# வாழ்வியற் களஞ்சியம்

தொகுதி பதினைந்து



தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்
தமிழ் நாடு
அச்சகம்

# வாழ்வியற் களஞ்சியம்

# வாழ்வியற் களஞ்சியம்

## தொகுதி பதினைந்து

## (இணைப்புத் தொகுதி)

**தமிழ்ப் பல்கலைக்கழகம்**

**தஞ்சாவூர் 613 010.**

ISBN : 81-7090-394-7

தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு எண் : 333

திருவள்ளுவராண்டு 2040, வைகாசி - மே - 2009

| | | |
|---|---|---|
| துறை | : | களஞ்சிய மையம் |
| நூல் | : | வாழ்வியற் களஞ்சியம் தொகுதி - 15 |
| பதிப்பு | : | முதற்பதிப்பு |
| விலை | : | **உரூ. 800.00** |
| ஒளியச்சு | : | முல்லைபாரதி கம்ப்யூட்டர் பிரிண்டர்ஸ், தஞ்சாவூர். |
| அச்சு | : | தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர். |

# வாழ்வியற் களஞ்சியம்

வேந்தர்

**மேதகு சுர்ஜித்சிங் பர்னாலா**

ஆளுநர், தமிழ்நாடு

புரவலர்

**மாண்புமிகு டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி**

முதலமைச்சர், தமிழ்நாடு

இணைவேந்தர்

**முனைவர் க. பொன்முடி**

உயர்கல்வி அமைச்சர், தமிழ்நாடு

துணைவேந்தர்

**முனைவர் ம. இராசேந்திரன்**

முதன்மைப் பதிப்பாசிரியர்

**பேரா. தெ. பாலசுப்பிரமணியன்**

முதன்மைப் பதிப்பாசிரியர்(பொ)

**முனைவர் நே. ஜோசப்**

பொறுப்பாசிரியர்

**முனைவர் சா. உதயசூரியன்**

Digitized by the Internet Archive
in 2022 with funding from
University of Toronto Scarborough Library

https://archive.org/details/socialscienceshu15unse

# பதிப்புக் குழு

முதன்மைப் பதிப்பாசிரியர்
**பேரா. தெ. பாலசுப்பிரமணியன்**

முதன்மைப் பதிப்பாசிரியர்(பொ)
**முனைவர் நே. ஜோசப்**

செய்தி திரட்டுவோர்
**முனைவர் சீ. பக்தவச்சலு**, மானிடவியல், கல்வியியல், சமூகவியல்

**முனைவர் சா. உதயசூரியன்**, மொழி, மொழியியல், தத்துவம்

மொழி வல்லுநர்கள்
**திரு கூ. அம்பிகாபதி**

**திரு செ.இரெ. செயச்சந்திரன்**

**முனைவர் அர. கமலதியாகராசன்**

ஓவியர்
**முனைவர் இரெ. அன்பரசன்**

## நன்றியுரை

**பதினைந்தாம் தொகுதியில் இடம் பெற்றுள்ள ஒளிப்படங்களுக்குப் பயன்பட்ட நூல்கள்**

*Encyclopaedia Britannica, Encyclopedia Americana, Compton's Encyclopaedia, The Illustrated Encyclopaedia of Mankind, The Art of India* by C. Sivaramamurthi, *Archaeology, The World Book Encyclopaedia, Anthropology* by Victor Barnouw, *Sociology* by Elbert W. Stewar, *Sociology* by David Popenoe.

**ஒளிப்படங்கள் வழங்கிய தனியார் மற்றும் பொது நிறுவனங்கள்**

அரசு அருங்காட்சியகம், சென்னை; மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை; டாக்டர் கு. முருகேசன், தஞ்சாவூர்; திரு அ. காசிலிங்கம், பெருமாங்குப்பம்.

மேலே கண்ட நூல்களின் உரிமையாளர்களுக்கும், தனிப்பட்ட பெருமக்களுக்கும், பொது நிறுவனங்களுக்கும் தமிழ்ப் பல்கலைக்கழக வாழ்வியற் களஞ்சிய மையத்தின் சார்பில் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முந்திய தொகுதிகளைப் போன்றே இத்தொகுதியும் சிறப்பாக அமைவதற்கு ஆலோசனைகள் வழங்கிய மதிப்பிற்குரிய துணைவேந்தர் டாக்டர் ம. இராசேந்திரன் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி உரியது. அயராது உழைத்து வரும் வாழ்வியற் களஞ்சிய அனைத்துப் பணியாளர்களுக்கும், களஞ்சியச் செயற்பாட்டிற்குத் துணை நிற்கும் பதிவாளர் பொறுப்பு டாக்டர் ஆ. கார்த்திகேயன் அவர்களுக்கும், முன்னாள் முதன்மைப் பதிப்பாசிரியர்கள் பேரா. டாக்டர் நா. பாலுசாமி அவர்களுக்கும், டாக்டர் அ.மா. பரிமணம், பேரா. தெ. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கும், பதிப்புத்துறை இயக்குநர் டாக்டர் பழனி. அரங்கசாமி மற்றும் அச்சகத்தாருக்கும் என் நன்றி!

*தஞ்சாவூர்*
*நாள் : 15.05.2009*

**நே. ஜோசப்**
முதன்மைப் பதிப்பாசிரியர் (பொ)

# கட்டுரையாளர்கள் முகவரி

அ.அ.
திரு அ. அப்துல் மஜீத்
உதவி இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத்துறை
திருமலை நாயக்கர் அரண்மனை
மதுரை.

அ.இரா.
திரு அ. இராசேந்திரன்
காப்பாளர்
டேனிசு கோட்டை அருங்காட்சியகம்
தரங்கம்பாடி.

அ.இரா.ச.
திரு அம்மை. இரா. சங்கரன்
பெருஞ்சொல்லகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.கு.சா.
டாக்டர் அரோமா குளோரிசாம்
பேராசிரியர் (ஓய்வு)
சமூகவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.ப.
திரு அ. பன்னீர்செல்வம்
வழக்கறிஞர்
சென்னை உயர்நீதிமன்றம்
சென்னை.

அ.மா.ப.
டாக்டர் அ.மா. பரிமணம்
20, கிருட்டிணன் கோயில் 3-ஆம் தெரு
மானம்புச்சாவடி
தஞ்சாவூர்.

அர.க.
டாக்டர் அர. கமலதியாகராசன்
விரிவுரையாளர்
அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

அ.வி.
டாக்டர் அ. விசுவநாதன்
8-ஆம் தெரு,
சுப்பிரமணியபுரம்
காரைக்குடி.

ஆ.கா.
டாக்டர் ஆ. கார்த்திகேயன்
துறைத்தலைவர்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

ஆ.ச.
திரு ஆ. சந்திரசேகரன்
''சொர்ணம்''
டி69-ஏ, 7ஆவது அவென்யூ
பெசண்ட் நகர்
சென்னை.

**ஆ.செ.**
திரு ஆவுடைத்தாய் செயராமன்
9, தவுலத் நகர்
கடலூர்.

**இ.அ.**
டாக்டர் இ. அங்கயற்கண்ணி
துறைத்தலைவர்
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**இரா.அ.**
டாக்டர் இரா. அண்ணாமலை
ஏ-54, அண்ணாநகர் கிழக்கு
சென்னை.

**இரா.இரா.**
டாக்டர் இரா. இராசு
துறைத் தலைவர்
நிகழ் கலைத்துறை
புதுச்சேரி பல்கலைக்கழகம்
புதுச்சேரி.

**இரா.கு.**
டாக்டர் இரா. குமரவேல்
தமிழ்ப் பேராசிரியர்
பச்சையப்பன் கல்லூரி
சென்னை.

**இரா. தி.**
டாக்டர் இரா. திருநாவுக்கரசு
விரிவுரையாளர்
அகராதியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**இரா.ப.**
டாக்டர் இரா. பவுன்துரை
துறைத் தலைவர்
கட்டிடக்கலைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**இரா.பா.**
திரு இரா. பாலகிருஷ்ணன்
விரிவுரையாளர்
மொழியியல் உயராய்வு மையம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

**இரா.வி.**
திரு இரா. விவேகானந்தகோபால்
சரஸ்வதி மகால் நூலகம்
தஞ்சாவூர்.

**இரெ. அ.**
டாக்டர் இரெ. அன்பரசன்
எண். 2, திருநகர்
நாஞ்சிக்கோட்டை சாலை
தஞ்சாவூர்.

**ஈ.ஞா.**
டாக்டர் ஈ.ஞா. வேதநாயகம்
கல்வியியல் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**எச்.எம்.**
திரு எச்.எம். அபுல்கலாம்
வழக்கறிஞர்,
எல் - 2813, 26வது குறுக்குத் தெரு
பெசண்ட் நகர்
சென்னை.

**எச்.சி.**
டாக்டர் எச். சித்திரபுத்திரன்
துறைத்தலைவர்
அகராதியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**எம்.சு.**
டாக்டர் எம். சுசீலா
பேராசிரியர் (ஓய்வு)
மொழியியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**எம்.எஸ். வே.**
எம்.எஸ். வேம்பு
உதவிப் பேராசிரியர்
வணிகவியல் துறை
மாநிலக் கல்லூரி
சென்னை.

**என்.எஸ்.பா.**
டாக்டர் என்.எஸ். பாலசுப்பிரமணியன்
186, முனிச்சாலை
மதுரை.

**எஸ்.கி.**
திரு எஸ். கிருட்டினசாமி ஐயங்கார்
'சுதர்சனம்'
புத்தூர் அக்ரகாரம்
திருச்சி.

**எஸ்.நா.**
டாக்டர் எஸ். நாகராஜன்
பேராசிரியர் (ஓய்வு)
அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**ஏ.ஆ.**
திரு ஏ. ஆதித்தன்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

**க.அ.**
திரு க. அம்பிகாபதி
மொழியியல் வல்லுநர் (ஓய்வு)
களஞ்சிய மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**க.த.**
திரு க. தங்கமணி
தஞ்சாவூர்.

**க.பா.**
டாக்டர் க. பாஸ்கரன்
துறைத்தலைவர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**க.பு.**
டாக்டர் க. புவனேஸ்வரி
பொருளியல் ஆய்வாளர்
சரபோஜினி தன்னார்வ நிறுவனம்
பாலாஜி நகர், தஞ்சாவூர்.

**கி.அ.**
திருமதி கிருஷ்ணவேணி அருணாசலம்
முதல்வர்
வெல்லிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம்
சென்னை.

**கி.இரா.**
திரு கி. இராசேந்திரன்
இணைப் பேராசிரியர்
உளவியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

**கி.க.**
டாக்டர் கி. கந்தன்
விரிவுரையாளர்
சிற்பத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**கி.க.**
டாக்டர் கி. கருணாகரன்
மொழியியல் துறை (ஓய்வு)
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

**கு.நா.இரா.**
திரு கு.நா. இராமானுசம்
93, மாரியப்பா நகர்
அண்ணாமலை நகர்.

கு.முரு.
டாக்டர் கு. முருகேசன்
இணைப் பேராசிரியர் (ஓய்வு)
நாடகத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கே.நி.
டாக்டர் கே. நிர்மலானந்த ரெட்டி
மலையின மக்கள் ஆய்வு மையம் (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

கோ.இரா.
திரு கோ. இராமகிருஷ்ணன்
வரலாற்றுப் பேராசிரியர்
மன்னர் கல்லூரி
புதுக்கோட்டை.

கோ.சீ.
டாக்டர் கோ. சீனிவாச வர்மா
இணைப் பேராசிரியர்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

கோ.சூ.
டாக்டர் கோமதி சூரியமூர்த்தி
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.க.
டாக்டர் ச. கங்காதரன்
தத்துவத்துறைப் பேராசிரியர்
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை.

ச.மெ.
டாக்டர் ச. மெய்யப்பன்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

சா.உ.
டாக்டர் சா. உதயசூரியன்
விரிவுரையாளர்
அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சா.கி.
டாக்டர் சா. கிருட்டினமூர்த்தி
துறைத்தலைவர்
அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

சி.இரெ.
திரு சி. இரெத்தினம்
58, முருகவேள் நகர்
திருச்சிராப்பள்ளி.

சி.என்.ந.
டாக்டர் சி.என். நடராசன்
பி - 64, என்.ஜி.ஓ. காலனி
திருநெல்வேலி.

சி.ம.
திரு சி. மகேசுவரன்
உதவிக் காப்பாட்சியர்
எழும்பூர்
சென்னை.

சீ.ப.
டாக்டர் சீ. பக்தவச்சலு
மனை எண். 52, ஜெயராம் நகர்
கொளத்தூர்
சென்னை.

சு.இரா.
டாக்டர் சு. இராசவேலு
வேந்தன் வீதி
அண்ணா நகர்
சேண்பாக்கம் அஞ்சல்
வேலூர்.

**சு.ச.**
டாக்டர் சு. சக்திவேல்
துறைத்தலைவர் (ஓய்வு)
நாட்டுப்புறவியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சி.சு.**
திருமதி சி. சுந்தராம்பாள்
தமிழ்த்துறை
அவிநாசிலிங்கம் மனையியல் கல்லூரி
கோயம்புத்தூர்.

**சு.சா.**
டாக்டர் சு. சாமிஐயா
தமிழ்த்துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

**சு.ந.**
டாக்டர் சு. நரேந்திரன்
623, கீழ வீதி
தஞ்சாவூர்.

**செ.இரா.**
திரு செ. இராசு
பேராசிரியர் (ஓய்வு)
கல்வெட்டுத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**செ.இரெ.செ.**
திரு செ.இரெ. செயச்சந்திரன்
888, பரசுராமர் தெரு
கரந்தை
தஞ்சாவூர்.

**செ.வா.**
டாக்டர் செ. வான்மதி
இராமகிருட்டிணன் மேல்நிலைப்பள்ளி
10, ரெங்கநாதன் தெரு
விழுப்புரம்.

**சு.வெ.பா.**
திரு சு.வெ. பாலசுப்பிரமணியன்
மலர் இல்லம்
23-ஏ, ஜவுளி செட்டித்தெரு
தஞ்சாவூர்.

**செ.வை.ச.**
டாக்டர் செ.வை. சண்முகம்
மொழியியல் துறைப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

**சோ.ஆ.**
டாக்டர் சோ. ஆனந்த நடராசன்
நூலக உதவியாளர்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சோ.ந.க.**
டாக்டர் சோ.ந. கந்தசாமி
பேராசிரியர் (ஓய்வு)
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**சௌரி.கி.**
டாக்டர் சௌரி. கிருட்டினமூர்த்தி
மக்கள் தொகையியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோவை.

**ஞா.கு.**
டாக்டர் ஞானா குலேந்திரன்
பேராசிரியர் (ஓய்வு)
இசைத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**ஞா.ப.**
திருமதி ஞா. பங்கஜம்
முதல்வர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்.

**த.கோ.ப.**
டாக்டர் த.கோ. பரமசிவம்
பேராசிரியர் (ஓய்வு)
ஓலைச்சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**த.வெ.ப.**
திருமதி த.வெ. பானுமதி
கௌரவ சோதனையாளர்
இளைஞர் வழிகாட்டி நிலையம்
சென்னை.

**தா.ஈ.**
டாக்டர் தா. ஈசுவரப்பிள்ளை
பேராசிரியர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**தி.சு.**
திரு தி. சுப்பிரமணியன்
காட்டாட்சியர்
அகழ்வைப்பகம்
தர்மபுரி.

**தி.வ.தெ.**
திரு தி.வ. தெய்வசிகாமணி
4/2, மல்லேஸ்வரர் கோயில் தெரு
மைலாப்பூர்
சென்னை.

**து.ஆ.த.**
திரு து.ஆ. தனபாண்டியன்
பேராசிரியர், இசைத்துறை (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**தெ.பா.**
பேரா. தெ. பாலசுப்பிரமணியன்
182, பூங்காத்தெரு
மாரியப்பா நகர்
அண்ணாமலை நகர்.

**தே.ச.**
திரு தே. சந்திரன்
நிகழ்ச்சிப் பொறுப்பாளர்
அகில இந்திய வானொலி நிலையம்
திருச்சிராப்பள்ளி.

**ந.க.ம.**
திரு ந.க. மங்கள முருகேசன்
வரலாற்றுத்துறை
அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம்
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**நா.பா.**
டாக்டர் நா. பாலுசாமி
பேராசிரியர்
16, சவகர் சாலை
சாந்தி நகர்
மதுரை.

**நே.தே.**
திரு நே. தேவசகாயம்
மானிடவியல் காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

**ப.அ.**
டாக்டர் பழனி. அரங்கசாமி
பேராசிரியர் (ஓய்வு)
துறைத்தலைவர்
மொழிபெயர்ப்புத் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**ப.அ.**
திரு ப. அருளி
பேராசிரியர்
தூய தமிழ் அகராதித்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**ப.இரா.**
திரு ப. இரா. இராசமோகன்
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

**பழ.மு.**
திரு பழ. முத்துவீரப்பன்
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
தொலைதூரக் கல்வி இயக்ககம்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

**ப.சு.**
டாக்டர் பத்மா சுப்பிரமணியம்
6, நான்காவது மெயின் ரோடு
காந்தி நகர்
சென்னை.

**பா.சூ.**
திரு பா. சூரியநாராயணன்
21, கம்பர் தெரு
எஸ்.எஸ். காலனி
மதுரை.

**பா.பி.**
திரு பா. பிரபாகரன்
பொருளியல் துறை
ஆதித்தனார் கல்லூரி
திருச்செந்தூர்.

**பா.ஜெ.**
டாக்டர் பா. ஜெயக்குமார்
விரிவுரையாளர்
கல்வெட்டியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**பி.பி.**
டாக்டர் பி. பிரேமா
கல்வியியல் துறை விரிவுரையாளர்
காரைக்குடி.

**பு.எ.மோ.**
திரு பு.எ. மோகன்
விரிவுரையாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

**பு.வே.**
புலமை வேங்கடாச்சலம்
வழக்கறிஞர்
15, பூக்கார இரண்டாம் தெரு
தஞ்சாவூர்.

**பூ.த.**
டாக்டர் பூ. தர்மலிங்கம்
நாடகத்துறை (ஓய்வு)
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**ம.இரா.த.**
திரு ம. இராசசேகர தங்கமணி
வரலாற்றுப் பேராசிரியர்,
அரசு கலைக்கல்லூரி,
கரூர்.

**ம.ஃபெ.**
பேரா. ம. ஃபெரோஸ்
உளவியல் பேராசிரியர்
8, சி.வி. இராமன் வீதி
ஆர்.எஸ். புரம்
கோயம்புத்தூர்.

**ம.ந.பு.**
திருமதி ம.ந. புஷ்பா
அரசு அருங்காட்சியகம்
சென்னை.

**மா.கா.**
டாக்டர் மா. காந்திதாசன்
7/188, என்.ஜி.ஓ. காலனி
நாகமலை
மதுரை.

**மா.பா.கு.**
டாக்டர் மா.பா. குருசாமி
பேராசிரியர்
117, சன்னதித் தெரு
திருச்செந்தூர்.

**மு.இரா.**
டாக்டர் மு. இராசமாணிக்கம்
உளவியல் துறைத்தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்.

**மு.நா.**
டாக்டர் மு. நாகநாதன்
பிளாட் எண். 14, 2வது தளம்
சிவசங்கர் அப்பார்ட்மெண்ட்
சொக்கலிங்கம் நகர்
தேனாம்பேட்டை
சென்னை.

**மு.மு.**
டாக்டர் மு. முத்துராமன்
முதல்வர்
பச்சையப்பன் கல்லூரி
காஞ்சிபுரம்.

**வ.கு.**
டாக்டர் வ. குருநாதன்
துறைத்தலைவர்
இலக்கியத்துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**வ.தே.சா.**
திரு வ.தே. சாமிநாதன்
விரிவுரையாளர்
உளவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை.

**வி.சு.**
திரு வி. சுந்தரராசன்
36, துவாரகா நகர்
தஞ்சாவூர்.

**வை.ப.**
திரு வை. பக்கிரிசாமிச் செட்டியார்
திருத்துறைப்பூண்டி
திருவாரூர் மாவட்டம்.

**வே.க.**
டாக்டர் வேதகிரி கணேசன்
உளவியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர்.

**ஜெ.அர.**
டாக்டர் ஜெ. அரங்கசாமி
பேராசிரியர்
தத்துவ மையம்
தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர்.

**ஜி.ப.**
திரு ஜி. பங்கஜம்
முதல்வர்
இலட்சுமி கல்வியியல் கல்லூரி
காந்திகிராமம்
திண்டுக்கல்.

# வாழ்வியற் களஞ்சியம்

**அக்கேடியர் :** பண்டைய பாபிலோனியாவில் வாழ்ந்து, பாபிலோனிய நாகரிகத்தைப் படைத்த மக்கள் அக்கேடியர் ( Akkadians ) ஆவர். இங்குள்ள அக்காடு ( Akkad or Accad ) அல்லது அகேடு ( Agade) என்ற நகரில் இவர்கள் வாழ்ந்து, ஒரு பேரரசை நிறுவி, அங்கிருந்து தங்கள் நாகரிகத்தைப் பரப்பிய தால் இப்பெயர் பெற்றனர். முதலாம் சார்கன் ( Sar gon I ) என்னும் இவர்களுடைய அரசரால் கி. மு. 2300 கால அளவில் உண்டாக்கப்பட்ட இந்நகரமானது தைகிரிசு ( Tigris ), ஊப்பிரடீசு ( Ephrates ) ஆகிய இரு ஆறுகளும் மிக நெருங்கி ஓடும் இடத்தில் அமைந்துள் ளது. இன்றைய ஈராக்கில் பாபிலோனியாவிலிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்நகரானது கி.மு.1125 வரை, நெபுகட்நேசர் ( Nebuchadnezzar ) காலம் வரை செல்வச் செழிப்புடன் விளங்கியது. இந் நகரம் ஒரு சிறந்த வாணிக மையமாகத் திகழ்ந்தது.

பண்டைய பாபிலோனியா வடக்கு, தெற்கு என இரு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு, அதன் தென் பகுதி சுமேரியா எனவும், வடபகுதி அக்காடு எனவும் வழங்கப்பட்டு வந்தது. எனவே, கி.மு. 2000க்குப்பின் பாபிலோனியாவை ஆட்சி புரிந்த மன்னர்கள் தங் களைச் "சுமேர் மற்றும் அக்காடின் மன்னர்கள்" என அழைத்துக்கொண்டனர். இந்நாட்டின் எல்லை களைச் சுமேரியாவுடனான எல்லையைக்கூட, வரை யறுத்துக் கூற முடியவில்லை. இப்பகுதியில் பண் டைய பாபிலோனிய நாகரிகத்தின் சிறந்த இடங் களான பாபிலோன், கிசு ( Kish ), போர்சிப்பா ( Bor sippa ), குதா ( Cuth ah), ஏசுன்னா ( Eshunna), சிப்பர் ( Sippar ), அக்சா ( Akshah) ஆகியவை உள்ளன.

செமேடிக் இனத்தைச் சேர்ந்த நாடோடி மக்களான இவர்கள் கி.மு. 3000 - 2000 ஆண்டுகளில் பாபி லோனியாவில் குடியேறினர். இவர்களுடைய புகழ் மிக்க அரசனான முதலாம் சார்கன் சுமேரியாவையும், பல நகர அரசுகளையும் வென்று, இணைத்த பின் னரே இம்மக்கள் ஓரிடத்தில் நிலையாக வாழத் தொடங்கினர். இவ்வரசர் தம்முடைய பேரரசை எலம் ( Elam) மலைகளிலிருந்து மத்திய தரைக்கடல், ஆசியா மைனர் ஆகியவை வரை விரிவடையச் செய்து வரலாற்றிலேயே முதலாவது பேரரசை நிறுவி னார். அக்கேடியர் சுமேரிய நாகரிகத்திலிருந்து பல வற்றைக் குறிப்பாக நாள்காட்டி ( Calendar ), முகத் தல், நிறுத்தல் அளவைகள், ஆப்பெழுத்து, எண் முறை, வாணிகம், சிற்பங்கள், கைத்தொழில்கள் ஆகியவற்றைக் கற்றனர். அக்கேடியன் ( Akkadian )

எனப்படும் இவர்களது மொழியானது கிழக்குச் செமெடிக் மொழிகளான ஈபுரூ, அராபிக்கு ஆகியவற்றுடன் தொடர்புடையது. ஆப்பெழுத்தில் எழுதப்பட்ட இம்மொழியானது இப்பொழுது வழக்கில் இல்லை.

- கி.இரெ.

**அகத்தீசுவரம் :** அகத்தீசுவரம் என்ற கோயில் கீழையூரிலுள்ளது. கீழையூர், திருச்சி அரியலூர் நெடுஞ்சாலையில் திருச்சியிலிருந்து 48 கி.மீ. தொலைவிலுள்ளது. இப்பகுதி, பண்டைய நாளில் பெரும்பழூவூர் என்றும் மன்னு பெரும்பழூவூர் என்றும் பெயர் பெற்றிருந்தது. இது சிவத்தலங்களில் ஒன்று. கீழையூரில் இரண்டு வகையான விமானங்களைக் கொண்ட இரண்டு கோயில்கள் ஒரே இடத்தில் உள்ளன. இவ்விரண்டு தளிகளில் தெற்கே உள்ள கோயிலுக்குத் தென்வாயில் சிரீகோவில் என்று பெயர் இருந்ததாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. ஆனால் இப்போது இக்கோயிலுக்கு அகத்தீசுவரம் என்ற பெயர் வழங்கப்படுகிறது.

அகத்தீசுவரமுடையார் கோயில் முழுமையாகக் கல்லால் கட்டப்பட்ட கற்றளியாகும். மேற்குத் திசையை நோக்கி அமைந்துள்ள இக்கோயிலில் கருவறை, அர்த்தமண்டபம், அந்தராளம், முகமண்டபம், கோபுரம், நந்தி ஆகியன உள்ளன. அவை கட்டடக்கலை அமைப்பு முறையில் ஒரே கலை நுணுக்கத்தில் கட்டப்பட்டுள்ளதால் ஒரே காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று கருதலாம். முகமண்டபத்தில் உருண்டை வடிவமான தூண்களும், சிம்மம் தாங்கிய தூண்களும் உள்ளன. முகமண்டபத்திலுள்ள தூண்கள் பல்லவர் காலக் கலை நுணுக்கத்தில் செதுக்கப்பட்டுள்ளன. பிற்காலத்தில் எழுப்பப்பட்ட பகுதிகளும் இதில் உள்ளன.

கருவறை சதுர வடிவில் அமைந்துள்ளது. கருவறையின் வெளிச்சுவர்களில் தேவகோட்டங்கள் காணப்படுகின்றன. தேவகோட்டங்கள் மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. தோரணங்களின் நடுப்பகுதியில் நடராசர் புடைப்புச் சிற்பங்கள் காட்டப்பட்டுள்ளன. தேவகோட்டங்களிலுள்ள பிரமன், தென்முகக் கடவுள் போன்ற சிற்பங்கள் கலையழகு வாய்ந்தவை. இங்குப் பரிவார ஆலயங்களும் எழுப்பப்பட்டுள்ளன. சூரியன், விநாயகர், சுப்ரமணியர், சண்டேசுவரர் போன்ற சிற்பங்களும் சோழர்காலச் சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டுகள்.

விமானம் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. விமானத்திலுள்ள சாலை அமைப்புகள் நுணுக்கமான முறையில் காட்டப்பட்டுள்ளன. தளத்திலுள்ள சிற்பங்களில் நந்தி போன்றவையும் பூதவரி, கூடுகளின் அமைப்பு ஆகியனவும் கண்ணைக் கவரும் வகையிலுள்ளன. கிரீவம், சிகரம் ஆகியன சதுர அமைப்புடையன.

கோவிராசகேசரி வர்மனின் கல்வெட்டு குன்றக் கூற்றத்திலுள்ள இக்கோயிலுக்குச் செய்த தானம் பற்றிக் கூறுகின்றது. அக்கல்வெட்டு முதல் ஆதித்தனின் காலத்தைச் சார்ந்தது. மற்றொரு கல்வெட்டில் பூதிபழுவேட்டரையன் குமரன் கண்டன் செய்த தானம் கூறப்பட்டுள்ளது. அவன் ஆதித்த சோழன் காலத்தவன். இங்குள்ள கல்வெட்டுகளைக் கொண்டும் கட்டடக் கலையைக் கொண்டும் இது கி.பி. 884க்கு முன்னர் கட்டப்பட்டதாகும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர்.

**அகத்தீசுவரம் 2 :** தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்திலுள்ள கிளியனூரில் ஓர் அகத்தீசுவரம் கோயில் உள்ளது. 25 கி.மீ. தூரத்தில் இக்கோயில் அமைந்துள்ளது. இதுவும் சிவத்தலங்களில் ஒன்று. இக்கோயிலில் பல கல்வெட்டுகள் உள்ளன. முதலாம் பராந்தகனின் கல்வெட்டு ஓய்மா நாட்டிலுள்ள கிளியனூர் அகநீசுவரமுடையாருக்குச் செய்த தானம் பற்றிக் கூறுகின்றது. எனவே, அகநீசுவரமுடையார் என்பது மருவிப் பிற்காலத்தில் அகத்தீசுவரமுடையார் - அகத்தீசுவரம் என்று பெயர் வந்துள்ளதாகக் கொள்ளலாம்.

மேற்கு நோக்கி அமைந்துள்ள இக்கோயில் கற்களால் கட்டப்பட்டுள்ளது. கருவறை, அர்த்தமண்டபம் போன்றவை மட்டும் பழமையானவை. மற்றவை பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளன. கோபுரம் இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. திருச்சுற்றும் இடிபாடுகளுடன் காணப்படுகின்றது. கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவற்றின் வெளிச்சுவரில் தேவகோட்டங்கள் உள்ளன. அவற்றில் துர்க்கை, பிச்சாடனர், தென்முகக் கடவுள், பிரம்மா ஆகிய சிற்பங்கள் உள்ளன. இங்குள்ள அரைத் தூண்கள் அலங்கார வேலைப்பாடுகளுடன் செதுக்கப்பட்டுள்ளன.

பூதவரி, கொடுங்கை, சாலையமைப்பு, கூடுகள் போன்றனவை சோழர்களின் கலை வண்ணங்கள். விமானம் இரண்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ளது. அது சதுர அமைப்பிலுள்ளது. அதனுடைய அமைப்பு முறை கீழையூர் அகத்தீசுவரம் கோயிலை ஒத்திருப் பதால் இதுவும் ஆதித்தனின் கலைப்பணியாக இருக்கலாம்.

- தி.சு.

**அங்கோர்** : தென்கிழக்கு ஆசியாவில் தொல்லி யல் சிறப்பு வாய்ந்த இடங்களில் முக்கியமான ஒரு பகுதி கம்பூசியாவின் ( கம்போடியா ) வடமேற்கில் சீயெம்ரீபு ( Siemreab) எனப்படும் இக்கால நகருக்கு 6 கி.மீ வடக்கில் சிறப்புற்றிருந்த அங்கோர் ( Angkor) நகரமாகும். இது கெமேர் ( Khmer ) அல்லது கம்போடியப் பேரரசின் தலைநகராக, கி.பி. 9ஆம் நூற். முதல் 15ஆம் நூற்றாண்டு வரை விளங்கியது. பல பேரரசுகளின் தலைநகராக இருந்த பெருஞ்சிறப்பு இந்நகருக்கு உண்டு. ஆய்வாளர் இங்குக் கண்டு பிடித்துள்ள நினைவுச் சின்னங்களில் அங்கோர்வாட் ( Angkor Wat ), அங்கோர்தோம் ( Angkor Thom ) என் பன மிகவும் சிறப்பானவை. இரண்டாம் சூர்யவர் மன் என்ற அரசன் கி.பி. 12ஆம் நூற்றாண்டில் கட்டிய கோயிற்றொகுதிக்கு ( Temple Complex ) **அங்கோர் வாட்** என்று பெயர். ஏழாம் செயவர்மன் என்ற மன்னன் ஏறத்தாழக் கி.பி.1200இல் கட்டிய கோயிற்றொ குதிக்கு **அங்கோர்தோம்** என்று பெயர்.

தென்கிழக்கு ஆசிய வரலாற்றில் புகழ் பெற்ற கெமெர் அரச குலத்தவர் அங்கோர் பகுதியைத் தமது அரசியல் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர். அவர்கள் பேரரசு தென்கிழக்கு ஆசியாவின் மிகப் பெரிய பேரரசுகளில் ஒன்றாகவும் வளமை நிறைந்த தாகவும் செயற்கைப் பண்பாடுகள் சிறப்புறப் பொதிந்ததாகவும் திகழ்ந்தது. முதலாம் யசோவர்மன் என்ற அரசன் கி.பி. 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் அங்கோர்வாட்டைத் தமது தலைநகராமாகக் கொண்டார். ஏழாம் செயவர்மனின் ( ஏறத்தாழக் கி.பி. 1181 - 1215) காலத்திற்குப் பிறகுதான் அத்தலைநகரின் சிறப்பு குன்றியது. செயவர்மன், அங்கோர்தோம் என்ற பெயரை உடைய புதிய தலைநகரை நிறுவினார். புதிய முறையில் அகழ்சூழ் கிடங்குகளையும் அகழி களையும் கால்வாய்களையும் அமைத்த பெருமை அவ்வரச னுக்கு உண்டு.

அங்கோர்தோமில் உள்ள கோயிலின் நடுக் கோபு ரத்தில் மிகப்பெரிய புத்தர் உருவச்சிலை அமைந்துள் ளது. புத்த பெருமான், ஏழாம் செயவர்மனாகத் திருப் பிறப்பை மேற்கொண்டாரென்ற ஒரு நம்பிக்கையை யொட்டி அந்த உருவச்சிலை அமைந்ததாகக் கூறப் படுகிறது. இக்கோயிலைச் சுற்றியுள்ள காட்டுப்பகுதி யில் 50க்கு மேற்பட்ட சிறிய கோபுரங்கள் உள்ளன. அவற்றில் அவ்வரசனின் தலைஉருவங்கள் பல பொருத்தப்பட்டுள்ளன. செயவர்ம மன்னன் ஒரு பௌத்தக் கடவுள் என்பதை அறிவுறுத்துவதற்கா கவே அவை ஏற்படுத்தப்பெற்றன என்பர். அங்கோர் தோம் கி.பி. 14 - 15 ஆம் நூற்றாண்டுகளில் தாய் (Thai) குலத்தவரால் படையெழுச்சிகளின் மூலம் சூறையா டப்பட்டது. அதன் விளைவாக, தலைநகர் கி.பி. 1434 ஆம் ஆண்டில் புனோம்பென் ( Phnompenh) என்னு மிடத்திற்கு மாறியது. சிறப்பிழந்த அங்கோர் நகரில் மக்கள் வாழ்க்கையும் அறவே அற்றுப்போயிற்று. நகரம் காடாகியது. காட்டுப்பகுதியில் மறைந்து கிடந்த அவ்வணி நகரைக் கி.பி. 1861ஆம் ஆண்டு பிரான்சு நாட்டு ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர். அழிவுற்றிருந்த அங்கோர் கட்டடங்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு நகரின் பழைய புகழ் மீட்கப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் நடைபெற்ற வியட்நாமியப் போரின் விளைவாக மறுபடியும் நகரில் அழிபாடுகள் ஏற்பட்டன.

- தெ.பா.

**அடுக்குத்தொடர்** : ஒரு தொடரில் ஒரு சொல்லே இரண்டு மூன்று நான்கு முறை மீண்டும் மீண்டும் தொடர்ந்து வருவது அடுக்கு எனப்படும். பெயர், வினை, இடை, உரி என்னும் நால்வகைச் சொற்களும் அவ்வாறு அடுக்கி வருவதற்கு உரியன வாகும். அடுக்குத்தொடர் உரைநடையிலும் வரும். செய்யுள் நடையிலும் வரும். செய்யுளின்கண் யாப்ப மைதியும் பொருள் உணர்வும் கருதி வரும். உரை நடையில் பெரும்பான்மையும் பொருள் உணர்வு பற்றியே வரும். இவ் அடுக்குத்தொடர் இசைநிறை, அசைநிலை, பொருளுணர்த்து நிலை என மூவகைப் படும். இதனைப் பற்றித் தொல்காப்பியம், ‘இசை-

நிறை அசை நிலை பொருளொடு புணர்தல் என்று அம் மூன் றென்ப ஒரு சொல் அடுக்கே' என்று கூறுகின்றது.

**இசைநிறை அடுக்கு :** செய்யுள் ஓரடியின்கண் அமைந்துள்ள சீர்களில் அசை குறையின் அதனை நிரப்புதற்கும் சீர்கள் குறையின் அவற்றை நிரப்புதற்கும் வருவது இசைநிறை அடுக்கு எனப்படும். 'ஏஏ அம்பல் மொழிந்தனள்', 'ஏ ஏ இவனொருத் தியேடியோ' என்பவற்றுள் ஏ என்னும் விளி ஓரசையாக நிற்றலின் ஏ ஏ என அடுக்கிச் சீரை நிறைத்தது. 'நல்குமே நல்குமே நல்குமே நாமகள்' என்ற அடியுள் நல் குமே என்ற சீர் அடுக்கி அடியை நிறைத்துள்ளது. இங்ஙனம் அடி நிரப்ப வரும் அடுக்கினைப் பொருளொடு புணர்ந்ததாகக் கொள்ளினும் பிழையாகாது. அதனைத் தெளிவு பற்றி வந்த அடுக்கு என்பர்.

**அசைநிலை அடுக்கு :** செய்யுளிலோ, உரைநடையிலோ யாதொரு சிறப்புப் பொருளுமின்றி ஒரு சொல் அடுக்கிவரின் அதனை அசைநிலை அடுக்கு என்பர். வழக்கின்கண் ஒருவர் ஒருவரிடம் நீங்க எந்த ஊரு? என்று வினவும் போது அவர் வந்து வந்து கூடலூருங்க என்று ஒரு சிலர் கூறுவதைக் காணலாம். அவ்விடையில் வந்து வந்து என்பவை ஒரு பொருளு மின்றி அசைநிலையாக நிற்பதைக் காணலாம். செய்யுளிடத்து அன்றே அன்றே- நன்றே நன்றே என்றாற் போல வரும்.

**பொருள் நிலையடுக்கு :** பல்வேறு மனநிலை களை மெய்ப்பாட்டுணர்வுடன் வெளிப்படுத்தும் போது நிகழும் நிலை பொருள்நிலை எனப்படும். அஃது, விரைவு, துணிவு, உடன்பாடு, வலியுறுத்தல் அல்லது ஏவுதல், அச்சம், அவலம், வெகுளி, உவகை, அவா எனப் பல பொருள் பற்றி வரும். உ.ம். ஓடு ஓடு ஓடு - பாரு பாரு பாரு என்பன விரைவு பற்றியன வாகும். அதே அதே அதே - அவன் தான் அவன் தான் அவன் தான் என்பன துணிவு பற்றியனவாகும். ஆமாம் சொன்னேன் சொன்னேன் - நல்லது நல்லது நல்லது என்பன உடன்பாடு பற்றியனவாகும். அது வேண்டா விடுவிடுவிடு, அதைச் சொல்லு சொல்லு சொல்லு என்பன வலியுறுத்துதல் அல்லது ஏவுதல் பற்றியனவாகும். தீத்தித் தீ - பாம்பு பாம்பு பாம்பு என்பன அச்சம் பற்றியனவாகும். அடி அடி அடி கொல்லு கொல்லு கொல்லு என்பன சினம் பற்றிய னவாகும். ஐயோ ஐயோ ஐயோ - என்னே என்னே என்னே என்பன அவலம் பற்றியனவாகும். வருக வருக வருக - வாழ்க வாழ்க வாழ்க என்பன உவகை பற்றியனவாகும். சீ சீ சீ போ போ போ என்பன வெறுப்பு பற்றியனவாகும். தருக தருக தருக சோறு சோறு சோறு என்பன அவா பற்றியனவாகும். 'இசைப் படு பொருளே நான்குவரம்பாகும்', 'விரை சொல் அடுக்கே மூன்று வரம்பாகும்' ( தொல் - சொல் 424, 425 ) என்பதன் பொருள் பற்றிய அடுக்கு இரண்டு முதல் நான்கு வரை அடுக்கும் என்பதும் விரைசொல் மூன்று வரை அடுக்கும் என்பதும் விளங்குகின்றன. இவ் வரையறை பிறழ்ந்து வருதல் உலக வழக்காகக் கொள்ளப்படும்.

- ச. பா.

**அடைப்பொலிகள் :** உலக மொழிகளில் காணப் படும் ஒலிகள் உயிரொலிகள் என்றும் மெய்யொலி கள் என்றும் வகைப்படுத்தப்படுகின்றன. நுரையீரலி லிருந்து வெளியேறும் காற்று எந்தவிதத் தடையு மின்றி வாயின்மூலம் வெளிவர உயிரொலிகள் பிறக் கின்றன. இதற்கு மாறாக நுரையீரலிலிருந்து வெளி யேறும் மூச்சு வாயறையினுள் அடைபடவோ, சிறிய இடுக்கின் வழியாகச் செல்லவோ, நாவின் இரு மருங்கு வழியாக வெளியேறவோ, மூக்கறை வாயிலைத்திறக்க மூக்கறையில் ஒலியூக்கம் பெற்று நாசித் துவாரங்கள் வழியாக வெளியேறவோ மெய் யொலிகள் பிறக்கின்றன. மெய்யொலிகளை ஒலிப் பிடம், ஒலிப்புமுறை, அதிர்வுடனோ அதிர்வின்றி யோ பிறத்தல் ஆகிய மூன்று அளவுகளை அடிப்படை யாகக் கொண்டு வகைப்படுத்துவர்.

அடைப்பொலிகள் மெய்யொலிகளின் முக்கிய வகைகளுள் ஒன்று. அடைப்பொலிகளைப் போலவே உரசொலிகள் ( Fricatives ), மூக்கொலிகள் ( Nasals ), மருங்கொலிகள் ( Laterals ), வருடொலி கள் ( Flaps ), ஆடொலிகள் ( Trills ) ஆகியவை மெய்யொலிகளின் முக்கிய வகைகளாகும். ஒலியியல் அறிஞர்கள் அடைப் பொலிகளின் சிறப்பியல்புகளாகக் கீழ்வருவன வற்றைக் குறிப்பிடுகிறார்கள். அடைப்பொலிகளை உச்சரிக்கும்போது நுரையீரலி லிருந்து வெளியேறும் மூச்சு முழுவதுமாக வாயில் அடைபடுகிறது. 2. வாயினுள் அடை பட்ட மூச்சு சட்டென்று வெடிப் போடு வெளியேறுகிறது. இதனால் இவ்வொலிகள் வெடிப்பொலிகள் ( Plosives ) என்றும் அழைக்கப்படு கின்றன. 3. [illegible] அண்ணம் மூக்கறை வாயிலை

நோக்கி உயர்ந்து மூக்கறையினுள் மூச்சு செல்லாத வாறு அடைக்கிறது. 4. குரல் வளை மடல்கள் அதிரலாம்; அதிராமலும் இருக்கலாம்.

அடைப்பொலிகளைப் பிறப்பிக்கும்போது மூச்சை எந்தப்பகுதியிலும் அடைக்கலாம். இவ் வடைப்பு நுரையீரலுக்கும் வாய் இதழுக்கும் இடை யே நிகழும். கீழிதழும் மேலிதழும் ஒரு சேர மடிந்து பொருந்தும் பொழுது அடைப்பு ஏற்படுகிறது. நுனி நாக்கு மேற் பல்லைத் தொடும்போது அடைப்பு ஏற்படுகிறது. அவ்வாறே, நுனிநாக்கு அண்பல்லில் பொருந்தும் போதும் நுனிநாக்கு பின்னோக்கி வளைந்து அண்ணத்தில் பொருந்தும் போதும் மூச்சு வாயில் அடைபடுகிறது. சில அடைப்பொலிகள் பிறக்கும் போது ஒரே நேரத்தில் இரண்டு அல்லது மூன்று இடங்களில் கூட அடைப்புகள் நிகழ்வதுண்டு. இதனடிப்படையில் அடைப்பொலிகளை இருவகை யாகப் பிரிப்பார்கள். ஓர் அடைப்பொலியைப் பிறப் பிக்கும்போது வாயில் ஏதாவது ஓர் இடத்தில் மட்டுமே அடைப்பு நிகழுமேயானால் அதனைத் தனி அடைப்பொலி ( Simple stop ) என்றும், ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் அடைப்புகள் நிகழுமேயானால் அதனைக் கூட்டு அடைப் பொலி ( Compound stop ) என்றும் கூறுவார்கள்.

அடுத்தபடியாக, வாயின் உள்ளே அடைக்கப்பட்ட காற்று சட்டென்று வெடிப்போடு வெளியேற்றப்படு கிறது என்றும் இதனாலேயே இவை வெடிப் பொலிகள் என்று அழைக்கப்படுகின்றன என்றும் குறிப்பிட்டோம். அது அடைப்பொலிகளின் முக்கிய மான பண்புகளில் ஒன்றாகும். மூச்சை வெளியேற் றும் முறை பேச்சுறுப்பு, வாயில் எந்த இடத்தில் பொருந்தி இருக்கிறது என்பதையும் பின்னர் எந்த இடத்தை நோக்கி இடம் பெயரப்போகிறது என்பதையும் பொறுத்ததாகும். சில அடைப்பொலிகள் பிறக்கும் போது மூச்சு சட்டென்று வெளியேற்றப்படலாம். வேறு சில அடைப்பொலிகள் பிறக்கும்போது காற்று குப்பென்று வெளியேற்றப்படலாம். மூச்சு குப்பென்று வெளியேறப் பிறக்கும் அடைப்பொலி களை மூச்சுடை அடைப்பொலிகள் ( Aspirated stops) என்றும், ஏனைய வற்றை மூச்சிலா அடைப்பொலிகள் ( Unaspirated stop) என்றும் ஒலியியல் அறிஞர்கள் குறிப்பிடுவார்கள். இந்திய மொழிகளில் தமிழ் மொழியைத் தவிர ஏனைய மொழிகளில் மூச்சுடை அடைப்பொலிகள் காணப்படுகின்றன. kha, tha, pha போன்ற மூச்சுடை அடைப்பொலிகள் குறியிட்டு உணரப்படும்.

அடைப்பொலிகளைப் பிறப்பிக்கும்போது கடை யண்ணம் மூக்கறை வாயிலை நோக்கி உயர்ந்து மூக் கறையினுள் மூச்சு செல்லாதவாறு அடைக்கிறது என்று முன்னர் குறிப்பிட்டோம். அடைப்பொலிகளை மூக் கொலிகளிலிருந்து இப்பண்பே வேறு படுத்துகின்றது. அடைப்பொலிகள் பிறக்கும்போது பேச்சுறுப்புகள் செயற்படும் நிலையில் கடையண் ணம் கீழ்நோக்கித் தாழ மூக்கறை வாயில் வழியாக மூச்சு மூக்கறை யினுள்ளே செல்லுமேயானால் அடைப்பொலி களுக்கு நிகரான மூக்கொலிகள் பிறக்கும். இக்காரணத் தாலேயே மூக்கொலிகளைக்கூட மூக்கடைப்பொலி கள் என்று சிலர் கூறுவர். எடுத்துக்காட்டாக, ( ப ) என்ற அடைப்பொலிக்கு இணையான மூக்கொலி ( ம ) வாகும். ( ப ) பிறக்கும்போது பேச்சுறுப்புகள் எவ்வாறெல்லாம் செயற்பட்டனவோ அவ்வாறே ( ம ) பிறக்கும்போதும் செயல்படுகின்றன. காற்று வாய் வழியாகவும், மூக்கு வழியாகவும் வெளியேறு வதைப் பொறுத்தே இவை வேறுபடுகின்றன.

அடைப்பொலிகள் அதிர்வொலியாகவோ ( Voic ed sound ) அதிர்வில்லா ஒலியாகவோ ( Voiceless sound ) இருக்கலாம். அடைப்பொலிகள் பிறக்கும்போது குரல்வளை மடல்கள் அதிருமானால் அவை அதிர்வு அடைப்பொலிகள் என்றும், குரல்வளை மடல்கள் அதிராமல் பிறந்தால் அவை அதிர்விலா அடைப் பொலிகள் என்றும் கூறுவர். உறிஞ்சடைப் பொலிகள் ( Implosive stops ) என்றொரு வகை சுவாகிலி போன்ற ஆப்பிரிக்க மொழிகளில் காணப்படுகின்றன.

பேச்சுத் தமிழில் பத்து அடைப்பொலிகள் இருப்ப தாகத் தமிழ் ஒலியல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். அவற்றில் ஐந்து அதிர்விலா அடைப்பொலிகளாகும். மற்ற ஐந்தும் அதிர்வு அடைப்பொலிகளாகும். அதிர்வு அடைப்பொலிகள் ( b, d, g முதலியன ) தமிழில் மொழி முதல் வழங்கும் இயல்பு இல்லை. குரு, குணம் போன்ற வடசொற்கள், உச்சரிக்கப்படும் போது அதிர்வுடன் தோன்றுகின்றன. மேலும் அதிர்வு அடைப் பொலிகள் அவ்வற்றின் இணை மூக்கொலிகளை அடுத்து வரும்போது ( தங்கம், பந்து, பஞ்சு போன் றவை ) சிறப்பாகப் பாதுகாக்கப்படுகின்றன. மூச்சுடை

அடைப்பொலிகள் தமிழ் மொழியில் இல்லை. மலையாளம், தெலுங்கு போன்ற பிற திராவிட மொழிகளிலும், வடமொழிகளிலும் காணப்படுகின்றன.

- ஆ. கா.

**அண்மைவிதி :** அரிசுடாட்டில் மூன்று முதனிலை இயைபு விதிகளைப் பற்றிக் குறிப்பிட்டதைத் தொடர்ந்து தாமசு பிரௌன் ( Thomas Brown ) என்பவர் பல இரண்டாம் நிலை இயைபு விதிகளை உருவாக்கினார். அவ்விரண்டாம் நிலை விதிகளுள் ஒன்று அண்மைவிதி ( Law of Recency ) ஆகும்.

இயைபுவிதி மூலம் பொதுவாக எண்ணங்கள், உணர்வுகள், இயக்கங்கள் ஆகியவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டு இணைக்கப்பட்டுள்ளன என்பதை விளக்கலாம் என அரிசுடாட்டில் காலம் முதல் உளவியல் அறிஞர்கள் எடுத்துரைத்து வந்துள்ளனர். அக்கருத்தின் படி ஒட்டணிமை விதியும் ( Law of Contiguity ) ஒருமித்த விதியும் ( Law of Similarity ) முதனிலை இயைபு விதிகளாயின. முதன்மை விதி ( Law of Primacy ), அண்மை விதி, நிகழ் விரைவு விதி ( Law of Frequency ) தெளிர் நிலை விதி ( Law of Vividness ) ஆகியன இரண்டாம் நிலை விதிகளாயின. அண்மை விதியாவது, அண்மைக்காலத்தில் புலன்களுக்கு எதிர்ப்பட்டவையைக் கொண்டு இயைபுபடுத்தி நினைவு கூர்வது ஆகும். இவ்விதியை அடிப்படையாகக் கொண்டு உளவியல் வல்லுநர்கள் கற்றலின் தன்மையைப் பற்றியும், மறதியின் காரணத்தைப் பற்றியும், மேலும் சமூகச்சூழலில் மற்றொருவரைப் பற்றி எண்ணம் படிவதைப் பற்றியும் விளக்கியுள்ளனர்.

கற்றலின் போது பெரும்பான்மையோர் தொடக்கத்தில் ஊன்றிக் கற்பதால் முதலில் கற்பவை வலுவான நினைவுக்கோடு உடையனவாக உள்ளன. எனவே, கற்றபின் நினைவுகூரும்போது தொடக்க நிலை விதியின் காரணமாக முதலில் கற்றவற்றைத் தங்குதடையின்றி வெளிக்கொணர முடிகின்றது. ஆனால், சிற்சில சமயங்களில் நினைவு கூரும்போது அண்மையில் கற்றவற்றைச் செவ்வையாக எவ்விதத் தவறும் இன்றி நினைவுபடுத்த முடிகின்றது. நடத்தைக் கோட்பாட்டினர் மறதிக்குக் குறுக்கீடு காரணமாக இருக்கிறது என்று கருதுகின்றனர். குறுக்கீடு இரு வழிகளில் நேரலாம். 1. முன்னோக்குத் தடங்கல் 2. பின்னோக்குத் தடங்கல்.

சமூக உளவியல் வல்லுநர்கள் பல ஆய்வுகள் நடத்தி எப்போது முதன்மைவிதி செயற்படுகிறது. எப்போது அண்மைவிதி செயற்படுகிறது என்பவற்றைக் கூறியிருக்கின்றனர். ஒருவரைப் பற்றி எண்ணம் உருவாகும்போது பெரும்பாலும் முதன்மை விதியே செயற்படுகிறது. அதாவது புதிதாக அறிமுகப்படுத்தப்படும் ஆளைப் பற்றி முதன்முதலாக என்ன கூறப்படுகின்றதோ அதே எண்ணம் கடைசி வரை நிலைத்திருக்கும் என்பதாகும். ஆனால் முன்னரே அறிமுகப்படுத்தப்பட்ட ஆளைப் பற்றியோ பொருளைப் பற்றியோ வரிசை வரிசையாகப் பல செய்திகளை அளிக்கும்போது, மிக அண்மையில் அளித்த செய்தி ஏனைய செய்திகளைக் காட்டிலும் பச்சைப் பசேலென அவர்கள் எண்ணத்தில் இடம் பெற்றிருக்கும்.

லூசின்சு ( Luchins - 1957 ) என்பவர் ஒரு சீரான ஆய்வினை நடத்தி, முதன்மைவிதியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தாலும் அவரே தொடக்கத்தில் உருவாகும் எண்ணம் எவ்வளவு தவறான வழிகாட்டும் என்பதையும் தெளிவுறுத்தியுள்ளார். ஓர் ஆளைப் பற்றி இரு விதமாகத் தனித்தனிக் காலங்களில் கூறி அவ்விரு காலங்களுக்கும் இடையே தகுந்த இடைவெளியைச் சோதனைக்குட்படுத்தப்பட்டவர்களுக்கு அளித்து அவ்விடைவெளியின்போது எந்த ஆளைப் பற்றி எண்ணம் உருவாகச் செய்கிறார்களோ அதற்கு எவ்விதத் தொடர்புமில்லாமல் இருக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்து, பின்னர் அவர்களின் அந்த ஆளைப் பற்றிய எண்ணத்தை உற்று நோக்கியபோது, அண்மை விதிக்கு ஆதாரம் தரும் வகையில் அந்த ஆளைப் பற்றி இறுதியாக என்ன சொல்லப்பட்டதோ அதைத்தான் அவர்கள் வெளிப்படுத்தி இருந்தனர். அதன்மூலம் அண்மைவிதி பற்றித் தெரிந்து கொண்டாலும் இன்னும் முடிவாக இன்னின்ன சூழ்நிலைகளில் அண்மைவிதி செயற்படுகிறது என ஆய்வாளர்களால் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை.

சோதனை உளவியலில் இயைபு சோதனைகள் மூன்று வகையாக நடத்திக் காட்டப்படுகின்றன. அம்மூன்று வகைகளாவன 1. தடையில் இயைபு சோதனை, 2. கட்டுப்பாட்டு இயைபு சோதனை, 3. தொடர் இயைபு சோதனை. இம்மூன்று வகைகளுள் இரண்டாவதான கட்டுப்பாட்டு இயைபு

சோதனையைத் தவிர ஏனைய இரு வகைகளைச் சார்ந்த சோதனையை நடத்தும்போது அண்மைவிதி செயற்படுகிறதா என்று சோதித்துப் பார்க்கலாம். கட்டுப்பாட்டு இயைபில் சோதனைக்குட்படுத்தப் படுபவர் பெரும்பாலும் அவருக்கு அளிக்கப்படும் தூண்டல் சொல்லிற்கு எதிர்மறைப் பொருளைக் கொடுக்க வேண்டி இருப்பதால் அண்மைவிதியை அங்குக் காண முடியாது. எடுத்துக்காட்டாக, இருட்டு என்ற தூண்டல் சொல்லிற்குத் துலங்கல், கட்டுப்பாட்டு இயைபு சோதனையில் வெளிச்சம் என்று இருக்கும். ஆனால் தடையில் இயைபு சோதனையிலோ, தொடர்பு இயைபு சோதனையிலோ இருட்டு என்பதற்கு இரவு, மின்சாரக் கோளாறு, கறுப்பு, அச்சம் என அடுக்கிக் கொண்டே போகலாம். அண்மை யில் சோதனை அறையில் மின்சாரக்கோளாறின் காரணமாக விளக்கு அணைந்து போயிருந்தால் மின் சாரக் கோளாறு என்ற துலங்கல் அண்மை விதியைச் சுட்டும். ஆனால் அச்சம் என்பது துலங்களாக இருந் தால் சோதனைக்குட்படுத்தப்பட்டவரைப் பின்னர், 'ஏன் அச்சம் என கூறினீர்?' என வினவினால், ஒரு வேளை தாம் சின்ன வயதிலேயோ அல்லது சின்ன வயது முதற்கொண்டோ இருட்டு என்றால் அச்சப் படுவதாகச் சொன்னால் அது அண்மைவிதியைச் சுட் டாது. முதன்மை விதியைச் சுட்டிக் காட்டும். இவ் வாறு சில எளிய சோதனைகள் மூலம் இயைபின் விதி முறைகளைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

- வ. தே. சா.

**அண்மை விளைவு :** வாழ்க்கையில் நீண்ட நாள் களுக்கு முன்பு நடந்த ஒரு சில நிகழ்ச்சிகளை இன்றும் நினைவில் வைத்துக்கொள்ள முடிகிறது. மாறாக, சென்ற வாரம் நடந்த சில நிகழ்ச்சிகளை அல்லது படித்த செய்திகளைச் சிறிது கூட நினைவில் நிறுத்த இயலவில்லை. நினைவு, பதிவு செய்தல் (Recording), சேமித்து வைத்தல் ( Retention ), திரும்பப் பெறுதல் ( Retrieval ) என்ற மூன்று நிலைகளில் செயற்படு கிறது. முதலில் வெளிஉலகினின்று பெறப்படும் புலன் உணர்ச்சி அனுபவங்கள், பெரும்பாலும் கண் களின் வரவேற்பு அறை போன்ற புலன் உணர்ச்சி சேமிப்புப் பகுதியில் பெறப்படுகின்றன. இவை ஒரு நொடிக்கும் குறைவான கால அளவில் இருத்தி வைக்கப்பட்டு உடனடியாக மறக்கப்படும். எ.கா. ஒரு நொடியில் தோன்றும் மின்னலின் ஒளி, ஊசி முனை யில் குத்தப்படும் உணர்வு, ஒரு கிளை ஒடியும் ஓசை போன்றவை மிகமிகக் குறுகிய காலத்திற்கு இந்தப் பகுதியில் வைக்கப்படுகின்றன. வானொலியை நிறுத்தி, சிறிது நேரம் வரை கூட அதன் இசை கேட் கப்படுவதாக உணரப்படுகிறது. செவி வழி நினைவு, கண் வழி நினைவை விட சிறிது அதிக அளவில் நீடிப்பதாகக் கூறுகிறார்கள். இது போன்றே மணம் நிறைந்த ஒரு சோப்பை முகர்ந்தவுடன் ஒருவருக்கு அந்த நறுமணம் தன் குழந்தைப் பருவத்தில் தனது பாட்டியாருடன் கழித்த நாள்களையும் மணம் நிறைந்த அவரது அறையினையும் நினைவில் கொண்டு வந்தது என்பர்.

**குறுகிய கால நினைவுப்பகுதி (Short time Memory):** இது இப்போது பயன்படுத்தும் செய்தியை அடக்கிச் செயல்படும் பகுதியாகும். ஒரு தொலைபேசி எண் ணைப் பார்த்தவுடன் அதனை இரண்டு அல்லது மூன்று முறை சொல்லிப்பார்த்துக்கொண்டே பிறகு எண்களைச் சுழற்றுகிறீர்கள். இதற்கிடையில் தொலை பேசியை அடைவதற்குள் ஒரு நண்பர் வந்துவிட்டால், அந்த எண்ணை மறந்து விட்டால், மீண்டும் ஒரு முறை பார்க்க வேண்டியுள்ளது. எனவே, அந்தத் தொலை பேசி எண்ணை ஓரிருமுறை திரும்பத் திரும்ப மனத் திற்குள் சொல்லிக் கொண்டிராவிட்டால் 15லிருந்து 18 நொடிகளில் எண்ணையே மறந்திட வேண்டிய நிலை உருவாகின்றது. கவனம் திசை திருப்பப்பட்டால் நினைத்துக் கொண்டிருப்பவை மறந்துவிடும் என்ற உண்மை இதனால் தெளிவாகிறது.

குறுகிய கால நினைவு நிலையில் காணப்படும் செய்திகளை நீண்ட நாள் நினைவு ( Long Time Memory ) கொள்ள வேண்டுமானால் அவை குறி களாகச் சுருக்கப்பட்டு, மாற்றப்பட்டு நெடுங்கால நினைவிற்கு மாற்றப்பட வேண்டும். இப்பகுதி, பரப்பில் மிகப் பெரியது. கற்றவை இங்குப் பெருமளவு நிலைத்துத் தங்குகின்றன. மீண்டும் செய்திகளையோ, அனுபவங்களையோ மீட்டுக் கொணர வேண்டுமேயானால் குறிகளாக உள்ள செய்திகள் அனுபவங்களாக மாற்றப்படுகின்றன. அவை மீண்டும் உணரப்பட்டு நினைவிற்கு வருகின்றன.

ஒரு வரிசையில் காணப்படும் உருப்படிகளை, அவை காணப்படும் இடத்தைப் பொறுத்து மீண்டும் நினைவிற்குக் கொண்டுவரவல்ல ஒரு மனிதனின் திறமையே வரிசை நிலை விளைவு எனப்படுகிறது. இது முதல் நிலை விளைவு ( Primacy Effect ),

அண்மை விளைவு ( Recency Effect ) என்ற நிலை களில் காணப்படுகிறது. ஒரு நீண்ட பட்டியலில் தொடக்கத்தில் உள்ள உருப்புகள் நன்கு நினைவிற்குக் கொண்டு வரப்பட்டால் தொடக்க விளைவு ஏற்படுகிறது எனலாம். கடைசியில் உள்ள உருப்படிகள் நினைவிற்குக் கொண்டு வரப்பட்டால் அண்மை விளைவு ஏற்படுகிறது எனலாம். அண்மை விளைவு குறுகிய கால நினைவுகளிலிருந்து செய்தியைத் தருவிப்பதால் ஏற்படுவதாகும். சில சமயங்களில் வரிசையின் நடுவே இருக்கும் பெயர்கள் எந்த வகையிலோ, நன்கு அறிந்தவையாக இருப்பின் அவற்றை நினைவில் கொள்ள முடிகிறது. இவ்வாறு ஓர் அசாதாரணமான உருப்படியை வரிசையில் எந்த நிலையில் காணப்பட்டாலும் பொருட்படுத்தாது நினைவில் வைக்கும் தன்மையை அதனைக் கண்டறிந்த உளவியல் வல்லுநர் பெயரில் வான் இரெசுடாப் விளைவு ( Von Restorff ) என்று குறிக்கின்றனர்.

நடைமுறை வாழ்க்கையில் தொடக்க விளைவும், அண்மை விளைவும் காணப்படும் பல சூழ்நிலைகளைக் காணலாம். ஒருவரைப் பற்றிய செய்திகள் ஒன்றுக்கொன்று முரணான நிலையில், ஆனால் ஒட்டு மொத்தமாக ஒரே நிலையில் கிடைப்பதாகக் கொண்டால் அப்போது முதலில் கிடைக்கப் பெறும் செய்திக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டு முதலில் அவரைப் பற்றி ஏற்படும் கருத்து வலுவுடையதாக அமைகிறது. அது அடுத்து வரும் முரணான தகவல்களுக்கும் ஈடு செய்து கொள்ளவோ முதலில் காணப்பட்ட உண்மையான ஆளுமைத் தன்மையிலிருந்து எதிர்பாராத விதமாக நிகழ்ந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ளவோ துணைசெய்கிறது. வேலைக்கான நேர் முகப்பேட்டிகள், முதல் சந்திப்புகள், அரசியல் பேச்சுகள் போன்ற சூழ்நிலைகளில் முதலில் ஏற்படும் எண்ணத்திற்குத் தான் அதிக மதிப்பு. ஆனால் அண்மை விளைவுகளைப் பொறுத்தவரை முதலில் ஏற்பட்ட தவறான எண்ணங்கள் மாற்றி அமைக்க வேண்டிய நிலையில் அண்மை விளைவுகள் ஏற்படுத்தப்படுகின்றன. வேடிக்கையாகக் கூற வேண்டுமென்றால், இன்றைய நெருங்கிய நண்பர்கள் சில சமயங்களில் முதன்முதலில் சந்தித்த போது தங்களுக்குள் ஒருவரைப்பற்றி ஒருவருக்கு ஏற்பட்ட தவறான எண்ணங்களையும், கருத்துகளையும் நினைத்துச் சிரிப்பதுண்டு. காலப்போக்கில் தொடக்க விளைவு மறக்கப் பட்டு அண்மை விளைவினால் ஒருவர் மற்றொரு வரது சிறப்புகளையும் பெருமைகளையும் உணர்ந்து கொள்ள வாய்ப்பு கிடைக்கின்றது.

- கி. அ.

**அப்துல் ரகுமான், துங்கு** : மலேயா நாடு விடுதலை அடைந்ததும் அதன் முதல் பிரதமராகவும் (1957 - 63 ), பல்வேறு இன மக்களைக் கொண்ட மலேசியக் கூட்டரசு 1963இல் உருவானதும் அதன் முதல் பிரதமராகவும் விளங்கியவர் துங்கு அப்துல் ரகுமான் ஆவார். இவருடைய முழுப்பெயர் எங்தெராமத் முலிய துங்கு அப்துல் ரகுமான் புத்ர அல்-காச்சு என்புதாகும். துங்கு என்னும் சொல்லுக்கு 'இளவரசர்' என்பது பொருளாகும். அந்நாட்டு மக்கள் இவரைப் **பாபா மலேசியா** ( Bapa Malasiya ) என அன்புடன் அழைத்தனர்.

இவர் கெதா ( Kedah ) நாட்டின் சுல்தான் அப்துல் கமீத்து கலீம் சா ( Abdul Hamid Halim Shah )வின் ஏழாவது மகனாக, அந்நாட்டின் தலைநகர் அலர் சுடார் ( Alor Star ) என்னுமிடத்தில் 1903ஆம் ஆண்டு பிப்பரவரி 8ஆம் நாள் பிறந்தார். தாய்லாந்து நாட்டுக் காரரான இவருடைய தாயாரின் பெயர் சே மெஞ்சலரா ( Che Menjalara ) என்பதாம். மலேயா, தாய் லாந்து ஆகிய நாடுகளில் கல்வி கற்ற பின்னர், இங்கி லாந்து சென்று 11 ஆண்டுகள் அங்கு கல்வி பயின் றார். கேம்பிரிட்சு பல்கலைக்கழகத்திலுள்ள புனித காதைரன் கல்லூரியில் ( St. Catherines College in Cambridge ) பயின்று, 1925ஆம் ஆண்டு இளங்கலைப் பட்டம் பெற்றார். பின்னர் லண்டன் மாநகரிலுள்ள இன்னர் டெம்பிளில் ( Inner Temple ) ஐந்து ஆண்டுகள் சட்டம் பயின்றார், எனினும் பட்டம் பெறாமலேயே 1931இல் தாய்நாடு திரும்பினார். இலங்காவை ( Langkawai ) என்னுமிடத்தில் இவர் மாவட்ட அலுவலராகப் பணிபுரிந்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இவர் இங்கிலாந்து சென்று சட்டக் கல்வியைத் தொடர்ந்து 1949இல் வழக்குரைஞர் பட்டம் பெற்றார்.

மலேசியா திரும்பிய இவர் அந்நாட்டின் விடுதலைக்காகப் பாடுபடலானார். இவர் 1951இல் ஐக்கிய மலேசிய தேசிய நிறுவனத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது அந்நாட்டிலிருந்த மலேயன் சீனக்கட்சியுடன் கூட்டு சேர்ந்து தம்

கட்சிஸ்ய வலிமை மிக்கதாகச் செய்ய விரும்பினார். ஆனால், இவருடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் 1955 இல் நடைபெறவிருந்த தேர்தலில் சீனர்களுக்கு அதிக இடங்களை ஒதுக்க விரும்பவில்லை. மற்றும் மலேயா இசுலாமியத் தலைவர்கள் அந்நாட்டு இசுலாமியர் இசுலாமியர்களுக்கு மட்டுமே வாக்களிக்க வேண்டுமெனக் கூறினர். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது இவர் மலேயச் சீனக் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கூட்டுக்கட்சியைத் தோற்றுவித்தது பெரிய சாதனையாகும். அதன் விளைவாக 1955 இல் நடந்த முதல் பொதுத்தேர்தலில் இவருடைய கட்சிக்குப் பெரும்பான்மை இடம் கிடைத்தன. அந்நாட்டு விடுதலைக்காகப் போராடிய இவர் 1956 சனவரியில் மலேய விடுதலைத் தூதுக்குழுவிற்குத் ( Merdheka Mission ) தலைமை தாங்கி இங்கிலாந்து சென்று அந்நாட்டை மலேயாவிற்கு உடனே தன்னாட்சியும், 1957ஆம் ஆண்டு ஆகசுடு 31இல் விடுதலையும் வழங்குவதற்கு இணங்கச் செய்தார். விடுதலை பெற்ற மலேசியாவின் முதல் பிரதமரானார். இவருடைய பெருமுயற்சியின் பயனாக இங்கிலாந்து காப்பு நாடுகளாகவிருந்த மலேயா, சிங்கப்பூர் வடக்கு போர்னியா ( இன்றைய சாபா - Sabah ), சராவக் ஆகியவை இணைக்கப்பட்டு 1963 செப்டம்பரில் மலேசியக் கூட்டரசு உருவானது. அதன் முதல் பிரதமராகத் துங்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அந்நாட்டின் அயல்நாட்டுக் கொள்கையை இவர் சிறப்பான முறையில் வகுத்தார். இங்கிலாந்துடனும், அதன் காமன்வெல்த்துடனும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தினார். இந்தியப் பிரதமர் நேருவும், துங்குவும் 1934இல் பினாங்கில் சந்தித்த திலிருந்து நெருங்கிய நண்பர்களாயினர். இருவரும் காமன்வெல்த் நடவடிக்கைகளில் இணைந்து செயல்பட்டனர். நேருவின் அழைப்பின் பேரில் துங்கு 1962இல் இந்தியா வந்தார்.

வயிற்றுப்போக்கின் விளைவாக இரத்தக்கசிவு ஏற்பட்டு உடல்நலம் குன்றிய துங்கு 1991 திசம்பர் 5 ஆம் நாள் மயக்கநிலையை ( Coma ) அடைந்தார். பின்னர் சிறு நீரகமும், இதயமும் வேலை செய்வதில் சிக்கல் ஏற்பட்டு மறுநாள் இரவு மரணமடைந்தார்.

- சி. இரெ.

**அப்பாத்துரையார், கா. :** நூறு புலவர்கள் ஒன்று சேர்ந்தாலும் கூட இவருடைய நூலறிவுக்கு முன்னால் இணையாகமாட்டார்கள் என்று பாரதிதாசனால் பாராட்டப்பெற்ற பெரும்புலவர் இவர். இவருடைய இயற்பெயர் நல்லசிவம் என்பதாகும். இவர் பிறந்த ஊர் கன்னியாக்குமரி மாவட்டத்திலுள்ள ஆரல்வாய் மொழி என்பதாகும். இவர் காசிநாதர் என்பவருக்கும் முத்தம்மாள் என்பவருக்கும் 24 - 6 - 1907இல் பிறந்தார்.

ஆரல்வாய் மொழி, குலசேகரப்பட்டினம், கோட்டாறு ஆகிய மூன்று ஊர்களிலும் தொடக்கக்கல்வியைப் பயின்றார். பின்னர் நாகர்கோயிலில் இசுக்காத்துக் கிறித்துவக் கல்லூரியில் இடைநிலை வகுப்புக் கல்வி பயின்றார். திருவனந்தபுரம் பேரரசர் கல்லூரியில் இளங்கலைக் கல்வியைப் பயின்று தேர்வுற்றார். திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் 1939இல் தமிழ் முதுகலைப் பட்டத்தைப் பெற்றார். இம்முதுகலைப் பட்டத்தைப் பெறுவதற்கு முன்னரேயே இந்தி மொழியில் ‘விசாரத்’ என்னும் பட்டத்தைப் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறு அகவையிலேயே தமிழுணர்வும் தமிழினவுணர்வும் இவருள்ளத்தில் செழுமையுற்றிருந்தன. கல்வியார்வமும், விரைந்து கற்கும் திறனும் எத்தகு அறிவுச் செய்தியையும் ஒரு சிறிதும் மறவாதபடி நெஞ்சத்திருத்தி நிலைப்படப் பதிந்துகொள்ளும் ஆற்றலும் இவருக்கு இயல்புகளாய் அமைந்திருந்தன. தமிழ் மொழியுடன் ஆங்கிலம், சமஸ்கிருதம், மலையாளம், இந்தி ஆகிய நான்கு மொழிகளையும் பள்ளிப் பருவத்திலேயே கற்றுத் தேறியிருந்தார். பின்னர் தெலுங்கு, கன்னடம், மராத்தி, குசராத்தி போன்ற திராவிட மொழிகளையும், அரபு, சப்பானியம், ஈபுரு, மலாயம் ஆகிய மொழிகளையும், பிரெஞ்சு, செர்மன், உருசியம், இத்தாலியம் ஆகிய ஐரோப்பிய மொழிகளையும் அரும்பாடுபட்டு கற்றுப் பன்மொழிப்புலவர் என்னும் பொருட்குறிப்புச் சொல்லுக்குப் பொருந்தியவரானார்.

சென்னை சேப்பாக்கத்தில் அப்பொழுதிருந்த செங்கற்பட்டு மாவட்டக் கூட்டுறவுத்துறை அலுவலகத்தில் 1930ஆம் ஆண்டில் முதன்முதலாகப் பணியிற் சேர்ந்தார். ஆறு திங்களுக்குப் பின்னர் திராவிடன் எனும் செய்தித்தாளின் துணையாசிரியராகப் பொறுப்

பேற்றார். ஆறு திங்கள் கழிந்ததும், நுங்கம்பாக்கத்தில் அப்போதிருந்த கல்வி இயக்குநர் அலுவலகத்தில் இரு திங்களும், சென்னை பூக்கடை அருகிலிருந்த பச்சையப்பன் கல்லூரி அலுவலகத்தில் ஆறு திங்களுமாக எழுத்தர் பணியில் ஈடுபட்டு உழைத்து வந்தார். இதழியல் துறை நாட்டங் காரணமாக **நயன்மை** (Justice) என்னும் ஆங்கில இதழின் துணையாசிரியராக ஆறு திங்கள் பொறுப்பேற்றுச் சிறப்புறப் பணியாற்றி வந்தார்.

நாகர்கோயிலில் இயங்கிய துளசி தனிப்பயிற்சிக் கல்லூரியில் 1932 - 1934 ஆகிய ஆண்டுகளில் ஆங்கிலம் பயிற்றும் ஆசிரியராகப் பொறுப்பேற்று இயங்கியதோடு மட்டுமல்லாமல், அப்பொறுப்புக் காலத்திடையே இந்தியா, உலோகோபகாரி, சினிமா உலகம் ஆகிய நாளிகைகட்குக் கட்டுரை வரையும் எழுத்தாளராகவும் விளங்கினார். காரைக்குடி சா. சு. சுப்ரமணியம் குருகுலத்தின் தலைமை ஆசிரியராய் 1934 - 35இல் விளங்கினார். அப்பொழுது **குமரன்** இதழுக்குத் துணையாசிரியர் பொறுப்பேற்றுச் சிறப்புற நடத்திக் காட்டினார்.

1935ஆம் ஆண்டு முதல் 1939ஆம் ஆண்டு வரை திருநெல்வேலி மாவட்ட வாழ்க்கையை மேற்கொள்ளவேண்டிய சூழல் இவருக்கு ஏற்பட்டது. அப்பொழுது இந்திமொழி பரப்புத் தொழிலை மேற்கொண்டிருந்தார். நாசரத்து ஆங்கில உயர்நிலைப் பள்ளியில் 1936 இலும், திருநெல்வேலி இந்துக் கல்லூரியில் 1937 -39 ஆகிய ஆண்டுகட்கு இடையிலுமாக இந்தி ஆசிரியராகப் பணியாற்றினார். 1940ஆம் ஆண்டில் மீண்டும் சென்னை திரும்பினார். அப்பொழுது சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி இளைஞர் கல்வியைப் பெற்றார். உடற்பயிற்சிக் களத்தில் அப்பொழுது அவருக்குக் கால் எலும்பு முறிவுற்றது.

அப்பாத்துரையார் அவர்களுக்கும் பாணர்குடியைச் சேர்ந்த "நாச்சியார்" என்னும் அம்மையாருக்கும் 1933இல் திருமணம் நிறைவேறியது. 1939இல் நாச்சியார் அம்மையார் காலம் எய்தினார். பிறகு அலர்மேலு அம்மையாரை மறுமணம் புரிந்துகொண்டார். அரசியல் தலைவர்களான காந்தியடிகள், பெரியார், அண்ணா ஆகியவர்களின் தொடர்பு இவருக்கு இருந்தது. இந்நிலையில் மீண்டும் செட்டிநாடு சென்றார். கோனார்ப்பட்டு சரசுவதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

செட்டிநாட்டிலிருந்து 1944இல் சென்னைக்கு மீண்டும் வந்து சேர்ந்தார். பாவேந்தர் பாரதிதாசனார் உதவியால் 'விடுவிப்பாளன்' (Liberator) என்னும் ஆங்கில இதழின் துணையாசிரியராக அமர்த்தப்பட்டார். இதில் பத்துத் திங்கள் கால அளவுக்குப் பணிபுரிந்தார். பிறகு 'விடுதலை' இதழின் துணையாசிரியராக விளங்கினார். விடுதலை இதழின் துணையாசிரியராக விளங்கினார். விடுதலை இதழில் பத்துத் திங்கள் பணியாற்றிய பின்னர் 1945 - 46இல் சென்னை முத்தியால் பேட்டை உயர்நிலைப்பள்ளியின் தமிழாசிரியராகப் பொறுப்பேற்றார்.

நடுவண் அரசின் மக்கள் செய்தித் தொடர்பு அலுவலகத்தில் 1947ஆம் ஆண்டு முதல் 1949ஆம் ஆண்டு வரையிலான கால அளவில் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்தார். எவ்வகை அலுவல் வாய்ப்பும் கிட்டாமல் 1949 முதல் 1959 வரை பத்தாண்டு கால நீண்ட இடைவெளியில் பொதுத் தொண்டுகளில் ஈடுபட்டு வந்தார். அரிய பல நூல்களை எழுதி அவற்றைப் பதிப்பகங்களின் வாயிலாக வெளிப்படுத்தும் சூழல் இக்கால இடைவெளியில்தான் இவருக்குச் சிறப்பாக அமைந்தது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலம் - தமிழ் சொற்களஞ்சியத்தின் முதன்மைப் பதிப்பாசிரியராக விளங்கிய முனைவர் அ. சிதம்பரனார் அவர்களுக்குத் துணையாக 1959 முதல் 1965 வரை துணைப்பதிப்பாசிரியராக விளங்கிப் பெரும் பங்கு ஆற்றினார். பிறகு தமிழ்நாடு சட்டத் துறை ஆட்சி மொழி ஆணையத்தின் உறுப்பினராகவும் சில ஆண்டுகள் பணியாற்றினார்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கோனார்ப்பட்டு தன்மதிப்புக் கழகத்தில் 1942 - 43இல் பாரதிதாசனாரின் தொடர்பு இவருக்கு வாய்த்தது. "அப்பாத்துரை கொண்டே ஆயிரம் நூல் செய்க தப்பா துயரும் தமிழ்" என்றவாறு பாரதிதாசனார் எழுதியுள்ள குறள் வெண்பா அப்பாதுரையாரின் அறிவின்மீதும் அவரின் தமிழ்நல நோக்கின்மீதும் பாவேந்தர் கொண்டிருந்த நம்பிக்கையையும் மதிப்பையும் காட்டவல்லது. இவரால் எழுதி இதுவரை வெளிவந்த நூல்கள் ஏறத்தாழ 180 ஆகும்.

மொழி, இலக்கியம், வரலாறு, சமயம், அறிவியல், பாவியல், அகராதியியல், அரசியல், மாந்தவியல் முதலிய பல்வேறு துறைகளில் மிக ஆழங்காற்பட்ட அறிவு நூல்களை வாரி வழங்கியிருக்கும் இவர்தம் வெளியீடுகளுக்கெல்லாம் பதிப்பகத்தார்களிட

மிருந்து பெற்ற அறிவுக்கூலி மிகமிகக் குறைவு. எனவேதாம் 1989ஆம் ஆண்டு இவர் மறைந்த பின் வீட்டாருக்காக வைத்துச்சென்றது ஏறத்தாழ ஐந்திலக்கம் உருவாக்கள் கடன் சுமை மட்டுமே.

இவருக்கு இவர் வாழ்நாளில் கிடைத்த பெருமைகளும் பட்டங்களும் பாராட்டுகளும் மிகுதி. 1961 இல் சென்னைத் தமிழ் எழுத்தாளர் கழகத்தின் தலைவராயிருந்தார். தமிழகப் புலவர் குழு உறுப்பினராக இறுதி வரையிருந்தார். பாரீசில் 1970இல் நடைபெற்ற உலகத் தமிழ்மாநாட்டில் அன்றைய தமிழக முதல்வர் ம.கோ.இராமச்சந்திரனார் முன்னிலையில் இந்தியத் தலைமையமைச்சரால் பொற்கிழியும் ஒண்திருகும் வழங்கப்பெற்றது. 1973இல் **செந்தமிழ்ச் செல்வர்** பட்டம் தரப்பெற்றது. சேலம் தமிழகப்புலவர் குழுக் கூட்டத்தில் **சான்றோர்** பட்டமும், **தமிழன்பர்** பட்டமும் தரப்பெற்றன. 1981ஆம் ஆண்டு சனவரி 26இல் தமிழ்நாடு இயல் இசை மன்றத்தின் சார்பில் **கலைமாமணி** பட்டம் அளிக்கப்பெற்றது. 1983ஆம் ஆண்டு தமிழக அரசு திரு.வி.க. விருதும், தங்கப் பதக்கமும் அளித்தது. அதே ஆண்டில் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இவருக்குப் **பேரவைச் செம்மல்** என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

இங்கிலாந்து ஆக்சுபோர்டு பல்கலைக்கழகம் அங்குப் படிக்கும் மேற்பட்டப்படிப்பு மாணவர்களுக்கு இவரின் **தென்னாட்டுப் போர்க்களங்கள்** என்னும் நூலைப் பாடநூலாக வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. தன்னின் தனிநலம் மறந்து, தமிழ் மொழி இன நாட்டு நலம் கருதி இறுதி வரை பல துறை அறிவுத் தொண்டாற்றி அளப்பரிய பயனை நல்கி இறவாப் புகழ் எய்தியவர் இவர்.

- ப. அ.

**அப்பே–துபே**: இவர் இந்தியாவில் 31 ஆண்டுகள் சமய ஊழியம் செய்து வந்த உரோமன் கத்தோலிக்கப் பாதிரியார். இவர் பிரெஞ்சுக்காரர். இவர் தென்னிந்திய மக்களிடம் நெருக்கமாகப் பழகினார். இந்துக்களின் சமூக, சமய வாழ்க்கையைப் பற்றியும் பழக்க வழக்கம், சமயச் சடங்குகள் பற்றியும் கூர்ந்து கவனித்து அவற்றை நூலாக எழுதியுள்ளார். இவர் சீன் அந்தோணி துபே ( Dubois Jean Antoine ) எனவும் அழைக்கப்பெறுகிறார். இவரது இலக்கியப் பணியும் சமுதாயப் பணியும் போற்றத்தக்கன. தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் இவர் வல்லவர்.

இவர் கி.பி. 1765இல் பிரான்சு நாட்டிலுள்ள புனித இரெமிசே ( St. Remeze ) என்னுமிடத்தில் பிறந்தவர். கி.பி. 1792ஆம் ஆண்டு சமயப் பணியில் அமர்த்தப்பட்டு, எந்தராசெரேசு மத பிராச்சார நிறுவனத்தின் ( Entrangeres Missions ) மூலம் இந்தியாவிற்குக் கிறித்தவ சமயப் பணியாற்ற அனுப்பப்பட்டார். இந்தியாவிற்கு வந்த இவர், பாண்டிச்சேரி சமயக் குழுவுடன் இணைக்கப்பட்டார். சில ஆண்டுகள் சென்னை மாநிலத்தின் தென் மாவட்டங்களில் சமயப் பணியாற்றினார். விவிலிய நூலின் செய்திகளை மக்களுக்குப் போதிக்குமுன்னர், இந்தியர்களைப் புரிந்துகொண்டு அவர்களது நம்பிக்கையைப் பெறுவதே முதற்கடமை எனக் கருதினார். இவர் இந்தியாவில் இருந்த காலத்தில் பெரும் பகுதியைத் தக்காணத்திலும், சென்னை மாநிலத்திலும் கழித்தார். தருமபுரி மாவட்டத்தில் இவர் சில காலம் சமயப் பணியாற்றினார். அப்பகுதி மக்களுடன் நெருங்கிப் பழகினார்.

இவர் மைசூர்ப் பகுதியில் தங்கி இருந்தபோழ்து, மக்களின் வறுமையைப் போக்குவதில் பெருந்தொண்டு புரிந்தார். பல பஞ்ச நிவாரணப் பணிகளை மேற்கொண்டார். 1803 - 1804இல் மட்டும் ஏறத்தாழ 25, 432 பேருக்கு அம்மை குத்தப்பட்டது. மக்கள் இவரது சேவையைப் பாராட்டி, "தாதா சுவாதி ஐயா வாரு" அல்லது "பெரும் பிரபு" என்று இவரை அழைத்தனர். கருமத்தம்பட்டி போன்ற பகுதிகளில் இவர் "ஐரோப்பியருள் புனிதர்" எனப் போற்றப்பட்டார். ஆங்கில கிழக்கிந்தியக் கழகத்தினர் இவரது பெருந்தொண்டினைப் பாராட்டி, தனி ஊக்க ஊதியம் அளித்தனர்.

விந்திய மலைக்குத் தெற்கே உள்ள மக்களைப் பற்றிய சமுதாய வாழ்க்கையை விரிவாக எழுதிய இவர் ஒரு சிறந்த எழுத்தாளர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தான் பிரெஞ்சு மொழியில் எழுதிய கையெழுத்துப் படிகளை இவர் கி.பி. 1806இல் மேசர் வில்சிடம் ஒப்படைத்தார். வில்லியம் பெண்டிங் பிரபு இக்குறிப்புகளை இரண்டாயிரம் பகோடாக் கள் ( ரூ. 8000 ) கொடுத்து வாங்கிக்கொண்டார். இவை ஆங்கிலத்தில் கி.பி.1816ஆம் ஆண்டு மொழி பெயர்க்கப்பட்டு, ஆங்கில கிழக்கிந்தியக் கழகத்தாரால்

வெளியிடப்பட்டன. இந்நூல், **இந்துக்களின் பழக்கவழக்கங்கள் மற்றும் சமயச் சடங்குகள்** ( Hindu Manners, Customs and Ceremonies ) எனும் தலைப்பில் வெளிவந்தது. பின்னர் இதன் விரிவான பதிப்பொன்று கி.பி. 1825இல் பிரெஞ்சு மொழியில் வெளியிடப்பட்டது.

தமிழை நன்கு கற்ற இவர் கி.பி. 1826இல் பஞ்ச தந்திரக் கதைகளைப் பிரெஞ்சு மொழியில் மொழி பெயர்த்தார். பின்னர் பரமார்த்தகுரு கதையையும் மொழிபெயர்த்தார். இவற்றால் இவரது இலக்கியத் தொண்டு புலனாகிறது. இந்தியாவில் 31 ஆண்டு காலம் சமயப்பணி புரிந்த இவர், இந்துக்களைக் கிறித்தவ சமயத்திற்கு மாற்றுவது எளிதன்று என்று உணர்ந்தார். தமது சமயப் பணியில் தோல்வியைத் தழுவிய இவர் கி.பி. 1823ஆம் ஆண்டு பாரிசுக்குத் திரும்பினார்.

சமயப் பணியில் இவாது முயற்சிகள் வெற்றி பெறாவிட்டாலும், இந்துக்களின் பழக்க வழக்கங் கள் பற்றிய விரிவான செய்திகளை, இவர் உலகிற்கு உணர்த்தியுள்ளார். தக்காணத்தில் கொண்டாடப் பெற்ற திருவிழாக்களைப் பற்றியும் இவர் தெளிவாக விவரித்துள்ளார். தமிழ்நாட்டிலும், தெலுங்கு நாட்டி லும் நவராத்திரி விழா, தீபாவளிப் பெருவிழா, பொங்கல் விழா ஆகியவை மக்களால் மிகச்சிறப்பு டன் கொண்டாடப்பட்டு வந்ததாக அப்பே - துபே குறிப்பிட்டுள்ளார். உடன்கட்டை ஏறும் வழக்கம் பற்றி இவர் விவரித்துக் கூறுகிறார். தாம் நேரில் கண்ட 'உடன்கட்டையேறிய' நிகழ்ச்சி பற்றி விளக்கு கிறார். வங்காளத்தில் இப்பழக்கம் மிகுதி என்றும், கி.பி. 1817இல் மட்டும் 706 உடன்கட்டையேறல்கள் நடந்தன என்றும் குறிப்பிட்டுள்ளார். இவ்வழக்கம் தென்னிந்தியாவில் மிகுதியாக இல்லை எனவும் இவர் கருத்துத் தெரிவிக்கிறார்.

பாரிசு திரும்பிய அப்பே - துபே எந்தராசெரேசு நிறுவனத்தின் இயக்குநராக அமர்த்தப்பட்டார். பின்னர் 1836 - 39 ஆம் ஆண்டுகளில் திருமட முதல்வ ராகப் ( Superior ) பணிபுரிந்தார். நெடுநாளைய சேவைக்குப்பின் இவர் 1848ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17ஆம் நாள் மறைந்தார்.

- ம.இரா. த.

**அபராசிதவர்மன் :** பிற்காலப் பல்லவ வேந்த னாம் கம்பவர்மனுக்கும் கங்க இளவரசி விசயாவிற் கும் மகனாகத் தோன்றியவன். இவன் ஏறத்தாழ கி.பி. 870இல் பல்லவ அரியணையேறினான். இவன் தனது தந்தையுடன் தொடக்கக் காலத்திலிருந்தே இணைந்த ஆட்சியை மேற்கொண்டதாகத் தெரிகிறது. இவன் திருப்புறம்பியப் போரில் தனது எதிரி களின் வலிமைமிக்க கூட்டணிப்படைகளை வெற்றி கண்ட மாவீரன். மேலைக் கங்கருடன் நட்புறவு கொண்டு, இவன் தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டான்.

**சான்றுகள் :** இவ்வேந்தரின் திருவொற்றியூர்க் கல்வெட்டு, திருத்தணிக் கல்வெட்டுகள், மேலைக் கங்கரின் செப்பேடுகள், அண்மையில் கண்டுபிடிக்கப் பட்ட அபாரசிதவர்மனின் வேலஞ்சேரிச் ( திருத்தணிச் செப்பேடுகள் ) செப்பேடுகள் ஆகியன இவரது ஆட்சியின் மாட்சி பற்றி அறிந்து கொள்ளத் துணை புரிகின்றன. வேலஞ்சேரிச் செப்புப் பட்டயங்கள் இவ்வேந்தனின் ஒன்பதாம் ஆட்சியாண்டில் வெளி யிடப்பட்டன. இதில் இவ்வேந்தனைப் பற்றிய புதிய செய்திகள் இடம் பெறுகின்றன.

**வெற்றிகள் :** மாவீரனான இவன் பாணவேந்த னின் யானைகளைக் கொன்றதாகவும், பாண்டியரின் நகரான காரணையைக் கைப்பற்றியதாகவும், சோழ னைச் சிற்றாற்றூரில் வென்றதாகவும் வேலஞ்சேரிச் செப்பேடுகள் தெரிவிக்கின்றன. எனவே, இவன் பாணன், பாண்டியன், சோழன் ஆகிய மூவரையும் வென்றுள்ளமை புலனாகும். இப்போர் நடவடிக்கை கள் ஏறத்தாழ கி.பி.870இல் தொடங்கி 879இல் முடிவு பெற்றிருத்தல் வேண்டும். இதனால் அபராசி தன் தனது அரசியலை விரிவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட் டான் எனலாம். இரண்டாம் வரகுண பாண்டியன், பல்லவர்க்குட்பட்ட சோனாட்டுப் பகுதியில் ஊடுரு வல் செய்து வந்தான். பெண்ணையாறு வரை முன் னேறினான். பாண்டியனுக்குப் போட்டியாகவே அபராசிதன் காரணையைப் பிடித்துக் கொண்டான் எனலாம். அபராசிதன் பாண்டியரிடம் எதிர்ப்புக் காட்டி அவர்களை ஒடுக்குவதில் முனைந்தான்.

**திருப்புறம்பியப்போர் :** பல்லவ அரசினை இழந்த அபராசிதன் எவ்வகையிலேனும் ஆட்சியைக் கைப் பற்றச் சீரிய முயற்சிகளை மேற்கொண்டான். பாண்டி யர், முத்தரையர், பாணர், கொடும்பாளூர் வேளிர் ஆகி யோரின் கூட்டுப்படைகளை அபராசிதனது பல்லவப்

படைகள் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள திருப்புறம்பியத்தில் சந்தித்தன. அபராசிதனுக்குக் கம்பவர்மனும் மேலைக்கங்க வேந்தனான பிரிதிவிபதியும் உதவி புரிந்தனர். ஏறத்தாழக் கி.பி. 880இல் நடைபெற்ற இப்போரில் அபராசிதனே வெற்றி பெற்றான். கங்க நாட்டுப் பிரிதிவிபதி பெரும் வீரங்காட்டிப் போர் புரிந்து வீரமரணம் அடைந்தான். திருப்புறம்பியப் போர், பல்லவர் வரலாற்றில் மட்டுமன்றித் தமிழக வரலாற்றிலும் முக்கியமான திருப்பு முனையாகும்.

வெற்றி பெற்ற அபராசிதன் நெடுநாள்கள் வெற்றிக்கனியைச் சுவைக்க இயலவில்லை. இவன் மீண்டும் பல சோதனைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. நெடுங்காலமாக நடைபெற்று வந்த பாண்டிய - பல்லவப் போராட்டத்தின் விளைவாக, இரு பெரும் வேந்தரும் வலிமை குன்றினர். புத்தெழுச்சி பெற்றுப் படிப்படியாக வலிமைபெற்று வந்த சோழர், தனது அரசினை விரிவுபடுத்துவதில் முனைந்தனர். ஏறத்தாழ கி.பி. 890இல் சோழர் அபராசிதனையும் வென்று அவனைக் கொன்றனர். இவ்வாறு பல்லவப் பேரரசு வீழ்ந்தது.

அபராசிதனின் ஆட்சிக்காலத்தில் வேளாண்மை பெருகியது. நீர்ப்பாசனத்திட்டங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. கல்வி வளர்ச்சியில் இவன் பெரிதும் நாட்டம் கொண்டான். பிராமணர்களுக்கும் திருக்கோயில்களுக்கும் தானங்கள் வழங்கினான். இவ்வேந்தனது 18ஆம் ஆட்சியாண்டில் திருத்தணி வீரட்டானேசுவரர் கோயில், நம்பியப்பியால் கட்டப்பட்டது. இக்கோயிலுக்கு 1000 குழி நிலத்தையும் நம்பியப்பி வாங்கித் தானமளித்தான். அபராசிதன் திருத்தணி முருகனை இடைவிடாது வழிபட்டு வந்தான். திருத்தணிகைக் கோயிலில் காணப்படும் வெண்பாவில் அமைந்த பாடல் கல்வெட்டை இவ்வேந்தனே இயற்றினான் என்பர்.

- ம. இரா. த

**அமர்வு நீதிமன்றம் :** மாவட்டங்கள் தோறும் கொலை வழக்கு உட்பட அமர்வு நீதிமன்றத்தால் மட்டும் விசாரிக்கப்படக் கூடிய வழக்குகளையும் மற்றும் குற்றவியல் மேல்முறையீடு, குற்றவியல் சீராய்வு மனுக்களையும் விசாரணை செய்வதன் பொருட்டு மாநில அரசாங்கம் ஏற்படுத்தும் நீதிமன்றங்கள் அமர்வு நீதிமன்றங்களாகும். அமர்வு நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்படுகிறார்கள். அமர்வு நீதிமன்றமொன்றிற்குத் தலைமையாக ஒரு நீதிபதியை உயர்நீதிமன்றம் நியமித்த பிறகு, அதே அமர்வு நீதிமன்றப் பிரிவில் கூடுதலாக அமர்வு நீதிமன்றங்களை அமைத்து, கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கலாம். அதேபோன்று உதவி அமர்வு நீதிமன்ற நீதிபதிகளையும் நியமிக்கலாம்.

**அமர்வு நீதிமன்றம் இருந்து இயங்க வேண்டிய இடம் :** உயர்நீதிமன்றம் அறிக்கை மூலமாகக் குறிப்பிடலாகும் இடம் அல்லது இடங்களில் சாதாரணமாக அமர்வு நீதிமன்றம் ( Sessions Court ) இருந்து இயங்க வேண்டும். ஆனால், குறிப்பிட்ட ஒரு வழக்கிற்காக, அமர்வுநீதிமன்றம் அதன் ஆள்வரைக்கு உட்பட்ட வேறு எந்த இடத்திலேனும் அமர்ந்தால், அது தரப்பினர்கள், சாட்சிகள் ஆகியோரின் பொதுவசதிக்கு ஏற்றது என்பதாகக் கருதுமாயின், அரசு தரப்பு, எதிரி ஆகியோரின் சம்மதத்துடன் அந்நீதிமன்றம் அவ்வழக்கைத் தீர்க்கவோ, அவ்வழக்கிலுள்ள சாட்சி அல்லது சாட்சிகள் எவரையேனும் விசாரிக்கவோ அந்த இடத்தில் அமரலாம்.

**உதவி அமர்வுநீதிமன்ற நீதிபதிகள் :** மாவட்ட நீதிமன்றத்தின் ஆணைக்கு உட்பட்டு இயங்கும் சார்பு நீதிமன்ற நீதிபதிகள் உதவி அமர்வு நீதிமன்ற நீதிபதிகளாகவும் இருந்து செயற்படுகிறார்கள்.

**அதிகாரப் பகிர்ந்தளிப்பு :** உதவி அமர்வு நீதிமன்ற நீதிபதிகளுக்கிடையில் அலுவலைப் பகிர்ந்தளிப்பது பற்றி அமர்வு நீதிமன்ற நீதிபதி குற்றவியல் நடைமுறைச் சட்டத்திற்கு இசைவான முறையில் அவ்வப்போது விதிகளைச் செய்வார்.

அமர்வு நீதிமன்ற நீதிபதி தாம் இல்லாதபோது அல்லது தாம் செயற்பட இயலாதபோது, அவசர விண்ணப்பம் எதையும் ஒரு கூடுதல் அல்லது உதவி அமர்வு நீதிமன்ற நீதிபதியோ அத்தகையவர் எவரும் இல்லை எனில், நீதித்துறைத் தலைமை நடுவரோ தீர்த்து வைப்பதற்கான ஏற்பாட்டையும் செய்யலாம். அத்தகைய நீதிபதி அல்லது நடுவர் அத்தகைய விண்ணப்பம் எதையும் மேல் நடத்தும் அதிகாரம் உள்ளவராகக் கொள்ளப்பட வேண்டும்.

**அமர்வு நீதிமன்றம் பிறப்பிக்கக்கூடிய தண்டனைகள் :** ஓர் அமர்வு நீதிமன்ற நீதிபதி அல்லது கூடுதல் அமர்வு நீதிமன்ற நீதிபதி மரண தண்

டனை உட்பட, சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எந்தத் தண்டனையையும் விதிக்கலாம். ஆனால், அவர் அளிக்கும் மரணதண்டனையை உயர்நீதிமன்றம் உறுதி செய்த பின்தான் அது நிறைவேற்றப்படும்.

- பு. வே.

**அமிர்தமங்கலம் :** அமிர்தமங்கலம் செங்கை மாவட்டத்தில் உள்ளது. அமிர்தமங்கலத்தின் அருகில் பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கிடைத்தன. மழைத் தண்ணீர் ஓடியதால் பல தாழிகள் வெளியில் தெரிந்ததையடுத்து இதன் வரலாற்றை அறிய இப்பகுதியில் ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன.

இம்மாவட்டத்தில் கல்வட்டங்கள், தாழிகள் போன்ற பெருங்கற்கால ஈமச்சின்னங்கள் அதிக அளவில் கிடைக்கின்றன. தொல்லியல் துறையின் ஆய்வாளர்கள் கல்வட்டங்களை அகழாய்வு செய்த னர். ஆனால் அமிர்தமங்கலத்தில் தாழிகள் வகையைச் சார்ந்த சின்னங்கள் கிடைக்கின்ற காரணத்தால் இவை இரண்டிற்குமுள்ள வேறுபாடுகளை வெளிக் கொணர இங்கும் அகழாய்வு மேற்கொண்டனர். மத்திய தொல்லியல் துறையைச் சார்ந்த என். ஆர். பானர்சி என்பவர் அமிர்தமங்கலத்தை 1954 - 55இல் அகழாய்வு செய்தார்.

பெருங்கற்கால மக்கள் கி.மு.800க்கும் கி.பி.300க் கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன. அவர்கள் இறந்தவர்களைப் புதைக்க, பலவகையான முறைகளைக் கையாண்ட னர். அத்தகைய ஈமச்சின்னங்களில் இறந்தவர்களைத் தாழியில் வைத்துப் புதைக்கும் முறையும் ஒன்றாகும். அமிர்தமங்கலத்தில் இத்தகைய தாழிகள் கிடைக்கின் றன. இங்கு ஏறத்தாழ, 250க்கும் மேற்பட்ட தாழிகள் கிடைத்துள்ளன. இவற்றுள் பல உடைந்த நிலையி லும், சில நல்ல நிலையிலும் சேகரிக்கப்பட்டுள்ளன. அமிர்தமங்கலத்தில் கிடைக்கின்ற தாழிகள் நீண்ட உருண்டை வடிவிலும், உருண்டை வடிவிலும் கிடைக் கின்றன. இவை எல்லாம் கையால் செதுக்கப்பட் டவை. தாழிகளின் ஓடுகள் மிகவும் தடித்துக் காணப் படுகின்றன. தாழிகள் செய்யப் பயன்படுத்திய மண், மணல் கலந்துள்ளதால் ஓடுகள் ஒழுங்கற்ற நிலையில் உள்ளன. இத்தாழிகள் வெள்ளையும் சிவப்பும் கலந்த நிறத்தில் இருக்கின்றன. தாழிகளின் வாய்ப்பாகம் தடித்த உருண்டையான அமைப்பில் செய்யப்பட் டுள்ளது. இவற்றின் வெளிப்பாகத்தில் கழுத்துப் பகுதியில் அலங்காரக் கோடுகளுடனும் கோடுகள் இன்றியும் காணப்படுகின்றன. தாழிகளின் அடிப்பகுதி நீண்டும், கூம்பு போன்ற அமைப்பிலும் உள்ளது.

தாழிகளில் சிதைந்த எலும்புகள் கிடைத்துள்ளன. மண்டை ஓடுகள், நீண்ட எலும்புகள், உடைந்த எலும் புகள் போன்றவை அடியில் வைக்கப்பட்டுள்ளன. இந்த எலும்புப் பொருள்கள் மேல் மூன்று அல்லது நான்கு மட்கலங்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்த மட்கலங்கள் கறுப்பு - சிவப்புப் பானை வகையைச் சார்ந்தவை. இவற்றின் உட்பகுதியில் சில இரும்புப் பொருள்களும் எடுக்கப்பட்டன. இவற்றுடன் தாழி யை முழுமையாக மண்ணால் நிரப்பி இதனைச் சுற்றி உருண்டையான மண்ணாலான மூடிகளை வைத்துப் புதைத்துள்ளனர். இத்தகைய மூடிகளின் வாய்ப் பாகங்கள் மூடியின் பாதி வரை வந்துள்ளன. அத்த கைய வகையைச் சார்ந்த மூடிகள் குறைந்தே கிடைக் கின்றன. அந்த மூடிகளும் வெள்ளை கலந்த சிவப்பு நிறமுடையவனாகச் செய்யப்பட்டுள்ளன. சில பானைகள் அதற்கு மேல் வைக்கப்பட்டிருந்தன. இந்தக் குழிகளின் மேல்பகுதியில் கற்கள் வைக்கப் பட்டிருந்தன. சிறுகற்கள் கலந்த மண்ணைக் கொண்டு இந்தக் குழிகள் மூடப்பட்டிருந்தன.

அமிர்தமங்கலம் ஈமச்சின்னங்கள் தமிழ்நாட்டில் கிடைக்கின்ற மற்ற ஈமச்சின்னங்களைப் போல் இல்லா மல் வேறு வகையாக உள்ளன. இதன் மேல் பகுதியில் கல்வட்டங்கள் இல்லை. சிவப்புநிற மட்கலங்களில் சில வகைகள் மட்டும் கிடைத்துள்ளன. கறுப்பு - சிவப்புப் பானை வகைகள் மிகுந்த அளவில் காணப் படவில்லை. கறுப்பு மட்கலங்கள் இல்லை. இரும்புப் பொருள்கள் மிகுந்த அளவில் வைக்கப்பட வில்லை. பெருங்கற்காலப் பண்பாட்டிற்குரிய தொல்பொருள் கள் இங்குப் பொதுவாகக் குறைந்து காணப்படுவ தால் பெருங்கற்காலம் நன்கு வளர்ச்சிய டையாத காலத்தைச் சார்ந்ததாக இந்த ஈமச்சின்னங்கள் இருக்கவேண்டும் என்று ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். பெருங்கற்காலத்தின் வளர்ச் சிப் படிகளில் இது முதல் நிலையாக இருக்க வேண்டும் என்று அகழாய்வு எடுத்துரைக்கின்றது. இதனு டைய காலம் கி.மு. 300க்கு முற்பட்டதாக இருக்கலாம்.

- தி.சு.

**அமோகவர்சன், முதலாம் (கி.பி. 814–880):** இராட்டிரகூடப் பேரரசினை ஆண்டு வந்த புகழ் பூத்த மன்னர்களுள் ஒருவன். சர்வா ( Sarva ) எனவும் அழைக்கப்பெறுகிறான். இவன் நிருபதுங்கன், அதிசயதாவளன், மகாராச சண்டன், வீரநாரயணன், முதலான விருதுப் பெயர்களையும் பூண்டிருந்தான். மூன்றாம் கோவிந்தனின் ( கி.பி. 793 - 813 ) ஒரே மகனாகிய இவன் தனது தந்தையாரின் இறப்பிற்குப் பின் அரியணையேறினான். தனது ஆற்றல் மிகு தந்தையாரைப்போன்று, இவனும் இராட்டிரகூடரின் புகழை உயர்த்தினான்.

இவன் ஆறு வயதிலேயே ஆட்சிப்பொறுப்பேற்றான். இளவயதானதால் இவன் சார்பாகக் கர்க்கன் அரசு புரிந்தான். அமோகவர்சன், தொடக்கக் காலத்தில் பல சோதனைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. சில காலம் ஆட்சியினின்றும் அகற்றப்பட்டான். கர்க்கன், பட்டலமல்லன் ஆகியோரின் உதவியால் தனது 13ஆம் வயதில் ( கி.பி.821 ) மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிய இவன் கி.பி.830இல் கீழைச் சாளுக்கிய வேந்தனான மூன்றாம் விசயாதித்தனை வென்றான். தனது மகனான இரண்டாம் கிருட்டிண்ணின் புரட்சியைப் படைத்தலைவன் பங்கேசனின் உதவியால் ஒடுக்கினான். இவனது ஆட்சிக்காலத்தில் முற்பகுதி போரும் குழப்பமும் மிகுந்ததாக இருந்தது. எனவே, தனது தந்தையைப் போன்று இவன் வடஇந்திய அரசியலில் தலையிடவில்லை.

இவ்வேந்தனது ஆட்சியில் பிற்பகுதி ஓரளவு அமைதிக் காலமாக இருந்தது. குசராத் பகுதியில் வாழ்ந்த தன் தாயத்தாருடன் இவன், அமைதி உடன்படிக்கை செய்து கொண்டான். மண உறவின் மூலம் அண்டை அரசருடன் நட்புறவு கொண்டு தனது நிலையை வலுப்படுத்திக் கொண்டான். மேலைக் கங்கச் சிற்றரசனான பூதுகனுக்குத் தனது முதல் மகள் சந்திராவை மணம் செய்வித்து, நீண்ட நாள் பகையை நட்பாக மாற்றினான். மற்றொரு மகளான சங்காவைப் பல்லவ வேந்தனாம் மூன்றாம் நந்திவர்மனுக்கு மணமுடித்தான். இராட்டிரகூடரின் தலைநகரான மானியகேதத்தை உருவாக்கி அதனை விரிவுபடுத்தினான்; அங்கு எழில்மிகு அரண்மனை ஒன்றினையும் எழுப்பினான்.

சமயம், கல்வி, கலை, இலக்கியம் ஆகியன இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் பெருவளர்ச்சி பெற்றன. சமயத்துறையில் இவன் பொறையுடைமை யைப் பின்பற்றினான். மகாலட்சுமியைத் தனது குல தெய்வமாகக் கொண்டு வழிபட்ட போதிலும், சமண சமயத்திலும் இவன் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்தான். திகம்பர சமய சமண வளர்ச்சிக்குப் பேராதரவு நல்கினான். சமணத் துறவியான சினனேசரைத் தனது ஞான குருவாகக் கொண்டான். மன அமைதி பெற, பல முறை சமணப்பள்ளிக்குச் சென்று தியானம் செய்தான். சினசேனர், மகாவீர ஆச்சாரி சகத்தியானர் முதலிய அறிஞர்கள் இவ்வேந்தனது அவையை அலங்கரித்தனர். சினசேனர் ( Jinasenar ) **ஆதிபுராணம்** எனும் நூலையும், மகாவீரர் ஆச்சாரி, **கணித சாரசம் கிரகம்** எனும் நூலையும் இயற்றியுள்ளார்கள். சகத்தியா யனர் என்பவர் **சப்தானு சாசனம்** எனும் இலக்கண நூலை இயற்றினார். அதற்கு அவரே உரை இயற்றி, அமோகவர்சனின் நினைவாக அமோகவிருத்தி எனப் பெயரிட்டார். அமோகவர்சன் தானே **கவிராச மார்க்கம்** எனும் நூலை இயற்றியுள்ளான். கன்னட மொழியில் உள்ள பண்டைய இலக்கியச் செய்யுள் நடையில் எழுதப்பட்ட சிறந்த நூல் இதுவே எனலாம். நிருபதுங்க தேவ மார்க்கம் என்பது இதன் மறுபெயர். இவ்வேந்தர் வடமொழியில் **பிரசுநோத்தர ரத்னாவளி** எனும் நூலையும் இயற்றியுள்ளார். வடமொழி, கன்னட இலக்கிய வளர்ச்சிக்கு இவ்வேந்தன் பெரும் பணி ஆற்றியுள்ளான்.

வெற்றி வீரனாகத் திகழாத அமோகவர்சன் தன் பிற்காலம் முழுவதும் பக்திச் செயல்களிலும், சமய வழிபாடுகளிலுமே கழித்தான். இதனால் இவனுடைய ஆட்சிப் பொறுப்பை இவனுடைய மகன் இளவரசன் இரண்டாம் கிருட்டிணனே ஏற்று நடத்தினான். பாரசீக நாட்டு இசுலாமிய வரலாற்றறிஞரான சுலைமான் இவ்வேந்தனை வல்லபன் அல்லது பல்காரன் என்று குறிப்பிட்டுள்ளார். இவர் கான்சுடாண் டி நோபிள், பாக்தார், சீனா முதலான நாடுகளின் வேந்தருடன் ஒப்புமை கூறத்தக்க பெருமை உடையவன் என்றும் சுலைமான் சுட்டுகிறார். அராபிய வணிகர்கள் தன் நாட்டில் வணிகம் புரிய அமோகவர்சன் அனுமதித்தார்.

இவ்வேந்தனது சஞ்சன் சாசனம் (கி.பி.821), சிறூர் சாசனம் (கி.பி. 866), கொன்னூர் கல்வெட்டு, கவிராச மார்க்கம், கர்க்க சுவர்ணவர்சனின் நௌசாரி செப்பேடுகளும், கீழைச்சாளுக்கியரின் சாசனங்களும் இவ்வேந்தனது ஆட்சி பற்றி அறியப் பெருந்துணை புரிகின்றன. 67 ஆண்டுகள் ஆட்சி புரிந்த இம்மன்னன்

தன் எண்பதாவது வயதில் உயிர் நீத்தான்.

இவ்வேந்தன் கொல்லாபுரத்திலுள்ள ( Kollahpur ) அம்மன் மகாலட்சுமிக்குத் தனது இடக்கை விரல் களைப் பலியிட்டான் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது. அதே நேரத்தில் இவன் சமண சமயத்திலும் பற்றுக் கொண்டிருந்தான்.

**அமோகவருசன், இரண்டாம் (கி.பி. 927– 930):** இராட்டிரகூட மூன்றாம் இந்திரனின் மூத்தமகன். தனது தந்தையாரின் இறப்பிற்குப்பின் இவ்வேந்தன் தனது 25ஆம் வயதில் இராட்டிரகூட அரியணையேறி னான். இரண்டாம் அமோகவருசன் மூன்றாண்டு காலம் சிறப்புடன் ஆட்சி புரிந்தான். ஏறத்தாழ கி.பி. 927இல் அரியணையேறிய இவன், தனது தம்பி யான நான்காம் கோவிந்தனுடன் பகைமை பூண்டி ருந்தான். அபராசித சிலாகாரனின் பாதன் பட்டயங்க ளும், மூன்றாம் கிருட்டிணனின் தியோலி, கர்கத் ( Deoli and Karhad Plates ) செப்பேடுகளும், சாளுக்கியர் பட்டயங்களும் இவ்வேந்தனைப் பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன. இவ்வேந்தன் ஒரே ஆண்டு தான் ஆட்சி புரிந்ததாக அல்டேகர் கருதுவார். மிகக்குறுகிய காலமே ஆட்சிபுரிந்ததால், இராட்டிர கூட வரலாற்றில் இவன் ஒரு சிறந்த இடத்தைப் பெற வில்லை. இவனிடமிருந்து இவனது தம்பியான நான்காம் கோவிந்தன் ஆட்சியைப் பறித்துக் கொண் டான். அமோகவருசன் கொல்லப்பட்டதால், அவ னது அரசியார் வெங்கி சென்று முதலாம் அம்மனிடம் அடைக்கலம் புகுந்தாள்.

**அமோகவருசன், மூன்றாம்** : இவன் நான்காம் கோவிந்தனுக்குப் பின் அரியணையேறினான். நேர் மையும், நற்பண்புகளும் நிரம்பப் பெற்ற இவன் நான்கு ஆண் டுகளே ஆட்சி புரிந்தான். அமைதியான ஆட்சியை மேற்கொண்ட இவன், கி.பி. 936இல் அரி யணையேறிதாகத் தெரிகிறது. மூன்றாம் அமோக வர்சன் மிகச்சிறந்த பக்திமான். சமயம் சார்ந்த வாழ் வில் மனநிறைவு கண்டவன். எனவே, இவன் ஆட்சி நிர்வாகத்தின் பெரும் பகுதியைத் தனது மகனான இளவரசன் கிருட்டிணனிடம் ஒப்படைத்தான். சிவ பக்தனான இவன் சந்தமசேனன் என்று இலக்கியங் களில் குறிக்கப்பெறுகிறான்.

இவன் தனது மகளான இரேவாகனிம்மதியை, கங்க இளவரசனான இரண்டாம் பூதுகனுக்கு மணம் செய்வித்தான். இவனுக்கு மருலதேவன் எனும் பெய ரன் பிறந்தான். குந்தகாதேவி இவ்வேந்தனது அரசி யாவார். இவன் தனது மகனான மூன்றாம் கிருட்டிண னுக்கு, இளவரசு பட்டம் கட்டி, ஆட்சியை அவனிடம் ஒப்படைத்தான். ஆட்சிப் பொறுப்பில் இருந்த மூன்றாம் கிருட்டிணன், கங்கவாடியின் மீது படை யெடுத்துச் சென்று, அதன் வேந்தனான இராசமல்ல னைப் பதவியினின்றும் அகற்றினான். இராசமல்ல னின் தம்பியான பூதுகன் மன்னனாக ஆக்கப்பட் டான். அடுத்து இவன் பண்டில்கண்டின் மீது படை யெடுத்துக் களஞ்சார், சித்திரகூடம் முதலான கோட் டைகளைக் கைப்பற்றினான். இதன் விளைவாகச் சேதி அரச மரபினரின் பகைமை ஏற்பட்டது. முதுமைப்பருவத் தில் ( 50 வயது ) ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாம் அமோகவர்சன் ( கி.பி. 936 - 940 ) குறுகிய ஆட்சிக் காலம், இராட்டிரகூடரின் வரலாற்றில் சிறப்பானதாக விளங்கவில்லை.

- ம. இரா. த.

**அயூப்கான்** : இவர் ஆப்கானிய இளவரசர். ஆங்கிலேயரை விடா முயற்சியுடன் எதிர்த்து நின்ற பெருமை இவருக்கு உண்டு. செர் அலி ( Sher ali ) என்ற ஆப்கானிய அமீருக்கு ( அமீர் என்ற சொல் ஆப் கானிய இளவரசரின் பட்டப்பெயர் ) கி.பி. 1855இல் மகனாகப் பிறந்த அயூப்கான் ( Ayubkhan ) ஆங்கிலே யர் தம் நாட்டில் தலையிடுவதை வெறுத்தார். ஆனால் சூழ்நிலை காரணமாக ஆங்கிலேயர் ஆப்கா னியத்தானத்தில் தமது அதிகாரத்தை வளர்த்துக் கொள்ள விரும்பினர். உருசியாவின் பேரரசு வளர்ச்சி யடைவதற்கு ஆப்கானித்தானம் உதவி செய்யக் கூடாது என்பதே ஆங்கிலேயரின் குறிக்கோள். ஆகவே, உருசியாவின் அதிகார வளர்ச்சியை ஆப்கா னித்தானத்தில் ஏற்றுக்கொள்ளும் எந்த ஆட்சியையும் சீர்குலைப்பதில் ஆங்கிலேயர் கண்ணும் கருத்துமாயி ருந்தனர். இது காரணமாகவே இந்திய வரலாற்றில் ஆங்கிலேய இந்தியா, மூன்று ஆப்கானியப் போர்கள் நிகழ்த்தியதைக் காணலாம்.

அமீர்செர்அலி ஆங்கிலேயருக்கு உதவியாக இல் லாத காரணத்தால் நாடு கடத்தப்பட்டு, பிறகு கி.பி. 1879ஆம் ஆண்டு இறந்தார். அவர் மகன் அயூப்கான் தமக்குப் பட்டத்துக்கு வரும் உரிமை உண்டு என் பதை வற்புறுத்தியவுடன், ஆங்கிலேயரையும் எதிர்த் தார். ஆங்கிலேயர், அயூப்கான் உரிமையை ஏற்க

மறுத்து; இவர் உறவினர் அப்துல் ரகுமான் என்ப வரை அமீராக அமரச் செய்தனர். வெகுண்டெழுந்த அயூப்கான் கி.பி. 1880இல் மெய்வாண்டு ( Maiwand) என்னுமிடத்தில், தளபதி பர்ரோசு தலைமையிலி ருந்த ஆங்கிலப்படையை முறியடித்தார். தமது வெற் றியைத் தொடர்ந்து அயூப்கான், காண்டகார் பகுதி யையும் முற்றுகையிட்டார். இதைக் கேள்விப்பட்ட ஆங்கிலேய இந்திய அரசப் பேராளர் ரிப்பன்பிரபு ( Lord Rippon ), இராபர்ட்சு ( Roberts ) என்னும் தள பதியை அனுப்பி அயூப்கானைத் தோற்கடிக்கச் செய் தார். அயூப்கானிடமிருந்து கைப்பற்றிய நிலப்பகுதி கள் அமீர் அப்துர் இரகுமானிடம் கொடுக்கப்பட் டன. அப்துல் ரகுமான் ஆங்கிலேயருடன் நட்பு உடன் படிக்கை செய்துகொண்டு மகிழ்ச்சி அடைந்தார். தோல்வியடைந்த அயூப்கான், கி.பி. 1881இல் பாரசீகத்துக்கு நாடு கடத்தப்பட்டார். இவர் கி.பி. 1887இல் ஒரு சதித்திட்டம் தீட்டி ஆப்கானித்தானத் துக்குள் நுழைந்து சில பகுதிகளைக் கைப்பற்ற முற் பட்டார். ஆனால் அத்திட்டம் வெற்றி பெறவில்லை. வேறு வழியின்றி ஆங்கிலேயரிடம் அடைக்கல மடைந்த அயூப்கான் 1914இல் இறந்தார்.

- தெ.பா.

**அயூப்கான், முகம்மது ( கி.பி. 1907 – 1974) :** பாகிஸ்தான் தலைவராக ( President ) 1958 முதல் 1969 வரை பதவி ஏற்றிருந்த அயூப்கான், முகம்மது ( AyubKhan Mohammad ) இந்தியாவின் வடமேற்கு எல்லைப்புற மகாணத்தில் அப்போட்டாபாது ( Abb ottabad ) என்னும் நகரில் 1907ஆம் ஆண்டு பிறந்தார். இவர் அலிகார் முசுலிம் பல்கலைக்கழகத்திலும், பின் னர் இங்கிலாந்தில் சாந்தர்சுட்டு ( Sandhurst ) என்னு மிடத்திலுள்ள காலாட்படை - புரவிப்படைப் பயிற் சிக்குரிய அரசுப்படைத் துறைக் கல்லூரியிலும் ( Royal Military College ) பயின்றார். ஆங்கிலேயரின் இந்தி யப் படையில் 1928இல் சேர்த்துக்கொள்ளப்பட்டார். இரண்டாம் உலகப்போர்க் காலத்தில் இவர் பர்மா வில் பணியாற்றினார். 1947இல் பாகிஸ்தான் உரு வாகிய காலத்தில் அந்நாட்டிலுள்ள அனுபவம்மிக்க சிறந்த படைத்தலைவர்களுள் இவரும் ஒருவராவார். பாகிஸ்தானியப் படையில் சேர்ந்த இவருக்கு மிகக் குறுகிய காலத்திலேயே பதவி உயர்வு கிடைத்தது. அப்படையின் முதற் பெரும் படைத்தலைவராக ( Co mmander -in- Chief ) 1951இல் அமர்த்தப்பெற்றார். அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சராக 1954 - 55 ஆண் டுகளில் பணியாற்றினார். ஐக்கிய அமெரிக்காவுடன் நட்புறவு கொள்ள வேண்டுமென்பது இவர் விருப்ப மாக இருந்தது. அதை நிறைவேற்ற இவரே அந்நாட் டுடன் தொடர்பு கொண்டு சில உடன்பாடுகளைச் செய்து கொண்டார். அவற்றின் விளைவாக அமெ ரிக்கா பாகிஸ்தானுக்கு இராணுவ உதவி அளிக்க இணங்கியது. மேலும், இவருடைய முயற்சிகள் கார ணமாகப் பாகிஸ்தான், பாக்தாத் ஒப்பந்தத்திலும் ( Baghdad Pact ) தென் கிழக்கு ஆசிய உடன்படிக்கை அமைப்பிலும் சேர்ந்து கொண்டது.

பாகிஸ்தானின் தலைவராக இருந்த இசுகந்தர் மிர்சா ( Iskander Mirza ) 1958, அக்டோபரில் அந் நாட்டு அரசியலமைப்பை வழக்கொழியச் செய்து, அயூப்கானைப் பாகிஸ்தானியப் படைகளின் உச்ச நிலைத் தலைவராகவும், இராணுவச் சட்ட நிருவாகி யாகவும் அமர்த்தினார். பேராசை கொண்ட அயூப் 1958 அக்டோபர் திங்களிலேயே, மிர்சாவை நாடு கடத்தி விட்டுத் தாமே தலைவரானார்.

தம் ஆட்சிக்காலத்தில் ( 1958 - 1969 ), இராணுவச் சட்டங்கள் மூலம் தம்மை வலிமைப்படுத்திக் கொண்ட அயூப்கான், மேற்குப் பாகிஸ்தானில் நிலச் சீர்திருத்தப் பணியை மேற்கொண்டார். கல்வி, சட் டம், சமூகம், பொருளாதாரம் முதலிய துறைகளில் சீர்திருத்தங்கள் செய்யப்படுவதற்காக, ஆணைக் குழுக்களை நியமித்தார். கையூட்டு, ஊழல் குற்றம் புரிந்தோர் பதவியினின்றும் நீக்கப்பட்டனர். அரசுக் குரிய வரிகளை வசூலிப்பதில் மிகுந்த ஊக்கம் காட் டப்பெற்றது.

அயூப்கான், 1959இல் தம்மைப் படைத்துறை உயர்தரப் பணியாளர் என்று அறிவித்துக்கொண்டார். அதே ஆண்டில் 'அடிப்படைக் குடியாட்சி' ( Basic Democracy ) முறையை நாட்டுக்கு அறிவித்தார். அதன் படி உள்ளாட்சித்துறை நிருவாகிகளின் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. அக்குழுவே, நாட்டுத் தலை வரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக் குழுவாகவும் பயன் படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அத்தேர்வுக் குழு, 1960இல் அயூப்கானையே நாட்டுத் தலைவராக உறுதி செய்தது. இவர் தம் நாட்டுக்கு ஒரு புதிய அரசிய லமைப்பை உருவாக்குவதற்கு ஓர் ஆணைக்குழுவை அமர்த்தினார். அக்குழு, 1962இல் புதிய அரசிய லமைப்பை அறிவித்தது. அயூப்கான் 1965இல் மீண் டும் நாட்டுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே, காசுமீரப்பகுதி தொடர்பாகச் சச்சரவுகளேற்பட்டு, 1965இல் போரும் விளைந்தது. உருசியாவின் தலையீட்டினால் அப்போர் முடிவுற்றது. சோவியத் தலைமையமைச்சர் கோசிசின் முயற்சியால் இவரும் அந்நாள் இந்தியத் தலைமையமைச்சர் இலால்பகதூர் சாஸ்திரியும் செய்துகொண்ட தாஸ்கண்டு ஒப்பந்தம் இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்குமிடையே ஒரு நல்ல உறவை ஏற்படுத்த உதவியது. அயூப்கான், காலப் போக்கில் அமெரிக்காவிடம் மிகுந்த நம்பிக்கை கொள்ளலாகாது என்ற முடிவுக்கு வந்தார்.

தாஸ்கண்டு மாநாட்டிற்குப்பிறகு அயூப்கானுக்கு உள்நாட்டில் எதிர்ப்பு வரலாயிற்று. பாகிஸ்தானியர் பலர் அம்மாநாட்டு முடிவுகளையும், அயூப்கானின் புதிய தேர்தல் முறையையும் எதிர்க்கலாயினர். அயல் துறை அமைச்சராக இருந்த புட்டோ ( Bhutto ) 1966 ஆம் ஆண்டு தம் பதவியை விட்டு விலகி எதிர் அமைப்பு ஒன்றை நிறுவினார். அடுத்த ஆண்டில் அயூப்கானைக் கொலைச் செய்வதற்குக் கிழக்கு பாகிஸ்தானில் உருவாகிய முயற்சி வெற்றி பெறவில்லை. அந்நிலையில் அயூப்கான் நோய்வாய்ப்பட்டார். நாட்டில் மாணவர் கலகங்களும், தொழிற்சாலைகளில் வேலை நிறுத்தமும், புட்டோவின் தொடர்ந்த எதிர்ப்பும் அயூப்கானை மிகவும் துன்புறுத்தின. தாம், 1970ஆம் ஆண்டுத் தேர்தலில் தலைவர் பதவிக்குப் போட்டியிடப் போவதில்லை என்றும், தாம் வெளியிட்டுள்ள தலைவர் முறை ஆட்சிக்குப் பதிலாக நாடாளுமன்ற ஆட்சி முறை புகுத்தப்படும் என்றும் அயூப்கான் அறிவித்த பிறகும், நாட்டில் எதிர்ப்பும் அமைதியின்மையும் தொடர்ந்தன. ஆகவே, இவர் 1969 மார்ச் திங்களில் பதவியினின்று விலகிக் கொண்டார். இவர், 1974ஆம் ஆண்டு இசுலாமாபாதிலிருந்த தமது இல்லத்தில் காலமானார்.

- தெ. பா.

**அரங்கநாத கவிராயர், அட்டாவதானம் :** இவர் தொண்டை மண்டல வேளாள மரபில் சேக்கிழாரின் குலத்தில் தோன்றியவர். இவர்தம் ஆற்றலைப் போற்றியே இவருக்கு **அட்டாவதானம்** என்னும் அடைமொழி வழங்கப்பட்டது. இவர்தம் பிறப்பிடத்தை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. எனினும் இவர் பாடிய பாரத காவியத்தின் பாயிரப் பகுதியால் சில வரலாற்று நிகழ்வுகளை அறிய முடிகிறது.

இவர் நெல்லை நாட்டில் கோட்டூர் என்னும் ஊரின் அரசராக அந்நாளில் விளங்கிய திருமலை வேள் என்பாரை அடுத்திருந்தார். திருமலைவேள் அரங்கநாதரிடம், அவர்கள் இருவர் பெயரும் உலகிடை விளங்கப் பாரதத்தின் பிற்பகுதியைப் பாடித் தரும்படி வேண்டினார். அந்நாளில் வில்லிபுத்தூராரின் பாரதமே பெரும்புகழ் பெற்று விளங்கியிருப்பினும், அவர் முதல் பத்துப் பருவம் வரையே பாடிப் பின் பருவங்களைப் பாடாமல் விட்டிருந்தார். அவர் பாடாது விடுத்த பிற்பகுதியைத் திருமலைவேளின் தூண்டுதலால் அரங்கநாதர் இயற்றினார். இவர் இயற்றிய பாரதம் சௌப்திக பருவத்தின் சிகாமணிச் சுருக்கம் முதல் பதினெட்டாம் பருவமாகிய சொர்க்காரோகண பருவம் முடிய உள்ளது. இவர் பாடிய பாரதம் 45 சருக்கங்களும், 2477 செய்யுள்களும் கொண்டதாகும்.

திருமலைவேளின் நண்பரான பூபால ரெட்டியார் என்பாரின் வேண்டுகோட்படி துறையூரில் தம் பாரதத்தை அரங்கநாதன் அரங்கேற்றியுள்ளார் எனத் தெரிய வருகிறது. திருவாடுதுறை ஆதினம் திருப்பெருந்திரு சிவப்பிரகாச தேசிகரும் அவையின் தலைவராக அமர்ந்து இப்பாடல்களைக் கேட்டுள்ளார். இவ்வரங்கேற்றம் நிகழ்ந்த காலம் கி.பி. 1753 என்பது 'ஏறிய சகாத்தமாயிரத்தறு நூற்றெழு பதினைந்தின் மேல்' எனத் தொடங்கும் பாயிரச்செய்யுளால் (23) அறியப்படும். அரங்கேற்றுவித்த பூபால ரெட்டியார் பொன், மணி, குதிரை, சிவிகை முதலிய வரிசைகளை வழங்கிச் சிறப்பித்தமையும் தெரிய வருகிறது. பாடுவித்த திருமலைவேளும் இச்சிறப்பினைப் புலவர்க்கு நல்கினர் என்பதைக் கவிஞர் தம், நூலகத்துத் துருவாசச் சருக்கம் 20ஆம் பாடலில் கூறிய குறிப்பினால் அறியலாம்.

அரங்கநாதர் இயற்றிய இப்பாரதம் துறையூர் உபாத்தியார் மு. கோவிந்தப்பிள்ளை என்பாரால் சென்னைப் பண்டிதமித்திர எந்திர சாலையில் 1902இல் அச்சிடப்பட்டுள்ளது. புதுவை அரங்கநாத கவிராயர் என்பார் **இரணிய விலாசம்** என்னும் **சிரீ பிரகலாதன விலாசம்** என்னும் நாடக நூலை இயற்றியுள்ளார். இந்நூலையும் அரங்கநாத கவிராயரின் பாரதத்தையும்

நோக்கும்போது தமிழ்நடையும், சொல்லாட்சியும் பெரிதும் வேறுபடக் காணலாம். இருவரும் வேறு வேறு புலவரே என்பதைப் பாரதம் பாடியவரை **அட்டாவதானம்** எனக் குறிப்பிடும் அடைமொழி கொண்டு அறியலாம்.

- அர. க.

**அரங்கநாதன், சீ.இரா, (கி.பி. 1892–1972 ):** இவர் நூலக அறிவியலின் தேசியத் தந்தையும், கோலன் பகுப்பு முறையை உருவாக்கிய வித்தகரும், நூலக இயலின் ஐந்து விதிகளின் ஆசானும், எண் ணற்ற நூலகத்துறை நூல்களையும், நுணுக்கங்களை யும் வழங்கியவரும் ஆவார். சீ. இரா.அரங்கநாதன் கி.பி. 1892ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள சீர்காழியில் பிறந்தார். இவர் சீர்காழியில் உள்ள சபாநாயக முதலியார் இந்து உயர்நிலைப் பள்ளியில் தம் பள்ளிப்படிப்பை முடித்து, சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் கணிதக் கல்வியைப் பெற்றார். ஆசிரியர் பயிற்சிப் பட்டயப் படிப்பைச் சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் முடித்து விட்டுச் சென்னை அரசினர் கலைக் கல்லூரியில் விரிவுரை யாளராகச் சேர்ந்தார்.

இந்திய நூலக வரலாற்றில் 1924 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24ஆம் நாள் குறிப்பிடத்தக்க நாளா கும். அன்றுதான் சீ. இரா. அரங்கநாதனைச் சென் னைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழு, நூலகராக நிய மித்தது. இவருக்கு இது புதிய துறையாக அமைந்தது. இவர் இப்பதவியை ஏற்றபின் பல்கலைக்கழக ஆட்சிக்குழு இவரை இலண்டனுக்கு நூலகப் பயிற்சிக்காக அனுப்பி வைத்தது. அங்குள்ள பல்கலைக்கழகக் கல்லூரியில் பேராசிரியர் பெர்விக் சேயர்சிடம் ( Berwike Sayers ) நூலகவியலின் பல நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டார். அரங்கநாதன் பிரிட்டனில் தங்கி இருந்த இரண்டு ஆண்டுகளில் ( 1924 - 1925 ) 100க்கு மேற்பட்ட நூலகங்களைப் பார்வையிட்டார். இவர் இலண்டன் பல்கலைக் கல்லூரியில் 1925ஆம் ஆண்டு நூலகவியலில் சிறப்புச் சான்றித ழைப் பெற்றார். 1930ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நூலகச் சங்க உறுப்பின ராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இவர் 1944ஆம் ஆண்டு முடிய சென்னைப் பல் கலைக்கழக நூலகராகப் பணியாற்றினார். பின்னர் இவர் 1945ஆம் ஆண்டு முதல் 1947 ஆம் ஆண்டு முடிய வாரணாசி இந்துப் பல்கலைக்கழக நூலகரா கவும், நூலக அறிவியல் துறையின் பேராசிரியராக வும் பணியாற்றினார். தில்லிப் பல்கலைக்கழக நூலக அறிவியல் துறையின் பேராசிரியராக 1947ஆம் ஆண்டு முதல் 1954ஆம் ஆண்டு முடியவும், விக்ரம் பல்கலைக் கழக நூலக அறிவியல் துறையின் வருகை தரு பேரா சிரியராக 1957ஆம் ஆண்டு முதல் 1959ஆம் ஆண்டு வரையிலும் பணியாற்றினார். இவர் 1962 ஆம் ஆண்டு பெங்களூரில் உள்ள இந்திய புள்ளியியல் ஆய்வு மையத்தால் தொடங்கப்பட்ட செய்தி சேகரிப்பு ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தின் சிறப்புப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவராக நியமிக்கப் பட்டார். இந்திய அரசாங்கம் இவரை 1965ஆம் ஆண்டு நூலக அறிவியலின் தேசிய ஆராய்ச்சிப் பேராசிரியராக ஆக்கியது.

சீ.இரா. அரங்கநாதன் என்றவுடன் நினைவுக்கு வருவது இவருடைய நூலகப் பகுப்பு முறையான கோலன் பகுப்பு முறையாகும். இவருடைய முதல் நூல் நூலகப் பகுப்பு முறையின் முகவுரையாகும். இவர் நூலகவியலுக்குரிய ஐந்து நூலக விதிகளை உருவாக்கி அதனை 1931 ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டார். அவ்விதிகள் வருமாறு : 1. நூல்கள், பயன்படுத்துவதற்கே ( Book for use), 2. ஆளுக்கு ஒரு நூல் ( Every Reader his / her book ), 3. நூலுக்கு ஒரு ஆள் ( Every book its Reader ), 4. வாசகர் / நூலகப் பணியாளர் காலம் கருதுக ( Save the time of the Reader / Staff ), 5. நூலகம் வளரும் ஒரு அமைப்பு ( Liberary is a growing Organism ).

கோலன் பகுப்பு முறையை அடுத்து அரங்கநாதன் நூல்களைப் பகுத்துப் பட்டியலிடும் விதிமுறையை ( Theory of Liberary Catalogue ) 1934ஆம் ஆண்டும், நூலக ஆட்சி முறையினை 1935ஆம் ஆண்டும் வெளி யிட்டார். இவற்றோடு 60 நூல்களையும் 2000 ஆய்வு அறிக்கைகளையும் படைத்துள்ளார். 5 காலமுறை இதழ்கள் இவர் காலத்தில் வெளியிடப்பட்டன.

சீ.இரா. அரங்கநாதன் சென்னை நூலகச் சங்கத்தின் முதல் செயலாளராக 1928ஆம் ஆண்டு தேர்ந்தெடுக் கப்பட்டு அதில் 25 ஆண்டுகள் பதவி வகித்தார். இந்தி யக் கணக்கியல் சங்கத்தின் பொருளாராகவும், இந் திய நூலகச் சங்கத்தின் தலைவராகவும், இந்திய தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் செய்திச் சேகரிப்புக் குழுத் தலைவராகவும், இந்திய வயது வந்தோர் கல்விச்

சங்கத்தின் செயலாளராகவும் இவர் பணியாற்றியுள்ளார். இவருக்கு டி.லிட்., பட்டம் தில்லிப் பல்கலைக்கழகத்தால் 1948ஆம் ஆண்டு வழங்கப் பட்டது. பெட்டிசுபர்க் பல்கலைக்கழகத்தில் நூலக அறிவியலில் முனைவர் பட்டம் 1964ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. அன்றைய இந்தியக் குடியரசு தலைவர் வி.வி.கிரி அவர்களால் 1965ஆம் ஆண்டு இந்திய தேசிய நூலகத்தந்தை என்ற பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டார். இவர் 1972ஆம் ஆண்டு தம் 80ஆம் வயதில் மறைந்தார்.

- சோ. ஆ.

**அராபி பாசா :** அராபி பாசா ( Arabi Pasha ) எனப் படும் அகமது உராபி பாசா (Ahmad Urabi Pasha, 1839 - 1911) எகிப்தில் சிறந்த தேசியவாதியாவார். தொடக் கத்தில் எகிப்து துருக்கி சுல்தானின் ஆட்சிக்கு உட்பட் டிருந்தது. துருக்கி சுல்தான் ஆங்கிலேயர், பிரெஞ்சுக் காரர் ஆகியோரின் கைபொம்மையாக இருந்ததால் எகிப்திலும் அவர்களுடைய ஆதிக்கம் இருந்து வந்தது. எனவே அராபிபாசா அன்னியரான துருக்கியர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகியோரின் செல் வாக்கு எகிப்தில் ஏற்படுவதை எதிர்த்துப் போராடினார்.

இவர் கீழ் எகிப்திலுள்ள சாகாசிக்கு ( zagazig ) என்ற இடத்திற்கு அருகிலுள்ள ஓர் ஊரில் கி.பி. 1839 ஆம் ஆண்டு வேளாண் குடும்பம் ஒன்றில் பிறந்தார். எகிப்திற்கும் எத்தியோப்பியாவிற்கும் இடையே கி.பி.1875 - 76இல் நடைபெற்ற போரில் ஈடுபட்டார். அப்பொழுது எகிப்தியப் படையில் துருக்கிய மொழி பேசுவோரின் ஆதிக்கம் மிகுதியாக இருந்தது. எனவே, அவர்களை நீக்கும் பொருட்டு அலி - அல் - ரூபி ( Ali - al - Rubi ) என்பவர் ஏற்படுத்திய தலைமறைவு இயக்கத்தில் அராபி சேர்ந்தார். இவர் கி.பி.1879இல் நடைபெற்ற கலகம் ஒன்றில் பங்கு கொண்டார். பின்னர் கர்னலாகப் ( Colonel ) பதவி உயர்வு பெற்றார்.

எகிப்திய கெடிவ் இசுமாயில் ( Khediv Ismail ) சுதந்திர உணர்வு கொண்டவராக இருந்ததால் துருக்கி சுல்தான் அவரை கி.பி. 1879இல் பதவியிலிருந்து நீக்கி விட்டுத் தனது கைப்பொம்மையான தேபிக்கு (Twefik) என்பவரைக் கெடிவாக ஆக்கினார். அப்போது எகிப்தியப் படையின் தளபதியாகவிருந்த அராபி கி.பி. 1881ஆம் ஆண்டு செப்டம்பர் 9ஆம் நாள் ஒரு கிளர்ச்சியைத் தொடங்கி 5000 வீரர்களுடன் கெடிவின் அரண்மனைக்குள் நுழைந்து கெடிவ் அமைச்சரவையை மாற்றியமைக்கவும், எகிப்திய படை வீரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கவும், தேசிய அவை ஒன்றை ஏற்படுத்தவும் செய்தார். மகமுது சமி அல் பருதி பாசா ( Mah mud Sami al - Barudi Pasha ) அராபி பாசாவைக் கி.பி. 1882இல் போர் அமைச்சராக நியமித்தார். எனவே, எகிப்தில் அராபி பாசாவின் செல்வாக்குப் பெருகியது. அதனைக் கண்டு அஞ்சிய ஆங்கிலேய - பிரெஞ்சு அரசுகள் ஒரு கப்பற் படையை அலெக்சாண் டிரியாவுக்கு அனுப்பின. அங்கு சூன் 11ஆம் நாள் ஒரு கலகம் தோன்றி, பொதுமக்கள் 50 ஐரோப்பியர்களைக் கொன்றதுடன், அங்கிருந்த துருக்கிய, ஐரோப்பிய அதிகாரிகளையும் ( Residents ) வெளியேற்றினர். உடனே அராபி அங்குச் சென்று, கலகக்காரர்களுக்குத் தலைமை தாங்கி அலெக் சாந்திரியா கோட்டையைப் பாதுகாப்பதில் ஈடு பட்டார். ஆங்கிலேயப் போர்க்கப்பல்கள் கி.பி. 1882 சூலை 11ஆம் நாள் அக்கோட்டையை அழித்தன.

சர் கிராண்டு உல்சிலி ( Sir Grant Wolsely ) தலைமையிலான ஆங்கிலேயப் படை ஒன்று சூயசு கால் வாய்ப் பகுதியில் இசுமெய்லியாவில் ( Ismailia ) இறங்கியது. அது அராபியின் படையைச் செப்டம்பர் 13ஆம் நாள் தெல் எல் கபீர் ( Tell - el - Kabir ) என்னுமிடத்தில் தோற்கடித்தது. அராபி கெய்ரோவில் சரணடைந்து, அரசு துரோகக் குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு, மரண தண்டனை விதிக்கப்பட்டார். ஆனால் பின்னர் அது நாடு கடத்தும் தண்டனையாகக் குறைக்கப்பட்டு இலங்கைக்குக் கொண்டு செல்லப் பட்டார். சிறையில் இவர் 19 ஆண்டுகள் இருந்த பின்னர், மன்னிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். இவர் 1901இல் எகிப்தை அடைந்து, 10 ஆண்டுகள் அங்கு வாழ்ந்த பின்னர் 1911 செப். 21ஆம் நாள் மறைந்தார்.

- சி. இரெ.

**அரியலூர் :** இவ்வூர் திருச்சிராப்பள்ளி மாவட் டத்தின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பேரூர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே அரியலூர்ப் பகுதி புகழ் பெற்றிருந்தது என்பதனை அப்பகுதியில் கிடைத்துள்ள பழைய கற்காலக் கருவிகளால் அறிய

லாம். 'தமிழ்ப்புலவர் அரிசில் கிழாரின் ஊராதலால் இது அரியலூர் எனப்பெயர் பெற்றது என்பர். அரி + இல் + ஊர் எனப் பிரித்து மகாவிட்ணு குடியிருந்த ஊர் எனப் பொருள் கொள்வாரும் உண்டு.

மானிடவியல் ஆய்வாளர்கள் அரியலூர்ப் பகுதி 35 மில்லியன் ஆண்டுகட்கு முன்பு கடலாக இருந்தது எனக் கணக்கிட்டுள்ளனர். கடல்வாழ் பிராணிகள் கல்லாக ( Fossil ) மாறியுள்ளமையை இன்றும் காணமுடிகிறது. எனவே, இப்பகுதி கடலாக இருந்தமை உறுதி பெறுகிறது. அரியலூருக்கு மேற்கே 15 கி.மீ. தொலைவில் உள்ள சாத்தனூரில் 90 அடி நீளமுடைய கல்மரமும் காணப்படுகிறது. கல்மரத்தோப்புகளை இப்பகுதியில் காணலாம். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட காலத்திய பழைய கற்காலக் கருவிகள் அரியலூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் வடகிழக்கில் அமைந்துள்ள நின்னியூரில் கிடைத்துள்ளன. இராயம்புரம், ஓட்டக்கோயில், ஏலாக்குறிச்சி முதலான ஊர்களில் புதிய கற்காலக் கருவிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அரியலூர்ப் பகுதியிலும், மேலப் பழுவூரிலும், தத்தனூர்ப் பொட்டக்கொல்லை, விக்ரமங்கலம் முதலான இடங்களிலும் பெருங்கற்காலப் பானையோடுகள் கிடைத்துள்ளன. இன்றைய விக்கிரமங்கலம் பண்டு விக்கிரம சோழபுரம் எனும் பெயரில் புகழ்மிக்க வணிக நகரமாக விளங்கிற்று. இவற்றால் அரியலூர்ப் பகுதியின் தொன்மைச் சிறப்பு நன்கு புலனாகும். இப்பொழுது அரியலூர் ஒரு மாவட்டத் தலைநகரம் ஆகும்.

இரண்டாம் குலோத்துங்க சோழனது கல்வெட்டில்தான் முதன்முறையாக அரியலூர் எனும் பெயர் சுட்டப்படுகிறது. இதனைக் குறிப்பிடும் துண்டுக் கல்வெட்டு அரியலூர் ஆலந்துறையார் கோயிலில் உள்ளது. அரியலூரின் வடபகுதி கொல்லாபுரம் எனப் பெயர் பெற்றது. இரண்டாம் இராசேந்திரனது ஆட்சிக் காலத்தில் தோன்றிய வணிக நகரமே கொல்லாபுரம் ஆகும். அரியலூரைச் சேர்ந்த அதிகாரி ஒருவரைப் பற்றிய குறிப்பு சடாவர்மன் சுந்தரபாண்டியனது கல்வெட்டில் இடம் பெற்றுள்ளது. விசயநகர வேந்தர்கட்கு அடங்கிய செஞ்சி வையப்ப நாயக்கனின் ஆணைக்குட்பட்ட நிலையில் கிருட்டிணப்ப மழவராயர் என்பார் அரியலூரைத் தலைமை இடமாகக் கொண்டு பாளையக்காரர் ஆட்சியைத் தோற்றுவித்தார். ஏறத்தாழ கி.பி. 1817 இல் ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்தார் பாளையக்காரர் ஆட்சியை அகற்றிவிட்டு, சமீன்தார் ஆட்சியை அரியலூரில் கொண்டு வந்தனர். பின்னர் 1951 இல் சமீன் ஒழிக்கப்பட்டது.

அரியலூரில் ஆலந்துறையார் கோயில், சீனிவாசப் பெருமாள் கோயில் எனும் இரு புகழ்மிக்க திருக்கோயில்கள் உள்ளன. ஆலந்துறையார் கோயில் பிற்காலச் சோழர் காலத்தது. கி.பி.1808 இல் மழவராயர்கள் இதனைத் திருப்பணி செய்துள்ளனர். மழவராயர் காலத்தில் உருவாக்கப்பட்ட சீனிவாசப் பெருமாள் கோயிலில் கவின்மிகு தியான தசாவதாரச் சிற்பங்கள் உள்ளன. அரியலூருக்குச் சற்று கிழக்கில் கள்ளக் குறிச்சியில் அருள்மிகு கலியபெருமாள் கோயில் உள்ளது. உ. வே.சாமிநாத ஐயர், அரியலூர் சமத்தானத்துப் புலவர் சடகோப ஐயங்காரிடம் அரியலூரில் தங்கி 11 ஆண்டுகள் தமிழ்ப் பயின்றார் என்ற பெருமையும் இவ்வூருக்குண்டு.

இப்பகுதியில் மிளகாய், கொத்தமல்லி, சோளம், வரகு, வெள்ளரிக்காய் ஆகியன மிகுந்த அளவில் விளைகின்றன. அரியலூர் சிமெண்டு தொழிற்சாலை அரியலூரின் கீழ்ப்புறம் உள்ளது. சுண்ணாம்புக் கட்டித் தொழிற்சாலையும் இப்பகுதியில் உள்ளது.

- ம.இரா.த.

**அருங்காட்சியகவியல் :** அருங்காட்சியகம் என்பது அரிய, அருகிய பொருள்களைத் தன்னகத்தே சேகரித்து வைத்திருக்கும் கூடமாகும். பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் உலகில் தோன்றிய தொழிற்புரட்சி, மறுமலர்ச்சி ஆகியவற்றின் விளைவே புதிய கோட்பாடுகளைக் கொண்ட அருங்காட்சியகங்கள் தோன்றக் காரணங்களாயின. தொடக்கத்தில் அரசர்கள், செல்வந்தர்கள், வணிகர்கள், கலை ஆர்வலர்கள் ஆகியோரால் ஆர்வத்தைத் தூண்டும் அரிய பொருள்கள் சேகரிக்கப்பெற்றன. பின்னரே சேகரிக்கப்பட்ட பொருள்கள் ஆய்வுக்காகப் பயன்படுத்தப்பட்டன. அதன் பின்னர் இப்பொருள்களைப் பொதுமக்கள், மாணவர்கள் காண்பதற்குரிய வகையில் காட்சிக்கூடங்கள் தோன்றின. இதன் வளர்ச்சியே பின்னர் கல்விக்குரிய இடமாகவும் மாற்றமுற்றது. இவ்வாறு சேகரிப்பு, ஆய்வு, காட்சிப்படுத்துதல், கற்பித்தல் என்ற நான்கு வகையான செயல்முறைகளைப் பெற்றதாக அருங்காட்சியகங்கள் இன்று பயன்பட்டு வருகின்றன.



நமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகம், தஞ்சாவூர்



தேசிய அருங்காட்சியகம், புதுதில்லி.



கொல்கத்தா அறிவியல் காட்சிக் கூடத்தில் குழந்தைகள்



பார்வதி
தஞ்சாவூர் கலைக்கூடம்
(கி.மு. 14 – ஆம் நூற்றாண்டு)

இக்காலத்தில் உலகெங்கும் பல்வேறு அருங் காட்சியகங்கள் தோன்றி வருகின்றன. இதனால் அருங்காட்சியகத்தின் சேகரிப்புமுறை, அவற்றைப் பாதுகாக்கும் வழி, காட்சிப்படுத்துவதில் உள்ள சிறப் புத்தன்மை, பொதுமக்களைச் சென்றடைவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் கல்விப்பணி ஆகியவற் றில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

அருங்காட்சியகவியல் என்பது அருங்காட்சியகக் கல்வியோடு தொழில்நுட்பச் சிந்தனைகளையும் உள் ளடக்கியதாகும். இதில் அருங்காட்சியக அமைப்பு முறைகளும் அதன் செயற்பாட்டு நெறிமுறைகளும் சிறப்பிடம் பெறும். அரும்பொருள்களை அழிவி னின்று காத்தல், அவற்றைச் சேகரிப்பதன் நோக்கம், பதிவு செய்யும் முறைகள், கண்காட்சியமைப்பு நெறி கள், பார்வையாளர்களின் எதிர்பார்ப்பும் அவற்றை நிறைவு செய்தலும், நடமாடும் காட்சியகமுறை போன்றவற்றை விரிவாகப் பயிற்றுவிக்கும் ஒரு பாட மாக அருங்காட்சியகவியல் அமையப் பெறுகின்றது. இன்றைய அருங்காட்சியகக் கல்வி முறையால் கலைக் கூடங்களிலிருந்து வெளியே வந்து பண் பாட்டு, வரலாற்று, அறிவியல் தொடர்புடைய இடங் களுக்கு நேராகச் சென்று காணுமாறு செய்வது என்ற புதிய செயல்முறை தொடங்கப் பெற்றுள்ளது. இதன் அடிப்படைக் காரணமே அருங்காட்சியகவியல் கல்வி முறையாகும். அருங்காட்சியகவியல் கல்வி ( Museology ), அருங்காட்சியக அமைப்பியல் கல்வி ( Museography ) என இருபெரும் பிரிவுகளாகப் பிரித்து கற்பிக்கப்படுகின்ற வளர்ச்சியை அருங்காட்சியக வியல் பெற்றுள்ளது. இதனால் அருங்காட்சியகவியல் ஆய்வு ( Museological Research ), அருங்காட்சியக ஆய்வு ( Museum Research ) எனச் சிறப்பு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவில் பரோடாவிலுள்ள எம்.எஸ். பல்கலைக்கழகத்தில் தான் முதல்முறையாக அருங் காட்சியகவியல் கல்வி கற்பிக்கப்பட்டது. இன்று பல் வேறு பல்கலைக்கழகங்கள் ஓராண்டு, ஈராண்டுப் பாடங்களையும், பட்டயப் பாடங்களையும் நடத்தி வருகின்றன. பன்னாட்டுக் கல்வி, பண்பாட்டுக் கழ கத்தின் ஒரு செயற்பிரிவாகிய பன்னாட்டு அருங்காட் சியகக் கழகம் (ICOM) அருங்காட்சியகவியல் கல்விக்குரிய பயிற்சிப் பாடத்திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளது. உலகிலுள்ள அருங்காட்சியகப் பணியாளர்களுக்கென ஒரு பயிற்சியையும் இக்கழகம் அளித்து வருகின்றது. புதுதில்லியிலுள்ள இந்திய தேசிய அருங்காட்சியகம் இன்று ஒரு பல்கலைக் கழகமாகச் செயல்பட்டு வருகின்றது என்பது இத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி நிலையைக் காட்டு கின்றது.

- இரா. ப.

**அருணா ஆசப் அலி :** இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட மகளிருள் இவரும் ஒருவர். இவர் 1910ஆம் ஆண்டில் வங்காளத்தில் பிறந்தார். இவர்தம் இளமைப் பருவத்தில் உத்திரப்பிரதேசத்திலுள்ள நைனிடால் என்ற ஊரில் வாழ்ந்தார். பள்ளிப் பருவத் திலேயே சமுதாய விழாக்களில் கலந்து கொண்டு அர சியல் துறையில் தமக்குள்ள ஆர்வத்தைக் காட்டி வந் தார். தம்முடைய பத்தொன்பதாம் வயதில் புகழ்மிக்க வழக்கறிஞரும், அரசியல் துறையில் செல்வாக்குப் பெற்றவருமான ஆசப் அலி என்ற முகமதியரைத் திருமணம் செய்து கொண்டார். இருபது ஆண்டுகள் மூத்தவரான பிற மதத்தினரைத் திருமணம் செய்து கொள்வதில் கடுமையான எதிர்ப்பு இருந்தபோதும் இவர் அதைப் பொருட்படுத்தவில்லை. அருணா தம் கணவருடன் அமெரிக்க நாட்டிற்குச் சென்றார். பின் னர், மெக்சிகோவில் நிகழ்ந்த ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக, பண்பாட்டு அவையில் ஓர் உறுப்பினராகக் கலந்து கொள்ள இந்தியாவின் பேராளராகச் சென்றார். சோவியத்து ஒன்றியம், கிழக்கு ஐரோப்பா நாடுகள் ஆகியவற்றைச் சுற்றிப் பார்த்துப் பட்டறிவு மிக்கவரானார்.

வெளிநாடு சுற்றி வந்த இவருக்கு அரசியல் செயல் களில் நாட்டம் மிகுந்தது. இவர் வாழ்க்கையில் இது முதல் திருப்பமாகும். காந்தி, ஆசாத் முதலிய காங் கிரசுத் தலைவர்களைச் சந்தித்தார். அரசியல் கூட்டங் களில் சொற்பொழிவாற்றத் தொடங்கினார். செயப் பிரகாச நாரயணன், இராம் மனோகர் லோகியா போன்றவர்களுடைய ஆதரவாலும், ஊக்குவிப்பா லும் காங்கிரசு சமவுடைமை இயக்கத்தில் சிறந்தவ ராகத் திகழ்ந்தார். காந்தியடிகள் 1930, 1941 ஆகிய ஆண்டுகளில் அரசாங்கத்திற்கெதிராக நடத்திய

ஒத்துழையாமை இயக்கங்களில் இவர் கலந்து கொண்டதால் சிறை செய்யப்பட்டார்.

'வெள்ளையனே வெளியேறு' என்ற காந்தியப் போராட்டம் 1942ஆம் ஆண்டில் தொடங்கியது. அப் போராட்டத்தில் இவ்வம்மையார் கலந்து கொண்டு தம்முடைய சம உடைமைக் ( Socialist ) கொள்கை யுடைய நண்பர்களோடு பம்பாய், கல்கத்தா, தில்லி முதலிய இடங்களுக்குச் சென்று மறைவாகக் கூட்டங் கள் நடத்தி இயக்கத்திற்கு வழிகாட்டி ஊக்கமளித்து ஆர்வமூட்டினார். அது இவர் வாழ்க்கையில் இரண் டாம் திருப்புமுனையாயிற்று. கைது செய்யுமாறு அர சாங்கம் விதித்த ஆணையின் காரணமாக 1946 வரை மறைமுகமாகவே வாழ்ந்தார். பின் இந்திய அரசாங் கம் அவ்வாணையை விலக்கிய பின்னரே வெளிப் பட்டார்.

தில்லிப் பிரதேசக் காங்கிரசுக் குழுவின் தலைவராக 1947ஆம் ஆண்டு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் இவருடைய நோக்கங்களுக்கு காங்கிரசின் அரசியல் கொள்கைகள் ஒத்துவரவில்லை. எனவே, இவர் காங்கிரசிலிருந்து விலகினார்.

பின்னர், 1948ஆம் ஆண்டு சமவுடைமைக் கழகத் தில் ( Socialist Party ) சேர்ந்து, இரண்டு ஆண்டுகட்குப் பின்னர் அதையும் விடுத்து இடதுசாரி சமவுடைமைக் குழு ( The Left Socialist Group ) ஒன்றைத் தோற்று வித்தார். இக்குழு 1955ஆம் ஆண்டு இந்தியப் பொது வுடைமைக் கட்சியுடன் இணைக்கப்பட்டு, இவர் அதன் மையக்குழு உறுப்பினராகவும் அனைத்திந்திய தொழிலாளர் சங்க அமைப்புத் துணைத் தலைவராக வும் ஆனார். பண்டித நேருவின் ( 1964 ) மறைவுக்குப் பின் மீண்டும் காங்கிரசு கட்சியில் இவர் சேர்ந்த போதிலும் விறுவிறுப்பாக எச்செயலிலும் ஈடுபட வில்லை. தில்லி மாநகராட்சித் தலைவராக 1958ஆம் ஆண்டு தேர்ந் தெடுக்கப்பட்டார். அப்பதவியிலிருந்து 1959ஆம் ஆண்டு ஏப்பிரலில் விலகி, இந்திய சோவியத்துப் பண்பாட்டுக் கழகத்திலும், அனைத் திந்திய அமைதிக் குழுவிலும், இந்தியப் பெண்கள் தேசியக் கூட்டமைப்பி லும் உறுப்பினராகச் சேர்ந்தார். தம்முடைய இறுதிக் காலத்தைச் சமவுடைமைக் கொள்கைப் பற்றுடைய வராத் தில்லியில் கழித்தார்.

- க.அ.

**அருள் நமச்சிவாய தேசிகர் :** இவர் சீகாழிப் பதியினர். மெய்கண்ட சந்தான ஆசாரியருள் மூன்றா மவரான மறைஞானசம்பந்தரின் மாணவர். இவ ருடன் பயின்றவரே உமாபதி சிவாச்சாரியார். அருள் நமச்சிவாயர் தம் குருநாதராய மறைஞான சம்பந்தர் முக்தியடைந்த பின் தாம் பக்குவநிலை பெறாதது கண்டு தன்னிலும் மேலான உமாபதி சிவாச்சாரியா ரையே தம் குருவாக ஏற்றுக்கொண்டு அவர் மாணவ ராயிருந்து பலன் பெற்றார். உமாபதி சிவாச்சாரியா ருக்குப் பின் மெய்கண்ட சந்தான பரம்பரையைத் தொடர்ந்து வளர்த்து வந்தவர் இவ்வருள் நமச்சி வாயத் தேசிகரே. இவருக்கு மச்சுச் செட்டியார் என் னும் வேறு பெயரும் உண்டு. சைவ வேளாளர்களுள் செட்டியார் என்ற ஒரு பிரிவினருள்ர். இவர் இயற் பெயர் சாமிநாதன் என்று கூறுவர். இவர் இளமை யிலேயே ஞான நாட்டம் கொண்டு உலகியலில் மனதை உழலாதபடி நிறுத்தும் காரணமாகத் தம் வீட்டு மச்சியிலேயே உறைந்து வந்தார். ஆதலின் இவருக்கு மச்சுச் செட்டியார் எனும் காரணப்பெயர் ஏற்படலாயிற்று. இவர் காலம் பதினான்காம் நூற். என்று ஆராய்ச்சி வல்லுநர் கூறுகின்றனர் ( கி.பி. 1300 - 1330 ). இவர் ஞான பூசாகரணம், ஞான பூசாவிதி, ஞான தீட்சாவிதி, ஞான அந்தியேட்டி, போசனவிதி என்னும் ஐந்து பிரமாண நூல்களைப் பாடியுள்ளார். இவருக்கு மாணவர்கள் பலர் இருந்தனர். அவர்களுள் தலையாயவர்கள் சித்தர் சிவபிரகாசரும் காழிக் கங்கை மெய்கண்டாருமாவர். இவர்களுள் சித்தர் சிவப் பிரகாசர் மூலம் திருவாடுதுறை ஆதீனமும் காழிக் கங்கை மெய்கண்டார் சீடர்கள் மூலம் தருமை யாதீனமும் ஏற்பட வாய்ப்பேற்பட்டது.

- இரா. ச.

**அரை ஒப்பந்தம் :** ஒப்பந்தச் சட்டத்தின் 68வது பிரிவு முதல் 72வது பிரிவு வரை ஒப்பந்தங்களால் உரு வாக்கப்பட்ட தொடர்புகள் பற்றிக் கூறப்பட்டுள்ளன. அவை தொக்கியுள்ள அல்லது உருவாக்கியுள்ள அல்லது அரை ஒப்பந்தங்கள் என அழைக்கப்படுகின் றன. இவ்வரை ஒப்பந்தம் ( Quasi Contracts ) கீழ்க் காணும் ஐந்து வகைகளைச் சாரும்.

**1. பெற்றிருந்த அல்லது வைத்திருந்த பணம் பற்றிய வழக்கு :** வாதி பிரதிவாதிக்குப் பணம் கொடுத்து அதைத் திரும்பக் கோரும் போதும், பிரதி

வாதியின் பயன்பாட்டிற்கு வேறு ஒருவரிடன் வாதி பணம் கொடுத்திருந்த போதும், அல்லது மூன்றாம் மனிதரிடமிருந்து பிரதிவாதி பணம் பெற்றிருந்த போதும் இச்சூழ்நிலை ஏற்படுகிறது. அதாவது பணம் பற்றிய வழக்கு ஏற்படுகிறது. தவறாக, தவறான மனிதருக்குப் பணம் செலுத்தப்பட்டிருக்கலாம். கைமாறு செய்வதற்குத் தவறியிருக்கலாம் அல்லது மோசடி மூலம் பணம் பெற்றிருக்கலாம். எனவே, பெற்றிருந்த பணத்தை வழக்காடித் திரும்பப்பெறலாம். சில நேரங்களில் பிரதிவாதிக்குச் சில அவசியமான கட்டுப்பாட்டினால் பணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை நேரலாம். முதலாளிக்குப் பதிலாக அவரின் பதிலாள் பணம் பெற்றுக் கணக்கில் காட்டாமலிருக்கலாம். அவ்வாறு பெற்ற பணத்தைத் திருப்பித் தருவதற்கு வழக்காடலாம்.

**2. பணித்தகு தொகை ( Quantum merit )** : வெளிப்படையான வாக்குறுதியில்லாதபோது ஒருவர் தாம் செய்த வேலைக்குத் தக்கவாறு பணம் கேட்கும் போது இது எழுகிறது. தாம் அனுப்பிய சரக்கிற்கு நியாயமான அளவு வாதி பணம் கோரலாம். இத் தகைய வழக்குகளில், சட்டத்தில் வாக்குறுதி கலந்தி ருக்க வேண்டும். ஒருவர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற மறுக்கும்போதும் அல்லது விட்டுவிடும் போதும் இது தோன்றுகிறது. பிளான்சு எ. கோல்பர்ன் ( Plan che vs Colburn ) என்ற வழக்கில் ஒரு வார இதழில் ஒரு புத்தகத்தைப் பகுதி பகுதியாக வெளியிடுவதற்கு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் திடீரென்று வார இதழ் நிறுத்தப்பட்டது. வெளியிட்ட அளவிற்கேற்ப அந்நூலாசிரியர் பணம் பெறலாம் என்று நீதிமன்றம் தீர்ப்பு கூறியது. கிரவான் எல்லீசு லிமிடெட் என்ற நிறுவனத்தில் ஒருவர் நிர்வாக இயக்குநராக அமர்த்தப்பட்டார். ஆனால், அவரை நிர்வாக இயக்குநராக அமர்த்துவதற்கு மற்றைய இயக்குநர்களுக்கு அதிகாரம் இல்லையெனப் பிறகு தெரியவந்தது. எனவே, அவர் அப்பதவியை விட வேண்டியுள்ளதால் அவர் அதுவரை செய்த வேலைக்குச் சம்பளம் கோரி வழக்குத் தொடுத்தார். அது ஒரு செல்லாத ஒப்பந்தமாக இருந்த போதிலும், அதுவரை அவர் செய்த வேலைக்குச் சம்பளம் தர வேண்டுமென்று நீதிமன்றம் கூறியது. ஒருவர் மற்றொருவரின் செயலால் பயனடைந்தாலும், அப்பயனைத் திரும்பத்தரச் சொல்லி ஆணையிடுகிறது என்ற அடிப்படையில் இது அமைந்துள்ளது. சில நேரங்களில் ஒருவர் செய்த வேலைக்குத் தகுந்த வீதத்தில் பணம் தரவேண்டும் என்ற தொக்கிய வாக்குறுதி இருந்தால்தான் பரிகாரம் ஏற்படும். கட்டர் எ. பாவெல் ( Cutter vs Powell ) என்ற வழக்கில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சமைக்காவிலிருந்து லிவர்பூலுக்குக் கடற்பயணம் செய்தால் கட்டருக்கு 30 கினியாக்கள் தருவதாக உடன்பாடு செய்யப்பட்டது. இடையிலே கட்டர் இறந்துவிட்டார். அவருடைய மனைவி, செய்த வேலைக்குச் சம்பளம் வேண்டி வழக்குத் தொடர்ந்தார். ஒப்பந்தம் ஒரு முழு வேலையைச் சார்ந்ததென்றும், அதைத் தனியே பிரிக்கவியலாதென்றும் கூறி நீதிமன்றம் அவர் மனைவிக்கு நிவாரணம் தர மறுத்துவிட்டது. ஆப்பிள் எ. மியர்சு ( Apple vs Myers ) என்ற வழக்கில் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ஒரு எந்திரத்தைப் பொருத்தவேண்டும் என்பது உடன்பாடு. ஒரு பகுதி எந்திரம்தான் பொருத்தப்பட்டது. அதுவும் தீயினால் நாசமாகிவிட்டது. எனவே, உடன் வேலையாள்கள் அப்புறப்படுத்தப்பட்டார்கள். செய்த வேலைக்கு ஏற்ற கூலி தரப்படவில்லை.

**3. கொடுக்கப்பட்ட கணக்கு** : ஒருவர் காட்டிய கணக்கை மற்றொருவர் ஒத்துக் கொண்டுவிட்டால், பின்னர் அவர் அதைத் திரும்பக் கிளறி மீண்டும் கணக்கு காட்ட வேண்டும் என்று சொல்லக்கூடாது. தீர்ந்த கணக்கை மோசடி என்று ஐயப்பட்டால்தான் திரும்பக் கேட்க வேண்டும். ஒத்துக்கொண்ட கணக்கில் மீதமுள்ள தொகையைத் தருவதாக வாக்குறுதி தந்திருந்தால் அவ்வாக்குறுதியின் மேல் நடவடிக்கை எடுக்கலாம். தீர்க்கப்பட்ட கணக்கில் ஒவ்வொரு வரவு விவரத்தையும் காட்ட வேண்டிய அவசிய மில்லை.

**4. அவசியப் பொருள் அளித்தல்** : வயது வராதோர் அல்லது பித்தர் ஆகியோர்களுக்கு அவசியமெனப் பொருளை அளித்தோர், அவர்களின் சொத்துக்களிலிருந்து தங்கள் சேவைக்கான பணத்தைப் பெறலாம் என்று ஒப்பந்தச் சட்டத்தின் 68வது பிரிவு கூறுகிறது. இத்தகைய நிகழ்ச்சிகளில் பொறுப்பு தனிப்பட்ட நபர் மீது விழாமல் அவர் தம் சொத்துகளின் மீது விழுகிறது. இழப்பீடு தரவேண்டுமென்று சட்டத்தில் மறைமுகமாகக் கூறப்பட்டுள்ளது.

**5. பொருளைக் கண்டுபிடித்தோர்** : தொலைந்த பொருளைக் கண்டுபிடித்தோரின் கடமைகள் யாவை என்பதை ஒப்பந்தச்சட்டத்தின் 71வது பிரிவும், 151 வது பிரிவும் கூறுகின்றன. ஓர் ஒப்படைப் பெறுபவரின் ( Bailee ) பொறுப்பு எவ்வாறோ அவ்வாறு அவரு

டைய பொறுப்புள்ளது. அப்பொருளின் உண்மையான உரிமையாளரைக் கண்டுபிடித்து அவரிடம் அதை ஒப்படைக்கும் வரை அவர் அப்பொருளை மிகவும் கண்காணிக்க வேண்டும். அத்தகைய சொத்துகள் பற்றி அரை ஒப்பந்தத்தில் ஒரு வழக்குத் தொடரலாம்.

அரை ஒப்பந்தம் அல்லது ஒப்பந்தப்போல்வு சட்டத்தின் மூலமாக ஏற்பட்ட ஒப்பந்தங்கள் உண்மையில் ஒப்பந்தங்கள் இல்லை. ஆனால் சட்டத்தின் கண்களுக்கு அவை ஒப்பந்தமாகும். இத்தகைய ஒப்பந்தங்களில் இருவரின் இசைவும் இருக்க வேண்டிய அவசியமில்லை. நேர்மை நெறியின் அடிப்படையில் இத்தகைய ஒப்பந்தங்களுக்குச் சட்ட ஏற்பு கிடைத்துள்ளது. இத்தகைய நிகழ்ச்சிகளில் தோன்றும் சட்டம் ஒருவர் வேறு ஒருவரிடமிருந்து நன்மை பெற்றால், அவருக்கு அதாவது அந்நன்மை செய்தோருக்கு அதற்காக ஈட்டுத்தொகை அளிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறது. இத்தகைய ஒப்பந்தங்கள் உடன்பாடுகளால் தோன்றுவதில்லை. சட்டத்தால் மறைவாகத் தொக்கிக் கூறப்படுகின்றன. வெளிப்படுத்திய உடன்பாட்டால் ஏற்பட்ட கடமைகள் போன்றும், கடமைகளைச் சட்டம் மனிதர்கள் மீது சுமத்துவதுண்டு என்றாலும், அத்தகைய ஒப்பந்தங்கள் ஒரு நிறுவனத்தின் அதிகாரத்திற்கும் அப்பாற்பட்டதென்றால், அந்நிபந்தனைகளை வலியுறுத்த முடியாது. மொத்தத்தில் இவ்வகை ஒப்பந்தங்கள் வழக்கறிஞர்களும், நடுவர்களும் இணைந்து நேர்மையின் அடிப்படையில் உண்டாக்கிய ஒருவகை ஒப்பந்தங்களாகும்.

- கே. என். இரா.

**அல்லூர் :** வரலாற்றுப் புகழ்மிக்க சிற்றூர். திருச்சி - கரூர் சாலையில் திருச்சியிலிருந்து மேற்கே 10 கி.மீ. தொலைவில் காவிரியின் தென்கரையில் அமைந்துள்ளது. இங்கு, பஞ்சநதீசுவரர் கோயில், பசுபதீசுவரர் கோயில் எனும் இரு முற்காலச் சோழர் காலத்திய கோயில்கள் உள. பஞ்சநதீசுவரர் கோயிலில் வீற்றிருக்கும் இறைவர், 'திருவடகுடி பரமேசுவரர்' எனவும் 'திருவடகுடி மகாதேவர்' எனவும் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகிறார். இது இருதளக் கற்றளி. இக்கோயில் முதலாம் பராந்தக சோழன் காலத்தில் எடுக்கப்பட்டது. இக்கோயிலின் முதலாம் பராந்தகன், இராசகேசரி (கண்டராதித்தன்) கல்வெட்டுகள் காணப்படுகின்றன. பசுபதீசுவரர் கோயில் இறைவர் 'அல்லூர் நக்கர் கோயில் பரமேசுவரர்' என்று கல்வெட்டில் குறிக்கப்பெறுகிறார். இக்கோயிலில் முதலாம் பராந்தகன், கண்டராதித்தன், பரகேசரி, அரிஞ்சயன், முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன், முதலாம் இராசதிராசன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகியோர் காலத்திய கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இந்த ஒரு தளக்கற்றளி முதலாம் பராந்தகன் காலத்தது. வீர சோழ இளங்கோவேளுடைய அரசியான கங்கமாதேவி இவ்வூரில் தன் கணவனுடன் உடன்கட்டை ஏறினாள் என்பர்.

- ம. இரா. த.

**அற நிலையம் :** அறச்செயல்களைச் செய்யும் அமைப்பு அறநிலையம் ஆகும். பொதுவாக மக்கள் குலம் பயன்பெறவோ மக்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் பயனடையவோ சமயக்கல்வி, அறிவியல் ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காகவோ, வறுமை ஒழிபடும் பொருட்டோ வருமானம் பயன்படுத்தப் படுதலே ஆங்கிலச் சட்ட அடிப்படையில் அறச் செயல் எனக் கூறப்படுகின்றது. முசுலிம் அறச் செயல் சட்டம், ஆங்கிலச் சட்டத்தில் கூறப்பட்ட பொதுச் செயல்களுடன், இசுலாம் கற்பிக்கும் வணக்கம், அதைப் பேணும் காரியங்கள், தம்முடைய உற்றார் உறவினர் பயன்பெறுமாறு ஒரு முசுலிம் செய்யும் கடமைகள் ஆகியவற்றை இணைத்து அறச்செயல்கள் என்கிறது.

முசுலிம் அறக்கட்டளைச் சட்டம், அறக்கட்டளையின் குறிக்கோள், சமய, தெய்வீக அறச்செயல்கள் தொடர்பானதாக இருக்க வேண்டும் என்கிறது. முசுலிம் அறக்கட்டளையின் குறிக்கோள்கள் பின்வரும் பாங்கிலும் அமையலாம். அவை, 1. இமாம்கள், முவாசின்கள் ஆகியோரின் சம்பளம் உட்பட மசூதியை நிர்வகித்தல், 2. கல்வி நிறுவன ஊழியர்களின் சம்பளம் உட்பட அவற்றை நிர்வகித்தல், 3.ஏழைகளுக்கும், வறியவர்களுக்கும் தானம் அளித்தல், 4. புனிதப் பயணத்திற்காக ஏழைகளுக்கு நிதியுதவி செய்தல், 5. பாலங்கள், மதகுகள் ஆகியவற்றைக் கட்டி நிர்வகித்தல், 6. அறக்கட்டளையை நிறுவியவர் அல்லது அவர் உறவினர்களின் நினைவு ஆண்டு விழாக்களை நடத்துதல் அல்லது அத்தகைய வாய்ப்பு

களுக்கான சம்பிரதாயச் சடங்குகளை நடத்துதல், 7. முகரம் பண்டிகையை இந்திய முறையில் நடத்துதல், 8. இமாம்பாரா, கங்கா, தர்கா, இட்கா போன்ற குறிப்பிட்ட தனியார் அல்லது அறக்கட்டளைகளை நிருவகித்தல், 9. மசூதி விளக்குகளுக்கான செலவுகள், 10. மரபுவழி மதச் சடங்குகளை நடத்துதல், 11. மெக்காவில் உரோபத்துகளைக் கட்டுதல், 12. பொது அல்லது தனியார் இடங்களில் குர்ஆன் ஓதுதல், 13. ஏழைகளுக்குத் தானம் செய்தல், 14. ஏழை உறவினர்களுக்கு வாழ்க்கைப்படி அளித்தல், 15. கல்வி நிறுவனம், மசூதி அல்லது மருத்துவமனையை நிறுவ அறநிலையங்களை உருவாக்குதல், 16. ஒரு மண்டபம், சமாதி அல்லது கல்லறையில் உருசு அல்லது படேகாவை நடத்துதல் போன்றன. முசுலிம்களின் குடும்ப அறக்கட்டளை 'வக்பு' அல்லது 'அவுரத்' எனப்படும். இது அறக்கட்டளைகளுள் நன்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். முசுலிம் சட்டம் இந்த வகை அறக்கட்டளையை மற்றவற்றிற்கு இணையாக அனுமதிக்கிறது. ஒரு முசுலிம், சட்டப்படி தன் குடும்பம், குழந்தைகள் வம்சம் ஆகியோரின் குடும்பத்தை முற்றிலும் அல்லது ஓரளவு காப்பாற்றுவதற்காகக் குடும்ப அறக்கட்டளையை நிறுவலாம். ஒரு 'கனபி' முசுலிம் தன் வாழ்க்கைச் செலவுகளுக்காகவும் கடன்களைத் தீர்த்துக் கொள்வதற்காகவும் ஓர் அறக்கட்டளையை நிறுவலாம்.

**அறக்கட்டளை நிருவாகம்** : முசுலிம் சட்டப் படி, ஓர் அறக்கட்டளை பொதுவாக ஒரு முத்தவல் லியால் நிருவாகம் செய்யப்பட வேண்டும். முத்த வல்லி அறக்கட்டளையின் மேற்பார்வையாளரா வார். ஒரு முத்தவல்லி, அறக்கட்டளைச் சொத்தைச் சிறந்த முறையில் நிருவகித்துக் காப்பாற்றக் கடமைப் பட்டவராவார். அவர் தம் கடமைகளைக் கௌரவமாகவும் தெளிவாகவும் விசுவாசமாகவும் இருந்து நிறைவேற்றி வருதல் வேண்டும்.

**இந்துசமய அறக்கட்டளைகள்** : இந்து சமயத்தின் வழிநிலையில் அல்லது அறச்செயல்களின் அடிப்படையில் இந்துச்சட்டம் அங்கீகரிக்கும் அறக்கட்டளைகளே செல்லுபடியாகும் அறக்கட்டளைகளாகும்.

**செல்லுபடியாகும் அறக்கட்டளைகள்** : 1. மருத்துவ மனைக்காக ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 2. பேராசிரியர் நிலைக்காக ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 3. பல்கலைக்கழகத்திற்கு உறுதுணையாகும் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 4. பள்ளி, மருத்துவமனை ஆகியவற்றின் நிருவாகத்தின் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 5. அறச்சாலைப் பராமரிப்பின் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 6. கல்வியின் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 7. குளங்கள், கிணறுகள் கட்டுவதன் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 8. கல்வி உயர்வின் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 9. பார்ப்பனர்களுக்கு உரிய சடங்குகள் இயற்றுதல் மற்றும் உணவளித்தல் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 10.விலங்கினங்களைப் பாதுகாக்கும் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை; 11. ஏழை, உறவினர்கள், பணியாட்கள், தம்மைச் சார்ந்திருப்போர் ஆகியோருக்கு உணவளித்தலின் பொருட்டு ஏற்படுத்தப்படும் அறக்கட்டளை ஆகியன செல்லுபடியாகும் இந்து சமய அறக்கட்டளைகளாகும்.

- பு. வே.

**அறிவுத்திறன் இழப்பு** : அயல்நாடுகளுக்குச் செல்லும் ஒருவர் மூலம் அறிவுத்திறன் இழப்பு ( Brain - Drain ), அறிவாற்றல் உதவி ( Brain - Aid ) முதலியன ஏற்படுகின்றன. ஓர் அரசு தன்னாட்டு வல்லுநர்களை இன்னொரு அரசுக்கு உதவிபுரியும் நோக்குடன் அனுப்பி வைப்பதையே அறிவாற்றல் உதவி என்பர். வளரும் நாடுகளின் சிறப்பான திட்டங்களில் உதவுவதற்காக ஒரு தாய்நாடோ, பன்னாட்டு அமைப்புகளோ இத்தகைய அறிவாற்றல் உதவியை அளிக்கின்றன. ஆனால் அறிவுத்திறன் இழப்பு அதிலிருந்து மாறுபட்ட ஒன்றாகும். அறிவுத்திறன் இழப்பு என்பது தானாகவே நிகழ்கிற, திட்ட அடிப்படையில் ஏற்படாத தன் விருப்பத்துடன் தோன்றும் மக்கள் பெயர்ப்பு நிகழ்ச்சியாகும்.

பொதுவாக வளரும் நாடுகளில் செயல்திறம் வாய்ந்த தொழிலாளர்களும் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களும் குறைந்த எண்ணிக்கையிலேயே பணிபுரிந்து வருகின்றனர். வளரும் நாடுகளில் படித் துப் பட்டம் பெற்றுச் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்க ளுள் பெரும்பான்மையோர் வளர்ந்த நாடுகளில் பணி புரியச் சென்றுவிடுகின்றனர். இது வளரும் நாட் டின் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கின்றது. அவர் களை இழக்காமல் அந்தந்த நாடுகளே முழுமை யாகப்

பயன்படுத்திக்கொண்டால் வளரும் நாடுகள் மேலும் வளர வாய்ப்புகள் உண்டாகும். ஒவ்வொரு நாடும் பெருமளவு செலவழித்தே தன்னாட்டில் சிறப் புத் தேர்ச்சிப் பெற்றவர்களை உருவாக்குகின்றது. அவ்வாறு உருவாக்கப்பட்டவர்கள் அயல்நாடுகளுக் குச்சென்றுவிடுவதால் அந்நாடு அந்த அறிவுத் திறனை உண்டாக்கச் செலவழித்த முதலீட்டை இழக்க நேர்கின்றது. குறிப்பாக மிக அதிக அளவில் முதலீடு செய்து உருவாக்கிய உயர் கல்வித்துறையில் பயிற்சி பெற்றோர் தம் சொந்த நலன் கருதி அயல் நாடுகளுக்குச் செல்வதால் அரசு மிகப்பெரிய பொரு ளாதார இழப்பைச் சந்திக்க நேர்கிறது.

1982ஆம் ஆண்டு ஆய்வறிக்கையின் படி இந்தியா, பிலிப்பைன்சு, மெக்சிகோ, கரிபீயன் தீவு போன்ற நாடுகளில்தான் மிகுதியாக அறிவுத்திறன் இழப்பு நிகழ்கின்றது. வளரும் நாடுகளின் அறிவுத்திறன் இழப்பால் வளர்ந்த நாடுகள் ஆதாயம் பெறுகின் றன. குறிப்பாக அமெரிக்கக் குடியரசே பெருமளவு ஆதாயம் அடைகின்றது. எ.கா. அமெரிக்காவின் மொத்த அறுவை மருத்துவர்களில் ஏறத்தாழ 30 விழுக்காட்டினர் அயல்நாட்டினராவர். ஒரு புள்ளி விவரப்படி 1916 - 1972 ஆம் ஆண்டுகளுக்கிடையே அமெரிக்காவிற்கு 30 இலட்சம்கோடி டாலர்களும், கனடாவிற்கு ஒரு லட்சம் கோடி டாலர்களும், பிரிட்டனுக்கு மூன்றரை லட்சம் கோடி டாலர்களும் அயல்நாட்டு சிறப்புத் தேர்ச்சிப் பெற்றவர்களை பயன்படுத்தியதால் ஆதாயம் கிடைத்துள்ளது.

அயல்நாடுகளுக்குச் செல்வதால் வளரும் நாடுக ளுக்குச் சிற்சில நன்மைகளும் ஏற்படுகின்றன. அவை 1. கடுமையான வேலையில்லாத் திண்டாட்டமுள்ள நாடுகளில் சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று விடுவ தால் அங்கேயே தங்கியுள்ள பிறருக்கு வேலைவாய்ப்பு மிகுதியாகின்றது. 2. அயல்நாடுகளுக்குச் செல்வோர் தன் பிறந்த நாட்டிற்குப் பணம் அனுப்புவதால் அந்த நாட்டின் அந்நியச் செலவாணி கையிருப்பு நிலை மேம்பாடு அடைகிறது. 3. அயல்நாட்டுப் படிப்பு முடித்துவரும் சில வல்லுநர்களைத் தன் சொந்த நாட் டின் வளர்ச்சிக்கும் பயன்படுத்த வாய்ப்பு ஏற்படு கிறது. ஆனால் மேற்கூறப்பட்ட இம்மூன்று நன்மை களும் குறுகிய கால விளைவுகளே தவிர நிரந்தர விளை வாகக் கருதவியலாதவை. எனவே, ஒரு நாட்டிற்கு அறிவுத்திறன் இழப்பு வாயிலாகக் கிடைக்கும் நன்மையைவிடத் தீமைகளே மிகுதி.

**இந்தியாவில் அறிவுத்திறன் இழப்பு** : பண்டைய காலத்திலிருந்தே இந்தியர்கள் அயல்நாடுகளுக்குச் சென்று குடியேறியிருக்கின்றனர். பொதுவாக வாணி கம் செய்வதற்காகப் பண்டைய காலத்தில் இந்தியர் கள் அயல்நாடுகளுக்குச் சென்றனர். ஆனால் கி.பி. 18 - 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியத் தொழிலாளிகள் தொழில்முறைக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் செய்து கொண்டு இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், பிசித் தீவு, தென்னாப்பிரிக்கா, மொரிசியசு, கரிபீயன் தீவு முதலிய பகுதிகளுக்குச்சென்று பெருமளவில் நிரந்தர மாகக் குடியேறினர்.

இந்தியா சுதந்திரமடைந்த பிறகு மேலை நாடு களுக்குச் சென்று குடியேறப் படித்துப் பட்டம் பெற்ற இந்தியர்களுக்கு மிகுதியான வாய்ப்பு ஏற்பட்டது. குறிப்பாக 1965ஆம் ஆண்டிற்குப் பிறகு அமெரிக்கக் குடியரசு, கனடா, ஆசுதிரேலியா முதலிய நாடு களுக்கு இந்தியர்கள் சென்று குடியேறினர். இவர் களில் 40 விழுக்காடு இங்கிலாந்திலும், 14 விழுக் காடு கனடாவிலும், 11 விழுக்காடு மேற்கு ஐரோப் பிய நாடுகளிலும், 5 விழுக்காடு ஆசுதிரேலியா விலும் உள்ளனர். படித்துப் பட்டம் பெற்றுச்சிறப்புத் தேர்ச்சி பெற்ற இந்தியர்கள் அந்தந்த நாட்டு மொத்த இந்திய மக்கள் தொகையில் அமெரிக்காவில் 80 விழுக்காடும், மேற்கு ஐரோப்பாவில் 75 விழுக்காடும், ஆசுதிரேலியாவில் 74 விழுக்காடும், கனடாவில் 52 விழுக்காடும், இங்கிலாந்தில் 15 விழுக்காடும் இருக் கின்றார்கள். 1970ஆம் ஆண்டுக்குப் பிறகு ஏறக்குறைய 10 இலட்சம் இந்தியர்கள் மேற்காசிய நாடுகளுக்குச் சென்று குடியேறியுள்ளனர்.

இன்று உலகில் ஏறத்தாழ 100 நாடுகளில் இந்தியர் கள் அந்நாட்டுக் குடிமக்களாக மாறியிருக்கின் றார்கள். ஏறத்தாழ 120 இலட்சம் இந்தியர்கள் அயல்நாடுகளில் இருப்பதாகக் கருதுகின்றனர்.

அமெரிக்காவின் சண்டியோகோ இசுடேட் பல் கலைக்கழகத்தில் 1985ஆம் ஆண்டு நடந்த ஒரு மாநாட்டில் அளிக்கப்பட்ட ஓர் ஆய்வு அறிக்கையில் பல்வேறு துறையினைச் சார்ந்த இந்தியர்கள் பல் வேறு நாடுகளில் பணிபுரிவதைத் திரட்டி அளித்தனர்.

அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளின் நகர்ப்புற மருத்துவமனைகள் அயல்நாட்டுப் பணியாளர்களை மிகுதியும் நம்பி வாழ்கின்றன. நியூயார்க்கிலுள்ள மொத்த செவிலியர்களில் மிகுதியாகக் கேரளச் செவிலியரே இருக்கின்றனர். உலக நாடுகள் உடல் நல அமைப்பின் புள்ளி விவரப்படி உலகத்திலேயே மிகுதியாக மருத்துவர்களை அயல்நாடுகளுக்கு இழக்கும் நாடு இந்தியாவாகும். 1980ஆம் ஆண்டில் 13 விழுக்காடு அதாவது 15,000 இந்திய மருத்துவர்கள் அயல் நாடுகளில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களால் இந்திய அரசுக்கு 1440 இலட்சம் அமெரிக்க டாலர்கள் இழப்பு ஏற்பட்டது.

விடுதலைக்குப் பின் பெருகிவரும் மக்கள் தொகையும், வேலையில்லாதோர், வேலைப் பற்றாக் குறை உள்ளவர்கள் பெருகி வருவதாலும் அறிவியல் அறிஞர்கள் தங்களுக்குப் பணிச் சூழ்நிலை இந்திய நாட்டில் முறையாக இல்லை என்பதாலும், வெளி நாட்டில் ஈட்டக்கூடிய அளவுக்கு வருமானம் இந்தியாவில் கிட்டவில்லை என்பதாலும் பெருமளவுக்கு மேலை நாடுகளுக்குச் சென்று குடியுரிமை பெற்று வாழத் தொடங்கினர். சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களை ஈர்க்கும் திட்டங்களை உருவாக்கி, தேசிய விழிப் புணர்வு மனப்பான்மைக் குறிக்கோளுடன் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ளும்போதே அறிவுத் திறன் இழப்பிலிருந்து இந்தியா மீளமுடியும்.

- எஸ். நா.

**அறுவகை இலக்கணம்** : இது ஓர் இலக்கண நூல். வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளால் கி.பி. 19ஆம் நூற்றாண்டில் இந்நூல் எழுதப்பெற்றது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்று பலரும் பகுத்தறியும் ஐந்திலக்கணக்களோடு புலமையிலக்கணம் என்ற ஒன்றையும் சேர்த்துக் கூறுவதால் இந்நூல் அறுவகை இலக்கணம் எனக் காரணப்பெயர் பெற்றது.

இந்நூலின் ஒவ்வொரு பிரிவும் தனித்தனி நூல் போல் காப்புச் செய்யுளுடன் தொடங்குகிறது. உட்பிரிவுகள் யாவும் இயல்பு என்றும் நிலை என்றும் பெயர் பெறும். நூல் முழுமையும் அமைந்த நூற் பாத் தொகை 786. ஓரிலக்கணம் முடிந்து அடுத்தொன்று தொடங்கும் போதும் இயல்புக்கு இயல்பும் இன்னது கூறி இன்னது தொடங்குகிறது எனக் கூறுவதாக நூலின் அமைப்பு உள்ளது. இலக்கண நூல் படிப்பது போன்ற உணர்வே தோன்றாதவாறு சமய உணர்வுடன் இலக்கியச்சுவை தோய்ந்ததாய்ப் பாடப்பெற்றுள்ளமை இந்நூலின் தனிச்சிறப்பாகும். இந்நூலாசிரியர் தெய்வத்தினும் தமிழையே உயர்வாகக் கருதியவர் என்பதை, ‘தமிழ்ச்சுவையறியாத் தெய்வம் உளதெனில் அஃதுணரா வகையில் தாழ்வெனல் அறமே’ ( புலமை. 30 ) என்ற நூற்பாவால் உணரலாம். இடுகுறிப்பெயரும் யாதோ ஒரு காரணம் பற்றி இடப் படுவதோர் பெயராதலின் நுட்பமாக உணரின் அஃதும் காரணப்பெயரே என்பது இந்நூல் துணிபு. இத்தகு புதிய பார்வை கொண்ட இலக்கண நூலாக இந்நூல் அமைந்து சிறக்கிறது.

- சா. உ.

**அன்னாம்** : இது தென்கிழக்கு ஆசியாவில் வியட்நாம் நாட்டின் நடுவில் முற்காலத்தில் விளங்கிய ஒரு வரலாற்றுப் பகுதி. ஒரு நாடாக முன்பு விளங்கிய அன்னாம் ( Annam ) அப்போது ஏறத்தாழ 1290 கி.மீ. நீளத்திற்குக் கிழக்கில் தென்சீனக் கடலுக்கும், மேற்கில் இலாவோசு ( Laos ) கம்போடியா இராச்சியங்களுக்குமிடையே பரவியிருந்தது. அன்னாம் என்னும் சொல், அமைதிப்படுத்தப்பட்ட தெற்கு என்ற பொருளில் கி.பி.264ஆம் ஆண்டு தோன்றியது. சீனப் படைத்துறை உயர் அலுவலர் ஒருவருக்கு அவர் சாதனைகள் காரணமாக, ‘தென்பகுதி அமைதிக்காவலர்’ என்ற பட்டம் கிடைத்திருந்தது. அவருடைய நினைவைப் போற்றும் வகையில் தெற்கில் வியட்நாமியர் வாழ்ந்து கொண்டிருந்ததும் சீனாவின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதுமாகிய பகுதிக்கு அன்னாம் எனப் பெயரிட்டனர். தொடக்கத்தில் ஒரு பகுதிக்கு வைக்கப் பட்ட பெயர் பிறகு நாடு முழுவதும் பொருந்துவதாயிற்று. சீனர்களைப் பொறுத்தவரை வியட்நாம் நாடு, அன்னாம் நாடு என்றே குறிப்பிடப் பட்டது. பிறகு கி.பி. 939ஆம் ஆண்டில் வியட்நாமியர், சீனாவிட மிருந்து விடுதலை பெற்றபிறகு அன்னாம் என்ற பெயரை விடுத்து, தமது நாட்டுக்குத் **தாய்வியட்டு** ( Daiviet ) என்ற புதிய பெயரைச் சூட்டினர். இப்புதிய பெயருக்கு வியட்டுகளின் பெரு நாடு என்பது பொருளாகும்.

மேற்கு நாடுகளைப் பொறுத்தவரை கி. பி. 19ஆம் நூற்றாண்டில்தான் வியட்நாம் நாடு, அன்னாம் நாடு

என்ற பெயராலேயே குறிப்பிடப்பட்டது. மேலை நாட்டு எழுத்தாளர்கள் கி.பி. 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் வியட்நாமை, கொச்சின் சீனா என்னும் பெயரால் குறிப்பிட்டனர். மேலும் அவர்கள், வியட்நாமின் வடபகுதியை ஒரு தனி நாடு எனத் தவறுதலாகக் கருதி அதைத் தாங்கிங்கு ( Tongking ) என்று குறிப்பிட்டனர். பிரான்சு நாட்டினர் கி.பி. 1859க்கும் 1883க்கு மிடைப்பட்ட காலத்தில் இந்தோசீனாவில் படையெடுத்துத் தமது ஆதிக்கத்தைப் பரப்பியபோது வியட்நாம் 5 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் ஒரு பகுதிக்கு மட்டும் அன்னாம் என்ற பெயர் சூட்டப்பட்டது. ஆகவே, பிரெஞ்சு இந்தோசீனாவின் ஒரு பகுதியின் பெயர் அன்னாம். மற்ற நான்கு பகுதிகளாவன :- கொச்சின் சீனா ( தென் வியட்நாம் ), தாங்கிங்கு ( வட வியட்நாம் ), கம்போடியா, இலாவோசு ( Loas ). இவ்வாறு வியட்நாம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டதை வியட்நாமியர் தமது தேசிய உணர்வு காரணமாக விரும்ப வில்லை இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு அப்பிரிவுகள் நீக்கப்பெற்றன. காண்க : வியட்நாம்.

- தெ. பா.

**அன்னூர் :** கோவை மாவட்டத்தில் உள்ள பழமையும் வரலாற்றுச் சிறப்பும் கொண்ட ஊராகும். கோவையிலிருந்து சத்தியமங்கலம் செல்லும் வழி யில் 30 கி.மீ தொலைவில் அன்னூர் அமைந்துள்ளது. அவிநாசிக்கு மேற்கில் அமைந்துள்ள அன்னூர் பண்டு, மன்னியூர் என்று அழைக்கப்பட்டது. கொங்கு நாட்டு வரலாற்றில் அன்னூரிலுள்ள மன்னீசுவரர் கோயில் சிறப்பிடம் பெற்றுள்ளது. பழங்கொங்கு நாட்டின் 24 பிரிவுகளுள் ஒன்றான வடபரிசார நாட்டில் மன்னியூர் அமைந்துள்ளது. வட பரிசார நாட்டில் உள்ள இருபதுக்கும் மேற்பட்ட ஊர்களுள் ஒன்றான இவ்வூர் ஆயிரம் ஆண்டு வரலாற்றுச் சிறப்புமிக்கது.

சோதுன் பூர்வப் பட்டயம், அன்னூர்க்கோயில் கல்வெட்டுகள் ஆகியன அன்னூரைப் பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகின்றன. கல்வெட்டுகளில் அன்னூர் மேற்றலைத் தஞ்சாவூரான மன்னியூர் அடிக்கீழ்த் தளம் என்று குறிப்பிட்டுள்ளது. மன்னியூர், வன்னி யூர், வள்ளியூர் ஆகிய பெயர்களாலும் அன்னூர் குறிக்கப்பெறுகிறது. இவற்றால் அன்னூர் பண்டு சிறந்த வணிகத்தளமாக விளங்கியது எனலாம். முன்பு இவ்வூரில் திருஞான சம்பந்தர் மடம் ஒன்றிருந்தது. இவ்வூரில் அருந்தவச் செல்வி கோயில், பெருமாள் கோயில் போன்ற கோயில்களும் உள்ளன.

கோவை மாவட்டத்தில் காணப்படும் தொன்மை மிக்க கோயில்களுள் மன்னீசுவரர் கோயில் முதன்மையானது. இக்கோயில் கல்வெட்டுகள் 'மன்னியாண்டார் கோயில்' என்றே குறிக்கின்றன. இக்கோயில் கி.பி. 10 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலோ 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலோ கட்டப்பட்டது எனலாம். இக்கோயிலில் ஐம்பத்தாறு கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கல்வெட்டுகள் கி.பி. 11 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 14ஆம் நூற்றாண்டு வரையிலான கால கட்டத்தைச் சார்ந்தவை. எனவே, நான்கு நூற்றாண்டு காலச் சமுதாய, சமய வாழ்க்கையை அறிந்து கொள்ள இவை பெரிதும் பயன்படுகின்றன.

கோக்கலிமூர்க்க விக்கிரம சோழன் ( கி.பி. 1004 - 1047 ), குலோத்துங்க சோழன் ( கி.பி.1149 - 1183 ), வீர சோழன் ( கி.பி.1183 - 1206 ), வீரராசேந்திரன் ( கி.பி.1206 - 1252 ), விக்கிரம சோழன் ( கி.பி.1255 - 1266 ), கோனேரின்மை கொண்டான் வீரபாண்டியன் ( கி.பி.1282 - 1303 ), வீரவல்லாளன் ( கி.பி.1292 - 1345), முதலான வேந்தர்களின் கல்வெட்டுகள் இத்திருக் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ளன.

மன்னீசுவரர் கோயிலின் அமைப்பு தாராபுரம் வட்டம், பிரமியம் என்ற ஊரில் உள்ள வலஞ்சுழி நாதர் கோயிலை ஒத்துள்ளது. இது புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலையில் முத்தரையரால் கட்டப்பட்ட விசயாலய சோழீச்சுரத்தின் கலையைப் பெரிதும் ஒத்துள்ளது. எனவே, இது கோநாட்டார் கலை மரபினது எனலாம். இக்கோயிலில் கருவறை, அர்த்த மண்டபம், முக மண்டபம், மகா மண்டபம் ஆகிய கட்டட அமைப்புகள் உள்ளன. தள விமானம் மூன்று தளங்களை உடையது. அதன் சிகரம் திராவிட சிகரம் ஆகும். இங்கு வடிக்கப்பட்டுள்ள சிற்பங்க ளுள் சேரமான் பெருமாள் நாயனாரும் சுந்தரரும் கயிலை செல்லும் காட்சி நன்கு காட்டப்பட்டுள்ளது. அன்னூரில் கார்த்திகை விழா, திருவாதிரை விழா, தைந்நீராடல், பாவை நோன்பு, பூப்பொங்கல் விழா ஆகியன சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

- ம. இரா. த.

## அனைத்திந்தியக் கைத்தொழில் வாரியம்

: அனைத்திந்தியக் கைத்தொழில் வாரியம் கைவினைப் பொருள்களின் வளர்ச்சிக்கும் ஏற்றுமதிக்கும் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு உதவுகிறது. கைவினைப் பொருள்களின் மேம்பாடு பற்றிய திட்டங்களை நிறைவேற்றவும் அவை பற்றித் திட்டங்கள் தீட்டவும் மாநில அரசுகளுக்கு இவ்வாரியம் துணை புரிகிறது.

இந்தியாவின் கைவினைப்பொருள்களின் உற்பத்தியைப் பெருக்கி அவற்றின் விற்பனையைப் பெருக்கிட மைய அரசு இவ்வாரியத்தை 1952ஆம் ஆண்டு நிறுவியது. இவ்வாரியம் 15 முன்னேற்ற மையங்களை நிறுவி நடத்தி வருகிறது. பொருள்களின் வடிவமைப்பை அமைத்திட நான்கு மையங்கள் உள்ளன. அவை தவிர நான்கு மண்டல மையங்களும் உள்ளன. அவை கைவினைப் பொருள்கள் மாதிரி வடிவமைப்புகளுக்கும் மற்ற நடவடிக்கைகளுக்கும் உதவி புரிகின்றன. கைவினைப்பொருள்களை விற்பனை செய்திடும் நோக்கத்துடன் நாடு முழுவதும் ஏறத்தாழ 150க்கும் மேலான விற்பனைக் கூடங்களை இது அமைத்துள்ளது.

விற்பனை, தரக்கட்டுப்பாடு, விளம்பரம், வடிவமைப்பு, மேம்பாடு, திட்டம், ஆய்வு போன்றவை வாரியத்தின் முக்கியப் பணிகளாகும். இந்தியக் கைவினைப் பொருள் மற்றும் கைத்தறிப் பொருள்கள் ஏற்றுமதிக் கழகம் வெளிநாட்டில் பொருட்காட்சி அல்லது கண்காட்சி நடத்தியும் பல்வகை ஆய்வு வழிகளைப் பின்பற்றியும் இந்தியக் கைவினைப் பொருள்களுக்கு விளம்பரம் தேடித்தருகிறது.

அனைத்திந்தியக் கைவினைப்பொருள்கள் வாரியம் பல பேருக்கு வேலை வாய்ப்பை நல்கி நாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கிறது. மேலும் இந்திய நாட்டிற்குப் பெருமளவு அந்நியச் செலவாணியையும் ஈட்டித் தருகிறது. கைவினைப்பொருள்கள் செயற்கை வைர நகைகள் நீங்கலாக 1985 - 86ஆம் ஆண்டில் ரூ. 392. 34 கோடிக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. அதற்கு முந்தைய ஆண்டில் செயற்கை வைர நகைகள் உட்பட ஏற்றுமதியின் மதிப்பு ரூ.1699.67 கோடியாகும்.

கைவினைப் பொருள்கள் மற்றும் கைத்தறிப் பொருள்களின் வளர்ச்சி பற்றி அரசுக்கு அறிவுரை வழங்கிட 1981ஆம் ஆண்டு அனைத்திந்திய கைத்தறிப்பொருள்கள் மற்றும் கைவினைப் பொருள்கள் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் 1984இல் இவ்வாரியம் திருத்தியமைக்கப்பட்டது. மையத்துறையில் உள்ள கைவினைப் பொருள்களின் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றிடும் பொறுப்பு மேம்பாட்டு ஆணையருக்குண்டு. இவ்வாரியம் மும்பை, கொல்கத்தா, சென்னை, லக்னோ, தில்லி போன்ற இடங்களில் ஐந்து மண்டல அலுவலகங்களைப் பெற்றுள்ளது. தில்லியில் கைத்தறி ஆடைகள் மற்றும் கைவினைப் பொருள்கள் பற்றிய தேசியப் பொருட்காட்சியகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஏற்றுமதிக்காகப் பல்வகை வடிவமைப்பு மையங்கள் திறமையுடன் பணியாற்றிட 'இரங்கதந்திரா' சங்கங்கள் என்று மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

அரசு வாணிகக் கழகத்தின் துணை நிறுவனமாக இந்திய கைவினைப் பொருள்கள் மற்றும் கைத்தறிப் பொருள்கள் ஏற்றுமதிக் கழகம் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் ஏற்றுமதியைக் கவனித்திடும் பொறுப்பு அதனிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனுடைய மூலப்பெயர், 1958இல் நிறுவப்பட்ட இந்தியக் கைவினைப்பொருள்கள் மேம்பாட்டுக் கழகமாகும். இது இப்புதிய பெயரோடு இந்திய அரசு வாணிகக் கழகத்தின் துணை நிறுவனமாக 1962இல் தான் அமைக்கப்பட்டது. அயல்நாட்டுச் சந்தையில் இந்திய நாட்டுக் கைவினைப் பொருள்களுக்கு நல்ல தேவை ஏற்படுத்தவும், புதிய சந்தைத் தேவையை ஏற்படுத்தவும், ஏற்கனவே உள்ள சந்தை எல்லையை விரிவுபடுத்தவும் இது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக் கழகத்தின் அதிகார மூலதனம் 1 கோடி ரூபாய் ஆகும்.

அனைத்திந்தியக் கைவினைப்பொருள் வாரியம் ஒவ்வொரு மாநிலத்திலும் அல்லது சில மாநிலங்களில் உள்ள மாவட்டங்களிலும் தன் மண்டல அலுவலகங்களை நிறுவியது. இம்மண்டல அலுவலகங்களின் நோக்கம் குடிசைத் தொழிலை மேம்படுத்துவதும் அதற்கான சிறப்பறிவை வழங்குவதுமாகும். கைவினைப் பொருள்கள் நன்றாக உற்பத்தி செய்யப்பட வேண்டுமானால் கிராமக் கைத்தொழில் வினைஞர்கள் நன்கு பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அதற்கான பயிற்சியை அவர்களுக்கு இவை தருகின்றன. இப்பயிற்சியால் அவர்கள் புதிய தொழில் நுட்பங்களையும், உத்திகளையும் வடிவ அமைப்புகளையும் புதிய கருவிகளையும் கையாள்கிறார்கள்.

அரசு அலுவர்களுக்கும் வங்கி அலுவலர்களுக்கும் பயிற்சியும் விளக்கமும் அளிக்கப்படுகின்றன. காரணம் இத்துறையில் முதலீடு செய்தால் அது வருவாய் தரக்கூடியதா இல்லையா என அவர்கள் உணர வேண்டும். மேலும் புதிய புதிய மூலப்பொருள்களைப் பயன்படுத்திக் கைவினைப் பொருள்களை உற்பத்தி செய்து இடப்பட்ட முதல் மீது பெருமளவு வருவாய் வரும் வகையில் தொழிலை வளர்த்திட வேண்டும்.

இவ்வாறு அனைத்திந்தியக் கைவினைப் பொருள்கள் வாரியம் குடிசைத் தொழிலை வளர்க்கிறது. கிராமியக் கைவினைத் தொழில் விற்பன்னர்களுக்கு வேலைவாய்ப்புத் தருகிறது. நாட்டிற்கு அந்நியச் செலவாணியை ஈட்டித்தருகிறது. பாரதநாட்டின் பழைய கலைகளை அயல்நாடுகளில் பரப்புகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகப் பன்னாட்டுச்சந்தையில் கைவினைப் பொருள்களுக்கு நல்ல தேவையை ஏற்படுத்துகிறது.

- கே. என். இரா.

**ஆசப் அலி ( 1888 – 1953 ) :** இவர் நாட்டுப் பற்றுடையவராகவும், புகழ்மிக்க வழக்குரைஞராகவும் விளங்கினார். இவர் கி.பி. 1888ஆம் ஆண்டு மேத் திங்களில் தில்லியில் பிறந்தார். இளமையில் இவர் ஆங்கில - அரபு உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து முறையாக இசுலாமியக் கல்வியையும் மேற்கத்திய நாட்டுக் கல்வியையும் கற்றார். பின்னர் இசுடீபன்சு கல்லூரியில் சேர்ந்து பட்டப்படிப்பை முடித்தார். பின்னர் 1909ஆம் ஆண்டு இலண்டன் மாநகர் சென்று இலிங்கன் விடுதியில் தங்கி வழக்கறிஞர் படிப்பை முடித்து 1912ஆம் ஆண்டு வழக்குரைஞரானார்.

இந்தியாவிற்கு 1914ஆம் ஆண்டு வந்து தம் வழக்குரைஞர் தொழிலை மேற்கொண்ட இவர், அரசியலிலும் ஈடுபட்டார். பஞ்சாப் நீதிமன்றத்தில் பகத்சிங்கின் விடுதலைக்காக வாதாடினார். மகாத்மா காந்தி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு 1918ஆம் ஆண்டு சிறை சென்று 18 மாத காலம் சிறையில் துன்புற்றார். காங்கிரசு பொதுச் சபையின செயலாளராக 1927லும், காங்கிரசு செயற் குழு உறுப்பினராக 1930லும் தேர்ந்தெடுக்கப்பட்டார். நடுவண் சட்டமன்றத்தில் 1934, 1946ஆம் ஆண்டுகளில் இடையிடையே காங்கிரசுக்குக் குழுவின் தலைவராகப் பணியாற்றியுள்ளார். தில்லி நகரசபைக் குழு 1935ஆம் ஆண்டு இவரைப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தது. இந்து - முசுலிம் ஒற்றுமை எதிர்கால இந்தியா சிறப்போடு அமைய எந்த அளவு பயன்படும் என்பதைத் தம் சொற்பொழிவு முதலானவற்றில் அடிக்கடி மக்களுக்கு எடுத்துரைத்து வந்தார்.


இரண்டாம் உலகப்போர் முடிந்த பின்பு மௌலானாஅபுல்கலாம் ஆசாத் தலைமையிலமைந்த காங்கிரசுச் செயற்குழுவில் உறுப்பினராகவும், காங்கிரசு சட்டமன்றக் குழுவின் செயலாளராகவும் பணியாற்றினார். ஆங்கில ஆட்சிக்கு எதிராகக் கலகத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 1942ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் காலவரையறையின்றி அகமது நகர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டார். இருப்பினும் உடல்நலக்குறைவால் 1945ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்டார். ஆங்கிலேயருக்கு எதிராகச் செயற்படும் அமைப்பாகக் கருதப்பட்டதும், நேதாசி சுபாசு சந்திரபோசால் அமைக்கப்பட்டதுமான இந்திய நாட்டுப்படையைக் காப்பாற்றுவதற்காகப் புலாபாய் தேசாயின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவிற்குச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றினார். இந்திய அமைப்பால் உருவாக்கப்பட்ட அரசியல் நிருணய சபையில் 1946ஆம் ஆண்டு உறுப்பினராக இருந்தார்.

வங்காளப் பார்ப்பன இனத்தைச் சார்ந்த அருணா கங்குலி என்ற மங்கையை 1928ஆம் ஆண்டு திரு மணம் செய்தார். இவருக்கு குழந்தைகள் இல்லை. ஆங்கிலம், இந்தி, உருது ஆகிய மொழிகளில் நூல்கள் பல எழுதியுள்ளார். இந்திய அமெரிக்க நட்புறவை வளர்ப்பதற்காக 1947ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் 1948ஆம் ஆண்டு ஏப்ரல் வரை இந்தியத் தூதுவராகச் சென்று வாஷிங்டனில் தங்கினார். பின்னர் 1948ஆம் ஆண்டு சூன் திங்களில் ஒரிசா மாநில ஆளுநராகப் பணியேற்றார். இவர் உடல்நலக் குறைவால் 1952ஆம் ஆண்டு மேத் திங்கள் பதவியினின்று விலகினார். அதே ஆண்டு சுவிட்சர்லாந்து நாட்டிற்கு இந்தியத் தூதுவராக நியமிக்கப்பட்டார். பின்னர் ஆஸ்திரேலியா, வாத்திகன் ஆகிய நாடுகளிலும் தூதுவராக இருந்து பணியாற்றினார். கடைசியாகச் சுவிட்சர்லாந்து நாட்டில் தூதுவராகப் பணியாற்றிக் கொண்டிருந்த போது 2 - 4 - 1953 அன்று இதய நோயால் இறந்தார்.

- க. அ.

**ஆசியா மைனர் :** ஆசியாக் கண்டத்தின் மேற்குக் கோடியில் உள்ள ஒரு முந்நீரகம். இதன் பரப்பளவு 6, 47, 500 ச.கி.மீ. கருங்கடலை வடக்கில் ஈசியல் கடலிலிருந்தும், தெற்கில் மத்திய தரைக் கடலி னின்றும் ஆசியா மைனர் பிரிக்கிறது. இம்முந்நீரகத் தைப் பாசுபரசு ( Bosporus ) நீர் இணைப்பும் தார்டனல்சு ( Dardanelles ) நீர் இணைப்பும் ஐரோப்பா வினின்று பிரிக்கின்றன. அந்த நீர் இணைப்புகள் மார்மராக் ( Marmara ) கடலுடன் இணைக்கப்பட்டுள் ளன. ஆசியா மைனரின் நடுப்பகுதி உயர்வான பீட பூமியாகவும், பாலைப்பகுதியாகவும் அதனைச் சுற்றி யுள்ள பகுதி மலைப்பாங்கானதாகவும் உள்ளன. பல் வேறு வகைச் செடியினங்களை இங்கே காணமுடியும். ஐரோப்பாக் கண்டத்துக்குரிய தட்பவெப்ப நிலை இங்கே நிலவுகிறது.

களால் வளம் பெற்ற கருங்கடல் மாகாணங்கள் பாண்டசு ( Pontus ), பப்லகோனியா ( Paphlagonia ), பிதினியா ( Bithynia ) ஆகியன. ஆசியா மைனரின் மேற் குப் பகுதியில் விளங்கிய ஈசியன் மாகாணங்களாகிய மிசியா ( Mysia ), இலிடியா ( Lydia ), கரியா ( Caria) மூன்றும் மிகவும் விரும்பத்தக்க தட்பவெப்ப நிலை யுடன் செழிப்புற்றிருந்தன. மத்தியத் தரைக்கடல் நாக ரிகத்துடன் அம்மாகாணங்கள் தொடர்பு கொண்டி ருந்தமையால் வாணிகச் செழிப்பும் கலைச்சிறப்பும் பெற்றிருந்தன. ஆசியா மைனரின் தெற்கு, தென் கிழக்கு, தென்மேற்குப் பகுதிகளில் இருந்த பாம்பி லியா (Pamphylia), சிலிசியா (Cilicia), இலிசியா (Lycia) மாகாணங்கள் தாரசு ( Taurus ) மலைகளால் தனிமைப்படுத்தப்படுவதால் சிறப்புக் குன்றியிருந்தன.



ஆசியா மைனர்

ஆசியா மைனரின் வடபகுதியில் இப்போது ஓடிக் கொண்டிருக்கும் கிசிலிர்மாக்கு ( Kisilirmak ), சகரியா ( Sakarya ) என்னும் இரண்டு ஆறுகள் முற்காலத் தில் முறையே ஆலிசு ( Halys ), சங்கேரியசு ( Sanga rius ) என்ற பெயர்களைப் பெற்றிருந்தன. இந்த ஆறு

ஆசியா மைனரின் நடுப்பகுதி மாகாணங்களான பிரிசியா ( Phrysia ), கலேசியா ( Galatia ), இலை கோணியா ( Lycaonia ), பிசிடியா ( Phrygia ) ஆகியன ஆசியா மைனர் முழுவதற்கும் தானியங்கள் வழங் கும் களஞ்சியப் பகுதியாக இருந்தன. கிழக்கில்

மலைப்பகுதி மாகாணமான கபடோசியாவில் ( Cap padocia) கால்நடை வளர்ப்புத்தொழில் சிறப்புற்றிருந்தது. ஆசியா மைனரின் மலைகள் அயலாரிடமிருந்து அப்பகுதியைக் காப்பாற்றி வந்தன.

**வரலாறு** : மிகப் பழங்காலத்திலேயே ஆசியா மைனர் பகுதியில் மக்கள் வாழ்ந்து வந்தனர் எனினும் பழங்கற்கால, புதிய கற்காலக் கலைப்பொருள்கள் குறிப்பிடத்தக்க அளவுக்கு இங்கே கண்டுபிடிக்கப்படவில்லை. இப்பகுதியில் கி.மு. 4000 ஆண்டுகளில் வேளாண்மை சிறப்புற்ற நிலையில் இருந்தது என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. அக்காலத்தில் அனடோலியா ( Anatolia ) என்று இப்பகுதி குறிக்கப்பட்டுள்ளது. தொல்லியல் சின்னங்களுடன் கி.மு. 1900 ஆண்டுகளில் எழுத்து மூலமான சான்றுகளும் கிடைத்துள்ளதால், அதன் பிறகுள்ள அனடோலியா வரலாற்றைத் தெளிவாக அறிய முடிகிறது. அக்காலத்தில் கிழக்கு ஆசியா மைனர், அக்கேடியர் என்னும் மக்கள் அமைத்திருந்த பேரரசுக்கு உட்பட்டிருந்தது. ஆசியா மைனரின் ஈசியன் கடலோரப்பகுதியில் குடியேறிய மக்கள் ஈசியன் மக்கள் என்றே குறிப்பிடப்படுகின்றனர்.

திராய் ( Troy ) நகரத்தின் இரண்டாவது கட்ட வளர்ச்சி அமைப்புக்குக் காரணமாக இருந்தனர். நடு பீடபூமி பகுதியில் அட்டைட்டுகள் ( Hittites ) எனப்படும் கூட்டத்தினர் கி.மு. 19ஆம் நூற். முடிவு வரை ஆதிக்கம் செலுத்தினர். அட்டைட்டுகள் பின்னர் இட்டைட்டுகள் எனப்படும், இந்தோ - ஐரோப்பிய இனத்தவருடன் ஒன்றுபட்டனர். இட்டைட்டுகளின் தலைநகரமாகக் கட்டுசாசு ( Khattusaa ) நகரம் இப்போது போககுகாய் ( Bogazkoy ) என்னும் பெயர் பெற்றுள்ளது. இந்நகரில் நடைபெற்ற புதைபொருள் ஆராய்ச்சி மூலம், இட்டைட்சுகளின் முன்னேற்ற மடைந்த சமூக அமைப்பையும், தொழில் வளர்ச்சியையும் அறியலாம். ஆரிய இனத்தைச் சார்ந்த ஏக்கியர் ( Achacans ) கி.மு. 15ஆம் நூற். நடுப்பகுதியில் கிரிசு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டபின், அடிக்கடி ஆசியா மைனர் கடலோரப் பகுதிகளைத் தாக்கி வந்து முடிவில், கி.மு.1180இல் திராய் நகரை அழித்தனர். அதைத் தொடர்ந்து ஆசியா மைனரில் குடியேறியிருந்த சில கூட்டத்தினர் கிழக்கு நோக்கிக் குடிபெயர்ந்தனர். அவ்வாறு குடிபெயர்ந்தோருள் ஓர் இனத்தவரான பிரிசியர் ( Phrygians ) அனடோலிய சமவெளிப் பகுதியில் ஆட்சி நடத்தி வந்த இட்டைட்டுகைகளைத் தாக்கி முறியடித்தனர்.

தோரிய கிரேக்கர் கி.மு.12ஆம் நூற். தொடக்கத்தில் கிரிசு நாட்டில் புகுந்த பின், மீண்டும் ஆசியா மைனரில் கிரேக்கத் தாக்குதல்களும், அவற்றின் விளைவாக அங்கிருந்த மக்கள் புலம் பெயர்தலும் ஏற்பட்டன. இப்பகுதியில் கி.மு.8ஆம் நூற்றாண்டின் முடிவு வரை சீராக நிலைத்திருந்த அரசு பிரிசியா ஒன்றுதான். அதற்குப் பிறகு அதை அடுத்து மேற்குப் பகுதியில் விளங்கிய இலிடியா ( Lydia ) வாணிகப் பெருக்கமும், வேளாண்மைச் சிறப்பும் காரணமாக மிகுந்த செல்வம் கொழிக்கும் நாடாக வளர்ச்சியுற்றது. பாரசீகப் பேரரசு, ஆசியா மைனரில் பரவியதன் விளைவாக அங்கு அரசியல் ஒற்றுமை நிலவியது. சைரசு ( Cyrus ) என்ற பாரசீகப் பேரரசர் செல்வச் சிறப்புப்பெற்றிருந்த இலிடியாவைத் தோற்கடித்தார்.

ஆசியா மைனரில் தமது ஆதிக்கத்தை அமைத்த பாரசீகர்களைக் கி.மு.334இல் மகாஅலெக்சாந்தர் தோற்கடித்து விரட்டினார். ஆசியா மைனரில் அவர் பெற்ற அளவற்ற செல்வம், அவருடைய கிழக்கு நாடுகளுக்குப் படையெழுச்சிக்கு உதவியது. அலெக்சாந்தர் கி.மு 323ஆம் ஆண்டு இறந்தபின், அவர்தம் தானைத் தலைவர்கள் அவருடைய பேரரசைப் பங்கிட்டுக்கொண்டனர். ஆசியா மைனரின் பல பகுதிகள் செல்யுகசு நிகேடார் ( Seleucus Nicator ) என்பவரின் கீழ் வந்தன. அவர் ஏற்படுத்திய செல்யூசிட் ஆசியப் பேரரசைக் கி.மு.190ஆம் ஆண்டு மக்னீசியா என்ற இடத்தில் ரோமானியர் வென்றனர். அதன் விளைவாகத் தெற்கு ஆசியா மைனரில் இருந்த உள்நாட்டு இராணுவத் தலைவர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் வடக்கில் கருங்கடல் மாகாணங்களுக்கும், கிழக்கில் ஆர்மீனியாப் பகுதிகளுக்கும் புலம் பெயர்ந்தனர். அவர்களுடைய உதவியைப் பெற்ற மித்ரடேட்சு ( Mithridates ) சிறிது காலம் ஆசியாமைனரில் சிறப்பாக ஆட்சி புரிந்ததுடன் கிரிசின் மீது படையெடுக்க முடிந்தது. ஆனால், விரைவில் ரோம் அப்பகுதியை மீட்டுக்கொண்டதுடன், ஆர்மீனியப் பகுதியையும் அடக்கியது.

பாரசீகத்தில் கி.பி.226இல் சசநீத ( Sassanid ) குலம் ஆட்சிக்கு வந்தபின், ரோமாபுரி அக்குலத்தினரால் தொல்லைக்கு உள்ளாயிற்று. கிழக்கில் சசநீதரும் மேற்கில் மிலேச்சர்களும் அடிக்கடி இடையூறுகளை

விளைவித்த காரணத்தால்தான் பரந்த ரோமாபுரிப் பேரரசை, ஒரே தலைநகர் மட்டும் பாதுகாக்க முடியாது என்பதை ரோமானியப் பேரரசர் தயோகிளேசியன் ( Diocletian ) உணர்ந்து, கி.பி. 286இல் அதனை மேற்கு ரோமானியப் பேரரசு என்றும், கிழக்கு ரோமானியப் பேரரசு என்றும் இரண்டாகப் பிரித்தார். பின்னர் ஏற்பட்ட கான்சுடான்டி நோபிள் ( Constantinople ) என்ற புதிய நகரம் கிழக்கு ரோமப் பேரரசின் தலைநகராகியது. அப்புதிய நகரின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த ஆசியா மைனர் பேரரசின் வலிமை வாய்ந்த பகுதியாகத் திகழ்ந்தது. இசுலாமியர் கி.பி.7ஆம் நூற்றாண்டில் ஆசியாமைனரை வெல்ல முடியவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. பிறகு, கி.பி.1071ஆம் ஆண்டு செல்சக்துருக்கியர் ஆசியா மைனரைத் தம்வசப்படுத்தினர். அக்காலம் முதல் ஆசியா மைனர், துருக்கிப் பேரரசின் ஒரு பகுதியாகியது. ஆசியா மைனரின் புதிய கால வரலாறு, துருக்கியப் பேரரசின் வரலாற்றுடன் இணைந்தது.

- தெ. பா.

**துணை நூல்கள் :**

1. Bury, John B., 1923, **History of the Later Roman Empire**, 2 Vols., London.

2. Lioyd, Seton., 1956, **Early Anatolia**, Baltimore, Maryland, USA.

**ஆதி கேசவலு நாயக்கர், பா.ம. ( கி.பி. 1898 – 1964 ) :** இந்திய விடுதலைப் போராட்ட வீரர். தமிழ் நாட்டைச் சேர்ந்த சர்தார் வேதரத்தினம் போன்றே 'சர்தார்' பட்டம் பெற்றவர். பா.ம. ஆதிகேசவலு நாயக்கரின் முன்னோர்கள் பாண்டிச்சேரியைச் சேர்ந்தவர்கள். இவர் பாட்டனாரான கிருட்டிணசாமி நாயக்கர் பாண்டிச்சேரியிலிருந்து இடம்பெயர்ந்து சென்னைக் கொருக்குப்பேட்டையில் குடியேறி, சென்னைத் துறைமுகத்தில் ஒப்பந்தக்காரராகப் பணியாற்றினார். அவருடைய நான்கு மக்களில் ஆதிகேசவலு நாயக்கரின் தந்தையார் மதுரைமுத்து நாயக்கர் மூத்தவர்.

சென்னையில் 1898ஆம் ஆண்டு பிறந்த ஆதிகேசவலு நாயக்கர் தூய்மையான எளிய வாழ்வை மேற்கொண்டிருந்தார். செய்யாறு நாராயணசாமி மகளான இராசம்மாள் என்ற பெண்மனியை 1920ஆம் ஆண்டு மணம் புரிந்தார்.

ஆதிகேசவலு நாயக்கர் தம் தந்தையின் வணிகத்தில் உதவியதோடு மட்டுமன்றித் தம்மால் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் நலனில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராகவும் இருந்தார். பட்டங்கள் ஏதும் பெறாவிட்டாலும், தம் உடன்பிறப்புகளுடன் இணைந்து தந்தைக்கு உதவிடத் தேவையான கல்வித் தகுதியைப் பெற்றிருந்தார். இளைஞராக இருக்கும் போதே 1916ஆம் ஆண்டில் தொழிலாளர் இயக்கங்களில் ஈடுபடத் தொடங்கிய இவர் எம். எசு. எம். இரயில்வே இளைஞர்கள் ஒன்றியத்திற்கும், இவர் அமைத்த சென்னை மண்ணெண்ணெய்த் தொழிலாளர்கள் ஒன்றியத்திற்கும், பொதுப்பணித்துறைத் தொழிலாளர்கள் ஒன்றியத்திற்கும் மற்றும் சென்னை 'டிராம்வே' தொழிலாளர்கள் ஒன்றியத்திற்கும் தலைவராகத் திகழ்ந்தார்.

மகாத்மா காந்தியால் தொடங்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்திற்கு முதலில் ஆதரவும், நம்பிக்கை அளித்தவரும், நவசக்தி நாளேட்டின் பதிப்பாசிரியருமான திரு.வி. கல்யாணசுந்தர முதலியார், நாயக்கரின் தொழிலாளர் ஒன்றிய அமைப்புகளில் பெரிதும் உதவினார். தொழிலாளர்களின் தலைவர் சிங்காரவேலு செட்டியாருடன் இணைந்து 1917இல் வேலை நிறுத்தத்தை நடத்தினார். தேசியப் பற்று மிகுந்த வழக்குரைஞர் சென்னை சீனிவாச அய்யங்காரின் பேச்சினாலும், செயற்பாட்டினாலும் கவரப்பட்டு இந்திய தேசியக் காங்கிரசில் சேர்ந்தார். பின்னர், சென்னைக் காங்கிரசுக் கிளையின் செயலாளராகப் பணியாற்றி, சென்னைப் பெருநகரிலும், இன்றைய செங்கற்பட்டு மாவட்டத்திலும் காங்கிரசு இயக்கம் வளர்ந்திடப் பாடுபட்டார்.

எஸ். சீனிவாச அய்யங்கார், எஸ். சத்தியமூர்த்தி போன்றவர்களின் நெருங்கிய நண்பரான நாயக்கர் செங்கற்பட்டு மாவட்டக் காங்கிரசுக் குழுவின் செயலாளராக நீண்ட காலம் பணியாற்றித் தேசிய இயக்கத்தையும், விடுதலை வேட்கையையும் கிராமங்கள் தோறும் பரவிடச் செய்தார். சென்னை மாவட்டக் காங்கிரசுத் தலைவராகவும், காங்கிரசின் செயற்குழு உறுப்பினராகவும் நீண்ட நாள் பணியாற்றினார். சென்னை மாகாண சபாவின் உறுப்பினராகவும், பின்னர் மும்முறை அதன் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

மகாத்மா காந்தி தொடங்கிய ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கங்களில் மிகவும் துணிச்சலுடன் செயற்பட்டு ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்து உப்பு சத்தியாகிரகத்திலும் பங்கு கொண்ட நாயக்கர், சர்தார் வல்லபாய் பட்டேலுடன் சர்தார் வேதரத்தினம் பிள்ளையுடனும் சேர்ந்து 'சர்தார்' பட்டத்தைப் பெற்றார். சைமன் குழு சென்னை வந்தபோது அதற்கு எதிர்ப்பாக நடந்த ஊர் வலத்தில் கலந்து கொண்ட நாயக்கர் காவல்துறை யின் தடியடியில் சிக்கித் தலையில் கடுமையாகத் தாக்கப்பட்டார். 1931-ஆம் ஆண்டு சத்தியாகிரக இயக்கத்தில் கலந்து கொண்டு 13 மாதங்கள் சிறையிலிருந்தார்.

இந்திய அரசு சட்டத்தின்படி மாநிலத் தன்னாட்சி அறிமுகப்படுத்தப்பட்டபின், 1937ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் வடசென்னை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மதுவிலக்குக் கொள்கையில் ஆழமான நம்பிக்கையும், உழவர்கள் நலனில் ஈடுபாடும் கொண்ட நாயக்கர், இராசாசி கொண்டுவந்த மதுவிலக்கு அமுல்படுத்தல், வேளாண் கடன்களைத் தள்ளுபடி செய்தல் என்ற இரண்டு சட்டங்களுக்கும் தம் முழு ஆதரவை நல்கினார். 1939ஆம் ஆண்டில் பெரும்பான்மையான ஆதரவுடன் சென்னை மாநகராட்சிக்குக் கொருக்குப்பேட்டைப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார். எஸ். சத்தியமூர்த்தி சென்னை மாநகராட்சியின் தலைவராகத் தேர்வு பெற்ற போது நாயக்கர் துணைத் தலைவராகப் பதவி வகித்தார். சத்தியமூர்த்தி தில்லி மக்களவை உறுப்பினராக இருந்ததால் பெரும்பான்மையான நாள்கள் சென்னையில் இருக்கமுடியவில்லை. அந்நிலையில் நாயக்கர்தான் அதன் செயற்பாட்டுத் தலைவராகப் பணியாற்றினார்.

தனிமனித சத்தியாகிரகப் போராட்டத்தினால் 1941 - 1943 ஆம் ஆண்டுகளில் நாயக்கர் மிகுந்த தொல்லைகளைச் சந்திக்க நேர்ந்தது. காவல்துறையின் தடியடியால் தலையில் பட்ட அடி மூளையையும், உடலின் செயற்பாட்டையும் பெரிதும் பாதித்தது. இப்போராட்டத்தில் பங்கு கொண்டதால் வேலூர் சிறையில் வினோபாபாவுடன் அடைக்கப்பட்டார். அங்கு இருவரும் நண்பர்களாகி, வினோபாபாவே மூலம் இந்தி மொழி கற்று, வினோபாபாவுக்கு தமிழைக் கற்றுத்தந்தார். வேலூர் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வரும்போது இவர் முற்றிலும் மாறுபட்ட மனிதராக இருந்தார். இவர் வாங்கிய அடிகளும் சிறை வாழ்க்கையும் இவர் உடல்நலத்தைப் பெரிதும் சீர்குலைத்திருந்தன. இவர் இறக்கும்வரை மூளை பாதிக்கப்பட்ட நிலையிலேயே இருந்தார்.

1945இல் சென்னையில் நடந்த மத்திய கிராமத் தொழில்கள் கண்காட்சியின் முழுப்பொறுப்பினையும் ஏற்று நடத்தினார். வன்னியக்குல சத்திரியப் பிரிவினரின் நலத்தில் நாட்டம் கொண்டிருந்தார். தென்னிந்தியாவிற்கே உரிய பாரம்பரிய உடையுடன், தலைப்பாகை அணிந்து, கையில் கோலுடன் தோன்றும் தோற்றப்பொலிவு கொண்டவர். இவருடைய நாவண்மை மக்களைக் கவர்ந்தது. சமயப் பொறையில் நம்பிக்கை கொண்ட ஆதிகேசவலு நாயக்கர் நேர்மை, துணிவு, உண்மை, எளிமை ஆகியவற்றின் மொத்த உருவமாவார். இவர் 1964இல் காலமானார்.

- கி.க.

**ஆதித்தன் சூரியன்** : இவன் முதலாம் இராசராச சோழனின் ஆட்சிக் காலத்தில் பணிபுரிந்த புகழ்மிகு அரசியல் தலைவன். சிறந்த சிவபக்தன். இராசராசனின் நம்பிக்கைக்கும் போற்றுதலுக்கும் உரிய, பொய்கை நாட்டின் தலைவன். பொய்கை நாடென்பது இன்றைய திருவையாறு, திருநெய்த்தானம், திருமழபாடி முதலான பகுதிகளைத் தன்னகத்தே கொண்டது. இவனது அரும்பணியைப் பாராட்டி இராசராசன் இவனுக்கு 'தென்னவன் மூவேந்த வேளான்' எனும் விருதொன்றினை வழங்கினான். இவன் முதலாம் இராசேந்திர சோழனின் ( 1012 - 1044 ) ஆட்சிக் காலத்திலும் கோயில் பணிகளைக் கவனித்து வந்தான்.

'சுவத்தி சிரீ சிரீ உடையார் சிரீ ராசராசசேசுவரமுடையார்க்கு சிரீகாரியம் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான்' என்று இவன் இராசராசனின் கல்வெட்டிலும் குறிக்கப்பெறுகிறான். இதனால் இவன் தஞ்சைப் பெரியகோயில் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று நடத்தினான் எனக் கருதலாம். இவன் இராசராசனின் காலத்தில் திருச்சோற்றுத்துறை மகாதேவர் கோயிலுக்குப் பல அறக்கொடைகள் அளித்தான். இவற்றுள் இக்

கோயில் திருப்பதியம் ஓதப்பெற இவன் அறக் கட்டளைவிட்டுள்ளமையைச்சிறப்பாகச்சுட்டலாம். இவன் தஞ்சைப் பெரிய கோயிலில் தேவாரம் பாடிய நாயன்மார் மூவரின் படிமங்களை நிறுவி, அவற்றிற்கு ஆடம்பரமான அணிகலன்களையுழ் அளித்துள்ளான். நம்பியாரூரரின் படிமத்தையும் அவரது மனைவியான பரவையாரின் படிமத்தையும் எழுந்தருளச் செய்தான். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சிறுதொண்ட நாயனார், திருவெண்காட்டு நங்கை, சீராளதேவர், மெய்ப்பொருள் நாயனார் ஆகியோரது திருவுருவங் களையும் இவன் தஞ்சைப் பெரியகோயிலில் எழுந்த ருளச்செய்தான். சைவ நாயன்மார்களின் மீது அளவற்ற பக்தி கொண்டு, அவர்களது படிமங்களைத் தஞ்சைக் கோயிலில் எழுந்தருளச் செய்தான்.

ஆதித்தன் சூரியன் மாமன்னன் முதலாம் இராசராச சோழன், அவனது அரசியார் உலோகமாதேவி யார் ஆகிய இருவரது சிலைகளையும் தஞ்சைப் பெரியகோயிலில் நிறுவினான். இவற்றின் அருகில் இராசராசன் வணங்கிய தேவாரதேவராகிய சந்திர சேகரப்பெருமானையும் எழுந்தருளச் செய்தான். இவன் மேலும் பைரவமூர்த்தி, காட்சி கொடுத்த இறைவர் ஆகியோரது திருமேனிகளையும் திருவிளக் குகளையும் தஞ்சைக் கோயிலுக்கு அளித்துள்ளான். அரசன், அரசி சிலைகளுக்கு இவன் விலையுயர்ந்த அணிகலன்களையும் வழங்கியுள்ளான்.

ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான், பொய்கை நாட்டின் தலைவனாகத் திகழ்ந் ததுடன், தஞ்சைப் பெருவுடையார் கோயில் நிர்வா கத்தையும் திறம்பட ஏற்று நடத்தினான். இறையன்பு மிக்க இவன் இராசேந்திரனின் ஆட்சிக் காலத்திலும் புகழ் பெற்ற தலைவனாக விளங்கினான்.

- ம. இரா. த.

**ஆதிவராகர் கோயில் :** மாமல்லபுரத்தில் மகிசாசுரமர்த்தினி குகைக்குத் தென்மேற்கில் அமைந் துள்ளது இக்கோயில். இது ஒரு குடைவரைக் கோயில். இக்குடைவரையின் முன்புறம் பிற்காலத் தில் கட்டப் பட்ட மண்டபம் ஒன்றுள்ளது. இக்குகைக் கோயில் இரண்டு அங்கணமாகக் குடையப்பட்டுள் ளது. மேற்குப்புறம் பார்த்துள்ள இக்குடைவரையின் கருவறையில் ஆதிவராக மூர்த்தி எழுந்தருளியுள்ளார். இங்குள்ள கல்வெட்டு இதனைப் பரமேச்சுர மகாவராக விட்ணுக்கிரகம் என்று சுட்டுகிறது. இது பல்லவரின் கலைப்பணியாகும்.

இங்குள்ள முன்மண்டபமும், இடை மண்டப மும் ஒரே மாதிரியாக நான்கு தூண்களுடனும் இரு சுவர்த்தூண்களுடனும் காணப்படுகின்றன. முன்மண் டபத் தூணின் அடியில் சிங்கத்தின் உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இக்குடைவரையின் மேல்புறத் தில் பத்துக்கூடுகளும் கலசங்களும் உள்ளன. வடபுறச் சுவரின் முன் அங்கணத்தில் சிவபெருமான் கங்கை வார் சடைக்கரத்தாராக, கங்காதரமூர்த்தியாகக் காட்சித்தருகிறார். இதனையடுத்துச் சிங்கவிண்ணப் போத்ராதிராசன் இரு மருங்கிலும் தேவியர் புடைசூழ அமர்ந்துள்ளான். இவன் பல்லவவேந்தன் சிம்ம விஷ்ணுவே எனலாம். அடுத்துள்ள கிழக்குச் சுவரில் தாமரையைக் கையிலேந்திய திருமகள் தாமரைப் பீடத்தில் அமர்ந்த நிலையில் வடிக்கப்பட்டுள்ளாள்.

கருவறையின் முன்புறத்தையடுத்து நாகராசர் உரு வம் செதுக்கப்பட்டுள்ளது. அடுத்துத் திருமாலின் உரு வம் ஆழியும் சங்கும் ஏந்திய நிலையில் காட்டப்பட் டுள்ளது. கருவறையின் உள்ளே ஆதிவராகர் வலப் புறம் நிலமகளைத் தாங்கி நிற்கிறார். அதனை அடுத்து அரியரனின் சிற்பம் உளது. கிழக்குச்சுவரில் கொற்ற வையின் சிற்பம் உயிரோட்டமுள்ளதாகத் தீட்டப்பட் டுள்ளது. தென்புறச் சுவரில் மகேந்திரவர்ம பல்லவன் தனது இரு தேவியருடன் நின்ற நிலையில் காட்டப் பட்டுள்ளான். இதனையடுத்து நான்முகனின் சிற்பம் உள்ளது.

**இக்கோயிலின் சிறப்புகள் :** 1. பல்லவரது குகைக் கோயில்களுள் இதில் மட்டுமே இன்றும் இறை வழிபாடு நடைபெறுகிறது. 2. திருமாலுக்காக உருவாக்கப் பட்ட இக்கோயிலில் சிவபெருமானின் புகழைப் போற்றும் கல்வெட்டுள்ளது. 3. நந்திவர்மப் பல்லவனின் 65ஆம் ஆண்டுக் கல்வெட்டுள்ளது. 4. திரு மாலின் பத்து அவதாரங்களையும் குறிப்பிடும் கல் வெட்டுள்ளது. அதில் புத்தபிரானும் ஓர் அவதாரமாக இடம் பெற்றுள்ளார்.

- ம. இரா. த.

**ஆவுடையார்கோயில் செப்பேடு :** ஆவுடையார் கோயில் இறைவனை வணங்கி வாணாதிராயன் தானம் வழங்கியுள்ளதால் இது ஆவுடையார் கோயில் செப்பேடு எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஆவுடையார் கோயிலின் பழம்பெயர் திருப்பெருந்துறை ஆகும். இச்செப்பேடு இப்போது தஞ்சை மாவட்டம் தருமபுரம் ஆதீனத்தாரிடம் உள்ளது. இச்செப்பேடு ஈசுவர ஆண்டு புரட்டாசித் திங்கள் இருபத்தொன்றாம் நாள் வெளியிடப் பெற்றுள்ளது. எனவே, இது கி.பி. 1457 இல் வெளியிடப்பட்டதனை அறியலாம். இச்செப் பேட்டினைக் கொண்டு, மாவலி வாணாதிராயனின் வெற்றிகளையும், பட்டப் பெயர்களையும் அறியலாம்.

மூவராய கண்டன், மதியாத மன்னர்மன்னன், சமர கோலாகலன் என்னும் விருதுப்பெயர்களைப் பூண்டிருந்த வீரப்பிரதாப மாவலிவாணாதிராயர் இதனை அளித்துள்ளார். இவன் பெருமாள் வீரபாண்டிய தேவர் எனும் பாண்டிய வேந்தனை வென்று அவனை வடவெல்லையான வெள்ளாற்றிற்கு வடக்கே உள்ள சோணாட்டிற்குத் துரத்திவிட்டு, ஆவுடையார் கோயில் சிவபெருமானை நேரில் சென்று வணங்கி, இச்செப்பேட்டை வெளியிட்டுள்ளான். இதில் குறிக் கப்பெற்றுள்ள விருதுப்பெயர்களை ஆய்ந்து பார்க் குங்கால், இவ்வாணாதிராயன் 'திருமாலிருஞ் சோலை நின்றான் மாவலி வாணாதிராயன்' ( கி.பி. 1428 - 1477 ) தான் என்பதை அறியலாம். இவ் வாணாதிராயனிடம் தோல்வி கண்டவன், கி.பி. 15 ஆம் நூற்றாண்டில் ஆட்சிபுரிந்த வீரபாண்டியனே என்பது புலனாகும். இவ்வீரபாண்டியன் பழைய இராமநாதபுர மாவட்டத்தின் கடற்கரையை ஒட்டியுள்ள பகுதிகளைக் கி.பி. 1443 முதல் 1497 முடிய ஆட்சி புரிந்துள்ளான் என்பதனை இக்கல்வெட்டுச் சான்று மூலம் அறியலாம்.

இச்செப்பேடு, 'மிழலைக்கூற்றத்து நடுவிற்கூறு பிரமதேயம் தனியூர், திருப்பெருந்துறையான பவித்திர மாணிக்கச் சதுர்வேதி மங்கலம்' என்று குறிப்பிடுவதால் திருப்பெருந்துறைக்குப் பவித்திர மாணிக்கச் சதுர்வேதி மங்கலம் என்ற பெயர் இருந்தமை புலனாகும். வாணாதிராயன் திருப்பெருந்துறையில் 'மாவலிவாணாதிராயன் சந்தி'யை நிறுவி, திங்கள் தோறும் வரும் அவனது பிறந்த நாளில் வரும் நட்சத்திரத்தில் சிறப்பு வழிபாடு நடைபெற ஏற்பாடுகள் செய்தான். அதற்காகும் செலவிற்காகப் பார்ப்பார்குடி, வெண் கட்டி என்ற இரு பாண்டிய நாட்டு ஊர்களைத் திருநாமத்துக் காணியாக அளித்துள்ளான். இவ்வூர்களின் நாற்பால் எல்லைகளும் இச்செப்பேட்டில் குறிக்கப் பெற்றுள்ளன. இதனால் இப்பகுதியிலிருந்த நாட்டுப் பிரிவுகளும், ஊர்களும், ஆறுகளும் தெரிய வருகின்றன.

- ம. இரா.த.

**ஆழ்புலன் காட்சி:** புற உலகிலிருந்து பல்வேறு வகையான தூண்டல்கள் உயிரின் உறுப்புகளைத் தொடர்ந்து தாக்கியவண்ணமிருக்கின்றன. அவற்றுக் கெல்லாம் உயிரி ஏற்ற புலனுறுப்புகளின் மூலம் துலங்கியப்படி இருக்கின்றது. தூண்டலுக்கு மட்டுமே உயிரி கவனம் செலுத்தித் துலங்குகின்றது. இந்த இரண்டு செயல்முறைகளும் சேர்ந்த ஒருங்கிணைப்பே புலன் காட்சியில் செயல்படுகின்றன. புலன்களின் வழியே, புறத்தேயுள்ள பொருள்கள், நிகழ்ச்சிகள் ஆகியவை பற்றிய அனுபவத்தின் மூலம் தெளிந்த அறிவினைப் பெறும் செயல்முறையே புலன்காட்சியாகும். பொருள்களைப் புலன் காண்பது போன்றே ஆழத்தையும் அல்லது தூரத்தையும் காலத்தையும் அசைவையும் புலன் காணலாம். ஆழ் புலன் காட்சியும் தூரப்புலன் காட்சியும் ஒன்றே. ஆழ் புலன் காட்சியைக் கண்களின் செயல்முறைகளைக் கொண்டு விளக்கலாம்.

எந்த ஒரு பொருளுக்கும் நீளம், அகலம், தடிமன் என்ற முப்பரிமாணங்கள் உண்டு. ஒரு மனிதன், தனக்கும் தான் தேடிச் செல்லும் பொருளுக்குமிடையிலுள்ள தூரத்தைத் தீர்மானிக்க வேண்டிய அவசியம் அடிக்கடி ஏற்படுகின்றது. பொருள்களுக்கிடையிலுள்ள தூரத்தைத் தீர்மானிக்கின்ற திறமை தூரப் புலன்காட்சி அல்லது ஆழ்புலன் காட்சிக்குத் தான் உண்டு. இதனால் தான் சாலையில் நடந்து செல்லுகின்ற போது மற்றவர்களுடனோ, சாலையில் விரைவாகச் செல்லும் வாகனங்களுடனோ மோதிக் கொள்ளாமல் செல்ல முடிகின்றது. தரையில் கிடக்கின்ற ஒரு பொருளை எடுக்க வேண்டுமானால் தற்போக் காக அதன் தூரத்தைத் தீர்மானித்துக் கையை நீட்டுகின்றோம். ஒரு குழந்தை தன்னுடைய விளையாட்டுப் பொருளைத் தேவையான அளவுக்குத் தன் கையை நீட்டி அதை எடுக்கின்றது.

மனிதர்கள் தங்களுடைய அன்றாட வாழ்க்கையில் சில பொருள்களின் ஆழத்தைத் தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். பாத்திரங்களின் ஆழம், நீர்த்தொட்டியின் ஆழம், கிணற்றின் ஆழம் முதலிய வற்றிலும் பயன்படுத்துகின்ற மற்றப் பொருள்களிலும் ஆழத்தைத் தீர்மானிக்கின்றனர். சற்று தூரத்திலிருக்கின்ற இரண்டு பொருள்களைக் காணும் போது, அவற்றில் எது முன்னாலிருக்கின்றது, எது பின்னாலிருக்கின்றது என்று ஐயமின்றிக் கூறமுடியும். இது எவ்வாறு ஏற்படுகின்றது? காணும் அந்த இரு பொருள்களின் பிம்பங்களும் கண்ணின் விழித்திரையில் ஒன்றன் பின் ஒன்றாக விழுவதில்லை. ஏனென்றால் கண்ணின் விழித்திரை தட்டையானது. எனவே, தூரத்திலுள்ள பொருள்களின் பிம்பங்கள் அண்மையிலுள்ள பொருள்களின் பிம்பங்களுக்கு இடமோ வலமோ, மேலோ கீழோ தான் விழமுடியும். ஒரு கண்ணின் பார்வைப் பிம்பங்கள் இரு பரிமாணங்களை மட்டுமே கொண்டுள்ளன. ஆனால் இரு கண்ணின் பிம்பங்கள் விழித்திரையின் பரப்பில் விழும் இரு பரிமாணப் பிம்பங்கள் முப்பரிமாணக் காட்சியாக மாற்றப்படுகின்றன. பொருளின் இரு பரிமாணங்கள் மூன்றாவது பரிமாணத்தைத் தோற்றுவிப்பதற்கான தூண்டல் விவரங்களை அளிக்கின்றன. இதுவே ஆழ்புலன் காட்சி ( Depth Perception ) அல்லது தூரப்புலன் காட்சியாகும். ஆழ்புலன் காட்சியை விளக்குவதற்குப் பல கோட்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்த விவரங்கள் இரண்டு வகைகளில் அமைகின்றன. அவற்றில் ஒன்று சூழ்நிலை சார்ந்தவை. மற்றவை உயிரியைச் சார்ந்தவை.

**சூழ்நிலையைச் சார்ந்த குறிப்பிகள்** : அ. ஒரு கண் பார்வைக் குறிப்பிகள், ஆ. மேலிட்ட நிலை, இ. புலக்காட்சிக்கோள், ஈ. ஒளியும் நிழலும், உ. அசைவு, ஊ. அமைப்பு நயத்தின் சாய்வுகள் ஆகியவை சூழ்நிலைக் குறிப்பிகளாகக் கொள்ளப்படுகின்றன.

**ஒரு கண் பார்வைக் குறிப்பிகள்** : ஒரு கண்ணை மட்டும் பயன்படுத்திப் பொருள்களிடமிருந்து பெறுகின்ற விவரங்கள் ஒரு கண் பார்வைக் குறிப்பிகளா கும். ஆழத்தையும் தூரத்தையும் இரு கண்களைக் கொண்டு தீர்மானிக்க முடியுமென்றாலும் ஒரு கண் பார்வைக் குறிப்புகளே பெரும்பாலும் ஆழத்தையும், தூரத்தையும், சரியாகவும், வெற்றிகரமாகவும் தீர்மானிக்கப் பயன்படுகின்றன. சிலவற்றை இரு கண்களையும் பயன்படுத்திக் குறிபார்க்க இயலாது. புகைப்படம் எடுக்கும்போதும், துப்பாக்கியால் சுடும்போதும், வில்லிலிருந்து அம்பை எய்யும்போதும் ஒரு கண்ணால் மட்டுமே குறிபார்க்க இயலும். ஒரு கண் பார்வைக் குறிப்பிகளில் பெரும்பாலும் கடந்த கால அனுபவங்களும் சேர்ந்திருக்கின்றன.

**மேலிட்ட நிலை** : பார்வைத்தளத்தில் இரண்டு பொருள்கள் ஒரே நேர்கோட்டிலிருந்தால் அண்மையிலிருக்கும் பொருள் தூரத்திலிருக்கும் பொருளை மறைப்பதைக் காணலாம். மேலும் அண்மையிலுள்ள பொருள் முழு உருவமைப்புள்ளதாகவும், தொடர்ச்சியாகவும் காணப்படுகின்றது. தொலைவிலுள்ள பொருள் உருவமைப்பு சிதைந்தும், சில பகுதிகள் தொடர்ச்சியின்றி மறைந்தும் முழுமையின்றியும் காணப்படும். முழுமையாகத் தெரிகின்ற பொருள் அண்மையிலிருப்பதாகவும், முழுமையின்றி உருவெல்லை சிதைந்து காணப்படும் பொருள் தொலைவிலிருப்பதாகவும் புலன்காட்சி உணர்த்தும்.

**புலன்காட்சிக் கோள்** : இந்தக் குறிப்பியைப் பற்றிப் பெரிதும் தெரிந்தவர்கள் ஓவியர்களாவார்கள். வரையப்படும் ஓவியத்திலுள்ள உருவங்கள் அண்மையிலும் தொலைவிலுமிருப்பதாகக் காட்டுவதற்கு அவர்கள் சில விதிகளை வகுத்துள்ளனர். அதன்படி அண்மையிலுள்ள பொருள்களையும் உருவங்களையும் பெரியவையாகவும் தொலைவிலுள்ளவைகளைச் சிறியவையாகவும் அவர்கள் தங்கள் ஓவியங்களில் வரைகின்றனர். இம்முறையில் ஓவியங்களைக் காண்போர்களிடம் ஆழ்புலன்காட்சி ஏற்படுமாறு தூண்டுகின்றனர். இணையாகச் செல்லுகின்ற இரு இருப்புப் பாதைகள் கண்ணுக்கெட்டிய தூரத்தில் இரு பாதைகளும் இணைவதாகத் தோன்றுகின்றன. இவ்வாறு குவிகின்ற கோடுகள் ஆகாய விமானிக்கு முக்கிய விவரங்களைத் தருகின்றன. விமானி, தான் ஓட்டிச் செல்லவிருக்கும் விமானம் ஓடும் வழியின் தூரத்தைப் புரிந்துகொள்ள முடியும். இத்தகைய குறிப்பிகள் நீள்கோட்டுப்புலன் காட்சிக்கோள் ( Linear Perspective ) எனப்படும். வானிலிருந்து காணும் விமானிக்கு அண்மையிலுள்ள கட்டடங்கள் தெளிவாகவும் தொலைவிலுள்ள கட்டடங்கள் மங்கலாகவும் தோற்றமளிக்கின்றன. இவை விமானிக்கு வான் சார்ந்த ஆழ்புலன்காட்சிக் குறிப்பிகளாக ( Aerial Perspective ) உதவுகின்றன.

**ஒளியும் நிழலும்** : இவை ஆழ்புலன்காட்சியின் முக்கிய குறிப்பிகளாகும். பொருளின் பகுதிகளில் நிழல் தோன்றுமாயின் அது தூரத்திலிருப்பதாகத் தோன்றுகிறது. இரு பரிமாணங்களைக் கொண்ட வரைபடத்தில் ஒளியும் நிழலும் சரியான விகிதத்தில் பரப்பப்படுமானால் அது முப்பரிமாணத் தோற்றம் பெறுகின்றது. இம்முறையில்தான் வடிவவியல் கணித உருவங்கள் கனபரிமாணம் கொண்டவையாகத் தோன்றுகின்றன. ஒரு தாளில் வரையப்பட்ட வட்டம் ஒரு தட்டையான தகட்டைப்போன்று தோற்றமளிக்க லாம். ஆனால் அதன் மீது தகுந்த வகையில் கோடு களின் விளிம்புகளில் நிழலை வரைவதால் அது ஓர் உருண்டையான பந்து போன்ற தோற்றத்தைக் கொடுத்து முப்பரிமாணமாகத் தோன்றும். எந்த ஒரு பொருளிலும் முப்பரிமாணத் தோற்றத்தைக் கண் டால் அது ஆழ்புலன் காட்சியாகும்.

**அசைவு** : ஒரு பொருள் நகர்ந்து செல்லும்போது அதன் வேகம், அது செல்லும் திசை ஆகியவை ஆழ் புலன் காட்சியின் குறிப்பிகளாகச் செயல்படுகின்றன. தொடர் வண்டிகளிலும் பேருந்துகளிலும் பயணம் செய்யும்போது இருப்புப்பாதையையும் சாலையை யும் ஒட்டியுள்ள மரங்களும் தந்திக் கம்பங்களும் எதிர்த்திசையில் விரைவாக ஓடுவதைப்போலவும், தொலைவில் மரங்களும், தந்திக்கம்பங்களும் மற்றப் பொருள்களும் மெதுவாக ஊர்ந்து செல்லுவதைப் போலவும் தோன்றுகின்றன. ஓடுவது போலத் தோற்ற மளிப்பவை அண்மையிலுள்ளவை. ஊர்ந்து செல்வது போலத் தோற்றமளிப்பவை தொலைவிலுள்ளவை. இந்த அசைவுக் குறிப்பிகள் ஆழ்புலன் காட்சிக்கு உறுதுணை புரிகின்றன.

**அமைப்பு நயத்தின் சாய்வுகள்** : இக்குறிப்புகள் பற்றிப் பலர் ஆய்வுகள் நடத்தியுள்ளனர். ஜிப்சன் என் பவர் அமைப்பு நயத்தின் சாய்வுகள் ( Texture gradiants) பற்றி மிகவும் விரிவான ஆய்வுகள் நடத்தியுள்ளார். ஒரு பொருளின் அமைப்பு நயம், அது தோன்றும் முறை ஆழ்புலன் காட்சிக்குச் சிறந்த குறிப்பிகளாக இருக்கின்றன. அருகிலுள்ள பொருள்கள் கரடுமுரடா கவும், ஒழுங்கற்றும் காட்சியளிக்கின்றன. அதே பொருள்களைத் தொலைவிலிருந்து நோக்கும்போது சீரானவையாகவும், ஒழுங்கமைப்புக் கொண்டவை யாகவும், நயமாகவும் இனிமையாகவும் காணப்படு கின்றன. தொலைவிலுள்ள மலைச்சரிவுகள் ஒழுங் கமைப்பும், பசுமையும், கவர்ச்சியும் கொண்டு காட்சி யளிக்கின்றன. ஆனால் அண்மையில் சென்று பார்த் தால் மேடு பள்ளங்களுடன், கரடு முரடாகவும் பசுமை யும் எவ்விதக் கவர்ச்சியுமின்றிக் காணப்படுகின்றன. நெடுஞ்சாலைகளும், வீதிகளும், புல்வெளிகளும் இவ்வாறே இக்குறிப்பிகளின் மூலம் ஆழ் புலன் காட்சி சரி நுட்பமாக்கப்படும்.

**2. உயிரி சார்ந்த குறிப்பிகள்** : அ. இரு கண் பார்வைக் குறிப்பிகள் ( Binocularcues ), ஆ. ஒத்தமை தல், இ. விழித்திரை வேறுபாடு ( Retinal Disparity ) முதலியவை உயிரிசார்ந்த குறிப்பிகளாகக் கருதப்படு கின்றன.

**அ. இருகண் பார்வைக்குறிப்பிகள்** : ஆழ்புலன் காட்சியில் இருகண் பார்வைகள் சில பயன்களைப் பெற்றிருக்கின்றன. இருகண் பார்வை ஒரு பரந்த பார் வைக் களத்தை அளிக்கின்றது. ஒரு கண்ணால் பார் பதை விட இரண்டு கண்களால் ஆழத்தையும் தூரத் தையும் தெளிவாகவும் சரிநுட்பமாகவும் காணவிய லும். ஒரு கண்பார்வை சிலருக்கு மங்கலாக இருக்க லாம். ஆனால் இரண்டு கண்களாலும் பார்க்கும் போது அக்குறைபாட்டைச் சரிசெய்து தெளிவான புலன்காட்சியை அளிக்கலாம்.

**ஆ. ஒத்தமைதல்** : காணும் பொருள் பெரியதும் சிறியதுமாகவும் அண்மையிலும் தொலைவிலும், நிலையானதாகவும் அசைந்து செல்லுகின்றதாகவுமி ருக்கலாம். அப்பொருள்களின் தன்மைக்கேற்றவாறு கண்ணின் ஆடிகள் வளைந்து மாறுதலடைந்து பொருள்களைச் சரியாகக் காணும்பொருட்டு ஒத்தமை கின்றன. பொருள்கள் மிக அருகிலிருக்கும் போது ஆடி உருண்டையாகின்றது. மிகத் தொலைவிலிருக்கும் போது ஆடி தட்டையாகின்றது. அதே போன்று பெரிய பொருள்களைக் காணும்போதும் சிறிய பொருளைக் காணும்போதும் அவற்றுக்கு ஏற்ற வாறு ஆடி மாறுத லடைந்து ஒத்தமைகின்றது. பொருள்கள் நகருகின்ற போது ஆடியும் நகர்ந்து கொடுத்து ஒத்தமைகின்றது. இம்மாறுதல்களை நிகழ்த்தும் தசை சார்ந்த புல னுணர்ச்சிகளும் பொருளின் தூரத்திற்கேற்பச் சில விவரங்களைத் தந்துதவுகின்றன.

**இ. விழித்திரை வேறுபாடு** : இரண்டு கண்களும் ஒரு பொருளிடமிருந்து சற்று வேறுபட்ட காட்சி களையே பெறுகின்றன. அதாவது இரண்டு கண்களு டைய பார்வைகளும் ஒரே மாதிரியான சரிநுட்பம் கொண்டவையல்ல. இரண்டு கண்களினாலும்

பெறப்படும் பிம்பங்களுக்கிடையேயுள்ள அந்த வேறுபாடுதான் விழித்திரை வேறுபாடு ஆகும். வலக்கண் வலப்பக்கத்திலிருந்து அதிக விவரங்களையும் இடக்கண் இடப்பக்கத்திலிருந்து அதிக விவரங்களையும் சேகரிக்கின்றன. இவ்விருவகை விவரங்களும் ஒன்றிற்கொன்று ஓரளவு மாறுபட்டவையாகும். ஒரு சிறு பரிசோதனை மூலம் இதனை விளக்கலாம். மூக்கிலிருந்து மூன்று அங்குல தூரத்தில் ஆள்காட்டி விரலை நிறுத்தி, இடக்கண்ணை மூடிக் கொண்டு வலக்கண்ணால் விரலைப் பாருங்கள். பிறகு வலக் கண்ணை மூடிக்கொண்டு இடக்கண்ணால் விரலைப் பாருங்கள். இவ்வாறு விரைவாக மாறிமாறித் திரும்பத்திரும்பச் செய்யுங்கள். ஆள்காட்டி விரல் இடப் பக்கமிருந்து வலப்பக்கமும், வலப்பக்கமிருந்து இடப் பக்கமும் விரைவாக நகர்ந்தபடி இருக்கின்றது. உண்மையில் விரல் நகருவதில்லை. இது விழித்திரை மாறுபாட்டால் ஏற்படுகின்றது. விரலை இரு கண்களால் பார்க்கும்போது இரு வேறு பிம்பங்களும் ஒன்றுடன் ஒன்று இணைந்து விடுவதால் விரல் அசைவதாகத் தெரியவில்லை. இதுவே திட்பக்காட்சி சார்ந்தப் பார்வையாகும். இது ஆழ்புலன் காட்சியை மிகவும் சரிநுட்பமாக்குகின்றது. தனித்தனியே இரண்டு கண்களும் பெறுகின்ற வேறுபாடுகளை இருகண் பார்வைப்புலன் காட்சிகள் நீக்குகின்றன.

ஆழ்புலன் காட்சி சிலருக்குச் செயல்சார்ந்த ஈடுபாடு கொண்டதாகும். ஆகாயவிமானம், பேருந்து ஆகியவற்றைச் செலுத்துபவர்கள் ஆழ்புலன் காட்சியின் நுட்பம் அறிந்து கொண்டிருக்க வேண்டும். மிகவும் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் கருவியான ஒவார்டு டால்மென் ( Howard - Tohlman ) கருவி ஆழ்புலன் காட்சிப்பரிசோதனைக்கு மிகவும் ஏற்றதாகும். இக்கருவி பெரும்பாலும் எல்லா உளவியல் பரிசோதனைக்கூடங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் மூலம் ஒருவருடைய ஆழ்புலன் காட்சியின் தரத்தை அளந்து மதிப்பிட முடியும்.

- மு. இரா.

**துணை நூல்கள் :**

1. Candland, D.K., 1968, **Psychology : The Experimental Approach**, McGraw - Hill Book Company, Newyork.

2. Dember, W. N., 1960, **Psychology of Perception**, Holt, Newyork.

3. Gibson, J. J., 1950, **The Perception of the Visual World**, Hinghton Muffix, Boston.

4. Moskowitz, M. J., 1969, **General Psychology**, Hinghton Muffix, Boston.

**ஆளுமைச் சமநிலை :** ஒருவருக்குப் பழக்கமாகி விட்ட எண்ணம், சொல், ஆர்வம், மனப்பாங்கு, செயற்படும் முறை அவ்றோடு அவற்றுக்கென்று உள்ள தனி வாழ்க்கைத் தத்துவமும், உடல் அமைப்பும் சேர்ந்த முழு நடத்தையின் கூட்டுத்தன்மையே ஆளுமையாகும். பலருக்குப் பல பண்புகள் இருக்கும். ஆனால் சில பண்புகள் மட்டுமே மாறிமாறி வெளிப் பட்டுக் கொண்டே இருக்கும். இந்தப் போக்குத்தான் ஒருவருடைய ஆளுமையின் தன்மையை உருவாக்குவது. இது நல்லதாகவும் இருக்கலாம், தீயதாகவும் அமைந்துவிடலாம். இந்த நடத்தையை விரும்பினால் பெருமுயற்சியுடன் மாற்ற முடியும். பொதுவாகத் தன் போக்கை மாற்றிக் கொள்ள விரும்புவோர் மிகச் சிலரே. ஆகவே பல பண்புகள் நிலைத்துவிடுகின்றன. அவற்றின் விளைவாக ஆளுமையின் தன்மை நிலைத்துவிடுகின்றது. வாழ்க்கையின் போக்கில் சிறுசிறு மாறுதல்கள் ஆளுமையில் நிகழ்வதுண்டு. சினத்தைக் காட்டாமலிருப்பது ஆளுமையின் சமநிலை ஆகிவிடாது. சினத்தை நிகழ்ச்சிக்கேற்றவாறு எந்த அளவில் காட்ட வேண்டுமோ அந்த அளவு காட்ட வேண்டும். சினத்தைக் காட்ட வேண்டியதில்லை என்றால் காட்டலாகாது. தவறான இடத்தும் சினத்தைக் காட்டாது அடக்கிக் கொள்வது சம நிலை ஆகாது.

**சீர்கெடல்** : சில பேர் தமக்கிருக்கும் நற்பண்புகளை மிகைப்படுத்தியும் தீயனவற்றை இல்லாதனவாகவும் நினைப்பதுண்டு. ஆசைகள் கூடப் பேராசையாக இருப்பதுண்டு. உயர்கல்வியில் சேரப் பல முறை முயன்றும் தன் தகுதிக்குறைவினால் இடம் கிடைக்காது போவதனால் தோல்வி மனப்பான்மை உருவாகும். அன்றாடச் சிக்கல் அணுகுவதற்கு ஏற்ற பயிற்சியானது பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அளிக்காத போதும் இதே உணர்வுதான் ஏற்படுகிறது.

குடும்பங்களில்கூட இதைப்பற்றிக் கவலை இருப்பதில்லை. அதனால் இளைஞனோ, வயதானவரோ

தனித்தே இருக்க் வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடுகின்றது. சிறுவயதிலிருந்தே எதையும் மனம் விட்டுப் பேச வாய்ப்புகள் தரப்பட வேண்டும். கணவன் மனைவி கூடத் தத்தம் சிக்கல்களை வாய்விட்டுப் பேச முடிவதில்லை. இவ்வாறே பழகிவிடுவதால் மனச்சுமை பெருகும். இதனால்தான் இயங்க முடியாத நிலையில் ஆளுமைச்சிதைவு ஏற்படுகின்றது. ஆளுமையை ஆரோக்கியமான நிலையில் ஆளத் தெரிய வேண்டும்.

பலரால் தாமிருக்கும் சூழ்நிலையின் மெய்யான தன்மையை ஆராய முடிவதில்லை. அது தெரிந்த பின்னர் கூடச் சிலர் அந்நிலையை ஏற்றுக் கொள்ள மறுப்பர். வேறு சிலர் இல்லாதவற்றைத் தமக்கான சிறப்புப்பண்புகள் என எண்ணுவர். எண்ணங்களோடு நிற்காமல் செயலிலும் ஈடுபடுவர். இது தோல்வியில் அல்லது இக்கட்டான நிலைக்கு ஈர்த்துச் செல்லும். இதன் விளைவு மனமுடையல்தான்.

**சீரமைப்பு வழிகள் :** தன்னைச் சீரமைத்துக் கொள்ள வேண்டும் என்ற அவா வேண்டும். இத்தகைய எண்ணம் வந்தாலே போதுமானது. சமநிலையையடைதற்கான வழிமுறைகள் எளிமையானவை.

ஆளுமையின் சமநிலைக்கு நலம் வாய்ந்த நற்பழக்கங்கள் போதுமானவை. வேளா வேளைக்கு உண்பது, உறங்குவது, கற்பது, விளையாடுவது போன்றவை உடல்நலத்தைத் தந்துவிடும். அவற்றுடன் புகைக்காமை, குடிக்காமை, புறங்கூறாமை, திருடாமை போன்ற தீய பண்புகளையும் விலக்க வேண்டும்.

ஒருவரைப் பற்றிப் பிறர் சீர் தூக்கிப்பேசுவார்கள். அந்தச் செய்திகள் அவர் காதிற்கு எட்டும். குறைகள் கூறப்பட்டிருந்தால் அஞ்சவோ, வருத்தப்படவோ, சினங்கொள்ளவோ கூடாது. அவர்கள் கூற்றில் உண்மை ஏதேனும் உள்ளதா என்று பார்க்க வேண்டும். உண்மை இருப்பின் மாற்றிக் கொள்ள முயல வேண்டும். சற்றும் உண்மையற்றது எனில் சண்டைக்குப்போக வேண்டியதில்லை. அமைதியைக் கடைப்பிடித்தால் போதும். நாளடைவில் குறை கூறியவர்கள் தம் கூற்றை மாற்றிக் கொள்வார்கள்.

ஆளுமையான சமநிலையில் இருப்பது உரையாடலில் வெளிப்படும். பிறருடன் பேசுவதே தனி ஆற்றல்தான். உரையாடலின்போது, தாம் பேசுவதைவிட மற்றவர் பேசுவதை உற்று கவனிக்க வேண்டும். இது உரையாடலின் தன்மையை உயர்த்தும். பேசுபவர் தாறுமாறாகப் பேசுவதை அப்படியே ஏற்க வேண்டுமென்பதில்லை. தான் ஏற்கவில்லை என்தைக் கூறி விடலாம். தம் வாதத்தை அவர் ஏற்காதிருக்கலாம். இருப்பினும் அவர் பேச்சுக்குச் செவி சாய்க்கலாம். கேட்பது, ஒத்துக்கொள்வது என்று ஆகிவிடாது.

தான் ஒரு தனிப்படைப்பு என்பதை நம்பவேண்டும். தனக்கிருக்கும் சில தனி ஆற்றல்கள் எவ்வகை என்பதையும் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். தன்னைப் பற்றி உயர்வாக எண்ண வேண்டும். அதற்குக் காரணங்களிருக்கவேண்டும். கற்பனையாக இருக்கக்கூடாது. எந்தச் சிறு செயலாக இருப்பினும் அதனை ஆக்கச் செயலாக மாற்ற முயலவேண்டும். தனக்கிருக்கும் இயல்பூக்கங்களைப் பயன்தரும் செயல்கள் மூலம் உச்சமேம்பாடாக வெளிப்படுத்த வேண்டும். இம்முயற்சியில் முழு வெற்றி கிட்டாவிட்டாலும் முயற்சியின் சிறப்புமிக்க காரணத்தால் ஆளுமையானது பெருமளவிற்குக் கவர்ச்சியான முயற்சியில் செம்மையாகும்.

- எம். பெ.

**இடர் தரும் நடத்தை :** குழந்தைப் பருவத்திலேயே வாழ்க்கையில் ஏற்படும் சில நிகழ்ச்சிகள், சிறுவர்களிடையே பல உள போராட்டங்களைத் தோற்றுவிக்கின்றன. அவற்றைத் தீர்க்க முடியாத நிலையில் சிறிது சிறிதாக அவை உள்ளத்தின் நனவிலி நிலைக்குத் தள்ளிவிடப்படுகின்றன. அவையே பிறகு பொருத்தப்பாடின்மையைக் காட்டும் செயல்களாக வெளிப்படுகின்றன. ஆசிரியர்களைப் பொறுத்தமட்டிலும் மாணவரது கீழ்ப்படியாமை, துடுக்குத்தனம், கிளர்ச்சி செய்தல், பொருள்களை உடைத்தல் போன்ற எதிர்ப்பு நடத்தைகளைப் பெரும் தீமை விளைவிப்பவை என எண்ணுகின்றனர். ஆனால், உளவியல் கருத்துப்படி சமூக நியதியிலிருந்து மாறுபட்டுக் குழந்தையின் நடத்தை மிக அதிக அளவிலோ மிகக் குறைந்த அளவிலோ செயல்பட்டு, விலகிக் காணப்படும்போதே கவலை தருவதாக உள்ளது. உடலில் குறைபாடு, நுண்ணறிவுக் குறைவு, பாதுகாப்பு உணர்ச்சியை உணரப்பெறாத நிலை, மன முறிவு போன்றவை குழந்தைகளை இடர்தரும் நடத்தைக்கு ( Problem Behaviour ) இழுத்துச் செல்கின்றன.

**உண்பதில் தொல்லை** : சில குழந்தைகளிடம் அடிக்கடி உண்ண மறுப்பது, அல்லது அளவுக்கு அதிகமாக உண்பது என்ற இருவகைச் சிக்கல்கள் காணப்படுகின்றன.

**உண்ண மறுப்பது** : உடல், நோய் ஏதுமில்லாமல் இருக்கும்போது குழந்தை உணவு உண்ண மறுத்தால் அதன் காரணம் உள்ளத்தைப் பொறுத்தேயிருக்கும். பசியில்லை என்று சொல்வதற்கும், உண்ண மறுப்பதற்கும், கவனஈர்ப்பு, எதிர்ப்பு மனப்பான்மை, பகற்கனவு காணுதல், அச்சம், பதட்டம், பெற்றோரின் மீது வெறுப்புணர்ச்சி ஆகிய பல காரணங்கள் உள்ளன. குழந்தையைக் கேலி செய்தல், அதிக அளவில் செல்லம் கொடுத்தல், எதற்கெடுத்தாலும் பயமுறுத்தல், எதிர்ப்புத் தெரிவித்தல் போன்ற காரணங்களால் குழந்தைக்கும் பெற்றோருக்கும் அடிக்கடி சிறுசிறு சண்டைகள் உண்டாகின்றன. குழந்தைகள் தொடர்ச்சியாகச் சில நாள்கள் உண்ண மறுப்பின் பெற்றோர்கள் அதைப் பொறுமையாகச் சமாளித்து மருத்துவரின் ஆலோசனைகளைக் கையாள வேண் டும். அதற்குள் இயற்கையான பசி உணர்வு வந்து குழந்தை உண்ணத் தொடங்கும்.

உண்ண மறுத்தல் குழந்தைகளைக் காட்டிலும் குமரப் பருவத்தினரிடையே, அதுவும் பெண்களிடையே 95 விழுக்காடு காணப்படுகிறது. தங்கள் உடல் கொடி போல் மெலிந்து இருக்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு உணவைப் பெருமளவில் குறைத்துக் கொண்டே சென்று, இறுதியில் எலும்புக் கூடாகத் தோற்றம் அளிப்பினும் தமக்கு அழகிய உடல்கட்டு இருப்பதாக எண்ணிக் கொண்டு தமது உடல் நலத்தையே கெடுத்துக் கொள்கின்றனர். தொடர்ந்து உணவு உண்ணாமல் இருக்க அது உடலில் கொழுப்புச் சக்தியை மிகச்சிறு அளவிற்குக் கொண்டு சென்று, மாதவிலக்கு ஆவதையே பெரும்பாலும் நிறுத்தி விடுகிறது. அப்போது அவரது நடத்தையும், அடிக்கடி வரம்பு மீறிய இயக்க நிலையை அடைகிறது.

**அளவிற்கு அதிகமாக உண்பது** : சில குழந்தைகள் பெற்றோரிடமும், மற்றோரிடமும் அன்பையும், ஆதரவையும் எதிர்பார்க்கின்றன. அவை கிடைக்காத போது தம்முள் ஏற்பட்ட மனக்கொதிப்பைத் தவிர்க்கத் தங்களை அறியாமலேயே அளவுக்கு அதிகமாக உண்ணத்தொடங்குகின்றன. கணவனால் நிராகரிக்கப்பட்டு, மிகுந்த ஏக்கத்திற்கும், ஏமாற்றத்திற்கும் ஆளான தாய்மாரும் தனது ஒரே பற்றுக்கோடாகக் குழந்தையைக் கருதி அதற்கு அளவிற்கு மீறிய உணவைத் திணித்து வளர்க்கின்றனர். பெரியவனாகியும் குழந்தையை இப்பழக்கம் விடுவதில்லை.

**உறங்குவதில் தொல்லை** : இதனைத் தூக்கமின்மை, பயங்கரக் கனவுகள் காணுதல், தூக்கத்தில் நடப்பது என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

**தூக்கமின்மை** : அமெரிக்கா போன்ற நாடுகளில் 14லிருந்து 25 விழுக்காடு வரை மக்கள் தூக்கமின்மையால் அவதிப்படுவதாகவும், 1975இல் 60 மில்லியன் டாலருக்குமேல் தூக்கமாத்திரைகள் கடைகளில் விற்கப்பட்டன என்றும் தெரிய வருகிறது. பெரும்பாலும் அச்சம், பதட்ட உணர்ச்சி அல்லது மனக்கொந்தளிப்புடைய சிறுவர்களுக்குத் தூக்கமின்மை ஏற்படுகிறது. குழந்தை தனக்குச் சரியான பாதுகாப்பு இல்லையென உணர்வது, தனிமையில் இருப்பதற்குப் பயப்படுதல், இருளைக் கண்டு அஞ்சுதல் போன்றவையும் சில காரணங்களாகும்.

பெற்றோர்கள், குழந்தைகள் தூங்கச் செல்லும் போது அவர்களுக்கு மனதில் மகிழ்வையும், தனக்குப் பாதுகாப்பாகப் பெற்றோர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை உணர்வையும் ஊட்ட வேண்டும். குழந்தையைத் தனது விருப்பம்போல் தூங்குவதற்கு ஆதரவு அளிக்கவேண்டும்.

தொடர்ந்து தூக்கமின்மையால் பிற்காலத்தில் வெகுவாகப் பாதிக்கப்படுவர். போதை மருந்துகள், மதுபானங்கள், காபி, நிகோடின், மன இறுக்கம், உடல் நலக் குறைவு, சோம்பி இருத்தல், தூங்கும் சூழ்நிலை, தூங்கும் பழக்கங்கள் இவற்றாலும் வயது வந்தோரும் உறக்கத்தை இழந்து பெரிதும் தவிக்கின்றனர்.

**பயங்கரக் கனவுகள்** : குழந்தை தூக்கத்தில் இருக்கும்போது பயங்கரமான கனவுகளைக் ( Night Terror) காண்பதால் திடீரெனக் கதறி அழுகிறது. அச்சத்தினால் எழுந்து உட்காருகிறது. மறுநாள் காலையில் இது பற்றி வினவினால், இரவில் நடந்தது எதுவும் குழந்தையின் நினைவிற்கு வருவதில்லை. இவற்றிற்கெல்லாம் காரணம், குழந்தையின் மனதில் ஏற்படும் பலவகையான உணர்ச்சி மாற்றங்களே ஆகும். இவையே பயங்கரக் கனவுகளாக வந்து குழந்தைகளுக்குத் தொல்லை கொடுக்கின்றன. பெரும்பாலும் மிகவும் துடிதுடிப்பும், ஆர்வமும், அறிவும் நிறைந்த குழந்தைகளுக்கு இந்நிலை ஏற்படுகிறது.

**தூக்கத்தில் நடப்பது** : தூக்கத்தில் நடப்பது, உறக்கத்தில் ஏற்படும் பெரும் தொல்லையாகும். இது 11 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடம் காணப்படுகிறது. இத்தகைய சிறுவர்கள் நன் றாக உறங்கிக் கொண்டிருக்கும்போது திடீரெனப் படுக்கையிலிருந்து எழுந்து நடக்கத் தொடங்குகின்றனர். அப்போது அவர்களுடைய தன் உணர்வு குழம்பி இருக்கின்றது. இப்பழக்கம் பெரும்பாலும் மிகவும் உணர்ச்சி வயப்படக்கூடிய, மனச்சிக்கலை உடைய குழந்தைகளிடம் ஏற்படுகிறது. எனவே, மனநோய் மருத்துவரை அணுகி முறைப்படி மருத்துவம் பெற்றுக்கொள்வது மிகவும் அவசியமானதாகும்.

**சிறுநீர் கழிப்பதில் கட்டுப்பாடின்மை** : பொதுவாகக் குழந்தைகள் மூன்று வயதிற்கு மேல் படுக்கையில் சிறுநீர் கழிக்காமல் கட்டுப்படுத்திக்கொள்ளும் திறனைப் பெறுகின்றனர். ஆனால் சில குழந்தைகளிடம் அக்கட்டுப்பாடு ( Enuresis ) உரிய காலத்தில் உண்டாவதில்லை . பெரும்பாலும் இது பெண் குழந்தைகளைவிட ஆண் குழந்தைகளிடம் அதிகம் காணப்படும். இதில் இருவகையுண்டு. பிறந்தது முதல் தொடர்ச்சியாக இருப்பது முதலாவது வகையைச் சார்ந்தது. இது குழந்தைகளின் உடல் வளர்ச்சியில் ஏற்படும் குறைபாட்டால் உண்டாவது. வேறு சில குழந்தைகள் உரிய காலத்தில் சிறுநீர் கழிப்பதில் கட்டுப்பாடு அடைந்து பிறகு சில ஆண்டுகள் கழித்து மீண்டும் படுக்கையில் சிறுநீர் கழிக்கத் தொடங்கும். இது இரண்டாவது வகையைச் சார்ந்தது. பெரும்பாலும் இத்தகைய சிறுவர்களுக்கு உடலமைப்பில் எவ்வித மான குறைகளும் இருப்பதில்லை. இத்தகைய சிக்கல்களுக்குக் காரணங்களைக் கண்டறிந்து நடத்தை மாற்று மருத்துவம், சிறுநீர்ப்பைக் கட்டுப்பாட்டுப் பயிற்சி, மருந்து மாத்திரைகள் மூலம் மருத்துவம் அளிக்க வேண்டும்.

**இசைவின்மைப் பழக்கங்கள்** : துன்பம் தரும் சூழ்நிலையில் உணர்ச்சி வசப்படுதல் அதன் காரணமாகப் பொருந்தாச் செயல்களில் ஈடுபடுதல் மனித இயல்பு. இவை வாழ்வின் எல்லாப் பருவங்களிலும் ஏற்பட வாய்ப்புண்டு. துன்பச் சூழ்நிலைக்கு வளைந்து தரும் மனப்பாங்கு இருந்தால் அச்சூழ்நிலையின் அழுத்தம் குறையும்போது பொருந்தாச் செயல்களும் இயல்பாகவே மறைந்துவிடும். ஆனால் சிலரிடம் சூழ்நிலை அழுத்தம் ( Environmental Stress ) குறைந்தாலும் கூட இப்பொருந்தாச் செயல்கள் மறையச் சில வாரங்களோ மாதங்களோ ஆகலாம்.

நகம் கடித்தல், விரல் சூப்புதல், அடம் பிடித்து ஆர்ப்பாட்டம் செய்தல், பொருள்களை உடைத்தல், சுய இன்பம் காணுதல் போன்றவை இசைவின்மைப் பழக்கங்களில் முக்கியமானவை.

**நகம் கடித்தல்** : குழந்தைகளுக்கு ஏறத்தாழ ஒரு வயதில் ஏற்படும் இப்பழக்கம் பத்து முதல் பன்னிரண்டு வயது வரை நீடிக்கும். மன அழுத்தத்தின் வெளிப்பாடாக இது அமைகிறது. பகைமை, பதட்டம், பாதுகாப்பின்மை, அச்சம் முதலிய உணர்வு களை ஏற்படுத்தும் சூழ்நிலையில் இப்பழக்கம் உருவாகிறது. மன அழுத்தம் குறைவதற்கு இது வடிகாலாக இருப்பதால் நாளடைவில் இது நிரந்தரப் பழக்கமாகி விடுகிறது.

விரல் சூப்புதலும், பெற்றோரால் புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள், சவலைக் குழந்தைகள், தாய்ப் பால் பெறாத குழந்தைகளின் மன இறுக்கத்தைக் குறைப்பதற்கு உதவும் பழக்கமாகும். இது ஐந்து வயதிற்கு மேலும் தொடர்ந்தால் குழந்தையின் மன வளர்ச்சிக் குறையை அது காட்டுகிறது.

- கி. அ.

## இடைநிலைக் கல்வி

**இடைநிலைக் கல்வி** : தொடக்கக் கல்வியின் தொடர்ச்சியே இடைநிலைக் கல்வி. ஐந்து ஆண்டு காலத் தொடக்கக் கல்விக்குப் பின் கல்லூரிக் கல்வியை எட்டும் வரை உள்ள இடைப்பட்ட காலக் கல்வியை இடைநிலைக்கல்வி என்றும் கூறுவர். இடைநிலைக் கல்விதான் உயர்கல்விக்கு வழிவகுக்கிறது.

**வரலாற்றுப் பின்னணி** : இடைநிலைக் கல்வி வளர்ச்சியினை இந்திய விடுதலைக்கு முந்தைய நிலை, விடுதலை அடைந்த பின் உள்ள நிலை என இரு நிலைகளில் காணலாம். விடுதலைக்கு முன் உள்ள காலத்தில் இடைநிலைக் கல்வி வளர்ச்சியைக் கி.பி. 1835 முதல் கி.பி. 1854 வரை என்றும், கி.பி. 1854 முதல் 1904 வரை என்றும், 1904 முதல் 1917 வரை என்றும், 1917 முதல் 1947 வரை எனவும் 4 பகுதிகளாகக் காணலாம்.

**மெக்காலே அறிக்கை ( 1835 – 1854 )** : மெக்காலே என்பவரது அறிக்கை முதன் முதலாக இந்தியக் கல்விக் கொள்கை பற்றிக் கூறியது 1835இல் தான். அந்த அறிக்கையே இந்தியக் கல்விமுறையில்

பெரிய மாற்றத்தையும், புரட்சியையும் தோற்றுவித்தது. இன்றைய இந்தியக் கல்வி முறைக்கு வித்திட்டதும் மெக்காலேயின் அறிக்கைதான். அந்த அறிக்கையின் முக்கிய சாரமாக அமைந்தது அவர் கூறிய, 'எங்களுக்கு வேண்டியது இந்திய நிறத்தையும் குருதியை யும் கொண்ட இந்தியர்கள். ஆனால் அவர்கள் கருத்துகளும், உணர்வுகளும், அறிவும், ஆன்மீகமும் ஆங்கிலேயருடையதாக அமைய வேண்டும்' என்ற கருத்தாகும். அந்த அடிப்படையில் உருவாக்கிய கல்விதான் இன்றும் இந்திய மக்களின் குருதியில் ஊறி நிற்கிறது. ஆங்கிலத்திற்கு அப்போது அளிக்கப்பட்ட முக்கியத்துவம் இன்றும் கல்விமுறையில் காணப்படுகிறது. ஆங்கிலேய அரசு நீதிமன்றங்களின் மொழியாக ஆங்கிலத்தை ஆக்கியது. அதேபோன்று ஆங்கில மொழி பயின்றோருக்கு அரசுப் பணிகளில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. ஆகவே, முக்கியமாக ஆங்கிலம் பயிற்றுவிப்பதற்காக அதிகமான இடைநிலைப் பள்ளிகளும் அப்போது தொடங்கப்பட்டன.

**உட்சு அறிக்கை ( 1854 – 1904 ) :** உட்சு என்பாரின் அறிக்கையில் கீழ்க்காணும் பரிந்துரைகள் அளிக்கப்பட்டன. பொதுக்கல்வித்துறையை உருவாக்குதல், பல்கலைக்கழகங்களை உருவாக்குதல், மூன்றா வதாக இடைநிலைப்பள்ளிகளை நிறுவுதல் உட்சு அறிக்கையின் பரிந்துரை காரணமாகக் கல்கத்தா, சென்னை, பம்பாய் பல்கலைக்கழகங்கள் கி.பி. 1857 ஆம் ஆண்டு உருவாயின. இதன் காரணமாக இடைநிலைக்கல்வி வாழ்க்கைக்காக மாணவர்களை உருவாக்குவதை விடுத்து, உயர் கல்விக்காக அவர்களை ஆயத்தம் செய்தது. தாய்மொழி மூலம் கற்றல் மாறி ஆங்கில வழிக்கல்வி சிறப்புப்பெற்றது. இடைநிலை கல்விக்கென அரசு நிதியுதவி அளித்ததின் காரணமாகப் பள்ளிகளின் எண்ணிக்கையும் மிகுதியாயிற்று.

இந்தியக் கல்விக்குழு என்ற பெயரில் அண்டர் கல்விக் குழு ( Hunter Commission ) உருவாக்கப்பட்டது. அக்குழுவின் முக்கியப் பரிந்துரை பள்ளிக் கல்வி மாணவர்களை உயர்கல்விக்கு மட்டுமன்றி வாழ்க்கைக்காகவும் உருவாக்க வேண்டும் என்பதே.

**இந்தியப் பல்கலைக்கழகங்களின் சட்டம் ( 1904 – 1917 ) :** இந்தியப் பல்கலைக்கழகங்கள் மாணவர்களை ஆயத்தம் செய்யும் பணியில் சிறந்த முறையில் ஈடுபட்ட இடைநிலைப் பள்ளிகளுக்கு மட்டுமே ஒப்புதல் அளித்தன. எனவே ஏனைய பள்ளிகள் மூடப் பட்டன.

சாட்லர் குழு ( Sadler Commission ), ஆர்டாக்குழு ( Hartog Commission ), சாப்ரூ குழு ( Sapru Commission), அப்பாட்டு மற்றும் உட் அறிக்கை ( Abbot and Wood report ), சார்சண்டு அறிக்கை ( Sargent report 1917 - 1947) ஆகிய பல்வேறு கல்விக்குழுக்கள் இடைநிலைக்கல்வி பற்றிப் பல்வேறு பரிந்துரைகளை வழங்கின. அப்பரிந்துரைகளில் முக்கியமானவை மாணவர்களின் திறமை, விருப்பத்திற்கேற்பக் கல்வி கற்கும் வகையில் பல்நோக்குப் பாடத்திட்டத்தை ஏற்படுத்துதல், தொழிற்கல்வி அளித்தல், தகுதியுடையவர்களுக்கு மட்டுமே இடைநிலைக் கல்வி அளித்தல், இலவசக்கல்வி, ஆசிரியர்களுக்குப் பயிற்சி, ஆங்கிலம் மட்டுமன்றித் தாய்மொழியின் வாயிலாகவும் கல்வி அளித்தல் ஆகியவையாகும். இருப்பினும், இடைநிலைக் கல்வியில் காணப்பட்ட பல்வேறு குறைபாடுகள் இதில் காணப்படவில்லை.

அரசியல், சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப புதிய இந்தியாவை உருவாக்கும் திறனை மாணவர்கள் பெற வாய்ப்பற்ற கல்வியாகவே இடைநிலைக் கல்வி அமைந்ததாகக் கருதப்பட்டது. அதேசமயத்தில் பல்வேறு அறிஞர்களின் பரிந்துரைகள் இடைநிலைக் கல்வி வளர்ச்சியுறவும் பெரிதும் உதவின. அந்தப் பரிந்துரைகள் விடுதலைக்குப் பின்னர், கல்வியில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு வித்திட்டன எனக் கூறலாம்.

**விடுதலைப்பெற்ற இந்தியாவில் நடுநிலைக் கல்வி வளர்ச்சி :** ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் இருந்த கல்வி முறையின் அடிப்படையில் 1947 முதல் விடுதலை பெற்ற இந்தியாவின் வளர்ச்சியையும், தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு கல்விக்குழுக்கள் பரிந்துரை அளித்தன. அவற்றில் குறிப்பாக, தாராசந்து குழு ( 1948 ), பல்கலைக் கழகக் கல்விக்குழு ( 1948 - 49 ), நடுநிலைக் கல்விக் குழு ( 1952- 53 ), கோத்தாரி கல்விக்குழு ( 1964 - 66 ), தேசியக் கல்விக்கொள்கை ( 1968, 1979, 1986 ) ஆகியவை நடுநிலைக் கல்வி குறித்த பரிந்துரைகளை வழங்கின.

**தாராசந்து கல்விக்குழு ( 1948 ) :** இந்தக் கல்விக் குழுவின் பரிந்துரைகளில் மிக முக்கியமானவை மூன்று.

1. நடுநிலைப் பள்ளிகள் மிகுந்த எண்ணிக்கையில் பல்நோக்குப் பள்ளிகளாக மாற்றப்பட வேண்டும்.

2. அதேநேரத்தில் ஒரே நோக்குடைய ( Uni - Purpose schools ) பள்ளிகளும் தொடர்ந்து செயற்படவேண்டும்.

3. நடுநிலைப் பள்ளிகளில் காணப்படும் சிக்கல்களை ஆராய்ந்து அதற்கேற்பத் தீர்வுகளை அளிக்கக் கூடிய வகையில் ஒரு தனிக்கல்விக் குழு அமைக்கப்பட வேண்டும்.

**பல்கலைக் கழகக் கல்விக்குழு ( 1948 – 1949 ) :** இந்தக் குழு பல்கலைக்கழக உயர்கல்வியைப் பற்றி ஆராய்வதற்காக ஏற்படுத்தப்பட்டது. இருப்பினும், நடுநிலைக்கல்வி குறித்தும் இது சிறந்த கருத்துக்களை அளித்துள்ளது. அந்தக்கல்விக் குழுவின் முக்கியமான கருத்து, 'கல்வி என்னும் சங்கிலித் தொடரில் வலிமை குன்றிக் காணப்படும் பிணைப்பு நடுநிலைக் கல்வி. கல்வியின் அக்குறை உடனடியாக களையப்பட வேண்டும்' என்பதே ஆகும்.

**நடுநிலைக் கல்விக்குழு ( 1952 – 1953 ) :** தாராசந்து குழுவின் பரிந்துரையின்படி இந்திய அரசு டாக்டர் ஏ. லட்சுமணசுவாமி முதலியார் தலைமையில் நடுநிலைக் கல்விக்குழுவை ஏற்படுத்தியது. அந்தக் குழு நடுநிலைக் கல்வி குறித்து ஆராய்ந்து நடுநிலைக் கல்வியைச் சிறப்புறச் செய்வதற்கான பல பரிந்துரைகளை வழங்கியது. அவற்றில் முக்கியமாகக் கருதப்பட்ட சில பரிந்துரைகள் இங்கே தரப்படுகின்றன.

1. மக்களாட்சி உணர்வுகளை மாணவர்களுக்கு உண்டாக்குதல்
2. தொழில் திறனை வளர்த்தல்
3. முழுமையான சிறந்த ஆளுமையை வளர்த்தல்
4. மாணவரிடையே தலைமைப் பண்புகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை அளித்தல்
5. தாய்மொழி மூலமாகக் கல்வி கற்றல்
6. மாணவர்களை வழிநடத்திச் செல்ல ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல்

இந்தப் பரிந்துரைகளின் அடிப்படையில் பல் வேறு மாற்றங்களை நடுநிலைக் கல்வியில் அரசு கொண்டு வந்தது.

**கோத்தாரிக் கல்விக்குழு ( 1964 – 1966 ) :** கோத்தாரி தலைமையில் அமைந்த கல்விக்குழு கல்வியின் பல்வேறு நிலைகளைப் பற்றிய ஆராய்ந்து அதில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும் எனப் பரிந்துரைத்தது.

அந்தக் கல்விக்குழு நாட்டின் வளர்ச்சியையும் குறிக்கோள்களையும் அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைந்திடல் வேண்டும் என்று வலியுறுத்தியது. ஆகவேதான், இந்தியாவின் எதிர்காலம் அதன் வகுப்பறைகளில் உருவாக்கப்படுகிறது என்ற சொற்றொடரோடு அக்குழுவின் அறிக்கை தொடங்குகிறது. அந்தக் கல்விக்குழு கல்வியின் அமைப்பினை நான்காகப் பிரித்துள்ளது. 1. பள்ளி முன்பருவக் கல்வி, 2. பள்ளிக்கல்வி, இந்நிலையில் பொதுக்கல்வி 10 ஆண்டுகள் அளிப்பது 3. மேல் நிலைப் பள்ளிக் கல்வி, 4. உயர்கல்வி.

இரண்டாம் நிலையில் முக்கியமான பரிந்துரையாகக் கருதப்படுவது எல்லோருக்கும் கல்வி பயில சமவாய்ப்பினை ஏற்படுத்துதல் என்பதாகும். அரசியல் அமைப்பில் கூறப்பட்டுள்ளபடி எந்தவித வேறுபாடுமின்றி இந்தியக் குழந்தைகள் அனைவருக்கும் குறைந்த அளவு எட்டு ஆண்டுகாலமாவது கல்வி அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை அந்தக் குழு வலியுறுத்தியது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் மிகுந்த அளவில் பள்ளிகள் தொடங்கப்பட்டன.

**தேசியக் கல்விக் கொள்கை :** கோத்தாரிக் கல்விக்குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு 1968ஆம் ஆண்டும் 1978ஆம் ஆண்டும் தேசியக் கல்விக் கொள்கை உருவானது. அதன்பின் 1986ஆம் ஆண்டு இந்திய தேசியக்கல்விக் கொள்கை உருவானது. அந்தக் கல்வி கொள்கை, கல்வி எல்லா நிலைகளிலும் ஓர் அறைகூவலாக அமைந்திட வேண்டும் என்பதனை வலியுறுத்தியது. அத்துடன் எல்லோருக்கும் கல்வி என்பதற்கும் முக்கியத்துவம் அளித்தது. சமுதாயத்தின் தேவைகளையும் நாட்டின் குறிக்கோள்களையும் அடிப்படையாகக் கொண்ட கல்விதான் சமுதாயத்தை மாற்றக்கூடிய ஒரு கருவியாக அமைந்திட முடியும் என்பதும் மற்றொரு முக்கியக் கருத்தாகும். தொழில்நுட்பக் கல்விக்கும், தொழில் சார்ந்த கல்விக்கும் அந்தத் தேசியக்கல்விக் கொள்கை முக்கியத்துவம் அளித்துள்ளது. கல்வியின் எல்லா நிலைகளிலும், மாணவர்கள் தொழிற்பயிற்சி பெறு

வதற்கு வாய்ப்புகள் அளிக்கப்படுவதின் மூலம் உடல் உழைப்பிற்கும், உற்பத்திக்கும் மதிப்பும் மரியாதை யும் அளிக்கப்படும் என்ற எண்ணம் மாணவரிடையே உருவாக்குவது இதன் கொள்கையாகும்.

எல்லோருக்கும் கல்வி என்ற நிலை இருப்பினும், அறிவுத்திறன் மிக்க குழந்தைகள் வறுமையின் காரண மாகச் சிறந்த பள்ளிகளில் படிக்கும் வாய்ப்பினைப் பெற முடிவதில்லை. அக்குறையைக் களைவதற்காக நவோதயா பள்ளிகள் என்ற எல்லா வசதிகளையும் படைத்த பள்ளிகளை நாட்டின் அனைத்துப் பகுதி களிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் நிறுவ வேண் டும் என்ற பரிந்துரையினை இந்தப் புதிய கல்விக் கொள்கை அளித்தது. சிறந்த ஆசிரியர்களையும், கற் பிக்கும் கருவிகளையும் வசதியான கட்டடங்களை யும் கொண்டதாக நவோதயாப் பள்ளிகள் நாட்டின் பல்வேறு மாநிலங்களில் நிறுவப்பட்டன. அதே சம யத்தில் நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளும் குறைந்த அளவு தேவைகளையாவது நிறைவு செய்ய வேண்டும் என்ற நோக்கோடு கரும்பலகை முனைப்பு நட வடிக்கை (Operation Black Board) என்ற கருத்தினையும் வலியுறுத்தியது.

தேசியக் கல்விக்கொள்கை தேசிய ஒருமைப் பாட்டினையும், பன்னாட்டு உறவினையும் கல்வி யின் மூலமாக உருவாக்கிட இயலும் என்ற குறிக் கோளோடு பள்ளிப்பாடத்திட்டத்தின் பல்வேறு கூறு களின் மூலமாக மாணவர்களுக்கு உணர்த்த முயன் றுள்ளது. மாணவர்களைத் தேசிய வயது வந்தோர் கல்வி, தேசிய மாணவர் படை (NCC), நாட்டு நலத் தொண்டு (NSS) ஆகியவற்றின் மூலமாக நாட்டிற்கு அவர்கள் ஆற்ற வேண்டிய தொண்டையும், கடமை யையும் அக்கல்விக் கொள்கை வலியுறுத்தியது. அச் செயல்களின் மூலமாக மாணவர்களுக்குச் சமுதாய உணர்வினையும், ஒழுக்க நெறியையும் கல்வி உணர்த் துகிறது. அவர்கள் சமுதாயத்தின் ஒரு முக்கியமான அங்கம் என்ற உணர்வினையும் பெறுகிறார்கள்.

சிறந்த கடமை உணர்வுமிக்க ஆசிரியர்களால் தான் மாணவர் சமுதாயத்தை நெறிமுறைப்படுத்த முடியும் என்பதால் ஆசிரியர்களுக்கு அந்த உணர்வை ஊட்டக் கூடிய வகையில் ஆசிரியப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் என்பதும் அந்தத் தேசியக் கல்விக் கொள் கையின் ஒரு முக்கிய கூறாகும். ஆசிரியர்கள் சமுதா யத்திற்குத் தாங்கள் கடமைப்பட்டவர்கள் என்ற உணர்வோடு பணியாற்ற வேண்டும் என்ற கருத்தை உருவாக்க வேண்டும் என்பதையும் அது வலியுறுத் தியது.

**ஐந்தாண்டுத் திட்டங்களில் நடுநிலைக் கல்வி :** ஐந்தாண்டுத் திட்டங்களிலும் நடுநிலைக் கல்வி வளர்ச்சிக்காகப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட் டன. வசதிகள் அதிகரிக்கப்பட்டன. பல்நோக்குப் பள் ளிகள் தொடங்கப்பட்டன. பள்ளிப் பாடநூல்களும், நூலகப் புத்தகங்களும் வெளியிடுவதற்கான வாய்ப்பு கள் ஏற்படுத்தப்பட்டன. அறிவியல் கல்வியின் மேம் பாடு வலியுறுத்தப்பட்டது. நாடு முழுவதும் 10+2+3 என்ற ஒரே மாதிரியான கல்விமுறை ஏற்படுத்தப் பட்டது. மதிப்புணர்வு கல்வியின் அவசியம் உணரப் பட்டது. ஏழு ஐந்தாண்டுத் திட்டங்களை 1951 முதல் 1990 வரை இந்திய அரசு நிறைவேற்றியுள்ளது. இடைநிலைக் கல்வியில் தொழிற்கல்விக்கும் முக் கியத்துவம் அளிக்கப்பட்டது. சமுதாயத்திற்குப் பய னுள்ள உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட செயல்களில் மாணவர்களை ஈடுபடுத்தி அவர்களுக்கு வாழ்க்கையோடு இயைந்த கல்வி அளிப்பதன் இன்றி யமையாமை வலியுறுத்தப்பட்டது. இடைநிலைப் பள்ளியில் இருந்து விடுபட்டவர்களுக்கு முறை சாராக் கல்வி மூலமாக அவர்கள் மீண்டும் கல்வியைத் தொடரும் வாய்ப்பும் அளிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பு பல்வேறு கல்விக்குழுக்கள் இடைநிலைக்கல்வி பற்றிய பரிந் துரைகளை அளித்ததின் அடிப்படையிலும், நாடு சுதந் திரம் பெற்ற பின் பல்வேறு கல்விக் குழுக்கள் அளித்த பரிந்துரையின் அடிப்படையிலும், இந்தியாவில் இடைநிலைக்கல்வி பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகியுள்ளது.

- ஜி. ப.

## இந்திரவர்மன் ( கி. பி. 877 – 889 ) :

காம்போச நாட்டை ஆண்டு வந்த ஒரு வேந்தன். இவன் சுவேதக கங்க குல வேந்தருள் ஒருவன். பிரிதிவிவர்மனின் மகன். மூன்றாம் சயவர்மனை அடுத்துப் பட்டத்திற்கு வந்த இவன் புதிய அரச மரபினைத் தோற்றுவித்தான்.

காம்போச அரசிற்கு உட்பட்ட சிற்றரசர்களுள் ஒரு வனாகத் திகழ்ந்த இவன், பின்னர் தனியாட்சி நிறுவி னான். காம்போச ஆட்சியைக் கைப்பற்றினான். சீனா,

சம்பா, சாவா நாட்டின் மன்னர்கள் தமது ஆணைக்குக் கீழ்ப்படிந்தனர் என்று இவன் தனது சாசனங்களில் பெருமை பேசிக்கொள்கிறான். இவன் யுனான் அரசின் மீதும் தன் மேலாண்மையை விரிவுபடுத்தியதாக அறியமுடிகிறது. இவன் அகத்தியரின் வழித்தோன்ற லான அரசி இராசேந்திர தேவியின் இளவரசியான இந்திராதேவியை மணந்து கொண்டான்.

இந்திரவர்மன் கட்டடக்கலை வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளான் என்பதனைக் கல் வெட்டுகளால் அறியலாம். இந்திர தடாகம் எனும் பெருங்குளமும், தங்கத்தால் ஆன அழகிய அரசுக் கட் டிலும் இந்திரயான எனும் வாகனமும், இந்திர விமா னகா, இந்திர பிரசாதகா எனும் பெயர்கொண்ட இரு அரண்மனைகளும் இவ்வேந்தனால் அமைக்கப்பட் டன. திருக்கோயில் பலவற்றைக் கட்டுவித்த இவன் அங்கு பல தெய்வப் படிமங்களையும் எழுந்தருளச் செய்தான். இவ்வேந்தனது காலத்திய கட்டடங்கள் யாவும் பழங்காலக் கலைக்கும் முதல்தரமான கலைக் கும் இடைப்பட்ட கலைப்பாணியைக் கொண்டு விளங்குகின்றன. இவ்வகையில் இவன் கட்டடப் பிரியன் முகலாய சாசகானுடன் ஒப்பிடத்தக்கவனாக விளங்குகிறான். பன்னிரெண்டு ஆண்டுகள் சீருடன் ஆட்சிபுரிந்த இவ்வேந்தன் கி.பி. 889இல் மண்ணுலக வாழ்வை நீத்தான். இவனுக்குப்பின் இவனது மகனான யசோவர்மன் அரியணை ஏறினான்.

**இரண்டாம் இந்திரவர்மன் ( கி. பி. 860 – 985 ) :** சம்பா நாட்டை ஆட்சி புரிந்த மன்னன். இவன், பாண்டுரங்க அரசக் குலத்தை அடுத்து ஆட்சிக்கு வந்த பிருகு அரச குலத்தைத் தொடங்கிய மன்னன் (Bhrigu Dynasty). சம்பாவை நூறு ஆண்டுகட்கு மேல் அரசு புரிந்த பிருகு குலத்தின் முதல் மன்னனான இவன் புகழ் மிகுந்தவன். சிரீ லக்சுமீந்திர பூமிசுவர கிராமசுவாமி என்பது இவன் இயற்பெயர். பட்டத்திற்கு வந்த பின்பு இவன் சிரீ செய இந்திரவர்மன் மகாராசாதிராசா எனும் பட்டப்பெயர் பூண்டான்.

இவ்வேந்தனது தந்தையும், பாட்டனும் மன்னர் களாக ஆண்டுள்ளனர். இருப்பினும், இவன் தனது அறிவுக்கூர்மையாலும், தனித்தகுதியாலும், நற்பண்பு களாலும் அரச பதவியை அடைந்ததாகவும் தனது பரம்பரைத் தகுதியால் பெறவில்லை என்றும் பல கல் வெட்டுகளில் கூறிக்கொள்கிறான். இவற்றை ஆய்ந்து பார்க்குங்கால் இவனது பாட்டனும் தந்தை யும் மிகக் குறுகிய பகுதிக்குக் குறுநில வேந்தராக இருந்தனர் என்றும், இவன் தனது தனித்திறனால் சம்பா அரசு முழுமைக்கும் பெருவேந்தன் ஆனான் என் பதும் புலனாகும். பிருகு, மகாதேவரால் சம்பாவிற்கு அனுப்பப்பட்டதாக புராணக்கதை கூறுகின்றது. எனவேதான் இவர்களும் தங்களைப் பிருகு குலத்தினர் என்று கல்வெட்டில் குறிப்பிட்டுக் கொள்கின்றனர் போலும். கல்வெட்டுகளில் இம்மரபின் புராணத் தலைவராக சிவன் குறிக்கப்பெறுகிறார். இவ்வேந்த னைப் பற்றிய சாதனைகள் கல்வெட்டுகளில் இடம் பெறவில்லை. இவ்வேந்தனது ஆட்சிக்காலம் அமைதி நிறைந்ததாகவும், நீண்டகாலம் நீடித்ததாக வும் அறியப்படுகிறது. இவன் ஒரு பக்திமான். சமய வாழ்வில் பேரார்வம் கொண்டவன். சைவம் சார்ந் திருந்த இவன் புத்த சமயத்தையும் போற்றிப் புரந் தான். இவன் புத்தக்கோயில் ஒன்றினையும் புத்த மட லாயம் ஒன்றினையும் அமைத்துப்புகழ் பெற்றான். அண்டை அரசுகளுடன் நட்புறவு கொண்டான். கி.பி. 877இல் சீனாவிற்குத் தூதுக்குழு ஒன்றினை அனுப்பி, சீனாவுடன் நட்பு பூண்டான். இவனுக்குச் சயசிம்ம வர்மன் எனும் மகன் இருந்தான். இவனுக்குப்பின் இவனது மகன் சயசிம்மவர்மன் பட்டம் பூண்டான் ( கி.பி. 896 - 905 ).

**மூன்றாம் இந்திரவர்மன் ( கி. பி. 911 – 971 ) :** சம்பா நாட்டை ஆட்சி புரிந்த புகழ்மிகு வேந்தருள் ஒருவன். மூன்றாம் பத்ரவர்மனின் ( கி.பி. 905 - 910 ) மகனான இவன் மாபெரும் அறிஞனாகத் திகழ்ந் தான். இவ்வேந்தனது சாசனம் ஒன்று, இவன் பௌத் தசித்தாந்தம், மீமாம்சம், பாணினியின் இலக்கணம், காசிகா இயற்றிய விளக்கம், சைவசமய உத்தரகல்பம் முதலான பலவிதமான தத்துவங்களைக் கற்றுத் தெளிந்தான்.

இவ்வேந்தனது ஆட்சிக்காலம் அமைதிக் கால மாக விளங்கவில்லை. இவன் சில அயலாரின் படை யெழுச்சியைச் சந்திக்க வேண்டியிருந்தது. காம்போச மன்னன் இவனது நாட்டின் மீது படையெடுத்து வந்து, உள் நாட்டையேத் தாக்கினான். போநகர் எனும் கோயிலில் இருந்த தங்கச்சிலை ஒன்றையும் காம்போச மன்னன் கவர்ந்து சென்றான். இப்படை யெழுச்சியால் நிரந்தர விளைவுகள் ஏதும் நிகழ வில்லை எனினும், சாம்பாவின் முன்னேற்றம் தடைப் பட்டது.

இந்திரவர்மன் சீனாவுடனான அயல்நாட்டு உறவைப் புதுப்பிக்க எண்ணி, கி.பி. 951இல் தூதுக்

குழு ஒன்றினை அனுப்பினான். மீண்டும் கி.பி. 958 முதல் கி.பி. 971 முடிய ஏழு தடவை தூதுக்குழுக்களை அனுப்பினான். இதன் விளைவாக சீன, சம்பா நல்லுறவு வளர்ந்தது. சம்பா மன்னர்களுள் மூன்றாம் இந்திரவர்மன் மாமேதையாகத் திகழ்ந்தான். இலக்கிய அறிஞர்களைப் பேணிப்பாதுகாத்தான். கி.பி.911 முதல் கி.பி. 971 முடிய அறுபது ஆண்டுகாலம் இவ் வேந்தனது ஆட்சிக்காலம் நடைபெற்றது. இவ் வேந்தனை அடுத்து இவனது மகனான பரமேசுவர வர்மன் அரியணை ஏறினான்.

- ம. இரா. த.

**இயல் திட்டவாதம் :** மெய்ப்பொருளியலில் இறைவனின் இருப்பு நிலையை உண்மையென உறுதி செய்யும் பொருட்டு எழுந்த மூன்று வாதங்க ளில் படைப்புத் திட்டத்தின் அடிப்படையாகக் கூறப் படுவதே இயல்திட்ட வாதமாகும். இயலுலகம் ஓர் இலக்குமுறைமையை வெளிப்படுத்துகின்றது. எனவே, நுண்ணறிவுள்ள முதனிலைத்திட்ட உருவரை வரைபவர் ஒருவரால் இது படைக்கப்பட்டிருக்க வேண்டும். இவ்வாதம் ஒரு குறிப்பிட்ட விளைவைக் கொணர் தற்பொருட்டுச் செயற்பாடுகள் அல்லது உறுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன என்ற கருத்தைச் சுட்டிக்காட்டுகின்றது.

பாலே ( Palay ) என்பவர்தான் இயல் திட்டவாதத் தின் முன்னோடியாக விளங்கினார். அவர் கருத்தின் படி மனித உடலின் உறுப்பாகிய கண் காட்சியை இலக்காகக் கொண்டது. அதேபோன்று காலப் பொறியும் காலத்தைக் காட்டும் இலக்கைக் கொண் டது. இவற்றின் உறுப்புகள் மேற்கூறிய இலக்குகளை விளைவித்தற்பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் காலப்பொறியை மனிதனின் படைப்புச் செயல் உண்டாக்கியது போன்றே, இயலுலகம் அனைத்திற்கும் உருவரை முன்மாதிரியைப் படைத்த ஒன்று இருத்தல் வேண்டும். இயலுலகு முழுமைக் கும் உரிய இலக்கை வரம்புக்குட்பட்ட மனிதனுடைய நுண்ணறிவு உருவரை முன்மாதிரியை உண் டாக்கியிருக்க முடியாது. எனவே, படைப்பு முழு மைக்கும் உருவரை முன்மாதிரியை அனைத்திலும் பரவியிருக்கக்கூடிய ஒரு நுண்ணறிவுக் கோட்பாட்டி னால் மட்டுமே முடியும் என்ற கருத்து, கடவுள் உண்மைக்குப் பின்னர் கூறப்பட்ட இயல்திட்ட வாதத்திற்கு முன் மாதிரியாகும்.

இயல் திட்டவாதத்தை முதன்முதலாக புனித தாமசு அல்கொயினசு ( St. Thomas Aquinas ) என்பவர் தனது இறைமைக் கொள்கையில் கூறியுள்ளார். அவரது கருத்தின்படி பொருள்கள் தம் அளவில் படிப்படியான சிறப்பை அல்லது முழுமையைக் கொண்டு விளங்கு கின்றன. இக்கருத்து இவற்றிற்கெல்லாம் அப்பாற் பட்ட நிறைவான முழுமையுடைய ஒன்று இருக்க வேண்டும் என்பதனைச் சுட்டுகின்றது. இதேபோன்று இயற்கையிலுள்ள ஒவ்வொரு பொருளும் குறிப்பிட்ட இலக்கைக் கொண்டுள்ளது. இலக்கிற்குக் கொண்டு செல்லக்கூடிய ஒரு நுண்ணறிவு வழிகாட்டியும் இருக்க வேண்டும் என்பதனை இக்கருத்து உள்ள டக்கியுள்ளது. படைப்பு முழுமை ஓர் இலக்கைக் கொண்டுள்ளதால் இலக்கை உடைய படைப்பு முழுமை தனக்குள் முற்றுணர்வான கடவுள் உண் மையை உள்ளடக்கியுள்ளது. இவ்வாறு பொருள் களின் படிப்படியான நிறைவும் அல்லது முழுமையும், இலக்குகளும், நிறைவான முழுமையும் அனைத்து இலக்கையும் கொண்டுள்ள உணர்வுப்பொருளாகக் கடவுளின் இருப்பு உண்மையைக் காட்டுகின்றன. இதுவே படைப்புத் திட்டத்தின் அடிப்படையாகக் கடவுள் உண்மையை வலியுறுத்தும் இயல் திட்ட வாதமாகும். இயல் திட்டவாதத்தை முதன்முதலாக ஐயப்பாட்டுக் கொள்கையினர் திறனாய்வு முறையில் மறுத்தனர்.

அவர்களின் கருத்துப்படி இயலுலகம் அழகு, நன்மை, பகுத்தறிவு ஆகியவற்றைக் கொண்டதன்று. அப்படியே இருப்பினும் அதனைக் கடவுள் படைத் தார் என்பதை அது நிருபிக்காது. இயல் திட்டவாதத் தினரின் கருத்துப்படி கடவுள் உணர்வுடையவன் எனில், அவன் மாற்றத்திற்குட்பட்டவன் ஆவான். மாற்றத்திற்குட்பட்ட கடவுள் நிலைபேறுடையதாக இருக்க முடியாது. இறைவன் மாற்றத்திற்குட்படாத வன் எனில் அவன் கடினமான உயிரற்ற இருப்பாக இருக்க வேண்டும். மேலும், கடவுள் உடலுடன் கூடியவன் எனில் அவன் அழியக்கூடியவன். உடலற் றவன் எனில் உணர்வுகள் இல்லாதவன். இவ்வாறு கடவுள் என்னும் கருத்து முரண்பாடுகளைக் கொண் டிருப்பதால் மனிதனது அறிவு அவனைக் கருத முடி யாது. எனவே, கடவுளைப் பற்றிய அறிவு இயலாத ஒன்று என்று ஐயப்பாட்டுக் கொள்கையினர் கூறுகின் றனர்.

ஐயப்பாட்டுக் கொள்கையினரைப் போன்றே யூம் ( Hume ) என்பவரும் இயல் திட்டவாதத்தினைத் திறனாய்வு செய்து மறுக்கின்றார். இவரது கருத்தின்படி காலப்பொறி மற்றும் இவை போன்ற பொருள்களுடன் படைப்பு முழுமையை ஒப்புமைப்படுத்த முடியாது. ஒரு காலப்பொறியைக் காணுகின்ற பொழுது அதனை உருவாக்கிய ஒருவனை உறுதியாகக் கணிக்க முடியும். ஆனால், படைப்பு முழுமையைக் காலப் பொறியுடன் ஒப்பிட்டு அதனை உருவமைத்த முன் மாதிரியாகக் கடவுளின் இருப்பைக் கருதுதல் இயலாது. காலப்பொறியை உருவாக்கிய மனிதனின் மனம் தொடர்ந்து மாற்றத்திற்குட்பட்டது. எனவே, மாற்றத்திற்குட்பட்ட மனிதனுடைய அறிவை எவ்வித மாற்றத்திற்கும் உட்படா கடவுள் இருப்பிற்கு ஒரு பண்பாகக் கருதி கடவுள் உண்மையை நிருபித்தல் இயலாது என்கிறார் யூம். இமானுவேல் காண்ட் என்பவரும் தனது மெய்ப்பொருளியல் கொள்கையில் கடவுள் உண்மைக்குக் கூறப்படும் இயல் திட்டவாதத்தினை மறுத்துள்ளார்.

- பி. ஆர். ந.

**இயற்கை வழிபாடு** : பழங்குடி மக்களிடையே பெருமளவில் காணப்பட்ட இயற்கை வழிபாட்டில் சூரியன், சந்திரன், பூமி ஆகியவை இயற்கை நிலை சக்திகளாக எண்ணப்பட்டு வழிபடப்பட்டன. குவி குந்தர்கள் ( Kuvi Kundhas ) பூமியைக் குறிக்கும் சக்ரீ ( Jakhri ) எனப்படும் பெண் தெய்வத்தையும் சூரியனையும் வழிபடுகின்றனர். பயிர் வளத்திற்காக பூமி அன்னைக்கு இரத்தம் சிந்தும் பழக்கத்தைத் தொங்காரியக் கொந்தர்கள் ( Dongria Kondas ) கொண்டுள்ளனர்.

பூமித்தாய்க்கு எருதினைப் பலி கொடுக்கும் பழக்கம் குட்டியா கொந்தர்களிடையே ( Kutia Kondas ) காணப்படுகிறது. மரியா பழங்குடியினர் தமக்கு உணவளித்து வாழ்வளிக்கும் தெய்வமாகப் பூமி அன்னையை வணங்குகின்றனர். இமாலய மலைப் பகுதி வாழ் கேரோ பழங்குடியினர் ( Garos ) சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் முதலியவற்றைச் சுவர்க்கத்தின் ஆவிகளாகவும், நாட்டை ஆளும் சக்திகளாகவும் வழிபடுகின்றனர். அருணாச்சலப் பிரதேசத்தைச் சார்ந்த பல்வேறு பழங்குடியினரும் சூரிய, சந்திரர்களைப் பெரும் சக்திகளாக வழிபடுகின்றனர்.

தென்னிந்தியாவின் தோடர்கள் (Todas), உரளி (Uralis), கணிக்கர் (Kanikkars) ஆகிய பழங்குடியினரிடையே சூரியனைத் தெய்வமாக வழிபடும் வழக்கம் காணப்படுகிறது. தொல் பழங்குடியினரிடையே இயற்கை வழிபாடென்பது சுவர்க்கத்தின் உயர் கடவுளாகக் கருதப்பட்ட **தியகு ஒடியோரசு** ( Deos Odeosus) எனும் கண்ணுக்குப் புலப்படாக் கடவுள் வழிபாட்டினைக் குறித்தது. இக்கடவுளால் பூமியின் பணிகளைக் கவனிக்க உருவாக்கப்பட்ட சக்திகளே இயற்கை வழிபாட்டிற்குரியனவாக வணங்கப்பட்டன.

**சுவர்க்க வழிபாடு** : தொன்மைக் காலத்திலிருந்தே சுவர்க்கம் என்பது உயர் கடவுள் உறையும் இட மாக வழிபடப்பட்டு வந்துள்ளது. இவ்வழிபாடு வேளாண்மை சமுதாயத்தினரிடையேயும் உணவு சேகரிக்கும் பழங்குடியினரிடையேயும் வேட்டைக் குடியினரிடையேயும் காணப்படுகிறது.

சுவர்க்கக் கடவுளால் உருவானதே பூமி எனவும், கடலிலிருந்து வெளிப்பட்டதே பூமியெனவும், பூமி உருவானதைப் பற்றிப் பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன. பூமி இயற்கைச் சக்திகளைப் புதுப்பிக்கும் இடமாகவும், பாதாள உலகமாகவும் கருதப்பட்டது. மழை தரும் மேகம், வெப்பம், குளுமையளிக்கும் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகியவற்றைக் கொண்ட இடமாகத் தொன்மைக் காலந்தொட்டே சுவர்க்கம் உருவகப்படுத்தப்பட்டுள்ளது. மின்னலையும் மழையினையும் தோற்றுவிப்பராகவும், இறந்தோரை ஏற்றுக்கொள்ளும் கடவுளாகவும் சுவர்க்கம் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது.

சுவர்க்கத்தை முதன்மைக் கடவுளாக வழிபடுதல் வடஅமெரிக்கக் காட்டிந்தியர்களிடையேயும், கலிபோர்னிய இந்தியர்களிடையேயும், ஆசுத்திரேலிய தொல் பழங்குடியினரிடையேயும், ஆப்பிரிக்க பழங்குடி மக்களிடையேயும் காணப்படுகின்றது.

**நீர் வழிபாடு** : தூய்மைக் கடவுளாகவும், காக்கும் கடவுளாகவும், சூரிய சந்திர சக்திகளுடன் நெருங்கிய தொடர்புடையனவாகவும், நீரும் நெருப்பும் கூறப்படுகின்றன. பொதுவாக நீர் சந்திரனுக்கு, நெருப்பு சூரியனுக்கு ஒப்பிடப்படுகிறது. மேலும் நீர் பெண்ணாகவும், நெருப்பு ஆணாகவும் உருவகப் படுத்தப் பட்டுள்ளது.

எகிப்திய நியுவினர் ( EgypÉian Nu ), மெசப்பொட்டேபியன் அப்சு ( Apsu ), தியாமத்து ( Tiamat ) ஆகிய மக்களிடையே நீர் உருவாக்கும் சக்தியாக வழிபடப்படுகிறது.

நீரிலிருந்து பூமியும், அதன் இதர வானொளிக் கோளங்களும் தோன்றியதாகவும், பறவைகள் கடல் மேலிடும் முட்டை இரண்டாகப் பிளந்து அதிலிருந்து சுவர்க்கமும், பூமியும் தோன்றியதாகவும் நீரின் சக்தியைக் குறித்துப் பல கருத்துகள் நிலவுகின்றன. யூரேசியா மற்றும் அமெரிக்காவின் பெருவெள்ளம் பற்றிய கதைகளில், முன்னர் இருந்த பணிவற்ற மக்கட் தொகையினை வெள்ளமானது அழித்துப் புதியதோர் உலகத்தை உருவாக்கியதாகக் கூறப்பட்டுள்ளது.

நீர் ஊற்றுகள், ஓடைகள் மற்றும் ஆறுகள் வளமைச் சின்னங்களாக வழிபடப்படுகின்றன. சுகமான்டிரோ ஆறு வளமைச் சின்னமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளதைப் பற்றி கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சார்ந்த கிரேக்க எழுத்தாளர், மணமாகாப் பெண்கள் தம் திருமணத்திற்கு முன் அந்த ஆற்றில் மூழ்கியெழுந்து தம் கன்னித்தன்மையை ஏற்றுக்கொள்ளுமாறு குளித்தெழுந்தனர் எனக் குறிப்பிடுகிறார்.

**நெருப்பு வழிபாடு :** பொதுவாக நெருப்பென்பது உருவகப்படுத்தப்பட்ட, உயிருடைய சக்தியாகக் கருதப்பட்டு வழிபடப்படுகிறது. நெருப்பின் நிறம், மனித இரத்தத்தின் நிறத்திற்கும் அதன் தணல், மனித இரத்தத்தின் வெப்பத்திற்கும் ஒப்பிடப்படுகிறது. இறந்த உடலிலிருந்து ஆன்மாவைப் பிரிப்பதில் நெருப்பு முக்கிய பங்கேற்பதாக நம்புகின்றனர்.

தூய்மை செய்தலும், தீய சக்திகளை அண்டவிடா திருத்தலும் நெருப்பின் பண்புகளாகக் கூறப்பட்டுள்ளன. விண்ணுலக, மண்ணுலகப் பிறப்பினைக் கொண்டதே நெருப்பு என்றும், பாதாள உலகின் எரிமலையிலிருந்து தோன்றியது நெருப்பு என்றும் கூறப்படுகிறது.

ஈரானியர்களிடையேயும் நெருப்பு வழிபாடு உள்ளது. அது அட்டார் ( Atar ) எனும் கடவுளை வழிபடுவோரின் சமயப் பின்பற்றல் முறையிலிருந்து பெறப்பட்டது என்பர். இந்தியாவில் சோராசுபுரியர்களான பார்சி மக்களிடையே இன்றும் நெருப்பு வழிபாடு காணப்படுகிறது.

பண்டைக் காலந்தொட்டே பிறப்பு, இறப்பு, திருமணச் சடங்குகளில் நெருப்பு வழிபடப்பட்டு வருகின்றது. மத்திய ஆசுத்திரேலியாவின் வாரமுங்காப் பழங்குடியினர் ( Warramungatribe ) நெருப்பினைக் குலவழிக் குறியாக வழிபட்டனர். அருண்டாப் பழங்குடி மக்கள் ஏற்புச் சடங்கை நிறைவு செய்யும் நிகழ்ச்சியாக நெருப்புச் சடங்கினைச் செய்கின்றனர்.

**வளிமண்டல சக்தி வழிபாடு :** சுவர்க்கத்தின் உயர் கடவுளே இடிக்கும், மழைக்கும் கடவுளாகத் திகழ்கிறார் என்பர். புயல் மற்றும் சூறாவளி மிகுதியாகக் காணப்படும் நாடுகளில் காற்றுக்கும் புயலுக்கும் தனிக்கடவுளர்கள் உள்ளனர்.

வடஐரோப்பா முதல் தட்பவெப்ப மண்டலக் காடுகள் வரையிலான விண்ணுலகையும், மண்ணுலகையும் இடி, மின்னல், புயல் ஆகியவற்றின் கடவுளர்கள் ஆள்வதாகக் கூறப்படுகிறது. செர்மானியரின் தார் -டோனார் ( Thor - Donar ), கெல்டினரின் - தாரனீசு ( Geltner - Darnis ), சுலாவினரின் - பெர்குனீசு ( Sulavinar - Pergunis ), இந்தியரின் இந்திரன், கிரேக்க உரோமானியரின் சீயசு, சுபிடர் ( zeus - Jupiter ), ஆகியோர் இந்தோ - ஐரோப்பிய இடி, மின்னல், புயல் ஆகியவற்றின் கடவுளராகக் கூறப்படுகின்றனர்.

வளிமண்டலக் கடவுளரின் வாகனங்களாக ஆடு, குதிரை போன்ற விலங்குகள் குறிப்பிடப்பட்டுள்ளன. வேத காலத்தில் கருடனும் பண்டை மெசபடோமியாவில் சூ ( zu ) எனும் பறவையும் இடி, மின்னல் மற்றும் புயலின் சின்னமாகக் கருதப்பட்டது. அப்பறவைகள் தங்கள் அலகுகளில் வில் அல்லது ஈட்டியை வைத்துள்ளதுபோல் சித்தரிக்கப்பட்டுள்ளன. இதற்கு தோனோவின் படிமக்காலத் தொல் பொருட்கள், கைவினைப் பொருட்கள், வடக்குப் பெருவில் கிடைத்த பானைகள் ஆகியன சான்றுகளாகத் திகழ்கின்றன.

எகிப்தியரின் காற்றுக் கடவுள் ஆத்மாவைக் கொண்டு செல்லும் தூதனாக, மனித வாழ்வின் நன்மை தீமையைக் கணிக்கும் நீதிபதியாகக் கருதப்படுகிறது.

வானவில் என்பது மழைநீரை விழுங்கித் தன்னுள் தேங்க வைத்துக்கொள்ளும் ஒரு விலங்கின் வடிவமாகக் கருதப்பட்டது. இத்துடன் வானவில் மனிதனைக் கடவுளர் உலகிற்குக் கொண்டு செல்லும் ஒரு பாலமாகவும் கருதப்பட்டது. பண்டைக் கிறித்தவ வழிபாட்டில் வானவில் கிறித்துவின் சிம்மாசனமாகக் கருதப்பட்டது. அகாபியா, மைய ஆப்பிரிக்காவின்

பாண்டுப் (Ban tu) பழங்குடியினரிடையே வானவில் கடவுளின் வில்லாகக் கருதப்படுகிறது. நந்தி (Nandi), மசாய் (Masai), கலிபோர்னியாவின் யூகீப் ( Yuki ) பழங்குடியினர் வானவில்லைக் கடவுளின் மேலங்கியாகக் கருதுகின்றனர்.

**ஆவியுலகக் கோட்பாடு :** இக்கோட்பாடு ஆன்மா, மந்திரச்சக்தி ஆகியவற்றைக் குறிக்கிறது. பண்டைய மனிதன் இயற்கைச் சக்திகளை, மந்திர சக்தி கொண்ட மிகப்பெரும் சக்தியாகவே கருதினான். இயற்கையின் மேல் அவன் கொண்டிருந்த நம்பிக்கையே, தொன்மையான சமய நம்பிக்கைக்கு அடிகோலியது. ஆத்மாவும், ஆவியும் மனித வாழ்க்கைக்கு அப்பாற்பட்டவை எனும் கருத்து சமய வளர்ச்சியில் மிகப் பின்னரே தோன்றியது எனலாம்.

வளர்ச்சியடைந்த சமூகத்தினரிடையேயும் மலை, ஆறு, குகை, காற்று, மரம், பாறை, மேகம் போன்றவற்றில் ஆவிகள் குடிகொண்டிருப்பதாக நம்பப்படுகின்றது. அது மனித சமுதாயத்தின் நம்பிக்கையையும், இயற்கை வழிபாடு வளர்ந்த முறையையும் செவ்வனே எடுத்துக்காட்டுகிறது.

பெரும்பான்மையான இயற்கைச் சமயங்களில் சூரியன், சந்திரன், கோள்கள் போன்றவை மேல் சுவர்கத்திலும், மேகம், காற்று, மழை போன்றவை கீழ் சுவர்க்கத்திலும் உள்ளனவாகப் பகுக்கப்பட்டுள்ளன.

வளம் தரும் கடவுளர் உறையும் இடமாக பூமி கருதப்பட்டது. பூமியிலிருந்து தோன்றும் அனைத்தும் இறப்புக்குப்பின் மீண்டும் பூமிக்குச் செல்கின்றன என்னும் நம்பிக்கையே இயற்கை வழிபாட்டிற்கு வழிகோலியது என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அனைத்து உயிரினமும் தோன்றும் பூமி தாயாகவும், மழைதரும் வானம் தந்தையாகவும் சூரியன் வளர்ச்சியின் தந்தையாகவும், காற்று கடவுளின் தூதராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன. காற்று கடவுளருடன் பாம்பைச் சித்தரிப்பது மெக்சிகோவில் காணப்படுகிறது. உரோமானிய, கிரேக்கப் புராணக் கதைகளில் நோய்களைக் குணப்படுத்தும் கடவுளர் பாம்புடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளார்.

இயற்கை வழிபாடு பற்றிய கோட்பாடுகளுள் மேக்சுமுல்லரின் கோட்பாடு முதன்மையாக விளங்குகிறது. மனிதனின் முதன்மையான சமய முயற்சியே இயற்கை வழிபாடு எனப்படுகிறது. பல்வேறு ஆய்வாளர்கள், மூதாதையர் வழிபாட்டிலிருந்து தோன்றியதுதான் இயற்கை வழிபாடு எனக் கருதுகின்றனர். இடி, மின்னல், மழை, சூறைக்காற்று போன்ற இயற்கைச்சீற்றங்களுக்கும், நோய்களுக் கும் மரணத்தை அளிக்கவல்ல மறை சக்திகளுக்கும் அஞ்சிப் பண்டைக்கால மக்கள் இயற்கை வழிபாடு செய்தனர் என்றும் கூறப்படுகிறது. தொடக்க கால ஆய்வாளர்கள் பலர் இக்கருத்தையே கூறியுள்ளனர்.

இயற்கை வழிபாடென்பது இனவழியாகவும், மொழிவாரியாகவும் வெவ்வேறு பாதையில் வளர்ச்சியடைந்திருந்த போதிலும், இயற்கைக் கடவுளரின் செயல்களும் பண்புகளும் பல இடங்களில் ஒத்துக் காணப்பட்டன.

- ம. ந. பு.

**இயற்கை விதிகள் :** மனிதர்களால் ஆக்கப்பட்ட சட்ட விதிகளிலிருந்து வேறுபட்டு இயலறிவு அல்லது இயற்கைக்கு இயைந்த விதிகளாக இருப்பவை இயற்கை விதிகள் ( Natural law ) ஆகும்.

இயற்கை விதிகளின் முதன்மை நோக்கம் எதிர் தரப்புக்கு அறிவிப்புச் செய்வதும், நியாயமான வாய்ப்புக் கொடுத்து விசாரணை செய்தலும், பரிசீலனை செய்தலுமாகும். அமெரிக்காவில் நீதிமன்றமோ, தீர்ப்பாயமோ, நிருவாகத்துறை முகவர் நிலையோ நடவடிக்கைகளில் இயற்கை விதிகளைப் பின்பற்றியே முடிவு கூறுகின்றன.

இங்கிலாந்து நாட்டில் எழுந்த மிகவும் பழைய வழக்குகளில் நீதிமன்றங்கள் நாடாளுமன்றத்தினால் செய்யப்பட்ட சட்டங்களைவிட இயற்கை விதிகளுக்கே முதன்மைக் கொடுத்துத் தீர்ப்புகளை வழங்கின.

இந்தியாவில் நீதிமன்றங்கள் இயற்கை விதிகளுக்கு ஒரு சிறப்பு இடத்தையே தந்துள்ளன. இந்திய சட்டமுறை இங்கிலாந்து நாட்டுச் சட்டமுறையைப் பின்பற்றியதாகையால் இங்கிலாந்து நாட்டில் எந்த அளவுக்கு இயற்கை விதிகளுக்கு முதன்மை கொடுக்கப்படுகின்றதோ அதே அளவு இந்தியாவிலும் கொடுக்கப்படுகிறது. அயல்நாட்டு நீதிமன்றமொன்று இயற்கை விதிகளுக்கு முரண்பட்டுத் தீர்ப்பு அளித்திடும்போது, இந்திய நாட்டு நீதிமன்றங்கள் அத்தீர்ப்பை ஏற்க மறுக்கின்றன.

இந்திய நாட்டில் சட்டம், இயற்கை விதிகளை நடைமுறையில் கையாண்டு தீர்ப்பளிக்க வேண்டு மென்று வெளிப்படையாகக் கூறவில்லையெனினும் நீதிமன்றங்களைப் பொறுத்தவரை இயற்கை விதி களுக்கு முதன்மைக் கொடுத்தே தீர்ப்புகளை வழங்குகின்றன.

இயற்கை விதிகளின் கோட்பாடுகளைக் குறிப்பது இயற்கை நீதியாகும். இயற்கை நீதி இரண்டு இன்றியமையாத கோட்பாடுகளைக் கொண்டுள்ளது. அவை 1. இருபுறங் கேட்டல், 2. எவரும் அவருடைய வழக்கில் சமன்செய்து சீர்தூக்கும் நடுவர் போல் இரார் என்பன.

இரு தரப்பினர்களும் அவர்களுடைய வழக்கை யுரைக்க நல்வாய்ப்புகள் அளித்த பிறகே தீர்ப்புக் கூற வேண்டும். அத்தீர்ப்பு, காரணங்களோடு கூடியதாக இருந்திடல் வேண்டும். அப்படிச் செய்யப்பட்ட தீர்ப் பினைக் கொண்டதே நேர்மையான விசாரணையா கும். நேர்மையான விசாரணையின்றி தீர்ப்புக்கூற லாகாது. அத்தகைய விசாரணையின்றிக் கூறப்பட்ட தீர்ப்புகள் பல வழக்குகளில் செல்லத்தக்கவை அல்ல என நீதிமன்றங்களால் அறிவிக்கப்பட்டுள்ளன.

**இருபுறங்கேட்டல் விதிக்கு விதிவிலக்குகள் :** நிருவாகத்துறை முகவர் நிலை எடுக்கும் நடவடிக்கை ஒருவருடைய உரிமையையோ, உடைமையையோ, நலனையோ, சுதந்திரத்தையோ, நல்வாழ்வு நாட்டத் தையோ பாதிக்குமானால், பாதிக்கப்பட்டவருக்கு அவருடைய வழக்கை உரைக்க வாய்ப்பளித்துத் தீர்ப்பு கூறப்படும். ஆனால், நிருவாகத்துறை முகவர் நிலை அது கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையை நிரு ணயம் செய்யுமானால், அப்போது இரு தரப்பினர் களையும் கேட்டல் விதியை அனுசரிக்க வேண்டிய அவசியமில்லை. கொள்கையை நிருணயம் செய்தல் ஆட்சி நிருவாகச் செயலாகும். அது நீதித்தன்மை வாய்ந்த செயலாகாது. சான்றாக, வளர்ந்து வரும் புறநகர்ப் பகுதிக்கு நல்ல சாலைகள் அமைக்க ஒரு நகராட்சி திட்டமிடுமானால் அத்திட்டம் பற்றி இரு தரப்பினர்களையும் புறங்கேட்டல் விதியை அனுசரிக்க வேண்டியதில்லை.

இருபுறங்கேட்டல் விதி, நிருவாகத்துறை முகவர் நிலைகளின் மிக முக்கியமான நடவடிக்கைகளை முறியடிக்கும் போதும், அதனால் பொதுநலன் பாதிக்கப்படும் போதும், அமைதி குலைக்கப்படும் போதும் அவசரத்தன்மை மற்றும் உகந்தமை அடிப் படையில் இருபுறங்கேட்டல் விதியை அனுசரிக்க வேண்டியதில்லை.

அயல்நாட்டினர் இந்திய நாட்டிற்குள் நுழைவதை அவர்கள் நுழைவதற்கு முன்பாக இரு தரப்பினர் களையும் புறங்கேட்டல் விதியை அனுசரிக்காமல் தடை செய்யலாம். ஏனெனில், அயல் நாட்டினரை ஒரு நாட்டினுள் நுழைய அனுமதி வழங்குவதென்பது அந்த நாடு அவருக்கு அளிக்கும் சிறப்புரிமையாகும். அது அயல்நாட்டினருடைய உரிமையன்று. ஆனால் அவரே நாட்டினுள் நுழைந்து பிறகு உரிமைகளைச் சட்டத்தில் மூலமாகப் பெறுகிறார். அதனால் அவர் நாட்டினுள் நுழைய அனுமதிக்கப்பட்ட பிறகு இரு புறங்கேட்டல் விதியை அனுசரிக்கமால் வெளியேற்ற முடியாது.

ஒருவருடைய தொழில் பொதுநலத்தையோ, பாதுகாப்பையோ, ஒழுக்கத்தையோ, பெரும்பான் மையினருடைய வசதியையோ பாதிக்கும்போது அத் தொழிலை மேற்கொள்ள அவருக்கு உரிமை இல் லை. அத்தொழிலைச் செய்ய அவருக்குள்ள உரிமம் சமுதாயத்தால் அவருக்கு அளிக்கப்பட்ட சிறப்பு உரி மையாகும். பொதுநலனைக் கருதி அவசரச் சூழ் நிலையில் இருபுறங்கேட்டல் விதியை அனுசரிக்கா மல் அவருக்கு அளித்துள்ள சிறப்புரிமையைத் திரும் பப்பெறலாம்.

அவசரக்காலச் சூழ்நிலையில் எடுக்கப்படும் நட வடிக்கைகளுக்கு இருபுறங்கேட்டல் விதி பொருந் தாது. சான்றாக, ஒரு குடியிருப்பில் தீப்பரவத் தொடங் கினால், தீ மேலும் பரவாமல் தடுக்கப் பாதுகாப்பு நடவடிக்கையாகப் பக்கத்துக் குடியிருப்புகளைப் பிரித்துவிட நேரிடலாம். அதுபோன்ற நேரங்களில் இருபுறங்கேட்டல் விதியை அனுசரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

சட்டமன்றம் வரிவிதிக்கையில் இருபுறங் கேட் டல் விதியை அனுசரிக்க வேண்டிய அவசியமில்லை. அனுசரிப்பதும் இல்லை. ஆனால் வரியை வசூல் செய்யும்போது யாராவது பாதிக்கப்பட்டால், பாதிக் கப்பட்டவருக்கு அவருடைய வழக்கையுரைக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

**மனச்சாய்வு :** இருபுறங் கேட்டல் விதிக்கு இணையான மற்றோர் இயற்கை விதி மனச்சாய்வின் மையாகும். நீதிமன்றத்தின் தீர்ப்பாயினும் நிருவாகத்

துறை முகவர் நிலையில் தீர்ப்பாயினும் மனச்சாய்வின்றி அமைதல் வேண்டும். மனச்சாய்வு மூன்று வகைப்படும் அவை, 1. பணஞ் சார்ந்த மனச்சாய்வு, 2. நபர் மனச்சாய்வு, 3. பொருள் பற்றிய மனச்சாய்வு.

**பணஞ்சார்ந்த மனச்சாய்வு :** பணஞ்சார்ந்த மனச்சாய்வு எவ்வளவு குறைவாக இருந்தாலும் ஒருவரை நீதிபதியாக இருக்கத் தகுதியற்றவராக்கிவிடும். இங்கிலாந்து நாட்டில் பல வழக்குகளில் பணஞ்சார்ந்த மனச்சாய்வு நீதிபதிக்கு இருக்குமானால் அவர் நீதிபதியாக இருக்கத் தகுதியற்றவர் என நீதிமன்றம் தீர்ப்பு கூறியுள்ளது.

**நபர் மனச்சாய்வு :** நீதிபதிக்கு நபர் சார்ந்த மனச்சாய்வு இருந்திடும்போது தொடர்புடைய வழக்கில் நீதிபதியாக இருக்கவியலாது. நீதிபதி விருப்பு வெறுப்பின்றி இரு தரப்பினரையும் ஒத்த நிலையில் வைத்து ஒரு பக்கம் கோடாமல் தீர்ப்பளித்திடுதல் வேண்டும். நீதிபதி ஒரு தரப்பினருடைய உறவினராகவோ, நண்பராகவோ, வேறு வழக்கில் வேண்டியவராகவோ, வேண்டாதவராகவோ இருப்பின் அந்த வழக்கினை விசாரித்துத் தீர்ப்புக்கூறும் தகுதியை இழந்துவிடுவார். நீதிபதி நேர்மையாகத் தீர்ப்பு கூறினாலுங்கூட அவரிடம் நபர் சார்ந்த மனச்சாய்வு இருந்ததாகக் கருதப்படும் அல்லது அவ்வாறு எண்ண வாய்ப்பளிக்கும்.

**பொருள் பற்றிய மனச்சாய்வு :** பொருள் பற்றிய மனச்சாய்வு காரணமாக ஒருவர் தகுதி இழப்பதற்கு அவர் தொடர்புடைய பொருளின் மீது கொண்டுள்ள கருத்து ஈடுபாட்டிற்கும் அல்லது வேறுபாட்டிற்கும் வழக்கிற்கும் நெருங்கிய நேரடித் தொடர்பு இருக்க வேண்டும்.

- பு. வே.

**இயற் நிலைக்கொள்கை :** இக்கொள்கை மனிதனது விருப்பத்தின் அடிப்படையில் அமைகின்றது. மனித விருப்பம் அவனுடைய அறிவு மற்றும் காரண காரிய செயல்முறை ஆகியவைகளை விட முக்கியமானது. இக்கொள்கை மனித விருப்பம் இயற்கையாகவும் அவனுடைய அனுபவத்தினாலும் எங்ஙனம் பாதிக்கின்றது என்பதை ஆராய்கின்றது. இக்கொள்கையை மனவியல், அறவியல், இறையியல் மற்றும் புலன்கடந்தவியல் என்னும் நிலைகளில் அறிந்து கொள்ளலாம்.

மனிதன் மனவியலின் படி அவனுடைய விருப்பத்திற்கிணங்கவே தன் வாழ்க்கையின் முடிவுகளையும், இலட்சியங்களையும் அமைத்துக்கொள்கிறான். தாமசு கோப்சு ( Thomas Hobbes ) மனித வாழ்க்கை விருப்பத்தின் அடிப்படையில் அமைவது என்று கொண்டு, அது மனிதனுடைய பெரு முயற்சியின் வழி நிகழ்வது என்று குறிக்கின்றார். தேவிட்கம் ( David Hume ) விருப்பத்தின் முன்னிலையில் காரண காரிய அணுகுமுறை எவ்வித பயனையும் வழங்காது என்றும், முன்னது பின்னதின் கட்டுபாட்டிற்குள் இருக்கின்றது என்றும் கருதுகின்றார். ஆர்தர் இசுகோபன்கௌர் ( Arthur Schopenhaver ) மனிதனது விருப்பம் அவனுடைய இயற்கைத் தன்மையது. உள்ளியல்பு உள்ளிருப்பு என்னும் குணங்களையுடையது என்றும், அதுவே அவனது வாழ்க்கையின் போக்கையும், முடிவையும் வழிநடத்துகின்றது என்றும் காட்டு கின்றார்.

மனித விருப்பத்தின் மேன்மையை இக்கொள்கைக்கு எதிர்கருத்துகளை வெளிப்படுத்தும் பிளேட்டோ, தேகார்த் ஆகியவர்களுடைய பகுத்தறிவுக் கொள்கையுடன் இணைத்து ஆராய்வதால் அறிந்து கொள்ளலாம். பிளேட்டோ மனிதனின் முடிவுகளும் இலட்சியங்களும் காரணகாரிய அணுகுமுறையின் அடிப்படையில் அமைந்து அதுவே மனிதனது விருப்பத்தைத் தமக்குகந்தவாறு வழிநடத்துகின்றது என்கிறார். தேகார்த்தும் காரணத்தை முன்வைத்து விருப்பம் அதன் பின்செல்லுகிறது என்றும், அறிவு முதலில் மனதிற்கு ஒரு முடிவைக்கூறுகின்றது என்றும், பின்னர் விருப்பம் மனதை உயர்நிலையை அடையவோ கட்டுப்படுத்தவோ செய்கின்றது என்றும் கூறுகின் றார்.

இயற்நிலைக் கொள்கை, பிளேட்டோ தேகார்த் ஆகியவர்களுடைய கருத்துகளை மறுக்கின்றது. இக்கொள்கையை வலியுறுத்தும் தேவிட்கம் காரணகாரிய அணுகுமுறை என்பது ஒன்றை உய்த்துணருவ தாலோ தொகுத்து விளக்குவதாலோ கிடைக்கும் முடிவு என்கிறார். காரணம், காரியம் என்பது உலகில் இயற்கையாக நடக்கும் ஒரு தொடர் இயக்கத்தின் இரு வேறுபட்ட நிலைகள் இவை மனித விருப்பத்தை எவ்விதத்திலும் பாதிக்காது. காரணகாரிய அணுகுமுறை மனிதனது செயல்பாட்டிற்கும் மனத் தூண்டுதலுக்கும் உதவிடாது. ஆகவே விருப்பமே வாழ்க்கைக்கு அடிப்படை. இதனையே ஜே.சி. பெட்ச்

( J.C. Fichte ) என்பார், 'விருப்பம் விரும்புவதால் விரும்பப்படுகிறது. ஒரு பொருளை விரும்புவதற்கு அடிப்படையாக இருக்கக் காரணமாகின்றது' என்று கூறுவார்.

இயற்நிலைக் கொள்கை அறத்திற்கு முக்கியத் துவம் கொடுக்கின்றது. மனிதன் வரையறுக்கும் முடிவைச் சரியானது அல்லது சரியில்லாதது என்று கூறுதல் கடினம். ஒருவனது முடிவு அவனுக்குச் சரியான தாய் இருக்கலாம். ஆனால், அதுவே மற்றவனுக்குச் சரியென்று கூறமுடியாது. ஒருவனது விருப்பத்தால் அடைந்திடும் முடிவின் தன்மை அவன் தனிப்பட்ட குணத்தின்பால் பட்டதாகின்றது. ஒருவனது விருப் பத்திற்கு உகந்தவாறு முடிவு இருப்பின், அது அவனுக்கு நல்லது. இல்லையேல் தீயது. நல்லது, தீயது என்பதெல்லாம் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றது. ஒருவன் தன் விருப்பத்தின் வழி நல்ல செயல்களை விவேகத்துடன் முறையாகச் செய்து அதன் வழி கிடைக் கும் முடிவை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒருவன் தன் விருப்பத்தின் வழி அடைந்திடும் முடிவு சரியானதா என்ற வினாவிற்கு வில்லியம் சேம்சு விடை கூறுகின்றார். அவர் ஒருவன் விரும்பி டும் முடிவு சரியானது என்றால் அது பெருவாரியான மக்களால் ஏற்றுக்கொள்ளப்படும். மேலும் அம் முடிவு அவனுடைய தேவையையும் மற்றவர்களுடைய தேவையையும் முழுமை செய்வதாய் இருந்திடும். ஆகவே, சரியான பாதையின்வழி மக்களின் தேவை கள் முழுமையடைவதால் அவ்வழி அறவழிப்பட்ட தாய் அமைந்திடும்.

பீட்டர் டாமெய்ன் ( Peter Damian ) என்பார் மனித விருப்பம் இறை விருப்பத்திற்குக் கட்டுப்படுகின்றது என்கிறார். இவர் மனிதனுடைய காரணகாரிய அறிவு மாறுபடும் தன்மையது என்றும், அதன் செயல்நிலை இறைவிருப்பத்தினடிப்படையில்தான் அமைந்தி டும் என்றும் கருதுகின்றார். இவர் உண்மை என்பது இறைவிருப்பத்தினால்தான் முடிவு செய்யப்படு கிறது என்று கட்டுரைக்கின்றார். வில்லியம் சேம்சும், பிளெய்சுபாசுகலும் இறைநம்பிக்கையே வாழ்க் கைக்கு ஆதாரம் என்கின்றனர். கிறித்துவ சமயத்தைச் சார்ந்த புனித ஆன்செல்ம் ( St. Anselm of Canterbury) மனித வாழ்க்கையில் இறை நம்பிக்கை முன்செல்ல அதன் பின்னரே காரணகாரிய அறிவு பின் செல்லுகின் றது என்று சுட்டுகின்றார். கிர்கிகார்டு என்பார் இறை விருப்பத்தின் அடிப்படையில் அறப்பண்புகள் மனி தர்களிடம் தோன்றுகின்றன என்கிறார். இந்நிலை யில் சமுதாயத்தில் ஒரு செயல் அறத்தின்பாற்பட்டது எனில் அது இறைவனுடைய விருப்பத்தின் வழியே அமைகின்றது. இசுகோபன்கௌர் இறைவிருப்பமே உலகின் அடிப்படை என்றும், உலகம் அதன் மறு பதிப்பு என்றும் கருதுகின்றார். மேலும் அவர் இறை விருப்பத்தின் அடிப்படையிலேயே மனிதர்கள், விலங்குகள், தாவரங்கள் ஆகியவை வாழ்கின்றன என்கிறார்.

இக்கோட்பாட்டினைப் புலன்கடந்த நிலையில் உயிர்களிடத்து இயற்கையாகவுள்ள பாலுணர்வை யும், மக்களிடையேயுள்ள சமய உணர்வையும் ஆராய் வதால் அறிந்து கொள்ளலாம். பாலுணர்வு அனைத்து உயிர்களுக்கும் பொதுவானது. வாழவேண்டுமென்ற உயிர்த்துடிப்பை வெளிப்படுத்துவது. காரண காரிய அறிவு நிலைக்கு எதிரான குணமுடையது. இவ்வுணர் வைப்போலவே சமய உணர்வும் இதுவென்று குறிக்க முடியாததாய், சரியா, தவறா என்று முடிவுறுத்த முடியாததாய் உள்ளது. வாழ்க்கையில் பாலுணர் விற்கும் காரணகாரிய அறிவிற்கும் அடிப்படையான விருப்பமானது புலன்கடந்த நிலையுடன் தொடர்பு கொண்டுள்ளது. இதனால் உலக நிகழ்வுகள் புலன் கடந்த நிலையில் முடிவுறுத்தப்பட்ட காரணத்தை நோக்கியும், முடிவை நோக்கியும் மனித விருப்பத் திற்குப் பின் செல்வதாக அமைகின்றன.

- ஜெ. அர.

**இயற்பொருளாதாரம்** : பொதுவாகப் பயிற்று விக்கப்படும் இயல்களை நெறியுரை இயல் என்றும் இயல்புரையியல் என்றும் இரு வகைப்படுத்தலாம். இயற்புரையியல் என்றால் உள்ளதை உள்ளவாறு விளக்குவதாகும். நெறியுரை இயல் என்றால் ஒன்று நன்மை பயப்பதா, தீமை பயப்பதா என்று விளக்கு வதாகும். எ.கா. எழுதுகோல் எப்படி இருக்கிறது என்று விளக்குவது இயல்புரையியலாகும். அந்த எழுதுகோலின் பயன்கள் பற்றி விரிவாக விளக்கி னால் அது நெறியுரையியலாகும்.

இங்குப் பொருளாதாரம் இயற்பொருளாதாரம் ( Natural Economics ) எனக்கொள்ளப்பட்டால், நடைமுறைச்சிக்கல் பற்றி மட்டும் விளக்க வேண்டும். நெறியுரைப் பொருளாதாரம் எனக்கொள்ளப்பட் டால், இச்சிக்கல்களுக்குக் காரணங்களை ஆராய்ந்து,

இவற்றால் ஏற்படும் விளைவுகளைக் கண்டறிந்து தீர்க்கும் வழிகளையும் கூற வேண்டும். எ.கா. வேலை யில்லாத் திண்டாட்டம் அல்லது வேலையின்மை யின் இயல்புகள் பற்றிக் கூறுவது இயல்புரைப் பொருளா தாரம் ஆகும். இச்சிக்கலின் காரணத்தையும், விளைவு களையும் கூறி இச்சிக்கலைத் தீர்க்க வேண்டிய அவசியத்தையும் அதற்குரிய வழிகளையும் விளக்கினால் அது நெறியுரைப் பொருளாதாரம் ஆகும்.

பொருளியலின் தந்தை எனப்படும் ஆடம்சுமித்து தம் 'நாடுக்ளின் செல்வம்' என்ற நூலில் எவ்வாறு நாட் டின் செல்வத்தைப் பெருக்கலாம் என்பதற்கான விளக்கத்தைத் தந்துள்ளார். அவர் விளக்கம், பொரு ளாதாரம் என்பது இயற்பொருளாதாரம் எனக் காட் டுகிறது. செல்வத்திற்கு முக்கியத்துவம் தருவதாக அவர் விளக்கம் இருந்ததே தவிர அதனைப் பெறும் வழிகள், பயன்படுத்தும் வழிகள் பற்றிக் கூறவில்லை. எனவே அவர் காலத்தில் வாழ்ந்த அறிஞர்கள் பொருளா தாரத்தையே பணதெய்வத்தை வழிபாடு செய்யும் இயல் என்றும், மஞ்சள் பிசாசை வழிபடும் இயல் என்றும் குறை கூறினர்.

பொதுவாக, தொன்மைப் பொருளியல் அறிஞர் கள் பொருளாதாரத்தை இயற்பொருளாதாரமாகவே கருதியதால் பொருளாதாரக் காரணிகளை விளக்கி விட்டு, அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசிய மில்லை என்றும், அரசு பொருளாதார நடவடிக்கை களில் ஈடுபட வேண்டியதில்லை என்றும் விளக்கம் அளித்துள்ளனர். குறிப்பாக, இங்கிலாந்து நாட்டுத் தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் பொருளா தாரம் அறிவுரைகளை, மதிப்புரைகளைக் கூறக்கூடாது என்று வலியுறுத்தினர். இருப்புப் பாதையை அமைப் பதில் பல்வேறு திட்டங்கள் இருப்பினும் இயந்திரங் கள் இப்பல்வேறு திட்டங்களில் எவ்வாறு நடு நிலைமை வகிக்கின்றனவோ அவ்வாறே பொருளா தாரமும் குறிக்கோளைப் பொறுத்தமட்டில் நடுநிலை வகிக்கவேண்டும் என்றனர்.

பேராசிரியர் சீனியர் இலாண்டர்டேல் பிரபு, சான் இரே, இலையனல் இராபின்சு போன்றோர் இயற் பொருளாதாரக் கருத்தை உடையவர்கள். அவர்கள் கருத்துப்படி பொருளாதாரம் எப்படி இருக்கிறது எனக் கூறவேண்டுமே தவிர, எப்படி இருக்க வேண்டும் என்று கூறத் தேவையில்லை. பொருளாதார அறிஞர் கள் பொருளாதாரத்திற்குச் செய்யவேண்டிய மிகப் பெரும் கடமை எது என்றால் நடுநிலைமையுடன் நடப்பதுதான் என்று இலையனல் இராபின்சு வலியுறுத்துகிறார். எனவே இயல்புரைவாதிகள், பொருளாதாரக் கோட்பாடுகள், கருத்துகள், மாதிரி கள் ஆகியவை எடுகோள் அடிப்படையில் விளக்கப் பட்டாலும், எடுகோள்கள் உண்மைக்குப் பொருந்து பவையா, சரியானவையா என்பதை ஆராயத் தேவை யில்லை என்றுரைத்தனர். பொருளாதாரக் கருத்துகள், பொருளாதார நடவடிக்கைகள் அல்லது பொருளா தாரக் காரணிகளுக்கு இடையேயுள்ள தொடர்பை யும், அவற்றின் போக்கையும் விளக்கும் கூற்றுக்களாக இருக்குமேயல்லாது மதிப்புரைக் கூற்றாக இராது என்று கருதினார்.

ஆனால், இதற்கு நேர் எதிராக ஆல்பர்டு மார்சல் போன்ற அறிஞர்கள் மனிதனின் பொருள்கள் நலத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகள் பற்றி ஆய்வதே பொருளாதாரம் என்றனர். பொருளியல் சிந்தனை வரலாற்றில் பெரும்புரட்சியை ஏற்படுத்திய தாகக் கருதப்படும் சான்மேனார்டு கீன்சு என்பவர், பொரு ளாதாரச் சிக்கல்களை ஆராய்ந்து, அவற்றை நேர்செய்ய அரசு தலையிட வேண்டும் என்று குறிப்பிட் டார்.

காரல்மார்க்சும் சமதர்மக் கருத்துகள் மூலம் பொரு ளாதார நடவடிக்கைகளை மக்களுக்கு நன்மை பயக் கும் வகையில் மாற்றுவதை விளக்கினார். எனவே இவர்கள் விளக்கங்களின் படி பொருளாதாரம் வெறும் போக்குரைக்கூற்றைக் கொண்டதாக இல் லாமல் மதிப்புரைக் கூற்றுகளைக் கொண்டதாகவும் மக்களுக்கு நன்மை பயக்கும் நடவடிக்கைகள் பற்றி விளக்குவதாகவும் கருதப்படலாயிற்று. எ.கா. கள்ளக் கடத்தல் ஒரு பொருளாதார நடவடிக்கை. இதனைப் பற்றி விளக்குவதுடன் நின்றிடாமல் இதனால் ஏற் படும் விளைவுகளைக் கூறுவதுடன் மட்டுமின்றி இதனைக் கட்டுப்படுத்த அரசு மேற்கொள்ள வேண் டிய நடவடிக்கைகள் மூலம் ஏற்படும் நன்மைகளை யும் கூறுவதாக, பொருளியல் இருக்க வேண்டும் என்பது அவ்வறிஞர்கள் கருத்து.

குறைகள் : திறனாய்வாளர்கள் இயற்பொருளா தாரத்தில் சில குறைகளைச் சுட்டிக்காட்டியுள்ளனர். இயற் பொருளாதாரம் என்பது பழமையான கருத்து. அது சமதர்மக் கருத்துகளும், குடியாட்சித் தத்துவமும் பரவியுள்ள இக்காலத்திற்குப் பொருத்தமானதன்று. இயற் பொருளாதாரம் ஒரு நாட்டின் வளப் பொருட்

களை எவ்வாறு சிறந்த முறையில் பகிர்ந்தளிக்கலாம், பயன்படுத்தலாம் என்று கூறாததால் திறமை, சிக்கனம் போன்ற பொருளாதாரக் கருத்துகளுக்குப் பொருளே இல்லாமல் போய்விடும். மதிப்புரைக்கருத்துக் களைக் கூறக்கூடாது என்று வரையறை செய்வதே, இயற் பொருளாதாரத்தை ஒருவகையில் நெறியுரை இய லின் தன்மைக் கொண்டதாகக் காட்டுகிறது. கருத்து களில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப, பொருளாதார இயலின் தன்மை பற்றிய விளக்கங்களும் மாறுபடுவ தால் பொருளாதாரம் இயற்புரை இயலா, நெறியுரை இயலா என்பது பற்றிய ஐயப்பாடு தீரவில்லை.

- க. த.

**இரட்டைக்கிளவி :** பெயராகவோ, வினைமுற் றாகவோ எச்சமாகவோ வரும் ஓர் ஒட்டுச் சொல்லின் முற்பகுதியாக உள்ள முதனிலை உரிச்சொல் இரட் டித்துப் பிளவுபடாமல் தொடர்ந்த ஒரு பொருளைச் சுட்டி நிற்கும் கிளவி இரட்டைக் கிளவியாகும். ஒரு காம்பில் இரு கூறாகத் தளிர்க்கும் இலையிரட்டை, பூவிரட்டையைப் போல வரும் என்பர் உரையாசிரி யன்மார். அது வண்ணம் முதலிய பண்பு பற்றியும் ஓசை ஒலியாகிய இசை பற்றியும் பல்வேறு குறிப்புப் பற்றியும் வரும். எ.கா. 'வற்றிய ஓலை கலகலக்கும்', 'சலசலமும் மதமும் பொழியானை', 'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி' எனச் செய்யுளிலும் குறுகுறுத்தது. முணுமுணுத்தது. சுறுசுறுப்பு, வழவழப்பு, பரபரப்பு என வழக்கிலும் பயின்று வரும். இவற்றுள் சுறுசுறுப்பு - வழவழப்பு போன்றவற்றைப் பிரிப்பின் இரண்டு சொற்களும் தனிப்பொருள் தாராமற் போகும். கருகருத்தது, பரபரப்பு என்பனவற்றைப் பிரிப்பின் முதற்சொல் பொருளின்றிப் போகும். இரண்டாவது சொல் பொருள் தருமாயினும் இரட்டித்த பொருளைத் தரமாட்டா. ஆதலின் இரட்டைக் கிளவி இரட்டிற் பிரிந்திசையா எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. துடிதுடித்துத் துள்ளிவரும், வரிவரியாகப் படித்தான், படிப்படியாக முன்னேறினான் என்பன இரட்டைக் கிளவியின் பாற்படும். இவை கலகல என்று பேசி னான் எனத் தனியேயும் கலகலத்தது எனப் பின்னொட் டொடு இணைந்தும் வரும்.

- ச. பா.

**இராசகம்பீர சம்புவராயன் :** சம்புவராயர் மர பின் தனியரசை நிறுவிய முதல் மன்னன். சோழரின் கீழ் சிற்றரசனாகத் திகழ்ந்த இவன், திருவண்ணா மலை மாவட்டம் போளூர் வட்டம் படவேடு என்னும் ஊரினைத் தலைநகராகக் கொண்டு, சம்புவராயர் அரசைத் தோற்றுவித்தான். இவன் 'சம்புகுலப் பெருமாள்', 'அத்திமல்லன் சம்புகுலப் பெருமாளான இராசகம்பீர சம்புவராயன்' எனும் பெயர்களால் கல் வெட்டுகளில் குறிக்கப்பெறுகிறான்.

இராசகம்பீர சம்புவராயன் ( கி.பி. 1236 - 1268 ) தொடக்கக் காலத்தில் மூன்றாம் இராசராச சோழ னின் ( கி.பி. 1216 - 1257 ) கீழ் சிற்றரசனாக விளங் கினான். மூன்றாம் இராசராசன் இறந்த பின்பு, அவனது மகனான மூன்றாம் இராசேந்திர சோழன் ( கி.பி. 1254 - 1279 ) மன்னனானான். இந்நிலையில் இராசகம்பீரன் தனது படைவலிமையைப் பெருக்கி கி.பி. 1258இல் விடுதலைபெற்ற தனி வேந்தனாகத் தன்னை அறிவித்துக்கொண்டான்.

இவ்வேந்தனது ஆட்சி இன்றைய ஆரணி, போளூர் வட்டங்களில் பரவியிருந்ததனைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியலாம். இவன் தனது அரசுக்குத் தலை நகரும் கோட்டையும் அமைத்து, அவ்விடத்திற்கு 'மருதரைசர் படைவீடு' எனப் பெயரிட்டான். கோட்டையின் மத்தியில் கி.பி. 1258இல் அம்மையப் பீசுவரமுடையார் கோயில் எனும் குலத் தெய்வக் கோயிலைக் கட்டுவித்தான். இக்கோயிலின் வழி பாட்டிற்கு உளகத்தூர், பையூர் எனும் ஊர்களை இறையிலி தேவதானமாக வழங்கினான். இவனது மனைவியான ஆராயும் பெருமாள் இக்கோயிலுக்கு வினாயகர் செப்புத் திருமேனியை அளித்தார்.

இராசகம்பீரன் மலை, அத்திமலை என்பன இவ் வேந்தன் பெயரால் அழைக்கப்படும் மலைகள் ஆகும். இவன் தன் பெயரால் சம்புகுலப் பெருமாள் அசுரமான 'இராச கம்பீர சதுர்வேதி மங்கலம்' எனும் பிரம தேயத்தை அமைத்து பார்ப்பனர்களுக்கு வழங்கினான். போளூருக்கு அருகிலுள்ள குன்றத்தூர் எனும் ஊரை 'குன்றத்தூரான இராசகம்பீர நல்லூர்' எனப் பெயரிட்டு பங்களராயருக்குக் காணிக்கையாக வழங்கினான்.

கி.பி. 1258இல் இராசகம்பீரனால் நிறுவப்பட்ட முதல் தனியரசு பத்தாண்டுகளே பிழைத்திருந்தது.

கி.பி. 1267இல் தெலுங்குச் சோழனான விசய கண்ட கோபாலன் ( கி.பி. 1250 - 1285 ) சம்புவராயனை வென்று, அவ்வரசைத் தனதாக்கிக் கொண்டான். இத்துடன் சம்புவராய முதல் சுதந்திர அரசு வீழ்ந்தது. சம்புவராயர் தெலுங்குச் சோழனுக்கும் பாண்டியருக்கும் சிற்றரசர் ஆயினர்.

- ம. இரா.த.

**இராச நாராயண சம்புவராயர், முதலாம்** : சம்புவராயர் குலத்தின் வேந்தன். வென்று மண் கொண்ட சம்புவராயரின் மகனும், ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயரின் பேரனுமான இவன், திருமல்லிநாதன் இராசநாராயணன் எனவும் குறிக்கப் பெறுகிறான். இவனுக்கு வீரசம்பன், வீரகம்பீரன், இராச கம்பீரன் வென்று மண்கொண்டான் போன்ற பெயர்களும் வழங்கப்பட்டு வந்தன. விசயநகர வேந்தன் குமார கம்பனால் தோற்கடிக்கப்பட்ட வேந்தன் இவனேயாவான். இவனது தலைநகர் படைவீடு ஆகும்.

தனது தந்தையின் பெயரான வென்று மண் கொண்ட சம்புவராயர் எனும் பெயரையும் இவன் சூட்டிக்கொண்டான். இவ்வேந்தன் கி.பி. 1337 முதல் கி.பி. 1363 முடிய அரசை ஆண்டு வந்தான். கல்வெட்டுகளில் இவன் 'சகலலோக சக்கர வர்த்தி சிரீ இராச நாராயண சம்புவராயன்' என்று பெருமையுடன் குறிக்கப்பெறுகிறான். கி.பி. 1337 முதல் முடிபுனைந்து தன் தந்தைக்கு உதவியாக ஆட்சியைக் கவனித்த இவன், கி.பி. 1339 ஆம் ஆண்டில் தன் தந்தை இறந்துவிடவே தனிவேந்தனாக கி.பி. 1340 முதல் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டான். இவனது காலத்தில் விசயநகரகம்பணன் இப்பகுதியில் படையெடுத்தான்.

25 ஆண்டு காலம் ஆட்சி புரிந்த இவ்வேந்தன் கி.பி. 1363-இல் இம்மண்ணுலக வாழ்வை நீத்தான். இவ்வேந்தனது பெயரால் படவேட்டில் இருந்த மலைகளில் ஒன்று இராசகம்பீரன் மலை என்றும், வருவாய்துறைப் பிரிவு ஒன்று 'இராசகம்பீரன் மலைக் கடந்த பற்று' என்றும் அழைக்கப்பட்டன. இவனுக்குத் திருமல்லிநாதன் எனும் பெயரில் மைந்தன் ஒருவன் இருந்தான். கி.பி. 1356-இல் இவன் தனது மகனுக்கு முடி புனைந்து ஆட்சித்துறையில் தனக்குத் துணையாக வைத்துக்கொண்டான். இதுகாறும் இவனது கல்வெட்டுகள் 76 கிடைத்துள்ளன.

இவை வேலூர், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களி லும், புதுச்சேரிப் பகுதியிலும் காணப்படுகின்றன. குடியம், திருக்கழுக்குன்றம் கல்வெட்டுகளிலிருந்து இவனுக்கு பொன்னின் தம்பிரான் இராசநாராயணன் என்னும் தம்பி இருந்தான் என்பதனை அறிய லாம். கி.பி. 1338 முதல் 1363 வரை இவ்விருவரும் இணைந்து ஆட்சிபுரிந்துள்ளனர்.

சம்புவராய மன்னர்களிலேயே அதிக ஆண்டுகள் ஆட்சி புரிந்த இவனது ஆட்சிக்காலத்தில் கி.பி. 1337 முதல் 1363 வரை குடியத்தில் ( வாலாசாப்பேட்டை) ஏகாம்பரநாதன் திருக்கோயில், புழலில் ( சைதை ) திருமூலநாத சுவாமி கோயில், விழுப்புரம் வட்டம் திருவாமாத்தூரில் திருவண்ணாமலை உடைய நாயனார் கோயில், குடியாத்தம் வட்டத்தில் வேப்பூர் வசிடீசுவரர் கோயில், செய்யாறு வட்டம் மாமண்டூரில் திருமாந்தீசுவரமுடையார் கோயில், செங்கை மாவட்டத்தில் நெருப்பூரில் திருவாலீசுவர் கோயில் முதலான பல கோயில்கள் கட்டப்பட்டன. விழுப்புரம் மாவட்டம் திருக்கோயிலூர் வட்டத்திலுள்ள கண்டாச்சிபுரம் திருவிராமீசுவர முடையார் கோயில் புதுப்பிக்கப்பட்டது.

- ம. இரா. த.

**இராச நாராயண சம்புவராயர், இரண்டாம்** : வென்று மண்கொண்ட சம்புவராயரின் இளைய மகன். படைவீட்டு சம்புவராய குலத்து வேந்தன். இவனுக்கு பொன்னின் தம்பிரான். பொன்னின் பெருமாள். இராச நாராயணன், பொன்னாயன், உதாரகுணராமன் ஆகிய பெயர்கள் இருந்தன என்பதைக் கல்வெட்டுகளால் அறியலாம். கல்வெட்டுகளில் இவன் 'சகலலோக சக்கரவர்த்தி இராச நாராயணன் உதாரகுணராமன் சம்புவராயன்' என்று புகழப்பட்டுள்ளான்.

இவன் கி.பி. 1338இல் முடிசூட்டப்பட்டான். இவனது தந்தையின் இறப்பிற்குப்பின் கி.பி. 1340 இல் தனது அண்ணனுடன் இணைந்து ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டான். இவ்வேந்தன் கி.பி. 1356 வரை ஆட்சி புரிந்தான். இரண்டாம் இராசநாராயணனின் ( கி.பி. 1338 - 1363 ) கல்வெட்டுகள் 28 கிடைத்துள்ளன. இவை வேலூர், செங்கல்பட்டு, விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் கிடைத்துள்ளன. இவற்றைக் கொண்டு இவ்வேந்தனது காலத்திய

வாணிக்ம், வேளாண்மை, கலை வளர்ச்சி ஆகியன அறியப்படுகின்றன.

செங்கை மாவட்டத்தின் பொன்னேரி வட்டத்தில் திருப்பாலைவனத்தில் யோகிலும் பிரியாத நாச்சியார் எனும் அம்மன் கோயிலும், புதுப்பட்டினத்தில் இராமநாதர் கோயிலும், விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டம் தேவனூரில் திருநாகீசுவரமுடைய நாயனார் கோயிலும், வேலூர் மாவட்டம் வாலாசாப் பேட்டை வட்டம் வேப்பூரில் வசிட்டீசுவரர் கோயிலும் இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் கட்டப் பட்டன.

- ம. இரா. த.


**இராச நாராயண சம்புவராயர், மூன்றாம்** : படைவீட்டு சம்புவராய அரசின் கடைசி வேந்தன். முதலாம் இராசநாராயண சம்புவராயரின் மகனான இவன் இம்மரபின் புகழ்மிகு மன்னன். இவன் இராசநாராயணன் திருமல்லிநாதன் எனவும் அழைக் கப்படுகிறான்.

கல்வெட்டுகளில் இவ்வேந்தன் ‘சகலலோக சக்க ரவர்த்தி இராசநாராயணன் திருமல்லிநாதன்’, ‘திருநீற்றுச்சம்பன்’, ‘பகை மன்னர் பதியில் பல விதைத்த இராசநாராயணன் திருமல்லிநாதன்’ என்று புகழப்பட்டுள்ளான். இவன் ஏறத்தாழ கி.பி. 1356ஆம் ஆண்டு தொடக்கத்தில் தனது தந்தையால் முடிசூட்டப் பெற்று, தந்தைக்கு உறுதுணையாக ஆட்சியைக் கவனித்தான். மூன்றாம் இராசநாராயணின் காலத்தில் ( கி.பி. 1356 - 1379 ) கம்பணனின் படையெழுச்சி உச்சக்கட்டத்தில் இருந்தது. சம்புவராய அரசின் வடக்கு, வடமேற்கு, தெற்குப் பகுதிகள் கி.பி. 1359க்கும் 1362க்கும் இடைப்பட்ட காலத்தில் கம்பணனாலும் அவனது மகன் சாயனனாலும் கைப்பற்றப்பட்டன. விரிஞ்சிபுரம் போரும், படை வீட்டுப்போரும் இங்கே குறிப்பிடத்தக்கன. பின்னர் கம்பணன் சம்புவராயருடன் நட்புக் கொண்டு, அவர்களை ஆட்சி புரிய அனுமதித்தான் என்பதைக் கல்வெட்டுக்களால் அறிய முடிகிறது. சம்புவராயர்களுடன் அவன் திருமண உறவும் கொண்டான். எனவேதான் மூன்றாம் இராசநாராயணன் தனது ஆவூர் ( திருவண்ணாமலை வட்டம் ) கல்வெட்டில் கம்பணனைத் தனது மைத்துனன் எனக்குறிப்பிட்டுள்ளான். இதனால் இராசநாராயணன் தொடர்ந்து ஆட்சி புரிந்தான் என்பது புலனாகும். குமாரகம்பணனின் கல்வெட்டுகளும் இராசநாராயணன் கல்வெட்டு களும் வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் பல பகுதிகளில் கிடைத்துள் ளன. எனவே கி.பி. 1363க்குப் பிறகு தொண்டை மண்டலத்தில் இருவரும் இணைந்து ஆட்சி புரிந்தமை புலனாகும். கம்பணனின் மகனான சம்மண உடையார் காலத்திலும் இக்கூட்டாட்சி நீடித்தது.

இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் பல திருக் கோயில்களும் மண்டபங்களும் கட்டப்பட்டன. சில கோயில்கள் புதுப்பிக்கப்பட்டன. திருக்கோயில் களுக்கு நிலதானங்கள் வழங்கப்பட்டன. இவற்றுள் வேலூர் மாவட்டம் போளூர் வட்டம் வடபாதி மங்கலம் மகாதேவீசுவரர் கோயில், வசூர் திரு வேகம்பமுடையார் கோயில் ஆகியவையும் செங்கை மாவட் டம் மதுராந்தகம் வட்டம் புலிப்பார்கோயில் மகா மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டமை குறிப்பிடத் தக்கதாகும். பெரிய காஞ்சிபுரத்தின் மேற்குப் பகுதி யாக விளங்கும் பிள்ளையார்பாளையம் திருமேற்ற ளிசுவரர் கோயில் இவ்வேந்தனது காலத்தில் புதுப் பிக்கப்பட்டது. இதுகாறும் இவனது கல்வெட்டுகள் 38 கிடைத்துள்ளன. இவனது ஆட்சி கி.பி. 1379இல் முடிவுக்கு வந்ததாகத் தெரிகிறது.

- ம. இரா. த.

**இராசாராம் மோகன்ராய்** : புதிய இந்தியாவின் முன்னோடியாகக் கருதப்படும் இராசாராம் மோகன் ராய் ( RajaRam Mohan Roy, 1772 - 1833 ) இந்திய மக்களின் சமூகச் சமயச் சீர்திருத்தங்களுக்காகப் பாடுபட்டவர். சிறந்த அறிஞரான இவர் ஆங்கிலம், பிரெஞ்சு இலத்தீன், வடமொழி, கிரேக்கம், பாரசீகம், அராபி, ஈப்ரு ஆகிய மொழிகளை அறிந்திருந்தார். ஆத்மிய சபை ( Atmiya sabha ), பிரம்ம சமாஜ் ( Brahma samaj) ஆகியவற்றைத் தோற்றுவித்து இந்திய மக்களின் முன்னேற்றத்திற்காக உழைத்தார். மேற்கத்திய கருத் துக்களின் செல்வாக்கின் காரணமாக இவரிடையே காழ்ப்புணர்ச்சி எதுவும் இல்லை. இந்துசமய வைதீ கர்கள், உயர்வகுப்பினர், பெருநிலக்கிழார்கள், அரசு ஆகியோரின் எதிர்ப்பிற்கும், கண்டனத்திற்கும் இடையே பல சீர்த்திருத்தங்களைச் செய்தார். இராம் மோகன் என்பது இவருக்குத் தாய்தந்தையர் இட்ட



இராசராம் மோகன்ராய்

பெயராகும். 'இராசா' எனும் விருதினை அப்பொழுது தில்லியின் பேரரசாகவிருந்த இரண்டாம் அக்பர் தம்முடைய தூதுவராக இவரை இங்கிலாந்து அரசவைக்கு அனுப்பியபோது வழங்கினார். இவருடைய முன்னோர் ஒருவர் வங்காள நவாப்பிடம் ஊழியராகப் பணியாற்றியபோது அவருக்கு 'இராய்' என்ற பட்டம் அளிக்கப்பட்டு, அது பரம்பரையாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இராம்மோகன் கி.பி. 1772 மே மாதம் 22ஆம் நாள் பர்துவான் ( இன்று கூக்ளி ) மாவட்டம் இராதா நகரில் பிறந்தார். இவருடைய தந்தையின் பெயர் இராம் காந்தராய் ( Ram Kanto Roy ), தாயார் பெயர் புல்தகு இராணி ( Phulthakumbi ). தொடக்கக் கல்வியை வீட்டிலேயே கற்ற இவர் உயர் கல்விக்காக பாட்னா சென்றார். பின்னர் வாரணாசியில் சிறிது காலம் இருந்துவிட்டு கல்கத்தா வந்தார். அங்கு கி.பி.1800 இல் வில்லியம் கோட்டைக் கல்லூரி நிறுவப்பட்டதால் இவருக்கு பாரசீக, ஆங்கில மொழி அறிஞர்களின் தொடர்பு ஏற்பட்டது. இவர் கி.பி.1803 இலிருந்து 1809 வரை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் குழுமத்தில் திவானாகப் பணியாற்றினார். சான்திக்பி ( John Digby ) என்னும் அலுவலருக்கு கி.பி. 1805 இலிருந்து 1814 வரை உதவியாளராக இருந்தபோது, அவருடைய செல்வாக்கின் காரணமாக, ஆங்கில மொழியையும், ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளின் அரசியல், பொருளாதார முன்னேற்றத்தையும் நன்கு அறிந்தார். இவர் கல்கத்தாவில் கி.பி. 1815இல் ஆத்மிய சபையைத் ( Atmiya Sabha ) தோற்றுவித்து சமூக, சமய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டார். வங்க மொழி இலக்கிய வளர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றினார்.

மக்களுடைய அறிவை வளர்க்கவும், தம்முடைய கருத்துகளை வலியுறுத்தவும் பண்டைய வடமொழி நூல்களை வங்கமொழியில் மொழிபெயர்த்தார். அவற்றுள் வேதாந்த சூத்திரம் (1815), வேதாந்த சாரம் (1816), ஈசோ மற்றும் கேனோ உபநிடதங்கள் ( Isha and Kena Upanishads, 1816 ), கதோ மற்றும் மாண்டுக உபநிடதங்கள் ( Katha and Manduka Upanishads ), பகவத் கீதை ஆகியவை குறிப்பிடத்தக்கவை. வங்க மொழி உரைநடை வளர்ச்சிக்கு இவர் அடிக்கல் நாட்டினார் எனலாம். முதன் முதலாக வங்க மொழியில் எழுதப்பட்ட சமயச் சார்பற்ற உரைநடை நூல்

இவருடைய **வேதாந்த கிரந்த**மாகும். இவர் மிக எளிய, நேரடியான சிறிய சொற்களைக் கொண்ட தெளிவான நடையில் எழுதினார். **கௌரிய வியா கரணம்** ( Gouriya Viyakaarnam ) என்னும் பெயரில் வங்கமொழி இலக்கண நூல் ஒன்றையும் வெளியிட்டார். மேலும் வங்க மொழியில் புவியியல் நூல் ஒன்றை எழுதியதுடன் பர்கசன் எழுதிய வான வியலுக்கு ஓர் அறிமுகம் ( Furguson's Introduction to Astronomy ) எனும் நூலை ஆங்கிலத்திலிருந்து வங்காள மொழிக்கு மொழிபெயர்த்தார். அம்மொழியில் துருபத ( Dhurpad ) இராகத்தில் 32 இசைப் பாடல்களை இயற்றினார். இவை பிரம்மசபைக் கூட்டங்களில் துதிப்பாடல்களாகப் பாடப்பட்டன. இவ்வாறு இவர் இட்ட அடிக்கல் மீதுதான் பங்கிம் சந்திரசட்டரிஜியும், வித்யாசாகரும் வங்கமொழி இலக்கியத்தை வளர்த் தனர். பின்னர் தாகூர் அதனை உலக மொழியாக உயர்த்தினார். இந்திமொழி உரைநடை வளர்ச்சிக்கும் இராம்மோகன் தொண்டு புரிந்தார். இவர் ஐந்து உப நிடதங்களை இந்தியில் மொழிபெயர்த்துள்ளார்.

இந்து சமயத்தின் தூணாக விளங்கிய இவர் கிறித்தவ பாதிரிமார்களின் எதிர்ப்பிலிருந்து அதனைப் பாதுகாத்தார். பண்டைய இந்துசமய இலக்கியங்களை வங்காள மொழியில் மொழிபெயர்த்து, பொதுமக்கள் இந்து சமயத்தின் மேன்மையை உணரச்செய்தார். அதே சமயத்தில் இந்து சமயத்தில் நிலவிய உருவவழிபாடு, சதி, குழந்தை திருமணம், பலதார மணம், சாதிப்பிரிவினை, தீண்டாமை போன்றவற்றைச் சாடினார். இவர் தம்முடைய 16 ஆம் வயதில் இந்து சமூகத்தில் இருந்து வந்த உருவ வழிபாட்டையும், மூடப்பழக்க வழக்கங்களையும் கண்டித்துக் கட்டுரை ஒன்று எழுதினார். சாதிப் பிரிவினையை எதிர்த்து கி.பி. 1827இல் வட மொழியில் **பசூரசூசி** ( Bajrasuchi ) என்ற நூலை வெளியிட்டார். வங்க மொழியில் அதன் மொழிபெயர்ப்பும் வந்தது.

இந்துக்களிடையே உள்ள சாதிப்பிரிவுகளும், உட்பிரிவுகளும் அவர்களிடையே நாட்டுப்பற்று முற்றிலும் இல்லாமல் செய்துவிட்டன எனக்குறிப்பிட் டார். மகளிரின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட இவர் சதி எனும் உடன்கட்டையேறும் வழக்கத்தைக் கண்டித்ததுடன் கைம்பெண் மறுமணத்தை ஆதரித் தார். பெண்களுக்கு அவர்களுடைய தந்தை மற்றும் கணவன் சொத்தில் பங்குபெற உரிமை வேண்டும் எனக்கூறிய இவர் 1823இல் 'இந்து வாரிசுரிமைச் சட் டத்தின்படி இந்துப் பெண்களுக்குள்ள உரிமைகளில் தற்கால ஆக்ரமிப்புகள்' ( Modern Encroachment on the Rights of the Hindu Females According to Law of ) என்ற துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டார். பெண்களின் கல்விக்காகவும் பாடுபட்டார். எதையும் ஆராய வேண்டும் என்னும் எண்ணம், மக்கள் அறிவைப் பெருக்குவதில் ஆர்வம், ஆங்கிலக்கல்வியில் ஊக்கம், மனிதப்பற்று ஆகியவற்றின் விளைவாக இவர் புதிய தோர் கால கட்டத்தை அறிமுகப்படுத்தியவர் எனப் பாராட்டப் படுகிறார்.

இராம்மோகன் தம்முடைய கருத்துக்களைப் பரப்ப கி.பி. 1828இல் பிரம்மோ சபையைத் ( Brahmo Samaj ) தோற்றுவித்தார். பிரம்மனை ( Brahman ) வழிபடுவோர் பிரம்மோக்கள் எனப்பட்டனர். பிரம்ம சபைக்காகக் கட்டடம் ஒன்று கட்டப்பட்டது. அங்கு உருவ வழிபாடோ பலியிடுதலோ இல்லை. அனைத்து சமயத்தவரிடமும் ஐக்கியத்தை உண்டாக்க வேண்டுமென்பதே இதன் குறிக்கோள். இதனை எதிர்த்து, இராம்மோகனின் சீர்திருத்தக் கருத்துகளை எதிர்ப்பதற்காக, வைதீகர்கள் தர்மசபையை ( Dharma Sabha ) ஏற்படுத்தினர். இராம்மோகன் 1833இல் இறந்த பின்னர் மகரிசி தேவேந்திரநாத் தாகூர் இதனை நடத்திவந்தார். இந்திய மறுமலர்ச்சியில், சமூக சமய முன்னேற்றத்தில் இதன் பங்கு குறிப்பிடத்தக்கதாகும். இதன் வாயிலாக இராம்மோகன் பல சீர்திருத்தங்களைச் செய்திருந்தாலும் உடன் கட்டையேறுவதை ஒழித்ததும், ஆங்கிலக் கல்வியைக் கொண்டு வந்ததும் இவரது இருபெரும் சாதனை களாகும்.

வடஇந்தியாவில் இந்துக்களிடையே நிலவிவந்த மிகக்கொடிய சமூக வழக்கமான சதி அல்லது உடன் கட்டையேறுவதை ஒழிப்பதில் இராம்மோகன் பெரும் பங்கு வகித்தார். வங்காளத்தில் கி.பி. 1815 லிருந்து 1818க்குள் 2365 கைம்பெண்கள் உயிருடன் எரிக்கப்பட்டனர். அவர்களில் 1528 பேர் கல்கத்தாவிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளையும் சேர்ந்தவர்கள். இவருடைய தமையன் ஜக்மோகன் ( Jagmohan) கி.பி.1811இல் இறந்தபோது அவருடைய மனைவி அலோக்மஞ்சரி உடன்கட்டையேற்றப்பட்ட நிகழ்ச்சி இராம்மோகனின் உள்ளத்தை உருக்கியது. எனவே, இக்கொடிய வழக்கத்தை ஒழிக்காமல் ஓய்வதில்லை

எனச் சூளுரைத்து 1812இல் இதற்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தினார். இக்கொடுமையை எதிர்க்க மக்களுடைய கருத்தைத் திரட்ட இவர் ஆங்கிலத்தி லும், வங்காள மொழியிலும் தொடர்ந்து பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார். அப்போது தலைமை ஆளுநராக விளங்கிய வில்லியம் பெண்டிங்கு பிரபு இதனை ஒழிக்க 1828இல் ஒரு மசோதா கொண்டு வந்தார். மக்களுடைய மனதைச் சிறிதுசிறிதாக மாற் றிக் கருத்துப் புரட்சியை செய்த பின்னரே இச்சட்டத் தைக் கொண்டுவருவது நல்லது என இராம்மோகன் கருதினார். ஆனால் பெண்டிங்பிரபு அஞ்சா நெஞ்சத் துடன், மனஉறுதியுடன் உடனேயே சட்டத்தின் மூலம் இதனை ஒழிக்க வேண்டுமென்றார். எனவே 1829 திசம்பர் 4இல் புகழ்மிக்க 17வது ஒழுங்குமுறை யை ( Regulation XVII ) நிறைவேற்றி, வங்காள மாநி லத்தில் உடன்கட்டையேற்றப்படுவது சட்டவிரோத மான செயல் என்றும், குற்றவியல் சட்டப்படி தண்ட னைக்குரியது என்றும் அறிவித்தார்.

இச்சட்டத்தை எதிர்த்து வைதீகர்கள் பல கட்டுரை கள், கடிதங்கள் அறிக்கைகள் வெளியிட்டனர். வங் காளம், பீகார், ஒரிசா ஆகியவற்றிலிருந்து 800 பேர் கையொப்பமிட்ட இச்சட்டத்தை நீக்கவேண்டு மென்ற மனு ஒன்று தலைமை ஆளுநருக்கு 1829 திசம் பர் 19 அன்று அளிக்கப்பட்டது. அதனை எதிர்த்து, தலைமை ஆளுநரின் செயலைப்பாராட்டி நூற்றுக் கணக்கானவர் கையொப்பமிட்ட மனு ஒன்றை இராம்மோகன் ஆளுநரிடன் அளித்தார். வைதீகர்களு டைய தர்மசபை இங்கிலாந்திலுள்ள பிரிவுகவுன் சிலுக்கு ( Privy Council ) மேல்முறையீடு மனு ஒன்றைக் கொடுத்து, அதற்காக வாதாட வழக்குரைஞர் ஒரு வரையும் அனுப்பி வைத்தது. இத்தருணத்தில் அச் சட்டத்தை நிலைநிறுத்தும் பொருட்டு இராம்மோகன் அரும் பணியாற்றினார். இச்சட்டத்தை ஆதரித்து ஆயிரக்கணக்கான மக்கள் கையொப்பமிட்ட மனு ஒன்றை இங்கிலாந்து மன்னருக்கு அனுப்பினார். இவர் இங்கிலாந்து சென்று பிரபுக்கள் அவையில் வைதீகர்களின் மனுவுக்கு எதிர்மனு கொடுத்தார். இங்கிலாந்து மக்களிடையேயும் இச்சட்டத்தின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். இவரு டைய இத்தகைய முயற்சியின் பயனாக கி.பி.1832 சூலையில் பிரிவுகவுன்சில் இச் சட்டத்திற்கு எதிரான மனுவைத் தள்ளுபடி செய்யும்படி இங்கிலாந்து மன்ன ருக்குப் பரிந்துரைத்தது. எனவே இச்சட்டம் நிலை நிறுத்தப்பட்டது.

இந்தியருக்கு மேலைநாட்டுப் பாடங்கள் கற்பிக் கப்பட வேண்டும் என்பதில் இவர் அதிக ஆர்வம் காட்டினார். அக்காலத்தில் இந்தியப் பள்ளிகளில் பயிற்று மொழியாக ஆங்கிலம் இருக்க வேண்டுமா அல்லது தாய்மொழி இருக்க வேண்டுமா என்பது குறித்து இரு கட்சிகள் இருந்துவந்தன. இராம் மோகன் ஆங்கிலம் தான் இருக்க வேண்டும் என உறுதி யாகக் கூறினார். கல்கத்தாவில் வடமொழிக் கல்லூரி ஒன்று 1823இல் தொடங்கப்பெற இருந்த பொழுது இவர் அதை வன்மையாக எதிர்த்தார். அப்பொழுது தலைமை ஆளுநராக இருந்த ஆம்கர்சுடு பிரபுவுக்கு ( Lord Amherst ) ஆங்கிலக் கல்விதான் மக்களுக்கு அளிக்கவேண்டுமென மனு ஒன்றைக் கொடுத்தார். அதில் கணிதம், தத்துவம், வேதியல், உடல்கூறுநூல் ( Anatomy ) போன்ற பாடங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என்றார். இது இந்திய ரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியதால் இந்தியருக்கு மேலை நாட்டுக்கல்வியை அளிக்கப் பல பள்ளிகளும், கல்லூரிகளும் ஏற்படுத்தப்பட்டன. ஆங்கிலப் பாடப் புத்தகங்களை வெளியிட்டு, விற்பனை செய்ய பள்ளி புத்தகக் கழகம் ( School Book Society ) ஒன்று தொடங்கப் பட்டது. இவருடைய உதவியாலும், ஊக்கத்தாலும், தூண்டுதலாலும் கிறித்தவ சங்கத்தினர் பல பள்ளிகளை ஏற்படுத்தினர்.

இந்தியச் செய்தித்தாள்களின் சுதந்திரத்திற்காகவும் இவர் பாடுபட்டார். இவரை ‘முதலாவது அரசியல் கிளர்ச்சிக்காரர்’ என சுரேந்திரநாத் பேனர்ஜி வருணித் துள்ளார். இவர் 1821 திசம்பரில் ‘சம்பத் சௌமுதி’ ( Sambad Kaumudi ) என்ற வங்கமொழி வார இதழின் ஆசிரியராக இருந்தார். பின்னர் வங்கமொழி ஆங்கில மும் அறியாத இந்தியர்களுக்காக 1822இல் மீரத் உல் அக்பர் எனும் செய்தித்தாளைப் பாரசீக மொழியில் தொடங்கினார். அக்காலத்தில் இந்தியச் செய்தித்தாள் களின்மீது அரசாங்கக் கட்டுப்பாடு மிகக் கடுமையாக இருந்தது. அப்பொழுது தலைமை ஆளுநர் ஆடம் ( J. Adam ) என்பார். செய்தித்தாள்களும், காலமுறை இதழ்களும் அரசின் உரிமமின்றி வெளியிடப்படக் கூடாதெனச் சட்டம் பிறப்பித்தார். அதனை எதிர்த்து இராம்மோகன் உச்சநீதிமன்றத்திற்கும், பின்னர் அரசர் அவைக்கும் ( King in Council ) மனு செய்தார். அவ்விரு

மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டாலும் பின்னர் கி.பி.1835இல் இச்சட்டமானது நீக்கப்பட்டது. இது இந்தியச் செய்தித்தாள்களின் வரலாற்றில் ஒரு குறிப் பிடத்தக்க நிகழ்வாகும்.

இவர் உழவர்களின் தோழனாகவும் விளங்கினார். வங்காளத்திலிருந்த உழவர்களின் கோரிக்கைகளை வலிமையாக ஆதரித்தார். நிலையான நிலவரித் திட் டம் வங்காளத்தில் கொண்டுவரப்பட்டதன் விளை வாக பெருநிலக்கிழார்கள் உழவர்களைக் கசக்கிப் பிழிந்து அதிக வரியை வசூலித்தனர். அவர்கள் பட்ட துன்பத்தைக் கண்ட இராம்மோகன் பெருநிலக்கிழார் கள் அரசுக்குச் செலுத்தவேண்டிய வரியைக் குறைக்கும் படி அரசுக்கு எழுதினார். அவ்வாறு செய்தால்தான் அவர்கள் உழவர்களிடம் வசூலித்துவந்த வரியைக் குறைக்க முடியுமென்றார். அதனால் அரசுக்கு ஏற்ப டும் வருவாய் இழப்பைப் பிற வரிகளை விதித்தும், அதிக ஊதியத்தில் ஐரோப்பிய மாவட்ட அதிகாரிகளை நிய மிப்பதற்குப் பதிலாக குறைந்த ஊதியத்தில் இந்தியர் களை நியமித்தும் ஈடுகட்டலாம் எனவும் அரசாங்கத் திற்குக் கருத்துகளை வழங்கினார்.

அரசியல் ஞானியான இவர் அரசுத்துறைகளிலும் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டுமென விழைந் தார். அரசியல் அதிகாரங்களைப் பெற அரசியல் அமைப்புக்குட்பட்டு அமைதியான முறையில் போராடவேண்டும் என்றார். அதுவே அரை நூற்றாண் டுகளுக்குப் பின்னர் இந்திய தேசிய காங்கிரசு தோன்ற வழி வகுத்தது. இந்தியாவில் படை நிர்வாகம், நடுவர்களை ( Jury ) வைத்து விசாரணை செய்தல், பொருளியல் ( Civil ), குற்றவியல் ( Criminal ) சட்டங் களைத் தொகுத்தல், அவற்றிற்கான நீதிபதிகளின் பணிகளை வேறுபடுத்துதல், நீதிமன்றத்தில் பாரசீக மொழிக்குப் பதிலாக ஆங்கிலத்தைப் பயன்படுத்துதல் போன்ற பல கருத்துக்களைக் கூறினார்.

ஆறடி உயரமும், பெரிய தலையும், வலிமையான உடற்கட்டும் கொண்ட இவர் காண்பாரைக் கவரும் ஆளுமையைப் பெற்றிருந்தார். சிறப்பாக ஆடை அணி வதில் ஆர்வம் கொண்ட இவர் வங்காளத்திலிருந்த இசுலாமியர் போன்று உடை உடுத்தினார். தன்னைப் பின்பற்றியவர்களையும் அவ்வாறே உடுத்தச் சொன் னார். ஆண்டவனின் முன்னிலையில் நல்ல, தூய்மை யான உடையில் இருக்க வேண்டுமென்றார். ஆடல், பாடல்களைக் கலையென்ற முறையில் ஆதரித்தார்.

பழமையில் ஊறிய இவருடைய உறவினர்களும், தாய், உடன் பிறந்தவர்கள், மற்றவர் ஆகியோர் இவ ருக்கு எதிராக இருந்தனர். இவருடைய பரம்பரைச் சொத்தின் மீது இவருக்கு உரிமை இல்லாமல் செய்ய வழக்குத் தொடுத்தனர். அவ்வழக்கின் காரணமாக இவர் அதிக காலத்தையும் பெரும் பொருளையும் இழந்தார். இந்து சமய வைதீகர்களையும், குழும அர சையும் தனிமனிதனாகவே எதிர்த்து நெடுநாள் போராடிய இவருக்கு உடல்நலம் குன்றியது. இங்கி லாந்திலிருந்த பொழுது இவருடைய உடல்நலம் மிகவும் மோசமடைந்து அது மூளைக்காய்ச்சலாக மாறியது. சிறிதுசிறிதாக இவர் பேசும் தன்மையை இழந்து, 1833 செப்டம்பர் 27இல் பிரிட்டனில் மரண மடைந்தார்.

இராம்மோகன் புதிய இந்தியாவின் தந்தையெனக் கருதப்படுகிறார். இந்திய மறுமலர்ச்சிக்கு வித்திட்ட இவர் இந்து சமயத்தின் சிறப்பினை எடுத்துக் காட்டிய அதே நேரத்தில் அதன் குறைகளைச் சாடவும் அவற் றைக் களையவும் தயங்கவில்லை. இந்திய மக்களின் நல்வாழ்விற்காக இவர் செய்த பணி போற்றத்தக்க தாகும். இந்திய மறுமலர்ச்சியின் விடிவெள்ளியாக இவர் விளங்கினார்.

- சி. இரெ.

**துணை நூல்கள் :**


1. Dasgupta, B. N., 1980, **RajaRam MohanRoy - The Last Phase**, Oppal Publishing House, NewDelhi.

2. Sawmyendranath, Tagore., 1981, **RajaRam MohanRoy**, Publication Division, Ministry of Information and Broadcasting, NewDelhi.

3. Minni, Thakur., 1987, **RajaRam MohanRoy - His School, Political and Economic Ideas**, Deep and Deep Publications, NewDelhi.

4. சௌமியேந்திரநாத் தாகூர், ( தமிழாக்கம் ) திரு நாவுக்கரசு, க. த., 1989, **ராஜாராம் மோகன்ராய்**, சாகித் திய அகாதெமி, புதுதில்லி.





இறுதியாக கலந்து கொண்ட நிகழ்ச்சி

இராசீவ் காந்தி

**இராசீவ் காந்தி :** இவர் இந்தியாவின் முன்னாள் தலைமையமைச்சர். இவர் ஆசியஜோதி எனப் போற்றப்பட்ட நேருவின் பேரனும், அன்னை என்று அனைவராலும் அழைக்கப்பட்ட இந்திரா காந்தி அம்மையாரின் மகனுமாவார். இவர் பம்பாய் மாநகரில் பெரோசு காந்தி - இந்திராகாந்தி தம்பதியினருக்குத் தலைமகனாக 1944ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 20ஆம் நாள் பிறந்தார்.

இளமையிலேயே கல்வியில் சிறந்து விளங்கிய இவர் தூன் பள்ளியில் படிப்பை முடித்து கேம்பிரிட்சு பல்கலைக்கழகத்தில் உயர்கல்விப் பயின்றார். படிக்கும் போதே இத்தாலி நாட்டைச்சேர்ந்த சோனியாவைக் காதலித்துப் பின்னர் திருமணம் செய்து கொண்டார். இந்திய வான்படையில் 1968ஆம் ஆண்டு முதல் விமானியாகப் பணியில் சேர்ந்தார். இவர் ஒருபோதும் அரசியல்வாதியாக வேண்டும் என்று விரும்பியதில்லை. இயற்கையை நேசிப்பதில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் சோனியாவோடும் தம் குழந்தைகள் இராகுல், பிரியங்கா ஆகியோருடனும் அடிக்கடி சரணாலயங்கள், மலைகள் போன்ற இயற்கை எழில் தவழும் இடங்களுக்குச் சுற்றுலா செல்வார். இவருடைய இளைய சகோதரர் சஞ்சய் காந்தி 1980ஆம் ஆண்டு விமானவிபத்தில் மரணமடைந்ததால் தன் தாயான இந்திராகாந்திக்குத் துணையாக இவர் அரசியலில் நுழைய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

முதன்முதலாக 1981ஆம் ஆண்டு உத்திரபிரதேசத்தைச் சேர்ந்த அமேதி தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிட்டு இவர் பாரளுமன்ற உறுப்பினரானார். இந்தியாவின் தலைமையமைச்சர் பொறுப்பிலிருந்த இந்திராகாந்தி அம்மையார் 1984ஆம் ஆண்டு அக்டோபர் 31ஆம் நாள் சுட்டுக்கொல்லப்பட்டார். அதே நாளில் இவர் இந்தியாவின் இளைய பிரதமராகத் தம்முடைய 40வது வயதில் பதவியேற்றார்.

1984ஆம் ஆண்டு திசம்பரில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் 415 இடங்களில் வெற்றிகண்ட இந் திரா காங்கிரசு மீண்டும் ஆட்சியமைத்தது. மீண்டும் பிரதமர் பதவியேற்ற இவர் 21ஆம் நூற்றாண்டுக்கு இந்தியாவை இட்டுச்செல்லும் மிகப்பெரிய பொறுப்பை ஏற்றுக்கொண்டார். புதிய இந்தியாவை உருவாக்க விரைந்து பல பணிகளில் ஈடுபட்டார். இந்தியாவைக் கணிப்பொறி மயமாக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவர் கொண்டுவந்த கட்சித் தாவல் தடைச்சட்டம் அரசியலில் ஓர் ஒழுங்கை ஏற்படுத்தியது. இவர் தம் புதிய பொருளாதாரக் கொள்கையும் புதிய கல்விக்கொள்கையும் இந்திய சமுதாயத்தில் சில புதிய மாற்றங்களுக்கு வித்திட்டன. நவோதயா பள்ளிகள் நாடு முழுவதும் உருவாக்கப்பட்டு மிகச்சிறந்த இளைய தலைமுறை உருவாக அடிப்படை அமைக்கப்பட்டது.

இவர் பஞ்சாப், மிசோரம், அசாம் முதலிய மாநிலங்களில் தொடர்ந்து தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி பல ஒப்பந்தங்களை ஏற்படுத்தி அமைதி ஏற்பட முயற்சி மேற்கொண்டார். உள்நாட்டுக் கொள்கைகளைப் போலவே அயல்நாட்டுக் கொள்கைகளிலும் இவர் பெரிய வெற்றி கண்டார். சோவியத் அதிபர் மிகையில் கோர்ப்பச்சேவுடனும் அமெரிக்க அதிபர் இரொனால்டு ரீகனுடனும் இவர் நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். இலங்கைத் தமிழர்களின் சிக்கல்களுக்குத் தீர்வுகாண இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தினார். அதன் விளைவாக இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதி அனைத்தும் ஒரே மாநிலமாக ஆக்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு நடந்த ஒன்பதாவது பாராளுமன்றத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி தோல்வி கண்டது. அப்போது இவர் மிகச்சிறந்த எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றினார்.

வி.பி.சிங் தலைமையிலான அரசும் அதனைத் தொடர்ந்து சந்திரசேகர் தலைமையிலான அரசும் கவிழ்ந்ததன் விளைவாக பத்தாவது பாராளுமன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டது. இத்தேர்தல் பிரசாரத்திற்காக சென்னைக்கு அருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூர் கூட்டத்திற்கு இவர் 1991ஆம் ஆண்டு மே மாதம் 21ஆம் நாள் வந்தார். அப்போது மேடைக்குச் செல்லும் வழியில் தாணு என்ற இலங்கையைச் சேர்ந்த தமிழ்ப் பெண் இவருக்கு மாலையிட்டுக் காலில் விழுந்து வணங்குவதைப்போல் நடித்து, தன் இடுப்பில் கட்டியிருந்த குண்டை வெடிக்கச்செய்ததால் இவர் கொல்லப்பட்டார்.

- இரா. தி.

**இராணா கும்பா :** மேவாரின் அரசர் இராணா கும்பா அல்லது இராணா சிரி கும்பகர்ண சார்வ பௌமா ( Rana Sri Kumbahakarna Sarvabhauma, 1431 - 1469 ) அந்நாட்டை ஆட்சி புரிந்த புகழ்மிக்க அரசர் களுள் ஒருவராவார். மோகலா ( Mokala ) என்னும் மேவார் அரசர் 1431இல் கொலை செய்யப்பட்டதும் அந்நாட்டின் அரியணையேறிய இவர் 38 ஆண்டுக ளுக்கு அந்நாட்டைச் சிறப்பாக ஆட்சிபுரிந்தார். வீர மும், அறிவும், ஆற்றலும், கலைகளில் ஈடுபாடும் கொண்ட இவர் கட்டடக்கலையில் மிகுந்த ஆர்வம் காட்டினார். ஒரு புலவராகவும், அறிஞராகவும், இசைக்கலைஞராகவும் விளங்கிய இவர் கற்றோரை யும் புலவர்களையும் ஆதரித்தார்.

இவர் தம்முடைய நாட்டின் எல்லையிலிருந்த மாளவம், குசராத்து ஆகிய நாடுகளை ஆட்சிபுரிந்த இசுலாமிய அரசர்களுடன் தொடர்ந்து போரிட வேண்டியவரானார். அவர்களை வென்று, அவர்களு டைய பகுதிகளை இவர் கைப்பற்றவில்லையென்றா லும் வலிமைமிக்க அவர்களுடைய எதிர்ப்புகளுக்கி டையே மேவாரைக் காத்தது இவரது அருஞ்செயலா கும். இவருக்கும் மாளவநாட்டு அரசர் மகமுது கல்சிக் கும் இடையே நடந்த போரின் முடிவில் இவர் சித்தூரிலும் மற்றவர் மாண்டுவிலும் வெற்றிச் சின்னங் களை நிருவியிருப்பதிலிருந்து அப்போர் அவர் களுள் எவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிந்திருக் கவேண்டும் எனக் கருதப்படுகிறது. இவரால் சித்தூரில் எழுப்பப்பட்ட நினைவுச்சின்னம் இன்றும் நல்ல நிலை யில் இருக்கும்பொழுது, மகமுதுவால் கட்டப்பட்ட ஏழு அடுக்கு கோபுரம் அழிந்துவிட்டது.

கட்டடக்கலையில் ஆர்வமிக்க இவர் மேவாரில் பல நினைவுச் சின்னங்களை விட்டுச் சென்றுள்ளார். அந்நாட்டின் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்ட எண்பத்து நான்கு கோட்டைகளில் முப்பத்திரண்டு கோட்டைகள் இவரால் கட்டப்பட்டவையாகும். இவற்றுள் கும்பல்கர் ( Kumbhalgarh ) கோட்டை இவ ருடைய போர்த்திறமையை எடுத்துக்காட்டக்கூடிய வகையில் அமைந்துள்ளது. இவரால் சித்தூரில் எழுப்பப்பட்ட 'வெற்றி அல்லது புகழ் கோபுரம்' ( Jayastambha or Kirtistambha ) மற்றொரு சிறந்த கட்டடமாகும்.


இவர் கி.பி. 1469இல் இவருடைய மகன் உதய கரன் என்பவரால் கொலை செய்யப்பட்டார். மொக லாய மன்னர் பாபரை எதிர்த்து கான்வா ( Khanua ) என்னுமிடத்தில் போர்புரிந்த முதலாம் சங்கா அல்லது சங்கராமா ( 1509 - 1527 ) இவருடைய பேரானா கும். இராணா கும்பா இந்திய வரலாற்றில் ஒரு சிறந்த அரசராகக் கருதப்படுகிறார்.

- சி. இரெ.

**இராமச்சந்திரன், எம். ஜி. :** மக்களால் எம். ஜி. ஆர். என அழைக்கப்பட்ட இவர் பெயர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆகும். இவர் மருதூரைச் சேர்ந்த கோபாலமேனனுக்கும் சத்தியபாமாவிற்கும் 1917 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 17ஆம் நாள் சுவாதி விண்மீன் நாளில் ஐந்தாம் குழந்தையாக இலங்கையில் உள்ள கண்டி எனுமிடத்தில் பிறந்தார்.

இவர் தந்தை கோபாலமேனன் கள்ளிக்கோட்டை யில் நீதிபதியாகப் பணியாற்றிய பின் இலங்கையில் கண்டி எனும் நகரில் நீதிபதியாக இருந்தபோது எம். ஜி.ஆர். பிறந்தார். இவர் இரண்டரை வயது குழந்தையாக இருந்தபோதே இவர் குடும்பத்தினர் இந்தியா திரும்பினர். இவர்கள் திரும்பியபோது குடும்பச் சூழல் காரணமாகத் தங்கள் சொத்துக்களை இழக்க நேர்ந்தது. இந்நிலையில் கோபாலமேனனும் உயிர் நீத்தார். வறுமையில் வாடிய குழந்தைகளுடன் இவர் தாய் சத்தியபாமா கும்பகோணம் வந்தடைந் தார். இளமையில் வறுமையுடனும் இவர் கும்ப கோணம் ஆணையடிப்பள்ளி எனும் இடத்திலிருந்த கல்வி நிலையத்தில் தம் அண்ணன் எம்.ஜி. சக்கர பாணியுடன் படிக்கத் தொடங்கினார். வறுமையின் காரணமாகத் தொடர்ந்து படிக்க இயலாமல் படிப்பை நிறுத்தினார்.

இவர் ஏழு வயதில் அப்போது கும்பகோணத்தில் இருந்த 'மதுரை ஒரிஜனல் பாய்ஸ் கம்பெனி' எனும் நாடகக்குழுவில் தம் அண்ணனுடன் சேர்ந்தார். பின் னர் நடிகர் எம்.கே.இராதாவின் தந்தை கந்தசாமி முத லியாரின் நாடகக்குழுவிலும் உறையூர் மொய்தின் நாடகக் குழுவிலும் நடிக்கத் தொடங்கினார். தொடக் கத்தில் சிறிய வேடங்களில் நடித்த இவர் பின்னர்



இராமச்சந்திரன், எம். ஜி.

கதாநாயகனாக நடிக்கத் தொடங்கினார். நாடக வாழ்க்கையில் தொய்வு ஏற்பட்டதால் இவர் நீண்ட கால இடர்பாடுகளுக்குப் பின் திரைப்படத்துறையில் அடியெடுத்து வைத்தார். திரைப்படத்துறையில் இருந்து கொண்டே 1953ஆம் ஆண்டு தாமே ஒரு நாடகக் குழுவை ஏற்படுத்தி 10 ஆண்டுகள் நன்முறையில் நடத்தினார். இக்குழுவுடன் பர்மா, சிங்கப்பூர், மலேசியா போன்ற வெளிநாடுகளுக்குச் சென்று வந்தார்.

1935ஆம் ஆண்டு எஸ். எஸ். வாசன் கதை வசனம் எழுதிய சதி லீலாவதி எனும் படத்தில் காவல்துறை அதிகாரியாக நடித்தார். அந்தப்படம் 1936ஆம் ஆண்டு வெளிவந்தது. இதுவே இவர் நடித்த முதல் படமாகும். அந்நாளில் புகழ்பெற்ற நடிகர் எம்.கே. தியாகராச பாகவதருடன் அசோக்குமார் என்ற படத்தில் 1941ஆம் ஆண்டு நடித்தார். துணை நடிகர் என்ற நிலையில் நடித்து வந்த இவர் 1945ஆம் ஆண்டு இராசகுமாரி எனும் படத்தில் முதன்முதலில் கதாநாயகனாகத் தோன்றினார். பின்னர் 1954ஆம் ஆண்டு இவர் நடித்த மலைக்கள்ளன் எனும் படம் ஆறு மொழிகளில் வெளிவந்து இவருக்குப் புகழைப் பெற்றுத் தந்தது. 1958ஆம் ஆண்டு எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் எனும் தம் சொந்தப்பட நிறுவனத்தின் மூலம் நாடோடி மன்னன் எனும் படத்தைத் தாமே இயக்கி, நடித்து வெளியிட்டார். 1950ஆம் ஆண்டு கலைஞர் மு. கருணாநிதி கதை வசனம் எழுத வி. என். ஜானகி யுடன் இணைந்து மருத நாட்டு இளவரசி எனும் படத்தில் நடித்தார். அந்நாளில் பல திரைப்படங்களுக்கு கதை - வசனம் எழுதிய கலைஞர் மு. கருணாநிதியுடன் ஏற்பட்ட ஆழமான நட்பு, பிற்கால அரசியல் வாழ்க்கைக்கு வித்தாக அமைந்தது. இவர் 1959 ஆம் ஆண்டில் திரைப்பட நடிகர்களின் நலம் காக்க தென்னிந்திய திரைப்பட நடிகர் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினார். ரிக்ஷாக்காரன் என்ற படம் இவருக்கு மத்திய அரசின் **பாரத்** பரிசைப் பெற்றுத் தந்தது. பின்னாளில் தம் அன்னை சத்திய பாமாவின் நினைவாக சத்தியா மூவிசு எனும் பட நிறுவனத்தையும் சத்தியா ஸ்டுடியோ எனும் நிறுவனத்தையும் தொடங்கினார்.

சதிலீலாவதி எனும் திரைப்படத்துடன் 1935ஆம் ஆண்டு தொடங்கிய இவருடைய 43 ஆண்டு திரை வாழ்க்கை 1976 வெளிவந்த மதுரையை மீட்ட சுந்தர பாண்டியன் எனும் திரைப்படத்துடன் நிறைவு பெற்றது. இவர் நடித்த படங்களில் இவருடைய பாத்திரங்களும், பாடல்களும், ஏழைகளையும், உழைப்பாளர்களையும் கவரும் வகையிலும் பொதுவுடைமைக் கருத்துக்களுடன் அமைந்திருந்தன. இவருக்கு நாடு முழுவதும் பெருமளவில் ரசிகர்கள் இருந்த[illegible] பெரும் எண்ணிக்கையில் ரசிகர் மன்றங்களும் இருந்தன.

இவர் நாடகங்களில் நடிக்கத் தொடங்கிய கால கட்டத்தில் இந்தியா முழுவதும் விடுதலைப் போராட்டம் தீவிரமாக நடந்ததால், அதனை நடத்திய காங்கிரசு கட்சியுடன் தம்மை இணைத்துக் கொண்டார். இவர் நேதாஜி சுபாசு சந்திரபோசின் எழுத்துக்களை விரும்பிப்படித்தார். 'கதர்பக்தி' எனும் நாடகத்தை அரங்கேற்றி, விடுதலை உணர்வினைத் தூண்டினார். பேரறிஞர் அண்ணாவுடன் 1944ஆம் ஆண்டு முதல் நட்புக் கொண்டிருந்த இவர், அவருடைய கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு 1950ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தார். பல எதிர்ப்புகளுக்கு இடையே தி.மு.க.வின் இருவண்ணக் கொடியை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸின் சின்னமாக்கி வெள்ளித்திரையில் தோன்றச் செய்தார். அன்றைய பிரதமர் நேருவுக்குக் கறுப்புக்கொடி காட்டும் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றார்.

'மக்களை ஈர்ப்பவர்' ( Crowd Puller ) என்று அண்ணாவால் பாராட்டப்பெற்ற இவர் பல கூட்டங்களில் கலந்து கொண்டு கட்சியினை வளரச் செய்தார். 1967ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டிருக்கும்போது எம்.ஆர். இராதாவால் தம் இல்லத்தில் சுடப்பட்டு காயத்துடன் உயிர் தப்பினார். அத்தேர்தலில் திமுக வெற்றிபெற்று அண்ணா தமிழகத்தின் முதலமைச்சரானார். இத்தேர்தலில் எம்.ஜி.ஆர். பரங்கிமலைத் தொகுதியிலிருந்து சட்டமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதற்கு முன் 1963ஆம் ஆண்டு மேலவைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1969ஆம் ஆண்டு பிப்ரவரியில் அண்ணாவின் மறைவுக்குப்பின் கலைஞர் மு. கருணாநிதி முதல்வரானார். 1972ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எனும் புதிய கட்சியை எம்.ஜி.ஆர் தொடங்கினார். கறுப்பு, சிவப்பு இரு வண்ணக் கொடியில் அண்ணாவின் உருவம் பொறிக்கப்பட்ட கொடி அக்கட்சியின் கொடியாகவும், இரட்டை இலை அதன் தேர்தல் சின்னமாகவும் ஏற்படுத்தப்பட்டது. கட்சி தொடங்கி 7 மாதங்களில் திண்டுக்கல் நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சி

வெற்றிப் பெற்றது. 1977 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் அக்கட்சி அறுதிப்பெரும்பான்மை பெற்று ஆட்சியைப் பிடித்தது. 1977 ஆம் ஆண்டு சூன் 30இல் முதன் முதலாக எம்.ஜி.ஆர். தமிழக முதல்வராகப் பதவியேற்றார். பின்னர் 1980ஆம் ஆண்டு சூன் 9இல் இரண்டாம் முறையாகவும் தமிழகத்தின் முதலமைச்ச ராகப் பதவியேற்றார். 1984ஆம் ஆண்டு மூன்றாம் முறையாகவும் அக்கட்சி வெற்றி பெற்றது. அத்தேர்தல் நடந்த போது எம். ஜி. ஆர். சிகிச்சைக் காக அமெரிக்கா சென்றிருந்ததால் திரும்பிய பின் 1985 பிப்ரவரி 10இல் மூன்றாம் முறையாகவும் தமிழகத்தின் முதலமைச்ச ராகப் பதவியேற்று, அவர் இறக்கும் வரை அப்பதவி யிலிருந்தார்.

தமிழகத்தில் தொடர்ந்து பத்தாண்டு காலமாக முதல்வராகப் பணியாற்றிய எம்.ஜி.ஆர். பல சாத னைகளைச் செய்தார். மதுரையில் ஐந்தாவது உலகத் தமிழ்மாநாடு சிறப்புடன் நடத்தி அதில் அறிவிக் கப்பட்டதற்கிணங்க இந்தியாவில் முதன்முதலாக மொழிக்குப் பல்கலைக்கழகம் என்ற முறையில் 1981ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டது. 1986 ஆம் ஆண்டு மதுரையில் உலகத் தமிழ்ச் சங்கம் செயற் படத்தொடங்கியது. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அழகிய கட்டடமும், அரிய நூல்களும் கொண்ட தமிழ்ப்பல்கலைக் கழக நூலகம் 1987 ஆம் ஆண்டு தமிழ்ப்புத்தாண்டில் திறந்து வைக்கப்பட்டது. புதிய பல்கலைக்கழகங்கள் வரிசை யில் சென்னையில் அண்ணாப் பல்கலைக்கழகமும், திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழகமும், கோவை யில் பாரதியார் பல்கலைக்கழகமும், காரைக்குடியில் அழகப்பா பல்கலைக்கழங்களும் ஏற்படுத்தப்பட்டன. இவர் ஆட்சியின் இறுதி நாள்களில் டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகமும் ஏற்படுத் தப்பட்டது.

பசியால் தம் படிப்பைத் தொடர இயலாததை மனதில் கொண்டு மூன்று வயது முதல் அனைத்து ஏழைக்குழந்தைகளுக்கும் மதியம் சத்துணவு வழங்கப் பட்டது. சென்னையில் குடிநீர் பிரச்சனைக்கு நிலை யான தீர்வு காண கிருட்டிணா ஆற்று நீர்த்திட்டம் 1983ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

இலங்கைத் தமிழர்கள் சிக்கலில் மிகுந்த அக்கறை யுடன் செயற்பட்ட இவர் அன்றைய பாரதப்பிரதமர் ராஜீவ்காந்திக்குத் துணையாக நின்று 1987 ஆம் ஆண்டு இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படச் செய்தார். இவர் நடிகன் குரல், சமநீதி, அண்ணா போன்ற பத்திரிக்கை களை நடத்தி வந்தார். புரட்சி நடிகர், பொன்மனச் செம்மல், புரட்சித்தலைவர், மக்கள் திலகம், நிருத்திய சக்கரவர்த்தி போன்ற பட்டங்களைப் பெற்ற எம்.ஜி.ஆருக்கு 1983ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டத்தையும் அளித்தது. இவர் இறப்புக்குப்பின் இந்திய அரசின் பெரிய விருதான **பாரத்ரத்னா** இவருக்கு அளிக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். முதலில் பாலக்காட்டைச் சேர்ந்த பார்கவி என்ற பெண்ணை மணமுடித்தார். இவ்வம் மையார் இறந்தபின் குழல்மந்தம் எனும் ஊரைச் சேர்ந்த அம்முகுட்டி என்பவரை மணந்தார். இவ் வம்மையாரும் சில ஆண்டுகளுக்குபின் இறக்கவே தம்முடன் திரைப்படத்தில் நடித்த வி.என். ஜானகி என்பவரை மணந்தார். இவருக்கு குழந்தைகள் இல்லை.

1984ஆம் ஆண்டு உடல் நலம் குன்றி சென்னை அப்பலோ மருத்துவமனையிலும், அமெரிக்காவின் புருக்ளின் மருத்துவமனையிலும் சிகிச்சைப் பெற்றார். இவர் 1987ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் சென்னையில் இராமாவரத்தோட்டம் என்ற தனது இல்லத்தில் இயற்கை எய்தினார். இவர் சமாதி சென்னை மெரினா கடற்கரையில் அண்ணா சமாதி யின் தென்புறத்தில் உள்ளது. சென்னை ஆர்க்காட்டு முதலித்தெருவில் உள்ள இவர் இல்லம் எம்.ஜி.ஆர். நினைவகமாக மாற்றப்பட்டுள்ளது.

- கி. க.

**இரு துருவ உலக அதிகார அமைப்பு :** இரண் டாம் உலகப்போர் முடிவதற்கு முன் உலக அரங்கில் பொதுவாக வல்லரசுகள் தான் இருந்தன. இவ் வல்லரசுகள் ஒன்றையொன்று எதிர்க்கும் கூட்டமைவு களின் அதிகாரத்தைச் சரிசமமாக நிலைநிறுத்தல் நிலையைத் தான் வல்லரசு சமநிலை ( Balance of Power) என்று அழைத்தனர். ஆகையால் வல்லரசு சமநிலை எந்த நாடும் ஆக்கரமிப்பாளராக மாறாமல் இருக்க உதவி செய்தது.

இவ்வல்லரசு சமநிலைப் பன்னாட்டு அமைப்பு இரண்டாம் உலகப்போருக்குப்பின் மாறியது. அமெரிக்கக் குடியரசு, சோவியத் ஒன்றியம் முதலிய இரண்டு நாடுகளும் பெரும் வல்லரசுகளாக மாறின. இவ்விரு நாடுகளில் மட்டும்தான் பெருமளவு அணு ஆயுதங்கள் இருந்தன. மேலும் இரு முரண்பாடான அரசியல் கோட்பாடுகளைத் தழுவி, உலகில் பிற பகுதிகளில் இவை தங்கள் கோட்பாடுகளைப் பரப்ப முயன்றன. சோவியத் ஒன்றியம் புரட்சிகளை உருவாக்கி ஆதரித்து, உலகில் பிற பகுதிகளில் பொதுவுடைமைக் கொள்கைகளைப் பரப்ப வேண்டும் என முயற்சி செய்தது. அரசியல் கட்டுப்பாடற்ற வாணிகக் கொள்கை, மக்கள் உரிமை, சனநாயகம் முதலிய கோட்பாடுகளைப் பரப்ப அமெரிக்கக் குடியரசு போட்டியிட்டது. இவ்விரு நாடுகளும் முரண்பாடான இவ்விரு அயல்நாட்டுக் கொள்கைகளைப் பரப்பி ஆதரவு தேடிப் பிற நாடுகளுடன் கட்சி சேர்ந்தன.

சக்திவாய்ந்த முக்கிய நாடுகள் இம்மாதிரியாக சோவியத் ஒன்றிய அணியிலோ அமெரிக்கக் குடியரசு அணியிலோ கூட்டு சேர்ந்தன. இதன் விளைவாக இரண்டாம் உலகப்போருக்குப்பின் வல்லரசு சமநிலைப் பன்னாட்டு அமைப்பு மறைந்தது. இரு முரண்பாடான அரசியல் கோட்பாடுகளைத் தழுவிய மிகச் சக்தி வாய்ந்த பெருமளவு அணு ஆயுதப் படை வலிமையுள்ள இரு துருவ உலக அதிகார அமைப்பு ( Bi polar - power structure ) தோன்றியது. இவ்விரு அணிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலைத்தான், போர் மனப்பான்மை தழுவிய செயல்களைத்தான் கெடுபிடிப்போர் அல்லது பனிப்போர் என்று அழைத்தார்கள். இவ்விரு அணியிலும் சேராத நாடுகள் அணி சேரா நாடுகள் என்று அழைக்கப்பட்டன. அணி சேரா நாடுகள் சுதந்திரமாகச் செயல்பட முயன்ற போதிலும் குறைவான சக்தி உள்ள நாடுகளாக இருந்ததால் இருதுருவ உலக அதிகார அமைப்பை மாற்ற முடியவில்லை. மேலும் அணிசேரா மாநாடுகளில் இவ்விரு அணிகளுக்கும் அந்தந்தக் கட்சியைச் சேர்ந்த அணி சேரா நாடுகள் ஆதரவு தேடின. ஆகையால் அணி சேரா நாடுகளும் அரசியல் அடிப்படையில் இருதுருவ உலக அதிகார அமைப்பிற்கு ஆதரவு தந்தன. சமயம் வரும் போது கட்சி சேர்ந்தன.

**இரு துருவ அமைப்பின் தத்துவம் :** 1. தங்களை ஆதரிக்கும் நேசநாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து மற்றொரு வல்லரசு அணியை அடக்க வேண்டும். 2. பிற நாட்டு உள்நாட்டுப்போர்கள் நடக்கும் சமயம் போர் கருவிகள் முதலியவைகளை அளித்து முடிந்தால் தளம் அமைத்து, தங்கள் கைத்தடியாகச் செயல்படும் கைப்பாவை அரசுகளை அமைக்க வேண்டும். 3. கைப்பாவை நாடுகளை அமைக்க முடியாவிட்டால் தங்கள் உதவியை நம்பிவாழும், ஆனால் தங்கள் இராணுவ அணியில் சேர மறுக்கும் நேச நாடுகளை அமைக்க வேண்டும். 4. அம்முறையும் தோல்வியுற்றால் இரு வல்லரசுகளிடமும் நட்புரிமை கொண்டாடும் நடுவர் நாடுகளை உருவாக்க வேண்டும். 5. பிரச்சாரப்போர் ( Propaganda war ), வாய்மொழிப் போர் ( Verbal warfare ) முதலிய போர் முறைகளை ஐ.நா. சபையிலும், பொதுவாக உலக நாடுகளிடையேயும் பயன்படுத்தி தங்கள் அணியின் செல்வாக்கை உயர்த்த வேண்டும். 6. படை வலிமையைப் பெருக்கி அணு ஆயுத உற்பத்தியை அதிகரித்து ஒருவரையொருவர் அச்சுறுத்த வேண்டும். 7. போட்டியிட்டுக் கொண்டு வட்டியைக் கூட்டியும் குறைத்தும் அளித்து பிற நாடுகளின் நட்பைத் தேடவேண்டும்.

**இருதுருவ அமைப்பில் மாற்றங்கள் :** 1. பொதுவுடைமை நாடுகளிடையே ஓரளவு பிளவு ஏற்பட்டால் எல்லாப் பொதுவுடைமை நாடுகளும் சோவியத் ஒன்றியத்தைப் பின்பற்ற மறுத்தன. தனி உள்நாட்டு, அயல்நாட்டுப் பொதுவுடைமைக் கொள்கைகளுடன் 1960ஆம் ஆண்டுகளிலிருந்து இயங்கத் தொடங்கின. வியட்நாம், கம்பூசியா போன்ற நாடுகளும் அணிசேராக் கொள்கையைத் தழுவின. 2. 1970 - 71ஆம் ஆண்டுகளில் சோவியத் ஒன்றியத்தின் முதல் எதிரி சீனா, சீனாவின் முதல் எதிரி சோவியத் ஒன்றியம் என மாறியது. இதனால் அரசுக் கோட்பாடு அடிப்படையில் தொடங்கிய இருதுருவ அமைப்பின் கோட்பாடும் மாறத் தொடங்கியது. 3. முதன்முதலாக 1963ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியமும் அமெரிக்காவும் அணு சோதனை ஒப்பந்தம் செய்து கொண்டன. படைக்குறைப்பு தொடர்பாக பேச்சுவார்த்தை இவ்வாண்டிலிருந்து ஓரளவு சுமூகச் சூழ்நிலையில் நடக்கத் தொடங்கியது. ஆகையால் இவ்விரு பெரும் வல்லரசுகளிடையே நேச உறவு மனப்பான்மை குறிப்பாக 1970ஆம் ஆண்டுகளில் தோன்றி வேரூன்றியது. 4. 1960 - 85ஆம் ஆண்டுகளிடையே அணி சேரா நாடுகளின் உறுப்பினர்கள் நான்கு மடங்காகப் பெருகினர்.

இன்று 101 நாடுகள் அணிசேராக் கொள்கையைப் பின்பற்றுகின்றன. சில பொதுவுடை நாடுகளும் அணிசேராக் கொள்கையைத் தழுவின. பெரும்பான்மையான இலத்தீன் அமெரிக்கா, மத்திய அமெரிக்க நாடுகளும் இக்கொள்கையைத் தழுவின. 5. சியாடோ, சென்டோ, நேட்டோ, வார்சா போன்ற இராணுவ கூட்டமைப்பின் முக்கியத்துவம் இம்மாதிரியான மாற்றங்கள் ஏற்பட்ட சூழ்நிலையில் குறைந்தது. 6. அணு ஆயுதங்களைக் கொண்டிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்தது. அணுகுண்டுகளைத் தயாரிக்க மறுக்கும் இந்தியா கூட அணுகுண்டுகளை வெடித்துச் சோதனை செய்தது. ஆகையால் தொடர்ந்து இருதுருவ அமைப்பு செயல்பட்ட போதிலும் பலதுருவ அமைப்பிற்கு அடிப்படை நாட்டப்பட்டது.

**பல துருவ அமைப்பின் தோற்றம் :** சோவியத் ஒன்றியத்தில் 1985ஆம் ஆண்டு செயலர் பதவிக்கு வந்த கொர்ப்பச்சேவ் சிறப்பான மாற்றங்களை அறிமுகப் படுத்தியதால் உலகில் இருதுருவ அமைப்பு மறைந்து பலதுருவ அமைப்பு ( Multi polar - power structure ) தோன்றியது. மாறுபட்ட கோட்பாடுகளின் மூலம் தோன்றிய இரு துருவ அமைப்பு சோவியத் ஒன்றியம் பொதுவுடைமைக் கோட்பாட்டில் சிறப்பான மாற்றங்கள் ஏற்படுத்தியதால் மறைந்துவிட்டது. அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள பொருளாதார முறைக்கு பதில் சந்தைப் பொருளாதார முறையை ஏற்படுத்து வது, சனநாயக உரிமையை அளிப்பது, பல்வேறு சோவியத் குடியரசு பொதுவுடைமைக் கட்சிகளுக்குச் சுதந்திர உரிமை அளிப்பது, அரசு சொத்து ஏகபோக உரிமையை நீக்கி, நிலம், பிற சொத்து தொடர்பாக தனியார் உரிமை அளிப்பது, சமயம் தொடர்பாக சுதந்திர உரிமை அளிப்பது, கெடுபிடிப்போர் முறை யை கைவிட்டு அமெரிக்காவுடன் நட்புறவு கொண்டாடுவது, சோவியத் ஒன்றியத்திலுள்ள பிற குடியரசுகளிலும், கிழக்கு ஐரோப்பாவிலும் இம்மாதிரி யான சுதந்திர சனநாயக உரிமை வளர்வதற்கு ஆதரவு தருவது போன்ற எதிர்பாராத மாற்றங்களைக் கொர்ப்பசேவ் அறிமுகப்படுத்தியதில் இருதுருவ அமைப்பு மறையத் தொடங்கியது.

கெடுபிடிப்போர் முடிந்துவிட்டபோதிலும் பல்வேறு நாடுகளின் புதிய பூசல்கள் எழக்கூடிய வாய்ப்பு இருந்தது. அதோடு சோவியத் ஒன்றியத்தின் அணு ஆயுத வலிமையும் குறையவில்லை. மேலும் உலக அரங்கிலிருந்து அமெரிக்காவோ, சோவியத் ஒன்றியமோ பின்வாங்கி தன்னுடைய சொந்த உள்நாட்டுச் சிக்கல்களில் கவனம் செலுத்த முற்றிலும் முயலவில் லை. ஆகையால் இருதுருவ அமைப்பு மறைந்த புதிய பன்னாட்டு அமைப்புச்சூழ்நிலையில் மீண்டும் வல்லரசு சமநிலை அமைப்பு தோன்ற வாய்ப்பிருக்கின்றது.

- எஸ். நா.

**இருபடிநிலைக் கல்வி அமைப்பு :** பொதுவாகக் கல்வி எனப்படும்போது எழுத்தறிவு, தொழில் அடிப்படை என்ற இரு கூறுகள்தாம் இருக்கின்றன. எழுத்தறிவு என்பது எழுத்தர், கணக்காயர், ஆசிரியர் என்ற வேலைகளுக்கு வாய்ப்பளிப்பது. தொழில் அடிப்படை என்று கூறும்போது அதனுடன் மருத்துவம், பொறியியல், வேளாண்மை என்றவற்றையும் கருத வேண்டும். வேலைவாய்ப்பு அளிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட பாடங்கள் அடிப்படையாக இருந்தபோது இது போன்ற குறுகிய இருபடி நிலைக் கல்வி எண்ணப்பட்டு வந்தது. எண்ணங்கள் இவ்வாறு சுருக்கப்பட்டதற்குக் காரணமில்லாமலில்லை.

எழுத்தறிவிற்குப்பின் வாழ்க்கை நடத்துவதற்கு வழி வகுக்கப்பட வேண்டும் என்ற அவசர அவாவினால் அவ்வாறு பல நூற்றாண்டுகள் கழிந்தன. செல்வம் ஈட்டுவது மட்டுமா கல்வி என்று பிறகுதான் சிந்திக்கப்பட்டது. ஆங்கிலேயர்கள் பாங்காகக் காத்து வந்த கல்விமுறை கூட, இந்தியன் விடுதலை வேட்கை பெறாமல், அரசை நடத்த மட்டும் உதவும் அளவிற்குப் பேணப்பட்ட கல்வி முறை அமைப்பு ஆகும். இத்துடன் பாலினத்தை அடிப்படையாகக் கொண்டு ஆண் பிள்ளைகளுக்குத் தனிப் பள்ளிகளும், பெண் பிள்ளைகளுக்குத் தனிப்பள்ளிகளும் பிரிக்கப்பட்ட காலமும் உண்டு. அப்பொழுதெல்லாம் அவர்களுக்கான பாடத்திட்டங்களும் வெவ்வேறாக இருந்தன. இன்னும் பெண் பிள்ளைகளுக்குத் தனியாக பள்ளி கள் உள்ளன. அவை பிரிக்கப்பட்டவை அல்ல. நிர் வாக வசதிக்காகத் தனித்துள்ளவை. அவை பொதுப் பாடத்திட்டங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டவை அல்ல. பாடத்திட்டங்கள் ஆண்பிள்ளைகளுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் ஏற்றத்தாழ்வு இல்லை.

இருபடி நிலைக் கல்வியில் செய்தியைத் தருதல் தான் கல்வியாக உள்ளது. மாறிவரும் உலகத்தோடு தொடர்பற்றதாக இருக்கின்றது. கற்ற கல்விக்கும்

தொழிலுலகத்திற்கும் அது நேரிடைத் தொடர்பற்றது. எழுத்தறிவானது கல்வியின் தொடக்கமன்று. வயது, நோக்கம், ஆராய்ச்சி, சமூக உறவுக்கல்வி என்று திட்டமிடப்படுவது அண்மைக்காலத்தில்தான். ஆங்கிலப் புலமைதான் பெரிது. பண்பாட்டைப் பற்றிய கவலை இல்லை என்ற குறைகளைப் போக்க எண்ணும் புதிய அணுகுமுறை நான்கு படிகள் கொண்டதாக உள்ளது; 1. அடிப்படைக்கல்வி, 2. பொதுக்கல்வி, 3. நுண்ணாற்றல் கல்வி, நாட்டுநலப்பணி. கல்வியில் எத்தனைப் படிகள் அமைக்கப்பட்டிருந்தாலும் பொதுவான அடிப்படை இருபடிநிலைக் கல்வியாகத்தானிருக்கும்.

- எம். பெ.

**இருமுனைக் கோட்பாடு** : கல்வி எதற்காக என்ற வினா எப்பொழுதும் கல்வி வல்லுநர்களால் தொடர்ந்து வினவப்பட்டு வருகின்றது. அதற்குக் காரணம் மக்களின் கல்விக்கான நோக்கங்கள் அவ்வப்போது மாறுபட்டு வருவதுதான். வீரமும் வலிமையும் போற்றப்பட்ட காலத்தில் போர் வீரர்களுக்கான பயிற்சியே சிறந்திருந்தது. இசுபார்டா ( Sparta ) உரோம், தூரக்கிழக்கு நாடுகள் போன்ற இடங்களில் இந்நிலையிருந்தது. கிறிஸ்தவ சமயம் பல நாடுகளிலும் பரவி வந்த வேளையில் சமயக் கல்வியும் வாழ்க்கை அமைப்பும் முக்கியமாகக் கருதப்பட்டன. பழைய செர்மனியில் கட்டுப்பாடும் கீழ்ப்படிதலும் கற்பிக்கப்பட்டது. பின்னர் இட்லர் காலத்தில் அவர்களின் பண்பாட்டின் பரிமாணச் சிறப்பைத் தூண்டிவிட்டது. பிரான்சு நாட்டவர் அறிவுக் கூர்மையை மட்டும் வளர்த்தால் போது மென்றனர். அதே அடிப்படையில் இங்கிலாந்திலும் கிரேக்க இலத்தீன் மொழிகளில் ஆற்றலை வளர்த் தால் நல்லது என்றனர். அத்துடன் உடலை வலிமையாக்கிக் கொள்ள விளையாட்டு வீரர்களை உண்டாக்கவும் முயன்றார்கள். சப்பான் நாட்டில் சிண்ட்டோ ( Shinto) இனத்தவர் ஆண்ட காலத்தில் ஒருவனுக்கு உயிரினும் மேலானது வீரம் என்ற கருத்தைக் கற்பித்தனர். அரசனுக்காக மாள்வதுதான் மிகவும் சிறந்த வீரம் என்றாயிற்று. இவை எல்லாம் பரந்த நோக்கங்கள் ஆகா.

மேலே கூறப்பட்ட கோட்பாடுகள் அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பற்றவை. சமூகச்செயல்கள் கல்வித்திட்டத்துடன் இணையவில்லை. அவை போட்டியை வளர்த்தன. ஒத்துழைப்பிற்கு வித்திடவில்லை. அனைத்துப்போக்கும் தேர்வு மையமானவை. வாழ்க்கையிலிருந்து விலகியவை.

ஏதென்சு, சுவிட்சர்லாந்து, இந்தியா போன்ற நாடுகளில் தான் வேறுவகையான பரந்த எண்ணங் கள் உதித்தன. ஏதென்சு கல்வி முறைப்படி எல்லோ ருக்கும் உயர வாய்ப்பளிக்கப்பட்ட போதிலும் மன மகிழ்ச்சிகள், பொருள் சேமிப்பு, தளர்ந்திருத்தல் போன்றவை தூற்றப்பட்டன. அக்குறைகள் இருப்பினும் தனி மனிதனின் முழு வளர்ச்சிக்குப் பெரும் ஆக்கம் அளிக்கப்பட்டது. பெசுட்டலாசி ( Pestalozzi ), புரோபஸ் ( Froebel ), சுவாமி விவேகானந்தர் போன்றோர் தான் குழந்தைகளுக்கு முழு விடுதலையைத் தந்து கற்பிக்க வேண்டுமெனக் கூறினர். மாண்டிசோரி அம்மையார் ( Montessori ) குழந்தையின் விடுதலை வேட்கை பறிபோகாத அளவிற்குக் காக்க முன்வந்தார். எல்லாச் செயல்களும் இயல்பாக இருக்க வேண்டும். புனையப்பட்ட தேவதைகளின் கதைகள் தேவையற்றவை என்றார். முழு விடுதலையுடன் இயற்கையோடு இணைவதற்குத்தான் ஏட்டுப் படிப்பு வேண்டும். போதித்தல் குறைய வேண்டும். கற்றல் ஏற்படவேண்டும். கல்வி திணிக்கப்படக் கூடாது என்பது தான் புரட்சி.

தூயி ( Dewey ), இசுபென்சர் ( Spencer ), காந்தி போன்றோர் கல்வி முழு வாழ்க்கைக்குரிய பயிற்சியாதல் வேண்டும் என எண்ணினர். எழுத்தறிவோடு வாழ்க்கையின் முழு ஈடுபாடு என்பதுதான் இருமுனைக் கோட்பாடு. மனிதனின் முயற்சியால் இந்த உலகத்தைச் சிறந்த வாழ்விடமாக்க முடியும். அதற்குக் கல்வி உதவவேண்டுமென்பது இக்கோட்பாட்டிலிருந்து பெறப்படும் கருத்து. வாழ்க்கை மையக் கல்வி என்பது இதுதான். தனியனின் பல்துறைச் சிறப்புகள் வெளிப்பட வேண்டும் என்பது தான் முக்கியக் குறிகோள். அதன் விளைவு படைப்பாற்றல் பெருக்கம், பொறுப்பேற்றல், சீரிய பண்பாடு என்பதில்தான் முடியும்.

- எம். பெ.

**இலக்கணச் சூடாமணி** : இது யாப்பிலக்கண நூல்களுள் ஒன்று. 58 வெண்பாக்களைக் கொண்டது. நேமிநாதம், வெண்பாப்பாட்டியல் ஆகியவற்றைப் போன்று இந்நூல் வெண்பா யாப்பில் அமைந்து

உரையுடன் உள்ளது. தொன்னூல் விளக்கம், சிதம்பரப்பாட்டியல் போன்று பிரபந்தவிலக்கணத்தையும் யாப்பிலக்கணத்தையும் கூறுகின்றது. உறுப்பியல், பாவியல், பாவினவியல், பிரபந்தவியல், ஒழிபியல் என்னும் ஐந்து இயல்களைக் கொண்டு விளக்குகின்றது. யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை போன்றவற்றின் கருத்துகளை அடியொற்றியும், அவற்றின் உரையமைப்பைப் பின்பற்றியும் இந்நூல் அமைந்துள்ளது. எல்லா இலக்கண நூலுள்ளும் காணப்படும் இலக்கணக் கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாக இந்நூலின் பாயிரம் கூறுகின்றது. இலக்கணச் சாரத்தை எடுத்தியம்புகின்றேன் இலக்கணச் சூடாமணியீதென்று என்பது பாயிரம்.

முன்னூல்களின் மரபையொட்டி இந்நூலும் மகடூஉ முன்னிலை நெறியில் இலக்கணம் கூறுகின்றது. 58 வெண்பாக்களுள், 7 வெண்பாக்கள் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன. பிணை விழிக்கண் மானே ( இலக். சூ. 10 ), பிணக்குறு வேற் கண்ணாய் ( இலக். சூ. 20 ), வடிவுறு வேற் கண்ணாய் ( இலக். சூ. 21 ), தோகாய் ( இலக். சூ. 23, 27 ), குடி கொள் அளி களிக்கும் கூந்தல் அணங்கே ( இலக். சூ. 33 ), செருமோதி வந்த வடிவேற் கண்ணாய் ( இலக். சூ. 40 ).

எளிமையும் தெளிவும் கொண்ட இந்நூல் நூற்பா, நூற்பா நுதலும் பொருள், கருத்துரை, எடுத்துக் காட்டு, விதப்புக்கிளவி என்ற அமைப்பில் இயங்குகின்றது. வெண்பாக்கள் தெளிந்த நடையில் எளிதில் பொருள் கொள்ளத்தக்க வகையில் உள்ளன. 58 வெண்பாக்களுள் மூன்றன் வெண்பாக்கள் ( 4, 10, 26) ஈற்றுச்சீர்கள் ஈராசைச்சீரான் முடிந்து நிற்கின்றன. இவையன்றி முற்றியலுகர வீற்றால் முடியும் வெண்பாக்களும் இந்நூலுள் காணப்படுகின்றன.

யாப்பருங்கல விருதியுள் காணப்பெறும் மேற்கோள் பாடல்கள் அகரகமோடாகாரம், ஆசிரியப் பாவின் என்னும் இரண்டனை இந்நூல் நூற்பாவாக ஆக்கிக்கொண்டுள்ளது. நிகண்டு சூடாமணி, மகா பாரதசூடாமணி, வேதாந்த சூடாமணி, பரத சூடாமணி போன்று இந்நூலும் சூடாமணி என்னும் பெயரைக் கொண்டுள்ளது. இந்நூல் யாப்பிலக்கணத்தைச் சிறப்பித்துக் கூறுவதாயினும் பொதுப்பெயராகிய இலக்கணம் என்பதாலேயே வழங்கப்பெறு கிறது.

**நூலாசிரியரும் உரையாசிரியரும் :** மூலமும் உரையுமாக அமைந்த இந்நூலின் ஆசிரியரும் உரையாசிரியரும் வேறானவர்கள். நூலினுள் ஆசிரியர் பற்றிய குறிப்புகள் இல்லை. நூலின் புறத்தே அமைந்த நூற்பயன் கூறும் காரிகை இதன் ஆசிரியரை, 'கவிபாலபாரதி கட்டுரையால் பார்க்கும் இலக்கணச் சூடாமணி' என்று கூறுகின்றது. கவி பாலபாரதி என்பவர் தான் இந்நூலின் ஆசிரியர். பாலபாரதி என்ற பெயரில் பலர் இருப்பினும் இந்நூலாசிரியர் கி.பி. 17ஆம் நூற்றாண்டளவில் வாழ்ந்தவராவார். சிந்து யாப்பிற்கும் வண்ணத்திற்கும் இவர் இலக்கணம் கூறுகின்றார். எனவே, இவ்விரு பாவகைகளும் சிற்றிலக்கிய வடிவம் பெற்ற காலத்தில் இவர் இலக்கணம் செய்துள்ளார் என்று தெரிகின்றது.

இந்நூலின் உரையாசிரியர் பெயர் தெரியவில்லை. இந்நூலுடையார்க்கும் இதுவே உடன்பாடு ( இலக். சூ. 52 ) என்று நூலாசிரியரை இவர் சுட்டியுள்ளதால் நூலாசிரியரினின்றும் இவர் வேறுபட்டவராவார். இவர் பரந்த இலக்கணப் புலமையுடையவர். இவர் தம் உரையுள் 250க்கும் மேற்பட்ட இலக்கிய மேற்கோள்களும், 60க்கும் மேற்பட்ட இலக்கண மேற்கோள்களும் காணப்படுகின்றன. யாப்பருங்கலக் காரிகையிலிருந்து 12 உதாரண முதனினைப்புக் காரிகைகள் இதனுள் எடுத்தாளப்பெறுவதால் இவ்வுரை கி.பி. 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்ததாகும். இவ்வுரையுள் அமைந்த மேற்கோள் பாடல்கள் வேறுபாடுகளைக் கொண்டு காணப்படுகின்றன. 'மண்டிணிந்த நிலனும்' என்னும் புறநானூற்றுப் பாடல் (2) 'மண்டணிந்த நிலனும்' என்ற பாட வேறு பாட்டுடன் காணப்படுகிறது. 'உலைக்கல் அன்ன பாறைஏறி' என்னும் குறுந்தொகைப் பாடல் (12) 'உலைக் கல் என்ன பாறை ஏறியக்' என்ற பாட வேறு பாட்டுடன் காணப்படுகிறது.

**நூற்பொதி சிறப்புகள் :** அசைக்குறுப்பாகும் எழுத்துக்கள் எவையென்று வரையறுத்துக் கூறுவதில் இந்நூல் வேறுபடுகின்றது. காக்கைப்பாடினியம் 13 என்றும், சிறுகாக்கைப் பாடினியம் 12 என்றும், யாப்பருங்கல விருத்தி 15 என்றும், யாப்பருங்கலக் காரிகை 13 என்றும், நாலடி நாற்பது 13 என்றும், அவிநயம் 11 என்றும், பெரியபம்மம் 15 என்றும் வரையறை செய்யவும் இந்நூல் அசைக்குறுப்பாகும் எழுத்துக்கள் 7 என்று கூறுகின்றது.

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழி நெடிலடி என்னும் ஐவகை அடிகள் அல்லாமல் விருத்தம் என்னும் ஓர் அடிவகையை இந்நூல் எடுத்தியம்புகின்றது. பிற இலக்கண நூல்கள் கூறுகின்ற தொடை, தொடை விகற்பங்களைக் கூறுவதோடு ஐஞ்சீர் முதல் பதினாறு சீர்ப்பாவுக்கும் உரிய தொடை விகற்பங்களை இந்நூலுள் காணமுடிகின்றது. நூற்சிற்றடிப் பாவினங்களுக்குப்பொழிப்பு மோனையும் ஐஞ்சீரடிக்குக் கடைமோனையும், அறுசீர் முதல் பதின்சீரளவிற்கு இடைமோனையும், பதினொருசீர் முதல் பதினாறு சீரளவிற்கு வழிமோனையும் சிறப்பு மோனைகளாகும் என்று இந்நூல் கூறுகின்றது.

வேறு எந்த யாப்பு நூலிலும் காணப்பெறாத ஒரு சீரடியால் வரும் சதுக்கம் என்னும் யாப்புவகையை இந்நூலுள் காணமுடிகின்றது. சவலை என்னும் வெண்பா வகையை மாறன் பாப்பாவினமும் ( நூ. 28), தொன்னூல் விளக்கமும் ( நூ. 222 ), முத்துவீரியமும் ( நூ. 908 ), அறுவகை இலக்கணமும் ( யாப். 18 ) கூறியுள்ளன. இந்நூல் கூறும் சவலை வெண்பாவின் இலக்கணம் மேற்கூறப் பெற்றுள்ளவற்றினின்றும் வேறுபட்டு அமைந்துள்ளது. குறள் நேரிசை, சிந்தியல், இன்னிசை, பஃறொடை என்னும் ஐவகை வெண்பாக்களும் சிதைந்து வருவது சவலை வெண்பாவாகும் என்று சவலை வெண்பாவிற்கு வேறுபட்ட இலக்கணத்தை இந்நூல் கூறுகின்றது ( இலக். சூ. 18 ).

பாவிணத்திற்கென்று தனிஇயல் இந்நூலுள் காணப்படுகின்றது. மேலும் முடுகுவிருத்தம், காப்பியக் கலித்துறை, திலகக்கலித்துறை, கட்டளைக் கலிப்பா போன்ற யாப்புகளுக்கும் இந்நூல் இலக்கணம் கூறுகின்றது. பிரபந்த விலக்கணம் கூறும் இயலுள் உலா, மடல், தூது, பரணி, பிள்ளைத்தமிழ், வண்ணம், சிந்து ஆகிய சிற்றிலக்கியங்களுக்கு இலக்கணம் கூறப் பெற்றுள்ளது. இத்தகு சிறப்புடைய இந்நூல் சுவடிப் பதிப்பாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வழி வெளி வந்துள்ளது.

- சா.கி.

**இலைக்டென்சுடீன் :** இது நடு ஐரோப்பாவில் ஆசுத்திரியாவுக்கும் சுவிட்சர்லாந்துக்கும் இடையே ஆல்ப்சு மலையின் மேலுள்ள இலைக்டென்சுடீன் ( Hiechtenste* ) நாட்டின் தலை நகர் வடுசு ( Vaduz ). மன்னராட்சி நடைபெறும் இந் நாட்டின் பரப்பளவு 160 ச.கி.மீ. மக்கள் தொகை 1989 கணக்கின்படி 30,000. மன்னராட்சிக்குட்பட்ட இந்நாட்டில் ஓரவை கொண்ட பாராளுமன்றம் உள்ளது. அதற்கு 15 உறுப்பினர்கள் 4 ஆண்டுகளுக்கொருமுறை தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாராளுமன்றத்தைக் கூட்டவும் கலைக்கவும் மன்னருக்கு உரிமை உள்ளது. பாராளுமன்றத்தின் பரிந்துரையை ஏற்று மன்னர், தலைமை அமைச்சரையும் நான்கு ஆட்சிமன்ற உறுப்பினர்களையும் 4 ஆண்டுக் காலத்திற்குப் பணியமர்த்துவார். தலைநகர் வடுசும் ஏனைய 10ஆட்சிப்பகுதிகளும் நல்ல சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளன. வேளாண்மை, கால்நடை வளர்த்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருந்த இந் நாட்டு மக்கள், இப்போது நெசவு, எஃகு ஆணி செய்தல், மருந்து உற்பத்தி, வெப் பமூட்டும் கருவிகள் செய்தல், பீங்கான்பொருட்கள் செய்தல் ஆகிய தொழில்களில் மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். இந்நாடு விரைவில் ஐ. நா.அவையில் ஓர் உறுப்பு நாடாகச் சேர விருக்கிறது.

- செ. இரெ. செ.

**இளம் இத்தாலிய இயக்கம் :** இத்தாலிய ஐக்கியம் கி.பி. 1871இல் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தனவற்றுள் மசினி (Mazzini) என்பவரால் 1831இல் மார்செயிலிசில் (Marsailles) தோற்றுவிக்கப்பட்ட 'இளம் இத்தாலிய இயக்கம்' ( The Society of young Italy ) ஒன்றாகும். அவர் இத்தாலிய இளைஞர்களிடையே நாட்டுப்பற்றை உண்டாக்கி புரட்சிக் கருத்துகளைப் பரப்பி, ஆயுதம் தாங்கியாவது அன்னிய ஆதிக்கத்தை, குறிப்பாக ஆசுதிரியாவின் ஆதிக்கத்தை ஒழித்து, இத்தாலியை ஐக்கியப்படுத்தி ஒரு குடியரசை நிறுவவேண்டுமென விரும்பினார். எனவே அவர் இத்தாலிய இளைஞர்களிடையே விடுதலை, ஒற்றுமை, தியாகம் போன்ற கருத்துகளைப் பரப்பினார். 'தியாகிகளின் குருதி பாய்ச்சப்பட்டால் கருத்துகள் விரைந்து வளர்கின்றன' என அவர் குறிப்பிட்டார். பண்டைய உரோமாபுரியின் புகழையும், அன்றைய இழிந்த நிலையையும் அவர்களுக்கு எடுத்துக்காட்டி சுதந்திரம், ஒற்றுமை ஆகியவற்றின் இன்றியமையாமையை உணர்த்தினார். "முதலாவது உரோம் சீசர்களின் ரோமாபுரியாக இருந்தது. இரண்டாவது உரோம்

போப்பாண்டவர்களின் உரோமாபுரியாக இருந்தது. மூன்றாவது உரோம் இத்தாலிய மக்களின் உரோமா புரியாக இருக்கவேண்டும்” என முழக்கமிட்டார். இத்தாலிய விடுதலைக்காக அன்னியரின் உதவியை நாடுவதை இவர் விரும்பவில்லை. எனவேதான், “இத்தாலியர் தங்களைத் தாங்களே விடுவித்துக் கொள்வர்” ( Italia fara de se - Italians will liberate them selves ) எனக்குறிப்பிட்டார். இக்கட்சியின் கிளைகள் விரைவாக இத்தாலி முழுவதும் ஏற்படுத் தப்பட்டு கி.பி. 1833இல் 60,000 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

மசினி 1830 சூலைப் புரட்சியின்பொழுது பீட்மாண்டு அரசர் ஆல்பர்டை தேசியவாதிகளுக்குத் தலைமை தாங்கி ஆசுதிரியா மீது படையெடுக்க வேண்டினார். தாம் அதற்குத் தேவையான உதவிகளைச் செய்வதாகவும் வாக்களித்தார். ஆனால் அரசர் இளம் இத்தாலிய இயக்கத்தின் மீது ஐயம் கொண்டு தேசியவாதிகளை நசுக்கினார். இளம் இத்தாலிய இயக்கத்தின் தலைவர்களுள் ஒருவரான கரிபால்டி (Garibaldi) 1833 இல் ஒரு புரட்சியில் பங்குகொண்டு, அது தோல்வியடைந்ததும், தென் அமெரிக்கா சென்று 14 ஆண்டுகள் தலைமறைவாக வாழ்ந்தார். சிசிலியில் 1843இல் வெடித்த புரட்சியும் ஒடுக்கப்பட்டது. மசினி கி.பி. 1848இல் உரோமாபுரியைக் கைப்பற்றி அதனை ஒரு குடியரசாக அறிவித்தார். தசுகனியும் (Tuscany) விடுதலை பெற்று ஒரு குடியரசாக அறிவிக்கப்பட்டு உரோமாபுரியுடன் இணைந்துகொள்ள விருப்பம் தெரிவித்தது. ஆனால் ஆசுதிரியா மீண்டும் தசுகணியில் மன்னராட்சியை ஏற்படுத்தியது. பின் பிரான்சின் மன்னர் மூன்றாம் நெப்போலியன் போப்பாண்டவரை உரோமாபுரியின் தலைவராக மீண்டும் கொண்டு வந்தார். எனவே மசினியால் இத்தாலிக்கு விடுதலைபெற்றுத்தர முடியவில்லை. இருப்பினும் அவருடைய கருத்துகள் இத்தாலிய இளைஞர்களின் உள்ளத்தில் ஆழப்பதிந்திருந்தது. இத்தாலிய ஐக்கியத்தின் மூன்றாவது கட்டத்தில் இளம் இத்தாலிய இயக்கத்தைச் சார்ந்த கரிபால்டி, சிசிலி, நேபிள்சு இரண்டையும் கைப்பற்றி சார்டினிய மன்னர் இரண்டாம் விக்டர் இமானுவலிடம் ( Victor Emanuel II ) ஒப்படைத்து இத்தாலிய ஐக்கியத்திற்கு வழிவகுத்தார்.

- சி. இரெ.

**இன்பக்கொள்கை :** அறவியலின் வாழ்வின் முடிந்த குறிக்கோளாக இன்பத்தை அடைதலையே குறிப்பர். வாழ்வின் மிக உயர்ந்த தன்மையாக இன்பத்தையே கருதுவர். இன்பமே வாழ்வின் முடிந்த முடிநிலையாக இருப்பது என்று கூறும் கொள்கைக்கு இன்பியற் கொள்கை ( Hedonism ) எனப் பெயர். அறிவியல் வாழ்வின் அடிப்படைக் குறிக்கோளாக இன்பத்தினை ஏற்றுக் கொள்வதற்கு இரண்டு காரணங்களை அறவியல் வல்லுநர்கள் கூறுவர். அவை 1. புலன் கடந்த பொருளியலைச் சார்ந்த காரணம் ( Metaphysical ), 2. உளவியல் சார்ந்த காரணம் (Psychological) இதில் முதலாவது உயிரானது இயற்கையிலேயே அதன் இயல்பான தன்மையில் இன்பத்தை நாடக்கூடியதாக இருக்கிறதென்றும் ஏனெனில் உயிரானது தன்னை உண்மையான நிலையில் அளந்தறிவதற்கு இன்ப உணர்ச்சிகளையே கருவியாகக் கொள்கிறது என்றும் கூறும். இரண்டாவது உளவியல் ஆய்வு வழியில் கூறப்படுவது.

உளவியல் விளக்கத்தின் படி மனிதன் தன்னியல்பாகவே இன்பத்தை நாடுகிறான். துன்பத்தை வெறுக்கிறான். ஆசை என்பது இன்பத்தை நோக்கியதே. அதன் இயல்பான குறிக்கோளே இன்பத்தினை நுகர்தல்தான். எனவே, பொதுவான நிலையில் மனிதனின் மனம் இன்ப ஈர்ப்புக்கு ஆளாவதால் இன்பமே அறவியல் வாழ்வின் குறிக்கோள் என உளவியலார் காரணம் தெரிவிப்பர். பொதுவாக இன்பியற் கொள்கை இரு வகைப்படும் அவை. 1. உளவழி இன்பியற் கொள்கை, 2. அறவழி இன்பியற் கொள்கை. மக்கள் எப்போதும் இன்பத்தையே நாடுவார்கள் என்பது உளவியல் சார்ந்த இன்பியற் கொள்கையின் அடிப்படை. மக்கள் கட்டாயம் இன்பத்தையே நாட வேண்டும் என்பது அறிவியல் சார்ந்த இன்பியற் கொள்கையின் கரு.

**உளவழி இன்பியற் கொள்கை :** இக் கொள்கையானது மனிதன் இயற்கையாகவே - இயல்பாகவே - இன்பத்தை நாடி ஓடுகிறான் என்கிறது. மனிதன் இவ்வுலகில் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இன்பம் வரும் அல்லது தரும் பொருள்கள் மீது ஆசைகொண்டு அதனை அடைய விரும்பி முயற்சிசெய்கிறான். இங்கு அவன் பொருளுக்காகப் பொருளை விரும்பவில்லை, மாறாக, பொருளுக்கு அப்பாலுள்ள இன்பத்தை அடைய

விரும்புகிறான். ஆசைகளின் முடிந்தநிலை இன்பத்தை யடைதலே என்று இக்கொள்கை வலியுறுத்துகிறது. இக்கோட்பாட்டினை வலியுறுத்துபவர்களில் முதன்மையானவர் சான் இசுடுவர்டுமில் ஆவார். அவர் இன்பம் தருகின்ற பொருள் மீது விருப் பமும், துன்பம் தருகின்ற பொருள் மீது வெறுப்பும் மக்களுக்கு இயல்பாகவே உண்டாகின்றன என்றார்.

**அறவழி இன்பியற்கொள்கை :** இன்ப உணர்வு என்ற ஒரே ஒரு செயலை அல்லது ஓர் அனுபவத்தை, நன்மையுடையது என்றோ, பயனுடையது என்றோ கூறலாம் என்பதுதான் இக்கொள்கையின் அடிப் படைக் கருத்தாகும். உளவழி இன்பியற் கொள்கை ஓர் உண்மைச் செய்தியை உள்ளீடாகக் கொண்டது என்று கூறினால், அறவழி இன்பியற் கொள்கையினை வாழ்வியற் குறிக்கோளாக அல்லது உயர்த் தகவுக் கோட்பாடாகக் கொள்ளலாம். அறவழி இன்பியற் கொள்கையின்படி இன்பத்தைக் கட்டாயம் தேடி அடையவேண்டும். இதுவே வாழ்வின் முடிநிலைக் குறிக்கோள் எனச் சிலர் கூறுவர். வேறுசிலரோ இக்கொள்கையை ஆசைகளுக்கு இன்பம் என்பது தான் அறிவியலாய்வுக்கு ஏற்றதாக அமைந்த அடை யும் பொருளாக உள்ளது என்று எடுத்துக்காட்டி இன் பத்தை அறிவியல் அடிப்படையில் அடையக்கூடிய குறிகோளாக அமைத்துக் கொள்ளலாம் என வரை யறுப்பார்கள்.

இந்த அறவழி இன்பியற் கொள்கையானது தன் னல அறவழி மற்றும் பிறர்நல அறவழி இன்பியற் கொள்கைகள் என இருவகைப்படும். இயற்கையில் மக்கள் இன்பத்தினையே நாடுவார்கள் அல்லது கட் டாயம் நாடவேண்டும் என்றிருந்தாலும் அது தன்னு டைய இன்பத்தினைப் பற்றியதாகவே இருப்பின் அக்கொள்கை தன்னலவழி இன்பியற்கொள்கை என வும் நாடும் அல்லது நாடப்படவேண்டிய இன்பம் பிறருக்காகவோ மனித இனம் முழுமைக்காகவோ இருப்பின் அக்கொள்கை பிறர்நல வழி இன்பியற் கொள்கை எனவும் அழைக்கப்படும். மேலும், தன் னல அறவழி இன்பியற்கொள்கையில் இரு உட்பிரி வுகளும் பிறர்நல அறவழி இன்பியற்கொள்கையில் இரு உட்பிரிவுகளும் உள. அவை முறையே, அறி வியல் இணையாத தன்னல அறவழி இன்பியற் கொள்கை, அறிவியலொடுபட்ட தன்னல அறவழி இன்பியற் கொள்கை, அளவு அடிப்படையிலான பிறர் நல இன்பியற் கொள்கை மற்றும் பண்பு அடிப்படை யிலான பிறர்நல அறவழி இன்பியற்கொள்கை என்பனவாகும்.

**அ. அறிவியலிணையாத தன்னல அறவழி இன்பியற் கொள்கை :** இக்கொள்கையினை அரிசு டிப்பசு, தாமசு, ஆப்சு, மாண்டவில்லி ஆகியோர் மிக வும் வற்புறுத்துவர். இவர்களில் அரிசுடிப்பசு சிற்றின் பத்தைவிட நட்பு, அன்பு முதலியவற்றால் வரும் இன்பமே உயர்ந்தது என்றும் அதைனைப்போன்றே கலை மற்றும் இலக்கியங்களால் வரும் இன்பங்களும் உயர்ந்தவையே என்றார். தாமசு, ஆப்சு இருவரும் இரக்கம், அறச்செயல், விருப்பம், பரிவு ஆகியவை பிறர்நலம் பேணும் பண்புகள் எனினும், அப் போர்வை யில் மறைந்திருப்பது தன்னலமே. என்றும் மனிதன் தன்னுடைய இன்ப விருப்பத்தை விட, பிறர் மேல் தன் னுடைய அதிகாரத்தை செலுத்தவே விரும்புகிறான் என்றும் கூறினார். அவரைப்பொறுத்தமட்டில் தனி மனிதனுடைய இன்பம், அவன் பிறர் மேல் செலுத்தும் அதி கார ஆற்றல் என்ற இரண்டுமே அவனுடைய வாழ் வில் உயர்நிலைத் தன்மை வாய்ந்த குறிக்கோள் என்று முடிவு செய்தார். இவர் கொள்கை பிற்காலத் தில் அறஇயலான தற்சார்புக் கொள்கை ( Ethical Subjectivism ) என்றழைக்கப்பட்டது. மாண்டலில்லி என்பாரும் தன்னலமே மனிதனின் முழுமையான உள்நோக்கம் என்றும், தன்னைத் தானே நேசித்தல் என்ற ஒன்று தான் மனித அறமாகக்கொள்ளவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

**ஆ. அறிவியலான தன்னல அறவழி இன்பியற் கொள்கை :** எபிகூரசு என்பவர் அறிவு ஒன்றே இன் பத்தை அடைதற்குரிய சரியான வழிகாட்டி என்று கூறியுள்ளார். மாறிக்கொண்டேயிருக்கும் உடலின் பம் வாழ்வில் உயர்ந்த தன்மையன்று என்றும், வாழ்வு முழுவதையும் இணைய அமைந்ததுவே இன்பம் என்றும் குறித்தார். காலஅளவு, ஆழ்ந்து செல்லல் என்ற இரண்டாலும் இன்பம் வேறுபடுகின்றது என்று கூறும் எபிகூரசு அறிவியல் மூலமாகத்தான் துன்பத்தை நீக்க முடியும் என்றார். அவர் கூற்றுப்படி, இன்பம் என்பது உடலிலிருந்து வரும் துன்பம் இல்லாததும் உயிரிலிருந்து வரும் அமைதியின்மையில்லாததும் ஆகும்.

**இ. அளவு அடிப்படையிலான பிறர்நல அறவழி இன்பியற் கொள்கை :** இதனை அளவு அடிப்படை யிலான பயன்முதற்கொள்கை என்றும் கூறுவர். கி.பி.

18ஆம் நூற். வாழ்ந்த உள்ளுணர்வுக் கொள்கையினர்களாகிய பட்லர், அட்சீசன் என்பவர்கள் அறவாழ்வை விளக்கம் செய்யும்போது, மிகப்பெரும்பாலான மக்களுக்குக் கிடைக்கும் அதிக மகிழ்வே நன்னடத்தையின் குறிக்கோளாகும் என்று கூறினார்கள். அந்தத் தொடரே மிகப்பெரும்பாலோருக்குக் கிடைக்கும் மிக அதிக மகிழ்வு ( The greatest happiness for the great number ) என வடிவம் கொடுக்கப்பட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பயன்முதற் கொள்கையின் அடிப்படைக் கோட்பாடாக விளங்கியது. இக்கொள்கையினை வலியுறுத்தியவர்களில் முக்கியமானவர்களாக செரமி பெந்தம் என்பாரையும் சான் இசுடுவர்டுமில் என்பாரையும் குறிப்பிடலாம். இன்பியற் கொள்கைக்கேயுரிய இன்பம், மகிழ்வு என்னும் சொற்களை எடுத்தாளாமல், இன்பத்தைப் பற்றி அதிகமாக வலியுறுத்தாமல், பயனை வலியுறுத்துவதே இக்கோட்பாட்டின் நோக்கமாக இவர்கள் கொண்டனர். பெந்தம், மில் ஆகிய இருவரும் பயன்முதற் கொள்கை என்ற ஒரு கொள்கையை அறவியற் கொள்கையாக வழங்கினாலும், இருவரும் அக் கொள்கையில் இரு பிரிவினராய்ப் பிரிந்தே நின்றார்கள்.

பெந்தமின் கொள்கை, அளவு முறையைக் கொண்டதாகவும், மில்லின் கொள்கை பண்பு முறையைக் கொண்டதாகவும் அமைந்திருந்தன. பெந்தம் இன்பத்தை அளவு ( Quantity ) என்ற அடிப்படையில் கணக்கிடலாம் என்றார். ஆனால் மில் இன்பத்தைத் தன்மை ( Quality ) என்ற அடிப்படையில் கணக்கிடலாம் என்றார். பெந்தம் ஏழு வகை அடிப்படைகளை வைத்து இன்பத்தைக் கணக்கிடலாம் எனக்குறித்துள்ளார். அவை. 1. ஆழ்ந்து தாக்கும் நிலை ( Intensity ), 2. காலஅளவு ( Duration ), 3. உறுதி ( Certainty ), 4. அண்மை ( Proximity ), 5. கலப்பற்ற தன்மை ( Purity), 6. பல இன்பங்களைத் தோற்றுவிக்கும் தன்மை ( Fecundity ), 7. பரப்பு ( Extent ).

**ஈ. பண்பு வழிப் பிறர்நல இன்பியற் கொள்கை :** இதனைப் பண்பியலான - அறிவியலான பயன் முதற் கொள்கை என்றும் கூறுவர். பயன்முதற் கொள்கை என்பது இன்பியற் கொள்கையிலிருந்து கிடைத்த மறுமலர்ச்சி இயக்கக் கொள்கை என்பர். இக்கோட்பாட்டினை சான் இசுடுவர்டு மில் மிகவும் வலியுறுத்தியுள்ளார். மில்லே முதன்முறையாக அளவு என்பதற்கு வேறாக, தன்மை வேறுபாடுகள் அளவு வேறுபாடுகளைப் போலவே இருக்கின்றன என்றார். சிலவகையைச் சார்ந்த இன்பங்கள் பிறவற்றைவிட அதிகமாக விரும்பத்தக்கவையாகவும் மதிப்பீடு செய்தற்குரியவையாகவும் அமைகின்றன என்றார். பொருட்களை மதிப்பீடு செய்ய முற்படும்போது தன்மையைப் போலவே அளவையும் அமைத்து மதிப்பீடு செய்வது போலவே இன்பங்களையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். அவ்வாறன்றி இன்பத்தின் மதிப்பீட்டினை அளவு என்ற ஒன்றை மட்டுமே சார்ந்து அமைப்பது தவறாகும் என்றும் விளக்கினார். இத்தகைய விளக்கத்தினாலேயே இக்கொள்கை அறிவியலொடுபட்ட பயன்முதற்கொள்கை எனப்பெற்றது.

இவ்வாறாக பல்வேறு வகைகளைத் தன்னகத்தே கொண்ட இன்பியற் கொள்கையானது அறிவியலில் ஒரு முக்கியமான இடத்தினைப் பெற்று அறவாழ்வின் வழிகாட்டி நெறியாகத் திகழ்கிறது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

- க. பா.

**ஈர்த்தல் விதிகள் :** மனிதன் ஒரு சமூக விலங்காகும். சமூகத்தில் அவன் மற்ற மனிதர்களுடன் வாழ முயலும்போது ஒரு சிலரால் அவன் ஈர்க்கப்பட்டும் ஒரு சிலரால் அவன் தள்ளப்பட்டும் விடுகிறான்.

**தோற்றம் :** பொதுஅறிவின் படி புதியவர்களுக்கிடையே ஈர்த்தல் ஏற்படுவதற்கு முதன்மைக்காரணம் தோற்றம் ஆகும். இது புறத்தோற்றம் அல்லது உடற்தோற்றம் ஆகும். ஈர்த்தல், ஓர் உடன்பாடு கொண்ட நீண்ட உறவிற்கு அடிப்படையாக வேண்டுமெனில் கவர்ச்சிகரமான புறத்தோற்றமே தேவைப்படும். ஈர்த்தல் என்னும் சொல்லை ஒரு மனிதன் அல்லது ஒரு பொருளின் புறப்பகுதிகளின் அடிப்படையில் தான் வரையறை செய்யமுடியும். இத்தகைய மேலோட்ட வரையறைகளை உளவியல் வல்லுநர் முழுமையாக ஏற்றுக்கொள்வதில்லை. ஏனெனில் மற்ற முக்கிய கூறுகளான ஈர்க்கப்படுபவரின் அடிப்படை, ஆளுமைப் பண்புகள், குழுவின் பொதுவிதிகள் போன்றவை கருத்தில் கொள்ளப்படவில்லை.

ஈர்த்தல் என்பது இருவழிச் செயலாகும். மேலும் புறத்தோற்றம் என்பது அடிக்கடி மாறும் தன்மை கொண்டுள்ளமையால் அது ஒருவரின் உண்மையான அமைப்பை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. எனவே, உளவியல் நோக்கின் படி பொதுஅறிவின்

அடிப்படையில் அமைந்த தோற்றம் என்னும் விதி இன்றியமையாததன்று. இருப்பினும் மின்னசோட்டா பல்கலைக்கழகத்தில் அறிவியல் வழி ஓர் ஆய்வை நடத்தி பொது அறிவு நோக்கான தோற்றம் என்னும் ஈர்த்தல் விதிக்கு ஆதாரத்தை அளித்தனர். இந்த ஆய்வை வால்சுடர் மற்றும் அவர் தம் உடன் ஆய்வாளர்கள் 1966ஆம் ஆண்டில் நடத்தினர்.

**ஒற்றுமை :** உடற்தோற்றம் என்பது ஈர்த்தல் ஏற்படக் காரணமாகிறது. இரு மனிதர்களுக்கிடையே ஏதாவது ஒன்று பொதுவாக இருந்தால் அதை ஒற்றுமை என்பர். அவ்வொற்றுமையினால் அவ்விருவரும் ஒருவரையொருவர் ஈர்த்துக்கொள்வர். சான்றாக இரண்டு இளைஞர்கள் இளமையில் வழுக்கைத் தலையுடன் இருந்தால் அவ்விருவரும் ஒருவரையொருவர் இனம் கண்டு கொண்டு ஈர்த்துக்கொள்வர். இதேபோன்று தேர்வில் முதல் வகுப்பில் தேறியவர்கள் ஒருவரையொருவர் கவரலாம். தேர்வில் தோல்வியுற்றவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு குழு அமைக்கலாம். தியோடர் நியுகாம் ( Theodore New Comb ) எனும் அமெரிக்க சமூக உளவியல் வல்லுநர் 1956, 1961, 1963 ஆம் ஆண்டுகளில் ஆய்வு நடத்தி ஒருவரின் மனப்பான்மை எவருடைய மனப்பான்மையுடன் ஒத்துச்செல்கிறதோ அவருடன் நெருங்கிப்பழக வாய்ப்பு மிகுதி என்று குறிப்பிட்டுள்ளார்.

**நிறைவுத்தன்மை :** ஒரு சில சமூக உளவியல் அறிஞர்கள், ஒற்றுமையை விட நிறைவுத்தன்மை ( Complementarity ) ஈர்த்தலுக்கு மிகுதியாக ஏற்படக் காரணமாகிறது என்கின்றனர். அதாவது யாரிடம் எது அவ்வளவாக இல்லையோ அது வேறொருவரிடம் மிகுந்து காணப்பட்டால் அது அவரிருவர்களுக்கிடையே ஈர்த்தலை உண்டாக்கும். எ.கா. எந்நேரமும் உரையாடுபவரும் வாயடக்கம் நிறைந்தவரும் ஒருவரையொருவர் கவரலாம். ஏனெனில் உரையாடலில் விருப்பம் உடையவருக்கு வாயடக்கம் கொண்டவர் ஏதும் கூறாமல் அவரை உரையாடவிட்டுப் பொறுமையாகக் கேட்கும் தன்மையைப் பெற்றுள்ளமையால் அவரை மிகவும் பிடிக்கலாம். அதேபோன்று வாயடக்கம் கொண்டவர் வாயடக்கத்தினால் நிரம்ப ஏதும் பேசாமல் இருந்தாலும் பொழுதுபோக்கிற்கு உரையாடலில் நாட்டம் கொண்டவரை நாடித் தம் நேரத்தை இன்பமாகக் கேட்டுக் கழிக்கலாம். இவ் விதியை ஆய்வுகள் மூலம் நிறுவியோரில் இராபர்டு வின்சு ( Robert Winch ), தாமசுபாண்டா ( Thomas Banta ) போன்றோர் குறிப்பிடத்தக் கவர்கள்.

**அடிக்கடித் தொடர்புடைமை** ( Frequent Exposure ) : சார்சு ஓமோன்சு ( Geroge Homans ) எனும் சமூகவியல் வல்லுநர் மனிதர்கள் நெருங்கிய தொடர்பு கொண்டு பழகினால் நாளடைவில் அத் தொடர்பு அவர்களுக்கிடையே ஒருவிதப் பாசத்தைத் தோற்றுவிக்கும் என்னும், அப்பாசமே ஈர்த்தலுக்குக் காரணமாக அமையும் என்கிறார். ஒருசிலர் இவ் விதியை ஒத்துக்கொள்வதில்லை. ‘பழகப் பழகப் பாலும் புளிக்கும்’ என்பது அவர்களின் வாதமாகும். இதற்கு ஓமன்சு போன்ற சமூகவியலார், ஒருவரின் பார்வைக்கு அப்பாற் சென்றால் அவர்தம் உள்ளத்திலிருந்து வெளியேறுவது போன்று அடிக்கடி எவரொருவர் மற்றவரைச் சந்திக்காமல் செல்கிறாரோ, அச்சந்திப்பின்மை அவரிருவரையும் ஈர்த்துப் பிணைக்காது என்று பதிலுரை தருகிறார். ஃபெசிடின்சர் மற்றும் அவர்தம் இணை ஆய்வாளர் கள் ( Festinger and his associates ) ஓமன்சின் கூற்றை ஆதரிக்கும் வகையில் தம் ஆய்வு முடிவினைத் தெரிவித்துள்ளனர்.

- வ. தே. சா.

**உடல் ஊனமுற்றோர் கல்வி :** உடல் ஊனம் என்பது கற்றலுக்குப் பெருந்தடையாக இருப்பதில்லை. ஊனமுற்றோருக்குச் சிறப்பு வசதிகள் செய்து தருவதன் மூலம் அவர்களது வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் உதவ முடியும். இந்தியாவில் பல்வேறு வகை உடல் ஊனங்கள் உள்ளவர்களது எண்ணிக்கை 1981இல் ஏறத்தாழ 10 இலட்சம் ஆகும். இது இந்திய மக்கள்தொகையில் 2 விழுக்காடு ஆகிறது. இத்தகையோர் சமூகத்திற்குச் சுமையாகவோ, இரந்து வாழ வேண்டிய நிலையிலோ விடப்பட்டிருத்தல் பண்புடைய சமூகத்திற்கு அழகன்று. உடல் ஊனமுற்றவர்களை மூன்று பெரும் பிரிவுகளில் அடக்கலாம். 1. பார்வையிழந்தவர்கள், 2. செவி கேளாதோர், 3. உடல் உறுப்புகளின் இயக்கக் குறைபாடு உடையோர். இதில் ஒவ்வொரு பிரிவினருக்கும் கல்வி அணுகுமுறைகள் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

**பார்வையிழந்தவர்கள் :** இந்தியாவில் 5 முதல் 14 வயதுடைய குழந்தைகளில் ஏறத்தாழ 1.26

இலட்சம் பேர் விழியிழந்தவர்களாக உள்ளனர் என 1981 ஆம் ஆண்டு புள்ளிவிவரம் கூறுகிறது. இவர்கள் மற்றக் குழந்தைகளுக்கு இணையான நுண்ணறிவும் மன வளர்ச்சியும் உடையவர்களாக ஆக முடியும். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த எலன் கெல்லர் பார்வை யற்றவர், பேச இயலாதவர், காதும் கேளாதவர் அவர் புலக்குறைபாடுகளையும் வென்று உலகப்புகழ் எய் தினார்.

விழியிழந்தவர்களுக்கான சிறப்புக் கல்வி முயற்சி கள் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே தொடங்கப் பெற்றன. வாலண்டைன்யென் என்பார் இத்துறையின் முதல் ஆசிரியர். போரில் பார்வையிழந்தவருக்காக 1943ஆம் ஆண்டு டேராடுனில் தொடங்கப்பட்ட புனித தண்சுடன் விடுதி இந்தியாவில் விழியிழந் தோர் கல்வியின் முன்னோடியாக அமைந்துள்ளது. இதை 1950இல் மையஅரசு ஏற்று நடுத்தர வயதுள்ள வர்களுக்கு ஈராண்டு காலக் கல்வியும், தொழிற் பயிற்சியும் இலவசமாகத் தந்துவருகிறது.

குசராத்திலுள்ள பன்சர் என்னுமிடத்தில் பார்வை யற்றோருக்கு எளிய வேளாண் தொழில் பயிற்சி அளிக்க ஒரு தனியார் நிறுவனம் இயங்கி வருகிறது. தமிழகத்தில் சென்னை பூவிருந்தவல்லியிலுள்ள விழி யிழந்தோருக்கான மேநிலைப்பள்ளியும் ஆசிரியப் பயிற்சிப் பள்ளியும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

பார்வையற்றோருக்கான தேசிய மையம் டேரா டுனில் செயல்படுகிறது. இதோடு இணைந்த அச்சகத் தில் பிரெயில் வாசிப்புக் கருவிகள் உருவாக்கப்படு கின்றன. இங்குள்ள தேசிய பிரெயில் நூலகம் உல கின் சிறந்த நூல்களை விழியிழந்தோர் படித்துப் பயன்பெற வழிவகுத்துள்ளது.

பார்வையற்றோருக்கான கல்விக்குச் சில சிறப்பு நோக்கங்கள் உள்ளன. முதலில் இக்குறைப்பாட் டினைப் பற்றி வருந்தி தாழ்வுணர்ச்சி அடையாமல் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொண்டு சமூகத்தில் உரிய பங்கினைப்பெற இவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். தளரா நோக்குடைய வாழ்க்கைத் தத்து வமும், சமூக இயல்புகளும் இவர்களது முன்னேற்றத் திற்கு உதவியாக அமையும். தக்க தொழிற் கல்வி அளிப்பதன் மூலம் பொருளாதாரக் காப்புணர்ச்சியும் அளிக்கப்படல் வேண்டும். சமூகத் திறன்களோடு அன்றாடச் செயல்பாடுகளைச் செவ்வனே நிறை வேற்றவும் பயிற்சி தருதல் வேண்டும்.

பார்வையற்றோருக்கு அதை ஈடு செய்யும் வகை யில் பிற புலன்களை நுட்பமாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். எ.கா. தொடுபுலன் உணர்ச்சி மூலம் படிக்கவும் எழுதவும் கற்பிக்கவும் இயலும். பிரெயில் முறையில் படிப்பு நூல்களும், எழுதுகோல் களும், தட்டச்சுப்பொறிகளும் உருவாக்கப்பட்டுள் ளன. ஒலிப்பதிவு நாடாக்கள், ஒலித்தட்டுகள் ஆகியன இவர்களது கல்வியில் பயன்படுகின்றன.

விழியிழந்தோருக்கான பள்ளிகளைத் தொண்டு நிறுவனங்களும் அரசும் பல இடங்களில் தொடங்கி யுள்ளன. பிரெயில் முறையில் உருவாக்கப்படும் நூல்கள் அஞ்சல் துறையில் கட்டணமின்றி எடுத்துச் சென்று வழங்கப்பெறுகின்றன. இன்று உயர் பட்டங் களும் ஆராய்ச்சிப் பட்டங்களும் பெறுவது விழியிழந் தோரால் இயல்வது ஆகிவிட்டது. எனினும், பெரும் பாலான விழியிழந்தோர் பள்ளிகளில் தொழிற் கல்வி, தொழில்நுட்பக் கல்வி ஆகியன இன்றியமை யாத பகுதிகளாக உள்ளன.

**காண்க** : பார்வைக்குன்றியோர் கல்வி ( த. க )

**செவி கேளாதோர் :** பிறவியிலேயே செவி கேளாதவர்களும், வளரும் பருவத்தில் கேள்விப் புலன் பழுதடைந்தோரும் கல்வி பெற ஏற்ற முறை கள் உருவாகியுள்ளன. இவர்கள் பிறரோடு எல்லாத் துறைகளிலும் இணையாக நிற்க முடியும். உதட்ட சைப்பைக் ( Lip reading ) கொண்டு விழிவழியாகப் பல காட்சிகளைக் காண்பதாலும் இயல்பான முறை யில் படிப்பதாலும் இவர்கள் அறிவு வளர்ச்சி பெறு கிறார்கள். இவர்களுக்கெனச் சிறப்பான செய்தித் தொகுப்புகளைத் தொலைக்காட்சி வழங்குகிறது.

ஒலித்திறன் கருவியைக் ( Audio Meter ) கொண்டு செவிப்புலனின் திறனிழப்பைக் கணக்கிட்டு ஏற்ற ஒலிக்கருவிகளைப் பயன்படுத்துவது பெரும்பாலோ ருக்கு ஏற்றதாக உள்ளது. இதை அணிவது மூக்குக் கண்ணாடி அணிவதற்கு ஒப்பாகும். தாழ்வுணர்ச்சி கொள்ளத் தேவையில்லை. இவர்கள் சாதாரணப் பள்ளிகளில் பிற குழந்தைகளோடு சேர்ந்து பயில்வதே ஏற்றது. ஒரு சிலர் கேட்கும் திறனையும் பேசும் திறனையும் ஒருங்கே இழந்துள்ளனர். இவர்களது தொடுபுலன்களுக்குப் பயிற்சியளிப்பதின் மூலம் பல் வகை காட்சிப்பொருள்களைப் பயன்படுத்துவதன்

மூலமும் கல்வியளிக்கமுடியும். செவிகேளாதோருக்குக் கற்பிக்கத் தேவையான ஆசிரியர்களை உருவாக்க மையஅரசினால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையங்கள் ஹைதராபாத்திலும், மைசூரிலும் உள்ளன.

**உடல் உறுப்புகளில் ஊனமுற்றோர் :** விரல்கள், கை, கால் ஆகியவற்றை ஓரளவோ, முழுமையாகவோ இழந்தவர்கள் கல்வி நிலையங்களுக்குச் செல் வதற்கோ, குறிப்பிட்ட சில செயல்களைச் செய்யவோ இயலாமல் இருக்கலாம். எனினும் விழியும் செவியும் நன்னிலையில் இருப்பதால் இவர்கள் மற்ற குழந்தைகளோடு சேர்ந்து கற்பதில் குறிப்பிடத்தக்க இடர்பாடு இல்லை. எனவே உடல் ஊனமுற்ற மாணாக்கருக்குத் தேவைப்படுவன உந்துவண்டி போன்ற வசதிகளேயன்றி தனிப்பள்ளிகள் அல்ல. பல்வேறு தொழிற்பயிற்சி நிறுவனங்களிலும் பயிற்சியின் தன்மையைக் கருத்தில் கொண்டு உடல் ஊனமுற்றோர் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

தேசிய அளவில் ஊனமுற்றோருக்கான ஒருங்கிணைந்த கல்வித்திட்டம் ( Project Integrated Education for the Disabled ) தொடங்கப்பட்டுள்ளது. இதற்கான தனித்துறை தேசியக்கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் அமைக்கப்பெற்றுள்ளன. வேலை வாய்ப்புகளிலும் இடஒதுக்கீடு செய்வதை அரசு வலியுறுத்தி வருவதால் பல்வகை உடல் ஊனமுற்றோரும் தமக்கேற்ற முறையில் தமக்குகந்த கல்வியைப் பெற்று தமது தகுதிக்கேற்ற பணியில் அமர்ந்து தமது ஆற்றல்களைத் தமக்கும் நாட்டிற்கும் பயன்படுத்திக் கொள்ளச் சிறப்புக் கல்வித்திட்டங்கள் துணை நிற்கின்றன.

- எஸ். நா.

**உடலொறுப்பு :** உடலொறுப்பு அல்லது உடல் சார்ந்த தண்டனை ( Corporal Punishment ) என்றால், கசையடி கொடுத்தல் முதலியவற்றைப் போன்ற உடலுக்கு விதிக்கப்படும் தண்டனையாகும். இந்த உடல் தண்டனை, சிறைவாசத் தண்டனையிலிருந்து வேறுபட்டதாகும். ஆனால் இச்சொற்றொடருக்கு விரிவான அளவில் பொருள் தருவதாயின், உடல் மீது விதிக்கப்படும் எல்லாவகையான தண்டனைகளையும் அதாவது சிறைத்தண்டனை உட்பட அனைத்து வகையான தண்டனைகளையும் இது உள்ளடக்கி நிற்கும்.

ஓர் அரசானது தன் எல்லைக்குள் உள்ள சமூகத்தைச் சிறந்த முறையில் நிருவகிப்பதற்குச் சட்டங்களை இயற்றுகிறது. அவ்வாறு இயற்றப்படும் சட்டங்களுக்கு அந்த அரசின் அதிகாரத்தின் கீழுள்ள குடிமக்கள் கட்டுப்பட்டு நடந்தால்தான், அந்த அரசு தான் கருதுகிறவாறு முறையான நல்லாட்சியை நடத்த முடியும். அதனால் சட்டம் என்பது, உயர்நிலை அதிகாரத்தில் உள்ளவர்களால் விதிக்கப்பட்டு அதற்குக் கீழ் நிலையிலுள்ளவர்கள் கட்டுபட வேண்டிய ஒன்றாகும். அவ்வாறு கட்டுப்பட்டு நடக்கவில்லையென்றால், அரசு எண்ணுகிறவாறு ஆட்சியைத் திறம்பட நடத்த இயலாமற்போய்விடும். ஆகையால், தான் இயற்றும் சட்டத்திற்கு இணங்கிக் கட்டுப்பட்டு நடக் குமாறு தன் குடிமக்களைச் செய்வதற்கு, அரசிற்கு அதிகாரம் தேவை. அந்த அதிகாரம், தண்டிக்கின்ற அதிகாரமாகும். அத்தகைய ஒரு தண்டனையின் மூலமாகத்தான், தான் இயற்றிய சட்டங்களைத் திறம்படச் செயற்படுத்தி, நாட்டை முறைப்படுத்த அரசிற்கு முடியும்.

தண்டனைக்குரிய குற்றச்செயல்கள் இன்னின்னவை என்று சட்டங்களிலேயே குறிப்பிட்டு, அக் குற்றச்செயல்களைச் செய்தவர்களுக்கு இன்ன தண்டனைகள் விதிக்கப்படும் என்றும் அச்சட்டங்களிலேயே கூறப்படுவது வழக்கம். சட்டங்கள் பொதுவாகச் சில வகைமுறைகளை விளம்பும். அவ்வகைமுறைகளை மீறினால், அவ்வாறு மீளுகைக்கு என்ன தண்டனை என்பதையும் அவை குறிப்பிட்டுக் கூறும்.

இந்திய நாட்டைப் பொறுத்த அளவில், தண்டனைகள் என்னென்ன என்பதைக்கூறும் தனிச்சட்டம் ஒன்று உள்ளது. அதற்கு இந்தியத் தண்டனைச் சட்டம் ( Indian Penal Code ) என்று பெயர். இந்தச் சட்டம், ஆறு வகைத் தண்டனைகளைக் குறிப்பிடுகின்றது. முதலாவது தண்டனை மரண தண்டனை, இரண்டாவது தண்டனை நாடு கடத்தல், மூன்றாவது தண்டனை கடுமையான உடலுழைப்போடு கூடிய கடுங்காவல் தண்டனை, நான்காவது தண்டனை சிறைவாசத் தண்டனை, ஐந்தாவது தண்டனை சொத்து அரசாங்கத்திற்குத் தண்ட இழப்பாகிவிடுகின்ற தண்டனை, ஆறாவது பணத்தண்டனை ( அபராதம் ) ஆகும். பண்டை நாளில் பழிக்குப்பழி என்கிற வகையில் தண்டனை வகைகள் நிலவிவந்தன. அதாவது, உயிருக்கு உயிர், இரத்தத்திற்கு இரத்தம், பல்லுக்குப்பல், கண்ணுக்குக் கண் என்று எந்த உறுப்புக்கு ஊறு செய்யப்பட்டதோ அதைச் செய்தவனின் அதே உறுப்புக்கு அதே

தண்டனையாக விதிக்கப்பட்டது. இவையெல்லாம் கொடூரமான தண்டனைகளாகும். சுருங்கக்கூறின், பழிவாங்கும் வகையில் தண்டனை விதிப்பதும், அச்சுறுத்தும் வகையில் தண்டனை விதிப்பதும், குற்றங்களைத் தடுக்கும் வகையில் தண்டனை விதிப்பதும், சீர்திருத்தும் வகையில் தண்டனை விதிப்பதும் தான் தண்டிக்கும் வகைகள் ஆகும்.

உடல் உறுப்பு அல்லது உடல் சித்திரவதை செய் தல் என்பது, பண்டை நாளைய தண்டனை வகைகளில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. இத்தகைய தண்டனை முறை அந்நாளில் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளது. ஆனால் மாறிவரும் உலக நிலைக்கேற்ப, இந்தத் தண்டனை முறையானது கொடூரமானது என்று கருதப் பட்டு, குற்றச்சட்டத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

இத்தகைய உடல் தண்டனையானது, எந்தக் குற்றச் செயலை ஒருவன் புரிந்தானோ அவன் அதனால் அடைந்த இன்பத்தின் அல்லது நன்மையின் அளவிற் கேற்ப அளிக்கப்பட்டு வந்தது. குற்றவாளிக்குச் சூடு போடுதல், ஒருவகை உடல் தண்டனையாகும். அவன் கை, தோல்பட்டை, நெற்றி ஆகிய இடங்க ளில் சூடுபோடுவது இம்முறை, விதையடித்தல் என் பது இன்னொரு வகையான உடல்தண்டனை. குற்றவாளி யின் கை விரல் அல்லது கால் விரலை வெட்டி விடு வதும் ஒருவகையான உடல் தண்டனையே. மரத் தால் செய்யப்பட்ட சட்டத்தில் குற்றவாளியை மாட்டித் துன்புறுத்தல், இந்த உடல் தண்டனை முறைகளில் ஒன்றாகும். அதற்குப் பதிலாக குற்றவாளியை இரும் புக்கூண்டுகளில் அடைப்பதும் வழக்கமே. இரும்புக் கம்பி இடுக்குகளில் குற்றவாளியை அடைத்துச் சித்திரவதைச் செய்வதும், உடல் தண்டனை முறையாக இருந்து வந்துள்ளது. இருந்து பெருவழக்காக இருந்த உடல் தண்டனை முறை என்னவென்றால், சாட்டை யாலோ, சவுக்காலோ குற்றவாளியை அடித்துத் துன் புறுத்துவதாகும். ஊசியால் குத்துவதும் இத்தகைய முறையின்பாற்பட்டதாகவே இருந்து வந்தது.

இந்த உடல் தண்டனையை மரண தண்டனை யோடு இணைத்தும் சிலவேளைகளில் அளிக்கப் பட்டு வந்துள்ளது. அதாவது குற்றவாளியின் கையையோ, காலையோ வெட்டி, மரண தண்டனையை நிறைவேற்றியுள்ளனர். குற்ற வாளியைக் கல்லால் அடித்து அல்லது சாட்டையால் அடித்து, அவனுக்கு மரணதண்டனை விதிக்கப்பட் டுள்ளது. இந்திய நாட்டில் நெடுங்காலமாக நிலவிவந்த இத்தகைய உடல் உறுப்பு முறையானது 1955ஆம் ஆண்டிலிருந்து அடியோடு நீக்கப்பட்டு விட்டது. நாகரிகமடைந்து வரும் நாடுகளில், இத் தகைய உடல் சார்ந்த தண்டனைகள் காலத்திற் கொவ்வா என்றும், அவற்றிற்கு நேர்மாறான விளைவு கள் தாம் சமூகத்தில் விளையும் என்றும், அதனால் அவற்றிற்குப் பதிலாக, குற்றவாளிகளை மனரீதியாகத் திருந்துவதற்கு முயலுவதே சிறந்தது என்றும் கருதப் பட்டு வருகின்றது. உலகெங்கும் இத்தகைய மாற்றத் திற்கு ஆதரவான கருத்து பரவி வருவதைப் பெருமளவு காணலாம். பல நாடுகளில், தூக்குத்தண்டனை விதிப் பதையே கூட தவிர்த்தல் வேண்டும் என்கிற அளவிற் கும் தீர்ப்பு வழிச்சட்டங்கள் பெருகி வருகின்றன.

சிறைச்சாலையில் உடல் தண்டனை - சிறைத்தண் டனை விதிக்கப்பட்டுள்ள அல்லது சீர்திருத்தப் பயிற் சிப் பெற விதிக்கப்பட்டுள்ள அல்லது தடுப்புக் காவ லில் வைக்கப்பட்டுள்ள ஒருவன், சிறைச்சாலை அலு வலர் ஒருவர் பால், உடல் ரீதியான வன்முறையைப் பயன்படுத்தும்போது அவனுக்கு உடல் தண்டனை விதிப்பதற்குச் சிறைச்சாலை விதிகள் சிறைச்சாலை அதிகாரங்களுக்கு அதிகாரம் வழங்கலாமேயன்றி மற்றபடி சிறைச்சாலைக்கு வெளியில் செய்யப்பட்ட குற்றங்களுக்கு தண்டனை வழங்கும் அதிகாரம் சிறைச்சாலை அதிகாரிகளுக்குத் தரப்படுதல் கூடாது.

சிறையிலுள்ள கைதி ஒருவருக்கு உடல் தண்டனை விதிக்கப்படுவதற்குச் சில நிபந்தனைகள் உண்டு. சிறைச்சாலையைப் பார்வையிடும் குழுவோ, பார்வையாளர் குழுமமோ, பெருநகர் குற்றவியல் நடுவரோ, அரசினால் இதற்கென நியமிக்கப்படும் பிற குற்றவியல் நடுவரோ ஆணையிட்டதின் பேரில் ஆணையனுமதியின் பேரில் சான்றளிக்கப்படும் விசா ரணையொன்றை நடத்தி, அதற்குப்பின்பு தான் அத் தகைய உடல் தண்டனையை விதிக்க முடியுமேயல்லா மல், பிறவாறாக அன்று. குறிப்பிட்ட வேளை களில் பிற எந்த தண்டனையோடுங்கூட அல்லது அதற்குப் பதிலாக உடல் தண்டனையை விதிக்க ஆணையிடு வதற்குத்தான் சிறைச்சாலை விதிகள், பார்வையிடுங் குழுமத்திற்கு அளிக்கின்றனவேயல்லாமல் கசையடி யோடு கூட, தனிமைச் சிறைவாசத்திற்கு அக்குழு ஆணையிட முடியாது. அதேபோல் கட்டுப்படுத்தப் பட்ட உணவு வழங்குவதற்கும் ஆணையிட முடியாது. அத்தகைய ஓர் ஆணையானது 21 வயதிற்குட்பட்ட ஒருவரைப் பிரம்பினால் 12 அடிகள் வரையிலும் அடிப்

பதற்கு அல்லது மற்ற எவரையும் 18 அடிகள் வரையிலும் அடிப்பதற்கு அல்லது ஒன்பது இழை முடிச்சுகளை உடைய ஒரு வார்க் கசையினால் அடிப்பதற்கு அதிகாரமளிக்கலாம். ஆனால் அந்த ஆணையும் கூட அரசு அதை உறுதிப்படுத்திய தற்குப் பிறகு மட்டுமே நிறைவேற்றப்படலாம். அதில் மாற்றங்கள் எவற்றையேனும் அமைச்சர் செய்வராயின் அத்தகைய மாற்றங்களுக்கு உட்பட்டே, அத்தகைய ஆணை நிறைவேற்றப்படவேண்டும். அமைச்சரும், அந்த ஆணையின் படியொன்றையும், விசாரணையில் தரப்பட்ட சான்றுக் குறிப்புகளையும் பார்த்த பின்புதான், தேவைப்பட்டால் அதில் மாற்றங்களைச் செய்யலாம். அவர் அந்த ஆணையை உறுதிப்படுத்த மறுப்பாராயின், அதற்குப் பதிலாக மற்றவகைத் தண்டனைகள் விதிக்கப்படலாம். ஆனால் அத்தகைய ஆணையானது எத்தனை அடிகள் கொடுக்கப்பட வேண்டும் என்பதையும் எந்தக் கருவியின் மூலம் அவற்றைக் கொடுக்க வேண்டும் என்ப தையும் திட்டவட்டமாகக் குறித்துரைத்தல் வேண்டும்.

சிறைச்சாலைப் பார்வையிடுங்குழுவானது உடல் தண்டனையொன்றை விதித்து ஆணையிடுங்கால், அதற்கு மாற்றுத்தண்டனைகள் என்னென்ன என்பதையும் குறித்துரைக்கலாம். இவ்வாறு உடல் தண்டனைகள் வழங்கப்படும்போது, என்னென்ன பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும் என்ப தைச் சிறைச்சாலை விதிகள் தெளிவாகக் கூறுகின் றன. அவற்றைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக, சிறைக்கைதி அத் தகைய உடல் தண்டனையைத் தாங்கிக்கொள்வதற்கு ஏற்ற நிலையிலுள்ளார் என்று சிறைச்சாலை மருத்துவ அதிகாரி சான்றிதழ் அளிக்க வேண்டும். அத்தகைய ஒரு சான்றிதழ் இல்லாமல் அத்தண்டனை வழங்கவே கூடாது. 1952ஆம் ஆண்டு சிறைச்சாலைகள் சட்டத்தில் வகை செய்யப்பட்டவாறு தவிர, பிற வகையில் எந்தச் சிறைச்சாலையிலும் உடல் தண்டனை விதிக்கப்படுதல் ஆகாது.

**திருந்துவதற்காகத் தண்டித்தல் :** ஒரு குழந்தையை அதன் பெற்றோரும், ஒரு பயிற்சியாளரை அல்லது படிப்பாளரை அவரது ஆசிரியரும், சட்டமுறையாகத் திருத்துகின்றபோது அடித்தால் அல்லது அதுபோன்ற ஒரு செயலைச் செய்தால், அது தாக்கிய ஒரு குற்றச்செயலாகாது. அதேபோன்று, குற்றத் தீர்ப்புரைக்கப்பட்ட ஒரு குற்றவாளிக்கு, முறையான அதிகாரியானவர் சட்டத்தின்படி தண்டனை வழங்கும் போது செய்யப்படும் எந்த ஒரு செயலும், தாக்கிய ஒரு குற்றச்செயலாக ஆகாது. முதலில் சொல்லப்பட்ட இரண்டு வேளைகளிலும் தண்டித்துத் திருத்தல் என்பது நியாயமானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் முறையான தகுந்த ஒரு கருவியினால் வழங்கப்படுவதாகவும் இருத்தல் வேண்டும். அதுவும் ஒரு பெண்ணைப் பொறுத்த அளவில், அது கண்ணியமான முறையிலும் இருந்தாக வேண்டும். தம் குழந்தை உரிய வயது எய்தாத நிலையில், அதைத் திருத்துவதற்காக அதைத் தண்டிப்பதற்குப் பெற்றோருக்கு அல்லது சட்டமுறைப்படியான பெற்றோராக உள்ளவருக்கு உரிமையுண்டு.

மாணவரொருவரைத் திருத்துவதற்காக அவரைத் தண்டிப்பதற்குப் பள்ளி ஆசிரியருக்குள்ள உரிமையானது, பெற்றோருக்குள்ள உரிமையின் ஒப்படைவாகக் கருதப்படும். பொறுப்பு வாய்ந்த ஓர் உதவி ஆசிரியருக்கும் அது பொருந்தும்.

ஒரு குழந்தையை அல்லது இளைஞரைத் திருத்துவதற்காக அவரைத் தண்டிப்பதற்கு, அக்குழந்தை அல்லது இளைஞரின் மீது சட்டமுறையான அல்லது பொறுப்பு அதிகாரத்தைப் பெற்றிருக்கின்ற பெற்றோருக்கோ ஆசிரியருக்கோ மற்றருக்கோ உள்ள உரிமையானது, சட்டத்தினால் ஏற்கப்பட்ட ஒன்றாகும். அக் குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் தொடர்பான சட்டத்தினால் பாதிக்கப்படுவதில்லை.

திருத்துவதற்காக, மிதமான நியாயமான தண்டனையைப் பள்ளி ஆசிரியர் மாணவர்களுக்கு விதிக்கலாம். ஆனால் வெறித்தனத்தாலோ, தகாத கருவி மூலமாகவோ, உயிருக்கோ உறுப்புக்கோ ஆபத்து விளைவிப்பதாகவோ, அத்தண்டனை இருத்தல் கூடாது. அதேபோல் அது மிகையானதாகவும் இருத்தல் ஆகாது. மாணவரின் தாங்கும் சக்திக்கு மேற்பட்டதாகவும் அத்தண்டனை இருத்தல் கூடாது. கையில் பிரம்பினால் அடித்தல் முறையான தண்டனைதான். மாணவிகளைப் பொறுத்த அளவிலும் இது சட்டப்படியான தண்டனைதான் என்றாலும் இது விரும்பத்தக்கதன்று. ஆனால் தலையில் அடிப்பது முறையானதாகாது.

எசமானர் ஒருவர், தம் பணியாளரைத் திருத்துவதற்காக மிதமான அளவில் தண்டிக்கலாம் என்று முன்பு தீர்மானிக்கப்பட்டது. கி.பி.1785 கல்கத்தா வழக்

கொன்றில், திருத்துவதற்காகத் தண்டிக்கும் இந்த உரிமை எசமானருக்கு உண்டு என்று தீர்மானிக்கப் பட்டது. அதேபோல் தொழில் பழகும் பயிற்சியாளர் ஒருவரின் நடத்தைக்காக அவரை திருத்துவதற்காக அவரை நியாயமான முறையிலும் மிதமான வகை யிலும் தண்டிப்பதற்கு, பயிற்சி அளிப்பவருக்கு உரிமை யுண்டு என்பதிலும் ஐயம் இல்லை.

கப்பலின் தலைவர், தம் பணியாளர் எவரேனும் கலகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டால் அதற்காக மிதமான வகையில் நியாயமான ஒரு தண் டனையை அவருக்கு விதிப்பதற்கு அதிகாரம் பெற்றவ ராவர். ஆனால் கீழ்ப்படியாத அல்லது கலகம் விளை விக்கும் கப்பல் பணியாளர் ஒருவரைச் சாட்டையால் அடிக்கும் இந்த உரிமையானது இப்போது வழக் கொழிந்ததாக ஆகியுள்ளது.

கடினமான உழைப்போடுகூடிய கடுங்காவல் தண்டனையும், சவுக்கடித் தண்டனையும் இப்போது நீக்கப்பட்டுவிட்டன. இத்தகைய தண்டனை இப் போது ஒரு நீதிமன்றம் விதிக்கமுடியாது. ஆனால் இராணுவ நீதிமன்றம் அதை விதிக்கலாம்.

- தி.வ.தெ,

**உடன்கட்டையேறுதல் :** வட இந்திய இந்துக் களிடையே நிலவிவந்த மிகக்கொடிய சமூக வழக்கங் களுடன் சதி என்னும் உடன்கட்டையேறுவதும் ஒன் றாகும். கணவனை இழந்த கைம்பெண்ணை அவனது சிதைத் தீயிலிட்டுக் கொளுத்திக் கொல்வர். அவ்வாறு உயிர்நீத்த பெண்ணை சதி, அதாவது உண்மையான மனைவி என்று அழைத்தனர். அக்கைம்பெண் ணுக்கு இட்ட சதி என்ற பெயரைத் தவறாகப் புரிந்து கொண்ட ஐரோப்பியர் இக்கொடிய வழக்கத்திற்குச் சதி எனப் பெயரிட்டனர். கணவனை இழந்த கைம் பெண்ணைக் காப்பாற்றுவது யார் என்ற கேள்வியும் பொறுப்பும் எழுந்ததால் அவளைக் கொன்று தீர்த்தனர். சிலர் தங்க ளுடைய மறைவுக்குப்பின்னர் தங்களுடைய மனைவி யர் கற்பு நெறி தவறக்கூடாது என நினைத்ததால் தங்க ளுடனேயே அவர்களையும் எரித்துவிட வேண்டு மென்றனர். கல்கத்தாவில் இது அதிகமாக இருந்த தற்குக் கார ணம் அப்பகுதியிலிருந்த சட்டப்படி கணவன் இறந்ததும் அவனுடைய சொத்து முழுவதும் அவனுடைய மனைவியைச் சேரவேண்டும். எனவே பொருளாசை பிடித்த அவனுடைய உறவினர் அவனு டைய மனைவியையும் எரித்து சொத்தைப் பகிர்ந்து கொண்டனர். இந்து சமூகத்தில் பெண்களின் எண் ணிக்கை ஆண்களை விட அதிகமாக இருந்ததால், மகளிருக்குத் திருமணம் செய்வது கடினமாக இருந்த தால் கைம்பெண்கள் வேறு திருமணச்சந்தைக்கு வந்து விடக் கூடாது எனக் கருதி வைதீகர்கள் இவ்வேற் பாட்டை ஆதரித்தனர். இந்து சமூகத்தில் நிலவிய குழந்தை திருமணம், பெண் குழந்தைகளைப் பிறந்த தும் கொன்றுவிடுவது, பலதாரமணம், வரதட்சிணை, சதி, கைம்பெண் மறுமணத்திற்கு எதிர்ப்பு ஆகிய அனைத்துக் கொடுமைகளுக்கும் அடிப்படைக் கார ணம் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் அதிகமாக இருந்ததேயாகும்.

கைம்பெண்கள் சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, வெறுப்புடன் நடத்தப்பட்டனர். அவர் களுடைய தலை மழிக்கப்பட்டு, வாழ்க்கை வசதிகள், மலர், அணிகலன், அழகிய ஆடை, நல்ல உணவு, படுக்கை ஆகியவை மறுக்கப்பட்டு நற்காரியங்களில் பங்குபெற முடியாமல் செய்யப்பட்டனர். எனவே கண வனை இழந்தபின்னர் இழிந்த வாழ்க்கை வாழ விரும் பாத மகளிர் சிலர் விருப்புடன் உடன் கட்டையேறினர். அவ்வாறு செய்த மகளிர் துறக்கம் சென்று தம் கண வனுடன் பன்னெடுங்காலம் இனிதே வாழ்வர் என நம்பப்பட்டதால் சிலர் உடன்கட்டையேற முன்வந்த னர். ஒருசிலர் தம் கணவர்மீது கொண்டிருந்த அன் பினால் பிரிவாற்றாமையைத் தாங்கவியலாது உயிரை விடத் துணிந்தனர். ஆனால் பெரும்பன்மையான கைம்பெண்கள் தங்கள் உறவினரால் கட்டாயப்படுத் தப்பட்டே உயிருடன் எரிக்கப்பட்டனர். உடன்கட்டை யேறும் பெண்ணின் கணவனுடைய தாய், தந்தையர் வழியில் வந்த மூன்று தலை முறையினர் தாங்கள் செய்த பாவங்கள் அனைத்தும் நீக்கப்பெறுவர் எனக் கருதப்பட்டது. மேலும் அவர்கள் அவளுக்குச் சேர வேண்டிய அவளுடைய கணவனின் சொத்து முழு வதையும் அடைய விரும்பினர். எனவே, உறவினர்கள் அவளைச் சிதைத்தீயிலிட்டு எரிப்பதில் ஆர்வம் காட்டி னர். அப்பெண்கள் அபின் போன்ற போதைப் பொருள் கள் ஊட்டப்பட்டு, தன்னினைவு அற்ற நிலையில் சிதையில் இடப்பட்டனர். அவளுடைய உடல்மீது கட்டைகள், இலைகள், வைக்கோல் ஆகியவற்றை வைத்து மூடி, அவ்வுடலை இரு பச்சை மூங்கில்கள் கொண்டு நன்றாக அழுத்திக்கொண்ட பின்னரே

சிதைக்குத் தீயிட்டனர். அங்கு கூடியிருந்த மக்கள் எழுப்பிய பேரொலியும் பறை போன்ற இசைக்கருவிகளின் முழக்கமும் அப்பெண்ணின் அலறல் வெளியில் கேட்காதவாறு செய்தன. பின்னர் அப்பெண்ணுக்கு நடுகல் ஊன்றி, கோயில் எடுப்பித்து வணங்கும் வழக்கம் இருந்தது.

இக்கொடிய வழக்கமானது பன்னெடுங்காலமாகவே வட இந்தியாவில் இருந்து வந்தது. வேத காலத்தில் இவ்வழக்கம் இருந்ததற்கான சான்றுகள் இல்லை. தொடக்கக்கால இந்து சட்டநூல்களில் இது பற்றிக் குறிப்பிடவில்லை. பிற்கால நூல்களில் இது காணப்பட்டாலும் உடன்கட்டையேறுவது கைம்பெண்களின் விருப்பத்திற்கே விடப்பட்டது. கிரேக்க எழுத்தாளர்களின் கூற்றுக்களிலிருந்து இது கி.மு. நான்காம் நூற்றாண்டில் வழக்கில் இருந்து வந்துள்ளது எனத் தெரிகிறது. குப்தப் பேரரசில் இது பரவலாக குறிப்பாக அரசகுலத்தில் பின்பற்றப்பட்டது என அறியப்படு கிறது.

விசயநகரப் பேரரசில் பிராமணர்கள் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்ததால் இவ்வழக்கம் அதிகமாகவே இருந்துவந்துள்ளது. அப்பேரரசிற்கு வருகை தந்த அயல்நாட்டுப் பயணிகளான பார்போசா ( Barbosa, 1514 ), நூனிசு ( Nuniz, 1535 - 36 ), சீசர்பிரடெரிக் ( Caesar Frederick, 1567 ), இலின்சு கோடன் ( Linschoten, 1583 ), பார்ரடாசு ( Barradas, 1614 ) ஆகியோர் இக்கொடிய செயல் எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதை நன்கு விவரித்துள்ளனர். மேலும் கன்னட நாட்டில் அதிக அளவில் சதிக்கற்கள் அல்லது மகாசதிக்கற்கள் கிடைப்பது அவர்களுடைய கூற்றை உறுதிப் படுத்துகின்றது. இருப்பினும் உடன்கட்டை ஏற்றப்பட்ட முறை, நாள் முதலியவை பற்றி இவர்கள் மாறுபட்ட கருத்துகளைத் தெரிவித்துள்ளனர். அப்போது வீரசைவர்கள் அல்லது இலிங்காயத்துகள் இறந்தவர்களைப் புதைத்ததால், கணவனைப் புதைக்கும்போது, மனைவியையும் அவனுடன் வைத்து உயிருடன் புதைக்கும் வழக்கம் இருந்துவந்தது என நூலில் குறிப்பிட்டுள்ளார். கல்வெட்டுச்சான்றுகள் பல இதனை உறுதிப்படுத்துகின்றன.

இந்தியாவில் முசுலீம்களின் ஆட்சி ஏற்பட்ட பின்னர் இவ்வழக்கத்தைத் தடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சுல்தான்களின் ஆட்சிக்காலத்தில் இவ்வழக்கமானது பரவலாக இருந்து வந்தது. ஆயினும் கைம்பெண் உடன்கட்டையேறுவதற்கு முன்னர் அரசிடமிருந்து முன் அனுமதியைப் பெற வேண்டியிருந்தது என இபின்பதூதா ( Ibn Batutah ) என்ற பயணி குறிப்பிட்டுள்ளார். சில இசுலாமியர் கூட, செல்வமிக்க இந்து குடும்பத்திலிருந்து இசுலாமிய சமயத்திற்கு மாறியவர்கள், இதனைப் பின்பற்றினர் எனத் தெரிகிறது. மொகலாயப் பேரரசில் இது தடை செய்யப்பட்டிருந்தது. பேரரசர் அக்பர் இதனை வன்மையாகக் கண்டித்து எவரும் தன்னுடைய விருப்பத்திற்கு மாறாக உடன்கட்டை ஏற்றப்படக்கூடாது என ஆணை பிறப்பித்தார். ஔரங்கசீப் அலுவலகப் புத்தகத்தில் கி.பி. 1663 திசம்பரில் உள்ள ஒரு குறிப்பின்படி அப் பேரரசில் உடன்கட்டையேறும் வழக்கம் தடை செய்யப்பட்டிருந்தது. எனினும், அதனை அரசு சட்டத்தால் தடை செய்ய முடியவில்லை என்றும், அது தொடர்ந்து நடைபெற்று வந்தது என்றும் ஐரோப்பியப் பயணிகளின் குறிப்புகளிலிருந்து தெரிகின்றது.

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி இந்தியாவில் ஏற்பட்டதிலிருந்து கம்பெனி அலுவலர்களும், கிறித்தவ குருமார்களும் இதனை எதிர்த்துக் குரல் எழுப்பி வந்தனர். அதனைத் தடைசெய்ய வேண்டுமென இங்கிலாந்திலும் கிளர்ச்சிகள் செய்யப்பட்டன. ஆனால் இந்தியர்களின் சமய விவகாரங்களில் இங்கிலாந்து அரசாங்கம் தலையிட விரும்பாததால் இதனைத் தடுக்க எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. வங்காளத் தலைமை ஆளுநர் வாரன் கேஸ்டிங்ஸ் கி.பி.1772ல் தொகுத்தளித்த இந்து சட்டத்தில் இதனை ஆதரித்துச் சில பகுதிகள் உள்ளன எனினும் கல்கத்தாவிலிருந்த உச்சநீதிமன்றம் தனக்குட்பட்டப் பகுதியில் இது நிகழாதவாறு பார்த்துக் கொண்டது. சின்சுராவிலிருந்த தச்சுக்காரரும், செராம்பூரிலிருந்த டென்மார்க்கியரும் சந்திர நாகூரிலிருந்த பிரெஞ்சுக்காரரும் தத்தம் பகுதிகளில் இக்கொடிய செயல் நடக்காதவாறு தடுத்தனர். பேசுவா யாசிராவ் ( Peshaw Baji Rao ) மராட்டியரிடையே இவ்வழக்கத்தைத் தடுத்து நிறுத்தியதுடன் தமது வேண்டுகோளுக்கிணங்கிய கைம்பெண்களைப் பாதுகாக்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார்.

ஆங்கிலேய ஆளுநர்கள் தங்களுடைய அலுவலர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கைகளில் மக்களைக் கட்டாயப்படுத்தி இதனைத் தடுக்க வேண்டாமென்றும், வேண்டுமானால் இதனைத் தவிர்க்கும்படி மக்களைக்

கேட்டுக்கொள்ளலாம் என்றும் கூறிவந்தனர். வெல்லெசுலி ஆட்சிக்காலத்தில் 1812, 1815ஆம் ஆண்டுகளில் இக்கொடிய செயலுக்கு எதிராகச் சில ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. பின்னர் இது பற்றி இந்து பண்டிதர்களிடம் கருத்துரை கேட்கப்பட்டது. அதன் அடிப்படையில் 1817 இல் ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டு இளம் பெண்டிர், கருவுற்றுள்ளோர், கைக் குழந்தையுள்ள தாய் ஆகியோர் உடன்கட்டை ஏற்றப் படுவது தடைசெய்யப்பட்டது. மேலும் ஒருவரைக் கட்டாயப்படுத்தி உடன்கட்டை ஏற்றுவதும், அதற்காகப் போதைப்பொருட்களைக் கொடுப்பதும் குற்றவியல் சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய செயல்கள் என அறிவிக்கப்பட்டது. இதனால் எவ்வித பெரும் பயனும் ஏற்படவில்லை. அதற்கு மாறாக இச்சட்டத்தில் குறிப்பிடப்படாதவர்கள் உடன்கட்டையேற்றப் படுவதை சட்டமே அனுமதிப்பதாக உள்ளது. வங்காளத்தில் மட்டும் 1815லிருந்து 1818க்குள் 2365 கைம் பெண்கள் உடன்கட்டையேற்றப்பட்டனர். அவர்களுள் 1528 பேர் கல்கத்தாவையும் அதன் சுற்றுப்புறத்தையும் சேர்ந்தவர்கள். அப்போது வைதீகர்கள் 1817 ஆம் ஆண்டு சட்டத்தை எதிர்த்துத் தலைமை ஆளுநருக்கு மனு ஒன்றை அளித்தனர். புதிய இந்தியாவின் தந்தையெனப் போற்றப்படும் இராசராம் மோகன் ராய் இவ்வழக்கத்தை எதிர்த்துத் தம்முடைய குரலை எழுப்பினார். இவருடைய தமையன் சக்மோகன் ( Ja gmohan ) 1811 இல் இறந்தபோது அவருடைய மனைவி அலோக்மஞ்சரி உடன்கட்டை ஏற்றப்பட்டதால் இராம்மோகன் 1815ஆம் ஆண்டிலிருந்து இக் கொடிய செயலுக்கு எதிராகத் தம்முடைய கருத்துகளை மக்களிடையே பரப்பி வந்தார். வைதீகர்கள் 1817ஆம் ஆண்டு சட்டத்தை எதிர்த்ததும் இவர் கொதித்தெழுந்தார். சாத்திரங்களிலிருந்து மேற்கோள் காட்டி ஆங்கிலத்திலும், வங்காளமொழியிலும் இவ் வழக்கத்தைக் கண்டித்து துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தப் பாடுபட்டார். வங்காளத்தில் இச்சட்டம் மீறப்படுகிறதா என்பதைக் கண்டுபிடிக்க கண்காணிப்புக் குழு ஒன்றையும் ஏற்படுத்தினார்.

அப்போது வில்லியம் பெண்டிங்பிரபு தலைமை ஆளுநராக இருந்தார். அவரை இங்கிலாந்து அரசாங்கம் இக்கொடிய வழக்கத்தை விரைந்தோ படிப்படியாகவோ ஒழிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது. இதுபற்றி அவர் இந்தியாவிலிருந்த அறிஞர் பலருடைய கருத்துகளைக் கேட்டபொழுது அவர்கள் இதனை மிகுந்த எச்சரிக்கையுடன் அணுகவேண்டுமென அறிவுரை கூறினர். பெண்டிங்பிரபு கி.பி. 1828 இல் ஒரு சட்டத்தின் மூலம் இதனைத் தடைசெய்ய விரும்பினர். ஆனால் இராம்மோகன் அவ்வாறு விரைந்து சட்டம் இயற்றினால் மக்களிடையே நம்பிக்கையின்மையும், மனநிறைவின்மையும் ஏற்பட்டு எதிர்ப்பு தோன்றும் என்றும், சிறிதுசிறிதாக அவர்களுடைய உள்ளத்தில் கருத்துப்புரட்சியை உண்டாக்கிய பின்னரே இதனை ஒழிக்க முடியும் என்றும் கருத்து தெரிவித்து வந்தார். ஆனால் பெண்டிங்கு இக்கருத்தினை ஏற்றுக்கொள்ளாது மன உறுதியுடன் உடனே சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார்.

வங்காளத்தில் உடன்கட்டை ஏறுவது 1829 திசம்பர் 4ஆம் நாள் கொண்டுவரப்பட்டது. பதினேழாம் ஒழுங்குமுறைப்படி ( Regulations XVII ) சட்டவிரோதமான செயலாக அறிவிக்கப்பட்டு, குற்றவியல் சட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டது. கட்டாயப்படுத்தி உடன்கட்டையேற்றுபவர் கொலைக்குற்றம் செய்தவர்களாகவும், உடன்கட்டையேறுவதற்குத் துணைபுரிவோர் தற்கொலைக்குத் துணை நிற்பவர்களாகவும் கருதப்படுவர் என அறிவிக்கப்பட்டது. அதைப்போலவே 1830 பிப்ரவரி 2ஆம்நாள் சென்னை மாநிலத்திலும், பின்னர் பம்பாய் மாநிலத்திலும் இதனைத் தடைசெய்து ஒழுங்குமுறைகள் கொண்டுவரப்பட்டன. வங்காளத்தில் பதினேழாம் ஒழுங்குமுறையை எதிர்த்து 1829 திசம்பர் 19ஆம்நாள் வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 800க்கு மேற்பட்ட இந்துக்கள் கையொப்பமிட்டு, அதற்கு ஆதரவாக 120 பண்டிதர்களின் கருத்துகள் அடங்கிய மனு ஒன்றை வைதீகர்கள் பெண்டிங்கிடம் கொடுத்தனர். உடனே இராம்மோகன் பெண்டிங்கின் செயலைப்பாராட்டி அவ்வொழுங்குமுறையின் அவசியத்தை வலியுறுத்தி 300க்கு மேற்பட்டோர் கையொப்பமிட்ட மனு ஒன்றை அளித்தார்.

பெண்டிங்பிரபு 1830 சனவரி 14ஆம் நாள் அதனைத் தள்ளுபடி செய்யத் தனக்கு அதிகாரம் இல்லையென்றும், அவர்கள் விரும்பினால் பிரிவு கவுன்சிலுக்கு மேல்முறையீடு செய்துகொள்ளலாம் என்றும் தெரிவித்தார். உடனே வைதீகர்கள் இதனைத் தள்ளிவிட வேண்டுமென பிரிவுகவுன்சிலுக்கு மேல் முறையீடு செய்து, தங்கள் வழக்கை எடுத்துரைக்க உச்சநீதி மன்ற வழக்குரைஞர் ஒருவரை இலண்டன் மாநகருக்கு

அனுப்பிவைத்தனர். இராம்மோகன் அவ்வொழுங்கு முறையினை ஆதரித்து நூற்றுக்கணக்கானவர் கையொப்பமிட்ட மனு ஒன்றை எடுத்துக் கொண்டு இலண்டன் சென்றார். பாரளுமன்ற உறுப்பினர் களிடமும், இங்கிலாந்து பொதுமக்களிடமும் இவ் வொழுங்குமுறையின் இன்றியமையாமையை எடுத்துரைத்தார். இவருடைய சீரிய முயற்சியின் விளைவாக பிரிவு கவுன்சில் அம் மேல்முறையீட் டினைச் செல்லாது எனத் தீர்ப்பளிக்கும்படி இங்கி லாந்து மன்னருக்குப் பரிந்துரைத்தது. அதன்படி அம் மேல் முறையீடானது தள்ளுபடி செய்யப்பட்டு, அவ் வொழுங்கு முறை நிலைநிறுத்தப்பட்டது.

இருப்பினும், இக்கொடிய வழக்கமானது முற்றி லும் ஒழிக்கப்படாது சிற்சில இடங்களில் தொடர்ந்து இருந்து வருகிறது. அண்மையில் இராசஸ்தான் மாநி லத்தில் ரூப்கன்வர் ( Roop Kanvar ) என்ற பெண் உடன்கட்டை ஏறியதும், அவருக்கு விழா எடுக்கச் செய்த முயற்சிகளும் இதற்குச் சான்றாகும். அவற் றைத் தடுப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் பல நட வடிக்கைகளை மேற்கொண்டன. இவ்வழக்கத்தை எதிர்த்து நாடு முழுவதிலும் கண்டனக்குரல் எழுப்பப் பட்டது. எனினும், இதனை ஆதரித்துச் சில செல்வர் களும், அரசியல்வாதிகளும், சமயவாதிகளும் கருத் துக் கூறியது வருந்தத்தக்கதாகும்.

தமிழ்நாட்டில் இத்தகைய கொடிய வழக்கம், கண வனின் சிதைத்தீயில் மனைவியை வைத்துக்கொளுத்து வது, இல்லையென்பது குறிப்பிடத்தக்கதெனினும் சங்ககாலத்திலிருந்து தலைவன் இறந்துபட்டான் என்ற செய்தி கேட்டதும் தலைவி பிரிவாற்றமை கார ணமாகத் தீயினை வளர்த்து, அதில் விழுந்து உயிர் துறக்கும் வழக்கம் இருந்துவந்ததை அறியலாம். இதற்குத் தீப்பாய்தல் என்று பெயர். அத்தகையவர் நல்ல உயர்ந்த மகளிர் எனப் பாராட்டப்பட்டனர் என தொல்காப்பியம் குறிக்கிறது. ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் மனைவி பெருங்கோப்பெண்டு தீப் பாய்ந்தாள். சாதுவன் என்ற வணிகனின் மனைவி ஆதிரை என்பாள் தன் கணவன் இறந்துபட்டான் என அறிந்ததும் தீப்பாய முனைந்த செய்தி மணிமேகலை யில் காணப்படுகின்றது. இங்ஙனம் ஒருசிலரே, வட நாட்டிலுள்ளதைப்போல் பெருமளவில் இல்லாது, தீயில் விழுந்து உயிர் துறந்தனர். அத்தகைய மகளி ருக்கு நடுகல் எடுக்கப்பட்டது. அது சதிக்கல் அல்லது மகாசதிக்கல் எனப்பட்டது. அதுவே பின்னர் மகா சதிக்கல் எனத்திரிந்தது. அவர்களுக்குக் கோயில் எடுத்து, வணங்கும் வழக்கம் ஏற்பட்டது. தமிழ் நாட்டில் எவரும் தம்முடைய விருப்பத்திற்கு மாறாக கட்டாயப்படுத்தி உடன்கட்டையேற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கூட இவ்வழக்கம் ஒருசில இடங்களில் மிகக்குறைந்த அளவில் இருந்துவந்துள்ளது.

- கி. இரெ.

**துணை நூல்கள் :**

1. Dasgupta, B. N., 1980, **RajaRam MohanRoy - The Last Phase,** Oppal Publishing House, NewDelhi.

2. Minni, Thakur., 1987, **RajaRam MohanRoy - His School, Political and Economic Ideas,** Deep and Deep Publications, NewDelhi.

3. சௌமியேந்திரநாத் தாகூர், ( தமிழாக்கம் ) திருநாவுக்கரசு, க. த., 1989, **ராஜாராம் மோகன்ராய்,** சாகித்திய அகாதெமி, புதுதில்லி.

**உணர்வு நீக்கம் :** உணர்வு நீக்கம் என்பது மருத் துவ அறிவியல் தொடர்பான தலைப்பாக இருப்பி னும் உளவியல் அடிப்படையில் இதற்கு ஒருசில விளக்கங்களைத் தரலாம். உணர்வு நீக்கம் என்பதைப் பொதுவாக இருமுறைகள் மூலம் கொணரலாம். ஒன்று மருத்துவமுறை, மற்றொன்று உளவியல் முறை. மருத்துவர்கள் குறிப்பாக உணர்வு நீக்கியல் வல்லு நர்கள் மயக்க மருந்துகள் ( anaesthetists ) மூலமாக ஒருவரை முழுமையாக உடலில் ஒருசில பகுதிகளில் மட்டிலோ உணர்வு இழக்கச் செய்விப்பர். உளப் பகுப்பு வல்லுநர்கள் அறிதுயில் மூலம் ( Hrough hypnosis ) முழு உணர்வு நீக்கத்தையோ, பகுதி உணர்வு நீக்கத்தையோ ஏற்படுத்த முடியும் எனத் தெரிவிக் கின்றனர். இக்கால ஆய்வின்படி புலன் உணர்ச்சிகளுள் வலியுணர்வும் ஒன்று எனத் திட்டவட்டமாகச் சொல்ல முடிகிறது. உணர்வு நீக்கம் என்பது எல்லாப் புலன் உணர்ச்சிகளுக்கும் பொருத்தமாக இருப்பினும் பெரும்பாலும் வலியுணர்வினைக் குறைப்பதற்கும், முடிந்தால் போக்குவதற்கும் தான் தேவைப்படுகிறது.

பார்வை, கேள்வி, சுவை, மோப்பம் ஆகிய புலன் களுக்கென்று தனிப்புலன் உறுப்புகள் இருக்கின்றன. ஆனால் வலிப்புலனுக்கென்றுள்ள உறுப்பை உட லின்

எந்த ஒரு குறிப்பிட்ட இடத்திலும் நிருணயிக்க முடியாது. ஏனெனில் உடலின் எந்தப் பகுதியிலும் சரியான தூண்டலின் மூலம் வலியை உண்டாக்கமுடியும். தடையற்ற நரம்பு முனைகள் தான் வலிக்கான புகுவாய்கள் என்று கூறுவர். தடையற்ற நரம்பு முனைகளின் நரம் பிழைப் பின்னல்கள் வலியை உண்டாக்குகின்றன. அவை அழுத்தத்தை உண்டாக்கும் புகுவாய் களுக்குக் கீழ் உள்ள தோலினடியிலிருக்கின்றன. மேல் தோலை எந்தவிதமான வலியுமின்றி எடுக்கலாம். அதனால் அழுத்த நரம்பு முனைகள் பாதிக்கப்படக் கூடும்.

உடலின் தோல் பகுதிகள், தசை நார்கள், தசை நாண்கள், மூட்டுகள், உள் உறுப்புகள், தலை ஆகிய எல்லாப் பகுதிகளிலும் வலி ஒரே மாதிரியான குணத்தைக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. பல்வேறு பகுதிகளிலும் ஏற்படும் வலியின் குணத்தில் வேற்றுமைகள் ஏதேனும் உண்டா? எனத் தீர்மானிப்பதற்குப் போதுமான சான்றுகள் இல்லை. வலியின் குணத்தைத் தீர்மானிப்பது மிகவும் கடினம். இருப்பினும் மற்றப் புலன்களைப் போன்று வலிப்புலனும் குணப் பண்பு, செறிவு, காலத்தொடர்ச்சி, விரிவாக்கம் என்ற நான்கு பரும அளவுகளால் விவரிக்கப்படலாம்.

வலி ஒரு மகிழ்ச்சியில்லாத புலன் உணர்ச்சியாகும். எனவே, அதைப் போக்குவதற்கோ குறைப்பதற்கோ மனிதர்கள் விரும்புகின்றனர். வலிப்புலனின்மை ( analgesic ) என்பது ஒரு வகை மருந்தாகும். அதன் மூலம் வலி உணர்விலிருந்து ஓரளவிற்கு விடுபடலாம். உளவியல் நோக்கிலிருந்து மனிதன் எவ்வாறு தன்னை வலியின் பிடியிலிருந்து காப்பாற்றிக் கொள்கிறான் என ஆய்வது முக்கியமானதாகும்.

மிகவும் தீவிரமாகவும் விடா முயற்சியுடனும் சில நடவடிக்கைகளில் ஈடுபடும்போது காயமடைவதைக் கூட உணராதநிலை ஏற்படுகிறது. அந்நடவடிக்கைகள் முடிந்தபிறகு பட்ட காயத்தைப் பற்றி உணர்வு உண்டாகின்றது. எனவே, வேறொரு நடவடிக்கையில் தீவிரமாக இருக்கும்பொழுது வலியின் கொடுமை குறைகிறது.

வலியைக் குறைக்கும் மற்றொரு முறை அறிதுயில் முறையாகும். அறிதுயில் முறை வலியை முற்றிலும் அகற்றுகிறது எனப் பல செயல் விளக்கங்களில் நிருபிக்கப்பட்டுள்ளது. சில பெரிய அறுவை மருத்துவங்களில் மயக்கத்தை உண்டாக்கி வலியைக் குறைப்பதை விட அறிதுயில் முறையைப் பயன்படுத்தி வலியைக் குறைக்கின்றனர். ஈதர் ( Ether ) போன்ற நீர்ம வகை மருந்து கண்டுபிடிக்காமல் இருந்தால் அறிதுயில் முறைதான் இன்றைய மருத்துவ முறைகளில் முதன்மை பெற்று விளங்கியிருக்கும். வலியின் கொடுமையால் அவதிப்பட்டுக்கொண்டிருப்பவர் வலி இல்லை அல்லது வலி குறைந்துபோய்விட்டது என்ற நம்பிக்கையை வரவழைத்துக் கொண்டு வலியை மறந்திருக்க முயற்சி செய்யலாம். இதைத் தற்குறித் தோற்றம் ( auto suggestion ) அல்லது தன் அறிதுயில் ( self hypnosis ) என்பர். சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும் எல்லாவிதமான வலிகளையும் தங்களுடைய உளவலிமையினால் தாங்கி இருக்கின்றனர் என்று கூறுவர். இங்ஙனம் பல முறைகளில் உணர்வுநீக்கத்தைக் கொணரச் செய்யலாம்.

- வ. தே. சா.

**உத்தம சோழமிலாடுடையார் :** இவன் சோழரது ஆட்சிக்காலத்தில் மலையமான் நாட்டை ஆண்டு வந்த குறுநில மன்னன். பார்க்கவ குலத்தைச் சேர்ந்தவன். முதலாம் இராசராச சோழன், முதலாம் இராசேந்திர சோழன் ஆகிய இருவர் காலங்களிலும் வாழ்ந்தவன். பராந்தக யாதவ பீமானன உத்தம சோழமிலாடுடையார் எனவும் இவன் கல்வெட்டில் குறிக்கப்பெறுகிறான். விக்கிரம சோழமிலாடுடையாருக்குப்பின், மலையமான் நாட்டை ஆண்டு வந்த மன்னர்களுள் வலிமை மிக்கவன் இவனேயாவான். உத்தம சோழமிலாடுடையார் என்பது இவனது விருதுப்பெயராகும். பராந்தக யாதவ பீமன் என்பது இவனது இயற்பெயராகக் கருதப்படுகிறது. இறைபக்தி மிக்க இவன் பல திருக்கோயில்களுக்கு அறக்கொடைகள் அளித்துள்ளான். முதலாம் இராசராசனின் படைத்தலைவனாக விளங்கியவன். கீழூர்ச் சிவன் கோயில் கல்வெட்டுகள் இவனைச் சுட்டுகின்றன.

தொடக்கக் காலத்தில் இவன் விக்கிரம சோழமிலாடுடையாரிடம் அகம்படனாகப் பணிபுரிந்து நல்ல பயிற்சி பெற்றவன். தரமான போர்ப் பயிற்சியும் பெற்றவன். க்ணபதி மயிலாடி என்பவள் இம்மிலாடுடையாரின் தேவியாவாள். இவன் இராசேந்திர சோழனது மருமகனாகிய இராசராச நரேந்திரனுக்கு உதவும் பொருட்டு, படையுடன் வேங்கி நாடு சென்று,

மேலைச்சாளுக்கியருடன் நடந்த போரில் போரிட்டு, கலிதிண்டி என்னுமிடத்தில் வீரமரணம் எய்தினான். இவனுடன் உத்தம சோழக்கோன், இராசராச பிரம ராயன் ஆகிய இருவரும் உயிர் துறந்தனர். அங்கு இம்மூவருக்கும் பள்ளிப்படைக் கோயில்கள் அமைக்கப்பட்டன. கி.பி. 1035இல் இவன் உயிர்துறந்தான். இவன் எலவானாசூர் இறைவர்க்கு நாள்தோறும் திருவமுது படைக்க நல்லரைசூர் என் னுமிடத்தில் 98181/8 குழி நிலம் வாங்கித் தானமளித்ததுடன், நாள்தோறும் பாலும் நெய்யும் வழங்க 120 பசுக்களையும் தானமளித்துள்ளான். கி.பி. 1018 இல் இவன் கோவலூர் வீரட்டானத்துப் பெருமானுக்குப் பொன்னாலான மடல் ஒன்றினை வழங்கினான். திருப்பத்தூர் ஐயனார் கோயிலுக்குத் தானமளித்துள்ளான். இவன் சிறந்த ஆட்சியாளனாகவும், பெருவீரனாகவும், படைத்தலைவனாகவும் திகழ்ந்தான். இதேகாலத்தில் மலையமான் நாட்டின் மற்றொரு பகுதி இராசேந்திர சோழமிலாடுடையாரால் ஆளப்பட்டு வந்தது. இவன் சோழருக்காகத் தனது இன்னுயிரையும் ஈந்தான்.

- ம. இரா. த.

**உயிர்க்கொள்கை :** இக்கொள்கை அரிசுடாடிலின் கொள்கையிலிருந்து உருவெடுக்கிறது. இக்கொள்கை உயிர் வாழ்வனவற்றுக்குச் சிறப்பாக உள்ள உயிர்ப்பாற்றல் கருத்து மூலம் உயிரின் தன்மையை விளக்குகிறது. மறைமுகமாக உள்ள இந்த ஆற்றல் உயிரினம் செயற்படும் முறை, அமைப்பு போன்றவற்றை நிச்சயிக்கிறது. இப்போது இயற்பியல், வேதியியல் ஆற்றல்கள் மூலம் பெரும்பாலும் உயிரினத்தின் ஆற்றல்களை விளக்க இயலுவதால் இக்கொள்கையின் மதிப்பு குன்றி வருகிறது.

உயிர்க்கொள்கையை விளக்கும்போது இயற்பியல் அடிப்படையில் தோற்றம் ( Biogenesis ) இயற்பியல் அல்லாத நிலையில் தோற்றம் ( Abiogenesis ) என்று இரு வகையில் விளக்குவர். இப்போதுள்ள உயிரினம் தம்மைப்போன்றுள்ள பெற்றோரிடமிருந்து தோன்ற வேண்டுமெயொழிய, வேறுவகையிலும் தோற்றம் பெற இயலாது என்பது காட்சியளவையின் அடிப்படையில் இப்பகுதியில் விளக்கப்படுகிறது. உயிரினம் தம்மைப்போன்று காணப்படாத பெற்றோரிடமிருந்தோ உயிரில்லாத பொருண்மையிலிருந்தோ ( Now Living matter ) தோன்றியிருக்கலாம் என்றும் சிலர் கருதுகின்றனர். இருவகைக் கொள்கைகளும் அறிஞர்களால் போற்றப்படுகின்றன. எனினும், இயற்பியல் அடிப்படையில் தோற்றம் என்பது சிறந்த கொள்கையாகக் காணப்படுகிறது. இதை விதி போலக் கொள்ள இயலாது. ஏனெனில் தம்மைப் போல் அல்லாதவற்றிலிருந்து இது வரை உயிரினம் தோன்றியதற்கு இறந்த காலத்திலும், நிகழ்காலத்திலும் சான்று இல்லை என்பது இக்கொள்கையின் உண்மைக்குப் பொருத்தமான சான்றாகாது. ஆயினும் இயற்பியல் அடிப்படையில் தோற்றம் என்பது தனி ஆள்தோற்றத்தைக் குறிக்கிறது எனச் சிலர் தவறாகக் கருதுகின்றனர். இவ்வாறு பயன்படுத்துவது தவறு என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

உயிரல் பொருளிலிருந்து உயிர்ப்பொருள் தோன்றுகிறது என்பது இயற்பியலின் அடிப்படையில் தோற்றம் என்பதற்கு மாறாகக் கொடுக்கப்படுகிறது. இயல்பான தோற்றம் ( Spontaneous generation ) என்பது இதன் வேறுபெயர். இவ்வுலகில் வாழ்வின் தோற்றத்துக்கு விஞ்ஞானிகள் இயல்பான தோற்றக் கொள்கையையே பொதுவாகக் கொள்கிறார்கள். திரவ நிலையிலிருந்து திட நிலைக்குச் செல்லும் நிலையில் ஒரு குறிப்பிட்ட வெப்பநிலையைப் பூமி அடைய அப்போது உயிரல் பொருளிலிருந்து உயிர் தோன்றும் நிலை உண்டாயிற்று. உயிரல் பொருளும் உயிர்ப் பொருளும் பிரிக்க இயலாத வகையில் இணைந்து உள்ளன என்பது மறுப்பதற்கில்லை. மனிதன் தன் குழந்தைப் பருவத்தை முழுமையாக நினைத்து விளக்க முடியாதது போல உயிரின் தோற்றத்தையும் இப்போதுள்ள நிலையிலிருந்து முழுமையாக விளக்க இயலாது என்று அறிஞர் கூறுகின்றனர். உயிர், உயிரல்லாத பொருளிலிருந்து தோன்றுகிறது என்பது அறிவியல் அறிஞர்களால் ஒப்புக்கொள்ளப்படுகிறது. உயிரினத்தின் தோற்ற காலத்தில்தான் இவ்வாறு தோன்றியதா, இப்போதும் உயிரல்லாத பொருளிலிருந்து உயிர் தோன்றுகிறதா என்னும் கேள்வி எழுகிறது. தேல்சின் ( Thales ) மாணவரான அனேக்சிமாண்டர் ( Anakimander ) சூரிய வெப்பம் குளிர்ந்த பகுதியில் உயிர் உண்டாகியிருக்க வேண்டும் என்று முதலில் கூறினார். அரிசுடாட்டில் கி.மு. 384 - 322 இக்கொள்கையைப் பொதுவாக ஒப்புக்கொண்டாலும், பாலின உறுப்புகள் கொண்ட விலங்கின் தோற்றத்துக்கு இக்

கொள்கை போதுமான விளக்கம் அளிக்கவில்லை என்று கருதினார். மழை, சூரிய வெப்பம் இவற்றின் காரணமாக இப்போதும் உயிரினங்கள் உலகத்தில் தோன்றுகின்றன என்று உலுகிரிடசு ( Lucretus ) என்னும் அறிஞர் கூறுகிறார். பிரான் சிசுகோ இரடி ( Francisco Redi - 1626 - 1698 ) என்பவர் இறந்த சடலத்தின் ஒரு பகுதியைக் குளிர்ந்த சாடியில் மூடி வைத்து, ஏனைய பகுதியை வெளியில் வைக்க, ஈக்கள் போன்ற கிருமிகள் வெளியிலிருந்த பகுதியில் தோன்ற, சாடியில் இருந்த சடலத்தின் பகுதியில் ஈக்கள் போன்ற கிருமிகள் தோன்றாத நிலையையும் விளக்கி, தன் கொள்கையை வலியுறுத்தினார். உலுயி பாசுடர் தம் செயல்முறைகளினால் பிரான்சுக்கு மட்டும் அல்லாமல் உலகு அனைத்துக்கும் உதவியுள்ளார். கோழிகளுக்கு உண்டாகும் காலரா நோயின் மூலம் வரும் இறப்பைப் பத்து விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாக் குறைத்திருக்கிறார். பல்லாயிரக் கணக்கான விலங்குகள் இறப்பதைத் தம் கண்டுபிடிப்பினால் தடுத்து நிறுத்தினார். நாய்க்கடிநோய் (Rabis), நீர் அச்சநோய் ( Hydrophobia ) என்னும் நோய்களைக் கட்டுப்படுத்துவதில் பாசுடரின் பங்கு சிறப்பு வாய்ந்தது.

உலகமானது தன் தொடக்க நாள்களில் குளிர்ந்து திடமாவதற்கு முன், இப்போது காணப்படும் உயிருடையவை எவையேனும் இருந்திருக்க வாய்ப்பில்லை. கணிக்க இயலாத காலத்துக்கு முன் உலகில் உயிரினம் எவ்வாறோ தோன்றியிருக்க வேண்டும். இக்கொள்கைப்படி விலங்குகளுக்கும் விலங்கல்லாத தன்மைக்கும் உள்ள வேறுபாட்டை மிகவும் பெரிதுபடுத்தவும் கூடாது. அதேநேரத்தில் இவ்வேறுபாட்டைப் புறக்கணிக்கவும் கூடாது. உயிர் வாழ்வனவற்றுக்கும் உயிரல் பொருட்களுக்குமுள்ள வேறுபாட்டை அறிவியலும் பொதுஅறிவும் வற்புறுத்துகின்றன. உயிர் வாழ்வன உணவுண்டு வளர்கின்றன. தொடர்ந்து வைத்துக்கொள்கின்றன. மேலும், உயிர் வாழ்வன தம் இனத்தைக்காத்துப் பெருக்கிக் கொண்டிருக்கின்றன. தமக்கு ஏற்படும் குறைகளைத் தாமே சீர்செய்து கொள்கின்றன. அனுபவத்தின் மூலம் அறிவு பெறுகின்றன எளிமையான விலங்குகளில் கூட மனத்தின் செயல்பாட்டுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. உயிரல் பொருள்களிலிருந்து ( non-living matters ) உயிர்ப்பொருட்கள் தோன்றுகின்றன என்னும்போது உயிரல் பொருள் பற்றி உயர்ந்த தன்மையைக் கொள்ளவேண்டும். வாழ்வின் புதிரை முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாததால், உலகத்தில் இருக்கும் உயிர்ப்பொருள், உயிரல்பொருள் என்னும் அனைத்துப் பொருள்களோடும் அன்புடனும் மதிப்புடனும் இருக்க வேண்டும்.

- ச. க.

**உரூபாய் :** பணம் அல்லது செலாவணி என்பது ஒரு கருவி. இது பொருளாதார நடவடிக்கைகளுக்கு உறுதுணையாக இருக்கிறது. பொருட்கள், பணிகள், கடன் ஆகியவற்றின் கொடுக்கல், வாங்கல், மதிப்பிடுதல் போன்றவற்றிற்கு பணமே சிறந்த கருவி ஆகும். பணத்தின் பெயர் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. எ.கா. இந்தியாவில் உரூபாய் என்றும், சப்பானில் யென் என்றும், உருசியாவில் ரூபிள் என்றும் அமெரிக்காவில் தாலர் என்றும் பணம் குறிக்கப்பெறுகிறது. இந்தியாவில் பண்டங்கள், பணிகள், கடன் ஆகியவற்றின் மதிப்பு உரூபாய் குறிக்கப்படுகிறது.

**உரூபாயின் வரலாறு :** பொதுவாகப் பணம் என்பது எப்போது கண்டுபிடிக்கப்பட்டது என்று அறுதியிட்டுக் கூறமுடியாது. ஒவ்வொரு காலகட்டத்தில் ஒவ்வொரு பொருள் பணமாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. கிளிஞ்சல்கள், முத்து, மிருகங்களின் நகம், கொம்பு, தானியங்கள் போன்றவை பணமாக பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. உலோகமும், காகிதமும் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர், நாணயங்களும், உலோகப்பணமும் அச்சிடப்பட்டன. இந்தியாவில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை ஒவ்வொரு பகுதியிலும் ஆண்டு வந்த மன்னர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்டப் பகுதிகளில் பொன், வெள்ளி நாணயங்களைப் புழக்கத்தில் விட்டனர். தில்லியை கி.பி. 1542இல் ஆண்ட முகமதிய மன்னர் செர்சா 179 குன்றுமணி எடையுள்ள வெள்ளியைக்கொண்டு நாணயங்கள் அச்சிட்டு வெளியிட்டார். இவை உரூபாய் எனப்பட்டன. உரூபாய் என்ற சொல் ‘உரூபையா’ என்னும் இந்துஸ்தாணி சொல்லிலிருந்து பெறப்பட்டது.

ஆங்கில ஆட்சி ஏற்படும் வரை இந்தியாவில், நாடு முழுவதும் ஒரே செலவாணி நடைமுறையில் இருக்கவில்லை. கி.பி. 1835ஆம் ஆண்டு முதல் நாடு முழுவதும் ஒரு உரூபாய், அரை உரூபாய் நாணயங்கள் சட்ட செலாவணியானது. இதற்கென அவ்வாண்டில் செலவாணிச் சட்டம் இயற்றப்பட்டது.


भारतीय रिज़र्व बैंक
RESERVE BANK OF INDIA
5CQ 082978
एक हज़ार रुपये
पाँच सौ रुपये
एक सौ रुपये
पचास रुपये
ONE RUPEE
6BC 032894

உருபாய்

வெள்ளியாலான 180 குன்றுமணி எடையுள்ள உரூபாய் நாணயங்கள் அச்சிடப்பட்டன. இதில் 165 குன்றுமணி தூய வெள்ளியாகும். வெள்ளியைத் தங்கச் சாலையில் கொடுத்து வெள்ளி நாணயம் பெறலாம். அப்போது இந்தியாவில் எடை அளவீட்டு முறையே, உரூபா யின் எடையைச் சார்ந்ததாக இருந்தது. கி.பி.1841 இல் ஒரு தங்க நாணயம் 15 வெள்ளி நாணயங்களுக்குச் சமம் என்ற மாற்று வீதம் இருந்தது. 1875க்குப் பிறகு இந்திய உரூபாய் ஆங்கில செலாவணியுடன் இணைக்கப்பட்டு 1 உரூபாய் 1 சில்லிங் 4 பென்னி என்று மாற்று வீதம் நிருணயிக்கப் பட்டது.

உலகப்போர்களின் போது, வெள்ளி உரூபாய் நாணயங்கள் பதுக்கப்பட்டதால், 1940இல் ஒரு உரூ பாய் தாள்களை அரசு அச்சிட்டு வெளியிட்டது. பின் னர் மாற்றவியலா காகிதப் பணத்தை வெளியிடத் தொடங்கியது. மாற்றவியலா காகிதப் பணம் என் றால், குறிப்பிட்ட அளவு காகிதப் பணத்தை அதன் மதிப்புக்குச் சமமான தங்கம் அல்லது வெள்ளியாக மாற்ற முடியாத நிலையாகும்.

1926இல் ஏற்படுத்தப்பட்ட இல்டன் - யங் குழு, இந்தியப் பணத்திட்டத்தை நிருவகிக்க ஒரு மைய வங்கி ஏற்படுத்தப் பரிந்துரை செய்தது. ஆனால், 1934 இல் இந்திய வைப்பு வங்கிச் சட்டம் ( Reserve Bank Act) இயற்றப்பட்டு 1935இல் அவ்வங்கி ஏற்படுத்தப் பட்டது. அவ்வங்கியே இந்தியாவின் உரூபாயை வெளியிடுகிறது. கட்டுப்படுத்தவும் செய்கிறது.

**உரூபாய் வெளியீட்டு முறை :** இந்தியாவில் ஒரு உரூபாய் தாள்கள் மற்றும் நாணயங்கள் தவிர, பிற மதிப்புடைய உரூபாய் தாள்கள் இந்திய வைப்பு வங் கியால் வெளியிடப்படுகின்றன. இவ்வங்கியின் வெளியீட்டுத்துறை இப்பணியைச் செய்கிறது. எல்லா மாநில மொழிகளிலும் அந்தத் தாளின் மதிப்பு அச்சிடப் பட்டிருக்கும். வைப்பு வங்கியின் ஆளுநரின் கையொப்பம் இடப்பட்டிருக்கும். ஓர் உரூபாய் தாள், இந்திய மைய அரசின் நிதித்துறைச் செயலரின் கையொப்பமுடன் அச்சிடப்படுகிறது. இந்தியாவில் உரூபாய் தாள்கள் மற்றும் நாணயங்கள் அச்சிடப் படும் இடம் தங்கச்சாலை எனப்படுகிறது. இது நாசிக் என்ற இடத்தில் உள்ளது. நாணயங்கள் நிக்கல் உலோகத்தால் ஆனவை. இவற்றின் தோற்ற மதிப்பு உலோக மதிப்பை விட அதிகம். எனவே இவை அடையாளப் பணம் எனப்படுகின்றன. 1948ஆம் ஆண்டு முதல் 1956ஆம் ஆண்டு வரை விகிதாச்சார காப்பு முறை என்ற திட்டத்தின் அடிப்படையில் உரூ பாய் வெளியிடப்பட்டது. இதில், வெளியிடப்படும் பண மதிப்பில் 40 விழுக்காடு அளவு மதிப்புடைய தங்கம், அந்நிய செலவாணி, உரூபாய் பத்திரங்கள் காப்பாக வைக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கு மிகுந்த பணம் தேவைப் பட்டதால் 1957 முதல் இத்திட்டம் கைவிடப்பட்டு, குறைந்த அளவு காப்புமுறை பின்பற்றப்பட்டு வந்தது. இதில் 115 கோடி உரூபாய்க்கு சமமான மதிப்புடைய தங்கமும், 85 கோடி உரூபாய்க்கு மதிப்புடைய பத்திரங்களும் காப்பாக வைக்கப்பட வேண்டும்.

**உரூபாய் பகுப்பு :** ஆங்கில ஆட்சியின் போதும், நாடு விடுதலை அடைந்த பின்னரும் உரூபாயானது அணா என்றும், அணாவானது பைசா என்றும் பகுக் கப்பட்டிருந்தது. இதன்படி ஒரு உரூபாய்க்கு 16 அணா சமம். ஒரு அணா 12 பைசா கொண்டதாகும். ஏப்ரல் 1957 முதல் அணா என்ற பகுப்பு நீக்கப்பட்டு, தசாம்ச முறை பின்பற்றப்பட்டது. இதன்படி 100 பைசா கொண்டது ஒரு உரூபாய் எனப்பட்டது. சிறிது காலம் வரை இப்பைசா நயா பைசா எனப்பட்டது. ( இந்தி மொழியில் ***நயா*** என்றால் ***புதிய*** என்று பொருள்).

**உரூபாய் மதிப்பு :** 1873இல், இந்திய உரூபாய் ஒன்று, இங்கிலாந்தின் 1 சில்லிங் 3 - 29 / 32 பென்னிக்குச் சமமாகக் கருதப்பட்டது. 10 உரூபாய்கள் ஒரு சவரன் பொன்னுக்குச் சமமாகக் கருதப்பட்டது. 1875இல் 1 உரூபாய் 1 சில்லிங் 4 பென்னிக்குச் சமம் என மாற்றப் பட்டது. 1927இல் 1 உரூபாய் 1 சில்லிங் 6 பென்னிக்குச் சமம் என மாற்றப்பட்டது. இந்திய உரூபாயின் மதிப்பு இங்கிலாந்து ஸ்டெர்லிங்கைச் சார்ந்தே இருந்தது. 1975 செப்டம்பரில் இத்தொடர்பு நீக்கப்பட்டது. அந்நியச் செலாவணி பற்றாக்குறை, பாதக செலுத்து நிலை, பணவீக்கம் ஆகிய காரணங் களால் இந்திய உரூபாயின் மதிப்பு செப். 1949லும், சூன் 1966லும் குறைக்கப்பட்டது. 1966 மதிப்புக் குறைப்புக்குப் பின் ஓர் இந்திய உரூபாய் 11 பென்னிக்குச் சமமானது.

1991ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் நாளன்று சில நாடுகளின் செலாவணியுடனான மாற்று விகிதத் தில், இந்திய உரூபாயின் மதிப்பு, இந்திய வைப்பு வங்கியினால் 8.5 விழுக்காடு முதல் 9.7 விழுக்காடு

வரை குறைக்கப்பட்டது. பின்னர் இரு நாட்களில் (சூலை 3ம் தேதி) 10.6 விழுக்காடு முதல் 11.1 விழுக்காடு வரை குறைக்கப்பட்டது. மூன்று நாள்களுக்குள் பண மதிப்பு 20 விழுக்காடு வரை குறைக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். மீண்டும் சூலை 8ம் தேதியன்று இங்கிலாந்து பவுண்டைப் பொருத்த வரை மாற்றுவிகிதம் 0.91 விழுக்காடு மாற்றப்பட் டது. பாதக செலுத்துநிலை, அந்நிய கடன் மற்றும் வட்டி அதிகரிப்பு, அந்நிய செலாவணி இருப்புக் குறைவு ஆகிய காரணங்களால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அரசு கூறியது.

அமெரிக்க தாலர், இங்கிலாந்து பவுண்டு, செர் மனி தியூச் மார்க், சப்பானின் யென் ஆகிய செலாவணிகளுடன் உருபாய் மதிப்பு மட்டுமே குறைக்கப்பட்டதால் இது மதிப்பு குறைப்பன்று. செலாவணி மாற்றுவீத மாற்றங்கள் என்றே அரசால் குறிப்பிடப்பட்டது. இந்நட வடிக்கையால், இச்செலாவணிகளுடனான செலாவணி மாற்றுவீதம் கீழ்வருமாறு மாறியது.

1 டாலர் - 25.88 ரூ ( 1991 சூன் வரை 21.01 ரூ )

1 மார்க் - 14.10 ரூ ( 1991 சூன் வரை 11.66 ரூ )

1 யென் - 18.62 ரூ ( 1991 சூன் வரை 15.22 ரூ )

1 பவுண்டு - 41.99 ரூ ( 1991 சூன் வரை 34.36 ரூ )

சில நேரங்களில் கறுப்புப் பணத்தை வெளிக் கொணர, குறிப்பிட்ட மதிப்புடைய உருபாய் தாள்கள் செல்லாது என அரசு அறிவிக்கும். இவ்வாறு இந்தியாவில் 1946 சனவரியில் 500 உருபாய், 1000 உருபாய், 10,000 உருபாய் தாள்கள் செல்லாது என அரசு அறிவித்தது. 1952இல் இவற்றை மீண்டும் அச்சிட்டது. 1970களின் இறுதியில் 1000 உருபாய், 10,000 உருபாய் நோட்டுகள் செல்லாது என அறிவித்தது.

பம்பாய், சென்னை, கல்கத்தா என்ற மூன்று வட்டங்களில் முதலில் வெளியிடப்பட்ட உருபாய் தாள்கள் இன்று ஒரே இடத்தில் அச்சிடப்பட்டு நாடு முழுவ தும் புழக்கத்தில்உள்ளன. காலத்துக்கு காலம் இவற்றின் அளவும், நிறமும் மாறுபட்டு வந்துள்ளன. பண வீக்கம் போன்ற காரணிகளால் பணமதிப்பு காலத்துக்குக் காலம் குறைந்து கொண்டேயிருக்கிறது. உருவம், வண்ணம், மதிப்பு மாறினாலும் ஒரு கருவியாக இருந்து உருபாய்இந்தியாவில் நடைபெறும் கொடுக்கல் வாங்கலுக்கு உதவி வருகிறது.

- க.த.

**ஊர்ப்பெயர் :** ஓர் ஊரினின்றும் மற்றொரு ஊரை வேறுபடுத்த பெயர் இன்றியமையாததாகிறது. மனித இனம் கூட்டம் கூட்டமாக இடம் விட்டு இடம் சென்று வாழத்தலைப்பட்ட காலத்தே ஊர்ப்பெயர் தோற்றம் பெற்றிருக்கவேண்டும். ஊர்ப்பெயரைப் பற்றி அண்மைக்காலத்தில் சிந்தனை இருந்தது என்பதைத் தொல்காப்பியம் மூலம் அறியலாம். மனித இனம் ஒரு குழுவாக சமூகமாக ஆங்காங்கே ஒரு பகுதியில் சிறிதுகாலம் நிலையாக வாழத்தொடங்கிய பின்னர்தான் இடப்பெயர்கள் தோன்றியிருக்க வேண்டும். ஒரு மனிதன் இன்னொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்த ஆட்பெயரையும் ஓர் இனத்தை மற்றொரு இனத்திடமிருந்து வேறுபடுத்த இனப் பெயரையும் வழங்கியது போன்று நிலத்தின் ஒரு பகுதியை இன்னொரு பகுதியினின்றும் வேறுபடுத்திக் காட்ட இடப்பெயர்களை அமைத்துக்கொண்டனர் ஆதிகால மக்கள். ஊர்ப்பெயர்கள் பழமை எச்சங்களாக நின்று ( Fossil remains of the past ) மனித வரலாற்றையும் பண்பாட்டையும் விளக்கும் ஆற்றலுடையன. இடப்பெயர்களை இட வரலாற்றின் காலப்பெட்டகம் ( Time capsule of local history ) என அழைக்கலாம்.

மனிதப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் வெளிப்படுத்துவதற்கு இடப்பெயராய்வு துணை செய்கின்றது. ஊர்ப்பெயராய்வு வரலாறு, தொல் பொருளாய்வு, பண்பாட்டியல், நாட்டுப்புறவியல், மொழியியல் துறைகளோடு பின்னிப்பிணைந்து இருக்கின்றது. பெயர், மொழியியலில் ஒரு கூறாக யிருப்பினும் சில சிறப்பியல்புகளால் பெயராய்வு ( Oho mastics ) எனத் தனித்துறையாக வளர்ந்துள்ளது. பெயராய்வை மக்கட்பெயர் ஆய்வு ( Anthroponymy study ), இடப்பெயர் ஆய்வு ( Toponymy study ) என இரண்டாகப் பிரிப்பர். ஒரு நாட்டின் பழங்கால வாழ்வை யும் வரலாற்றையும் அறிவதற்கு இலக்கியம், கல்வெட்டு, நாணயம் போன்று பெயராய்வும் பெருந் துணைபுரியும்.

இத்துறையிலும் மேலை நாட்டாரே முன்னோடியாக உள்ளனர். இடப்பெயராய்வின் முக்கியத் துவத்தை முதலில் உணர்த்தியவர் கோல் பிரைட்வில் எல்ம் லெய்ப்னிசு, 1768 ஆவார். எக்லி ( Egli ) என்பவர் தொடக்கக் காலத்தில் இடப்பெயராய்வு செய்த முன் னோடியாவார். அனைத்துலகப்பெயராய்வு மையம் உலூவெய்ன் நகரில் நிறுவப்பெற்றுள்ளது.

இந்தியாவில் தல புராணங்கள் இடப்பெயராய்வுக்கு முன்னோடியாகத் திகழ்கின்றன. காசிநாத் இலட்சுமணன், மிதிலா சரண்பாண்டே, சங்காலியா, சேசாத்திரி, வாசுதேவ், அகர்வாலா, விசுவநாத ரெட்டி, அயவதனராவ், அச்சுதமேனன், ரா.பி. சேதுப்பிள்ளை முதலியோர் இடப்பெயராய்வு செய்துள்ளவர்களில் சிலர்.

தமிழகத்தில் இராமலிங்க வள்ளலார் இவ்வாய்வினைத் தொடக்கம் செய்தார் எனக்கூறலாம். டாக். ரா.பி. சேதுப்பிள்ளையைத் 'தமிழ் ஊர்ப்பெயரின் தந்தை' எனலாம். அவரது **தமிழகம் ஊரும் பேரும்** ஊர்ப்பெயர் பற்றிய சிறந்த நூலாகும். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் தல புராணங்கள் ஊர்ப்பெயர் பற்றி ஆராய உதவுகின்றன. ஞானமுத்துவின் கன்னியாகுமரி மாவட்ட ஊர்ப்பெயர் ஆய்வும், நாச்சிமுத்துவின் கோயம்புத்தூர் மாவட்ட ஊர்ப்பெயராய்வும், மா. நயினார் சுந்தரத்தின் சுசிந்திரம் கல்வெட்டுகளில் ஊர்ப்பெயராய்வும், த.கோ. பரமசிவத்தின் தஞ்சை மாவட்ட இடப்பெயராய்வும், ஆளவந்தார், பகவதி, சந்திரசேகரன், பழ. அண்ணாமலை போன்றோரின் ஊர்ப் பெயராய்வும் இவண் கண் குறிப்பிடத்தக்கன.

மனிதப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதில் வரலாற்றிற்கும் தொல்பொருளாய்வுக்கும் என்ன பங்கு உண்டோ அப்பங்கு இடப்பெயராய்வுக்கும் உண்டு என இன்றைய இடப்பெயராய்வாளர்கள் கருதுகின்றனர். தொல்பொருளாய்வில் காணப்படாததும் வரலாற்றுச் சான்றுகளில் திரிபடைந்து அல்லது புறக்கணிக்கப்பட்டுக் காணப்படுவதுமான மொழியியல் செய்திகளை இடப்பெயர்கள் முழுமையாகத் தருகின்றன எனக்கூறும் வானிரைட் ( Waniwright ) கூற்று இங்கு குறிப்பிடத்தக்கது. மனித இனங்கள் பழங்காலத்தில் வாழ்ந்த பகுதியை இடப்பெயர் மூலம் அறியலாம். பாரசீகப் பகுதியில் திராவிடர் வாழ்ந்தனர் என்பதற்கு எல்.வி. இராமசாமி அய்யர் ஊர்ப்பெயர்களைச் சுட்டிக் காட்டுவர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை அறியவும் இயற்கை நில அமைப்புகளை அறியவும் சமூக நிலை அறியவும் பூகோள அமைப்பு அறியவும் இடப்பெயர்கள் துணை புரிகின்றன.

இடப்பெயராய்வை முழுநிலை ஆய்வு ( Comprehensive survey ) , சிறிய நிலை ஆய்வு ( Small scale survey ) எனப் பகுத்து, இடப்பெயர்களைத் திரட்டல் ( Collection of Place ), சான்று செய்திகளைத் திரட்டல் ( Documentation ), அடையாளம் காணல் ( Identification), விளக்குதல் ( Interpretation ), வெளியிடல் ( Pub lication ) என ஐந்து நிலைகளில் காண்பர்.

ஊர்ப்பெயர்களின் அமைப்பு முறையை நோக்கினால் அவற்றைச் சிறப்புக்கூறு ( Specifics ), பொதுக்கூறு ( generics ) என இரண்டாகப் பிரிக்கலாம். ஊர்ப்பெயரின் ஈற்றிலே ஊர்ப்பெயரின் விகுதியாக அல்லது பின்னொட்டாக ( suffix ) அமைந்திருக்கும் கூறு பொதுக் கூறாகும். இக்கூறுதான் முதலில் ஊரின் பெயராக அமைந்திருக்க வேண்டும். காலப்போக்கில் ஒரே பெயரில் பல ஊர்கள் தோன்றும்போது அவற்றை வேறுபடுத்த சிறப்புக்கூறுகள் தோன்றலாயிற்று. சிறப்புக்கூறினை முன்னோட்டு எனலாம். ஊர்ப்பெயரின் முன்னோட்டாக அமைந்து ஊர்ப்பெயரை இனங்கண்டு கொள்ள உதவுகிறது. சில ஊர்கள் ஒரே சொல்லாக அமைவதும் உண்டு. இத்தகைய ஒரே சொல்லாக அமைந்த பெயர்களே முதலில் தோற்றம் பெற்றிருக்கவேண்டும் என சில இடப்பெயராய்வாளர்கள் கூறுகின்றனர். சிறப்புக்கூறுகளை விளக்கப் பெயரடை, ஆட்பெயரடை, பிற வகைப்பெயரடை என மூவகையாகப் பகுக்கின்றனர்.

புரம், ஊர், ஏரி, காடு என்ற பொதுக்கூறுகள் உள்ள ஊர்ப்பெயர்கள் தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. குளம், மங்கலம் என்னும் பொதுக்கூறு உள்ள ஊர்ப்பெயர்களை நீலகிரி மாவட்டம் தவிர எல்லா மாவட்டங்களிலும் காணலாம். பட்டி என்று முடியும் ஊர்ப்பெயர்கள் மதுரை மாவட்டத்திலும் இராமநாதபுர மாவட்டத்திலும் அதிகம் காணப்படுகின்றன. விளை என முடியும் ஊர்ப்பெயர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் அதிகம் காணப்படுகின்றன.

மொழியியல் வளர்ச்சி இடப்பெயராய்வுக்கு உந்துசக்தியாக அமைந்தது. ஓரினமாதல் (assimilation) மூலம் கோவன்புத்தூர், கோயமுத்தூர் என மாற்றம் பெற்றதையும் வேறினமாதல் ( dissimilation ) மூலம் செம்மடைப்பாளையம், செம்படைப்பாளையம் என மாற்றம் பெற்றதையும் ஒலிஇடப்பெயரால் ( metathesis ) ராதாபுரம் தாராபுரம் என மாற்றம் பெற்றதை விளங்கிக்கொள்ள முடிகிறது. வரலாற்றுப்பெயர் வடிவங்களான செங்கழுநீர்பட்டு, செங்கல்பட்டு என மாறியதையும், இளங்கோக்குடி, அம்பாசமுத்திரம் என மாறியதையும்

திருமறைக்காடு வேதாரண்யம் என மாறியதையும் காணலாம்.

ஊரில் பேசப்படும் மொழி, சாதி, தொழில் முதலியவைகளும் இடப் பெயராய்வுக்கு உதவியாக இருக்கும் நில அமைப்பு, நில வருவாய்ச் செய்திகளைக் காட்டும் ஊர்ப்பெயர்களும் உள்ளன. பொருளனியல் மாற்றத்தையும் ( semantic charge ) ஊர்ப்பெயரில் காணலாம். படை, படைமுகாம் குறித்த பாளையம், பின்னர் ஊரைக் குறிக்கலாயிற்று. படையைக் குறித்த பாடி பின்னர் ஊரைக்குறிக்கலாயிற்று. சிறப்புப் பொருளை இழந்து பொதுப்பொருட்பேறு பெற்று விட்டன. பெயர்ச்சிகளையும் ஊர்ப்பெயர் மூலம் அறியலாம். சமய வரலாற்றை அறியவும் ஊர்ப் பெயர்கள் துணை புரிகின்றன. பள்ளி, பாழி போன்றவை சமண, பௌத்தத் தொடர்பைக் காட்டுகின்றன. அரசியல் வரலாற்றில் சேர, சோழ, பாண்டிய, பல்லவ, நாயக்க, இசுலாமியத் தொடர்பை ஊர்ப்பெயர் காட்டுகின்றது. இனங்களின் பண்பாடு, வாழ்க்கை நோக்கு முதலியவற்றையும் இடப்பெயர் மூலம் அறியலாம்.

- சு.ச.

**எழுத்துச் சீர்திருத்தம் :** எழுத்துகள் மனித முயற்சியினால் ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன்னால் உருவாக்கப்பட்டது என்பது வரலாற்று உண்மை. காலம் செல்லச்செல்ல பல மொழிகள் தங்களுக்கெனத் தனித்தனி வடிவங்களை அமைத்துக் கொண்டன. ஒரு மொழி எழுத்து மொழியாகப் படைத்துக் கொள்ளப்பட்ட பிறகும் காலந்தோறும் வடிவமும், பிறவும் மாறி வந்திருக்கிறது என்பது வரலாற்று ஆசிரியர்கள் எடுத்துக்கூறும் உண்மையாகும். எனவே, எழுத்துகளுக்கும் ஒரு வரலாறு உண்டென்பது எல்லோரும் ஒத்துக்கொள்ளும் உண்மையாகும்.

எழுத்தைப் பொறுத்தவரையில் அச்சுப்பொறியின் கண்டுபிடிப்பு முக்கியமானதாகும். அச்சுப் பொறி ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டு உலகின் எல்லா பகுதிகளுக்கும் பரவியது. இதனால் பல புதிய மொழிகள் எழுத்துவடிவம் பெற்றன. வேறு பல மொழிகள், முன்பு வழங்கிவந்த எழுத்துகளிலும் வடிவங்களிலும் மாற்றத்தைக் கொண்டுவந்தன. அந்த மாற்றங்களில் பழைய வடிவத்தை விட்டுவிட்டு புதிய வடிவத்தை ஏற்றுக்கொண்ட மொழிகள் உள்ளன. எடுத்துக் காட்டாக மராத்தி மொழி மோடி எழுத்துகளில் எழுதப்பட்டு வந்தது. அச்சுப்பொறி அறிமுகப்படுத்தப் பட்ட பொழுது மோடி எழுத்துகளைத் தனித்தனிக் கட்டைகளாகப் பிரித்து வார்க்க முடியாமல் போனதால் நாகரி எழுத்துகளை ஏற்றுக்கொண்டது. இப்படிப்பட்ட முழு வரி வடிவ மாற்றங்கள் ஏற்பட்டது எழுத்துச் சீர்திருத்தத்தில் அடங்குமாயினும் எழுத்துச் சீர்திருத்தம் என்பது ஒரு மொழியில் முன்னர் வழங்கிய வடிவங்களில் செய்துகொள்கிற மாற்றங்களையே சிறப்பாகக் குறிப்பதாக எடுத்துக்கொள்ளப் படுகிறது. ஆனாலும் எழுத்துச் சீர்திருத்தம் என்பதைப் பொதுவாக வரிவடிவ் எழுத்துகளில் செய்து கொள்ளும் மாற்றம் ( வரிவடிவ மாற்றம் ), எழுத்து எண்ணிக்கையில் செய்துகொள்ளும் மாற்றம் ( எண்ணிக்கை மாற்றம் ), ஒரு சொல்லுக்குரிய எழுத்தில் செய்து கொள்ளும் மாற்றம் ( சொல் லெழுத்து மாற்றம் ) ஆகிய மூன்று வகையைக் குறிப்பிடுவதாகக் கொள்ளப்படுகிறது. பரவலாக வரி வடிவங்களில் செய்து கொள்ளும் மாற்றங்களை மட்டுமே எழுத்துச் சீர்திருத்தம் என்று கருதப்பட்டாலும் கோட்பாடு அளவில் மேலே குறிப்பிட்ட மூன்றையும் எழுத்துச் சீர் திருத்தம் என்ற கருத்து அடக்கியுள்ளதாகக் கருதுவதே உலகளாவிய நிலைக்குப் பொருந்தும்.

இந்தோனேசிய எழுத்து மொழியில் அரபி வரி வடிவத்திலிருந்து உரோம வரிவடிவத்திற்கு மாறியதும், பிலிப்பைன் நாட்டில் தகலாக்கு மொழியில் அந்த மொழி தேசிய மொழியாக்கப்பட்டு எழுத்து எண்ணிக்கையே மாற்றம் ஏற்பட்டதும், அக்டோபர் புரட்சிக்குப்பிறகு உருசிய மொழியில் சொல் எழுத்துகளில் மாற்றம் ஏற்பட்டதும், எழுத்துச் சீர்திருத்தமாக மொழியியல் அறிஞர்களால் கருதப்படுவதால் எழுத்துச் சீர்திருத்தமென்பது வரிவடிவ மாற்றம், எழுத்து எண்ணிக்கையில் மாற்றம், சொல் எழுத்துகளில் மாற்றம் ஆகிய மூன்று கூறுகளையும் கொண்டது என்பது தெளிவாகும்.

தமிழ்மொழியில் எழுத்து எண்ணிக்கையில் மாற்றம் செய்ய வேண்டுமென்று, குறிப்பாக, புதிய வடிவங்களைச் சேர்க்கவேண்டுமென 1915லேயே சுப்ரமணிய பாரதியாரும், 1933இல் வரிவடிவங்களில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று ஈ.வெ.ரா.பெரியாரும், சொல்லெழுத்துகளில் சில மாற்றங்கள் செய்ய வேண்டுமென்று தமிழறிஞர்கள் பலரும் சொல்லியுள்ளார்கள். எனவே, தமிழிலும் எழுத்துச் சீர்திருத்தம்

என்பது அந்த மூன்று கூறுகளும் அடங்கியதுதான் என்பது தெளிவாகிறது. எழுத்துச் சீர்திருத்தமென்பது மொழி அமைப்பை ஒட்டிய மாற்றமானாலும் சமூகத்தில் பெரிய மாற்றம் ஏற்பட்ட பிறகே எழுத்துச் சீர்திருத்தம் ஏற்படும்.

இந்தோனேசிய மொழியில் 1945இல் விடுதலை அடைந்த பிறகே வரிவடிவ மாற்றம் ஏற்பட்டது. அப்படியே வியட்நாம் பிரஞ்சுகாரர்கள் குடியேற்ற நாடான பிறகே உரோம் எழுத்தை ஏற்றுக் கொண்டார்கள். சோவியத் ஒன்றியத்தைச் சேர்ந்த மத்திய ஆசியாவில் பேசப்படும் பல தர்கிக்கு மொழிகளிலும் முதலில் அரேபிக் எழுத்துகளிலிருந்து உரோமன் எழுத்துக்கும் பின்னர் ரோம் எழுத்துகளிலிருந்து சிரிலிக் எழுத்துக்கும் மாற்றம் ஏற்பட்டது. பொதுவுடைமைக் கட்சி ஆட்சிக்கு வந்தபிறகே ஆகும்.

இந்தியாவில் தேசிய போராட்டம் ஏற்பட்ட போது தமிழில் அடிக்கடி பிற மாநில மக்களின் பெயர்களையும் ஊர்ப்பெயர்களையும் எழுதும் தேவை ஏற்பட்டது. பல இந்திய மொழிகளில் உள்ள குரல் ஒலி உடைய வல்லொலிகள் தமிழில் இல்லாததாலும், தமிழில் வழங்கும் வடமொழிச்சொற்களில் அவ்வொலிகள் காணப்பட்டதாலும் பாரதியார் B, D, G போன்ற குரல்ஒலி உடைய வல்லொலிகளுக்குப் புதிய எழுத்துவேண்டுமென்று வாதாடினார். அதாவது இந்திய வரலாற்றிலும், தமிழ்நாட்டு வரலாற்றிலும் விடுதலைப்போராட்டக் காலம் ஒரு சமூக மாற்றத்தின் வெளிப்பாடாகவே கருதப்படுகிறது. எனவேதான் பாரதியார் எழுத்து எண்ணிக்கையில் மாற்றம் செய்ய வேண்டுமென்று வாதிட்டார். இன்று ஜ, ஸ, ஷ, ஹ போன்ற எழுத்துகளையும் வடமொழி எழுத் துகள் என்று கூறிப் பயன்படுத்தக்கூடாது என்று ஒரு சிலர் வாதாடி வருகின்றார்கள். ஆனால் இன்றைய படைப்பிலக்கியங்களையும், பிறதுறை நூல்களையும் பார்த்தால் அந்த எழுத்துகள் பயன்படுவதை அறியலாம். அதேசமயத்தில் புதியதாக அறிவியல் நூல்கள் எழுதும் பொழுது இதைப் பெரிய சிக்கலாகக் கருதி ஒரு சிலர் பேசி வருகிறார்கள். இங்கும் தனியார் வெளியிடும் பல அறிவியல் நூல்களில் இந்த எழுத்துகள் பயன்படுவதைக் காணலாம். இந்த நிலையில் தமிழில் கலைச் சொற்களை எப்படி ஒலிபெயர்ப்பது என்ற கேள்வி எழுத்து எண்ணிக்கையுடன் தொடர்புடையதாகும்.

வரிவடிவத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்று சென்னையில் நடந்த தமிழன்பர் மாநாட்டில் முதன்முதலாகத் தீர்மானம் செய்யப்பட்டதால் பெரியார் ஈ.வெ.ரா அப்போதிருந்த எழுத்துச் சீர்த்திருத்தத்தைக் கடைப்பிடித்து வந்தார்கள். அதையொட்டி இன்னும் பல எழுத்துச் சீர்த்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், புலவர் குழந்தை, தமிழ்நாடு பொதுநூலகத்துறை இயக்குநராக இருந்த தில்லைநாயகம், மொழியியல் அறிஞரான பொன். கோதண்டராமன், பொறியியல் அறிஞரான வா. செ. குழந்தைசாமி போன்றவர்களும் புதிய வரிவடிவச் சீர்திருத்தங்களைப் பரிந்துரைத்தார்கள். ஆனால் தமிழ்நாடு அரசு 1978இல் ஈ.வெ.ரா பெரியார் நூற்றாண்டு விழா கொண்டாடியபொழுது அக்டோபர் 19இல் பெரியார் கடைபிடித்த எழுத்துச் சீர்திருத்தத்தை ஒத்துக் கொண்டு உயிரெழுத்துகளின் ஐ - கார, ஔ - காரங்களை அய், அவ், என்னும் உயிரெழுத்துகள் ஆகாரம், ஓகாரம், ஐகாரம் ஆகியவற்றில் ஒரே உயிர்மெய் வடிவைப் பின்பற்றவேண்டும் என்று ஆணை பிறப் பித்தது. அதன்படி,

| பழையமுறை | புதியமுறை |
|---|---|
| ஐ | அய் |
| ஔ | அவ் |
| ஞு | ணா |
| று | றா |
| ணை | ணை |
| லை | லை |
| ணொ | ணொ |
| றொ | றொ |
| ணோ | ணோ |
| றோ | றோ |

இதன்படி ஒவ்வொரு உயிர்மெய்க்கும் ஒரு துணை வடிவம் தரப்பட்டது. இதனால் குழந்தைகள் எழுத்து மொழியைக் கற்றுக்கொள்வது எளிதென்றும், அச்சுகோப்பதற்கும் தட்டச்சு செய்வதற்கும் எளிதானதென்றும் விளக்கப்படுகின்றது. எனவே வரிவடிவச் சீர்திருத்தம் கல்வியியல் நோக்கிலும், பொறியியல் நோக்கிலும் திறன் மிகுந்ததாக அமைகிறது. இதே முறையில் இகர, ஈகார, உகர, ஊகார உயிர்மெய்களுக்கும் ஒரே வடிவத்தையே எல்லா இடத்திலும் பயன்படுத்த வேண்டுமென்ற முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சொல்லெழுத்துக்குரிய மாற்றம் பற்றித் தமிழறிஞர்கள் சில நூல்களில் விவாதித்ததோடு நிற்கிறதே தவிர, அது செம்மைப்படுத்தப்படவில்லை. எ.கா. இயக்குநர், ஒட்டுநர் போன்ற சொல்களில் ந - கரம் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னாலும் ன - கரமே பயன்படுத்தி வருகிறார்கள். இப்படி பல சொற்களில் எழுத்துகள் பற்றிய கருத்து வேறுபாடு உள்ளது. எழுத்துச் சீர்திருத்தம் என்பது எழுத்து வரிவடிவ மாற்றம், சொல்லெழுத்து மாற்றம், எழுத்து எண்ணிக்கை மாற்றம் என்ற கருத்து தெளிவாக உணரப்பட்டால் வரிவடிவ மாற்றத்தில் செய்துகொண்ட மாற்றத்தைப் போல, மற்ற இரண்டு நிலையிலும் வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்துகொள்ளத் தமிழ்ச்சமூகம் முன்வரும்.

- செ. வை. ச.

**ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயர் :** இவன் இரண்டாவது பாண்டியப்பேரரசின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டு ஆட்சிபுரிந்த சம்புவராய மன்னன். இவ்வேந்தனது அரசு, இன்றைய வடார்க்காடு மாவட்டத்தின் மூன்று வட்டங்களையும், செங்கை மாவட்டத்தையும் உள்ளடக்கியதாக விளங்கியது. இவன் பாண்டியர்க்குத் துணையாகப் பல போர்களில் கலந்து கொண்டு வெற்றி தேடித்தந்தவன். பாண்டியர்கள் வீழ்ச்சியுற்ற போழ்து, இவன் தனது மகனுடன் சேர்ந்து சம்புவராயது இரண்டாவது தனியரசை நிறுவிய பெருமைக்குரியவன். கோயிற் பணிகளில் ஈடுபட்டவன். இறையன்பு மிக்கவன்.

ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயன் கி.பி. 1306 - கி.பி. 1330. இயற்பெயர் ஏகாம்பரநாதன். சடாவர்மன் வீரபாண்டியன் கி.பி. 1297 - 1342, சடாவர்மன் சுந்தர பாண்டியன் கி.பி. 1303 - 1319 ஆகிய இரு பாண்டிய வேந்தரது மேலாண்மையை ஏற்று அவர்களின் கீழ் அரசு புரிந்தவன். கி.பி. 1313 - 1316 முடிய காஞ்சிப்பகுதியை ஆண்ட திருவாங்கூர் மன்னன் இரவிவர்மன் குலசேகரனைப் பாண்டியன் வெல்ல, இச் சம்புவராயன் உதவி புரிந்தான். ஏகாம்பரநாதன் அந்தலில் வென்றான் திருநாளுக்குத் தானமளித்துள்ளதாலும், செய்யாறு வென்றான் சதுர்வேதி மங்கலத்தை நிறுவியுள்ளதாலும் இவனது வெற்றிகள் புலனாகின்றன. விரிஞ்சிபுரத்தில் 'செய்யாற்றில் வென்றான் திருவீதி' யும் அச்சரப்பாக்கத்தில் 'செய்யாற்றில் வென்றான்' எனும் ஊரும் உள்ளதால் இவனது பெருமையை உணரலாம்.

கி.பி. 1322 வரை பாண்டிய சிற்றரசனாகத் திகழ்ந்த இச்சம்புவராயன், முசுலிம் படையெழுச்சியால் பாண்டியர் வலிமை இழக்கவே, சம்புவராயரின் தனியரசை நிறுவினான். கி.பி. 1324 ஆம் ஆண்டின் குன்னத்தூர்க் கல்வெட்டில் இவனது மகன் 'வென்று மண்கொண்டான்' எனக்குறிக்கப்படுவதால் தந்தையும் மகனும் சேர்ந்து பாண்டியரின் பிடியினின்றும் இவர்கள் விடுபட்டமை புலனாகும்.

இவ்வேந்தன் தனியாட்சி மேற்கொண்டபின், தனது பெயரிலேயே 25வது ஆட்சியாண்டுக் கல்வெட்டை வெடாலில் பொறித்துள்ளான். இதுவே இவனது கடைசிக் கல்வெட்டாகும். இவன் கி.பி. 1330 வரை ஆட்சி புரிந்தான் எனலாம். இவனையடுத்து இவன் மகன் வென்று மண்கொண்ட சம்புவராயன் ஆட்சிக்கு வந்தான். ஏகாம்பரநாதன் அரசரில் அஞ்சாத பெருமாள் எனவும் சிறப்பிக்கப்பெறுகிறான். இச்சம்புவராயன் பள்ளிகொண்டாவிலுள்ள பள்ளிகொண்ட பெருமாள் கோயிலை கட்டியுள்ளான். விரிஞ்சிபுரம், வழித்துணை நாயனார் கோயிலுக்கும் உக்கல் பெருந்திருக்கோயிலுடைய நாயனார் கோயிலுக்கும் இறையிலி வழங்கியுள்ளார். இச்சம்புவராயன் கி.பி. 1330இல் இம்மண்ணுலக வாழ்வை நீத்தான். இவ்வேந்தனது 15 கல்வெட்டுகள் இதுகாறும் கிடைத்துள்ளன.

- ம. இரா. த.

**ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் :** இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஐக்கிய நாடுகள் அவையால் நிறுவப்பட்ட முதலாவது சிறப்பு அமைப்பு உணவு மற்றும் வேளாண்மை அமைப்பாகும். இந்நிறுவனம் 1945 ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்களில் கனடா நாட்டின் கியூபெக் நகரில் நிறுவப்பட்டது. ஊட்டச்சத்துக் குறைவான உணவு, பசிக்கொடுமை ஆகியவற்றுடன் போராடி, காடுவளம், மீன்வளம் உள்ளிட்ட உணவு மற்றும் வேளாண்மை வளர்ச்சி நடவடிக்கைகளை இது ஒருமுகப்படுத்துகிறது. கல்வி, பயிற்சி மற்றும் அமைப்பு உருவாக்கும் நடவடிக்கைகளில் வளரும் நாடுகளுக்கு இது உதவி வருகிறது.

**மாநாடு :** உறுப்பினர் நாடுகளைக் கொண்ட பொதுச்சபையே மாநாடு எனப்படும். இதில் மொத்தம் 158 நாடுகள் உறுப்பினர்களாவார்கள். இப்பொதுக்குழு இரண்டாண்டுக்கொருமுறை கூடி, கொள்கைகள் வகுப்பது, அமைப்பின் நிகழ்ச்சித் திட்டத்தை இறுதியாக்குவது, திட்டப்பட்டியலை தயாரித்து, புதிய உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது போன்ற பணிகளைப் புரியும். தவிர, இம்மாநாடு, தலைமைச் செயலகத்தின் தலைமை அலுவலரைத் தேர்ந்தெடுப்பதுடன் நிர்வாகக் குழுவின் ( Council ) தலைவரையும் நியமிக்கும். ஆண்டுதோறும் இப்பொதுச்சபை, இவ்வமைப்பின் வட்டார அலுவலகம் ஒவ்வொன்றிலும் மாநாடுகள் நடத்தி வருகிறது.

**நிர்வாகக்குழு :** இதன் உறுப்பினர்கள் 49 பேர். இவர்கள் பொதுச்சபையால் மூன்றாண்டுக்கொருமுறை உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகளாய்த் தேர்ந்தெடுக்கப்படுவர். இதன் நிரந்தரக் குழுக்கள் வருமாறு: நிதி மற்றும் நிகழ்ச்சித் திட்டக்குழு, விளை பொருள் சிக்கல் குழு, மீன்வளக்குழு, வேளாண்மைக் குழு, வனவளக்குழு.

**செயலகம் :** 1989இல் இதில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை 2970. வட்டார மற்றும் இதர அலுவலகங்களில் பணிபுரிபவர்கள் 2830. தவிர தலைமையகத்திலும், வட்டார அலுவலகத்திலும் உள்ள வல்லுநர்கள் எண்ணிக்கை 368. கீழ்க்காணும் துறைகள் பணிகளை மேற்பார்வை செய்கின்றன. நிர்வாகம் மற்றும் நிதித்துறை, பொது விவகாரங்கள் மற்றும் தகவல் தொடர்புத்துறை, பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைத்துறை, வேளாண்மை, மீன்வளம், வனவளம் மற்றும் வளர்ச்சித்துறைகள்.

**வட்டார அலுவலகங்கள் :** 5 வட்டார அலுவலகங்கள் செயல்படுகின்றன. ஆப்பிரிக்கா நாட்டுக்கான வட்டார அலுவலகம் கானாவிலும், ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளுக்குத் தாய்லாந்து நாட்டில் பாங்காக் நகரிலும், ஐரோப்பாவுக்கான அலுவலகம் இத்தாலி, உரோமிலும், இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகளுக்குச் சிலிநாட்டின் சாண்டியாகோ நகரிலும் கிழக்கு நாடுகளுக்கு ரோம் நகரிலும் உள்ளன.

**தொடர்பு அலுவலகங்கள் :** அமெரிக்க ஐக்கிய நாடுகளில் வாசிங்கடன் நகரிலும், நியுயார்க் நகரிலும் செயல்படுகின்றன.

**உணவு வேளாண்மை அமைப்பின் துணைக் குழுக்கள் :** பல்வேறு நடவடிக்கைகளுக்கான 35 குழுக்களும் சார்பு அமைப்புகளும் தனித்தனியே இயங்கி வருகின்றன. அவற்றுள் சில : 1. வேளாண் புள்ளி விவரத்துக்கான ஆப்பிரிக்கக் குழு, 2. ஆப்பிரிக்க வனவளக் குழு, 3. ஆசிய - பசிபிக் வேளாண் புள்ளி விவரக்குழு, 4. ஆசிய - பசிபிக் வனவளக்குழு, 5. உரங்களுக்கான குழு, 6. பயிர் பாதுகாப்புக் குழு, 7. ஐரோப்பிய வேளாண்குழு, 8. இலத்தீன் - அமெரிக்காவுக்கான மீன்வளக்குழு, 9. பன்னாட்டு அரிசிக் குழு, 10. இந்தியக்கடல் மீன்வளக் குழு, 11. உள்நாட்டு மீன்வளக்குழு.

**நடவடிக்கைகள் :** உலகின் மக்கள்தொகை அதிகரிப்புக்கேற்ப, வேளாண்மை, காடுவளம் மற்றும் மீன் வளங்களும் வளர்ச்சியடைந்து பசிக்கொடுமையை எதிர்த்துப்போராடி, மக்களுக்குச் சத்தான உணவு கிடைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். 1985-ம் ஆண்டில் இவ்வமைப்பு 'ஐந்தாவது உலக உணவு கணக்கெடுப்பு' நடத்தியது. அதன்படி, உலக மக்கள் தொகையில் குறைந்த ஊட்டச் சத்து உண்பவர்கள் நிலை 19 விழுக்காட்டிலிருந்து 15 விழுக்காட்டிற்குக் குறைந்துள்ளது. பெருகி வரும் மக்கள் தொகை காரணமாக 1980இல் ஏறத்தாழ 335 மில்லியன் மக்கள் குறைந்த சத்துணவு உண்பவர்களின் பட்டியலில் இடம் பெறுவர். 1987இல் நடத்திய கணக்கெடுப்புப் படி கி.பி. 2000ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை 530 மில்லியனை எட்டும் என்று மதிப்பிடப்படுகிறது. சிறு உழவர்களை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட இவ்வாய்வு பரிந்துரைக்கிறது.

ஊட்டச்சத்தின் அளவையும், மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் இவ்வமைப்பு பாடுபடுகிறது. மீன்வளம், காடுகள் மற்றும் நிலங்கள் மூலம் கிடைக்கும் உணவு மற்றும் இதர உணவுப்பொருட்களின் உற்பத்தியையும், வழங்கல் வழிமுறைகளையும் முன்னேற்றும் நோக்கத்துடன் இது செயல்படுகிறது. இதன் பணி நான்கு அடிப்படை வகைகளைக் கொண்டது. அவை :

1. தகவல்கள் சேகரித்து, ஆய்வு செய்து வழங்குவது
2. கொள்கை வகுத்தல் மற்றும் திட்டமிடலில் அரசாங்கங்களுக்கு அறிவுரை வழங்குவது

3. உறுப்பு நாடுகளிடையே ஆலோசனை மற்றும் ஒத்துழைப்புக்கு வழி செய்தல்

4. தொழில்நுட்ப உதவி மற்றும் ஆலோசனை வழங்குவது

**வேளாண்மை :** உணவு, வேளாண்மை அமைப்பின் கள நிகழ்ச்சி செலவினங்களில் மூன்றில் ஒரு பங்கு பயிர் உற்பத்தியைப் பெருக்குவதற்குச் செலவிடப்படுகிறது. அதிக அளவிற்கு நட்டம் ஏற்படாமல் உணவுப்பயிர் மற்றும் எண்ணெய் வித்துகளைப் பயிரிடும் நுட்பத்தை உழவர்களுக்கு எடுத்துரைக்கிறது. பல்வேறு அரசுகளுக்குப் பயிர்ப்பாதுகாப்பு மற்றும் விதைகள் வழங்குவது பற்றி அறிவுறுத்துகிறது. செயல்விளக்கம் மூலம் பருப்பு வகைகள் மற்றும் உணவுப் பயிர் உற்பத்தியில் அதிக கவனம் செலுத்துகிறது. எ.கா.1987இல் உ.வே.அ வேளாண்மை விரிவாக்கப் பணியாளர்களுக்குப் பயிற்சி வழிமூலமும் சிறு உழவர்களுக்கு முன்னோடித்திட்டம் மூலமாகவும் உணவுப்பயிர் உற்பத்திப் பெருக்கம் பற்றி உதவி வருகிறது. பன்னாட்டு அரிசிக் குழு வாயிலாக இவ்வமைப்பு உலகின் மிக முக்கியமான ஒற்றை உணவுப் பயிர் உற்பத்தியைப் பெருக்கி வருகிறது. அரிசி சாகுபடியுடன் குறைந்தளவு நிலத்தில் மற்ற பொருட்களான மீன், காளான், சிறு கால்நடைகள் இவற்றையும் இணைத்துச் சாகுபடி செய்யும் முறையை ஊக்குவிக்கிறது. ஊட்டச்சத்து உணவு கிடைக்கவும் உணவுப் பொருட்கள் அதிகளவுக்குக் கிடைக்கச்செய்யவும் உ. வே. அமைப்பு உழவர்களுக்குத் தோட்டக்கலை மற்றும் கால்நடை வளர்ப்புக்குப் பெரிதும் உதவி வருகிறது. 1988இல் ஐ. நா. வளர்ச்சி அமைப்பு உதவியுடன் ஆசியாவில் 499, அருகாமை கிழக்கு நாடுகளில் 264, இலத்தீன் அமெரிக்காவில் 208, மற்றும் ஆப்பிரிக்காவில் 933 ஆக 1904 களத்திட்டங்களை நடத்தியது. பயிர்ப்பாதுகாப்பு மற்றும் கால்நடை மருத்துவம் உ. வே. அமைப்பின் முக்கியப் பணிகளில் இடம் பெற்றுள்ளது.

பயிர்ப்பாதுகாப்புக்கு முக்கியத்துவம் தரும் வகையில் உறுப்பு நாடுகளின் வேண்டுகோளுக்கிணங்க 1985 இல் பூச்சிக்கொல்லிகள் வழங்கல் மற்றும் பயன்பாடு பற்றி சர்வதேச விதிமுறை ஒன்றை ஏற்படுத்தியது. 1986 இல் பயிர்பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் வகையில் விரைவுமையம் ஒன்றை உருவாக்கியது. ஆப்பிரிக்காவில் பூச்சிகளால் பயிர்ச்சேதம் அதிகளவுக்கு உண்டாயிற்று. 1986ஆம் ஆண்டு இடையில் உ. வே. அமைப்பு ஆப்பிரிக்க வேளாண்மை என்பது பற்றி ஓர் ஆய்வு நடத்தியது. அதனைத் தொடர்ந்து உ.வே. அமைப்பின் வேளாண் செயல் திட்டத்தை 49 நாடுகள் ஏற்றுக்கொண்டன. 1988இல் இலத்தீன் அமெரிக்கா, கரீபியன் நாடுகளின் வேளாண்மை பற்றி ஓர் ஆய்வையும் நடத்தியது. வேளாண்மை தவிர உ. வே. அமைப்பு (ஐ. நா), மீன் வளம், வனவளம், பதனிடல் மற்றும் சந்தையிடுகை, உணவுப்பாதுகாப்பு போன்ற துறைகளிலும் கவனம் செலுத்தி வருகிறது. மீன்வளத்துக்காக 1979இல் உ.வே. நிறுவனம் ஒரு சிறப்பு அமைப்பை ஏற்படுத்தியது. சிறிய அளவு மீன்வளர்ப்பில் தான் இது கவனம் செலுத்துகிறது. மீன்வள சட்ட ஆலோசனை நிகழ்ச்சிகளையும் ஏற்படுத்தியுள்ளது. 1984இல் கட்டப்பட்ட உலகளவு மீன்வள நிர்வாக மாநாட்டில் மீன்வள உற்பத்தியைப் பெருக்குவதற்காக ஐந்து செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

உணவு, இருப்பிடம், எரிபொருள், வேலை வாய்ப்பு ஆகியவற்றில் காடுகளின் பங்கை உ. வே. அமைப்பு வலியுறுத்துகிறது. மண்வளம் மற்றும் நீர் வளத்தைப் பாதுகாக்கக் காடுகளை அழிப்பதைத் தடுக்கவேண்டி 1985இல் செயல்திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தியது. 1987இல் கூடிய சர்வதேச மாநாடு அழிந்து வரும் காடுகளைப் பாதுகாக்க அறைகூவல் விடுத்தது. வனவளம் சார்ந்த தொழிற்சாலை அமைக்க நாடுகளைக் கேட்டுக்கொண்டது.

- எம். எஸ். வே.

## ஐக்கிய நாடுகள் முன்னேற்றத்திட்டம் :

ஐ. நா. பொதுச்சபையால் 1965ஆம் ஆண்டில் இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. வளர்ந்துவரும் நாடுகள் தங்களின் இயற்கை வளம் மற்றும் மனித ஆற்றல்களைக் கொண்டு செல்வத்தைப் பெருக்கும் நடவடிக்கைகளுக்கு இத்திட்டம் உதவி வருகிறது.

**அமைப்பு :** இத்திட்டம், பொருளாதார மற்றும் சமூகக் குழுவின் மூலமாக ஐ. நா.பொதுச்சபைக்கு அறிக்கைகளை அளிக்கும். இக்குழுவில் மொத்தம் 48 நாடுகளில் பிரதிநிதிகள் உறுப்பினர்களாய் உள்ளனர். 27 உறுப்பினர்கள் வளர்ந்து வரும் நாடுகளிலிருந்தும், 21 பேர் பொருளாதாரத்தில் முன்னேறிய நாடுகளிலிருந்தும் அங்கம் வகிக்கின்றர். ஆண்டுதோறும்

மூன்றில் ஒரு பங்கினர் மாறிக்கொண்டே வருவர். இக்குழு ஆண்டுதோறும் கூடி கொள்கைகளை வகுக்கும்.

**மண்டல அலுவலகங்கள் :** ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் பசிபிக் நாடுகள், ஐரோப்பா மற்றும் அரேபிய நாடுகள், இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் - ஆகிய நான்கு மண்டலங்களுக்கான அலுவலகங்களும் நியூயார்க் நகரில் இதன் தலைமை அலுவலகத்திலிருந்து செயல்படுகின்றன. தலைமை அதிகாரியிடமிருந்து வரும் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு இந்த மண்டல அலுவலகங்களிலுள்ள துணை நிர்வாகிகளைச் சாரும். தவிர 112 நாடுகளில் சிறப்புப் பிரதிநிதிகளும் உள்ளனர். பெரிய அளவு மற்றும் சிறிய அளவுத் திட்டங்களை இவர்கள் அலுவலக ஒப்புதல் பெற்று நிறைவேற்றுவர். மேலும் சர்வதேச திட்டங்களுக்கான தனிப்பிரிவு ஒன்றும் செயல்படுகிறது.

**கள அலுவலர்கள் :** இத்திட்டத்தின் கீழ் உதவி பெறும் அனைத்து நாடுகளிலும், இத்திட்டத்தின் பிரதிநிதியைக் கொண்ட ஓர் அலுவலகம் அமைந்திருக்கும். இவர்கள் அந்தந்த நாடுகளிலியே தங்கி இருப் பர். இவர்கள் ஐ. நா. தொழில்நுட்ப உதவியை ஒருமுகப்படுத்துவது, அரசுக்கு ஆலோசனை வழங்கு வது, களப்பணிகளை மேற்பார்வை இடுவது மற்றும் ஐக்கிய நாடுகளின் வல்லுநர் குழுக்களுக்குத் தலைமை வகிப்பது போன்ற பணிகளைச் செய்வர். வளர்ந்துவரும் எல்லா நாடுகளிலும் களஅலுவலகம் அமைந்திருக்கும். இந்நாடுகளில் நடைபெறும் ஐ.நா. வளர்ச்சிப் பணிகளை ஒருங்கிணைப்பது களஅலுவலர்களின் முக்கிய பணியாகும்.

**செயல்படுத்தும் / பணியை நிறைவேற்றும் அமைப்புகள் :** ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டத்தின் பணிகளில் பங்கெடுத்துச் செயல்படுத்தும் அமைப்புகள் பின்வருமாறு :

அ. ஐ. நா. தொழில் நுட்பக் கூட்டுறவுத்துறை

ஆ. சர்வதேச வணிக மையம்

இ. 26 ஐ. நா. அமைப்புகள்

ஈ. மண்டலங்களுக்கிடையேயான மூன்று வளர்ச்சி வங்கிகள்

உ. ஐந்து மண்டலப் பொருளாதாரக்குழுக்கள்

ஊ. பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கான அரேபிய நிதி

அமைப்புகளுக்கிடையேயான பணிக்குழு ஒன்று பங்குபெறும் அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்துகிறது.

**நிதி :** ஐ.நா. உறுப்பு நாடுகள் மற்றும் இத்திட்டத்தில் பங்குபெறும் அமைப்புகளின் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுகிறது. 1988ஆம் ஆண்டின் மொத்த செலவுகள் 1200 மில்லியன் தாலர்கள் ஆகும். இவற்றில் 810 மில்லியன் தாலர் தொகை களப்பணிகளுக்காகவும், எஞ்சியத் தொகை திட்டமிடல், நிர்வாகம் ஒருங்கிணைப்பு மற்றும் திட்டச் செயல்படுத்தவும் செலவாயின.

| 1988இல் செலவினம் வருமாறு | மில்லியன் தாலர்கள் |
|---|---|
| வேளாண்மை, வன மற்றும் மீன்வளம் | 176.6 |
| பொதுமுன்னேற்றம், கொள்கை, திட்டம் | 127.2 |
| தொழில் | 100.6 |
| இயற்கை வளம் | 98.3 |
| போக்குவரத்து / தகவல் தொடர்பு | 95.9 |
| அறிவியல் / தொழில்நுட்பம் | 46.7 |
| வேலைவாய்ப்பு, கல்வி, மக்கள்தொகை, சுகாதாரம் | 131.3 |
| 1988இல் மண்டலம் வாரியாக செலவினம் | |
| ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளுக்கு | 288.7 |
| ஆப்பிரிக்க நாடுகளுக்கு | 277.8 |
| இலத்தீன் அமெரிக்கா, கரீபியன் நாடுகள் | 110.8 |
| ஐரோப்பா மற்றும் அரபியன் நாடுகள் | 95.4 |
| மண்டலங்களுக்கிடையில் மற்றும் சர்வதேச அளவில் | 37.3 |
| மொத்தம் | **810.0** |

**இணைப்பு அமைப்புகள்**

**அ ) ஐ.நா. நாடுகள் மூலதன வளர்ச்சி நிதி** (UNCDF) : 1966 இல் நிறுவப்பட்ட இவ்வமைப்பு, மிகவும் பின்தங்கிய நாடுகளின் மூலதன திரட்சி நடவடிக்கைகளுக்கு உதவி செய்கிறது. மான்யங்களாகவும், குறைந்த வட்டிக் கடன்களாகவும் அளித்து வருகிறது. ஐ. நா. உறுப்பு நாடுகளில் உள்ள குறைந்த வருவாயுள்ள மக்களுக்குப் பயன்தரும் சிறிய திட்டங்களுக்குத் தாராள நிதி உதவி கிடைக்கும்.

**ஆ ) மகளிர்களுக்கான ஐ.நா. வளர்ச்சி நிதி** (UNDFW) : மகளிரின் வருமான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் நோக்குடன் 1985இல் தொடங்கப்பட்டது.

**இ ) அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான ஐ.நா. நிதி :** வளர்ந்து வரும் நாடுகளின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிப் பணிகளுக்கு உதவு புரியும் நோக்குடன் 1982இல் நிறுவப்பட்டது.

**ஈ) இயற்கை வளங்களை வெளிக்கொணரும் நடவடிக்கை களுக்கான ஐ.நா.வின் சுழலும் நிதி** (RFNRE) : வளரும் நாடுகளின் இயற்கை வளங்களை வெளிக்கொணரும் அல்லது தோண்டியெடுக்கும் பணிகளுக்கான மூலதனத் தேவைகளை இச்சுழலும் நிதி அளித்து வரு கிறது. இது 1974இல் அமைக்கப்பட்டது. பயன் பெற்ற நாடுகள் மறுபடி தங்கள் பங்களிப்புகளை இந் நிதிக்கு அளித்துவிட வேண்டும்.

**ஐ. நா. நாடுகளின் தொண்டர்படை :** வளர்ந்து வரும் நாடுகள் தாங்களாகவே இப்படைக்குத் தொண்டர்களை அளிக்க வேண்டும். வளர்ச்சிப் பணி களில் இளைஞர்களை ஈடுபடுத்துவதே இதன் நோக் கமாகும். நடைபெற்று வரும் வளர்ச்சிப்பணிகளுக்கு இப்படை துணை புரியும். 1988ஆம் ஆண்டில் 90 நாடுகளில் 1958 தொண்டர்கள் பணியாற்றினர். இவர் கள் வளர்ந்த, வளரும் நாடுகளிலிருந்து வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவை தவிர மேலும் பல்வேறு சிறப்பு நிதிகளும் இயங்கி வருகின்றன.

**நடவடிக்கைகள் :** வளரும் நாடுகளின் தொழில் நுட்ப வளர்ச்சிக்காக இத்திட்டம் 150 அரசுகள் மற்றும் 36 சர்வதேச அமைப்புகளுடனும் இணைந்து பணி யாற்றுகிறது. விரைவான பொருளாதார முன்னேற்றம் மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் போன்ற குறிகோளுடன் பணியாற்றி வருகிறது. இதன் பணிகளில் வேளாண்மை, மீன்வளம் மற்றும் வன வளம் முக்கிய இடம் வகிக்கிறது. 1988ஆம் ஆண்டில் செலவினங்களில் 22 விழுக்காடு இதற்கெனச் செலவிடப்பட்டது.

2. பெரும்பாலும் உதவியின் தன்மை பணத்தை தொடர்பில்லாதது ஆகும். வல்லுநர் பணிகள், ஆலோ சனை, கருவிகள் மேற்படிப்புக்காக அயல் நாடுகளுக் குச் செல்லுவதற்கான நிதி வசதி என்ற வகையில் அமையும்.

3. இயற்கை வளங்களைக் கண்டறிதல், தோண்டி எடுத்தல், முதலீட்டு நடவடிக்கைகளை ஊக்குவித் தல், தொழிற்பயிற்சி, அறிவியல் ஆய்வு போன்ற ஆக்கத்திட்டங்கள் இதன் உதவி நடவடிக்கைகளில் அடங்கும். 1988ஆம் ஆண்டில் வளர்ந்து வரும் நாடு களுக்கு 18499 வல்லுநர்களின் சேவையினையும், 11728 படிப்புதவித் திட்டங்களையும் அளித்துள்ளது.

4. வளரும் நாடுகள் தாங்கள் பெறும் உதவியைக் கணக்கிட ஒரு வழிமுறை உருவாக்கப்பட்டுள்ளது. இத நாட்டின் கூடுதல் உற்பத்தி அளவைப் பொறுத் தது.

5. 1987 - 91 காலத்துக்கான திட்டம் மிகவும் பின் தங்கிய நாடுகளுக்கு உதவும் திட்டமாகும். ஏறத்தாழ 80 விழுக்காடு உதவித்தொகை இந்நாடுகளுக்கு வழங்கப்படும்.

6. யூ. என்.டி.ஆர். ஓ ( UNDRO ) என்ற அமைப் பின் உதவியுடன் விரைவான துயர் துடைப்புப் பணியிலும் இது ஈடுபடுகிறது.

7. பன்னாட்டு நிதிக்கழகத்தால் நிர்வகிக்கப்படும் கரீபியன் திட்ட வளர்ச்சி வசதி மற்றும் ஆப்பிரிக்க திட்ட வளர்ச்சி வசதித்திட்டங்களுக்கு ஆதரவு அளித்து வருகிறது.

8. 1986இல் இவ்வமைப்பு மகளிர் வளர்ச்சிப் பிரிவு ஒன்றைத் தொடங்கியது. தவிர அரசு சார்பில்லாத அமைப்புகளுக்கான பிரிவு ஒன்றையும் ஏற்படுத்தி யுள்ளது. வளர்ச்சிப் பணிகளில் மகளிரும் தனியார் அமைப்புகளும் பங்கு கொள்ளும் நோக்குடன் இவ் விரு பிரிவுகளும் உண்டாக்கப்பட்டன.

1987 - 91 காலத்துக்கு 192 தொழில்நுட்ப உதவித் திட்டங்களை இது தீட்டியுள்ளது.

- எம். எஸ்.வே.

**ஐகூ கவிதை :** சப்பான் நாட்டில் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் தோன்றிய கவிதை வடிவமே ஐகூ ( Hai ku ) கவிதை வடிவமாகும். மூன்று அடிகளாலும் பதினேழு அசைகளாலும் ( 5 - 7 - 5 ) ஆக்கப்படுவதே இக்கவிதை. இச்சிறிய வடிவமே இதன் சிறப்புக்கு முதல் காரணமாக விளங்கி இன்று உலகில் பல மொழிகளில் எழுதப்பெற்று வருகிறது.

**வடிவம் :** நவீன ஐரோப்பிய கவிதைகளில் இருக் கின்ற ஒலிநயமும், அசை அழுத்தமும்போல, சீன மொழியிலிருக்கிற ஒலிநயம், தொனி மற்றும் அசை

எண்களை போல, இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிகளில் இருக்கிற சிறிய மற்றும் நீளசைகளைப் போல, சப்பானிய ஐகூவின் இந்த வரிசை (5-7-5) வடிவங்களுக்கிடையே ஓர் ஒற்றுமையை உருவாக்குகிறது. மேலோட்டமாகப் பார்க்கும்போது ஐகூவின் மூன்றடிகளும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை போலவே தோன்றும். இணைப்புச் சொற்கள் இக்கவிதை வடிவில் பயன்படுத்தப்படாமையே இம்மயக்கத்திற்குக் காரணமாகும். எனவே தொலைவரியில் தகவல்களைப் புரிந்துகொள்வது போலவே இக்கவிதையைப் புரிந்துகொள்ள வேண்டும் என்பர். மூன்றாம் அடியை முடிக்கும் சொல் பெரும்பாலும் பெயர்ச் சொல்லாகவே இருக்கும். உவமை, உருவகம் போன்ற எந்த அணியும் இக்கவிதையில் இடம் பெறுவதில்லை.

சப்பானியர்கள் இயற்கையின் மீது கொண்டுள்ள ஈடுபாட்டினை ஐகூ கவிதைகள் மூலம் அறியலாம். இயற்கைக்குத் திரும்பிச் செல்லும் கோட்பாட்டில் பிற நாட்டாரைவிட இவர்கள் மிகுந்த ஆர்வங் காட்டுகின்றனர். பருவங்களைக் குறிக்காத ஐகூ கவிதை இருக்கவே இருக்காது எனக்கருதும்படி இவர்கள் பருவங்களைப் பயன்படுத்துவர். புதுப்புது எண்ணக் கோலத்தோடு புத்துணர்வு குன்றாமல் இலையுதிர் காலமும் இளவேனிற் காலமும் கோடைக்காலமும் குளிர்காலமும் இக்கவிதைகளில் சித்தரிக்கப்படுகின்றன. இவ்வகையான பருவகாலச் சொற்கள் நிறைந்து கிடக்கும் உள்ளுணர்வின் மூலக்கூறுகளை இணைக்கிற திறனைப் பெற்றிருக்கும்.

**தத்துவப் பின்னணி :** ஒரு சிறந்த ஐகூ கவிதை எங்கே? எது? எப்போது? என்ற மூன்று வினாக்களுக்கு விடையளித்தாக வேண்டும். இந்த மூன்றும் தத்துவப் பின்னணியில் வளர்ந்த ஐகூவின் ஆழத்தை வெளிப்படுத்தக் கூடியவை. இக்கவிதைகள் வலிமை வாய்ந்த தத்துவப்பார்வை கொண்டுள்ளன. சென் பௌத்தப் பின்னணியில் ஐகூ செழித்து வளர்ந்தது எனினும் இந்திய பௌத்தம், சீன பௌத்தம், சப்பானிய பௌத்தம், தாவோக் கோட்பாடு, கன்பூசியக் கோட்பாடு எனும் ஐம்பெருந்தத்துவங்களும் இக் கவிதை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளன. எனவே ஐகூ கவிதையைக் கீழை நாட்டுப்பண்பாடுகளின் சாரம் என்றே கூறலாம்.

ஒருவன் மகிழ்ச்சியாக அல்லது சோகமாக இருக்கும்போது ஐகூ கவிதை எழுத முடியாது. உணர்வு வயப்பட்ட நிலையில் கவிதை தோன்றும் என மேற்கத்திய சிந்தனையாளர் கூறுவதுபோல் இந்தக் கவிதையை உருவாக்கிட முடியாது. மகிழ்ச்சி, கோபம், சோகம் என்ற உணர்வார்ந்த நிலைக்கு அப்பாற்பட்ட அனுபவ நிலையில் முகிழ்ப்பதே ஐகூ ஆகும். இதன் விளைவாக எந்த வகையான சார்புநிலைக்கும் ஆட்பட்டுவிடாத ஒரு நடுநிலைப்போக்கு ஐகூவில் இயற்கையாகவே அமைந்துவிடுகிறது.

**தமிழில் ஐகூ கவிதை :** முதன்முதலில் தமிழுக்கு ஐகூவை அறிமுகப்படுத்தியவர் பாரதி. தம் கட்டுரை ஒன்றில் திருக்குறளோடு ஐகூ கவிதையை ஒப்பிட்டு அவர் எழுதியுள்ளார். அதன்பின் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் 1968ஆம் ஆண்டு நடை இதழில் சி.மணி சில ஐகூக்களை மொழிபெயர்த்தார். இதழ்கள் மூலமாகவும் மேடைகள் வாயிலாகவும் ஐகூ வகுப்புகள் வழியாகவும் இக்கவிதையைத் தமிழகமெங்கும் விரிவாகப் பரப்பி வளர்த்த பெருமை அப்துல் ரகுமானுக்குரியது. 'உலகக் கவிதை வடிவங்களிலேயே எனக்கு மிகவும் பிடித்தது ஐகூ தான். அது சின்னதாக இருக்கும் பெரிய அற்புதம். வடிவத்தைப் பார்த்தால் வாமணன் மாதிரி, ஆனால் தாரை வார்த்தாலோ விசுக்கென்று விண்ணுக்கும் மண்ணுக்குமாய் விசுவரூபம் எடுத்து மூவுலகையும் அளந்துவிடுகிறது' என அவர் ஐகூவை அழகாக அறிமுகம் செய்துள்ளார். அவரது **பால்வீதி** என்ற கவிதைத் தொகுதியில் இடம் பெற்றுள்ள "இரவெல்லாம் உன் நினைவுகள் கொசுக்கள்" என்ற கவிதையைத் தமிழில் எழுதப் பெற்ற முதல் ஐகூ என்று கூறலாம்.

ஐகூ கவிதைகள் முழுமையானவையல்ல. கவிதையின் ஒரு பகுதியை மட்டுமே கவிஞர்கள் வழங்குவர். மறுபகுதியை வாசகனே தன்னுள் வடித்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு படைப்பிலேயே வாசகனுக்குப் பங்கு தருகின்ற புதுமை ஐகூவின் தனித்தன்மையாகும். உயிருள்ள பொருள்களுக்காக மட்டுமின்றி உயிரற்ற பொருள்களுக்காகவும் இரங்கும் கருணையை ஐகூவில் மிகுதியாகக் காணலாம். "நீங்கள் சாவியோடு வந்தால் ஒவ்வொரு மொட்டுக்குள்ளிருந்தும் ஒரு நந்தவனத்தைத் திறந்து கொள்ளலாம்" என்று ஐகூவில் வாசகனின் பங்கு குறித்து விளக்குகிறார் கவிஞர் தமிழன்பன்.

தமிழில் வெளிவந்த முதல் ஐகூ கவிதைத் தொகுப்பு அமுதபாரதி எழுதிய **புள்ளிப்பூக்கள்** ஆகும். சப்பானிய ஐகூ கவிதைகளை மொழி பெயர்த்து

பேராசிரியர் லீலாவதி நூலாக வெளியிட்டுள்ளார். அவரே **இதுதான் ஐகூ** என்ற தலைப்பில் ஐகூ குறித்து விரிவாக நூல் ஒன்றை எழுதியுள்ளார். மேலும் தமிழன்பனின் **சூரியப் பிறைகள்**, அறிவுமதி யின் **புல்லின் நுனியில் பனித்துளி**, மித்ராவின் **ஐகூ கவிதை** ஆகியவை இதுவரை தமிழில் வெளிவந்துள்ள குறிப்பிடத்தக்க ஐகூ கவிதைத் தொகுதிகளாகும். வர்த்தக அமைப்பு சிதைந்துவரும் இந்நாளில் ஐகூவும் கருத்து வகையில் ஒரு மாற்றத்தைச் சந்திக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியுள்ளது. பழம் மரபுகளிலிருந்து விடுபட்டு புதிய நெறிகளை ஏற்க வேண்டிய தவிர்க்க முடியாத நிலை பிற கலைகளுக்கு ஏற்பட்டதைப் போலவே ஐகூவுக்கும் ஏற்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் பல மொழிகளிலும் ஐகூ புதிய திசையை நோக்கி நகரத் தொடங்கியிருக்கிறது.

- சா. உ.

**ஐயக்கொள்கை :** இது அறிவின் இயல்பு பற்றிய ஐயம் என்பதைக் குறிக்கும். ஐயம், திரிபு இன்றி முடிவானதும் ஏற்கத்தக்கதுமான அறிவு என்பது ஏதுமில்லை என்று ஐயக்கொள்கையினர் கூறுகின்றனர். உண்மை அறிவைப் பெறுவதற்கு இயலாது என்று ஐயக்கொள்கையினர் மறுத்துவிடுகின்றனர். தத்துவ இயலின் வரலாற்றை நோக்குமிடத்து 'ஐயக் கொள்கை' அவ்வப்பொழுது தோன்றி மக்களிடையே ஆதரவு பெற்றதாகவே தெரிகிறது. இந்நாளிலும் ஐயக் கொள்கையைத் தழுவுவோர் உளர். அக்கொள்கையை விளக்கும் நூல்களும் எழுதப்பெறுகின்றன.

ஐயக்கொள்கை மக்கள் மனதைக் கவர்வதற்குரிய காரணத்தைக் கண்டறிதல் வேண்டும். பல்வேறு அறிவுத்துறைகளில் வல்லுநர் நுணுகிய ஆராய்ச்சியின் பயனாகப் பல உண்மைகளைத் தேறுகின்றனர். அவ் வுண்மைகளுள் சில ஒன்றோடொன்று ஒவ்வாது முரணுகின்றன. அவ்வாறு வேறுபடுதல் என்பது துறைதோறும் காணலாம். பல்வேறு அறிஞரிடையே கருத்துவேறுபாடும், கோட்பாடுகளிடையே முரண்பாடும் நிலவக் காணும்போது சாதாரண மக்கள் உண்மைகளை நாடுதலும் துணிதலும் இயலாத ஒன்றாகும். ஐயக்கொள்கையினர் இத்தகைய நிலையைக் கருதுகின்றபோது அறிவை அடைவதற்குரியதன்று என்ற முடிவிற்கு வந்துவிடுகின்றனர் அல்லது எதையும் திடமாக நம்புவதற்கு இயலாது என்ற நிலையைக் கொள்வாராகின்றனர். இதுவே ஐயக்கொள்கையின் தோற்றமாகிறது. ஐயக்கொள்கையென்பது திறனாய்வு செய்யும் மெய்ப்பொருளியல் நிலையாகும். மெய்ப் பொருளியல் வல்லுநர்களோ ஏனையோரோ அளிக்கின்ற அறிவுச்செய்திகளின் நம்பத்தக்க தன்மையினை ஐயப்பாட்டுடன் கேள்விக்கேட்பதுதான் இக் கொள்கையினரின் செயற்பாடாகும். தொடக்கத்தில் இக்கொள்கைக்கான பெயர் கிரேக்கச்சொல்லான 'செப்டிக்கோசு' என்ற அடிச்சொல்லிலிருந்து வந்தது. இவ்வடிச்சொல்லின் பொருள் ' விசாரணைச் செய் வோர்' என்பதாகும்.

ஐயக்கொள்கையினர் தங்களது கொள்கையை நிலைநாட்டப் பயன்படுத்தும் ஒருமுறை விவாத முறையாகும். இவர்கள் தங்களுடைய வினாக்களை முறையான விவாதமுறையில் அமைத்து ஐயங்களை வெளிப்படுத்தினார்கள். உடனடி அனுபவம் தவிர ஏனைய முறைகளில் வருகின்ற எந்த அறிவினையும் தீவிர ஐயக்கொள்கையினர் ஏற்க மறுத்து வினாக்களை எழுப்பினர். சிற்சில சமயங்களில் தர்க்கம் மற்றும் கணிதம் இவைகளைப் பற்றி மட்டும் வினாக்களை எழுப்பமாட்டார்கள். அனுபவத்திற்கு அப் பாற்பட்டு வருகின்ற அறிவினை ஆன்மீகவாதிகள், அறிவியலறிஞர்கள் மற்றும் அடிப்படைத் தத்துவ இயல் அல்லது புலன் கடந்த பொருளியல்வாதிகள் கூறுகின்றபோது ஐயக்கொள்கையினர் அவற்றை மறுத்து தங்களின் ஐயங்களை வெளிப்படுத்திக் கொண்டேயிருந்தனர். எல்லா அறிவினையும், அவர்கள் மறுக்கவில்லை. சில நிகழக்கூடிய எல்லை வரையறை கூடிய அறிவின் வகைகளை மட்டும் அனுமதித்தார்கள். சில ஐயக் கொள்கையினர் உடனடி அனுபவத்திற்கு அப்பாற் பட்ட அறிவே இல்லை என்று கூறுவர். சிலர் அவ் வறிவையும் ஐயுற்றனர்.

சாக்ரடீசுக் காலத்திற்கு முன்பே ஐயக்கொள்கையின் போக்குகள் காணப்பட்டன. எராக்லிதின் அடிப் படைத் தத்துவவியற் கோட்பாட்டின்படி, "எல்லா மே மாற்றமும் போக்குந்தான்" என்பதாகும். மாறுதல் விதியை வலியுறுத்திய அவர் உலகம் நிரந்தரமாக மாறிக்கொண்டே இருக்கிறதென்று கூறினார். ஒரே ஆற்றில் இருமுறை குளிக்க முடியாது என்ற எராக்லிதின் கூற்றே உண்மை மட்டும் நிலையானதாகவும், மாற்றமுடியாத இயல்பினை உடையதாகவும் இருப் பதனை வெளிப்படுத்தியது. இக்கூற்றை மேலும்

விரிவாக்கிய கிரேடைலசு என்பார், ஒருவர் ஒரு முறை கூட ஆற்றில் குளிக்க முடியாது எனக் கூறலானார். ஏனெனில் எல்லாமே மாறிக்கொண்டேயிருக்கிறது. மனிதனும் மாறிக்கொண்டேயிருக்கின்றான். ஆறும் மாறிக்கொண்டேயிருக்கிறது. இவரின் இக்கூற்று ஐயக்கொள்கையினை மேலும் உறுதிப்படுத்தியது.

கிசேனோஃபேன் என்பார் உண்மையறிவைத் தருகின்ற அளவைக் கட்டளையின் இருப்புநிலையையே மறுத்து வினா எழுப்பினார். எதிர்பாராத சூழலில் ஒரு மனிதன் உண்மையினைக் கண்டாலும் பிழையிலிருந்து அதனை வேறுபடுத்தியறிய அவனால் முடியாது என்றும் அவர் கருதினார். இன்னும் தீவிர ஐயங்களை சோஃபிக்கள் என்கிற ஐயக்கொள்கையினர் எழுப்பினார்கள். கார்கியாசு என்பார் எல்லாவற்றின் இருப்பினையும் ஐயுற்றார். அப்படியே ஏதேனும் இருப்பினும் அதனை ஒருவராலும் அறிந்து கொள்ள முடியாது என்றும், அப்படியே அறிந்தாலும் எவரும் அறிந்தவற்றை வெளிப்படுத்தி அறிவிக்க முடியாது என்றும் அவர் விளக்கினார்.

தேகார்ட் என்பார் கி.பி. 17ஆம் நூற்றாண்டில் அப்போது நிலவிய ஐயக்கோட்பாட்டின் சூழலை வெளிபடுத்தினார். எல்லா ஐயங்களையும் வெற்றி கொள்ளும் வழிமுறைகளை கண்டறிந்து அறிவிற்குத் தீர்க்கமான, இறுதியான அடிப்படையினை நிலைநாட்டுவது என்பது முடியக்கூடிய செயல்தான் என்று அவர் உறுதியுடன் கூறினார். ஐயங்களின் முறைமைகளைப் பயன்படுத்துவதால் ஐயத்திற்கு இடமற்ற உண்மையினை அறிந்துகொள்ள முடியும் என்றும் அவர் நம்பினார். இருப்பினும், ஐயக்கொள்கையானது இன்றளவிலும் இருந்துதான் விடுகின்றது என்பதையும் சிந்தனையிற் கொள்ளவேண்டும்.

மேலைநாடுகளைப் போன்றே இந்தியாவிலும் உலகாயத அல்லது சாருவாகக் கொள்கையினர் மெய்பொருளியலின் அடிப்படைக் கோட்பாடுகளாக இறைவன், உயிர், மறுஉலகம், மறுபிறப்பு, வினைக் கொள்கை ஆகிய அனைத்தையும் ஐயுற்றனர். ஆத லின், கண்டால் கண்டதையே உண்மை என நம்பினர்.

இருப்பினும், ஐயக்கொள்கையினரின் கருத்துகளை மறுத்து பலர் கருத்துரைகள் வழங்கியுள்ளனர். எல்லோராலும் ஆராய்ந்து உண்மையைத் துணிதல் என்பது இயலாததாகும். துறைதோறும் காணப்ப டும் கருத்துவேறுபாடுகளைக்கொண்டு, உறுதியான உண்மை என்பதே கிடையாது, அதைப் பெறவும் இயலாது என்ற முடிவிற்கு வருவது பொருந்தாது. அறிவுச்செயல்பாட்டில் கருத்து வேற்றுமை இருந்து வருவது உண்மையே எனினும், மக்கள் எதிர்காலத்தில் முடிவான, திட்டமான அறிவைப் பெறமாட்டார்கள் என ஐயம் கொள்ளல் முறையன்று. கருத்து வேறுபாடுகள் அறிவு வளர்ச்சிக்கு வேண்டுவன. எனவே, கருத்து வேறுபாடுகளைக் கருதி ஐயம் கொள்ளல் அவசியமில்லை என்றே துணிந்து கூறலாம்.

- க.பா.

**ஐயப்பன் :** தமிழகமெங்கும் ஊர்ப்புறங்களில் கோயில் கொண்டுள்ள ஐயனார் வரலாற்றின் வளர்ச்சியே ஐயப்பன் வரலாறாக வடிவுபெற்றுள்ளது. தேவர்களும் அசுரர்களும் அமுதம் பெறவேண்டித் திருப்பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து தோன்றிய அமுதத்தை உண்பதற்குப் போட்டியிட்டு ஆரவாரம் செய்த அசுரரை மயக்கி ஏமாற்றுவதற்காகத் திருமால் மோகினி வடிவமெடுத்தார். அவ்வடிவத்தைக் கொண்டு அசுரரை ஏமாற்றித் தேவரை அமுதூட்டியதன் பின்னிகழ்ச்சியாக அம்மோகினியைச் சிவபெருமான் தன்னுடைய சக்திகளுள் ஒன்றெனக் காட்டல் கருதிச் சேர்ந்தார். அரியும் அரனும் சேர்ந்த அச்சேர்க்கையால் தோன்றிய மைந்தனே அரியரபுத்திரனென்று பெயர்பெற்ற ஐயனார் என்பது கந்தபுராணத்தில் காணப்படும் வரலாறாம் (2:32).

ஐயனார் தோன்றியவுடனே தம் தந்தையான சிவபெருமானின் அருளாணைப்படி இந்தப் பூவுலகத்தைக் காத்தாளும் காவல் தெய்வமாகித் தம் பரிவாரபடைகளோடே எங்குமிருந்து இரவும் பகலும் காத்தருள்புரிவாராயினர். சூரபன்மணின் கொடுமையைத் தாங்கமாட்டாத இந்திரன் இந்திராணியோடு தேவருலகத்தை விட்டுத் தலைமறைவாகிச் சீகாழிச் சண்பகவனத்தில் வந்து தங்கியிருந்தபோது, பின் தொடர்ந்து வந்து புலம்பிய தேவர்களோடு கயிலை செல்லத்துணிந்த அவ்விந்திரன் இந்திராணியை அங்கிருந்த ஐயனார் அருட்காவலில் இருத்திப்போயினான். பின்னர் அவ்வழி வந்த அசமுகியென்பாள் அவ்விந்திராணியைக் கண்டு அவளைத் தன் தமையனான சூரபன்மனியிடம் சேர்ப்பதற்குப் பற்றியெடுத்த நிலையில் இந்திராணி அரற்றினளாக அவ்வரற்றலைக்கேட்டு ஐயனாரின் ஏவல்பூண்ட வீரமாகாளர்



ஐயப்பன்

வந்து அவளை விடுவித்து அசமுகியின் கையை வெட்டிக் காத்தனாரென்றும் அக்கந்தபுராணத் திலேயே காண்கிறோம் (2 : 29 - 36). இந்த ஐயனார் சாத்தன், சாதவாகனன் போன்ற பெயர்களோடு தமிழகத்தில் பண்டைக்கால முதல் வழிபடப்பெற்று வருகின்றார்.

சிலப்பதிகாரம், காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த கடவுளர் கோயில்கள் பலவற்றையும் அடுக்கிக் கூறும் வரிசையில் புறம்பணையான் கோட்டமென்று ஐய னார் கோயிலைக் குறிக்கின்றது ( 9 : 12 ). மாலதி யென்னும் பார்ப்பனியொருத்தி தன் மாற்றாள் மக வுக்குப் பால் கொடுத்த போது அப்பாலகன் பால் விக்கி இறந்தானாக, அதனை ஏலாது பார்ப்பனனும் மாற்றானும் பழிகூறுவரென்று ஏங்கிய மாலதி, இறந்த பாலகனை எடுத்துக்கொண்டு ஒவ்வொரு கோயிலுக்கும் சென்று அக்கடவுளரையும் தன் துயர் தீர்க்க வேண்டித் தொழுது இறுதியில் பாசண்டச்சாத் தானாகிய ஐயனார்கோயிலிற் சென்று வரம் வேண்டிக் கிடந்தாள். அப்போது சுடுகாட்டுக் கோட்டத்துப் பிணந்தின்னும் பேயொன்று வந்து அவள் கைப் பிணத்தை வாங்கி விழுங்கக் கண்டு ஏங்கியழுத அம் மாலதியை அக்கோயில் ஐயனார் தேற்றி, தானே அக் குழந்தையாகித் தோன்றி அவளால் எடுத்துச்செல்லப் படுமாறு அருளிய வரலாற்றையும் அக்காப்பியம் காட்டுகின்றது. அந்தக்குழந்தையே வளர்ந்து கண்ணகி யின் தோழியான தேவந்திக்குக் கணவனாய் அவளுக் குத் தன்னுடைய மூவா இளநலம் காட்டிப் பின்னர் அவளைத் தன் கோயில் வழிபாட்டிற்கு ஏற்றுக் கொண்ட தொடர்நிகழ்ச்சிகளையும் அக்காப்பியத் திலேயே காண்கிறோம் ( 9 : 5 - 36 ).

ஐயனார், பாசண்டமாகிய தொண்ணூற்றாறு வகைச் சமய சாத்திரத்தருக்கக் கோவைகளில் வல்ல வராதலால், பாசண்டச் சாத்தனென்ற பெயரும் அக் கோவைகளுக்கு முதலாயுள்ள சாத்திரங்களைப் பயின்றவராதலால் மகாசாத்திரனென்ற பெயரும் பெற்றார். 'பண்ணாற் றித்திற் பழுதின்றி மேம்பட்ட, தொண்ணூற்று அறுவகைக் கோவையும் வல்லவன், விண்ணாறு இயங்கும் விறலவராயினும், கண்ணாறி நோக்கிக் கடுநகை செய்வான்' என்று வளையாபதி யும் இவரது ஆற்றலை அடுக்கி மொழியும். மகாசாத் திரன் என்ற இவர் பெயரே மகாசாத்தான், மாசாத்தன் என்று மருவி வழங்கியது.

அப்பரடிகளும் தம் தேவாரத்தில் சிவபெரு மானைப் பாடும்போது சாத்தனை மகனா வைத்தார் என்று ஐயனாரைக் குறித்துப் பாடுவார்.

சங்ககாலத்திலேயே சிறந்து விளங்கிய சோழ நாட்டுப் பிடவூரில் அக்கால முதலே மாசாத்தனார் கோயிலொன்று இருந்து வருகிறது. அக்காலத்தி லேயே பிடவூர் கிழான் மகள் பெருஞ்சாத்தன் என்ப னொரு வேளிர்குடி மன்னன். இந்த மாசாத்தனார் பெயரையே தனக்கு இயற்பெயராகப் பெற்றிருந்த மையை அறிகிறோம் ( புறம். 395 ). இடைகாலத்தில் கழறிற்றறிவாராகிய் சேரமான் பெருமாள் நாயனார் திருக்கயிலாயத்திலே பரமசிவன் திருமுன்பு விண்ணப் பம் செய்து அரங்கேற்றிய திருக்கயிலாய ஞானவுலா வைக் கேட்டறிந்து வந்த இம்மாசாத்தனார் அந்நூலை இப்பிடவூரிலேயே வெளிப்படுத்தினாரென்று பெரிய புராணம் பேசுகின்றது ( வெள்ளானை. 52 ).

அரியரபுத்திரனாய்க் கயிலையிலிருந்த ஐயனாரை நோக்கிப் பரமசிவனார், 'நீ பூவுலகிலே கேரள நாட் டில் பம்பை நதிக்கரையிலே ஒரு குழந்தையுருவில் தோன்றிப்பந்தள மன்னனால் எடுத்து வளர்க்கப் பெற்றுப் பன்னிரண்டு ஆண்டுகள் அவன்கீழ்ப் பணி புரிந்து, பின் மகிடமுகி என்ற அரக்கியைக் கொன்று அவளிட.மிருக்கும் தேவருலக ஆட்சியை மீட்டு இந்தி ரனுக்கு அளித்து வருவாயாக' என்று அருள்புரிந்து ஒரு மணிமாலையையும் அளித்தார். அதன்படியே அம் மணிமாலையை அணிந்து பம்பைநதிக் காட்டிலே குழந்தையுருவில் தோன்றிய ஐயனாரை, அங்கு வேட் டைக்கு வந்த பந்தள மன்னன் கண்டெடுத்து மணி கண்டனென்று பெயர்சூட்டி வளர்த்தான். மணிகண் டன் வளர்ந்து வரும் நாளில் முன்னம் பிள்ளைப் பேறில்லாத மன்னனுக்குப் பிள்ளைப்பேறு வாய்த்து மகனொருவன் பிறந்தான். பிறந்தபின், இளையவ னான அம்மகனுக்கே இளவரசுப்பட்டம் கிடைக்க வேண்டுமென்றும் அதற்கு ஏதுவாக மூத்தவனான மணிகண்டனை மாய்த்தொழிக்க வேண்டுமென்றும் திட்டமிட்ட அரசி, அந்நிலையில் தம் நாட்டின் மேற் படையெடுத்து வந்த வாபரென்ற கடற்கொள்ளைக் காரருடன் அம்மணிகண்டனைப் போரிட அனுப்பி னாள். அவள் கருத்திற்கு மாறாக மணிகண்டன் வாப ரை வென்று மீண்டான். பின் அவனுண்ணும் உண வில் நஞ்சுகலந்து ஊட்டி அவனைக் கொல்ல முயன் றாள். நஞ்சுணவை உண்டு மயங்கிய மணிகண்டனைத் துறவியுருவில் வந்த மகேசுவரன் காப்பாற்றினார்.

பின்னும் அரசி தனக்குத் தலைநோய் வந்ததென்றும், அது தீரப் புலிப்பால் வேண்டுமென்றும் மருத்துவர் வாயிலாகவே சொல்லவைத்து, மணிகண்டனை அப் புலிப்பால் கொண்டுவரப் பணித்தாள். புலியை நாடி, கானகம் புறப்பட்ட மணிகண்டனுக்குத் துணையாகச் சிவபெருமான் தன் பூதகணங்களுள் சிலரை அனுப்பியதோடு அவருக்குப் பணிசெய்யுமாறு தேவர்களையும் ஏவினார். எல்லோரும் வரப்பெற்ற மணிகண்டன் அவர்களோடே பம்பையாற்றங்கரைக்கு வந்த போது அங்கிருந்த தவமுனிவர்களுக்கெல்லாம் அவரைக் கண்டு, அவரே ஐயனாரென்பதை உணர்ந்து தொழுது துதித்தபின், அப்பம்பையாற்றின் தோற்றுவாயான காந்தமலைச் சிகரத்தில் பொன்னம்பலமென்ற கோயிலொன்றை அமைத்து, அதிலோர் மணியாசனம் இயற்றி அதன்மேல் மணிகண்டனை அமர்த்தி வழிபட்டனர். அக்காந்தமலைப் பொன்னம்பலமே கேரளத்திலுள்ள ஐயப்பன் திருத்தலங்களுள் தலைமை பெற்றுத் திகழ்கின்றது.

காந்தமலைப் பொன்னம்பலத்தில் அமர்ந்த மணிகண்டன் பின்னர் தேவர்களின் வேண்டுகோளுக்கு இசைந்து, தேவருலகம் சென்று, அதனைக் கைப் பற்றி ஆண்டுகொண்டிருந்த மகிடமுகியென்னும் அரக்கியோடு போர்புரிந்து அவளுடைய கொம்புகளைப் பற்றித் தூக்கிப் பம்பைக்கரையிலே வீசியெறிந்து பின் அங்கே வந்து அவளுடல் மேல் நின்று வெற்றிக் கூத்தாடினார். அந்நிலையில் ஆற்றலழிந்த அரக்கி, மணிகண்டனின் திருவடிப் பேற்றினால் தன் சாப விமோசனத்தை உணர்ந்து அவரருளை வேண்டினளாக, அவளுக்கு இரங்கிய மணிகண்டன் தம் திருக்கரத்தால் அவளுடலைத் தடவியருளவும், அவளோர் அழகிய தேவமங்கையாய்த் தோன்றித்தொழுது, தன்னைத் துணைவியாக ஏற்குமாறு அவரைவேண்ட, அதனை மறுத்த மணிகண்டன் தம்மருகே மஞ்சம்பை ( மஞ்சாம்பிகை, மஞ்சமாதா) என்ற பெயருடன் கோயில்கொள்ளச் செய்தார். பிறகு, மணிகண்டன் சிவபெருமான் அருளியபடி இந்திரனைப் பெண்புலியாக்கி அதன்மேல் ஏறிக்கொண்டும் ஏனைத் தேவர்ளைப் புலிக்கூட்டமாக்கிக் கூட்டிக்கொண்டும் பந்தள நாட்டிற்குச் சென்று, தம் வளர்ப்புத்தந்தையும் தாயுமான அரசனையும் அரசியையும் கண்டு புலிப்பால் கொள்ளுமாறு கூறினார். மணிகண்டனின் தெய்வத் தன்மையை உணர்ந்து, ஐயனே! அப்பனே! ஐயப்பனே! என்று போற்றிய அரசன் அகத்தியர் மொழிப்படி அம் மணிகண்ட ஐயப்பனுக்குத் திருக்கோயில் அமைக்கத் துணிந்து, அவரருளையும் பெற்றுச் சபரியென்னும் பெருமாட்டி தவஞ் செய்திருந்த நீல மலையிலே அவருக்குத் திருக்கோயில் எடுத்தான். அத் திருக்கோயிலில் அமர்ந்த ஐயப்பன் அந்நீலமலையிலிருந்த தவப்பெருமாட்டியான சபரிக்கு அருள் புரிந்தார். ஐயப்பன் அருள் பெற்ற சபரியின் பெயரால் அவர் அமர்ந்த நீலமலை சபரிமலை என்று பெயர் பெற்றது.

- வ. கு.

**ஒட்டாவா ஒப்பந்தம் :** இவ்வொப்பந்தம் பிரிட்டனுக்கும் மற்றும் தன்னாட்சி பெற்ற சில நாடுகளுக்கும் இடையே பொருளாதார மாநாட்டில் (1932) ஏற்பட்ட ஓர் ஒப்பந்தமாகும். பொருளாதார மந்தத்திற்கு எதிராக பாதுகாப்பு அளிக்க 1920 - 30 களில் இது ஏற்பட்டது. மேலும், இங்கிலாந்தில் நீண்ட காலமாக நடந்து வந்த தடங்கலற்ற வணிகக் கோட்பாடு திட்டத்தைப் பாதித்து அதற்கொரு முடிவு கட்டியது. இவ் வொப்பந்தம் பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்திடும் அதன் ஆட்சியில் உள்ள நாடுகளுக்கு முன்னுரிமை அளித்தது. அதேபோல் அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திடும் பொருள்களுக்கு முன்னுரிமை அளித்தது. மாறி வரும் உலக வணிகப் பாணியினால் இவ் வொப்பந்தம் பழமையுடையதாகவும், பயனற்றதாகவும் ஆகிவிட்டது. இரண்டாவது உலகப்போரிலிருந்து ஏற்பட்ட பல்வகை வணிக ஒப்பந்த ஏற்பாடுகளால் இவ்வொப்பந்தம் பயனில்லாமல் போய் விட்டது. சுங்கவரி மற்றும் வணிகப்பொது ஒப்பந்தமும், ஐரோப்பியப் பொருளாதார அமைப்பில் பிரிட்டன் சேர்ந்தமையும் இவ்வொப்பந்தத்தின் முக்கியத் துவத்தை இழக்கச்செய்தன. இவ்வொப்பந்தத்தில் சுங்கவரி மற்றம் வணிகக்காப்பு போன்றவைகள் பற்றிய விதிமுறை வலியுறுத்தப்பட்டது.

**சுங்கமம் ( Tariffs ) :** சுங்கவரிகள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மீது வணிகக் காப்பிற்காகவும், வருமான நோக்கத்திற்காகவும் செலுத்தப்படுகின்றன. சுதந்திரமான வணிகத்திற்காக பிரிட்டன் இவ்வரிகளை கி.பி.19ஆம் நூற்றாண்டில் நீக்கிய போதிலும், வருவாய் நோக்கங்களுக்காக சில பொருள்கள் மீது சுங்கவரி செலுத்தப்பட்டது அல்லது வசூலிக்கப்பட்

டது. எ.கா. காபி, தேயிலை, மது, சாராயம் போன்றவைகளுக்குச் சுங்கவரிகள் உண்டு. வணிகக்காப்பு விளைவுகளைச் சரிகட்டும்பொருட்டு உற்பத்திவரி அவசியமானப் பொருள்கள் மீது விதிக்கப்பட்டன. சுங்கவரிப் பொருள்களின் எடைகள் மீதும் அல்லது பெறுமான மதிப்பின் மீதும் குறிப்பிட்ட விழுக்காட்டில் செலுத்தப்படுகிறது.

அமெரிக்காவில் கி.பி.1789ஆம் ஆண்டில் முதல் காங்கிரசு வணிகக்காப்பிற்காகவும், வருவாய் நோக்கத்திற்காகவும் சுங்கவரி விதிக்கப்படும் சட்டத்தை இயற்றியது. பிரிட்டனோடு கி.பி.1812 முதல் 1815 வரை நடந்த சண்டைக்குப் பின்னர் பிரிட்டன் பொருள்களின் இறக்குமதியைத் தடுக்கும் பொருட்டுச் சுங்கவரிகள் விதிக்கப்பட்டன. பின்னர் கி.பி. 1830 ஆம் ஆண்டு வரை வணிகக்காப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உள்நாட்டுச் சண்டை நடந்த காலம் அதாவது 1861 - 65 ஆம் ஆண்டு வரை குறைந்த அளவு சுங்கவரியே விதிக்கப்படவேண்டும் என்ற நிலைமை அங்குக் காணப்பட்டது. போர் முடிந்த பின்னர் ஆட்சிக்கு வந்த குடியரசுக்கட்சியினர் சுங்கவரியை உயர்த்திட பல்வகைச் சட்டங்களைக் கொணர்ந்தனர். எடுத்துக்காட்டாக 1922 ஆம் ஆண்டின் போர்டேமிக்கம்பர் சட்டம் மற்றும் 1930 ஆம் ஆண்டின் எளலக் இசுமுத் சட்டம் போன்றவைகளைச் சொல்லலாம். பின்னர் ஆட்சிக்கு வந்த சனநாயகக் கட்சியினர் சுங்கவரியைக் குறைத்திட சட்டங்கள் தீட்டினர். அதாவது வில்சன் அண்டர்வுட் 1913 இல் சுங்கவரி பற்றிய சட்டத்தைக் கொண்டு வந்தார்.

1930 ஆம் ஆண்டுச் சட்டம் 1939இல் செய்யப் பட்ட திருத்திய சட்டமான பரசுபர வணிக ஒப்பந்தச் சட்டம் அமெரிக்க குடியரசு தலைவருக்குச் சுங்கவரியை 50 விழுக்காடு குறைத்திடும் அதிகாரத்தைத் தந்தது. இவ்வொப்பந்தம் 21 நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்டது. 1947இல் செனிவாவில் கூடிய சுங்கவரி மற்றும் வணிகப் பொது ஒப்பந்தத்தின் ( GATT ) படி சுங்கவரியைக் குறைத்திட முயற்சி எடுக் கப்பட்டது. அதன் பின்னர் ஒட்டாவா ஒப்பந்தம் செயல்படவில்லை.

- கே. என். இரா.

**ஒட்டியன் கலாபை :** ஒட்டியன் கலாபை ( Oddiyan Kalabai ) என்றால் ஒட்டர்களின் கலவரம் அல்லது குழப்பம் என்று பொருள். இது ஒட்டநாடு அல்லது கலிங்க நாடு, இன்றைய ஒரிசா. படையானது கி.பி. 1463இல் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்ததைக் குறிக்கும். அவர்கள் சிறிதுகாலம் தமிழ்நாட்டில் தங்கியிருந்து குழப்பத்தை உண்டாக்கியதால் கல்வெட்டுகள் இவ்வாறு குறிப்பிடுகின்றன. இப்படையெடுப்பு விசயநகர மன்னர் மல்லிகார்சுனர் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தது.

விசயநகரப் பேரரசர்கள் இரண்டாம் தேவராயர், மல்லிகார்சுனர் ஆகியோர் காலத்தில் ஒரிசாவைக் கபிலேசுவர கசபதி ஆண்டு வந்தார். அவர் இரண்டாம் தேவராயரின் ஆட்சியின் பொழுது கி.பி. 1437இல் விசயநகரப் பேரரசின் மீது படையெடுத்தார். தேவராயர் மல்லப்ப உடையார் தலைமையில் ஒரு படையை அனுப்பி, கபிலேசுவர கசபதியைத் தோற்கடித்து விரட்டினார். மல்லிகார்சுனரின் ஆட்சியில், விசய நகரப்பேரரசு வீழ்ச்சியடையத் தொடங்கியபொழுது கலிங்க மன்னர் கபிலேசுவர கசபதி முன்னர் தான் பெற்ற தோல்வியைத் துடைக்க தமிழ்நாட்டின் மீது படையெடுத்தார். அவர் தம்முடைய மகன் குமார கம்வீர அல்லது கம்வீரதேவ ( Hamviradeva ) தலைமையில் ஒரு படையை அனுப்பினார். அது 1462இல் உதயகிரியை வென்று, தொண்டைமண்டலத்தின் மீது கி.பி. 1463இல் படையெடுத்து, காஞ்சியைக் கைப்பற்றியது. அப்படை தெற்கே எதுவரை சென்றது என்பது சரியாகத்தெரியவில்லை. அனந்தவரம் செப்பேடுகள் அப்படையானது தென்கடல், குமரிமுனை வரை சென்றதெனக் குறிப்பிடுகின்றன. முன்னூர்க் கல்வெட்டில் இவர்களுடைய ஆட்சி திருவாரூர், திருச்சி வரை பரவியிருந்ததெனக் காணப்படுகிறது. இதற்கு வேறு சான்று ஏதுவுமில்லை. அப்பொழுது திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களை ஆட்சி புரிந்த சாலுவதிம்மன் அல்லது திருமலை தேவ மகாராசன் மிகவும் வலிமை மிக்கவன். எனவே ஒட்டர்கள் படையெடுப்பு கொள்ளிடக் கரையைத் தாண்டிச் செல்லவில்லை எனக்கூறலாம்.

அப்போது விசயநகர மகாமண்டலேசுவரனாகத் தமிழ் நாட்டிலிருந்த வீரமிக்க சாலுவ நரசிம்மன் வேறு ஏதோ பணியின் காரணமாக விசயநகரம் சென்றிருக்க வேண்டும். அவன் இல்லாத சமயத்தில் ஒட்டர்கள் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்து சிறிது காலம் ஆட்சிசெய்தனர். அங்கிருந்து மீண்ட சாலுவநரசிம்மன்

அவர்களைத் தமிழ்நாட்டிலிருந்து விரட்டிவிட்டதால் இதன் தாக்கம் அதிகமில்லை.

இப்படையெடுப்பு பற்றிய செய்திகளைப் பல கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. திருக்கோயிலூரைச் சுற்றி மட்டும் அத்தகைய கல்வெட்டுகள் ஏழு உள்ளன. இவற்றிலிருந்து ஒட்டர்கள் திருக்கோயிலூர், இடையாறு, அரகண்டநல்லூர், நெற்குணன், மரங்கியூர், சித்தலிங்க மடம், திருப்பாலப்பந்தல், செஞ்சிக்கு அருகிலுள்ள செம்பேடு, விழுப்புரத்திற்கு அருகிலுள்ள திருவாமாத்தூர் ஆகிய ஊர்களிலுள்ள கோயில்களை அழித்துக் கொள்ளையிட்டனர் எனத்தெரிகிறது. இந்தப் படையினர் இந்து கோயில்களை அழித்தது தமிழக வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

- சி. இரெ.

**ஒப்புமை உளவியல் :** சில உளவியலார் விலங்குகளின் நடத்தையை ஆய்வதன் மூலம் சிறப்பான பணியைச் செய்கின்றனர். விலங்குகளின் நடத்தையினை அறிந்துகொள்வதற்காகவும், மனிதனின் நடத்தையை ஓரளவுக்கு அறிந்து கொள்வதற்காகவுமே இப்பணி செய்யப்படுகிறது. இதன் அடிப்படை என்னவெனில் ஒரு தொடர்ச்சியான வாழ்க்கைச் செயல்முறையில் இயங்குகின்றது என்பதாகும். இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே மனிதன் ஒரு பகுத்தறிவுள்ள விலங்கு என்று வரையறுக்கப்படுகிறான். கீழ்த்தர விலங்குகளின் நடத்தை பற்றிய அறிவினை ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அறிந்துகொள்ள விலங்கு உளவியலார் உதவியுள்ளனர். உளவியல் சிக்கல் பற்றிய இக்கால ஆய்வுகள் விலங்குகளுக்கும் மனிதனுக்கும் பல பொதுவான நடத்தைக் கூறுகள் இருப்பினும், பற்பல சிறப்பான வேறுபாடுகளும் காணப்படுகின்றன என்று காட்டுகின்றன. இந்த வேறுபாடுகளை வலியுறுத்தினால் மனித நடத்தையை அறிந்துகொள்ள விலங்கினை ஆய்வதே சிறந்த வழி என்று சிலரால் தெரிவிக் கப்படும் கருத்துகள் திருத்தி அமைக்கப்பட வேண்டும். இருப்பினும், இப்போது விலங்கு நடத்தை பற்றிச் சேகரிக்கப்பட்ட சில விவரங்கள் மனித நடத்தையின் எளிய நிலைகளை அறிந்து கொள்ள உதவுகின்றன. ஒப்பிட்டு உளவியலாரின் மகத்தான செயல்களுள் ஒன்ற உளவியற் சிக்கல்களை ஆய்வதற்கு அறிவியல் ஆய்வுக்கூடச் சோதனைகளையும் நுண்முறைகளையும் பயன்படுத்துவதாகும். இப்பணியில் தாண்டைக் (Thorndike) என்பாரின் விலங்கு கற்றல் பற்றிய தொடக்கப்பணி குறிப்பிடத்தக்கது.

1. தாண்டைக் ஓர் அமெரிக்க உளவியலறிஞர். அவரது முக்கியமான பணி முதலில் விலங்கு உளவியலில் இருந்தது. அவர் விலங்கு கற்றலில் மிக அரும் பணிகளைச் செய்தார். தாண்டைக் என்பாரின் சோதனைகளின் விளைவாகக் கற்றலில் முயன்று தவறிக் கற்றல் முறையினை ( Trial and Error Method ) மிகவும் வலியுறுத்தினார். அவருடைய தொடக்க ஆய்வு முதலில் பெரும்பாலும் விலங்கு கற்றலைப் பற்றியதாக இருப்பினும் பின்னைய ஆண்டுகளில் அவருடைய ஆய்வினை மனிதனின் கற்றல் செயன்முறைக்குத் திருப்பினார். இதன் மூலம் ஒரு கல்வி உளவியலறிஞராக உயர்ந்த நிலையை அடைந்தார்.

2. உயர்ந்த விலங்குகளின் நடத்தையை ஆராய்வதில் முதல்முதலில் பரிசோதனையைப் பயன்படுத்தியவர் மார்கன் என்பவராவார். அவர் பறவைகளின் வகைகளையும் குட்டிப்போட்டுப் பால் கொடுக்கும் விலங்குகளையும் பற்றிய ஆராய்ச்சியினைச் செய்தார். அவற்றினுடைய இயல்பூக்கக் களஞ்சியத்தை ஒத்திட்டுப் பார்த்தோடு அவற்றினுடைய கற்றல் வழிகளை நிருணயிக்க எளிய சோதனைகளையும் உருவாக்கினார். பறவைகளின் இயல்பூக்கம் வெளிப்படுவதில் பெற்றோர்களின் செல்வாக்கு முன்னமே ஏற்படுவதைத் தடுக்கும்பொருட்டு அடைகாத்தல் நுட்பத்தை அவர் தோற்றுவித்தார். அவர் தம்முடைய ஆராய்ச்சி முடிவுகளைப் பற்றி கி.பி. 1896ஆம் ஆண்டில் சிக்காக்கோ அர்வார்டு பல்கலைக்கழகத்தில் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். அந்தச் சொற்பொழிவுகளே **இயல்பூக்கங்களும் பழக்கங்களும்** என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது. அச்சொற்பொழிவுகளே பின் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் பரிசோதனை முறைகளைத் தொடங்கக் காரணமாக இருந்தன.

அவை நடைபெறுவதற்கு முன்பே அவர் முயன்று தவறிக் கற்றல் முறை என்ற கருதுகோளைப் பயன்படுத்தி வந்தார். அது பொது உளவியல் கோட்பாட்டில் மிக முக்கியப் பங்கேற்றுள்ளது. அவர் தம்முடைய ஒப்புமை உளவியலை கி.பி.1894ஆம் ஆண்டில் உருவாக்கியபோதுதான் வெளியுலகத்திற்கு நன்றாக அறிமுகமானார்.

- கி. இரா.

**ஒரு மொழியம் :** உலகின் பல்வேறு பகுதிகளில் வாழும் மக்கள் தத்தம் சமுதாயத்தில் தமக்கென ஒரு மொழியைப் பெற்று, அதன் அடிப்படையில் தங்களை இனம் கண்டு கொள்கின்றனர். தமிழ்பேசும் மக்கள் தமிழர், ஆங்கிலம் பேசுவோர் ஆங்கிலேயர் எனத் தத்தம் தாய்மொழி அடிப்படையில் குறிப்பிடப்படுவர். ஆங்கில மொழியைப் பேசுகின்ற அனைத்து நாட்டினரையும் ஆங்கிலேயர் எனக்குறிப்பிடுவதில்லை. நாடு, அங்கு வாழும் மக்கள், அவர்களின் மொழி ஆகிய மூன்றையும் இணைத்தே அவர்தம் இனம், நாடு, மொழி முதலியவற்றை அடையாளம் காணமுடிகிறது.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டுள்ள மக்களைத் தமிழர் என்பர். அவர்கள் தமிழ்நாட்டில் வாழ வேண்டும் என்று கூற வேண்டிய கட்டாயம் இல்லை. இன்று சிங்கப்பூர், மலேசியா, தென் ஆப்பிரிகா ஆகிய நாடுகளில் கூடத் தமிழர்கள் வாழ்கின்றனர். இவர்களைத் தமிழர் என்று அடையாளம் காட்டப் பயன்படும் கருவி, அவர்கள் பேசும் 'தமிழ்' மொழியேயாகும். இவ்வாறு ஒரு குழுவினர் தமக்கென ஒரு மொழியைப் பெற்று அதன்மூலம் கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்வார்களேயானால் அவர்களை ஒரு மொழியினர் (Monolinguals) என்றும், அவர்கள் வழங்கும் மொழித் தன்மையை ஒரு மொழியம் ( Mono lingualism ) என்றும் கூறலாம்.

ஒரு மொழியை மட்டுமே கருத்துப் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தும் குழுவினர் அம்மொழி அடிப்படையில் மட்டுமே ஒரே குழுவினர் ஆவர். அம்மக்களை வேறுபல அணுகுமுறைகளால் வெவ்வேறு சிறுசிறு குழுவினராகவும் அடையாளம் காண முடியும். தமிழர்கள், தாம் வாழுமிடங்களுக்கேற்ப பாண்டி நாட்டுத் தமிழர், சேரநாட்டுத் தமிழர், சோழ நாட்டுத் தமிழர், பம்பாய்த் தமிழர், மொரீசியத் தமிழர் எனவும் குறிப்பிடப்படுவதைக் காணலாம். மத அடிப்படையில் முசுலீம் தமிழர், கிறித்துவத் தமிழர் என்று குறிப்பிடப்படுவதையும் காணலாம். ஆயினும் அவர்களும் தமிழர்களேயாவர்.

தாய்மொழியைப் பேசமட்டுமே அறிந்துள்ளவரையும் தனிமொழியாளர் என்று குறிப்பிடுவதுடன். அம்மொழியை எழுதவும் படிக்கவும் கற்றுள்ளவரையும் இப்பிரிவின் கீழே கொண்டு வரவேண்டும். கற்றவர்கள், தம் தாய்மொழியின் பேச்சுமொழியின் அமைப்பு, எழுத்து மொழியின் அமைப்பு என இரு நிலை வழக்கினை அறிந்தவர்கள். இத்தகைய இரு வேறு அமைப்புகளை மொழியியலில் இருநிலை வழக்கு ( Diglossia ) என்று கூறுவர். அந்த அமைப்பு மிகப்பழைய மொழிகளான கிரேக்க, அரபி, தமிழ் மொழிகட்கு மட்டுமே பொருந்தி வருவதால், உலகளவில் எல்லா மொழிகட்கும் அது ஒத்ததல்ல. ஆதலின் இருநிலை வழக்கினை அறிந்துள்ள கற்றவர்களையும், தனி மொழியாளராகவே கொள்ளலாம்.

ஒரே குடும்பத்தினைச் சேர்ந்த இரு மொழிகளானாலும், அல்லது வெவ்வேறு மொழிக்குடும்பங்களைச் சேர்ந்த மொழிகளானாலும், அதனை இரு மொழியம் ( Bilingnalism ) என்று கூறலாம். இவ்விரு மொழிகளையும் ஒப்பிட்டு, வேறுபாடுகள் ஒற்றுமைகள் ஆகியவற்றைக் கணக்கிடும்போது இருநிலை வழக்குகளை விட அதிகமாகவே காணப்படும். ஆதலின் தனிமொழியாளர்கள் என்ற பிரிவில் அ) தாய்மொழியைப் பேசுவதற்கு மட்டும் அறிந்தவர்கள் ; ஆ) பேசவும் எழுதவும், படிக்கவும் அறிந்தவர்கள் என இரு பெரும்பிரிவினர்களைக் காணலாம். முதல் உட்பிரிவில் முறையாகக் கல்வி பயிலாதவர்களும், இரண்டாம் உட்பிரிவில் கல்வி பயின்றவர்களும் அடங்குவர். மொழிவழி மாநிலம் அமைந்த பின் ஒவ்வொரு மாநிலத்திலும் அம்மண்ணின் மக்கள் தொகை இவ்விரண்டு உட்பிரிவிலும் உட்பட்டதாக அமையும். மேலும் அம்மாநில மொழியைத் தாய் மொழியாகக் கொள்ளாத, பிற மொழி பேசும் மொழிச் சிறுபான்மையினர் இரு மொழியாளர்கள் என்ற பிரிவின் கீழ் அடங்குவர். ஏனெனில் தம் தாய் மொழியுடன் மாநிலமொழியைப் பேச அல்லது பேசவும் எழுதவும் கற்றிருப்பர். அந்நிலையில் மொழிச் சிறுபான்மையினர் இரு மொழியாளர்களாகவும், மொழிப் பெரும்பான்மையினர் ஒரு மொழியாளர்களாகவும் இருப்பதைக் காண முடிகிறது. மிகக் குறைந்த அளவே கல்வியறிவு பெற்றுள்ள இந்திய நாட்டில் பெரும்பான்மையான மாநிலங்களில் இத்தகைய சூழல் இருந்து வருகிறது. தாய்மொழிக் கல்வியறிவும், பிறமொழித் தொடர்பும் சிறிதுசிறிதாக இந்நிலையை - ஒரு மொழியாளர்கள் என்ற நிலையை - மாற்றிப் படிப்படியாக இரு மொழியாளர்கள் என்ற நிலைக்கு மாற்றியமைக்கும்.

ஒரு சமுதாயத்தில் இருமொழியாளர்கள், நிறைந்திருந்தால்தான் இருவேறு மொழிகள் பேசும் குழு

வினர்க்கிடையில் கருத்துப் பரிமாற்றம் ஏற்படும். ஒரு மொழியாளர்கட்கிடையில் மட்டும் தாய்மொழி பயன்படும். பிறமொழி வழங்கும் குழுவினருடன் கருத்துப் பரிமாற்றம் ஏற்பட வாய்ப்பில்லை. மொழி யற்ற நிலையில் சைகைகளின் மூலமே மிகக்குறைந்த அளவு கருத்துப்பரிமாற்றம் செய்து கொள்ளமுடியும்.

சீனா போன்ற நாடுகளிலும், இந்தியாவிலும் கூட ஒரு மொழியாளர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருக்கின்றது. முறையான தாய்மொழிக் கல்வியின் மூலம் ஒரு மொழியாளர்கள், இருநிலை வழக்கினை மட்டுமே அறிந்தவர்களாக உயரமுடியும். மற்றொரு மொழியைக் கற்றபின்னரே ஒரு மொழியாளர் இரு மொழியாளராக முடியும். மேலும் மேலும் மொழி களைக் கற்பதால் மும்மொழியாளர் அல்லது பன் மொழியாளர் என்ற நிலையைப் பெற முடியும்.

ஒரு மொழியாளருடைய பேச்சு வழக்கில் பிற மொழிகளின் குறுக்கீடு ஏற்படாது. ஆனால் காலங் காலமாக பிறமொழித் தொடர்பு ஏற்பட்ட இரு மொழியாளர் அல்லது பன்மொழியாளர் மூலம் மொழிக்குப் பிறமொழிச் சொற்கள் கடன் சொற்க ளாக வரப்பெற்று, தனிமொழியாளர் பேச்சிலும் அவை வழங்கக்கூடும். தனிமொழியாளரால் பிற மொழிக்குறுக்கீடு நடைபெற வாய்ப்பில்லை. கட னாகப்பெறும் சொற்களைக் கண்டறியவும் அவர்க ளால் இயலாது. எ.கா. இப்போது தமிழ்ப்பேச்சு வழக்கில் உள்ள சொல் 'சாவி' இச்சொல்லிற்கு ஈடான திறவுகோல் என்ற சொல் பழந்தமிழ்ச் சொல்லானா லும் ஒரு சில மொழியாளர்களே அறிந்துள்ளனர். பல ரும் பூட்டு, சாவி என்ற சொற்களையே வழங்கி வரு கின்றனர். இதுபோன்று பிறமொழிச் சொற்களைப் பட்டியல் போட்டுக்காட்டினாலும் அச்சொற்கள் ஒரு மொழியாளர்களால் வழங்கப்படுபவை அல்ல. இந் நிலைக்குத் தமிழுடன் பிற மொழிகளையும் அறிந்த இரு மொழியாளர் அல்லது பன்மொழியாளர்களே காரணமாவர். தலைமுறை தலைமுறையாக வழங்கி வரும் தாய்மொழியினைப் பிறமொழிக் கலப்பின் றிப் பேணிக்காத்து வருவது மொழியாளர்களே ஆவர்.

- கோ. சீ.

**ஓய்வூதியம் :** ஒருவர் பணிசெய்கின்ற காலத்தில், செய்யும் பணிக்காகப் பெறும் பணமே ஊதியம் எனப்படும். பணி செய்கின்றவர், வயதின் அடிப் படையிலோ, இயலாமையினாலோ, வேலை யிலிருந்து ஓய்வு பெற்றபின் அவருக்கு ஊதியம் கிடைக்காது. அவருக்கு உதவி செய்வதற்காக மாதந் தோறும் வழங்கு கின்ற பணத்தை ஓய்வூதியம் என்பர்.

ஒருவர் எந்த வயதுவரை பணி செய்யலாமென்ப தை அவர் பணியின் விதிமுறைகள் நிருணயிக்கின் றன. தமிழக அரசினர் ஓய்வுபெறும் வயதை 58 என்று வரையறுத்துள்ளார்கள். பல்கலைக்கழகங்களில் ஒரு வர் அறுபது வயது வரை பணி செய்யலாம். இராணு வத்தில் ஒரு குறிப்பிட்ட காலம் பணி செய்தபின் ஒருவர் ஓய்வு பெறலாம். செய்கின்ற பணியின் இயல் புக்கு ஏற்ப ஓய்வு பெறும் வயதை நிருணயிக்கின்ற போக்கு உலகில் காணப்பெறுகிறது.

ஓய்வூதியம் பணி செய்கின்றவர்களுக்கு மட்டு மின்றி அவர்களது குடும்பத்தினருக்கும் கிடைக்க வழி செய்கின்றனர். ஓய்வு ஊதியம் பெறுகின்ற ஒருவர் இறந்த பின் அவரது மனைவிக்கு உதவித்தொகை கிடைக்கும். மனைவி இறந்த பின்னர் குழந்தை களுக்குக் குறிப்பிட்ட வயதுவரும் வரை உதவித் தொகை கிடைத்து வரும்.

ஓய்வூதியம், பணி செய்கின்றவர் ஓய்வுபெற்ற பிறகு வாழ்வதற்கு வழி செய்யும் வகையில் அமைந்த தாகும். பணிக்காலத்தில் ஒருவர் விபத்துக்குள்ளாகி அல்லது வேறுவகையில் பணி செய்ய இயலாமல் போய்விட்டாலும் அவருக்கு உதவித்தொகையாக தொடர்ந்து ஓய்வூதியம் வழங்குவது அரசின் அல்லது பணியளித்தவரின் பொறுப்பாகின்றது. ஓய்வூதியத்தை சில அடிப்படைகளில் கணிக்கின்றனர். இந்த அடிப் படைகள் பணிக்குப் பணி வேறுபடலாம். பொது வானவற்றைச் சுட்டிக்காட்டலாம்.

பணி செய்த மொத்தக்காலத்தைக் கணக்கில் எடுத் துக்கொண்டு ஓய்வு ஊதியத்தைக் கணிக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மேல் பணியாற்றியவர் களுக்கு முழு ஓய்வூதியம் கிடைக்கும். எ.கா. இப் போது தமிழக அரசின் விதிப்படி 33 ஆண்டுகள் பணி செய்தவர்கள் முழு ஓய்வூதியம் பெறும் தகுதி பெறு கின்றனர். அதற்குக் குறைவாகப் பணி செய்தவர்களுக் குப் பணி செய்த காலத்தின் விகிதத்தில் ஓய்வூதி யத்தைக் கணிக்கின்றனர்.

ஒருவர் பணியாற்றிய காலத்தில் பெறுகின்ற ஊதி யத்திற்கும் அவருக்குக் கொடுக்கின்ற ஓய்வூதியத்

திற்கும் தொடர்பு இருக்கின்றது. பொதுவாக, ஓய்வு பெறும் பொழுது ஒருவர் பெறுகின்ற ஊதியத்தில் இவ்வளவு விகிதமென ஓய்வு ஊதியத்தை நிருணயிக் கின்றனர். சிலவேளைகளில் பணி செய்கின்ற காலத் தில் ஊதியத்தில் ஒரு விகிதத்தை ஓய்வு ஊதிய நிதிக் காகக் கட்டிவரும்படிக் கூறுகின்றனர். அவர் எவ்வ ளவு காலம் இந்த நிதிக்குப் பணம் கட்டியிருக்கின் றார் என்பதையும் கணக்கிலெடுத்துக் கொள்கின்றனர்.

**வரலாற்றுப் பின்புலம் :** ஓய்வு ஊதியம் கொடுக் கின்ற வழக்கம் மத்திய காலத்தில் இங்கிலாந்தில் தொடங்கியது. வாணிகம் செய்கின்றவர்கள் வணிகர் கழகங்களையும், கைவினைத் தொழில்களில் ஈடுபட் டவர்கள் சிறுதொழில் கழகங்களையும் அமைத்துக் கொண்டனர்.

வாணிகம், தொழில் கழகங்களில் உறுப்பினர்க ளாக இருப்பவர்கள் முதுமையின் விளைவாகவோ, நோய்வாய்ப்பட்டோ பணி செய்ய இயலாமல் போகும்பொழுது, அவர்கள் வாழ்வதற்கு உதவி தேவைப்பெற்றது. அப்பொழுது வாணிகம், தொழில் கழகங்கள் இவர்கள் வாழ்வளிக்கும் அறப்பொறுப்பி னை ஏற்று உதவி செய்தன.

இராணுவத்தில் பணி செய்கின்றவர்கள் போர்க் காலத்தில் இறந்துவிட்டால், அவர்களைச் சார்ந்திருப் பவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் வழக்கம் ஏற் பட்டது. குறிப்பாக போர்க்காலங்களில் தங்களது இன்னுயிரை ஈந்தவர்களின் குடும்பங்களுக்கு உதவு வதை அரசு தனது கடமையாகக் கருதியது. போர்களில் காயம் பட்டு பணி செய்ய முடியாதவர்களுக்கும் ஓய் வூதியம் வழங்கினர்.

நாட்டின் விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட் டவர்களுக்கு ஊதியம் கொடுக்கின்ற பழக்கமும் சில நாடுகளில் தோன்றியது. இந்திய நாட்டில் தியாகி களுக்கு ஓய்வூதியம் வழங்குவது இந்த வகையைச் சார்ந்ததே. நாட்டிற்கு ஏதாவது ஒரு வகையில் சிறப் பாகத் தொண்டு செய்தவர்களுக்கு சில நாடுகளில் ஊதியத்தொகை வழங்குகின்றனர். தமிழகத்தில் தமிழ்த்தொண்டு செய்தவர்களுக்கும், கலைஞர்களுக் கும் ஓய்வூதியம் வழங்குவதை இங்குச் சுட்டிக் காட் டலாம்.

இங்கிலாந்து அரசு கி.பி.18ஆம் நூற்றாண்டி லேயே முதியவர்களுக்கு ஓய்வு ஊதியம் கொடுக்கத் தொடங் கியது. கி.பி. 1834ஆம் ஆண்டு முதல் சமுதாய நலத் திட்டங்களின் மூலம் வயது முதிர்ந்தவர்களுக்கு அரசு உதவித்தொகை வழங்கியது. பின்னர் இத்திட்டம் படிப்படியாக விரிவடைந்து அரசு ஊழியர்களும் பயனடைந்தனர். பிரான்சில் கி.பி. 1850ஆம் ஆண்டு முதல் ஓய்வு ஊதியத் திட்டம் நடைமுறைக்கு வந்தது. இப்போது எல்லா நாடுகளிலும் ஓய்வூதியத் திட்டம் ஒரு வகையில் செயல்பட்டு வருகின்றது.

**வகைகள் :** ஓய்வு ஊதியங்களை அவற்றின் இயல் பையும் முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகைகளாகப் பிரிக்கலாம்.

ஊழியர்கள் தங்களது ஊதியத்தின் ஒரு பகுதியை ஓய்வு ஊதிய நிதிக்காகத் தருவதைப் பங்கு வழங்கு கின்ற ஓய்வூதியத்திட்டம் ( Contributory pension scheme) என்று கூறலாம்.

ஊழியர்கள் தங்களது ஊதியத்தின் ஒரு பகுதியை ஓய்வு ஊதிய நிதிக்கு கட்டாமல், பெறுகிற ஓய்வூதியத் திட்டத்திற்கு ( Non - Contributory pension scheme) என்று பெயர்.

அரசு தனது ஊழியர்களுக்கோ, சிறப்புப் பணி புரிந்த வர்களுக்கோ வழங்குகின்ற உதவித்தொகை தேசிய ஓய்வூதியம் ( National Pension scheme) எனப் படும்.

பொதுப்பணி ஓய்வூதியம் (Public Service Pension) என்பது அரசில் பணிபுரிகின்றவர்களுக்கு, அவர்களது பணியின் அடிப்படையில் கிடைப்பதாகும். இப்படிப் பட்ட உதவித்தொகை அவர்களது பணிக்காலத்தை யொட்டி அமைகின்றது. ஆபத்தான பணிகளில் ஈடுபடு கின்றவர்களுக்கு அவர்களது ஓய்வு வயதினை அடை வதற்கு முன்பே ஓய்வூதியம் தருகின்றனர். இராணு வத்தில் பணியாற்றுகின்றவர்களுக்குத் தருகின்ற ஓய்வு ஊதியத்தை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ள லாம். நார்வே நாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு ஓய்வு ஊதியம் முதன் முதலில் வழங்கத் தொடங்கினர். இப்போது இந்திய நாட்டிலும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் ஓய்வு ஊதியத்தொகை கொடுக் கும் வழக்கம் ஏற்பட்டுள்ளது.

போர்க்கால ஓய்வூதியம் ( War Pension ) போர்க் களங்களில் நேரடியாகப் பங்குபெறுகின்றவர்களுக்கு குறிப்பாகக் காயம் பட்டு பணி செய்ய இயலாதவர் களுக்கு வழங்குகின்ற ஒன்றாகும்.

தொழில் வளர்ச்சி பெற்ற நாடுகளில் தனியார் ஓய்வூதியத் திட்டம் ( Private Pension ) செயல்படு

கின்றது. இதன்படி தொழிலாளர்கள் பெரும்பயன் பெறுகின்றர்.

அரசில் பணி செய்கின்ற ஊழியர்களுக்கு வழங்கு வதைப் பொதுப்பணி ஓய்வூதியம் என்று கூறுகின்ற னர். பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் இத்தகைய ஓய்வூதியத்திட்டம் செயல்பாட்டிலுள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் ஓய்வூதியத்திற்கு வேண் டிய நிதியைப் பெற வெவ்வேறு முறைகளைப் பின் பற்றுகின்றனர். அரசின் ஊழியர்களுக்கு ஓய்வு பெறும் காலத்தில் ஊதியம் வழங்குவது அரசின் கடமை என்றாலும், அது பெரும்சுமையாக மாறாமலிருக்க, அதற்குரிய நிதியைப் பெறுவதில் தனிக் கவனம் செலுத்துகின்றனர்.

ஆசுதிரேலியாவில் அரசு தனக்குக் கிடைக்கின்ற வரி வருவாயில் ஒரு பகுதியை ஓய்வூதியச் செலவிற்காக ஒதுக்கி வைக்கின்றது. இந்த நிதியிலிருந்து ஓய்வூதியத் திற்குச் செலவிடுகின்றது.

சோவியத் நாட்டில் ஓய்வூதியத் திட்டத்திற்காக வேலையளிப்பவர்கள் பணி செய்கின்றவர்களின் ஊதியத்தின் அடிப்படையில் ஓரளவு நிதி தருகின்றனர். இந்த நிதியோடு அரசும் ஓரளவு நிதியளித்து ஓய் வூதியத்திட்டத்தைச் செயல்படுத்துகின்றது.

செர்மனியிலும் இத்தாலியிலும் அரசும், வேலை தருகின்றவர்களும் ஊழியர்களும் குறிப்பிடப் பெற்ற விகிதத்தில் ஓய்வூதிய நிதிக்குப் பணம் செலுத்துகின் றனர். இந்திய நாட்டிலும் இதனை ஒட்டிய முறையே பின்பற்றப்பெறுகின்றது.

பிரான்சிலும் அமெரிக்காவிலும் பணி தருகின்றவர் களும் ஊழியர்களும் ஓய்வூதியத் திட்டத்திற்கு நிதி வழங்குகின்றனர். அரசு தேவையான உதவிகளை மட் டும் செய்கின்றது. ஓய்வூதியம் வழங்குவது வேலை யளிப்பவர்கள், வேலை செய்பவர்களின் கூட்டுப் பொறுப்பாகிறது.

சுவீடனில் அரசும் ஊழியர்களும் ஓய்வூதிய நிதிக் குப் பணம் வழங்குகின்றனர். வேலை தருகின்றவர்கள் இந்தத் திட்டத்தில் பங்கெடுக்கவில்லை.

பொதுவாக ஓய்வூதியத் திட்டத்தில் ஊழியர்கள் ஓரளவு பங்கு பெறுகின்ற முறையே உலகெங்கும் இருக்கின்றது. ஊழியர்கள் பங்குத் தொகை செலுத் துவதால் ஓய்வூதியம் பெற அவர்கள் உரிமை பெறு கின்றனர்.


ஓய்வூதியத் திட்டம் உலகெங்கும் விரிவடைந்து வளர்ந்து வருகின்றது. மத்தியஅரசும், மாநில அரசு களும், உள்ளாட்சி மன்றங்களும் முதலில் ஓய்வூதியத் திட்டத்தைச் செயல்படுத்தின. இப்போது தனியார் நிறுவனங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டு மென்ற கோரிக்கை வெற்றி பெற்றுவருகின் றது.

முன்பு ஓய்வூதியமாக ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தைக் கொடுத்துவந்தனர். இப்போது விலை ஏற் றத்திற்கேற்ப ஊதியம் உயர்வதைப் போன்றே ஓய் வூதியத்தையும் நாட்டின் விலைக்குறியீட்டு எண்ணை யொட்டி வழங்குகின்றனர். இது ஓய்வூதியம் பெறு கின்றவர்களுக்குப் பெரும் துணையாக இருக்கின்றது.

சமுதாய நலத்திட்டங்களோடு இணைத்து ஓய்வூதி யத் திட்டத்தையும் செயல்படுத்துகின்ற போக்கு பெரும்பாலான நாடுகளில் வளர்ந்து வருகின்றது. ஆதரவற்ற முதியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கு வதைச் சமுதாய அறமாகக் கருதுவதைச் சுட்டிக் காட் டலாம். ஓய்வூதியத் திட்டம் செவ்வனே நடைபெறு வது மக்களின் நல வளர்ச்சிக்கு ஒரு சான்றாகும்.

- மா.பா. கு.

**ஓவியம் :** அழகுக் கலைகளுள் ஒன்றாகிய ஓவியக் கலை, பனிக்கட்டி யுகத்திலேயே தோன்றிய கலை யாகும். பனிக்கட்டி யுகத்தில் வாழ்ந்த பழைய கற்கால மனிதன் தன்னுடைய எண்ணத்தை ஓவியங்கள் வாயிலாக வெளிப்படுத்தினான் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. வேடர்களாக வாழ்ந்த கலைஞர் களின் வண்ண ஓவியங்களும் வரைபடங்களும் உல கின் பல பகுதிகளிலும் காணப்படுகின்றன. எ.கா. தென்பிரான்சு, வடஇசுபெயின் ஆகிய நாடு களின் குகைகளில் எண்ணிலடங்கா ஓவியங்களும், சிற்பங்களும் காணக்கிடைக்கின்றன. வரைபடம் வரைவதற்கு சிவப்பு, மஞ்சள் ஆகிய வண்ணக் கட்டி களைச் சிறு குச்சிகளாக அமைத்துப் பயன்படுத்தி யுள்ளார்கள். ஓவியங்கள் தீட்டுவதற்காக, குறிப்பாக விலங்குகளின் உருவங்களை அழகுப்படுத்துவதற்காக இயற்கையில் கிடைத்த வண்ணப்பொடிகளையே விலங்குக்கொழுப்புடன் கலந்து தீட்டியுள்ளனர். விலங்குகளின் தட்டையான அகன்ற எலும்புகளையும் ஓவியம் தீட்டப் பயன்படுத்தியுள்ளனர். சுவர்களில்



லாசல் குகைகளிலிருந்த வரலாற்று முன்காலத்திய சிதைவுகளில் ஒன்றான எலும்பில் செதுக்கப்பட்டுள்ள ஓவியம்



அல்ட்டாமீரா குகைகளிலுள்ள காட்டெருமை ஓவியம்



சிந்துநதி நாகரிக மண்பாண்ட ஓவியம்

கைக்கு எட்டாத இடங்களில் நானல் தட்டைகளை ஊது குழாய்களைப்போல் அமைத்து அதன் துளை வழியாக வண்ணங்களை ஊதி ஓவியம் தீட்டியுள்ளனர். கி.மு. 6000 - 4000 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் குகை ஓவியங்கள் நன்கு வளர்ச்சியடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இடைக்காலத்தில் மக்கள் வேடர்களாக அலைந்து திரிந்தனர். அவர்களால் செய்யப்பட்டக் கலைப் பொருட்களில் வண்ணம் பூசப்பட்ட கூழாங்கற்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புதிய கற்காலத்தில் பழைய கற்காலத்திய குகை ஓவியங்கள் போல் தீட் டப்படவில்லை.


**எகிப்து :** வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் எகிப்தியர்கள் மண்பாண்டங்களில் மனிதத்தலை, விலங்குகளின் தலைகளை வரைந்தனர். அரசவம்சத்து தொடக்கக்கால ஓவியக்கலை சித்திர எழுத்து வரையும் வழக்கத்தினின்று எழுந்ததாகும். உருவங்கள் தீட்டும் முறையை மதகுருமார்கள் வகுத்துவிட்டனர். அவ்வாறு வரையப்பட்டவையே அழகுடையவையாகக் கருதப்பட்டன. எகிப்தின் பழைய பேரரசுக் காலத்தில் கி.மு. 4000 - 2280 புடைப்புச் சிற்பங்களுக்கு வண்ணம் பூசப்பட்டன. இடைக்காலப்பேரரசிலும் கி.மு. 2065 - 1783, பிற்காலப் பேரரசிலும் கி.மு. 1085 - 158 ஓவியம் ஒரு தனிக் கலையாகவே விளங்கியது. ஓவியர்கள் சுவரின் மீதும் நேரடியாகவே ஓவியங்களைத் தீட்டினர். மேலும் கல்லறைகளின் கரடு முரடான பாறைச் சுவர்களின் மீது சாந்துப்பூசி சமப்படுத்தி அதன் மீது ஓவியக்காட்சிகளைத் தீட்டியுள்ளனர். ஓவியங்கள் எல்லாம் ஒட்டுவண்ண ஓவிய முறையில் ஒட்டும் பொருள்களுடன் வண்ணங்கள் கலக்கப்பட்டு, உலர்ந்த சுவர்களின் மீது தீட்டப்பட்டன. அவை எகிப்தியரின் அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளை விவரிக்கும் காட்சிகள் அடங்கியவையாகும். விருந்துக் காட்சிகள், வேட்டைக்காட்சிகள், இறந்தவர்களுக்குக் காணிக்கையாக வைக்கப்படும் பொருட்கள் கொண்டு செல்லும் காட்சி ஆகியவை சிறப்பானவையாகக் கருதப்படுகின்றன.

எகிப்திய ஓவியமுறையில் ஓவியங்கள் எல்லாம் பக்கவாட்டாகவே வரையப்பட்டுள்ளன. ஆனால், கண்களும் தோள்களும் மட்டுமே முன்பக்கத் தோற்றத்தில் வரையப்பட்டுள்ளன. இவர்கள் ஓவியத்தை வரிவடிவமாகவே வரைந்தமையால் ஓவியக்கலையில் சிறந்து விளங்க முடியவில்லை. இருப்பினும், இவர்கள் சிற்பக்கலையில் தனியொருயிடத்தைப் பெற்றனர்.

**கிரேக்கம் :** ஏதென்சு நகரில் இருந்த சந்தைக் கட்டிடத்தின் சுவர்களில் குறிப்பிடத்தக்க அழகிய ஓவியங்கள் இருந்தன. அவை பித்தியாசு காலத்தில் வாழ்ந்த மிகச்சிறந்த ஓவியரும், சிற்பக் கலைஞருமாகிய பாலினோடசு (Polygnotus) என்பவரால் தீட்டப்பட்டவை. கி.மு. 5, 4ஆம் நூற்றாண்டுகளில் சியுக்சிசு, பர்காசிசு (zeuxis, Parhasis) என்ற இருவரும் புகழ் பெற்ற ஓவியர்களாக விளங்கினர். புரோட்டோசென்சு (Protogens), அப்பெல்லசு (Apelles) என்ற ஓவியர்கள் அலெக்சாண்டருடைய காலத்தில் வாழ்ந்த மிகச்சிறந்த ஓவியர்கள் ஆவர். ரோமப் பேரரசில் பாம்பீ என்ற நகரிலுள்ள வீடு ஒன்றில் காணப்படும் மொசைக் வேலைப்பாடு கிரேக்க ஓவியத்தின் நகல் என்று கருதப்படுகிறது.

கிரேக்க மண்பாண்டங்களில் காணப்படும் அலங்கார வேலை கிரேக்க ஓவியத்திறனுக்குச் சான்றாக உள்ளது. கிரேக்கச் சாடிகளில் கி.மு.5ஆம் நூற்றாண்டுக்கு முன்பு சிவப்புக் களிமண்ணால் செய்யப்பட்ட மண்பாண்டங்களில் கறுப்பு வண்ணத்தைக் கொண்டு உருவங்கள் தீட்டப்பட்டன. கி.மு.5ஆம் நூற்றாண்டில் மண்பாண்டங்களில் தீட்டப்பட்ட உருவங்கள் எல்லாம் சிவப்பு வண்ணத்தினால் தீட்டப்பட்டு அதன் பின்னணி கறுப்பு வண்ணத்தினால் தீட்டப்பட்டுள்ளன. கி.மு.6, 4 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் களிமண்ணால் செய்யப்பட்ட மண்பாண்டங்களில் வெண்மையான மெருகூட்டி அதன்மீது ஓவியங்களைத் தீட்டினர். இந்த ஓவிய முறை முக்கியமாக ஈமச் சடங்கிற்காகப் பயன்படும் மண்பாண்டத்தில் தீட்டப் பட்டுள்ளன.

தொடக்கக்காலத்திற்குப் பிறகு கிரேக்கர்கள் மனித உடலமைப்பை மண்பாண்டங்களில் ஓவியமாகத் தீட்ட அதிக ஆர்வமுள்ளவர்களாகவும் திறன் படைத்தவர்களாகவும் காணப்பட்டனர். மண்பாண்டங்களில் அமைந்துள்ள ஓவியங்கள் பெரும்பாலனவை புராணக் காட்சிகளும், மக்களின் அன்றாட வாழ்க்கையை விவரிக்கும் காட்சிகளும், விருந்து காட்சிகளும், நடனம் மற்றும் கேலிக்கைக்காட்சிகளும் அடங்கியவையாகும்.



எகிப்திய ஓவியம் (இரண்டாம் இராம சீசு மகன் தேரோட்டும் காட்சி)



கிரேக்க ஓவியம் ( ஒலிவக்கனி பறித்தல் )

**இத்தாலி :** இத்தாலி நாட்டில் தோன்றிய எட்ரா சுக்கள் என்ற இன மக்களின் கலை எட்ராசுக்கள் கலை எனப்பட்டது. எட்ராசுக்கள் கல்லறைகளின் மீது காணப்படும் ஓவியங்கள் பல்வேறு காட்சிகளையும் சித்தரிக்கின்றன. அதில் காணப்படும் உருவங்கள் கம்பீரமான தோற்றத்துடன் காணப்படுகின்றன. இவ்வோவியங்கள் எல்லாம் பற்றோவிய முறையில் தீட்டப்பட்டுள்ளன. கண்ணைக் கவரும் அழகிய ஓவியங்கள் மலையைக் குடைந்தமைக்கப்பட்ட உட்சுவர்களில் குறிப்பாக, கல்லின் மீது வண்ணம் பூசப்பட்டு அமைந்துள்ளன. இவ்வோவியங்கள் கல்லறைகளிலும், விதானங்களிலும் கட்டடத்தின் முகப்புகளிலும் காணப்படுகின்றன. விதானங்களிலே காணப்படும் ஓவியங்கள் வழக்கமான ப்ராணியில் வடிவியல் அமைப்புடன் தீட்டப்பட்டுள்ளன.

**உரோம் :** உரோமானியர் இயற்கையை ஒட்டியவைகளையே பெரிதும் விரும்பினர். கிரேக்கர்களிடம் நலிந்துவிட்ட ஓவியக்கலையே உரோமானியர்களிடம் வளர்ந்தது. எனவே, உரோமானியர் பல வண்ண அலங்கார வேலைப்பாடுகளையே செய்தனர். கான்சுடன்டைன் பேரரசர் கிருத்துவ மதத்திற்கு ஆதரவு அளித்த பிறகு கிறித்துவின் கோயில் கட்டடத்தின் உட்பகுதியில் பற்றோவிய முறைக்குப் பதிலாக பல வண்ண அலங்கார ஓவியங்கள் அமைத்தனர். பல வண்ண ஓவிய வேலைப்பாடு ரோமானியர்களின் காலத்தில் மிகச் சிறப்புடன் விளங்கியது.

**பிரான்சு :** பிரான்சு நாட்டின் ஆதிகால ஓவியங்களெல்லாம் அழிந்து போய்விட்டன. கோயில் சுவர்களில் கிருத்துவ வேத நூல்களில் உள்ள பல காட்சிகள் தீட்டப்பட்டுள்ளன. மடத்தின் சுவர்களில் உலக வரலாறும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இவ்வோவியங்களெல்லாம் பண்டை உரோமானிய ஓவியமுறையைத் தழுவியவையே. இவ்வோவிய முறையில் புனித சாவின் ( St. Savin ) கோயில் ஓவியங்கள் முக்கியமானவை.

14ஆம் நூற்றாண்டில் நல்லவரான சான் என்னும் அரசருடைய அவையோவியர் சிரார்டு ( Girard ) என்பவர் வரைந்த அரசருடைய உருவப்படமே அக்காலத்து முறைப்படி அமைந்த பிரான்சு நாட்டு முதல் ஓவியமாகும். பாரிசிலிருந்த ஓவியர்கள் சர்வதேச முறையைக் கையாண்டனர். பிரான்சு மக்கள் பெரிதும் விரும்பிய பாண்டின்பிளோ என்ற ஓவிய முறையைப் புகுத்தியவர்கள் ராசோ, பிர்மாட்டிச்சோ என்ற இத்தாலியர்களே. இவர்கள் பிரான்சு ஓவியமுறையைக் கையாளவில்லை. 17ஆம் நூற்றாண்டு ஓவியர்களில் தலை சிறந்தவரான நீக்காலா பூசான் (Nicolas Poussin) என்ற ஓவியருடைய ஓவியங்கள் பண்டை ரோமானிய முறையைத் தழுவி நின்றவற்றுள் சிறந்தவையாகும்.

உரோமானிய முறை, கற்பனை முறை தவிர, பார்பீசான் என்ற கிராமத்தில் தோன்றிய பார்பீசான் இயற்கைக்காட்சி ஓவியமுறை சிறப்புடன் வளர்ந்தது. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பதிவு நவிற்சி முறை எழுந்தது. எட்வார்மானே ( Edward Manet ) என்பவர் உடையில்லா உருவ ஓவியங்களை நிழல் இன்றி வண்ணத்தில் தீட்டினார். ஆனால் கிளாடு மோனே ( Claude Monet ) போன்ற ஓவியர்கள் ஒரு கண நேரத்தில் பார்ப்பதையே ஓவியங்களில் சித்தரிக்க வேண்டும் என்றனர். எனவே, அவர்கள் இருண்ட வண்ணங்களை உபயோகப்படுத்தவில்லை. ஆனால் வான்காக் ( VanGogh ) போன்ற ஓவியர்கள் இம்முறையிலுள்ள குறைகளை நீக்கினர். மத்திய காலத்தில் ஓவியர்கள் பல ஓவியங்களைத் தீட்டிய போதிலும் மிகக் குறைவான ஓவியங்களே கிடைத்துள்ளன. எட்டாம்ஹென்றி என்ற அரசருடைய காலத்தில் உருவப்படம் வரைவது சிறந்திருந்தது. இக்காலத்தில் கால்பைன் ( Holbein ) என்ற ஓவியர் உருவப்படங்கள் தீட்டுவதில் சிறந்து விளங்கினார். எலிசபெத் அரசி காலத்தில் இருந்த ஓவியர்களுள் சிறந்தவர் கிலியர்டு என்பவர். வான்டைக் என்ற ஓவியர் 17ஆம் நூற்றாண்டில் முதலாம் சார்லசு மன்னனின் அரசவை ஓவியராக இருந்தார். இவ்வாறு அயல்நாட்டு ஓவியர்கள் ஆங்கில நாட்டில் ஓவியக்கலையை வளர்த்தனர்.

1723இல் ஆங்கில தேசிய மேதையான கோகார்த் என்பவர் உருவப்படங்களைத் தீட்டியபோதிலும், ஒரு கதையை விளக்குவது போலப் படங்களைத் தொடராகத் தீட்டினார். இது ஓவியக்கலையில் ஒரு புதிய முறையாகும். கோகார்த் அரிப்புச் சித்திரங்களையும் செய்தார். இவருக்குப் பின்வந்த சர்சோசுவா ரெயினால்டுசு, தாமசு கெயின்சுபரோ ஆகிய இருவரும் உருவப்பட ஓவியர்களே. லாரன்சு என்ற ஓவியர் ஐரோப்பா முழுவதிலும் சிறந்து விளங்கினார். இந் நூற்றாண்டின் பிற்பகுதியில் வேட்டையோவியங்கள் தீட்டப்பட்டன. இதில் சிறந்து விளங்கியவர் சார்சு சுட்டுப்சு ( Geroge Stubbs ) என்பவர். பின்னர் வந்த சர் எட்வின் லான்சியர் என்ற ஓவியர் நாய்களையும்,



கருப்புக் காளை – பிரான்சு நாட்டு குகை ஓவியம் (கி.பி. 15000 – 10000)

குதிரைகளையும் வரைந்தார். மணிங்சு என்ற ஓவியர் நாய்களையும், குதிரைகளையும் அழகாகத் தீட்டிப் புகழ் பெற்றார்.

ஜீ. எப். வாட்சு என்ற ஆங்கில ஓவியர் திறமை யுடன் திகழ்ந்தார். இவர் வரைந்த வில்லியம் மாரிசு, டெனிசன், மாத்தியூ ஆர்னால்டு, லெசுலி இசுட்டீ பன் ஆகியோர் ஓவியங்கள் அழியாப் புகழுடைய வை. ஆல்பிரடு இசுட்டீபன்சு என்பவர் வரைந்த திரு மதி கோல்மன் என்ற உருவப்படம் சிறந்த உருவப் படங்களுள் ஒன்றாகும்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மிகச் சிறந்த ஓவியராக இருந்தவர் இசுடான்லி இசுபென் சர். இவருடைய ஓவியங்கள் வாழ்க்கைத் தத்துவத் தைச் சித்தரித்தன. தொடக்கத்தில் சமய சார்பான ஓவி யங்களைத் தீட்டினார். இவர் பர்க்கிளேர் என்ற இடத் திலுள்ள கோயிற் சுவரில் முதலாம் உலகப்போரைப் பற்றித் தம்முடைய நினைவுகளைச் சித்தரித்துள்ளார். இதுவே இவருடைய மிகப்பெரிய சாதனையாகும்.

**ஐரோப்பிய மறுமலர்ச்சி :** ஐரோப்பாவில் கிறித் தவ மதம் பரவத் தொடங்கியதும் ஓவியக்கலை வர லாற்றில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டது. ஓவியர் கள் புராணக் கருத்துகளைச் சித்தரிப்பதை விட்டுவிட்டு கிறித்தவ சமயக் கருத்துகளைச் சித்தரிக்கும் புதிய பழக் கத்தைக் கையாண்டனர். அது முதல் இச்சமயக் கருத்து களை மாதா கோயில்களிலும், கல்லறைகளிலும் தீட்டினார்கள்.

பைசான்டைன் ஓவிய முறையிலிருந்து விலகிச் சென்ற ஓவியராகிய கியாட்டோ ( Giotto ) மறு மலர்ச்சிக் கால ஓவியம் தோன்ற வழி வகுத்தவர் ஆவார். இவ ருடைய ஓவியக்கொள்கை அவர் காலம் முதல் நவீன காலம் வரை வழிகாட்டியாகவே விளங் கியது. கியாட்டோவின் செல்வாக்கால் 1349இல் பிளாரன்சு மரபினர் ஓவியச்சங்கம் ஒன்றை நிறுவினர்.

தொடக்க மறுமலர்ச்சிக் கால மிகச்சிறந்த ஓவிய ரான மசாசியா ( Masaccio ), கியாட்டோவிற்கு நூறு ஆண்டுகாலத்திற்குப் பிறகு முப்பரிமாண உருவங்கள் அமைப்பதை மிகவும் திறமையாகச் செய்தார். மறு மலர்ச்சிக் கால உச்சநிலையில் கலைஞர்கள் கலையின் பல்வேறு பிரிவுகளிலும் திறமையுடையவர்களாக இருந்தமையால் ஓவியக்கலையைத் தனியே பிரித்து ஆராய முடிவதில்லை. இக்காலத்தில் லியானார்டோ டாவின்சி ( Leenordo Devince ), மைக்கேல் ஆஞ்சலோ ( Michel Angelo ), இரபேல் ( Raphael ) ஆகியோர் ஓவி யம், சிற்பம், கட்டடக்கலை ஆகியவற்றில் மிகச்சிறந்த மேதைகளாக விளங்கினர். அவர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய கலையில் மிக உயர்ந்த நிலையைப் பெற்றிருந்தனர்.

லியானார்டோ டாவின்சி தன்னுடைய நீண்ட கால வாழ்க்கையின் பெரும்பகுதியை 15ஆம் நூற் றாண்டிலேயே கழித்தபோதிலும் முதல் உச்ச மறு மலர்ச்சிக்காலத்திய மிகச்சிறந்த ஓவியர் என்று சிறப் பித்துக் கூறப்படுகிறார். ஒளிநிழல் மக்களின் நடமாட் டத்தை அமைத்துக் காட்டுவதற்குப் பேருதவியாக இருந்தது என்று ஓவியத்தைப் பற்றி விளக்கமாக அவர் எழுதிய நூலில் குறிப்பிட்டுள்ளார். டாவின்சியின் இறுதி இரவுச் சாப்பாடு ( The Last Supper ), மோனாலிசா ( Mona Lisa ) என்ற இரண்டு ஓவியங் களும் உலகப்புகழ்பெற்றவை.

மைக்கேல் ஆஞ்சலோ தீட்டிய இழந்த சொர்க்கம் என்ற மிகப்பெரிய ஓவியத்தொகுப்பு 13 மீட்டர் அகல மும், 36 மீட்டர் நீளமும் உடையது. இதைப் பல பகு திகளாகப் பிரித்துத் தீட்டியுள்ளார். இறுதித் தீர்ப்பு ( The Last Judgement ) என்ற உலகிலேயே மிகப் பெரிய ஓவியத்தொகுப்பு என்று சொல்லக்கூடிய 18மீ உயரமும், 9மீ அகலமும் உடைய ஓவியத்தை 1537 இல் தொடங்கி 1541இல் தீட்டி முடித்தார்.

இரபேல் தீட்டிய ஓவியங்களில் மென்மையும், வனப்பும் மிளிர்கின்றன. இவர் வரலாற்றுக் காட்சி, பைபிள்நூல் விளக்கச்சுவரோவியம், உருவப்படங்கள் ஆகிய பல்வேறு வகை ஓவியங்களைத் தீட்டியுள்ளார். பிளாண்டர்சில் 14ஆம் நூற்றாண்டில் தோன்றிய பிளாண்டர்சு ஓவியக்கலை ஓவிய நுட்பத்துடனும், தெளிவாகவும் தீட்டப்பட்டு, ஒளிநிழல் அமைப்பதில் சிறந்த கவனம் செலுத்தப்பட்டது.

16ஆம் நூற்றாண்டில் செர்மனியில் சிறப்புற்றிருந்த காத்தியக்கலை முறையில் தேவதை பற்றிய ஓவியங் களில் எல்லாம் மக்களின் முகஅமைப்பே தழுவப் பட்டி ருந்தது. 17ஆம் நூற்றாண்டில் ஆலந்தில் இரெம் பிரெண்ட் ( Rembrandt ) என்ற ஓவியர் ஒளிநிழல் அமைப்பதில் சிறப்புடன் விளங்கினார். டச்சுக்கலை முறையைத் தோற்றுவித்த இவர் உருவப்படங்களை இயற்கையான தன்மையுடன் வரைவதில் உலகப் புகழ்பெற்றார். டச்சு ஓவிய முறையினர் நிலக்காட்சி, கால்நடைகளின் காட்சி, உயிரற்ற பொருள்களின் காட்சி ஆகிய ஓவியங்களைத் தீட்டினார்கள்.



இயேசு செருசலேம் வருதல் – கியாட்டோ (1305 – 1306)

18ஆம் நூற்றாண்டில் பிரான்சில் தோன்றிய இரக்கோக்கோ ( Rococo ) என்ற கலைமுறை ஓவியக்கலையில் பின்பற்றப்பட்டது. இம்முறையில் ஓவியங்கள் செயற்கை அழகிலே தீட்டப்பட்டன. எனவே, இம்முறையில் சலிப்பு ஏற்பட்டு எல். தேனிடு என்ற ஓவியர் செம்மைக் கலைமரபை ( Classicism ) பின்பற்றி, ஓவியமுறையைப் புதுப்பித்தார். பிறகு செம்மைக் கலைமுறைக்குப் போட்டியாகப் பாவனை நவிற்சி ( Romanticism ) என்ற புதிய கலைமுறை தோன்றியது.

1810 - 1931ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பாவனை நவிற்சியை ஒத்தபல புதிய கலைமுறைகள் தோன்றின. பிரான்சில் கூர்பெட் ( Courbet) என்ற ஓவியர் இயற்கை நவிற்சி ( Naturalism ) என்ற முறையையும், கிளாடுமானே ( ClaudeMonet ) என்ற ஓவியர் இயற்கைப் பதிவு நவிற்சி ( Impressionism ) என்ற முறையையும் தோற்று வித்தார்கள். சோரா ( Sewrat ), சிக்நே (Signac) ஆகியோர் புதிய பதிவு நவிற்சி ( Neo - Impressionism ) என்ற முறையைத் தோற்றுவித்தனர். இது புள்ளியீட்டு மரபு (Pointillism) என்றும் சொல்லப்படும். இந்தப் பல மரபுகளையும் பொதுவாக ***பதிவு நவிற்சி பின்மரபு*** ( Post - Impressionism ) என்று தொகுத்துக் கூறுவர்.

இம்மரபில் பொருட்கள் உள்ளது உள்ளபடியே சித்தரிக்கப்படுவதில்லை. ஓவியர் தம் கருத்திற்கேற்ப பொருட்களின் உருவங்களை மாற்றியும் அமைக்கலாம். எதிர்மை நவிற்சியினர் ( Futurists ) என்று அழைக்கப்பட்ட ஓவியர்கள் ஒரே ஓவியத்தில் ஒரு காட்சி வெவ்வேறு நேரங்களில் எவ்வாறு தோன்றும் என்பதைக் காட்டும் ஓவியங்களைத் தீட்டினர். 1911 இல் திடீர் செயல்களைச் சித்தரிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இத்தாலியில் தோன்றியதே எதிர்மை நவிற்சி முயற்சியாகும். கன வடிவ நவிற்சி (Cubists) என்ற முறையில் பொருள்களின் உருவங்கள், கன சதுரம், வட்டம், உருளை, கூம்பு போன்ற வடிவங்களாகத் தோன்றும் படியாக அவற்றின் வடிவங்களை எளிதாக்கிக் கொண்டனர். 1925இல் அடிமன நவிற்சி ( Surrealism ) என்ற மற்றொரு கலைமுறை தோன்றியது. நவீன ஓவியத்தின் தந்தையாகப் போற்றப்படும் பாப்லோ பீக்காசோ ( Pablo Picasso ) போன்ற ஓவியர்களும், அவர்களுக்குப் பின்வந்த ஓவியர்களும் சிறந்த ஓவியங்களைத் தீட்டினர்.

**சப்பான் :** சப்பானில் கி.பி.ஆறாம் நூற்றாண்டில் பௌத்த மதம் பரவியபோது தான் ஓவியக்கலை தோன்றியது. பெரும்பாலான சப்பானிய ஓவியம் மதச்சார்பற்றவையாகவே உள்ளன. ஆனால், தொடக்கக்காலத்தில் தீட்டப்பட்ட சுவரோவியங்கள் எல்லாம் மதச்சார்பானவையே. இங்கு 9ஆம் நூற்றாண்டின் இறுதியில் தான் ஓவியக்கலை புத்துயிர் பெற்றது. இக்காலத்தில் வீடுகளின் கதவுகளிலும், திரைகளிலும் அழகான ஓவியங்கள் தீட்டப்பட்டன. மதச்சார்பற்ற ஓவியங்கள் கரா-யீ ( Kara - e ), யாமாட்டோ - யீ ( Yamato - e ) என்று இருவகைப்படும். முதல் வகை சீன ஓவிய முறையைத் தழுவி சீன கலாச்சாரத்தைச் சித்தரிப்பது. இரண்டாவது வகை சப்பானிய முறையைத் தழுவி சப்பானியக் கலாச்சாரத்தைச் சித்தரிப்பது.

இவற்றைத்தவிர, சப்பானுக்கேயுரிய எமாக்கி ( Emaki ) ஓவியங்களும் குறிப்பிடத்தக்கவை. 14, 16 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடைபட்ட காலத்தில் ஓவியமானது சென் மதக்கலைஞர்களால் வளரப்பட்டு வந்தது. எடோ காலத்தில் ஓவியம் அதிகமாகவே மக்களிடம் பரவியது. 18ஆம் நூற்றாண்டில் மேல் நாட்டு ஓவியர்கள் சப்பானுக்கு வந்தபோது அரசாங்க ஆதரவு கிடைக்கவில்லை. ஆனால் மீசி ( Meiji ) ஆட்சிக் காலத்தில் மேல்நாட்டு ஓவியமுறையும், சப்பானிய ஓவிய முறையும் ஒன்றாக இணைய ஆரம்பித் தன.

**சீனா :** உலகின் மிகச்சிறந்த ஓவியக்கலைகளுள் சீன ஓவியக்கலையும் முக்கியமான ஒன்றாகும். சீன ஓவியங்களில் பெரும்பாலும் இயற்கைக் காட்சிகளே காணப்படுகின்றன. கிறித்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சீனாவில் ஓவியக்கலை பயிலப்பட்டு வந்ததாக நம்பப்படுகிறது. துன் - கூங் ( Tun - Huang ) குகையிலுள்ள சுவரோவியங்கள் கி.பி. 6ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்டவையாகக் கருதப்படுகின்றன. தங் வமிசகாலத்தில் தான் பௌத்த மதத்தைச் சார்ந்த ஓவியக்கலை சிறப்புற்று விளங்கியது. இக்காலத்தில் இயற்கைக் காட்சி ஓவியம் தனிக்கலையாக விளங்கியது. யென்கூயீ ( Yen Hui ) என்பவரின் தாவோ மத ஞானிகளின் ஓவியங்கள் சப்பானில் புகழ்ந்துப்போற்றப்பட்டன. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் சிறந்து விளங்கியதும், சீன ஓவியக் கலையில் அதிகமாகக் காணப்படுவதும் இயற்கைக் காட்சி ஓவியங்களே ஆகும்.

**சோவியத் ருசியா :** சோவியத்துக் கலை கி.பி. 10 ஆம் நூற்றாண்டில் தான் தோன்றியது. சோவியத்துக் கலை தனிச் தன்மை வாய்ந்தது. பை சாண்டியத்தி



இறுதி இரவு உணவு



மோனோலிசா

லியனார்டோ டாவின்சியின் உலகப்புகழ் பெற்ற ஓவியங்கள்

லிருந்து கிறித்தவ போதகர்களுடன் வந்த கிரேக்க ஓவியர்களே சோவியத்துக் கலைஞர்களுக்கு ஓவியக்கலையைப் பயிற்றுவித்தனர். இக்கலையில் பைசாண்டிய பாணியே பெரிதும் காணப்பட்டது.

கான்ச்டாண்டி நோபிள் நகரம் இரண்டாவது மறுமலர்ச்சியடைந்த காரணத்தால் புத்துயிர் பெற்று பைசாண்டியக் கலையைத் தழுவி நான்கொராடு கலை வளர்ச்சி பெற்றது. இதில் சோவியத்து நாடோடிக் கலையில் பயன்படுத்திய சிவப்பு, மஞ்சள், பச்சை போன்ற வண்ணங்களே பயன்படுத்தப்பட்டன. 14, 15ஆம் நூற்றாண்டுகளில் சோவியத்துக்கலை உச்ச நிலையை அடைந்த போது அண்டிரிரூப்பௌல் ( AndreiRublev ) என்ற ஓவியரே தலைசிறந்தவராகக் கருதப்பட்டார். இவருக்குப் பிறகு 16ஆம் நூற்றாண்டில் பெர்மான்ட் என்னுமிடத்திலுள்ள கிறித்தவக் கோயிலில் காணப்படும் சுவரோவியங்களைப் படைத்த டையானிசியது என்பவர் குறிப்பிடத்தக்கவராக விளங்கினார். 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அரண்மனைகளை அழகுபடுத்துவதற்காகவும், உருவப்படங்கள் தீட்டுவதற்காகவும் வந்த மேலை ஐரோப்பிய ஓவியர்களுக்கும், சோவியத்து ஓவியர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் உண்டாயிற்று. இறுதியில் வென்ற மேலை ஐரோப்பியக் கலையின் மிகச்சிறந்த ஓவியரான சைமன் உசக்கோல் என்பவர் பைசாண்டிய ஓவிய முறையோடு மேலை ஐரோப்பிய இயற்கை நவிற்சி முறையைக் கலந்தார். 18ஆம் நூற்றாண்டில் உருவப்படங்கள் தீட்டுவது சிறிது காலம் குறைந்து காணப்பட்டது.


குடியானவர்கள் அரசை எதிர்த்தபோது மக்களின் உரிமைகள், கடமைகள் நன்மைகளுக்காக உயிர்த்தியாகம் செய்தல் போன்றவற்றை விளக்கும் ஓவியங்களை இலக்கியங்களிலிருந்து எடுத்துத் தீட்டிய ஓவியர்களில் புரட்சிகரமானவராகிய எர்மெனெவ் ( Yermenev ) வழக்கத்திற்கு மாறாக குடியானவர்களை நல்லவர்களாகவே சித்தரித்தார். 19ஆம் நூற் றாண்டில் தோன்றிய பிரயாணிகள் என்ற இன ஓவியர்கள் சமூக ஊழல்களையும், மத மூட நம்பிக்கைகளையும், வரதட்சணைக் கொடுமைகளையும், போரின் பெயரால் நடைபெறும் கொலைகளையும் கண்டித்து ஓவியங்கள் தீட்டினார்கள். வாழ முடியாத ஏழைகள், கையூட்டு வாங்கும் அரசாங்க ஊழியர்கள், ஒழுக்கங்கெட்ட பாதிரியார்கள், பணமில்லாமை யால் படிக்க முடியாத ஏழை மாணவர்கள், பட்டினியால் வாடும் கலைஞர்கள் ஆகியோரின் வாழ்க்கையையும் ஓவியங்களாகத் தீட்டினார்கள்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தத்துவ முறையில் ஓவியங்களைத் தீட்டிய ஒரு மரபினர் துன்பக் காட்சிகளைத் தீட்டாமல் விளையாட்டுக் காட்சிகளையே பளபளப்பான வண்ணங்களினால் தீட்டினார்கள். 1917ஆம் ஆண்டிற்குப்பிறகு பழைய முறைகளை முற்றிலும் அழித்துவிட்டுப் புதிய முறைகளில் ஓவியங்கள் தீட்டும் வழக்கம் நடைமுறைப்படுத்தப் பட்டது. இவ்வாறு மக்களின் முன்னேற்றத்தையே அடிப்படையாகக்கொண்ட ஒரு புதிய கலை அங்கு உருவாக்கப்பட்டது.

**அமெரிக்க ஐக்கியநாடுகள் :** அமெரிக்காவில் ஓவியக்கலையானது 17ஆம் நூற்றாண்டில்தான் உதயமானது. அவர்கள் ஐரோப்பிய ஓவிய முறையைத் தழுவியே ஓவியங்கள் தீட்டினார்கள். அக்கால முக்கியமான ஓவியமாக 1729இல் சான் இசுமிபெர்ட் வரைந்த உருவ ஓவியம் கருதப்பட்டது.

அமெரிக்க ஓவிய முறையானது 18ஆம் நூற்றாண்டில் உள்ளதை உள்ளவாறு வரையும் தன்மை நவிற்சியினராகிய காப்ளி, பெஞ்சமின் வெசுட்டு ஆகியோரால் தொடங்கி வைக்கப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் அமெரிக்க ஓவியக்கலை ஒரு புதிய எழுச்சிப்பெற்றது. கவிஞர்களின் இயற்கை எழில் வர்ணணையை ஆடபான் ( Auduban ) போன்ற ஓவியர்கள் பொருள் மாறாமல் ஓவியங்களாகத் தீட்டினார் கள். தன்மை நவிற்சிக் கொள்கைதான் அமெரிக்க ஓவியக்கலையின் சிறப்பியல்பாகும். அயல்நாட்டிலிருந்து கொண்டு ஓவியம் தீட்டிய அமெரிக்க ஓவியர்களுள் சார்செண்ட் என்பவரின் ஓவியங்கள் அமெரிக்கத் தொழில்நுட்ப திறமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க ஓவியக்கலையில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. ஓவியங்களில் உணர்ச்சியைக் காட்டுவதே சிறப்பியல்பாக இருந்தது. அமெரிக்க ஓவியக்கலையானது தனி அமெரிக்க இயல்புடன் அந்நாட்டையும் அங்குள்ள மக்களையும் சித்தரித்து வருகிறது.

**மாயா ஓவியம் :** கிருத்துவ சகாப்தத்தின் தொடக்கத்தில் மத்திய அமெரிக்காவிலுள்ள குவாத்திமாலாவின் தாழ்ந்த சதுப்பு நிலக்காட்டுப் பிரதேசத்திலும் வேறுசில இடங்களிலும் வாழ்ந்த மாயா மொழி பேசிய இந்தியர்கள் மாயா - இந்தியர்கள் எனப்பட்டனர். அம்மக்களின் ஓவியக்கலையாகிய மாயா ஓவியக்



லியனார்டோ டாவின்ச்சியின் கோட்டோவியங்கள்

கலை கட்டடக்கலையோடும், சிற்பக்கலையோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. பல புடைப்புச் சிற்பங்களுக்கு வண்ணம் தீட்டப்பட் டுள்ளது.

இவ்வோவியங்கள் மத்திய மாயா பகுதியில் கோணார்பர்க்கிலும் இதற்கு 500 ஆண்டுகளுக்குப் பின் யுக்காட்டான் தீபகற்பத்தில் சிக்சன் என்ற இடத்திலும் காணப்படுகின்றன. மாயா ஓவியம் மண் பாண்டங்களிலும் எகிப்திய பாணியில் மக்களின் அன்றாட வாழ்க்கையை விவரிக்கும் உண்மைக் குறிப்புகள் போலக் காணப்படுகிறது.

சுவரோவியங்களைத் தவிர மதம் பற்றிய நிகழ்ச்சிகளையும், வரலாற்று நிகழ்ச்சிகளையும் காகிதம் போன்ற 6 அங்குல மரப்பட்டையில் ஓவியங்களாகத் தீட்டியுள்ளார்கள். பிற்காலத்தில் அங்குக் குடியேறிய மக்கள் கிறித்துவக் கலைக்கு முரண்பாடானது என்று அவ்வோவியங்களை எரித்துவிட்டனர். தப்பிய மூன்று ஓவியங்கள் இப்போது காணப்படுகின்றன. இதில் மாயா சோதிட அமைப்புகள், தேவதைகளின் உருவங்கள், விண்ணில் காணப்படும் நட்சத்திர அமைப்பு ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன.

**ஈழம் :** ஈழத்தில் ஓவியக்கலை மிகுதியாகப்பயிலப் பட்டுவந்த போதிலும், மாத்தளை மாவட்டத்தி லுள்ள கொழும்புவிற்கு வடக்கிழக்கே 105 மைல் தொலைவிலுள்ள சிகிரியா என்ற குன்றின் கீழுள்ள நிலவறையில் காணப்படும் வியக்கத்தக்க ஓவியங்களே குறிப்பிடத்தக்கவை. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த இவ்வோவியங்கள் மேகங்களின் மீது தேவதைகள் செல்வதைச் சித்தரிக்கின்றன. இவை மிக உயர்ந்த கலைத் திறனைக் காட்டுவதோடு தனிச்சிறப்பும் பெற்று விளங்குகின்றன.

பௌத்தக்கதைகளிலுள்ள சில காட்சிகளைச் சித்தரிக்கும் ஓவியங்கள் பொலனறுவையிலுள்ள 12ஆம் நூற்றாண்டுக் கோயில் ஒன்றின் சுவர்களை அழகு செய்கின்றன. மேலும், மண்பாண்டங்களிலும் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன.

**இந்தியா :** உத்திரபிரதேசத்தில் மிர்சாப்பூர், பண்டா, விந்திய மலைத்தொடரில் மகாதேவ குன்றுகள், கைமூர் குன்றுகள், மத்திய இந்தியாவில் சிங்கன்பூர், தெற்கில் பல்லாரி ஆகிய இடங்களிலுள்ள குகைகளிலும், பாறைச்சரிவுகளிலும் பக்குவமடையாத முறையில் தீட்டப்பட்டிருக்கும் ஓவியங்கள் வேட்டைக்காட்சிகளேயாகும். இவ்வோவியங்க ளில் சிவப்பு வண்ணமே அதிகமாக உள்ளது. கோர் மங்கர் குகையில் காண்டாமிருக வேட்டைக் காட்சி கவர்ச்சியுடன் தீட்டப்பட்டுள்ளது. மேல்டோரதீடிச் சரிவில் காணப்படும் குரங்கு குழல் ஊதுகிற காட்சியும் சிறப்புமிக்கது. பல்லாரி மாவட்டத்து கப்கல்லுவில் காட்டெருதுகள். சண்டையிடும் காட்சிகளைத் தவிர, யானைகள், பறவைகள் ஆகியவற்றின் உருவங்களும் தீட்டப்பட்டுள்ளன.

இந்தியாவின் வரலாற்றுக் கால ஓவியங்களுள் மிகவும் முற்பட்டவை கி.மு.2ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள சாதவாகனர் காலத்தவையாகும். அசந்தாவின் மிகவும் முற்பட்ட குகைகளும் இவர்கள் காலத்தவையே. குதிரை லாட வடிவில் அமைந்துள்ள குன்றில் 30 குகைகள் செதுக்கிக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளன. 6 குகைகளின் சுவர்களிலும் விதானங்களிலும் இன்றும் கண்ணைக் கவரும் வகையில் அதிகமான ஓவியங்கள் காட்சியளிக்கின்றன. அசந்தா ஓவியங்கள் எல்லாம் பற்றோவிய முறையில் தீட்டப்பட்டவை. அசந்தா ஓவியக்காட்சிகள் சமயத் தொடர்புடையவையாக இருந்தபோதிலும் உலகியல் காட்சிகளும் தீட்டப்பட்டுள்ளன. போதிசத்வ பத்ம பாணி என்ற முதலாவது குகையில் உள்ள ஓவியம் இந்திய ஓவியக்கலையிலேயே மிகச்சிறந்தது.

குவாலியரில் உள்ள பாக் என்னும் சிற்றூருக்கு அருகிலுள்ள குகைகளில் காணப்படும் ஓவியங்கள் குப்தர்கால ஓவியங்கள் ஆகும். இந்தப் பற்றோவிய முறை ஓவியங்கள் அசந்தா ஓவியக்கலையின் இறுதிக் காலத்தில் தீட்டப்பட்டவை என்றும், ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவை என்றும் கருதப்படுகிறது. பாக் நதிக்கு 150 அடி உயரத்திற்கு மேல் விந்திய மலைக்குன்றுகளின் சரிவுகளில் வெட்டப்பட்ட ஒன்பது குகைகளில் முக்கியமானவையாக 2, 4, 5 ஆகியன கருதப்படுகின்றன. எல்லோரா தக்காணத்தின் ஒப்பற்ற நினைவுச்சின்னமாக விளங்கியது. கைலாசநாதர் கோயிலில் மிக முக்கியமான ஓவியங்கள் இரண்டு மூன்று அடுக்குகளாக மேற்கு மண்டபத்தின் உட்பகுதியில் காணப்படுகின்றன. முதல் அடுக்கு கி.பி.750இல் கோயில் அமைக்கப்பட்ட போது தீட்டப்பட்டதாகத் தெரிகிறது. அதில் முக்கியமான ஓவியங்கள் பறக்கும் கந்தர்வர்கள், சித்திரக் குள்ளர்கள், அரக்கன் முதுகின் மீதமர்ந்துள்ள தேவதை ஆகியவை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படும். இந்திரசபை ஓவியம் மிகவும் விளக்கமாக அமைத்துக்





புனித செபசுதியான்

– ஆண்டிரியா மேண்டிக்னா ( 1455 – 1460)

இறுதித் தீர்ப்பு – சான்வான்ஐக் (1420 – 1425)

காட்டப்பட்டுள்ளது. மேலடுக்கு ஓவியம் திருமால் லட்சுமி ஆகியோரின் உருவங்களைச் சுற்றிக் கருடன் பறக்கும் காட்சியாகத் தீட்டப்பட்டுள்ளது.

எல்லோராக் குகைக் கூட்டத்தின் இறுதியில் உள்ள சமணக்குகையின் விதானச்சுவர் முழுவதும் சிறு ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை கைலாசநாதர் கோயிலுள் ஒரு நூற்றாண்டுக்குப் பின்னுள்ளவை எனக்கூறவேண்டும்.

சித்தன்னவாசல் தமிழகத்தில் புதுக்கோட்டையிலிருந்து 15 கி.மீ. தொலைவிலுள்ள குன்றாகும். இக்குன்றின் மேல் செதுக்கி அமைக்கப்பட்ட கோயில் அக்காலத்திய பண்பாட்டின் சின்னமாகக் காட்சியளிக்கிறது. கி.பி. 817 - 862ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் பற்றோவிய முறை ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. கோயிலின் முகப்பிலுள்ள இரண்டு தூண்களில் மேகங்களுக்கிடையே மகளிர் நடனமாடுவது போல் ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. இவை கி.பி. 9ஆம் நூற். பாண்டிய ஓவியங்களே எனத் தெளிவுறுத்தும் கல்வெட்டு இப்போது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

விசயநகர ஓவியப்பாணி பிற்காலச் சோழ, பாண்டிய மரபின் தொடர்ச்சியாக இருந்தது. விசயநகரப் பேரரசை நிறுவக் காரணமாகவிருந்த வித்தியானுயரைக் குறிக்கும் ஓவியம் ஒரு தலைசிறந்த படைப்பு. லேபாசியில் மூன்று சந்நிதிகளுக்குப் பொதுவான மண்டபத்தின் கூரையின் உள்ளே வீரபத்திரரின் மா பெரும் ஓவியம் ஒன்றிருக்கிறது. இது விசயநகர காலத்தின் மிகவும் குறிப்பிடத்தக்க ஓவியங்களுள் ஒன்று. பிற்கால ஓவியங்கள் சைவசமயக் கொள்கைகளை விளக்குவதோடு இயற்கையான தன்மையுடன் எளிமையான முறையில் தீட்டப்பட்டுள்ளன.

தஞ்சாவூர் பிரகதீசுவரர் கோயில் கருவறையைச் சுற்றியுள்ள இருள் சூழ்ந்த ஆறு அறைகளில் சற்று அழிந்துபோன நிலையிலுள்ள சோழர்கால ஓவியங்களில் இரண்டு ஓவியப்பூச்சுகள் தெரிகின்றன. இதில் புதிதாக உள்ள பூச்சு கி.பி. 17, 18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த நாயக்கர்கள் காலத்தவை ஆகும். பழைய ஓவியம் பூச்சு தான் சோழர் காலத்தைச் சார்ந்தவை. வடக்குச்சுவர் முழுவதும் திரிபுராந்தகப் போர் சித்தரிக்கப்பட்டுள்ளன. இவ்வோவியங்கள் சைவ சமயத் தலைப்புகளைக் கொண்டது. இதில் சிவன் நடனமாடும் பாணியிலும், சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்க்கையை விளக்கும் காட்சிகளும் அமைத்துக் காட்டப்பட்டுள்ளன. சோழர் கால மக்களின் பண்புகளையும், வாழ்க்கையையும் இவ்வோவியங்கள் விளக்குகின்றன. வண்ணங்கள் மென்மையாகவும், இளகியும் கோடுகள் உறுதியாகவும், முகபாவம் உணர்ச்சி மிக்கதாகவும் காட்சியளிப்பதோடு வீரம், கோபம், கருணை ஆகியவையும் தெளிவாக விளக்கிக் காட்டப்பட்டுள்ளன. மொகலாய ஓவியம் தனித்தன்மை வாய்ந்ததாயினும் இந்திய ஓவியமே.

பாரசீக மணம் வீசிய போதிலும், இந்திய மரபின் இயல்பாக அமைந்துள்ள கவர்ச்சி இதற்கு உண்டு. தைமூருக்குப்பின் ஐந்தாவது தலைமுறையில் வந்த பாபர் இந்தியாவில் மெகாலாயப் பேரரசை நிறுவிய போது ஓவியக்கலையைக் கண்டு களிக்க வேண்டுமெனக் கருதினார். அவரது மைந்தர் ஹுமாயுனும் கலையில் ஆர்வம் கொண்டிருந்தார். ஹுமாயுன் டில்லியைக் கைப்பற்றியதும் 1550ஆம் ஆண்டு அப்துல் சபாவை குழந்தை அக்பருக்கு ஓவியம் கற்றுக் கொடுக்கவும் மீர் சையது அலி தலைமையிலான குழுவிடம் ஒரு காதல் காவியத்திற்கு விளக்கப்படங்கள் தீட்டும் பணியையும் ஒப்படைத்தார். துணியில் தீட்டப்பட்ட அம்மிகப்பெரிய ஓவியப்பணி 1375 ஓவியங்களைக் கொண்டது. அதுவே முதலாவது மொகலாயப் புத்தக விளக்க ஓவியமாகும். இது முழுவதும் பாரசீக முறையில் தீட்டப்பட்ட போதிலும் இந்திய உடை, கிராமியக்காட்சி ஆகியவையும் இணைக்கப்பட்டுள்ளன.

அக்பர் காலத்தில் வரலாற்று நூல்களுக்கும், இலக்கிய நூல்களுக்கும் புத்தக விளக்கப்படங்கள் தீட்டப்பட்டன. மேலும் அரசாங்க அதிகாரிகளின் அரை உருவங்கள் தீட்டப்பட்டு அரண்மனையிலேயே பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. சிறு ஓவியங்களில் மட்டுமே அதைத் தீட்டியவர்களின் பெயர் எழுதப்பட்டுள்ளன. பெரும்பாலான சிறு ஓவியங்கள் இரண்டு ஓவியர்களால் தீட்டப்பட்டுள்ளன. ஒருவர் வரைபடத்தை வரைந்தும் மற்றவர் வண்ணப்பூச்சுக்களைப் பூசியும் பாரசீக ஓவிய முறையை இந்தியாவிலும் மொகலாய ஓவியக்கலையில் பின்பற்றப்பட்டது. முதிர்ச்சியடைந்த பாரசீக ஓவியம் அரண்மனையில் தீட்டப்பட்டபோது இரண்டு பரிமாண ஓவியங்களும் அலங்கார ஓவியங்களாகத் தீட்டப்பட்டன. இவை எளிதில் ஒன்றோடு ஒன்று கலக்காத ஒளிமிக்க வண்ணங்களால் தீட்டப்பட்டுள்ளன. ஓவியக்கலை



அசந்தா ஓவியம்

அரசர் தம் மனைவியோடு உரையாடுதல் (முதலாம் குகை வடக்குச் சுவர்)

போன்று ஒளிமிக்க எனாமல் வண்ணங்களைப் பயன்படுத்துவதையும் ஓவியங்களில் பாரசீக ஓவியங்களில் இயற்கையான கோடுகளை அமைப்பதையும் இந்தியர்களும் செய்துள்ளனர். அக்பருடைய ஆட்சியின் பிற்பகுதியில் கிறித்துவ பாதிரியார்களால் கொண்டு வரப்பட்ட ஐரோப்பிய ஓவியங்களே மொகலாய அரசு ஓவியர்கள் ஆராய்ந்ததின் விளைவாக மொகலாய ஓவியங்களில் ஐரோப்பிய முறைகளும் காணப்படுகின்றன.

சகாங்கீர் காலத்தில் மொகலாய ஓவியக்கலை உச்சநிலை அடைந்து, ஐரோப்பியக் கலையின் மேம் பாடு அதிகமாகக் காணப்பட்டது. ஓவியர்கள் சகாங்கீருடன் சென்று, அவர் பார்த்த பூக்கள், தாவரங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றை ஓவியங்களாகத் தீட்டுவார்கள். இவ்வாறு ஒரு புதிய முறை சகாங்கீர் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. உஸ்தாத் மன்சூர் என்பவர் இக்காலத்துச் சிறந்த ஓவியராக விளங்கினார். சாசகான் காலத்தில் ஓவியக்கலை வளர்ச்சி அடையாவிட்டாலும் உயர்ந்த நிலையிலேயே இருந்தது. ஔரங்கசீப் காலத்தில் ஓவியக்கலை தொடர்ந்து இருந்த போதிலும் அதனுடைய தரம் குறைந்தது. பின்னர் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அயோத்தி நவாப்புகளால் மொகலாய ஓவியக்கலை புதுப்பிக்கப்பட்டது.

**இரசபுத்திர ஓவியக்கலை :** இரசபுத்திர ஓவியக்கலை கி.பி. 16 முதல் 19ஆம் நூற்றாண்டு வரை வளர்ச்சியடைந்த ஒரு கலையாகும். இது ஓவியக்கலையின் மிகச்சிறந்த காலத்தில் தீட்டப்பட்ட சுவரோவிய முறையை அடிப்படையாகக் கொண்டு தீட்டப்பட்டது. இந்திய புராதனக் கலையின் பாணி மட்டுமின்றி அதன் அம்சங்களும், அசந்தா ஓவியக்கலையின் அம்சங்களும் இவ்வோவியக்கலையில் உள்ளன. ஆனால் பிற்காலத்தில் மொகலாய ஓவியக்கலையின் சில அம்சங்களை இவ்வோவியக் கலையில் குறிப்பாக, பகாரி ஓவியக் கலையில் காணலாம். இவ்வோவியக் கலையை வரலாற்ற அடிப்படையில் முற்காலம் பிற்காலம் என்றும் நிலவியல் அடிப்படையில் இராசதானிய ஓவியம், பகாரி ஓவியம் என்றும் பிரிக்கலாம்.

பகாரி ஓவியக்கலையில் பல பிரிவுகள் அடங்கியுள்ளன. அவற்றில் இமயமலை அடிவாரத்தில் வாழ்ந்த இராசபுத்திரர்களின் ஓவியக்கலை, சம்முவிலும் கங்கராவிலும் வளர்ச்சியடைந்தது. பழைய ஓவியம் குறிப்பாக, கிருட்டிண லீலைகள் அடங்கிய காட்சிகளை விளக்குவது ஆகும். இசை தொடர்பான ஓவியங்கள் 36 பாகங்களைக் கொண்டுள்ளன. இவற்றில் இரண்டாவது பிரிவு சமயச் சார்பற்ற ஓவியம் ஆகும். இதில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் அரை உருவங்களும் ஏனைய காட்சிகளும் அடங்கும்.

சம்மு ஓவியக் கலை இராசுதானிய ஓவியக்கலையைக் காட்டிலும் சற்றுத் தரம் குறைந்தது. ஆனால் வரைபட அமைப்பு மிகவும் மென்மையானது. பரந்த நெற்றியும், பெரிய கண்களும், உயர்ந்த மூக்கும் உள்ள மனித உருவங்களை வரைதல், பளபளப்பான வண்ணங்களைப் பயன்படுத்துதல், பறவைகளின் அழகான இறகுகளைக் கொண்டு அழகு செய்தல் சூழ்நிலையை ஒரே வண்ணத்தில் தீட்டுதல் போன்றவற்றில் தனியம்சம் பெற்றிருந்த போதிலும் பெரும்பாலும் பாரசீக ஓவியத் தன்மையைக் கொண்டுள்ளது.

காங்கிரா ஓவியக்கலை இரசபுத்திர ஓவியக் கலையின் கடைசிக் கட்டமாகும். இவ்வோவியக் கலையின் தொடக்கக் காலத்தில் மிகக்குறைந்த ஓவியங்களில் அதனுடைய ஓவியப்பணி உணர்ச்சி மிக்கவும், மனதைக் கவரும் நிலையிலும் அமைந்துள்ளன. இராசபுத்திர ஓவியக்கலையில் அரை உருவங்கள் அதிகமாகக் காணப்பட்டபோதிலும், அவை மொகலாய அரை உருவ ஓவியங்களினின்றும் முற்றிலும் மாறுபட்ட நிலையில் அமைந்துள்ளன.

பகாரி கலையானது 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குன்றத்துவங்கியது. மேலும், அதன் முடிவு எதிர்பாரத வகையில் திடீர் என்று ஏற்பட்டது. காங்கிரா நகரத்தையே அழித்த மிகப்பெரிய நில நடுக்கத்தால் அங்கிருந்த கலைஞர்கள் உயிரிழந்தனர். கலைப்பொருட்களும் அடியோடு அழிந்தன. 1902இல் இந்தியாவில் தொல்பொருள் ஆய்வுக் கழகம் தொடங்கப்பட்டு அவ்வாராய்ச்சியின் பயனாக இந்தியக் கலையின் அழகையும் அக்கலையின் வாயிலாக தோன்றிய முக்கிய உண்மைகளையும் மக்கள் புகழ ஆரம்பித்தனர். இந்நிலையில் இந்தியக் கலைஞர்கள் உள்நாட்டுப் பழைய கலையின் மூலம் கலையுணர்வு பெற முயன்றனர்.

கல்கத்தா கலைப்பள்ளியின் முதல்வராக நியமிக்கப்பட்ட அவநீத்திரநாத் தாகூர் மற்றும் அவருக்குத் துணையாயிருந்த நந்தலால் போசு, மொகுல் சந்திர டே, இராய் சவுத்திரி, மசும்தார் முதலியோர் வங்காள ஓவியக்கலை என்ற ஒரு புதிய கலையை உரு



பாலகிருட்டிணன் கி.பி. 19ஆம் நூற்றாண்டு முற்பகுதி , தஞ்சாவூர்



மற்போரையும், விலங்குகளின் சண்டைகளையும் பாபர் பார்த்தல், பாபர் நாமா, முகலாயர்; கி.பி. 1597.



மூன்று நடனக்காரர்கள் — பிக்காசோ (1925)

வாக்கினர். வங்கக்கலையை இந்தியக்கலை என்று சொல்ல முடியாத நிலையில் இருந்த போதிலும் பிற நாடுகளின் கவனத்தை இக்கலையின் மீது ஈர்க்க முயன்றனர். இக்கலை வளர்ச்சியடைய முயற்சி செய்யப்பட்டபோது இந்தியாவிலிருந்து வெளிநாடு சென்று கல்வி பயின்ற பெரியோர்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியக்கலையின் உண்மையான உணர்வு இந்தியக்கிராமங்கள் முன்னேறினால் தான் வளர்ச்சியடையும் என்று கூறினார்கள். இளம் முற்போக்கான எண்ணமுடைய கலைஞர்கள் நாட்டின் எளிய மக்களின் நிலையையும், அவர்களின் ஏழ்மை நிலையையும் உலகிற்கு எ.காட்டுவதே தங்கள் குறிகோளாகக் கருதினார்கள்.

வங்காளக் கலைக்கு எதிராக பல இளம் ஓவியர்கள் தங்கள் ஓவியங்களுக்காக மட்டுமல்லாமல் தொழில் முறைகளுக்காகவும் தங்களுடைய கவனத்தைக் கிராமங்களின் மீது செலுத்தினார்கள். அவர்களில் 1925ஆம் ஆண்டு முதல் ஒளிமிக்க வண்ணங்களைக் கொண்டு ஓவியங்களைத் தீட்டத் தொடங்கி பின்னர், மேல்நாட்டு வண்ணங்களுக்குப் பதிலாகக் கிராமங்களில் கிடைத்த வண்ணங்களையே ஓவியங்களைத் தீட்டிய செமினிராய் என்பவரும் ஒருவர்.

இந்திய ஓவியர்களில் மகாகவி இரவீந்திரநாத் தாகூரும் ஒருவர். அவர் தம் 65வது அகவையில் பேனாவிற்குப் பதிலாக தூரிகையை எடுத்து ஓவியம் தீட்டத் தொடங்கினார். இவருடைய ஓவியங்கள் 1928 - 30ஆம் ஆண்டு காலத்திய ஓவியங்களின் நிலையை அடையாவிட்டாலும் முக்கியமான தன்மை களைப் பெற்றிருந்தது.

நவீன கால ஓவியர்களைப் பழைய ஓவிய மரபுகள், சீனா, சப்பானிய ஓவிய மரபுகள் ஆகியவற்றின் அடிப்படையில் வரைபவர்கள் என்றும், மேலை நாட்டு முறையில் ஓவியம் பயின்று அதே முறையில் நாட்டுச் செய்திகளை வரைபவர்கள் என்றும், நாடோடி கிராமியக் கலையின் நுட்பங்களைக் கற்று அவற்றின் அடிப்படையில் வரைபவர்கள் என்றும், இன்றைய பலதரப்பட்ட வாழ்க்கையை, நிகழ்ச்சியை நேரில் கண்டு அவற்றின் உட்கருத்தை விளக்கி வரைபவர்கள் என்று நான்கு பிரிவினராகப் பிரிக்கலாம்.

இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பும் அதற்குப் பின்னரும் பல ஓவியப்பிரிவினர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் ஓவியக்கலையை அவரவர் வழியிலேயே வளர்ச்சியுறச் செய்தனர். குறிப்பாக கல்கத்தா, பம்பாய், பரோடா, சென்னை முதலிய நகரங்களில் பல்வேறு ஓவியர்கள் ஓவியக்கலையை அவரவர் சொந்தப் பாணியிலேயே வளர்த்து வருகின்றனர்.

-இரெ.அ.

**ஓவிய வகைகள் :** ஓவியங்கள் தீட்டப்படும் முறையைப் பொறுத்தும், இடங்களைப் பொறுத்தும் வண்ணக்கலவையில் வண்ணங்கள் ஒட்டுவதற்காகக் கலக்கப்படும் பொருட்களைப் பொறுத்தும் வகைப் படுத்தப்படுகின்றன. முக்கியமாக நீர்வண்ண ஓவியம், நெய்வண்ண ஓவியம் என்று ஓவியங்கள் பிரிக்கப்படுகின்றன.

**நீர்வண்ண ஓவியம் :** வண்ணப்பொருள்களை நீருடன் கலந்து தீட்டும் நீர்வண்ண ஓவியமே காலத்தால் முற்பட்டது. ஆதி மனிதனுக்கு எளிதில் கிடைத்த நிற தாதுக்களும் நீருமே நீர்வண்ண ஓவியம் தீட்டப் பயன் படுத்தப்பட்டன. சில வேளைகளில் தாவரச் சாறுகளும் பயன்பட்டன. பொதுவாக வெள்ளை நிறம் பயன்படுத்தாமல் தீட்டப்படும் ஓவியம் ஒளி புகு நீர்வண்ணம் என்றும் ( Transparent water colour ), வெள்ளை நிறத்துடன் சேர்த்து தீட்டப்படுவது ஒளி புகாநீர்வண்ணம் ( Opaque or Gouache water colour ) என்றும் கூறப்படுகின்றன. ஒளி புகு நீரோவியத்தில் ஒளியானது கீழிருந்து வரும், ஒளிபுகா நீரோவியத்தில் கீழிருந்து வராமல் வண்ணத்திலிருந்தே வரும். ஒளிபுகும் நீரோவியத்திற்கு நீரை மிகுதியாகவும், வண்ணத்தைக் குறைவாகவும் பயன்படுத்துவர். ஆனால், ஒளிபுகா நீரோவியத்திற்கு நீரைக் குறைத்தும் வண்ணத்தை அதிகமாக்கியும் பயன்படுத்துவர்.

ஆதி காலத்தில் தாவரச்சாறுகளும், நிறத் தாதுக்களுமே வண்ணப்பொருள்களாகப் பயன்படுத்தப் பட்டன. இக்காலத்தில் அடிப்படை வண்ணங்களாகிய சிவப்பு, நீலம், மஞ்சள் ஆகியவற்றுடன் துணை வண்ணங்களாகிய ஊதா, பச்சை முதலியவற்றைப் பலவாறு கலந்து தேவையான நிறவேறுபாடுகளு டன் ஓவியங்களைத் தீட்டுகிறார்கள். ஓவியங்களைப் பலமுறை நீரில் அமிழ்த்தி எடுத்து அல்லது மீண்டும் மீண்டும் வண்ணத்தைத் தீட்டி வண்ணங்கள் கண்ணுக்கு இதமாகுமாறு செய்வர். இம்முறை கழுவு நீரோவியம் என்றும், இந்திய முறை நீரோவியம் என்றும் குறிப்பிடப்படுகிறது.

**சிற்றோவியம் :** நூல் விளக்கமாகத் தீட்டப்படுவது சிற்றோவியம். சிற்றோவியங்கள் தீட்டும் போது வண்ணம் நன்றாகப் பற்றும்படி செய்வதற்காக நீருடன் சிறிதளவு பிசினோ, தேனோ கலக்கப்படுகிறது. சிற்றோவியங்களை நீரோவியங்கள் என்று கூற முடியாது.

ஐரோப்பிய வரலாற்றின் மத்திய கிறித்தவ வேத நூலிலும் வேறு சமய நூல்கள், சமய சார்பற்ற நூல்கள் ஆகியவற்றிலும் வரும் நிகழ்ச்சிகளை விளக்குவதற்குப்படங்கள் வரைந்தனர். அவற்றிற்கு வண்ணப் பொருட்களை நீரில் கலந்தே பயன்படுத்தினர். இத்தகைய நூலோவியங்கள் பாரசீக நாட்டிலும் இந்தியாவில் பௌத்தர்கள், சமணர்கள், மொகலாயர், இராசபுத்திரர் ஆகியோராலும் மிக அழகாகத் தீட்டப் பெற்றன. மொகலாயர் காலத்தின் பிற்பகுதியில் அத்தகைய சிற்றோவியங்கள் நூல்களுக்காக மட்டுமின்றித் தனியாகவும் வரையும் வழக்கம் உண்டாயிற்று. அவற்றைத் தந்தம் போன்ற விலையுயர்ந்த பொருட்களின் மீதும் தீட்டினர்.

**ஒட்டுவண்ண ஓவியம் :** இதைப் பச்சை வண்ண ஓவியம் என்றும் கூறுவர். இவ்வோவியம் தீட்டுவதற்கு முட்டையின் வெள்ளைக்கருவுடன் வண்ணப் பொருள்களைக் கலப்பர். மேலும் முட்டையின் வெள்ளைக்கருவுடன் மெருகெண்ணெய் ( Varnish ) ஆளிவிதை எண்ணெய், நீர் ஆகியவற்றைச் சேர்த்து நன்றாகக் குலுக்க வேண்டும். இக்கலவை கெடாமல் இருப்பதற்காக ஒரு துளி சீமைக்காடியைச் சேர்ப்பர். இம்முறையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்ததே நெய் வண்ண ஓவியமாகும்.

**பற்றோவியமுறை ஓவியம் :** கரடு முரடான குகைகளின் சுவர்களில் களிமண், சாணம் மற்றும் விலங்குகளின் மயிர் ஆகியவற்றைக் கலந்த கலவையைப் பாறைகளின் மேடு பள்ளங்களில் நன்றாகப் பதியும்படி பூசி, அதன் மீது நேர்த்தியான சுண்ணாம்புச் சாந்து பூசப்படுகிறது. பின்னர், அதன் மீது வரைபடம் வரைந்து அதன் கோடுகளைத் தூரிகையால் கறுப்பு வண்ணத்தால் அமைத்து ஓவியம் தீட்டுவதற்கு இதில் தேவையான அளவு தேர்ந்தெடுத்து மீண்டும் சாந்து மிகுவும் நேர்த்தியான முறையில் பூசப்படுகிறது. ஈரமாக உள்ளபோதே அப்பகுதியில் எந்தெந்த வண்ணங்கள் தீட்டவேண்டுமோ அது தீட்டப்படுகிறது. அவ்வாறு ஒரு ஓவியத்தொகுப்பைப் பல நாள்கள் தீட்டி முடிக்க வேண்டும். அசந்தா குகை ஓவியங்கள் இம்முறையில் தீட்டப்பட்டவையே.

**நகைச் சித்திரம் :** இது முதன்முதலில் இத்தாலியில் தோன்றியது. இப்போது எல்லா நாடுகளிலும் கையாளப்படுகிறது. இந்தியாவில் முதன்முதலில் வெளியிட்டவர் போத்தன் சோசப் என்பவர். இது பத்திரிக்கைகளில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. பொதுவாகக் கேலி செய்வதற்காகத்தான் பெருமளவில் இது கையாளப்படுகிறது. பொருத்தமற்ற உறுப்பு அமைப்பை வைத்துக்காட்டுவதே நகைச் சித்திரத்தின் தனிப்பண்பு. இதில் வரையப்படும் பாத் திரத்தின் பண்பே மேலோங்கி நிற்பதால் இதை ஒரு வகையில் குண பாவச் சித்திர விளக்கம் என்றும் சொல்லலாம். தனி நகைச்சித்திரம், நகைச் சித்திர வரிசை, திரைப்பட நகைச்சித்திரம் என்று நகைச்சித்திரங்கள் வரிசைப்படுத்தப்படுகின்றன. சினிமா நகைச்சித்திரத்தை முதன் முதலாக உருவாக்கியவர் எமீல்கோல் ( Emile Cohl ) என்னும் பிரான்சு நாட்டு ஓவியர். ஆனால் இத்துறையில் மிகவும் புகழ்பெற்றவர் வால்ட்டு திசுனி ( Walt Disney ) என்னும் அமெரிக்க ஓவியர் ஆவார். நகைச் சித்திரங்கள் வரலாற்றாசிரியர்களுக்கு மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றி அறிந்து கொள்ளப் பெரிதும் பயன்படுகிறது.

**நாடோடி ஓவியம் :** நாடோடி ஓவியக்கலை குடிசைக் கைத்தொழில்களோடு இரண்டறக் கலந்ததாகும். இவ்வோவியங்கள் பெரும்பாலும் துணிகளிலும், காகிதங்களிலும் தீட்டப்பட்டுள்ளன. மசூலிப்பட்டின கலங்காரித் திரைகளின் ஓவிய வேலைப்பாடுகள் சிறந்தவை. திரைச்சீலைகளின் பறவை, விலங்கு, மலர் ஓவியங்களும் புராணக் காட்சிகளும் தீட்டப்படுகின்றன. சிவப்பு, மஞ்சள், நீலம், கறுப்பு முதலிய வண்ணங்கள் பயன்படுத்தப்படுகின்றன. நயமான துணிகளில் தீட்டுவதோடு தடிப்பான, துணிகளிலும் தீட்டுகின்றனர். சீனாவில் வண்ணக் காகிதங்களை விலங்கு, பறவை, பூச்சி, மலர் முதலிய வடிவங்களாக வெட்டி வெள்ளைக் காகிதத்தில் ஒட்டி அமைக்கப்படுகிறது. அவ்வாறு ஒட்டப்பட்டவை சன்னல் கண்ணாடிகளில் ஒட்டி அழகு செய்யப்படுகிறது.

நாடோடி ஓவியம் குடும்பத்தவரின் வழிமுறையாகப் பயிலப்பெற்று குடும்ப இரகசியமாக காக்கப்படுகிறது. திரைப்படத் தொழில் தோன்றியதும் இக்கலை வளர்ச்சி குன்றியது.

**அரிச்சித்திரம் :** அரிச்சித்திரம் ( Etching ) முதன் முதலில் கி.பி. 15ஆம் நூற்றாண்டில் தான் தோன்றியது. இவ்வோவியம் செய்வதில் சிறந்து விளங்கிய வர் டச்சு ( Dutch ) ஓவியரான இரெம்பிரெண்ட். இது உலோகத்தில் தீட்டுவதைப் போல கண்ணாடியிலும் தீட்டப்படுகிறது.

உலோகத் தகட்டை முதலில் நன்றாகப் பளபளப்பாக்கிக் கொண்டு அதன்மீது பிரன்சுவிக் கறுப்பு என்னும் மெருகெண்ணெய்யை நன்றாகப் பூசிக் காய வைக்க வேண்டும். காய்ந்த பரப்பின் மீது தேவையான ஓவியக்காட்சிகளைக் கூர்மையான ஆணி போன்ற ஊசிகளால் பிரன்சுவிக் கறுப்பு நீங்கும் அளவிற்கு அழுத்தி வரைய வேண்டும். வரையப்பட்ட உலோகத் தகட்டை அமில நீரில் அழுத்தி வரையப்பட்ட பாகங்களை அரிக்கச் செய்ய வேண்டும். போதுமான அளவு அரித்தவுடன் எடுத்து நீரில் கழுவி காயவைத்து மீண்டும் அரிப்பின் ஆழம் தேவைப்படும் இடங்களைத் தவிர்த்து மற்ற இடங்களில் பிரன்சுவிக் கறுப்புப் பூசி, மீண்டும் அமில நீரில் அமிழ்த்தி அரிப்பு ஏற்படச் செய்ய வேண்டும். இவ்வாறு தேவையான அரிப்பு கிடைக்கும் வரை செய்தபின், தகட்டை எடுத்து பிரன்சுவிக் கறுப்பு நீங்கும் வரை நன்றாகக் கழுவி, வண்ணக் கலவையைத் தேவையான இடங்களில் பூசிக் காகிதத்தில் அச்சுப்பிரதி எடுக்க வேண்டும். குறிப்பாக, துத்தநாகத் தகடும் இதை அரிப்பதற்கு நீரக அமிலம் அல்லது வெடியக்காடி பயன்படுத்தப்படுகிறது. அரிச்சித்திரம் செய்யும் போது ஓவியர்கள் தங்கள் கற்பனைக்கு ஏற்ற புதிய உத்திகளையும் கையாள்வார்கள்.

**நெய்வண்ண ஓவியம் :** ஓவியக்கலை உயர்ந்த நிலையை அடைந்ததற்கு நெய் வண்ண ஓவிய முறையே முக்கியக் காரணமாகும். இம்முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் பெல்சியம் நாட்டுப் பிளாண்டர்சு பகுதியைச் சார்ந்த சான் வான்ஐக் ( Jan Van Eyck ). இம்முறை அவருக்கு முன்பிருந்தே இருந்தாலும் கூட அவரே இதைச் சிறப்படையச் செய்தார். சீனாவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நெய் வண்ண ஓவியம் தீட்டியிருக்கிறார்கள்.

நெய்வண்ண ஓவியம் கட்டுப்பாடற்ற முறையில் ஓவியம் தீட்டவும், வரையும் முறையைத் தேவையான போது மாற்றிக் கொள்ளவும், ஓவியத்தை தீட்டிய பிறகு அதன்மேல் வேறு வண்ணங்களைத் தீட்டி படத்தையே மாற்றிக்கொள்ளவும் வாய்ப்புத்தந்தது. மேலும், உலர்ந்த வண்ணங்கள் ஒளியுடன் விளங்கின. ஓவியங்கள் தண்ணீரால் அழியவில்லை. நெய் வண்ண ஓவியங்கள் மரப்பலகை, காகிதம், உலோகத் தகடு, கற்பலகை முதலியவற்றின் மேல் தீட்டப்பட்டு வந்தன. ஆனால் இக்காலத்தில் பருத்தி நூலால் நெய்யப்பட்ட தடித்த கித்தான்களின் மீது வரையப்படுகிறது.

இந்தியாவில் முதன்முதலில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இரவிவர்மா, இராமசாமி நாயுடு ஆகிய இருவரும் நெய் வண்ண ஓவியம் தீட்டுவதில் தேர்ச்சி பெற்று விளங்கினார்கள். இந்தியாவில் இக்கால் நெய்வண்ணக் கலையில் மேல்நாட்டு மரபின் கொள்கைகளைப் பயன்படுத்திய போதிலும், அது முற்றிலும் மேல்நாட்டுக் கலையைப் போல் இல்லை. நெய்வண்ண ஓவியம் தீட்ட வண்ணத்தைக் குழைக்க முப்பதுக்கும் மேற்பட்ட எண்ணெய்கள் உள்ளபோதிலும் சணல் எண்ணெய் ( Linseed Oil ) தான் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

மஞ்சள், சிவப்பு, ஆரஞ்சு வண்ணங்களும் இவை தூக்கி நிற்கும் கூட்டு வண்ணங்களும் வெப்ப நிறங்கள் ( Warm Colours ) என்றும், நீலம், பச்சை வண்ணங்களும் இவை தூக்கி நிற்கும் கூட்டு வண்ணங்களும் குளிர் நிறங்கள் ( Cool Colours ) என்றும் மேல் நாட்டினரால் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

நெய்வண்ண ஓவியம் தீட்டும்போதும், நீர் வண்ண ஓவியம் தீட்டும்போதும் ஓவியர் கண்களுக்கு ஒரு பொருளின் உண்மை நிறம் எதுவாக இருந்தாலும் அதன் தூரப்பார்வையில் எந்நிறம் தெரிகிறதோ அந்நிறமே ஓவியத்தில் இடம் பெறும்.

இரா. அ.

**கங்கைகொண்ட சூரியதேவன் வாணாதிராயன் காலிங்கராயன் :** இவன் வாணாதிராயத் தலைவன்; மாறவர்மன் குலசேகர பாண்டியனின் ( கி.பி. 1268 - 1311 ) அமைச்சனாகப் பணிபுரிந்தான். இவன் காலிங்கராயன் எனும் விருதுப்பெயரையும் பூண்டிருந்தான். இவனது சாதனைகளை இளையான்குடிப்பெருமாள் கோயில் கல்வெட்டு விரித்துரைக்கின்றது. இறையன்பில் மேம்பட்டு விளங்கிய இவன், பல திருக்கோயில்களுக்கு அறக்கொடைகள் விட்டுள்ளான். கோயில் திருப்பணிகள் புரிந்துள்ளான். பாண்டிய நாட்டில் மட்டுமன்றி, சேர நாட்டிலும் இவன் திருப்பணிகள் புரிந்துள்ளான்.

திருச்சி மாவட்டம் திருவானைக்காக்கோவிலில் தனது தந்தையின் பெயரால் கங்கை கொண்ட ஈசுவரம் உடையாரையும், தாயின் பெயரால் சுந்தர நாயனாரையும் எழுந்தருளுவித்தான். திருவரங்கத்தில் காவிரியாற்றின் கரைகளையமைத்து 'கலியுகராமன்கரை' எனப் பெயரிட்டான். கலியுகராமன் பெயரில் திருவீதி ஒன்றையும் நிறுவினான். தனது மன்னனின் பெயரால் கோயில் அமைத்து, பெருமாளை எழுந் தருளுவித்ததுடன், உற்சவநாயன்மாரையும் எழுந்தருளுவித்தான். 'குலசேகரன் மடமும்' தண்ணீர்ப் பந்தலும் நிறுவினான். பெருமாள் புதுப்புனலாட அழகிய நாயனார் குளம் அமைத்து, தீர்த்த மண்டபமும் ஏற்றமும் ஏற்படுத்தினான். திருவரங்கத்தில் சதுர்வேதி மங்கலங்களை நிறுவினான். சிதம்பரத்தில் பாண்டிய வேந்தன் பெயரில் வீரபாண்டிய ஈசுவரம் எனும் கோயிலை எடுப்பித்தான். இக்கோயிலில் பரிவார தெய்வங்களையும் எழுப்பி அவற்றிற்கு கோயில்க ளும் கட்டினான்.

இளையான்குடியில் வீரகோடி விண்ணகர ஆழ்வாருக்குக் கோயில் கட்டி அங்கு பெரிய திருவடி நாயனாரை எழுந்தருளச்செய்தான். பெருமாள் கோயிலில் குழலூதும் பிள்ளையையும், நாச்சியாரையும் எழுந்தருளிவித்து, அழகிய பிள்ளையாரையும், நாச்சியாரையும் எழுந்தருளுவித்தான். திருநெல்வேலி உடைய நாயனார்க்குத் திருநந்தவனமும், வல்ல நாட்டு நதிக்கரையில் சூரிய தேவ விண்ணகரப் பெருமாளை எழுந்தருளச்செய்து அவருக்குத் திருக்கோயிலும் திருநந்தவனமும் அமைத்தான். வள்ளியூர் கருமாணிக்க ஆழ்வார் கோயிலில் சங்கப்பெருமாளை எழுந்தருளச் செய்தான். நம்பிக்குக் கோயில் அமைத்து குழலூதும் பிள்ளையை எழுந்தருளுவித் தான். திருவனந்தபுரத்துப் பெருமானுக்குக் காலைச் சந்தியும், அசுவதிப்பெருநாளில் சிறப்பும் செய்ய தக்க ஏற்பாடுகளையும் செய்தான்.

மதுரையிலே திருவாலவாயுடைய நாயனார் திருநாட்களில் நீராடி எழுந்தருள வைகைக் கரையில் காலிங்கராயன் திருமண்டபத்தை அமைத்தான். இந் நாயனார் திருக்கோயிலில் சூரியதேவரையும், இரிசப தேவரையும், நாச்சியாரையும் எழுந்தருளுவிக்கச் செய்தான். திருமாலிருஞ்சோலை அழகருக்கும் தாயின் பெயரால் சுந்தரவல்லி நாச்சியாரைக் கோயில் கட்டி எழுந்தருளுவித்தான். திருக்கோட்டியூரிலும் சுந்தரவல்லி நாச்சியாருக்குக் கோயில் கட்டினான். திருக்கானப்பேர், சிரீவில்லிப்புத்தூர், சேரன்மாதேவி, திருவிடைமருதூர், திருநரையூர், பெரும்பெற்றப்புலியூர் முதலான திருத்தலங்களிலும் இவன் திருப்பணிகள் புரிந்தான். வாணாதிராயர் சந்திகளை நிறுவினான். சிரீவில்லிப்புத்தூர் வட பெருங்கோயில் உடையார்க்குப் பெரிய திருவடியாரை எழுந்தருளுவித்ததுடன் கோயிலும் சமைத்துள்ளான்.

- ம. இரா. த.

**கடந்தநிலைப் பொருள் :** இக்கொள்கை மேலை நாட்டில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குப் பின் தோன்றியது. இது தோன்றிய காலத்தில் மக்களால் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருந்தது. இதற் குப் பல வகைகளில் மறுப்புகள் இருந்தன. ஆனால், இக்கொள்கை அவற்றைத் தாண்டித் தத்துவ உலகில் நிலையாகக் காலூன்றியது. இக்கொள்கையைத் தோற்றுவித்தவர்களை அன்றைய அறிவுலகம், போற்றுதற்குரிய அறிஞர்கள் என்று பாராட்டியது. அப்பட்டம் காலப்போக்கில் இக்கொள்கையை உருவாக்கியவர்கள் என்று மருவியது. இங்ஙனம் வளர்ச்சியுற்ற இக்கொள்கையைப் பின்னர், கடந்தநிலைப் பொருள் கொள்கை என்று மேலைநாட்டுத் தத்துவத்தில் வளர்ச்சியுற்றது. மெய்யில் கோட்பாடு, தத்துவத்தையும், இறைமைக்கருத்துகளையும் உள்ளடக்கிப் புலன் கடந்த பொருளியல் ( Metaphysics ), அறிவாய்வியல் ( Epistemology ) ஆகியவற்றின் வழியாகப் பொருள்களின் குணங்களைப் பற்றிக் கூறுகின்றது. இக்கோட்பாட்டைக் கடந்தநிலைப் பொருள் கொள்கை மறுக்கின்றது. கடந்தநிலைப் பொருள் கொள்கையின்படி மனித அறிவு உலகில் நடக்கும் ஒரு நிகழ்வின் மூலம் அறிவிற்கு ஏற்புடைய அதன் அருவமான உட்பொருளை அறிந்து கொள்கின்றது. அதன்வழி அவ்வறிவு, ஒரு தனிப்பட்ட பொருளுக்கும் அதன் அடிப்படைக் குணங்களுக்கும் மற்றும் அப்பொருளைச் சார்ந்திருக்கும் செயற்பாடுகளுக்கும் உள்ள நெருக்கமான இணைப்பை அறிந்து கொள்கிறது. மேலும், அவ்வறிவு இறைவனுக்கும் அவனுடைய குணங்களுக்கும், அவன் உலகப் பொருட்களின் உள்ளீடாக இருக்கும் தன்மைகளுக்கும் உள்ள தொடர்பைத் தெளிவாகத் தெரிந்து கொள்கிறது.

இக்கொள்கை அரிசுடாட்டிலினுடைய கருத்தை மறுக்கின்றது. இவர் கருத்துப்படி, ஒரு பொருளின் உண்மைத்தன்மை, அப்பொருளைப் பற்றிக் கூறும் வாக்கியத்தின் பயனிலையில் கூறியவண்ணமே இருக்காது. இதன் அடிப்படையில் பொருளைப் பற்றிய பொதுவான குணத்தையும், ஒரு பொருளை அதே போன்றிருக்கும் வேறொரு பொருளுடன் இணைத்துப் பார்க்கும் தன்மையையும் பெறுதல் இயலாது. இக்கொள்கையானது மெய்யியல் கோட்பாட்டையும் அரிசுடாட்டிலினுடைய மேற்குறிப்பிட்ட அடிப்படைக் கருத்தையும் வன்மையாகக் கண்டிக்கின்றது. இக்கொள்கை அடிப்படையான அனுபவத்தில் நம்பிக்கை வைக்கும் முறையை ( Radical Empiricism ) கடைப்பிடிக்கின்றது.

இதன்படி, மக்களின் அனைத்து அறிவும் அவர்களின் நேரடி அனுபவத்தால் தனிப்பட்ட முறையில் அமைவது. அவ்வறிவு குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றியதாகவும், குறிப்பிட்ட ஒரு செயலினை அடிப்படையாகக் கொண்டதாகவும் இருப்பது, அவர்கள் இயற்கையாக அமைந்த ஒரு வாக்கியத்தைப் பகுத்து ஆராய்வதன் அடிப்படையிலும் ஒன்றை நேரடியாகப் பார்த்து, அதில் அனுபவப்பட்டு அதன்வழி வெளிப்படும் மொழியை ஆராய்வதன் அடிப்படையிலும் தங்கள் கோட்பாட்டை அமைத்துள்ளனர்.

கடந்தநிலைப் பொருள்கொள்கை, பொருள் வேறு அப்பொருளைப் பற்றிக்கூறும் குணங்கள் வேறு என்றும், அக்குணங்கள் அப்பொருளில் பிரிக்க முடியாதபடி ஒன்றாய் நிறைந்திருக்கின்றன என்றும் சுட்டிக் காட்டுகின்றது. காகிதம் வெள்ளை என்றால், காகிதம் வேறு, வெள்ளை எனும் தன்மை வேறு. ஆனால் காகிதத்திலிருந்து வெள்ளைத் தன்மையைப் பிரித்துக் காட்ட முடியாது. அதனாலேயே இரண்டையும் ஒன்று என்றும் சொல்ல முடியாது. இக்கொள்கையானது, ஒரு வாக்கியத்தில் அமைந்துள்ள குறிப்பிட்ட பொருளைச் சுட்டும் சொல்லை ஆராய்கின்றது. அச் சொல்லைக் குறிக்கும் உள்ளார்ந்தத் தகவுகளின் மேன்மையை நோக்குகிறது. அச்சொல்லால் பெறப்படும் அளவைகளின் குணத்தினைப் பகுக்கின்றது. மேலும் இக்கொள்கை, ஒரு வாக்கியம் குறிக்கும் தனிப்பொருளையும், அப்பொருளின் புலன்களுக்கு வயப்படும் குணங்களையும் சிறப்புற வெளிப்படுத்துகின்றது. இங்ஙனம் ஆராய்வதால் உலகில் தனிப்பட்ட பொருள்களைப் பற்றியும் அவை கொண்டுள்ள குறிப்பிட்ட குணங்களைப் பற்றியும் அறிவுலகம் தெரிந்து கொள்கிறது. இதனால் சமய உலகம் பயன்படுத்தும் ஒவ்வொரு தனிச்சொல்லும் தனித்துவமானவை என்பதும், அவை தனிப்பட்ட பொருட்களின் குறிப்பிட்ட குணங்களையே சுட்டுகின்றன என்பதும் பெறப்படுகின்றன. இதனால், மேலைநாட்டில் சமயத்துறையில் மெய்ப்பொருளைப் பற்றி விவரிக்கும் மொழி நடையில் வழிவழியாக நோக்கிய முறையில் மாற்றம் ஏற்பட்டது. அம்மொழியானது காரணகாரிய முறையில் பகுக்கப்பட்டு அதிலுள்ள குறைகள் நீக்கப்பட்டன. இதனால் சமயம் கடைப் பிடித்த மொழி பல வகைகளில் வளம் பெற்றது. இக்கொள்கையில் பிரிட்டனில் தோன்றிய வில்லியம் ஒக்கேயம் ( William Ockham - 1285-1349 ) என்பாரும் வியன்னாவைச் சேர்ந்த உலுட்லிக் விட்சின்சுடைன் ( Ludwig Wittgenstein - 1889 - 1951 ) என்பாரும் சிறப்பானவராகக் கருதப்படுகின்றனர்.

- ஜெ. அர.

**கண்டன் மறவனார் :** இவன் பழுவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பழுவேட்டரைய மன்னன். சோழரது மேலாண்மையை ஏற்றுக் கொண்டவன். மறவன் கண்டனின் ( கி.பி. 960 - 985) ஆட்சிக் காலத்தில் சிற்றரசனாகத் திகழ்ந்த இவன் முதலாம் இராசராசனின் ஆட்சிக்காலத்திலும் ( கி.பி. 985 - 1014 ) சோழரது சிற்றரசனாகத் திகழ்ந்தான். கண்டன் மறவனாரும் ( கி.பி. 985 - 1000 ), கண்டன் அமுதனாரும் உடன்பிறந்தோர் என்பதனைப் பெயர் ஒற்றுமை கொண்டு அறியலாம்.

கண்டன் சுந்தரசோழன் என்னும் பழுவேட்டரையச் சிற்றரசன் ஒருவன் உத்தமசோழனது கல்வெட்டில் குறிக்கப்பெறுகிறான். கண்டன் மறவனாரும் இச் சோழனது கல்வெட்டில் இடம் பெறுகிறான். எனவே, இவ்விருவரும் ஒருவரென்றே கருத இடமுண்டு. மறவன் கண்டன் ( கி.பி. 960 - 985 ) தனது பேரரசனும் தலைவனுமான சுந்தரச்சோழனின் பெயரைத் தனது மகனுக்கு இட்டிருக்கக்கூடும். கண்டன் சுந்தரச்சோழன் தனது தம்பியான கண்டன் சத்ரு பயங்கரனின் நினைவாக, வீரநாராயண சதுர்வேதி மங்கலத்திலுள்ள திருஅனந்தீசுவரர் கோயிலுக்கு, பரகேசரி உத்தம சோழனின் பன்னிரண்டாம் ஆட்சி யாண்டில் அறக் கொடைகள் விட்டுள்ளான்.

இப்பழுவேட்டரையன், உரத்தூர் எனும் ஊரின் பெயரைக் கருப்பூர் என மாற்றம் செய்யவும், அதன் மீதான குத்தகை உரிமையை மருதூர் காடன் மாராய னிடமிருந்து, கருப்பூரைச் சேர்ந்த வேங்கடதேவன் அரங்கன் என்பானுக்கு நிரந்தரமாக மாற்றவும், குன் றக்கூற்றத்து நாட்டார்களுக்கு ஆணைபிறப்பித்துள் ளான். இதனால் குறுநில மன்னனாக இருந்தபோதி லும் ஊர்ப்பெயர் மாற்றம் செய்தல், நில உரிமை மாற் றம் செய்தல், அதற்கான ஆணைகளைப் பிறப்பித்தல் ஆகிய அதிகாரங்களைப் பெற்றிருந்தான் என்பது புலனாகும். கண்டன் மறவனார் சோழருடனும் கொடும்பாளூர் வேளிருடனும் மணஉறவு கொண்டி ருந்தான். விக்ரமசோழ இளங்கோவேள் எனும் வேளிர் சிற்றரசனின் மனைவி, கண்டன் மறவனின் மகளாகக் கருதப்படுகிறாள். இப்பழுவேட்டரைய னின் படை இளைய இளமுகராமன் என அழைக்கப் பட்டது.

கண்டன் மறவன் இறையன்பு மிக்கவன். உத்தம சோழனின் பதினாறாம் ஆட்சியாண்டில் (கி.பி. 986) இப்பழுவேட்டரையன், மேலப்பழுவூரில் திருத் தோற்றமுடையார் கோயில் எனும் பெயரில் சிவன் கோயில் ஒன்றைக்கட்டி அக்கோயிலில் நந்தா விளக் கொன்றையும் வைத்தான். இதனை இக்கோயிலின் மேற்குப்புற அதிட்டானத்தில் உள்ள கீழ்க்காணும் கல்வெட்டு ‘மண்ணுபெரும் பழுவூர் திருத்தோற்ற முடைய மகாதேவருக்கு அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவனார் வைத்த ஒரு நந்தா விளக்கு’ எனக் குறிப்பிட்டுள்ளது. இதே பீடத்தில் உள்ள முதலாம் இராசராச சோழனின் நான்காம் ஆட்சியாண்டுக் (கி.பி. 989) கல் வெட்டும் இதனை, ‘மண்ணு பெரும் பழுவூர் அடிகள் பழுவேட்டரையர் கண்டன் மறவன் எடுப்பித்த திருக் கோயில் திருத்தோற்றமுடையார் கோயில்’ எனக் குறிப்பிட்டுள்ளது. கண்டன் மறவன் காலத்தில் அதிட்டானம் வரையில் இக்கோயில் கருங்கல்லாலும், சுவர்ப்பகுதியும் விமானமும் செங்கல்லாலும் கட்டப் பட்டது. பின்னர் முதலாம் குலோத்துங்க சோழனின் ( கி.பி. 1070 - 1120 ) ஆட் சிக்காலத்தில், இவனது அதிகாரி வாணகோவரை யன் என்பான் இதனை முழுவதும் கற்றளியாக்கி, ‘குலோத்துங்க சோழீசுவரம்’ எனப் பெயரிட்டான். இக்கோயில் இன்று மீனாட்சியம்மன் கோயில் என்ற ழைக்கப்படுகிறது. பிற்காலத்தில் இச்சிவன் கோயிலில் மீனாட்சியம்மனின் திரு உருவம் வைக்கப்பட்டுவிட்டது. கண்டன் மறவனால் கி.பி. 986இல் கட்டப்பட்ட இக்கோயில் இன்றும் அழியாமல் இருந்து வருகிறது.

- ம.இரா.த.

**கண்டி நடனம் :** கொழும்பு, காலி, கண்டி, திருகோணமலை, யாழ்ப்பாணம் என ஐந்து பிரிவு களாக இலங்கை பிரிக்கப்பட்டுள்ளது. இப்பகுதி களில் பல்வேறு நடனங்கள் ஆடப்பட்டு வருகின்றன. இலங்கையின் பல பகுதிகளில் அதனதன் பழக்க வழக்கம், பண்பாடு என்னும் இவைகளுக்கேற்பத் தனிப்பட்ட சில நடனங்களும் வழக்கில் உள்ளன. கண்டி மாவட்டத்திலும் அதனை அடுத்துள்ள ஊர் களிலும் ஒருவகை நடனக் கலையும், தென் மாகாணத் தில் மற்றொரு வகை நடனக்கலையும் காணப்படு கின்றன. மேற்கு மாகாணத்தில் ஐரோப்பிய நாகரிகக் கலப்பு மிகுந்துள்ளது. இதனால் இங்குப் பன்னாட் டுப் பண்பாடுகளும் கலந்து காணப்படுகின்றன.

தேசிய உணர்ச்சி வளர்ந்த காலத்தில் இலங்கை யில் மறைந்து கிடந்த கலைகள் எல்லாம் மறுமலர்ச்சி பெறலாயின. மக்கள் தங்கள் வாழ்க்கையுடன் நெருங் கிய தொடர்பு கொண்டிருந்த கண்டி நடனத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கத் தலைப்பட்டனர். கண்டி நடனம், தான் பிறந்த இடத்தில் பலகாலம் வழக்கில் இருந்ததால் இதனுடன் அந்நியப் பண்பாடுகள் கலப்பதற்கு இடமின்றித் தன் தூய்மை கெடாமல் பாதுகாக்கப் பட்டு வந்துள்ளது. கலைஞர்களும் இந்த நடனத்தை நீண்ட நெடுங்காலமாகக் கலப்பின்றி வளர்த்து வந்துள்ளனர். கண்டியில் இருந்த பிரபுகளின் பரம்பரையினர் நடனக்குழுக்களை அமைத்து இந் நடனத்தைக் காத்து வந்தனர். அடவுச் சந்தங்களும், விரிவான தாள இலயங்களும் நிறைந்த கண்டி நடனம் கலைத்தன்மை நிறைந்ததாக விளங்குகிறது. இந்தியாவிலிருந்து பலவகையான நடன மற்றும் நாடகக் கலைஞர்கள் அடிக்கடி இலங்கைக்கு வந்து கலை நிகழ்ச்சிகள் நடத்திச் செல்வதால் கண்டி நட னங்களில் இந்திய நடன உத்திகள் விரவி வருகின்றன. இந்நடனங்களில் வெசு, நையாண்டி, உடுக்கு, பந்தேறு என்று நான்கு வகைகள் காணப்படுகின்றன.

நாட்டுப்புறங்களில் மக்கள் நலத்துக்காகக் கொகோம்பா தெய்வங்களை வேண்டி ஆடுவது வெசு நடனம் ஆகும். சிவபெருமானின் ஊர்த்துவத் தாண்டவத்திற்கு இணையாக இதனை ஒப்பிட்டுக் கூறுவதுண்டு. சமயம், சமூகவாழ்வு என்னும் இவைகளின் அடிப்படைத் தத்துவங்கள் வெசு நடனத்தில் இணைந்து காணப்படுகின்றன. வெசு கூத்து ஆடும் கலைஞன் 34 வகை அணிகலன்களால் தன்னை அலங்கரித்துக்கொண்டு ஆடுகிறான்.

நையாண்டி நடனம் மிகவும் பகட்டான நடனமாகக் காணப்படுகிறது. இதனை ஆடுபவர்கள் வெள்ளையுடையையும், வெள்ளைத் தலைப்பாகையையும் அணிந்து ஆடுகின்றனர். மணிச்சரங்களையும், கழல்களையும், சலங்கைகளையும் அணிந்திருப்பர். இந்நடனம் மிகவும் கவர்ச்சிகரமானதாகக் காணப்படுவதால் சிங்கள மன்னர்களின் ஆதரவைப் பெற்று இருந்தது.

உடுக்கையை அடித்துக்கொண்டு ஆடுவது உடுக்கு நடனமாகும். இவ்வுடுக்கை நடராசப் பெருமானின் கையிலுள்ள டமருகத்தைப் போன்று வடிவமைத்திருப்பர். கஞ்சிராவைப் போன்ற பந்தேறு எனப்படும் சிறுபறைகளை முழக்கி ஆடும் நடனம் பந்தேறு நடனம் என அழைக்கப்படுகிறது. இந்நடனக்காரர்கள் ஆடும்போது பந்தேறுவாக்களைக் கைவிட்டுக் கைகளில் இலாவகமாக மாற்றி ஆடுவது இனிய காட்சியாகும்.

இக்கண்டி நடனங்களில் 18 வகை வண்ணங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு வகை வண்ணமும் ஒரு சிறந்த கருத்தை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. இவை தனித்து நின்று ஆடப்படுகின்றது. இவற்றுக்கு வண்ணமக் கூத்துகள் என்று பெயர். கசம வண்ணம், ஐராவதம் என்னும் தேவலோக யானை நீராடிக் களிப்பதைக் காட்டுகிறது. நையாண்டி வண்ணம் பௌத்த சாதகக் கதைகள் ஒன்றின் போக்கைக் காண்பிப்பதாக அமைந்துள்ளது. கிரள வண்ணம் கிரளம் என்ற பறவையைக் குறிப்பதாக இடம் பெற்றுள்ளது. உதார வண்ணம் பரிவாரங்கள் புடைசூழ யானை மீது பவனி வரும் மன்னனைக் குறித்துப் பேசுவதாக உள்ளது. சிங்கராசி வண்ணம் என்பது ஆமையால் ஏய்க்கப்பட்ட ஒரு சிங்கத்தைப் பற்றியதாக உள்ளது. அனும வண்ணம் குரங்கின் சேட்டைகளைக் குறிக்கிறது. கணபதியைக் குறிப்பது கசனவண்ணமாகும். கந்தனால் பிளவுண்ட சூரனின் ஒரு கூறு சேவலாக மாறுவதைக் குறிப்பது குக்குட வண்ணம் ஆகும். சக்க தேவரைக் குறிப்பது சக்க வண்ணம் ஆகும். சிவலோகத்தைக் குறிப்பது வைரோதி வண்ணம் ஆகும். கதிர் காமக் கடவுளின் மயிலூர்தியைப் புகழ்ந்து பாடுவது மயூர வண்ணம் ஆகும். துரக வண்ணம் என்பது சித்தார்த்தனின் கண்டகன் என்ற குதிரையைப் பாராட்டிப் பாடப்படுவதாகும். சிவபெருமான் உமாதேவியைக் கண்டு, களித்தாடுவதைக் குறிப்பது ஈசுவர வண்ணம் ஆகும். முயலின் நடையைப் புகழ்ந்து பாடி ஆடுவது முசலடி வண்ணம் ஆகும். பருந்துகள் காற்றிலே மிதந்து களிப்பதைக் காட்டுவது பருந்து வண்ணம் ஆகும். நாகப்பாம்பு படமெடுத்து ஆடுவதைக் குறிப்பது நாக வண்ணம் ஆகும். புத்தரைப் போற்றி ஆடும் கூத்து ஆசதர்ச வண்ணம் ஆகும். இவ்வண்ணங்களில் பாடப்பெறும் பதங்கள் குறுகிய வருணனை புகழ்ப் பாக்களால் ஆனவையாகும். கண்டி நடனங்களில் இவ்வண்ணங்களுக்கு ஒரு சிறப்பிடம் உண்டு. சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை இக்கண்டி நடனத்தை விரும்பி ஆடுகின்றனர்.

- கு. மு.


## கந்தசாமிப்பிள்ளை ச.மு. காரணப்பட்டு:

இவர் திருவருட் பிரகாச வள்ளலாரின் மாணாக்கருள் ஒருவர். இவருடைய தந்தையார் முத்துசாமிப் பிள்ளை. தாயார் தைலம்மாள். இவர் புதுச்சேரிக்கு அருகில் உள்ள காரணப்பட்டு என்னும் சிற்றூரில் வாழ்ந்தவர். எனவே, 'காரணப்பட்டு கந்தசாமிப் பிள்ளை' என்றே குறிக்கப்பெற்றுள்ளார். இவர் தம் காலம் கி.பி.19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும். இவர் தமிழ்ப்புலமை மிக்கவர். வளமான இசைத்தமிழ்ப் பாடல்களைப் பாடியவர். சைவ சமய நூல்களைக் கசடறக் கற்றுத் தெளிந்தவர். இவர் வள்ளலாரையே வழிபடும் தெய்வமாகக் கொண்டவர். அவர் தம் அருட்பாக்களில் தோய்ந்து நின்று நாள்தோறும் அவர்தம் பெருமைகளைப் பேசுவதையே கடமையாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். வள்ளலாரின் சமய உண்மைகளை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் 'சமரச பசனை' எனும் அமைப்பை இவர் தொடங்கிச் செயற்படுத்தி வந்தார். அதனால் 'காரணப்பட்டு சமரச பசனைக் குமரன்' என இவர் சிறப்பித்துப் பேசப்பட்டார்.

திருவருட்பாவின் அரும்பெரும் தத்துவ நெறி கன்ளச் சொற்பொழிவு வாயிலாக இவர் உணர்த்தி வந்தார். தொழுவூர் வேலாயுத முதலியாருக்குப் பின், திருவருட்பா ஆறு திருமுறைகளையும் செவ்விய முறையில் ஆராய்ந்து பதிப்பிக்கும் அரும்பணியை இவர் செய்தார். புதுக்கோட்டை சமசுதானத்தில் இருந்த இராமச்சந்திரபுரம் தீ. நா. முத்தையாச் செட்டியாரின் பொருளுதவியால் ஆறு திருமுறை களையும் அச்சிட்டு அவற்றை விலையேதும் இன்றிப் பலருக்கும் வழங்கச்செய்தார்.

இவர் தம் பிரபந்தப்பாடல்கள் அருட்பாவின் விளக்கங்களாகவே அமைந்தவை எனலாம். இவருடைய பிரபந்தத் திரட்டில் உள்ள 25 நூல்களுள் 14 நூல்கள் வள்ளலார் பெருமை பேசுபவை. வள்ளலாரோடு நெருங்கிப் பழகி அவர் ஆற்றலையும் அருளையும் உணர்ந்தவராதலின் இவர்தம் சரித்திரக் கீர்த்தனைகளில் வரும் செய்திகள் தன்னனுபவ வாக்காகக் கொள்ளத்தக்கவை. இவருடைய **சற்குரு வெண்பா அந்தாதி** 1108 வெண்பாக்களைக் கொண்ட ஒரு பெரு நூலாகும். பிரபந்தங்களில் கீர்த்தனை, நாமாவளி, அந்தாதி, வெண்பா, கண்ணி என்னும் செய்யுள் வகைகள் அமைந்துள்ளன. வள்ளலார் வருகை பற்றிய பாடல்கள் நன்னிமித்தம் பராவல் துறையில் பல்லியை நோக்கி வினவும் முறையில் வருக்கச் செய்யுட் கோவையாக அமைந் துள்ளன. இந்நூற் றாண்டின் தொடக்கத்தில் தமிழகம் முழுவதும் அறிந்த பெரும் புலவராகவும், சமரச சன்மார்க்கச் செல்வராகவும் விளங்கிய இவர் ஆயிரம் பிறை கண்டவர் என்று போற்றப்படுகிறார்.

— சா. உ.



கந்தசாமிப்பிள்ளை, ச.மு. காரணப்பட்டு

**கம்பதாசன் :** இவர் இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர். இராசப்பா என்பது இவர் இயற்பெயர். புதுவைநகர் சுப்பராய பத்தர் கோகிலாம்பாள் ஆகியோருக்கு 1916ஆம் ஆண்டு பிறந்தார். திண்டிவனம் வட்டம் உலகாபுரம் என்னும் ஊரிலமைந்த பள்ளியில் ஏழாம் வகுப்பு வரை படித்தார். தம் அனுபவ அறிவினால் கவிஞ ராகித் தம் பத்தாவது வயதில் **சுதந்திரகீதம்** என்னும் கவிதை நூலை வெளியிட்டார்.

இயற்கையாகவே அழகுடைய இக்கவிஞரின் தோற்றத்தோடு செல்வவளமும் சேர்ந்தது. தொடக் கத்தில் சங்கரலிங்கக் கவிராயரின் நாடகக் குழுவில் நடிகராகச் சேர்ந்தார். பின்னர் பாரதிதாசன் நாடகக் குழுவில் நாடக நடிகரானார். இக்கவிஞர் தம் உறவி னரான மதுரை மாரியப்ப சாமியிடம் இசை பயின் றார். நடிகராக விளங்கி, கவிஞராகத் திகழ்ந்து, நிறைய நாடகப்பாக்கள் புனைந்தார். சொல்லிலும் செயலிலும் சமவுடைமைக் கருத்தை வெளிப்படுத் தும் இயல்புடையவராகக் கம்பதாசன் விளங்கினார். இவர் அக்கட்சியின் பொருட்டு பர்மா சென்று வந்தார்.

கற்பனை நயமும் உவமை நயமும் இவரது கவிதைச் சிறப்பாகும். தமிழ்க் கவிஞர்களுள் இவர் ஒருவர் தாம் நோபல் பரிசுக்காகக் கவிதை எழுதி அனுப்பியவர். தத்துவ முத்துக்கள், கவிதைக்கதிர்கள்

ஆகியவை இவர் கவிதைகளில் குறிப்பிடத்தக்கவை. இனிய குரலில் பாடும் ஆற்றலுடைய கம்பதாசனின் 'சாவின் முத்தம்' என்ற கவிதை புகழ் பெற்றது. படுக்கையறை, கம்பதாசன் கதைகள் என்னும் சிறுகதைகளும், சிற்பி என்னும் நாடகமும் இவர் படைப்புகளாகும். அருணகிரி என்னும் நாட்டிய நாடகத்தையும் இவர் படைத்துள்ளார். சாலிவாகனன் என்னும் திரைப் படத்திற்கு உரையாடலும், பாடல்களும் எழுதித் தந்ததோடு அப்படத்திலும் நடித்துள்ளார்.

எண்மரோடு மனைவாழ்வு நடத்தி இருபத்தாறு செல்வங்களுக்குத் தந்தையானார். மனைவாழ்வு இக்கவிஞருக்குச் சரியாக அமையாததால் வாழ்வு நிலை சரிந்தது. கம்பதாசன் பல இழப்புக்கு ஆளாகி வறுமையில் வாட நேரிட்டது. இவர் நோயுற்றுச் சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் 1973ஆம் ஆண்டு தம் எழுபத்துமூன்றாம் வயதில் காலமானார்.

- இரா.கு.

**கம்பவர்மன் :** இவன் காஞ்சிப் பல்லவ வேந்தர்களுள் ஒருவன். பிற்காலப் பல்லவ மரபின் கடைசி வேந்தர்களுள் புகழ்மிக்க மன்னன். ஏறத்தாழ கி.பி. 868 முதல் 900 வரை ஆட்சி புரிந்த இவன், சமயப் பொறை உடையவனாகத் திகழ்ந்தான். இவன் கல்வெட்டுகளில் கோவிசய கம்பவர்மன் எனக் குறிப்பிடப்படுகிறான். இவன் மூன்றாம் நந்திவர்மப் பல்லவனின் மூத்த மகன். தொண்டை மண்டலம் மட்டுமன்றி இந்தளூர் உள்ளிட்ட தஞ்சையைச் சூழ்ந்த பகுதியிலும் கஞ்சனூரை உள்ளடக்கிய கும்பகோணம் பகுதியிலும் இவனது மேலாண்மை பரவியிருந்தது.

இவ்வேந்தனது ஆறாம் ஆட்சியாண்டினதான திருநாதர் குன்று கல்வெட்டு, எட்டாம் ஆட்சியாண்டினதான சோழபுரம் கல்வெட்டு, ஒன்பதாம் ஆட்சியாண்டினதான திருவொற்றியூர்க் கல்வெட்டு, ஆம்பூர், மேல்பாடி, திப்பசமுத்திரம் கல்வெட்டுகளும் இவ்வேந்தனைப் பற்றி அறியப் பயன்படுகின்றன. இவற்றால் நெல்லூர், சித்தூர், வட ஆர்க்காட்டின் சில பகுதிகள் ஆகியவற்றில் பல்லவரது மேலாண்மை பரவியிருந்தமை அறியப்படுகின்றன.

மூன்றாம் நந்திவர்மன் தனது இளைய மகனான நிருபதுங்கவர்மனை இளவரசனாகத் தேர்ந்தெடுத்தான். தொடக்கக்காலத்தில் பொறுமையுடன் இருந்த கம்பவர்மன், தனது தந்தையின் இறப்பிற்குப் பின் நிருபதுங்கனை அரசப் பதவியினின்றும் அகற்றினான். ஏறத்தாழ கி.பி.868இல் கம்பவர்மன் அரசுக் கட்டிலேறினான். இவன் நிருபதுங்கனிடமிருந்து ஆட்சியைப் பறித்துக்கொண்டான் என்பதனை வேலஞ்சேரிப் (திருத்தணி) பட்டயங்களால் அறியலாம். இவன் தனது ஆட்சியின் தொடக்கக் காலத்திலேயே தனது மகன் அபராசிதவர்மனுக்கு இளவரசுப்பட்டம் கட்டி, தனக்குத் துணையாக ஆட்சியில் ஈடுபடுத்தினான். எனவே இருவரும் இணைந்தே ஆட்சியை மேற்கொண்டனர்.

இவன் சோணாட்டின் வட எல்லைப் பகுதியில் ஊடுருவல் செய்து, சில பகுதிகளைக் கைப்பற்றினான். இவன் தனது அதிகாரத்தை நிலைநாட்டும் பணியில் கங்கரது உதவியைப் பெற்றதாகச் செங்கம் நடுகற்களால் அறியலாம். பல்லவதியரையனான அமர்நீதி, கொடும்பாளூர் தலைவனான விடேல் விடுகு இளங்கோ வேளார், மேலைக்கங்கனான பிருதிவிகங்கரையர், இராசித்தன் ஆகியோர் இவ் வேந்தனுக்குட்பட்ட சிற்றரசர்களாகத் திகழ்ந்தனர் எனத் தெரிகிறது.

இவன் நீர்ப்பாசனத்தைப் பெருக்கி வேளாண்மையை விரிவுபடுத்தினான். பிருதிவிகங்கரையரும் அவனது தேவியான இலாடப்பெருந்தேவியாரும் தென்பாலாற்றையும் வாலிவலக்க மங்கலம் ( திப்ப சமுத்திரம் ) ஏரியையும் இணைக்கும் வகையில் 'விழுப்பேரரையன் கால்வாய்' ஒன்றினை வெட்டினர். இவ் வேந்தனது ஆட்சிக்காலத்தில் சோழபுரத்தில் கனகவல்லி விட்டுணுக்கோயிலும், நிரஞ்சனகுரவர் கோயிலும் கட்டப்பட்டன. காவண்தண்டலம் கோயிலும் இவன் காலத்தவை. கொடும்பாளூர் விடேல்விடுகு இளங்கோவேளாரின் தேவியான பூதி அரிந்திகை, திருவொற்றியூர் மகாதேவர்க்குச் சங்கராந்தியன்று சிறப்பு வழிபாடு நடைபெற இருபத்தியேழு கழுஞ்சு பொன் தானமளித்துள்ளாள்.

கம்பவர்மன் சமயத்துறையில் சமரசக்கொள்கை கொண்டவன். சைவ, வைணவ கோயில்கள் கட்டப்படவும், பழுது பார்க்கப்படவும் ஆதரவு நல்கிய கம்பவர்மன் சமணக்கோயில் கட்டப்படவும், பராமரிக்கப்படவும் நல்லாதரவு காட்டினான். திருநாதர்குன்று சமணப்பள்ளி இவ்வேந்தனது ஆட்சிக்காலத்தில் புதுப்பிக்கப்பட்டதனைச் சுட்டலாம். இவ்வேந்தனது ஆறாம் ஆட்சியாண்டில் இப்பள்ளியின் முகமண்ட

பம் புதிதாக அமைக்கப்பட்டது. இயக்கி பட்டார கிக்கு ஆலயம் அமைக்கப்பட்டது. பெரிய மணி ஒன்றும் இப்பள்ளிக்கு அளிக்கப்பட்டது. இவை யனைத்தும் காடகதியரையனின் தேவியால் வழங் கப்பட்டன.

இவ்வேந்தன் கங்கநாட்டு இளவரசியான விசயாவை மணந்ததாக வேலஞ்சேரிச் செப்பேடு களால் அறியலாம். இவ்விருவருக்கும் பிறந்தவனே அபராசிதவர்மன் ஆவான். கனகா எனும் பெயரில் மற்றொரு அரசியும் இவனுக்கு இருந்ததாகக் கல் வெட்டுகளால் அறியலாம். கங்கநாட்டு இள வரசியை மணந்ததால்தான், இவனுக்குக் கங்கரின் ஆதரவும் நட்பும் கிடைத்தது. கம்பவர்மன், பல்லவ அரசின் எல்லைகளைச் சுருக்கிவிடாது கட்டிக் காத்த பெருமைக்குரியவன். நிருபதுங்கனை வீழ்த்திவிட்டு, ஆட்சியைக் கைப்பற்றிய போதிலும், நிருபதுங்க னுக்குச் சலுகைகளும் உரிமைகளும் வழங்கிய பெருந்தகையாளன்.

- ம. இரா. த.

**கமலாம்பாள் சரித்திரம் :** கமலாம்பாள் சரித் திரம் அல்லது ஆபத்துக்கு இடமான அபவாதம் தமி ழில் எழுதப்பட்ட இரண்டாம் புதினம் ஆகும். இது விவேக சிந்தாமணி என்ற திங்கள் இதழில் தொடர் கதையாக வெளிவந்து கி.பி. 1986ஆம் ஆண்டு நூலுரு வம் பெற்றது. இதனை முதல் கிராமிய நடப்பியல் சித்திரம் என்று சுருங்கச்சொல்லலாம். இதில் கூட்டுக் குடும்ப வாழ்க்கையின் சிதைவு சிறப்பாகப் புனை யப்பட்டுள்ளது. ஆசிரியரின் தத்துவக் கருத்துகளும் நகைச்சுவை உணர்வும் நூல் முழுவதும் இழையோ டக் காணலாம்.

இந்நூலின் ஆசிரியர் இராசமையர். வத்தலக் குண்டு என்னும் சிற்றூரில் பிறந்தவர். அக்காலத்தில் சிறந்து விளங்கிய இந்து மத நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். ‘பிரபுத்த பாரத்’ என்ற ஆங்கில இதழின் ஆசிரியராகவும் இருந்தார். ஓரிரு துறவிகளின் தொடர்பும் உடையவர். உலகமே மாயை. பொருட்கள் அனைத்தும் நிலையற்றவை என்றும் எல்லாம் இறைவன் செயல் என்றும் தியா னமே அவனை அடைய உரிய வழி என்றும் கருதி னார். இக்கருத்துகளின் கதையுருவமே கமலாம்பாள் சரித்திரம் ஆகும்.

**கதைச்சுருக்கம் :** முத்துசாமி ஐயர் சிறுகுளம் கிராமத்தில் ஒரு நிலக்கிழார். அவர் மனைவி கமலாம் பாள். மகள் இலட்சுமி, மகன் நடராசன். தம்பி சுப்ர மணிய ஐயர். அண்ணனுக்குக் கட்டுப்பட்டவர். அவர் மனைவி பொன்னம்மாள் தன் தம்பி மகனுக்கு இலட்சுமியை மணம் செய்து தரவில்லை என்ற மனவருத்தத்தால் குடும்பத்தில் பிரிவினை ஏற்படுத்த முயல்கிறாள். ஊரில் உள்ள குறும்புக்காரர்கள் இதற்கு உதவுகின்றனர்.

சமீன்தார் ஒருவருக்கும் சுப்பிரமணிய ஐயருக்கும் ஏற்பட்ட பகையால், பேயாண்டித் தேவன் என்ற திருடன் ஐயரின் காளைகளைத் திருடிச்செல்கிறான். முத்துசாமி ஐயரின் செல்வாக்கால் பேயாண்டி கைதா கிறான். சிறை மீண்ட தேவன் பழியுணர்ச்சியால் முத்துசாமி ஐயரின் மகன் நடராசனைத் தூக்கிச் செல்கிறான்.

பொருளாசையால் மோசக்காரர்களுடன் சேர்ந்து கூட்டு வணிகம் செய்து வந்த முத்துசாமி ஐயர், வணி கத்தில் எழுந்த சிக்கல் தொடர்பாகப் பம்பாய் செல்ல நேரிடுகிறது. முயற்சி பயனளிக்காமல் திரும்பும் போது சிதம்பரத்திற்கு வருகிறார். தொடர்ந்து ஏற் பட்ட சிக்கல்களால் துறவு கொள்ளும் எண்ணம் பிறக் கிறது. அதே நேரத்தில் தம்பி மனைவி ஏவிய ஆள்கள், கமலாம்பாள் நடத்தைக் கெட்டவள் எனப் பழி சுமத்து கின்றனர். அதிர்ச்சியும் வெறுப்பும் அடைந்து தற்கொலை செய்து கொள்ள முனைகிறார். சந்நியாசி ஒருவரால் தடுக்கப்பட்டு அத்துவைதக் கொள்கையில் மிகுந்த ஈடுபாடு கொள்கிறார்.

ஐயரைத்தேடி மகள் மருமகனுடன் சிதம்பரம் செல் கிறார் கமலாம்பாள். வழியில் மருமகன் சீனி வாசனைப் பிரிய நேரிடுகிறது. பின் திருவெற்றியூரில் ஒரு மகான் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரைச் சந்திக்க முயல்கிறாள். அவர் காசி சென்று விட்ட தாகத் தெரிகிறது. எல்லோரும் காசி வந்து சேர்கிறார் கள். இந்நிலையில், தன்னால் ஐயரின் குடும்பம் சீரழிந்ததை எண்ணிப் பரிகாரம் செய்ய விரும்பிய பேயாண்டித் தேவன், முத்துசாமி ஐயரின் சொத்தை ஏமாற்றிக் கவர்ந்தவர்களிடமிருந்து மீட்டுக் கொடுத்து, காணமற்போன ஐயரின் குழந்தையையும் அடை யாளங் காட்டுகிறான். பிரிந்த குடும்பம் ஒன்று சேர்கிறது. நல்லவர்கள் நலம் பெறுகிறார்கள். தீயவர் கள் செய்த பாவத்திற்குத் தண்டனை அடைகிறார்கள்.

இக்கதையின் கட்டமைப்பு முழுமை பெறவில்லை. பாதி வரை இயல்பாக வளர்ந்துவரும் கதை, அதற்குப் பிறகு முடிவைக் கருதி விரைவுப்படுத்தப் பட்டுள்ளது. முத்துசாமி ஐயர், கமலாம்பாள், அம்மையப்பப் பிள்ளை, பொன்னம்மாள், பேயாண டித்தேவன், சுப்பம்மாள் முதலிய அனைத்துப் பாத்தி ரங்களும் உயிர்க்களையுடன் படைக்கப்பட்டுள்ளன. இந்நூல் எளிய நடையில் சிறிது கவிதைத் தன்மை யுடன் எழுதப்பட்டுள்ளது.

பழ.மு.

**கல்வி இலக்கு :** ஒரு சமுதாயத்தின் பண்பாடு, மரபு, குறிக்கோள்கள் ஆகியவற்றை இளைய தலை முறையினருக்கு விளங்கச் செய்து அவற்றின் இன்றி யமையாமையை எடுத்துச் சொல்லும் தலையாய கருவி கல்வியாகும். இத்தகைய கல்வி சமுதாயத் தோடு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. கல்வி யின் காரணமாகச் சமுதாய மாற்றங்களும், சமுதாயத் தின் தேவைகள் காரணமாகக் கல்வியின் இலக்கு களில் மாற்றங்களும் ஏற்படுகின்றன.

கல்வியின் இலக்குகளைப் பொறுத்து அமை பவைதான் கற்பித்தலின் இலக்குகள். கல்வி கற்பிக் கும் ஆசிரியர்தம்முடைய, மாணவர்களுடைய இலக் குகளை மனதிற் கொள்வதோடன்றி, பள்ளி, சமு தாயம் ஆகியவற்றின் இலக்குகளுக்கும் முன்னுரிமை அளிக்கின்றார். இவையத்தனை இலக்குகளும் ஒன் றோடொன்று தொடர்புள்ளவையாகும். கல்வியின் இலக்குகள் அது தனிமனிதனிடத்திலும், சமுதாயத்தி லும் ஏற்படுத்த வேண்டிய தாக்கங்கள், மாற்றங்கள் ஆகியவை பற்றி பன்னாட்டு அறிஞர்கள் பல்வேறு தத்துவங்களையும் கருத்துகளையும் வழங்கியுள்ளனர்.

**வரலாற்றுப் பின்னணி :** கல்வியின் வரலாற்றில் பிளாட்டோவின் (Plato) பங்கு மகத்தானது. கிரேக்க அறிஞரான பிளாட்டோ ஒழுக்கமும், கட்டுப்பாட் டுச் சக்தியும் நிறைந்த ஒரு சமுதாயத்தை உருவாக்கு வதுதான் கல்வியின் நோக்கு என்பதை வலியுறுத்தி னார். சுவர்லாந்து நாட்டு அறிஞர் பெசுடலாசி (Pes talozzi) தனி மனித வளத்தையும், ஆற்றலையும், நம்பிக்கையையும் வளர்த்து சமுதாயத்திற்குப் பயனுள்ளவர்களாக மாணவர்களை உருவாக்குவதே கல்வியின் இலக்காக இருக்க வேண்டும் என்று வலி யுறுத்தினார். ஆகவே, சமுதாயத்திற்கும், வாழ்க்கைக் கும் உகந்த கல்வியை அளிப்பதில் தனிக்கவனம் செலுத்தப்பட்டது.

இங்கிலாந்தில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண் டில் வாழ்ந்த ஆர்பர்ட் இசுபென்சர் (Herbert Spencer) என்பார் தொழில் புரட்சியின் விளைவாக நிகழ்ந்த தொழில் துறை முன்னேற்றம், அறிவியல் வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறை அமைந்திட வேண்டும் என்று வலியுறுத் தினார். ஆகவே, மாணவரின் முழு வளர்ச்சிக்கும் அடி கோலுவதே கல்வியின் இலக்காக அமைந்திட வேண் டும் என்றார். அமெரிக்க நாட்டுக் கல்வி அறிஞர் சான் டுயி (John Dewey) இயற்கையான தனிமனித வளர்ச் சியையும், சமூகத் திறனையும் வளர்ப்பதையே கல் வியின் இலக்காகக் கொள்ள வேண்டும் என்றார். மேலும், ஒவ்வொருவரும் தனது தனித்துவத்துக்கு ஏற் றாற்போல், தொடர்ந்து வளர்ச்சியடைவதையே கல் வியின் இலக்காகக்கொண்டனர்.

கில்பாட்ரிக் (Kilpatrick) கல்வியாளர்கள் பலரின் கருத்துகளையும் ஆய்ந்து சில கல்வி இலக்குகளை அறிவித்தார். அதன்படி, ஒருவரின் நன்னடத்தையை வளர்த்து, அவரின் ஆளுமையை உயர்த்திச் சிறந்த வாழ்க்கையை வாழச் செய்வதே கல்வியின் இலக் காக இருத்தல் வேண்டும். ஏரனசுட் மெல்பி (Earnest Melby) என்பார் மாறிவரும் பண்பாட்டுக்கு ஏற்ற வாறு வாழும் திறனை வளர்ப்பதே கல்வியின் இலக் காக இருத்தல் வேண்டும் என்றார். மகாத்மா காந்தி முழுமையான மனிதனை உருவாக்குவதுதான் கல்வி யின் இலக்கு என்றும், அது உடல், உள்ள, அறிவு வளர்ச்சிக்கு உதவக்கூடிய முறையில் அமைந்திட வேண்டும் என்றார். இரவீந்திரநாத் தாகூர் அறிவு, ஆன்மா, உடல் ஆகியவற்றின் வளர்ச்சியை முழுமை பெறச் செய்வதுதான் கல்வியின் இலக்கு என்றார்.

அரவிந்தர் ஆன்மீக வளர்ச்சியைக் கல்வியின் இலக்கு என்று வலியுறுத்தினாலும், அது மனிதனின் முழு வளர்ச்சியையும் ஊக்குவிப்பதாக அமைந்திட வேண்டும் என்றார். வினோபா கல்வியின் இலக் கைப் பற்றிக் கூறும்போது அது மாணவரிடையே அறிவுத் தாகம், தற்சிந்தனை, கடமையுணர்வு, தற்சார்பு, தற்கட்டுப்பாடு, பிறருக்கு உதவும் குணம் ஆகியவற்றை வளர்ப்பதே என்றார்.

**கல்வியின் இலக்கும் சமுதாயமும் :** வரலாற்றுப் பின்னணி எவ்வாறு கல்வியின் இலக்கு மாறிக்

கொண்டே வந்திருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது. இந்த மாற்றங்களுக்குக் காரணியாக இருப்பவை ஒரு சமுதாயத்தின் மாற்றமே. இந்த மாற்றத்திற்கு மற்றொரு காரணம் அறிவியல் துறையில் ஏற்பட்டுள்ள பெரும் வளர்ச்சியே. அறிவியல், மனிதனின் வாழ்க்கையின் எல்லா அங்கங்களிலும் பரவியுள்ளதைக் காணலாம். அறிவியல் வளர்ச்சியின் காரணமாகத் தொழில் துறையில் மாற்றமும் அதன் காரணமாக வாழ்க்கையில் மாற்றமும் ஏற்பட்டுள்ளது. இவை அனைத்தும் கல்வியின் இலக்கினையும் முடிவு செய்கின்றன.

ஆன்மீக வளர்ச்சியை வலியுறுத்திய கல்வி இன்று, யதார்த்த வாழ்க்கையை அடிப்படையாகக்கொண்டு அதன் இலக்குகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளது. இதற்கு எ.கா. கோத்தாரிக் கல்விக்குழு பரிந்துரை செய்துள்ள கல்வியின் இலக்குகளைக் கூறலாம். மாறிவரும் சமூகச் சூழலுக்கும், இயற்கைச் சூழலுக்குமேற்ப இந்தியக்கல்வியின் இலக்குகளாக நான்கு முக்கிய இலக்குகளைக் கோத்தாரி பரிந்துரை செய்துள்ளார். 1. உற்பத்தியோடு இணைந்த, உற்பத்தியை ஊக்குவித்தல், 2. சமூக தேசிய ஒருமைப்பாட்டினையும், ஒற்றுமையையும் ஊக்குவித்தல், 3. சமூக நன்னடத்தை, ஆன்மீக நெறிகள் ஆகியவற்றை மாணவரிடையே வளர்த்தல், 4. நாட்டை நவீனமயமாக்க அறிவியல், தொழில்நுட்பத்துறையில் மாணவர்களை ஊக்குவித்தல்.

**தனிமனிதனும் கல்வியின் இலக்கும் :** தனிமனித வளர்ச்சி சமுதாய வளர்ச்சிக்குப் பயனுள்ளதாக அமைந்திட வேண்டும். சமுதாயம் தனிமனிதனின் முழுமையான வளர்ச்சியை ஊக்குவிக்க வேண்டும். இதனையே ஒவ்வொருவரும் தமது கல்வியின் இலக்காகக் கொள்கிறார்கள். சமுதாயம் தனிமனிதனின் முழுமையான வளர்ச்சிக்கு வாய்ப்பளிப்பதன் மூலமாக அதன் பயனை அவர்களது கொடையின் மூலமாக அனுபவிக்கிறது. ஆகவே, தனிமனிதனின் கல்வியின் இலக்கு முழுமையான வளர்ச்சி, வாய்ப்பு ஆகியவையாகும். தான் கற்கும் கல்வி, கற்றலின் இலக்கு தன்மையும், தன்னைச் சார்ந்தோரையும் சமுதாயத்தில் உயர்த்துவதாக அமைந்திட வேண்டும். அத்தோடு அந்தச் சமுதாயமும் உயர்நிலையை எய்திட வேண்டும் என்றும் ஒவ்வொரு தனிமனிதனும் விரும்புகிறான்.

**பெற்றோரும் கல்வியின் இலக்கும் :** ஒவ்வொரு பெற்றோருக்கும், தனது பிள்ளைகளைக் கல்விக் கூடங்களுக்கு அனுப்பும்போது சில இலக்குகளைத் தமது மனதில் கொள்கின்றனர். அவை, 1. கல்வியின் அடிப்படை அங்கங்களாகிய வாசித்தல், எழுதுதல், எண்ணுதல் ஆகியவைகளில் திறனைப்பெற வேண்டும், 2. மற்றவர்களோடு சேர்ந்து வாழும் திறனைப் பெறவேண்டும், 3. உடல்நலத்துடன் பாதுகாப்பாக வாழ வேண்டும், 4. நுண்கலைகளையும், சங்கீதத்தையும் ரசிக்க வேண்டும், அதில் திறமையும் பெற வேண்டும், 5. முழுமையான மனவெழுச்சி வளர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும் கல்வி அடிகோல வேண்டும், 6. தமது சமுதாயப் பண்பாடுகள் பற்றிய சிறந்த கருத்துகளையும், மனப்பான்மையையும் உருவாக்கிட வேண்டும், 7. தமது பிள்ளைகள் நாட்டின் வரலாற்றுப்பின்னணி அறிந்து, வெறுப்பும், வன்முறையும், வேதனையும் அற்ற ஒரு சமுதாயமாக நாடு திகழ்ந்திட வேண்டும் என்ற எண்ணத்தையும் உருவாக்க வேண்டும் என்பவையாகும். மேற்கூறிய ஏழு இலக்குகளை அடைவதற்கு கல்வி உதவுமேயாயின் அதுவே முழுமையான கல்வியாக அமைந்திடும்.

**கல்வியின் இலக்குகளும் கல்வி நிறுவனங்களும் :** கல்வி நிறுவனங்கள் கல்வியின் இலக்குகளை எய்துவதற்கு உதவும் கருவிகளாகும். ஆசிரியர்களின் மூலமாக இந்த இலக்குகளைக் கல்வி நிறுவனங்கள் அடைகின்றன. ஆகவே, ஆசிரியர்களின் பொறுப்பும், கடமையும் மிகுதியாகிறது. தனிமனித இலக்குகள், பெற்றோரின் இலக்குகள், சமுதாய இலக்குகள் மற்றும் பொதுக்கல்வியின் இலக்குகளை மனதில் கொண்டு அவற்றை அடையும் வகையில் ஆசிரியர்களின் கற்பிக்கும் இலக்குகள் அமைந்திட வேண்டும். மாணவர்களுக்குச் சமுதாய இலக்குகளை உணர்த்திச் சமூக வாழ்க்கைக்கு அவர்களைத் தயாராக்குதல் ஆசிரியர்களின் கடமையாகும். வாழ்க்கையோடு கற்றலின் இலக்குகள் இணையும்போது அவை உண்மை நிலையை அடைகின்றன. கற்பதற்கும், வாழ்க்கைக்கும் உள்ள உறவினையும், பிணைப்பையும் மாணவர்கள் உணர்கிறார்கள். கல்வியின் இலக்குகள் மனிதனின் மேம்பாட்டிற்காகவும், அதன் மூலமாகச் சமுதாய நலனுக்காகவும் உதவுகின்றன என்ற உணர்வினை மாணவர்கள் பெற்றால் தான் கற்றலின் உண்மையான, முழுப் பயனையும் பெற முடியும். கல்வி வெறும் ஏட்டுச் சுரைக்காய் அன்று.

அது மாணவ சமுதாயத்தைச் சமூக உணர்வுள்ளவர் களாகவும், பொறுப்பு மிக்கவர்களாகவும் உருவாக்கு கிறது.

ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் பாடங்களின் இலக் குகளைத் தெளிவாகத் தம் மனதில் கொள்ள வேண் டும். பாடங்களைக் கற்பித்தலின் முடிவில் இந்த இலக்குகளை அடைந்துள்ளோமா என்று சோதனை யையும் ஒவ்வொரு ஆசிரியரும் செய்திடல் வேண் டும். புத்தகங்களில் உள்ள கருத்துக்கும், உண்மை நிலைக்கும் உள்ள உறவினை மாணவர்களுக்கு உணர்த்தியுள்ளோமா என்றும் ஆசிரியர்கள் ஆய்ந்திட வேண்டும். ஆகவேதான், கோத்தாரி தலைமையில் அமைந்த கல்விக்குழுவின் அறிக்கையின் முதல் வரியே, 'நாட்டின் வருங்காலம் அதன் வகுப் பறைகளில் உருவாக்கப்படுகின்றது' என்று கூறப்பட் டுள்ளது. கல்வித்துறை அறிஞர்களும், கல்விக்குழு அறிக்கைகளும் கல்வியின் இலக்குகளை எடுத்துரைத் தாலும் அந்த இலக்குகளுக்கு உண்மை உருக்கொடுப் பவர்கள் ஆசிரியர்கள்தான். எனவே, ஆசிரியர்களின் கடமை யுணர்வும், திறனும்தான் கல்வியின் அல்லது கற்றலின் இலக்குகளை அடைவதற்கு அடிகோலு கின்றன எனலாம்.

- ஞா. ப.

**கவச நூல்கள் :** கவசம் என்ற சொல்லிற்குத் தமிழ்ப் பேரகராதி பல்வகைப் பொருள்களைக் கூறு கிறது. அவற்றுள் இரட்சை. இரட்சையை உண்டாக் குவதாய்ச் சுலோக ரூபமாயுள்ள மந்திரனிசேடம் என்பவற்றைக் கவச நூலுடன் பொருந்தும் பொருள் களாகக் கொள்ளலாம். கவசம், பகைவர்களின் தாக் குதலிலிருந்து போர் வீரர்களைக் காப்பதற்குப் பெரி தும் பயன்படுவதாகும். ஆன்மீக நிலையிலும் கவசம் என்ற சொல் காப்பதற்குப் பயன்படுவதாக விளங்கு கிறது. எல்லாம் வல்ல இறைவன் ஒருவன் இருப் பதை உணர்ந்து அவனிடம் தம்மை முழுமையாக ஒப்படைத்து, இவ்வுலகத் துன்பங்களிலிருந்து காக்குமாறு வேண்டும் பாடல்களைக் கொண்டதே கவச நூல் ஆகும். உலகியல் துன்பங்களிலிருந்து காக்கும்படி வேண்டும் கருவை அடிப்படையாகக் கொண்ட நூலாகையால் 'காக்க', 'காக்க' என்ற சொற்கள் கவசச் சொற்களாகப் பயன்படுத்தப் பெறும் பாங்கைக் கற்போர் உணரலாம்.

பில்லி, சூனியம், பேய், அடங்காமுனி, பூதம், பிரம்மராக்கதர், இருசி, காட்டேரி, சண்டாளங்கள் போன்ற தீய சக்திகளிலிருந்து தம்மை விடுவித்துக் காத்தருள வேண்டும் தன்மையது இந்நூலாகையால் 'ரரரர ரரர', 'ரிரிரிரி ரிரிரி', 'டுடுடுடு டுடுடு' போன்ற மந்திர எழுத்துக்கள் இடம்பெறுவதைக் காணலாம். இவற்றுள், தமக்குக் கவசமாக வீற்றிருந்த இன்ன ருளை வாரி வழங்கும் இறைவனின் பெருமை களைப் பல நிலைகளில் எடுத்துக் கூறப்பெறும். மேலும், இந்நூலை எவ்வாறு எத்தனை முறை ஓத வேண்டும் என அறிவுறுத்தப்பெறும் பாங்கையும் காணலாம். சான்றாகக் கந்தர் சஷ்டிக் கவசத்தைக் காலையிலும் மாலையிலும் முறைப்படி நீராடி, மனதை அலையவிடாது ஒருநிலைப்படுத்தி இறை வனை எண்ணி, ஒரு நாள் முப்பத்தாறு உருக் கொண்டு ஓத வேண்டும் எனக் கூறப்பெறுமாற்றைக் குறிப்பிடலாம். இந்நூலை ஓதுவதால் விளையும் பயன்களும் குறிப்பிடப்பெறும். உரு ஏற்றத்திரு ஏறும் என்ற நம்பிக்கையும் உண்டு. இக்கவச நூல் தனி யொரு நூலாகத் தோன்றுதற்கு முன்னரே இந்நூலின் கூறுகள் முந்திய இலக்கியங்களில் இடம் பெற்றுள் ளன. திருஞான சம்பந்தப் பெருமாள் பாடியருளிய கோளறு திருப்பதிகம் கோள்களினால் விளையும் தீமைகளிலிருந்து காக்கும் கவசப்பாடல் தொகுதி யாகக் காட்சியளிக்கின்றது. மாணிக்கவாசகப் பெரு மாள் நீற்றுக்கவசம் பற்றிக் குறிப்பிடுகின்றார் (திரு வாசகம் 46:1). புலவர்கள் பலர் தாம் இயற்றியருளிய பெரு நூல்களின் ஒரு பகுதியாகக் கவசப்பாடல்கள் பாடியுள்ள வளர்ச்சி நிலையைக் காண்கின்றோம். வரதுங்க பாண்டியர் பிரமோத்தர காண்டத்தில் சிவகவசத்தையும், அதிவீர ராமபாண்டியர் காசிக் காண்டத்தில் சக்தி கவசத்தையும், செவ்வை சூடுவார் பாகவதத்தில் நாராயண கவசத்தையும் கச்சியப்ப முனிவர் விநாயகபுராணத்தில் விநாயக கவசத்தையும் இடம் பெறச் செய்துள்ளனர்.

இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியுற்ற கவச இலக்கியம் கந்தகுரு கவசம், கந்தர் சஷ்டி கவசம், கந்தர் கவசம், சக்தி கவசம், சண்முககவசம், சிவ கவ சம், கார்த்திகை கவசம், சனிபகவான் கவசம், ஐயப் பன் கவசம், சிரீதேவி கருமாரியம்மன் கவசம், சிரீ அரிகவசம், காரைக்குடி சிரீ கொப்புடையம்மன் சக்தி கவசம், விநாயக கவசம், வில்வகவசம் போன்ற பக்திச் சுவை ததும்பும் தனி நூல்களைப் பெற்றுத் திகழ்கின்றது.

- தா. ஈ.

**கற்றல் கோட்பாடுகள் :** உளவியல் வல்லுநர்கள் கற்றல் எவ்வாறு நிகழ்கிறது என்பது பற்றி ஆராய்ச்சிகள் செய்து பல்வேறு கருத்துகளை வழங்கியுள்ளனர்.

**முதனிலை ஆக்க நிலையுறுத்தல் ( Classical Conditioning ):** இவான் பாவ்லாங் ( Ivan Pavlo ) என்ற ருசிய உடலியர் நிபுணர் 1904இல் சீரணித்தல் என்ற தலைப்பின்கீழ்ச் செய்த ஆராய்ச்சிக்காக நோபல் பரிசு பெற்றவர். ஆனால் அவர் தற்செயலாக அடிப்படைக் கற்றல் முறைகளில் செய்த சோதனைகளுக்காக, இன்றும் நினைவில் வைக்கப்பட்டுள்ளார். வயிற்றில் சுரக்கும் அமிலங்களையும், பல்வேறு உணவு வகைகளைக்கண்டு உமிழ்நீர் சுரத்தலையும் கண்ணுற்று, நாய்களைக் கொண்டு சோதனைகள் செய்தபோது ஓர் அனுபவத்தைப் பெற்றார். சிற்சில சமயங்களில் உணவு சாப்பிடப்படாமலிருக்கும்போதே, உணவுப் பாத்திரமோ உணவைக் கொண்டுவரும் நபரோ அவரது காலோசை மட்டும் இருந்தாலோ நாய்களிடம் உடலியல் மாற்றத்தைக் கண்டார். இம் மாற்றம் பசி என்ற உடலியல் தேவைக்காக மட்டுமின்றி, முதனிலை ஆக்க நிலையுறுத்தல் என்ற வகையில் ஒரு குறிப்பிட்ட தூண்டலுக்கு அனிச்சைச் செயல் போன்ற துலங்கலை வரவழைக்கும் விதமாகக் கற்றலைக் கண்டார். பசியுள்ள ஒரு நாய்க்கு, ஒரு மணியை அடித்து அதன்பின் உணவளித்து அப்போது நாயின் வாயில் ஊறும் உமிழ் நீரை அளவிட்டார். இவ்வாறு பலமுறை செய்தார். பிறகு உணவு அளிக்காமலேயே மணி ஒலியை மட்டும் எழுப்பி, உமிழ்நீரின் அளவை அளப்பதன் மூலம் பயிற்சியின் பலனைச் சோதனை செய்தார். இப்போதும் உமிழ்நீரின் அளவு அதிகரித்திருந்தது. உணவு தரப்படாவிட்டாலும், மணி ஒலியைக் கேட்டவுடனேயே அதிக உமிழ்நீர் சுரந்துள்ளது. மணி ஒலியினால் ஏற்பட்ட இத்துலங்கல் இயல்பானது. கற்றதனால் ஏற்பட்டது. இதையே பாவ்லாங் ஆக்க நிலையுற்ற துலங்கல் ( C - R ) எனப் பெயரிட்டார். பின்வரும் படத்தின் (A) மூலம் இதனை விளக்கலாம்.

ஆக்க நிலையுறுத்தலுக்கு முன்பு மணி ஒலி கேட்டு உமிழ்நீர் சுரக்கவில்லை. எனவே இது ஒரு ( Neutral ) தூண்டலாகும். ஆனால் உணவைக்கண்ட உடனேயே உமிழ்நீர் சுரத்தலால் உணவாகிய இயற்கைத் தூண்டலுக்கு, உமிழ்நீர் சுரத்தல் ஓர் இயற்கைத் துலங்கலாகக் கிடைக்கிறது.

*தூண்டல் - 1* உணவு - *துலங்கல் - 1* ( உமிழ் நீர் சுரத்தல்)
S1 R1

இத்தகைய தொடர்பு இயற்கையானதே.

*தூண்டல்- 2* மணிஒலி - *துலங்கல் - 2* ( மணி ஒலிக்கும் திசையில் திரும்புதல் )
S2 R2

இத்தகைய தொடர்பும் இயற்கையானதே.

*தூண்டல் 1* *தூண்டல் 2* *துலங்கல் 1*
S1 S2 R1

இவ்வாறு பல தடவைகள் சேர்ந்து நிகழ்கின்றன. பிறகு,

*தூண்டல் 2* ( மட்டும் ) *துலங்கல் 1*
S2 R1

மணி ஒலி என்ற சிறிதும் தொடர்பில்லாத ஒரு தூண்டல் உமிழ்நீர் சுரத்தல் என்ற ஒரு துலங்கலைத் தோற்றுவிக்கும் நிலையில் ஒரு புதிய தூண்டல் - துலங்கல் தொடர்பு ஏற்படுகிறது. இத்தகைய தொடர்புகளைக் கற்றலே ஆக்க நிலையுறுத்தலாகும். மணி ஒலிக்குப் பதிலாக ஒருவித வண்ண ஒளி, நாயின் விலா பக்கத்தில் ஓரிடத்தில் தொடுதல், ஒரு குறிப்பிட்ட மணம் போன்ற பல தொடர்பில்லாத தூண்டல்களை, இயல்பான தூண்டலாகிய உணவுடன் பலமுறை இணைத்து இறுதியில் வலுப்படுத்தி உமிழ்நீர் சுரக்கச் செய்தார். எயர்க்சு ( R. M. Yerkes ), இலேசுலி ( Lashley ), கெக்டிரவ் ( Bekhterev ), கிராசுகைகார்சிகி ( Krasuagorshi ), வாட்சன் ( Watson ) போன்ற அறிஞர்கள் பாவ்லவ்வின் சோதனைகளை மேலும் விரிவுபடுத்தி, தட்டைப்புழு, நத்தை போன்ற உயிரிகள் முதல், மனிதன் வரை இத்தகைய கற்றலைப் பெற முடியும் என அறிந்தனர். பயிற்சி, கல்வி, கட்டுப்பாடு ஆகியவற்றின் வழியே பெறப்படும் எல்லாப் பழக்கங் களும் ஆக்க நிலையுற்ற மறிவினைகளின் தொடர்களே ( Chain of Conditioned Reflexes ) ஆகும் என்ற பாவ்லவ்வின் முடிவையே வாட்சனின், நடத்தைக் கொள்கை யினர் மனித நடத்தையின் எல்லா மாறுதல்களையும் விளக்கவல்ல ஒரு கோட்பாடாகக் கொண்டனர்.

ஆல்பர்ட் என்ற பதினோரு மாத சிறு குழந்தைக்கு, ஒரு வெள்ளை எலி விளையாட்டுத் தோழனாக இருந் தது. குழந்தை வெள்ளை எலியை நெருங்கப் போகும் ஒவ்வொரு சமயத்திலும் வாட்சன் ஓர் எஃகு கம்பியைக் கட்டி ஒரு பெரும் ஒலியை உண்டாக்கினார். இவ்வாறு நிகழ்ந்தப்பின் ஒலியின்றியே

குழந்தை வெள்ளை எலியைக் கண்டவுடன் அழுது கொண்டு ஓடத் தொடங்கிற்று. ஒலியின் விளைவாக ஆல்பர்டின் அச்சம் வெள்ளை எலி என்ற ஒரு புதிய தூண்டலுடன் தொடர்பு கொண்டது. இதனை ஆக்க நிலையுற்ற மனவெழுச்சித் துலங்கல் என்பா. இறுதியாக ஆல்பர்ட் வெள்ளை எலிகளுக்கு மட்டுமின்றி, தாயின் வெள்ளை மேலங்கி முதல் எல்லா வெள்ளை பொருட்களிடமும் அஞ்சத் தொடங்கினான். இது ஆக்க நிலையுற்ற மனவெழுச்சியின் பரவுதல் அல்லது மாறுதலாகும்.

முதனிலை ஆக்க நிலையுறுத்தலுக்கு அன்றாட வாழ்க்கையில் எத்தனையோ செயல்களைக் கூற லாம். கருத்தரங்குகளில் ஆழ்ந்து ஈடுபட்டிருக்கும் போது மாலை 3.30க்குத் தரப்படும் தேநீர்க் கோப்பைகளின் ஒலியைக் கேட்டவுடனேயே நாவில் உமிழ்நீர் சுரக்கிறது. குழந்தையாக இருந்தபோது பண்டிகைகளுக்கும், பிறந்த நாட்களுக்கும் தரப்பட்ட பச்சை நிற ஆடைகள் இனிய நினைவுகளோடு தொடர்பு கொண்டனவாக இருந்த நிலையில், பச்சை நிறத்தை எங்குக் கண்டாலும் ஒரு மனவெழுச்சி ஏற்படுகிறது.

**செயற்பாடுடைய ஆக்க நிலையுறுத்தல் ( Operant Conditioning ) :** ஒரு குழந்தை அழுதவுடன் தாயின் கவனம் அதற்குக் கிடைக்கிறது. தாயின் வருகை தனக்குத் தேவையானபோதெல்லாம், குழந்தை அதிகமாக அழுவதற்குக் கற்றுக்கொள்கிறது. ஒரு குழந்தை பள்ளியில் மிகச்சிறந்த கற்றல் பழக்கங்களை அமைத்துக் கொள்கிறது. எதிர்வரும் விளைவுகளுக்காகக் குழந்தை தானே தீவிரமாக வெளிப்படுத்தக்கூடிய துலங்கலைச் செயல்பாடுகள் ( Operants ) என்று அழைத்தார் இசுகின்னர். வெகுமதிகள் அல்லது தண்டனைகள் குழந்தையின் நடத்தையைப் பொருத்து அமைகின்றன. இசுகின்னருடைய செயற்பாடுடைய நடத்தையின் தூண்டலைவிட துலங்கலுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படுகிறது. இவருடைய கோட்பாடு 'துலங்கல் - தூண்டல் ( R - S )' வகையைச் சார்ந்த ஆக்க நிலையுறுத்தல் எனக் கருதப்பட்டது.

வெகுமதியைவிட தண்டனையின் மூலம் ஒரு குறிப்பிட்ட நடத்தை நிகழ்வதற்கான வாய்ப்பு குறைகிறது. ஒரு குழந்தையைப் புன்சிரிப்போடு வரவேற்பவரிடம் குழந்தை நன்கு சிரித்து விளையாடி பேசுகிறது. மாறாகக் கடுகடுப்பான முகத்தைப் பார்த்தவுடனேயே குழந்தை அந்தச் சூழலைவிட்டு விலகி ஓட விரும்புகிறது.

பசியுள்ள ஓர் எலி 'இசுகின்னர் பெட்டி' எனப்படும் ஒரு பெட்டியில் வைக்கப்படுகிறது. பெட்டியின் உள்ளே ஒரு நெம்புக்கோல் கருவி பொருத்தப்பட்டுள்ளது. இதனை எலி அழுத்தும்போதெல்லாம் ஓர் அளவு உணவு வெளிவரும். பெட்டியின் உள்ளே எலியின் அசைவுகளைப் பதிவு செய்யும் கருவியும் பொருத்தப்பட்டுள்ளது. இச்சோதனையில் நெம்புகோல் எப்போதும் எலியின் பார்வையில் தான் உள்ளது. ஆனால் அது தூண்டல் செய்யவில்லை. பசி ஏற்படும்போது, எலி தனது உணவினைப் பெறுவதற்காக நெம்புகோலை அழுத்துகிறது. இந்தத் துலங்கல் முதலில் தோன்றி, உணவு உண்டாகும் தூண்டலிற் சூழ்நிலையைத் தோற்றுவிக்கிறது. இச்செயல் திரும்பத்திரும்பச் செய்வதால் துலங்கலுக்கும் தூண்டலுக்கும் உள்ள தொடர்பு வலுப்பெறுகிறது.

| | | |
|---|---|---|
| நெம்புகோல் கருவி தூண்டல் - 1 | | அழுத்துதல் துலங்கல் - 1 |
| உணவு தோன்றல் | ஆக்க நிலையுறுத்தல் | உமிழ்நீர் சுரத்தல் |
| தூண்டல் ( சூழ்நிலை ) 2 | | துலங்கல் 2 |

துலங்கல் - 1க்கும், தூண்டல் - 2க்கும் உள்ள தொடர்பே செயல் ஆக்க நிலையுறுத்தலாகும். துலங்கலைச் செம்மையாகச் செய்து தூண்டல் சூழ்நிலையை உண்டாக்குதலை உருவாக்கல் ( Shaping ) என்பர்.

செயல் ஆக்க நிலையுறுத்தலில் பழைய நடத்தையின் அனுபவத்தால் புதிய நடத்தை தோன்றுகிறது. கற்பவரிடத்தில் தேவையும், அதனை நிறைவு செய்ய விருப்பமும் வேண்டும். கற்பவரினால் துலங்கலைத் தோற்றுவித்தப் பின்னரே வலுப்படுத்தல் நிகழ்கிறது. இக்கற்றலில் ஊக்குவித்தலும் வெகுமதியும், முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன. முதனிலை ஆக்க நிலையுறுத்தல் போன்றே இக்கற்றலிலும் சோதனை மறைவு, தூண்டல்களைப் பொதுமைப்படுத்துதல், வேறுபடுத்துதல், கால இடைவெளி போன்ற கருத்துகள் உள்ளன.

செயல் ஆக்க நிலையுறுத்தலின் மூலம் கற்பவரிடையே நடத்தை மாற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது. விரும்பத்தகாத செயல்களை நீக்குவதற்கு ஒரே வழி கற்பவர்கள் விரும்பத்தக்க துலங்கலைத் தோற்றுவிக்கும்போது அதிக வலுவூட்டிகளைப் பயன்படுத்தி தேவையான கற்றலை நிலைநிறுத்துதலாகும்.

எ.டு. ஒதுங்கி வாழும் குழந்தைகளின் சமூகத் திறன் களை வளர்த்தல், மன வளர்ச்சி குன்றிய குழந்தை களின் முரட்டுத்தனத்தைக் குறைப்பதற்கு உதவுதல்.

சிறந்த எழுத்தாளர்களுக்கும், பேராசிரியர்களுக் கும், தங்களது எழுத்துப் பணியில் ஒருவகை சோர்வு நிலை வந்து மேலும் எழுத முடியாமல் நிறுத்திவிடக் கூடிய மனநிலை அவ்வப்போது ஏற்படுகிறது. செயல் பாடுடைய ஆக்க நிலையுறுத்தல் மூலம், இராபர்ட் பாய்சு ( Robert Boice ) என்பவர் எழுத்து வேகத்தில் ஏற்படும், இத்தகைய குறைகளை நீக்க, நான்கு வழி யுள்ள ஒரு திட்டத்தை அமைத்தார்.

1. முதல் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு எதைப்பற்றியும் சிந்தனை செலுத்தாமல் எவ்வளவு எழுத முடிகிறது, எந்த நிலைகளில் ( எழுதும் நேரம், எடுத்துக்கொள்ளும் காலம், இடம் ) என்பவற்றைப் பற்றி ஒரு குறிப்பெடுக்க வேண்டும்.

2. ஒவ்வொரு நாளும் இத்தனை பக்கங்கள் எழுத வேண்டும் என்ற இலக்கை வரையறுத்துக்கொண்டு, ஆறு வாரங்களுக்குத் தொடர்ந்து அந்த எழுத்துப் பணி யைச் செய்து வர முயலவேண்டும். அந்தக் குறிப்பிட் டப் பக்கங்கள் எழுதி முடிக்கும்வரை எவ்வகையான அன்றாடச் செயல்களிலும் ( தொலைக்காட்சிப் பார்த் தல், நண்பரைச் சந்தித்தல், செய்தித்தாள் படித்தல் போன்றவை ) ஈடுபடக்கூடாது. இத்தகைய வெகு மதிகள் பயனளிக்காவிடில் தண்டனை தரும் விதத்தில் பொருள் நட்டமோ வெறுப்பிற்குரிய செயல்களோ கிடைக்குமாறு ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.

3. மூன்று வாரங்களுக்கு எழுதி முடிக்கும் அன்றா டப் பணிக்கு வெகுமதியோ எழுதாமல் இருப்பதற் குத் தண்டனையோ தருவதனை நிறுத்திவிட்டு எழுத் துப் பணியை மட்டும் தொடர்ந்து செய்துகொண்டு இருக் கவேண்டும்.

4. அந்த இருபது நாட்களுக்குப் பிறகு எழுதுவதில் ஒரு தனி வேகம் பிறந்து விடுகிறது. அதனைத் துரிதப் படுத்த வெளியிலிருந்து வெகுமதியோ தண்ட னையோ தேவையில்லை. எழுதிக்கொண்டிருப்பதே ஒரு வலுவூட்டியாக அமைந்துவிடுகிறது.

கற்றலில் ஒரு பெரும்புரட்சியை ஏற்படுத்திய பங்கு செயலாக்க நிலையுறுத்தலுக்கு உண்டு. பாடப் பொருளை மிக எளிய, சிறிய படிகளாகப் பிரித்துக் கற்பவருக்கு வெற்றி கிடைப்பதற்கே மிகுந்த வாய்ப்பு கிடைக்குமாறும், அவ்வப்போது அவர்து தேர்ச்சி பற்றிய முடிவு தெரிந்து வலுவூட்டப் பெறு மாறும், திட்டமிட்டக் கற்றல் புத்தகங்கள் வடிவிலோ கற்பிக்கும் இயந்திரங்களாகவோ உருவாகியுள்ளன. மேலும் கணினி மூலம் கற்பித்தல் என்ற இன்றைய கல்வி உலகின் புதுமைக்குச் செயலாக்க நிலைக் கற்றலே அடிப்படையாகும்.

**உட்பார்வை வழியே கற்றல் (Learning by insight):** ஒருவர் அடைய விரும்பும் இலக்கிற்கும், அதை அடைய உதவக்கூடிய வழிக்கும் இடையே உள்ள தொடர்பை உடனடியாக உணர்வதே உட்பார்வைக் கற்றல் அல்லது உள்ளொளிக் கற்றல் எனப்படும். பொருளற்று முயன்று தவறுதலில் ஈடுபடாமல் உள்ளத்தின் சிந்தனைத் திறன்களால் செயல்படக் கற்றுக்கொள்ளும் இக்கோட்பாட்டினைக் காட்சி முழுநிலைக் கொள்கையினர் ( Gestelt Pschologists ) உருவாக்கினர். உல்ப்காங் கோலர் ( Wolf GangKoh ler) என்பவர் இக்கோட்பாட்டினைத் தோற்றுவித் தார். இவர் சுல்தான் என்ற பசியுள்ள ஒரு மனிதக் குரங்கினை ஒரு கூண்டின் உள்ளே அடைத்து, கூண் டிற்கு வெளியே குரங்கிற்கு எட்டாத தூரத்தில் ஒரு வாழைப் பழத்தை வைத்தார். கூண்டின் உள்ளே ஒரு குச்சி வைக்கப்பட்டது. முதலில் சுல்தான் தன் கையை நீட்டி பழத்தை எடுக்க முயற்சி செய்தது. முடிய வில்லை. பிறகு தற்செயலாக கூண்டிலுள்ள குச்சி யைப் பார்த்தது. குச்சியையும் வாழைப்பழத்தையும் ஒரே மண்டலத்தில் பார்த்த காரணத்தால் உட் பார்வை பெற்ற சுல்தான் குச்சியின் உதவியினால் பழத்தை இழுத்துச் சாப்பிட்டு வெற்றியடைந்தது.

அடுத்த சோதனையில் நீளமான ஒரு குச்சிக்குப் பதிலாக இரு சிறு குச்சிகள் வைக்கப்பட்டன. உடனே சுல்தான் இவ்விரு சிறு குச்சிகளையும் தனித் தனியாகப் பயன்படுத்தி வாழைப்பழத்தை உள்ளே இழுக்க முயற்சி செய்தது. வெற்றி கிட்டவில்லை. உடனே கூண்டின் மூலைக்குச் சென்று அவ்விரு குச்சி களையும் வைத்து விளையாடிக்கொண்டிருந்தது. தற் செயலாக இவ்விரு குச்சிகளும் இணைந்து சுல்தா னுக்கு ஒரு நீள் குச்சி கிடைத்தது. உடனே இந்த நீள் குச்சியைப் பயன்படுத்தி முன்பு போலவே வாழைப் பழத்தை எடுத்துவிட்டது. புதிய சூழ்நிலையில் பழைய அனுபவத்தைப் பயன்படுத்தி, விரைவில் தீர்வு கண்டது.

இக்கற்றலில் கற்பவரின் பழைய அனுபவம், நுண் அறிவு, கற்றல் சூழ்நிலையை முழுமையாக உற்று நோக்கி புதிய தொடர்பினைப் புலன் காட்சி வழி பெறுதல், கற்பவரது உறுதியான மனநிலை, திரும்ப திரும்பச் செய்து சரிபார்த்தல் போன்ற பல காரணிகள் உள்ளன. உட்பார்வை வழிக்கற்றலில் ஒரு சிக்கல் எழும்போது ஒரு குறிப்பிட்ட காலம் வரை சிக்கலைத் தீர்ப்பதில் முன்னேற்றமே ஏற்படாதிருந்து திடீரெனத் தீர்வு கிடைத்துவிடுகிறது. இந்நிலையில் கற்பவர் விவரிக்க இயலாத ஒரு பெரும் மகிழ்வு உணர்வை அனுபவிக்கின்றனர். உட்பார்வை வழிக் கற்றலை, முந்தையன ஒத்த பல புதிய சூழல்களுக்கும் விவரித்துக் கூறுகின்றனர்.

புதிய கண்டுபிடிப்புகள், புதியன புனைதல், உயர் கணிதம், இயற்பியல், வேதியியல், இலக்கியம் போன்ற பாடங்கள் கற்பதற்கும், ஆராய்ச்சிகள் நடத்துவதற்கும் உட்காட்சி வழிக் கற்றல் பயன் தருகிறது.

கற்றலில் தனிப்பட்ட சிறுசிறு பகுதிகளாகப் பார்ப்பதைவிட, அவற்றை முழுமையாகக் காண்பதே மகிழ்ச்சி தருவதாகும். பொருள் பொதிந்ததாகவும் உள்ளது. எனவேதான், கவிதை, காவியம், கதை போன்றவற்றை முதலில் முழுமையாகச் சுருக்கிக் கற்பித்துப் பின்னர் பகுதி பகுதியாக விரிவாக நடத்திடல்வேண்டும்.

**முயன்று தவறிக் கற்றல் ( அ ) தட்டுத் தடுமாறிக் கற்றல் ( Learning by Trail and Error ) :** இதனை முயன்று வெற்றி பெற்று கற்றல் என்றும், தூண்டல் துலங்கல் கோட்பாடு ( Trial and Success - Stimulus Response ) என்றும் குறிப்பிடுகின்றனர்.

தார்ண்டைக் என்ற உளவியல் அறிஞர் விலங்குகளின் கற்றலின் தன்மையை ஆராயும்பொருட்டு பல சோதனைகளை நிகழ்த்தினார். பசியுள்ள பூனையொன்றை ஒரு புதிர்ப்பெட்டியில் ( Puzzle box ) இருக்கச் செய்தார். அப்பெட்டியில் ஒரே ஒரு கதவு உண்டு. அதனைத் தாழ்ப்பாள் மூலம் மூடவும் திறக்கவும் செய்யலாம். பூனையின் பார்வையில் படும்படி பெட்டிக்கு வெளியே மீன் துண்டுகள் வைக்கப்பட்டன. வெளியில் உள்ள மீன் ஊக்கியாக செயல்பட, அதனை உண்ண பெட்டியை விட்டு வெளியே வர பூனை முயற்சி செய்கிறது. கம்பிக்குள் தலையை விட்டுப் பார்த்தும், பெட்டியின் பக்கங்களில் மோதியும், கம்பிகளைக் கடித்தும், பிராண்டியும் பார்த்தது. பயன் கிட்டவில்லை. இந்நிலையில் தற்செயலாகப் பூனையின் வால் தாழ்ப்பாளின் மீது படுவதால் கதவு திறக்கப்படுகிறது. வெளியே ஓடிவரும் பூனை ஒரே ஒரு மீன் துண்டு மட்டும் தின்ன அனுமதிக்கப்படுகிறது. மீண்டும் அதே பெட்டிக்குள் பூனை அடைக்கப்படுகிறது. கதவைத் திறந்தால் மீன் என்ற வெகுமதி கிடைக்கும் என்ற வெளித்தூண்டலும், பூனையின் பசி என்ற உள் தூண்டலும் பூனையை மீண்டும் கதவைத் திறக்கும் முயற்சியில் ஈடுபடத் தூண்டுகின்றன. இம்முறையும் பல தவறான முறைகளில் ஈடுபட்டாலும் முடிவில் வெற்றியடைகிறது. இவ்வாறு பல முயற்சிகளுக்குப் பிறகு பூனை செய்யும் தவறுகள் படிப்படியாகக் குறைக்கப்பட்டு தவறுதலும் முயற்சிக்கு நேரமும் குறைகிறது. தொடக்கத்தில் கடினமாகவும், சிக்கனமாகவும் இருந்த செயல் பயிற்சியின் பயனாக இறுதியில் எளிமையாகவும் திருத்தமாகவும் அமைகிறது. மொழி உச்சரிப்பு, புதிய மொழியைக் கற்றல், கணிதம், ஆராய்ச்சி, புதிய பொருளை இயங்கச் செய்தல், புதிய ஊருக்குச் செல்லல் போன்ற பல நிலைகளில் முயன்று தவறிக்கற்றல் உதவுகிறது.

தார்ண்டைக் இக்கற்றல் கோட்பாட்டின்படி ஆயத்தவிதி, பயிற்சிவிதி, பயன்விதி என்ற மூன்று கற்றல் விதிகளைத் தந்தார். மாணவர் கற்பதற்கு ஆயத்த நிலையில் இருக்கும்போது கற்றல் நிகழ்வது மகிழ்ச்சி தரும். கற்றல் நிகழாதது சலிப்பைத்தரும். ஆனால் ஆயத்த நிலையில் இல்லாதபோது கற்றல் பயன் தராது. தூண்டல் - துலங்கல் தொடர்பு பயிற்சியால் வலுப்படுத்தப்படும். பயிற்சியில்லாமல் வலுவிழந்து விடும். பயன்விதிப்படி, தூண்டல் - துலங்கல் தொடர்பு பயனையும், மனநிறைவையும் அளிக்குமாயின் கற்றல் சிறந்து விளங்கும்.

அல் ( Hull ) என்னும் உளவியல் அறிஞர் கற்றல் கொள்கைகளில் புதிய கோணத்தைக் கண்டுள்ளார். அவர் கற்றலை உயிரின் தேவைகளோடு இணைத்தார். அவரது கற்றல் கோட்பாடு மனதில் ஏற்படும் தீவிர தூண்டுவிசையைக் குறைக்கும் கொள்கையாக இருந்தது. தூண்டுவிசை உயிரியல் ( Drive ) மன இறுக்கத்தையும், அமைதியின்மையையும் தோற்றுவிக்கின்றன. தனது மன இறுக்கத்தைக் குறைப்பதற்காக ஏதேனும் செயலில் ஈடுபட உயிர் ஊக்குவிக்கப்படுகிறது. செயல்புரியும்போது உயிரி பல தூண்டல்களைச் சந்திக்கிறது. அதற்குத் தொடர்ந்து பல துலங்கல்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு தூண்டல்,

துலங்கல் ஏற்படுவதற்கு ஒருவகை தொடர்பு தேவைப்படுகிறது. இந்தத் தொடர்புக்குப் பிறகு வெகுமதியோ தண்டனையோ கிடைக்கப்படா விடில் தொடர்பு தொடர்ந்து நடைபெறுவதில்லை.

கற்றல் முறையில் தேவைகளின் முக்கியத்து வத்தை அல் வலியுறுத்தினார். பாடத்திட்டத்தில் எல்லாப் பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளின் தேவை களும் நிறைவு செய்யப்படவேண்டும். பள்ளி அனு பவங்களில் வலுவூட்டிகள் சிறந்த முறையில் அமைக் கப்படவேண்டும். வெகுமதி, தண்டனை இரண் டுமே உயிரியின் மன இறுக்கத்தைக் குறைக்கின்றன. அல் கற்றலை எண் அளவைகளில் கணக்கிட்டார். ஓர் அடையாளத்திற்கும், துலங்கலுக்கும் இடையே உள்ள கால இடைவெளியை அளந்தார்.

**மாதிரியைப் பின்பற்றுதலும் அறிதல் சார் கற்ற லும் ( Imitation and Cognitive Learning ) :** பெரும் பாலும் குழந்தைகள் பிறரைப் பார்த்துக் கற்றுக் கொள்கின்றனர். குழந்தைகள் பெரியவர்களைப் பார்த்து பல நடத்தைகளில் அவர்களைப் போலவே செய்து பழக்கங்களை உருவாக்கிக் கொள்கின்றனர். மனிதர்கள் போல் கிளியும் இம்முறையிலேயே பேசக் கற்றுக் கொள்கிறது. குல்லாய் வணிகர் தன் னிடமிருந்து பறிபோன குல்லாய்களைக் குரங்குக் கூட்டத்திலிருந்து திரும்பப் பெற்றுக்கொள்ள, தன் தலையிலிருந்த குல்லாவைக் கழற்றிக் கீழே போட்ட தும் அவை அவரைப் பார்த்துத் திருப்பிப் போட்டதும் இதற்கு பொருந்தி வரும் கதையாகும்.

கற்றலில் துண்டல் - துலங்கல் தொடர்பை விட கவனம், சிந்தித்தல், திட்டமிடுதல், எதிர்பார்ப்புகள் ஆகியனவும் முக்கிய பங்கை ஆற்றுகின்றன என்பது நிகழ்காலத்திய கற்றல் கோட்பாடாகும். கற்றலில் அறிதலின் பங்கை வலியுறுத்தியவர்களுள் ஆல்பர்ட் பண்டுரா ( Albert Bandura ) முன்னோடியாக இருந் தார். முயன்று தவறிக் கற்றல் மிகக் கடினமானதும், சிற்சில சமயங்களில் ஆபத்தை விளைவிக்கக் கூடியது மாகும். முயன்று தவறிக் கற்றல் முறையில் மகிழுந்து (Car) ஓட்டக்கற்றுக் கொள்ளுமாறு ஒரு சிறுவனிடம் திறவுகோலைத் தந்துவிட்டால் தெருவில் செல்வோர் நிலை என்னாவது? பொதுவாகக் குழந்தைகளிடம் திறமையுள்ள சில மாதிரிகள் காட்டப்பட்டால் அவற்றை உற்றுநோக்குதல் மூலம் சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் உலகின் நடைமுறை அனுபவத்திற்கும் தேவையான பல சிக்கலான நடத்தைகளைக்கூட குழந்தைகள் எளிதாக, விரைவில் கற்றுக்கொள்கின் றனர். பண்டுராவின் கருத்துப்படி பிறரைப் பார்த்துக் கற்றலின் வெற்றிக்குக் காரணம், கவனம், மாதிரியின் செய்கைகளை நினைவில் வைத்தல், மாதிரிகளின் இயக்கங்களையும், செய்கைகளையும் மீண்டும் செய்து பார்த்தல், வலுவூட்டுதல் ஆகியவை தேவைப் படுகின்றன. அவர் பிறரைப்பார்த்துக் கற்றல் செய்தி களுக்குப் புத்துருவாக்கும் நிலையைச் ( Information Processing ) செயலாக்க் கருதுகிறார். நடத்தை, மனிதர் அறிவு, சூழ்நிலை ஆகிய மூன்றிற்கும் இடையே இரு வழி தொடர்புகள் உள்ளதாக கூறியவர் அவர். இரிபினிபீல்டு ( Riffany Filld, 1982 ) குழுவினர், பச்சிளம் குழந்தைகளால் கூட பிறரது முக பாவனை களைப் பார்த்து அவர்களைப் போலவே திருப்பிச் செய்ய இயலும் என்று சோதனைகள் மூலம் நிரூ பித்துள்ளனர். தங்களுக்கு எதிரே நிற்கும் நபர்களது முக உணர்ச்சிகளைக் குழந்தைகள் பிரதிபலிப்பதைக் காணலாம்.

சூழ்நிலையைப் பொறுத்து, தூண்டல் - துலங்கல் தொடர்பின் வலிமையால் கற்றல் ஏற்படுகிறது என்ற முந்தைய கருத்தினை இன்றைய அறிதல்சார் உளவி யல் அறிஞர்கள் ( Cognitive Psychologists ) பலர் முழு மையாக ஒப்புக்கொள்ளவில்லை. கற்பவர் மனி தனோ, புறாவோ, எலியோ எதுவாயினும் சூழ் நிலையில் தாக்கமே கற்றலில் ஏற்படுகிறது என்கின்ற னர் நடத்தைக்கொள்கையினர். ஆனால், அறிதல்சார் கொள்கையினரோ கற்றல் உயிரின் வெளிப்புறத்தே மட்டுமன்று, அகத்திலும் நடைபெறும் செயல், சிந்திக்கும் முறைகள் தூண்டலுக்கும் துலங்கலுக்கும் இடையே தங்கள் பங்கை ஆற்றுகின்றன. கற்றலின் உயிரின் தனித்தன்மையும் பங்கு பெறுகிறது என்கின் றனர். கற்றல் கோட்பாடுகள் ஒவ்வொன்றும் கற்பித்த லில் வெற்றிபெற ஆசிரியருக்குக் கைகொடுக் கின்றன.

- கி. அ.

**கன்னோசி ஆங்கிரே :** மராட்டிய நாட்டில் சிறந்த கப்பற்படைத் தளபதியாகவும், வலிமைமிக்க போர்வீரராகவும் விளங்கியவர் கன்னோசி ஆங்கிரே ( Kanhoji Angria ). இவருடைய தந்தை துக்காசி ஆங்கிரே. சத்ரபதி சிவாஜியின் கப்பற்படையில்

சிறப்பாகப் பணியாற்றியவர். கன்னோசி ஆங்கிரே மராட்டிய கப்பற்படையை வலிமைமிக்கதாகச் செய்து, ஆங்கி லேயரையும், போர்த்துகீசியரையும் எதிர்த்துப் போரிட்டதால் மராட்டியக் கப்பற் படையை ஏற்படுத்தியவர்களுள் இரண்டாமவர் எனப் பாராட்டப் பெறுகிறார்.

மராட்டிய நாட்டில் சாகுவிற்கும், தாராபாயிற்கும் இடையே உள்நாட்டுப் போர் தொடங்கியபோது கன்னோசிஆங்கிரே தாராபாயை ஆதரித்தார். இவர் சாகுவிற்கு எதிராகப் படையை நடத்திச் சென்று உலோகர் ( Lohagarh ), இராசுமாச்சி ( Rajmachi ) ஆகிய கோட்டைகளைக் கைப்பற்றினார். எனவே சாகு தம்முடைய பேசுவா ( Peshwa ), பகிரோ பந்து பிங்லே ( Bahiro Pant Pingle ) தலைமையில் ஒரு படையை அனுப்பினார். ஆங்கிரே அவரைத் தோற்கடித்து சிறை செய்த பின்னர், சத்தாராவை நோக்கிப் புறப் பட்டார். அப்போது மராட்டிய நாட்டின் பிரதிநிதி, அசுட்டப்பிரதாவின் அமைச்சர்கள் ஆகியோர் ஆங்கி ரேயிக்கு எதிராகப் படையை நடத்திச் செல்ல மறுத் துவிட்டனர். அத்தகைய இக்கட்டான நேரத்தில் பாலாசி விசுவநாத்து ( Balaji Viswanath ) உறுதியுடன் போர்க்களம் செல்ல முன்வந்தார்.

சிறந்த வீரரான கன்னோசி ஆங்கிரேயைப் போரில் வெல்வது கடினம் என்பதை பாலாசி நன்கு அறிவார். மற்றும் அவரைச் சாகுவின் கட்சியில் சேர்த்து விட்டால் சாகுவின் வலிமைப் பெருகும் எனக் கருதினார். எனவே, தம்முடைய அறிவுக் கூர்மையும், சூழ்ச்சித்திறமையையும் பயன்படுத்தி னார். கன்னோசி ஆங்கிரேயின் உள்ளத்தில் அவ ருடைய பகைவர் களான சித்திகள், ஆங்கிலேயர், போர்த்துகீசியர் பற்றிய அச்சத்தைப் பாலாசி விசுவ நாத்து உண்டாக்கினார். அவருடைய தேசிய உணர் வைத் தூண்டிவிட்டு சிவாஜியால் தோற்றுவிக்கப் பட்ட மராட்டியப் பேரரசின் புனிதத்தன்மையைக் கூறி, அதனைக் காக்க தரைப்படையுடன், கப்பற் படையும் இணைந்து செயல்பட வலியுறுத்தினார். அதன் விளைவாக ஆங்கிரே சாகுவின் கட்சியில் சேர்ந்தார். சாகு அவரைத் தம்முடைய கப்பற்படைத் தளபதியாக ( Sarkel ) நிய மித்தார். எனவே சாகுவின் வலிமை பெருகியது.

ஆங்கிரே ஆங்கிலேயக் கப்புற்படையை அடிக்கடி தாக்கி வந்தார். இவர் ஆங்கிலேயருடைய வெற்றி என்ற கப்பலைக் கைப்பற்றியதால் கி.பி.1717இல் போர் தொடங்கியது. அவர்களுடன் கி.பி.1722இல் போர்த்துகீசியரும் சேர்ந்துக்கொண்டனர். இருவரும் ஆங்கிரேயின் கப்பற்படை இருந்த கொலாபாவின் ( Kolabah ) மீது தாக்குதல் தொடுத்தனர். போர்த்து கீசியர் தரைவழியாக வந்தபோது ஆங்கிலேயக் கப் பல்கள் மூன்று மாதியூசு ( Mathews ) தலைமையில் வந்தன. போர்த்துகீசியரின் கோழைத்தனம் காரண மாக அவர்கள் இம்முயற்சியில் வெற்றிபெற முடிய வில்லை. ஆங்கி லேயர் கப்பல்கள் சிலவற்றை இவர் கி.பி.1727இல் கைப்பற்றினார். அவற்றுள் மிக விலை யுயர்ந்த பொருட்களை ஏற்றிச் சென்ற தெர்ஸீ ( Darlay ) என்ற கப்பலும் அடங்கும். இவர் 1728ஆம் ஆண்டு இறந்தார்.

- சி. இரெ.

**காட்பைசசு, வீமா:** முதலாம் காட்பைசசிற்குப் பின்னர் அவருடைய குமாரர் வீமா காட்பைசசு ( Vima Kadphises ) அல்லது இரண்டாம் காட்பைசசு கி.பி.64இல் அரசரானார். அது முதல் கி.பி.78இல் தான் இறக்கும்வரை இவர் பல போர்களை மேற் கொண்டு குசாணப் பேரரசை விரிவுபடுத்தினார். இவருடைய காலத்தில் அப்பேரரசு கிழக்கில் மதுரா வரை பரவியிருந்தது. அப்போது குசாணப்பேரரசு மேற்கில் உரோமானியப் பேரரசுடனும், கிழக்கில் சீனாவுடனும் வணிகத்தொடர்பு கொண்டிருந்தது. இந்திய, மற்றும் பிற நாட்டு வணிகர்கள் பட்டு, நறு மணப்பொருட்கள், வைரம் மற்றும் சில பொருட் களில் வணிகம் செய்தனர். இவருடைய பொன், வெள்ளி நாணயங்கள் அதிக அளவில் கிடைப்பதி லிருந்து இவருடைய ஆட்சியில் பொருளாதார வளம் பெருகியிருந்தது என அறியலாம். அவற்றில் சிவன், அவரது ஊர்தியான எருது, அவரது சின்னங் களான சூலம் அல்லது கோடாரி ஆகியவை பொறிக் கப்பட்டதிலிருந்தும், தம்மை மகீசுவரா என இவர் குறிப்பிடுவதிலிருந்தும் இவர் சைவ சமயத்தைப் பின்பற்றினார் எனத்தெரிகிறது. சிலவற்றில், ‘மகா ராசா ராசாதி ராசா சர்வலோக ஈசுவரா மகேசுவரசா வீமா காட்பை சசா திரத்ரா’ என எழுதப்பட்டுள்ளது.

- சி. இரெ.

**காண்வ மரபு :** மகத நாட்டில் மௌரியப் பேரரசு வீழ்ச்சியடைந்த பின்னர் அதனைச் சுங்கர்கள் ஆட்சி செய்தனர். அவர்களைத் தொடர்ந்து அந் நாட்டை ஆண்டவர்களே காண்வ மரபினர். இம்மர பினைத் தோற்றவித்த வாசுதேவர் ஒரு காண்வ பிரா மணர் ஆதலால் இது காண்வ மரபு எனப்பட்டது. பாண பட்டரின் கூற்றுப்படி சுங்க மரபின் இறுதி அரசனான தேவபூதி அல்லது தேவபூமியை அவரது அமைச்சரான வாசுதேவ காண்வ கொன்று அரசப் பதவியைக் கைப்பற்றினார். வாசுதேவரின் சூழ்ச்சிப் படி அரசர் தேவபூதியை அவருடைய அடிமைப்பெண் ஒருத்தி அவருடைய மனைவியைப்போல் வேட மணிந்து சென்று கொன்றாள். இம்மரபின் நான்கு அரசர்கள் நாற்பத்தைந்து ஆண்டுகள் ( கி.மு. 72 முதல் 27 வரை அல்லது கி.மு. 75 முதல் 30 வரை ) ஆட்சி புரிந்தனர் எனவும், அவர்களுள் வாசுதேவர் 9 ஆண்டு கள், பூமி மித்திரர் 14 ஆண்டுகள், நாராயணன் 12 ஆண்டுகள், அசர்மன் 10 ஆண்டுகள் ஆட்சி செய்தனர் எனவும் புராணங்களில் காணப்படுகிறது. இம் மரபின் இறுதி அரசனான சுசர்மன் ஆந்திர சாதவாகன அரசர் ஒருவரால் தோற்கடிக்கப்பட்டுக் கொல்லப்பட் டார் எனக் குறிப்பிடப்படுகிறது. அவரைவென்ற ஆந்திர (சாதவாகன) அரசர் யார் என்பது தெளிவாக வில்லை.

வாசுதேவரின் ஆட்சிக்கு மகத நாடு மட்டுமே உட் பட்டிருந்தது. பஞ்சாபைக் கிரேக்கர்கள் கைப்பற்றிக் கொண்டனர். கங்கைச் சமவெளியில் மித்ர அரசர்கள் பலர் ஆட்சி செய்து வந்தனர். விதிசா ( கிழக்கு மாள வம் அல்லது அவந்தி ) சுங்கர்களின் ஆட்சியிலிருந்தது. பின்னர் இந்நகரம் காண்வமரபின் கைக்கு வந்தது. இவ்விரு மரபினரின் ஆட்சியில் இது சிறந்த வாணிக மையமாகத் திகழ்ந்தது. பல இடங்களிலுமிருந்து வணிகர் பலர் இந்நகருக்கு வந்து வாணிகம் செய்து வளம் பெற்றனர்.

- சி. இரெ.

**காயிதே மில்லத் :** சமூகத்தின் காவலர் எனப் போற்றப்பட்ட இவரின் இயற்பெயர் மி. முகமது இசுமாயில். ஏறத்தாழ 50 ஆண்டுகள் இந்திய அரசி யல், சமுதாயப் பணிகளில் செயற்கரிய செய்த இச் சான்றோர் பிறப்பிலே சிறப்பமைந்தவர். திருநெல் வேலிப்பேட்டையில், சிறப்புடைய முசுலீம் குடும் பத்தில் மௌலவி மிஆன் இராவுத்தருக்கும், முகையதீன் பாத்திமாவுக்கும் இரண்டாம் மகனாக 1896இல் பிறந்தார். சி. எம். பள்ளியில் பயின்றார். கல்வி கற்று வரும்போதே பாலிய முசுலீம் சங்கம் என்ற ஒன்றைத் தொடங்கினார். பேட்டையில் நடை பெற்று வந்த அராபிக் கல்லூரி ஆசிரியர்களுடனும், மாணவர்களுடனும் பழகிச் சமய அறிவையும் ஆர்வத் தையும் பெற்றார். சென்னைக் கிறித்துவக்கல்லூரியில் இளங்கலை வகுப்பில் பயின்றபோது காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நடத்தினார். நாட்டு விடுதலையில் ஆர்வம் கொண்டு படிப்பைத்துறந்து ஒத்துழையாமை இயக்கத்தில் தம்மை இணைத்துக் கொண்டார். சென்னையில் புகழ்பெற்ற சமால் முகையதீன் குழுமத்தில் உதவியாளராகப் பணியாற் றத் தொடங்கினார். தம் தகுதியாலும் திறமையாலும் அந்நிறுவனத்தின் பங்குதாரரனார். சமால் குடும்பத் தைச் சார்ந்த சமால் அமீதா அம்மையாரை 1923இல் மணந்தார்.



காயிதே மில்லத்

கல்லூரியை விட்டு நின்றபோதும் தனியாத அறிவு வேட்கை கொண்டு நூல்களைப் படித்து வந்தார். பல் துறை அறிவு பெற்றார். நேர்மைத் திறத்தால் உயர்ந்து விளங்கினார். நாட்டு விடுதலையிலும் இசுலாமிய சமுதாயப்பணியிலும் தீவிரமாக ஈடுபட்டார். திரு நெல்வேலியில் 1920இல் மாநிலக் காங்கிரசு

மாநாட்டில் பூரண சுதந்திரம் கோரும் தீர்மானம் நிறைவேற உதவியாக இருந்தார். ஆங்கிலேய அறிஞர் மர்மதூ கபிர்தாஸ், அல்லமா இக்பால், மௌலானா அப்துல் அலீம், சித்தீக்கி, மௌலானா சுலைமான் நக்வி முதலிய அறிஞர்களுடன் பழகும் வாய்ப்பைப்பெற்றார். தென்னிந்திய முசுலீம் கல்விச் சங்கம், சென்னை அஞ்சமனே இமாயத்தே இசுலாம் ஆகியவற்றின் துணைத் தலைவராகயிருந்து பணியாற்றினார். காங்கிரசு வட்டாரத்தில் சாதி உணர்வு தோன்றியது கண்டு, அகில இந்திய முசுலீம் லீகில் சேர்ந்தார். சென்னை மாவட்ட முசுலீம் லீகின் தலைவரானார். சென்னை சட்டசபைக்கு 1945இல் சென்னை நகரத் தனித் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்ட சபையின் எதிர்கட்சித் தலைவராகவும் ஆனார். சென்னையில் முசுலீம் எனும் பெயரில் ஒரு நாளிதழ் தொடங்கினார்.

பாக்கிஸ்தான் பிரிந்தபின் இந்திய யூனியன் முசுலீம் லீக் எனும் அமைப்பைத் தொடங்கி அதன் தலைவராகப் பணியாற்றி வந்தார். இந்திய நாட்டின் சுதந் திரத்தையும் ஒற்றுமையையும் காப்பதே இலட்சியம் என அறிவித்தார். நாட்டுப் பிரிவினைக்குப் பின் தோன்றிய அவநம்பிக்கையையும் வெறுப்பையும் நீக்க முற்பட்டார். முசுலீம் மக்களுக்காக மட்டுமல்லாமல் சிறுபான்மைச் சமூகத்தினர், தாழ்த்தப்பட்டோர், பின்தங்கியோர் ஆகியோரின் நலனைக் காக்கவும் பாடுபட்டார்.

இந்திய அரசாங்கம், இணைய மறுத்த ஐதராபாத் மீது போலிசு நடவடிக்கை எடுத்து இந்தியாவுடன் சேர்த்த போது அதனை வரவேற்று ஆதரித்தார். காசுமீரம் இந்தியாவைச் சேர்ந்ததே என்று கூறி இந்திய அரசுக்கு ஆதரவு தந்தார். இந்திய அரசியல் நிருணய சபைக்கு 1948இல் தேர்ந்தெடுக்கப்பட்டார். பழமையும் இலக்கிய வளமையும் கொண்ட தமிழ் மொழியே இந்திய நாட்டின் ஆட்சிமொழியாகும் தகுதிப் பெற்றது என்று அச்சபையில் தெளிவுபடுத்தினார். சென்னை சட்டசபையிலிருந்து 1952இல் இராச்சிய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1962, 1967, 1971 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற மூன்று தேர்தல்களிலும் கேரளத்திலுள்ள மஞ்சேரி தொகுதியிலிருந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அத்தேர்தல்களின்போது இவர் தொகுதிக்குச் சென்று வாக்காளரைச் சந்திக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. செஞ்சீனா 1962இல் இந்தியாவின் வட எல்லையில் தாக்கியபோது ஆத்திரம் அடைந்தார். தம் ஒரே மகனையும் போர்ப் பணிக்கு அனுப்பத் துணிந்தார். தம் நாடாளுமன்ற ஊதியத்திலிருந்து ஒரு பகுதியைப் போர் நிதிக்களித்து வந்தார். பாகிஸ்தான் பாரதத்தின் மீது தாக்கியபோது அதைக் கண்டனம் செய்தார்.

திராவிட முன்னேற்றக்கழகம், சுதந்திரக்கட்சி, முசுலீம் லீக் கூட்டணி உருவாகத் துணைபுரிந்தார். இவர் ஆதரவால் பல கல்லூரிகள் தோன்றியுள்ளன. கேரள மாநிலத்தில் பாரூத் கல்லூரியும், சென்னைப் புதுக் கல்லூரியும், திருச்சி சமால் முகம்மது கல்லூரியும் அவற்றுள் குறிப்பிடத்தக்கவை.

இவர் 1972இல் தம் 76ஆம் வயதில் மறைந்து விட்டார். தமிழக அரசு தஞ்சை மாவட்டத்தை இரு பகுதிகளாகப் பிரித்து, நாகப்பட்டினத்தைத் தலைமையிடமாகக் கொண்ட பிரிவிற்கு இச்சான்றோரின் பெயரைச் சூட்டிப் பெருமைப்படுத்தியிருந்தது.

- ந.மு.

**காரைக்காடு** : தென்னாற்காடு மாவட்டத்தில் அமைந்துள்ளது காரைக்காடு என்னும் சிற்றூர். இவ்வூர் வரலாற்றுச் சிறப்புமிக்க அரிக்கமேடு என்ற ஊரிலிருந்து முப்பது கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூரின் பண்டைய வரலாற்றுச் சிறப்பை அறிந்துகொள்ளும் பொருட்டு பாரிசு நாட்டைச் சேர்ந்த டாக்டர் யுவேசுமார்டின் ( Dr. Yvesmartin ) என்ற அறிஞரால் மேற்பரப்பு ஆய்வும், ‘புரோட்டான் மேக்னட்டோமீட்டர்’ ( Proton - Magneto Meter ) ஆய்வும் நடத் தப்பட்டன. இவ்விடத்தில் வரலாற்றுச் சிறப்பினை அறிந்துகொள்ளும் பொருட்டு சோதனைக் குழிகள் அகழ்ந்தெடுக்கப்பட்டன. இச்சோதனை அகழ்வாய்வில் மென்மையான கறுப்பு சிவப்பு நிறம் கொண்ட மட்கலங்களின் பகுதிகள் குறைந்த அளவிலும், வழவழப்பான சிவப்பு நிறம் பொருந்திய மட்கலங்களின் பகுதிகளும் செதுக்கு வேலைபாடமைந்த வகையைச் சேர்ந்த மட்கலங்கள் காணப்பட்ட பகுதிகளும் அகழ்ந்தெடுக்கப்பட்டன. செதுக்கு வேலைபாடமைந்த மட் கலங்கள் சாம்பல் நிறத்திலும், இளஞ்சிவப்பு நிறத்திலும் இங்கே

அகழ்ந்தெடுக்கப்பட்டன. அவை பெரும்பாலும் தட்டுகளாகவும் அத்தட்டுகள் வளைந்த பக்கங்களுடனும் கிடைத்தன. ஏனைய மட்கலங்களின் வடிவங்கள், வட்ட வடிவம் கொண்ட அடிப்பகுதிகளையுடைய கிண்ணங்களாகவும், வளைந்த கழுத்துப் பகுதிகளைக் கொண்ட சமைக்கும் கலங்களாகவும் விளங்கின.

இங்கு நடைபெற்ற சோதனை அகழ்வாய்வின் வண்ணக் கற்களாலான ( கிறிசுடல், காபர், சால்சிடனி, அகேட், கார்னீலியன் ) மணிகள் அகழ்தெடுக்கப்பட்டன. அவை பல்வேறு வடிவங்கள் கொண்டு விளங்கின. இங்கு முழுமையான கண்ணாடி மணிகளும், கண்ணாடி மணிகள் செய்வதற்குரிய மூலப் பொருட்களும் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்வூர், மணிகள் செய்யும் ஒரு தொழிற்கூடமாகத் திகழ்ந்திருப்பதை இக்கண்டுபிடிப்புகள் மெய்ப்பிக்கின்றன. இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட பொருட்கள், அரிக்கமேட்டில் கிடைத்த பொருட்களுடன் ஒத்திருப்பதால் இவ்விடத்தில் நிலவிய பண்பாடு கி.பி. 1, 2 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம்.

இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட பழம் பொருட்களைக் கொண்டு கி.மு.4ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு.3ஆம் நூற்றாண்டு வரை கறுப்பு சிவப்பு நிற மட்கலங்களைப் பயன்படுத்திய மக்கள் வாழ்ந்த காலம்தான் முதன்முதலில் இங்கு தொடங்கியிருக்கிறது என்று கொள்ளலாம். கி.பி. 1ஆம் நூற்றாண்டில் இவ்விடம் மேற்கத்திய உலகத்துடன், குறிப்பாக ரோம் நாட்டுடன் வாணிகத் தொடர்பு கொண்டு விளங்கியதை இங்கு அகழ்ந்தெடுக்கப்பட்ட ரோம் நாட்டு மதுக்குடுவைகளும், செங்கற்களாலான கட்டடங்களின் பகுதிகளும் எடுத்தியம்புகின்றன. இவ்விடம் கி.பி.2ஆம் நூற்றாண்டு வரை வணிகத்தில் செழித்திருந்தது என்பதை இக்கண்டுபிடிப்புகள் மெய்ப்பிக்கின்றன. பின்னர், படிப்படியாக இவ்விடம் வரலாற்றிலிருந்து மறைந்துவிட்டது. சோழ மண்டலக் கடற்கரையில் அமைந்துள்ள அரிக்கமேடு, வசவ சமுத்திரம், காவிரிப்பூம்பட்டினம் போன்று இவ் வூரும் ரோம் நாட்டுடன் வணிகத் தொடர்பு கொண்டு விளங்கிய ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க பண்டைய ஊராகும்.

- அ. அ.

**காலிங்வுட் ராபின் சியார்சு :** ஆங்கில தத்துவ ஞானியும், வரலாற்று ஆசிரியருமான இவர் கானிசுடன் இலங்காசியரில் பிறந்தார். சான்ரங்கினுடைய நண்பரும், வாழ்க்கை வரலாற்று ஆசிரியருமான டபுல்யூ. சி. காலிங்வுட், ராபின் சியாரிசியுடைய தந்தை ஆவார். காலிங்வுட், ரக்பியில் இருந்தபோது அங்குள்ள பெரும்பாலான ஆசிரியர்கள் பற்றி வெறுக்கின்ற வகையில் எழுதி ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தைப் புகழ்ந்து எழுதினார். இளநிலைப் பட்டப் படிப்பில் படிக்கும்போது பண்பாட்டிலக்கம் பற்றி இவர் எழுதிய கட்டுரை கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது. இவர் 1912 முதல் பெப்புரோக்கல்லூரியிலும், 1934 முதல் ‘வெயின் புளிட்’ பேராசியரியராகவும் பணியாற்றினார். முதல் உலகப்போரின்போது கடற்படை ஆட்சிக் குழுத் தகவல் செய்தியாளராகச் சில காலம் பணி யாற்றியதைத் தவிர, இவர் ஆக்சுபோர்டில் தொடர்ந்து பணியை மேற்கொண்டார். இந்நிலையில் 1941ல் உடல்நிலை சரியில்லாததால் கட்டாய ஓய்வு பெற்றார். காலிங்வுட் தன் கொள்கையை வெளிப்படுத்துவதில் தகுதி வாய்ந்தவராக இருந்த போதிலும் இவருடைய பெரும்பாலான நூல்கள் கொள்கை அளவில் காணப்படுகின்றன. கேள்விகளுக்கு விடை தெரிவிக்கும்போதும், வெளிப்படுத்தும் போதும் மற்றவர்களுடைய கருத்தை ஏற்றுக் கொண்டு முடிவை விவரிக்கும்போதும் இவர் மிகச் சிறந்த அறிஞராக விளங்கினார். இவரால் எழுதப் பெற்ற **இங்கிலாந்து வரலாறு** புகழ்மிக்கது.

காலிங்வூட்டினுடைய பிற நூல்களைவிட அவருடைய **அழியாத உண்மையான கல்வெட்டு** எனும் நூல் மேன்மை வாய்ந்ததாக இன்றைய தொல்பொருள் ஆய்வாளர்கள் கருதுவர். காலிங்வுட்டின் தத்துவச்சிந்தனைகளை மூன்று கால அளவுகளில் காண்பர். 1. 1912 - 1927 கருத்தியற் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளுதல், 2. 1927 - 1937 சிறப்பு அறிவியலின் பக்குவச் சிந்தனை கருத்தியற் கோட்பாட்டினடிப் படையில் உள்ளது, 3. 1937 - 1943 கருத்தியற் கோட்பாட்டைத் தவிர்த்தல்.

காலிங்வுட்டின் முதல் நூலான **மதமும் தத்துவமும்** என்ற நூலில், மூன்று எண்ணங்களை வலியுறுத்தியுள்ளார். 1. மனித மூளையின் உருவாக்கம் காட்டுமிராண்டித்தனமாக இருந்தாலும் சரி அதை உளவியல் அடிப்படையில் இல்லாமல் வரலாற்றின் அடிப்

படையில் பயிலவேண்டும், 2. வரலாற்றின் அறிவு அடையக்கூடியது, 3. வரலாறும் தத்துவமும் ஒன்றானவை. காலிங்வுட், "தத்துவம் என்பது சொற்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. அதை மனிதன் தன்னுடைய சிந்தனையிலும் நடைமுறையிலும் நினைவு செய்கின்றான்" என்று கூறுகிறார். மேலும், மக்கள் தங்களுடைய தத்துவம் என்னவென்று தெரியாததால் தத்துவவாதிகள் மக்களுடைய தத்துவம் என்னவென்பதுபற்றி அறிய முயற்சி எடுக்கவேண்டும் என்றும் கூறினார்.

1919 வரையில் இவர் தத்துவம் என்பது மனிதனுடைய இறுதியான மேலும் பெரும்பாலும் ஒத்துக்கொள்ள முடியாத வரலாற்றுக்கண்டுபிடிப்பாகும் என்று கூறினார். இவர் தத்துவம், வரலாற்றுடன் இணைந்துள்ளது என்ற கருத்தை விமர்சித்ததோடு, தத்துவம் என்பது வரலாற்றினுடைய பிரிவு ஆகும் என்று சுட்டிக்காட்டியுள்ளார். வரலாறும் தத்துவமும் சாதாரண நிலையில் பார்க்கும்போது தொடர்புடையது என்று இவர் நினைக்கவில்லை. ஆனால், முனைப்புடன் ஆராய்ச்சி செய்யும்போது இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய நிலையில் உள்ளது என்கிறார். தத்துவமும் வரலாறும் சமநிலை வாய்ந்தவை என்பதைக் காலிங்வுட் ஒத்துக்கொள்கிறார்.

காலிங்வுட்டுக்கு தன் தொடக்க கால கருத்துகளை அவ்வப்போது மாற்றி அமைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இவர் 'கலைக்கொள்கைகள்' என்ற புதிய நூலில் கிரேக்க தத்துவஞானியான குரோசேயின் கருத்துகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறார். காலிங்வுட் தன் இறுதி நூலான **புதிய மிகப் பெருஞ்செல்வர்** என்ற நூலில் தத்துவத்தின் உள்ளக் கருத்தைச் சரி செய்தது மட்டுமல்லாமல் விரிவாக விளக்கவும் செய்தார். உள்ளக்கருத்து என்பது புலன் உணர்வு என்றும் அதே சமயம் ஒவ்வொரு புலன் உணர்வு செயலுக்கும் ஒரு பொருள் இருக்கிறது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். புலன் உணர்வின் பல வகை செயல்முறைகளைப் பிரித்து வகைப்படுத்தினார். அவை, 1. முற்காலத்திய புலன் உணர்வு, 2. விருப்பம், 3. ஆசை, 4. தேர்ந்தெடுக்கும் சுதந்திரம், 5. காரணம்.

காலிங்வுட் தன் வரலாற்றில் குறிக்கோள் நிலையை எய்த விரும்புகிற கருத்தின் தத்துவத்தை மறுத்தாலும் மதம், இயற்கை அறிவியல், வரலாறு இவற்றைப் பற்றியுள்ள தன் கருத்துகளை மாற்றியமைத்ததில்லை. அது மட்டுமின்றி நுண்பொருள் கோட்பாட்டில் உள்ள வரலாற்று வாய்மையால், இவர் கலைக் கருத்துகளை மாற்றியதும் இல்லை. இவர் இடையிடையே சில கருத்துகளை மாற்றியமைத்தாலும் கூட அடிப்படையான கருத்துகளை ஊக்கமுடனும், ஆர்வத்துடனும் எடுத்துக்காட்டியுள்ளார்.

கருத்தியற் கோட்பாட்டிற்கு ஒரு மாற்றுப் பொருள் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தாலும் அழகிய வாதம், தத்துவத்தின் வரலாறு, தத்துவத்தின் உள்ளக் கருத்து ஆகியவற்றில் இவர் கண்ட வெற்றியை யாராலும் மறுக்க முடியாது.

- சு. இரா.

**கிருட்டிணவேணி அம்மாள், பண்டிதை, எசு :** இவர் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து மறைந்த தமிழ்ப்புலவர். இவர் கி.பி. 1888ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் புட்பால அப்பாயி நாயுடு, தாயார் காமாட்சி அம்மாள். இவர் தந்தையாரிடமே தமிழ் மொழியைக் கற்றுத் தேறினார். பின்னர், தமிழ் இலக்கிய நூல்களையும் இலக்கண நூல்களையும் செந்தமிழ் இரத்தினாகரம், மருத்துவமணி வல்லை சண்முக சுந்தர முதலியாரிடமும் வைணவ நூல்களை பிரபல்ல வித்வான் டி.டி. இராமசாமி நாயுடுவிடம் கற்றுப் பெரும் புலமையடைந்தார்.

இளமையிலேயே கணவனை இழந்த இவர் வைணவக் கோட்பாடுகளில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு விளங்கினார். திருநெல்வேலி, சிரீவில்லிபுத்தூர் போன்ற இடங்களில் பல வைணவச் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினார். சைவ சமய நெறிகளையும் இவர் ஆழ்ந்துணர்ந்து அறிந்தவராதலின், 1913ஆம் ஆண்டு தூத்துக்குடிச் சைவ சித்தாந்த சபையினர் இவருக்குப் 'பண்டிதை' என்ற பட்டமளித்துப் பாராட்டினர். இவர் 1922ஆம் ஆண்டு முதல் 1948ஆம் ஆண்டு வரை உயர்நிலைப் பள்ளியொன்றில் தமிழாசிரியையாகப் பணிபுரிந்து வந்தார். அப்பள்ளியுடன் தொடர்புகொண்ட இந்து மாணவிகள் நிலையத்திற்கு தலைவியாகவும் இவர் விளங்கினார். எளிய வாழ்வை மேற்கொண்டிருந்த இவர் பொதுநலத்திற்காக அளித்த நன்கொடைகள் ஏராளம்.

இவர், **பறம்புநாடும் பாரிமகளிரும், மங்கையரின் மாண்பு, மகளிர் இல்லம், கோதையார், சிரீவில்லிப்புத்தூர் விளக்கு, பெரியாழ்வார் பெண் கொடி** முதலிய நூல்களைப் படைத்துள்ளார். இவர் தம் **சிரீ வில்லிப்புதூர் விளக்கு** என்ற நூலுக்கு தமிழக அரசு ஆயிரம் ரூபாய் பரிசளித்துச் சிறப்பித்தது. இவர் 1966 ஆம் ஆண்டு மறைந்தார்.

- சா. உ.

**கீழக்கரை :** கீழக்கரை இராமநாதபுரம் வட்டத்தில் அமைந்துள்ள ஊர், இவ்வூர் இராமநாதபுரத்துக்கு தென்மேற்கு பதினெட்டு கி.மீ தொலைவில் உள்ளது. மன்னார் வளைகுடாவில் இவ்வூர் ஒரு துறைமுகப் பட்டினமாகத் திகழ்ந்து வந்தது. இத்துறைமுகப் பட்டினம் பாம்பன் துறைமுகத்திற்கும், தூத்துக்குடி துறைமுகத்திற்கும் இடையில் உள்ளது.

கீழக்கரையில் உள்ள சொக்கநாதசுவாமி கோயிலில் உள்ள ஒரு கல்வெட்டு இவ்வூரை, 'நினைத்தது முடித்தான் பட்டினம்' என்று குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு கி.பி. 1545ஆம் ஆண்டைச் சேர்ந்தது. இக்கோயிலில் உள்ள திருமலை சேதுபதி மகராசாவின் கல்வெட்டு இவ்வூரை, 'நினைத்தது முடித்த விநாயகர் பட்டினம்' என்று குறிப்பிடுகிறது. கி.பி. 1645ஆம் ஆண்டைச் சேர்ந்த பிறிதொரு கல்வெட்டு இவ்வூரை, 'அனுத்தொகை மங்கலமான கீழக்கரை' என்று குறிப்பிடுகிறது. இவ்வூரிலுள்ள பழமையான கோயில் சொக்கநாதசுவாமி கோயிலாகும். இக்கோயில் கி.பி பதினாறாம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுகள் உள்ளன. அக்கல்வெட்டுகள் அச்சுதராயரைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. கி.பி. 1828ஆம் ஆண்டைச்சார்ந்த ஓலைச்சுவடி ஒன்று கீழக்கரையைக் குறிப்பிடும் போது, 'செம்பிநாடு அனுத்தொகை மங்களம் நினைத்ததை முடித்தான் பட்டினமாகிய கீழக்கரை' என்று குறிப்பிடுகிறது. இதிலிருந்து கீழக்கரை செம்பி நாட்டில் இருந்ததாகத் தெரிகிறது. இச்செம்பி நாடு கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலிருந்ததாக கல்வெட்டுகள் குறிக்கின்றன. இங்கு ஒரு கத்தோலிக்க மாதா கோயிலுள்ளது. டச்சுக்காரர்களின் தொழிற்கூடம் ஒன்று அழிந்த நிலையில் காணப்படுகிறது. இவைகளைத் தவிர இங்கு பன்னிரண்டு பள்ளிவாசல்கள் உள்ளன. அப்பள்ளிவாசல்களில் குறிப்பிடத்தக்கது சும்மா பள்ளிவாசலாகும். இப்பள்ளிவாசலின் அருகே வள்ளல் சீதக்காதி மரைக்காயர் அமைவிடமும், பெருந்தகை சதக்கத்துல்லா அப்பா அடக்கவிடமும் அமைந்துள்ளன.

இங்குள்ள சும்மா பள்ளிவாசல் திராவிடக் கட்டடக்கலைப் பாணியைப் பின்பற்றி இசுலாமிய மத வழிபாட்டிற்கு ஏற்றாற் போல் உருவங்களும், விலங்கினங்களும் இடம் பெறாத வண்ணம் செடி, கொடி, மலர் இவைகளின் அணி வேலைப்பாட்டுடன் அமைக்கப்பட்ட ஒரு பள்ளிவாசலாகும். இப் பள்ளிவாசல் வள்ளல் சீதக்காதியால் கட்டப்பட்டதாகும். சீதக்காதி யின் காலம் கி.பி. 1650க்கும் 1720க்கும் இடைபட்டதாகும். இவ்வூருக்கு கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வெளிநாட்டினர் வரத் தலைப்பட்டனர். சேதுபதி மன்னர்கள் கி.பி. 1750இல் டச்சுக் காரர்களை இங்கு வாணிகம் செய்வதற்கு அனுமதி அளித்தனர். சேதுபதி மன்னர்களும் டச்சுகாரர்களுக்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. டச்சுக்காரர்கள் அவ்வுடன் படிக்கையை மீறி கோட்டையைக் கட்டினார்கள். அவ்வாறு கட்டப்பட்ட கோட்டைகளின் அழிந்த பகுதிகள் இன்றும் காணப்படுகின்றன.

கீழக்கரையிலிருந்து சங்குகள் கல்கத்தாவிற்கு தூத்துக்குடித் துறைமுகப்பட்டினம் வழியாக ஏற்றுமதி செய்யப்படுகிறது. இச்சங்குகள் மணிகள், மோதிரங்கள், வளையல்கள் செய்யப் பயன்படுகின்றன. இங்கு கிடைக்கும் பனைநார் தூத்துக்குடித் துறைமுகம் வழியாக ஐரோப்பாவுக்கு ஏற்றுமதியாகி வந்தது. கீழக்கரைத் துறைமுகப்பட்டினம் 80 ஆண்டுகளுக்கு முன்னர் செழிப்புடன் விளங்கியது.

கீழக்கரையில் மக்களின் எண்ணிக்கை மிகுதியாக உள்ளது. அவர்களில் இசுலாமியர் பெரும்பான்மையாக உள்ளனர். இவர்கள் வணிகர்கள். இவ்வூரில் வாழும் மக்கள் முத்துகளையும், சங்குகளையும் மதிப்பீடு செய்வதில் வல்லவர்கள். சங்கு தொடர்பான தொழில் இங்கு ஒரு குடிசைத் தொழிலாக நடந்து வருகிறது.

- அ.அ.

**குடித்தொகையியல் சார் மானிடவியல் :** ஒரு நாடு அல்லது குறிப்பிட்ட எல்லையைக் கொண்ட புவிப்பரப்பில் வாழும் மக்களினங்கள் அவற்றின் அளவாலும், பால் விகிதத்தாலும், வயது, கல்வி, சமயம், பொருளியல் நிலை, வாழும் பகுதி போன்ற எண்ணற்ற காரணிகளாலும் எவ்வாறு அமையப்பெற்றுள்ளது என்பதை ஆராய்வதே குடித் தொகையியல் இலக்காகும். இவ்வகை ஆய்வினைச் செயலறிவு நிலையில் நின்று செய்வதும், புள்ளி யியல், கணக்கியல் முறையுடன் செய்வதும் இயல்பு. மேற்கூறிய குடித்தொகையியல் பண்புகள் காலத் தோடு எவ்வாறு மாறி வந்துள்ளன என்பதும் இவ் வாய்வின் பொருளாக எடுத்துக்கொள்ளப்படும்.

மானிடவியலில் இன்று குடித்தொகையியல் ஆய் வுகள் இன்றியமையாதனவாக உள்ளன. அண்மைக் காலத்தில் இவ்வகை ஆய்வுப் போக்கு மிகப்பரவ லாகப் பெருகியதால் இப்பிரிவைக் குடித்தொகையி யல் சார் மானிடவியல் ( Demographic Anthropology) என்னும் தனி ஆய்வுப்பரப்பாகக் கொள்ளும் நிலை ஏற்பட்டது. ஆனால் குடித்தொகையியல் அறிஞர்க ளின் ஆய்வு முறையிலிருந்து சற்று மாறுபட்ட அணுகு முறையினை மானிடவியலார் ஏற்படுத்திக்கொண்ட னர். மக்கள் தொகையின் வளர்ச்சியில் எவ்வகைக் காரணிகள் பங்கு பெறுகின்றன என்பதும் அவ்வகைக் காரணிகளோடு வெவ்வேறு புவிச்சூழலைக் கொண்ட மக்களினங்கள் எவ்வாறு உறவு பெறு கின்றன என்பதும் குடித்தொகையியல் சார் மானிட வியலாரின் அணுகுமுறையாகும். அதோடு வெவ் வேறு மரபுப் பண்புகளைக் கொண்ட மக்களினத் தார்கள் வெவ்வேறு புவிச்சூழலில் தகவமைத்து வாழும்போது அந்த இனத்தவர்களின் எண்ணிக்கை, கல்வி, தொழில்நுட்பம் போன்ற பல காரணிகள் மாறும் சூழ்நிலைகளில் எவ்வாறு அமைகின்றன என் பதும் மானிடவியலாருக்கு முதன்மையான படைப் பொருளாகும்.

இன்று உலகம் முழுவதும் மக்கள்தொகைப் பெருக்கம் ஒரு பெரும் சிக்கலாக உருவெடுத்துள்ளது. குறிப்பாக, வளரும் நாடுகளுக்கு இது மிகப்பெரும் சிக்கலாகும். மக்கள்தொகைப் பெருக்கம் எவ்வளவு முக்கியமான சிக்கல் என்பதை ஒவ்வொரு குடி மகனும் அறிய 1970 களிலிருந்து உலகம் முழுவதும் எண்ணற்ற கருத்தரங்குகள், நிகழ்ச்சிகள், விளம்பரங் கள், கருத்துபடங்கள் போன்றவை நிகழ்த்தப்பட்டன. இன்று வளரும் நாடுகளில் பெரும்பாலான சமூகங் கள் மானிடவியலாருக்குப் பழக்கப்பட்ட சமூகங்கள் தாம் என்பதால் மேற்கூறிய நிகழ்ச்சிகளை அமைப் பதில் மானிடவியலார் பெரும் பங்குபெற்றனர்.

இந்தியா போன்ற வளர்முக நாடுகளில் உடல் நலத் துறையின் பெரும் முன்னேற்றத்தால் மக்கள் வாழும் கால அளவு கூடியுள்ளது. கருவள வீதமும் கூடியுள்ளது. அதேநேரத்தில் இறப்பு வீதம் பெரு மளவு குறைந்துள்ளது. இப்பெரும் மாற்றங்களால் மக்கள்தொகைப் பெருக்கம் மிகுதியாகியுள்ளது. ஆகவே, மக்கள் தொகையை ஒருமுறையான திட்ட மிடுதலின் மூலம் கொண்டு செல்ல அந்தந்த நாட்டில் மக்கள்தொகையின் அனைத்துப் பண்புகளையும் முழுவதுமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். இவ் வகை ஆய்வில் மானிடவியல் இரண்டு நிலைகளில் பங்காற்ற முடியும். ஒன்று, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே பல்வேறு பகுதிகளின் மக்களினத்த வர்களின் வளர்ச்சி நிலைகளை நன்கு அறிந்த நிலை யில் அவர்களின் வளர்ச்சிப் பரிமாணங்களை நன்கு புரிந்து கொள்ள இயலும். இரண்டு, மானிடவிய லார் உலகின் எண்ணற்ற பண்பாட்டினரை ஆராய் வதால் மக்கள்தொகைப் பெருக்கம் பற்றிய சிக்க லைப் பண்பாட்டிடை நிலையில் அணுக இயலும்.

மானிடவியலின் ஒரு பிரிவாகிய உடல்சார் மானிடவியல் குடித்தொகை ஆய்வில் ஒரு புதிய பரி மாணத்தைக் காணும் நிலையில் உள்ளது. பண்பாட்டு மானிடவியலால் பெறப்படும் பண்பாட்டுப் பின் னணியைக் கொண்டு உயிரியல் காரணிகளை அலசிப் பார்க்க முடியும். ஆதலின் குடித்தொகை ஆய்வுகளில் வேறு எந்தத் துறையைக் காட்டிலும் மானிடவியலில் ஒரு முழுதளாவிய நிலையில் ஆராய இயலும். இத னால்தான் குடித்தொகையியல் சார்மானிடவியல் பிரிவு ஆய்வுகள் மற்ற துறையினரின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளன.

மானிடவியல் நோக்கில் பல்வேறு இனத்தவர் களின் குடித்தொகை அமைப்பினை நோக்குவது என் பது அவர்களின் மரபியல் கூறுகளின் அமைப்பினைப் புரிந்து கொள்வது என்பதாகும். ஒரே இனத்து மக்கள் புவிப்பரப்பிற்கேற்ப மாறும் தன்மைகளைக் கொண் டுள்ளனர். இவ்வகைக்காரணிகள் மக்கள் தொகை வளர்ச்சிக்கு எவ்வகையில் பங்காற்றுகின்றன என்பதை மரபியல் கூறுகளைக் கொண்டு உடல் சார் மானிடவியலார் விளக்குவர். தொடக்கத்தில்

இந்தியாவிலும் உலகின் பிற பகுதிகளிலும் உடல்சார் மானிடவியல் ஆய்வுகள் மனித குலத்தைப் பல இனப் பிரிவுகளாக வகைப்படுத்தி அதன் மரபியல் சிறப்புகளை அறிவதாக மட்டுமே இருந்தன. அவ் வகை ஆய்வுப்போக்கு குறைந்து இப்போது மக்க ளின் மரபியல் பண்புகளை மையமாகக் கொண்டு இன்று நடைபெறும் படி மலர்ச்சியை அறிவதில் ஆர்வம் காட்டப்படுகிறது. இவ்வகை ஆய்வுகளுக்கு மக்களின் பரந்துபட்ட மரபியல் வேறுபாடுகள் பற் றிய அறிவு தேவைப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பகுதி யில் வாழும் மக்களினத் தவர்களிடையே கருவளம் மிக்க, இனப்பெருக்கம் செய்யும் தகுதிபடைத்த பிரிவினரே அவ்வினத்தின் படிமலர்ச்சியில் நேரடி யாகப் பங்கு பெறுகின்றனர். இவர்கள் இனப் பெருக்க மக்கள் தொகையினர் ( Breeding Population) எனப்படுவர். ஒரு குறிப்பிட்ட பகுதியின் இனப் பெருக்க மக்கள் தொகையினரின் குடித்தொகை அமைப்பு மற்ற பகுதிகளைச் சேர்ந் தவர்களிடமிருந்து எவ்வகையில் மாற்றம் பெறுகிறது. அதற்கான கார ணங்கள் என்ன என்பவை இக்காலப் படிமலர்ச்சிக்கு அடிப்படையான ஆய்வுகள், மனித இனம் அன்றும், இன்றும், என்றும் தொடர்ந்து படிமலர்ச்சியடைந்து வருகிறது என்பது இங்கு கவனத்திற்குரியது.

மக்கள் பெருக்க நிகழ்ச்சியில் பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் முதன்மைக்காரணிகள். பிறப்பு வீதத்தைத் தூண்டுவன மக்களின் கருவளப்பெருக்க மும் பண்பாட்டுப் பின்னணியுமாகும். இறப்பு வீதத் தைக் கட்டுப்படுத்துவன உடல்நலம் மிகுதியாதலும் நவீன மருத்துவத்தின் வளர்ச்சியுமாகும். இக்கூறு களின் செயலுறவுகள் ஒவ்வொரு இனத்திலும் எவ் வாறு காணப்படுகின்றன என்பதை அறிவதன் மூலமே பொருளியல் வளர்ச்சிக்கான திட்டத்தை வகுக்க இயலும். ஊரகச் சமுதாயங்கள் அடுத்த நிலை யில் பழங்குடிச் சமுதாயங்கள், பின்தங்கிய சமுதா யங்கள் ஆகியோரின் குடித்தொகைக் கருத்தாக்கத்தை அறிந்து கொள்ளுதல் அவசியம். இவர்கள் தாம் இன்றைய இந்திய மக்கள்தொகைப் பெருக்கத்தில் முதன்மை யாக இடம் பெறுகின்றனர். குடும்ப நலத்திட்டமும் ( Family Planning ), பண்பாட்டு மாற்றமும், நகர மயமாதலும், தொழில்மயமாதலும் பெருகியுள்ள இந்நிலையில் மக்கள்தொகைப் பெருக் கம் புதிய பரி மாணத்திற்குத் தள்ளப்படும். ஒவ் வொரு மரபுசார்ந்த இனமும் மாறும் சூழலை எவ் வகையில் எதிர்கொள்கிறது என்பதும் அம்மாற்றத் தால் குடித்தொகை அமைப்பில் எவ்வகை மாற்றம் நிகழ்கிறது என்பதும் அறிவதன் மூலமே மக்கள் தொகைப் பெருக்கம் பற்றிய ஆய்வில் இலக்கை அடைய முடியும். இதற்கு மானிடவியல் துறை பெரி தும் பங்காற்ற முடியும்.

இன்று வளர்ந்துவிட்ட நாடுகளில் வாழும் மக்களிடையே சமுதாயப் பொருளாதார மாறிகள் ( Socio - Economic Variables ) கருவளத் தன்மையோடும் பிறப்பு விகிதத்தோடும் நேரடியாக தொடர்பு கொண்டுள்ளன. இவை வளரும் நாடு களின் தன்மையைப் பிரதிபலிக்காது. இந்தியாவின் மக்கள் தொகைப் பண்புகள் குடிமதிப்பு மூலம் பெருமளவு புரிந்துகொள்ள முடிகிறது. வயது அமைப்பு, பால் விகிதம், மக்கள் எண்ணிக்கை ஆகியவற்றைப் பகுதி வாரியாக அறிய இயலுகிறது. இந்தியப் புவிப் பரப்பு, சாதி, பழங்குடி என்னும் கோடுகள் குறுக்கும் நெடுக்குமாக ஓடி இந்திய சமுதாயத்தைப் பெரும் எண்ணிக்கை கொண்ட பிரிவுகளாகப் பிரிக்கின்றன. இவை மேற்கூறிய குடிமதிப்புப் பண்புகளின் அதன தன் தன்மையை வெளிப்படுத்துகின்றன. ஒவ்வொரு சாதி / பழங்குடிப் பிரிவும் மாறுபட்ட கருவளப் பெருக்கத்தை வெளிப் படுத்துவதால் ஒவ்வொரு குழுவும் இனப் பெருக்க அளவில் தனித்த குழுவாகச் ( Breeding Isolate) செயற்படுகிறது.

மேற்கூறிய பரந்துபட்ட ஆய்வுப்பரப்பைப் புரிந்து கொண்டு இந்நிலையால் மானிடவியல் மூன்று குறிப்பிட்ட பகுதிகளில் அதன் தனிக் கவனத்தைச் செலுத்த விரும்புகிறது. 1. குடித்தொகையின் அளவு ( Population size ) அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி, 2. குடித்தொகையியல் உள்ளமைப்பு ( Composition ), 3. ஒரு நாட்டின் மொத்தப் புவிப்பரப்பில் எங்கெல் லாம் எந்த வகையான குடித்தொகை அமைப்பு நிலை பெற்றுள்ளது என்பதை அறிதல். இந்த அடிப் படைகள் மக்கள் தொகைகளின் எந்த ஒரு பரி மாணத்தைப் புரிந்து கொள்வதற்கும் உதவுவன ஆகும். மானிடவியல் அதன் நிலையில் ஒரு முழுதள விய நிலையில் குடித்தொகையியலை அணுக முடியும் என்றாலும் புவியியல், பொருளியல், சமூகவியல் துறைகளின் ஒருங்கிணைப்பும் மிகவும் இன்றியமையாதது என்பதை எப்போதும் உணர்ந் துள்ளது.

- கே. நி.

**குடிமதிப்பு – 1991** : குடிமதிப்பு எனப்படும் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு ( Census ) இந்தியாவில் பத்தாண்டுகளுக்கு ஒருமுறை எடுக்கப்படுகிறது. இறுதியாக எடுக்கப்பட்ட 1981 - 91 இல் அடங்கியுள்ள பத்தாண்டுகளில் வளர்ந்துள்ள மக்கள் பெருக்கத்தினைச் சுட்டிக்காட்டும் அறிக்கையிலிருந்து கீழ்க்காணும் புள்ளி விவரங்கள் பெறப்பட்டுள்ளன.

**மொத்த மக்கள்தொகை** : மார்ச் 1, 1991இல் இந்தியாவில் மக்கள் தொகை 843,930,861 ( 89.94 மில்லியன் ) ஆகும். ஒவ்வொரு ஆண்டும் ஆசுதிரேலியாவின் மக்கள் தொகை அளவிற்கு இந்தியாவில் மக்கள் தொகை வளர்ந்துள்ளது. கடந்த பத்தாண்டுகளில் ( 1981 - 1991 ) சப்பானின் மொத்த மக்கள் தொகை அளவிற்கு, இந்தியாவின் மக்கள் தொகை வளர்ந்துள்ளதைக் காணமுடிகிறது. உலக மக்கள் தொகையில் இந்திய மக்கள் தொகை 16 விழுக்காடு என்றளவில் அமைந்துள்ளது.

**மக்கள்தொகை வளர்ச்சி வேகம்** : 1971- 81ஆம் ஆண்டு மக்கள்தொகை வளர்ச்சி வேகத்தோடு ஒப்பிடுகையில் 1981- 91ஆம் ஆண்டுகளில் மக்கள் தொகை மொத்த வளர்ச்சி வேகம் 1.16 விழுக்காடு குறைந்துள்ளதை அறியலாம். 1971- 81இல் மக்கள் தொகை வளர்ச்சி வேகம் 24.66 விழுக்காடு, 1981-91இல் மக்கள்தொகை வளர்ச்சி வேகம் 23.50 விழுக்காடு. அதேநேரத்தில் ஒவ்வொரு ஆண்டின் சராசரி மக்கள்தொகை வளர்ச்சி வேகம் ( 1981 - 1991 ) 2.11 விழுக்காடு என் றளவில் அமைந்துள்ளது. 1971-81இல் ஓர் ஆண்டிற்கு சராசரியாக மக்கள்தொகை வளர்ச்சி வேகம் 2.22 விழுக்காடு என்றளவில் அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

**பால் விகிதம்** : மொத்த மக்கள்தொகையில் ஆண், பெண் பால் விகிதம் பற்றிய செய்திகள் சேகரிக்கப்பட்டன. 1991இல் 1000 ஆண்களுக்கு 929 பெண்கள் என்றளவிற்கு பால் விகிதம் காணப்பட்டது. எனவே பால் விகிதக் கணக்கின் படி, பெண்களின் எண்ணிக்கைக் குறைந்துள்ளதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

**எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை:** மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் வளர்ச்சி வேகம் பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டன. கடந்த பத்தாண்டுகளில் வரலாறு காணாத அளவிற்கு எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் விகிதம் 52.11 விழுக்காடு என்றளவில் அமைந்துள்ளது. 1971- 81இல் எழுதப்படிப்பத் தெரிந்தவர்களின் விகிதம் 43.56 விழுக்காடு ஆகும். எனவே, 1991இல் மொத்த மக்கள்தொகையில் பாதிக்கும் சற்றே அதிகமானவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாவர்.

**மக்கள்தொகைச் செறிவு** : மக்கள்தொகைச் செறிவு அதிகரித்துள்ளதை அறியமுடிகிறது. 1981இல் மக்கள் தொகைச் செறிவு ஒரு சதுர கி.மீட்டருக்கு 117 நபர், 1981இல் 261 நபர், 1991இல் 267 நபர்.

**நகரங்களில் மக்கள்தொகை** : பம்பாய், கல்கத்தா, சென்னை, தில்லி, ஐதராபாத், பெங்களூர் முதலிய நகரங்களில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை தொடர்பான செய்திகளும் சேகரிக்கப்பட்டன. இவற்றில் பம்பாயில்தான் ( 12.57 மில் ) அதிக மக்கள் வசிக்கின்றனர். அடுத்து கல்கத்தாவில் 10.86 மில்லியன் மக்களும், தில்லியில் 8.38 மில்லியன் மக்களும், சென்னையில் 5.36 மில்லியன் மக்களும், ஐதராபாத்தில் 4.27 மில்லியன் மக்களும், பெங்களூரில் 4.11 மில்லியன் மக்களும் வாழ்கின்றனர்.

**மாநிலங்களுக்கிடையே மக்கள்தொகை வளர்ச்சி வேகம்** : இந்தியாவிலுள்ள மாநிலங்களுக்கிடையே மக்கள்தொகை வளர்ச்சி வேகம் வேறுபடுகிறது. குறைந்த அளவு வளர்ச்சி வேகம் 13.98 கேரள மாநிலத்தில் காணப்படுகிறது. அதிக அளவு வளர்ச்சி வேகம் 56.86 நாகலாந்து மாநிலத்திலுள்ளது. குச்ராத்தில் மக்கள்தொகை வளர்ச்சி வேகம் 20.80 விழுக்காடு என்றளவிலும், கர்நாடகாவில் 20.69 விழுக்காடு என்றளவிலும், கோவாவில் 15.96 விழுக்காடு என்றளவிலும், தமிழகத்தில் 14.94 விழுக்காடு என்றளவிலும் அமைந்துள்ளதைக் காணலாம். கேரள மக்கள் தொகையில் 90.59 விழுக்காடு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். எனவே, கேரளாவில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் எண்ணிக்கை அதிகமுள்ளது.

இந்திய அளவில் மொத்த மக்கள்தொகையில் 52.11 விழுக்காடு எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். இதில் 63.86 விழுக்காடு ஆண்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள், 39.42 விழுக்காடு பெண்கள் எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள். பீகாரில் குறைந்த அளவு எழுதப்படிக்கத்தெரிந்தவர்கள் 38.54 விழுக்காடு வாழ்கின்றனர். இராசஸ்தானில் பெண்களில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் 20.84 விழுக்காடு மட்டுமே.

**கேரளாவில் பால் விகிதம் :** கேரள மாநிலத்தில் 1000 ஆண்களுக்கு 1040 பெண்கள் என்ற விகிதத்தில் பால் விகிதம் உள்ளது. பெண்கள் விகிதம் அதிகமாகக் காணப்படுவது கேரளத்தில் மட்டுமே.

1991இல் உலக நாடுகளின் மக்கள்தொகை 5.35 மில்லியன். இதில் சீனாவின் பங்கு 1.16 மில்லியன். உலக மக்கள் தொகையில் 46.89 விழுக்காடு ஆசிய கண்டத்தில் வாழ்கின்றனர். 12.11 விழுக்காடு ஆப்பிரிக்காவில் வாழ்கின்றனர். சோவியத் ருசியாவில் மக்கள்தொகை 287 மில்லியன். அமெரிக்காவின் மக்கள் தொகை 249 மில்லியன். உலக நாடுகளின் மொத்த மக்கள்தொகையில் ஏறக்குறைய 50 விழுக்காடு சீனா, இந்தியா, ருசியா, அமெரிக்கா ஆகிய நான்கு நாடு களில் வாழ்கின்றனர்.

மகாராட்டிர மாநிலத்தில் தான் 1 மில்லியனுக்கும் அதிகம் மக்கள் வசிக்கும் நான்கு நகரங்கள் உள்ளன. அம்மாநிலத்தில் உள்ள மக்கள்தொகை 78.7 மில். இது ஐக்கியசெர்மன், பிரான்சு, இங்கிலாந்து, இத்தாலி, ஸ்பெயின், போலந்து முதலிய நாடுகளின் மக்கள் தொகையைக் காட்டிலும் அதிகமாகும். பம்பாய் மாவட்ட மக்கள்தொகை, பஞ்சாப் மாநிலத்தில் வாழும் மக்கள்தொகையில் 50 விழுக்காடாகும்.

**தமிழகத்தில் மக்கள்தொகை வளர்ச்சி வேகம் :** 1991இல் தமிழகத்தில் மொத்த மக்கள்தொகை 5,56,38, 318. தமிழகத்தில் மக்கள்தொகை வளர்ச்சி வேகம் 1971இல் 17.5 விழுக்காட்டிலிருந்து, 1981-91 இல் 14.94 விழுக்காட்டிற்குக் குறைந்துள்ளதைப் புரிந்துகொள்ளலாம். பிறப்பு விகிதம் 1000க்கு 28 என்றளவிலிருந்து, 1981இல் 1000க்கு 23 என்றளவிற்கு குறைந்துள்ளது. 1991ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மாநில மக்கள்தொகை அளவைக் கொண்டு பார்க்கையில் தமிழகம் ஏழாவது மாநிலமாக விளங்குகிறது. தமிழகத்தில் மக்கள்தொகைச் செறிவு ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 428 நபர் ( இந்திய மக்கள் தொகைச் செறிவு ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 267 பேர் ) என்றளவில் அமைந்துள்ளது. 1000 ஆண்களுக்கு 972 பெண்கள் என்ற விகிதத்தில் பால் விகிதம் உள்ளது. தமிழக மக்கள்தொகையில் 63.72 விழுக்காடு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் ( இந்தியாவில் 52.29 விழுக்காடு). இதில் தென்னார்க்காடு மாவட்டத்தில் தான் அதிகம் பேர் ( 48,70,871 ) வாழ்கிறார்கள். மாநில மொத்த மக்கள்தொகையில் 8.75 விழுக்காடு தென் ஆர்காடு மாவட்டத்திலும், 8.31 விழுக்காடு செங்கற்பட்டு மாவட்டத்திலும், 8.14 விழுக்காடு தஞ்சாவூர் மாவட்டத்திலும், 7.39 விழுக்காடு திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலும், 7.03 விழுக்காடு சேலம் மாவட்டத் திலும் வாழ்கின்றனர். நீலகிரி மாவட்டத்தில்தான் குறைந்தளவு 1.27 விழுக்காடு மக்கள் வாழ்கின்றனர். தமிழகத்தில் 25 நகரங்கள் உள்ளன. அவற்றுள் சென்னையில் 53.6 இலட்சமும், கோவையில் 11.4 இலட்சமும், மதுரையில் 10.9 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். தமிழகத்தில் உள்ள இருபத்தோரு மாவட்டங்களில் செங்கற்பட்டு மாவட்டத்தில்தான் அதிகளவு மக்கள்தொகை வளர்ச்சி வேகம் 22.77 காணப்படுகிறது. இதே மாவட்டத்தில் கடந்த பத்தாண்டுகளில் மக்கள் தொகை வளர்ச்சி வேகம் 29.26 விழுக்காடு என்ற அளவில் அமைந்துள்ளது. 1991 ஆம் ஆண்டுடன் முடிவுற்ற பத்தாண்டுக்காலத்தில் சென்னை நகரத்தின் நகரத் திரட்சி ( Urban Agglomeration) வேகம் 24.99 விழுக்காடு என்றளவில் அமைந்துள்ளது.

**காண்க** : குடிமதிப்பு ( த. க )

– அ.கு.சா.

## குணசேகரம் ( குணசீலம் ) :

குணசீலம் திருச்சியிலிருந்து சேலம் செல்லும் வழியில் ஏறத்தாழ இருபது கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இத்தலம் புராணப் பெருமை வாய்ந்தது. கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாய் விளங்கும் திருப்பதித் திருவேங்கமுடையானே குணசீல மகரிசிக்கு இவ்விடத்தில் காட்சி தந்து, பக்தர்களின் துன்பங்களைப் போக்கியருள்வதாக வாக்களித்துள்ளார் என்பது புராண வரலாறு. இத்தலத்தின் வேங்கடவன் அலர்மேல்மங்கைத் தாயாருடன் நின்ற திருக்கோலத்தில் காட்சியளிக்கிறான். கோவிலுக்கு அருகில் காவிரி ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது.

தன்னை அண்டியவர்களுக்கு அவர்கள் விரும்பியதைச் செய்து தருகிறார் இத்தலப்தெம்பெருமாள். குறிப்பாக, மனநோயாளிகள் இத்தலத்தில் இருந்து கொண்டு வழிபடுவதால் பைத்தியம் தெளிந்து நல்ல நிலையை அடைகிறார்கள். இத்தலத்தில் தங்கியிருந்து வழிபடும் முறை நீண்டகாலமாய் வழக்கத்தில் உள்ளது. இதனை 'வாமிருப்பது' என்பர்.

வாமிருப்போர் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய மான சில விதிகளைக் கோவில் அர்ச்சகரிடமிருந்து அறியலாம்.

எம்பெருமானுக்குச் சந்தனத்தினால் முழுவதும் அலங்காரம் செய்வது, பூப்பந்தல் போடுவது, சுநபன திருமஞ்சனம் செய்வது, மந்திரங்களைச் சொல்லி நீராட்டுவது ஆகியவை இங்குச் சிறப்பாகும். திருப் பதியில் எப்படி திருவிழாக்கள் செய்து வைக்கி றார்களோ அதேபோல் தென்திருப்பதி என்று போற் றப்படும் இத்தலத்திலும் பக்தர்களின் வேண்டு கோளுக்கிணங்கச் செய்து வைக்கிறார்கள். திருப்பதித் திருவேங்கடமுடையானுக்குப் பிராத்தனை செய்து கொண்டதை இத்தலத்தில் செய்துவிடலாம். ஆனால், இத்தலத் தெம்பெருமானிடம் பிராத்தனை செய்து கொண்டவர்கள் திருப்பதியில் செலுத்தக் கூடாது என்று இங்குள்ளோர் சொல்லிவருகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் புரட்டாசி மாதத்தில் பத்து நாள் கள் பிரம்மோத்சவம் நடைபெறுகிறது. புரட்டாசித் திருவோணத்தன்று இரத உற்சவமாகும். இக்கோவி லில் வைகானச ஆகம முறைப்படி வழிபாடு நடை பெறுகிறது.

குணசீலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியி ருக்கும் எம்பெருமானைக் கண்டுகளித்த கவிகளில் சிலர் தமிழிலும் வடமொழியிலும் துதிபாடியுள்ள னர். விலசனானந்தர் இந்த பெருமானைப் பற்றிப் பாடும்போது, 'ஆரணமு மாகமும் புகலவொண்ணா வருந்தவமே யேழுமலை வாழுமீச காரணமே கஞ்சனைமுன் குத்திவீழ்த்திக் காசினியையுய்வித்த கமலக்கண்ணா நாரணனே குணசீலன் பிறவிதிர நற் பொன்னி வடகரையிற்றுலங்கி நின்றாய்' என்று பாடி உள்ளார்.

- எஸ்.கி.

**குலோத்துங்கச் சோழச் சேதிராயன்** : இவன் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு சோழ வேந்தருக்குட்பட்டு மலையமான் நாட்டை ஆண்டு வந்தான். விக்கிரம சோழச்சேதிராயனுக்குப் பின்னர் மலையமான் வேந்தருள் இவனே புகழ் பெற்றவ னாகத் திகழ்ந்தான். பெரியான், பெரிய உடையான் முதலான விருதுப் பெயர்களை இவன் பூண்டிருந் தான். இறைப்பற்று மிக்கவன். சைவ, வைணவத் திருக்கோயில்களுக்கு நிவந்தங்கள் பல விட்ட கொடைவள்ளல். இரண்டாம் குலோத்துங்கச் சோழனது ஆட்சிக் காலத்தில் இச்சேதிராயன் வாழ்ந் தவன் ஆவான். இவனுக்கு, 'அத்திமல்லன் எதிரிலி சோழ வாணகோவரையன்' என்னும் பெயரில் மகன் ஒருவன் இருந்தான். கோயில் கட்டிய கோமானாக வும் இவன் விளங்குகிறான்.

இரண்டாம் குலோத்துங்கச் சோழனது ஐந்தா மாட்சியாண்டில் ( கி.பி. 1138 ) இவன் திருக்கோவ லூர் வீரட்டானத்து ஆளுடைய நாச்சியாருக்கு, இவ னது கட்டளைக்கு இணங்க ஊர்ச்சபையார் ஒன்றரை வேலி நிலங்களைத் தானம் செய்தனர். அறையணி நல்லூர் (அரகண்டநல்லூர்) ஒப்பொருவருமில்லா நாயனார் கோயிலில் இவன் பள்ளியறை நாச்சியார் திருமேனியை எழுந்தருளச் செய்ததுடன், நாச்சி யார்க்குக் கற்றளி ஒன்றினையும் கட்டுவித்தான். அருங்குறுங்கை என்னும் ஊரிலுள்ள பலவாயுத பல்லவரையநல்லூர் என்னும் பெயருடைய நிலங் களைப் பெரும்புனம் தான்றீசுவரமுடைய நாய னார்க்கு இறையிலி தேவதானமாக்கினான். கி.பி. 1139 இல் இவன் திருக்கோவலூர் இடைக்கழி ஆழ்வார்க்கு 4000 குழி நிலங்களை இறையிலி ஆக்கி னான். அடுத்த ஆண்டில் அவ்வாழ்வாருக்கு ஒரு வேலி நிலத்தைத் தானம் செய்தான்.

குலோத்துங்கச் சோழச்சேதிராயன் மலையமான் நாட்டின் பெரும்பகுதியை ஆண்டகாலத்தில், இந் நாட்டின் வேறுசில பகுதிகளிலும் சில சின்னஞ்சிறு தலைவர்கள் ஆண்டு வந்தனர். இவர்களுள் விக்கிரம சோழவாணகுலராயன் குறிப்பிடத்தக்கவன் ஆவான். அறையணி நல்லூர், கோவலூர், தொட்டி, அருங் குறுக்கை ஆகிய ஊர்க் கல்வெட்டுகள் இவனைப் பற்றித் தெரிவிக்கின்றன.

- ம.இரா.த.

**குவா மொழிகள்** : குவா மொழிகள் ஆப்ரிக்க மொழிக்குடும்ப வகையில் மிகப்பெரியதான நைஜர் காங்கோ மொழிக் குடும்பத்தில் ஒரு பிரிவு மொழி களாகும். நைசர் - காங்கோ மொழிக்குடும்பத்தை 1. மேற்கு அட்லாண்டிக் மொழிகள், 2. மார்டே மொழிகள், 3. கூர் மொழிகள், 4. குவா மொழிகள், 5. அடமாவா கிழக்கு மொழிகள், 6. பெறுவே காங்கோ மொழிகள் என ஆறு பிரிவுகளாகப்

பிரித்துள்ளனர். இவற்றுள் ஒரு பிரிவான குவா மொழிகள் இலைபீரியா முதல் மேற்கு கிழக்காக 1400 மைல் நீளத்திற்கும், 200 மைல் அகலத்திற்கும் உட்பட்டுக் கிடக்கும் நிலப்பகுதிகளில் வழங்கப்படுகின்றன. இலைபீரியா, ஐவரிகோசுடு, கானா, இடொகோ, இடவோமா ஆகிய பல நாடுகளில் இவை வழக் கிலுள்ளன. குவா மொழிப்பிரிவு ஐம்பதுக்கும் அதிக மான மொழிகளைக் கொண்டது. இவற்றுள் அக்கள், எவே, இயொருபா, இக்பே ஆகிய நான்கு மொழி களும் மிக முக்கியமான மொழிகளாகக் கருதப்படு கின்றன.

குவா மொழிகளை 1. குரு மொழிகள், 2. இலகூன் மொழிகள், 3. அக்கன் மொழிகள், 4. காங் - அடங்மே மொழிகள், 5. எவே மொழிகள், 6. இடொகோ மொழிகள், 7. இயொருபா - இடோ மொழிகள், 8. நுப்பே - பரி மொழிகள், 9. இடோமா மொழிகள், 10. இபோ மொழி, 11. இசோ மொழி எனப் பதி னொரு பிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

**குரு மொழிகள் :** இப்பிரிவில் ஆறுக்கும் அதிக மான மொழிகள் உள்ளன. இவை தென்கிழக்கு இலைபீரியா, ஐவரிகோசுடு ஆகிய இடங்களில் 700,000க்கு அதிகமான மக்களால் பேசப்படுகின்றன.

**இலகூன் மொழிகள் :** இப்பிரிவில் பதினொரு மொழிகள் உள்ளன. இவை ஐவரிகோசுட்டில், இலைகூன் பகுதிகளில் 160,000க்கு அதிகமான மக் களால் பேசப்படுகிறது.

**அக்கன் மொழிகள் :** இப்பிரிவில் மூன்று மொழி கள் உள்ளன. இம்மொழிகளில் பல்வேறு கிளை மொழிகளைக் காணலாம். இவை ஐவரிகோசுட்டில், கானா, இடொகோ பகுதிகளில் பேசப்படுகிறது. இப்பிரிவில் திவி மொழி மிக முக்கியமான மொழி யாகும்.

**காங் - அடங்மே மொழிகள் :** இப்பிரிவில் இரண்டு மொழிகள் உள்ளன. இவை கானாவில் வாழும் 250,000க்கு அதிகமான மக்களால் பேசப்படு கின்றன.

**எவே மொழிகள் :** இப்பிரிவில் இரண்டு மொழி களே உள்ளன. இவை இடொகோ, இடாவோமே, கானா பகுதிகளில் 1000,000க்கு அதிகமான மக்க ளால் பேசப்படுகின்றன.

**இடொகோ மொழிகள் :** இப்பிரிவில் பதினைந் துக்கும் அதிகமான மொழிகள் உள்ளன. இவை இடொகோ நாட்டின் நடுப்பகுதிகளில் வழக்கிலுள் ளன. 65,000க்கு அதிகமான மக்களால் பேசப்படு கின்றன.

**இயொருபா - எடோ மொழிகள் :** இப்பிரிவில் பதினொரு மொழிகள் உள்ளன. இவை நைசீரியா, இடவோமே பகுதிகளிலும், இடொகோ நாட்டி லும் வழக்கிலுள்ளன. 4, 000,000க்கு அதிகமான மக் களால் பேசப்படுகிறது.யொரூபா, இகலா, இக் பிரா, பினி, சோபோ ஆகிய மொழிகள் இப்பிரிவில் முக்கியமானவை.

**நுப்பே - பரி மொழிகள் :** இப்பிரிவில் மூன்று மொழிகளே உள்ளன. இவை நைசீரியாவில் 4,80,000க்கு அதிகமான மக்களால் பேசப்படுகிறது.

**இடோமா மொழிகள் :** இப்பிரிவு நான்கு மொழி களைக் கொண்டது. இவை நைசீரியாவில் 1,82, 000க்கு அதிகமான மக்களால் பேசப்படுகிறது.

**இபோ :** இப்பிரிவில் இபோ என்ற ஒரு மொழி யே உள்ளது. இது தெற்கு நைசீரியாவில் 3,00,0 00க்கு அதிகமான மக்களால் பேசப்படுகிறது. இதில் ஏழுக் கும் அதிகமான கிளை மொழிகள் உள்ளன.

**இசோ :** இப்பிரிவிலும் இசோ என்ற ஒரு மொழி யே உள்ளது. இது தென்மேற்கு நைசீரியாவில் வழங் கப்படுகிறது. 1,60,000க்கு அதிகமான மக்களால் பேசப்பட்டு வருகிறது. இதில் ஐந்துக்கும் அதிகமான கிளை மொழிகள் உள்ளன.

- எம்.சு.

**குவிந்த சிந்தனை :** குவிந்த சிந்தனை என்பது நுண்ணறிவின் ஒரு பகுதிப்பொருளாக அல்லது உறுப் பாகக் கருதப்படுகின்றது. நுண்ணறிவு பற்றி ஆய்கின் றபோது ‘நுண்ணறிவின் அமைப்பு' ( Structure of Intellect ) என்ற கருத்துச் சொல்லைப் பலரும் பயன் படுத்தினார். இது பல்வேறுபட்ட உறுப்புகளைச் சேர்த்து அமைத்ததொரு கருத்தைக்குறிக்கின்றது. நுண்ணறிவு பற்றிய ஆராய்ச்சியை முதன்முதலில் பிரான்சு நாட்டைச் சேர்ந்த ஆல்பிரெட் பினெட் ( Albert Binet ) என்பவர் நடத்தினார். நுண்ணறிவு பற் றிய பல புதிய உண்மைகளை அவர் வெளியிட்டார்.

ஆனால் அவருடைய ஆராய்ச்சி ஒரு குறிப்பிட்ட சிக்கலுக்குத் தான் தீர்வு கண்டதே தவிர, நுண்ணறிவு பற்றி முழுமையான விவரங்களைத் தரவில்லை. நுண்ணறிவு வளர்ச்சி பற்றி பினெட் வெளி யிட்ட உண்மைகளைக் கொண்டு அவருக்குப் பின் வந்தவர் கள் பல ஆராய்ச்சிகளை வேறுவகைகளில் நடத்தினர். தாசுடன் ( Thur stone ) என்பவர் நடத்திய ஆராய்ச்சி களின் முடிவுகள் 'அடிப்படை மனத்திறமைகள்' ( Primary mental Abilities ) என்ற தலைப்பில் வெளி யிடப்பட்டன. தர்சுடன் கருத்துப்படி, நுண்ணறிவு என்பது ஒரு செயலைக் குறிப்பதன்று. அது பல திறமைகளை உள்ளடக்கிக் கொண்டிருக்கின்ற செயல்முறையாகும். அவை, மொழியைப் புரிந்து கொள்ளும் திறமை, சொல், ஆற்றொழுக்கு, இடம் சார்ந்த புலன் காட்சி, எண் சார்ந்த திறமை, பகுத் தாய்தல், நினைவு, புலன்காட்சி, விரைவு என்பன. தர்சுடனின் ஆராய்ச்சி முடிவுகளில் பல விரிவாக் கங்களும், சீரமைப்புகளும் அண்மைக் காலத்தில் ஏற்பட்டன. அவைகளில் முக்கியமானது கில்போர்டு ( Guilford ) என்பவரின் நுண்ணறிவு அமைப்பாகும். அவருடைய ஆராயச்சி முடிவுகள் வெளிவந்த பிறகு நுண்ணறிவு பற்றிய தேர்வாராய்ச்சிகளில் பல புதிய தோற்றுவாயில்கள் அமைந்தன. நுண்ணறிவின் விளக் கங்களும் அவைகளின் விளைவுகளும் வேறு கோணங்களிலிருந்து நோக்கப்பட்டன. கில்போர் டின் நுண்ணறிவின் அமைப்பு ஒரு மாதிரியாக அமைந்தது. இந்த முடிவுகள் பற்றி மன நிறைவடை யாத கில்போர்டு இன்னும் விரிவான தேர் வாராய்ச்சி தேவைப்படுகின்றது என்று உணர்ந்தார். எனவே, பத்தாண்டுகள் இத்துறையில் இடைவிடாது தொடர்ந்து ஆராய்ச்சிகளில் ஈடுபட்ட பிறகு பல புதிய உண்மைகளை வெளியிட்டார்.

கில்போர்டு கண்டறிந்த உண்மைகளில் முக்கிய மானதொன்று, நுண்ணறிவு நினைவையும் சிந்தனை யையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது என்பதா கும். நினைவு வரம்புக்குட்பட்ட சில திறமைகள் உள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. சிந்தனை மிகவும் சிக்கலானது. எனவே, பல்வேறு திறமைகளைக் கொண்டிருக்கிறது. சிந்தனைகள் மூன்று வகையாக இயங்குகின்றன என்பது கில்போர்டின் கருத்தாகும். அவை, அறிதல் செயல்முறை ( Cognition ) - இது செய் தியைக் கண்டுபிடித்து, அதை ஏற்றுக்கொள்ளும் செயல்முறையைக் கையாளுகின்றது. இரண்டாவது வகை, உற்பத்தி செய்தல் - இது தெரிந்த செய்தியைப் பயன்படுத்துவதை வெளிப்படுத்துகின்றது. புதிய செய்தி உருவாவதையும் இது உள்ளடக்கிக் கொண்டி ருக்கின்றது. இந்த அமைப்பில் திறமைகள் உருவா கின்றன. அவை இரண்டு வகைகளில் அடங்கு கின்றன. ஒன்று குவிந்த சிந்தனை ( Convergent thinking ). இந்த வகையான சிந்தனை சிக்கல்களைத் தீர்ப் பதில் ஒரு தனியானதும் சரியானதும் விடைக்கு இட் டுச்செல்கின்றது. மற்றொன்று விரிந்த சிந்தனை என்பதாகும். இது பல வழிகளைக் கொண்டிருக்கின் றது. அவைகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட வழிகள் சிக்கலைத் தீர்ப்பதற்குச் சரியான வழி களாக இருக்கலாம். மூன்றாவது சிந்தனை, மதிப்பீடு செய்தல். இது மேலே குறிப்பிட்ட இரண்டு சிந்தனைகளையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கின் றது. அறிதல் செயல்முறையும், உற்பத்தி செய்தலும் எந்த அளவுக்குப் பொருத்தமானவைகளாகவும் சரி யாகவும் இருக் கின்றன என்று நிருணயம் செய்கின்ற திறமையை இது கொண்டிருக்கின்றது.

நினைவை அளவிடுவதற்குப் பல நினைவுச் சோத னைகளிருக்கின்றன. கல்லூரி மாணவர்கள் பலர் பொருளில்லாச் சொற்களின் பட்டியலைக் கற்கின்ற னர் அல்லது இணையான பொருளுள்ள சொற் களைக் கற்கின்றனர். உளவியல் சோதனையின் ஒரு பகுதியாக இதைச் செய்கின்றனர். இந்த வகையான பொருள்கள் நினைவிலிருந்தும் ( Retention ) திறமை ஒருவகையான நினைவைக் குறிக்கின்றது. இதே போன்று, மாணவர்கள் வகுப்பறையிலிருந்து வீட்டுக் குச் செல்கின்ற போது வழியைச் சரியாக நினைவு கொள்கின்றனர். தெரிந்தவர்களின் குரல்களை அடை யாளம் காண்கின்றனர். நினைவைக் குறிக்கின்ற வரைபடத்தை மனதில் நிறுத்துகின்றனர். கற்கப்பட்ட பொருள் ஒருமுறை மனதில் நிலைநிறுத்தப்பட்டால் நினைவின் வகையையும் ஆழத்தையும் அளவிட லாம். நினைவு, சிந்தித்தல் ஆகியவைகளுக்கடியில் அடங்கியுள்ள எல்லாப் பண்புக்கூறுகளையும் இரண்டு வகைகளில் அடக்குகின்றனர். விளைவு களை உள்ளடக்கிய வகை என்றும், பயனுள்ள உள் பொருள்களின் வகை என்றும் அவை கூறப்படுகின் றன. கற்ற பிறகு எவை நினைவிலிருத்தப்பட்டு பிறகு அறியப்படுகின்றனவோ அவைகளை விளைவுகள் எதிரொலிக்கின்றன. அடங்கியுள்ள பொருள்கள் என் பது விளைவுகளை உருவமாகவோ, அடையாளக்

குறி மூலமாகவோ, சொற்பொருள் அமைப்பிலோ வெளிப்படுத்துவதைக் குறிக்கின்றன.

நுண்ணறிவைப் பற்றி ஆராய்ச்சி செய்யும்போது மூன்று முகங்கள் வெளிப்படுகின்றன. அவை, இயக்கங்கள் அல்லது செயல்முறைகள் ( திறமைகளின் வகைகள் ), விளைவுகள், உட்பொருள்கள் என்பன. எடுத்துக்காட்டாக, இயக்கம் அல்லது செயல்முறை என்பது ஒரு விரிந்த சிந்தனைத் திறமையாகும். இது உள் பொருளாகவும், சொற்பொருள் மாறுபாடு சார்ந்த மாறுமியல்புகளாகவும் விளைவுகளாகவும் கருதப்படுகிறது. இத்திறமை விரிந்த கருத்தை உற்பத்தி செய்கின்ற நாட்டமுள்ளது. இவ்வாறான அமைப்பில் 120 தனிச் சிறப்பானதும் அளவிடக் கூடியதுமான திறமைகள் வெளிப்படுகின்றன.

குவிந்த சிந்தனை வழக்கமான சோதனைக் கருவிகளைக் கொண்டுதான் அளவிடப்படுகின்றது. நுண்ணறிவுத் துறையில் குவிந்த சிந்தனையின் இயக்கப் பொருள்கள் பற்றி மிகக்குறைவான ஆய்வுகளே நடத்தப்பட்டிருக்கின்றன. ஏனென்றால் விரிந்த சிந்தனையின் மீதுதான் அதிகப்படியான கவர்ச்சிகள் காட்டப்படுகின்றன. கிளார்க்கும் அவரது கூட்டாளிகளும் 1965 ஆம் ஆண்டில் 192 உயர்நிலைப் பள்ளி மாணவர்களின் மீது பரிசோதனை நடத்தினர். சோதனையில் முக்கியமானது செயல்நிறைவேற்றமாகும். இதில் குவிந்த சிந்தனையும், விரிந்த சிந்தனையும் ஆராயப்பட்டன. மொழிசார்ந்த நடவடிக்கைகளில் குறிப்பாக, கற்பனை, உற்பத்தி சார்ந்தவை ஆகியவைகளில் குவிந்த சிந்தனையை விட விரிந்த சிந்தனையே அதிகமாகக் காணப்பட்டது.

குவிந்த சிந்தனைத்திறமை இளம் சிறுவர்களிடமும், ஆறு வயது முதல் பதினான்கு வயது வரையிலுமுள்ள பையன்களிடமும் காணப்படுவதாகப் பரிசோதனையின் முடிவில் தெரிய வந்தது. குவிந்த சிந்தனையின் உற்பத்திப் பொருள்கள் சில குணப்பண்புகளில் விரிந்த சிந்தனைப் பொருள்களோடு பங்கு கொண்டுள்ளன. குவிந்த சிந்தனை உற்பத்தியில் சிக்கல் இறுக்கமாக அமைக்கப்படுகின்றது. கட்டுப்பாடுகள் அதிகம். குவிந்த சிந்தனை மிகவும் குறுக்கலானது. உற்பத்தி வரம்புக்குட்பட்டது. அதற்கான அளவுக்கருவி கூர்மையானது.

குவிந்த சிந்தனையின் முக்கிய கூறுகளில் ஒன்று, இலக்கு நோக்கிச் செலுத்தப்படுவதாகும். ஒருவருக்கு ஒரு சிக்கல் தீர்க்கப்பட வேண்டியதாக இருந்தால் அதற்கான முயற்சி, சிக்கலின் இலக்கு நோக்கிச் செலுத்தப்படுவதற்கு ஒரு தெளிவான வரையறை கொண்டதாக இருக்க வேண்டும். அப்போதுதான் உறுதியாகவும், நம்பிக்கையுடனும் செயல்பட முடியும். குவிந்த சிந்தனையில் இந்தப் பண்புக்கூறு தெளிவாக இருக்கின்றது. மேலும் சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒரு வழிமுறையைத் தேர்ந்தெடுத்து அந்த வகையில் நம்பிக்கையுடன் செல்லவேண்டும். ஆராய்ச்சியில் காணப்பட்ட மற்றொரு பண்புக்கூறு இடம் கூடுகின்ற மாறுபாட்டுக் கூறைத் தீர்மானித்தலாகும்.

எதைப்பற்றியும் எப்போதும் உறுதியின்றி ஐயப்படுபவர்களிடம் இரக்கவுணர்வு கொள்வது மிகவும் கடினமாகும். மிகவும் கடினமான சிக்கல்களிலும் உறுதியான ஒரு மனிதன் தன்னுடைய மனதைத் திடப்படுத்திக்கொள்ள முடியும். ஒரு முடிவைத் தீர்மானிப்பதில் தனிமனிதக்கூறும் காணப்படுகிறது. ஏனென்றால், சிலர் ஒரு முடிவைத் தீர்மானித்த பிறகு, இப்படித் தீர்மானித்தது சரியன்று என்று கூறிவிட்டு வேறொன்றைத் தீர்மானிப்பார்கள். இதற்குக் காரணம் தீர்மானிப்பதில் உறுதியின்மையாகும். இதில் தனிமனிதனுக்குரிய கூறு செல்வாக்குப் பெறுகின்றது. எ.கா, சொந்தப் பயன்பாட்டிற்கு ஒரு பொருள் வேண்டியிருந்தால் அதற்கு எப்பொருளை வாங்க வேண்டுமென்று ஒரு தீர்மானத்தோடு செல்பவர், அப்பொருளைக் கண்டு வாங்குவர், இதில் எவ்வித மான சிரமமுமில்லை. என்றாலும், சிலசமயங்களில் இரு பொருள் மயக்கம் அல்லது தெளிவின்மை ஏற்படுவதுண்டு. இந்த இடத்தில் மூன்றாவது புதியதொரு சிந்தனைக்கூறு பரந்தமனப்பான்மை செயல்படுகின்றது. அதாவது, தெளிவின்மையைச் சகித்துக் கொள்கின்ற பண்புக்கூறு தவிர்க்க முடியாததாகின்றது.

- மு. இரா.

**குளுவ நாடகம் :** குளுவ நாடகம், நொண்டி நாடகம் போன்ற ஒரு வகை நாட்டிய நாடகமாகும். இதில் குளுவன் என்னுமொரு பாத்திரமே சிறப்பிடம் பெறுகிறது. குளுவன் வேட்டையாட விரும்பித் தன்னுடைய தலைவனிடம் வருவதும், அவனுடைய அருமை பெருமைகளை அடுக்கிக் கூறுவதும் அவன் வேட்டையாட எடுத்துச் செல்லும் ஆயுதங்கள்,

வலை, கண்ணிகள் ஆகியவற்றை விளக்குவதும் இந் நாடகத்தின் சிறப்பாகும்.

இதுவரை கோட்டூர் நயினார் குளுவ நாடகம் (1899), ஏழு நகரத்தார் பேரிறு குளுவ நாடகம் (1922) ஆகிய இரண்டும் அச்சாகியுள்ளன. சின்ன மகிபன் மீது குளுவ நாடகம் இன்னும் கையெழுத்துப் பிரதி யாக உ. வே. சா. நூலகத்தில் உள்ளது மற்றும் குற்றா லக் குளுவ நாடகமொன்று இருந்ததாகக் குறிப்பும் உள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள விருதுநகரின் பக்கத்திலுள்ள கோட்டூரில் கோயில் கொண்டுள்ள, நயினாரைப் பாராட்டிய குளுவ நாடகமாகக் கோட் டூர் நயினார் குளுவ நாடகம் காணப்படுகிறது. நகரத் தார் என்று வழங்கப்பெறும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களின் பெருமைகளை சிறப்பித்து பாடும் மற்றொரு நாடகம் ஏழு நகரத்தார் பேரிறு குளுவ நாடகமாகும். சின்ன மகிபன் மீது குளுவ நாடகம், சின்னன் மார்கண்டயோகன் என்ற சிற்றரசனைப் புகழ்ந்து கூறுகிறது. குற்றாலக் குளுவ நாடகம், திருக் குற்றால நாதரின் அருட்பெருமைகளை எடுத்துக் கூறு வதாக இருந்திருக்கவேண்டும்.

இவற்றுள் இரண்டு, கடவுளரையும், ஒன்று குறு நில ஆட்சியாளரையும், பிரிதொன்று ஒரு குறிப் பிட்ட சமூகத்தினரையும் புகழ்ந்து பாடுகின்றன. ஆண்டவன், ஆட்சியாளர் பெருமைகளைப் புகழ்ந்து ஆடிப்பாடக் குளுவ நாடகத்தை ஓர் அமைப்பாகக் கொண்டிருக்கின்றனர். இவற்றின் காலம் சரிவரத் தெரியவில்லை. ஏழு நகரத்தார் குளுவ நாடகத்தில் நூல் இயற்றப்பட்ட காலம், புகழேந்திப் புலவர் காலம் என்று குறிக்கப்பட்டுள்ளது. மற்ற நாடகங் களின் மொழிநடையை விட இது திருத்தமாகக் காணப்பெறுகிறது. அவை இதைவிடவும் முந்தி யவைகளாகத் தோன்றுகின்றன.

- சி.சு.

**குறுபர்** : சோழ மன்னன் அடோன்டியால் ( Adonti ) பல்லவர்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் முறியடிக்கப்பட்டு, பல திசைகளில் துரத்தப்பட்டனர். சிலர் நகர்ப்புறங்களுக்கும், மலைகளுக்கும் முக்கிய மான நீலகிரி, வயநாடு ( கேரளம் ), மைசூர் ஆகிய பகுதிகளுக்கு வந்தனர். நகர்ப்புறங்களுக்குச் சென்ற வர் பிற மக்களின் பழக்க வழக்கங்களைக் கொண்ட வராயினர். ஆனால், காடுகளுக்கும், மலைகளுக்கும் சென்றவரோ பழமையில் இருந்தனர். காலப்போக் கில் காட்டில் சென்றவர் கொடூரத்தன்மையையும், மிருகத் தன்மையையும் ஏற்ற தங்கள் முன்னோரின் பண்பாட்டை இழந்தனர். நகர்ப்புறங்களில் குடி யேறினவரோ தங்கள் பண்பாட்டுடன், ஆடு, மாடு மேய்ப்பவராக வும், துணி நெய்பவராகவும் மாறினர். ஆகவே, குறுபர், பொதுவாகக் காட்டுக்குறுபர் என் றும், நகரக் குறுபர் என்றும் இருவகையாகப் பிரிக்கப் படுகின்றனர். மேலும், காட்டுக்குறுபர், பெட்ட குறுபர் என்றும், சேனு குறுபர் என்றும் பிரிக்கப்படு கின்றனர். பெட்ட குறுபர் ஆனே ( யானை ), பேவினா ( வேப்பம் ), கொள்ளி என்ற மூன்று பிரிவாகப் பிரிக்கப்படுகின்றனர். குறுபன், குறுமன், குறும்பர் ஆகிய அனைவரும் ஒருவரே.

குறுபர் பொதுவாகப் படிப்பு இல்லாதவர்கள். அவர்களை அப்பாவிகள் என்று அக்காலத்தில் நினைப்பதுண்டு. இந்த இடையமக்கள் மைசூரில் பரவலாக உள்ளனர். 1961ஆம் ஆண்டு கணக்கெடுப் பின்படி இவர்களின் மொத்த எண்ணிக்கை 401,222 ஆகும். இவர்கள் கன்னட மொழியைப் பேசுகின்ற னர். குறுபர் வாழும் தெருவிற்கு குறுபர் பேட்டை என்று பெயர். இவர்களின் சிறிய வீடு செங்கல் மற் றும் மண் சுவரினால் கட்டப்பட்ட ஓட்டு வீடுகள் ஆகும். காற்று வசதி மிகுதியாக வீடுகளில் இல்லை. வீடுகளின் அருகே மந்தைப்பட்டி அமைக்கப்படும். ஆடுகளைக் காக்க இவர்கள் வேட்டை நாய்களை வளர்க்கின்றனர்.

இவர்களின் முதன்மைத்தொழில் ஆடுகளை மேய் பதும், கம்பளம் நெய்வதுமாகும். பல பகுதிகளில் வேளாண்மை முக்கிய இடத்தைப் பெறுகிறது. உரோமங்களைக் கத்தரிக்க இவர்கள் பயன்படுத்தும் சிறப்பான கத்தரிக்கோல் மிகவும் முக்கியக்கருவி யாகும். கத்தரிக்கோலை வைத்து ஒவ்வொரு தசராப் பண்டிகையிலும் பூசை செய்வர். ரோமம் குளிர் காலத் திலும், மழை தொடங்கும் காலத்திலும் சேகரிக்கப் படுகிறது. ரோமங்களைச் சீர்படுத்தி, நூலாக மாற்றி, தறியில் கம்பளங்களாக நெய்கிறார்கள். சிலர் தங்கள் சொந்த நிலங்களில் பயிர்த்தொழில் செய்கின்றனர். சிலர் பயிர்வேலைகளில் ஈடுபட்டு நாள் ஊதியம் பெறுகின்றனர். வேளாண்மை முதல் மழை பெய்த வுடன் தொடங்கப்படுகிறது. முதல் விளைச்சல் எப்

பேர்தும் கிராம தெய்வதத்திற்குக் காணிக்கையாக இடப்படுகிறது.

பெண் வயதுக்கு வந்தவுடன் புதியதாக அமைக்கப்பட்ட குடிசையில் ஒன்பது நாட்கள் தங்குவாள். பத்தாம் நாளில் குளியல் நடந்தவுடன் அந்தக் குடிசை எரிக்கப்படுகிறது. குழந்தைத் திருமணமும் இவர்களிடம் காணப்படுகிறது. பொதுவாக ஒரே இன வகுப்பினர் திருமணம் செய்து கொள்ள முடியாது. திருமணச் சடங்கில் வெற்றிலைப் பாக்கு பரிமாறுதல், முறையாக மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைக் கேட்கச் செல்லுதல், தங்களின் இறந்த முன்னோர்களுக்கு மரியாதை செய்தல் ஆகிய சடங்குகள் உள்ளன.

குறுபர் சாதி அடிப்படையில் பல வகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு வகுப்பிற்கும் கவுடா அல்லது தலையாரி தலைவனாவார். ஒரு நாடு கவுண்டன் பல கவுண்டனுக்குத் தலைவராவார். ஒவ்வொரு பிரிவுக்கும் தனிக்கோவில் உண்டு. தனி பூசாரியும் உண்டு. குறி சொல்லுதலிலும் மந்திரத்திலும் இவர்களுக்கு ஈடுபாடு உண்டு. குறுபர்கள் சிவனடியார்களாக இருப்பதால் எல்லா இந்து தெய்வங்களையும் வழிபடுவர். அவ்வப்போது தெய்வங்களுக்கு விழாக்கள் எடுக்கப்படுவதுண்டு.

இவர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். உடலைக் குளிப்பாட்டிப் புதிய துணியால் மூடுவர். பூசாரி குலத்தினர் இறந்தால் உட்கார்ந்த நிலையில் பாடை எடுத்துச் செல்லப்படும். மற்றவர்கள் இறந்தால் படுத்தநிலையில் பாடை எடுத்துச் செல்லப்படும். பதினோராம்நாள் ஈமச்சடங்குகள் நடைபெறும். குறுபர் மற்றவர்களைப் போன்றே ஆடை அணிகின்றனர். ஆனால் சில பகுதிகளில் பெண்கள் கம்பளியை ஆடையாக அணிகின்றனர். முதல் மகப்பேறு பெண்களின் பெற்றோர் வீட்டில் கவனிக்கப்படும். பேறுகாலங்களில் சில விரதங்களைக் கணவன் கடைப்பிடிக்கவேண்டும்.

குறுபர்களின் மிகவும் பழமையானவர்கள் பெட்ட குறும்பரும், முள்ளு குறும்பருமாவர். மொழியாலும், இதர ஒரு சில பழக்கவழக்கங்களிலும் குறுபர்கள் வேறுபடுகின்றனர். எடுத்துக்காட்டாக, பெட்ட குறுபர், பெட்ட குறும்ப மொழியைப் பேசுகின்றனர். ஆனால் முள்ளு குறும்பரோ மலையாள கிளை மொழியைப் பேசுகின்றனர்.

- நே.தே.

**கூட்டுநிலைச் சொத்துரிமை** : இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர் தம் வாழ்நாளில் சம உரிமையுடன் நிலச்சொத்தைக் கூட்டாக அனுபவிப்பது கூட்டுநிலச் சொத்துரிமை ( Joint Tenancy ) எனப் படும்.

கூட்டுநிலைச் சொத்துரிமை என்பது இந்தியாவிற்கு முற்றிலும் புதியதாகும். இந்துச் சட்டத்தைப் பொறுத்த வரை பிரிவினையாகாத இந்துக் கூட்டுக் குடும்ப உறுப்பினர்களின் பங்குரிமையைத் தவிர மற்றைய வகையில் புதியதாகும்.

**கூட்டுநிலச் சொத்துரிமை மாற்றம்** : சொத்துரிமை மாற்றுச் சட்டப் பிரிவுகள் 44, 45, 46, 47 ஆகியவை கூட்டுரிமையாளர்கள், செய்யும் உரிமை மாற்றங்கள் பற்றி உரைக்கின்றன.

பிரிவு 44 - ஒரு கூட்டுரிமையாளரிடமிருந்து உரிமை மாற்றம் பெற்றவருக்கு, மாற்றப்பட்ட சொத்தின் நுகர்வு குறித்த உரிமைகள், கடமைகள் பற்றிக் கூறுகிறது. இப்பிரிவு ஒருவர் இன்னொருவரிடமிருந்து உரிமை மாற்றம் பெறும்போது அவருக்குள்ள எல்லா உரிமைகளையும் அவர் பெறுவார் என்ற பொதுவிதியின் படி அமைந்ததாகும். அதனால், உரிமை மாற்றம் பெறும்போது அவருக்குள்ள கூட்டு உடைமை அல்லது பகுதி உடைமை என்று என்ன உள்ளதோ அதனைப்பெற அவருக்கு உரிமையுண்டு. அது மட்டுமின்றி உரிமை மாற்றத்தின்படி, தனது பங்கினைப் பெற பாகப்பிரிவினைக் கோருவதற்கான உரிமையும் அவருக்குண்டு. எனினும், அத்தகைய உரிமைகள், உரிமை மாற்றத் தேதியின்போது பங்கினைப் பாதிக்கவல்ல நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவைகளாகும்.

மாற்றப்பட்ட பங்கு, பாகம் பிரியாத ஒரு குடும்பத்தினர் குடியிருக்கும் வீடாக இருந்திடும்போது, உரிமை மாற்றம் பெற்றவர் அவ்வீட்டைப் பாகப்பிரிவினை மூலமாகவே பெறமுடியும்.

பிரிவு 45 - மறுபயனுக்காக ஏற்படுத்தப்படும் கூட்டு உரிமை மாற்றங்களைக் குறித்துக்கூறுகிறது. இப்பிரிவின் கீழ் சொத்தானது, இரண்டு அல்லது மேற்பட்டவர்களுக்கு உரிமை மாற்றம் செய்யப்படும் போது, அதன் நலன்களை உரிமை மாற்றம் பெறுபவர் விகித்தாச்சாரப்படி பகிர்ந்து கொள்வது பற்றிக் கூறுகிறது.

பிரிவு 46 - மறுபயனை உரிமை மாற்றம் செய்பவர் விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொள்வதைப் பற்றி கூறு கிறது. இப்பிரிவின் கீழ் சொத்தை உரிமை மாற்றம் செய்பவர்கள் ஒருவருக்கு மேல் இருப்பதுபோல், பிரிவு 45ன் கீழ் சொத்தொன்றை உரிமை மாற்றம் பெறுபவர்களும் ஒருவருக்கு மேல் இருப்பது அவசியமாகும்.

பிரிவு 47 - பொதுச்சொத்தில் பங்கு கொண்டவர் கள் செய்யும் உரிமை மாற்றம் பற்றிக் கூறுகிறது. இதன்படி, உரிமை மாற்றம் ஒன்று ஏற்படுத்துங்கால் பங்கு சமமாக இருந்திடும்போது, சமமாகவும், சம மின்றி இருந்திடும்போது, அதற்குத் தகுந்த அளவி லும் பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

- பு. வே.

**கையெழுத்தியல்** : மக்களின் இயல்புகளை ஆராய்ந்து அறிகின்ற உளவியல். அவர்களின் நடத் தையைத் தான் அடிப்படையாகக் கொள்கின்றது. ஒரு மனிதனின் நடத்தையின் மூலந்தான் அவனுடைய நுண்ணறிவு, இயற்கையாற்றல்கள், விருப்பங்கள், ஊக்கிகள் ( Motives ), மனவெழுச்சிகள், கற்றல், கற் பனை, சிந்தனை, ஆளுமை ( Personality ), குணம், பண்பு முதலியவற்றை ஒழுங்குமுறையாக ஆராய்ந்து வெளிப்படுத்த முடியும். ஒருவருடைய ஆளுமையை யும் குணப்பண்பையுந்தான் அதிகமாக மக்கள் அறிய விரும்புகின்றனர். ஏனென்றால் இவையே கவர்ச்சி யாற்றல் மிக்க உளவியல் பகுதிகளாகும். இவற்றை யறிய பல முறைகளிலிருக்கின்றன. அவற்றில் ஒரு முறை என்று கருதப்படுவது கையெழுத்தியலாகும் ( Graphology ). முகக்குறியியலார் ( Physiognomists ) ஒருவரின் தாடை, மூக்கின் அளவு, கண்களின் அமைப்பு, நெற்றியின் நேரான, சாய்வான அமைப்பு, அதன் அளவு முதலிய உறுப்புகளைக்கொண்டு ஒரு வரின் ஆளுமையையும் குணப்பண்புகளையும் அறிய முடியுமென்று கருதுகின்றனர் இதில் உளவியலுக்கு அடிப்படையாகவுள்ள நடத்தைப்பாங்கில்லை. ஆனால் கையெழுத்தியலில் நடத்தைப் பாங்கிருக் கின்றது. மக்களின் நடத்தை மூன்று வகையான நட வடிக்கைகளை உள்ளடக்கியதாகும். அவை இயக்க நடவடிக்கைகள் ( Motor Activities ), அறிவு பெறும் நடவடிக்கைகள் ( Cognitive Activities ), மன வெழுச்சி நடவடிக்கைகள் ( Emotional Activities ) என்பன.

இயக்க நடவடிக்கைகள் - நடத்தல், ஓடுதல், பேசு தல், எழுதுதல் என்பன. அமெரிக்க உளவியல் வல்லு நரான உட்வொர்த் ( Woodsworth ) என்பவர் எழுதுதல் ஓர் இயக்க நடவடிக்கை. எனவே, எழுதுதலை ஒரு வரின் ஆளுமையையும் குணப்பண்புகளையும் அறி வதற்குப் பயன்படுத்தலாம் என்று கருதுகின்றார். ஒரு வரின் கையெழுத்திலிருந்து அவருடைய ஆளுமை யையும், குணப்பண்புகளையும் மதிப்பீடு செய்யும் ஒரு தொழில்துறையாக இருப்பது கையெழுத்திய லாகும்.

மதிப்பீடு செய்வதற்குக் கையெழுத்தியலார் பல முறைகளைக் கையாளுகின்றனர். அவற்றில் ஒன்று பகுப்பாராய்ச்சிமுறை அல்லது கூறுபடுத்தி ஆராயும் முறையாகும். அம்முறையின் மூலம் ஓர் எழுத்தாள ரின் கையெழுத்தைப் பண்புக்கூறுகளாக்கி ஏனைய நன்கு தெரிந்ததும் ஆராய்ந்து அறிந்ததுமான கையெ ழுத்துகளோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். அத்த கைய ஒப்பீடுகளில் காணப்படும் ஒற்றுமைகளைத் தங்கள் தொழில்முறைச் செய்திப் பொருட்களாக்கிக் கொள்கின்றனர். அம்முறையின் மூலம் அவர்கள் பாகுபடுத்திக் காண்பது, ஒருவரின் கையெழுத்தி லுள்ள வளைவுகள், எழுத்தின் அகலம், எழுத்துக்க ளின் கோணம், எழுத்துக்களின் சாய்வு முதலியன வாகும். எழுத்துக்களின் இந்தப் பண்புக்கூறுகளை அடிப்படையாக எடுத்துக்கொண்டு மக்களின் குணப் பண்புகளை ஆராய்கின்றனர்.

சிலருடைய எழுத்து ஒவ்வொன்றும் பல வளைவு களைக் கொண்டிருக்கும். எழுத்தின் தொடக்கப் பகுதி, நடுப்பகுதி, முடியும் பகுதி ஆகிய இடங்களில் வளைவுகள் காணப்படும். மேலும் எல்லா எழுத்துக் களுமே ஒரு வளைவைக் கொண்டு முடியும். சிலர் எழுத்தைத் தொடங்கும்போது ஒரு வளைவு போட்டு தொடங்குவார்கள். எனவே, வளைவு அவர்களின் எழுத்தின் ஒரு முக்கிய பண்புக்கூறாக இருக்கிறது. அவ்வாறு எழுதுகின்றவர்கள் ஒரு வகையினராக வகுக்கப்படுகின்றனர். சிலர் எழுத்துக்களை அகல மாக எழுதுவார்கள். அதாவது, எழுத்துக்கள் மேலும் கீழுமாக அதிக இடத்தை எடுத்துக்கொள்கிறது. அப் படிப்பட்டவர்களின் எழுத்துக்கள் எப்போதும் தடித்தே காணப்படும். செல்டன் ( Sheldon ) என்பவர் உடலமைப்புகளைக் கொண்டு ஆளுமையை வகைப் படுத்தினார். தடித்த உருண்டையான மனிதர்கள் ஒரு வகையான குணப்பண்புகளைக் கொண்டவர்கள்.

அவர்களின் எழுத்துக்கள் அவர்களின் உடலமைப்பையே கொண்டிருக்கின்றன என்று அவர் கூறுவார். சிலர் எழுத்துக்களைச் சாய்க்காமல் செங்குத்தாக எழுதுகின்றனர். அவர்களின் எழுத்து அதிக இடத்தை அடைப் பதில்லை. அப்படிப்பட்டவர்கள் ஆளுமை வகையில் வேறு ஒரு வகையைச் சார்ந்தவர்கள். அவர்களின் குணப்பண்புகள் மற்றவர்களிடமிருந்து வேறுபடுகின்றன. அவர்கள் பெரும்பாலும் நெட்டையான மனிதர்களாக இருப்பார்கள். வேறு சிலர், எழுத்துக்களைச் சாய்வாக எழுதுவார்கள். எழுத்துக்கள் வலப்புறமும் சாயலாம், இடப்புறமும் சாயலாம். ஆனால், இடப்புறம் சாய்த்து எழுதுகிறவர்கள் வலப்புறம் சாய்த்து எழுதுகிறவர்களிடமிருந்து முற்றிலும் பண்புக்கூறுகளில் மாறுபடுகின்றனர். இவ்வகையில் எழுதுபவர் மிக அரிதாகவே காணப்படுவர். அவர்கள் சற்று விசித்திரமானவர்களாகவும் இருப்பார்கள். வலப்புறம் சாய்த்து எழுதுகிறவர்கள் ஏறத்தாழ முப்பது விழுக்காட்டினர் என்று கூறுகின்றனர். அந்தப் பண்புக் கூறுகளில் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட ஆளுமையைக் குறிப்பதாக எழுத்துக்களைக் கூறுபடுத்தி கையெழுத்தியலார் கூறுகின்றனர்.

ஆனால், கையெழுத்தியல் துறையைச் சார்ந்த சிலர், எழுத்தைப் பாகுபடுத்தி, தனிமைப்படுத்தப்பட்ட பண்புக்கூறுகள் ஒவ்வொன்றும் ஒரு வகையான தனிப்பண்பைக் குறிப்பிடுவதாகக் கூறமுடியாது என்றும் எல்லாம் சேர்ந்து ஓர் ஆளுமையைத்தான் குறிப்பிடுகின்ற என்றும் கூறுகின்றனர். இத்துறையில் வருகின்ற ஆய்வு முடிவுகள் கருத்து வேறுபாடுகளுக்கு நல்ல விளக்கங்களைத் தரலாம்.

நோயினால் பீடிக்கப்பட்ட மக்களின் உடலில் சில உடற்கூற்று மாற்றங்கள் ஏற்படலாம். அம்மாற்றங்கள் அவர்களின் கையெழுத்துகளிலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் உண்மையாக இருந்து வருகின்றது. ஆனால், எந்த ஆய்வு முடிவுகளும் அந்த உண்மையை உறுதிப்படுத்தவில்லை. கையெழுத்தியல் துறையிலுள்ள எந்தக் கோட்பாட்டுக்கிளையினரும், சிகிச்சை முறைகளுக்கு மருந்து சரக்குகளைப் பயன்படுத்தி வருகின்றவர்களும், அல்லது இது நாள் வரையிலும் இத்துறையில் நடைபெற்று வருகின்ற ஆய்வு முடிவுகளும் ஒருவரின் ஆளுமையோடும் குணப்பண்புகளோடும் அவருடைய கையெழுத்திலுள்ள கூறுகளும், எழுத்தின் வடிவமைப்புகளும் தொடர்பு கொண்டிருக்கின்றன என்று கூறும் கருத்தை இறுதி முடிவாக உறுதிப்படுத்தவில்லை. அதனால் இக்கருத்தை ஆதரிப்பதற்கான ஆய்வு முடிவுகள் இன்னும் வெளிவரவில்லை என்று கருதவேண்டியுள்ளது.

ஒரு மனிதனின் கையெழுத்திற்கும் அவனுடைய குணப் பண்புகளுக்குமிடையில் ஒரு நல்ல தொடர்புறவு இருக்கின்றது என்ற கருத்து உலகில் பல நாட்டு மக்களிடையே இருந்து வருகின்றது. அமெரிக்க நாடுகளைவிட ஐரோப்பிய நாடுகளில் இக்கருத்து சற்று அதிகமாகவே பரவியிருக்கின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பிரெஞ்சு நாட்டில் ஆல்பர்ட் பினெட் ( Albert Binet ) என்பவர் மனிதர்களின் நுண்ணறிவு வளர்ச்சி பற்றிய ஆராய்ச்சி முடிவுகளை முதன் முதலில் வெளியிட்டார். சராசரி நுண்ணறிவு படைத்த மனிதர்களும், மிக்க நுண்ணறிவு படைத்த மனிதர்களும் வெளிப்படுத்திய கையெழுத்து மாதிரி களைக் கொண்டு அவர்களின் நுண்ணறிவின் மேம்பாட்டை வேறுபடுத்திக் காட்டுவதில் கையெழுத்தியலார் தம் திறமைகளைக் காட்டினார்கள் என்பதை பினெட் தம் கட்டுரையில் வெளியிட்டார். அது ஒரு தற்செயல் நிகழ்ச்சி என்றோ, அனைவரும் எதிர்ப்பார்க்கக்கூடிய முடிவு தான் என்றோ கொள்ளவேண்டாம் என்றும் பினெட் கூறினார்.

ருசிய நாட்டைச் சேர்ந்த லூரியா ( A. Luria ) என்பவர் 1940ஆம் ஆண்டில் மனித மூளையில் எப்பகுதி கையெழுத்தோடு தொடர்பு கொண்டிருக்கின்றது என்று கண்டறிந்து வெளியிட்டார். மூளையின் அப்பகுதி பழுதடைந்தால் அம்மனிதனின் கையெழுத்து பாதிக்கப்படுவதாக அவர் கண்டறிந்தார். எழுத்தியலாரின் திறமைகளைப் பல ஆராய்ச்சியாளர்கள் தங்கள் முயற்சிகளில் ஆதரிக்கத் தவறிவிட்டார்கள். என்றாலும் ஐரோப்பாக் கண்டத்தில் பல பல்கலைக்கழகங்கள் கையெழுத்தியலைப் பாடத்திட்டங்களில் வைத்து ஆதரவளித்துள்ளன. கையெழுத்தியலார் ஐரோப்பிய நாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் துறையினராகக் கருதப்படுகின்றனர். அமெரிக்காவில் ஒரு பல்கலைக்கழகந்தான் கையெழுத்தியலைப் பாடத்திட்டத்தில் அனுமதித்துள்ளது. ஒருவரின் நோய் கையெழுத்து சார்புடையதாக இருந்தால் அதன் இயல்பை அறிந்து கொள்வதற்கான உதவிப்பொருளாகவே கையெழுத்தியலை

அமெரிக்கப் பல்கலைக்கழகம் பயன்படுத்தி வருகின்றது. ஆனால், உளவியலார் எழுதியுள்ள பாடநூல்களில் எல்லாம் புறத்தெறி தொழில்நுட்பமுறை ( Projective Technique ) மூலம் ஆளுமையை விவரிக்கின்ற இடங்களில் எல்லாம் கையெழுத்தியலின் முக்கியத்துவத்தை விளக்கியுள்ளார்கள்.

பல அறிவியல் வல்லுநர்கள் கையெழுத்தியலை ஒரு போலி அறிவியல் என்று கருதுகின்றனர். பல அமெரிக்க வாணிக நிலையங்கள் தங்களுக்கு வேண்டிய பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் கையெழுத்தியலாரின் பணிகளையே பெரிதும் பயன்படுத்தி வருகின்றன. இந்தியாவிலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தின்போது அரசாங்கப் பணிகளுக்குப் பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கும்போது கையெழுத்திற்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. நல்ல தெளிவான கையெழுத்துள்ளவர்கள் முதன்மையிடம் கொடுக்கப்பட்டு அரசாங்கப் பணிகளில் அமர்த்தப்பட்டனர். வங்கி போன்ற வாணிக நிறுவனங்கள் எண்களைப் பெரிதும் பயன்படுத்துவதால் அதில் குழப்பம் ஏதும் நடைபெறாமலிருக்கும் பொருட்டு அழகாக எழுதக் கூடியவர்களையே பணியாளர்களாக அமர்த்தினர். ஆனால் விடுதலைபெற்ற இந்தியாவில் நல்ல கையெழுத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. வங்கிகளுக்குத் தேர்வு செய்யும் முறையிலும் எழுத்துக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதில்லை. அதனால் இன்று வங்கிகளில் பணிபுரிகின்றவர்கள் வாடிக்கையாளர்களின் சேமிப்புக் கணக்குப் புத்தகத்தில் ஒன்றும் புரிந்துகொள்ள முடியாதபடி கிறுக்கி வைக்கின்றனர். இதனால் பல குழப்பங்கள் ஏற்பட்டு வாடிக்கையாளர்கள் தொல்லைப்பட வேண்டியதாயுள்ளது.

மாணவர்கள் நல்ல எழுத்துத் திறமையைப் பெறும் பொருட்டு பள்ளிகளில் 'ஒன்றைப்போல எழுதுதல்' ( Copy Writing ) பயிற்சி முறை ஒரு கட்டாயமான வீட்டுப்பயிற்சியாக இருந்து வந்தது. அந்தப் பயிற்சி ஆங்கிலத்திலும் தமிழிலும் இருந்தது. அதனால் மாணவர்கள் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழி எழுத்துக்களையும் தெளிவாகவும் அழகாகவும் எழுதி வந்தனர். இன்று பள்ளிகளில் அத்தகைய கட்டாயப் பயிற்சி முறை இல்லை. அதனால் கல்லூரிகளில் நல்ல கையெழுத்துள்ள மாணவர்கள் பத்து விழுக்காட்டினர் கூட இல்லை.

தட்டச்சுப்பொறியும் அண்மைக்காலத்தில் கண்டு பிடிக்கப்பட்ட சொற்செயல்முறைப் பொறியும் ( Word Processor ) கையெழுத்து வேலைகளைக் குறைத்து விட்டன. இதனால் கையெழுத்து முக்கியத்துவம் இழந்துவிட்டது. இறந்தவர்கள் கையினால் எழுதப்பட்டவைகளை விட்டுச் செல்லாமல் எல்லாவற்றையும் தட்டச்சு செய்தவையாகவே விட்டுச் சென்றிருப்பதால் கையெழுத்தியலார் ஒருவர் கைப்பட எழுதிய பல பொருட்களைக் கொண்டு அவருடைய குணப் பண்புகளை ஆராயமுடியாமல் போய்விட்டது. இங்குமங்கும் கிடைக்கின்ற ஓரிரு கையொப்பங்களைக் கொண்டு ஒருவரின் முழு ஆளுமைப் பண்புகளையும் மதிப்பீடு செய்வது மிகவும் கடினம்.

கையெழுத்தின் உருவமைப்பு ஒருவர் பயன்படுத்துகின்ற எழுதுகோலினாலும் அமைகின்றது. ஒருவர் நெடுநாள்கள் எழுதிவந்த எழுதுகோலை விட்டு, வேறொன்றினால் எழுதுவாரானால் எழுத்துக்களின் உருவமைப்பு மாறுகின்றதைக் காணலாம். ஆனால், எழுதுகோல் மாற்றம் ஒருவரின் எழுத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்று சில கையெழுத்தியலார் கருதுகின்றனர். வயது, எழுத்தியல் விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பது சிலருடைய முடிவாகும். வயது முதிர்ந்தவர்களின் எழுத்தில் ஒரு விதமான வளைவுகள் காணப்படுகின்றன. தேவைக்கு அதிகமாகவே சில கோடுகள் நீட்டிச் செல்கின்றனர். சில இடங்களில் தேவைக் குக் குறைந்தும் சில கோடுகள் காணப்படும். அது நடுக்கத்தால் ஏற்படும் விளைவாகும். வயது முதிர்ந்தவர்களின் முன் கையிலும் விரல்களிலும் வலிமை குறைந்துவிட்டதால் அந்த நடுக்கம் ஏற்படுகிறது. கையில் நடுக்கம் வேலைக் களைப்பின் காரணமாகவும் ஏற்படலாம்.

அப்படிப்பட்ட விளைவுகளுள்ள எழுத்துக்களைக் கொண்டு ஒருவரின் குணப்பண்புகளை விவரிக்க வேண்டுமானால் அதிகமான விவரங்களைச் சேகரிக்கவேண்டும். ஒருவரின் மனநிலை எந்த வயதிலும் பாதிக்கப்படலாம். ஒருவர் நரம்புக் கோளாறினாலோ ( Neurosis ), உள நரம்புக்கோளாறினாலோ ( Psychoneurosis ) தாக்கப்பட்டிருப்பாரானால் அவருடைய எழுத்துக்களின் உருவமைப்பு நிச்சயமாக மாறுபடுகின்றன. அவருடைய முக்கிய எழுதும்

உறுப்புகளான முன்கை, விரல்கள் ஆகியவை முன்புபோல ஒத்துழைக்க மறுக்கின்றன. அவருடைய முன்கையின் பகுதிகளில் குறிப்பாக முழங்கையின் பகுதிகளில் வலி இருந்து வரும். இதனால் நரம்புகள் எழுதுவதில் ஒத்துழைக்காமல் சற்று முன்னோ பின்னோ கையைத் தள்ள வைக்கின்றன. எழுதுவதில் தடை ஏற்படுகிறது. சிறிது சிரமப்பட்டு எழுதலாம். அப்படி எழுதும்போது எழுத்துக்கள் சரியான உருவமைப்பைப் பெறாமல் சற்றுச் சிதைந்து காணப்படுகின்றன. . அப்படிப்பட்டவர்களின் கையெழுத்தைப் பார்த்தவுடன் அவர் உள நரம்புக் கோளாறினால் தாக்கப்பட்டவர் என்று அவரைப் பார்க்காமலேயே கூற முடியும்.

ஒருவர் இயல்பு நிலையில் இருந்தபோது அவருடைய எழுத்து இருந்த உருவமைப்பு பின்னர் பெறும் மாற்றங்கள் அவருடைய உளநிலை பழுதடைந்திருக்கின்றது என்பதைக் காட்டும். எனவே அறிவியல் வல்லுநர்கள் கையெழுத்தியலை ஒரு போலியான அறிவி யல் என்று கருதினாலும் அது ஒரு பயனுள்ள துறை யாகவே இருந்து வருகிறது.

- மு. இரா.

**கைலாசபதி, க. ( 1933 – 1982 ) :** இவர் ஈழத்தமிழறிஞர். ஒப்பிலக்கிய ஆய்வாளர். மார்க்சிய நோக்கில் தமிழாய்வு செய்து புகழ் பெற்றவர். இவர் 5 - 4 - 1933இல் மலேசிய நாட்டுக் கோலாலம்பூரில் பிறந்தார். தந்தையார் கனகசபாபதி, தாயார் தில்லை நாயகி. ஒன்றரை மாதக் குழந்தையாகப் பெற்றோருடன் இலங்கை வந்து ஆறு வயதில் கோலாலம்பூர் சென்று விக்டோரியா நிறுவனத்தில் தொடக்கக் கல்வி பயின்றார். 1945 - 50இல் இலங்கையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இடைநிலைக் கல்வியைத் தொடங்கினார். அங்கு வித்துவான் க. கார்த்திகேசு, பண்டிதர் க. செல்லத்துரை ஆகிய ஆசிரியர்கள் இவரது தமிழார்வத்தை ஊக்குவித்தனர். பொதுவுடைமைக் கொள்கையாளரான மு. கார்த்திகேசன் எனும் ஆசிரியரால் அக்கொள்கையில் ஈடுபாடு கொண்டார். அப்பருவத்திலேயே இவர், உலக அறிஞர் சிலரின் சிந்தனைகளைத் திருக்குறளுடன் ஒப்பிட்டு இந்து சாதனம் எனும் இதழில் கட்டுரைத் தொடரொன்றை எழுதினார்.

கொழும்பு இராயல் கல்லூரியில் 1951 - 53இல் மேல்நிலைக் கல்வியைத் தொடர்ந்த கைலாசபதி ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர்களின் நூல்களைப் படித்தார். சிறுகதைகள், கவிதைகள் சில வற்றோடு ஏறத்தாழ, நாற்பது நாடகங்களை ஆக்கினார். இலக் கியப்படைப்பு முயற்சிகளில் ஈடுபட்டாராயினும், தமக்குரிய துறை திறனாய்வே என இனங் கண்டார். சிற்சில திறனாய்வுக் குறிப்புகளையும் கட்டுரைகளையும் வெளியிடத் தொடங்கினார்.

பல்கலைக்கழக நுழைவுத்தேர்வு எழுதியபின் கிடைத்த சில திங்கட்கால ஓய்வில் ( 1953 ) தமிழ், ஆங்கிலப் புதினங்கள் பலவற்றைப் படித்தார். அதன் பயனாக, *'வீரகேசரி'* ஏட்டின் ஞாயிறு இதழில் 'தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் கட்டுரைத் தொடரொன்றை எழுதினார்.

இலங்கை - கண்டி பேராதனைப் பல்கலைக்கழகத்தில், தமிழைச் சிறப்புப்பாடமாக எடுத்துப் பயின்றார் ( 1953 - 54, 56 - 57 ). அங்குப் பேராசிரியர்கள் க. கணபதிபிள்ளை, ச. வித்தியானந்தன் ஆகியோரால் ஆழ்ந்த தமிழ்ப்புலமையும், உடன் சாலை மாணாக்கர் கா. சிவத்தம்பி நட்பினால் அறிவார்ந்த மார்க்சியத் தோழமையும் கைலாசபதிக்குக் கிடைத்தன. பல்கலைக் கழகத் தமிழ்ச்சங்கம் நடத்திய இளங் கதிர் எனும் இதழில் பல கட்டுரைகளை எழுதினார்.

பட்டம் பெற்ற பின் தினகரன் இதழின் துணையாசிரியராகி ( 1957 - 58 ) பின், ஆசிரியராகவும் ( 1958 - 60 ) உயர்ந்தார். அக்காலத் தினகரனில் தான் ஈழத்து வாழ்க்கையைப் பொருளாகக் கொண்ட படைப்புகள் மிகுதியாக இடம் பெற்றன. 1957இல் கொழும்பில் நடைபெற்ற அனைத்துலகச் சமாதன மாநாட்டுப் பணிகளில் பங்கேற்றார். புதிதாக விடுதலையடைந்த விடுதலைக்குப் போராடிய நாடுகளின் எழுத்தாளர்களோடு உரையாடினார். கல்கத்தாவில் 1960இல் நடைபெற்ற அகில இந்தியத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டிற்கு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

1961இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தார். அங்கேயே பயின்று 1961 - 63இல் முதுகலைப்பட்டமும் பெற்றார். பின்பு இங்கிலாந்தின் பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் கிரேக்கப் பேராசிரியர் ஜார்ஜ் தாம்சன் என்பாரை

நெறியாளராகக் கொண்டு தமிழிலுள்ள சங்கப்பாடல்களையும், கிரேக்க காவியங்களையும் ஒப்புநோக்கிச் சங்கப் பாடல்கள் தமிழின் வீரயுகப்பாடல்கள் என நிறுவி னார். இதற்கான முனைவர் பட்டம் 1966இல் பெற்றார். இதற்கிடையில் 1964இல் சர்வமங்கலம் என்பாரை மணந்தார். 1966இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகப் பணியேற்றார்.

1969இல் கொழும்புப் பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாகிச் சென்றார். 1970இல் யுனெஸ்கோவிற்கான இலங்கைத் தேசிய ஆணைக்குழு உறுப்பினராகவும், இலங்கைப் பாடநூல் ஆணைக்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்றிருந்தார்.

1971 முதல் 74 முடிய இலங்கைப் பல்கலைக்கழக வெகுமக்கள் தொடர்பு ஆய்வுக்கழக உறுப்பினராக இருந்தார். இலங்கைப் பல்கலைக்கழகத்திற்கு யாழ்ப்பாணத்தில் வளாகம் நிறுவும் பணிக்குத் தலைமைப் பொறுப்பேற்று அது, ‘யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமான’ போது ( 1974 ) தமிழ்ப் பேராசிரியரானார். 1977இல் தமிழ்த்துறை தலைவராகவும், 78 இல் கலைப்புலத் தலைவராகவும் ஆனார்.

1968இல் சென்னையிலும், 1970இல் பாரிசிலும், 1981இல் மதுரையிலும் நிகழ்ந்த உலகத் தமிழ் மாநாடுகளில் பங்கேற்றார். 1977 - 78இல் படைப்பெழுத்து தகைஞர் ( Fellow in Creative Writing ) எனும் வகையில் அமெரிக்க அயோவாப் பல்கலைக்கழகத்தில் ஆய்வு மேற்கொண்டார். 1978 இல் குடும்பத்துடன் சீனா சென்று வந்தார்.

சிக்கலும் நுண்மையும் வாய்ந்த பலவற்றைத் தெளிவான, எளிய தமிழில் எழுதியதால் இலக்கியக் கல்வித்துறையினரிடம் மட்டுமின்றி ஆர்வமுடைய யாவரிடத்தும் செல்வாக்குப்பெற்றார். மார்க்சிய கோட்பாடு சார்ந்து நின்று எழுதிப் பல்வேறு கருத்து மாறுபாடுகளை எதிர்கொண்டார். உறுதியாகவும் கடுமையாகவும் தம் கருத்துகளை வலியுறுத்தினார். கருத்து மாறுபாடு கொண்டோரிடமும் இனிமையாகப் பழகினார். மாறுபட்ட கருத்துடையார் தாமும் தம் எழுத்துகள் பற்றிய கைலாசபதியின் கருத்தினை அறிய ஆர்வங்கொண்டிருந்தனர். இவ்வாறு ஒரு நிறுவனமெனத் தக்க தனிமனிதராகவிருந்த கைலாசபதி 1982 டிசம்பர் 6ஆம் நாள் மறைந்தார்.

கைலாசபதியின் நூல்கள் - **இரு மகாகவிகள், பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், தமிழ் நாவல் இலக்கியம், அடியும் முடியும், கவிதை நயம்** ( இணையாசிரியர் ), **இலக்கியமும் திறனாய்வும், பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும், மக்கள் சீனம் காட்சியும் கருத்தும்** ( இணையாசிரியர் ), **சமூகவியலும் இலக்கியத் திறனாய்வும், பாரதி ஆய்வுகள், ஈழத்து இலக்கிய முன்னோடிகள்** மேலும் ஆங்கிலத்தில் மூன்று நூல்கள் Tamil Heroic Poetry, The Relation of Tamil and Western Literature, Or. Art and Literature எழுதியுள்ளார்.

- பா. ம.

**கைவிடுதல் :** திருமணமான தரப்பினர்களில் கணவன் அல்லது மனைவி ஒருவரைவிட்டு ஒருவர் எந்தவிதக் காரணமுமின்றிப் பிரிதல் அல்லது ஒருவரை ஒருவர் புறக்கணித்தல் கைவிடுதல் (Desertation) எனப்படும். வாழ்க்கைப்பொருளுதவி, மணமுறிவு, நீதிமன்றத் தீர்ப்புவழி பிரிந்துறைதல் போன்ற வழக்குகளில் திருமணத் தரப்பினர் கைவிடுதலை ஒரு சரியான காரணமாகக் காட்டி உரிய நிவாரணத்தைப் பெறலாம்.

**கைவிடுதல் குற்றத்தின் கூறுகள் :** கைவிடுதல் குற்றம் இரு கூறுகளைக் கொண்டது. அவை 1. திருமணத்தரப்பினர்களில் ஒருவர் ஒருவரை விட்டு உடல் வழியாகப் பிரிந்திருக்க வேண்டும். 2. உள்ளத்தின் வழியாக நிரந்தரமாகப் பிரிந்திருக்க வேண்டும். இவை இரண்டையும் மெய்பிக்கும் நிலையிலேயே கைவிடுதல் குற்றமாகும்.

**கைவிடுதலும் ஆகாதனவும் :** கணவன் தானே தன் மனைவியை அவள் தாயார் வீட்டிற்குக் கூட்டிச் சென்று அங்கே அவள் தொடர்ந்து இருக்கும் நிலையில் விட்டுவிட்டு, பின்னர் அவள் தன்னை எந்தவித காரணமுமில்லாமல் பிரிந்திருக்கிறாளெனக் கூறிக் கைவிடுதல் குற்றத்தைச் சாட்டுவது தவறானதாகும். பெண்ணொருத்தி புகுந்த இடத்தை விட்டு, சாதாரண மனவருத்தம், கோபங்களின் அடிப்படையில் இடைக்காலமாகப் பிரிந்திருக்கும்போது அது கைவிடுதல் குற்றமாகாது. கணவனுடன் கூடி வாழ்வதினின்று நிரந்தரமாகப் பிரிந்திருக்கும்போது மட்டுமே அது கைவிடுதல் குற்றமாகும். மனைவிக்கு முதல்

குழந்தை பிறந்து அதை மனைவியின் தந்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் மாப்பிள்ளை வீட்டாருக்கு இனிப்புகள் வழங்க வந்திருக்கும்போது, மாப்பிள்ளை வீட்டார் அதைப் புறக்கணித்து, மனைவியின் வீட்டாரிடமிருந்து வரதட்சணை வேண்டி நிற்பதையும், கணவனும் மனைவியைப் பொருட்படுத்தாது அவளை அவள் பெற்றோர் இல்லத்திலேயே இருக்க விடுவதையடுத்தும், மனைவி கணவனுடன் இணைந்து வாழாதிருப்பது கைவிடுதல் குற்றமாகாது. மனைவி ஒருத்தி, தான் கணவன் விதிக்கும் எந்தவொரு நிபந்தனைக்கும் கட்டுப்படுவதாகவும், ஆகையால், தன்னைத் திரும்பக்கூட்டிச் சென்று குடும்பம் நடத்த அவள் வேண்டும்போது, கணவன் அதை மறுப்பது கைவிடுதல் குற்றமாகும்.

மனைவி ஒருத்தி கணவனின் வீட்டிற்கு முதல்முதலில் வருகின்ற நிலையில், அவளுக்கு எதிர்பாராத வகையில் வயிற்றுவலி வந்துவிடுகிறது. கட்டிய கணவனும் அவன் வீட்டாரும் அவளுக்கு மருத்துவ வசதி ஏற்படுத்தித் தராத நிலையில் அவள் தாய்வீடு சென்று மருத்துவம் செய்து கொள்கிறாள். கணவன் அவன் பராமரிப்பிற்கோ, மருத்துவத்திற்கோ எந்த உதவியையும் செய்யவில்லையெனில் அது கைவிடுதல் குற்றமாகும். கணவன் ஒருவன் மன அமைதி தேடி தன் தாயையும், தன் குடும்ப உறுப்பினர்களையும் துறந்து தனியே வாடகைக்கு ஒரு வீடு அமர்த்திக் கொண்டு வாழ, அங்கேயும் மனஅமைதி கிட்டாததையடுத்து, அவன் மீண்டும் தன் தாயார் இல்லத்திற்கே வந்து வாழ விரும்பும்போது, அவன் மனைவி அவனுடன் இணைந்துவாழ மறுப்பது கைவிடுதல் குற்றமாகும். திருமணத்துக்குப்பின் மனைவி கணவனுடன் சேர்ந்து உறைய வேண்டும். கணவனை விட்டுப் பிரிதல் கூடாது. சட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்ட எவ்விதக் காரணமுமின்றி கணவனை விட்டுப் பிரிந்திருப்பது கைவிடுதல் குற்றமாகும். அதுபோன்றே கணவன் தன் மனைவியை தன்னுடன் வைத்து வாழ வைக்க வேண்டும். அப்படியின்றி காரணம் எதுவுமில்லாமல் மனைவியை விலக்கி வைத்தல் கைவிடுதல் குற்றமாகும். இதைக் காரணமாகக்கொண்டு கணவனோ, மனைவியோ நீதிமன்றத்தில் ஒருவர் மீது ஒருவர் வழக்குத் தொடரலாம்.

- பு.வே.

**கொற்றவை** : சக்தியாகிய துர்க்கையின் மற்றொரு பெயர் கொற்றவை ஆகும். 'வெற்றிக்கு உரியவள்' என்னும் பொருளில் இப்பெயர் வழங்கப் பெறுகிறது. திருமுருகாற்றுப்படையில் முருகனைக் கண்டு துதிக்கும் நக்கீரர், 'வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ' ( முருகு : 258 ) என்றே அழைப்பர். இதே போன்று பரிபாடலிலும் ( 11 - 100 ), பெருங்கதையிலும் ( இலாவாண, 2, 31 ) கொற்றவையின் கோலத்தைக் காட்டக் காணலாம். துர்க்கைக்குப் பலியிட்டுப் பரவும் புறத்துறையைக் கொற்றவை நிலை என்றே குறிப்பிடுவார் ( தொல். பொ. 59 ) தொல்காப்பியர்.

தொல்காப்பியர் பாலைக்கு நிலம் கூறவில்லை. 'முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து நல்லியல் பிழந்து நடுங்குதுயர் உறுத்துப் பாலை என்பதோர் படிவங்கொள்ளும்' என்று பாலைக்கு நிலத்தை முதன்முதலில் குறித்தவர் இளங்கோவடிகள். முன்னோர் கூறாத பாலை நிலம் வகுத்து, அதற்குரிய தேவியாகிய கொற்றவையின் செயல்களைக் குறிப்பிடும் இளங்கோவடிகள், பின்னோர் அத்தெய்வத்தைப் பெருமளவிற்கு ஏத்துவதற்கு அடிப்படையானார் எனலாம்.

கொற்றவையைச் சிறப்புச் செய்ய வேட்டுவரி என்று ஒரு காதை அமைத்த இளங்கோவடிகள், கொற்றவை குடிகொண்ட கோயிலை ஐயைக் கோட்டம் என்பர். கொற்றவையை ஐயை, அமரி, கவுரி, அந்தரி, சங்கரி, சமரி, குமரி, சூலி, நீலி, கண்ணுதல் பாகம் ஆளுடையாள், கலைப்பரிதி ஊர்தி, கலையமர் செல்வி, திங்கள் வாழ் சடை முடியாள், பாய்கலைப்பாவை, மாயவள், வெள்வாள் உழத்தி, விண்ணோர் பாவை, விழிநுதல் குமரி எனப் பல்வேறு பெயர்களால் அழைப்பர்.

சிங்கத்தின் தோலை உரித்து மேகலையாக அணிந்தும், புலியின் தோலை உடுத்தியும், யானைத் தோலினை உரித்துப் போர்த்தியும் கொற்றவை காட்சி நல்குகின்றாள். இடக்காலில் சிலம்பும் வலக்காலில் வீரக் கழலும் அணிந்தவள். அழகிய பொன்னாற் செய்த அரிபொருந்திய சிலம்பும் சூடகமும் மேகலையும் அணிகலன்களாகக் கொண்டவள். நஞ்சு ஊறும் துளையெயிற்றினை உடைய பாம்பாகிய கச்சணிந்தவள், வளையணிந்தவள், அழகிய தொடியினை

உடையவள், பிறையினைச் சடைமுடியில் அணிந்தவள், பாம்பைப் பிறையோடு முடிந்தவள், மதியாகிய வெள்ளிய இதழைச் சென்னியில் அணிந்தவள், ஆளிக்கொடியைக் கொற்றக் கொடியாகக் கொண்டவள். கொற்றவை, ஆறலைக் கள்வர் தரும் பலியை எதிர்பார்த்திருப்பவள். மறவர்கள் தங்களுக்கு வெற்றி தந்த கொற்றவைக்கு விலையாகத் தங்கள் மிடற்றிலிருந்து ஒழுகும் குருதியை நினத்தோடு பலியாகத் தருகின்றனர்.

கொற்றவை, விக்கிரமாசூரன் மயிடாசூரன் ஆகியோரை வென்ற செயல்களையெல்லாம் இளங்கோவடிகள் குறிப்பிடுவர். மதுரையில் இத்தேவிக்குக் கோயில் இருந்ததென்றும் கூறுவர். புறஞ்சேரியிறுத்த காதையில் கொற்றவையின் அந்தரிகோலம் வியந்து பாடப்பெறும். மாதவி இக்கொற்றவை ஆடிய 'மரக்காலாட்டத்தில்' தேர்ந்திருந்தனள் என்பர்.

கொற்றவை திருமாலுக்குத் தங்கை. சிவபிரானுக்குக் கிரியா சக்தி. எனவே இருவர் செயல்களும் கொற்றவை மேல் ஏற்றிப் புகழப்படுகின்றன. வேட்டுவ வரியில், திருமாலிற்கு இளையாள் எனவும், 'கங்கை முடிக்கணிந்த கண்ணுதலான் பாகத்து மங்கை' எனவும் கொற்றவை குறிக்கப்படுகின்றாள். தேவர்கள் அமுதுண்டு சாக, சிவன் நஞ்சுண்டு சாகாதிருந்தான். இதைக் கொற்றவையின் செயலாக, 'விண்ணோரமு துண்டும் சாவ ஒருவரும் உண்ணாத நஞ்சுண்டிருந்தருள் செய்குவாய் 'என்று பாடுவார் இளங்கோவடிகள். திருமால் இருமருத மரங்களின் இடையே நடந்து அவற்றைச் சாய்த்து, மாமனாகிய கஞ்சன் செய்த வஞ்சகத்தால் தோன்றிய உருண்டு வரும் சகடத்தையும் உதைத்தருளினார். இச்செயலையே கொற்றவையின் செயலாக, 'மருதின் நடந்துநின் மாமன் வஞ்ச உருளுஞ் சகடம் உதைத்தருள் செய்குவாய்' என்று இளங்கோவடிகள் பாடுவார்.

கொற்றவைக்கு எயினர் குருதிப்பலி கொடுப்பது போலவே, கொற்றவையின் கூறாகக் கருதப்பட்ட கண்ணகிக்கும் பொற்கொல்லர் ஆயிரவரைப் பலி கொடுத்த வெற்றிவேற்செழியனையும் சிலம்பில் காணலாம்.

'அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப் பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி' என்றும், 'வெற்றிவேல் தடக்கை கொற்றவை' என்றும், 'அறுவர்க்கு இளைய நங்கை' என்றும், 'இறைவனை ஆடல்கண் டருளிய அணங்கு'என்றும், 'சூருடைக் கானகம் உகந்த காளிதாருகன் பேருரங் கிழித்த பெண்' என்றும், கொற்றவையின் தெய்வக்கூறுகளை வழக்குரை காதையில் விளக்குவர். எனவே, கொற்றவை வழிபாடு, சிவன் திருமால் வழிபாட்டோடு தொடர்புடையதாய் அமைந்தமை சிலம்பு வழித் தெளிவாகும்.

- வே. இரா. மா.

**கோவலன்பொட்டல் :** கோவலன்பொட்டல் மதுரையிலிருந்து திருப்பரங்குன்றம் செல்லும் நெடுஞ்சாலையில் மதுரைமாநகரின் ஒரு பகுதியாக உள்ளது. பழங்காநத்தம் என்ற பேருந்து நிலையத்திலிருந்து ஒரு கி.மீ. சென்றால் கோவலன் பொட்டலை அடையலாம். சிலப்பதிகாரக் காப்பியத்தலைவன் கோவலன் கொலை செய்யப்பட்ட இடம் கோவலன்பொட்டல் என்று பெயர் பெற்றதாகச் செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. கோவலன் பொட்டலில் ஒரு கல்லை நட்டுவைத்து அதற்குக் குங்குமம் இட்டு, கோவலன் கொலை செய்யப்பட்ட இடம் என்று கருதி இன்றும் இப்பகுதி மக்கள் வழிபட்டு வருகின் றனர்.

கோவலன்பொட்டல் பகுதி சிறிய மண்மேடாகக் காட்சியளிக்கின்றது. அதன் வரலாற்றுச் சிறப்பை அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் தொல்லியல் ஆய்வாளர்கள் இதை ஆய்வு செய்தனர். இங்கு செய்யப்பட்ட மேற்பரப்பாய்வின் போது பல தொல் பொருட்கள் கிடைத்தன. அந்த மேற்பரப்பாய்வின் அடிப்படையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையினர் இங்கு அகழாய்வை மேற்கொண்டனர். அந்த அகழ்வாய்வின்போது பல வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த உண்மைகள் வெளிப்பட்டன. இப்பகுதியில் கி.மு.300க்கும் கி.பி. 30க்கும் இடைபட்ட காலத்தில் வாழ்ந்த பெருங்கற்கால மக்கள் வாழ்ந்ததற்கான தடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.


பெருங்கற்கால மக்கள் இறந்தவர்களைப் புதைக்கும் வழக்கம் கொண்டவர்கள். அவர்கள் இறந்தவர்களைப் புதைத்த ஈமச்சின்னங்கள் பலவகைகளில் தமிழ்நாட்டில் கிடைத்துள்ளன. அத்தகைய முறைகளில் ஒன்று தாழியில் வைத்து புதைப்பதாகும்.

கோவலன்பொட்டல் அகழாய்வின் போது மூன்று தாழிகள் கிடைத்துள்ளன. இறந்தவர்களின் எலும்பை இத்த கைய தாழிகளில் இட்டுப் புதைப்பது வழக்கம். இத் தகைய எலும்புக்கூடு ஒன்றும் இங்கு கண்டெடுக்கப் பட்டுள்ளது.

இந்த அகழ்வாய்வின்போது மேலும் பல தொல் பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பெருங்கற் காலத்தைச் சார்ந்த கறுப்பு சிவப்பு பானைகள், சிவப் புப்பானைகள், கறுப்பு நிறப்பானைகள் போன்றவை இங்கு கிடைத்துள்ளன. சங்ககாலக் காசு ஒன்றும், ஈட்டி முனைகள் என்று கூறப்படுகின்ற எலும்பு ஆயு தங்கள், பலவகையான மணிகள், பாசிகள் போன் றவைகளும் இங்கு சேகரிகப்பட்டுள்ளன. கோவலன் பொட்டல் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து இறந்தவர்களைப் புதைக்கும் சுடு காடாக இருந்துள்ளது என்பது தெளிவாகிறது. இன்றும் இப்பகுதி சுடுகாடாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

- தி.சு.

**கோவிந்தராசன், சீர்காழி** : கனிவும் கம்பீரமும் இணைந்த குரல் வளம். தெளிவான உச்சரிப்பு. பொருள் உணர்ந்து பாடும் திறன். இத்தனை சிறப்புகளும் ஒருங்கிணைந்து உலகப் புகழ் பெற்ற ஒரு கர்நாடக இசைப்பாடகராக விளங்கியவர் சீர்காழி எஸ். கோவிந்தராசன். இவர் தஞ்சை மாவட் டத்தில் சீர்காழி எனும் ஊரில் 1933ஆம் ஆண்டு அபயாம்பாள், சிவசிதம்பரம் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். இயல்பாகவே இசையில் பேரார்வம் கொண்டிருந்த இவர் இளம் வயதி லிருந்து கர்நாடக இசையை முறையாகப் பயின்றார். பி.எசு. செட்டியார் மேற்பார்வையில் டி. சீனிவாசய் யாவிடம் முதலில் இசை பயின்ற இவர்1949 - 50ஆம் ஆண்டுகளில் சென்னை தமிழிசைக் கல்லூரியில் இசை பயின்று, ‘இசைமணி’ பட்டத்தைப் பெற்றார். தொடர்ந்து 1951 முதல் 1952ஆம் ஆண்டுவரை சென்னை கர்நாடக சங்கீத மத்தியக் கல்லூரியில் இசை பயின்று, ‘சங்கீத வித்துவான்’ பட்டத்தைப் பெற்றார். கல்லூரிப் பயிற்சியோடு புகழ்வாய்ந்த புல் லாங்குழல் வித்தகரான சங்கீத கலாநிதி பேராசிரியர் திருப்பாம்புரம் என். சாமிநாதபிள்ளையிடம் குருகுல வாசம் செய்தார்.



கோவிந்தராசன், சீர்காழி

நிறைந்த இசை அறிவும், இசை விருத்தியில் விடா முயற்சியும், சீரிய ஒழுக்கமும் கொண்ட சீர்காழி கோவிந்தராசனுக்கு இளம் மாணவப்பருவத் திலேயே அரிய பரிசுகள் கிடைத்தன. சென்னைத் தமி ழிசைச் சங்கம் நடத்திய கோபால கிருட்டிண பாடல் போட்டியில் இவர் முதல் மாணவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டு இராசாசி தம்புரா பரிசைப் பெற்றார். பின் னர், சென்னை சங்கீத வித்துவ சபை நடத்திய தியாகய் யர் அபூர்வ கீர்த்தனைகள் போட்டியிலும், தமிழ் அபூர்வ கிருத்திகள் போட்டியிலும் தங்கப்பதக்கம் பெற்றார். தொடர்ந்து இசைப்போட்டிகளில் தங்கப் பதக்கப்பரிசு பெறும் சிறப்புத் தகுதியை வளர்த்துக் கொண்ட இவர் சென்னை இரசிக ரஞ்சனி சபை நடத் திய மும்மூர்த்திகளின் கீர்த்தனைப் போட்டியிலும் தங்கப்பதக்கம் பெற்றார்.

இசைக்கலை நுட்பங்களை ஆழமாகவும் விரிவாக வும் அறிந்துகொண்ட இவருக்குத் தெளிவான குரல் வளமும், எல்லோரோடும் இனிமையாகப் பழகும் எளிய பண்பும் ஏராளமான ரசிகர்களைத் தேடித் தந்தன. இசை நிறுவனங்களில் மட்டுமல்லாமல் கோயில் விழாக்களிலும், திருமண விழாக்களிலும் இவருடைய இசை நிகழ்ச்சிகள் விரும்பிக் கேட்கப் பட்டன. தில்லி, கல்கத்தா, பம்பாய் ஆகிய வட நாட்டிலுள்ள சங்கீத சபைகளிலிருந்தும் இவருக்கு

அழைப்புகள் வந்தன. கடல்கடந்த வெளிநாடுகளிலும் இவர் புகழ் பரவியது. இலங்கை வாழ் தமிழர்களின் அழைப்பை ஏற்று இசைநிகழ்ச்சிகள் நடத்த முதன்முதலாக 1958 ஆம் ஆண்டு இலங்கை சென்றார். தொடர்ந்து சிங்கப்பூர், செர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்சு, கனடா, சுவிட்சர்லாந்து, மொரிசியசு எனப்பல நாடுகளுக்குச் சென்று அன்பையும் பக்தியையும் இசையால் பரப்பும் ஒரு பண்பாட்டுத் தூதுவனாக விளங்கித் தமக்கும் இந்திய நாட்டிற்கும் பெரும் புகழை ஈட்டினார்.

சீர்காழி கோவிந்தராசன் பாடிய கர்நாடக இசைக் கச்சேரிகளும், பக்திப்பாடல்களும் இசைத்தட்டுகளாகவும், ஒலிநாடாக்களாகவும் ஏராளமாக வெளிவந்தன. பெரியோர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பல பெரியோர்கள் குறித்த பாடல் தொகுப்புகளையும் இவர் பாடி ஒலிப்பதிவு நாடாக்களில் வெளியிட்டார். கர்நாடக இசைக் கச்சேரிகள் செய்வது, பக்திப்பாடல்கள் பாடுவது என்பதோடு நின்றுவிடாமல் இவர் ஒரு சிறந்த திரைப்படப் பின்னணிப் பாடகராகவும் விளங்கினார். 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு இவரை சிறந்த பின்னணிப் பாடகராகத் தேர்ந்தெடுத்துச் சிறப்பு செய்தது. சீர்காழி கோவிந்தராசன் நடிகர்களுக்குப் பின்னணி பாடியதோடு, தாமும் சில பாத்திரங்களையேற்று திரைப்படங்களில் நடிக்கவும் செய்தார்.

கர்நாடக இசையின் வளர்ச்சிக்காகவே தன் வாழ்க்கையை அமைத்துக்கொண்ட இவரை நாடும் உலகமும் அவ்வப்போது பட்டங்களும், பட்டயங்களும் வழங்கி கௌரவித்தன. சென்னை அருள்மிகு அங்காள பரமேஸ்வரி ஆலயம் 1955 ஆம் ஆண்டு வழங்கிய சங்கீத ரத்னம் முதல் ஏழிசை அரசு, இன்னிசை வேந்தன், கம்பீர கானமணி, இசைக்கடல், இன்னிசை அரசு, தருமபுர ஆதின இசைப்புலவர், இசைத் திலகம், அருளிசை அறிஞர், இறை இசை வேந்தன், இசைமாமணி, இசை அமுதம், இசை அரசு, சங்கீத பாஸ்கர, இன்னிசைத் தென்றல், ஏழிசை வேந்தர், கானாமுத வாரிதி, இசை ஞான பூபதி, கந்தர்வ கித வித்தகர், இந்திய இசையின் இதயமும் ஆத்மாவும், பேரிசைமணி, கம்பீர காண இன்னிசை வேந்தன், முத்தமிழ் கலைமாமணி, இசை மாமன்னர், இசைச் செல்வம், தமிழிசை மன்னர், இசைப்பேரறிஞர், இசைக்கலை அகத்தியர், தமிழிசைப் பேரறிஞர், பேரிசைப்புலவர், இசைப்பேருவி, உலக இசைத் தூதுவர் முதலிய பட்டங்களைப் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகம் இவருக்கு 1983ஆம் ஆண்டு 'டாக்டர்' பட்டம் வழங்கி சிறப்பித்தது. இந்திய அரசு இவருக்கு 1983ஆம் ஆண்டு 'பத்மசிரீ' பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழக இசைத்துறைகளின் வளர்ச்சியில் இவர் பெரும் ஈடுபாடு கொண்டிருந்தார். சீர்காழி கோவிந்தராசனுக்குச் சுலோச்சனா அம்மையார் வாழ்க்கைத் துணையாக அமைந்தார். இவர்களுக்கு ஞானவல்லியும், டாக்டர் சிவசிதம்பரமும் மக்களாக வாய்த்தனர். இவர் 1988ஆம் ஆண்டு தனது 55வது வயதில் காலமானார்.

- ஞா. கு.

**கோவிந்தன், புலவர் கா :** இவர் தமிழகத்தின் முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர். இவர் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாற்றில் 1917ஆம் ஆண்டு சூன் திங்கள் பன்னிரண்டாம் நாள் பிறந்தார். இவருடைய தந்தையார் காங்க முதலியார், தாயார் சுந்தரம் அம்மையார். செய்யாறு உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்த அவ்வை சு. துரைசாமிப்பிள்ளையிடம் இவர் தமிழ் பயின்றார்.

பள்ளிப்படிப்பை 1934ஆம் ஆண்டு நிறைவு செய்தவுடன் பெரியார் ஈ.வெ.ராவின் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டார். அதே நேரத்தில் மறைமலையடிகள், ஞானியாரடிகள், ந.மு. வேங்கடசாமி நாட்டார், சோமசுந்தர பாரதியார், உமாமகேசுவரபிள்ளை, திரு.வி.க.போன்ற தமிழறிஞர்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். திருவத்திபுரத்தில் இந்தி எதிர்ப்பை 1938ஆம் ஆண்டு நடத்தினார். வேலூர் வேங்கடேசுவரா உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராக 1941ஆம் ஆண்டு முதல் பணிபுரிந்து வந்தார். பணியிலிருக்கும்போது, தனி நிலையில் படித்து, சென்னைப் பல்கலைக்கழகத்தில் பி.ஓ. எல்., எம்.ஏ., ஆகிய பட்டங்களைப் பெற்றார்.

அண்ணாவின் முதல் படைப்பான சந்திரோதயம் என்ற சமூக சீர்திருத்த நாடகத்தை அரங்கேற்றும் பொறுப்பையேற்று, 1943ஆம் ஆண்டு

அரங்கேற்றினார். பாரதிதாசன் எழுதிய இரணியன் அல்லது இணையற்ற வீரன் என்ற நாடகத்தை அரசு தடை செய்திருந்த போது, அத்தடையை மீறி அந்நாடகத்தை நடத்திக்காட்டிய தன்மான இயக்கத்தமிழ்ப் புலவராக விளங்கினார். முதன்முதலாக ஆண்டு தோறும் பொங்கல் விழாவைத் தமிழர் திருநாள் எனும் பெயரில் சீரோடும் சிறப்போடும் நடத்தி தமிழ்நாட்டிற்கு வழிகாட்டியவர் இவர்.

தி.மு. கழகத்தின் சார்பில் போட்டியிட்டு 1962ஆம் ஆண்டு செய்யாறு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரானார். மீண்டும் அதே தொகுதியில் 1967ஆம் ஆண்டு வெற்றியடைந்து சட்டப்பேரவைத் துணைத் தலைவரானார். 1969ஆம் ஆண்டு சட்டப்பேரவைத் தலைவரானார்.

இவர், **சங்ககால புலவர் வரிசை, சங்க கால அரசர் வரிசை, தமிழர் வாழ்வு, நற்றிணை விருந்து, கோவை இலக்கிய வளர்ச்சி, பாலைச்செல்வி** போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துள்ளார். கால்டுவெல்லார் எழுதிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை மிகவும் சிறப்பாக மொழி பெயர்த்தார். இவர் தம் தமிழ்ப் பணியை போற்றிப் பாராட்டும் வகையில் தமிழக அரசு 1990ஆம் ஆண்டுக்குரிய திரு.வி.க. விருதினை வழங்கியது. இவர் 2 - 7 - 1991 ஆம் ஆண்டு மாரடைப்பால் மரணமடைந்தார்.

- சா. உ.

**சகசமலம் :** சைவ சித்தாந்தத்தில் தளை அல்லது கட்டு எனப்படுகின்ற மலமானது மூன்றாகக் குறிக்கப் படுகின்றது. அவை ஆணவம், கன்மம், மாயை என்பனவாம். இவை ஆன்மாவிற்கு மலமாய் உள்ளன. மலம் எனில் அழுக்கு. இங்கே ஆன்மாவைப் பற்றிய அழுக்கு. கன்மம், மாயை, ஆணவம் ஆகிய மூன்றும் நெல்லிற்கு முளை, தவிடு, உமியைப் போல ஆன்மாவிற்கு போகம், பந்தம், போத்திருத்துவம் ( நுகரும் தன்மை ) ஆகிய செயல்களைச் செய்து பிறப்பிற்குக் காரணமாக அமைகின்றன.

மூன்று மலங்களில் ஆணவமே முதலாவதாக வைத்து எண்ணப்படுவது. அறிவுடைய பொருளாகிய ஆன்மாவை அறியாமையுடையதாகச் செய்வதே இதன் இயல்பாம். உயிர்களுக்கு இயற்கையாக ஒரு குற்றம் உண்டு என்பதை அடிப்படை உண்மையாக வைத்து, அக்குற்றத்தின் நீக்கத்திற்காகவே உலகப் படைப்பு நிகழ்கிறது எனச் சைவசித்தாந்தம் வலியுறுத்துகின்றது. இந்நிலையில் ஆணவமலமே ஆன்மாக்களின் அறிவாற்றலைத் தடுத்து மறைக்கும் இயற்கைக் குற்றம் என்பதால் இது சகசமலம் என்றும், மூலமலம் என்றும் குறிக்கப்படும். இருள் போல் நின்று உயிர்களை அறியாமையால் அழுத்துவதாய் இருத்தலால் இது இருள் அல்லது இருள் மலம் எனவும் அழைக்கப்படும்.

ஆணவம் ஆன்மாவிற்கு இயற்கையாகவே - உடனாகவே - உள்ளதால் சகசமலம் எனப்பட்டது. சகசம் என்னும் வடமொழிச் சொல்லிற்கு உடன் தோன்றுதல் என்பது பொருள். மெய்கண்டாரின் சிவஞான போதத்தின் நான்காம் சூத்திரத்தில் வருகின்ற ‘சகச மலத்துவராது’ என்பதன் பொருள் இயற்கையில் உள்ள மலம் என்பதாம். எனவே சகசம் என்பது இயற்கையில் உள்ளது என்றும் பொருள்படும். இச்சொல்லிற்கு எதிர்ச்சொல் ‘ஆகந்துகம்’ என்பது. அச்சொல்லின் பொருள் ‘பின்வந்தது’ அல்லது ‘செயற்கை’ என்பதாகும். ஆணவமலத்தைச் சகசமலம் எனவும், மாயை, கன்மங்களை ஆகந்துகமலம் எனவும் உரைத்தல் உண்டு.

ஆன்மா ஆணவமலம் இன்றியிருந்த காலமே இல்லை. தொன்றுதொட்டு ஆன்மா ஆணவமலத்தோடு கூடித்தான் உள்ளது என்பது சைவசித்தாந்தத்தின் கருத்தாகும். எனவே, ஆணவமலம் உயிர்கட்கு இடையே வந்தது அன்று. செம்பிற்களிம்பு போல, அனாதியே - உயிர் என்று உண்டோ அன்றே - அதனை பற்றியுள்ளது. அதனால்தான் இது சகசமலம் என அழைக்கப்பெறுகிறது. ஆணவமலம் சகசம் அல்லது அனாதி என்றால் அது ஒரு காலத்திலும் நீங்காதே என்று கேட்பின் அனாதியாய் உள்ளதாயினும் குற்றம் நீங்கும், குணந்தான் நீங்காது என விடை கூறலாம். நெல்லிற்கு உமியாகிய குற்றம் நீங்குகிறது. செம்பிற்கு உள்ள களிம்பாகிய குற்றம் இரசவாதத்தால் நீக்கப்படுகிறது. எனவே, ஆணவமலம் அனாதி எனக் கூறல் தவறில்லை எனலாம். மேலும், ஆணவமலம் இடையிலே வந்தது என்று கூறுதல் சரியில்லை. ஏனெனில் இடையிலே வந்தது என்றால் முன்பு தூய்மையாய் இருந்த ஆன்மாவைப் பற்றியதாகச் சொல்லவேண்டும். இது பொருந்தாது. பொருத்தம் என்று கொண்டால் முத்தியடைந்த ஆன்மாவையும் அது

சென்று பற்றலாம். அப்போது முத்தி என்பது நிலையற்றாதாய் ஆகிவிடும். எனவே ஆணவமலம் இடையிலே வந்தது என்பது தவறாகும். அது ஆன்மாவிற்கு சகசமாயே உள்ளது என்றே கூறவேண்டும்.

உடம்பு முதலியனவாய் உள்ள மாயை, நன்மை தீமைகளாய் விளையும் கன்மம் என்ற இந்த இரு வினைகளுக்கும் வேறாய், உயிரின் அறிவைத் தடை செய்யும் பொருள் ஒன்று இருத்தல் இன்றியமையாததாகின்றது. அந்தப்பொருளே ஆணவமலம் எனப்படுகிறது. எனவே, சகசமலமாகிய இவ்வாணவம் என்பது முயற்கோடு முதலியனபோல இல்பொருளாகாது உள்பொருளேயாகும். மேலும், ஆணவ மலத்தின் காரணமாகவே மாயையும் கன்மங்களும் ஆன்மா வைப் பற்றுதலால் இது மூலமலம் எனவும் அழைக் கப்படுகின்றது.

ஆணவமலமானது ஒன்றாய் நித்தமாய் வியாபகமாய் ஆன்மாவின் அறிவினை மறைக்கின்ற ஒரு சடப்பொருளாகும். அது கண்ணை மறைக்கும் படலம் போன்றே ஆன்மாக்களைப் பற்பல சத்திகளால் வேறுவேறு வகையில் மறைத்து நிற்கின்றது. இம்மலமானது கயிற்றினைப் பாம்பெனக் காணும் மயக்க அறிவு, ஞான அபாவம், தமோ குணம் அவிச்சை, மாயை, கன்மங்கள் என்பவற்றின் வேறாய் இருந்து ஆன்மாவின் சகசக் குற்றமாய் உள்ளது. இம்மலத்தின் தன்னியல்புயாதெனின் ஆன்மாக்களின் அறிவை முழுமையாக மறைத்து அறியாமையைத் தோற்றுவித்தலேயாகும். மேலும், மாயை மற்றும் கன்மங்களின் சார்பு உண்டானபொழுது, அவை ஆன்மாவின் அறிவை விளக்குமிடத்துப் பொருள்களை உள்ளது உள்ளபடி உணரச் செய்யாமல், உயர்ந்ததை இழிந்ததாகவும், இழிந்ததை உயர்ந்ததாகவும் மயக்கி மாற்றி உணரச்செய்வதே ஆணவமலத்தின் பொதுவியல்பாகும். எனவே, ஆணவமலத்தின் தன்னியல்பானது 'ஆவாரக சக்தி' என்றும், பொதுவியல்பானது, 'அதோநியாமிகா சத்தி' என்றும் அழைக்கப்பட்டன.

சகசமலமான ஆணவமலம் ஒன்றே. பல இல்லை. ஆனால், அது எண்ணற்ற சத்திகளையுடையது. அதனால்தான் ஆணவமலம் எண்ணில்லா ஆன்மாக்களின் அறிவினை மறைக்கக்கூடிய ஆற்றல் உடையதாக உள்ளது. ஆணவமானது அறிவையும் மறைக்கும், தன்னையும் வெளிப்படுத்தாது இருக்கும். எனவே, இருபொருளுங் காட்டாது இது, தானே தனித்து இருக்கும்போது ஆன்மாவின் அறிவினை மறைக்கின்றது. மாயையின் பொருள்களோடு சேரும்போது, 'நான், எனது' என்கிற மயக்கத்தினை ஏற்படுத்துகிறது. இம்மலத்தின் ஏழு செயல்களாக மோகம், மதம், அராகம், கவலை, தாபம், வாட்டம், விசித்திரம் என்பன சொல்லப்படுகின்றன.

சகசமலமான ஆணவமலம் தோற்றமும் அழிவும் இல்லாதது என்றும் உள்ள பொருளேயாகும். ஆணவ மலம் நீங்குதல் என்பது அதன் அழிவினைக் குறிப்பதன்று, மாறாக, அதன் சக்தி கெடுவதையே குறிக்கின்றது.

- க. பா.

**சகசானந்த அடிகள் :** இவர் வேலூர் மாவட்டம் ஆரணி வட்டம் மேல் புதுப்பாக்கம் என்னும் சிற்றூரில் 27 - 7 - 1890இல் பிறந்தார். தந்தை அண்ணாமலை, தாயார் அலமேலு ஆவர். இவர் ஏழை முனிசாமியாகப் பிறந்து முனிவராக மாறி முனைவராக வாழ்ந்து தாழ்த்தப்பட்ட மக்க ளின் தனி உயர்ச்சிக்குப் பெரிய அளவில் கால்கோள் செய்தார். இவர் சிதம்பரத்தில் 1917இல் நந்தனார் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார். ஆடவர்க்கும் மகளிருக்கும் பள்ளிகளை நிறுவினார். அவை இன்று பல்லாயிரம் பேர் பயிலும் கல்வி மையமாகத் திகழ்கிறது. இவர் 1923 முதல் 1946 வரை சென்னை மேல் சபை உறுப்பினராக இருந்தார். தொடர்ந்து தமிழக சட்ட மன்ற உறுப்பினராக 1947 முதல் 1959ஆம் ஆண்டு தமது இறுதிக்காலம் வரை சிறப்புற பணியாற்றினார். அப்போது சென்னை சட்டமன்றத்தில் பண்ணையாள் பாதுகாப்புச்சட்டம், வார சாகுபடி முதலியவை கொண்டு வருவதற்குப் பாடுபட்டார். வன்னியர்களுக்கு இருந்து வந்த குற்றப் பரம்பரையினர் என்ற சட்டத்தை நீக்குவதற்குச் சட்டப்பேரவையில் வாதாடி அதனை நீக்குமாறு செய்தார்.

இவர் தொண்டு உள்ளம் கொண்டு துறவியாக வாழ்ந்தார். சாதி வேறுபாடுகள் மறைவதற்கு, பல வகைகளில் பாடுபட்டார். சமூக மாற்றங்கள் அனைத்திற்கும் கல்வியே அடிப்படை என்பதை உணர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்விக்கண்ணை வழங்கினார். இவருடைய எளிய வாழ்க்கையும் அமைதியான தோற்றமும், செயல்திறனும் தமிழக தலைவர் அனைவரது பாராட்டையும் பெறும்படி செய்தன.

நந்தனார் திருமடத்தை சிதம்பரத்தில் சிறப்பாக நிறுவியுள்ளார்.

பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதியாக விளங்கி அறத்தின் குரலாக அமைந்தார். தமிழகத்தின் அம்பேத்கார் எனவும், அண்ணல் அம்பேத்கார் எனவும் சகசாநந்த அடிகள் கடலூர் மாவட்ட மக்களால் நெஞ்சில் நிறுத்தி வாழ்த்தப்பெற்று வருகிறார். இவர் 1959இல் இயற்கை எய்தினார். இவர் வாழ்ந்து மறைந்த இடத்தில் இவருக்கு நினைவகம் உருவாகியுள்ளது. இவரது உருவச் சிலையும் அமைக்கப்படுகிறது.

- ச. மெ.

**சகந்நாதன், கி. வா. :** இவர் மகாமகாபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரின் மாணாக்கராக விளங்கியவர். தம் ஆசிரியர் பதிப்பித்த இலக்கியங்களுக்கெல்லாம் எளிய நடையில், பாமரரும் படித்தறியுமாறு விளக்கவுரை எழுதியவர். இவர், சேலம் மாவட்டம் கிருட்டிணராயபுரத்தில் 1906ஆம் ஆண்டு பிறந்தார். தந்தையார் பெயர் வாசுதேவ ஐயர்; பள்ளி இறுதித்தேர்வு எழுதியதும், மேற்கல்விக்காக மோகனூருக்கு இவர் குடும்பம் சென்றது. இதுவே நிலையான ஊராக பின்னாளில் மாறியது. இவர்பால் பத்து வயதிலேயே கவி இயற்றும் வன்மை இயற்கையாய் அமைந்திருந்தது. இவர் மோகனூர் காந்தமலை முருகன் கோயில் சந்நிதியில் முதல் கந்தபுராணச் சொற்பொழிவு நிகழ்த்தினார். இவருடைய சொற்பொழிவாற்றலைக் கண்ட உடையார்பாளையம் சமீன்தார் தம் சமீன் இல்லத்துக்கு அழைத்து இவரை உபசரித்துத் தம்முடனேயே இருக்குமாறு வேண்டினார். ஆனால், இவருடைய தமிழார்வம், அந்தச் செல்வரின் வேண்டலைப் புறக்கணித்து, டாக்டர் உ.வே. சாமிநாத ஐயரிடம் கொண்டு சேர்த்தது. இவர் 1927இல் அவரை அவர் இல்லத்தில் சந்தித்தார். முதன்முதலில் 1928இல் தக்கயாகப் பரணி பதிப்புக்கு உதவினார். நற்பண்புகளும், இலக்கிய ஆர்வமும், தமிழ் அறிவும் நிறைந்த ஓர் ஆசிரியரைத் தேடிக் காத்திருந்த கலைமகள் இதழ் நிறுவனர் ஆர். நாராயணசாமி ஐயர், இவர் கிடைத்ததில் மகிழ்ந்தார். கலைமகள் 1932 தைப்பொங்கலன்று தோன்றியது. அதன் ஆசிரியர் கி.வா. சகந்நாதன். அடுத்த ஆண்டே இவர் வித்துவான் தேர்வில் முதல் மாணவராகத் தேறினார். தொடர்ந்து பி.ஓ. எல்., எம்.ஏ., பட்டங்கள் பெற்றார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1934 - 36இல் 'தமிழ்க் காப்பியங்கள்' பற்றி நடத்திய இவர் ஆய்வுரை நூலாக வெளிவந்துள்ளது.

கலைமகள் இதழை இலக்கியத் தரம் வாய்ந்ததாகத் தமிழ் மக்கள் விரும்பிப் படிக்கும் இதழாக அமைத்த பெருமை இவரைச் சாரும். இவர் சிறுகதை, பயணக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள், திருத்தல வரலாற்றுக் கட்டுரைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். இவர் பேச்சிலும், எழுத்திலும் கொச்சைத் தன்மையைக் காணமுடியாது. இலக்கியக் கூட்டமானாலும் பாரதி, கம்பன் விழா நிகழ்ச்சிகளானாலும், பட்டி மன்ற நடுவர் தீர்ப்புரையானாலும் இலக்கிய வளம் செறிந்த சிலேடைநயம் மிகுந்த பேச்சைக் கேட்கலாம்.

சங்க நூற்காட்சிகள், திருமுருகாற்றுப்படை விளக்கம், கந்தபுராண விளக்கம், திருக்குறள் தெளிவு - ஆய்வு உரைநூல், அபிராமி அந்தாதி விளக்க நூல்கள் என 300 நூல்களுக்கும் மேலாக எழுதியுள்ளார். இவர் நாடோடி இலக்கியத்தை அறிமுகப்படுத்தி, அதைப் பற்றி நூல் எழுதிய முன்னோடி. இலக்கிய ஐயங்களைத் தீர்த்துவைக்கும் வினாவிடை நூல் இவர்தம் தேர்ந்த தமிழறிவுக்குச் சான்று. தம் வாழ்நாள் எல்லாம் சேகரித்த பழமொழிகளைத் தொகுத்து விளக்கங்களுடன் **பழமொழி** நூல் என வெளியிட்டார். **அறுந்த தந்தி, கஞ்சியிலும் இன்பம்** போன்ற சிறுகதைத் தொகுப்புகள் தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளன. சாகித்திய அகாதமிப் பரிசு, ராசா சர் அண்ணாமலைச் செட்டியார் நினைவுப்பரிசு, தமிழக அரசுப் பரிசு ஆகியன இவருடைய இலக்கிய அறிவுக்குக் கிடைத்த பரிசுகள். இவருக்குக் கலைமாமணி விருது அளிக்கப்பட்டது. இலங்கை, பர்மா, சிங்கப்பூர், பிரான்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளுக்குப் பல முறை சென்று தமிழைப் பரப்பினார். சாகித்திய அகாதமி ஞானபீடப் பரிசுத் தேர்வுக்குழு உறுப்பினர், தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர், திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினர், தமிழ்ப் பல்கலைக்கழக ஆட்சிக் குழு உறுப்பினர், திருக்கோயில் குழு உறுப்பினர் என பல பதவிகளை வகித்தார்.

ஆசிகவியாக விளங்கிய இவர் 'சோதி' என்ற புனைப்பெயரில் கவிதைகள் எழுதியுள்ளார். **மேகமண்டலம்** என்ற கவிதைத் தொகுப்பு இவரது

கவியாற்றலுக்குச் சான்று பகரும். தமிழ் வளர்க்கும் திருமடங்கள் எல்லாம் இவரை ஆதரித்தன. இவர் வாழ்நாள் முழுவதும் கதர் உடுத்திய தேசியவாதி. காந்தி பக்தர், முருகனடியார். இவர் 1988ஆம் ஆண்டு காலமானார்.

- சு. வே. இர

**சங்காரம் :** உள்தொழில்கள் பலவாயினும், அவற்றை அடக்கி நிற்கும் பெருந்தொழில்கள் மூன்று அவை, படைத்தல், காத்தல், அழித்தல் என்பது சைவ சித்தாந்தத்தின் கருத்தாகும். இவை சிருட்டி, திதி, சங் காரம் எனவும் அழைக்கப்படும். இதில் படைத்தல் எனும் 'சிருட்டி' என்பது சூக்கும நிலையில் உள்ள வற்றைத் தூலநிலைக்குக் கொண்டுவருதலேயாகும். அழித்தல் எனும் 'சங்காரம்' தூல நிலையில் உள்ள வற்றைச் சூக்கும நிலையிற்படுத்தி ஒடுக்குதல். காத் தல் எனும் 'திதி' என்பது அங்ஙனம் தூல நிலையிற் கொணர்ந்தவற்றை அந்நிலையிலேயே நிறுத்துத லாகும்.

'இல்லது தோன்றாது' என்பதும், 'உள்ளது அழி யாது' என்பதும், சைவசித்தாந்தம் ஏற்றுக்கொள்கிற ஓர் அடிப்படை உண்மையாகும். அதாவது இல்லை யெனில் என்றும் இல்லை. அது என்றாவது ஒருநாள் உள்ளதாகும் என்பதே இல்லை. அதனைப்போன்றே உள்ளது என்றால் எக்காலத்தும் இருப்பது, அவை என்றும் இல்லாதது இல்லை. எனவே தோன்றுதல் என்பதும் அழிதல் என்பதும் அவற்றையுடைய பொருளின் நிலை மாற்றங்களேயாகும். ஆதலின், தோன்றி அழியும் நிலை காரியநிலை எனவும் தோற்றத்திற்கு முன்னும் அழிவிற்குப் பின்னும் உள்ள நிலை காரண நிலை எனவும் கூறப்படும். எனவே, 'தோன்றுதல்' என்பது காரணநிலையிலிருந்த காரிய நிலைய அடைவதே என்பதையும், 'அழிதல்' என்பது காரிய நிலையிலிருந்து மீண்டும் காரண நிலையை அடைவதே என்பதையும் உணரலாம்.

ஆதலின், தோற்றம் என்பது காணப்படாத நுண் ணிலையின் நீங்கிக் காணப்படும் பருநிலையை அடைவதே என்பதும், அழிவு என்பது காணப்பட்ட பருநிலை நீங்கி முன்போலக் காணப்படாத நுண்ணி லையை அடைவதே என்றும் சைவசித்தாந்தம் கூறும். தோற்றம் என்பது முன்பு எங்கும் எந்நிலையிலுமில் லாத பொருள் தோன்றுதல் என்பதனையும், அழிவு என்பது உள்ளபொருள், பின்பு எங்கும் எந்தநிலை யிலும் இல்லாது அறவே அழிந்துவிடும் என்பதனை யும் மறுக்கின்றது.

இறைவன், உலகத்தைப் படைத்தல், காத்தல்க ளுடன், அழித்தலாகிய சங்காரத்தையும் செய்பவன் என்பது சைவசித்தாந்தக் கருத்தாகும். உலக சங்காரம் இல்லை எனக்கூறுவோரை மறுத்து அஃது உண்டு என்று அது வலியுறுத்துகிறது. ஆலயங்கள் அல்லது ஒடுக்கங்கள் எனப்படுகின்ற சங்காரங்கள் மூவகைப் படும். அவையாவன, நித்திய சங்காரம் அல்லது நாளொடுக்கம், ஆயுட் சங்காரம் அல்லது ஊழியொ டுக்கம், சருவ சங்காரம் அல்லது பேரூழியொடுக்கம். அவற்றில் நித்திய சங்காரமாவது அன்றாடம் கீழால வத்தையில் அறிவிழந்திருத்தல். பிறவி எடுத்த எல்லா உயிர்கட்கும் பொதுவாக வைக்கப்பட்ட ஆயுட் சங் காரமானது விழித்தல் இல்லாத உறக்கமாகிய இறப்பு. சருவசங்காரமாவது ஆன்மா செயலற்று ஆணவத்திலே அழுந்திச் சடம் போலக் கிடத்தல்.

இந்த மூவகைச் சங்காரங்களை வேறுமுறையிலும் விளக்கலாம். நித்திய சங்காரம் தூலம், சூக்குமம் என் றும் இரண்டு உடம்புகள் உள்ளபொழுதும் அவற் றோடு ஒட்டாது நீக்கி நின்றல் எனவும், ஆயுட் சங் காரம் என்பது தூல உடம்பின் அழிவு எனவும், சருவ சங்காரம் என்பது சூக்கும உடலின் நீக்கம் எனவும் கூறுதற்குரியன. எனவே, நித்திய சங்காரம் தூல உடம் போடு நிற்கும்பொழுதே அதனொடு கூடாதிருக்கச் செய்வதென்றால், ஆயுட் சங்காரம் அதனை அடி யொடு விடச் செய்வதாகும். சருவ சங்காரம் சூக்கும உடம்பையும் விடப்பண்ணுவது.

மேலும், சங்காரத்தினை வேறுவகையில் இரண் டாகக் கூறலாம். ஏகதேச சங்காரம் அல்லது ஒருபுடை யொழிப்பு, சருவ சங்காரம் அல்லது முற்றழிப்பு என் பவை அவ்விருவகைகளாம். சைவ சித்தாந்தத்தில் உலகங்கள் யாவும் பிருகிருதி உலகம், அசுத்தமாயா உலகம், சுத்தமாயா உலகம் என மூன்றாகச் சொல்லப் படுகின்றன. இவற்றுள் சுத்தமாயா உலகம் மட்டும் ஒடுங்கி மற்றை இரு மாயா உலகங்கள் ஒடுங்காமலி ருப்பினும் அவை ஏகதேச சங்காரங்களாகும். மூன்று உலகங்களும் எஞ்சாமல் ஒடுங்குவதே சருவ சங்காரம் எனப்படும். மேற்சொன்ன மூன்று வகை உலகங் களும் சைவசித்தாந்தத்தில் ஐந்து கலைகளில் அடக்கப்

பட்டுள்ளன. அக்கலைகளாவன : நிவர்த்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியதீதை. இவற்றில் நிவர்த்தி முதலிய கலைகள் தமக்கு அடுத்துள்ள கலைகளில் அடக்கமாகும். எனவே, நிவர்த்தி முதலிய நான்கு கலைகளுக்கு உட்பட்ட உலகங்கள் எந்த அளவில் அழிந்தாலும் அது ஏகதேச சங்காரமே. மற்றைய நான்கு கலைகளையும் உள்ளடக்கியுள்ள சாந்தியதீத கலை ஒடுங்கினால் ஒடுங்காமல் இருப்பது எதுவுமில்லை. எனவே, அக்கலையின் ஒடுக்கமே சருவ சங்காரம் அல்லது முற்றழிப்பாகும்.

இறைவன் செய்யும் தொழில்கள் யாவும் அருள் தொழிலேயன்றி ஏவையும் கொடுந்தொழில் இல்லை. ஒன்றும் அறியா மக்களும் உலகத்தினது இழிவையும் துன்பப்பெருக்கையும் உணராதவர்களும் சங்காரத் தொழில் கொடியது என்று எண்ணுவர். ஆயினும், மெய்யுணர்ந்த சான்றோர்கட்கு அஃது ஒன்றே பேரருள் தொழிலாய் விளங்கும். எனவே, உருத்திரன் என்ற பெயர்கூட 'துக்கத்தை நீக்குவோன்' என்னும் காரணம் பற்றி வந்த பெயர் என அறிஞர்கள் கூறுவர்.

- க. பா.

**சஞ்சீவி, ந. ( 1927 – 1983 ) :** இவர் புகழ் பெற்ற தமிழ்ப் பேராசிரியர். தமிழையும் தமிழ் இலக்கியங் களையும் அறிவியல் நோக்கில் அணுக வேண்டும் என்னும் கொள்கை உடையவர். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதைத் தம் இலக்காகக் கொண்டு ஒல்லும் வகையான் உழைத்தவர். இவர் தமிழுக்கு இணையாக ஆங்கில அறிவையும் வளர்த்து இரு மொழிகளிலும் எழுதுவதிலும் பேசுவதிலும் தன்னிர கற்று விளங்கினார். இவர் 2 - 5 - 1927இல் திருச்சியில் பிறந்தார். இவர் தந்தையார் பேராசிரியர் நடேசனார். தாயார் கண்ணம்மாள். சாதிமுறை ஒழிவதையும், பொருளாதாரச் சமன்மை ஏற்படுவதையும் வற்புறுத்தி வந்த இவர் திருமதி கிருட்டிணா என்பவரைக் கலப்புத் திருமணம் செய்து கொண்டார். அவரும் ஒரு தமிழ்ப்பேராசிரியர். இத் தம்பதியர்க்கு ஒரு மகளார் மட்டுமே வாரிசு.

இவர் இலக்கியம், வரலாறு ஆகிய இரு துறைகளிலும் நூல்கள் எழுதியுள்ளார். இவர் எழுதிய நூல்கள் மொத்தம் இருபது. இவற்றுள் கடைசி மூன்று நூல்கள் இவர் இறந்தபின் வெளியாயின. மூன்றுள் ஒன்று ஆங்கிலக் கட்டுரைத் தொகுப்பு நூல். பிறிதொன்று, கால்டுவெல் ஆங்கிலத்தில் எழுதிய திருநெல்வேலி வரலாறு என்பதன் தமிழாக்க நூல். நூல்களேயன்றி, முந்நூறுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை ஐம்பதுக்கும் மேற்பட்ட நாள், திங்கள், கிழமை இதழ்களில் எழுதியுள்ளார். ஆய்வுத் தமிழ் வளர்ப்பதிலேயே மிகுந்த கவனம் செலுத்திய இவர் படைப்பிலக்கியத்தில் அதிகம் நாட்டம் கொள்ளவில்லை.

**மருதிருவர், மாண்ங்காத்த மருது பாண்டியர், வீரத்தலைவர் புலித்தேவர், இருபெருந் தலைவர், கும்மந்தான் கான் சாகிபு, 1806, வேலூர் புரட்சி** ஆகிய ஏழு நூல்களும் இவர் எழுதிய வரலாற்று நூல்களாகும். இவற்றுள் மருது சகோதரர்களின் வரலாற்றை விளக்கும் நூல்கள், தமிழக வரலாற்றாசிரியர்களால் பெரிதும் பாராட்டப்பெற்றவை. மருது சகோதரர்களின் வீர வரலாற்றைத் தமிழுலகுக்கு முதன் முதலில் ஆராய்ச்சி நுட்பத்துடன் அறிமுகப் படுத்திய பெருமை இவரையே சாரும்.

இவர் படைத்த இலக்கிய ஆய்வு நூல்களுள் **சங்க இலக்கிய ஆராய்ச்சி அட்டவணைகள், இலக்கிய இயல்** ஆகிய இரு நூல்களுக்கும் இலக்கிய உலகில் தனியிடம் உண்டு. முதல் நூல் சங்க இலக்கியத்தைப் பகுப்பாய்வு நோக்கில் வகை தொகைப்படுத்திக் கூறுகிறது. இரண்டாம் நூல், இலக்கியக்கொள்கையைப் புதிய முறையில் அறிவியல் நோக்கில் அறிமுகப்படுத்துவது. மேலும், வரிப்படங்கள் மற்றும் வரைபடங்களுடன் இந்நூல் இலக்கியக்கொள்கைகளை விளக்குகிறது. இவர் இலக்கியத் திறனாய்வாளர் என்னும் நிலையிலிருந்து இலக்கியக்கொள்கையாளராகவும் வளர்ந்ததை இந்நூல் காட்டுகிறது.

இவருக்குச் செந்தமிழ் இலக்கியச்செம்மல் என்னும் பட்டத்தை 1970ஆம் ஆண்டு தருமபுர ஆதீனமும், நூலறி புலவர் என்னும் பட்டத்தை 1973ஆம் ஆண்டு குன்றங்குடி ஆதீனமும் அளித்தன. காஞ்சிபுரம் பச்சையப்பர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பத்தாண்டு காலமும் (1950 - 60), சென்னைப் பல்கலைக்கழகத்தில் இருபத்தேழு ஆண்டு காலமும் ( 1960 - 87 ) தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றார். இவர் பணிகளுள் 1971ஆம் ஆண்டு அகில இந்திய திருக்குறள் கருத்தாய்வரங்கை நடத்தியது குறிப்பிடத்தக்கது. பிற மாநில அறிஞர்களைக் கொண்டு அவ்வம் மொழிகளிலுள்ள அறநூல் கருத்து

களுடன் திருக்குறளை ஒப்பிட்டு ஆய்வுக்கட்டுரைகள் படிக்கச் செய்தார். இவை 1973ஆம் ஆண்டு நூலாக வெளிவந்தன.

இவர் திருவேங்கடன் பல்கலைக்கழகத்தில் வருகைதரு பேராசிரியராக அமர்த்தப்பெற்றார். தமிழ், ஆங்கிலத்துடன், பிரெஞ்சு, செருமன் ஆகிய மொழிகளையும் இவர் அறிந்திருந்தார். சிங்கப்பூர், மலேசியா, சீனா, சப்பான் ஆகிய தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் அமெரிக்கா, இலண்டன், கிரீசு ஆகிய மேலைநாடுகளிலும் இவர் பயணம் செய்துள்ளார். செருமன் சனநாயகக் குடியரசின் அழைப்பின் பேரில் மூன்று வார காலம் சுற்றுப்பயணம் செய்துள்ளார். 1960ஆம் ஆண்டு சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளின் சிறப்பு அழைப்பின் பேரில் சென்று தங்கி ஒரு திங்கள் தொடர் சொற்பொழிவாற்றியுள்ளார். தாம் கல்விப் பணிபுரிந்த காலத்தில் இருபதுக்கும் மேற்பட்ட கருத்தரங்குகள், கலந்தாய்வரங்குகள், கல்வி மாநாடுகள் ஆகியவற்றில் கலந்து கொண்டுள்ளார். இருபத் தைந்து கல்விசார் அமைப்புகளில் பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார். நான்கு அறக்கட்டளைச் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

'ஆய்வு செய்வோம், ஓய்வு செய்யோம்', 'தமிழாய்வும் ஆய்வுத்தமிழும் வளர்ப்போம்', 'ஆய்வே, தொழில் தொண்டு தொழுகை' என்பன இவரது தமிழாய்வு முழக்கங்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த காலத்தில் 1976 ஆம் ஆண்டு நெருக்கடி நிலைச் சட்டம் அமலிலிருந்த காலத்தில் இவர் தற்காலிகமாகப் பதவிநீக்கம் செய்யப்பட்டார். பின்னர் சனதா அரசு ஆட்சிக்கு வந்த போது இவர் மீண்டும் பணியமர்த்தப்பெற்றார். இவர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டது இவருக்கு ஆறாத மனப்புண்ணை ஏற்படுத்திவிட்டது. இவரது கடைசி பத்தாண்டுகாலம் மிகுந்த மன உளைச்சலால் அவதிப்பட்டார். இக்கால கட்டத்தில் இவர் 'கருத்து மலர்கள்' என்னும் பெயரில் உலகியல் குறித்த சிந்தனைத் துளிகளை எழுதிவந்தார். இவை இன்னும் நூல் வடிவம் பெறவில்லை.

பல்கலைக்கழகப் பணியிலிருந்து ஓய்வு பெற்றவுடன் இவருக்குக் கிடைத்த ஓய்வுதியத் தொகையை நான்கு பல்கலைக்கழகங்களுக்கு அறக்கட்டளைக்காகப் பிரித்துக் கொடுத்தார். சென்னைப் பல்கலைக்கழகத்துக்கு ரூ 25,000 ஆயிரமும், மதுரை காமராசர், பாரதிதாசன், தமிழ்ப் பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூ 20,000 ஆயிரமும் கொடுத்தார். தமிழ்ப் பேராசிரியர்களில் டாக்டர் இரா.பி. சேதுப்பிள்ளை, டாக்டர் ந. சஞ்சீவி ஆகிய இருவரும் பெருந்தொகையைப் பல்கலைக்கழகங்களுக்கு வழங்கிய வள்ளல்கள். எளிமையே அருமை. எளிமையே இனிமை என்பதை உள்ளும் புறமுமாக ஏற்றுக் கொண்டு வாழ்ந்த பேராசிரியர் சஞ்சீவி அவர்கள் தமது 62-வது வயதில் 22 - 8 - 1988 அன்று இயற்கை எய்தினார்.

- ப.கி.

**சட்டமியற்றல் :** அரசாங்கத்தைச் செம்மையாக நடத்தும் பொருட்டு, சட்டமன்றங்கள், சட்டங்கள், விதிகள் ஆகியவற்றை இயற்றுதல் சட்டமியற்றுதல் ( Legislation ) எனப்படும். சட்டமன்றத்தில் சட்டம் இயற்றப்படும் நிலையில் இருக்கையில், அது மசோதா என்றழைக்கப்படுகிறது. மசோதா சட்டமன்றத்தில் பெருவாரியாக ஆதரவு பெற்று, குடியரசுத் தலைவர் ஒப்புதலைப்பெற்றதும் சட்டமாகிறது.

மசோதா 1. பொது மசோதா, 2. பண மசோதா, 3. தனி மசோதா என மூன்று வகைப்படும்.

பொதுமக்களின் நன்மை, தீமைகளை அடிப்படையாகக்கொண்டு கொணரப்படும் மசோதா பொது மசோதா எனப்படும்.

அரசு ஒவ்வொரு ஆண்டும் செய்யப்போகிற பணச் செலவுக்கு அனுமதி கோரும் மசோதா பண மசோதா எனப்படும்.

தனிப்பட்ட மனிதரை அல்லது நிறுவனத்தைப் பாதிக்கின்ற வகையில் கொணரப்படும் மசோதா தனி மசோதா எனப்படும்.

**இங்கிலாந்தில் சட்டமியற்றும் முறை :** இங்கிலாந்தில் பொதுமசோதாக்கள் அமைச்சர் குழுவினால் வடிவமைக்கப்பட்டு அவர்களாலேயே அறிமுகப்படுத்தப்படுகின்றன. பணமசோதாவைத் தவிர ஏனைய பொது மசோதாக்கள் இங்கிலாந்தில் எந்த அவையில் வேண்டுமானாலும் அறிமுகப்படுத்தப்படலாம். ஆனால் பணமசோதாக்களைப் பொறுத்த வரையில் அது பொதுமக்களவையிலேயே அறிமுகப் படுத்தப்படுகிறது.

**முதல் வாசிப்பு :** மசோதா ஒன்று சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படுதல் முதல் வாசிப்பு எனப்படும். முதல் வாசிப்பில் விவாதம் எதுவும் நிகழவில்லையெனில் மசோதாவில் அடங்கிய செய்திகள் அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகின்றன.

**இரண்டாம் வாசிப்பு :** அது மசோதாவில் ஒரு முக்கிய கட்டமாகும். குறிப்பிட்ட ஒரு நாளில் மசோதா சட்டமன்றத்தின் விவாதத்திற்கு வருகின்ற போது மன்றத்தின் உறுப்பினர்கள் கடுமையான விவாதத்தில் ஈடுபடுவர். இறுதியில் மசோதா வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது.

**குழுக்கூட்டம் :** இரண்டாவது வாசிப்பின் முடிவில் மசோதா ஏற்கப்பட்ட பின்னர், அது குழுக்கூட்டத்தை அடைகிறது. பண மசோதா முழு அவைக் குழுவிற்கும் மற்ற மசோதாக்கள் வெவ்வேறு குழுக்களுக்கும் அனுப்பப்படுகின்றன. குழுக்கூட்டங்களில் மசோதாக்கள் பற்றி விரிவான விவாதம் நடைபெறும். மசோதாக்களில் மேற்கொள்வதற்கான திருத்தங்களும் குழுக்காளால் பரிந்துரைக்கப்படுகின்றன.

**அறிக்கைக்கூட்டம் :** குழுக்களிடமிருந்து மசோதா திரும்ப அவைக்கு அனுப்பப்படும் நிலை அறிக்கைக் கூட்டமாகும். குழுக்கள் பரிந்துரைத்த திருத்தங்களை அவை ஆராயும். அத்திருத்தங்களை ஏற்பதும் மறுப்பதும் அவையின் விருப்பத்தைப் பொறுத்தது.

**மூன்றாம் வாசிப்பு :** அறிக்கைக் கூட்டத்திலேயே மசோதா இறுதி வடிவம் அடைந்துவிடுகிறது. மூன்றாம் வாசிப்பில் பெரிய மாற்றங்கள் எதுவும் செய்யப்படுவதில்லை. சில சொற்கள் மட்டும் மாற்றம் பெறும். மூன்றாம் வாசிப்பு முடிவில் மசோதா ஓரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் அடுத்த அவைக்கு அனுப்பப்படும்.

**அடுத்த அவையில் மசோதா :** மசோதா ஒன்று முந்திய அவையில் ஐந்து நிலைகளைக் கடந்து வந்ததைப்போன்று, மற்றொரு அவையிலும் ஐந்து நிலைகளைக் கடக்க வேண்டும். பொது மக்கள் அவையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மசோதாவை மறுக்கும் அதிகாரம் மேலவைக்குக் கிடையாது. பிரபுக்கள் அவை பண மசோதவை ஒரு மாத காலத்திற்கும் சாதாரண மசோதாவை ஓராண்டு காலத்திற்கும் மட்டுமே தாமதப்படுத்தலாம். மசோதா இரு அவைகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகு அரசர் / அரசியின் இசைவிற்குச் செல்கிறது.

**அரசர் / அரசியின் இசைவு :** அரசர் / அரசியின் இசைவின்றி இங்கிலாந்தில் எந்த ஒரு மசோதாவையும் சட்டமாக்க முடியாது. மரபுகளின் படி, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் எந்த மசோதாவிற்கும் இசைவு மறுக்கப்படுவதில்லை. அரசர் / அரசியின் இசைவைப் பெற்றதும் மசோதா சட்டமாகிறது.

**தனி மசோதாக்களின் ஆக்கமுறை :** பொது மசோதாக்களின் ஆக்கமுறைக்கும், தனி மசோதாக்களின் ஆக்கமுறைக்கும் சில வேறுபாடுகள் உள்ளன. தனி மசோதாக்களைக் கொடுக்கின்ற போது அவற்றுடன் மனுக்கள் இணைக்கப்படுதல் வேண்டும். அந்த மனுவில் தொடர்புடைய மசோதாக்கள் எவர் ஒருவரை அல்லது எந்த ஒரு நிறுவனத்தைப் பற்றியது என்ற விவரங்கள் கூறப்பட்டிருத்தல் வேண்டும். அந்த மனுக்களை மனுக்களின் பரிசோதகர் என்பவர் பரிசீலனை செய்வார். அவரது பரிசீலனைக்குப்பின் ஏதாவதொரு அவையில் மசோதா அறிமுகப்படுத்தப்படும். இரண்டாம் வாசிப்பிற்குப் பின் தனிமசோதாக்கள் அதற்கென உள்ள குழுவிற்கு அனுப்பப்படுகின்றன. தனி மசோதாக்களை, குழு விரிவாக ஆராய்கிறது. மசோதாவினால் பயனடையும் அல்லது பாதிக்கப்படும் ஆள் அல்லது நிறுவனம் குழுக்கூட்டத்தில் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். பின்னர் மசோதா அவைக்குத் திரும்ப அனுப்பப்படும். மூன்றாம் வாசிப்பிற்கு மேற்பட்டு, அடுத்த அவைக்கு மசோதா அனுப்பப்படுகிறது. அங்கும் மசோதா நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசர் / அரசியின் இசைவிற்கு அனுப்பப்படுகிறது. அவர்களின் இசைவு பெற்றதும் சட்டமாகிறது.

**இந்தியாவில் சட்டமியற்றல் முறை :** இந்திய நாடாளுமன்றத்தில் மசோதா ஒன்று சட்டமாக்கப்பட மூன்று நிலைகளைக் கடந்தாக வேண்டும். முதல் நிலையில் மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும். இதற்குப் புகுத்துநிலை என்றுபெயர். இரண்டாம் நிலையான கருத்தாய்வு நிலையில் கடுமையான விவாதத்திற்கு உள்ளாகிறது. மூன்றாவது நிலையில் மசோதா நிறைவேற்றப்படுகிறது.

சாதாரண மசோதாக்களை நிறைவேற்றுவதில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளுக்கும் சமமான அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மசோதா ஒன்று

நிறைவேற்றப்பட்டு சட்டவடிவமாக வேண்டுமாயின் இரு அவைகளும் ஒரே மாதிரியாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றியிருக்க வேண்டும். ஓர் அவை இயற்றிய மசோதாவிற்கு மற்றொரு அவை திருத்தங்கள் அளிக்குமாயின், திருந்திய நிலையில் அம் மசோதா முந்தைய அவைக்குத் திரும்ப ஒப்புதல் பெற அனுப்பி வைக்கப்படும். பொதுவாக இரு அவைகளும் ஒப்புக்கொள்ளுமாயின் தடங்கல் ஏதுமின்றி அம்மசோதா சட்டமாகும்.

இரு அவைகளும் மசோதாவை ஒப்புக்கொள்ளாத நிலையில் குடியரசுத்தலைவர் ஓர் அறிக்கையின் மூலம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தைக் கூட்டி மசோதாவை வாக்கெடுப்புக்கு விடுவார். மக்களவைத் தலைவர் அல்லது அவரில்லாத சமயத்தில் அவையின் நடைமுறை விதிகள் கூறும் வேறு ஒருவர் இக்கூட்டு அவைக்கு தலைமை வகிப்பார். திருத்தங்களுடனோ, திருத்தம் இல்லாமலோ, பெரும்பான்மை வாக்குகளால் கூட்டு அவையினால் நிறைவேற்றப்பட்ட மசோதா நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்படும். நாடாளுமன்றம் என்பது, இரு அவைகள் அடங்கியது மட்டுமல்ல. குடியரசுத் தலைவரையும் உள்ளடக்கியதாகும். ஆகையால், நாடாளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட மசோதா குடியரசுத் தலைவரின் கையொப்பத்திற்கு அனுப்பப்பட்ட பின்னரே சட்டமாகிறது.

- பு. வே.

**சட்ட முகவர்** : வழக்கு மன்றங்களில், வழக்கு நடத்தும் வழக்காளிகட்கு முறையான பயிற்சி பெற்று சட்டமுகவராக அனுமதிக்கப்படுவோரைச் சட்ட முகவர் என்பர். இங்கிலாந்து நாட்டில் கி.பி. 1843 ஆம் ஆண்டு சட்ட முகவர் சட்டம் இயற்றப்பட்டு அமலில் இருந்தது. கி.பி. 1873 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்ட முகவர் சட்டத்தில் சட்ட முகவர்களை ( Solicitors of the Supreme Court ) உச்ச நீதிமன்ற சட்ட முகவர்கள் என்ற பிரிவு 87 இல்சொல்லப்பட்டுள்ளது. இச்சட்டத்தில் வரும் உச்சநீதிமன்றம் வேறு, இக்கால இந்திய உச்சநீதிமன்றம் வேறு. இச்சட்டம் இயற்றப்படுவதற்கு முன் பொதுச்சட்ட நீதிமன்றத்தில் ( Common Law Court ) தோன்றும் சட்ட முகவர்களை ஆட்டர்னி என்றும் சான்சரி நீதிமன்றங்களில் ( Court of Chancery) தோன்றும் சட்ட முகவர்களைச் சொலிசிபிடர்கள் என்றும் அழைத்து வந்தனர்.

ஆங்கில நாட்டில் சட்ட முகவர்கள் சாதாரண வழக்கறிஞர்கள் போல நடுவர் நீதிமன்றங்களில் தோன்றி வழக்குகளை நடத்தி வந்தார்கள். சட்ட முகவர்களாகப் பணி செய்ய சான்றிதழ் தகுதி உள்ளவர்கட்கு வழங்கப்பட்டன. இச்சான்றிதழ் அக்காலத்தில் ஆண்டுக்கு நவம்பர் 15ஆம் நாள் வரை வழங்கப்பட்டது. இருந்த போதிலும் அடுத்த திசம்பர் 16ஆம் தேதிக்குள் புதுப்பித்துக்கொண்டால் இடையில் தடைபடாமல் நவம்பர் 15ஆம் நாளை அடுத்துத் தொடர்ந்து பணியாற்றத் தகுதிப்பெற்று வந்தார்கள். இதனால் நவம்பர் 15ஆம் நாளுக்கும் திசம்பர் 16ஆம் நாளுக்கும் இடையே பணியாற்றியதற்குத் தண்டனை அளிக்கப்படாமல் சட்ட முகவர் உதவியால் பாதுகாப்பு பெறுகிறார்.

சட்ட முகவர்கள் பணி ஆற்றத் தகுதி உள்ளவர்கள் பட்டியலைச் சட்டப்பட்டியல் என்று அழைப்பர். சட்டச்சங்கம் என்று அமைப்பு இந்த சான்றிதழை வழங்கும். சட்ட முகவர் நொடித்த கடனாளியாகிவிட்டால் 1906ஆம் ஆண்டு சட்ட முகவர் சட்டப்படி சட்டச் சங்கம் சட்ட முகவருக்கு மனுச் செய்துள்ளவருக்குச் சான்றிதழ் தர மறுத்துவிடும். ஆனால், கடனாளி நொடித்தநிலையிலிருந்து மீண்டு விட்டால் திரும்பவும் சான்றிதழைச் சட்ட முகவருக்குப் புதுப்பித்துக்கொள்ளலாம்.

கி.பி.1843ஆம் ஆண்டு சட்ட முகவர் சட்டப்படி சட்ட முகவராகத் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்புவோர் குறைந்த அளவு ஐந்தாண்டு காலத்திற்கு ஒரு சட்ட முகவரிடம் எழுத்தராகவோ அதற்கு ஒப்பான பணியோ ஆற்றியிருக்க வேண்டும். ஆனால், பல்கலைப்படிப்பு படித்துத் தேறியவராக இருந்தால் அவருக்கு மூன்றாண்டு காலப் பயிற்சி போதுமானது. ஏற்கனவே வழக்கறிஞராகப் பணியாற்றி, கைவிட்டவர்கட்கும் மூன்று ஆண்டு போதுமானது.

சட்டச் சங்கம் நடத்தும் மூன்று வகையான தேர்வுகளில் சட்ட முகவராக விரும்புவோர் தேர்ச்சி பெற வேண்டும். பூர்வாங்கத் தேர்வு, இடைநிலைத் தேர்வு, இறுதித்தேர்வு என மூன்று தேர்வுகளில் இவர்கள் தேர்ச்சி பெற வேண்டும் என்பது சட்ட

விதியாகும். இங்கிலாந்து நாட்டு நடைமுறையில் இயங்கி வந்த சட்டமுகவர்கள் போல் இந்திய நீதிமன்றங் களிலும் சட்ட முகவர்கள் பணி ஆற்ற அனுமதிக்கப் பட்டார்கள்.

கல்கத்தா போன்ற நகரங்களில் வழக்கறிஞர்கள் சட்ட முகவரிடம் கருத்துப் பெற வேண்டும் என்று நீதித்துறையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் '57 இந்தியன் வழக்குகள் 22' தீர்ப் புப்படி சட்ட முகவர்கள் மூலமாகத்தான் கட்சிக்காரர் கள் வழக்கை நடத்தும் வழக்கறிஞருக்குத் தகவல் தர வேண்டும் என்ற கட்டாயம் சட்டத்தில் ஏதும் இல் லாத போதிலும் இந்த நீண்ட கால நெறியைக் கைவிடுவது நல்ல மரபு அன்று எனத் தீர்ப்பு அளித்துள் ளது. சட்ட முகவர்களின் துணையால் வழக்கறிஞரும் கட்சிக்காரரும் தொடர்புகொள்ளும் நெறி நீண்ட காலப் பழக்கமென்றும் இதனை மாற்றத் தேவை யில்லை என்றும் தீர்ப்புகள் தரப்பட்டன. சட்ட முக வர்களின் தேவை சட்டத்தில் சொல்லப்படாத போதி லும் அவர்கள் சேவை நீண்ட காலப் பணியாகையால் கைவிடப்பட வேண்டியது அன்று என்று இத்தீர்ப்பு பேசும். சட்ட முகவர்களுக்கு உரிய செலவுத் தொகை களை ஏமாற்றி மோசடி செய்யும் நோக்கத்தோடு கட் சிக்காரர்களுக்குள் சமரசம் நேரிடும்போது நீதிமன்றம் சட்ட முகவருக்குத் தரப்படவேண்டிய செலவுத் தொகையைத் தீர்மானித்து வழங்கிட முன்வரும்.

- வி.சு.

**சட்டவியல் :** நீதித்துறையில் அரசு ஏற்றுக் கொண்டு அமல்படுத்தும் நெறிமுறைகளே சட்டம் என்றும் மனிதனின் புறநடவடிக்கைகளைக் கட்டுப் படுத்தும் விதிமுறைகளே சட்டம் என்றும் விருப்பங் களற்ற நியாயங்களே சட்டங்கள் என்றும் அரசாங்கத் தின் வாயிலாக வெளியிடப்படும் மக்களின் விருப் பங்களே சட்டம் என்றும் பலவாறு சட்டம் வரை யறை செய்யப்படுகிறது. அரசாண்மையின் ஆணை களைச் சட்டங்கள் என்கிறார் ஆசுடின். சட்டம் என் பது சுதந்திர உணர்வின் தன்மை எனலாம். சமுதாயப் பணிகளில் சட்டம் முதன்மையானது. ஓர் ஒழுங்கு படுத்தப்பட்ட சமுதாயத்தில் முதலாவதாகச் சட்டம் தோற்றுவிக்கப்படுவதற்குரிய காரணம், சட்டத்தின் மூலம் நீதி வழங்கப்படாவிட்டால் பிற சமுதாயப் பணிகள் ஒழுங்காக நடைபெறாது என்பதேயாகும்.

சட்டவியல் ( Jurisprudence ) என்பதற்கு ஆக்சு போர்டு ஆங்கிலச் சொல்லகராதி மனித சமுதாயச்சட் டம் பற்றிய நூல் ( அது எழுதப்பட்டதாயினும், எழு தப்படாததாயினும் சரி ), சட்டத்துறை மெய்விளக்க இயல், சட்டத்துறை கோட்பாடு, சட்டத்துறைத் திறமை எனப் பலபொருள் தருகிறது. சட்டவியல் கொள்கை குறித்து ஒவ்வொரு அறிஞரும் ஒவ்வொரு கொள்கையைக் கொண்டிருந்தாலும் பொதுவாகச் சட்டவியல் கொள்கைகளைப் பொறுத் தளவில் ஏழு வகைக் கொள்கைகள் உள்ளன. அவை: 1. வரலாற் றுக்கொள்கை, 2. சமுதாயக்கொள்கை, 3. உண்மை யாளர்கள் கொள்கை, 4. அறக்கொள்கை, 5. ஆய்வுக் கொள்கை, 6. இயற்கைச் சட்டக் கொள்கை, 7. பயன் கொள்கை என்பன.

**வரலாற்றுக்கொள்கை :** வான்சேவிக்னி இக் கொள்கையின் தந்தையாவார். அவரது கொள்கைப் படி, சட்டம் என்பது ஒரு நாட்டு மக்களின் குணம், பழக்கவழக்கங்கள், வரலாறு ஆகியவைகளிலிருந்து உருப்பெற்று, அவர்களுடன் வளர்ந்து, அவர்களின் வலுவைப் பொறுத்து அதுவும் வலுப்பெற்று பின்னர் அவர்களுடனேயே இறந்துவிடுகிறது.

**சமுதாயக்கொள்கை :** உரோசுகோபாண்டு இக் கொள்கையின் தந்தையாவார். அவரது கொள்கைப் படி, சட்டம் என்பது அரசியலில் நன்கு வளர்ந்த சமு தாயத்தின் உயர்ந்த கட்டுப்பாட்டைக் குறிப்பதாகும். சட்டம், சமுதாயத்தில் பொருளாதார ஏற்றத்தாழ்வை நீக்கவும், பொருளாதார நிறைவு பெறவும், சமத்து வம், அறம் ஆகியவற்றை இணைக்கவும் ஒரு கருவி யாகப் பயன்படுகிறது என்பது இவரது கொள்கை யின் துணிவான எண்ணமாகும்.

**உண்மையாளர்கள் கொள்கை :** இக்கொள்கை யாளர்கள் வகுக்கப்படும் சட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவதில் ஏற்படும் குறைகளைக் கண்டு அவைகளை நீக்குவதற்குக் கவனம் செலுத்த வேண்டு மென வாதாடுவார்கள்.

**அறக்கொள்கை :** இக்கொள்கையாளர்கள் நல் லவை, தீயவைகளையும், அறத்தையும், மறத்தையும் ஆராய்ந்து சட்டம், நல்லவைகளையும் அறத்தையும் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துவார்கள்.

**ஆய்வுக்கொள்கை :** இக்கொள்கையாளர்களில் முதன்மையானவர் ஆசுடினேயாவார். இவர்

கொள்கைப்படி, சட்டம் என்பது, அரசின் கட்டளைகள் அடங்கிய ஒரு தொகுப்பாகும்.

**இயற்கைச் சட்டக்கொள்கை :** தாமசுஅக்கினாசு இக்கொள்கையை நிறுவியவர். இவரது கொள்கைப் படி, சேர்ந்த சிந்தனையாளர்கள் சட்டம் எப்படி இருக் கிறது என்பதைவிட, எப்படி இருக்க வேண்டும் என் பதையே பெரிதாகக் கருதுகின்றனர். சமுதாயத்தின் நலன்பேணும் கொள்கைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சட்டமன்றத்திற்கும் நீதித்துறைக் கும் அறிவுரை கூறுவார்கள்.

**பயன் கொள்கை :** பெரும்பாலான மக்களின் நலனைக் கருதி வகுக்கப்பட்டதாகும் இக்கொள்கை.

இக்கொள்கையாளர்களில் ஒருவரான செரிமி பென்தம் என்பவர் நீதிபதிகள் சட்டம் வகுப்பதை எதிர்க்கிறார். சட்டமன்றம் ஒன்றே சட்டத்தை உரு வாக்கும் தகுதியுடையது என்பது அவரது கருத்து. எழுத்தில் உள்ள சட்டம் நாகரிக நாடுகளுக்குரியது. மரபுவழிச் சட்டம் காட்டுமிராண்டிகளுக்குரியது. பழக்க வழக்கத்தின் வழிச்சட்டம், மூடர்களுக்குரியது என்கிறார் பென்தாம்.

பென்தமுக்குப் பின்னர் வந்த உருடால்ப் வான் செரிங் அந்தக் கொள்கையையே மேலும் பயனுள்ள வகையில் ஆய்ந்து சட்டம் என்றால் என்ன என்பதைப் பற்றி உரைக்கின்றபோது சட்டத்தின் தரம் முழுக்க முழுக்க உண்மையின் அடிப்படையில் இல்லை, பய னைப் பொறுத்தே உள்ளது. மருத்துவன், நோயாளி கள் எல்லோருக்கும் ஒரே மருந்தைத் தருவதில்லை. அது மாதிரியே சட்டம் ஒரே விதிகளைக் கொண்ட தாக இருக்கவியலாது. பல்வேறு மக்களின் நிலைக் கும், அவர்கள் தேவைக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் தகுந்தபடி சட்டம் உருவாக்கப்படல் வேண்டும் என்கிறார்.

- பு. வே.

**சடாவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் :** இரண்டாம் பாண்டியப் பேரரசின் தலைச்சிறந்த பேர ரசனாக, பெரும் வெற்றி வீரனாகத் திகழ்ந்தவர் முத லாம் சடாவர்மன் சுந்தர பாண்டியன். இரண்டாம் மாறவர்ம சுந்தரபாண்டியனுக்குப் பின்னர் இவர் கி.பி.1251 இல் அரசு கட்டிலேறி 1268 வரை சிறப்பாக ஆட்சி புரிந்தார். இவரது வெற்றிகளின் விளைவாகப் பாண்டிய அரசு ஒரு பேரரசாக விரிவடைந்தது. இவ ரது வரலாற்றை அறியக் கல்வெட்டுச் சான்றுகள் பல உள்ளன. திருவரங்கத்திலுள்ள வடமொழி கல் வெட்டிலிருந்து இவரது வெற்றிச் சிறப்புகளையும் அறச் செயல்களையும் அறியலாம். தஞ்சை மாவட் டத்தில் திருப்பூந்துருத்தியில் உள்ள கல்வெட்டும் கோயில் அழகும் பிற முக்கிய சான்றுகளாகும்.

போசளர்கள் திருச்சிக்கு அண்மையிலுள்ள கண்ண னூர் கொப்பத்தைத் தலைமையிடமாகக் கொண்டு பாண்டிய, சோழ நாடுகளில் அரசியல் ஆதிக்கம் செலுத்தி வந்தனர். சோழ மன்னன் மூன்றாம் இராசேந்திரன் சோழர் புகழை மீண்டும் நிலைநாட்ட முயற்சி செய்து கொண்டிருந்தார். காகதீய அரசன் கணபதி காஞ்சியைக் கைப்பற்றி ஆட்சிபுரிந்து வந் தான். முதலாம் சடாவர்மன் சுந்தரபாண்டியன் தன் பேராற்றலால் இவர்களையெல்லாம் அடிபணியச் செய்தார்.

இவர் முதலில் சேர நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, சேரமன்னர் வீரரவி உதயமார்த்தாண்டனைப் போரில் தோற்கடித்து, சேரமரபினை அழித்தார். எனவே, இவர் 'இரவி வென்றான்', 'கேரள வம்ச நீர் மூலன்' என்னும் விருதுகளைப் பெற்றார். அடுத்த சோழ நாட்டின் மீது படையெடுத்துச்சென்று, மூன் றாம் இராசேந்திரனை வென்று தனக்குத் திறை செலுத்துமாறு செய்தார். பின்னர் சோழ நாட்டில் ஆதிக்கம் செலுத்தி வந்த போசளர்களை அடக்கக் கருதி கண்னனூர் மீது படையெடுத்துச்சென்றார். போசளமன்னன் சோமேசுரனை வென்று, போரில் கொன்று, போசளர்களை சோழ நாட்டிலிருந்து விரட்டினார். அக்காலத்தில் சிறந்த வீரனாக விளங்கிய, 'சகல புவன சக்கரவர்த்தி' என்ற விருதி னைப்பெற்ற, காடவமன்னன் கோப்பெருஞ்சிங்க னைப் பணியவைக்க சேந்தமங்கலத்தை நோக்கிப் படையெடுத்தார். அவ்வரசனை வென்று, திறை செலுத்தும்படி செய்தார். சுந்தரபாண்டியன் அவரைச் சிற்றரசனாக ஏற்றுக்கொண்டு, அவரது மணி முடியைத் திரும்பக் கொடுத்ததால் அவர்கள் இரு வரிடையேயும் நட்புறவு நிலவியது. தெலுங்கு சோழ அரசன் விசயகண்ட கோபாலனைத் தோற்கடித்துக் கொன்றார். இவரிடம் பணிந்த அவருடைய தம்பி களுக்குத் தெலுங்கு சோழப் பகுதிகளை மனமுவந்து அளித்தார்.

காகதீய மன்னன் கணபதியிடமிருந்து காஞ்சியை மீட்டு, அவர்களுடைய ஆதிக்கத்தை அழித்தார். நெல்லூரைக் கைப்பற்றி, அங்கு வீராபிடேகம் செய்து, வெற்றி விழா எடுத்தார். கொங்கு நாட்டை வென்று, தன் பேரரசுடன் இணைத்தார். வானரின் மகத மண்டலத்தையும் வென்றார். ஈழநாட்டின் மீது படையெடுத்துச்சென்று, கி.பி. 1254 - 56இல் யானைகளையும், முத்துகளையும் திறையாகப்பெற்று, அதன் வடபகுதியில் பாண்டியரின் ஆதிக்கத்தை ஏற்படுத்தினார்.

அரியணையேறிய ஆறே ஆண்டுகளில் இவர் சேரர், சோழர், போசளர், காடவர், சிங்களர் ஆகியோரை வென்று தன்னுடைய ஆதிக்கத்தைத் தென்னகத்தில் நிலைநாட்டினார். தான் பெற்ற வெற்றிகளின் பயனாக ‘சமசுத சகதாதாரன்’, ‘கேமாச்சாதன ராசர்’, ‘இரவி வென்றான்’, ‘கேரள வம்ச நிர்மூலன்’ ‘எம்மண்டலமும் கொண்டருளிய சிரீ சுந்தரபாண்டிய தேவர்’, ‘காஞ்சிப்புரங் கண்டான்’, ‘மகாராசாதிராசா சிரீபரமேசுவர்’, ‘மரகதப்பிருத்வி - பிரித்’, ‘எல்லாம் தலையான பெருமாள்’, முதலான விருதுகளைச் சூட்டிக்கொண்டார். இவரது பேரரசு வடக்கில் நெல்லூர் கடப்பா மாவட்டங்களிலிருந்து தெற்கே குமரிமுனை வரை பரவியிருந்தது.

இவர் சிறந்த கொடை வள்ளலாகவும், சமயப் பொறை உடையவராகவும் திகழ்ந்தார். பல்வேறு படையெடுப்புகளின் பொழுதும் தான் பெற்ற பெருஞ்செல்வத்தை அறச்செயல்களுக்குப் பயன்படுத்தினார். தில்லை நடராசர் கோவில், திருவரங்க அரங்கநாதர் கோயில் விமானங்களுக்குப் பொற்கூரை வேய்ந்தார். அதனால் ‘பொன்வேய்ந்த பெருமாள்’, என்ற சிறப்புப் பெயர் பெற்றார். தில்லையில் பொன்னம்பலம் ஒன்றை நிறுவினார். இவரால் கட்டப்பட்ட அக்கோயிலின் மேலைக்கோபுரம் சுந்தர பாண்டியர் கோபுரம் என்று இன்றும் வழங்கப்படுகிறது. திருவரங்கத்தில் வேள்வி ஒன்று நடத்தி துலாபாரதானம் செய்து, முடிசூட்டிக்கொண்டார். அக்கோயிலுக்கு பதினென் நூறாயிரம் பொன்னைத் தானமாக அளித்தார். மேலும் அரங்கனுக்கு தான் காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கனிடமிருந்து பெற்ற மரகத மாலையை அளித்து, அறக்கட்டளைகள் பல ஏற்படுத்தினார். சேரநாட்டில் தான் பெற்ற வெற்றியின் நினைவாக திருவானைக்கோயிலுக்கு மூன்று ஊர்களை வழங்கி, அக்கோயிலில் சேரனை வென்றான் விழா எடுக்க ஆணையிட்டார் தம்முடைய பிறந்த நாளன்று கோயில்களில் விழா எடுக்க ஏற்பாடுகள் செய்தார். சமணப் பள்ளிகளுக்கும் மானியங்கள் வழங்கினார். இவருடைய சமயப் பொறைக்கு இவை தக்க சான்றுகளாகும்.

பாண்டிய மன்னர்களிலேயே பெயரும், புகழும் பெற்ற இப்பெரும் வீரன் தான் இறப்பதற்கு முன்னர் தன்னுடைய மகன் முதலாம் மாறவர்மன் குலசேகரனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினார். இவருடைய ஆட்சிக்காலத்தில் பாண்டிய நாட்டை வேறு நான்கு அரசர்கள் ஆண்டு வந்தனர் என மார்க்கோபோலோ என்னும் வெனீசு நகரப் பயணி எழுதியுள்ளார். வாசாபு ( Wassaf ) என்ற இசுலாமிய வரலாற்று ஆசிரியர் சுந்தரபாண்டியனே அன்றி வேறு பாண்டியர் மூவர் சுதந்திரமாக ஆட்சி செய்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார். இறுதி வரையில் சிறந்த வெற்றி வீரனாகத் திகழ்ந்த தமிழகம் முழுவதையும் அடிபணியச் செய்த அவருடைய காலத்தில் பாண்டிய நாட்டை வேறு எவரும் ஆட்சிசெய்திருக்க முடியாது என்பது உறுதி. பாண்டிய நாடானது ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, நால்வர் ஆளுநர்களாக இருந்திருக்கலாமோவெனில் அவ்வாறு அது பிரிக்கப்பட்டதற்கான இலக்கியச்சான்றுகளோ, கல்வெட்டுச்சான்றுகளோ இல்லை. ஆனால் கல்வெட்டுகளிலிருந்து சுந்தர பாண்டியன் காலத்தில் சடாவருமன் வீரபாண்டியன், சடாவருமன் விக்கிரம பாண்டியன் என்ற இருவர் சுதந்திரமாக அரசனைப்போல் ஆட்சி செய்தவாறு தெரிகின்றது. இவர்கள் சுந்தரபாண்டியனின் படைத்தலைவர்களாக இருந்து அவருக்காகப் பல வெற்றிகளைப் பெற்றிருக்கலாம் அல்லது பாண்டியர் அரசியலில் பங்குகொண்ட இளவரசர்களாக இருக்கலாம் எனக் கருதலாம். எனினும், தக்க சான்றுகள் கிடைத்தால்தான் உண்மை நிலையை உணரமுடியும்.

- சி. இரெ.

**சந்திரவாணன் :** இவன் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாண்டியவேந்தரின் அமைச்சனாகவும், படைத்தலைவனாகவும் விளங்கியவன். பாண்டிய நாட்டிலுள்ள மாறை நாட்டை ஆட்சிபுரிந்தான். தஞ்சை வாணண்கோவையின் பாட்டுடைத் தலைவன். மாவலிவாணன், மாறை வாணன், தஞ்சை வாணண் எனவும் இவன் அழைக்கப்பெறுகிறான். இறையன்பும் கொடைப்பண்பும்

மிக்கவன். சிறந்த வெற்றிவீரன், பாண்டியர்க்கு ஆதர வாகப் போரிட்டு சேரர், சோழர், பல்லவர் ஆகி யோரை வெற்றிகண்டவன்; வாணர் குலத்தவன்.

மாறை நாட்டை ஆண்டதால் இவன் மாறை வாணண் என்று சிறப்பிக்கப்பட்டான். மாறைநாடு, கல்வெட்டுகளில் குறுமாறை நாடு என்று குறிக்கப் படும். ஆய்வாளர் சிலர் கருதுவதுபோல, இரு திரு நெல்வேலிப்பகுதியில் இருந்தது எனக் கொள்வது பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. இவனது தலைநகரான தஞ்சையும், மாறைநாடும் பாண்டிய நாட்டிலுள்ள வையைக் கரையிலே இருந்தது என்ப தையும் தஞ்சை வாணன் கோவைப்பாடல்களால் அறியலாம். எ.கா. 'தஞ்சை சூழ் வையை நாட்டு', 'நன்றே தரு வையை நாடு', 'வாணண் தென் மாறை வையத் தேயம்', 'தஞ்சை வாணன் வையைத்துறை' போன்ற பாடல்வரிகளால் சுட்டலாம். கோவைப் பாடல்களில் இவன், 'மாவலிவாணண்' எனச் சுட்டப்பெறுவதால் இவன் வாணர் குலத்தலைவன் என்பதும், மாபலிச் சக்கரவர்த்தியின் வழிவந்தவன் என்பதும் அறியப்படுகிறது. மதுரை, மானாமதுரை வழியில் உள்ள திருப்பாச்சேத்திக்கு அருகில் அமைந் துள்ள தஞ்சாக்கூரும் அதன் அருகில் உள்ள மாற நாடும் சந்திரவாணனின் தலைநக்ரும் நாடும் ஆகும் என்பதே பொருத்தமுடையது.

இவன் இறையன்பில் மேம்பட்டு விளங்கினான் என்பதையும், கொடைப்பண்பில் சிறந்தவன் என்ப தையும் கோவைப்பாடல்களால் அறியமுடிகிறது. எ.கா. 'வலம்புரி போல் கொடை வாணன்', 'வார ணம் கோடி தரும் தஞ்சைவாணன்', போன்ற பாடல் வரிகளால் அறியப்படுகிறது. கோவை நூலில் இவன், 'வரோதயன்', 'மானகரன்', 'செந்தமிழ் வாணன்', என்று அழைக்கப்பெறுகிறான்.

இவ்வாணன் சேரரையும், சோழரையும், பல்ல வரையும், கருநாடக வேந்தனையும் வெற்றி கொண் டதாகக் கோவை தெரிவிக்கின்றது. இவற்றைக் கொண்டு இக்குறுநில மன்னன் இரண்டாம் சடைய வர்மன் சுந்தரபாண்டியனின் ( கி.பி. 1276 - 1293 ) ஆட் சிக்காலத்திலும், அவனது பேராளர்களான விக்கிரம பாண்டியன் ( கி.பி. 1283 - 1296 ), சடையவர்மன் வீர பாண்டியன் ( கி.பி. 1270இல் அரியணையேறிவன்), ஆகியோரது ஆட்சிக் காலங்களிலும் படைத்தலைவ னாகப் பணிபுரிந்துள்ளான். சிலர் கருதுவது போன்று இவன் மாறவர்மன் குலசேகர பாண்டியனது ( கி.பி. 1268 - 1311 ) படைத்தலைவனாகப் பணி புரிந்தான் என்பது பொருந்தாது. காரணம் குலசேக ரன் வென்ற பகுதிகளை, சந்திரவாணன் வென்றதாகக் கோவை குறிப்பிடவில்லை.

- ம. இரா. த.

**சமத்துவம்** : நெறியுரை அரசியல் கோட்பாட் டில் இடம் பெறுகின்ற முதன்மையான கருப் பொருள்களில் ஒன்று சமத்துவம் ( Equality ). இந்தக் கருப்பொருளைத் தனியாகப் படித்து அறிந்து கொள்ள முடியாது. ஏனெனில் அது சுதந்திர உரிமை, சகோதரத்துவம், உடைமை நீதி என்ற பல கொள்கை களுடன் இணைந்து இயைந்து வருகிறது. இதன் காரணமாக அது பல பரிமாணங்களைக் கொண்ட கருத்தாக விளங்குகிறது. ஆகவே, ஒழுக்கவியல் மற்றும் சமூக, அரசியல் தத்துவத்தில் இடம் பெறு கின்ற அனைத்து அடிப்படைக் கருத்துகளிலும் அது மட்டுமே சிக்க லாக இருக்கிறது. இதை உணர்ந்தே அரசியலறிஞர் ஏரால்டு லாசுகி ( Herold Laski ) அரசியல் அறிவியல் துறையில் சமத்துவக் கருத்தை விடக் கடினமானது எதுவுமில்லை என்கிறார்.

ஒவ்வொருவரும் தம்மைச் சிறந்த முறையில் ஆளாக்கிக் கொள்ள அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்படும் நிலைமையே சமத்துவம் எனலாம். பார்க்கர் என்பார், 'உரிமைகளின் வடிவில் எனக்கு என்னென்ன நிலைமைகள் உறுதியளிக்கப்படுகின்ற னவோ, அதே அளவில் மற்றவர்களுக்கும் அவை அளிக்கப்படுவதும், அதேபோல் மற்றவர்களுக்கு என் னென்ன உரிமைகள் தரப்படுகின்றனவோ, அவை எனக்கும் தரப்படுவதுமே சமத்துவம்' என்று வரை யறை கூறுகிறார்.

ஆனால், சமத்துவம் என்பது எல்லோரையும் ஒரே விதமாக நடத்துவது என்று பொருளாகாது, மனிதர் களிடையே விருப்பத்தில், ஆற்றிலில், தேவையில் வேறுபாடு இருக்கும்பொழுது எல்லோரையும் ஒத்த முறையில் நடத்த முடியாது. ஓர் அணு விஞ்ஞானிக்கு கொடுக்கிற முதன்மையை ஒரு கொத்தனாருக்குக் கொடுக்க முடியாது.

சமத்துவம் இரண்டு விதமான கொள்கைகளை உள்ளடக்குகிறது. ஒன்று, ஒரு மனிதன் தன்

ஆளுமையை வளர்த்துக்கொள்ள வாய்ப்புப் பெற வேண்டும். இரண்டு, வலிமையுடையவனும், வலிமையற்றவனும் சேர்ந்து வாழவும், அது மட்டு மின்றி இருவருக்கும் தமது கருத்துகளை வெளியிடும் உரிமையைப் பெறவும், அனுபவிக்கவும் ஆன நிலைமை உடைய சமூக ஒழுங்கு அமையவேண்டும். இந்த இரண்டு கருத்துகளும் ஓர் இசைவோடு சமத்துவக்கொள்கை யில் உள்ளடங்கியிருக்கின்றன.

இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கும்பொழுது, சமத்துவம் இரண்டு பக்கங்களைக் கொண்டது என் பது புலப்படும். ஒன்று ஆக்க முறையான பக்கம், இன்னொன்று எதிர்மறையான பக்கம். ஆக்கமுறை யான பக்கத்தின்படி, சமத்துவம் எல்லோருக்கும் போதுமான வாய்ப்புகள் அளிப்பது என்று பொரு ளாகும். மனிதர்கள் தம் தேவைகளில், ஆற்றல்களில், முயற்சிகளில் வேறுபடுகிறார்கள். எல்லோருக்கும் இயற்கைத் திறமைகள் அமையவே செய்கின்றன. ஆனால், அவை எல்லாம் சமமாக இருப்பதில்லை. சிலர் வாழுகின்ற சூழ்நிலையில் சிந்தனை ஆற்றல் களுக்கு அதிகத் தேவை இருக்கும். இப்படிப்பட்ட நிலையில் இரு தரப்பினருக்கும் ஒரே விதமான, ஒரே அளவான வாய்ப்புகளை அளிப்பது என்பது முறை யாகாது. ஆகவே, அவரவருக்குத் தேவைப்படும் வாய்ப்புகளைத் தேவைகளின் அளவுக்கேற்ப அளிப் பது தான் சமத்துவத்தின் நடைமுறையாகும். ஒருவன் தனது வாழ்வை அல்லது ஆளுமையை நல்ல விதமாக அமைத்துக்கொள்ள எந்த வாய்ப்புத் தேவைப்படு கிறதோ, அந்த வாய்ப்பைப் போதுமான அளவுக்குத் தருவதே சமத்துவத்தின் இலட்சியமாகும்.

எதிர்மறைப் பக்கத்தின்படி சமத்துவம் என்பது சிறப்புச் சலுகைகள் அளிக்காதிருப்பது என்று பொரு ளாகும். அதாவது மதம், சாதி, நிறம், செல்வம், பாலி னம் என்று செயற்கைத்தனமான அடிப்படைகளில் பாகுபாடு காட்டாமல் திறமைக்கு ஊக்கம் கொடுப் பதே சமத்துவத்தின் அடிப்படையாகும். இத்தகைய பாகுப்பாட்டினால் சரியான ஊக்குவிப்பு இல்லா மல் ஒருவனுடைய திறமை அமுங்கிப்போகும். இத் தகைய நிலைமை ஏற்படக்கூடாது என்பதற்காகவே சிறப்புச் சலுகைகள் காட்டலாகாது என்பது சமத்து வத்தின் நிலைப்பாடு ஆகும். ஒருவன் தான் நாடும் ஒரு பொதுப்பதவிக்கு வர வேண்டுமானால் தனது திறமையின் மூலம் தான் வரவேண்டும். அன்றி, சலுகைகள் மூலம் மற்றவரைக்காட்டிலும் ஓர் அனு கூலமான நிலையை அடைந்து அதன்மூலம் பொதுப் பதவிக்கு வரக்கூடாது. அவ்வாறே ஓர் அதிகாரம் மிக்க பொதுப் பதவியும் செயலாற்றல் தகுதியைக் கொண்டு பொதுப்படையாக அமையவேண்டுமே யன்றி மரபுவழி உரிமை அடிப்படையில் அமையக் கூடாது.

பாகுபாடு கூடாது என்று சொல்வதனால் அதை அறவே ஒதுக்கிவிட வேண்டும் என்பது சமத்துவத் தின் கொள்கையன்று. தகுந்த காரணங்களோடு பாகு பாட்டைச் செயல்படுத்தலாம். எ.கா. தமிழகத்தில் தொழிற்கல்வி நுழைவுத் தேர்வுகளுக்கு +2 வகுப்பில் கணக்கில், அறிவியல் பாடங்களில் தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக்களுக்கு நாற்பது விழுக்காடு, மற்றும் 120 / 200 மதிப்பெண்கள் என்றும், மிகப் பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு ஐம்பது விழுக்காடு, மற்றும் 120 / 200 மதிப்பெண்கள் என்றும், பிற்படுத்தப்பட்ட மக்க ளுக்கு அறுபது விழுக்காடு, மற்றும் 130 / 200 மதிப் பெண்கள் என்றும், மற்றைய வகுப்பினருக்கு அறுபது விழுக்காடு, மற்றும் 140 / 200 மதிப்பெண்கள் என் றும் குறைந்தபட்ச மதிப்பெண்கள் வரம்பு வைத் திருக்கிறது. இந்தப் பாகுபாடு தலைமுறை தலை முறையாக ஒடுக்கப்பட்டும், பிற்படுத்தப்பட்டும் வாழ்ந்து வருகின்ற மக்களுக்குத் தொழிற்கல்வி ஒளி கிடைக்க வேண்டும் என்பதற்காக நீதிக் கண்ணோட் டத்தில் செயல்படுகிறதே தவிர, மற்றைய வகுப்பின ருக்கு எதிராகவோ, விரோதமாகவோ மேற்கொள் ளப்படவில்லை. இவ்வாறே பெண்களுக்கு அரசுப் பணிகளில் முப்பது விழுக்காடு என்றும், உடல் ஊன முற்றவர்களுக்குப் பொதுப்பணிகளில் முப்பது விழுக்காடு என்றும், தாழ்த்தப்பட்ட, பழங்குடி மக் களுக்கு அரசு பணித் தேர்வுகள் எழுத உச்ச வயது வரம் பைத் தளர்த்தியும் அரசு மேற்கொள்ளுகிற நடவடிக் கைகள் ஒருதலையாகத் தோன்றினாலும் சமத்துவக் கொள்கையின் அடிப்படையில் அவை மேற்கொள் ளப்படுகிறது. சமத்துவத்தின் நோக்கம் ஒரு பொது நன்மைக்கு அல்லது பொதுத்திறமைக்குக் குந்தகம் ஏற்படக்கூடாது என்பதுதான். இந்த நோக்கத்திற்குப் பாதகமாக அமைகிற பாகுபாட்டையே சமத்துவம் கண்டிக்கிறது.

சமத்துவத்தின் பொருளை நன்றாக அறிய வேண்டு மானால் அதன் தன்மையை உணர்வது மிக அவசி யம். சமத்துவம் என்பது ஒருமித்த தன்மை என்பதற்கு மாற்று அன்று. மனித ஆளுமை வளர்ச்சி என்கிற

தலையான விழுமியத்திற்குப் பெறப்பட்ட துணைப் பொருள் அது. எல்லா மனிதர்களுக்கும் அடிப்படைத் தேவைகள் ஒன்றே. அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படுகிற நிலையில்தான் அவர்களிடையே வேறுபாடுகள் எழுகின்றன. அவர்கள் ஆற்றும் செயல்கள், அந்தச் செயல்களை ஆற்ற வேண்டிய தேவைகள் முதலியவற்றின் காரணமாக அவர்களிடையே வேறுபாடுகள் எழுகின்றன. அந்த வேறுபாடுகளின் இடையேதான் ஒவ்வொருவரும் தத்தம் ஆளுமையை வளர்த்துக்கொள்ளுகிறார்கள்.

இதனால் ஆளுமையில் வேறுபாடுகள் பிரதிபலிக்கின்றன. ஆனால் வேறுபாடுகளே இல்லாமல் எல்லோரும் ஒருமித்த ஆளுமை கொண்டிருக்க வேண்டும் என்ற முறையில் சமத்துவம் செயல்படுவதில்லை. அவரவர் தம் ஆளுமையை வளர்த்துக்கொள்ள ஒவ்வொருவருக்கும் போதிய வாய்ப்பு அளிப்பது தான் சமத்துவத்தின் கொள்கை ஆகும். பார்க்கர், ‘சமத்துவம் எந்த வடிவில் அமைந்தாலும் சரி, அது எப்போதும் மனித ஆற்றலின் இயற்கையான வளர்ச்சிக்கு உட்பட்டும் உறுதுணையாகவும் அமைய வேண்டும். அது ஒருமித்த தன்மை என்கிற அளவுக்கு நீட்டிக்கப்பட்டால் ஒருமித்த தன்மையினால் மனித ஆற்றலில் இயற்கையான வளர்ச்சி தடைபட்டு எல்லாமே தலைகீழாகிவிடும். அடங்கியிருக்க வேண்டியது ஆண்டையாகவும், ஆண்டையாக இருக்க வேண்டியது அடங்கியும் போய்விடும்’ என்று கூறுகிறார். மனித ஆளுமை வளர்ச்சி ஆண்டை என்றால், சமத்துவம் என்பது அதற்குப் பணிந்து போகிற பணியாள். முன்னதற்குப் பணிபுரிவதே பின்னதன் வேலை. எனவே, முன்னதை மீறுகிற வகையிலோ, தடுக்கின்ற வகையிலோ பின்னது அமையக்கூடாது.

சமத்துவக் கருத்தைப் பரந்த மனப்பான்மை (Liberal) அரசியல் கோட்பாடு முன் வைக்கிறது. சமமானவர்கள் சமமாகவும், சமமற்றவர்கள் சமத்துவமற்ற முறையிலும் நடத்தப்படவேண்டும் என்பதை அக்கோட்பாடு வலியுறுத்துகிறது. எனினும், அந்தச் சமத் துவமின்மை காரணமாக ஒருவனுடைய ஆளுமை வளர்ச்சிக்கு, வாழ்வு மேம்பாட்டிற்குப் பாதகம் வரக் கூடாது என்று அக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. இதுவே சமத்துவக் கொள்கையின் தன்மை என்று சான் ரால்சு கூறுகிறார்.

பரந்த மனப்பான்மை அரசியல் கோட்பாடு சமத்துவம் என்பது அனைவருக்கும் போதிய வாய்ப்புகளைக் கொடுக்கும் சமநிலை என்ற கருத்திலேயே சமத்துவக் கொள்கையை விவரிக்கிறது. இத்தகைய நிலை மாக்ஃபெர்சன் என்பவர் குறிப்பிடும் சந்தைச் சமூகத்தில்தான் நிலவும். சந்தைச் சமூகத்தில்தான் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவதும் மேலோங்கியிருக்கும். போட்டியிட அனைவருக்கும் சுதந்திர உரிமையிருக்கும். அப்படி ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவதற்குச் சம வாய்ப்புகள் இருந்தாக வேண்டும். சம வாய்ப்புகள் அற்ற நிலையில் ஒருவரோடு ஒருவர் போட்டியிடுவது இயலாது. எனினும் போட்டியில் தம்மை ஆளாக்கிக் கொள்ளும் வல்லமை பெற்றவர்களே முன்னேறுவர். மற்றவர் பின்தங்க நேரிடும். இத்தகைய விளைவு, சமத்துவமின்மை சம வாய்ப்புகள் அமைந்திடும் நிலையில்தான் ஏற்படுகிறது என்பது இங்குக் கவனிக்கத்தக்கது. இதைக் கருத்தில் கொண்டுதான் சே.எச். சார், ‘தனித்துவக் கொள்கை ஆட்சிபுரியும் போட்டிச் சமூகத்தில்தான் சமவாய்ப்புக் கோட்பாடு என்கிற சமத்துவக் கொள்கை உற்பத்தியாகும்’ என்கிறார்.

பரந்த மனப்பான்மை அரசியல் கோட்பாடு மனித உறவுகளில் மொத்தத் தொகுதியையும் ஒரு போட்டியாகக் கருதுகிறது. சமூகத்தில் கிடைப்பதற்கு அரிதாக இருக்கும் பொருள்களுக்கு மனிதர்களிடையே போட்டி இருக்கும். தம் சக்திக்கு உட்பட்ட வரையில் ஒவ்வொருவரும் இவற்றைப் பெற முனைந்து செயல்படுவர். இந்தப் போட்டி, சமூகத்தில் சம வாய்ப்புகள் இருந்தால்தான் சாத்தியமாகும். எனவேதான், போட்டி நடைபெறச் சமூகம் சம வாய்ப்புகளை அனைவருக்கும் அளிக்கிறது என்கிறது அந்தக்கோட்பாடு. ஆனால், இதற்கு எதிரான நிலைப்பாட்டை மார்க்சியக் கோட்பாடு எடுக்கிறது. அக்கோட்பாடு சமத்துவம் என்பது அடிப்படையில் பொருளாதாரத் தொடர்புடையது என்கிறது.

வர்க்க வேறுபாடுகள் இருக்கிற வரைக்கும் சமத்துவம் என்பது கற்பனையே என்றும் அக்கோட்பாடு கூறும். முதலாளித்துவச் சமூக அமைப்பில் மக்களிடையே நிலவும் உறவுகள் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்டு ஏற்படும் உறவுகள் ஆகும். அத்தகைய உறவுச் சூழ்நிலையில் சமூகம் உற்பத்திச் சாதனங்களை உடைய வர்க்கம் என்றும், இல்லாத வர்க்கம் என்றும் இருபெரும் வர்க்கங்களாகப் பிரிந்து நிற்கிறது. உற்பத்திச் சாதனங்களைத் தம் உரிமையிலும், கட்டுப்பாட்டிலும் வைத்திருக்கும் சொத்துரிமை

வர்க்கம் அனைத்து வகையான ஆற்றலையும் தன் கைக்குள் வைத்திருக்கும். அதைக்கொண்டு சுதந்திர உரிமை, சமத்துவம் இவற்றின் பயன்களைத் தானே எடுத்துக்கொள்ளும். இப்படியிருக்கையில் சுதந்திர உரிமை, சமத்துவம் இவற்றின் பயன்களை அனு பவிக்க முடியாத ஏழை எளியவரால் பணக்காரர்க ளுடன் போட்டியிட இயலாது. இதைக் கருத்தில் கொண்டு மார்க்சியக்கோட்பாடு முதலாளித்துவச் சமூக அமைப்பில் இல்லாதவர்களால் உடையவர் களுடன் போட்டியிட எந்த வாய்ப்பும், வசதியும் இல் லாமல் இருக்கும்போது சுதந்திர உரிமை, சமத்துவம் என்றெல்லாம் ஏமாற்றுவேலை என்று சாடுகிறது. இலெனின், 'முதலாளித்துவ அமைப்பு முறையில் முதலாளித்துவ வர்க்கம் மீமிசை எளிமை கொண்டு தன் நலன்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், தொழி லாளர்களும், உழவர்களும் என்றென்றும் தனக்கு அடிமைப்பட்டிருக்கவும் அரசியல் அதிகார ஆற்ற லின் சின்னமான அரசைத் தன் கைப்பிடிக்குள் வைத் துக்கொள்கிறது. ஆதலால் அங்கு சனநாயக ஒழுங்கு ஏற்பட சாத்தியமே இல்லை' என்கிறார்.

சொத்துடைமை முறையான சமத்துவமின்மைக்கு உடையவர், இல்லாதவர் என்கிற வர்க்க வேறுபாடு களுக்கு வழிகோலுகிறது. ரூசோ, 'மனிதன் பிறவி யிலேயே சுதந்திரமாக இருக்கிறான். ஆனால் அவனு டைய மகிழ்ச்சியையும், எளிமையையும் சொத் துரிமை அழித்துவிடுகிறது. ஆகவே மனிதர் களிடையே சமத்துவமின்மையைத் தோற்றுவிக் கிறது' என்கிறார். எனவே, உண்மையான சமத்துவம் ஏற்படச் சொத்துரிமை முறை ஒழிக்கப்பட்டு வர்க்க வேறுபாடுகள் அகற்றப்படவேண்டும். இதைப் புரட்சியின் மூலமாகவே சாதிக்க முடியும். முத லாளித்துவம் ஒழிந்து, தொழிலாளர் ஆட்சி ஏற் பட்டால்தான் உண்மையான சமத்துவம் மலரும் என்கிறது மார்க்சியக் கோட்பாடு.

'உழைக்கிறவனே உண்ண வேண்டும்' என்பது மார்க்சிய சித்தாந்தம். உடலால் அல்லது மூளையால் உழைக்கிற எவனும் உழைப்பாளியே. எனவே, உழைக்கும் மக்கள் ஆட்சி செலுத்தும் சமதர்மச் சமூக அமைப்பில் உழைக்கிறவனே உண்ண முடியும் என்ற நிலைமை ஏற்படுவதனால் அனைவரும் உழைக்க வேண்டியிருக்கிறது. உழைக்கின்றனர். இந்த வகை யில் உழைப்பவன், பிறர் உழைப்பை உண்டு கொழுப்பவன் என்ற வர்க்க வேறுபாடு ஏற்படாமல் அனைவரும் உழைப்பாளியாக மாறுவதால், சம தர்மச் சமூகம் சமத்துவச் சமூகமாக அமைகிறது. சம தர்மம் சமத்துவத்துக்கு இணைபொருள் சொல்லாகி றது. இப்படி மார்க்சியக் கோட்பாடு எல்லோரும் சமமாக உழைத்திடும் நிலையைச் சமத்துவமாக நோக்குகிறது.

மார்க்சியக் கோட்பாடு சமத்துவம் இரண்டு வடி வங்களில் மலரும் என்கிறது. ஒன்று, பொருளாதார வடிவம். இன்னொன்று, மனிதத்துவ வடிவம். முத லாளித்துவம் ஒழிந்து தொழிலாளர் அரசு ஏற்படும் வர்க்கமுறை அற்ற சமதர்மச் சமூக ஒழுங்கு அமையும் காலக்கட்டத்தில் மலரும் சமத்துவம் பொருளாதாரச் சமத்துவமாகும். அரசு என்கிற நிறுவனமே மறைந்து, அரசு இல்லாத பொதுவுடைச் சமூக ஒழுங்கு அமை யும் காலகட்டத்தில் மலரும் சமத்துவம் மனிதத்துவச் சமத்துவமாகும். சமூக வளர்ச்சிச் செயற்பாங்கில் கடைசிக் கட்டமாக அமைவது இந்தச் சமத்துவமே. எல்லோரும் முழுநிறைவான கூட்டுறவோடு ஒன் றிணைந்து சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளும் போது அரசு என்ற நிறுவனத்திற்கே தேவையில்லா மல் போய்விடுகிறது. அத்தகைய சூழ்நிலையில் மக் களிடையே முழு நிறைவான சமத்துவம் தோன்று கிறது.

**சமத்துவத்தின் வகைகள் :** சமத்துவம் ஒரு துறை யை மட்டும் தழுவி அமைவதில்லை. பல துறைகளை யும் அது தழுவி அமைகிறது. அந்த வகையில் அது பல் வேறு வடிவங்களில் அமைகிறது. முற்றிலும் கருத்தி யல் அளவில் அமைகிற இயற்கை அல்லது ஒழுக்க வியல் சமத்துவத்திலிருந்து நடைமுறையில் மெய் யாய் அமைகிற சமூக அல்லது பொருளாதாரச் சமத் துவம் வரையில் அது பல்வேறு வடிவங்களில் அமை கிறது. அவற்றில் சில கீழே தரப்படுகின்றன.

**இயற்கைச் சமத்துவம் :** இயற்கை அனைவரை யும் சமமாகவே படைக்கிறது என்கிறது ஒரு சித்தாந் தம். அதன்படி அனைவரும் இயற்கையில் சம மாகவே ஆகின்றனர். முற்காலத்திலேயே இந்தக் கருத்து நிலவியிருந்தது. பிளேட்டோவும், அரிசு டாட்டிலும் 'யாவரும் சமமல்ல. இயற்கை மனிதர் களை சமமற்றவர்களாகவே படைத்திடுகிறது' என்ற கூறியபோது, சீசரோ, பலிபீயசு போன்ற ரோமாபுரிச் சிந்தனையாளர்கள் இயற்கை விதிப்படி மனிதர்கள் அனைவரும் சமம் என்று வாதிட்டனர். நவீன காலத் தில் சமூக உடன்படிக்கைக் கருத்தினைச் ( Social

Contract School) சேர்ந்த சிந்தனையாளர்களும் இயற்கை விதிப்படி மனிதர்கள் அனைவரும் சமம். சுதந்திரமானவர்கள். எனவே, யாரும் எவருக்கும் அவர்தம் வாழ்க்கையில் நலத்தில், உரிமையில் அல்லது உடைமையில் தீங்கு விளைவிக்கக் கூடாது என்று வற்புறுத்தினர். இந்தச் சிந்தனையாளர்களில் ஒருவரான ரூசோ, 'இயற்கை மனிதர்களைச் சம மாகப் படைத்திருக்கிறது என்ற மதச்சாயல் கொண்ட கருத்தை மதச்சார்பற்ற கருத்தாக மாற்றி, ஒழுக்கக் கொள்கையில் அனைவரும் சமமே' என்று அறி வித்தார். பின்னாளில் இந்தக்கருத்து பேரறிஞர் கார்ல் மார்க்சின் சிந்தனையில் இடம் பெற்றது. ஒழுக்கக் கொள்கையின் அடிப்படையிலும் ஒவ்வொரு மனி தனும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்று அவர் விரும்பினார். ஆனால் மனித வாழ்வுக்குச் சிறப்புத் தரக்கூடிய இந்த விழுமியம் முதலாளித்துவ சமூக அமைப்பு முறையில் நிறைவேறாது, சமதர்மச் சமூக அமைப்பு முறையில்தான் சாத்தியம் என்று அவர் உரைத்தார்.

எனினும், இயற்கையில் அனைவரும் சமம் என்ற கருத்தோ, ஒழுக்கக்கொள்கை அடிப்படையில் அனைவரும் சமமாக நடத்தப்படவேண்டும் என்கிற கருத்தோ ஓர் இலட்சிய வகையைச் சார்ந்தது. அதை முழுமையாக அடைவது என்பது இயலாதது.

**சமூகச் சமத்துவம் :** சமூகத்தில் வாய்ப்பு வசதி கள் அனைவருக்கும் சமம். அதில் யாரும் வேறுபடுத் தப்படவோ, ஒரு தலையாய் நடத்தப்படவோ கூடாது என்பது இதன் கொள்கை. இலாசி சொல் வதுபோல், 'எந்தப் பொருள்கள் இல்லாமல் வாழ்க்கை பொருளற்றதாகிவிடுமோ, அந்தப் பொருள்கள் எந்த விதமான வேறுபாடும் இல்லாமல் அனைவருக்கும் கிடைக்க வேண்டும்' என்கிற அடிப் படையைக் கொண்டு சமூகச் சமத்துவம் செயல் படுகிறது. ஆகவே ஒருவர் சமூகத்தில் பெறுகிற பயன் கள், வாய்ப்புகள் மற்றவர்களுக்கும் கிடைக்க வேண் டும் என்பதே சமூக சமத்துவத்தின் நிலைப்பாடு.

"நான் எத்தகைய நடத்தையை - மரியாதையை பிறரிடமிருந்து எதிர்பார்க்கிறேனோ, அதே அளவில் மற்றவர்களுக்கும் அவை அளிக்கப்படுவதுதான், ஒழுக்கமாகும்" என்று பெரியார் கூறுகிற சுய மரியாதைத் தத்துவம் சமூகச் சமத்துவத்திற்கு ஒரு மாற்று வடிவமாகும்.

**அரசியல் சமத்துவம் :** ஒவ்வொருவருக்கும் அர சியல் அதிகார ஆற்றல் வாயில்களில் நுழைய உரிமை இருக்கும்போது, அந்த நிலைமை அரசியல் சமத்து வம் எனப்படும். அந்த நிலைமையில் எந்த விதமான தடையுமில்லாமல் அனைவருக்கும் நிருவாகம் செய் யவும், பொதுப்பதவிகளை அடையவும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். இந்த வகையில் ஒவ்வொ ருவருக்கும் வாக்களிக்கவும், தேர்தலில் நிற்கவும், ஒரு பொதுப்பதவியைப் பெறவும் அரசாங்கத்தின் செயற் பாட்டை விமர்சிக்கவும் இவை போன்ற அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவும் உரிமைகள் அமைய வேண்டும். எந்தச் செயற்கையான வேறுபாடும் இல் லாமல் இந்த அரசியல் உரிமைகள் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். இங்கிலாந்தில் பிரபுக்கள் சபை என்கிற நாடாளுமன்ற மேலவையில் பிரபுக்கள் பரம் பரையைச் சேர்ந்தவர்கள் மட்டுமே உறுப்பினராக ஆக முடியும் என்று ஒரு குறிப்பிட்ட சாராருக்குச் சிறப் புச் சலுகை அளிப்பது போன்ற ஏற்பாடு அரசியல் சமத்துவக் கொள்கைக்கு முரணானது. கார்ல் சே. பிரட்ரிக், 'அதிகாரத்தில் பங்கேற்கிற வாய்ப்பு அனை வருக்கும் கிடைக்கிற நிலைமையும் சேரும்போது தான் அரசியல் சமத்துவம் நிறைவடையும்' என் கிறார்.

**பொருளாதாரச் சமத்துவம் :** அரசியல் சமத் துவம் உண்மையாக அமைவதற்குப் பொருளாதாரச் சமத்துவமே துணைபுரிகிறது. பொருளாதார அதிகார ஆற்றல் மூலாதாரங்களான நிலம், உற்பத்திச் சாதனங் கள் முதலியன சிலர் கைகளில் குவிந்துவிடக் கூடாது என்பதுதான் பொருளாதாரச் சமத்துவத்தின் கொள் கையாகும். தேசியச் செல்வம் எல்லாரிடத்திலும் ஏற்ற இறக்கம் இல்லாமல் சமமாகப் பகிர்ந்து அமை யவேண்டும். அதாவது செல்வம் சிலர் கைகளில் குவிந்து கிடக்கவும், மற்றவர்கள் மிகக்குறைந்த செல் வத்துடன் அல்லது கொஞ்சங்கூட பங்கில்லாமல் வாடி நிற்கும் நிலைமை இருக்கக்கூடாது. அப்படியி ருக்கும் நிலையில் செல்வந்தர்கள் தமது பொருளா தாராதிகார ஆற்றலைக்கொண்டு, அரசியல் அதிகார ஆற்றலைக் கைப்பற்றி இல்லாதவர்களை நசுக்கிவிடு வர். சமூக வாய்ப்புகளையும், வசதிகளையும் தாமே பயன்படுத்திக்கொண்டு இல்லாதவர்களை விட்டு விடுவர்.

**சட்டச் சமத்துவம் :** சட்டத்தின் முன் அனைவ ரும் சமம் என்பது சட்டச்சமத்துவமாகும். இதன் படி

அனைவரும் சட்டம் வழங்கும் பாதுகாப்புப் பெற உரிமையுண்டு. தமது வாழ்க்கைக்கும், உடைமைக்கும் வேண்டிய பாதுகாப்பை அனைவரும் வேறுபாடு இல்லாமல் சட்டத்தின் மூலம் பெறலாம். இப்படிப்பட்ட சட்ட உரிமைகள் அனைவருக்கும் கிடைக்கும்போது சட்டம் விதிக்கும் கடப்பாடுகளும் எல்லோர் மீதும் சமமாக இறங்குகின்றன. அந்தக் கடப்பாடுகளை மீறும் நிலையில் யாராக இருந்தாலும் அவர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு தண்டனை பெறுகிறார். சட்ட மீறுதலுக்குரிய தண்டனையும் ஆளுக்கு ஆள் வேறுபடுவதில்லை. இந்த விதியின் துணை விதியாக, எந்தவிதமான செயலின் அடிப்படையிலும் மனிதர்களுக்குச் சட்டத்தின் கீழ்த் தரப்படும் பாதுகாப்பில் எவ்வித வேறுபாடும் காட்டக் கூடாது என்று சட்டச் சமத்துவம் வலியுறுத்துகிறது.

**சர்வதேசச் சமத்துவம் :** சர்வதேச அளவில் சமத்துவக்கொள்கை விரிவுப்படுத்தப்படும்போது, அது சர்வதேசச்சமத்துவம் எனப்படுகிறது. இக்கொள்கையின்படி உலகில் உள்ள எல்லா நாடுகளும் சமமாக நடத்தப்பட வேண்டும். பெரும் மக்கள் தொகை கொண்டதாகயிருந்தாலும் சரி, அல்லது சிறுமக்கள் தொகை கொண்டதாகயிருந்தாலும் சரி, உலகின் மையமான பகுதியில் இருந்தாலும் சரி, அல்லது ஒரு கோடியிலிருந்தாலும் சரி, இயற்கை வளங்கள், செல்வம் முதலின மிகுந்திருந்தாலும் சரி, குறைந்திருந்தாலும் சரி, இராணுவ பலத்தில் மேம்பட்டிருந்தாலும் சரி, குறைவாகயிருந்தாலும் சரி, எந்த நாடும் பிற நாடுகளுக்கு ஈடாக ஏற்றத்தாழ்வு இன்றி நடத்தப்பட வேண்டும். குட்டி நாடு என்று எந்த நாடும் அலட்சியப்படுத்தக்கூடாது என்பதுதான் சர்வதேசச் சமத்துவத்தின் கொள்கை.

இவ்வாறு பல்வேறு கோணங்களிலும் வலிமையுடன் திகழும் சமத்துவக்கொள்கை வெறும், தூய நெறியுரைக் கருத்தாகக் கருதப்படக்கூடாது. அது நெறியுரைத் தன்மையையும், அறிவியல் கூறையும் ஒருங்கே பெற்றிருக்கிற உன்னதக்கோட்பாடாகும்.

- சி. என். ந.

**சயந்தம் :** இது ஒரு நாடகத்தமிழ் நூல். இந்நூல் குறித்த அடியார்க்கு நல்லார் சிலப்பதிகார உரைப் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார். 'நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலாகவுள்ள தொன்னூல்களுமிருந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றிய மென்பனவற்றுள்ளும் ஒரு சார் சூத்திரங்கள் நட்க்கின்ற அத்துணை யல்லது முதல் நடுயிறுதி காணாமையின், அவையும் இறந்தன போலும்' என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் அகத்தெழு சுவையா கைமெனப்படுமே என்ற சயந்த நூலின் நூற்பாவை அரங்கேற்றுக் காதை உரையில் மேற்கோள் காட்டியுள்ளார். அடியார்க்கு நல்லார் காலத்திலேயே சிதைந்து போன இந்நூல் இப்போது முழுவதும் மறைந்துவிட்டது.

- சா. உ.

**சரத் சந்திரபோசு :** சிறந்த சுதந்திரப் போராட்ட வீரரும், தேசியவாதியுமான சரத் சந்திர போசு மேற்கு வங்காளத்திலுள்ள இருபத்து நான்கு பர்கானா மாவட்டத்தில் 1889 செப். 7ஆம் நாள் பிறந்தார். இவருடைய குடும்பம் அப்பகுதியில் மிகப் பழமையான செல்வமிக்க குடும்பமாகும். இவருடைய தந்தை சானகிநாத்போசு ஒரிசா மாநிலத்திலுள்ள கட்டாக் நகரில் சிறந்த வழக்கறிஞராக யிருந்தார். இவருடைய தாயார் பிரபாவதி தேவி. மனைவின் பெயர் பிபாபதி தேவி. நேதாசி சுபாசு சந்திரபோசு இவருடைய இளவல் ஆவார்.

இவர் கட்டாக், கல்கத்தா ஆகியவிடங்களில் கல்வி கற்றுப்பட்டம் பெற்றார். இங்கிலாந்திற்கு 1911இல் சென்று, சட்டக்கல்வி பயின்று 1913இல் இந்தியா திரும்பினார். கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராகப் பணியாற்றி பெயரும், புகழும் பெற்ற பெருஞ்செல்வந்தரானார். இவர் சி.ஆர். தாசின் தலைமையின் கீழ் அரசியலில் ஈடுபட்டு வங்காள காங்கிரசிலும், கல்கத்தா மாநாகராட்சியிலும் முக்கியப் பங்கு பெற்றார். சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டார். காந்தியடிகளின் வன்முறையற்ற போராட்டங்களில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தாலும், தீவிரவாதிகளிடம் இரக்கம் காட்டினார். சிட்டகாங்கு ஆயுதச்சாலையைக் கொள்ளையிட்ட வழக்கில் ( Chittagong Armoury Raid Case ) குற்றம் சாட்டப் பட்டவர்களுக்காகக் கட்டணமின்றி வழக்காடினார்.

இவருடைய அரசியல் வாழ்க்கை 1937 - 47இல் மிக உயர்ந்த நிலையை அடைந்தது. காங்கிரசு செயற் குழுவின் உறுப்பினராக 1937 - 39 வரை இருந்து

அதன் முக்கியமான கொள்கைகளைத் தீர்மானித்தார். வங்காள சட்டசபையில் காங்கிரசு கட்சியின் தலைவராகப் பணியாற்றியபொழுது சிறந்த பாராளுமன்றவாதியாக, பேச்சாளராக, அரசியல் சூழ்ச்சி அறிந்தவராக விளங்கினார். இடைக்கால அரசு 1946இல் ஏற்படுத்தப்பட்டபோது மத்திய அமைச்சரவையில் அமைச்சரானார். ஆனால் அதே ஆண்டில் அப்பதவியைத் துறந்தார்.

காங்கிரசுடன் இவருக்குக் கருத்து வேறுபாடு தோன்றியதால் அக்கட்சியை விட்டு 1946இல் விலகி சோசலிசுடு ரிபப்ளிகன் கட்சியைத் ( Socialist Republican Party ) தொடங்கினார். வங்காளப் பிரிவினையை எதிர்த்த இவர், இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றிலிருந்து வங்காளம் பிரிக்கப்பட்டு, இரு வங்காளமும் இணைந்த சுதந்திரநாடு வேண்டுமென்றார். மேற்கு வங்காள சட்டசபைக்கு 1949இல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரசு வேட்பாளரை எதிர்த்து நின்று பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றியடைந்தார். ஆனால் விரைவிலேயே இறந்துவிட்டார்.

இவர் காங்கிரசு கட்சியிலிருந்தபொழுது பார்வேர்டு ( Forward ) அட்வான்சு ( Advance ) எனும் இரு ஆங்கில நாளேடுகளை நடத்தினார். பின்னர் காங்கிரசை விட்டு வெளியேறியதும் தன்னுடைய கருத்துகளைப் பரப்ப நேசன் ( Nation ) என்ற ஆங்கில நாளேட்டைத் தொடங்கினார். நாட்டிலுள்ள எல்லா கேடுகளுக்கு சமவுடைமையே ( Socialism ) சிறந்த மருந்தெனக் கூறிய இவர், சாதி வேறுபாடுகளையும், தீண்டாமையையும் வன்மையாகக் கண்டித்தார்.

- சி. இரெ.

**சரவண, ஆறுமுக முதலியார் (1909 – 1988) :** இவர் திருச்சி மாவட்டம், லால்குடி வட்டத்திலுள்ள அன்பில் என்று வழங்கும் திருஅன்பிலாலந்துறை என்னும் ஊரில், சரவண முதலியார், செல்லம்மாள் ஆகியோருக்கு மைந்தராக 1907ஆம் ஆண்டில் பிறந்தார். தம்முடைய இளங்கலைப் பட்டக்கல்வியைத் திருச்சி பிசப்பு ஈபர் கல்லூரியில் 1927இல் முடித்த இவர், சிறிது காலம் சென்னை மாநிலக்கல்லூரியிலும், மேரி அரசுக் கல்லூரியிலும் பணிபுரிந்த பின் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார். அக்காலத்தில் பி.ஓ.எல் என்னும் தேர்விலும் வெற்றி பெற்றார். மீண்டும் மாநிலக் கல்லூரியில் பணிபுரிந்த இவர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து பயின்று தமிழில் சிறப்பு நிலைத் தேர்வில் ( பி.ஏ. ஹானர்சு ) தேர்ச்சி பெற்றார். கல்லூரியில் பயின்று பி.ஏ. தமிழ்த் தேர்வில் மாநில முதன்மை பெற்றமைக்காக 'பிராங்கலின் கெல்' தங்கப்பதக்கமும் பரிசும் பெற்றார். இடைப்பட்ட காலத்தில் தனியே பயின்று தமிழ் வித்துவான் பட்டமும் பெற்றார்.

பாலக்காடு அரசினர் விக்டோரியா கல்லூரி, கோவை அரசு கலைக்கல்லூரி, சைதை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றில் பல நிலைகளில் பணிபுரிந்து 'சென்னைக் கல்வித்துறை ஊழியர்' ( Madras Education Service ) எனும் சிறப்பு நிலை பெற்றார். அயற்பணி நிலையில் திருப்பராய்த்துறை இராமகிருட்டின மடம் நடத்திய பயிற்சிக் கல்லூரி முதல்வராகவும், தொடர்ந்து கொமாரபாளையம் அரசு பயிற்சிக் கல்லூரி முதல்வராகவும் பணிபுரிந்து இறுதியில் பழனித் திருக்கோயில் சார்பில் நடைபெறும் பழனியாண்டவர் பண்பாட்டுக் கல்லூரி முதல்வராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்று சென்னையில் வாழ்ந்து வரலானார்.

தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் இனிமையாகப் பேசவும், எழுதவும் திறமை பெற்ற இவருக்குத் தமிழ் பெரும்புலவர் என்னும் பட்டம் வழங்கப்பட்டது. சென்னைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ரா.பி. சேதுப்பிள்ளையின் வழிகாட்டுதலில் பிற்காலச்சோழர் காலத்தில் பைந்தமிழின் வளர்ச்சி என்பது பற்றி ஆராய்ச்சி மேற்கொண்டார்.

இவர் தம் பணிக்காலத்தில் சென்னை, அண்ணாமலை, மதுரை, பழனி மேலும் சில பல்கலைக்கழகங்களின் தமிழ்த்துறை சார்ந்த பல்வேறு நிலைகளில் ஆட்சிக்குழு உறுப்பினர், பாடத்திட்டக்குழு உறுப்பினர், தேர்வுத்தலைவர், வினாக்குறிப்போர், தேர்வாளர் முதலிய பணிகளை மேற்கொண்டு சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார். எளிமையும் இனிமையும் கொண்ட இவர் எம்.லிட் முதலிய ஆய்வில் ஈடுபட்டுள்ளோர் பலருக்கு வழிகாட்டியாக இருந்துள்ளார்.

இவர் எழுதிய, **தமிழ் கற்பிக்கும் முறை** என்னும் நூல் அத்துறைக்கு ஓர் முன்னோடியாக அமைந்து சிறந்து விளங்குகிறது. **திருக்குறளும் பொதுநோக்கமும், கட்டுரைக் கருவூலம், இலக்கிய ஓவியங்கள்,**

**திருநாவுக்கரசர்** என்பன இவர்தம் பிற நூல்களாகும். கல்வி, கலை, இலக்கியம், பண்பாடு பற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும் இவர் எழுதிய பல கட்டுரைகள் பல்வேறு இதழ்களிலும், மலர்களிலும் இடம் பெற்றுள்ளன. இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் அறக்கொடை நிதியளித்துத் தமிழ், சைவம் சார்ந்த தலைப்பில் சொற்பொழிவுகள் நிகழ ஏற்பாடுகள் செய்துள்ளார். பழனிக் கல்லூரியில் பண்பாட்டுக் கல்வித் தேர்வில் சிறப்பாக வெற்றி பெறும் மாணவருக்குப் பரிசளிக்க வைப்புநிதி.வழங்கியுள்ளார்.

தமிழ், சைவம், பண்பாடு போன்ற துறைகளில் சிறப்பாகப் பணியாற்றிய முதல்வர், பேராசிரியர், தமிழ்ப் பெரும்புலவர் சரவண ஆறுமுக முதலியார் 1988ஆம் ஆண்டு காலமானார்.

- அ. மா. ப.

**சரியை :** உயிர்கள் பாசத்தால் பந்திக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் பசுக்கள் என்ற தத்துவக் கலைச் சொல்லால் குறிப்பிடப்படுகின்றன. உயிர்கள் பாசத்திலிருந்து விடுபட்டு இறைவன் அருளைப் பெற்று அவனடிக்கீழ் இன்பம் துய்ப்பதே குறிக்கோளாகக் கொண்டிருத்தல் வேண்டும். அதற்கு மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் சாதனங்கள் எனப்படும். அவை சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்காகும். மக்கள் அறிவின் பக்குவநிலை பலதிறப் பட்டுள்ளது. எனவே, அவரவர் பக்குவநிலைக்கேற்ப கடவுளை வழிபடுதற்கு நால்வகை நெறிகளை வகுத்தனர் ஆன்றோர். இறைவனுடைய உருவத் திருமேனியை நினைத்துப்புறத்தே செய்யும் வழிபாடு சரியை எனப்படும்.

உருவம் அற்றவனாகிய இறைவன் தன்னை உயிர்கள் வழிபடுதற்பொருட்டு உருவம், அருவுருவம், அருவம் ஆகிய மூவகைத் திருமேனிகளைக் கொள்கிறான். அவற்றுள் உருவத்திருமேனி எனப்படுவன முகம், கை, கால் முதலிய உறுப்புகள் யாவும் தோன்ற ஆடை., அணிகள், படைக்கலன்கள் முதலியவற்றோடு இனிது விளங்கும் திருமேனிகளாகும். இன்னும் சிவநெறியை அறிவிக்கும் உரிமையுடைய ஆசிரியர்களும், சிவனடியார்களும் சிவபிரானது உருவத்திருமேனிகளே. இவ்வுருவத் திருமேனிகளில் இறைவனை நினைந்து வாழ்த்தலும், வணங்கலும், வேண்டும் பணியைச் செய்தலும் ஆகிய புறவழிபாடுகளே சரியை எனப்படும். புறத்தே உள்ள ஓர் உருவத்தை இறைவனாகப் பாவித்து வழிபடுவதால் இது புறவழிபாடு எனப்படும். இறைவனுடைய உருவத் திருமேனியை வழிபடுவதால் இஃது உருவ வழிபாடு என்றும் கூறப்படும். சரியை நெறியினுடைய இயல்பையும், பயனையும் சிவஞான சித்தியார் என்னும் சாத்திர நூல் விளக்கிக் கூறுகின்றது.

திருக்கோயிலுக்குச் சென்று அலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், திருநந்தவனம் வைத்தல், பூப்பறித்துக்கொடுத்தல், மாலை தொடுத்துக் கொடுத்தல், திருப்பாடல்களைப் பண்ணோடு பாடி இறைவனைப் போற்றுதல், சிவனடியார்சகுத் தொண்டு செய்தல் முதலியன சரியையாகும்.

அலகிடலாவது திருக்கோயிலினுள்ளும், புறமும் தூய்மைப்படுத்தும் பொருட்டுப் பெருக்குதலாகும். திருமெழுக்கிடலாவது திருக்கோயிலின் தரையைத் தூய்மையான பசுவின் சாணம் கொண்டு மெழுகுதலாகும். கோயில் வழிபாட்டிற்குப் பூப்பறித்துக் கொடுக்கும்போது அதிகாலையில் எழுந்து, குளித்து, முழு தூய்மையனாய் எச்சில் உமிழாதபடியும், சிவத்தியானத்தோடும், மலரும் பக்குவநிலையிலுள்ள போதுக்களை, வண்டுகள் மொய்க்குமுன் பறித்துக் கூடையிலிட்டு திருக்கோயிலில் கொடுத்தல் வேண்டும். தொடுக்கும் மாலைகள் இண்டை, தொடை, கண்ணி, பந்து, தண்டிற்கட்டுமாலை எனப்பல வகைப்படும்.

மேலும், பழங்கோயில்களைப் புதுப்பித்தலும், நித்திய நைமித்திக வழிபாடுகளைச் செய்வித்தலும் அவற்றுக்கு வேண்டப்படும் குடம், கவசம், தூப, தீபக்கால்கள் முதலியன ஆக்கித்தருதலும், சிவ புராணங்களையும் அடியவர்களது வரலாறுகளைக் கேட்டலும், தீர்த்தயாத்திரை, தலயாத்திரைகள் செய்தல் முதலாக இன்னோரன்ன பலவும் சரியைத் தொண்டுகளாகும். சுருங்கக்கூறின், புறத்தொழில் அளவில் இறைவனது உருவத்திருமேனியை நோக்கிச் செய்யப்படுவன பலவும் சரியை என்று கூறலாம். சரியையானது உபாயச்சரியை, உண்மை சரியை என இரு வகைப்படும். உபாயச்சரியையானது புகழ், முதலிய உலகப் பயன்நோக்கிச் செய்யும் சிவ புண்ணியங்களாகும். உண்மைச் சரியையாவது பக்தி காரணமாய்ச் செய்யும் சிவபுண்ணியங்களாகும். உபாயச்சரியை,

உண்மைச் சரிய, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என விரியும்.

சரியையிற் சரியையாவது திருக்கோயில் அலகிடுதல், மெழுகுதலாகும். சரியையிற் கிரியையாவது பரிவார மூர்த்திகளில் ஒரு மூர்த்தியை வழிபடுவதாகும். சரியையில் யோகமானது நெஞ்சின்கண் சிவபெருமான் உருவத் திருமேனியைத் தியானம் செய்தலாகும். சரியையில் ஞானமானது அத்தியான பாவனையின் உறைப்பில் ஓர் அனுபவ உணர்வு நிகழ்தலாகும். இத்தகைய சரியை நெறிக்கு இலக்கியமாக ஒழுகிக் காட்டியவர் திருநாவுக்கரசராவார். என் கடன் பணி செய்து கிடப்பதே என்று அவரே கூறியுள்ள படி உழவாரப்படை கொண்டு திருக்கோயில் அலகிடும் தொண்டு செய்தவர் அவர். ‘நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா நித்திலும் எம்பெருமானுடைய கோயில் புக்குப்புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டும் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித் தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிக் சங்கரா போற்றி போற்றியென்றும் அலைபுனல்சேர் செஞ்சடை எம் ஆதி என்றும் ஆரோ என்றென்றே அவறா நில்லே’ என்ற திருநாவுக்கரசரின் பாடல் சரியைத் தொண்டினை உணர்த்தும்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்டவையன்று. ஒன்றன் படிநிலை வளர்ச்சியே மற்றொன்று. இவற்றை அரும்பு, மலர், காய், கனிக்கு ஒப்பிடுவார் தாயுமானவர். ‘விருமபுஞ் சரியை முதல் மெய்ஞானம் நான்கும் அரும்பும் மலர் காய்கனி போலன்றோ பராபரமே’ என்பது தாயுமானவர் வாக்கு. இந்நால்வகை நெறிகளுள் ஞானமே வீடுபேற்றுக்கு நேர்வாயிலாகும். ஏனைய மூன்றும் ஞானம் பெறுதற்குரிய பக்குவத்தை உண்டாக்கும் வழிகளாகும். சரியையாளர் பெறும் பயன் சாலோகம் எனப்படும் பதமுத்தியாகும்.

சாலோகமாவது இறையுலகு எய்தி அங்குயாண்டும் தடையின்றி இயங்கி, அங்குள்ள போகங்களை நுகர்ந்து வாழ்தலாகும். சரியையாளர், ஒருவர் வீட்டில் பணி செய்யும் அகத்தொண்டர்க்கு உள்ள அன்பும் உரிமையும் போன்ற அன்பும் உரிமையும் இறைவனிடத்து உடையராய் ஒழுகுதல் பற்றி இவருடைய நெறி தொண்டு நெறி (தாசமார்க்கம்) எனப் படும்.

சரியை முதலியவற்றைச் செய்தவர்கள் இறக்குங்கால் உலகப் பற்று வைத்திருப்பின் சரியையாதியின் பயனாகச் சாலோகப் பதங்களை அடைந்து அவ்விடத்துள்ளதாகிய இன்பங்களை அனுபவித்து, பின்னர் முன்பற்று வைத்து வினைப்பயன்களை அனுபவித்தல் பொருட்டு பூமியில் உயர்ந்த குலத்தில் பிறந்து வினைப்பயனை அனுபவிக்கும் பொழுதே முன் செய்த சரியையாதியைச் செய்து அவற்றால் ஆசையை அறுத்து உண்மை ஞானத்தைப் பொருந்துவர். இவ்வுலகப் பற்றில்லாதிருப்பின் சாலோக பதவிகளி லிருந்தவாறே ஞானத்தைப்பொருத்தி பின் வீடு பேறடைவர்.

- கோ. சூ.

**சாக்கிரம்** : உயிர், மாயை, கன்மம் என்பவற்றோடு கூடாது; ஆணவமலத்தோடு மட்டும் கூடியிருப்பதும், பின்னர் மாயை கன்மங்களோடு கூடியிருப்பதும், பின்னர் மும்மலங்களும் நீக்கப்பெற்று, இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்பதும் ஆகிய மூன்று நிலைகளை உடையது. அந்நிலைகளை அவத்தை என வடமொழியில் கூறுவர்.

உயிர் ஆணவமலத்தோடு மட்டும் கூடியிருக்கிற நிலை கேவலாத்தை எனப்படும். இது உயிர் பிறப்பதற்கு முந்திய நிலை. இஃது இருள்நிலை எனப்படும். உயிர் மாயை கன்மங்களோடு கூடியுள்ள நிலை சகலாவத்தை. இஃது உயிர் கருவி காரணங்களோடு கூடிய பிறப்பெடுத்த நிலை. இது மருள்நிலை எனப்படும். உயிர் பாசத்திலிருந்து விடுபட்டு இறைவனோடு ஒன்றிய நிலை சுத்தாவத்தை. இஃது அருள் நிலை எனப்படும். இம்மூன்றும் காரணவத்தை எனப்படும்.

உயிர், கருவி கரணங்களோடு கூடிய பிறப்பெடுத்த நிலையில் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப் படங்கல் என்ற ஐந்து நிலைகளை அடையும். இவை காரியாவத்தைகள் என்றும் அஞ்சவத்தைகள் என்றும் கூறப்படும். முற்கூறிய நனவு, கனவு, உறக்கம், பேரு றக்கம், உயிர்ப்படங்கல் என்ற ஐந்தும் முறையே சாக் கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என வடமொழிகளில் கூறப்படும். எனவே, உயிரின் நனவு நிலையே அதாவது விழிப்பு நிலையே சாக்கிரம் என்பது புலனாகும். இந்நிலை வேறுபாடுகள் உயிர் தத்து வங்களோடு கூடுவதாலும்

குறைவதாலும் உண்டாகிறது. சாக்கிரத்தில் உயிர் முப்பத்தைந்து தத்துவங்களோடு கூடித் தொழிற்படு கின்றது. அவை ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந் திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு, புருடன் ஒன்று ஆகத் தத்துவம் பதினைந்தும், ஞானேந்திரிய விடயங் களாகிய சத்தம் முதலிய ஐந்து கன்மேந்திரிய விடயங் களாகிய வசனம் முதலிய ஐந்து, பிராணன் முதலிய வாயுக்கள் பத்து ஆகத் தாத் துவிகங்கள் இருபதும் ( சொப்பனத்தில் ஞானேந்திரியம் ஐந்தும், கன்மேந் திரியம் ஐந்தும் ஆகிய பத்தும் நீங்க ஏனைய இருபத் தைந்து கருவிகள் தொழிற்படும் சுழுத்தியில் சித்தம், பிராணன், புருடன் என்ற மூன்று கருவிகளே தொழிற் படும். துரியத்தில் பிராணனும் புருடனும் தொழிற் படும். துரியாதீதத்தில் பிராணனும் நீங்க புருடன் ஒன்றே நிற்கும் ). சாக்கிரத்தில் உயிர் நிலைத்தானம் புருவநாடு ஆகும்.

சாக்கிரத்திலேயும் ஒரு கேவலநிலை உண்டு. அதா வது கனவோ உறக்கமோ இல்லாது விழித்திருக் கின்ற நிலையிலும் அறிவு இருவகையாய் நிகழ் தலைக் காணலாம். ஒன்று பொருட்களை எழுச்சி யுடன் நன்குணர்தல், மற்றொன்று சோம்பல் கொண்டு மந்தமாய் உணர்தல், இவற்றுள் மந்தமாய் உணரும் நிலையில் அறிவு குறைந்து நிற்கும். ஆகவே அதுவும் கேவல நிலையேயாகும். எனவே எழுச்சி யுற்று உணரும் நிலை சகலம் என உணரப்படும். இவ்வாறு சாக்கிரம் கேவல சாக்கிரம், சகல சாக்கிரம் என இருவகைப்படும்.

இனி அறிவு சிறிதும் குறையாத நிலையிலேயே ஐந்து வகை நிலைகள் உள்ளன. அவை சகலசாக்கிரம், சகல சொப்பனம், சகலசுழுத்தி, சகல துரியம், சகல துரியாதீதமாகும்.

சாக்கிரநிலையில் பொருள்களை அறியும் பொழு தும் இடைவிடாது தொடர்ச்சியாய் அறிந்து கொண்டேயிருப்பதில்லை. இடையிலே விட்டு விட்டுத்தான் அறியலாம். ஆயினும் விடுதலும் பற்றுதலும் மிக விரைவில் மாறிமாறி நிகழ்தலால் சாக்கிர நிலையில் விடுதல் புலனாவதில்லை. தொடர்ச்சியாய் அறிந்து கொண்டிருப்பது போலத் தோன்றுகின்றன. சாக்கிரத்திலும் உயிருக்கு நினைப் பும் மறப்பும் மாறி மாறி வரும். கேவல சாக்கிரம் முத லிய ஐந்திற்கும் இடம் முறையே புருவநாடு, கண் டம், இருதயம், உந்தி, மூலாதாரம் என்பன. இவ் வவத்தைகளில் கருவிகள் நீங்க நீங்க ஆன்மா புருவ நடுவிலிருந்து கீழிறங்கிச் சென்று மூலாதாரத்தை அடையும். பின்பு நீங்கிய கருவிகள் அம்முறையே வந்து கூட ஆன்மா மூலாதாரத்திலிருந்து மேலேறிப் புருவநடுவை அடையும். அதனால் கீழ் இறங்குதல் கீழாவவத்தை என்றும் மேல் ஏறுதல் மேலாவவத்தை என்றும் சொல்லப்படும்.

சகல சாக்கிரம் முதலிய ஐந்திற்கும் இடம் புருவ நாடு ஒன்றே. அதனால் அவை ஐந்தும் மத்தியால் அவத்தை எனப்படும். இவை ஐந்தும் பிரேரக காண்ட மாகிய சுத்த தத்துவம் அல்லது சிவதத்துவம் எனப் படும் ஐந்தும் குறைதல் கூடுதல்களால் நிகழ்வன. மத் திய காலத்தை அல்லது சகலாவத்தையின் காரியம் சாக்கிர துரியாதீதம்; சாக்கிர துரியம், சாக்கிர சுழுத்தி, சாக்கிர சொப்பனம், சாக்கிர சாக்கிரமாகும்.

சாக்கிர துரியாதீதமாவது ஒரு பண்டத்தை மறந்த வன் அந்தப் பண்டம் காணாத போது, பிராண வாயும் இயங்காமல் சிவதத்துவம் ஒன்றுடன் மூர்ச்சித்திருந்த நிலை. சாக்கிர துரியமாவது அந்தப் பிராணவாயு இயங்கத் தக்கதாகப் பெருமுச்செறிந்து சிவ தத்துவம், சத்தி தத்துவங்களுடன் விசாரித்து அறிவோமென்ற நிலை. சாக்கிர சுழுத்தியாவது அவ்விடத்திலல்லோ போனோமென்ற சிவம் சக்தி, சாதாக்கிய தத்துவங் களுடன் நினைவெழுந்த நிலை. சாக்கிர சொப்பன மானது இன்னவிடத்தில் பண்டம் வைத்தோமெனச் சிவம், சக்தி, சாதாக்கியம், ஈஸ்வர் தத்துவங்களோடு விசாரம்பட்ட நிலை. சாக்கிர சாக்கிரமாவது அந்தப் பண்டம் வைத்த இடத்தில் சென்று சுத்தத்துவம் ஐந்துடன் கூடிய நிலை.

( சகல ) கேவலாவத்தையின் காரியமும்,. சகலா வத்தையின் காரியமும், தனித்தனியே ஐந்து ஆவது போல சுத்தாவத்தையின் காரியமும் ஐந்து ஆகும். அது நின்மலாவத்தை எனப்படும். அதிலும் சாக்கிர நிலை உண்டு. ஆசாரியராலே ஞானதீட்சை பெற்றுத் திரிபதார்த்த உண்மை அறிந்து சிந்தித்துத் தெளிந்து கருவிகள் நீங்க விசாரித்து நிற்பது நின்மல சாக்கிர மாகும். கருவிகள் நீங்கியும் நீங்காமலும் நடுவே சற் றுப் பதைப்புண்டாவது நின்மல சொப்பனமாகும். தத்துவ நீக்கி மேலான கேவலந்தானாய் நிற்பது நின்மல சுழுத்தியாகும். கேவலநீங்கி அருளினாலே தன்னையுங்கண்டு, அருளையும் கண்டு அவ்வசத்தாய் நிற்பது நின்மல துரியமாகும். சிவத்தைத் தரிசித்துச்

சிவானந்தத்து அழுந்துதல் நின்மல துரியாதீதமாகும். இவ்வாறு சாக்கிரம், கேவலம், சகலம், சுத்தம் என்ற மூன்று நிலையிலும் உண்டு. இங்குக் கேவலம் என்ற அனாதி கேவலமன்று, சகல நிலையில் உண்டாகிற கேவலத்தைக் ( அறியாமையை ) குறித்தது.

- கோ. சூ.

**சாகு :** மராட்டிய மாமன்னர் சிவாஜியின் பேரனான சத்ரபதி சாகு ( Sahu ) கி.பி. 1708ஆம் ஆண்டிலிருந்து 1749 முடிய மராட்டிய நாட்டைச் சிறப்பாக ஆட்சி புரிந்தார். இவரை இரண்டாம் சிவாசி எனவும் குறிப்பிடுவர். இவருடைய ஆட்சிக்காலத்தில் பேசுவா பாலாசி விசுவநாத்து ( Peshwa Balaji Viswanath, 1713 - 20 ), அவருடைய மகன் முதலாம் பாசிராவ் ( Baji Rao I, 1720 - 40 ), பேரன் இரண்டாம் பாலாசி ( Balaji II, 1740 - 61 ) ஆகியோர் பேசுவாக்களாக, தலைமை அமைச்சர்களாகப் பணிபுரிந்து அப்பதவியைப் பாரம்பரியமாக ஆக்கியதுடன், மராட்டியப் பேரரசை வலிமை மிக்கதாகவும் செய்தனர். மராட்டிய மக்களிடையே செல்வாக்கு மிக்க இவர் கள் ஆட்சி முழுவதையும் தாமே முன்னின்று நடத்தியதால் சத்ரபதி சாகு பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தார்.

மாமன்னர் சிவாசியின் மகன் சாம்பாசி அல்லது சாம்பூசி ( Sambaji or Shambhuji, 1689, Sep. 11 ) அவுரங்கசீப்பின் படையினால் சிறை செய்யப்பட்டார். பின்னர் அப்படை இராய்கர் ( Raigarh ) கோட்டையைக் கைப்பற்றியபோது சாம்பூசியின் மகன் சாகு, மனைவி ஏசுபாய் ( Yesu Bai ) உடன் பிறந்தவர், உறவினர் சிலர் ஆகியோர் சிறை செய்யப்பட்டு தில்லிக்குக் கொண்டு செல்லப்பட்டனர். அப்போது அக்கோட்டை யிலிருந்து தப்பிச் சென்ற சிவாசியின் இளைய மகன் ராசாராம் மராட்டிய நாட்டை கி.பி. 1700ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தார். அவ்வாண்டு அவர் இறந்த தால் அவருடைய மனைவி தாராபாய் தம்முடைய மகன் மூன்றாம் சிவாசிக்காக ஆட்சி செய்யலானார். மொகலாய இளவரசர் ஆசம் சா ( Azam Shah ) மராட்டிய நாட்டில் குழப்பத்தை விளைவிப்பதற்காக 1707ஆம் ஆண்டு சாகுவை விடுதலை செய்தார். தில்லியில் பதினெட்டு ஆண்டுகள் சிறையிலிருந்து மீண்ட சாகுவிற்கு அப்பொழுது வயது 26 ஆகும். மொகலாய இளவரசர் சாகுவிற்கு தக்காணத்திலிருந்த தன் ஆறு சுபாக்களில் ( காந்தேசு, பீரார், பிதர், அவுராங்கா பாத்து, ஐதரபாத்து, பிசாப்பூர் ஆகியன ), சௌத்து ( Chauth ), சந்தேசுமுகி ( Sardesmukhi ) என்னும் இருவரிகளை வசூலித்துக் கொள்ளும் உரிமையை வழங்கினார். அத்துடன் கோண்டுவானா, குசராத்து, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளுக்குத் தம்முடைய ஆளுநராகவும் நியமித்தார். சாகு நர்மதை ஆற்றைக் கடந்து, கெத்து ( Khed ) என்ற இடத்தில் தாராபாயின் படையைத் தோற்கடித்தார். தாராபாய் தலைநகர் சதாராவை ( Satara ) விட்டு விட்டு கோல்காபூர் சென்று, அதனைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்யலானார். எனவே சாகு சதாராவைக் கைப்பற்றிக்கொண்டு 1708ஆம் ஆண்டு சனவரித் திங்கள் மராட்டிய நாட்டின் சத்ரபதியாக முடிசூட்டிக் கொண்டார். எனவே சாகுவுக்கும் தாராபாய்க்கும் இடையே உள்நாட்டுப்போர் தொடங்கியது.

சாகு மராட்டியத் தலைவர்கள் பலருடைய ஆதரவைப் பெற்றார். அதில் குறிப்பிடத்தக்கது அறிவுக் கூர்மையும், அரசியல் சூழ்ச்சியும் மிக்க பாலாசி விசுவநாத்தின் ஆதரவாகும். பாலாசி தாராபாயின் தளபதியாகவிருந்த தானாசி சாதவு ( Dhanaji Jadav ) என்பவரை சாகுவை ஆதரிக்கச் செய்தார். சாகு 1708ஆம் ஆண்டு அத்தளபதி இறந்ததும் அவருடைய மகன் சந்திரசென் சாதவைத் தளபதியாக்கினார். இருப்பினும், அவர்மீது நம்பிக்கையில்லாத சத்ரபதி பாலாசி விசுவநாத்தைப் படை அமைப்பாளராக (Sena - Karte) நியமித்தார். சாகுவிற்கு 1712ஆம் ஆண்டு ஒரு சோதனையான காலமாகும். அப்பொழுது அவருடைய தளபதி சந்திரசென், சாதவு தாராபாயுடன் சேர்ந்து கொண்டார். அக்காலத்தில் மராட்டியக் கப்பற்படையில் சிறந்த தளபதியாகவும், உயர்ந்த போர் வீரராகவும் விளங்கிய கன்னோசி ஆங்கிரேயும் மொகலாயப்பேரரசின் தக்காண சுபேதாராக விளங்கிய ஆசப் சா நிசாம் - உல்-முல்க்கும் தாரா பாயை ஆதரிப்பதாக அறிவித்தார். கன்னோசி ஆங்கிரே தம் படையுடன் வந்து சாகுவின் தலைமை அமைச்சராகவிருந்த பகிரோ பந்த் பிங்லே ( Bahiro pant Pingle ) என்பவரைத் தோற்கடித்து சிறை செய்ததுடன் சதாரா நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தார். அப்போது மராட்டிய நாட்டின் பிரதிநிதியும், அசுட்டப் பிரதானின் அமைச்சர்களும் ஆங்கிரேயிக்கு எதிராகப் படையை நடத்திச்செல்ல அஞ்சி மறுத்துவிட்டனர்.

இத்தகைய சூழ்நிலையில் பாலாசி மிக்க வீரத்துடனும், உறுதியுடனும் போர்க்களம் செல்ல முன்வந்தார். தம்முடைய அரசியல் சூழ்ச்சித் திறனால் ஆங்கிரேயை சாகு மன்னரின் கட்சியில் சேரச் செய்தார். சாகு 1713ஆம் ஆண்டு நவம்பர் பதினாறாம் நாள் பாலாசியைத் தன்னுடைய பேசுவாவாக நியமித்தார்.

பேசுவா பாலாசி விசுவநாத்து மராட்டிய நாட்டில் ஒழுங்கையும், அமைதியையும் நிலைநாட்டி, மராட்டியக் கூட்டணியை ( Maratha Confederation ) ஏற்படுத்தினார். வருவாய்த்துறை நிருவாகம் சீர்திருத்தியமைக்கப்பட்டது. சாகு 1714ஆம் ஆண்டு மொகலாயப் பேரரசர் பரூக்சியர் ( Farrulhshiyar ) என்பவருக்கு எதிராக அவருடைய தக்காண சுபேதார் உசைன் அலி ( Husain Ali ) உடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். அதன்படி சாகுவிற்குப் பல்வேறு உரிமைகளும், சலுகைகளும் வழங்கப்பட்டன. அவருடைய தாயார் ஏசுபாய் மற்றும் உறவினர்கள் சிறையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. மொகலாயப் பேரரசர் சாகுவை மராட்டிய நாட்டின் மன்னராக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதால் 2 ஆம் சாம்பூசியின் உரிமை கைவிடப்பட்டது. அவ்வு டன்படிக்கையின்படி மராட்டியப்படை தில்லி சென்று, சையது சகோதரர்களுடன் சேர்ந்துகொண்டு 1719ஆம் ஆண்டு பேரரசர் பரூக்சியரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, இரபி - உத் - தராசத்தை ( Rafi - ud - Darajat ) அரியணையில் ஏற்றியது. இதனால் மராட்டியர் புகழ் ஓங்கியது. வலிமை பெருகியது.

பாலாசி விசுவநாத்து 1720 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் நாள் மரணமடைந்ததால் அவருடைய மூத்த மகன் முதலாம் பாசிராவை சாகு பேசுவாகாக நியமித்தார். அப்போது இந்தியாவில் மொகலாயப் பேரரசை அழித்துவிட்டு ஓர் இந்துப்பேரரசை ஏற்படுத்தவேண்டுமென்ற முதலாம் பாசிராவின் கொள்கையைச் சாகு ஆதரித்தார். தக்காண சுபேதார் ஆசப் சா நிசாம் உல் முல்கு மராட்டியருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அவரை பேசுவா பால்செட்டு ( Palkhed ) என்ற இடத்தில் தோற்கடித்து முங்கிசிவகான் ( Mungi Shivagon ) உடன்படிக்கையில் கையொப்பமிடச் செய்தார். எனவே, சாகுவின் ஆதிக்கமும், வரி வசூலிக்கும் உரிமையும் தக்காணத்தில் மீண்டும் நிலைநாட்டப்பட்டன. மராட்டியப்படை குசராத்தைப் பலமுறைத் தாக்கிக் கொள்ளையிட்டதால் அப்பகுதியில் சௌத்து வசூலிக்கும் உரிமையைச் சாகு பெற்றார். மாளவத்தின் மீது படையெடுத்துச் சென்று 1735இல் அதைக் கைப்பற்றினார். பண்டில் கண்டு ( Bundlekhand ) அரசர் சத்ரசால் பண்டலாவுக்கு ஆதரவாக சாகு தம்முடைய படையை அனுப்பி அவரை மீண்டும் அரியணையேற்றினார். எனவே, இப்பகுதியில் மராட்டிய ஆதிக்கம் ஏற்பட்டதுடன் கல்பி, சாகர், சான்சி, கிர்தேநகர் ஆகிய இடங்களையும் அவர்கள் பெற்றனர். மராட்டியப் படையானது 1737 ஆம் ஆண்டு மார்ச் இருபத்தொன்பதாம் நாள் தில்லியைக் கைப்பற்றி மூன்று நாட்கள் தம்முடைய ஆதிக்கத்தின்கீழ் வைத்திருந்தது. இதனால் மராட்டியரின் புகழ் ஓங்கியது. அப்போது மொகலாயப் பேரரசருக்கு ஆதரவாக நிசாம் அனுப்பிய படையை மராட்டியர் போபாலில் தோற்கடித்தனர். அதன் விளைவாக 1738ஆம் ஆண்டு சனவரியில் ஏற்பட்ட துரகசராய் உடன்படிக்கையின் படி நிசாம் மராட்டியருக்குப் பணிந்தார். மேற்குக் கடற்கரையில் பேசின் ( Bassein ), தானா ( Thana ), சால்செட்டு ( Salsette ) ஆகிய இடங்களை மராட்டியர் போர்ச்சுக் கீசியரிடமிருந்து கைப்பற்றினார்.

முதலாம் பாசிராவ் 1740ஆம் ஆண்டு ஏப்ரல் 28 ஆம் நாள் இறந்ததால் அவருடைய மகன் இரண்டாம் பாலாசி அல்லது பாலாசி பாசிராவை சத்ரபதி சாகு பேசுவாவாக நியமித்தார். கருநாடகத்தில் சாகு தம்முடைய ஆதிக்கத்தை ஏற்படுத்தினார். மராட்டியப் படை வங்காள அரசரை வென்று கட்டாக் அல்லது ஒரிசாவை அடைந்ததுடன், அவரிடமிருந்து சௌத் தொகையாகப் பதினைந்து லட்சரூபாய் வசூலித்தது.

மராட்டியப்படை மேலைநாட்டு முறையில் சீர்திருத்தி அமைக்கப்பட்டது. சத்ரபதி சாகு 1749ஆம் ஆண்டு திசம்பர் 15ஆம் தம்முடைய 67ஆம் வயதில் இயற்கை எய்தினார். அப்போது மராட்டிய ஆதிக்கம் மிக உன்னத நிலையை அடைந்திருந்தது. அது அட்டாகிலிருந்து ( Attock ) கட்டாக்கு ( Cuttack ) வரையிலும் பரவியிருந்தது. மேலும் குசராத்து, மாளவம், பண்டில் கண்டு, வங்காளம், கருநாடகம் ஆகிய பகுதிகளும் அவருடைய ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தன.

- சி. இரெ.

**சாசகானாபாத்து :** மொகலாயப் பேரரசர் சாசகானால் தில்லியில் நிறுவப்பட்ட நகரத்திற்கு சாசகானாபாத்து ( Shahjahanabad ) என்று பெயர். தில்லியின் ஏழாவது நகரமான இது பழைய தில்லியில் உள்ளது. சாசகான் கி.பி.1638ஆம் ஆண்டு தம்முடைய தலைநகரை ஆக்ராவிலிருந்து தில்லிக்கு மாற்றி இப்புதிய நகரை கட்டத்தொடங்கினார். ஆக்ரா நகரம் போல் இல்லாது இது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்டதாகும். இந்நகரில் வடகோடியில், யமுனை ஆற்றின் வலது கரையில், சலீம்கரின் தெற்கில் இவரால் கட்டப்பட்டுள்ள இலால் - கலா ( Lal - Gala ) என்னும் செங்கோட்டை மிகவும் புகழ்பெற்றதாகும். கி.பி.1639இல் தொடங்கப்பட்ட இதன் வேலை ஒன்பது ஆண்டுகளில் முடிவுற்றது.

இக்கோட்டை வலிமைமிக்க மதில் சுவர்களையும், அழகிய வேலைப்பாடுடன் கூடிய நுழைவாயில்களையும் கொண்டுள்ளது. இந்நகரினுள்ளே செல்வதற்குப் பதினான்கு வாயில்கள் அமைக்கப்பட்டன. அவற்றுள் மொரீ ( Mori ), இலாகொரீ ( Lahori ), ஆசிமீர் ( Agemeri ), துர்க்கமான் ( Turkman ), காசுமீர் ( Kashmiri ), தில்லி ஆகியவை குறிப்பிடத்தக்கன. இவற்றுள் சில மிகவும் பழுதடைந்து காணப்படுகின்றன. பிரோசா துக்ளக்கினால் நிறுவப்பட்ட தில்லியின் ஐந்தாவது நகரமான பிரோசாபாத்தின் ( Firuzabad ) இடிந்துபோன பொருட்களைக்கொண்டும், பூரணகலா ( Purnagala ) வின் அருகில் கிடைத்த பொருட்களைக் கொண்டும் இது எழுப்பப்பட்டது. இதனுள் மிக அழகியதோர் அரண்மனையும், அரசவையும், எழில்மிகு பூங்காக்களும் இருந்தன. யமுனை ஆற்றிலிருந்து இவ்வரண்மனைக்கு நீர் கொண்டு வரப்பட்டது. அதற்கு மாற்று ஏற்பாடாக புதிய கால்வாய் ஒன்றும் அமைக்கப்பட்டது. காந்தாரத்தில் கால்வாய் நீர்ப்போக்குவரத்தை ஏற்படுத்தி, அத்துறையில் பட்டறிவுமிக்கவராக விளங்கிய பாரசீக வல்லுநரான அலி மர்த்தன் கான் பிரோசா துக்ளக்கின் கால்வாயைப் பழுதுபார்த்து, அகலப்படுத்தி அதற்குப் புதிய கிளை ஒன்றை அமைத்து சாசகானாபாத்திற்கு நீரைக்கொண்டு வந்தார். இந்நகரிலுள்ள தீவான் இ ஆம், தீவான் இ காசு, சும்மா மசூதி ஆகியவை குறிப்பிடத்தக்க கட்டடங்களாகும். இவை அனைத்தும் 1638ஆம் ஆண்டிலிருந்து 1658 ஆம் ஆண்டிற்குள் கட்டிமுடிக்கப்பட்டன. இவை இன்றும் நல்ல நிலையில் உள்ளன.

தீவான் இ ஆம் ( Diwan - i - Am ) எனப்படும் மக்களை அரசர் சந்திக்கும் பொதுக்கூடம் நீண்ட சதுர வடிவில் அமைந்துள்ளது. இதன் நீளம் 153மீ, அகலம் 92 மீ. தங்கத்தகடுகள் போர்த்தப்பட்ட தூண்களோடிருந்தது. இக்கூடத்தில்தான் உலகப்புகழ்பெற்ற மயிலாசனம் வைக்கப்பட்டிருந்தது. தீவான் இ காசு (Diwan-i-Khass) என்னும் கூடம் அரசரின் தனிப்பட்ட சந்திப்பு இடமாகும். இக்கூடத்தின் நீளம் 71மீ, அகலம் 34 மீ. சாசகாவின் கட்டடங்களிலேயே இது மிகவும் அழகியதாகும். அப்பேரரசர் இதனை மிகவும் விரும்பியதால் இதன் நுழைவாயிலில் பாரசீக மொழியில், ‘இவ்வுலகில் ஒரு சுவர்க்கம் உண்டென்றால் அது இதுதான். இதைத் தவிர வேறில்லை’ என்னும் சொற்றொடரைப் பொறித்தார்.

கோடைக்காலத்தில் இக்கூடத்தைக் குளிர்ச்சியாக வைத்திருப்பதற்காக, இதனுள்ளே குளிர்ந்த நீர் செல்லும்படி வாய்க்கால்கள் அமைக்கப்பட்டிருந்தன. இதன் மேற்கூரை வெள்ளித்தகடுகளால் போர்த்தப்பட்டு, பளிங்கு, பொன் விலையுயர்ந்த கற்கள் ஆகியவை பதிக்கப்பட்டு, கண்ணைக் கவரும் வகையில் அமைத்திருந்தனர். தெவர்னியர் ( Tavernier ) என்னும் பிரெஞ்சுப் பயணி இக்கூறையின் அன்றைய மதிப்பு 270இலட்ச பிராங்குகள் அல்லது 26 இலட்ச இந்திய ரூபாய்கள் எனக் கணக்கிட்டுள்ளார். மராட்டியர் இதனை 1760ஆம் ஆண்டு கொள்ளையடித்துச் சென்று உருக்கிவிட்டனர்.

இந்தியாவிலேயே மிகப்பெரிய மசூதியான சும்மா மசூதியைப் பேரரசர் சாசகான் பதினைந்தாண்டுகளில் ( 1644 - 1658 ) கட்டி முடித்தார். சாந்தினி சவுக்கிற்குத் ( Chandni Chowk ) தெற்கில் அமைந்துள்ள இது தாசுமாகாலுக்கு அடுத்து சிறப்புடையதாகும். சதுர வடிவில் அமைந்துள்ள இதில் தொழுகைக்கூடத்தின் ஒவ்வொரு பக்கமும் 99மீ நீளமாகும். இது அக்காலத்தில் பத்து இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட்டது. இதனைக் கட்டி முடிக்க 5 ஆண்டுகளும், 5000க்கு மேற்பட்ட வேலையாட்களும் தேவைப்பட்டனர். மிகப்பெரிய, மிக அழகிய இந்த மசூதி சிவப்பு மணற் கற்களாலும், வெள்ளைப் பளிங்குக் கற்களாலும் கட்டப்பட்டுள்ளது.

- சி. இரெ.

**சாதவாகனர் கலை :** சாதவாகனப் பேரரசு முந்நூறு ஆண்டுகளுக்கு மேல் செல்வச்செழிப்புடன் விளங்கியது. பல மன்னர்கள் நீண்ட காலம் அமைதியாக ஆட்சி செய்ததால் நாட்டில் செல்வமும், மகிழ்ச்சியும் நிறைந்திருந்தன. எனவே, கலைகள், கட்டடம், சிற்பம், ஓவியம் ஆகியவை அப்பேரரசர்களின் ஆதரவில் செழித்து வளர்ந்தன. வடமேற்குத் தக்காணத்திலும், கிழக்குத் தக்காணத்திலும் உள்ள நினைவுச் சின்னங்கள் இதற்கு தக்க சான்றுகளாக உள்ளன.

**கட்டடக்கலை :** இவர்களுடைய கட்டடக்கலை புத்தசமயச் சார்புடையவை. அவை சைத்தியங்கள் ( Chaityas ) அல்லது தூபிகள் ( Stupas ) அல்லது விகாரங்கள் ( Viharas ) உருவில் உள்ளன. சைத்தியம் அல்லது தூபி என்பது மக்கள் வழிபாட்டு இடங்களாகும். மிகப்பெரிய கூடங்களான இவற்றின் ஒரு கோடியில் சைத்தியம் அல்லது தூபி இருக்கும். விகாரம் என்பது புத்தசமயத் துறவிகள் வாழ்ந்த மடங்களாகும். இதன் நடுவில் பிக்குகளின் வழிபாட்டிற்கெனப் பெரிய கூடங்கள், சைத்தியம் அல்லது தூபியில் உள்ளது போல் உள்ளது. அக்கூடத்தைச் சுற்றிலும் அத்துறவிகள் வசிப்பதற்கான அறைகள் இருக்கும். மேற்குத் தக்காணத்தில் திட்டமிட்டுச் செய்யப்பட்ட இக் கோயில்களும், மடங்களும் கற்பாறைகளில் குடையப்பட்டுள்ளதால் இவை குகைக்கோயில்கள் எனப் பட்டன. ஆனால் பெர்சி பிரவுன் என்பார் இதற்கு பாறை கட்டடக்கலை ( Rock - Architecture ) எனப் பெயர் சூட்டியுள்ளார். இவற்றில் சில மிக உயர்ந்த, சிறந்த அளவில் செய்யப்பட்ட சிற்பங்களாகும். கிழக்குத் தக்காணத்திலுள்ள தூபிகளும் விகாரங்களும் செங்கற்களும், சுண்ணாம்பும் கொண்டு கட்டப் பட்ட கட்டுமானக் கோயில்களாகும். தொடக்கக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட இவற்றில் ஓர் அரியணை அல்லது இருக்கை அல்லது புத்தர் இருப்பதையுணர்த்துவதற்கான ஏதேனும் ஒரு சின்னம் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் பிற்காலத்தில், மகாயானப் பிரிவினைப் பின்பற்றி, புத்தரின் உருவச் சிலை வைக்கப்பட்டுள்ளது.

நாசிக்கில் ஒரே அடுக்குள்ள சிறந்த வேலைபாடுகளைக் கொண்ட விகாரங்கள் மூன்று ( குகை எண்கள் 3, 8, 15 ) உள்ளன. இவற்றில் காணப்படும் கல்வெட்டுகளைக் கொண்டு இவை கௌதமிபுத்ர நகபான சீரி யக்ஞ குகை ( SriYajana ) என்று அழைக்கப்படுகின்றன. இவற்றில் தூண்களைக் கொண்ட முகப்பு, சதுரமான தூண்களற்ற அறைகள் ஆகியவை சிற்சில வேறுபாடுகளுடன் உள்ளன. வடமேற்குத் தக்காணத் திலுள்ள சைத்தியங்கள், அசந்தாவிலுள்ள குகை எண் 10, நாசிக், சுன்னார் ( Junnar ), கார்லே ( Karle ), கான்கரி ஆகியவிடங்களில் உள்ளன. பர்சாவிலுள்ள சைத்தியம் ஏறத்தாழ கி.மு. இருநூறில் எடுக்கப் பட்டது.

கொண்டானேயிலுள்ள சைத்தியமும் இது போன்ற அமைப்பை உடையது. பாழடைந்த நிலையில் பிதால்கொராவிலுள்ள தூபி அசந்தாவிலுள்ள குகை எண் பத்து போன்றது. நாசிக்கிலுள்ள தூபி அசந்தாவிலுள்ள குகை எண் ஒன்பது போன்றது. கார்லேயிலுள்ள சைத்தியம் மிகப்பெரியதும் சிறந்த வேலைப்பாடு உடையதும் ஆகும். இது இந்தியாவிலுள்ள நினைவுச் சின்னங்களிலேயே மிகவும் கவர்ச்சி மிக்கது. இதில் ஈனயான ( Hinayana ) பாறைக் கட்டடக் கலையின் மிக உயர்ந்த நிலையைக் காணலாம். கான்கரியிலுள்ள சைத்திய அறை, கி.பி. 180 இல் வெட்ட ்பட்டது. இது கார்லேயிலுள்ள சைத்தியத்தை ஒத்தது என்றாலும் வேலைப்பாட்டில் தரம் குறைந்தது.

கிழக்குத் தக்காணத்திலுள்ள இந்நினைவுச் சின்னங்களில் பெரும்பாலனவை செங்கற்களால் கட்டப் பட்டவைகளாகும். அவற்றுள் பட்டிப்புரோலு, குடிவாடா, அமராவதி, கண்டசாலா, செக்கய பீடா, கோலி, நாகார்சுன கொண்டா ஆகியவிடங்களிலுள்ளவை குறிப்பிடத்தக்கவை. விசாகப்பட்டினம் மாவட்டத்தில் சங்கரம் என்ற இடத்திலும், மேற்குக் கோதாவரி மாவட்டத்தில் குண்டுபள்ளி ( Kuntupalle) என்ற இடத்திலும் உள்ளவை குடவரை விகாரங்களாகும். செங்கற்களால் கட்டப்பட்டுள்ளவை அரைவட்ட வடிவத்தில் உள்ளன. இவற்றின் வெளிப் புறத்தில் கீழ்ப்பகுதிகளில் சுண்ணாம்பும், மேல்பகுதியில் வெண் சாந்தும் பூசப்பட்டுள்ளன.

**சிற்பங்கள் :** மேற்கு, கிழக்குத் தக்காணத்திலுள்ள கட்டுமான மற்றும் குடைவரைத் தூபிகள், விகாரங்கள் ஆகியவற்றில் புத்தசமயம் பற்றிய சிற்பங்கள் பலவற்றைக் காணலாம்.

மேற்குத் தக்காணத்தில் பாசா, நாணாகாட்டு, பிதால்கொரா, பெத்சா நாசிக், கார்லே, கான்கரி ஆகியவிடங்களில் சிற்பங்கள் நிறைய உள்ளன.



அரசி மயங்குகிறாள் – (சட்தந்த சாதகம்) கி.மு. இரண்டாம் நூற்றாண்டு
10–ஆம் குகை அசந்தா ஓவியம்

குடைவரை நினைவுச் சின்னங்களிலுள்ள தூண்கள் மிக அழகிய சிற்ப வேலைபாடுகளைக் கொண்டவை. பெத்சாவிலுள்ள சைத்தியத் தூண்களில் மனித மற்றும் விலங்குகளின் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. கார்லேயில் ஆண்கள், பெண்கள் நிறைந்த கூட்டமொன்று குறைந்த ஆடையுடன் நிறைந்த அணிகலன்களுடன் காணப்படுகின்றது. இவற்றின் ஒரு பக்கத்தில் யானைகளும், மறுபுறம் குதிரைகளும் செதுக்கப்பட்டுள்ளன. பாசாவிலுள்ள விகாரத்தில் நான்கு குதிரைகள் இழுத்துச்செல்லும் தேர் ஒன்றில் அரச குடும்பத்தினர் செல்வதும், இரு பெண்கள் வெண்சாமரம் வீசுவதும், அவர்களுக்குக் காவலாகப் பலர் குதிரைகளிலும், யானைகளிலும் செல்வதும்போல் மிக அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. நாணாகாட்டில் சிரீசாதகர்னியின் ( Sri satakarni ) குடும்பத்தினரின் உருவச்சிலைகள், பெயர்கள் பொறிக்கப்பட்டு, பழுது பட்ட நிலையில் உள்ளன. கொண்டேனிலுள்ள மனித உருவச் சிலைகள் கண்கா அல்லது கிருட்டினா என்பவரின் மாணாக்கர் பலகா என்பவரால் வெட்டப்பட்டவை என அங்குள்ள கல்வெட்டு குறிக்கிறது. அதனைக் கொடையாக வழங்கியவரின் உருவச் சிலை உடைந்த நிலையில் காணப்பட்டாலும், அதனுடைய தலைப்பாகை மிகவும் நுணுக்கமான வேலைப்பாட்டுடன் அழகாக உள்ளது. இது அச் சிற்பியின் திறமையை எடுத்துக்காட்டுகிறது. கார்லே, கான்கரி ஆகியவிடங்களிலுள்ள அறைகளைக் கொடையாக வழங்கிய கணவன், மனைவியரின் உருவச்சிலைகளும் உள்ளன.

கிழக்குத் தக்காணத்தில் சாதவாகனர் கால சிற்பங்களைப் பட்டிப்ரோலு, செகயபீடா, அமராவதி முதலிய இடங்களிலுள்ள தூபிகளில் காணலாம். பட்டிப்ரோலுவில் இடிபாடுகளுக்கிடையே கல்வெட்டுகளுடன் கூடிய நினைவுச் சின்னப்பெட்டிகள் பல ( Relic Caskets ) காணப்படுகின்றன. அமராவதி ஆறு

நூற்றாண்டுகளுக்கு, கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. மூன்றாம் நூற்றாண்டு வரை, புத்த சமயக்கலையின் மையமாக விளங்கியது. தொடக்கக் கால ( கி.மு. 200 முதல் 100 வரை ) விகாரங்களின் துண்களில் விலங்குகளின் உருவங்கள் மிகுதியாகவும், மனித உருவங்கள் குறைவாகவும் பொறிக்கப்பட்டன. பின்னர், கி.மு.100க்கும் கி.பி.100க்கும் இடையே, புத்தர் தம் கருத்துகளைப் பரப்புவது போன்ற சிலைகள் பல செய்யப்பட்டன. அவற்றுடன் ஓர் இருக்கையின் மீது புத்தரின் பாதம் அல்லது தர்ம சக்கரம் அல்லது தூபி போன்றவை உள்ளன. தொடக்கக் காலத்தில் இருந்ததை விட இக்காலத்து சிலைகள் இயற்கையாகவும், சாந்தமாகவும் காணப்படுகின்றன. அவற்றுள் அசோகர் போதி மரத்திற்கு நீர் ஊற்றுவது, மாரனின் புதல்விகளும், மோகினிகளும் புத்தரை வசியப்படுத்த முயற்சிப்பது, சித்தார்த்தா உண்மையைத் தேடி அரண்மனையை விட்டு வெளியேறுவது ஆகியவை குறிப்பிடத்தக்கவை. பிற்கால கி.பி. 150க்குப் பின்னர் தூபிகளின் கூரைகள் மிக அழகாகக் குடையப்பட்டுள்ளன. தூண்களின் இரு முனைகளிலும் விலங்குகளும், மலர்களும் செதுக்கப்பட்டு, இடைப்பகுதியில் தூபி, புத்தர், நாகம் ஆகியவை வெட்டப்பட்டுள்ளன. அத்துடன் புத்தர் பற்றிய கதைகள், சாதகக்கதை நிகழ்ச்சிகள், மக்களின் குடும்ப சமய வாழ்க்கைப் பற்றிய நிகழ்ச்சிகள் ஆகியனவும் வடிக்கப்பட்டுள்ளன.

சாதவாகனர் ஆட்சியில் நாகார்சுன கொண்டாவில் புத்த சமயக்கலையானது, கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 137லிருந்து 197 வரை வளரத் தொடங்கியது. புத்தரின் வாழ்க்கையில் நடந்த நிகழ்ச்சிகள், அவர் வெள்ளை யானை உருவத்தில் துறக்கத்திலிருந்து இறங்கி வருதல், அரசி மாயாதேவியின் வயிற்றில் உதித்தல், அவர் பிறந்ததும் அவருடைய சாதகம் கணிக்கப்படுதல், உலக வாழ்வைத் துறத்தல், தலைப்பாகை துறக்கம் செல்லுதல், அவருடைய உணர்ச்சிகளைத் தூண்ட முயற்சிக்கும் நிகழ்ச்சிகள், முச்சலிந்தா ( Muchalinda ) என்னும் நாகம் தன் படத்தை விரித்துப் புத்தரை மழையிலிருந்து காத்தல், மான் பூங்காவில் அவர் முதன் முதலாகத் தம்முடைய கருத்தைப் பரப்புதல், மகாபரி நிர்வாணம் ஆகியவை மிக அழகாகச் செதுக்கப்பட் டுள்ளன.

**ஓவியம் :** அசந்தா ஓவியக்கலையானது பத்தாம் எண் குகை, கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கணக்கிடப்படுவதால், சாதவாகனர் காலத்திலிருந்து தொடங்குகிறது எனலாம். இங்கு புத்தர் செந்நிற ஆடை அணிந்து ஓர் இருக்கையில் அமர்ந்திருக்க, பெண் துறவிகள் அவரைச் சூழ்ந்திருக்க, இல்லறத்தார் ஒருவர் பக்கத்தில் நிற்கும் காட்சி அழகாகத் தீட்டப்பட்டுள்ளது. பெத்சா, பாசா ( Bhaja ), பிதால், கொரா, கார்லே, கான்கரி ஆகியவிடங்களில் உள்ள சைத்தியங்களில் தீட்டப்பட்ட ஓவியங்களின் ஒரு சில பகுதிகள் அழிந்து போன நிலையில் உள்ளன. இவற்றை நன்கு ஆராய்ந்து, இவற்றின் காலத்தைக் கணக்கிட வேண்டியுள்ளது. நாசிக் குகையில், அசந்தா குகையில் உள்ளது போன்ற ஓவியங்கள் இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. அவை இப்பொழுது மறைந்துவிட்டன. நாசிக்கிலுள்ள குகை எண் மூன்றில் ஓவியங்களைத் தீட்ட கொடை வழங்கியவர் பற்றிய கல்வெட்டு ஒன்று உள்ளது. பிதால் - கொராவில் அசந்தாவைப் போன்று ஓவியங்கள் தீட்டப்பட்டிருக்க வேண்டும்.

சாதவாகனர் காலத்துக் கலைகளின் நினைவுச் சின்னங்கள், கட்டடம், சிற்பம், ஓவியம் ஆகியவை தென்னிந்தியப் பண்பாட்டிற்கு அவர்கள் வழங்கியுள்ள கொடையாகும்.

- சி. இரெ.

**சாதன சதுட்டயம் :** சங்கரர் அருளிச்செய்த நூல்களுள் ஒன்று விவேக சூடாமணியாகும். அதனைத் தமிழில் மொழிபெயர்த்தவர் பகவான் இரமணர் ஆவார். இறைவனை அடைவதற்குரிய நெறிமுறைகள் சாதனங்கள் என்று சொல்லப்படும். சாதன நெறியில் நிற்பவன் சாதகன் எனப்படுவான். விவேக சூடாமணி என்ற நூல் சாதகனுக்கு அதாவது பிரம்ம விசாரம் செய்கிறவனுக்கு நால்வகைத் தகுதிகள் இருக்க வேண்டும் என்று வரையறை செய்கிறது. அந்நால்வகைத் தகுதிகளே சாதன சதுட்டயம் எனக் குறிப்பிடப்படும். அவை :-

**நித்தியா நித்திய வசுது விவேகம் :** பிரம்மமே உள்பொருள். சத்தியம் உலக மித்தை. இதுவே நித்தியா நித்திய வசுது. அனைத்து வசுக்களின்றும் பிரித்து உணர்தல்.

**இகா முதார்த்த பலபோக விராகம் :** உடல் முதலாக உலகிலுள்ள பொருட்கள் அனைத்தும் நிலையற்றன என உணர்தல். அப்பொருள்களிடத்து விளங்கும் குறைகளை நேராக அறிதல் அல்லது சமய நூல்களின் வாயிலாக அறிந்து வைராக்கியம் கொள்ளுதல். புற உலகப் பொருள்களின் நிலையாமையை உணர்தல் வைராக்கியத்திற்குத் துணை செய்யும்.

**சமாதிசட்க சம்பத்தி :** இதில் ஆறு நிலைகள் உண்டு. அவை - சமம், தமம், உபாதி, திதிட்சை, சிரத்தை, சமாதானம்.

வைராக்கியம் மேலோங்குமானால் சாதகனிடத்து உலப்பொருட்களில் விருப்புத் தோன்றாது உவர்ப்பு உண்டாகும். இவ்வாறு உலகப்பொருள்களிடத்து உவர்ப்புக் கொண்டு மனத்தைத் தனது இலட்சியத்தில் இருத்துதல் சமம் எனப்படும்.

ஞானேந்திரியங்களையும், கன்மேந்திரியங்களையும் புறத்தே செல்லவிடாது அதாவது, அறிவுக்கருவிகளையும், செயற்கருவிகளையும் புறத்தே விடாது அதனதன் இருப்பிலேயே இருக்கச்செய்தல் தமம் ஆகும்.

மனம் தனது இலட்சியத்தில் ஊன்றி, பிற எவற்றையும் நினையாமல் கருமங்களை விட்டுவிடல் உபாதி எனப்படும்.

துன்பங்கள் தொடர்ந்துவரினும் அவற்றைத் தடைசெய்யாமலும், இன்பங்கட்காக ஏங்கமாலும் தைரியமாகச் சகித்துக்கொள்ளுதல் திதிட்சை எனப்படும்.

வேத நூல்கள் கூறும் உண்மைகளும், குருவின் வாக்கியமும் சத்தியம் எனக்கொண்டு பிரம்ம உணர்விற்கு உகந்த முயற்சிகளில் கண்ணுங் கருத்துமாய் இருத்தல் சிரத்தை ஆகும்.

சித்தத்தைப் பரிசுத்தப் பிரம்மத்திடத்தில் நிலையாக இருத்துதல் சமாதானம் ஆகும்.

**முமு கட்ச தவம் :** ஞானத்தால் அனைத்துப் பந்தங்களையும் தொலைப்பதற்குரிய இச்சை.

மேற்கண்ட நால்வகைத் தகுதிகளே சாதன சதுட்டயம் எனப்படும்.

- கோ. சூ.

**சாமியா மில்லியா இசுலாமியா :** இந்நிறுவனம் 1920ஆம் ஆண்டு அலிகாரில் நிறுவப்பட்டது. ஐந்து ஆண்டுகளுக்குப்பின் தில்லிக்கு மாற்றப்பட்டது. தேசிய முசுலீம் பல்கலைக்கழகம் என்றும் இந்த நிறுவனத்தைக் குறிக்கிறார்கள். அரசியல் ரீதியாக இசுலாமிய மக்களால் இப்பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டாலும் கல்வித்துறையிலும், இந்தியப் பண்பாட்டுத்துறையிலும் புதுமையையும், நிறைவினையும், உயர்வையும் உருவாக்கத் தொடங்கப்பட்டது என்பதுதான் உண்மை. இதன் காரணமாகவே இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களும், சமூகச் சீர்திருத்தவாதிகளும் இதில் முழுமையாகப் பங்கேற்றனர்.

இந்நிறுவனம் ஒரு சிறந்த உயர்கல்வி நிறுவனமாகத் திகழவேண்டும் என்பதுதான் இதன் நிறுவனர்களின் முதல் குறிக்கோள் ஆகும். அத்தோடு அரசுப் பணிக்காக என்ற உணர்வோடு மட்டுமே கல்வி கற்காமல் சிறந்த இந்தியக் குடிமகனாகவும், இந்தியப் பண்பாட்டிற்கு ஓர் எடுத்துக்காட்டாகவும் தங்களது வாழ்க்கையை அமைத்துக்கொண்டு தேசிய வளர்ச்சியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளக் கூடிய இளைஞர்களை உருவாக்குவதையே இந்த நிறுவனம் தனது குறிக்கோளாகக் கொண்டது.

இந்தியப் பண்பாட்டையும், மேற்கத்தியப் பண்பாட்டையும் ஒருங்கிணைக்கக்கூடிய இடமாகவும் சாமியா மில்லியா திகழ்ந்தது. இசுலாமிய சமயத்தினரும் மற்ற சமயத்தாரும் தங்களது சமயக் கருத்துகளையும், நெறிகளையும் அறிந்து கொள்வதோடு மற்ற சமயக் கருத்துகளுக்கும் முழுமையான மரியாதையும் செலுத்தக்கூடிய வாய்ப்பும் அளிக்கப்பட்டது. அன்றைய கல்வி முறையிலிருந்து மாறுபட்ட கருத்துகளையும், பாடத்திட்டங்களையும், கற்பிக்கும் முறைகளையும் கொண்ட தனியொரு கல்வி நிறுவனமாகத் திகழ்ந்ததின் காரணமாக இந்நிறுவனம் அளித்த பட்டங்களை மற்றவர்கள் ஏற்கவில்லை. இருப்பினும் தனக்கென ஒரு பாதையை வகுத்து புதிய சமுதாயத்தை உருவாக்கிடும் இளம் தலைமுறையினரை உருவாக்கிய பெருமை இதனையே சாரும்.

ஆங்கிலேயர் ஆட்சியிடமிருந்து மாறுபட்ட கருத்துகளைக் கொண்ட சாமியா மில்லியாவுக்குத் தேவையான நிதியுதவியை அவர்களிடமிருந்து பெறுவதில் சிரமம் ஏற்பட்டது. ஆகவே நிதி உதவிக்காக

சமுதாயத்தை அணுகவேண்டிய நிலை ஏற்பட்டது. கல்விக்காகவும், சமுதாயத்திற்காகவும் இந் நிறுவனம் ஆற்றி வந்த பெரும் சேவையை உணர்ந்த சமுதாயம் முழுமையாக இதை ஆதரித்து தேவை யான நிதியுதவியை அளித்தது.

இது இசுலாமிய சமுதாயத்திற்குப் பயனுள்ள கல் வியை அளித்தமையால் இந்திய சுதந்திரப் போராட் டத்தில் ஈடுபட்ட மகாத்மாகாந்தி, மௌலான முக மது அலி, அன்சாரி, மௌலான அப்துல்கலாம் ஆசாத், சாகிர் உசேன் போன்ற பெருந்தலைவர்களுக் கும் இந்நிறுவனத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பாரத விடுதலைக்கு முன்பே தேசியக் கல்வி கொள்கைக்கான கழகத்தை 1939ஆம் ஆண்டு சாமியா மில்லியா இசுலாமியாவின் துணைவேந்தராக இருந்த டாக்டர் சாகிர் உசேன் உருவாக்கினார். இங் குப் பள்ளி முன் பருவக்கல்வி முதல், பல்கலைக் கழ கப் பட்ட மேற்படிப்பு வரை ஒன்றுபட்ட இணைந்த கல்வியாக ( Integrated Education ) அளிக்கப்பட்டது. சாமியா மில்லியா இசுலாமியாவின் தனித்தன்மை மிக்க கல்விச் சேவையையும், சமுதாய உணர்வையும் உணர்ந்த பல்கலைக்கழக நல்கைக்குழு 1962ஆம் ஆண்டு சூன் மாதம் 19ஆம் நாள் பல்கலைக் கழகமாக ஏற்று பெருமைப்படுத்தியது. இப்பல்கலைக்கழகத் தில் கீழ்க்காணும் பகுதிகள் தனித்துறைகளாக செயல் படுகின்றன.

1. **தங்கிப் படிக்கும் கல்லூரி** ( Residental College ) : இக்கல்லூரி கலை மற்றும் சமுதாயவியல் ஆகியவற் றில் உயர்கல்வியை அளிக்கிறது. வேளாண்மை இயல், சமூகக் கல்வி, சமுதாய வளர்ச்சி ஆகிய துறை களில் செயல் முறைப் பயிற்சியையும் அளிக்கிறது.

2. **தங்கிப் பயிலக்கூடிய பல்நோக்கு மேல்நிலைப் பள்ளி** (Residental Multipurpose Higher Secondary school): நவீன பயிற்சி முறைகளைக் கையாண்டு மாணவரி டையே கற்பதற்கான விருப்பத்தை உருவாக்குவ தையே குறிக்கோளாகக் கொண்டு இப்பள்ளி செயல் படுகிறது.

3. **தங்கிப் படிக்கும் தொடக்கப்பள்ளி** ( Residental Primary School ) : ஆசிரிய - மாணவரிடையே நல்லுணர் வுகளையும், ஒற்றுமையையும் வலியுறுத்திக் கூட்டுப் பயிற்சி முறையைக் கையாண்டு இத்தொடக்கப் பள்ளியில் கல்வி அளிக்கப்படுகிறது.

4. **வயது வந்தோர் கல்வி நிறுவனம்** : சமூகக் கல்வி யின் பரிசோதனைக்கூடமாகத் திகழ்கிறது இந்நிறு வனம். சிறிதளவே கல்வி கற்ற, வயதுவந்தோர் களுக்குத் தேவையான அடிப்படைப் புத்தகங்களை வெளியிடுகிறது.

5. **ஆசிரியப் பயிற்சி நிறுவனம்** : ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும், அடிப்படைக்கல்வியில் பரி சோதனைகள் நடத்தவும் இந்நிறுவனம் பெரும் முயற்சி எடுக்கிறது. இளையோருக்குப் பட்டயங்க ளும், பட்டதாரிகளுக்கு பி.எட். பட்டமும் வழங்கு கிறது.

6. **மக்தபா சாமியா லிமிடெட்** : இது ஒரு புத்தக வெளியீட்டு நிறுவனமாகும். பள்ளிப்பாட நூல்களை யும், மற்ற பொதுவான நூல்களையும் வெளியிடு கிறது.

7. **நூலகம்** : இலட்சக்கணக்கான புத்தகங்களை யும், வார, மாத இதழ்களையும் கொண்ட சிறந்த நூல கம் உள்ளது. மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல் கள், ஆய்வுக்குத் தேவையான நுண்படம் ( Micro Film) போன்ற வசதிகளையும் கொண்டுள்ளது.

8. **நுண்கலைப் பயிற்சி நிறுவனம்** ( Institute of Art Education ) : பள்ளிக் கல்வியின் பல்வேறு நிலைகளுக் கான கலை மற்றும் கைத்தொழில் ஆசிரியர் பயிற்சி அளிப்பதில் இந்நிறுவனம் பங்கேற்றுள்ளது.

9. **கிராமியப் பொருளாதாரம் மற்றும் சமூகவியல் நிறுவனம்** : கிராமப் பொருளாதாரம், சமூக நிலை அவர்களின் சிக்கல்கள் ஆகியவற்றைக் குறித்த பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கான ஆராய்ச்சி நிறுவ னமாகவும் திகழ்கிறது.

10. **வரலாறு மற்றும் அரசியல் துறை** : இத்துறை கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் வரலாறு கற்பிப்பதை ஒருங்கிணைப்பதிலும், அதற்குத் தேவையான புத்த கங்களைத் தயாரிப்பதிலும் ஈடுபடுகிறது.

11. **கிராமியக் கல்வித் துறை** : கல்வியின் பல்வேறு அங்கங்களாகிய பாடத்திட்டம், பயிற்றுமுறை, புத்த கத் தயாரிப்பு, கைத்தொழில், கைவினைப்பொருள் களின் பயன்பாடு, மதிப்பீடு, மேற்பார்வை, நிர்வா கம் ஆகியவற்றில் உள்ள சிக்கல்களை ஆராய்ந்து தீர்வு காணும் துறையாக இது விளங்குகிறது.

12. **பள்ளி முன்பருவக் கல்வி** : சாமியா மில்லியா வில் பணியாற்றும் ஊழியர்களுடைய குழந்தைகளின் கல்விக்காக ஏற்படுத்தப்பட்ட பள்ளியிது.

13. **ஆராய்ச்சித்துறை** : கல்வியின் பல்வேறு அங்கங்களிலும் சமுதாயத்திலும் காணும் சிக்கல்களை ஆய்வு செய்து அவற்றிற்குத் தீர்வுகாணும் வகையில் அமைந்த இந்த நிறுவனம் ஆராய்ச்சிப் பட்டங்களான முதுகலை ஆராய்ச்சியாளர் எம்.ஃபில், முதுகலை அறிஞர் பிஎச். டி., ஆகிய பட்டம் பெற வாய்ப்பளிக்கிறது.

14. **அஞ்சல் வழிக்கல்வி** : பெண்கள் சாமியா மில்லியாவில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் இராணுவத்தினர் தனிப்பட்ட முறையில் பயின்றும், அஞ்சல்வழிக் கல்வியில் பயின்றும், இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டங்களுக்கான தேர்வுகள் எழுத அனுமதிக்கப்படுகிறார்கள். செய்முறைப்பயிற்சி தேவைப்படும் எந்தத் தேர்வுக்கும் அஞ்சல் வழிமுலம் கற்றுத் தேர்வு எழுத சாமியா மில்லியாவின் கல்வித்துறை அனுமதி வழங்குவதில்லை. சாமியா மில்லியாவின் எந்த நிறுவனத்திலாவது தேவையான நேரிடைப் பயிற்சியை முடித்தவர்கள் அத்தகைய பட்ட மேற்படிப்புகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள்.

**கற்பிக்கப்படும் பாடங்கள்** : இடைநிலைக் கல்வி எட்டாம் வகுப்பு தேர்வு பெற்றவர்களுக்கு இரண்டு ஆண்டு கல்வியிது. இந்த இரண்டாண்டுகளில் ஆங்கிலம், உருது, இந்தி, கணிதம், அறிவியல், வரலாறு, புவியியல், வணிகம், பொருளாதாரம், இசுலாம், இந்துசமயக் கொள்கைகள், நலவாழ்வு, உடற் பயிற்சி, தொழிற்பயிற்சி ஆகிய பாடங்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**முதுநிலைப் பள்ளிக்கல்வி** ( Senior Secondary School) : இடைநிலைக் கல்வித்தேர்வில் தேர்ச்சியுற்றவர்களுக்கு இரண்டு ஆண்டு கல்வியாகும் இது. இந்த இரண்டு ஆண்டுகளில் கட்டாயப் பாடங்களாக உருது அல்லது இந்தி, இலக்கியம், இசுலாமியம் அல்லது இந்து சமயக் கொள்கைகள், உருது படிக்காதவர்களுக்கு உருது மொழி ஆகியவை கற்பிக்கப்படுகின்றன. விருப்பப் பாடங்களாக மானிடவியல், வரலாறு, புவியியல், பொருளாதாரம், அரசியல், அறிவியல், கணிதம் ஆகியன கற்பிக்கப்படுகின்றன.

மானிடவியல் மற்றும் மொழித்துறையில் பட்ட, பட்ட மேற்படிப்புகளில் சமுதாயப்பணி, உளவியல், அரபியமொழி, பொருளாதாரம், வரலாறு, இசுலாமிய இந்து சமயக்கல்வி, இந்தி, உருது போன்ற பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. இவற்றில் ஆனர்சு ( Honors ) வகுப்புகளும் உள்ளன.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் கீழ்க்காணும் பாடங்களைப் பட்ட, பட்டமேற்படிப்பு மற்றும் ஆனர்சு ஆகிய வகுப்புகளில் விருப்பப் பாடங்களாகப் படிக்க வாய்ப்புள்ளது. இந்தியப் பண்பாடு, பொது ஆங்கிலம், உருது அல்லது இந்தி ஆகிய மொழிகளோடு பொருள்ாதாரம், கணிதம், புவியியல் ஆகிய பாடங்களை விருப்பப்பாடங்களாக எடுத்துக் கற்க முடியும். தொழில் நுட்பத்தில் குறிப்பாகக் கிராமப்புறங்களுக்கான கட்டடக்கலை போன்ற பாடங்களில் பட்டயங்களும், இதை முடித்தவர்களுக்குப் பட்டப்படிப்பைத் தொடர மாலைநேரக் கல்லூரியில் வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.

**சான்றிதழ் படிப்பு** : ஓராண்டு சான்றிதழ் படிப்பாக கீழ்க்காணும் பாடங்களைப் பயிலவும் இந்நிறுவனத்தில் வசதியுள்ளது. மின்னணுவியல், குளிர்சாதனம் செய்தல், வரைபடம் போடுதல் ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

கல்வியியல் துறையில் இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்பும் இங்குள்ளது. கல்வியியல் துறையில் கலையும் பயிற்றுவிக்கப்படுகிறது. இதைப்படிப்பவர்கள் கலைகளைப் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். நுண்கலையில் பட்டம் பெற விருப்பமும், ஆற்றலும் உடையவர்கள் சிற்பம், ஓவியம் போன்ற பாடங்களைப் பயின்று பட்டம் பெறவும் சாமியாமில்லியாவில் வாய்ப்பளிக்கிறது. மேலும், இத்துறையில் சான்றிதழ் மற்றும் பட்டப் படிப்புகளுக்கும் வாய்ப்புள்ளது.

- ஞா.ப.

**சார்பில் தோற்றக் கொள்கை** : புத்தர் மெய்யுணர்வு பெற்றதும் காசிக்கு அருகில் மிருகதாவனத்தில் முதன்முதல் மொழிந்த மெய்ப்பொருள்கள், பிரதித்திய சமுத்பாதம் என்ற சார்பில் தோற்றக் கொள்கையும் நான்கு வாய்மைகளும் ஆகும். காலந்தோறும் தோன்றும் புத்தர்கள் அனைவரும் இவ்விரண்டு கோட்பாடுகளை யாவர்க்கும் விளக்கினர் என்று தேரகாதை கூறுகிறது. புத்தர் சாங்கியரின் பரிணாமக் கொள்கையினையும், வைதிகனின் படைப்புக் கொள்கையினையும் உட்கொள்ளவில்லை.

பொருள்கள் எல்லாம் சார்புக் காரணங்களால் தோன்றுவன என்றும், இவற்றை யாரும் படைக்கவில்லை என்றும் கருதினார். இக்கருத்தினைப் பிரதித்தயசமுத்பாதம் என்ற கோட்பாட்டால் விளக்கினார். இத்தொடரினைச் சாத்தனார் சார்பில் தோற்றம் என்றும் கூறுவர்.

புத்தரின் கொள்கையின்படி உள்பொருள் என்றோ இல்பொருள் என்றோ ஒன்றுமில்லை. பொருள்கள் அனைத்தும் இருப்புக்கும் இன்மைக்கும் இடமின்றித் தோன்றி மறைந்து தொடர்வனவாய் உள்ளன. இருப்பது அல்லது நிகழ்வதாகிய ஒவ்வொரு பொருளும் சார்புக் காரணங்களால் விளைந்தனவே. இக்காரணங்களும் ஒரு வகையால் காரணங்களின் காரியங்களாகத் திகழ்தலின் தொடர்ந்து நோக்குவோர்க்கு இவை எண்ணிலிக்குச் சென்று நிற்கும்.

சார்புகள் பன்னிரண்டு என்று கூறுதல் மரபாகும். ஆயின் பாலி நூல்களில் இவற்றின் எண்ணிக்கை கூடியும், குறைந்தும் காணப்படுகின்றன. சார்புகள் தொடக்கநிலையில் மிக்கும் குறைந்தும் விளங்கப் புத்தர்க்குப் பின்னர் பல ஆண்டுகள் கடந்து பன்னிரெண்டென்று வரையறை பெற்றன. இவ்வரையறையை முதன் முதல் விநயபிடகத்தில் மகாவக்கத்தில் காணப்படுகின்றது. சார்புகள் பன்னிரண்டும் பின்வருவன :- 1. பேதைமை, 2. செய்கை, 3. உணர்வு, 4. அருவுரு, 5. வாயில் ஆறு, 6. ஊறு, 7. நுகர்வு, 8. வேட்கை, 9. பற்று, 10. பவம், 11. தோற்றம், 12. வினைப்பயன் ( பிணி, மூப்பு, சாக்காடு ).

**பேதைமை :** சார்புத் தொடர்ச்சியில் முதற்கண் நிற்பது பேதைமையாகும். பௌத்தத்தின் அடிப்படைக் கொள்கைகளாகிய சார்பில் தோற்றம், நான்கு வாய்மைகள் ஆகியவற்றை அறியாமையும், அளவைகளால் அறிந்து கொண்ட மெய்ப்பொருளை மறத்தலும், பிறர் கூறியதற்காக முயலுக்குக் கொம்புண்டு எனக்கேட்டு நம்புவதும் பேதைமை சார்பாகும்.

**செய்கை :** பேதைமையின் காரணமாகச் செய்கை தோன்றுகிறது. இச்செய்கை அறியாமையால் விளைதலின் தீவினையெனப்படும். மனம், மொழி, மெய்களினால் வெளிப்படும் தீவினைகள் பத்தாகும். மெய்யிடமாகத் தோன்றும் கொலை, களவு, காமம். சொல்லிடமாகத் தோன்றும் பொய், குறளை, இன்னாச்சொல், பயனில் சொல், உள்ளத்தினிடமாகத் தோன்றும் வெஃகல், வெகுளல், பொல்லாக்காட்சி. இப்பத்துவகைத் தீவினைகளை விலக்குதல் வேண்டும் என்று புத்தர் கட்டளையிட்டார். ஒருவனுடைய உயர்வு தாழ்விற்கும், இன்ப துன்பத்திற்கும் அவனுடைய செயல்களே காரணமாகும். எனவே மனம், மொழி, மெய்களால் செய்யப்படும் செயல்கள் தூய்மையாய் இருக்க வேண்டும்.

**உணர்வு :** விஞ்ஞானம் எனப்படும் நிதானமே உணர்வு. உணர்ச்சி, உள்ளம், சித்தம், மனம் முதலிய சொற்களால் சுட்டப்படுகின்றது. செயலும் ஈடுபாடும் இன்றி சாட்சி மாத்திரையாய் உணர்வு விளங்கும்.

**அருவுரு :** நாம ரூபம் என்ற பாலிச்சொல் அருவுரு என்று தமிழில் கூறப்படுகின்றது. நாமம் என்பது அருவத்தையும், ரூபம் என்பது உருவத்தையும் குறிக்கும். இரண்டும் சேர்ந்து மனிதனின் ஆளுமையைச் சுட்டும். உடம்போடு கூடிய உயிருடன் திகழுங்கால் இச்சார்பு நிகழும் என்பது கருத்தாகும். இதனை, 'உணர்வு சார்ந்த உயிர் உடம்பு' என்று சாத்தனார் குறிப்பிடுகின்றார். இத்தொடரிலுள்ள உயிர் நாமம் அல்லது அருவத்தையும், உடம்பு ரூபத்தையும் குறிக்கும். உணர்வாகிய விஞ்ஞானம் நாமசுகந்தத்தைச் சார்ந்து நிற்கும். உணர்வு நாமத்தைச் சார்ந்திருக்குங்கால் நான்கு கந்தங்கள் எண்ணப்படும். உணர்வு, வேதனை, சஞ்ஞை, சம்சுகாரம். இந்நான்கும் ஆளுமையின் அகத்தோற்றத்தை உருவாக்குவன. இவற்றுக்கு ஒத்த புற உறுப்புகள் அனைத்தும் சேர்ந்து உருவக்கந்தம் என்று குறிக்கப்பெறும். இது மனிதனின் புறத்தோற்றத்தைக் குறிப்பது. ஆதலின் அகக்கூறுகளும் புற உறுப்புகளும் பொருந்திய ஒன்றுதான் ஆளுமை எனப்படும். இதனையே நாமரூபம் அல்லது அருவுரு என்ற சார்பு விளக்குகின்றது என்பர்.

**வாயில் ஆறு :** மனத்துடன் சேர்ந்த அறிகருவிகள் ஆறும் வாயில்கள் எனப்படுவன. புறத்தே உள்ள பொருள்களுடன் இவ்வறிகருவிகளின் உதவியால் உணர்வு தொடர்பு கொள்கிறது. பௌத்த நூல்களில் அறி கருவிகள் ஆறும் அகவாயில்கள் என்றும், அவற்றால் அறியப்படும் அறுவகைப் புறப்பொருள்களும் புறவாயில்கள் என்றும் கூறப்பட்டுள்ளன.

**ஊறு :** அகவாயில்கள் ஆறினாலும் புறப்பொருட்களுடன் தொடர்பு கொள்ளுங்கால் தோன்றும் சார்பினை ஊறு என்பர். பொருள், உணர்வு, ஐம்புலன்கள்

ஆகிய மூன்றும் தொடர்புறுங்கால் தோன்றுவதை ஊறு என்பர். பொருட்களை உணரும் கோட்பாட்டில் இச்சார்பிற்குத் தக்க இடம் உண்டு.

**நுகர்வு :** உணர்வினால் பொருட்களை நுகரும் திறனை நுகர்வு என்னும் சார்பு என்பர். அஃது இன்பம் தருவது, துன்பம் தருவது, இரண்டுமற்றது என்று மூவகைப்படும். முதல்வகை நுகர்வினை நாடாது இரண்டாம் நுகர்வினைப் புறக்கணித்து, மூன்றாவது வகையினை மறந்து நிற்றல் வேண்டும் என்று பௌத்தத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

**வேட்கை :** இச்சார்பினை அவா என்றும் அழைப்பர். பொருட்கள் மேல் மேலும் மேலும் ஆசையைப் பெருக்கி நிறைவு பெறாத நிலையினை இச்சார்பு சுட்டுகிறது. பேதைமைக்கு அடுத்த நிலையில் வேட்கை தான் தீவினைக்குக் காரணமாகும்.

**பற்று :** பொருட்களில் ஒட்டிக்கொள்ளும் பந்தத்தினைப் பற்றென்றும் நிதானமாகக் கூறுவர். இச்சார்பினை வேட்கையின் ஒரு கூறாகக் கருதலாமே தவிர அதினின்றும் வேறுபட்டதாகக் கருதவொண்ணாது என்பர்.

**பவம் :** வேட்கை, பற்று முதலியவற்றின் காரணமாகத் தோன்றுவது பவம் என்னும் சார்பு. பௌத்த இயல் அறிஞருள், பலரும் பவம் என்ற சொல்லுக்கு இருப்பு, தோன்றுதல் என்று விளக்கம் கூறினர். பவம் என்ற சொல் ஒருவன் ஆற்றியுள்ள பிறவிக்கு வித்தாகிய கருமத்தொகுதியை உணர்த்தும் என்று சாத்தனார் மணிமேகலையில் கூறுகின்றார்.

**தோற்றம் :** இச்சார்பினைப் பிறப்பு என்றும் கூறுவர்.

**வினைப்பயன் :** பன்னிரு சார்புகளில் இறுதியாகக் கூறப்படுவது வினைப்பயன் என்னும் சார்பாகும். இதனைப் பிணி, மூப்பு, சாக்காடு என்றும் குறிப்பர். சில பாலி வடமொழி பௌத்த நூல்களில் வினைப் பயனாகிய இறுதிச்சார்பு பிணி, முதுமை, இறப்பு, அவலம், கவலை, கையாறு, அழுங்கல் என்னும் ஏழு உறுப்புகளை உடையதாக விளக்கப் பெற்றுள்ளன.

இச்சார்புகள் சந்தானம் அல்லது தொடர்ச்சி எனப்படும் வகையில் இடையறவுபடாமல் தோன்றுகின்றன. பன்னிருசார்புகளும் ஒன்றுக்கொன்று காரணமும் காரியமுமாய் உள்ளன. இச்சார்புகளின் தொடர்பு முடிவில்லாத வட்டமாகச் சுழன்று கொண்டிருக்கும். இதனைப் பௌத்தர் ஊழ் வட்டம் அல்லது பவச்சக்கரம் என்பர். கி.பி.ஆறாம் நூற்றாண்டைச்சார்ந்த அசந்தா ஓவியங்களில் ஒன்று உருளை வடிவில் பன்னிரு ஆரங்கள் கொண்டு விளங்குகின்றது. ஒவ்வொரு ஆரமும் ஒவ்வொரு சார்பினைச் சுட்டுகின்றது. மக்கட்குப் பயன்படும் வகையில் அறங்களை உணர்த்துவதற்கு இச்சார்புக்கோட்பாடு பௌத்தத்தில் விளக்கப்படுகின்றது.

இச்சார்புகள் தோன்றுவதனால் துன்பங்கள் உண்டாகும். இச்சார்புகள் நீக்கத்தால் துன்ப நீக்கம் ஏற்படும். சார்பின் தோற்றமும், சார்பின் மீட்சியும் முறையே கட்டு, வீடு ஆகிய இரண்டிற்கும் ஏதுவாகும் என்பது பௌத்தக் கோட்பாடாகும். எனவே, பிறவித் துன்பத்திற்கும், பிறவாத் துன்பத்திற்கும் பிறரைக் காரணப்படுத்துதல் தகாது. இப்பன்னிரு சார்புகளின் தோற்றமும் நீக்கமுமே காரணம் எனப் பௌத்தம் அறிவுறுத்தும்.

- கோ. சு.

**சார்லசு மார்ட்டல் :** இவர் பிராங்குகளின் முதலாவது வலிமைமிக்க அரசராக கி.பி. 688 முதல் 741 வரை ஆட்சி புரிந்தார். இவருடைய இயற்பெயர் சார்லசு. இவரது மக்கள் இவரைத் தங்களது புராணக் கடவுளான தோர் ( Thor ) என்பதுடன் ஒப்பிட்டனர். அதன் கையில் மார்ட்டல் ( Martel ) ஒன்று இருக்குமாகையால் இவரை சார்லசு மார்ட்டல் என்றழைத்தனர். இவரது ஆட்சி கி.பி. 725லிருந்து 741 வரை மிக உயர்ந்த நிலையில் இருந்தது. பிராங்குகளின் மிகவும் புகழ்பெற்ற பேரரசரான சார்லமேன் ( Charlemagne ) இவருடைய பேரனாவார்.

சார்லசின் தந்தை பெபின் ( Pepin the Herstal ) மெரோவிஞ்சியன் ( Merovingian ) அரசர்களிடம் அமைச்சராக இருந்து வந்தார். அவர் இறந்த பின்னர் அரசி பீலக்கு ரூடு ( Plectrude ) சார்லசை சிறையிலடைத்துவிட்டு தம்முடைய பேரப்பிள்ளைகளின் பேரில் ஆட்சி செய்யலானார். சார்லசு சிறையிலிருந்து தப்பி, ஆசுடிரேசியன் ( Austrasian ) படைகளை வென்று நாட்டையும், பெருஞ்செல்வத்தையும் கைப்பற்றினார். ஆசுடிரேசியாவில் தம்முடைய ஆதிக்கத்தை ஏற்படுத்திய பின்னர் இவர் துசுடிரியா மீது போர் தொடுத்து இறுதியில் அதனை கி.பி. 724இல்

கைப்பற்றினார். நாட்டை விரிவுபடுத்த இவர் தம்முடைய நாட்டின் கிழக்குப் பகுதியிலிருந்த பல்வேறு குழுக்களுடன் போர் புரிந்தார். பிரிசியன்கள், சேக்சன்கள், சுவாபியன்கள், பவேரியன்கள் ஆகியோரைப் போரில் வென்றார். சார்லசு 733 - 39 ஆம் ஆண்டுகளில் பர்கண்டியிலிருந்த ( Burgundy ) குறுநில மன்னர்களையெல்லாம் அடிபணியச் செய்தார். புரொவென்சு ( Provence ), செப்டிமேனியா ( Septimania ) ஆகியவற்றிற்கு அரேபியரின் படையெடுப்புகளிலிருந்து பாதுகாப்பு அளிப்பதாகக் கூறி அவற்றையும் தம்முடைய ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார். இவ்வாறு வலிமைமிக்கதோர் அரசை ஏற்படுத்தி, சிறப்பாக ஆட்சிபுரிந்தார்.

ஆப்பிரிக்கா, ஐரோப்பா ஆகியவற்றிலிருந்து வந்த இவருடைய பகைவர்கள் குதிரை மீதமர்ந்து போர் புரிந்ததால் அவர்களை எதிர்க்க வலிமைமிக்கதோர் குதிரைப்படையை ஏற்படுத்தினார். அதனால் ஏற்பட்டபெருஞ்செலவை ஈடுகட்ட திருச்சபைக்குப் புதிதாக அ. ரிக்கப்பட்டிருந்த நிலங்களைப் படைவீரர்களுக்கு மாற்றினார். இவருடைய பணிகளில் மிகவும் குறிப்பிடத்தக்கது அரேபியரின் படையெடுப்பைத் தடுத்து நிறுத்தியதாகும். இசுபெயின் நாட்டில் கி.பி. 711இல் அரேபியர் குடியேறியதிலிருந்து அவர்கள் பிராங்குகளின் பகுதிகள் மீது அடிக்கடி தாக்குதல்களை நடத்தி வந்தனர். அவர்கள் கி.பி. 725இல் பர்கண்டியை அடைந்து ஆடன் நகரைக் கொள்ளையிட்டனர். கார்டோபா ( Cordoba ) வின் ஆளுநராகவிருந்த அப் - துல் - ரகுமான் அக்குடைனின் கோமகன், ஊடைசத்தை தோற்கடித்தார். ஊடசு, சார்லசு மார்ட்டலின் உதவியை நாடினார். எனவே, சார்லசு கி.பி.732இல் உருசுக்கு ( Tours ) அருகில் நடந்த போரில் அரேபியரை வென்று அழியாப் புகழ் பெற்றார். அதன் பின்னர் அரேபியரால் ஐரோப்பாவில் முன்னேற முடியவில்லை. சார்லசின் மேலாண்மையை ஊடசு ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது.

சார்லசு மார்ட்டல் கி.பி.741இல் அக்டோபர் இருபத்திரண்டாம் நாள் மரணமடைந்தார். அவர் இறப்பதற்கு முன்னர் தனது பகுதிகளை தம்முடைய மகன்கள் கார்லமேன் ( Carloman ), குட்டைபேபின் ( Pepein the short ) ஆகியோருக்குப் பிரித்தளித்தார். பெபின் பிரான்சின் அரியணையில் ஏறிய காரவிஞ்சியன் மரபின் முதல் அரசர் ஆவார்.

- சி. இரெ.

**சாருவாகம் :** கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்பதை நம்பும் கொள்கை உலகாயதக் கொள்கை. உலகாயதக் கொள்கையின் வேறு பெயர் சாருவாகம் ஆகும். சாருவாகம் என்பதற்கு இனிமையான நாக்கு என்பது பொருள். ஆகவே, தன் கொள்கையைக் கேட்பவர் மனங்கொள்ளுமாறு இனிய சொற்களால் உலகாயதன் கூறுவதையே இச்சொற்றொடர் விளக்குகிறது. பிருகசுபதி பகவான் இம்மதத்தின் தொடக்க ஆசிரியர்.

உலகாயதக் கருத்துகளைத் தெரிவிக்கும் மூலநூல் இப்போது காணப்படவில்லை. உலகாயதக் கருத்துகளை மறுக்கும் நூல்களான வேதங்கள், பௌத்த இலக்கியங்கள், இதிகாசங்கள், இந்திய தத்துவநூல்கள் ஆகியவற்றில் காணப்படும் உலகாயதக் கருத்துகளே இப்போது உலகாயதத்தை அறிந்து கொள்ள உதவும் நூல்களாகும். சாருவாக தத்துவத்தை அளவையியல், தத்துவக் கருத்துகள், அறஇயல் என்னும் மூவகையில் விளக்கலாம்.

சாருவாகத் தத்துவம் சாருவாக அளவை இயலை ஒட்டியே அமைகிறது. உண்மையை எந்த அளவு அறியலாம். அறிவு எவ்வகையில் தோன்றி வளர்கிறது. அறிவு தோன்றுவதற்கான ஆதாரங்கள் யாவை? உண்மை அறிவு பிரம்மா என்றும் உண்மை அறிவைப் பெறுவதற்கான கருவி பிரமானம் என்றும் கூறப்படும். காட்சி அளவை மட்டும் நம்பத்தகுந்த பிரமாணம் எனப்படும். இங்குக் காட்சி அளவை என்பது கண்ணால் காணப்படும் அறிவை மட்டும் குறிக்காமல் ஐம்பொறிகள் மூலம் கிடைக்கும் அறிவையும் குறிக்கும். சாருவாகம் காட்சி அளவையின் மேன்மையை வெளிப்படுத்தக் கருதல், ஆகம அளவையின் நம்பத்தகாத தன்மையை வலியுறுத்துகிறது.

கருதல் அளவை பிரமாணமாகக் கருதப்பட வேண்டுமானால் அது ஐயந்திரிபற்ற உண்மையைக் கொடுக்கவேண்டும். உலகாயதர் கருத்துப்படி கருதல் அளவையின் மூலம் உறுதியான உண்மையை பெறவியலாது. புகையின் மூலம் தீயை அறியலாம் என்பது கருதல் அளவையினை வற்புறுத்துபவரின் கருத்து. ஆனால், காணும் புகையிலிருந்து அதாவது அறிந்ததிலிருந்து அறியாததற்குச் செல்வது நிச்சயமில்லாத செயலாகும். கருதல் அளவையின் அடிப்படையாக அமைவது ஏதுவுக்கும் சாத்தியத்துக்கும் இடையே அமையும் உறவாகும். அதாவது புகைக்கும்

நெருப்புக்கும் இடையே உள்ள உறவு. சான்றாக, "இம் மலை தீயுடையது, புகையுடைமையால் எங்கு எங் குப் புகையோ அங்கு அங்குத் தீ" என்னும் கருதல் அளவையில் குறிப்பிட்ட இந்தப் புகை யும் சேர்ந்தே உள்ளது. இவ்வுண்மையை அரிசுடாட்டிலின் முக் காற்று உண்மை ( syllogism ) மூலமாகவும் விளக்க லாம். எ.கா. 'எல்லா மனிதர்களும் அழியக் கூடிய வர்கள். கோபு ஒரு மனிதன். எனவே கோபு அழியக் கூடியவன்' இதில் எல்லா மனிதர்களும் அழியக் கூடியவர்கள் என்று சொல்லும்போது அத்தொடர் கோபுவை விட்டால், எவ்வாறு பொருளுடையதாக இருக்கும். ஆகவே கருதல் அளவையானது ஐயந் திரிபு அற்ற தெளிவான உண்மையைத் தரவியலாத நிலையில் உள்ளது என்பது உலகாயத்தரின் முடிந்த முடிபு.

நம்பத்தகுந்த சான்றோர் கூறும் அனைத்துச் சொற் களும் பிரமாணமாகா. சான்றோர் சொற்களை ஐம் பொறிகளால் அறிந்து சரிபார்க்கக் கூடியவை. ஐம் பொறிகள் மூலம் சரிபார்க்க இயலாதவை என்ற இரண்டு பகுதியாகப் பிரிக்கலாம். சான்றோர் கூறும் கட்டு, வீடு, முக்தி போன்றவை ஐம்பொறிகள் மூலம் சரிபார்க்க இயலாதவை. ஆகவே இத்தகு சொற்கள் தெளிவான உண்மைக்கு அழைத்துச் செல்லா என்பது உலகாயத்தரின் அசைக்க முடியாத நம்பிக்கை. இது போலக் கருதுதல் அளவையை அடிப்படையாகக் கொண்ட ஆகம பிரமாணமும் நம்பக்கூடாததே. ஏனெனில் கருதல் அளவை உறுதியான உண்மை யைத் தராது.

சாருவாக அளவை இயலை ஒட்டி சாருவாகத் தத் துவக் கொள்கை அமையும். ஐம்பொறி மட்டுமே உண்மை அறிவதற்கு ஒரே வழி என்பதால், ஐம்பொ றிகளால் அறியக்கூடியவை மட்டுமே உண்மை என் பது உலகாயதரின் கொள்கை. கடவுள், ஆன்மா, சுவர் கம் உடல் பெறுமுன் அல்லது உடல் விட்ட பின் அமையும் வாழ்க்கை, கண்ணால் பார்க்கவியலாத கருமக் கோட்பாடு போன்றவை எல்லாம் நம்புதற் கியலாதவை. ஆகவே, பொருண்மை மட்டுமே இருக்கும் ஒரேபொருள் நிலம், நீர், தீ, காற்று என் னும் நான்கு பூதங்களால் இவ்வுலகம் அமைந்தது. வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவற்றின் சேர்க்கையில் புதிதாகச் சிவப்பு நிறம் தோன்றுவது போல இந்த நான்கு பூதங்களின் கூட்டுறவில் பூதங் களில் காணப்படாத அறிவு ( Consciousness ) தோன்று கிறது. ஆகாயத்தைக் கண்ணால் பார்க்கவியலாது. ஆகவே சாருவாகர் ஆகாயத்தை நீக்கி நான்கு பூதங் களையே கொள்வர்.

ஆன்மா என்பதும் கண்ணால் பார்க்கக்கூடிய உட லுக்கு அப்பாற்பட்டு இல்லை. ஆகவே, உடல் அழி யும்போது ஆன்மா என்று ஒன்று இருந்தால் அதுவும் உடனே அழியும். கடவுளைக் கண்ணால் பார்க்க இய லாததால், அவர் இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. கடவுள் ஒருவர் இருந்தால் அவர் பார்க்கக் கூடியவராக இருக்க வேண்டும். சுவர்க்கம், மோட் சம் என்பது நம்பக்கூடியதாக இல்லை. புதரில் இருக் கும் இரு பறவைகளைப் பிடிக்க கையில் உள்ள பறவையை விடுதல் போன்றது. கைமேல் இருக்கும் ஐம்பொறி இன்பங்களை விடுத்து நிச்சயமில்லாத கடவுள் பின்உலகத்தில் தரும் இன்பத்தை நம்புவது, கொடுக்கப்பட்டவற்றைக் கேள்வி கேட்காமல் ஒப்புக்கொள்ளக்கூடாது என்பது சாருவாகர் அளித்த கொடையாகும். ஆயினும் கருதல் அளவை, ஆகம அளவை என்பவை இல்லாமல் வாழ்க்கை நடத்த இயலாது. மணிமேகலை உலகாயத்தரை நோக்கி உம் தாய் தந்தையரை எவ்வாறு அறிவீர் என்று கேட் கிறார். இது போன்றவற்றில் நம்பித்தான் வாழ்க்கை நடத்த வேண்டியிருக்கிறது என்ற உண்மையையும் உணர வேண்டும்.

- ச. க.

**சாரூபம் :** சைவ சமயத்தின் நான்கு நெறிகளைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று கூறுவர். இந்நான்கு நெறிகளும் ஒன்றோடொன்று இயல்பா கவே இணைந்தது மட்டுமல்லாமல், ஒன்றை விட மற்றொன்றின் வளர்ச்சி, அதனை அநுட்டிப்போரின் ஆன்ம வளர்ச்சிக்கேற்ப அமைந்துள்ளது. இந்நான்கு நெறிகளுக்குத் தொண்டர்நெறி ( தாசமார்க்கம் ), மகன்மை நெறி ( சற்புத்திர மார்க்கம் ), தோழமை நெறி ( சகமார்க்கம் ), நன்னெறி ( சன்மார்க்கம் ) என்ற பெயர்களும் உண்டு. இந்நெறிகளை அரும்பு, மலர், காய், கனி ஆகிய நான்கு நிலைகளுக்கு ஒப்பிடுவர்.

முதல்நெறியான சரியைத் தாசமார்க்கம் என்பர். தாசன் என்றால் அடிமை அல்லது தொண்டன் என் பது பொருள். இந்நெறியில் ஆன்மா இறைவனுக்குத் தொண்டன் என்ற நிலையில் பணிபுரிகின்றது.

கிரியை இறைவனை அருசிப்பது, போற்றுவது போன்றவற்றைச் செய்வதாகும். இதனைச் சற்புத்திர மார்க்கம் என்பர். ஆன்மா புத்திரனது நிலையை யொத்த ஒரு நிலையினை அடைந்து இறைவனைத் தந்தையாகப் பாவித்துப் பணிகளைப் புரிகின்றது. அடுத்ததாகிய யோக நிலை ஒரு நண்பனது நிலை. இதனை சகமார்க்கம் என்பர். தோழனைப் போல் பக்தி பண்ணும் நெறி. இறுதியில் வருகின்ற ஞான மார்க்கத்தில் பதிஞானமே முக்கியமாகும். இது சன்மார்க்கம் எனப்படும்.

சுருங்கக்கூறின், உருவத் திருமேனியை நோக்கிப் புறத்தொழிலால் செய்யும் வழிபாடே சரியை. புறத் தொழில், அகத்தொழில் ஆகிய இரண்டாலும் அருவு ருவத் திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடே கிரியை. அகத்தொழிலால் மட்டும் அருவுருவத் திரு மேனியை நோக்கிச் செய்யும் வழிபாடே யோகம். புறத்தொழில், அகத்தொழில் இரண்டுமின்றி அறிவுத் தொழிலால் அம்மூன்று திருமேனியையும் கடந் துள்ள சொரூப நிலையினை வழிபடுதலே ஞானம்.

இந்த நான்கு நெறிகளைப் பின்பற்றுவதற்குக் கிடைக்கும் பலன்களாக முறையே சாலோகம், சாமீ பம், சாரூபம், சாயுச்சியம் என்பனவற்றைக் கூறுவர். சாலோகம் என்பது இறைவனது உலகத்தை அல்லது சிவனுலகத்தையடைதல். சாமீபம், இறைவனின் அண்மையை அடைதல் அதாவது சிவனண்மை. சாரூ பம், அதாவது இறைவனது ரூபத்தைப் பெறுதல். சிவனுருவாதல், சாயுச்சியம் எனப்படுவது இறைவ னோடு இரண்டறக் கலக்கும் நிலை அதாவது சிவானதல்.

சாரூபம் என்பது மூன்றாம் நெறியாகிய யோக மார்க்கம் அல்லது சகமார்க்கத்தினைப் பின்பற்றுவ தால் ஏற்படும் பலனாகும். அதாவது எண்வகை உறுப்புகளாலமைந்த சிவயோக நெறியினால் எய்து வது சிவவுருவம் அல்லது சாரூபம். எண்வகையான சிவயோக நெறியாதெனில் இயமம், நியமம், ஆச னம், பிராணாயமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பவனவாம்.

யோகம் என்ற வடமொழிச் சொல்லிற்குக் கூடுதல் அல்லது ஒன்றுதல் என்று பொருள். ஆன்மா இறை வனோடு ஒன்றுதலை இது குறிக்கும். ஆன்மா இறை வனோடு உடலால் ஒன்ற முடியாது. ஆனால் மனம் முதலிய அந்தக்கரணங்கள் மூலம் கூட முயலலாம். இம்முறையில் இறைவனைக் கூடுதல் யோகம் என்று கூறப்படும். இருப்பினும் இதுவும் அவ்வளவு எளிதான செயல்அன்று. அதற்கெனப் பல பயிற்சிகள் தேவையாகின்றன. எனவேதான் யோகம் என்பது எட்டுக்கூறுகளாகப் பகுத்துச் சொல்லப்படுகின்றது.

இந்த எட்டுவகைப் பயிற்சிகளில் இயமம் என்பது தீயொழுக்கங்களை அறவே விலக்குவதாகும். நிய மம் என்பது அறநூல்களில் கூறியபடி செய்தல். ஆச னம் என்பது மனக்கட்டுப்பாட்டிற்காகச் செய்யும் உடற்பயிற்சி. பிராணாயாமம் என்பது இயற்கையாக இயங்கும் மூச்சுக்காற்றினை ஒரே நெறியில் இயங்கச் செய்தல். பிரத்தியாகாரம் என்பது, தான் நினைத்த பொருளின் வடிவாதல். தாரணை என்பது மனதை அடக்கி ஒரு வழியில் நிறுத்துதல். தியானம் என்பது இறைவனை அவனது அருவுருவத் திருமேனியாகிய ஒளிவடிவினனாக எண்ணுதல். சமாதி என்பது அந்த எண்ணத்தில் தம்மை மறந்து இறைவனோடு ஒன்றி விடுதலாகும். மேலும், இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம் என்னும் நான்கும் யோகத்தில் சரியை என்றும், பிரத்தியாகாரமும், தாரணையும் யோகத்திற்கிரியை என்றும் தியானம் யோகத்தில் யோகம் என்றும், சமாதி யோகத்தில் ஞானம் என்றும் விரித்தும் விளக்கப்படும்.

சகமார்க்கத்தில் யோகப் பயிற்சிகளில் அவசியங் கள் வலியுறுத்தப்படுகின்றன. யோகப்பயிற்சிகளின் விளைவாக உடலை உறுதிப்படுத்தி, உள்ளத்தைக் கட்டுப்படுத்தி மனவெழுச்சிகளைச் சீராக்கிச் செம் மையான சிந்தனையையும், அதன் வாயிலாக உள் ளொளியையும் ஒளிரச் செய்யலாம். யோகநிலையில் இறைவனோடு தொடர்பு கொள்வதால் இதனைச் சாருபபதம் என்றும் கூறுவர். எனவே, சகமார்க்கம் என்றும் சாதனத்தினைப் பின்பற்றினால் வரும் பயனே சாரூபமாகும். அரசனை அணுகி வேண்டிய வற்றைப் பெறுவது மட்டுமின்றி, அரசனுக்குத் தோழ னாய் உள்ளவர். அவனைப் போலவே ஆடை அணி கலன்களை அணிந்து, அவனொடு ஒத்த நிலையில் இருந்து சிறந்த இன்பங்களைப் பெறுதல் போல, இறைவனுக்குரிய வடிவம், ஆடை அணிகலன் முதலியவற்றைப் பெற்றுச் சிறந்த இன்பத்தை நுகர் தலே சாரூபமாகும்.

- க.பா.

**சால்வரின் :** செர்மானிய ஐக்கியம் கி.பி. 1871 இல் ஏற்படுவதற்கு முதற்படியாக விளங்கியது சால் வரின் ( zollverin ) எனப்படும் பொருளாதார அல்லது சுங்க ஐக்கியம் ( Customs Union ) ஆகும். அந்நாட்டில் 1815இல் இருந்த 39 சிற்றரசுகளில் பெரியதும், வலிமை மிக்கதுமான பிரசியா ( Prussia ), ஆசுதிரியா (Austria ) ஆகிய இரு அரசுகளுக்குமிடையே ஆதிக்கப் போட்டி ஏற்பட்டபோது, செர்மானிய சிற்றரசு களைத் தம்முடைய ஆதிக்கத்தின் கீழ்க்கொண்டு வரவும், ஆசுதிரியாவைத் தனிமைப்படுத்தவும் செர் மானியின் இரும்பு மனிதர் பிசுமார்க்கு இதனைத் தோற்றுவித்தார். பிரசியாவின் எல்லைகளில் பன்னி ரெண்டு சிற்றரசுகள் இருந்ததாலும், அது தன்னுடைய பொருளாதார வளத்திற்கு அச்சிற்றரசுகளைச் சார்ந்தி ருந்ததாலும் அதற்கு இப்பொருளாதாரக் கூட்டுறவு இன்றியமையாததாக இருந்தது. ஆனால் ஆசுதிரியா இந்நாடுகளிலிருந்து தனித்துத் தொலைவில் இருந்த தாலும், பொருளாதாரத் தன்னிறைவு பெற்றிருந்ததா லும் தொடக்கத்தில் இதில் அக்கறை காட்டவில்லை.

வியன்னா மாநாடு 1815இல் எடுத்த முடிவின்படி உண்டாக்கப்பட்ட செர்மானிய இணைப்பரசில் ( Germanic Confederation ) இருந்த நாடுகளிடையே சுங் கத்தடைகளை நீக்கி, தங்குதடையற்ற வணிகக் கொள் கையைப் பின்பற்றி, தன்னுடைய பொருளாதா ரத்தை வளர்த்துக்கொள்ள பிரசியா விரும்பியது. எனவே, 1819இல் உள்நாட்டு சுங்கவரிகளை நீக்கி, வடக்கு செர்மன் சால்வரினைத் தொடங்கி, வெற்றி கரமாக நடத்தியது. பின்னர் 1882இல் தொடங்கப் பட்ட தெற்கு செர்மன் சால்வரின், மத்திய செர்மானி யவாணிக ஐக்கியம் இரண்டையும் 1834இல் பிரசியா இணைத்து செர்மன் சால்வரினை உண்டாக்கியது. உறுப்பு நாடுகளிடையே நிலவிய சுங்கத்தடைகள் நீக்கப்பட்டு, உறுப்பினரல்லாத நாடுகள் மீது ஒரே மாதிரியாக வரி விதிக்கப்பட்டது. சுங்க வரி அயல் நாடுகளின் எல்லைகளில் வசூலிக்கப்பட்டு, பொதுக் கணக்கில் வைக்கப்பட்டு, பின்னர் உறுப்பு நாடு களிடையே அவற்றின் மக்கட்தொகைக்கும், தொழில் வளத்திற்கும் ஏற்ற விகிதத்தில் பிரித்துக் கொள்ளப் பட்டது. அவ்வாண்டு பவேரியா ( Bavaria ), சேக்சனி ( Saxony ) ஆகிய இரு நாடுகளும் இதில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

இச்சுங்க ஐக்கியத்தில் 1844இல் அனைத்து செர்மா னிய நாடுகளும், ஆனால் ஆசுதிரியா, லக்சம்பர்க் ( Luxembrug), கனோவர் ( Hanover ), ஓல்டன்பர்க்கு ( Oldenburg ), இரு மெக்லன்பர்க்குகள் ( Two Mecklenbrugs ), மூன்று கேன்சியாடிக்கு ( Three Hanseatic Towns ) நகரங்கள் நீங்கலாக, உறுப்பினர்களாக இருந் தன. எனவே 1848இல் பிரசியா செர்மானியின் பெரும்பகுதியைத் தன்னுடைய பொருளாதார ஆதிக் கத்தின் கீழ்க் கொண்டு வந்தது. அதனை ஆசுதிரியா 1834இல் எதிர்க்கத் தொடங்கியது. ஆனால் பயன் எதுவும் கிட்டவில்லை. எனவே அந்நாட்டு அமைச் சரும், அன்றைய ஐரோப்பிய அரசியல் வல்லுநர் களில் ஒரு வருமான மெட்டர்னிக்கு ( Metternich ) சால்வரினில் தம் முடைய நாட்டைச் சேர்க்க முயற்சி செய்தார். பல சிற்றரசுகள் ஆசுதிரியாவைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென வற்புறுத்தினாலும் பிசு மார்க்கு அதற்கு இணங்கவில்லை. பின்னர் கனோவர் இதில் சேர்த்துக்கொள்ளப்பட்டு 1853இல் இந்த சுங்க ஐக்கியம் பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின் புதுப்பிக்கப்பட்டது. ஆசுதிரிய - பிரசியப் போர் 1866 இல் முடிவடைந்ததும் வடக்கு செர்மானிய இணைப் பரசு ( North Germanic Confederation ) ஏற்படுத்தப்பட் டது. அதில் சேர்ந்திருந்த 22 வடக்கு செர்மானிய சிற்ற ரசுகளிடையே புதிய உடன்படிக்கை ஒன்று ஏற்படுத் தப்பட்டது. எனவே 1867இல் புதிய சால்வரின் அமைக்கப்பட்டு, புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டு, ஓர் அவையும் (zellbundesrat or Federal Council of Customs), ஒரு பாராளுமன்றமும் ( zollparlament ) ஏற்படுத்தப்பட்டன. இவை இரண் டும் பிரசியாவின் ஆதிக்கத்தில் இருந்து வந்தன. செர்மெனிய ஐக்கியம் 1871இல் ஏற்பட்டதும், சால்வரின் அதில் ஐக்கியமாகியது.

- சி. இரெ.

**சாலோகம் :** சைவ சமயத்தில் வீடு பேற்றுக்குரிய சாதனங்களாகக் கூறப்படுபவை சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்காகும். இவற்றுள் ஞானத்தின் முடிந்த பயன் வீடுபேறாகும். சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றிற்கும் முடிவான பயன் ஞானமாகும். இடைநிலைப்பயனாக சாலோக, சாமீப, சாரூபம் என்பவற்றையும் அவை முறையே தரும். அமிர்தத்தை உண்பவன் அதனால் அடையும் முடிந்த பயன் நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு என்பன இல்லாது நெடுங்காலம் இருத்தலேயாகும்.

ஆயினும் அது பசியையும் தணித்தல் போல, சரியை முதலிய மூன்றினால் அடையும் முடிந்த பயன் ஞானமே ஆயினும் சாலோகம் முதலியவை அவற்றின் இடைநிலைப் பயன்களாகும்.

சரியை நெறியின் பயன் சாலோகம் ஆகும். கிரியை நெறியின் பயன் சாமீபமாகும். யோக நெறியின் பயன் சாரூபமாகும். ஞானத்தின் பயன் சாயுச்சியமாகும். சாலோகமாவது சிவபெருமானுடைய உலகத்தை அடைந்து ஓர் அரண்மனையில் பணிசெய்பவர்கள் அதன்கண் எங்கும் தடையின்றிச் செல்லும் உரிமை உடையவராய் இருத்தல்போல, அச்சிவலோகம் எங்கும் தடையின்றிச் செல்லும் உரிமை பெற்று அங்குள்ள இன்பங்களை நுகர்தலாகும்.

சாலோகம், சாமீபம், சாரூபம் என்ற மூன்றும் பதமுத்திகளாகும். சாயுச்சியமே பரமுத்தி எனப்படும். இங்குப் பதமுத்தி என்றால் என்ன, பரமுத்தி என்றால் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளல் நன்று. பிரகிருதிகாறும் உள்ள தத்துவங்களில் உள்ள பதவிகட்கு மால், அயன், இந்திரன் முதலியோர் தாம் செய்த தவத்தினால் விளைந்த புண்ணிய மிகுதியினால் தலைவர்களாய் இருப்பர். பிரகிருதிக்கு மேற்பட்ட தத்துவத்தில் உள்ள பதவிகட்குச் சிவபுண்ணிய மேலீட்டால் பக்குவமுற்றுச் சிவஞானத்தைப் பெற்ற சீகண்ட உருத்திரர், அனந்ததேவர், மந்திரமகேசுவர், அணுசதாசிவர் என்போர் தலைவர்களாய் விளங்குவர். அவர்களுள் சீகண்ட உருத்திரர் பிரளாயகவருள் பக்குவம் பெற்றுச் சிவஞானம் கைவரப்பெற்றவர். ஏனையோர் விஞ்ஞான கவருள் பக்குவம் பெற்றுச் சிவஞானம் பெற்றவர்கள். அவர்கள் சிவஞானத்தால் மலம் நீக்கப் பெற்றாராயினும், மலவாசனை நீங்கப் பெறாமையால் அதிகாரத்திலும் போகத்திலும் சிறிதே இச்சையுடையராய் இருப்பர். அதனால் அவர்கள் மேற்கூறிய தலைமையைப் பெற்றுப் புவனபதிகளாய் விளங்குவர். ஞானத்தால் பெற்ற உரிமை காரணமாக அவர்களெல்லாம் தடத்த சிவனோடொத்த உருவும், பெயரும், தொழிலும் உடையவர்களாயினும் ஆன்ம வர்க்கத்துட்பட்டவர்களே. இனிக் குணிருத்திரர் சகலவருக்கத்தினராயினும் சிவபுண்ணியத்தால் சிவனை உணர்ந்து அவனது உருவும், பெயரும், தொழிலும் பெற்றமையால் அவரது உலகமும் முக்தியுலகம் எனப்படும். அணுசதாசிவர், மந்திரமகேசுரர், அனந்த தேவர் என்பவரது உலகங்களை அடைந்து நிற்றல் அபரமுத்தியாகும். சீகண்ட உருத்திரர் உலகத்தை அடைதல் பதமுத்தியாகும். குணருத்திரர் உலகத்தை அடைதலும் ஒருவகைப் பதமுத்தியே யாகும்.

அபரமுத்தித் தானங்களம், பதமுத்தித் தானங்களும் ஒன்றல்ல பல. அத்தானங்களில் அடையும் நிலைகளும் பல. அவை சாலோகம், சாமீபம், சாரூபம் என மூன்று வகைப்பட்டிருக்கும்.

மேற்குறித்த அபரமுத்தி, பதமுத்தி உலகங்களில் சென்று எங்கும் தடையற இயங்கும் உரிமை பெற்றிருத்தலே சாலோகம் என்ற முத்திநிலையாகும். ஒருவர் இல்லத்தில் பணிபுரியும் அகம்படிமைத்தொண்டர் அவ்வில்லம் முழுவதும் தடையறச் செல்லும் உரிமை போன்ற இவ்வுரிமையைத் தருவது சரியைத் தொண்டு.

சாலோகம் என்று சொல்லப்படும் பதமுத்தியை அடைந்தோர் அங்கு நின்றே ஞானத்தைப் பெற்றுப் பரமுத்தியை அடைதல் சிறுபான்மை. பெரும்பான்மை அவர்கள் மீளவும் நல்ல சூழலில் நன்மக்களாய் பிறந்து ஆசான் மூர்த்தி வழியாக ஞானத்தைப் பெற்றுப் பின் பரமுத்தி அடைவர். பரமுத்தி என்பது சிவபெருமானோடு இரண்டறக் கலத்தலாகும். பரமுத்தி அடைந்தவர்கட்கு மீண்டும் பிறப்பு இல்லை.

- கோ. சூ.

**சிவாச்சாரியர்** : இவர்கள் சைவசமய குருமார் ஆவர். இவர்கள் பிராமணர்களல்லர். இவர்கள் பரம்பரையாக இறைவனுடைய திருவுருவத்தைத் தொட்டு வழிபடுதற்குரிய நியதியுடையவர்கள். அதனாலேயே இவர்களுக்கு முப்போதும் திருமேனி தீண்டுவார் எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தாமியற்றிய திருத் தொண்டத் தொகையுள் தொகையடிளார்கள் ஒன்பதின்மருள் ஒரு சாரராகப் பாராட்டினார். இவர்கள் ஒழுக்க நெறியிலும் சைவ ஆகம அறிவிலும் மேம்பட்டவர்கள். இவர்களுக்கு ஆதி சைவர் எனவும் குருக்கள்மார் எனவும் பெயர்கள் உள. தென்னாட்டில் சில பகுதிகளில் பட்டர் என்றும் இக்குருக்கள்மாரைக் கூறுவதுண்டு. சிவாச்சாரியர்களுள் பலர் தங்கள் பிராமணர்களல்லர் என்பதையும் தமிழர்களின் குருக்களாயிருத்தற்குத் தகுதியுடையோர் என்பதையும் உணராது தாங்களும் பிராமணர்களே எனக் கருதிக் கொண்டிருக்கின்றனர். பிராமணர்கள் தங்களுடன்

இவர்களைச் சேர்க்க விரும்புவதில்லை. ஆகவே, இவர்கள் இரண்டுமில்லாதவர்களாகியிருக்கின்றனர். இவர்கள் பொதுவாகத் தமிழர்களுக்கும் சிறப்பாகச் சைவர்களுக்கும் குருபீடத்திலமர்ந்து உபதேசம் செய்துவைக்கத் தகுதி வாய்ந்தவர்களாவர். இவர்கள் ஒழுக்கசீலராய் சைவ ஆத்ம அறிவின்மிக்கோராய்த் திகழ வேண்டும். பழநி ஈசான சிவாசாரியார் எடுத்துக்காட்டான சிறந்த குருநாதராவார். முற்காலத்துச் சிவாசாரியர் பலர் இவ்வாறே சிறந்து விளங்கியிருந்தனர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இராசராச சோழன் காலத்தில் சிவாச்சாரியர் பலரை அவன் போற்றிப்பாதுகாத்து வந்ததாகக் கல்வெட்டு கூறுகிறது. அருணந்தி சிவாச்சாரியார் என்பவர் புறச் சந்தான குரவர் நால்வருள் இரண்டாமவராவார். அவர் சிவாசாரிய மரபிலுதித்துத் தமிழறிவோடு வடமொழியறிவும் மிக்குடையவராய்த் திகழ்ந்தார். அதனால் அவரை மக்கள் சகலாகம பண்டிதர் என் அக்காலத்தில் போற்றிக் கொண்டாடினர் எனத் தெரிகிறது.

உமாபதி சிவாசாரியாரும் வடமொழியிலும், தமிழிலும் பல நூல்கள் செய்திருக்கிறார். அவரைத் தில்லைத் தீட்சிதர்கள் மூவாயிரவருள் ஒருவர் எனக் கூறுவதுண்டு. அவர் சிவாசாரியர் எனக் கூறப்பெறுவதாலும் முப்போதும் திருமேனி தீண்டப் பெறும் தன்மையைப் பெற்றிருந்ததாலும் தீட்சிதர்களும் இக்குருமார்களுள் ஒருவகையானராவர் எனக்கருதலாம். திரிலோசன சம்புசிவாச்சாரியார் என்பவர் சித்தாந்த சாராவனி என்னும் நூலை இயற்றியுள்ளார். சோம சம்புசிவாச்சாரியார் என்பவர் சோமசம்புபத்ததி என்னும் நூலை இயற்றியிருக்கிறார். சூரியனார் கோயிலாதீனத்தைச் சார்ந்த சதாசிவ சிவாசாரியார் என்பவர் சிவஞானபோத வடமொழிவியாக்கியானத்தைச் செய்திருக்கிறார் என்று தெரிகிறது. இவ்வாறு சைவத்தை வளர்த்த பெருமை சிவாசாரியார்களுக்குண்டு.

- இரா. ச.

**சிற்றெட்டகம் :** இப்பெயர் கொண்ட தமிழ்நூல் ஒன்று இருந்ததென்பதைக் களவியற் காரிகை உரை வழி அறியலாம். இது சங்க காலத்துக்குப் பின்னர் இயற்றப்பட்ட நூல் எனத்தெரிகிறது. இறையனார் அகப்பொருள் உரையாசிரியரும், இளம்பூரண அடிகளும், நச்சினார்க்கினியரும், யாப்பருங்கலக் காரிகை உரையாசிரியரும், நம்பியகப்பொருள் உரையாசிரியரும் இந்நூற் செய்யுள்களை மேற்கோள் காட்டியுள்ளனர். இந்நூல் சிற்றடக்கம் என்றும் சிற்றட்டகம் என்றும் வழங்கப்பெறும். சிற்றெட்டகம் என்பதே சரி என்பது ஆய்வாளர் கருத்து. சிற்றடக்கத்துக் குறிஞ்சிப் பாட்டு, சிற்றட்டகத்துப் பாலைப் பாட்டு என்று களவியற் காரிகையில் வரும் குறிப்புகளைக் கொண்டு இந்நூல் ஐந்திணையையுங் குறித்து எழுந்த நூல் எனக் கொள்ளலாம். ஐந்திணைகளுள் ஒவ்வொரு திணைக்கும் எட்டுச் செய்யுள்களாக நாற்பது செய்யுள்கள் கொண்ட சிறியதொரு நூல் இது. 'உள்ளார் கொல்லோ தோழி சிள்ளெனப், பருந்து வீழ்ந்தெடுத்த பைந்தலை யரவங், காதறு கவண தேய்க்குந், தீதுறு கள்ளியங் காடிறத்தோரே' என்னும் சிற்றெட்டகச் செய்யுள் இந்நூலாசிரியரின் புலமை நலத்திற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும்.

- சா. உ.

**சீவல மாற பாண்டியர் :** தென்பாண்டி நாட்டை ஆண்டு வந்த குறுநில மன்னர்களுள் சீவல மாற பாண்டியர் ஒருவர். இவர், பாண்டிய மரபினைச் சார்ந்தவர். இவருடைய தலைநகராக வீரவநல்லூர் என்ற இடம் அமைந்திருந்தது. இந்நகர் வீரைமாநகர் என்றும் வழங்கப்பெறும். நாடாளும் மன்னரான இவர் குடிமக்களிடம் அன்பு கொண்டு அரசாட்சி செய்ததுடன் அமையாது இராசை என அழைக்கப் பெறும் சங்கரநயினார்க்கோயில் என்ற திருத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சங்கர நாராயண சுவாமி என்ற இறைவனிடமும் தணியாத அன்பு கொண்டு வாழ்ந்துவந்தார்.

நாட்டுப்பற்று, இறைப்பற்று இவற்றுடன் தீராத தமிழ்ப்பற்றும் கொண்டிருந்தார். சங்கர நாராயண சுவாமி கோயிற் புராணம் என்ற பக்திச்சுவை ததும்பும் நூலின் பிற்பகுதி ஏழு சருக்கங்களையும் இச் சீவல மாற பாண்டியர் பாடியுள்ளான் என்ற செய்தி இவர் தமிழ்ப்புலமைக்குச் சான்றாக அமைகிறது என லாம். இந்நூலின் முதல் ஆறு சருக்கங்களைப் பாடியவர் முத்துவீரக் கவிராயர். சருக்கங்களில் இப்புலவர்

நாட்டுச் சிறப்பையும், நகரச் சிறப்பையும், இறைவ னின் திருவுருவச் சிறப்பையும் எடுத்து மொழிந்துள் ளார். நாடு, நகர வருணனைப் பகுதியுள் முத்து வீரக் கவிராயரின் கற்பனை வளத்தையும், அணி நலனை யும், சொல்லாட்சித் திறனையும் கண்டு களிக்கலாம்.

இந்நூலின் பிந்திய ஏழு சருக்கங்களைப் பாடிய சீவல மாற பாண்டியர் இறைவனுடன் தொடர்பு டைய செய்திகளையும், புராண வரலாறுகளையும் கூறி மகிழ்கின்றார். இந்நூலின் பிற்பகுதியினைப் பாடிய சீவல மாறபாண்டியரின் காலம் கி.பி.பதி னெட்டாம் நூற்றாண்டென்று அறிஞர்களால் கருதப் பெறுகின்றது. நூலுள் இடம்பெறும் சாற்றுக்கவி, சிறப்புப் பாயிரம் மூலம் சீவலமாற பாண்டியருக்குக் காலத்தால் முற்பட்டவர் முத்துவீரக்கவிராயர் என் பது புலனாகின்றது. பண்டைத் தமிழகத்தில் நாடா ளும் தமிழ் மன்னர்கள் பலர் தமிழ்ப்புலமையும் பெற் றிருந்தனர். அவ்வரிசையில் சீவலமாற பாண்டியரும் வைத்து எண்ணத்தக்கவர் ஆவார்.

- தா. ஈ.

**சுத்தானந்த பாரதியார்** : இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர் சுத்தானந்த பாரதியார் துறவை மேற்கொண்டு வாழ்ந்தவர். இவர் சிவகங்கையில் பிறந்தவர். சடாதரர், காமாட்சி என்னும் தந்தை தாயார்க்கு 1897ஆம் ஆண்டு நான்காவது பிள்ளையாக பிறந்த இவர் வேங்கட சுப்பிரமணியன் என்பது இயற்பெயராகும்.

மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் சமயப்பற்றும் இவருக்கு இளமை முதலே ஊட்டப்பெற்றது. இளமையில் இவரைத் தடுத்தாட்கொண்ட ஞான சித்தரே இவரை சுத்தானந்தர் என்ற பெயரிட்டு அழைத்ததாகக் கூறுகிறார். பெண்களைச் சக்தி வடி வில் காண்பதால் திருமணத்தை மறுத்து விட்டதாகக் கூறினார்.

இவர் தெய்வசிகாமணிப் புலவரிடம் தமிழ் பயின் றார். பூர்ணானந்த தாத்தாவிடம் யோகப் பயிற்சி பெற்றார். பூச்சி ஐயங்காரிடம் இசை பயின்ற பின்னர் மதுரை பொன்னுசாமிப்பிள்ளை, புதுக்கோட்டை அரிதீர்த்தம் அய்யர் ஆகியோரிடமும் முறையாக இசை பயின்றார்.

சகத்குரு சிருங்கேரி நரசிம்மபாரதி இவரைக் கவி யோகி பாரதி என வாழ்த்தினார். இரணமபகவானும் சுவாமி சிவானந்தரும் மகரிசி என்றனர். அரவிந்தர் யோகி எனப் போற்றினார். டி.கே. சிதம்பரநாத முத லியார் தேவகானரிசி எனப்போற்றினார். உ.வே. சாமிநாதய்யர் தவஞ்செய்த தவம் எனப்புகழ்ந்தார். தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம் கலாசிகாமணி என்ற பட்டம் தந்தது.

இவர் சிவகங்கை அரசர் பள்ளியில் நூலகராகவும், காட்டுப்புத்தூர் சமீன்தார் உயர்நிலைப்பள்ளியில் ஆசிரியராகவும் பணியாற்றினார். சாரணஇயக்கம், நாட்டு நலப்பணி, சமூகத்தொண்டு, தீண்டாமை விலக்கல், மதுவிலக்கு, உயிர்ப்பலி தவிர்த்தல் போன்ற நல்லியக்கங்களில் இவர் உள்ள ஈடுபாட் டோடு தொண்டாற்றி வந்தார்.

மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை இயக்கத்தி லும் கிலாபத் இயக்கத்திலும் பங்கு கொண்டார். தவம் செய்வதற்காக அரசியலை விட்டு ஒதுங்கி ஆன் மீகப் பணியினைத் தழுவினார். தஞ்சையில் வெளி யான, ‘சமரசபோதினி’ யின் ஆசிரியராகச் சிறிது காலம் பணியாற்றியுள்ளார். தொழிற்கல்வி என்னும் இதழையும் நடத்தினார். காஞ்சிபுரத்திலிருந்து வெளியான இயற்கை என்னும் இதழின் ஆசிரியராக வும் தொண்டாற்றினார். மலேசியா, சப்பான், பர்மா, சீனா, சுவிட்சர்லாந்து, சோவியத் ருசியா, பிரான்சு, செர்மனி, அமெரிக்கா, இலங்கை, அரே பியா போன்ற நாடுகளுக்குச் சென்றுள்ளார். இவர் தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி, தெலுங்கு, மலையாளம், வடமொழி ஆகிய மொழிகளை யெல்லாம் கருத்துடன் பயின்றவர். துறவு நிலை யினை மேற்கொண்டதால் பெரும்பாலும் பக்தியே இவர் தம் படைப்பின் மையக்கருத்தாக இருந்தது. கவியோகி தமிழில் பல இசைப்பாடல்களை இயற்றி யுள்ளவர். இவர் தம் **நடனாஞ்சலி** என்ற நாட்டிய நூலும் **காலத்தேர்** என்ற கவிதை நாடகமும் புகழ்பெற்றவை.

இவர் இந்து இசுலாமியர் ஒற்றுமைக்காகத் தொண்டாற்றியவர். அப்துல் கரீம் என்னும் பெயரில் இவர் மெக்கா சென்று இசுலாம் அறிவு பெற்று வந் தது குறிப்பிடத்தக்கது. பசுமலையில் பணியாற்றிய போது பைபினை முழுமையாகப் படித்தபின் அதை செய்யுள் வடிவில் ஏசுவின் வரலாற்றுடன் சேர்த்து

எழுதினார். பின்னர் போப்லி அதை நூலாக வெளியிட்டார். இவர் இமாலயம் சென்று பத்ரிநாத், கேதரிநாத், உத்திரகாசி போன்ற பல தலங்களைத் தரிசித்தார். அரவிந்தர், அன்னை திருவடியில் 25 ஆண்டுகள் மௌனத் தவமாற்றினார். பின் வடலூரிலும் அடையாறிலும் யோகாசமாசம் நிறுவினார். சர்வதேசக் குழந்தைகள் ஆண்டில், தொழிற்கல்வி இணைந்த குருகுலமாக 1979ஆம் ஆண்டு சுத்தானந்த பாரதி உயர்நிலைப் பள்ளியை நிறுவினார். இவர் 1990 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார். இவருடைய படைப்புகளின் எண்ணிக்கை 350க்கும் மேற்பட்டவையாகும். இவர் தம் **பாரதசக்தி மகாகாவியம்** என்னும் காப்பியம் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் இராசராசன் பரிசைப்பெற்ற முதல் நூலாகும்.

- என். சு.

**சுந்தரத்தோளுடையான் வானாதிராயன்:** இவன் கி.பி. பதினைந்தாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த வானர் குல வேந்தருள் குறிப்பிடத்தக்கவன். இவன் திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வானாதிராயனின் மகன். இவன் கி.பி. 1468 - 1488 தனது தந்தையின் ஆட்சிக்காலத்திலேயே இளவரசனாக அமர்த்தப்பட்டான். கி.பி. 1477இல் திருமாலிருஞ்சோலை நின்றான் இறந்தான். இளவரசனாக இருந்தபோதே சுந்தரத்தோளுடையான் மழவராயன் என்றே இவன் அழைக்கப்பட்டான். தந்தையின் இறப்பிற்குப்பின் இவன் சுந்தரத்தோளுடையான் வானாதிராயன் எனும் பட்டத்துடன் அரியணையேறினான். இவன் தாய் வழியில் மழவராயர் குலத்தவனாகவும், தந்தை வழியில் வானர்குலத்தவனாகவும் திகழ்ந்தான்.

இவன் பாண்டிய நாட்டின் வடபகுதியை விசயநகரத்தாருக்கு உட்பட்டு ஆட்சிபுரிந்து வந்தான். பின்னர் தனித்த ஆட்சியை மேற்கொண்டான். இரண்டாம் விரூபாட்சனும் ( கி.பி. 1465 - 1485 ) சாளுவ நரசிம்மனும் ( கி.பி. 1485 - 1490 ) இவனது உடன் காலத்து விசயநகர வேந்தராவர். சுந்தரத் தோளுடையானின் கல்வெட்டுகள் சீவில்லிப்புத்தூர், நெக்கோணம், குன்னத்தூர், மேட்டுப்பட்டி முதலான ஊர்களில் உள்ளன. இவன் தனது தந்தையைப் போன்று அழகர்கோயில் அழகர் மீது எல்லையற்ற பற்றுக் கொண்டிருந்தான்.

சுந்தரத்தோளுடையான் சீவில்லிபுத்தூர் ஆண்டாள் கோவிலின் அர்த்த மண்டபம் கருவறை ஆகியவற்றை அமைத்தான். இக்கோயிலின் மகா மண்டபமும் இவனால் கட்டப்பட்டதேயாகும். இவன் மேலும் பல திருக்கோயில்களுக்கு அறக்கொடைகள் விட்டுள்ளான். இவன் பல பட்டப்பெயர்களைப் பூண்டிருந்தான். இவற்றுள் மானபூசனன், வழுதி சேகரன், பாண்டிய குலாந்தகன், நவகண்டவரகண்டன், ராசவிபாடன், பரராச தண்டதரன், ராசபுசுகவன், கருடகேதநன், கம்பா குலோத்தமன், இராச குலசர்ப்ப கருடன், அழகர் தம் சிறுதத்தன் என்பன இவ்வேந்தனுக்கே உரியன. இவன் தனது தந்தையாரின் விருதுப்பெயர்களான சமரகோலாகலன், புவனேசுவீரன், மூவராயகண்டன், மதியாதார் மணவாளன், இராசமீசுவரகண்டன், வீர கஞ்சகன், பூபால கோபாலன், பட்டமானங்காத்தான், வீரப்பிரதாபன், மதுராபுரி மகாநாயகன், வேதியர் காவலன் முதலானவற்றையும் தனதாகக்கொண்டுள்ளான்.

இவனது விருதுப்பெயர்களைக்கொண்டு, இவன் பாண்டிய வேந்தனை வென்றவன் என்பதும், மறவர் நாடான சேது நாட்டை வென்றடிப்படுத்தினான் என்பதும் வைணவசமயப் பற்றில் மேம்பட்டு விளங்கியவன் என்பதும் புலனாகும். திருமலையான் திம்மாச்சி நாயக்கன் என்பான் இவனது சிற்றரசர்களுள் புகழ்மிக்கவன்.

- ம.இரா.த.

**சுவடியியல் :** சுவடியை அறிவதும் அறிவிப்பதும் சுவடியியலாகும். இது சுவடியைத் தேடித்தொகுப்பது, பாதுகாப்பது, படித்துணர்வது, படியெடுப்பது, இன்றைய அச்சில் பதிப்பது, வெளியிடுவது போன்ற பணிகளை உள்ளடக்கியதாகும். சுடிவ என்பது கையினால் எழுதப்பெற்ற எழுத்துக்களைத் தாங்கிய ஓலைச்சுவடி, காகிதச்சுவடி போன்ற அனைத்தையும் குறிப்பதாக இருந்தாலும், சிறப்பாக ஓலையில் எழுதப்பெற்றதையே சுவடி என்று குறிப்பது மரபாகும்.

எழுதுபொருளாகக் காகிதங்கள் - தாள்கள் பயன்பாட்டிற்கு வருமுன்னர் பனைஓலை, மரப்பட்டை, துணி, தோல், கல், களிமன், பலகை, மரப்பலகை போன்றவற்றிலேயே முன்னோர் எழுதி வரலாயினர். மேலைநாடுகளிலும் இவ்வரலாறு இவ்வாறே உள்ளது.

துணி, மரப்பட்டை ஆகியவற்றின் மீது கருப்பு, சிவப்பு, நீலம், பச்சை போன்ற வண்ண மைகளைத் தோய்த்த தூரிகையால் எழுதியுள்ளனர். ஆயின் ஓலைகள், களிமண் பலகைகள், கற்கள் போன்றவற்றின் மீது கூரிய உலோக ஆணிகளைக் கொண்டு பொறிக்கும் தன்மையில் எழுதியுள்ளனர். ஆழமாகப் பதிக்கப் பெற்ற அவை அழியாமல் நீண்டகாலம் வாழ்வன வாயின. கல்விக்கும் பிற கலைகளுக்கும் தெய்வமான கலைமகளின் கைகளில் அக்கமாலையுடன் ஓலைச் சுவடி காணப்படுவதும், வேதநாயகனாம் படைத்தற் கடவுள் பிரமன் கையில் ஏட்டுச்சுவடி இருப்பதும், உயிர்களின் அறம்பாவங்களை எழுதி வைக்கும் சித்திரகுப்தன் கையில் ஏட்டுச்சுவடியிருப்பதும் இந்திய மக்கள் ஏட்டுச் சுவடியாகிய பொத்தகத்திற்குக் கொடுத்த உயர்நிலையைக் காட்டுவனவாகும்.

தமிழ்நாட்டின் எழுதுபொருள்களாக மிகுதியும் பயன்பட்டன பனைஓலையும் எழுத்தாணியுமே. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், தேவார திருவாசகம், திவ்வியப்பிரபந்தம் போன்ற நூல்கள் எல்லாம் ஓலைச்சுவடியிலிருந்து கிடைத்தனவேயாம்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட அவற்றையெல்லாம் ஓலைத்தமிழ்தான் வழிவழியாகப் பாதுகாத்து இன்று கொடுத்துள்ளது. ஒவ்வொரு நூலும் ஆசிரியராலும், மாணவராலும், பிறராலும் பல படிகள் எடுக்கப்பெற்று பாதுகாக்கப்பெற்றன. அவை அழியும் சூழ்ல் ஏற்படும்போதெல்லாம் மீண்டும் புதிய ஓலைகளில் படியெடுத்து வைக்கப்பெற்றன. இப்படி வழிவழியாக ஓலைத்தமிழ் பாதுகாக்கப் பெற்றது.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஓலைச்சுவடிகள் பற்றிய செய்திகளைக் காலத்தால் முந்திய சங்கப் பாடல்கள் முதற்கொண்டே அறியமுடிகிறது. நூல்களை, செய்திகளைப் பனைஓலைகளில் எழுதிச் சேர்த்துக் கயிற்றால் கட்டிவைப்பதும், பின் அதனைப் படிக்கும்போது கயிற்றைப் பிரித்துச் சுவடியை விரித்துப் படிப்பதும் அன்றும் இருந்த முறையாக அகநானுறு உவமை நிலையில் சுட்டுகிறது ( கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார், பொறிகண்டழிக்கும் ஆவண மாக்கள் - அகம். 77 ). இவ்வுவமை ஓலைச்சுவடியைப் பானைகளில் பாதுகாத்ததையும் முத்திரையிட்டுப் பயன்படுத்திய செய்தியையும் தெளிவாக்குகிறது. சங்க இலக்கியத்தைத் தொடர்ந்து வரும் பல்வேறு இலக்கியங்களிலும் சுவடி பற்றிய பல குறிப்புகளைக் காணலாம். தடுத்தாட்கொண்ட புராணத்தில் கிழவேதியர் - சுந்தரர் வாதாடும் சூழலில் கிழிபட்ட ஓலை படிஓலை என்ற செய்தியும் பிறவும் உடன்படிக்கை, விற்றல் வாங்கல் பதிவு போன்ற ஆவணப்பத்திரங்கள்கூட ஒன்றுக்கு மேலும் படியெடுக்கப்பட்டன என்ற மரபை உணர்த்தக் காணலாம்.


**பனைஓலை :** பேச்சுத்தமிழ் ஒலிவடிவையும் ஓலைத்தமிழ் வரிவடிவையும் காத்து வந்திருக்கின்றன என்றால் அது மிகையாகாது. வரிவடிவை எழுதப்பயன்பட்ட பொருள்களுள் பனை ஓலைகளே முதலிடம் பெறுகின்றன எனலாம். இன்று காகிதத்தைப் பயன்படுத்துமளவுக்கு அன்று எழுதுபொருளாகப் பனைஓலைகள் பயன்பட்டுள்ளன.


பனை மரங்களில் பலவகைகள் காணப்படுகின்றன. எனினும் எழுதுவதற்குப் பயன்பட்ட பனை மூன்று வகையாகக் காணக்கிடைக்கிறது. 1. நாட்டுப் பனை ( தமிழகமெங்கும் காணப்படும் சாதாரண நுங்குப் பனை ), 2. கூந்தற்பனை ( அரிதாகக் காணப்படும் மெல்லிய அகலமான ஓலைகளைக் கொண்ட சீதாளப்பனை ), 3. யாழ்ப்பாணத்துப் பனை (இரண்டுக்கும் இடைப்பட்ட ஓலை வகையைக் கொண்ட பனை, யாழ்ப்பாணத்தில் அதிகமாகக் கிடைப்பது ). நாட்டுப்பனை எல்லாச் செய்திகளையும் இலக்கிய இலக்கண நூல்கள், மருத்துவம், சோதிடம், ஆவணம் போன்ற பலவற்றையும் எழுது வதற்குப் பரவலாகப் பயன்பட்டது. கூந்தற்பனை மிகப்பெரிய காவியங்கள், இலக்கணங்கள் ஆகியவற்றை மட்டுமே எழுதுவதற்குப் பயன்பட்டன. அருமையாகக் கிடைத்த இதன் விலை அதிகமாக இருந்திருத்தல் வேண்டும்.

இவ்வகைப் பனைகளின் பழுப்பு நிறம் கொண்ட பழுத்த ஓலைகளைக் கொண்டு வந்து அவற்றைப் பதப்படுத்தி, குறுகிய அடி நுனிப்பகுதிகளை வெட்டி, நரம்பைக்கிழித்து ஒரே அளவாக 2, 3, 5 அங்குலம் முதல் 36, 40 அங்குலம் வரை ( நீளம் ) வெட்டி வைத்துக்கொள்வர். இதனை ஓலை வாருதல் என்பர். இவ்வாறு செய்யப்பட்ட வெள்ளோலைகள் கயிறு கோப்பதற்காக வட்ட வடிவத்தில் துளையிடப்பெறும். சிறு சுவடியாயின் மூன்றிலொரு பாகத்தில் இடப்பக்கம் துளை அமைக்கப்பெறும். நீண்ட சுவடியாயின் மையத்தைக் கணக்கிட்டு இடப்பக்கமும் வலப் பக்கமுமாக இரு துளைகள் ஓலையின் நடுவில்



மிகப் பழமையான பனையோலைச்சுவடிகள்
The oldest Palm leaf manuscripts





சிதலமடைந்த காகிதச் சுவடி
Damaged paper manuscript

ஒரு மணிபோன்ற சுவடியிலுள்ள விபரம்
Details of a bead like manuscri



கத்தி வடிவிலுள்ள சுவடி
Knife-shaped manuscript

அமைக்கப்படும். இதழ்கள் ஒன்று சேர்ந்திருப் பதற்காக அத்துளை வழியே கயிறு கோத்து ஓலைகள் சரியா வண் ணம் கயிற்றின் மேற்பக்கம் பனை ஈர்க்குத் துண்டொன்றினையோ, சோழியையோ, காகினையோ முடித்து வைப்பது வழக்கம். இது கிளிமூக்கு எனப்படும். பின் ஏடுகளை ஒன்று கூட்டி இவ்வாறு நறுக்கப்பட்ட ஓலைகளின் ஏடுகளின் துளைவழியே வரும் கயிற்றால் ஏட்டின் அடிமுதல் நுனிவரை சுற்றிக் கட் டப்பெறும். இதுவே சுவடி என்றும் சுவடிப்புத்தகம் என்றும் கூறப்படும். சுவடி என்பது சுவடு ( பொறிப்பு, பதிவு ) உண்டாக்கப் பெற்றது. பெறுவது என்னும் பொருள்படுவதாகும். பொத்தகம் என்பது புத்தகமாயிற்று என்பர். ( இணை யாகச் சேர்த்து வைப்பது சோடிப்பு எனப்படும் ) எழுதுவதற்காகத் தயாரிக்கப்பெற்ற இவ்வோலை வெள்ளோலை, வெற்றோடு எனப்படும்.

இரு துளையிடப்பெறும் சுவடிகளில் இடப்பக் கம் நூற்கயிறு கோத்து வலப்பக்கம் மெல்லிய குச்சி யையோ, இரும்பு, செம்பு, பித்தளை முதலான உலோகத்தால் ஆன ஆணியையோ செருகிச் சுவடி தொய்யாமல் பாதுகாக்கப்பெறும். இந்த ஆணியின் தலையில் குமிழ் போன்ற கொண்டை அமைக்கப் பெற்றிருக்கும். இந்த ஆணி நாராசம் எனப்படும். நாராசம் செருகும் சுவடிகளில் இடப்பக்கம் கோத்த நூல் நாராசத்தின் கொண்டையில் முடிக்கப்பெறும்.

சுவடியின் இருபுறமும் எழுத்துள்ள ஏடுகளை சிதையாவண்ணம் காப்புக்காகச் சில வெற்றேடுகள் சேர்க்கப்பெற்றிருக்கும். இவை காப்பேடுகள் எனப் பெறும். காப்பேடுகளுக்குமேல் இருபுறமும் அதே அளவான மரச்சட்டங்கள் துளையிடப் பெற்று சேர்க் கப்பெறும். இவை இக்காலப் புத்தகங்களின் அட் டைக்கட்டு போல நூல்களைப் பாதுகாக்க வல்லன. பனைமட்டை, மூங்கில் பட்டை, தேக்குச்சட்டம், உலோகத் தகடு போன்ற பலவற்றாலும் இது அமைக் கப்பெறும். இத்தகு காப்புச் சட்டங்கள் கம்பை என் றும் அழைக்கப்பெறும். சுவடிக்குக் காப்பாக அமை யும் இவ்வகைச் சட்டங்களில் அழகிய பூ வேலைப் பாடு, தெய்வங்களின் உருவங்கள், நூலின் சில காட் சிகள் போன்றவை பொறிக்கப்பட்டிருத்தலும் உண்டு. யானைத் தந்தங்களால் ஆன காப்புச் சட்டங் களும் உள்ளன. ஓலைகளின் ஓரங்களில் பொன், வெள்ளி போன்ற உலோகங்களின் வண்ணப்பூச்சு சில சிறப்பான சுடிவகளில் காணப்படுகின்றன.

**எழுதும் முறை :** மேற்கூறியவாறு தயாரிக்கப் பெற்ற ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுத்துக் கள் பொறிக்கப்படும். அடிபருத்தும் நுனி சிறுத்தும் கூராயுள்ள எழுத்தாணியே பரவலாகப் பயன்பட்ட தாகத் தெரிகிறது. இவை பெரும்பாலும் இரும் பினால் செய்யப் பெற்றவையே. அடி பருத்து நுனி சிறுத்த ஆணி குண்டெழுத்தாணி எனப்படும். ஓலை களை நறுக்குவதற்காகத் தலையில் கத்தியுடன் கூடிய எழுத்தாணியும் பயன்படுத்தப்பெற்றது. இது வார் எழுத்தாணி எனப்பட்டது. இத்தகு எழுத்தாணி களைக் கொண்டு ஓரங்களில் இடம் விட்டு இடக் கையால் சுவடியைப் பிடித்துக்கொண்டு வலக் கையால் எழுத்தாணியைக் கொண்டு எழுத்துக் களைப் பொறிப்பர். இன்று அழிந்துவிட்ட இக்கலை அரிய கலையாகவே கருதப் பெறும். இன்றைய தட் டச்சுப் பொறியில் எழுத்து வரிகள் பொறிக்கப் பொறிக்கக் காகிதம் நகர்ந்து செல்வது போல ஓலை யும் விரலசைவால் நகர, தொடர்ந்து கையை எடுக் காமலே எழுதுவதுதான் மரபாகும். மெல்லிய ஓலை களிலும் இருபுறமும் இப்படித் தொடர்ந்து எழுதப் பெறும். ஓலையின் இடப்பக்கம் நூற்பெயர், ஆசிரியர் பெயர் முதலியன எழுதப்பெறும். நூலின் இறுதியில் நூலாசிரியர் பெயர், ஏடெழுதியோர் பெயர், காலம், நூலுடையார் விவரம் போன்ற பிற குறிப்புகள் எழுதி வைக்கப்பெறும். நூல் முழுவதும் நிறுத்தற் குறியீடுகள் இன்றி செய்யுளாயினும் உரை யாயினும் ஒருசேரத் தொடர்ந்து எழுதப் பெறும். இன்றைய பத்திப் பிரிவு, சீர் அடிப்பிரிவு ஆகியன சுவடியில் இரா.

மிகக்கூரிய எழுத்தாணி கொண்டு ஓலைகளில் தொடர்ந்து எழுதுவதற்குச் சிறந்த பயிற்சி வேண்டும். பயிற்சி பெறாதவர்களால் ஏடுகள் கிழிந்தும், துளை பட்டும் சிதைந்துவிடும். நூலாசிரியர் தாமே எழுது வது, நூலாசிரியர் சொல்லிக் கேட்டு மாணவர் எழுது வது என்ற இருமுறைகள் சுவடி எழுத்தில் காணப்படு கின்றன. இவை பயில்முறை எழுத்தர் வகையின. ஒரு நூலைப் பல படிகள் எடுத்துப் பயன்படுத்தும்போது கூலி பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுக்கும் தொழில் முறை எழுத்தர்களும் அக்காலத்திலிருந்தனர். பெண் பாலரும் சுவடி எழுதுவதில் சிறந்திருந்தனர். துறவி களையும், கன்னிமார்களையும், அடிமைகளையும் பைபிள் போன்ற நூல்களைப் படியெடுக்குமாறு பணித்த வரலாற்றை மேலைநாடுகளில் காணலாம்

இங்கேயும் சமணத்துறவியர் முதலானோர் சாதுர் மாச விரதத்தின் போது ஓரிடத்தே தங்கிக் கல்விப் பணியாற்றியபோது பல நூல்களை எழுதிக் குவித்திருக்கின்ற வரலாறு காணப்படுகிறது.

ஏடுகளில் எழுதும்போது வரிகள் கோணாமல் நேர்நேராக ஒன்றிற்கொன்று சம இடைவெளியுடையனவாய் எழுதி வைத்திருக்கின்ற அமைப்புமுறை வியக்கச்செய்யும். பாடல்கள் தொடர்ந்து எழுதப் பெற்றிருந்தாலும் ஒவ்வொரு பாட்டின் முடிவிலும் அப்பாட்டுக்குரிய எண் எழுதப்பெற்றிருக்கும். வடிவங்கள் ஒருமைப்பாடுடைய உருவம் பெற்றனவாய் சுவடி முழுவதும் காணப்படும் சிறப்பு போற்றத்தக்கதாயிருக்கும்.

ஓலையில் எழுத்தாணி கொண்டு கீறப்பட்ட எழுத்துக்கள் தெளிவாகத் தெரியா. அவை எளிதில் படித்துணரமுடியாதபடி இருக்கும். அவற்றை விளக்கமாக அறிந்துகொள்ள மஞ்சள், கோவையிலைச்சாறு, கரி முதலியன கொண்டு தயாரிக்கப்பெற்ற மை போன்றவற்றை ஏடுகளின் மீது பூசி வைப்பது மரபாகும். வண்ணக்குழம்பு பூசப்பெற்றப்பின் வெள்ளைத்துணியால் ஏட்டின் பக்கங்கள் துடைக்கப்பெறும். இதனால் அக்கலவை எழுத்துப் பொறிப்புகளில் படிந்து எழுத்துகளை நன்கு பளிச்சிடச்செய்யும். எளிதில் படித்துணர வாய்ப்பாகவும் அமையும்.

**சுவடி வகை :** எழுதாத சுவடிக்கட்டு வெற்றோலை, வெள்ளோலை எனப்பட்டது போலவே எழுதப்பெற்ற சுடிவகளும் பலவகைகளில் பெயர் பெற்றிருந்தன. இலக்கணம், இலக்கியம், மருத்துவம், சோதிடம் போன்றவற்றைத் தாங்கிய சுவடிகள் அந்தந்த நூற்களின் பெயராலேயே அழைக்கப் பெற்றன. தொல் காப்பியச்சுவடி, நற்றிணைச்சுவடி, தேவாரச்சுவடி என அவை நூற்பெயராலேயே அழைக்கப்பட்டன. சில, பொதுப்பொருளால் சோதிடச்சுவடி, மருத்துவச் சுவடி எனப்பட்டன. சில, தேரையர் சுவடி, அகத்தியர் சுவடி என நூலாசிரியர் பெயரால் அழைக்கப்பட்டன. சில அவை சார்ந்த இடப் பெயர்களால் திருவாடுதுறைச் சுவடி, மதுரைச் சுவடி எனப்பட்டன.

இவையன்றி தாங்கிய செய்திகளுக்கேற்ப பெயர் பெற்ற சுவடிகளும் உண்டு. அரச ஆணை தாங்கிய சுவடி நீட்டோலை எனப்பட்டது. கடித அமைப்புடைய சுருண்ட ஓலைகள் முடங்கல் எனப்பட்டன. அவை அரக்கினால் முத்திரையிடப் பெற்றிருந்தன. சுவடிகளை அடுக்கி எடுத்துச் செல்லும் பை சுவடித் தூக்கு எனப்பட்டது. தூக்குச் சுவடிகள் பெரும்பாலும் மாணவர்களாலேயே பயன்படுத்தப் பெற்றன. கொடுக்கல், வாங்கல் பிற உடன்படிக்கைகள் போன்ற பதிவுகளைக் கொண்ட சுவடிகள் ஆவணச்சுவடிகள் எனப்பட்டன.

கற்றாரிடையே பெரிதும் பயின்ற இலக்கிய இலக்கண நூல்கள் முதல் பாமரரிடையே பயின்ற ஆவணங்கள், மருத்துவ சோதிடக் குறிப்புகள், சமய வரலாற்றுச் செய்திகள், நாட்டுப்புற இலக்கியங்கள் போன்ற பலவும் ஓலைகளில் எழுதப்பட்டன. கற்றாரிடையே பயின்ற இலக்கண இலக்கிய நூல்களைப் பெரும்பாலும் கற்றறிந்த மாந்தரே ஏட்டிலும் எழுதினர். ஆதலின் அவற்றுள் பிழைகள் குறைந்த செம்மொழியைக் காணலாம். ஆயின், பிறவற்றில் பிழைகள் மிகுந்திருப்பிதுடன் வழக்குச் சொற்கள், பிழைபட்ட வடிவங்கள் போன்றன காணப்படும். குறிப்பாக, ஆவணங்கள் நாட்டுப்புற இலக்கியங்களில் பேச்சுத்தமிழுடன் அவ்வக்காலத்து அரசியல் மொழிச்சொற்களும் வழக்குகளும் காணப்படும்.

இத்தகு சுவடிகளையெல்லாம் ( சுவடி எழுதுவதம் படிப்பதும் ) ஆங்கிலேயர் ஆட்சியின் பிற்பகுதியில் கூட புழக்கத்திலிருந்தன. ஆங்கில அரசின் முத்திரையுடன் கூடிய ஆவணச் சுவடிகள் பல தமிழ்ப்பல் கலைக் கழக சுவடிக்காப்பகத்திலும், பிறவிடங்களிலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஓலையில் எழுதும் பழக்கம், ஏட்டைப் படிக்கும் பழக்கம் மறைந்துவிட்ட இன்றும், பிறந்த குழந்தையின் சோதிடக்குறிப்பைப் பனை ஓலையில் எழுதுவதை மங்கலமாகக் கருதும் வழக்கம் சிற்சில இடங்களில் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**சுவடி எழுத்துகள் :** சுவடிகளில் காணப்படும் எழுத்துகளும் இன்று அச்சு நூல்களில் காணப்படும் எழுத்துகளும் பெரும்பான்மையும் ஒத்திருக்கின்றன. எனினும், அச்சு நூல்களைப் படிப்பதுபோல சுவடிகளைப் படித்துவிட முடியாது. பல்வேறு இடத்து பல்வேறு காலத்துத் தோன்றிய அச்சு நூல்கள் ஒன்று போலவே இருக்கின்றன. சுவடிகளோ ஒரே வகையான கையெழுத்தைப் பெற்றிருப்பதில்லை. ஏடெழுதுவார் பலராதலின் பலகாலத்தவராதலின், பல்வேறு

இடங்களைச் சேர்ந்தவராதலின் ஒருவர் கையெழுத்துப்போல மற்றொருவர் கையெழுத்து அமைவதில்லை. ஏடெழுதியோர் எந்தெந்த எழுத்தை எத்தகைய வடிவத்தில் அமைத்துச் செல்கிறார் என்பதும் சுவடியை முழுமையாகப் பார்த்துத் தெளிய வேண்டுவதாம்.

சுவடிகளில் காணப்படும் எழுத்துகளும் வரிகளும் ஒரே சீரான அமைப்பில் அழகுறக் காணப்பட்டாலும் அவற்றைப் படிப்பது கடினமாகவே இருக்கும். சொற்களுக்கிடையே இடைவெளியிராது, பாடல்களாயின் சீர்களுக்கிடையே இடைவெளியின்றித் தொடர்ந்து எழுதப்பெற்றிருக்கும். முற்றுப்புள்ளி, காற்புள்ளி போன்ற நிறுத்தற்குறியீடுகளும் பத்திப் பிரிவுகளும் கூட தொடர்களிலும் பாடல்களிலும் அமைந்திரா. ஏடுகளில் புள்ளிபெறும் மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியிடப் பெறுவதில்லை என்பது சிறப்பாகக் கவனிக்கத்தக்கதாம். ஓர் எழுத்து மெய்யா, உயிர்மெய்யா என்பது எளிதில் உணரக்கூடியதாக இருக்காது.

சிவம் இது சிவம என்றுதான் சுவடியில் எழுதப் பெற்றிருக்கும். எகர ஒகரங்கள் குறில் நெடில் வேறுபாடின்றி எழுதப்பெற்றிருக்கும். ஒடு, ஓடு, இவை இரண்டும் ஒடு என்றுதான் காணப்படும். முட்டையும் மூட்டையும் ஒன்றுபோலவே முட்டை என்றுதான் இருக்கும். அவ்வாறே ஒற்றைக்கொம்பு (ெ), இரட்டைக்கொம்பு (ே)களுக்கிடையே மாறுபாட்டைக் காணமுடியாது. பெறு, பேறு இவை இரண்டும் பெறு என ஒரேமாதிரியாகத்தான் எழுதப்பெற்றிருக்கும். சூழலையும் பொருட் பொருத்தத்தையும் ஒட்டித்தான் வேறுபடுத்திப் படிக்க வேண்டும். ‘ர’ வுக்கும் நெடிலோசை குறிக்க ‘ா’ லுக்கும் வேறுபாடு இருக்காது. சரடு, சாடு இவையிரண்டும் சாடு என்றுதான் எழுதப்பெற்றிருக்கும்.

வல்லின றகரமும் நகரமும் நுட்பமான வேற்றுமையே பெற்றிருக்கும். சில நேரங்களில் ர, ற, ந இவை மூன்றும் ‘ா’ எழுதப்பெற்றிருக்கும். ஐகாரத்தைக் குறிக்க இடப்பெறும் ‘ை’ இரட்டைச்சுழிக்கும் இரண்டு சுழி ‘எ’ வுக்கும் வேற்றுமை காண்பது அரிது. இவ்வாறே ல, வ, க, ச, த போன்ற எழுத்துகளும் வேற்றுமையின்றியே மிக நுணுகிய வேறுபாடுடனேயே எழுதப்பெற்றிருக்கும்.

‘இலஙகை வெநதன இருபது தொளிரநலங்கொழ பாததொருவிலூனாரினான மலஙகு பாயவயல குள றதவஞசுளிவலஞகொழவாரடியென தலைமெலவே’ இது ஏட்டில் காணப்படும் வடிவமாகும். இதனைக் கீழ்க்காணுமாறு படித்துணர்ந்து அச்சில் பதிப்பிக்க வேண்டும். அப்போதுதான் எல்லோருக்கும் எளிதில் விளங்கும்.

இலங்கை வேந்தன் இருபது தோளிற
நலங்கொள் பாதத் தொருவிரல் ஊன்றினான்
மலங்கு பாய்வயல் சூழ்ந்த வலஞ்சுழி
வலங்கொள் வாரடி என்தலை மேலவே

( தேவாரம் 5 : 66 : 10 )

**சுவடித்தமிழின் குழப்பம் :** சுவடிகள் பல்வேறு இடங்களில், பல்வேறு காலங்களில், பல்வேறு சூழல்களில் பல்வேறு தரமுடைய அறிவினரால் எழுதப்படுவனவாம். நூலாக்குகின்ற ஆசிரியரே அல்லாமல் அவரிடம் பயிலும் மாணவரும், அவர் எழுதியதைப் பார்த்துப் பிறரும் எழுதுவர். ஒருவர் சொல்லக்கேட்டு மற்றவர் எழுதும் போது ஓர் ஒலியை மற்றொரு ஒலியாக மயங்கிக்கொண்டு ர, ற, ன, ந, ண, ல, ள, ழ எழுதிவிடுவதும் உண்டு. எழுதப்படுகின்ற வட்டாரங்களுக்குத்தக, தொழில்முறை எழுத்தர் பயில்முறை எழுத்தர்களின் மொழித்திறனுக்கேற்ப சொற்களும் தொடர்களும் வழுக்களுடன் காணப்படும். ர, ற மயங்கிய நிலையிலும் ( தோளிர - தோளிற ), ள, ழ மயங்கிய நிலையிலும் ( வலஞ்சுளி - வலஞ்சுழி, கொள்வார் - கொழ்வார் ) பல்வேறு வகைப்பட்ட பிழைகளுடன் காணப்படும். இத்தகைய மொழிப்புண்மைகளையும் வழுக்களையும் களைந்து படித்துணரவேண்டும். இவ்வாறே இரட்டைச்சுழி ன, ண, ல, வ, கு, டு, ரு, மு, ழு, து, லு, று, நு, னு, சு, அ, கு, ஆ, க, த, ச போன்றனவும் ஒன்று போலவே தோன்றுமாறு எழுதப்பட்டிருக்கும்.

சில சுவடிகள் மெய்யெழுத்துகளுக்கு அடுத்து வரும் இன எழுத்தைக் கூட்டெழுத்தாக்கிக் காட்டுகின்றன. பத்து, இதில் த், து இவை ங என்றும் சுக்கு இதில் க், கு இவை கு என்றும் எழுதப்பெற்றிருத்தலைக் காட்டுகின்றன. இகரத்தின் நெட்டெழுத்தை ஈ என்று பல சுவடிகள் காட்டியபோதும் இ என்ற வடிவிலும் சில சுவடிகளில் காணப்படுகின்றன. இவ்வாறே சிலவகைக் குறியீடுகளையும் அன்னைய சுவடிகளில் காணலாம். ஆ என். ஆ [illegible] ம் என்பது மாதம் எனவும் பயன்படுத் ,ப்படுகின்றன. எ[illegible]களும்

அளவைகளும் தமிழ் எண்களாகவும், தமிழ் அளவைகளாகவும் குறிக்கப்பட்டிருக்கும். முற்றுப்புள்ளிக்குப் பதிலாக குறியீடுகள் காணப்படும். இவற்றையெல்லாம் நன்குணர்வதுடன் ஏட்டின் வரிவடிவ அமைப்பைத் தெளிந்து கொண்டுதான் சுவடித்தமிழை அணுக முடியும்.

நூலின், சுவடியின் காலத்தை அறுதியிடுவதிலும் சுவடிகள் மயக்கமூட்டும் நிலையிலேயே காணப்படுகின்றன. அச்சு நூல்களில் காணப்படும் எழுத்துகளுக்கும் ஓலைச்சுடிவகளில் காணப்படும் எழுத்துகளுக்கும் பெரிதும் ஒப்புமை காணப்படினும் எழுதுகின்ற முறையிலும் படித்துணரத் தேவைப்படும் மொழியறிவிலும் அவை வேறுபட்டுள்ளன. ஓலையில் காணப்படும் எழுத்துக்கள் கிட்டத்தட்ட கல்வெட்டு வடிவங்களை நினைவூட்டுகின்றன. எனினும், கல்வெட்டுகள் தோன்றிய காலத்தை - அவை வெட்டப்பட்ட காலத்தைத் தெளிவாகக் காட்டுவன. அசோகர் கல்வெட்டு அசோகர் காலத்தையும், பல்லவர் கல்வெட்டு பல்லவர் காலத்தையும், சோழர் கல்வெட்டு சோழர் காலத்தையும் காட்டுவனவாய் அமைந்துள்ளன.

ஓலைச்சுவடிகளோ நூல் தோன்றிய காலத்தை அவ்வாறு காட்டுவன அல்ல. சங்கப்பாடல்களைக் கொண்ட சுவடி, அச்சுவடியெழுத்தைச் சங்க காலத்ததாகக் காட்டாது. திருஞானசம்பந்தர், அப்பர் பாடல்களைக் கொண்ட தேவாரச் சுவடிகள் அவர்தம் காலத்தனவாக இருத்தல் இல்லை. சுவடியில் படியெடுத்த காலத்தை வேண்டுமானால் பிற்குறிப்புகளால் அறிதல் கூடும். கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டு காலந்தோறும் எழுதப்படுவனல்ல. ஒரேயிடத்து ஒரே முறை எழுதப்படுவனவே அவை. ஆயின், சுவடிகளோ அவை பழமையாக பழமையாகக் காலந்தோறும் புதுப்புதுச் சுவடிகளில் பல்வேறு இடங்களில் படி எடுத்துப் போற்றப்பட்டு வந்துள்ளன. எனவே, கல்வெட்டுகளில் காணப்படும் வரிவடிவ வளர்ச்சிப் போக்கை சுவடிகளில் காணஇயலாது.

சுவடி எழுத்துக்கள் நானூறு ஆண்டுகால வரிவடிவத்தை மட்டும் காட்டவல்லன. நானூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட ஓலைச்சுவடியின் வரிவடிவம் பற்றி அறியக்கூடவில்லை. காரணம் 500 ஆண்டுக்கு முற்பட்ட சுவடி கிடைக்காமையே எனலாம். தமிழகத்தின் தட்பவெப்ப நிலைக்குப் பனை ஓலைகள் 400 ஆண்டுகளுக்கு மேல் வாழ்வது கடினம். பழைய சுவடியைப் பார்த்து புதிய சுவடியில் படி எடுப்பவர் தாம் படியெடுக்கும் காலத்தைக் குறிப்பிடாமல், பழைய சுவடியிலுள்ள காலக்குறிப்பையும் சேர்த்துப் படியெடுத்துவிட்டால், காலக்கணிப்பில் மேலும் குழப்பம் ஏற்படும். இத்தகு குழப்பங்களையெல்லாம் உணர்ந்து தெளிதல் சுவடியின் முதற்படியாகும்.

**பாதுகாத்தலும் பதிப்பித்தலும் :** எழுதுப் பொருளாகக் காகிதம் பயன்பாட்டிற்கு வந்த பிறகும் - அச்சிட்ட நூல்கள் பரவலாகக் கிடைத்த பின்பும் கூட ஓலைச்சுவடிகளில் எழுதிப்படிக்கும் பழக்கம் பலரிடம் முன்னாளில் இருந்தது. ஆயின், இன்றோ சுவடிக்கலை முற்றிலும் அழிந்துவிட்ட நிலையில் காணப்படுகிறது. சுவடிகள் அருங்காட்சியகப் பொருள்களாகிவிட்டன. சுவடிகள் பழமைக்கும் வேறு சிதைவுக்கும் உட்பட்ட காலங்களில் எல்லாம் அவற்றைப் புதிய சுவடியில் படியெடுத்து போற்றும் வழக்கம் அடியோடு நின்றுவிட்டது. பயில்வாரும் போற்றுவாரும் அருகிய நிலையில், சுவடிகள் மூலை முடுக்குகளில் பெட்டி பேழைகளில் அடைபட்டுப் பரணில் சிறைபட்டன. கவனிப்பாரின்றி (ஆண்டுக்கொருமுறை கூட எடுத்துப்பார்க்க முடியாத நிலை) முடங்கிய சுவடிகள் தட்பவெப்பத்துக்கும், பூச்சி புழுக்களுக்கும் கரையான்களுக்கும், எலிகளுக் கும் இரையாயின. சுவடியின் அருமை உணராத மக்கள் - இனி வெளிவரவேண்டிய நூல்களும் அவற்றின் உள்ளனவே என்பதை உணராத மக்கள் அவற்றை ஆற்றிலிட்டும், நெருப்பிலிட்டும் அழித்து வருகின்றனர். இவற்றால் அச்சுக்கு வந்த நூல்களுடன் அச்சுக்கு வராத பல அரிய நூல்களும் அழிவதாயின. இவ்வளவு புறக்கணிப்பையும் தாண்டி இந்நாளிலும் சுவடிகள் ஆங்காங்கே தனியாரிடத்தும் கவிராயர் குடும்பங்களிலும் சமய நிறுவனங்களிலும் அரிதாக இருந்து வியப்பைத் தருகிறன்றன.

ஆங்காங்கே கிடைக்கின்ற ஓலைச்சுவடிகளையெல்லாம் தேடித்தொகுத்து அவற்றை முறைப்படித் தூய்மைசெய்து, கிருமி நீக்கப் பேழையில் வைத்து மருந்துப்புகையூட்டியும் அறிவியல் முறை பரிந்துரைக்கும் மருந்துகளையெல்லாம் பூசியும் குளிர்சாதன அறைகளில் வைப்பது பாதுகாக்கும் முறையாகும். அழியும் நிலையில் உள்ளவற்றை அக்காலத்து போல ஓலைகளில் படி எடுக்க முடியாத நிலையில் மின்பொறிபடி எடுத்து நுண்படச்சுருள் வழி ஒளிப்படமாக்கிப் பாதுகாப்பது நவீன முறையாகும்.

ஒல்லகளின் மீது மஞ்சள், வசம்பு ஆகியவற்றைப் பூசுவதுடன், வேப்பெண்ணெய் முதலானவற்றைப் பூசியும், பூச்சிகளினின்று முன்னாளில் பாதுகாத்தனர். இலவங்கம், கற்பூரம், மிளகு, கருஞ்சீரகம், ஓமம் போன்ற மணப்பொருள்களை இடித்துத் துளாக்கித் துணிகளில் வைத்து சுவடிகளின் அருகே வைத்தால் பூச்சிகள் அண்டாது.

சுவடி தொகுப்பதும் பாதுகாப்பதும் பிறர் அறிந்து பயன்படுத்தும் பொருட்டேயாகும். சுவடியை அப்படியே படித்துணர்வது இயலாத ஒன்று. எனவே அவற்றை முறைப்படி இன்றைய அச்சு வடிவ எழுத்துக்களில் படியெடுத்து பல்வேறு சுவடிகளை ஒப்பு நோக்கி, பிழைபட்ட வடிவங்கள், வழக்குச் சொற்களைக் களைந்து, தெளிவான பாடங்களைத் தேர்ந்து பதிப்பதே முறையாகும்.

இச்சுவடியியலில், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை சரசுவதிமகால், சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகம், ஆசியவியல் கழகம் முதலியன இன்றும் தொடர்ந்து பணியாற்றி வருகின்றன. சுவடியியலில் பெரிதும் முயன்று ஈடுபட்டுச் சிறந்த பதிப்பாசிரியர்களாகத் திகழ்ந்தவர்கள் சீலத் திரு ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநா ஐயர், பேரா. ச. வையாபுரி பிள்ளை ஆகியோராவர்.

- த.கோ.ப.

## செக்கோசுலோவேக்கிய நாட்டுத் தத்துவம் :

செக்கோசுலோவேக்கிய நாட்டுத் தத்துவம் என்பது அந்நாட்டிலேயே தோன்றிய தத்துவக் கோட்பாடுகளைக் குறிப்பதாகாது. ஏனெனில் இந்திய நாட்டில் தோன்றிய இந்தியத் தத்துவத் தரிசனங்களைப் போன்று செக் நாட்டில் தனித்ததொரு தத்துவக் கோட்பாடுகளோ, முறைமைகளோ தோன்றிவிடவில்லை. ஆதலின் செக்கோசுவோவேக்கிய நாட்டுத் தத்துவம் என்ற வகையில் அந்நாட்டில் காணப்பட்ட தத்துவத்தின் வளர்ச்சிகளையும் குறிப்பிடத்தக்க தத்துவ அறிஞர்களின் சிந்தனைகளையுமே காண வேண்டும்.

கி.பி.1271ஆம் ஆண்டிலேயே அங்கு அரிசுடாட்டிலின் தத்துவம் விவாதிக்கப்பட்டிருக்கின்றது. அக்காலத்திலே அளவையியலைப் பற்றிய சிந்தனைகளும் கருத்துரைகளும் போகுமில் ( Bohumil ) என்பவரால் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், செக்கோசுலோவேக்கிய நாட்டுத் தத்துவத்தின் வளர்ச்சியில் தொடர்பின்மையும் முறைமையின்மையும் அந்நாட்டின் அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட புரட்சிப் புயல்களால் ஏற்பட்டன. இருப்பினும் அந்நாட்டின் தத்துவ வரலாற்றினை ஓரளவு தொடர்ச்சியாகப் பார்க்கலாம்.

செக் நாட்டில் தத்துவ நூல்கள் கி.பி.பதினான்காம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தாய்மொழியிலேயே எழுதப்பட்டன. எ.கா இசுடாட்டிலின் தாமசு ( Thomas of Stitne 1334 - 1401 ) என்பாரது சமயம் மற்றும் அறஇயல் தொடர்பான நூல்கள் இலத்தீன் மொழியில் எழுதப்பெறாமல் செக்மொழியிலேயே எழுதப்பட்டிருந்தன. அந்தக்கால கட்டத்தில் சான் விக்லிப் ( John wyclyf ) என்பவரது சிந்தனைகள் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பயின்றுகொண்டிருந்த செக் மாணவர்களைப் பெரிதும் ஈர்த்தன. அதுவே செக் மறுமலர்ச்சி இயக்கத்தின் தோன்றுதலுக்குக் காரணமாக அமைந்தது. சான்விக்லிப் அவர்களின் மாணவரான சேன் அசுஸ் ( Jan Hus, 1369 - 1415 ) தனிமனிதனின் மனச் சான்றின் உரிமையினை நிலைநாட்டும் பொருட்டு கிறித்துவ தேவாலயங்களின் போக்கினைக் கண்டித்தார். அதுவே அந்நாட்டின் தத்துவ வரலாற்றில் சமயநூல்களில் சொல்லப்பட்டுள்ள எக்கருத்துகளையும் யாவரும் சுதந்திரமாக ஆராயும் போக்கினைத் தொடங்கி வைப்பதாக அமைந்தது.

அடுத்த நூற்றாண்டில்தான் முழுமையான தத்துவச்செயல்பாடுகள் செக்நாட்டில் நிகழ்ந்தன. பல தத்துவ நூல்கள் தாய்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. அளவை இயலைப் பற்றிச் செக் மொழியில் அந்நாட்டவரான பிட்ரசு கோடிக்ளிசு ( Petrus Codcillus ) என்பார் முதன்முதலில் கி.பி.1590ஆம் ஆண்டில் ஒரு நூல் இயற்றினார். பிறகு அந்நாட்டின் தத்துவ வளர்ச்சியானது எதிர் சமயச் சீர்திருத்த இயக்கத்தின் வெற்றியால் பாதிக்கப்பட்டது. அவ்வியக்கத்தினரால் கி.பி. 1621ஆம் ஆண்டு சசனியசு ( Jessenius ) என்னும் தத்துவ ஞானிக்கு மரணம் ஏற்பட்டது. அவர் உறுதியுடன் தான் மேற்கொண்ட கோட்பாடுகளுக்காகத் தம்மை இழந்தார். அவரின் மறைவு அந்நாட்டின் அறிவுச் சான்றாண்மையின் அழிவாகக் கிட்டத்தட்ட 150 ஆண்டுகளுக்கு நீடித்தது.

அதற்குப் பின்னர் வெளிநாடுகளிலிருந்து செக் சீர் திருத்தக் கிறித்தவ அகதிகளிடையே தான் தத்துவ ஈடு பாடுகள் காணப்பட்டன. அவ்வகதிகளில் குறிப்பிடத் தக்கவராய்த் திகழ்ந்தவர் சேன் கோமென்சுகை அல்லது காமனியசு ( Jan A. Komensky ( or ) Comeniu, 1592 - 1670) என்பாரே ஆவர். ஆனாலும் அவருடைய தத்துவத் தின் நுழைபுலமும் அவருடைய சமய ஈடுபாட்டி னால் எல்லையிடப்பட்ட ஒன்றாகவே அமைந்துவிட் டது. காமனியசுவின் தத்துவக்கோட்பாடானது தே கார்டு ( Descartes ) மற்றும் காப்பரினிகசு (Copernicus) ஆகியோர்களின் தத்துவக் கொள்கைகளை மறுப்ப தாகவே உள்ளது. அவர் தத்துவம் மட்டுமின்றி இறை யியல், அரசியல், அறிவியல், மொழியியல், கல்வி ஆகிய அனைத்தினைப் பற்றியும் பல நூல்கள் எழுதி யுள்ளார். அவருடைய கருத்துரைகளில் இயல்வன யாவும் இறையுருவே என்னும் கோட்பாடு அல்லது அனைத்திறைக் கொள்கையே மிகுதியாகக் காணப் பட்டாலும் கிறித்தவச் சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை அவர் எந்நாளும் கைவிட்டதில்லை. அவரின் சமய ஈடுபாடே அவரை இயற்கை, மனித இனநலக் கோட்பாடு மற்றும் இயற்கை அறிவியல் ஆகியனவற்றை நோக்கிச் சிந்திக்கச் செய்தன.

காமனியசு அவரின் காலத்திலிருந்த மிகப்பெரிய அறிஞர்களின் சிந்தனைகளுடன் இணைந்து முறை மை அல்லது கருத்தமைவு என்கிற கருத்தினைப் பற்றி மிக நுட்பமாகச் சிந்தனைகளை வெளியிட்டார். அவ ரின் கருத்துப்படி, இயற்கைக்கும் மனிதனின் பகுத் தறிவிற்கும் இடையே எந்த ஒன்று இணக்கமான நிலையினை உறுதி செய்கின்றதோ அந்த முறையான மற்றும் செயலறிவான ஆய்வே முறைமை அல்லது கருத்தமைவு ஆகும். முறைமையைப் பற்றிய அவரின் கருத்து அந்நாட்டின் தத்துவத்திற்கு அவர் அளித்த மிகப்பெரிய கொடையாகும். மேலும் எல்லா மனி தர்களுக்கும் எல்லாமும் ( All things to all men ) என்கிற பாடத்தினைத் தருகின்ற முறைமைப்படுத்தப்பட்ட ஒரு கோட்பாட்டினைத் தான் கண்டுபிடித்ததாகக் காமனியசு நம்பினார்.

செக் நாட்டின் தத்துவ வளர்ச்சியின் வரலாற்றில் கி.பி.1781ஆம் ஆண்டு ஒரு முக்கியமான ஆண்டா கும். ஏனெனில் அப்போதுதான் அந்நாட்டில் சமயச் சுதந்திரம் திரும்பவும் நிலைநாட்டப்பட்டது. அது மட்டுமின்றி அங்குக் கொத்தடிமைத்தனமும் முற்றிலு மாக நீக்கப்பட்டது. அந்நிலைகளால் செக் நாட்டில் தத்துவம் வளர்ச்சிப் பெறுவதற்கான நல்ல சூழ்நிலை ஏற்பட்டது. தாய்மொழியிலேயே தத்துவ நூல்கள் எழுதப்படவேண்டும் என்ற ஆவல் மிக அதிக அள வில் காணப்பட்டது. தத்துவத்திலே பயன்படுத்துகிற சொல்லாட்சிகள் எல்லாம் செக் மொழியிலேயே எழுதும் கடமை அக்காலத்தில் பெரிதும் போற்றப் பட்டது. அக்காலகட்டத்தின் சிறந்த தத்துவ அறிஞரா கப் பெர்னார்டு போல்சானோ என்பார் திகழ்ந்தார்.

தத்துவவாதியாக மட்டுமல்லாமல் இறையியல் வல்லுநராகவும், அளவை இயல் அறிஞராகவும், கணிதவியல் அறிஞராகவும் அவர் திகழ்ந்தார். அக் காலத்தில் ஒரு சிறந்த இறைமையியல் வல்லுநராக வும் சமூக நெறியாளராகவும் பொல்சான போற்றப் பட்டார். கத்தோலிக்கச் சமயத்தினைப் பற்றியும் அற இயல் தத்துவத்தினைப் பற்றியும் பல சொற்பொழிவு களை நிகழ்த்தி மாணவர்களிடையே சமதருமம் என் கிற பொதுநலக் கூட்டுத் தத்துவத்தினைப் பற்றிய உணர்வுகளைத் தூண்டினார். மக்கள் அனைவரும் சமம் என்கிற கோட்பாட்டினை அதிகமாக வலியுறுத் திய அவர் உழைப்பு இல்லாமல் சொத்துகள் சேர்த் தலை வன்மையாகக் கண்டித்தார். மனித உரிமைக ளுக்காக எவற்றையும் தியாகம் செய்ய யாவரும் தயாராக இருக்கவேண்டும் எனவும் தமது சொற் பொழிவுகளில் கேட்டுக்கொண்டார்.

போல்சானா, சமயத்தத்துவம் பற்றிப் பல சிறந்த நூல்களை எழுதினார். உரோமன் கத்தோலிக்க சமயக் கோட்பாடுகள் பொது அறிவிற்கு உடன்பட்டதாய் தான் இருக்கின்றன என்பதை நிருபிப்பதில் அதிக ஆர்வத்தைக் காட்டிய அவர், அந்தக் கருத்திற்காகவே கத்தோலிக்கச் சமயத்தில் காணப்பட்ட இறைமை இணைவுப் பண்பு பற்றிய எண்ணங்களை ஒதுக்கித் தள்ளினார். மேலும், போல்சானாவின் அற இயல் கோட்பாடான 'உயர்ந்த அறக் கொள்கையான' பெந்தம் ( Behtham ) அவர்களின் அறக்கோட்டினை நினைவுகூரத்தக்கதாய் உள்ளது. அக்கொள்கை - உன்னால் எல்லாச் செயல்களையும் செய்யமுடியும், இருப்பினும் நீ ஒரே செயலை - அதனின் எல்லா விளைவுகளைப் பற்றி யெல்லாம் எடைபோட்டு - தேர்ந்தெடுத்துச் செயலாற்றினால் அதுவே பல நன்மைகளை முழுமையாகத் தரும். அதனைப் போன்றே மனித இனத்தினைப் பற்றிய முக்கிய கருத் தொன்று உள்ளது எனக் கூறி அது மனிதர்கள் அனை வரும் சமம் என்பதே. இதை நிருபிக்க வரலாறு.

பகுத்த்றிவு மற்றும் அறவியல் சிந்தனைகள் ஆகிய வற்றின் மூலம் பெரிதும் முயன்றார் என்பதையும் காணலாம்.

சமயம் அறவியல் மட்டுமின்றி அளவையியல் மற்றும் அறிவாராய்ச்சியியலில் தான் ஒரு சிறந்த அறிஞர் என்பதனைப் போல்சானா நிலைநாட்டினார். தருக்கவாதியாகவும், முறைமையியல் வல்லுநராகவும், அறிவாராயச்சியில் அறிஞராகவும் விளங்கிய அவர் அந்தக்காலத்தில் நிலவிய ஐயுறவு மனப்பான்மையினைத் தடுக்கும் பொருட்டே அறிவாராய்ச்சி சம்பந்தமான பல கருத்துகளை வெளியிட்டார். உண்மையினைப் பற்றிக் கூறும்போது, மொழி, மனிதன் அவற்றுக்கு முன்பே மற்றும் அவற்றை விடுத்தே தனித்து உண்மை உள்ளே உள்ள பொருள்கள் என்பது உண்டு என்றும், அந்த உண்மைக்கும் சொற்களால் சொல்லப்படுகின்ற உண்மை மற்றும் கருத்தில் கொள்கின்ற உண்மை ஆகியவற்றிற்கும் வேறுபாடுகள் உண்டு என்றும் அவர் வலியுறுத்தினார். அந்த உண்மை உள்ளே உள்ள பொருள் எனும் தொகுதி கருத்துரை எனும் தொகுதியின் துணைத்தொகுதியென்றும் கூறிய அவர் கருத்துரை என்பதில் எண்ணங்களின் தொகுதி அடங்கியிருக்கும் என்றும் நிலை நாட்டினார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குறிப்பாக செக்கோசுலோவேக்கிய நாடு கி.பி.1918இல் அரசியல் சுதந்திரம் பெற்ற பின்பு, தத்துவத்தில் காணப்பட்ட பல்வேறு மாறுபட்ட சிந்தனைகள் பற்றியெல்லாம் தீவிர விவாதங்கள் அங்கு நடைபெற்றன. அது அந்நாட்டின் தத்துவ வளர்ச்சியில் ஓர் உயர் நிலையினை அடைந்ததைக் குறிப்பதாக அமைந்தது. அப்போதுதான் அந்நாட்டில் பல தத்துவ அறிஞர்கள் தோன்றினர். அவர்களில் முக்கியமானவராகக் கருதப்பட்டவர் ஃபிராண்டிசிக் கெர்சி ( Frantisek Krejci ) என்பவராவர்.நேர்க்காட்சி வாதத்தின் பிரதிநிதியாகக் கருதப்பட்ட அவர் உண்ட் ( Wundt ) மற்றும் இசுபென்சர் ( Spencer ) ஆகியோர்களது கோட்பாடுகளை ஆதரித்து பல நூல்கள் எழுதினார்.

அவருக்குப்பின் வந்த தாமஸ் கேரிக்யூ மாசார்க் ( Thomas Garrigue Masaryk ) என்பவர் நேர்க்காட்சிவாதிகள் மற்றும் தாவிதுகியூம் ( David Hume ) ஆகியோர்களின் கருத்துகளினால் ஈர்க்கப்பட்டவர். ஆனால், பிற்காலத்தில் அவரே பிரண்டானோவின் ( Brentano) இறைமைக்கோட்டின் பாதிப்பினால் நேர்க்காட்சி வாதத்தினை எதிர்த்துப் பல நூல்களை வெளியிட்டார். அவருடைய நூல்கள் பல ஆங்கிலத்திலும் செருமானிய மொழியிலும் கூட மொழிபெயர்க்கப்பட்டன. மாசார்க் நடைமுறைக்குரிய அல்லது செயல்முறை சார்ந்த தத்துவ அறிஞராவார். தத்துவமானது உலகினைப் பற்றிய சிந்தனைகள் என்பது மட்டுமின்றி அவ்வுலகினையும் மாறச் செய்யக்கூடிய ஒன்று என்றே மாசார்க் கொண்டார். அதனால்தான் அறிவாராய்ச்சியியல் மற்றும் அண்டப் படைப்புக்கோட்பாடு ஆகியவற்றில் அவர் ஆர்வம் காட்டவில்லை. தொடக்கக் காலத்தில் செருமானியக் கருத்து முதற் கொள்கையினை எதிர்த்த அவர் அனுபவ வழிக் கொள்கையினையும் நேர்க்காட்சி வாதத்தினையும் ஏற்றுக்கொண்டார். ஆனால், பிற்காலத்தில் பருமைக் கொள்கை ( Conctetism ) எனப்படுகின்ற ஒரு வகையான காட்சிப் பொருள் உண்மைக் கொள்கைக்காக வாதாடினார்.

அறிந்துகொள்ளும் எந்தவொரு செயலிலும் மனிதன் முழுமையாக ஈடுபடுகின்றான் என்ற நம்பிக்கையினை வெளிப்படுத்திய மாசார்க், பருமைக் கொள்கையானது அறிந்துகொள்ளும் செயலில் பகுத்தறிவு மட்டுமல்லாமல் புலன்களும், உணர்ச்சிகளும் மற்றும் விருப்பாற்றலும் ஈடுபடுகின்றன என்பதை ஏற்பதேயாகும் என்றும் விளக்கினார். அவரின் காட்சிப்பொருள் உண்மைக் கொள்கையானது தீவிர சமய நம்பிக்கைகளுடன் இணைந்தே இருந்தது. ஒரு நாட்டின் பண்பாட்டில் குழப்பமும் சிக்கலும் நேருவதற்கான காரணம் சமய அழிவேயாகும் என்றும் அவர் வலியுறுத்தினார். சமதருமம் எனப்படுகின்ற பொது நலக் கூட்டுத் தத்துவத்தினை ஆதரித்தாலும் மாசார்க் தனிமனிதனின் தனிச் செயலுரிமையை ஆதரிக்கும் கூட்டாண்மை என்கிற கோட்பாட்டின் பல நிலைகளையும் அவர் எதிர்த்தார். மார்க்சு அவர்களை கண்முடித்தனமாக நியதிவாதத்தினை வழிபடுபவர் என்று கூறி அவரையும் மறுத்துரைத்தார்.

அவருக்குப்பின் இமானுவேல் ராடுல் ( Emmanuel Radl ), பெர்டினண்டு பெல்லிகான் ( Ferdinand pelikan), காரேல் வோராங்கா ( Karel Vorovka ), பிரான்சு காஃப்கா ( Franz Kafka ) போன்ற தத்துவ அறிஞர்களும் செக் நாட்டில் தோன்றி, தத்துவத்தில் பல நூல்களை வெளியிட்டு அந்நாட்டின் தத்துவ வளர்ச்சியில் பெரிதும் பங்காற்றினார். செக்கோசுலோவேக்கிய

நாட்டுத் தத்துவ வளர்ச்சியானது 1939ஆம் ஆண்டிலிருந்து 1945ஆம் ஆண்டு வரை நாசிகளின் ஆக்கிரமிப்பினாலும் 1948ஆம் ஆண்டில் பொதுவுடைமை ஆட்சியாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. மார்க்சிய லெனின்சந்தான் செக் நாட்டின் அதிகார பூர்வமான தத்துவக் கோட்பாடாக 1948ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. ஆதலின் அங்கு வேறு எந்தச் சிந்தனைக் கருத்துகளும் இன்றளவில் கூட சகித்துக் கொள்ளப்படவில்லை. இதுவே இன்றுவரை செக்கோசுலோவேக்கிய நாட்டுத் தத்துவ வளர்ச்சியின் வரலாறாகும்.

- க.பா.

**செயிற்றியம் :** இது மறைந்துபோன தமிழ்நூல்களுள் ஒன்று. இப்பெயரில் நாடகத்தமிழ் இலக்கண நூல் ஒன்று இருந்தது என்பது சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் அரும்பத உரையாசிரியரும் இளம்பூரணரும் பேராசிரியரும் யாப்பருங்கல விருத்தி உரைகாரும் எழுதிய உரைகள் வழிப்புலப்படும். செயிற்றியனார் என்பவர் செய்த நூல் ஆதலின் இதற்குச் செயிற்றியம் என்றும் பெயர் வாய்ந்தது என்பர். 'உய்ப்போன் செய்தது காண் போர்க் கெய்துதன் மெய்ப்பா டென்ப மெய்யுணர்ந்தோரே' என்பது இளம்பூரணர் காட்டும் செயிற்றிய நூற்பாவாகும்.

- சா. உ.

**செல்லுலார் சிறை :** இந்திய நாட்டின் தனிச் சிறப்பு வாய்ந்த வரலாற்றுச் சின்னங்களில் இச் சிறைச்சாலையும் ஒன்று. தன் வரலாற்றுச் சிறப்பை இன்றும் தாங்கி நிற்கும் இச்சிறைச்சாலைக் கட்டடம் இந்திய நாட்டின் ஒரு பகுதியாக வங்காள விரிகுடா கடலில் அமைந்திருக்கும் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் தலைநகராக விளங்கும் போர்ட்பிளேயரின் கடற்கரை ஓரமாக உள்ளது.

ஆங்கிலேயர்களால் 1906ஆம் ஆண்டு கட்டிமுடிக்கப்பட்ட இக்கட்டடம், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் திருப்பு முனையாக அமைந்த கி.பி.1857ஆம் ஆண்டு சிப்பாய்க் கலகத்தின் விளைவாகத் தோன்றி என்றால் மிகையாகாது. இப்போராட்டத்தில் பங்கு பெற்றவர்களையும் மேலும் தீவிரமாகப் பங்கு பெறுபவர்களையும் கடுமையாகத் தண்டிக்கும் நோக்கத்தில் இத்தனிமைச் சிறையைக் கட்ட ஆங்கிலேயர்களால் அந்தமான் தீவு தேர்வு செய்யப்பட்டு சுதந்திரப் போராட்ட வீரர்களைக் கொண்டே இக்கட்டடம் கட்டுமானப் பணியும் முடிக்கப்பட்டது. செங்கல் நிறமுடைய இக்கட்டடம் ஏறத்தாழ 300 இலட்சம் செங்கற்களைக் கொண்டு சுண்ணாம்புச் சாந்துடன் கட்டப்பட்டுள்ளது. இச்செங்கற்கள் அனைத்துமே இப்போது மியான்மர் என்று அழைக்கப்படும் பர்மா நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டவையாகும். இக் கட்டடத்தின் தோற்றம் ஒரு நட்சத்திரத்தின் தோற்றத்தை ஒத்ததாக ஏழு ஒரே மாதிரியான சிறகுகளைக் கொண்டு அமைக்கப்பட்டது. ஏழு சிறகுகளின் ஒரு முனை ஒரு மையப்பகுதியில் இணைக்கப்பட்டு அம் மையப் பகுதியிலிருந்து ஏழு சிறகுகளையும் பார்க்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு சிறகும் மூன்று அடுக்குகளைக் கொண்டு மொத்தம் 698 சிறு அறைகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு அறையும் 4 x 2 - 7மீ அளவில் கட்டப்பட்டுள்ளது. இதனுள் கைதியாக இருப்பவர்கள் வேறு எத்தகைய தொடர்பும் கொண்டிராதபடி ஒவ்வொரு அறையிலும் தளத்திலிருந்து 3மீ உயரத்தில் அளவில் சிறிய ஒரே ஒரு சன்னல் மட்டுமே உள்ளது. அனைத்துப் பகுதியும் பெரும் சுவரால் மறைக்கப்பட்டு ஒரே ஒரு வழியை மட்டும் கொண்டதாக உள்ளது. இச்சிறையிலிருந்து தப்பிச் செல்ல நினைப்பவர்கள், இவ்வழியாக மட்டுமே வரமுடியும். வேறு வழியாகத் தப்பித்துச் செல்ல முயன்றால் மற்ற பக்கங்களில் கடலில் தான் இறங்க நேரிடும். அவ்வாறு தப்பித்துச் செல்பவர்களையும் ஆங்கிலக் கடற்பகுதி காவல்பிரிவு சுட்டுக் கொன்றுவிடும். இச்சிறையின் முதல் தலைமை அதிகாரியான தாவிது பரே என்பவர் மிகவும் கொடூர குணம் கொண்டவராக, சுதந்திர வீரர்களை மிருகங்கள்போல் நடத்தினார். இங்குக் கைதிகளுக்கு உணவு கற்களுடனும், புழுக்களுடனும் அளவிற்கு மிகவும் குறைவாகவும் வழங்கப்பட்டன. இங்குள்ள கைதிகள் தினமும் தேங்காயை ஆட்டி ஒரு குறிப்பிட்ட அளவு எண்ணெய் எடுத்துக் கொடுக்கவேண்டும். இல்லையேல் கடும் தண்டனைக்குள்ளாவார்கள். எதிர்ப்பவர்கள் மற்றவர்கள் முன்னிலையில் கசை அடி மற்றும் சித்ரவதைக்குள்ளாவார்கள். அத்துடன் தூக்கிலும் ஏற்றப்படுவார்கள். இங்கு வந்து சேர்ந்த கைதிகளில் பலர் தூக்கில் ஏற்றப்பட்டு கடலில்

எறியப்பட்டனர். தனித்தனியாகத் தூக்குப்போடும் பழக்கம் இங்குக் கடைப்பிடிக்கப்படாமல் ஒரே நேரத்தில் மூவர் தூக்கிலிடப்பட்டனர்.

மகாத்மா காந்தியின் அரிய முயற்சியினால் 1939 ஆம் ஆண்டு இங்குக் கைதிகளாக அடைக்கப்பட்டிருந்த சுதந்திரப்போராட்ட வீரர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். அக்காலக் கட்டத்தில் இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தது. இப்போரில் அந்தமான் நிக்கோபர் தீவுகளை ஆங்கிலேயரிடமிருந்து சப்பானியர் கைப்பற்றி 1942 ஆம் ஆண்டு முதல் 1945 ஆம் ஆண்டு வரை இச்சிறைச்சாலையைத் தங்கள் வசம் வைத்திருந்தனர். இவர்களது காலத்திலும் கைதிகளைத் தண்டனைக்குட்படுத்தும் இடமாகவே இச்சிறைச்சாலை காட்சி அளித்தது. அதோடு மட்டுமல்லாது இக்கால கட்டங்களில் உணவுப் பஞ்சம் தலைதூக்கியதால் சிறையில் கைதிகளுக்கு உணவு அளிக்காமல் கைதிகளை அவ்வப்போது மொத்தமாகக் கடலுக்குள் தள்ளி மூழ்கடித்தனர். இத்தகைய கொடும் செயல்களைக் கேள்வியுற்ற இந்திய சுதந்திரத்திற்காக ஆயுதம் ஏந்தி விடுதலை பெறத் துடித்த 'இந்திய தேசிய இராணுவம்' என்ற அமைப்பின் தலைவர் 'வங்காளத்துச்சிங்கம்' என்று மக்களால் அன்போடு அழைக்கப்பட்ட நேதாசி சுபாசு சந்திரபோசு அவர்கள் 1943 ஆம் ஆண்டு தனது நட்பு நாட்டின் ஆட்சியின் கீழிருந்த போர்ட்பிளேயர் வந்து சிறைச்சாலையில் உரை ஒன்றை நிகழ்த்தி விட்டு அங்கிருந்த கைதிகள் அனைவரையும் சப்பான் அரசின் சம்மதத்துடன விடுதலை செய்தார். மேலும் இவரால் இங்கு இந்திய நாட்டின் தேசியக்கொடி முதன்முதலாக ஏற்றப்பட்டு இந்திய நாட்டின் முதல் சுதந்திரப் பகுதி என அந்தமான் தீவு பிரகடனப்படுத்தப்பட்டது. முதன் முதலில் இங்கு வந்த இந்தியத் தலைவர் என்ற பெருமையும் இவருக்கே உரியது.

உலகளவில் சப்பானியர்கள் இரண்டாம் உலகப் போரில் தோல்வியுற்றதும் இத்தீவிலிருந்து வெளியேறினர். இதன்பின் மீண்டும் இச்சிறை ஆங்கிலேயர் வசம் வந்தது. பின்னர் 1947ஆம் ஆண்டு இந்திய நாடு முழுச்சுதந்திரம் பெற்ற பின்பு இச்சிறையும் சுதந்திரம் பெற்றது.

இந்திய மைய அரசினால் தேசிய நினைவகமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் இக்கட்டடத்தின் நான்கு சிறகுகள் அண்மைக்காலத்தில் அழிக்கப்பட்டு அதில் பொதுமக்களுக்கு அரசு மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இப்போது மூன்று சிறகுகள் மட்டுமே இக்கட்டடத்தில் உள்ளன. பொதுச்சேவை என்ற பெயரில் இக்கட்டடம் அழிக்கப்பட்டபோதிலும் ஒரு வரலாற்று உண்மையை அழித்து உருவாக்கப்பட்டுள்ளதைப் பலரும் விரும்பவில்லை. இச்சிறை, சுதந்திர காலத்தில், 'இந்தியாவின் பாசுடல் சிறை' என்று ஒப்பிடுமளவுக்குக் காணப்பட்டது. இன்று பல நாட்டிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் இவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகமும், ஒலி, ஒளி காட்சியும் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

- பா. ஜெ.

**சேக்கோபின்கள்** : பிரெஞ்சுப்புரட்சியின் பொழுது அந்நாட்டிலிருந்த வலிமைமிக்க புரட்சியில் மிகவும் ஈடுபட்ட ஓர் அரசியல் கட்சியினர் சேக்கோபின்கள் ( Jacobins ) எனப்பட்டனர். இக்கட்சி 1789 மே மாதம் பிரிட்டனில் பிரிட்டன் கழகம் ( Club Briton ) என்ற பெயரில் தொடங்கப்பட்டது. இதில் பல்வேறு தொழில்களிலும், வாணிபத்திலும் ஈடுபட்டிருந்தோர் உறுப்பினர்களாகச் சேர்ந்தனர். அப்பொழுது இதன் நோக்கம் அந்நாட்டிலிருந்த முடியாட்சியைச் சீர்திருத்துவதாகும். புரட்சி தோன்றியதும் இக்க ழகமானது வெர்சாயிலிருந்து ( Versailles) பாரீசு நகருக்கு மாற்றப்பட்டது. அங்குள்ள சேக்கோபின் மடாலயத்தில் கூடியதால் இவர்கள் சேக்கோபின்கள் என அழைக்கப்பட்டனர். அப்போது இதில் அரசியல்வாதிகள் மிகுதியாகச் சேர்ந்தனர். இதன் நோக்கம் பிரான்சில் குடியாட்சியை ஏற்படுத்தி, மக்களிடையே சமத்துவத்தைத் தோற்றளித்து, எல்லோருக்கும் கல்வி அளிக்கவேண்டும் என்பதாகும். இது ஒரு தேசியக் கட்சியாக மாறி, பிரான்சு முழுவதும் பரவியது. 1790 இல் 152 கிளைகள் ஏற்பட்டு, பாரிசு நகரில் மட்டும் 1200 உறுப்பினர்கள் இருந்தனர். இதன் உறுப்பினர் எண்ணிக்கை 1793 - 94 இல் 500,000 ஆக உயர்ந்தது.

சேக்கோபின்களிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு மிதவாதிகள் தோன்றினர். கிராண்டிசுடுகள் ( Girondists ) எனப்பட்ட அவர்கள் தேசிய கன்வென்சனில் ( National Convention ) பெரும்பான்மையினராய் இருந்தனர். கிராண்டிசுடுகள் மாநில அரசுகளுக்கு

அதிக அதிகாரம் வழங்க வேண்டுமெனக் கூறிய போது சேக்கோபின்கள் வலிமையான நடுவன் அரசு ஒன்றை ஏற்படுத்த முயன்றனர். சேக்கோபின்களின் முக்கியத் தலைவர்களாக மாக்சிமிலியன் உரோசுபியர் ( Maxmillien Robespierrre ), சீன்பால் மாரட்டு ( Jean Paul Marat ), சார்சு சேக்கசுடால்டன் ( Geroge Jacques Danton) ஆகியோர் தோன்றினர். மன்னர் பதினாராம்லூயி 1793 சனவரி 21இல் கொலை செய்யப்பட்டதற்கு சேக்கோபின்களே காரணமாவர். இவர்களுடைய கருத்துகளையும், செயல்களையும் எதிர்த்து வந்த கிராண்டிசுடுகளை ஒழிக்க ஒரு சூழ்ச்சி செய்தனர். மாநாட்டுத் தலைமையில் 1793 சூன் 2ஆம் நாள் ஒரு கிளர்ச்சியைத் தூண்டிவிட்டு 31 கிராண்டிசுடுகளைச் சிறை செய்து, தேசிய கன்வென்சனில் சேக்கோபின்கள் பெரும்பான்மை வலிமையைப் பெற்றனர். எனவே, தேசிய கன்வென்சன் உரோசுபியர், டான்டன், மாரட்டு ஆகிய மூன்று பயங்கரவாதிகள் ஆதிக்கத்தில் வந்தது.

அப்போது நடைபெற்று வந்த உள்நாட்டுக் கலகங்களை அடக்கவும் அயல்நாட்டுப் படையெடுப்புகளை முறியடிக்கவும், சேக்கோபின் தலைவர்கள் கொடுங்கோல் ஆட்சியைத் தொடங்கினர். எனவே, பிரான்சில் 1793 சூன் 2ஆம் நாளிலிருந்து 1794 சூலை 27வரை பயங்கர ஆட்சி ( Reign of Terror ) நடைபெற்றது. பிரான்சிலிருந்த கிராண்டிசுடுகளும், முடியாட்சி ஆதரவாளர்களும் கொன்று குவிக்கப்பட்டனர். அயல் நாட்டுப் பகைவர்கள் அடக்கப்பட்டனர். சேக்கோபின்களில் தீவிரவாதிகளாகவிருந்த கெர்பர்டிசுடுகள் ( Herbertists ) உள்நாட்டுச் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தனர். உரோபசுபியரும், அவரைச்சார்ந்தவர்களும் டான்டன் ஒரு பிற்போக்காளர் எனக்குற்றம் சாட்டி, அவரையும் அவரது ஆதரவாளர்களையும் சிறை செய்து 1794 ஏப்ரல் 5இல் கொன்றனர். அதற்கு முன்னரே மாரட்டு கொலை செய்யப்பட்டுவிட்டதால் உரோபசுபியர் சேக்கோபின்களின் வலிமைமிக்க தலைவராகத் தோன்றினார். இவரது ஆட்சிக்கு எதிராக இருந்தவர்கள் ஐயத்துக்குரியவர் என்று குற்றஞ் சாட்டப்பட்டு சிறை செய்யப்பட்டனர். பின்னர் புரட்சி நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது. புரட்சி சதுக்கத்தில் கில்லடினில் வைத்துத் தலை துண்டிக்கப்பட்டது. அவர்களுள் அரசி மேரி அந்துவானே, ஆர்லியன்சு பிரபுவான பிலிப்பு, கிராண்டி சுடு கட்சியைச் சேர்ந்த உரோலண்டு அம்மையார், வானவியல் அறிஞரான பெய்லி ஆகியோர் முக்கியமானோர். புரட்சி நீதிமன்றம் நாற்பத்தைந்து நாட்களில் 1367 பேரைக் கொன்றது. புரட்சிக் குழுக்கள் 17,000 பேரை கொலை செய்தன. 40,000 பேர் கூட்டமாகக் கொல்லப்பட்டு அல்லது நீரில் மூழ்கடிக்கப்பட்டு இறந்தனர்.

இத்தகைய கொடுமைகளைக் கண்டு கொதித்தெழுந்த மக்கள் 1794 ஜூலை 27இல் கன்வென்சன் மீது படையெடுத்துச் சென்று, உரோசுபியரையும் அவரைச் சார்ந்தவர்களையும் சிறை செய்து, மறுநாள் அவர்களுடைய தலைகளைத் துண்டித்தனர். உரோசுபியரின் வீழ்ச்சிக்குக் காரணமாகவிருந்த தெர்மிடோரியன்கள் ( Thermidorians ) கன்வென்சனைக் கைப்பற்றி பாரிசு கம்யூனை மூடினர். சேக்கோபின் கழகங்கள் நவம்பர் 12 இல் கலைக்கப்பட்டன.

பின்னர் பிரான்சில் இயக்குநர் ஆட்சி ( Directory 1795 - 99 ) நடந்தபோது சேக்கோபின்கள் மீண்டும் தலையெடுத்தனர். அவர்கள் அரசியலமைப்புக்குட்பட்ட வட்டங்கள் என்ற பெயரில் புதிய கட்சியைத் தொடங்கினர். அவர்கள் அரசியலமைப்புக்குட்பட்டு அரசுக்கு மனு செய்வதன் வாயிலாகவும், தேர்தல்கள் மூலமாகவும் ஆட்சியைத் திருத்தியமைக்க வேண்டும் என்றனர். ஆனால் கி.பி.1799இல் நெப்போலியன் ஆட்சிக்கு வந்ததும் இக்கட்சி முற்றிலும் அழிக்கப்பட்டது.

- சி. இரெ.

**சேம்சு அறிக்கை :** சேம்சு அறிக்கை 1971ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இங்கிலாந்து, வேல்சு நாட்டு ஆசிரியர் கல்வி பற்றி இவ்வறிக்கை ஆய்வு செய்தது. ஆசிரியப் பயிற்சியில் 1960 முதல் 1970 வரையிலான பத்து ஆண்டுகளில் ஏற்பட்ட விரிவாக்கமானது அரசுக்குப் பல தொல்லைகளைத் தோற்றுவித்தது. பள்ளி இறுதி வகுப்பில் ஆங்கிலம் அல்லது கணக்குப்பாடத்தில் போதிய அளவு மதிப்பெண் பெறாத மாணவர்கள் ஆசிரியப் பயிற்சி பெற்றனர். இந்நிலையானது மாணவர்களின் கல்வித்தரத்தினைப் பெரிதும் பாதித்தது. அரசு, இதற்கான காரணத்தை அறிந்து அறிக்கை தருமாறு கல்விச்செயலரைக் கேட்டது. இது தொடர்பாக பாராளுமன்றத்தில் விவாதம் எழுந்தபோது உறுப்பினர்களின் வேண்டுகோளை

ஏற்று சேம்சு தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. சேம்சு அறிக்கையானது ஆசிரியப் பயிற்சியின் அடிப்படைக் கோட்பாடுகளைப் பற்றி சில முடிவுகள் மேற்கொண்டது. ஆசிரியப் பயிற்சியானது உயர் கல்வியோடு இணைந்து செயல்பட வேண்டிய ஒன்றாகும். கல்வியானது வாழ்நாள் முழுவதும் தொடரும் ஒரு செயலாகும். பள்ளிகளில் ஆசிரியர்களின் தேவைக்கேற்பப் பயிற்சி அளித்தால் போதும். பயிற்சியானது தரமாக அமைய வேண்டுமானால் மூன்று வகைகளில் அமைதல் வேண்டும். முதல் வகை, பிரிட்டன் நாட்டில் பொதுவாகப் பன்னிரண்டு ஆண்டுக்கல்வி முடிந்தபின்பு பயிற்சிக் கல்லூரிகளில் மூன்று ஆண்டுப் பயிற்சி அளிக்கப்படும். அதில் கற்பித்தல் பயிற்சியும் அடங்கும். பட்டம் பெற்றவர்கள் ஆசிரியப் பயிற்சிக்கெனப் பல்கலைக்கழகத்தில் அல்லது கல்வியியல் கல்லூரிகளில் ஓராண்டு படிக்க வேண்டும் என்பது இரண்டாம் வகையாகும். பட்டம் பெற்றவர்கள் ஆசிரியருக்கான ஓராண்டுப் பயிற்சி பெறுவது என்பது அண்மையில் தோன்றிய ஒன்றாகும். இந்த நிலையில் ஒரு சில மாற்றங்களைச் சேம்சு அறிக்கை கூறு கிறது.

முந்தைய மூன்று ஆண்டு ஆசிரியப் பயிற்சி என்ற நிலையை மாற்றி, ஆசிரியர் பயிற்சி நான்கு ஆண்டுகள் என அமைதல் வேண்டும். இந்தப் பயிற்சி, பள்ளிகளின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். முதல் வகைக்கும் இரண்டாம் வகைக்கும் நெருங்கிய தொடர்பு இருத்தல் வேண்டும். இரண்டாம் வகை என்பது பட்டம் பெற்ற பின்னர் ஆசிரியருக்கான ஓராண்டுப் பயிற்சியைக் குறிக்கும். தனிப்பயிற்சி அல்லது சிறப்புப் பயிற்சி என்பது ஏற்றுக்கொள்ள வேண்டிய ஒன்று. இரண்டாம் வகைப் பயிற்சியில் இரண்டு ஆண்டுகள் கொண்ட ஆசிரியப் பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும். அந்த இரண்டாண்டு ஆசிரியப் பயிற்சியில் முதலாண்டு கல்வியானது பல்கலைக்கழகத்தில் அமைந்த ஒரு பயிற்சி நிறுவனத்தில் அல்லது கல்விப் பயிற்சிக் கல்லூரிகளில் அல்லது தொழில் பயிற்சிக்கல்லூரிகளில் இருத்தல் வேண்டும் எனப் பரிந்துரைத்துள்ளது. இதில் மூன்றாவது வகை ஆசிரியருக்கான பணியிடைப் பயிற்சி அளிப்பது பற்றியதாகும்.

ஆசிரியப் பயிற்சியில் வெற்றி பெற்ற மாணவர்கள் பள்ளிகளில் பணி புரிய அவர்கள் வாரத்தில் ஒரு நாள் ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களில் வகுப்பு எடுக்க வேண்டும். இவ்வாறு இரண்டாண்டுப் பயிற்சியை வெற்றிகரமாக முடித்த மாணவர்களுக்குக் கல்வித் துறையின் இளங்கலைப் பட்டம் வழங்கப்பெறும். ஆசிரியருக்கான உரிமம் பெற்ற, ஒப்புதல் பெற்ற ஆசிரியர்கள் மேற்கொண்டு உயர்கல்வி பெற, கல்வியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்க வேண்டும். ஆசிரியர்களுக்கான பணியிடைப் பயிற்சி பெறுவதற்கு வட்டார முகவர்களாகக் கல்வித்துறையும், வட்டாரக் கல்வியியல் கல்லூரிகளும் செயற்படும். வட்டாரக் கல்வியியல் கல்லூரிகளுக்குத் தேவையான நிதி உதவி செய்ய வேண்டும்.

தேசிய அளவில் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி அமைப்பு நிறுவனம் ஒன்று இருத்தல் வேண்டும். இந்த அமைப்பானது உரிமம் பெற்ற, அங்கீகாரம் பெற்ற ஆசிரியர்களை நியமிக்கக் கல்வித்துறைச் செயலருக்குப் பரிந்துரை செய்ய வேண்டும். தேசிய நிறுவனமானது பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர் எத்தனைபேர் வேண்டும் என்பதை வரையறை செய்ய வேண்டும். 1973ஆம் ஆண்டு மூன்றாண்டுப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் சேம்சு அறிக்கையின் அடிப்படையில் உயர்கல்வி பெற கல்வியியல் கல்லூரிகளில் சேர்ந்து 1975ஆம் ஆண்டு கல்வியியலில் இளங்கலைப்பட்டம் பெறுவர் எனக் கூறுகிறது.

உள்ளாட்சி அமைப்புகள் பயிற்சிபெற்ற பயிற்றுநர்களைத் தங்கள் பள்ளிகளில் நியமித்துக்கொள்ளலாம். அவர்களுக்குப் பின்னர், தேவையான பணியிடைப் பயிற்சியைக் கல்வியியல் கல்லூரிகள் வழங்க வேண்டும். தங்களுடைய கூடுதல் தேவைகளுக்ேற்ப ஆசிரியர்களை உள்ளாட்சி நிறுவனங்கள் நியமித்துக்கொள்ளலாம். ஆசிரியர்களுக்கான பட்டயச் சான்று பெற்ற அனைத்து ஆசிரியர்களும் கல்வியியலில் இளங்கலைப்பட்டம் பெற்றவர்களாக ஆக்கப்படுவர். கல்வியியல் கல்லூரிகளின் நிலை உயர்த்தப்படுவதோடு தொடர்கல்வி மையங்களாக அவை ஆக்கப்படும். பணிபுரியும் ஆசிரியர்களுக்கு ஏழாண்டிற்கு ஒருமுறை பணியிடைப்பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு சேம்சு அறிக்கை கல்வியின் தரம் வளர பல வழிகளைச் சுட்டிக்காட்டுகிறது.

- இரா. சி.

**சேலம் :** சேலம் மாவட்டத்தின் தலைநகரமாகச் சேலம் விளங்குகிறது. இந்நகரம் தமிழ்நாட்டின் நான்காவது பெரிய நகரமாகும். இந்நகரின் மையத்தில் ஏறத்தாழ அரை கி.மீ. தூரத்திற்குள்ளாகவே நகரத்தின் மாநகராட்சி நிலையம், தலைமைப் பேருந்து நிலையம், தலைமை வங்கி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், தலைமை அஞ்சலகம், தொடர் வண்டி நிலையம், தலைமை மருத்துவமனை, நீதிமன்றம், கருவூலம், சுபாசு சந்திரபோசு மைதானம், கல்லூரி, விளையாட்டுத்திடல், மாவட்ட மையநூலகம் போன்ற இன்றியமையாத அலுவலகங்கள் அமைந்துள்ளன. இவ்வாய்ப்பு தமிழகத்தின் வேறு எந்த மாவட்ட தலைநகரிலும் காணப்படாத தனிப்பெரும் சிறப்பாகும். கிழக்கே அம்மாப்பேட்டை, மேற்கே பள்ளப்பட்டி, ஐந்துரோடு, தெற்கே கொண்டலாம் பட்டி, வடக்கே அசுதம்பட்டி என இந்நகரம் குறுக்கு நெடுக்காக ஏறத்தாழ பத்து கி.மீ. தொலைவுள்ள ஒரு நகரமாக விளங்குகிறது. நாற்புரமும் மலைகளால் சூழப்பட்ட நகரமாக இது விளங்குவதால் கோடையில் மிக்க வெப்பமும், குளிர்காலத்தில் மிகுந்த குளிரும் கொண்ட நகரமாகச் சேலம் விளங்குகிறது. காவிரியின் கிளை நதியான திருமணிமுத்தாறு ஒரு காலத்தில் நகரத்தின் மையத்தில் ஓடியது. இப்போது இது வறண்டு கிடக்கிறது.சேலம் நகரத்தின் பெயர் கல்வெட்டில் ‘சேலம்’ என்றே குறிக்கப்பட்டுள்ளது. சேலத்து உடையார் (51A.of.1888) என்று சேலத்தில் எழுந்தருளியுள்ள இறைவனைக் குறிப்பிடுகிறது.

கொங்குமண்டலச் சதகம் அதனை ராசிபுர நாட்டின் கிளைநாடான ‘சேலநாடு’ எனக்குறிப்பிடுகிறது. இவ்வூர் மலை சூழ்ந்து காணப்படுவதால் சைலம் எனவும் அழைக்கப்படுகிறது. சைலம் பின்னர் சேலம் ஆகியிருக்கலாம். ஏத்தாப்பூர் செப்பேடு இவ்வூரைச் சாலி - சேரமண்டலம் எனக்குறிக்கிறது. சேரலம் என்னும் பெயரே காலப்போக்கில் திரிந்து சேலமாயிற்று.

சேலம் நகரில் வன்னியர், வேளாளர், துளுவ வேளாளர், கன்னடம் பேசுவோர், செங்குந்தர், நாயக்கர், ஆதிதிராவிடர் என்னும் இன மக்கள் வாழ்கின்றனர். சேலம் நகரம் ஒரு முக்கிய போக்குவரத்து மையமாக விளங்குகிறது. இந்நகரின் மையத்தில் காசி, கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை செல்கிறது. அரசுப் போக்குவரத்து கழகம் இந்நகரில் செயற் படுகிறது. நகரின் மையத்தில் உள்ளூர் பேருந்து நிலையமும், சற்றுத் தள்ளி, வெளியூர்களுக்குச் செல்லும் பேருந்து நிலையமும் உள்ளன.

கல்விக்கூடங்கள் நிறைந்த நகரமாகச் சேலம் விளங்குகிறது. சேலம் நகரில் ஆண்களுக்கான ஓர் அரசு கலைக்கல்லூரியும், பெண்களுக்கான அரசு கலைக் கல்லூரியும் இடம் பெற்றுள்ளன. இந்நகரில் பெண்களுக்கான சாரதா மகளிர் கல்லூரி புகழ் பெற்றதாகும். பெண்களுக்கான ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியும், அக் கல்லூரி நிறுவனத்தாராலேயே நடத்தப்பட்டு வருகிறது. அரசு சார்பில் நடைபெறும் ஒரு சட்டக்கல்லூரி யும், ஒரு மருத்துவக்கல்லூரியும், இரு பொறியியல் கல்லூரிகளும், ஒரு தொழிற் பயிற்சிக் கூடமும் உள்ளன.

சேலம் நகரைப் பொறுத்தவரை நெசவுத் தொழிலே தலையாய தொழில். வளர்ந்து வரும் தொழில்களுள் சேலம் இரும்பு எஃகுத் தொழிற்சாலை குறிப்பிடத்தக்கது. நகரிலும் நகரைச் சுற்றிலும் எட்டுக்கும் மேற்பட்ட நூற்பாலைகள் மற்றும் துணி தயாரிப்பு ஆலைகள் இடம் பெற்றுள்ளன. சேலம் நகரில் உள்ள அம்மாபேட்டை பருத்தி ஆடை நெய்வதில் சிறந்து விளங்குகின்றது. சேலம் நகரிலும் சேலம் நகரத்தைச் சார்ந்த கொண்டலாம்பட்டியிலும் சிறந்த முறையில் பட்டாடைகள் நெய்யப்பட்டு இந்தியா முழுவதற்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இதற்கடுத்த பெரிய தொழிலாக இந்நகரில் காணப்படும் பத்துக்கும் மேற்பட்ட மரவள்ளிக்கிழங்குத் தொழிற்சாலைகள் ( Sago Factories ) அமைந்து உள்ளன. இதில் சவ்வரிசி தயாரிக்கபபடுகின்றது. செராமிக் தொழில்களும், கிராபைட்டுத் தொழில்களும், கருங்கல்லை வெட்டியெடுத்துத் தேவையான அளவில் அறுத்து வெளிமாநிலங்களுக்கு அனுப்பும் பணிகளும் நடைபெறுகின்றன.

சேலம் நகரில் ஆண்டுதோறும் ஆடி மாதத்தில் நடைபெறும் கைத்தறிப்பொருட்காட்சி மிகவும் புகழ் வாய்ந்த ஒன்றாகும். இந்தியா முழுவதிலும் இருந்து பல பொருட்கள் விற்பனைக்காக இக்கைத் தறிக் கண்காட்சியில் இடம் பெறும். இக்கைத்தறிப் பொருட்காட்சி சேலம் நகரில் ஆண்டுதோறும ஆடி மாதத்தில் கொண்டாடப்படும் மாரியம்மன் திரு விழாவையொட்டி இடம் பெறுகிறது.

சேலம் நகரில் அமைந்துள்ள அருங்காட்சியகத்தில் இம்மாவட்டத்தில் கிடைத்துள்ள சிலைகள்,

கல்வெட்டுகள், பழைய, புதிய கற்காலக் கருவிகள், நாணயங்கள் முதலான கலைப்பொட்கள் காணப்படுகின்றன. சேலத்திற்குப் பெருமை சேர்க்கும் பழங் கோயிலான சுகவனேசுவரர் கோயில் உள்ளது. இது கி.பி.ஏழாம், எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. சேலம் கோட்டை மாரியம்மன் கோயிலும் தேர்நிலை இராசகணபதி கோயிலும் இந்நகரை அலங்கரிக்கும் இரு கோயில்கள் ஆகும். சேலத்திற்கு மேலும் புகழ் சேர்ப்பது சேலம் மாம்பழங்களாகும்.

- கு. மு.

**சொல்லிலாச் சோதனை :** சோதனை என்பது நடத்தையை முறையாகக் கவனித்து, அதனை எண்ணளவைகளிலோ குறிப்பிட்ட வகைப்படுத்தும் முறையிலோ விளக்குவதாகும். வழக்கமான, எழுதும் சோதனைகளைத் தவிர ஒரு மின்சாரப்பெட்டியைப் பழுது பார்த்தல், ஒரு மனிதனின் படம் வரைதல், மணிகளைக் கோர்த்தல், பொருட்களை வகைப்படுத்தல் எனச் செயலாற்றும் சோதனைகளும் உள்ளன.

சொல்லிலாச் சோதனையில் ( Non - Verbal Test ) எந்த வினாவிற்கும் வாய்மொழியில் அல்லது எழுத்து மூலம் சொற்கள் அடங்கிய விடைகளையோ சொற்கள் அடங்கிய சிக்கல்களைத் தேர்வு காண்பதோ தேவையில்லை. உளவியல், கல்வியியல் சோதனைகளின் தொடக்க நாள்களிலிருந்தே இத்தகைய சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன. தனி நபருக்கான நுண்ணறிவு சோதனைகளில் இத்தகைய பல உருப்படிகள் காணப்பட்டன. இது போன்றே குழு சோதனைகளில் முதல் உலகப்போரில் பங்கேற்றவர் எழுத்தறிவற்ற போர் வீரர்களின் பொது அறிவுத் திறனைச் சோதிப்பதற்காக நடத்தப்பட்ட அமெரிக்க நாட்டின் பீட்டாபடை சோதனை இத்தகைய சொல்லிலா சோதனைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அவரவர் பரம்பரை பண்பாட்டு விளைவுகளோடு, மொழி தொடர்புடையது. எனவே மொழியைப் பயன்படுத்தாது, பொதுத்திறனை அல்லது நுண்ணறிவை மட்டும் தனிப்பட்ட முறையில் மதிப்பிடுவதற்கு இவை உதவும். இன்று இத்தகைய சோதனைகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளனர். இச்சொல்லிலாச் சோதனைகள், மொழித்திறனைப் போதுமான அளவு வளர்த்துக் கொள்ளாதவர்களுக்கும், காது கேளாதோர் அல்லது மொழித்திறனில் குறைபாடுடையோர்க்கும் அல்லது பல்வேறு இனங்களின் பின்னணிகள், தாழ்த்தப்பட்ட சூழ்நிலைகள் ஆகியவற்றிலிருந்து வந்தவர்களுக்கும் உதவுகின்றன. இருப்பினும் சிறந்த மொழித்திறன்கள் உடையவர்களுக்கும் பெரும்பாலான சொல்லிலாச் சோதனைகளையும் குறிப்பிடத்தக்க அளவிற்குத் தீர்வு காணும் திறன் உண்டு. எனவே எந்த ஒரு சோதனையையும் முற்றிலும் சொல்லிலாச் சோதனையாக மேற்கொள்வது என்பது ஐயப்பாடுடையதே.


தொழில்களில் தேர்ந்தெடுப்பதற்கும், வழிகாட்டலுக்கும் சொல்லிலாச் சோதனைகள் பயன்படுகின்றன. இச்சோதனைகளில் தேர்வு எழுதுபவர் எப்போதும் வாய்மொழி அல்லது எழுத்தின் மூலம் தரப்படும் குறிப்புரைகள் பெறுவதில்லை. தேர்வு உருப்படிகளில் மொழி பயன்படுத்தப்படுவதில்லை. அவை பட வடிவிலேயே அமைக்கப்படுகின்றன. இச்சோதனைகளில் மாணவர் தனது கைகளால் எதையேனும் படைத்தல் வேண்டும் அல்லது சுட்டிக் காட்டுதல் மூலம் பல்வகைக் விடைக்குள் சரியானதைக் குறிப்பிடவேண்டும்.

சொல்லிலாச் சோதனைகளைத் தனி நபருக்கோ குழுவிற்கோ நடத்திடலாம். இவற்றை உளவியல் அறிஞர்களைத் தவிர தொழில் வல்லுநர்களும் நடத்துகிறார்கள். இவற்றால் பணியின் தன்மையை எவ்வளவு தூரம் தெரிந்து வைத்துள்ளார் என்றும், எவ்வளவு சிறப்பாக ஒத்துழைத்துச் செயலாற்றுவார் என்றும் கண்டு அறிய முடிகிறது. சொற்களால் விடையளிக்கக் கூடிய பணிகளில் சரிவரப் பங்கேற்க முடியாதவர்களும், இந்தச் சோதனைகளை விரும்பி ஏற்கின்றனர். கடின உழைப்பும், பணமும் மிகுதியாகத் தேவைப்படுவதால், தனி நபர் சோதனையைவிட குழுக்களில் இச்சோதனைகள் பெரும்பாலும் நடத்தப்படுகின்றன. பள்ளிக் குழந்தைகளையும் வேலைக்கு விண்ணப்பித்துள்ளவரையும் சோதிப்பதற்கு இவை மிகவும் பயன்படுகின்றன. இருப்பினும் சில குறைகள் இதிலும் உண்டு. சோதிக்கப்படுவோர் எல்லோரும் வேலையின் தன்மையைப் புரிந்து கொள்கின்றனரோ என்பதும், சோதனையை முடிப்பதற்கு எல்லோரும் கடினமாக உழைக்கின்றனரா என்றும் அறிய வேண்டும்.

மொழியின் தாக்கத்தையும், முந்தைய கல்வி அனுபவத்தையும் மீச்சிறு அளவில் கொண்டு ஆராயும் திறனை மட்டும் அளப்பதற்கு ஒரு தனிப்பட்ட அளவாகப் பயன்படுவதே சொல்லிலாச் சோதனையின் நோக்கம். குறைந்த மதிப்பெண்களைப் பற்றி கருத்துத் தெரிவிக்கும்போது சோதனை நடத்துபவருக்குச் சில சிக்கல்கள் ஏற்படும். மாணவரது குறைந்த திறமையாலா? அல்லது தரப்பட்டுள்ள குறிப்புகள் சரிவரப் புரிந்து கொள்ளாமையாலா? அல்லது ஆர்வமூட்டலோ தவறிவிட்டதாலா? எனக் குழப்பம் ஏற்படும். இத்தகைய சிக்கல்கள் தனி நபருக்காக நடத்தப்படும் சோதனைகளில் ஓரளவு குறைவுதான். பொதுவாகப் பள்ளித் தேர்வுகளில் ஊடுருவி ஆராயும் சோதனை களின் மதிப்பெண்களும், மாணவரின் அடைவிற்கும் உள்ள பொருத்தப்பாடு சொல்லிலாச் சோதனைகளின் மதிப்பெண்களுக்கும் அடைவுச் சோதனைகளின் மதிப்பெண்களுக்கும் இடையே காணப்படுவதில்லை. எனவே, பள்ளியில் பின் தங்கிய மாணவர் சொல்லிலாச் சோதனையில் உயர்ந்த மதிப்பெண் வாங்கும் நிலையின் அடிப்படைக் காரணத்தை ஆசிரியரால் சரிவர எடுத்துக்கூற இயலவில்லை.


**சொல்லிலாச் சோதனைகளின் நன்மைகள் :** மொழி, பண்பாட்டு அனுபவம் இவற்றைப் பொருத்து குறைபாடுள்ள சூழ்நிலையிலிருந்து வரும் மாணவர்களைச் சோதிப்பர். செய்திகளை வேறொரு கோணத்தில் மிக உயர்ந்த நிலையில் ஆராயவும், கையாளவும் அவர்களுக்கு உரிய திறனை இவற்றின் மூலம் காணலாம். அவர்களுக்கு ஊடுருவி ஆராயும் சோதனைகளில் தேர்ச்சி மிகக் குறைவாக இருக்கலாம். சோதிக்கப்படுவோரின் எண்ணிக்கை மிகுதியாக இருந்தால் சோதனைகளைக் கையாளவும் அவற்றிற்கு மதிப்பெண்களைத் தருவதற்கும் கணிப்பொறியைப் பயன்படுத்தலாம்.

சொல்லிலாச் சோதனைகள் இரு வகைப்படும். ஒரே அளவைக் கொண்ட ஒருப்படித்தான உருப்படிகளைக் கொண்ட அணிகள் வடிவில் அமைக்கப்படும் சோதனை. அத்தகைய அணிகளில் குறுக்காகவோ, நெடுக்காகவோ அந்த அணியில் உள்ள மாதிரிகளில் தொடர்புகளைக் கண்டு காலியிடத்தை நிரப்ப வேண்டும். பிரிட்டன் திறன் அளவுகளில் அளவைக் கொண்டு அணிகளைப் பயன்படுத்தும் உருப்படி கீழே காணப்படுகிறது ( படம் K )




இரேவனின் தொடர்ந்து வரும் அணிகள் என்ற அமைப்பில் பல உள் தேர்வு ( Multiple Choice ) முதன் முதலில் 1983 இல் வெளியிடப்பட்ட சோதனையின் மாதிரி படம் P இல் காட்டப்படுகிறது.

அவர் களுக்குப் பயிற்சிக்காகத் தரப்படுகின்றன. இறுதி மதிப்பெண் அவர்கள் எவ்வளவு வேகமாக சரியான விடையைத் தருகிறார்கள் என்பதைப் பொருத்து அமைகிறது. சொல்லளவில் கருத்துகளை




கொடுக்கப்பட்டுள்ள ஆறு விடைகளுக்குச் சரியான ஒரு விடை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஒரே மாதிரியான அணிகள் சோதனைகளில் எல்லா உருப்படிகளும் ஒரே ஒரு அணியின் மாதிரிகளைக் கொண்டுள்ளன. ஆனால் கேள்விகளின் கடினத் தன்மை பொறுத்து அவை மாறுபடுகின்றன. தனிப்பட்ட முறையில் தரும்போது குறிப்பிட்ட நேர அளவு தரப்படுவதில்லை. காலவரம்பின்றி எவ்வளவு வினாக்களுக்குச் சரியாக விடையளிக்க முடியும் என்பதே வெற்றியின் அளவைத் தீர்மானிக்கிறது.

குழுக்களில் தரப்படும் சோதனைகள் பல படித் தான தன்மையை உடையவை. அவற்றிற்குக் கால வரம்புண்டு. இங்குத் தரப்பட்டுள்ள கேட்டலின் பண் பாட்டு ஏந்தலைச் சார்பற்ற நுண்ணறிவுச் சோதனை களிலிருந்து எடுக்கப்பட்டவை.



இச்சோதனைகளில் ஒரு வகை வினாவிலிருந்து மற்றொரு வினாவிற்குச் சரியாக விடையளிக்க மிகுந்த அளவு ஆராயும் திறன்களும், இலகுத் தன்மை யும் தேவைப்படுகிறது. சோதனைக்கு முன்பே அவர்கள் எதிர்கொள்ளத் தக்க பல்வேறு உருப்படிகள்

வளர்த்துக் கொண்ட நபர்கள் சொல்திறன்களைக் கொண்டு சொல்லிலாச் சோதனைகளை வகைப் படுத்தி, தீர்க்க முயல்வதால் அவர்கள் இச்சோதனை களிலும் நல்ல வெற்றியே பெறுகிறார்கள். இந்த வகையில் சொற்களின் இடையீடின்றி அவற்றின் தாக்கமின்றி சொல்லிலாச் சோதனைகளை அமைத்துக்கொள்வது இயலாதென்றே கூறலாம்.

கல்வி அல்லது சொற்சோதனைகளில் குறைந்த அளவே தேர்ச்சி பெறும் குழந்தைகளிடமும், வயது வந்தோரிடமும் உள்ள தனிப்பட்ட ஆராயும் திறனை அளப்பதற்கும் சொல்லிலாச் சோதனைகள் மிகவும் பயன்படுகின்றன. சிறுபான்மையினர் அல்லது பின் தங்கியுள்ள மக்களைச் சோதிக்க கல்வி, தொழில் துறையில் இத்தகைய சோதனைகள் பெரிதும் பயன் படுகின்றன.

- கி. அ.

**சொற்காலவியல் :** ஒரு மொழியின் எழுத்துச் சான்றுகளுக்கு முற்பட்ட வரலாற்றினைக் கண்டறிய அகச்சான்றுவழி ஆய்வு, வட்டார வழக்குவழி ஆய்வு, ஒப்பியல் முறை ஆய்வு, சொற்காலவியல் ஆய்வு என்று நான்கு முறைகள் உள்ளன.

மொழியில் காணப்பெறும் சொற்களின் நிலை பேற்றினையும், இழப்பினையும் அடிப்படையாகக் கொண்டு மொழியின் எழுத்துச் சான்றுகளுக்கு முந் தைய வரலாற்றினைக் கண்டறியும் முறையே 'சொற் காலவியல் ஆய்வுமுறை' எனப்படும்.

காலப்போக்கில் ஏற்படும் சமுதாய, பொருளா தார, காலச்சார மாற்றத்தினால் ஒரு மொழியின் சொற்களஞ்சியத்தில் மாற்றம் ஏற்படுவதுண்டு. அம் மாற்றத்தால் மொழியில் சொற்கள் அழிந்துபடுவதும் புதிதாகத் தோன்றுவதும் உண்டு. ஒரு குறிப்பிட்ட காலத்தில் மொழியில் ஏற்படும் சொற்களின் இழப் பினையும் எஞ்சியிருக்கும் சொற்களையும் அடிப் படையாகக் கொண்டு சொற்காலவியல் ஆய்வு மேற் கொள்ளப்படுகிறது.

சொற்காலவியல் ஆய்வு முறையால் ஒரே குடும்பத்தினைச் சார்ந்த வெவ்வேறு மொழிகள் தனித்தனியாகப் பிரிந்து சென்ற காலத்தினையும், அம் மொழிகளுக்கிடையே காணப்பெறும் தொடர் பினைக் கண்டறியவும் அம்மொழிகளுக்கிடையே உட்பிரிவினை ஏற்படுத்தவும் இயலும்.

ஒரே குடும்பத்து மொழிகள் ஒவ்வொன்றிலும் அடிப்படையான சொற்கள் பெரிதும் அழிந்துபடா மலும் மாற்றமடையாமலும் இருக்கின்றன என்பதும் ஒவ்வொரு மொழியிலும் காணப்பெறும் அடிப் படைச் சொற்களில் இழப்போ, மாற்றமோ ஏற்படு மாயின் அவை அனைத்து மொழிகளிலும் சமச்சீராக அமைகின்றன என்பதும் ஆகிய இரண்டு கருதுகோள் களின் அடிப்படையில்தான் சொற்காலவியல் ஆய்வு முறை மேற்கொள்ளப்படுகின்றது. முதன்முதலில் குறிப்பிடப்பெற்றுள்ள இரண்டு கருதுகோள்களின் அடிப்படையில் லீசு என்னும் அறிஞர் ஒரு குடும்பத் தினைச் சார்ந்த இருமொழிகள் பிரிந்துசென்ற கால எல்லையை அளந்தறியப் பல கோட்பாடுகளை உரு வாக்கினார்.

சொற்காலவியல் ஆய்வு முறையில் முதல் நிலை யில் ஒரு மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த பல்வேறு மொழிகளினின்றும் அடிப்படைச் சொற்கள் தெரிவு செய்யப்படும். அடிப்படைச் சொற்கள் அனைத்து மொழிகளிலும் காணப்பெறும் வடிவு, பொருள் ஆகி யவற்றில் ஒத்துக்காணப்பெறும் வாய்பாட்டு வடிவங் களாக (Cognates) இருத்தல் வேண்டும். அடிப்படைச் சொற்களைத் தெரிவு செய்யும்போது கடன்சொற்கள் கட்டாயமாகத் தவிர்க்கப்படல் வேண்டும். மேலும் அடிப்படைச் சொற்கள் நிலைத்து நிற்கும் தன்மை, பொதுமைப்பண்புகளைக் கொண்டுள்ளமை, வருகை நிலை ஆகிய மூன்று பண்புகளையும் பெற்றி ருக்கும் வகையில் தெரிவு செய்யப்பெற வேண்டும்.

சான்றாக கருதுகோள் நிலையில் தென் திராவிட மொழிக் குடும்பத்தினைச் சார்ந்த மொழிகளில் காணப்பெறும் ஐந்நூறு அடிப்படைச் சொற்களைத் தெரிவு செய்து அவ்வடிப்படைச் சொற்களின் இழப் பினையும் நிலைப்பேற்றினையும் ஒப்பிட்டுக் கண் டறிவதன் வழி இம்மொழிகளுக்கிடையே காணப் பெறும் தொடர்பினையும், ஒவ்வொரு மொழியும் பிரிந்த காலத்தினையும் கண்டறியலாம். மேலும் இதன் வழி இம்மொழிகளுக்கிடையே உட் பிரிவினை உருவாக்கவியலும்.

| தமிழ் | மலையாளம் | கொடகு | |
|---|---|---|---|
| 401 | 392 | 374 | |
| கோட்டா | தோடா | கன்னடம் | துளு |
| 347 | 320 | 293 | 268 |

ஈண்டு தென்திராவிட மொழிகளில் காணப்பெறும் தெரிவு செய்யப்பெற்ற அடிப்படைச் சொற்களின் நிலைபேறு நிலையினையும் இழப்பினையும் ஒப்பிட்டுக் காண்கையில் மூலத் தென்திராவிடமொழி முதலில் துளு, தமிழ் - கன்னடம் குழு எனவும், பின்னர் கன்னடம், தமிழ் - தோடா குழு எனவும், இதனை அடுத்துத் தமிழ் - கொடகு குழு, கோட்டா - தோடா குழு எனவும் பிரிந்துள்ளது என்பதனையும், பின்னர் கோட்டா - தோடா குழு கோட்டா, தோடா எனவும் தமிழ் - கொடகு குழு கொடகு, தமிழ் - மலையாளம் குழு எனவும், இதனை அடுத்துத் தமிழ் - மலையாளம் குழு தமிழ், மலையாளம் எனவும் பிரிந்துள்ளதைக் கண்டறியலாம்.

இதன் வாயிலாகத் தென்திராவிட மொழிகளின் உட்பிரிவினை மேலே குறிப்பிடப்பெற்றுள்ள வரைபடத்தில் சுட்டப்பெற்றது போன்று ஏற்படுத்த முடிகிறது. மேலும் இம்முறையில் தமிழ், மலையாளம் ஆகிய மொழிகள் அனைத்துத் தென்திராவிட மொழிகளில் அதிகத் தொடர்புடையன என்பதனையும் கண்டறிய முடிகிறது. கோட்டா, தோடாவை விடத் தமிழ் மலையாள மொழிகளோடு கொடகு மொழியே நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது என்பதனையும், துளு மொழி முதலில் பிரிந்தமையால் ஏனைய திராவிட மொழிகளினின்றும் வேறுபட்டு நிற்றலையும் அறியமுடிகிறது.

மொழிகளிலுள்ள அடிப்படைச்சொற்களின் இழப்பு சமச்சீராக அமையாமல் மொழிக்கு மொழி வேறுபட்டு அமைவதாலும் முறையான வாய்பாட்டு வடிவங்களாக மொழிகளிலுள்ள அடிப்படைச் சொற்கள் இன்மையாலும், இவற்றினை அடிப்படையாகக் கொண்டு நிகழ்த்தப்பெறும் சொற்காலவியல் ஆய்வு குறையுடையதாகக் கருதப்படுகின்றது.

- ஏ. ஆ.

**சௌரம் :** சூரியனை முழு முதற்கடவுளாகப் பாவித்து வழிபடும் நெறி சௌரம் எனப்படும். சூரிய தேவன் புராதன காலத்திலிருந்தே பாரத பூமியில் தனிப்பெரும் தெய்வமாக வழிபடப்பெற்று வந்திருக்கிறான். வேதங்கள் ஒளிதேவனின் புகழைப் பறை சாற்றுகின்றன. இருக்கு வேதத்தில் பத்துப் பாசுரங்கள் அருணாஞ்சலி புரிகின்றன. சூரியனைப் பற்றிய மந்திரங்கள் வேதத்தில் பல இடங்களில் வருகிறது. ஓர் அநுவரகத்தில், 'நீ வெற்றியுடையனாய், எல்லாவற்றையும் காண்பவன். சோதியை ஆக்குபவன். எவ்வுலகையும் ஒளிரச் செய்கிறவன்' என்று சூரியனுடைய பெருமையைக் காணலாம். சாமவேதத்தில் கூறப்பட்டுள்ள சூரியனைப் பற்றிய மந்திரங்களுள் 'ஆதித்தியர்களே நோயை நீக்குகள். இன்னல் புரியும் பகைவரை ஓட்டுக! கெடுமதி உடையவனையும் அழிப்பீர்களாக, எங்களைத் தீவினையினின்றும் நீக்குக!' என்பதும் ஒன்று. அதர்வன வேதம் இருதய நோயையும், காமாலையையும் போக்கச் சூரியனை வழிபடும் முறையைக் கூறுகிறது.

காயத்திரி துதியில் உலகுக்கெல்லாம் கண் போன்றவரும், உலகின் படைத்தல், காத்தல், அழித்தல், ஆகியவற்றுக்குக் காரணமானவரும், வேத வடிவினரும், முக்குணத்தால் மூன்று வடிவம் கொண்டவரும் பிரம்மா, விட்ணு, சிவரூபமாய் இருக்கின்றவருமான சூரிய பகவானுக்கு வணக்கம் என்று சூரிய வழிபாடு பற்றி அமைந்துள்ளது.

சூரிய வழிபாடு பழமையானது மட்டுமன்று, பெருமை மிகுந்தது, புகழ்மிக்கது. மாவீரன் அலெக்சாந்தர் இந்தியாவுக்குப் படையெடுத்து வந்தபோது வீராவேசத்துடன் எதிர்த்துப் போரிட்ட பேரரசு என்னும் புருடோத்தம மன்னன் தன் படைகளை அணி வகுக்கு முன்பு சூரிய வழிபாடு நடத்தினான் என்று வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன. வடநாட்டில் சாகர்கள் என்ற அரச மரபினர் சூரிய வழிபாட்டைச் சிறப்பாக வளர்த்தவர்கள். பாசாவில் உள்ள சூரியச் சிற்பங்கள் பௌத்த மதத்திலும் ஒளிதேவன் வழிபடப்பட்டதை உணர்த்துகின்றன. ஒரிசாவில் உள்ள கண்டகிரி சைன குடைவரைக் கோவிலிலும் அருணனின் அற்புதச் சித்திரங்களைக் காணலாம். குப்தர்களுக்குப் பிறகு வடபுலத்தில் வல்லமை பெற்று விளங்கிய அர்சவர்த்தனர், பிரபாகர வர்த்தனர், ஆதித்யவர்த்தனர் முதலிய மன்னர்கள் சூரிய வழிபாடு புரிந்து வந்ததை அவர்கள் காலத்துக் கல்வெட்டுகளும் அர்சசரிதம் என்னும் நூலும் சுட்டிக்காட்டுகின்றன.

வால்மீகி இராமாயணத்தில் கதிரவனுடைய துதியாகிய 'ஆதித்திய இருதயம்' என்ற பகுதியில் இராவணனோடு போர் செய்த இராமர், சோர்வு அடையாமல் இருக்கும்பொருட்டு, அகத்திய முனிவர் தோன்றி அவருக்கு ஆதித்திய இருதயத்தை அருளினார். அந்த மந்திரத்தின் பெருமையை, 'பகைவர் அனைவரையும் வெல்வதற்குரிய இரகசியத்தைக் கேட்பாயாக. ஆதித்த இருதயம் என்ற பெயருடைய இந்த மந்திரம் வெற்றியைத் தருவது. குறைவற்ற பயனை அளிப்பது. மிகத் தூய்மையானது, எல்லாப் பாவங்களையும் நாசம் செய்வது, மனக்கவலையையும் உடற்பிணியையும் போக்குவது' என்று விரித்துச் சொல்லிப் பின் அந்த மந்திரத்தை அருளினார். அந்தத் துதியில் கதிரவனுடைய பெருமைகள் விரிவாக வருகின்றன. இராமர் பிறந்த இரகுவம்சம் சூரியனை முதலாக உடையது. தமிழ் நூல்களிலும் கதிரவனுடைய வழிபாட்டைப் பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. தொல்காப்பிய உரையில் பேராசிரியர் சூரியனுடைய துதியாக இரண்டு செய்யுட்களைக் காட்டுகிறார். 'உலகங்களையெல்லாம் படைத்த பிரம்மன் முதலிய தேவர்களை வெளியாக்கினவன் நீ ஆதலால் பருதியஞ் செல்வனே, நின் திருவுள்ளத்தில் உள்ள அருள், எங்களிடமிருந்து நீங்காமல் இருக்கட்டும்' என்று ஒரு பாடல் வரும். மற்றொரு செய்யுள், 'கதிரவன் மனக்கமல மலரையும் மலர்த்துபவன்' என்று சொல்கிறது. அவனே இருளையும் ஒளியையும் வெளிப்படுத்துபவன். நட்சத்திரங்களைப் பகலில் மறைத்துக்கொண்டு இரவில் வெளிப்படுத்துகிறான். சந்திரனைப் பிரகாசிக்கும்படிச் செய்பவனும் சூரியனே என்று சூரியனின் புகழை விரிவாகப் பாடுகிறது.

சிலப்பதிகாரத்தில் தொடக்கத்திலேயே இளங்கோவடிகள், 'ஞாயிறு போற்றதும் ஞாயிறு போற்றதும்' என்று சூரியனை வாழ்த்துகிறார். மற்றோர் இடத்தில், 'மலர்பொதி யவிழ்ந்த உலகு தொழு மண்டிலம் வேந்து தலை பனிப்ப வேந்துவோம் செழிபயன் ஓங்குயர் கூடலூர் துயிலெழுப்ப' (சிலம்பு, 14 : 4 - 9) என்று உலகோர் கதிரவனைத் தொழுது நின்ற காட்சியினையும், கதிரவன் மதுரை மாநகர மக்களை வைகறையில் துயிலெழுப்பிய காட்சியினையும் இளங்கோவடிகள் ஒருங்கே புலப்படுத்துகிறார். கதிரவனின் கதிர்கள் உலகில் மண்டி நிற்கும் இருளைப் போக்கவில்லையெனில் உலகில் எத்தொழிலும் நடவாது என்கிறது அகநானூறு.

மயூரன் என்ற கவியினால் கி.பி.ஏழாம் நூற்றாண் oš ï a‰w¥g£l **சூரிய சதகம்** என்னும் நூல் அருணன் கண்நோய்களை நீக்கி, நல்ல பார்வையை அளிக்க வல்லவன் என்று பகர்கின்றது. இதே சூரிய சதகம் காஞ்சிபுரத்துக் கச்சபேசுவரர் கோயில் சுவரொன்றில் கல்வெட்டுகளாகக் காட்சியளிக்கிறது. சூரியனைச் சூரியநாராயணன் என்று பாராட்டுவர். அவன் திருமாலின் வடிவம் என்பதே இதற்குக் காரணமாகும். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராகிய முத்துசாமி தீட்சிதர் நவக்கிரகங்களின் மேல் ஒன்பது கீர்த்தனங்கள் இயற்றியிருக்கிறார். ஒவ்வொரு பாட்டிலும் அந்தந்த கிரக வருணனையும், மந்திரமும் வழிபாட்டில் பயனும் அமைத்திருக்கிறார். 'சூரிய மூர்த்தே நமோசுதுதே' என்று தொடங்கும் கீர்த்தனம் கதிரவனைப் பற்றியது.

தமிழ்நாட்டில் சூரியனுக்குத் தனியே கோயில்கள் இருக்கின்றன. காவிரிப்பூம்பட்டினத்தில் சூரியன் கோயில் இருந்தது. அதை இளங்கோவடிகள் பகல் வாயில், உச்சிக்கிழான் கோட்டம் என்று சொல்கிறார். சோழநாட்டில் தஞ்சை மாவட்டத்தில் சூரியனார் கோயில் என்ற தலத்தில் சூரியனுக்குத் தனிக் கோயில் உண்டு. ஒரிசாவில் கோனார்க்கு என்னும் இடத்தில் சூரியக்கோவில் உள்ளது. எகிப்தில் கார்நாக் என்ற இடத்தில் சூரியன் கோவில் உள்ளது. தில்லியிலுள்ள குதுப்மினார் ஒரு சூரிய கம்பத்தின் மேல் எழுப்பியது எனத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அங்கேயுள்ள கோயில் சூரியனது கோயில் என்றும், அதனைச் சுற்றி இருபத்தேழு நட்சத்திரக் கோயில்கள் இருந்ததாகவும் கருதப்படுகிறது.

சூரியனைச் சுற்றித்தான் எல்லாக் கிரகங்களும் வருகின்றன. சூரியனது சிறப்பு வழிபாடு மங்கியபோதிலும், சூரியனுடன் உள்ள ஏழு கிரகங்களையும் இரண்டு சாய கிரகங்களையும் (ராகு, கேது) சேர்த்து நவக்கிரகங்கள் என்று தனிச் சந்நதி அமைத்து வழிபடும் மரபு தமிழ்நாட்டில் இன்று வேரூன்றிவிட்டது.

- கோ.சூ.

**ஞானப்பிரகாசர், களந்தை** : இவர் பிறந்த ஊர் திருவிசைப்பாப் பெற்ற ஆதித்தேச்சுரம் என்ற களந்தை. இவர் திருவாரூர் சத்திய ஞானபண்டாரத்திடம் கல்வி பயின்றார். இவருடன் பயின்றவர் மதுரை ஞானப்பிரகாசர். களந்தை ஞானப்பிரகாசர்

**தசகாரியம், சந்தான அகவல், சகலாகமசாரம், அட்டாங்க யோகக் குறள், அளவை இலக்கணம்** என்ற நூல்களை எழுதியுள்ளார்.

தசகாரியம் முப்பது விருத்தப்பாக்களால் ஆனது. மெய்கண்ட சந்தான வரலாறு கூறும் சந்தான அகவல் என்னும் நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. அட்டாங்க யோகக்குறள் அறுபத்தைந்து குறட்பாக்களால் ஆனது. இயமமாதி எட்டினைப் பற்றி விளக்கங் கூறுகிறது. அளவை இலக்கணம், வெண்பா, குறட்பா, கட்டளைக் கலித்துறையால் அமைந்தது. இந்நூல் தற்போது கிடைப்பதில்லை.

சகலாகமசாரம் என்ற நூல் குறட்பாவால் அமைந்தது. இந்நூலும் கிடைக்கவில்லை. வடமொழிச் சகலாகமசாரசங்கிரத்தின் தமிழாக்கம் இது என்ற கருத்தும் உண்டு. இப்புலவர் வாழ்ந்த காலம் கி.பி. 1450 - 1500. இப்புலவரிடம் கல்வி பயின்ற கண்கட்டி மறைஞான சம்பந்தர் பல நூல்களை இயற்றியுள்ளார்.

- இரா. ம.

**தண்டபாணி தேசிகர் :** தண்டபாணி தேசிகர் தமிழுலகில் குறிப்பிடத்தக்க அறிஞர்களுள் ஒருவர். தேசிகர் என்று கூறினார் தண்டபாணி தேசிகரை என்னும் அளவிற்கு தமிழ் மக்களிடம் அறிமுகம் ஆனவர். இவர் சிதம்பரத்தில் வானூர் ச. சடையப்ப தேசிகர் என்பவருக்கும் திருமதி பாலாம்பாள் என்பவருக்கும் தலைமகனாய் தோன்றியவர். 1905 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 30ஆம் நாள் பிறந்தார். இளம் வயதில் ஓர் அளவே பள்ளிக்கல்விப் பெற்ற இவர் திருவையாறு அரசர் கல்லூரியில் மாணவராகச் சேர்ந்தார். வடமொழி, தமிழ் என்னும் இருமொழி பாடத்திட்ட அமைப்புள்ள சமப்பிரதான வித்துவான் என்ற பட்டம் பெற்றார். இன்றைய அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திற்கு தோற்றுவாயாக இருந்த மீனாட்சி கல்லூரியில் வித்துவான் வகுப்பில் சேர்ந்து பயின்றார். புகழ் பூத்த தமிழ் அறிஞர்களாகிய ச. பொன்னோதுவா மூர்த்திகள், யாழ்ப்பாணம் ம. கதிரைவேற் பிள்ளை, டாக்டர் உ.வே. சாமிநாதையர் ஆகியோரிடம் பாடம் கேட்கும் பேறு பெற்றவர். வித்துவான் படிப்பில் மாநிலத்திலேயே முதலிடம் பெற்றார். டாக்டர் உ.வே. சாமிநாதையர் இவருக்குத் தமிழ் கற்பித்ததோடு ஓலைச்சுவடி படிக்கும் முறையையும், நூல்களைப் பதிப்பிக்கும் முறைகளையும் கற்பித்தார். அந்நாளில் ஐயர் அவர்களிடம் பெற்ற பயிற்சி, பின்னாளில் தேசிகர் அவர்கள் பல நூல்களை பதிப்பிப்பதற்கு வாய்ப்பாக அமைந்தது எனலாம்.

தாம் பயின்ற மீனாட்சி கல்லூரியில் 1928ஆம் ஆண்டு விரிவுரையாளராகப் பணியமர்த்தப்பெற்றார். 1930ஆம் ஆண்டு வரை அப்பணியில் நீடித்தார். பின்னர் நாகப்பட்டிணத்தில் உயர்நிலைப்பள்ளியில் சில காலம் பணியாற்றினார். அதன்பின்னர்க் கழக உயர்நிலைப்பள்ளிகளில் பணிபுரியத் தொடங்கினார். திருவாரூர், குடவாசல் போன்ற இடங்களில் 1944 ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

தேசிகரின் தமிழ்ப்புலமையை அறிந்த திருப்பனந்தாள் சிரீகாசி மடத்து அருள்நந்தி தம்பிரான் சுவாமிகள் தேசிகரைத் திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரியில் பேராசிரியராக அமர்த்திக்கொண்டார்கள். பின்னர் தருமபுர ஆதினம் கீழ்த்திசைக் கல்லூரியில் துணை முதல்வராக நியமனம் பெற்றார். தருமை ஆதீனம் பல்வேறு வகையிலும் இவரைத் தமிழ்ப்பணியில் ஈடுபடுத்திக்கொண்டது. அக்கால எல்லையில் இவரால் வெளியிடப்பெற்ற நூல்கள் பல. இவருடைய நூல்களுள் குறிப்பிடத்தக்க நூலாகத் திருக்குறள் உரைவளம் திகழ்கிறது. தேசிகர் பெரும்புகழ் எய்துவதற்கு இந்நூல் பெரிதும் காரணமாயிற்று. தருமை ஆதீனம் வெளியீடாகத் திருஞானசம்பந்தர் தேவாரம் உரைகுறிப்போடு, அக்கால எல்லையில் வெளிவந்தது. திருவாசகம் குறிப்புரையோடு வெளிவந்தது. இந்நூல் வெளியீடுகளுக்கு தேசிகர் பெரிதும் உறுதுணையாக இருந்தார். திருப்பனந்தாளிலும், தருமபுரத்திலும் 1944 முதல் 1954 வரை இவர் தமிழ்ப் பணி புரிந்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1954 முதல் 1972 வரை தமிழ் விரிவுரையாளராகப் பணி செய்தார்கள். அந்நாளில் திருவாடுதுறை ஆதீன முதல்வராக விளங்கிய சுப்பிரமணிதேசிகர் இவர்தம் பெரும் புலமையைப் பாராட்டி, மகாவித்துவான் பட்டத்தைக் கொடுத்தார்கள். அவ்வாதீன வெளியீடாகப் பல நூல்களை வெளியிட்டார்கள். அவைகளுள் கணபதி, முருகன், ஆடல்வல்லான் முதலிய நூல்களைப் பட விளக்கங்களோடு வெளியிட்டார். இவை பெரிதும் வரவேற்கத்தக்க நிலையில் அமைந்தன.



**தண்டபாணி தேசிகர்**

திருமந் திரம் நூலுக்கு *பஞ்சாட்சர தீபம்* என்னும் உரையெழுதி ஒவ்வொரு தந்திரமாக வெளியிட்டார்கள். திருவாசகத்திற்கு ஒரு பேருரை எழுதினார்கள். சங்க இலக்கிய சொற்களஞ்சியம், நன்னூல் விருத்தியுரை விளக்கம், தொல்காப்பிய சூத்திர விருத்தி விளக்கம் போன்ற வெளியீடுகளும் வெளி வந்தன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலிருந்து ஓய்வு பெற்ற பின் இரண்டாண்டுகள் நாகப்பட்டிணத்தில் கனகசபை தமிழ்க்கல்லூரியில் சிறப்பு நிலைப் பேராசிரியராகப் பணிபுரிந்தார். மீண்டும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் திருக்குறள் இருக்கையில் பணி மேற்கொண்டார். திருக்குறள் இருக்கையின் வெளியீடுகளாக **வள்ளுவத்தில்**

**மெய்பொருள் சுவடுகள், வள்ளுவரும் கம்பரும்** போன்ற நூல்கள் வெளியாயின. அதன்பின்னர் மதுரை காமராசர் பல்கலைக்கழகம் திருக்குறள் ஆராய்ச்சித்துறையில் பேராசிரியராக நியமனம் செய்தது. அப்பல்கலைக் கழகத்தில் 1983 முதல் 1986 வரை திருக்குறள் உரைக்களஞ்சியப் பணியைச் செம்மையுறச் செய்தார்கள். காமராசர் பல்கலைக்கழகம் தமிழ்ப் பேரவைச்செம்மல் என்னும் பட்டத்தை இவருக்கு அளித்துப் பாராட்டியது. மீண்டும் அப்பல் கலைக்கழகம் 1988 முதல் திருக்குறள் உரைக்களஞ்சியம் அச்சாகும் வரை பணிசெய்யும் வாய்ப்பினை அளித்தது.

இவருடைய அறுபத்தியொரு ஆண்டு தமிழ்ப் பணியில் தமிழகம் பெற்ற நூல்கள் பல. உரையெழுதிய நூல்கள், பதிப்பித்த நூல்கள், தொகுப்பு நூல்கள், ஏடுபெயர்த்து எழுதிய நூல்கள், ஒப்புமையாக்க நூல்கள் என 150 நூல்கள் வெளியிட்டுள்ளார்கள் என்பது போற்றுதற்குரியதாகும். இவருடைய மாணாக்கர்கள் பலர் குறிப்பிடத்தக்கவர்கள். தருமை ஆதீனம் குரு மகாசந்நிதானம் சண்முக தேசிகர், குன்றக்குடி அடிகளார், டாக்டர் மு. கருணாநிதி, நீதிபதி இசுமாயில் போன்றோர் அவர்களில் சிலர்.

பல நிறுவனங்கள் இவருக்குப் பட்டம் அளித்து சிறப்பித்துள்ளன. தருமை ஆதீனம், ஆதீனம் வித்துவான் என்ற பட்டத்தையும், திருவாடுதுறை ஆதீனம் மகாவித்துவான் பட்டத்தையும் கொடுத்துப் பெருமைப்படுத்தின. திருமுறை உரைமணி, சித்தாந்தப் பேராசிரியர், முதுபெரும் புலவர், உரையாசிரியர், உரைவளத் திருவள்ளுவர் போன்ற பட்டங்களும், இலங்கையில் பெற்ற உரைவள வேந்தர் பட்டமும் குறிப்பிடத்தக்கவை.

தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகம் தேசிகரின் புலமையைப் பாராட்டி டாக்டர் பட்டம் அளித்துள்ளது. தமிழக அரசு 16 - 1 - 1988 நடத்திய திருவள்ளுவர் திருநாளில் ரூபாய் 10,000 கொடுத்துப் பெருமைப்படுத்தியது. அண்ணாமலை அரசர் அறக்கட்டளையின் சார்பில் முத்தையவேள் பிறந்தநாள் விழாவில் ரூபாய் 50,000 பரிசு கொடுத்து வெள்ளித் தட்டும், பொன்னாடையும் வழங்கி சிறப்பிக்கப்பட்டார். 1990ஆம் ஆண்டு சனவரித் திங்கள் குடியரசு தினவிழாவில் குடியரசுத் தலைவர் இவருக்கு பத்மபூசன் விருது வழங்கிச் சிறப்பித்தார்.

மயிலாடுதுறையில் இவர்களால் கட்டப்பெற்ற திருமந்திரம் என்னும் இல்லத்தில் தம் வாழ்நாளின் இறுதிப்பகுதியைக் கழித்தார்கள். 1990ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 25ஆம் நாள் இயற்கை எய்தினார். நாள்தோறும் காலை நான்கு மணிக்கு எழுந்திருந்து உடற்தூய்மை செய்து சிவவழிபாடு செய்யும் வழக்கத்தைத் தம் வாழ்நாள் கடமையாகச்செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவருடைய நீண்ட நாள் வாழ்க்கைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்தது எனலாம். பழம்பெரும் புலமைக்கு இவர் ஓர் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார் என்பது உளங்கொள்ளத்தக்கது.

- சு. சா.

**தம்மம்பட்டிப்பாளையப்பட்டு :** தம்மம்பட்டி, இரண்டாம் இராசராசனின் செம்பைக்கல்வெட்டில் தன்மம்பட்டி எனக் குறிக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்தில் ஆத்தூருக்கு இருபது கி.மீ. தெற்கே இவ்வூர் அமைந்துள்ளது. சுவேத நதியின் தென்கரையில் அமைந்துள்ள இவ்வூர் சுருட்டுத் தொழிலில் தலை சிறந்து விளங்குகிறது. இவ்வூரில் 100 ஆண்டுகளுக்கு முன் இரும்பு உருக்கும் தொழில் சிறப்பாக நடைபெற்றது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொட்டே புகழ் பெற்று விளங்கிய இவ்வூரைச் சுற்றிலும் பல இடங்களில் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவ்வூரின் ஒரு பகுதியாக விளங்கும் கோனேரிப்பட்டி என்ற இடத்தில் இருபத்தைந்து ரோமானியக் காசுகளும், சில ரோமானிய அணிகலன்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திபிரிசு ( கி.பி. 14 - 37 ), அகசுடசு ( கி.மு.29 ) காலத்தைச்சேர்ந்த இக்காசுகளும் அணிகலன்களும் தம்மம்பட்டி ரோமானிய நாட்டுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்புக்குச் சிறந்த சான்றாக விளங்குகின்றன. இவ்வூர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டு முதல் ஒன்பதாம் நூற்றாண்டு வரை இராட்டிரகூடர்கள், மேலைகங்கர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. மதுரை நாயக்கர்கள் ஆட்சிக் காலத்தில் 72 பாளையங்களுள் ஒன்றாகத் தம்மம் பட்டிபாளையமும் சிறப்புற்று விளங்கியது. அக்கி திருமலை நாயக்கர் ( கி.பி. 1507 - 1702 ) கட்டிய ஒரு கோட்டை இவ்வூரில் உள்ளது. இதன் வரலாறும் இவன் வழி வந்தோர் இக்கோட்டையை ஆண்ட



நீரோ மன்னர் (கி.பி. 14 – 37) காலத்து வெள்ளிக்காசு

**தம்மம்பட்டிப்பாளையப்பட்டு**

செய்திகளும் பாளையப்பட்டுகளின் வம்சாவளியிலும் விவரித்துக் கூறப்பட்டுள்ளன.

கோட்டையின் உட்புறம் அமைந்துள்ள கதரி நரசிம்மப்பெருமாள் கோயில் கி.பி.1407இல் தேவராயன் என்னும் நாயக்க அரசனால் கட்டப்பட்டது. அக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம் என்ற அமைப்புகளைக் கொண்டு விளங்குகிறது. அக்கோயிலின் உள்ளே கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பைரவர், அம்மன் கற்சிற்பங்கள் காணப்படுவதால் சோழர் காலத்திலேயே புகழ்பெற்ற சிவன் கோயில் ஒன்று இவ்வூரில் இருந்துள்ளது தெளிவாகிறது. அக்கோயிலில் தேவராயன், இரண்டாம் நரசிம்மன், வசந்தராயன், கிருட்டிண தேவராயர் ஆகியோரின் கல்வெட்டுகள் நான்கு உள்ளன.

இவ்வூர்க்கோட்டை, திப்பு சுல்தான் படையெடுப்பால் பெரும் பகுதி சிதைந்துவிட்டது. எஞ்சிய மதில் பகுதி, அகழி, கோட்டை, மேடு, முனீசுவரன் கோயில்கள் மட்டுமே காணப்படுகின்றன. இவ்வூரில் கொங்குவெள்ளாள இனத்தைச் சேர்ந்தவர்கள் வன்னியர், உடையார், ஆதி திராவிடர்கள், முகம்மதியர்கள் ஆகியோர் உள்ளனர். இவ்வூரில் வாழும் முகம்மதியர்கள் திப்புசுல்தான் காலத்தில் படைவீரர்களாக வந்தவர்களும் இந்து மதத்தில் இருந்து முகம்மதியர்களாக மதம் மாறியவர்களுமே இவர்களின் மூதாதையர்கள் எனக்கூறுகிறார்கள்.

- அ. இரா.

**தமிழ்நெறி விளக்கம் பொருளியல் :** இது கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் தோன்றிய இலக்கண நூலாகும். இந்நூலை டாக்டர் உ.வே.சா. பதிப்பித்துள்ளார். இந்நூல் 25 நூற்பாக்களுடனும் 172 எடுத்துக்காட்டுச் செய்யுளுடனும் அச்சாகியுள்ளது. முதற் நூற்பாவின் உரையில், 'என்பது நிறுத்த முறையான பொருளிலக்கணம் ஆமாறு உணர்த்தல் நுதலிற்று' என்று குறிப்பிடுவதால் இதற்கு முன் எழுத்து, சொல் பற்றியும் தமிழ்நெறி விளக்கம் கூறியிருத்தல் வேண் டும் என்று கூறுவர். இந்நூலில் யாப்பியலும் அமைந் திருக்கலாம் என்று உ.வே.சா. கருதுகின்றார். களவியல் காரிகையிலும் பரிமேழலகரின் உரையிலும் இந்நூலின் நூற்பாக்கள் எடுத்துக்காட்டப்படுகின்றன. களவுக்குமுன் கைக்கிளையை எடுத்துக் கூறுதல் அகப்பொருள் மரபாகும். இந்நூலில் இம்முறை காணப்படவில்லை. களவின் பகுதிகளான அறத்தொடு நிலை, உடன்போக்கு இரண்டும் இந்நூலில் கற்பினுள் அடக்கப்படுகின்றது.

- சா. உ.

**தருவாய்க் கொள்கை :** மனித இனத்தின் சிறப்புகள் பலவற்றுள் மேம்பட்டு விளங்குவது சிந்தனையாற்றல். சிந்தனை என்பது மனதின் இயக்கம். இவ் வியக்கத்தின் விளைவு அறிவு. சிந்தனையின் விளைவான அறிவு பற்றிய ஆராய்ச்சி முடிவுகளை மேலைநாட்டுத் தத்துவ அறிஞர்கள் அறிவுக்கோட்பாடு என்பர். அறிவு என்ற சொல்லுக்குக் கூறப்படும் பொருட்களும், தரப்படும் விளக்கங்களும் பற்பல. அவற்றுக்கேற்பக் கொள்கைகளும் கோட்பாடுகளும், தத்துவ அமைப்புகளும் வேறுபடுகின்றன. அறிவுக்கான கருப்பொருள் எது? அறிவு எப்படி உருவாகிறது? அறிவின் ஏற்புடமையை எப்படித் துணிவது? அறிவின் இறுதிப் பயன் என்ன? இவை அறிவுக் கோட்பாட்டில் எழுப்பப்படும் சில அடிப்படை வினாக்கள். இவ்வினாக்களுக்கான விளக்கங்கட்கேற்பத் தத்துவங்கள் அமைகின்றன.

மனிதன் அறிவை எங்கிருந்து பெறுகின்றான்? எப்படிப் பெறுகின்றான். புற உலகிலிருந்து மனதிற்கு வருகிறதா? மனதின் உள்ளிருந்து வெளிப்படுகின்றதா? நீர் நிலைகள் இருக்குமிடமும், நீரெடுக்கும் முறையும் தெரிந்தவர்கட்கு நீரைப் பெறுவது எளிது. அதுபோல அறிவின் மூலங்கள் எவையென அறிந்தவர்கள் முயன்றால் அறிவை எளிதாகத் திரட்ட முடியும். மேற்கோள், அனுபவம், சிந்தனை, உள்ளுணர்வு என்ற நான்கினை அறிவின் மூலங்களாக மேலைநாட்டு மெய்ப்பொருள் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேற்கோள் என்பது கல்வியும் கேள்வியும் ஆகையால் அது அனுபவத்துள் அடங்கும் உள்ளுணர்வென்பது அறிவியல் வரையறைக்கு அப்பாற்பட்டது. எனவே அனுபவம், சிந்தனை ஆகிய இரு மூலங்களே அறிவியல் அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுகின்றன. அனுபவத்தால் ஏற்படும் அறிவு துண்டு துண்டானது. ஆளுக்கேற்பவும் சூழ்நிலைக்கேற்பவும் மாறும் தன்மையது. ஆனால், சிந்தனை என்பது மனிதர்கள் அனைவருக்கும் பொது. அச்சிந்தனையால் விளையும் அறிவே பொதுமையானதாக எல்லோர்க்கும் ஏற்புடையதாக இருக்கும். எனவே சிந்தனவாதிகள் சிந்தனையே அறிவுக்கு ஆதாரம் என்று பறைசாற்றினார்.

பிரான்சு நாட்டின் தத்துவ அறிஞர் தேகார்த் ( Des cartes, 1596 - 1650 ) சிந்தனாவாதிகளின் முன்னோடியாக கி.பி.பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தார். இவர் மத்திய கால வறட்டுக் கோட்பாடுகள், மூடநம்பிக்கைகள் ஆகிய வற்றைத் தன் முறையான ஐயங்கள் கொண்டு ஒவ்வொன்றாக மறுத்து வந்தார். ஏதேனும் ஒன்று ஐயத்திற்கு இடம் தருகிறது என்றால் தேகார்த் அதனை மறுத்துவிடுவார். புறஉலகு இருக்கிறதா இல்லையா என்ற கேள்வி எழுந்தபோது இல்லை என்று மறுத்தார். தனது மனதைத் தவிர வேறெதையும் அவர் நம்பத் தயாராக இல்லை. உலகை ஐயுறுவதற்காகத் தான் சிந்திக்க வேண்டும். அப்படிச் சிந்திப்பதற்காகத் தான் இருக்க வேண்டும் என்ற உணர்வை இவரால் ஐயுற முடியவில்லை. இறுதியாக, 'நான் சிந்திக்கிறேன். எனவே நான் இருக்கின்றேன்' என்ற முடிவுக்கு வந்தார். இம் முடிவைத் தம் தத்துவத்தின் மையப்புள்ளியாகக் கொண்டார்.

தேகார்த்தின் கருத்துப்படி மனிதன் பருப்பொருளும் அவ்வருப்பொருளும் சேர்ந்திருக்கும் ஒரு கூட்டு ஆகும். ஆனால் ஒன்றை மற்றொன்று ஆட்டுவிக்கும் என்ற சூட்சுமத்தை அவரின் மாணவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. மனம் உடலின் மேல் செயல்படும் விதத்தை விளக்கவே சந்தர்ப்பவாதம் என்ற கொள்கையைக் கொண்டு வர வேண்டியதாயிற்று.

மனமும் உடலும் வெவ்வேறானவை என்றால், சிந்தனையும் பொருளும் வெவ்வேறென்றால் அவற்றை இணைக்கும் பாலம் எது? அப்பாலம் இறைவனே என்றார் தேகார்தே. மனித மனத்திற்கும் உடலுக்கும் உள்ள காரியத் தொடர்பை இரு தரப்பட்ட கார்டேசியன் தத்துவம் விளக்க முயல்கிறது. அதன்படி மனிதன் விரும்புகின்ற ஒரு காரியத்தைக் கடவுள் சந்தர்ப்பக் காரணம் கொண்டு அதை நிறைவேற்றும் வகையில் உலகில் மாறுதல் செய்கிறார். அதேபோல் உலகில் கடவுள் நிகழ்த்தும் மாறுதல் காரணங்களுக்கேற்ப மனிதனும் தன் விருப்பத்தையும் மாற்றிக் கொள்கிறான். மனத்துடன் புற உலகின் இயைபுத் தோற்றம் இரு திசையிலும் நேரடி இறைத் தலையீட்டினாலேயே நேர்வது என்பது தேகார்த்தின் கோட்பாடு ஆகும். இது இறை தலையீட்டியைபுக் கோட்பாடு ( Occasionalism ) எனப்படும். இது ஆர்னால்டு கேலினக்சு ( Arnold Geulinex ) என்பவரால் பின்னால் வளர்க்கப்பட்டது. அதன்படி கடவுளே மன உணர்வுகட்கும் உடம்பின் அசைவுகளுக்கும் காரணமானவர்.

**தற்புல உண்மை :** உண்மையை வெளிப்படுத்தும் வாக்கியங்களை இரண்டு வகையாகப் பிரிப்பர். 1. வாக்கியத்தின் உண்மையை அத்துடன் தொடர்புடைய மற்ற வாக்கியத்துடன் இணைத்துப் பார்த்து முடிவு செய்வது, 2. வாக்கியத்தின் உண்மையை அதன் அடிப்படையிலேயே முடிவு செய்வது. இப்பின்னணியில் தன்னியல்பைத் தானே வெளிப்படுத்தும் உண்மையைத் தற்புல உண்மை என்று அறிவுலகம் சுட்டுகிறது. இத்தற்புல உண்மை ஐந்து வகைகளில் அமைகின்றது. 1. அறிவாய்வின் வழி இவ்வுண்மை மனிதனின் உள்ளுணர்விற்கும், அறிவின் நுட்பத் தன்மைக்கும் ஏற்புடையதாயிருக்கின்றது, 2. உளவியலின் வழி இவ்வுண்மை மனத்தின் இயற்கைத் தன்மைக்கு உகந்தவாறு அமைய அதனை மனமானது நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்றுக்கொள்கிறது, 3. தருக்கவழி இவ்வுண்மையானது அடிப்படையானது, தன்னைத்தானே விளக்கமளித்துக் கொள்வது. இது மற்ற உண்மைகளை விளக்குவதற்காகவும் அதனைச் சோதித்துப் பார்ப்பதற்காகவும் உதவுகின்றது. இது காரணகாரிய ஒழுங்குமுறையைத் தன்னுள் அடக்கி, பொதுவாக அனைவரும் ஏற்கும் வகையில் தன் முழுமையை ஐயத்திற்கிடமின்றி வெளிப்படுத்துகின்றது, 4. சமுதாயவழி இவ்வுண்மை சமுதாயத்திலுள்ளவர்கள் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் இவ்வுண்மையை ஏற்றுக்கொள்கின்றனர், 5. உளவியல் மற்றும் மரபியலின் வழி சமுதாயத்தில் மரபு வழியாக ஓர் உண்மையானது புழக்கத்தில் இருந்த அது அனைவரின் மனத்திலும் ஒத்தவகையில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

தற்புல உண்மையைப் பொதுவாக அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வுண்மையின் ஏற்புமை அதனை நோக்கும் மனிதனின் உள்ளக்கிடக்கையின் அமைவைப் பொறுத்து அமைகின்றது. இந்நிலையில் இவ்வுண்மையைத் தனியொருவன் ஏற்காமலும் போகலாம். ஆனால் அதற்கு அவன் போதுமான ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்.

இவ்வுண்மை அறிவின் ஆதாரத்தை அறியும் முறைகளை ஆராய்வதற்குத் துணையாக இருக்கின்றது. இவ்வுண்மையின் குணநலன்களை, அவ்வுண்மையை உள்ளீடாகக் கொண்ட வாக்கியங்களை ஆராய்வதால் அறிந்து கொள்ளலாம். இவ்வகையில் அமைந்திடும் வாக்கியங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தன்னிலையில் ஒருவன் தான் கருதும் உண்மையைத் தானே அறிவிக்கும் வகையில் அமையும் வாக்கியம் : இவ்வாக்கியம் ஒருவனது எண்ணத்தையோ, நம்பிக்கையையோ நினைவையோ வெளிப்படுத்தும் நிலையில் அமைகின்றது. எ.கா. ‘என் உடம்பின் இடப்புறம் வலிக்கின்றது’.

2. பகுத்து ஆராயும் நிலையில் அமையும் வாக்கியங்கள் : இதனை இரண்டு உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை : 1. காரண காரிய முறையில் அமைவது, எ.கா. ‘வாழ்க்கைத்துணையை இழந்த ஒரு சிலர் ஆண்கள் என்றால், ஆண்களில் ஒரு சிலர் வாழ்க்கைத் துணையை இழந்தவர்களாக இருக்கின்றார்கள்’ இவ்வாக்கியத்தின் கருப்பொருள் காரண காரிய முறையில் அமைந்த எவ்விதத்திலும் மறுக்க முடியாததாய் இருக்கின்றது. இவ்வகையில் அமையும் வாக்கியங்களை சொற்றொடர் சார்ந்த பகுப்பாய்வு வாக்கியங்கள் என்று கூறலாம். 2. உண்மையை வெளிப்படுத்தக் கூடிய வார்த்தைகளை அடக்கியது, எ.கா. ‘வாழ்க்கைத்துணையை இழந்தவர்கள் அனைவரும் ஆண்கள்’ இவ்வாக்கியத்தில் வாழ்க்கைத்துணையை இழந்தவர்கள் என்ற பகுதி ஆண்கள் என்ற கருத்தின் உள்ளீடாக வைத்து எண்ணப்படுகின்றது. இவ்வாக்கியத்தை மொழியின் சொற்பொருள் சார்ந்த பகுப்பு வாக்கியம் என்பர்.

தற்புல உண்மை, மேற்கூறி இரண்டு வகையாக அமையாமல் வேறுவகையாகவும் அமையும். எ.கா. இந்த அறையில் விளக்கு எரிகின்றது - இவ்வாக்கியம் வெளிப்படுத்தும் உண்மையை வாக்கியத்தின் அமைவைக்கொண்டு சோதித்துப்பார்க்கலாம். கண்ணால் நேரடியாகப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும், இதனை இணைப்பாக்க வாக்கியம் என்பர்.

ஆகவே, தற்புல உண்மை ஒரு வாக்கியத்தின் வழி அமையும்போது அது தன்னைத்தானே நேரடியாக வெளிப்படுத்திக் கொள்கிறது. மேலும், அவ்வாக்கியத்தைக் காரணகாரிய முறையில் பகுப்பதாலும், முக்கிய வார்த்தைகளை ஆராய்வதாலும், புலன் கொண்டு நோக்குவதாலும் அதன் இயல்பை அறிந்து கொள்ள முடிகிறது.

- ஜெ. அர.

**தன்மான இயக்கம்**: தன்னுடைய மானத்தைக் காத்துக்கொள்ளுதல், தன்னை மதித்தல் என்ற அடிப்படையில் அதற்குத் துணை செய்வதற்காகத் தன்மான இயக்கம் பெரியார் ஈ.வெ.இராமசாமி அவர்களால் சுயமரியாதை இயக்கம் என்ற பெயரில் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வியக்கம் அரசியல் அடிப்படையில் இல்லாமல் பண்பாட்டு அடிப்படையில் அமைந்தது. பார்ப்பனர்களின் சமுதாய மேலாண்மையை எதிர்த்து பிற்பட்டோரை நிலைநிறுத்தல் இதன் நோக்கம்.

சேரன்மாதேவியில் வ.வே.சு. ஐயர் நடத்தி வந்த குருகுலத்தில் உணவு உண்ணும்போது பார்ப்பனர்களையும், மற்றவர்களையும் தனித்தனியாகப் பிரித்து வைத்தமை தன்மான இயக்கம் தோன்றுவதற்குத் தூண்டுகோலாயிற்று. தமிழ்நாட்டுப் பேராயத்தில் (காங்கிரசு) பார்ப்பனரல்லாதார் சமபந்தியை ஆதரிக்க பார்ப்பனர் எதிர்த்தனர். இதனால் பெரியார் பேராயக்கட்சியிலிருந்து விலகினார். தன்மான இயக்கம் 1925ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. 25 - 8 -1929ஆம் ஆண்டில் செங்கல்பட்டில் நடைபெற்ற தன்மான இயக்கத்தின் முதல்மாநாட்டில் அதன் கொள்கைகள் வரையறுக்கப்பட்டன.

பிறப்பால் சாதிவேறுபாடு கற்பித்தல் கூடாது. சாதி வேறுபாடுகளை வலியுறுத்தும் சமயம், சடங்கு, புராணம், வேதம் முதலியவற்றைப் பின்பற்றக் கூடாது. தீண்டாமையை ஒழித்து, பொதுவிடங்களில் அனைவரும் செல்ல உரிமை வேண்டும். சாதிசமய வேறுபாடுகளைக் காட்டும் பட்டங்களைப் பயன்படுத்தக்கூடாது என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பெண்களின் திருமண வயது பதினாறு என நிர்ணயிக்கப்பட்டது. மேலும், அவர்களுக்குச் சொத்துரிமையும் பள்ளி ஆசிரியர் வேலை முழுவதும் தரப் பட வேண்டும் என்ற கருத்தும் கூறப்பட்டது. சமுதாயத்தில் உள்ள அனைவரும் கற்க உரிமை வேண்டும். கல்வியில் தாய்மொழி, அரசுமொழி தவிர மற்ற கல்விக்குப் பொதுநிதியைச் செலவிடக்கூடாது. தீண்டப்படாதவர்களுக்கு உண்டி, உடை, நூல்களை இலவசமாக வழங்க வேண்டும். தொடக்கக் கல்விக்கு மட்டும் பொதுநிதியைச் செலவிடுதல் வேண்டும். உயர் கல்விக்குச் செலவிடுதல் கூடாது என்ற கொள்கைகள் வரையறுக்கப்பட்டன.

கோவில் பணத்தைப் பொதுநலத்திற்காகச் செலவிடவேண்டும். சாதி நீங்கும் வரை வகுப்புரிமை வழங்கப்பட வேண்டும். உணவு விடுதிகளில் வேறுபாடுகள் களையப்படவேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தன்மான இயக்கக் கொள்கைகளில் 1935ஆம் ஆண்டு முதல் பொருளாதாரக் கொள்கைகளையும் பெரியார் இணைத்துக்கொண்டார். தொழிலாளர், உழவர் ஆகியோர் வாங்கியுள்ள கடன்களை நீக்க வேண்டும். நாட்டின் தொழில்களையும் போக்குவரத்து முதலியவற்றையும் நாட்டுடைமையாக்க வேண்டும். நாட்டினைத் தொழிலாளர் ஆட்சியின் கீழ்க்கொணர வேண்டும். தொழிலாளரின் வாழ்வு சிறக்க நூலகங்கள், மருத்துவமனைகள், பொழுதுபோக்கு இடங்கள் முதலியவற்றை அமைத்தல் வேண்டும். ஏழுமணி நேரத்திற்குமேல் தொழிலாளர் வேலை செய்தல் கூடாது போன்றவை வலியுறுத்தப்பட்டன. திராவிடர்களின் தன்மானத்தைக் காக்கவே இந்தி எதிர்ப்பினையும், தமிழ்நாடு தமிழருக்கே (1938) என்ற முழக்கத்தினையும், இவ்வியக்கத்தினர் முன் வைத்தனர். வட நாட்டினரின் ஆதிக்கத்தினை எதிர்ப்பதன் பொருட்டு இந்திய விடுதலை நாளினைத் துக்க நாளாக அறிவித்தனர். தன்மான இயக்கத்திற்குத் துணையாக உண்மை நாடுவோர் சங்கம், முற்போக்குச்சிந்தனையாளர் கழகம், பகுத்தறிவாளர் கழகம் போன்ற அமைப்புகள் தொடங்கப்பட்டன.

குடியரசு, புரட்சி, பகுத்தறிவு, சமதர்மம், வெடிகுண்டு போன்ற இயக்க ஏடுகள் இயக்கத்தின் கருத்துகளைப் பரப்பி வந்தன. தன்மான இயக்கத்தின் தாக்கத்தால் சமுதாயத்தில் மாற்றங்கள் ஏற்பட்டன. சமயம் மனிதனை அடிமைப்படுத்தும் என்பதனால் தன்மான இயக்கத்தினர், சமயத்தினை விலக்கினர். தன்மான இயக்கத்தினர் தாழ்த்தப்பட்டோர் ஆலயத்தில் நுழைய வழிவகுத்தனர். அவர்கள் பொதுவிடங்களில் வருவதற்கு இருந்த தடைகளை நீக்க தன்மான இயக்கம் போராடியது எ.கா. வைக்கம் போராட்டம். சமயத் தொடர்பான விழாக்கள் குறைந்தன. பள்ளிகள் பல தொடங்கப்பட்டன. இலக்கியங்கள் தம் பார்வையைச் சமயத்திலிருந்து மீட்டு மக்கள் மீது செலுத்தின. வடமொழி சமயத்தின் வாயிலாகப் பார்ப்பனருக்குத் துணை புரிந்தமையால் வடமொழி எதிர்ப்பு ஏற்பட்டது. பலர் தங்களின் வடமொழிப் பெயரையும் தமிழ்ப்படுத்தினர். அவர்களில் ஒருவர் தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை மறைமலையடிகள். அவர் வேதாச்சலம் என்ற தன் பெயரை மறைமலை என மாற்றிக்கொண்டார். தனித்தமிழ் இயக்கத்தை

அடியொற்றி 1943ஆம் ஆண்டு அண்ணாமலை அரசரால் தமிழிசை இயக்கமும் தொடங்கப்பட்டது. மொழியும், இசையும் கருவிகள் என்ற அடிப்படையில் இவ்வியக்கங்கள் தோன்றவில்லை. இவற்றின் பெயரால் தமிழக மக்கள் பண்பாட்டு அடிப்படையில் அடிமைப்பட்டுக் கிடந்தமையை நீக்குவதே இவ்வியக்கங்களின் நோக்கம்.

தன்மான இயக்கம் ஒரு குறிப்பிட்ட இனத்தாருடன் போராடுவதற்காக அமைக்கப்பட்டதாகத் தோன்றினாலும் உலக மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்துவதே இதன் நோக்கம் என்றும், இது சமுதாய இயக்கமாயினமையின் கடைசி மூடநம்பிக்கையாளன் உள்ளவரை தன்மான இயக்கத்திற்கு வேலை உண்டு என்றும் பெரியார் தெளிவுப்படுத்தினார்.

சேலத்தில் 1944 ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் நீதிக்கட்சி, திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. திராவிடர் கழகம் முழுக்க முழுக்க அரசியலை அடிப்படையாகக் கொண்டது. தன்மான இயக்கம் சமுதாய நோக்கம் கொண்டது. இரண்டிலும் அடைய வேண்டிய குறிக்கோள் ஒன்று எனினும் இரண்டும் வெவ்வேறானவை. ஆயினும் இவை ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து இன்று வரை இயங்கி வருகின்றன.

- இரா. ம.

**தன்னிலை அடைதல் :** தன்னிலை அடைதல் (Self Actualization) என்பது ஒரு வகையான ஊக்கியாகும். மனிதனுக்கு எத்தனையோ தேவைகளிருக்கின்றன. அவைகளையெல்லாம் அவன் ஏதாவது ஒரு வழியில் நிறைவு செய்துகொள்கிறான். ஒரு மனிதன் தான் என்னவாக இருக்க விரும்புகிறானோ அவையெல்லாம் அடையவில்லையானால் அவன் மன நிறைவு கொள்வதில்லை. தான் எதற்குத் தகுதியோ அதைப் பெற்றாகவேண்டும் என்பதில் கவனம் செலுத்துகிறான். ஒருவன் என்னவாக இருக்க முடியுமோ அதுவாக அவன் இருக்க வேண்டும். ஒருவன் ஒரு சிறந்த கவிஞனாகவோ, அறிவியல் வல்லுநனாகவோ, சிறந்த இசைக் கலைஞனாகவோ, ஓவியனாகவோ இருக்கவேண்டிய திறமைகளைப் பெற்று அதுவாக அவனிருந்தால் அதில் அவன் அமைதி கொள்கிறான். அவனுடைய இயல்பும், குணமும், திறமைகளும் என்னவோ அதுவாக அவன் இருக்க விரும்பி அதைத் தேவையாக்கிக் கொள்கிறான். அந்தத் தேவையை நிறைவு செய்தல் தன்னிலை அடைதல் என்பதாகும். இக்கருத்துச்சொல்லை முதன்முதலில் வழங்கியவர் குர்ட் கோல்டு சுடெயின் ( Kurt Goldstein ) என்பவராவார். இது ஒரு மனிதனின் தன்னிறைவு விருப்பத்தைக் குறிக்கிறது. அவனுடைய உள்ளார்ந்த அல்லது மறைந்துள்ள ஆற்றல்கள் வெளிப்படுத்தப்பட வேண்டுமென்ற போக்கு, இது தன்னிடமுள்ள இயற்கையாற்றல் செயல்வடிவில் வெளிப்படுத்தப்படுதலைக் குறிக்கின்றது. தன்னுடைய முழுத்திறமைகளையும் செயல்வடிவில் வெளிப்படுத்திக் காட்டவேண்டுமென்ற ஒரு தனியாத விருப்பம், போக்கு தன்னிலை அடைதல் என்பதாகும்.

இந்தப்போக்கு ஒவ்வொருவரிடம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. பெண்கள் ஆண்களிடமிருந்து இப்போக்கில் மாறுபடுகின்றனர். ஒரு பெண்ணிடமுள்ள தன்னிலை அடைதல் போக்கு, தான் ஒரு சிறந்த தாயாக வேண்டுமென்தாகவுமிருக்கலாம், அல்லது தான் ஒரு சிறந்த நாட்டியதாரகையாகவோ, இசைக்கலைஞராகவோ, விளையாட்டு வீராங்கனையாகவோ ஆக வேண்டுமென்றும் விருப்பங் கொண்டு செயல்படலாம். ஒரு ஆண், தான் ஒரு சிறந்த நாவலாசிரியனாக வேண்டுமென்று விரும்பி, தன் திறமைகள் அனைத்தையும் அதில் ஈடுபடுத்தலாம். இதில் தனியாள் வேறுபாடுகள் மிக அதிகமாகக் காணப்படுவதால் ஒரே அளவில் இருவர் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்திக் காட்ட முடியாது. ஒருவரின் உள்ளார்ந்த திறமைகளுக்கு ஒரு வரம்பு இருக்கின்றது. ஓர் ஓட்டப்பந்தயத்தில் பங்கு பெறும் அனைவருக்கும் முதல் பரிசு கிடைக்காது. ஆனால், தன்னிலை அடைவதில் ஒரு மனிதன் ஓரளவு வெற்றிபெற்ற நிறைவு பெறுகின்றான்.

அபிரகாம் மாசுலோ ( Abraham Maslow ) இந்தத் தன்னிலை அடைதல் தேவையைப் பற்றி சற்று ஆழமாக ஆய்வு செய்து அதனை விளக்கியுள்ளார். உள்ளார்ந்த திறமை அல்லது இயற்கையாற்றல் என்று கூறப்படும் திறமை செயல்களில் வெளிப்படும் போதுதான் அது தன்னிலை அடைதல் நிலையைப் பெறுகின்றது. சிலரின் உள்ளாற்றல்கள் செயல்களில் வெளிப்படுத்தப்படாமல் செயலிழந்து போவதற்குக் காரணம் அந்த ஊக்கி தேவையாக்கப்படாததினாலாகும். 'நான் என்ன? எப்படிப்பட்டவன்' என்பதை

இத்துறையில் காட்டவேண்டுமென்று கிளர்ந்து எழுந்து செயல்படும்போதுதான் ஒருவன் தன்னிலை அடைகிறான். ஓர் உளவியல் நல்வாழ்வு ( Psychological health ) பெற்றுள்ள மனிதனே தன்னிலை அடைதல் தேவையை நிறைவேற்றுகின்றான் என்ற மாசுலோ கூறுகின்றார். தன்னிலை அடைதல் தேவை கொண்டுள்ள மனிதனிடம் தனிக்குணப் பண்புகள் காணப்படுகின்றன. வளர்ச்சியடைந்து வருகின்ற இளைஞர்களிடம் இதற்கான உறுதி அதிகம் காணப்படுவதில்லை என்று மாசுலோ தன்னுடைய நீண்ட காலப் புரிசோதனைகளில் கண்டார். வயது வந்த மனிதர்கள் உறுதியுடன் தளராமல் மீண்டும் மீண்டும் ஈடுபடுகின்றனர்.

நாடகங்களிலும், நாவல்களிலும் உருவாக்கப்படுகின்ற பாத்திரப்படைப்புகள் தன்னிலை அடைவதாகச் சித்தரிக்கப்படுகின்றனர். ஆனால், அத்தகைய பாத்தி ரங்கள் எந்தப் பண்பாட்டிலும் அந்த அளவுக்கு உண்மையான பாத்திரங்களாக இருந்ததில்லை என்று மாசுலோ கூறுகிறார். அத்தகைய பாத்திரங்களைப் பற்றிய சிந்தனைகளைத் தூண்ட வேண்டுமென்பதற்காகத் தன்னிலை அடைதல் போன்ற உறுப்பினர்களை நாடகங்களிலும் நாவல்களிலும் உருவாக்குகின்றனர். எத்தகைய மனிதர்கள் தன்னிலை அடையத்தக்கவர்கள் அல்லது தங்களிடமுள்ள ஆற்றல்களைச் செயலில் வெளிப்படுத்தக்கூடியவர்கள் என்பதைக் கண்டறிய மாசுலோ பல பரிசோதனைகளை நடத்தினார். அப்பரிசோதனைகளில் மருத்துவமுறை கடைப்பிடிக்கப்பட்டது. பல கல்லூரி மாணவர்கள் கடுமையான பரிசோதனைகளுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்டனர். மறுபடியும் மறுபரிசோதனைகள் அவர்கள் மீது நடத்தப்பட்டன. அவர்களிடம் உளவியல் நோய்க்குறிகள் காணப்படின் அவர்கள் விலக்கப்பட்டனர். தன்னிலை அடைவதற்கு உடன்பாடான பண்புக்குறிகளைக் கொண்டவர்களைக் கண்டறிந்து, சரியான விளக்கம் தருவது மிகவும் கடினமான செயலாக இருந்தது. உள்ளார்ந்த ஆற்றல்கள், திறமைக்கூறுகள் முதலியவற்றை முற்றிலும் பயன்படுத்தித் தீரச் செயல்களில் வெளிப்படுத்துகின்ற மனிதர்கள் தன்னிலை அடையக்கூடியவர்கள். இவ்விதமான மனித இயல்புகளை மொத்தமாக எடுத்துக்கொண்டு முழுமை யான பாகுபாடு செய்து, தன்னிலை அடைகின்ற மனிதர்களின் முழு குணப் பண்புகள் பல மாசுலோவின் ஆராய்ச்சிகளில் வெளிப்பட்டன. அவற்றில் சில உடன்பாடானவைகளாகவும் சில எதிர்மறையானவைகளாகவும் விளக்கப்பட்டுள்ளன.

1. தன்னிலை அடைதல் ஆராய்ச்சியில் ஆளுமையின் வழக்கத்திற்கு மாறான ஆற்றல் ஒன்றும் காணப்பட்டது. அது உண்மையில்லாததும், போலியானதும், வாய்மையில்லாததுமான குணப்பண்புகளைக் கண்டறியும் திறமையாகும். இத்திறமை பொதுவாக, மனிதர்களைச் சரியாகவும் நிறைமுதிர்வுடனும் மதிப்பிடுகின்ற திறமையாகும். பல பரிசோதனைகளுக்குப் பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவைச் சார்ந்த கல்லூரி மாணவர்களிடம் இத்திறமை இருக்கின்றதா என்று ஆராயப்பட்டது. இத்திறமையை மிகவும் அதிக நம்பகத்துடன் பெற்றிருந்த அவர்கள் சிறந்த உளநலமுடையவர்களாகவுமிருந்தனர். இம்மாணவர்கள் சற்று குறைந்த நம்பகத்தையும் உளநலத்தையும் பெற்றிருந்த மாணவர்களை விட மிகச் சிறப்பாகத் தங்களுடைய பேராசிரியர்களை மிகவும் சரிநுட்பமாக மதிப்பீடு செய்தனர். நிறைமுதிர்வுடைய இத்திறமை மற்ற துறைகளிலும் பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. கலை, இசை, நுண்ணறிவுமிக்க செயல்கள், அறிவியல் சார்ந்த செய்திகள், அரசியல், பொதுமக்கள், செய்திகள் முதலியவற்றில் அவர்கள் சரிநுட்பமாக மதிப்பீடு செய்தனர். இவர்கள் அவர்கள் எந்த விதமான விருப்பு, வெறுப்பின்றி, ஒருசார் பெண்ண மின்றி செயல்பட்டனர்.

2. தன்னிலை அடைவதற்கான தகுதிபெற்ற இந்த உளநலம் மிக்க மாணவர்கள் தங்களையும் தங்களுடைய இயல்புகளையும் எந்தவிதமான ஏமாற்றமும் முரண்பாடுகளுமின்றி ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள், தங்களுடைய மனித இயல்பை முழுமையான பாணியில் எல்லாவிதமான குறைபாடுகளோடும் முரண்பாடுகளோடும் அகமெய்மை ( Ideal ) நிலையில் நின்று கவலையுணர்ச்சி ஏதுமின்றி ஏற்றுக்கொள்ளவும் முடியும். நன்னெறியில் உறுதியின்மைகள், தீவினைகள், மனித இயல்பின் கேடான நிலைகள் முதலியவற்றை இயற்கையின் இயல்பினை ஏற்றுக்கொள்கின்ற பாணியிலேயே, கேள்விகளை எழுப்பாத உணர்ச்சியுடன் அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியும். பாறை ஏன் கரடு முரடாக இருக்கின்றது என்றும், தீ ஏன் சுடுகின்றது என்றும், கொடிய விலங்குகள் ஏன் சாதுவான விலங்குகளைக் கொல்லுகின்றன என்றும் அவர்கள் முறையிடுவதில்லை. இவ்வாறு மனிதர்களின் இயல்புகளையும் தன்னிலை

அடைகின்றவர்கள் எடுத்துக்கொள்ளும் குணப்பக்குவம் கொண்டவர்களாக இருக்கின்றனர். இயல்புகளை மிகவும் தெளிவாக ஏற்றுக்கொள்ளுகின்ற கட்டம் விலங்கின் கட்டமாகும் ( Animal Level ) . தன்னிலை அடைகின்ற மனிதர்கள் நல்ல விலங்குகளைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். உடலுக்கு வேண்டிய உணவிடம் நல்ல நாட்டமும், ஓய்வின் பொருட்டு நல்ல உறக்கமும் கொள்கின்றனர். தங்களுடைய பால் இன்பத்தை எந்தவிதமான தடை, கட்டுப்பாடின்றி அனுபவிக்கின்றனர். இந்தக் கீழ்மட்டத் தேவைகளை மட்டுமின்றி எல்லாக் கட்டங்களிலும் எந்தவிதமான முறையீடுமின்றி எல்லாத் தேவைகளையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளமுடியும். இயற்கையின் செயல்களை எந்தவிதமான விவாதமுமின்றி இவர்கள் ஏற்றுக்கொள்ள முடியும். சாதரண மனிதர்களிடம் காணப்படும் வெறுப்பு, ஒரு சார்பெண்ணம், உடல் வாடை கண்டு பிறரை வெறுத்து ஒதுக்குதல் முதலியவை இவர்களிடம் காணப்படுவதில்லை.

தன்னிலை அடைகின்ற உளநல மனிதர்கள் வருத்தமும், கவலையும், துன்ப உணர்ச்சிகளும் கொள்ளுகின்ற நிலைகளுமிருக்கின்றன. அவை அ. பிறரிடம் காணப்படும் திருத்தமுடியாது குறைபாடுகள், அதாவது சோம்பேறித்தனம், சிந்தனையின்மை, தன்னிலையிழப்பு, மற்றவர்களைப் புண்படுத்துதல் என்பன ஆ. உளநலமின்றி பிடிவாதம் செய்தல், அதாவது ஒரு சார்பெண்ணம், பொறாமை முதலியன. இ. பழக்க வழக்கங்களில் மிகக் கடுமையாக இருத்தல். ஈ. பண்பாடுகளில் குறை காணல் முதலியவைகளாகும்.

3. தன்னிலை அடைகின்ற மனிதர்கள் தங்களுடைய நடத்தையில் இயற்கையாகவும், அதைவிடத் தங்களுடைய உள் வாழ்க்கையிலும் சிந்தனைகளிலும் உணர்ச்சிகளிலும் மிகவும் இயற்கையாக இருக்கின் றனர். அவர்களில் நடத்தை செயற்கையான வாழ்வு, சோர்வு ஆகியவற்றின் விளைவுகளின்றி இருக்கின்றது. உலகத்தில் வாழ்கின்ற மக்களைப் புரிந்து கொண்டு அவர்களோடு எந்த நிலையிலும் சண்டை போட்டுக்கொள்ளாமல் நல்ல உணர்ச்சியுடன் ஒத்துச் செல்கின்றனர்.

4. தன்னிலை அடைகின்ற மனிதர்கள் தங்களுக்கு வெளியிலுள்ள சிக்கல்களின் மீது கவனம் செலுத்துகின்றனர். தன்முனைப்பை மையமாகக் கொள்ளாமல் அவர்கள் சிக்கல்களை மையமாகக் கொள்கின்றனர்.

5. இவை மட்டுமின்றி இவர்கள் தங்களுக்கு எந்த விதமான கேடும் நலக்குறைவுமின்றி துறவிகள் போன்று தனித்து வாழ்கின்றனர். சாதாரண மனிதர்களைவிட இவர்கள் தனித்திருப்பதை அதிகம் விரும்புகின்றனர். இவர்கள் கட்டுபாடற்ற சிந்தனையையும் உறுதியையும் கொண்டவர்கள்.

6. இவர்கள் தன்னுரிமை ஆட்சியில் நம்பிக்கை கொண்டவர்கள். பண்பாட்டுச் சுதந்திரம், சூழ்நிலை சுதந்திரம் முதலியவைகளில் ஈடுபாடு கொண்டவர்கள்.

7. புதுமைகளிலும் வாழ்க்கையின் அடிப்படை நன்மைகளிலும், மகிழ்ச்சி, வியப்பானவை முதலியவற்றிலும் மேலும் மேலும் நாட்டம் கொண்டவர்கள்.

8. இவர்களுக்கு மறைபொருள் ( Mystic ) சார்ந்த அனுபவங்கள் தான் மிகவும் உயர்ந்த அனுபவங்களாகும்.

9. மனிதர்களிடம் ஆழ்ந்த ஒற்றுமையுணர்ச்சியும், ஒத்துணர்வும், அன்பும் கொண்டவர்கள். இதனால் இவர்கள் உண்மையான விருப்பம் கொண்டு மனித இனத்திற்கு உதவிபுரிகின்றனர்.

10. இவர்கள் சிறந்த மக்களாட்சி மரபைக் கொண்டவர்கள். தீய நடத்தை உடையவர்களையும் கெட்டவர்களையும் எதிர்ப்பதற்கு இவர்கள் தயங்குவதில்லை.

11. உண்மை வாழ்க்கையில் சரியானவற்றையும் தவறானவற்றையும் பிரித்தறிந்து தீயவைகளை விலக்கிவிட்டு, நல்லனவற்றை இவர்கள் ஏற்கின்றனர்.

12. மேலும் இவர்கள் தத்துவநோக்குடையவர்கள் கடுமையற்றவர்கள், நகைச்சுவையைப் பெரிதும் விரும்புகின்றார்கள்.

13. இவர்கள், பண்பாடுகள் கலப்பதை எதிர்க்கின்றனர். மிகவும் நலம் வாய்ந்தவர்களாக நலமற்றவர்களோடு கலப்பதானது தன்னிலை அடைதல் குணப்பண்பைப் பழுதாக்கிவிடுகிறது. கலப்பு தொடர்ந்து செல்லுமானால் ஒரு கட்டத்தில் உள நலத்தைக் கொண்ட மனிதர்களே இல்லாமல் போய்விடுவார்கள். அதனால்தான் தனித்திருப்பதை இவர்கள் ஆதரிக்கின்றனர்.

*14.* எழுத்தாளர்கள் எனப்படுபவர்கள், குறிப்பாக, நாவலாசிரியர்களும், நாடகாசிரியர்களும், கவிஞர்களும், கட்டுரையாசிரியர்களும் மனித இனத்தில் சிறந்தவர்களாக இருப்பவர்களைத் தன்னிலை அடைந்தவர்கள் என்று விவரித்துக் கூறி, கேலிச் சித்திரமாக்குகின்ற அளவுக்கு மிகைப்படுத்திவிடுகின்றனர். அவர்களுடைய வீடுகளில் பணிபுரிகின்றவர்களே அவர்களைக் கேலி செய்வது போலவும் நாடகப் பாத்திரங்களை அமைகிக்கின்றனர். இதனால் யாரும் அவர்களைப் போலாகக்கூடாது என்று அவற்றைக் காணுவோர் நினைக்கின்றனர். உளவியல் முறைப் படிப் பார்த்தால் ஒரு மனிதர், குறைபடியாத சிறந்த குணப்பாத்திரத்தைப் படைக்க விரும்பி தன்னுடைய குற்ற மனப்பான்மை, ஒரு சார்பெண்ணம், மரியாதைக் குறைவு முதலிய குறைபாடுகளை மற்ற மனிதர்கள் மீது ஏற்றிக்காட்டிவிடுகின்றார். அதனால் சாதாரண மனிதர்கள் அவர் படைத்த மனிதர்களை விடச் சிறந்தவர்களும், அரசியல்வாதிகளும், பெருநிலக்கிழார்களும் அவர்கள் தங்களுடைய உண்மை வாழ்க்கையில் நேர்மையான மனிதர்களாக இருந்தாலும் பிறர் பழி சுமப்பவர்களாக்கப்படுகின்றனர். தன்னிலை அடைதல் இப்படிப்பட்ட எழுத்தோவியங்களில் தவறான கருத்தைத் தோற்றுவித்துவிடுகின்றது.

*15.* தன்னிலை அடைதல் ஆக்கச் சிந்தனையுடன் அதிகத் தொடர்புறவு கொண்டதாக இருக்கின்றது. தன்னிலை அடைந்து வருகின்ற எல்லா மனிதர்களிடமும் இக்குணப்பண்பு காணப்படுகின்றது. ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்ட ஒவ்வொரு மனிதரும் ஏதேனும் ஒருவழியில் ஒரு சிறப்பு வகையான படைப்பினை அல்லது ஒரு முழு முதலை அல்லது புதுப் புனைவு செய்வினைத் தங்களின் தனித்தன்மையாகக் கொண்டிருக்கின்றனர். அவர்களோடு உரையாடும் போது இது வெளிப்படுகின்றது. தன்னிலை அடைந்த மனிதரின் படைப்பு சாதாரண மனித இயல்பின் அடிப்படைப் பண்பாகும். பிறக்கும்போது எல்லா மனிதர்களுக்கும் இயற்கையாக அளிக்கப்பட்ட ஓர் உள்ளார்ந்த திறமையாகும். பெரும்பாலான மனிதர்கள் தங்கள் பண்பாட்டில் கலந்துரையும் போது அதை இழந்துவிடுகின்றனர். ஆனால், சில மனிதர்கள் அத்திறமையைத் தூயதாகவும், கலப்பின்றியும் விடாமல் கைக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் வாழ்க்கையை நேர்வழியில் காணுகின்றனர். அவர்கள் அதை ஏதேனும் காரணங்களால் இழந்திருந்தாலும் தங்களுடைய பிந்திய வாழ்க்கையில் அதை மீட்டுக்கொள்கின்றனர். இந்தப் படைப்புத்திறமை வழக்கமாக நிகழ்கின்ற அமைப்பான கவிதை நூல் எழுதுவதிலோ, இசை அமைப்பதிலோ, கலைப்பொருள்களைப் படைப்பதிலோ சிலரிடம் தோன்றுவதில்லை. எந்த விதமான செருக்குநிலைக்கும் இடந்தராத ஒரு நலமான ஆளுமைத்தோற்றமாக வெளியுலகில் செயல்படுகிறது. அவர்கள் எப்பொருளைத் தொட்டாலும் அதில் அவர்கள் ஒரு புதுமையான ஆக்கத்திறமையைக் காட்டமுடியும். தானாகவே இயங்கக்கூடியவர்களாகவும், இயற்கையான நோக்குடையவர்களாகவும், மனிதபிமானமிக்கவர்களாகவும் அவர்கள் காணப்படுகின்றனர்.

*16.* தன்னிலை அடைதலில் இருவேறு பகுதிகளாக நிற்பவை ஒன்றாக இணைகின்றன. இருமுனை கோடிகளைக் கொண்டுள்ள கருத்துகள், எதிரிடையான முடிவுகள் முதலியவை நலம் குறைந்த மனிதர்களிடந்தான் நிலவுகின்றன. ஒரு நலம் நிறைந்த மனிதனிடம் அதாவது, தன்னிலை அடைந்த மனிதனிடம் இவ்விதமான ஐயுறவுகள் போக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக நெடுங்காலமாக மூளைக்கும் இதயத்துக்குமிடையிலுள்ள எதிரான கருத்து வேறுபாடும், பகுத்தறிவுக்கும் இயல்பூக்கத்திற்கும் ( Instinct), உணர்ந்தாராய்தலுக்கும், செயலுக்கும் இடையிலிருக்கின்ற கருத்து வேறுபாடுகளும் நலம் வாய்ந்த ஒரு மனிதனிடம் காணப்படுவதில்லை. இவை அம்மனிதனிடம் ஒத்து நிகழ்கின்றன. தன்னிலை அடைந்த மனிதர்களின் அடிப்படை உண்மை ( Axiom ) நலமாக இருந்தால் உணர்ச்சிவேகத்தைக் கட்டுப்படுத்தலாம் என்பதாகும். அதனால் தன்னலத்திற்கும் தன்னலமின்மைக்கும் இடையிலுள்ள வேறுபாடு அவர்களிடம் மறைந்து போய்விடுகின்றது. ஏனென்றால் அவர்கள் கோட்பாட்டின்படி, ஒவ்வொரு செயலிலும் தன்னலமும் தன்னலமின்மையும் இருக்கின்றன என்பதாகும். தூய்மையான சிற்றின்ப நடவடிக்கையும், ஆன்மீகப்பற்றும் சமயப்பற்றும் கொண்டதே சிறந்த வாழ்க்கை வழியாகும் என்கின்றனர்.

கடமை, மகிழ்ச்சியோடு முரண்பாடு கொண்டதன்று. கடமையானது மகிழ்ச்சியாக இருக்குமானால் செய்கின்ற பணி விளையாட்டோடு முரண்படு

வதில்லை. அதனால், தன்னுடைய கடமையைச் செய்கின்ற மனிதன் நன்னெறிவுடையவனாக இருந்து ஒரே சமயத்தில் மகிழ்ச்சியைத் தேடிப் பெற்று இன்பமாக இருக்கின்றான். இவ்விதமாக நலமான மனிதர்கள் சாராசரி மனிதர்களிடமிருந்து வேறுபடுகின்றனர். இது மேலும்மேலும் தெளிவுபடுத்துவது என்னவென்றால், குறைபாடுகளும், வளர்ச்சியற்றதும், முதிர்ச்சியின்மையும் நலமற்றதுமான மாதிரிச்சான்றுகளை வைத்துக்கொண்டு ஆராய்ச்சிகள் நடத்தினால் அம்முடிவுகள் குறைபாடுகள் ஓர் உளவியலையும் குறைபாடுள்ள ஒரு மெய்ப்பொருளியலையுந்தான் அளிக்கமுடியும். தன்னிலை அடைகின்ற மனிதர்களின் மீது நடத்துகின்ற ஆராய்ச்சிதான் எல்லா விவரங்களையும் உட்படுத்திய ஒரு சிறந்த உளவியலின் அறிவியலுக்கு ஆதாரமாக இருக்கமுடியும்.

- மு. இரா.

**துணை நூல்கள் :**

1. Anderson, H.H., (Ed), 1959, **Creativity and its cultivation**, Harper and Row, Newyork.

2. Kasex, E., & Newman, J., 1940, **Mathamatics and the Imagination**, Simon and Schuster, Newyork.

3. Maslow, A. H., 1970, **Motivation and Person ality**, Harper and Row, Newyork.

4. Mc Clelland, D., 1961, **The Achieving Society**, Van Mostrand Reinhold, Newyork.

**திண்டுக்கல் :** தென்னகத்தின் அலிகார் எனப் போற்றப்படும் திண்டுக்கல் மாவட்டத்தின் தலை நகராக விளங்குகிறது. இரண்டு லட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இந்நகர் விசயநகர ஆட்சிக் காலத்தில் 18 பாளையங்களைக் கொண்ட திண்டுக்கல் சீமையின் தலைநகராக விளங்கியது. இது திருச்சி - மதுரை, திண்டுக்கல் - கோவை தொடர்வண்டிப் பாதைகள் சந்திக்கும் இடமாக உள்ளது. திருச்சியிலிருந்து 96 கி.மீ. தொலைவிலும் மதுரையிலிருந்து 65 கி.மீ. தொலைவிலும் உள்ளது.

இவ்வூர் மலையடிவாரத்தில் உள்ள சீனிவாசப் பெருமாள் கோயில், நகருக்குள் உள்ள காளத்தீசுவரர் கோயில், மாரியம்மன் கோயில், வள்ளலார் கோயில் முதலியவை குறிப்பிடத்தக்கவை. அப்பர் வைப்புத் தலமாகக் குறிப்பிடும் தீண்டீசுரம் திண்டுக்கல்லையே சுட்டுவதாக உ.வே.சா. எழுதியுள்ளார். இவ்வூரில் பல பொருட்கள் உற்பத்தியாகின்றன. சுருட்டுச் சுற்றுதல், புகையிலை வாணிகம், இரும்புப்பெட்டி, பூட்டுச்செய்தல், முலாம் பூசுதல், பஞ்சாலை, தோல் பதனிடுதல், கடலை எண்ணெய் ஆலை முதலிய தொழில்கள் சிறப்புற்று விளங்குகின்றன.

இந்தியாவிலேயே அரசுத்துறையில் நடத்தப்படும் பூட்டுத் தொழிற்சாலை இவ்வூரில் தான் உள்ளது. இங்குள்ள கிறித்தவ தேவாலயங்களுள் குறிப்பிடத்தக்கன மேட்டுப்பட்டியில் கி.பி.1720இல் கட்டப்பட்ட தோலார்சு மாதா கோயிலும் நகரின் நடுப்பகுதியில் கி.பி.1872இல் கட்டப்பட்ட புனித வளனார் ஆலயமும் குறிப்பிடத்தக்கன.

**திண்டுக்கல் கோட்டை :** விசயநகர ஆட்சியில் இராணுவத்தளமாக விளங்கிய திண்டுக்கல் மலைக் கோட்டை பலர் ஆட்சியில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நாயக்க அரசர்கள், ஆர்க்காட்டு நவாப்புகள், மைசூர் அரசர்கள், ஆங்கிலேயர் முதலிய பலரும் இக்கோட்டையை விரிவுப்படுத்தினர்.

குலசேகர பாண்டியன் ( கி.பி. 1268 - 1311 ) இம்மலைமீது ஒரு சிவன் கோயிலை எழுப்பி, பாறையை வெட்டிப் படிகளை அமைத்தான். முத்து வீரப்ப நாயக்கன் ( கி.பி. 1609 - 1623 ) 300 ஆண்டுகளுக்குப் பிறகு இம்மலைக்கோட்டையைக் கட்டினான். இக்கோட்டையில் உள்ள உணவகம், அதிகாரிகள் தங்குமிடங்கள், வெடிமருந்துக் காப்பறைகள் யாவும் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்டன.

மருது சகோதரர்கள் கும்பினிக்குப் பயந்து ஆறு மாதங்கள் இக்கோட்டையில் அடைக்கலம் புகுந்திருந்தனர். 80மீ உயரத்தில் 600 படிகள் திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டன. படியின் இருபுறமும் 1.7மீக்கு ஒரு துளை காணப்படுகிறது. இதில் கம்பு நட்டு பந்தல்போட பயன்படுத்தியுள்ளனர். கோட்டையின் முன்புறச் சுவரும், ஒரு பக்கம் பகைவர்கள் ஏறமுடியாத மலையும் உள்ளன. உட்புறச்சுவரில் 0.6மீக்கு அகலப்பாதை உள்ளது. கோட்டைச்சுவர் 1.5மீ அகலம் கொண்டது. இதில் 16 கொத்தளங்கள் உள்ளன. ஒவ்வொன்றிலும் ரோமன் எண்களும் அதன் கீழ்ப்புறம் தமிழ் எண்களும் குறிக்கப்பட்

டுள்ளன. கோட்டையில் உள்ள கூடுகள், நிலவறைகள், சுரங்கப்பாதைகள், சுரங்கங்கள், பீரங்கி மேடைகள், குளங்கள், வெடிமருந்துக் கிடங்கு யாவும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் அமைந்துள்ளன.

- அ. இரா.

**தியானம் :** தியானம் என்ற வடமொழிச்சொல்லுக்கு ஆழ்ந்த சிந்தனை, இடையறாச் சிந்தனை, ஐம்புலன்களையும் அடக்கி யோகம் செய்தல் என்ற பொருள்கள் உள்ளன. மனித மனத்தின் செயல்பாட்டிற்கு எதிரிகளாகக் கருதப்படும் சோம்பல், இச்சை, குரோதம், பிடிவாதம், அக்கறையின்மை, ஐயம் முதலியவற்றை ஒடுக்குவதோடு மனக்குருடு ( மன இருட்டு ), மனக்குள்ளம் ( வஞ்சகம் ), மனக்கோட்டம் ( கோணல்புத்தி ), மனத்தழுத்தம் ( அழுக்காறு ) மனப்பகை ( உட்பகை ), மனப்பிரமை ( மனமயக்கம்), மனமுறிவு ஆகியவற்றையும் ஒடுக்கி மனக்குலிவு ( மன ஒருமிப்பு ) செய்வதே தியானம் ஆகும்.

கீழைநாட்டுத் தத்துவ அகராதியில் தியானம் ஒரு கீர்த்தி வாய்ந்த சொல்லாகவும், நேர்த்தி வாய்ந்த செயலாகவும், உணர்வின் ஊக்கமாகவும் ஆன்மாவின் ஆக்கமாகவும் விளங்குகின்றது. மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய கலைகளில், கடமைகளில் தியானமும் ஒன்று. தியானம் செய்பவனே தியானி. சிறந்த தியானியே சிறந்த யோகியாக விளங்க முடியும். சிற்றின்பத்தை நாடுபவன் போகி. சிற்றின்பத்தை விட்டு பேரின்பத்தை நாடுபவனே யோகி. யோகம் என்றால் இறைவனோடு இணைதல் என்று பொருள்.

பதஞ்சலி முனிவரின் யோக தத்துவத்தில் இறைவனோடு இணைய மொத்தமுள்ள எட்டு படிகளுள் தியானம் ஏழாவது படியாக விளங்குகின்றது. அவை: 1. யாமம் - கட்டுப்பாடு, 2. நியமம் - கைக்கொள்ளுதல், 3. ஆசனம் - (நிலைகோடல்), 4. பிராணாயாமம் - மூச்சோட்டத்தை ஒழுங்குப்படுத்துதல், 5. பிரத்யாகாரம் - புலன்களைச் சுருக்கிக் கொள்ளுதல், 6. தாரணம் - கவனத்தை ஒரு நிலைப்படுத்துதல், 7. தியானம் - ஆழ்ந்த சிந்தனை, 8. சமாதி - சுழுத்தி நிலை அல்லது மெய்ம்மறதி நிலை.

மனிதன் தன் மனப்போராட்டங்களிலிருந்தும் உளைச்சல்களிலிருந்தும், வேட்கையிலிருந்தும் விடுபட பல தியான முறைகளைக் கண்டுபிடித்துக் கையாண்டுள்ளான். தியான முறைகள் பலவானாலும் அதன் நோக்கம் ஒன்றே. தியானம் என்பது மனித மனத்தின் இயக்கமேயன்றி மயக்கமன்று. தியானம் செய்யாத இதயம் பாலைவனமாகிவிடும். தியானம் செய்வது எளிமையான வேலையன்று. அதற்கு கடும் உழைப்பும் கட்டுப்பாடும் தேவை. கட்டுப்பாடு இல்லாமல் தியானம் செய்ய எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் அனைத்தும் தியானத்திற்குப் புறம்பானதாக முடிவடைந்துவிடும். ஒழுக்கமே தியானத்திற்கு ஆதாரம். ஒழுக்கம் என்ற ஆதாரம் இல்லாமல் தியானம் என்ற ஆதாயம் கிட்டாது. இந்தியரிவொழுக்கம், கரணவொழுக்கம், ஜீவவொழுக்கம், ஆன்மவொழுக்கம் ஆகிய நான்கொழுக்கங்களும் தியானிக்கு அவசியம் தேவையாகும்.

அன்பின் பொழிவு அல்லது இயக்கமே தியானம் என்று கூறுவர். இந்த இயக்கம் ஒரு முடிவில்லா இயக்கமாகும். இந்த முடிவில்லா இயக்கத்திற்குத் தொடக்கம் இல்லை. இந்தத் தெய்வீக இயக்கம் சொற்களுக்கு அப்பாற்பட்டது. காலத்திற்கு அப்பாற்பட்டது. மொழிக்கும், சமயத்துக்கும், இனத்துக்கும் நிறத்திற்கும் அப்பாற்பட்டது.

தியானம் என்பது குறிக்கோளாகவும், அதனை அடையும் வழியாகவும் விளங்குகின்றது. இது உள்ளத்தில் உதிக்கும் ஒளியாகவும், செயலுக்கு வழிகாட்டும் விளக்காகவும் விளங்குகின்றது. அந்த ஒளி இல்லாமல் வழி இல்லை.

தியானத்தை மௌனத்தின் செயல் ( Action of Silence) என்றும், சக்தியின் முழு வெளிப்பாடு ( Total release of energy ) என்றும், தியானத்தின் முதிர்ச்சிநிலை என்பது அறிவினின்று மனத்தை விடுவிப்பதுவே, அப்படி விடுவிக்கப்பட்ட மனத்தின் மூன்று பகுதிகளாக மேல்மனம், நடுமனம், அடிமனம் எதுவும் தொழில்படாது என்றும், அதையே தியானம் என்பது எண்ணத்தின் முடிவு என்றும் இந்திய தத்துவஞானி ச. கிருட்டிணமூர்த்தி கூறுவார்.

சிறந்த தியானியாய் விளங்க வள்ளலார் இராமலிங்க அடிகள் கூறும் வழி யாதெனில், ‘பசித்திரு, தனித்திரு, விழித்திரு’ என்பதாகும். வள்ளலார் அகராதியில் தியானமும், தியாகமும் யோகம் என்ற நாணயத்தின் இரண்டு பக்கங்களாகத் திகழ்கின்றன. முன்னது குவிந்தும், பின்னது விரிந்தும் கடவுளின் அருளையும், படைப்பின் பொருளையும் வெளிப்படுத்துகின்

றன. ஒருவரின் உள்ளொளி ( Inlightening ) பெருக்குவது தியானத்தின் நோக்கமாகவும் பிறருக்கு ஞான ஒளி ( Enlightening) அளிப்பது தியாகத்தின் நோக்கமாகவும் இருக்கின்றது. தியானமும் தியாகமும் ஐக்கியமாவது மானிடவர்க்கத்தின் மேம்பாட்டிற்கு மிகவும் உகந்ததாகும்.

- ஆர். கோ.

**திருநாவுக்கரசு, க.த.** : இவர் தமிழறிஞராகவும் வரலாற்றாசானாகவும் திகழ்ந்தவர். இவர் பல்துறை அறிவும் ஆற்றலும் பெற்றவராகத் திகழ்ந்தார். இவர் செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த கருங்குழியில் 20 - 11 - 1931 அன்று பிறந்தார். தந்தையார் பெயர் தர்மலிங்கம். தாயார் பெயர் ருக்குமணி அம்மாள். இவர் சென்னை சிந்தாரிப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப்படிப்பை முடித்து சென்னை விவேகானந்தர் கல்லூரியில் இடைநிலை வகுப்பும் (Intermediate), பச்சையப்பன் கல்லூரியில் இளங்கலை, சிறப்பு வகுப்பும் (B.A. Hons) படித்தார். இளங்கலைத் தேர்வில் பல்கலைக்கழகத்திலேயே முதல் மாணவராகத் தேர்ச்சிப்பெற்றார். *பழந்தமிழ் இலக் கியத்தில் அறம்* என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து எம்.லிட்., பட்டமும், *பேராசிரியர் மு. வரதராசனாரின் படைப்பு இலக்கியம் ஓர் ஆய்வு* என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டமும் பெற்றார். வரலாற்றில் முதுகலைப்பட்டமும், மொழியியல் பெருஞ்சான்றுப்பட்டமும் பெற்றார். இவர் வட மொழி இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளை அறிந்தவர்.

இவர் புதுக்கோட்டை அரசர் கல்லூரி, சென்னை மாநிலக் கல்லூரி, மணலித் தமிழ்க்கல்லூரி ஆகிய கல்லூரிகளில் ஆசிரியராகவும், சென்னைப் பல்கலைக் கழகத் திருக்குறள் ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை வழங்கியுள்ளார். இவருடைய **திருக்குறள் நீதி இலக்கியம்** என்ற நூலுக்கு 1974ஆம் ஆண்டு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது. **தென்கிழக்கு ஆசிய நாடுகளில் தமிழ்ப் பண்பாடு** என்ற நூலுக்குத் தமிழ்நாடு அரசின் முதற்பரிசு 1989 ஆம் ஆண்டு கிடைத்தது. இவருடைய தமிழ்த் தொண்டிற்காகத் தமிழ்நாடு அரசு 1985ஆம் ஆண்டு திரு.வி.க. விருது வழங்கிச் சிறப்பித்தது.

இவருக்குத் திருக்குறள் மணி, திருக்குறள் சித்தர், குறள்நெறித் தோன்றல், திருக்குறள் பேரறிஞர் ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன. அவை இவருடைய திருக்குறள் தொண்டிற்காகத் தரப்பட்டவை. இவர் 1989 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் நாள் காலமானார்.

- மு. அ. மா.

**திருப்போரூர்** : தொண்டை நாட்டிலுள்ள முருகன் தலங்களுள் சிறப்புடையதொன்றாகும். இது செங்கல்பட்டு மாவட்டத்தில் செங்கற்பட்டிற்கு வடகிழக்கில் 25 கி.மீ. தொலைவிலுள்ளது. சென்னையிலிருந்து மாமல்லபுரம் செல்லும் வழியில் 57 கி.மீ. தொலைவிலும், திருக்கழுக்குன்றத்திலிருந்து 16 கி.மீ. தொலைவிலுமுள்ளது. போரூர் எனச் சென்னைக்கு அருகில் பூவிருந்தவல்லியையடுத்து ஓரூர் இருப்பதால் அதனின் இவ்வூர் வேறுபட்டதென்பது குறித்தும் சிறந்த முருகன் தலமொன்று விளங்குதற் பொருட்டும் திரு என்னும் அடைகொடுத்து இவ்வூர் திருப்போரூர் என வழங்கலாயிற்று. இவ்வூர் கல்வெட்டில் திருப்போரியூர் என்று வழங்கப்பெறுகிறது. வடமொழியில் யுத்தபுரி எனவும் சமர்புரி எனவும் கூறுவர். இவ்வூருக்குப்புரசை அட்டாவதானம் சபாபதி முதலியாரால் இயற்றப்பெற்ற புராணம் ஒன்றுமுண்டு. இங்கு கந்தப்பெருமான் வள்ளி தெய்வானையுடன் வீற்றிருந்து தங்களை நாடிவரும் அடியார்களுக்குக் கண்கண்ட தெய்வமாக அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்.

இக்கோயிலுக்குப் பின்புறம் ஒரு குன்று உள்ளது. அதனைப் பிரணவமலை என்று கூறுவர். இக்குன்றில் கைலாசநாதர் பாலாம்பிகையுடன் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார். இவ்வூர்ப்புராணத்துள் திருமால் இலக்குமி, அகத்தியர் முதலியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர் என்று கூறப்பெறுகிறது. இத்திருக்கோயில் பல்லவர் காலத்துக்கு முன்பே விளங்கியதென்பதற்குக் கல்வெட்டுச்சான்றுண்டு. திருப்போரூர் சயங்கொண்டசோழ மண்டலமாய தொண்டைநாட்டில் ஆமூர்க் கோட்டத்துள் குமிழநாட்டில் ஒரு சிறந்த

நகரமாயிருந்தது என்று கல்வெட்டிலிருந்து அறியலாம்.

இத்திருக்கோவிலில் கோப்பரகேசரி பன்மர் கல்வெட்டொன்றும் விக்கிரமசோழன் கல்வெட்டுகள் இரண்டும் விசயகண்ட கோபால தேவர் கல்வெட்டு ஒன்றும் காணப்பெறுகின்றன. ஆமூர்க்கோட்டத்துச் சிறுகுன்ற நாட்டுச் செம்பாக்கம் எனப்படும் பரகேசரி நல்லூரைப் பிள்ளையார் திருவிழாப்படிக்காகக் கந்தப்பெருமாள் கோவிலுக்கு விக்கிரம சோழன் கொடுத்தான் என அக்கல்வெட்டால் அறியப்படுகிறது. மேலும், விக்கிரமசோழன் தேவதானமாக நிலம் விட்டிருக்கிறான். விசயகண்ட கோபால தேவர் நந்தவனம் அமைக்கப் பொன்கொடுத்த கல்வெட்டு ஒன்றுமிருக்கிறது. இவ்வாறு பழமை பொருந்திய இத் திருக்கோயில் நாளாவட்டத்தில் சிறப்புக் குன்றிப் பாழடைந்துள்ளது. இக்கோயிலில் கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த சிறந்த ஞானியாய சிதம்பர சுவாமிகள் திருப்பணிகள் பல செய்து அதனைப் புதுப்பித்தார். அச்சிதம்பர சுவாமிகளின் பின் வந்தவர்களும் இத்திருக்கோயிலை நன்கு பேணி வருகின்றனர். இத்திருக்கோயிலில் கந்தப்பெருமான் சந்நிதி கிழக்கு நோக்கியிருக்கின்றது. பெண்பனையினடியில் புற்று மூர்த்தியாயிருப்பதால் இம்மூலவருக்குப்புனுகு தான் சாத்துகிறார்கள். அபிடேகம் முதலியன செய்வதில்லை. முருகப்பெருமான், வள்ளி தெய்வானையுடன் காட்சியளிக்கிறார். இச்சிலைகட்கு அபிடேகங்கள் நடக்கின்றன. திருக்கோயில் அமைப்புகளுக்கேற்றாற்போல் எல்லா மூர்த்திகளும் இங்குக் காட்சியளிக்கிறார்கள். திருப்போரூர் சிதம்பரசுவாமிகள் திருப்போரூர் முருகன் மீது ‘திருப்போரூர் சந்நிதி முறை’ என்னும் ஒரு சிறந்த பிரபந்தத்தைப் பாடியுள் ளார்கள். அந்நூல் மிகவும் உருக்கம் அமைந்ததாதலின் ஆன்றோர் அதனைக் குட்டித்திருவாசகம் என்று பாராட்டுவர். அருணகிரிநாதர் திருப்புகழ்ப் பாடல்களும் இத்தலத்திற்கு நான்கு உள்ளன. சிதம்பர சுவாமிகள் சமாதி திருப்போரூருக்கு அண்மையிலுள்ள கண்ணுவர் பேட்டையிலிருக்கிறது. இத்தலத்திற்கு வரும் அடியார்கள் யாவரும் திருப்போரூர் முருகனை வழிபடுவதுடன் சிதம்பரசுவாமிகள் சமாதியையும், சுரங்கம் முதலியவற்றையும் கண்டு வழிபட்டுச் செல்வது வழக்கமாகும்.

- இரா.ச.

**திருமண மருத்துவம் :** மருத்துவம் என்ற சொல் பெரிதும் உடல் சார்ந்த சிகிச்சை முறைகளையே குறிப்பதாக நெடுங்காலமாக மக்கள் நம்பி வந்தனர். உடலில் ஏற்படுகின்ற நோய்களுக்கு மருத்துவர்கள் அளித்துவந்த சிகிச்சையே மருத்துவம். ஆனால் நோய்கள் மக்களின் உடலை மட்டும் தாக்குவதில்லை. அவர்களின் உள்ளத்தையும் தாக்குகின்றன. அத்தகைய நோய்கள் மனநோய்களின் வகையைச் சார்ந்தவை. அந்நோய்களில் ஏதேனும் ஒன்று மனிதர்களின் உள்ளத்தைத் தாக்கி ஏதேனும் ஒரு வழியில் அவர்கள் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்த முடியாதபடி செய்து அவர்களை அவதிகளுக்கு உள்ளாக்குகின்றன. இதனால் மக்கள் தங்கள் நல்லிணக்கத்தை இழந்து துன்புற்று வருகின்றனர். இந்நிலை அவர்களைப் பல்வேறு மனநோய்களுக்கு ஆளாக்குகின்றது. இதனால் அவர்கள் மற்றவர்களுக்கும், சமூகத்திற்கும் சுமையாக இருக்கின்றனர். உளவியலார் இப்படிப்பட்ட நிலைகளுக்குப் பல்வேறு மருத்துவ முறைகளைக் கண்டறிந்து சிகிச்சையளித்து வருகின்றனர். அம்முறைகளில் ஒன்றுதான் உளப்பாகுபாடு (Psychoanalysis) என்பதாகும். இது ஆசுதிரியாவில் வாழ்ந்த சிக்மன் பிராய்டு ( Sigmund Freud ) என்பவரால் உருவாக்கப்பட்ட உள மருத்துவமுறையாகும். அன்றாட வாழ்க்கையில் மக்கள் பல சிக்கல்களால் தங்கள் நல்லிணக்கத்தை இழக்கின்றனர். அச்சிக்கல்களில் ஒன்று குடும்ப வாழ்க்கையாகும். குடும்ப வாழ்க்கை திருமணத்தில் தொடங்குகின்றது. எனவே ஒருவரின் திருமண வாழ்க்கையில் சிக்கல் ஏதுமின்றி கணவன் மனைவியரிடையே நல்லிணக்கம் தொடர்ந்து இருந்து வருமாயின் அவர்கள் வாழ்க்கை இன்பமாகவேயிருக்கும்.

சிறுசிறு பிணக்குகள், ஊடல்கள் இருக்கலாம். அவை நல்லிணக்கத்தைச் சிதைப்பதில்லை. ஆனால் செறிவு மிக்க சிக்கல் ஏதேனும் தோன்றுமாயின் கணவன் மனைவியரிடையே கசப்பான உணர்ச்சிகள் ஏற்பட்டு அவர்கள் தங்கள் திருமண வாழ்க்கையில் நல்லிணக்கத்தை இழந்து ஒருவரையொருவர் கடினமான சொற்களால் குறைகூறிக்கொண்டு பகைவர்களைப் போல் நடந்து கொள்ளத் தொடங்குகின்றனர். இந்த நிலையில் அவர்கள் உளவியலாரை நாடும்போது அவர்களின் நல்லிணக்கம் பழுதுபடுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அளிக்கப்படும் சிகிச்சை தான் திருமண மருத்துவம் ( Marital Therapy )

என்று கூறப்படுகிறது. பலருடைய திருமண வாழ்க்கையில் மறைந்துள்ள சிக்கல்கள் இயக்கமின்றி, தூங்குவது போன்ற பாவனையிலிருந்து வருவது வெளியிலிருந்து பார்ப்பவர் கண்களுக்குப் புலப்படுவதில்லை. ஆனால், அச்சிக்கல்கள் சிலசமயங்களில் பீரிட்டு எழுந்து மிகக்கொடிய முடிவுகளை ஏற்படுத்தி விடுகின்றன. திருமண வாழ்க்கையின் கொடுந்துயர் முடிவுகள் பற்றிச் செய்தித்தாள்களில் அடிக்கடி நிகழ்ச்சிகள் வெளியிடப்படுகின்றன. திருமணத்தின் காரணமாகக் கொடுந்துயர் முடிவுகளுக்கு இலக்காகின்றவர்கள் உரிய காலத்தில் உளவியலாரை அணுகியிருந்தால் அந்த முடிவுகளை அவர்கள் தவிர்த்திருக்கலாம்.

திருமணத்தினால் ஏற்படும் சிக்கல்கள் எல்லா நாடுகளிலுமே உள்ளன. ஆனால் அது அமெரிக்கா போன்ற மேலைநாடுகளில் அதிகமாகப் பேசப்படுகின்றன. அந்த நாடுகளிலெல்லாம் கணவன் மனைவியரிடையே சிக்கல் ஏற்பட்டு நல்லிணக்கம் சிதைவதாக இருந்தால் அவர்கள் உடனே உளமருத்துவரை நாடிச் செல்கின்றனர். தங்கள் சிக்கல்களை அவர்முன் வைக்கின்றனர். எனவே உள மருத்துவத்தில் திருமண மருத்துவம் ஒரு துறையாக இப்போது வளர்ந்துள்ளது.

ஒரு கணவனும் மனைவியும் தங்களுடைய திருமணச் சூழ்நிலையை மையமாகக் கொண்டு எழுகின்ற சிக்கல்களை மருத்துவரின் முன்வைக்கின்றனர். மருத்துவர், சிகிச்சைக்கான முறைகளைச் சரியானபடி வகுத்தமைத்துக்கொண்டு அவர்களிடம் நன்கு பேசி ஒரு வகையான தொடர்புறவை ஏற்படுத்திக் கொள்கின்றார். அதன்மூலம் அவர்களுக்கு மருத்துவர் மீது நம்பிக்கை ஏற்படுகிறது. பிறகு அம்மருத்துவர் அவர்களின் சிக்கல்களைத் தெளிவுப்படுத்திக்காட்டுகிறார். அவ்வாறு தெளிவுபடும்போது எந்த இடத்திலாவது கணவனோ, மனைவியோ மறுப்போ, திருத்தமோ செய்ய முன் வருகின்றார்களா என்று மருத்துவர் கவனமாக அவர்களைக் கையாண்டு வருகின்றார். அவர்களின் செயல்கள், ஒருவரோடு ஒருவர் கொள்கின்ற எதிர்வினைச் செயல்கள், ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் உணர்ச்சி தொடர்பான நட வடிக்கைகள் ஆகியவற்றைப் பாகுபாடு செய்து அவற்றில் மேம்பாடு ஏற்படச் செய்கின்றார். அவர்களின் மன இறுக்கத்தைத் தளரச் செய்து அச்சம், கவலை ஆகியவற்றைக் குறையச்செய்து அவர்களின் உறவுமுறைகள் செம்மைப்படுத்தப்படுகின்றன. அவர்களிடம் நல்லிணக்கம் விரிவடையச் செய்வதற்காகத் தூண்டு விசைகளை அமைக்கின்றார். கணவன் மனைவியிடையே அத்தகைய ஓர் இலக்கைப் பெறுவதற்கு மிகவும் விரிவான கருத்துகளையும் ( Concepts ), முறைகளையும் உள்ளடக்கிய முயற்சிகளை மருத்துவர் செய்ய வேண்டும்.

சில உளவியல் மருத்துவர்கள், தம்பதிகளில் ஒருவருக்கொருவர் தேவைகளை நிறைவு செய்து கொள்வதை வலியுறுத்துகின்றனர். சிலர் அவர்கள் சமூக நடவடிக்கைகளில் பங்கேற்கும் ஆர்வத்தை முக்கியமாக வலியுறுத்துகின்றனர். சில மருத்துவர்கள் தம்பதிகளிடையே நடைபெறுகின்ற செய்திப் போக்குவரத்துமுறை அவர்களிடையே நடைபெறுகின்ற இடைவினைச் செயற்பாட்டு முறைகள், ஏனைய மனிதர்களிடம் அவர்கள் கொள்கின்ற செயல்முறைகள் ஆகியவற்றில் ஏற்படுகின்ற குறைபாடுகளைக் களைவதில் கவனம் செலுத்துகின்றனர்.

மகிழ்ச்சியாகத் திருமணம் செய்துகொண்டு வாழ்கின்ற கணவன் மனைவியர், மகிழ்ச்சியின்றித் திருமணம் செய்துகொண்டு வாழ்கின்ற கணவன் மனைவியரிடமிருந்து எவ்வாறு வேறுபட்டு நிற்கின்றனர் என்று சில உள மருத்துவர்கள் காட்டுகின்றனர். மகிழ்ச்சியாகத் திருமணம் செய்துகொண்டு வாழ்கின்ற கணவன் மனைவியர் தங்களிடையே அதிகமாக உரை யாடல் புரிகின்றனர். தங்களின் செய்திப்போக்கு வழிகளைத் திறந்தே வைக்கின்றனர். செய்திப்போக்குவரத்து முறைகளைப் பெரும்பாலும் பேச்சின்றியே செய்கின்றனர். ஒருவருடைய உணர்ச்சிக்கு மற்றவர் முக்கியத்துவம் கொடுத்து நடந்து கொள்கின்றனர். இவ்வாறாள போக்குகளில் ஒருவர் மீது ஒருவர் அவ நம்பிக்கை கொள்வதற்கோ, தப்பெண்ணம் கொள்வ தற்கோ இடமில்லை.

ஆனால் சிலசமயங்களில் திருமண வாழ்க்கையில் கணவன் மனைவியிடமிருந்தோ அல்லது மனைவி கணவனிடமிருந்தோ தேவைகளையும், செயல்பங்குகளையும் ( Roles ) தவறாக எதிர்பார்க்கின்றனர். இத்தகைய சூழ்நிலைகள் திருமணம் சார்ந்த நல்லிணக்கத்தில் பெரும் அழிவுகளை ஏற்படுத்தியிருக்கின்றன. சான்றாக, ஒரு நிகழ்ச்சியை இங்கு காணலாம். திருமண மருத்துவம் பெறும்பொருட்டு ஒரு கணவனும், மனைவியும் உள மருத்துவரிடம் வந்தனர். கணவன்

35 வயது நிரம்பியவர். அவர், தம் மனைவியை விலக்கி விட்டு இளம் வயதுப் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். உள மருத்துவர் அவர்களை மருத்துவமுறையில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் போது, அவர் இறந்துபோன தம் அத்தையை நினைத்துப்பார்த்து, துக்கத்தால் விம்மி அழத் தொடங்கினார். ஏனென்றால் அவருடைய அத்தை அவருடைய போக்குகளை ஏற்றுக்கொண்டு அமைதியான சூழ்நிலையையும், மனநிறைவையும் உண்டாக்கி வந்தார். அந்த நிகழ்ச்சியைத் திரும்பிப் பார்த்தபோது, அவர் தாம் நெடுநாள்களாகத் தேடி வந்த தம் அத்தையைப் பிரதிபலிக்கும் வகையில் தம்முடைய பெண் நண்பர் இருப்பதாகக் கூறினார். அதனால் அவரைத் திருமணம் செய்து கொள்ள விரும்பினார். இதை அவர் வெளியில் கொண்டு வர முடியாமல் துன்புற்று வருந்தித் தன்னுடைய மனைவியை விலக்கிவிட விரும்பினார். உள மருத்துவரின் முயற்சியால் அவருடைய அடிமனத்தில் அடைப்பட்டிருந்த சிக்கல் வெளியே கொண்டு வரப்பட்டு, அவருடைய சிக்கல் என்னவென்பது கண்டறியப்பட்டது. அந்த உள்மன வெளிப்பாடு அவரிடையேயும், அவருடைய மனைவியிடையேயும் நிகழ்ந்த வேற்றுமைகளைப் போக்கி நட்புறவை மறுபடியும் உண்டாக்கிற்று. பின்னர் அவருடைய மனைவி அவருடைய தேவைகளையும் உணர்ச்சிகளையும் அதிகமாக புரிந்துகொண்டு நடந்தார்.

திருமண மருத்துவத்தில் மிகவும் கடினமான சூழ்நிலை ஒன்றுண்டு. அது என்னவென்றால் திருமணத் தம்பதிகளிடம் உருவாகியுள்ள செறிவுமிக்க மனவெழுச்சியாகும். அதுதான் அவர்களுடைய தொடர்புறவுகளிலும், உண்மைகளைக் கண்டறியும் முயற்சிகளிலும் தடையாக இருந்து கடுந்துயரங்களை உண்டாக்குகிறது. மனைவிமார்கள் அடிக்கடித் தங்கள் கணவன்மார்களிடம் என்ன தவறு இருக்கின்றது என்று தெளிவாகக் காண்கின்றனர். ஆனால் அவர்களிடமுள்ள தவறுகளை அவர்கள் காணுவதில்லை. அது போலவே கணவன்மார்கள் தங்களுடைய மனைவிமார்களின் தவறுகளில் மிகுந்த உட்காட்சி கொண்டு பார்க்கின்றனர். ஆனால் தங்களிடமுள்ள குறைகளை அவர்கள் காணுவதில்லை. அப்படிப்பட்ட சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு உளமருத்துவர்கள் புதிய உத்திகளைக் கடைபிடிக்கின்றனர்.

கணவனையும், மனைவியையும் தனித்தனியாகத் தங்களுடைய மனச் சிக்கல்களைப் பேசச்செய்து அவற்றை ஒலிப்பதிவு நாடாவிலோ, தொலைக்காட்சி நாடாவிலோ பதிவு செய்கின்றனர். அவற்றை அவர்களிடையே தனித்தனியே திரும்பத் திரும்ப வெளியிட்டு, கேட்கவும், பார்க்கவும் செய்யப்படுகின்றது. ஒலிப்பதிவு நாடா மூலம் அவர்கள் தங்கள் கருத்தை வெளிப்படுத்தும்போது குரலில் வெளிப்படும் உணர்ச்சிகளைக் கேட்கின்றனர். தொலைக்காட்சி நாடா மூலம் அவர்கள் தங்கள் கருத்துகளை வெளியிடும் போது குரல் வெளிப்படுத்தும் துயர உணர்ச்சிகள் மட்டுமின்றி, உடல் அசைவுகளிலும் அவ்வுணர்ச்சிகள் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றன என்பதையும் காணுகின்றனர். அந்த நாடாக்கள் பலமுறை அவர்களுக்குத் தனித்தனியே போட்டுக்காட்டப்படுகின்றன. அவற்றைக் காணுகின்ற போது அவர்கள் தங்களிடையே நடைபெற்ற செயல்களில் எத்தகைய மனஇறுக்கமும், கடுமையும் இரக்கமற்ற உணர்ச்சிகளும் இருந்திருக்கின்றன என்பதையும், அவர்களுடைய செயலெதிர் செயல்களில் உள்ளடங்கியுள்ள முழு உணர்ச்சிகளுக்கு ஊக்கமளிப்பவைகளையும் தெரிந்துகொள்ள முடிகிறது. அதன்மூலம் கணவன், தன்னுடைய மனைவி கூறுவதைச் சிறிதும் கவனிக்காமலும், அவளுடைய தேவைகள் என்ன என்பதையும், அவள் தன்னிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறாள் என்பதையும் புரிந்து கொள்ளாமலும் அவள் மீது ஆதிக்கம் செலுத்த முயன்றிருப்பதை முதல் தடவையாக உணரலாம்.

ஒரு மனைவி தன்னுடைய கணவனின் மேன்மையான உணர்ச்சிகளையும் தன் மதிப்பையும், தான் தாழ்வாக மதித்து,தொடர்ந்து துன்புறுத்தி வந்திருப்பதையும் முதன்முதலாக உணரலாம்.

சிலர் தங்களுடைய திருமண வாழ்க்கையினடியில் மறைந்துள்ள கடும்துயர உணர்ச்சிகளை விவரித்துச் சொல்லும்போது திருமண மருத்துவர்களே மிகவும் சிரமப்பட்டிருக்கின்றனர். அல்சர் ( Alger ) என்பவரும் ஒகேன் ( Hogan ) என்பவரும் அத்தகைய ஒரு நிகழ்ச்சி அனுபவத்தை வெளிப்படுத்தினார்கள். ஒரு கணவனும் அவருடைய மனைவியும் தங்களுடைய சிக்கல்களுடன் ஒரு திருமண மருத்துவரிடம் சென்றனர். அங்கு இரு மருத்துவர் இருந்தனர். அவர்கள் இவர்களுடன் சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, இருவர் கூறுவதையும் தனித்தனியே தொலைக்

காட்சி நாடாவில் பதிவு செய்தனர். அவர்களின் உடல் அசைவுக ளையும், கூற்றுகளையும் சேர்த்துப் பதிவு செய்தனர். மனைவியை விட கணவனிடம் தான் அதிக சிக்கல்கள் இருப்பதாக அம்மருத்துவர்கள் உணர்ந்தனர். பதிவு செய்யப்பட்ட அந்தத் தொலைக் காட்சி நாடாவைக் கணவனிடம் போட்டுக்காட்டி னர். அவன் தன்னுடைய மனைவியிடம் கூக்குரலிட்டு அழுவதையும், மனைவியின் முன் அடிமைபோலக் கெஞ்சுவதையும் அந்தத் தொலைக்காட்சி நாடாவில் அவன் பார்த்தான். இவ்விதமான நிகழ்ச்சிக் காட் சியை முதன்முதலாக நாடா வெளிப்படுத்தித்தான் அவன் காண்கிறான். இப்படியா மனைவியிடம் நடந்துகொண்டேன் என்று தன்னைத்தானே கேட் டுக்கொண்டான். அதை அவன் பார்த்தபோது எதிர் வினை மிகவும் செறிவாக காணப்பட்டது. அவ னுடைய நெற்றியும், முகமும் வியர்த்துக்கொட்டின. அதை மறுபடியும் அவன் பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்றான். எப்படியோ மருத்துவர்கள் போட்டுக்காட்டிய காட்சியை அவன் பலதடவை பார்த்தான். அதன்பிறகு, விளைவுகள் எப்படியிருந் தாலும் அதைப்பற்றி எண்ணாது தன்னுடைய மனைவியின் முன் தான் அஞ்சாமல் நிற்கப்போவ தாக முடிவு செய்து, அந்த முடிவின் படி என்றும் நடந்து கொள்ளப்போவதாகத் தீர்மானம் செய்தான். இதன் விளைவு அந்தக் கணவன் மனைவியரிடையே மிகவும் ஒரு மரியாதையான உறவு முறை தொடர்ந்து வளர்ந்து வந்தது.

திருமண மருத்துவ முறையில் மேலும் பல புதிய முறைகளும், உத்திகளும் கண்டுபிடிக்கப்பட்டிருக் கின்றன. ஒல்சன் ( Olson, 1970 ) என்பவர் ரோசர்ஸ் ( Rogers ) என்பவரின் மறைமுக வழிகளைப் பின்பற்றி திருமணத் தம்பதியருக்குப் பயிற்சியளித்துக் கணவன், மனைவியின் உணர்ச்சிகளையும், மனைவி கணவ னின் உணர்ச்சிகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டு செயல்பட உதவியிருக்கிறார். நடத்தைக் கோட்பாடு ( Behaviour Therapy ) மருத்துவமுறை திரு மணத் தொடர்புறவில் தேவையான மாற்றங்களைச் செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. இம் முறையின் மூலம் தம்பதிகள் தாங்கள் விரும்பிய நடத்தையை வலிமை பெறச் செய்வதற்கும் விரும் பாத நடத்தையைப் பின்வாங்கிக் கொள்வதில் வலிமை பெறச் செய்வற்கும் பயிற்சி அளிக்கப்படு கின்றது. இந்த மருத்துவ முறை தம்பதிகள் இரு வருக்கும் அல்லது சிக்கலுக்கு மூலகாரணமாகவுள்ள கணவனுக்கோ, மனைவிக்கோ பயன்படுத்தப்படு கின்றது.

மேலும், ஒரு சிறப்பான திருமண மருத்துவமுறை அண்மைக்காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அதா வது, கணவனோ, மனைவியோ அல்லது இரு வருமோ மருத்துவச் சூழ்நிலைக்குச் செல்லா மலேயே விரும்பிய விளைவுகளை அவர்களிடம் ஏற்படுத்த முடியும். கோல்டு சுடெயின் என்பாரும் பிரான்சின் என்பாரும் ( Goldstein and Francin ) கணவன்மார்களின் விரும்பத்தகாத நடத்தையை விளக்கும் பொருட்டுத் திருமணமான ஐந்து கல்லூரி மாணவிகளுடன் சோதனையில் ஈடுபட்டனர். ஒவ் வொரு மாணவ மனைவியின் கணவனிடத்திலும் ஒரு குறிப்பிட்ட விரும்பத்தகாத நடத்தையை மாற்றி யமைக்க முடிவு செய்தனர். ஆனால், அந்த மாணவ மனைவிகளால் ஒரு மாறுதலும் செய்ய முடிய வில்லை. முதல் கட்டமாக அந்த ஐந்து மாணவ மனைவிமார்களும் தங்கள் கணவன்மார்களிடம் நடைபெறும் விரும்பத்தகாத நடத்தை ஒவ்வொன் றையும் தொலைக்காட்சி நாடாவில் பதிவு செய்யும் படி பயிற்சியளிக்கப்பட்டனர். இதன் மூலம் விரும் பத்தகாத நடத்தைகளின் படித்தரம் கண்டுபிடிக்கப் படுகின்றது. அடுத்த கட்டமாக, விரும்பத்தகாத நடத்தை மறைந்து போவதற்கான வழிகள் கற்றுத் தரப்படுகின்றன. விரும்பத்தகாத நடத்தைக்கு மாற் றாக விரும்பத்தக்க ஒரு மாற்று நடத்தை நிலைநாட் டப்படுகின்றது. இத்தகைய முறையானது கணவன் மார்கள் மருத்துவச் சூழ்நிலைக்குச் செல்லாமலேயே அவர்களின் விரும்பத்தகாத நடத்தையைப் போக்கி, விரும்பத்தக்க நடத்தையை அவர்களிடம் புகுத்தி அவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்து வதில் மிகவும் வெற்றியடைந்திருக்கிறது. குடும்ப மருத்துவம் இதனின்றும் சிறிது மாறுபட்ட அடிப் படையைக் கொண்டிருந்தாலும் அது திருமண மருத்துவத்தை ஒட்டியே இருக்கின்றது.

- மு. இரா.

**திருமால் :** உலகில் ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் முறையே நான்முகன், திருமால், சிவன் என்ற மும்மூர்த்திகளும் செய்து வருகின்றனர் என்பது இந்துக்களின் நம்பிக்கை. காத்



திருமால்

தற் கடவுளாகக் கருதப்பெறும் திருமால் வடமொழியில் விஷ்ணு என்று குறிக்கப்பெறுகிறார்.

வேதங்களில் பழமையானதாகக் கருதப்பெறும் இருக்கு வேதத்தில் இந்திரன், வருணன், அக்கினி ஆகியோர் முதலிடம் பெறுகின்றனர். சிவபெருமானும் விஷ்ணுவும் குறிக்கப்பெறுகின்றனர். உபநிடத புராண காலங்களில் சிவன், விஷ்ணு ஆகிய இரு தெய்வங்களும் முதன்மைப்பெறுகின்றனர். இவர்களுடன் பிரம்மனும் சேர்ந்து எண்ணப்பெற்று மும்மூர்த்திகள் என வணங்கப்பெற்றனர்.

தொல்காப்பியத்தில் முல்லை நிலத் தெய்வமாக மாயோன் குறிக்கப்பெற்றுள்ளார். மாயோன், சேயோன் என்பன இவர்க்கு வண்ணத்தின் அடிப்படையில் அமைந்த பெயர்கள். தொல்காப்பியர் காலத்தில் திருமால் மாயோன் என அழைக்கப்பட்டார். அரசன் மக்களைக் காத்தலின் இறைவனுடன் சார்த்திப் புகழப்பெற்றான். 'மாயோன் மேய மன்பெருஞ்சிறப் பின் தாவா விழுப்புகழ்ப் பூவை நிலையும்' என்பது தொல்காப்பியம். சங்க இலக்கியங்களில் திருமால் என்ற சொல் வழக்கு இல்லை. 'புட்கொடி விறல் வெய்யோன்' (புறம்.56), 'நேமியோன்' (புறம்.58), 'அஞ்சன உருவன்' (புறம்.174), 'பாம்பணைப் பள்ளிய மர்ந்தோன்' (பெரும்பாண்.373), 'நெடியோன்' (பெரும்பாண்.402), 'மால்' (முல்லைப்பாட்டு.3), 'திகிரியான்' (கலி.104), 'திருமறு மார்பன்' (கலி.104), என்ற பெயர்களால் திருமால் குறிக்கப்பெற்றுள்ளான். படை, கொடி, வண்ணம், வாழிடம் இவற்றைக் கொண்டு சுட்டப்பெற்றுள்ளார். திருமாலும் பலராமனும் சங்க இலக்கியங்களில் சேர்த்துப் பேசப்படுகின்றனர். 'பானிற வுருவின் பனைக்கொடியோனும் நீனிற வுருவின் நேமியோனும் என்று இரு பெருந் தெய்வமும் உடனின் றாஅங்கு' (புறம்.58) மாயோன் அன்ன மால்வரைக் கவான் வாலியோன் அன்ன வயங்கு வெள்ளருவி (நற்.32).

மாயோன் - கருநிறத்தன் என்பது பொருள். மால் என்பதற்கு நெடுமை / கருமை என்பது பொருள். மாயோயே என்ற பரிபாடல் (3) திருமாலை விளிக்கும். நிறத்தான் அமைந்த பெயர், பின்னர் இயற்பெயர் போலாகிவிட்டது. விஷ்ணு என்பதற்கு எங்கும் நிறைந்துள்ளவன் என்பது பொருள். மால் என்ற சொல் திரு என்ற அடைபெற்றுத் திருமால் என்று வழங்கப்படுகின்றது. திருமகளை உடன் கொண்ட மால் என்றும் கருத இடமுண்டு. சிலப்பதிகாரத்தில் திருமால் பலபடப் பாராட்டப் பெறுகின்றான். ஆய்ச்சியர் குரவை முழுக்க முழுக்கத் திருமால் சீர் பாடுகிறது. திருமால் குன்றம் என்று திருமாலிருஞ் சோலைமலை குறிக்கப் பெறுகின்றது. திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே என்று சிலப்பதிகாரம் பாராட்டுகின்றது. திருமால் என்ற வழக்கு முதன்முதலில் இடம் பெறுவது சிலப்பதிகாரத்தில் தான். திருமால் நின்ற வண்ணம், கிடந்த வண்ணம், இருந்த வண்ணம் ஆகிய மூன்று கோலங்களில் இருந்து அருள் செய்கின்றார். திருவேங்கிட மலையில் நின்ற வண்ணத்திலும் திருவரங்கத்தில் கிடத்த வண்ணத்திலும் அவர் காட்சியளிக்கிறார். இவ்விரு கோலங்களையும் சிலப்பதிகாரம் மிகமிக அழகாகச் சித்தரிக்கும் ( காடுகாண் கதை ), இருந்தையூரில் இருந்த கோலத்தைப் பரிபாடல் சுட்டுகிறது ( பரிதிரட்டு. 1 ).

சிவபெருமானுக்குத் திருவாதிரை சிறப்பான விண்மீன் ஆதல் போன்று திருமாலுக்குத் திருவோணம் குறிக்கப்பெறுகின்றது. 'மாயோன் மேய ஓண நன்னாள்' என்று மதுரைக்காஞ்சி சுட்டும். 'திருவோணத் திருவிழாவில்', 'ஓணத்தான் உலகானாம் என்பார்களே' என்று மொழிவார் பெரியாழ்வார். திருமாலுக்குத் திருமகளும் நிலமகளும் இரு மனைவியர். 'திருவின் கணவ' என்று பரிபாடல் கூறும். ஆழ்வார்கள் பொதுவாகத் 'திருமகள் கேள்வன்' என்று குறிப்பிடுவர். 'திருமகளும் மண்மகளும்' என்று பொய்கையார் புகல்வார். சிவபெருமான் கொன்றை மாலையை விரும்பி அணிதல் போலத் திருமால் துளசிமாலை அணிவார். 'கண்பொரு திகிரிக் கமழ்குரற்றுழாஅய் அரங்கற் செல்வன்' என்று பதிற்றுப்பத்து.31 உரைக்கும். 'தண்துழாய் மாலை மார்பன்' என்று கூறுவார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

திருமாலின் திருவுருவம் அமையும் முறையை ஆகமங்கள் கூறுகின்றன. ஒவ்வோர் உருவமும் நின்ற திருக்கோலம், இருந்த திருக்கோலம், கிடந்த திருக்கோலம் என்ற மூன்று நிலைகளில் ஏதாவது ஒன்றில் அமைக்கப்படும். இம்மூன்றுடன் இயங்கு திருக்கோலமும் ( யாகை மூர்த்தம் ) சேர்ந்து நான்கு ஆதல் உண்டு. திரிவிக்கிரம மூர்த்தியாகிய உலகளந்த பெருமாள் கோலம் இயங்கு திருக்கோலம் எனப்படும்.

திருமாலின் நின்ற திருக்கோலம் இரண்டு, நான்கு, எட்டுக்கைகளுடன் அமைதல் உண்டு. இரண்டு கைகளுடன் அமையின் வலக்கை அபயமுத்திரையிலும், இடக்கை சங்கு ஏந்தியும் இருக்கும். நான்கு கைகளுடன் இருப்பின் அபயமுத்திரையுடன் வலக்கை இருக்கும். சங்கும் சக்கரமும் கதையும் ஏந்தி ஏனைய கைகள் இருக்கும். தேவன் நின்ற கோலத்தில் அமைந்தால் அங்ஙனமே தேவியரும் நின்ற கோலத்தில் அமைதல் வேண்டும். கிடந்த திருக்கோலத்தில் தேவியர் நின்ற நிலையிலோ, அமர்ந்த நிலையிலோ அமைய வேண்டும்.

மக்களின் பொருட்டுத் திருமால் பத்து அவதாரங்கள் எடுத்தார் என்ப. மச்சம், கூர்மம், வராகம், வாமணன், நரசிம்மன், பரசுராமன், இராமன், பலராமன், கிருட்டிணன், கல்கி என்பன அவை திருமால் நூற்றெட்டுத் தேசங்களில் எழுந்தருளியுள்ளார் என்ப. முதல் திவ்வியதேசம் திருவரங்கம், இறுதித் திவ்விய தேசம் பரமபதம். இவற்றை ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்துள்ளனர்.

பரிபாடலில் ஏழு பாடல்கள் திருமால் பற்றியன. திருமாலின் சீர்த்தி உரைக்கும் தனிப்பாடல்களுள் இவை காலத்தால் முந்தியனவாகும். பன்னிரு ஆழ்வார்கள் பாடிய நாலாயிரத் திவ்விய பிரபந்தம் திருமாலைப் புகழ்ந்து பேசும் திருப்பாசுரங்களாலாயது. பதினென் புராணங்களில் விஷ்ணு புராணமும் ஒன்று.

அறத்தினுள் அன்பாகவும், மறத்தினுள் மைந்தாகவும், கல்லினுள் மணியாகவும், சொல்லினுள் வாய்மையாகவும், வேதத்து மறையாகவும், பூதங்களில் முதலாவதாகவும், வெஞ்சுடருள் ஒளியாகவும், திங்களுள் அளியாகவும், அனைத்துமாகவும் அனைத்தின் உட்பொருளாகவும் திருமால் விளங்குகின்றான் என்று கடுவன் இளவெயினார் பரிபாடலில் திருமாலின் குணங்களைப் பாரித்தரைப்பர் (பரி.3).

- அ.வி.

**திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் :** அழகர் கோயிலைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டின் பகுதிகளை விசய நகரத்தாருக்கு உட்பட்டு ஆண்டு வந்தவன். வாணாதிராய வேந்தர்களுள் பெருவலியும், பெரும் புகழும் பெற்று விளங்கியவன். பல்வேறு விருதுப் பெயர்களைப் பூண்டவன். திருமாலிருஞ்சோலை நின்ற திரு மாலிடம் அளவற்ற அன்பு கொண்டவன். இவனது முழுப்பெயர் திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் உறங்காவில்லிதாசன் என்பதாகும். திருமாலிருஞ்சோலை நின்றான் என்பது இவனது இயற்பெயராதல் வேண்டும். ஏனெனில் பல கல்வெட்டுகளில் இவன் இவ்வாறே குறிக்கப் பெறுகிறான்.

இவன் கி.பி. 1428 முதல் 1477 முடிய 49 ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளான். இரண்டாம் தேவராயர் கி.பி. 1422 - 1466, இரண்டாம் விசயராயர் கி.பி. 1446 - 1447, மல்லிகார்சுனர் கி.பி. 1446 - 1465, இரண்டாம் விருபாக்சர் கி.பி. 1465 - 1485, ஆகிய விசயநகரப் பெருவேந்தர்களுள் இவன் உடன்காலத்தவர். அரிகேசரி பராக்கிரம பாண்டியன் கி.பி. 1422 - 1462 தென்காசியைத் தலைநகராகக் கொண்டு அதனைச் சூழ்ந்த பகுதிகளை இவனது உடன் காலத்தவனாக ஆண்டு வந்தான்.

திருமாலிருஞ்சோலை நின்றானின் கல்வெட்டுகள் மதுரை மாவட்டம் அழகர் கோயில், புளியங்குளம் போன்ற ஊர்களிலும், திண்டுக்கல் மாவட்டம் திண்டுக்கல், தாடிக்கொம்பு ஆகிய ஊர்களிலும், விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரிலும், புதுக்கோட்டை மாவட்டம் சேவலூர், காரையூர், பூவாலைக்குடி என்னும் ஊர்களிலும், செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சிபுரத்திலும் கிடைத்துள்ளன. ஸ்ரீ வில்லிப்புத்தூரில் மட்டும் ஏழு கல்வெட்டுகள் உள்ளன. இக்கல்வெட்டுகளைக் கொண்டு இவன் சமரச கோலாகலன், தென்னவர் காவலன், புவனேக வீரன், வீரகஞ்சுகன், பூபாலகோபாலன், மதியார்தம் மணவாளன், இராச மீசுரகண்டன், வீரப்பிரதாபன், மூவராயகண்டன், தப்புவராய கண்டன், பாண்டிய மண்டல தாபனாச்சாரியன், சோழ மண்டல பிரதாபச்சாரியன், மதுராபுரி மகாநாயகன், கசவேட்டை கண்டருளியவன் முதலான விருதுப்பெயர்களைக் கொண்டிருந்தான் என்பது தெரிகிறது. இவற்றுள் சில விசயநகர வேந்தர்களின் பட்டங்களாகும். விசயநகரத்தாருக்கு உட்பட்டு ஆண்ட இவன், அவர்களது பட்டங்களைத் தானும் புணைந்து கொண்டிருக்கக் கூடும். திருவணைக்காவலன் எனும் விருதுப்பெயரையும் இவன் பூண்டுள்ளதால் மறவர் நாடும் இவனது மேலாண்மைக்கு உட்பட்டது எனலாம்.

விசயநகர வேந்தர்களான மல்லிகார்சுனரும், விருபாட்சரும் வலிமை இழந்து கிடந்தபோது இவன் காஞ்சிவரை படையெடுத்துச் சென்று, காஞ்சிபுரத்தைக் கைப்பற்றிக்கொண்டான். இவனது கல்வெட்டுகள் காஞ்சி ஏகாம்பர நாதர் கோயிலிலும், காமாட்சியம்மன் கோயிலிலும் காணப்படுகின்றன. கி.பி. 1471 ஆம் ஆண்டு அளவில் விசயநகர வேந்தர் காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டனர். இவன் பாண்டியரையும் வென்று தன்னடிமைப்படுத்தினான். இதனை இவன் வெளியிட்ட ஆவுடையார் கோயில் செப்பேடு தெரிவிக்கிறது.

இவன் வைணவ சமயத்தில் பெரும்பற்று மிக்கவன். சமரகோலாகலன் புவனேகவீரன் என்ற தனது பட்டப்பெயர்களைப் பொறித்த நாணயங்களை வெளியிட்டுள்ளான். நாணயங்களில் பின்புறம் திருமாலின் பெரிய திருவடியான கருடனைப் பொறித்துள்ளான். வைணவக் கோயில்களுக்கு, நிறைந்த அறக்கொடைகளை விட்டதுடன், கோயில்களைத் திருப்பணி செய்துள்ளான். கி.பி. 1428 இல் இவன் ஸ்ரீவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயிலுக்கு நித்த நிவந்தங்களுக்காக கிராமம் ஒன்றைத் தனமாக்கியுள்ளான். கி.பி. 1433 இல் இந் நாச்சியாருக்கு திருவரங்க நல்லூர் கிராமத்தைத் தானமளித்ததுடன் விலையுயர்ந்த ஆபரணங்களையும் அளித்தான். கி.பி. 1438இல் வெருகனூர் எனும் கிராமம் நாச்சியாருக்குத் தானம் செய்யப்பட்டது. கி.பி. 1477இல் மாங்குளம் எனும் ஊரையும் தானமளித்துள்ளான்.

திண்டுக்கல் மாவட்டம் தாடிக்கொம்பு பெருமாள் கோயிலில் இதிகாசம், புராணம், சிபாசியம், திருவாய்மொழி, சிரீ ஆளவந்தான் தோத்திரம், சிரீபதி பாகவம் ஆகியன படிக்கப்பெற இவ்வாணாதிராயன் பெயரில் அறக்கட்டளை விட்டுள்ளான். அழகர் கோயிலுக்கு அழகிய பெரிய அம்மி ஒன்றைத் தானமளித்து அதில், ‘திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் உறங்காவில்லிதாசன் ஆன சமரகோலாகலன்’ என்ற தனது பெயரைப் பொறித்துள்ளான். கி.பி. 1464இல் அழகர் கோயில் கருவறையை அழகிய முறையில் புதுப்பித்துள்ளான்.

வைணவ பக்தனான இவன், சிவன் கோயில்களுக்கும் அறக்கொடைகள் விட்டுள்ளான். காஞ்சிபுரம் ஏகாம்பரநாதருக்கும், காமாட்சி அம்மனுக்கும் திங்கள்தோறும் வரும் இவனது பிறந்தநாள் நட்சத்திரத்தில், சிறப்பு வழிபாடு நடைபெற பாண்டிய நாட்டில் உள்ள சமரகோலாகல நல்லூர், புனேகவீர நல்லூர் என்னும் ஊர்களைத் தேவதானமாக அளித்துள்ளான். திருமயம் வட்டத்திலுள்ள சேவலூர் கோயிலுக்கு ஏனாதி ஊரைத் தானமாக அளித்தான். அப்பன் திருவேங்கடமுடையான் மடம் ஒன்றை நிறுவி நிலதானம் செய்துள்ளான்.

பஞ்சவராயர், நரசிங்கதேவர், சோழக்கோனார், பல்லவராயர் முதலான அரசியல் தலைவர்கள் இவனிடம் பணிபுரிந்தனர். சிரீரெங்கநாதப்பிரியன் என்னும் இவனது அம்மாள், திருமந்திர ஓலைநாயகமாகப் பணிபுரிந்தான். இவனது காலத்தில் வழக்கிலிருந்த நிலம் அளக்கும்கோல் திருமாலிருஞ்சோலை மாவலி வாணாதிராயன் மாத்ராங்குலம் எனக் குறிக்கப்பெறுகிறது. சுந்தரத்தோளுடையான் வாணாதிராயன் ( மழவராயன் ) இவனது மகனாவான். மதுரைப்பகுதியை ஆண்ட வாணாதிராயர்களுள் பெரும் புகழ் பெற்றவன் இவனேயாவான்.

- ம.இரா.த.

**திறந்தவெளிப் பள்ளி** : அனைவருக்கும் கல்வி, எல்லோருக்கும் சம வாய்ப்புகள் என்ற இரு அடிப்படைக் கொள்கைகள்மீது டாக்டர் இராதாகிருட்டிணன் குழுவின் ( 1948 - 49 ) அறிக்கை சுதந்திர பாரதத் தின் கல்வியின் இலக்குகளைத் தந்துள்ளது. இனம், சமூக அல்லது பொருளாதாரத் தகுதி எதுவாயினும் சரி, ஆர்வம் அல்லது நாட்டம் எந்த நிலையில் இருப்பினும் சரி ஒவ்வொரு குடிமகனுக்கும் கல்வி அளிப்பதைத் தன் கடமையாகக் கொண்ட இத்தகைய மாற்றம் பெரிதும் வரவேற்கத்தக்கதாகும். மரபுவழி வரும் கல்வி முறைக்கே உரிய தேர்வில் கட்டுப்பாடு, வருகையில் கட்டுப்பாடு, தேர்வு எழுதுவதற்கு உரிய நிலைகளில் கட்டுப்பாடு, கால வரையறை, ஒரு குறிப்பிட்ட பட்டம் பெறத் தேர்ந்தெடுக்கக்கூடிய பாடங்களின் அமைப்பு, எழுதக்கூடிய தேர்வுகளின் எண்ணிக்கை போன்ற எண்ணற்ற கட்டுப்பாடுகள் திறந்தவெளிக் கல்வி அமைப்பில் இல்லை.

பிரிட்டனில் 1960ஆம் ஆண்டுகளில் பிறந்த இப்புதிய கருத்து 1970ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் புகழ் பெற்று வளர்ந்துவிட்டது. சூசன் ஐசக், சூன் பியாசே ஆகியோர் கண்டறிந்த ஆய்வுகள் திறந்த

வெளிக் கல்வியின் உயர்வினை வலியுறுத்தின. இக் கல்வி நான்கு சுவர்கள் இல்லாத திறந்த வெளியில் நடைபெறும் பள்ளிகள் மூலமாகத்தான் நடைபெற வேண்டுமென்பதில்லை. இப்போது இயங்கி வரும் வகுப்பறைகளில் கூட இத்தகைய கல்வியைத் தரமுடியும். இங்கு அறிவு வளர்ச்சி, திட்டமிட்ட கல்வி, செயல்முறைகளில் ஆசிரியரின் பங்கு போன்றவை வலியுறுத்தப்படுகின்றன. வழக்கமாகச் செயல்படும் வகுப்பறைகளை விட இயற்கைச்சூழலில், திறந்த வெளியில் இயங்கும் வகுப்பறைகள் சிறந்தவையாக இருக்கின்றன.

இந்திய நாட்டைப் பொறுத்தவரை 1980ஆம் ஆண்டுகளில் தில்லியில் தொடங்கப்பட்ட இந்த திறந்தவெளிப் பள்ளி ( Open school ) ஒரு சிறந்த புதிய முயற்சியாகும். இத்திறந்த பள்ளி, முறையான கல்வியுடன் முறைசாராத் தொழில்கல்வியையும் வாழ்க்கையை வளம் சேர்க்கும் கல்வியையும் தருகிறது. இதன் மூலம் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி தேர்வுகளுக்கான சான்றிதழ்களையும் பெறமுடியும். முறைசாரா, தொழில்நுட்ப வாழ்க்கைக்கு வளம் சேர்க்கும் படிப்புகள் ஆகியவை இத்தகைய ஆர்வம் ஊட்டப்பட்டு கற்பவர்கள் தங்களுக்கே உரிய சிறப்புத் துறைகளில் பயிற்சிப்பெற உதவுகின்றன. மேலும், நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் கற்றல் மையங்களை ஏற்படுத்தி தானே கற்றலுக்கும் உதவிட அந்த மையங்களில் உள்ள பல்வேறு கற்றல் சாதனங்கள் ( நூலகம், தொலைக்காட்சி, ஒளி - ஒலிப்பதிவு நாடா) மாணவரது ஐயங்களை நீக்க உதவுகின்றன.

**தமிழகத்தில் திறந்த வெளிக்கல்வி :** மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஐந்து ஆண்டுகளாகத் திறந்தவெளிப் பள்ளியின் மூலமாக ஏறத்தாழ 1200 மாணவர்களை 10ஆம் வகுப்பிற்குத் தயார் செய்து அனுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளது. அரசின் பொதுத்தேர்வுக்கு இணையாக நடைபெற்ற இத்தேர்வு முறைகளில் நலிவுற்ற பிரிவினர், இல்லத்தரசிகள், வயது வந்தோர், பணிபுரிந்து கொண்டே கற்க விரும்புவோர், திடீரெனப் பல்வேறு காரணங்களுக்காகப் படிப்பைத் தொடர முடியாமல் போனவர்கள் எனப் பல பிரிவினர் பெரும் பயன் அடைந்தனர்.

மாணவரிடமிருந்து ரூபாய் 225 கட்டணமாகப் பெறப்பட்டு சிறந்த ஆசிரியர்களால் உருவாக்கிய பாடப்புத்தகங்கள் அஞ்சல் மூலமாக அனுப்பப்படுகின்றன. மேலும் மாணவர்களின் ஐயங்களை நீக்கப் பல மையங்களில் நேரடித் தொடர்பு வகுப்புகள் ( Contact Programme ) நடத்தப்படுகின்றன. தமிழ், ஆங்கிலம், அறிவியல், கணிதம், சமூக வரலாறு ஆகியப் பாடங்களில் தேர்வுகள் நடத்தப்பெற்று, பள்ளிகளில் இயக்குநர் மூலம் தேர்வு முடிவுகள் வெளியிடப் பெறும். இப்பள்ளி இறுதித்தேர்வில் வெற்றி பெற்றவர்கள் தொடர்ந்து மேல்நிலைக்கல்வியோ, தொழில் நுட்பக்கல்வியோ பயில முடியும். பதினைந்து வயதிற்கு மேற்பட்டு, எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றுள்ள எவரும் இந்தத் திறந்தவெளிப் பள்ளியில் சேரத் தகுதி உடையவர்கள். “மின்சாரம், கல்வி ஆகிய இவற்றைக் கொண்டு இந்த நாடு முழுவதற்குமே என்னால் வெளிச்சத்தைத் தரமுடியும்” என்று லெனின் கூறினார். இருண்டு கிடக்கும் கிராமங்களுக்கு மின்சாரமும், அறியாமை இருளில் மூழ்கித் தவிக்கும் மக்களுக்குக் கல்வியும் தந்தால் தான் நாடு உயர்வதற்கு வழியேற்படும். பள்ளிக் கல்வியில் மட்டுமின்றி உயர் கல்வியிலும் எல்லோருக்கும் வாய்ப்புத் தரக்கருதி 1969ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் மில்டன்கெயின்சு என்ற இடத்தில் 60,000 மாணவர்களுக்கு மேல் சேர்ந்த திறந்தவெளிப் பல்கலைக்கழகம் உலகிற்கு முன்னோடியாக இருந்தது. இந்தியாவில் முறையாக நடத்தப்படும் பல்கலைக்கழகங்களிலிருந்து பிரிந்து தனிப்பிரிவாக இத்தொலைக்கல்வி 1982இல் ஆந்திராவிலும், 1985இல் செப்டம்பர் மாதத்தில் நாட்டிலுள்ள அஞ்சலகக் கல்வி இயக்கங்களின் பணிகளை ஒருமைப்படுத்திச் செயல்புரிய, இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகம் தில்லியிலும் உருவாகியது. இதனையடுத்து மகாராட்டிரம், கேரளம், பீகார், மத்தியப்பிரதேசம், இராசசுதான் போன்ற மாநிலங்களிலும் திறந்தவெளிப் பல்கலைக்கழகங்கள் உருவாகின. வளர்ந்து வரும் மக்கட்தொகைக்கும் பெருகி வரும் அறிவு வளர்ச்சிக்கும் ஈடுகொடுக்க திறந்தவெளிப் பள்ளிகளும், பல்கலைக் கழகங்களுமே தக்கதொரு தீர்வாக அமையும் என்பதில் ஐயமில்லை.

- கி. அ.

**துணிகர முதலீடு :** முதலீடு செய்பவர்களின் துணிகரமான முடிவையும் போக்கையும் துணிகர முதலீடு ( Venture Capital ) குறிக்கிறது. துணிகர முதலீட்டைத் தனியாரும் மேற்கோள்ளலாம். கடன்

வழங்கும் நிறுவனங்களும் மேற்கொள்ளலாம். அதிகமான இலாபமீட்டும் திறனுடன் இயங்கும் தொழில் நிறுவனங்களைக் கண்டறிந்து அவற்றில் பெருந்தொகையை முதலீடு செய்வதைத் துணிகர முதலீடு என்னும் சொல்லால் குறிப்பிடுவர். இலாபம் ஈட்டும் திறன் ஆயிரம் விழுக்காட்டிலிருந்து, ஐயாயிரம் விழுக்காடு வரை கொண்டுள்ள தொழிலில் பெருந்தொகை முதலீடு செய்யப்படுவது துணிகர முதலீடாகும். அதே நேரத்தில் அந்த அளவிற்கு இழப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் மிகுதியாக இருக்கக்கூடும். துணிகர முதலீட்டில் இழப்பு ஏற்படும் வாய்ப்புகளும் அதிகம். இலாபமீட்டும் திறனும் அதிகம். நட்டமடையும் வாய்ப்புகளைப் பொருட்படுத்தாமல், இலாபமீட்டும் திறனைக் கணக்கிட்டு, துணிகரமாக முதலீடு மேற்கொள்ளப் படுகிறது. துணிகர முதலீடு மேற்கொள்ளப்படும் பொழுது தொழில் முதலீட்டிலுள்ள இடர்களையும் முதலீட்டாளர் நன்கு உணர்ந்து வைத்திருப்பர்.

துணிகர முதலீட்டை, தனிப்பட்ட ஒரு நபரோ, நிறுவனமோ மேற்கொள்ள வேண்டியதில்லை. தொழில் நிறுவனங்கள் வெளியிடுகின்ற சாதாரணப் பங்குகளில் முதலீடு செய்வதும் துணிகர முதலீடாகக் கருதப்படுகிறது. நிறுவனங்கள் வெளியிடுகின்ற சாதாரணப் பங்குகளைத் தனிநபரும் வாங்கலாம். பலபேர் சேர்ந்து கூட்டாகவும் வாங்கலாம். குறிப்பிட்ட ஒரு சில நிறுவனங்களும் வாங்கலாம். நிறுவனம் அதிக இலாபமீட்டுகின்ற காலங்களில் அதன் பங்குகளை வாங்கியவர்களுக்கு அதிக அளவு இலாப ஈவு வழங்கப்படும். ஆனால் முன்னுரிமைப் பங்குகளை ( Preference shares ) வாங்கியவர்களுக்கு நிலையான இலாபஈவு தொடர்ந்து வழங்கப்படும். இடர்களைத் தவிர்க்கும் எண்ணமுடையவர்கள் முன்னுரிமைப் பங்குகளில் முதலீடு செய்வர். ஆனால், சாதரணப்பங்குகளில் முதலீடு செய்பவர்களுக்குச் சில காலங்களில் அதிக இலாபஈவு வழங்கப்படும். சாதாரணப் பங்குகளில் முதலீடு செய்பவர்கள் இடர்களைத் தாங்கிக்கொள்ளும் மனநிலை படைத்தவர்களாவர். ஏனெனில் சாதாரணப் பங்குதாரர்கள் இலாப ஈவு கூடவும் செய்யவும், குறையவும் செய்யவும். அந்தந்த ஆண்டில் நிறுவனம் ஈட்டிய இலாபத் தொகையையொட்டி, சாதாரணப் பங்குதாரர்களுக்கு இலாபஈவு மாறக்கூடும். சாதாரண பங்குதாரர் இலாப ஈவைப் பெறாது இடர்படுவதுண்டு. எனவே தான் சாதாரணப் பங்குகளில் முதலீடு செய்வதைத் துணிகர முதலீடு என்றழைப்பர். நிறுவனத்திற்குத் தேவையான நீண்ட கால நிதித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சாதாரணப் பங்குகளை வெளியிடுவதுதான் பொருத்தமான செயலாகும். சாதாரணப் பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் திரட்டப்பட்ட துணிகர முதலீட்டு தொகையைத் தான், நிறுவனம் நீண்ட காலத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதேபோன்று நிறுவனம் கலைக்கப்படும்போது, பங்குதாரர்களுக்கு அவர்களிடமிருந்து திரட்டிய முதலீட்டைத் திரும்பக் கொடுத்தாக வேண்டும். இத்தகைய சூழ்நிலையில் முன்னுரிமைப் பங்குதாரர்களுக்குத்தான் முதலில் கணக்குத் தீர்க்கப்படும். அதற்குப்பின்னர், சாதாரணப் பங்குதாரர்களின் கணக்குத் தீர்ப்பது பற்றி நிறுவனங்கள் சிந்திக்க முற்படும். இந்த வகையான இடரையும், சாதாரணப் பங்குகளை வாங்குபவர்கள் தாங்கிக் கொள்கின்றனர்.

- எஸ். வி. பா.

**துணை விதி :** சட்டமியற்றும் பணியானது, சட்டமன்றத்திற்கு உரியதாகும். பொதுவாக அரசின் கொள்கையொன்றை நிறைவேற்றுவதற்காகச் சட்டமன்றம் சட்டமொன்றை இயற்றுவது வழக்கமாகும். ஆனால் அவ்வாறு இயற்றும்போது, அச்சட்டத்திலேயே மிக விரிவான வகைமுறைகளையும் பிற வழிவகைகளையும் கூறுவதென்பது நடைமுறையில் இயலாத ஒன்றாகும். எனவே சட்டமன்றமானது, அதுபோன்ற தறுவாய்களில் சட்டமியற்றுவதற்குத் தனக்குள்ள அதிகாரத்தை அரசின் நிருவாகத் துறையினிடமோ, நீதித்துறையினிடமோ ஒப்படைத்து விடும். இவ்வாறு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, நிருவாகத் துறையும் நீதித் துறையும் துணைச் சட்டங்களையும், விதிகளையும் உருவாக்கும். இதைத் தான் ‘ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரத்தின்படி சட்டமியற்றுதல்’ ( Delegated Legislation ) எனக் குறிப்பர். துறைவழி ஒழுங்குமுறை விதிகள் ( Departmental Regulation ), சட்டமுறையான விதிகள் ( Statutory Rules ), ஆணைகள் ஆகிய வடிவங்களில் அவை உருவாக்கப் படுகின்றன.

சட்டம் என்பது உயர்நிலைச் சட்டமாகவும் ( Supreme ) இருக்கலாம் அல்லது சார்நிலைச்

சட்டமாகவும் ( Subordinate Legislation ) இருக்கலாம். உயர்நிலைச் சட்டமென்பது, ஓர் அரசிற்கு உள்ள இறையாண்மை அதிகாரத்திலிருந்து தோன்றுவதாகும். அதை, வேறெந்தச் சட்டமியற்றும் அமைப்பும் நீக்கிவிடவோ, ரத்து செய்து விடவோ, கட்டுப்பாடு செய்திடவோ முடியாது. ஆனால் சார்நிலைச் சட்டமென்பதோ இறையாண்மை அதிகார அமைப்பு அல்லாத பிற அதிகார அமைப்பினால் செய்யப்படும் ஒன்றாகும். அதனால் அத்தகைய சார் நிலைச் சட்டம் தொடர்ந்து நீடிப்பதற்கும், செல்லத் தக்கதாக இருப்பதற்கும் அதற்கு உயர் நிலை அதிகார அமைப்பின் ஏற்பிசைவு தேவையாகும். சட்டமியற்றுகின்ற ஓர் அதிகார அமைப்பிற்குள்ள சார்நிலைத் தன்மையைப் ( Subordination ) பின்வரும் அறிகுறிகளை வைத்து கண்டுகொள்ளலாம் என்கிறார் டெய்சி (Dicey) என்பவர்.

1. அந்த அதிகார அமைப்பு, எந்த அமைப்பு விதிகளுக்குட்பட்டு நடக்கவேண்டுமோ, எந்த அமைப்பு விதிகளை மாற்றமுடியாதோ, அந்த அமைப்பு விதிகளைப் பாதிக்கின்ற சட்டங்களாக இருந்து வருதல்.

2. சாதாரண சட்டங்களுக்கும் அடிப்படையான சட்டங்களுக்கும் இடையே ஒரு குறிப்பிட்ட வேறுபாடு உருவாதல்.

3. அத்தகைய சட்டமியற்று அமைப்பினால் நிறைவேற்றப்பட்ட சட்டங்கள் செல்லத்தக்கவையா அல்லது அரசமைப்பின்படி அமைந்தவையா என்பது பற்றித் தீர்ப்பு கூறுவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கின்ற ஆளோ, ஆட்களோ ( அவர்கள் நீதிமன்றத்தைச் சேர்ந்தவர்களாயினும் அல்லது பிறவாயினும் ) இருந்து வருதல்.

சார்நிலைச் சட்டமியற்றல் ( Subordinate Legislation) என்பது, பின்வரும் முக்கியமான வடிவங்களில் செய்யப்படுகின்றது.

**நிருவாகத் துறையினால் செய்யப்படும் சார் நிலைச்சட்டம் :** இக்காலச்சட்டங்களின் போக்கு என்னவென்றால், சில அகன்ற பொதுவிதிகளை அல்லது கொள்கை அறிவிப்புகளை மட்டும் சட்டத்தின் முக்கியப் பகுதியில் கூறிவிட்டு, நுணுக்கமான விவரங்களைச் சட்டமுறையான விதிகளின் ( Statutory Rules) மூலமாகத் தெரிவிக்க விட்டுவிடுவதாகும். பல்வேறு நகராட்சிச் சட்டங்களின் கீழ் அரசினால் உருவாக்கப்படும் விதிகள் இந்தத் தலைப்பின் கீழ்தான் வருகின்றன.

**நீதித்துறையினால் செய்யப்படும் சார் நிலைச் சட்டம் :** பல்வேறு சட்டங்கள், நீதிமன்றங்களில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைநெறியை முறைப்படுத்துவதற்கான விதிகளை உருவாக்குவதற்கு, உயர் நீதிமன்றங்களுக்கு அதிகாரம் அளிக்கின்றன. இவ்வாறு அதிகாரமளிக்கின்ற வகைமுறையின்படி, உயர் நீதிமன்றங்கள், காப்பாளர் மற்றும் காப்பிற்குரியோர் சட்டம் ( Guardians and Wards Act ), நிறுவனங்கள் சட்டம் ( Companies Act ), நொடிப்புநிலைச் சட்டம் ( Insolvency Act ), வாரிசுரிமைச்சட்டம் ( Succession Act) முதலியவற்றை உருவாக்கியுள்ளன.

**நகராட்சிகளால் செய்யப்படும் சார் நிலைச் சட்டம் :** நகராட்சி அதிகார அமைப்புகள் தத்தம் நிருவாகத்தின் கீழ் வருகின்ற ஆட்சிப்பகுதி முழுவதற்குமோ, ஏதேனும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்கோ பொருந்தத்தக்க தனிச் சட்டமொன்றை இயற்றுவதற்காக, வரம்புக்குட்பட்ட சார்நிலை அதிகாரங்கள் அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ளன.

**தன்னாட்சி அமைப்புகளால் செய்யப்படும் சார் நிலைச்சட்டம் :** பல்கலைக்கழங்களைப் போன்ற தன்னாட்சி அமைப்புகள், தத்தம் தொடர்பான பொருள்கள் குறித்துத் தாங்கள் செய்துகொள்கின்ற ஒழுங்குமுறை விதிகள் இந்தத் தலைப்பின் கீழ்வரும்.

**துணை விதிகள் :** துணை விதிகள் ( Bye - Laws ) தாம், சார் நிலைச்சட்டத்தின் உண்மையான வடிவமாகும். ஒரு கூட்டு நிறுவனமானது தன்னையும் தன் அலுவலர்களையும் பணியாளர்களையும் மட்டுமல்லாமல் தன் செயற்பாட்டு எல்லைக்குள் வருகின்ற பொதுமக்களையுங்கூடக் கட்டுப்படுத்தக் கருதிச் செய்கின்ற ஒழுங்குமுறை விதிகள் அனைத்தையும், அவை சட்டப்படி செல்லத்தக்கவையாக இருந்தாலும் அல்லது செல்லாதவையாக இருந்தாலும் துணை விதிகள் என வழங்கலாம். துணை விதிகள் என்ற சொற்றொடரானது, சட்டக்கூறினைப் பொறுத்தளவில் எது செல்லத்தக்கதாகவுள்ளதோ அதற்கு மட்டும் உரிதானதன்று. அது எவரெவருக்கெல்லாம் பொருந்துமோ, அவர்கள் அதற்குக் கட்டுபட உடன்பட்டாலும் இல்லையென்றாலும் அவர்களைக் கட்டுபடுத்துகின்ற ஓர் உடன்பாடு அன்று.

ஒரு துணைவிதியென்பது, எதையாவதொன்றைச் செய்ய வேண்டுமென்றோ, செய்யக்கூடாதென்றோ ஆணையிட்டு, சட்டமுறையான அதிகாரங்களைப் பெற்றுள்ள ஓர் அதிகார அமைப்பினால் விதிக்கப் பட்டு, பொதுமக்கள் அனைவரையும் அல்லது அவர் களின் ஒரு குறிப்பிட்ட பகுதியினரைப் பாதிக்கின்ற ஒரு நெறிமுறை விதியாகும். இத்துணை விதிக்கு இணங்கி நடக்காவிடில் என்ன தடையாணை அல் லது தண்டனைக்கு உள்ளாக நேரிடும் என்பதும் அதிலேயே அடங்கியிருக்கும்.

துணைவிதி எதுவும் இல்லாமலிருந்தால், எந்தச் செயல்களைச் செய்யவோ, செய்யாமலிருக்கவோ ஆட்கள் உரிமை பெற்றவர்களாக இருப்பார்களோ, அந்தச் செயல்களைப் பொறுத்த அளவில், தன் செயற் பாட்டிற்குள் வருகின்றவர்களால் அச்செயல்கள் சுதந் திரமாகச் செய்யப்படுவதற்குக் கட்டுப்பாடு விதி யென்பதுகூட அத்துணைவிதியில் கட்டாயமாக அடங்கியிருக்கும். இன்னுஞ்சொன்னால், செல்லத் தக்க வகையில் துணைவிதியொன்று செய்யப்படுமா யின், தன் எல்லைக்குள் அது சட்டத்திற்குள்ள ஆற்ற லைப் பெற்றதாகவும் இருக்கும். தத்தம் உள்ளாட்சி களுக்குள் சிறந்த ஆட்சி அமைவதற்காக எந்தெந்தத் துணை விதிகளைச் செய்வது ஏற்றது என்று தங்களுக் குத் தோன்றுகின்றனவோ அந்தத் துணைவிதிகள் என் னென்ன என்பது குறித்துத் தாங்களே தேர்ந்து முடிவு செய்வதற்கான அதிகாரங்களை, மக்களின் சார்பாளர் கள் அடங்கிய பொது அமைப்புகளுக்குச் சட்டமன்ற மானது ஒப்படைக்கின்ற போது, அவ்வாறு ஒப்ப டைக்கப்படும் அத்தகைய அதிகாரங்களோடு, பொது வாக சில காப்பு வகைமுறைகளையும் உடன் சேர்த்தே சட்டமன்றமானது ஒப்படைக்கும். எ.கா. கொண்டுவரக் கருதியுள்ள அந்தத் துணைவிதியைப் பற்றி, அவ்வட்டாரத்திலுள்ள பொதுமக்களின் கருத் தினை அறிவதற்காக வேண்டி, அத்துணை விதிகளை முன் கூட்டியே வெளியிடுதல் வேண்டும் என்று அக் காப்பு வகைமுறை கூறலாம். அத்துடன், அத்தகைய துணைவிதிகளுக்கு மாநில அரசு ஒப்பளிப்பு செய் கின்ற வரையிலும் அவை செல்லுகின்ற ஆற்றல் பெற் றிருக்கக் கூடாது என்றும் அக்காப்பு வகைமுறை கூற லாம்.

தனக்கு உகந்ததென்று தோன்றுகிறபோதெல்லாம் துணை விதிகளைச் செய்வதற்கு ஓர் அதிகார அமைப் பிற்கு உள்ள அதிகாரமானது, அப்போது நடைமுறை யில் இருக்கின்ற துணைவிதிகளைச் செயற்படுத்துவ தற்குக் கடினமாக உள்ளது என்றோ, வசதியற்றதாக உள்ளதென்றோ நடைமுறை அனுபவம் மூலம் தெரியவந்தால், அதே உள்ளாட்சி அதிகார அமைப் பானது அத்தகைய துணை விதியை நீக்குவதற்கோ மாற்றுவதற்கோ முழு அதிகாரத்தைப் பெற்றிருக் கும். அதே போன்றே அத்தகைய அதிகாரத்தை வழங் கிய சட்டமன்றமும், தான் ஒப்படைத்த அதிகாரத்தை மாற்றியமைக்கலாம் அல்லது விலக்கிக் கொள்ள லாம்.

விதிகளைச் செய்வதற்குச் சட்டமொன்றினால் வழங்கப்படும் அதிகாரத்தினைக்கொண்டு செய்யப் படும் துணை விதிகளும் சட்டங்களின் கீழ்ச்செய்யப் படும் விதிகளைப் போன்றே அதே நிலையில் நிற் பவையல்ல. ஏனெனில் பின்சொல்லப்பட்டவை, அச் சட்டத்தின் பகுதியாகவே அமைந்தவையாகும். சட்ட முறைப்படியான விதிகளுக்கும், துணை விதிகளுக்கு மிடையே தெளிவான ஒரு வேறுபாடு உண்டு. துணை விதிகளென்பவை வழக்கமாக, கூட்டு நிறுவனங்க ளால் அவற்றின் நோக்கங்களை நிறைவேற்றுவதற் காக அவற்றிற்குள்ள உட்கிடையான அதிகாரங் களைக் கொண்டு, அவற்றால் செய்யப்படுபவை யாகும். அல்லது நாடாளுமன்றத்தால் நிறுவப்படும் பொது அதிகார அமைப்புகளால் அவை உருவாக்கப் படுபவையாகும். எனவே, இத்துணை விதிகளை உரு வாக்குவதற்கும் தங்கள் நோக்கங்களை நிறைவேற்று வதற்கும் அத்தகைய கழகங்களுக்கு அல்லது பொது அதிகார அமைப்புகளுக்கு உரிமையிருப்பதால், அத்த கைய துணை விதிகள் நியாயமானவையாக உள்ள னவா என்பதை ஆராய்ந்து காண்பதற்காக, ஒரு வகை யான கட்டுப்பாட்டதிகாரத்தை நீதிமன்றங்கள் தங் கள்பால் இருத்திவைத்துக் கொண்டுள்ளன. ஆனால் சட்டமுறையான விதிகளோ, முற்றிலும் வேறுபட்ட ஓர் அடிப்படையில் நிற்பவையாகும்.

நாடாளுமன்றமோ சட்டமன்றமோ சட்டத்தி லேயே விதிகளையும் சேர்ப்பதற்குப் பதிலாக, வழக் கமாக என்ன செய்கின்றது என்றால், சட்டமன்றத் தால் விதிக்கப்படும் கொள்கைகளை நிறைவேற்றுவ தற்காக, அந்தச் சட்டத்தின் கீழ் விதிகளை உருவாக்கு வதற்கு, அரசின் நிருவாக துறைக்கே அதிகாரத்தை அளித்துவிடுகிறது. அவ்வாறு அதையொட்டி விதிகள் உருவாக்கப்பட்டதும், அவ்விதிகள் அச்சட்டத் திலேயே சேர்க்கப்பட்டு, அச்சட்டத்தின் பகுதி

யாகவே ஆகிவிடுகின்றன. அதற்குப்பின் அவ்விதிகள் அச்சட்டத்தைப்போன்றே, அதே கொள்கைக்கு உட்பட்டவையாக இருந்துவரும். எனவே, ஒரு துணை விதியானது நியாயமானதாக இல்லை என்கிற காரணத்தின் அடிப்படையில், அதை எதிர்த்து வழக்கிடலாம். ஆனால், சட்டமுறையான ஒரு விதியானது அவ்வாறு எதிர்க்கப்பட முடியாது. அதாவது நியாயமானதாக இல்லை என்று கூறி, சட்டமுறையான ஒரு விதியை எதிர்த்து யாரும் வழக்கிட முடியாது.

துணைவிதிகளைச் செய்வதற்கு மக்கள் சார்பாளர்களின் பொது அமைப்பொன்றிற்குப் போதுமான அதிகாரம் வழங்கப்பட்டிருந்து, அத்தகைய அதிகாரத்தைக்கொண்டு அத்தகைய அமைப்புகளால் செய்யப்பட்ட விதிகள் குறித்து ஆராயுமாறு நீதிமன்றம் கோரப்படும்போது, அத்தகைய துணைவிதிகளை வேறொரு கோணத்திலிருந்து அந்நீதிமன்றம் அணுகி ஆராயும். இயலுமாயின் நீதிமன்றமானது அவ்விதிகளை ஆதரிக்கவே முனைதல் வேண்டும். அதாவது, நீதிமன்றமானது அத்தகைய விதிகளுக்கு விரிந்த மனதுடன் பொருள் விளக்கம் அளிக்கவேண்டும். அத்துணை விதிகளை நியாயமான அளவிற்கு நிருவகிப்பதற்குவேண்டி, அவ்வாறு அவற்றை நிருவகிப்பவர்களுக்கு உரிய மதிப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.

துண்ணவிதிகள் நியாயமானவையாக அமைந்திருக்கவில்லை என்று கருதிக்கொண்டு, அந்த அடிப்படையில் அத்தகைய துணைவிதி எதுவும் செல்லாது என்று கண்டிப்பதில் நீதிமன்றங்கள் விரைவு காட்டுதல் கூடாது.

ஒரு துணைவிதிக்குச் சரியானபடி பொருள் எதுவும் அளிக்கப்படவில்லையென்றாலோ, அறிவுக்கேற்ற அல்லது உறுதியான பொருள் எதுவும் அளிக்கப்பட முடியவில்லையென்றாலோ, அத்துணை விதியானது, தெளிவுறுதியற்றதாக உள்ளது என்கிற காரணத்தின்பேரில், செல்லா நிலையது என்று தீர்ப்புரைக்கப்படும்.

**துணை விதியின் இன்றியமையாக் கூறுகள் :**

1. ஒரு துணை விதியானது, அதைச் செய்வதற்கு அதிகாரம் அளிக்கின்ற சட்டமுறையான அதிகாரத்தை விஞ்சுவதாக இருத்தல் கூடாது.

2. அது, சட்டத்திற்கோ சட்டத்தின் பொதுக் கோட்பாட்டிற்கோ முரணாக அமைதல் கூடாது.

3. அது நியாயமற்றதாகவோ, தெளிவுறுதியற்றதாகவோ இருத்தல் கூடாது.

பொது சட்டநெறியை வைத்து ஒரு துணை விதியானது செல்லுமா செல்லாதா என்பதைப் பற்றி முடிவு செய்கின்றபோது, சில பொதுக்கூறுகளை மனதில் கொள்ளுதல் வேண்டும். ஒரு வழக்கில் நீதிபதி சாணல் என்பவர் பின்வருமாறு கருத்துரைத்துள்ளார். ‘சட்ட விரோதமானது என்று எதையேனுமொன்றை பொதுச்சட்டமானது விளம்பாத நிலையில், அத்தகைய ஒன்றை ஒரு துணை விதியானது தடை செய்கின்றது என்கிற காரணத்தினால் மட்டுமே, அத்துணைவிதியானது பொதுச்சட்டத்திற்கு முரண்பட்டதாகிவிடாது. ஆனால் அத்துணைவிதி எப்போது பொதுச்சட்டத்திற்கு முரண்பாடாகிறது என்றால், பொதுச்சட்டம் எதையேனுமொன்றை வெளிப்படையாகவோ, தேவையான உட்கிடையாகவோ சட்டமுறையானது என்று விளம்பியுள்ள நிலையில், அத்தகைய ஒன்றை இத்துணை விதியானது தடைசெய்வதாகப் புலப்படுகின்றபோது மட்டுமே அவ்வாறு துணை விதியானது, பொது சட்டத்திற்கு முரண்பட்டதாகின்றது. அப்போதும் அத்துணைவிதியானது எதனால் அவ்வாறு முரண்பட்டதாகும் என்றால், எந்த வகைமுறைக்கு அது முரண்படுகிறதோ, அந்த வகைமுறையானது, உட்கிடையாகக் கொள்ளப்பட்ட ஒரு வகைமுறையேயன்றி அது அவ்வாறு முரண்பட்டதாகும். எடுத்துக்காட்டொன்றின் மூலமாக இதை விளக்கலாம். மோசடி செய்ய வேண்டும் என்கிற உட்கருத்துடன் இருப்புப்பாதை வண்டியில் பயணச்சீட்டு இன்றிப் பயணியொருவர் பயணஞ்செய்தால் அது ஒரு குற்றச்செயலாகும் என்று சட்டமொன்று குறிப்பிடுவதாக வைத்துக்கொள்வோம், அந்த வகைமுறையை அதேபோன்று தண்டனை விதித்து ஒரு துணை விதியானது மீண்டும் சொல்கின்றது என்றும் வைத்துக் கொள்வோம். ஆனால் ஒரு துணைவிதியானது, மோசடி செய்கின்ற உட்கருத்துடன் என்கிற சொற்றொடரை அதில் விட்டுவிடுகின்றது என்றால் அப்போது அது ஐயத்திற்கு இடமேயன்றி அச்சட்டத்திற்கு முரண்பட்டதேயாகும்.

துணை விதிகள் ஒரு வரம்புக்குட்பட்ட எல்லைக்குள் அமைந்து, செல்லத்தக்கவையாக இருக்குமாயின், அவை தேவையானவையா அல்லது உகந்தவைதாமா என்பது பற்றி, நீதிமன்றத்தில் கேள்வி கேட்க முடியாது. அதாவது அவை நியாயமற்றவை

யாக இருந்தாலன்றி, ஆனால் ஒரு துணை விதியானது தகாததாகவோ, நியாயமற்றதாகவோ இருக்குமாயின் அது சட்டத்திற்குப் புறம்பானதாகி, விழலாகி நிற்கும்.

ஒரு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளோ, விதியின் கீழ்ச்செய்யப்பட்ட துணை விதிகளோ, அச் சட்டத்தின் வகைமுறைகளை விஞ்சியவையாக இருப்பின் அல்லது அவ்வகைமுறைகளை மீறியவையாக இருப்பின், அல்லது அவ்வகைமுறைகளுக்கு ஒவ்வாதவையாக இருப்பின், அத்தகைய வகைமுறைகளை அச்சட்டத்திற்குப் புறம்பானவையாக, அதனை மீறியவையாகக் கருதப்படவேண்டும். அதனால் அத்தகைய வகைமுறைகளைச் செயற்படுத்தும் வகையில் அவற்றிற்குச் செயல்வடிவம் அளிக்க முடியாது.

ஒரு துணை விதியானது ஒரு சட்டத்தால் வழங்கப்படும் அதிகாரத்திற்கப்பால் செல்கின்ற வகையில், அச்சட்டத்திற்குப் புறம்பானதாக இருத்தல் கூடாது. ஒரு துணைவிதியானது, அச்சட்டத்தையொட்டியதாக அமைந்திராவிட்டால் அது செல்லாததாகும்.

ஒரு துணைவிதியைத் தனித்தனி தெளிவான பகுதிகளாகப் பிரிக்கமுடியுமாயின், ஒரு பகுதியை சரியற்றதென்று தள்ளிவிடலாம். ஆனால் எஞ்சிய பகுதிகளைச் செல்லத்தக்கவையென தீர்ப்புரைக்கலாம். ஒரு துணைவிதியிலுள்ள சரியற்ற பகுதியைச் சரியாகவுள்ள பகுதியிலிருந்து பிரிக்கமுடியுமாயின், அப்போதும் சரியாகவுள்ள பகுதியைச் செயற்படுத்த முடியும். ஆனால் சரியில்லாத பகுதியை அவ்வாறு தனியாகப் பிரிக்க முடியாதென்றால், அதாவது அந்த அளவிற்கு பிரிக்க முடியாதபடி அவை இரண்டும் ஒன்றாகக் கலந்துவிட்டிருக்குமாயின் அப்போது அத்துணைவிதி முழுவதுமே சரியற்றதாகும். சரியற்ற பகுதியை, எஞ்சிய மற்ற பகுதியிலிருந்து பிரிக்க முடியுமா, முடியாதா என்பதைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு சோதனை என்னவென்றால், சரியற்ற அந்தப் பகுதியை நீக்கி விட்டதன் பின்னர் சட்டத்தின் எஞ்சிய பகுதி செயற்படுத்தத்தக்கதாகவுள்ளதா, விதியைச் செய்கின்ற அதிகார அமைப்பின் உட்கருத்தை வீணாக்காமல் இருக்கிறதா, சரியற்ற பகுதியிலிருந்து முற்றிலும் தனித்து நிற்கிறதா என்பதைக் காண்பது தான் அச்சோதனையாகும்.

ஒரு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிக்கும் ஒரு சங்கத்தால் செய்யப்பட்ட துணை விதிக்கும் இடையே முரண்பாடொன்று எழுமாயின் ஒரு சட்டத்தின் பிரிவைப்போலச் செல்திறம் வாய்ந்த, அந்த விதிக்குத்தான் துணை விதியை விட முன்னுரிமை தர வேண்டும்.

துணைவிதியைச் செய்கின்ற அமைப்பொன்று, ஒரு துணைவிதியை உருவாக்கிச் சாற்றுகின்றபோது, அந்தத் துணைவிதிக்குப் பொருந்தாததாகவுள்ள ஏதேனுமொரு வகைமுறையை மேற்கோளாகக் காட்டுமாயின், அப்போதும் அந்தத் துணைவிதியானது நன்கு செல்லத்தக்கதாகவே இருக்கும். ஆனால் சட்டத்தின் பிற வகைமுறையின்கீழ், அதை இயற்றுவதற்கான அதிகாரத்தைச் சட்டமியற்றும் அந்த அதிகார அமைப்பானது பெற்றிருத்தல் வேண்டும். கவனக் குறைவினாலோ தவற்றினாலோ அவற்றிற்குள்ள அதிகாரத்தைத் தவறாக மேற்கோள் காட்டுவதனாலேயோ, சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரத்தை அது பறித்துக்கொண்டு விடுவதாகாது.

- தி. வ. தெ.

**துவாரகை :** துவாரகை என்னும் ஊர் ஏழு முத்தித் தலங்களுள் ஒன்று. பம்பாயிலிருந்து ஓகா துறைமுகத்திற்குச் செல்லும் புகைவண்டிப் பாதையில், துறைமுகத்திற்குக் கிழக்கே 32 கி.மீ. தொலைவில் துவார்கை என்னும் இவ்வைணவத் தலம் உள்ளது. இது நூற்று எட்டு வைணவத் திருப்பதிகளில் ஒன்று. இவ்வூரில் அமைந்துள்ள பிரபாசத்தீர்த்தம், இரைவத மாலை, கிருட்டிணன் கோயில் ஆகியவை காணத் தக்க இடங்களாகும். உலகத்தின் பாரத்தைத் தவிர்க்க, திருமால் கிருட்டிணனாக இத்தலத்தில் அவதாரம் செய்தார்.

இங்குள்ள கிருட்டிணக்கோயிலில் துவாராக தீர்த்தம் உள்ளது. நின்ற கோலத்தில் உள்ள திருமாலின் வடிவம் இக்கோவிலின் மூலத்தன்மையாகும். இக்கோவிலின் அட்டமகரிசிகளின் அருள் பெற்றதாகும். பொன்னால் ஆன விமானம் இக்கோவிலின் தனிச்சிறப்பு. இத்தலம் திரௌபதிக்குக் கிருட்டிணன் காட்சி தந்த இடமாகும். இங்கு அமைந்த கிருட்டிணன் கோவில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. இத்

தலத்தில் திருமாலை ஐந்து நாள் எண்ணி உயிர்விடு வோரின் எலும்பு திருமாலின் சங்கு உரு அடையு மென்பர்.

வடமதுரையில் ஆட்சி செய்து வந்த பலராமனும் கிருட்டிணனும் சராசந்தன் என்பவனுடைய கொடுமையிலிருந்து மக்களைக் காக்கும் பொருட் டுக் கடலரசனிடம் அனுமதி பெற்று, தேவசிற்பியைக் கொண்டு துவாரகை என்னும் நகரை உருவாக்கினார். முக்திக்குத் துவாரமாக இத்தலம் இருப்பதால் துவாரகை எனப்பெயர் பெற்றது. இக்கோவிலுக்கு அருகில் சென்றால் கோமதி ஆறு கடலில் கலக்கும் காட்சியைக் காணமுடியும். கிருட்டிணன் மறைவிற் குப் பிறகு இத்தலத்தைக் கடல்கொண்டது.

ஒகா துறைமுகத்திலிருந்து விசைப்படகில் கடலில் சிறிது தொலைவு சென்றால் தீவுத் துவாரகை என்னு மிடத்தை அடையலாம். இத்தீவில்தான் பலராமன், கிருட்டிணன், இலட்சுமி போன்றோர் அவதாரம் செய்தனர் என்பர். இன்றும் அங்கு ஏறத்தாழ 1500 வீடுகள் உள்ளன. கிருட்டிணனுக்கு அங்குக் கோவில் உள்ளது. அக்கோவில் மூலவர் சங்கு சக்கர கதாதாரி யாக உள்ளார். இக்கோவிலில் பக்தர்களுக்கு முன் பாகவே அலங்காரம் நடைபெறுவது மரபாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. கல்யாணராயர், திரிவிக் கிரம மூர்த்தி, தேவகி, சாம்பவதி, இலட்சுமி நாரா யணர் ஆகியோருக்குச் சன்னதிகள் உள்ளன. இக் கோவிலில் நாள்தோறும் இறைவனுக்கு, குழந்தை ஒப்பனையும், அரசு ஒப்பனையும், முதிய ஒப்பனை யும் செய்யப்படுகிறது.

ஒகா துறைமுகத்திலிருந்து நான்கு கி.மீ. கிழக்கே கிருட்டிணனின் மனைவிகளில் ஒருத்தியான ருக்கு மணிக்குத் தனிக்கோவில் உள்ளது. இத்தலத்தில்தான் கிருட்டிணன் ருக்குமணியைத் திருமணம் செய்து கொண்டார். போர்ப்பந்தருக்கும், மியானிக்கும் அரு கிலுள்ள மத்வபூர் என்ற சிரீநகரமே துவாராகை என் பர். போர்பந்தரில் கிருட்டிணனின் இளமைக்கால நண்பர் குசேலர் வாழ்ந்த வீடும், கோவிலும் உள்ளன.

- இரா. கு.

**தூயதமிழ் :** உடல் வளர்ச்சிக்கு எந்த அளவு உணவு இன்றியமையாத பொருளோ அந்த அளவுக்கு மொழி என்பதும் மாந்தனின் மனவளர்ச்சிக்கு இன்றி யமையாதது. விலங்கிடமிருந்து மாந்தனை வேறு படுத்தி நிறுத்திய பெரும் பெருமை மொழிக்குண்டு. மாந்தனின் வாழ்வியக்க வரலாற்றின் பெரும்பான் மைப் பதிவுகளை மிகவுள்ளீடாகக் கொண்ட அரிய ஆவணத் தொகுதியாக மொழி நிற்கின்றது.

மக்களின் வாயிடையே ஒலித்தொகுதிகளாகப் புறம்பெயர்ந்தும், ஒலித்தொகுதிகளாகப் புறம்படிந் தும் பரிமாற்றக் கருவியாக விளங்கும் மொழி அவர் களுக்கிடையே ஓர் இணைப்புணர்வுப் பாலமாக இருந்து செயற்படுகின்றது. மொழியின் முழுப் பயன் பாட்டு வளர்ச்சிநிலை என்பது, அம்மொழியைப் பேசியும் எழுதியும் வளர்த்த அம்மொழிக்குரிய இன மக்களின் பல்வேறு பகுதியினரால், பல்வேறு காலங் களில், பல்வேறு சூழல்களில், பகுதிபகுதியான உரு வாக்க வினைகளின் ஒட்டுமொத்த தொகுப்பால் விளைந்து முற்றி நிற்பதாகும். ஒரு மொழியை உரு வாக்கி நிறுத்திய அம்மொழி மக்களின் துய்ப்புணர்வு கள், நடைமுறைகள், நோக்குகள் போன்ற பல கூறு கள் அதில் புதைப்பொருள் எச்சங்கள் போல் கருவா கப் படிவெய்தி நிற்பதை உற்றுநோக்கின் உணரலா கும். ஒட்டுமொத்தத்தில், முந்தைய இனமக்களின் முயற்சிகள், உணர்ச்சிகள், போக்குகள் முதலியவற் றின் வரலாற்றிழைகள் மொழியாடையில் ஊடோடி நிற்கின்றமை இன்றும் கண்கூடு.

மொழி என்னும் சொல்லிற்கு முழுநிறைவுப் பொருளோடு முற்றி நிற்கின்ற மிகப்பழைய மொழி கள் இவ்வுலகில் இன்றும் சில நிலைத்துள்ளன. எனி னும், அம்மொழிகளுள் மிகப் பழமைச்சான்ற மூல அமைப்புகளோடும், தனித்தன்மையோடும் நின்று வாழும் தகைமையைத் தமிழ்மொழி இயல்பாகவே பெற்றுள்ளது. முதலில் இலக்கியச் செம்மொழி யென்னும் முதண்மைத்தகுதியை மொழி வரிசையில் இது பெற்று நிற்கின்றது. தமிழின் தோற்றக்காலம் ஏறத்தாழ 50,000 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்பார் தேவநேயப் பாவணர்.

ஒரு மொழி செப்பப்பாடெய்துதற்கு முந்தையில் பல்லாயிரமாண்டுகளைக் கடந்து வந்திருக்கவேண் டும். தமிழ்மொழியில் முதலாவதாகக் கைக்குக் கிட் டியிருக்கும் நூலாகிய தொல்காப்பியமும், கடைக் கழக நூல்களில் எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும், பதிணென்கீழ்க்கணக்கு நூல்களில் சிலவும் பழம் பழைமைப் படிவுகளின் உறுதிகளைப் பதிவுசெய்து வைத்துள்ள ஆவணங்களாகும்.

*அறிஞர் பெருமக்கள் இவ்வாறு கூறுவர்-* என்னும் கருத்துபட, *என்ப, என்மனார், என்றிசினோர்,* என்ற வாறு 287 இடங்களில் தொல்காப்பியர் தம் இலக்கண நூலுள் 2500 ஆண்டுகளுக்கு முன்பே குறித்துள்ள பதிவுகள். பழமைக்கும் பழமையாய் தமிழ்மொழி தோன்றி வளர்ந்து செழித்துத் திருத்தமுற்று வந்த மொழி வரலாற்றுக் கூறுகளை உறுதிப்படுத்தி நிற்பன வாகும்.

கடைக்கழகக் காலம் வரை தமிழ்மொழி செழிப்புற்று விளங்கி வந்தமையைப் பண்டையிலக்கியங்கள் விரிவாகக் காட்டுகின்றன. ஆரியர் இந்நாட்டுள் புகுந்து, சமயவுணர்வுகளில் இடைநுழைந்து, தமிழ் மக்களிடையே தம் மொழிச்சொற்களை ஊடுபுகுத்தி நின்ற போதும் விரல் விட்டு எண்ணத்தக்க சிலவாகிய சொற்களே கடைக்கழக இலக்கிய இலக்கணத் தொகுப்புகளில் படிந்துள்ளமையைக் காணமுடிகின்றது. இன்றைக்கு இருபது நூற். முற்பட்டுத் தோன்றிய திருக்குறளில் ஏறத்தாழ பன்னீராயிரம் சொற்கள் பயிலப்பட்டுள்ளவிடத்து ஆறேயாறு சொற்கள் மட்டும் வடமொழிகுரியனவாக அமைந்துள்ள நிலையில், அக்காலத்துக்கு முந்தையபொழுது முழுமையுமிருந்துவந்த தமிழின் கலப்பற்ற தூயநிலையை நன்கு உணரலாம்.

தமிழனத்தின் வாழ்வியல், கலையியல், பண்பாட்டியல் வளர்ச்சியினூடேயே தமிழ்மொழியும் படிப்படியே வளர்ச்சியுற்று வந்திருக்கின்றது. ஓர் இன வளர்ச்சியோடு ஒட்டி வளர்வது மொழிவளர்ச்சியாதலான், அவ்வினவளர்ச்சியில் தடையேற்றபட்டபோதெல்லாம் அம்மொழி வளர்ச்சியும் உடன் தடைபட்டு வந்தமை இயல்பானதுதான். வேற்றினத்தவரின் உட்புகுவால் தமிழின் இயல்பொழுங்கிலும் கலப்பு புகலாயிற்று. தமிழ்மொழியைப் பொறுத்தவரை இதனில் ஏற்பட்ட தாக்கம் மொழிக் கலப்பேயன்றி, 'மொழிக்கடன்' என்பதாகாது. இச்சொல் வளமொழி கருத்து கெனச் சொற்கடன் பெறவேண்டிய தேவை நிலையில் எப்போதும் இருந்ததில்லை. துலக்கமும் விலக்கமும் இலங்குகின்ற வகையில் எக்கருத்தையும் குறிக்கும் புதுச்சொல்லாக்கத்தை உடனுக்குடன் ஏற்படுத்திக் கொள்ளும் முழுத்திறப்பாடுடைய இயல்புத்தன்மையைத் தமிழ்மொழி தன் அடிக்கட்டுமான அமைப்பிடையில் என்றும் பெற்ற நிலையில் இருந்து வந்திருக்கின்றமையை மொழியறிஞர்கள் தெளிவுபடுத்தக் காணலாம்.

இத்தகைய மொழியைப் பேசிய மக்கள், தம் மொழியில் பிற மொழிச்சொற்களைக் கலந்துபோக ஒத்துக்கொண்டமைக்குப் பிற இனத்தவரின் மேலீடு ஓர் அடிப்படைக் காரணமாக இருந்தது. ஆரிய வருகைக்கு முன்னர், இவ்விந்திய நாடெங்கும் பிரிவு பிரிவான ஆங்காங்கிருந்து மக்கள் வழங்கிவந்த தமிழில் திரிபு மொழிகளாகிய வட்டார வழக்கு மொழிகளை ஆரியர் தம் வேதமொழியுடன் கூட்டிக் கலந்து பிசைந்து முதற்கண் பிராகிருதமாகவும், பின்னர் அதனையே ஒருவாறு சீர்மைப்படுத்தி சமஸ்கிருதமாகவும் ஆக்கிக்கொண்டனர். மேலும், அரைசெயற்கைக் கலவை மொழியில் இந்நாட்டிற் பரந்துபட்டுப் பல்கியிருந்த மெய்கருத்துகளின் சாறங்களைச் செறித்து நன்கு வளர்த்துக்கொண்டு நாடு முழுக்கவும் பரவலெய்தி, ஒச்சங்கொண்ட பௌத்த, சமணசமய வளர்ச்சியைக் கெடுப்பதற்கெனவும், தமிழகம் முழுமையிலும் சிறந்து நிறைந்திருந்த இயற்கைச் சமயங்களான சிவனிய ( சைவம் ) - மாலிய ( வைணவம் ) சமயங்களின் நிலைப்பைக் குலைப்பதற்கெனவும் சிவ - மாலியத் தெய்வ வணக்க வழிபாட்டு முறைகளையும் தம் வேத சமயத்துடன் பின்னிப் பிணைத்து “ஒரே இந்து மதம்” என்றும் போர்வை விரித்துப் போர்த்தியவாறு, அதனூடாக, மெல்லமெல்லத் தன்னின் உருவாக்கச் சொற்களையும் வேதமொழிச் சொற்களையும் நாடு முழுக்கவும் நன்கு நுழைத்து வெற்றி கொண்டனர். பௌத்த சமண மதங்களின் பரவலும் படிப்படியே தளர்ந்த நலிவெய்தியது.

தமிழகத்தில் கடைக்கழகக் காலத்தின் இறுதிக் காலங்களில் அரசாண்டு வந்த பெரும்பாண்மை அரசர்களின் துணைவலியை அன்றைய தமிழகத்துட் படிப்படியே புகுந்த ஆரியர் பெற்றனர். ஊர்ப்பெயர்களும் தமிழகத்தின் வழிபாட்டிற்குரிய தெய்வங்களின் பெயர்களும் சமஸ்கிருதத்தில் மொழிபெயர்க்கப் பெற்று வழங்கப்பட்டன. மன்னர்களும் சமஸ்கிருதப் பெயர்களையே தாங்கினர். அன்றாட வாழ்வில் பயிலப்பட்டு வந்த இயல்பான தமிழ்ச்சொற்கள் பலவற்றுக்குப் புதிய வடசொற்கள் மாற்றாகப் பயன்படுத்தப்பட்டன. அனைத்துக் கலைகளின் பயில்விலும் சமஸ்கிருத மொழித்தாக்கம் ஏற்பட்டன. செய்யுள் புனைவிலும் படிப்படியே வடசொற்கள் வழக்கூன்றின. உரைநடைப் பிரிவுகளுள் ஒன்றாகிய மணி பிரவாள நடை என்னும், மணிமிடைப் பவளநடை ஏதோ பெருங்கல்விமான்கள் நடை என்றவாறு கருத்

தேற்றம் செய்யப்பெற்றுக் கவடறியாத குறையறிவுப் புலவர் பெருமக்களால் கடைப்பிடித்தும் வரப்பட்டது. பொதுவாக, அனைத்துத் துறைகளிலும் ஆரியம் ஆழ வேருன்றியது.

தமிழ் மக்களின் துணைகொண்டு ஆரியரால் நடத்துவிக்கப்பெற்ற சமயத்தாக்கங்களால் தமிழ்ச்சமயமாகிய சிவனியத்திலும் மாலியத்திலும் சமஸ்கிருதச் சொற்கள் தாராளமாகப் பயன்படுத்தங்கொண்டன. சமயங்களின் வழிபாட்டுச் சடங்குகள் பெரும் பான்மையவும் ஆரியப் பூசாரியராலேயே நடத்துவிக்கப் பெறுதற்கு அன்றைய தமிழ் மன்னர்கள் இசைவளித்துப் பாதை திறந்தனர். மன்னர்கள் தத்தம் பகுதிகளில் பெரியபெரிய கோயில்களைக் கட்டி வழிபாட்டுச் சடங்குத் தலைவர்களாக அல்லது பூசாரியராக ஆங்காங்கிருந்த பிராமணர்களையே அவற்றுள் இருந்து ஆளவிட்டனர். தமிழகச் சமயங்களுள் புகுந்த ஆரியம் இத்தமிழகத்தின் இயற்கை மொழியாகிய தமிழ் மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட தமிழக மக்களின் அன்றாட நடைமுறை உரையாடல்களிலும் மெல்லமெல்லப் படிப்படியே இடம் பெறலாயிற்று. தமிழ் மொழி சீர் குலைந்து தளரத் தொடங்கியது.

சமயத் தாக்கத்தோடு அக்கால அரசியலில் நேர்ந்த ஆட்சித் தாக்கங்களும் தமிழின் சீர் குலைவுக்குத் துணைபோயின. களப்பிரர்களும், பல்லவர்களும் வேதப் பிராமணர்களுக்கே முதலிடமும் துணையுந் தந்து வடமொழியைப் போற்றினர். சாதி வேறுபாடுகள் நன்கு பெருகி பரவி தமிழின அடிப்படை ஒற்றுமையையே ஆட்டி அசைத்தன. அரசியல் வகையிலும் சமய வகையிலும் வடமொழியினரின் வல்லாண்மை பேராட்சிகொண்டது.

இந்திய நாட்டில் கி.பி. 664 அளவில் அரபியர் பஞ்சாப் பகுதியில் படையொடு நுழைந்தனர். அவர்கள் கி.பி. 712 இல் சிந்துப் பகுதியில் நுழைந்தனர். சிந்துப் பகுதியில் சிறப்புற்று விளங்கிய முல்தான், மன்சுரா என்னும் பெயரிய ஆளுமைப்பெயரிடங்களில் கசனி முகமது என்பார் தலைமையில் துருக்கியப்படை உள் நுழைந்தது முறையே கி.பி. 1005, கி.பி. 1025 ஆகிய ஆண்டுகளில் அவற்றை வீழ்த்திக் கைப்பற்றி ஆட்சி செய்தது. ஆப்கானித்தானம் என்னும் காந்தார நாட்டின் முகமதியர், துருக்கியர், மங்கோலியர் ஆகிய அயலவர் பலரால் இந்நாட்டின் வேறு வேறு பகுதிகளில் அரசுக் கட்டில்கள் மாறிமாறி அயலவரின் இருக்கைகளாயின. இம்மேற்சாரரின் மொழிச்சொற்களை அவ்விடத்திலிருந்த மக்கள் படிப்படியே ஏற்கவும், வாழ்வியலில் அவற்றை புகழவும் செய்தனர். கோரி முகமது காலத்திலிருந்து இந்தியக் காவலர் காலம் வரைக்குமான ( கி.பி. 1193 - 1857 ) ஏறத்தாழ ஏழு நூற்றாண்டு காலம் இன்றைக்கிருக்கும் தில்லியில் முகமதியரின் அரசாட்சியே நிலைப்புற்றிருந்தது.

தில்லி முகமதிய ஆட்சியில் குறிப்பாக அரசு அற மன்றம் தன்னின் வழக்கு உசாவற்குறிப்பு, தீர்ப்பு வரைவு ஆகியவற்றிலும் பாரசீக மொழியே கடைப்பிடிக்கப்பட்டன. பாரசீகச் சொற்களைப் பயன்படுத்துவதை ஒரு நாகரிகப் பழக்கமாகவே அன்னவர் ஆட்சிக்கு உட்பட்டிருந்த பெரும்பான்மை மக்கள் ஏற்றுப் பயின்றனர். பாரசீக மொழிச்சொற்களும், அரபு மொழிச் சொற்களும் பிற பலவும் இவ்வாறே. இந்திய மொழிகளிடையே பரவலாக இரண்டறக் கலந்து வழங்கின. அத்தகைய தாக்கக் காற்று தமிழகத்திலும் ஓரளவு அடித்துச் சுழன்றது. போர்த்துகீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுகாரர், ஆங்கிலேயர் என்றவாறு அயலவர் பலரும் தமிழக வரைப்புக்குள் வந்து ஆட்சி செலுத்திவிட்டுப் போயினமையில் அவ்வவரின் மொழிச்சொற்களில் பலவும் அவரவர்களின் ஆட்சித் திற அளவிற்கு இங்குத் தங்கி ஒலித்து வரலாயின.

மேற்கூறியவாறு இந்நாட்டில், பல்வேறு அயலவரின் ஆட்சியேற்புகள் தொடர்ந்தும், அறுந்தும், மீண்டும் தொடர்ந்தும் மாற்றமுற்று நடக்கநடக்கப் பெரும்பாலான இந்திய மொழிகளும் அவ்வனை நிலையளவுகளுக்கேற்ப திரிபுகளுற்றும், கலப்பினையேற்றும் பயிலப்பெற்றன. அவற்றுள் தமிழ்மொழியானது சமஸ்கிருதத்தின் பாரிய தாக்கத்தையடுத்துப் பிற அயல்மொழிகளின் ஓதத் தாக்குதலையும் ஓரளவு பெற்றதாயிற்று. தமிழர்களின் பேச்சுமொழியே திசை திரும்பிவிட்டது.

இன்றைக்கு வழங்கப்பெறும் தமிழ் மொழியுள் தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய தமிழிய மொழிகளைத் தவிர்த்து ஏறத்தாழ இருபத்துமூன்று மொழிகளினின்று வந்து படிந்த சொற்கள் நிலவி வருகின்றன. நீண்ட நெடுங்காலத் தாக்கத் தொடர்ச்சியால் தமிழரின் எழுத்து வழக்கில் மிகுதியான கலப்பு கொண்டுள்ள மொழி சமஸ்கிருதம் ஆகும். ஆங்கிலேயாட்சியை அடுத்து, இன்றைக்குக் கடைபிடித்து வரும் போலி நாகரிகப்போக்கால் தமிழரின் பேச்சு வழக்கில் மிகுதியான கலப்புக் கொண்டுள்ள மொழி

ஆங்கிலம். பிற அயன்மொழிகளின் சொற்கள் மிகச் சிறு அளவிலேயே விரவியுள்ளன.

கலப்புற்ற தமிழினின்று வேறுபிரித்து அறிதற்கு ரிய வகையில் தனித்தமிழ் என்றும், தூய தமிழ் என் றும், செந்தமிழானது இக்கால் வழங்கப்பெறுகின்ற தேயன்றி அது ஒருவகைப்பட்ட புதுமுறைத் தமிழாக கருதற்குரியதன்று. பாலில் நீர் கலந்து விற்கும் வழமை தோன்றியபின், நீர் கலக்கப்பெறாத பாலைத் தனிப்பால் எனக் குறிப்பது போன்றதே தூய செந் தமிழைத் தனித்தமிழ் என்பதுவும் ஆகும்.

பண்டைப் பழம்பெரும் இயற்கைமொழியாகிய தமிழ் பல்வேறு நிலைகளால் தாக்குறப்பெற்று நலி வடைந்து செல்வதைக் கண்டு - மனம் பொறாத உண் மைத் தமிழர்களும், தமிழ்ப்பற்றாளர்களும் அவற் றைத் தடுத்து மீண்டும் முன்னிலைப்பட்ட நன் னிலைக்கு மீட்டெடுப்பதும் இயன்ற அளவு இன் றைய உலக அறிவியல் வளர்ச்சிக்கேற்ப புத்துயிர் கொடுத்தலுமான முயற்சியாக தூயதமிழ் முயற் சியைப் பன்னிலைகளில் மேற்கொண்டனர். எழு தினர், பேசினர் இயக்கமும் கண்டனர்.

இனி, கி.பி. பதினேழாம் நூற்றாண்டின் இறுதி யில் வாழ்ந்த சாமிநாத தேசிகர் தம் இலக்கணக் கொத்து என்னும் நூலில், ‘அன்றியும் தமிழ் நூற் களவிலை, அவற்றுள் ஒன்றேயாயினும் தனித்தமிழ் உண்டோ’ என்று குறித்துள்ளார். ஆங்கிலேயர் ஆட் சிக்கிடையில் இத் தமிழகத்துள் சமய ஊழியர்களாக வந்து, கிறித்துவமதப் பணியாற்றிய இராபர்டு நொபிலி, எல்லிசு, வீரமாமுனிவர், போப், கால்டு வெல் முதலியோரின் தமிழ் மொழி பற்றிய மதிப் பீடுகள் தமிழக அறிஞர்களிடையே நல்ல எழுச்சி யையும், தமிழை மீட்டெடுக்கவேண்டிய உணர்வு களையும் உந்தி வளர்த்தன. தமிழில் கி.பி. எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய நிகண்டுகள் என்றும் சொற் பொருட்பாக்கோவைகள், பத்து நூற்றாண்டுகள் அளவுக்குப் பல்வேறு உருவெடுத்துப் பயில்வு பெற் றிருந்தமையை முறையொழுங்கான பயன்பாட்டு அமைப்பில் கி.பி.1732இல் வீரமாமுனிவர் சதுர அகராதி என்று நாற்பகுப்பகராதியாக விரிவுபடுத்தி வெளியிட்டார். அப்போது தான் தமிழின் சொல் லாட்சிகள் புலனாகின. இதுவே தமிழின் முதல் அகராதி நூலாகும். வடலூர் இராமலிங்கம் என்னும் வள்ளலார், ஆரிய சமயப்போலிமைகளைத் தம் திரு வருட்பாக்களில் தெளிவுபட வெளிப்படுத்திக் காட்டி னார். கால்டுவெல் இயற்றிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல் தமிழ் அறிஞர்களிடையே ஒரு புத்துலக்கத்தையும், உலக மொழியியல் அறிஞர் களிடையே ஒரு புதிய உண்மை ஒளியையும் பாய்ச்சி யது. தமிழ் ஆரியத்தினின்று தோன்றியது என்றும் தவறான கருத்து அந்நூல் வெளிப்படுத்திய செய்தி விளக்கங்களால் பிய்ததெறியப்பட்டது. தமிழ் தனித் தியங்க வல்ல மொழி என்பதையும், அது ஓர் உயர் தனிச் செம்மொழி என்பதையும் கால்டுவெல் நன்கு வெளிப்படுத்தி விளக்கியுள்ளார்.

அடுத்து, கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர், ‘ பண்ணுறத் தெரிந்தாய்ந்தனிப் பசுந் தமிழ் ஏனை மண்ணிடைச் சில இலக்கண வரம்பிலா மொழிபோல் எண்ணிடைப்படக் கிடந் ததா எண்ணவும் படுமோ’ என்றவாறு வினா வெழுப்பி, வடமொழிக்கும் தென்மொழியாகிய தமி ழுக்கும் உள்ள இறக்க - ஏற்ற வேறுபாட்டளவை களைக் குறிப்பாய்ச் சுட்டியிருந்தபோதிலும், கால்டு வெல் அவர்களின் ஆழ்ந்தகன்ற விளக்கவுரைகள் தாம் தமிழின் தனித் தன்மையை முறைபடவும் முற்படவும் தமிழ் மண்ணிற்கும், உலகுக்கும் தெளிவுபடுத்தின.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த பேராசிரியர் மனோண்மணியம் சுந்தரனார், ‘ஆரியம் போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதை யாத தமிழின் சீரிளமைத் திறத்தை வியந்து, நான் (சதுர்) மறை ஆரியம் இம்மண்ணுள் வருமுன், இவ் விந்தியம் முழுமையும் தமிழே படர்ந்திருந்தது’ என்ற வாறு பாட்டில் பதித்தமைக்கெல்லாம் கால்டுவெல் அவர்களின் களப்பணிக் கணக்கீடுகளும், விளக்கங் களுமே மூலங்களாக ( ஆண்டு - 1856 ) இருந்தன. ஆரியத்தை விட தமிழ் அனைத்து வகையிலும் உயர்ந் தது என்னும் உண்மையைத் தமிழறிஞர்கள் மெல்ல மெல்ல உணரத் தலைப்பட்டனர்.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் அவர்கள் ( கி.பி. 1859 - 1919 ) இசைத்துறையில் தமிழின் தனித்தன்மையைச் சிறப்புற நிலைநிறுத்தினார். அயோத்திதாசப் புலவர் ( கி.பி. 1845 - 1914 ) *தமிழன்* என்னும் பெயரில் தாளிகையொன்றை நடத்தித் தமிழுணர்வை வளர்க்க லானார். தமிழகத்தின் பல பகுதிகளிலும் திராவிடர் இயக்கங்கள் கால்கொள்ளத் தொடங்கின.

வின்சுலோ உருவாக்கிய ஆங்கிலம் - தமிழ் அகர முதலி கி.பி. 1862இல் வெளிவந்தது. கு. கதிரைவேல்

( கி.பி. 1829 - 1904 ) உழைப்பில் வெளிவந்த தமிழ்ச்சொல் அகராதி புலவர்களின் கைவிளக்காய் விளங்கியது. யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் ( கி.பி. 1822 - 1879 ) தமிழுக்கு ஆக்கமளிக்கும் பல்வேறு விளக்கங்களடங்கிய நூல்களை எழுதி வெளியிட்டார். அவரால் வெளியிடப்பெற்ற பாடப்புத்தகங்கள் அக்கால் பெரிதும் மதிப்புற்றிருந்தது.

மதுரையில் பாண்டித்துரை தேவரால் தமிழ் உணர்வுக்கும், வளர்ச்சிக்குமான சிறந்த அடிப்படை நோக்கங்களைக் கொண்ட தமிழ்ச்சங்கம் என்னும் பெயரில் ஓர் அமைப்பு கி.பி. 1901இல் தொடங்கப்பட்டது. அக்கழகம் சேதுபதி செந்தமிழ்க் கலைக்கூடம் நிறுவி மாணவர் பல்வோருக்கு உண்டியும் உறையுளும் கொடுத்து தமிழ்மொழியைக் கற்பித்தது. பாண்டியன் புத்தகச்சாலை நிறுவி அழியுந்தறுவாயிலிருந்த பல அரிய ஏட்டுச்சுவடிகளை இயன்றவரைத் தேடி தெர்ந்தெடுத்து அவற்றை உரிய முறையில் வெளியிட்டு, எளிய விலையில் வழங்கித் தமிழின் பண்டை வளங்களைப் பேனவும் பரப்பவுமான வினைகளில் தொடர்ந்து ஈடுபட்டது. அத்தமிழ்க்கழகம் கி.பி. 1909 லிருந்து *செந்தமிழ்* என்னும் பெயரில் இதழொன்றைத் தொடங்கி பன்னூற்றுக்கணக்கான அறிஞர்களின் கட்டுரைகளை வெளிப்படுத்தி தமிழாய்வியலுக்கு வழிவகுத்தது. அக்கழகத்தின் ஆண்டு மாநாடுகள், தமிழகத்தின் பல மாவட்டங்களில் நடைபெற்றன. அவற்றின் வழியே அக்கழகத்தின் கிளைக் கழகங்கள் தமிழகத்தின் பல பகுதிகளிலும் தோற்றுவிக்கப்பட்டன. தமிழ்ச்சங்கத்தின் தோற்றத்தால் தமிழகத்தில் கணிசமான அளவு தமிழுணர்வு பரவிற்று.

மாகறல் கார்த்திகேயனார் என்னும் பெயரிய அறிஞர் கி.பி. 1913இல் **மொழி நூல்** என்னும் பெயரில், மொழியியல் ஆராய்ச்சி நூலொன்றை வெளியிட்டார். மொழியியல் துறையில் பெரியதொரு விழிப்புணர்ச்சியை இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் அந்நூல் ஏற்படுத்தியது.

வீ. கனகசபை ( கி.பி. 1855 - 1906 ) என்பவரால் ஆங்கிலத்தில் எழுதி வெளியிடப்பட்ட 1800 ஆண்டுகளுக்கு முந்தைய தமிழர் என்ற வரலாற்று நூலும், பூபாலனார் ( கி.பி. 1860 - 1920 ) என்பவர் எழுதி வெளியிட்ட தமிழ் வரலாறு என்ற நூலும், எம். எசு. பூரணலிங்கனார் ( கி.பி. 1866 - 1947 ) என்பவர் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட தமிழ் இந்தியா என்ற வரலாற்று நூலும் தமிழ் அறிஞர்களிடையே அக்கால் நன்கு பரவி அறிவுகொளுத்தி நின்றன.

தமிழவேள் த.வே. உமாமகேசுவரனரால் ( கி.பி. 1883 - 1941) கி.பி. 1911இல் தஞ்சையையடுத்த கருந்திட்டக்குடியில் தொடங்கப்பெற்ற கரந்தைத் தமிழ்ச் சங்கம் என்ற பெயரிலான கழகம் ஒன்று தொடங்கப் பட்டது. அக்கழகத்தின் அனைத்து வினைகளிலும் தூய செந்தமிழே கையாளப்பெற்றது. நல்ல தமிழ் நடை எங்கும் பரவ அக்கழகத்தின் எழுத்து வெளிப்பாடுகளும், உரைப்பொழிவு வெளிபாடுகளும் பேரளவில் துணைபுரிந்தன. தாய்மொழிப்பற்றையும், தூய தமிழ் உணர்வை யும் கரந்தை தமிழ்ச்சங்கம் நன்கு பரப்பியது. அதன் வழிப் பல்லாயிரவர் செந்தமிழ் பற்றாளராயினர்.

யாழ்ப்பாணம் விபுலானந்த அடிகள் ( கி.பி. 1892 - 1947 ) **யாழ் நூல்** என்னும் பெயரில் அரிய இசைத் தமிழ் ஆராய்ச்சி நூலொன்றை வெளியிட்டார். முனைவர் உ.வே.சாமிநாதர் ஊர்ஊராக அலைந்து அரும்பாடுபட்டு பழம்பெரும் ஓலைச்சுவடிகளையெல்லாம் தேடித்தொகுத்து ஆராய்ந்து, **சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, பத்துப்பாட்டு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து** முதலியனவற்றையும், ஏராளமான இடைக்காலத் தமிழ் நூல்களையும் செப்பமுறப் பதிப்பித்து தமிழுக்கு நிலைக்களங்களை உருவாக்கினார். தமிழறிஞர் சிலரால் அக்கால கட்டத்தில் **அகநானூறு, கலித்தொகை, குறுந்தொகை** முதலிய கழக இலக்கியங்களும் வெளிக் கொணரப்பட்டன. இவ்வகை வெளிப்பாடுகளின் வழி தமிழின் வளமும், ஆற்றலும் தமிழரின் பண்பாட்டு நாகரிகச் சிறப்புத்தன்மைகளும் நன்கு வெளிப்படத் தொடங்கின. தமிழ்மொழி முன்னை நிலையிலும், பன்னிலையில் வலிவும் பொலிவும் மீட்டு நின்றது. அதன்வழித் தமிழறிஞர் இடையில் சிறப்பாகவும், பொதுமக்களிடம் ஓரளவு பொதுப்படவும் இவ்வுணர்வும் எழுச்சியும் காணப்பட்டன. இவ்வகைத் தெம்பூட்டத்தால் வரலாற்று தெளிவுப் புலப்பாட்டாலும் வடமொழியாளர்கள் மேலும், வடமொழியின் மீதும் ஒருவகை வெறுப்புணர்வும், தம் மொழியை முற்றாக மீட்க வேண்டும் என்ற எண்ணமும் நன்கு வளர்ந்து தாமும் உலகரங்கில் மேம்பட்டு நிற்கவேண்டும் என்ற விருப்பவுணர்வும் தமிழரிற் பலருக்கு ஏற்படலாயின.

வி.கோ.சூரிய நாராயண சாத்திரியார் என்பார் ( கி.பி. 1870 - 1903 ) தம் வடமொழி பெயரைத் தூய தமிழாக்கி பரிதிமாற்கலைஞர் என்றவாறு குறிப் பிடத் தொடங்கி, ஒரு பெயர்மாற்ற மறுமலர்ச்சியைத் தொடங்கிவைத்தார். பல்லாயிரவர் இவரை அடி யொற்றி தமிழ்பெயர் பூண்டனர். கி.பி.பத்தொன்ப தாம் நூற்றாண்டில் இவர் செய்த இப்பெயர் மாற்ற மறுமலர்ச்சி தமிழறிஞர்கள் பலராலும் பெரிதும் பாராட்டப்பட்டது.

மேற்குறிப்பிட்ட நிலைகளிலெல்லாம் மெல்ல மெல்ல தமிழுணர்வு பரவிக்கொண்டிருந்த நிலை 1916இல் பல்லாவரம் சமரச சன்மார்க்க சங்கத்தை நிறுவிய சுவாமி வேதாசலனார் என்னும் பெயரிய அறிஞர் தனித்தமிழ் உணர்வு கொண்டவராகித் தம் பெயரை மறைமலையடிகள் என்றவாறு தூயதமிழ்ப் படுத்திக்கொண்டார். வள்ளலாரின் திருவருட்பா பாட்டிலொன்றாகிய *பெற்றதாய்தனை* எனத் தொடங்கும் பாடலை அவரும் அவர்தம் அருமை மகளாகிய நீலாம்பிகையாரும் ஒரு நாள் மாலைப் பொழுதில் தோட்டத்தில் உலவியவாறு வாய் விட்டுப் பாடிக்கொண்டிருக்கையில், அப்பாடலின் இரண்டாம் அடியில் வரும் *உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும்* என்பதை *உற்ற யாக்கையை உயிர் மறந் தாலும்* என்றவாறு மாற்றிப் பாடினால் எவ்வளவு அழகாக இருக்கும் என்று, மறைமலையடிகள் கூறிய தாகவும், அதனை அவர் மகளார் உவந்து ஏற்றுக் கொண்ட தாகவும் அந்நிகழ்ச்சி இனித் தமிழை வட மொழிச் சொல் நீக்கியே எழுதவும் பேசவும் பயில்வது என்றவாறு உறுதிபூணச் செய்தது என்பதாக மறைமலையடிகளின் வாழ்க்கை வரலாறு கூறு கின்றது.

பல்லாவரம் சமரச சன்மார்க்க சங்கத்தைப் பல்லா வரம் பொதுநிலைக்கழகம் என்றவாறும், தம் மக்க ளாகிய திருஞான சம்பந்தம், மாணிக்கவாசகம், சுந்த ரமூர்த்தி, திரிபுரசுந்தரி ஆகியோரின் வடமொழிப் பெயர்களை முறையே அறிவுத்தொடர்பு, மணி மொழி, அழகுறு, முந்நகரழகி என்றவாறும், ஞான சாகரம் என்ற இதழ்ப்பெயரை அறிவுக்கடல் என்றும் மறைமலையடிகள் மாற்றினார். தனித்தமிழ்க் கொள் கையை தமிழகமெங்கும் சென்று உயர்ந்த இனிய செந்தமிழ் அறிவார்ந்த நடையில் வெளிப்படுத்தி னார். இலக்கியம், நாடகம், வரலாறு, சமயம், புதி னம், அறிவியல் முதலிய துறைகளில் தூய செந்தமிழ் நடையிலான நூல்கள் பலவற்றை எழுதிக்காட்டி, தமிழ் வடமொழியுதவியின்றித் தனித்தியங்கவல்ல முழுத்திறமை வாய்ந்தது என்பதை தம் வாழ்நாள் முழுமையும் மெய்ப்பித்துக்காட்டிய பெருமை அவரையே சாரும். இக்கொள்கையை இயக்கப்படுத் திய காலத்திற்கு முன்னர், தாம் வடமொழி கலந் தெழுதிய மணிபிராவள நடை வெளியீடுகளை மாற்றி தனிச்செந்தமிழில் செப்பனிட்டு மறுபதிப்பு செய்தார்.

தமிழைத் தூய்மையாகவும், செப்பமாகவும் பயன் படுத்துவது மொழிக்கான ஆக்கமாகுமேயன்றித் தாக் கமும் தளர்வும் ஆகா என்பதைத் தெளிவுபடச் சுட்டிக் காட்டி, தமிழை மீட்கும் பணிகளில் மிகவும் முயன் றுழைத்தார். ஏராளமான புதுச்சொல்லாக்கங்களை யும் புகுத்து நிறுத்தினார். அவரின் அருநூல்கள் முப் பதும் - தமிழுக்கு ஒரு மறுமலர்ச்சி வரலாற்றின் தொடக்கத்தை ஏற்படுத்தி மூலங்கள் எனலாம். அவ ரின் இத்தனித்தமிழ்க் கொள்கைக்கு ஏற்பட்ட தாக்கங் களும், பழிப்புகளும் அளவிறந்தன. தமிழின் வள நலத்துக்கு ஆக்கமுறை வினைகளை ஆர ஆற்றி நின்ற அறிஞர் சிலர் மறைமுகமாகவும், நூல் செய்தி வெளி யீடுகளாகவும் இவரைப் பெயர்சுட்டாமல் எதிர்த்த னர் என்பது வரலாறு.

இரா. இராகவ ஐயங்கார் ( கி.பி. 1870 - 1948 ), மு. இராகவ ஐயங்கார், பி.டி. சீனிவாச ஐயங்கார், எச். கிருட்டிணசாமி ஐயங்கார், டி. சேசு ஐயங்கார் ஆகியோர் எழுதிய அரிய ஆராய்ச்சி நூல்கள் தமிழ் - தமிழர் - தமிழ்நாடு பற்றிய பல்வேறு உண்மைக்கூறு களை வெளிப்படுத்தின. அனைத்தும் தமிழர் பற்றிய வரலாற்று உண்மைகளைப் படம் பிடித்துக்காட்டின.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் *செந்தமிழ்* (1909) என் னும் திங்களிதழும், கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் *தமிழ்ப்பொழில்* (1925) என்னும் திங்களிதழும், திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத் தின் *செந்தமிழ்ச் செல்வி* (1927) என்னும் திங்க ளிதழும் தமிழுக்கு ஆக்கமான பல்லாற்றுக்கணக்கான இலக்கிய இலக்கண, வரலாற்று ஆய்வியல் கட்டுரைகளை பிற மொழிக் கலப்பின்றி வெளியிட்டு வருகின்றன. செந்தமிழில் எழுத ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து வந்தன வருகின்றன.

யாழ்ப்பாணம் - சுன்னாகத்திலிருந்து ந.சி.கந் தையா அவர்கள் 1926இலிருந்து *தமிழன்* என்னும்

பெயரிலான திங்களிதழ் ஒன்றை நடத்தி வந்தார். நல்ல தமிழில் தமிழுணர்வை அதன் வழி பரப்பினார். தமிழவேள் உமாமகேசுவரனார் தனித் தமிழ்க் கொள்கையில் பற்றாளராகவும் பிறரை ஊக்கு வித்துச் செயற்படுத்துவதில் கடமையுணர்வார்ந்தவராகவும் கரந்தைத் தமிழ்ச்சங்கம் கண்டு ஆக்கம் விளைத்து வந்தார்.

தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் ( கி.பி. 1883 - 1953 ), நாவலர் சோமசுந்தர பாரதியார் ( கி.பி. 1878 - 1959 ), சட்ட அறிஞர் கா. சுப்ரமணிய னார் ( கி.பி. 1889 - 1945 ), பொறியிலறிஞர் பா.வே. மாணிக்கனார் ( கி.பி. 1871 - 1971 ), அரசஞ் சண் முகனார் ( கி.பி. 1868 - 1945 ), பண்டிதமணி மு. கதிரே சனார் ( கி.பி. 1881 - 1953 ), சாமி வேலாயுதனார், செல்வகேசவராயனார் ( கி.பி. 1864 - 1921 ), நெல்லை பால்வண்ணனார், தஞ்சை சீனிவாசனார் ( கி.பி. 1842 - 1929 ), திருமதி நீலாம்பிகை அம்மையார், பாம்பன் குமர குருதாச அடிகள், விருதை சிவஞான யோகி யார், ஈழத்து சிவானந்த அடிகள், கா. நமச்சிவாய னார் ( கி.பி. 1846 - 1937 ), க.ப. மகிழ்நனார், நாவல பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார் ( கி.பி. 1884 - 1940 ), வரகுணப் பாண்டியனார், தாரமங்கலம் வரத நஞ்சையார், கணியறிஞர் இ.மு. சுப்பிரமணியனார் முதலிய நூற்றுக்கணக்கான நல்ல தமிழறிஞர்கள் நல்ல தமிழில் நாட்டங்கொண்டவராயிருந்து, ஆங் காங்கு இனிய சொற்பொழிவுகளாற்றியும், பல் வேறு துறைகளில் சிறந்த பல நூல்களியற்றியும் தமி ழுக்குத் தொண்டாற்றினர். இன்னோரின் முயற்சி யால் செந்தமிழ்ப் பற்றுச் செழித்தோங்கி நின்றது. அறிவியலைத் தமிழில் கொணருதற்கு அடிப்படை யாகக் கலைச்சொற்களையெல்லாம் தூய தமி ழிலேயே அமைக்கவேண்டும் என்றும், அது மிகவும் எளிய காரியமென்றும் ப.வே.மாணிகனார் போன்ற அறிஞர்கள் தமிழக மக்களிடம் அறிவுக் கொளுத்தி நின்றனர்.

மேற்சுட்டிய அறிஞர் பெருமக்கள் அனைவர் முயற்சிகளும் தமிழுணர்வுபரவத் துணைபுரிந்தன வாம். ஆனால் அவர்களின் பேச்சிலும் எழுத்திலும் ஆங்காங்கே சில வடசொற்கள் கலந்தேயிருந்தன. முற்றக் களைந்தநிலையில் மறைமலைஅடிகளாரே அக்காலத்தில் உறுதிப்பட எழுதியும், பேசியும் வந்தார். தூய தமிழுக்கான இயக்கக் கால்கோளை அவர்தாம் நிகழ்த்தினார். மறைமலையடிகளாரை யடுத்து இத்தூய தமிழியக்க வரலாற்றில் பெருந் தலைமைத் தகுதியைத் தகுதியாலும், உழைப்பாலும், அதன் வழியதான விளைச்சலாலும் பெற்ற பெருமை ஞா. தேவநேயப்பாவணர்க்கேயுரியது. இவரால் எழுதப்பெற்று வெளிவந்த இயற்றமிழ் இலக்கணம் (1934), கட்டுரை வரைவியல் என்னும் உரைநடை இலக்கணம் (1936), செந்தமிழ்க்காஞ்சி (1937), ஒப்பியன் மொழிநூல் (1940), திராவிடத்தாய் (1944), சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள் (1949), உயர்தரக் கட்டுரை இலக்கணம் முதற் பாகம் (1950), உயர்தரக் கட்டுரை இலக்கணம் இரண்டாம் பாகம் (1951), பழந்தமிழாட்சி (1952), முதல் தாய்மொழி (1953), தமிழ்நாட்டு விளையாட்டுகள் (1954), தமிழர் திருமணம் (1956), சென்னைப் பல்கலைக்கழகத் தமிழகராதியின் சீர்கேடுகள் (1961), இசைத்தமிழ்க் கலம்பகம் (1966), உலக முதல் உயர் தனிச் செம்மொழி (1966), பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும் (1966), தமிழ் வரலாறு (1967), வட மொழி வரலாறு (1967), தமிழ்நாட்டில் மொழிச்சிக் கலும் அதற்கான தீர்வுகளும் (1967), இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும் (1968), வண்ணனை மொழி நூலில் வழுவியல் (1968), தமிழ் கடல்கொண்டு தழைக்குமா (1969), இசையரங்கு - இன்னிசைக் கோவை (1969), திருக்குறள் - தமிழ் மரபுரை (1969), தமிழர் வரலாறு (1972), வேர்சொற் கட்டுரைகள் (1973), தமிழர் மதம் (1973), மண்ணில்வின் அல்லது வள்ளுவர் கட்டுடமை (1978), தமிழ் இலக்கிய வரலாறு (1979) ஆகிய செழுமையும் சீர்மையும் வாய்ந்த தனித்தமிழ் நூல்கள் தமிழைத் தலைநிமிர்த்தின. அதன் தனித்தன்மையை மீட்டுக்காட்டின. 'தமிழ் திராவிடத் திற்குத் தாயும், ஆரியத்திற்கு மூலமும் ஆயது' என் னும் இவரின் செம்மாந்த கொள்கைகள் இந்நூல் களில் பல்வேறு கோணங்களில் சான்றுகளுடன் வலியுறுத்தப்பட்டன.

மறைமலையடிகள் உருவாக்கிய பொதுநிலைக் கழகம் சிவனியச் சமயக்கோட்பாடுகளை நிறுவவும் தூய சிவனியத்தை நிலைநாட்டவும் பாடுபட்டு நின் றது. தனித்தமிழ் கொள்கை அக்கழகத்தின் ஒரு பகுதி வினையாக மட்டுமே தொடர்ந்தது. ஆனால், பாவ ணார் காலத்தில் தனித்தமிழியக்கம் மொழி, இனம் ஆகிய இரண்டு கூறுகளின் வளர்ச்சிக்கும் வலிவுக்கு மாகவே இயங்கத் தலைப்பட்டது. புலவர் சேந்த மாங்குடியார் என்பவர் தனித்தமிழ்க்கழகம் என்னும்

பெயரில் ஒரு மன்றத்தை நிறுவி நடத்தி வந்தார். தனித்தமிழ் இயக்கம் தமிழகமெங்கும் இயங்குவதற்குரிய அமைப்புருவாக்கத்திற்கெனத் தனித்தமிழறிஞர்கள் திருச்சியில் 6 - 10 - 1968 அன்று ஒன்று கூடினர். "உலகத்தமிழ்க் கழகம்" என்னும் அமைப்பு உருவாக்கப்பெற்றது. பாவணார் தலைவராகவும், பெருஞ்சித்திரனார் பொதுச்செயலராகவும், புலவர் இறைகுருவனார் துணைப்பொதுச்செயலராகவும், செங்கைச் செந்தமிழ்கிழார் பொருளாளராகவும் கொண்டு இக் கழகம் செயற்படத் தொடங்கியது.

தமிழக அரசினால் அதன் கல்வித்துறையில் தனித்த துறையாகத் தோற்றுவிக்கப்பட்ட செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கத்தின் (1974) இயக்குநராகப் பாவணார் அமர்த்தப்பெற்றார். அவரால் எழுதப்பட்ட செந்தமிழ்ச்சொற்பிறப்பியல் பேரகரமுதலியின் முதல் மடலத்தின் - முதற்பகுதி (1981) அவர் மறைவுக்குப்பின் (1985) வெளியிடப் பெற்றது.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் சார்பாக சென்னைத் தமிழ்ப்பாதுகாப்புக்கழகம் நீலாம்பிகையாரின் வடசொற்றமிழ் அகரவரிசையை (1938) வெளியிட்டதோடு தொடர்ந்து தமிழ்ச்சொற்களைப் பிழையின்றி எழுதும் முறை, மக்கட்பெயர் அகரவரிசை, தமிழ்நாட்டுப் பழமொழி அகரவரிசை, மரபுத் தொடர் அகரவரிசை, இல்லப்பெயர் அகரவரிசை முதலிய சிறிய சிறிய நூல்களையெல்லாம் வெளியிட்டுத் தமிழுணர்வு பரவத் தொடர்ந்து தொண்டாற்றி வருகிறது.

ஆட்சிச்சொல் அகரவரிசை (1924), நகராட்சி முறை (1954), தமிழ் ஆட்சிச்சொற்கள் (1960), ஆட்சித்துறைத் தமிழ் (1968), முதலிய சிறந்த ஆட்சியியற் பயன்பாட்டு அடிப்படை நூல்களை கி. இராமலிங்கனார் எழுதியுள்ளார்.

முனைவர் அ. சிதம்பரனாரை முதன்மைப் பதிப்பாசிரியராகக் கொண்டு சென்னைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட **ஆங்கிலம் தமிழ் அகரமுதலி** ஆயிரக்கணக்கான புத்தம்புதிய தமிழ்ச்சொல்லாக்கங்களோடு அமைந்து பன்னூற்றுக்கணக்கான அறிவியல் கலையியல் பாட நூல்களில் செப்பத் தமிழ்ச்சொற்கள் பயிலுதற்குரிய பயன்களனாயிற்று. இவ்வகரமுதலியுள் அமைந்த அருமையான புதுச்சொல்லாக்கங்களும் நல்ல தமிழ்ச்சொல் பதிவுகளுக்கும் பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் மூலகாரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகள் நல்ல தமிழில் சொற்பொழிவுகள் நிகழ்த்தித் தமிழின் இனிமையையும் ஆற்றலையும் மக்களுக்கு உணர்த்தி வந்தார். பேரா க. வெள்ளைவாரணணார், பள்ளியகரம் நீ. கந்தசாமியார், முனைவர் மா. இராசமாணிக்கனார், முனைவர் அ. சிதம்பரநாதனார், துடிசைக் கிழார் அ. சிதம்பரனார், பேரா. கார்மேகனார், அறிஞர் வரகுண பாண்டியனார், கல்வெட்டாராய்ச்சியறிஞர் தி.வி. சதாசிவனார். ஔவை து. துரைசாமி, பொ.வே. சோமசுந்தரனார், அழகரடிகள், மே.வீ. வேணுகோபலனார், மயிலை சீனி. வேங்கடசாமியார், முனைவர் சி. இலக்குவனார், முனைவர் மு. வரதராசனார், உறையூர் புலவர் இறையனார், மறை. திருநாவுக்கரசு முதலியோரும் திருத்தமான இலக்கண மரபு வழாத நல்ல தமிழ் நூல்களும் கட்டுரைகளும் எளிதில் சிறந்த உரைநடை வளர்ச்சிக்குத் துணைநின்றனர்.

மு. வரதராசனார் முப்பது எண்ணிக்கைக்கும் மேற்பட்ட புதினங்களை நல்ல தமிழ்நடையில் எழுதி வெளிப்படுத்தினார். மா. சண்முக சுப்பிரமணியார் **சட்டவியல், குற்றவியல், தீங்கியல் சட்டம், குற்றமும் தண்டனையும், சட்டத்தமிழ்** என்றவாறு பல்வேறு சட்டவியல் விளக்கநூல்களைத் தமிழில் எழுதி வெளியிட்டார். புதுவைப்புலவர் சுந்தர சண்முகனார் **தனித்தமிழ்க் கிளர்ச்சி** (1947), என்றொரு செய்யுள் நூல் யாத்தளித்து தமிழுணர்வு ஊட்டினார்.

கி.ஆ.பெ. விசுவநாதம், ம.பொ.சிவஞானம், அண்ணாதுரை, மு. கருணாநிதி, க. அன்பழகன் முதலியோர் பேச்சுத்தமிழால் நல்ல தமிழுணர்வு வீறும் படித் தமிழகத்தில் பணியாற்றினர்.

பாரதிதாசனாருக்குத் தூயதமிழ் வளர்ச்சியிலும் அதற்குரிய உணர்வுத் தூண்டுதல் வினையிலும் பெரும்பங்குண்டு. தமிழ்ப் பாவலர்களுள் அழுத்தமான தமிழ் மானவுணர்ச்சியுடையவராக இறுதிக் காலம் வரை அவர் விளங்கினார். பகுத்தறிவு, தமிழ், தமிழினம், தமிழ்நாடு முதலிய பொருள்களில் அவர் யாத்த பேராளமான பாக்கள் தமிழகத்தில் நல்ல தமிழுணர்வை வளர்த்தன. மேலும், 1940ஆம் ஆண்டிற்குப்பிறகு வெளிவந்த அவர்தம் நூல்கள் அனைத்

தும் தூய தமிழ் நடையிலேயேயிருந்தன. **தமிழியக்கம்** என்னும் பெயரில் ஒரே இரவில் இவர் யாத்துப்புறப் படுத்திய அரிய பாத்தொகை நூல் 1945இல் வெளி வந்து தமிழ் மக்களிடம் விழிப்புணர்வையும், தமி ழுணர்வையும் ஊட்டியது. தனித்தமிழ் வளர்ச்சிக் கருத்துகளையே முழுதும் கொண்டதாயிருந்து நல்ல தமிழுணர்வெழுச்சியை அது எழுப்பி நின்றது. அவரின் ஆயிரக்கணக்கான பாடல்கள், ஆசிரியர், தமிழ்நாட்டினர், மாணவர் ஆகிய பலராலும் படிக்கப் பெற்றன. தூய தமிழ்ப் பற்றும் தமிழினவுணர்வும் எங் கும் பரவ அவர்தம் நூல்கள் பெரும் பணியாற்றின.

நீலாம்பிகையாரின் கணவரான திருவரங்கனாரு டைய தம்பியார் வ. சுப்பையா என்பார் சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் அமைச்சராகப் பொறுப்பேற்றப்பின்னர் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் நூல்களை அச்சிட்டு வெளிக்கொணர்ந்தார்.

பல்லாயிரம் தமிழ் நூல்கள் நல்ல நடையில் எழு தப்பெற்று வெளிவந்தன. பல்லாயிரம் தமிழ்ப் பொழிவுகள் தமிழகமெங்கும் பன்னூற்றுவரால் நிகழ்த்தப்பெற்றன. ஆயினும், தனித்தமிழ்க் கொள்கையென்றளவில் அதனைத் தனிப்படுத்தி நிறுத்திப் பரப்பும் முயற்சியை மறைமலையடிகளார் அவர்களே செய்தார்கள். அக்கொள்கையும் அவரின் வாழ்வுக் கொள்கைகளுள் ஒரு கூறாக மட்டுமே இருந்தது. அதுவும் வலிய முயற்சியாக மேற்கொள் ளப்படாமல் தமிழால் தனித்தியங்க முடியும் என்ற கொள்கையை உலகுக்கு உறுதிப்படுத்த நின்ற தாகவே இயங்கியது. அக்கொள்கைக்குரிய ஓர் இயக்க முயற்சியாக எடுத்துக்கொண்டு வாழ்நாளில் அதற்கெனத் தம்மை ஒப்படைத்துகொண்டும், அக் கொள்கையை மேற்போட்டுக்கொண்டும் அவரின் காலத்தில் எவரும் இயங்கினாரிலர். ஆட்சியதிகாரத் துறையே இதுபோலுங் கொள்கைகளைச் செயற் படுத்த இயலுமாதலால் இக்கொள்கைக்குப் பொருந்திய ஆண்மையாளர்களைக் கொண்ட ஆட்சி யமைப்பும் அரசமைப்பும் அக்கால் இல்லை.

அறிஞர் அண்ணாதுரை அவர்களின் திராவிட முன் னேற்றக்கழகம் 1967இல் பதவிக்கு வந்ததும், நல்ல தமிழுக்கு ஆக்கமான சூழல் தமிழகத்தில் அமைந்தது. திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியமைப்பில் பங்கேற்று இயங்கிய பெரும்பான்மையர் இனவுணர் வும் மொழியுணர்வும் கொண்டவர்களாயிருந்தனரா தலால் இவர்களுக்கு முன்னர் ஆண்ட பேராயக் கட்சி ஆட்சியாளர்கள் 1956இல் கொண்டுவந்த தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை அடிப்படையாகப் பற்றிக் கொண்டு நல்லமுறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய செயற்பாடுகளில் கவனம் செலுத்தினர். ஆட்சிக்கு வருவதற்கு நீண்ட நெடுங்காலத்திற்கும் முன்னேரே திராவிட முன்னேற்றக்கழகத்தைச்சார்ந்த பலர், தம் வடமொழிப் பெயர்களையெல்லாம் தூயதமிழில் மாற்றி வைத்துக்கொண்டியங்கியமையில் அவர் களின் உள்ளுணர்வை விளங்கிக் கொள்ளலாகும்.

தமிழ் 1970இல் பயிற்சிமொழி ஆக்கப்பட்டது. அரசுக்குரிய நிறுவனப் பெயர்களெல்லாம் நல்ல தமி ழில் மாற்றியமைக்கப்பெற்றன. பெயர்களுக்கு முன் னர் ஸ்ரீ என்று போடுவதைத் தவிர்த்து திரு என்றவாறு போட வேண்டுமென அரசு கட்டளையிட்டது. அர சின் ஆட்சிச்சொல் அகரவரிசையில் பதிப்புகள் திருத் தமான நல்ல தமிழ்ச்சொற்களைத் தாங்கியவாறு மீண் டும் பதிப்பிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கில் தூய தமிழ்ச் சொற்கள் ஆட்சியில் ஆளப்பெற்றன. பொது மக்களும் படிப்படியே அச்சொற்களை வழங்கத் தொடங்கினர். தமிழ் வளர்ச்சித்துறை அரசதிகாரத் துறைகளில் நல்லத்தமிழ் வழக்காளுமையை நிலை நாட்டப் பெரும் பணியாற்றியது.

பொதுமக்களும் மாணவரும் 1965இல் நடத்திய இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்கள், தமிழக மக்களின் தமிழுணர்வின் வீற்றை அனைவருக்கும் உணரச் செய்தது. அம்மக்களின் துணைக்கொண்டு ஆட்சியேற்ற திராவிட முன்னேற்றக்கழகம், அவர் களின் மனவுணர்வுகளுக்கேற்ப உரிய இடத்தைத் தமிழுக்குத் தந்து ஆக்கவினைகள் பல ஆற்றி வந்தது. அனைத்து நல்லதமிழ் முயற்சிகளுக்கும், முனைப்பு களுக்கும், செயற்பாடுகளுக்கும் கருவகமாகத் தூய தமிழ் இயக்கம் ஒரு பக்கத்தில் தொடர்ந்தியங்கி வந்தமை வரலாற்றில் குறிப்பிடத்தக்க சிறப்புச் செய்தியாகும்.

முற்றிலும் தனித்தமிழ் கொள்கைகளைப் பரப்பு வதற்கென்றே 1959ஆம் ஆண்டு தொடங்கப்பெற்ற *தென்மொழி* என்னும் தூய தமிழ் திங்களிதழ் முப்ப தாண்டுக்கால உழைப்புகள் வரலாற்றில் குறிப்பிட் டுச் சொல்லத்தக்க செய்தியாகும். நெல்லிக்குப்பத் தில் தொடங்கப்பட்டு ஈராண்டுகளுக்குப் பின்னர் அது கடலூருக்கு மாற்றப்பட்டது. அதன் ஆசிரியர்

பாவலேறு பெருஞ்சித்திரனார் ஆவார். அவர்களின் தொடர்ந்த அயராத உழைப்பு ஈடு இணையற்ற தாகும்.

தனித்தமிழ் வளர்ச்சிக்கென இவரின் தென்மொழி நிகழ்த்திய வினைகள், தமிழகத்தின் அனைத்து அறிவுத்துறைகளிலும் பெருத்த மாற்றங்களை விளைவித்தது. தொடங்கிய காலத்தினின்று இன்றுகாணும் கொள்கை பிசகாது அனைத்துச்செய்திகளிலும் தூய தமிழையே கடைப்பிடித்தும் தமிழ் மானவுணர்வு எழுப்பியும் வந்த இதன் வரலாறு வீறுடையதாகும். ஆயிரக்கணக்கான புதுக்கலைச்சொல்லாக்கங்கள் இவ்விதழில் பதிவுற்றுப் பரவின. பாவணரின் சொல்லாய்வுக் கட்டுரைகளும், வினா - விடைப் பகுதிகளும் இவ்விதழில் தொடர்ந்து வந்தன. 1967இல் மாணவச் சிறுவர் சிறுமியருக்கென *தமிழ்ச்சிட்டு* என்னும் பெயரிலான தனித்தமிழ் திங்களிதழ் ஒன்றையும் உடன் தொடங்கினார். இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகின்ற அச்சிற்றிதழின் ஆக்கப்பணியால் தமிழுணர்வு பெற்ற தமிழக அயலக மாணவ மாணவியர் பல்லாயிரக்கணக்கினராவர்.

பாவாணரின் தமிழ் ஆராய்ச்சி நூல்களும், பெருஞ்சித்திரனாரின் தனித்தமிழ் இலக்கிய நூல்களும் தமிழகமெங்கும் பல்லாயிரக்கணக்கில் பரவின. தனித்தமிழ் உணர்வாளர்கள், கடலூரில் இயங்கி வந்த தென் மொழி வெளியீடு 1974லிருந்து சென்னையிலிருந்து புதுப்பொலிவுடன் வெளிவரத் தொடங்கியது. இதன் பயனாக நூற்றுக்கணக்கான தமிழ் மன்றங்கள் தமிழகமெங்கும் தொடங்கப்பட்டன. தனித்தமிழில் நூல்கள் வெளியிடுதல், மறைமலையடிகள், பாவாணர், பெருஞ்சித்திரனார், திரு.வி.க. போன்ற அறிஞர் பெருமக்களின் பொன்மொழிகளை வெளியிடுதல், நாள்காட்டிகள், அஞ்சல் அட்டைகள், உள்நாட்டு உறைகள் ஆகியவற்றைத் தூய தமிழில் வெளியிடுதல் முதலியன தனித்தமிழ் கழகங்களின் குறிப்பிடத்தக்க பணிகளாகும்.

புதுச்சேரி மாநிலத்தில் இயங்கி வரும் தமிழினத் தொண்டியக்கம் வினையாற்றலும் தொண்டுணர்வும் சான்ற அறிஞர்களையும், தொண்டர்களையும் கொண்ட கட்டமைப்பான இயக்கமாகும். மொழியியல் ஆராய்ச்சி நூல்களைத் தொடர்ந்து வெளிப்படுத்துவது அவ்வியக்கத்தின் தலையாய பணிகளுள் ஒன்று. தென்மொழி இதழைத் தொடர்ந்து ஆங்காங்குள்ள தனித்தமிழ் அறிஞர் பெருமக்களால் புதிய புதிய திங்களிதழ்கள் தமிழகமெங்கும் வெளிவரத் தொடங்கின. அவற்றின் விளைவுகள் அளப்பரியதாகும்.

தூயதமிழில் விளம்பரப்பலகைகள் அமைத்திட வேண்டி வணிகர்களிடமும், நிறுவனப் பொறுப்பாளர்களிடமும் சென்று விளக்கி அவ்வகையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைத் தனித்தமிழியக்கத்தினர் விளைவித்தனர். இவ்வகை முயற்சிகள் கோயம்புத்தூரிலும், புதுவையிலும், மதுரையிலும், சிவகாசியிலும் மேற்கொள்ளப்பெற்றன.

கடந்த இருபது ஆண்டுகளில் மட்டும் தூய தனித் தமிழில் இருநூறுக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. **தூய தமிழ் அகரமுதலி** ( ஆறு மடலம் ), **கலைச்சொல் அகரமுதலி** ( ஆங்கிலம் - தமிழ் ), **கலைச்சொல் அகரமுதலி** ( தமிழ் - ஆங்கிலம் ), **கலைச்சொல்லாக்க அகரமுதலி** ஆகிய முப்பெருங் கூற்று அகரமுதலி மடலங்களைத் தொகுத்து வெளியிடுவதற்கெனத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் தூய தமிழ் சொல்லாக்க அகரமுதலிகள் துறை என்னும் பெயரிலான திட்டத் துறையொன்று அக்காலத் துணைவேந்தராயிருந்த முதுமுனைவர் வ.அய்.சுப்ரமணியம் அவர்களால் 25 - 7 - 85 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. அத்திட்டப்பணிகள் செவ்வனே நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

இவ்வகைத் தமிழியக்க முயற்சிகள், தமிழறிஞர்கள், மாணவர்கள், பிறதுறைகளில் பணியாற்றிய தமிழன்பர்கள் ஆயிரக்கணக்கான தென்மொழியன்பர்கள் முதலியோரால் படிப்படியே கடந்த முப்பது ஆண்டுகளாகப் பெருத்த வேகத்துடனும் உரத்த உணர்வுடனும் ஆற்றப்பெற்றன.

கடந்த அரைநூற்றாண்டுக்காலத் தூய தமிழ் முயற்சிகளால் அரசு துறைகளின் நடைமுறைகளிலும், பாட நூல்களிடையிலும், திறனாய்வு நூல்களிலும் நல்ல தமிழ் நிலவுகின்றது. தூய தமிழ் அறிஞர்களால் இன்றைக்குப் போற்றப்பெறுகின்றது. இந்நிலைக்குக் காரணம் மறைமலையடிகளும், பாவாணரும் தான். இவர்களின் கொள்கையைச் செயற்படுத்துவதற்குக் கடந்த முப்பதாண்டுகளாக அயராது பாடுபட்டு வரும் பெருஞ்சித்திரனார் அவர்கள் பெரிதும் போற்றற்குரியவராவார். தூய தமிழ்க் காப்பளராக அவர் இன்றும் தொடர்ந்துவருகிறார்.

ஈராயிரமாண்டுகாலத் தடைப்பாடுகளைக் கடந்து வளர்ச்சியின்மை நோயினின்று சற்று நீங்கித் தமிழ் மொழியானது தன்னை மீட்டுக்கொண்டு இன்று செம்மாந்து நடையிடுவதற்குத் தூய தமிழியக்கமே முற்றவும் அடிப்படையாக இருந்தியங்கி வந்துள்ளது என்பது மறுக்கவியலாத உண்மையாகும்.

தூய தமிழ் இயக்கம் மற்றும் பல அரசியல் கட்சிகளின் இடை விடாத முயற்சியின் பயனாய் தமிழ் இன்று **செம்மொழி** என்ற உயரிய நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வறிப்பை வெளியிட்ட மத்திய அரசு அண்டை மாநிலங்களிலும் தமிழ் மொழியைப் பயிற்றுவிக்க முன்னுரிமை வழங் கப்படும் என்றது.

- ப. அ.

**தூயவாரம் :** தூயவாரம் என்னும் கருத்தை ஆல் பிரடு மார்சல் உருவாக்கியளித்தார். நிலம் தவிர வேறு உற்பத்திக் காரணிகளுக்கும், பண்டங்களுக்கும் வாரம் போன்று கிடைக்கின்ற மிகுதி வருமானத்தை, தூயவாரம் என்ற சொல் குறிப்பிடுகிறது. இரிக்கார் டோவின் கருத்துப்படி நிலத்தின் அளிப்பு நெகிழ்ச்சி யற்றதாக அமைகின்ற காரணத்தினால் வாரம் தோன்றுகிறது. இதே கருத்தைப் பிற காரணிகள் மற் றும் பண்டங்களின் அளிப்போடு தொடர்புபடுத்தித் தூய வாரம் என்னும் கருத்தை ஆல்பிரடு மார்சல் விளக்கியுள்ளார். போலிவாரம் பற்றி விளக்க முற் படும் போது தூயவாரம் ( Pure Rent ) பற்றிய விளக் கத்தை ஆல்பிரடு மார்சல் வழங்கியுள்ளார். குறுகிய காலத்தில் ஒரு குறிப்பிட்ட எந்திரத்தின் அளிப்பு நெகிழ்ச்சியற்றதாக அமையும்போது அவை நீண்ட காலத்தில் நெகிழ்வுள்ள அளிப்பைப் பெற்றிருக்கக் கூடும். குறுகிய காலத்தில் நெகிழ்வற்ற அளிப்போடு அமைகின்ற எந்திரத்தின் தேவை மிகுதியாகுமானால் அதற்கு மிகுதியான விலை கிடைக்கும். அவ்வாறு கிடைக்கின்ற மிகுதியான வருவாய், வாரம் போன்றே அமைகிறது. எனவே அதனைப் போலி வாரம் என்று ஆல்பிரடு மார்சல் குறிப்பிட்டார். அதே போன்று நீண்டகாலத்திலும் நெகிழ்வற்ற அளிப் பைக் கொண்டு அமைகின்ற நிலம் தவிர பிற காரணி கள் அல்லது பிற பண்டங்கள் ஈட்டுகின்ற மிகுதியான வருமானத்தைத் தூயவாரம் என்னும் சொல் குறிக் கிறது.

நிலத்தின் விளைச்சலையொட்டி வாரம் தோன்று வதைப்போலவே பண்டங்கள் மற்றும் காரணிகளின் விலையையொட்டி போலிவாரமும், தூய வாரமும் தோன்றுகின்றன. போலிவாரம் குறுகிய கால நெகிழ் வற்ற அளிப்போடு தொடர்புடையது. தூயவாரம் நீண்ட கால நெகிழ்வற்ற அளிப்போடு தொடர்புடை யது. தூயவாரம் என்னும் கருத்தை விளக்குவதற்கு விண்வெளியிலிருந்து விழும் நட்சத்திரக் கற்களை எடுத்துக்காட்டுகளாக ஆல்பிரடு மார்சல் கூறி யுள்ளார்.

விண்வெளியிலிருந்து ஒரு குறிப்பிட்ட இடத்தில் மட்டும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தொழில் துறையில் பெரிதும் பயன்படக்கூடிய நட்சத்திரக் கற் கள் விழுவதாகக் கொண்டால், அவ்வாறு விழுந்த நட்சத்திரக் கற்களின் அளிப்பை மாற்ற முடியாது. அத னையே நெகிழ்வற்ற அளிப்பு என்று குறிப்பிடுவர். குறுகிய காலத்திலும், நீண்ட காலத்திலும் நட்சத்திரக் கற்களின் அளிப்பு நெகிழ்வற்றதாக அமைகிறது. அவற்றைப் பொறுக்கி எடுத்து வைத்துள்ளவர்கள் மிகுதியான விலைக்கு விற்று, மிகுந்த வருவாயைப் பெறுவார்கள். அவற்றிற்கான தேவை அதிகரிப்பதை யொட்டி அவற்றின் அளிப்பை அதிகரிக்க முடியாது. எனவேதான், அவற்றின் விலை அதிகரிக்கிறது. இவ் வாறு நீண்ட காலத்தில் நெகிழ்வற்ற அளிப்பைப் பெற்றுள்ள விண்வெளியிலிருந்து விழுந்த நட்சத்திரக் கற்களின் விலை மிகுதியானதால் பெறப்பட்ட மிகு தியான வருமானம் தூயவாரம் என்று குறிப்பிடப்படு கிறது என்று ஆல்பிரடு மார்சல் குறிப்பிட்டுள்ளார்.

- எஸ்.வி. பா.

**தெருக்கூத்து :** தமிழ் நாடகத்தின் தொன்மை வடிவமே தெருக்கூத்து எனலாம். தொடக்கக் காலத் தில் தமிழகம் முழுவதும் செல்வாக்குடன் விளங்கிய இக்கூத்து இன்று வடக்குப்புற மாவட்டங்களில் மட் டும் வழக்கில் இருந்து வருகிறது. இது கோயில் சார் புக்கலை என்பதால் பெரும்பாலும் தெருக்கூத்து திரு விழாக்காலங்களில் மட்டும் நடைபெற்று வருகிறது. குறிப்பாக தெருக்கூத்து, அம்மன் கோயில்களிலேயே மிகுதியாக ஆடப்பெற்று வருகிறது. நாட்டுப்புற மணங்கமழும் இக்கலை வாய்மொழி வழியாகவே காலங்காலமாய் வாழ்ந்து வருகிறது.



தெருக்கூத்து

தெருக்கூத்து என்பது நாடக அரங்கு ஏதுமின்றி தெருவில் வெட்டவெளியிலி நடிக்கப்பெறும் கிராமியக் கலையாகும். கூத்தாடுவோர் கோயிலைப் பார்த்தவாறு ஆட் வேண்டும் என்ற மரபைப் போற்றும் வண்ணம் கோயிலுக்கு நேர் எதிரில் இக்கூத்து நிகழும். சிற்சில இடங்களில் கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள பெரிய திடல்களில் நடைபெறுவதுமுண்டு. கிராமத்து மக்கள், வயலில் பணிகள் எதுவுமில்லாத கோடைக்காலத்திலேயே இக்கூத்துக்களை ஏற்பாடு செய்வர்.

தெருக்கூத்தில் கதைப்பகுதி முழுவதுமே இசைப் பாடல்களால் ஆனது. முன்னோர் எழுதிவைத்த அவ்விசைப்பாடல்களை அப்படியே ஏற்றுக்கொண்டு வழிவழியாகப் பாடி வருகின்றனர். இடைச்செருகலாய் சில புதிய பாடல்களும் காணப்படும். அவை பெரும்பாலும் கதைக்குப் புறம்பாய் அமையும் பாடல்களாவே இருக்கும். நகைச்சுவைக்காக நிகழ்கால அரசியல், சமூகப்போக்கு போன்றவற்றை விளக்கும் வண்ணம் இடையிடையே கட்டியங்காரன் அப்பாடல்களைப் பாடுவான். அவை காலச்சூழலுக்

கேற்ப அவ்வப்போது இயற்றப்படுபவை. பொது வாக கதைத் தொடர்பான பாடல்களில் மாற்றங்கள் இருப்பதில்லை. காலப்போக்கில் தெருக்கூத்துகளில் வசனமும் இடம் பெறத் தொடங்கிற்று. பார்வை யாளர்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வகையில் செய்யுட் பகுதிகளைப் பேச்சு மொழியில் உரை நடைப்படுத்திக் கூற எழுந்த இவ்வழக்கம் இன்று தெருக்கூத்தில் குறிப்பிடத்தக்க அளவு வசனம் இடம் பெற வழிவகுத்து விட்டது.

கூத்தினைத் தொடங்குவதற்கு முன்னதாக இறை வணக்கப் பாடல்கள் இசைக்கபெறும். அதில் பற்பல கடவுளர்கள் போற்றப்பெறுவர். பொதுவாக விநாய கர் வணக்கம் முதலில் இருக்கும். அதன் பின்னர் முரு கன், பரமசிவம், காளி, திருமால், பிரும்மா என்று பல கடவுளர்களும் வணங்கப்பெறுவர். இறைவணக் கத்தைத் தொடர்ந்து அவையடக்கம் இடம் பெறும். கதையாசிரியர் அல்லது கூத்துகுழுத் தலைவர் அவை யில் தோன்றி அக்கூத்தில் சொற்குற்றமோ பொருட் குற்றமோ இருப்பின் அவற்றைப் பொறுத்தருளு மாறு வேண்டிக்கொள்ளுவதே அவையடக்கம் ஆகும்.

அரங்கில் முதலில் அறிமுகமாகும் பாத்திரம் கட்டி யங்காரன் பாத்திரமாகும். கதைக்குத் தொடர்பில் லாத இப்பாத்திரம் கதை முழுவதையும் நடத்தி வைக்கும் உயரிய பாத்திரமாக விளங்குவது தெருக் கூத்துக் கலைக்கே உரிய தனித்தன்மையாகும். கூத்தி னைத் தொடங்கிவைத்து எல்லாப் பாத்திரங்களை யும் அறிமுகப்படுத்தும் பணியையும் கட்டியங்காரன் செய்வான். முதன்முதலில் அரங்கில் தோன்றும் கதைப் பாத்திரத்திற்குத் தலைவேடம் என்று பெயர். தலை வேடதாரியும் பிறரும் அரங்கினுள் வருமுன்னர் திரை மறைவில் நின்றபடி தம்மைத்தாமே அறிமுகம் செய்துக் கொள்ளுவது வழக்கமாகும்.

கூத்தின் இறுதியில் மங்களம் பாடுதல், வாழி விருத்தம் ஆகியவை இடம்பெறும். மங்களம் பாடிய பின் கூத்தை நிறைவு செய்யும்போது வாழ்த்துக் கூறி முடிப்பர். வாழி விருத்தம் என்ற பாடல் மூலம் இயற் றியவர், கேட்டவர், கண்டவர், ஆடினோர் ஆகியோ ருக்கும் வாழ்த்துக்கூறுவர்.

கோயில் வழிபாட்டின் ஒரு பகுதியாகத் தெருக் கூத்து நடைபெறுவதால் இறையுணர்வை வளர்த் தெடுக்கும் பக்திநெறிக் கதைகளே அதிகம் இடம் பெறுகின்றன. குறிப்பாக தெருக்கூத்தில் பாரதக் கதையே அதிகம் இடம்பெறுகிறது. தெருக்கூத்து பெருவழக்கிலுள்ள வடார்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு போன்ற மாவட்டங்களில் ஒவ்வொரு கிராமமும் பாஞ்சாலியம்மன் அல்லது திரௌபதி யம்மன் கோயிலைப் போற்றுகிறது. அவ்வாலயங் களில் ஆடுவதற்குப் பாரதக்கதையே மிகவும் பொருத் தம் என்பதால் அக்கதை இன்றுவரை அப்பகுதி மக்களிடையே பெருஞ்செல்வாக்குடன் பேசப்பட்டு வருகிறது. பாரதக்கதைக்கு அடுத்த நிலையில் இராமாயணக் கதையும் கூத்தில் இடம்பெறுகின்றது. சிற்சில இடங்களில் பழங்கதைகளில் புதிய கற்பனை யையும் இணைத்து ஆடப்பெறுவதைக் காணலாம்.

இக்கூத்தில் கதை நிகழ்வுகளையும், கதை மாந்த ரின் இயல்புகளையும் சொல் மூலமாக விளக்குவ தோடு அணியப்பெறும் ஆடை அணிகலன்கள் மூல மாகவும் வெளிப்படுத்துவர். ஆடைகள், அணிகள் எனப் பிரித்துக் காண முடியாதவாறு இரண்டையும் ஒரே நிலையில் பயன்படுத்தும் போக்கு காணப்படு கிறது. பெரும்பாலான ஆடைகளும் அணிகளும் துணிகளால் அமைந்தவை. எவ்வித அலங்காரமு மின்றி இக்கூத்தில் இடம் பெறுபவன கட்டியங் காரன் ஆவான். தெருக்கூத்தில் அங்கம், காட்சி, களம் போன்ற பிரிவுகள் இல்லை. காட்சி மாற்றங்களைக் கட்டியங்காரன் பார்வையாளர்களுக்கு எடுத்துக்கூறு வதால் மேற்கண்ட பிரிவுகள் இக்கூத்தில் இல்லை. நேரத்திற்கும் நாள்களுக்கும் தக்கவாறு எடுத்துக் கொண்ட கதையினைத் தேவைக்குத் தகுந்தாற்போல சுருக்கவும் பெருக்கவும் இதில் வாய்ப்புண்டு.

- செ.வா.

**தேக்கநிலைப் பகுப்பாய்வு :** பொருளியல் கோட்பாடுகளை விளக்குவதற்குத் தேக்கநிலையை ( State Analysis) அடிப்படை நிலையாகத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் அமைத்துக் கொண்டனர். எனவே, தொன்மைப் பொருளியலறிஞர்களின் ஆய்வு முறை, தேக்கநிலை ஆய்வுமுறையென்று கரு தப்படுகிறது. தேக்கநிலையென்பது பொருளாதாரத் தில் பண்டங்கள் தேங்கிக் கிடக்கின்ற நிலையைக் குறிப்பதன்று. அதேபோன்று தேக்கநிலையென்பது வளர்ச்சியற்ற நிலையையும் குறிப்பதன்று. தேக்க நிலையென்னும் சொல்லைச் சற்று விரிவான வகை யில் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

தேக்கநிலையென்பதற்கு ஆடம்சுமித்து தெளிவான விளக்கத்தை வழங்கியுள்ளார். பொருளாதார அமைப்பு வெளிநாட்டுத் தொடர்பற்ற நிலையில் இருக்கும்போது வருமான வளர்ச்சி, முதலீடு வளர்ச்சி, மக்கள்தொகைப் பெருக்கம், நுகர்வு மற்றும் இவை போன்ற பொருளியல் கூறுகள் நிலையான வேகத்தில் அமையுமாயின், அதனை தேக்கநிலையென்று ஆடம்சுமித்து கூறியுள்ளார். எ.கா. முதலீடு நான்கு விழுக்காடு வளர்ச்சி வேகத்தைக் கொண்டிருக்குமாயின், அதே நான்கு விழுக்காடு வளர்ச்சி வேகம் நிலையானதாகும். முதலீட்டு வளர்ச்சி வேகத்தில் திடீரென மாற்றம் ஏற்படுவதில்லை என்ற நிலையை அடிப்படையாக எடுத்துக்கொண்டு பொருளாதாரக் கோட்பாடுகளை விளக்குவது தேக்கநிலை ஆய் வென்று குறிப்பிடப்படுகிறது. ஒரே சீரான வேகத்தைக் குறிப்பிடுவதற்காகத் தேக்கநிலையென்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது.

தேக்கநிலை ஆய்வின்படி, பொருளியலில் செயல் திறனுடன் இயங்கும் காரணிகள் தீடிரெனப் பெரும் வேகத்துடன் இயங்குவதில்லை. அவற்றிற்குரிய இயல்பான வேகத்தையும் இழந்துவிடுவதில்லை. குறுகிய காலத்தில் வேண்டுமாயின் காரணகளின் செயல்திறன் வேகத்தில் மாறுபாடு காணப்படலாம். நீண்ட காலத்தில், பொதுவாகக் காரணிகளின் செயற்படும் திறனில் நிலையான வேகத்தை உணரமுடியும் என்று தேக்கநிலை ஆய்வு கருதுகிறது. தேக்கநிலை ஆய்வில் இரண்டு மாறிகளுக்கிடையே நிலவும் உறவுநிலை ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் எவ்வாறு அமையும் என்று விளக்கப்படுகிறது. எ.கா. ஒரு குறிப்பிட்ட காலத்தில் பண்டத்திற்கான தேவை, அதன் விலையோடு தொடர்புடையது என்று தேவை விதி கூறுகிறது. கால வேறுபாடு தோன்றும் பொழுது பண்டத்திற்கான தேவைக்கும் அதன் விலைக்குமிடையே நிலவும் தொடர்பு தேவை விதியில் விளக்கப்பட்டுள்ளதுபோல் அமையாமல் சற்று மாறுபடலாம். இக்கருத்தை வேறுவகையாகவும் விளக்க முற்படலாம். தேக்கநிலை ஆய்வில், மற்றவை மாறாமல் இருக்கின்றன என்ற எடுகோள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. பண்டத்திற்கான தேவையை வரையறுப்பதில் பல கூறுகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. நுகர்பவரின் வருமானம், நுகர்பவரின் விருப்பு, வெறுப்பு போட்டிப் பண்டங்களின் விலை போன்ற கூறுகளும் பண்டங்களின் தேவையை நிருணயிக்கின்றன. மேலே குறிப்பிட்ட கூறுகள் மாறாமலிருக்கின்றன என்ற எடுகோளை எடுத்துக்கொண்டு, பண்டத்திற்கான தேவை அதன் விலை குறையும்பொது விரிவடைகின்றது. விலை கூடும்போது பண்டத்திற்கான தேவை சுருங்குகிறது என்று தேவை விதி கூறுகிறது.

தேவைவிதி, குறைந்து செல் இறுதி நிலைப் பயன்பாட்டு விதி, நுகர்வோர் உபரி, இரிக்கார்டோவின் வாரக்கோட்பாடு முதலிய கோட்பாடுகள் மேலே குறிப்பிட்டதைப்போன்று, அவற்றிற்குரிய எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்பட்டுள்ளன. அக்கோட்பாடுகள் தேக்கநிலை ஆய்வின் மூலம் விளக்கப்பட்டவை. தேக்கநிலை ஆய்வுமுறை எளிய முறையாகும். தேக்கநிலை ஆய்வுமுறையைப் புரிந்து கொள்வதன் மூலம் இயங்குநிலை ஆய்வைத் ( Dynamic Analysis ) தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். தேக்க ஆய்வுமுறையின் மூலம், மாறிகளுக்கிடையே நிலவும் தொடர்புகளை எளிதில் விளக்க முடியும்.

ஆகசுடு காம்டே ( 1798 - 1857 ) என்ற அறிஞர் தேக்கநிலை ஆய்வு முறையைச் சமூக அறிவியலில் முதன் முதலில் பயன்படுத்தினார். பின்னர் ச. எசு. மில், சாமுவேல்சன், எபேரியர், திம்பர்கன் முதலிய அறிஞர்கள் தேக்கநிலை ஆய்வு முறையில் பொருளியல் கோட்பாடுகளை விளக்கினார்கள்.

- எஸ்.வி.பா.

**தேக்கநிலை மாதிரி :** பொருளியல் மாறிகளுக்கிடையே நிலவும் தொடர்பை விளக்குவதற்கு மாதிரிப் படிவங்களை அமைக்கும் முறையை இக்கால அறிஞர்கள் பின்பற்றுகின்றனர். இம்முறையில் சமன்பாடுகள் பயன்படுத்தப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிட்ட விளைவை நிருணயிக்கும் பல காரணிகளில் முக்கியமான சிலவற்றைத் தேர்வு செய்து, அவற்றைச் சமன்பாடுகளில் குறிக்கின்றனர். முக்கியமற்ற காரணிகள் ஒதுக்கப்படுகின்றன. மேக்ரோகில் அகராதியின் விளக்கப்படி, மாதிரியென்பது பொருளியற் கோட்பாடுகளைக் கணித வழியில் சமன்பாடுகளை அமைத்து விளக்குவதாகும். மாதிரியில் அல்லது மாதிரிப் படிவத்தில் இரண்டு வகை உள் ளன. 1. தேக்கநிலை மாதிரி, 2. இயங்குநிலை மாதிரி. தேக்கநிலை மாதிரி என்பது குறிப்பிட்ட காலக்கட்டத்தில் இரண்டு காரணிகளுக்

கிடையே நிலவும் உறவை விளக்கக்கூடியது. தேக்க நிலை மாதிரி எளிதில் புரிந்து கொள்ளக்கூடியது. காரணிகளில் தன்மையும் அவற்றிற்கிடையே நிலவும் தொடர்பும் தேக்கநிலை மாதிரியில் விளக்கப்படுகின்றன. தேக்கநிலை மாதிரி வரையறைக்குட்பட்டது. தொண்மைப் பொருளியலறிஞர்களின் கோட்பாடுகள் தேக்கநிலை மாதிரிமுறையில் விளக்கப்பட்டுள்ளன. ஆல்பிரடு மார்சலால் விளக்கப்பட்ட தேவை விதியை எடுத்துக்காட்டாகக் கொண்டு தேக்கநிலை மாதிரிக் கருத்தை விளக்குவர். தேவை விதியைக் கீழ்க் காணும் வகையில் தேக்க நிலை மாதிரிப்படிவத்தில் குறிப்பிடலாம்.

$$D_x = F(P_x)$$

$D_x$ - பண்டத்திற்கான தேவை

$P_x$ - பண்டத்தின் விலை

மேலே கொடுக்கப்பட்டுள்ள சமன்பாட்டின் படி பண்டத்திற்கான தேவை அதன் விலையைச் சார்ந்து அமைகிறது. பண்டத்திற்கான தேவையைப் பல்வேறு காரணிகளும் நிருணயிக்கக்கூடிய திறனைப் பெற்றிருக்கலாம். நுகர்பவர்களின் வருமானம் நுகர்பவரின் விருப்பு, வெறுப்பு, போட்டிப் பண்பாடுகளின் விலை போன்ற பல காரணிகளும் பண்டத்திற்கான தேவையை நிருணயிக்கக்கூடியவை. எ.கா. நுகர்பவரின் வருமானம் அதிகரிக்குமாயின் அதிக அளவுப் பண்டங்களை வாங்குவர். இவ்வாறு நுகர்வு செய்யப்படும் பண்டத்தின் அளவு அதிகரிக்கும்போது, பண்டத்திற்கான தேவையும் அதிகரிக்கும். ஆனால், மேலே குறிப்பிட்ட காரணிகள் மாறாமலிருக்கின்ற வரையறையை அமைத்துக்கொண்டு, பண்டத்திற்கான தேவையை அதன் விலை நிருணயிக்கிறது என்ற கருத்து விளக்கப்பட்டுள்ளது. இக்கருத்தைத் தேவை விதியில் எடுகோள்கள் என்று குறிப்பிடுவர். மேலும் நுகர்பவரின் வருமானம், விருப்பு, வெறுப்பு, போட்டிப் பண்டங்களின் விலை போன்ற காரணிகள் முக்கியமற்றவை என்று கருதப்பட்ட காரணத்தினால், அவை சமன் பாட்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. சில காரணிகளை மேலே குறிப்பிட்டதைப்போன்று ஒதுக்கிவிடுகின்ற காரணத்தினால் தேக்கநிலை மாதிரியை அல்லது தேக்கநிலை மாதிரிப்படிவத்தை முழுதும் சரியான தென்று ஏற்றுக்கொள்ள முடிவதில்லை.

- எஸ்.வி.பா.

**தேவராய சுவாமிகள் :** இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் **கந்தர் சஷ்டிக் கவசம்** இயற்றினார். இந்நூல் அகவற்பாவாலானது. இந்நூலில் ஆறுபடை வீடுகளுக்கும் வெவ்வேறாக ஆறு அகவல்களுள்ளன. கந்தர் சஷ்டிக் கவசத்தில் கந்தன் காக்க காக்க என்ற தொடர் பலமுறை வந்து தோத்திர வடிவமாக அமைந்தது. கவசங்களுள் தலை சிறந்தது இச்சுவாமிகள் இயற்றிய கந்தர் சஷ்டிக் கவசமேயாகும். முதல் கவசம் 238 அடிகள் கொண்டது. இரண்டாம் கவசம் 80 அடிகள் கொண்டது. மூன்றாம் கவசம் 142 அடிகள் கொண்டது. நான்காம் கவசம் 73 அடிகள் கொண்டது. ஐந்தாம் கவசம் 156 அடிகள் கொண்டது. ஆறாம் கவசம் 80 அடிகள் கொண்டது. பிற கவசங்கள் காக்க காக்க என்று மட்டும் கூற இக்கவசம் மந்திரங்கள், அக்கரங்கள், உச்சரிப்புகள் முதலியவற்றைக் கொண்டுள்ளது. கல்வியறிவற்றோரும் கேள்வி ஞானத்தாலேயே இதனை அறிந்து மனப்பாடம் செய்தும் பாராயணம் செய்தும் பயன்கள் பல பெற்றுள்ளனர்.

முதலில் திருச்செந்தூர் முருகனுக்கே இக்கவசம் பாடப்பெற்றது. பின் ஏனைய ஐந்து படை வீடுகளுக்கும் கசவங்கள் உள. இருப்பினும் முதல் கவசமே பலராலும் நன்கு பயிலப்பட்டுள்ளது. இச்கவசமியற்றிய சுவாமிகள் பிறந்த ஊர், பெற்றோர் பெயர், மரபு முதலியன ஒன்றும் தெரியவரவில்லை. பலரும் பலவாறு கூறுவர். அவையெல்லாம் சான்று காட்டி நிறுவ இயலாதவை. சுவாமிகளுக்கு தாங்கமுடியா வயிற்று வலியும், நாக்கிழுப்பும் ஏற்பட்டன. பலர் மருத்துவம் செய்தும் பயனில்லை. இறுதியாகச் சுவாமிகள் திருச்செந்தூர் சென்று முருகனையே சரணடைந்து பல நாளாகியும் ஒன்றும் பலன் காணமற் போகவே கந்தர் சஷ்டி முதல்நாளன்று கடலில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ளக் கருதி திருக்கோயிலை வலம் வந்தார். சந்நிதி சேர்ந்ததும் வயிற்றுவலியும், நாக்கிழுப்பும் நின்றன. உடனே இக்கந்தர் சஷ்டி கவசம் பாடினார் எனத் தெரிகிறது. கந்தர் சஷ்டி ஆறு நாள்களாதலின் நாளுக்கொன்றாக ஆறு கவசங்கள் பாடினார் என்றும் கூறுவர். பாம்பன் சுவாமிகள் தம் இளமைக் காலத்தில் கந்தர் சஷ்டிக் கவசத்தையே பாடிக்கொண்டிருப்பதாக ஒரு வரலாறு கூறுகிறது. அதைப்போன்றே திருத்தணி சுவாமிகள் என்ற அடியாரும் இக்கவசத்தையே ஓதி முருகனருள் பெற்றதாக வரலாறு உண்டு. திருச்

செந்தூரிலேயே தேவராய சுவாமிகள் சமாதியடைந்தார்.

- இரா. ச.

**தைத்திரிய உபநிடதம்** : தைத்திரிய உபநிடதம், யசுர்வேதத்தின் ஒரு பகுதி. அவ்வேதம் தைத்ரியம், வாசனீயம் என்று இரண்டு மூலங்களிலிருந்து தோன்றியது. தைத்திரியப் பிரிவை, சங்கிதை, பிராமணம், ஆரண்யகம் என்று பிரிக்கலாம். தைத்திரிய ஆரண்ய கத்தின் ஏழாவது, எட்டாவது, ஒன்பதாவது அதிகாரங்கள் ஒன்று சேர்ந்து தைத்ரிய உபநிடதம் என்று குறிக்கப்படுகின்றது. தைத்ரிய உபநிடதத்தில் 50 பாடல்கள் உள்ளன.

வேதவியாசரைக் குருவாகக்கொண்ட கிருட்டிண வைசம்பாயனர் இவ்வுபநிடதத்தைத் தன் மாணவரான யாக்ஞவல்கியனுக்குக் கற்றுக்கொடுத்தார். ஒரு சமயம் ஆசிரியர் யாக்ஞவல்கியனிடம் இவ்வுபநிடத்தை மற்ற மாணவர்களுக்குப் போதிக்கச்சொல்லி அவர்களைத் தித்திரிப் பறவை ( மீன்கொத்திப் பறவை ) போன்று பாடம்கேட்கப் பணித்தார். இதனால் இதற்குத் தைத்ரிய உபநிடதம் என்று பெயர் வழங்கலாயிற்று. இதன் எளிமைத்தன்மையும், ஆழமான தத்துவச் செறிவும் போற்றுதற்குரியதாய் இருக்கின்றன. ஆதிசங்கரர் தம் பிரம்ம சூத்திர உரையில் இவ்வுபநிடத வாக்கியங்களை 147 முறை மேற்கோளாகப் பயன்படுத்தியுள்ளமை இதன் பெருமைகளுக்குச் சான்று பகரும்.

இவ்வுபநிடதத்தில் முதல் அதிகாரம் ( சிக்சாவல்லி ) மாணவன் குருகுலத்தில் வேதத்தைக் கற்கும் முறை, ஓங்கார வழிபாட்டின் மூலம் இறைவனை வழிபடும் நிலை, உலகில் வாழும் வகை ஆகியவை பற்றி விளக்கும். மாணவன் வேதத்தின் ஒவ்வொரு சொல்லையும் வெளிப்படையாகவும் உள்ளீடாகவும் ஆராய்ந்து எழுத்துகளின் கூட்டமைப்பால் புதுக் கருத்துகள் உருவாகும் தன்மையை அறிந்து கொள்ள வேண்டும். அவன் மனதை ஒன்றுபடுத்தி ஓங்காரத்தை உச்சரிப்பதால் அவனது இந்திரியங்கள் வலுப்பெற்று உடல் பலமடைகிறது. புத்தி கூர்மையாகி நினைவாற்றல் கூடுகின்றது. ஆன்மா, சாக்கிரம், சுவப்பனம், சுழுத்தி, துரியம் என்னும் நிலைகளைத் தாண்டி பிரம்மத்துடன் இணைகிறது. மாணவன் உலக வாழ்க்கையில் ஈடுபடும்போது, அவன் உண்மை, அறம், நன்முயற்சி முதலிய நற்பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும். தாய், தகப்பன், ஆசிரியன், விருந்தினன் ஆகியவர்களைப் போற்றுதல் வேண்டும். இல்லறத்தின் மூலம் முழு மனதுடன் தானம் செய்ய வேண்டும். வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களுக்கு மறைநூல்களின் வழி முடிவு கண்டு இன்பமாய் வாழவேண்டும்.

இரண்டாம் அதிகாரம் ( ஆனந்தவல்லி ) பிரம்மத்தின் குணங்களையும் அதன் பெருமைகளையும் விளக்குகின்றது. பிரம்மம், சத்தியம், ஞானம், அனந்தமாகவும், சத்து, சித்து, ஆனந்தமாகவும் இருக்கின்றது. அன்னத்தினாலான மனிதஉடல் ஆன்மாவிற்கு உறை போன்றது. இவ்வுறை அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய கோசங்களால் ஆனது. பிரம்மம் இக்கோசங்களுக்கு அடிப்படையாக இருக்கின்றது. பிரம்மம் தன் விருப்பத்தால் உலகின் உருவமுடைய, உருவமற்ற, குணமுடைய, குணமற்ற பொருட்களாய் இருக்கின்றது. அறிவுடையவன் பிரம்மத்திற்கும் தனக்கும் வேறுபாடு கருதுவதில்லை. ஒருவன் பிரம்மத்தை உணர்வதால் கிடைக்கும் ஆனந்தத்திற்கு ஒப்பாக இன்பம் வேறில்லை.

மூன்றாவது அதிகாரத்தில் ( பிருகுவல்லீ ) வருணன் தன் மாணவனான பிருகுவிற்கு உபதேசம் செய்கின்றான். வருணன் பிருகுவிற்கு உலகம் தோன்றி, இருந்து, ஒடுங்குவதற்கு அடிப்படையான பிரம்மத்தைத் தவத்தால் உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறான். பிறகு அவ்வழியில் பிரம்மம், மனம், சித்தம், புத்தி, அகங்காரம் முதலியவைகளைக் கடந்து ஆனந்தமயமாக இருப்பதை உணருகின்றான். ஒருவன் பிரம்மத்தை 'மகத்' என்று நினைப்பதனால் மகனாகிறான். மனம் என்று நினைப்பதனால் அவன் மனவலிமையடைகிறான். அவன் பிரம்மத்தை வணங்கினால் உலகில் செய்யும் செயல்கள் அனைத்தும் வெற்றியடையும், இதனை உணர்ந்தவன் உலகக் கூட்டை விட்டு, தன் ஆன்மாவை அறிந்து அதனைப் பிரம்மத்துடன் இணைத்து இறுதியில் வீடுநிலையை அடைகிறான்.

- ஜெ. அர.

**தொடக்க நிலைக்கல்வி :** ஆங்கிலேயர் வருவதற்கு முன்னர் மக்தப்பு, 'பாட்சாலா' என்னும் பள்ளிகள் இந்திய நாட்டில் நடைமுறையில் இருந்தன. அவை படித்தல், எழுதுதல், எண்ணுதல் ஆகியவற்றி லேயே அதிகமாகக் கவனம் செலுத்தின. பெரும்பாலும் அப்பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகளாகவே இருந்தன. ஆங்கிலேய ஆட்சி இந்தியாவில் ஏற்பட்ட போது கிறித்துவ சமயத்தைச் சார்ந்தோர் பள்ளிகளைத் தொடங்குவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். தொடக்கப்பள்ளிகள் பல தொடங்கப்பட்டன.

**கிழக்கிந்தியக் குழுமமும் தொடக்கக்கல்வியும்:** கிழக்கிந்தியக் குழுமத்தில் ஆட்சியின் போது இங்கிலாந்து நாட்டுப் பாராளுமன்றம் இந்தியக் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பது கிழக்கிந்தியக் குழுமத்தின் கடமையாகும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது. இருப்பினும் கூட இந்தியாவில் தொடக்கக் கல்வி வளர்ச்சி பெறவில்லை. அதற்கு முக்கிய காரணம் ஆங்கிலேயர்கள் உள்நாட்டுக் கல்வியை வெறுத்தார்கள். அத்துடன் உயர்கல்விக்கு அவர்கள் சிறப்பிடம் தந்து, அதன் வாயிலாகத் தொடக்க நிலைக்குக் கல்வி பரவவேண்டும் என எண்ணினார்கள். அதுவே கீழ் நோக்கி ஊடுருவும் கொள்கை ( Downward Filteration Theory ) ஆனால், அந்த நிலை இந்தியாவில் உருவாகவில்லை. இங்கிலாந்து அரசு பொதுமக்களுக்குக் கல்வியளிக்கும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளவில்லை.

**கட்டாயத் தொடக்கக்கல்வியின் வளர்ச்சிப் படிகள் :** ஆங்கிலேய ஆட்சியின் போது கி.பி.1838ஆம் ஆண்டு வில்லியம் ஆடம் ( WilliamAdam ) இந்திய மக்களுக்குக் கட்டாயமாகத் தொடக்கக்கல்வி அளித்திட வேண்டும் என்ற பரிந்துரையினை முதன்முதலாக ஆங்கிலேய அரசுக்குத் தந்தார். அதன் பின்னர் வின்கேட்டு ( Wingate ) என்பவர் கி.பி.1852ஆம் ஆண்டு நிலத்திலிருந்து வரும் வருமானத்தில் ஐந்து விழுக்காடு கட்டாயத் தொடக்கக்கல்விக்குப் பயன்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். இந்திய தேசிய காங்கிரசும் இப்பணியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. சுவாமி விவேகானந்தர் தொடக்கக் கல்விக்கு ஓர் எழுச்சியை ஏற்படுத்தினார். கோபால கிருட்டிணகோகலே 1910ஆம் ஆண்டு கட்டாயத் தொடக்கக் கல்வியை உருவாக்க வேண்டுமென்று மத்திய சட்டமன்றத்தில் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் 1918ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல்வேறு தேசியக் கொள்கைகள் உருவாயின. அவற்றில் கட்டாயத் தொடக்கக்கல்வியும் ஒன்று. காந்தியடிகளின் ஆதாரக் கல்வியின் மூலமாக 1937 - 38ஆம் ஆண்டுகளில் ஏழாண்டுக் கட்டாயக் கல்வி உருவாகியது. அதனிடையே 1939ஆம் ஆண்டு முதல் 1944ஆம் ஆண்டு வரை முதல் உலகப் போரின் காரணமாக தொடக்கக்கல்வி வளர்ச்சியில் சிறு தயக்கம் ஏற்பட்டது. சார்சண்ட் அறிக்கை 1944 ஆம் ஆண்டு 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தை கள் அனைவருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கவேண்டும் எனப் பரிந்துரைத்தது.

**விடுதலைக்குப்பின் கல்வியின் வளர்ச்சி :** இந்தியா மக்களாட்சிக் குடியரசாக ஆன பின்னர் இந்திய அரசியல் சட்டத்தின் நாற்பத்தைந்தாவது பிரிவின் படி இந்திய நாடு விடுதலை பெற்று பத்தாண்டுகளுக்குள் 14 வயது வரையுள்ள குழந்தைகள் எல்லோருக்கும் இலவசக் கட்டாயக் கல்வி அளிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒவ்வோர் ஐந்தாண்டுத் திட்டத்திலும் கட்டயா தொடக்கக் கல்விக்கு மானியம் ஒதுக்கப்பட்டு வந்துள்ளது.

**முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்களும், தொடக்கக் கல்வியின் வளர்ச்சியும் :** முதல் மூன்று ஐந்தாண்டு திட்டங்களும் ( 1951 - 66 ) தொடக்கக் கல்வி வளர்ச்சியில் மிகுந்த ஈடுபாடு காட்டியுள்ளன. அந்த பதினைந்தாண்டு காலத்தில் தொடக்கப் பள்ளிகளின் எண்ணிக்கை இருமடங்காயின. அதே போன்று பள்ளிச் செல்வோரின் எண்ணிக்கையும் இரண்ட ரை மடங்கு கூடியது. தொடக்கக்கல்விக்காச் செலவழிக்கப்பட்ட தொகையும் ரூபாய் 6 கோடியிலிருந்து ரூபாய் 122 கோடியாக அதிகரித்தது. இவை அனைத்தும் தொடக்கக்கல்விக்கு விடுதலை பெற்ற இந்திய அரசு அளித்த சிறப்பிடத்தைக் காட்டுகின்றன.

**நான்காம் ஐந்தாண்டு திட்டம் :** நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ( 1969 - 74 ) கல்விகென ரூ. 823 கோடி ஒதுக்கப்பட்டது. அதில் தொடக்கக்கல்விக்கு மட்டும் ரூ. 235 கோடியாகும். அந்த ஐந்தாண்டுத் திட்டத்தின்போது அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கட்டாயத் தொடக்கக்கல்வியினை எல்லோருக்கும் அளிக்கவேண்டும் என்ற குறிக்கோளை அடைவதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. அது

போன்றே தொடக்கப்பள்ளிகளும், நடுநிலைப் பள்ளிகளும் அனைத்துக் கிராமங்களிலும் தொடங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. பெண் குழந்தைகள், பிற்பட்டடோர், தாழ்த்தப்பட்டோர் ஆகியோரைப் பள்ளியில் சேர்ப்பதில் மிகுந்த ஆர்வம் காட்டின. கழிவு நிலையும் தேக்க நிலையும் குறைவதற்கான முயற்சி எடுக்கப்பட்டது. முழுநேரமும் பள்ளி செல்ல இயலாத குழந்தைகளுக்கெனப் பகுதி நேரப் பள்ளிகளும் தொடங்கப்பட்டன.

**ஐந்தாம் ஐந்தாண்டு திட்டம் :** ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ( 1974 - 79 ) கல்விக்கென ஒதுக்கப்பட்ட ரூ. 1285 கோடியில் தொடக்கக்கல்விக்காக மட்டும் ரூ. 410 கோடி செலவிடப்பட்டது. அந்தத் திட்டத்தின் முக்கியக் கொள்கைகள் வருமாறு.

1. ஆறு முதல் பதினாலு வயது வரையுள்ள குழந்தைகள் அனைவரும் முழுநேரப் பள்ளிகளிலோ பகுதிநேரப் பள்ளிகளிலோ கட்டாயமாகச் சேர்க்கப்பட வேண்டும்.

2. ஏழைக்குழந்தைகளுக்கு இலவசப் பாடநூல்களும், ஏனைய கற்கும் பொருட்களும், மதிய உணவும், உடையும் வழங்கப்பட வேண்டும்.

3. பெண்கள் பள்ளிகளில் தொடர்ந்து கல்வி கற்பதை ஊக்குவிப்பதற்காகக் காப்பகங்களும் பள்ளி முன் பருவப் பள்ளிகளும், தொடக்கப்பள்ளிகளோடு இணைக்கப்பட வேண்டும். சிறு குழந்தைகள் பேணிக் காக்கும் பொறுப்பிலிருந்து பெண் குழந்தைகளுக்கு விடுதலை கிடைப்பதற்கு அந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

4. கல்வியின் தரத்தை உயர்த்திக் குழந்தைகளைப் பள்ளிக்கு ஈர்ப்பதற்கும், அவர்கள் பள்ளியில் தொடர்ந்து படிப்பதற்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்.

**ஆறாம் ஐந்தாண்டு திட்டம் :** ஆறாம் ஐந்தாண்டு திட்டத்தில் ( 1980 - 85 ) கல்விக்கென ஒதுக்கப்பட்ட தொகையில் ஐம்பது விழுக்காடு தொடக்கக் கல்விக்கு ஒதுக்கப்பட்டது. திட்டக்குழு ஆறாம் ஐந்தாண்டு திட்டத்தில் கொள்கைகளாகவும், குறிக்கோள்களாகவும் கீழே குறிப்பிடப்பெறுபவற்றை அறிவித்தது.

1. அரசியல் சட்டத்தின் 45வது பிரிவை நிறைவேற்றுவது.

2. புதிய பள்ளிகளைத் தொடங்கல் என்ற கொள்கையின் படி 93 விழுக்காடு கிராமபுற மக்களுக்கு அவர்கள் இருப்பிடத்திலிருந்து ஒன்றரை கி.மீ. தொலைவிலேயே தொடக்கப்பள்ளிகள் தொடங்குவது, அதேபோல் 72 விழுக்காடு மக்களுக்கு அவர்கள் இருப்பிடத்திலிருந்து மூன்று கி.மீ. தொலைவில் நடுநிலைப்பள்ளிகள் தொடங்கப்பட்டன.

3. ஆறு முதல் ஏழு வயது வரை உள்ள குழந்தைகள் அனைவரையும் தொடக்கப்பள்ளிகளில் சேர்ப்பதற்கான தீவிர முயற்சிகள் எடுத்தல்.

4. முறைசாரக்கல்வி - பள்ளியிலிருந்து விலகியவர்களுக்கும், பள்ளிக்கே சென்றிராத ஒன்பது முதல் பதினாலு வயது வரை உள்ளவர்களும் கல்வி பயிற்றுவதற்காக முறைசாரக் கல்வியைத் தொடங்கல்.

5. பகுதிநேரப்பணிகள் - பள்ளியிலிருந்து விடுபட்ட ஒன்பது முதல் பதினான்கு வயது குழந்தைகள் முழு நேரப் பள்ளிக்குச் செல்ல முடியாத நிலையில் பகுதி நேரப்பள்ளிகளில் சேர்ந்துப் படிப்பதற்கான வாய்ப் பளித்தல்.

6. பெண் குழந்தைகளையும், தாழ்த்தப்பட்டோர், மலைசாதியினர் மற்றும் ஏழை வேளாண்மைக் குடும்பத்தைச் சார்ந்தோரையும் பள்ளியில் சேர்த்தல்.

7. கல்வியின் தரத்தை உயர்த்துதல் - தொடக்கக் கல்வியின் தரத்தினை உயர்த்துவதற்காகப் பல்வேறு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அ. சமுதாயத்திற்குப் பயன்படக்கூடிய உற்பத்தியை மையமாகக் கொண்ட செயல்களைத் தொடக்கப் பள்ளியில் தொடங்குதல்.

ஆ. குழந்தைகளின் சூழ்நிலைக்கேற்ப அவர்களுக்குத் தேவையான ஆர்வமிக்க கல்வியினைக் கொடுப்பதற்காகப் பாடத்திட்டத்தில் மாற்றம் செய்தல்.

இ. பள்ளி விடுமுறைக் காலங்களை அப்பகுதிக்கேற்ற காலநிலைக்கேற்பவும், வேளாண்மைக்கு ஏற்றவாறும் மாற்றியமைத்தல். தேவையான கருவிகளை அளித்தல். மலிவான, பயனுள்ள பள்ளிக்கூடங்களைக் கட்டித்தருதல், பள்ளிப்பாட நூல்களின் தரத்தை உயர்த்துதல், சிறந்த பயிற்றுமுறைகளையும் தேர்வு முறைகளையும் உருவாக்குதல். மொழி,

கணக்கு, அறிவியல் பாடங்களைச் சிறந்த முறையில் பயிற்றுவித்தல். அறிவியல் கருத்துகளை அறிவதோடு கூட அறிவியில் மனப்பான்மையை உருவாக்குதல். சிறந்த ஆசிரியப் பயிற்சியும், பணியிடைப் பயிற்சியும் அளித்தல்.

**ஏழாம் ஐந்தாண்டு திட்டம் :** ஏழாம் ஐந்தாண்டு திட்டத்தில் ( 1985 - 90 ) கல்விக்கென ஒதுக்கப்பட்ட ரூ.4775 கோடியாகும். தொடக்கக்கல்விக்கு மட்டும் ரூ.1830 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தத் திட்டத்தில் கீழ்க்காணும் செயல்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தொடக்கக்கல்வியை விரிவுபடுத்துதல், அதிகக் குழந்தைகளைத் தொடக்கப்பள்ளிகளில் சேர்த்தல், எல்லோருக்கும் முறைசாராக் கல்வித் திட்டத்தை முறையான திட்டத்தோடு இணைத்தல், மாநில அரசுகளும், தொடக்கப்பள்ளிக் கல்வியை அளிப்பதில் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளல், ஆசிரியர்களுக்குச் சிறந்த பயிற்சியையும் பணியிடைப் பயிற்சியையும் அளித்தல், கழிவையும், தேக்க நிலையையும் தவிர்த்தல், பெண் குழந்தைக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்தல், கல்வியின் தரத்தை உயர்த்துதல் போன்றவற்றிற்கு முதன்மையளிக்கப்பட்டது.

தொடக்கக் கல்வியானது ஆங்கிலேயர் ஆட்சியிலும், இந்தியா விடுதலை பெற்ற பின்னரும் படிப்படியாக அளவிலும், தரத்திலும் வளர்ச்சி பெற்றுள்ளதை இந்த வரலாற்றுப் பின்னணி எடுத்துக்காட்டுகிறது. இந்த வரலாற்றுப் பின்னணியில் அமைந்தது தான் இன்றைய தேசியக் கல்விக் கொள்கையாகும்.

**தேசியக் கல்விக்கொள்கை :** தேசியக் கல்விக் கொள்கைகள், கோத்தாரிக்குழுவின் ( 1964 - 66 ) பரிந்துரையின் பேரில் 1968ஆம் ஆண்டு முதல் தேசியக் கல்விக் கொள்கை அறிவிக்கப்பட்டது. அந்தக் கல்விக் கொள்கையில் தொடக்கக்கல்வி அரசியல் சட்டத்தின் நெறிமுறைக் கோட்பாட்டின் நாற்பதைந்தாவது கிளைச்சட்டத்தின் படி பதினாலு வயதிற்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாயமாக தொடக்கக்கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டும். பெண்குழந்தைகள், ஏழைகள், சமுதாயத்தில் கீழ்மட்டத்தில் உள்ள அனைவரும் தொடக்கக்கல்வி பெறுவதற்கான வாய்ப்புகளையும், வசதிகளையும் அளித்திட வேண்டும் என்பவைதான் அக்கல்விக் கொள்கை. 1979ஆம் ஆண்டு மீண்டும் இதே கருத்துகளைத் தேசியக் கல்விக்கொள்கை வலியுறுத்தியது.

**தேசியக் கல்விக்கொள்கை :** தேசியக் கல்விக் கொள்கை (1986) தொடக்கக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கும், பள்ளிகளை விரிவுப்படுத்துவதற்கும் பல்வேறு பரிந்துரைகளை அளித்தது. குறிப்பாகத் தொடக்கக்கல்வி இரு கூறுகளை வலியுறுத்தியுள்ளது 1. எல்லோரையும் பள்ளியில் சேர்ப்பது, 2. அனைவரையும் பதினாலு வயதுவரை பள்ளிக்கல்வியைத் தொடரச் செய்வதும் கல்வியின் தரத்தை உயர்த்துவது மாகும்.

**குழந்தைகளை மையமாகக் கொண்ட அணுகு முறை :** குழந்தைகளின் தேவை, ஆர்வம், ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்த கல்வியே அவர்கள் பள்ளிக்கு வருவதை ஊக்குவிக்கும் செயல்களை அடிப்படையாகக் கொண்ட கல்வி, குழந்தைகளின் உளவியலை அடிப்படையாகக் கொண்டதாகும். அக்கொள்கைகளை மனதில் கொண்டு தொடக்கக்கல்வி முறை அமைந்திட வேண்டும்.

**பள்ளியில் வசதிகள் :** எல்லாத் தொடக்கப்பள்ளிகளிலும், பெரிய அறைகள், பொம்மைகள், கரும் பலகைகள், வரைபடங்கள், கற்கும் பொருட்கள் அளிக்கப்பட வேண்டும். குறைந்த அளவு இரு ஆசிரியர்களாவது ஒவ்வொரு பள்ளியிலும் நியமிக்கப்பட வேண்டும். அதில் கட்டாயம் ஒருவர் பெண் ஆசிரியராக இருக்க வேண்டும்.

**முறைசாராக்கல்வி :** பள்ளியை விட்டவர்களுக்கும், பள்ளியில் ஈடுபட்டிருக்கக்கூடிய குழந்தைகளுக்கும், முழுநேரப் பள்ளியில் சேர முடியாதவர்களுக்கும் முறைசாராக்கல்வி பயனுள்ள முறையில் அமைந்திடல் வேண்டும் என்பது இந்தக் கல்விக் கொள்கையின் மிகச்சிறந்த குறிகோளாகும். இந்த முறைசாராக் கல்வியினைச் சிறப்புடையதாக்குவதற்கு நவீன தொழில் நுட்பத்தில் கற்பிக்கும் கருவிகளைப் பயன்படுத்துதல் வேண்டும். இம்முயற்சியில் அரசும், தொண்டு நிறுவனங்களும் முழுமையாக ஈடுபடுதல் வேண்டும் என்பதைத் தேசியக் கல்விக் கொள்கை வலியுறுத்துகிறது.

அரசியல் சட்டத்தின்படி பதினைந்து வயது வரை எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும். ஆனால், மக்கள் தொகைப் பெருக்கம், வறுமை, எழுத்தறிவின்மை, அரசின் குறைந்த நிதிநிலை, சிறுமியருக்குக் கல்வி அளிப்

பதை எதிர்த்தல் ஆகியவற்றின் காரணமாக மேற் கண்ட கொள்கையினை நிறைவேற்ற இயல வில்லை. அக்குறைகளை நீக்கி அதற்கான வழிமுறை களைக் கண்டறிந்தால், பெற்றோர்களின் அறியா மையை நீக்கினால், சிறு குடும்பத் தத்துவத்தை ஏற் றுக்கொண்டால் இந்தியக் குழந்தைகள் அத்தனை பேரும் தொடக்கக்கல்வியைப் பெற்றிட இயலும்.

- ஜி.ப.

**தொடர்ச்சி விதி :** கற்றல் செயல்முறைகளை ஆராய்ந்து வந்த உளவியலார், தம் பரிசோதனைகளை யெல்லாம் முதலில் விலங்குகளின் மீதே நடத்தி வந் தனர். அப்பரிசோதனைகள் நம்பிக்கையான முடிவுக ளைக் கொண்டிருக்குமானால் அவற்றை மக்கள் மீது நடத்தி அவர்களின் நடத்தையை ஆராய்ந்தனர். அத் தகைய ஆராய்ச்சிப் பரிசோதனைகள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தோன்றிவிட்டன என்றாலும் அமெரிக்காவில் வாட்சன் என்ற உள வியலார் 1912ஆம் ஆண்டில் நடத்தைக் கோட்பாடு களைத் தோற்றுவித்த பிறகே ஆராய்ச்சிப் பரி சோதனைகள் கற்றல் துறையில் முக்கியத்துவம் பெறத் தொடங்கின. நடத்தைக்கோட்பாட்டின் பிந்திய அறிஞர்களான ஹல் ( Hull ), தால்மென் (Tolman ), ஸ்கின்னர் ( Skinner ) ஆகியோர் கருத்து வேறுபாடு கொண்டு வாட்சனுடைய விதிகளை வேறு கோணத்தில் நோக்கினர். அவர்களுள் முதன் மையானவர் ஹல் ஆவார். அவருக்குத் துணையாக நின்றவர் சிபென்சு ( Spence ) என்பவர். இவர் 1936 ஆம் ஆண்டில் வேறுபடுத்திக் கற்றல் ( Discrimination Learning ) என்ற விதியை உரு வாக்கினார். அவ்விதி தான் தொடர்ச்சி விதி ( Principle of Continuity ) என்று கற்றல் துறையில் பிறகு பேசப்பட்டது.

சிக்கலில்லாமல் மிகவும் எளிய முறையில் வேறு படுத்திக் காணும் பரிசோதனை அமைப்பு முறையில் செல் - செல்லாதே என்ற வழிகளில் பரிசோதிக்கப் படுவது பெரும்பாலும் ஒரு விலங்காகவே இருந்தது. அவ்விலங்கு ஒரு தூண்டலின் முன்னிலையில் துலங் குவதற்கு ஏற்புடைமையாக வலிமையூட்டப்படு கின்றன. இந்தத் தூண்டல் நேர் நிலையான தூண்டலாகும். இது S+ எனக் குறிக்கப்படுகிறது. மற்றொரு தூண்டல் எதிர்மறையானதாகும் S–. அவ் விலங்கு இத்தூண்டல் முன்னிலையில் துலங்கு வதற்கு வலிமையூட்டப்படவில்லை. இவ்விதமான வேறுபாடுகளைக் கொண்ட சோதனைச் சூழ்நிலை யில் அளிக்கப்படுகின்ற பயிற்சியில் பரிசோதிக்கப் படும் விலங்கு S+ என்ற தூண்டலுக்கு உடனே துலங்குகின்றது. அவ்விலங்கு S– என்ற தூண்டலை முன்னிலையாக்கும்போது துலங்குவதில்லை.

இப்பரிசோதனையில் அடங்கியுள்ள கருப் பொருள் என்னவென்றால், பரிசோதனைக்குட்படுத் தப்பட்ட அவ்விலங்கு ஒரு நேர்நிலையான தூண்ட லுக்குத் துலங்கவும் மற்றொரு எதிர்வினையான தூண்டலுக்குத் துலங்காமலிருக்கவும் ஊக்கமூட்டப் படுகின்றது. தூண்டலின் மாற்றத்திற்கேற்ற துலங்கு கின்ற விலங்கின் நடத்தையிலும் மாற்றங்கள் ஏற் படுகின்றன. இதனால் பரிசோதனைக்குட்படுத்தப் பட்ட விலங்கு வேறுபாடு கண்டறிந்து செயல் படுகின்றது என்று தெரிகின்றது.

இதே பரிசோதனையில் ஒரு சிறிய மாறுபாட் டைச் செய்து, நேர்நிலையான S+ தூண்டலையும் எதிர் மறையான S– தூண்டலையும் ஒரே சமயத்தில் பரிசோதிக்கப்படுவதன் முன்னிலையில் வைக்கப்படு கின்றது. இங்கு பரிசோதிக்கப்படுவது இந்த இரண்டு தூண்டல் வடிவமைப்புகளுக்கிடையிலும் எது சிறந் தது என்று ஒரு முன்னுரிமையான தேர்வைச் செய்ய வேண்டும். இந்த தேர்வு முயற்சியில் பரிசோதிக்கப் படும் விலங்கு தவறு ஏதும் செய்யாமல் நேர் நிலை யான S+ தூண்டலைத் தேர்ந்தெடுத்தால் கற்றல் ஏற் பட்டிருக்கின்றது என்றும் அது சரியாக வெளிப்படுத் தப்பட்டிருக்கின்றது என்றும் கொள்ளவேண்டும்.

வேறுபடுத்திக் கற்றலில் எந்தப் பண்புக்கூறு முன் மாதிரியான தொடர்ச்சியாகின்றது என்பதை சிபென்சு தாம் 1936ஆம் ஆண்டில் எழுதிய ஆராய்ச் சிக் கட்டுரையில் தெளிவுபடுத்தியுள்ளார். அக்கட் டுரையில் மிகவும் குறிப்பிடத்தக்கதொன்றுண்டு அது என்னவெனில், தூண்டல் விவரக் குறிப்புகளின் தொகுதிகளை அல்லது பல பகுதிகள் சேர்ந்து அமைந்த கூட்டுப் பொருட்களை அவர் கையாண்ட முறையாகும். முன் மாதிரியாக அமைந்த வேறு படுத்திக் காணல் இடு பணி பல பண்புக்கூறுகளை உள்ளடக்கியதாக இருக்கின்றது அல்லது பன்முகத் தூண்டல் படிவமைப்புகளைக் கொண்டதாக இருக் கின்றது. எ.கா. ஒரே சமயத்தில் இரண்டு பொருட் களில் ஒன்றை வேறுபடுத்திக் காணும் ஒரு இடு

பணியில் ஒரு குரங்கு ஈடுபடுத்தப்படுகின்றது. அக் குரங்கு ஒரு குறிப்பிட்ட முயற்சியில் இடப்புறத் திலுள்ள ஒரு பெரிய வெண்மையான முக்கோணம், வலப்புறத்திலுள்ள ஒரு சிறிய கறுப்புச்சதுரம் ஆகிய இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்யவேண்டும். பெரியதும் சிறியதுமான பரிமாணங்களைக் கொண்ட இரண்டு தூண்டல்களும் அளவைக் கொண்டு மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இந்த எடுத்துக்காட்டில் நான்கு இரட்டைப் பரிமாணங் களிருக்கின்றன. அவை $2^4$ ( 2 2 2 2 ) - 16 தூண்டல் வடிவமைப்புகளாக நிகழக்கூடியவை. அவை எட்டு நிறைவுறும் இணைகளாகவும் இருக்கின்றன. பரிசோதிக்கப்படுவது பரிமாணங்களில் ஒன்றின் மதிப்பீட்டை, சரியானதென்று தேர்ந்தெடுக்கப்படு வது பரிமாணங்களில் ஒன்றின் மதிப்பீட்டை சரியான தென்று தேர்தெடுக்க வேண்டும். எ.கா. முக்கோணத் தைத் தேர்ந்தெடுக்கின்றது என்று கொள்வோம். இத னுடைய மதிப்பீட்டைக் கொண்டிருக்கின்ற எந்த வடிவமைப்பைத் தேர்ந்தெடுத்தாலும் ஊதியம் அல் லது பரிசு கிடைக்கிறது.

சரியானதென்று தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த முக் கோணம் சரியாக இருக்குமானால், அதன் உருவம் பொருத்தமான பருமனைக் கொண்டிருக்கின்றது என்று கருதப்படுகிறது. ஆனால் அளவு, நிறம், நிலைமை ஆகியவை பொருத்தம் இல்லாத பருமன் களின் பல்வேறு மதிப்பீடுகள், வலிமை பெறச் செய்யாத மதிப்பீடுகளைப் போலவே வலிமை பெறச் செய்த மதிப்பீடுகளோடு அடிக்கடி சம மாகவே இணைக்கப்படுகின்றன. எ.கா. பாதி முயற்சிகளின்போது முக்கோணம் இடப்பக்கத்தி லிருக்கின்றது. மறுபாடி முயற்சிகளின் போது சதுரம் இடப் பக்கத்திலிருக்கின்றது. இதனால், ஒரு பொருத்தமில்லாத மதிப்பீட்டிற்கு முரணில்லாமல் செய்யப்பட்ட தேர்வினால் பாதி முயற்சிகளுக்குப் பரிசும் பாதி முயற்சிகளுக்குப் பரிசின்மையும் நிகழ் கின்றது. சிபென்சின் கற்றலும் சேர்ந்து அமைத்தலும் முறைகள் ( Learning and Composition Rules ) இந்த அமைப்பின் அடிப்படையில் தான் விளக்கப்படு கின்றது. சாதரணமாகப் பார்க்கும்போது, ஒவ்வொரு தூண்டல் வடிவமைப்பின் மதிப்பீட்டையும் அணுகு வதற்கு ஒரு நிகர எதிர்வினைப் போக்கை வகுத்து ஒதுக்கப்பட வேண்டும் என்று அவர் புனைந்துரை செய்கின்றார். அவர் கூறும் நிகர எதிர்வினை என்பது அணுகுமுறையில், கிளர்ச்சியுட்டப்பட்ட போக்கி லிருந்து தடை செய்யப்பட்ட போக்கு நீங்கிய மீதிப் போக்காகும்.

பரிசோதிக்கப்படுவோன் இரண்டு வடிவமைப்பு களுக்கிடையே ஏதாவது ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் போது அவன் பெரிய கூட்டுத்தொகை எதிர்வினை யுடையதைத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று எதிர் பார்க்கப்படுகின்றது. மேலும் ஒரு புனைகருத்து என்னவென்றால், ஒரு வடிவமைப்புக்குத் துலங்கு வதின் விளைவாக ஊதியம் பெறுவதுண்டு. ஊதியம் பெறாமற்போவதும்முண்டு. அந்த முயற்சியின் இறுதி யில் தேர்ந்தெடுக்கப்பட்ட வடிவமைப்பின் உறுப்பு களில் ஒவ்வொன்றின் எதிர்வினைப் போக்கும் பொருத்தமான முறையில் ஊதியம் அளிக்கப்பட்ட முயற்சிக்கு அதிகரித்தும் ஊதியம் அளிக்கப்படாத முயற்சிக்குக் குறைந்தும் செயற்படுகின்றது. இவ்வித மாக பரிசோதிக்கப்படுவோன் தேர்ந்தெடுக்கப்பட்ட தூண்டல்களின் எல்லா உறுப்புகளின் மீதும் புலன் காட்சி ( Perception ) செய்து, அதன்மூலம் தன்னுடைய தேர்வை அடிப்படையாக அமைத்து, புலன்காட்சி செய்த எல்லா உறுப்புகளையும் காண்கின்றான். இந்த செயல்முறைப்படி கற்பது என்னவென்றால் பரிசோதிக்கப்படுவோன் எஞ்சியுள்ள பழக்கத்தில் வலிமைகளை ஏற்றவாறு திருத்தம் செய்துகொள்வ தாகும். மேலும், ஊதியங்களாலும், ஊதியமின்மை களாலும் அதிகரித்தல்களும் குறைதல்களும் தொடர்ச்சியாகவே குவிந்து வருவதனால் குறிப் பிட்ட விவரக் குறிப்புகளுக்கு வழக்கமான போக்கு களில் மாற்றங்கள் படிப்படியாக ஏற்படுகின்றன. இந்தச் செயல் முறைதான் தொடர்ச்சி விதி என்ற ழைக்கப்படுகிறது.

இக்கருத்தின்படி, ஒரு பரிசோதிக்கப்படுவோன், வேறுபடுத்திக் காணல் பிரச்சினையில் பொருத்தமில் லாத விவரக்குறிப்புகள் என்று நிருபிக்கப்பட்டவைக ளிடம் வழக்கமான ஒரு தொகுதி முன்னுரிமைகளைக் கொண்டு செயற்படத் தொடங்கலாம். அதனால் ஒரு எலி ஒரு புதிர்ப் பெட்டியில் ( Maze ) தானே இயங்கக் கூடிய விளைவுகளால் ஊதியத்தை ஒவ்வொரு தடவையும் கூடுதலாகவும் குறைவாகவும் பெறு கின்றது. கொடுக்கப்பட்ட விவரக்குறிப்புகளுக்குச் சரி யாகத் துலங்குவதின் மூலம் அதனுடைய துலங்கல் படிப்படியாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப் படுகின்றன. இந்த நிலை ஏற்படுவதற்கு முன்பே அந்த எலி ஒரு ஒழுங்கு முறையான இட முன்

னுரிமையைப் புதிர் பெட்டியில் காட்டமுடியும். இந்த விதியில் பொருத்தமான பரிமாணத்திற்கு நேர் நிலை மதிப்பீடுகளுக்கும் எதிர்நிலையான மதிப்பீடு களுக்கும் அணுகும் போக்குகள் வேற்றுமை சார்ந்தவைகளாக நிகழ்கின்றன. இது அவ்வாறு இருப்பதால் பொருத்தமில்லாத பரிமாணங்களுக் குள் இரண்டு மதிப்பீடுகளை நோக்கிச் செல்லும் அணுகும் போக்குகள் படிப்படியாகச் சமமாக்கப்படு கின்றன. ஊதியத்திற்கு ஏற்றவாறு சாதகமாகவும், பாதகமாகவும் முயற்சிக்கு முயற்சி வலிமையில் மாறுபாடு ஏற்படுகின்றது.

எதிர்நிலையான மதிப்பீடுகளைவிட நேர்நிலை யான மதிப்பீடுகளின் மீது பயிற்சியின் விளைவா லான வேறுபாடுகள் சாதகமாக இருக்கும்போது அந்த விலங்கு பிழையேதுமின்றித் துலங்குகின்றது. அதாவது பயிற்சி விளைவுகளின் கூட்டுத்தொகுப்பு எதிர் நிலையான வடிவமைப்புக்கு இருப்பதைவிட நேர்நிலையான வடிவமைப்புக்கு அதிகமாக இருக் கின்றது. வேறுபாடு கண்டு கற்றல் செயல்முறையில் உள்ளடங்கியுள்ள உறுப்புகளில் ஒன்றான தேர்வு செய்தலில் கூட்டுக்கலவையை நிர்ணயம் செய்தல், புலன் காணப்பட்ட எல்லா உறுப்புகளையும் உள்ள டக்கிப் படிப்படியாகக் கற்றல் ஆகிய இந்தப் புனைக் கொள்கைகளின் அடைவுதான் தொடர்ச்சிவிதியின் மூலக்கருத்தாகும்.

- மு. இரா.

**தொலையுணர்வு :** மக்களின் உளம் சார்ந்த வாழ்க்கையை ஒழுங்கு முறையாக அறிகின்ற உளவியல் பல துறைகளாகப் பிரிந்து பலதரப்பட்ட வாழ்க்கைத் துறைகளை ஆராய்ந்து வருகின்றது. அத்துறையில் ஒன்றாகக் கருதப்படுவது புலனாய்வு கடந்த உளவியல் ( Parapsychology ) துறையாகும். ஏனைய துறைகளெல்லாம் புலனுறுப்புகளின் அனுபவங்கள் மூலமாகவே மனிதர்களின் நடத்தையை ஆராய்ந்தன. ஆனால், இந்தப் புலனாய்வு கடந்த உளவியல் துறை புலன்களின் துணையின்றியே மனித நடத்தையை ஆராய்கின்ற ஓர் அறிவியலாக வளர்ந்து வருகின்றது. இத்துறை பல கருதுகோள்களை உள்ளடக்கிக் கொண்டிருக்கிறது. அவை தொலையுணர்வு ( Telepathy ), தொலைவிடக் காட்சி ( Clairvoyance ), முன்னறிவு அல்லது முன்னுணர்வு ( Precognition ), தொலைவிடம் கேட்டல் ( Clair audience ), அசையும் பொருளை வசப்படுத்துதல் ( Psychokinesis ), இறப்பிற்குப்பின் உய்தல் என்பனவாகும். இவை ஒவ்வொன்றின்மீதும் நடைபெற்ற ஆராய்ச்சி முடிவுகளின் படி, சில சூழ்நிலைகளில் சில மக்கள் அவர்களுடைய புலன் களுக்குப் புலப்படாத வாழ்க்கை நிகழ்ச்சிகளுக்கு நேரடியான துலங்களைச் செய்கின்றனர் என்று கண்டறியப்பட்டுள்ளது. அது போலவே எதிர் காலத்தில் நிகழவிருக்கின்ற நிகழ்ச்சிகளோடும் நேரடித் துலங்களைச் செய்கின்றனர். விருப்பமுள்ள பொருட்களின் அசைவை நேரடியாக இயக்கவும் செய்கின்றனர். இத்திறமைகளையெல்லாம் உடல் சார்ந்த அல்லது புலன் சார்ந்த தொடர்புறவுகளைக் கொண்டிருக்கவில்லை. மேலே கூறிய கருதுகோள் களெல்லாம் புலனாய்வு கடந்த உளவியல் உறுப்புகள் என்றே சிலர் கருதுகின்றனர். இவையனைத்திலும் ஒரு பொது குணப்பண்பு காணப்படுகின்றது. அது தனி மிகையான உணர்வாகும். ஒரு நிலையில் இவற் றின் செயல்முறைகள் ஒன்றுபோலவே தோன்று கின்றன.

மனிதர்கள் உலகத்தைப் பற்றிய அறிவை ஐம்புலன் களின் அனுபவ வாயிலாகத்தான் பெறுகின்றனர். ஐம் புலன்களே அறிவின் வாயிற் கதவுகள் என்ற அடிப் படை மெய்மைக்கூற்றின் மீது உளவியல் செயற்படு கின்றது என்றாலும் சிலர் தங்கள் அறிவை வேறு வாயிற்பொருட்களின் மூலம் பெறுவதாகக் கூறுகின் றனர். தனி மனித அனுபவங்கள் பெரிதும் வேறுபடு கின்றன. அது தனி மிகையான புலனுணர்வுத் தொடர்பை ( Extrasensory Perception ) மெய்யெனக் காட்டுவதாத் தோன்றுகின்றன. இது முற்றிலும் உண் மையென நம்புகின்றனர். உளவியலில் மனிதப் பண் புசார் உளவியலார் என்ற ஒரு வகையினர் இக்கருத் திற்கு ஆக்கமளிக்கின்றனர்.

அமெரிக்காவில் கிரைன் ( J.B. Rhine ) என்பவர் தனி மிகையான புலனுணர்வு பற்றி பல ஆய்வு முடிவுகள் வெளியிட்டார். அதைத் தொடர்ந்து உலகில் பல நாடு களிலும் இத்துறையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இதன் விளைவாகத் தனி மிகையான புல னுணர்வு உலகில் செல்வாக்குப் பெற்றது எனலாம். தனி மிகையான புலனுணர்வு மூலம் தொலைவி லுள்ளவற்றை அல்லது நிகழ்வனவற்றை உணர்தல்,

காணல், கேட்டல், இயக்குதல் ஆகியவைகளுக்கு அத்துறைகளில் ஈடுபட்டுள்ளோர் சான்றுகளைக் காட்டுகின்றனர். பரிசோதனைகளையும் செய்துகாட்டி, சோதனை எண்களின் மூலம் அவை உண்மையெனக் காட்டுகின்றனர். ஒருவரை நேரில் பார்க்கமால் தொலைவிலிருந்தே அவருடைய சிந்தனைகள், உணர்ச்சிகள், விருப்பங்கள் ஆகியவைகளை ஐம்புலன்களின் தொடர்பின்றி அவருடைய உள்ளத்தை இயக்கவைத்து அவருடன் தொடர்பு கொள்கின்ற செயல் முறையைத் தொலையுணர்வு என்று கூறுகின்றனர். ஒருவரின் உள்ளத்தோடு மற்றொருவர் தன்னுடைய மன ஆற்றலால் தொலைவிலிருந்தே தொடர்பு கொள்கின்றார். அவருடைய உள்ளம் சார்ந்ததும், செயல் சார்ந்ததுமான விவரங்களையும் அறிந்து கூறுவதும் தொலையுணர்வுதான் நன்கு தெரிந்த எந்த அறிவியல் விதிகளைக் கொண்டும் இவ்விதமாகச் செயல்பட முடியாது. இச்செயல் முறையைச் சிந்தனை மாற்றம் என்றும் கூறலாம்.

தனி மிகையான புலனுணர்வு பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட நிலையில் சில மாறுதல்களைப்பெற்று மரபொழுங்காக அது வரையறை செய்யப்பட்டது. அதனால் அது மூன்று முக்கிய துணைப்பிரிவுகளாகச் செயற்படுத்தப்படுகின்றது. சோதனையின் இலக்கு ஒருவனுடைய எண்ணங்களாக இருக்குமானால் இந்தத் தனிமிகையான புலனுணர்வு தொலையுணர்வு என்றும், சோதனையின் இலக்கு ஒரு புறப்பொருளாக அல்லது நிகழ்ச்சியாக இருக்குமானால் அந்தத் தனிமிகையான புலனுணர்வு தொலைவிடக் காட்சி என்றும், சோதனையின் இலக்கு என்ற ஒன்று பரிசோதிக்கப்படுவோன் சொல்லி அழைக்கின்ற வரையில் இல்லாமலேயே இருந்து, அழைத்த பிறகு புலன்காட்சி செய்யப்படுமானால் அது தனிமிகையான புலனுணர்வு சார்ந்த முன்னுணர்வு அல்லது முன்ன றிவு என்றும் கூறப்படுகிறது. பரிசோதனை ஏற்பாடுகளில் பல்வேறு இணைப்புகளும் துணைப்பிரிவுகளும் இருக்கின்றன. எ.கா. ஒரு பொருள் ஒருவருக்குத் தனி மிகையாகத் தெரிந்திருந்தால் அது தொலைவிடக்காட்சி இலக்காகவோ அல்லது தொலையுணர்வு இலக்காகவோ இருக்கலாம். அத்தகைய ஒரு இலக்கைப் பெயர் சொல்லி அழைப்பதில் வெற்றி ஏற்படுமானால் அந்தச் செயல் முறையை பொது தனிமிகையான புலனுணர்வு ( General ESP ) என்று கூறுவர்.

பரிசோதிக்கப்படுவோன் அழைக்கின்றபோது ஒரு பொருள் யாருக்குமே தெரியாமலிருக்கலாம். அதாவது தொலையுணர்தல் மூலம் புலன் கடந்த காட்சிகளைக் காண்போர் அப்பொருளை அறிந்து கொள்ளாமலிருக்கலாம். ஆனால் பிறகு யாரேனும் தெரிந்து கொள்ளலாம். இந்தச்செயல்முறை தொலைவிடக் காட்சியின் இலக்காகவோ முன்னறிதல் சார்ந்த தொலையுணர்வின் இலக்காகவோ இருக்கின்றது. நன்கு தெரிந்த ஒரு பரிசோதனை ஏற்பாடு மூலம் இது எளிதில் விளக்கப்படலாம். சூதாடுகருவி அல்லது பகடைக்காய்கள் உருட்டிவிடல், நாணயத்தைச் சுண்டிவிடல் போன்ற செயல்களில் பொருள்கள் அசைகின்றன. சோதனையில் தொடர்புடையவர் பகடைக்காய் அல்லது நாணயம் குறிப்பிட்ட நிலையில் அமைய வேண்டும் என்று விரும்புகின்றனர். அது அவ்வாறே அமைகிறது. நாணயத்தின் தலை விழ வேண்டும் என்று விரும்பினால் தலை விழுகிறது. சுண்டிவிட்ட நாணயம் கீழே விழுவதற்கு முன்பே, தலைவிழுகின்றது என்று தீர்மானித்து, அவர் கூறுகின்றார். தலையே விழுகின்றது. பத்துமுறை சுண்டிவிட்டபோதும், தலை விழுகின்றது என்று அவர் கூறுகின்றார். பத்து முறையும் தலையே விழுகிறது. இயல்பான நிலையில் இது நடைபெறுவதில்லை. நாணயம் மேலே சென்று கீழே வரும்போது அவர் தம்முடைய மனவலிமை மூலம் அசைந்து செல்லுகின்ற அப்பொருளின் மீது தம்முடைய செல்வாக்கைச் செலுத்துகின்றார். அவர் விரும்பியப்படியே அந்த நாணயம் விழுகின்றது. பகடைக்காய்களை உருட்டுவதிலும் அந்த முறை தான் பின்பற்றப்படுகிறது. அதில் இயற்பியல் சார்ந்த வழி எதுவும் பயன்படுத்தப்படவில்லை.

மகாபாரதத்தில் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் நடைபெற்ற சூதாட்டத்தில் கௌரவர்கள் வெற்றி பெறுவதற்குப் பெருந்துணையாக இருந்தவர் சகுணி என்பவராவார். அவர் தம் மனவலிமையின் மூலம் அசைகின்ற பகடைக்காய்களில் தம் செல்வாக்கைப்பயன்படுத்திக் கௌரவர்களுக்குச் சாதகமாகவே பகடைக்காய்கள் விழுமாறு செய்து பாண்டவர்களைச் சூதாட்டத்தில் தோல்வியடையச் செய்தார். இது சார்பான புனைகொள்கை நிகழ்ச்சி அல்லது திறமை, பொருளை வசப்படுத்துதல் ( Phycho kisesi ) என்ற கருத்துச் சொல்லால் குறிப்பிடப்படுகின்றது.

தற்செயலாகச் சில இலக்குகள் ( Targets ) முன் பதிவு செய்யப்படலாம். புலன்காட்சி செய்த ஒருவர் அவற்றை நினைவில் கொள்ள முயலுகின்றார். செயல் முதல்வர் ( Agent ) அந்த இலக்குகளைத் தனி மிகையான தற்செயல் எண்களாக அனுப்ப முயலு கின்றார். செயல் முதல்வரின் தனிமிகையான தற் செயல் எண்கள் அவருடைய எண்ணங்களின் அல்லது இயற்பியல் இலக்குகளில் துலங்கல்கள் என்று கருதப்படுகின்றன. முற்றிலும் சரியான தொலை யுணர்வுப் பரிசோதனைகள் பல வெற்றி பெற்ற முடிவுகளுடன் நடத்தப்பட்டிருக்கின்றன. எ.கா. மக்மோகன் என்பவர் தம் பரிசோதனையில் தனிப் பட்ட குழுக்குரியை பயன்படுத்தினார். ஒரு தற்செயல் - எண் அட்டவணையின் இலக்கங்களைத் தனி மிகை யான புலனுணர்வுச் சின்னங்களாக மாற்றுவதற்குக் குழுக்குறிகளை எழுத்துமூலமாக பேச்சு மூலமாக அறிவிக்கவில்லை. தற்செயல் நிகழ்ச்சியை விட மிகவும் குறிப்பிடத்தக்க வகையில் சிறப்பான முறை யில் பரிசோதிக்கப்படுவோர்கள் அச்சின்னங்களை அவற்றின் விளைவுகளோடு சுட்டிக்காட்டினார்கள்.

தொலையுணர்வின் விளைவுகளை ஆராய்கின்ற போது தொலைவிடக்காட்சியை முற்றிலும் புறக் கணித்துவிட முடியாது. ஏனென்றால் பரிசோதிக்கப் படுவோர்கள் பரிசோதனையாளரின் சிந்தனை மாற்றங்களுக்குத் தொலையுணர்வாகத் துலங்குதலை விடத் தொலைவிடக் காட்சியாகத்தான் அதிகமாகத் துலங்குகின்றனர். அதனால் அந்த நிலைகளில் உண்மையான தொலையுணர்வுச் செயல்விளக்கம் செய்யக்கூடியதாக இல்லை. செயல் முட்டுக்களி னால் தொலையுணர்வுக்கும் தொலைவிடக் காட்சிக் கும் இடையில் அறிவியல் முறைப்படி வேறுபாடு காண்பது பொருளற்றதாகத் தோன்றுகிறது. தொலை யுணர்வுப் பரிசோதனைகளில் இரட்டையர்கள் மற்ற வர்களைவிடச் சிறப்பாகத் துலங்கியிருக்கின்றனர். கட்டுப்படுத்தப்பட்ட இணைகளை விட மனவுறுதி ஒப்பந்தத் தம்பதிகள் அதிகமான வெற்றி எண்களைப் பெற்றிருக்கிறார்கள். சிமிட்லர் ( Schmeidler ), திருமதி இசுடுவர்ட் ( Stewart ), ரைசு ( Rice ), டவுன்சென் ( Townsend ) போன்றவர்கள் தொலையுணர்வுத் துலங் கல் வேறுபாடுகளைப் பரிசோதனைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். வெற்றி எண்கள் முறையை பயன்படுத்தி அளவாய்வாக முடிவுகளை கொண்டு விளக்கமளித்திருக்கின்றனர். கனவுகளின் மீது அண்மைக் காலத்தில நடைபெற்ற ஆய்வுகளிலும் தொலையுணர்வு அளவாய்வான முடிவுகளைக் கொண்டிருக்கின்றன.

தொலையுணர்தலின் செயல்முறை நிகழ்ச்சி யொன்றை விளக்குவதின் மூலம் அதனுடைய கருப் பொருள் தெளிவுபட்லாம். சயில்டு என்பவர் தன் மிகையுணர்வு புலன்காட்சி என்ற தம் கட்டுரையில் தம் தாய்வழிப்பாட்டனார் எழுதிய வாழ்க்கைக் குறிப்பு என்ற நூலில், வாழ்க்கையில் தமக்கு நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை விளக்குவதற்கு மிகவும் கடினமாக இருக்கின்றது என்ற தலைப்பில் நடந்தவொரு நிகழ் ச்சியை விவரிக்கின்றார். அவர் விளக்குகின்ற நிகழ்ச்சி தொலையுணர்வு, தொலைவிடக்காட்சி என்ற இரண்டு தனிமிகைப் புலனுணர்வுகளைக் கொண்ட தாக இருக்கின்றது.

சயில்டின் பாட்டனார் தம் சொந்த மாநிலமான பென்சில்வேனியாவை விட்டு, மெக்சிகோவுக்குச் சென்று ஒரு சுரங்கத்தையும், ஒரு மரத்தொழிற் சாலையும் நிர்வகித்து வந்தார். ஒரு நாள் அவர் தம் கூட்டாளியுடன் சுரங்கத்தில் காலை முதல் மதியம் வரையில் வேலை செய்து, களைப்படைந்து சுரங் கத்தை விட்டு வெளியில் வந்து, தம் மதிய உணவை யருந்திக் கொண்டிருந்தார். உணவு எவ்வளவு நன் றாக இருக்கிறது என்று சுவைத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். உடனே துள்ளிக் குதித்தார். அது சமயம் பயங்கரமான காற்றுப்புயலடித்து வானம் ஒரே புழுதிமயமாகக் காணப்பட்டது. உடனே வெளி யில் ஓடினார். குதிரை வண்டிக்காரரிடம், உடனே வண்டியில் குதிரைகளை பூட்டச் சொன்னார். ‘தொழிற்சாலைக்கு உடனே செல்ல வேண்டும். மிக வேகமாக வண்டியைச் செலுத்து, என்னை அங்குள்ள வர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருப்பார்கள் ’ என்று கூறினார். அவரது உடலில் நடுக்கம் காணப்பட்டது. அதைக்கண்ட அவருடைய கூட்டாளி, ‘உங்கள் உடம் புக்கு என்ன, படுத்து ஓய்வு எடுத்துக்கொள்ளுங்கள்’ என்று கூறினார். அவர் அதைப் பொருட்படுத்த வில்லை. வழியில் தொழிலாளி ஒருவர் புழுதி படர்ந்த ஆடையுடன் அவரை நோக்கி விரைவாக வந்து கொண்டிருந்தான். அவர் வண்டியை நிறுத்தச் சொன்னார். வந்தவன், ‘நீங்கள் தொழிற்சாலைக்கு உடனே வரவேண்டும் என்று எல்லோரும் கூறினார்

கள்' என்றான். வண்டியில் அவரையும் ஏறிக் கொள்ளச் சொன்னார். தொழிற்சாலையை அடைந்தார். தொழிற்சாலையில் பயங்கர தீ விபத்து. உடனே அதனை அணைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்தார். இன்னும் முப்பது மணித்துளிகள் தாமதமாக வந்திருந்தால் அவருடைய தொழிற்சாலை முழுவதும் எரிந்து சாம்பலாயிருக்கும். அவருடைய சொத்து முழுவதும் அழிந்து போயிருக்கும். தீப்பிடித்த நேரத்தைக் கேட்டுத் தெரிந்தபோது, அவர் சாப்பிடுகையில் துள்ளிக் குதித்த போது தான் தொழிற்சாலையிலும் தீ பிடித்தது. எது அவரை இவ்வாறு செய்யத் தூண்டியது? அவர் பெற்ற விசித்திரமான அனுபவங்களான தொலையுணர்வும், தொலைவிடக்காட்சியுந்தான்.

தொலையுணர்வு அனுபவங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் ஏதேனும் ஒரு சமயத்தில் நேரிட்டிருக்க முடியும். ஆனால் அவர்கள் அதை, இது உண்மைதானா என்று சரிபார்த்துக்கொள்வதில்லை. சிலர் அதில் அதிகமான தீவிரங்காட்டி அத்திறமையைப் பெருக்கிக் கொள்கின்றனர். அத்திறமை தனிமிகையான புலனுணர்வின் ஏதாவது ஒரு கிளை அனுவமாகவுமிருக்கலாம். தனிமிகையான புலனுணர்வில் தனியாள் வேறுபாடுகள் நிறையவுண்டு. ஒருவர் தன்னிடமிருக்கும் தனிமிகையான புலனுணர்வுத் திறமையை அறியாமலுமிருக்கலாம். பரிசோதனைகளின் மூலம் அத்திறமை சோதித்துப் பார்க்க முடியும். யாரிடம் அத்திறமை அதிகமாக இருக்கின்றதோ அவரை இத்துறையில் நன்கு ஊக்குவித்து அவருடைய தனிமிகையான புலனுணர்வின் ஏதாவது ஒரு கிளையை விருத்தி செய்யமுடியும். இத்திறமை தற்செயல் நிகழ்ச்சி என்றோ தனிமிகையான தற்செயல் என்றோ புறக்கணித்துவிட முடியாது.

- மு. இரா.

**நடமாடும் நீதிமன்றம் :** நீதிமன்றங்கள் இந்திய நாட்டைப் பொறுத்தவரை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. குற்ற இயல் நீதிமன்றங்கள் என்றும் உரிமையியல் நீதிமன்றங்கள் என்றும் இரு வகையாக நீதிமன்றங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. குற்ற இயல் நீதிமன்றங்கள் குற்ற இயல் நடைமுறைச் சட்டப்படியும் (Criminal Procedure Code), உரிமையியல் நீதிமன்றங்கள் உரிமை இயல் சட்ட நடைமுறைப்படியும் ( Civil Procedure Code ) வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கின்றன.

நீதிமன்றம் நிலையாக ஒரு கட்டத்தில் நிலைநாட்டப்பட்டு வழக்குகள் அங்கு விசாரிக்கப்பட்டுத் தீர்ப்புகள் பகரப்படுகின்றன. ஆனால் குற்றவியல் நீதிமன்றங்கள் பழைய காலங்களில் அதாவது ஏறத்தாழ நாற்பது அல்லது ஐம்பதாண்டுகட்கு முன் வருவாய்துறையிலிருந்து பிரிக்கப்படாததால் வருவாய்த்துறைப் பணிச் சுமையும் கூடுதலாக இருந்ததால் இவர்கள் தம் அதிகார எல்லைக்குள் தங்கும் இடங்களுக்கெல்லாம் விசாரணை மாற்றப்பட்டது. ஆங்கிலத்தில் கேம்ப் கோர்ட் ( Camp Court ) என இதனை அழைப்பர். வட்டாட்சியர் நடுவராக இயங்கியதால் அவர் வருவாய்த்துறைப் பணிக்காகத் தங்கும் பிற ஊர்களிலும் விசாரணை நடைபெறும். இப்படி நீதிமன்றம் நடமாடும் நீதிமன்றமாகக் குற்றவியல் துறையில் நீண்ட காலம் இயங்கி வந்தது. நீதித்துறை வருவாய் துறையிலிருந்து பிரிக்கப்பட்ட பிறகு இந்த நிலை நீடிக்கவில்லை. நடமாடும் நீதிமன்றம் கைவிடப்பட்டது. ஆனால் சில சிறு குற்றங்கள் நடக்கும்போது குற்றவாளிகளைப் பல முறை நீதிமன்றத்திற்கு அலைய விடாமல் தடுத்திடவும் செய்த குற்றத்தைக் குற்றவாளி ஒத்துக்கொள்ளும்போது உடனே தண்டனை வழங்கவும் நடமாடும் நீதிமன்றங்கள் இப்போது சென்னை போன்ற நகரங்களில் இயங்கி வருகின்றன.

பேருந்து ஒன்றில் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. குற்றவியல் நீதிமன்ற நடுவர் அதில் அமர்ந்திட வசதி செய்யப்பட்டு நீதிமன்றத்திலுள்ள குற்றவாளிக் கூண்டு உட்பட அனைத்தும் பொறுத்தப்பட்டுள்ளது. மிகவும் சிறிய குற்றங்கள் இந்நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுகின்றன. பெரும்பாலான வழக்குகளில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொள்வதால் அங்கேயே தண்டனை விதிக்கப்பட்டு வழக்கு முடிவுக்கு வருகிறது. நடமாடும் நீதிமன்றங்கள் காரணமாக நீதிமன்றங்களில் வழக்குச் சுமை குறைகிறது. வழக்கும் விரைவில் முடிவடைகிறது. போக்குவரத்து தொடர்பான சிறு வழக்குகளை இந்நீதிமன்றம் விசாரிக்கிறது. சாலை ஒழுங்கைப் பராமரிக்கத் தவறியவர்கள் இந்நீதிமன்றத்தில் உடனுக்குடன் விசாரிக்கப்படுகிறார்கள். ஒரே நாளில் இந்த

நடமாடும் நீதிமன்றம் பெருநகரங்களில் பல இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு காவல்துறை தொடுக்கும் வழக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கிறது.

- வி.சு.

**நடுவண் கல்வி நிறுவனம்** : நடுவண் கல்வி நிறுவனம் என்பது தில்லிப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையாகும். இத்துறை 1946ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் பத்தொன்பதாம் நாள் தொடங்கப்பட்டது. இத்துறையில் இளநிலை மற்றும் முதுநிலை கல்வியில் பிரிவுகள் ( B.Ed. & M.Ed.) இளம் முனைவர் ( M.Phil. ), முனைவர் ( Ph.D.) பட்டம் பெறுவதற்கான வகைகள் செய்யப்பட்டுள் ளன. இத்துறையில் நுழைவுத்தேர்வுகள், பயிற்றுவித் தல், இறுதித்தேர்வுகள் ஆகியன இந்தி, ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள் மூலமாக நடத்தப்படுகின் றன. இங்கு உருது, பஞ்சாபி போன்ற மொழிகளுடன் வங்காள மொழியும் பயிற்றுவிக்கப்படுகிறது. விரை வில் மௌலான ஆசத் மையம் என்ற ஒரு மையம் தொடங்கப்பட இருப்பதாக 1989ஆம் ஆண்டு விழா அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மௌலான ஆசத் 1947ஆம் ஆண்டு இந்த நிறுவ னத்தின் முதலாம் ஆண்டு விழாவின்போது பின்வரு மாறு கூறினார்.

"இந்த நிறுவனத்தில் பயிற்சி பெற்று வெளியே வருகின்ற ஆசிரியர்கள் மாநிலங்களிலுள்ள அனைவ ருக்கும் முன்மாதிரியாகத் திகழ்வார்கள். முக்கிய மாக இந்திய நாட்டில் புதிய கல்விச் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் ஒரு மையமாக இந்நிறுவனம் விளங் கும். நாட்டிலுள்ள அனைத்து பயிற்சி நிறுவனங் களுக்கும் இது ஒரு கலங்கரை விளக்கமாக ஒளி வீசும். இந்நிறுவனத்தை நோக்கியுள்ள பல சிக்கல்களில் குழந்தைகள் தமது தனித்தன்மையை வளர்த்துக் கொள்ளும்படியும், உலக நடப்புகளை அறிந்து கொண்டு அதற்கேற்ப தன்னைத் தயார் செய்து கொள் ளும் வகையிலும் தொடக்கக் கல்வியை உருவாக்கு வது என்பது முக்கியமான ஒன்றாகும்"

இந்த ஆண்டு விழா உரை பல ஆண்டுகளுக்கு முன் வழங்கப்பட்டிருப்பினும் இதன் முக்கிய கருத் துகள் இந்நிறுவனத்தின் இன்றைய செயல்பாட்டு குறிக்கோள்களைத் தெளிவாக விளக்குகின்றன.

ஒரு முறை மாநிலங்களவையில் ஆர்.கே. நாராய ணன் இப்போது குழந்தைகள் நிறைய புத்தகச் சுமைகளைத் தூக்க வேண்டிய பரிதாப நிலையை மக்களின் கவனத்துக்குக் கொண்டு வந்தார். ஆனால் இந்த மையத்தைச் சார்ந்துள்ள 'மாதிரிக்கல்வி நிறு வனத்தில்' முதலாம், இரண்டாம் வகுப்பு படிக்கும் குழந்தைகள் புத்தகங்களை எடுத்துச் செல்ல வேண் டிய தேவையில்லை. இந்த நிறுவனத்தில் சமூகத்திற் குப் பயனுள்ள வகையில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிறுவனம் சமூகச் சிக்கல்கள், பெண்கள் மேம்பாடு போன்ற முக்கியமான பிரிவு களில் ஆராய்ச்சி செய்து மற்ற நிறுவனங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கி வருகிறது.

- பி.பி.

**நடுவண் நிலைப் பள்ளிக்கல்வி** : நடுவண் நிலைப் பள்ளிக் கல்வியின் தோற்றத்திற்கு மைக்கேல் சாட்லர் ( Michael Sadler ) 1919ஆம் ஆண்டு வித்திட் டார். சாட்லர் தலைமையிலான கல்விக்குழு தன் பரிந் துரையில் பள்ளி இறுதிப் பொதுத்தேர்வுகள் நடத்துவ தற்கெனத் தனியான குழுமம் ஏற்படுத்தவேண்டும் என்று கூறியது. அதன் அடிப்படையில் இடைநிலைக் குழுமங்கள் உத்திரபிரதேசம், இராசஸ்தானம், மத் திய இந்தியா, குவாலியர் ஆகிய பகுதிகளில் முதலில் தோற்றுவிக்கப்பட்டன. பத்தாண்டுகள் கழித்து குறுநில மன்னர்களால் ஆளப்பட்ட அவ்விடங்களில் அனைத்தும் இந்தியாவின் ஏனைய பகுதிகளில் அந்தக் குழுமங்களை நிர்வகிப்பது கடினம் என்று கருதியதனால் 1929ஆம் ஆண்டு எல்லா மாநிலங் களுக்கும் கூட்டாகக் குழுமம் ஏற்படுத்தப்பட்டது. அதன் மூலம் செலவு குறைந்ததோடு ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது.

குறுநில மன்னர்களால் ஆளப்பட்ட மாநிலங்க ளில் இடைநிலைக் கல்வி விரைவாக வளர்ச்சியுறத் தொடங்கியது. இடைநிலைக் கல்விக் குழுமங்கள் கல்வியின் தரத்தை உயர்த்த முயற்சி எடுத்துக் கொண்டதோடு அவ்வப்போது தணிக்கையும் மேற் கொண்டன. அதன்கீழ்ப் பட்ட மேற்படிப்பு ஆசிரியப் பயிற்சியில் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டது அக் கல்விக் குழுமத்தின் மற்றுமொரு சிறப்பாகும். இராசசுதான் பல்கலைக்கழகம் 1947ஆம் ஆண்டு

ஏற்படுத்தப்பட்டு அது இராசபுதன மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் தேர்வுப் பணியை மேற்கொண்டது. மத்திய இந்திய மாநிலம் 1951ஆம் ஆண்டு தமக்கென ஒரு குழுமத்தை ஏற்படுத்தியது. ஆகவே, முதலில் நிறுவப் பட்ட குழுமம் ஆசுமீர், போபால், விந்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு மட்டுமே பொறுப்பாக அமைந்தது. இந்திய அரசு 1952ஆம் ஆண்டு அந்தக் குழுமத்தின் சட்ட அமைப்பைத் திருத்தம் செய்து அதன் எல்லையை 'சி' பகுதி மாநிலங்களுக்கும் 'டி' பகுதி ஆட்சிப்பகுதிகளுக்கும் விரிவுபடுத்தியது. திருத்தியமைக்கப்பட்ட அக் குழுமத்திற்கு 'நடுவண் இடைநிலைப் பள்ளிக் கல்வி குழுமம்' என்று பெயர். அந்த நேரத்தில் இந்தியாவிலுள்ள எந்தப் பள்ளியும் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களோடு, குறிப்பாக கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தோடு இணைக்கப்படக்கூடாது என்ற கருத்தும் நிலவத் தொடங்கியது. அத்தகைய இணைப்பு இந்தியாவின் பெருமையைக் குறைக்கும் என்று கருதப்பட்டது. ஆகவே கேம்பி ரிட்ஜ் பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டிருந்த பள்ளிகள் நடுவண் இடைநிலைக் கல்விகுழுமத்தோடு இணைக்கப்பட்டன. மேலும் மத்திய அரசுப் பணியாளர்களின் குழந்தைகளுக்காகவும், இராணுவத்தினரின் குழந்தைகளுக்காகவும் அத்தகைய பள்ளிகள் தேவைப்பட்டன. அதன் அடிப்படையில் 1962 ஆம் ஆண்டு இக்குழுமம் மீண்டும் திருத்தியமைக்கப் பட்டு இந்தியா முழுமைக்கும் இத்தகைய பள்ளியின் பயன் கிட்டும்படி செய்யப்பட்டது. குறிப்பாக, ஒரு மாநிலத்திலிருந்து வேறொரு மாநிலத்திற்குப் பணி மாற்றம் அடைந்து செல்வோருக்கு நடுவண் இடைநிலைப்பள்ளிகள் பேருதவியாக இருந்தன.

**நடுவண் நிலைப்பள்ளிக் குழுமத்தின் பணிகள் :**

1.தேர்வுகள் நடத்தி அதில் வெற்றி பெறுவோருக்குச் சான்றிதழ்கள் வழங்குதல்.

2. நடுவண் நிலைப்பள்ளிக்குப் பாடத்திட்டம் அமைத்தல்.

3. நடுவண் நிலைப்பள்ளிக் குழுமத்தில் சேர்வதற்கான விதிமுறைகளை வகுத்து, அவற்றை நிறைவு செய்யும் பள்ளிகளுக்கு இணைப்பு அளித்தல்.

4. தணிக்கை செய்தல்

5. இக்குழுமத்தோடு இணைக்கப்பட்ட பள்ளிகளின் தரம் உயர்வதற்கான விதிமுறைகளை வகுத்தல்.

6. நடுவண் நிலைப்பள்ளிகளுக்கான பாட நூல்களை வெளியிடுவதற்கான விதிமுறைகளை வகுத்தல்

7. அத்தகைய பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் தகுதியை நிருணயம் செய்தல்.

8. இந்திய அரசுக்கு இக்குழுமத்தின் கருத்துகளை அவ்வப்போது அளித்தல்.

9. கட்டுப்பாட்டு அலுவலரின் கீழ் இக்குழு பணியாற்றுதல்.

10. கட்டுப்பாட்டு அலுவலர்கு இக் குழுமத்தைக் கலைப்பதற்கும், வேறு உறுப்பினர்களை நியமனம் செய்வதற்கும் அதிகாரம் வழங்குதல்.

11. குழுமத்தின் நிர்வாகக் குழுவில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை நாற்பது ஆகும். இதில் கல்வி, பண்பாட்டுத்துறை, குடும்ப நலத்துறை ஆகிய அமைச்சுகளின் பிரதிநிதிகளும், இந்தியப் பல் கலைக்கழகக் குழுமப் பிரதிநிதிகளும் நியமிக்கப்படுதல். மேலும் பல்வேறு துறைகளில் வல்லுநர்களாகத் திகழ்பவர்களும், இயக்குநரும், மத்தியப் பள்ளிக் குழுக்களின் தலைவரும், இராணுவக்கல்லூரியின் இயக்குநரும், மருத்துவத் துணை இயக்குநரும் இக் குழுமத்தில் இடம்பெறச் செய்தல்.

பதினோராண்டு கால நடுவண் நிலைப்பள்ளிக் கல்வி இந்திய இடைநிலைக் கல்வியின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு, அதன் தேர்வுகளைப் பதினோராம் ஆண்டின் இறுதியில் நடத்துகின்றது. அம்முறை 1966 ஆம் ஆண்டு வரை பின்பற்றப்பட்டது. அதன் பின்னர் தேசியக்கல்விக் கொள்கையின் அடிப்படையில் நடுவண் நிலைப்பள்ளிகளும் 10, +2 கல்வி முறையினை 1975 ஆம் ஆண்டு முதல் பின்பற்றத் தொடங்கின. அதன் அடிப்படையில் பதினோராமாண்டின் இறுதியில் நடத்தப்பட்ட தேர்வுகள் மூன்று தேர்வுகளாக மாற்றப்பட்டன. அதாவது பத்தாம் வகுப்பின் இறுதியில் அனைத்திந்திய இடைநிலைப் பள்ளித் தேர்வு, பதினோராம் வகுப்பின் இறுதியில் அனைத்திந்திய முதுநிலைப் பள்ளிச் சான்றிதழ் தேர்வு பகுதி ஒன்று, பன்னிரண்டாம் வகுப்பின் இறுதியில் மீண்டும் அனைத்திந்திய

முதுநிலைப் பள்ளிச் சான்றிதழ்த் தேர்வுகள் நடத்தப் படுகின்றன.

**நடுவண் நிலைப்பள்ளிக் கல்வியின் பாடத்திட்டம் :** நடுவண் நிலைப்பள்ளிக் கல்வியில் கற்பிக்கப் படும் பாடங்களை இருவேறு பகுதிகளாகப் பிரித்துள்ளனர். 1. கட்டாயப் பாடங்கள், 2. விருப்பப் பாடங்கள். கீழ்க்காணும் பாடங்கள் பள்ளிகளில் கட்டாயப் பாடங்களாகும். ஆங்கிலம், இந்தி, பதினைந்து இந்திய மொழிகளில் ஏதாவது ஒன்று, கணக்கு, அறிவியல், சமூகவியலும் இந்தியப் பண்பாடும், கைத்தொழில்கள் கீழ்க்காணும் பாடப்பிரிவுகளில் குறைந்தது மூன்று பாடங்கள் விருப்பப் பாடங்களாக எடுத்துப் படிக்க வேண்டும். 1. மானிடவியல், 2. அறிவியலும் தொழில் நுட்பமும், 3. வணிகவியல், 4. வேளாண்மை, 5. நுண்கலைகள், 6. மனையியல்.

நடுவண் நிலைப்பள்ளிக் கல்வி பன்னிரண்டு ஆண்டுகளாக மாற்றப்பட்டபோது பாடத்திட்டத்திலும் மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன் அடிப்படையில் பாடத்திட்டங்கள் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன. 1. கல்விசார் பாடத்திட்டம் ( Academic Courses ), 2. தொழில் கல்விப் பாடத் திட்டம் ( Vocational Courses) உயர் கல்வியினைத் தொடர விருப்பமுள்ளவர்கள் கல்விசார் பாடத்திட்டத்தையும், பள்ளி இறுதித் தேர்வு முடிந்தவுடன் தொழிலில் ஈடுபட விரும்புவோர் தொழிற் கல்வியையும் பயில்வதற்கான வாய்ப்புகள் அதன் மூலமாகக் கிடைத்தன.

அறிவியல் பாடங்களைப் பயிலும் மாணவர்கள் நுண்கலைகளையும் பயில்வதற்கான வாய்ப்புகள் அளிக்கப்பட்டன. கட்டாயப் பாடங்களுக்காக மொத்த நேரத்தில் இருபத்தைந்து விழுக்காடு ஒதுக்கப்பட்டது. அதில் ஒரு மொழியும், இன்றைய இந்தியா, இந்தியப்பண்பாடு, சேவையும் சமுதாயமும், ஊரக வளர்ச்சி ஆகிய நான்கு பாடங்களும் கட்டாயமாக்கப்பட்டன.

தொழிற்கல்வியில் இருபத்தைந்து விழுக்காடு நேரம் அடிப்படை அறிவியலுக்கும், சமூகவியலுக்கும் ஒதுக்கப்பட்டது. அந்த இரு பாடங்களும் தொழில்களோடு இணைந்தவையாக அமைந்திடல் வேண்டும் என்பதும் விதி. எஞ்சியுள்ள ஐம்பது விழுக்காடு நேரம் அந்தத் தொழிலைப்பற்றிய அறிவையும் அதனைச் செய்வதற்கான திறனைப் பெறுவதற்காகவும் ஒதுக்கப்பட்டது. ஒவ்வொரு மாணவனும் மூன்று விருப்பப்பாடங்களையும் கட்டாயப் பாடங்களோடு எடுத்துப் படிக்க வேண்டும்.

நடுவண் நிலைப்பள்ளிக் கல்விக் குழுமம் மேற்கண்ட விரிவான பாடத்திட்டத்தை அளித்தாலும் பொருளாதார நிலை காரணமாகப் பள்ளிகளில் அளிக்கப்படும் விருப்பப் பாடங்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே காணப்படுகின்றன.

**தேர்வுமுறை :** நடுவண் நிலைப்பள்ளிகளில் இருவகையான தேர்வுகள் நடத்தப்படுகின்றன. ஒன்று பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களே மதிப்பீடு செய்தல். மற்றொன்று வெளி மதிப்பீட்டு முறை. ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரை ஆசிரியர்களே அந்தந்தப் பள்ளிகளில் மதிப்பீடு செய்வார்கள். பத்தாம் வகுப்பு வரை இறுதியில் நடுவண் நிலைப் பள்ளிக் குழுமம் தேர்வுகளை நடத்துகிறது. அந்த இறுதித் தேர்விலும் சமுதாயத்திற்குப் பயனுள்ள உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட செயல்களுக்கும் உடற்கல்விக்கும் நலவாழ்வுக் கல்விக்கும் உள்மதிப்பீட்டின் மூலமாகவே மதிப்பெண்கள் கொடுக்கப் படுகின்றன.

மேல்நிலைக் கல்வியின் 11, 12ஆம் வகுப்புகளுக்கான தேர்வுகளுக்கு வினாத்தாள் குழுமத்தால் தயாரிக்கப்பட்டாலும், பதினோராம் வகுப்பு விடைத்தாள்களை அப்பள்ளி ஆசிரியர்களே மதிப்பீடு செய்கிறார்கள். அம்முறைகளைக் கையாளுவதின் மூலமாக உள் மதிப்பீட்டிற்கும், வெளி மதிப்பீட்டிற்கும் சம வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது.

மாணவர்கள் அவர்களுக்கு விருப்பமான எந்த மொழியிலும் தேர்வுகள் எழுதலாம். ஆனால் வினாத்தாள் ஆங்கிலத்திலும், இந்தியிலும் தயாரிக்கப்படும். இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் ஐம்பது முதல் அறுபது வெளிநாடுகளிலும், தேர்வு மையங்கள் உள்ளன. தேர்வுகள் மார்ச் - ஏப்ரல், செப்டம்பர் - அக்டோபர் ஆகிய மாதங்களில் இருமுறைகள் நடத்தப் படுகின்றன. நடுவண் இடைநிலைப் பள்ளிக் கல்வியின் தோற்றம் 1919ஆம் ஆண்டாக இருந்தாலும் உண்மையில் இதன் பணியும் செயல்பாடுகளும் 1962 ஆம் ஆண்டுதான் தொடங்கின.

- ஜி. ப.

**நந்திதேவர்:** இவர் சிவபெருமான் சன்னதியின் அதிகாரி என வழங்கப்படும் பெருமைக்குரியவர். மிகப்பழங்காலத்தோடு தொடர்புடையதாக இவர் வரலாறு கூறப்படுகிறது. முன்னொரு காலத்தில் சிலாத முனிவர் என்ற பெயருடைய முனிவர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவருக்குக் குழந்தைப்பேறு வாய்க்கவில்லை. அவருடைய மனைவியர் மக்கட் பேறைப் பெரிதும் விரும்பினர். எனவே, முனிவர் முக்கட் கடவுளாகிய சிவபெருமானை நோக்கிக் குழந்தைப் பேறு வேண்டித் தவம் செய்தார். சிரீசைல பர்வதத்தின் நிருதி மூலையை அடைந்து, நீரையும் காற்றையும் உண்டு, மன ஒருமைப்பாட்டுடன் மூன்று கோடி ஆண்டுகள் தவம் செய்தார். பின்னர், மீண்டும் மூன்று கோடி ஆண்டுகள் கடுகளவான கற்களை உண்டு கடுந்தவம் செய்தார். அவர் தவத்தின் வலிமையைக் கண்ட சிவபெருமான் அவர் முன்னர் எழுந்தருளித்தவம் செய்வதன் நோக்கத்தை வினவினார். முனிவர் சிவ பெருமானிடம் உம்மைப் போன்றதொரு குழந்தை எனக்கு வேண்டும் என வேண்டினார்.

சிவபெருமான் முனிவரிடம், ''நீர் வேள்வி செய்வதற்குரிய நிலத்தை உழும்போது அங்கு நம்மைப்போலும் அழகுள்ள புதல்வன் ஒருவன் தோன்றுவான்'', என்றார். இறைவனின் திருவாக்கிற்கேற்ப முனிவரும் நிலத்தை உழுதார். அப்போது உழுகாலில் ஒரு பொற்பெட்டியில் நந்திதேவர் தோன்றியிருந்தார் என்று நந்திதேவரின் பிறப்பு வரலாறு கூறுகிறது.

நந்திதேவர் செந்நிறம் உடையவர். முக்கண் கொண்டவர். சடை உடையவர். செபமாலையும் இடக்கையில் சூலமும் தரித்தவர். அபய வரதங் கொண்டு சதுர்புசராய இருப்பவர் என அவருடைய தோற்றப்பொலிவு விளக்கப்படுகிறது.

நந்திதேவர் கற்க வேண்டிய கலைகளையெல்லாம் கற்றுத்தெளிந்து வல்லவராக விளங்கினார். எல்லாம் வல்ல இறைவனாகிய சிவபெருமானின் திருவருளை வேண்டி மூன்று முறை தவம் செய்தார். அத்தவங்களின் மூலம் பெறத்தக்க நன்மைகளை எல்லாம் பெற்றார். இவர் கோடி ஆண்டுகள் தவம் செய்து சிவ பெருமானின் வாகனமாகவும் துவாரபாலகராகவும் விளங்கினார் எனப்புராணம் கூறுகிறது.

நந்திதேவர் பிதுர் தேவர்களின் உள்ளத்தில் தோன்றிய சுயஞ்ஞை என்பவளை மணம் செய்து கொண்டு திருக்கயிலாயத்தை அடைந்தார். சிவபெருமானின் தலைமை மாணாக்கராகவும் சந்தான குரவர்களுக்கு முதற் குருவாகவும் திகழ்பவர் நந்திதேவர் என்ற கருத்தும் காணப்படுகின்றது.

நந்திதேவர் கடுந்தவம் செய்தமையைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் தம்முடைய வாகனமாக்கிக் கொண்டார். அவர் தவம் செய்த சிரீ சைலத்திற்கு நிருதி மூலை நந்தி மண்டலம் என்ற பெயர் பெற்றது. மேலும், சிவ பெருமான் நந்திதேவரிடம், ''உலகம் உள்ள நீ இரண்டாவது சிவமாகப் புவியில் பிறப்பாயாக'' எனக் கட்டளையிட்டார். அதன்படி உலகிலுள்ள தர்க்கவா தம் செய்கின்ற இதர சமயத்தவர்கள் வெற்றி கொள்ளவும், வீர சைவர்கள் ஈடேறவும் உலகில் அவதாரம் செய்யப் புறப்பட்டார் என்று வரலாறு கூறும். இப் பெருமைகளைப் பெற்ற நந்திதேவர் சிவபெருமான் சன்னதியில் அதிகாரியாக இருக்கப்பெற்றவர். திருப்பேரூரில் இவரது திருவுருவச் செப்புப் படிமத்தில் பட்டீசுவர சுவாமியார் வாசற்பிரதாணி என்று பொறிக்கப்பெற்றுள்ளது. கோயிற் சன்னதியில் வீற்றிருக்கும் இடபதேவரினின்றும் நந்திதேவர் வேறு பட்டவர் எனக் கருதுவர்.


- தா. ஈ.

**நல்லுருவ விதி :** முழுநிலக்காட்சி ஒப்பீட்டு வடிவக் கோட்பாட்டினர் புலன்காட்சியைப் பற்றி விளக்கும்போது 'வடிவம் - நிலம்' அமைப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளனர். அதாவது வடிவம் என்பது நிலத்திற்கு முற்பகுதியில் இருப்பதாகும். நிலம் பின்னணியில் இருப்பது நல்லுருவம் என்பது நனவு நிலையில் ஒருவர் நிலத்தில் உள்ள குறிப்புகளை இயக்க ஆற்றலுடன் வகைப்படுத்தித் தெளிவான வடிவம் கொண்ட உருவத்தைப் புலன்காட்சி செய்வதாகும். இவ்வாறு நல்ல உருவமைப்புக் கொண்ட புலன்காட்சி தூண்டல் உருவங்களை நிறைவு பெற்றவையாகவும் ஒழுங்கானவையாகவும் தோன்றச் செய்யும். எனவே, புலன்காட்சியில் ஏதேனும் சிக்கல் தோன்றினால் நல்லுருவவிதி ( Law of Pragnany ) அடிப் படையில் அமைந்த கொள்கை நெறிகள் மூலம் முழுமைக்குக் காரணமாக இருக்கும் பகுதிகளில் சிலவற்றின் செய்பாட்டினை மாற்றி அமைத்து அச்சிக்கலுக்குத் தீர்வு காணமுடியும்.

நல்லுருவ விதியின்படி புலன்காட்சித் துலங்கல் மிகவும் சிக்கன முறையில் வெளிப்படுவதாகும். பல தூண்டல்கள் இருக்குமேயானால் அவை ஏதேனும் ஓர் அடிப்படையில் ஒன்றுகூடி புலன் காட்சிக்குள்ளாகின்றன. இவ்வாறு ஒன்றுகூடும் முறைகள் பல உள்ளன. அவற்றுள் முக்கியமானவை கீழே விளக்கப்பட்டுள்ளன.

1. **அண்மை அல்லது நெருக்கமுடைமை :** ( Proximity ) ஒரு வெற்றிடத்தில் சிலவிடங்களில் சிறுசிறு புள்ளிகள் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது அச்சிறு புள்ளிகளுள் எவை ஒன்றுக்கொன்று அருகில் இருக்கின்றனவோ அவை எல்லாம் ஒன்றுகூடி ஓர் உருவத்தைக் காட்டும். ஒலித் தூண்டல்களை எடுத்துக்கொண்டால் சீரற்றத் தட்டல்களுக்கிடையே இருக்கும் தட்டல்களில் எவை நெருக்கத்துடன் கேட்கப்படுகின்றனவோ அவை ஒன்றுகூடி புலன்காட்சி காதுகளால் செய்யப்படும். எ.கா. டங் டங் டாங் டங் டங் டங் டங். . . டாங் டாங். . . என்றிருந்தால் டங்குகள் ஒருபுறமும் டாங்குகள் ஒருபுறமும் பிரிக்கப்பட்டு புலன்காட்சி செய்யப்படும். இதைத் தான் அண்மை அல்லது நெருக்கமுடைமை ( Proximity ) என்பர்.


2. **ஒற்றுமை :** ஒற்றுமை ( Similarity ) என்ற கூற்றின் படியும் நிலத்தில் உள்ள ஒரு வடிவத்தின் தனிமங்கள் ஒன்றுகூடி வடிவம் ஒன்று வரக் காரணமாக இருக்கலாம். எ.கா. கீழ்வரும் உருவங்கள் இரண்டு. அவற்றில் ஒன்று கருநிறங்கொண்ட சதுரங்கள், மற்றொன்று வெண்ணிற சதுரங்கள். இவ்விருவகைச் சதுரங்கள் நிற ஒற்றுமையின் காரணமாக இருபிரிவு வடிவங் களாகத் தெரிகின்றன. இதேபோன்று எடுத்துக்காட்டு எண் இரண்டிலும் பெருக்கல் குறிகள் ஒரு வகை உருவங்களாகவும் வட்டங்கள் மற்றொரு வகை உருவங்களாகவும் உருவமைப்பு ஒற்றுமையினால் புலன் காட்சி செய்யப்படும்.



எடுத்துக்காட்டு – 1 எடுத்துக்காட்டு – 2

3. **செவ்வொழுங்கு :** செவ்வொழுங்கு ( Symmetry) என்ற கூற்றின்படி நிலத்திலுள்ள செவ்வொழுங்கற்றப் பகுதிகளைவிட செவ்வொழுங்கு உடைய பகுதிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து வடிவம் ஒன்றினை அமைத்துக்காட்டும். கீழே வரையப்பட்டுள்ள இரு வகை உருவங்களில் ஒன்றான எ.கா எண் மூன்றில். கருநிறப்பகுதி செவ்வொழுங்கு உடையதாகவும் வெண்ணிறப் பகுதி ஒழுங்கற்றதாகவும் இருப்பதால் கருநிறப்பகுதி மட்டும் உருவம் ஒன்றினைக் காட்டுகிறது. ஆனால் எ.கா. நான்கில் வெண்ணிறப் பகுதி ஒழுங்குடையதாகவும் கருநிறப்பகுதி ஒழுங்கற்றதாகவும் இருப்பதால் வெண்ணிறப்பகுதி ஓர் உருவத்தைக் காட்டச்செய்கிறது.

4. **நன்தொடர்ச்சி :** நன்தொடர்ச்சி ( Good Continuation ) என்ற கூற்றின் படி தூண்டல் பொருட்களை ஒரு விதமாக வரிசைப்படுத்தி வைத்திருந்தால் அவை அனைத்தும் ஒரு தொடராகக் காட்சியளிக்கும். அது மட்டுமின்றி அத்தொடர் ஓர் உருவத்தைக் கொண்டதாக இருக்கும். கீழ்வரும் எ.கா இதை விளக்கும்.


எடுத்துக்காட்டு – 3 எடுத்துக்காட்டு – 4

5. **முடித்தல் :** முடித்தல் ( Closure ) என்ற கூற்றின் படி தளவேறுபாட்டு எல்லைக்கோடு முழுமையாக இல்லாமல் இருந்தாலும் தூண்டல் தனிமங்கள் முடிவுடையனவாகத் தோன்றும். கீழ்வரும் எ.கா. இதை விளக்கும்.

இவ்வெடுத்துக்காட்டில் எண் எட்டு வடி வம் படுத்திருப்பது போல் எடுத்துக்காட்டு எண் ஆறில்



எடுத்துக்காட்டு – 5



எடுத்துக்காட்டு – 6

காட்சி அளிக்கக் காரணம் இரு நிறைவற்ற வட்ட வடிவத்தில் அமைந்த புள்ளிகள் நிறைவுபடுத்தப் பட்டுப் புலன்காட்சி செய்யப்படுவதால் ஆகும். இங்ஙனம் மேற்கூறிய ஐந்து முறைகளும் அடிப் படையாக அமைந்திருக்கும் விதி நல்லுருவ விதி ஆகும்.

- வ. தே. சா.

**நலிவுற்றோர் கல்வி** : சமுதாயத்தில் சமூக, பொருளாதார நிலைகளில் போதிய முன்னேற்றத்தை அடையாமல் இருக்கும் பிரிவினரே நலிவுள்ள மக்க ளாவர். அவ்வாறு பின்தங்கிய நிலையில் உள்ளவர் கள் பல இன்னல்களுக்குட்பட்டு, தாழ்வு மனப்பான் மை, அச்சம், ஏமாற்றம், அடிமைத்தனம் போன்ற உணர்வுகளால் தாக்கப்பட்டு, வாழ்வில் அன்றாடம் பல சிக்கல்களைச் சந்திக்க வேண்டியவர்களாக உள் ளனர். இந்த நிலையைப் பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் பொருளாதார, சமூக அரசியல் கார ணங்கள் மேலும் மோசமாகியுள்ளன. சமூக, பண் பாட்டு அடிப்படையில் இவர்களுக்கு இழைக்கப் பட்ட அநீதிகளும் தொல்லைகளும் இவர்களின் பின் தங்கிய நிலைமைக்குக் காரணமாக இருக்கின்றன.

இன வெறியினால் கடந்த சில நூற்றாண்டுகளாக நீக்ரோக்கள் மிகவும் நலிவுற்ற பிரிவினராகவே இருந்து வருகின்றனர். இந்தியாவில் அது போன்ற இனப்பாகுபாடு இல்லாவிடினும் சாதி அடிப்படை யில் உள்ள பாகுபாடுகள் இன்னும் உறுதியாக இருக் கின்றன.

உலகம் முழுவதும் நலிவுற்ற பிரிவினரைச் சேர்ந்த குழந்தைகள் சத்துணவு, விளையாட்டுப்பொருட்கள், போதிய மருத்துவப் பராமரிப்பு, பொழுதுபோக்கு, அன்பான கவனிப்பு ஆகியவற்றுக்கு வழியில்லாத வறிய நிலையில் உள்ளனர். பல குழந்தைகள் இளம் வயதிலேயே ஏதாவதொரு தொழிலைச் செய்து பணம் ஈட்ட வேண்டிய நிலையில் இருக்கின்றனர். பெற்றோரின் குறைந்த வருவாயை ஓரளவேனும் ஈடு கட்டும் வகையில், குறைந்த ஊதியமாயினும் ஆபத் தான தொழில்களில் கூட அக்குழந்தைகள் பணிபுரி கின்றனர். இதனால் முன்னரே, சமூக பொருளாதரா அடிப்படையில் நலிவுற்ற அக்குழந்தைகள் உளவியல் அடிப்படையிலும் பின்தங்கியவர்களாகவே உள்ள னர்.

இந்தியாவில் சமூக, கல்வி நிலைகளில் பின்தங்கி யவர்களின் நலன் கருதியும், தாழ்த்தப்பட்ட சாதியி னர், பழங்குடியினர் முன்னேற்றத்திற்காகவும் இந் திய அரசியலமைப்பில் 15, 17, 46ஆம் சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. தாழ்த்தப்பட்ட சாதியினர், பழங்குடியினர் ஆகியோரிடையே அனைத்திந்திய அடிப்படையில் எழுத்தறிவு பெற்றோர் விழுக்காடு நூற்றுக்கு முறையே 21.38ம், 16.35ம் என்று 1981ஆம் ஆண்டின் கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது. அப் பிரிவினரில் எழுத்தறிவு பெற்றுள்ள பெண்களின் விகி தம் நூற்றுக்கு பதினொன்றுக்கும் குறைவாகவே உள் ளது.

மக்களாட்சி, சம உடைமை ஆகியவை உலகம் முழுவதும் சிறப்பாகப் போற்றப்படும் இந்நாளில் நலிவுற்ற பிரிவினரின் நலன் கருதி அவர்களின் சுதந்தி ரம், முன்னேற்றம், முழுமையான வளர்ச்சி ஆகியவற் றில் அரசு ஆர்வம் காட்டி வருகிறது. ஒரு சமுதாயத் தின் மாறுபாடு, வளர்ச்சி, நவீனமயமாதல் ஆகியவற் றுக்குக் கல்வி ஒரு முக்கியமான கருவியாக இருக்கி றது. எனவே, பின்தங்கிய நிலையில் உள்ளவர்களுக் குப் பொருத்தமான வகையில் கல்வி அனுபவங் களை வழங்குவதன் மூலமாக அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் அனைவருக்கும் தொடக்கக்கல்வி, வயது வந்தோர் கல்வி, முறைசாராக் கல்வி முதலியவை முக்கிய மானவை. இந்தியாவில் வயதுவந்தோர் கல்வித் திட் டத்தைத் தீவிரமாகச் செயலாற்ற முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. வயது வந்தோர், பெண்

கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகிய நலிவுற்றோரின் கல்வி மேம்பாட்டுகென 1986ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட தேசியக் கல்விகொள்கையில் பரிந்துரைகள் செய்யப்பட்டன. நலிவுற்றோரின் கல்விக்கென முன்னரே பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தாழ்த்தப்பட்ட மக்கள், பழங்குடி மக்கள், பின் தங்கிய வகுப்பினரின் கல்வி :** தேசியக் கல்விக் கொள்கை 1986 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தவரைச் சேர்ந்த, ஆறிலிருந்து பதினோரு வயது வரை உள்ள குழந்தைகள் அனைவருக்கும் 1990ஆம் ஆண்டளவில் முறைசாராக் கல்வி மூலம் தொடக்கக் கல்வியை அளிக்க வேண்டும் எனப் பரிந்துரை செய்துள்ளது. அம்முயற்சி வெற்றியடைய சில அறிவுரைகளையும் தந்துள்ளது. தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி இனத்தைச் சார்ந்தவர்களை ஆசிரியர்களாக நியமிப்பது, மாவட்டத் தலைமையகங்களில் தங்கும் விடுதி வசதியளித்தல், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் பள்ளிகளை அமைத்தல், பாலர் பள்ளிகள், வயது வந்தோர் கல்வி மையங்களை அமைப்பது, தீவுகள், மலைப்பகுதி, பாலைவனப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்குக் கல்வி வசதிகளை விரிவாக்குதல், பிற பின்தங்கிய பகுதியினருக்கு உதவித்தொகை, சீருடை, பாட நூல்கள், குறிப்பேடுகள் ஆகியவற்றை வழங்கி ஊக்குவித்தல் போன்றவை இவற்றில் சிலவாகும். இப்போது இலவசக்கல்வி, இலவச உணவு, தங்குமிட வசதிகள், கைச்செலவுக்கான பண உதவி, தொழில் நுட்ப, அரசு உயர் அதிகாரிகள் தேர்வுக்கான இலவசப் பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகின்றன. தில்லி, பம்பாய், கல்கத்தா போன்ற பெரிய நகரங்களில் தொடக்கப் பள்ளிகள் பயிலும் குழந்தைகளுக்குப் பால், நிலக்கடலை, சில குறிப்பிட்ட சத்துணவுப் பொருட்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், நூலக வசதிகள், விளையாட்டு, பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

**பெண் கல்வி :** பெண்களுக்குத் தன்னம்பிக்கையை வளர்க்கவும், அவர்களுக்குச் சமுதாயத்தில் ஆண்களுடன் சமநிலை அளிக்கவும், அவர்களின் பொருளாதார சுதந்திரத்திற்கு வழிவகுக்கவும் கல்வி இன்றியமையாத ஒரு கருவியாகும். முறைசாராக் கல்வி மூலமும், கிராமப்புறங்களில் அவர்களின் கல்வி வசதிக்கென சில குறிப்பிட்ட திட்டங்களின் மூலம் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த தேசியக் கல்விக்கொள்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சமூகக் காடுகள் வளர்ப்பு, குடிநீர் வழங்குதல், மதிய உணவு, பிற சத்துணவுத் திட்டங்கள், புகை வராத அடுப்புகள் ஆகியவை அத்திட்டங்களில் சிலவாகும். தொழிற்கல்வி, திறன் வளர்ப்புக் கல்வி, தொழில் நுட்பக்கல்வி போன்றவற்றில் பெண்களுக்கென இட ஒதுக்கீடு செய்து அவர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**வயது வந்தோர் மற்றும் முறைசாராக் கல்வி :** வயது வந்தோர் கல்வியை முறைசாராக் கல்வியின் ஓர் அங்கமாகக் கருதலாம். தனியார் நிறுவனங்கள், கல்வியில் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் முதலியவை வயது வந்தோர் கல்வித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளன. பொதுத்தொடர்பு சாதனங்களான திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, செய்திதாள்கள், காலமுறை இதழ்கள், நூல்கள், சுவரொட்டிகள், செயற்கைக்கோள் ஆகியவை மூலமாக வயது வந்தோர் மற்றும் முறைசாராக் கல்வி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், பகுதி நேர அல்லது குறுகிய காலப் பாடத்திட்டங்கள், திறந்தவெளிப் பல்கலைக்கழகங்கள் போன்றவையும் உள்ளன. முறைசாராக் கல்வியானது வரைமுறைக் கல்வித் திட்டங்களைவிட வளர்ச்சிப்பணிகளோடு ஒருங்கிணைந்த ஒரு முயற்சியாகத் திகழ்கிறது.

நலிவுற்ற பிரிவனருக்கெனக் கல்வி அளிப்பதற்குப் பற்பல திட்டங்கள் இருப்பினும் அவற்றை நன்கு செயலாற்றுவதற்குப் போதிய நிதி ஒதுக்கீடும், இப்பிரிவினரின் கல்விக்கென அர்ப்பணிப்பு மனப்பான்மை கொண்ட ஊழியர்களும், சமுதாயத்தில் ஒட்டு மொத்தமான விழிப்புணர்வும் இருந்தால் நலிவுற்றோரின் எதிர்காலம் நல்ல ஒளிமயமான தாகும்.

- பா.பி.

**துணை நூல்கள் :**


1. Anand, C.L., et.al., 1983, **The Teacher and Education in Emerging Indian Society**, NCERT, New Delhi.

2. Kochhar, S. K., 1984, **Pivotal Issues in Indian Education**, Sterling Publishers Pvt. Ltd, New Delhi.

**நாச்னா :** பாட்னாவுக்குத் தென்கிழக்கே நாற்பது கி.மீ. தொலைவில் உள்ளது இச்சிற்றூர். காடுகளும் புதர்களும் நிறைந்த இவ்வூரை ஆங்கிலேயர்கள் நர்குவா ( Narhus ) எனக் குறித்தனர். இவ்வூரில் மண் மூடிக் கிடந்த புதரில் ஒரு பாழைடந்த பார்வதி கோயில் காணப்பட்டது. இதைக் குத்தரக் கோயில் ( Kuthara ) என அழைத்தனர். கன்னிங்காம் எனும் அறிஞரே இப்பார்வதி கோயிலைக் கண்டறிந்து உலகிற்கு அறிமுகப்படுத்தினார். இவ்வூரில் பார்வதி கோயிலும் சதுர்முக மாகாதேவர் கோயிலும் புகழ் பெற்றன.

**பார்வதி கோயில் :** கி.பி.ஐந்தாம் நூற். சேர்ந்த இக்கற்கோயில் குப்தர் காலக் கலைப்பணியாகும். இக்கோயிலில் கல்வெட்டுகள் எதுவும் இல்லை. இவ்வூரில் கோயிலை ஒட்டி ஒரு பலகைக்கல் கல்வெட்டு கிடைத்தது. அது, கி.பி. 470 - 490இல் ஆட்சி செய்த வாகாடக அரசன் வியாகர தேவனின் காலத்தது. இரண்டு நிலைகளைக் கொண்ட இக்கற்கோயில் உத்தரபாத வகைக்குச் சான்றாக விளங்குகின்றது. இது 7 படிகளைக் கொண்ட உயரமான தளத்தின் மீது அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலையில் உள்ள கோயில் சிதைந்துள்ளது. முதல் நிலை மூன்று கல்வரிசைகளால் போர்த்தப்பட்டுள்ளது. தட்டையான கூறை அமைப்பு, கோபுரம் எதுவுமின்றி உள்ளது. கருவறைக்கு வெளிச்சம் வருவதற்காக வடக்கு, தென்புறச் சுவர்களில் 25 துளைகளைக் கொண்ட வேலைப்பாடு மிக்க கல்சன்னல்கள் காணப்படுகின்றன. அவற்றுக்குக் கீழே பூதகண வரிசைகள் உள்ளன. கருவறையின் உட்புறம் வேலைப்பாடுமிக்க நான்கு தூண்களைக் காணலாம். முகப்பு வாசலில் நிலைக்கல்லின் இருபுறமும் வேலைப்பாடுமிக்க கங்கை, யமுனை சிற்பங்கள், சைவ, வைணவ தேவதைகள், தோழிகள், இராமாயணக் காலச் சிற்பங்கள் ஆகியவை குப்தர்காலச் சிற்பக்கலைக்குச் சான்றாக விளங்குகின்றன. குப்தர் காசுகளில் உள்ளது போன்றே இச்சிற்பங்களில் சிதை அலங்காரம் சுருள் சுருளாக இருப்பதைக் காணலாம். இரண்டாம் நிலையிலுள்ள அறைச்சுவர்களிலும் சிங்கம், கரடி சிற்பங்கள் உள்ளன.

**சதுர்முக மாகாதேவர் கோயில் :** இக்கோயில் கி.பி. ஏழாம் நூற். சேர்ந்தது. நான்கு முகங்களைக் கொண்ட 1.2 மீ உயரச் சிவலிங்கம் கருவறையிலுள்ளது. சிவபெருமானின் சடாமகுடம் உயரமாகக் காணப்படுகிறது. பார்வதி கோயிலைப் போன்றே இதுவும் சதுரக் கோயிலாகும். இக்கோயில் 12மீ உயரமான தளத்தின்மீது அமைந்துள்ளது. இக் கோயிலுக்கு வெளிப்புறம் ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த நான்கு சிங்கச் சிற்பங்கள் காணப்படுகின்றன. கோயிலின் இருபுறமும் வெளிச்சத்திற்காக அமைக் கப்பட்ட கல் சன்னல்கள் ஏழாம் நூற்றாண்டு சிற்ப அமைதியுடன் காணப்படுகின்றன.

- அ. இரா.

**நாட்டார் வழக்குகள் :** ஒருவன் தன் வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அவன் சார்ந்திருக்கிற சமூகம் வழிகாட்டி, அவன் நடத்தையை நெறிப்படுத்துகிறது. அந்த வழிகாட்டுதல், விதிமுறைகள் மூலமாகத் தரப்படுகிறது. அந்த விதிமுறைகள் சமூக நெறிமுறைகள் ( Social Norms ) எனப்படும்.

அந்த நெறிமுறைகளில் ஒன்று நாட்டார் வழக்குகள் ( Folkways ). இந்த நாட்டார் வழக்கியல் கருத்து வில்லியம் கிரகாம் சம்னர் ( William Graham Sumnor ) என்ற சமூகவியலாளரால் 1906இல் தோற்றுவிக்கப்பட்டது. மெக்ஈவ் ( MacIvey ) நாட்டார் வழக்குகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, "சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒழுகலாற்று வழிகளே நாட்டார் வழக்குள்" என்கிறார். ஆர்னால்டு கிரீன் ( Arnold Green ) நாட்டார் வழக்குகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, "சமூகத்துக்குப் பொதுவாக அமைந்து தலைமுறை தலைமுறையாய் நிலவி வரும் செயற்பாட்டு வழிகளே நாட்டார் வழக்குகள்" என்கிறார்.

ஆகவே, நாட்டார் வழக்குகள் என்பது 1. சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட, 2. சமூகத்துக்குப் பொதுவாக அமைகிற, 3. தலைமுறை தலைமுறையாய்க் கடைப்பிடிக்கப்பட்டு வருகிற மரபு வழியான வழக்காற்றுச் செயற்பாட்டு வழிகள் என்பது தெளிவு.

மனிதர்கள் நாள்தோறும் சாப்பிடுவது, உடை உடுத்துவது, நகை அணிவது, உட்காருவது, நடப்பது, வேலை செய்வது, பேசுவது, எழுதுவது, பாடுவது, பிறருடன் பழகுவது, வழிபடுவது, சடங்குகள், விழா

க்கள் நடத்துவது, அலங்கரிப்பது என்று கணக்கற்ற செயல்களைப் புரிந்து வருகின்றனர். அவற்றைத் தலைமுறை தலைமுறையாகச் சமூகம் ஏற்றுக் கொண்ட வழியில் ஒரு குறிப்பிட்ட கோலத்தில் ஆற்றி வருகின்றனர். அந்தச் செயற்பாட்டு வழிகள் நாட்டார் வழக்குகளின் கீழ் வருகின்றன.

கொடுக்கல் வாங்கல் முறை, முகத்தலளவு, நிறுத் தலளவு, தூரக் கணிப்பளவு முறைகள் ஆகியனவும் நாட்டார் வழக்குகளின் அடிப்படையிலேயே அமை கின்றன. வேலைப்பகுப்பு முறையும் கூட நாட்டார் வழக்குகளின் வழியிலேயே அமைகிறது. இன்ன வேலை ஆண்களுடையது, இன்ன வேலை பெண் களுடையது என்ற வேலைப்பகுப்பு நாட்டார் வழக் கின் வழியிலேயே அமைகிறது.

சம்பிராதயங்களும் ( Conventions ), ஒழுங்காசார மும் ( Etiquetts ) கூட நாட்டார் வழக்குகளே. ஒரு சமூக ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிகழ்வதைப் போல நடைபெறும் வழக்காறுகளே சம்பிரதாயங்களாகும். அவற்றைக் கடைப்பிடிப்பதில் ஓர் ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டது போல உறுப்பினர்கள் நடந்து கொள் வர். அதன் காரணமாக அவர்களிடையே ஒரு மேலோட்டமான கட்டுப்பாட்டொருமை ஏற்படு கிறது. அவ்வாறு இரு தரப்பினரிடையே நிலவும் உறவை மையமாக வைத்துச் சம்பிரதாயங்கள் செயற் படுகின்றன. பொதுத்தேர்தலில் பெரும்பான்மை யான இடங்கள் பெற்றுள்ள கட்சியை அரசமைக்க குடியரசுத் தலைவர் அழைப்பதும், வாக்கெடுப்பில் சட்ட முன்வடிவுகள் தோற்கடிக்கப்பட்டால் ஆளுங் கட்சி பதவி விலகுவதும், சட்டப்பேரவைத் தலைவர் பேரவைக்குள் வரும்போது எல்லோரும் எழுந்து நிற்பதும் அரசியல் அமைப்பு என்ற முறையில் நில வும் சம்பிரதாயங்களில் சில. இவை பொதுவாக குடி யரசு முறை நிலவும் எல்லா நாடுகளிலும் காணப் படுகின்றன.

தமிழ்ச் சமூகத்தில் எண்ணற்ற சம்பிராதாயங்கள் நிலவுகின்றன. குறிப்பாக, திருமணம், சடங்குமுறை, உறவுமுறை ஆகியவை தொடர்பான ஏராளமான சம் பிராதாயங்கள் தமிழ்ச்சமூகத்தில் உண்டு.

ஒழுங்காசாரம் என்பது சடங்கு அடிப்படை யிலான நடைமுறையாகும். ஒரு குறிப்பிட்ட வகை யினத்தைச் சேர்ந்த ஒருவர் பிறிதொரு வகையினத் தைச் சேர்ந்த ஒருவரிடம் நடந்துகொள்ள வேண்டிய முறைமைப் பற்றிய ஒழுங்காசாரம் நிருணயிக்கிறது. அதாவது பண்பட்ட நடத்தைப் பற்றிய முறைமை யைச் சுட்டிக்காட்டுகிறது. ஒருவர் காலை மிதித்து விடும் போது அவரிடம் வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கேட்பதும், ஒருவர் செய்த உதவிக்கு நன்றி தெரிவிப்பதும் ஒழுங்காசாரமாகும். இப்படிச் செய் வது ஒரு சடங்கு. அந்தச் சடங்கின் மூலம் பண்பட்ட நடத்தை வெளிப்படுகிறது.

ஒவ்வொரு சமூகமும் தனக்கென நாட்டார் வழக் குகளைக் கொண்டிருக்கிறது. இதனால் நாட்டார் வழக்குகள் சமூகத்திற்கு சமூகம் வேறுபட்டு விளங்கு கின்றன. தமிழகத்தில் கைகூப்பி வணக்கம் கூறி விருந் தினரை வரவேற்கின்றனர். வட இந்தியாவில் ஒரு வரை ஒருவர் தழுவி வரவேற்கின்றனர். மேலை நாட் டார் கைகுலுக்கி வரவேற்பு தெரிவிக்கின்றனர். ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் மனிதன் தான் சந்திக்கும் ஒரு சிக்கலுக்குத் தீர்வு காண ஒரு குறிப்பிட்ட செயற் பாட்டு வழியைத் தேர்ந்தெடுக்கும்போது, அதே வழி மற்றவர்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு அது எல் லோருக்கும் பொதுவாக அமையும் நிலையில், அது நாட்டார் வழக்கு ஆகிறது. அது எப்போது தோன்றி யது என்பதை யாராலும் அறிந்துகொள்ளவியலாது. சம்னர் என்ற அறிஞர், “மனிதன் தன் வாழ்க்கையில் பல சிக்கல்களைச் சந்திக்கிறான். உணவு உற்பத்தி, வாணிகம், கலைச்சுவை எனப்பல்வேறு சிக்கல்க ளைச் சந்திக்கிறான். இவற்றைச் சமாளிக்கக்கூடிய உடலியல், உளவியல் கூறுகள், இயல்புணர்ச்சிகள், இயற்கைப்போக்குகள், நாட்டங்கள், செயலாற்றல் கள் முதலியவை அவ்விடத்தில் இயல்பாகவே அமைந்துள்ளன. அவன் இவற்றைத் தன் விலங்கின மூதாதையரிடமிருந்து பெற்றிருக்கிறான். இவற்றைக் கொண்டு அவன் தன் சிக்கல்களைச் சமாளிக்கிறான். எல்லோரும் இணக்கமாக ஒத்த வழியில் சிக்கல் களைச் சமாளிக்கச் செயற்படும்போது பொது வழி கள் அமைகின்றன. அவையே நாட்டார் வழக்கு களாக உருவெடுக்கின்றன” என்றார்.

நாட்டார் வழக்குகள் எப்போது தோன்றின, யாரால் தோற்றுவிக்கப்பட்டன என்பது தெரியாது. ஆதி காண முடியாத அவற்றின் தன்மையே அவற் றுக்குச் சிறப்பியல்பாக அமைகிறது. நாட்டார் வழக் குகள் மக்கள் சந்திக்கும் பல்வேறு சிக்கல்கள்- தேவை கள் தொடர்பாக அவை எழுகின்றன. ஆனால் அவை திட்டமிடப்பட்டு, சிந்திக்கப்பட்டு உருவாவதில்லை.

ஒரு தேவைக்கு ஏதோ ஒரு செயற்பாட்டு வழியை மனிதர்கள் தேர்ந்தெடுத்து மேற்கொள்ளுகிறார்கள். அதனால் தேவை நிறைவேறும்பொழுது மக்கள் அதைத் தொடர்ந்து கடைப்பிடிக்கிறார்கள். அது மீண்டும் மீண்டும் திரும்பத்திரும்பக் கடைப்பிடிக்கப் படும் போது, நிலைபெற்றுச் சமூக அமைப்பு முறையில் நெறிமுறை ஒழுங்கில் இடம் பெறுகிறது.

நாட்டார் வழக்குகள் அறிவு அடிப்படையில் உருவாக்கப்படுவதில்லை. அவை நன்கு சிந்திக்கப்பட்டு, திட்டமிடப்பட்டு உருவாகுமேயானால் அறிவு அடிப் படையிலான தீர்ப்பின் படைப்பாக இருக்கக்கூடும். ஆனால் அவை பல்வேறு சந்தர்ப்பச் சூழ்நிலைகளில் இயற்கையாக எழுபவை. எனினும் அவை சில வேளைகளில் அறிவுக்குப் பொருத்தமாக அமைய நேரிடுவதுண்டு. இயற்கையாக எழுதுவதைப் போலவே, நாட்டார் வழக்குகள் இயற்கையாகவே மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன. இது ஒரு நாட்டார் வழக்கு. நெறிமுறை ஒழுங்கின் கூறு. ஆகவே இதனைக் கடைப்பிடித்தாக வேண்டும் என்ற நினைவுணர்வில் நாட்டார் வழக்கு மக்களால் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அவை இயல்பாக மக்கள் நடத்தையில் வருகிறது.

ஆனால், அந்த நடத்தை பாரம்பரியமாக வருவதில்லை. கற்றலின் மூலமே வருகிறது. பிறரைப் பார்த்து, பிறர் சொல்லிக்கொடுத்து, பிறரிடமிருந்து வருகிற குறிப்பேற்றத்துக்கு ஆட்பட்டு மனிதன் செயற்படு வழிகளைக் கற்றறிந்து அகப்படுத்திக் கொள்கிறான். அகப்படுத்துதலின் காரணமாக நாட்டார் வழக்குகள் அவன் நடத்தையில் படிந்து, அவனைப் பொறுத்த வரையில் பழக்கங்களாகவும், சமூகத்தைப் பொறுத் தவரையில் வழக்கங்களாகவும் அமைகின்றன.

நாட்டார் வழக்குகள் தொன்றுதொட்டு மரபு வழியாக வரும் என்பதாலேயே அவை மாறாத தன்மை உடையவை என்று சொல்லவியலாது. பிற சமூக நிகழ்வுகளைப் போலவே அவையும் மாறுதல் விதிக் குட்பட்டவை.

தொன்மையான காலத்தில் தான் நாட்டார் வழக்குகள் தோன்றியிருக்க வேண்டும் என்றில்லை. இக் காலத்திலும் புதிய நாட்டார் வழக்குகள் தோன்றுகின்றன. அத்தகைய நாட்டார் வழக்குகளைச் சுடுவர்டும், கிளின்னும் ( Stewart and Glynn ) "புதிய நாட்டார் வழக்குகள்" என்று குறிப்பிடுகின்றனர். தொழில் நுட்ப வளர்ச்சியினால் ஏற்பட்டுள்ள வழக்குகள் புதிய நாட்டார் வழக்குகளே. இடப்பக்கம் காரை ஓட்டுவது, வளைவில் திரும்பும்போது, வேகத்தைக் குறைக்கும் போதும் சைகை காட்டுவது, புதிய தொழில்நுட்பத்தி னால் ஏற்பட்ட புதிய வழக்குகள். இவை புதிய காலத்தவையாயினும், இவை யாரால், எப்போது தொடங்கப்பட்டது என்பது தெரியாது.

பியசான்சும், பியாசான்சும் ( Biesanz and Biesanz ) குறிப்பிடுவதைப் போல நாட்டார் வழக்குகள் ஒரு செயலைச் செய்ய, சரியான ஏற்புடைய வழியைச் சுட்டிக்காட்டுகின்றன. எனவே மக்கள் அந்த வழியில் நடக்கும்போது அவர்களுடைய நடத்தை ஒழுங்கு படுகிறது. அவர்கள் ஒரு சூழ்நிலையில் எவ்விதம் நடந்துகொள்வார்கள் என்று முன்கூட்டியே தெரிந்து கொள்ளக்கூடிய உறுதித்தன்மை அந்த நடத்தையில் ஏறுகிறது. அவர்களும் மற்றவர்கள் அந்தச் சூழ்நிலையில் எவ்விதம் நடந்துகொள்வார்கள் என்று முன்கூட்டியே தெரிந்து உறுதிப்படுத்திக்கொண்டு குழப்பமில்லாமல் செயல்படவும் வழி ஏற்படுகிறது. நாட்டார் வழக்குகள் உருவாக்கும் இத்தகைய நிலைமையில் மக்கள் தம் நேரத்தையும், சக்தியையும் வீணாக்காமல் பாதுகாத்துக்கொள்ள முடிகிறது. வாழ்க்கையில் அவர்களுக்கு ஒரு பாதுகாப்பும் ஒழுங்கும் கிடைக் கிறது.

நாட்டார் வழக்குகள் சமூக மரபுரிமையின் கூறாக விளங்குவதால், மக்கள் அவற்றைக் கடைப்பிடிப்ப தன் மூலம் சமூகத்தோடு ஒன்றுதற்கு வழி ஏற்படுகிறது. இந்த ஒருங்கிணைப்பு அவர்கள் சமூக வாழ்வில் பங்கேற்கவும், தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவும் உதவுகிறது. ஒரு மனிதன் நாட்டார் வழக்குகளை ஒதுக்கி அவற்றைக் கடைப்பிடிக்காமல் போனானேயாகில் அவன் சமூகத்தோடு இணைய வழியில்லாமல் ஒதுங்க நேரிடும். அத்தகைய நிலைமையில் அவன் வாழ்வது என்பது கடினம். கிங்சுலி டேவிசு மனிதனுடைய இருப்பின் தொடக்கத்தையும், முடிவையும் எங்காவது காண வேண்டுமானால், அதை நாட்டார் வழக்குகளிடம் காண முடியும். ஏனெனில் அவன் அவற்றோடுதான் தன் இருப்பைத் தொடங்குகிறான். முடிவையும் அவற்றோடுதான் முடிவெடுத்துக்கொள்கிறான் என்கிறார்.

நாட்டார் வழக்குகளை மக்கள் கடைப்பிடிப்ப தற்கு இவை மட்டும் காரணமல்ல. சமூகமே நாட்

டார் வழக்குகளைப் பின்பற்றவும் மீறாமலிருக்கவும் ஒரு நிறுவன ஏற்பாட்டை அமைத்து, அதன் மூலம் நாட்டார் வழக்குகளைப் பாதுகாக்கிறது. உறுதியீடுகளை ( Sanctions ) நிறுவி, அவற்றின் மூலம் மக்கள் நாட்டார்வழக்குகளைப் பின்பற்றச் செய்கிறது. அதாவது விதிமுறை சாராத பரிசுகளையும், தண்டனையையும் நிறுவி அவற்றின் மூலம் மக்களை நாட்டார் வழக்குகளைப் பின்பற்ற வைக்கிறது. நாட்டார் வழக்குகளுக்கேற்ப ஒருவனுடைய நடத்தை அமையும்போது சமூகம் அதனைத் தன் மௌனமான ஒப்புதலாலும், புன்னகையாலும் ஏற்றுக்கொள்கிறது. அந்த ஒப்புதலே நாட்டார் வழக்குகளின் வழியிலான நடத்தைக்குப் பரிசாக அமைகிறது. இந்தப் பரிசு நாட்டார் வழக்குகளைப் பின்பற்ற ஒரு தூண்டுகோலாக இருக்கிறது. நாட்டார் வழக்குகளை நிலைநிறுத்துகிற இந்தப் பணியைத் தண்டனையும் ஆற்றுகிறது. ஆனால் அது எதிர்மறை வடிவில் அமைகிறது. பரிசுகள் நாட்டார் வழக்குகளின் வழியில் அமைகிற நடத்தையை அங்கீகரிப்பதன் மூலம் நாட்டார் வழக்குகளுக்கு ஊக்கம் கொடுக்கின்றன. ஆனால் தண்டனை நாட்டார் வழக்குகளுக்கு மாறாக முரணாக அமைகிற நடத்தைக்கு விமர்சனம், இகழ்வு, ஏச்சு என்ற வகையில் அமைந்து அத்தகைய நடத்தைக்குச் சமூக ஒப்புதல் கிடையாது என்பதை உணர்த்துவதோடு அத்தகைய நடத்தை மீண்டும் ஏற்படாதவாறு தடுக்கவும் செய்கிறது. இப்படிப் பரிசுகளும், தண்டனையும் எதிர் எதிர் முனையில் நின்றாலும் அவை இரண்டும் நாட்டார் வழக்குகளை நிலைபெறச் செய்கின்றன.

ஆனாலும், மக்கள் தம் சமூகத்தின் எல்லா நாட்டார் வழக்குகளையும் முழுவதுமாகக் கடைப்பிடிப்பதில்லை. அவர்கள் சில நாட்டார் வழக்குகளை அகப்படுத்தாமல், பழக்கத்திற்குக் கொண்டு வராமற் போகக்கூடும். அந்த நிலையில் உறுதியீடுகள், அவர்களுக்குப் பொருட்டல்ல. அவற்றால் மனிதர்களைக் கட்டுப்படுத்த இயலாது. எனினும் நாட்டார் வழக்குகளை முற்றிலும் ஒதுக்கிவிட இயலாது. சில நாட்டார் வழக்குகளைப் பின்பற்றாமல் வி. லாமேயன்றி, எல்லா நாட்டார் வழக்குகளையும் ஒருவன் ஒதுக்கவோ, மீறவோ இயலாது. ஏனெனில் நாட்டார் வழக்குகளைக் கடைப்பிடிப்பதன் மூலம்தான் சமூகத்தோடு ஒன்றாக இணையமுடியும். சமூக வாழ்வு அளித்திடும் பலன்களை நுகர முடியும்.

- சி.என். ந.

**நாட்டுப்புறக் கதைகள் :** மனிதர் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்ச்சியும் கதையாகிறது. சில நிகழ்ச்சிகள் பெருங்கதையாய் விரிகின்றன. மனிதனின் ஆசைகள், அவலங்கள், தேவைகள், விருப்பு, வெறுப்புகள், கனவுகள், கற்பனைகள், எண்ணங்கள் கதைகளாகின்றன. கதை கற்பனையை வளர்க்கிறது.

கதை கேட்பதும் கதை சொல்வதும் மனிதர் இயல்பு. மனிதன் ஒவ்வொன்றைப்பற்றியும் அறிய விரும்புவது இயற்கை. மனிதன் கதை கேட்பதுடன் அதிலேயே தன்னை மறப்பதுமுண்டு. கதை சொல்வதும் கலை. கதை கேட்பதும் கலை. மனித இன வரலாற்றில் வேட்டையாடிக் கொண்டிருந்த மனிதன், வேட்டையின் போது நடந்ததைப் பிறருக்குக் கூற முற்பட்ட அன்றே கதை தோன்றிவிட்டது என்பர். ஆதி மனிதன் தனது அனுபவங்களை மற்றவர்களுக்குக் கூறத் தொடங்கியதே கதையின் தொடக்கம் என்பர். அச்சவுணர்வு, இயற்கை நிகழ்ச்சிகளுக்குக் காரணம் காணும் முயற்சி, குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளால் மக்கள் மனதில் நேர்ந்த பாதிப்பு, அறமுரைத்தல் போன்றவை கதைகள் தோன்ற காரணிகளாகக் கூறலாம். உலக முழுவதும் ஒரே மாதிரியான கதை பரவ தொழில் நிகழ்ச்சி, கொண்டு கொடுத்த உறவு முறை, விழா, ஒரே கால கட்டத்தில் மனித இனம் ஒன்றாகச் சிந்தித்தமை முதலியவற்றைக் காரணமாகக் கூறலாம்.

நாட்டுப்புறக் கதைகள் தொல்காப்பியர் காலந்தொட்டு வழக்கிலிருந்தமையை அறியலாம். 'பொருள் மரபில்லாப் பொய்மொழியானும்' ( தொல். செய். 173 ) என்ற சூத்திரம் மூலம் இதனை அறியலாம்.

கதையில்லாத சமுதாயமே இல்லையெனலாம். நாட்டுப்புற மக்களின் கற்பனை, அறிவு நுணுக்கம், எண்ணங்கள் ஆகியவற்றைக் கதைகளில் காணலாம். பண்டைக்கால மக்கள் உலகத்தோற்றத்தைப் பற்றியும் சமயங்கள் பற்றியும் கதைகள் புனைந்தனர். காலப்போக்கில் இக்கதைகள் கற்பனைக் கதைகளாகவும் இதிகாசங்களாகவும் புராணங்களாகவும் மாறின. பழங்கால சமுதாயத்தை அறிய இப்பழங் கதைகளை ஆராயவேண்டும்.

மானிடவியலாளர், சமூகவியலாளர், உளவியலாளர் அவரவர் நோக்கில் கதைகளுக்கு விளக்கம் கூறு

கின்றனர். இயற்கை மாறுதல்களையும் உற்பாதங்களையும் உருவங்களால் விளக்குவதற்கு கதைகள் ஏற்பட்டன எனப் பொதுவிளக்கம் அளிக்கின்றனர். இயற்கையின் வளம், பிறப்பு, இறப்பு போன்றவற்றை விளக்குவன பழங்கதைகள் என்கிறார் சேம்சு பிரவுசர். உளவியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு ( Sigmund Fraud ) மக்களின் ஆசை நிறைவேறுவதற்குரிய கருவி பழங்கதைகள் என்கிறார். மனித குலத்தின் நனவிலி மனக்கனவுகளைக் காட்டுவன பழங்கதைகள் என்கிறார் யங் ( Yung ) எனும் உளவியல் அறிஞர்.

உலகக் கதைகளை ஆராயும்போது மனிதகுலத்தின் வளர்ச்சியும் மனித மனங்களின் எழுச்சியும் புலனாகின்றன. கதைகளின் கரு, உரு, கட்டமைப்பு ஆகியன சில மாற்றங்களைப் பெற்றுள்ளன. கதை சொல்வோரின் திறத்தாலும் சொல்லும் முறையாலும் சில கதைகள் சாகாவரம் பெற்றன. கதைகள் வெறும் பொழுதுபோக்கு இலக்கியம் மட்டுமல்ல, அறக்கோட்பாடுகளை விளக்கும் காவியத்தன்மை கொண்டவையுமாகும். சிறுவர் முதல் பெரியவர் வரை கேட்டு மகிழ்ந்து நினைந்து அசைப்போடத்தக்கது. நாட்டுப்புறக் கதைகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவதாகும். அஃது மரபு வழிப்பட்டது.

பல நூற்றாண்டு காலமாக வாய்மொழியாக வழங்கி வருவதால் நாட்டுப்புறக் கதைகளில் மாற்றத்தைக் காணலாம். இந்த நாட்டுப்புறக் கதைகளின் மூல ஆசிரியர் அறியவொண்ணாமையும் ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அவை அடங்கும் தன்மையுடன என்பதும் நாட்டுப்புறக் கதைகளின் இயல்பாகும்.

இதிகாசக் கதைகள், பாரத இராமாயணக் கதைகள், பஞ்சதந்திரக் கதைகள், கீதோவுபதேசக் கதைகள் அறநெறிக் கதைகள், நாடோடிக் கதைகள், விக்கிரமாதித்தன் கதைகள், மதன காமராசன் கதைகள், தெனாலிராமன் கதைகள், பீர்பால் கதைகள் எனக் கதைகளின் பட்டியல் நீண்டு செல்லும்.

ஈசாப் கதைகள், அரபுக் கதைகள் முதலிய உலகக் கதைகளில் இந்தியக் கதைகளின் வித்தும் வேரும் சாயலும் உள்ளதை ஆராய்ச்சியாளர்கள் ஆய்ந்து நிறுவியுள்ளனர். நாடுகள் பலவாயினும் மொழிகள் பலவாயினும் இனங்கள் பலவாயினும் மனித இனங்களின் ஆசாபாசங்கள் ஒன்றே. அவற்றையே உலகக் கதைகள் படம்பிடிக்கின்றன.

வாழ்க்கைச் சிக்கல், காதல், ஆசை, ஒழுக்கம், துன்பம், பொறாமை, மன உணர்வெழுச்சி, கள்ளநட்பு, மந்திரம், அறிவின்மை, புத்திசாலித்தனம், நீதி முதலியவற்றின் பொருண்மைகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன நாட்டுப்புறக் கதைகள்.

இக்கதைகள் மூலம் மக்களின் பழக்கவழக்கங்களையும் சமூக அமைப்பையும் மொழி அமைப்பையும் அறிந்து கொள்ளலாம். சாதியமைப்பு முறைகள் பற்றியும் அறிந்து கொள்ளலாம். தமிழ்நாட்டுக் கதைகளில் கள்ளர், வேசி, துறவி, கிழவி ( சூனியக்காரி ) ஆகியோர் இடம் பெறுதல் கதைகளின் உயிரோட்டத்திற்குரியது எனலாம். பெரும்பாலான கதைகளில் செட்டியார் பாத்திரம் அமைந்திருக்கிறது. அவ்வினத்தார்தான் இடம் விட்டு இடம் பெயர்ந்து வணிகம் செய்பவர்கள். நாட்டுப்புறக் கதைகள் மூலம் மக்களின் பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் அறியலாம்.

பெரும்பாலான நாட்டுப்புறக் கதைகளில் கீழ்க்காணும் நீதிகளை அறியலாம். 1. கடவுளை வழிபட வேண்டும். 2. அகந்தை, ஆணவம் இழிநிலையை அடையச்செய்யும். 3. பேராசை பெரும் நட்டம். 4. சத்தியத்திற்கு என்றும் அழிவில்லை. 5. மூடனுடைய உறவு கேடு தரும். 6. கடுஞ்சிநேகிதம் கண்ணைக் கெடுக்கும். 7. வாய்மையே வெல்லும். 8. பெரியோ ரைப் பேண வேண்டும். 9. மது மதியை அழிக்கும். 10. பிறரை ஏமாற்றுபவர் ஏமாற்றப்படுவார். 11. ஆபத்திலிருந்து தப்ப பொய் சொல்லலாம். 12. மதியால் எதையும் வெல்லலாம். 13. முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார். 14. எவரையும் ஒதுக்கக்கூடிய பழக்கத்திற்கு அடிமையாகக்கூடாது.

நாட்டுப்புறக் கதைகள் அனைத்தும் தமிழக நாட்டுப்புற மக்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள் முதலியவற்றை அறிந்து கொள்வதற்குப் பெருந் துணையாக இருப்பன.

- சு.ச.

**நாட்டுப்புறத் தெய்வங்கள் :** ஆதிநாளில் இயற்கையின் ஆற்றலைக்கண்டு அஞ்சிய மனிதன் அதன் சீற்றத்திற்கு ஆளாகாமல் இருக்கலாம் என்று நம்பினான். காலப்போக்கில் இயற்கைக்கு உருவம் கொடுத்து வழிபடத்தொடங்கினான். வழிபாடும் விழாக்களும் தோற்றம் பெற்றன. பழங்கால மனிதன்



நாட்டுப்புறத் தெய்வங்கள்

இடி, மழை, மின்னல், பூகம்பம் முதலியவற்றைக் கண்டு அஞ்சினான். நோய் முதலியவற்றிற்கு ஆவிகளே காரணமென்று இயற்கையிடமும் மரணத்திற்குப் பின்வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்கிறார் உள வியல் பேரறிஞர் சிக்மண்ட் பிராய்டு ( Sigmund Fraud).

ஆதிகாலத்தில் மனிதன் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்தினான். இயற்கையின் சீற்றத்திற்குக் காரணகாரியம் அறியாமல் இயற்கையை விழாவெடுத்து நன்றிக்கடன் ஆற்ற விரும்பினான். இயற்கை வழிபாட்டிற்கு அச்சமும் காரணம் எனலாம். சங்க காலத்திலிருந்தே தமிழர்களிடையே இயற்கை வழிபாடிருந்தது. 'இயற்கைத் தோற்றங்களின் பொருள்களாகிய கதிரவன், மதி, மழை, மின்னல் முதலான பொருள்களைக் கண்டு ஏற்பட்ட வியப்பு, அதிர்ச்சி, அச்சம் என்னும் அவன் உள்ளத்து உணர்வுகளே சமயம் தோன்றக் காரணமாயிற்று' எனக் கூறும் மாக்சுமுல்லரின் கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது. கதிர் வழிபாடும் மாரி வழிபாடும் விண் வழிபாடும், மண் வழிபாடும் இப்படித்தான் தோன்றின. பெரும்பாலான வழிபாடுகளுக்கு அச்சமும் நன்றியுணர்வும் காரணங்களாகும். கதிரவனின் இயக்கமும் மதியின் இயக்கமும் பருவங்களின் மாறுதல்களும் கொண்ட இயற்கை நியதியின் விளைவு மனிதனின் மனதில் ஒரு பாதிப்பை உண்டாக்கி, சமய வாழ்வுக்கு நம்பிக்கையை அளிக்கின்றது.

பழங்கால மனிதன் ஆவியின் சீற்றத்தைத் தணிக்க ஆவியை வழிபடத் தொடங்கினான். உலகிலுள்ள பெரும்பாலான இனத்தினர் ஆவியுலக வழிபாட்டினரேயாவார். இறந்தவர்களின் ஆவிகளே தெய்வங்களின் தோற்றம் என எல்மோர் குறிப்பிடுகின்றார். பழங்குடியினர் விலங்கு, பறவைகளைத் தமது குலக்குறியாகக் கொண்டு அவற்றை வழிபட்டனர். குலக்குறி வழிபாடு தொன்மைச் சமயத்தின் ஒரு கூறாகும்.

இயற்கை கடந்த ஆற்றல்கள் சில பொருள்களில் உறைவதாக எண்ணி மக்கள் அவற்றை வழிபட்டனர். அதனைப் புனிதபோலிப்பொருள் வழிபாடு என்பர். இறந்த முன்னோரை வழிபடுவது ( ancestor worship) எல்லா மக்களிடையேயும் காணலாம். தமிழரிடையே இருந்த நடுகல் வழிபாடும் முன்னோர் வழிபாட்டோடு தொடர்புடையதாகும்.

குல தெய்வ வழிபாடும் ஊர்த்தெய்வ வழிபாடும் சிறு தெய்வ வழிபாட்டில் அடங்கும். சில நேரங்களில் செல்வாக்குமுள்ள குலதெய்வம் ஊர்த்தெய்வமாகவும் பின்னர் பல ஊர்த்தெய்வமாகவும் மாறுவதுண்டு. நாட்டுப்புறத் தெய்வங்களைக் கீழ்காணும் காரணங்களுக்காக வழிபடுகின்றனர்.

நாட்டுப்புறத் தெய்வ வழிபாடு என்பது அச்சம், வளமை, இயற்கையின் சீற்றம் தணிய, இயற்கையின் வசதிகளைப் பெருக்கிக்கொள்ள, அம்மை, காலரா போன்ற நோய்களைத் தடுக்க என்பதாக அமைந்துள்ளது.

கிராமப்புறங்களில் நாட்டுப்புறத் தெய்வங்கள் அதிகமாக உள்ளன. நாட்டுப்புறத் தெய்வங்களில் மாரியம்மன் குறிப்பிடத்தக்கது. தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இத்தெய்வ வழிபாட்டைக் காணலாம். அக்னிச்சட்டி எடுத்தலும், தீ மிதியும் நடைபெறுகின்றன. மாரியை வணங்குவது போன்று காளியையும் வழிபடுகின்றனர். நாட்டுப்புறங்களில் நாட்டுப் புறத்தெய்வ வழிபாட்டுடன் பெருந்தெய்வ வழிபாட் டையும் காணலாம். பெருந்தெய்வங்களில் சிவன், திருமால், முருகன், பிள்ளையார் மக்களிடையே செல்வாக்குப்பெற்ற தெய்வங்களாகும். சிறு தெய்வம், பெருந்தெய்வ வேறுபாடுகளைக் காண்பது நாட்டுப்புறத் தெய்வங்களின் சிறப்பியல்புகளைக் காண்பது போலாகும்.

சிறுதெய்வம் - பிறப்பு, இறப்பு உள்ளவை, குறிப்பிட்ட ஆற்றல் உடையது, உயிர்ப்பலி உண்டு, பெரும்பாலும் பிராமணர் அல்லாதோர் பூசாரியாக இருப்பர், பெரும்பான்மை பெண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் பெரும்பாலும் திருமணமாகாதவை, பூசை, திருவிழா முதலியவற்றில் வரையறை இல்லை, சிறு தெய்வங்களில் சைவ, வைணவ வேறுபாடில்லை, பெரும்பாலும் கோயில் அமைப்பில்லை, மக்களால் உண்டாக்கப்பட்டு மக்களால் பேணப்படுபவை, நாட்டுப்புறக் கதைகள் உண்டு, வட்டாரத்திற்கே உரி யது, அருள்வாக்கு உண்டு, பெருமளவு எண்ணிக்கை, மாடங்கள், சுதைகள், கல், மரம், புற்றுகளில் உறை வது, இவ்வுலகில் வாழ்தல், கொடூர உருவம், சமூக ஒற்றுமைக்கும் கலைகளின் வளர்ச்சிக்கும் பயன்படுகின்றது, நாட்டுப்புற இயலுடன் தொடர்புடையது, சிறுபாரம்பரிய மரபைச் சார்ந்தது.





நாட்டுப்புறத் தெய்வங்கள்

நாட்டுப்புறத் தெய்வங்கள்



நாட்டுப்புறத் தெய்வங்கள்

பெருந்தெய்வம் - ஆதி அந்தம் இல்லாதவை, எல்லையற்ற ஆற்றல் உடையது, உயிர்ப்பலி இல்லை, பெரும்பாலும் பார்ப்பனரே பூசாரியாக இருப்பர், பெரும்பான்மை ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள் திருமணமானவை, பூசை, திரு விழா முதலியவற்றில் வரையறை உண்டு, பெருந் தெய்வங்களில் சைவ, வைணவ வேறுபாடு உண்டு, ஆகம விதிகளின்படி கோயில் அமைப்பு உண்டு, மன்னர், அரசியர், அதிகாரிகளால் ஒரு காலத்தில் பேணப்பட்டது, தல புராணங்கள் உண்டு, எல்லா வட்டாரத்துக்கும் உரியது, அருள்வாக்கு இல்லை, சிறிய அளவு எண்ணிக்கை, கருங்கல் சிலை, செம்பு வடிவச்சிலை, மேல் உலகில் வாழ்தல், சாந்தமான உருவம், கலைகளின் வளர்ச்சிக்குப் பயன்படும், எழுத்திலக்கியத்துடன் தொடர்பு உடையது, பெரும் பாரம்பரிய மரபைச்சார்ந்தது.

சில நாட்டுப்புறத்தெய்வங்களின் வழிபாட்டு முறை பெருந்தெய்வங்களின் வழிபாட்டு முறையை யொட்டி உள்ளது. நாட்டுப்புறத் தெய்வங்கள் பெருந் தெய்வ நிலைக்கு மாறிக்கொண்டுள்ளது. சிறு பாரம் பரிய மரபு ( Little tradition ) பெரும் பாரம்பரிய மரபை நோக்கிச் செல்வதைக் காணலாம்.

குறிப்பாக மாரியம்மன் வழிபாட்டு முறையில் பெரும் பாரம்பரிய வழிபாட்டு முறையின் தாக்கம் காணப்படுகிறது. வழிபாட்டு முறையில் மட்டு மின்றி கோயிலமைப்பு நாள், பூசை, பார்ப்பனப் பூசாரி, உயிரில் பலி முதலியவற்றைக் காணலாம். அய்யனார் வழிபாடும் பெரும்பாரம்பரிய மரபை நோக்கிச் செல்வதைக் காணலாம். சிறு தெய்வ வழி பாடு பெருந்தெய்வ வழிபாட்டை நோக்கிச் செல் வதை மேல்நிலையாக்கம் ( Sanskritization ) என்பர். நாட்டுப்புறத் தெய்வங்களை ஆண் தெய்வங்கள், பெண் தெய்வங்கள், சாதி தெய்வங்கள், சமாதி தெய் வங்கள், தீயில் பாய்ந்து தெய்வமானவர்கள் என வகைப்படுத்தலாம்.

அய்யனார், கருப்பசாமி, சுடலைமாடன், முனி சாமி போன்றவற்றை ஆண் தெய்வங்களின் கீழும், காளி, மாரியம்மன், முப்பிடாதி இசக்கி, முத்தலாம் மன், அங்காள பரமேசுவரி போன்றவற்றைப் பெண் தெய்வங்களின் கீழும் சக்கம்மாதேவி, சௌடம்மாள் போன்றவற்றைச் சாதித் தெய்வங்களின் கீழும், உண்ணாசாமி, ஏரல் சேர்மன் சாமி போன்றவற்றைச் சமாதி தெய்வங்களின் கீழும், தீப்பாய்ஞ்சம்மன் போன்றவற்றைத் தீயில் பாய்ந்து தெய்வமானவர் களின் கீழும் வகைப்படுத்தி ஆய்வு செய்யலாம்.

பெரும்பாலான நாட்டுப்புறத் தெய்வங்களுக்குப் பீடங்கள் கோயில்களாகக் கருதப்படுகின்றன. விழாக்காலங்களில் மட்டும் பந்தல் போட்டு தோர ணங்கள் கட்டப்படும். சில தேவதைகளுக்கு மண்ணா லான மண்டபம் உண்டு. சில நாட்டுப்புறத் தெய்வங் களுக்கு ஆகம விதிப்படி கோயில் எழுப்பப்பட்டுள் ளன. பெரும்பாலான தெய்வங்கள் மரத்தினடியில் வீற்றிருக்கும். இந்தியப் பண்பாட்டில் மரங்கள் வள மைக் குறியீடாகக் கருதப்படுவது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்புறத் தெய்வ உருவமைப்பை நான்கு வகையாகப் பகுத்துக்கூறுவர். 1. வேல், சூலம், முக் கோணக்கல், மரம் முதலியவற்றைத் தெய்வமாக வழிபடல், 2. பீடத்தில் உருவம் அமைதல், 3. பந்தல் அல்லது ஓடு போன்ற அமைப்புடைய கோயில் உரு வங்கள், 4. கோயில் போன்ற அமைப்புடைய இடத் திலுள்ள உருவங்கள். சிறு தெய்வங்களுக்குக் கொண் டாடப்படும் விழாவைத் திருநெல்வேலி மாவட்டத் தில் ‘கொடை’ என்றும், மற்றவிடங்களில் ‘பொங்கல்’ என்றும் அழைக்கின்றனர்.

சிறுதெய்வ வழிபாட்டு முறையில் தெய்வத்திற் குத் தெய்வம் வேறுபடுவதுண்டு. சாமி கும்பிடுவ தற்கு முன் பல்லி சகுணம் அல்லது பூக்கட்டிப் பார்ப் பர். கோயில் கும்பிடுவதற்கடையாளமாக காப்பு கட்டுவர். குடும்ப வாரியாக வரி போடுவர். நேர்த்திக் கடன் உள்ளோர் விரதமிருப்பர். சிலையைக் கோயி லில் வைத்தவுடன் கிடா வெட்டி பொங்கல் வைப் பர். பின், மாவிளக்கு, முளைப்பாரியுடன் பூசை நடக் கும். நேர்த்திக்கடன் உள்ளோர் நேர்த்திக்கடன் செலுத் துவர். அக்னிச்சட்டி எடுப்பதும், தீக்குழி இறக்கு வதும் உண்டு. மறுநாள் சோற்றுத்திரளையைக் காவு கொடுப்பர். மாலையில் பள்ளயம் பிரிப்பர். அன்றி ரவு வில்லுப்பாட்டோ நாடகமோ நடைபெறும். கிராமப்பெருந்தனக்காரரும் பூசாரியும் பெரும்பங்கு வகிப்பர். சமுதாய ஒற்றுமைக்கும் கலை வளர்ச்சிக் கும் இவ்விழாக்கள் பயன்படுகின்றன.

- சு.ச.

**நாட்டுப்புறப் பாடல்கள் :** மண்ணின் மைந்தர் தம் மனத்தில் கருக்கொண்டு உருப்பெற்று வெளி வரும் உண்மையான உணர்ச்சி வெளிப்பாடுகளே நாட்டுப்புற இலக்கியங்கள். அந்த நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் ஒன்றே நாட்டுப்புறப்பாடல்கள். நாட்டுப்புறங்களில் பாடப்படுகின்ற பாடல்கள் இப்பாடல்களாகும். இப்பாடல்கள் நாட்டுப்புற மக்கள் வாழ்விலே பிறந்து, வளர்ந்து, பிணைந்திருப்பவை. மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையுள்ள நிகழ்வு கள் நாட்டுப்புறப்பாடல் பொருளாகின்றன. நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை தாலாட்டில் தொடங்கி விளையாட்டு, காதலில் வளர்ந்து திருமணப் பாடலில் நிறைவெய்தி ஒப்பாரிப் பாடல்களில் முடிவடைகின்றன. மக்களது இன்ப துன்பங்களை மக்களே பாடுவதாலும் மக்களது வாழ்வை நாட்டுப்புறப் பாடல்கள் எதிரொலிப்பதாலும் இதனை மக்கள் இலக்கியம் என்பர். பசுமை நிறைந்த வயல் வெளிகளையும் அவ்வயல் வெளிகளில் உழைக்கும் மனித இனத்தையும் அம்மனித இனத்தின் வழக்காறுகளையும் நாட்டுப்புறப்பாடல்கள் காட்டுகின்றன.

நாட்டுப்புறப் பாடல்களை இயற்கைப் பாடல்கள் எனலாம். நாட்டுப்புறப் பாடல்கள் எளியவை, இனியவை, எழுதப்படாதவை, வாழையடி வாழையாக வளர்ந்து கொண்டிருப்பவை. நாட்டுப்புறப் பாடல்களில் உணர்ச்சி இருக்கும், ஓசை இன்பம் இருக்கும். சொல் தொடை அழகிருக்கும். அதேநேரத்தில் இலக்கண வரம்புக்கு உட்படாமலும் இருக்கும். நாட்டுப்புறப் பாடலை நாட்டுப்பாடல், நாடோடிப்பாடல், நாட்டார் பாடல், வாய்மொழிப்பாடல், செவ்வழிப் பாடல், பாமரர் பாடல், பரம்பரைப்பாடல், கிராமியப் பாடல், ஏட்டில் எழுதாக்கவிதை, மலையருவி, காட்டுப்பூக்கள், காற்றிலே மிதந்த கவிதை என்றெல்லாம் அழைக்கின்றனர். ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு இயல்பைக் காட்டுவதாக அமைந்துள்ளது. நாட்டுப்புறப் பாடல் என்பதே வழக்கில் உள்ளது.

தொல்காப்பியர் பண்ணத்தி பற்றி, “பாட்டிடைக் கலந்த பொருளவாகிப் பாட்டின் இயல் பண்ணத்தி இயல்பே” ( தொல், செய். 180 ) என்று குறிப்பிடுகிறார். இதற்கு பழம் பாட்டினூடு கலந்த பொருளே தனக்குப் பொருளாகப் பாட்டும் உரையும் போலச் செய்யப்படுவன பண்ணத்தி என்றவாறு, என்று பேராசிரியர் உரை எழுதியுள்ளார். பின், மெய் வழக்கிலாத புற வழக்கினைப் பண்ணத்தி என்ப, இஃதும் எழுதும் பயிற்சியில்லாத புறவுறுப்புப் பொருளைப் பண்ணத்தி என்பவென்பது அவையாவன நாடகச் செய்யுளாகிய பாட்டுமடையும் வஞ்சிப்பாட்டும் மோதிரப்பாட்டும் கடகண்டும் முதலாயின அவற்றை மேலதே போலப் பாட்டென்றாராயினர் நோக்கு முதலாயின உறுப்பு இன்மையின் என்பது அவை வல்லார்வாய்க் கேட்டுணர்க. என்று பண்ணத்தியைப் பற்றிய சில இயல்புகளையும் தருகிறார். தொல்காப்பியர் கூறும் பண்ணத்தி இன்றைய நாட்டுப்புறப் பாடல் களைக் குறிக்கிறது எனலாம்.

நாட்டுப்புற இலக்கியத்திற்கு உள்ள இயல்புகள் அனைத்தும் நாட்டுப்புறப் பாடல்களுக்கும் உண்டு. நாட்டுப்புறப் பாடல்கள் பல்லாண்டு காலமாக வாய்மொழியாகப் பரப்பப்பட்டு வருகின்றன. நாட்டுப்புறப் பாடல்களுக்கு மரபு என்ற பண்பு இருப்பதால் பல தலைமுறைகளாக எழுத்திலக்கியச் செல்வாக்கிடையேயும் வாழ்ந்து வருகின்றன. பாடல்கள் பல தலைமுறைகளாக வாய்மொழியாகப் பரவி வருவதால், பாட வேறுபாட்டைக் காணலாம். அவ்வேறுபாட்டிற்கு நிலவியல் சூழல், சமுதாயச் சூழல், வட்டார வழக்கு வேறுபாடு முதலியன காரணிகளாகச் செயல்படுகின்றன. நாட்டுப்புற இலக்கியத்தின் ஒரு கூறான ஆசிரியர் பெயர் அறியவொண்மை நாட்டுப்புறப்பாடலுக்கும் பொருந்தும். இப்பாடல்கள் மனித சமுதாயத்தின் கூட்டு முயற்சியாகும். இப்பாடல்கள் ஒருவித வாய்ப்பாட்டுக்குள் அடங்கக் கூடியவை. இப்பாடல்களை நினைவில் வைத்துப் பாடுவதாலும் பாடியது மறவாமல் இருக்கவும் சில அடிகள் திரும்பத் திரும்ப வருகின்றன.

நாட்டுப்புறப் பாடல்கள் நெகிழ்ந்த தொடரமைப்பைச் ( Free phrasegenre ) சார்ந்தனவாகும். பேச்சு மொழியிலே அமைந்திருக்கும். எழுத்திலக்கியத்தைப் போன்றே எதுகை, மோனை, இயைபு, இரட்டைக்கிளவி போன்றவற்றைக் காணலாம். பாடலின் பொருளுக்கேற்ப அடிகளின் அளவும் குறிப்பிட்ட எல்லையும் உண்டு. குழந்தைகள் பாடும் பாடல்கள் அடிகள் குறைந்ததாகவும் பெரியவர்கள் பாடும் தாலாட்டு, ஒப்பாரி அடிகள் அதிகம் கொண்டதாகவும் இருக்கும். உவமை, உருவகம், வருணனை, கற்பனை, அணி, அந்தாதி அமைப்பு போன்றவற்றை நாட்டுப்புறப் பாடல்களிலும் காணலாம்.

எந்தவொரு அறிவியல் ஆய்விலும் சேகரித்தல், வகைப்படுத்தல், ஆய்வு செய்தல் முக்கிய ஆய்வு நெறிமுறைகளாகக் கருதப்படுகின்றன. தமிழ் நாட்டுப்புறப் பாடல்களைக் கடந்து ஐம்பாதாண்டு காலமாகப் பலர் வகைப்படுத்த முயன்றுள்ளனர். இதுவரை வகைப்படுத்திய முறையை பாடல்களைத் தனித்தனியே பெயர்ச்சுட்டிய நிலை, பல்வேறு அளவுகோல்களைக் கொண்டு வகைப்படுத்திய நிலை, ஒரே அளவுகோலைக் கொண்டு வகைப்படுத்திய நிலை என்ற மூலம் பெரும் பிரிவுகளில் அடக்கலாம்.

நாட்டுப்புறப் பாடல்களைச் சூழல் அடிப்படையில் வகைப்படுத்தல் சிறப்பாகும். இவ்வடிப்படையில் நாட்டுப்புறப் பாடல்களை, 1. தாலாட்டுப் பாடல்கள், 2. குழந்தைப் பாடல்கள், 3. காதல் பாடல்கள், 4. தொழில் பாடல்கள், 5. கொண்டாட்டப் பாடல்கள், 6. பக்திப்பாடல்கள், 7. ஒப்பாரிப் பாடல்கள், 8. பல்பொருள் பற்றிய பாடல்கள் என வகைப்படுத்தலாம். சூழல் என்ற அடிப்படையில் வகைப்படுத்தினாலும் குழந்தைப்பாடல்கள் என்ற வகைப்பாடு பாடுவோர், பாடப்படும் பொருள் என்ற நிலையில் அமைந்திருப்பதைக் காணலாம்.

1. **தாலாட்டுப் பாடல்கள் :** தாய்மை உணர்வின் வெளிப்பாடாகவே தாலாட்டு மலர்கிறது. தாயின் நாவசைவில் தாலாட்டு பிறக்கிறது. தாய்மை உலகிற்கு வழங்கிய முதல் இலக்கியப் பரிசுதான் தாலாட்டு என்பர். உலகில் தாய்மையும் சேய்மையும் இருக்கும்வரை பாசமும் பற்றும் உள்ளவரை பாடலும் இசையும் நிலவும் வரை சமுதாயத்தில் தாலாட்டுகள் இருக்கும். இவை தாலாட்டு என்ற சொல்லைத் தால் + ஆட்டு என பிரிக்கலாம். தால் என்றால் நாக்கு என்றும் நாவை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு எனப்பெயர் பெற்றிருக்க வேண்டும். தாலாட்டைத் தாராட்டு, தாலேலோ, ஓராட்டு, உரோராட்டு, இராராட்டு, தொட்டில் பாட்டு என வழங்குவர். இடைக்கால இலக்கியங்கள் தாராட்டு என்றும் பிள்ளைத் தமிழ் பிரபந்தங்கள் 'தாலேலோ' என்றும் குறிப்பிடுகின்றன. பரிபாடலில் தாலாட்டு என்ற சொல்லாட்சி காணப்படுகின்றது. "மாசிப் பிறையோ நீ வைகாசி மாங்கனியோ, தேசப் பிறையோ நீ தெவிட்டாத மாங்கனியோ, எங்கள் குலம் மங்காமல் எதிர்குலத்தார் ஏசமால், தங்கமலி பொக்கிசத்தை தானாள வந்த கண்ணா".

2. **குழந்தைப் பாடல்கள் :** உலகில் ஈடு இணையற்ற செல்வம் குழந்தைச் செல்வம், சிறுவர் உலகம் விந்தையான உலகம். அங்கு காக்கை கதை சொல்லும். நிலவு பேசும், விண்மீன் விளையாடும். இயற்கைப் பொருட்களும் செயற்கைப் பொருட்களும் விளையாட்டும் வேடிக்கையும் பாடற்பொருளாகின்றன. குழந்தைப்பாடல்கள் எளிய அமைப்பு கொண்டன. ஈரடிப் பாடல்களும் குழந்தைப்பாடல்களே, வினாவிடைப் பாடல்கள் நீண்டதாக இருக்கும். "மயிலைப்போல் ஆடுவேன், மானைப்போல் ஓடுவேன், குயிலைப்போல் பாடுவேன், கூடி அன்பு நாடுவேன்".

3. **காதல் பாடல்கள் :** அகத்தின்கண் மறைந்து புறத்தின்கண் புலப்படும் மெய்ப்பாடுகளால் தாக்கப் பெறும் வலிய ஆற்றலே காதல். நாட்டுப்புற மக்களது காதல் பாட்டுகள் மூலம் அவர்களது உணர்வினைப் புரிந்துகொள்ளலாம். உண்மையான வெளிப்பாடான ஒளிவு மறைவற்ற காதல் பாடல்களாக நாட்டுப்புறக் காதல் பாடல்கள் இருக்கின்றன என்கிறார் எல்வின் என்னும் மானிடவியல் அறிஞர். காதல் பாடல்களில் காதல்தான் கரு என்றாலும் உறவும் பிரிவும் மிகப்பெரிய பிரிவுகளாகும். பட்டிக்காட்டுக் காதலுக்குக் கெட்டியான உருவமைப்பா எனக் கூறுவது பொருத்தமாக உள்ளது. "அன்னநடை நடந்து, ஆசாரக் கைவீசி, சிமிட்டி நடக்கையிலே, சீவன் பிரியுதடி".

4. **தொழில் பாடல்கள் :** தொழில் புரியும்போது பாடும் பாடல்களைத் தொழில் பாடல்கள் என்பர். இப்பாடல்கள் வேலையில் உள்ள துன்பத்தை மாற்றுவதோடு வேலையின் வேகத்தை அதிகரிக்கவும் செய்கின்றன. இவை தொழிலாளர்களின் வேதனைக்கு வடிகாலாகவும் உள்ளன. தொழில் பாடல்களிலே அன்பு மலர்வதையும் பாசம் பொங்குவதையும் உழைப்பின் ஆர்வத்தையும் நன்மையில் பற்றையும் தீமையில் வெறுப்பையும் காணலாம். இன்ப துன்பங்களையும் நெஞ்சக் குமுறல்களையும் விருப்பு வெறுப்புகளையும் தொழில் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. ஏலோங்கிடி பாட்டு, தில்லாலங்கடி பாட்டு, தெம்மாங்கு பாட்டு, ஏற்றப்பாட்டு, வண்டிக்காரன் பாட்டு என்றெல்லாம் கூறுவர். தொழில் பாடல்களில் தொழிலுக்கு அடுத்தபடியாக காதல் பாடல்கள் இடம் பெறுவதைக் காணலாம். சிறிய பாடல்களைத் தெம்மாங்கிலும் நெடிய பாடல்களை

ஏற்றப் பாட்டிலும் காணலாம். "இராவைக்கெல் லாம் இறைப்பாங்க, இராமாயணம் படிப்பாங்க, பகலெல்லாம் இறைப்பாங்க, பாரதம் படிப்பாங்க".

5. **கொண்டாட்டப்பாடல்கள் :** மனிதன் பலரு டன் இணைந்து தங்களது மகிழ்ச்சியினை ஆடியும் பாடியும் கொண்டாடுகிறான் கடின உழைப்புக்குப் பின் ஆட்டமும் பாட்டமும் நடைபெறுகின்றன. குடும்ப உறவினர்களே பங்குபெறும் திருமணம் போன்றவற்றில் பாடப்படும் பாடல்களும் கும்மி, கோலாட்டம் போன்றவற்றில் பாடப்படும் பாடல் களும் கொண்டாட்டப்பாடல்கள் என்பர். "ஆல் போல் தழைத்து, அருகுபோல் வேரூன்றி, நல முடனே எந்நாளும், ஞானமுடன் வாழ்ந்திடுவீர்".

6. **பக்திப் பாடல்கள் :** பழங்கால மனிதன் இயற் கையின் ஆற்றலைக் கண்டு அஞ்சி வழிபடுவதன் மூலம் அதன் சீற்றத்தைத் தணிக்கலாம் என நம்பி னான். அதனடிப்படையில் வழிபாடுகள் தோற்றம் பெற்றன. காலப்போக்கில் உருவ வழிபாடு தோன்றி யது. கிராமப்புறங்களில் சிறு தெய்வ வழிபாடு அதி கம். "ஆரு கடன்நின்றாலும் மாரி கடன் ஆகாது" என்ற நம்பிக்கை கொண்டுள்ள மக்கள் மாரியம்மனை வழிபடுகின்றனர்.

7. **ஒப்பாரிப் பாடல்கள் :** இறந்தவர்களின் இழப்பை எண்ணி இறந்தவர்களையும் தம்மையும் ஒப்பிட்டுப் பாடுவது ஒப்பாரியாகும். தாலாட்டு வாழ்வின் முன்னுரையானால் ஒப்பாரி வாழ்வின் முடிவுரையாகும். ஒப்பாரியை ஒப்பு ஆரி எனப் பிரித்து ஒப்புச் சொல்லி அழுதல் எனப்பொருள் கூறுகிறது 'சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் அகராதி'. ஒப்பாரியில் இறந்தவரின் பெருமையும் குணநலன்களும் பிறரால் போற்றப்பட்ட முறையும் பேசப்படுவதுண்டு. காலனது கொடுமையும் விதியின் வலிமையும் விதவையின் வேதனையும் ஒப்பாரிப் பொருளாக்கின்றன. பாதுகாப்பை இழந் தாலும் பாதுகாக்கப்பட வேண்டியதை இழந்தாலும் பெண்களின் ஒப்பாரிகளில் சோகம் கொள்கின்றது. கணவன் இறந்துவிட்டால் கனவுகளில் மிதக்க வேண்டியவள் கண்ணீரில் மிதக்க வேண்டும். பூவும் பொட்டும் சொந்தமில்லை. அணிகலனால் அழகு செய்யவே முடியாது. மங்கள காரியங்களில் கலந்து கொள்ள முடியாது. ஒப்பாரிப் பாடல்கள் மூலம் பெண்களின் சமூக நிலையை அறிந்து கொள்ளலாம். "கூந்த பனமரமாம், குயிலடையும் மண்டபமாம், கூந்தமரம் சாஞ்சிபுட்டா, குயிலு போயி எங் கடையும்" இவ்வாறு செயற்கையழகு சிறிதுமின்றிச் சமூகத்தில் உள்ளதை உள்ளவாறே உணர்த்தி நிற்பன நாட்டுப்புறப் பாடல்கள்.

- ச. சு.

**நாட்டுப்புற விளையாட்டுக்கள் :** நாட்டு மக்களின் வாழ்வியலில் நாட்டுப்புற விளையாட்டுக் கள் ஒரு கூறாகும். ஒரு சமுதாயத்தில் நாகரிகம், பண்பாடு ஆகிய பரிணாம வளர்ச்சியுடன் இயைந்த தாகும் விளையாட்டுகள். விளையாட்டு என்பது வெளித் தூண்டல்களின்றி மகிழ்ச்சியூட்டும் செயல் களில் இயற்கையாக ஈடுபடுவதாகும். விளை யாட்டை மன மகிழ்ச்சி ஊட்டும் செயல் எனலாம். விளையாட்டுகள் வெறும் பொழுதுபோக்கு மட்டு மல்ல, உடல் நலம், மனநலம், முதலியவற்றைப் பேணுபவைகளுமாகும். விளையாட்டில் உடல் செயல்களின்றி உள்ளச் செயல்களும் இடம் பெறுகின் றன. குழந்தைகளின் இயல்புகளும் வெளிப்படுத்தப் படுகின்றன. வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களம் என்றும் விளையாட்டைக் கூறுவர்.

மனித இன வரலாற்றைக் கூர்ந்து நோக்கின் மனி தன் இன்றைய நிலையை எய்துவதற்குப் பல்வேறு நிலைகளில் பல்வேறு கால கட்டங்களைக் கடந்து முன்னேறியுள்ளான். வேட்டையாடி வாழ்ந்த காலத் திலும் நிலைத்த வாழ்வு வாழத் தொடங்கிய போதும் வேட்டை, போர் போன்றவற்றில் ஈடுபட்டான். அவற்றிற்காகப் பல பயிற்சிகளை மேற்கொண்டான். அப்பயிற்சிகள் காலப்போக்கில் சமுதாய மாற்றத் தின் விளைவாக விளையாட்டுகளாகப் பரிணமித் தன. விளையாட்டு எல்லா மனித இனங்களிலும் காணப்படும் ஒன்றாகும். விளையாட்டு என்பது அமைப்புடைய ஆட்டமாகவும் போட்டியை ஏற் படுத்துவதாகவும் வெற்றியை நிருணயிக்கும் விதி களைக் கொண்டதாகவும் விதிகள் பொதுவாகப் பல ரால் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருக்க வேண்டும்.

விளையாட்டின் அடிப்படை இயல்பு, விளை யாட்டின் பயன் போன்றவற்றின் அடிப்படையில் விளையாட்டு பற்றி கொள்கைகள் ( Theories of play ) எழுந்தன. அவற்றுள் 1. மிகை ஆற்றல் கொள்கை ( Surplus energy theory ), 2. ஆயத்தக் கொள்கை

( Preparatory theory ), 3. புனராக்கக் கொள்கை ( Recapitulatory theory ), 4. பொழுதுபோக்குக் கொள்கை ( Recreation theory ), 5. காலுதற் கொள்கை ( Cathautic theory ), 6. போட்டி மனப்பான்மை ( Rivalry theory ) ஆகியன குறிப்பிடத்தக்கவை.


இக்காலத்தில் விளையாட்டுகளை அகவிளையாட்டு, புறவிளையாட்டு என இரண்டாகப் பிரிக்கின்றனர். ஓரளவு மகளிர், குழந்தை விளையாட்டுகளை முதல் பிரிவிலும் மற்றவற்றை இரண்டாவது பிரிவிலும் அடக்கலாம். விளையாட்டை, கால அடிப்படையிலும், கருவிகள் அடிப்படையிலும், வயது மற்றும் விளையாடுவோர் அடிப்படையிலும், தன்மை அடிப்படையிலும், போட்டி அடிப்படையிலும், செயல்கள் அடிப்படையிலும் வகைப்படுத்தலாம்.

ஆடவர் விளையாட்டுகள் புற விளையாட்டுகளாகவும், உடல்திறன், அறிவுத்திறன், வாய்ப்பு நிலை வாய்ந்த விளையாட்டுகளாகவும் உள்ளன. மகளிர் விளையாட்டுகள் அக விளையாட்டாக உள்ளன. சிறுவர், சிறுமியர் விளையாட்டுகள் போலச் செய்தலை ( Imitation ) அடிப்படையாகக் கொண்டவை. இவ் விளையாட்டுகள் மரபு வழியாகப் பாதுகாக்கப்படுகின்றன. சிறுவர், சிறுமியர், உடல்திறன், மன மகிழ்ச்சி விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். சிறுவர்கள் பொதுவாகப் போட்டி விளையாட்டுகளிலும் அதிகம் ஈடுபடுகின்றனர். தீவிரமான விளையாட்டுகளைச் சிறுவர்களும், மென்மையான விளையாட்டுகளைச் சிறுமியர்களும் விளையாடுகின்றனர். ஆடவர் விளையாட்டை அறிவுத்திறன் சார்ந்தது என்றும், மகளிர் விளையாட்டை மனமகிழ்ச்சி, பொழுது போக்குச் சார்ந்தது என்றும் கூறுவர். உடல்திறன் விளையாட்டுகள் வீரத்தையும், அறிவுத்திறன் விளையாட்டுகள் சிந்திக்கும் ஆற்றலையும் நல்குகின்றன. சிறுமியர் விளையாட்டுகளை வாழ்க்கைக்குப் பயிற்சியளிக்கும் களமாகக் கொள்ளலாம். கட்டுப்பாடு, ஒற்றுமையுணர்வு, பொறுப்பணர்வு, வெற்றி தோல்வியைச் சமமாகக் கருதும் மனோநிலை முதலியவற்றை விளையாட்டு அளிக்கிறது. விளையாட்டு குழந்தையின் முழுவளர்ச்சிக்கு இன்றியமையாதது. விளையாட்டின் வழியே புலப்பயிற்சி ( Sense training) இயற்கையாக நிகழ்கிறது. குழந்தைகளின் இயல்பூக்கங்கள் விளையாட்டில் வெளிப்படுகின்றன. விளையாட்டு பண்பாட்டுச் செயல்களின் வெளிப்பாடாகும். விளையாட்டு சமூக ஒழுகலாறுகளைக் கற்பிப்பதற்குப் பயன்படுகின்றது. குழந்தைகளிடையே விளையாட்டின் மூலம் ஒற்றுமையுணர்வும் கட்டுப்பாட்டுணர்வும் வளர்கின்றன. மேலும், குழந்தைகளிடையே தலைமைப் பண்பும் வளர்கிறது. அதே நேரத்தில் பணிவும் பிறருக்கு உதவும் மனித நேயமும் வளர்கின்றன.

- சு.ச.

**நாணயங்கள் :** ஒரு பொருளை வாங்கவும் விற்கவும், ஒரு பொருளின் மதிப்பை நிருணயிக்கவும் அனைவராலும் ஒருமனதுடன் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஒரு கருவியே நாணயம் ஆகும். இது காசு, பணம் எனவும் அழைக்கப்பட்டது. ஒரு நாட்டின் வாணிக வளர்ச்சிக்கும் பொருளாதார முன்னேற்றத்திற்கும் நாணயங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. நாணயங்கள் புழக்கத்திற்கு வருமுன்பு, பண்ட மாற்று முறையே மக்களால் பின்பற்றப்பட்டு வந்தது. பின்னர் கிளிஞ்சல்கள், கூழாங்கற்கள் போன்ற பொருள்கள் காசுகளாகப் பயன்படுத்தப்பட்டன. அதன் பின்னரே நாணயங்கள் அச்சடிக்கப்பட்டுப் புழக்கத்தில் விடப்பட்டன. நாணயங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே வாணிகம் பன்மடங்கு பெருகலாயிற்று. நாணயங்கள் ஒரு நாட்டின் வரலாற்றை உருவாக்கப் பயன்படும் சான்றுகளுள் ஒன்றாகத் திகழ்கின்றன. எனவே வரலாற்று ஆராய்ச்சிக்கு இவை பெரிதும் பயன்படுகின்றன.

இந்தியாவில் பண்டைக்காலத்தில் ஈயம், செம்பு, வெள்ளி, தங்கம் முதலான உலோகங்களில் நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன. தொடக்க காலத்திய நாணயங்கள் இன்றைய நாணயங்களைப் போன்று அழகும், வடிவமைப்பும், நேர்த்தியும், தரமும் கொண்டதாக விளங்கவில்லை. இவை அச்சடிக்கப்பட்ட இடம் பண்டு அக்கசாலை, தங்கசாலை, கம்பட்டம் முதலான பல்வேறு பெயர்களால் குறிக்கப்பட்டன. பழங்காலத்திலிருந்து இந்தியாவின் பல பகுதிகளை ஆட்சிபுரிந்த அரசகுடியினர் பலரும் நாணயங்களை வெளியிட்டுள்ளனர். அவர்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் பணம், சின்னப்பணம், வீரராயன் பணம், அனந்தராயன் பணம், காசு, அச்சு, ஆணை அச்சு, அக்கம், இராசி, வராகன், காணம், மாடை, துளைப்பொன், திரமம், தினார், ககபணம், பத்ம தங்கா, கழங்சு, ஈழக்காசு முதலான பெயர்களால்



இந்திய – ஐரோப்பிய நாணயங்கள்

வழங்கப்பட்டன. இந்திய வேந்தரது காசுகளேயன்றி கிரேக்கர், உரோமானியர், இந்தோ கிரேக்கர், பார்த்தியர், சீனர், ஆங்கிலக் கிழக்கிந்தியக் குழுமத்தார், போர்த்துகீசியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர், தச்சுக்காரர் ஆகியோரது காசுகளும் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் உரோமானியரது நாணயங்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இவை தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் மிகுந்த அளவில் கிடைத்துள்ளன. இதனால் இந்தியா பண்டு உரோமம் நாட்டுடன் கொண்டிருந்த வாணிக உறவு தெரியவருகிறது.

**இந்திய நாணய வளர்ச்சி :** இந்தியப் படையெழுச்சிக்குப்பின், கிரேக்க மாவீரன் அலெக்சாந்தர், இந்தியாவில் வெளியிட்ட அழகிய நாணயங்கள் இந்தியரைப் பெரிதும் கவர்ந்தன. எனவே இந்தியரும் நாளடைவில் அவற்றைப் பின்பற்றி வட்ட வடிவம் கொண்ட, இருபுறமும் அச்சடிக்கப்பட்ட, உருவம் பொறித்த நாணயங்களை வெளியிட்டனர். இதன் பின்னர் இந்திய நாணயங்களில் பெரியதோர் மாற்றத்தையும் வளர்ச்சியையும் காணமுடிகிறது. இதன் விளைவாக இந்திய நாணயங்களிலும் மன்னரின் பெயர்களும் உருவங்களும் பொறிக்கப்பட்டன. இத்தகைய நாணயங்களுள், அலெக்சாந்தருக்குப் பின்னர் பாக்ட்ரியாவை ( Bactria ) ஆண்ட கிரேக்க வேந்தரது நாணயங்கள் முக்கிய இடம் பெறுகின்றன. இவை வடமேற்கு எல்லைப்புறங்களிலும், பஞ்சாபிலும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவற்றின் கலையழகும் நேர்த்தியும் மிகவும் போற்றத்தக்கதாக உள்ளன.

இந்திய கிரேக்கர்களைத் தொடர்ந்து இந்தியாவின் மீதுப் படையெடுத்த சித்தியர்கள், பார்த்தியர்கள் ஆகியோரும், சித்தயரின் ஒரு பிரிவினரான மேலைச்சத்திரபர்களும் ( Western satraps ) பல அழகிய வரலாற்றுப் புகழ்மிக்க நாணயங்களை வெளியிட்டுள்ளார். பின்னவரது நாணயங்களில் அவற்றை வெளியிட்ட மன்னனின் பெயர் மட்டுமன்றி, அவனுடைய தந்தையின் பெயருங்கூடப் பொறிக்கப்பட்டுள்ளன. சிலவற்றில் நாணயம் வெளியிடப்பெற்ற ஆண்டும் சகாப்தத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இவர்களது நாணயங்களைக் கொண்டே இவர்களது வரலாறும் கணிக்கப்படுகின்றது.

இவர்களையடுத்து ஆட்சிபுரிந்த குசாணர்கள், மாளவர்கள், யௌதேயர்கள், மித்திரர்கள் ஆகியோரும் பல நாணயங்களை வெளியிட்டனர். சாதவாகனரும் பல நேர்த்தியான நாணயங்களை அச்சடித்தனர். இவர்களது வரலாறும் நாணயச் சான்றுகளால் ஒளி பெறுகின்றன. குப்தர் காலத்திய நாணயங்கள் மிகுந்த அளவில் கிடைத்துள்ளன. இவற்றுள் பொன் நாணயங்களும் அடங்கும். குப்தர்களுக்குப் பின் நாணயச் சான்றுகள் அருகியே காணப்படுகின்றன. எ.கா. பேரரசர் கர்சர், சாளுக்கியர், இராட்டிரகூடர், பிரதிகாரர், பாலர் முதலான பல முக்கியமான அரச மரபினரின் நாணயங்களும் கிடைப்பது மிக அரிதாக உள்ளது. எனவே இவர்களது வரலாறுகள் கணிக்கப்பெற, நாணயச் சான்றுகள் பயன்பெறவில்லை.

நாணயவியல் ஆய்வு, வரலாற்று ஆராய்ச்சியாளர்களுக்குப் பல வகைகளில் துணைபுரிகிறது. ஒரு நாட்டின் அரசியல் வரலாற்றை மட்டுமின்றி, பொருளாதார, பண்பாட்டு, சமூக, சமய, கலை, மொழி வரலாற்றை அறிந்து கொள்ளவும் நாணயங்கள் உதவுகின்றன. அரசன், அரசி ஆகியோரது உருவம் பொறிக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்டு அவர்களது தோற்றம், ஆடை, அணிகலன்கள், அரச முத்திரை, மங்கலப்பொருள்கள் போன்றவற்றையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

நாணயங்கள் ஒரு மன்னனின் வெற்றிகளையும், அதன் விளைவாக அவன் பூண்டிருந்த விருதுப் பெயர்களையும் உணர்த்துகின்றன. கிரேக்க மாவீரன் அலெக்சாந்தரின் இந்திய வெற்றியின் நினைவாக வெளியிடப் பெற்ற 'தெக்காட்ரம்சு' எனும் நாணயம் முதலாம் இராசேந்திர சோழனின் கங்கை வெற்றியின் நினைவாக வெளியிடப்பெற்ற 'கங்கை கொண்ட சோழன்' எனும் நாணயம், முதலாம் இராசாதிராசனின் மலை நாட்டு வெற்றியின் நினைவாக வெளியிடப்பெற்ற 'மலை நாடு கொண்டான்' எனும் நாணயம் போசள விட்ணுவர்த்தனின் வெற்றியின் நினைவாக வெளியிடப்பெற்ற 'தலகாடு கொண்ட', 'நொளம்ப வாடி கொண்ட', நாணயங்கள் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் வெற்றியின் நினைவாக வெளியிடப்பெற்ற 'கச்சி வழங்கும் பெருமாள்', 'சோனாடு கொண்டான்', 'கலியுகராமன்', முதலான பெயர் பொறிக்கப்பட்ட நாணயங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்க சிறப்புக்குரியனவாகும்.

குப்தரது நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள இந்து சமயக் கடவுளர்களைக் கொண்டு, அவர்கள் இந்து சமயச் சார்புடையவர் என்பது புலனாகும். சமுத்திரக்குப்தரின் காசில் வீணையை அவர் மீட்டுவது போன்ற உருவம் காணப்படுவதால், அக்காலத்திய வீணையையும், அவர் வீணை இசையின் மீது கொண்டிருந்த ஆர்வமும் அறியப்படுகின்றது. கூனரது படை யெடுப்பிற்குப்பின் குப்தரது நாணயம் தரங்குறைந்து காணப்படுகிறது. குப்தரின் பொருளாதாரச் சீர் குலைவை இது காட்டுவதாகக் கொள்ள வேண்டும். சாதவாகனர் கடல் வாணிகத்தில் ஈடுபட்டிருந்ததை, அவர்களது நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ள கப்பல் உருவத்தால் அறியலாம்.

இலக்கியச் சான்றுகளும் பிற சான்றுகளும் துணை புரியாத ஒரு சூழலில், நாணயவியல் பழங்கால வரலாற்றை அறிய பெரிதும் பயன்படுகிறது. மதுரை சுல்தான்களின் ஆட்சி பற்றிய செய்திகள் நாணயங்களால் மட்டுமே அறியப்படுகின்றன.

தமிழகத்தை ஆண்டு வந்த அரச மரபினர் பலரது நாணயங்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் சோழர், பாண்டியர், சேரர், பல்லவர், மலையமான்கள், நாயக்கர், விசயநகரத்தார், ஹைதர்அலி, திப்புசுல்தான், மைசூர் உடையார்கள், போசளர் ஆகியோரது நாணயங்கள் குறிப்பிடத்தக்கன. சங்க கால மூவேந்தரது எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட காசுகள் கிடைத்துள்ளன.

1988க்குப் பின்னர் திருச்சி மாவட்டம் கரூரில் கொல்லிப்புறை, கொல்லிரும்பொறை, சேரமான், மாக்கோதை எனும் பெயர் பொறிக்கப்பட்ட பல செம்பு, வெள்ளிக் காசுகள் கிடைத்துள்ளன. இவற்றால் சங்கச்சேரரின் தலைநகரம் திருச்சி மாவட்டத்துக் கரூரே என முடிவு செய்ய வாயப்புள்ளது.

'வழுதி பெருவழுதி' எனப்பெயர் பொறிக்கப்பட்ட காசு, பாண்டியர் தலை உருவம் பொறிக்கப்பட்ட காசு ஆகியன கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் சங்கப் பாண்டியரின் பெருமை புலனாகிறது. அண்மைக் காலத்தில் மலையமான் பெயர் பொறிக்கப்பட்ட காசுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சேர,சோழ, பாண்டிய பல்லவரது நாணயங்களில் முறையே வில்,

புலி, இணைக்கயல், காளை ஆகிய அரசரின் சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களில் நந்தர், மௌரியர் பற்றிய குறிப்புகளும், தமிழகம் பண்டு யவனம், சீனம், ஈழம், கடாரம் முதலான நாடுகளுடன் கொண்டிருந்த வணிகத் தொடர்பு பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. தென்னிந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் உரோமம் நாட்டினரின் நாணயங்கள் பெருமளவில் கிடைத்துள்ளன. கரூர், கலையமுத்தூர், திருப்பூர், பொள்ளாச்சி, பவானி, அவினாசி, அழகன் குளம், மதுரை முதலான ஊர்களில் உரோமனியரது காசுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இக்காசுகள் அனைத்தும் கி.மு 44 முதல் கி.பி. 337 முடிய ரோம நாட்டை ஆட்சி புரிந்த வேந்தருடையதாகும். தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் விக்ரமம், ஒலைய குன்னம் கிராமங்களிலும் மன்னார்குடி வட்டம் தளிக்கோட்டையிலும் நூற்றுக்குமேற்பட்ட சீனக்காசுகள் கிடைத்துள்ளதால் தமிழகம் சீனாவுடன் மேற் கொண்டிருந்த வணிக, பண்பாட்டுத் தொடர்பு புலனாகிறது.

- ம. இரா.த.

**நார்வுட் அறிக்கை :** இடைநிலைப் பள்ளிக்கான கலைத்திட்டம் மற்றும் தேர்வுகளின் சீரமைப்பிற்காக, இடைநிலைப் பள்ளித் தேர்வு மன்றத்தைச் சேர்ந்த நார்வுட் குழுவை 1941ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் கல்வி வாரியம் நியமித்தது. இடைநிலைப் பள்ளிக்கான கலைத்திட்டத்திலும் பள்ளித் தேர்வுகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்துவதைப் பற்றி ஆலோசனை வழங்குதலே இக்குழு தயாரித்து அளிக்கப்பட வேண்டிய அறிக்கையின் வரையறை ஆகும். இக்குழு பொதுவான தத்துவ நிலையினை அறிக்கையின் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கின்றது. இது 1943ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இத்தத்துவமானது பின்னர் வந்துள்ள அத்தியாயங்களில் உள்ள மதக்கல்வி மற்றும் இதிகாசங்கள் போன்றவற்றில் மிகவும் வெளிப்படையாக விளங்குகிறது. எல்லாக் காலங்களுக்கும், எல்லா இடங்களுக்கும் பொருந்தும்படியான வாய்மை, அழகு, நன்மை என்பவைகளைத் தனிப்பெரும் கருத்துகளாகக் கொள்ள வேண்டும் என இக்குழு கூறியது. மேலும் இக்குழுவானது இது போன்ற மதிப்புண்மைகளை ஏற்கிறது. இம்மதிப்புகள் வாழ்க்கைப் பற்றிய மத அடிப்படையிலான விளக்கங்களை ஏற்றுள்ளது. மத அடிப்படை என்பதைக் கிறித்துவ மத அடிப்படையிலான வாழ்க்கை எனப் பொருள் கொள்வது பொருந்தும். இம்மதிப்புண்மைகள் என்பவை காலம் மற்றும் குறிப்பிட்ட சூழ்நிலையைச் சார்ந்தவை அல்ல. சார்புத்தன்மை உள்ள இம்மதிப்புண்மைகளைப் புறக்கணிக்கும் எந்தக் கல்வியையும் இது ஏற்றுக்கொள்வதில்லை. நல்ல வாழ்க்கை அல்லது கிறித்துவ வாழ்க்கை என்பதாகிய இறுதி இலக்கை அடைவதற்குரிய வழிமுறைகளாக அறிவியலும் அறிவியல் முறையும் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றன.

தொடக்கக் கல்வியைத் தொடர்ந்து இடைநிலைக் கல்வி என்ற நிலையிருக்க வேண்டும் என்ற கருத்து இவ்வறிக்கையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தனி அக்கறையும் ஆர்வமும் ஏற்படுத்தக்கூடிய, இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்குப் பொருந்தக்கூடிய கல்வியை அளிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது. முரட்டுத்தனமான பிரிவினர்களாக இருந்தாலும், அடிப்படையில் அவர்கள் எப்படியிருப்பினும், பொதுக்கல்வி அனுபவத்தை அவர்கள் பெற்றிருந்தார்கள். இலக்கணம், தொழில்துறை மற்றும் நவீனம் என்ற மூன்று விதமான இடைநிலைப்பள்ளிகள் இருத்தல் வேண்டும் என்று இக்குழு கருதுகிறது. மாணவர்களையும் மூன்று பிரிவினர்களாகப் பிரித்து அவர்கள் தங்களுடைய பதினொன்றாவது வயதிற்கு மேல் இம்மாதிரிப் பள்ளிகளில் சேர்ந்து தங்கள் தேவைகளை நிறைவு செய்துகொள்ள வேண்டும் என இவ்வறிக்கை குறிப்பிட்டிருந்தது. மூன்று வகையான பள்ளிகளை மும்மண்டலம் என மிகச்சரியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் பயிலும் மாணவர்களின் பருவம் எதையும் ஆய்ந்துணரக்கூடிய பருவமாக இருப்பதால் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரே வகையான கல்வியைப் பயில வேண்டும். பதின்மூன்று வயதிற்கு மேல் தேர்ந்தேடுக்கப்பட்ட மாணவர்கள் மற்ற பள்ளிகளுக்கு மாற்ற வேண்டும் என்பதைத் தேவைப்பட்டால் மறுஆய்வு செய்ய வேண்டும் என்று இக்குழு கருதியது. குழந்தைகளை உளவியல் அடிப்படையில் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டதற்கு அன்றும் இன்றும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

வசதிகள், பொதுவான நிலைகளைக் கொண்டிருத்தல், உயர்வாக மதித்தல் ஆகியவைகளில் மூன்று

வகையான பள்ளிகளும் சமமாக இருத்தல் வேண்டும். ஆனால் இப்பள்ளிகள், நிர்வாகத்தில் ஆணையினாலோ ஒவ்வொரு மாணவர்கள் செலுத்தும் தொகையினாலோ இல்லாமல் தங்களுக்குள்ள சொந்த முயற்சியின் அடிப்படையில் வெற்றி பெற வேண்டும் எனக்குழு கூறியது. உள்ளூர் தொழில் நிலைகளில் தேவைக்கேற்ப பதினாறு வயதிற்கு மேல் தொழில் மற்றும் வாணிகத்தில் நுழைவதற்குப் பயிற்சி கொடுப்பதையே தனது முக்கிய மற்றும் அடிப்படைக் கடமையாக இடைநிலைப்பள்ளி கொண்டிருந்தது. இந்தப் பள்ளிகள் பதினாறு வயதி லிருந்து பதினெட்டு வயதிற்குள் உள்ளவர்களுக்கு வளர்ச்சியடைந்த வேலை செய்வதற்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும் என இக்குழு கருதியது. நாட்டின் பெரும்பாலான மாணவர்களும் மாணவிகளும் பள்ளியை விட்டு வெளியேறும் வயதில் பொதுக்கல்வி வசதி அளிப்பதையே நவீன இடை நிலைப் பள்ளியின் முக்கியப் பண்பாக இருந்தது.

இப்பள்ளிகளின் கலைத்திட்டங்கள் மாணவர்களின் சூழ்நிலைக்கும் உடனடித்தேவைக்கும் தொடர்புடையவையாக இருக்க வேண்டும். கற்பிக்கும் முறையானது, செயல்முறை சார்ந்ததாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டும். சோதனை முறையில் அணுகக்கூடிய முறையிலும் குறிப்பிடப்பட்ட பகுதிக்கான கல்வி இருக்க வேண்டும் என்று இவ்வறிக்கை எதிர்பார்க்கிறது.

இடைநிலை இலக்கணப் பள்ளியானது ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு மட்டும் அறிவாற்றல் தரக்கூடிய குறிகோளைக் கொண்டிருந்தது. மேலும், குறிப்பிட்ட இப்பிரிவு மாணவர்கள் சொந்த நலனுக்காகக் கற்பதிலும், பகுத்தறிவுத் திறனை வளர்ப்பதிலும், காரணங்களை அறிவதிலும், நிருபணம் செய்வதிலும், சுருக்கமாகச் செய்து காட்டுவதிலும் தொடர்புபடுத்துவதிலும், அமைப்பிலும், வளர்ச்சியிலும், இசைவான சட்டத்தொகுப்பு பற்றிய அறிவியலிலும் ஆர்வம் காட்டி வந்தார்கள்.

இக்குழு கவனமாக ஆலோசித்து, முடிவாக பதினொன்று வயதிற்கு மேற்பட்ட மாணவர்களைப் பாகுபடுத்தித் தேர்ந்தெடுப்பதில் பள்ளிப் பதிவேட்டு அட்டையையும் தொடக்கப்பள்ளி ஆசிரியர்களின் தீர்ப்புகளையும் அறிவுத் திறமையையும் சிறப்புச் செயல்களையும் மற்றும் பல தேர்வுகளின் அடிப்படையையும் வலியுறுத்தியது.

தேசியக் கல்விப்பணியை மாற்றியமைப்பதற்காக 1943ஆம் ஆண்டு அரசாங்கம் கல்விச் சீரமைப்பிற்கான வெள்ளை அறிக்கையை வெளியிட்டது. தேசத்தின் பெரிய சொத்து இளைஞர்கள் என அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாரானது. பள்ளி முன்பருவப் பள்ளி, தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி ஆகிய மூன்று நிலைகளில் கல்வி என்பது ஒரு தொடர் செயலாக இருக்கவேண்டும் என உறுதி செய்யப்பட்டது. கட்டாயப்பள்ளி வருகை பதினைந்து வயது வரையும், சந்தர்ப்ப சூழ்நிலைகளின் படி பதினாறு வயது வரைக்கும் எந்தவிதமான விலக்குமின்றி நீட்டிக்கப்பட்டது. இலக்கண இடைநிலைப்பள்ளி, நவீன இடைநிலைப்பள்ளி மற்றும் தொழில்துறை சார்ந்த இடைநிலைப்பள்ளி ஆகிய இம்மூன்றும் மூன்று விதிகளிடங்கிய ஓர் அமைப்பு என வெள்ளை அறிக்கை ஆமோதித்தாலும் இவை வெவ்வேறு விதமானவை என்றும் சமநிலையில் இல்லாதவை என்றும் இக்குழு கருத்துக் கூறியது. மேலும் இவை எப்போதும் தனியானவை அல்ல. வித்தியாசமான இவற்றை ஒரே கட்டடத்தில் அல்லது ஒரே இடத்தில் இணைத்து வைக்க முடியும். மேலும் ஒருவிதமான கல்வியிலிருந்து மற்றொன்றிற்கு எளிமையான முறையில் மாற்றம் செய்வதற்கான வசதிகள் இருக்க வேண்டும். தனித்திறமை மேலும் தேவைப்பட்டால் நுண்ணறித்தேர்வு, பெற்றோர்களின் விருப்பங்கள், அவர்களின் மனதில் உள்ள வாழ்க்கை நெறிப்போக்கு ஆகியவற்றின் அடிப்படையில் குழந்தைகளைப் பிரித்தல் வேண்டும்.பதினொன்றுக்கு தேர்ந்தெடுப்பதில் போட்டியின்மை குறித்து, கல்வித்துறையின் பெரும்பாலான இயக்குநர்களும் தலைமை ஆசிரியர்களும் அதற்கான குறிப்புரைகளைப் புறக்கணிப்பு செய்வதை வெள்ளை அறிக்கை கவனிக்கத் தவறிவிட்டது. ஆனால் இவை இயற்கையிலேயே தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. மேலும் அரசாங்கமானது, மூன்று அமைப்புகள் அடங்கிய இப்பகுதியை 1944ன் கல்விச்சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு முன்பே, திரும்பப் பெற்றுவிட்டது.

- நா. பா.

**நிதித்திட்டம் :** ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டம் தீட்டுகின்ற பொழுது பல் வேறு அணுகுமுறைகளைப் பின்பற்றுகின்றனர். அவற்றில் ஒரு முறையாக நிதிசார் திட்டமிடல் இருக்கின்றது. நிதித்திட்டமிடுதலின் மற்றொரு வகையாகப் பருப்பொருள்சார் திட்டமிடல் ( physical planning) இருக்கின்றது. நிதித்திட்டமிடுதலும், பருப்பொருள் சார் திட்டமிடுதலும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போல் இருக்கின்றன.

ஒரு நாட்டிற்குத் திட்டமிடுகின்ற பொழுது, அந்தத் திட்டத்திற்கு எவ்வளவு வளங்கள் பயன்படுத்தப்படும் என்பதையும் ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு வளங்கள் ஒதுக்கீடு செய்யவேண்டும் என்பதையும் ஒவ்வொரு துறையிலும் அடையப்போகின்ற குறியீட்டு அளவு ( Target ) எதுவாக இருக்கும் என்பதையும் முதலில் தீர்மானிக்கவேண்டும். அவற்றைப் பண அளவில் குறிப்பிட்டால் அதனை நிதித்திட்டம் என்பர்.

திட்டத்திற்கு நிதி அச்சாணியாக இருக்கின்றது. போதுமான நிதியின்றி திட்டத்தை நிறைவேற்ற இயலாது. ஆதலால் திட்டத்திற்கு வேண்டிய நிதியளவை ஒவ்வொரு துறையின் திட்டத்தேவையை ஒட்டி நிருணயம் செய்யப்படுகிறது. நாட்டிலிருக்கின்ற மனித வளங்களையும் மூலப்பொருட்களையும், எந்திரங்களையும், பிற சாதனங்களையும் பண அளவில் மதிப்பிடப்பட வேண்டும். திட்டத்தின் அளவைப் பணக் கணக்கில் கூறி, ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கியுள்ள மூல வளங்களையும் பண அளவில் குறிப்பிடுவர். பருப்பொருள்சார் திட்டத்தில் உண்மையான உழைப்பு, பொருட்கள், கருவிகள் போன்ற பருப்பொருட்களாக இருக்கும் வளங்களின் அடிப்படையில் நோக்கங்களையும் குறியீடுகளையும் தீட்டுகின்றனர்.

இந்திய நாட்டுத் திட்டங்களை நிதித் திட்டமிடுதலுக்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம். முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ( 1951 - 56 ) பொதுத்துறைகளுக்கு இரண்டாயிரத்து மூன்னுற்று ஐம்பத்தாறு கோடி ரூபாய் செலவிட அரசு ஒதுக்கியது. இதில் சமுதாய வளர்ச்சிக்கு 357 கோடி ரூபாயும், மின்சக்தி உற்பத்தி, நீர்ப்பாசனம் ஆகிய துறைகளுக்கு 661 கோடி ரூபாயும், தொழில்கள், சுரங்கத் தொழிலுக்கு 178 கோடி ரூபாயும், போக்குவரத்து செய்தித் துறைக்காக 657 கோடி ரூபாயும் பிறவற்றிற்காக 59 கோடி ரூபாயும், சமூகப்பணிக்காக 533 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டன.

ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் நிதியளவு கூடிக்கொண்டே சென்றது. ஏழாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ( 1985 - 90 ) பொதுத்துறைக்கு 1, 80, 000 கோடி ரூபாயும், எட்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ( 1990 - 95 ) பொதுத்துறைக்கு 3, 35, 000 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டன. இது நிதிசார் திட்டத்தின் அடிப்படை இயல்பாகும்.

திட்டக்குழு ( Planning Commission ) விலை அமைப்பில் முக்கியமான, சமநிலையற்ற மாற்றங்கள் ஏற்படாமல் பருப்பொருள்சார் ஆற்றல்களை எல்லாம் முழுமையாகப் பயன்படுத்தும் வகையில் தேவைகளையும் அளிப்பையும் சமநிலைப்படுத்துவதே நிதிசார் திட்டத்தின் சாரமாகும் என்று கூறுகிறது.

திட்டக்குழு திட்டத்திற்கு வேண்டிய நிதிவளங்களையும், அவை கிடைக்கக்கூடிய மூலங்களையும் கணக்கிட வேண்டும். ஒரு திட்டத்தின் அளவு கிடைக்கின்ற நிதியின் அளவைச் சார்ந்தே அமையும். திட்டத்திற்கு வேண்டிய நிதி உள்நாட்டு வரி வருவாய், கடன் போன்றவற்றின் மூலம் கிடைக்கலாம். உள்நாட்டில் தேவையான நிதி கிடைக்காவிட்டால், வெளிநாடுகளிலிருந்து கடனாகவும் உதவித் தொகையாகவும் திட்டத்திற்கு வேண்டிய நிதியைப் பெறலாம். அதற்குரிய வாய்ப்புகளையும், வழிமுறைகளையும் கணக்கிலெடுத்துக்கொண்டு திட்டக்குழு நிதிசார் திட்டத்தினை வரையத் தொடங்கும்.

பொருளாதாரத்தில் நிதிச்சமநிலை சீர்கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பணப்புழக்கம் ஒரு பொருளாதாரத்திற்குக் குருதி ஓட்டம் போல் இருக்கிறது. நாட்டின் மொத்த நிதிக்குரிய தேவையும் அளிப்பும் சமநிலையில் இருக்கின்ற பொழுது பொருளாதார நடவடிக்கைகள் ஒரே சீராக இருக்கும். திட்டத்தின் மூலம் நிதிச்சமநிலை சீர்கெடுமானால் நாட்டுப் பொருளாதாரத்தில் சிக்கல்கள் தோன்றலாம்.

நிதிசார் திட்டம் பொருள்களின் அளிப்புக்கும் வாங்கும் சக்திக்கும் இடையிலும், வரவுகளுக்கும் செலவுகளுக்கும் இடையிலும் சமநிலை ஏற்படுத்தும் வகையில் பண ஓட்டத்தை மாற்றவும் சரிக்கட்டவும் வேண்டும். பொருள்களின் அளிப்புக்கும் வாங்கும் சக்திக்கும் இடையில் சமநிலை நிலவாவிட்டால்

பொருளாதாரத்தில் பணவீக்கமோ, பணவாட்டமோ ஏற்படலாம். இதேபோன்று, வரவுகளுக்கும் செலவுகளுக்கும் இடையில் சமன்பாடு ஏற்படாவிட்டாலும் சிக்கல் ஏற்படும். ஆதலால் திட்டத்தில் வெற்றி நாட்டின் பண நிர்வாகத்தைச் சார்ந்து அமைகின்றது.

**சிறப்புகள் :** பொருள்சார் திட்டமிடுதலோடு ஒப்பிடுகையில் நிதித்திட்டத்தில் சில குறிப்பிடத்தக்க சிறப்புகள் உள்ளன. நிதித்திட்டத்தை இருக்கின்ற வளங்களின் பண மதிப்பீட்டின் அடிப்படையில் எளிதாகத் தீட்டலாம். ஆனால், பொருள்சார் திட்டமிடலுக்கு இருக்கின்ற பருப்பொருள் வளங்களைப் பற்றிய நம்பத்தகுந்த சரியான புள்ளி விவரங்கள் தேவையான அளவில் கிடைக்க வேண்டும். வளர்ச்சி குறைந்த நாடுகளில் இத்தகைய புள்ளிவிவரங்கள் கிடைப்பது அருமையாக உள்ளது.

திட்டத்தின் மூலம் பொருள்களின் தேவை அளிப்புக்கிடையில் சமநிலை சீர்கெடுகின்ற பொழுது பண, நிதி நிர்வாகத்தின் மூலம் சமநிலையைக் கொண்டு வர முயலலாம். ஆனால், பொருள்சார் திட்டத்தில் எதிர்பாராத நிகழ்ச்சியினால் சில பொருள்கள் பற்றாகுறையாகிவிடுகின்ற போது, பொருளாதாரத்திலுள்ள பல்வேறு துறைகளுக்கிடையில் சமநிலை ஏற்படாமல் போகும். இந்நிலையை எளிதில் சரிகட்ட இயலாது.

பருப்பொருள் சார் திட்டத்தில், பருப்பொருள் குறியீடுகளில் பற்றாக்குறை ஏற்படுகின்ற பொழுது விலைகள் உயர்ந்து கூட பணவீக்கம் ஏற்படும். இத்தகைய பணவீக்கம் நிதிசார் திட்டத்தில் ஏற்பட வாய்ப்பு இல்லை.

நிதித்திட்டம் பொருள்சார் திட்டமிடலுக்கு உற்ற துணையாக இருக்கிறது. நிதித்திட்டம் பொருள் சார் திட்டமிடுதலில் குறியீடுகளை அடையவும், சாதனைகளை மதிப்பிடவும் ஏற்றதாக உள்ளது. ஒரு திட்டத்தை முழுமை உடையதாக மாற்ற பொருள்சார் திட்டத்தோடு இணைத்து நிதித்திட்டத்தையும் தீட்ட வேண்டிய தேவையை வல்லுநர்கள் வலியுறுத்துகின்றனர்.

**வரையறைகள் :** நிதித்திட்டம் சிறந்ததாக இருந்தாலும் அதனை வளர்ச்சி குறைந்த நாடுகளில் பின்பற்றுவதில் சில நடைமுறைத் தடைகள் உள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க குறைகளாவன :-

நிதித்திட்டத்திற்கு வேண்டிய நிதியை அரசு வரி விதிப்பின் மூலம் பெறுகின்றது. அப்போது மக்களின் சேமிப்பு ஆற்றல் குறையும். மக்களிடம் இருக்கின்ற சேமிப்பு விருப்பமும் பாதிக்கப்படும். இதனால் நாட்டின் சேமிப்பு குறையும்.

நிதித்திட்டத்தைச் செயற்படுத்த, பொருளாதாரத்தில் பணவீக்கம், நெகிழ்வற்ற தன்மைகள் போன்றவை இல்லாதிருக்க வேண்டும். இருக்கின்ற சூழலில் பொருளாதாரத்தின் சில பகுதிகளுக்கு மட்டுமே பின்பற்ற முடியும். நாட்டின் மொத்தப் பொருளாதாரத்திற்கும் நிதித்திட்டத்தைத் தீட்டிச் செயல்படுத்த இயலாது.

பின்தங்கிய பொருளாதாரத்தில் இரட்டைப் பொருளாதாரச் சூழல் இருக்கின்றது. பணப்பொருளாதார அமைப்பும், பராமரிப்பு நிலையிலுள்ள பணப்புழக்கம் குறைந்த பொருளாதாரமும் ( Subsistence nonmonetized economy ) அருகருகே இருக்கின்றன. இவ்விரு துறைகளுக்கும் இடையில் நிதித்திட்டம் சமநிலையற்ற போக்கை ஏற்படுத்தும். பொருளாதார வளர்ச்சியில் சிக்கல்கள் தோன்றும். அதனால் பருப்பொருள் குறியீடுகளை அடைய முடியாமல் போகலாம். அப்படிப்பட்ட சூழலில் பொருட்களின் அளப்பில் பற்றாக்குறையும் பணவீக்கமும் ஏற்படும்.

நிதித்திட்டத்தில் பொருளாதாரத்தில் பொருள்களின் பற்றாக்குறை ஏற்படுமானால் அதனை ஈடு கட்ட இறக்குமதிகளின் மூலம் அளிப்பைக் கூட்ட முயலலாம். ஆனால் இது, செலுத்துநிலையின் சமநிலையைச் ( Balance of Payments ) சீர்குலைக்கும்.

வளர்ச்சி குறைந்த நாடுகள் நிதித்திட்டம் தீட்டிச் செயல்படுத்துகின்ற பொழுது, தொடர்ந்து பணவீக்கம் ஏற்படும். பணவீக்கத்தின் விளைவாக விலைகள் கூடுகின்ற பொழுது திட்டத்தின் செலவுகள் கூடும். திட்டத்தின் நிதி அளவை மட்டுமின்றி, குறியீடுகளையும் மாற்றியமைக்க வேண்டிய தேவை ஏற்படும்.

நிதித்திட்டத்தின் மூலம் சமநிலைச் சமுதாய வளர்ச்சியை அடைவதில்லை. மக்கள்தொகைப் பெருக்கத்திற்கேற்ப சராசரிக் கூலியில் போதுமான வேலைவாய்ப்பை நிதித்திட்டத்தால் ஏற்படுத்த முடியாது. இதனால் வேலைவாய்ப்பைப் பெற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பைப் பெறதாவர்களுக்கும் இடையில் மிகுந்த இடைவெளி ஏற்படும்.

ஒவ்வொரு நாடும், அரசியல் அமைப்பு, பொருளாதாரச் சூழ்நிலை ஆகியவற்றை ஒட்டி நிதித்திட்டத்தையோ, பொருள்சார் திட்டத்தையோ மேற்கொள்கின்றது. முதலாளித்துவம் பொருளாதார அமைப்பில் பொருள்சார் திட்டத்தைப்போன்றே நிதிசார் திட்டமும் முக்கியத்துவம் பெறுகின்றன. இரண்டு திட்டங்களும் ஒன்றோடொன்று முரண்பட்டவை அல்ல. ஒன்றுக்கு மற்றொன்று உறுதுணையாக இருக்கின்றது. சிறந்த திட்டமிடுதலுக்கு இருவகைத் திட்டமிடுதலும் தேவைப்படுகின்றன. டாக்டர் பாலகிருட்டினா, பொருள்சார், நிதிசார் திட்டமிடுதல் ஒரே உண்மையின் வெவ்வேறு பக்கங்களாகும் என்று கூறுவார். பொருள்சார் திட்டத்தை இயக்குவதாக நிதித் திட்டம் இருக்கின்றது. திட்டமிடுபவர்கள் இருவகைத் திட்டமிடுதலையும் இணைத்து மிகுதியாகப் பயனைப் பெறுதலே சிறப்புடைய செயலாகும்.

- மா.பா. கு.

**நியமம் ( நேமம் ) :** தேவார வைப்புத் தலங்களில் ஒன்றாகக் கருதப்படும் நியமத்தை ( நேமம் ) சிலப்பதிகாரம் **தீதுதீர்நியமம்** எனச் சுட்டுகிறது. தஞ்சை மாவட்டத்தில் திருக்காட்டுப்பள்ளி - கல்லணை சாலையில் 3.2 கி.மீ தொலைவில் இவ்வூர் அமைந்துள்ளது. காவிரியின் தென்கரையில் அமைந்துள்ள நியமத்தைத் தலைநகராகக் கொண்டே முத்தரையர் என்னும் குறுநில மன்னர்கள் தஞ்சை, வல்லம் பகுதிகளை ஆண்டு வந்தனர்.

இரண்டாம் நந்திவர்மனின் படைத்தலைவனாக விளங்கிய பெரும்பிடுகு முத்தரையனான சுவரன் மாறன் நியமத்தில் 'மாகாளத்து பிடாரிகோயில்' எனும் கோயிலை எடுப்பித்துள்ளான். இப்போது இக்கோயில் இருந்ததற்கான சுவடே அழிந்துவிட்டது. பெரும்பிடுகு முத்தரையன் பிடாரிகோயிலைக் கட்டியதாகக் கூறும் கல்வெட்டும், நந்திவர்மன், ஆதித்த சோழன் காலக்கல்வெட்டுகளும் கொண்ட நான்கு தூண்கள் அருகில் உள்ள செந்தலைக் கோயிலில் உள்ளன. இத்தூண்கள் நியமம் பிடாரி கோயிலைச் சேர்ந்தவை என வரலாற்றாசிரியர்கள் கருதுவர்.

முதலாம் ஆதித்த சோழன் காலத்தில் எடுப்பிக்கப்பட்ட ஐராவதேசுவரர் கோயில் எனும் ஒற்றைத் தளக் கற்றளி இவ்வூரில் உள்ளது. கருவறை, அர்த்த மண்டபம், பரிவார தேவதைகளின் கோயில்களுடன் இக் கோயில் கிழக்கு நோக்கிக் கட்டப்பட்டுள்ளது.

அரம்பை எனும் தேவலோக மங்கை மானிட உருக்கொண்டு இக்கோயிலில் தவம் இயற்றினாள். தேவலோகத்திலிருந்து அரம்பையை மீட்க அனுப்பப்பட்ட ஐராவதத்தால் அரம்பையை மீட்க முடியவில்லை. அந்த ஐராவதத்தை மன்னித்து இறைவன் இத் தலத்தில் எழுந்தருளியுள்ளதால் ஐராவதேசுவரர் எனக் குறிப்பிடப்படுகிறார். இதை இக்கோயில் தலபுராணம் கூறுகிறது. இக்கோயில் கல்வெட்டுகள் இவ்வூரை 'நியமம் ஆயிரத்தளி' எனக் குறிக்கின்றன. இக் கோயிலில் இருந்து ஆதித்த சோழனின் இருபத்தி நாலாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றும், முதலாம் பராந்தகனின் பதினெட்டாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஒன்றும் படியெடுக்கப்பட்டுள்ளன.

ஆதித்த சோழனின் கல்வெட்டு, மூன்றாம் நந்திவர்மனின் தேவியான மாறன் பாவை என்பவள் இக் கோயிலில் எழுந்தருளியுள்ள இறைவன் மற்றும் பரிவார தேவதைகளின் வழிபாட்டுக்காகவும், இருபது அந்தணர்களுக்கு உணவு அளிக்கவும், ஐந்து கழஞ்சு பொன்னை முதலாக வைத்த செய்தியை உரைக்கிறது. பராந்தகனின் கல்வெட்டு இக்கோயில் இறைவனுக்கு விளக்கெரிக்க, கொடை அளித்த செய்தியைக் கூறுகிறது.

இக்கோயிலுக்குத் தென்மேற்கே பாழடைந்த பழங்கோயிலின் சின்னங்கள் காணப்படுகின்றன. இப்பகுதியில் நடுவில் பெரியலிங்கமும், சுற்றிலும் ஆயிரம் லிங்கங்களும் பதிக்கப்பட்டு விளங்குகின்றன. இதனால் இவ்வூருக்கு ஆயிரத்தளி எனப் பெயர் ஏற்பட்டிருக்கக்கூடும். இந்த லிங்கக் கூட்டத்திற்குச் சற்றுத் தொலைவில் மற்றொரு பெரிய லிங்கமும் காணப்படுகிறது.

- அ. இரா.

**நியூசோம் அறிக்கை :** சான் நியூசோம் என்பாரைத் தலைவராகக்கொண்டு தயாரித்து அளிக்கப்பட்ட இந்த அறிக்கையானது, மத்திய ஆலோசனை அவையின் அறிக்கை - இங்கிலாந்து ( Report of the Central Advisory Council - England ) என அழைக்கப்படுகிறது.

**அறிக்கை தயாரித்து அளிக்கப்பட வேண்டிய வரையறை :** பள்ளிகளிலோ தொடர் கல்விக்கான வேறு நிலையங்களிலோ முழு நேரப்படிப்பில் பயின்று வரும் சராசரி அல்லது அதற்குக் குறைந்த திறனுடைய பதின்மூன்றிலிருந்து பதினாறு வயதுடைய மாணவ மாணவிகளின் கல்வி பற்றி ஆராய்ந்து கல்வி என்பது பாட இணைச் செயல் களையும் ( Extra Curricular Activities ) உள்ளடக்கிய தாகக் கருதப்பட வேண்டும் என்பதே வரையறை யாகும். குரோத்தர் ஆராய்ந்த அதே பகுதிகளையும் பொருட்களையும் இருவரும் ஆராய்ந்ததால் அவர் கொடுத்த முடிவுகளையே இவர் திரும்பக் கூறும்படி யாயிற்று. அதாவது உலகம் உயர்பகுதி, இடைப் பகுதி, கீழ்ப்பகுதி ஆகிய மூன்றைக் கொண்டிருக் கிறது என்பதே இந்த முடிவாகும். ஆனால் மேல் தட்டு அல்லது மீத்திறன் மாணவர்களுக்கான கற் பித்தல் பொருட்களைப் பற்றி பிரவுன் என்பாரது ஆய்வும், நடுத்தர மாணவர்களுக்கான கற்பித்தல் பொருட்களைப் பற்றி சோன்சு என்பாரது ஆய்வும், கீழ்நிலை மாணவர்களுக்கான கற்பித்தல் பொருட் களைப் பற்றி இராபின்சு என்பாரது ஆய்வும், நியூசோமின் ஆய்வுக்கு வலுவூட்டியது.

எனவே, அவர் இந்த மூன்று தட்டு மாணவர்களுக் கான கற்பித்தல் பொருட்கள் வேறு விதமாக மீண்டும் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் எனக் கூறினார். அடிப்படையில் நியூசோம் குறிப்பிடக்கூடிய மாண வர்கள் இங்கிலாந்தில் இடைநிலைப்பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் 50 விழுக்காடு ஆவர். இவர் கள் தான் நாட்டின் 50 விழுக்காடு குடிமக்கள். 50 விழுக்காடு பணியாளர்கள், 50 விழுக்காடு பெற் றோர்கள், 50 விழுக்காடு நுகர்வோர். எனவே, கல்வி முறை அளிக்கக்கூடி மிகச்சிறந்த கூறுகளில் 50 விழுக் காடுகளை இவர்களுக்கு உரியவையாக்கப்பட வேண்டும் என்பது பொருத்தமானது.

இது ஒரு நல்ல இலக்காக இருப்பினும் நியூசோம் ஓர் அடிப்படையானதும் மிகப்பொருத்தமானது மான ஒரு சிக்கலைத் தவிர்த்திருக்கிறார். இடை நிலைக் கல்வி பற்றிய புதுமைக்கருத்தைச் சிந்திக்க வேண்டும் என்ற கருத்து விடப்பட்டிருக்கிறது. இரு கூறாகப் பகுப்பட்ட கல்விமுறை அதாவது மீத்திறம் வாய்ந்த சிறுபான்மை மாணவ மாணவிகளை மட் டும் பதினொன்றாம் வகுப்பு கல்வி முறையிலே எடுத்துக்கொண்டு மற்ற மாணவர்களை வெற்றிப் பெறாதவர்கள் என்று அழைப்பது கல்வியின் மற்ற சிக்கல்களுக்கு வழிகோலுமா என்ற வினா நியூசோம் குழுவினரால் ஆராயப்படவில்லை.

பரவலான கல்வி முறையில் அமைப்பு முறையி லான மாற்றம் கல்விச் சிக்கலுக்கு ஒரு தீர்வு என்று இந்தக் குழு கருதவில்லை. ஆனால், கல்விக் கொள்கைகளை வகுப்பவர்கள் மற்றும் பொதுமக்க ளின் மனப்பான்மை மாற்ற மே கல்விச் சிக்கலுக்குத் தீர்வு என்று இந்தக்குழு கருதுகிறது. இராபின்சனாக இருப்பது அல்லது சோன்சாக இருப்பது என்ற கருத்துகள் மோசமான படிப்புகள், ஆசிரியர், கட்ட டங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடும். 20 விழுக்காடு பள்ளிகள் சிக்கல்கள் உள்ள பகுதிகளில் பணியாற் றின. இவற்றில் இடைநிலைக் கல்வி பயிலும் மாண வர்களில் 18 விழுக்காடு பயின்றவர். 7 விழுக்காடு பள்ளிகள் நகரங்களில் உள்ள மோசமான பகுதிகளில் இருந்தன. 13 விழுக்காடு பள்ளிகள் அவற்றின் குறை பாடுகளையெல்லாம் பகிர்ந்து கொண்டன. 40 விழுக் காடு மன்றத்தின் பள்ளிகள் போதுமான கட்டட வசதிகளைப் பெறாமலிருந்தன. ஆனால், ஏழை மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் உள்ள பள்ளிக்கூடங் களில் 79 விழுக்காடு மோசமான கட்டடங்களைப் பெற்றிருந்தன. மூன்றில் ஒரு பங்கு ஆசிரியைகளும், ஆசிரியர்களில் பாதிபேரும் மூன்று ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து நீடிக்கவில்லை. இவர்கள் பணி யாற்றிய பள்ளிகளில் பள்ளிப்பாடங்கள் மிகப் பழமையானதாகவும், விரும்பப்படாததாகவும் இருந்தன. பெரும்பாலான சமயங்களில் பள்ளிகளில் காணப்பட்ட குறைபாடுகள் மாணவர்களின் இல்லங் களில் காணப்பட்ட குறைபாடுகளை ஒத்திருந்தன.

எனவே, சீர்திருத்தம் என்பது புறக்கூறுகளான கட் டடங்கள் போன்றவற்றில் முன்னேற்றம் காண்பதைக் கொண்டதாக மட்டும் இருக்கக்கூடாது. பளிங்குக் கற்களினால் பள்ளிக்கூடம் அமைந்தால் கூட மோச மான பள்ளிகளாக இருக்கலாம் என்பதே மாணவர் களின் கூற்று. எனவே, பள்ளிப்படிப்பு முழுவதையும் சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டியதாக இருந்தது. இலக்கணப் பள்ளிக்கூடங்களில் எளிமைப்படுத்தப் பட்ட வடிவமாக இல்லாமல் மாணவர்களுக்கு உண்மையிலேயே பயன்படக்கூடிய முதிர்ச்சி நிறைந்த கல்வியைத் தருவதாகச் சீர்திருத்தம் அமைய வேண்டும்.

**நியூசோம் அறிக்கையில் காணப்படும் முக்கிய பரிந்துரைகள் - மாணவர்களும் பள்ளிகளும் :** இடைநிலைப் பள்ளிகளில் 1965 செப்டம்பர் மாதத்திலிருந்து சேரும் அனைத்து மாணவர்களுக்கும் பள்ளியை விட்டு நீங்கும் வயதானது பதினாறு வயதாக உயர்த்தப்பட வேண்டும் என்பதை உடனடியாக அறிவிக்க வேண்டும்.

கல்வித்துறையானது ஓர் ஆராய்ச்சித்திட்டத்தை உண்டாக்க வேண்டும். ஏனெனில் மாணவர்களுக்குக் கற்பிக்கும் முறையினால் மாணவர்களுடைய இயற்கைத் திறமைகள் பாதிக்கப்படுகிறது. இவை பாதிக்கப்படுவதற்குக் காரணம் சூழ்நிலை, மொழியியல் தடங்கலே ஆகும். நலம் குறைந்த இடத்தில் வாழும் மக்களுடைய பொது சமூகம் சார்ந்த மற்றும் கல்வி சார்ந்த சிக்கல்களை எப்படிச் சாமாளிப்பது என்பதற்காக அனைத்துத் துறை அலுவலர்கள் நிறைந்த ஒரு நிறுவனம் தொடங்கப்பட வேண்டும்.

**கலைத்திட்டங்களும் தேர்வுகளும் :** அனைத்துப் பள்ளிகளிலும் நான்கு ஆண்டு மற்றும் ஐந்து ஆண்டு படிப்புகள் ஏற்படுத்த வேண்டும். இத்தகைய படிப்புகள் மாணவர்களுக்குக் கடுமையாக இருக்கக்கூடாது. மேலும், இத்தகைய படிப்புகள் உண்மையாகவும் வயது வந்தோர்களின் திறமையின் அடிப்படையிலும் அமைவது நல்லதாக இருக்கும். இளைஞர் வேலை வாய்ப்புப் பணி, மேற்படிப்பு, இளைஞர் தொண்டு, முதியோர் கல்வி போன்றவற்றை வலுப்படுத்துவதாகப் பள்ளி இறுதி ஆண்டுத் திட்டம் அமைய வேண்டும். வேலை அனுபவம் சார்ந்த படிப்புகள் மிகவும் பொருத்தமானதாகும். தொலைக்காட்சி சனிக்கிழமை வேலைகள் போன்றவை பள்ளி வாழ்க்கையின் வெளிப்புறத்திலிருந்து அவனுடைய வாழ்க்கையில் செல்வாக்கைச் செலுத்துகின்றன என்பதை ஆசிரியர்கள் ஏற்றுக்கொள்வதோடு பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும்.

பள்ளிப்படிப்பை முடித்து வெளியேறுகிறவர்கள் பொதுத்தேர்வில் கலந்து கொண்டாலும் கலந்து கொள்ளாவிட்டாலும் பள்ளிவிடுப்புச் சான்றிதழ் வழங்கவேண்டும். பொதுத்தேர்வில் பங்கேற்க, தகுதியற்ற மாணவர்களைப் பள்ளிகள் கட்டாயப்படுத்தக் கூடாது. வயதான மாணவர்களுக்குச் சமயச் சார்பான கல்வி பொருத்தமுடையதாக ஆக்குவதற்கு ஏற்கனவே ஏற்றுக்கொண்ட பாடத்திட்டங்களைப் புதுப்பிக்க வேண்டும். பாலினம் சார்ந்த நடத்தைகளுக்குப் பள்ளிகள் உடன்பாடான வழிகாட்டுதலை அளிக்க வேண்டும்.

பாட இணைச் செயல்களையும் உள்ளடக்கியதாக உள்ள கல்வி சார்ந்த செயல்களில் மாணவர்கள் அதிக நேரம் செலவிட வேண்டும். ஆசிரியர் அதிக நேரம் பள்ளிகளில் வேலை செய்வதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

பள்ளியிலே தங்கிப்படிக்கும் படிப்புகளுக்கு உள்ள வாய்ப்புகள் குறித்து உள்ளாட்சித்துறை கல்வி அதிகாரிகளும், கல்வித்துறையும் சேர்ந்து ஆய்வினை மேற்கொள்ள வேண்டும். மேலும் பள்ளி வாழ்க்கையில் பாடங்களைப் பள்ளியிலே தங்கிப் படிக்கும் போது ஏற்படும் செலவினைக் கணக்கிடல் வேண்டும்.

**கட்டடங்கள் :** கல்வித்துறையும் உள்ளாட்சிக் கல்வித்துறை அதிகாரிகளும் கற்பிக்கும் முறைகளுக்காகவும் வெவ்வேறான பள்ளி அமைப்புகளுக்காகவும் சோதனை செய்வதற்காக முன்னறிச் சோதனை ( Try out ) ஏற்படுத்த வேண்டும்.

நலம் குறைந்த இடத்தில் உள்ள இடைநிலைப் பள்ளிகள் நீக்கப்பட்டு புதிய நவீன இடைநிலைப் பள்ளிகள் தோன்றவேண்டும். மேலும் இப்பள்ளியில் கூடுதலான மாணவர்கள் படிக்கின்றார்கள். ஆகையால் போதுமான அளவிற்கு நவீன இடைநிலைப் பள்ளிகளை விரிவுப்படுத்த வேண்டும்.

கல்லூரி மேற்படிப்புகளோடு செய்முறை உடைய பாடங்களை இணைப்பதற்கு வாய்ப்புகள் இருக்க வேண்டும். இடைநிலைப் பள்ளிகளில் கேள்விக் காட்சிகள் அமைத்தல் வேண்டும். புதிய கட்டடங்களில் மொழி கற்பித்தலுக்கான கருவிகளும், தொலைக்காட்சிகளுக்கான கருவிகளும் சேர்ப்பதற்குரிய திட்டம் தீட்ட வேண்டும்.

**ஆசிரியர்கள் :** பெரும்பாலான ஆசிரியர்கள் நல்லதொரு பயிற்சி பெற வேண்டும். இப்பயிற்சிகள் கல்வியியல் கல்லூரியில் மூன்று ஆண்டு படிக்கக்கூடிய பாடமுறையாகவோ, பல்கலைக்கழகப் பட்டப் படிப்பிற்குப் பின்பு ஓராண்டுப் பயிற்சியாகவோ இருக்கவேண்டும். ஒரு முக்கிய பாடத்தையும், ஒன்று அல்லது இரண்டு மற்ற பாடங்களையும் கற்பிப்பவராக ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும்.

இத்தகைய பயிற்சி பள்ளிப்படிப்பை விட்டு நீங்கு பவர்களுடைய வயதை அதிகரிப்பதற்கு ஏற்றவாறு தொடங்க வேண்டும். அறிவிக்கப்பட்ட தேதி யிலிருந்து பட்டப்படிப்பாளர்களுக்குக் கட்டாயப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

கல்வித்தகுதி வாய்ந்த ஆனால் பயிற்சிப்பெறாத ஆசிரியர்களுக்கு அவசரகாலப் பணியிடைப் பயிற்சி வகுப்புகள் இடைக்கால நிவாரணமாக அளிக்க வேண்டும்.

**அறிக்கையின் மீது செயல்படல் :** பழமைப் பற்று ( Conservative ) அமைச்சர் சர் எட்வர்டு பாயில் என்பவர், நியூசோமின் அறிக்கையைப் பெற்றுக் கொண்டு அதில் வெளியாகியுள்ள நற்செய்திகளை வலிமைப்படுத்தினார். அவர் அவ்வறிக்கைக்கு அளித் துள்ள முன்னுரையில், “எல்லா குழந்தைகளும் சம மான வாய்ப்பைப் பெற்று நுண்ணறிவு பெறுதலும், இயல் திறமையையும் மற்ற திறமைகளையும் முழு அளவிற்கு வளரச்செய்வதும் முக்கிய கருத்தாகும்,” என்று கூறுவார். ஆனால், இதனைச் செயல்முறைக் குக் கொண்டு வருவதற்கு முன்பே பழமைப்பற்று அரசு பதவியிழந்துவிட்டது. பிறகு வந்த தொழிற் கட்சி அரசும் அவ்வறிக்கை மீது நடவடிக்கை எடுக்க வில்லை. நான்கு ஆண்டுகளுக்குப்பின் பிளோவ்டன் குழு ஓர் உடன்பாடான செயல்முறையை எடுக்கும் வரையில் செயல்படவில்லை.

பள்ளிப்படிப்பை முடித்து நீங்கும் வயதானது பதி னாறுக்கு உயர்த்த வேண்டும் என்பதைப் பழமைப் பற்று அரசு 1964இல் ஏற்றுக்கொண்டது. 1969 - 70 இல் குழு தெரிவித்த யோசனை செயற்படாமல் 1970 - 71இல் இடைநிலைப் பள்ளிகளில் இளம் வயதினர் இருந்துவந்தனர். 1971இல் அதிகமானவர்கள் தங்கு வதற்குரிய கட்டடத் திட்டங்களின் பொறுப்புகளை மற்றொரு பழமைப்பற்று அமைச்சர் மார்க்ரெட் தாட்சரிடம் விடப்பட்டது. நியூசோமின் வரையறுக் கப்பட்ட குழந்தைகள் நீண்ட காலத்திற்குச் சரியாகச் செயற்படுவதற்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. அதே சமயத்தில் தொழிற்கட்சி அரசும் அத்தகைய கொள்கைகளைச் சீர்குலைத்தது. இடைநிலைக் கல்விக்கான கட்டடத் திட்டங்கள் சிறிய செயல்களாக இருந்த போதிலும் தொடர்ந்து நடைபெற்றது. மேலும் இடைநிலைக் கல்வி புனரமைப்பு பெறவும் வழிவகை செய்யப்பட்டது.

தொடக்கக் காலத்தில் பொதுமக்கள் அரசில் உள்ள சிலரைப்பற்றி அவர்களுடைய தவறான நடத்தை களைச் சுட்டிக்காட்டினர். ஆனால் கல்வித் துறை யினருடைய கருத்து உள்ளாட்சிக் கல்வியதிகாரியினு டைய எண்ணங்களுக்கு ஒத்ததுபோல் பள்ளிக்கூடங் களுக்குப் போதுமான கருவிகளும், பொருட்களும், தங்குமிடங்களும் பெறுவதற்கான மாற்றத்திற்கு உடன்பட்டது. ஒரு பெரும் அளவிற்குப் பாராட்டு களும் கற்பனை வேலைகளும் ஆசிரியர்களால் நடை பெற்றன என்று தலைமை ஆசிரியரும் ஆய்வாளர் களும் அனுபவத்தின் வாயிலாகக் கூறினார்கள்.

பாராட்டுமளவிற்குப் பொருளாதாரத்தில் ஒரு புது மாற்றம் ஏற்பட்ட போதிலும் கலைத்திட்டத்தைப் புதுப்பித்தலில் ஒரு பின்னடைவும் தடைகளும் ஏற் பட்டன. ஆனால் இத்தடைகளையும் குறைகளையும் நீக்க ஆசிரியர்களாலும், உள்ளாட்சித்துறை கல்வி அதிகாரிகளாலும் பெரும் முயற்சி எடுக்கப்பட்டது.

சில தயாரிக்கப்பட்ட கருத்துகளும் வளர்ச்சித் திட் டங்களும் தொடக்கநிலைத் தூண்டலைப் பல அதிகா ரிகளுக்கும், பள்ளிகளுக்கும் புதிய பாடங்களைத் தோற்றுவிக்க வாய்ப்பளித்தன. ஏறக்குறைய 450 ஆசிரிய மையங்கள் உள்ளாட்சித்துறை ஆசிரியர்க ளின் பயிற்சிகளைப் பற்றி விவாதித்தன. இவ்வாறு மாற்றங்கள் வந்தபோதிலும் சில அதிகாரிகளும் சில பள்ளிகளும் மாற்றத்திற்கு இடம் கொடாமல் பழ மையைக் கடைப்பிடித்து நடத்தும் பாடப்பொருள்க ளுக்கும் கற்பிக்கும் முறைகளுக்கும் தொடக்கநிலைச் செயல் உருவாகியது.

நியூசோமின் கருத்துப்படி பல புதிய பாடத்திட் டங்கள் தோன்றின. அவை கற்கும் செயல்களைப் பகுத்தறிதல் முதல் அழகுச் சாதனங்களை உண்டாக் கும் வரை எல்லையாகக் கொண்டு சொந்த உறவு களை ஆராய்ந்தன. இவைகளிலிருந்து பொதுப்படிப் பிலுள்ள மாணவர்கள் வேறுபட்டிருந்தனர். புதிதாகப் பள்ளிப்படிப்பைப் பெறுவதில் ஆர்வம் காட்டினர். ஆனால், உண்மையான படிப்புகளின் விரிவாக்கம் என்பது தேர்வு சார்ந்த படிப்புகளாகவே உள்ளன.

பெரும்பாலான மாணவர்கள் தேர்வு சார்ந்த படிப்புகளையே வரவேற்றுப் படித்தனர். தேர்வற்ற படிப்புகளை மாணவர்களிடையே பரவச்செய்வது கடினமாக இருந்தது. பின்னர்ப் பல அதிகாரிகள் மிகக் கவனத்துடன் கல்லூரிப் படிப்புகளையும் தொழி

லோடு இணைத்துப் பாடங்கள் அளிக்க வேண்டும் என்பதற்காகச் செங்கற்கள் அமைத்தல், நீர்க்குழாய் வேலை செய்தல் போன்றவற்றை இணைத்தனர். இத்தகைய வேலை அனுபவம் சேர்ந்த பாடங்கள் அமைக்கப்பட்டிருந்தபோதிலும் வேலை அளிப்பவர்களுக்கும் ஒன்றியத்திற்கும் மிகுந்த சிக்கல்கள் ஏற்பட்டன.

ஆசிரியர் பெறுகின்ற கல்வியின் அடிப்படையில் ஆசிரியர் ஒரு சிறந்த வழிகாட்டி என்பதை நியூசோம் நிருபித்தார். சேம்சு என்பவருடைய விசாரணையில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுப்பது என்பது பல பரிந்துரைகளில் ஒன்று என எடுத்துக்கொள்ளப்பட்டது. இந்த விசாரணை 1970களில் பழமைப்பற்றுக் கட்சியினரால் செயற்படுத்தப்பட்டது. பட்டதாரி ஆசிரியர்கள் எதிர்காலத்தில் சில பயிற்சிகளைப் பெற வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது 1970ஆம் ஆண்டு முதல் தொடக்கப்பள்ளிகளில் கட்டாயமாக்கப்பட்டது. 1974ஆம் ஆண்டு முதல் இடைநிலைப் பள்ளிகளில் கட்டாயமாக்கப்பட்டது.

- நா.பா.

**நெறிமுறைகள்** : தம்முடைய நிலைத்து அமைகிற குழுக்களில் அதன் உறுப்பினர்கள் புறத்தூண்டுதல்களுக்கு மறுமொழி கொடுக்கிற வகையில் எவ்விதம் செயற்படுவது என்பதை வழிகாட்டப் பல பொது விதிகள் அல்லது கருத்துகள் நிலவும். அந்த விதிகள் அல்லது கருத்துகளே நெறிமுறைகள் ( Norms ) எனப்படும் என்கிறார் செரிஃப் ( Mr. Sherif ).

ஒருவன் தன் வாழ்க்கையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை அவன் சார்ந்திருக்கிற சமூகம் சில விதிமுறைகளால் நெறிப்படுத்துகிறது. அந்த விதிமுறைகளையே நெறிமுறைகள் என்று சமூகவியலாளர்கள் அழைக்கின்றனர். இந்த நெறிமுறைகள் இரண்டு வகைகளில் அமைகின்றன. முதல்வகை மக்கள் இன்னவற்றைச் செய்யலாம், செய்யவேண்டும் என்று ஆணையிடுகிறது. இரண்டாவது வகை அவர்கள் இன்னவற்றைச் செய்யலாகாது என்று தடைப்படுத்துகின்றன. முந்தியவை ஆணையிடும் நெறிமுறைகள் என்றும் ( Prescriptive Norms ), பிந்தியவை தடைப்படுத்தும் நெறிமுறைகள் ( Prospective Norms ) என்றும் குறிக்கப்படும்.

சமூகத்தில் இரண்டு வகையான ஒழுங்குகள் அமைகின்றன. ஓர் ஒழுங்கு நெறிமுறைகளைக் கொண்டு விளங்குகிறது. இந்த ஒழுங்கு நெறிமுறை ஒழுங்கு ( Normative Order ) எனப்படும். இந்த ஒழுங்கில் சமூக உறுப்பினர்கள் ஒரு சமூகச் சூழ்நிலையில் எவ்விதம், எந்தப் பாங்கில் நடந்துகொள்ள வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு நிலவுகிறது. மற்றோர் ஒழுங்கு நடைமுறையில் மெய்யாக அமைகிற ஒழுங்கு ( Factual Order ). அதாவது சமூக உறுப்பினர்கள் நடைமுறையில் நடந்துகொள்ளும் பாங்கு அமைந்த ஒழுங்கு. இந்த ஒழுங்கு முதல் ஒழுங்கினால் ஈர்க்கப்பட்டு அதன்படி அமைகிறது. அதாவது நெறிமுறைகள் வகுத்துத் தருகிற பாங்கின்படி மக்களுடைய நடைமுறை நடத்தைப் பாங்கு அமைகிறது.

நெறிமுறை ஒழுங்கிற்கும், நடைமுறையில் மெய்யாக அமைகிற ஒழுங்கிற்கும் உள்ள உறவு ஒருவழிப் போக்குவரத்தில் அமைவதில்லை. நடைமுறை ஒழுங்கும் நெறிமுறை ஒழுங்கை ஈர்க்கிறது. நடைமுறை ஒழுங்கில் ஏற்படும் நிகழ்வுகள் நெறிமுறை ஒழுங்கை நிருணயம் செய்கின்றன. அந்த ஒழுங்கில் நிகழும் மெய்மைகளின்படிதான் நெறிமுறைகள் அமைகின்றன. மக்கள் தொகையில் ஆண்களும், பெண்களும் சமச்சீர் எண்ணிக்கையில் இருக்கும் நிலைமையில் ஒருவன் மூன்று மாணவிகளை வைத்துக்கொள்ள வேண்டும் என்று நெறிமுறை ஒழுங்கு நிருணயிப்பது கிடையாது. அவ்வாறே உப்புநீரில் குளிப்பதற்கும், எலும்புருக்கிநோய் தடுப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்கிற நிலைமை - மெய்மை நிலவிடும் நிலையில் ஒருவன் எலும்புருக்கி நோய் வராமல் இருக்க நாள்தோறும் உப்பு நீரில் குளித்திட வேண்டும் என்று நெறிமுறை ஒழுங்கு வற்புறுத்துவது கிடையாது. ஒருகால் அப்படிப்பட்ட விதிகள் இருந்தாலும், அந்த விதிகள் மதிப்பில்லாமல் இருக்கும். அந்த விதிகளைச் செயற்படுத்த எந்த உறுதியீடும் இருக்காது. அந்த ஒரு காரணத்தாலேயே அவை காலாவதியாகிப் போகும்.

நடைமுறை ஒழுங்கில் நிலவும் மெய்மைகள் மாறும்போது நெறிமுறைகளும் அவற்றுக்கேற்ப மாறும். அரசாங்கத்துக்கு மக்கள் அடிபணிய வேண்டும் என்கிற நெறிமுறை அரசாங்கம் முறையாக, நீதி நியாயத்துக்கு உட்பட்டுச் செயற்படும் நிலையில் தான் இயங்கும். ஆனால் அந்த அரசாங்கம் நீதி நியாயத்திற்குப் புறம்பாக, கொடுங்கோன்மை

அரசாக மாறிச் செயற்படும் நிலையில் , நீதியையும், அக்கிரமத்தையும் பொறுக்கலாகாது என்ற முறையில் பழைய நெறிமுறை புதிய சூழ்நிலைக்கேற்ப உரு மாறும். ஆக, மெய்மைகள் மாறும் நிலையில், நெறி முறைகளும் அதற்கேற்பத் தகவமைகின்றன.

சமூகம் ஒழுங்காக இயங்கக் கட்டுப்பாடு தேவை. மனிதன் சமூகத்தோடு இயற்கையாக, தானாக ஒன்றி ணையக்கூடிய அளவுக்கு அவனுடைய உணர்ச்சிய மைப்பு அமையவில்லை. ஆகவேதான் இத்தகைய நிலையில் சமூகம் ஒரு நெறிமுறை ஒழுங்கை உரு வாக்கி மனிதனுடைய நடத்தையைக் கட்டுப்படுத்த முனைகிறது.

மனிதன் எந்தக்காலத்திலும் ஆப்சு ( Hobbes ) கூறு கிறபடி, ஓர் இயற்கை நிலையில் அதாவது கட்டுப் பாடற்ற, நெறிமுறைகளற்ற, முழுச்சுதந்திரம் நிலவக் கூடிய நிலையில் வாழ்ந்தது இல்லை. அப்படிப்பட்ட நிலை ஒரு கற்பனையே தவிர உண்மையன்று. நெறி முறைகளுக்கு மனிதன் கட்டுப்பட்டு வாழ்வதற்குக் காரணம் மனிதனுடைய இயல்பிலே நெறிமுறை களுக்கு உட்பட்டு வாழும் தன்மை உள்ளடக்கியிருக் கிறது என்று உயிரியல்வாதிகள் கூறுகின்றனர். மனித னுடைய கட்டுப்பாட்டு நடத்தையே அவர்கள் ஓர் இயல்புணர்ச்சி என்று கருதுகின்றனர். ஆகவேதான், அவன் நெறிமுறைகளுக்கு உட்பட்டு நடக்கிறான் என்பது அவர்கள் கருத்து.

ஆனால் மனிதன் நெறிமுறைகளுக்குக் கட்டுப் பட்டு நடப்பது உயிரியல் இயல்பினால் வருவதன்று; கற்றலின் மூலம் வருகிறது என்பது சமூகவியலாளர் கள் கருத்து. மனிதனுடைய மைய நரம்பு மண்டலம் குறிப்பாக, பெரு மூளை சிறப்பாக மேம்பட்டு அமைந்துள்ளது. கற்கக்கூடிய ஆற்றல் மிகுதியாக அமைந்துள்ளது. அதனால் அவன் தன்னைச்சுற்றி நிகழ்வனவற்றையும், தான் வாழும் சூழ்நிலையில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது.

மனிதனுடைய தேவைகள் ஏராளமானவை. அந்தத் தேவைகளை நிறைவேற்ற அவன் பிறரைச் சார்ந்து அவர்களுடன் ஒன்றிணைந்து வாழ வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. இந்த நிலையில் அவன் பிறருடன் சேர்ந்து வாழ, நெறிமுறைகள் கைகொடுக் கின்றன. நெறிமுறைகளுக்கேற்ப அவன் நடந்து கொள்ளும்போது அவனுடைய சொந்தத்தேவைகள் நிறைவேறுவதுடன் சமூகத்தின் தேவையும் சேர்ந்து நிறைவேறுகிறது.

சமூக நெறிமுறைகள் சமூக ஒழுங்குக்கு வழி வகுப் பதுடன் சமூகம் வாழவும் வழிவகுக்கின்றன. சமூகம் வாழ மனித இனப்பெருக்கம் இன்றியமையாதது. மனித இனப் பெருக்கத்துக்குத் திருமணம், குழந்தை பேறு முதலிய செயற்பாங்குகள் அவசியம். இந்தச் செயற்பாங்குகள் முறையாக, ஒழுங்காக இயங்க வேண்டும். எல்லாச் சமூகங்களிலும் இத்தகைய செயற்பாங்குகளுக்கு நெறிமுறைகள் அமைந்திருக் கின்றன.

சமூக நெறிமுறைகள் அகப்படுத்தப்படுவது மட் டுமே மக்களால் கடைப்பிடிக்கப்படுவதற்குக் காரண மாக அமைவதில்லை. வழக்கத்தின் காரணமாகவும் மக்கள் நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கிறார்கள். நெறிமுறைகளைக் கடைப்பிடிப்பது பழக்கமாகி விடும்போது, மக்கள் அந்தப் பழக்கத்தின் காரண மாகவே அவற்றைத் தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறார்கள். சமூகம் வகுத்துள்ள நெறிமுறைகளை மக்கள் கடைப்பிடிக்கும்பொழுது அவர்களுக்குச் சமூகத்தோடு தம்மை பிணைத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இந்த வாய்ப்பிற்காகவும் அவர்கள் சமூக நெறிமுறை களைத் தொடர்ந்து கடைப்பிடிக் கின்றனர். சமூக நெறிமுறைகளை நிறுவுவதோடு மட்டுமின்றி, அவற்றை மக்கள் கடைப்பிடிக்கவும் சமூகம் ஒரு நிறுவன ஏற்பாடு செய்கிறது. உறுதியீடு களை நிறுவி, அவற்றின் மூலம் நெறிமுறைகளை அமுல்படுத்தி, மக்கள் நெறிமுறைகளைக் கடைப் பிடிக்க வைக்கிறது. அதாவது பரிசுகளையும், தண் டனைகளையும் நிறுவி, அவற்றின் மூலம் மக்களை நெறிமுறைகளைக் கடைப்பிடிக்க வைக்கிறது. நெறி முறைகளுக்கேற்ப அமைகிற ஒழுகலாற்றுக்குப் பரிசு களை வழங்கியும், நெறிமுறைகளுக்கே எதிராக அமைகிற ஒழுகலாற்றுக்குத் தண்டனை அளித்தும் சமூகம், மக்களை நெறிமுறைகளுக்கேற்ப நடக்க வைக்கிறது.

தண்டனை இரு வேறு வகைகளில் அமைந்து செயல்படுகிறது. முறைசார் தண்டனை ( Formal Punishment ) என்றும், முறைசாரத் தண்டனை ( Informal Punishment ) என்றும் இரு வேறு வகைகளில், கண்டனம், எதிர்ப்பு, சமூக விலக்கு, அபராதம், வன்முறைப் பிரயோகம், சிறைவாசம், மரண தண் டனை என்று பல்வேறு உருவங்களைத் தாங்கிச் சமூக

நெறிமுறைகளுக்கு எதிரான நடத்தையைத் தடுக்கிறது.

ஒரு சமூகத்தில் உறுப்பினர்கள் அனைவரும் அதன் எல்லாச் சமூக நெறிமுறைகளையும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. அவ்வாறே ஒரு குறிப்பிட்ட நெறிமுறையை முற்றாகக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை என்கிறார் கிங்சுலி தேனிசு. சமூக எதிர்பார்ப்புக்கிணங்க ஒருவன் ஒரு சமூக நெறிமுறையைப் பின்பற்ற முனைந்தாலே போதும், அதுவே அவன் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்தி அவனை சமூகத்தோடு இணைய வைக்கும் என்கிறார். "பல சமூக நெறிமுறைகளைப் பொறுத்த அளவில் அவற்றை முழுமையாகக் கடைப்பிடிப்பது சாத்திய மற்றது மட்டுமன்று. அதனால் சமூகத்திற்கு நன்மையும் இல்லை" என்கிறார்.

ஒரு சமூகத்தில் நெறிமுறைகள் எல்லா உறுப்பினர்களிடத்திலும் ஒரே மாதிரியாக அமுலாவதில்லை. அவ்வாறே எல்லாச் சூழ்நிலைகளிலும் அவை சமமாக அமுலாவதில்லை. வயது, பால், சமயம், செய்தொழில், சமூகத் தகுதிநிலை ஆகியவற்றின் அடிப்படையில் அமைகிற வேறுபாடுகளையொட்டி அவை மாறும். இத்தகைய நெறிமுறை மாற்றம் ( Variation in Norms ) பல்வேறு குழுக்கள் அடங்கிய ஒரு சமூகத்தில் இயல்பாக அமைந்திருக்கும். நாகரிகமடைந்த சமூகங்களில் இத்தகைய நிலை நிலவுகிறது.

இதற்குக் காரணம் அவை பலவாறாகப் பல்வேறு குழுக்களைக் கொண்டிருப்பதுதான். ஆனால் தொன்மையான சமூகங்களில் நெறிமுறை மாற்றம் நிலவுவதில்லை. ஏனெனில் அவை ஒருமித்த தன்மையைக் கொண்டவை. பல்வேறு குழுக்கள் அவற்றில் நிலவு வதில்லை.

சமூகம் ஒரு நடத்தைக்கு மாற்று முறைகளை ( alt ernative modes ) அனுமதிக்கும்போது, அங்குக் கட்டுப்பாட்டு உணர்வு எழுவதில்லை. ஒருவன் உடை உடுத்த வேண்டும் என்று சமூகம் வற்புறுத்துகிறபோது அவன் இன்ன உடையைத்தான் அணிய வேண்டும் என்று வற்புறுத்துவதில்லை.

இவ்வாறு கடப்பாட்டு உணர்வு அடிப்படையில் சமூக நெறிமுறைகள் வெவ்வேறு வகைகளில் அமைகின்றன. அவற்றை நாட்டார் வழக்குகள் ( Folkways ), வழக்கடிப்பாடுகள் ( Mores ), சட்டங்கள் ( Laws ) என்று சமூகவியலாளர்கள் வகைப்படுத்துகின்றனர். ஒரு குறிப்பிட்ட செயல் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட வழியில் செய்யப்பட்டு வரும். அந்த வழி தலைமுறை தலைமுறையாகச் சமூகத்தில் பின்பற்றப்பட்டு வரும். அதனை நாட்டார் வழக்குகள் என்கிறார் க்ரீன் ( Arnold Green ).

சமூக நெறிமுறைகள், நாட்டார் வழக்குகளாக இருந்தாலும், வழக்கடிப்பாடுகளாக இருந்தாலும், சட்டங்களாக இருந்தாலும் அவை வலுவான சமூகக் கட்டுப்பாட்டுச் சக்தியாக விளங்க வேண்டுமானால் சமூக விழுமியங்களைத் தழுவியிருத்தல் வேண்டும். மக்கள் எவற்றைச் சமூக மேம்பாட்டுக்கும் சமூக நன்மைக்கும் உகந்ததானவை என்று கருதி, மதிப்பளித்து போற்றுகிறார்களோ அவை விழுமியங்கள் எனப்படும். மக்கள் தங்களுடைய சமூக மேம்பாடும், சமூக நன்மையும் விழுமியங்களோடு தான் பிணைந்திருக்கும் என்று கருதுவார்கள். அப்படிப்பட்ட நிலையில் அவற்றுக்குப் பெரிதும் மதிப்பு கொடுத்து, அவற்றைப் போற்றிப் பேணுவார்கள். அவற்றுடன் உணர்ச்சிபூர் வமான பிணைப்பு வைத்திருப்பார்கள். அவற்றுக்காகப் போரிடவும், உயிர் துறக்கவும் துணிவார்கள்.

- சி. என்.ந.

துணை நூல்கள் :


1. Bierstedt, Robert., 1957, **The Social Order : An Introduction to Sociology**, McGraw - Hill Book Company, New York.

2. Davis, Kingsley., 1981, **Human Society**, Subject Publications, New Delhi.

3. Johnson, Harry. M., 1966, **Sociology : A Systematic Introduction**, Allied Publishers, Bombay.


**நோக்கக் கொள்கை :** நோக்கக்கொள்கை என்பது வில்லியம் மெக்டூகல் ( William McDougall ) என்ற உளவியல் வல்லுநரால் பெரிதும் பேசப்பட்டது. மெக்டூகல் 1921ஆம் ஆண்டு அமெரிக்க உளவியல் சங்கம் நடத்தியக் கூட்டம் ஒன்றில் உளவியல் கொள்கைகளின் சாரத்தை ஒன்று திரட்டி மனிதனின் நடத்தை, குறிக்கோள்களின் அடிப்படையிலும் முடிவு ஒன்றை நோக்கி அமைவதாகவும் இருப்பதாகக் கூறினார். மனிதன் தன் குறிக்கோள்களை முழுமையாக உணரவில்லையெனினும் அக்குறிக்

கோள்கள் அவனது நடத்தையினுள் புதைந்திருப்ப தால் நடத்தைத் 'தன் கட்டுப்பாடு ( Self - regulatory )' கொண்டதாக இருக்கிறது என்று கருதினார். இவரது நோக்கக் கொள்கையைப் பற்றி இன்னும் விரிவாக இவர் தோற்றுவித்த 'ஆர்மிக் உளவியல் ( Hormic Psychology)' என்ற கோட்பாட்டில் காணலாம்.

மெக்டூகல் தெளிவாக எங்ஙனம் மனிதன், தன் குறிக்கோள்களின் அடிப்படையில் நடத்தையைப் பெற்றிருக்கிறான் என்பதை உளப்பகுப்பாடு செய்து விவரிக்கிறார். இவரது கருத்தின்படி மனித உள்ளம் முழுநனவு நிலையிலும், ஓரளவு நனவு நிலையின் பக்கத்திலும் ( Marginally Conscious ), முன்நனவு நிலையிலும் ( Subconscious ) குறிக்கோள்களை உணர்ந்து மனிதனை உந்துகிறது எனலாம். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இவரது நோக்கக் கொள்கை உள்ளத்தின் குறிக்கோள்கள் நிறைந்த செயலாகும்.

மெக்டூகல் உளவழி நரம்புப்பிணிகளின் அறிகுறிகளைக் ( Psychonnrotic symptoms ) கூட நோக்க அடிப்படையில் விவரிக்கிறார். எ.கா. இசுடீரியா எனப்படும் நோயின் அறிகுறிகளுள் ஒன்றான ஆபத்துக் காலத்தில் கால் இயங்காமல் பக்கவாதம் பிடித்துக் கொண்டது போல் ஆவது. மெக்டூகலின் கருத்துப்படி நோக்கம் கொண்ட ஒன்றாகும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்தின் காரணமாகத் தான் அவன் தீடிரென நோய்வாய்ப் பட்டு அவ்வாறு கோளாறு ஒன்றினைப் பெற்றுத் தன்னை அத்தகைய இக்கட்டானச் சூழ்நிலையிலிருந்து காப்பாற்றிக் கொள்கிறான்.

ஈ.கே.தோல்மேன் ( E. K. Tolman ) என்ற மற்றொரு உளவியல் வல்லுநரின் எண்ணப்படி, "நோக்கம் என்பது ஒரு குறிப்பிட்டப் பொருளின் முடிவிலிருந்து ஏற்படும் ஒரு வேண்டுகோள்" ஆகும். அவர் தம் கொள்கைக்கு 'நோக்கம் சார் நடத்தைக்கோட்பாடு ( Purposive behaviourism )' எனப் பெயரிட்டார். அதில் அவர் மெக்டூகலின் நோக்கக் கொள்கை மாதிரி அகவயப்பாடு கொண்டது என்றும் அதை அறிவியில்பூர்வமாகச் சோதிக்கப்பட முடியாது என்றும் குறை சாற்றியிருக்கிறார். ஆனால் தாம் இயற்றி இருக்கும் மாதிரி நோக்கம் சார் நடத்தையில் கூறப்பட்டிருக்கும் ஒவ்வொரு முக்கியச் சொல்லும் அறிவியல்பூர்வ ஆய்வின்படி சோதிக்கப்பட்டது. சோதிக்கப்பட்ட முடிவு எது என்று கூறியிருக்கிறார். தோல்மேன் மேலும் தமது நோக்கம் பற்றிய கருத்தை நடத்தைக் கோட்பாட்டினரின் பெருமைக்குரிய குறியீடுகளான எசு.ஆர். என்பவற்றில் செவ்வனே இடையில் புகுத்தி ஆராயலாம் என்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார்.

ஆல்ஃபிரட் ஆட்லர் ( Alfred Adler ) என்ற உளப்பகுப்பு துறை சார்ந்த உளவியலார், நடத்தை என்பது நனவியல் உள்ளத்தில் உள்ள நோக்கங்களால் இயக்கப்படுவது எனச் சொல்லியிருக்கிறார். சிக்மென் ஃபிராய்டுக்கு எதிராக இக்கருத்து அமைகிறது. ஏனெனில் ஃபிராய்டு, நனவிலியில் உள்ளவை ஒரு குறிப்பிட்ட திசை நோக்கி நடத்தையைச் செலுத்துவதில்லை என்று கருதியது ஆட்லரின் கருத்திற்கு முரணாக அமைகிறது. ஆட்லர் மேலும் திடீரென ஏற்படும் உந்துதல்கள் கூட ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகத்தான் தோன்றுகின்றன என்றும் அவை அந்நோக்கத் தின் விளைவு என்றும் கூறுகிறார்.

ஆட்லர், மனிதர்கள் இருவிதமான நோக்கங்கள் உடையவர்கள் என்கிறார். அவை தொலைக்கால நோக்கங்கள் குறுகிய கால நோக்கங்கள் என்றும் பெயரிடப்பட்டுள்ளன. குறுகிய கால நோக்கங்கள் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் தூண்டல்களுக்குத் தரப்படும் உடனடித் துலங்கல்களாகும். ஆனால் தொலைக்கால நோக்கங்கள் ஒருவரது ஆளுமைக்குக் காட்டப்படும் பொதுவானத் திசைக்கருவியாகும். மெக்டூகலைப் போன்று ஆட்லரும் உளவழி நரம்புப் பிணிகளின் அறிகுறிகளை நனவிலி உள்ளத்தில் தோன்றும் நோக்கங்களின் விளைவு என்கிறார். ஆட்லரின் கருத்துப்படி மெய்ப்பாடுகள் கூட நோக்க அடிப்படையாகக் கொண்டு தோன்றியதேயாகும்.

- வ. தே.சா.

**பகழிக்கூத்தர் :** பகழிக்கூத்தர், சேதுமன்னர் அரசாட்சிக்கு உட்பட்ட செம்பி நாட்டைச் சார்ந்த சன்னாசி சிற்றூரில் பிறந்தவர். இது சதுர்வேத மங்கலம் என்னும் காமங்கோட்டைச் சேகரத்தைச் சார்ந்துள்ளது. இவர் தந்தையார் பெயர் தர்ப்பாதனர். இவர் வைணவப் பார்ப்பனக் குலத்தைச் சார்ந்தவர். தர்ப்பாதனர் புரிந்த அருந்தவத்தின் பயனாகப் பகழிக்கூத்தர் அவருக்குத் தவமைந்தராகத் தோன்றினார் என்பர். பகழிக்கூத்தர் இளமையிலேயே தமிழ்

இலக்கண, இலக்கிய நூல்களைக் கசடறக் கற்று அவற்றில் துறை போகியவராக விளங்கினார். இவர் ஒரு நாள் வயிற்று வலி நோயினால் பாதிக்கப்பெற்று மிகவும் வருந்தினார். வயிற்றுவலி நீங்குவதற்குரிய மருந்துகள் பல கொடுக்கப் பெற்றும், அவர் வயிற்று வலி நீங்கவில்லை. பகழிக்கூத்தர் பிறவி நோய்க்கு மருந்தாக விளங்கும் செந்திலம்பதியில் எழுந்தருளி யுள்ள குமரக்கடவுளைப் போற்றிப் பாடித் தம் வயிற்றுவலியைத் தீர்த்துக்கொள்ள எண்ணி, 'திருச் செந்தூர் பிள்ளைத்தமிழ்' என்னும் சிற்றிலக்கிய நூலைப் பாடினார். முருகப்பெருமானின் புகழ் பாடிய அவ்வேளையில் பகழிக்கூத்தர் தா முற்றிருந்த வயிற்றுவலி நீங்கப்பெற்றார். முருகப்பெரு மானைக் கண்டு மகிழவேண்டும் என்ற எண்ணத்தில் புலவர் திருச்செந்தூர் சென்றடைந்தார். முருகப் பெரு மானின் திருவடிகளைப் பணிந்து தாம் பாடிய பிள் ளைத் தமிழ் நூலை அரங்கேற்றினார்.

இத்தகைய பக்தி நலம் மிக்க, பகழிக்கூத்தரின் சிறப்பை நன்கு உணர்ந்திருந்தும்கூட அவண் வீற்றிருந்தவர்கள் அவருக்குச் செய்ய வேண்டிய சிறப்புக்களைச் செய்யவில்லை. பகழிக்கூத்தர் நூலை அரங்கேற்றி முடித்துவிட்டுத் தம் இல்லம் சென்று துயிலில் ஆழ்ந்துவிட்டார். முருகப்பெருமான் தம் அடியாராகிய பகழிக்கூத்தரின் பெருமைகளைப் பாருக்கு உணர்த்தத் திருவுளங்கொண்டார். எனவே, தம் திருமார்பில் திகழ்ந்த, மாணிக்கத்தால் செய்யப் பெற்ற பதகம் என்னும் அணிகலனைத் தூங்கிக் கொண்டிருந்த பகழிக் கூத்தரின் மார்பில் அணிவித்துச் சென்றார்.

மறுநாள் கோயிலுக்கு வந்த பூசை செய்வோரும், கோயில் அதிகாரிகளும் இறைவனின் திருவுருவில் அவ்வணிகலன்களைக் காணாது மனம் பதறினர். அதனை யாரோ திருடிச்சென்றுவிட்டனர் என எண்ணி திருடியவரைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட னர். இறுதியில் அவ்வணிகலன் பகழிக்கூத்தரின் மார் பில் விளங்கக் கண்டனர். அவருடன் உரையாடி அத் திருவருட் செயலைப் புரிந்தவன் இறைவனே என உணர்ந்தனர். உடனே பகழிக்கூத்தரை வணங்கிப் போற்றித் தாங்கள் செய்த தவற்றைப் பொறுத்தருள வேண்டினர். பின்னர், அவரைப் பல்லக்கில் அமரச் செய்து இசைக்கருவிகள் முழங்க, அடியார்கள் கூட் டம் நெருங்கிவர, நகர்வலம் செய்வித்து திருக்கோயி லுள் அழைத்துச்சென்று முறைப்படி சிறப்பித்தனர்.

திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் இது சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை, கற்பனை நயம், அணி நலம், கருத்துவளம் முதலிய பல இலக்கியச் சிறப்பு களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் நூலா கும். இந்நூல் முருகப்பெருமானின் பூசையின் முடி வில் ஓதுவார்களால் திருப்புகழுடன் சேர்த்து ஓதப் பெறும் வழக்கம் மூலம் இதன் பெருமையையும், இந்நூலை இயற்றிய பகழிக்கூத்தரின் புலமைச் சிறப் பையும் உணரலாம்.

- தா. ஈ.

**பகற் கனவு** : இதற்கு உருவெளித் தோற்றம், மனக்கோட்டை என்ற பெயர்களும் உண்டு. இது மிகச்சாதாரணமாகக் காணப்படும் உள நுட்பங்களில் ஒன்றாகும். எல்லா மக்களும் எப்போழுதேனும் பகற் கனவுகளில் ஈடுபடுகின்றனர். தாம் அடிக்கடி பகற் கனவு காண்பதாகக் கல்லூரி மாணவர்கள் மூவரில் இருவர் கூறுகின்றனர். மனக்கோட்டை கட்டுதல் எல் லாப் பருவங்களிலும் காணப்படினும், குமரப் பரு வத்திலேயே மிக அதிகமாக அடிக்கடி ஏற்படுகிறது என்பதற்கு ஓரளவு ஆதாரமிருக்கிறது. மனக் கோட்டை காணப்படும் அளவில் குமரப் பருவத் திற்கு அடுத்து குழந்தைப் பருவத்தையும், அடுத்த தாகக் கிழப்பருவத்தையும், இறுதியாக முதிர்ச்சிப் பருவத்தையும் வரிசைப்படுத்தலாம். பகற்கனவுகள் விருப்பங்களையும், மனமுறிவுகளையும், நம்பிக்கை களையும், ஏமாற்றங்களையும் பிரதிபலிக்கின்றன. பகற்கனவில் ஈடுபடுவதால் உண்மை வாழ்வின் கடி னங்களினின்றும், மகிழ்ச்சியற்ற நிலைகளினின்றும் தப்பித்துக் கொள்வர். இதனால் சில குறைகளை ஈடு செய்து கொள்வர். மனமுறிவுக்கு உள்ளானவற்றை யும் தொலைவான பேரவாக்களையும் கற்பனையில் நிறைவேற்றிக் கொள்வர். கனவு காண்பவரே கன வில் கதாபாத்திரமாக விளங்குகிறார். உடற் குறைபா டுடைய மனதின் தன்னை மிக்கத் திறமுடைய ஆட்ட வீரராகக் காண்கிறார். தனிமையில் வாடும் குழந்தை, விளையாட்டுத் தோழர்களை உண்டுபண்ணிக் கொள் கிறது. பிறரால் விரும்பப்படாத பெண்ணைச் சுற்றி லும் அவளை வியந்து பாராட்டுவோர் நிற்கிறார் கள். குமாரப்பருவத்தினன் தன் வீரச்செயல்களையும், நாளை ஏற்பட இருக்கும் தனது வெற்றியையும் காதல் களியாட்டங்களையும் தன் பகற்கனவுகளில் காண்கிறான். கிழவன் தனது இளம் பருவத்து இன்ப

மான, சக்தி மிகுந்த வாழ்க்கையைத் தன் பகற்கனவுகளில் மீண்டும் காண்கிறான். பகற்கனவுகளில் சினமுறச் செய்பவர்கள் தண்டிக்கப்படுகின்றனர். இதில் தடைகள் யாவும் மறைந்து போகின்றன.

இவ்வாறு கற்பனை உலகிற்குச் சென்று வருவது போதிய அளவில் செயலுறுவதைத் தடை செய்யாது இருக்கும் வரையிலும், அவை ஏற்றுக்கொள்ளத் தக்க பொருத்தப்பாட்டு வகையாகும். அவற்றில் ஓரளவு பயன் இருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். கற்பனையிலிருந்து விடுபட்டு சிக்கல்களுக்கு அதிகரித்த சக்தியோடு திரும்பி வருவதால் நன்மை ஏற்படுகிறது. மேலும் கனவுகளில் தன்னை வீரனாகக் காண்பது அதிக சாதனை புரியும் வகையில் தனியனைத் தூண்டும் ஊக்குவியாக இயங்கலாம். ஆனால் பகற்கனவு காண்பதில் ஓர் ஆபத்து இருக்கிறது. உண்மை வாழ்வில் கடினமாக உழைக்கப்பெறும் சுமாரான சாதனைகளை விட பகற்கனவில் எளிதில் கிடைக்கும் பயனற்ற வெற்றிகளை அவன் விரும்பித் தேர்ந்தெடுக்கலாம்.

தீவிரமான மனவெழுச்சி அதிர்ச்சிகள், மனமுறிவுகள், போராட்டங்கள் என்பவற்றால் உடல் சமநிலை பாதிக்கப்படும்போது, உள்ளம் தன்னைக் காக்கும் பொருட்டுப் பகற்கனவு என்னும் மறைசெயலில் ஈடுபடுகிறது. பகற்கனவு தோல்வியின் கூரை மழுக்கி, உள் சமநிலையைப் பாதுகாத்து, வேதனை தரும் அனுபவங்களுக்கு ஏற்ப ஓரளவு பொருத்தப்பாட்டையும் தருகிறது. இது உண்மையான சாதனையைப் பாதிப்பதோடு, தவறான சமூகப் பொருத்தப்பாடுகளுக்கும், மகிழ்ச்சியற்ற வாழ்விற்கும் வழி கோலுகிறது. இதைப் பயன்படுத்தவேண்டிய முறையில் பயன்படுத்தும்போது, இது பொருத்தப்பாட்டிற்கும் உதவும் நல்ல நுட்பச் செயலாகும்.

**தனித்த இயல்புகள் :** 1. பெரும்பாலும் பகற் கனவுகள் உடனடிச் சூழ்நிலையுடன் கொள்கின்ற தொடர்பு வலிவற்றதாக இருக்கும்பொழுது ஏற்படுகின்றது.

2. பெரும்பாலும் பகற்கனவுகள் மனதிற்கு ஒரு நிறைவு உணர்வினை அளிப்பதாக உள்ளது.

3. பகற்கனவுகள் வளர்ச்சியிலும் முதிர்ச்சியிலும் முக்கியப்பங்கினை வகிக்க முடியும். இவ்வாறான கனவுகள் மூலமாகத்தான் எதிர்காலத் திட்டத்தை அமைக்க முடியும்.

**பகற்கனவு வகைகள் :** வெற்றிவீரன் வகை - பெரும்பாலும் பகற்கனவுகள் தனியன் ஆச்சரியமானவற்றைச் செய்வதாகவும், எல்லா விதமான தடைகளையும் கடப்பதாகவும் அல்லது வேறு வார்த்தைகளில் சொன்னால் உலகை வென்று விளங்குவதாக இருக்கும். கற்பனையில் தீரச் செயல்கள் யாவும் வெற்றியளிப்பனவாயும் தனியன் ஒவ்வொரு வகையிலும் வெற்றி பெறுவதாகவும் காட்டும்.

தோல்வி வீரன் வகை - இதில் ஒருவன் உலகத்தை வெற்றி காண்பதாக எண்ணாது, தன்னை எல்லோரும் மோசமாக நடத்துகிறார்கள் என்றும், எல்லா விதமான கெடுதல்களும் தனக்கு விளைகின்றன என்றும், தோல்விகளே வந்தடைகின்றன என்றும் கற்பனை செய்து கொள்கிறான்.

பகற்கனவுகளில் இன்னுமொரு வகையும் உண்டு. இவ்வகைப் பகற்கனவுகளில் தனியன் தனக்கு எல்லா விதமான தொல்லைகளும் இருப்பதாகக் கற்பனை செய்து கொள்வதோடு தனக்கு அல்லது தன்னைச் சார்ந்தவர்களுக்குப் பேராபத்துகள் ஏற்படும் என்றும் கற்பனை செய்து கொள்கின்றான். இவ்வகையான பகற்கனவு என்பது தொடர்ந்து தவறாமல் திட்டமிட்டுக் கவலைப்படுவதாலன்றி வேறன்று. இவ்வாறான பகற்கனவுகள், ஒரு தனியனிடத்து இருக்குமானால் அவை அவனிடம் சில பிறழ்வு நிலை இயல்புகள் இருக்கின்றன என்று சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறான திட்டமிட்டுக் கவலைப்படுதலை அளிக்கின்ற பல்வேறு நனவிலி ஊக்கிகளைப் பற்றியும் இக்கவலைகளைத் தீர்மானிப்பனவற்றைக் குறித்தும் பிறழ்வு உளவியல் அக்கறை கொள்கின்றது.

- கி. இரா.

**படிமக்கலை :** இறையியல் தொடர்புடைய உருவங்கள், கல், மரம், உலோகம் போன்றவற்றில் வடிவம் பெறும்போது அவை படிமம் எனப்படுகிறது. பிரதிமம் எனும் வடமொழிச் சொல் தமிழில் படிமம் எனப்படும். படிமங்களின் அமைப்பு முறை இயல்புகளையும் கூறுபாடுகளையும் அளவு முறைகளையும் அதன் குணங்களையும் பற்றிய செய்திகளைக் கூறும் கலை படிமக்கலையாகும். இக்கலைப் பற்றிய நூல்கள் பல உள்ளன. இதில் மயன் எழுதிய **மயமதம்** எனும் நூலே முதல் நூலாகும்.

சிற்பநூல் ஒன்றின் மூலம் அந்நாளில் ஏறக்குறைய படிமக்கலைத் தொடர்பான ஐம்பது நூல்கள் இருந்தன என்று தெரிகிறது. ஆனால் இன்றைக்கு **மயமதம், விசுவகர்மியம், மானசாரம், ஐந்திரமதம், மனுசாரம், காசியபம், சரசுவதியம், பிரம்மீயம், சகவதிகாரம், சில்பரத்தினம், நாராயணியம், சித்ரபாகுல்பம், சர்வார்த்த சிற்ப சிந்தாமணி** போன்ற சில நூல்களே நடைமுறையில் உள்ளன. மேலும் பிங்கலம், சில ஆகமங்கள், புராணங்கள், இலக்கியங்கள் போன்றவற்றிலும் படிமக்கலைத் தொடர்பான செய்திகள் கிடைக்கின்றன.

தொடக்கக் காலத்தில் படிமங்களை வடிவமைக்கப் பயன்படுத்தப்பட்ட அளவுமுறை பரமாணு எனப்பட்டது. பின்னர்ப் பொதுவான அளவு முறையாகத் தானம் எனும் அளவுமுறை பயன்பாட்டுக்கு வந்தது. இந்த அளவு ஒரு சாண் அளவுக்குச் சமமானதாகும். சில சிற்பிகள் அங்குலம் எனும் அளவு முறையைப் பயன்படுத்துவார்கள். இவ்வங்குல அளவுமுறை மானாங்குலம், மாத்ராங்குலம், தேகாங்குலம், யலாங்குலம் என நான்கு வகைப்படும். இதில் மாத்ராங்குலம் என்பது உபயதாரரின் வலக்கை நடுவிரல் நடுக்கணுவின் நீளம், அகலம், சுற்றளவு போன்றவற்றில் மூன்றை அடிப்படையாகக் கொண்டது.

பொதுவாகப் படிமங்கள் அருவம், உருவம், அருவுருவம் என மூன்று வகைப்படும். இதனை அவியகீதம், வியக்தம், வியக்தா வியக்கம் என்றும், நிட்சணனம், சகனம், சகன நிட்சணனம் என்றும் கூறுவதுண்டு. தலை, உடல், கை, கால்களுடன் உள்ள வடிவத்தை உருவம் என்றும், மேற்கூறிய உறுப்புகளற்ற ஒன்றை அருவம் என்றும், இரண்டும் கலந்த படிமத்தை அருவுருவம் என்றும் சிற்ப நூல்கள் கூறுகின்றன. ஒரு படிமத்தின் எல்லா உறுப்புகளும் முழுமையாகவும் அதற்குரிய அளவிலும் அமைப்பிலும் இருப்பின் அவை சித்திரம் எனப்படும். செப்புத் திருமேனிகள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். படிமங்களில் முற்பகுதி உறுப்புகள் மட்டும் அமைக்கப்பட்டு, பின்பகுதி காட்டப்படாமல் இருப்பின் அப்பக்கப் படிமங்கள் புடைப்புச் சிற்பம் எனப்படும். சுதைப் படிமங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். படிமங்களை அசலம், சலம், சலாசலம் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். திருக்கோயிலின் கருவறையில் வீற்றிருக்கும் நகராத் தன்மையுடைய படிமங்கள் அசலம் என்னும் வகையைச் சார்ந்தவை ஆகும். திருக்கோயில் விழாக்காலங்களில் உலா வரும் நகரும் தன்மைக் கொண்ட படிமங்கள் சலம் என்றும் அழைக்கப்படும்.

அசலம் வகையைச் சார்ந்த மூலப் படிமங்கள் அவற்றின் அமைப்புக்கேற்ப மூன்றாகக் கூறப்பட்டுள்ளன. அவை நின்ற நிலையில் இருந்தால் இசுதானகம் என்றும், கிடந்த நிலையில் இருந்தால் சயனம் என்றும் அழைக்கப்படும். படிமங்கள் அதில் உள்ள இறைவனின் குணத்தின் அடிப்படையில் இரௌத்தரம் அல்லது உக்ரம் என்றும், சாந்தம் அல்லது சௌமியம் என்றும் பிரிக்கப்படுகின்றன. எ.கா. சிவன் படிமங்களில் கசசம் காரமூர்த்தி, திரிபுராந்தகன் திருமால் படிமத்தில் விசுவரூபம், நரசிம்மம் போன்ற படிமங்கள்.

இன்றைக்குக் காணக்ககூடிய படிமங்கள் யாவும் பல்வேறுபட்ட கால கட்டங்களில் வடிவமைக்கப் பட்டவையாகும். அவற்றின் அமைப்பு முறையில் கால வேறுபாட்டின் தாக்கத்தைக் காணலாம். தொடக்கக் காலப் படிமங்கள் எவ்வித சாத்திர, ஆகம நெறிமுறைகளின் படியும் அமையாமல், சிற்பியின் கற்பனைத் தன்மையுடன் இணைந்த இயற்கைத் தன்மையுடன் காணப்பட்டன. பிற்காலப் படிமங்கள் சில்ப சாத்திரம், ஆகம விதிமுறைகளுக்கு உட்பட்டு வடிவமைக்கப்பட்டதால் அவற்றில் உண்மைத் தன்மையும் சற்றே குறைந்து காணப்பட்டது. எ.கா. தொடக்கக் காலப் படிமங்களில் முக அமைப்பு வட்ட வடிவத்திலும், பிற்காலப் படிமங்களில் முகம் நீள் வட்ட வடிவத்திலும் அமைந்துள்ளன. இதுபோன்ற படிமங்களில் பல்வேறு உறுப்புகள், சிகை அமைப்பு, ஆடை அலங்காரம் போன்றவற்றிலும் வேறுபாடுகள் உள்ளன. தொடக்கக் காலப் படிமத்தின் குட்டையான, சிறிய மூக்கும், தடித்த உதடுகளும் பிற்கால படிம அமைப்பில் காணப்படவில்லை.

இந்துமதப் படிமத்தின் பொதுவான அமைப்பினை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவை நான்கு கலை மண்டலங்களாகப் பிரிக்கலாம். முதல் மண்டலத்தை மதுரா கலைப்பள்ளி என்று வி.ஏ. சுமித் கூறுவார். பாதாமி முற்காலச் சாளுக்கியர் பாணியையும், காஞ்சிப் பல்லவரின் பாணியும், இரண்டாவது மண்டலமாகவும், பிற்காலச் சாளுக்கிய, ஒய்சாளப் பாணி மூன்றாவது மண்டலமாகவும், நான்காவது பாணியில் ஒரிசா, அசாம், வங்காளம் போன்ற பகுதியைச் சேர்ந்த படிமங்களும் அடங்குகின்றன. முதல்

இரண்டு பாணிகளில் உள்ள படிமங்களில் ஏறக் குறைய ஒரே தன்மையினைக் காணலாம். எளிமை யும், இயற்கையான உண்மைத் தன்மையும் முதல் இரண்டு பாணிகளின் சிறப்பாகும். சோழர் கலைப் படைப்புகள் பல்லவ பாணியினைப் பின்பற்றி வந்த தால் அவை இவ்வகையைச் சார்ந்தவையாகும். மூன்றாவது பாணியான சாளுக்கிய - ஒய்சாள வகைப் படிமங்கள் விரிவான அலங்கார வேலைப்பாடுகள் கொண்டவையாகத் திகழ்கின்றன. நான்காவது பாணியில் அனைத்து இயல்புகளும் முன்னதைப் போன்றே அமைந்திருக்கும்.

காலத்திற்குக் காலம் புதிய படிமங்கள் தோன்றுவ தும் பழைய படிமங்கள் சில வழிபாட்டில் இருந்து மறைந்து வருவதும் வழக்கமாகும். கி.பி. ஐந்து முதல் கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டு வரை முன்னணியில் இருந்த திருமகள், துர்க்கை, சேசுடா என்ற மூன்று பெண் தெய்வங்களில் இன்றைய வழிபாட்டில் சேசுடா முற்றிலுமாக மறைந்துவிட்டது குறிப்பிடத் தக்கது. இது போன்றே திருமாலின் நரசிம்ம அவ தாரப் படிமம் அன்றைய நாள் கோயில்களில் பெரும் பாலும் காணப்பட்டது. இந்நாளில் காணப்பட வில்லை.

சமயக் குரவர்களும் மதத்தில் உள்ள பிரிவினை வாதிகளும் தங்கள் பிரிவின் வலிமையைக் காட்ட புதிய படிமங்களை அமைத்தனர். எ.கா. வைணவர் களின் நரசிம்ம அவதார படிமத்திற்கு எதிராக, சிவனைச் சரப மூர்த்தியாக (மனித முகம், பறவை இணைந்த உருவம்) வடிவமைத்தனர். இது போன்றே பல புதிய படிமங்கள் தோன்றலாயின.

படிமங்கள் கல், நவரத்தினம், உலோகம் போன்ற வற்றால் செய்யப்படலாம் என ஆகமங்கள் கூறுகின் றன. உலோகங்களை உருக்கிப் படிமம் செய்யும் முறை கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன்னதாகவே இந்தியாவில் நடைமுறையில் இருந்தது என்றும், இம்முறை ஐரோப்பாவில் இருந்து பெறப்பட்டது என்றும் கூறப்படுகிறது. இம்முறையின் செயல்பாட் டினைக் காமிக்காகமும், சுப்ரபீடாகமும் விவரமாகக் கூறுகின்றன.

படிமங்களின் கை அமைப்பு முறை அசுதம் எனப் படும். இவற்றில் வரதம், அபயம், கட்டகம், சுச்சி, தர்சனி, கட்யசலம், தண்டம், விசுமயம் போன்றவை பொதுவான முத்திரைகளாகும். தியான நிலையில் இருக்கும் கை அமைப்புகள் சின் முத்திரை, வியாக்கி யான முத்திரை, ஞான முத்திரை, யோக முத்திரை என நான்கு வகைப்படும். படிமங்கள் அமர்ந்திருக் கும் முறை ஆசனம் அல்லது பீடம் எனப்படும். ஆனந் தசாசனம், சிம்மாசனம், யோகாசனம், பத்மாசனம் என்று சுப்ரபீடாகமம் கூறுகிறது. மேலும் கூர்மாச னம், பத்ராசனம், உத்குடிசாசனம் என்று ஆசன அமைப்புகளுக்கு பெயரிடப்பட்டுள்ளன. ஆந்திர மாநிலம் குடிமல்லத்தில் உள்ள சிவன் உருவம் உள்ள டங்கிய லிங்கம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த மிகவும் தொன்மையான லிங்கமாகும்.

- கி.சு.


**பண்பாட்டுச் சமச்சோதனை :** நீள அகலம் போல், ஆற்றலையோ, கற்றலையோ, செய லையோ, வேலையையோ, உறவையோ அளக்க முடியும். சமச்சோதனை ஒரு கலை. ஒவ்வொரு இனத்திற்கும் பழக்க வழக்கங்கள், சடங்குகள், மூட நம்பிக்கைகள், உண்ணும் முறை, திருமணச் சீர் வரிசை, வழிபாட்டு முறை, இனப்பெருமை வெவ் வேறாக இருக்கின்றன. இவை அனைத்தும் பண்பாடுதான். சமையல், உடை, பேச்சு, வர்க்கப் போராட்டம் முதலியன ஒரு குழு மக்களை ஒன்று சேர்க்கக்கூடியன. ஆனால் இனப்பெருமை, நாட்டுப் பெருமை, பண்பாட்டு வேறுபாடு போன்றவை மக்களைப் பிரிக்கத்தான் செய்கின்றன.


பள்ளிக்கு வரும் மாணவர்கள் ஒரே மொழியைப் பேசுபவர்களாகவும் இருக்கலாம், அல்லது ஒரே சம யத்தைச் சார்ந்தவர்களாகவும் இருக்கலாம். வகுப் பிற்கு மாணவர்கள் ஒரே பண்பாட்டுப் பின்னணியை அடிப்படையாகக் கொண்டு வருவதில்லை. முற்றி லும் பண்பாட்டால் வேறுபட்டவர்களைச் சந்திக்கும் போது அவர் கேட்பது, கட்டளையிடுவது, வேண்டு வது போன்றவை புரியாதிருக்கும். சொல்லாட்சி குறைந்திருந்தால் படங்களைக் கூட பார்த்துப் புரிந்து கொள்ள முடியாதிருக்கும். மற்றவர்களின் செயலைப் படியெடுப்பதோ, சைகைகளைப் புரிந்து கொள் வதோ சிறப்பானதாக இருக்காது.

அமெரிக்கர்களுக்கும், நீக்ரோக்களுக்கும் பண் பாட்டு ஒற்றுமையில்லை. செர்மனியிலிருந்து அமெ ரிக்காவிற்குக் குடிவந்தர்வர்களுக்கும் இசுபெயின்

நாட்டிலிருந்து வந்தவர்களுக்கும் ஒரே பண்பாடில்லை. இவ்விரு குழுக்களும் ஐரோப்பாவிலிருந்து வந்தவையே. வணிகம் நாடி இவர்கள் அமெரிக்க நாடுகளுக்கு வந்தவர்களாயினும், வந்த பிறகு அமெரிக்க மொழியைப் பேசினாலும் ஒரே பண்பாட்டைச் சார்ந்தவர்கள் அல்லர். இராவுத்தரும் தக்னியும் முசுலீம்கள்தாம் எனினும் வாழ்க்கை முறை வேறு. சமயம் ஒன்றாகச் சேர்ப்பினும் பண்பாடு அவர்களை விலக்கிவிடுகிறது. யூதர்கள் தம் நாடுவிட்டு வேறு நாட்டில் உழைக்கப் பிரியமாகச் செல்லுவார்கள். ஆனால் அதிக ஊதியம் கிட்டுவதாக இருந்தபோதிலும் நீக்ரோக்களோ அல்லது இத்தாலியர்களோ தாமிருக்குமிடத்தை விட்டுப் பெயர்வதைச் சிறிதும் விரும்புவதில்லை.

சில குழுக்களில் அந்தச் சமூகப் பண்பாட்டிற்கேற்ப போட்டி மனப்பான்மை தன்மானம் சிறந்திருக்காது. அதே வேளையில் தன் முயற்சி, வளர்ச்சி முதலியவற்றில் வேகமிருக்கலாம். நகரத்து மாணவர்களுக்கிருக்கும் போட்டிகளில் ஈடுபடும் ஊக்கம் கிராமத்தவர்களில் பொதுவாகக் காணப்படுவதில்லை. கத்தோலிக்கர்களைவிட, தன் முயற்சியிலும், போட்டிகளில் பங்கு கொள்வதிலும் மார்டின் லூதர் வழி வந்தவர்கள் தீவிரமாக ஈடுபடுகின்றனர். கத்தோலிக்கர்கள் ஆண்டவன் வகுத்த வழியில் போகட்டும் என்று இருந்து விடுகின்றனர். இவ்விருவரும் கிறித்தவர்களே. பண்பாடானது சோதனைகளைப் பாதிக்கின்றது. வேறுபாட்டைக் குறைக்க மொழி ஆதிக்கமில்லாத சோதனைகள் ஏற்பட்டன. பின்வரும் வினாவானது உருவங்களைக் கொண்டு கணிப்பதற்கானது. மாதிரி வினாவைக்கூட விளக்குவதற்கு மொழியைப் பயன்படுத்தாத சோதனைகள் உண்டு. பின்வரும் மாதிரியில் ஐந்தாவது படம் எவ்வாறு இருக்கும் என்பதைக் குறிப்பிட வேண்டும். அ, ஆ, இ என்று வரிசையில் ஆ என்பதைக் குறிப்பிட்டால் போதுமானது.




இவற்றில் மொழி ஆதிக்கம் இல்லை என்றாலும் இதுபோன்ற உருவங்களுடன் பழக்கமில்லாதார் இவ்வினாக்களுக்குச் சரியான விடை அளிக்க முடியாது. ஆடு, மாடு மேய்ப்பவர்கள், பள்ளிப்படிப்பு இல்லாதவர்கள் இதுபோன்ற வினாக்களுக்கு விடையளிக்க முடியாது. ஆகவே, இந்தப் பள்ளிப் பண்பாடு கூட மற்றவர்களிலிருந்து சோதனையை வடிக்க முடியாது. வெவ்வேறு பண்பாட்டிலிருந்து வருவோர்க்கெல்லாம் ஏற்றவாறு சமச்சோதனையை உருவாக்கவும் முடியாது. எந்த ஒரு குறிப்பிட்ட பண்பாட்டிற்கும் சாதகமில்லாதபடி சோதனையை வகுக்கவும் முடியாது. முடிந்தவரைக்கும் எந்தப் பண்பாட்டிற்கும் பெருமளவில் ஒத்துப்போகாதவாறு பார்த்துக் கொள்ளலாம். சோதனை வல்லுநர்கள் இந்த முயற்சியில் தான் உழைக்கின்றனர்.

இத்தொல்லைகளைக் கண்டு ஒரே வகையான பண்பாட்டிற்குத் திட்டமிடுவது சரியன்று. பல பண்பாடுகள் இருப்பது நல்லது. பொதுவான சோதனைகளை உருவாக்க முயல்வதும் சிறப்புதான். மன நிறைவு பெற்ற ஆசிரியர்கள், பிறர் உறவு நாடும் ஆசிரியர்கள், புதியன நாடும் ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளில் மேற்பார்வை சிறந்திருக்கும்போது சமச் சோதனைகளுக்குத் தேர்ச்சி உயர்ந்திருக்கிறது. இருப்பினும் தம் பண்பாட்டினை உயர்த்திப் பேசாதிருக்க இளஞ்சிறார்களுக்குக் கற்பிக்க வேண்டும்.

- எம்.பெ.

**பண்பாட்டு மானிடவியல் :** மனிதனை முதல் நிலையில் ஆராயும் அறிவியல் துறையே மானிடவியல் எனப்படும். இன்று மானிடவியல் துறையில் இருவகை மரபுகள் காணக்கிடைக்கின்றன. மனிதனை அவன் பின்பற்றும் பண்பாட்டை நிலைக்களன்

களாகக் கொண்டு ஆராயும் போக்கு ஒன்று. பிறிதொன்று மனிதனை அவன் சார்ந்துள்ள சமுதாயத்தை நிலைக்களன்களாகக் கொண்டு ஆராயும் போக்கு. முந்தைய போக்கு 'பண்பாட்டு மானிடவியல்' எனவும் பிந்தையது இது சமுதாய மானிடவியல் எனவும் வழங்கப்படுகிறது.

சமுதாயத்தின் மையப்பகுதியாகப் பண்பாடு திகழ்கிறது எனவும் அதன் அடிப்படையிலேயே சமுதாய வலைப்பின்னல் உறவுகள் அமைகின்றன எனவும் பண்பாட்டு மானிடவியலார் கருதுகின்றனர். மாறாக, மனிதனுக்கும் அவன் சார்ந்துள்ள சமுதாயத்திற்குமிடையே நிலவும் வலைப்பின்னலமைப்பை அறுதியிடுவதில் பண்பாட்டை ஒரு பகுதியாக மட்டும் சமுதாய மானிடவியலாளர் கொள்வர். பண்பாட்டு மானிடவியலின் ஒரு பிரிவாகச் சமுதாய மானிடவியலைக் கருதி ஆராயும் பண்பாட்டு மானிடவியலாளரும் உள்ளனர்.

**பண்பாட்டு மானிடவியலின் பிரிவுகள் :** இது மொழியியல்சார் மானிடவியல் மற்றும் குறியீட்டியல், கூர்தல் மானிடவியல், பொருளியல்சார் மானிடவியல், சமுதாய மானிடவியல் எனப் பலவகைப் படும்.

1. **மொழியியல்சார் மானிடவியல் மற்றும் குறியீட்டியல் :** பண்பாட்டு மானிடவியலில் இப்பிரிவு குறியீடுகளின் அடிப்படையில் தகவல் தொடர்பியலில் ஒப்பாய்வு செய்யும். பண்பாட்டு மானிடவியலில் மொழிக்கும் அம்மொழி பேசுநரின் பண்பாட்டிற்குமிடையே நிலவும் நெருங்கிய உறவை அறுதியிட்டுக் கூறுவது இப்பிரிவே. இதுபோன்றே, குறியீட்டியலும் இன்று தனித்த ஓர் ஆராய்ச்சித் துறையாக வளர்ந்து வரக்காணலாம்.

2. **கூர்தல் மானிடவியல் :** மனித மனங்களில் தோன்றும் தொன்மைத் தருக்கம், சமயம், மந்திரம், தொன்மை, அறிவியல் ஆகியவற்றிற்கிடையே நிலவும் நெருங்கியதொரு உறவு நிலையை வெளிக்கொணர்வதும் கலை வெளிப்பாடுகள் மற்றும் அழகுணர்ச்சிகளை ஆராய்வதும் இப்பிரிவில் அடங்கும்.

3. **பொருளியல்சார் மானிடவியல் :** பொருள்சார் பண்பாட்டை ஆராய்வதும், அதன்வழி உற்பத்தி, பங்கீடு, நுகர்வு ஆகியவற்றை நுணுகி ஆராய்வதும் இப்பிரிவின் பணியாகும்.

4. **சமுதாய மானிடவியல் :** மனிதனுக்கும் அவன் சார்ந்துள்ள சமுதாயத்திற்குமிடையே நிலவும் உறவு நிலைகளைப் பல்வேறு வகைச் சமுதாய வாழ்க்கைகளாகக் காண்பது இதன் பணி.

**பண்பாட்டு மானிடவியலின் பரப்பு :** சமுதாய ஒழுங்கமைப்பு, பொருளியல் ஒழுங்கமைப்பு, மந்திர -மருத்துவ ஒழுங்கமைப்பு, அழகுணர்ச்சி ஒழுங்கமைப்பு உள்ளிட்ட கட்டமைப்பில்லங்களையொட்டிய நடத்தையைப் பண்பாட்டு மானிடவியல் ஆராய்கிறது. இந்நிலையில் இக்கால மனிதனின் முகிழ்ச்சி மற்றும் வளர்ச்சியை மனிதன் ஒரு கலைப்படைப்பாளி என்ற அளவில் சமுதாயப் படிமலர்ச்சியையும் பண்பாட்டு மானிடவியல் ஆராய்கிறது எனலாம். அதாவது இக்கால மனிதனின் பண்புகளை முழுமையான நிலையில் ஆராய்வது பண்பாட்டு மானிடவியலாகும்.

**மானிடவியல் துறையில் பண்பாட்டு மானிடவியலின் பங்கு :** மனிதனின் உயிரியல் உளப்பாங்கு அடிப்படையில் சமுதாய வாழ்வு அமைந்திருந்தாலும் அது தன்னை உயிரி மற்றும் உளப்பாங்கு நிலையில் கட்டுப்படுத்திக் கொள்வதில்லை மாறாக அது ஒரு புதிய சமுதாய நிலையை அடையும் வண்ணம் வீறு பெறுகிறது.

மனிதன் ஒழுங்கமைப்புடைய குழுவில் வாழ வேண்டுமென்பதை மனித இயற்கை ஒப்புக் கொள்கிறது என்றாலும், ஒரு சமுதாயம் பழமையானதாக விளங்க வேண்டுமா அல்லது புதுமையானதாக இருக்க வேண்டுமா, நாட்டுப்புறத் தன்மையோடு இருக்க வேண்டுமா அல்லது நகர்புறத் தன்மையோடு இருக்க வேண்டுமா, பொதுவுடமையை ஏற்க வேண்டுமா அல்லது முதலாளித்துவத்தை ஏற்க வேண்டுமா என்றெல்லாம் ஒருபோதும் மனிதனை இயற்கை அறிவுறுத்துவதில்லை. இதனால் சமுதாயமென்பது சூரிய மண்டலம் போன்றோ அணு அமைப்பைப் போன்றோ இயற்கையாக அளிக்கப்பட்ட ஒன்றன்று என்பது பெறப்படும்.

சமுதாய உறவுகளால் அமைந்த ஒரு சீரமைப்பே சமுதாயம், இயற்கைச் சக்திகளால் அல்லாமல் தார்மீக மதிப்புகளால் இச்சமுதாய உறவுகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. வாழ்வைச் சீரமைக்கும் பெரும்பணியுடன் நெருங்கிய உறவுடைதொரு சமுதாய அறிவியலே பண்பாட்டு மானிடவியல், எனவே

இத்தகைய சமுதாய மீட்டுருவாக்கத்தில் பண்பாட்டு மானிடவியலாளர் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர். இதனாலேயே எழுத்தறிவிற்கு முற்பட்ட மக்களின் மரபுப்பொருள்கள் மறைந்தொழியும் சூழலை எதிர் கொள்ள சமுதாயக்குழு ஆராய்ச்சிகளைப் பண் பாட்டு மானிடவியலாளர் உருவாக்கியுள்ளனர்.

**பண்பாட்டு மானிடவியலில் பயின்று வரும் கோட்பாடுகள் :** தொடக்கக் காலத்திலிருந்தே எவ் வாறு ஒரு பண்பாடு வளர்ச்சியுறுகிறது என்பதையும் பண்பாட்டு இணைகள் எவ்வாறு நிலவுகின்றன என் பதையும் அறுதியிடுவதில் பண்பாட்டு மானிடவிய லாளர் சிக்கல்களை எதிர்கொண்டனர். அதாவது பண் பாடுகள் எவ்வாறு தோற்றமுறுகின்றன, பண்பாடு கள் எவ்வாறு ஒத்த பண்பாட்டுக் கூறுகளையும் ஒத்த பண்பாட்டுக் கட்டமைப்புகளையும் கொண்டிலங்கு கின்றனவா எனும் வினாக்களுக்கு விடை தேடுவதில் பண்பாட்டு மானிடவியலாளர் முனைந்திருந்தனர். இந்நிலையில் பல்வேறு பண்பாட்டு மானிடவிய லாளர் பல்வகைக் கோட்பாடுகளை இதற்கென உரு வாக்கினர். அக்கோட்பாடுகளே பண்பாட்டு வளர்ச்சி குறித்த கோட்பாடுகள் எனப்படுகின்றன.

காலப்போக்கில் ஒரு பண்பாட்டின் உள்ளமைப்பு என்ன, ஒரு பண்பாட்டைப் பொருள்பதிந்த முழுமை யாக ஆக்குவது எது எனும் புது வினாக்கள் தோன்ற வும், அவற்றிற்கு விடைகாணும் முயற்சியில் பல் வேறு புதுக்கோட்பாடுகளும் உருவாயின. அக் கோட்பாடுகளே பண்பாட்டு ஒருமைப்பாடு குறித்த கோட்பாடுகள் எனப்பட்டன.

**பண்பாட்டு மானிடவிலுக்கும் மானிடவியலின் பிற பிரிவுகளுக்குமுள்ள தொடர்புகள் :** மனிதனின் வீழ்ச்சி மற்றும் வளர்ச்சியை உடற்கூறு, பண்பாடு போன்ற கோணங்களில் மானிடவியல் ஆராய்கிறது. உடற்கூற்றின் தோற்றம், படிமலர்ச்சி மற்றும் வளர்ச் சியை உடற்கூறு மானிடவியல் ஆராய்கிறது. இக் கால மனிதன் முகிழ்ச்சி மற்றும் வளர்ச்சியை அவனை ஒரு கலைப்படைப்பாளனாகக் காண்ப திலும் அம்மனிதனின் சமுதாயப் படிமலர்ச்சியை அறிவதிலும் மதிப்பிடப்படுகிறது. இருப்பினும் பண்பாட்டு மானிடவியலானது எளிய எழுத்தறி வுக்கும் தொழில் துறைக்கும் நகரவர்க்கத்திற்கும் முற்பட்ட பண்பாடுகளை ஆராய்வதில் காட்டும் ஈடுபாட்டைப் படிமலர்ச்சி ஆராய்ச்சியில் காட்டுவ தில்லை என்பதே உண்மை. இப்பிரிவுகள் அனைத் தும் தத்தமக்குள் பின்னிப் பிணைந்ததொரு நிலையில் காணப்படுவதால் மானிடவியலின் ஒரு குறிப்பிட்ட பிரிவில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் எவரும் இவ்வனைத்துப் பிரிவுகளைப் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**வரலாற்று முன்னிலைக்கும் பண்பாட்டு மானிடவியலுக்குமான தொடர்பு :** வரலாற்று முன்னிலைக்கும் பண்பாட்டு மானிடவியலுக்கு மிடையே நிலவும் தொடர்பு மிகவும் நெருக்க மானது. வரலாற்றுத்தரவுகள் இல்லாத நிலையில் வரலாற்று முன்னிலைக் காலத்தைய பண்பாட்டு மானிடவியலாக வரலாற்று முன்னிலை விளங்கக் காணலாம். தொல் பொருளியல், புவியியல், புதை யியல், படிமவியல் மற்றும் இன்ன பிற தொடர் புடையச் சான்றுகளின் அடிப்படையில் அந்தக் காலத்தைய பண்பாட்டை ஆராய்வதில் வரலாற்று முன்னிலை பெரிதும் முயல்கிறது. எனவே, வரலாற்று முன்னிலை அற்ற பண்பாட்டு மானிட வியல் வேரற்றது என்றும் பண்பாட்டு மானிடவியல் அற்ற வரலாற்று முன்னிலை பயனற்றது என்றும் அறுதியிட்டுக் கூறலாம். இதனாலேயே மானிட வியலறிஞர் இரெட்ஃபில்டு என்பாரும் இவ்விரு பிரிவுகளுள் ஒன்றில்லாமல் பிறிதொன்று முழுமை யானது என்று கூறுவார். பொருள்சார் பண்பாட் டிற்கு இன்றியமையாமையைத் தரும் வரலாற்று முன்னிலை அந்தக் காலகட்டத்தில் பொருள்சாராப் பண்பாடு குறித்து ஊகங்களையே எடுத்துரைக்கிறது. இருப்பினும், வரலாற்று முன்னிலையின் தரவுகள் வரலாற்று அடிப்படையில் ஒழுங்குடனும் தொடர்பு டனும் அமைக்கப்பட்டு விளங்குகிறது. மாறாக, கால ஒப்பீட்டில் கவனம் செலுத்தாது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் முழுமையான பண்பாட்டை ஆராய்வ தில் பண்பாட்டு மானிடவியல் ஈடுபடுகிறது. இந் நிலையில் வரலாற்று முன்னிலையாளரின் காலக் கண்ணோட்டம் பண்பாட்டு மானிடவியலாளரின் முழுமை ஆராய்ச்சியை ஈடுகட்டக் காணலாம்.

**உடற்கூறு மானிடவியலுக்கும் பண்பாட்டு மானிடவியலுக்குமான தொடர்பு:** இனக்குழுவின் பண்பாட்டுத் தாக்கங்கள், மரபுவழி அறிவுறுத்தப் படும் உடல் சிதைத்தல் மற்றும் உடலுறுப்புக் குறைத் தல் ஆகியவற்றை ஆராயும்போது உடற்கூறு மானிட

வியலுக்கும் பண்பாட்டு மானிடவியலும் ஒன்றோடொன்று நெருங்கிச் செயல்படுகின்றன. பச்சைக் குத்திக்கொள்ளுதல், ஆண்குறியின் முன்தோல் நீக்குதல், முன்பற்களை அராவிக்கொள்ளுதல் என்பன தலையாய உடற்கூறுப் பண்புகளாகும். ஓர் இனக்குழுவின் அனைத்து மக்களும் இப்பண்புகளுடன் விளங்குவதை ஓர் உடற்கூறு மானிடவியலாளர் ஆராய வேண்டும் என்றாலும் இப்பண்புகள் அந்தக் குறிப்பிட்ட இனக்குழுவில் காணப்படுவதற்கான காரணத்தை ஒரு பண்பாட்டு மானிடவியலாளனால் மட்டுமே விளக்கவியலும்.

மேற்குறித்துள்ள காரணங்களால் மானிடவியல் துறைக்குள் ஒரு துருவத்தன்மை இருப்பது புலப்படும். உடற்கூறு மானிடவியல் இயற்கையிலேயே தன்னை இயற்கை அறிவியல் துறைகளுடன் நெருக்கப்படுத்திக்கொள்வதையும் பண்பாட்டு மானிடவியல் இதற்கு எதிர்த்திசையில் சமுதாய அறிவியல் துறைகளுடனும் வாழ்வியல் கூறுகளுடனும் நெருங்கிச் செல்வதையும் காணலாம். முன்னர் குறிப்பிட்டுள்ளது போல, வரலாற்று முன்னிலையானது பண்பாட்டு மானிடவியலைப் போன்றதே. ஆனால், புதையுயிர்ப் படிவவியல், புவியியல் மற்றும் வேதியியல் வழிமுறைகளையும் சான்றுகளையும் இது பயன்படுத்திக் கொள்கிறது. உடற்கூறு மானிடவியலோ இயற்கை அறிவியல் துறைகள் மற்றும் இயற்பியல் அறிவியல் துறைகளின் வழிமுறைகளைப் பயன்படுத்துகிறது. மேலும், பண்பாட்டு மானிடவியல் இயற்கை அறிவியல் துறைகளிலிருந்து பெறப்படும் புள்ளியியல் செயற்பாட்டியல் மாதிரிகளைப் பயன்படுத்திக் கொள்ளக்காணலாம்.

மனிதனின் சமுதாயப் பொருளியல் மற்றும் அரசியல் வாழ்வையும் அவர்கள் கைக்கொண்டுள்ள சமயம், மொழி, கலைகள் உள்ளிட்ட இன்ன பிறவற்றை ஆராயும் பிரிவாகப் பண்பாட்டு மானிடவியல் விளங்கக் காணலாம். எனவே, மனிதனின் பண்பாட்டுப் போக்குகளை முழுமையான நிலையில் ஆராயும் நன்கு வரையறுக்கப்பட்ட ஆராய்ச்சிப்பிரிவே பண்பாட்டு மானிடவியல் என அறுதியிட்டுக் கூறலாம்.

- சி. ம.

**பண ஊதியமும், வட்டி வீதமும் :** பண ஊதியம் என்பது தொழிலாளிக்கு அவனுடைய உழைப்பிற்காக, பண அளவில் கொடுக்கப்படும் ஊதியத்தைக் குறிப்பதாகும். உண்மை ஊதியம் என்பது அப்பணத்தைக் கொண்டு அவன் வாங்கக் கூடிய பொருள்களின் அளவையும் அதனால் அமையும் அவனுடைய வாழ்க்கைத் தரத்தையும் குறிப்பதாகும். பொருள்களின் விலை நிலை உயர்வதன் காரணமாக, பண ஊதியம் மாறாதிருப்பினும், உண்மை ஊதியம் குறையும் என்பது உண்மை. பண ஊதியத்தை எல்லா ஆலைகளிலும் பொதுவாகக் குறைப்பதன் மூலம், உற்பத்திச் செலவைக் குறைத்துப் பண்டங்களின் விலையினையும் குறைத்து, தேவையைப்பெருக்கி, முழு வேலை நிறைவினைப் பெற இயலும் என்ற ஓர் ஆய்வு நெடுங்காலமாக இருந்து வருகின்றது.

தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் காலத்துப் பெருமக்களாலும், பின்னர் பேராசிரியர் பிகு அவர்களாலும் இக்கருத்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேலையின்மைக்குக் காரணமே, உயர்ந்த ஊதிய அளவுதான் என்று கூட இவர்கள் கருதினார்கள். பேராசிரியர் எட்வின்கேனன் குறைந்த ஊதியத்தில் மிகுதியான அளவிற்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும் என்று நம்பினார். நெடுங்காலமாக மாறாத ஊதிய அளவே, வேலை வாய்ப்பின்மைக்குக் காரணம் என்பதும், ஊதியத்தைக் குறைப்பதன் மூலம் வேலை நிறைவை ஏற்படுத்த இயலும் என்பதும் இவர்களின் கருத்தாகும்.

பேராசிரியர் கெயின்சு (Keynes) குறிப்பிட்டுள்ளவாறு பண ஊதியத்திறனைப் பொதுவாகக் குறைப்பதன் மூலம் உழைப்பாளிகளின் உண்மை ஊதியம் குறைவதில்லை. உண்மை ஊதியம் குறையாத வரையில், உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தியைப் பெருக்க ஊக்கம் கிட்டப்போவதில்லை. வேலை வாய்ப்புகளும் பெருக வழியில்லை. எனவே, மற்றவை மாறாதிருப்பின் உண்மை ஊதியமும் வேலை வாய்ப்பின் அளவும் எதிர்மறையில் மாறுபடும் என்று கெயின்சு குறிப்பிட்டுள்ளார். அதாவது உண்மை ஊதியம் குறையும் போது வேலைவாய்ப்புகள் பெருகும் என்பதும், உண்மை ஊதியம் உயரும்போது வேலைவாய்ப்புகளைப் பெருக்க, பண ஊதியத்தைக் குறைக்க வேண்டும் என்பதும் தேவையில்லை. பண ஊதியத்தை நிலையாகக் கொண்டே சமூகத்தின் மொத்தப் பய

னுள்ள் தேவையினைப் பெருக்குவதன் மூலம் வேலைவாய்ப்பு அளவினைப் பெருக்க முடியும் என்று குறிப்பிடுகின்றார். சமூகத்தின் மொத்தப் பய னுள்ள தேவையினை அரசிறைக் கைக்கோளின் மூல மும், பணவாக்கக் கைக்கோளின் மூலமும் பெருக்க இயலும் என்று கூறுகின்றார். அதேசமயம் கூட்டுப் பேரங்களின் மூலம் பண ஊதியத்தை நிலையாகக் கொள்ள முடியும். மொத்தப் பயனுள்ள தேவை உயர்ந்து, அதே சமயம் பணஊதியம் நிலையாக இருக்குமாயின் உண்மை ஊதியம் குறைய நேரிடும். எவ்வாறெனில் குறுகிய காலத்தில் தொழிலமைப்பு தொழிற்கருவிகள், உற்பத்தி முறைகள் முதலியன மாறுவதில்லை. எனவே, உற்பத்தியாளர்கள் மொத் தப் பயனுள்ள தேவையின் உயர்விற்கேற்ப உற்பத்தியைப் பெருக்கும்போது இறுதி நிலை உற்பத்திச் செலவு உயர்கிறது. அதன் காரணமாக உற்பத்தியாளர்கள், தங்கள் உற்பத்திப் பொருள்களின் விலைகளை உயர்த்த நேரிடுகின்றது. பொருள்களின் விலை உயர்வு, உண்மை ஊதியத்தைக் குறைக்கின் றது. பண ஊதியத்தைக் குறைக்க மேற்கொள்ளப் படும் முயற்சிகள், உழைப்பாளர்களால் கடுமையாக எதிர்க்கப்படுகின்றன. ஆனால், உண்மை ஊதியக் குறைப்பு அவர்களுக்குத் தெரிவதில்லை. பண ஊதி யக் குறைப்பு அவர்கள் தங்கள் கடனைத் திருப்பித் தருவதனையும் பாதிக்கின்றது. எனவே, எவ்வகை யில் பார்த்தாலும் மொத்தப் பயனுள்ள தேவையினை உயர்த்துவதன் மூலம் வேலைவாய்ப்புகளைப் பெருக் குவதே, பண ஊதியத்தைக் குறைப்பதைக் காட்டிலும் சிறந்த முறையாகத் தோன்றுகிறது.

வேலை வாய்ப்பின் அளவை நிருணயம் செய்யும் மூன்று காரணிகள் இறுதிநிலைத் துய்ப்பு நாட்டம், முதலீட்டின் இறுதிநிலைத் திறன் மற்றும் வட்டி வீதம் ஆகியனவாகும். பண ஊதியக்குறைப்பு மூன் றையுமே பாதிக்கிறது என்றாலும், இவற்றில் வட்டி வீதமே முக்கியக் காரணியாக அமைந்திருப்பதாலும் இவ்விரண்டின் தொடர்பு குறித்து விரிவாகக் காண லாம்.

பொதுப்பண ஊதியக் குறைப்பு வட்டிவீத வீழ்ச் சியை ஏற்படுத்துவதையே 'கெயின்சு விளைவு' என்று குறிக்கப்படுகிறது. பொதுப்பண ஊதியக் குறைப்பு எவ்வளவிற்கு அதிகமாகச் செய்யப்படுகிறதோ அந்த அளவிற்கு விலைகள் குறையும். விலைகள் எவ்வளவு அதிகமாகக் குறைகின்றனவோ அவ்வளவு அதிக மான அளவிற்குக் கொடுக்கல் வாங்கல் தேவைக் கான பண அளவு ஊகவாணிக நோக்கங்களுக்குக் கிடைக்கும். எவ்வளவு அதிகமான அளவிற்குப் பணம் கொடுக்கல் வாங்கல் நோக்கங்களிலிருந்து விடுபடுகின்றதோ, அதே அளவிற்கு அல்லது வட்டி வீதம் வீழ்ச்சியடையும் என கெயின்சு விளைவு விளக்குகிறது.

தொன்மைப் பொருளாதார நிபுணர்களின் கருத் தைப் பிரதிபலித்து பண ஊதியத்தைக் குறைத்து, நுகர்ச்சி வேட்கையை அதிகரிப்பதின் வாயிலாக, வேலைவாய்ப்பைப் பெருக்க முடியும் என்று பிகு வெளியிட்ட கருத்து பிகு விளைவு எனப்படும். இதனை மறுத்து எவ்வாறு பொது ஊதியக் குறைப்பு வட்டி வீதத்தைக் குறைத்து மூலதனப் பெருக்கத்தை யும், வேலைவாய்ப்புப் பெருக்கத்தையும் ஏற்படுத் தும் எனக் கெயின்சு கூறியுள்ளார். இவ்விரண்டு கருத்துகளுமே இன்று நடைமுறைக்கு ஒவ்வாதன. தொழிற்சங்கங்கள் வலிமையாக உள்ள இந்நாளில் ஊதியக்குறைப்பு என்பது நினைத்துப் பார்க்க முடி யாத ஒன்றாகும். ஊதியக் குறைப்பின் மூலம் வேலை வாய்ப்பு களைப் பெருக்க இயலாது எனினும், ஊதியம் உயர்ந்து கொண்டே செல்லும் போக்கு ஓரள விற்காவது தடை செய்யப்படுதல் வேண்டும் என்பது உண்மை.

- எ. சு.

**பணியர்** : இப்பழங்குடி மக்கள் கேரளத்தின் வய நாட்டில் பரவலாகவும் எர்நாடு, கள்ளிக்கோட்டை, குறும்பர் நாடு, கோட்டயம், சேரங்காடு, முதநாடு ஆகிய பகுதிகளில் ஆங்காங்கேயும், தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்ட எல்லைப்புறத்தின் சில இடங்களி லும் வாழ்கின்றனர். இம்மக்களின் தோற்றம் பற்றி உறுதியான சான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. பணியரைத் தோட்டம் அமைக்கும் பணிகளில் ஈடு படுத்திய ஐரோப்பியர் இம்மக்கள் ஆப்பிரிக்காவிலி ருந்து திசைமாறி வந்த கப்பலில் கேரளக் கரையை வந் தடைந்திருக்க வேண்டும் என நம்பினர். இருப்பினும் ஆய்வுகள் அதனை உறுதிப்படுத்தவில்லை.

பணியர் கருப்பு நிறமும், கட்டான உடலமைப்பும் அகன்ற மூக்கும் சுருண்ட மற்றும் அலைபாயும் தலை முடியும், குட்டையான தோற்றமும் கொண்டுள்ள னர். இம்மக்களின் தொழில் வேளாண்மையாகும்.

பணியர் என்ற சொல் வேலையாட்கள் எனப் பொருள்படும். இப்பழங்குடி மக்களை நாயர் இன நிலக்கிழார்கள் தொன்று தொட்டுத் தங்கள் பண்ணை களில் அடிமைகளைப் போல் பயன்படுத்தி வந்தனர். நிலங்கள் விற்கப்படும் போது அதில் பணிபுரிந்து வந்த பணியர்களும் நிலத்துடன் சேர்ந்து விற்கப்பட்ட னர். இக்காலத்தில் பழங்குடி மக்கள் வயல்களில் வேளாண்மைக் கூலிகளாகப் பணிபுரிவதுடன் சில இடங்களில் நெல், கேழ்வரகு போன்றவற்றைச் சொந்தமாகவும் பயிரிடுகின்றனர். கேரளத்தில் வய நாட்டில் நெல் சாகுபடிப் பணிகள் முழுவதும் பணிய ராலேயே கவனிக்கப்படுகிறது. பெண்களும் சிறுவர்களும் காட்டுகிழங்குகளை அகழ்ந்தெடுக் கின்றனர். மற்ற பழங்குடி மக்களைப் போல பணியர் நரி, பாம்பு, ஓணான், எலி, கழுகு போன்றவற்றை உண்பதில்லை. வயல்வெளிகளில் பெருமளவில் கிடைக்கும் நண்டை விரும்பி உண்கின்றனர். அந்த நண்டை உட்கொள்வதால் தலையில் நரையோ வழுக்கையோ ஏற்படாது என நம்புகின் றனர்.

பணியரின் குடிசைகள் தேவைக்கேற்ப தனித்தனி யாகவும், வரிசையாகச் சேர்த்தும் கட்டப்படுகின்றன. குடிசைகளின் சுவர்கள் மூங்கிலாலும் கூரை புற்களா லும் அமைக்கப்படுகின்றன. தனிக் குடிசையைச் சாலை என்றும் பல குடிசைகள் ஒன்று சேர்ந்திருப் பதைப் பாடி என்றும் அழைக்கின்றனர். கோடைக் காலத்தில் ஓடைகளின் அருகே சென்று குடிசைகளை எழுப்பிக் கொள்கின்றனர். மழைக்காலம் தொடங்கி யவுடன் மீண்டும் பழைய இருப்பிடங்கட்குத் திரும்பு கின்றனர்.

பணியர் சிதைவுற்ற மலையாள மொழியில் பேசு கின்றனர். இருப்பினும் எழுதுவதற்கும் படிப்பதற் கும் தமிழ் எழுத்துகளைப் பயன்படுத்துகின்றனர். பண்ணைகளில் சென்று பணிபுரியும் பணியர் கன்னட மொழியும் பேசுகின்றனர்.

குழந்தை பிறப்பதையடுத்துச் சிறப்பான சடங்கு கள் எதுவும் பணியரால் செய்யப்படுவதில்லை. குழந்தை பிறப்பதற்குச் சில நாட்களுக்கு முன்பா கவே கருவுற்ற பெண்ணைத் தனியான குடிசையில் தங்க வைப்பர். மகப்பேறு வயதான ஒரு பெண்ணால் பார்க்கப்படுகிறது. அந்தப் பெண்ணின் சேவைக்குச் சிறிது ஊதியம் தரப்படுகிறது. குழந்தை பிறந்தவுடன் தாயின் கந்தல் துணிப்படுக்கையிலேயே படுக்க வைக்கப்படுகிறது. குழந்தை பிறந்த பத்தாம் நாளில் அல்லது பதினைந்தாம் நாளில் தாயையும் சேயையும் நீராட்டிக் குடிசைக்கு அழைத்து வருகின்றனர். குழந்தை பிறந்து வீடு திரும்பும் வரை அந்தத் தாயின் தேவைகளை அவளுடைய கணவன் கவனித்துக் கொள்கிறான். அவளுக்குத் தேவையான உணவை யும் பிற பொருட்களையும் பேறுகாலக் குடிசைக்கு வெளியிலிருந்து கொண்டு கொடுத்தனுப்பவேண் டும். உள்ளே செல்வதில்லை. குழந்தைகளைத் தொட்டிலில் போடும் பழக்கம் இல்லை. குழந் தைக்கு ஆறாவது மாதத்திலோ பத்தாவது மாதத் திலோ பெயர் சூட்டுகின்றனர். குழந்தைகள் இளமை யிலேயே வீட்டுப் பொறுப்பில் பயிற்சி பெறு கின்றனர்.

பூப்படைந்த பெண்ணை ஏழு நாட்களுக்கு ஒரு தனிக்குடிசையில் தங்க வைக்கின்றனர். ஏழாம் நாளில் அவளை நீராட்டி நவதானியச் சடங்கு செய்து வீட்டுக்கு அழைத்துக்கொள்கின்றனர்.

பெண்கள் வயதுக்கு வந்த பின்னரே திருமணம் செய்கின்றனர். பெரும்பாலும் ஒருதார முறையே பின்பற்றப்படுகிறது. இருப்பினும் தேவையடிப் படையில் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை வைத் துக்கொள்ள தடையேதுமில்லை. திருமணம் பெற் றோராலும் உற்றோராலும் பேசி முடிக்கப்படுகிறது. பெண்ணைப் பார்த்து நிச்சயித்த பின்பு ஆறு மாதங் களுக்கு நாள்தோறும் மணமகன் சிறிய விறகுக் கட்டை எடுத்துச் சென்று பெண்ணில் வீட்டில் கொடுத்து வரவேண்டும். பரிசம் கொடுக்கும் வழக் கம் பணியரிடம் உண்டு. பரிசப்பணமும் புத்தாடை களும் மணமகளின் பெற்றோரிடமும் வழங்கப்படு கின்றன. திருமணம் மிக எளிமையான முறையில் நடத்தப்படுகிறது. திருமண நாளில் மணப்பெண்ணை அதிகாலையில் சேவல் கூவும் முன் பந்தலுக்கு அழைத்து வருகின்றனர். உற்றார் உறவினர் முன் னிலையில் மணமகன் எல்லோருக்கும் தெரியும்படி ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெண்ணின் தந்தை யிடம் கொடுத்தவுடன் மணமகனின் உறவுப் பெண் கள் மணமகளின் கழுத்தில் தாலி கட்டுகின்றனர். பின்னர் செம்மி என்றழைக்கப்படும் சமூகத் தலைவர் மணமக்களின் தலைகளிலும், கால்களிலும் நீரை ஊற்றித் திருமணச் சடங்குகளை நிறைவு செய்கிறார். பறையும் குழலும் முழங்கப் பெண்கள் நடனம் ஆடு வர். மணமுறிவும், விதவை மணமும் பணியரிடம் உண்டு. மனைவி இறந்துவிட்டால் அவளது

தங்கையை ஒருவன் மணக் கக்கூடாது. அதேபோல் இரண்டு சகோதரிகளையும் ஒருவன் மணந்து கொள்ளத் தடை உண்டு.

பணியர் இறந்தவரைப் புதைக்கின்றனர். ஒருவர் இறந்து விட்டால் உறவினர் அனைவரும் வந்து பார்க்கும்பொருட்டு மூன்று நாட்கள் வரை சடலத்தை வைத்திருப்பர். அதன் பின்பு மூங்கிலால் பாடை கட்டி படுத்த நிலையில் சடலத்தை வைத்து இடுகாட்டுக்குக் கொண்டுச்செல்கின்றனர். வடக்கு கிழக்காகக் குழி வெட்டிக் குழியின் மேற்குச் சுவரின் அடிப்பாகத்தில் குடைந்து எடுத்து அதற்குள் சடலத்தின் தலையைத் தெற்காகவும் கால்களை வடக்காகவும் வைத்துப் புதைக்கின்றனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரே விதமான இறுதி மரியாதையே செலுத்தப்படுகிறது. பெண்கள் இடுகாடுவரை சென்று வர அனுமதிக்கப்படுகின்றனர். சடலத்தை அடக்கம் செய்த பின்பு செம்மி எனும் சமூகத் தலைவர் புதைக் குழியிலிருந்து சற்றுத் தொலைவில் சிறிது அரிசிக் கஞ்சியை வைத்துக் கைகளை தட்டி அங்கு இருக்கும் ஆவிகளை அழைப்பார். அங்குள்ள ஆவிகள் காக்கைகளின் உருவத்தில் வந்து கஞ்சியை உண்பதாக நம்புகின்றனர். காக்காக் கஞ்சி என்றழைக்கப்படும் இக்கஞ்சி ஏழு நாட்களுக்கு வைக்கப்படுகிறது. அதன் பின்பு மூன் றாண்டுகட்கு மகரம் மாதத்தில் இறந்தவர் வீட்டினர் நோன்பு அனுசரித்துத் தங்கள் துயரத்தை வெளிக்காட்டுவர். மூன்று நான்கு ஆண்டுக்கு ஒரு முறை நீத்தாருக்காக மகர மாதத்தில் அவர்தம் உறவுக் காரர்கள் பொதுவான நோன்பு இருப்பதும் உண்டு. மகரம் மாதம் முழுவதும் நோன்பு இருப்பவர்கள் தனியாக ஒரு பந்தல் அமைத்து அங்கேயே சமைத்து உண்பர். நோன்பு நாட்களில் கறி, மீன் போன்றவற்றை உண்ண மாட்டார்கள். செம்மி என்பவர் நோன்பின் இறுதி நாளில் சில சடங்குகளை நடத்தி நோன்பை நிறைவு செய்வார். அந்நாளில் நோன்புக் காரர்கள் காலை முதல் மாலை வரை எதுவும் உண்ணாமல் இருந்து மாலையில் ஒன்றாக உண்டு நோன்பை முடிப்பர். அன்று இரவு முழுவதும் துயரத்தை மறக்கும் பொருட்டு ஆடவர் மட்டும் நடனமாடுவர்.

பணியர் வாழும் ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டன் என்னும் தலைவர் உள்ளார். இவருக்கு அடுத்த நிலையில் உள்ள உதவித் தலைவரை முதலி என்று அழைக்கின்றனர். இவ்விரு தலைவர்களையும் பொதுவாக மூப்பன்மார் என்றும் அழைப்பர். கிராமத்தில் ஏற்படும் சண்டை சச்சரவுகள், மண முறிவு போன்றவை தொடர்பான வழக்குகளில் இத்தலைவர்கள் விசாரித்துத் தீர்ப்பு வழங்குவார்கள். இவர்களைத் தவிரச் செம்மி என்றழைக்கப்படும் சமுதாயத் தலைவர் ஒருவரும் உள்ளார். திருமணம் வழிபாடு, மரணச்சடங்குகள் போன்றவற்றை இவர் பொறுப் பேற்று நடத்துகிறார்.

பேய்களும், தீங்கு விளைவிக்கும் ஆவிகளும் உள்ளன என்று பணியர் நம்புகின்றனர். இவர்கள் வழிபடும் தெய்வத்தைக் காட்டுப் பகவதி அல்லது கூலி என்றழைக்கின்றனர். இத்தெய்வத்திற்கென்று ஆலயங்கள் ஏதுமில்லை. ஒரு பெரிய மரத்தடியில் வைக்கப்பட்ட கல்லை அல்லது கற்குவியலைக் கூலி உறையும் ஆலயமாகக் கருதுகின்றனர். அவ்விடம் கூலித்தரை என அழைக்கப்படுகிறது. தேங்காய் மூடி, அவல், சிறிய நாணயங்கள் ஆகியவற்றைக் கூலித் தரையில் படைத்து வழிபடுகின்றனர். கூலியைப் போற்றி ஆண்டுதோறும் ஒரு வாரக்காலத்திற்குத் திரு விழா நடத்துகின்றனர். இவ்விழாவில் கொமாரன், நொலம்புக்காரன் என்னும் இந்துச் சமயத் தலைவர்களும் கலந்துகொள்கின்றனர். அவர்கள் மீது தேவதை இறங்கி நடக்கவிருக்கும் நன்மை தீமைகளை எடுத்துரைத்து அருள் புரிவதாகப் பணியர் நம்புகின்றனர். அரசமரம் ஆலமரம் ஆகியவற்றிலும் தெய்வம் உறைவதாகவும் அம்மரங்களை வெட்டினால் கேடு விளையும் என்றும் கருதுகின்றனர்.

மூங்கிற் கழைத் துண்டுகளிலிருந்து பணியர் எளிதாக நெருப்பை உண்டாக்குகின்றனர். இரண்டு கணுக்களுக்கு இடையில் உள்ள மூங்கிற் கழையை நீள்வாக்கில் இரண்டாகப் பிளந்து ஒரு துண்டின் குவிந்த பகுதியில் நெடுக்காக ஒரு நீண்ட துளையை உருவாக்கி அதன் உட்புறத்தில் துணி, பஞ்சு போன்றவற்றை இட்டுத் தலையில் வைத்துக்கொள்கின்றனர். மற்றொரு துண்டின் வெட்டுப் பகுதியினை நீண்ட துளை மீது வைத்து முன்னும் பின்னுமாக விரைவாகத் தேய்க்கின்றனர். இதனால் ஏற்படும் உராய்வினால் தீப்பொறிகள் பறந்து துணிகளில் பற்றிக் கொள்கிறது. அதனை மேலும் ஊதி நெருப்பை உண்டாக்குகின்றனர்.

குளங்களிலும், ஓடைகளில், நீர் தேங்கிய இடங்களில் நச்சுச்செடி, மரப்பட்டை, கனிகளை அரைத்துப் போட்டு மீன்களை மயக்கமுறச் செய்து மீன் பிடிக்

கின்றனர். ஓடும் நீரில் மூங்கில் பாய்களால் வலை அமைத்தும் மீன் பிடிப்பதுண்டு. இப்பழங்குடி மக்கள் பச்சைக் குத்திக்கொள்கின்றனர். இரும்பு, பித்தளை, செம்பு ஆகிய உலோகங்களில் மோதிரம் அணிகின்றனர். சிறு வயதிலிருந்தே பெண் குழந்தைகளின் காதுகளில் துளையிட்டு அதில் பனை ஓலைச் சுருள்களை வைத்துத் துளைகளைப் பெரிதாக வளர்க்கின்றனர். வளர்ந்த பின்பு கட்டையிலான காதணிகளும் அணிகின்றனர். மூக்கிலும் சிறு துளையிட்டுக் குச்சியை அணிந்து கொள்கின்றனர்.

- ப. இரா.

**பணியிடைப் பயிற்சி:** ஆசிரியர் பயிற்சி என்பது ஒரு தொடர் கல்வியாகும். மாறிவரும் உலகில் ஒவ்வொரு நாளும் அறிவியலிலும், தொழில் நுட்பத்திலும், மற்ற துறைகளிலும் புதிய புதிய கண்டுபிடிப்புகளும் வளர்ச்சியும் பெருகிக்கொண்டே போகின்றன. ஆகவே, தங்களது தொழில் நுட்பத்தையும் கற்பிக்கும் திறனையும் அறிவையும் அவ்வப்போது பெருக்கிக் கொள்வது ஆசிரியருக்கு இன்றியமையாததாகும். பணியில் சேரும் முன் பயிற்சி பெறுதல் ஒருவரை அந்தப் பணிக்குத் தயாராக்குகிறது. பயிற்சியில் கற்றவைகளை வகுப்பறையில் பயன்படுத்தும்போது ஏற்படும் அனுபவம், இடையூறுகள் போன்றவற்றைப் புதிய கருத்துகளோடு ஒப்பிட்டு நோக்குவதற்கும், இடையூறுகளைக் களைவதற்கும் பணியிடைப் பயிற்சி ஒரு களமாக அமைகிறது. சோர்ந்துபோன உள்ளங்கள் புத்துணர்வோடு மீண்டும் பணியில் சேர்வதற்கான ஒரு வேகத்தையும் பணியிடைப் பயிற்சி அளிக்கிறது. ஆகவே பணிக் காலத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை எல்லா ஆசிரியர்களும் பணியிடைப் பயிற்சி பெறுவது மிகவும் அவசியம்.

மேலும் கல்வி முறையில் தேக்கம் ஏற்படாது தேசியக் கொள்கைகளுக்கும், தேவைகளுக்கும் ஏற்ப கல்வி அமைந்திட வேண்டுமாயின் மாறிவரும் தேவைகளை மனத்தில் கொண்டு கல்வி முறை மாறிட வேண்டும். சமுதாயத் தேவைகளை அறிந்து அளிக்கப்படும் கல்வி முறையே சிறந்ததாகும். அதற்குத் தேவை பணியிடைப் பயிற்சியாகும். பணியில் அமர்ந்தவர்கள், முன் பயிற்சியினை மட்டும் நம்பி இருந்தால் அவர்களின் மன நிலையிலும், ஆற்றலிலும் அறிவுத் திறனிலும் தேக்கம் ஏற்பட்டு விடும்.

**பணியிடைப் பயிற்சியின் குறிக்கோள்கள் :** கீழ்க் காண்பவைகளைப் பணியிடைப் பயிற்சியின் குறிக்கோள்களாகக் கொள்ளலாம். 1. தொழில் திறனையும், தன்னம்பிக்கையையும் வளர்ப்பதோடு புதிய அறிவினையும் பெறுதல்.

2. தனது பணியையும், மனப்பாங்கினையும் மதிப்பீடு செய்வதோடு, தன்னுடன் ஆசிரியர்களோடு ஒத்து நோக்குதல்.

3. ஆசிரியர் சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய பணிகளின் வெவ்வேறு கூறுகளை ஆய்ந்து அதற்கேற்றவாறு தங்களைத் தயார் செய்துகொள்ளுதல்.

4. சமுதாயத்தில் புதிய சவால்களைச் சமாளிப்பதற்கான திறனை வளர்த்துகொள்ளுதல்.

5. தமது பணியில் புதிய உத்திகளையும், அறிவையும் பிறரோடு பகிர்ந்து கொள்வதற்கான வாய்ப்பாக அமைதல்.

6. ஆசிரியப் பணியில் ஏற்படும் சிக்கல்களைப் பிறரோடு பகிர்ந்துகொண்டு ஏற்றத் தீர்வுகளைப் பெறுதல்.

7.ஆரிசிரியத் தொழிலில் புதுமையையும், கண்டுபிடிப்புகளையும் பரப்புதல்.

மேற்காணும் குறிக்கோள்களை அடையும் வகையில் பணியிடைப்பயிற்சிகள் அமைந்திட வேண்டும்.

**பணியிடைப் பயிற்சியின் வகைகள் :** பகுதி நேரப் பணியிடைப் பயிற்சி, முழுநேரப் பணியிடைப் பயிற்சி என இருவகைகளாகப் பணியிடைப் பயிற்சிகள் உள்ளன. கல்வி நிறுவனங்களில் முதன் முறையாகப் பணிக்குச் சேரும் ஆசிரியர்கள் மற்றவர்களிடமிருந்து அவ்வப்போது புதுக்கருத்துகளையும், கற்பிக்கும் முறைகளையும் பற்றி அறிந்துகொள்ளலாம். பணியிடைப் பயிற்சிக்கு என வேறு நிறுவனங்களுக்குச் சென்று முழுமையாகத் தங்க வேண்டியதில்லை. இதனைப் பகுதிநேரப் பணியிடைப் பயிற்சி என்பர்.

பணியில் சேர்ந்து சில ஆண்டுகள் கழித்து தமது துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் வளர்ச்சியையும் அறிந்து கொள்ளவும், கற்பிக்கும் முறைகளில் ஏற்பட்டுள்ள புதுமைகளை அறிந்து அவற்றைக் கையாளும் திறனைப் பெற முழுநேரப் பணியிடைப் பயிற்சி அவசியமாகிறது. இப்பயிற்சியின் காலம் ஒரு

வாரம் முதல் ஒரு மாதம் வரை நீடிக்கலாம். நீண்ட கால முழுநேரப் பயிற்சியினை கோடைக்கால விடு முறையின்போது நடத்துவதுதான் சிறந்தது. இத் தகைய பயிற்சிகள் ஆசிரியர்களுக்குப் புத்துணர்வுப் பயிற்சிகளாகவும் அமைகின்றன. புதிய வேகத் தோடும் புதிய கருத்துகளோடும் ஆசிரியர்கள் பணிக் குத் திரும்ப இப்படிப்பட்ட பயிற்சிகள் பயன்படும்.

பகுதிநேரப் பணியிடைப்பயிற்சிகள் புதிதாகப் பணியில் சேரும் ஆசிரியர்களுக்குப் பணி மூப்புடைய ஆசிரியர்களுக்கும், தலைமை ஆசிரியர்களுக்கும், முதல்வர்களுக்கும் அவர்கள் பணியாற்றும் நிறுவனங் களிலேயே கொடுக்கலாம். தேவைப்பட்டால் அரு கில் உள்ள மற்ற நிறுவனங்களில் பணியாற்றும் சிறப் புடைய ஆசிரியர்களையும் பயன்படுத்தலாம்.

முழுநேர நீண்ட காலப் பணியிடைப் பயிற்சி நிறு வனங்களிலும், கல்வி இயல் கல்லூரிகளிலும் நடத்த லாம். ஒவ்வொரு துறையிலும் திறமை படைத்தவர் களால் இப்பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

**தேசியக் கல்விக்கொள்கையும், பணியிடைப் பயிற்சியும் :** 1986ஆம் ஆண்டு தேசியக்கல்விக் கொள் கையின் படி பணியிடைப் பயிற்சிகளை நடத்த ஒவ் வொரு மாவட்டத்திலும் ஒரு பயிற்சி நிறுவனம் நிறு வப்பட்டுள்ளது. உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குக் கல்வி யியல் கல்லூரிகளில் பணியிடைப் பயிற்சி அளிக்கப் பட வேண்டும் என்று அதற்கெனச் சில கல்வியியல் கல்லூரிகள் வசதிகள் நிறைந்ததாக உயர்த்தப்பட் டுள்ளன.

கல்லூரியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிப்பதற்கென்று ஆசிரியக் கல்லூரிகள் பல்கலைக்கழகங்களில் நிறுவப்பட்டுள் ளன. பல்வேறு பாடங்களைக் கற்பிக்கும் கல்லூரி ஆசிரியர்களுக்குத் தனியாகப் பணியிடைப் பயிற்சி யும் பொதுவாகப் பணி முன் பயிற்சி இல்லாதவர்க ளுக்குக் கல்வி கற்பிக்கும் முறைகள் மதிப்பீடு போன்றவற்றைக் கற்பிப்பதற்காகவும் இங்குப் பணியிடைப் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவ னம், தேசிய அளவிலும் மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாநில அளவிலும் எல்லா நிலையிலும் ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி களை அளிக்கின்றன. கோடை விடுமுறைக் காலங் களில் முழுநேரப் பணியிடைப் பயிற்சிகளையும் மற்ற காலங்களில் குறுகிய கால, பகுதி நேரப் பயிற்சி களையும் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இந்த நிறுவனங்கள் நடத்து கின்றன.

தேசியக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவ னம் நான்கு மண்டலங்களாகப் பிரித்து மைசூர் ( தென் மண்டலம் ), புவனேசுவர் ( கிழக்கு மண்ட லம் ), கவுகாத்தி ( வடக்கு மண்டலம் ) ஆசுமீர் ( மேற்கு மண்டலம் ) ஆகிய இடங்களில் கல்வியியல் கல்லூரிகளை நடத்துகிறது. இங்கு முன் பணிப்பயிற் சிக்கும், பணியிடைப் பயிற்சிகளும் அளிக்கப்படு கின்றன.

**பணியிடைப் பயிற்சிக்குச் செல்லும் ஆசிரியர் களின் நிலை :** பணியில் உள்ள ஆசிரியர்கள் முழு ஊதியத்தோடும் உதவித் தொகையோடும் பணி யிடைப் பயிற்சிக்கு அனுப்பப்படுகிறார்கள். பயணப் படியும் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. குறிப்பாகக் கல்லூரிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு, பதவி உயர்வு பெறுவதற்கு இது ஒரு கட்டாயத் தகுதியாக ஆக்கப்பட்டுள்ளது. குறைந்த அளவு எட்டு வாரங் களாவது பணியிடைப் பயிற்சியில் பங்கேற்றிருக்க வேண்டும். ஆகவே இது ஆசிரியர்களிடையே பணி யிடைப் பயிற்சியில் பங்கேற்க வேண்டும் என்ற கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது. பல்வேறு பணி யிடைப் பயிற்சிகளில் பங்கேற்ற ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வோடு, அவர்கள் பணி சிறக்குமானால் அவர்களுக்கு நல்லாசிரியர் விருதுகளையும் அளித்து அரசு ஆசிரியர்களைச் சிறப்பிக்கிறது. பணியிடைப் பயிற்சிகள் ஆசிரியர்களுக்குப் புதிய கருத்துகளையும், முறைகளையும் கற்பித்து அவர்களுடைய அறிவை யும், திறனையும் பெருக்குவதோடு தொடர்ந்து சோர் வின்றிப் பணியாற்றிட புத்துணர்வையும் அளிக்கிறது.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இவ்வாறு தாங்கள் பணியாற்றும் சூழ்நிலையில் இருந்து வேறு ஒரு சூழலில் பலருடன் பழகி உறவாடும் வாய்ப்புமுள் ளது. ஆகவே, ஆசிரியர்கள் இதுபோன்ற பயிற்சிக்குத் தாமாக விருப்பத்தோடு செல்லாதபோது கட்டாயத் தின் காரணமாகப் பணியிடைப் பயிற்சி அவசியம் என்பதை இப்போது ஆசிரியர்களுக்கு அரசு உணர்த் துகிறது. ஆனால் கட்டாயம் என்று இல்லாமல் விருப் பத்தோடும் ஆர்வத்தோடும் பணியிடைப் பயிற்சிக்கு ஆசிரியர்கள் சென்றால் உறுதியாக அவர்களது திற னும் மிகுதியாகும். அதன் காரணமாக அவர்கள் கல்விக்காற்றும் பணியும் பெருகும்.

- ஜி.ப.

**பயன்முறை மானிடவியல் :** பயன்முறை மானிடவியல் ( Applied Anthropology ) மனிதனைப் பற்றியும், மனித வாழ்க்கையைப் பற்றியும் முழுமையாக விளக்கவல்ல அறிவியல் பாடமாகிய மானிடவியலின் பெரும் பிரிவுளில் ஒன்றாகும். இது மனிதன், மனித சமுதாயம், பண்பாடு மற்றும் தோற்றம், வளர்ச்சி இப்போதைய நிலை ஆகியன பற்றிய மானிடவியல் உண்மைகளையும் விதிமுறைகளையும் எவ்வாறு பயன்படுத்த முடியும் என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டது. பொதுவாக உலகில் பல்வேறு பகுதிகளில் வாழும் பழங்குடி ஊரக, நகர மக்களின் சமூகம், பொருளாதாரம், அரசியல், சமயம், பண்பாடு, மொழி, அறநெறிச் சட்டங்கள் ஆகியவற்றைச் சார்ந்த இடர்ப்பாடுகளை முடித்து வைப்பதற்கான வழிமுறைகளையும், விளைவுகளையும் எதிர்நோக்கி அறியவும், திறனாய்வு செய்யவும் பயன்முறை மானிடவியல் பெரிதும் உறுதுணையாக உள்ளது. இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் பழங்குடி, கிராமப்புற மேம்பாட்டுப் பணிகளைத் திட்டமிடுதல், மதிப்பீடு செய்தல் போன்ற செயல்முறைகளுக்கும் பயன்முறை மானிடவியல் பெரிதும் உதவக்கூடும் எனலாம்.

**தோற்றுவாய் :** ஆங்கில நாட்டைச் சேர்ந்த தார்வின் ( Darwin ) உயிரினங்களின் தோற்றம் என்ற நூலை கி.பி. 1859ஆம் ஆண்டு வெளியிட்டார். அவ்வாண்டே மானிடவியலின் தோற்றமாகக் கருதப்படுகிறது. ஆனால் பயன்முறை மானிடவியலின் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கிளைத்து வளரத் தொடங்குகிறது எனலாம். குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயர்கள் ஆப்பிரிக்காவில் தம் காலனி ஆதிக்கத்தை விரிவுப்படுத்தினார்கள். அம்முயற்சியில் குமாசி என்ற இடத்தில் அசாந்தி என்ற ஓர் ஆப்பிரிக்க பழங்குடியினரின் நாட்டை 1921ஆம் ஆண்டு தம் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர முயற்சித்தனர். அப்போது அசாந்தி பழங்குடிகள் வணங்கி வந்த பொற்பீடத்தை எடுத்துச் செல்ல ஆங்கிலேயர்கள் திட்டமிட்டனர். அதை எதிர்த்து ஆயிரக்கணக்கான அசாந்தி மக்கள் போராடினர். கேப்டன் ராட்ரே என்னும் மானிடவியல் அறிஞர் அந்தப் பொற்பீடத்தின் மீது அசாந்தி மக்கள் வைத்திருந்த தெய்வ நம்பிக்கையை ஆங்கிலேய அதிகாரிகளுக்கு விளக்கினார். அசாந்தி மக்களின் மூதாதையர்கள் ஒவ்வொருவருடைய ஆன்மாவும் அந்தப் பொற்பீடத்தில் உறைவதாக நம்பி வந்ததையும் அதை இழந்தால் அவர்கள் அழிந்து போவார்கள் என்ற அம்மக்களின் நம்பிக்கையையும் விளக்கிய அம்மானிடவியல் அறிஞர் பொற்பீடத்தை அசாந்தி மக்கள் திரும்பப் பெற வழி செய்தார். அதன் விளைவாக அசாந்தி ஆங்கிலேயர் போர் தவிர்க்கப்பட்டது.

ஆப்பிரிக்க நிகழ்ச்சியைப் போன்றே இந்தியாவிலும் ஓரான் என்ற பழங்குடி மக்களிடையே நடக்கவிருந்த கலவரத்தை மானிடவியல் பேராசிரியர் சரத் சந்திரராய் தலையிட்டு நிறுத்தினார். ஓரான் பழங்குடி மக்கள் வாழும் பகுதியில் இருந்த நதியின் குறுக்கே கட்டிய பாலத்தின் நினைவுச் சின்னமாக அப்பாலத்தைக் கட்டிய ஒப்பந்தக்காரர் புகை வண்டி படத்தை உடைய கொடி ஒன்றை ஓர் ஓரான் கிராம மக்களுக்குக் கொடுத்தார். அந்தக் கொடியை அவ்வூர் மக்கள் ஆண்டுதோறும் தங்கள் பாதயாத்திரையின்போது எடுத்துச் செல்வது வழக்கம். அவ்வூர் மக்கள் மற்றொரு கிராம மக்கள் அதேபோன்று கொடியை அவர்கள் விழாவில் பயன்படுத்தியபோது எதிர்ப்பு தெரிவித்துக் கலவரம் செய்தனர். கொடியைப் பயன்படுத்துவதில் இரு கிராம மக்களுக்கும் சண்டை ஏற்பட்டது. அக்கலவரத்தைத் தொடர்ந்து நடக்காமல் தடுத்து நிறுத்த அதிகாரிகள் மானிடவியல் பேராசிரியர் சரத் சந்திரராயின் ஆலோசனையைக் கேட்டனர். அப்போது அவர் விமானம் வரையப்பட்ட கொடியைப் பக்கத்து கிராம மக்களுக்குக்கொடுத்து விமானம் புகைவண்டியை விடச் சக்தி வாய்ந்தது என அப்பழங்குடி மக்களிடம் சொல்லி அக்கொடியை ஏற்றுக்கொள்ளச் செய்தார். அதனால் இரண்டு ஓரான் கிராம மக்களுக் கும் இடையே நடக்கவிருந்த பெரும் கலவரம் தவிர்க்கப்பட்டது.

மானிடவியல் அறிஞர்களின் ஆலோசனைகள் ஆங்கிலேயக் காலனி ஆதிக்கத்திற்குப் பயனுள்ள முறையில் இருந்தமையால் மானிடவியல் அறிஞர்கள் பலர் அரசுப் பணிகளில் பல நிலைகளில் அமர்த்தப்பட்டனர்.

இரண்டாம் உலகப்போரின் போது மானிடவியல் அறிஞர்கள் அமெரிக்க அரசுக்குப் பல நிலைகளில் பணிபுரிந்து உதவியுள்ளனர். அமெரிக்க நாட்டைச் சார்ந்த கிளைடி குளக்கோகன் என்ற மானிடவியல் அறிஞர், அமெரிக்க அரசு மானிடவியல்

அறிஞர்களைப் பல்வேறு துறைகளில் நியமனம் செய்து பயனடைந்துள்ள விளக்கங்களைக் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்க அரசு போர் வீரர்களுக்கு அளிக்கப்பட்ட பயிற்சி, புலனாய்வுத்துறை, வரைபடத் துறை, வெளிநாட்டு தேசியக்கொள்கை, நிர்வாக உள்நாட்டுப் பாதுகாப்பு, விமானப்படை, மருத்துவத்துறை, இராசயன இராணுவப் படைத் திட்டம் ஆகிய பல் வேறு துறைகளில் மானிடவியல் அறிஞர்களை நியமித்து அவர்களுடைய பணியையும், ஆலோசனைகளையும் தக்க முறையில் பயன் படுத்திக் கொண்டது. இரண்டாம் உலகப்போரின் போது அமெரிக்கா சப்பானில் உள்ள கிரோசிமா, நாகாசாகி ஆகிய நகரங்களை அணுகுண்டு போட்டு அழித்ததால் அங்கே பிறக்கும் குழந்தைகள் ஊன முடைய ஏதுவான சூழ்நிலை உள்ளதால் அதைப் பற்றி மானிடவியல் அறிஞர்கள் பல்வேறு ஆய்வுகளைச் செய்து உதவியுள்ளனர்.

மானிடவியல் அறிஞர்கள் போர்க்காலத்தில் மட்டுமன்றி அமைதியான காலத்தில் தொழில்துறை மாற்றம், சமுதாயத்தின் அன்றாட வாழ்க்கையில் உண்டாகும் இடர்ப்பாடுகளை முடித்து வைப்பதற்கு உதவி வருகின்றனர். மானிட சமுதாயத்தில் மக்கள் தொகைப் பெருக்கம், உணவுப் பற்றாகுறை, வீட்டு வசதி, நல்வாழ்வு, சாதி சமய இடர்ப்பாடுகள், தீர வழி வகைகளைக் கூறி வந்துள்ளனர்.

பல்வேறு மதங்களில் காணப்படும் சாத்திரங்கள், மூடப் பழக்கவழக்கங்களை விளக்குவதோடு அவர்களின் சமுதாய, பொருளாதார இடர்ப்பாடுகளை ஆய்வு செய்து மானிடவியல் அறிஞர்கள் கொடுக்கக் கூடிய விளக்கங்கள் சமுதாயத்திற்கு மிகவும் பயன்படு வனவாக உள்ளன.

அமெரிக்காவைச் சார்ந்த உருத் பெண்டிக்ட் என்பவர் சப்பானியர் வாழ்க்கைப் பற்றிய தொகுப்பு ஒன்றை வெளியிட்டார். அதில் அந்நாட்டின் பண்பாடு, குடிமக்களின் எழுச்சி, திறமை, இராணுவத்தில் கையாளப்பட்ட அணுகுமுறை ஆகியவை விளக்கப்பட்டுள்ளன. அம்மானிடவியல் அறிக்கை சப்பானிய அரசுக்குப் பெரிதும் பயன்பட்டது.

போலாசு எனும் மானிடவியல் அறிஞர் எழுதிய **மானிடவியலும் இக்கால வாழ்க்கையும்** என்ற நூலில் பல பயனுள்ள கருத்துகளை விவரித்து இருக்கிறார். மனிதன் சமூகத்தில் எவ்வாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான் என்பதை மானிடவியல் அறிஞர்கள் இலைர், இரெட்கிளின், புரொன், இரெமண்ட் ஆகியோர் தெளிவாகக் கூறியுள்ளனர். இவை பயன்முறை மானிடவியலுக்கு இன்றியமையததாக உள்ளது. குறிப்பாக மாலினோவிசுகி மற்றும் ரெட்கியின், புரொன் ஆகியோர் மனிதப்பண்பாடு என்பது தனி மனித வாழ்க்கைக்கும் சமுதாய வாழ்க்கைக்கும் வரைபடமாக இருக்கிறது என்பதை விளக்குவது பயன்முறை மானிடவியலின் விளக்கத்திற்கு அடிப் படையாக அமைந்துள்ளது எனலாம்.

**பயன்முறை மானிடவியலின் பிரிவுகள் :** இதில் மருத்துவ மானிடவியல் என்ற பிரிவு இன்று வளர்ந்து வரும் பயன்முறை மானிடவியலின் ஓர் உட்பிரிவாகும். மக்கள் தொகை, பிறப்பு, இறப்பு பற்றிய விளக்கங்கள், மக்கள்தொகைக் கட்டுப்பாடு போன்ற பல்வேறு துறைகளிலும் ஆய்வு செய்து தேவையான புதிய ஆலோசனைகளைக் கூறி மனித மேம்பாட்டுக்கு வழி வகுக்கப்படுகிறது. இத்துறையில் ஐரோப்பா மற்றும்அமெரிக்கா நாடுகள் மிகுந்த முன்னேற்ற மடைந்துள்ளன.

உணவுப் பழக்கவழக்க முறைக்கும் பண்பாட்டிற்கும் உள்ள தொடர்புகளையும், போதை மருந்து உட்கொண்டு அதற்கு அடிமையானவர்களுக்கு அதிலிருந்து விடுபட வழிவகை செய்வதற்கும் மானிடவியல் அறிஞர்கள் பெரிதும் உதவியுள்ளனர். குறிப்பாகப் பழங்குடி மக்களிடையே காணப்படும் இயற்கை மருத்துவத்தைப் பல்வேறு விளக்கங்களுடன் சமுதாயத்திற்குப் பயனுடையதாகச் செய்துள்ளனர்.

**வேளாண்மை மானிடவியல் :** வேளாண்மைத் துறையில் பல வளர்ச்சிப் பணிகளுக்கு மானிடவியல் அறிஞர்கள் பெரிதும் துணையாய் நின்று வருகின்றனர். சமுதாயக் காடு வளர்ப்பு, வேளாண்மைக் காடு வளர்ப்பு, பல்வேறு புதிய வேளாண் முறைகளின் நன்மைகளை விளக்கிக்கூறுதல், பழமையை விட்டுப் புதுமையைக் கையாள வேண்டியதன் தேவை ஆகியவற்றை விளக்குகின்றனர். இந்தியா போன்ற வளரும் நாடுகளில் பெரும் பகுதியினர் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டு இருப்பதால் அறிவியல் முறைகளைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதற்கான ஆலோசனைகளைத் தங்கள் ஆய்வின் அடிப்படையில் கூறி வருகின்றனர்.

**தொழில்துறை மானிடவியல் :** மானிடவியல் அறிஞர்கள், அரசு தொழிற்சாலைகளிலும், தனியார்

தொழிற்சாலைகளிலும் ஆலோசகர்களாகப் பணியாற்றி வருகின்றனர். அங்கு நிலவும் பல்வேறு தொழிலாளர் குறைகளைப் போக்கவும் உற்பத்தியைப் பெருக்கவும் உதவுகின்றனர். குறிப்பாக உடற்கூறு மானிடவியல் அறிஞர்கள் ஒரு நாட்டின் மக்களுக்குத் தேவையான ஆடை, காலணிகள் ஆகியவற்றைப் பெரிய அளவில் உற்பத்தி செய்ய உதவி வருகின்றனர்.

**இயற்கை வள மேம்பாட்டு மானிடவியல் :** இப்போது இயற்கை வள மேம்பாட்டுக்கு அறிவியல் அறிஞர்கள் பெரிதும் முதன்மை கொடுத்து வருகின்றனர். மானிடவியல் அறிஞர்கள் இயற்கை வளமுள்ள பகுதியைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளைக் கூறி வருகின்றனர். தங்கம், நிலக்கரி, எண்ணெய், இயற்கை எரிவாயு மற்றும் இரும்புக் கனிமங்களின் தொழிற்சாலைகளால் பழங்குடி மக்களுக்கும் மற்றவருக்கும் ஏற்படக்கூடிய இடர்பாடுகளை முன்கூட்டியே எடுத்துரைக்கின்றனர். அணைக்கட்டுகள், வான்வெளி ஆராய்ச்சி நிலையங்கள் போன்றவை பெரும்பாலும் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் ஏற்படுத்தப்படுவதால் பழங்குடி மக்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இதனால் பழங்குடியினர் பல ஆண்டு காலம் வாழ்ந்து வந்த இடத்தை இழக்க நேரிடுகிறது. இப்புதிய திட்டங்களால் பழங்குடி மக்களுக்கு ஏற்படக் கூடிய இடர்ப்பாடுகளை மானிடவியல் அறிஞர்கள் விளக்கும் போது அவை பழங்குடி மக்கள் மறு வாழ்வுக்குப் பெரிதும் உதவியாக உள்ளது. அதோடு தொழிற்சாலைகளில் அமர்த்தப்படும் பழங்குடி மக்களின் இன்னல்கள் வெகுவாகச் சீர் செய்ய மானிடவியல் அறிஞர்கள் முனைகின்றனர்.

**ஊரக வளர்ச்சித் திட்டங்களும் மானிடவியலும் :** இந்தியாவில் பெரும்பாலான கிராம மக்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழ்உள்ளனர். பல திட்டங்கள் வாயிலாகக் கிராமப்புறங்களை முன்னேற்ற மானிடவியல் அறிஞர்கள் உதவுகின்றனர். ஊரக வளர்ச்சிக்கு கல்வி, வீட்டுவசதி, மருத்துவ வசதி, உணவு உற்பத்தி, வேலை வாய்ப்பு ஆகியவை உள்ளடக்கிய திட்டங்களைத் தீட்ட மானிடவியல் அறிஞர்கள் அரசுக்கு உதவி வருகின்றனர். அதோடு ஊரக வளர்ச்சித் திட்டங்களுக்கும் ஐந்தாண்டுத் திட்டங்களுக்கும் மானிடவியல் அறிஞர்கள் ஆலோசகர்களாக இருந்து வருகின்றனர்.

**நகர்ப்புற வளர்ச்சியும் மானிடவியலும் :** இப்போது நகர்ப்புறங்களில் உள்ள மக்கள்தொகை, இட நெருக்கடி ஆகிய இடர்ப்பாடுகளை நீக்கவும், நகர்ப்புற வீட்டு வசதி, மாசுக்கட்டுப்பாடு ஆகிய நலத் திட்டங்களை உருவாக்குவதற்கும் மானிடவியல் அறிஞர்கள் உதவி வருகின்றனர். நகர்ப்புறங்களில் குடிசை வாழ் மக்களின் நலவாழ்விற்குத் திட்டங்கள் தீட்டுகின்றனர். பொதுவாக நகர்ப்புறங்களில் ஏற்படக் கூடிய பண்பாட்டு மாற்றங்களையும் அதனால் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளையும் விளக்குகின்றனர்.

**பழங்குடி மக்களின் முன்னேற்றம் :** பழங்குடி மக்களின் மேம்பாட்டிற்கு சாலை வசதி, வீட்டு வசதி, வேளாண்மை, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் பல திட்டங்களை வகுக்க மானிடவியல் அறிஞர்கள் உதவி வருகின்றனர். மத்திய, மாநில அரசுகள் பழங்குடி மக்களின் நலவாழ்விற்குத் தீட்டங்களைத் தீட்டுவதிலும், செயல்படுத்துவதிலும், அத்திட்டங்களை மதிப்பீடு செய்வதிலும் மானிடவியல் அறிஞர்கள் பலரைப் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

பொதுவாகப் பயன்முறை மானிடவியல் இப்போது பல்வேறு துறைகளில் பயன்படக்கூடிய ஓர் அறிவியல் பாடமாக வளர்ந்து வந்துள்ளது. வளர்ந்து வரும் நாடுகளில் சமுதாய, பொருளாதாரப் பண்பாட்டு முன்னேற்றங்களுக்குப் பயன்முறை மானிடவியல் அறிஞர்களின் ஈடுபாடு வெகுவாக வரவேற்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, பயன்முறை மானிடவியல் அறிஞர்களைச் சமுதாய இடர்ப்பாடுகளைத் தீர்க்க வல்ல சமுதாய மருத்துவர் என்ற நிலையிலும் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டக்கூடிய சமுதாயப் பொறியாளர் என்ற நிலையிலும் பயன்படுத்திக்கொள்வது வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றாகிய இந்தியாவிற்குப் பெரிதும் பயனளிக்கும் என்று கூறலாம்.

- பூ.க.

**பரந்தாமனார், அ.கி. :** தமிழ் இலக்கிய உலகில் சிறந்த உரைநடை ஆசிரியராகவும், கட்டுரை ஆசிரியராகவும், சிறுவர் பாடல் புனையும் குழந்தைக் கவிஞராகவும், ஆற்றுப்படை, கையறு நிலை போன்ற சிற்றிலக்கியங்களைப் படைக்கும் படைப்பாளராகவும் விளங்கித் தமிழ் அன்னைக்கு அணி செய்பவர் அ.கி. பரந்தாமனார் என்னும் தமிழ்ச்

செம்மல் ஆவார். இவர் 15 - 6 - 1902இல் அல்லிக்குழி கிருட்டிணசாமி முதலியார் என்ற பெருமகனாருக்கும், சிவவாக்கியானத்தம்மாள் என்ற பெருமாட்டிக்கும் திருமகனாகப் பிறந்தார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்ற பழமொழிக்கு விளக்கமாய்ச் சிறு வயதிலேயே இவர் தமிழ் ஆர்வம் மிக்கவராகத் திகழ்ந்தார்.

வேப்பேரியில் உள்ள செயிண்ட் பால் உயர் நிலைப்பள்ளியில் சேர்ந்து தம் பள்ளிப்படிப்பைத் தொடர்ந்தார். பள்ளி இறுதி வகுப்பில் 1921ஆம் ஆண்டு தேர்ச்சிப்பெற்றார். பின்பு கர்னாடிக் பஞ்சாலையில் எழுத்தாளராகச் சேர்ந்து பணியாற்றி வந்தார். இவர் 1921ஆம் ஆண்டில் கணேசம்மாள் எனும் பெயருடைய திருமகளாரை மணந்தார். 1922ஆம் ஆண்டில் இவர் தாம் பயின்ற அதே பள்ளியில் தமிழாசிரியராகச் சேர்ந்து தம் அரும் பணியைத் தொடங்கினார். 1925ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்தார். மோசூர் கந்தசாமி முதலியார் அவர்களிடமும் திருநாவுக்கரசு அவர்களிடமும் தமிழைக் கசடறக்கற்றுத் தேர்ந்தார்.

தமிழ் மொழியில் மட்டும் புலமை பெறுதல் போதும் என்று எண்ணாது டி.ஆர். சேச ஐயங்கார் அவர்களிடமும், சி.எசு. சீனிவாசச்சாரியார் அவர்களிடமும் வரலாறும் பயின்றார். இக்கல்வி இவர் பின்னாளில் வரலாற்றுத் துறையில் புகழ்பெற அடிப்படையாய் அமைந்தது எனலாம்.

சிதம்பரம் மீனாட்சி பயிற்சிக்கல்லூரியில் 1931 - 32 ஆம் ஆண்டுகளில் சேர்ந்து ஆசிரியர் பயிற்சிபெற்றார். அக்கல்லூரியில் பூவராகம்பிள்ளையிடம் பாடம் பயின்றார். 1949ஆம் ஆண்டில் முதுகலைப் பட்டம் பெற்றார். மதுரை தியாகராசர் கல்லூரியில் 1950ஆம் ஆண்டு முதல் 1965ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.


**பாரதி தமிழ் வாசகம், திருவள்ளுவர் செந்தமிழ் வாசகம், நவீன தமிழ் இலக்கியக் கோவை, மானிடம் செய்த மாண்புறு செயல்கள், நல்ல தமிழ் எழுத வேண்டுமா, பேச்சாளராக, கவிஞராக, மதுரை நாயக்கர் வரலாறு, திருமலை நாயக்கர் வரலாறு, வரலாற்றுக் கட்டுரைகளும் பிறவும், தமிழிலக்கியம் கற்க, திருக்குறளும் புதுமைக்கருத்துகளும், சிறுவர் பாடல்கள், தமிழ்மகள் திருப்பள்ளி எழுச்சி, பெருமாணவர் ஆற்றுப்படை, பெருமக்கள் கையறு நிலை, மன்னைக் காஞ்சி, காமக்களி மகள், கோமகசு** போன்ற கட்டுரை, உரைநடை, திறனாய்வு, கவிதை, சிற்றிலக்கியம், வரலாறு என்னும் அணிகலன்களை இயற்றித் தமிழ் அன்னைக்கு அணி வித்துப் போற்றினார். இவற்றுள் **நல்ல தமிழ் எழுத வேண்டுமா** என்ற நூல் **தமிழ்நாடு** என்ற நாளிதழின் ஞாயிறு மலரில் தொடர்ந்து எழுதி வந்த கட்டுரைகளின் தொகுப்பாகும். “நல்லம்பர் நல்ல முடியுடைத்து. . .” எனத் தொடங்கி “நாட்டுடைத்து நல்ல தமிழ்” என முடியும் ஔவையார் பாட்டில் இடம் பெற்ற இறுதிச் சொற்றொடராகிய நல்ல தமிழ் என்பதை எடுத்து இந்நூலை எழுதியதாக ஆசிரியர் குறிப்பிடுவார். வாழ்வின் இன்றியமையாப் பணியாய் இந்நூல் அமைந்தது என்றும் குறிப்பிடுவார். நாள், வார, மாத இதழ் ஆசிரியர்களுக்கும், தமிழ் மொழியைக் கற்க விரும்புவோருக்கும், வெளியீட்டு நிலையங்களுக்கும், அச்சகங்களுக்கும் மிகவும் பயன்பட வேண்டும் என்ற நோக்கில் இந்நூலை எழுதியுள்ளார். இவரது **பேச்சாளராக** என்ற நூல் ஒருவர் தன் பேச்சுக் கலையை வளர்ப்பதற்குத் துணை புரியும் வண்ணம் பல நுட்பங்களை உள்ளடக்கியதாகும்.

இதைப் போன்று **கவிஞராக** என்ற நூல் கவிதை படைக்கும் முறை, வேண்டியப் பா வகைகள், பாவினம், செய்யுள் இலக்கணம் ஆகியவற்றை விளக்குகிறது. மதுரைத் திருவள்ளுவர் கழகம் 1962 ஆம் ஆண்டில் இவரது மணிவிழா நிகழ்ச்சியைச் சிறப்புறக் கொண்டாடிப் பைந்தமிழ்ப்பாவலர் என்று பொறித்த பொற்பதக்கம் வழங்கியது.

இவ்வாறு சிறந்த படைப்பாளராகவும், சொற்பொழிவாளராகவும், புலமை நிறைந்தவராகவும், அஞ்சா நெஞ்சத்தினராகவும், உழைப்பு மிக்கவராகவும் திகழ்ந்த அ.கி. பரந்தாமனார் தமிழன்னையின் புலமை மிக்க புலவர்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர் ஆவார். இவர் 1986 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 24ஆம் நாள் மறைந்தார்.

- தா. ஈ.

**பல்கேரியா :** பல்கேரிய மக்கள் குடியரசு ( Peoples Republic of Bulgaria ) என்றழைக்கப்படும் இந்நாடு பால்கன் தீபகற்பத்தின் கிழக்குப் பகுதியில், கருங்கடலின் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ளது.




பல்கேரியா

இது ஒரு பொதுவுடைமை நாடாகும். அதன் தலை நகர் சோபியா ( Sofia ). இந்நாடு மத்திய தரைக்கடலுக்கு அண்மையில் இருப்பினும் இங்கு கண்ட பருவநிலையே காணப்படுகின்றது. தான்யூபியன் ( Danubin ) மேட்டு நிலப்பகுதியில் ஆண்டில் 180 முதல் 215 நாட்கள் மட்டுமே மூடுபனியின்றி இருக்கும். இங்கு கோடைக்கால சாராசரி வெப்பநிலை 21 பாகை செல்சியசிலிருந்து 27 வரை உள்ளது.

இயற்கை அமைப்பின்படி இதனைக் கிழக்கு மேற்காக மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை வடக்கில் தான்யூபியன் மேட்டுநிலப்பகுதி, இடையில் பால்கன் மலைகளும், திரேசியன் மலைகளும் அடங்கிய பகுதி, தெற்கு தென்மேற்கில் உள்ள பிரின் மலைப்பகுதி. இந்நாட்டில் நான்கில் மூன்று பங்கு மலைப்பகுதிகளாக உள்ளதால் கிழக்கு ஐரோப்பாவிலேயே இங்குதான் மக்கள் நெருக்கம் குறைவு. ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 81 பேர் வாழ்கின்றனர். மக்கட் தொகையில் மூன்றில் இரு பங்கினர் நகரங்களில் வசிக்கின்றனர்.

இந்நாட்டில் மூன்றில் ஒரு பகுதி கடல் மட்டத்திலிருந்து 500 மீட்டர் உயரத்தில் உள்ளது. இந்நாட்டின் பரப்பளவு 1, 10, 994 சதுர கி.மீ. இதன் வடக்கில் ருமேனியாவும், தெற்கில் துருக்கியும், கிரீசும் மேற்கில் யுகோசுலோவியாவும், கிழக்கில் கருங்கடலும் எல்லைகளாக உள்ளன. 1985 திசம்பரில் 8, 942, 976ஆகயிருந்த மக்கள்தொகை 1988 இல் 8.97 மில்லியனாக உயர்ந்துள்ளது. இந்நாட்டு மக்கள் தொகையில் 85.3 விழுக்காட்டினர் பல்கேரியர்கள். துருக்கியரின் ஆட்சியில் இந்நாடு இருந்ததால் இப்போது இங்கு 8.5 விழுக்காட்டினர் துருக்கியர் இருக்கின்றனர். இந்நாட்டில் சிப்சிகள் ( Gypsies), மாசிடோனியர்கள், ஆரிமீனியர்கள், யூதர்கள் ( Jeues), ருமேனியர்கள் ( Rumanians ), தார்டார்கள் ( Tartars ), ருசியர்கள் ஆகியோரும் சிறுபான்மையினராக வாழ்ந்து வருகின்றனர்.

இந்நாட்டில் பெரும்பாலான மக்கள் பல்கேரிய மொழியையே பேசுகின்றனர். இது சிலாவிக்கு ( Slavic ) மொழியுடன் தொடர்புடையது. இதற்கு ஒன்ப தாம் நூற்றாண்டில் சிரிலிக் ( Cyrillic ) எழுத்து

முறையை சிரில் ( Cyril ), மெதோடியசு ( Methodius ) எனும் இரு பாதிரிமார்கள் கண்டுபிடித்தனர். இப்போது ருசியாவிலும், யூகோசுலோவியாலும் இவ்வெழுத்து முறை பயன்படுத்தப்படுகிறது. இந் நாட்டில் துருக்கிய, ருசிய மொழிகளும் சிறுபான்மை மக்களால் பேசப்பட்டு வருகின்றன.

இந்நாட்டு மக்களுள் மூன்றில் இருபங்கினர் பல் கேரிய வைதீகத் திருச்சபையைச் சேர்ந்தவர்கள். இச் சமயமானது 1947 இல் பொதுவுடமை அரசால் தடை செய்யப்பட்டாலும், பின்னர் 1953 இல் ஏற்றுக் கொள் ளப்பட்டது. இதன் தலைவராக பாட்ரியார்கு சோபி யாவைத் தலைமையிடமாகக் கொண்டுள்ளார். இதற்கு பதினொரு மறை மாவட்டங்கள் உள்ளன. பல்கேரியன்களுள் சிலரும், துருக்கியர்களும் இசு லாம் மதத்தைப் பின்பற்றுகின்றனர். இவர்களுக்கு 1980இல் ஆயிரம் மசூதிகள் இருந்தன. மேலும் இந் நாட்டில் யூத, ரோமன் கத்தோலிக்க சீர்திருத்தக் கிறித் துவச் சமயங்களைச் சேர்ந்தவர்களும் உள்ளனர். இந் நாட்டு அரசியல் அமைப்பின்படி, இம்மக்களுக்குச் சமய சுதந்திரம் அளிக்கப்பட்டிருந்தாலும் சமய நிறுவ னங்கள் பள்ளிகள், மருத்துவமனைகள் ஆகியவற்றை நடத்தவும், இளைஞர் அணி போன்ற அமைப்புகளை ஏற்படுத்தவும் அரசாங்கத்திற்கு எதிரான கருத்துகளை வெளியிடவும் தடை உள்ளது.

இந்நாட்டு மக்களுள் நாற்பது விழுக்காட்டினர் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். சோவியத் ஒன் றியத்தைப் பின்பற்றி இந்நாட்டுப் பொருளாதாரக் கொள்கை 1947 இல் மாற்றியமைக்கப்பட்டு, வேளாண் துறையில் பெரும் மாற்றங்கள் செய்யப் பட்டன. நிலமானிய முறை கைவிடப்பட்டு, சிறு பண்ணைகள் ஒழிக்கப்பட்டு, வேளாண் நிலங்கள் நாட்டுடைமையாக்கப்பட்டன. இரண்டாம் உலகப் போருக்குப்பின் இரு ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டு, வேளாண்மை வங்கிகளும், கூட்டு றவுப் பண்ணைகளும் தொடங்கப்பட்டன. இயந்தி ரங்களும், உரங்களும் 1960களிலிருந்து அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. பெரிய அணைக்கட்டுகள் கட் டப்பட்டு நீர்ப்பாசன வசதி பெருக்கப்பட்டது. 1987 இல் இந்நாட்டில் வேளாண்மைக்கு ஏற்றதாகவிருந்த 6, 165, 300 ஹெக்டேர் நிலப்பரப்பில் 4, 650, 300 ஹெக்டேர் வேளாண் செய்யப்படுகிறது. இங்கு முக்கியமாக கோதுமை, பார்லி, சோளம் ஆகியவை பெருமளவில் விளைவிக்கப்படுகின்றன. மற்றும் நெல், ரே, ஓட்சு முதலிய தானியங்களும் பயிரிடப் படுகின்றன. பணப்பயிர்களான புகையிலை, சூரிய காந்தி, பருத்தி, சர்க்கரைக்கான பீட்ருட்டு கிழங்கு முதலியனவும், காய்கறிகளும், பழங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு பழுப்பு நிலக்கரி, தாமிரம், ஈயம், தகரம் சிறிதளவு மண்ணெண்ணெய், இரும்பு, மாங்கனீசு ஆகியவை கிடைக்கின்றன.

இரண்டாம் உலகப்போருக்கு முன் இந்நாடு தொழில்துறையில் மிகவும் பின்தங்கியிருந்தது. பொதுவுடமைக்கட்சி 1947 இல் ஏற்பட்டு தொழிற் சாலைகள் நாட்டுடைமையாக்கப்பட்டு, நாட்டைத் தொழில்மயமாக்குல் அரசின் பொருளாதாரக் கொள்கையானது. நெசவுத்தொழில், உலோகத் தொழில்கள், வேதியல் பொருட்கள் தயாரிப்பு, மின்சார உற்பத்தி ஆகியவற்றில் ஆர்வம் காட்டப் பட்டன. அதன் விளைவாக 1964 இல் தொழிற்சாலை உற்பத்தியானது இரண்டாம் உலகப்போருக்கு முன் இருந்ததைவிட பதினேழு மடங்கு பெருகியது. கப்பல் கட்டுதல், இரும்பு, எஃகு, ஈய, துத்தநாக, தாமிரத் தொழிற்சாலைகள், பருத்தி, கம்பள, பட்டு நெசவுத் தொழிற்சாலைகள் ஆகியவை வேகமாக வளர்ந்து வருகின்றன. உணவுப்பொருட்களைப் பதப் படுத்துதல், காலணிகள், மண்பாண்டங்கள், மனை துணைப்பொருட்கள் ஆகிய உற்பத்தியிலும் முன் னேற்றம் ஏற்பட்டது. மண்ணெண்ணெய் 1951 இல் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து அது சார்ந்த தொழில் களும் வளரலாயின.

பொதுவுடமை ஆட்சி ஏற்படுவதற்கு முன்னர் இந் நாடு மேற்கு ஐரோப்பா, செர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளுடன் சிறப்பாக வாணிகத்தில் ஈடுபட்டு வந் தது. அவற்றிற்கு அறுபது விழுக்காடு பொருட்களை இறக்குமதி செய்து வந்தது. இது 1949 இல் கம்கானில் சேர்ந்த பின்னர் பொதுவுடமை நாடுகளுடன் பெரி தும் வணிகத்தில் ஈடுபட்டு வருகிறது. தன்னுடைய ஏற்றுமதியில் பாதியைச் சோவியத் ருசியாவிற்கு அனுப்பி, அந்நாட்டிலிருந்து தன்னுடைய இறக்குமதி யில் பாதியைப் பெறுகின்றது. மற்றும் செக்கோ சுலோவாக்கியா, போலந்து, கிழக்கு செர்மனி ஆகிய நாடுகளுடனும் இது வாணிகத்தில் ஈடுபட்டு வரு கிறது.

இயந்திரங்கள், தானியங்கள், பழங்கள், மது, முட்டை, எண்ணெய் போன்ற உணவுப்பொருட்கள், புகையிலை, தோல்பொருட்கள், உலோகங்கள்,

ஆடைகள், கடினமரங்கள் ஆகியன ஏற்றுமதியா கின்றன. இது கனரக இயந்திரங்கள், துணைக் கருவி கள், மண்ணெண்ணெய், இயற்கை வாயு, ஊர்திகள், நிலக்கரி, இரப்பர், உலோகங்கள், இரப்பர், காகிதம், வேதியியல் பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்து கொள்கிறது.

பொதுவுடைமை ஆட்சியில் கல்வியில் பெரும் வளர்ச்சி ஏற்பட்டு இன்று இந்நாட்டில் எழுத்தறிவற் றவர் இல்லையெனச் சொல்லும் அளவிற்கு முன் னேற்றம் அடைந்துள்ளது. கல்வி இலவசமாக வழங் கப்பட்டு ஏழு வயது முதல் பன்னிரண்டு வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கட்டாய கல்வி வழங்கப் பட்டு வருகிறது. அறிவியல், தொழில்நுணுக்க, தொழில் கல்வி மிகவும் வலியுறுத்தப்படுகிறது. இந் நாட்டில் மூன்று பல்கலைக்கழகங்கள் உள்ளன. அவற் றுள் 1888இல் நிறுவப்பட்ட சோபியா பல்கலைக் கழகம் மிகப்பெரியதாகும்.

இந்நாட்டில் அரசு அதிகாரம் முழுவதும் 1971 மே பதினெட்டில் இயற்றப்பட்ட அரசியல் அமைப்பின் படி, தேசிய அவையிடம் ( National Assembly ) உள் ளது. இதன் நானூறு உறுப்பினர்களும் ஐந்து ஆண்டு களுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இந்த அவை ஆண்டில் மூன்று தடவைகளே கூடுவதால் இதனு டைய அதிகாரம் அனைத்தும் மாநில அவையிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. இதன் உறுப்பினர்கள் தேசிய அவையால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இதன் தலைவர் ( Chairman of the State Council ) நாட்டின் தலைவராவார். நாட்டின் நிர்வாகம் முழுவதும் அமைச்சரவையின் கையில் உள்ளது. அதன் தலைவர் அரசின் தலைவரா வார்.

பண்டைக்காலத்தில் இப்பகுதியின் மீது பல இன மக்கள் படையெடுத்து வந்து குடியேறினர். எனினும் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தெற்கு சிலாவு இனத் தைச் சார்ந்த மக்கள் குடியேறியதிலிருந்து இந்நாட் டின் வரலாறு தொடங்குகிறது. பல்கர்கள் ( Bulgars ) ருசியன் புல்வெளியிலிருந்து வந்து தான்யூபின் ஆற்றின் தென்பகுதியில் குடியேறினர். பண்டைய திரேசியன்களின் வழி வந்தவர்களும் இப்பகுதிக்கு வந்தனர். சிலாவு இனத்தவர் இந்நாட்டில் பெரும் பான்மையினராக இருந்ததால் பல்கர்களும், திரேசி யன்களும் அவர்களுடன் கலந்து சிலாவு மொழியைப் பேசி, அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் கைக்கொண்டனர். இவர்களுடைய வழியில் தோன் றியவர்களே இன்றைய பல்கேரியன்கள். முதலாம் போரிசு என்பவரால் ஏற்படுத்தப்பட்ட முதலாவது பல்கேரியப் பேரரசு கி.பி. 1018வரை நீடித்தது. இவ் வரசர் கி.பி. 865இல் கிறித்தவ சமயத்தைத் தழுவிய தால் 870இல் பல்கேரிய வைதீகத் திருச்சபை ஏற்படுத் தப்பட்டது.

பால்கன் மலைகளுக்கு வடக்கேயிருந்த இவர்களு டைய நாடு தெற்கு நோக்கி விரிவடையத் தொடங் கியதால் பைசான்டியப் பேரரசுடன் போர்கள் ஏற்பட் டன. பைசான்டிப் பேரரசர் இரண்டாம் பேசில் 1018 இல் பல்கேரியாவை வென்று தன் பேரரசுடன் இணைத்தார். எனவே, கி.பி. பதினொன்றாம், பன் னிரண்டாம் ஆண்டுகளில் இந்நாடு பைசாண்டியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்து வந்தது. பல் கேரியா 1186இல் விடுதலைப் பெற்று இரண்டாவது பேரரசு ஏற்படுத்தப்பட்டது. அது பதினான்காம் நூற்றாண்டின் இறுதி வரை ஆட்டோமான் துருக் கியர் கைப்பற்றும் வரை சுதந்திரமாக இருந்தது.

ஆட்டோமான் துருக்கியர்கள் 1396இல் பல்கேரி யாவைக் கைப்பற்றியதால் அது 1878 வரை துருக்கியின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. பல்கேரிய மக்கள் அடிக்கடி துருக்கியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்ததாலும் அவை கடுமையாக நசுக்கப் பட்டன. 1876ஆம் ஆண்டு கிளர்ச்சியில் ஆயிரக்கணக் கானோர் கொல்லப்பட்டனர். எனவே ருசியா துருக்கியின் மீது போர் தொடுத்தது. 1877 - 78ஆம் ஆண்டுகளில் நிகழ்ந்த ருசிய - துருக்கியப் போரில் துருக்கி தோற்கடிக்கப்பட்டது. அதன் விளைவாகத் துருக்கி பல்கேரியாவிற்கு சுதந்திரம் வழங்கியது. அத் துடன் 1885இல் ருமேனியா இணைக்கப்பட்டது. பல்கேரியா 1905 அக்டோபர் 5 இல் முழு சுதந்திரம் பெற்றது. செர்மானிய இளவரசர் பெர்டினான்டு சார் என்ற பட்டத்துடன் பல்கேரிய அரசரானார்.

துருக்கிக்கு எதிராக 1912இல் நடைபெற்ற முதல் பால்கன் போரில் பல்கேரியா பால்கன் நாடுகளுடன் சேர்ந்து போர் புரிந்தது. அவை வெற்றி பெற்றாலும் அவற்றிடையே பூசல்கள் எழுந்தன. பின்னர் 1913இல் சூன் மாதம் தொடங்கிய இரண்டாம் பால்கன் போரில் பல்கேரியா தோல்வியடைந்தது. முதல் உலகப்போரில் தான் பெற்ற இடங்களையெல்லாம் இழந்தது. முதல் உலகப்போரில் பல்கேரியா செர் மனியுடன் சேர்ந்து தோல்வியே கண்டது. எனவே அந் நாட்டு அரசர் பெர்டினான்டு பதவி துறந்து, அவரு

டைய மகன் மூன்றாம் போரிசு பதவியேற்றார். இரண்டாம் உலகப்போரில் அந்நாடு அச்சு நாடுகளு டன் சேர்ந்து போரில் ஈடுபட்டது.

சோவியத்து படை கள் 1944 இல் அந்நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, அதனைக் கைப்பற்றியது. பல்கேரியா 1946 இல் செப். 6ஆம் தேதியன்று ஒரு மக்கள் குடியரசாக அறிவிக்கப்பட்டு, அங்கு பொது வுடைமை ஆட்சி ஏற்பட்டது. சோவியத் நாட்டு அரசியலமைப்பைப் பின்பற்றி பல்கேரியாவுக்கு 1947 இல் திசம்பர் 4இல் புதிய அரசியலமைப்பு ஒன்று வழங்கப்பட்டது. பல்கேரியா மக்கள் குடியரசு தோன்றியது. இப்போது 1971, மே 18இல் தீட்டப் பட்ட அரசியலமைப்பின் படி ஆட்சி நடக்கின்றது.

- சி. இரெ.

**பல தெய்வக் கோட்பாடு** : எல்லாக் காலக் கட்டங்களிலும் எல்லா இடங்களிலும் மனிதர் களிடையே கடவுள் பற்றிய சிந்தனை பல்வேறு வகை களில் இருந்து வந்துள்ளது. பல தெய்வ வழிபாடு என்னும் முறை உலகின் பல பண்டைய பண்பாடு களில் கலந்துள்ளது. குறிப்பாக கிரேக்க, இந்திய, சீன, பாபி லோனிய, ரோமானிய சமயங்களில் இந்தப் பழக்கங் கள் இருந்ததற்கு நூற்குறிப்புகள் உள்ளன. இந்தப் பல தெய்வ வழிபாடு நாகரிகமடைந்த கிரேக்க, சீன இந் திய நாடுகளில் முற்காலத்தில் பழக்கத்திலுள்ளதால் சமய வரலாற்று ஆராய்ச்சி யாளர்கள் பல கருத்துகளை இதன் தோற்றத்திற்குக் காரணமாகக் கூறுகின்றனர். விவிலிய வரலாற்றுக் கருத்துகளில் ஈடுபாடுள்ள ஒரு சாரர்கள் ஆதியில் ஆதாம் ஏவாள் தோன்றிய போது ஒரு தெய்வ நம்பிக்கையும் வழிபாடும் இருந்ததாகவும், அது பின் நோவாவின் காலத்திற்குப் பின் கலப்படமடைந்து பல தெய்வ வழிபாடாக மாறியது எனக் கூறு கின்றனர். இதற்கு ஆதாரமாக மோசசின் **மெய்மோனாய்டு** என்ற நூலைக்காட்டுகின்றனர். பின் கடவுளின் வெளிப்பாடு மூலமாக இப்பழக்கம் ஒரு தெய்வ வழிபாடாக மாறியது.

ஆனால் கிரேக்க, இந்திய, ரோமானிய நாடுகளி லுள்ள பல தெய்வ வழிபாடு சப்பானிலுள்ள சன்டோ பல தெய்வ வழிபாட்டிற்கும், தென் அமெரிக்கா விலுள்ள மாயா நாகரிக வழிபாட்டிற்கும் மாறு பட்டது. வேறுபல அறிஞர்கள் மற்றோர் கருத்தைக் கூறுகின்றனர். ஆதி மனிதர்கள் இயற்கையின் பல ஆற்றல்களை வழிபட்டனர். அதாவது காற்று, இடி, தீ, மழை, கடல், சூரியன், சந்திரன் முதலிய ஆற்றல் களையும் அதற்கு உருவங்கள் அமைத்தும் வழிபட்ட னர். இயற்கையின் ஆற்றல்களினால் தங்கட்குத் தீங்கு நேரிடா வண்ணம் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டு அவற்றைத் தெய்வமாக வழிபட்டனர். இந்த முறை கிரேக்க, இந்திய பழைய பண்பாட்டில் இருந்துள்ளது. கிரேக்க முறையில் விளையாட்டும், கல்வியும், இசையும் தெய்வங்களாக வழிபடப்பட் டன. பின் அவற்றுக்கு உருவங்கள் அமைக்கப்பட்டு அது பல தெய்வ வழிபாடாக மாறியது. ரோமானியப் பண்பாட்டில் நடைமுறையிலிருந்த அரசியலமைப் பைச் சமயத்திற்குள்ளும் புகுத்திப் பல தெய்வ வழிபாட்டிற்கு அடி கோலினர். அரசியலில் எவ்வாறு மன்னன், மந்திரிகள், அலுவலர்கள், சேவகர்கள் என உள்ளனரோ, அது போன்றே தெய் வங்கள் அமைப்பும் உள்ளது என நம்பினர். வீட்டிற்கு ஒரு தெய்வமும், தெருவிற்கு ஒரு தெய்வமும், கிராமத்திற்கு ஒரு தெய்வமும், நகரத்திற்கு ஒரு தெய் வமும் என்று பல காவல் தெய்வங்களை உண்டாக்கி னர். ஓடைக்கும் நதிக்கும் தெய்வங்களை நியமித்த னர். இஃது ஓர் அரசியலமைப்பு முறை பல தெய்வ சமயமாகும்.

இதுபோலவே இந்திய சமயங்களிலும் இயற்கை முறையிலும், தொழில்முறையிலும் பல தெய்வ வழி பாடுகள் தோன்றின. வேதகாலத்தில் தெய்வங்களை மூன்று நிலையில் வணங்கினர். வருணன், உதய சூரி யன் ஆகியோர் வானத்துத் தெய்வங்களாவர். இந்தி ரன், உருத்திரன், மாருதி போன்றவர்கள் காற்றுத் தெய்வங்கள். பிருத்திவி, அக்னி, பிருககசுபதி, சோமா இவர்கள் பூமி தெய்வங்கள். தொல்காப்பியர் காலத் தில் நிலத்தை ஐவகையாகப் பாகுபடுத்தி ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு தெய்வத்தை அமைத்து வழிபட்ட னர். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப் படும். அந்நிலத்தெய்வம் முருகன் ஆவார். காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படும். முல்லை நிலத் தெய்வம் திருமால் ஆவார். வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். மருத நிலத் தெய்வம் இந்திரன் ஆவார். கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் எனப்படும். நெய்தல் நிலத் தெய் வம் வருணன் ஆவார். இந்நால்வகை நிலமும் தம் முறைமையிற் திரிந்தது பாலை எனப்படும். பாலை

நிலத்துத் தெய்வம் கொற்றவை எனப்படும். சங்க கால மக்களும் பல தெய்வங்களையும், தேவதை களையும் வழிபட்டனர்.

உரோமானிய பண்பாட்டின்படி அரசியல் அமைப்பையொட்டி இந்து சமயத்திலும் பேரரசர் கட்கு ஒப்பாகப் பரம்பொருளும், அமைச்சர்கட்கும், செயலாளர்கட்கும் ஒப்பாக நிர்வகிக்கும் மேல் நிலைத் தெய்வங்களும், ஏவலாளர்களுக்கும், அலுவ லர்கட்கும் ஒப்பாகக் கீழ்நிலைத் தெய்வங்களும் வழிபடப்பட்டன.

பரம்பொருள் ஒன்றே பிறப்பு இறப்பற்றது. ஏனைய சிறு தெய்வங்கள் பிறக்கும், வேதனைப் படும், இறக்கும் என நம்பினர். இந்து சமயத்தில் பல தெய்வக் கோட்பாடும், ஓரிறைக் கோட்பாடும் வேத காலந்தொட்டே பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. ஓரிறைக் கோட்பாடு உயர்மட்ட இந்து சமய தத்துவத் துக்கே உரியதாகவும், பல தெய்வக்கோட்பாடு சாதா ரண மக்கள் நடுவே நிலவும் நடைமுறைச் சமயத் துக்கே உரியதாகவும் எண்ணப்படுகின்றது. மக்கள் சமயத்தில் கிராமத் தெய்வங்கள், பாதுகாப்புத் தெய் வங்கள், குல தெய்வங்கள், விருப்பத் தெய்வங்கள் எனப் பலபிரிவுகள் உள்ளன.

சிவன் முழுமுதற் கடவுளாகக் கருதப்பட்டாலும் மக்கள் விநாயகரையும், முருகனையும் சிவகுமாரர் களாகவே கருதி வழிபடுகின்றனர். தத்துவ அறிஞர் கள் சிவனும், முருகனும், விநாயகரும் ஒன்றே என் பர். மேலும் கல்விக்கு அதிதெய்வம் கலைமகள் என் றும், செல்வத்திற்கு அதிதெய்வம் திருமகள் என்றும் ஞானத்திற்கு அதி தெய்வம் மலைமகள் என்றும் கருதப்பட்டு வழிபடப்பட்டு வருகின்றன. ஒவ் வொருவரும் தம் சூழ்நிலைக்கும், தேவைக்குமேற்ப தங்கள் விருப்பத்தின்படி யாதேனும் ஒரு கடவுளைத் தேர்ந்தெடுத்து வழிபடுகின்றனர். நாளடைவில் பல தெய்வக்கோட்பாடு ஓரிறைக் கோட்பாடாக மாறி யது. மக்களின் அறிவு வளர்ச்சியின் முதிர்வே இதற் குக் காரணம் என்பர் ஆராய்ச்சியாளர்கள். ஒருமைக் கான தேடலே பல தெய்வக் கோட்பாடானது ஒரு தெய்வக் கோட்பாடாக மாறக் காரணமாய் அமைந் தது எனலாம்.

வெளிப்படையாக இந்து சமயம் பல தெய்வ வழி பாடு போன்று தோன்றினாலும் அடிப்படையில் அஃது ஒரு தெய்வ வழிபாட்டையே வலியுறுத்துகின் றது. சைவ சமயத்தில் முழுமுதற் கடவுள் சிவன் ஆவார். ஞானமே வடிவான சிவபெருமான் தன்னை வழிபடும் அன்பர்கட்கு அருள்புரிதற் பொருட்டு அவ் வப்போது மேற்கொண்ட அருளுருவத் திருமேனிகள் இருபத்தைந்து என்றும், அறுபத்து நான்கு என்றும், நூல்கள் கூறும். சிவனின் உருவத்திருமேனிகளைச் சிவஞான சித்தியார் என்ற சாத்திர நூல் போகவடி வம், யோக வடிவம், வேக வடிவம் என்று மூன்றாகப் பாகுபடுத்திப் பேசுகிறது. உலக வாழ்வில் போகம் துய்க்க விரும்புபவர்கள் போக வடிவத்தை வழிபடு கின்றனர். ஞானம் பெற்று வீடுபேறடைய விரும்பு வோர் யோக வடிவத்தை வழிபடுகின்றனர். பகைவர் களை வெல்ல விரும்புவோர் வேகவடிவத்தை வழி படுகின்றனர். சிவனின் ஆற்றல்நிலை சக்தி எனப் படும். அந்தச்சக்தி சமயநிலையில் பெண்ணாக உரு வகித்து வழிபடப்படுகின்றது. தொழில் முறையில் சிவபேதங்கள் பலவாதல் போல, சக்தி பேதங்களும் பலவாகும். எந்நிலையில் நின்று எவ்வுருவில் வணங் கினாலும் அது ஒன்றாகிய சிவனையே குறிக்கும் என நம்புகின்றனர். வைணவ சமயத்தில் முழுமுதற் கட வுள் நாராயணன் ஆவார். அவர் பரம் ( மேலான வடி வம் ), வியூகம் ( வெளிப்பட்ட வடிவம் ), விபவம் ( தோன்றி வந்த வடிவம் ), அந்தர்யாமி ( உள்ளுறை வடிவம் ), ஆர்ச்சை ( வழிபடுதற்குரிய வடிவம் ) முத லான ஐந்து நிலைகளிலே அண்டமனைத்திலும் நின்று, இருந்து, கிடந்து, நடந்து அருள்பாலிக்கிறார்.

சிவமூர்த்தங்கள் போன்று நாராயண மூர்த்தங்க ளும் பலவாகும். ஒவ்வொருவரும் அவரவர் விருப் பப்படி தேவைக்கேற்ப மூர்த்தங்களுள் ஒன்றையோ, பலவற்றையோ வழிபடுகின்றனர். எந்நிலையில் எத் தெய்வத்தை வணங்கினாலும் அவ்வணக்கம் ஒரே கடவுளையே சேரும் என்ற கருத்தைப் பகவத்கீதையும் ஆதரிக்கின்றது. எனவே, சைவத்திலும், வைணவத்தி லும் ஒன்றாகிய இறைவனே பல வடிவங்களில் வழி படப்படுகிறான் என்பது தெளிவு.

பல கடவுள் கொள்கை சமய வரலாற்றில் ஒரு முக் கிய கூறாக அல்லது கட்டமாக் கொள்ளப்படுகிறது. ஆனால் தத்துவ ரீதியில் உயிரோட்டமுள்ள ஒரு கொள்கையாக ஏற்றுக்கொள்ளப் படுவதில்லை. உல கம் பல்வேறு உருவில் தோன்றினாலும் ஒன்றாகக் கொள்ளப்படுகின்றது. இதுபோன்ற இந்தியப் பண் பாட்டில் மக்கள் பல தெய்வ வடிவங்களை வணங்கி

னாலும் அவையனைத்தும் ஒரே கடவுளாகவே கருதப்படுகின்றது.

ஒரு தெய்வ வழிபாட்டையே பெரிதும் வலியுறுத்தும் மதம் இசுலாம். கிறித்துவ சமயமும் மகான்களையும், அருளாளர்களையும் தெய்வமாகவே எண்ணி வழிபடுகின்றன. கிறித்துவத்தில் இறைவன் தந்தை, மகன், தூய ஆவி என்ற மூன்று நிலைகளில் வைத்து வழிபடப்படுகிறான். கடவுள் நம்பிக்கையற்ற புத்த மதமும் பல மதத் தெய்வங்களை வழிபடுகின்றது. திபெத்திய புத்த மதங்களில் பல தெய்வ வழிபாடு போன்ற அமைப்பு உள்ளது. கடவுள் நம்பிக்கையற்ற சமண சமயத்திலும் தீர்த்தங்கரர்கள் எனப்படும் சமண சமயத் தலைவர்களும் தெய்வங்களாகவே வைத்துத் தொழப்படுகின்றனர். அவர்கட்குக் கோவிலும், விழாக்களும், வேண்டுதலும் உண்டு. எனவே, இன்று மக்கள் செயலளவில் கொண்டுள்ள சமயத்தை, "ஓரிறைக் கோட்பாடுடைய பல தெய்வ வழிபாடு" என்று கூறலாம்.

- கோ. சூ.

**பல நோக்குப்பள்ளிகள் :** 1947ஆம் ஆண்டு இந்தியா சுதந்திரம் பெற்றதிலிருந்து இந்திய கல்வித் திட்டம் சுதந்திர இந்தியாவின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அமைய வேண்டும் என்று பலராலும் விரும்பப்பட்டது. 1950ஆம் ஆண்டு இந்தியா குடியரசு நாடாக ஆனதிலிருந்து மக்களாட்சியின் தேவைகளுக்கேற்றபடி கல்வித்திட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் மேலும் தீவிரமானது. இதற்காக டாக்டர் இராதாகிருட்டிணன் தலைமையில் உயர்கல்விக்கான ஒரு குழு நியமிக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையில் உயர்கல்வியின் குறிக்கோள்களைப் பற்றி பரிந்துரைகள் செய்தது.

நடுவண் குழு பரிந்துரை வாரியம் ( Central Advisory Board of Education ) 1948ஆம் ஆண்டு நடத்திய பதினான்காவது கூட்டத்தில் பள்ளிக் கல்வியைப் பற்றி கவனிக்க ஒரு குழுவை அமைக்கும்படி ஆலோசனை கூறியது. இந்த ஆலோசனைகளைப் பற்றி 1951 ஆம் ஆண்டு தீவிரமாக எண்ணப்பட்டது. இதன் விளைவாக டாக்டர் இலட்சுமண முதலியார் தலைமையில் பள்ளிக்கல்விக்கென 1952ஆம் ஆண்டு ஒரு குழு நியமிக்கப்பட்டது. இது பரவலாக முதலியார் குழு அல்லது பள்ளிக் கல்விக்குழு என்று அழைக்கப்பட்டது. இக்குழுவானது பின்வரும் குறிக்கோள்களுக்காக நியமிக்கப்பட்டது.

1. பள்ளிக் கல்வியின் சிக்கல்கள், தேவைகள், சூழ்நிலைகள், மதிப்புகள் இவற்றைப் பற்றி ஆய்ந்து அறிக்கை அளித்தல்.

2. பள்ளிக் கல்வியை மாற்றி அமைக்கவும், மேம்படுத்த வழிமுறைகளையும், பரிந்துரைகளையும் வழங்குதல்.

இந்திய நாட்டில் கல்வியிலுள்ள சிக்கல்கள் மற்றும் தேவைகள் இவற்றைப் பற்றிய ஆய்வுகளின் அடிப்படையில் முதலியார் குழு பின்வருவனவற்றைக் கல்வியின் குறிக்கோள்களாக வரையறுத்தது.

1. மக்களாட்சிக்கு ஏற்ற வகையிலான குடிமக்கள் பண்புகளை வளர்த்தல்

2. முழுமையான ஆளுமை வளர்ச்சி

3. தொழில் திறமை

4. தலைமைப் பண்புகளை வளர்த்தல்

5. பொழுதுபோக்குக் கல்வி

6. சமுதாயத் திறன்கள் வளர்ப்பு

பதினான்கு வயது வரையிலான குழந்தைகளுக்கு இலவச, கட்டாயக் கல்வி வழங்குவதற்காக அரசியல் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டதால், பல துறைகளிலும் திறமை உள்ள பலதரப்பட்ட மாணவர்கள் எதிர்காலத்தில் கல்வி கற்க வரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாகப் பள்ளிக்கல்வி ஒருமுக நுழைவாயிலாக இல்லாமல் பலவகைப்பட்ட திறமைகளுக்கும், ஆர்வங்களுக்கும் வழிவகுக்கும்படி அமைந்தது. இத்திறமைகள் யாவும் கட்டாயக் கல்வியின் நிறைவில் வெளிக்கொணரப்படும். எனவே, உயர்நிலைப் பள்ளிகள் பொதுப்பாடங்கள், சிறப்புத் தொழில் பாடங்கள் இவையிரண்டையும் உள்ளடக்கிய முழுமையான பாடத்திட்டம் உடையனவாக அமையவேண்டும். இதன் மூலம் மாணவர்கள் தமது தேவைகளின் அடிப்படையில் பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள முடிகிறது.

மக்களாட்சி அமைப்பில் அனைத்து மாணவர்களும் அறிவுள்ள குடிமக்களாகத் திகழவேண்டிய அவசியம் உள்ளதால், மக்காளட்சியின் அடிப்படைக் கொள்கைகள், மனப்பான்மைகள், உணர்வுகள் போன்றவற்றைப் பொதுவான மையப்பாடங்களாக

வைத்து அனைவரையும் கற்கச் செய்ய வேண்டும். இவ்வாறு பலவித நோக்கங்களை எட்டும் வகையில் பள்ளிக் கல்வியை மாற்றி அமைக்கப் பரிந்துரைகள் செய்யப்பட்டன. இதன் விளைவாகப் பலநோக்குப் பள்ளிகள் ( Multipurpose Schools ) அல்லது பல பக்கப் பள்ளிகள் ( Multilateral Schools ) தோன்றின. இவற்றில் எட்டாம் வகுப்பிற்குப் பின்னர் ஏதாவதொரு தொழில் பாடத்தைக் கற்க வழிவகை செய்யப் பட்டது.

முதலியார் குழுவில் பல்நோக்குப் பள்ளிகள் யாவும் பலவித தொழில் பாடங்களை வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. ஒரு பல்நோக்குப் பள்ளியில் பலதரப்பட்ட குறிக்கோள்கள், ஆர்வங்கள், திறமைகள் கொண்ட மாணவர்களின் தேவையை ஈடு செய்யும் வகையில் பலவகையான பாடங்கள் வழங்கப்படுகின்றன. இது ஒவ்வொரு தனி மாணவனும் தன்னால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடத்தில் தனது இயல்பான திறமைகளையும் ஆர்வங்களையும் வளர்த்துக்கொள்வதற்கு ஏற்ற வகையில் வாய்ப்புகளை வழங்குகிறது. பல்நோக்குப் பள்ளிகளின் நன்மைகள்.

1. சாதாரணமாகத் தொழில் பாடங்களைத் தேர்ந்தெடுக்கின்ற மாணவர்களிடையே ஏற்படுகின்ற தாழ்வு மனப்பான்மையை அகற்றி, பல வகையான துறைகளுக்குத் தங்களை ஆயத்தம் செய்து கொள்ளவும், அனைத்து மாணவர்களிடையே வேற்றுமை உணர்வு எதுவும் ஏற்படாமல், கல்வித்திட்டத்தை உண்மையிலேயே மக்களாட்சி அடிப்படையில் அமைக்கவும் பல்நோக்குப் பள்ளிகள் உதவுகின்றன.

2. பல துறைகளிலும் கல்வி கற்க வாய்ப்பு ஏற்படுத்தி, மாணவர்கள் தங்களின் ஆர்வத்திற்கு ஏற்றபடி பாடங்களைத் தேர்ந்தெடுக்க இவை வழிவகை செய்கின்றன.

3. சிலசமயம் தனக்குப் பொருத்தமில்லாத பாடத்தை ஒரு மாணவன் தேர்ந்தெடுத்துவிட்டாலும், பாடத்தினை மாற்றுவதற்காக வேண்டி வேறு பள்ளிக்குச் செல்லாமல் அதே பள்ளியில் மாற்றுப் பாடத்தைத் தேர்ந்தெடுக்க இத்தகைய பள்ளிகள் உதவுகின் றன.

பல்நோக்குப் பள்ளிகளின் கலைத்திட்டத்தின் கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன.

அ. (1) தாய்மொழி அல்லது மாநில மொழி அல்லது தாய்மொழியும், பழமையான மொழியும் சேர்ந்தது.

(2) இந்தி, ஆங்கிலம், நவீன இந்திய மொழி, நவீன அயல்நாட்டு மொழி, ஒரு புராதான மொழி இவற்றில் ஏதாவது ஒன்று.

ஆ. (1) சமூகப்பாடங்கள் - முதல் இரண்டு ஆண்டுகளுக்குப் பொதுப்பாடம்.

(2) பொது அறிவியல் - கணிதப் பாடத்தையும் சேர்த்து.

இ. பின்வருவனவற்றிலிருந்து ஏதாவதொரு கைத்தொழிலைத் தேர்ந்தெடுத்தல்.

1. நூற்றலும் நெய்தலும், 2. தோட்ட வேலை, 3. தையல் வேலை, 4. உலோக வேலை, 5. மர வேலை, 6. தட்டச்சு, 7. பட்டறை அனுபவம், 8. தையல் பூ வேலைகள், 9. மாதிரிகள் செய்தல்.

பலநோக்குப் பள்ளிகள் தொடங்கப்பட்ட புதிதில் இவை ஏதோ தொழில் பள்ளிகள் என்றும், இவற்றில் அளிக்கப்படும் கல்வித் தரம் குறைவானதாக இருக்கும் எனச் சில பெற்றோர்கள் நினைத்தனர். ஆனால் உண்மையில் இத்தகைய பள்ளிகள் தாம் குழந்தையின் ஆர்வத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் பொருத்தமான கல்வித்திட்டம் அமைக்கப்பட்டு உள்ளது. ஆனால் பலநோக்குப் பள்ளிகள் பொதுவான சில சிக்கல்களுக்கு ஆளாகின.

1964 - 66ஆம் ஆண்டுகளில் டாக்டர் கோத்தாரி தலைமையில் அமைக்கப்பட்ட குழு, பல்நோக்குப் பள்ளிகளின் செயல்பாட்டு முறைகளை ஆய்ந்து அறிக்கை அளிக்கையில் பின்வரும் சிக்கல்களைக் கவனத்திற்குக் கொணர்ந்தது.

1. பலநோக்குப் பள்ளிகளில் பலவகைப் பாடங்களை எடுத்துப்படித்த மாணவர்களில் பலர் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பெற ஆசைப்பட்டார்களேயன்றி, நுண்கலை, வேளாண்மை, தொழில் நுட்பம் போன்ற பாடங்களை மிகச்சிலரே விரும்பி எடுத்துப்படித்தனர். இதன் விளைவாக உயர்கல்வியில் ஏற்பட்ட இடநெருக்கடி சிறிதும் குறையவில்லை.

2. மாணவர்களின் பலதரப்பட்ட திறமைக்கு ஏற்ற வகையில் பாடங்களை வழங்குவது சிறந்த திட்டம்

என்றாலும், மிகுந்த பொருட்செலவை ஏற்படுத்து வதாக இருந்ததால் இந்திய நாட்டுப் பொருளாதார நிலைக்கு இது ஏற்றதாக இல்லை.

3. மேலும் ஒன்பதாம் வகுப்பில் மாணவர்கள் மிகவும் சிறியவர்களாக இருப்பதால் பதின்மூன்று அல்லது பதினான்கு வயதிலேயே அவர்கள் சிறப்புப் பாடங்களை எடுத்துப் படிப்பதற்கான முதிர்ச்சி பெற்றவர்களாக இருப்பதில்லை.

இந்தியக் கல்வித் திட்டத்துடன் உலக நாடுகளில் உள்ள கல்வித்திட்டங்களை ஒப்பிட்டுப் பார்கையில் முதல் பத்தாண்டுக்குப் பொதுக்கல்வியும், அதன் பிறகு மாற்றுப்பாடங்கள், சிறப்புப் பாடங்கள் இவற்றை மேல்நிலைப் பள்ளியில் படிக்கலாம் என்று கோத்தாரி குழு பரிந்துரை செய்தது. இதன்படி மேல்நிலைப் பள்ளிகளில் பொதுப்பாடம், தொழில் பிரிவு பாடங்கள் இவையிரண்டும் பத்தாம் வகுப் பிற்குப் பின்னர் பதினொன்றாம், பன்னிரண்டாம் வகுப்புகளில் கற்பிக்கப்படுகின்றன.

1986ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட தேசியக் கல்விக் கொள்கையானது தொழிற்பிரிவு பாடங்கள் வழங் கப்படுவதிலுள்ள சிக்கல்கள், அவற்றை வழங்கும் பள்ளிகளிலுள்ள செயல்பாடுகளின் தரம் போன்ற வற்றை ஆராய்ந்து அதன்பேரில் பரிந்துரைகள் செய் துள்ளது. இதன்படி இப்பிரிவுகளின் செயல்பாட்டை மேம்படுத்த அதிக நிதி ஒதுக்கீடு, முழு நேரத் தொழில் நுட்ப ஆசிரியர் நியமனம், இப்பிரிவில் அதிக மாணவர்களைச் சேர்க்க வேண்டியதன் அவசியம் இவை பற்றி ஆலோசனைகள் தரப்பட்டுள் ளன. பள்ளிக் கல்வியைச் சரியானபடி திட்டமிட்டு அமைத்து, கல்லூரிக் கல்வியில் உள்ள இட நெருக் கடி, வேலையற்ற பட்டதாரிகள் தோன்றுதல் இவற் றைத் தவிர்க்க வேண்டும். பலநோக்குப் பள்ளிகளின் சிறப்புத் தன்மைகளை எடுத்துக்கொண்டு, குறை களைத் தவிர்த்து தொழிற்கல்வியைப் பொருத்தமான வயதில் தொடங்குவதன் மூலம் மாணவர்களின் ஆர்வத்தினைத் தூண்டி பல துறைகளிலும் திறமை களை வளர்த்துக் கொள்ளும்படி நெகிழ்ச்சியான கல்வித் திட்டத்தின் வழியாக சொந்தமாகத் தொழி லில் ஈடுபட்டு, வருவாயை ஈட்டி, தன் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்வதோடு நாட்டின் முழுமையான வளர்ச்சிக்கும் வழி வகுக்கமுடியும்.

- பி.பி.

**பன்னாட்டுக் கல்வி நிறுவனம் :** அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள கொலம்பியா பல்கலைக் கழகத்தில் பன்னாட்டுக் கல்வி நிறுவனம் உருவா யிற்று. இது ஒரு தனியார் அமைப்பாகும். வில்லியம் எப். இரசல், ஐ.எல்.கேண்டல், தாமசு அலெக்சாண் டர் போன்ற அறிஞர்கள் இந்நிறுவனத்தின் வளர்ச்சி யில் பெரும் பங்கு கொண்டனர். இந்நிறுவனம் 1924ஆம் ஆண்டு முதல் 1944ஆம் ஆண்டு வரை பன் னாட்டுக் கல்வி பற்றிய அரிய கட்டுரைகளை எழுதி வெளியிட்டது. உலக் நாடுகளுக்கிடையே உள்ள கல்வி பற்றிய செய்திகளைக் கூறுவதோடு அமையா மல் ஒப்பியல் கல்வி பற்றியும், பன்னாட்டுச் சமூக, அரசியல் சிக்கல்கள் பற்றியும் ஆய்வு செய்தது. ஆசிரி யர்களின் சமூக, பொருளாதாரச் சிக்கல்கள், சிறு பான்மையோரின் சிக்கல்கள், கல்விச் சுதந்திரம் ஆகியன பற்றி அவ்வப் போது ஆய்வுகள் மேற்கொள் ளப்பட்டன.

ஒவ்வொரு சிக்கல் பற்றியும் நான்கு அல்லது ஐந்து முறை ஒன்று கூடி அறிஞர்கள் விவாதித்தனர். ஒப்பி யல் கல்வியின் அடிப்படைக் கோட்பாடுகள் பற்றி மாணவர்கள் கலந்துரையாடினர். கல்வி, பொருளா தார, சமூக முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும். மேலும், கல்வியில் மிகவும் பின்தங்கிய ஐரோப்பிய நாடுகள் அல்லாத பல நாடுகளை முன்னேற்றப் பெரி தும் பாடுபடுவது எனவும் முடிவு செய்தனர்.

பல்வேறு நாட்டுக் கல்விச் சிக்கல்களை ஒப்பியல் முறையில் ஆராய்வது, அவற்றின் காரணங்களை அறி வது, பன்னாட்டுக்கல்வி முறைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளையும் அவற்றிற்கான காரணங்களை யும் அறிவது. மேலும் கல்விச்சிக்கலுக்குத் தீர்வு காண் பது ஆகியன இந்நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் களாக அமைந்தன. சிறப்பான கருத்துகள் மிகுதி யாகப் பெருகி வருவதாலும், மேம்படுத்தப்பட்ட முறைகள் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டு வருவ தாலும், அறிவியல் அடிப்படையில் கல்வியைத் திட்டமிட முடிவு செய்தது.

பல கல்வியாளர்கள் தங்கள் நாட்டுக் கல்வி அமைப்புகளில் சில திருத்தங்கள் மேற்கொள்வதற் காக கி.பி. பத்தொன்பதாம் நூற். பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டார்கள். அவர்கள் அந்நாடுக ளின் கல்விக்கொள்கைகள், கற்பித்தல் முறைகள்,

ஆசிரியர் பயிற்சி முறைகள், கல்வி ஏற்பாடுகள் ஆகியவற்றை ஆராய்ந்து கட்டுரைகள் எழுதி வெளியிட்டனர். பள்ளிக் கல்வியின் சில தேர்ந்தெடுக்கப்பட்ட கூறுகளில் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுத் தொகுக்கப்பெற்றன. ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் பண்பாட்டுக் கழகம் வெளியிட்ட அனைத்துலகக் கல்வி பற்றிய ஆண்டு நூல் ( International year Book of Education ) குறிப்பிடத்தக்கது.

சமூக அறிவியல் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் மிகப்பெரும் வளர்ச்சியடையத் தொடங்கியது. புவியியல், பொருளாதாரம், வரலாறு, சமயம், அறிவியல், நுட்பவியல் போன்ற காரணிகள் ஒரு நாட்டின் கல்விமுறையில் தனித்தன்மையை முடிவு செய்கின்றன. எனவே, கல்வி முறையை அறியும்போது மேற்கூறிய காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என மாலின்சன் என்னும் அறிஞர் கூறுகிறார்.

இந்நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள அறிவுப்பெருக்கம், சமுதாய மாற்றம் ஆகியவற்றின் காரணமாக ஒரு நாட்டின் கல்வி அமைப்பைச் சீர்திருத்தி மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகிறது. எந்த விதமான முன்மாதிரியும் இல்லாமல் ஒரு நாட்டின் கல்வி அமைப்பைச் சீர்திருத்துவது மிகச் சிக்கலான செயலாகும். ஏனெனில், பிற நாடுகளில் என்னென்ன கல்வி சீர்திருத்தங்கள் செய்தார்கள் அவற்றில் எவை வெற்றி பெற்றன, எவை வெற்றி பெறவில்லை என ஆராய்வதும், சீர்திருத்தங்களின் பயன்கள் யாவை என ஆராய்வதும் முக்கியம். அப்போதுதான் பிற நாடுகளின் முன்மாதிரிகளைப் பின்பற்றி அவர்கள் வெற்றியுடன் செயற்படுத்திய முன்னேற்றங்களைப் பயன்படுத்தலாம்.

கல்வி தொடர்ந்து மாறிக்கொண்டு வரும் ஒரு செயல்முறையாகும். பழைய முறைகளைத் தொடர்ந்து பின்பற்றி வருவது இயலாது. காலத்திற்கேற்ற பொருத்தமான மாற்றங்கள் செய்யப்படவில்லையெனில் கல்வி பயனற்றதாகிவிடும். வெவ்வேறு நாடுகளில் குறிப்பிட்ட கால கட்டங்களில் கல்வியில் என்னென்ன மாறுதல்கள் செய்யப்பட்டன என்பதைப் பன்னாட்டுக் கல்வி நிறுவனம் அறிவிக்கிறது. பன்னாட்டுக் கல்வி அமைப்புகளை ஒப்பிட்டுக் காணும்போது பல நாடுகளுக்குப் பொதுவான ஒரு சிக்கலுக்கு எவ்வாறு வெவ்வேறு தீர்வுகள் காணப்பட்டன என்பது தெரிய வரும். செய்தித் தொடர்புகள் மிக அதிகமாக வளர்ச்சி அடைந்துள்ள இக்காலத்தில் பன்னாட்டுக் கல்வி அமைப்புகளைப் பற்றியும் அவர்கள் செய்யும் கல்விச் சீர்திருத்தங்களைப் பற்றியும் உடனடியாகவும் எளிதாகவும் அறியமுடியும்.

வளர்ச்சியடையாத நாடுகளின் கல்வி முறைகளில் முன்னேற்றங்கள் செய்வற்குத் துணைபுரிய விரும்பும் கல்வியாளர்கள் ஏனைய நாடுகளில் செய்யப்படும் கல்விப் புதுமைகள், கல்வி அனுபவங்கள் பயனுள்ளதாக இருப்பின் அவற்றை ஏற்றுக்கொள்ளலாம். ஒரு நாட்டின் கல்விமுறையை அப்படியே இன்னொரு நாடு பயன்படுத்த முடியாது. கல்வியானது மனிதாபிமான குறிக்கோள்களையும், செயற்பாடுகளையும் மேம்படச் செய்வதோடு குறுகிய வட்டார மனப்பான்மையை மாற்றி அமைப்பதையும், பண்பாட்டை மேம்படச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு செயற்படுதல் வேண்டும். பல நாடுகளில் மாணவர்களுக்கு வழிகாட்டவும் அறிவுரை வழங்கவும் வழிகாட்டும் வல்லுநர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், மாணவர்களின் சிந்தனையை வளர்ப்பதற்கும், அவர்கள் கண்டுபிடிப்புத்திறனையும், படைப்புத் திறனையும் வளர்ப்பதற்கும் புதிய நுட்பங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கின்றன. கல்வியில் முதலீடு செய்வது, நீண்டகால அடிப்படையில் பார்த்தால் அதிகப் பயன் தருவதாக இருப்பதாகப் பல நாடுகளிலும் உணரப்படுகிறது.

பன்னாட்டுக் கல்வி முறைகளை ஆய்வதால் வெவ்வேறு நாட்டு மக்களைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள முடியும். ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வதால் நாடுகளிடையே போராட்ட மனப்பான்மை குறைகிறது. ஒற்றுமை வளர்கிறது. உலக ஒற்றுமையும், அமைதியும் சிறந்து விளங்கும்போதுதான் கல்விக்கான அனைத்துலகத் திட்டங்களை நன்முறையில் செயற்படுத்த முடியும். கல்வி முன்னேற்றமடைந்த நாடுகளிலிருந்து கல்வி அறிஞர்கள் கல்வி வளர்ச்சி பெறாத நாடுகளுக்குச் சென்று பணியாற்ற முடியும்.

- இரா.சி.

**பாகவத புராணம் :** பாண்டிய நாட்டைச் சேர்ந்த நெல்லி நகரில் வாழ்ந்த அருளாளதாசர் என்ற பெரும் புலவர் வடமொழிப் பாகவதத்தினைத் தமிழில் பாகவத புராணம் என்ற பெயரில் பாடியுள்ளார். இந்நூலாசிரியருக்கு மதுரகவி வரதராச ஐயங்கார் எனவும் பெயருண்டு. வடமொழியில் வியாசர் எழுதிய புராண பாகவதம் என்னும் நூலினையே இவர் தமிழாக்கம் செய்தார் என்பர். இந்நூல் கி.பி. 1543ஆம் ஆண்டில் திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்யப்பெற்றது. இது 135 பாடல்களையும், 9151 செய்யுட்களையும் கொண்டது. இப்புராணம் சாத்துவிக புராண வகையைச் சார்ந்தது. இதில் பெரும் பிரிவு, சிறு பிரிவு என இரு பிரிவுகள் இல்லை. படலம் என்ற ஒரு பிரிவே உள்ளது. இந்நூலில் கடவுள் வாழ்த்தை அடுத்து திருவரங்கப் படலம் அமைந்துள்ளது. ஆழ்வார்களாற் பாடப்பெற்ற சிறப்பு வாய்ந்த வைணவத் திருப்பதிகளில் திருவரங்கம் முதன்மை வாய்ந்தது. எனவே முதலில் அத்திருவரங்கத்தையும், காவிரி நதியையும் அங்குள்ள திருமாலையும் விரிவாகப் புகழ்ந்து கூறிப் பின்னர் ஏனைய திருப்பதிகளைப் பாடிச் செல்கின்றனர். மேலும் ஆழ்வார்களால் பாடப்பெறாத இராச மன்னார்குடி, திருமுட்டம், திரு நாராயணபுரம் முதலிய திருப்பதிகளையும் பாடியுள்ளார். திருவரங்கப்படலம், நைமிசாரணியப் படலம், ஆகியவற்றின் பின்னர் பிற இலக்கியங்களைப் போலவே ஆற்றுப் படலம், நாட்டுப்படலம், நகரப்படலம் முதலியவற்றை அமைத்துள்ளார். திருவரங்கத்தைக் கூறியவுடன் தொடர்ந்து சோழ நாட்டுத் திருப்பதிகளைக் கூறாமல் பாண்டி நாட்டுத் திருப்பதிகளைக் கூறிப் பின்னர்ச் சோழநாட்டுத் திருப்பதிகளையும் பிறவற்றையும் கூறியுள்ளார். இதைக் கொண்டு இவர் பாண்டி நாட்டைச் சேர்ந்தவர் என்ற கருத்தை வலியுறுத்துவர்.

**பாகவத புராணம் [2] :** ஆரியப்புலவர் என்பவராலும் பாகவத புராணம் ஒன்று இயற்றப்பட்டுள்ளது. அவர் திருக்குடந்தையைச் சேர்ந்தவர். இந்நூல் பதினெட்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. இப்பாகவத புராணம் 4970 பாடல்களைக் கொண்டது. இதன் இறுதிப் பகுதியில் பாயிரம் உரைத்த அத்தியாயம், புராண அளவையுரைத்த அத்தியாயம் என்பவை உள்ளன. முதற்பகுதியில் புராணச் செய்திகள் அனைத்தும் 33 விருத்தங்களில் கூறப்பட்டுள்ளன. அப்பகுதி சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி ஆகிய காப்பியங்களின் முற்பகுதியைப் போல அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

**பாகவத புராணம் [3] :** வடமொழியிலிருந்து பாகவதத்தினை மொழிபெயர்த்தவர்களுள் வேம்பத்தூர் சென்வைச் சூடுவாரும் ஒருவர். வியாச முனிவரே வேம்பத்தூரில் சென்வைச் சூடுவராகப்பிறந்து இப்புராணத்தைப் பாடினார் என்ற செவி வழிச் செய்தி இப்புராணத்தின் சிறப்பை எடுத்துரைக்கும் ஏனைய பாகவத புராணங்களை விட இப்புராணமே இலக்கியச்சுவை மிக்கது என்பது ஆய்வாளர் முடிவு. இந்நூலின் காலம் கி.பி. பதினாறாம் நூற்றாண்டு.

- பா. வே. நா.

**பாசுகம், வில்லியம் :** பாசுகம் வில்லியம் ( Bascom, William ) சர்வதேச அளவில் மானிடவியலிலும், ஆப்பிரிக்க மொழியிலும், நாட்டுப்புறவியலிலும் பணிகள் பல ஆற்றிப் பலராலும் அறியப்பட்ட மிகச் சிறந்த அமெரிக்க அறிஞராவார்.

இவர் விசுகான்சின் பல்கலைக்கழகத்தில் மானிடவியல் துறையில் இளநிலைப் பட்டத்தையும், முதுகலைப்பட்டத்தையும் முடித்தப்பின்னர், நார்த்வெசுடன் பல்கலைக்கழகத்தில் ஆய்வு செய்து முனைவர் பட்டத்தினைப் பெற்றார். 1935ஆம் ஆண்டு ஒக்ளஆமாவில் உள்ள கியோவா இந்தியரைப் பற்றிய ஆய்வுப் பணியில் ஈடுபட்டார். பின்னர் நியுயார்க்கில் உள்ள சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகத்தில் சேர்ந்து நைஜிரியாவில் உள்ள யொருகா இனத்தினர் பற்றியும் ஆய்வு செய்துள்ளார். பின்னர் 1939ஆம் ஆண்டு ஜியார்ஜியாவிலும், தெற்குக் கரோலினாவிலும் உள்ள நீக்ரோ மக்களைப் பற்றியும் ஆய்வு செய்துள்ளார்.

கலிபோர்னியாவில் உள்ள பெர்க்கிலி பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறையின் பேராசிரியராகப் பணியாற்றிய இவர், அத்துறையின் உலோவி மியுசியம் ( Lowie Museum ) பிரிவில் இயக்குநராகப் பணியாற்றினார். பின்னர் ஒப்பனைக்கலை என்ற பிரிவிலும் பணியாற்றியுள்ளார். நார்த்வெசுடன் பல்கலைக் கழகத்தில் ஆப்பிரிக்க மொழிப்பிரிவில் உதவி இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார். அமெரிக்க நாட்டுப்புறவியல் கழகத்தின் தலைவராகவும், அக்கழகத்தின்

உறுப்பினராகவும் இருந்து வந்துள் ளார். இவர் மானிடவியல் அறிஞராக இருந்தபோதி லும், நாட்டுப்புறவியல் துறையில் பல சாதனைகள் புரிந்த சிறந்த அறிஞராக அத்துறையில் திகழ்ந்தார். இவருக்கு 1969ஆம் ஆண்டு **அய்ஃபா இறையியல் தன்மை. மேற்கு ஆப் பிரிக்காவில் இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்பு** ( IFA Divination : Communication between Gods and Men in West Africa ) என்ற நூலினை எழுதியதற்காக நாட்டுப்புறவியலின் மிக உயர்ந்த விருது (Pitre) வழங்கப்பட்டது. பதினைந் துக்கும் மேற்பட்ட நாட்டுப்புறவியல் கட்டுரைகள் வெளியிட்டுள்ளார். அவற்றில் ***யொருபா மக்களின் முன்னேற்றம்*** ( Urbanization among the Yoruba ) என்ற கட்டுரை அனைவரின் பாராட்டுதலைப் பெற்ற தாகும். இவர்“நாட்டுப்புறவியலுக்கு ஆற்றியப் பணி கள்” என்ற நூலில் பல நாட்டுப்புறவியல் கட்டுரை களை வெளியிட்டு பல அறிஞர்களது பாராட்டு தலைப் பெற்றுள்ளார். மேலும் இவர் பழங்குடி மக் கள் வாழ்க்கைப் பற்றிய கண்காட்சிகள் நடத்திய தோடு அல்லாமல் அவற்றின் திரைப்படமாகத் தயாரிப்பதற்கு ஆலோசகராகவும் இருந்து வந்துள் ளார். இவர் ஆப்பிரிக்க மக்களின் பாடல்களை ஒலி நாடாவில் பதிவு செய்தும் வெளியிட்டுள்ளார்.

- வி.கி.

**பாதுகாப்புக் கல்வி** : விபத்துகள் மக்களுக்குக் காயங்களையும், நோய்களையும் ஏற்படுத்துவ தோடு, சொத்துகளுக்கும் உடைமைகளுக்கும் சேதத் தினையும் ஏற்படுத்துகின்றன. அவ்விபத்துக்குக் கார ணமாக விளங்கும் மக்களுக்கு எந்திரச்சாதனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் தொடர்புடைய விவரங்களைப் பற்றி அளிக்கப்படும் முறையான கல்வியே பாதுகாப் புக் கல்வி ( Safety Education ) ஆகும்.

பாதுகாப்புக் கல்வியின் மூலம் விபத்துகள் யாவும் ஆபத்தான உடல்நலச் சிக்கல்கள் என்பதும், அவற்றை நிகழும் முன்பாகவே தெரிந்துகொள்ள முடியும் என்பதும், அவ்விபத்துகள் மக்களால் மட்டுமின்றி எந்திரம், சுற்றுசூழல் ஆகியவற்றாலும் நிகழ்கின்றன என்பதும் விளக்கப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தோன் றிய பாதுகாப்பு இயக்கமானது மக்களிடையே தொழில் அடிப்படையில் ஏற்படும் காயங்கள், அபாயங்கள் பற்றியும், விபத்துகளைக் குறைப்பது எப்படி என்பது பற்றியும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. அறிவியல், தொழில்நுட்ப வசதிகள் வளர்ந்து வரும் இந்நாளில் பெருகிவரும் ஆபத்து களைப் பற்றிய அறிவை வழங்குவது இன்றி யமையாத ஒன்றாகும். தீப்பெட்டி, வெடிமருந்து தொழிற்சாலைகளில் பணிபுரிபவர்கள், தோல் பதனிடும் தொழிலில் ஈடு பட்டுள்ள ஊழியர்கள், துப்புரவுப் பணியாளர்கள், நல வாழ்வு நிலையங் களில் பணியாற்றுபவர்கள், குழந்தைத் தொழிலாளர் கள், ஊர்தி ஓட்டுநர்கள் ஆகியோருக்கு விபத்து, காயங்கள் தொழில் மூலம் ஏற்படும் நோய்கள் முதலியவை ஏற்படுவதைத் தவிர்க்கவும், அவை ஏற்பட்ட காலத்தில் முதலுதவி அளிப்பதற்கான பயிற்சியை அளிப்பதும் மிகவும் இன்றியமையாத தேவைகளாகும்.

அமெரிக்காவில் 1912ஆம் ஆண்டு ஏற்படுத்தப் பட்ட தேசியப் பாதுகாப்பு அவை பாதுகாப்புக் கல் வியை வழங்கியது. நியுயார்க் பல்கலைக் கழகத்தி லுள்ள பாதுகாப்புக் கல்விமையம் 1938ஆம் ஆண்டு எர்பெர்ட் சே.இசுடாக் என்பவரை இயக்குநராகக் கொண்டு தொடங்கப்பட்டது. அந்த மையம் பாது காப்புக் கல்வியில் ஆராய்ச்சிகளை மேற்கொள்வ தோடு பணியாளர்களுக்குப் பயிற்சிகளையும் வழங் குகிறது.

மேலைநாடுகளில் சில பல்கலைக்கழகங்களில் பாதுகாப்புக் கல்வியில் பட்டப்படிப்பு வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் இயற்பியல், கணக்கு தனிமனித, பொதுத் தொடர்புத் திறன்களை வளர்த் துக் கொள்ளுதல், தொழில் பாதுகாப்பு, நலவாழ்வு பற்றிய அடிப்படைத் விவரங்கள் ஆகியவை கற்பிக் கப்படுகின்றன. அணுசக்தியைப் பயன்படுத்துவ தாலும், பிற தொழில்நுட்ப முன்னேற்றத்தாலும் வருங்காலத்தில் நிகழவிருக்கின்ற சிக்கல்கள் பற்றிய அறிவும் வழங்கப்படுகின்றன.

விபத்துக்களிலிருந்தும், அவற்றின் விளைவுகளிலி ருந்தும் மக்கள் எவ்வாறு தம்மைக் காத்துக் கொள்ள லாம் என்பதே பாதுகாப்புக் கல்வியின் தலையாய நோக்கமாகும். தொழில்களில் முதலீடு செய்யும் போது, நிகழக்கூடிய விபத்துகள், சேதங்கள் முதலிய வற்றைக் கணக்கிட்டு அதன்படித் திட்டமிடுதலும் இக்கல்வியின் ஓர் அங்கமாகும். எந்திரச் சாதனங்

களைக் கவனமாகக் கையாளுதல், அவற்றின் பராமரிப்பு, தீ விபத்துகளைத் தடுத்தல் போன்ற விவரங்கள் மட்டுமே இப்போது பணியாளர்களுக்குத் தரப்படுகின்றன. முறையான இக்கல்வி மூலம் விபத்துகள், அவற்றின் பின் விளைவுகள் ஆகியவற்றைக் கட்டுப் படுத்தவும் தவிர்க்கவும் முடியும்.

- பா.பி.

**பார்வை குன்றியோர் கல்வி** : கிறித்துவ ஆலயம் ஒன்றின்முன் பிச்சை எடுத்த பார்வையற்றவர்களுக்குப் போடப்பட்ட காசுகளை அவர்கள் தம் தொடு உணர்ச்சியைப் பயன்படுத்திச் சரியாகக் கண்டு கொள்கின்றனர். இதைக்கண்ட வாலண்டைன் காய் ( Valentin Haiiy ) என்பவர் பார்வையற்றோருக்குத் தொடு உணர்ச்சியின் மூலம் கல்வி கற்பிக்க முடியும் என்பதை உணர்ந்தார். அவ்வாறே அவர்களுக்குத் தொடு உணர்ச்சி மூலம் கற்பிக்க மிகவும் பாடுபட்டார். எனவேதான் அவரை ‘பார்வையற்றோரின் மறு மலர்ச்சித் தந்தை’ என்று உலகம் இன்றும் புகழ்கிறது.

வாலண்டைன் காயின் முயற்சியால் பலர் கல்வி கற்க முன்வந்தனர். அவர்களுக்கு முதன்முதலில் முடிச்சுகளைப் பயன்படுத்திப் படிக்கும் முறை கற்பிக்கப்பட்டது. முடிச்சுகளின் வடிவம் உணர்வதற்குச் சற்று கடினமாக இருந்தது. இதனால் இம்முறை வெற்றி பெறவில்லை.

**மூன் முறை :** இங்கிலாந்தைச் சேர்ந்த வில்லியம் மூன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட முறை மூன் முறையாகும். அம்முறையில் உள்ள எழுத்துக்கள் பெரும்பாலும் ரோமன் எழுத்து வரி வடிவமாகும். வாழ்க்கையின் பின்பகுதியில் பார்வையற்று அல்லல் படும் முதியவர்கள் அம்முறை கொண்ட நூல்கள் மூலம் எளிதாகக் கற்க முடிகின்றது. அம்முறை கொண்ட நூல்கள் அனைத்தும் ஆங்கிலம் பேசப்படும் நாடுகளில் பார்வையற்ற முதியோர்களால் பயன் படுத்தப்படுகிறது.

**பிரெயில் முறை :** சான் என்பவர் பன்னிரண்டு புள்ளிகளைக் கொண்ட பிரெயில் முறையைக் கண்டறிந்தார். அம்முறையைப் பயன்படுத்திப் புத்தகங்களை அச்சிட மிகுந்த செலவும் நேரமும் ஆயிற்று. எனவே அம்முறை காலப்போக்கில் வெற்றி பெறவில்லை. அந்நிலையில்தான் பிரான்சு நாட்டைச் சேர்ந்த காலணி தைக்கும் தொழிலாளி ஒருவரின் மகனான லூயி பிரெயில் கண்டறிந்த பிரெயில் முறை நடைமுறைக்கு வந்தது.

லூயிபிரெயில் தம் தந்தையின் காலணி தைக்கும் கடையில் இருந்தபோது தவறுதலாகச் சிறிய கத்தியால் தன் கண்ணைக் குத்திக் கொண்டார். அவரின் மூன்று வயதில் அந்தச் சம்பவம் நடந்தது. அவருக்குக் கண்நோய் ஏற்பட்டு, அவரின் இரண்டு கண்களும் பார்வையிழந்து போயின. எனினும் அவருக்குக் கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. பின் அவர் கல்வி கற்றுப் பாரீசிலுள்ள பார்வையற்றோர்களுக்குக் கல்வி கற்பிக்கப் பயன்படுத்தப்பட்ட முறை பிரெஞ்சுப் போர் வீரனாயிருந்த சார்லசு பார்பியர் என்பவர் கண்டுபிடித்த முறையாகும். அந்த முறையை பிரெயில், திருத்தி அமைத்து தம் கூர்மையான அறிவைப் பயன்படுத்தி ஆறு புள்ளிகளைக் கொண்ட பிரெயில் எழுத்து முறையை கி.பி. 1892 இல் வெளியிட்டார். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் அதைத் தெளிவாக்கினார். ஆனால், அரசாங்கம் அம்முறையை அவர் இறந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே ஏற்றுக்கொண்டது. இப்போது அனைத்து நாடுகளிலும் பிரெயில் முறையே கையாளப்படுகிறது.

அம்முறையின் மூலம் பார்வையற்றோர்கள் தாளின் மீது கையால் தடவிப் படிக்கும்படி அவர்களுக்குரிய எழுத்துகள் அமைக்கப்படுகின்றன. அதற்காகத் தாளில் இரண்டிரண்டாக மூன்று வரிசையில் ஆறு குமிழ்களை அமைக்கின்றனர். குமிழ்களைப் பலவிதமாக அமைப்பதன் மூலம் அறுபத்து மூன்று எழுத்துகளைக் கற்றுக்கொள்ள முடியும். இம்முறையைக் கொண்டு பார்வையற்றோர் படிக்கவும் எழுதவும் கற்று கொள்கிறார்கள். பார்வையற்றோர் கணக்குப் போடுவதற்காக எண்கோண வடிவ துவாரங்கள் துளைக்கப்பட்ட பலகையும் உள்ளது.

பிரெயில் முறையை அடிப்படையாகக்கொண்டு தட்டச்சுப்பொறி உருவாக்கப்பட்டது. அவர்களுக்கான நூல்களை அச்சிட அச்சு எந்திரமும் உள்ளது. அவர்கள் கண்ணுக்குப் பதிலாக கையையும் காதையும் பயன்படுத்திக் கல்வி கற்கிறார்கள். மேலும் பார்வையற்றோர் பள்ளிகளில் மாணவர்களுக்குப் படிக்க எழுதக் கற்றுக்கொடுப்பதோடு, தையல், நெசவு, தச்சு வேலை முதலிய பல கைத்தொழில்

களும் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. எல்லாப் பள்ளி களிலும் இசை கற்றுத் தரப்படுகின்றது.

**இந்தியாவில் பார்வையற்றோருக்கான கல்வி :** இந்தியாவில் பார்வையற்றோருக்கான தொடக்கப் பள்ளிகள் இருபத்திரண்டு உள்ளன. அதில் தனியார் பள்ளிகள் பதினொன்றும், அரசுப்பள்ளிகள் பதி னொன்றும் உள்ளன. மேலும் அரசு மேல்நிலைப் பள்ளிகள் பெண்களுக்கு ஒன்றும், ஆண்களுக்கு ஒன் றும் உள்ளன. பிரெயில் அச்சகம் ஒன்று தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகம், கேரளா, பாண்டிச்சேரி ஆகிய ஐந்து மாநிலங்களுக்கும் சேர்த்து மண்டல பிரெயிலி அச்சகம் சென்னையில் உள்ள பூவிருந்தவல்லியில் உள்ளது. அதில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலை யாளம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் நூல்கள் அச்சடிக்கப்பட்டு, பள்ளிகளில் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன.

மேல் நாடுகளைப் போலவே இங்கும் ஏனைய குழந்தைகளுடன் சேர்ந்து பார்வையற்ற குழந்தைக ளுக்கும் கல்வி கற்க வசதிகள் செய்து தரப்படுகின்றன. பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்க ளிலும் பார்வையற்றோர் மற்றவர்களோடு சேர்ந்து படித்து இன்று சமுதாயத்தில் பலர் உயர் பதவிகளில் பணியாற்றி வருகின்றனர். நடைப்பயிற்சிக்கு ஊன்று கோல், நெகிழி ஊன்றுகோல், வழிகாட்டி நாய் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. அவற்றால் பார்வையற்றவர் தன்னம்பிக்கையுடனும் மனத்துணி வுடனும் நடக்க முடிகின்றது.

- நா.பா.

**பால் கல்வி :** மனித வாழ்க்கையின் எல்லா நிலை களிலுமே பால் வேட்கை ( Sex Urge ) ஒரு முக்கியப் பங்கு பெறுகிறது. கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள் போன்ற நெருங்கிய இணைப்புகளுக் கும் அதனையொட்டி எழும் அன்புப்பிணைப்பிற்கும் அடிப்படையாக அமைவதே இப்பாலூக்கமாகும். மகிழ்ச்சி நிலவும் குடும்பச் சூழலில் பிறந்து வளரும் குழந்தையால்தான் ஒருங்கிணைந்த வளர்ச்சியையும், ஒருமைப்பாடுடைய ஆளுமையையும் பெற முடியும் என்பது உளநூல் வல்லுநரது கருத்தாகும். இயல்பாக ஏற்படுகின்ற பாலூக்கத்தைக் கட்டுப்பாடுகளுடன் பயன்படுத்தாது போனால், தனிப்பட்ட மனிதனின் வாழ்வைச் சீரழிப்பதுடன் வாழும் சமூகத்திற்கும் கேடு பயப்பதாகும். ஆகவே, மாணவர்களுக்குப் பால் பற்றிய உண்மையான அறிவை அளித்து, நல்ல மனப்பான்மைகளை வளர்க்க உதவுவது ஆசிரியரது இன்றியமையாக் கடமையாகும்.

பாலூக்கம் குமாரப் பருவத்தில்தான் முதிர்ச்சி பெறுகிறது என்றாலும், குமரப்பருவத்திற்கு முந் தைய பருவங்களிலேயும் இவ்வூக்கம் ஓரளவு காணப் படுகிறது. உளவியல் அறிஞர்களில் ஒரு பிரிவினரா கிய உளப்பகுப்புக் கொள்கையினர் சின்னஞ்சிறு குழந்தையின் நடத்தையிலும், பாலுணர்வின் தீவிர மான செல்வாக்கைக் காணலாம் எனக் கருதுகின்ற னர். பிறர் அன்புடன் தட்டிக்கொடுக்கும் போதும், அணைத்துத் தடவிக் கொடுக்கும்போதும் குழந்தை மகிழ்ச்சி அடைவதற்கு இப்பாலூக்கமே காரணம் என்பர். மேலும் ஆண் குழந்தைகளுக்குத் தம் தாய் மார்களிடமும், பெண் குழந்தைகளுக்கு தம் தந்தை யாரிடமும் அன்பு மிகுந்து காணப்படும் என்றும், இப்பண்பும் பாலூக்கத்தின் பாற்பட்டதே என்றும் கூறுவர். அதனையடுத்த பிள்ளைப் பருவத்தில் பால் வேட்கை தனித்தே காணப்படுகிறது. ஆனால் இப் பருவத்தின் இறுதியில் பாலுணர்வின் அடிப்படை யில் உடலில் பல மாற்றங்கள் எழத் தொடங்குகின் றன. அம்மாற்றங்கள் குமாரப்பருவத்தில் முழுமை அடைகின்றன. அம்மாற்றங்கள் நிகழ அடிப்படை யாக அமைவது கோனாட்சு ( Gonads ) எனப்படும் பாலூட் சுரப்பிகளின் ( Sex glands ) ஹார்மோன்களால் தோன்றுவனவாம். அந்த ஹார்மோன்கள் குமாரப் பருவத் தொடக்கத்தில்தான் பெருமளவு சுரக்கின்றன. அவையே, அப்பருவத்தில் ஆண், பெண் உடலுறுப்பு களிலும் உடலமைப்பிலும் ஏற்படும் மாறுபட்ட வளர்ச்சிக்குக் காரணங்களாகும்.

பாலூட்சுரப்பிகள் செயல்படத் தூண்டுகோலாக அமைவது பிட்யூட்டரி சுரப்பியும், அட்ரினல் தைமசு போன்ற சுரப்பியும் ஆகும். அப்பருவத்தில் உடல் அமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் ஆண்களைக் காட் டிலும் பெண்களிடம் ஓரிரு ஆண்டுகள் முன்ன தாகவே எழத் தொடங்கும். பால் முதிர்ச்சி அடைவ திலும் தனி ஆள் வேற்றுமைகள் காணப்படும். ஒருவர் எந்த வயதில் பால் முதிர்ச்சி அடைகிறார் என்பது, அவருடைய மரபுநிலை உணவுப்பழக்கங்கள், வாழும் சூழ்நிலைகள், தட்பவெப்ப நிலை போன்ற பல காரணிகளைப் பொறுத்து அமையும்.

இவ்வாறு குமாரப்பருவத்தினரின் உடலில், உள்ளத்தில் ஏற்படும் மாற்றங்கள் இயற்கையாக நிகழ்பவை. இப்பருவத்தினர் பிற பால் தோழர்களிடம் நெருங்கிப் பழக ஆர்வம் காட்டுகின்றனர். இவை இயற்கையான முறையான நடத்தைக் கோலங்களாகும். ஆனால், இது போன்ற உணர்வு எதிர்பாராது ஏற்படுவதாலும் இம்மாற்றங்களைப் பற்றிய அறிவினைப் பெறாததாலும், இப் பருவத்தினர் இது ஏதோ அசாதாரண நிகழ்ச்சியெனக் கருதி அச்சம் கொள்கின்றனர். பால் தொடர்பான உடல் மாற்றங்கள் பெண்ணிடத்திலும், ஆணிடத்திலும் ஏற்படுவதை உடல் கோளாறு எனக் கருதி கவலை கொள்கின்றனர். குமாரப் பருவத்தினரிடையே இத்தகைய காரணமற்ற அச்சங்கள், வீண் கவலைகள், மன எழுச்சிச் சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. அவர்களது படிப்பினையும், சமூக வளர்ச்சியையும் கெடுக்கின்றன. இப் பருவத்தினருக்கு, பால் பற்றிய உண்மை அறிவு அளிக்கப்படாவிடில் பால் பற்றி உண்மைக்குப் புறம்பான பல கருத்துகளைப் பிறரிடமிருந்தோ, கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய திரைப்படங்கள், கேடுவிளைவிக்கும் விரும்பத்தகாத பத்திரிக்கைகள் ஆகியவற்றின் மூலம் பெறக்கூடும். இத்தகைய தவறான கருத்துகள் அவர்களை மேலும் குழப்பத்தில் ஆழ்த்தி அவர்களிடையே சில தீய பழக்கங்களையும் ஏற்படுத்திவிட வாய்ப்புண்டு.

இவை போன்ற தீய விளைவுகளைத் தடுக்க வேண்டுமாயின், உண்மையான பாலறிவை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். பால்பற்றி நினைப்பதோ, பொதுவிடங்களில் பேசுவதோ ஓர் அருவக்கத்தக்க, அவமானப்படக்கூடிய செயலாகும் என்ற தவறான எண்ணம் நிலவுகிறது. அதனால் பள்ளி மாணவரிடையே பால்பற்றிய பேச்சு எழுவது பெருந்தவறு என்று கருதப்படுகிறது. உடலியலின் பல்வேறு பகுதிகளையும் கற்பித்துவிட்டு, பால்தொடர்பான இனப்பெருக்கம் என்ற தலைப்பினை மட்டும் கற்பிக்காது விடுவர். பால்பற்றிய உண்மைகளை அறிவியல் அடிப்படையில் மாணவருக்குக் கற்பிக்கத் தேவையில்லை என்று இன்றும் கருதுகின்றனர். இந்நிலையை மாற்றி, பாலுணர்ச்சி ஓர் இயற்கைத் தூண்டல் என்றும், இத்தூண்டலின் அடிப்படையில் எழும் உணர்ச்சிகள் பிற பாலரிடம் தோன்றும் ஆர்வம் போன்ற மனவெழுச்சிகள் இயற்கை என்றும், இவற்றைப் பற்றிக் கவலைப்படவோ, அவமானப்படவோ வேண்டாம் என்றும் உணர்த்துதல் இன்றியமையாததாகும். பள்ளியில் இவ்வறிவினைக் கொடுப்பதுடன் மாணவரது சிந்தனையையும், செயலையும் பயன்தரத் தக்க வழியில் மடைமாற்றம் செய்யும் வழிகளையும் அமைத்தல் வேண்டும்.

குழந்தைகளுக்குப் பால்பற்றிய அறிவினைப் புகட்டுவது ஓரளவு பெற்றோர்களது பொறுப்பாகும். குழந்தைகள் மூன்று வயதிலிருந்தே பால் வேற்றுமைகளைப் பற்றிய வினாக்களைத் தாய் தந்தையரிடம் கேட்கத் தொடங்குவர். தன் வீட்டிலோ அடுத்த வீட்டிலோ புதிதாகக் குழந்தைகள் பிறக்குமாயின், அக் குழந்தை எவ்வாறு பிறந்தது என்ற வினா எழுவது இயற்கை. இதுபோன்ற கேள்வி ஆராய்வூக்கத்தினின்றும் எழுதுவது ஆகும். இந்த வினாக்களுக்குப் பெற்றோர்கள் நேரிடையாக விடையளிக்காது சுற்றி வளைத்துத் தவறான எண்ணத்தை ஏற்படுகின்றனர். குழந்தை தாயின் வயிற்றிலிருந்து பிறக்கின்றன என்றும், அவ்வாறேதான் வினா எழுப்பிய குழந்தையும் பிறந்தது என்றும் பெற்றோர் கூற வேண்டும். மகிழ்ச்சி ததும்பும் குடும்பச்சூழ்நிலையை அமைத்தல், பெற்றோர் குழந்தைகளிடையே உள்ள நெருக்கம், குழந்தையின் பால் பற்றிய வினாக்களுக்கு முகம் சுளிக்காமல் தெளிவான விடை அளித்தல் போன்ற செயல்கள் பெற்றோரது கடமையாகும்.

பால் பற்றிய அறிவினைப் புகட்ட பள்ளியில் அறிவியல் பாடத்திட்டத்தில் வாய்ப்புகள் உண்டு. தாவரங்கள் மகரந்தச் சேர்க்கை, பல்வேறு உயிரினங்களின் இனப்பெருக்கம் ஆகியவைப்பற்றிக் கற்பிக்கும் போதும், மனித உடலியல் எல்லாவகையான மண்டலங்களையும் பற்றிக் கற்பித்துப் பின் இனப்பெருக்கு உறுப்புகளையும், இனப்பெருக்கம் பற்றிய அடிப்படைக் கருத்துகளையும் கற்பிக்க வேண்டும்.

பிள்ளைப்பருவ மாணவர்களுக்கு அவரது உடலில் எழப்போகும் மாற்றங்களின் தன்மை பற்றிய அறிவு கொடுக்கப்படல் வேண்டும். இருபால் கூட்டுக் கல்வி முறை, பள்ளியில் கல்வி பயிலும் இருபால் மாணவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்ள உதவும் வாய்ப்பினை அளிக்கும்.


பொதுவாகக் குமாரப் பருவ மாணவர்களுக்குச் சிறந்த மருத்துவர்களாலும், கல்வியாளர்களாலும் எழுதப்பட்டுள்ள பால்கல்வி பற்றிய நூல்களையும், படச்சுருள்கள், சலனப்படங்கள் ஆகியவற்றையும் பால் கல்வியினைக் கற்பிக்கப் பயன்படுத்தலாம்.

- அ.ப.

**பாலச்சந்தர், வீணை :** வீணை வாசிப்பில் 'காயகி பாணி' ( வாய்ப்பாட்டு இசையை அடிப் படையாகக் கொண்ட ஒரு வாசிப்பு முறை ) என்ற ஒரு புதிய பாதையை உருவாக்கிய வீணை பாலசந்தர் இருபதாம் நூற்றாண்டில் கர்நாடக இசையில் தலை சிறந்த கலைஞராகத் திகழ்ந்தார். இரசிகர்களின் தரத்தை உயர்த்த வேண்டுமென்ற குறிக்கோளுடன், மரபிசையின் அடிப்படையில் காயகிபாணியை அமைத்தார். தமக்கு ஆசிரியர் என்று எவரையும் வைத்துக் கொள்ளாமல் கேள்வி ஞானம் மற்றும் ஆண்டவன் அருள் மூலம் இசைக்கலையில் ஓர் உன்னத நிலையை அடையலாம் என்பதற்கு இவர் எடுத்துக் காட்டாக விளங்கியவர்.

இவர், தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த வழக் கறிஞர் சுந்தராமையர், பார்வதி என்கிற செல்லம் மாள் தம்பதியரின் இரண்டாம் மகனாக 1927ஆம் ஆண்டு சென்னை மைலாப்பூரில் பிறந்தார். இளம் வயதிலேயே கஞ்சிரா, தபேலா, ஆர்மோனியம் ஆகிய இசைக்கருவிகளின் வாசிப்பிலும் வாய்ப்பாட்டிலும் இவர் சிறந்து விளங்கினார். சதுரங்க ஆட்டத்திலும் இவர் சிறந்து விளங்கினார். இவர்தம் அண்ணன் இராசம் சிறந்த வாய்ப்பாட்டுக் கலைஞராவார். பாலச்சந்தர் தம் அண்ணனுடன் சேர்ந்து இலங்கை மற்றும் கராச்சி, இலாகூர், தில்லி, சிம்லா ஆகிய இடங்களுக்குச் சென்று கச்சேரி செய்து சிறப்புப் பெற்றார்.

தம் பதினோராம் வயதில் கராச்சியில் தம் அண்ணன் பாட்டிற்குத் தபேலா வாசித்த கச்சேரி இவர் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது. அந்தக் கச்சேரிக்கு வந்திருந்த கட்டடக்கலை நிபுணர் பி. எச். முதலியாரின் மனைவி கிருட்டிணபாய் பாலச்சந்தரின் சிறப்பான தபேலா வாசிப்பைக் கேட்டு மகிழ்ந்து சித்தார் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினார். ஏழு மாதத்திற்குள்ளாகவே சித்தார் வாசிப்பில் நன்கு பயிற்சிபெற்றுத் தம் முதல் சித்தார்க் கச்சேரியை மைலாப்பூர் இரசிக ரஞ்சனி சபாவில் அரங்கேற்றினார். ஒரு முழுமையான கர்நாடக இசை, சித்தார்க் கலைஞராகப் பதினைந்தாம் வயதிலேயே சேர்ந்து மூன்றாண்டுகள் பணியாற்றினார். பல வகையான இசைக்கருவிகளை நாள்தோறும் வாசித்துப் பார்த்து விட்டு, வீணையே கர்நாடக இசை வாசிப்பிற்கு உகந்த கருவி என்ற முடிவுக்கு வந்து அதில் சிறப்புப்



பாலச்சந்தர், வீணை

பயிற்சி மேற்கொண்டார். இவ்வாறு இவர் வீணைப் பயிற்சி மேற்கொண்டிருந்த காலத்தில் காரைக்குடி சாம்பசிவ ஐயர் மற்றும் வீணை தனம்மாள் ஆகியோரின் வாசிப்பை முன்மாதிரியாகக் கொண்டு அப்படியே பின்பற்றி வாசித்ததாக இவர் குறிப்பிட்டுள்ளார். இவர் 1945ஆம் ஆண்டு முதல் தம் முழுக் கவனத்தையும் வீணை வாசிப்பில் மட்டும் செலுத்தத் தொடங்கினார்.

பல சபாக்கள், கோவில்கள், இசை விழாக்கள், திருமணங்கள், வானொலி ஆகியவற்றில் தொடர்ந்து வீணைக்கச்சேரிகள் செய்யத் தொடங்கினார். இசையரங்குகளில் இராக ஆலாபனை, தாளம் மட்டுமே இடம்பெறும் வகையில் வாசித்து வந்தமை இவருடைய வீணை இசையின் தனித்தன்மையை விளக்கியது. இவ்வாறு 45 இராக நிகழ்ச்சிகள் நிகழ்த்தியுள்ளார். சோவியத் நாட்டில் 1965இல் மூன்று மாத காலம் தங்கி, பல நகரங்களில் கச்சேரி செய்து சொற்பொழிவுகளும் ஆற்றினார். பிரான்சு, செர்மனி, போலந்து, ஹங்கேரி, சப்பான், சீனா எனப் பல நாடுகளுக்கும் சென்று இசையைப் பரப்பினார்.

இவர் இதுவரை 25 எல்.பி. இசைத்தட்டுகள் வெளியிட்டுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கன எழுபத்திரண்டு மேளகர்த்தா, இராகங்கள் அனைத்தையுமே வரிசையாக பன்னிரண்டு இசைத்தட்டுகளில் வாசித்துள்ளதாகவும், இரண்டு இசைத்தட்டுகளில் முத்துசுவாமி தீட்சிதர் இயற்றிய நவக்கிரக கிருத்திகளைத் தம்முடைய மாணவி காயத்திரி நாராயணனுடன் இணைந்து வாசித்துப் பாடிக் கொடுத்துள்ளமையும் ஆகும். இசைத்தட்டுகளைத் தொடர்ந்து பல ஒலி நாடாக்களும் இவரது இசையைத் தாங்கி வந்துள் ளன. சிறு வயதிலிருந்தே திரைப்படங்களில் நடித்தும் பின்னர் இசை அமைத்தும், தயாரித்தும் திரைப்படத் தொழிலிலும் பெரும் பணி புரிந்துள்ளார்.

இவர் தம் இசைப்புலமைக்காக ஏறத்தாழ 46 பட்டங்களும், விருதுகளும் இவருக்கு வழங்கப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை 1977இல் சங்கீத நாடக அகாதமியினரால் வழங்கப்பட்ட தேசிய விருது, 1982இல் இந்தியக் குடியரசுத் தலைவரால் அளிக்கப்பட்ட பத்மபூசன், இந்திய நுண்கலைக் கழகத்தார் வழங்கிய சங்கீத கலா சிகாமணி, மேற்கு வங்காளமும், சீனாவிலுள்ள அகில உலக நுண்கலை கலாச்சார அகாடமியும் வழங்கிய டாக்டர் பட்டங்கள் முதலியனவாகும்.

இவர் இசை தொடர்பான செய்திகளைச் சுவையாகவும், நகைச்சுவையோடும் விவாதிப்பார். இசைக்கு அநீதி செய்யப்பட்டதாக இவர் கருதும் எந்தச் செய்தியிலும் இவர் எதிர்ப்புக் காட்டத் தயங்கியதில்லை. இவர் தம் விரும்பிக்கேட்ட கலைஞர்களான டைகர் வரதாச்சாரியார், திருவாடுதுறை இராசரத்தினம் பிள்ளை, செம்பை வைத்தியநாத பாகவதர், மகாராசபுரம் விசுவநாத ஐயர், திருவாலங்காடு சுந்தரேச ஐயர் ஆகியோரைப் புகழ்ந்து ஆங்கிலத்தில் 112 வரிகளில் நீண்ட செய்யுள் ஒன்றை இயற்றி, அதை அழகாக அச்சிட்டு வெளியிட்டுள்ளார். வீணை பாலச்சந்தர் 1990ஆம் ஆண்டு மத்தியப் பிரதேசத்தில் பிலாய் என்ற ஊரில் கச்சேரி செய்யச் சென்றபோது மாரடைப்பால் காலமானார்.

- இ. அ.

**பாலசுப்பிரமணிய முதலியார், ம. :** இவர் சைவ நெறி வளர்த்த தமிழ்ப்பெரியார். இவர் மயிலை மாசிலாமணி முதலியாருக்கும் அன்னம்மாளுக்கும் கி.பி. 1896ஆம் ஆண்டு மார்ச் திங்கள் எட்டாம் நாள் மகனாய்த் தோன்றினார். இளமையிலேயே கல்வியில் சிறந்து விளங்கினார். இவர் மயிலாப்பூர் பெ.சு. ஐயர் உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் முதல் மாணவராக வெற்றிபெற்றார். தமிழில் மட்டுமின்றி ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றிலும் புலமை பெற்றார். பின்னர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து முதல் வகுப்பில் வெற்றியடைந்தார்.

இவர் தலைசிறந்த வழக்கறிஞரான அல்லாடி கிருட்டிணசாமி ஐயரிடம் பதினைந்து ஆண்டுகள் இளநிலை வழக்கறிஞராகப் பணிபுரிந்தார். இவர் 1926 ஆம் ஆண்டு திருமதி பார்வதியம்மாளைத் திருமணம் செய்தார். தமக்கு மகப்பேறு இல்லாமையால் இவர் உற்றார் உறவினர் குழந்தைகளை ஆதரித்து வளர்த்து வந்தார். இவர் மகாமகோபாத்தியாயர் டாக்டர் உ.வே. சாமிநாத ஐயருடன் தொடர்பு கொண்டு அவர் தம் நல்லறிவையும் உயரிய குறிக்கோளையும் பின்பற்றலானார்.

சைவ சித்தாந்த மகா சமாச மாநாடு 1921ஆம் ஆண்டு சென்னை மாநகரில் நடைபெற்றபோது

இவர் மகா சமாசச் செயலாளர் பதவியை ஏற்றுச் சிறப்புடன் செயல்பட்டார். இவர் பொறுப்பேற்றவுடன் **சித்தாந்தம்** இதழ் மீண்டும் வெளிவரத் தொடங்கியது. சைவத்திருமுறைகளையும், சித்தாந்த சாத்திரங்களையும் பல அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் சிறந்த முறையில் அடக்கவிலைப் பதிப்பாக வெளியிட்டார். சிவஞான போதம் மொழிபெயர்ப்பு நூலன்று என்பதை விளக்கி அதற்கான 120 காரணங்களைக்கொண்டு எழுதிய நூல் இவர்தம் சைவ சமயப் புலமையைப் புலப்படுத்துவதாகும்.

சைவப்பற்றுடையவர் ஆயினும், இவர் வைணவக் கொள்கையையும் ஆழ்ந்துணர்ந்து கற்றவர். எனவேதான், மயிலை மாதவதாசன் பதிப்பு என்ற பெயரில் நாலாயிர திவ்யபிரபந்தத்தை அழகாக அச்சிட்டு வெளியிட்டார். சமயத் துறையில் இவர் ஆற்றிய பணிகள் சிறப்பானவை. காசிப் பல்கலைக்கழகத்தில் 1950 ஆம் ஆண்டு இவர் சைவ சித்தாந்தம் பற்றி ஆங்கிலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு புகழ் வாய்ந்தது. தம் வாழ்நாளில் பல தலங்கட்கும் யாத்திரை செய்தும் சொற்பொழிவு நிகழ்த்தியும் இவர் சைவசமயத்திற்கு ஆக்கம் சேர்த்தார். இவர் 1958ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 14ஆம் நாள் காலமானார்.

- சா.உ.

**பிராப், விலாடிமிர்** : உருசிய நாட்டுப் பேரறிஞராகிய விலாடிமிர் பிராப் அமைப்பியல் கோட்பாட்டின் தந்தை எனக்கருதப்படுகிறார். இருபதாம் நூற்றாண்டில் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வில் புரட்சிகரமான மாறுதலை ஏற்படுத்தக் காரணமானவர் இவரே. அறிவியலில் பயன்படும் அமைப்பியல் என்ற சொல்லை எடுத்துத் தமது நூலில் கதைகளில் அமைப்பிற்குப் பயன்படுத்தியுள்ளார். பிராப் தன்னுடைய ஆய்விற்கு அஃவனேசன் ( Afanasev ) என்பார் தொகுத்த நூறு தேவதைக் கதைகளை எடுத்துக் கொண்டார். உறுப்புகளின் விளக்கமும், பகுதிகளாகிய உறுப்புகள் ஒன்றோடு ஒன்று கொள்ளும் உறவும், பகுதிகள் முழுமையோடு கொள்ளும் உறவும் அமைப்பியல் கோட்பாடு என்பதே இவரது கருத்து. இதனால் அனைத்து நாட்டுப்புறக் கதைகளும் ஓர் அமைப்புக்குள் உட்பட்டவையாகிவிடும்.

மேலும் பிராப்பின் அமைப்பியல் கோட்பாடு வகைப்படுத்துதல் என்னும் முறையை எளிமையாக்குவதால் நாட்டுப்புற இயலில் உள்ள பண்பாட்டுக் கூறுகளைப் பிரித்தறிய உதவும் அரிய சாதனமாக இதனை நாட்டுப்புற வியல் அறிஞர்கள் கருதுகின்றனர்.

பிராப் தமது தேவதைக் கதைகள் பற்றிய ஆய்வில் கண்டுபிடித்த அலகு 'செயல்' எனப்படும். பிராப்பின் கோட்பாட்டிற்குத் தொடர்பாட்டு ஆய்வு முறை ( Syntagmatic analysis ) என்பது பெயராகும்.

ஆர்னி தாமசனின் ஆய்வுமுறை அறிவியல் அடிப்படையில் அமையவில்லை என்ற காரணத்தால் இவர் இக்கோட்பாட்டை உருவாக்கினார். உருசிய மொழியில் **நாட்டுப்புறக் கதைகளின் உள்ளமைப்பு** ( Morphology of Folktales ) என்ற நூலை 1928ஆம் ஆண்டு வெளியிட்டார். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு 1958ஆம் ஆண்டு இந்நூல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது. பின்னர் 1960ஆம் ஆண்டளவில் அமெரிக்க நாட்டுப்புறவியல் அறிஞர்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்த கோட்பாடு அமைப்பியல் கோட்பாடாகும். கணிப்பானிலும் இம்முறை கையாளும் வகையில் இக்கோட்பாடு அமைந்துள்ளது.

பிராப்பின் அமைப்பியல் முறையினை அடிப்படையாகக் கொண்டு இலெவிசுட்ராசு ( Levystrauss) என்ற அறிஞர் நாட்டார் வழக்காற்றியலில் புராணக் கதைகளைப் பற்றிய அமைப்பியல் ஆய்வு செய்துள்ளார். இந்த ஆய்வானது நாட்டுப்புறவியல் ஆய்விற்குப் புதிய வழி முறைகளை வகுத்துத் தந்துள்ளது. அதன் பயனாக இருபது ஆண்டுகளுக்குப் பிறகு பிராப் தேவதைக் கதைகளின் வரலாற்று முறை ஆய்வையும் தொடர்ந்தார். அதன் பயனாக இவர் எழுதிய **தேவதைக் கதையின் வரலாற்று வேர்** ( The Historical Roots of the Fairy Tale ) என்ற நூல் 1946ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலில் இவர் தேவதைகளுக்கும் மதக்கோட்பாடுகளுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறியுள்ளார்.

- வி.கீ.

**பிறப்புத்தடை :** பிறப்புத்தடை என்ற சொல் மார்க்ரெட் சாங்கர் என்னும் அமெரிக்கச் செவிலித் தாயால் அறிமுகப்படுத்தப்பட்டது. இவர் நவீன குடும்பநலத் திட்டத்தின் முன்னோடி என அழைக்கப் படுகிறார். பிறப்புத்தடை என்னும் சொல்லானது விருப்பத்திற்கு மாறாக கருத்தரிப்பு மற்றும் குழந்தைப் பிறப்பு ஆகியவை நேராது தடுக்க தம்பதிகள் மேற்கொள்ளும் செயலைக்குறிக்கும். பிறப்புத்தடை மகப்பேற்றைக் கட்டுபடுத்தவதற்கு மட்டுமல்லாமல் மகப்பேற்றுக்கிடையே இடை வெளி விடுதற்கும், விரும்பும் சமயத்தில் குழந்தை களைப் பெற்றுக் கொள்வதற்கும் பயன்படுகிறது. இச்சொல்லானது கருத்தடைச் சாதனம், குடும்பக் கட்டுபாடு, திட்டமிட்ட குடும்பம், கருவளத்தடை, மகப்பேற்றுக்கிடையே இடைவெளி போன்ற சொற் களுக்கு இணையாகவே பயன்படுத்தப்படுகிறது. எனினும் பிறப்புத்தடை என்பது பிறப்புத்தடை முறை களை மட்டுமின்றி முயற்சி மற்றும் செயலையும் குறிக்கும்.

நார்மன் ஐம்சு என்பவர் 1936இல் பிறப்புத்தடை முறைகளின் வரலாற்றை ஆராய்ந்து, மனிதன் தன்னு டைய எண்ணிக்கை வளர்ச்சியைக் கட்டுப்படுத்தப் பல பிறப்புத்தடைகளை வரலாற்றுக்காலத்திற்கு முன்பிருந்தே பயன்படுத்தி இருக்கிறான் என்பதற் குப் பல சிறந்த சாட்சியங்களை அளித்திருக்கிறார். மானிடவியல் அறிஞர்கள் செயற்கையான கருக் கலைப்பு முறை, கல்வி அறிவு இல்லாத பண்டைய சமுதாயத்தில் உலகம் முழுவதும் இருந்ததாகக் குறிப் பிடுகின்றனர். பிறப்புத்தடையானது மனித வரலாற் றில் பரவலாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. தொடக்கக் காலங்களில் பிறப்புத் தடைக்குக் கடுமை யான எதிர்ப்பு சமயவாதிகளிடமிருந்தும், அரசாங்கத் திடமிருந்தும் இருந்தது. இது பற்றி பேசுவோர் மற் றும் எழுதுபவர்கள் சிறையில் அடைக்கப்பட்டார் கள். எழுத்துகளுக்கும் தடை விதிக்கப்பட்டன. ஆனால் இப்போது பெருகி வரும் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த பல நாட்டு அரசாங் கங்கள் பிறப்புத்தடையை நாட்டு நலனுக்குத் தேவை யான ஒன்றாகவே கற்பித்து வருகின்றன.

பிறப்புத்தடை முறைகள் உடலுறவினால் ஏற் படும் கருத்தரித்தலைத் தவிர்க்கத் தம்பதிகளால் எடுக்கப் படும் அனைத்து வகையான இடைக்கால மற்றும் நிரந்தர கருத்தடை முறைகளைக் குறிக்கும். குடும்ப நலத் திட்டத்தைப் பரவலாக்குவதில் பிறப்புத் தடைகளின் வளர்ச்சி முக்கிய இடத்தை வகிக்கிறது. எனவே அரசுகளும் தனியார் நிறுவனங் களும் பல்வேறு வகையான பிறப்புத்தடை முறை களை மக்களிடையே அறிமுகப்படுத்தியுள்ளன.

ஒரு சீரிய கருத்தடைக் கருவியின் தன்மைகளைக் கீழ்க்காணுமாறு கூறுவர். நற்பலனளிக்கக்கூடியதாக வும், தீங்கு விளைவிக்காததாகவும், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாகவும், மலிவானதாகவும், மாற்றிக் கொள்வதற்கும், நிருவகிப்பதற்கு எளிதான தாகவும், உடலுறவைப் பாதிக்காத வகையினதாக் வும், நீண்ட காலத்திற்கு வரக்கூடியதாகவும், மருத் துவ மேற்பார்வைக்கு மிகச்சிறிய அளவே அல்லது முழுமையாகவே இல்லாமல் இருக்க வேண்டும். ஆனால் இதுவரை கண்டுபிடித்துள்ள அல்லது புழக் கத்தில் இருக்கக்கூடிய எந்தக் கருத்தடைக் கருவி யிலும் மேற்சொன்ன அனைத்துத் தன்மைகளையும் கொண்டிருக்கவில்லை.

**முக்கிய கருத்தடை முறைகள்:** இரண்டு முறை கள் உள்ளன அவை முறையே, இடைக்கால முறை கள், நிரந்தர முறைகள்.

**இடைக்கால முறைகள் :** இடைக்கால முறை களைப் பின்வருமாறு பிரித்துள்ளனர்.

**1. நடத்தை சம்பந்தமான முறைகள் :**

1. கலவியின் பொழுது விந்து பெண்ணுறுப்பினுள் விழாதவாறு வெளியே எடுத்து விடுவது.

2. கணவன் மனைவி இருவரும் உடலுறவு கொள்ளாது விலகியிருத்தல்.

3. நீண்ட காலத்திற்குத் தாய்ப்பால் கொடுப்பது. இது குழந்தைப் பிறப்பிற்குப் பிறகு மாதவிடாயைத் தள்ளிப்போடும்.

4. உடலுறவிற்குப் பிறகு நீருடன் கலந்த வீட்டு முறையில் தயாரித்த விந்துக்கொல்லிக் கரைசலைப் பெண்ணுறுப்பினுள் பீச்சியடிப்பது.

**2. கருத்தடை மருந்துகளும் கருவிகளும் :**

1. வாய் வழியாகச் சாப்பிடும் கருத்தடை மாத்திரைகள்.

2. ஊசி வழியாகச் செலுத்தும் கருத்தடை மருந்து கள் மற்றும் உடலுக்குள்ளேயே பதித்து வைத்துக் கொள்ளும் மருந்துகள்.

3. உடலுறவிற்குப்பிறகு சாப்பிடும் மாத்திரைகள்.

4. கருப்பையினுள் பொருந்தும் கருத்தடைச் சாதனங்கள்.

5. பெண்ணுறுப்பினுள் பொருந்தும் விந்துக் கொல்லிகள்.

6. பெண்ணுறுப்பினுள் விந்து கருப்பையினுள் செல்வதைத் தடுக்கும் சாதனங்கள்.

7. ஆணுறைகள்.

**நிரந்தர முறைகள் :** நிரந்தர முறைகளை இரண்டு பிரிவாகப் பிரித்துள்ளனர். அவை 1. ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை, 2. பெண் கருத்தடை அறுவை சிகிச்சை.

**இடைக்கால முறைகள் :** இடைக்கால முறைகளை நான்கு பிரிவாகப் பிரித்துள்ளனர். அவை

**1. கலவின் பொழுது விந்து பெண்ணுறுப்பில் விழாதவாறு வெளியே எடுத்து விடுவது :** இது மிகவும் பழைய முறை. இதற்கு ஆண்களின் சுயக்கட்டுப்பாடும், பயிற்சியும் ஊக்கமும் தேவை. இம்முறையின் குறையானது ஆண் உறுப்பை வெளியில் எடுப்பதில் சிறிது விநாடிகள் தவறினாலும் விந்து உள்ளே தங்கி கர்ப்பம் தரிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டு விடும். இம்முறையின் தோல்வி பதினெட்டு விழுக்காடு எனக் கணக்கிட்டுள்ளனர்.

**2. கணவன் மனைவி இருவரும் உடலுறவு கொள்ளாது விலகியிருத்தல் :** கணவன், மனைவி இருவரும் உடலுறவு கொள்ளாது அறவே விலகியிருத்தல் ஒருமுறை. மற்றொன்று கருவுறாப் பருவத்தில் உடலுறவு கொண்டு கருவுறும் பருவத்தில் விலகியிருத்தல். கருவுறாப்பருவத்தைப் பாதுகாப்பான பருவம் எனவும், கருவுரும் பருவத்தைப் பாதுகாப்பற்ற பருவம் எனவும் அழைக்கின்றனர். மாதவிடாய்க்கு முன்னால் ஒரு வாரமும் பின்னால் ஒரு வாரமும் பாதுகாப்பான பருவம் எனப்படும். இரு மாதவிடாய்களுக்கிடையில் பொதுவாக ஒரே ஒரு கருமுட்டைதான் உருவாகிறது. இக்கரு முட்டை மாதவிடாய்க்குப் பதினான்கு நாட்களுக்கு முன் முட்டைப் பையிலிருந்து வெளிவருகிறது. இதன் கருத்தறிக்கும் திறன் அதிகம்போனால் இரண்டு நாள் மட்டுமே. இந்தச் சமயத்தில் கருத்தரிப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இது தோரயமாக ஒரு வார காலமாகும். ஆண் விந்து கருப்பையினுள் அதிகம் போனால் மூன்று நாட்களுக்குக் கருத்தறிக்கும் திறன் கொண்டிருக்கும். எனவே தான் மாதவிடாய்க்கு முன் ஒரு வார காலமும் பின் ஒரு வாரக்காலமும் பாதுகாப்பான பருவமாகக் கருதப்படுகிறது. பாதுகாப்பற்ற பருவத்தில் கலவியைத் தவிர்த்தால் கருவுறும் வாய்ப்பு 80 விழுக்காடு வரை குறையும்.

**3. நீண்ட நாட்களுக்குத் தாய்ப்பால் கொடுப்பது:** இம்முறையானது பெண்களுக்குக் குழந்தை பிறப்பதற்குப் பிறகு மாதவிடாய் திரும்புவதைத் தள்ளிப் போடுகிறது. இதனால் கருமுட்டைகள் உருவாவதற்கு வாய்ப்பில்லை. எனவே கருத்தறிப்பதற்கான வாய்ப்பும் குறைவு.

**4. உடலுறவிற்குப் பிறகு நீருடன் கலந்த வீட்டு முறையில் தயாரித்த விந்துக்கொல்லிகளைப் பெண் ணுறுப்பில் பீய்ச்சுவது :** இம்முறையானது கருத்தடை முறைகளிலேயே மிகவும் குறைந்த பயனுறுதி திறன் கொண்டதாகும். விந்துக் கொல்லிகளைப் பெண்ணுறுப்பினுள் பீய்ச்சுவதற்கு முன்பே விந்தானது கருப்பைக்குள் சென்றுவிட வாய்ப்புண்டு.

**2. கருத்தடை மருந்துகளும் கருவிகளும் :**

**1. வாய் வழியாகச் சாப்பிடும் கருத்தடை மாத்திரைகள் :** இவை செயற்கை ஹார்மோன்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவைகளாகும். பொதுவாகப் பெண்கள் தினம் கருத்தடை மாத்திரைகளை உட்கொள்ளும்போது கருமுட்டைகள் வளர்ந்து வெளிவருவது தடுக்கப்படுகிறது. கருமுட்டைகள் இல்லாதபொழுது கருத்தறிப்பதற்கான வாய்ப்பு இல்லை. மாத்திரைகளின் பயனுறு திறன் அதிகம். வாந்தி, தலைவலி, எடை கூடுதல், மார்பகம் இளகுதல், சில சமயங்களில் இரத்த அழுத்தம் போன்றவை ஏற்பட வாய்ப் புண்டு. மாத்திரைகளின் பயனுறு திறன் சோதனையில் 99 விழுக்காடு ஆகும். ஆனால் இதைப் பயன்படுத்தும்போது அதன் பயனுறு திறன் 97 விழுக்காடு.

**2. ஊசி வழியாக உடலுக்குள் செலுத்தும் மருந்துகள் மற்றும் உடலுக்குள்ளேயே பதித்து வைத்துக்கொள்ளும் மருந்துகள் :** இவை செயற்கை ஹார்மோன்களால் தயாரிக்கப்பட்டதாகும். இவை கருமுட்டை வளர்வதைத் தடுத்து கர்ப்பம் அடையாமல் பாதுகாக்கிறது. இவற்றை ஐந்து வகைகளில் கருத்தரிப்பதைத் தடுக்கப் பயன்படுத்துகிறார்கள்.

1. ஊசி வழியாகச் செலுத்தும் கருத்தடை மருந்து.

2. ஹார்மோன்களை வெளிப்படுத்தும் கருப்பையினுள் பொருந்தும் கருவிகள்

3. தோலிற்கு அடியில் பதிக்கப்படும் ஹார்மோன்கள் அடங்கிய உறைகள்

4. பெண்ணுறுப்பினுள் பொருத்தும் வளையங்கள்

5. மாதமொருமுறை வாய்வழியாகச் சாப்பிடும் மாத்திரைகள்.

இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு கால அளவுகளில் பயனுறுதி திறன் கொண்டவை. ஊசி வழியாகச் செலுத்தும் ஹார்மோன்கள் எட்டு வாரத்திலிருந்து மூன்று அல்லது ஆறு மாதத்திற்கு ஒரு முறை பயன்படுத்துவதற்குத் தகுந்தாற்போல் உள்ளது. ஹார்மோன்களை வெளியிடும் பெண்ணுறுப்பிற்குள் பொருத்திக்கொள்ளும் வடிவ சாதனங்கள் கிட்டத்தட்ட ஒரு ஆண்டிற்குப் பயனுறுதி திறன் கொண்டவை. உலக சுகாதார நிறுவனம் தயாரித்த இச்சாதனம் ஒன்று ஏழு வருடத்திற்குப் பயனுறுதி திறன் கொண்டது. தோலிற்குக் கீழாகப் பதித்து வைத்துக் கொள்ளும் ஹார்மோன்கள் அடங்கிய உறைகள் ஐந்து முதல் ஏழு வருடம் வரை செயல் திறன் கொண்டவை. இவற்றில் 'நார்பிளாண்ட்' எனப்படும் முறையானது பிரபலமானது. இவை வளையும் தன்மையுடைய, கரைந்து போகாத, ஹார்மோன்களால் நிரப்பப்பட்ட சிறிய உறைகள் ஆகும். இவை மெதுவாக உடலினுள் கலந்து கருமுட்டை வெளிவருவதைத் தடுத்து கருத்தறிக்காத வண்ணம் காக்கிறது. இவை பெண்களின் முழங்கைக்கு மேலாகவோ கீழாகவோ தோலிற்கு அடியில் பதித்து வைக்கப்படுகிறது. இவை ஹார்மோன்களை மெதுவாக அதே சமயத்தில் சீரான அளவில் பல ஆண்டுகளுக்கு வெளியிடுகிறது. நார்பிளாண்டை உள்ளே வைப்பதற்கும் வெளியே எடுப்பதற்கும் சிறிய அறுவை சிகிச்சை தேவைப்படுகிறது. பெண்ணுறுப்பினுள் பொருந்தும் வளையங்கள் மெதுவாக ஹார்மோன்களை வெளியிட்டு கருவுருதலைத் தடுக்கிறது. இவை பெண்ணுறுப்பிற்குள் மூன்று வாரத்திற்கோ ஆறு மாதத்திற்கோ பொருத்திக் கொள்ளும்படி தயாரிக்கப்பட்டுள்ளது.

**3. உடலுறவிற்குப் பிறகு பயன்படுத்தப்படும் கருத்தடை மாத்திரைகள் :** ஹார்மோன்கள் அடங்கிய நவீன கருத்தடை மாத்திரைகள் வித்தியாசமானவை. பெண் கருமுட்டைக்குள் கலந்து கருவுருதலைத் தடுக்கின்றன. இம்மாத்திரைகள் வாய் வழியாகவே கொடுக்கப்படுகின்றன. உடலுறவு முடிந்து 72 மணி நேரத்திற்குள் இம்மருந்தை எடுக்க வேண்டும். இவை எப்படிச் செயல்படுகின்றன என்பது இன்னும் தெளிவாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

**4. கருப்பையினுள் பொருத்தும் சாதனங்கள் :** இவை நெகிழிகளாலும் துருப்பிடிக்காத உலோகங்களாலும் பல்வேறுபட்ட வடிவங்களிலும் ஆனவை. இவை பெண்களின் கருப்பைக்குள் பொருத்தப்படுகின்றன. இவற்றில் அதிகமாகப் பயன்படுத்தப்படுபவை இரண்டு சாதனங்கள் ஒன்று, லூப் எனப்படும் சுத்தமான நெகிழிகள் அல்லது துருப்பிடிக்காத உலோக சாதனம். ஆங்கில எழுத்தான S போன்று இரண்டுபுறமும் வளைந்திருக்கும். இதன் நுனி ஒரு நைலான் கயிறால் இணைக்கப்பட்டிருக்கும். இந்தக் கயிற்றைத் தொட்டுப்பார்த்து சாதனம் கருப்பைக்குள் இருப்பதை உறுதி செய்து கொள்ளலாம். இதைப் பயன்படுத்துபவர்கள் எவ்வளவு நாட்கள் விரும்புகிறார்களோ அவ்வளவு நாட்களும் கருப்பைக்குள் வைத்திருக்கலாம். இரண்டாவது மருந்து கலந்து தயாரித்த சாதனங்கள் இவை எண் 7 வடிவில் இருக்கும் அல்லது ஆங்கில எழுத்தான T வடிவில் இருக்கும். இவ்வடிவச் சாதனங்கள் அதிகப் புழக்கத்தில் உள்ளன. இவை தாமிரம் அல்லது ஹார்மோன்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்டவை. தாமிர T மிக அதிகமான பயனுறுதி திறன் கொண்டது என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இவற்றை நான்கு ஆண்டுகளுக்குக் கருப்பைக்குள் வைத்துக் கொள்ளலாம். இச்சாதனங்களினால் ஏற்படும் குறிப்பிடத்தகுந்த பக்க விளைவானது இரத்தப்போக்குப் பிரச்சினையாகும்.

**5. பெண்ணுறுப்பிற்குள் செலுத்தக்கூடிய விந்துக்கொல்லிகள் :** விந்துக்கொல்லிகள், மாத்திரைகள் அல்லது பசை வடிவில் ஆனதாகும். மாத்திரைகளை உடலுறவிற்குப் பத்து அல்லது பதினைந்து நிமிடங்களுக்கு முன்னால் பெண்ணுறுப்பினுள் திணித்துவிட வேண்டும். இவை மெதுவாகக் கரைந்து நுரைகளை ஏற்படுத்தும். இந்த நுரைகள் விந்துகளைக் கொல்வது மட்டுமல்லாமல் அவை கருப்பைக்குள் நுழைவதையும் தடுக்கிறது. இவை பெண்ணுறுப்பிற்குள் எரிச்சலையும், அரிப்பையும் ஏற்படுத்தலாம்.

**6. விந்து கருப்பையினுள் செல்வதைத் தடுக்கும் சாதனங்கள் :** இவை கருப்பைக்குச் செல்லும் பாதையின் வாயிலில் விந்து உள்ளே சென்று விடாத வாறு தடுப்பதற்குப் பொருத்தப்படும் சாதனங்களாகும். இவை மெல்லிய செயற்கை நெகிழிகளாலான ஒரு குவிந்த கிண்ணத்தைப் போன்ற அமைப்புடன் செய்யப்பட்டதாகும். இச்சாதனங்கள் உடலுறவிற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்னால் பெண்ணுறுப்பினுள் பொருத்த வேண்டும். உடலுறவு முடித்து ஆறு மணி நேரத்திற்கு அப்படியே இருக்க வேண்டும்.

கருப்பையின் வாயிலை மட்டும் அடைக்கும் தொப்பி. இது மேற்சொன்ன சாதனத்தைக் காட்டிலும் அளவில் சிறியது. தொப்பி போன்ற அமைப்பையுடையது. ஒருமுறை பொருத்திவிட்டால் அடுத்த மாதவிடாய் வரையிலும் எடுக்க வேண்டியதில்லை.

**7. ஆணுறைகள் :** மிக அதிகமாக ஆண்களால் பயன்படுத்தப்படும் கருத்தடை முறையாகும். சாதாரண இரப்பரினால் ஆனதாகும். இது ஆணுறுப்பை முழுவதுமாக மூடிவிடுகிறது. இவை பெண்ணுறுப்பினுள் விந்துகள் விழுவதைத் தடுத்து கருத்தரித் தலைத் தடுக்கிறது.

**நிரந்தர முறைகள்**

**1. ஆண் கருத்தடை அறுவை சிகிச்சை :** விந்துகள் ஆண்களின் விதை உறுப்புகளில் உருவாகிறது. இந்த விதை உறுப்புகளிலிருந்து ஆணுறுப்பிற்கு விந்துகளை எடுத்துச்செல்லும் குழாய்களைக் குறைந்தது ஒரு செ.மீ. நீளத்திற்கு அறுவை சிகிச்சை மூலம் வெட்டிவிடுவதாகும்.

**2. பெண் கருத்தடை அறுவை சிகிச்சை :** கர்ப்பப் பைக்கு கரு முட்டைகளை எடுத்து வரும் குழாய்களை அறுவை சிகிச்சை மூலம் வெட்டி மூடி விடுவதாகும். இதற்குப்பிறகு கருமுட்டைகள் ஆண் விந்துகளைச் சந்திப்பதற்கான வாய்ப்பு இல்லை.

**கருத்தடை முறைகளின் பயனுறு திறன் :** கருத்தடை முறைகளின் பயனுறு திறன் ஒரு குறிப்பிட்ட கருத்தடை முறையைப் பயன்படுத்தும் பொழுது அதனால் ஓர் ஆண்டிற்குக் கர்ப்பம் ஏற்படுத்துவதற்கான வாய்ப்பை எத்தனை விழுக்காடு குறைக்கிறது என்பதே. கீழ்க்காணும் கருத்தடை முறைகளின் பயனுறுதித் திறனை வகைப்படுத்தலாம்.

பெண் கருத்தடை அறுவை சிகிச்சை முறையில் 99 விழுக்காடு, ஆண் கருத்தடை அறுவையில் சிகிச்சை முறையில் 99 விழுக்காடு, ஊசி வழியாகச் செலுத்தும் கருத்தடை மருந்துகள் 99 விழுக்காடு, வாய் வழியாகச் சாப்பிடும் மருந்துகள் 97 விழுக்காடு, கருப்பையினுள் பொருத்தும் கருத்தடை சாதனங்கள் 94.5 விழுக்காடு, விந்துக்கொல்லி மாத்திரைகள் 90 விழுக்காடு, ஆணுறைகள் 88 விழுக்காடு, கலவியின் போது விந்து பெண்ணுறுப்பினுள் விழாதவாறு வெளியே எடுத்து விடுவது 82 விழுக்காடு, கருவுறாப் பருவத்தில் உடலுறவு கொண்டு கருவுறுப் பருவத்தில் விலகி இருப்பது 80 விழுக்காடு என்ற விகிதங்களில் கருத்தடை முறைகளின் பயனுறுதி திறன் உள்ளது.

ஒரு நாட்டின் கருவளத்தைக் கட்டுப்படுத்துவதில் பிறப்புத் தடைகள் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்திய அரசு கி.பி. 2000த்தில் குழந்தை பெற்றுக் கொள்ளக்கூடிய வயதில் உள்ள தம்பதியர்களில் அறுபது விழுக்காட்டினர் ஏதாவது ஒரு கருத்தடை முறையைக் கடைப்பிடிக்கச் செய்ய வேண்டும் என்ற இலக்கு நிருணயித்துள்ளது. அறுபது விழுக்காடு தம்பதியர்கள் கருத்தடை முறைகளைப் பயன்படுத்தினால் மக்கள் தொகையின் வளர்ச்சி நின்றுவிடும்.

- சௌ. கி.

**புற ஊக்கி :** தனி மனிதனுடைய நடத்தையைப் பற்றி ஆராயும்போது ஊக்கியை விடச் சிறந்த உளவியல் கருதுகோள் கிடையாது. மனிதர்களுக்குப் பல குறிக்கோள்களிருக்கின்றன. ஒவ்வொரு குறிக்கோளும் ஓர் ஊக்கத்தால் உந்தப்படுகிறது. உடற்கூற்று சார்பான ஊக்கிகள், உளச்சார்பான ஊக்கிகள், சமூக ஊக்கிகள், அடிமன ஊக்கிகள் என ஊக்கிகளை வகைப்படுத்தலாம். அபிரகாம் மாசுலோ ( Abraham Maslow ) ஊக்கிகளை வேறுவகையாகவும் வகைப்படுத்தியுள்ளார். அவை உடற்கூற்றியல், பாதுகாப்பு, அன்பு, மரியாதை, தன்னிலை அடைதல் என்று ஐந்து வகைகளில் அடங்குகின்றன. தொழில்சார்ந்த நிறுவனங்களில் மனிதர்களின் நடத்தையை ஆராய்ந்தவர்கள் புறஊக்கி ( Extrinsic Motives ) என்றும் அகஊக்கி ( Intrinsic Motives ) என்றும் இரண்டு வகைகளில் அடக்கினர். உணர்ச்சித் துடிப்புகளாலும், தூண்டுதல்

களாலும் செயலில் செலுத்தப்படுவதைவிட, மனிதர்கள் தங்களுடைய குறிக்கோள்கள், நோக்கங்கள், பயன் விளைவுகள் முதலியவைகளினால் செயலில் செலுத்தப்பட வேண்டுமென்று ஆவல் கொள்கின்றனர். தேவைகள் நிறைவேற்றப்பட்ட பிறகும் தேவைகள் தொடர்கின்றபொழுதும் உயர்ந்த தேவைகளைப் புறக்கணிப்பதும், உயர்ந்த தேவைகளுக்கும் சாதாரண தேவைகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளைப் புறக்கணிப்பதும் மனிதர்களிடம் நிகழக்கூடிய வைகளாக இருக்கின்றன. இந்த நிலை அவர்களை ஏமாற்றங்களுக்குச் இட்டுச்செல்லலாம். ஒரு நலம் வாய்ந்த மனிதனின் தேவைகள் ஒரு கட்டத்தில் நிறைவேற்றப்பட்டவுடன் அவன் தன் தேவைக்கான விருப்பங்களைப் புறக்கணித்து விடுவதில்லை. தற்காலிகமான ஒரு மனநிறைவுக்குப் பிறகு உயர்ந்த விருப்பங்கள் ஏற்படுகின்றன. தியாகிகளின் ஊக்கிகளையும், துறவிகளின் ஊக்கிகளையும் பற்றி இன்னும் சரியான அளவு புரிந்துகொள்ளப்படவில்லை. அதேபோன்று வீரர்கள், நாட்டுப் பற்றுடையவர்கள், தன்னலமற்ற மனிதர்கள் ஆகியவர்களின் ஊக்கிகளைப் பற்றியும் தெளிவாக அறிய முடியவில்லை. எனவே, புறஊக்கி அகஊக்கி ஆகிய வகைப்படுத்தங்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் ஆராயப்பட்டிருக்கின்றன. இவை பெரிதும் தொழிற்சாலைகள், அமைப்பு நிறுவனங்கள் முதலியவைகளில் பணிபுரியும் பணியாளர்களின் நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்த முடிவுகளைக் கொண்டு எழுந்த வகைப் படுத்தலாம்.

புறஊக்கி என்பது தனிமனிதன் அல்லது ஒரு பணியாளர் தான் பணிபுரியுமிடத்தைச் சுற்றியுள்ள சூழ்நிலையிலிருந்து பெறுகின்ற ஊதியமாகும். பணியாளர்கள் பல வழிகளில் ஊக்கப்படுத்தப்படலாம். பணியாளர் பணியைச் சிறப்பாகச் செய்வதற்குத் தூண்டு விசைகள் ( Incentives ) மிகவும் பயன்படுகின்றன. அந் தத் தூண்டுவிசைகள் வேலை செய்யும் சூழ்நிலையிலிருந்தும் வரலாம். ஒருவரின் சுற்றுப் புறச் சூழ்நிலையிலிருந்து பெறுகின்ற மதிப்பீடுதான் புறஊக்கி என்று பொதுவாகக் கருதப்படுகிறது. செய்கின்ற பணிக்குப் பெறுகின்ற ஊதியம் அல்லது சம்பளம், மேற்பார்வையாளர் தொடர்புகள், உரிமைக் காலம், பாராட்டுகள், வேலையுயர்வு முதலியவை புறஊக்கிகளாகச் செயல்படுகின்றன. ஆனால், அதேசமயத்தில் அகஊக்கிகள் என்று கருதப்படுபவை. பணியின் உள்ளடக்கப் பொருள்களோடு தொடர்புபடுத்தப்பட்ட பணியாளரின் உணர்ச்சி, பணியாளர் செய்கின்ற வேலையின் மதிப்பீடு. தனியாளின் தகுதி, வெற்றி, தன்னிலை அடைதல் என்பன. புறஊக்கிகள் தனி மனித மேம்பாட்டை ஏற்படுத்துகின்றன. ஒரு போட்டியில் வெற்றி பெறுகின்ற விளையாட்டு வீரன் பரிசு பெறுகின்றான். அனைவராலும் பாராட்டப்படுகின்றான். அவனுக்கு அதன் காரணமாக நல்லதொரு தொழில் நிறுவனத்தில் நல்ல வேலையும் கிடைக்கலாம் அல்லது இப்போதுள்ள வேலையில் உயர்வும் கிடைக் கலாம்.

**சம்பளம் :** மற்றெல்லாவற்றையும்விட இது ஒரு சிறந்த புற ஊக்கியாகும். ஒருவர் செய்கின்ற பணிக்குப் பெறுகின்ற ஊதியந்தான் சம்பளம். இது ஒருநாள் வேலை செய்து பெறுகின்ற நாட்கூலியாகவுமிருக்கலாம். வாரத்திற்கு ஒருமுறை பெறுகின்ற வாரச்சம்பளமாகவுமிருக்கலாம். எதுவாகவிருப்பினும் அது ஒருவர் செய்த பணிக்குக் கிடைக்கின்ற ஊதியமாகும். அதைப்பெறுவதில் பணியாளருக்கு ஒரு மகிழ்ச்சியிருக்கின்றது. ஏனென்றால் அதைக்கொண்டுதான் பணியாளர் தன்னுடைய வாழ்க்கையின் தரத்தை நிருணயிக்கின்றார். சம்பளம் நிருவாகத்தினரிடமிருந்து பணியாளருக்கு வருகின்றது. அதைப் பெறுவதில் பணியாளர் தான் செய்த பணியில் மனநிறைவு கொள்கின்றார். மனநிறைவு ஓர் அகவூக்கியாகும். அதை புற ஊக்கியான சம்பளம் நிருணயிக்கின்றது.

**மேற்பார்வையாளர் தொடர்பு:** ஒவ்வொரு பணியாளரும் நிறுவனங்களில் ஒருவரால் மேற்பார்வை செய்யப்படுகின்றார். மேற்பார்வையாளரிடமிருந்து பணியாளர் தனக்கு வேண்டிய வழிமுறைகளைப் பெறுகிறார். அவர் கூறும் நல்லுரைகளையும் ஆணைகளையும் ஏற்றுச் செயல்புரிய வேண்டியிருக்கின்றது. மேலும், மேற்பார்வையாளர்தான் பணியாளரின் பணியின் திறமைகளைப் பற்றி நிறுவனத்தினருக்குத் தெரிவிப்பவர். எனவே, பணியாளர் மேற்பார்வையாளரோடு நெருங்கித் தொடர்பு கொண்டொழுக வேண்டியிருக்கின்றது. பணியாளர் வேலையுயர்வுக்குத் தகுதி பெற்றவரா? இல்லையா? என்பதை மேற்பார்வையாளர் தான் முடிவு செய்கின்றார். பணியாளர் மேற்பார்வையாளரோடு கொண்டுள்ள தொடர்பு நல்ல நட்புறவுள்ளதாகவுமிருக்கலாம். சில

சமயங்களில் இறுக்கமாகவுமிருக்கலாம். எப்படியிருப்பினும் இவ்விதமான தொடர்புகள் வெளியிலிருந்து வருவதால் புறஊக்கியாகக் கருதப்படுகிறது.

**உரிமைக்காலம் :** இது பணிபுரியும் காலத்தை நிருணயம் செய்யும் ஓர் ஒப்பந்த விதியாகும். நிறுவனங்கள் பணியாளர்களை அமர்த்தும்போது ஒரு காலக்கெடுவை நிருணயித்து அமர்த்துகின்றன. அவ்விதமான ஓர் ஒப்பந்தம் பணியாளர்களால் ஏற்படும் பல தொந்தரவுகளைக் களையும் பொருட்டு நிறுவனத்தினர் கடைப்பிடிக்கும் ஒரு கொள்கையாகும். சில நிறுவனங்கள் பணியாளர் வேலைக்குச் சேர்ந்த நாளிலிருந்து ஓய்வுபெறும் காலம் வரையில் பணிபுரியலாம். இது அவர்களின் உரிமைக்காலம். ஆனால், சில நிறுவனங்கள் பணியாளர்களை இரண்டு, நான்கு, பத்து ஆண்டுகள் என நிருணயித்து ஓர் ஒப்பந்தம் செய்துகொள்கின்றனர். அந்தக் காலத்திற்குப் பிறகு நிறுவனத்தினர் விரும்பினால் மேலும் சில ஆண்டுகள் அவ்வொப்பந்தத்தை நீடிக்கலாம். பணியாளரின் பணிபுரியும் காலம் நிறுவனத்தினரால் நிருணயிக்கப்படுகிறது. எனவே இது ஒரு புறஊக்கியாகின்றது.

**பாராட்டுகள் :** ஒருவர் செய்கின்ற பணி சிறப்பாக இருக்குமானால் அல்லது உற்பத்தி நல்லமுறையில் அதிகரித்திருக்குமானால் அவருக்குப் பலரிடமிருந்தும் பாராட்டுகள் வருகின்றன. மேற்பார்வையாளர், நிறுவனத்தினர், உடன் பணி செய்வோர், நண்பர்கள் முதலியவர்களிடமிருந்து பாராட்டுகள் வரலாம். நிருவாகத்தினர் பாராட்டி, பரிசுகளும், நற்சாட்சிப் பத்திரங்களும் வழங்கலாம். இது அவருக்கு வேலையுயர்வுக்கு உறுதுணை செய்யலாம். இவை பணியாளருக்கு மேலும் மேலும் ஊக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவர் பணிகளை மேலும் சிறப்பாக செய்யலாம். எனவே, இது பாராட்டு புறத்தைச் சார்ந்த ஊக்கியாகும்.

**வேலையுயர்வு வாய்ப்புகள் :** தொழில் நிறுவனங்கள் அடிக்கடி விரிவடைகின்றன. அதனால் பணியாளர்கள் அதிகம் தேவைப்படுகின்றனர். சில பணியாளர்கள் அந்த நிறுவனத்தைவிட்டு வேறு நிறுவனத்திற்குச் செல்லலாம். சிலர் பணியிலிருந்து ஓய்வு பெறலாம். நிறுவனம் சிலரைப் பணியிலிருந்து நீக்கியிருக்கலாம். இதனால் சில பணிகளில் வேலைவாய்ப்பு ஏற்படுகின்றது. இதற்கான பணியாளர்களை வெளியிலிருந்து புதிதாக அமர்த்துவதை விட நிறுவனத்தில் பணிபுரிகின்றவர்களையே வேலையுயர்வு கொடுத்து அவ்வேலைகளில் அமர்த்துவதற்கு நிறுவனத்தினர் முடிவு எடுத்திருக்கலாம். அப்படியாயின் எந்த பணியாளருக்கு வேலையுயர்வு கொடுப்பது என்ற சிக்கல் எழுகிறது. இந்தச் சமயத்தில்தான் நிறுவனத்தினர் பணியாளரின் கடந்தகால நடத்தையைப் பற்றி ஆராய்கின்றனர். தொடக்கத்திலிருந்து முரண்பாடுகளும், சிக்கல்களும் இன்றி சிறப்பான முறையில் பணியாற்றிய பணியாளர்களையும், நிறுவனத்திடம் வாய்மை தவறாமல் பணிபுரிந்தவர்களையும் பணி உயர்வுக்கு அவர்கள் பரிந்துரை செய்கின்றனர். இந்த முடிவு புறத்திலிருந்து வருகின்ற ஓர் ஊக்கியாகும்.

இவைகளின்றி வேறு சில கூறுகளும் புறவூக்கிகளாகக் கருதப்படுகின்றன. அவை பணியில் அடங்கியுள்ள கூறுகள், குழுவின் படித்தரம் ( Group norm ), உடன் பணியாளர்களின் தூண்டுதல் முதலியவைகளாகும்.

- மு. இரா.

**துணை நூல்கள் :**

1. Robbins, S.P., 1985, **Organization Behaviours**, Prentice - Hall of India Private Ltd, New Delhi.

2. Schein, E.H., 1973, **Organizational Psychology**, Prentice - Hall of India Private Ltd, New Delhi.

3. Vroom, V.H., 1978, **Work and Motivation**, Wiley Eastern Ltd, New Delhi.

**பெரியபட்டினம் :** இவ்வூர் இராமநாதபுரத்திலிருந்து தென்கிழக்குத் திசையில் இருபது கிலோ மீட்டர் தொலைவில் வங்காள விரிகுடாக்கடலின் கரையில் அமைந்துள்ளது. இவ்வூரை கி.பி. பத்தாம் நூற். சேர்ந்த கல்வெட்டு ஒன்று 'பராக்கிரம பட்டினம்' என்று குறித்துள்ளது. குறிப்பாக இப்பெயர் பராக்கிரம பாண்டியன் என்ற பாண்டிய மன்னின் பெயருடன் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

இலங்கையின் வரலாற்று ஆதாரமான மகாவம்சம் இலங்கையின் படைத்தளபதி செகத்விசயன், மூன்றுபுரம் கோட்டைச்சுவருடன் காணப்பட்ட பராக்கிரமபட்டினத்தைக் கைப்பற்றியதாகக் கூறுகிறது. பெரியபட்டினத்தின் ஒரு பகுதி கோட்டை

வாசல் என்று உள்ளூர் மக்களால் இன்றும் அழைக்கப் படுவது இவ்வூர் கோட்டையுடன் விளங்கியதை காட்டும். மேலும், இவ்வூர் கி.பி. 1199ஆம் ஆண்டு வரை 'பவித்திரமாணிக்கப்பட்டினம்' என்றும் அழைக்கப்படுகிறது. இதை உறுதி செய்யும் வகையில், பெரிய பட்டினத்திலிருந்து நான்கு கி.மீ தூரத்தில் அமைந்துள்ள திருப்புல்லாளி என்ற இடத்தில் உள்ள கோவிலின் கல்வெட்டு ஒன்று பவித்திர மாணிக்கப்பட்டினம் இக்கோயிலின் கிழக்குத்திசையில் அமைந்திருந்ததாகக் கூறுவது பொருத்தமாக உள்ளது. மார்க்கோபோலோ, இபின்பதூதா போன்ற அயல்நாட்டுப் பயணிகள் இவ்வூரை பட்டன் அல்லது 'படன்' என்று குறித்துள்ளனர்.

பெரியபட்டினத்தில், தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் குழு ஒன்று 1987ஆம் ஆண்டு அகழாய்வை மேற்கொண்டது. அக்குழு பழங்கால மக்கள் வாழ்ந்த இரண்டு பகுதிகளை நத்த மேடு, கழிமங்குண்டு ஆகிய இடங்களைக் கண்டு பிடித்தனர். அவை இரண்டின் பரப்பளவு முறையே இருபத்தைந்து மற்றும் நாற்பது ஹெக்டர் ஆகும். அவற்றில் நத்தமேடு, பெரியபட்டினத்தின் மேற்கிலும், கழிமங்குண்டு பெரியபட்டினத்திலிருந்து மேற்கே ஒரு கி.மீ தூரத்திலும் உள்ளன. இப்பகுதியில் ஏழு அகழாய்வுக் குழிகள் அக்குழுவினரால் தோண்டப்பட்டுள்ளன அவற்றில் மூன்று அகழாய்வுக் குழிகள் மூன்று மீட்டர் ஆழம் வரை பண்பாட்டு நிலைகளைக் காட்டுகின்றன. அம்மூன்று குழிகளுமே சீன மண்பாண்டங்கள் காணப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் அவ்வகழ்வாய்வில் ஒரு சீனக் காசும், சோழ, பாண்டிய நாணயங்களும் கிடைத்துள்ளன. சில செம்பு நாணயங்கள் பாண்டியர்களின் பட்டங்களான புவனேசுவீரன், சமரகோல கலன், கச்சி வழங்கும் பெருமாள் ஆகிய தொடர்களைக் கொண்டுள்ளன. இவை அனைத்துமே கி.பி. 13 - 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். மதுரை சுல்தான்களின் நாணயங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவ்வகழ்வாய்விற்கு முன்னரே இங்கே மேற்பரப்பில் கண்டெடுக்கப்பட்ட சில பொன் நாணயங்கள் இராமநாதபுரத்தில் அமைந்துள்ள தமிழக அரசு தொல்பொருள் துறையின் அருங்காட்சியகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும் ஓர் அகழாய்வுக் குழியின் இயற்கைத் தளத்தில் மூன்று சிறிய வட்ட வடிவக் கிணறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இங்கு நடைபெற்ற தொல்பொருள் அகழாய்வை டோக்கியோ பல்கலைக்கழகப் பேராசிரியர் நொபுரு கரோசிமா தலைமையில் அயல்நாட்டு அறிஞர்கள் பார்வையிட்டுள்ளனர். அகழாய்வில் கிடைத்த சீன மண்பாண்டங்களைச் சிறப்பாக ஆராய்ந்த பேராசிரியர் நொபுரு கரோசிமா, இவை கி.பி. பதின்மூன்று - பதினான்கு நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றும், இவை சீனாவிலிருந்து பெரியபட்டினத்திற்கு வந்திருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர். இக்கண்டு பிடிப்பின் மூலம் சீன மொழியில் உள்ள பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த நூலில் கூறப்பட்டுள்ள ஒரு தென்னிந்திய கடற்கரை நகரைக் கண்டுபிடிக்க முடிந்தது. தௌயி - சிலு ( Daoyi - zhilue ) என்ற அந்த நூலில் தாபடன் என்ற ஒரு தென்னிந்தியத் துறைமுகப் பட்டினம் குறிக்கப்பட்டுள்ளது. அப்பழங்காலத் துறைமுகம் இப்போதைய பெரியபட்டினம் ஆகும். இதன் மூலம் தமிழகத்திற்கும் சீனாவுக்குமிடையே 13 - 14 ஆம் நூற்றாண்டுகளில் கடல் வழி தொடர்பு இருந்தது மட்டுமல்லாது, பாண்டிய மன்னர்களின் ஆட்சியின் கீழ் இவ்வூர் ஒரு சிறந்த பன்னாட்டுத் துறைமுக நகராக விளங்கியதும் தெளி வாகியது.

காயல்பட்டினம் பாண்டியர்களின் முக்கிய துறைமுகமாக இருந்து தனது மதிப்பை இழந்த நேரத்தில் கி.பி. பதின்மூன்று - பதினான்கு நூற்றாண்டில் பாண்டியர்களின் மிக முக்கியத் துறைமுகமாக பெரியபட்டினம் விளங்கியிருக்க வேண்டும். இதே காலக்கட்டத்தில் பாண்டியநாடு முகமதியர்களின் ஆதிக்கத்தில் இருந்தபோது இபின் - பாதுதா என்ற முகமதியக் கடல் பயணி இத்துறைமுகம் வந்து, தங்கியிருந்து பின்பு, இங்கிருந்து ஒரு கப்பல் மூலம் ஏமன் சென்றதாக வரலாற்றுச் செய்தியுண்டு. மேலும் கி.பி. 1293 இல் மார்க்கபோலோ என்ற கடல்பயணியும், சீனாவிலிருந்து இலங்கை வழியாக இந்தியா வந்த பொழுது பெரியபட்டினத்திற்கு வந்து சென்ற செய்தியும் வரலாற்று வாயிலாக அறியலாம்.

இப்போது பெரியபட்டினம் கடற்கரையிலிருந்து ஒரு கி.மீ. மேற்கே அமைந்துள்ளது. கடலுக்கும் ஊருக்குமிடையே கப்பலாறு - ஊரணி என்ற பெரிய நீண்ட குளம் ஒன்று அமைந்துள்ளது. கப்பலாறு - ஊரணி என்ற பெயரின் பொருளும், அதன் அமைப்பும் இது ஒரு காலத்தில் கப்பல்கள் கடலுக்குள் செல்ல பயன்படுத்தப்பட்ட கால்வாயாக அல்லது வழியாக கடலுடன் இணைக்கப்பட்டிருக்கும் என்று

புலப்படுகிறது. இப்போது கப்பலாறு - ஊரணி கடலுக்குத் தொடர்பில்லாதது போல் மணல் கொண்டு மூடப்பட்டுள்ளது.

கி.பி.பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த டச்சுக் காரர்களுக்குச் சொந்தமான மன்னார் வளைகுடாப் பகுதியைச் சேர்ந்த ஒரு வரைபடத்தில் இப்போதைய பெரியபட்டினம் காணப்படுகின்ற இடத்தில் பெரி படன் என்று ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டுள்ளது. இவ்வரைபடத்தின் மூலம் கி.பி. பதினேழாம் நூற் றாண்டு வரை பெரியபட்டினம் தமிழகத்தில் மிகச் சிறப்பு வாய்ந்த ஒரு கடற்கரைத் துறைமுக நகரமாக விளங் கியது என்பதை உணரமுடிகிறது.

- பா. ஜெ.

**துணை நூல்கள் :**

1. Krishnaswami, Aiyangar, S., 1921, **South Indian Muhammadan Invaders**, New Delhi.

2. Nilakanta, Sastri, K A., 1939, **Foreign Notices of Ma Huan**, Chennai.

**பேச்சுமொழி :** மனித இன வரலாற்றையும் மொழியின் தோற்றத்தையும் ஆராய்ந்தால் பேச்சு மொழியே அடிப்படை என்று அறியலாம். உலகின் பல பகுதிகளில் காடுகளிலும் மலைகளிலும் வாழ் கின்ற பழங்குடி மக்கள் பேசும் மொழி இன்றும் பேச்சுமொழியாகவே ( Spoken Language ) இருக்கக் காணலாம். எழுத்து வடிவம் என்பது பல நூற்றாண்டு கட்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட ஒன்றாகும். பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் பேச்சு மொழியைக் கையாண்டு வந்திருக்க வேண்டும். எழுத்து மொழி இல்லாத சமூகம் உலகில் பரவலாகக் காணப்படுகிறது. எழுத்துமொழி உள்ள சமூகத்திலும் அதைத் தெரிந்துகொள்ளாத மக்கள் இருப்பது எழுத்து மொழி காலத்தால் பிற்பட்டது என்பதை உணர்த்துகிறது.தமிழ் மொழியின் எழுத்துச்சான்று கி.மு. மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்ததாகும். மொழியியல் பேரறிஞர்கள் மொழியைப் பேச்சு மொழி, எழுத்து மொழி என இரண்டாகப் பகுத்து ஆராய்கின்றனர்.

எழுத்து மொழிக்குப் பேச்சுமொழியே அடிப் படையானது. காலத்தால் பழமையானது. இயற்கை யானது. பேசுபவர் தம் உள்ள உணர்வுகளைக் குரலின் ஏற்றஇறக்கம் மூலம் வெளிப்படுத்திக்காட்ட முடி யும். ஒருமுறை பேசியதை மாற்றமுடியாது. அறி வியல் வளர்ச்சியால் இன்று பேச்சுமொழியைப் பாது காக்க முடிகிறது. பேச்சுமொழியினின்றும் வளர்ச்சி பெற்ற எழுத்துமொழி காலம், இடம் ஆகிய இரண் டையும் கடந்து நிலைத்து நிற்க வல்லது. முன்னோர் கள் விட்டுச்சென்ற அறிவுக் கருவூலங்களைக் கண்டு துய்ப்பதற்கும் இன்று பெற்றுள்ள அறிவுச் செல் வத்தை வழித்தோன்றல்களுக்கு வழங்குவதற்கும் எழுத்துமொழி பெருந்துணையாக உள்ளது.

ஒலி வடிவான குறியீடுகள் கொண்டது பேச்சு மொழி. வரி வடிவான குறியீடுகள் கொண்டது எழுத்து மொழி. பேச்சுமொழி ஓடும் ஆறு போன்ற தெனின், எழுத்துமொழி அந்த ஆற்றில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது என மொழியியல் பேரறிஞர் வெண்ட்ரியே கூறுகிறார். எண்ணங்களையும் அனுப வங்களையும் தேவைகளையும் வெளியிடும் ஆற்றல் பேச்சுமொழிக்கு உண்டு என்பது ஆய்வுகளால் நிறு வப்பட்ட உண்மையாகும். பேச்சுமொழி வாக்கியம் சுருங்கியது, எளியது, தெளிவானது, இயற்கை யானது. எழுத்துமொழி வாக்கியம் சிந்தித்து எழுதப் படுவதால் நீண்டதாகவும் சிக்கல் நிறைந்ததாகவுமுள் ளது. எழுத்து மொழி திருத்தமாக அமையக்கூடியது. அந்த அடிப்படையில் எழுத்துமொழியே பழமை யானது. அடிப்படையானது. பேச்சுமொழி தரங் குறைந்தது. கொச்சையானது. இலக்கணமற்றது என்ற மனப் பாங்கு அறிஞர்களிடையே பல்லாண்டு காலம் நிலவி வந்தது. மொழியியல் வளர்ச்சி காரண மாக, பேச்சு மொழி அடிப்படை என்பது மட்டு மன்றி, பல பழமைக் கூறுகளையும் கொண்டது என்பதும் தெளிவு.

பேச்சுமொழிக்கும் எழுத்துமொழிக்கும் தனித் தனிப் பண்புகள் காணப்படுவதால் அவற்றைத் தனியே ஆராய வேண்டும் என்ற எண்ணம் மொழி யியல் அறிஞர்களிடையே எழுந்தது. எழுத்து மொழிக்கு முதலிடம் கொடுத்து ஆராய்பவர்களைத் தனி நிலைவாதிகள் ( Autonomists ) என்றும், பேச்சு மொழியும் எழுத்து மொழியும் தொடர்புடையன,

அஃது மொழிக்கு மொழி மாறுபடும் என்று கருது கின்றவர்களை இணைநிலைவாதிகள் (Correlationists) என்றும் குறிக்கின்றனர். சில நேரங்களில் பேச்சு மொழியையொட்டி எழுத்து மொழியும், எழுத்து மொழியையொட்டி பேச்சு மொழியும் திருத்திக் கொள்ளப்படுகின்றன. இக்கருத்தினை வரலாற்று மொழியியலாளரும் சமூக மொழியியலாளரும் ஒத்துக் கொள்கின் றனர்.

பேச்சு மொழியில் பல பழமைக் கூறுகள் பொதிந்து காணப்படுகின்றன. சங்க இலக்கியங் களில் முன்னிலைப் பன்மை வடிவமாக நீயிர், நீர் என்ற வடிவங்கள் காணப்படுகின்றன. தேவாரத்தில் நீங்கள் என்ற இரட்டைப் பன்மை வடிவமும், சீவக சிந்தாமணியில் நீம் என்ற வடிவமும் காணப்படுகின் றன. கன்னியாகுமரி மீனவர் தமிழில் நீம் என்ற வடி வம் காணப்படுகிறது. நீம் என்ற வடிவமே பழமை யானது என வரலாற்று மொழியியலாளர் கூறுகின்ற னர். இலக்கியங்களிலும் அகராதிகளிலும் காணப் படாத எண்ணற்ற சொற்களைப் பேச்சுமொழியில் காணலாம். மீனவர் பேச்சுத்தமிழில் காற்றைக் குறிக்க, கொண்டல், நேர்கொண்டல், சோழக் கொண்டல், வாடெ கொண்டல், கச்சான், கொண்டே கச்சான், கோடை கச்சான் கோடை, நேர்கோடை, வடகோடை, முல்லைச்சல்வா, குன்னுவாட, வடமரெ, வடமேலு, வட கொடே, சோழகன், செம்பாது போன்ற பலச் சொற்களில் குறிக்கின்றனர். இதுபோன்றே நீரைக்குறிக்கவும் மீனவர் தமிழில் ஏறிணி, வத்தொம், கலக்கு, தெழிவு, பணிச்சல், மிதாவலு, தருப்பு, சுரப்பு, சேறு, பாறு, கல்லுவாடு, சோணிவெள்ளம், தென்னிவள் ளம், மேமுறி, தென்னிமேமுறி, வாளா ஒனி, தெம்மா ஒனி, சிராச்சித்தண்ணி, வாங்கியா போன்ற சொற் களையும் காணலாம். மொழிக் குடும்ப வரலாற் றிற்கு மொழியும், மொழி வரலாற்றிற்குக் கிளை மொழியும் மிக முக்கியமானவையாகக் கருதப்படு கின்றன.

ஒரு மொழி பரந்த நிலப்பகுதியில் பேசப்படும் போது, பல கிளைமொழிகளை ( Dialacts ) உடைய தாக அமைவது இயற்கையாகும். அஃது வட்டாரத் திற்கு வட்டாரம் வேறுபடுவதால் வட்டாரக்கிளை மொழியும் ( Regional Dialect ), சாதிக்கு சாதி வேறுபடு வதால் சாதிக்கிளை மொழியும் ( Caste Dialect ) தோன்றுகின்றன. ஒரு கிளைமொழி பிற கிளை மொழிகளைப் போற்றிப் பின்பற்றும் நிலை ஏற்படு மானால் அஃது பேச்சு நிலைமொழி எனப்படும். அந் நிலைமொழி எல்லோருக்கும் ஓரளவு பொதுவான தாக அமையும்.

தமிழ் ஒரு இருநிலை மொழி ( Diglossic Language ) என்பது அனைவராலும் ஒத்துக்கொள்ளப்பட்ட உண்மையாகும். இருநிலை மொழியை முதலில் விளக்கிய பெர்கூசன் ( Ferguson ) தமிழின் இருமொழி நிலையை வியந்து பேசினார். இதன் அடிப்படையில் பேச்சுமொழிக்கும் எழுத்து மொழிக்குமுள்ள வேறு பாட்டை மொழியியலார் ஆராய்கின்றனர். சமூகத் தில் பொதுவாகப் பேசுவதற்குப் பயன்படும் நிலம், சமூகம் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த வழக்குகளை ஒரு பிரிவாகவும், சமூகத்தில் எழுத்துச் செயற்பாடுகளுக்காகவும் சில சமயங்களில் முறைப் பட்ட பேச்சுக்காகவும் பயன்படும் இலக்கிய வழக்கை மற்றொரு பிரிவாகவும் வகுக்கின்றனர். சமூக மொழியியல் அறிஞர்கள் இதனை இரட்டை வழக்கு என்றழைக்கின்றனர்.

தமிழ்மொழியில் பல்லாண்டுகளாக இரட்டை வழக்கு நிலவி வருகின்றது. எழுத்து வழக்கோடு பேச்சு வழக்கும் நிலவி வந்ததைக் கல்வெட்டுகள் மூலம் அறியலாம். உரையாடல், புதினங்களில் கதை மாந்தர் உரையாடல், புதுக்கவிதைகள், நாட்டுப்புற இலக்கியங்கள், சமூகப்படங்கள், கிராமச்செய்தி போன்றவற்றில் பேச்சுவழக்கைக் காணலாம். பேச்சு வழக்கினின்றும் எழுத்து வழக்கு அமைந்தாலும் செயற்பாட்டின் விளைவாக வேறுபாடுகள் நிறைய காணப்படுகின்றன.

பேச்சு வழக்கில் எழுத்து வழக்கின் தாக்கத்தையும் எழுத்து வழக்கில் பேச்சு வழக்கின் தாக்கத்தையும் ஒலியனியல், உருபனியல், தொடரியல், சொற்களஞ் சியம் என்ற நிலையில் மொழியியல் அறிஞர்கள் ஆராய்கின்றனர். பேச்சுமொழி செல்வாக்கு மிகுந் தது. அதன் செல்வாக்கு மொழியின் இலக்கணத் திலும் காணப்படுகின்றது.

- சு.ச.

**போதி சத்துவர் :** பௌத்த சமயத்தில் போதி சத்துவர் சிறப்பிடம் பெறுகின்றனர். இவர்கள் தமக் கென வாழாப் பிறர்குரியாளர்கள். போதிசத்துவர் என்ற வட சொல்லிற்கு மெய்யுணர்வின் சாரத்தைப் பெற்ற வர்கள் என்றும், அருள் வாகை பெற்றவர்கள் என்றும் பொருள் கூறுவர். இவர்கள் புத்த நிலை யைப் பெறுவதற்குரிய பக்குவ நிலையைப் பெற்ற வர்கள். ஈனயான பௌத்தத்தில் அருகர் பற்றிய கோட்பாடும், மகாயான பௌத்தத்தில் போதிசத்து வர் பற்றிய கோட்பாடும் சிறப்பாக குறிப்பிடப் பெறு கின்றன. அருகர் என்போர் சமுதாயத்தினின்றும் ஒதுங்கி தனித்துநின்று, நிர்வாணப் பேற்றிற்கு முய லும் முதிர்ந்த முனிவர்கள் ஆவர். ஆயின், போதி சத்துவர் தன்னலம் மறந்து, சமுதாய நலத்தில் நாட்டம் கொண்டு, என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற கோட்பாட்டில் முற்றி நிற்பவர்கள். மன்னுயிர்கள் ஈடேறும் வரைக்கும் வீடுபேறும் வேண்டாத விறல் மிக்கவர்கள். இவர் தம் இயல்புகளைச் சூத்திராலங் காரம் என்ற யோகாசார பௌத்த நூலில் ஆசங்கர் விரிவாகக் கூறியுள்ளார்.'உணவுப் பொருளை ஒருவன் தானே உண்ணாமல் பிறருக்கு வழங்குவதில் புண்ணியம் அடைகிறான். அதுபோல, ஈனயான பௌத்தத்தில் தாமே நிர்வாணப்பேற்றினை நாடுவது போலாது, ஏனையோர் அதனை எய்தும் பொருட்டு உழைக்கும் காரணத்தால் போதிசத்துவர்கள் மிகப் பெரும் புண்ணியத்தைப் பெறுகின்றனர்' என்பது ஆசங்கரின் கருத்தாகும். சாந்திதேவர் என்னும் பௌத்தப்பெரியார் அறச்செயல்களை முறையாகப் பின்பற்றும் இருபாலரும் முடிவில் போதிசத்துவப் பெருநிலையை எய்துகின்றனர் என்று சுட்டியுள்ளார்.

போதிசத்துவர்களின் தகுதிகள் அனைத்தையும் சத் தர்ம புண்டரிகம், போதி சத்துவ பூமி முதலிய மகா யான நூல்கள் தெளிவுறுத்திக் கூறியுள்ளன. தானம், சீலம், சாந்தி, வீரியம், தியானம், பிரக்ஞை, உபாய கௌசல்யம், பிரவிதானம், பலம், ஞானம் என்ற பத்து வகைப் பண்புகளும் நிரம்பப் பெற்றவர்களே போதிசத்துவர்கள் என்று போற்றப்பெறுபவர். இப் பத்தும் தசபாரமிதைகள் என்று வழங்கப்பெறும். பார மிதை என்ற சொல் பூரணத்துவம் பெறுதல் என்ற பொருளையும், அக்கரை அடைதல் என்ற பொருளை யும் சுட்டுவதால், இப்பத்துவகைப் பண்பு நலன் களும் நிரம்பப்பெற்ற பௌத்தப்பெரியார் எவரும் அக்கரையாகிய நிர்வாணப்பேற்றினை எய்துவதற்கு உரியர் என்பர் பௌத்த இயலார். ஒவ்வொரு போதி சத்துவரும் தானம், சீலம் முதலிய பாரமிதைகளைக் குறைவற மேற்கொண்டு தம் அருள் வாழ்வினை நடத்துதல் வேண்டும். தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பிற உயிர்கள் பொருட்டு உள்ளம் உவந்து வழங்கும் ஈகைக்குணம் நிரம்புதலே தான பாரமிதை எனப்படும். பகவான் புத்தர் வரையறுத்த கொல்லாமை, கள்ளாமை, காமமின்மை, பொய் யாமை, கள்ளுண்ணாமை, ஆடல் பாடல் நாடாமை முதலிய பத்துவகைச் சீலங்களையும் பழுதறப் பயின்று மனத்தெளிவினைப் பெறுதலைச் சீல பாரமிதை சுட்டுகிறது.

அறிந்தோ, அறியாமலோ மற்றவர்கள் இழைக் கும் பொல்லாங்குகளையும் இகழ்ச்சிகளையும், நிந்தனைகளையும் பொறுத்துக்கொள்ளுதலும், பசி, தாகம், வெயில், மழை ஆகியவற்றைப் பொறுத்துக் கொள்ளுதலும் சாந்திபாரமிதை எனப்படும். எவ் வகைத் துன்பங்களையும் அமைதியாகவும் மகிழ் வாகவும் ஏற்றல் சாந்திபாரமிதை நிரம்பப்பெற்ற போதிசத்துவரின் இயல்பாகும். சமய வாழ்க்கைக்கு உள்ளமும் உடலும் வீரியம் நிரம்பியிருத்தல் வேண் டும். வீரியம் நிரம்பப்பெற்ற பௌத்த ஞானி அச்சம், தீமை, துன்பம், கலக்கம் ஆகிய தடைகள் அனைத்தை யும் களைந்தெறியும் தகுதிபெற்றவர் ஆகிறார். வீரிய பாரமிதை நிரம்பிய ஒருவரால் தான் பௌத்த சமயத் தின் சாத்தனாகக் கருதப்படும் மாரன் என்னும் காமதேவனை வெல்ல முடியும்.

தானம், சீலம், சாந்தி, வீரியம் ஆகிய பாரமிதைகள் முற்றிய போதிசத்துவர் தியானத்தில் முழுமைப் பெறும் தகுதி பெறுகிறார். மைத்திரி, முதிதை, கருணை, உபேட்சை என்ற நான்கு பிரமவிகாரங்கள் எனப்படும் தியானங்களையும் குறைவறப்புரிவதால் தியான பாரமிதையும் நிரம்பப்பெற்றவர் ஆகின்றார். இதனால் ஞானமும் பேரின்பமும் விளையும். மெய் யுணர்தலைப் பிரக்ஞை என்ற சொல்லால் பௌத்த நூல்கள் சுட்டுகின்றன.

இந்த ஞானம் நிரம்பப்பெறுதலைப் பிரக்ஞா பார மிதை என்று மகாயான பௌத்த நூல் உணர்த்துகிறது. பௌத்த சமயத்திற்கு ஏனைய நெறியாளர்களையும் ஈர்க்கும் வகையிலும் ஏற்கும் வகையிலும் உபாயங் களையும் நற்செயல்களையும் கருவியாகக் கொண்டு தொண்டாற்றும் நிலையை உபாயகௌசல்ய பார



போதிசத்துவர் (பத்மபாணி)
அசந்தா ஓவியம்

மிதை உணர்த்துகிறது. எனவே, சமயம் பரப்பும் சாதுரியமும் போதிசத்துவரின் பண்புகளில் ஒன்றாகப் போற்றப்பெற்றது. பிரணிதானம் என்பது எல்லை யற்ற கருணை நிரம்பியிருத்தலாகும். பலம், ஞான பாரமிதைகள் என்பன வலிமையும் மெய்யுறவும் பூரணம் பெற்றிருத்தலைக் குறிக்கும். இங்குக் கூறப் பெற்ற பத்துவகையான பண்புகளும் நிரம்பியோர் போதிசத்துவர் என்று புகழப்பெறுபவர் ஆவர்.

மேற்குறிப்பிடப்பெற்ற தசபாரமிதைகள் பலம், ஞானம் என்பனவற்றை முறையே வீரியம், பிரக்ஞை என்ற இரண்டிலும் அடக்கிக் கூறுதல் உண்டு. இவ்வாறே உபாயம், பிரணிதானம் என்பனவற்றை முறையே தானம், சீலம் என்ற பாரமிதைகளில் இணைத்துக்கூறும் மரபும் காணப்படுகிறது. எனவே முதலில் சொல்லப்பெற்ற ஆறுவகை பாரமிதைகளே மிகவும் இன்றியமையாதவை ஆகும்.

மகாயான பௌத்த வரலாற்றில் தன் முத்திரை பதித்த அசுவகோசர், நாகார்ச்சுனர், அசங்கர், திக்கநாதர், தருமபாலர் முதலிய ஞானிகளைப் போதிசத்துவர் என்று கூறுதல் வழக்கம். தமிழில் தோன்றியுள்ள பௌத்தப் பெருங்காப்பியமான மணிமேகலையில் இடம்பெறும் அறவணவடிகள், புண்ணியராசன் சங்கதருமன் முதலியோர் போதிசத்துவர்கள் என்பது ஆராய்ச்சியினால் அறியப்பெற்ற உண்மையாகும்.

- சோ. ந. க.

**மக்கட்பெயர் :** மனித இனவரலாற்றில் மக்கட்பெயர் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இது ஒரு மனிதனை மற்றொரு மனிதனிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. பெயர், குறியீடாக மட்டுமின்றி மனிதனின் ஆளுமையையும் இயல்பையும் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது. பெயர் சூட்டிய பின்புதான் மனிதன் குடும்பத்தில் ஓர் அங்கமாகவும் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராகவும் கருதப்படுகிறான். ஒரு சமுதாயத்தின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், நம்பிக்கை, கடவுட் கொள்கை, சமயச்சிந்தனை, சமுதாய மாற்றங்கள் அனைத்தும் அச்சமுதாயத்தின் மக்கள் பெயர் மூலம் அறிந்துகொள்ளலாம். மக்கட்பெயர்கள் அவை சார்ந்துள்ள சமுதாயத்திடமிருந்தும் இயற்கைப் பொருள்களிடமிருந்தும் பெறப்படுகின்றன. 'ஒரு நாட்டின் வரலாறும் மதமும் நாகரிகப் பண்பாடுகளும் அந்நாட்டு மக்கள் பெயர்களில் தம் முத்திரையைப் பதிக்கின்றன' என்ற சார்லட் யங்கின் ( Charlotte Younge) கூற்று மக்கட் பெயராய்விற்கு முன்னோடிக் கருத்தாக அமைகின்றது. ஒரு நாட்டினரின் சமுதாய நிலையினையும் உளப்பாங்கினையும் செவ்வன் உணர்வதற்கு அம்மக்களின் பெயரிடும் முறையினை அறிதல் தவிர்க்க முடியாத பணியாகும். பெயர்கள் பழமை எச்சங்களாக நின்று மனித வரலாற்றையும் பண்பாட்டையும் எதிரொலித்து நிற்கின்றன.

மேலைநாட்டில் பெயராய்வு ( Onomastics ) தனித்துறையாக வளர்ச்சி பெற்றுள்ளது. இப்பெயராய்வு இடப்பெயராய்வு ( Toponymy study ), மக்கட் பெயராய்வு ( Anthoroponymy study ) என இரண்டாக வகுத்து ஆராயப்படுகின்றது. தமிழகத்தில் இடப்பெயராய்வு வளர்ந்தளவிற்கு மக்கட் பெயராய்வு வளரவில்லை.

தொல்காப்பியத்தில் மக்கட்பெயரைப் பற்றிய குறிப்பு காணப்படுகின்றதே தவிர பெயரிடும் முறை பற்றிய குறிப்பு காணப்படவில்லை. சிலப்பதிகாரத்தில் ஆயிரம் பெண்கள் மாதவி இல்லத்தில் கூடி கோவலனின் குலதெய்வமான மணிமேகலையின் பெயரை மாதவியின் குழந்தைக்கு இட்டனர் என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது ( அடைக்கலக்காதை 1, 23 - 41 ). பெரியாழ்வார் பெயரிடும் முறையைப் பற்றி குறிப்பிடுகிறார். சிற்றூர்களில் கோயில் பூசாரியாலும் குடும்பப் பெரியவராலும் பெயர் சூட்டப்படுகின்றது. சோதிடம் மூலமும் பெயர் சூட்டப்படுவதுண்டு. இக்காலத்தில் அரசியல் தலைவர்களைக்கொண்டு பெயர் சூட்டுகின்றனர். பழங்குடி சமுதாயத்தில் மூப்பன் (Headman) என்பவனால் பெயர் சூட்டப்படுகிறது. குழந்தைக்கு மொட்டையடித்து காதுகுத்தி பின் பெயர் சூட்டுகின்ற வழக்கத்தைக் காணலாம்.

பழங்காலத்தில் இயற்பெயர் அறியமுடியாத புலவர்களுக்கு அவர்கள் பாடிய பாடல்களின் சிறந்த சொற்றொடர்களைக் கொண்டு பெயரிடப்பெற்றன. மகன் தந்தையானவுடன் தன் பெயரை மறந்து இன்னாரின் தந்தை என வழங்கப்படுதலையும் சங்க காலத்தில் காணலாம். மரம், செடி, கொடி, விலங்கு, பறவை, ஆறு பெயர்கள் மக்களுக்கு இடப்பட்டதைப் பண்டைக்காலத்திலிருந்தே இன்றுவரை அறியலாம். சங்க மருவிய காலத்தில் சமுதாயத்தின் பல் வேறு பிரிவினர் பெயரைச் சிலம்பு மூலமும் பௌத்த மதத் தாக்கத்தின் பெயர்களை மணிமேகலை மூலமும் அறியலாம்.

இடைக்காலத்தில் சைவப்புலவர்கள் நாயனார் என்றும் வைணவப் புலவர்கள் ஆழ்வார்கள் என்றும் அழைக்கப்பெற்றனர். பொற்காலமாக விளங்கிய சோழர் காலத்துப்பெயர்களில் வடமொழிச் செல்வாக்கைக் காணமுடிகிறது. நாயக்கர் ஆட்சிக்காலத்தில் தான் பெயருக்குப் பின்னர் சாதிப்பெயர் வெளிப்படையாக வழங்கலாயிற்று. பின்னர் மேலைநாட்டாரின் ஆட்சித்தாக்கத்தையும் பெயர்களில் காணலாம். சங்க காலத்திலிருந்து இருபதாம் நூற்றாண்டு வரை மக்கட்பெயர்களைக் கூர்ந்து நோக்கின் சமூக - வரலாற்று மாற்றங்களை இப்பெயர்கள் எதிரொலிக்கின்றன எனக் கூறலாம்.

இருபதாம் நூற்றாண்டில் ஆங்கிலேய ஆட்சியையும் விடுதலை இயக்கத்தின் வளர்ச்சியையும் புதிய பாரதத்தின் எழுச்சியையும் வடமொழிப் புறக்கணிப்பையும் தனித்தமிழ் இயக்கத் தோற்றத்தினையும் திராவிட இயக்கங்களின் எழுச்சியையும் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற தமிழ் இன உணர்வினையும் மக்கட்பெயர்களில் காணலாம்.

**பெயர்வைப்பு முறைகளில் கீழ்க்காணும் வகைப்பாட்டைக் காணலாம்**

**தெய்வப்பெயர்கள் :** மக்கட் பெயர்களில் பெரும்பான்மையான பெயர்கள் தெய்வப்பெயர்களாகும். தெய்வ சக்தி, நம்பிக்கை, அச்சம் முதலியவையே இம்மாதிரியான பெயரிடலுக்குக் காரணங்களாகும். நகரப் பகுதிகளில் பெருந்தெய்வப்பெயர்கள் ஆதிக்கம் செலுத்துவதையும் கிராமப்புறங்களில் குலதெய்வம், சாதிதெய்வம், வட்டாரத் தெய்வப்பெயர்கள் ஆதிக்கம் செலுத்துவதையும் காணமுடிகிறது. கிராமங்களில் குலதெய்வத்தின் பெயரே முதலிடம் வகிக்கின்றது எனக்கூறலாம்.

**பெருந்தெய்வப் பெயர்கள் :** முருகன், சுப்பிரமணியன், சரசுவதி.

**சிறுதெய்வப் பெயர்கள் :** அய்யனார், காளியம்மாள், மாரியம்மாள்.

**முன்னோர் பெயரிடல் :** பெற்றோர் நினைவைப் போற்றல். பெற்றோர் இறந்தபின் அவர்களே மீண்டும் மீண்டும் குடும்பத்தில் குழந்தையாகப் பிறக்கின்றனர் என்ற நம்பிக்கையும் மக்களிடையே நிலவுகின்றது. தாத்தா, பாட்டி பெயரைப் பேரனுக்கும், பேத்திக்கும் சூட்டும் மரபு உண்டு. முன்னோர் வழிபாடு உலகிலுள்ள பல இனங்களிலும் காணப்படுகின்றது. முன்னோரது பெயர்களைக் குழந்தைகளுக்குச் சூட்டும் மரபு தொன்றுதொட்டு இருந்து வருகின்றது.

**மரம், செடி, கொடி, பூ பெயர்கள் :** அசோகன், துளசி, பூங்கொடி, முல்லை.

**விலங்கு, பறவை பெயர்கள் :** சின்னக்காளை, அன்னக்கிளி.

**ஆறு, மலைப்பெயர்கள் :** பொன்னி, நர்மதா.

**உடலமைப்புப் பெயர்கள் :** குள்ளன், மொட்டையன்.

**பண்புப்பெயர்கள் :** சற்குணம், புண்ணியவதி.

**வரலாற்று வீரர் பெயர்கள் :** பகத்சிங், இராணி மங்கம்மாள்.

**அரசியல் தலைவர் பெயர்கள் :** காந்தி, அண்ணாதுரை.

**திரைப்பட நடிகர், நடிகைகள் பெயர்கள் :** சிவாஜி கணேசன், பத்மினி.

**நிறங்களின் பெயர்கள் :** பச்சையப்பன், வெள்ளையம்மாள்.

**நவரத்தினங்களின் பெயர்கள் :** வைரமுத்து, மரகதம்.

**ஊரின் பெயர்கள் :** சிதம்பரம், பழனி

**இராகங்களின் பெயர்கள் :** பைரவி, கல்யாணி.

**தமிழ் தொடர்பு பெயர்கள் :** தமிழண்ணல், தமிழன்பன்.

**நம்பிக்கைப் பெயர்கள் :** பௌர்ணமி, ரோகினி.

மேலே குறிப்பிட்ட வகைப்பாட்டு[illegible] பட்ட பெயர்களைத் தவிர விசித்திரமான [illegible]யர்களும் காணப்படுகின்றன. எ.கா. கும்பிடு[illegible] சாமி, சேவிக்கிறேன் சாமி.

தனித்தமிழ் இயக்கம், திராவிட இ[illegible] விளைவாக நல்ல தமிழ்ப் பெயர்க[illegible] அன்பழகன், அறிவழகன், தொல்கா[illegible] மலர்விழி, கயல்விழி போன்[illegible] பட்டித்தொட்டிகளிலும் வழங்க[illegible] ளர் பட்டியல் காட்டுகின்றது. [illegible]ரத்தில் புறங்களில் புதுமைச்சா[illegible]வும் [illegible].

கார்த்திக், வெங்கட், பத்மபிரியா போன்ற பெயர்களையும் காணலாம். நகர்ப்புற மேல்சாதி சமுதாயத்தின் நோக்கும் போக்கும் மக்கட்பெயரில் பிரதிபலிப்பதைக் காணலாம்.

- சு.ச.

**மக்கள் தொகை வீழ்ச்சி :** குறிப்பிட்ட கால இடைவெளியில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றம் மக்கள்தொகை வளர்ச்சி எனப்படும். மக்கள் தொகையில் ஏற்படும் வளர்ச்சி, வீழ்ச்சி ஆகிய இரு மாற்றங்களையும் குறிப்பிடும் பொதுவான தொடராக 'மக்கள் தொகை வளர்ச்சி' பயன்பாட்டில் இருந்தாலும் மக்கள் தொகை குறைவைக் குறிப்பாக உணர்த்தவே 'மக்கள் தொகை வீழ்ச்சி' ( Negative Population Growth ) எனும் தொடர் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு நாட்டின் மக்கள் தொகை வளர்ச்சி அங்கு நிகழும் பிறப்புகள், இறப்புகள் மற்றும் குடிப்பெயர்ச்சிகளின் எண்ணிக்கையே சார்ந்துள்ளது. அவையே வீழ்ச்சிக்கும் காரணமாயிருக்கின்றன. மக்கள் தொகை வளர்ச்சியைப் பின்வரும் சமன்பாட்டின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

குறிப்பிட்ட கால இடைவெளியில் ஏற்படும் மக்கள் தொகை வளர்ச்சி பின்வருமாறு கணக்கிடப்படுகிறது. அதாவது, அந்தக்கால இடைவெளியில் ஏற்படும் பிறப்புகளின் இறப்புகளின் எண்ணிக்கை + குடிபுகுந்தோர் மற்றும் வெளியேறியோர் எண்ணிக்கை. இது சுழிக்கும் ( zero ) குறைவாக இருப்பின் மக்கள்தொகை வீழ்ச்சியைக் குறிக்கும்.

மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் என்ற அளவை மக்கள்தொகை வளர்ச்சியைக் கணக்கிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் = மக்கள் தொகை வளர்ச்சி / தொடக்கத்தில் மக்கள் தொகை X 100.

ஒரு சமுதாயத்தின் சமூகப்பொருளாதார முன்னேற்றத்திற்கு முன்பு பிறப்பு இறப்பு விகிதங்கள் மிகுதியாகவும் முன்னேற்றமடையும்போது அவை குறைந்துகொண்டும், பின்னர் முன்னேற்றம் அடைந்துள்ளபோது மிகவும் குறைந்தும் காணப்படும். அப்படி பிறப்பு இறப்பு விகிதங்களில் ஏற்படும் மாற்றத்தில் முதலில் குறைவது இறப்பு விகிதம். பிறப்பு விகிதத்தில் சிறிது காலந்தாழ்ந்தே மாற்றம் ஏற்படுவதால் மக்கள் தொகையியல் பெயர்ச்சி ஏற்படும் போது மக்கள்தொகை பெருக்கம் மிகுதியாகவும் அதன் முன்னும் பின்னும் மக்கள் பெருக்கம் மந்தமாகவும் காணப்படும்.


மக்கள் தொகையியல் பெயர்ச்சிக்குமுன் மக்கள் தொகை வளர்ச்சியை அங்கு நிகழும் இறப்புகளின் எண்ணிக்கையே நிருணயம் செய்கின்றது. பஞ்சம், புயல், நிலநடுக்கம் போன்ற இயற்கைச் சீற்றங்களாலும், காலரா, பிளேக் போன்ற கொள்ளை நோய்கள் பரவுவதாலும் பெருமளவு உயிர்ச்சேதம் ஏற்பட்டு இறப்புகளின் எண்ணிக்கை பிறப்புகளின் எண்ணிக்கையைவிட மிகுதியாகும் போது மக்கள்தொகை வீழ்ச்சியடைகிறது. இந்தியாவில் கி.பி. 1918இல் ஏற்பட்ட இன்புசூயன்ஸா நோயின் பரவலான தாக்குதலால் பன்னிரண்டு முதல் பதின்மூன்று மில்லியன் மக்கள் மாண்டனர். இதனால் கி.பி. 1911க்கும் கி.பி. 1921க்கும் இடையில் மொத்தத்தில் ஏற்பட்ட பிறப்புகளின் எண்ணிக்கையைவிட இறப்புகள் மிகுதியாக இருந்தது. இதுவே இந்தியா இறுதியாகக் கண்ட மக்கள்தொகை வீழ்ச்சியாகும்.

மக்கள்தொகையியல் பெயர்ச்சிக்குப் பின் பிறப்பு விகிதமும் இறப்பு விகிதமும் இயன்ற அளவு குறைந்துவிடுகின்றது. அப்போது பிறப்புகளின் எண்ணிக்கையே மக்கள் தொகை வளர்ச்சியை நிருணயம் செய்கின்றது. வளர்ந்த நாடுகளின் முற்போக்கான மக்கள் பொருளாதார மலர்ச்சிக்கும் மந்த நிலைக்கும் ஏற்ப தங்களது மகப்பேற்றை ஒத்தியோ முன் தள்ளியோ வைத்துக்கொள்கின்றனர். இதனால் பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்படும்போது மக்கள்தொகை வீழ்ச்சியடைகிறது. இதைத்தவிர பிறப்புகளின் விகி தம் மிகத் தாழ்ந்துள்ளபோது ஏற்படும் தவிர்க்க முடியாத இயற்கைச் சீற்றங்களால் மிகுதியான உயிர் சேதமடையும்போது மக்கள்தொகை வீழ்கின்றது. இப்போது மேற்கு செர்மனி, சுவீடன், ஆசுதிரியா, தென்மார்க் போன்ற நாடுகளின் மக்கள் தொகை வீழ்ச்சியடைந்து கொண்டுள்ளன.

அட்டவணை 1 சில வளரும் நாடுகளின் கி.பி. 1980க்கும் 1986க்கும் இடைப்பட்ட காலத்திய மக்கள் தொகை வளர்ச்சி விகிதத்தைக் காட்டுகிறது.

| நாடுகள் | ஆண்டு மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் 1980 - 86 |
|---|---|
| பல்கேரியா | 0.2 |
| இங்கிலாந்து | 0.1 |
| சுவீடன் | 0.1 |
| ஆசுதிரியா | 0.0 |
| தென்மார்க் | 0.0 |
| பெல்சியம் | 0.0 |
| ஹங்கேரி | 0.1 |
| மேற்கு செர்மனி | 0.1 |
| கிழக்கு செர்மனி | 0.2 |

பெரும்பாலும் உலகிலுள்ள எல்லா நாடுகளிலும் மக்கள் தொகையியல் பெயர்ச்சி நடைபெற்றுக் கொண்டுள்ளது அல்லது நிறைவடைந்துவிட்டது. இந்நிலையில் உலகில் மகப்பேறு குறைவினால் மட்டுமே மக்கள் தொகை வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது. பிறப்பு விகிதம் குறைவதால் மக்கள் தொகையில் இளையோர் விழுக்காடு குறைந்து முதியோர் விழுக்காடு மிகுதியாகிறது. இதனால் முதியோர் பராமரிப்பு மற்றும் மருத்துவச் செலவீனங்களுக்கு மிகுதியான முதலீடு தேவைப்படுகிறது. இதனைப் பெறுவதற்கு உழைப்போரின் மீது மிகுந்த சுமை ஏற்படுகிறது. உழைப்போரின் மீது ஏற்றப்படும் மிகுதியான சுமையைப் பகிர்ந்து கொள்வதற்காகப் பெண்களும்




மக்கள் தொகை வீழ்ச்சி

வேலைக்குச் செல்ல வேண்டிய கட்டாயத்துக்குள்ளா கின்றனர். இதனால் பிறப்பு விகிதம் மேலும் குறை வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. உழைப்போரின் எண் ணிக்கையில் பற்றாக்குறை ஏற்படுவதால் இளை யோர் தேவையான அளவு கல்வியறிவு பெறுவதற்கு முன்பே வேலைக்கு ஈர்க்கப்படுகின்றனர். இதனால் தொழிலில் தனித்திறமை பெற்றோரின் எண்ணிக்கை குறைந்து தொழில்துறை வளர்ச்சி பாதிக்கப்படும் என்ற ஒரு கருத்தும் நிலவுகிறது.

வரைபடம் 1 : ஒரு குறிப்பிட்ட இறப்பு விகிதமாக இருக்கும்போது ( சராசரி வாழ்க்கை 40 ஆண்டு ) ஒவ் வொரு வயதிலும் உள்ள மக்கள் தொகை விகிதத்தில் வெவ்வேறு மக்கள் தொகை வளர்ச்சியில் ஏற்படும் மாற்றம்.

மூலம் : மக்கள்தொகை ஆய்வு அலுவலகம், பிரின் சுடன் பல்கலைக் கழகம், அமெரிக்க ஐக்கிய நாடுகள்.

தனிநபர் வருமானம் மிகுதியாவதால் இன்றியமை யாப் பொருட்களான உணவு, உடை போன்றவற்றின் தேவை குறைந்து ஏனைய விலையுயர்ந்த பொருட்கள் மற்றும் பொழுது போக்குக் கருவிகளின் தேவை மிகுதியாகும். தகுதி வாய்ந்த நீண்டநாள் உழைக்கும் ஆடம்பரமான புதிய பொருட்களின் மீது மக்களுக்கு நாட்டம் ஏற்படும். இக்காரணங்களினால் பல ஐரோப் பிய நாட்டு அரசுகள் மக்கள் தொகை வீழ்ச்சியைத் தடுக்கச் சாதகமான கொள்கைகளைச் செயலாக்கி வருகின்றன.

- சௌ. கி.

**துணை நூல்கள் :**

1. Caldwell, J.C., 1982, **Theory of fertility decline**, Academic Press, Newyork.

2. Coale, A.J., 1972, **The Growth and Structure of Human Populations**, Princeton University, New Jersey.

3. Espenshade, J.T., 1978, **zero Population Growth and the Economics of Developed Nations**, Population and Development Review, Vol. 4, No. 4.

4. Grant, P.J., 1989, **The State of the World's Children**, Oxford University Press, London.

5. Marten, J. T., 1921, **Census of India**, Vol.1, India Part 1 Report, Govt. of India, Delhi.

**மகளிர் சொத்துரிமை :** இந்து, இசுலாம், கிறித்துவச் சமயத்தைச் சார்ந்த பெண்கள் அவரவர் களுக்கு முரிய இனமுறைச் சட்டத்தின் கீழ் உரிய சொத்தை அடைவது மகளிர் சொத்துரிமை ( Women's Property ) எனப்படும்.

**இந்து மகளிர் சொத்துரிமை :** இந்து மகளிர்க் கான சொத்துரிமையை இந்து வாரிசுரிமைச் சட்டம் விளக்குகிறது. இச்சட்டப்படி, உயில் எழுதாமல் ஓர் இந்து ஆண்மகன் இறந்துவிடும்போது அவரது சொத் திலிருந்து 1. மகன், 2. முன்பே இறந்துபோன மகனின் மகன், 3. முன்பே இறந்துபோன மகளின் மகன், 4. முன்பே இறந்துபோன மகனின் முன்பே இறந்து போன மகன் ஆகியோர் வாரிசுகளாக இருந்து பாகம் பெறுவதுபோல், 1. மகள், 2. மனைவி, 3. தாய், 4. முன்பே இறந்துபோன மகனின் மகள், 5. முன்பே இறந்துபோன மகனின் மகன், 6. முன்பே இறந்து போன மகனின் விதவை, 7. முன்பே இறந்து போன மகனின் முன்பே இறந்துபோன மகள், 8. முன்பே இறந்துபோன மகனின் முன்பே இறந்துபோன மகனின் விதவை ஆகியோரும் வாரிசுகளாக இருந்து உரிய பாகத்தைப் பெறுவார்கள்.

இந்த முதல் வகுப்பு வாரிசுகள் யாரும் இல்லாத நிலையில் ஆண்களில் 1. தந்தை, 2. மகனின் மகனின் மகன், 3. சகோதரன், 4. மகனின் மகனின் மகள், 5. மக ளின் மகளின் மகளின் மகன், 6. சகோதரியின் மகள், 7. தந்தையின் தந்தை, 8. தாயின் தந்தை, 9. தாயின் சகோதரன் ஆகியோர் இறந்தவரின் இரண்டாம் வகுப்பு வாரிசுகளாக இருந்து சொத்தில் பாகத்தைப் பெறுவது போல், 1. மகனின் மகளின் மகள், 2. சகோதரி, 3. மகளின் மகளின் மகள், 4. மகளின் மகனின் மகள், 5. சகோதரரின் மகன், 6. சகோதரியின் மகள், 7. தந்தையின் தாய், 8. தந்தையின் விதவை; 9. சகோதரனின் விதவை, 10. தந்தையின் சகோதரி, 11. தாயின் தாய், 12. தாயின் சகோதரி ஆகியோரும் இரண்டாம் வகுப்பு வாரிசுகளாக இருந்து பாகம் பெறுவர்.

**முதல் வகுப்பு வாரிசுகளுக்கிடையேயான பாகப்பிரிவினை :** உயில் மூலம் சொத்துக்களைப் பிரித்து கொடுக்காமல் ஓர் இந்து ஆண் இறந்திருக்கும் போது, அவரின் சொத்துகளை முதல் வகுப்பு வாரிசி லுள்ள ஆண்களும் பெண்களும் பின்வருமாறு பாகஞ் செய்து கொள்வார்கள்.

1. இறந்தவர் ஒரே ஒரு விதவையை மட்டும் விட்டு இறக்கும்போது, விதவை ஒரு பங்கு பெறுவார். இரண்டு விதவைகளை விட்டு இறக்கும்போது, ஒரே பங்கை இரு விதவைகளும் பெற்று ஆளுக்குப் பாதியாகப் பகிர்ந்து கொள்வர்.

2. இறந்தவர் மகன்கள், மகள்கள், தாய் ஆகியோரைவிட்டு இறக்கும்போது அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே ஒவ்வொரு பங்கைப் பெறுவார்கள்.

3. இறந்தவர், இறந்துவிட்ட மகனின் மகனையோ, மகளின் மகளையோ விட்டு இறக்கும்போது, மகன் அல்லது மகளுடைய கிளையிலுள்ள வாரிசுகள் அனைவரும் சேர்ந்து ஒரு பங்கைப் பெறுவார்கள்.

4. இறந்தவர் ஒரு மனைவி, ஒரு மகன், ஒரு மகளை விட்டு இறந்திருக்கும்போது அம்மூவரும் சரிசமமான அளவில் இறந்தவரின் சொத்தில் பங்கைப் பெறுவார்கள்.

5. இறந்தவர் ஒரு மனைவி, ஒரு மகன், ஒரு மகள், தாய் ஆகியோரைவிட்டு இறந்திருக்கும்போது இறந்தவரின் சொத்தை நான்கு பாகங்களாகப் பிரித்து ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாகத்தைப் பெறுவார்கள்.

6. இறந்தவருக்குத் தாய், இரண்டு மனைவிகள், இரண்டு மகன்கள், இரண்டு மகள்கள் இருந்திடும்போது, சொத்துக்கள் ஆறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, தாய்க்கு ஒரு பாகமும், இரண்டு மனைவிகளுக்கும் சேர்ந்து ஒரு பாகமும், ஒவ்வொரு மகனுக்கும் ஒரு பாகமும் ஒவ்வொரு மகளுக்கும் ஒரு பாகமும் அளிக்கப்படும்.

7. இறந்தவருக்குத் தாயும் ஒரு மகளும் இருந்திடும்போது, இறந்தவரின் சொத்துக்கள் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒரு பாகம் தாய்க்கும், ஒரு பாகம் மகளுக்கும் அளிக்கப்படும்.

8. இறந்தவருக்குத் தாய், மனைவி, மகள் முன்பே இறந்த மகனின் மகன் இருந்திடும்போது, இறந்தவரின் சொத்துக்கள் நான்கு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாகம் அளிக்கப்படும்.

9. இறந்தவருக்கு ஒரு மகளும், முன்னதாக இறந்துபோன மகளின் இரண்டு மகன்களும், இரண்டு மகள்களும் (பெண்வயிற்றுப் பேத்திகளும்) இருந்திடும்போது, இறந்தவருடைய சொத்துக்கள் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, இறந்தவரின் மகளுக்கு ஒரு பாகமும், இறந்தவரின் மகளின் கிளையிலுள்ள நால்வருக்கு ஒரு பாகமும் அளிக்கப்படும்.

10. இறந்தவருக்கு மனைவியும், முன்னதாக இறந்துபோன மகனுடைய விதவையும் இருந்திடும்போது, இறந்தவருடைய சொத்துக்கள் இரு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாகம் அளிக்கப்படும்.

11. இறந்தவருக்கு ஒரு விதவை மருமகள் மட்டும் இருந்திடும்போது, இறந்தவரின் அனைத்துச் சொத்துக்களும் விதவை மருமகளையே சென்றடையும்.

12. இறந்தவருக்கு ஒரு பெண்வயிற்றுப் பேத்தியும் ஒரு சகோதரனும் இருந்திடும்போது இறந்தவரின் சொத்துக்கள் அனைத்தும் பெண் வயிற்றுப் பேத்தியையே சென்றடையும்.

13. இறந்தவருக்கு ஒரு சகோதரர், ஒரு சகோதரி, ஒரு தந்தை, ஒரு விதவை மருமகள் இருந்திடும்போது, இறந்தவரின் சொத்துக்கள் அனைத்தும் விதவை மருமகளையே சென்றடையும்.

**இரண்டாம் வகுப்பு வாரிசுகளுக்கிடையேயான பாகப்பிரிவினை :** 1. இறந்தவருக்குத் தந்தையும், சகோதரனும் இருந்திடும்போது, இறந்தவரின் அனைத்துச் சொத்துகளும் தந்தையே சென்றடையும்.

2. இறந்தவருக்கு ஒரு சகோதரனும், ஒரு சகோதரியும் இருந்திடும்போது இறந்தவரின் சொத்துக்களை அவ்விருவரும் சரிசமமாகப் பெற உரிமையுண்டு.

3. இறந்தவருக்குச் சகோதரர் மகன்கள் இருவரும், சகோதரியின் மகள்கள் நால்வரும் இருந்திடும்போது இறந்தவரின் சொத்துக்கள் ஆறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாகம் அளிக்கப்படும்.

**இந்து வாரிசுரிமை (தமிழ்நாடு திருத்தம்) சட்டம், 1989இன் கீழ் மகளிர் சொத்துரிமை :** இச்சட்டப்படி, மித்தாட்சரா இந்துக் கூட்டுக் குடும்பத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி அவள் பிறந்த குடும்பத்தில் ஆண் மகன் ஒருவன் எந்த அளவுக்குக் கூட்டுக் குடும்பச் சொத்திலிருந்து பங்கைப் பெறுவானோ அதே பங்கைப் பெறுவாள்.

மேலும், இந்துக் கூட்டுக் குடும்பத்தில் பிறந்த ஆண் ஒருவன் இறந்த பிறகு அவனது குழந்தைகள் மற்றும் வாரிசுகள் எந்த வகையில் கூட்டுக்குடும்பச் சொத்திலிருந்து பங்கைப்பெறுவார்களோ அதே

வகையில் பெண்ணொருத்தியின் குழந்தைகள் மற்றும் வாரிசுகளும் பங்கைப் பெறுவார்கள். எனினும், 25-5-1989க்குப் பின்னர் திருமணமான பெண்களே இந்துக் கூட்டுக்குடும்பத்தில் மேற்குறிப்பிடப்பட்ட சலுகைகளைப் பெறுதல் முடியும். அதற்கு முன்பு திருமணமானவர்களுக்கு இச்சலுகை இல்லை.

**இசுலாமியர் சட்டத்தின் கீழ் மகளிர் சொத்துரிமை :** அனபி சொத்துரிமைச் சட்டப்படி, இறந்தவர் விட்டுச்சென்ற சொத்தில் பின்வரும் ஆண்களும், பெண்களும் வாரிசுகளாக இருந்து பங்கு பெறுவார்கள். அவர்கள், 1. கணவன், 2. தந்தை, 3. பாட்டன், 4. தாய்வழிச் சகோதரன், 5. மனைவி, 6. தாய், 7. பாட்டி, 8. மகள், 9. மகனின் மகள், 10. தாய்வழிச் சகோதரி, 11. உடன்பிறந்த சகோதரி, 12. தந்தைவழிச் சகோதரி ஆகியோராவர்.

**அனபி சொத்துரிமைச் சட்டப்படி மகளிர் மற்ற ஆண்களோடு வாரிசு முறையிலிருந்து சொத்துரிமையைப் பெறும் முறை :** இறந்தவர் தம்முடைய வாரிசுகளாகக் கணவன், தந்தை, தாய், மகள், மகன் ஆகியோரை விட்டு இறந்திடும்போது கணவன் ¼ பங்கும், தந்தை 1/6 பங்கும், மகன் 10/36 பங்கும், தாய் 1/6 பங்கும், மகள் 5/36 பங்கும் பெறுவார்கள்.

**சுன்னீ சட்டப்படி மகளிர் மற்ற ஆண்களோடு வாரிசு முறையிலிருந்து சொத்துரிமைப் பெறும் முறை :** ஒரு சுன்னீ முசுலீம் 1. தந்தை, மகன், மனைவி ஆகியோரை விட்டு இறந்திடும்போது, மனைவி கூடுதல் சொத்துரிமையாக ¼ பங்கும், குழந்தைகளோ, மகனின் குழந்தைகளோ இருந்திடும் நிலையில் 1/8 பங்கும் பெறுவாள்.

2. தந்தை மற்றும் மனைவியை விட்டு இறந்திருக்கும்போது, தந்தை ¾ பங்கும், மனைவி ¼ பங்கும், பெறுவார்கள்.

3. மனைவி மற்றும் மகளை விட்டு இறந்திருக்கும் போது, ஒவ்வொரு மனைவி 1/8 பங்கும், மகன் 7/8 பங்கும் பெறுவார்கள்.

4. நான்கு மனைவியையும் தந்தையையும் விட்டு இறந்திருக்கும்போது, ஒவ்வொரு மனைவியும் 1/16 பங்கும், தந்தை ¾ பங்கும் பெறுவார்கள்.

5. மூன்று மனைவியையும் ஒரு மகனையும் விட்டு இறந்திருக்கும்போது ஒவ்வொரு மனைவியும் 1/24 பங்கும், மகன் 7/8 பங்கும் பெறுவார்கள்.

6. தாய் மற்றும் தந்தையை விட்டு இறந்திருக்கும் போது தாய் 1/3 பங்கும், தந்தை 2/3 பங்கும் பெறுவார்கள்.

7. தந்தையின் தந்தை, மகன், மகளை விட்டு இறந்திருக்கும்போது, தந்தையின் தந்தை 1/6 பங்கும், மகன் 5/6 பங்கும், மகள் 5/18 பங்கும் பெறுவார்கள்.

8. தாய் மற்றும் தந்தையின் தந்தையை விட்டு இறந்திருக்கும்போது, தாய் 1/3 பங்கும், தந்தையின் தந்தை 2/3 பங்கும் பெறுவார்கள்.

9. மகள் மற்றும் தந்தையின் தந்தையை விட்டு இறந்திருக்கும்போது, மகள் ½ பங்கும் தந்தையின் தந்தை ½ பங்கும் பெறுவார்கள்.

10. தாய் மற்றும் மகனை விட்டு இறந்திருக்கும் போது, தாய் 1/6 பங்கும், மகன் 5/6 பங்கும் பெறுவார்கள்.

11. தாய், தந்தை, இரு சகோதரி ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தாய் 1/6 பங்கும், தந்தை 5/6 பங்கும் பெறுவார்கள். இரு சகோதரிகளுக்கும் பங்கு கிடையாது.

12.. தந்தையின் தாய், தாயின் தாய், தந்தையின் தந்தை ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது, தந்தையின் தாய் 1/12 பங்கும், தாயின் தாய் 1/12 பங்கும் பெறுவார்கள். தாயின் தந்தை 5/6 பங்கும், பெறுவார்கள்.

13. தாய், உடன்பிறந்த அல்லது தந்தை வழி அல்லது தாய் வழிச் சகோதரன் அல்லது சகோதரி, தந்தை ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது, தாய் 1/6 பங்கும், தந்தை 5/6 பங்கும் பெறுவார்கள்.

14. மகள் மற்றும் தந்தையை விட்டு இறந்திருக்கும் போது, மகள் ½ பங்கும், தந்தை ½ பங்கும் பெறுவார்கள்.

15. தந்தை, தாய், இரு மகள்கள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், ஒவ்வொரு மகளும் 1/3 பங்கும் பெறுவார்கள்.

16. மகன் மற்றும் மகளை விட்டு இறந்திருக்கும் போது மகன் 2/3 பங்கும், மகள் 1/3 பங்கும் பெறுவார்கள்.

17. இரு மகன்களையும், மூன்று மகள்களையும் விட்டு இறந்திருக்கும்போது, இரு மகன்கள் 4/7

பங்கும், மூன்று மகள்கள் 3/7 பங்கும் பெறுவார்கள்.

18. இரு மகள்கள், மகனின் மகன், மகனின் மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது இரு மகள்கள் 2/3 பங்கும், மகனின் மகன் 1/3 பங்கும் பெறுவார்கள். மகனின் மகனின் மகளுக்குப் பங்கு கிடையாது.

19. மகளின் மகன், மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மகனின் மகன் 2/3 பங்கும், மகனின் மகள் 1/3 பங்கும் பெறுவார்கள்.

20. மகனின் மகனின் மகன், மகனின் மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மகனின் மகனின் மகன், 2/3 பங்கும், மகனின் மக னின் மகள் 1/3 பங்கும் பெறுவார்கள்.

21. மகனின் மகள் மற்றும் தந்தையை விட்டு இறந் திருக்கும்போது, மகனின் மகள் ½ பங்கும் தந்தை ½ பங்கும் பெறுவார்கள்.

22. தந்தை, தாய், இரு மகன்களின் மூன்று மகள் கள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், ஒவ்வொரு மகளும் 2/9 பங்கும் பெறுவார்கள்.

23. தந்தை, தாய், மகள், மகளின் நான்கு மகள்கள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், மகள் ½ பங்கும், ஒவ்வொரு மகளும் 1/24 பங்கும் பெறுவார்கள்.

24. தந்தை, தாய், மகனின் மகள், மகனின் மகனின் மகள் ஆகியோரைவிட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், மகனின் மகள் ½ பங்கும், மகனின் மகனின் மகள் 1/6 பங்கும் பெறு வார்கள்.

25. இரு மகள்கள், மகனின் மகனின் மகள், மக னின் மகள், மகளின் மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது, இரு மகள்கள் 2/3 பங்கும், மகனின் மகனின் மகன் 1/6 பங்கும், மகனின் மகள் 1/12 பங்கும், மகனின் மகனின் மகள் 1/12 பங்கும் பெறுவார்கள்.

26. தாய், தந்தை, இரு உடன்பிறந்த சகோதரி ஆகி யோரை விட்டு இறந்திருக்கும் போது தாய் 1/6 பங்கும், தந்தை 5/6 பங்கும் பெறுவார்கள். உடன் பிறந்த சகோதரிகள் இருவருக்கும் பங்கு கிடையாது.

27. தாய், தந்தை, உடன்பிறந்த சகோதரி ஆகியோரைவிட்டு இறந்திருக்கும் போது தாய் 1/3 பங்கும், தந்தை 2/3 பங்கும் பெறுவார்கள். உடன் பிறந்த சகோதரிக்குப் பங்கு கிடையாது.

28. கணவன், இரு மகள்கள், உடன்பிறந்த சகோதரி ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது, கணவன் ¼ பங்கும் மகள்கள் இருவரும் 2/3 பங்கும் பெறு வார்கள். உடன் பிறந்த சகோதரி 1/12 பங்கும் பெறு வாள்.

29. மகள், மகனின் மகள், உடன்பிறந்த சகோதரி ஆகியோரை விட்டு இறந்திருக்கும் போது மகள் ½ பங்கும், மகனின் மகள் 1/6 பங்கும், உடன் பிறந்த சகோதரி 1/3 பங்கும் பெறுவாள்.

30. இரு மகள்கள், அல்லது இரு மகனின் மகள்கள் உடன்பிறந்த சகோதரி ஆகியோரை விட்டு இறந் திருக்கும் போது, இரு மகள்கள் அல்லது இரு மக னின் மகள்கள் 2/3 பங்கும், உடன் பிறந்த சகோதரி 1/3 பங்கும் பெறுவார்கள்.

31. கணவன் மற்றும் உடன் பிறந்த சகோதரி விட்டு இறந்திருக்கும்போது, கணவன் ½ பங்கும், உடன் பிறந்த சகோதரி ½ பங்கும் பெறுவார்கள்.

32. இரு மகள்கள், மகனின் மகனின் மகன், மக னின் மகள், மகனின் மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது, மகள்கள் இருவரும் 2/3 பங்கும், மகனின் மகனின் மகன் 1/6 பங்கும், மகனின் மகள் 1/12 பங்கும், மகனின் மகனின் மகள் 1/12 பங்கும் பெறுவார்கள்.

33. இரு மகள்கள், மகனின் மகள், மகனின் மக னின் மகள் ஆகியோரைவிட்டு இறந்திருக்கும்போது இரு மகள் 2/3 பங்கும், மகனின் மகள் 1/9 பங்கும், மகனின் மகனின் மகள் 2/9 பங்கும் பெறுவார்கள்.

34. மகள், மகனின் மகள், மகனின் மகனின் மகன், மகனின் மகனின் மகள் ஆகியோரை விட்டு இறந் திருக்கும்போது மகள் ½ பங்கும், மகனின் மகள் 1/6 பங்கும், மகனின் மகனின் மகன் 2/9 பங்கும், மக னின் மகனின் மகள் 1/9 பங்கும் பெறுவார்கள்.

35. மகனின் மகள், மகனின் மகனின் மகன், மக ளின் மகளின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக் கும்போது மகனின் மகள் ½ பங்கும், மகனின் மக னின் மகன் 1/3 பங்கும், மகனின் மகனின் மகள் 1/6 பங்கும் பெறுவார்கள்.

*36.* இரு மகள்கள், மகனின் மகன், மகனின் மகனின் மகன், மகனின் மகனின் மகன் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மகள்கள் இருவரும் 2/3 பங்கும், மகனின் மகன் 1/3 பங்கும் பெறுவார்கள். மகனின் மகனின் மகனும், மகனின் மகனின் மகளும் பங்குபெற மாட்டார்கள்.

**சியா சட்டப்படி மகளிர் சொத்துரிமை :** ஒரு சியா முசுலீம் பின்வரும் வாரிசுகளை விட்டு இறந்திருக்கும்போது, ஆண், பெண் வாரிசுகள் பின்வரும் பாங்கில் சொத்துரிமைப் பெறுவார்கள்.

1. கணவன், தாய், தந்தை ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது கணவன் ½ பங்கும், தாய் 1/3 பங்கும், தந்தை 1/6 பங்கும் பெறுவார்கள்.

2. மனைவி, தாய், தந்தை ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மனைவி ¼ பங்கும், தாய் 1/3 பங்கும், தந்தை 5/12 பங்கும் பெறுவார்கள்.

3. தந்தை, தாய், மகன் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங் கும், மகன் 2/3 பங்கும் பெறுவார்கள்.

4. தந்தை, தாய், மகனின் மகன் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், மகனின் மகன் 2/3 பங்கும் பெறுவார்கள்.

5. தந்தை, தாய், இரு மகள்கள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், மகள்கள் இருவரும் 2/3 பங்கும் பெறுவார்கள்.

6. தந்தை, தாய், மகளின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது தந்தை 1/6 பங்கும், தாய் 1/6 பங்கும், மகளின் மகள் 2/3 பங்கும் பெறுவார்கள்.

**இந்திய வாரிசுரிமைச்சட்டம் :** இந்தியக் கிறித்தவர் அல்லது வேறு கிறித்தவர்கள் சிறப்புத் திருமணச் சட்டத்தின் ( Special Marriage Act ) கீழ் திருமணம் செய்துகொண்ட கணவன் மனைவி தமது சொத்துக்களை விட்டு இறந்திருக்கும்போது, அவரது ஆண், பெண் வாரிசுகள் பின்வரும் பாங்கில் சொத்துரிமையை அடைவார்கள்.

1. தனது மனைவி, மகன், மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மனைவி 1/3 பங்கும், மகன், மகள் இருவரும் சரிசமமான பங்கைப் பெறு வார்கள்.

2. மனைவி மற்றும் ( நேரடி வாரிசுகளில்லாத நிலையில் ) உறவினர்களை விட்டு இறந்திருக்கும் போது மனைவி ½ பங்கும், உறவினர்கள் ½ பங்கும் பெறுவார்கள்.

3. மகனின் மகன் அல்லது மகனின் மகள், மகளின் மகன் அல்லது மகளின் மகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது அவ்விருவரும் தாத்தாவின் சொத்தில் சரிசமமானப் பங்கைப் பெறுவார்கள்.

4. உறவினர் எவருமில்லாது மனைவியை மட்டும் விட்டு இறந்திருக்கும்போது, மனைவி முழுச் சொத்தையும் அடைவாள்.

5. தாய், சகோதரர்கள், சகோதரிகள் ஆகியோரை விட்டு இறந்திருக்கும்போது மூவரும் இறந்தவரின் சொத்தில் சரிசமமானப் பங்கைப் பெறுவார்கள்.

6. தாயை மட்டும் விட்டு இறந்திருக்கும்போது, தாயே அவரது முழுச்சொத்தையும் அடைவாள்.

7. சகோதரன், சகோதரி அல்லது அவர்களது மக்களை விட்டு இறந்திருக்கும்போது அவர்கள் அனைவரும் இறந்தவரின் சொத்தில் சரிசமமானப் பங்கைப் பெறுவார்கள்.

8. நேரடி வாரிசுகள் யாருமில்லாத நிலையில் உறவினர்களை விட்டு இறந்திருக்கும்போது, இறந்தவரின் சொத்தில் உறவினர்கள் சரிசமமான அளவில் பங்கைப் பெறுவார்கள்.

- பு.வே.

**மகுடி நாடகம் :** தமிழில் பள்ளு, குறவஞ்சி, நொண்டி, குளுவம், நாடகக் கீர்த்தனை, வில்லுப் பாட்டு, கும்மிப்பாடல் போன்ற பலவகையான கலை இலக்கியங்கள் தோன்றி இருப்பது போன்று 'மகுடி நாடகம்' என்ற அமைப்பில் நூல்கள் பல தோன்றியுள்ளன. படித்துச் சுவைப்பதை விடவும் இவற்றைப் பாடி மகிழ்வதே மிகுதி என்பதினால் இவற்றைக் கலை இலக்கியமாகக் கருதுவது பொருத்தமாகும்.

மகுடியை ஒரு மந்திர தந்திர விளையாட்டாக மதிக்கலாம். ஒருவர் மந்திர ஆற்றலினால் பொருட்களைக் கண்ணுக்குப் புலப்படாத வண்ணம் மறைத்து வைக்க அவற்றை மற்றொருவர் தம்முடைய மந்திர

வலிமையால் கண்டெடுப்பதை மகுடி என அழைத்துள்ளனர். பெரும்பாலும் பாக்கு, இலை, தேங்காய், ஆட்டுக்கடாவின் தலை, முட்டை, பழம், பணம் ஆகியவற்றை மறைத்து வைத்து எடுக்கச்சொல்வது வழக்கம். சில போட்டிகளில் ஒரு வாழைமரத்தையும் நட்டு வைத்திருப்பர்.

மந்திரவாதிகள் இத்தகைய போட்டிகளில் கலந்து கொள்வர். ஊருக்குப் பெரியவர்கள் முன்னிலையில் மந்திரப்போட்டிகள் நடைபெறும். இத்தகைய வினோத விளையாட்டுகள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் நடைபெற்றாலும் சிறப்பாக மதுரை, தஞ்சை, திருச்சி, வடஆற்காடு அம்பேத்கர் போன்ற மாவட்டங்களில் நடைபெற்று வந்துள்ளன. போட்டியில் ஈடுபடும் மந்திரவாதிகள் இரு கூறாகப் பிரிந்து நிற் பர். ஒருவர் தன் மந்திர வலிமையால் மறைத்து வைக் கும் பொருட்களை மற்றவர் தம்முடைய மந்திர ஆற்றலினால் கண்டுபிடித்து எடுக்கவேண்டும்.

மந்திரவாதிகள் காளி, துர்க்கை, அனுமன், வயிரவன், காலருத்ரன் போன்ற தேவதைகளின் துணையைத் தங்கள் சித்து மந்திர தந்திர ஆற்றலினால் பெற்று அவற்றை ஏவி பல அற்புதங்களை நிகழ்த்துவதாகக் கூறுவர். யாருடைய மந்திர வலிமை மிகுந்தது என்பதைக் கண்டுபிடிப்பதற்காகவே இந்தப் போட்டி நடத்தப்படும். இரு மந்திரவாதிகளும் தங்கள் தங்கள் திறமைகளை மேலாகப் பேசி முதலில் வாதிடுவர். பின்னர் போட்டி பெரியோர்களின் அனுமதியுடன் தொடங்கப்படும். ஒருவர் பொருட்களை மறைத்து வைப்பார். மற்றவர் தன் ஏவல் தேவதையின் துணையுடன் அவற்றைக் கண்டுபிடிப்பார். சில சமயங்களில் போட்டி கடுமையாகி இருவரும் வெற்றி தோல்வியின்றி முடிவு காணமுடியாத நிலையில் முறுக்கமுறுவதுமுண்டு. அந்நிலையில் பெரியவர்கள் தலையிட்டு இருவருக்குமிடையில் சமாதனம் செய்து வைப்பதுமுண்டு.

சில இடங்களில் பொருட்களை மறைத்து வைப்பதுடன் நடப்பெற்றுள்ள வாழைமரத்தைச் சவுக்கால் அடிப்பதையும் காணலாம். வாழைமரத்தில் பட்ட அடியானது எதிரியைத் தாக்கி அவன் வலி பொறுக்க முடியாமல் அலறுவதையும் சிலர் பார்த்துள்ளனர். இத்தகைய வன்போட்டியின் அடிப்படை ஆற்ற லுக்கு அறிவியல் விளக்கம் கூற இயலாது. தேவதை களின் ஆற்றலே இத்தகைய போட்டிகளின் ஆதாரத் துணைகள் என்று கருதப்படுகிறது.

மகுடி விளையாட்டு மந்திரவாதிகளின் திறமையைப் புலப்படுத்தும் ஒரு போட்டியாக இருப்பினும் அதில் பாடல், ஆடல் ஆகிய கலைகள் இணைந்து நயம் பெருக்கியுள்ளன. மக்கள் அதனைச் சுவைத்துக் களித்துள்ளனர். பாடல்கள் இடம் பெறுவதினால் மகுடி ஓர் இலக்கிய இனமாக வளர்ந்தது.

புலவர்கள், இறைவன், மன்னன், வள்ளல் ஆகியோரைப் போற்றிப் புகழ்ந்து பாடும் வழக்கம் கொண்டவர்கள் என்பதைச் சங்கக்காலத்திலிருந்தே அறியலாம். அருள் பெற இறைவனையும், பொன்னும் பொருளும் பெற்று வாழ்வு வளமும், சீரும் அடைய மற்றவர்களையும் பாடி வந்துள்ளதை இலக்கிய வரலாற்றில் கண்டுணரலாம். சீதகாதி மன்னனைப் புகழ நொண்டி நாடகம் பயன்பட்டது போன்று, சின்னமகிபனைப் பாராட்ட குளுவ நாடகம் உதவியது போன்று, இந்த மகுடி நாடகம் செய்யது மீரா லெப்பை, அபூபக்கர் ஆகிய இருபெரும் வள்ளல்களின் சிறப்புகளை எடுத்துக்கூற செல்லி நகரில் வாழும் சீவரத்னக் கவிராசருக்கு மிகவும் உதவியாக இருந்துள்ளது.

இதேபோன்று மந்திர தந்திரப் போட்டிகள் நிறைந்த இரண்டு நாடகங்கள் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தெருக்கூத்து அமைப்பில் எழுதப்பட்டு நாடக மேடையில் நடித்துக் காட்டப்பட்டுள்ளன. சோகி நாடகம் என்ற பெயரில் நாடகத் தலைவனையும் அவனுக்கு எதிரியாக வருபவனையும் மந்திர வல்லமை மிக்கவர்களாகப் படைத்துக் கோவிந்த ராயக் கவிராயர் என்பாரும் சுப்பராய முதலியார் என்பாரும் இசைக்கூத்து நாடகங்கள் எழுதி மேடையேற்றி மக்களை மகிழ்வித்துள்ளனர்.

இந்த மகுடி நாடகம், அமைப்பில் நாடகமாக இல்லாது ஒருவரோ சிலரோ பாடும் வகையில் இசைக் கருவிகளுடன் பாடும் தன்மையில் உடுக்கடிப்பாட்டு போன்று அமைந்துள்ளது. இதில் இசைப் பாடல்களுடன் வெண்பா, சந்தக்கலிப்பா, மகுடிப்பதம், கலித்துறை ஆகியவை சுவையுடன் இணைக்கப்பெற்றுள்ளன. குறுகிய நேரத்தில் வள்ளல்களின் சிறப்புகளை எடுத்துக்கூறும் தன்மையுடையதாகக் காணப்படுகிறது.

**நூலமைப்பு :** நூலின் தலைவர்களையும் மகுடிக்காரர்களையும் அறிமுகப்படுத்தும் இரண்டு விருத்தங்கள் முதலில் இடம்பெறுகின்றன. அடுத்ததாகத் தரு என்று கூறப்படும் இசைப்பாடலில் மகுடிக்காரர்களின் மந்திரத்திறமைகள் விளக்கப்பட்டுள்ளன. பின் னர் இரு

வெண்பாக்களில் முறையே பாடல் தலை வர்களாக செய்யிது மீரா லெவ்வை, அபூபக்கர் மரைக்காயர் ஆகிய இருவரும் புகழ்ந்துரைக்கப்படு கின்றனர்.

தொடர்ந்து தருவாகப் பதினோரு இசைப்பாடல் கண்ணிகள் ஒன்றுவிட்டு ஒன்றாய் இரு வள்ளல் களைப் பற்றியும் அவர்களுடன் மகுடிக்காரர்களுக்கு இருக்கும் உரிமையைக் குறித்தும் விளக்கப்பட்டுள் ளன. அடுத்துவரும் இரண்டு வெண்பாக்கள் தலைவர் களைச் சிறப்பிக்கின்றன. பின் ஆறு இசைப்பாடல் கண்ணிகள் மகுடிக்காரர்களின் மந்திரத் தன்மைக ளைச் சாற்றுவதுடன் பாட்டுடைத் தலைவர்களையும் போற்றுகின்றன.

மேல்வரும் இரு வெண்பாக்களும் தலைவர்களின் சிறப்புகளைச் சுட்டுவதுடன் மகுடிக்காரர்களின் வேக வுணர்வினையும் காட்டுகின்றன. அடுத்துவரும் ஆறு கண்ணிகள் இசையுடன் தலைவர்களின் உயர்வுகளை முதலிரண்டில் காட்டி பின் நாலில் மகுடி விளையா டும் முறையை விளக்குகின்றன.

பின்வரும் இரண்டு வெண்பாக்களும் போட் டியைத் தெளிவாகக் காட்டும் நிலையில் அமைக்கப் பட்டுள்ளன. செய்யது மீரா லெவ்வையின் ஆதரவு மகுடிக்காரர் பொருட்களை மறைத்து வைப்பதாக முதல் வெண்பாவும் அவற்றை எடுத்துவிடுவதாக அபூபக்கரின் மகுடிக்காரர்கள் கூறுவதாக இரண்டாம் வெண்பாவும் கூறுகின்றன. அடுத்துவரும் பத்து கண்ணிகளும் தற்கத் தருக்களாக இடம் பெறுகின்றன. எடு என்றும் எடுப்பேன் என்றும் எதிரெதிர் உரை களாகக் கண்ணிகள் அடுக்கப்பெற்றுள்ளன. பின்னர் வரும் சந்தக் கலிப்பா செய்யது மீரா லெவ்வையின் தந்தையான சித்தி முகம்மதுவைப் பற்றிக் கூறுகிறது. அடுத்து அபூ பக்கரைப் பற்றிய செய்தி தரப்படுகிறது.

ஒரு மகுடிப்பதம் காமச்சுவையுடன் பெண்ணொ ருத்தி அபூபக்கர் மேல் மோகங்கொண்டு பாடுவது போன்று அமைக்கப்பட்டுள்ளது. இது பல்லவி, அனு பல்லவி, சரணம் என்ற அமைப்பில் காணப்படுகிறது. திடீரென்று இசை மாறுகிறது. பொருள் வேறுபடு கிறது. மகுடிக்காரர் இருவரும் மாறி மாறி ஒருவர் திற மையை ஒருவர் ஏற்றி வீரவுரைகளைக் கணைகளாக வீசுகின்றனர். வெல்வோர் தோற்போர் இல்லா நிலை ஏற்படுகிறது. ஆயினும் வாதம் முடிவதாக இல்லை.

இதைக்கண்ட அவையோர் இலவைத் தம்பி மகி பனிடம் இருவரையும் சந்து செய்வித்து மகுடிப் போரை முடித்து வைக்குமாறு வேண்டுகின்றனர். உடனே அவர் நேரில் வந்து இருவரையும் கூட்டி சமா தானம் செய்து வைக்கிறார். அபூபக்கர் மனம் மகிழ்ந்து மகுடிக்காரர்களுக்குப் பொன்னாபிசேகம் செய்கிறார். செய்யிது மீரா லெவ்வை களிப்புடன் கனகாபிசேகம் செய்து போற்றுகிறார். அனைவரையும் வாழ்த்தும் மங் களத் தருவுடன் மகுடி நாடகம் இனிதே முடிகிறது.

**மகுடி நாடக ஆசிரியர் :** தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அதிராம்பட்டினத்தில் உள்ள சீவரத்ன கவிராசர் என்ற கவிஞர் இந்த மகுடி நாடகத்தை இயற்றியதாகச் சிறப்புப்பாயிரப் பாடல்கள் கூறுகின்றன. அதிராம் பட்டினம் செல்லிநகர் என்றும் கூறப்படுகிறது. இதுவும் வேம்பத்தூரார் திருவிளையாடல் புராண ஆசிரியர் பெரும்பற்றப் புலியூர் நம்பியின் ஊரான செல்வி நகரும் வேறுவேறானவை. பின்னது திருநெல்வேலி மாவட் டத்தில் கரிவலம் வந்த நல்லூரின் பக்கத்திலுள்ளது. இதனை பனையூர் என்றும் கூறுவர். சீவரத்தினக் கவிராசரின் ஊர் செல்லி நகரென்றும் அதிவீரராமன் நகர் என்றும் குறிக்கப்பட்டுள்ள செய்தியைப் பாயிரப் பாடல்கள் வாயிலாக அறியலாம். இன்று அது அதிராம்பட்டினம் என்று வழங்கப்படுகிறது.

**நூலின் நாடக நயம் :** இந்நூலை மகுடி நாடகம் என்று கூறியுள்ளமை எண்ணத்தைத் தூண்டுவதாக உள்ளது. மூவர் பாடிய பாயிரப்பாடல்களும் நாடகம் என்றே இதனைக் குறிப்பிடுகின்றன. பீர் முகம்மது பண்டிதர் திருநடன மகுடி நாடகம் என்று சொல்வதி லிருந்து இது நடனத்துக்கு உரியது என்றும் கருத இட முள்ளது. ஆனால் நூலைப் படிக்கும்போது இரு மகுடிக் குழுவினர் மாறி மாறிப் பாடுவதுபோன்று தோன்றுகிறது.

மகுடி விளையாட்டு ஒரு கலை. அதனை அடிப் படையாகக் கொண்டு தோன்றியது இந்த இலக் கியம். இதன் அமைப்பு ஆடிப்பாடுவதற்கு ஏற்றதாக உள்ளது. மகுடிக்காரர்கள் பாத்திரங்களாகத் தோன்று கின்றனர். ஆற்றல் முறுக்கத்துடன் இரு மாறுபட்ட குழுவினர் தங்கள் மேலாற்றலைப் புலப்படுத்தி வீர வுரை பகர்கின்றனர். அதில் உணர்ச்சி கொந்தளிப்பு மிகுதியாகக் காணப்படுகிறது. அங்குச் செயலோட்ட முடைய நாடக நயம் தோன்றுகிறது. இந்த மகுடி நாடகம் தமிழ்நாட்டில் வழக்கத்திலிருந்த ஒரு கலை இலக்கிய இனத்தை மறைந்துவிடாது காக்கும் அரிய நூல் என்று மதிக்கத்தக்கதாகும்.

- சி.சு.

**மங்கலங்கிழார்** : இவர் வடார்க்காடு மாவட்டம் அரக்கோணம் வட்டம் புளியமங்கலம் என்னும் சிற்றூரில் ஐயாசாமி முதலியாருக்கும் பொன்னுரங்கம் அம்மையாருக்கும் 1897 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். இவரின் இயற்பெயர் குப்புசாமி. இவர் வேளாளர் மரபைச் சேர்ந்தவர். புளியமங்கலத்தில் ஐந்தாம் வகுப்புவரை கல்வி பயின்றார். பின்னர், சென்னையில் தனது தமக்கையின் வீட்டில் தங்கியிருந்து பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயின்றார்.

இச்சமயம் தமக்கையின் கணவர் காலமாக பத்தாம் வகுப்புடன் தனது கல்வியை நிறுத்தி, தமையனார் செய்துவைத்த தச்சுதொழிலை மேற்கொண்டார். ஆனால் அவர் உள்ளத்தில் தமிழ் கற்க வேண்டுமென்ற ஆசை இருந்துகொண்டே இருந்தது. இதனால் சென்னை டி.என். சேசாசலம் அய்யர் நடத்தி வந்த கலா நிலையம் இரவுப்பள்ளியில் தமிழ் இலக்கியம் பயின்றார். கலாநிலைய வளர்ச்சிக்காக நாடகம் நடத்தி பொருள் திரட்டினார். அந்நாடகத்தில் கிழார் பெண் வேடமேற்று நடித்தார். இதை உணர்ந்த திரைப்படத் துறையினர் கிழாரைக் கல்கத்தாவிற்கு அழைத்துச் சென்று சந்திரகுப்த சாணக்கியர் என்னும் திரைப் படத்தில் சாணாக்கியராக நடிக்கச் செய்தனர். மே.வீ. வேணுகோபாலப் பிள்ளையுடன் சேர்ந்து கா. ர. கோவிந்தராச முதலியாரிடம் தொல்காப்பியம் முதலிய தமிழ் நூல்களைக் கற்றார். 1922ஆம் ஆண்டு கமலாம்மாளை மணந்தார்.

தச்சுத்தொழிலில், தொழிற்சாலையின் மேற்பார்வையாளர் பொறுப்பைப் பெற்றார். கிழாரின் தமிழறிவு பொதுமக்களுக்குப் பயன்பட வேண்டும் என்றும் நல்லெண்ணத்தில், ஆசிரியர் கோவிந்தராச முதலியார் அறிவுரைப்படி பெரம்பூர் கலவலகண்ணன் செட்டியார் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகச் சேர்ந்து பதினைந்து ஆண்டுகாலம் சிறப்பாகப் பணியாற்றினார். இவர் திருக்குறளின் பால் கொண்ட ஈடுபாட்டின் காரணமாக வ.உ.சி. அவர்களிடம் பாடங் கேட்டார். சென்னையிலுள்ள வடிவேல் செட்டியாரிடம் வேதாந்தம் பயின்றார். தமது தந்தை காலமானதால் அவரது பொறுப்பான கிராம அதிகாரிப்பணியைச் சிறிதுகாலம் புளியமங்கலத்தில் மேற்கொண்டார். ஆயினும், அப்பணியில் தொடர்ந்து செயல்பட இவர் மனம் ஈடுபடவில்லை. தான் கற்ற கல்வி மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டுமென்ற எண்ணத்துடன் தனது ஊரிலேயே தமிழ் இலக்கிய இரவுப் பள்ளி நடத்தி வந்தார். இச்சமயம் இராணிப்பேட்டை முனிவர் சின்மயானந்த அடிகளாரிடம் ஞான தீட்சைப் பெற்றுத் துறவறம் பூண்டார்.

தமிழக வடவெல்லை சுருங்கி வருவதைக் கண்டு மிகவும் வருத்தமுற்றார். தமிழைப் பெருக்கி எல்லையைக் காக்க வேண்டும் என்ற உணர்வில் வளர்புரம், குருவராஜப்பேட்டை, மின்னல், நரசிங்கபுரம், அம்மையார் குப்பம், பொதட்டூர்பேட்டை, மத்தூர், மத்தேரி, அத்திமாஞ்சேரிப்பேட்டை, சுரக்காய்ப் பேட்டை, கீழப்புத்தூர், மேலப்புத்தூர், நாரயணவனம், புதுப்பேட்டை, சிந்தலபேட்டை, சத்திரவாடி ஆகிய பதினாறு கிராமங்களில் அறிநெறித் தமிழ்ச் சங்கம் அமைத்துத் தமிழ் வகுப்புகளைத் தொடங்கி நடத்தி வந்தார். இவரது முயற்சியால் சில ஊர்களில் தமிழர் பள்ளிகள் தொடங்கப்பட்டன. பொதட்டூர் பேட்டையில் தமிழாசிரியர் பயிற்சிப்பள்ளியும் 4-8-1952இல் தொடங்கப்பட்டது.

தமிழ்ச் சங்கத்தில் நன்றாகப் படித்த மாணவர்களைக் கல்லூரிகளுக்கு அனுப்பிப் புலவர்களாகவும் ஆக்கினார். தமிழாசிரியப் பள்ளியில் தொடக்க இடைநிலை ஆசிரியர்களை உருவாக்கினார். மேலும், பல பட்டதாரிகள், புலவர்கள், கவிஞர்கள், தமிழாசிரியர்கள் எனப் பலரை உருவாக்கினார். திரு. வி. க அவர்கள் இவரை வித்தியானந்தர் என்றழைத்தாலும் மக்கள் எல்லோரும் கிழாரைச் சாமியார் என்றே அழைத்தனர்.

தமிழர்களிடம் தமிழ் நிலைகொள்ள வேண்டுமாயின் தமிழக எல்லை ஆந்திரப்பகுதியிலிருந்து காக்கப் படவேண்டும் என்றெண்ணி வடவெல்லைப் போராட்டத்தை முதன்முதலில் தோற்றுவித்தார். இதன் பயனாய் பலமுறை சிறை சென்றார். வடவெல்லைப் போராட்டக் குழுவிற்கு ம.பொ. சி. தலைவராக இருந்தார். தொண்டரின் பணியே சிறந்தபணி என்பதை மெய்ப்பிக்கும் அளவில் கிழார் தொண்டாற்றினார்.

17-8-1947இல் கிழார் அவர்கள் திருத்தணியில் ஊர்வலம் நடத்தினார். இதன் பயனாக 6-10-1949இல் திருத்தணி வன்னியகுலச் சத்திரத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகம் கிழாரின் தலைமையில் தொடங்கப்பட்டது. அதன் பின்னர் 1949இல் வடவெல்லைப் பாதுகாப்புக் குழு அமைத்து அதன்மூலம் பல தமிழர் மாநாடுகளும்

பொதுக்கூட்டங்களும் நடத்தி வட வெல்லை காக்கப் பாடுபட்டார். இதன்மூலம் கிழாரை வடவெல்லைத் தந்தை எனப் போற்றிச் சிறப்பிக்கின்றனர்.

ஆசிரியர் கிழார் சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதிகளுக்குத் தனி ஒரு மனிதராக வந்து தமிழைக் கற்கவும், தமிழன் என்ற உணர்வை ஏற்படுத்தவும், ஆன்மீகத்துறையில் மக்களுக்கு நல்லுரைகள் வழங்க வும் அயராது பாடுபட்டார். தன்னலம் அற்ற அமைதியே உருவான அண்ணல் காந்தியடிகளின் கொள்கைகளுக்கேற்ப நடந்து சிறந்த வழிகாட்டியாக வும் இருந்த கிழார் பொதட்டூர் பேட்டையில் தமிழா சிரியர் பயிற்சிக்கட்டடம் கட்டும் பணியில் ஈடுபட்டு இருக்கிற காலத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டு 31-8-1953இல் மறைந்தார்.

வடவெல்லை வெற்றி விழாவின் போது திருத்தணி நகராட்சி அலுவலகம் முன்பு இவர்தம் முழு உருவச் சிலை ஒன்று அமைக்கப்பட்டது. பொதட்டூர் பேட்டை யில் மங்கலக்கிழார் தெரு ஒன்றும், மங்கலக்கிழார் இளைஞர் மன்றம் ஒன்றும் அமைத்துள்ளனர். அத்தி மாஞ்சேரிப்பேட்டையில் மங்கலங்கிழார் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்துள்ளனர். குரு வாரசபேட்டையில் உயர்நிலைப்பள்ளிக்கு மங்கலக் கிழாரின் பெயரையும் உருவச்சிலையையும் அமைத் துள்ளனர். வா.சி.தனபாலன் என்பவர் மங்கலங்கிழார் பிள்ளைத்தமிழ் என்ற நூலை இயற்றி வெளியிட் டுள்ளார்.

- மோ. கோ. கோ.

**மண்டல் குழு அறிக்கை :** பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனுக்காக 1978ஆம் ஆண்டு சனதா ஆட்சிக் காலத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிந் தேசுவரி பிரசாத் மண்டல் தலைமையில் அமைக்கப் பட்டதே மண்டல் குழு ஆகும். சமூக ரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்வுக் கும் வளத்திற்கும் வகைசெய்ய குடியரசுத்தலைவர் ஒரு குழு அமைக்கலாம் என்ற அரசியல் சட்டம் 340ம் பிரிவின்படி இக்குழு அமைக்கப்பெற்றது. இக்குழு வில் ஆர்.ஆர். போலே, திவான் மோகன்லால், எல். ஆர். நாயக், கே.சுப்பிரமணியம், எஸ். எஸ். கில் ஆகி யோர் உறுப்பினர்களாக இருந்தனர். இந்தியா முழு வதும் இக்குழு பயணம் செய்து போதுமான புள்ளி விவரங்களைச் சேகரித்து ஆழமான ஆய்வுக்குப்பின் அறிக்கை தயாரித்தது. இக்குழு தனது அறிக்கையை 1980ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரிடம் அளித்தது. இவ்வறிக்கை பதினான்கு பிரிவுகளையும் இருபத் தொன்று பின்னிணைப்புகளையும் கொண்டது.

**பரிந்து[illegible]ள் :** கல்வி மற்றும் வேலை வாய்ப்பு களில் சமூக [illegible]கவும் கல்வி ரீதியாகவும் பிற்படுத் தப்பட்ட மக்[illegible]த மைய அரசிலும், தனியார்துறை களிலும் இ[illegible]தேழு விழுக்காடு இடஒதுக்கீடு வழங்கவே[illegible] என்பதே இப்பரிந்துரையின் மையக்கரு[illegible] இவ்விட ஒதுக்கீட்டை நடை முறைப்படு[illegible]முறைகளை மண்டல் அறிக்கை விரிவாக விளக்கு[illegible]து. அதன்படி திறமையின் அடிப் படையில் அதிக மதிப்பெண் எடுத்து திறந்த போட்டி யில் வரும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களை இருபத் தேழு விழுக்காடு இட ஒதுக்கீடு கணக்கில் சேர்த்துக் கொள்ளக்கூடாது.

இருபத்தேழு விழுக்காடு இட ஒதுக்கீடு எந்த ஒரு துறையில் முழுமையாக நிரப்பப்படவில்லையோ அத்துறை இடங்களை மூன்று ஆண்டுகட்கு வைத்தி ருந்து அவற்றை நிரப்ப வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பில் வயது வரம்பு தளர்த்தப்படுவதுபோல் பிற்படுத்தப் பட்ட மக்களுக்கு வயதுவரம்பு தளர்த்தப்பட வேண் டும். தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களின் கல்வி, சமுதாய மேம்பாட்டிற்கான மத்திய மற்றும் மாநில அளவில் வாரியங்கள் அமைக்கப்பட வேண் டும்.

தீண்டாமையினை இன்னமும் அனுபவிக்கும் மீனவர் போன்ற பல சாதியினரைப் பிற்படுத்தப் பட்ட பட்டியலிலிருந்து நீக்கித் தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும்.

இப்போது மாநில அரசுகள் தங்களது நிதியைக் கொண்டு பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத் திற்கு உதவி வருகிறது. மைய அரசு நிதி உதவி செய் வதில்லை. இனி மைய அரசு நிதியுதவி அளிக்க வேண்டும்.

போதிய பிரதிநிதித்துவம் இல்லாத பிற்படுத்தப் பட்ட மக்கள் மிகுதியாக வாழும் பகுதிகள் தனித் தொகுதியாக ஒதுக்கப்பட வேண்டும்.

மண்டல் குழுவின் பரிந்துரைகள் அனைத்தையும் இருபது ஆண்டுகளுக்குப் பின்னரே மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதற்குமுன் செய்யக்கூடாது.

இப்பரிந்துரைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்க இசைந்த வகையில் அரசின் விதிமுறைகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இக்குழுவின் அறிக்கையை நிறைவேற்றுமாறு பத்து ஆண்டுகளாகப் பல்வேறு சமூகநீதிக்காகக் குரல் கொடுக்கும் இயக்கங்கள் வலியுறுத்தி வந்தன. தமிழகத்தில் திராவிடர் கழகம் சிறப்பு மாநாட்டைக் கூட்டி இக்குழுவின் பரிந்துரைகளை நிறைவேற்ற வேண்டுமெனத் தீர்மானமும் நிறைவேற்றியது. இதே வகையில் திராவிட முன்னேற்றக்கழக அரசு சட்டமன்றத் தில் தீர்மானம் நிறைவேற்றியது. இத்தகைய முயற் சிகளின் விளைவாக சனதா ஆட்சியில் அமைக்கப் பட்ட இக்குழுவின் பரிந்துரைகள் வி.பி.சிங் தலைமையிலான சனதாதள ஆட்சியில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- சா. உ.

**மணியம்மை ஈ.வெ.ரா. ( 1920 – 1978 ) :** வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் கனகசபை, பத்மாவதி ஆகியோருக்கு மகளாக 1920ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பத்தாம் நாள் பிறந்தார். காந்திமதி என்ற இவர் இயற்பெயர், 1944இல் கே. ஏ. அரசியல் மணி என்று மாற்றம் செய்யப்பட்டது. திருமணத்திற்குப் பின் ஈ.வெ.ரா. மணியம்மையார் என்று அழைக்கப்பட்டார். வேலூர், அரசு உயர்நிலைப்பள்ளியில் பள்ளி இறுதி வகுப்பு வரை படித்துவிட்டு, கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரப்பட்டினத்தில் சி.டி. நாயகம் தமிழ்க் கல்லூரியில் சிலகாலம் பயின்றார். அம்மையாரின் தந்தை சுயமரியாதைக் கருத்துகளில் ஈடுபாடும், பெரியார் ஈ.வெ.ரா மீது பற்றும் கொண்டிருந்ததால் சிறுவயது முதலே அவ்வுணர்வுடையவராக அம்மையார் இருந்தார். வேலூருக்கு 1936இல் வந்த பெரியாரிடம் அறிமுகமானார். இந்தச் சந்திப்புக் காரணமாக வகுப்பிலிருந்து பள்ளி நிர்வாகம் இவரை வெளியே அனுப்பியது. அப்போது இவர் ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தார். ஒரு முறை அம்மையாரின் தந்தை கனகசபை, உடல் நிலையைக் கவனித்துக்கொள்ளுமாறு பெரியாருக்குக் கடிதம் எழுத, அதற்குப் பெரியார், எல்லோரும் இப்படி எழுதுவதாகவும், உடன் இருந்து உதவ யாருமில்லை என்றும் எழுதினார். அதனால் 1943ஆம் ஆண்டு செப்டம்பர் பதினொன்றாம் நாள் மணியம்மையாரை அழைத்து வந்து, பெரியாரிடம் தொண்டு செய்ய விட்டு விட்டுத் திரும்பினார் கனகசபை. அன்று முதல் சுமார் முப்பது ஆண்டுகள் பெரியாருடன் இருந்து தொண்டு செய்தார் மணியம்மையார்.

பெரியார், மணியம்மையாரை 1949 சூலை ஒன்பதாம் நாள், பதிவுத் திருமணம் செய்து கொண்டார். இயக்கத்திற்குப் பாதுகாப்பு வேண்டி இந்த ஏற்பாட்டைப் பெரியார் செய்ய முன் வந்தபோது, மணியம்மையார் மனமுவந்து ஏற்றார். ஆனால் அத்திருமணம் காரணமாக இவ்வம்மையார் பழிச்சொல் ஏற்றதுண்டு. பெரியாரை ஒரு குழந்தைபோல் கருதி, சரியான நேரத்தில் சரியான உணவு உண்ணச் செய்தல், தூங்கச் செய்தல் என்ற வகையில் கவனித்து நீண்ட காலம் வாழ வழி செய்தவர் இவரே.

சேலத்தில் 1944ஆம் ஆண்டு நடந்த திராவிடர் கழக மாநாட்டில் மணியம்மையார் முதன்முதலாக மேடையேறி உரையாற்றினார். இதுவே இவர் தம் பொதுத்தொண்டின் தொடக்கம். அதன்பின் பல மாநாடுகள், கூட்டங்கள், கலந்துரையாடல்கள், வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள் ஆகியவற்றில் பகுத்தறிவுக் கருத்துக்களை முழக்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார். கூட்டங்களிலும் மாநாடுகளிலும் தாமே இயக்க நூல்களை விற்றார். குடியரசு ஏட்டில் 1944 ஆம் ஆண்டில் "இரண்டும் ஒன்றே" என்ற தலைப்பில் இராமாயணம் - கந்தபுராணம் பற்றி ஆய்வுக்கட்டுரை எழுதினார். அது முதல் பல கட்டுரைகள் மூலம் இன வுணர்வைத் தூண்டலானார்.

ஈ.வெ.ரா. மணியம்மையார் தமிழின மேம்பாட்டிற்காகப் பல போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தினார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு 1948இல் இரண்டுமாத சிறைத்தண் டனை அனுபவித்தார். சாதி ஒழிப்புப் போராட்டம் 1958இல் நடந்தபோது அதில் கலந்து கொண்டவர் களை அரசு கைது செய்து சிறையிலடைத்தது. சிறையதிகாரிகளின் கொடுமையால் சிறையில் இருவர் மரணம் அடைந்தனர். அவர்கள் உடலைத் தர சிறையதிகாரிகள் மறுத்தனர். உடனே, அன்றைய முதலமைச்சர் காமராசரைச்



**மணியம்மை, ஈ.வெ.ரா.**

சந்தித்து அனுமதி பெற்று வந்து, திருச்சி சிறையிலிருந்து உடல்களைப் பெற்று, வீர வணக்கம் செய்து அடக்கம் செய்தார். அதே ஆண்டில் இளந்தமிழா புறப்படு போருக்கு என்ற கட்டுரையை விடுதலை நாளேட்டில் அச்சிட்டதற்காக அம்மையாரும், கட்டுரையாளரும் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக நியமிக்கப்படவேண்டும் என்பதற்காக 1974இல் அஞ்சலகங்கள் முன் மறியல் நடத்தியதுடன், அவ்வாண்டு சென்னை வந்த மைய அரசு அமைச்சருக்குக் கறுப்புக்கொடி காட்டி சிறையேறினார். வட இந்தியாவில் ஆண்டு தோறும் நடைபெறும் இராமலீலா நிகழ்ச்சியில்

மைய அமைச்சர்கள் கலந்துகொள்வது கோடிக்கணக்கான திராவிடர்களை அவமானப்படுத்துவதாகவும், இந்தியாவின் மதச்சார்பற்ற கொள்கைக்கு முரணானதாகவும், இருப்பதாகக்கூறி, அவ்வாறு கலந்து கொள்ளக்கூடாது என வேண்டி 1976ஆம் ஆண்டில் குடியரசுத்தலைவருக்கும், இந்தியத் தலைமை அமைச்சருக்கும் தந்திகள் கொடுத்தார். அவை கவனிக்கப்படாமையால் 'இராவண லீலா' என்ற நிகழ்ச்சியை நடத்தி கைதானார். நெருக்கடி நிலையை அறிவித்த அன்றைய இந்தியத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி தமிழக அரசைக் கலைத்ததைக் கண்டித்தார். இதனால் 31 - 1 - 1976 அன்று தொண்டர்களுடன் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். இந்தியத் தலைமையமைச்சர் இந்திராகாந்தி 1977 ஆம் ஆண்டு தமிழகம் வந்தபோது, நெருக்கடி நிலை அடக்கு முறைக்குக் காரணமானவர் என்பதால் தம் உடல் நலங் குன்றிய நிலையிலும் கறுப்புக்கொடிப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தினார்.

சுயமரியாதைப் பிரச்சார நிறுவனத்தின் ஆயுட் காலச் செயலாளராக 1952இல் மணியம்மையாரைப் பெரியார் நியமித்தார். பெரியார் 1973ஆம் ஆண்டு மறைந்தபின், கழகத் தலைமையேற்றதுடன், தொண்டர்களை உற்சாகப்படுத்த, பெரியார் வழியில் இயக்கம் எப்போதும் போல் செயற்படும் என்று உறுதியளித்தார். திராவிடர் கழக நிர்வாகக்குழு இவரை 1974 இல் இயக்கத்தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுத்தது. அது முதல் இயக்கத்தைத் திறம்பட நடத்தியதுடன் தொண்டர்களையும் தாயன்புடன் கவனித்துக் கொண்டார். பெரியார் இவருக்கு எழுதி வைத்த சொத்துக்களையும் இயக்கத்திற்கே அளித்தது தமக்கென வாழா, தகைமையுடையவர் இவர் எனக் காட்டுகிறது.

பெரியார் நூலகம், ஆய்வகம், பெரியார் மணியம்மை மகளிர் உயர்நிலைப்பள்ளி, பெரியார் மணியம்மை கல்வி அறப்பணிக் கழகம் ஆகியவற்றை ஏற்படுத்தியதுடன், பெரியார் கட்டடம் ஒன்றையும் இவர் கட்டியுள்ளார். சீர்திருத்த இயக்கம் ஒன்றிற்கு ஒரு பெண் தலைமை தாங்கி, பல போராட்டங்களை வெற்றியுடன் நடத்திய பெருமை இவரைச் சாரும். இவர் 1978ஆம் ஆண்டு காலமானார்.

- க.த.

**மதுராந்தகன் கண்டராதித்தன் :** இவன் உத்தம சோழனின் ( கி.பி. 970 - 985 ) மகனும் கண்டராதித்தனின் ( கி.பி. 949 - 956 ) பேரனும் ஆவான். உத்தம சோழனையடுத்து முதலாம் இராசராசன் அரியணையேறியதால், தனது தந்தைக்குப்பின் இவன் அரியணையேறும் வாய்ப்பினை இழந்தான். மாமன்னன் முதலாம் இராசராச சோழனது ஆட்சிக் காலத்தில், இவன் திருக்கோயில்களைக் கண்காணித்தல், அறநிலையங்களைப் பராமரித்தல், மேற்பார்வையிடுதல் போன்ற பணியில் ஈடுபட்டு வந்தான்.

கோயில் நிர்வாகத்தில் காணப்பட்ட முறைதவறிய செயல்களையும் சீர்கேடுகளையும் இவன் கூர்ந்து கவனித்து அவற்றை ஒழுங்குப்படுத்துவதில் முனைந்து செயல்பட்டான். தவறிழைத்த அலுவலர்களும், கோயில் பணியாளர்களும் அருச்சகர்களும் தண்டிக்கப்பட்டனர். கோயில் வரவுசெலவுக் கணக்குகள் சரிவர தணிக்கைச் செய்யப்பட வேண்டும் என்பதில் மதுராந்தகன் கண்டராதித்தன் மிகவும் கண்டிப்பாக இருந்தான்.

இராசராச சோழனின் நான்காம் ஆட்சியாண்டில் இவன் திருமாற்பேறு அக்னீசுவரர் கோயிலைப் பார்வையிட்டு, கோயில் நிலங்கள் பிறரால் கைக்கொள்ளப்பட்டதனையும் அதனால் இறைவனுக்குரிய படையல் அமுதின் அளவு குறையப்பட்டதையும் அறிந்து, தொடர்புடைய ஊழியர்களுக்குத் தண்டம் விதித்தான். திருவல்லம் கோயில் கணக்குகளைத் தணிக்கை செய்து, அக்கோயிலின் நான் வழிபாட்டைச் சீர் செய்யும் பொருட்டு ஏழு கழஞ்சு நான்கு மஞ்சாடி பொன்தானம் அளித்தான். அக்கோயில் நிலங்களைச் சிவபிராமணர் சிலர் தமது உடைமையாக்கிக் கொண்டனர். இதனைக் கண்டுபிடித்த இவன், அச்சிவ பிராமணர்களுக்கு 74 கழஞ்சு பொன் தண்டம் விதித்தான். கி.பி.992இல் இவன் திருத்தீக்காலி வல்லத்துக் கோயிலில் இறைவனுக்குச் சகசுர கடாபிடேகம் ( ஆயிரம் குடங்களில் நீராட்டுதல் ) செய்வித்தான்.

இறையன்பில் மேம்பட்ட இவன், திருமாற்பேற்று இறைவர்க்குத் திங்கள் தோறும் அபிடேகம் செய்ய நூற்றெட்டுக் குடங்கள் தயிர், தேன், நெய் ஆகியவற்றைத் தானமளித்தான். அவ்வூர்க் கோயிலில் நந்தா

விளக்கொன்று எரிக்கப் பதினைந்து கழஞ்சு பொன்னைத் தானமளித்தான். குடிமல்லம் கோயிலை இராசராசனது நான்காம் ஆட்சியாண்டில் இவன் திருப்பணி செய்தான். அக்கோயிலில் இறைவனது திருமேனி ஒன்றை எடுப்பித்து, அதன்நாள் வழிபாட்டிற்குத் தேவதானமாக நிலத்தையும் வழங்கியுள்ளான்.

- ம. இரா. த.

**மதுரை சோமு :** கம்பீரமான குரலில் இராகங்களைக் கற்பனைத்திறனுடன் விரிவாகப்பாடி ஆயிரக் கணக்கான இசை அன்பர்களை மகிழ்வித்தவர் மதுரை சோமசுந்தரம் ஆவார். மதுரை சோமு என்று இசை அன்பர்களால் அழைக்கப்பெற்ற இவர் 1934 ஆம் ஆண்டு முதல் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக கர்நாடக இசைவானில் ஒளிவீசும் நட்சத்திரமாக விளங்கினார். மிருதங்கச் சொற்கட்டுகளுக்கு ஏற்ப சுரக்கோர்வைகள் அமைத்துப் பாடுவதிலும் அவர் நிகரற்று விளங்கினார்.

சச்சிதானந்தம் பிள்ளை என்னும் இசைக் கலைஞருக்கும் கமலாம்பாள் என்னும் அம்மையாருக்கும்



மதுரை சோமு

அருந்தவப்புதல்வராக சோமசுந்தரம் 1919ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதி சுவாமி மலையில் தோன்றினார். சிறுவயதிலேயே அவர் நாகசுர வித்வான் சுவாமிமலை சுப்ரமணியப்பிள்ளை, வயலின் வித்வான் சேத்தூர் சுந்தரேச பத்தர் ஆகியோரிடம் இசை பயின்றார். அவரது பன்னிரண்டாவது வயது முதல் பதினான்கு ஆண்டுகள் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளை அவர்களிடம் குருகுல வாசம் செய்து இசையில் சிறந்த பயிற்சி பெற்றார். கற்பனைச் சுரம் பாடுவதிலும், இராகம், தாளம், பல்லவி பாடுவதிலும் சிறந்த தேர்ச்சிப்பெற்ற சோமு, 1934ஆம் ஆண்டு முதல் இசை அரங்கு நிகழ்ச்சிகள் நிகழ்த்தினார். இவரது வளமான குரலும், கற்பனைத் திறனும் இவருக்குப் புகழைத் தேடித்தந்தன. பல புதிய இராகங்களை இவர் விரிவாகப் பாடியது இவரது கற்பனைத் திறனுக்குச் சான்றாக அமைந்தது. இவர் தமிழில் பல சாகித்தியங்களை இயற்றி அவற்றைப் பாடியும் வந்தார். இவர் அமெரிக்கா, மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற பல வெளிநாடுகளுக்கும் சென்று இசை அரங்கு நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத்துறையில் கலைப்புலத் தலைவராக இவர் பணியாற்றியுள்ளார். தஞ்சை தமிழ்ப்பல்கலைக்கழக இசைத்துறையின் மதிப்புறு பேராசிரியராக இவர் நியமனம் பெற்று, இசைத்துறை சிறந்த முறையில் பணியாற்றுவதற்கான ஆலோசனைகளை வழங்கினார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. இந்திய அரசின் பத்மஸ்ரீ பட்டத்தையும், சங்கீத நாடக அகெடெமியின் விருதையும் இவர் பெற்றார். சென்னை தமிழிசைச் சங்கம் இவருக்கு இசைப்பேரறிஞர் என்ற பட்டத்தை வழங்கியது. இவர் பெற்ற வேறு பல பட்டங்கள் வருமாறு : கலைமாமணி, சங்கீத சக்கரவர்த்தி, கந்தர்வ கானமணி, சங்கீத சிம்மம், சுரலய சாம்ராட். 1989ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எட்டாம் தேதி இவர் மறைந்தார். இவருடைய மறைவு கர்நாடக இசை உலகிற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

- து. ஆ. த.

**மருங்கொலி :** மருங்கொலி பல் மற்றும் அண்ணப் பகுதியின் பல்வேறு இடங்களில் பிறக்கின்றது. நாவின் நுனி உயர்ந்து வாயின் மேற்புறம் அண்ணத்தின் பல்வேறு இடங்களில் அழுந்துவதால் நுரையீரலிலிருந்து வரும் மூச்சுக்காற்று நாவின் நடுப் பகுதியில் அடைபட்டு நாவின் ஓரங்களுக்கும் பற்களுக்கும் இடையே தடையின்றி வேகமாக அதிக உரசலின்றி வெளிப்படும்போது மருங்கொலிகள் பிறக்கின்றன. வாயின் நடுவே முழுமையாக அடைபட்ட காற்று கடையண்ணம் மூக்கறை வாயிலை நோக்கி உயர்ந்திருப்பதால் மூக்கறையின் உள்ளே செல்ல இயலாது. அண்ணப் பல்லில் பொருந்திய நா, பொருந்திய நிலையிலிருந்து விடுபடும்பொழுது வாயின் நடுவே அடைபட்ட மூச்சு நாவின் மருங்கு வழி வெளியேறுகிறது. மருங்கொலி பிறப்பின்போது, காற்று நாவின் ஒரு பக்கமோ இரு பக்கமோ வெளியேறலாம். மருங்கு வழி வெளியேறும் காற்றினால் ஒலிக்கப்படுவதால் மருங்கொலி என குறிக்கப்படுகின்றது. மருங்கொலிகள் பிறக்கும்பொழுது குரல் வளை மடல்கள் அதிர்கின்றன. எனவே, பெரும்பாலான மருங்கொலிகள் அதிர்வுடை ஒலிகளாகவே இருக்கும். ஆனால் சில மொழிகளில் அதிர்விலா மருங்கொலிகளும் காணப் படுகின்றன. அதிர்விலா மருங்கொலிகள் வெல்ஸ், பிரெஞ்சு, ஆங்கிலம், செர்மன், இத்தாலி மற்றும் சில அமெரிக்க மொழிகளிலும் காணப்படுகின்றன. மருங்கொலி ஒலிக்கப்படும் தன்மைக்கும், இடத்திற்கும் ஏற்ப ஒலிப்பு முறையில் மாற்றம் பெறுகின்றது. இவற்றில் முக்கியமானவை அண்ண, பல் மருங்கொலி, வளைநா மருங்கொலி, அண்மருங்கொலி, கடையண்ண மருங்கொலி என்பனவாகும். அண்மருங்கொலி இத்தாலி மொழியில் காணப்படுகின்றது. பெரும்பாலான மொழிகளில் இரண்டு மருங்கொலிகளே காணப்படுகின்றன.

ஆங்கிலத்தில் L என்பது மருங்கொலியாகும். இவ்வொலி, ஒலிக்கப்படும் தன்மைக்கேற்ப இரண்டு முறைகளில் வழங்கப்பெறுகின்றது. இவ்வொலியைத் தெளி மருங்கொலி (Clear L), அடர் மருங்கொலி (dark L) என இருவகையாகப் பிரிப்பர். சொல்லின் முதலில் வருவதும் உயிர் Iயுடன் ஒலிக்கப்படுவதுமான மருங்கொலி தெளி மருங்கொலியாகும். சொல்லின் இறுதியில் வருவதும் பின் உயிர்களுடன் ஒலிக்கப்படுவதுமான மருங்கொலி அடர் மருங்கொலியாகும்.

தெளி மருங்கொலி - Light, Lid

அடர் மருங்கொலி - Full, Fool

ஆங்கிலத்தில் Plan, Clean என்ற சொற்களில் வரும் L அதிர்விலா மருங்கொலி அதிர்விலா ஒலிக்குப் பின்னால் வரும் L அதிர்விலா மருங்கொலியாக ஒலிக்கப்படுகிறது. ஆங்கிலச்சொல்லான Little என்பதிலுள்ள இரண்டு L இரண்டு முறைகளில் ஒலிக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் மருங்கொலியை அண்பல்மருங் கொலி, வளை நா மருங்கொலி, கடையண்ண மருங் கொலி எனப் பலவாறாக ஒலிக்க முடியும்.

மருங்கொலி எல்லாத் திராவிட மொழிகளிலும் காணப்படுகின்றது. தமிழில் ‘ல’, ‘ள’, ‘ழ’, என்பன மருங்கொலிகள்.

‘ல’ என்ற ஒலி அன்பல் மருங்கொலியாகும். நுனி நா அண்பல்லில் பொருந்தியிருக்கக் காற்று நாவின் இரு மருங்குகளின் வழிவெளிவர இவ்வொலி பிறக்கின்றது. இவ்வொலி பிறக்கும்போது குரல்வளை மடல்கள் அதிர்கின்றன. குரல்வளை அதிர்வின்றியும் இவ்வொலி பிராகுயிமொழியில் பிறக்கின்றது. நா சிறிது வளைந்து அண்ணத்தின் நடுவே பொருந்தியிருக்கக் காற்று நாவின் மருங்கின் வழியே வெளியேற ‘ள’ பிறக்கின்றது. இவ்வொலி பிறக்கும்போது குரல் வளை மடல்கள் அதிர்கின்றன.

‘ழ’ என்பது மருங்குரசொலி. நுனிநா வளைந்து அண்ணத்தின் மிக அருகில் வந்து அண்ணத்தைத் தொடாமல் குழிந்து அதற்கும் அண்ணத்திற்கும் இடையே இடைவெளியை உண்டாக்கும். காற்று நாவின் இரு மருங்கிலும் சிறிது உராய்வுத்தன்மையோடு வெளியேறுகிறது. ஏனைய மருங்கொலி போன்றில்லாமல் தொடர்ந்து உராய்வோடு இவ்வொலி பிறப்பதால் இதனை நாவளைத் தொடரொலி என்றும் கூறுவர். இவ்வொலி தமிழ், மராத்தி மற்றும் மலையாள மொழிகளில் மட்டுமே காணப்படுகிறது. தமிழில் இவ்வொலியைச் சிறப்பு ழகரம் என்பர்.

தமிழில் மருங்கொலிகளான ல - ள, ள - ழ என்பன மயங்கி வருகின்றன. மருங்கொலிகளின் பிறப்பு ஏறத்தாழ ஒன்றுபோல் இருப்பதால் இம்மயக்கம் ஏற்படுகின்றது. பெரும்பாலான கிளை மொழிகளில் இம்மயக்கத்தைக் காணலாம்.

| | |
|---|---|
| காலை - காளை | அவர்கள் - அவர்கல் |
| கவலை - கவளை | கள் - கல் |
| கலை - களை | அவள் - அவல் |

பெரும்பாலான மொழிகளில் மருங்குரசொலி நாவளை ஒலியோடு இணைந்து வழங்கும் இயல்பைக் காணலாம். தென்னார்க்காடு, தஞ்சாவூர், திருச்சி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் பேசப்படும் கிளை மொழிகளில் மருங்குரசொலி பாதுகாக்கப்பட்டு வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் ழ வேறுபாடு இல்லை.

- எச். சி.

**மருத்துவச் சட்டவியல் :** வழக்குகளை விசாரிக்கும்பொழுது தோன்றும் உடற்கூறு பற்றிய சிக்கல்களை நீதிமன்றம் மருத்துவ அடிப்படையில் விடுவிப்பதே மருத்துவச் சட்டவியல். மருத்துவ அறிவானது சட்டத்தின் அடிப்படையில் இவ்வியலில் பொருத்த மான முறையில் செயற்படுத்தப்படுகிறது. இவ்வகை மருத்துவம் சார்ந்த சட்டம் பழங்காலத்திலிருந்து நடைமுறையில் இருந்தாலும் அண்மை ஆண்டுகளில்தான் மருத்துவக் கல்லூரிகளின் இளநிலைப் பட்டப்படிப்பில் எல்லா மாணவர்களுக்கும் பாடமாகச் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. மேலும் இவ்வியலுக்கான முதுநிலைப் படிப்பும் மருத்துவக் கல்லூரிகளில் தனியாகத் தொடங்கப்பட்டுள்ளது.

சட்ட மருத்துவ இயல் தொன்மையான வரலாற்று அடிப்படையைக் கொண்டது. பாபிலோனியா அரசரால் கொண்டுவரப்பட்ட ( கி.மு. 2000 ) ஆமுரபி ( Hammurabi ) என்ற சட்டம் மருத்துவச் சட்டவியலின் தொடக்கநிலை எனலாம். அச்சட்டம் மருத்துவர்களைக் கூட அவர்கள் கடமையிலிருந்து தவறிய நிலையில் தண்டித்தது. இந்தியாவில் வேதத்திலும், மனுசமிருதியிலும் மருத்துவச் சான்று கொடுப்பது பற்றியும் தண்டனை அளிப்பது பற்றியும் கூறப்பட்டுள்ளது. வேதத்தின்படி கருக்கலைப்பு என்பது குற்றம். மனுவில் கருவுற்றவருக்குத் தூக்குத்தண்டனை மறுக்கப்படுவதுடன், சித்தம் கலங்கியவர், குடிகாரர், குழந்தை ஆகியோர் வாக்குமூலங்களை நம்பக்கூடாது எனவும் கூறப்பட்டுள்ளது. ரோமப்பேரரசர் ஐந்தாம் சார்லசு கி.பி. 1532இல் அறிவித்த சட்டம் தான் ( The Constitution Criminalis Carolina ) மருத்துவச்சட்டவியலுக்கான விடியலாகும். காயம், கருக்கலைப்பு, கொலை, தற்கொலை, நச்சு போன்றவற்றைக் குறித்து அச்சட்டம் விவரிப்பதுடன் மருத்துவச் சான்றுகளின் முக்கியத்துவத்தையும் தேவையானபொழுது இறந்த உடலைச் சோதனை செய்யவும் அனுமதி வழங்கிற்று. அச்சட்டமே இன்று வளர்ந்து, சட்டமும் மருத்துவமும் கைகோர்த்த நிலையில் சரியான முறையில் நீதி வழங்க உதவுகிறது.

**மருத்துவச் சட்டவியல் நீதி வழங்க உதவும் முறைகள் :** *1.* இந்திய சாட்சியச் சட்டம் 1872 பிரிவு 45 மற்றும் பிரிவு 60 விதிவிலக்கு2, 3இன் படி அறிவியல் துறைகளில் கற்றுத்துறைபோகிய வல்லுநர்களின் கருத்துகளைத் தொடர்புடைய சாட்சியமாக ஏற்று ஐயப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாகக் குற்றம் மெய்ப்பிக்கப்பட்டால்தான் தண்டனை வழங்கப்படும். பல்வேறு வழிகளில் மருத்துவ இயல் ஆய்வுகளும், சோதனைகளும் குற்றவாளியை அடையாளம் காண உதவுகின்றன.

**( அ ) தனி ஆள் அடையாளம் காணல் :** குற்றவாளியின் இனம், பால், வயது, நிறம், முடி, பாதச்சுவடுகள், உடற்குறைபாடுகள், மச்சங்கள், பச்சை குத்திய குறிகள், தொழில் அடையாளங்கள், கையெழுத்து, சொந்த ஆடைகள், பொருட்கள், குரல், பேச்சு, நடை, உடை, பாவனைகள், பழக்கவழக்கங்கள், மன ஆற்றல், நினைவுஆற்றல் முதலியவை பற்றிய மருத்துவச்சோதனைகளின் பெறப்படும் முடிவுகளை வைத்துக் குற்றவாளியைத் தெளிவாக அடையாளம் காண முடியும். குறிப்பாக இறந்துபோனவரின் உடலையோ, கிடைக்கப்பெற்ற எலும்புக் கட்டையோ வைத்து மேற்குறிப்பிட்ட பல்வேறு கூறுகளின் அடிப்படையில் இறந்தவரின் அடையாளத்தைத் தெரிந்து கொள்ளலாம். எ.கா. ஒருவர் ஆணா, பெண்ணா என்பதை அவர்களுடைய இடுப்பு எலும்பின் அமைப்பை ( Bpelvis ) வைத்துக் கண்டுக்கொள்ளலாம். வளைவு அமைப்பு, நீளம், குழி அமைப்பு

ஆகியவற்றைக் கொண்டு வேறுபாடு காணலாம். தொடை எலும்பின் ( Femur ) கழுத்துப்பகுதி செங் கோண முக்கோணத்தில் பட்டையோடு பொருந்தி இருந்தால் பெண் என்றும், விரிகோணத்தில் அமைந் திருந்தால் ஆண் என்றும் அறிந்துகொள்ளலாம்.

**( ஆ ) வயது :** ஒருவரின் வயதை அறிந்து கொள்ள, ஆயத்தம் செய்த அட்டவணை உதவும்.

**பல் :** மூன்றாவது அறிவுப்பல் அல்லது பின் கொடி கடைவாய்ப்பல் (Third molar of Wisdom tooth) முளைத் திருந்தால் பதினேழு முதல் இருபத்தைந்து வயதுக் குட்பட்ட வயதினராக இருக்கலாம் என்று அறியலாம்.

**எலும்புகள் :** எலும்புகள் வளர்ச்சி, இணைப்புத் தின்மை ( Ossification ) வைத்தும் வயதைக் கணக்கிட லாம். அக்ரோமியான் ( Acromion ) என்ற பின்தோள் பட்டை எலும்பின் தோற்றம் அல்லது இணைப்பு அடிப்படையில் வயதைக் கணக்கிட்டு அவர் வயது வந்தவரா என அறியலாம். மேற்படி எலும்பின் இணைப்பு பதினெட்டு வயதில் தோன்றலாம். அதன் தோற்றம் பதின்மூன்று முதல் பதினான்கு ஆண்டுக் கிடையில் ஏற்படலாம். பெண்கடத்தல், கற்பழிப்பு வழக்கில் பதினாறு வயதுக்குள் குறைந்தவரா என் றும், திருமண வயது ( ஆண் 21, பெண் 18 ) காணவும் அந்த முடிவு பயன்படும். சிசுக்கொலை வழக்கில் கரு வளர்ச்சியைக் கொண்டு அதன் முழு வளர்ச்சிக் கால மாகிய 210 நாள்களைக் கடந்துள்ளதா என்று கணக் கிட மருத்துவச்சோதனை தேவைப்படுகிறது.

**சவப்பரிசோதனை :** ஒருவரின் இறப்புக் காரணத் தைக் கண்டறியவும் இறப்பு ஏற்பட்ட முறைகளைக் கண்டறியவும் மருத்துவச்சோதனை மிகவும் பயன் படுகிறது. இச்சோதனை வாயிலாக நீரில் மூழ்கி இறந் திருந்தால் அவர் கையில் ஏதாவது ஒரு பொருள் சிக்கி அதைப்பிடித்த நிலையில் இறந்திருப்பார். ஒரு சவத் தின் மீதுள்ள காயங்கள் இறப்புக்கு முன்னர் ஏற்பட் டதா இறப்பிற்குப்பின் ஏற்படுத்தப்பட்டதா என்பதைச் சவப்பரிசோதனையில் மூளையின் இரத்த உறைவை வைத்துக் கண்டுகொள்ளலாம். இறப்புக்கு முன்பு காயம் ஏற்பட்டது என்றால் மூளையில் இரத்தக்கட்டி கள் காணப்படும். அது போன்று தூக்குப்போட்டு ஒரு வர் இறந்திருந்தால் தாடைக் குறுத்தெலும்பில் முறிவு ஏற்பட்டிருக்கும். இறந்தவரைத் தூக்குப்போட்டு இறந் ததாகப் பொய்யாகக் காட்டப்பட்டிருந்தால் அந்த எலும்பு உடைந்திருக்க வாய்ப்பில்லை. தூக்குப் போட் டுக் கொண்டவர் சடலத்தில் கயிற்றுத்தடம் ( Ligature mark ) இருக்கும். உடல் தோற்றத்தையும் இரத்தம் உறைந்த நிலையையும், நிறத்தையும் வைத்து இறந்த நேரத்தைக் கணக்கிடலாம்.

**( இ ) இறப்பை இரண்டு வகையாகப் பிரித்தல்:** இறப்பை இரண்டு வகையாக மருத்துவர்கள் பிரிக் கிறார்கள். 1. முழு உடல் அழிவு அல்லது உடல் இறப்பு ( Somatic death ), 2. திசுக்கள் அல்லது மூலக்கூறு இறப்பு ( Molecular death ) உடல் இறப்பில் மூளை, இதயம், நுரையீரல் ஆகியவை முழுமையாகச் செயல் இழந்துவிடுகின்றன. உடலில் முக்கிய வேலை கள் இயங்குவது நின்று ஏறத்தாழ மூன்று முதல் நான்கு மணிநேரத்தில் எல்லாத் திசுக்களும் தனித்தனியாகச் செத்துவிடுதல் திசுக்கள் இறப்பாகும். மரணம் இயற்கையாகவோ, விபத்தாலோ ஒருவர் வலிய ஏற்படுத்தியதாலோ ஏற்படுகிறது. மூன்று வழிகளில் இறப்பு ஏற்படுகிறது. 1. நினைவற்ற நிலை ( எல்லா உணர்ச்சிகளும் இழந்த முழு மயக்க நிலை ), 2. குருதி மயக்கம் அல்லது இதயம் செயலற்றுப்போதல் ( Syn copa ), 3. மூச்சு அடைப்பு ( Asphyxia ) முதல் வகை இறப்பு, கபாலச் சிதைவுகளால் இரத்தப்போக்கா லும், வலிப்பாலும், வெப்ப மிகுதியாலும் சாராயம் போன்றவைகளாலும், ஈரல் நோயால் ஏற்படும் நச்சுத் தன்மையாலும் ஏற்படுகிறது. இதில் மூச்சடைப் புச்சாவில் இருப்பதுபோல் நுரையீரலில் அதிக இரத் தத்தேக்கம் இராது. இரண்டாம் வகைச்சாவு, உள் வெளி அவயங்களின் காயங்களில் ஏற்பட்ட இரத்தப் போக்கால் ஏற்படும் இரத்தச் சோகையாலும் இதயத் தசையாற்றல் குறைவாலும், தீடிர் பயம், அதிக வெப் பம் குளிரால் ஏற்படும் அதிர்ச்சியாலும் இதயம் செய லிழந்தாலும் ஏற்படும். மூன்றாம் வகையில் பிராண வாயுக் குறைவால் மூச்சுவிடுதலை நிறுத்துவதாலும் நெஞ்சு வயிற்றுப்பகுதியில் ஏற்படும் குத்துக் காயத் தாலும் ஏற்படும். நாக்கு வெளித்தள்ளியும் இருக்கும். தொடங்கிய ஒரு மணிநேரம் முதல் 2 மணி நேரத்தில் நிலைபெறும். இறந்தவரின் இரைப்பையில் உள்ள உணவின் செரிப்பு நிலையை வைத்தும் நேரம் கணக் கிடலாம்.

**காயங்கள் :** பெரும்பாலும் காயங்களை மருத்துவச் சோதனைக்கு உள்ளாக்கி அது ஏற்பட்ட காரணம், காலம், அவற்றால் இறப்பு ஏற்பட்டதா என்பதும், குற்றவாளிக்கும் காயத்துக்கும் தொடர்பு உண்டா என்றும் அறியவேண்டியது முக்கியம். காயங்கள் இரத்தக்கட்டு, சிராய்ப்பு, காயம் தாறுமாறாகக் கிழிந்து சிதைந்த காயம், துளைக்காயம், குத்துக் காயம், வெட்டுக்காயம் போன்ற அதன் அமைப்பை வைத்தும், உள்காயம் வெளிக்காயம் என்று அது ஏற்பட்ட முறையாலும் பிரிக்கப்படும். காயங்களுக்கும் அதை ஏற்படுத்திய ஆயுதங்களுக்கும் தொடர்புபடுத்த வேண்டியது மிக முக்கியம். தானாக வலிய ஏற்படுத்திய காயங்களுக்கும் விபத்தால் ஏற்பட்ட காயங்களுக்கும், ஒருவர் வேண்டுமென்றே மற்றவர் மீது ஏற்படுத்திய காயங்களுக்கும் வேறுபாடு காண வேண்டும். அவற்றை அமைப்புகளில் இருந்தும், காய அளவுகளிலிருந்தும், இரத்த ஒழுக்குகளிலிருந்தும் இரத்தக் கட்டுகளிலிருந்தும் முறையான சோத னையால் அறிய முடியும். எலும்பு முறிவுகளிலிருந்தும் அதைக் காணலாம்.

இறப்புக்கு முன் ஏற்பட்ட காயங்களுக்கும், இறப்புக்குப்பின் ஏற்பட்ட காயங்களுக்கும் வேறுபாடு உள்ளது. முன்னதில் ( ante - mortem ) என்சைம் வினை இருக்கும். பெரு இரத்த ஒழுக்கும், இரத்த உறைவும், தசை பிளந்தும் கழுவினாலும் போகாத இரத்தக் கறையும் வீக்கம் மற்றும் குணமடையும் தன்மைகளும் இருக்கும். பின்னதில் ( post - mortem ) அவை மாறாக இருக்கும். தற்காப்புக் காயங்கள், வேண்டுமென்றே ஏற்படுத்திய காயங்களுக்கு மாறாகக் காணப்படும் அது, ஏற்பட்ட இடம், தன்மை, எண்ணிக்கை திசை, தாக்கம், சூழல் இவற்றை வைத்துக் கணிக்கப்படும். அதே போல், தற்கொலை முயற்சிக் காயங்கள் வலு குறைந்தும், தயக்கத்துடனும் வலி ஏற்படா இடங்களிலும், உடனே உயிர்போகக்கூடிய பொட்டு, இதயம் போன்ற உடற்பகுதிகளில் ஏற்பட்டதாக இருக்கும்.

**கன்னித்தன்மை, கர்ப்பநிலை, குழந்தைப் பிரசவம் பற்றிய சோதனைகள் :** கற்பழிப்பு வழக்குகளில் கன்னித்தன்மைச் சோதனை, சவ்வின் அல்லது கன்னித் திரைச்சவ்வின் ( Hymen ) இருப்புநிலை, அதன் கிழிந்த தன்மை, நெகிழ்வு நிலை ஆகியவற்றைக் கொண்டு, அவை வன்புணர்ச்சியால் ஏற்பட்டவையா அல்லது நோயால் ஏற்பட்டவையா என்பதை மருத்துவர் சோதனை செய்வார். திருமணம் மணவிலக்கு வழக்குகளில் இது முக்கியப்பங்கு வகிக்கிறது. பெரும்பாலும் முதல் உடலுறவில் கன்னிச் சவ்வு கிழிகின்றது. ஆனால் விபத்துக்களாலோ, ஆயுதங்களாலோ இவை ஏற்பட்டு இருக்கின்றதா என்பதைக் கவனத்துடன் ஆராய வேண்டும். கருவுற்ற நிலையை அறிய 1. மாதவிடாய் நிற்றல், 2. மார்பக மாற்றங்கள், 3. பெண்குறி மாறல், 4. தோல் நிறமடைதல் அல்லது பசலை ( Pigmentation), 5. காலை நோய், 6. சிசு உதைத்தல் அல்லது குலுயிர்ப்பு நிலை அடைதல், 7. பசி, தாக உணர்வு வேறுபாடுகள் முதலிய மேலோட்டமான குணங்களும் மற்றும் பல தெளிவான சோதனைகளும் உதவுகின்றன.. சிசுவின் இயக்கத்தைத் தாய் பதினான்கு முதல் பதினெட்டு வாரங் களில் அறிகிறார். கர்ப்பத்தை உறுதிப்படுத்தும் அடையாளங்களாவன: 1. சிசுவின் இதயத்துடிப்பு 18 முதல் 20 வாரங்களில் நிமிடத்திற்கு 120 முதல் 160 துடிப்பு வீதம் கேட்கப்படும். 2. ஆறு மாதத்திற்குப்பிறகு சிசு வின் அசைவும் இதயத்துடிப்பும் காது, கொடுத்துக் கேட்குமளவிற்கு ஒலித்துக்கொண்டிருக்கும். 3. நுண்கதிர் சோதனை, எலும்புச் சேர்க்கைக்குப் பிறகு பதினாறு வாரங்களில் செய்தால், கருப்பை உள் மாற்றங்கள் காணப்படும். அதேபோல் பிரசவமான அறிகுறிகளையும் மருத்துவர் துல்லியமாக நோக்க வேண் டும். ஒருத்தி செய்தது கருச்சிதைவா, சிசுக்கொலையா, பிறப்பு மறைப்பா என்பது பற்றியும் யாருக் குப் பிறந்த குழந்தை, அவள் கற்பிழந்தவளா, மோசடி செய்கிறவளா என்பதையும் அந்தச் சோதனை தெரிவிக்கும். தாயின் முகத்தோற்றம், மார்பகங்கள், கருப்பை, பிறப்பு உறுப்பு அதன் கருப்பை - கழுத்துப் பகுதி, ஒழுக்கின் நிறம் இவற்றை வைத்தும் அறியப்படும்.

( ஊ ) இந்தியச் சாட்சியச் சட்டப்பிரிவு 112ன் படி ஒரு குழந்தை சட்டப்படிப் பிறந்தது என்பதை 280 நாள்கள் கணக்கில் சட்ட முன் அனுமானம் செய்கிறது. அந்தக் காலத்திற்கு மேல் பிறந்தால் அது சட்டப்படியில்லையென்று கூறினாலும் மருத்துவச் சாட்சியத்தில் அதை மெய்ப்பிக்க இயலும். தொடர்புடைய ஆண், பெண்ணின் இரத்தத்தின் பிரிவை வைத்துப் பிறந்த குழந்தையின் இரத்தப்பிரிவை வைத்தும் உண்மைத் தாய் தந்தையரைக் கண்டுபிடிக்க முடியும். இச் சோதனைகள் அதற்குத் துணைபுரிகின்றன.

**பால்வினைக் குற்றங்களில் மருத்துவச் சோதனை : வன்புணர்ச்சி** - திருத்தப்பட்ட புதிய சட்டம் இந்தக் குற்றத்திற்குக் கடுமையான தண்டனை வழங்குகிறது. எனவே இதன் ஆய்வு மிகவும் இன்றியமையாதது. உடைகள், அங்கங்களில் பலவந்த அடையாளங்கள், பிறப்புறுப்புகளில் தென்படும் கறைத்தடயங்கள், பால்வினை நோய் தொற்றிக் கொள்ளல் இவற்றை வைத்துச் சோதிக்க வேண்டும். தவறான பொய்யான குற்றச்சாட்டு சுமத்தும் பெண்களை அடையாளம் காண, சோதனைகள் தெளிவாக இருக்க வேண்டும்.

**கருச்சிதைவு** - கருக்கலைப்பு இயற்கையானதா அல்லது வலிய வேண்டுமென்றே ஏற்படுத்தப்பட்டதா என்பதற்குச் சரியான சோதனைகள் செய்யப்பட வேண்டும். தாயின் உடல் நிலையில் உள்ள நோய்க் குறிகளையும் கரு வளர்ச்சியில் ஏற்பட்ட குறைபாடுகளையும் நோக்க வேண்டும். கருச்சிதைவு மருந்து நேரடியாகக் கருப்பையிலோ, கழிவுத்துவாரத்தின் மூலமாகவோ, வாய் வழியாகவோ செலுத்தப்பட்டதா என்பதை அறிய வேண்டும். பெரும்பாலும் நடுத்தர மக்களிடையே தர்பன்டைன் மற்றும் நச்சு மூலிகைகளால் அது ஏற்படுத்தப்படுகின்றது.

**நச்சுப்பொருளியலும், மருத்துவம் சார்ந்த சட்ட அம்சமும் :** நச்சுப்பொருள் விபத்தாலும், வேண்டுமென்றே உட்கொள்வதாலும் அல்லது திணிக்கப்படுவதாலும் இறப்பு நிகழ்கின்றது. அதனால் உடலில் ஏற்படும் மாற்றங்களை வைத்துக் குற்றங்களைக் கண்டுபிடிக்கலாம். நோய்க்கும், நச்சு உட்கொண்டதற்கும் வேறுபாடு தெளிவாகக் காணப்பட வேண்டும். தற்கொலை, கொலை, விபத்து என்பது நச்சுத்தன்மை, செலுத்தப்பட்ட விதம், உடல் மாற்றம் ஆகியவைக் கொண்டு அறியலாம்.

நச்சு உட்கொண்டவரை உடனே தகுந்த எதிர் மருந்து கொடுத்துக் காப்பாற்ற வேண்டும். இவ்வாறு நீதிமன்றங்களில் அறிவியல் வளர்ச்சிக்கேற்ப, புதிய மருத்துவச் சட்டவியல் அறிவு, உடல் தீங்குக் குற்றங்களையும், பல்வேறு விதமான சட்டங்களை மீறல் தொடர்பான சிக்கல்களையும் தீர்த்துவைக்கின்ற வகையில் முக்கியப்பங்கு வகிக்கிறது என்பது தெளிவு.

- சு. ந.

**மனநிலை :** பிராய்டின் கருத்துப்படி மனம் மூன்று நிலைகள் கொண்டது. அவற்றை நனவுநிலை ( Conscious ), முன் நனவு நிலை ( Pre - Conscious ), நனவிலி நிலை ( Unconscious ) எனலாம். இப்பாகுபாடுகள் குறிப்பிடத்தக்க உடலமைப்புகள் கொண்ட பரப்புகள் அல்ல. அவை உள்ளத்தை அறிந்து கொள்ள உதவும் அருவப் படைப்புகளே ஆகும். ஒரு குறிப்பிட்ட வேளையில் ஒரு மனிதன் உணரும் உள நிகழ்ச்சிகளும், நினைவுகளும் நனவு உள்ளத்தை உண்டு பண்ணுகின்றன. மேலெழுந்தவாரியாக நினைவுகளையும் விருப்பங்களையும் கொண்டு அமையும் உள்ளப் பகுதியினை முன் நனவுநிலை எனலாம். அந்நிலையிலுள்ள நினைவுகளும் விருப்பங்களும் அதே வேளையில் நனவு நிலையில் இல்லாதிருப்பினும், அவற் றினை எளிதில் நினைவு கூர முடியும். தனியனின் கட்டுப்பாட்டிற்கு எளிதில் உட்படாத, புதையுண்ட எண்ணங்கள், மனவெழுச்சிகள், உள்துடிப்புகள் என்பன தேக்கி வைக்கப்பட்டிருப்பினும் உள்ளப் பகுதியினை நனவிலி உள்ளம் என்பர். நனவு முன் நனவு உள்ளங்களிலுள்ள உட்பொருள்கள் தம்முள் சீரான தொடர்புடையவையாகவும் அவை ஏற்பட்ட காலத்திற்கு ஏற்ப ஒழுங்கு செய்யப்பட்டவையாகவும், வெளிநிகழ்ச்சிகளுக்கு ஏற்ப அமைத்துக்கொள்ளக் கூடியவையாகவும் உள்ளன. மாறாக, நனவிலி உலகம் காலமற்றதாகவும், குழப்பம் மலிந்ததாகவும் குழந்தைப் பருவத்தன்மை கொண்டதாகவும், நாகரிகமற்றதாகவும் இருக்கிறது. அப்பகுதி உண்மையோடும், சட்டத்தின் நியதிகளோடும் விதிகளோடும் தொடர்பு கொள்ளாத ஆளுமைப் பகுதியின் ஒளிவிடமாகும்.

நனவிலி உள்ளம் தனது உட்பொருளை இருவழிகளில் பெறுகிறது. அதில் ஒரு பகுதி நாகரிகமற்ற, இன்பமுனைப்புள்ள, ஓரளவு விலங்குத்தனமான எண்ணங்களையும், முயற்சிகளையும் கொண்டது. அவை நனவிலி நிலையில் ஒருபோதும் தோன்றியதில்லை. அவை தனி மனிதன் வழி வரப்பெறுவதிலுள்ள ஒரு பகுதியாகும். மற்றப் பகுதி முன்னாளில் நனவு நிலையில் நின்ற எண்ணங்கள், நினைவுகள் விருப்பங்களைக் கொண்டது. அவை அதிர்ச்சியூட்டுபவையாகவும், வேதனை தருபவையாகவும் இருப்ப

தால் அவை ஒடுக்கப்படுகின்றன அல்லது உள்ளத்தின் அடிப்பகுதியில் தள்ளப்படுகின்றன. அவ்வாறு நனவு நிலையினின்று வெளியேற்றப்பட்டுள்ள இப்பொருள்கள் மீண்டும் நனவு நிலைக்கு வருவது வன்மையாகத் தவிர்க்கப்படுகின்றன.

இவை துல்லிய உணர்ச்சிகளைப் பாதிப்பதுடன், தன் மதிப்பிற்கும் ஊறு செய்யும் என்பதால், இவ்விருவகையான் நனவிலிப் பொருள்களும், கவனத்திற்கு வருவதும் நனவு நிலையில் உணரப்படுவதும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், நனவில் உள்ளமோ உறங்கிக் கிடப்பதில்லை கொந்தளிப்புடைய ஆழமான நதியில் அடியிலுள்ள சகதி நிரம்பி உள்ள அலைகள் மேலே ஓடும் தெளிவான நீரையும் கலக்குவது போல, நனவில் உள்ளமும் பிறநிலைகளிலுள்ள தெளிவான பொருள்களின் சேர்க்கையையும், ஓட்டத்தையும் பெருமளவில் பாதிக்கிறது. வாய் தவறி ஒன்றைச் சொல்லிச் சங்கடமுறுதல், மெல்லியத் திரையிட்டுத் தோன்றும் பகற்கனவுகள், கனவுகள், உள்ளப் போராட்டங்கள், நரம்பு நோய் அறிகுறிகள் என்பன நனவிலி உள்ளம் இயங்குதலைக் காட்டுகின்றன. மேலும், சில உளப்பிணிகளை ஆராயும்போது, இதற்கு இன்னும் அதிக ஆதாரம் கிட்டுகிறது. இங்கு நனவிலியைத் தடுக்கும் சுவர்கள் நொறுக்கப்பட்டுள்ள நிலையில் நோயாளி வெளியிடும் எண்ணங்கள், செயல்கள் என்பனவற்றின் மூலமாக நனவிலி உள்ளத்தின் காமாந்தகாரமானதும் அநாகரிகமானதுமான உட்பொருள்கள் மிகத் தெளிவாக எளிதில் காணப்படுகின்றன.

- கி. இரா.

**மனோரா :** மனோரா என்று அழைக்கப்படும் இவ்விடத்தின் வேறுபெயர் ‘சாளுவ நாயக்கன்பட்டினம்’ என்பதாகும். தமிழகக் கிழக்குக்கடற்கரையில் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டத்தில் அமைந்துள்ள இவ்வூர் மீனவர்கள் வாழும் ஓர் அழகிய சிறிய ஊராகும். இது பட்டுக்கோட்டையிலிருந்து இருபது கிலோமீட்டர் தூரத்தில் தெற்கே அமைந்துள்ளது. விசயநகரப்பேரரசர் கிருஷ்ணதேவராயரின் கீழ் தமிழ்நாட்டில் அரசப்பிரதிநிதியாக இருந்த ‘சாளுவ நாயக்கர்’ என்பவர் பெயரால் இவ்வூர் ‘சாளுவ நாயக்கன்பட்டினம்’ என்று அழைக்கப்படுகிறது.

இவ்வூர் ‘துலுக்கன் வாயல்’, ‘சரபேந்திரராசன்பட்டினம்’ என்ற பெயர்களாலும் அழைக்கப்பட்டுள்ளது. தொடக்கக் காலங்களில் இக்கடற்கரைப் பட்டினம் வாயிலாக இசுலாமியர்கள் இங்கு மிகுதியாகக் குடியேறினர் என்பதால் ‘துலுக்கன் வாயல்’ எனவும், மராட்டியர் ஆட்சியில் இரண்டாம் சரபோசி மன்னனின் (1798 - 1832) பெயரால் ‘சரபேந்திரராசன்பட்டினம்’ என்று இவ்வூருக்குப் பெயர்கள் வழங்கப்பட்டன. சில ஆவணங்களில் ‘சரபேந்திரராசபுரம்’ எனவும் வழங்கப்பட்டன. இங்கு இயற்கையாகவே கடல் சற்று கரையில் உள்வளைந்து பிள்ளையாரின் வயிறு போலக் காட்சியளிப்பதால் இக்கடல் பகுதி ‘பிள்ளையார் குடா’ எனவும் அழைக்கப்பெறுகிறது.

இங்குக் கட்டப்பட்டிருக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க மனோரா நினைவுக்கோபுரம் தனித்தன்மை வாய்ந்ததாகும். சரபோசி மன்னர் கி.பி.1814ஆம் ஆண்டு இதைக்கட்டிய செய்தியைத் தமிழ், ஆங்கிலம், மராத்தி, தெலுங்கு, உருது ஆகிய ஐந்துமொழி களில் கல்வெட்டுகள் வெட்டிச் சுவரில் வெவ்வேறு இடங்களில் பதிந்துள்ளார்கள்.

**வரலாறு :** தன்படை வலிமையால் ஐரோப்பாவையே கலங்க வைத்த நெப்போலியன் மீது இங்கிலாந்து தலைமையில் ருசியா, பிரசியா, ஆசுதிரியா போன்ற நாடுகள் கூட்டாகப் போர் தொடுத்தன. பல வெற்றிகளைப் பெற்ற நெப்போலியன் போனபார்ட் கூட்டுப்படையால் செர்மனிய இலெப்சிக் என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டு பிரான்சுக்குத் தப்பியோட நேர்ந்தது. ஆனால் கூட்டுப்படையோ பிரான்சின் தலைநகரான பாரிசைக் கைப்பற்றியது. இதனால் கி.பி. 1814இல் முழுமையாகத் தோல்வியைத் தழுவிய மாமன்னர் நெப்போலியன் தமது எதிர்ப்பைக் கைவிட்டார். இதன் விளைவாக நெப்போலியன் போனபார்ட் ‘எல்பா தீவிற்கு’ நாடு கடத்தப்பட்டார். ஆகவே, ஐரோப்பியப்போரில் நெப்போலியன் போனபார்ட் இங்கிலாந்தின் வலிமையால் தோற்கடிக்கப்பட்டு வீழ்ச்சியுற்றது ஆங்கிலேயர்களின் நண்பர்களான மராட்டியருக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. இம்மகிழ்ச்சியை நினைவுகூரும் வகையில் அன்றைய மராட்டிய மன்னர் இரண்டாம் சரபோசி சாளுவநாயக்கன்பட்டினத்தில் ஒரு நிரந்தர



மனோரா

மான உப்பரிகை நினைவுச்சின்னம் ஒன்றை உருவாக்கினார். அதுவே 'மனோரா' என்று அழைக்கப்படும் கோபுரக்கட்டடமாகும். இக்கோபுரம் மொகலாயக் கலைப்பாணியில் அமைந்துள்ளது. மினார் அல்லது மினார்ட் என்ற அரபியச் சொல்லில் இருந்தே மனோரா என்ற பெயர் பிறந்திருக்கவேண்டும். அச் சொல்லிற்குக் கோபுரம் அல்லது கலங்கரைவிளக்கம் என்பது பொருளாகும்.

வட்டவடிமான அகழியின் உள் கற்கோட்டையும், அதற்குள் செல்ல இருவழிகளும் மேற்கு நோக்கிய ஒரு வாயிலும் மனோராவில் உள்ளன. வாயில் கோட்டையின் உள்ளிலிருந்து இணைக்கக்கூடிய வகையில் கனமான பெரிய பாலம் முன்பு இருந்தது. கோட்டையின் உட்பக்கம் துப்பாக்கி வைக்கும் தளங்கள், போர்க்கருவி மற்றும் வெடிமருந்து சேமிக்கும் இடங்கள், வீரர்கள் காவலின் பொருட்டுத் தங்கும் இடங்கள் ஆகியவையும் உள்ளன.

கோட்டையின் நடுவே எட்டுப்பட்டை கொண்ட கோபுரம் ஒன்று உயர்ந்து திகழ்கிறது. இக்கோபுரம் அடி முதல் மேல்வரை ஒரே மாதிரியான அமைப்புடைய பதினோறு அடுக்குகளைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இங்குக் கற்களே பெரிதும் பயன் படுத்தப்பட்டுள்ளன. இக்கோபுரத்தின் அடியில் அரச குடும்பத்தினர் தங்கும் பாதுகாப்பான மாளிகை ஒன்று உள்ளது. கோபுரத்தின் மேல் செல்ல கிழக்கு, தெற்குப் பக்கமிருந்து அகன்று படிக்கட்டுகள் இரண்டாம் தளம் வரையுள்ளன. அங்கிருந்து சிறிய மர ஏணியில் ஏறிய பின்னர் வளைந்து செல்லும் குறுகிய படிகள் மூலம் உச்சியை அடையலாம். கோபுரம் முப்பத்தெட்டு மீட்டர் உயரம் உள்ளது. இக்கட்டடக் கோபுரம் மராட்டியர் கால கட்டடக்கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

இது, சரபோசி முதல் அவர்களது வழித்தோன்றல்கள் அனைவரும் அவ்வப்போது வந்து தங்கும் அழகு மிகு கடற்கரை மாளிகையாக இருந்தது. சாளுவ நாயக்கன்பட்டினத்தில் மராட்டிய அரசர்களின் நிருவாக அலுவலகம் இருந்தது. மராட்டியர் ஆட்சிக் காலத்தில் இங்கு இராணுவப்பயிற்சி நடைபெற்றது என்பதை உறுதி செய்யும் வகையில் 1958ஆம் ஆண்டு இங்கு வெட்டப்பட்ட குழியொன்றில் ஏறத்தாழ 2000 இரும்புக்குண்டுகள் கிடைத்தன.

சாளுவநாயக்கன்பட்டினப் பகுதி நீர்வளம், நில வளம் மிக்கது. பாப்பான் கண்ணியாறு என்ற சிற்றாறு இங்கு கடலில் கலக்கிறது. சின்ன ஏரி, பெரிய ஏரி, வண்ணான் குளம், சம்பன் குளம், மாரியம்மன் குளம், ஆவுடையான் குளம், குளம்பரச்சேரிக் குளம், பிள்ளையார் குளம் என்பவை இங்குள்ள நீர் நிலைகளாகும்.

மராட்டியர்களது துறைமுக நகர்களில் சாளுவ நாயக்கன்பட்டினமும் ஒன்று. இப்பகுதியில் மரங்களும் கயிறும் எளிமையாகக் கிடைத்ததால் பெரிய பாய் மரக்கப்பல்களும், சிறிய கப்பல்களும், படகுகளும் இங்கு கட்டப்பெற்றன. பழைய கப்பல்களும் பழுதுபார்க்கப்பட்டன. சாளுவநாயக்கன் பட்டினத்திலிருந்து கடற்கரையோரத்தில உள்ள நாகை, மீமிசல், கோடிக்கரை, அதிராம்பட்டினம் போன்ற துறைமுக நகர்களுக்கும், இலங்கை, மலேசியா உட்பட அருகே உள்ள வெளிநாடுகட்கும் கப்பல்கள் அடிக்கடி சென்று வந்தன. இலங்கைச்கு இங்கிருந்து நெல்லும் அரிசியும் ஏற்றுமதியாயின.

மராட்டிய அரசுக்குச் சொந்தமான கப்பல்களுடன் தனியார் கப்பல்களும் இங்கு வந்து சென்றன. மராட்டிய அரசுக்குச் சொந்தமான இரு பெரிய பாய்மரக் கப்பல்கள், பிரகதீசுவர பிரசாத், திருவருள் பிரசாத் என்ற பெயரில் இங்கு காணப்பட்டன. கடலில் கப்பல் செலுத்தும் மாலுமிகளுக்குக் கடற்கரையின் திசையை உணர்த்தும் குறிப்பாகவும் மனோரா விளங்கியது. இத்தகைய சிறப்புமிகு மனோரா இன்று தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் கீழ் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

- பா. ஜெ.

**மானாமதுரை மாரியம்மன் செப்பேடு :** பாண்டிய நாட்டில் கிடைத்துள்ள வாணாதிராயர் செப்பேடுகளுள் இதுவே காலத்தால் முற்பட்டதாகும். இச் செப்பேடு மானாமதுரையின் மேல்கரைப் பகுதியிலுள்ள கன்னார் தெருவில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் கோயிலுக்கு வாணாதிராயர் காலத்தில் வழங்கப்பட்ட செப்பேடாகும். இது இன்று இக்கோயிலில் பூசை நிகழ்த்தும் பணியில் தொடர்புடைய பண்டாரச்சமூகப்பிரிவைச் சேர்ந்த ஒருவரிடம் உள்ளது. இச்செப்பேடு அரசினரால் வெளியிடப்பெறவில்லை. இச்செப்பேடு திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலிவாணாதிராயன் மகனான சுந்தரத் தோளுடையான் மாவலிவாணாதிராயன் காலத்தில் வழங்கப்பட்டது. இச்செப்பேட்டில் குறிக்கப்பட்டுள்ள காலம் சக ஆண்டு எனத் தவறாகக் குறிக்கப்பட்டுள்ளது. எழுத்த மைதியைக்கொண்டு இச்செப்பேடு கி.பி. பதினைந் தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ( கி.பி. 1464 அல்லது 1484 ) எழுதப்பட்டதாகக் கூறலாம். அடுத்து வாணாதிராயர் பற்றிய கல்வெட்டுகளும் இக்காலக்கணிப்பிற்குத் துணைபுரிகின்றன.

சுந்தரத்தோளுடையானின் சிற்றரசனாகத் திகழ்ந்த இராக்கப்பராசர், மானாமதுரையில் ஆண்டு வந்தான். இவனது மகளான அலங்காரம்மாளுக்கு அம்மை நோய் கண்டது. எனவே, அவளுக்கு அம்மை நோய் நீங்கவேண்டுமென்று மானாமதுரை மாரியம்மனை வேண்டிக்கொண்டான். தனது வேண்டுகோள் நிறைவேறியதால் அவன் மாரியம்மனுக்கு ஆரோக்கிய தானமாக ஆண்டியேந்தல் எனும் பகுதியை 'மாரியம்மன் திருவிளையாடல் ஏந்தல்' எனும் பெயரில் தானமாக வழங்கியதுடன் மாரியம்மனுக்கு மண்டபமும் கட்டினான்.

இச்செப்பேடு ஒரே ஏட்டைக் கொண்டுள்ளது. இது 22.3 செ.மீ X 11. 8 செ.மீ அளவுக் கொண்டது. செப்பேட்டின் இருபுறமும் எழுதப்பட்டு, மொத்தம் நாற்பத்தேழு வரிகளைக் கொண்டுள்ளது. செப்பேட்டின் பக்கவாட்டில் தாமரை மலரின் வடிவில் இதழ் வெட்டப்பட்டுள்ளது. இச்செப்பேடு திருமாலிருஞ்சோலை அழகர் என்பானால் வெட்டப்பட்டுள்ளது. அவனது ஒப்பமும் இறுதியில் காணப்படுகிறது. இச்செப்பேட்டுச் செய்தி 'அழகர் திருவுள்ளம்' என்னும் சொல்லுடன் முடிகிறது. இச்செப்பேட்டில் சுந்தரத் தோளுடையான் வாணாதிராயனின் பட்டப்பெயர்களாகப் பதினேழு கூறப்பட்டுள்ளன. இவற்றுள் பெரும் பாலானவை வாணாதிராயன் கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. அழகர் சரணாலயன், துரந்தகன், கெங்காருலோத்துபன், இரணியகெற்பாவத்தாரனவன் ஆகிய பட்டப்பெயர்கள் புதுமையாக உள்ளன. அழகரின் தாசனாதலின் இவன் 'அழகர் சிறுதத்தன்' என இச்செப்பேட்டில் குறிக்கப் பெறுகிறான்.

பிற்காலப் பாண்டியர் காலத்தினை அடுத்து வாணாதிராயரின் கால்வழியினர் மானாமதுரையைத் தமது இருப்பிடமாகக் கொண்டு, கோட்டை முதலான அரண்களுடன் ஆண்டு வந்தனர் என்பதற்கு இச் செப்பேடு ஒரு சான்றாகும். முன்பு இந்நகரம் வானரவீரை மதுரை என அழைக்கப்பட்டு, பின்னர் மானாமதுரை என மருவிற்று.

- ம.இரா.த.

**முக்தேசுவர்** : புராணங்களிலுள்ள கதைப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு, மராட்டிய மொழியில் அதனைக் காவியமாகச் செய்து தந்தவர்கள் மோரோபந்த் இரகுநாத பண்டிதர், முக்தேசுவர் ஆகியோராவர். இவர்களுள் முக்தேசுவரர் நூல்கள் மிகவும் சிறப்புடையனவாப் பேசப்படுகின்றன. முக்தேசுவரர் ஞானி ஏக்நாத்தின் மகள் வயிற்றுப்பேரனாவார். தேவகிரி யாதவ அரசர்களின் வீழ்ச்சிக்குப் பிற்பட்ட இசுலாமியர்களின் தாக்கம் ஏற்பட்ட காலம் இவர் காலமாகும். முக்தேசுவர் தம் நூல்களில் தம்மைப் பற்றிக் கூறியுள்ள இடங்களைக் கொண்டே அவரைப் பற்றிய செய்திகள் அறியப்படுகின்றன. இவர் குறித்த வேறு சான்றுகள் கிடைத்தில. எனவே 'வரலாற்றுக் கோயிலில் அவரைச் சுற்றியும் மறுப்பு மணிகள் ஒலிக்கின்றன' என்று ஒரு தொடர் வழக்கிலிருக்கின்றது.

முக்தேசுவர் கி.பி. 1609ஆம் ஆண்டு பிறந்ததாக 'மகாராட்டிர சாரச்வத்கார்' வி.ல. பாவே கூறுவார். தஞ்சாவூரிலுள்ள கோவிந்த பல்லாள சுவாமி மடத்திலுள்ள கையெழுத்து ஏட்டுக்குறிப்பும் இதனை உறுதிப்படுத்துவதாக தா.கே. ஒக்கு குறிப்பிடுவார். இருபினும், ஏகநாத்தின் வாழ்க்கைக் குறிப்புகளைக் கொண்டு ஆராயுமிடத்து, முக்தேசுவர் கி.பி. 1574ஆம் ஆண்டு பிறந்திருக்க வேண்டும் என இல.இரா. பங்கார்கர், சி.வி. வைத்ய மற்றும் த.சி. பங்கு ஆகியோர் கருத்துத் தெரிவிக்கின்றனர். இதுவே ஏற்புடையதாகத் தோன்றுகிறது.

முக்தேசுவரது தந்தையார் பெயர் சிந்தாமணி என்பதாகும். அன்னையாரின் இயற்பெயர் கோதாவரி எனவும், மணமான பின் இவருக்கு இடப்பட்ட பெயர் கங்காபாயி எனவும் கூறுவர். அவ்வாறே முக்தேசுவரின் இயற்பெயர் முத்கல் எனவும் கூறப்படுகிறது. இவர்கள் கோதாவரி நதிக்கரையிலுள்ள பைட்டன் என்ற இடத்தில் வாழ்ந்தனர். அத்ரிகோத்ரி குலத்துதித்த இவர்கள் குலதேவதையாக, கோலாப்பூரிலுள்ள மகாலட்சுமியும், குலதெய்வமாகச் சோனாரி என்ற ஊரிலுள்ள பைரவரும் குறிக்கப்படுகின்றனர். ஏகநாத் தொடங்கி முக்தேசுவர் வரையிலான கவி பரம்பரையில், முக்தேசுவர் வடமொழிப் புலமை மிக்க கவிஞராதலின் இவர் படைப்புகள் கவித்துவமும், நாடகப்பாங்கும் கொண்டு விளங்குகின்றன. பைட்டனில் இவர் வசித்தாலும் பாரத நாடு முழுவதிலும் பயணம் மேற்கொண்டமையும், காசியில் சிறிது காலம் வசித்தமையும் இவர்தம் நூல்வழிப் புலப்படும்.

முக்தேசுவர் முதன்முதலில் எழுதிய நூல் சங்சேப இராமாயணமாகும். ஏழு காண்டங்களையுடைய இது 1722 கிரந்தங்களால் எழுதி முடிக்கப்பட்டிருத்தலின் இதனை, **இராமாயணச்சுருக்கம்** எனக் குறித்தனர். அதன் பின்னர் இவர் எழுதிய பதினைந்து குறுங்காவியங்கள் மிகச்சிறப்பு வாய்ந்தவையாகும். அவை **கசேந்திர மோட்சம், அனுமந்தாக்யான், விசுவாமித்திரர் போசனம், அர்சுன் காமபூர்த்தி, அரிச்சந்திராக்யான், சதமுக ராவணதாக்யான், ஏசுநாத சரித் திரம், மூர்க்கரின் இலட்சணம், பகவத்கீதா, சுகா ரம்ப சம்வாதம், துரியோதன சல்லியபரிச்போட்டு, பத சங்கிரகம், ஆரத்திகள், பூபாளி, பாருட்டு** முதலியனவாகும். முக்தேசுவர் தம் இறுதிக்காலத்தில் எழுதியதாகச் சொல்லப்படுவது மகாபாரதமாகும். இதில் ஐந்து பருவங்கள் 13,867 கிரந்தங்களால் எழுதி முடிக் கப்பட்டிருக்கிறது.

முக்தேசுவர் தம் நூல்களில் பக்திச்சுவையைக் காட்டிலும் அழகியலுக்கு மிகுந்த முதன்மை கொடுத்துள்ளார். எனவே, அழகியல் பற்றிய பகுதிகள் பெரும்பாலான இடங்களில் காணக்கிடைக்கின்றன. அதைப் போலவே, சமகாலத்திய சமூக, அரசியல் சூழல்களையும் ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்கின்றார். இவர் இறுதிக்காலம் பற்றிய செய்திகள் ஒன்றும் தெரியவில்லை.

- இரா. வீ.

**முடித்தல் விதி** : முற்றுப்பெறாமல் இடைவெளிகளோடு புறவுலகில் காணப்படும் ( Perception ) பொருள்களை முற்றுப்பெற வைத்து முழுமையாகப் புலன் காணும் மனப்போக்கின் செயல்முறையை முடித்தல் விதி ( Principle of Closure ) என்று கூறுகின்றார். இக்கருத்தை முதன்முதலில் கூறியவர்கள் அமைப்புக்கோட்பாட்டுக்கிளையினராகும். எட்வர்டு பி.திச்சினர் ( Edward B. Titchener ) என்பவர் கி.பி.1890 ஆம் ஆண்டில் கார்னல் பல்கலைக்கழகத்தில் இக் கோட்பாட்டைத் தோற்றுவித்தார். திச்சினர் கூறிய கருத்தையே பிரிட்டானிய செயல்சார் கொள்கையினரும் கூறினர். ஆனால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் (1910) செர்மானிய நாட்டு கெசுடால்டு கோட்பாட்டினர் ( Gestalt Psychologists ) திச்சனரின் கருத்தை மறு ஆய்வு செய்து திருத்தி விரிவாக்கியமைத்தனர். அவர்கள்தான் இந்த முடித்தல் அல்லது இட்டு நிரப்புதல் விதியைப் பல எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கிக் காட்டியுள்ளனர்.

மனிதர்களுடைய புலன் காட்சியில் பல பண்புக் கூறுகள் அடங்கியிருக்கின்றன. அந்தப் பண்புக் கூறுகளை ஒன்றாக இணைத்துச் செயல்படுத்துவதின் மூலந்தான் அவர்கள் பொருள்களை நன்கு பகுத்துப் புலன் காணமுடிகின்றது. புலன் காட்சியில் மிகவும் அடிப்படையான செயல்முறை புறத்தளத்திலுள்ள உருவத்தை அல்லது பொருளை வேறுபடுத்திக் காண்பதாகும். பொருள்களைப் பிரித்தறிந்து புலன் காணல் தூண்டலின் உடல் சார்ந்த சில குறிப்பிட்ட பண்புக் கூறுகளைச் சார்ந்திருக்கின்றது. புறத்தளத்திலுள்ள பொருளை அல்லது உருவத்தைப் பிரித்தறிவதற்கு ஒரு முக்கிய பண்புக்கூறாக இயங்குவது ஒளியின் தரத்தில் ஏற்படும் மாற்றமாகும். ஒளி அதிகமாகவும் குறைவாகவும் மாறிமாறி பொருள்களின் மீது விழும்போது பொருள்களின் விளிம்புகளை அல்லது எல்லைகளை நன்கு காணமுடிகின்றது. அறிமுகமான பொருளாக இருக்குமானால் ஒருசில இடங்களிலுள்ள விளிம்புகளோ எல்லைகளோ ஒளியின் குறைவால் காணப் படாமலிருப்பினும் முந்திய அறிவையோ அனுபவத்தையோ கொண்டு பொருளின் எல்லைகளைத் தொடர்ச்சியாக்கி முழுமையாகப் புலன் காணலாம்.

பொருள்களைப் புறந்தளத்திலிருந்து பிரித்துப் புலன் காண்பதில் பொருளின் எல்லைக்கோடுகள் மட்டுமே எப்போழுதும் போதுமானதாக இருப்பதில்லை. பல சூழ்நிலைகளில் புறந்தளத்தில் எளிய உருவங்களைக் கண்டறிய கண் அசைவுகள், புலனுணர்ச்சிக்கேற்ப ஏற்படுத்துகின்ற மாற்றங்கள், கற்றல், ஊக்கம் முதலியவைகளும் உதவுகின்றன. பழக்கப்பட்ட பொருள்கள் அல்லது உருவங்கள் பழக்கப்படாதவைகளை விட மிக எளிதாக வேறுபடுத்திப் புலன் காணப் படுகின்றன. பல தூண்டல்களின் வடிவங்கள் மிக அதிகமான எல்லைகளைக் கொண்டிருக்கின்றன. அவைகளில் பல உருவங்கள் இணைக்கப்பட்டிருக்கலாம். பொருள்களின் எல்லைகளைக் கொண்டு தனித் தனி உருவங்களாக அமைப்பதுதான் உருவப்புலன் காட்சியாகும். அளிக்கப்பட்ட தூண்டல்களின் எல்லைக் கோடுகளில் பல உருவங்கள் அடங்கியிருக்கலாம். புலன் காட்சியில் அவை தனித்தனி உருவங்களாக்கப் படுகின்றன. சில இடங்களில் எல்லைக் கோடுகள் தொடர்ச்சியின்றியும், முற்றுப்பெறாமலும் இருக்கலாம். அதனால் உருவங்கள் குறையுடையதாகவும் இடைவெளி கொண்டதாகவுமிருக்கலாம். புலன் காட்சியில் அவைகளெல்லாம் குறை நிரப்பப்பட்டு முழுமையாக்கப்படுகின்றன. இந்தச் செயல்முறை தான் முடித்தல் விதிக்கு அடிப்படையாக அமைகின்றது.

புலன்காட்சிக் களத்தை எளிமையாக்குவதற்கு நரம்பு மண்டலத்தில் ஒரு அடிப்படையான போக்கு அமைக்கப்பட்டுள்ளது போல் தோன்றுகின்றது. அது களத்திலுள்ள துண்டுதுண்டாக உள்ள பல்வேறு பகுதிகளை மிகவும் ஒழுங்கான அல்லது பயனுள்ள ஓர் அமைப்பாக அப்பகுதிகளைச் சேர்த்து அமைக்கின்றது. இந்த அடிப்படையான போக்கு புலன் காட்சி அமைப்பு விதிகளில் வெளிப்படுத்தப்படுகின்றது. அவ்விதிகள், அண்மை அல்லது நெருக்கம் ( Proximity ) ஒருமித்ததன்மை ( similarity ) தொடர்ச்சி ( Con tinuity ) என்பன.

முதல் விதியின் கருத்து என்னவெனில், மிக அண்மையிலுள்ள பொருட்களை ஒன்றாகச் சேர்த்து ஓர் உருவமாக அமைக்கின்ற நரம்பு மண்டலத்தின் போக்கு புலன் காட்சியில் வெளிப்படுகின்றது என்பதாகும். மேலும் நெருக்கமாக உள்ள பொருட்கள் பொதுவாக ஒன்றாகவோ, ஓரினமாகவோ புலன் காணப்படுகின்றன என்பதுதான் முதல் விதியாகும்.

இரண்டாவது விதிப்படி, ஒருமித்தத் தன்மையுள்ள பொருட்கள் இயல்பாகவே ஒரு குழுவாக இணைக்கப்பட்டுப் புலன் காணும் போக்கு நரம்பு மண்டலத்திலிருந்து வெளிப்படுகின்றது. இது ஒரே பண்புகளை ஒன்று சேர்க்கும் தன்மையாகும். மூன்றாவது விதி, தனித்தனியாக அல்லது விட்டுவிட்டுக் காணப்படுபவைகளை ஒரு தொடராகச் சேர்த்துப் புலன் காணும் போக்குப் பற்றியதாகும். இந்த விதிகள் அல்லது போக்குகள் ஒன்றோடு ஒன்று அடிக்கடி மாறுபட்டுச் செயல்படுகின்றன என்றாலும் சூழ்நிலையில் அதிக ளவு ஒழுங்குமுறையை உண்டாக்க, புலன்காட்சி அமைப்பு முறை தன்னியல்பாகவே அவைகளைச் சம நிலைப்படுத்துவது போல் தோன்றுகின்றது. இல்லையெனில் புலன்காட்சியில் குழப்பங்கள் ஏற்படலாம்.

அண்மை அல்லது நெருக்கம், ஒருமித்த தன்மை, தொடர்ச்சி ஆகியவை பார்வை சார்ந்த களங்களில் மட்டுமின்றி, கேள்வி சார்ந்த களங்களிலும் புலன் காட்சிக்காக இயங்குகின்றன. எடுத்துக்காட்டாக, புள்ளிகளைத் தொடர்ந்து நெருக்கமாக வைத்தால் அவைகளை நேர்கோடாக்கிப் புலன் காணலாம். ஒரு வட்டத்தை மூன்று, நான்கு இடங்களில் விட்டு விட்டுத் தீட்டினாலும் ஒரு வட்டமாகவே புலன் காட்சி செய்யலாம். ஒரு சொல்லிலுள்ள நான்கு எழுத்துகளை முழுமையாக எழுதாமல் இடைவெளிகளோடு எழுதினாலும் இடைவெளிகளை நிரப்பி முழுமையாக்கி சொல்லைப் பொருளுடையதாக்குகின்ற மனப்போக்கு மூலம் இடைவெளிகளை இட்டு நிரப்பி அல்லது முடிவின்றிருப்பவைகளை முடித்து முழுமையாகப் புலன் காட்சி செய்யலாம். கேள்விப் புலன்களிலும் இச்செயல்முறை நடைபெறுகின்றது. பேச்சுக்களிலும் ஒலி அல்லது ஓசைகளிலும் புலன் காட்சி சரியாகவே இருக்கின்றது. எ.கா புகைவண்டி நிலையங்களில் அடிக்கப்படுகின்ற மணியோசையைக் கொண்டு வண்டி எத்திசையில் செல்லுகின்றது என்று புலன்காட்சி செய்யலாம். இரண்டு முறை அடித்தால் கீழ் நோக்கிச் செல்லும் வண்டி வருகின்றது என்றும் மூன்று முறை அடித்தால் மேல்நோக்கிச் செல்லுகின்ற வண்டி வருகின்றது என்றும் அறியமுடியும். ஆனால் அதே மணியில் இரண்டு முறை அடிப்பதையும் மூன்று முறை அடிப்பதையும் இடைவெளிவிட்டு அடித்தால் அதற்கு எந்தவிதமான பொருளும் கொடுத்துப் புலன் காட்சி செய்வதில்லை.

பொருள்களைப் புலன் காண்பதில் நான்கு பண்புக் கூறுகள் சேர்ந்து இயங்குகின்றன. அவை, புலனுணர்ச்சியமைப்பு, பண்புக்கூறு, அனுபவம், உறுதிப்பாடு என்பன. இவை நான்கும் ஒன்றாக இணைந்து ஒன்று போல் செயல்படுகின்றன. கெல்ப்பும் கோல்டுடெயிலும் ( Gelb and Goldstein ) முதல் உலகப்போர் முடிவில் சில பரிசோதனைகள் நடத்தினர். மூளை பழுதுபட்டவர்களின் பார்வை சார்ந்த புலன் காட்சி பற்றிய ஆராய்ச்சிகள் அவை, பரிசோதனைக்குட்பட்டவர்கள் மூளையின் பார்வை மையத்தில் பழுதடைந்திருந்தனர். ஆனால், அவர்கள் கண்பார்வையை முற்றிலும் இழக்கவில்லை. கெல்ப்பும், கோல்டுடெயிலும் கண்டதுஎன்னவெனில், ஏற்பட்டுள்ள மூளைப் பழுது மிகவும் நுண்ணியல்பானது, முழுப்பார்வைச் செயல்முறையில் ஓர் அமைப்பு முறையை உள்ளடக்கியதாக இருந்தது. அதனால் அது பொருட்களைச் சிறியதாகக் காணச்செய்யும் போக்குடையதாக இருந்தது. இதுதான் பழுதினால் ஏற்பட்ட விளைவாகும். இந்தப் பழுதுள்ள மனிதர்களின் கண்களுக்கு எல் லாப் பொருட்களுமே அளவில் மிகச் சிறியதாகக் காணப்பட்டன. பார்வைப் பகுதியில்லாத மனிதர்கள் மிகுந்த தொலைவிலிருந்தோ உயர்ந்த மலையுச்சியிலிருந்தோ சமதளத்திலுள்ள பொருட்களை நோக்கினால் எவ்வாறு காணப்படுமோ அதுபோல இப்பழுதுள்ள மனிதர்களுக்கு அண்மையிலுள்ள எல்லாப் பொருட்களுமே மிகச்சிறியதாகக் காணப்பட்டன. பொருட்கள் சிறியனவாகக் காணப்பட்டாலும் அவைகளின் முழு உருவத்தையும் புலன்காட்சி செய்யும் அமைப்புச் செயல்முறையில் யாதொரு மாற்றமுமில்லை. இப்பழுதுள்ள மனிதர்கள் புலன்காட்சியின் மற்றெல்லாம் செயல்முறைகளிலும் இயல்பு நிலையிலுள்ள மனிதர்கள் போன்றே முழுமையாக எல்லாவற்றையும் கண்டனர். இடைவெளிகளைக் கொண்ட நீண்டகோடு, மூன்று நான்கு இடைவெளிகளைக் கொண்ட வட்டம், ஒரு தாளில் வரையப் பட்ட படம் சில இடங்களில் தொடர்ச்சியின்றி காணப்படல், வரையப்பட்ட மனித முகத்தில் ஓர் உறுப்பு இல்லாமை முதலியவைகளில் இடைவெளி களை நிறைவு செய்து முழுமையாகக் காணும் போக்கு இப்பழுதுப் பட்டவர்களிடமும் காணப்பட் டது. இந்த அமைப்பு முறையில் மேலே காணப்பட்ட பண்புக்கூறுகள் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. விட்டுப்

போயிருத்தல், பிளவாகக் காணப்படல், இடைவெளிகளைக் கொண்டிருத்தல், தொடர்ச்சியின்றியிருத்தல் ஆகியவைகளை முழுமையாக ஓர் அமைப்பாக்கிக் காணும் போக்குதான் முடித்தல் அல்லது இட்டு நிரப்புதல் என்று கூறப்படுகிறது.

முழுமையான அமைப்பாக்கிக் காணும் போக்கில் தனியாள் வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கவையாக இருக்கின்றன. குறை நிரப்பிக்காணும் அல்லது முழுமையாகக் காணும் போக்கின் வேகம், உருவங்களை அல்லது பொருட்களைக் கண்டவுடனேயே சிலர் முழு அமைப்பாக்கி அல்லது குறையை முடித் துப் புலன் காண்கின்றனர். சிலர் சிறிது தாமதமாகக் குறையை முடித்தல் செய்து முழுமையாகப் புலன் காட்சி செய்கின்றனர். மற்றும் சிலர் இன்னும் சற்று தாமதமாகச் செயல்படலாம். எனவே, புலன்காட்சிச் செயல்முறையில் உருவங்களை முழுமையாகக் காணும் ஒரு மனப்போக்கு இருந்து வருகின்றது. ஒரு உருவத்தைப் பற்றிய புலன் காட்சி நிறைவற்ற வடிவில் பெறும்போது அதனை நிறைவுடனேயே காண விரும்புவர். இவ்வேளையில் உருவத்தின் குறைகள் புறக்கணிக்கப்பட்டு நிறைவு செய்யும் போக்கு நிலையாக இருக்கின்றது.

அன்றாட வாழ்க்கையில் பெறுகின்ற தூண்டல்களில் பல இடைவெளியிருக்கலாம். குறைகளை முடித்தல் மனப்போக்கு நிலையாக இருந்து வருவதால் சிலசமயங்களில் அக்குறைகளைக் காண்பது கூட இல்லை. திருந்துகின்ற பக்கப்படியைத் தவறு இருந்தும் சரியாகவே படிக்கின்றதைக் காணலாம். எனவே முடித்தல் விதி புலன் காட்சியில் ஓர் அடிப்படை விதியாக இருந்து விடுகின்றது.

- மு.இரா.


**முதுமக்கள் தாழி :** முதுமக்கள் தாழி என்பது பண்டைக்காலத்தில் இறந்தவர்களின் எலும்புகளையும், இறந்தவர்களின் உடல்களையும் உள்ளே வைத்துப் பூமியின் கீழ்ப் புதைக்கப் பயன்படுத்தப் பெற்ற பெரிய தாழியாகும். இது பழங்காலத்தில் ஒரு காலக் கட்டமாகிய பெரும் கற்காலத்தில் தமிழகம் முழுவதும் பரவியிருந்த பண்டைய வழக்கமாகும்.

சங்க இலக்கிய காலத்தில் இவ்வழக்கம் பல இடங்களில் சுட்டிக் கூறப்படுகிறது. பல்வேறு வகையான ஈமச்சடங்கு வகையில் இதுவும் ஒன்றாகும். இவ்வழக்கத்தை 'தாழியிற் கவிப்போர்' என்று மணிமேகலை கூறும். 'கவி செந்தாழி' என்று சங்கப்பாடல் ( புறம். 239 ) கூறும். இத்தாழிகள் செந்நிறமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இத்தாழிகள் பெரும்பாலும் அளவில் பெரியதாகக் காணப்படுகிறது. 'மாயிருந்தாழி' ( நற். 271 ), 'கண்ணகன் தாழி' (புறம்.228), 'மன்னர் மறைத்த தாழி' (பதிற்.44), போன்ற தொடர்கள் இதன் பெரிய அளவைச் சுட்டும்.

இத்தாழிகளை வனைந்தோர் 'கலம் செய்கோ' என அழைக்கப்பட்டனர் (புறம்.256). பெரும் புகழ் படைத்த மாமன்னரின் உடலை அடக்கம் செய்ய வழக்கமாகச் செய்யும் பெரிய தாழி போதாது. இவ் வுலகத்தையே தாழிவனையும் உருளையாகக் கொண்டு பெரிய இமயமலையையே மண்ணாகக் கொண்டு மிகப்பெரிய தாழியை வனைவாயாக என்று கலம் செய்கோவை ஒரு புறநானூற்றுப் பாடலில் புலவர் ஒருவர் வேண்டுகிறார்.

இறந்தவர்களின் உடலை வெட்டவெளியில் எறிந்துவிடுவதும் பண்டைய ஈமச் சடங்கு வழக்கங்களில் ஒன்றாகும். அவ்வாறு எறிந்த உடல்களில் எஞ்சியிருக்கும் எலும்புகளைத் தாழியினுள் வைத்துப் புதைப்பது அந்நாளைய வழக்கம். எரித்த பின்னர்த் தாழிகளிலும், சிறு மட்சாடிகளிலும் எலும்பையும், சாம்பலையும் வைத்துத் தாழியிற் புதைப்பதும் உண்டு. இதனால், தொல்லியல் அறிஞர்கள் முதுமக்கள் தாழிப் புதையலை இரண்டாம் அடக்கம் என்று கூறுவர். சில இடங்களில் வெறும் தாழிகள் மட்டும் புதைக்கப்பட்டிருக்கும். இறந்துப்போனவரின் ஆவி அதில் தங்கும் என்று பண்டைய மக்கள் எண்ணினர். சில இடங்களில் முழு எலும்புக் கூடுகளும், இரண்டு எலும்புக் கூடுகளும் தாழியினுள் இருப்பது உண்டு.

முற்காலத்தில் மிகவும் வயது மூத்த முதியவர்களை அவர்கள் இயங்கமுடியாத காரணத்தால் தாழிக்குள் உயிருடனே வைத்து அவர்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் உள்ளேயே வைத்து விடுவர். இவ்வழக்கத்தை கி.பி.பத்தொன்பதாம் நூற்றாண்டில் மெக்கன்சி பெருமகனார் பலரிடம் வினவி எழுதியுள்ளார். திருவெண்காட்டுப் புராணமும் 'உயிர்கொடு



முதுமக்கள் தாழி

போகாமையினால் மொய்த்த முதியோர்க்கு முது மக்கட் சாடி பல வைத்தகுல தீபகனே' என்று கூறி இவ் வழக்கத்தை உறுதிப்படுத்துகிறது. முதுமக்கள் தாழி என்ற பெயரினாலும் இக்கருத்து வெளிப்படுகிறது.

இம்முதுமக்கள் தாழி வழக்கத்தைச் சோழ மன்னர் கள் இவ்வுலகில் படைத்தனர் என்று சில பிற்கால இலக்கியங்கள் கூறுகின்றன. ஒடி மறலி ஒலிப்ப முது மக்கட் சாடி வகுத்த தராபதியும் என்ற விக்கிரம சோழன் உலாவும், பதுமக்கட் கடவுட் படைப்படை யக் காத்த முதுமக்கட் சாடி முதலோன் என்று குலோத்துங்கச் சோழன் உலாவும் கூறும். இவ்வாறு ஏற்படுத்திய மன்னன் நாபாகன் ஆவான் என்று உரையாசிரியர் கூறுவர்.

ஈமத்தாழிகள் பலவகைகளில் உள்ளன. பெட்டி போன்ற சாடிகளும் இருந்தன. விலங்குபோல அவை உருவாக்கப்பெற்றிருக்கும். பல கால்களையும் பெற்றிருக்கும். அவற்றை ஈமப்பேழை (Sarcophagus) என்பர் தொல்லியலார். ஈமச்சடங்கு கட்குச் சிறுமட் கலங்கள் பலவும் பயன்படுத்தப்பெற்றன (புறம்.232).

ஈமக்காடுகளின் அகழாய்வுகளில் பற்பல சிறுமட் பாண்டங்கள் தாழிகளின் உள்ளும் புறமும் அகப்பட் டுள்ளன. அவை பல்வேறு வடிவங்களிலும் வண்ணப் பூச்சுகள் பூசப்பெற்றும், வரிக்கோடுகள் வரையப்பட் டும், கீறல், குறியீடுகள் இடப்பெற்றும், பழந்தமிழ் எழுத்துக்கள் எழுதப்பெற்றும், கறுப்பு, சிவப்பு வண் ணங்களில் கிடைக்கின்றன. சிறு தாழிகட்கு மூன்று அல்லது நான்கு சிறு கால்களும் அமையப்பெற்றிருக் கும். சிறு மட்கலங்கள் அவர்கள் புழங்கியனவாக இருக்கலாம் அல்லது நினைவுக்காக வைக்கப்பட்டி ருக்கலாம்.

இத்தாழிகள் மண்ணால் வனையப்பட்டுச் சுடப் பெற்றிருக்கும். இவை உருளைகளாலும், கைகளினா லும் செய்யப்பெற்றவையாகும். அகன்ற வாயுடைய தாகவும், தலைப்பகுதியை விட இடைப்பகுதி பருத் தும் அடிப்பகுதி சிறுத்தும் கூம்பு வடிவாக அமைந்த குதிர்போலக் காணப்படும். விளிம்புகளிலும், கழுத் துப் பகுதிகளிலும் அழகிய வேலைப்பாடுகள் அமைந்திருக்கும்.

இவை தமிழகத்தில் பரவலாகக் கிடைப்பதால் பரவலாக மக்கள் வாழ்ந்தனர் என்பது உறுதிப்படுகிறது. இத்தாழிகள் பெரிய கற்களைக்கொண்டு அமைக்கப்பட்ட கல்திட்டைகள் ( Dolmonoid cist ), மண்ணைத் தோண்டிப்பெரிய பலகைக் கற்களை நிறுத்தும் கல் பதுக்கைகள் ( Slab cist ), கல்லறைகள் ( Cist ), கல்லும் மண்ணும் மேடாகக் குவிக்கப்பெற்ற இடங்கள் ( Cairn ), பெரிய கற்களைக் கொண்டு அமைக்கப் பட்ட கல்வட்டங்கள் ( Cairn circle ), நீண்டு உயர்ந்த பெரிய கற்கள் நடப்பெற்றிருக்கும் இடங்கள் (Menhir) ஆகியவற்றின் கீழ் எல்லாம் முதுமக்கள் தாழிகள் புதைக்கப்பட்டிருக்கும். சில இடங்களில் மேற்குறித்த அடையாளங்கள் இன்றி மண்ணுக்குக் கீழும் புதைக்கப்படும். இம்முதுமக்கள் தாழிகள் மண்ணால் செய்யப்பட்ட ஒரு மூடியினால் மூடப்பெற்றிருக்கும். சில இடங்களில் காசுகளும், இரும்புப் பொருள்களும் கூட அகப்பட்டுள்ளன.

ஒரு மீட்டர் முதல் மூன்று மீட்டர் வரை ஆழத்தில் இத்தாழிகள் ஒரே இடத்தில் புதைக்கப்பெற்றிருப்பதையும் காணலாம். ஆதிச்ச நல்லூரில் ஒரே இடத்தில் ஆயிரக்கணக்கான முதுமக்கள் தாழிகள் இரண்டு மீட்டர் இடைவெளிகளில் புதைக்கப்பட்டுள்ளன. மலைப் பகுதிகளில் பாறைகளைக் குடைந்தும் முதுமக்கள் தாழிகளை வைப்பதுண்டு.

முதுமக்கள் தாழியை மதமதக்கா தாழி, குரங்குப் படை, பாண்டவர் குழி, குறும்பர் குடி, வாலிகுடி, வேடர்குடி, பாண்டுக்குழி எனப் பல்வேறு இடங்களில் பல்வேறு பெயர்களால் குறிப்பிடுவர். இவ்வழக்கம் பெரும்பாலும் கி.பி. 3, 4ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் மறைந்துவிட்டது.

- செ. இரா.

**முதுமைச் சோர்வு உளப்பிணி** : முதுமைச் சோர்வு உளப்பிணி என்பது மனச்சீர்மை குறைந்த ஒரு எதிர்வினையாகும். இது கிளர்ச்சியும் சோர்வும் மாறி வரும் உளப்பிணியின் சோர்வு வழியைப் போன்றதாகும். முதுமைச்சோர்வு உளப்பிணி ( Involutional Melancholia ) நோய் பெரும்பாலும் வாழ்க்கை மாற்றம் ஏற்படும் காலத்தில் நிகழ்கிறது. உடலிலுள்ள நாளமில்லாச் சுரப்பியின் செயல்முறையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படும்போது இந்நோய் மனிதர்களைப் பற்றுகின்றன. இந்நோயைச் சிக்கல் அமுங்கு நோய் என்றும் மன உட்சுருள் அழுக்கு நோய் என்றும் கூடக் கூறலாம். முதுமைச்சோர்வு உளப் பிணி பெண்களிடம் தான் அதிகமாக நிகழ்கிறது. பொதுவாக நாற்பத்தைந்து வயதிலிருந்து அறுபது வயதுக்குட்பட்ட பெண்களும் ஐம்பது வயதிலிருந்து அறுபத்தைந்து வயதுக்குட்பட்ட ஆண்களும் இந் நோய்க்கு இலக்காகின்றனர். பெண்களுக்கும் ஆண்களுக்கும் இப்பிணி பிந்திய, நடுத்தர வயதில் தோன்றுவதாகத் தெரிகிறது. இப்பிணி பெண்களையோ, ஆண்களையோ தாக்குகின்ற காலத்தில் குறிப்பிடத்தக்க உடல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. பெண்களுக்கு இறுதி மாதவிடாய் ஏற்படுகிறது. குழந்தை பெறும் தகுதியை இழக்கின்றனர். கருப்பையிலிருந்து முட்டைக்கரு வெளியாகிவிடுகின்றது. ஆண்களின் உடலிலும் உடல் சார்ந்த வேதியியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன. இவை பெண்களிடம் ஏற்படும் மாற்றங்கள் போன்று அவ்வளவு கடுமையானவையல்ல. பால் சம்பந்தப்பட்ட உடலுறவு நடவடிக்கைகள் குறைந்துவிடுகின்றன. கருவுறச்செய்யும் திறமை குறைந்துவிடுகிறது.

இப்பிணி பெரும்பாலான மனவெழுச்சிச் சீர்கேடுகளில் ஒன்றாக வகைப்படுத்தப்பட்டிருக்கிறது. உணர்ச்சிச் சீர்கேடுகள் ஏற்படும்போது உச்ச அளவும் ஒவ்வாததுமான மனவெழுச்சித் துலங்கல்கள், குறிப்பாக உச்சநிலை வெற்றிச்செருக்கும், சோர்வும் பெரிதும் காணப்படுகின்றன. இப்பிணி சோர்வு உளப் பிணி சார்ந்த எதிர்வினையின் குணப்பண்புகளான சோர்வு, கிளர்ச்சி, அச்சம் ஆகியவற்றையும் கொண்டி ருக்கிறது.

மனவெழுச்சிச் சீர்கேடுகளில் ஒன்றான முதுமைக் காலச்சோர்வு உளப்பிணி மனித வரலாற்றில் புதியதன்று. பண்டைய எகிப்து நாட்டினரும், கிரேக்கரும், சீன நாட்டினரும் தங்களுடைய வரலாறுகளில் இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். பிற்காலத்தில் வந்த புலவர்களும் எழுத்தாளர்களும் தங்களுடைய எழுத்தோவியங்களில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளனர். பதினாறாம் நூற்றாண்டின் சிறந்த நாடகப் புலவரான சேக்சுபியரும் பிறகு வந்த நாசுடாவங்கியும் எமிங்வே போன்றவர்களும் இப்பிணிகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர்.

முதுமைக் காலச் சோர்வு உளப்பிணி உச்சநிலைச் சோர்வையும், உச்சநிலைக் கிளர்ச்சியையும் முக்கிய குணப் பண்புகளாகக் கொண்டிருக்கின்றன. இந் நோய் நிகழ்ச்சிகள் அண்மைக்காலத்தில் குறைந்து வருவதாகக் கூறுகின்றனர். மேலும் இப்பிணிக்கு ஆண்களைவிடப் பெண்கள் மூன்று மடங்கு இரையாகின்றனர்.

நோய் குணப்படுதலின் விவரப்படி இச்சீர்கேடு படிப்படியாகக் கடுமையாகிறது என்பதாகும். தோல்வி மனப்பான்மை, எரிச்சலுறுதல், அமைதியின்மை, உறக்கமின்மை முதலியவை படிப்படியாக முற்றுப்பெறுகின்றன. சிறுசிறு பொருள்கள் பற்றிக் கூட மிகையான கவலையையும், காரணமல்லாத அழுகையையும், இப்பிணியாளர்கள் வெளிப்படுத்துகின்றனர். இப்பிணக்கானவர்கள் கடந்த காலத்தைப் பற்றிக் கவலைப்பட்டு, எதிர்காலத்தில் தங்கள் வாழ்க்கையில் நம்பிக்கையற்றவர்களாகவும் இருப்பர். இப்பிணியின் கடுமையான அறிகுறிகள் காணப்படும் போது பிணியாளர் அதிகப்படியாகச் சோர்வுற்றிருப்பார். கிளர்ச்சியடைந்தவராகவும் காணப்படுவார். மாபெரும் குற்றம் புரிந்துவிட்டது போன்ற உணர்ச்சிகளை வெளிப்படுத்துவார். உடல் சார்ந்த முறையீடுகளும் மனமருட்சிகளும் அடிக்கடி வெளிப்படும். தன்னுடைய உடலுறுப்புகள் செயலற்றுவிட்டன வென்றும் வயிற்றில் வலிகள் எழுகிறனவென்றும், தம்முடைய மூளை கறைந்து போய்விட்டதென்றும், தமக்குப் புற்றுநோய் ஏற்பட்டுவிட்டதென்றும், பயங்கரமான பிணிகள் தம்மைத் தாக்கியுள்ளனவென்றும் முறையிடுவர். தாம் ஒரு பொய்யான உலகத்தில் வாழ்ந்து வருவதாக உணர்வர். தம்முடைய மனைவியும் பிள்ளைகளும் மறைந்துபோய்விட்டனர் என்றும் உண்மையானது உலகத்தில் ஒன்றுமேயில்லை என்றும் அடிக்கடி கூறுவர். மேலும், முதுமைக்காலச் சோர்வு உளப்பிணி எதிர்வினைகளில் கவலைகளின் உணர்ச்சிகளும் உளச்சோர்வும் மிகுதிப்பட்ட இயக்க நடவடிக்கைகளைத் தொடர்ந்துவரும். அவை அமைதியின்மையிலிருந்து உச்சக் கிளர்ச்சி நிலை வரையில் செல்லும். இந்நிலையில் இப்பிணியாளர் தம்முடைய கால்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு நிற்றலும், அழுதலும் கைகளைப் பிசைதலும் தலைமுடியைப் பிய்த்துக்கொள்ளுதலும், உதடுகளைக் கடித்துக்கொள்ளுதலும் போன்ற செயல்களைச் செய்வர். தன்னுடைய விதியை எண்ணி வருந்திக்கொண்டிருப்பர். இந்நிலையிலுள்ள பிணியாளருக்கு மருத்துவம் இன்றியமையாததாகிறது. இல்லையென்றால் அவர் தற்கொலை செய்துகொண்டு இறக்க நேரிடும். மருத்துவ இயலின் புள்ளிவிவரப்படி இருபத்தைந்து விழுக்காடும் பிணியாளர் தற்கொலை செய்துகொண்டு இறந்திருக்கின்றனர் என்பது தெரியவரும்.

முதுமைக்காலச் சோர்வு உளப்பிணியின் சோர்வுப் பிணி, சில பிணியாளர்களிடத்தில் விடாத் துயர் தரும் திரிபுணர்ச்சியாலும் ( Delusion of Persecution ) மற்ற கருத்துத் திரிபுணர்ச்சியாலும் மூடப்பட்டிருக்கிறது. முதுமைச்சோர்வு உளப்பிணியின் தலையாய குணப் பண்புகளில் ஒன்று முறையீடாகும். இப்பிணி பெரிதும் பிந்திய நடுத்தர வயது மனிதர்களைத்தான் மிகுதியாகத் தாக்குகிறது என்றாலும் எல்லோரும் இப்பிணிக்கு ஆட்படுவதில்லை. அதனால் உடலியல் சார்பாலும் நாணமில்லாச் சுரப்பியின் மாற்றங்களாலும் இது ஏற்படுகிறது என்ற கூறமுடியாது. மற்ற காரணங்களும் இருக்கலாம்.

மனிதர்கள் நாளுக்குநாள் முதுமைப்பருவம் அடைகின்றனர். அதனால் உடல்சார்ந்த நடவடிக்கைகள் மெதுவாக்கப்படுகின்றன. அவர்களுடைய நடவடிக்கைகளும் சமூகத்தில் அவர்களின் நிலைகளும் மாறுகின்றன. அவர்களுடைய பொருளாதார மதிப்புக் குறைந்து கொண்டு செல்கிறது. அதை ஈடு செய் யும் பொருட்டு மனநிறைவு தராத தங்களுடைய பணியை மாற்றிக்கொள்ள விரும்புகின்றனர். வயதின் காரணமாக அவர்கள் அதைச் செய்துகொள்ள முடிவதில்லை. மூப்பும், இறப்பும் அவர்களை நாடி வந்து கொண்டிருக்கின்றன. எந்த ஒரு சமூகத்திலும் இளமையும் பாலுணர்ச்சி வலிமையுந்தான் அதிக செல்வாக்குப் பெறுகின்றன. தங்களிடம் இந்த இரண்டு குணப் பண்புகளுமில்லாததால் சமூகம் தங்களைப் புறக்கணிப்பதாகக் கருதுகின்றனர். அவர்கள் மற்றவர்களிடமிருந்து பிரிவுணர்ச்சியையும் தயவையும் எதிர்பார்க்கின்றனர். பாலுணர்ச்சி வலிமையுள்ள இளமையின் காலகட்டத்தைத் தாண்டிவிட்டதால் தாங்கள் எதற்கும் தகுதியற்றவர்கள் என்ற கருத்துத் திரிபுணர்ச்சிக்கு ஆளாகின்றனர். இந்நிலை பிந்திய நடுத்தர வயதில் தொடங்கி வளர்ந்து செல்லுகிறது. முன்னேறி

வருகின்ற மருத்துவ முறைகள் முதுமைச்சோர்வு உளப் பிணி முற்றுவதற்கு முன்பே குணப்படுத்த உதவு கின்றன.

**காரணக்கூறுகள் :** முதுமைச்சோர்வு உளப்பிணி யின் காரணக் கூறுகள் பெரும்பாலும் மூன்று வகை களில் அடங்குகின்றன. 1. உயிரியல் சார்பான காரணங் கள், 2. உளவியல் சார்பான காரணங்கள், 3. சமூகப் பண்பாடு சார்பான காரணங்கள் என்பன.

**உயிரியல் சார்பான காரணங்கள் :** பெண்கள் ஆண்களை விட மூன்றுமடங்கு இப்பிணிக்கு ஆளா கின்றனர் என்பது தெரியவருகின்றது. இப்பிணியின் போது பெரும்பாலான பெண்கள் மாதவிடாய் நிறுத் தம் என்ற அறிகுறி சார்ந்த துன்பத்துக்கு ஆட்படுகின் றனர். அந்த அறிகுறிகளாவன பெரிதும் வெப்ப உணர்ச்சிகள், தலைவலிகள், தலைச்சுற்றல், அதிகப்படி யாக வியர்த்தல், நரம்பு எரியுறுதல், உறக்கமின்மை, எதிலும் கவனம் செலுத்த முடியாமை முதலியன வாகும். கடுமையிராத ஒரு நரம்புப்பிணி போன்று தோன்றும் மென்மையான சோர்வும் ஏற்படும். ஆனால் இந்தத் தொந்தரவு கணத்தில் தோன்றி மறை யும் குணமுடையது. இது கருப்பைச்சுரப்பி உற்பத் திக் குறைவாவதால் ஏற்படுகிறது. பெண்பால் உட் சுரப்பிக்கு நீரின் மூலம் உடற்கூற்று முறைப்படியும் உளவியல் முறைப்படியும் மருத்துவம் அளிக்கலாம். மாதவிடாய் நிறுத்த அறிகுறியும் முதுமைச்சோர்வு உளப்பிணியும் ஒரே சமயத்தில் நிகழ்வது அரிதாகும். இந்த இரண்டு நிலைகளும் வேறுபட்டனவாகும். முதுமைச்சோர்வு உளப்பிணி மிகவும் கடுமையான தாகும். அது பெண்பால் உட்சுரப்பி நீரின் சிகிச்சைக்குக் கட்டுப்படுவதில்லை. முதுமைச்சோர்வுப் பணி பற்றிய ஆராய்ச்சி முடிவுகளின் படி அதன் காரணங்கள் எனக் கருதப்படுபவை நாளமில்லாச் சுரப்பியின் சமநிலை யின்மை, மனிதர்களிடையே நடைபெறும் இடை வினை நடவடிக்கைகள், மற்ற உளவியல் சார்பான கார ணங்கள் முதலியன.

**உளவியல் சார்பான காரணங்கள் :** வாழ்க்கை யின் ஒரு கட்டத்தில் ஒரு வகையான கடுமையான அழுத்தங்களுக்குத் தனியாள் ஆளாகின்றார். இதைச் சில உளவியல் அறிகுறிகள் முன்னறிவிப்பாகக் காட்டு கின்றன. அவை முதுமைச்சோர்வு உளப்பிணியின் அறிகுறிகளாகும். கிளர்ச்சியும், சோர்வும் மாறிவரும் உளப்பிணி ( Manic Depressive Psychosis ), முதுமைச் சோர்வு உளப்பிணி ( Involutional Melancholia ), இயல்பு நிலை ஆகிய நிலைகளை ஒத்திட்டு திட்லி ( Titley ) என்பவர் ஒரு வரைபடம் தயாரித்தார். அது மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்தது. முதுமைச் சோர்வு உளப்பிணியாளரிடம் அவர் கண்ட குணப் பண்புகள், மிகுந்த உன்னிப்புத்தன்மை, மிகுந்த கடமையுணர்ச்சி, உயர்ந்த ஒழுக்க விதிகளைத் தீவிரமாகக் கடைப் பிடித்தல், கவலை, பிடிவாதம், குறைந்த விருப்பங் கள், பாலுணர்ச்சி சார் இணக்கத்தில் மிகக் குறைந்த அக்கறை முதலியனவாகும். கிரிகிரி ( Gregory ), ரோசன் தாஸ் ( Rosenthal ) ஆகியோர் ஆராய்ச்சிகளும் இந்தப் பண்புகளை வெளிப்படுத்தின. சீர்மை மிகுந்த உறுதி யாக்கம், பாதுகாப்பின்மை, கட்டாயத்தன்மை, அன் றாட வாழ்க்கைப் பழக்கங்கள், வளைந்துகொடாமை முதலியவை முதுமைச் சோர்வுப் பிணியில் காணப் பட்டன. இந்த விதமான உளவியல் அறிகுறிகளைக் கொண்டவர்கள் அழுத்தங்களுக்கு எளிதில் ஆட்படு கின்றனர். ஏனென்றால் இந்நிலை முதுமைக் காலத் தில் தவிர்க்கமுடியாமல் தொடர்ந்து வந்துகொண்டி ருக்கக் கூடியவை. தனியாள் தன்னுடைய நிலையி லிருந்து வீழ்ச்சியுறுவது இதில் முக்கியமாகக் காணப் படும் உளவியல் சார்பான செயல்முறை என்று தயட்டு ( Tait ) என்பவரும் பர்ஞ்சு ( Burns ) என்பவரும் கூறு கின்றனர்.

முன்னறிவிப்பு ஏதுமின்றி பலர் முதுமையடைந்து வருவதாக உணருகின்றனர். அவர்கள் தங்களுடைய பழைய வலிமையை இழந்து விரைவில் களைப்படை கின்றனர். பாலுணர்ச்சி விருப்பங்கள் குறைந்து வரு கின்றன. உடற்கவர்ச்சிகள் குறைந்து வருகின்றன. அவர் கள் அடிக்கடி புதிய அழுத்தங்களுக்குத் தங்களை இணக்கப்படுத்திக் கொள்ளுகின்றனர். குறிப்பாக பொய்ப்பல் வைத்துக்கொள்வதிலிருந்து பெரும் சிர மங்களான முற்றிய பிணிகள் வரையில் தங்களை இணக்கப்படுத்திக் கொள்வதில் புதிய வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுகின்றனர். முதுமைச்சோர்வு உளப்பிணியாளர்களில் பலர் தங்கள் இறுதிக்காலத் தில் தங்கள் மீது அன்பு காட்டியவர்களை இழக்க நேரிடுகிறது. கெயின் ( Gaine ) என்பவரின் ஆராய்ச் சிப்படி 75 விழுக்காடு அமெரிக்கப் பெண்கள் இக் காலக்கட்டத்தில் விதவைகளாகின்றனர். குறிப்பிடத் தக்க எண்ணிக்கையுள்ள பெண்களுக்கு இந்த அழுத் தம் இறுதிக்கட்டத்தில் தோன்றுகிறது. ஒவ்வொரு வரும் தங்களுக்குரித்தான வழியில் இந்த

அழுத்தத்துக்கு எதிர்வினை புரிகின்றனர். இது அவர்களுடைய ஆளுமை அமைப்பையும் அவரவர் பெற்ற வெற்றிகளின் படித்தரத்தையும், குழுத்தொடர்பையும் பொறுத்திருக்கிறது. சிலர் தவிர்க்க முடியாத மெய்ப்பொருளமைதியை நாடுகின்றனர். சிலர் துயரத்தின் சாயலோடு மிகுந்த சிந்தனையின்றி மேலே ஏற முயன்று பின்னடைகின்றனர். அதனால் பொருளாதாரத் துன்பத்தை இறுதிக் காலக்கட்டத்தில் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. முதுமைச்சோர்வு உளப்பிணியில் அடங்கியுள்ள வளர்ச்சிப்படிவம் எளிதில் புரிந்துகொள்ளக் கூடியதாகத்தானிருக்கிறது. முன்கூட்டியே கணிக்கவும் முடியும். இந்த வாழ்க்கைக் காலத்தின் அழுத்தங்களுக்குத் துலங்குவதில் தனிமையும், மிகுந்த கடமையுணர்ச்சியும் கொண்ட நேர்மையான மனிதர்கள் எளிதில் கவலையும் சோர்வும் கொள்கின்றனர். கடந்த காலத்தில் ஏற்பட்ட தோல்விகளும் ஏமாற்றங்களும் அவர்களைப் பெரிதும் அச்சுறுத்துகின்றன. எதிர்காலம் சிறப்பாக இல்லை. தன்னையே மையமாகக் கொண்டு கவர்ச்சிகளைப் பெருக்கிக்கொள்கின்றனர். அச்சம் தரும் உளநோய்த் ( Hypochandrical ) தொடர்பு மாற்று மனநிறைவை அவர்களுக்கு அளிக்கிறது. முதுமைச்சோர்வு உளப்பிணி மிகைப்படும்போது இந்த அச்சம் தரும் உள நோய்க்கூறுகள் திரிபுணர்வுகளாக ( Delusions ) விரிவடைகின்றன.

பழிவினையின் திரிபுணர்வுகள் தோல்வியுணர்ச்சியிலிருந்தும் தன் எதிர்க் குற்றச்சாட்டிலிருந்தும் தோன்றுகின்றன. தான் தோல்வியடைந்தது சரிதான் என்று பிணியாளன் உணரத் தொடங்குகிறார். ஏனென்றால் எந்த ஒரு பண்பாட்டிலும் கடுமையாக உழைக்கின்ற மனிதன் வெற்றிபெறத் தகுதிபெற்றவன் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அப்பொழுதுதான் மிகச்சிறிய தவற்றிலிருந்து மன்னிக்கமுடியாத பழிவினைகள் வரையில் உள்ளவற்றை மிகைப்படுத்திக் காட்டு கின்ற அடுத்த கட்டத்திற்குச் சென்று அவர்களின் இக்கட்டான நிலையை விளக்கிக் கூறி ஒரு மாற்றத்தை உண்டாக்க முடியும். எப்படியென்றால் மற்ற உளச் சோர்வுப் பிணியாளர் போன்றே முதுமைச் சோர்வு உளப்பிணியாளரும் தம்மைத்தாமே குற்றம் சாட்டிக் கொள்வதில் ஓரளவு மனநிறைவு கொள்கின்றனர். உலகம் முழுவதும் அறியும்படியாக மாபெரும் பழி வினைளைச் செய்தவன் என்று தம்மைத்தாமே குற்றம் சாட்டிக்கொள்வது மட்டுமின்றி தம்மை மிகவும் முக்கியமானவர் என்று கூறித் தற்செருக்கு உணர்ச்சியையும் வளர்த்துக்கொள்கின்றனர்.

**சமூகப் பண்பாட்டுக்கூறு :** சமூகத்திற்குச் சமூகம் இந்த முதுமைச்சோர்வு உளப்பிணியில் மாறுபாடுகள் காணப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன்பு எண்டர்சன் (Henderson) என்பவரும் கிலெசுபி (Gilles pie) என்பவரும் நடத்திய ஆராய்ச்சியில் ஸ்காட்லாந்தின் சிற்றூர்ப் பகுதிகளில் முதுமைச்சோர்வுப் உளப் பிணியாளர்கள் மிகுதியாக இருந்தனர் எனத் தெரிய வருகிறது. ஒரே சமயத்தில் மூன்று முதல் ஐந்து விழுக்காடு வரையில் இந்தப் பிணியாளர்கள் அமெரிக்காவிலிருந்தனர் என்று கரோதர்சு ( Garothers ) என்பவர் கூறுகின்றார். அதேசமயத்தில் ஆப்பிரிக்காவிலுள்ள கென்யாவில் மொத்தப் பிணியாளர்களில் 1.4 விழுக்காட்டினர் முதுமைச்சோர்வு உளப்பிணியாளர்களாய் இருந்தனர். இங்கு நடத்தை பெரும்பாலும் குழுவின் பொறுப்பேயன்றித் தனி மனிதர்களுடையதன்று. எப்படியிருப்பினும், முதுமைச்சோர்வு உளப்பிணியின் அறிகுறிகள், எல்லாச் சமூகத்திலும் ஒரேமாதிரியாகத் தானிருக்கின்றன. சமூகப் பழக்கவழக்கங்களும், தனிமனிதனிடமிருந்து சமூகம் எதிர்பார்க்கும் கடமையுணர்ச்சிகளும் முதுமைச்சோர்வு உளப்பிணியை உண்டாக்குகின்றன.

**மருத்துவம் :** முதுமைச்சோர்வு உளப்பிணிக்கு மருத்துவர்கள் நெடுங்காலமாக ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றன. ரோசன்தாஸின் கணக்குப்படி இருபது முதல் அறுபது விழுக்காட்டினர் ஓராண்டு முதல் நான்காண்டுகள் வரையில் மருத்துவம் பெற்று குணமடைகின்றனர். எஞ்சிய நாற்பது விழுக்காட்டினர் நோய் முற்றிய நிலையில் மருத்துவமனை நோயாளியாகின்றனர். இத்துறையில் முன்னேற்றமடைந்துள்ள மருத்துவ முறைகளின் மூலம் மருத்துவம் பெற்ற பிணியாளர்கள் ஆறு வார காலத்தில் குணமடைந்திருக்கின்றனர். உள மருத்துவ இயலும் சமூக மருத்துவ இயலும் முதுமைச்சோர்வு உளப்பிணிக்கு மிக இன்றியமையாத் துறைகளாகக் கருதப்படுகின்றன.

- மு. இரா.

**துணை நூல்கள் :**

1. English, B., and Finch, S. M., 1954, **Introduction to Psychiatry**, Newyork.

2. Gregory, I., 1961, **Psychiatry : Biological and Social**, W. B. Saunders, Philadelpyia.

3. Henderson, D., and Gillespie, R.D., 1950, **A Text Book of Psychiatry for Students and Practioners**, Oxford University Press, Newyork.

**முதுவர் :** இப்பழங்குடி மக்கள் தமிழ்நாட்டில் கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள ஆணைமலையிலும், மதுரை மாவட்டம் ஏலமலையிலும் இதனையடுத்த கேரளப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். 1971 ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி இம்மக்களின் எண்ணிக்கை 4575 ஆகும். தமிழகத்தில் 890 பேரும், 3685 பேர் கேரளத்திலும் வசிக்கின்றனர். சில பகுதிகளில் இவர்களை ' முதுவான் ' என்றழைக்கின்றனர்.

இவர்கள் தொன்மை ஆசுதிரேலிய இனத்தைச் சார்ந்தவர்கள் என்று எல். அனந்தகிருட்டிண அய்யர் கூறுகிறார். இவர்கள் நீண்ட தலையும் கூர்மையான மூக்கும், மெல்லிய உதடும் உடையவர்களாக உள்ளனர். மணமாகா முதுவர்கள் வேட்டி கட்டிக்கொண்டு தலைப்பாகை அணிகிறார்கள். மணமானவர்கள் மட்டும் தலையின் முன்பகுதியைச் சிரைத்துக்கொள்கிறார்கள். பெண்கள் காதணியும், கொப்பும், மூக்குத்தியும், விரலில் பித்தளை மோதிரமும் அணிகிறார்கள். 'மயிர் மாட்டி' என்ற அணிகலனைக் காதின் மேற்புறத்திலிருந்து வில் போன்று தலையின் பின்புறமுள்ள கொண்டையுடன் இணைத்துக்கட்டிக் கொள்கிறார்கள். ஆண்கள் காதில் கடுக்கன் போட்டுக் கொள்கிறார்கள்.

முதுவர்களின் பழமையான இடம் மதுரை எனக் கூறப்படுகிறது. பாண்டிய மன்னர்கள் போரில் ஈடுபட்டிருந்தபொழுது இவர்கள் மலைப்பக்கம் வந்து குடியேறினர். இவர்கள் இப்படி வரும்போது குழந்தைகளை முதுகில் சுமந்து சென்றதால் 'முதுவர்' என்ற பெயர் வந்தது. மேலும், முதுவர்கள் மதுரையை விட்டுச் செல்லும்போது மீனாட்சி உருவத்தை முதுகில் சுமந்து சென்றதால் இப்பெயர் வந்தது என்றும் கூறுவர். மலைக்கு வந்து குடியேறிய மக்களுள் இவர்களே முதுகுடிகளாக உள்ளதால் 'முதுவோன்கள்' என்ற பெயரும் வந்ததாகக் கூறுவர். கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் நாயக்கர்கள் போடிநாயக்கனூரைப் பிடித்த பொழுது இப்பழங்குடி மக்களும் மலைக்கு வந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. அனந்த கிருட்டிண அய்யரும் கி.பி. பதினான்காம் நூற்றாண்டில் இப்பழங்குடி மக்கள் மலையில் குடியேறியிருக்க வேண்டுமெனக் கூறுகிறார். பூனையாத்து இராசாதான் இவர்கள் அரசர் என்றும் கி.பி.பதினெட்டாம் நூற்றாண்டு முகம் மதியப் படையெடுப்பின்போது இம்மலைக்கு வந்து குடியேறினர் முதுவர்கள் என்றும் கூறுகின்றனர்.

குடிசைகளை ஈந்து மர ஓலைகளால் கூரையையும் சுற்றுப்புறச் சுவர்களையும் ஈந்தினாலேயே கட்டியுள்ளனர். இவர்கள் வாழுமிடத்தைக் குடி என்று கூறுவர். குடிசையின் ஒரு பகுதியைத் தூங்கவும் மற்றொரு பகுதியைச் சமையல் செய்யவும் பயன்படுத்துவர்.

கேழ்வரகு, தினை, நெல் போன்றவற்றைப் பயிர் செய்கின்றனர். சிலர் ஏலக்காய்ப் பண்ணையும் வைத்துள்ளனர். ஒவ்வொரு குடும்பத்துக்கும் பசுவோ, எருமையோ இருக்கும். மீன், அணில், சேழையாடு ( ஒரு வகைக் காட்டுஆடு ) முதலியவற்றை உண்கின்றனர். பிள்ளையில்லாத மலட்டுப் பெண்கள்கருங்குரங்கின் மாமிசம் உண்டால், பிள்ளைப்பேறு கிடைக்குமென நம்புகின்றனர். வெட்டரிவாள் இல்லாத முதுவனைப் பார்க்கவே முடியாது. தேனைச் சேகரிப்பதிலும் வல்லவர்கள். யானைகளின் நடமாட்டத்தை எளிதில் உணர்ந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள்.

முதுவக்குடிக்கு 'மூப்பன்' தலைவராக உள்ளார். முதுவப் பழங்குடிகள் அனைவருக்கும் மேல்வாகென் என்பவர் தலைவராக உள்ளார். இப்பதவி பரம்பரை பரம்பரையாக வருவதாகும். மருமக்கள்தாய முறையை ஒரு காலத்தில் பின்பற்றினர். முதுவப் பழங்குடிகள் திருமண உறவுக்காகப் பின்வரும் புறமணக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளனர். 1. மேலக் கூட்டம், 2. கணைக்கூட்டம், 3. புதானிக் கூட்டம், 4. சூசானிக் கூட்டம், 5. கணையத்துக் கூட்டம், 6. எல்லிக் கூட்டம்.

இவர்கள் முருகனை வழிபடுகிறார்கள். பழனியாண்டவர், சொக்கநாதர், மதுரை மீனாட்சி, மாரியாத்தாள், கருப்பசாமி முதலியவற்றையும் வழிபடுகின்றனர். சித்திரைப்பொங்கல், கார்த்திகைத் தீபம், தைப்பொங்கல் முதலியவற்றைக் கொண்டாடுகின்றனர். கோயிலுக்குச் சற்று தூரத்தில்தான் பெண்கள் இருக்க வேண்டும். கேரளாவில் பல்லாண்டு காலம்

வாழ்ந்து கொண்டிருப்பினும் ஓணம் பண்டிகையை இம்மக்கள் கொண்டாடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் வெள்ளிக்கிழமையன்று வெளியிடங்களுக்குப் போகமாட்டார்கள். புதன்கிழமைதான் இவர்களுக்கு நல்ல நாளாகும். திங்கள்கிழமையானால் சூரிய உதயத்திற்கு முன்பும், செவ்வாய்கிழமைகளில் உச்சிப்பொழுதும் புதன்கிழமையானால் அதிகாலையிலும், வியாழக்கிழமையானால் காலை உணவிற்குப் பின்னும் புறப்படுவர். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் பொழுது புலர்ந்தவுடன் புறப்படுவர். கண்பட்டு விடுதல், வாக்குவிட்டு விடுதல் போன்றவற்றிலும், பேய் பிசாசுகளிலும் நம்பிக்கையுள்ளவர்கள். கேழையாடு கத்துவதைக் கெட்ட சகுனமாகக் கருதுகின்றனர்.

முகவர் பேசும்பேச்சு தமிழின் கிளைமொழியாகும். இவர்கள் பேசும் பேச்சைப் பாண்டி நாட்டுப்பேச்சு என்றும் கூறுவர். இவர்கள் கி.பி. பதினான்காம் நூற்றாண்டிலே மலைப்பகுதிக்குச் சென்றுவிட்டதால், இவர்கள் பேச்சில் சில தனித்தன்மைகளையும் புதுமைகளையும் காணலாம். ஒரு பகுதியினர் நெடுங்காலமாகக் கேரள மாநிலத்தில் வாழ்வதால் இவர்கள் பேச்சில் மலையாள இலக்கணக் கூறுகளையும், மலையாளச் சொற்களையும் காணலாம்.

பருவப்பெண்களும், மணமாகாத இளைஞர்களும் இளையார் கூடங்களில் தங்க வேண்டும். இளைஞர்கள் தங்குமிடத்தை இளந்தாரிமடம் என்றும், குமரிகள் தங்குமிடத்தை குமரிமடம் என்றும் கூறுவர். இளைஞர்கள் வாலிப வயதை அடைந்தவுடன் தாய்மாமன்மார் கொக்கிராசா உருமால் கட்டுவர். ஊரில் நடைபெறும் திருமணம், சாவு போன்ற நிகழ்ச்சிகளில் இளையார் கூடங்களைச் சேர்ந்த அனைவரும் பங்குபெறுவர். இளந்தாரி மடத்தைச் சார்ந்தவர்கள் யார் வீட்டில் வேண்டுமானாலும் உண்ணலாம். முதுவக் குடிக்கு வரும் விருந்தாளிகள் இளந்தாரி மடத்திலும், பெண் விருந்தாளிகள் குமரி மடத்திலும் தங்க வேண்டும். குமரி மடத்தில் வாழும் பெண்களுக்குப் பாதுகாப்பாகக் கிழவிகளும் அங்குத் தங்குவர். இம்மடத்திலுள்ளவர்கள் அச்சமூகத்திற்கே சொந்தமானவர்களாகக் கருதப்படுகின்றனர்.

மணமாகாதார் கூடங்கள் வீட்டிலுள்ள இடநெருக்கடி போன்ற சிக்கல்களைத் தீர்ப்பதுடன் அனைவரும் ஒன்று சேர்ந்து வாழ்கின்ற சமுதாயம் அமைய பேருதவியாக இருக்கும். கூட்டுறவான வாழ்வும், காதலைப் பற்றி அறிந்து வாழ்க்கைத் துணையைத் தேடவும் வாய்ப்புக்கிடைக்கிறது. பருமடையும் பெண்களைத் தனிக்குடிசையில் வைக்கின்றனர். இக்குடிசைக்குத் திண்ணை வீடு என்று பெயர். இக்குடிசையில் நான்கு நாள்கள் தங்க வேண்டும். ஐந்தாம் நாள் ஆற்றில் குளிக்கச் செய்து, வீட்டிற்கு அழைத்து வருவர். வீடு வரும் வரை அப்பெண்ணின் மீது தண்ணீர் ஊற்றிக் கொண்டே வருவர். எல்லாத் தாய்மாமன் வீட்டிற்கும் சென்று வரவேண்டும். தாய்மாமன் அப்பெண்ணுக்குப் புதிய துணிமணிகளைத் தருவர். அத்துடன் பெரிய விருந்தோம்பலும் நடைபெறும். பின் அப் பெண் குமரி மடத்து உறுப்பினராவாள். ஆண்களும் பெண்களும் இவ்விளைஞர் கூடத்தில் சேரும் நாளை மகிழ்ச்சியாக் கொண்டாடுகின்றனர்.

இவர்கள் தாய்மாமன் மகளைத் திருமணம் செய்கிறார்கள். பெரும்பாலும் இளைஞர்களே தங்கள் துணையைத் தேர்ந்தெடுப்பதில் ஈடுபடுகின்றனர். ஓர் இளைஞன் ஒரு பெண்ணை விரும்பினால், காட்டிற்குச் சென்று சில காலம் தங்கி வாழ்வர். பின்பு கிராமத்திற்கு அழைத்து வந்து திருமணம் செய்து வைப்பர். மணமகன் தானே தயாரித்த திருமணச் சீப்பை எல்லோர் முன்னிலையிலும் மணமகளின் தலையில் செருகுவான். இதனை அவர்கள் மொழியில் புகாரி என்றழைக்கின்றனர். ஒரு காலத்தில் இம்மக்களிடையே தாலி கட்டும் வழக்கமிருந்தது தற்போது அப்பழக்கமில்லை என்று தர்சுடன் ( Thurston ) குறிப்பிடுவார். மணமான பெண்கள் திருமணத்தின் அறிகுறியாகத் தலையில் கல்யாணச் சீப்பை வைத்துக்கொள்கிறார்கள். இக்கல்யாணச் சீப்பே இவர்களுக்குத் தாலி போன்றது. திருமணத்திற்கு மறுநாள் மஞ்சள் நீராட்டு நடைபெறும். ஆண்களும் பெண்களும் முறை உள்ளவர்கள் மீது மஞ்சள் நீரை ஊற்றி மகிழ்வர். ஆணும் பெண்ணும் கற்பு நெறியினின்றும் வழுவாமல் வாழ்க்கை நடத்துவர். கற்பு நெறியினின்றும் வழுவும் பெண்களைச் சமூகத்தை விட்டே நீக்கி வைப்பர். கூடாவொழுக்கத்தை இவர்களிடையே காண்பது அரிது. விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாம். ஆனால் கணவனுடன் பிறந்தவர்களைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. பல்மனைவி மணம் ஒரு காலத்தில் வழக்கத்திலிருந்தாலும் இன்று ஒருதார மணத்தைத்தான் அனைவரும் விரும்புகின்றனர்.

கருவுற்றப்பெண்களும், மாதவிடாயான பெண்களும் தனிக்குடிசையில் தான் தங்கவேண்டும். குழந்தை பிறந்த முப்பதாம் நாள் தாயையும், சேயையும் வீட்டிற்கு அழைத்து வருவர். அன்று சாமி கும்பிடுவர். குழந்தைக்கு மொட்டையடித்து குஞ்சான், குறிஞ்சான், கார்மேகம் போன்ற பெயர்களையும், பெண்களுக்கு பேச்சி, கூந்தல் போன்ற பெயர்களையும் வைக்கின்றனர்.

இறந்தவர்களைப் புதைக்கின்றனர். சனிக்கிழமையன்று யாரேனும் இறந்தால், இறந்தவருடன் உயிருள்ள கோழிக்குஞ்சு ஒன்றையும் புதைக்கின்றனர். அவ்வாறு செய்யாவிடில் பல சாவுகள் தொடரும் என நம்புகின்றனர். முதுகுடியில் ஒருவர் இறந்தால் குடியிலுள்ள அனைவரும் மூன்று நாட்கள் தலைப்பாகை அணியக்கூடாது.

- சு.ச.

**மும்முடிச்சோழன் :** சோழ மரபின் அரசர்களில் மூவர் 'மும்முடிச் சோழன்' என்ற பட்டத்தைப் பெற்றவர் ஆவர். அவர்கள் கண்டராதித்த சோழர், முதலாம் இராசராசன், இராசமகேந்திரன் ஆவர். இம் மூவரில் முதலாம் இராசராச சோழனே மும்முடிச் சோழன் என்ற சிறப்புப்பெயருக்குத் தகுதியானவராக விளங்கினார்.

முதலாம் இராசராசன் சேரர், பாண்டியர், ஈழவர் ஆகிய மூவரையும் வென்று இப்படத்தைப் பெற்றதை அம்மன்னனின் மெய்க்கீர்த்திகள் உணர்த்துகின்றன. மும்முடிச்சோழன் என்னும் சிறப்பு எய்துவதற்குக் காரணமாக விளங்கிய மூன்று வெற்றிகளையும் பின்வருமாறு காண்போம்.

தம் முதல் போரினைக் கேரளத்திலுள்ள திருவனந்தபுரத்தில் நிகழ்த்தினார். கேரளம் செல்லும் வழியில் பாண்டியரையும் வென்றார். சேர, பாண்டியரை வென்ற பின் அவ்விரு பகுதிகளுக்கு எப்போதும் துணை நின்ற ஈழத்தையும் வென்றார்.

கி.பி.988இல் சேரர்களுக்கு எதிராகக் காந்தளூர்ச் சாலை என்னுமிடத்தில் கடற்போரை நிகழ்த்தினார். சோழர்- பாண்டியர் ஆதிக்கப்போரில் பாண்டியர்க்கு உதவியவர் சேரன் பாசுகரவர்மன் ஆவார். கேரளம் செல்லும் வழியில் சோழர் படையிடம் தோற்ற அமர புயங்கன், சேரன் பாசுகரவர்மனுடன் சேர்ந்து மறுபடியும் போரிட்டார். அவ்விரு மன்னர்களும் சோழனிடம் தோற்றனர்.

காந்தளூரில் இருந்த சேரனின் கடற்படைத்தளம் அழிக்கப்பட்டது. இதனை இம்மன்னனின் மெய்க்கீர்த்தியில் காந்தளூர்சாலை கலமறுந் தருவி என்று குறிக்கப்பெறும். காந்தளூர்ச் சாலைவெற்றி என்பதற்குப் பல்வகையான மாறுபட்ட விளக்கங்கள் அளிக்கப்பெற்றபோதிலும், காந்தளூரில் சேரரின் கடற்படைத்தளம் அழிக்கப்பட்டது என்பதே பலராலும் ஏற்கப்பெறுகிறது. இவ்வெற்றி சோழரின்கப்பற் படை வலிமையினை நிலைநாட்ட உதவிற்று.

இப்போரில் சேரன் பாசுகரவர்மன் தோற்றுவிட்ட போதிலும், தோல்வியை முழுமையாக ஒப்புக் கொள்ளாது, இராசராசனின் தூதுவராக வந்த அலுவலரை சிறைவைக்கவே மீண்டும் கி.பி.1008க்குச் சற்று முன்னர் சேரர் மீது படையெடுத்தார். விழிஞம் என்னும் காவற்கோட்டை சோழப்படையினரால் கைப்பெற்றப்பட்டு அழிவுக்குள்ளாயிற்று. கடற் படை வெற்றிக்குக் காந்தளூர்ச் சாலையும், நிலப்படை வெற்றிக்கு விழிஞமும் சான்றாக அமைந்தன.

விழிஞத்தில் பெற்ற வெற்றியின் பயனாய்த் தம் தூதுவரைச் சிறை மீட்டார். சேர நாட்டில் தம் பிறந்த நாள் விழாவைச் சதயத் திருவிழாவாகச் சிறப்புடன் கொண்டாடினார்.

பாண்டியரையும், சேரரையும் வென்று அடக்கிய பின்னர், பல பகுதிகளையும் வென்று ஈழப்போரை மேற்கொண்டார். ஈழத்தின் வடபகுதி கி.பி. 991இல் சோழர் வசமாயிற்று. முதலாம் பராந்தகன் காலத்திலிருந்தே ஈழம் சோழருக்கு எதிர்ப்பாய் விளங்கிற்று. ஈழ மன்னர் ஐந்தாம் மகிந்தன் இராசராசன் காலத்தில், கடல் வழி வந்திறங்கும் எந்த அயலவர் படையினையும் முறியடிக்கும் மனஉறுதியுடனும், பகை உணர்வுடனும் இருந்தான்.

ஈழ நாட்டிலிருந்த கேரள, கன்னடக் கூலிப்படையினர் ஈழ மன்னரை எதிர்த்துக் கலகம் செய்யவே பெருங்குழப்பம் ஏற்பட்டது. அந்நிலையினைப் பயன்படுத்தி ஈழத்தின் மீது இராசராசன் படையெடுத்தார். சோழரின் படையெடுப்பினையும், உள்நாட்டுக் கிளர்ச்சியையும் எதிர்கொள்ள இயலாத மகிந்தன் தன் நாட்டின் பெரும் பகுதியைச் சோழர்களிடம் இழந்து, ஈழத்தின் தென்பகுதிக்கு ஓடினான். இலங்கையின் பெரும் பகுதியைக் கைப்பற்றிக்கொண்ட சோழர்படை

சிங்களவரின் தலைநகரான அனுராதபுரத்தை அழித்தது. ஈழ நாடு சோழமயமாக்கப்பட்டது. பொலருநாவைச் சனநாத மங்கலம் என்று பெயர் மாற்றம் செய்தார். அதையே சோழரின் தலைநகராக ஈழத்தில் செய்து அங்குத் தம் அன்னையின் பெயரால் வானவன் மாதேஸீச்சுரம் என்ற ஆலயம் எழுப்பினார்.

ஈழத்திலிருந்த சோழ அதிகாரி தஞ்சைத் தனிக் குமாரன் இராசராசேச்சுரம் என்ற கோயிலை மகாதித்தா எனும் ஊரில் எழுப்பினார். தஞ்சைப் பெரிய கோயிலில் நடைபெறும் விழாச் செலவிற்கு ஈழத்திலுள்ள பல ஊர்களை இராசராசன் அளித்தார். ஈழநாடும் சோழப் பேரரசின் மண்டலங்களில் ஒன்றாயிற்று.

சேர, பாண்டிய, ஈழப்படையெழுச்சிகளில் காணப்பெற்ற சிறப்பு நிறைந்த வெற்றிகளின் விளைவால் மும்முடிச் சோழன் என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொண்டார். ஈழநாடு மும்முடிச் சோழ மண்டலம் என்று கூறப்பட்டது.

- ந. க.ம.

**முரண் எதிர்நிலை :** இரு சொற்கள் அல்லது பதங்கள் தன்மையிலோ, அளவிலோ அல்லது இரண்டிலுமோ வேறுபட்டிருந்தால் அவ்விரு பதங்களிடையே உள்ள தொடர்பை அளவையியல் எதிர்நிலை ( Opposition ) என்பர். அதேபோன்று ஒரே எழுவாய் பயனிலைகளைக் கொண்டு முழுமையான பொருளைக் கொடுக் கக்கூடிய இரு வாக்கியங்கள் அல்லது உரைகள் (Pro positions) தன்மையிலோ அளவிலோ இரண்டிலுமோ வேறுபட்டிருப்பின் அவ்விரு உரைகளுக்கிடையே அமைந்த தொடர்பையும் அளவையியலில் எதிர் நிலைகள் என்பர். தன்மையில் மட்டும் வேறுபட்டி ருத்தலை வேற்றுமை எதிர்நிலை ( Contrary or Contrariety ) என்றும், அளவில் மட்டும் வேறுபட்டிருத்தலை உள்ளடங்கிய எதிர்நிலை (Subaltern) என்றும், இரண்டிலும் வேறுபட்டிருத்தலை முரண் எதிர்நிலை ( Contradictory opposition ) என்றும் குறிப்பிடுவர். அளவையியலில் எதிர்நிலை என்றால் தொடர்பு, உறவு என்பதாகும். பகைமை அன்று.

அளவையியல் உடன்பாட்டு நிறையுரை, எதிர்மறை நிறையுரை, உடன்பாட்டுக் குறையுரை, எதிர்மறை குறையுரை என நான்கு சார்பற்ற உரைகள் உண்டு. அவை முறையே ஆ (A); ஈ (E), ஐ (I), ஓ (O), எனும் குறியீடுகளால் உணர்த்தப்படும். இவற்றுள் உடன்பாட்டு நிறையுரையும், எதிர்மறை நிறையுரையும் (‘ஆ’வும் ‘ஈ’ யும்) தன்மையில் மட்டும் வேறுபட்டுள்ளதால் அவை வேற்றுமை எதிர்நிலை உறவில் உள்ளவை ஆகும். இது போன்றே உடன்பாட்டுக் குறையுரையும், எதிர்மறைக் குறையுரையும் ( ஐ யும், ஓ யும் ) தன்மையில் மட்டும் வேறுபடுவனவே. இவைகளின் உறவை கீழ் வேற்றுமை எதிர்நிலை என்பர். உடன்பாட்டு நிறையுரையும், குறையுரையும் ( ஆ வும், ஐ யும் ) எதிர்மறை நிறையுரையும் குறையுரையும் ( ஈ யும், ஓவும் ) அளவில் மட்டுமே வேறுபட்டுள்ளவையாதலால் அவற்றிடையே அமைந்த உறவு உள்ளடங்கிய எதிர்நிலைகளாகும். ஆனால் உடன்பாட்டு நிறையுரையும், எதிர் மறைக் குறையுரையும் ( ஆ வும், ஓ வும் ) எதிர்மறை நிறையுரையும் உடன்பாட்டுக் குறையுரையும் ( ஈ யும், ஐ யும் ) தன்மை, அளவு ஆகிய இரண்டிலும் வேறுபடுபவையாதலால் அவற்றிடையே அமைந்த உறவு முரண் எதிர்நிலைகள் எனப்படுகிறது. சா ற்ற உரைகளுக்கிடையே விளங்கும் மேற்குறிப்பிட் உறவுகளை எதிர்நிலைச் சமசதுரம் என்னும் வரைகோட்டுப் டத்தின் மூலமும் குறிப்பிடுவதுண்டு.

எதிர்நிலைகளில் முரண் எதிர்நிலை மட்டுமே முழுமையான வடிவம் ஆகும். ஏனெனில் அவ்வெதிர்நிலை மட்டுமே தன்மையிலும் அளவிலும் வேறுபடுவது. உடன்பாட்டு நிறையுரைக்கு எதிர்மறைக் குறையுரையும், எதிர்மறை நிறையுரைக்கு உடன்பாட்டுக் குறையுரையும் முரண் எதிர்நிலைகளாகும்.

அரிசுடாட்டில் எதிர்நிலை உறவுகளில், வேற்றுமை எதிர்நிலையையும், முரண் எதிர்நிலையையும் ஏற்கிறார். அவருடைய எதிர்நிலைச் சமசதுரத்தில் முரண் எதிர்நிலைகள் மேலும் கீழும் அமைந்திருக்கும். வேற்றுமை எதிர்நிலைகள் குறுக்காக அமைந்திருக்கும். உள்ளடங்கிய எதிர்நிலைகளை அவர் ஏற்பதில்லை.

முரண் எதிர்நிலைகளின் உண்மை மதிப்பைக் கருதுமிடத்து அவற்றில் உள்ள உரைகள் இரண்டும் ஒரே சமயத்தில் உண்மையாகா, ஒரே காலத்தில் பொய்யுமாகா. ஓர் உரை உண்மையெனில் மற்றது பொய்யாகவும், ஒன்று பொய்யெனில் மற்றது உண்மையாகவும் விளங்கும். முரண் எதிர்நிலை உரைகள் ஒன்றையொன்று மறுப்பவை ஆதலின் இவ்வுரைகளில் ஐயம் என்னும் நிலை ஏற்படுவதில்லை. முரண் எதிர்நிலை உரைகள், பிரிநிலை உரையில் உள்ள பிரிநிலைகளி

உள்ள பிரிவுகளில் ஏதேனும் ஒன்று மட்டும் உண்மையாகவோ பொய்யாகவோ இருக்க ஏனைய பிரிவுகள் அனைத்தும் அதன் மறுதலையாக விளங்கு வதைப் போன்றனவாகும்.

- பி. ஆர்.ந.

**துணை நூல்கள் :**

1. வைத்தியநாதன், எஸ்.எல்.டி., 1967, **அளவையியல்**, பொள்ளாச்சி.

2. Bholanath Roy., 1930, **Text Book of Deductive Logic**, Calcutta

**முரண்நிலை ஆய்வியல் :** முரண்நிலை ஆய்வியல் என்னும் சொல், அளவையியலில் பயன் மதிப்பற்ற கருத்தியலான சொல்லாடலைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது. இச்சொல் கிரேக்க மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். அம்மொழியில் இதன் பொருள் சொல்லாடல் கலை ( Art of Debate ) என்பதாகும்.

முரண் நிலை ஆய்வியல் முறையை ( Dialectics ) இலியா ( Elea ) நாட்டைச்சேர்ந்த சீனோ ( zeno ) என்பவர் முதன்முதலாகக் கண்டுபிடித்துப் பயன்படுத்தினார் என்று அரிசுடாட்டில் எழுதுகின்றார். சீனோ இம் முறையில் முதலில் எதிராளியின் முடிவிலுள்ள உண்மையைக் கருதுகோளாக ஏற்றுக் கொள்கிறார். பின்னர் இக்கருதுகோள் முரண்பாடான முடிவுரைகளுக்குக் கொண்டு செல்வதை எதிராளிக்குச் சுட்டிக் காட்டுவதன் மூலம் எதிராளியின் கருத்தை மறுக்கின்றார். உண்மையில் அவரது முரண்நிலை ஆய்வியல் முறை பன்மைக் கொள்கையினரின் நிலையை, விளைவுப் பொருத்தமின்மை காட்டி முடிவு தவறென்று எண் ணச் செய்தலாகும்.

சாக்ரட்டீசு முரண்நிலை ஆய்வியல் முறையைச் சில அறவியல் அல்லது அதுபோன்ற சொற்களுக்குத் திருப்தியானதொரு வரையறையை முறையான வினா விடைகளினால் தாண்டி வெளிப்படுத்தவோ மாறான வரையறையை மறுக்கவோ கூடிய ஒரு கலையாகப் பயன்படுத்தினார். சாக்ரட்டீசின் வினா விடையியலான முரண்நிலை ஆய்வியல் சாக்ரட்டீசு முறை எனச் சிறப்பாகக் குறிப்பிடப்படுகிறது.

பிளேட்டோ, சாக்ரட்டீசின் வரையறைகளைக் காணுகின்ற முரண்நிலை ஆய்வியல் போக்கினைப் பொருள்களின் பொதுவடிவங்களை ( Forms ) அல்லது எண்ணங்களைக் கண்டுபிடிக்கும் ஒரு முறையாக மாற்றினார். பிளேட்டோ குறிப்பிடும் வடிவங்கள் அல்லது எண்ணங்கள் இருக்கின்ற பொருள்களாகக் கருதப் படுகின்றன. ஒரு வடிவம் பிற வடிவங்களுடன் தொடர்பு கொண்டே சென்று இறுதியில் நன்மையின் வடிவமாக மாறுவதைப் பற்றிக் கருதுகின்ற ஓர் ஆய்வாக முரண்நிலை விளங்கியது. இதன்மூலம் படிநிலைகளில் அமைந்த வடிவங்களில் இறுதியானது ஏனைய அனைத்தையும் விளக்குவதாக அமைந்திருக்கும். ஆனால் அரிசுடாட்டில் முரண்நிலை ஆய்வியலின் விளக்கிக் காட்டும் பண்பினை ஏற்பதில்லை. மாறாக விளைவுகளைக் கொண்டு முடிவுக்கு வருதலையே அரிசுடாட்டில் தனது முரண்நிலை ஆய்வியலின் முறையாகக்கொண்டார். இவருக்குப் பின் வந்த இன்பதுன்பச் சம நோக்காளர்கள் அளவையியலை முரண் நிலை ஆய்வியல், சொல்லாட்சிக் கலை ( Rhetoric) என இருவகையாகப் பிரித்தனர். அவர்கள் காலத்திலிருந்து இடைக்காலத்தின் இறுதி வரை முரண்நிலை ஆய்வியல், அளவையியலுக்கு இணையானதாகவோ அதன் ஒரு பகுதியாகவோ கருதப்பட்டு வந்தது.

தற்காலத்திய மெய்ப்பொருளியலில் முரண் நிலை ஆய்வியல் முறை, பல புதிய பொருள்களைக் கண்டது. காண்ட் ( Kant ) தமது திறனாய்வியலான மெய்ப்பொருளியலில் முரண் நிலை ஆய்வியலை, இயற்கை நிகழ்ச்சிகளுக்கும், நிகழக்கூடிய உணர்வுகளின் எல்லைகளுக்கப்பாற்பட்டதனைப் புரிந்து கொள்ளலின் கொள்கைகள், சொற்பொருள் வகைகள் ஆகியவற்றைப் பயன்படுத்த முயல்வதில் அடங்கியுள்ள திரிபு நிலையினைச் சுட்டிக்காட்டுதற்கும் பயன்படுத்துகிறார். அவரது கருத்தின்படி புலன் சார்ந்த பொருள்களையும் நுகர்வுகளையும் விளக்கப் பயன்படுபவை புலனுக்கு அப்பாற்பட்டவைகளை விளக்கப் பயன்படாது. ஹெகல் ( Hegel ) என்பவர் முரண் நிலை ஆய்வியலை, வரம்புக்குட்பட்ட பொருள்கள் அல்லது கருத்துகளைத் தாமே கருதுவதற்கும், தம்முள் முரண்பாடுகளை வளர்த்துக்கொள்வதற்கும். தம்மையே மறுத்துக் கொள்வதற்கும் உரிய தன்மையாகப் பயன்படுத்துகிறார். இம்முறையானது அறிவியற் சிந்தனைகள், இயற்கை, வரலாறு ஆகியவற்றில் காணப்படுகிறது. அவரது கருத்தின்படி எங்கெல்லாம் இயக்கம்,

வாழ்வு இருக்கின்றதோ அங்கெல்லாம் முரண்நிலை ஆய்வியல் உண்டு என்று கூறலாம். ஹெகலின் கருத்தையும் சொற்களையும் அந்நிலையிலேயே காரல் மார்க்சு (KarlMarx) தம் முரண்நிலைப்பொருள் முதல் வாதத்தில் ( Dialectical Materialism ) பயன்படுத்துகிறார்.

- பி. ஆர்.ந.

**முருகப்பா :** இவர் காரைக்குடியில் கி.பி. 1893 இல் சி.சோ.சொக்கலிங்கம் செட்டியார், விசாலாட்சி ஆச்சி ஆகியோருக்கு மகனாகத் தோன்றினார். திண்ணைப் பள்ளியில் கல்வி பயின்றார். இவர் கி.பி. 1912 இல் காரைக்குடியில் பொற்கொடி ஆச்சியை மணந்தார். பின்னர் 1913 முதல் 1916 வரை மலேயாவில் தொழில் செய்து வந்தார். இந்துமத அபிமான சங்கத்தை 1917இல் காரைக்குடியில் தோற்றுவித்தார். சமூக முன்னேற்றம் கருதி 1919இல் தளவைசிய ஊழியர் சங்கத்தைத் தொடங்கினார். பின்னர் 1920இல் தளவைசிய ஊழியன் வார இதழைச் சிறப்பாக நடத்தினார். இவர் 1921இல் கோவிலூரில் சீர் திருத்த மாநாடு நடத்தினார். குமரன் என்னும் திங்கள் இதழை 1921இல் தொடங்கினார். பின், 1923இல் குமரன் என்னும் வார இதழாக அது வெளிவரலாயிற்று. செய்தி இதழ் வாயிலாக அரசியல், சமூகத் தொண்டுகள் பல செய்தார். சிவனடியார் திருக்கூட்டம் என்ற சங்கத்தை 1922இல் தோற்றுவித்தார். முதலில் காங்கிரசுப் பேரியக்கத்தில் மிகுந்த ஈடுபாட்டுடன் உழைத்துச் செட்டிநாட்டில் காந்திய நெறி தழைக்கச்செய்தார். பின்னர், சுயமரியாதை இயக்கத்தில் இணைந்தார். சமூகச் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்புவதற்காகத் திருச்சியில் சண்டமாருதம் என்ற நாளிதழை நடத்தினார். சீர்திருத்த இயக்கத்தில் முழுமூச் சுடன் ஈடுபட்டார். இளமை மணம் கூடாது என்றும், கலப்பு மணம் வேண்டுமென்றும், விதவை மணம் வேண்டுமென்றும் பல கூட்டங்களில் சொற்பொழிவாற்றினார். பெரியார் ஈ.வெ.ரா தலைமையில் மரகதவல்லி அம்மையார் என்னும் விதவையை 1929 இல் கலப்புமணம் செய்து கொண்டார். இவர் வாய் சொல் வீரராக அல்லாமல் சீர்திருத்தத்தைச் செயலில் காட்டிய சீர்திருத்தச் செம்மலாவார்.

இவர் 1938இல் காரைக்குடிக்கு அடுத்த அமராவதி புதூரில் மகளிர் இல்லம் என்னும் பெயரில் மாண்டிச்சேரி பள்ளி நடத்திப் பிள்ளைகளுக்கு இலவச உணவு அளித்தார். முன்னர் 1940 முதல் 1955வரை கம்ப ராமாயண ஆராய்ச்சியில் ஈடுபட்டார். பாட பேதங்களைத் தேர்ந்து கதைப்போக்குக் கெடாமல் தொகுத்துச் சுருக்கமாக இராம காதையைச் செம்பதிப்பாக வெளியிட்டார். அண்ணாமலை அரசர் தோற்றுவித்த தமிழிசை இயக்கம் செட்டிநாட்டில் செழிக்க அரும்பாடுபட்டார். இவர் 1943இல் காரைக்குடியில் தமிழிசை விழா நடத்தினார். கம்பன் அடிப்பொடி சா.கணேசன் அவர்களோடு சேர்ந்து புகழ்மிக்க கம்பன் கழகத்தைத் தோற்றுவித்தார்.

முருகப்பா, தமிழ்க்கடல் இராய சொ.சா. கணேசன் ஆகியோர் காரைக்குடியில் முப்பெரும் தொண்டர்களாக நாட்டுப்பற்று மிக்கவர்களாகச் சிறந்து விளங்கினார்கள்.

அறுபது ஆண்டுகாலம் பொதுவாகத் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செட்டிநாட்டின் பல்துறை வளர்ச்சிக்குப்பாடுபட்டவர். தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, மது ஒழிப்பு, பசி ஒழிப்பு, அறியாமை ஒழிப்பு, பரத்தையர் ஒழிப்பு, இளமை மண ஒழிப்பு எனப் பல ஒழிப்புகளில் பெருந்தொண்டு செய்த பெருமகனாக விளங்கினார். இவர் செய்த பல்வேறு சீர்திருத்தங்களைக் கருத்தில் கொண்டு இவர் தமிழ்நாட்டின் இராசாராம் மோகன்ராய் என அழைக்கப்பட்டார். இவர் அறிவுநுட்பமுடையவர், இலக்கிய வல்லுநர், சிறந்த சொற்பொழிவாளர், இதழாசிரியர், பல நூல் ஆசிரியர், சீர்திருத்தச் செம்மல், பெண்ணுரிமைக்குப் பெரிதும் போராடியவர், பல நிறுவனங்களையும் சில இயக்கங்களையும் தோற்றுவித்தவர்.

தாம் நடத்திய இதழின் மூலம் பல எழுத்தாளர்களைத் தோற்றுவித்தார். புதிய எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தினார். சிறந்த உரைநடையினை வளர்த்தார். புதிய கருத்துகளைத் தெளிவான நடையில் தாம் தோற்றுவித்த இதழ்களின் மூலம் விளக்கினார். நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு இலக்கியத்தில் பயிற்சி அளித்தார்.

இவர் வாழ்நாள் முழுவதும் கதர்ஆடையை உடுத்தினார். சிந்தனைச் செல்வர் என்றும், கவி இனிப்புக் கண்ட கலைஞர் என்றும், சீர்திருத்த வீரர் என்றும், செட்டி நாட்டின் பெரியார் என்றும் போற்றப்பெற்ற இவர் 1956ஆம் ஆண்டு காலமானார்.

- ச. மெ.

**முழு ஆயம் :** படித்தவரிடையே கருத்து வேறுபாடு எழுவது இயல்பு. அவ்விதம் கருத்து வேறுபாடு எழுகின்ற பொழுது பெரும்பான்மையரின் கருத்துக் கு மதிப்பளித்து, எல்லோரும் அதை ஏற்றுக்கொள்வதுதான் முறையாகும். சட்ட வல்லுநரிடையே கருத்து வேறுபாடு எழுவதைக் கண்கூடாகக் காணலாம். பாமரருக்கு இது ஒரு பெரும் புதிராகக்கூட இருக்கலாம். ஏனெனில் ஒரே செய்தியைப் பற்றிய ஆவணங்களையும் சாட்சியங்களையும் அலசிப் பார்த்து, சட்டத்தின்படி நீதி வழங்கும் கீழ்மை நீதிமன்ற நீதிபதி, கொலைக்குற்றம் சாட்டப்பட்டவரைக் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கிறார். அந்த வழக்கு மேல் முறையீட்டு வழக்காக நீதிமன்றங்களில் ஆய்வு செய்யப்படுகிற பொழுது, அதே ஆவணங்களையும் அதே சாட்சியங்களையும் பரிசீலனை செய்து முடிவு எடுக்கின்ற பொழுது சட்ட அடிப்படையில், கொலைக்குற்றம் சாட்டப்பட்ட அதே ஆள் குற்றமற்றவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவதையும் காண நேர்கிறது. சட்ட அடிப்படையில் சிக்கல்களுக்கு முடிவு கட்டும்பொழுது, இரண்டு நீதிபதிகள் வேறுபட்ட முடிவுக்கு வரலாம். அவ்விதம் இரு நீதிபதிகள் வேறுபடுகின்றபொழுது மூன்றாவதாகவுள்ள நீதிபதி அவ்வழக்கு அனுப்பப்படும். அவர் எந்த முடிவை சரியென்று சொல்கின்றாரோ அல்லது அவர் எந்த முடிவோடு ஒத்திசைந்து செல்கி றாரோ அதுவே முடிவான தீர்பாகக் கருதப்படுகிறது. ஏனெனில் மூவரில் இருவர் பெரும்பான்மையாக எடுக்கின்ற முடிவு, பெரும்பான்மை முடிவாகக் கருதப்படுகிறது. அதே கருத்தைப் பொறுத்த அளவில் அத்தீர்ப்பு, ஒருவர் அல்லது இருவர் அல்லது மூவர் அமைந்த நீதிபதிகளைக் கொண்ட ஆயத்தால் கட்டாயமாகப் பின்பற்றப்படவேண்டிய தீர்ப்பாகவும் அமைந்து விடுகிறது. பின்பற்றப்பட வேண்டிய தீர்ப்புகளுக்குக் கட்டுப்பட்டே நீதி வழங்க வேண்டும் என்பது முறை.

எடுத்துக்காட்டாகத் தமிழக உயர்நீதி மன்றத்தில் ஒரு நீதிபதியால் வழங்கப்படும் முடிவு, அதே செய்தியையும் சிக்கலையும் பொறுத்தவரையில் உயர்நீதி மன்றத்தின் கீழ் இயங்குகின்ற எல்லா நீதிபதிகளையும் கட்டுப்படுத்தும். அமர்வு, சார்பு நீதிபதிகள் அதைப் பின்பற்றியே தம் தீர்ப்பை வழங்கவேண்டும். ஆயினும், அது மற்ற மாநிலங்களில் உள்ள உயர்நீதி மன்ற நீதிபதியையோ, அதன்கீழ் இயங்குகின்ற நீதி மன்றங்களையோ கட்டுப்படுத்தாது. ஆயினும் அவர்கள் விரும்பினால் அதைப் பின்பற்றலாம். உயர்நீதி மன்றத்தைப் பொறுத்தவரையில் ஒரு நீதிபதியால் வழங்கப்பட்ட முடிவு மற்றொரு நீதிபதியைக் கட்டுப்படுத்தாது. அவர் தன்னிச்சையாகவும், சுதந்திரமாகவும் தம்முடிவைக் கூறமுடியும். மாறுபட்ட முடிவையும் கூறலாம். ஆனால் அதேபொருள் குறித்த சிக்கலில் இரண்டு நீதிபதிகளைக் கொண்ட இருவர் ஆயத்தின் முன் தீர்ப்பு இருக்குமானால், அவர் அதைப் பின்பற்றியே ஆகவேண்டும். அதேபோன்று, மூன்று நீதிபதிகளோ அதற்கு மேற்பட்ட நீதிபதிகளோ அமர்ந்து வழக்குகளை முடிவு செய்கிறபொழுது அதை முழு ஆயம் ( Full Bench ) என்பர். இவ்விதம் முழு ஆயம் கூறுகின்ற தீர்ப்பு இருவர் அடங்கிய நீதியர் ஆயங்களையும் ஒருவர் அடங்கிய நீதி ஆயத்தையும் கட்டுப்படுத்தும். அவ்வித ஆயங்களும் அதைப் பின்பற்றியே ஆக வேண்டும். அதற்கு எதிராக மாறுபட்ட கருத்துகளைக்கூறி தீர்ப்பு வழங்கும் அதிகாரம் அவர்களுக்கு இல்லை. ஆனால் மூன்று பேரடங்கிய வேறொரு முழு ஆயம் ஒரு சிக்கலில் மாறுபட்ட கருத்துக்கு வந்தால், மூன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் கொண்ட முழு ஆயம் முடிவு செய்ய வேண்டும். எனவே, முழு ஆயம் என்பது மூன்றுக்குக் குறையாத நீதிபதிகளைக் கொண்டது. முக்கியச் சட்டச்சிக்கல்கள், முழு ஆயந்தால் முடிவு செய்யப்படும். அதுவே முடிவான தீர்ப்பாகப் பின்பற்றப்படும். சென்னை உயர்நீதி மன்றத்தில் 1965ஆம் ஆண்டு வரன்முறைகள் உத்தரவு (1) விதி 4 உம் 5உம் முழு ஆயங்கள் அமைப்பது பற்றி வரையறுத்துக் கூறுகின்றன.

சட்டத்தொழிலாற்றுபவரின் சட்டப்பிரிவு பதினைந்தின்படி ( Legal Practioner's Act, 1879 ) தொழிலில் தவறான நடத்தை குறித்து விசாரணைகள் முழு ஆயத்தால் முடிவு செய்யப்பட வேண்டும். அது போலவே கிறித்தவச்சட்டத்தின்படி நடைபெற்ற திரு மணங்களை நீக்குவதற்காக இந்தியத் திருமண விலக்குச் சட்டப்படி கீழமை நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட திருமண விலக்கை உறுதிசெய்ய அனுப்பப் படும் வழக்குகளை முழுஆயந்தான் முடிவு செய்ய வேண்டும். மேலும், 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் ( Indian Stamp Act 1869) பிரிவு 57 - 60ன் கீழ் முடிவு செய்யப்படுவதற்காக மேல்முடிவுக்கு உயர்நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் வழக்குகளை முழு ஆயமே முடிவு செய்ய வேண்டும்.

இவை தவிர, முதன்மை நீதிபதி எந்த மனுவையோ, வழக்கையோ, மேல் முறையீட்டையோ, மேல் முடிவுக்காகச்சுட்டி அனுப்பப்பட்ட வழக்கையோ முழு ஆயத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும் என உத்தரவிடலாம்.

சில சமயங்களில் சட்டச் சிக்கல்கள் தொடர்புடைய கேள்விகள் முழு ஆயத்தின் முன்னிலையில் முடிவுக்காக அனுப்பப்படும். அவ்வித காலங்களில் அவ்வித கேள்விகளுக்கு விடையளித்துத் திரும்ப அனுப்பவோ, அசல் வழக்கையே இறுதியாக முடிவு செய்து அனுப்பவோ செய்யும் அதிகாரம் முழு ஆயத்திற்கு உண்டு.

நீதித்துறையில் ஒழுங்கினை நிலைநாட்டவும், நீதிமன்றங்கள் சுதந்திரமாய்ச் செயற்படுகின்றபொழுது, வரம்பு மீறாதிருக்கவும் இவ்விதக் கட்டுப்பாடு வழிவகை செய்கிறது.

அரசியல் சாசனம் சம்பந்தப்பட்டச் சிக்கல் தொடர்புடைய வழக்குகளை ஐவர் அமைந்த முழு ஆயம் முடிவு செய்யும். இவ்வித முழு ஆயங்கள் ஐவருக்கும் மேற்பட்டவர்களால் அமைக்கப்பட்டதாகவும் இருக்கலாம். இவ்வித முழு ஆயம் உச்சநீதிமன்றத்திலோ, உயர்நீதிமன்றத்திலோ அமைக்கப்படலாம். உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்டு, அரசியல் அமைப்புச் சட்டம் பற்றிய முடிவான தீர்ப்புகள், இந்தியாவில் உள்ள எல்லா உயர் நீதிமன்றங்களையும் கட்டுப்படுத்தும். உச்ச நீதிமன்றத்தின் முடிவைத் தீர்ப்பாக ஏற்று உயர்நீதிமன்றமும், மற்றைய நீதிமன்றங்களும் செயற்பட வேண்டும். அரசியல் அமைப்புச் சட்டம் குறித்த முக்கிய சிக்கல்களைப் பரிசீலனைக்கு எடுக்கும் பொழுது, அச்சிக்கல்களின் முக்கியத்துவத்தைப் பொறுத்து, 7, 9, 13 என்று எண்ணிக்கை கூடுதல் உள்ள முழு ஆயங்கள் அமைக்கப்பட்டு சிக்கல்கள் முடிவு செய்யப்படும்.

- எச்.எம்.அ.

**முழுநிலைக் கோட்பாடு :** இது உளவியல் துறையின் ஒரு முக்கியமான கோட்பாடு ஆகும். முழுநிலை உளவியல் ( Gestalt Psychology ) முப்பெரும் செருமானிய உளவியல் வல்லுநர்களின் உழைப்பினாலும், ஆய்வுகளினாலும் உருவானது. அவர்கள் 1. மாக்சு வெர்திமர் ( Max Wertheimer ), 2. கர்ட்டுகோ புகா ( Kurt Koffka ), 3. வோல்காங்கு கோகலர் ( Wolfgang Kohler) என்பவராவர். இக்கோட்பாடு இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உருவானதாகும்.

முழுநிலை உளவியல், நடத்தைக் கொள்கைக் கோட்பாட்டிற்கு (அகப்பண்புகளுக்கும் புறவாழ்வுக் கூறுகளே காரணம் என்ற கோட்பாடு : Behaviourism) எதிர்விளைவாக உருவானது. இக்கோட்பாடு உட்புறக் காட்சிக்கோட்பாட்டினையும் ( தன் உள்ளத்தைத் தானே நுணுக்கிக் காணும் செயல்சார் கோட்பாடு : Introspectionism ) ஏற்கவில்லை. இக்கோட்பாடு நடத்தை அல்லது பட்டறிவு இவற்றில் நிலைகொண்டிருக்கிற அமைப்புமுறை, முழுமையில் தன்மைகள் ஆகியவற்றை வலியுறுத்துகின்றது. இதை அறிவதற்கு இயங்கு திரைப்படத்தைக் காணும்போது உண்டாகும் அனுபவம் ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைகிறது. இயங்கு திரைப்படத்தில் நாம் உணர்வது போன்ற தொடர்ச்சியான இடமாற்றமோ, நிலைமாற்றமோ ஏற்படுவதில்லை. இதற்கு மாறாக உண்மைநிலையில் திரையில் காட்டப்படுவது யாதெனில் வரிசைப் படுத்தப்பட்ட சிறிது இடைவெளியுடன் கூடிய பல அசையாப் படங்களாகும்.

இத்தகைய அசையாப்படங்களில் ஒன்றிற்கும் அதற்கடுத்த ஒன்றிற்கும் இடையில் மிகக்குறுகிய நேர இடைவெளி இருக்கும். இத்தகைய இடைவெளிகளின் போது திரையில் உண்மையாக வெளிச்சமோ படமோ இருப்பதில்லை. இப்படி மாறும் வரிசையான பல படங்களையே அசைவுடன் கூடிய இயங்கு திரைப்படமாகக் காண்கின்றனர். சுருங்கக் கூறின் திரையில் காட்டப்படுவது விரைவில் மாறுபடும் வரிசைப்படுத்தப்பட்ட அசையாப்பொருள்கள் அல்லது மனிதர்களின் படங்களாகும். ஆனால், படத்தில் மனிதர்கள் அல்லது பொருள்களின் தொடர்ந்த அசைவு அல்லது இயக்கத்தையே காண்கின்றனர். அசைவில்லாத படங்களில் இயக்கத்தைக் காண்பது எதனால் என்பதை விளக்கத்தக்க் கோட்பாடாக முழுநிலைக் கோட்பாடு அமைகிறது. பட்டறிவின் இயல்பினை விளக்குவதற்காக முழு நிலைக் கோட்பாட்டில் சில விதிகள் கையாளப்படுகின்றன. அவற்றில் முக்கியமானவை 1. அண்மை விதி, 2. ஒப்புடமை விதி, 3. மூடுதல் விதி என்பனவாகும்.

**அண்மை விதி :** அருகருகே உள்ளவை தனித் தனியாக அமைந்திருந்த போதிலும் அவை ஒருங்கிணைந்தே காணப்படுகின்றன.

**ஒப்புடைமை விதி :** ஒரே தன்மையுடையவை எப்படி அமைந்திருந்த போதிலும் அவை ஒருங்கிணைந்தவையாகக் காணப்படுகின்றன. சான்றாகக் கீழ்க் கண்ட வரைபடத்திலுள்ள புள்ளிகள் ஒன்றமைந்த ஒரு தொகுதியாகவும் கட்டங்கள் அவைகளிலிருந்து மாறுபட்ட ஒருங்கிணைந்த ஒரு தொகுதியாகவும் காணப் படுகின்றன.

**மூடுதல் விதி :** ஓர் வரைபடத்தில் சிறிது இடைவெளி இருந்தபோதிலும் அவை நினைவாற்றலினால் நிறைவு செய்யப்பட்டு முழுமையாகவே உணரப்படுகின்றன. சான்றாகக் கீழ்க்கண்ட வரைபடங்களில் முதலாவதானது ஒரு வட்டமாகவும் இரண்டாவது ஒரு முக்கோணமாகவும் காணப்படுகின்றன.

முழுநிலைக் கோட்பாடு சிறப்பாகத் தொட்டறிவு மற்றும் பட்டறிவு ஆகியவற்றின் இயல்புகளை நமக்கு விளக்குகிறது. பிறகு இந்தக் கோட்பாடு விரிவுபடுத் தப்பட்டுக் கற்றல், நினைவாற்றல், ஆளுமை முதலிய சமூக உளவியல் போன்றவற்றை விளக்க முழுநிலைக் கோட்பாடு ( Gestalt Theory ) பயன்படுத் தப்பட்டது.

- க. இரா.

**முள்ளு குறும்பர் :** இப்பழங்குடி மக்கள் கேரளாவிலும், தமிழ்நாட்டில் நீலகிரி மாவட்டத்திலுமுள்ள கூடலூர் வட்டாரத்திலும் வாழ்கின்றனர். முள்ளு குறும்பர்களை முள்ளு குறும்பன் என்று தர்சுடனும் ( Thurston ), முள்ளு குறும்பர் என ஐயப்பனும், முள்ளு குறுமன் என லூயிசும் குறிப்பிடுகின்றனர். இப்பழங்குடி மக்கள் கப்பாலா, கள்ளிசால், படசேரி, கொன்னத்து, நரிவலப்பு, காப்புகுன்னு, நெங்கோ, ஒனிமூலா முதலிய இடங்களில் வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் இவர்கள் எண்ணிக்கை ஐந்நூறு இருக்கும். குறும்பர்களிடையே பெட்ட குறும்பர், தேன் குறும்பர், பால் குறும்பர், முள்ளு குறும்பர், ஊராளி குறும்பர் எனப் பல பிரிவுண்டு. தோற்றம், மொழி, பண்பாடு, பழக்க வழக்கங்கள் முதலியவற்றில் முள்ளு குறும்பர்கள் மற்ற குறும்பர்களினின்றும் வேறுபட்டவர்கள்.

முள்ளு குறும்பர்கள் கரும்பழுப்பு நிறமும், நடுத்தர உயரமும், நீண்ட அகன்ற மூக்குமுடையவர்கள். கடந்த காலத்தில் ஆண்கள் நான்கு பக்கமும் சிரைத்துவிட்டு நடுவிலுள்ள முடியை இடதுபுறத்தில் முடிச்சுப் போட்டுக் கொள்வார்கள். இப்போது இப்பழக்கம் குறைந்து வருகிறது. ஆண்கள் காதில் கடுக்கன் அணிகிறார்கள். இடுப்பில் வேட்டியும், மேலே துண்டும் போட்டுக்கொள்கிறார்கள். பெண்கள் நீண்ட துண்டை மார்புக்குமேல் போட்டுக்கொள்கிறார்கள். அப்படி அணிவதைப் ‘பேச்சுத்தி’ என்பர். எல்லாப் பெண்களும் காதோலையும், மூக்குத்தியும் அணிகிறார்கள். மணமாகாப் பெண்கள் நாணயங்கள் கோர்த்த சங்கலியையும், மணமான பெண்கள் முகூர்த்தத்தாலி, கும்பளத்தாலி, குண்டுமணி ஆகியவை கோர்த்த சங்கிலியையும் அணிகிறார்கள்.

குறும்பருடைய பழைமைப் பற்றிப் பல கருத்து கள் நிலவுகின்றன. தர்சுடன் குறும்பர்கள் பல்லவ இனத்தைச் சார்ந்தவர்கள் என்றும், பல்லவ அரசு அழிந்த பிறகு காடுகளிலும், மலைகளிலும் வாழத் தலைப்பட்டனர் எனக்கூறுகிறார். முள்ளு குறும்பர்கள் கூற்றுப்படி அவர்கள் மலபார் வந்த பின்பு குறுமன் என மலையாள மொழியில் அழைக்கப்பட்ட னர். முள்ளு குறும்பர்களுக்கு வேட்டையாடுதல் அவர்தம் வாழ்வோடு கலந்த ஒன்று என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். மானிடவியல் அறிஞர் ஐயப்பன் முள்ளு குறும்பர்கள் வேட்டையாடுவதில் வல்லவர்கள் என்றும் வில், அம்பு எய்வதில் தேர்ந்தவர்கள் என்றும், கோட்டயம் இராசா ஆங்கிலேயரை எதிர்த்துப் போரிட்ட பொழுது, இராசாவுக்குத் துணையாகப் போரிட்டனர் என்றும் கூறுகிறார். இவர்கள் மரபுக் கதைகள் மூலம் சிவன் வேடர்களைத் தோற்றுவித்து வழிபடுமாறு செய்தார் என்றும் அவ்வேடர்களின் வழித்தோன்றல்களே முள்ளு குறும்பர்கள் என்றும் கூறப்படுகிறது.

இவர்கள் குடிசை நீண்ட சதுரமான ஒரே அறையைக் கொண்டதாகும். வீட்டின் நாற்புறமும் இடைக்கழி உள்ளது. வீட்டின் முன் பகுதியைத் திண்ணையாகப் பயன்படுத்துகின்றனர். கூரைக்குக் கீழே பலகை வைத்து முகட்டறை அமைத்து, பயன் படுத்தப்படாத பொருட்களை அங்கு வைக்கின்றனர். ஒவ்வொரு வீட்டிலும் தானியத்தைச் சேகரித்து வைக் கப் பத்தாயம் உள்ளது. ஒவ்வொரு குடியிருப்பிலும் நெல் குத்துவதற்கென ஒரு பொதுஇடம் உண்டு. கத்தி, வில், அம்பு, ஈட்டி, அரிவாள், முறம், பம்பை, சாக்கு, கொம்மை, உரல், உலக்கை போன்ற பொருட்களை இவர்கள் பயன்படுத்துகின்றனர். இவர்கள் சாமை, கேழ்வரகு ஆகியவற்றை உண்டாலும் அரிசியே நிரந்தர உணவாகும். இவர்கள் மீனையும் விரும்பி உண்கின்றனர்.

வேளாண்மையும், வேட்டையாடுதலும் இவர்களது முக்கியத் தொழிலாகும். வேட்டையாடுதலை விளி நாயத்து, வலை நாயத்து, முயல் நாயத்து, விளக்கு நாயத்து என நான்கு வகையாகப் பிரிக்கின்றனர். விளக்கு நாயத்து எனில் விசுப் பண்டிகையைக் கொண்டாடும் பொருட்டு, விளக்கு என்ற திருவிழாவிற்கு முதல்நாள் அனைவரும் வேட்டைக்குச் செல்வர். வேட்டையாடிய பொருட்களைக் கோயில் அதிகாரிகளுக்குக் கொடுப்பர். வேட்டையாடுவதற்குக் கூட்டமாகவே செல்வர். நாய்களையும் அழைத்துச் செல்வர். உச்சார் திருவிழாவின் போது வேட்டையாடிய பொருட்களைத் தெய்வப் பொறையில் வைத்துப் படைத்துப் பின்பு உண்பர். ஒரு காலத்தில் காலையில் வேளாண்மையும், மாலையில் வேட்டைத் தொழிலும் செய்தனர்.

முள்ளு குறும்பர்கள் நிலங்களை நான்கு வகையாகப் பிரிக்கின்றனர். 1. வயல், 2. தோட்டம், 3. உழவுப் பரம்பு, 4. வெட்டுப்பரம்பு ( மரங்களை வெட்டிப் பயிர் செய்யுமிடம் ). இப்பொழுது காப்பி, மிளகு, மஞ்சள் முதலியவற்றையும் பயிர் செய்கின்றனர். இவர்களிடம் வில்லியப்ப குலம், காதிப குலம், வடக்குக் குலம், வேங்கட குலம் என நான்கு புறமணக் குலங்கள் உள்ளன. இக்குலங்கள் அனைத்தும் தாய்வழிக் குலங்கள் ஆகும்.

ஒவ்வொரு குடியிருப்புக்கும் ‘பூரணவன்’ என்கிற பெருந்தனக்காரன் உண்டு. சமூக கட்டுப்பாட்டைக் கவனிக்க மூப்பன் என்றொருவன் உண்டு. எல்லா முள்ளு குறும்பர்களுக்கும் தலைமையானவரை வலிய மூப்பன் அல்லது தலச்சி மூப்பன் என்பர். இவர் பழங்குடிச் சமுதாயத்தில் நடைபெறும் அனைத்து வழக்குகளையும் விசாரித்துத் தீர்ப்பு வழங் குவார்.

முள்ளு குறும்பர்கள் ஆவியுலகக் கோட்பாட்டில் நம்பிக்கையுடையவர்கள். எல்லாக் குடியிருப்பிலும் கோயில் வீடு எனப்படும் பெரிய பொதுவீடு ஒன்று உள்ளது. எல்லாச் சடங்குகளும் இங்கேயே நடைபெறும். பூரணவன் தான் தெய்வப்பொறைக்குப் பொறுப்பாக இருந்து எல்லாக்காரியங்களையும் செய்கிறார். முள்ளு குறும்பர்கள் சங்கராந்தி, ஓணம், மண்ணலம், உச்சல் போன்ற திருவிழாக்களைக் கொண்டாடுகின்றனர். காளி, மாரியம்மன் போன்ற தெய்வங்களையும் வழிபடுகின்றனர். தெய்வப் பொறையில் தெய்வ உருவங்கள் ஒன்றுமில்லை. இவர்கள் சகுனத்தில் நம்பிக்கையுடையவர்கள். பாம்பு கடிக்குக்கூட மந்திரம் ஓதுகின்றனர். நரி இடப் புறத்திலிருந்து வலப்புறம் செல்வது, பாம்பு வலது புறத்திலிருந்து இடப்புறம் செல்வது நல்ல சகுனமாகக் கருதப்படுகிறது.

இவர்களிடையே இராமாயணம், மகாபாரதத்தையொட்டிய பாடல்களும், கூத்துகளும் வழக்கில் உள்ளன. குறும்பர்களிடையே பெட்ட குறும்பர் பேசும் பேச்சு பெட்ட குறும்ப எனும் தனிமொழியாகும். முள்ளு குறும்பர்கள் பேசும் பேச்சு மலையாள மொழியின் கிளை மொழியாகும். சிலர் இவர்கள் பேசும் பேச்சு தனிமொழி என்கின்றனர்.

பெண்கள் பருவமடைந்தவுடன் வீட்டின் திண்ணையில் ஒரு பகுதியில் ஏழு நாட்கள் தங்குவர். அப்பொழுது வண்ணானிடமிருந்து முண்டு வாங்கி அணிந்து கொள்வர். அந்த ஏழு நாட்கள் அப்பெண் ஆண்களைப் பார்க்கக்கூடாது. ஏழாம் நாளன்று எண்ணெய் தேய்த்துக் குளித்து, வீட்டிற்குள் அழைத்துச் செல்வர். அன்றிரவு உறவினர் அனைவருக்கும் விருந்தளிக்கப்படுகின்றது.

முள்ளு குறும்பப் பழங்குடி மக்களிடையே பருவமடைந்த பின்பே திருமணம் நடைபெறுகிறது. மாப்பிள்ளை வீட்டார் பெண் வேண்டி, பெண் வீட்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை செல்வர். வந்த செய்தியை வெளிப்படையாகக் கூறமாட்டார்கள். பெண் வீட்டிலும் உண்ண மாட்டார்கள். வீட்டை விட்டுப் புறப்படும் முன் சகுனம் பார்ப்பர். சகுனம் ஒத்து வந்தால் தான் மேற்கொண்டு செல்வர். மாப்பிள்ளை வீட்டார் மணப்பெண்ணின் தந்தைக்கு ஐம்பது அல்லது நூறு ரூபாயும் பூரணவனுக்கு ஐந்து ரூபாயும் மணப்பெண்ணின் குடியிருப்பைச் சார்ந்தவர்களுக்கு விருந்தும் அளிக்க வேண்டும். திருமணத்திற்கு முன்பு மணப்பெண்ணின் காதுத்துளையைப் பெரிதுபடுத்துவர். ‘மூணன்’ என்றழைக்கப்படுகிற மாப்பிள்ளைத் தோழனும், மாப்பிள்ளையின் பெற்றோர்கள் தவிர மற்ற உறவினர்கள் பெண்வீட்டிற்குச் செல்வர். மூணனைப்பெண் வீட்டிற்கு அறிமுகப்படுத்தும் சடங்கினைப் பெண்ணுக்குரி என்றழைக்கின்றனர். மற்றொரு நாளில் திருமண உறுதி நடைபெறும்.

திருமணச் சடங்கு ஐந்து நாள்கள் நடைபெறும். முதல் நாள் உறவினர்கள் ஆப்பமும் இனிப்பும் கொண்டு வருவார்கள். இரண்டாம் நாளன்று தெய்வப்பொறை முன்பு ஆறு கால்களை நட்டு, பந்தல்

போடுவார்கள். பின்பு வேட்டைக்குச் சென்று வேட்டையாடியதைச் சமைத்து உண்டு ஆடிப்பாடி மகிழ்வர். மணப்பெண்ணை நன்கு அலங்கரிப்பர். தாய்மாமன் அப்பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவார். மூன்றாம் நாள் மாப்பிள்ளை வீட்டார் வருவர். மாப்பிள்ளையின் பெற்றோர்கள் திருமணச்சடங்கில் கலந்து கொள்ளக் கூடாது. மாப்பிள்ளைத் தோழன் மூணன், கணம் கட்டி, பெண்ணுக்காரன்கள் என்றழைக்கப்படுகின்ற இருவர் மாப்பிள்ளையுடன் வருவர். அந்த ஐந்துபேரும் வலக்கையில் பெரிய வளை அணிந்திருப்பர். மூணன் இடுப்பில் சிவப்புக் கச்சையணிந்து, வாள் ஒன்றும் வைத்திருப்பார். மாப்பிள்ளை வீட்டாருக்கு விருந்து அளித்த பின்பு கோலே களி என்ற நடனமாடுவர். மணமக்கள் தெய்வப் பொறையில் நுழைவார்கள். கணம்கட்டி ஐந்தரை ரூபாயைத் தாய்மாமனுக்கு அளிப்பர். மணப்பெண்ணை மாப்பிள்ளைக்கு அருகில் நிற்குமாறு செய்வது, அப்பெண் அவனுக்கு மனைவியாகிறாள் என்று பொருளாகும். மாப்பிள் ளை வீட்டார் கொண்டு வந்த ஆடைகளை அணிந்த பின்பு விருந்து நடைபெறும். மறுநாள் காலை மணமக்கள் மாப்பிள்ளை வீட்டிற்குச் செல்வர். மூன்றாம் அல்லது ஐந்தாம் நாள் பெண்வீட்டிற்குத் திரும்புவர். அன்றிரவு பெரிய வீட்டில் ( பொது இடம் ) முதலிரவு நடைபெறும்.

ஒரு காலத்தில் முள்ளுகுறும்பர்களிடையே உடன் போக்குத் திருமணம் ( Marriage of Elopement ) மிகுதியாக நடைபெற்றது. இதனை ஓடிக்கட்டுதல் என்பர். பெண்ணைக் கடத்திக்கொண்டு போய் திருமணம் செய்யும் வழக்கமும் உண்டு. இதனை ஆற்றுக்கடவு ( Marriage by Capture ) என்பர். பெற்றோர் பார்த்துச் செய்யும் திருமணத்தை வீட்டுக்கடவு ( Marriage by Arrangement ) என்பர். விதவைகள், மனைவியை இழந்தவர்களைத் திருமணம் செய்வது மூக்க வழி எனப்படும்.

முள்ளு குறும்பர்கள் இறந்தவர்களைப் புதைக்கின்றனர். சிறப்போடு வாழ்ந்தவர்களை மட்டும் எரிக்கின்றனர். பிணத்தை எண்ணெய் தடவிச் சீயக்காயல் குளிப்பாட்டி, பிணத்தைப் புதுத்துணியால் சுற்றி, மூங்கிலில் கட்டித் தூக்கிச்செல்வர். ஆண்கள் இறந்தால் அவர்கள் பயன்படுத்திய வில், அம்பு, கத்தி, வெற்றிலைப் பாக்கு, புகையிலை இறந்தவரின் வாயில் நான்கணாவும் போட்டுப் புதைக்கின்றனர். பெண்கள் இறந்தால் வில், அம்பு தவிர மற்ற பொருட்களை வைத்துப் புதைக்கின்றனர். தாய்மாமனோ அல்லது சகோதரனோ குழியில் முதலில் மண் தள்ள வேண்டும். பிணத்தை எரித்தால் மூன்றாம் நாளும், பிணத்தைப் புதைத்தால் ஐந்தாம் அல்லது ஒன்பதாம் நாளும் இறுதிச்சடங்கு நடைபெறும். கருவுற்ற பெண்கள் இறப்பின், வயிற்றிலுள்ள கருவை வெளியே எடுத்த பின்பு புதைக்கின்றனர். இறுதிச் சடங்கன்று குடும்பத்திலுள்ள அனைவரும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதுடன் சடங்கு முடிவடைகிறது. இவர்கள் இன்று பல நிலைகளில் வளர்ச்சி பெற்று வருகின்றனர்.

- சு.ச.

**முறைகேடாகப் பிறத்தல் :** முறைப்படி திருமணமாகாத ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் குழந்தை பிறத்தல் முறைகேடாகப் பிறத்தல் ( Illegitimacy ) எனப்படுகிறது. நாகரிகமடைந்த இன்றைய உலகில் இது சில நேரங்களில் தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இது ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் முறை தவறிக் குழந்தை பிறப்பதைக் குறிக்கிறது. அப்பெண் அவனுக்குச் சட்டத்திற்குப் புறம்பான மனைவியாகவோ இல்லாமலோ இருக்கலாம். இது ஒரு பெண் திருமணத்திற்கு முன்னரே குழந்தை பெற்றுக் கொள்வதைக் குறிக்கிறது. மேலும், பிறர்மனை புணர்தல் ( Adultery) மூலம் திருமணமான பெண்ணொருத்திக்குப் பிறக்கின்ற குழந்தையும் இவ்வகையே சாரும்.

கணவன்- மனைவி என்ற உறவைத் திருமணம் என்னும் நிகழ்வே சட்டமுறைப்பட்டதாக்குகிறது. இதுவே குழந்தைகளுக்குச் சமூகத்தில் தகுதி நிலையைக் கொடுக்கிறது. எனவேதான், சில பண்பாடுகளில் உயிரியல் அடிப்படையில் உண்மையான தந்தையைக் காட்டிலும் திருமணம் என்ற சட்ட அடிப்படையில் தந்தையாய் இருப்பவருக்கே உரிமை சேருகிறது. சமூகத்தில் சட்டப்படி ஒருவன் பரம்பரையாகப் பெறுகின்ற பெயரும், தகுதிநிலையுமே அவனுக்கு நிலைத்து நிற்கிறது. வாழ்க்கைக்கு அடிப்படையான இப்பெயரையும், தகுதிநிலையையும் திருமணத்தின் மூலமே அவன் உரிமையாகப் பெறுகிறான். எனவே, ஒரு குழந்தை பிறப்பிற்கு அதனுடைய பெற்றோரின் சட்ட அடிப்படையிலான திருமணமே இன்றியமையாததாக அமைகிறது எனலாம். முறையாகத் திருமணம் செய்துகொள்ளாத தம்பதியினருக்குப் பிறக்கின்ற குழந்தைகள் பழிச்சொல்லுக்கே ஆளாகின்றனர்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் பொதுவாக முறைகேடாகப் பிறத்தல் மிகுதியாகப் பெருகி வருகின்றன. ஆனால், முன்னர் போலன்றி இப்போது அங்கும் பெரும்பாலான மக்கள் முறைகேடாகப் பிறக்கின்ற குழந்தைக்குக் கிடைக்கின்ற களங்கத்தை உணரத் தொடங்கிவிட்டனர். இருப்பினும், தாராளமாகப் பழகுகிற மனப்பாங்கு குறைந்தபாடில்லை. இதைக் குறைப்பதற்கான நிலையான முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை.

உண்மையான சிக்கல் என்னவெனில், முறைகேடாகப் பிறக்கின்ற குழந்தை குடும்ப வாழ்க்கையின் வெளித்தோற்றத்தைக்கூட அறியவியலாத நிலையில் இருக்கும். எனவே, குடும்பத்தில் தன்னுடைய இளைய வயதில் பெறுகின்ற சமூகமயமாதற் (Socialization) பண்பை அக்குழந்தை பெறவியலாமல் போகிறது. இது தனிப்பட்ட அக்குழந்தையை மட்டுமின்றி அது வளருகின்ற குடும்பம் முழுவதையும் பாதிக்கிறது. பெற்றோரின் முழுமையான ஆதரவின்மையால் ஒரு பொதுவான மனிதன் அறிந்திருக்க வேண்டிய அடிப்படைப் பாங்குகளைக் கூடப் பழகிக் கொள்ளவியலாது. பின்னர் ஒரு பெற்றோராகவோ; கணவனாகவோ அவன் ஆற்றவேண்டிய கடமைகளைக்கூட நன்கு அறியாதவனாக இருப்பான். ஆனால், சமூகத்தில் முறைகேடாகப் பிறக்கின்ற குழந்தை சட்டப்படி தகுதிநிலை பெற்றுள்ள குழந்தையைக் காட்டிலும் தன்னுடைய எதிர்காலத்தை நிருமாணிப்பதில் மிகுதியான சுதந்திரத்தைப் பெற்றுள்ளது.

திருமணமாகாத பெண்ணிற்கோ பரத்தையருக்கோ முறைகேடாகப் பிறக்கின்ற குழந்தைகள் சமூகத்தில் கேள்விக்குறியோடு பிறக்கின்றன. அவை பெரும்பாலும் அனாதை இல்லங்களில் சேர்க்கப்படுகின்றன அல்லது கொலை செய்யப்படுகின்றன. எனவேதான், அமெரிக்கா போன்ற நாடுகளில் முறைகேடாகப் பிறக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைக்கும் பொருட்டு கருச்சிதைவு (Abortion) அனுமதிக்கப்படுகிறது. மேலும், சட்டத்திற்கு முரணாக மணம் செய்து கொண்ட பெண்களுக்குப் பிறந்த குழந்தைகளால் சமூகத்தில் நல்ல தகுதிநிலையைப் பெறவியலாது. தந்தையின் கவனிப்பும் குறைவாக இருப்பதால் முறையான முழுமையான சமூகமயமாதற் பண்பினைக் கொண்டிருப்பதில்லை. இதனால், அவர்களுடைய மனதிலே தாழ்வு மனப்பான்மை ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, இளங்குற்ற நடத்தையிலும் நெறிபிறழ் நடத்தையிலும் ஈடுபட வாய்ப்புண்டு என்றும் இதனால் சமூகச் சிக்கல்கள் சமூகத்தில் மிகுந்துள்ளன என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

பண்டைய பாரதத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஏவல் புரியவும், சொத்துகளைப் பாதுகாக்கவும், வீட்டுலகை அடையுமென ஆண் சந்ததியினர் தேவைப்பட்டனர். பழம்பெரும் புனிதரும் இந்து சட்டத்தை உருவாக்கிய தலைசிறந்தவர்களுள் ஒருவருமான யாக்ஞவல்கியரின் (Yajnavalkya) பார்வையில் புதல்வர்கள் பன்னிரண்டு வகையாக்கப்பட்டனர். அவர்களுள் ஒருவரின் மனைவிக்கு வேறொரு ஆணின் மூலம் பிறந்த மகன் குடசா (Kudaja). திருமணமாகாத பெண்ணிற்குப் பிறந்து திருமணத்திற்குப் பிறகு அவளுடைய கணவன் வீட்டில் வளரும் மகன் கானினா (Kanina). கருப்பந்தரித்த மணமகளுக்குத் திருமணத்திற்குப் பிறகு பிறந்த மகன் சகோதா (Sahodha), வைப்பாட்டியின் மகன் பரசவா (Parasava), மற்றவரால் உண்டாக்கப்பட்ட மகன் தட்டகா (Dattaka), விலைக்கு வாங்கப்பட்ட மகன் கிரிதா (Krita), உண்மையான பெற்றோரால் கைவிடப்பட்ட மகன் அபவித்தா (Apavidda) ஆகியோரும் அடங்குவர். இக்கருத்து, இந்து சட்ட நிபுணர் என்.ஆர். இராகவாச்சாரியார் எழுதிய இந்து சட்டம் என்ற தகுதி வாய்ந்த சட்டப் புத்தகத்தில் காணப்படுகிறது.

முறையிலா மணப்பிறப்பினைக்காண, முறையான திருமணம் எது என்று காண்பது இன்றியமையாதது. திருமணமென்பது, ஒவ்வொரு சமுதாயத்திற்கும் மற்றும் இனம், மொழி, சமயம், சாதி ஆகியவற்றிற்கும் இடையே மாறுபடுகிறது. ஆனால் இவை அனைத்திலும் திருமணங்களை முறைப்படுத்த உரிய சட்டங்கள் உள்ளன. சடங்குகள் (Rites) உள்ளன. சட்ட வலிமைப் பெற்ற பழக்க வழக்கங்கள் (Custom having the force of Law) உள்ளன. இத்தகைய முறையான, சட்ட பூர்வமான திருமண உறவின்றி ஓர் ஆணுக்கும், ஒரு பெண்ணுக்கும் பிறந்த குழந்தை முறையில்லா மனப் பிறப்பு எனப்படும்.

**செயற்கை முறைக் கருத்தரித்தல் :** மனைவியின் உடன்பாட்டோடு அவள் கணவனின் உயிரணுவைச் செயற்கை முறையில் மற்றொரு பெண்ணின் கருப்பைக்குள் செலுத்திக் குழந்தை பெறும் முறை இப்போது உலகின் சில பாகங்களில் உள்ளது. இத்தகைய

குழந்தை பற்றிய சட்ட நிலை இதுநாள்வரை இந்திய நீதிமன்றங்களில் விளக்கப்படவில்லை.

**மறுமணம் :** விதவையின் மறுமணமும், தாரமிழந்தவரின் மறுமணமும் முறையான திருமணங்களே. தவிர மணமுறிவு பெற்றவரும், இறுதியாக மணமுறிவு குறித்த தீர்ப்பாணை பெற்ற பின்னர் மீண்டும் திருமணம் செய்து கொள்ளத் தடையேதுமில்லை. ஆனால் இந்துக்களையும், கிறித்தவர்களையும் பொறுத்தவரை முதல் மனைவி அல்லது கணவன் உயிருடன் இருக்கும்போதும் அவரது முதல் திருமணம் நீக்கப்படாதவரையும் மறுமணம் செய்து கொள்ள இயலாது.

**கலப்புத் திருமணம் :** இருபத்தியொரு வயது முழுமையாக முடியப் பெற்ற ஆணும் பதினெட்டு வயது முழுமையாக முடியப்பெற்ற பெண்ணும் எந்த இனம், மொழி, சாதி, சமயத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் சட்டப்படி திருமணம் செய்துகொள்ளலாம். இதுபோன்ற முறையான மற்றும் சட்டபூர்வமான திருமணங்களைத்தவிர இதர வழிகளில் ஆண் பெண் தொடர்பு மூலம் பிறக்கும் குழந்தைகள் முறையிலா மணப்பிறப்புகளாகவே கருதப்படுபவர்.

**முகமதியச் சட்டம் :** உரிமையுடைய உடலுறவு ( Reality or Semblance of the right ) தவிர மற்ற வகை உடலுறவில் பிறந்த குழந்தைகள் முறையிலா மணப்பிறப்புகளே என்று பைசு பக்ருதீன் தியாப்சி ( Paiz Badruddin Tyabji ) என்ற முசுலிம் சட்ட நிபுணர் கூறுகிறார். ஒரு சில முசுலிம் பிரிவினரிடையே சில காலத்திற்கென்ற திருமண உறவு முறை உள்ளது. முறையிலா சில காலத்திற்கான திருமண உறவிற் பிறந்த குழந்தை சட்ட முறையானதே.

**கிறித்தவர்கள் சட்டம் :** 1872ஆம் ஆண்டைய இந்தியக் கிறித்தவர்கள் திருமணச் சட்டம் (மத்திய சட்டம்,15/1872) இந்தியக் கிறித்தவர்களைப் பொறுத்துத் திருமண வரையறைகளைக் கூறுகின்றது. அச்சட்டம் முறையிலான திருமணம் புரிந்து கொள்ளாத ஆணுக்கும் பெண்ணுக்கும் பிறந்த மக்கள் முறையிலா மணப்பிறப்பு என்று கூறுகிறது.

**நெடுங்காலமாகக் கணவன் - மனைவியாக வாழ்ந்து வருபவர்களின் குழந்தைகள் :** பல ஆண்டுகளாக ஒரு ஆணும் பெண்ணும் கணவன் - மனைவி போன்று இணைந்து வாழ்ந்திருந்து சமுதாயத்தினரும் உறவினரும் நண்பர்களும் அவர்களைக் கணவன் - மனைவி என்றே கருதினால் சட்டமும் அவ்வாறே கருதும். ஆனால் அவர்கள் வேறுவகையில் திருமணச்சட்டத்திற்குப் புறம்பாக நடந்து கொண்டிருக்கக்கூடாது. அதாவது ஓர் ஆண் மாற்றான் மனைவியுடன் இவ்வாறு வாழ்ந்து வருதல் கூடாது.

**தனிப்பட்ட வைப்பாட்டி மகன் :** ஓர் ஆணுடன் மட்டும் அவர் மனைவி போன்று வைப்பாட்டியாக வாழ்ந்து கொண்டிருப்பவரின் குழந்தைகள் முறையிலா மணப்பிறப்புகள் என்றே கொள்ளப்படும்.

**விழலான அல்லது விழலாகத்தக்க திருமணத்தின் பயனாகப் பிறந்தவர்கள் :** 1955ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம் எந்தெந்தத் திருமணங்கள் விழலானவை என்றும், எவை விழலாகத்தக்கவை என்றும் கூறுகிறது. ஒரு திருமணம் விழலானாலும் கூட அல்லது விழலாகத்தக்கதானாலும் கூட அந்தத் தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுவதற்கு முன்பு அந்த ஆணினால் ஒரு பெண்ணிற்குள் கரு உருவாகுமானால் அக்குழந்தை முறையான மணப்பிறப்பாகும். ஆனால், இத்தகைய திருமணங்கள் பிற வகைகளில் சட்ட முறையிலான திருமணங்களாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இத்தகைய குழந்தைகளும் முறையிலாத மணப்பிறப்புகளே.

**இந்தியக் குற்றவியல் சட்டம் :** இச்சட்டப்பிரிவு 125இன் சுருக்கம் : ஒருவர் வசதி படைத்தவராக இருந்து அவருக்கு முறையிலா மணப்பிறப்பு இருந்தால் அவர்தம் அந்தக் குழந்தை இளவராக ( Minor ) இருந்து தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ள வியலாவிட்டாலும் அல்லது அந்தக் குழந்தை முதிர்வராக ( Major ) இருப்பினும், அக்குழந்தை உடலாலோ உள்ளத்தாலோ இயல்பு கடந்த நிலையில் அல்லது காயமடைந்திருக்கும் நிலையில் தன்னைத் தானே காத்துக்கொள்ள இயலாவிட்டாலும், அக்குழந்தையின் தந்தை அக்குழந்தைக்கு வாழ்க்கைப் பொருள் தந்து பாதுகாத்து வரவேண்டும். ஆனால் அத்தகைய முதிர்வான பெண்ணுக்குத் திருமணம் ஆகிவிட்டால் அவ்வாறு பாதுகாக்க வேண்டியதில்லை என்று இச்சட்டம் ( Indian Criminal Precedure Code ) கூறுகிறது.

**சொத்துரிமை**

**இந்து சட்டம் :** முறையிலா மணப்பிறப்புகள் ஆண்களாயினும், பெண்களாயினும் தம் தந்தையின் சொத்திலிருந்து வாழ்க்கைப்பொருளுதவி பெற

உரிமை உள்ளவர்கள். ஆனால் இத்தகைய முறையிலா மணப்பிறப்புகளின் குழந்தைகளுக்கு இந்த உரிமை இல்லை. எப்படி இருப்பினும் முறையிலா மணப் பிறப்பான ஆண் கூட்டுக் குடும்பச் சொத்தினைப் பொறுத்துக் குடும்பக் கூட்டுரிமையர் ( Coparcener ) ஆக இயலாது.

**முகமதிய சட்டம் :** சட்ட முறையிலான திருமண உறவின் மூலம் பிறந்த குழந்தைக்குத்தான் தந்தை உண்டு. முறையிலா மணப்பிறப்புக்குத் தந்தை இல்லை. இவர்களிடையே தந்தை - மகன் என்ற உறவு மில்லை. ஆனால் தாய் - மகன் என்ற உறவு உண்டு. முறையிலா மணப்பிறப்பினரும் வாழ்க்கைப் பொருளுதவி பெறலாம்.

**கிறித்தவ சட்டம் :** கிறித்தவ சட்டத்திலும் முறையிலா மணப்பிறப்புக்கு யாதொரு சொத்துரிமையும் வழங்கப்படவில்லை. இத்தகைய குழந்தையும் வாழ்க்கைப் பொருளுதவி வேண்டலாம்.

- எஸ். ஆர். வீ.

**துணை நூல்கள் :**

1. Faiz Badruddin Tyabji., 1968, **Muslim Law**, Tripathi Pvt. Ltd, Bombay.

2. King , David C., and Marvin R. Koller., 1975, **Foundation of Sociology**, Rinehart Press, San Francisco.

3. Mitra, B. B., 1968, **Indian Succession Act**, Eastern Law House ( P ) Ltd, Calcutta.

4. Rajavachari, N. R., 1987, **Hindu Law**, The Madras Law Journal, Madras.

**முறையிலாக் கலவித்தடை :** குருதி வழிப்பட்ட சில குறிப்பிட்ட நெருங்கிய உறவினர் களுக்கிடையிலான பாலுறவைத் தடை செய்கின்ற சமூக நெறிமுறையிலாக் கலவித்தடை ( Incest Taboo ) எனப்படும். இயல்பாக உடன்பிறப்புகளுக்கென்றும் அல்லது பெற்றோர் குழந்தை ஆகியோர்களுக்கும் இடையிலான பாலுறவைத் தடை செய்வதைக் குறிக் கிறது. பாலுறவு ஒரு குடும்பத்திலுள்ள உறுப்பினர் களிடையே பொதுப்படையாகத் தவிர்க்கப்பட்ட தாகும். இது வரலாற்றுக் காலந்தொட்டே பெரும் பான்மையான சமூகங்களில் நடைமுறையில் இருந்து வருகின்ற வழக்கமாகும். ஆனால், பண்பாட்டிற்குப் பண்பாடு இம்முறையிலாக் கலவித் தடையில் பல வகையான வேறுபாடுகள் காணப்படுகின்றன. எ.கா. கி.பி.பத் தொன்பதாம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை இங்கிலாந்தில் ஒரு கணவன் தன்னுடைய நோய் வாய்ப்பட்ட மனைவி ன் தங்கையைத் திரு மணம் செய்துகொள்வதைக்கூட முறையிலாக் கலவி எனக் கூறிச் சட்டத்தின் மூலம் தடை செய்திருந்தது. ஆனால், பெரும்பாலான சமூகங்களில் இவ்வழக்கம் ஒத்துக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது.

ஒரு சமூக நிறுவனம் என்ற அடிப்படையில் குடும் பமானது மரபு வழியாகப் பல செயற்பாடுகளைச் செய்துவருகிறது. ஆனால், இச்செயல் தன்மைகள் சமூகத்திற்குச் சமூகம் வேறுபடலாம். இருப்பினும், ஓர் உயிரின அடிப்படையில் பொதுவாக மனிதனும் விலங்குகளும் கொண்டிருக்கிற பாலுணர்வுப் பசி, நாட்டம் ஆகியன நிறைவு செய்யப்படுகின்றன. இப் பாலுறவுகள் குழந்தைகளை உருவாக்குவதன் மூலம் சமூகத்திலுள்ள உறுப்பினர்களின் நிலைகளை நிலை நிறுத்துகின்றன. இதனால் சமூகம் பாலுறவு விதி களுக்கும் பொறுப்பாகிறது. எனவே, பெரும்பான்மை யான சமூகம் திருமணமான மணமக்களைத் தவிர்த்துப் பிறர் பாலுறவு கொள்வதைக் கடுமையாகத் தடுப் பதுடன் தண்டிக்கவும் செய்கிறது. திருமணத்திற்கு முன் னர் பாலுறவு கொள்வதையும் மனைவியைத் தவிர்த் துப் பிறருடன் பாலுறவு கொள்வதையும் தடுக்கின் றன. மேலும், சமூகம் யாரோடு திருமண உறவு கொள்ள வேண்டும் என்பதையும் யாரோடெல்லாம் திருமண உறவோ, பாலுறவோ கொள்ளக்கூடாது என் பதையும் வரையறுத்துள்ளது. குறிப்பாக உடன் பிறப்பு களுக்கும், பெற்றோர் - குழந்தைகளுக்குள்ளும் ஏற் படுவதை முறையிலாக் கலவி எனக் கூறித் தடை செய் கிறது. இதை மீறுபவர்களுக்குத் தண்டனையும் அளிக் கிறது. இது ஒரு பொதுமறைப் பண்பாடாகும். இது உலகிலுள்ள அனைத்துச் சமூகங்களிலும் காணப்படு கின்ற ஒரு வழக்கமாகும்.

இவ்வழக்கம் இக்காலச் சமூகங்களில் மட்டு மின்றிப் பழங்குடிச் சமூகங்களிலும் காணப்படுகின் றன. ஆனால், பழங்குடிச் சமூகங்களில் முறையிலாக் கலவியில் ஈடுபடுபவர்களைத் தெய்வமே தண்டிக் கும் என்ற அச்ச உணர்வும், அவர்கள் பல துன்பங்களை அடைய நேரிடும் என்பது போன்ற நம்பிக்கைகளும் பொதுவாகக் காணப்படுகின்றன. ஆனால், இக்

காலத்தில் கூட அங்கொன்றும் இங்கொன்றுமாக முறையிலாக் கலவிகள் நடைபெற்று வருவதைச் செய்தித் தாள்கள் வாயிலாக அறியலாம்.

உலகில் பெரும்பாலும் எல்லா நாடுகளிலும் முறையிலாக் கலவிக்கு எதிராக மிகவும் கடுமையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டு அதன்மூலம் அதில் ஈடுபடுவோருக்குக் கடும் தண்டனைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்தியாவில் இந்தியக் குற்றவியல் சட்டத்தில் சில பிரிவுகள் இத்தடையை மீறுவோரைத் தண்டிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளன.

**இயல்புகள் :** ஒழுங்குமுறையில்லாத சமூகங்களில் குடும்பங்கள் ஒழுங்காக இயங்கா என்ற கருத்தை அனைத்துச் சமூகவியலறிஞர்களும் மானிடவியலறிஞர்களும் ஒத்துக்கொள்கின்றனர். அச் சமூகங்களில் குடும்ப உறவுகளும் பங்குகளும் மிகவும் சிக்கலாகவும் குழப்பம் நிறைந்தனவாகவும் அமையும். எ.கா. ஒரு தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவினால் ஒரு பெண் குழந்தை பிறந்தால் அவள் ஒருபுறம் தந்தைக்குச் சகோதரி முறையிலும் மறுபுறம் தாய்க்கு பேத்தி என்ற முறையிலும் வருவாள். எனவே இதில் உறவுமுறைகள் பாதிக்கப்படும்.

பாலுறவுச் செயற்பாடுகளை ஒழுங்குப்படுத்துவது குடும்பத்தின் முக்கிய பணியாகும். எனவே, முறையிலாக் கலவித் தடையின் மூலமே குடும்பம் இப்பாலுறவுச் செயற்பாடுகளை முறைப்படுத்துகிறது. செயற்பாட்டளவில் முறையிலாக் கலவித்தடை தந்தைக்கும் குழந்தைகளுக்கும் உள்ள உறவின் உரிமையை நிலைநிறுத்துகிறது. தந்தைக்கும் குழந்தைக் குமிடையே ஏற்படக்கூடிய குழப்பமான பங்குகளைப் போக்குகிறது. தங்களுக்கு நெருங்கிய குடும்பங்களுக்கு வெளியே கணவனையோ மனைவியையோ தேர்ந்தெடுக்கத் தூண்டுகிறது. இவ்வாறு வெளியே திருமணங்கள் செய்வதால் பரவலான சமூகத் தொடர்பு குடும்ப அளவில் ஏற்பட வாய்ப்பாகிறது.

மக்கள் பொதுவாக முறையிலாக் கலவித்தடையை இயல்பான ஒன்றாக நினைக்கின்றனர். ஆனால், இது மரபு வழியாக வருகின்ற தீய விளைவுகளுக்கு ஓர் உயிரியல் தடையாகவும் விளங்குகிறது. எனவே தான், முறையிலாக் கலவி உயிரியல் முறைப்படி மரபுப் பண்புகளுக்கு ஊறு விளைவிக்கிறது என்றும், மனிதனின் உள் மனதிலேயே இதுபற்றிய வெறுப்பு இருக்கிறது என்றும் வெசுடர் மார்க் போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால், சமூகவியலறிஞர்கள் பலர் முறையிலாக் கலவித் தடையானது உயிரியலைக் காட்டிலும் பண்பாட்டில் மிகுதியாகப் பங்காற்றுகிறது எனக் கோட்பாடுகளை வகுத்துள்ளனர். எ.கா. இலெவி இசுடிராசு குடும்பம் என்ற நிறுவனத்தின் வளர்ச்சிக்கு முறையிலாக் கலவித் தடை ஓர் அடிப்படைக் காரணியாய் அமைந்துள்ளது என்று கூறுகிறார். இவர் இத்தடையானது குடும்பத்தின் பங்குகளைத் தெளிவாக விளக்க உதவுகிறது எனக் கூறுகிறார்.

குடும்ப உறுப்பினர்களிடையே பொதுவாக, முறையில்லாமல் தாரளமான பாலுறவு இருக்குமெனில் அங்குக் குழப்பமும் ஒழுங்கின்மையும் இருக்கும். ஆனால், முறையிலாக் கலவித் தடை குடும்பத்திலுள்ள உறுப்பினர்கள் உடன்பிறந்தோர், பெற்றோர் மற்றும் குழந்தையாக மட்டுமே இருக்க முடியுமென்ற நியதியை ஏற்படுத்துகிறது. லெவி இசுடிராசு இதற்கும் மேலாகச் சென்று முறையிலாக் கலவித் தடை சமூகத்தை உருவாக்குவதற்கு ஒரு முக்கிய தூணாக விளங்குவதாகக் கூறுகிறார். இது குடும்பங்கள் பிற குடும்பங்களுடன் திருமணத்தின் மூலம் இணைவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது. இவ்வாறான பல குடும்பங்களுக்கு இடையே ஏற்படும் உறவுகளே சமூகமாயிற்று. மேலும், இத்தடையானது இல்லாவிடின் குடும்பங்களில் மனிதத்தன்மையே அற்றுப் போவதற்கு வாய்ப்பு ஏற்படும். குடும்பங்கள் ஒன்றுக்கொன்று நிரந்தரமாக அறியாமை, சார்பெண்ணம் ஆகியவற்றைக் கொண்டிருக்கும். தகராறு உள்ள குடும்பங்களுக்கு இடையே திருமணங்கள் நடந்து அமைதி ஏற்பட இத்தடை ஒரு வழிமுறையாக உள்ளது.

-பூ. த.

**துணை நூல் :**

1. King, David C., and Marvin R. Koller., 1975, **Foundation of Sociology**, Rinehart Press, San Francisco.

**முறையின்றிச் சிறைப்படுத்தல் :** முறையின்றிச் சிறைப்படுத்தல் என்பதனை முறையின்றி அடைத்து வைத்தல் என்றும் கூறலாம்.

ஒரு குறிப்பிட்ட வட்ட எல்லையைத் தாண்டி மேற்கொண்டு செல்ல இயலாதவாறு ஒருவரை மற்றொருவர் சட்டத்திற்குப் புறம்பான வகையில் தடுத்து நிறுத்துவாரேயானால் ( Wrongfully restrains ) அவர்

சட்டத்திற்கு முரணாக அடைத்து வைக்கப்பட்டுள்ளவராகக் கருதப்படுவார்.

இவ்வாறு ஒருவர், மற்றொருவரைச் சட்டத்திற்கு முரணாக அடைத்து வைத்தால் அவ்வாறு அடைத்து வைப்பவருக்கு மெய்க்காவல் தண்டனையும் ( Imprisonment), தண்டனைத் தொகையும் விதிக்கப்படும்.

எவ்வளவு நாள்கள் ஒருவரை இவ்வாறு சட்டத்திற்கு முரணாக அடைத்துவைக்கிறாரோ அந்த நாள்களைக் கணக்கில் கொண்டு தண்டனைக்காலமும், தொகையும் மிகுந்து கொண்டேபோகும்.

தவிர, இவ்வாறு சட்ட முரணாக அடைக்கப்பட்டவர் பேரில் அக்கறை கொண்டுள்ளவர் அல்லது அரசுப் பணியாளர் அறியாவண்ணம் அவர் சட்ட முறையற்று அடைக்கப்பட்டிருந்தாலோ சட்ட முறை யின்றி அடைக்கப்பட்டிருக்குமிடத்தை அவர்களால் கண்டுபிடிக்கப்பட இயலாவிட்டாலோ இவ்வாறு ஒருவருக்கு மிகுந்த அளவு தண்டனையும் தண்டத் தொகையும் விதிக்கப்படல் வேண்டும். கீழ்க்காணும் நோக்கங்களுக்காகவும் ஒருவரைச் சட்டமுறையின்றி அடைத்து வைக்கக்கூடும்.

1. சட்டத்திற்கு முரணாக அடைக்கப்பட்டவரிடமிருந்து வலுக்கட்டாயமாக ஏதேனும் ஒரு சொத்தினைக் கைப்பற்றுதல்.

2. அவரிடமிருந்து விலைமதிக்கத்தக்க பிணையத்தைப் பெறுதல்.

3. அவரைச் சட்டத்திற்கு முரணான செயலைச் செய்யத் தூண்டுதல்.

4. ஒரு குற்றம் புரிவதற்கு வசதியான தகவல்களைப் பெறுதல்.

5. ஒரு குற்றம் அல்லது தவறான நடத்தையைக் ( Misconduct) கண்டுபிடிப்பதற்கான ஒப்புதல் வாக்குமூலத்தையோ, செய்தியையோ வலுக்கட்டாயமாகப் பெறுதல்.

6. காணாமற்போன பொருளையோ, விலைமதிக்கத்தக்க பிணையத்தையோ மீட்டளிக்கும்படியாகக் கட்டாயப்படுத்துதல்.

7. எந்த ஒரு வேண்டுகோளையோ கட்டளையையோ நிறைவேற்றுமாறு வலியுறுத்தல்.

8. காணாமற்போன பொருளையோ விலை மதிக்கத்தக்க பிணையத்தையோ மீட்கத்தக்க செய்தியை அளிக்கும்படி கட்டாயப்படுத்தல்.

9. அவரிடம் அக்கறை கொண்டுள்ள ஒருவரிடமிருந்து இவ்வாறு கைப்பற்றவோ ஒரு செய்தியைப் பெறவோ, செயலைப் புரிய வற்புறுத்தவோ வேண்டிச் சட்டத்திற்கு முரணாக அடைத்து வைத்தல்.

இத்தகைய செயல்களுக்கு மிகுந்த அளவு மெய்க்காவல் தண்டனையும், தண்டத்தொகையும் விதிக்கப்படல் வேண்டும். இவ்வாறு இந்தியத் தண்டனைகள் சட்டம் பிரிவு 340 மற்றும் 342 முதல் 348 வரை கூறுகின்றன.

விலை மதிக்கத்தக்க பிணையம் என்றால் அது பின் வருவனவற்றுள் ஒன்றாக இருக்கலாம். அவை :

ஓர் ஆவணத்தின் மூலமாகச் சட்டப்படியான ஓர் உரிமை அ) உண்டாக்கப்பட்டாலோ, ஆ) விரிவாக்கப்பட்டாலோ, இ) கட்டுப்படுத்தப்பட்டாலோ, ஈ) மாற்றப்பட்டாலோ, உ) அழிக்கப்பட்டாலோ, ஊ) விடுவிக்கப்பட்டாலோ, எ) ஒரு குறிப்பிட்ட கட்டுப்பாட்டிற்கு ஒருவர் தம்மை உட்படுத்திக் கொண்டாலோ, ஏ) ஒரு குறிப்பிட்ட உரிமை தமக்கில்லை என்று ஒப்புக்கொண்டாலோ அந்த ஆவணம் விலை மதிக்கத்தக்க பிணையமாகும். இவ்வாறு செய்பவரின் செயல் சட்டத்திற்குப் புறம்பாக இருந்தால் தான் அச்செய்கை முறையின்றிச் சிறைப்படுத்தல் அல்லது முறையின்றி அடைத்துவைத்தல் எனப்படும்.

குற்றவியல் விசாரணை முறைச் சட்டம் அதிகாரம் 5ன் கீழ் ஒருவரைச் சிறைப்பிடித்தல் பற்றியும் அதற்கான அதிகாரங்கள் பற்றியும், வரன்முறைகள் பற்றியும் விளக்குகிறது. ஒரு குற்றம் நிகழா வண்ணம் தனிப்பட்ட ஒருவர் கூட இவ்வாறு மற்றொருவரைத் தடுக்கலாம். பொது அமைதிக்கு ஊறு விளைவிப்பவர்களையும் தன் கண்ணெதிரே குற்றம் புரிபவர்களையும் தேடப்படும் குற்றவாளிகளையும் சிறை செய்து காவல்துறையினரிடம் ஒப்படைக்கலாம்.

ஒருவரைக் கைது செய்தால் அவரை உடனடியாக இருபத்திநான்கு மணிநேரத்திற்குள் உரிய குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் முன்னிலையாக்க வேண்டும்.

**தண்டனை :** ஒருவரை மறைவாகவும், முறையின்றி அடைத்து வைப்பதற்காகவும் கடத்திச் சென்றால் அவ்வாறு செய்தவருக்கு ஏழு ஆண்டுகள் வரை

சிறைத்தண்டனையும், தண்டத் தொகையும் விதிக்க லாம்.

**தீங்கியல் சட்டம் :** இச்சட்டப்படி அடைத்து வைக்கப்பட்டவர் இழப்பீடு பெறலாம். ஒரு சிறை என் பது பெரியதாகவும் இருக்கலாம், குறுகியதாகவும் இருக்கலாம், காணக்கூடியதாகவும், தொட்டுணரக் கூடியதாகவும் இருக்கலாம் அல்லது அச்சத்தின் மூல மாகவும் இருக்கலாம். ஆனால், அதற்கென ஓர் எல் லைக்கோடு உண்டு. அந்த எல்லைக்கோட்டினைத் தாண்டி சிறைப்பட்டவர் வெளியே செல்ல இயலாத வாறும் தடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஓர் இடத்தில் இருந்து வெளியேறினால் பின் விளைவுகள் பயங்கர மானதாகவும் இருக்கும் என அச்சுறுத்தப்பட்டால் அதுவும் சிறையே. ஒரு வரது எண்ணத்திற்கு மாறாக ஓர் இடத்துக்குச் செல்லுமாறு கட்டாயப்படுத்தப் பட்டாலும் அதுவும் சிறையே. ஒருவர் தூங்கிக் கொண்டிருக்கும் போதும், குடித்துவிட்டுத் தடுமாறிக் கொண்டிருக்கும் போதும் மயக்கமுற்றிருக்கும் போதும் அவரைச் சட்டத்திற்கு முரணாகக் கட்டுப் பாட்டில் வைத்திருந்தாலும் அதுவும் குற்றமே. இவ் வாறு சட்ட இயல் நிபுணர்கள் கருத்து தெரிவித் துள்ளனர்.

- எஸ்.ஆர்.வீ.

**துணை நூல் :**

1. Ratanlal and Dirajlal., 1965, **Law of Torts**, Bombay Law Reporter (P) Ltd, Bombay.

## முறையின்றித் தடைசெய்தல் :

பொதுவாக ஒவ்வொரு இந்தியக் குடிமகனுக்கும் இந்திய நாட் டில் எந்தப் பகுதிக்கும் சென்று வரவும், வசிக்கவும் யாதொரு தடையுமில்லை என்று இந்திய அரசியல மைப்புச் சட்டம் உறுப்பு பத்தொன்பது கூறுகிறது. இவ்வுரிமைகளுக்குச் சில வரம்புரைகளும் விதிமுறை களும் உள்ளன. அதேபோன்று ஒவ்வொருவரது தனிப் பட்ட தன்னுரிமை சட்ட முறையிலாக அன்றி வேறு முறையில் தடுக்கவியலாது என்று அச்சட்டத்தின் உறுப்பு 21 இவ்வாறு கூறும். ஆனால் முறையின்றித் தடை செய்தல் குற்றமாகும்.

**இந்தியத்தண்டனைச் சட்டம் :** எந்தத் திசையி லேனும் செல்லுவதற்கு உரிமை பெற்றுள்ள எந்த ஒரு வரையும் அவர் செல்லுந் திசையில் செல்லவொட்டா மல், அவரைத் தன்னிச்சையாகத் தடுக்கிற எவர் ஒரு வரும், அவரைச் சட்டவிரோதமான வகையில் தடுத்து வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறார் என்றும், அவ்வாறு எவரொருவரும் மெய்க்காவல் தண்டனை யும், தண்டத்தொகை விதிப்பும் பெறுதற்கு உரியர் என்று இந்தியத் தண்டனைச் சட்டம் 339ம் 341ம் கூறுகின்றன. இதற்குச் சில விலக்குகள் உள்ளன. அவை யாவன :

அ. ஒருவருக்கு ஒரு திசையில் செல்ல உரிமையிருக் கவேண்டும்.

ஆ. அவர் அத்திசையில் செல்ல முயலவேண்டும்.

இ. அவர் அத்திசையில் செல்ல இயலாதவாறு வேறு ஒருவர் தடுக்க வேண்டும்.

ஈ.அவ்வாறு தடுப்பவர் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**உரிமை :** ஒருவருக்கு ஓர் இடத்திற்குச் செல்ல உரிமையிருக்க வேண்டும். தனிப்பட்டவர்களின் கட்ட டங்கள், நிலம், அரசாங்கத்திற்குச் சொந்தமான விலக் கப்பட்ட பகுதிகள் போன்றவற்றுள் செல்வதற்கு ஒரு வருக்கு நேரடி உரிமையில்லை. அவற்றில் அனுமதி பெறாமல் செல்ல இயலாது. தவிரச் சிறப்பு அனுமதி யின்றி மிகப்பெரும்பாலான நாடகக் கொட்டகை கள், திரைப்பட அரங்குகள், நீச்சல் குளங்கள் போன்ற வற்றுள் செல்ல உரிமையில்லை.

உரிய அதிகாரமோ, வணிகம் செய்யும் நோக்கமோ நல்லெண்ணத்தின் அடிப்படையோ இல்லாமல் மற்றவரின் கடைகள், தொழிற்சாலை, உணவகம், அஞ்சல் அலுவலகம், தொலைபேசி அலுவலகம், பொது நூல் நிலையம், கல்விநிலையங்கள் போன்ற வற்றில் செல்ல அனைவருக்கும் உரிமையில்லை. ஒரு சில இடங்களில் குறிப்பிட்ட வயதுள்ளவர்தாம் செல் லலாம். குறிப்பிட்டப்படி உடையணிந்தவர்தாம் செல் லலாம். குறிப்பிட்ட பால் வகையினர் தாம் செல்ல லாம். குறிப்பிட்ட பணியாளர்கள் தாம் செல்லலாம் என்ற கட்டுப்பாடுகளும் இத்தடையை உண்டாக்க லாம்.

அதேபோல் அனைத்து வகை ஊர்திகளிலும் அனைவரும் விருப்பம்போலப் பிரயாணம் செய்யும் உரிமையில்லை. பயணத்திற்கும், பயணத்தின் போது நடந்துகொள்ளும் முறைக்கும் சில வரையறைகள் உள் ளன. ஒரு சாலையில் நடப்பதற்கும், ஊர்திகளை

இயக்கிக் கொண்டு செல்வதற்கும் சில வரையறைகள் உள்ளன.

எனவே, ஒருவருக்கு ஓர் இடத்திற்குச் செல்ல உரிமையிருக்க வேண்டும். அவ்வாறு உரிமை பெற்ற ஒருவர் அத்திசையில் செல்லும்போது மற்றொருவரால் தகுந்த காரணமின்றித் தடுக்கப்பட வேண்டும். பொது அமைதியைக் கருதியும் வேறு பல காரணங்களுக்காகவும் இரு இடத்திற்குச் செல்லக்கூடாது. கடை, தொழிற்சாலை, திரையரங்கம் போன்றவற்றைத் திறக்கக் கூடாது. ஊர்திகளை ஓட்டக்கூடாது என்றும் இது போன்ற தடைகளை அரசாங்கம் உரிய முறையில் பிறப்பிக்கலாம். இச்சூழ்நிலைகளில் அந்த இடத்திற்குச் செல்ல அனைத்து மக்களுக்கும் உரிமை இல்லை.

**தடை செய்யப்படல் :** உடல் பூர்வமாகத் தடுத்தால் மட்டுந்தான் தடுத்தல் ( Physical Obstruction ) 'தடுத்தல்' என்று பொருளில்லை. செல்லும் வழியில் குறுக்குத் தடையை ஏற்படுத்துதல், மூர்க்கமான அல்லது வெறி பிடித்த மிருகத்தைக் கட்டவிழ்த்து விடுதல், ஆயுதம் தாங்கிய பணியாளரைச் சூழ நிறுத்தி இருத்தல், ஓரிடத்திற்குச் சென்றால் உயிருக்கோ உடலின் பாகங்களுக்கோ உத்திரவாதமில்லை என்று அச்சுறுத்தல் போன்றவையும் தடை செய்யப்படல் என்ற சொற்றொடருள் அடங்கும். ஆனால், உரிய அடையாள அட்டை, குறிப்பிட்ட சீருடை, நுழைவுச்சீட்டு போன்றவை இல்லாததற்காக ஒருவர் தடை செய்யப்படலாம். நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் கூட ஒருவர் தடுக்கப்படலாம்.

எடுத்துக்காட்டாக 'அ' என்பவர் ஒரு சட்டவிரோதமான செயலைப் புரிந்தவர் என்று 'ஆ' கருதினார். நல்லெண்ணத்தின் அடிப்படையில் 'அ' என்பவரை 'ஆ' தடுத்து நிறுத்தலாம். 'அ' குற்றம் புரியாதவரெனப் பின்னர் முடிவு செய்யப்படலாம். 'ஆ' தவறு புரிந்தவர் ஆகார்.

**தன்னிச்சையாகத் தடுப்பவர் :** தடுப்பவர் தன்னிச்சையாகத் தடுக்க வேண்டும். ஒருவர் ஒரு செயலைச் செய்வதன் விளைவாக மற்றொருவரின் உரிமை மீறப்படும் என்று அச்செயலைச் செய்பவர் அறிந்திருந்தாலோ அறிய வாய்ப்பிருந்தாலோ அவர் தன்னிச்சையாகத்தான் அச்செயலைப் புரிகிறார் என்று கருதலாம்.

எ.காட்டு. ஒரு பேருந்து ஓட்டுநர் உரிய உரிமம் இல்லாத ஒருவரிடம் அப்பேருந்தை ஓட்டி வரும்படி பணிக்கிறார். அவ்வாறு உரிய உரிமம் இல்லாதவர் அப்பேருந்தை ஓட்டியதால் இடையூறு ஏற்பட்டால், அந்த இடையூற்றினுக்குப் பேருந்து ஓட்டுநர் தன்னிச்சையாகக் காரணமாவார். இடையூறு ஏற்படாவிட்டாலும் விபத்து உண்டாகும் அபாயமிருந்தால் போதும், அவர் குற்றவாளியே.

**பொது நன்மைக் கருதித் தடை செய்யப்படலாம்:** ஒரு பயங்கரக் குற்றவாளி ஒரு பேருந்தில் சென்று கொண்டிருப்பதாகத் தகவல் கிடைக்கிறது. காவலர்கள் பொதுமக்கள் துணையோடு அந்தப் பேருந்தை நிறுத்தி ஒவ்வொருவராகச் சோதனையிடலாம். தப்பில்லை. அந்த ஊர்தியில் அக்குற்றவாளி இல்லாவிட்டாலும் கூடக் காவலர்களோ, பொதுமக்களோ முறையின்றித் தடை செய்தவர்கள் ஆகமாட்டார்கள்.

ஒருவர் ஒரு கட்டடத்தைக் சட்ட முறையில் வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். ஆனால் ஒப்புக்கொண்டபடி வாடகை செலுத்தவில்லை. நிலக்கிழார் சட்டப்படி நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு, வாடகைக்காரர் இல்லாத சமயம் அக்கட்டடத்தையே பூட்டி விடுகிறார். இது குற்றமே. அந்த நிலக்கிழார் தன்னிச்சையாகச் செயற்பட்டவராவார். ஒருவர் ஒரு செயலைப் புரியும்போது அச்செயல் அவரை வேறு ஒரு சட்ட வகையத்தின் கீழ் குற்றவாளியாக்கக்கூடாது. எனவேதான், ஒவ்வொரு தடுப்பும் ( each restraint ) குற்றமாகாது என்றும் முறையிலாத்தடுப்பே குற்றமென்றும் சட்டம் கூறுகிறது.

இவ்வாறு முறையின்றித்தடுக்க ஒருவர் மீது தடுக்கப்பட்ட ஒருவர் உரிய குற்ற இயல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துத் தண்டனை வாங்கித் தரலாம். தவிர உரிய உரிமையியல் நீதிமன்றத்தில் இழப்பீட்டுக்கென உரிமை வழக்குத் தொடுக்கலாம். வழக்கை மெய்ப்பித்துக்காட்டும் பொறுப்பு வழக்குத் தொடுப்பவரையே சாரும்.

-எஸ். ஆர்.வீ.

**முன் தீர்ப்புத்தடை :** தகுதி வாய்ந்த நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுக்கப்பட வேண்டும். அதிலே சிக்கலுக்குரிய வினா எழுப்பப்படவேண்டும். அந்த வினா, செய்திகள், சட்டம், சாட்சியம், ஆவணங்கள்

ஆகியவற்றின் அடிப்படையில் நன்கு ஆராயப்பட வேண்டும். பின்னர் தீர்ப்புரை வழங்கப்பட வேண்டும். இந்தத் தீர்ப்புரையும் இறுதியானதாக இருக்க வேண்டும். இவ்வாறு இறுதியான தீர்ப்பு வழங்கப் பட்டால், பின்னிட்டு அதே சிக்கலை வேறு ஒரு வழக் கில் முந்தைய வழக்கின் இரு தரப்பினரோ அவர்கள் மூலம் உரிமை வேண்டுபவர்களோ மீண்டும் எழுப்ப இயலாது. இந்த இரு வழக்குகளிலும் எழுப்பப் பட்ட சிக்கல்கள் ஒன்றாகவேதான் இருக்க வேண்டும் என்ப தில்லை. அவை நேரடியாகவும் கணிசமான அள விலும் ( Directly and substantially in issue ) ஒத்திருந்தால் போதும்.

மிகப்பழமையான சட்டப்பிரிவின் படி பழங்காலப் பாரதமும் பண்டைய ரோமானியப் பேரரசும் இந்த முன் தீர்ப்புத்தடைக் கோட்பாட்டினைப் பயன் படுத்தினரென்று 1916ஆம் ஆண்டில் கூறப்பட்ட தீர்ப் புரையொன்று கூறுகின்றது. வழக்கு மன்றத்திலே தோற்ற ஒருவர் மீண்டும் அதே வழக்கினை வழக்கு மன்றத்தில் எழுப்பினால், அவர் அந்த முந்தைய தீர்ப்பு எவ்வாறு இரண்டாம் வழக்கைப் பாதிக்கவில்லை என்று விளக்கவேண்டுமென்று காத்தியாயனர் என்ற மாமுனிவர் மிகப்பழங்காலத்திலேயே தெளிவாகச் சொல்லியுள்ளார்.

இந்தக்கருத்தையே பண்டைய ரோமானியப் பேர ரசும் தனது சட்டஇயலில் கையாண்டுள்ளது. ஒவ் வொரு வழக்கிற்கும் ஓர் இறுதி முடிவு உண்டு என்பதை அரசாங்கம் கருத்திற் கொள்ள வேண்டும் ( Nemo debet bis vexari Pro una at eadem causa ). ஒரே காரணத்திற்காக எவரும் இருமுறை அலைக்கழிக்கப் படக்கூடாது. எனவே முன்தீர்ப்புத்தடை என்பது மிகப் பழமையான காலந்தொட்டே நாகரிக உலகமெங்கி லும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்டக்கோட்பாடு என் பதை உணரலாம்.

**சட்ட வடிவம் :** இந்திய நாட்டைப்பொறுத்த வரை முதன்முதலாக கி.பி. 1793ஆம் ஆண்டில் பிறப் பிக்கப்பட்ட வங்காள ஒழுங்குமுறை என்ற அரசணைப் படிதான் ( No. 111/1793) இந்தக் கோட்பாடு சட்ட வடிவம் பெற்று ஒழுங்குப்படுத்தப்பட்டது. பின்னர் உரிமையியல் விசாரணை முறைச்சட்டம் கி.பி. 1859 இல் முதன்முதலாக இயற்றப்பட்ட போதிலும் தொடர்ந்து கி.பி. 1877, 1882, 1908ஆம் ஆண்டுகளில் புதிய சட்டங்கள் இயற்றப்பட்ட போதும், 1976இல் திருத்தப்பட்ட போதும், இந்தச் சட்டப்பிரிவு அந்தந்தச் சட்டத்தில் இடம்பெற்று இருந்தது. இப்போது உரிமையியல் விசாரணை முறைச்சட்டப் பிரிவு பதினொன்றாக உள்ளது.

**பொதுச்சட்டம் :** இந்தக் கோட்பாடு உரிமையி யல் நீதிமன்றங்களுக்கு மட்டுமின்றிக் குற்றவியல் நீதி மன்றம், வாடகைக்கட்டுப்பாட்டுத் தீர்ப்பாயம், வரு வாய்த்துறை நீதிமன்றம், நொடித்தவர் நிலை நீதி மன்றம், நில எடுப்புச்சட்டம் ( Land Acquisition ), நிறு மங்கள் சட்டம் ( Company Law ) போன்றவற்றிற்கும் பொருந்தும்.

இந்தக் கோட்பாட்டிற்கு இரு நோக்கங்கள் உண்டு. அ) ஒருவர் ஒரே காரணத்திற்காக இருமுறை அலைக்கழிக்கப்படக்கூடாது. ஆ) ஒவ்வொரு வழக் கிற்கும் ஒரு முடிவு உண்டு என்ற பொதுக்கோட்பாடு கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இதன் அடிப்படைகளாவன, அ) ஒரு சிக்கலான வழக்கை நேரடியாகவும், கணிசமான அளவிலும் இரு வழக்குகளில் எழுப்புதல் கூடாது. இரு வழக்கு களிலும் உள்ள சிக்கல்கள் ஒன்றாகவே இருக்க வேண் டும் என்ற இன்றியமையாமை இல்லை. ஒத்திருந் தால் போதுமானது. ஒன்றின் கிளையாகவோ, துணை யாகவோ ( Collateral ), இடைநிகழ்வாகவோ ( Incidental ) ஓர் சிக்கலான வழக்கு அமையுமானால் அது முன் தீர்ப்புத்தடையை ஏற்படுத்தாது.

ஆ) கொள்நிலை முன்தீர்ப்புத்தடை ( Constructive resjudicata ) முன் வழக்கில் ஆதாரமாக எழுப்பப்பட்டி ருக்கக்கூடியதும், எழுப்பப்பட்டிருக்க வேண்டியது மான ஒரு சிக்கலான வழக்கு கொள்நிலை முன்தீர்ப் புத் தடை என்று கூறப்படும். ஒரு சிக்கலைக் கூற அல்லது மறுக்க வழக்குத் தரப்பினருக்கு முன்னமே வாய்ப்பிருந்ததா என்பதைத்தான் நோக்க வேண்டும். அவ்வாறு வாய்ப்பிருந்து முன்னரே மறுக்காமல் போனாலோ கூறாமல் விட்டுவிட்டாலோ அது முன் தீர்ப்புத் தடையை உண்டாக்கும்.

இ) அந்தத் தரப்பினரோ அவர்கள் மூலம் உரிமை வேண்டுபவர்களோ மீண்டும் எழுப்ப இயலாத நிலை: சட்டச்சார்புறவு உடையவர் ( Privy ) மற்றும் பிரதிநிதித்துவமுறை தரப்பினர் ( Being represented by ) ஆகியோரும் இதனுள் அடங்குவர். ஒரு வழக்கில் ஒரே நிலையில் உள்ள தரப்பினரிடையேயும் ( Co -

plaintiffs or Co - defendants ) கூட முன் தீர்ப்புத்தடை உண்டாகும். வழக்கு முறைமை தரப்பினராக ( Proforma ) ஒருவர் சேர்க்கப்பட்டு அவர் பேரில் பரிகாரம் வேண்டப்படவில்லையாயின் அந்த வழக்கின் முடிவு இத்தகைய வழக்குமுறைமைத் தரப்பினரைப் பொறுத்து முன் தீர்ப்புத்தடையை உண்டாக்காது. பொது அக்கறையுடைய பொதுப் பிரதிநிதித்துவ வழக்கில் உண்டான தீர் புரைக்கும் இக்கோட்பாடு பொருந்தும்.

ஈ) மீண்டும் அதே உரிமையை வேண்டல் ( Litigating under the same title ) முதல் வழக்கிலேயே 'அ' என்பவர், தான் 'ஆ' என்பவரின் முறையான மண உறவில் பிறந்த மகனென்றும் எனவே 'ச' எனும் சொத்து தமக் கே உரியதென்றும் கூறினார். 'அ' என்பவர் 'ஆ' என்பவரின் முறையான மணஉறவில் பிறந்த மகன் இல்லையென்று தீர்ப்பாயிற்று. மீண்டும் 'அ' என்பவர் தான் 'ஆ' என்பவரின் முறையான மண உறவில் பிறந்த மகனென்றும் எனவே 'ச' எனும் சொத்து தமக்கே உரிய தென்றும் வேறு ஒரு வழக்கில் வாதாட இயலாது. ஏனெனில் இங்கு அதே உரிமை மீண்டும் வேண்டப்படுகிறது. ஆனால் 'அ' என்பவர் தான் 'ஆ' என்பவரின் தனிப்பட்ட வைப்பாட்டியின் மகன் ( Exclusively kept concubine's son ) என்றும் எனவே தமக்கு 'ச' சொத்துக் களில் சட்டபூர்வ உரிமை உண்டு என்றும் இரண்டாம் வழக்குக் கொடுக்கத் தடையில்லை.

உ) தகுதி வாய்ந்த நீதிமன்றம் ( Competent Court ) உரிமையியல் நீதிமன்றங்களின் ஆள்வரை ( Jurisdiction ) மூன்று வகைப்படும். அவையாவன : *1)* பண ஆள்வரை ( Pecuniary ), *2)* எல்லை ஆள்வரை ( Territorial ), *3)* உள்ளார்ந்த ஆள்வரை ( Inherent ) இவ்வாறு தகுதி வாய்ந்த நீதிமன்றத்தால் முதல் தீர்ப்புரை வழங் கப்பட்டிருக்கவேண்டும். மற்றும் தகுதி வாய்ந்த நீதி மன்றத்தில் அந்தச் சிக்கலையொட்டிய இரண்டாம் வழக்கு தொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஊ) இறுதித்தீர்ப்பு ( Final decided ) தரப்பினர்களின் வாதுரைகள் ( Pleadings ) சாட்சியம், ஆவணங்கள், சட்டம், செய்தி ஆகிய அனைத்தையும் ஆய்வு செய்து பின்னர் தகுதியின் அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பே இறுதித்தீர்ப்பாகும். இத்தகைய தீர்ப்பின் பேரில் மேல் முறையீடு அல்லது சீராய்வு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்து, மேல்முறையீடு அல்லது சீராய்வு செய்யப்பட்டிருக்குமானால் அந்த மேல் முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தகுதியின் அடிப் படையிலான தீர்ப்பே இறுதித் தீர்ப்பாகும்.

தகுதியின் பேரில் இல்லாத சம்மதத் தீர்ப் பாணைக்கு ( Consent decree ) இந்தக் கோட்பாடு நேரடியாகப் பொருந்தாதெனினும் அந்தத் தீர்ப் பாணை முரண்தடையை ( Estoppel ) உண்டாக்கும். ஆனால் முதலில் வழங்கப்பட்ட தீர்ப்புரைக்குப் பின் னர் உண்டான சட்டமாற்றம், சூழ்நிலை மாற்றம் போன்றவை இத்தகைய முன்தீர்ப்புத் தடையை நீக்க வல்லனவாம்.

எ) வழக்கு ( Suit ) முந்தைய வழக்கு என்பது வழக் குத் தொடுக்கப்படும் காலத்தைக்கொண்டு கணக் கிடப்படுவதில்லை. தீர்ப்புப் பிறப்பிக்கப்படும் நாளைக் கொண்டுதான் கணக்கிடப்படுகிறது. மேற் கோள் : ஒரேவிதமான சிக்கல்களைக் கொண்ட இரு வழக்குகள் முறையே 1977ஆம் ஆண்டிலும், 1978ஆம் ஆண்டிலும் தாக்கல் செய்யப்பட்டன. வழக்கில் தகுதி யின் பேரில் 1978ஆம் ஆண்டு இறுதித் தீர்ப்புரை வழங்கப்பட்ட நாளன்று 1977ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்புரை வழங்கப்பட வில்லை. எனவே, 1978ஆம் ஆண்டு வழக்கில் ஏற் பட்ட தீர்ப்புரையே முந்தைய வழக்குத் தீர்ப்புரை என்று கருதப்படும். வழக்கு எனும் சொல் நடவடிக்கை களையும் உள்ளடக்கும். நிறைவேற்றுகை மனுக்களும் இதில் அடங்கும். ஒரே வழக்கில் ஒரு நிலையில் ( Stage ) உண்டான தீர்ப்புரை, ஆணை போன்றவை அதே வழக்கில் பின் விட்ட நிலையில், முன்தீர்ப்புத் தடையை ஏற்படுத்த வல்லவையாகும்.

**பொது :** ஒரு வழக்கு முன்தீர்ப்புத்தடைக் கோட் பாட்டின் படி பாதிக்கப்பட்டுள்ளது என்று கூறுபவர் தமது வாதுரையில் அதைப்பற்றிய விளக்கத்தினைத் தெளி வாகக் கூறவேண்டும். இந்தக் கோட்பாட்டின் படி ஒருவர் பரிகாரம் ( Waiver ) வேண்டாமலேயே விட்டு விடலாம்.

- எஸ். ஆர். வீ.

**முன் தீர்ப்பு முறை :** இந்திய நீதிமன்றங்கள் பல படித்துறைகளைக் கொண்டவை. உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள், ஆயங்கள், சிறப்பு நீதிமன்றங்கள், சார்பு நீதிமன்றங்கள், மேல் முறை யீட்டு ஆயங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், உயர் நீதி மன்றங்கள் உச்ச நீதிமன்றமெனப்பல பிரிவுகளைக்

கொண்டவை. இவை தவிர வெவ்வேறுவகை நீதி மன்றங்களும் உண்டு. தவிர, சட்டங்களும் பலவகைப் பட்டன.

சில சட்டங்கள் நாடு முழுவதும் பொதுவானவை. சில, மாநிலத்திற்கு மட்டும் பொதுவானவை. வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் போன்று ஒருசில, மாநிலத்தில் குறிப்பிட்ட நகரங்களுக்கு மட்டுமே இயங்கும். கடன் நிவாரணச் சட்டங்கள் குறிப்பிட்ட வகையினருக்கு மட்டுமே இயங்கும். சில சட்டங்கள் குறிப்பிட்ட வயதினருக்கு மட்டும்தான். மற்றும் சில மதத்தின் அடிப்படையில் இயற்றப்பட்டவையா கும். இவ்வாறு பலவகைச் சட்டங்கள் பலவகை நீதிமன் றங்கள் அவற்றின் அடிப்படையில் பல வழக்குகள், மிகப் பரவலான நீதிபதிகள், இறுதித்தீர்ப்பு கிடைக்கப் பல நீதியப்படிக்கட்டுகள் ( Judicial hierarchy) ஆகியவை உள்ளன.

இச்சூழ்நிலையில் பலவகை நீதிமன்றங்கள் ஒரே தன்மையான வழக்குகளில் வெவ்வேறு தீர்ப்புகளை யும் ஒன்றுக்கொன்று முரணான தீர்ப்புகளையும் அளித்தால் குழப்பமும் சிக்கலுமே பெருகும். என வேதான் படியில் உயர்ந்த உச்சநீதிமன்றம் வழங்கும் நீதிய நெறிமுறைகள் நாடு முழுவதும் கட்டுப்படுத் தும். உயர்நீதிமன்றம் வழங்கும் நீதிய நெறிமுறைகள் ( Judicial principles ) அந்த உயர்நீதிமன்றத்தின் ஆள் வரைக்குள் ( Jurisdiction ) உள்ள பகுதிகளைக் கட்டுப் படுத்துமென்றும் சட்டம் கூறுகிறது. இதுவே முன் தீர்ப்பு முறை ( Precedent ) எனப்படும்.

மூன்றும் அதற்கு மேற்பட்டதுமான நீதியர், பேரா யத்தால் வழங்கப்பட்ட தீர்ப்புரை என்றும், இரு நீதி யரசர்கள் அடங்கிய நீதியர் ஆயத்தால் வழங்கப்படும் தீர்ப்புரை என்றும், ஒரு நீதியரசரால் வழங்கப்பட்ட தீர்ப்புரை என்றும், உயர்நீதிமன்றத் தீர்ப்புரைகளும், உச்ச நீதிமன்றத் தீர்ப்புரைகளும் பொதுவாக மூன்று வகைப்படும். எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியான நீதியரசர்களால் தீர்ப்புரை பகரப்படுகிறதோ அவ்வள வுக்கவ்வளவு அதன் கருத்துகள் வலிமை பெறு கின்றன.

ஒரு தீர்ப்புரை மறுத்தளிக்கப்படலாம் ( Over ruled) உயர் நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்புரையை மிகுந்த எண்ணிக்கையுடைய நீதியர் ஆயத்தாலோ நீதியர் பேராயத்தாலோ உச்சநீதிமன்றத்தாலோ நேரடி யாகவோ மறைமுகமாகவோ கீழ்க்காணுமாறு மறுத் தளிக்கப்படலாம். ஒரு குறிப்பிட்ட தீர்ப்புரை செல் லாது என்று கூறப்பட்டால் அது நேரடி மறுத்தளிப் பாகும். சட்டமாற்றத்தின் காரணமாகவோ பல நீதி யரசர்களைக் கொண்ட ஆயம் அல்லது உச்ச நீதிமன்றம் வழங்கிய வேறு ஒரு தீர்ப்புரையின் காரணமாகவோ, வழங்கப்பட்ட தீர்ப்புரை சரியானதாக இல்லாமற் போகலாம். இது மறைமுக மறுத்தளிப்பாகும். இவ் வாறு மறுத்தளிக்கப்படும் வரையில் முன்தீர்ப்பு முறைப்படி அது கட்டுப்படுத்தப்படும் தன்மையது. உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புப் புறவுரையும் கட்டுப் படுத்தும் வலிமையைக் கொண்டது. சட்டமென்பது ஒரே தன்மையானது.

**வேறு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரை** : உரிய ஆள் வரையையுடைய நீதிமன்றத்தின் தீர்ப்பானை அதன் எல்லை வரை இயங்கும். கட்டுப்படுத்தும். ஒரு சட் டம் அல்லது செய்தியைப் பொறுத்து அந்த ஆள்வரை கொண்ட நீதிமன்றத்தின் தீர்ப்புரை ஒன்றும் இல்லை யாயின் வேறு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புரையைப் பின்பற்றலாம்.

**சரியில்லா நிலையிலுள்ள தீர்ப்புரை** : ஏற்கனவே உள்ள தீர்ப்புரை சரியில்லை என்று ஒரு நீதியரசர் கருதினால் சூழ்நிலைக்கேற்ப இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட நீதியரசர்களைக் கொண்ட நீதியர்ஆயம் அல்லது பேராயம் அந்த வழக்கைப் பரிசீலிக்க வேண்டு மென்று தலைமை நீதிபதிக்குப் பரிந்துரை செய்யலாம் அல்லது தலைமை நீதிபதியே அத்தகைய நீதியர் ஆயம் அல்லது பேராயத்தை நிறுவலாம். அரசப் பேரவை வழங்கிய தீர்ப்புரையை உச்சநீதிமன்றம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டுமென்பதில்லை.

**கீழமை நீதிமன்றங்கள்** : நீதியப் படிகளில் கீழமை நீதிமன்றங்கள், தத்தம் உயர்நீதி மன்றங்களின் தீர்ப்புரை களையும், உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புரைகளையும் அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரே வகை யான வழக்கு மூலத்தைப் பொறுத்து உயர்நீதி மன்றத் தின் அல்லது உச்சநீதி மன்றத்தின் தீர்ப்புரைகள் இரு வெவ்வேறு கருத்துகளைக் கூறியிருப்பின் ஏறத்தாழ வழக்குகளுக்குப் பொருத்தமான செய்திகள் அடங்கிய தீர்ப்புரையை ஏற்கலாம். அல்லது பின்னிட்டு வழங் கப்பட்ட தீர்ப்புரையை ஏற்கலாம். இவ்வாறு முன் தீர்ப்பு முறை இல்லாவிட்டால் நீதியத் துடிப்பே ( Judicial pulse ) நின்றுபோய்விடும். குழப்பமும் சிக்க லும் மிகும்.

- ஆர்.எஸ்.வெ.

**முன் தீர்ப்பு முறை ஏற்பு :** பொதுவாக உலகியல் நீதித்துறையில் இருமுறைகள் கையாளப் படுகின்றன. ஒன்று ஆங்கில முறை ( English System ) மற்றொன்று இங்கிலாந்தை விலக்கிய ஐரோப்பிய முறை ( Continental System ). இந்திய நாட்டில் கையாளப்படுவது ஆங்கில முறை. முன் தீர்ப்பு முறை ஏற்பு ( Stare decisis ) என்பது ஆங்கில முறையாகும்.

உரிய உயர்ந்த நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப் பில் கூறப்பட்டுள்ள வழிமுறைகளையும் ( Guide Lines), நெறிமுறைகளையும் ( Principles ) அதே நீதிமன்றமும், அதன் கிழமை நீதிமன்றங்களும் பின்பற்ற வேண்டும் என்பதே முன் தீர்ப்பு முறை ஏற்பு எனப்படும். இது நீதிய எண்ணங்களையும் கருத்துகளையும் செவ்விய முறையில் சட்டத்தன்மையுடைனவாக மாற்றுவ தாகும்.

ஒருவகையில் இது முன் தீர்ப்பு முறையே ஆகும். முன் தீர்ப்பு முறை ஏற்பைப் பொறுத்தவரையில் இரண்டு நிபந்தனைகள் உண்டு அவையாவன.

அ) முன்னால் வழங்கப்பட்ட தீர்ப்பு துல்லியமாக வெளியிடப்படல் வேண்டும்.

ஆ) நீதிமன்றத்தின் அடித்தளமெது, உயர் நீதிமன்ற மெது, உச்ச நீதிமன்றமெது என்று வரையறுக்கப்பட்ட நீதி நிலையமைப்பு திட்டவட்டமாக இருக்க வேண்டும்.

உயர் நீதிமன்ற, உச்ச நீதிமன்றத் தீர்ப்புரைகள் பொதுவாக மூன்று வகைப்படும் அவை : இரு நீதி யரசர்கள் அடங்கிய நீதியர் ஆயத்தால் வழங்கப்படும் தீர்ப்புரை ( Division Bench ), ஒரு நீதியரசரால் வழங்கப் பட்ட தீர்ப்புரை, இரண்டுக்கு மேற்பட்ட நீதியரசர் களால் வழங்கப்பட்ட நெறிமுறை ( Full Bench ), அதி கப்படியான நீதியரசர்களால் கூறப்படும் நீதிய விளக் கம் ஆகியவையாகும். அந்த நீதிமன்ற ஆள்வரைக்கு அடங்கிய அனைத்து நீதிமன்றங்களாலும் ஆயங்களா லும் கடைப்பிடிக்கப்பட வேண்டியனவாகும்.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலேயே நீதியத் தீர்ப்புகளைத் துல்லியமாகப் பதிவு செய்து வெளியிடப் படும் வழக்கம் இல்லை. கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் பிராக்டன் என்பவர் நீதியத் தீர்ப்பு களைக் குறிப்பேடு என்ற பெயரில் தொகுத்து வெளி யிட்டார். ஆனால், அவை துல்லியக் குறிப்புகளாக இல்லை. பின்னர் ஆண்டு புத்தகம் வெளிவந்தது. இதுவே முதன் முதலாக இங்கிலாந்தில் வெளியிடப் பட்ட நீதிய இதழாகும். பின்னர்த் தனிப்பட்ட நிறுமங்கள் தீர்ப்புகளை வெளியிடத் தொடங்கின. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் பர்ரோவின் சட்ட அறிக்கைகள் மிகவும் மதிப்பு வாய்ந்தவையாகக் கருதப்பட்டன. கி.பி. 1873ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றச் சட்டங்கள் ( The Supreme Court of Judicature Acts, 1873 ) உண்டாக்கப்பட்டன. அவை முன் தீர்ப்பு முறை ஏற்பை நெறிபடுத்தின. இந்திய உச்ச நீதிமன் றத்தின் தீர்ப்புகள் இந்திய நாட்டில் சட்டமெனக் கருதப்படும்.

தமிழ்நாட்டிலே பண்டைய சோழப் பேரரசில் ஐம் பெருங்குழு, எண்பேராயம் போன்றவை செயற்பட்டு வந்தன. அதிலே ஒரு குழு நீதித்துறையைக் கண்கா ணித்தது. ‘இது போன்றதொரு வழக்கில் அரசர் முன்பு என்ன தீர்ப்பு கூறியிருந்தாரோ அதனையொட்டியே தாமும் இதில் தீர்ப்பு கூற வேண்டும்’ என்றே அந்த நீதிபதிகள் கருதிச் செயற்பட்டனர். தவிர இது போன்ற கருத்து சாணக்கியர் எழுதிய அர்த்தசாத்திரம் எனும் நூலிலும் காணப்படுகிறது. எனவே, பண்டைய பாரதத் தில் கடைபிடிக்கப்பட்ட நீதிய நெறிமுறையே இப் போது முன் தீர்ப்பு முறை ஏற்பு ஆகும்.

வழக்கின் தன்மை, உரிய சட்டம், கையாளத்தக்க நெறிமுறை போன்றவற்றைக் கொண்டு முன் தீர்ப்பு முறை ஏற்பு உண்டாகிறது. தேவைப்பட்டால் முன் தீர்ப்பை மாற்ற இயலும். வேறுபடுத்த இயலும். புதிய தீர்ப்பினை வழங்க இயலும். பழைய தீர்ப்புச் செல்லாததெனக் கூறமுடியும்.

வகுக்கப்படும் சட்டத்திலே அனைத்துவகைச் சூழ் நிலைகளுக்கும் விடைகாண இயலாது. சூழ்நிலைக் கேற்பச்சட்ட விளக்கத்தின் மூலமே சட்டச் சொற்களை விளக்க இயலும். உயர் நீதிமன்றங்களால் வழங்கப் பட்ட தீர்ப்புகளைத் துல்லியமாக வெளியிட்டால் அது போன்ற வழக்குகளில் கீழமை நீதிமன்றங்கள் தீர்ப்புரை கள் கூற எளிதாக இருக்கும். முன் தீர்ப்பு முறை ஏற்பு இல்லாவிட்டால் நாடுதழுவிய நீதியத் துறையின் நூலிழை அறுந்து போகும்.

- ஆர்.எஸ்.வெ.

**முன்மரபைப் பாதிக்கும் கோட்பாடு** : சில அடிப்படை நியாயங்களை அமல்படுத்தச் சட்டப்படி சில தீர்ப்புகள் பின்னால் சொல்லப்பட்ட போதிலும், பின்னர் சொல்லப்பட்ட தீர்ப்பாணையை மனு தரப் பட்ட முன் தேதியில் சொல்லப்பட்டதாகக் கொள்ள வேண்டிச் சட்டம் கற்பிக்கும் அல்லது தோற்றுவிக் கும் ஒரு கொள்கைதான் 'முன்மரபைப் பாதிக்கும் கோட்பாடு' என்பது. இக்கொள்கை நியாயமான உரிமைகளை நிலைநாட்டுவதற்காகச் சட்டத்தின் மூலம் அமல்படுத்தப்படுகிற ஒன்றாகும். எ.கா. 1956 ஆம் ஆண்டு சூன் பதினெட்டாம் நாள் ஒரு வழக்கை ஒரு நீதிமன்றத்தின் ஒரு கட்சிக்காரர் கொடுக்கிறார். நீதிமன்றம் 1958ஆம் ஆண்டு திசம்பர் பத்தாம் நாள் தீர்ப்பாணையை வழங்குகிறது. அந்தத் தீர்ப்பாணை சற்று ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் வழங்கப்படாத தாக இருந்தாலும், அந்தத் தீர்ப்பு 1956ஆம் ஆண்டு சூன் பதினெட்டாம் நாளுக்குப் பரிகாரமாகவே கரு தப்படுகிறது. இது ஒரு மரபு. இப்படிச் சில சட்டங்கள் வலுக்கட்டாயமாக நியாயப்படுத்தப்படுகின்றன. எ.கா. 1909ஆம் ஆண்டு மாகாண நொடித்தோர் சட்டப்பிரிவு 51இன் படி ஒரு கடனாளி நொடித்தோர் என்று நீதிமன்றத் தீர்ப்பாணை பிறப்பிக்கும் கட்டத் தில், இந்தத் தீர்ப்பு எந்த நாளில் நொடித்தோராகக் கடனாளி ஆனாரோ அந்த நாளிலிருந்து தீர்ப்பாணை தொடங்குவதாகக் கொள்ள வேண்டுமென்று சட்டம் வெளிப்படையாக வலியுறுத்துகிறது. நொடித்தோ ராக நீதிமன்றம் தீர்மானிக்க மனுக்கொடுத்த நாளிலி ருந்தே அமலுக்கு வருகிறது. இது போன்றே 1920 ஆம் ஆண்டு மாநில நொடித்தோர் சட்டம் பிரிவு 28இன் படி எவரொருவர் நொடித்தோர் என்று தீர்மானிக் கப்படுகிற தீர்ப்பாணைத் தீர்ப்பு வழங்கப்பட்ட நாளை விட்டு, மனுக்கொடுத்த நாளிலேயே தீர்ப்பாணை யின் உள்ளடக்கங்களை அமலுக்கு வருவதாகக் கொள்ள வேண்டும் என்பதும் இந்தக் கொள்கையால் வலியுறுத்திச் சொல்லப்படுகிறது.

2) எடுத்துக்காட்டாக 1933ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் பதினெட்டாம் நாள் ஒரு கடனாளியை நொடித் தோராகத் தீர்ப்பாணை பிறப்பிக்க மனுத் தரப்பட்டு, அம்மனு விசாரணை செய்யப்பட்டு 1934 ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாளன்று அக்கடனாளி நொடித் தோராக நீதிமன்றத்தால் தீர்ப்பாணை பகரப்பட்ட தாக வைத்துக் கொள்ளலாம். 1940 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக் குள் கடன் தீர்வுக்கான மனு தராத காரணத்தால் நொடித்தோர் என்று பகரப்பட்ட தீர்ப்பாணை முடிவுக்குக் கொண்டு வந்ததாகக் கொள்ளலாம். ஆனால் அதே காலத்தில் கடனாளியின் சொத்துகள் நீதிமன்றப் பெறுபவர் பொறுப்பில் ஒப்படைக்கத் தீர்ப்பாணை இருப்ப தாகக் கொள்ளலாம். இவர் 1939இல் சில சொத்து களையும், 1942இல் சில சொத்துகளையும் விற்று விட்டார். இதற்கிடையே மேற்படி கடனாளிக்கு 1934 ஏப்ரலில் ஒரு மகனும், 1939 மேயில் ஒரு மகனும் பிறந் தனர் எனக் கொண்டால், இந்தப் புதல்வர்கள் 1944 இல் மேலேக் கண்ட இந்தக் கடனாளியின் சொத்து களைச் சட்டப்படி பெறுவர்.

1939, 1942ஆம் ஆண்டுகளில் ஏலம் விட்டு விற்றது சரியில்லை என்று வழக்குத்தொடர அனுமதி கேட் கிறார்கள். அதன் முடிவு என்ன ஆவது? நீதிமன்றம் அதனை விசாரணை செய்து தீர்ப்பு வழங்கியது. 1934ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் முதல் நாளன்று நீதிமன்றம் கடனாளியான ஆளை நொடித்தவர் என்று தீர்ப்பு ஆணை பகர்ந்தபோதிலும் இந்தத் தீர்ப்பாணை 1933 ஆம் ஆண்டு ஏப்ரல் பதினெட்டாம் நாள் முதல் நடைமுறைக்கு வருவதாகக் கொள்ள வேண்டும் என் பது மாநில நொடித்தோர் சட்டம், பிரிவு 28 உட்பிரிவு 7 சொல்லுகிறது. எனவே, 18 - 4 - 33 நாளைய கட னாளியை நொடித்தவராகத் தீர்ப்பாணைப்படி கொள்ள வேண்டும். தீர்ப்பாணை 1 - 11 - 34 இல் நீதி மன்றத்தால் பகரப்பட்ட போதிலும், 18 - 4 - 33 இல் பகரப்பட்ட தீர்ப்பாணையாகக் கருதவேண்டும். இது சட்ட நூலில் நியாயம் கருதி உருவாக்கப்பட்ட ஒரு நியாயக் கொள்கையாகும். எனவே, இந்த நாளுக்குப் பின் பிறந்த கடனாளியின் புதல்வர்களால் சட்டப்படி பெறுபவர் விற்பனை செய்யப்பட்ட சொத்துகளை நீக்கஞ்செய்ய அனுமதி பெற இயலாது என்று நீதிமன் றம் தெளிவாகத் தீர்ப்பு வழங்கியுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தில் கந்தசாமி பிள்ளைக்கும், கந்தசாமி பிள்ளைக்கும் நடந்த வழக்கில் நீதியரசர் கார்வில் வழங்கியுள்ள இந்தத் தீர்ப்பு ஏ.ஐ.ஆர் 1947இல் சென்னை 372 நூலில் வெளியிடப்பட்டுள்ளது. அந்தத் தீர்ப்பில் புலனாகும் இச்சட்டக் கொள்கையைத் தெளி வாகத் தெரிந்துகொள்ள வேண்டும். ஒரு கடனாளியை நொடித்தோனாகத் தீர்ப்பாணை பிறப்பிக்க நீதிமன்றத் தில் மனு தரப்பட்டு, தீர்ப்பாணைக் காலம் கடந்து பிறப்பிக்கப்பட்ட போதிலும், அந்த ஆணை பகரப் பட்ட நாளிலிருந்து நொடித்தோர் என்ற அறிவிப்பு

அமலுக்கு வருவதாகக் கொள்ளகூடாது. மாறாக, நீதிமன்றத்தில் மனு கொடுத்த நாளாகிய முந்திய நாளிலேயே நொடித்தோர் எனத் தீர்ப்பாணை பகரப்பட்டதாகக் கற்பித்துக்கொண்டு அந்த நாளில் கடனாளி சொத்து சட்டபடி பெறுபவர் கைக்குப் போய்விட்டால், இடைப்பட்ட காலத்தில் கடனாளி ஏதும் விற்பனை செய்திருந்தால் அது பெறுபவரைக் கட்டுப்படுத்தாது என்பதும் இக்கொள்கை.

ஒரு கடனாளி தன் சொத்தை அன்பரசன் என்பவருக்கு ஒத்தி வைத்துப் பத்திரம் எழுதித்தர வாய்மொழியாக ஒப்புக்கொள்கிறார். அதன் மீது சூன் 30 - 1952இல் ஒத்திப்பாத்தியத்தைத் தீர்ப்பு நீதிமன்றத் தில் வாங்கி விடுகிறார். ஆனால் 14 - 6 - 1952இல் அழகரசன் என்பவர் தமக்குக் கடனாளி தரவேண்டிய கடனுக்காக நொடித்தோர் சட்டத்தின் கீழ்க் கடனாளியை நொடித்தோனாக அறிவிக்க நீதிமன்றத்தில் மனு தர 16 - 12 - 1952இல் இத் தீர்ப்பு பகரப்படுகிறது. இதற்கிடையில் அன்பரசன் 22 - 11 - 1952இல் மற்றும் 30 - 6 - 1952 தான் கடனாளி மீது வாங்கியுள்ள ஒத்திப் பாத்திய தீர்ப்பாணைப்படி நீதிமன்றத்தால் ஒத்திப் பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டுவிட்டார். சட்டப்படி பெறுபவர் இந்த ஒத்திப்பத்திரம் தம்மை கட்டுப்படுத்தாது என்று வாதிடுகிறார். நீதிமன்றம் விசாரணை செய்து கடனாளியின் சொத்துகள் 14 - 7 - 1952லியே சட்டப்படி பெறுபவரிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டதால் தீர்ப்பாணை 16 -12 - 1952இல் நொடித்தவராகக் கடனாளியைப் பகர்ந்த போதிலும், அது 14 - 7 - 1952 முதல் பகரப்பட்டதாக முன் மரபைப் பாதிக்கும் கோட்பாட்டின் படி கொள்ள வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பாணை வழங்கயது. எனவே 22 - 11 - 1952இல் அழகரசன் நீதிமன்றத்தால் எழுதி வாங்கியுள்ள ஒத்திப்பத்திரம் சட்டப்படி பெறுபவரையோ கடனாளியின் சொத்துகளையோ கட்டுப்படுத்தாது எனச் சொன்ன உயர்நீதிமன்றத்தால் தீர்ப்பாணை பகரப்பட்டு ஏ. ஐ.ஆர் 1958 சென்னை 126 இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

3) நொடித்தோர்கள் மீதான வழக்கு நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட பிறகு, கடனாளி கடன் கொடுத்தவர்களை ஏமாற்றாமலிருக்க இந்தப் பாதுகாப்புச் சட்டத்தில் விதி செய்யப்பட்டுள்ளது. கடன் கொடுத்தோரின் தொகைகள் ஏமாற்றப்படக்கூடாது என்பதற்கு முன், ஏமாற்றும் நோக்கில் தீர்ப்பாணை பகரப்படுவதற்கு முன் விசாரணையில் உள்ள நொடித்தோர் வழக்குகளில் தவறுகள் நடவாமல் தடுப்பதற்கும் இச்சட்டக் கொள்கை துணை செய்கிறது.

- வி.சு.

**முன்னறிவுடன் நினைத்தல்** : உண்ட் (Wunt) என்பவரால் முதன்முதலில் முன்னறிவுடன் நினைத்தல் என்னும் நிலை உணரப்பட்டது. புலன் காட்சி ( Perception ) என்பது புலனுணர்வும், கருத்துகளும் இணையும்போது உருவாகும் நிலை. புலன் காட்சி நிலையில், புலனுணர்வு அனுபவத்தின்போது ( Sensational Experience ) எவ்வாறு மனதில் கருத்து உருவாகிறது என்ற வினா எழுந்தது. இதை விளக்க முற்பட்டபோது, முன்னறிவுடன் நினைத்தல் நிலை உணரப்பட்டது. முன்னறிவுடன் நினைத்தல் என்பது முன் அனுபவத்தின் காரணமாக உணர்வு நிலையில் ஏற்படும் செயல்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளுதல் அல்லது கிரகித்துக்கொள்ளுதல் ஆகும்.

முன்னறிவுடன் நினைத்தல் என்பது நனவு உள்ளத்தில் ( Consciousness ) இருக்கும்போது உணர்வுடன் புலன் காணுதல் ( Perceptual Situation ) ஆகும். அதாவது நடக்கப்போகும் செயல்களினால் ஏற்படப்போகும் கிளர்ச்சியுறுதலையோ ( Excitement ), பதற்ற நிலையையோ ( Tension ), முன் அனுபவங்கள் காரண மாக நடக்குமுன்பே கிரகித்துக் கொள்ளுதல் ( Grasping ) நிலையாகும்.

இதில் கவனம் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. கடந்தகால நிகழ்ச்சிகளில் நல்ல கவனம் செலுத்திய தன் காரணத்தினாலேயே வேறொரு சூழ்நிலையில் ஏற்படும் அதேமாதிரியான புலன் காணுதலைத் தெளிவான முறையில் புரிந்துகொள்ள இயலுகிறது.

முன்னறிவுடன் நினைத்தலில் ஆளுமைச் சோதனைகளில் ( Personality Test ) ஒன்றான புறத்தெரிதல் சோதனை ( Projective Test ) உபயோகப்படுத்தப்படுகிறது. புறத்தோற்றச் சோதனைகள் என்பது சோதனைக்குட்பட்டவரை முக்கிய அன்றாட வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சொற்களின் மூலமோ, வரைபடங்கள் மூலமோ ஒன்று அல்லது இரண்டுக்கு மேற்பட்ட கதை மாந்தர்கள் ஈடுபடும் ஒரு சூழ்நிலையைப் படங்களின்

மூலமோ காட்டி அந்த நிகழ்ச்சி அவருக்கு எதை அறிவுறுத்துகிறது. அதிலிருந்து என்ன புரிந்து கொண்டார் என்பன போன்ற வினாக்களை எழுப்பி அவர் அளிக்கும் விடைகளைக் கொண்டு அவர் எப்படிப் பட்டவர் என அறிந்துகொள்வது, சோதனைக்குட் பட்டவரின் விடைகள் அவருடைய முந்தைய அனுபவங்களையும், ஆளுமைக்கூறுகளையும் பொறுத்தது.

*1)* இச் செய்வகை சோதனைக்குட்பட்டவருக்குப் பலவகைப் பொருள்படும் ( Ambiguous ) ஒரு குழப்பமான சோதனையாக இருக்கும். *2)* இச் செய்வகைகளில் சரியான அல்லது தவறான விடை என்று எது வும் கிடையாது. சோதனைக்குட்பட்டவரைப் பொறுத்தவரையில் பொருத்தமெனத் தோன்றும் எந்த வகையான விடையையும் அவர் அளிக்கலாம். *3)* துலங்கல்கள் ( Responses ) சோதனைக்குட்பட்டவரது முக்கியமான ஆளுமைப் போக்கையும், அவரது உணர்ச்சி நிலையையும் எதிரொலிப்பதாக இருக்கிறது. *4)* எடுக்கப்பட்ட குறிப்புகள் பலவிதமான கோணங்களில் இருந்து நோக்கப்படுகின்றன. சோதனைக்குட்பட்டவரின் அறிதல் முறை ( Cognitive Process), ஆளுமைப் போக்கு ( Personality Style ) ஆகியவற்றை எதிரொலிப்பதாக இருக்கிறது.

இச்செயல்வகை ஒரு குறிப்பிட்ட சமயங்களில் தூண்டும் திட்ட அளவான தூண்டல்கள் கொண்டது. அதன் விளைவாக வரும் துலங்கல்கள், அடிப்படை ஆளுமைக்கூறுகளினன் வேறுபாடுகளை எதிரொலிக்கின்றன. மேலும், தனிப்பட்ட தேவைகளையும், வாழ்க்கை முறையையும் இதன்மூலம் வெளிப்படுத்துகின்றன. ஆனால், இம்முறை மிகக் குறைவான சோதனை முறைகளாலேயே செயற்படுத்தப்படுகிறது. விளக்கிப் பொருள்கூறும் புறத்தெளிச் சோதனை ( Thematic Apparception Test ) இதற்குப் பயன்படுத்தப் படுகின்றது.

- த. வெ. பா.

**முன்னிலை ஏற்புடைமை :** ஒரு சோதனையின் ஏற்புடைமை ( Validity ) என்பது அச்சோதனை எந்த அளவிற்குத் திருத்தமானது ( Accurate ) என்பதனைப் பொறுத்தும், அது எதனை அளவிடுகிறது, அதன் நோக்கமென்ன ஆகியவற்றைப் பொறுத்துமுள்ளது.

ஏற்புடைமைச் சோதனைகள் முன்னிலை ஏற்புடைமை ( Face Validity ), உள்ளுறை ஏற்புடைமை ( Con tent Validity ), காரணி ஏற்புடைமை ( Factor Validity ) என மூன்று வகைப்படும்.

முன்னிலை ஏற்புடைமை என்பது ஒரு சோதனையின் ஆசிரியர் அச்சோதனை எவ்வாறு அமைய வேண்டும் என நினைக்கிறாரோ அவ்வாறே அமைக்கப்பெற்றால் அச்சோதனை முன்னிலை ஏற்புடைமை உடையதெனக் கருதப்படுகிறது. முன்னிலை ஏற்புடைமையின் முக்கிய நோக்கம் ஒரு சோதனை எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதனை அடிப் படையாகக் கொண்டது. ஒரு சோதனையின் கூறுகள் சோதனைக்குப் பொருத்தமில்லாதனவாகவோ, பயன்மிக இல்லாதனவாகவோ, பொருளற்றதாகவோ, குழந்தைத் தனமானவையாகவோ இருப்பின் சோதனை முடிவு மோசமானதாக இருக்கும். சான்றாகக் குழந்தைகளுக்காகப் பள்ளிச் சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்ட ஒரு சோதனை முன்னிலை சோதனைக்குட்படுத்தாமல் திருத்தியமைத்து வயதுவந்தோருக்குப் பயன்படுத்தப்பட்டால் அது ஏற்புடையதாக இருக்காது. அது வயது வந்தோருக்குத் தகுதியாக மாற்றப்பட வேண்டும்.

முன்னிலை ஏற்புடைமை மற்ற இரு ஏற்புடைமை அளவீடுகளிலிருந்து மாறுபடுகிறது. ஒரு சோதனையைத் திருத்தியமைத்து முன்னிலை ஏற்புடைமை உடையதாகச் செய்வதன்மூலம் அச் சோதனை ஏற்புடைமை உடையது எனக் கொள்ளலாகாது. ஒரு சோதனை ஏற்புடைமை உடையதாகக் கொள்வதற்கு அச் சோதனையை நேரடி அளவீட்டு ஏற்புடைமை ( Objective Validity ) சோதனைகளான உள்ளுறை ஏற்புடைமைக்கும், காரணி ஏற்புடைமைக்கும் உட்படுத்துதல் இன்றியமையாததாகும்.

முடிவாக, ஏற்புடைமைக் கூறுகளான முன்னிலை ஏற்புடைமை, உள்ளுறை ஏற்புடைமை, காரணி ஏற்புடைமை இவை மூன்றும் ஒருங்கே அமைந்த ஒரு சோதனையை நல்ல முறையில் உருவாக்கலாம். பெரும்பாலான சோதனைகளில் அளவீட்டு ஏற்புடைமைச் சோதனைகளான உள்ளுறை ஏற்புடைமைக்கும், காரணி ஏற் டைமைக்கும் உட்படுத்துதல் தேவையாகக் கருதப்படுகிறது.

- ச. உ.

**முன்னுரிமைப் பங்குகள் :** ஒரு நிறுவனத்தின் பங்கு மூலதனத்தின் ஒரு பகுதி கீழ்க்கண்ட இரண்டு தேவைகளையும் நிறைவு செய்தால் நிறுவனச் சட்டம் பிரிவு 85ன் படி அது முன்னுரிமைப் பங்காகக் கருதப் படும். அ) நிலையான ஒரு வீதத்தில் பங்கு ஆதாயத் தைப் பெறுவதில் முன்னுரிமைப் பெறுதல், அதாவது நிலையான ஒரு குறிப்பிட்ட சதவீதம் பங்கு ஆதாய மாகப் பெறுதல் ( எ.கா. 9 விழுக்காடு ), இந்தப் பங்கு ஆதாயம் நேர்மைப் பங்குகளை ( Equity shares ) வைத் திருப்பவர்களுக்கு எதுவும் கொடுப்பதற்கு முன்னர்த் தரப்பட வேண்டும். ஆ) தொழிலை மூடும்போது மூல தனத்தினைத் திருப்பிப் பெறுவதிலும் இப்பங்குகள் முன்னுரிமை பெறுகின்றன. மூலதனத்தைத் திரும்பப் பெறுவதில் தரப்படும் முன்னுரிமை அதிகமாகும். விருப்பப்பட்டால் முன்னுரிமைப் பங்குதாரர்கள் எஞ்சியுள்ள சொத்துகளிலும் பங்கு பெற உரிமை யுண்டு.

சுருக்கமாகச் கூறுவதாயின் முன்னுரிமைப் பங்கு கள் பங்கு ஆதாயத்திலும், மூலதனத்திலும் முன்னுரி மைப் பெற்றிருக்க வேண்டும். தொழிலை மூடும் போது உபரி இலாபத்திலும் உபரிச் சொத்திலும் பங்கு பெற முன்னுரிமைப் பங்குகளுக்கு உரிமை அளிக்கப் பட்டுள்ளது.

பங்கு கொள்ளும் முன்னுரிமைப்பங்கு ( Participating share ) என்பது ஒரு நிலையான வீதத்தில் பங்கு ஆதாயம் பெறும் உரிமையோடு, நேர்மைப் பங்குகளுக்குத் தரப்படும் பங்கு ஆதாயத்துடன் அல்லது ஒரு குறிப்பிட்ட வீதத்தை அவர்களுக்குச் செலுத்திய பின் னர் இருக்கும் பங்கு ஆதாயத்தைப் பெறும் உரிமை பெற்றதாகும். எ.டு. நேர்மைப் பங்கு களுக்கு நிலையான 12 விழுக்காடு பங்கு ஆதாயம் அளித்த பின்னர், முன்னுரிமைப் பங்குகளுக்கும் பங்கு ஆதாயம் தருதல். இப்போது முன்னுரிமைப் பங்கு களுக்குக் கிடைக்கும் மொத்தப் பங்கு ஆதாயம் ஒன்பது சதவீதம், 12 விழுக்காடு மற்றும் உபரியாக உள்ள இலாபத்தில் கிடைக்கும் பங்கு.

உபரியாக உள்ள இலாபத்தில் பங்கு பெறும் உரி மைப் பங்குகளை வெளியிடும் போதே அளிக்கப்பட வேண்டும். உபரிச் சொத்துகளைப் பங்கிட்டுக் கொள் ளும் உரிமை முன்னுரிமைப் பங்குகளுக்கு அளிக்கப் படும்போது கடனைத் திருப்பிச் செலுத்துதல், செலவு, முன்னுரிமைப் பங்கு ஆதாய நிலுவை செலுத்திய முன்னுரிமை மற்றும் நேர்மை மூலதனம் ஆகிய அனைத்தையும் செலுத்திய பின்னர் எஞ்சியுள்ளதைப் பகிர்ந்தளிப்பதிலும் முன்னுரிமைப் பங்குதா ரர்கள் பங்கு கொள்ள வேண்டும். பங்கு ஆதாயத்தைச் செலுத்துவதில் முன்னுரிமைப்பங்குகள் கூடுதல் அல் லது கூடுதலற்ற தன்மையுடைனவையாக இருக்க லாம். கூடுதலற்ற அல்லது சாதாரண முன்னுரிமை ஒவ் வோர் ஆண்டும் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு பங்கு ஆதாயம் பெறும் உரிமை தருவது. ஓர் ஆண்டு இலாபம் இல்லையென்றால் அந்த ஆண்டிற்கு எப் போதுமே பங்கு ஆதாயம் தரப்படுவதில்லை. ஆனால், கூடுதல் முன்னுரிமையில் ஓர் ஆண்டு பங்கு ஆதாயம் கிடைக்கவில்லையென்றாலும் அதனையும் சேர்த்துப் பின்வரும் ஆண்டுகளில் இலாபம் கிடைக் கும்போது பெற்றுக்கொள்ளலாம்.

கூடுதலற்றது என்று குறிப்பிடப்படவில்லை என் றால் முன்னுரிமைப்பங்குகள் அனைத்துமே கூடுதல் தன்மை பெற்றதாகக் கருதப்படும். எனவே, கூடுத லற்ற முன்னுரிமை என்றால் அது குறிப்பிடப்பட்டி ருக்க வேண்டும்.

**பங்கு ஆதாயத்தில் முன்னுரிமை :** முன்னுரி மைப்பங்குகள் பங்கு ஆதாயம் பெறுவதில் முன்னுரி மைப் பெற்றிருந்தாலும் ( 7 விழுக்காடு ) ஒவ்வோர் ஆண்டும் இந்த ஏழு விழுக்காடு பங்கு ஆதாயம் தர வேண்டும் என்பது கட்டாயமில்லை. பங்கு ஆதாயம் கிடைக்கும்போது முன்னுரிமை தரப்படுமேயன்றிப் பங்கு ஆதாயம் கட்டாயம் தரப்படவேண்டும் என் பது எதுவுமில்லை.

**மீட்கத்தக்க முன்னுரிமைப்பங்குகள் :** நிதி அடிப் படையில் இடர் முதல் ( Risk Capital ), கடன் முதல் ஆகிய இரண்டிற்குமிடையே வேறுபாடு காணப்படு கிறது. பங்கு கொள்ளும் உரிமை பெறாத முன்னு ரிமைப் பங்குகள் நிதி முறையில் நிறுவனத்தின் நேர்மைப் பங்காகக் கருதப்படுவதில்லை. ஆனால், சட்ட முறையில் அவை நிறுவனத்தின் பங்குகளாகக் கருதப்படுவதில்லை. அதேபோல் நிறுவனம் மூடப் படும்போது கடன் கொடுத்தவர்களுக்குப் பகிர்ந் தளித்த பின்னரே சொத்துகள் இப்பங்குதாரர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

முன்னுரிமைப் பங்குகளைத் திருப்பிச் செலுத்தும் வசதி செய்ய குழுமச் சட்டம் மீட்கத்தக்க முன்னுரி மைப் பங்குகளை வெளியிட அனுமதிக்கிறது. நிருவா

கக் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் இப் பங்குகளை மீட்க முடியும். மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகள் நிதி முறையில் பங்கு ஆதாயத்திற்கு நெருக்க முடைய ஒன்றாகும். சட்ட முறையில் இவை பங்கு களாகும். எனவே, இத்தகைய பங்குகள் பங்கு ஆதா யம், பங்கு ஆகிய இரண்டின் இயல்புகளையும் பெற்ற வையாகும். இத்தகைய பங்குகள் பற்றிக் குழுமச் சட்டத்தின் பிரிவு எண்பதில் விளக்கம் தரப்பட்டுள் ளது. பங்குகளால் வரையறுக்கப்பட்ட ஒரு குழுமம் மீட்கத்தக்க பங்குகளை வெளியிடும் உரிமை இச் சட்டத்தால் தரப்படுகிறது. ஏற்கனவே உள்ள பங்கு மூலதனத்தை மீட்கத்தக்க பங்காக மாற்ற முடியாது. வெளியிடும்போதே அவற்றை மீட்கத்தக்க பங்காக வெளிட வேண்டும்.

ஆகவே, சட்டப்படி ஒரு குழுமம் ஒரு குறிப்பிட்ட நாளில் அல்லது குறிப்பிட்ட காலத்திற்குப்பின்னர் அல்லது குழுமம் விரும்பும்போது மீட்கத்தக்க பங்கு களை வெளியிடலாம். ஆனால், அதற்கு நிறுவனம் சில கட்டுப்பாடுகளுக்கு கட்டுப்பட வேண்டும். அவை அ) பங்குகளை வெளியிடும் உரிமை அளிக்கப் பட்டிருக்க வேண்டும். ஆ) முழுமையாகச் செலுத்தப் பட்டிருந்தால் தான் பங்குகளை மீட்க முடியும். இ) பங்கு ஆதாயத்திற்கு ஒதுக்கப்பட்ட இலாபத்தி லிருந்து அல்லது புதிய பங்குகளை வெளியிடுவதன் மூலம் கிடைத்த பணத்திலிருந்து பயன்படுத்தலாம். இந்த இரண்டிலிருந்து மட்டுமே பங்குகளை மீட்க முடியும். ஈ) மீட்கும்போது காப்பீட்டுக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தால் அதனை இலாபத்தி லிருந்துதான் செலுத்த வேண்டும். உ) பங்குகளை இலாபத்திலிருந்து மீட்டால் அந்தத் தொகையை இலாபத்திலிருந்து முதல் மீட்பு இருப்புக் கணக்கிற்கு ( Capital Redemption Reserve Account ) மாற்ற வேண்டும். பின்னர் மீட்கத்தக்க முன்னுரிமைப் பங்குகளை மீட்க இப்பணத்தைச் செலுத்திய பங்கு முதல் போல் பயன் படுத்தலாம். இதனைக் குழுமம் உறுப்பினர்களுக்கு முழுவதும் செலுத்தப்பட்ட மிகையூதியப் பங்குகளை வெளியிடவும் பயன்படுத்தலாம்.

புதிய பங்குகளை வெளியிடுவதன் மூலம் முன்னு ரிமைப்பங்குகள் மீட்கப்பட்டால் மூலதனம் தானே சரியாகிவிடுவதால் முதல் மீட்பு இருப்புக் கணக்குத் தேவையில்லை. ஆனால், இலாபத்திலிருந்து அவை மீட்கப்பட்டால் குழுமத்தின் மொத்த முதல் நிலை யாக இருக்கும்படி செய்ய முதல் இருப்பு உருவாக்கப் படுவது அவசியமாகிறது. இந்த முதல் இருப்பினை மிகையூதியப் பங்குகளைச் செலுத்தப் பயன்படுத்த லாம். அப்போது இது பங்கு முதலாக மாறிவிடும். இப்பங்குகள் குழுமத்தின் எந்தச் சொத்தினையும் விற் பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயினால் மீட்கப்படுவதில்லை.

முன்னுரிமைப் பங்குகளை மீட்பதால் குழுமத்தின் மூலதனம் எவ்விதத்திலும் குறையாது எனக்குழுமச் சட்டம் பிரிவு 80 (3) குறிப்பிடுகிறது. ஏனெனில் பிரிவு 80 (4) இன் படி அதே அளவு புதிய பங்குகளை வெளி யிட்டு முதல் பெறும் உரிமை குழுமத்திற்கு அளிக்கப் பட்டுள்ளது.

குழுமத்தின் இருப்பு நிலைக்குறிப்பில், மொத்த மூலதனத்தில் மீட்கத்தக்க முன்னுரிமைப்பங்குகள் எவ்வளவு, எவ்வாறு எப்போது மீட்கப்பட வேண் டும், முன்னால் மீட்கப்பட்ட பங்குகள் விவரம் ஆகி யவை குறிப்பிட்டிருக்க வேண்டும். குழுமச் சட்டம் பிரிவு 80இன் படி நடக்கத்தவறிய குழும அலுவலர் ஒவ்வொருவரும் ரூ. 1000 /- தண்டத்தொகை செலுத்த வேண்டியிருக்கும்.

- பொ. பா.

**மூதாதையர் சொத்து** : மூதாதையர் சொத்து என்பது ஓர் இந்து ஆண் தன் தந்தையிடமிருந்தோ, தந்தையின் தந்தையிடமிருந்தோ, பாட்டனாரின் தந்தையிட மிருந்தோ பெற்றுக்கொண்ட சொத்தாகும். ஒரு வருக்கு வழியுரிமையாக ஆண் மூலமாகச் சொத்துப் பெறப்படுமானால் அது மூதாதையர் சொத்து ( Ancestral Property ) எனப்படும்.

மூதாதையர் சொத்தின் முக்கிய அம்சம் என்ன வெனில், மிதாட்சரச் சட்டத்தின் படி அத்தகைய சொத் தினைப் பெற்றுக்கொள்ளும் புதல்வர்கள், பேரன்கள், பேரன்களின் புதல்வர்கள் ஆகியோர் பிறப்பின் காரண மாகப் பிறந்தவுடனேயே அச்சொத்துக்களில் உரிமை யினைப்பெறுகிறார்கள். எ.கா. 'அ' எனும் ஒருவர் அசையும் சொத்தினையோ, அசையாச் சொத் தினையோ தம் தந்தையிடமிருந்தோ, பாட்டனா ரிடமிருந்தோ, பாட்டனாரின் தந்தையிடமிருந்தோ பெறுவராயின் அவர் ஆண் மகனுக்கு அது மூதாதையர் சொத்து ஆகும். 'அ' என்பவருக்கு மகனோ, பேரனோ, பேரனின் மகனோ இல்லையெனில் அவர்

அச்சொத்தினை முழு உரிமையாளராக அனுபவித்துத் தம் விருப்பப்படி பிறர்க்கு உரிமையாக்கலாம். அவர் உறவினர்கள் யாரும் அவர் உயிருடன் இருக்கும் வரையிலும் அச்சொத்தில் உரிமை எதும் கொண்டாட இயலாது.

தாய்வழிப் பாட்டனாரிடமிருந்து பெற்ற சொத்து மூதாதையர் சொத்து ஆகாது. அதுபோன்று சகோதரர்களிடமிருந்தோ, பெண்களிடமிருந்தோ பெறப்பட்ட சொத்தும் மூதாதையர் சொத்து ஆகாது.

மூதாதையர் சொத்தினின்று பெற்ற வருமானத்தைக் கொண்டு வாங்கப்பட்ட சொத்தும், மூதாதையர் சொத்துக்களினின்று பெறப்பட்டவையும் ( Sale proceeds of ancestral property ) மூதாதையர் சொத்தாகும். ஓர் இந்து ஆண் மகனுக்கு, மகன் பிறந்தவுடன், அவர் மூதாதையர் சொத்தில் மகனுக்குத் தந்தைக்குச் சமமான பங்கு உண்டு. தந்தையின் பங்கிற்கும் மகனின் பங்கிற்கும் தொடர்பு ஏதுமில்லை. தந்தை தம் பங்கை, சட்டம் அனுமதிக்குமானால் பிறர்க்கு உரிமையாக்கலாம். அது மகனுக்குச் சொத்தில் உள்ள உரிமையைக் கட்டுப்படுத்தாது. தந்தை தம் பங்கைக் குறிப்பிட்ட காரணங்களுக்காகவே பிறர்க்கு உரிமையாக்கலாம். அதாவது 1) தம் கடன்களைத் திருப்பிச் செலுத்த, தம் மூதாதையர் சொத்துகளை ( அசையும் சொத்தையோ / அசையாச் சொத்தையோ ) விற்பனை செய்யலாம். 2) தந்தை தம் கடமையினைச் செய்யுங்கால் தவிர்க்க முடியாத செயல்களைச் செய்வதற்காகப் புதல்வர்களின் இசைவின்றி, அசையும் சொத்தில் தம் பங்கில் தகுந்த பாகத்தைப் பிறர்க்கு உரிமையாக்கலாம். அன்பின் காரணமாகவோ, குடும்பத்தைப் பாதுகாப்பதற்காகவோ, துன்பத்தினின்று விடுதலை பெறுவதற்காகவோ, கொடையாகவோ அசையும் சொத்தில் தமக்குரிய பாகத்தைப் பிறர்க்கு விற்கவோ அளிக்கவோ செய்யலாம். 3) பக்தி காரணங்களுக்காக நியாயமான எல்லைக்குட்பட்டு அசையாச் சொத்தினை ஒரு தந்தை, தாம் உயிருடனிருக்கும்போது கொடையாக அளிக்கலாம்.

மூதாதையர் சொத்து என்பது இந்து சட்டத்தில் கூட்டுடைமையின் மரபுரிமையில் இணையுரிமை பெறக்கூடிய சொத்தின் ( Coparcenary property ) வகைப் பிரிவு ( Species ) ஆகும். அதாவது கூட்டுடைமையின் மரபுரிமையில் இணையுரிமை பெற்றவரின் சொத்து என்பதில் அவர் மூதாதையர் சொத்தும், தனிப்பட்ட சொத்தும் அடங்கும். ( தனிப்பட்ட சொத்து என்பது மூதாதையர் சொத்தின் உதவியால் ஈட்டப்பட்டுப் பொதுச்சொத்தோடு சேர்க்கப்பட்டதாகும்) எ.கா. ஒரு இந்து குடும்பத்தின் தலைவர் 'அ' என வைத்துக் கொண்டால், அவர் மகன், பேரன், பேரனின் மகன் ஆகியோர் கூட்டுமையின் மரபுரிமையில் இணையுரிமைபெறுவோர் ஆவர். இக்குடும்பத்தின் சொத்தில் ஒவ்வொருவருக்கும் 1/7 பாகம் உரிமையுண்டு.

அ 1/7

| | |
|---|---|
| ம 1/7 | ம 2 1/7 |
| மம 1/7 | ம 2 ம 2 1/7 |
| மமம 1/7 | ம 2 ம 2 ம 2 1/7 |

தந்தையிடமிருந்தோ, பாட்டனாரிடமிருந்தோ, பாட்டனாரின் தந்தையிடமிருந்தோ பெறப்பட்ட சொத்து மூதாதையர் சொத்து ஆகும். இவ்வாறு பெறப்பட்ட 1/7 பாகம் மூதாதையர் சொத்தாகிறது. எ.கா. ம1 என்ற அ வின் மகனுக்கு, மம1 என்ற மகனும், ஒரு மகளும் இருக்கிறார்கள் என வைத்துக் கொண்டால் கூட்டுடைமையின் மரபுரிமையில் இணையுரிமை பெறக்கூடிய சொத்து பிரிக்கப்பட்டு ம1 என்பவருக்கு மூதாதையர் சொத்தாகக் கிடைக் கிறது. ம1 இறந்துவிட்டாரெனில், அவர் பங்கு மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டு ம1 இன் விதவைக்கு ஒன்றும், மகளுக்கு ஒன்றும், மகனுக்கு ஒன்றும் அளிக்கப்படும். கூட்டுமையின் சொத்து பிரிக்கப் படாதிருக்கும்போது ம1 இறந்துவிட்டால், அச் சொத்து ஆறு பாகங்களாகப் பிரிக்கப்பட்டு மம1க்கு 1/6, மமம1க்கு 1/6, ம2விற்கு 1/6, மம2விற்கு 1/6, மமம 2 விற்கு 1/6, அ விற்கு 1/6 எனக்கொடுக்கப்படும் ( Law of Curvivorship ). ஆனால், இந்து வாரிசுரிமைச்சட்டம் 1956, ஆறாம் பிரிவின் கீழ், கூட்டுடைமைச் சொத்து பிரிக்கப்படாதிருக்கும்போது, ம1 மனைவியைவிட்டு விட்டு இறந்துவிட்டால் அச்சொத்து பிரிக்கப்பட்டது போல் கொண்டு மனைவிக்கு அவர் பங்கு அளிக்கப்படும் ( Notional Partition ). அவர் மனைவிக்குக் கொடுக்கப்பட்ட சொத்து பின்பு, அவர் மனைவி, மக்களிடையே சமமாகப் பங்கிட்டுக்கொள்ளப்படும்.

அ 1/7

| | |
|---|---|
| ம1 1/7 | ம 2 1/7 |
| மம 1 1/7 | ம ம 2 1/7 |
| மமம 1 1/7 | ம ம 2 1/7 |

*ம1* க்கு கொடுக்கப்படவேண்டிய 1/7 பங்கை முழுமையான மூதாதையர் சொத்தாகக் கொள்ளலாம். *ம1* இறந்துவிடுகிறார் அப்போது,

*ம 1* ——— விதவை 1/3 (3) முழுச்சொத்து

*மகன் - மம1* — *மகள்*
1/3 — 1/3

*ம1* ன் பங்கு மனைவிக்குக் கொடுக்கப்பட்டு, மகன், மகள் ஆகியோருடன் இணைத்துப் பிரிக்கப் படுகிறது. ஆக, *ம1* இறந்துவிட்டபின்பு, *ம1* ன் பங்கு மனைவிக்குப் பெயரளவாகக் கூட்டுடைமைச் சொத்தில் 1/7 பங்கு கொடுக்கப்படல் வேண்டும். அதன் பின்பு 1/7 பங்கு மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டு 1/21 விதவைக்கும், 1/21 மகனுக்கும், 1/21 மகளுக்கும் கொடுக்கப்படும். ஆக *மம1* விற்கு மொத்தமாகக் கூட்டுடைமைச் சொத்தில் 1/7 + 1/21 = 4/21 பங்கு கிடைக்கும்.

மூதாதையர் சொத்தினைப் பிரித்துக்கொள்ளுதல் பற்றி எளிதாகப் புரிந்து கொள்ள எ.கா. பொதுவாக மூதாதையர் சொத்தில் பெண்களுக்கு உரிமையில்லை. 'அ' என்பவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருக்கிறார்கள் எனக்கொண்டால் 'அ' வினுடைய மூதாதையர் சொத்தில் அவர் வாழ்நாளில் 'அ' விற்கு 1/2 பங்கும், அவரது மகனுக்கு 1/2 பங்கும் உண்டு. 'அ' என்பவர் இறந்துவிட்டால் அது அவர் தனிப்பட்ட சொத்தாகக் கருதப்பட்டு, அவர் மனைவி, மகன், மகள் ஆகியோருக்குச் சமமாகப் பிரித்தளிக்கப்படும்.

1/2 x 3 = 1/6

அ 1/2 ——— மனைவி 1/6

மகன் — மகள்
1/2 + 1/6 = 4/6 — 1/6

ஆக, 'அ' வினுடைய மூதாதையர் சொத்தில் அவருக்குப் பின்பு அவர் மகனுக்கு 4/6 பங்கும், மகளுக்கு 1/6 பங்கும், மனைவி 1/6 பங்கும் கொடுக்கப்படும்.

மூதாதையர் சொத்து எனக் குறிக்கப்படுவது இந்து சட்டத்தில் மட்டுமே காணப்படக்கூடிய ஒரு தனிக் கருத்து. இசுலாமியச் சட்டத்திலோ, கிறித்தவச் சட்டத்திலோ மூதாதையர் சொத்து ஈட்டிய சொத்து என்ற பாகுபாடு கிடையாது.

ஆகவே, மூதாதையர் சொத்து என்பது இந்து ஆண் மகன், தன் தந்தை, பாட்டனார், பாட்டனாரின் தந்தை ஆகியோரிடமிருந்து பெறப்பட்ட சொத்து ஆகும். இச்சொத்தில் அவருக்கும் அவர் புதல்வர்களுக்கும் அவர் வாழ்நாளில் சமமான உரிமைகள் உண்டு. அவருக்குக் கொடுக்கப்பட்ட பங்கு, அவருக்குப் பின்பு அவர் மனைவி, மக்களுக்குச் சமமாகப் பங்கிடப்படும்.

- டி.பி.

**மூர் ஜி. இ.** : தம் புலன் கடந்த பொருளியல், அறிவாய்வியல் கொள்கைகளின் மூலம் அண்மைய ஆங்கிலேயக் காட்சிப்பொருள் உண்மைக் கொள்கைக்கு ( Recent British Realism ) வித்திட்டவரும், சிறந்த அறவியல் கோட்பாட்டாளருமான மூர்.ஜி.இ. ( Moore, G.E) கி.பி 1873ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14ஆம் நாள் இலண்டனில் பிறந்தார். மூரின் பெற்றோர் தானியெல் மூர், என்ரியெல்டா சுடர்ச்சு ஆவர். மூர் முதலில் துலு ரிச் ( Dulurich ) கல்லூரியிலும், பின்னர்க் கேம்பிரிட் சிலுள்ள திரினிட்டி கல்லூரியிலும் கல்வி பயின்றார். கேம்பிரிட்சில் 1904ஆம் ஆண்டு வரை தங்கியிருந்த இவர் தம் முதல் நூலான **பிரின்சிபியா எதிகாவை** ( Principia Ethica ) 1903இல் வெளியிட்டார்.

***தீர்ப்புரையின் இயல்பு*** ( Nature of Judgement ) என்ற இவரது ஆய்வுக் கட்டுரை மனம் என்ற இதழில் கி.பி. 1899ஆம் ஆண்டிலேயே வெளிவந்தது. ***கருத்துக் கொள்கைக்கு மறுப்பு*** ( Refutation of Idealism ) என்ற கட்டுரை அந்த இதழிலேயே 1903இல் வெளிவந்தது. இக் கட் டுரைகள் ஆங்கிலேய மெய்ப்பொருளியலில் ஹெகல், காண்ட் ஆகியோரின் தாக்கத்தைப் புரிந்து கொள்ள உதவின. பின்னர் மூர் எடின்பெர்கிலும், அதன்பின் இலண்டனிலும் அறவியல் விரிவுரையாளராக 1911 வரை பணிபுரிந்தார். இவர் கேம்ப்ரிட்சுப் பல்கலைக்கழகத்தில் 1925ஆம் ஆண்டு முதல் 1939 ஆம் ஆண்டு வரை மெய்ப்பொருளியற் பேராசிரியராகப் பணிபுரிந் தார். அக்காலத்தில் இவர் டிரினாட் கல்லூரியின் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் 1921 முதல் 1947 வரை மனம் இதழின் பதிப்பாசிரியராகவும் விளங்கினார். அக்காலத்தில் பணிக்கான சிறப்புத் தகுதி விருதும், கொலம்பியா நாட்டு நிக்கொலாசு முர்ரே பட்லர்க் தங்க விருதும் இவருக்கு அளிக்கப்பட்டது. மூர் 1953ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் பதினான்காம் நாள் கேம்பரிட்சில் காலமானார்.

இவர் தம் காலத்திலேயே **அறவியல்** ( Ethics - 1912), **மெய்ப்பொருளில் ஆய்வுகள்** ( Philosophical Studies -1912 ), **மெய்ப்பொருளியலின் இன்றியமையாத சிக்கல்கள்** ( Some Main Problems of Philosophy - 1953 ), ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். இவரது காலத்திற்குப்பின் இவர் எழுதியனயாவும் 1954ஆம் ஆண்டில் தேர்ந்த மெய்ப்பொருளியல் ஆய்வுக்கட்டுரைகள் ( Selected Philosopical Essays ) என்ற பெயரில் தொகுதியாக வெளிவந்தது.

மூர் தம் புலன் கடந்த பொருளியல், அறிவாய்வியல் ஆகியவற்றில் கருத்துக் கொள்கையினரின் கோட்பாடான பொருள்களின் இருப்பு அறியப்படுவதில் தான் உள்ளது என்றும், அறிவானுக்குப்புறத்தே பொருள்கள் இல்லை என்றும் கூறுவதை மறுத்து, அறிவானுக்குப் புறத்தே பொருள்கள் இருக்கின்றன. அறியப்படுவதனால் அவற்றின் இருப்பு எவ்விதத்திலும் மாறுபடுவதில்லை என்ற காட்சிப்பொருள் உண்மைக் கொள்கையை நிலை நிறுத்துகின்றார். கருத்துக் கொள்கையினர் பொருள்களின் இருப்பு அறியப்படுவதில் தான் உள்ளது என்று கருதுவதற்குக் காரணம் அவர்கள் புலனுணர்ச்சியை ( Sensation ), உணர்வை ( Consciocesness ) அல்லது அறிதலை அறியப்படும் பொருள்களிலிருந்து பிரித்து அறியாதது தான் என்கிறார். அவர்கள் அறிதலுக்கும் இருப்பிற்குமிடையே உள்ள உறவு பொருள்களுக்கும் அதன் தன்மைக்கும் உள்ள உறவைப் போன்றதே என்று கருதுபவர்கள். அவ்வகையில் நீல வண்ணத்திற்கும், நீல நிற மணிக்கும் உள்ள உறவைப் போன்றது ஆகும். இது பிழையானது. ஏனெனில் கருத்துக் கொள்கையினர் அறிகின்ற செயலைப் புலனுணர்ச்சியின் ஒரு கூறாகக் கருதவில்லை.

மூரின் கருத்துப்படி புலனுணர்ச்சியின் உணர்வு, அறியப்படும் பொருள், அறிதலுக்கும் அறியப்படும் பொருள்களுக்குமிடையே உள்ள உறவு ஆகிய மூன்று கூறுகள் உள்ளன. இவ்வாறு கருதுவதால் முதலாவதாக ஒருவர் நீலவண்ணத்தைப் பற்றிய புலனுணர்ச்சியைப் பெற்றால் அவரது உணர்வு புறத்தேயுள்ள ஒரு பொருளில் தொடர்பு கொள்கிறது என்றும், அதனால் கருத்துக் கொள்கையினரின் சிக்கலான எண்ணச் சூழல்களிலிருந்து எவ்வாறு வெளிவருவது என்ற வினாவிற்கே இடமில்லையென்றும், இரண்டாவதாக நீல வண்ணம், அதைப் பற்றிய நுகர்வின் இருப்பைப் போன்றே இருப்பது என்றும், மூன்றாவதாகப் பொருளானது அது அறியப்படும் பொழுதும், அறியப்படாத பொழுதும் அவ்வாறே உள்ளது என்றும், அறிதலானது பொருளில் எவ்வித வேறுபாட்டையும் உண்டாக்குவதில்லை என்றும் அறியலாம்.

மூரின் கருத்துப்படி அறிவானுக்கும் அறியப்படும் பொருளுக்கும் இடையே உள்ள அறிதலின் தொடர்பு புறவயமானது என்று பொருள்படும். இவ்வாறு கூறுவதால் இவற்றைப் பற்றியெல்லாம் எதுவும் உணர வேண்டியிராத ஒரு தான் இருக்க முடியும் என்றாகிறது. இந்திய மெய்ப்பொருளியலின் நியாயக் கொள்கை, உயிர், வீடு பேற்றில் இன்ப துன்பங்களிலிருந்து மட்டுமன்றி அறிவிலிருந்தும் விடுபட்டிருக்கும் என்று கூறுவதை மேற்சொன்ன கருத்து ஒத்திருக்கின்றது. மூர் தம் கருத்துகளினால் கருத்துக் கொள்கையை முழுவதுமாக மறுத்துவிட்டார் என்று கருத முடியாது.

இவர் தம் அறிவியலில் நன்மை என்பதனை அதன் மெய்ப்பொருண்மை நிலையிலேயே ( Good in itself ) என்கிறார். அறவியல் தொடர்பற்ற எந்தச் சொற்களைக் கொண்டோ, கருத்தமைவுகளைக் கொண்டோ நன்மையை விளக்க முயல்வதை இயற்கோட்பாட்டுப் போலியாகும் ( Naturalistic fallacy ) என்று கூறுகிறார். ஒரு செயலின் நன்மை அல்லது தீமை உடனடியான உணர்வினால் மட்டுமே அறியப்பட வேண்டும் என்று இவர் கூறியது இவரை அறவியல் அகவுணர்வாளர் என்று குறிப்பிடும்படி செய்தது. மேலும் உள்ளார்ந்த இயல்பினாலேயே ஒரு குறிப்பிட்ட செயலை நன்மை என்று கருத வேண்டுமென்கிறார். மூரினுடைய நன்மை, உரிமை போன்றவற்றில் மதிப்பீடு பின்னர் குறிக்கோள் நிலையான பயன்நெறி முறைக் கோட்பாடு ( Ideal Utilitaranism ) என்று சொல்லப்பட்டது.

- பி. ஆர். ந.

**மூலதன அங்காடி :** மூலதன அங்காடி என்பது எல்லா நீண்டகால நிதி நடவடிக்கைகளையும் உள்ளடக்கியது. பணமும் மூலதனத்தின் ஒரு கூறு. எனவே, பண அங்காடியும் மூலதன அங்காடியில் ( Capital Market ) ஒரு பகுதியாகும். நீண்டகால நிதியை வாங்குவோரும், அளிப்பவரும் மூலதன அங்காடியில் அடங்குவர். இவர் தவிர, இடைத்தரகர்கள் அல்லது நிதி

நிறுவனத்தோர் ஆகியோரும் செயற்படுகின்றனர். இவர்கள் பற்றியும், மூலதன அங்காடியின் பணிகள், அங்குப் பயன்படுத்தப்படும் கருவிகள், அவ்வங்காடியின் முக்கியத்துவம், இந்திய மூலதன அங்காடி ஆகியவை பற்றியும் குறிப்பிடுவது இன்றியமையாததாகிறது.

**முக்கியத்துவம்** : தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரை, மூலதன அங்காடி மூளையாகச் செயற்படுகிறதென்பர். புதிய தொழில்கள் தொடங்கவும், பழைய தொழில்களை விரிவடையச் செய்யவும் தேவையான நீண்டகால நிதியை மூலதன அங்காடி கிடைக்கச் செய்கிறது. இந்நிதி தொழில் முயல்வோர்கள், உண்மைச் சொத்துகள் வாங்கவும், கட்டுப்படுத்தவும், உற்பத்தியில் ஈடுபடுத்தவும், உற்பத்தி செய்ததை வழங்கவும் உதவுகிறது. தொழிலகங்களுக்குத் தேவையான அந்நிய முதலையும் பெற்றுத் தருகிறது.

**மூலதன அங்காடியின் பணிகள்**

**சேமிப்பையும் முதலீட்டையும் மிகுதிப்படுத்துதல்** : மூலதன அங்காடி பலதரப்பட்ட நிதிச் சொத்துகளை உருவாக்கித் தருகிறது. அவற்றின் நீர்மைத் தன்மையையும், சந்தைப்படுத்தும் தன்மையையும் எளிதாக்குவதன் மூலம் சேமிப்பு நடத்தைத் தூண்டுகிறது. நிதிக்கருவிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் மூலம் முதலீட்டாளர்களின் தேவையையும், சேமிப்பாளர்களின் விருப்பத்தையும் நிறைவு செய்து முதலாக்கத்திற்கு வழியமைக்கிறது.

**பலதிறப்பட்ட பயன்களிடையே நிதியைப் பங்கிடுதல்** : பொருளாதார வளர்ச்சியில் இப்பணி முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. நிதிப்பங்கீடு மூன்று வழிகளில் நடைபெறுகிறது. அ) மூலதன அங்காடிக் கருவிகளிலிருந்து பெறக்கூடிய இலாபத்தின் அடிப்படையில் பங்கிடுதல். இந்த இலாபம் தராதரச் செலவு, தராதர இடர், தராதர நீர்மைத் தன்மை ஆகியவற்றைச் சார்ந்தது. அவையே நிதி அளிப்பவரையும், பெறுபவரையும் பாதிக்கக்கூடியவை. ஆ) நிறுவனத் தொடர்பான கட்டுப்பாடுகள் இருப்பின் அந்த அடிப்படையில் பங்கிடுதல். அதனை மூலதனப் பங்கீடு என்றும் கூறலாம். இ) அரசுக் கட்டுப்பாடுகள் இருப்பின் அதன் அடிப்படையில் பங்கிடுதல். இந்த அரசுக் கட்டுப்பாடு பல்வேறு முதலீடுகளிலிருந்து பெறக்கூடிய இலாபத்தைச் சமமாக்கும் முயற்சி ஆகும். தனியார் நிறுவனங்கள், துறைகள், மண்டலங்களுக்கிடையே புலனாகும், புலனாகா நிதிச்சொத்துகளை மாற்றுவதற்கு உதவுதல்.

நிதிச்சொத்துகள், கடன் பொறுப்புகள் ஆகியவற்றை எளிதாக்க மூலதன அங்காடி சில கருவிகளைக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

**மூலதன அங்காடிக் கருவிகள்** : வேண்டும் உரிமைகளும் ( வைப்புகள், குறுகிய கால வேண்டும் உரிமைகள், நீண்டகால வேண்டும் உரிமைகள் ) - சந்தைப்படுத்தக் கூடியவை, சந்தைப்படுத்த முடியாதவை, சமபங்குகளும் ( சந்தைப்படுத்தக்கூடியவை, சந்தைப்படுத்த முடியாதவை ) மூலதன அங்காடிக் கருவிகளாகும்.

**மூலதன அங்காடியில் பங்கேற்போர்** : தனியார் நிறுவனங்கள், அரசு நிறுவனங்களால் நிதிக்கான தேவை ஏற்படுகிறது. நிதித் தேவையை நிருணயிக்கும் காரணிகள் வருமாறு அ) பொதுப் பொருளாதாரச் சூழல் ஆ) கடன் வாங்கும் நிறுவனத்தின் சிறப்பம்சங்கள்.

அ) வாணிக நிலை, தொழில் நிலை, தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தும் நிலை, நிதிக் கொள்கை ஆகியவை பொருளாதாரச்சூழலில் அடங்கும்.

ஆ) விலைப் போக்குகள், இலாப எதிர்பார்ப்புகள், மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன், கடன் வாங்கும் நிறுவனங்களின் முதலீட்டுச் சிக்கல்கள், இந்நிறுவனங்களின் பண்டங்கள், பணிகளுக்கான தேவை ஆகியவை நிதித்தேவையை நிருணயிக்கின்றன.

**அளிப்புப் பகுதி** : நீண்டகால நிதி அளிப்பு குடும்பத்துறைச் சேமிப்பு, நிறுவனச் சேமிப்பு, அந்நிய முதல், அமைப்பு முறையிலான முதலீட்டாளர்கள், அரசு ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெறுகிறது.

நீண்டகால நிதிக்கான தேவை அளிப்புக்கு இடையே ஒப்புறுதி முகவர்களும், வெளியீட்டு நிறுவனங் களும், சிறப்பு நிதி நிறுவனங்களும், புதிய, பழைய பங்கு மாற்று அங்காடிகளும் இடை நிறுவனங்களாகச் செயற்படுகின்றன.

**இந்திய மூலதன அங்காடி** : இந்திய மூலதன அங்காடி வளர்ச்சி குன்றியதாக உள்ளது. திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் இவ்வங்காடி இல்லை. இந்திய மூலதன அங்காடி இரு பிரிவுகளைக் கொண்டதாக இயங்கி வருகிறது. ஒன்று,

ஒழுங்குபடுத்தப்பட்ட மூலதன அங்காடி, இதில் இந்திய மைய இருப்பு வங்கியும், வணிக வங்கிகளும் அடங்கும். மற்றொன்று ஒழுங்குபடுத் தப்படாத மூலதன அங்காடி. இதில் நாட்டு வங்கி யாளர்கள் அல்லது வட்டிக்கடைக்காரர்கள் அடங் குவர்.

விடுதலைக்கு முன், கடன் பத்திரங்களை வெளி யிட ஏற்றதாக, இந்தியப் பொருளாதார அமைப்பின் மிகப்பெரிய துறையான வேளாண்மைத்துறை இல்லை. அந்நிய ஆட்சி காரணமாகத் தொழில் துறை யும் வளர்ச்சியடையவில்லை. எனவே, பத்திர அங்காடி இந்தியாவில் வளர்ச்சியடையவில்லை. அப்போது நிலவிய நிருவாக மேலாண்மை முறையும் இதற்கு மற்றுமொரு காரணமாகும்.

விடுதலைக்குப்பின், 1951 முதல் திட்டங்களின் கீழ் அமையும் தொழில் வளர்ச்சி, வங்கி வளர்ச்சிக்கும், மூலதன அங்காடி வளர்ச்சிக்கும் வழிவகுத்தது. இந்திய மையஇருப்பு வங்கியும், பல சிறப்பு நிதி நிறுவனங்களை ஏற்படுத்தியது. முதலீட்டாளர்களைப் பாதுகாக்கச் சட்டங்கள் பல இயற்றப்பட்டன. நிதி நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்தத் தொடங் கியது. அந்நிய மூலதனம் நாட்டிற்குள் வரத் தொடங் கியது. நிறுவனப் பத்திரங்களில் முதலீடு செய்ய, மக் கள் காட்டி ஆர்வம் பெருகியது.

**சட்டங்கள்** : நிறுவனங்கள் வளர்ச்சிக்கும், நிதி நட வடிக்கைக் கட்டுப்பாட்டுக்குமான அரசு பல சட்டங் களை இயற்றியது. அவற்றுள் 1947ஆம் ஆண்டின் மூலதன வெளியீட்டுச் சட்டம், மூலதன வெளியீட்டுக் கண்காணிப்பாளருக்குப் புதிய மூலதன வெளியீடு களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. நிறுவனம் சரியாகச் செயற்படவும், விரிவடையவும், திட்ட நோக்கங்களை நிறைவு செய்யும் வகையில் செயற்படவும் அவ்வதிகாரம் வழங்கப்பட்டது. பொதுநன்மை, நிதி அடிப்படையிலான ஏற்புடைமை, மூலதன அங்காடி நிலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு புதிய மூலதன வெளியீடுகளுக்கு அக் கண் காணிப்பாளர் அனுமதி வழங்குவர். பின்னர் உரு வாகிய 1956ஆம் ஆண்டின் இந்திய நிறுமச் சட்டம், நிறுவனங்களின் விதிமுறைகள், பங்குகள் அவை வழங்கப்படும் முறைகள், பங்குதாரர்களின் உரிமைகள் ஆகியவை பற்றி விளக்கம் தருகிறது. இவை முத லீடு செய்ய விரும்புவோரின் நலனைப் பாதுகாக்கும் வகையில் உள்ளன. 1970ஆம் ஆண்டின் முற்றுரிமை மற்றும் தடைப்படுத்தப்பட்ட வணிகச்சட்டம், தனியாரிடம் அதிகாரம் குவிந்து வருவதைத் தடுக்கிறது. மேலும், 1973ஆம் ஆண்டின் அந்நியச் செலவாணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் அயல்நாட்டுச் செலவாணியில் மோசடி நடைபெறாமல் செய்வதோடு அயல் நிறு வனங்கள் இந்நாட்டில் புதிய கிளைகள் தொடங்கச்சிறப்பு அனுமதியும் வழங்கியது.

**முதலீட்டு உணர்வு** : நிறுவனத்தின் சமபங்குகளை வாங்கும் எண்ணம் 1960 முதல் வலுவடைந்து வரு கிறது. மக்கள் தொழில் நிறுவனங்களில் முதலீடு செய் யும் எண்ணம் உடையவர்களாகவும், அதிலும் இலாபம், பாதுகாப்பு, முதலீட்டு மதிப்பு ஆகிய வற்றை ஆராய்ந்து பங்குகளைத் தேர்ந்தெடுத்து முதலீடு செய்பவர்களாகவும் மாறி வருகின்றனர்.

**ஒப்புறுதிச் செயல்கள்** : இந்தியாவில் 1961 முதல் இந்தியத் தொழில் நிதிக்கழகம், இந்தியத் தொழில் மற்றும் வளர்ச்சி வங்கி, இந்தியத் தொழில் கடன் மற்றும் முதலீட்டுக் கழகம், ஆயுள் காப்பீட்டு நிறு வனம் ஆகியவை தர முன்வந்த ஆதரவினால் பங்குத் தரகர்களும், வங்கிகளும் தொழில் நிறுவனங்களின் பங் குகளை ஒப்புறுதி செய்வது மிகுதியாகிக் கொண்டே வந்து, 1982 -83இல் 99 விழுக்காடானது.

**நிதி நிறுவனங்கள்** : வணிக வங்கிகள் நீண்ட காலக் கடன் வழங்குவதன் மூலமும், நிறுவனங்களின் பத் திரங்கள் பங்குகளை ஒப்புறுதி செய்வதன் மூலமும், அவற்றின் பேரில் கடன் வழங்குவதன் மூலமும் நேர டியாகவும், மறைமுகமாகவும் மூலதன அங்காடி வளர்ச்சிக்குத் துணை செய்கின்றன. மேலும், இவை வழங்கும் குறுகிய காலக்கடன் சுழன்று, நீண்டகாலக் கடனாகிறது.

இந்தியத் தொழில் நிதிக்கழகம், இந்திய ஒருமப் பொறுப்பாளகம் ( Unit Trust of India ) தொழில் மற்றும் வளர்ச்சி வங்கி ஆகியவை கடன் வழங்கல், கடன் முன்பணம் தருதல், ஒப்புறுதி செய்தல், பங்குகளில் முதலீடு செய்தல் போன்ற நடவடிக்கைகளை மேற் கொண்டு தொழில் வளர்ச்சிக்கு உதவுகின்றன.

இந்திய மைய இருப்பு வங்கியும், ஒழுங்கற்ற மற் றும் ஒழுங்குபடுத்தப்பட்ட மூலதன அங்காடியின் பகுதிகளை ஒருங்கிணைக்க நடவடிக்கைகள் மேற் கொண்டு வருகிறது. அதன் கிராமபுறக்கடன்திட் டமும், உண்டியல் அங்காடித் திட்டமும், நாட்டு டைமையாக்கப்பட்ட வங்கிகளும் மூலதன அங்காடி யின் அடிப்படையை வலுப்படுத்துகின்றன.

**இந்திய மூலதன அங்காடியில் தேவை :** ஒவ்வொரு திட்டத்தின் கீழும், தொழில் வளர்ச்சிக்கான முதலீடு கூடியதால், நிதித் தேவைக் கூடியது. பொதுத் துறைஃயப் பொறுத்தவரை அரசின் கடன் பத்திரங்களின் எண்ணிக்கையும், தொகையும் கூடின. இந்தக் கடன் பத்திரங்களுக்குரிய அங்காடி தங்க முனைப் பத்திர அங்காடி எனப்பட்டது. இத்தகைய கடன் பத்திரங்களின் மதிப்பு 1980இல் ஏறத்தாழ ரூ. 12,000 கோடி ஆகும். இதில் உள்ளாட்சி நிறுவனங் களின் கடன் பத்திர மதிப்பு இரண்டு விழுக்காடு ஆகும். மாநில அரசுக் கடன் பத்திர மதிப்பு இருபத் தொரு விழுக்காடு ஆகும். மீதி மைய அரசுக்கடன் பத்திரங்களாகும்.

இவை தவிர, தனியார் நிறுவனங்களுக்கு நிலையான மூலதனம் பெறவும், சுழலும் மூலதனம் பெறவும், நிதி தேவைப்படுகிறது.

**இந்திய மூலதன அங்காடியில் நிதியளிப்பு :** மூல தன அங்காடிக்குக் குடும்பத்துறையிலிருந்தும், தொழில் துறையிலிருந்தும் நிதி கிடைக்கிறது. பங்கு அங்காடி, சிறப்பு நிதி நிறுவனங்கள் ( IFC, HFC, CIDCO, IDBI போன்றவை ) புதிய மூலதன வெளியீட்டு அங்காடி ஆகியவை நிதியளிப்புச்செய்யும் நிறுவனங்களாகும். பொதுச்சேமநல வைப்பு நிதி, வணிக வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக்கழகம் போன்றவை குடும்பத்துறைச் சேமிப்பைத் திரட்டி நிதியளிக்கின்றன.

**புதிய மூலதன வெளியீட்டு அங்காடி :** புதிய மூலதன வெளியீடானது, தொழில் நிறுவனங்கள், புதிய மூலதனம் பெற முயல்வதைக் குறிக்கிறது. புதிய பங்குகள், கடன் பத்திரங்கள், உரிமைகள், வைப்புகள் ஆகிய வடிவங்களில் இப்புதிய வெளியீடு அமையலாம். இவ்வங்காடி மூன்று வகைப் பணிகளைச் செய்கிறது. அ) புதிய மூலதன வெளியீடுகளுக்கான இலாப சாத்தியக் கூறுகள் பற்றி ஆராய்கிறது. ஆ) புதிய மூலதன வெளியீடுகளுக்கு ஒப்புறுதி செய்கிறது. இ) முதலீட்டாளர்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளிக்கிறது.

பங்கு அங்காடி பெரும்பாலும் பழைய வெளியீடுகளுக்கானது. புதிய மூலதன வெளியீடு அங்காடியும், பங்கு அங்காடியும், மூலதன அங்காடியின் இரு பகுதிகளே. இரண்டும் ஒரே மாதிரியான காரணிகளால் பாதிக்கப்படுகின்றன. இவையிரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்திருக்கக்கூடியவை.

இந்தியாவில் இப்புதிய வெளியீடு அங்காடி சிறப்பாகச் செயற்படவில்லை என்பதை பல ஆய்வுகள் விளக்குகின்றன. அண்டை நாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட போர்களும், புதிய வெளியீடுகளுக்கு உரிய சூழ்நிலையை அரசு ஏற்படுத்தித் தராததும் காரணங்களாகும்.

இவ்வங்காடியில் 1980ஆம் ஆண்டுக்குப்பிறகு சிறிது வளர்ச்சி காணப்படுகிறது. ஏனெனில் 1980ஆம் ஆண்டு தொழிற்கொள்கை புதிய கடன் பத்திரங்களைப் பங்குகளாக மாற்றவும், அயல்நாட்டு நிறுவனங்கள், சிமெண்ட் உரம் போன்ற உள்நாட்டுக் குழுமங்களில் முதலீடு செய்யவும், ( நாற்பது விழுக்காடு பங்குகள் வரை வாங்கலாம் ) ஏழு ஆண்டுகளில் செலுத்தப்படக்கூடிய கடன் பத்திரங்கள் மீதான வட்டியை உயர்த்தவும் வழிவகை செய்தது.

- க. த.

**துணை நூல்கள் :**

1. Gadgil, P.G, Godgil, P. L., 1985, **Industrial Economy of India**, S. Chand & Co, Ram Nagar, NewDelhi.

2. Gupta, G., 1974, **Readings in Industrial Finance**, MacMillan Company, London.

3. Gupta, S. B., 1970, **Monetary Economics**, S. Chand & Co, Ram Nagar, NewDelhi.

**மூலதன ஆக்கம் :** மூதல் ஆக்கம் என்பதும், மூலதனக்குவிப்பு என்பதும், மூலதனத் திரட்சி என்பதும் ஒரே பொருளைத் தருபவை. எதிர்காலத்தில் நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக நடப்புக் காலத்தில் கிடைக்கப்பெறும் சாதனங்களில் ஒரு பகுதியை, மூலதனப்பண்டங்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்துவதே முதல் ஆக்கம் எனப்படுகிறது. விரிவாகச் சொல்லப்போனால், நிகழ்கால உற்பத்தி நடவடிக்கைகள் அனைத்தும் நிகழ்கால நுகர்வுத் தேவையைச் சமாளிக்கப் பயன்படுவதில்லை. அவற்றில் ஒரு பகுதியை, இயந்திர சாதனங்கள், கருவிகள், போக்குவரத்துச்சாதனங்கள், ஆலைகள், அணைகள் ஆகியவற்றை உருவாக்கப் பயன்படுத்துவதே முதல் ஆக்கம் எனப்படும். இவ்வாறு ஒரு நாட்டில், ஒரு குறிப்பிட்ட காலத்திலிருக்கும், மூலதனப் பண்டங்களின் இருப்பை மிகுதிப்படுத்தும் முறையே முதலாக்கமாகும் ( Capital Formation ).

மேற்கண்டவாறு முதலாக்கத்தை விளக்குகையில் நர்க்சு என்ற அறிஞர் மூலதனப் பருப்பொருட்களையே குறிப்பிட்டார். சிங்கு என்ற அறிஞரோ, முதலாக்கம் என்பது, பருப்பொருள் மட்டுமல்லாது, புலனாகா மூலதனப் பொருட்களையும் கணக்கில் எடுத்துக் கொள்வதைக் குறிக்கும். எ.கா. உயர்கல்வி, உடல் நலம், ஆராய்ச்சி ஆகியவற்றிற்கான செலவும் முதலாக்கத்தில் அடங்கும். இது அண்மைக்காலமாக மனித வள மேம்பாடு அல்லது மனித முதலாக்கம் என்று கூறபடுகிறது.

பொருளாதார வளர்ச்சிக்கு மூலதனம் ஒரு தேவையான காரணி எனினும் அது மட்டுமே போதுமானது ஆகாது. இருப்பினும், பொருளாதார வளர்ச்சியில் இன்றியமையாததாக இருப்பது முதல் ஆக்கம் ஆகும். முதலாக்கம், உற்பத்தித் திறனை மிகுவிக்கச் செய்கிறது. ஏனெனில், உழைப்பின் உற்பத்தித்திறன் கூடும், உற்பத்தி கூடும். அதனால் வேலைவாய்ப்பும் வருமானமும் கூடும். பண வீக்கம் கட்டுப்படுத்தப் படும். வாழ்க்கைத் தரம் உயரும். பண்டங்களுக்கான தேவை கூட, சந்தை விரிவடையும். இறக்குமதி குறையும். வாணிகச்செலுத்து நிலை சீரடையும்.

முதலாக்கம் மிகுந்துள்ள நாடுகள் பொருளாதார முறையில் வளர்ச்சியடைந்துள்ளன. முதலாக்கம் குறைவாக உள்ள நாடுகள் பின் தங்கிய நாடுகளாக உள்ளன. அந்நாடுகளில் ஏழ்மையின் நச்சுவட்டம் காணப்படுகிறது.

திருமதி சோசன்இராபின்சன் என்ற பொருளியல் அறிஞர், ஒரு பொருளாதார அமைப்பு, தகு வளர்ச்சி வீதத்தை அடையும் காலமே அதன் பொற்காலம் என்கிறார். தகு வளர்ச்சி வீதம் என்பது நிலையான இலாப வீதம் நிலவுகையில் பெறக்கூடிய நிலையான உயர்ந்தளவு முதலாக்க வீதமாகும்.

**முதலாக்க நிலைகள்** : முதலாக்கம் மூன்று நிலைகளில் நடைபெறுகிறது. 1. தேசிய சேமிப்பை மிகுதிப் படுத்துவது, 2. அச்சேமிப்பைத் திரட்ட தேவையான வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை ஏற்படுத்து வது, 3. திரட்டிய சேமிப்பை உற்பத்தி வழியில் முதலீடு செய்வது.

**1. சேமிப்பைக் கூட்டுதல்** : செலவு போக எஞ்சியுள்ள வருவாயே சேமிப்பாகும். இதை S=Y-C எனக் குறிப்பிடலாம். S - சேமிப்பு, Y - வருவாய், C - நுகர்வுச் செலவு.



**சேமிப்பைப் பாதிக்கும் காரணிகள்** : வருவாய் மிகுதியாக இருந்தால், சேமிப்பும் மிகுதியாகும். வருவாய் குறைவாக இருந்தால், சேமிக்கும் திறன் குறையும். இது தவிர, நுகர்வுச்செலவைக் குறைப்பது தியாகம் செய்வது போன்றது. எதிர்காலப் பாதுகாப்பு, சமூகப்பெருமை என்று பல நோக்கங்களுக்காக மக்கள் சேமிக்கிறார்கள். சேமிப்பது ஒரு பழக்கமாகக் கூட இருக்கலாம். சேமிப்பதற்காகச் செய்யப்படும் தியாகத்திற்கு நட்ட ஈடாகத் தரப்படுவது வட்டி ஆகும். வட்டி மிகுதியாகயிருந்தால் சேமிக்கும் விருப்பமும் தூண்டப்பட்டு சேமிப்பு கூடும். எனவே, சேமிக்குந் திறனையும், சேமிக்கும் விருப்பத்தையும் திறனையும் பொறுத்து சேமிப்பு அமைகிறது.

**சேமிப்பு மூலங்கள்** : 1. தனி மனிதர்களும், தொழில் நிறுவனங்களும், அரசும் சேமிக்கின்றன. இவற்றில் தனி மனிதர்களின் சேமிப்பே, மொத்தச் சேமிப்பில் அதிகப்பங்கு வகிக்கிறது. 1984 - 85ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இந்தியாவின் மொத்த தேசிய சேமிப்பில், அரசுத்துறைப்பங்கு 6.7 விழுக்காடு, நிறுவனச் சேமிப்பு 3.7 விழுக்காடு, தனி மனிதர் அல்லது குடும்பத்துறைச் சேமிப்பு 89.6 விழுக்காடு ஆகும். நிறுவனச்சேமிப்பு, நிறுவன இலாபத்தில் பிரித்துத் தரப்படாத பகுதியாகும். அரசின் சேமிப்பு, வரிகள் மூலமும் அரசு நிறுவனங்களின் இலாபம் மூலமும் பெறப்படுகிறது.

2. வங்கிகள், நிதி நிறுவனங்கள் ஏற்படுத்துதல் - தொழில் புரட்சிக்கு முன்பு, தொழில்கள் சிறிய அளவில் குடும்பத்தொழில்களே மேற்கொள்ளப்பட்டன. தொழில் முயல்வோர் தங்கள் சேமிப்பையே தங்கள் தொழிலில் முதலீடு செய்தனர். பற்றாக்குறை ஏற்பட்டால், கடன் வாங்கினர்.


தொழிற்புரட்சிக்குப் பின் தொழில் நுட்பம் விரிவடைந்ததால், பெரிய ஆலைகள் தோன்றின. அவற்றிற்கு மிகுதியான மூலதனம் தேவைப்பட்டது. ஒருவராலேயே, அந்த அளவு மூலதனத்தைப் பெற முடியாது. இந்த வகையில், சேமிப்பவர்களும், முதலீடு செய்பவர்களும் வேறுபடத்தொடங்கினர். சேமிப்பவரிடமிருந்து சேமிப்பைத் திரட்டி முதலீட்டாளர்களுக்கு வழங்கும் வேலையை வங்கிகளும், நிதி நிறுவனங்களும் செய்கின்றன. அந்நிறுவனங்கள், சேமிப்புகளை வைப்புகளாகத் திரட்டி, தொழில் முயல்வோருக்குக் கடனாகத் தருகின்றன. வங்கிகள் மிகுதியாக இருந்தால்தான் சேமிப்பைத் திரட்ட முடியும். முதலீட்டாளருக்கு மூலதனப் பொருளை வாங்க வும்,

பயன்படுத்தவும் தேவையான நிதியைக் கடனாகத் தரமுடியும். இதனால் முதலீடு விரிவடையும்.

3. முதலீடு செய்தல் - முதலீடு என்பது மூலதனப் பொருட்கள் உற்பத்தி அல்லது பயன்படுத்துவதாகும். தொழில் முயல்வோர் மிகுதியாக முதலீடு செய்வதால், மூலதன பொருள்களின் உற்பத்தி பெருகும். தம் நிறுவனத்தின் இலாபத்தில் ஒரு பகுதியையோ அல்லது வங்கியிடமிருந்து கடன் பெற்றோ முதலீடு செய்வர். கடன் வாங்கும்போது வங்கிக்கு வட்டி செலுத்த வேண்டும். அந்த வட்டி அந்த நிறுவனம், முதலீட்டிற்கான மேற்கொள்ளும் செலவாகும். அதனை மூலதனத்தின் தேவை விலை அல்லது வாங்கும் விலை எனலாம். தொழில் முயல்வோர் முதலீடு செய்வது இலாபத்தை எதிர்பார்த்தே ஆகும். மூலதனப்பொருட்கள் சிலகாலம் பயன்படக் கூடியவை. ஆதலால் அவற்றிற்கான ஆயுட்காலம் வரை அவற்றின் முதலீடு செய்வது மூலம் இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, மூலதனப்பொருட்களைப் பெறுதல், பயன்படுத்துதல் ஆகியவற்றிற்காகும் செலவைவிட, அவற்றிலிருந்து கிடைக்கப் பெறுவதாக எதிர்ப்பார்க்கப்படும் இலாபம் மிகுதியாகயிருந்தால் தான் அத்தகைய முதலீட்டை மேற்கொள்வர். இவை இரண்டிற்கும் உள்ள தொடர்பு கீழ்வருமாறு குறிக்கப்படுகிறது.

$$C = \frac{R_1}{(1+r)} + \frac{R_2}{(1+r)^2} + \frac{R_3}{(1+r)^3} \ldots \frac{R_n}{(1+r)^n}$$

C - என்பது ஓர் அலகு. மூலதனப்பொருள்களின் நிகழ்கால விலை $R_1\ R_2\ R_3 \ldots R_n$ - கூடுதல் மூலதனப் பொருள்களால் அதன் ஆயுட்காலம் வரை ஒவ்வொரு ஆண்டும் எதிர்ப்பார்க்கப்படும் நிகர இலா பம். r - இலாப வீதம். இதனை மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் என்றும் கூறுவர். இது வட்டி வீதத் தோடு ஒப்பிடப்படுகிறது. முதலாக்க நிலைகளைக் கீழ்வருமாறு குறிப்பிடலாம்.




சேமிப்பவர்கள், முதலீட்டாளர்களின் நடவடிக்கைகள் சமூக, உளவியல் முறையிலான காரணிகளைப் பொறுத்தவை என்பது தெரிய வருகிறது. இதனால், முதலாக்கத்தைத் துல்லியமாகவும், அறிவு முறையாகவும் அளவிட இயலாத நிலை ஏற்படுகிறது. இருப்பினும், ஓர் ஆண்டின் மொத்த முதலீடே அவ்வாண்டின் மொத்த முதலாக்கமாகும். இதிலிருந்து தேய்மானச் செலவைக் கழித்தால் கிடைப்பது நிகர முதலாக்கமாகும்.

**முதலாக்கம் செய்பவர் யார்** : நாட்டுக்கு நாடு இவர்கள் வேறுபடுகின்றனர். முதலாளித்துவ நாடுகளில் தனியாரும், சமதர்ம நாடுகளில் அரசும், கலப்புப் பொருளாதாரத்தில் அரசும், தனியாரும் முதலாக்கத்தைச் செய்கின்றனர்.

**முதலாக்கம் குறைவாக இருப்பதற்குக் காரணங்கள்** : பின்தங்கிய நாடுகளில் முதலாக்கம் ஐந்து விழுக்காடும், அமெரிக்கா, மேற்கு செர்மனி போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் இருபத்தைந்து விழுக்காடும் இருக்கிறது.

பின்தங்கிய நாடுகளில் முதலாக்கம் குறைவாக இருப்பதற்குக் காரணங்களாவன. 1. குறைந்த வருவாய், தனியாள் வருவாய் குறைவாக இருப்பதால் சேமிப்புக்குறைவாக உள்ளது. அது மட்டுமன்றி நுகர்ச்சி நாட்டமும் மிகுதி. எனவே, நுகர்வுச் செலவு மிகுந்துள்ளது. 2. குறைந்த உற்பத்தித்திறன் - இது இயற்கை வளப்பொருட்கள் பயன்படுத்தப்படாததாலோ, குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்டதாலோ, தவறாகப் பயன்படுத்தப்பட்டதாலோ நிகழலாம். இதற்குத் தொழில் நுட்பத்திறனற்ற உழைப்பே காரணம். 3. மக்கள்தொகை மிகுதி - மக்கள் தொகை அதிக வீதத்தில் வளர்ச்சியடைவதால் தனியாள் வருவாய் குறைந்து சேமிப்பும் குறைவாக உள்ளது. 4. தொழில் முயற்சிஇன்மை - தொழில் முயல்வோர் தொழில் தொடங்க முன்வராததாலும், விதியில் நம்பிக்கை உடையவராக இருப்பதாலும், இடர்தாங்கும் மனவலிமை அற்றவராக இருப்பதாலும் முதலீடு செய்ய முன்வருவதில்லை. எனவே, முதலாக்கம் குறைவாக உள்ளது. 5. மூலதனப் பொருட்கள் பற்றாக்குறை - மூலதனச் செலவு பின்தங்கிய நாடுகளில் தேசிய வருமானத்தில் 5 - 6 விழுக்காடு ஆகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் 15 - 20 விழுக்காடாகும். வளர்ச்சியடைந்த நாடுகளில் ஒரு தொழிலாளிக்கு ரூ 40,000 மதிப்புள்ள மூலதனப்பொருட்கள் கிடைக்கப்

பெறுகின்றன. பின்தங்கிய நாடுகளில் ரூ. 10,000 மதிப்புடைய மூலதனப்பொருட்களே கிடைக்கின்றன. 6. வருமானப் பகிர்வில் ஏற்றத் தாழ்வு - வருமானப் பகிர்வில் ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு காணப்படுவதால் மொத்தச் சேமிப்பு குறைவாக உள்ளது. 7. சிறிய அங்காடி - வருமானம் குறைவாக இருப்பதால் பண்டங்களின் தேவை குறைய, அங்காடியின் அளவு குறைகிறது. இது முதலீட்டைப் பாதிக்கிறது. 8. நிதி நிறுவனங்கள் வளர்ச்சியடையாமை - நிதி நிறுவனங்களும், மூலதனப்பங்கு அங்காடிகள் போன்றவையும் வளர்ச்சியடையாததால் சேமிப்பைத் திரட்டுவதும், முதலீட்டை மேற்கொள்வதும் தடைபடுகிறது. 9. தொழில் நுட்ப முறையில் பின்தங்கியிருத்தல் - பழமைக்கருவிகள், பழமையான உற்பத்தி ஆகியவற்றின் முறைகளால் உழைப்பின் உற்பத்தித்திறன் குறைவாக உள்ளது. 10. பற்றாக்குறை நிதியாக்கம் - பற்றாக்குறை நிதியாக்கம் பணவீக்கத்தை ஏற்படுத்துவ த ல், பண்டங்களின் விலை கூடுகிறது. இதனால் நுகர்வுச் செலவு மிகுதியாகிச் சேமிப்பு குறைகிறது. 11. எடுத்துக்காட்டு விளைவு - மக்கள் தங்கள் அருகில் வாழ்வோரின் வாழ்க்கைத் தரத்தைப் பார்த்து, அவ்வித வாழ்க்கைத் தரத்தைப் பின்பற்ற முயல்வர். இவ்வாறு பின்பற்றுவது எடுத்துக்காட்டு விளைவு எனப்படுகிறது. இதனால் நுகர்வுச்செலவு மிகுதியாகச் சேமிப்புக் குறைந்து முதல் ஆக்கமும் குறையும்.

**உள்நாட்டு மூதல் ஆக்கத்தின் மூலங்கள்** : உள்நாட்டு முதலாக்கத்தின் மூலங்களைக் கீழ்வருமாறு குறிக்கலாம். 1. கிடைக்கும் வளங்களையும், இருக் கும் தொழில் நுட்ப முறையையும் திறமையாகப் பயன்படுத்தித் தேசிய வருவாயைப் பெருக்குதல், 2. விளம்பரங்கள் மூலம் சேமிப்பைத் தூண்டுதல், 3. நிதி மற்றும் வங்கி நிறுவனங்களை ஏற்படுத்துதல், 4. தங்கக் கடன் பத்திரங்களை அரசு விற்பதன் மூலம், தங்கச் சேமிப்பைத் தவிர்க்கச் செய்தல் அல்லது குறிப்பிட்ட அளவுக்கு மேல் தங்கமாகச் சேர்த்து வைப்பதைச் சட்ட முறையில் செல்லாததாக்குதல், 6. இலாபத்தை மிகுதிப்படுத்துதல் - ஆர்தர்லூயிசு என்ற அறிஞர் சேமிப்பு வீதமானது தேசிய வருவாய்க்கும், இலாபத்திற்கும் உள்ள வீதத்தைச் சார்ந்தது என்கிறார். 7. மூலதன விலை வீழ்ச்சியிலிருந்து பாதுகாப்பு அளிப்பதன் மூலம் இலாபத்தை மிகுதிப்படுத்தினால் சேமிப்பையும் முதலீட்டையும் மிகுதியாக்கலாம். மேலும் குறைந்த அளவு பண வீக்கத்தை ஏற்படுத்தினாலும் இலாபம் கூடும் என்கிறார். ஏன் ஏழை நாடுகளில் சேமிப்புக்குறைவாக உள்ளதென்றால் அவை ஏழை நாடுகள் என்பதால் அல்ல. ஆனால், அங்கு நிறுவனத் துறை சிறியதாக இருப்பதாலேயே ஆகும் என்று ஆர்தர் லூயிசு குறிப்பிடுகிறார். ஆனால் காட்கில் என்ற அறிஞரோ பணவீக்கம் சமூக அமைதியின்மையையும், சமூக அளவில் விரும்பப்படும் பொருட்களை உற்பத்தி செய்யாத நிலையையும் ஏற்படுத்தும் என்று முன்னறிவிப்புச் செய்கின்றார். 8. நிதி நடவடிக்கைகள் - வரி விதிப்பதன் மூலமும், வரிச் சலுகைகள் மூலமும் பொதுக்கடன் மூலமும் சேமிப்பையும், முதலீட்டையும் பெருக்கி முதலாக்கத்தை மிகுதிப்படுத்த முடியும். 9. மறைமுக வேலையின்மையைப் பயன்படுத்துதல் - மறைமுக வேலையின்மை காரணமாக உழைப்பின் இறுதி நிலை உற்பத்தித்திறன் பூச்சியமாக உள்ளது. இந்த உபரி உழைப்பை அணை கட்டுதல், சாலை போடுதல் போன்ற பணிகளில் ஈடுபடுத்தினால் முதலாக்கம் ஆகும்.

**முதல் ஆக்கத்தின் வெளிநாட்டு மூலங்கள்** : 1. அந்நிய நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி, 2. இறக்குமதியைக் குறைத்தல், 3. வாணிக வீதத்தை உதவியானதாக மாற்றுதல் ஆகியவற்றின் மூலம் அந்நிய மூலதனப் பண்டங்களின் இறக்குமதியும், தொழில் நுட்பமும் கிடைக்கப்பெறுவதால் மூலதனப் பொருட்களின் இருப்பு மிகுதியாகும்.

பின்தங்கிய நாடுகளில் உள்நாட்டு முதலாக்கம் குறைவாக உள்ளதால், வெளிநாட்டு மூலதனம் பெற்றே அத்தகைய நாடுகள் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துகின்றன. இது, காலப் போக்கில் வெளிநாட்டைச் சார்ந்திருக்கும் நிலை ஏற்படுத்தி, அரசியல் சுதந்திரத்தையே பாதிக்கலாம். எனவே, உள்நாட்டு முதலாக்கத்தைப் பெருக்குவது இன்றியமையாததாகும்.

- க. த.

**மூலதன ஆதாய வரி** : அரசுகள் பல வழிகளில் வருவாயைப் பெறுகின்றன. அவற்றுள் ஒன்று வரி வருவாய் ( Tax Revenue ). இந்தியாவில் மைய அரசும் மாநில அரசுகளும் பலவிதமான நேரடி வரிகளையும், மறைமுக வரிகளையும் ( Indirect Taxes ) விதிக்கின்றன. இந்தியப் பேரரசின் நேரடி வரிகளில் ஒன்று மூலதன ஆதாய வரி ( Capital Gains Tax ).

மூலதனச் சொத்துகளை ( Capital Assets ) விற்பதன் மூலம் அல்லது மாற்றுவதன் மூலம் அச்சொத்தின் சொந்தக்காரருக்குக் கிடைக்கும் ஆதாயத்தின் மீது விதக்கப்படுவது மூலதன ஆதாய வரி. இந்தியப் பேரரசு முதலில் 1947இல் இவ்வரியை விதித்துப் பல இடையுறுகளைக் கருதி 1950இல் வரியை விலக்கிக் கொண்டது. ஆனால், இந்திய அரசின் வருவாயைப் பெருக்குவதற்கான பல வழிகளைப் பரிந்துரைக்க அழைக்கப்பெற்ற பேராசிரியர் கால்டார் ( Prof. Kaldor) என்பவரின் பரிந்துரைக்கேற்ப இவ்வரியை இந்தியப் பேரரசு 1956ஆம் ஆண்டில் மீண்டும் விதித்தது. வரி செலுத்தத்தக்கவரின் ஆண்டு மொத்த வருமானம் ரூ. 10,000க்குக் குறைவாக இருந்தால் மூலதன ஆதாய வரி இல்லையென்றும், மொத்த ஆண்டு வருமானம் ரூ. 10,000க்கு மிகுதியாக இருந்தால் மூலதனச் சொத்துப் பரிமாற்றத்தில் அவர் பெற்ற ஆதாயம் ரூ.5,000க்கு அதிகமாக இருப்பின் அவர் மூலதன ஆதாய வரி செலுத்தத்தக்கவர் என்றும் அறிவிக்கப்பட் டது. நிலம் அல்லது கட்டடம் போன்ற சொத்துகளின் விற்பனையின் மூலம் கிடைக்கப்பெறும் மூலதன ஆதாயமாக இருப்பின் அந்த மூலதன ஆதாயம் நிறுவனங்கள் தவிரப் பிறரால் பெறப்படும் நீண்டகால மூலதன ஆதாயமாக இருப்பின் 1972 ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 31ஆம் நாள் முடிய அத்தகை மூலதன ஆதாயத்தில் ரூ. 5,000க்குக் கழிவு நீக்கிய தொகையில் நாற்பத்தைந்து விழுக்காடு அளவு வரி செலுத்துபவரின் மொத்த வருமானத்தில் கழித்துக் கொள்ளப்படும் முறை வழக்கத்தில் இருந்தது. இத்தகைய மூலதன ஆதாயமான நிலம், கட்டடம் தவிரப் பிற சொத்துகளின் விற்பனை மூலமாகக் கிடைக்கப் பெறின் அம் மூலதன ஆதாயத்தில் ரூ.5,000க்குக் கழிவு நீக்கிய தொகையில் அறுபத்தைந்து விழுக்காடு அளவு வரி செலுத்துபவரின் மொத்த வருமானத்தில் கழித்துக் கொள்ளப்படும் முறை இருந்தது.

நிலம் மற்றும் கட்டடங்களின் விற்பனையிலிருந்து நிறுவனங்கள் பெறும் நீண்டகால மூலதன ஆதாய வரியின் விழுக்காடு நாற்பதிலிருந்து நாற்பத்தைந்தாகவும் பிற சொத்துகளின் விற்பனையிலிருந்து நிறுவனங்கள் பெறும் நீண்டகால மூலதன ஆதாய வரியின் விழுக்காடு முப்பதிலிருந்து முப்பத்தைந்தாகவும் உயர்த்தப்பட்டன. நகர்ப்புறங்களில் உள்ள வேளாண்மை நிலங்களின் விற்பனைக்கும் 1970 - 71 இலிருந்து மூலதன ஆதாய வரி விரிவுபடுத்தப்பட்டது.

இந்தியப் பொருளாதார நிலைகளுக்குப் பொருத்தமற்றதொரு வரி என்று மூலதன ஆதாய வரியைக் குறிப்பிடுபவர்கள் இவ்வரி நெகிழ்வுத்தன்மையற்றது. சமத்துவத் தன்மையற்றது, முதலிடுவதையும் தொழில் வளர்ச்சியையும் கேடுறச் செய்யத்தக்கது என்று குறைகூறுவர்.

- என். எஸ். பா.


**துணை நூல் :**

1. Mithani, D. M., and Mures Bunby., 1984, **International Trade and Public Finance**, Himalaya Publishing House, Bombay.

**மூலதன இருப்பு :** மூலதன இருப்பு என்பதைப் பொருளியில் அறிஞர்கள் பண்டங்களின் அலகின் அடிப்படையிலும் வணிகவியல் அறிஞர்கள் நிதி அலகின் அடிப்படையிலும் விளக்குகின்றனர். இவ்விரு அணுகுமுறையும் விரிவாக விளக்கப்படுகிறது.

பொருளியல் அறிஞர்களின் கருத்துப்படி, மூலதன இருப்பு ( Capital Stock ) என்பது ஒரு நிறுவனத்தில் குறிப்பிட்ட காலத்தில் இருப்பில் உள்ள மூலதனப் பொருட்களின் அளவாகும். மூலதனப் பொருட்கள் என்பவை இயந்திரங்கள், கருவிகள், மூலப்பொருட்கள் போன்ற பொருட்களாகும்.

மூலதன இருப்புக் கூடுவது என்பது, புதிய மூலதனப்பொருட்களை உற்பத்தி செய்து இருப்பில் வைத்தலாகும். இதற்காக முதலீடு செய்யப்படுகிறது. இவ்வுற்பத்திக்குத் தேவைப்படும் மூலதனப் பொருட்களின் விலை உயரும். இதனால் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் குறையும். மூலதன இறுதிநிலை ஆக்கத்திறனும், வட்டிவீதமும் சமமாகும் வரை மூலதன இருப்பைக் கூட்டலாம். இதுவே விரும்பத்தக்க மூலதன இருப்பாகும்.




Y - அச்சில் வட்டி வீதமும், X - அச்சில் மூலதன இருப்பும் குறிக்கப்பட்டுள்ளன.

மூ், இ, ஆ என்பது மூலதன இறுதிநிலை ஆக்கத் திறனாகும். மூலதன இருப்பு மிகுதியாக மிகுதியாக இது குறைகிறது என்பதை இக்கோட்டின் சரிவு காட்டு கிறது. $r_1$ - என வட்டி வீதம் குறையும்போது மூலதன இருப்பை $k_1$ - ஆக்க, முதலீட்டை மேற்கொள்ளலாம். மூலதனம் இருப்பு ஆகிய இவை இரண்டு தவிர நுகர் வுப் பொருட்களின் விலை, கூலி மூலதனப்பொருட் களின் ஆயுட்காலம் ஆகியவற்றையும் பொறுத்தது. இதனை $k_0 = f(p, w, n, q, r)$ எனலாம். இங்கு $k_0$ என் பது விரும்பத்தக்க மூலதன இருப்பு, p நுகர்வுப் பொருட்களின் விலை, w கூலி, n மூலதனப் பொருட் களின் ஆயுட்காலம், q மூலதனப் பொருட்களின் விலை, r வட்டி வீதம் இங்கு மற்ற காரணிகள் மாறா திருந்தால் விரும்பத்தக்க மூலதன இருப்பு, வட்டி வீதத்தைப் பொறுத்து மாறும்.

வணிகச்சுழல் என்ற கருத்தை விளக்குகையில், கால்டர் என்ற பொருளியல் அறிஞர், வணிகச்சுழல் ஏற்படுவதற்கு மூலதன இருப்பில் ஏற்படும் மாற்ற மும் ஒரு முக்கிய காரணம் என்கிறார். அவரது கூற்றுப் படி, சேமிப்பு மூலதன இருப்போடு நேரடித் தொடர் புடையது. முதலீடு தலைகீழ் தொடர்புடையது. குறிப்பிட்ட வருமானம் இருக்கும்போது, மூலதன இருப்பு மிகுதியாகயிருந்தால் சேமிப்பும் மிகுதியா இருக்கும். ஆனால் முதலீடு குறைவாக இருக்கும்.

I முதலீட்டு வளைகோடு, s சேமிப்பு வளைகோடு தொடக்கத்தில் B புள்ளியில் பொருளாதார அமைப்பு சமநிலையில் இருப்பதாகக்கொண்டு கால்டர் வணிகச் சுழலை விளக்குகிறார். இங்கு B புள்ளி உறு திச் சமநிலையைக் குறிக்கிறது. ஏனெனில் வருமான மும், முதலீடும் மிகுதியாக உள்ளன.

முதலீடு அதிகமாக இருப்பதால் மூலதன இருப்பு கூடுகிறது. மூலதன இருப்புக் கூடுவதால் மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் குறைகிறது. முதலீட்டு வளைகோடு கீழ்நோக்கி மாற்றமடையும். மூலதன இருப்பென்பது செல்வம் போன்றதாகையால், மூல தன இருப்புகூட சேமிப்பும் கூடும். சேமிப்பு வளை கோடு மேல்நோக்கி மாற்றமடையும். இதனால் B இடப்புறம் மாற்றமடைந்து C-யை நெருங்கும் ஒரு நிலையில் இரு வகைக்கோடுகளும் ஒன்றுக் கொன்று தொடுகோடுகளாகும். இது உறுதியற்ற சமநிலை யாகும். சேமிப்பு மிகுந்திருப்பதால் பொருளாதார நடவடிக்கைகள் சுருங்கத் தொடங்கும்.

முதலீடு தேவையைவிடக் குறைவாக இருப்ப தால், மூலதன இறுதிநிலை ஆக்கத்திறன் விரிவடை யும். அதனால் முதலீட்டு வளைகோடு மேல்நோக்கி மாற்றமடையும். அதனால் சமநிலையும் மாற்றமடை யும். ஒரு நிலையில் சேமிப்பு முதலீடு வரைகோடுகள் ஒன்றுக்கொன்று தொடுகோடுகளாக இதுவும் உறுதி யற்ற சமநிலையாகும். இதில் முதலீடு அதிகமுள்ள தால் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடையும். இவ்வாறு வணிகச் சூழலுக்கான காரணத்தை நாட் டின் மூலதன இருப்பின் அடிப்படையாகக் கால்டர் விளக்குகிறார்.

**வணிகவியலார் விளக்கம்** : வணிகவியலார், கருத் துப்படி மூலதன இருப்பு என்பது மூலதனப் பண்டங் களைப் பெற, தேவையான நிதியைத் திரட்ட நிறு வனங்கள் விற்கும் பங்குகளைக் குறிக்கிறது. இத்தகைய மூலதன இருப்பு மூலதனக் கணக்கிலிருந்து வேறுபட் டது. மூலதனக் கணக்கு என்பது ஒரு நிறுவனத்தின் இருப்பு நிலை அறிக்கையில் குறிக்கப்படும் விவரங் களாகும்.

கூட்டுருவாக்கம் பெற்ற ஒரு நிறுவனத்தின் மீதான மொத்த உரிமையும் சிறுசிறு அலகாகப் பிரிக்கப்பட் டுள்ளது. இவையே பங்குகள் எனப்படும். இவை அனைத்தும் பங்குக்கோவை எனப்படும். பங்குகளை வாங்குவோர் பங்குதாரர் எனப்படுகிறார். ஒரு நிறு வனத்தின் பங்குக்கோவை 1,00,000 என்றும் ஒருவர் 100 பங்குகள் வாங்கியுள்ளார் என்றும் கொண்டால், அவரது உரிமை 1/1000 என்று கணக்கிடப்படுகிறது.

நிறுவனங்களின் பங்குக் கோவை பொதுவாக, முதலில் முதலீட்டு வங்கிகளால் முதலீட்டாளருக்கு விற்கப்படுகின்றது. இவ்வங்கிகள் ஒப்புறுதியர் எனப் படுகின்றன. அமெரிக்காவில் மண்டலங்களுக் கிடையேயான பங்குகளின் மதிப்பு 30,000 டாலருக்கு மேல் இருந்தால், அவை, பத்திரம் மற்றும் மாற்ற ஆணையரிடம் பதிவு செய்யப்படவேண்டும். அவ் விவரத்தைக் குறிக்கும் தகவலறிக்கையை விற்கும் பங்குடன் இணைத்துத் தர வேண்டும். தாம் வாங்கிய பங்குகளைப் பங்குதாரர் மறு விற்பனை செய்யலாம்.

**மூலதன இருப்பு இயல்புகள்** : சாதரணப் பங்கு கள் மூலதன இருப்பு அதன் உடைமையாளருக்குச் சில உரிமைகளை வழங்குகிறது. அவையாவன: 1) 1956 ஆம் ஆண்டின் நிறுவனச் சட்டப்படி, பங்குதாரரின் பெயர், முகவரி, அவருக்கு உரிமையுள்ள பங்குகள்,

அவற்றின் எண்கள், அவற்றின் மீது செலுத்தப்பட்ட தொகை ஆகிய விவரங்கள் அடங்கிய நிறுவன முத்திரையிட்ட பங்குச் சான்றிதழ் வழங்கப்படும். அச்சான்றிதழில் மேலோப்பம் இட்டோ அல்லது முழு அதிகாரப்படிவத்தில் பங்குதாரர் மேலொப்பம் இட்டோ பங்குகளை விற்கலாம். 2) நிறுவனத்தின் நடவடிக்கைகளுக்காகவே பங்குதாரர் அளித்த நிதி பயன்படுத்தப்படும். 3) இயக்குநரவை அறிவிக்கும் பங்காதாயத்தைப் பங்குதாரர்கள் தங்கள் பங்குகளுக்கேற்பப் பெறுவர். நிறுவனம் கடனில் மூழ்கினால், மற்ற கடன்கள் எல்லாம் திருப்பித் தரப்பட்டபின், மீதியிருக்கும் சொத்துகளில் பங்குகளுக்கேற்பத் தொகைப்பிரித்துத் தரப்படும். 4) நிறுவனத்தின் பதிவேடுகளைப் பார்வையிடப் பங்குதாரருக்கு உரிமையுண்டு. 5) இப்போது வைத்துள்ள பங்குத்தொகைக்கேற்ப, புதிய வெளியீடுகளை அவை பொதுமக்களிடையே விற்கப்படுவதற்கு முன்னரே வாங்கப் பங்குதாரருக்கு உரிமையுண்டு. 6) நிறுவனத்தின் சில நடவடிக்கைகளை முடிவு செய்கையில், வாக்களிக்க இவர்களுக்கு உரிமையுண்டு.

**மூலதன இருப்புடன் பயன்படுத்தப்படும் பிற கருத்துகள்**

**அனுமதிக்கப்பட்ட பங்குக்கோவை** : நிறுவனத்தின் பட்டயம் அனுமதிக்கும் உயர்ந்தளவு பங்கு எண்ணிக்கையே அனுமதிக்கபட்ட பங்குக்கோவையாகும்.

**வெளியிடப்பட்ட பங்குக்கோவை** : வெளியிடப்பட்ட பங்குகள் அனுமதிக்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விட குறைவாகவோ, சமமாகவோ இருக்கலாம். பங்குகள் வெளியிடப்பட்டபின், நிறுவனம் சில பங்குகளை வைத்துக்கொண்டால் அவற்றிற்குக் கருவூலப் பங்குக்கோவை என்பது பெயர்.

**பங்குக்கோவைப் பிளவு** : ஒரு நிறுவனம் தன்னிடம் உள்ள வசூலாகாத பங்குகள் ஒவ்வொன்றையும் குறைந்த மதிப்புக்கொண்ட ஒன்றுக்கு மேற்பட்ட அலகுகளாகப் பிரிப்பது பங்குக்கோவைப் பிளவு எனப்படும். இத்தகைய பங்குக்கோவைப் பிளவு நிறுவனத்தின் அளவையும், பங்குதாரரின் உரிமையையும் பாதிக்காது. பொதுமக்கள் வாங்கும் வகையில், நிறுவனம் தனது பங்குகளின் விலையை இவ்வாறு அமைக்கிறது.

**பங்குகளின் வகைகள்** : பங்குகள் பரவலாகக் கீழ் வருமாறு பிரிக்கப்படுகின்றன. 1. முன்னுரிமைப் பங்குகள், 2. பொதுநிலைப் பங்குகள், 3. நிறுவனப் பங்குகள்.

**1. முன்னுரிமைப்பங்குகள்** : முன்னுரிமைப் பங்குகளுக்குப் பங்காதாயத்தில் முன்னுரிமை உண்டு. இலாபத்தை ஒட்டிப்பங்காதாயம் நிர்ணயிக்கப்படுவதில்லை. எப்போதும் ஒரே வீதம் தரப்படுகிறது. பங்காதாயத்திலும், நிறுவனம் கலைக்கப்படும் போது கடன்கள் தரப்பட்ட பின் எஞ்சியுள்ள சொத்திலும் பங்கு பெற முன்னுரிமை உண்டு. இவற்றை மேலும் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**அ) பங்கேற்கும், பங்கேற்காத முன்னுரிமைப் பங்குகள்** : எல்லாப் பங்குகளுக்கும் பங்காதாயம் தரப்பட்ட பின்னும் எஞ்சியுள்ள இலாபத்திலும், நிறுவனம் கலைக்கப்படும்போது, கடன்களும், பங்குத் தொகைகளும் திருப்பித்தரப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கும் சொத்திலும் பங்குபெற உரிமையுள்ள பங்குகள் பங்கேற்கும் முன்னுரிமைப் பங்குகளாகும். அவ்வுரிமையில்லாதவை பங்கேற்கா முன்னுரிமைப் பங்குகளாகும்.

**ஆ) குவிவு முன்னுரிமைப் பங்குகள், குவியா முன்னுரிமைப் பங்குகள்** : ஓராண்டில் இலாபம் இல்லையெனில் அவ்வாண்டில் செலுத்தப்பெறாதிருக்கும் பங்காதாய நிலுவை, பின்வரும் ஆண்டுகளின் இலாபங்களிலிருந்து செலுத்தப்பட்டால், அவ்வகைப் பங்குகளே குவிவு முன்னுரிமைப்பங்குகள் எனப்படும். அத்தகைய சலுகையைப் பெறாதவை குவியா முன்னுரிமைப்பங்குகள் எனப்படும்.

**இ) மீள்தகு முன்னுரிமைப் பங்குகள்** : ஒரு நிறுவனம் தன் பங்குகளைத் தன் ஆயுட்காலத்தில் தானே வாங்க முடியாது. ஆனால், மீள்தகு முன்னுரிமைப் பங்குகளை அந்நிறுவனம் வெளியிடலாம். அவற்றைக் குறிப்பிட்ட நாளில் அல்லது குறிப்பிட்ட காலம் கடந்த பின் நிறுவனம் சில நிபந்தனைகளுக்குட்பட்டு மீட்டுக் கொள்ளலாம்.

**2. பொதுநிலைப் பங்குகள்** : எந்தவித முன்னுரிமையும் பெறாத பங்குகள் பொதுநிலைப் பங்குகளாகும். அவற்றைச் சாதாரணப் பங்குகள் என்று சொல்லலாம். நிறுவனம் பெறும் இலாபத்தைப் பொறுத்து இவை பெறும் பங்காதாயம் அமையும்.

**3. நிறுவனப் பங்குகள்** : தனி நிறுவனத்தைத் தோற்றுவிப்போர் இவ்வகைப் பங்குகளை வாங்க

லாம். இவை இலாபம் மிகுந்த ஆண்டுகளில் இவர்களுக்கு ஏனையோரைக் காட்டிலும் மிகுந்த அளவு பங்காதாயம் கிடைக்க வழியுண்டு.

பொதுவாக, பங்குகள் நிறுவன அமைப்பைக் குடியாட்சி முறைக்குட்படுத்துவதாக ஒரு கருத்து நிலவுகிறது.

- க. த.

**மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் :** மூலதனம் அனைத்துப்பேரியல் பொருளாதாரக் கோட்பாடுகளிலும் முக்கியத்துவம் வகிக்கிறது. ஒரு தொழிலில் பயன்படுத்தப்படும் மூலதனம் அதன் உற்பத்தித் திறனைச் சார்ந்தது. முதலீட்டின் மூலம் தொழில் முயல்வோர் பெறும் உற்பத்தியே அவர் செய்யும் முதலீட்டின் அளவை நிருணயிக்கிறது.

கூடுதலாகப் பயன்படுத்தப்படும் மூலதனத்திலிருந்து எதிர்ப்பார்க்கப்படும் இலாபமே மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் ( Marginal Productivity of Capital ) எனப்படுகிறது. மூலதனத்திற்குச் செலுத்தப்படும் விலை வட்டி ஆகும். அம்மூலதனத்தை முதலீடு செய்வதால் இலாபம் கிடைக்கிறது. எதிர்பார்க்கப்படும் இலாபம் வட்டியைவிட அதிகமாக இருக்கும் போது முதலீடு அதிகரிக்கிறது. முதலீட்டை அதிகரிக்கும்போது அதற்கு ஆகும் கூடுதல் செலவு, அதிலிருந்து எதிர்பார்க்கப்படும் இலாபம் இரண்டையும் ஒப்பிட்டு இலாபம் அதிகமாக இருக்கும்வரை தொழில் முயல்வோர் முதலீட்டினை அதிகரித்துக் கொண்டேயிருப்பர்.

**மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறனை அளவிடுதல் :** மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறனை அளவிட மூலதனச் சொத்தின் விலையை எடுத்துக்கொள்ள வேண்டும். மூலதனச் சொத்திற்குத் தொழில் முயல்வோர் செலுத்தும் விலை அளிப்பு விலை ( Supply price ) எனப்படும். அடுத்து முதலீட் டின் மூலம் எதிர்பார்க்கப்படும் வருவாயை கணக் கிட வேண்டும். ஒரு மூலதனச்சொத்து நீண்ட காலத் திற்குப் பொருள்களை உற்பத்தி செய்து வருவாய் தரக் கூடியது. எனவே, மூலதனச்சொத்தின் ஆயுட்காலம் முழுவதற்கும் எதிர்பார்க்கப்படும் வருவாயைக் கணக்கிட வேண்டும். இந்த அளிப்பு விலையும் எதிர் பார்க்கப்படும் வருவாயுமே மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் அல்லது எதிர்பார்க்கப்படும் இலாப வீதம் ஆகும். ஒரு மூலதனச் சொத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் அதன் அளிப்பு விலையுடன் சமமாவதற்கு எந்த வீதத்திலும் அதனைக் கழிவு செய்ய வேண்டுமோ அந்த வீதத்தையே மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத் திறனென்று கீன்சு கூறுகிறார்.

அளிப்பு விலை = கழிவு செய்யப்பட்ட எதிர்பார்க்கப்படும் வருவாய்

$$C = \frac{R_1}{(1+r)} + \frac{R_2}{(1+r)^2} + \frac{R_3}{(1+r)^3} \dots \frac{R_n}{(1+r)^n}$$

C = அளிப்பு விலை

$R_1 R_2 R_3 \dots R_n$ = மூலதனச் சொத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய்

r = கழிவு வீதம் ( எதிர்பார்க்கப்படும் வருவாய் அளிப்பு விலையுடன் சமமாவதற்குப் பயன்படுத்தப்படும் கழிவு வீதம் )

எனவே r என்பது எதிர்பார்க்கப்படும் இலாப வீதம் அல்லது மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத் திறன் ஆகும்.

முதலீட்டின் அளவு, வட்டி வீதம் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் ஆகிய இரு காரணிகளால் நிருணயிக்கப்படுகிறது. முதலீடு மிக மிக மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் பல காரணங்களால் குறைந்துகொண்டே வரும். அதே சமயம் முதலீடு மிகும்போது இயந்திரங்களுக்கான தேவை மிகுவதால் அவற்றின் விலை அதிகரிக்கும். அத்துடன் முதலீடு அதிகரிப்பதால் உற்பத்தி அதிகரித்துப் பொருட்களின் விலை குறையும். இதனால் செலவு உயர்ந்து வருவாய் குறையும். அப்போது மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறன் குறையும்.

முதலீடு மிகும்போது மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறன் குறைவதால் முதலீட்டின் அளவு பாதிக்கப்படும். இது வட்டி வீதத்தினால் நிருணயிக்கப்படும். முதலீட்டின் அளவை நிருணயிப்பதில் வட்டி வீதம் முக்கியத்துவம் பெறுகிறது என்று தொன்மைப் பொருளியல் அறிஞர்களும், மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறனே முக்கியத்துவம் பெறுகிறது என்று கீன்சும் கூறுகின்றனர். ஆனால், இரண்டுமே முதலீட்டின் அளவை நிருணயிக்கின்றன. இருப்பினும் குறுகிய காலத்தில் வட்டி வீதம் ஓரளவிற்கு மாறாமலிருப்பதால் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்

திறனில் ஏற்படும் மாற்றமே முதலீட்டின் அளவை நிருணயிக்கின்றன.

**மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறனைப் பாதிக்கும் காரணிகள்** : மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறனைப் பல காரணிகள் பாதிக்கின்றன. அவை மறைமுகமாக முதலீட்டினையும் பாதிக் கின்றன.

**1. சேவையின் இயல்பு** : பொருட்களுக்கான தேவையில் ஏற்படும் மாற்றம் முதலீட்டின் அளவைப் பாதிக்கின்றது. தேவை மிகும்போது முதலீடு அதிகரிக் கிறது. தேவை குறையும் போது முதலீடு குறையும். தேவையில் எதிர்பார்க்கப்படும் மாற்றமே முதலீட்டின் அளவைப் பாதிக்கின்றது. உற்பத்தியாளர்கள் அதிகத் தேவையை எதிர்பார்த்தால் கூடுதலாக முதலீடு செய் வார்கள்.

**2. செலவும் விலையும்** : விலை, செலவு ஆகியவற் றில் எதிர்பார்க்கப்படும் மாற்றமும் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனைப் பாதிக்கும். விலை மிகும் என்று எதிர்பார்த்தால் முதலீட்டை உயர்த் துவார் கள். உற்பத்திச்செலவு குறையும் என்று எதிர் பார்த்தால் முதலீடு அதிகரிக்கும். அதேபோல் விலை குறையும் என்று எதிர்பார்த்தாலோ, உற்பத்திச் செலவு அதிகரிக்கும் என்று எதிர்பார்த்தாலோ முதலீடு குறை யும்.

**3. நுகர்வு நாட்டம்** : நுகர்வு சார்பு அல்லது நுகர்வு நாட்டம் மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனைப் பாதிக்கும். நுகர்வு நாட்டம் அதிகமாகும்போது அவை அதிகமாகி முதலீடு அதிகரிக்கும். நுகர்வுப் பொருளுக்கான தேவை முதற்பொருட்களுக்கான தேவையை உயர்த்தி முதலீட்டை அதிகரிக்கச் செய் யும். நுகர்வு நாட்டம் வருவாயைச் சார்ந்திருப்பதால் வருவாய் மிகும்போது முதலீடும் அதிகரிக்கும். வரு வாய் குறையும்போது முதலீடு குறையும்.

நுகர்வுச்சார்பு அல்லது நுகர்வு நாட்டம் மூலதனத் தின் இறுதிநிலை ஆக்கத்திறனைப் பாதிக்கும். நுகர்வு நாட்டம் மிகும்போது தேவை அதிகமாகி முதலீடு அதிகரிக்கும். நுகர்வுப்பொருளுக்கான தேவை முதற் பொருட்களுக்கான தேவையை உயர்த்தி முதலீட்டை அதிகரிக்கச் செய்யும். நுகர்வு நாட்டம் வரு வாயைச் சார்ந்திருப்பதால் வருவாய் மிகும்போது முதலீடும் அதிகரிக்கும். வருவாய் குறையும்போது முதலீடும் குறையும்.

**3. நீர்மைத் தன்மையுடைய சொத்துக்கள்** : நீர் மைத்தன்மையுடைய சொத்துகளின் இருப்பும் முத லீட்டையும் முதலீட்டில் மாற்றத்தையும் நிருணயிக் கின்றன. நீர்மைத் தன்மையுடைய சொத்துகளை வைத் திருக்கும்போது தொழில் முயல்வோர் எவ்வகைக் காலதாமதமுமின்றி முதலீட்டுத் திட்டங்களைச் செயற் படுத்த முடியும். இத்தகைய சொத்துகள் இல்லாத போது அவர்களது முதலீட்டுத் திறன் குறையும்.

**4. வரி அமைப்பு** : வரி அமைப்பும் முதலீட்டினைப் பெருமளவில் பாதிக்கும். வரி கூடுவதால் உற்பத்திச் செலவு உயரும். இது விற்பனை அளவைப் பாதித்து இலாபத்தையும் பாதிக்கும். இதனால் புதிய முதலீடு குறையும். தொழில்துறையினரின் ஆர்வத்தினைக் குறைக்கும். ஆனால், வரிக்குறைப்பு, வரிச்சலுகை போன்றவை முதலீட்டினை ஊக்குவிக்கும்.

**5. பொதுச் செலவு** : பொதுச்செலவு தனியார் செலவினைப் பாதிக்கும். அரசின் செலவு மிகும் போது முதலீடு அதிகரிக்கும். அப்போது சமுதாயத்தின் வரு வாய் அதிகரிப்பதால் பொருட்களுக்கான தேவை அதி கரிக்கும். விலை உயர்ந்து இலாபம் அதிகரிப்பதால் தனியார்துறையிலும் தூண்டப்பட்ட முதலீடு அதிகரிக் கும். இந்த முறையினையே பொருளாதார மந்த காலத்தில் ஒரு நாட்டினை மீட்சி நிலைக்குக் கொண்டு வரப் பயன்படுத்த வேண்டுமென்று கீன்சு கூறுகிறார். நாடு மீட்சி நிலையை அடைந்த பிறகு இத்தகைய பொதுச்செலவு கைவிடப்படும். அப்போது தனியார் முதலீடு மிகுந்து கொண்டே செல்லும்.

**நீண்ட காலக் காரணிகள்**

**மக்கள் தொகைப்பெருக்கம்** : நீண்ட காலத்தில் மக்கள்தொகை மிகும்போது பொருட்களுக்கான தேவை மிகும். அப்பொழுது மூலதனத்தின் இறுதி நிலை ஆக்கத்திறன் மிகும். மக்கள்தொகை குறைந் தால் தேவை குறைந்து இறுதிநிலை ஆக்கத்திறனும் குறையும்.

**தொழில் மயமாக்கலும் நகரமயமாக்கலும்** : தொழில் மயமாக்கல் திட்டம் தொழிற்சாலைகள் வளர்வதை ஊக்குவிக்கும். அதனால், அத்தொழிற் சாலைகளுக்காகத் தேவைப்படும் பொருட்களின் தேவை கூடும். அப்பொழுது முதலீடு மிகும். இத் தொழில் மையங்களைச் சுற்றி உருவாகும். நகரங்களில் பொருட்களுக்கான தேவை மிகும். முதற் பொருட் கள், நுகர்வுப் பொருட்கள், போக்குவரத்து வசதிகள்

போன்றவற்றிற்கான தேவை மிகுவதால் தனியார் முதலீட்டிற்கான வாய்ப்பு மிகுதியாகும்.

**தொழில் நுட்ப வளர்ச்சி** : இயந்திரங்களில் தோன்றியுள்ள புதிய முன்னேற்றம், தொழில்நுட்ப மாற்றங்கள் ஆகியவை உற்பத்திச் செலவினைக் குறைக்கும். இதனால் முதலீடு மிகுதியாகும்.

**உற்பத்தித் திறன்** : தொழில் அலகுகளில் உற்பத்தித் திறனும் முதலீட்டின் அளவை நிருணயிக்கும். தொழில் நிறுவனங்களில் உபரி சக்தி இருந்தால் கூடுதல் முதலீடு இன்றியே அதிக அளவு பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். அப்போது மாறுகின்ற செலவு மட்டுமே மிகும். ஆனால் உபரி சக்தி எதுவும் இல்லாதபோது முதலீட்டை அதிகரிப்பதன் மூலமே தேவையை நிறைவு செய்யமுடியும்.

**மூலதனத்தின் இருப்பு** : மூலதனத்தின் இருப்பு மிகையாக இருந்தால் தொழில்முயல்வோர் புதிய முதலீட்டினைச் செய்யமாட்டார்கள்.

**திறனாய்வு** : மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் என்ற தொடரை விளக்குவதே கடினம். பகிர்வுக் கோட்பாட்டில் ஒவ்வொரு உற்பத்திக் காரணி யின் பங்கினையும் தனித்தனியாக அறியமுடியும் என்ற அனுமானத்தின் அடிப்படையில்தான் மூலத னத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் என்ற சொல்லை ஒரு கருவியாகப் பயன்படுத்த முடியும். 2. அங்காடியில் நிறைவுப் போட்டி நிலவுகின்றது என்ற அனுமானத்தைக் கீன்சு பயன்படுத்தியுள்ளார். நிறைகுறைப் போட்டியின் இயல்புகளை எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால், முதலீட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் வருவாய் என்பது நிறைகுறைப் போட்டியுடன் தொடர்புடையதாகும். 3. வட்டி வீதத்திற்குத் தேவையான அளவு முக்கியத்துவம் தரப்படவில்லை. வட்டி வீதம் என்பதை இயங்காப்பொருளியலில் சேர்த்து, மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறனை இயக்கப் பொருளியலில் சேர்த்திருப்பது கீன்சு செய்த ஒரு மாபெரும் தவறாகும். 4. பேராசிரியர் ஆசுலிட்டு மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் என்ற சொல்லைக் கீன்சு பல பொருள்படப் பயன்படுத்தியுள்ளார் என்று சுட்டிக்காட்டுகிறார். 5. தொகு முதலீட்டுத் தேவைப் பட்டியலின் அமைப்பை நிருணயிக்கின்ற காரணிகளைக் கீன்சு விளக்கவில்லை. மூலதனத்தின் அளவு தவிர மற்றக் காரணிகள் நிலையாக இருக்கும்போது மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் எவ்வாறு மாறுகிறது என்பதை விளக்கவில்லை. மேலும் சிக்கனங்கள், சிக்கனங்களின்மை ஆகியவை முதலீட்டைப் பாதித்தாலும் கூட அவை பற்றிக் கீன்சு எதுவும் கூறவில்லை. கீன்சின் இக்கருத்து முழுமை பெற்றதாகவும் இல்லை. மூலதனத்தின் உற்பத்தித் திறனை நிருணயிக்கின்ற காரணிகள் பற்றி மன நிறைவான விளக்கம் தருவதாகவும் இல்லை.

- பொ. பா.

**மூளை அலைகள்** : மனித மூளை செயற்படும் விதம் குறித்து நடைபெற்று வரும் ஆராய்ச்சிகள் அதன் மிகச் சிக்கலான செயல்தன்மை குறித்துப் பல உண்மைகளைக் குறிப்பாக மூளை அலைகள் ( Brain Waves ) பற்றிய உண்மைகளை வெளிப்படுத்தியுள்ளன. இருப்பினும் இதன் செயற்பாடு பற்றி இன்னும் முழுமையான அறிவு நமக்குக் கிடைக்கவில்லை என்றாலும் இவ்வுண்மைகள் மூளையின் செயல்திறனைக் குறித்து ஓரளவேனும் புரிந்துகொள்ள உதவுகின்றன. இதில் முக்கியமாகப் புரிந்துகொள்வது மூளை மனிதனுக்கு இன்றியமையாத உறுப்பு. ஏனைய உறுப்புகள் மூளையின்பாற்பட்டே செயற்படுகின்றன. மனிதனுக்குரிய நடவடிக்கைகள் நடத்தைகள் யாவும் மூளையைச் சார்ந்தே உள்ளன என்ப வையாகும். மூளை பற்றிய மற்றொரு முக்கியமான உண்மை அதன் மின் அலைகள் பற்றியதாகும்.

மின் அலைகள் யாவை? இவை எதனால் எதற்காக மூளையில் ஏற்படுகின்றன. இதன் முக்கியத்துவம் என்ன? என்ற கேள்விகள் எழும்போது அதற்கான விடைகள் மூளை அலைகள் அல்லது மூளை மின் அலைகள் பற்றி அறிந்துகொள்ள உதவுகின்றன.

இம்மூளை அலைகள் மூளையின் செயல்தன்மை குறித்து அறிந்து கொள்ளப்பெருமளவு உதவியுள்ளன. மூளை அலைகள் என்பவை மூளையில் ஏற்படும் ஒரு வித மின் அலையாகும். இவை தன்வயமாகவும், உறுப்புகளின் தூண்டுதல்களினாலும் ஏற்படுகின்றன. தன்வயமாக ஏற்படும் அலைகள் தன்வய மூளை அலைகள் ( Spantaneous ), தூண்டப்படும் அலைகள் ( Stimulated Brain Waves ) ஆகும். இதன் பாங்கு மின் மூளை வரைவு ( Electro Encephalogram ) என்றழைக்கப்படுகிறது. இது மூளையின் மின் ஆற்றலுடைய அலைகள் எவ்வாறு எப்பாங்கில் வெளிப்படுகின்றன என வரை படம் மூலமாகக் காட்டுகிறது. இதற்காகப் பயன்

படுத்தப்படும் கருவி மின் மூளைமானி ( Electro Encephalograph ) எனக் கூறப்படுகிறது. இக்கருவி மனிதன் அமைதியாக இருக்கும்நேரத்தில் மின் அலைகள் எவ்வாறு வெளிப்படுகின்றன. உறக்க நிலையில் எவ்வாறு வெளிப்படுகின்றன. உணர்வுகளால் தூண்டப்படுகையில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்று வேறுபடுத்திக்காட்டுகிறது. எ.கா மனிதன் அமைதியாக இருக்கையில் இவ்வலைகள் பெரும் பரப்பினையுடையதாகவும் ஒரே சீராகவும் இருக்கின்றன. இதனை "ஆல்பா அலைகள்" என்று அழைக்கிறார்கள். இதே ஆல்பா அலைகள் மனிதன் முக்கிய சிந்தனையிலோ, மனக்கிளர்ச்சியிலோ இருக்கையில் ஒழுங்கற்ற வகையில் குறுகிய பரப்பில் அடுத்தடுத்து விரைவாக ஏற்படுகின்றன. மனிதன் உறக்கத்தில் இருக்கையிலும் கூட இம் மூளை அலைகள் பல நிலைகளில் பலவிதமான பாங்குகளில் ஏற்படுகின்றன. மனிதன் உறங்கத் தொடங்கும்பொழுது, ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கும்பொழுது, விழிப்பதற்குமுன் என உறக்க நிலைகள் பாகுபாடு செய்யப்பட்டு அந்நிலைகளின் பொழுது ஏற்படும் மூளையின் அலைகளின் பாங்குகளில் தோன்றும் வேறுபாடுகள் குறித்து அறிவியல் அடிப்படையில் அறியப்பட்டுள்ளது.

மேலும் இம்மூளை அலைகள் பாங்கினைக் கொண்டு மூளைப்பாதிப்பு பற்றியும் அறிந்துகொள்ள முடிகிறது. எ.கா. விபத்துகளின் மூலம் ஏற்படும் தலைக்காயங்களினால் மூளைப்பாதிப்பு அல்லது வலிப்பு நோயின் மூலக்காரணம் என்ன என அறிய முடியும். அதனை மின்அலைகளின் பாங்கு ஒரு சாதரண மனிதனின் மூளை அலைகள் வெளிப்படுத்தும் பாங்கினின்று வேறுபட்டிருப்பதைக் கொண்டு அறிய முடியும்.

இந்த அறிவியல் உண்மைகள் மூளை அலைகள் பற்றிப் புலப்படுத்துவது யாதெனில் 1. மூளையின் செயல்கள் யாவும் மூளை அலைகள் மூலமாகவே வெளிப்படுகின்றன. 2. மூளை அலைகள் மூளையின் ஒவ்வொரு பாகத்திலும் தனிப்பட்டு வெளிப்படுகின்றன. 3. வெவ்வேறு பாகங்களில் ஏற்படும் அலைகள் வெவ்வேறு பாங்கில் அமைகின்றன. 4. இம் மூளை மின் அலைகள் பொதுவாக மனிதன் செயலற்று இருக்கையிலும் கூட உருவாகிக்கொண்டே இருக்கின்றன. 5. மனிதன் வெவ்வேறு உணர்வுகளுக்கு உள்ளாகும்போது மூளை அலைகளும் வெவ்வேறு பாங்குகளில் வெளிப்படுகின்றன. 6. உறக்கநிலையில் ஏற்படும் அலைகளின் பாங்கு விழித்த நிலையில் ஏற்படும் மூளையின் அலைகளினின்று வேறுபடுகிறது. 7. உறக்க நிலையின் வேறுபாடுகள் மூளை அலைகளிலும் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன என்பவையாகும். ஆகவே, மூளை அலைகள் செயல்முறை மூளை செயல்படும் விதம் குறித்த ஒரு மகத்தான உண்மையை அளிக்கிறது.

- எஸ்.பா.

**துணை நூல்கள் :**


1. Coleman C., 1976, **Abnormal Psychology in Modern Life**, Tarparewala and Co Ltd., Mumbai.

2. Shanmugam T. E., 1985, **Abnormal Psychology**, Tata Mcgraw Hill Co, New Delhi.


**மெக்காலே தாமசு பாபிங்டன் ( கி.பி. 1800 – 1859 ) :** ஆங்கில இலக்கியப் படைப்பாளர்களுள் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தனித்துவம் வாய்ந்தவர் தாமசு பாபிங்டன் மெக்காலே ( Thomas Babington Macaulay ). இவர் காலத்தில் வாழ்ந்த பிற இலக்கியப் படைப்பாளர்களோடு ஒப்பிடும்போது இவர் இலக்கியத்தில் மட்டுமின்றிச் சமுதாய, அரசியல் நடப்புகளிலும் மிக்க ஈடுபாடு கொண்டு சிறந்து விளங்கியதைக் காணலாம். தாமசு கார்லைல் ( Thomas Carlyle), சார்லசு டிக்கன்சு ( Charles Dickens ) முதலியோர் தங்கள் படைப்புகளில் உழைப்பின் மேன்மையை எடுத்தெழுதி, உழைக்கும் மக்கள் வாழ்வில் ஏற்றம் பெற வேண்டும். சமுதாயத்தில் உயர்நிலை அடைய வேண்டும் என எழுத்துகளில் மட்டுமே வலியுறுத்தியபோது, தம் எழுத்தாற்றலாலும், பேச்சாற்றலாலும் சிந்தனையாளர் தம் சிந்தனையையும் மன சாட்சியையும் தட்டியெழுப்பியவர் மெக்காலே ஆவார். இவர் ஆங்கில அரசியல் வரலாற்றில் புகழ் பெற்ற சீர்திருத்த மசோதாவைத் தீவிரமாக ஆதரித்தவர். பிற படைப்பாளர்களைப் போலக் கற்பனையில் மட்டுமே வளம் நிறைந்த செழிப்பான வாழ்க்கையைக் கண்டுவந்த இலக்கிய ஆசிரியரல்லர். கூர்ந்த அறிவு வாய்ந்தவர். நடைமுறையில் நாள்தோறும் மக்களின் தொல்லை மிகு துன்ப வாழ்க்கையைக் கண்டறிந்தவர். வாய்மையாளர். பட்டறிவில் சிறந்தவர். இப்பண்புகளைத் தம் வாழ்வில் மகிழ்ச்சியுடனும், ஏற்றத்துடனும் நடைமுறைப்படுத்திப் பிறரை எழுச்சியுறச் செய்தவர்.

இங்கிலாந்தில் இலீசெசுடர்சயரில் (Leicester shire) உள்ள இராத்லீ டெம்பிள் ( Rothely Temple ) எனும் இடத்தில் 1800ஆம் ஆண்டு பிறந்த மெக்காலேயின் முன்னோர் ஸ்காட்லாந்து நாட்டினர். இவர் தந்தை ஆப்பிரிக்கக் கண்டத்தில் உள்ள குடியேற்ற நாடான சியரோ லிமோனில் ஆளுநராகப் பதவிவகித்தவர். அப்போது அவர் அடிமை முறையையும், அடிமை வாணிகத்தையும் ஒழிப்பதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டவர். மெக்காலே தம் அன்னை யாரின் பண்பு நலன்கள் அனைத்தும் ஒருங்கே அமை யப்பெற்றவர். அத்துடன் தந்தையாரின் சமுதாய நல ஈடுபாடும் கொண்ட பண்பாளர்.

வீறுணர்ச்சிக் காலக் ( Romantic Age ) கவிஞரான கோல்ரிட்சின் இலக்கியப் படைப்புகளால் குழந்தைப் பருவத்திலேயே பெரிதும் ஈர்க்கப்பட்டவர் மெக்காலே. மூன்று வயதாகும்போதே ஆர்வத்துடன் எல்லாவற்றையும் படிக்கத் தொடங்கினார் ஐந்து வய தில் ஒரு புத்தகத்தைப் போலப் பேசியவர் என இவ ரது கற்கும் திறன் வருணிக்கப்படுகிறது. பத்து வயதில் வரலாற்றுச் செய்திகள் பலவற்றை உள்ளடக்கிய தொகுப்பு நூல் ஒன்றினை எழுதினார். அத்துடன் இவர் இறைவணக்கப் பாடல்கள், காதற் கவிதைகள், கிறித்தவ மதத்தைப் பற்றிய வினா - விடைகள், குறுங் காவியம் முதலியவற்றைப் படைத்தார். குழந்தைப் பருவத்திலேயே ஆர்வத்துடன் கற்கத்தொடங்கிய பழக்கம் வாணாளின் இறுதி வரை இவரிடம் நிலைத் திருந்தது. இவர் கற்றுத்தேர்ந்த நூல்களின் எண் ணிக்கை வியப்பிலாழ்த்தும். அதுபோன்றே இவரது நினைவாற்றலும் வியக்கத்தக்க ஒரு கூறாகும். ஒரு முறை படித்த எந்த ஒரு நூலையும் பல ஆண்டுகால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் அடிபிறழாது திரும்பக் கூறும் ஆற்றல் வாய்க்கப்பெற்றவர். ஒரு சில வரிகள் என்றில்லை; காவியப் படைப்புகள் பல வற்றைத் தொடக்கத்திலிருந்து முடிவு வரை தம் நினை விலிருந்து எடுத்துக்கூறும் ஆற்றல்பெற்றிருந்தார். ஒரு முறை நாற்பதாண்டுகளுக்கு முன்னர் தேனீர் விடுதி யில நாளேடு ஒன்றிற் படித்த கவிதையொன்றை அடி பிறழாமல் எடுத்துக்கூறி அனைவரையும் வியக்க வைத்தார். இத்தனைக்கும் அக்கவிதைகளைப் படித்த பின்னர் மீண்டும் எண்ணிப் பார்த்தது கூட இல்லை என்றாராம்.

இத்தனைச் சிறப்பு வாய்ந்த மெக்காலே பன்னி ரெண்டாம் வயதில் பள்ளிக்கல்வி கற்க அனுப்பப் பட்டார். கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகத்தில் உள்ள டிரினிடி கல்லூரிக்கு ( Trinity College ) 18-ஆம் ஆண்டில் சென்றார். கல்லூரியில் காவிய அறிஞன் என்றும், சிந் தனையைத் தூண்டும் அறிவாற்றல் மிக்க நாவன்மை யாளர் என்றும் புகழப் பெற்றார். எனினும், கணிதத் தில் இவரது அறிவு நாட்டங்கொள்ளவில்லை. 'கணி தத்தைக் கற்பதைவிட உண்ணாமல் இருக்கலாம். தனிமைச் சிறையில் வாடலாம். அழிந்தொழியலாம்' எனத் தம் அன்னைக்கு எழுதிய மடலொன்றில் தம் கணிதவெறுப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

கல்லூரிக் கல்விக்குப் பின்னர் சட்டம் பயின்றார். எனினும், இவர் வழக்குரைஞர் பணியில் ஈடுபடாமல் அரசியல் நாட்டங் கொண்டார். இவர் கி.பி. 1830ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினரானார். மிகச்சிறந்த நாடாளுமன்ற உறுப்பினராகவும், எந்தச் சிக்கலையும் நுணுகி ஆய்ந்து வாதிடுவதில் வல்லவராகவும் விளங்கி னார். குறுகிய காலத்தில் புகழ்ப் பெற்றார். அவர் உரை யாற்ற எழுந்து நிற்கும்பொழுதெல்லாம், நாடாளு மன்ற உறுப்பினர்கள் விரைவாகத் தங்களது இருக் கையை அடைந்து அமர்ந்து, இவர் கூறப்போவதைக் கவனமாகக் கேட்பது பற்றி ஆங்கில நாட்டின் தலைமை அமைச்சராக விளங்கிய கிளேட்சுடனே ( Gladstone ) குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட போது, தந்தையாரின் சொத்துகளை இழந்து வறுமை யிலிருந்தது மெக்காலே குடும்பம். ஆனால் உடன் பிறந்தோர் அனைவரும் உறுதுணையாய் நின்று துன் பத்தில் துணை புரிந்தனர். மனம் தளராத கடும் உழைப்பினால் குடும்பச்சுமையைப் புன்முறுவலு டன் ஏற்று, வாழ்க்கையில் வளங்கண்டு, உடன் பிறந் தோரும், உறவினரும், பிறரும் மகிழும் வண்ணம் மெக்காலே உயர்ந்தார்.

ஆட்சித் தலைமைக்குழுவிற்குச் சட்ட ஆலோசக ராகவும், அதன் உறுப்பினராகவும் விளங்கிய மெக் காலே சிறப்புமிகுந்த, உயர்ந்த பணிகள் பலவற்றை வேண்டாமென மறுத்தார். கல்லூரியில் பயிலும் காலத் தில் நாளேடுகளிலும், இதழ்களிலும், கட்டுரைகளும், இசைப்பாக்களும் எழுதியமையே இவரது முதிர்ச்சி யடைந்த இலக்கியப்பணியின் தொடக்கக் காலம் எனலாம்.

நாட்டுப்பணிகள் இவரது நாட் பணிகளில் பெரும் பகுதியை எடுத்துக்கொண்ட போதிலும், விடியற்

காலையிலும், இரவிலும் எழுதும் பழக்கத்தைக் கொண்டிருந்தார் மெக்காலே. இவரது மிகச்சிறந்த பல கட்டுரைகள் அவ்வாறு எழுதப்பட்டவையே. இவரது புகழ் பெற்ற படைப்பான ***மில்டனைப் பற்றிய கட்டுரைகள்*** ( Essays on Milton ) கி.பி.1825ஆம் ஆண்டு எடின்பர்கு மதிப்பாய்விதழ் ( Edinburg Review ) என்ற நாளேட்டில் வெளிவந்தன. ஆற்றல் வாய்ந்த நாவண்மையாளர் எனப்புகழ் பெற்றிருந்த மெக்காலே அந்தக் கட்டுரைகள் மூலம் கூர்த்த மதி படைத்த எழுத்தாளர் என்ற புகழையும் பெற்றார். இக்கட்டுரைகள் ஒரு புத்துணர்வையும் புதிய சிந்தனைப் போக்கையும் ஆங்கில இலக்கிய உலகில் தோற்றுவித்தன.

நாடாளுமன்றத் தேர்தலில் கி.பி. 1847ஆம் ஆண்டு தோல்வியடைந்தாலும் துவண்டுவிடாமல் இவர் நெடுநாட்களாகத் திட்டமிட்டுக்கொண்டிருந்த **ஆங்கில நாட்டின் வரலாறு** ( History of England ) என்ற நூலை எழுதி முடித்தார். இந்நூல் வெளிவந்தவுடன் வாசகர்களிடமும், கற்றறிந்தோரிடமும் பெரிதும் பாராட்டுப் பெற்றது. இதன் மூன்றாம், நான்காம் தொகுதிகள் கி.பி. 1855ஆம் ஆண்டு வெளியான போது முன்னிரண்டு தொகுதிகளையும்விட மிகுதியான வரவேற்பு கிடைத்தது. அவ்வெற்றியால் ஊக்கம் கொண்டு ஏனைய தொகுதிகளையும் முடித்திட ஆர்வம் கொண்டு மிகவும் உழைத்த மெக்காலே கி.பி. 1859ஆம் ஆண்டு எதிர்பாராத வகையில் காலமானார். இலண்டன் மாநாகரில் உள்ள வெசுட்டு மினிசுடர் திருக்கோயிலில் பாவலர் முனையில் ஆங்கில நாட்டின் புகழ்பெற்ற கட்டுரையாளரான எடிசன் கல்லறைக்கருகே மெக்காலே அடக்கம் செய்யப்பட்டார்.

**இந்தியாவில் அரசியற்பணி** : மெக்காலே கிழக்கிந்தியக் குழுமத்தின் தலைமை ஆளுநரின் ஆட்சிக் குழு உறுப்பினராக நியமனம் பெற்று கி.பி. 1820 ஆம் ஆண்டு இந்தியா வந்தார். இந்திய மக்களிடையே மதங்களின் அடிப்படையில் வழங்கும் பல்வேறு சட்டங்களையும் நுணுகி ஆய்ந்தார். தம் ஆய்வின் அடிப்படையில் கி.பி. 1833ஆம் ஆண்டு ஆங்கில நாட்டு மக்களவையில் தாக்கல் செய்த தீர்மானத்தில், இந்தியாவில் நடைமுறையிலுள்ள குற்றவியல் சட்டங்கள் அனைத்தையும் தொகுக்க வேண்டும் என வேண்டினார். அவ்வாறே, மெக்காலேயைத் தலைவராகக் கொண்ட சட்டக்குழு ஒன்றினைப் பிரிட்டானியப் பேரரசு அமைத்தது. இவருக்கு ஆண்டொன்றிற்கு பத்தாயிரம் பவுன் ஊதியமாக வழங்கப்பட்டது. அக்குழு ஐந்தாண்டுகள் இந்தியாவின் பல முக்கிய நகரங்களுக்குச் சென்று, மக்கள், மதத்தலைவர்கள், சமூக அறிஞர்கள், தொண்டர் ஆகியோரின் கருத்துகளைக் கேட்டது மன்றி, இந்திய மக்களிடையே மத அடிப்படையில் வழங்கப்படும் சட்டங்களையும் ஆய்ந்தது. அதனுடன் இராபர்ட் லிவிங்சுடனின் லூசியானா சட்டம், நெப்போலிய மாமன்னரால் பிரான்சு நாட்டிற்கு வழங்கப்பட்ட சட்டம் ஆகியவற்றையும் ஆராய்ந்து கி.பி. 1837 அக்டோபர் திங்கள் பதினான்காம் நாள் தனது பரிந் துரையை அரசுக்கு அளித்தது.

**இந்தியாவில் கல்விப்பணி** : இந்தியாவில் இன்று வழங்கப்படும் கல்வி முறைக்கு வித்திட்டவர் மெக்காலே ஆவார். இவர் கி.பி. 1835ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் தயாரித்தளித்த அறிக்கையின்படி, ஆங்கில மொழியையும், ஆங்கில இலக்கியத்தையும் ஐரோப்பிய நாடுகளின் இலக்கியங்களையும், அறிவியலையும் உள்ளடக்கிய கல்வித்திட்டம் வரையப்பட்டு, அக்கல்வித் திட்டத்தில் கூறப்பட்டன. இந்தியர்களுக்குக் கற்பிக்கப்படல் வேண்டும் எனப் பரிந்துரை செய்தார். அப்பாடத்தை வடிவமைக்கும் குழுவின் தலைவராக மெக்காலே நியமிக்கப்பட்டார். இந்தியர்கள் சிலரும், ஆங்கிலேயர் சிலரும் அதன் உறுப்பினர்களாக இருந்தனர்.

இவர் பின்னாளில் தாய்நாடு திரும்பியபோது, கிளாசுக்கோ பல்கலைக்கழக வேந்தராகவும், கேம்பிரிட்சுப் பல் கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவராகவும் பணியாற்றிய நாட்களில் கல்வித்துறை வளர்ச்சிக்குத் தம் சிறப்பான பாங்கினைச் செவ்வனே செய்தார். பிரிட்டானிகா கலைக்களஞ்சியம் தொகுப்பிற்குத் தம் கட்டுரைகளை அவ்வப்போது எழுதி வந்தார். அவை பெரும்பாலும் திறனாய்வு நோக்கில் எழுதப்பட்டவை.

**இலக்கியப்பணி** : தம் மூன்று வயதிலேயே புகழ் பெற்ற இலக்கியங்களைப் படித்து அவற்றில் தம்மை இழந்த மெக்காலே பத்து வயதில் எழுதத் தொடங்கினார். இவரது முதற்தொகுதி மெக்காலே ஒரு சிறந்த வரலாற்றாசிரியர் எனக்காட்டுகிறது. வீரத்திருத்தகையர் காலாண்டு இதழ் ( Khights Quarterly Magazine ) என்ற ஏட்டில் இவர் எழுதி, வெளியான கவிதைகளைக் கண்டு மெக்காலேயின் தந்தையார் தம் மகன் இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்டு, வறுமை

யைத் தழுவிவிடுவானோ என மனம் வருந்தினார். எடின்பர்க் மதிப்பாயிவிதழில் வந்த மில்டன் பற்றிய கட்டுரை, இதோ ஒரு புதிய மாறுபட்ட இலக்கியத் திறனாய்வாளன் என இவரை அறிமுகப்படுத்தி, பிற ரைத் திகைப்பிலாழ்த்தி, 'யார் இந்தப் புதிய சிந்தனை யாளன்' என்ற வினாவை எழுப்பியது. அக்கட்டுரை களைத் திறனாய்வு மற்றும் பல திறப்பட்ட கட்டுரை கள் ( Critical and Miscellaneous essays ) என்ற பெயரில் தொகுத்து அமெரிக்காவில் வெளியிட்டனர். அத் தொகுப்பினைக் கற்று பல இளம் இலக்கியத் திற னாய்வாளர்கள் ஊக்கம் பெற்று, பல படைப்புகளை படைத்தனர். இவருடைய **பழங்கால உரோமைக்கு ரிய இடம்** ( Place of Ancient Rome ) எனும் நூல் எட் வர்டு கிப்சனுடைய **உரோமப்பேரரசின் சிதைவும் வீழ்ச்சியும்** ( The Decline and Fall of Roman Empire ) என்ற நூலுடன் ஒப்பிடத்தக்கது என்பார்கள் அறிஞர்கள். அனைத்திற்கு சிகரம் வைத்தாற்போன்று அமைந்தது இவரது ஆங்கில நாட்டின் வரலாற்றுத் தொகுதிகள் ஆகும். ஆங்கில இலக்கிய வரலாற்று நூற்படைப்பு களில் அவை ஒரு சாதனை எனக் கருதப்படுகிறது.

மெக்காலே பிரபுவின் வாழ்வு, இவர் தம் படைப் புகள் போன்றவற்றைப் படிப்போருக்கு இவரது பல முனைத் திறன்கள் நன்கு புலனாகும். இவர் ஒரு படைப்பாளி என்பதைவிட ஆற்றல் மிக்க, கேட் பாரைப் பிணிக்கும் தகைமை அமைந்த நாவணமை யாளர் என்பது புலப்படும். சொற்கள் இவரது ஆணைக்குக் கட்டுப்பட்டே நின்றன. வறுமையிலும் செம்மையாக வாழ்ந்த நெறியாளர். இவர் மகிழ்ச்சிக் காவும் பொழுதுபோக்கிற்காகவும் படைப்பாளராக மாறினாலும் வறுமையும் அதற்கு ஒரு காரணம் எனலாம்.

இவருடைய அசுர வேகப் படிப்புக்கும், ஆற்றல் மிக்க நாவண்மைக்கும் ஏற்றாற்போலப் படைப்புகள் மிகுதியாக இல்லை என்பது திறனாய்வாளர் தம் ஒரு மித்த கருத்து, எப்போதும் உரையாடுவது, படிப்பது படித்தவற்றைக் குறித்துப் பிறரிடம் விவாதிப்பது என்று தான் மெக்காலே வாழ்ந்தாரே தவிர அந்தத் திறமையைப் பயன்படுத்தி எதனையும் படைத்தாரல் லர் என்று ஆங்கில நாட்டின் தலைமை அமைச்சராக இருந்த கிளேட்சுட்டன் என்பார் தம் கருத்தைக் கூறி யிருக்கிறார். இருப்பினும், இவர் உரையைக் கேட்க ஆர்வமிக்க, அறிவுசான்ற கூட்டம் கூடியது. இவர் எழு தியதைப் படிக்க இலக்கிய ஆர்வலர்கள் இருந்தனர். இன்றும் இவரது புகழ்பாட ஆங்கிலம் பேசப்படும் நாடுகளில் பலர் உள்ளனர் என்பதே மெக்காலேயின் அறிவுக்கும் திறனுக்கும் சான்று.

- டி.ச.

**மெய்சி முன்னிலை மீட்சி :** சப்பானில் கி.பி. 1868ஆம் ஆண்டு பெயரளவில் பதவியில் வீற்றிருந்த மிகாடோ அரசுகுல மன்னர்கள், உண்மையான அதி காரங்களைச் செலுத்தி வந்த சோகன்களை வீழ்த்தி விட்டு, அரசு அதிகாரங்களைக் கைப்பற்றினர். இதுவே மெய்சி முன்னிலை மீட்சி எனப்படுகிறது. இந் நிகழ்ச் சியே மிகாடோவின் முன்னிலை மீட்சி ( Resto ration ) எனவும் மெய்சிப் புரட்சி எனவும் கூறப்படுகிறது. இவ்வாறு முன்பிருந்த உரிமையைத் திரும்பவும் பெற்று, ஆளத் தொடங்கிய முதல் மிகாடோ மன்னர் முட்சு இடோ ( Mutsu Hito ) என்பவர் ஆவார். அவர் மெய்சி மன்னர் எனும் சிறப்புப்பெயரால் அழைக்கப் பட்டார். மெய்சி முன்னிலை மீட்சி சப்பானிய வர லாற்றில் குறிப்பிடத்தக்கதோர் நிகழ்ச்சியாகும்.

சப்பானின் தெய்வீகப் பேரரசர்கள் கி.பி. 1192 முதல் 1867 வரை தம் அதிகாரங்களை இழந்து பொம்மை போன்று வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் அரசு அதி காரங்கள் யாவும் சோகன்கள் என்னும் படைக்குலத்த வரிடம் இருந்தன. அந்நிலையை மாற்றினார் முட்சு இடோ மெய்சி மன்னர். மெய்சி எனும் சொல்லிற்கு 'ஒளி பொருந்திய அல்லது தெய்வீகத் தன்மை வாய்ந்த' என்று பொருள். அவர் மக்கள் நலம் கருதி ஆண்டதால் ஒளி பொருந்திய மன்னர், தெய்வீகம் பேரரசர் என்றெல்லாம் மக்களால் போற்றப்பட்டார். புதியதோர் மாற்றத்தை ஏற்படுத்திய இவர் ஆட்சிக் காலமும் மெய்சி காலம் எனக் கூறப்பட்டது. அதற் கான காரணங்கள் வருமாறு.

1. தொடக்கக்கால தோகுகவா சோகன்களைப் ( Tokugawa Shogunate ) போன்று பிற்காலத்திய சோகன் கன் சிறந்த ஆட்சியை மேற்கொள்ளவில்லை. படிப் படியாக மன்னருடைய கட்டுப்பாடுகள் தளர்ந்தபோது அவர்கள் ஆட்சியைக் கவிழ்க்கச் சூழ்நிலையை எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர்.

2. பண்டைய சப்பானிய வரலாற்றைப் படித்தவர் கள் கி.பி.1192 ஆம் ஆண்டிற்கு முன்னர் ஆண்ட மன் னர்களின் தனியாட்சி முறைகளையும், மன்னருக்கும்

மக்களுக்குமிடையே நிலவிய தெய்வீகப் பற்றையும் அறிந்து வியந்தனர். அதற்குப்பின் எழுந்த சோகனின் தன்னலமும், தெய்வீக மன்னர்களைத் தம் கைப்பாவை யாக்கி ஆட்டுவித்த அவலமும் மக்கள் நெஞ்சில் பதிந் தன. அவர்களே சப்பானில் தோன்றிய உள்நாட்டுக் கிளர்ச்சிகளுக்கும், போர்களுக்கும் காரணமானவர்கள் என்பதனை மக்கள் உணர்ந்தனர். எனவே, சோகன் கனை நீக்கவும், மீண்டும் மக்கள் நலம் பேணும் நல் லரசை நிறுவவும் அரசியலறிஞர்களும், மக்களும் முனைந்தனர்.

3.சப்பானில் தோன்றிய சிண்டோ சமயத்தின் மறு மலர்ச்சியும் மன்னரின் தெய்வீகத் தன்மையை வலியு றுத்தியது. சூரியனின் நேர் மரபினராகத் தோன்றிய சப் பானியப் பேரரசர்களைச் சாய்த்துவிட்டு நயவஞ்சகர் களாக விளங்கும் சோகன்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்ற உணர்வு நாடெங்கிலும் பரவ, சிண்டோ சமய மறுமலர்ச்சி உதவியது. நாட்டில் பஞ் சம், பட்டினி, கொள்ளை நோய், ஐரோப்பியரின் நுழைவு, கிறிஸ்தவ சமயத்தின் பரவல், பண்பாட்டுச் சீர்கேடு ஆகிய அனைத்தும் சோகன்களின் ஆட்சியால் தான் ஏற்பட்டது என்று பாமரரும் படித்தோரும் நம்பினர்.

4. அக்காலத்தில் சப்பானில் நிலமானிய முறையும் நலிவுற்றது. பிரபுக்களும் அவர்கள் குடும்பத்தினரும் பொறுப்பற்று நகரில் இன்பமாக வாழ்ந்தனர். சப் பானியப் பொருளாதாரம் செல்வமிக்க ஒரு சிலரின் கையில் இருந்தது. நிலமானிய முறை சீரழியத் தொடங்கியது. சோகன்கள் கட்டிக்காத்த நிலமானிய முறையை அடிப்படையாகக் கொண்ட பொருளா தார முறை படிப்படியாகத் இறங்கத் தொடங்கியது.

5. அந்நிலையில் அந்நியர், அமெரிக்கர் பெர்ரி என் பார் தலைமையில் சப்பானில் வலிந்து நுழைந்தனர். அவர்களைத் தடுக்கவியலாது தோல்வி கண்ட சோகன்கள் மீது மக்கள் வெகுண்டு எழுந்தனர். அந்நி யருடன் சோகன்கள் செய்து கொண்ட உடன்படிக்கை கள் மக்களுக்கு வெறுப்பை ஏற்படுத்தின. எனவே, சோகனுக்கு எதிரானவர்கள் ஒன்றுதிரண்டு போராட் டத்தில் ஈடுபட முனைந்தனர்.

6. பேரரசின் ஆதரவாளர்களுக்கும் சோகன்களுக் குமிடையே ஏற்பட்ட போராட்டங்கள், முன்னிலை மீட்சிக்கு வழிவகுத்தன.

7. வலிமை மிக்க நிலப்பிரபுக்களும், பெரும் பிரபுகளும் சோகனைத் தாக்கத் தொடங்கினர். அவர்களுள் சாத்சுமா, சோசு, இசென், தோசா ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவர். இந்நிகழ்ச்சி 1867இல் உச்சக்கட்டத்தை அடைந்தது. சோகன்களை எதிர்த்துச் சப்பானியர் புரட்சி செய்தனர். பேரரசைப் பெருமைப்படுத்து, கொள்ளைக் கூட்டத்தினரை வெளியேற்று போன்ற முழக்கங்கள் பெருகின.

யோதோ எனும் பிரபு 1867 அக்டோபரில் சப்பா னின் தொல்லைகளுக்குத் தீர்வு காணவியலாத சோகனை வெளியேற்றும்படி மன்னனிடம் நீண்ட விண்ணப்பம் ஒன்றினைக் கொடுத்தார். அதனைக் கண்டு திகைத்த சோகன் 1867இல் அக்டோபர் பதி னான்காம் தேதியன்று தம் பதவியைத் துறந்தார். இவ் வாறு ஏறத்தாழ 700 ஆண்டுகளாக இருந்த சோகன் பதவியும், இரட்டை ஆட்சியும் சப்பானில் மறைந்தன. பேரரசர் காடேகி இறக்கவே, அவருடைய பதினைந்து வயது மகனான முட்சுஇடோ மன்னராக 1868 பிப்ரவரி 23 ஆம் நாள் முதல் 1912 ஆம் ஆண்டு வரை யில் அரசாண்டார். சப்பானின் வரலாறு கி.பி. 1868 ஆம் ஆண்டிலிருந்து மலர்ந்தது எனக் கூறுதல் பொருந் தும். இம்முன்னிலை மீட்சி இங்கிலாந்தில் தோன்றிய 1660ஆம் ஆண்டிலேற்பட்ட முன்னிலை மீட்சியை ஒத் துள்ளது என்று சில வரலாற்றாய்வாளர்கள் கருது கின்றனர்.

மேலைநாட்டவரின் தொடர்பையும் அதனால் விளைந்த தொல்லைகளையும் கண்டு அஞ்சிய சப்பா னியர் பழைய நிலைக்குத் திரும்புதல் வேண்டும் என்று முடிவெடுத்தனர். இந்நிலை தான் மெய்சி முன்னிலை மீட்சி அல்லது பண்டுரிமை மீட்சி என அழைக் கப்படுகிறது. பழமை விரும்பிகளான சோகன்களை அகற்றுவதற்காக எழுந்த புரட்சி, சப்பானை மேலை நாட்டுப் பாணியில் புதிய நாடாக உருவாக்கும் முயற் சிகளைத் தோற்றுவித்தது. புதிய சப்பானை உருவாக்க வும் புதிய சமுதாயத்தைப் படைக்கவும் புதியதோர் வரலாறு தொடங்கியது. இதுவே மெய்சி புரட்சி எனப் படுகிறது. இதனை பிரெஞ்சுப் புரட்சியுடனோ, ருஷ்யப் புரட்சியுடனோ ஒப்பிட இயலாது காரணம், இப்புரட்சியை வெற்றிகரமாக நடத்தியவர்கள் நடுத்தர மக்கள் அல்லர். படைத்தலைவர்கள், பரம்பரைப் பிரபுக்களான சாமுராய்கள் ஆகியவர்களே ஆவர். மெய்சி முன்னிலை மீட்சி சப்பானிய வரலாற்றில் புதியதோர் கட்டத்தைத் தொடங்கியது.

- ம. இ.

**மெய்ப்பிக்கும் பொறுப்பு :** நீதிமன்றங்களில் தனக்கு ஒரு தீர்ப்பாணை கிடைக்க வேண்டும் என்பதற்காகச் சட்ட முறையிலான தன்னுடைய உரிமையை நிலைநாட்டவோ, தனக்கு வேறொருவர் கடன்பட்டுள்ள உரிமைகளைப் பெறுவதற்கோ வழக்குத் தொடுக்கின்றபொழுது அதற்கான மெய்ப்பிக்கும் பொறுப்பை மெய்ப்பித்து அந்த உரிமைகளை நீதிமன்றம் மூலம் பெறுவது தொன்மைச்சட்ட நூல்களிலிருந்து வழிவழியாகத் தழுவப்பட்டு இந்தியச் சான்றுச்சட்டம் ( 1872 ) ஏற்றுக்கொண்ட ஒரு சட்ட நெறியாகும். யாதொன்றை நீதிமன்றத்தின் மூலம் நிலைநாட்ட விரும்புகிறார்களோ அதனை ஐயம் நீங்கித் தெளிவுபட நிலைநாட்ட வேண்டிய பொறுப்பு மெய்ப்பிக்க வேண்டியவருக்கு உரியதாகும். இதுவே மெய்ப்பிக்கும் பொறுப்பு என வழங்கப்பட்டு வருகிறது. கி.பி. 1872ஆம் ஆண்டைய இந்தியச்சட்டப் பிரிவு 101இல் இதற்கான தெளிவான விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்ட நூலின் பிரிவு 101 முதல் 113அ வரையிலும் மெய்ப்பிக்கும் பொறுப்பு தெளிவான முறையில் வரையறை செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு பொருளின் உண்மையை நிலைநாட்ட விரும்புவோர் அதனை மெய்ப்பிக்க வேண்டும் என்பது சட்டம் சொல்லும் உண்மையாகும். எ.கா. அரசு என்பவர் அழகன் ஒரு குற்றத்தைச் செய்தாரென அவர் மீது தீர்ப்புப்பெற வேண்டும் என்று வாதுரை செய்யும்போது அல்லது வழக்குத் தொடுக்கும்போது அழகன் இக்குற்றத்தைச் செய்தார் என்பதை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி அரசு அதனை மெய்ப்பித்தால்தான் அவர் வேண்டிய தீர்ப்புக் கிடைக்கப்பெறும். குற்றவியல் நீதிமன்றங்களில் ஓர் எதிரி குற்றத்தைச் செய்தாரென அரசு வழக்குத் தொடுக்கும்போது அந்தக் குற்றம் சம்பந்தப்பட்ட எல்லா உண்மைகளையும் சட்ட எல்லைக்குட்பட்டு, நியாயமான சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டு முழுமையாக எதிரி செய்த குற்றத்தை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டுள்ளது. குற்றவியல் சட்டத் தீர்வுகளின்படி குற்றம் சாட்டப்பட்டவர் தக்க சான்றுகள் மூலம் குற்றம் புரிந்தார் என்று மெய்ப்பிக்கப்படும் வரை அவர் குற்றம் செய்தவராகவே கருதப்படுவார். அந்தப் பொறுப்புக்கு மெய்ப்பிக்கும் பொறுப்பு என்று பெயர். உச்ச நீதிமன்றத்தில் கோசுவாமி என்பவருக்கும் மத்தியபிரதேச மாநிலத்திற்கும் நடந்த வழக்கில் எதிர்த்தரப்பில் நீதிமன்றத்தில் அளிக்கப்பட்ட சாட்சியங்களும், சான்றாவணங்களும் நம்பத்தகாதனவாகவும் முழுதும் பொய்யாகவும் இருந்தபோதிலும் கூட, குற்றவியல் நீதிமன்றங்களில் எதிரி செய்த குற்றத்தை மெய்ப்பிக்கும் பொறுப்பிலிருந்து எதிரியின் மீது வழக்குத் தொடுத்த அரசின் சுமை தவிர்க்கப்பட்டதாகக் கொள்ளக்கூடாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எதிரி தன் தரப்பில் எடுத்து வைத்துள்ள வாதுரைகள், சான்றாவணங்கள், சாட்சிகள் ஆகியவை பிழையானவைகளாகவும், பொய்யாகவும் இருந்தாலும் கூட எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களை அரசாங்கம் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் மெய்ப்பிக்கும் பொறுப்பில் உள்ளதை உச்சநீதிமன்றம் இந்த வழக்கின் தீர்ப்பில் தெளிவாக விளக்கியுள்ளது. 1972 ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற வழக்குகள் குற்றவியல் என்னும் நூலில் 258ஆம் பக்கத்தில் வெளியிடப்பட்டு, குற்றவியல் நீதிமன்றத்தில் ஓர் எதிரியின் மீது சுமத்தப்பட்ட வழக்கில் அவர் சரியான காரணங்களை எடுத்து எதிர்வாதுரை வழங்கவில்லை என்ற காரணத்தினால் அவருக்கு எதிராக ஓர் அனுமானம் கொள்ளக்கூடாது என்று உச்சநீதிமன்றம் பிறிதொரு வழக்கில் தெளிவாக விளக்கியுள்ளது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள எதிரி, குறுக்கு விசாரணைக்கு உட்பட்டவன் அல்லன் என்பதாலும், குறிப்பாகக் குற்றவியல் நடைமுறைச்சட்டப்பிரிவு 342இன் கீழ் அவன் அளிக்கும் வாக்குமூலம் குறுக்கு விசாரணைக்குட்படாத காரணத்தாலும், அவர் மீது வழக்குத் தொடுத்துள்ள அரசு, வழக்கின் ஐயத்தை அகற்றித் தெளிவான குற்றத்தை மெய்ப்பிக்க வேண்டும் என்ற மெய்ப்பிக்கும் பொறுப்புக் கொள்கையை திரு இராமன் என்பாருக்கும் உத்திரப்பிரதேச மாநிலத்திற்கும் நடைபெற்ற வழக்கில் உச்சநீதிமன்றம் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. அது 1972-ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற வழக்குகள் என்னும் நூலில் பக்கம் 8-இல் வெளியாகியுள்ளது. ஒரு வழக்கில் எதிரி தான் குற்றம் செய்யவில்லை என்று மட்டும் சொல்லிவிட்டு அதற்கான சாட்சியங்கள், அல்லது சான்றாவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யத் தவறினாலும் வழக்குத் தொடுத்த அரசாங்கம் அவனுடைய மௌனத்தை ஆதாயமாகக் கொண்டு அவன் செய்த குற்றத்தை மெய்ப்பிக்கும் பொறுப்பிலிருந்து தவிர்த்துக்கொள்ள இயலாது. இந்தக் கட்டத்திலும்கூட எதிரி

செய்த குற்றத்தை ஐயம் அகற்றித் தெளிவுடன் மெய்ப்பிக்க வேண்டுமென்பதை உச்சநீதிமன்றம் பிலன்தாஸ் என்பாருக்கும் பஞ்சாப் மாநிலத்திற்கும் நடைபெற்ற வழக்கில் தீர்ப்பு பிறப்பித்து. இந்தத் தீர்ப்பு 1972ஆம் ஆண்டு உச்சநீதிமன்ற குற்றவியல் வழக்குகள் பக்கம் 145இல் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை இந்தியச்சான்றுச்சட்டத்தில் பிரிவு 101இல் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

**மெய்ப்பிக்கும் பொறுப்புடையவர்** : உரிமையியல் நீதிமன்றங்களில் அல்லது உரிமையியலுக்கு ஒப்பான நீதிமன்றங்ளில் மெய்ப்பிக்கும் பொறுப்பு வழக்குகளின் தன்மைக்கேற்ப வாதி, பிரதிவாதிகளுக்கிடையில் மாற்றம் அடைவதுண்டு. ஒரு வழக்கை வாதி நீதிமன்றத்தில் தொடுத்துவிட்டார் என்ற காரணத்தினாலேயே உரிமையியல் நீதிமன்றங்களில் அவ்வழக்கில் உள்ள சாரங்கள் முழுவதையும் மெய்ப்பிக்க வேண்டும் என்று பொருள் கொள்ளக்கூடாது. வழக்கின் தன்மையைப் பொறுத்துச் சில வழக்குகளில் வழக்கு யார் மீது தொடுத்தாரோ, அப்படித் தொடுக்கப்பட்டவருக்கு மெய்ப்பிக்கும் பொறுப்பு ஏற்படுவதுண்டு. குற்றவியல் நீதித்துறையின் நியாயமான சந்தேகங்களுக்கு அப்பால் எதிரி செய்த குற்றத்தை அரசு மெய்ப்பிக்க வேண்டும் என்று உள்ளதைப்போல் உரிமையியல் நீதிமன்றத்தில் மெய்ப்பிக்கும் பொறுப்பு இல்லை. உரிமையியல் நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் யாதொன்றை மெய்ப்பிக்கத் தவறிவிட்டால் அதை நிலைநாட்ட இயலாதோ அதனை மெய்ப்பிக்கும் பொறுப்பைச்சுமந்தாக வேண்டும் என்ற கொள்கை இந்தியச் சட்டத்தில் பிரிவு 102 இல் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

எ.கா. அழகரசன் என்பவர் நாகலிங்கம் என்பவரிடம் அனுபோகத்தில் உள்ள சொத்தினைத் தமக்குச் சட்டபடி முறையிலான உரிய சொத்து என்று வழக் குத் தொடுப்பதாகக் கொண்டால் அவ்வழக்கில் அழகரசன், நாகலிங்கம் அனுபவித்து வரக்கூடிய சொத்து நாகலிங்கத்தின் தந்தை அரங்கநாதன் எழுதி வைத்த விருப்பாவணம் மூலம் தமக்குரியது என்று உரிமை கொண்டாடி, அனுபவம் பெற சில உண்மைகளை நீதிமன்றத்தின் மூன்னால் மெய்ப்பிக்கும் பொறுப்பைச் சுமந்தாகவேண்டும்.

அழகரசன் வழக்குத் தொடுக்கும் சொத்து நாகலிங்கத்தின் பொறுப்பில் உள்ளது. இது வழக்குக்கு முன்னால் உள்ள நிலை. யாதொருவருடைய பொறுப்பில் அல்லது அனுபவத்தில் ஒரு சொத்து உள்ளதோ அந்தச் சொத்து அவருடைய சொத்து என்றுதான் எடுத்த எடுப்பில் கருதப்படும். ஆனால், அந்த நிலையை மாற்றி நாகலிங்கம் அந்தச் சொத்துக்குரியவர் அல்லர் என்றும், நாகலிங்கத்தின் தந்தை அரங்கநாதன் எழுதி வைத்த விருப்பாவணப்படி தாமே அச்சொத்துக்குரியவர் என்றும் அழகரசன் புதிதாக ஓர் உண்மையை நிலைநாட்டும் பொறுப்பில் உள்ளார். அப்படி நிலைநாட்டும்போது அரங்கநாதனுக்கு அந்தச்சொத்து முழு உரிமையுடைய சொத்து என்பதையும், அந்தச் சொத்தை அரங்கநாதன் உயில் மூலம் அழகரசனுக்கு எழுதிக் கொடுக்க உரிமையுள்ளவர் என்பதையும், அவரைத் தவிர வேறு யாருக்கும் அச்சொத்தில் எந்த உரிமையுமில்லை என்பதையும், அந்த விருப்பாவணம் உரிய சாட்சியங்களின் முன்னிலையில் மனப்பூர்வமாகச் சம்மதித்து எந்தத் தூண்டுதலுக்கும், ஏமாற்றுக்கும், பித்தலாட்டங்களுக்கும் உட்படாமல் தெளிந்த சிந்தனையோடு எழுதப்பட்டது என்பதையும் அவ்வாவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்துத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது என்பதையும், அழகரசன் மெய்ப்பிக்க வேண்டும். இந்த மெய்ப்பிக்கும் பொறுப்பு அழகரசன் பால் சுமத்தப்பட்டுள்ளது. அழகரசன் மெய்ப்பிக்கும் போது எதிர்த்தரப்பில் வாதிடும் நாகலிங்கம் தன் தந்தை எழுதி வைத்த உயில் உண்மைதான் என்று சொல்லி, அவருடைய கையொப்பத்தையும் ஒப்புக் கொள்கிறார். ஆயினும் அந்த விருப்பாவணம் தன் தந்தையை ஏமாற்றி எழுதி வாங்கப்பட்டது என்று சொல்வாராயின் அந்தக் கட்டத்தில் மெய்ப்பிக்கும் பொறுப்பிலிருந்து அழகரசன் விடுவிக்கப்பட்டு, ஏமாற்றி எழுதி வாங்கப்பட்டது என்று சொன்ன நாகலிங்கம் அதை மெய்ப்பிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த உண்மை கேரள உயர் நீதிமன்றத்தில் நாரயண ஐயர் எதிரி வெங்கடம்மா வழக்கில் தெளிவாக விளக்கப்பட்டு அனைத்திந்திய அறிக்கை ( ஏ. ஐ. ஆர். 1957 ) கேரளா பக்கம் 115-இல் வெளியிடப்பட்டுள்ளது.

ஓர் உண்மையை அடிப்படையாக வைத்து அதை மெய்ப்பிக்கும் கட்டத்தில் அந்த உண்மையை ஏற்றுக் கொண்டு எதித்தரப்பினர் அதைச்சட்டத்துக்குப் புறம்பான வழியில் பெறப்பட்டது என்று வாதுரை செய்யும்போது, மெய்ப்பிக்கும் பொறுப்பு வாதியிடமிருந்து பிரதிவாதிக்கு உரிமையியல் நீதிமன்றத்தில் மாறுகிறது. பொதுவாக உரிமையியல் நீதிமன்றங்களில் மெய்ப்பிக்கும் பொறுப்பை அவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய ஏழு வினாக்களைக்

கொண்டு தீர்மானிப்பது ஒரு நடைமுறையாக உள்ளது. ஆனால் குற்றவியல் நீதிமன்றங்களில் மெய்ப்பிக்கும் பொறுப்பு வழக்குத் தொடுப்பவர் வசம் உள்ளது.

எ.கா. குற்றச்சாட்டு கொடுப்போர் ஒருவரை ஓர் எதிரி தாக்கிவிட்டதாகவும், அந்த எதிரி தாக்கியதற் குக் காரணம் குற்றச்சாட்டு கொடுப்போர் தன்னைத் தாக்க வந்தார் என்பதனால் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே எதிரி தாக்கினார் என்று சொல்லும் கட்டத்தில், குற்றச்சாட்டு கொடுப்போர் மீதுள்ள காயத்தைப் போல் எதிரியின் மேலும் காயம் இருந்தால், எதிரி தற்காப்புக்காக அவரைத் தாக்கினார் என்று கருத முடியும். ஆனால், தற்காப்புக்காகத் தாக்கவில்லை என்று வாதிட்டுக் குற்றம் இழைக்கத் தாக்கினார் என்று குற்றச்சாட்டு கொடுப்போர் வாதிடுகிறபோது அக்குற்றத்தை மெய்ப்பிக்க வேண்டிய பெரிய பொறுப்பு குற்றச்சாட்டு கொடுப்போருக்குத் தான் உள்ளது.


இந்தியச் சான்றுச்சட்டம் சில உண்மைகளை மெய்ப்பிக்காமலேயே உண்மை என்று ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது. அவை மெய்யானவை அல்ல என்பதை ஆதாரமாக வைத்து வாதிடுவோர் மெய்ப்பிக்கும் பொறுப்பைச் சுமந்தாக வேண்டும் என இந்தியச் சான்றுச்சட்டம் கூறுகிறது. எடுத்துக்காட்டிற்கு ஒரு சட்ட முறையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருமணத்தின் மூலம் கணவன், மனைவி ஆகியவர்களுக்குப் பிறக்கின்ற குழந்தையையும் அல்லது அவர்களுக்குள் திருமண முறிவு ஏற்பட்டுத் திருமண முறிவு ஏற்பட்ட நாளிலிருந்து 280 நாட்களுக்குள் பிறந்த குழந்தையையும் அக்கணவன், மனைவியர்க்குப் பிறந்த குழந்தை எனக் கொள்ளவேண்டும் என்பது இந்தியச் சான்றுச்சட்டம் பிரிவு 112 சொல்லுகிறது. இது மெய்ப்பிக்க தேவையில்லாத உண்மையாகும். இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட கணவன் மனைவிக்குப் பிறந்த குழந்தை தன் குழந்தையன்று என வாதிடுவாரேயானால், அந்த வாதத்திற்கு ஆதாரமாகக் கணவன், மனைவி இருவரும் கருவுற்ற காலகட்டத்தில் இருவருக்கும் தொடர்பு இல்லை என்பதை ஐயம் அகற்றித் தெளிவுபடுத்த வேண்டிய மெய்ப்பிக்கும் பொறுப்பும் கணவன்பால் உள்ளது என்பதை இச்சட்டம் உணர்த்துகிறது.

இதுபோன்றே 1983ஆம் ஆண்டுச்சட்டம் எண் 46க்கு ஒப்ப இந்தியச் சான்றுச் சட்டம் பிரிவு 113அ இச்சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி கணவன், மனைவி திருமணமாகி ஏழு ஆண்டுகளுக்குள் மனைவி தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டால், கணவன் அல்லது கணவனுடைய உறவினர்கள் அந்த மனைவியின் ஆயுள் காலத்தில் அவளைக் கொடுமை செய்தார் என்பதை நீதிமன்றங்கள் மனைவி தற்கொலை செய்துகொள்ளக் கணவனோ, கணவனின் உறவினரோ, உடந்தையாக இருந்தார் என்பதை மெய்ப்பிக்க வேண்டாமலே ஏற்றுக்கொள்ளலாம் என்று சட்டம் சொல்கிறது. இந்தக் கட்டத்தில் இச்சட்டத்தின் பிரிவின்படி இறந்த மனைவியைக் கொடுமைப்படுத்தவில்லை என்றும், கொடுமை காரணமாக மனைவி தற்கொலை செய்து கொள்ளவில்லை என்பதையும் மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு கணவனையும், கணவனுடைய உறவினர்களையும் சார்ந்தது ஆகும்.

இதுபோலவே, பல்வேறு உண்மைகளை மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு சட்ட நூல்களில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. முன்னால் நடந்த ஒரு வழக்கில் ஒரு நீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டால் அந்த வழக்கில் உள்ள உண்மைகளைப் பின்னால் வழக்குத் தொடுத்து மெய்ப்பிக்க வேண்டிய பொறுப்பு இல்லை என்று சட்டம் பகர்கிறது.

- வி.சு.

**மெய்யப்பச் செட்டியார் ஏ.வி. :** திரைப்பட உலகில் பெரிய சாதனைகள் செய்தவர் ஏ.வி. மெய்யப்பச்செட்டியார். சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் ஆவிச்சி செட்டியாருக்கும், இலட்சுமி ஆச்சிக்கும் 28 - 7 - 1907இல் நன்மகனாய்த் தோன்றினார். ஒரு குடும்பத்திற்கு ஒரு மகனாய் திகழ்ந்தார். காரைக்குடி மீனாட்சி உயர்நிலைப் பள்ளியில் ஒன்ப தாம் வகுப்பு வரை பயின்றார். தம் தந்தையார் நிறுவனத்தில் பல்பொருள் விற்பனையாளராக வாழ்வைத் தொடங்கினார். பின்னர், திரைப்படத் தொழிலில் புகுந்தார். காரைக்குடி அருகில் உள்ள தேவகோட்டையில் 1946 இல் மிக எளிய முறையில் படப்பிடிப்பு நிலையங்கள் அமைத்துக் குறைந்த செலவில் நல்ல படங்களை உருவாக்கினார். பின்னர், சென்னையில் 1948இல் ஏ.வி.எம் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கினார். பெரிய அளவில் திட்டமிட்டுப் பல பெரிய படங்களை எடுத்து பெருஞ்செல்வம் குவித்தார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய திராவிட



மெய்யப்பச் செட்டியார் ஏ. வி.

மொழிகளிலும் வங்காளம், இந்தி முதலிய வட இந்திய மொழிகளிலும் நல்ல படங்களைத் தயாரித்தார். பொழுதுபோக்குப் படங்களையும் நல்ல கருத்துப் படங்களையும் தேசிய உணர்ச்சிப் படங்களையும் தயாரித்தார்.

நடிப்பு, இசை, நடனம், உரையாடல், இயக்குதல் முதலிய பல் துறைகளிலும் புதுமுகங்களையும், புதிய கலைஞர்களையும் முதன்முதலாக அறிமுகப்படுத் திய பெருமை இவரையே சாரும்.

செயல்களில் மாற்றம் செய்வதிலும், புதுமை புகுத் துவதிலும் இயல்பார்வம் மிக்கவர். உலகைப் பல முறை வலம் வந்தவர். உலகின் திரை உலகப்புதுமை எல்லாம் தமிழ்த் திரைஉலகில் புகுத்திய முதன்மையர். தம் திரைப்படங்கள் மூலம் பாரதியார் பாடல்கள் பரவப் பல வழிகளில் செயற்பட்டார். சொந்த இசைப் பதிவு நிறுவனம் வைத்திருந்ததால் பாரதியாருடைய பாடல்களை இசைத்தட்டில் பதிவு செய்து பல்லாயிரக் கணக்கில் வெளியிட்டுத் தமிழ்நாடு முழுதும் ஒலிக்கச் செய்த பெருமை இவரையே சாரும். பாரதியார் குடும் பத்தாரிடம் தொகை கொடுத்து உரிமை பெற்றிருந் தார். பின்னர் அறிஞர்களின் வேண்டுகோளுக்கிணங்க வும் முதலமைச்சர் ஓ.பி.இராமசாமி செட்டியார் கேட் டுக்கொண்டதற்கு இணங்கவும் பாரதி பாடல்களை நாட்டுடைமையாக்க வழிவகுத்தார். தோல்வியைக் கண்டு துவளாமல் மனத்திட்பத்துடன் செயலாற்றித் தமிழ் திரையுலகில் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார்.

திரைப்படங்கள் மூலம் தாம் ஈட்டிய பெரும் செல்வத்தில் ஏ.வி.எம்.அறக்கட்டளை நிறுவினார். பள்ளிகள், திருமண மண்டபம் ஆகியன அமைத்து நாட்டு மக்களுக்கு நலம் பல செய்தார். திரை உலகுக் கான மிகப் பெரிய விருதுகள் பலவற்றைப் பெற்றார். தமிழ் எழுத்தாளர்களுக்கும், அறிஞர் பெருமக்களுக் கும் நிதி அளிப்பதிலும், பொற்கிழி வழங்குவதிலும் முதல் வரிசையில் நின்றார். தமிழ் அறிஞர்களை மதித் துப் போற்றி அவர்களுடன் அளவாளவுவதில் பெரு மகிழ்வு கொண்டார். ஏவி.எம் எதனையும் கலையழ குடன் நோக்குவதிலும் செய்வதை திருந்தச் செய்வ திலும் வல்லவர். பல நல்ல படங்களைச் சிறந்த முறை யில் உருவாக்கியதோடு பல சிறந்த படங்களையும் இயக்கினார். திரையுலகின் முன்னோடியாகவும், பல ருக்கு வழிகாட்டியாகவும் நாடுமதித்துப்போற்றும் நல்ல சாதனையாளராகவும் விளங்கிச் சிந்தனை செயல் உழைப்பு ஆகியவற்றால் உயர்ந்த உத்தமர் மெய்யப்பச் செட்டியார் ஆவார். இவர் 1979ஆம் ஆண்டு காலமானார்.

- ச. மெ.

**மெயின் :** அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வட கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு மாநிலம். நியுசிலாந்துப் பகுதியில் அமைந்துள்ள மெயின் ( Maine ) மாநிலத்தில், வடக்கில் கனடிய மாநிலங்க ளான கியூபெக், பிரான்சுவிக் ஆகியனவும், கிழக்கில் நியூ பிரன்சுவிக்கும், தென்கிழக்கிலும், தெற்கிலும் அட்லாண்டிக் பெருங்கடலும், மேற்கில் புதிய நியு ஆம்சயர் கியூபெக் ஆகியனவும் எல்லைகளாக அமைந்துள்ளன. இம்மாநிலம் 43 - 4° - 47 - 28° வட அட்ச ரேகையிலும் 70° மேற்குத் தீர்க்க ரேகையிலும் உள்ளது. இது கி.பி. 1629இல் நியு இங்கிலாந்தின் மெயின் நிலப்பகுதிகள் என்று கூறப்பட்டது. பின்னர் கி.பி. 1677 முதல் கி.பி. 1820 இல் அமெரிக்க ஐக்கிய நாடுகளுடன் இணையும் வரை மெயின், மாசசூசெட் சின் ஒரு பகுதியாக விளங்கிற்று. மெயின் கி.பி. 1820 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் பதினைந்தாம் நாள் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் இருபத்து மூன்றாம் மாநிலமாக இணைக்கப்பட்டது. இம்மாநிலத்திற்குத் தேவதாரு மரம் என்றப் பெயரும் உண்டு. வெள்ளை தேவதாரு மரம் இம்மாநிலத்தின் தேசிய மரமாதலால் இப் பெயர் வந்தது.

இம்மாநிலத்தின் மொத்தப்பரப்பளவு 86, 027 ச.கி.மீ ஆகும். மக்கள் தொகை 1,133,000 (1982) ஆகும். அகசுடா ( Augusta ) நகரம் இம்மாநிலத்தின் தலைநகர் ஆகும். இந்நகரில் 1970ஆம் ஆண்டிலேயே 21,945 மக்கள் வாழ்ந்தனர். கிழக்குக்கோடியில் அமைந்துள்ள மெயின் மாநிலம் மிகப்பெரியது. இம் மாநிலத்தின் கடற்கரையில் நூற்றுக்கணக்கான தீவு கள் உள்ளன. அட்லாண்டிக் கடற்கரையில் அமைந் துள்ள மற்ற நாடுகளைக் காட்டிலும் மெயினில்தான் மிகச் சிறந்த பல துறைமுகங்கள் உள்ளன. அவற்றுள் காசுகே குடானில் அமைந்துள்ள போர்ட்லாந்து துறைமுகமே தலைமை சான்றது. பாத்து, இராக் லாந்து, பெல் பர்ச்ட், சியர்போர்ட், பங்கோர், ஈஸ்ட் போர்ட் ஆகியன இங்குள்ள மற்ற துறைமுகங்கள் ஆகும். தலைநகர் அசுடாவிற்கு அடுத்தப்படியாகப் போர்ட்லாந்து என்னும் இரட்டை நகரம் துணி நெசவிற்கும் செருப்பு




மெயின்

உற்பத்திக்கும் புகழ் பெற்றுள்ளது. மௌண்ட்டு காட்டாடின் சேடில் பேக்குமலை, மௌண்ட் ஆபிரகாரம், புளுமௌண்டன் முதலான இங்குள்ள புகழ்மிகு மலைகள் ஆகும். இவற்றில் 1606 மீட்டர் உயரமுள்ள காட்டாடிசன் மலையே மிகப்பெரியது. புனித சான் ஆறும் அதன் கிளை நதிகளும் இம்மாநிலத்தை வளப்படுத்துகின்றன.

பெரும்பாலும் வடக்கிழக்கு ஐக்கிய அமெரிக்காவில் காணப்படும் பயிரினங்களே இங்கும் மிகுதியாக உள்ளன. காட்டுச்செல்வம் இங்கு மிகுந்த வருவாயைத் தருகின்றது. தேவதாரு மரக்காடுகள் இம்மாநிலத்தில் நிறைந்துள்ளன. பன்னீர் இங்குத் தயாரிக்கப்படுகிறது. மெயின் பல்கலைக்கழகம் ஓரோனாவில் ( Orona ) உள்ளது. இம்மாநிலத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்விக் கழகங்களும் ஆராய்ச்சி மையங்களும் உள்ளன. இவற்றுள் பிரைபர்க் கல்விக்கழகம் பிட்சுபீல்டில் உள்ள மத்தியக் கழகம் ( Main Central Institute, Pittsfield ), எப்பிரன் கல்விக் கழகம் ( Hebron Academy ) ஆகியன குறிப்பிடத்தக்கன. இம்மாநிலத்தில் முன்னூறுக்கு மேற்பட்ட நூலகங்கள் உள்ளன. பாங்கர் என்ற இடத்தில் இம்மாநிலத்தின் மாபெரும் பொது நூலகம் உள்ளது.

இங்கு மிகுந்த அளவில் காகிதம், மரம், மரப்பொருள் உற்பத்தி செய்யப்படுகின்றன. காகித உற்பத்தியில் மெயின் முதலிடம் பெறுகிறது. பனிக்காலணிகளும் ( Snow Shoes ) இங்கு தயாராகின்றன. தோல் பதனிடல், தோல் பொருட்கள் தயாரித்தல், துணி நெசவு, கப்பல் படகு தயாரித்தல் ஆகியனவும் இங்கு மிகுதி. வேளாண்மை ஒரு முதன்மைத் தொழிலாக இங்கு நடைபெறுகிறது. உருளைக்கிழங்கு, ஆப்பிள், ஓட்சு, பட்டாணி ஆகியவை இங்கு மிகுதியாக விளைகின்றன. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் பயிராகும் உருளைக்கிழங்கில் முப்பது விழுக்காடு இம்மாநிலத்தில் பயிராகிறது. பால்பண்ணைத் தொழிலிலும் சிறப்

புப் பெற்றுள்ளது. பாங்கர் பகுதியில் மரம் அறுக்கும் ஆலைகள் மிகுதியாக உள்ளன. தேவதாரு மரங்கள் இங்கிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கு காட்டு, கேடக்கு, கேக்கு, பொல்லாக்கு போன்ற பல வகையான மீன்கள் மிகுந்த அளவில் பிடிக்கப்படு கின்றன. மங்கனம் செம்பு முதலான தாதுப்பொருள் களும் கிடைக்கின்றன. நீர்முழ்கிக் கப்பல்களும் இங்குக் கட்டப்படுகின்றன. இங்குள்ள ஏரிகளில் நீர்மின்சக்தி எடுக்கப்படுகிறது.

அழகிய திருக்கோயில்கள் பல இங்குள்ளன. இங்குப் பெஞ்சமின் பால் ஆகர்சு, பிரடரிக்கு போர்டர் இலிண்டன், வின்சுலோ ஓமர் முதலான புகழ்மிக்க கலைஞர்கள் இம்மாநிலத்திற்குப் பெருமை சேர்த் துள்ளனர். அகேடியா தேசிய பூங்கா, போர்ட்லாந்தி லுள்ள அருங்காட்சியகம், பிரான்சுவிக்கில் உள்ள வால்கா கலை அருங்காட்சியகம், அகசுடா அரசு இல்லம் ஆகியன கண்டு மகிழத்தக்க வரலாற்றுப் புகழ் மிக்க இடங்களாகும். மெயின் மாநிலத்தின் அரசிய லமைப்பு கி.பி. 1819இல் உருவாக்கப்பட்டது. இங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆளுநரே பெரிய அரசு அலுவலர். இங்கு ஓர் ஆளவை மன்றமும், மக்க ளவையும் உள்ளன. இங்கு பதினெட்டு வயதான அனைவருக்கும் வாக்குரிமை உண்டு. இங்கு ஆங்கி லேய, ஸ்காட்லாந்து, அயர்லாந்து, பிரான்சு, செரு மானிய இன மக்கள் வாழ்கின்றனர். வேளாண்மை யிலும் தொழில் துறையிலும் மெய்ன் விரைவாக முன்னேறி வருகிறது.

- ம. இ.

**மெரீனாக் கடற்கரை :** சென்னை நகரைச் சேர்ந்த கடற்கரைகளான மெரீனாக் கடற்கரை, இராயபுரம் கடற்கரை, சாந்தோம் கடற்கரை, எலியட்டு கடற்கரை ஆகியவற்றுள் சிறந்து விளங்கு வது மெரீனாக் கடற்கரை. இது உலகின் இரண்டாவது அழகிய கடற்கரையாகும்.


இரும்பு வாராவதி என்றும் நேப்பியர் பாலம் என்றும் கூறப்படும் பாலத்திலிருந்து சாந்தோம் வரை உள்ள பகுதியே மெரீனாக் கடற்கரையாகும். இக்கடற் கரைக்கு மெரீனா ( Merina ) என்று பெயரிட்டவர் ஆங் கிலேயே ஆட்சியின்போது சென்னையில் ஆளுநராக விளங்கிய சர் மௌண்டு கிராண்ட் பிரபு (கி.பி. 1881 - 1886) என்பவர் ஆவார். அவருடைய ஆட்சிக் காலம் பற்றிக் குறிப்பிடும் வரலாற்றாசிரியர்கள் ஆட்சியமைப் பில் அக்காலம் அவ்வளவு சிறப்புடையது அன்று என்றே கூறியுள்ளனர் எனினும், மெரீனாக் கடற்கரை இவருக்குப் பெருமை சேர்த்துள்ளது.

மரைன் என்ற ஆங்கிலச் சொல்லின் அடியாகப் பிறந் ததே மெரீனா என்னும் சொல். இப்பொழுது சென் னைப் பல்கலைக்கழகம் அமைந்துள்ள இடத்தில் மரைன் மனை அல்லது மரைன் மாளிகை எனும் ஒன்று இருந்தது எனவும் அதையொட்டியே இப்பெயர் அமைந்தது எனவும் குறிப்பிடுவர்.

கூவம் ஆறு, கடலில் கலக்கும் இடத்தில் தொடங் கிச் சாந்தோம் வரை நீண்டுள்ள இக்கடற்கரையில் விடுதலைப் போராட்டக் காலங்களில் காங்கிரசு இயக் கத்தவரின் கூட்டங்கள் நடைபெற்றன. அவ்வாறு கூட்டங்கள் நடைபெறும் இடத்திற்குத் திலகரின் பெய ரால் திலகர் கட்டம் என்று பெயர் சூட்டினர். இக்கடற் கரையில் அமைந்துள்ளவற்றில் தமிழ்நாடு முதலமைச் சராக விளங்கிய பேரறிஞர் அண்ணா சமாதி தற்போது அண்ணா சதுக்கம் என்ற பெயருடன் விளங்கி வரு கிறது. இதனையடுத்து தமிழக முதலமைச்சராக விளங் கிய எம்.ஜி. இராமச்சந்திரன் சமாதியும் உள்ளது.

இக்கடற்கரையின் தென்முனையில் கலங்கரை விளக்கம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றத்தின் உச்சியில் அமைக்கப்பெற்றிருந்த கலங் கரை விளக்கத்திற்குப் பதிலாக அமைக்கப்பெற்றுள்ள கலங்கரை விளக்கம் அது. இக்கடற்கரையையொட்டி தமிழுக்கும், தமிழ் மண்ணுக்கும் தொண்டாற்றியவர் களின் சிலைகள் நாட்டப்பட்டுள்ளன. கம்பர், இளங்கோவடிகள், வீரமாமுனிவர், கண்ணகி, பாரதி, பாரதிதாசன், ஔவை, திருவள்ளுவர், காமராசர், போப் ஆகியோர் சிலைகள் உள்ளன. காந்தியடிகளின் சிலையும், உழைப்பாளர் சிலையும் 1967க்கு முன் அமைக்கப்பெற்றன. கடற்கரை மணலில் பொதுக்கூட் டங்கள் நடத்திட சீரணித் தொண்டர்களின் துணை யுடன் சீரணி அரங்கம் கட்டப்பட்டது. அது தற்போது இடிக்கப்பட்டுவிட்டது.

இக்கடற்கரையையொட்டி மீனவர் குடியிருப்பு களான நொச்சிக்குப்பம், அயோத்தியா குப்பம் முதலி யன அமைந்துள்ளன. மெரீனாவிற்கு அருகில் செல் லும் சாலையை அமைத்தவர் நேப்பியர் என்னும் ஆங்கிலேய ஆளுநர் ஆவார். முதலில் இக்கடற்கரைச் சாலை தெற்குக் கடற்கரைச்சாலை என்றே குறிப்பிடப்





மெரீனாக் கடற்கரை

பட்டது. இப்போது காமராசர் சாலை எனப் பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

மெரீனாவையொட்டிய இச்சாலையின் மேற்குப் பகுதியில்தான் வாலாசா நவாபுகளின் அரண்மனை இருந்தது. அவ்வரண்மனை இருந்தபகுதியில் இன்று அரசு அலுவலகங்கள் அமைந்துள்ளன. காமராசர் சாலையின் மேற்குப்பகுதியில் அமைந்துள்ள விவேகானந்தர் இல்லம் வரலாற்றுப் புகழ் பெற்றது. மேலும், மெரீனாக்கடற்கரையில் சென்னைப் பல்கலைக்கழகக் கட்டடங்கள், சென்னை மாநிலக் கல்லூரி, இராணிமேரிக் கல்லூரி, பொதுப்பணித்துறைக் கட்டடங்கள், எழிலகம் முதலியன விளங்குகின்றன.

விவேகானந்தர் இல்லத்தையொட்டி பெசண்ட் அம்மையாரின் இல்லம் ஒன்றும் உள்ளது. எழிலகம் என்னும் அழகிய அரசு மாளிகை ஒன்றும் இங்குக் கட்டப்பட்டுள்ளது. சென்னை மாநிலக்கல்லூரி ஆளவை மன்றம் ( Senate ) இதை சிசோல்ம், என்றி என்ற சிற்பக் கலைஞர்கள் வடிவமைத்தனர். பழமைச் சிறப்பு வாய்ந்த கூம்பு வடிவக் கோபுரங்கள் அமைந்த அக் கட்டடங்கள் மெரீனாக் கடற்கரைக்கு எழில் ஊட்டுகின்றன.

- ந. க. ம.

**மேல்நிலைக் கல்வி** : இந்தியாவில் புதிய கல்வி அமைப்பு முறையினை வலியுறுத்தி கோத்தாரின் கல்விக்குழு ( 1964 - 66 ) செய்த பரிந்துரைகளில் 10 + 2 + 3 என்ற கல்வி வகுப்புத் தொகுப்பு குறிப்பிடத்தக்கதாகும். அதுகாறும் கல்லூரிகளில் இணைக்கப்பட்டிருந்த புதுமுக வகுப்புகள் பல்கலைக்கழகங்களின் ஆணை வாம்பிலிருந்து நீக்கப்பட்டு உயர்நிலைப் பள்ளியின் இறுதி வகுப்பின் தொடர்பாக அமைய வேண்டும் என்பதே இப்பரிந்துரையாகும். இதனால் பத்தாம் வகுப்பிற்குப் பிந்தைய ஈராண்டுப் படிப்பானது பல்வேறு தொழில், கலை, அறிவியல் பட்டப் படிப்புக்கு முன் படியாகவும், பல பணிகளுக்கு அடிப்படைத் தகுதியாகவும அமைந்துள்ளன. மேல்நிலைக் கல்வியின் நோக்கங்களாகக் கீழ்க்காணுபவற்றைக் குறிப்பிடலாம்

1. வேலையின்மையை அகற்றுவது

2. வறுமையை ஒழித்தல்

3. ஊரக முன்னேற்றம்

4. வயது வந்தோர் கல்வி

இந்நிலையில் படித்தற்குரிய பாடங்களாக அமைந்துள்ளன. பல்வேறு தனித்திறன்களுக்கும் தேவைகளுக்கும் ஏற்றவையாக உள்ளன. இந்நிலையில் கற்பிக்கப்படுபவை, இரு கிளைகளை உடையது. ஒன்று கல்வி நீர்வழி எனவும் மற்றது தொழில் நீர்வழி ( Stream ) எனவும் கூறப்பட்டது. இவற்றை மால்கம் ஆதிசேசையா குழுவினர் கல்வி ஒளிக்கட்டாகவும், தொழில் ஒளிக்கட்டாகவும் ( Spectrum ) குறிப்பிட்டுள்ளனர். மேலும், இக்குழுவினர் தொழில் கல்விப்பிரிவு வேளாண்மை, ஊரகத் தொழில், மருத்துவத்தில் அடிப்படைப்பணி, வணிகம், மேலாண்மை, உடல் நலம் போன்றவற்றை ஒட்டியதாக இருக்க வேண்டும் எனவும் பொறியியல் உற்பத்திப்பணிகள், ஆலைத்தொழில், வாழ்க்கைத் தொழில்கள் ஆகியவற்றைச் சார்ந்திருக்க வேண்டுமெனவும் பரிந்துரைத்தனர். கிராமப்புறங்களில் மேல்நிலைப்பள்ளிகளை ஏற்படுத்துமாறும் பரிந்துரைத்தனர்.

மால்கம் ஆதிசேசையா குழுவினர் விருப்பத் தொழில் பாடங்களுக்கு 70% பாட நேரத்தை ஒதுக்குவதை ஆதரித்தனர். இதில் 50% நேரம் நேரடிப் பயிற்சிக்கென ஒதுக்கப்பட வேண்டும். தொழில்சார் பாடங்களைத் தேர்ந்தெடுப்பதில் வேலைவாய்ப்புக்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும். தொழில் பயிற்சி நிறுவனங்களில் வழங்கப்படும் அதே பாடங்களையே இங்கும் கற்பிக்கக்கூடாது. தொழில்சார் பாடங்களை எட்டு வகையாகப் பகுத்துள்ளனர். அவையாவன :-

1. **வேளாண்மை சார்ந்தவை** : அ. மீன் பிடித்தல், ஆ. மண், நீர் பாதுகாப்பு, இ. வேளாண்மைசார் வேதியியல் பொருட்கள், ஈ.பண்ணைசார் பொறியியல், உ. கால்நடை பராமரிப்பு, ஊ. தோட்டக்கலை.

2. **வணிகம் மற்றும் அலுவலக மேலாண்மை** : அ. வங்கி நடைமுறை, ஆ. தட்டச்சு, சுருக்கெழுத்துப் பயிற்சி, இ. விற்பனைத்திறன், ஈ. அலுவலகப் பொறிகளை இயக்குதல்.

3. **மருத்துவச் சார்புடையவை** : அ. பல் திறன் உடல் நல ஊழியர், ஆ. பல் நுட்ப ஊழியர் இ. கதிரியக்க நுட்ப ஊழியர், ஈ. விழி மருத்துவ உதவியாளர்.

**4. கல்விப் பணிகள் :** அ. அருங்காட்சியகப் பாதுகாவலர், ஆ. நூலக உதவியாளர், இ. ஆய்வக உதவியாளர், ஈ. இசை, நாட்டிய ஆசிரியர்கள், உ. தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள்.

**5. உள்ளாட்சித் துறை போன்ற ஊழியர்கள் :** அ. ஊர் நிலை ஊழியர், ஆ. வட்ட விரிவுக் கல்வியாளர், இ. வளர்ச்சி ஊழியர்.

**6. இதழியல் :** அ. பதிப்புத்துறை உதவியாளர், ஆ. செய்தி திரட்டுவோர் (நிருபர்)

**7. மனை இயல்சார் பணிகள் :** அ. அழகு ஆடை வடிவமைப்பு, ஆ. சலவை, இ. உணவு பக்குவம் மற்றும் பாதுகாப்பு, ஈ. இல்ல ஒப்பனை.

**8. பிற பொதுப்பணிகள் :** அ. விளம்பரங்கள் வரைதல், ஆ. நிழற்படம் எடுத்தல், இ. பீங்கான் தயாரித்தல், ஈ. சுற்றுலா வழிகாட்டி.

தமிழகத்தில் 1988 - 89இல் ஏறத்தாழ 2000 மேல்நிலைப் பள்ளிகள் செயற்பட்டன. இவற்றில் கற்பிக்கப்படும் பாடங்களாவன.

1. இரு மொழிகள்

2. கீழ்க்காணுபவற்றுள் ஏதேனும் நான்கு பாடங்கள்.

1. கூடுதல் மொழி, 2. வரலாறு, 3. புவியியல், 4. பொருளியல், 5. அளவை இயல், 6. உளவியல், 7. சமூகவியல், 8. கலை, 9. பொருளறிவியல், 10. வேதியியல், 11. கணிதம், 12. உயிரியல், 13. புவியமைப்பு இயல் ( Geology ), 14. மனையியல்.

- எஸ்.ந.

**மேல்முறையீடு :** ஒரு நீதிமன்றத்தாலோ அதிகாரியாலோ அரசாங்கத்துறையாலோ ஒரு வழக்கு விசாரிக்கப்பட்டு அளிக்கும் இறுதித்தீர்ப்பை எதிர்த்துப் பாதிக்கப்பட்ட வழக்காடுவோர் அடுத்த உயர்மட்ட நீதிமன்றம் அல்லது துறைக்குத் தாக்கல் செய்யும் மேல்முறையீட்டை மேல்முறையீடு என்ற சொல் குறிக்கும். அம் மேல்முறையீடுகளில் நீதித்துறை மேல்முறையீடுகள் முக்கியமாகக் கவனத்திற் கொள்ள வேண்டியவையாகும். நீதித்துறையைப் பொறுத்தவரை, உரிமையியல் நீதித்துறை, குற்றவியல் நீதித்துறை என இரு பிரிவுகள் உண்டு. இப்பிரிவுகள் மேல்முறையீடு குறித்து வகுத்துள்ள சட்டநெறிகள் அறிந்துகொள்ளத் தேவையான ஒன்றாகும்.

**உரிமையியல் நீதிமன்ற மேல்முறையீடு :** உரிமையியல் நீதிமன்றங்களைப் பொறுத்தவரை உரிமை இயல் நடைமுறைச்சட்டம் பிரிவு 96இல் தொடங்கி மேல்முறையீட்டு முறைகளும் இயங்கு நெறிகளும் சொல்லப்பட்டுள்ளன. ஒரு வழக்கை விசாரிக்கும் உரிமையியல் நீதிமன்றம் இவ்வழக்கில் எழுப்பப்பட்டுள்ள எழு வினாக்களை முதலில் தொகுத்துக் கொள்வதுண்டு. எழுவினா என்பது இருதரப்பினரின் வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய உண்மைப் பொருளும், சட்ட முடிவும் கொண்டதாகும். சட்டப்படி ஒரு பரிகாரத்திற்கு உரியவரா என்று எழுவினா எழுப்பப்படுகிறது. எழுவினாவிற்கு விடை காண வழக்கில் கிடைத்துள்ள சான்று ஆவணங்களாகக் குறிக்கப்பட்டவையும் சாட்சியங்களும் சட்டப்படி பரிகாரத்திற்கு உரியவையா என்று ஆய்வு செய்யப்படுகிறது. இப் படி ஆய்வு செய்து நீதிபதியால் இறுதியில் பகரப் படும் முடிவு தீர்ப்புரையாகும். இத் தீர்ப்புரையைத் தழுவி தீர்ப்பாணை தரப்படுகிறது. தீர்ப்பாணை என் பது, இரு தரப்பினருக்குமிடையே எழுப்பப்பட்டு விவாதத்திற்குச் சட்ட மூலமாக இறுதித் தீர்ப்பு செய்தலாகும். இத் தீர்ப்புச் செய்தல், வழக்கின் முடிவானதாகி இரு தரப்பினரையும் கட்டுப்படுத்துகிறது. இந்தத் தீர்ப்புச் செய்தலே தீர்ப்பாணை எனப்படும். தீர்ப்புரையின் சுருக்கமான இறுதி முடிவுத் தீர்ப்பாணையை மேற்படி சட்டப்பிரிவு 96இன் படி எதிர்த்துப் பாதிக்கப்பட்ட தரப்பினர் மேல்முறையீடு செய்ய உரிமை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட தீர்ப்பாணை வழங்க வழக்காடுவோர் பகரப்பட்டால் அதனை எதிர்த்து மேல்முறையீடு செய்ய அதிகாரம் கிடையாது. ஆனால், ஒரு தரப்பினர் ஒரு தலைப்பட்சமாக்கப்பட்டு தீர்ப்பாணை வழங்கப்பட்டால் அந்தத் தீர்ப்பாணை மீது மேல்முறையீடு வழக்குத் தாக்கல் செய்யப் பாதிக்கப்பட்டவருக்கு உரிமை உண்டு. சில வழக்குகளில் முன் தீர்ப்பாணை, இறுதித் தீர்ப்பாணை என இரு கட்டங்களாகத் தீர்ப்பாணைகள் பகரப்படுவதுண்டு. இப்படிப்பட்ட வழக்குகளில் முன் தீர்ப்பாணையின் மீது மேல்முறையீடு செய்யத் தவறிவிட்டால் இறுதித் தீர்ப்பாணைக் கட்டத்தில் முன் தீர்ப்பாணையின் இறுதித் தன்மையை எதிர்த்து வாதிடும் உரிமை இழந்து விடு

கிறனர். சிறு உற்பத்தி வழக்கு நீதிமன்றங்களின் ( Small Cause court ) பொறுமான ரூபாய் மூவாயிரத்திற்குட்பட்ட வழக்குகளின் மீது மேல்முறையீடு உரிமை இல்லை என்ற போதிலும், ஏதும் சட்டச் சிக்கல் இவ் வழக்குகளில் ஆய்வு செய்ய வேண்டிய தேவை நேரிட்டால் மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது. கீழ் நீதிமன்றத் தீர்ப்பினால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டும் தான் மேல்முறையீடு செய்யத் தகுதி உடையவர்கள் என்பது 42 இந்திய வழக்குகள் பக்கம் 181 இல் சொல்லப்பட்டுள்ளது. கீழ் நீதிமன்றத் தீர்ப்பு ஒரு கட்சிக்காரருக்குத் துணையாக வழங்கப்பட்டபோது, ஒரு சில செய்திகள் தவறாகத் தீர்ப்புரையாடல் சொல்லப்பட்டதை ஆதாரமாகக்கொண்டு மேல்முறையீடு செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.

மேல்முறையீடு வழக்கைத் தயாரித்து மேல்முறையீட்டுக்காரரோ அவரது முகவரோ அவரது வழக்கறிஞரோ, மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும்போது, அதற்குரிய நீதிமன்ற முத்திரைவில்லைகளுடனும் எதிர் தரப்பிரனருக்கு மேல்முறையீடு அறிவிப்பு ஆகியவற்றை அனுப்ப முத்திரைவில்லையுடனும், கீழ் நீதிமன்றத் தீர்ப்புரை, தீர்ப்பாணைகளுடனும் தாக்கல் செய்ய வேண்டும். மேல்முறையீட்டு மனு, கீழ்நீதிமன்றம் கவனிக்கத் தவறிய அல்லது சட்டப்படி ஏற்றுக் கொள்ள மறுத்த அல்லது பிழையிட்டவற்றை வரிசையாக எடுத்து, முறைப்படுத்தித் தரவேண்டும்.மேல்முறையீட்டு வழக்கு நடைமுறையில் இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதங்களை நீதிமன்றம் கேட்டுத் தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் பிறக்கிறது. வழக்கறிஞர்கள் தங்கள் தரப்பு வாதங்களைக் கீழ்நீதிமன்றத் தீர்ப்பின்மீது செய்கிறார்கள். இது இக்கால நீதிமன்றங்களில் நடைமுறையில் உள்ளது. தாக்கல் செய்யப்பட்ட சான்று ஆவணங்களையும் படித்துக் காட்டி, சாட்சியங்களில் விளக்கியுள்ள உண்மைகளையும் கூறி வாதம் செய்கிறார்கள். சட்ட நூல்களைப் படித்துக் காட்டி கிடைக்கப்பட வேண்டிய பரிகாரங்களைச் சுட்டிக் காட்டுகிறார்கள். சில முக்கியமான சிக்கல்களைக் கீழ் நீதிமன்றம் விசாரிக்கத் தவறியிருந்தாலோ தீர்ப்புக்குரிய எழுவினா எழுப்பப்படாமலிருந்தாலோ அதனை மேல்முறையீட்டு நீதிமன்றம் சுட்டிக்காட்டிப் புதிதாக எழு வினா எழுப்பி, அதற்கு ஆய்வு செய்து தீர்ப்பாணை பகரக் கீழ்நீதிமன்றத்திற்குச் சில சமயங்களில் வழக்கு மறு விசாரணைக்குத் திரும்ப அனுப்பிவிடுவதுமுண்டு.

முக்கியமான சாட்சிகள் விசாரிக்கப்படுவது இன்றியமையாதது என்ற போதிலும், புதிய சான்று ஆவணங்களைப் புதிதாக மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் காலம் தாழ்த்தித் தகுந்த நியாயமான காரணத்தோடு தாக்கல் செய்யும்போதும், கீழ்நிதிமன்றத்திற்கு வழக்கை மறுபடி விசாரிக்க அனுப்பப்படுவதுமுண்டு. சில சமயங்களில் மேல்முறையீடு நீதிமன்றமே விசாரித்துச்சான்று ஆவணங்களைக் குறியிட்டுத் தீர்ப்பளிப்பதுமுண்டு. மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் தீர்ப்பாணை பகரப்பட்ட வழக்கில் தீர்ப்பாணையை எதிர்த்து, மாவட்ட நீதிபதி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்கிறார்கள். மாவட்ட நீதிமன்ற மேல்முறையீட்டு வழக்குகள், நீதித்துறை நிர்வாகம் ஆகியவற்றிற்கு ஏற்றபடி துணை நீதிபதிகள் நீதிமன்றங்களுக்கு மாற்றப்படுவதுமுண்டு. இம்மேல் முறையீட்டு வழக்கில் தீர்ப்பாணையை எதிர்த்து, உயர்நீதிமன்றத்திற்கு வழக்கில் ஏதும் சட்டச்சிக்கல் எழுந்துள்ளதாயின் இரண்டாம் மேல்முறையீடு செய்யும் உரிமையும் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றம் விசாரணை செய்யும் வழக்குகளில் பொது முதன்மை வாய்ந்த சட்டச்சிக்கல் ஒன்று அவ்வழக்கில் எழுந்துள்ளதென்றும் அதற்கு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு வேண்டியது தேவையென்றும் சான்று அளித்தால் உயர்நீதிமன்றத்தின் இந்தச் சான்றுரையின் ஆதாரத்தில் உச்ச நீதிமன்றத்திற்கு உயர் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யும் உரிமையும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு உரிமை இயல் நடைமுறைச்சட்டப் பிரிவு 109இன் படி வழங்கப்பட்டுள்ளது.

### குற்றவியல் நீதிமன்ற மேல்முறையீடு

**தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு** : குற்றவியல் நடைமுறைச் சட்டப்பிரிவு 372 முதல் பிரிவு 394 வரை குற்றவியல் வழக்குகளில் மேல்முறையீடு பற்றிய சட்டப்பிரிவுகளாகும். பிரிவு 373இல் அமைதி காக்க அல்லது நன்நடத்தைக்காகப் பிணையில் விடுப்புத் தீர்ப்பின்படி ஒருவர் மீது வழங்கப்பட்டாலோ, பிரிவு 117-இல் ஒருவர் மீது வழங்கப்பட்டாலோ பிரிவு 121இன் படி விடுக்கப் பிணைதாரர் மறுக்கப்பட்டாலோ, அதனை எதிர்த்து அமர்வு நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யும் உரிமை சொல்லப்பட்டுள்ளன. பிரிவு 374இன்படி உயர்நீதிமன்றத்தின் சிறப்புக் குற்றவியல் அசல் நீதிமன்ற வரம்புப்படி உயர்நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டால் அதனை எதிர்த்து உச்ச

நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யும் உரிமை சொல்லப்பட்டுள்ளது. குற்றவியல் நீதித்துறைப்படி மாவட்ட அளவுக்குத் தலைமை நீதிமன்றமாக இயங்கும் அமர்வு நீதிமன்றத்தாலோ, கூடுதல் அமர்வு நீதிமன்றத்தாலோ யாரேனும் ஒருவர் குற்றவியல் வழக்கு விசாரணையில் தண்டிக்கப்பட்டால் அல்லது வேறு எந்த நீதிமன்றத்தாலும் ஏழு ஆண்டுச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டால் அந்தத் தண்டனையை எதிர்த்து உயர் நீதிமன்றத்திற்குத் தண்டிக்கப்பட்டவர், மேல் முறையீடு செய்ய உரிமை உடையவர் ஆவார். யாரேனும் ஒருவர் குற்றவியல் நடுவர் மன்றத்தால் கு.ந.ச. பிரிவு 325ன் படி தண்டிக்கப்பட்டாலோ அல்லது பிரிவு 360ன் கீழ் நடுவரால் தண்டிக்கப்பட்டாலோ ஆணை பிறப்பிக்கப்பட்டாலோ, முதல்வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு மெட்ரோபாலிட்டன் நடு வர்களால் தண்டிக்கப்பட்டாலோ, துணை அமர்வு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டாலோ அந்தத் தண்டனையை எதிர்த்து அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய உரிமை உடையவர் ஆவார். எதிரி தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டால் குற்றவாளிதான். ஆதலின் எதிரியே ஒப்புக்கொண்டதன் பேரில் விதிக்கப்பட்ட தண்டனையை எதிர்த்து அதன் வரம்பு பற்றியன்றி மேல்முறையீடு செய்ய அவருக்கு உரிமையில்லை. ஆனால், சட்டப்படி அந்தத்தண்டனை செல்லத்தக்காததாக இருந்தால் மேல்முறையீட்டு உரிமை அவருக்குப் பாதிக்கப்படவில்லை. சில சிறிய குற்றவியல் வழக்குகளில் தண்டிக்கப்பட்டவர்களுக்கு மேல் முறையீட்டு உரிமையில்லை.

1. உயர்நீதிமன்றத்தால் ஒருவர் ஆறுமாத சிறைத் தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் தண்டத்தொகை செலுத்தியிருந்தாலோ அல்லது

2. அமர்வு நீதிமன்றம் அல்லது மெட்ரோபாலிட்டன் நடுவரால் மூன்று மாதத்திற்கு மேற்படாமல் சிறை தண்டனை அல்லது ரூ 200க்கு மேற்படாமல் தண்டத்தொகை அல்லது இரண்டும் விதிக்கப்பட்டால் அல்லது,

3. முதல் வகுப்புக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் அல்லது

4. பிரிவு 260ன் கீழ் அதிகாரம் பெற்ற குற்றவியல் நடுவர் நீதிமன்றம் ரூ 200க்கு மேற்படாமல் தண்டத் தொகை விதித்தால் அதனை எதிர்த்து மேல்முறையீட்டு உரிமை தண்டிக்கப்பட்டவருக்குக் கிடையாது. ஆனால் இதில் மேலே சொல்லப்பட்ட தண்டனைகள் அல்லாமல், வேறு தண்டனைகளோடு சேர்த்து இந்தத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், அந்தத் தண்டனைக்குரிய மேல்முறையீட்டு உரிமையை யேற்று அப்போது மேல்முறையீட்டு உரிமை தண்டிக் கப்பட்டவருக்கு உண்டு. இதிலும் சில விலக்குகள் வரையறை செய்யப்பட்டுள்ளன.

**குறைந்த தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு** : குற்றவியல் நீதிமன்றங்களால், தண்டிக் கப்பட்ட குற்றவாளிக்குத் தண்டனை குறைவாக வழங்கப்பட்டிருந்தால் அதனை எதிர்த்து மேல் முறையீடு செய்வதுச் சட்டத்தில் இடம் இல்லா திருந்ததுண்டு. அதனைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டிய பொறுப்பு ஏற்பட்டது. இந்திய அரசாங்கத்தால் 1969 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சட்டக்குழு 24 - 9 - 1969 இல் அதனை ஆய்வு செய்து, நாற்பத்தொன்றாம் சட்டக்குழு அறிக்கையில், குற்றவியல் நீதிமன்றங்களால் குறைவான தண்டனை வழங்கப்பட்டிருந்தால் அதனை எதிர்த்து அரசுத் தரப்பில் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய இந்தக்குழு பரிந்துரை வழங்கியது. அதன் விளைவாக, 1898ஆம் ஆண்டு குற்றவியல் நடை முறைச் சட்டம் பிரிவு 377இன் படி இந்தப் பரிந்துரைப் படி தண்டனை குறைவாக வழங்கப்பட்டதை எதிர்த்து உயர்நீதி மன்றத்திற்கு மேல்முறையீடு செய்யச்சட்டத் திருத்தம் செய்யப்பட்டது. உயர்நீதிமன்றம் தண்டிக்கப்பட்ட வருக்கு வாய்ப்பளித்துச் சரியான காரணம் இருந்தால், தண்டனை உயர்த்தப்படும். இந்தக் கட் டத்தில் குற்றம் சாட்டப்பட்ட தன் தண்டனையை மேலும், குறைக்க அல்லது விடுதலை செய்ய வாதிடவும் வாய்ப்பு உண்டு என்று சட்டம் சொல்கிறது.

**விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு** : குற்றவியல் நீதிமன்றங்களால் விடுதலை செய்யப்பட்ட வழக்குகளில் விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் உரிமை அரசாங்கத்திற்குப் பழைய குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 417ன்படி வகுக்கப் பட்டிருந்தது. 1969ஆம் ஆண்டு இயங்கி வந்த சட்டக் குழு இதனை ஆய்வு செய்து, அதன் அறிக்கை பத்திகள் 31, 17 முதல் 31, 20 ஆகிய பகுதிகளில் பக்கம் 262 முதல் 263 வரை உள்ள ஏடுகளில் தெளிவாகச் சில ஆலோசனைகளை வழங்கிற்று. அவையாவன:- 1. குற்றவியல் வழக்குகளில் விடுதலையை எதிர்த்து மேல்முறையீடு வழக்குகள் உயர்நீதி மன்றத்தாலேயே விசாரிக்கப்

படவேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் அமர்வு நீதிபதிகள் ( உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கு அடுத்து கீழ் நீதிபதிகள் மாவட்ட அளவில் ) இம் மேல் முறையீடு வழக்குகளை விசாரிக்கக்கூடாது.

மேல்முறையீட்டு உரிமை அரசாங்கத்திற்கோ, குற்றச்சாட்டு தந்தவருக்கோ உள்ள உரிமையாகும். அக்கறையுள்ள பிறரைப் பொதுநோக்கு இல்லாத கட்டத்தில் அனுமதிக்கக்கூடாது. இப்படிப் பல பரிந் துரைகள் தரப்பட்டன. இணைக்குழு அறிக்கை பக்கம் 36 இல் மேல்முறையீடு மனுத்தாக்கல் செய்வதற்கு முன் உயர்நீதிமன்றத்தால் அனுமதி பெற்ற பிறகே அரசு மேல்முறையீடு மனுவைத்தர அனுமதிக்கப்பட வேண் டும் என்ற பரிந்துரையும் வழங்கியது. இந்தப் பரிந் துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுக் குற்றவியல் நடை முறைச்சட்டம் திருத்தப்பட்டு பிரிவு 378 இல் புதிய சட்டப்பிரிவு நடைமுறைக்கு வந்தது. உயர் நீதிமன்றம் மேல்முறையீட்டு மனுவை விசாரணை செய்து, கீழ் நீதிமன்றம் வழங்கிய விடுதலைத் தீர்ப்பை நீக்கி ஒரு வருக்கு அல்லது பலருக்கு மரணதண்டனை அல்லது ஆயுட்காலத் தண்டனை அல்லது பத்து ஆண்டு அல் லது அதற்கு மேல் சிறைத்தண்டனை விதித்தால், அதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்ய தண்டிக்கப்பட்டவருக்கு உரிமை உண்டு. மேல் முறையீட்டு மனுக்கள், மனுக்களைப் போல் எழுதப் பட்டு மேல்முறையீட்டுதாரர் அல்லது அவருடைய வழக்கறிஞரால் கையொப்பமிட்டுக் கொடுக்கப்படும். கீழ்நீதிமன்றத்தில் ஆணை அல்லது தீர்ப்பின் படி இத்துடன் இணைக்கப்பட வேண்டும். மேல்முறை யீட்டுதாரர் சிறைச்சாலையில் அடைபட்டிருந்தால், மேல்முறையீட்டு மனுவை எழுதி, சிறை அதிகாரி மூலமாகவோ, மேல்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அனுப்பிடலாம். உரிய சில வழக்குகளில் நீதிமன்றம் சிறையிலுள்ளவருக்கு வழக்கறிஞரை நியமனம் செய்து அவருடைய வாதத்தைக் கேட்டுத் தீர்ப்பாகப் பகர்வது உண்டு.

**பிற மேல்முறையீடுகள்** : வருவாய்த்துறை, வரு மான வரித்துறை போன்ற துறைகளிலும் மேல்முறை யீட்டு உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. வருவாய்த் துறையில் சில வழக்குகளில் வட்டாட்சியர் ஆணையை எதிர்த்து, கோட்டாட்சியரிடமும், கோட் டாட்சியர் ஆணையை எதிர்த்து, மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் மேல்முறையீட்டு மனுக்கள் தரப்பட்டு விசாரிக்கப்படுகின்றன. மேல்முறையீட்டு முறையின்றி ஒரு துறையில் தனக்குக் கீழ் உள்ள அலுவலகங்களில் ஆவணங்களை வருவித்து ஆய்வு செய்து, பிழை திருத் தப்படுவதும் உண்டு.

- வி. சு.

**மேல்வாரம்** : நிலத்தைச் சாகுபடி செய்வோர் உழவர்கள். இவர்களுக்குப் பாதுகாப்பு அரசாங்கம். பயிரை விளைவு செய்யும் பணி உழவர்களைச் சார்ந் தது. ஆனால், அதனை விலங்குகள், கள்வர்கள் ஆகி யோர் அழித்துவிடாமல் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு உண்டு. அரசு இன்றி வேளாண்மையில்லை. வேளாளர் இன்றி அரசு இல்லை. இப்படி உழவர்கள் வயலை உழுது விளைவு செய்வதில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தைக் கண்டு, முதலை அரசுக்குச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு அரசுக்கு உரிய தான பங்குக்கு மேல்வாரம் என்பது பெயர். விளைவு செய்யும் உழவர்களுடைய பங்குக்கு குடி வாரம் என்று பெயர். 1976ஆம் ஆண்டு சென்னைச் சட்டவிதழ் அலுவலகம், சென்னை, உரிமை வழக்கு மன்ற ஏடு, சென்னைச் சட்டம் ஏழாம் பதிப்பு இரண்டாம் பாகம் பக்கம் 1593இல் மேல்வாரம் குடிவாரம் ஆகிய விளைவு செய்து கிடைத்த பயிர்கள் அரசுக்கும், விளைவு செய்தவருக்கும் உள்ள உரிமைகளைத் தெளி வாக விளக்குகிறது.

அந்த விளக்கத்திலிருந்து மேல்வாரத்திற்குத் தொன்மைச் சிறப்பு இருப்பது புலனாகிறது. இந்திய நாட்டில் ஆங்கில ஆட்சி நடந்த காலத்திலும் மேல் வாரம் வாங்கும் பழக்கம் இருந்து வந்திருக்கிறது. ஆங்கிலேய ஆட்சியில் நில வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. அப்படிச் சட்டங்கள் சாகுபடி சம்பந்தமாக இயற்றப் பட்டபோது, சமீன்தார்கள் - இனாம்தார்கள் ஆகி யோர் உண்மைச் சாகுபடியாளருக்கும், அரசாங்கத் திற்கும் இடைப்பட்ட நில சம்பந்தப்பட்ட நில உரிமை யாளர்களாகத் தோன்றினார்கள். அரசாங்கம் இவர் களிடம் மேல்வாரம் பெறும் உரிமையை அளித்தது. அப்படிப்பட்ட இடைப்பட்டவர்கள் மேல்வார உரிமை கொண்டாடினார்கள்.

அதன் விளைவாக ஆங்கில ஆட்சியில் நிலங்கள் பயிரிடும் நிலங்கள், இரயத்துவாரி நிலங்கள், எஸ்டேட் நிலங்கள் என வகைப்படுத்தப்பட்டன. இச் சட்டங்களினால் மேல்வார உரிமைகள் எஸ்டேட் நிலங்களைப் பொறுத்தவரை சமீன்தார்கள், இனாம் தாரர்கள் ஆகியோருக்குக் கிடைக்கப்பெற்றன. எஸ்டேட் நிலங்களில் சமீன்தாரர்களுக்கு உள்ள உரிமை மேல்வார உரிமை என்று கருதப்பட்டது. இரயத்து வாரி நிலங்களைப் பொறுத்தவரை தீர்வை நிர்ணயிக்கப்பட்டு இரயத்து அல்லது உழவர்கள் தாம் செலுத்த வேண்டிய தீர்வைகளை அரசுக்கு நேரடியாகச் செலுத்தி வந்தார்கள். அதனால், இரயத்துவாரி நிலங்களைப் பொறுத்தவரை, மேல்வார - குடிவாரச் சிக்கல் எதுவும் கிடையாது. இவை எஸ்டேட் சிக்கல்களாக ஆகிவிட்டன.

1908ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சென்னை எஸ்டேட் நிலச்சட்டத்தில் சமீன்தார்களுக்கு மேல்வார உரிமைகள் தரப்பட்டன. ஏதோ ஒரு பணி செய்ய இனாமாக நிலம் பெற்று மேல்வார உரிமை உடையவர்கள் இனாம்தார் எனப்பட்டனர். மேல்வார உரிமை கொண்ட இவர்களுடைய நிலங்களை எஸ்டேட் எனக் குறிப்பிடுவதுண்டு. சமீன்தாரர்களுக்கும் இனாம்தாரர்களுக்கும் மேல்வார உரிமைகள் தரப்பட்டிருந்தாலும் சில காலங்களில் சில நிலங்களில் அவர்களுக்குக் குடிவார உரிமையும் வழங்கப்படுவதுண்டு. ஒரு நிலத்தைப் பொறுத்தவரை ஒருவருக்கு மேல்வார உரிமையும் குடிவார உரிமையும் இருக்குமேயானால் அவருக்கு இருவார உரிமையாளர் என்று பெயர். ஒரு இனாம்தார் குடிவார உரிமைக்கும் எப்போதும் தகுதியுடையவர் என்பதை ஆய்வு செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். ஒரு நிலத்தை ஒரு இனாம்தாரருக்கு அளிக்கிற போது அளிப்போருக்கு அந்த நிலத்தில் குடிவார உரிமை இருந்து அதனைப் பெற்றுக்கொண்ட இனாம்தார் தொடர்ந்து தாமே தன் பண்ணையாட்களைக் கொண்டு அந்த நிலத்தைப் பயிரிடுவாரேயானால் அந்த இனாம்தாரர்களுக்குக் குடிவார உரிமை உண்டு. இனாம் நிலம் அளிக்கப்பட்ட பிறகு இனாம்தார் சட்ட நியாயப்படி குடிவார உரிமையை வாங்கித் தொடர்ந்து அனுபவித்து வந்தால் அவருக்கு உள்ள குடிவார உரிமை ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

மேல்வாரம் - குடிவாரம் ஆகிய உரிமைகளில் மேல்வாரத்தைவிடக் குடிவார உரிமையை நிலைநாட்டவே பல சட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அரசாங்கத்தின் பங்கு என்ற பெயரால் உழவனின் மீது கடுமையான சுமையைச் சுமத்தி அவன் முதுகெலும்பை ஒடிப்பது அறமன்று என்பது பழைய தமிழ்க் கொள்கை. அரசு கடுமையாக தம் பங்கைப் பெறுவது வழிப்பறி கொள்கைக்குச் சமம் என்று வள்ளுவர் சொல்லுகிறார். கம்பராமாயணத்தில் சீதையை கவர்ந்துவர மாரீசனோடு இராவணன் கலந்துரையாடும் போது, மாரீசன் தடுத்துப் பேசுகிறான். "பெண்ணைக் களவு செய்தவன் - பிழையான வழியில் நாடு கவர்ந்தவன் - நடைமுறைக்கு ஒவ்வாத மேல்வாரம் கொண்டவன் - பிறன் மனையாளைக் கவர்ந்த பேதையன் ஆகிய இந்தப் பாவிகளை அறம் கடுமையாக தண்டித்து அழித்துவிடும்" என அச்சுறுத்துகிறான்.

மேல்வாரம் - குடிவாரம் ஆகிய பயிர் பங்கிடும் விகிதாச்சாரத்தின் குடிவார உரிமையையே நிலை நாட்டச் சட்டங்கள் தொடர் சங்கிலியாக இயற்றப்பட்டன. மேல்வாரம் மெல்லமெல்ல குறுக, குடிவார உரிமை பல சட்டங்களால் உறுதி செய்யப்பட்டது. நிலத்தைத் தேடிப் பயிரிடுவோருக்கு உறுதியான பாதுகாப்பும் இயற்கைக் காரணங்களால் இன்னலுற்ற காலங்களில் மேல்வாரத் தள்ளுபடியும் தொடர்ந்து பல கட்டங்களில் செயற்படுத்தப்பட்டுள்ளன. இதனைப் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டியது நியாயமாகும்.

ஆங்கில ஆட்சியின்போதும் மேல்வாரம் என்பது உழவர்களைக் கசக்கிப்பிழியும் பங்காக இருக்கக் கூடாது என்ற கொள்கையை ஆங்கில அரசு பின்பற்றத் துணிந்துள்ளது புலனாகிறது. மொகலாயப்பேரரசர் அக்பர் காலத்திலும் இந்த நியாயமான மேல்வாரக் கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதென்பது சர்.இ.பக் எழுதிய **இந்தியாவியல் வரைபடம்** என்னும் நூலாற் புலானாகிறது.

1901ஆம் ஆண்டு பஞ்சக்குழு தன் அறிக்கையில் அயின் அக்பரி என்ற புகழ்பெற்ற நில சம்பந்தப்பட்ட தொன்மை ஆவணம், கிடைத்த வருவாயில் உழவன் மூன்றில் ஒரு பங்கை அரசுக்கு மேல்வாரம் தந்ததாகச் சொல்லப்பட்டுள்ள செய்தியை மேற்கோள் காட்டியது. தொன்மைக்காலந்தொட்டு இன்று வரை உழவனின் பங்கு பாதிக்கக்கூடாது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை. ஆங்கில அரசாங்கத்திலும் இக் கொள்கை புறக்கணிக்கப்படவில்லை.

ஆங்கில ஆட்சியில் மேல்வார உரிமைகள் சமீன் தாரர், சாகிர்தாரர் ஆகியோருக்கு வழங்கப்பட்டன. நிலையான நிலத்தீர்வைச்சட்டம் கி.பி. 1793ஆம் ஆண்டு அப்போதிருந்த ஆங்கில ஆட்சிக்காலத்தில் நடைமுறைக்கு வரத்தொடங்கியது. இது வங்காள மாநிலத்தில் தொடங்கியது. சமீன்தாரர் போன்ற இடைத்தரகர்கள் பலர் பயிரிடும் நிலத்தைப் பொறுத் தவரை ஆங்கில ஆட்சிக்குக் கட்டுப்பட்ட குறுநில மன் னர்களாகத் திகழ்ந்தனர். பின்னர் கி.பி. 1802ஆம் ஆண்டு 25-ஆம் ஒழுங்குமுறைச் சட்டத்தைச் சென்னை அரசாங்கம் வெளியிட்டது. நில உரிமைகள் சமீன்தாரர் களுக்கும் அவர்களுக்கு ஒப்பானவர்களுக்கும் வழங் கப்பட்டன. இவர்களுக்குள்ள மேல்வார உரிமையை மற்றவர்களுக்கு மாற்றித்தந்தார்கள்.

குடிவார உரிமையுடையவர்கள் அப்படியே தங் களுக்குரிய குடிவார உரிமையையும் மற்றவர்களிடம் மாற்றித்தந்தார்கள். உண்மையான உழவர்களைக் கண்டு ஆய்ந்து அவர்களுக்குப் பரிகாரம் செய்வதில் அரசாங்கத்திற்குத் தொல்லை ஏற்பட்டது. மேல்வார உரிமைகளைப் பிற சொத்துகளைப் போல் பலருக்கு மாற்றி வந்தார்கள். சமீன்தாரர்கள் தமக்குரிய தனியான சில நிலங்களைத் தம் குடும்ப நிலங்களாகக் கொண்டு தாமே சொந்தச் சாகுபடி செய்து வந்தார்கள். இந்த நிலங்களுக்கு அவர்கள் குடிவார உரிமை பெற்றார்கள். மேல்வாரம், குடிவாரம் ஆகிய இரு வார உரிமையு முடைய சில மிட்டா, நிலக்கிழார், சமீன்தார்கள் ஆகி யோர் உருவாகி வந்தார்கள். ஆனால், அரசாங்கமோ தொடர்ந்து உண்மையான உழவரின் மீது ஆழ்ந்த அக் கறையும் கவலையும் கொண்டிருந்தது. நிலச்சட்டங் களில் பல்வேறு வகையான சாகுபடி அமைப்புகள் இருந்தன. எ.கா. நிலக்கிழார் சாகுபடி நிலங்கள் என ஒருவகை நிலங்கள் இருந்தன. இந்த நிலங்களில் உழவர் பயிர் செய்து கிடைக்கின்ற வருமானத்தை மூன்று பங்காகப் பிரித் தார்கள். ஒரு பங்கு மேல்வாரம் எனப்படும். அது அரசுக்குரிய பங்கு. மற்றொரு பங்கு துண்டுவாரம். இது நிலப்பிரபுக்குரிய பங்கு மூன்றாம் பங்கு குடிவாரம் இது உழவர்களுக்கு உரிய பங்கு. இப்படி மூன்று பாகமாக நிலத்திலிருந்து கிடைக்கப் பெற்ற வருவாயில் பங்கிடப்பட்ட உண்மையை 23 இந்திய வழக்குகள் என்ற சட்ட நூல் பக்கம் 113இல் தெளி வாக விளக்கியுள்ளது.

இந்த நிலக்கிழார் முறை இருவாரம் என்ற நிலை யிலிருந்து மாறி மூன்றுவாரமாகப் பிரிக்கப்பட்டது உண்மையான உழவர்களுக்கு இடர்ப்பாட்டை விளை வித்தது. மேல்வார உரிமைகள் எவருக்குரியன என்று ஆய்வு செய்யும் உரிமை, உரிமையியல் நீதிமன்றத் திற்கு உண்டு என்று சென்னை உயர்நீதிமன்றம் கொண்டையாராவுக்கும், நாகம்மாள் ராவுக்கும் நடைபெற்ற வழக்கில் தீர்ப்பு அளித்துள்ளது. இத் தீர்ப்பு ஏ.ஐ.ஆர் 1940 சென்னை என்பதில் வெளியாகி யுள்ளது. அவ்வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங் கும்போது ஒரு எஸ்டேட் உரிமையாளர் தம் சொந்த மான வீட்டு நிலங்களைக் குடிவார உரிமையோடு, அனுபோகம் செய்யும்போது குடிவார உரிமையும், மேல்வார உரிமையும் அவரிடமே இருக்கிறது. அவர் குடிவார உரிமையை யாரிடமாவது விற்றுவிட்டால் மேல்வார உரிமைய்ய நிலைநாட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கலாம் எனத் தீர்ப்புத் தந்தது.

இத்தகைய சூழ்நிலைக் காரணமாக மேல்வார உரிமையை நிலைநாட்ட நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டியிருந்தது. பல்வேறு வகையான சட்ட வழி முறைகள் உண்மையான உழவர்களைப் பாதுகாக்கப் பயன்படவில்லை என்று அரசாங்கம் கருதியது. பழைய சமீன்தார், இனாம்தார், மிட்டா, நிலக்கிழார் ஆகியோர் கைகளிலிருந்து உண்மையான உழவர் களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத் திற்கு ஏற்பட்டது. பழைய சமீன்தார் முறையை அகற்ற வேண்டியிருந்தது. நலிவடைந்த எளிய உழவர் களை அரசாங்கம் காக்கக் கடமைப்பட்டுள்ளது. வெள் ளத்தைத் தடுக்கக் கரைகள் பெரும் அளவுக்கு உயர்த் தப்படுவதைப் போல் உழவர்களை உயர்த்த வேண்டிய ஒரு கட்டாயம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. அதன் விளைவாக 1908ஆம் ஆண்டு அப்போதிருந்த சென்னைச் சட்டமன்றத்தில் சென்னை எஸ்டேட் நிலச்சட்டம் என்ற சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

1908ஆம் ஆண்டு சென்னை எஸ்டேட் நிலச்சட்டம் நடைமுறைக்கு வந்தது. அந்தச் சட்டம் நடைமு றைக்கு வந்ததும், உண்மையான உழவர்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படவில்லை. இறுதியாக சமீன்தார்கள், சாகிர்தாரர்கள், இனாம்தார்கள் ஆகிய எல்லா இடைத்தரகர்களையும் அரசு ஒழித்துவிடத் தீர்மானித் தது. எல்லா விளைநிலங்களையும் இரயத்துவாரி நிலங் களாகத் தீர்வை செய்து அரசாங்கம் நிலவுடைமை யாளர்களிடம் நேரடியாகத் தொடர்பு கொள்ளச் சட்டங்கள் இயற்ற முன்வந்தது. 1948ஆம் ஆண்டு

சென்னை சமீன் ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தது. அதன் காரணமாகச் சமீன் கையில் இருந்த நிலங்கள் வாங்கப்பட்டு இரயத்துவாரி நிலங்களாகப் பயிரிடுவோருக்கு உரிமை வழங்கப்பட்டது.

தொடர்ந்து 1963ஆம் ஆண்டில் சென்னை இனாம் எஸ்டேட் நில ஒழிப்புச் சட்டமும் இள வயதினர் இனாம் ஒழிப்புச்சட்டமும், எஸ்டேட் நிலங்களைப் பொறுத்தவரை குத்தகை உரிமை ஒழிப்புச் சட்டங்களும் ஆகிய மூன்று சட்டங்களும் நடைமுறைக்கு வந்தன. எஸ்டேட் நிலங்கள் முழுவதும் ஒழிக்கப்பட்டு எல்லா நிலங்களும் இரயத்துவாரி நிலங்களாக்கப்பட்டு நிலவுடைமையாளர்களுக்கு அரசாங்கம் நேரடியாக உரிமை வழங்கியது. எஸ்டேட் நிலங்கள் இந்தச்சட்டங்களால் ஒழிக்கப்பட்டதால் மேல்வாரம், இடைத்தரகர் பெற்ற உரிமைகள் எல்லாம் நீக்கப்பட்டு விட்டன. எல்லா எஸ்டேட் நிலங்களும் இரயத்துவாரி நிலங்களாக்கப்பட்டன. நிலத்தீர்வை, தண்ணீர்த் தீர்வை போன்ற பல தீர்வைகளை அரசாங்கமே நில உரிமையாளர்களிடம் நேரிடையாகப் பெறத் தொடர்பு கொண்டுள்ளது.

- வி.சு.

**மேலவை :** இக்கால அரசியலமைப்புகளில் காணப்படும் சட்டமன்ற அமைப்புகளில் இருமன்ற முறையே ( Bicameralism ) காணப்படுகிறது. இந்த முறையின் ஒரு பாகமாக விளங்குவதே இரண்டாம் மன்றம் ( Second Chamber ) அல்லது மேலவை ( Upper House ) ஆகும். பொதுவாக எல்லா அரசுகளிலும் தேசிய அளவில் இருமன்ற முறையே பின்பற்றப்படுவதால் அவற்றிற்கெல்லாம் மேலவைகளும் இருக்கின்றன. எ.கா. இந்திய அரசில் தேசிய அளவில் நாடாளுமன்றத்தில் மேலவையாக இராச்சியசபை அல்லது மாநிலங்களின் அவையும் ( Rajya Sabha or Council of States ) சில மாநிலங்களில் மன்றங்கள் அல்லது மேலவைகளும், பிரிட்டனில் பிரபுக்கள் சபையும் ( House of Lords ), பிரான்சில் ஆளவை மன்றமும் ( Senate ), அமெரிக்க நாட்டில் ஆளவை மன்றமும், சுவிர்சட்லாந்து நாட்டில் மாநிலங்கள் அவையும் ( Council of States ) சோவியத்து ருசியா நாட்டில் தேசிய இனங்களின் மன்றமும் ( Soviet of the Nationalities ) மேலவைகளாக இருக்கின் றன.

மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களடங்கிய கீழவையின் தன்னிச்சையான போக்கைத் தடுக்கவல்ல ஒரு கருவியாக இருப்பது மேலவை என்று சே. எசு. மில் ( J.S. Mill ) என்பார் குறிப்பிடுகிறார். பெரும்பாலான கீழவை உறுப்பினர்களுக்கு நிரம்பிய கல்வியறிவோ, அரசியல் செயலறிவோ இல்லையாகையால் அவர்களால் நன்கு ஆராயப்படாமல், விரைவாக நிறைவேற்றப்படும் சட்டங்களையெல்லாம் கல்வித்தகுதி பெற்ற உறுப்பினர்களை உடைய மேலவைதான் முழுமையாக ஆய்வு செய்து சீர்தூக்கிப் பார்த்தல் இயலும். கீழவையில் பேராளர்களாக இடம் பெற இயலாத தொழிலாளர், நிலவுடைமையாளர், பெண்கள், வணிகச் சங்கங்கள் ஆகியவற்றுக்குப் போதிய பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடிய ஒரே மன்றம் மேலவையே ஆகும். கூடுதல் வயதின் காரணமாகவோ, பொருளில்லாமையாலோ, உடல் நலக் குறைவின் காரணமாகவோ, தேர்தலில் போட்டியிட்டுக் கீழவையில் உறுப்பினராக வர முடியாத, ஆட்சித்திறனும் அரசியல் பலமுடையவர்களுடைய பணி நாட்டிற்குக் கிடைத்தல் வேண்டுமாயின், அவர்கள் மேலவையில் நியமன உறுப்பினர்க ளாக வருவதற்கு வழியிருத்தல் வேண்டும். கூட்டாட்சி நாடுகளிலே உறுப்பு மாநிலங்களுக்குச் சம பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு வழிவகுப்பது மேலவையே ஆகும். அந்நாடுகளில் கீழவை உறுப்பினர்கள் மக்கள்தொகை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவதனால், மாநிலங்களுக்கு அதில் சம பிரதிநிதித்துவம் இருக்கவியலாது. மேலும் மேலவையும் கீழவையும் சேர்ந்த இரு மன்ற முறையே வரலாற்றிலும் வழக்கத்திலும் காணப்படுகிறது. மேற்கூறிய காரணங்களுக்கெதிரான காரணங்களும் கூறப்படுகின்றன. இரு மன்ற முறை, இரு அவைகளுக்குமிடையே முரண்பாடுகளை உண்டாக்குகிறது. மேலவை கீழவையோடு மாறுபடுமாயின் அது குறும்பு செய்தலாகும். அது கீழவையோடு ஒத்துப் போனால் அது தேவையற்றதாகும். மேலவை சட்டமியற்றுதலில் காலதாமதத்தையும், பொருட் செலவையும் ஏற்படுத்துகிறது. கீழவையின் பெரும்பான்மையானவருடைய தன்னிச்சையான போக்கைத் தடுத்தற்கு நிருவாக அதிகாரியின் இடைக்கால மறுப்பாணை ( Suspensive veto ), மறு வாக்கெடுப்பு முதலிய தடுப்புமுறைகள் இருக்கின்றன. கீழவையில்

இயங்கும் குழு முறை ( Committee system ) ஒவ்வொரு சட்டமும் நன்கு ஆராயப் படுவதற்கு வழி செய்வதால், கீழவை ஆராயாமல் அவசர அவசரமாகச் சட்டமியற்றுகிறதென்று கூறவியலாது. கீழவையில் நேரடித் தேர்தல் முறை, அமைப்புக்கு முற்றிலும் மாறுபட்ட அமைப்பு முறையில் மேலவையை அமைப்பது எளிதன்று. கூட்டாட்சி நாடுகளில் உள்ள மேலவை உறுப்பினர்கள் கட்சி அடிப்படையில் தான் சட்டங்களைத் தீர்மானிக்கின்றனரே தவிர, மாநிலங்களினடிப்படையில் அல்ல. இவ்வாறெல்லாம் மேலவைக்குச் சார்பாகவும், எதிராகவும் காரணங்கள் கூறப்பட்டாலும், மேலவைகளையுடைய இருமன்ற முறையே பொதுவாக எல்லா நாடுகளிலும் இருக்கிறது.

**சில முக்கிய அரசுகளின் மேலவைகளின் அமைப்பும், கால அளவும், அதிகாரங்களும் :** ஒற்றை அரசுமுறையைச் சார்ந்த பிரிட்டனின் மேலவையான பிரபுக்கள் சபையில் 900 கூடுதலாக உறுப்பினர்கள் இருக்கின்றனர். இவர்களுள் பத்தில் ஒன்பது பங்கு உறுப்பினர் பரம்பரைப் பிரபுக்கள் ஆவர். ஆகையால் தேர்தல் முறையிலல்லாமல் இவர்கள் தங்கள் தந்தையர் பிரபுக்களாகவும் உறுப்பினராகவும் இருந்தமையினால் உறுப்பினராகியுள்ளனர். ஒரு சிலர் வாழ்நாள் பிரபுக்களாக அமர்த்தப்பட்டவர்கள். ஒன்பது சட்ட வல்லுநர்கள் சட்டப் பிரபுக்களால் வாழ்நாளுக்கு மட்டும் இதில் உறுப்பினர்களாக அமர்த்தப்படுகின்றனர். சில பிரபுக்கள் ஆங்கில கிறித்தவத் திருச்சபையைச் சேர்ந்த ஆயர்கள் ஆவர். ஆகவே எவரும் தேர்ந்தெடுக்கப்பட்டவரல்லர். சட்டப்பிரபுக்களைத் தவிர மற்ற எவருக்கும் ஊதியம் இல்லை. உலகத்திலேயே மிகப் பெரிய மேலவையான இம்மன்றத்திற்கு மேல் முறையீட்டு நீதி அதிகாரத்தைத் தவிர, சட்டமியற்றும் அதிகாரமோ, அமைச்சரவையைக் கட்டுப்படுத்தும் அதிகாரமோ இல்லை. பணமசோதாக்களை இம்மன்றத்தில் கொண்டு வர இயலாது.

பொதுமக்கள், மன்றத்தால் நிறைவேற்றப்படும் பண மசோதாக்கள், பிரபுக்கள் சபையில் நிறைவேற்றப்பட்டாலும் அவை ஒரு மாதத்தில் சட்டமாகிவிடும். சாதாரண மசோதாக்களையும் இது ஓராண்டுக் காலத்துக்கே ஒத்திப்போடலாம். அரசியல் தொடர்பான சிக்கல்களை விவாதித்தலை மட்டுமே இது செய்யலாம். இந்தச் சபை கூடியிருப்பதற்கான காலவரையறையும் இல்லை. ஐந்தாம் பிரெஞ்சுக் குடியரசின் மேலவையான செனட்டு மன்றமும் ஓரளவு ஆங்கிலப் பிரபுக்கள் மன்றத்தை ஒத்துள்ளது. இதன் 301 உறுப்பினர்களும் மறைமுக தேர்வுமுறையினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களுள் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மூன்றாண்டுகளுக்கொருமுறை பதவி விலகுவதால், இவ்வவையின் அமர்வுக்காலம் ஒன்பது ஆண்டுகளாகும். பணமசோதாக்களை இதில் தாக்கல் செய்யவியலாது. இதற்கும், கீழவையான தேசிய அவைக்குமுள்ள வேறுபாடுகளை இரண்டும் சேர்ந்த இணைப்புக்கூட்டத்தில் தீர்க்கலாமெனினும் இதனுடைய முடிவே இறுதியானது. பிரிட்டனிலுள்ளது போலவே பிரெஞ்சு அமைச்சரவையும் கீழவையின் ஆதரவைச் சார்ந்துள்ளதே தவிர மேலவையைச் சார்ந்திருக்கவில்லை.

அமெரிக்க நாட்டின் மேலவையான செனட்டு மன்றம் உலகத்திலேயே மிகவும் அதிகாரங்களையுடையதாகும். இதன் 100 உறுப்பினர்களும், மாநிலம் ஒவ்வொன்றுக்கும் இரண்டுபேர் என்ற விகிதத்தில் ஐம்பது மாநிலங்களிலிருந்து ஆறு ஆண்டுகளுக்கு வாக்காளர்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். பண மசோதாக்கள் இதில் தாக்கல் செய்யப்பட இயலாதெனினும், கீழவையான பிரதிநிதிகள் சபை நிறைவேற்றும் பணமசோதாக்களைத் திருத்தவும், தள்ளுபடி செய்யவும், சாதாரண மசோதாக்களைப் பொறுத்தவரை கீழவையை ஒத்த அதிகாரங்களைக் கையாளவும் நிருவாக அதிகாரியான குடியரசுத் தலைவர் செய்யும் வெளிநாட்டு ஒப்பந்தங்களுக்கும் நியமனங்களுக்கும் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு அளிக்கவும், அதனை மறுக்கவும், குடியரசுத் தலைவர் மீது துரோகக் குற்ற விசாரணை நடத்தவும் கீழவையோடு சேர்ந்து அரசியலமைப்புத் திருத்த மசோதாக்களைக் கொண்டு வருவதற்கும் இதற்கு அதிகாரங்கள் இருக்கின்றன. இது அளவில் சிறியதாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் இருப்பதால் இது ஆற்றலுள்ள ஒரு மேலவையாக விளங்குகின்றது.

சுவிட்சர்லாந்து நாட்டில் மாநிலங்கள் மன்றம், மாநிலத்துக்கு இரண்டு உறுப்பினர்கள் என்ற விகிதத்தில் 22 மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 44 உறுப்பினர்களை உடையது. அவர்களின் அமர்வுக் காலத்தை மாநிலங்களே தீர்மானிக்கின்றன. இரு மன்றங்களும் சம அதிகாரங்களை உடையவை. சோவியத் ருசிய நாட்டின் மேலவையான தேசிய இனங்களின் மன்றம் ( Soviet of the Nationalities ) ஏறக்குறைய 640 உறுப்பினர்களை உடையது. இது பல்வேறு அமைப்பு

களைச் சேர்ந்த மாநிலங்களால் 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இது கீழவையான இணையத்தின் மன்றத்தோடு ( Soviet of the Union ) ஒத்த அதிகாரங்களையுடையது.

இந்திய நாட்டின் மேலவையான இராச்சிய சபை 250 உறுப்பினர்களுள் 12 பேர்கள் குடியரசுத் தலைவரால் இலக்கியம், அறிவியல், கலை, சமூகப்பணி முதலிய துறைகளில் சிறந்தோரிடையேயிருந்து அமர்த்தப்படுகின்றனர். மீதிப் பேர்களை மாநிலங்களின் கீழவைகளிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். இவர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை பதவி விலகுவதால், இவ்வவையின் அமர்வுக்காலம் ஆறு ஆண்டுகளாகும். சாதாரண மசோதாக்கள் இதில் தாக்கல் செய்யப்படலாம். பண மசோதாக்களை இதில் தாக்கல் செய்யவியலாது. கீழவை நிறைவேற்றும் பண மசோதாக்களை இவ்வவை பதினான்கு நாட்களுக்கு மட்டுமே தள்ளுபடி செய்யலாம். சாதாரண மசோதாக்களைப் பற்றி இரு அவைகளுக்கிடையே எழும் முரண்பாடுகளைத் தீர்க்க இரண்டு அவையும் சேர்ந்த கூட்டுக் கூட்டத்தில் தீர்மானம் செய்யலாம். குடியரசுத் தலைவரையும், தலைமை நீதிபதிகளையும் குற்ற விசாரணை வாயிலாக நீக்குதற்கும், அரசியலமைப்புத் திருத்தங்களை நிறைவேற்றவும் இரு மன்றங்களுக்கும் சம அதிகாரங்கள் உள்ளன.

தமிழ்நாட்டில் பிற மாநிலங்களைப் போலவே அண்மைக்காலம் வரை இருமன்றச் சட்ட அவை இருந்தது. மேலவையின் உறுப்பினர்கள் எண்ணிக்கை அதன் கீழவை உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்காக இருந்தது. மேலவை உறுப்பினருள் 1/3 பங்கினர் நகராட்சிகள் போன்ற அமைப்புகளால் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1/12 பங்கினர் மூன்றாண்டுகளேனும் பட்டதாரிகளாயிருப்பவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1/12 பங்கினர் ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும், 1/3 பங்கினர் மாநிலக் கீழவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டும் மீதமுள்ளோர் ஆளுநரால் அமர்த்தப்பட்டும் வந்தனர். இதன் அமர்வுக்காலமும், அதிகாரங்களும் பெரும்பாலும் இராச்சிய சபையை ஒத்திருந்தன. தமிழ்நாட்டில் மேலவையை மீண்டும் கொண்டு வருதற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன.

இந்திய நாட்டின் மேலவையானது ஓரளவு மறைமுகத் தேர்வுமுறையினாலும், ஓரளவு நியமன முறையினாலும் அமைக்கப்பட்டுள்ளது. நல்ல மேலவை கீழவையின் விருப்பத்துக்கு மாறாக இல்லாமல் செயற்படுதல் வேண்டும்.

- பா. சூ.

**மேலாண்மை :** எந்தவொரு நிறுவனத்திற்கும் வழிகாட்டவும், கட்டுப்படுத்தவும் ஓர் அமைப்புத் தேவை. மனித உடலுக்கு மனமும், சிந்தனையும் எவ்வளவு முதன்மையானதோ அவ்வாறே ஒரு நிறுவனத்திற்கு மேலாண்மை என்ற செயற்பாடு தேவையாக உள்ளது. அது வணிக நிறுவனமானாலும் சரி, பொதுத்துறை நிறுவனமானாலும் சரி, கல்வி நிறுவனமானாலும் சரி அல்லது வேறு எந்தவொரு நிறுவனமாக இருந்தாலும் சரி அவற்றின் பல்வேறு செயற்பாடு களை ஒருங்கிணைத்து அந்த நிறுவனத்தின் குறிக் கோளையடைவதற்கு உந்து சக்தியாக அமைவது மேலாண்மை ( Management ) ஆகும். மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தின் தேவைகளை மற்றவர்களைக் கொண்டு நிறைவு செய்யக்கூடிய ஒரு கலையாகும். ஒரு நல்ல இசையமைப்பாளர் தன்கீழ்ப் பணியாற்றும் பல்வேறு இசைக்கருவியாளர்களைக் கொண்டு எப்படி ஒரு சிறந்த இசையை வழங்குகின்றாரோ அவ்வாறே ஒரு மேலாளர் தம் கீழ்ப் பணியாற்றும் பல்வேறு பணியாளர்களின் திறமைகளை ஒருங்கிணைத்து மிகச்சிறந்த விளைவுகளை நிறுவனத்திற்கு ஏற்படுத்தித் தருகிறார்.

**மேலாண்மைச் சிந்தனை வளர்ச்சி :** மனித இனம் தோன்றிய காலத்திலிருந்தே மேலாண்மைச் சிந்தனை ஏதோ ஒரு வகையில் வெளிப்பட்டுக் கொண்டுதான் இருந்திருக்கிறது. இலக்கிய ஆதாரமாக மிகவும் பழைய நூலாகிய விவிலிய நூலில் மோசசு என்பவர் தம்மை நாடிவரும் மக்களின் குறைகளைத் தீர்த்து வைக்கும் பணியில் ஈடுபட்டார் எனவும், அப்படி வரக்கூடிய மக்களின் எண்ணிக்கை கட்டுக் கடங்காமல் போகவே, தம்முடைய மாமனாரை அப்பணியில் சிலவற்றைப் பார்க்குமாறு கேட்டுக்கொண்டார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குதான் அதிகாரப்பகிர்வு என்ற கொள்கை உருவானதற்கு

முதல் அடிப்படை உள்ளது எனலாம். காலப்போக்கில் மேலாண்மைக் கொள்கை பல்வேறு நிறுவனங்களிலும் பரவலாயிற்று. மேலைநாட்டு நாகரிக வரலாற்றினை ஆராய்ந்தால் ரோமானிய நாட்டின் கிறித்தவ திருக்கோயில்களில் மேலாண்மைக் கொள்கைகள் கடைபிடிக்கப்பட்டுள்ளன. பணிப் பகிர்வும், திறமையான பணியமைப்பும், ஆலோசனை கூறும் வழக்கமும் இத்திருக்கோயில்களில் இடம் பெற்றிருந்தன. இராணுவ அமைப்பிலும் மேலாண்மைக் கோட்பாடுகள் நன்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளன. அதிகாரமும், பணிப்பகிர்வும் வரையறுக்கப்பட்டு வந்துள்ளன. குழு ஒழுக்கமும் பேணி வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாறெல்லாம் மேலாண்மைக் கொள்கைகள் பல்வேறு நிறுவனங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்துள்ளன. எனினும், மேலாண்மைச் சிந்தனை அறிவியல் அடிப்படையில் உருவாக்கப்பட்டது இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் எனலாம்.

பிரெடெரிக்கு வின்சுலோ தைலர் ( கி.பி.1856 - 1915 ) என்ற அமெரிக்கர், அறிவியல் மேலாண்மை இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படுகிறார். அவருடைய சிந்தனைப்படி மேலாண்மை என்பது 1. அதிகார வழி அன்று. அறிவியல் முறையாகும். 2. தொழிலாளர்களை ஒருங்கிணைப்பதன்று. நல்லுறவு கொள்வதாகும். 3. தனித்தன்மையானதன்று. கூட்டுறவான தாகும். 4. வரையறுத்த உற்பத்தியன்று. உச்ச அளவு உற்பத்தியாகும். 5. ஒவ்வொரு தொழிலாளருக்கும் அவருடைய உச்சநிலைத் திறமையையும், வளர்ச்சியையும் அடைய மேம்படுத்தும் ஒரு கருவியாகும்.

அறிவியல் மேலாண்மையின் கூறுகளாக அவர் 1. பணி அறிதல், 2. அறிவியல் முறையில் பணிக்கூறுகளைத் திட்டமிடல், 3. தொழிலாளர்களைத் தேர்ந்தெடுத்தல், பணியாற்ற வைத்தல், 4. தரப்படுத்துதல், 5. சிந்தனைப்புரட்சி ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். ஏறத்தாழ இதே காலகட்டத்தில் பிரான்சு நாட்டுத் தொழிலதிபர் ஹென்றி பயால் ( கி.பி.1841 - 1925 ) என்பார் **ஒரு நிறுவனத்தின் பொதுக்கோட்பாடு** என்ற நூலை 1916இல் எழுதினார். அதன் ஆங்கில ஆக்கம் 1949இல் தான் வெளியிடப்பட்டது. ஹென்றி பயால் தொழிலகங்களின் நடவடிக்கைகளை ஆறு வகையாகப் பிரித்துள்ளார். அவை. 1. தொழில்நுட்பம் ( உற்பத்தி சார்ந்தவை ), 2. வணிகம் ( பண்டங்கள் வாங்குதல், விற்றல், அங்காடி நடவடிக்கைகள் ), 3. நிதி ( உத்தம அளவு மூலதனம் தொடர்பானது ), 4. பாதுகாப்பு ( தொழிலுக்கு பாதுகாப்பு ), 5. கணக்கு ( நிதி நிலைமையை நிருணயம் செய்வதற்குத் தேவையானது ), 6. மேலாண்மை ( திட்டமிடுதல், பணியமைப்பை உருவாக்கல், ஆட்சி செலுத்தல், ஒருங்கிணைத்தல், கட்டுப்படுத்துதல்) முதலியன.

ஹென்றி பயால் தம்முடைய மேலாண்மையியல் பகுப்புகளை 1. பணிப்பகிர்வு, 2. அதிகாரமும் பகிர்வும், 3. ஒழுங்கு, 4. ஒருமித்த கட்டளை, 5. ஒருமித்த நெறிப்போக்கு, 6. குழு நலனுக்காகத் தன் நலனை விட்டுக்கொடுத்தல், 7. பணியாளருக்கு நியாயமான ஊதியம், 8. இயன்ற அளவு அதிகாரத்தை மையப்படுத்துதல், 9. சங்கிலிப் பின்னல் அமைப்புடைய தகவல் தொடர்பு, 10. தெளிவுடைமை, 11. அனைவரையும் சமநிலையில் நடத்துதல், 12. பணியாளருக்கு நேரிடைப் பயிற்சி, 13. ஊக்கமுடைமை, 14. தொழிலாளர் நல்லுறவு ஆகிய கோட்பாடுகளின் அடிப்படையில் விளக்குகிறார்.

வெசுடர்ன் மின் நிறுமம் என்ற நிறுவனம் 1920 லிருந்து 1930 வரை காத்தோர்ன் என்ற இடத்தில் பல்வேறு ஆய்வுகளைச் செய்தது. அதற்கான ஆய்வாளர்கள் ஆர்வர்டு பல்கலைக்கழகத்திலிருந்து வந்திருந்தனர். அத்தகைய ஆய்வுகளின் விளைவாக மேலாண்மையியலில் மனித உறவுகளுக்குரிய முதன்மையிடம் வெளிப்பட்டது. பணியிடத்தில் நிலவக்கூடிய மனித உறவுகள் உற்பத்தியைப் பெருக்குவதையும், உள் சிந்தனையைப் பெருக்குவதையும் அச்சோதனைகள் மூலம் கண்டறிந்தனர். தொழிலாளரை உருவாக்கும் காரணிகளைக் கண்டறிதல், பணியமைப்பை ஒரு சமூக அமைப்பாக உருவாக்குதல், தலைமைப் பண்பு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருத்தல், தகவல் தொடர்பு நிறுவனத்தின் விரைந்த செயல்பாட்டிற்கு உறுதுணையாக இருத்தல். மேலாண்மை திறமை மூலம் தொழிலாளர் திறனை வளர்த்துத் தொழிலாளர்கள் மேம்பாடு அடையச் செய்தல் ஆகியவை. இத்தகைய மனித உறவுகள் அணுகுமுறை மூலம் கண்டறியப்பட்டன. இதனைத் தொடர்ந்தே பல்வேறு சிந்தனையாளர்கள் மேலாண்மை இயலைச் சமூக உறவுகளின் மூலமும், ஒருங்கமைப்பு அணுகு முறை மூலமும், முடிவுகள் மேற்கொள்ளும் அணுகு முறை மூலமும் விளக்கியிருக்கின்றனர். இவர்களுள் எல்டன் மேயோ, எரால்டு, கூன்டசு, செசுடர்

பர்னார்டு, பீட்டர் திரக்கர் ஆகியோர் குறிப்பிடத்தக்க வர் ஆவர். இவர்களுடைய புதிய புதிய கோட்பாடு களும், விளக்கங்களும் மேலாண்மை இயலை மிகச் சிறந்த புதிய அறிவியல் துறையாக வளரச் செய் துள்ளன.

**மேலாண்மைச் செயல்முறைகள்** : மேலாண் மைச் செயல்முறைகளை 1. திட்டமிடுதல், 2. பணி யமைப்பு உருவாக்கல், 3. பணியாளர் நிர்வாகம், 4. பணியாளரை நெறிப்படுத்தல், 5. கட்டுப்படுத்தல் என்ற தலைப்புகளில் பிரிக்கலாம்.

திட்டமிடுதல் என்பது தொலைநோக்கு, குறிக் கோள், உருவாக்கம், கொள்கை உருவாக்கம், செயல் நிரல், செயல்முறைகள், வழிமுறைகள், வரவு - செல வுத் திட்டம் ஆகியவற்றை உட்கொண்டதாகும்.

பணியமைப்பு என்பது ஒரு நிறுவனத்திற்குத் தேவையான பல்வேறு நடவடிக்கைகளைப் பட்டிய லிட்டும், ஒன்றுப்படுத்தியும் பணி விளக்கம் செய்தும், அதிகாரம், பொறுப்பு ஆகியவற்றை நிருணயம் செய்தும், உறவு முறைகளை நிருணயம் செய்தும் ஒரு நிறு வனத்தில் தெளிவான பணிப் பிரிவுகளை ஏற்படுத்து வதாகும். பணியாளர் நியமனம் என்பது, பணியாளர்களைத் தேர்ந்தேடுத்தல், பயிற்றுவித்தல், அவர்களுக் குத் தக்க ஊதியம் நிருணயம் செய்தல், ஒழுங்கு பேணல், பணிநீக்கம் செய்தல் ஆகிய பல்வேறு நட வடிக்கைகளை உட்கொண்டதாகும்.

பணியாளரை நெறிப்படுத்துதல் என்பது அவர் களைக் கண்காணித்தல், அவர்களுடன் தகவல் தொடர்பு மேற்கொள்ளுதல், ஊக்குவித்தல், வழி காட் டுதல் ஆகிய அனைத்தையும் உட்கொண்டதாகும். கட்டுப்படுத்துதல் என்பது தேவையான விளைவு களுக்குரிய தர நிருணயம், அவற்றை அளவிடுதல், பகுத்தாய்தல், திருந்தி நடவடிக்கைகளை மேற்கொள் ளுதல் ஆகியவற்றை உட்கொண்டதாகும்.

1. **திட்டமிடுதல்** : எதிர்காலம் என்பது உறுதியற்ற தன்மையையும், மாறுதல்களையும் கொண்டதாகும். எனவே, இத்தகைய உறுதியற்ற தன்மையிலிருந்து பாதுகாப்புப் பெறவும் மாறுதல்களை எதிர்கொள்ள வும் திட்டம் தேவையாகிறது. மேலும், குறிக்கோளை அடைவதற்குத் திட்டம் உதவுகிறது. இதனால், சிக்கன மான இயக்கமும், கட்டுப்பாடும் ஏற்பட வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகைய நன்மைகளினால் திட்ட மிடுதல் எல்லா நிறுவனங்களுக்கும் இன்றியமையாத ஒரு நடவடிக்கையாகிறது.

திட்டமிடுதல் என்பது ஒரு சிந்தனை நிலை. இது இலக்கை நிருணயம் செய்ய உதவுகிறது. இது திற மைக்கு வழிகோலுகிறது. குறைந்த செலவில் நிறைந்த பலனை ஈட்டித் தருகிறது. இதனால் இது மேலாண் மையின் அடிப்படை நடவடிக்கையாக அமைந்து மற்ற எல்லா நடவடிக்கைகளிலும் ஊடுருவி நிற்கிறது. திட்டங்களில் பல வகைகள் உண்டு. நீண்ட காலத் திட்டங்கள், குறுகியகாலத் திட்டங்கள், இடை காலத் திட்டங்கள் என்ற கால அளவைக் கொண்டு திட்டங் களை வகைப்படுத்தலாம். மேலும் நிலையான திட் டங்கள், ஒற்றைப் பயன்பாட்டுத் திட்டங்கள் என்று பயன்பாட்டு அடிப்படையிலும் திட்டங்களை வகைப் படுத்தலாம். குறிக்கோள்கள், கொள்கைகள், வழக் காறுகள், விதிகள், தந்திர நிலைகள் ஆகியவை நிலை யான திட்டங்களாகும். நிகழ்வு நிரல்கள், வரவு - செல வுத் திட்டங்கள், தனித்திட்டங்கள் ஆகியவை ஒற்றைப் பயன்பாட்டுத் திட்டங்களாகும்.

திட்டமிடுதலில் பல படிகள் உள்ளன. முதலில் ஒரு நடவடிக்கைக்கான தேவையை உணரவேண்டும். அதாவது ஒரு சிக்கலையோ ஒரு வாய்ப்பினையோ முதலில் இனங்காண வேண்டும். இரண்டாவதாக, ஒரு நிறுவனத்தின் பலங்கள், பலவீனங்கள் ஆகியவற் றின் அடிப்படையில் அதன் குறிக்கோள்களை வரை யறுக்க வேண்டும். மூன்றாவதாக, திட்டத்திற்கான பல்வேறு சூழ்நிலைகளை ஆய்ந்து கடந்த காலப் பட் டறிவின் அடிப்படையிலும், எதிர்கால மாறுதல் களைக் கருத்தில் கொண்டும் தொலைநோக்குடன் தகவல்களைச் சேகரிக்க வேண்டும். நான்காவதாக, கிடைத்திருக்கும் தகவல்களின் அடிப்படையில் பல் வேறு மாற்று நடவடிக்கைகளை இனங்காண வேண் டும். ஐந்தாவதாக, இத்தகைய மாற்றுநடவடிக்கை களைப் பகுத்தாய்ந்து நன்மை தீமைகளை எடை போட வேண்டும். ஆறாவதாக, இத்தகைய மாற்று நடவடிக் கைகளில் எது சிறந்து என்பதைத் தேர்ந்தெடுக்க வேண் டும். இதற்கு முடிவு மேற்கொள்ளுதல் என்று பெயர்.

திட்டமிடுதலில் வெற்றி பெற வேண்டுமானால், அந்நிறுவனத்தில் பணிபுரியும் தொடர்புடைய அனை வரின் கருத்துகளும் கேட்கப்பட வேண்டும். செயல் முறைகள் உறுதியானவையாக இருக்க வேண்டும். நிறுவனத்தில் தகவல் தொடர்பு முறை நன்கு செயற்

பட வேண்டும். மேலும் புறக்காரணிகளான அரசியல் நிலை, பொருளாதார நிலை, போட்டியாளர்கள் நிலை, வாடிக்கையாளர் நிலை அனைத்தையும் துல்லியமாக உணர்ந்து திட்டத்தை உருவாக்கினால் திட்டத்தின் வெற்றிக்குரிய வாய்ப்புகள் மிகுதியாகும்.

திட்டங்கள் தோல்வியுறுவதற்கான காரணங்களையும் அறிந்து கொண்டால் தோல்விகளைத் தவிர்க்கலாம். திட்டங்கள் கீழ்க்கண்டவற்றால் தோல்வியடையலாம். அவை. 1. சிக்கலையோ, குறிக்கோளையோ சரிவரப் புரிந்துகொள்ளாமை. 2. திட்டமிடலுக்குப் போதிய காலம் எடுத்துக் கொள்ளாததால் ஏற்பட்ட விரைந்த நடவடிக்கையின் விளைவுகள், 3. போதுமான மாற்று நடவடிக்கைகளைக் கருத்தில் கொள்ளாமை. 4. கட்டுப்பாடு அமைப்பில் குறைபாடுகள், 5. தொடர்புடைய பணியாளருக்குப் போதிய தகவல் வழங்கத் தவறியமை, 6. தவறாகப் புரிந்து கொள்ளல், தவறான கணிப்பு, தவறான கால நிருணயம், 7. திட்டத்தைத் தடை செய்யக்கூடிய மனிதரையோ, காரணியையோ இனங்கண்டு கொள்ளத் தவறுதல், 8. தவிர்க்கமுடியாதது நடந்தே தீரும் என்பதைக் கண்டு கொள்ள இயலாமை, 9. நிறைவில்லாத ஆலோசனை, 10. எல்லாவிதமான வாய்ப்புக்குரிய விளைவுகளைப் பற்றியும் சிந்திக்கத் தவறுதல், 11. பணியைப் பற்றித் திட்டமிட்டுவிட்டுத் திட்டப்படி பணியாற்றாமை முதலியன.

எனவே, திட்டங்கள் வெற்றிபெற மிகுந்த விழிப்புணர்வு தேவை, குறிக்கோள் யாது, அது தெளிவானதா, சுருக்கமானதா, தொடர்புடைய அனைவராலும் அது புரிந்துகொள்ளப்பட்டதா, ஏற்றுக்கொள்ளப்பட்டதா, சோதனை முறைகள் மூலம் நிறுவப்பட்டுள்ளதா, கால நிருணயம் சரியானதா, தேவையான அனைத்து வளமைக் கூறுகளும் கிடைக்கின்றனவா, எல்லாப் புறக் காரணிகளும் கருத்தில் கொள்ளப்பட்டனவா, தேவையானால் திட்டத்தை மாற்ற இயலுமா, திட்டம் நடவடிக்கையைத் தூண்டவல்லதா என்றெல்லாம் பகுத்தறிந்தால் திட்டங்கள் வெற்றிக்கு வழிகோலும்.

2. **பணியமைப்பு** : இது குறிக்கோளை அடைவதற்கான முறையில் தோற்றுவிக்கப்படும் ஓர் உறவுத் தொடர்பு எனலாம். ஒரு நிறுவனத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் நிறைவேற்றப்பட பணிப்பகிர்வு தேவை. அதிகாரமும், பொறுப்பும் இணைந்த ஓர் அமைப்பு தேவை. பல்வேறு நடவடிக்கைகளைத் தம் போக்கிலேயே நடைபெறாமல் அவை ஒருங்கிணைக்கப்பட வேண்டும். அவை குறிக்கோளை அடைவதற்குத் துணை நிற்கவேண்டும்.

ஒரு பணியமைப்பை உருவாக்குவதற்குமுன் முதலாவதாக அதன் குறிக்கோள்கள் நிருணயிக்கப்படல் வேண்டும். அதன் பல்வேறு நடவடிக்கைகளும் பட்டியலிடப்படல் வேண்டும். பின்னர் அவை பணியடிப்படையில் தனித்தனியாகத் தொகுக்கப்படல் வேண்டும். அப் பணித்தொகுப்புக்குரிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அதற்குத் தேவையான ஆட்களின் தகுதிகள் நிருண்யிக்கப்படல் வேண்டும். இறுதியாக அப்பணியினை நிறைவேற்றுவதற்கு அப்பணியிடத்திற்குரிய அதிகாரம் விளக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு பணியிடங்கள் உருவாவது பணிகளின் இயல்பு அடிப்படையிலோ, பணிகளிடையே எழும் உறவுத்தொடர்பு அடிப்படையிலோ முடிவு மேற்கொள்ளும் அதிகாரத்தின் அடிப்படையிலோ அமையலாம். ஒரு நல்ல பணியமைப்புக்குத் தேவையான சில அடிப்படை விதிகளாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம். அவை 1. பணியைச் செய்யும் ஒவ்வொருவருக்கும் தெளிவான, விளக்கமான அதிகாரத் தோற்றுவாய் இருக்க வேண்டும் (ஒருமித்த மேலாண்மை என இது அழைக்கப்படும்) 2. எந்த மேற்பார்வையாளரையும் அவரால் திறமையுடன் கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு மேலான ஆட்களுக்குப் பொறுப்பாளராக்கக்கூடாது (இதற்கு கட்டுப்பாட்டுத் தொலைவு என்று பெயர்) 3. அலுவல்கள் அவற்றின் தன்மைக்கேற்ப ஒருங்கிணைக்கப்பட்டு பணிகளாக மாற்றம் தரப்படல் வேண்டும். 4. அடிமட்டத்தில் விளைவு ஏற்படுத்தக்கூடிய பதவியில் எல்லா விவரங்களும் அறியப்படுமாதலால் அங்கேதான் பொறுப்பு ஒப்படைக்கப்படல் வேண்டும். 5. சோதனைக்குட்படுத்தும் பணியைச் செய்யும் ஒருவருக்கு அவருடைய பணியின் தரத்தைத் தாமாகவே சோதித்துப் பார்த்துக் கொள்வதற்கு தேவையான வசதிகளும், உதவிகளும் செய்து தரப்படல் வேண்டும். 6. பணியின் குறிக்கோள்கள் நிலையாக நிறைவேற்றப்பட்டு உயர்ந்த குழுவொழுக்கம் நிலைநிறுத்தப்பட வளமைக்கூறுகள் உரிய அளவில் பயன்படுத்தப்படல் வேண்டும்.

ஒரு நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைவதற்குப் பணியாற்றுபவர்களிடையே உள்ள உறவுமுறைகளின் பின்னல் என்று பணியமைப்பைக் கூறலாம்.

அதனுடைய அமைப்புப் பல்வேறு வடிவங்களை எடுக்கலாம். வழி வழி வழக்கிலுள்ள முறையான பணியமைப்பு ( Formal Organisation ) என்பது குடும்ப மரம் அல்லது வரிசைமுறை எடுத்துவிட்டதாகும். இது சார் பணியாளர் மீது மேலாளருக்குள்ள திட்டமிட்ட அதிகாரத்தை விளக்குவதாகும். இது தேவையான கொள்கைகளையும், பொருத்தமான தரங்களையும் உருவாக்கும் வழிமுறைகளின் அடிப்படையில் உருவானதாகும். அதிகாரத்தின் போக்கு மேலிருந்து கீழாகத் தெளிவாக்கப்பட்ட வழித்தொடர்பு மூலமாகச் செல்கிறது. இதனை ஆதிக்கத்தொடர் எனலாம். தகவல் தொடர்பும் இவ்வாறே மேலிருந்து கீழாகச் செல்லும், அனுப்பப்படும். இங்கு இயக்கங்களை நிகழ்த்துபவர்கள் 'வரிசையாளர்' எனவும் ஆலோசனை உதவி புரிபவர்கள் 'ஆலோசகர்' எனவும் அழைக்கப்படுகின்றனர்.

ஒரே வகையிலான பணிகளைச் செய்யும் பணியாளர்கள் ஒன்றாய் இணைந்து, முறையான பணியமைப்பிலிருந்து மிகுதியான மாறுபாடில்லாத பணி செய்யும் முறையைச் செயல்முறைப் பணியமைப்பு ( Functional Organisation ) வலியுறுத்துகிறது. எ.கா. தலைமை அலுவலகப் பண்டக மேலாளர் மாவட்ட அலுவலகப் பண்டக அலுவலருக்கு நேரடியாகத் தொடர்பு கொள்வதைக் கூறலாம்.

இவையன்றிக் குறிப்பிட்ட சில காரணங்களுக்காகப் பணியமர்த்தப்பட்ட தலைமையின் கீழ்த் தனித்திறமை படைத்த பணியாளர்களை ஒன்றுபடுத்தி, குழுக்களை ஏற்படுத்தித் தனித்திட்டப் பணியமைப்பு ( Project Organisation ) செயற்படுகிறது. தனித் திட்டம் முடிவுற்றதும் இப்பணியாளர்கள் தங்கள் மூல நிலைகளுக்குத் திரும்பச் சென்றுவிடுவர். இதிலிருந்து அணிக்கோவைப் பணியமைப்பு ( Matrix Organisation ) என்ற பிறிதொரு அமைப்பும் உருவானது. இருக்கக்கூடிய பணியமைப்புக்குள்ளேயே அணிக் குழுக்கள் முறையாக நிறுவப்படுவதற்கு இப்பணியமைப்பு உதவுகிறது. எ.கா. உற்பத்திப் பொருள் மேம்பாட்டுக் குழுக்கள், அங்காடி மேம்பாட்டு அணிகள் அல்லது சிறப்பு வட்டாரக் குழுமங்களைக் கூறலாம். பணியமைப்பு எதுவாக இருந்தாலும், அதன் அமைப்பு முறை குறிக்கோள்களை அடைவதற்குத் துணைபுரிவதாக இருக்கவேண்டுமேயன்றி அதற்குத் தடையாக இருத்தல் கூடாது. தடைகள் பெரும்பாலும் மேல்மட்டத்திற்கருகில் ஏற்படுகின்றன எனலாம்.

முறையான பணியமைப்புக்கான படம் அதிகார வரம்புகளையும், பணிப் பிரிவுகளையும் ஆலோசனைப் பணிகளையும் காட்டுவதாக அமைந்தாலும், அதற்குள் ஒரு முறைசாராப் பணியமைப்பு அல்லது செல்வாக்குடைய ஒரு அமைப்பு இயங்குகிறது என்பதையும் அறிந்திருத்தல் இன்றியமையாததாகும். ஒரு சில மனிதர்களுடைய செல்வாக்குகள் அவர்களுடைய பதவிகளாலோ, பட்டங்களாலோ ஏற்படாமல் அவர்களுடைய சொந்தச் சிறப்பியல்களாலேயே ஏற்படுகின்றன என்பதை முறைசாராப் பணியமைப்புக் கொள்கையால் அறியலாம். முறையான அதிகாரத்துக்குக் கட்டுப்படுவதைவிட இவர்களுக்கு மிகுதியாக குழுவிலுள்ளவர்கள் கட்டுப்படுவார்கள். மாறுபட்ட சூழ்நிலைகளில் முறைசாராத் தலைமை மாறலாம். தகவல் தொடர்பு இங்கு முறைசார நிலையிலேயே பொதுவாக மேற்கொள்ளப்படும். முறைசாராப் பணியமைப்பானது முறையான பணியமைப்பின் இயக்கத்துக்குப் பெரிதும் உதவுவதாகும்.

3. **பணியாளர் நிருவாகம்** : மேலாண்மைச் செயல் முறையில் மூன்றாவதாக வரிசைப்படுத்தினாலும் பணியாளர் நிருவாகம் என்பது முதன்மையான ஒன்றாகும். ஏனெனில், மேலாண்மை என்பது ஒரு நிறுவனத்தின் தேவைகளை மற்றவர்களைக் கொண்டு நிறைவு செய்யும் கலை என்பதால் திறமையுள்ள பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தல், அவர்களுக்கு உரிய ஊதியம் நிருணயித்தல், பயிற்சியளித்தல், பணியாளர் நலன் பேணல், தொழிலுறவு, ஒழுங்கு பராமரித்தல், பணி உயர்வு, பணிநீக்கம், ஓய்வளித்தல் ஆகியவற்றை அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளுவதே பணியாளர் நிருவாகமாகும்.

ஒரு நிறுவனத்தின் பணியாளர் மற்றும் தொழிலாளருக்கான தேவைகளைத் திட்டமிட்டு அறிந்து அதற்கான விண்ணப்பங்களை விளம்பரம் மூலமோ, வேலைவாய்ப்பு நிறுவனம் மூலமோ, வேறு வகையிலோ பெற்று, நேர்காணல் மூலம் சிறந்த ஆளைத் தேர்ந்தெடுத்தால்தான் அந்நிறுவனத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட முடியும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆள்கள் அனுபவம் இல்லாதவர்களாக இருப்பார்கள். எனவே, அவர்களுக்குப் பணியில் பயிற்சி அளிக்க வேண்டியதும் இன்றியமையாததாகிறது. அவ்வாறே பணிக்கேற்ற ஊதியத்தைப் பணியின் தன்மை கருதியும், பிற நிறுவனங்கள் வழங்கும் ஊதிய அடிப்படையிலும், வாழ்க்கைத்தரம் கருதியும்,

கிடைப்பருமை கருதியும் தக்கவாறு நிருணயம் செய்யவேண்டியது இன்றியமையாததாகிறது.

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிக்கு அடிப்படைக் காரணிகளாக மூலதனம், தளவாடங்கள், மூலப் பொருட்கள் ஆகியவற்றைக் குறிப்பிட்டாலும் தொழிலாளர் களே அடிப்படையான காரணிகளாக அமைவர். எனவே, ஒரு நிறுவனம் தன் பணியாளர்களையும், தொழிலாளர்களையும் மேம்படுத்தவும், அவர்கள் நலன் பேணி அவர்களைத் தக்க வைத்துக்கொள்ளவும், நல்ல குழு ஒழுக்கம் நிலைக்குமாறு செய்யவும், தொழிலுறவு வளர்க்கவும் தொடர்ந்து முயல வேண்டும். திறமைமிக்க பணியாளர்கள் இருந்தால் மட்டும் போதாது. அவர்கள் முழுமனதோடு தம் ஆற்றலை வெளிப்படுத்துபவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

பணியாளர்கள் பெரும்பாலும் எதிர்பார்ப்பது தாங்கள் ஆற்றக்கூடிய பணிக்குப் பொருத்தமான ஊதியம், பொருத்தமான பணி விதிகள் ( நேரம், விடுப்பு முதலியன ), பணி செய்வதற்கு ஒரு திட்டமிட்ட பணிப் போக்கு, முறையான வழிமுறைகள், பணியைச் சிறப்பாகச் செய்ய உதவும் தளவாடங்கள், பாதுகாப்பாகவும், முறைப்படியும் பணிபுரியும் வழிமுறைகளும், அறிவுரைகள், தனி ஆள் தேவைகள், குறைகள் குறித்த நியாயமான கருத்துகள், நல்ல தகவல் முறை அவர்களைப் பாதிக்கக்கூடிய மாறுதல்கள் குறித்து முன் கூட்டியே தகவல் ஆகியவையேயாகும். இவற்றை அளிக்கக்கூடிய நிறுவனம் தன் இலக்குகளை அடைவது எளிது.

**4. பணியாளரை நெறிப்படுத்தல்** : பணியாளரை நெறிப்படுத்தல் என்பது மேற்பார்வையிடுதல், தலைமையேற்றல், ஊக்குவித்தல், தகவல் தொடர்பு ஆகிய செயல்முறைகளை உள்ளடக்கியதாகும்.

**மேற்பார்வையிடுதல்** : இது அதிகாரம் செலுத்துவதன்று. வழி நடத்துவதாகும். மனிதர்கள் அனைவரும் அறிவாலும், திறமையாலும், சூழலாலும் வேறுபட்டவர்கள். இந்த அடிப்படைத் தன்மையைப் புரிந்து கொண்டு பணியாளரின் தகுதிக்கேற்ப அவர்களை வழி நடத்தல் வேண்டும். சராசரி மனிதன் என்பவன் உலகில் இல்லை. அது ஒரு கற்பனையே. எனவே, பணியாளரை நிருணயிப்பதில் சராசரி அளவு என்பது எப்போதும் பொருந்திவரும் என்று சொல்லமுடியாது. அவ்வாறே மனிதர்களில் தாராளமாகப் பழகுபவர்களும், ஒதுங்கியிருப்பவர்களும் உள்ளனர். இப்படிப் பலதரப்பட்ட தொழிலாளர்களை ஒருங்கிணைத்துக் குறிக்கோள்களை அடைந்தாக வேண்டும். அதற்கு அவர்கள் ஒத்துழைக்கும் வகையில் அவர்களுடைய தேவையறிந்து செயற்பட வேண்டும். அவர்களை நெறிப்படுத்த இயலும் என்ற நம்பிக்கையுடன் அவர்களுக்குப் பொறுப்பையும், அறைகூவலையும் விடுத்தல் வேண்டும்.

**தலைமைப் பண்பு** : இது பலவகைப்படும். வல்லாட்சி செலுத்தும் தலைமைமீது பணியாளருக்கு அச்சம் இருக்குமே தவிர அன்பு இருக்காது. பணியாளர் கருத்துக்கு மதிப்பளிக்கும் தலைமைமீது பணியாளர் அன்பு பாராட்டுவர். பணியாளரை அவர் தம் விருப்பத்திற்கு விட்டுவிடும் தலைமையிடம் பணியாளர் நல்லுறவு கொண்டிருந்தாலும் உற்பத்தி குறைந்து நிறுவனத்தின் குறிக்கோள் பாதிக்கப்படும். எனவே, எந்த வகையான தலைமைப்பண்பு நிறுவனத்துக்கு நலன் பயக்கும் என்பதை நிறுவன மேலாளர்கள் உணர வேண்டும். பணியாளர் நலன், நிறுவன நலன் இரண்டையும் கருதக்கூடிய தலைமையும், தேவைக் கேற்ப இவற்றின் அளவுகளில் மாறுதல்கள் செய்து கொள்ளும் தன்மையும் நலன் விளைவிக்கும்.

**ஊக்குவித்தல்** : இது மனிதனின் உளவியல் தொடர்பானது. மனிதனின் தேவைகள் பலதரப்பட்டவை. ஆபிரகாம் மாசுலோ என்பவர் மனிதத் தேவைகளை வரிசைப்படுத்தியுள்ளார். முதல் தேவை உடற் கூறு தொடர்பான தேவைகள் ( பசி, தாகம், உறக்கம், ஒய்வு, உடலுறவு போன்றவை ). இத் தேவைகள் நிறைவு எய்தினால் இரண்டாவதாக எழுவது பாதுகாப்புத் தேவைகள் ( பணிப் பாதுகாப்பு, ஆயுள் பாதுகாப்பு போன்றவை ). மூன்றாவது சமூக தேவைகள் ( அன்பு, நட்பு, உறவு போன்றவை ). நான்காவது தன் மதிப்புத் தேவைகள் ( மரியாதை, சாதனை, தனித் தன்மை, தற்சார்பு போன்றவை ). ஐந்தாவது தன்னுணர்வுத் தேவைகள் ( வாழ்க்கையின் பொருளுணர்ந்து அதற்கான பாதையை வகுத்துக்கொள்ளுதல் போன்றவை ). ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையிலும் இந்த ஐந்து தேவைகளும் ஒவ்வொரு கால கட்டத்தில் தோன்றிய வண்ணமிருக்கும். இத் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் அவரைத் தூண்டி நடவடிக்கையில் ஈடுபட வைத்து நிறுவனத்தின் இலக்குகளை அடைதல் வேண்டும்.

தக்ளசு மெக்ரிகார் என்ற அறிஞர் மனிதர்களை இரு வகையாகப் பிரித்தார். அவருடைய 'எக்சு' கொள்கை யின்படி மனிதன் சோம்பேறித்தனமானவன், அச் சுறுத்தலின்றித் தானாக வேலை செய்யமாட்டான். பொறுப்பைத் தட்டிக்கழிக்க முயல்வான். பாதுகாப் பாக இருக்க விரும்புவான். வழி நடத்தப்பட்டாலன் றித் தானாக எதையும் செய்ய முன் வரமாட்டான்.

அவருடைய மற்றொரு கொள்கையான 'ஒய்' கொள்கையின்படி மனிதன் வேலையை விரும்பு வான். அவன் ஓய்வையும், விளையாட்டையும் விரும் புவதைப் போலவே வேலையையும் விரும்புவான். அவனுக்குள் ஒரு உந்துதல் சக்தி உள்ளது. எனவே, அவனை அச்சுறுத்தியோ, கட்டாயப்படுத்தியோ, வேலை வாங்க வேண்டிய தேவையில்லை. அவ னுடைய தேவையை நிறைவு செய்யக்கூடிய வினை யில் ஈடுபட்டு அதற்கான குறிக்கோளை அடைய அவன் பாடுபடுவான். எனவே, நிருவாகம் அவ னுடைய வளர்ச்சிக்கான வாய்ப்பையும், அறை கூவலையும் விடுத்தால் தன் கட்டுப்பாடு, தன்னியக் கம் ஆகியவற்றால் நிறுவனத்தையும் வளர்த்துத் தானும் வளருவான். ஆனால் நடைமுறை வாழ்க்கை யில் முற்றிலும் 'எக்சு' கொள்கைப்படி உள்ள மனி தனோ, 'ஒய்' கொள்கைப்படி உள்ள மனிதனோ இருக் கமாட்டான். இரண்டு எல்லைகளுக்கும் இடைப்பட்ட நிலையிலேயே மனிதன் இருக்கிறான். எனவே, மனிதர்களின் தேவைக்கேற்ப இவ்விரு கொள்கைகளின் அடிப்படையில் அச்சுறுத்தல் வழி, அன்பு வழி இரண்டையுமே அளவோடு கையாண் டால் நிறுவனத்தின் குறிக்கோள்களை அடைய பணி யாளர் களின் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**தகவல் தொடர்பு :** இது அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் ஒரு கருத்துப் பரிமாற்ற நிகழ்ச்சி. மேலாளர் சொல்வதைப் பணியாளர் சரியாகப் புரிந்து கொண்டால்தான் எதிர்பார்க்கக்கூடிய விளைவுகள் கிட்டும். இல்லையெனில் எதிர் விளைவுகள் ஏற்படக் கூடும். எனவே, தகவல் தொடர்பில் நிறுவனப் பணி யாளர்கள் அனைவரும் தேர்ச்சி பெற்றிருப்பது மிக வும் இன்றியமையாததாகும்.

தகவல் தொடர்பு பலவகைப்படும். வாய்மொழித் தொடர்பு, எழுத்துவழித் தொடர்பு, முறையான தக வல் தொடர்பு, முறைசாராத் தகவல் தொடர்பு, மேலி ருந்து கீழேவரும் தொடர்பு, கீழிருந்து மேலே செல் லும் தொடர்பு, சமநிலைத் தகவல் தொடர்பு என்று பல்வேறு வகைகளில் தகவல் தொடர்பை விவரிக்க லாம். ஆயினும் எல்லாவற்றிலும் தகவல் அளிப்பவர், தகவல், தகவல்தடம், குறியீடுகள், தகவல் பெறுபவர் என்ற கூறுகள் அடிப்படையாக உள்ளவையாகும். இவற்றுள் ஒரு கூறு சரிவர இயங்காவிட்டாலும் தகவல் தொடர்பு அறுந்ததாகவே கொள்ளலாம். ஆகவே ஒரு நிறுவனத்தில் பணியாளரை நெறிப் படுத்துவதில் தகவல் தொடர்பு பெரும் பங்கு வகிக்கிறது.

5. **கட்டுப்பாடு** : கட்டுப்பாட்டுக்கு அடிப்படை யாய் அமைவது திட்டமாகும். ஒரு திட்டம் உரிய வழி யில் செயற்படுத்தப்படுகிறதா என்பதைக் கண் காணிக்கக் கட்டுப்பாடு உதவுகிறது. எனவே, திட்ட மும், கட்டுப்பாடும் ஒரு நாணயத்தின் இரு பக்கங் களாக அமைகின்றன. திட்டமில்லாமல் கட்டுப்பாடு செயற்பட முடியாது. கட்டுப்பாடு இல்லாமல் திட்டம் செயற்பட முடியாது. எனவே, ஒரு நிறுவத்தின் குறிக் கோளை அடையக் கட்டுப்பாடு தேவையாகிறது. கட்டுப்பாடு இல்லையெனில் நிறுவனத்தின் வளங்கள் வீணாக்கப்படும். கட்டுப்பாட்டுக்கு அடிப்படையாய் அமைவது திட்டம் மட்டுமன்று. நடவடிக்கையும் ஆகும். நடவடிக்கை இல்லாமல் கட்டுப்பாடு பெறப் படல் இயலாது. யாராவது ஒருவருக்குப் பொறுப்புத் தரப்படாவிட்டால் நடவடிக்கை நிகழாது. முன் கூட்டியே நிருணயம் செய்யப்பட்ட தரம் ஒன்று நிறுவப்பட்டுச் சாதனை நிகழ்வுகள் தொடர்ச்சியாகச் சரிபார்த்தலுக்கு உட்படுத்தப்படல் வேண்டும். கட்டுப் பாடு தொடர்ச்சியான செயல்முறையாக இருக்க வேண்டும். சோதனைக்குள்ளாகாதது சீரழியும் எனவே, கட்டுப்பாட்டுக்கு முதலாவது, ஒரு தர நிருண யம் வேண்டும். இரண்டாவதாக, நடவடிக்கை யானது தக்க இடைவெளிகள் சரிபார்க்கப்படல் வேண்டும்.

தரத்துக்கும், சாதனைக்கும் இடையில் வேறுபாடு இருந்தால் அது திருத்தப்படல் வேண்டும். தர நிருண யமே தவறாக இருக்குமானால் திட்டமே திருத்தப் படலாம். எனவே, திருத்த நடவடிக்கை என்பது கட்டு பாட்டு அமைப்பின் மையக் குறிக்கோளாகும். ஒரு நல்ல கட்டுப்பாட்டு அமைப்புக்குத் தேவையானவை யாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம். 1. கட்டுப்பாட்டு அமைப்பு நடைமுறைக்கு ஒத்ததாக இருத்தல் வேண் டும். 2. நல்ல தகவல் தொடர்பு முறை மூலம் உடனுக் குடன் நிகழ்வுகளை அறிவிக்கும் வழியமைப்பு இருத்

தல் வேண்டும். 3. திட்டம் செயலாற்றும்போது எதிர் பார்க்கக்கூடிய மாற்றங்களைத் தவிர்க்கும் தொலை நோக்கு இருக்க வேண்டும். 4. கட்டுப்பாட்டுக்குரிய நிகழ்வுகள் எவையென்று தேர்வு செய்து அங்கங்கு கட் டுப்பாட்டு முனைகள் நிறுவப் படல் வேண்டும். 5. கட் டுப்பாட்டு அமைப்பு நெகிழ்வுடையதாகவும் மாற்றப் படக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும். 6. அது பணியமைப்பை ஒட்டியதாகப் பல்வேறு நிலைகளில் செயற்பட வேண்டும். 7. அது சிக்கனமானதாக இருக்க வேண்டும். 8. அது சிக்கலற்றதாகவும் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் இருத்தல் வேண்டும். 9. அது திருத்த நடவடிக்கைக்கு வழி கோலுவதாக இருக்க வேண்டும்.

நிறுவனங்களின் கட்டுப்பாடு என்பது பலவகை களில் பயன்படுத்தப்படுகிறது. அவற்றுள் வரவு - செலவுக் கட்டுப்பாடு, சரக்குக் கட்டுப்பாடு, உற்பத் திக் கட்டுப்பாடு, தரக்கட்டுப்பாடு, அடக்கவிலைக் கட்டுப்பாடு என்பவற்றை எடுத்துக்காட்டாகக் கூற லாம்.

கட்டுப்பாட்டு அமைப்பின் மூலம் திட்டங்களில் மாற்றம் கொண்டு வரும்போது மேலாண்மைச் செயல்முறைகளில் ஒரு சுழற்சி உருவாவதைக் காண லாம். திட்டமிடுதல் - பணியமைப்பு உருவாக்கல் - பணியாளர் நிருவாகம்- பணியாளரை நெறிப்படுத்தல் - கட்டுப்படுத்தல் - மீண்டும் திட்டமிடுதல் இவ் வாறாக மேலாண்மை நடவடிக்கைகளின் தொடர்ந்த சுழற்சி, நிறுவனத்தை அதன் குறிக்கோளை நோக்கி இயக்கும் உந்துசக்தியாக அமைகிறது எனலாம்.

**மேலாண்மைத் துறைகள்** : மேலாண்மைக் கோட்பாடுகள் நாளுக்குநாள் வளர்ந்துவருவதை அடுத்துப் பல்வேறு துறைகளுக்குரிய மேலாண்மைக் கோட்பாடுகளும் பல்கிப்பெருகியுள்ளன. அவற்றுள் உற்பத்தித் துறை மேலாண்மை, பணியாளர் துறை மேலாண்மை, அங்காடியியல் மேலாண்மை, நிதித் துறை மேலாண்மை ஆகியவை முதன்மையானவை. ஒவ்வொரு துறையும் தன்னளவில் திட்டமிடுதல், பணியமைப்பு உருவாக்கல், பணியாளரை அமர்த்து தல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய பணி களை மேற்கொள்வதோடு மற்ற துறைகளோடு ஒருங்கிணைந்து நிறுவனத்தின் குறிக்கோள்களை அடையப் பாடுபடுகிறது.

**1. உற்பத்தித் துறை மேலாண்மை** : ஆலை நிறு வுதல், உற்பத்தியைத் திட்டமிடுதல், உற்பத்திக் கட் டுப்பாடு, தரக்கட்டுப்பாடு, சரக்குக் கட்டுப்பாடு, பணியை எளிமைப்படுத்தல், பாதுகாப்பு நடவடிக் கைகள், கருவிகள் பராமரிப்பு ஆகிய பணிகளை உற்பத்தித் துறை மேற்கொள்ளுகிறது.

ஆலை நிறுவும் இடத்தைத் தேர்ந்தெடுக்கும் போது மூலப்பொருள் கிடைக்கும் இடம், அங்காடிக்கு அருகாமை, எரிபொருள் கிடைக்குமிடம், போக்கு வரத்து வசதிகள், தொழிலாளர் கிடைக்குமிடம், தகவல் தொடர்பு வசதிகள், தண்ணீர் வசதி, கழிவுநீர் ஓட வடிகால் வசதி ஆகியவை கருத்தில் கொள்ளப்படு கின்றன.

உற்பத்தியைத் திட்டமிடும்போது மூலப்பொருள் எந்த எந்த வழியாகப் பதப்படுத்தப்பட எந்த எந்த வரிசையில் இயந்திரங்கள் வழியாகச் செலுத்தப்படல் வேண்டும் என்பது முடிவு செய்யப்படுகிறது. இயந் திரங்கள் அனைத்தும் முழு அளவில் செயற்பட வகை செயற்படுகிறது. உற்பத்தியில் தொய்வு ஏற்படாமல் இருக்க எந்தத் தொழிலாளர் எந்த இயந்திரத்தில் பணி யாற்ற வேண்டும். அவருக்கு என்னென்ன கருவிகளும், மூலப்பொருள்களும் வழங்கப்படல் வேண்டும் என்பது முன்கூட்டியே முடிவு செய்யப்படுகிறது. உற் பத்திக் கட்டுப்பாட்டுக்குத் தேவையான அனைத்துத் தகவல்களும் முழுமையான அளவில் தொழிலாளர் களுக்குத் தரப்படுகின்றன. மூலப்பொருள் தட்டுப்பாடு நேராமல் இருக்கக் குறைந்த அளவு இருப்பு எப் போதும் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. தரக்கட்டுப் பாட்டை உறுதி செய்யத் தரமும், ஏற்பு எல்லையும் நிரு ணயம் செய்யப்படுகின்றன. குறிப்பிட்ட இடைவெளி கள் உற்பத்தியின் மாதிரிகள் எடுக்கப்பட்டுச் சோதனை செய்யப்படுகின்றன. பணியை இலகுவாக்க என் னென்ன மாறுதல்கள் செய்யலாம், செலவைக் குறைக்க என்னென்ன முறைகளைக் கையாளலாம் என்பது தொடர்ந்து பரிசீலனை செய்யப்படுகிறது.

குறைந்த முதலீட்டையும், தொடர்ந்த இருப்பை யும் உறுதிப்படுத்துவதாய்ப் பண்டகக்காப்பு பரா மரிக்கப்படுகிறது. மிகுதியான பண்டக இருப்பு மூல தன முடக்கத்தையும், குறைவான இருப்புப் பற்றாக் குறையால் உற்பத்தியை நிறுத்தக்கூடிய நிலையை யும் ஏற்படுத்துமாதலால் இரண்டுக்கும் இடைபட்ட ஒரு

நிலையில் பண்டக இருப்புப் பராமரிக்கப்படுகிறது. இயந்திரங்கள் சீரான இடைவெளியில் செப்பனிடப் பட்டு உற்பத்தி தடைபடாத நிலை உறுதி செய்யப்படு கிறது. இவ்வாறு உற்பத்தி சார்ந்த பல்வேறு நட வடிக்கைகளும் உற்பத்தித் துறையால் மேற் கொள்ளப் படுகின்றன.

2. **பணியாளர் துறை மேலாண்மை** : தொழில் உறவுகளை நல்லமுறையில் பராமரிப்பதும், பணி யாளர் தேர்ச்சி, பயிற்சி, மேம்பாடு ஆகியவற்றைக் கவனித்துக் கொள்வதும், ஊதிய அளவு, பிற சலுகை கள், பணியின் காலஅளவு, பணிச்சூழல் பராமரிப்பு ஆகியவற்றை நிருணயம் செய்வதும் பணியாளர் நலத் துறையின் பணிகளாகும்.

தொழிலக நல்லுறவு நீடிக்கத் தொழிற்சங்கங்களு டன் அடிக்கடி கலந்தாலோசித்துப் பணியாளர் சிக்கல் கள் தீர்வு காணப்படுகின்றன. கருத்து வேறுபாடு களைத் தீர்த்துக்கொள்ளப் பணிக்குழுக்களும், நடுவர் மன்றமும் ஏற்படுத்தப்படுகின்றன. தொழிலாளர்கள் நிருவாகத்தில் பங்கேற்கும் வசதிகள் ஏற்படுத்தப்படு கின்றன.

தொழிலாளருக்குப் பணியிடைப் பயிற்சியும், மறு பயிற்சியும் தரப்படுகின்றன. தொழிலாளருக்கு ஆதா யத்தில் பங்கு, குடியிருப்பு வசதிகள், போக்குவரத்து வசதிகள், கடன் வசதிகள், ஆயுள் காப்பீடு ஆகியவை செய்து தரப்படுகின்றன.

ஆள் எடுப்பு, பணிநீக்கம், ஒழுங்கு பராமரிப்பு, குறை தீர்ப்பு ஆகியவற்றை இத்துறை கவனித்துக் கொள்கிறது. ஒரு பணியிடத்துக்குப் பதவி உயர்வு மூலம் ஆள் எடுப்பதா, வேலைவாய்ப்பு நிறுவனம் மூலம் எடுப்பதா, வெளி அங்காடியில் விளம்பரம் மூலம் எடுப்பதா என்பது முடிவு செய்யப்படுகிறது. திறமைசாலிகளின் திறமையைப் பாராட்டி ஊக்கு விக்கும் முறையில் பதவி உயர்வுக் கொள்கை உரு வாக்கப்படுகிறது.

ஓய்வு பெறும் வயது, விபத்தில் பணியிழந்தவருக்கு ஈட்டுத்தொகை, கருணைத்தொகை, ஓய்வூதியம் ஆகி யவையும் நிருணயம் செய்யப்படுகின்றன. பணியாளர் நலத்துறை தன் பணியாளர் நலக்கொள்கை மூலம் சிறந்த பணியாளர்களைக் கவர்ந்து நிறுவனத்தில் பணி யமர்த்துவதுடன் அவர்களைத் தக்க வைத்துக்கொள்ள வும் இடையறாது முயலுகிறது. தொழில் அமைதி நிலவுவதை இத்துறை உறுதி செய்கிறது.

3. **அங்காடியியல் துறை மேலாண்மை** : உற் பத்தி செய்த பொருட்களை விற்பனை செய்தல், விலை நிருணயம் செய்தல், விற்பனையாளர் அறிக் கைகள் மூலம் வாடிக்கையாளர் தேவைகளைக் கவ னித்தல், முகவர்கள் நியமனம் போக்குவரத்து வசதிகளை உரு வாக்குதல், காப்பீடு செய்தல், கடன் விற்பனையின் கால அளவை நிருணயித்தல், விளம்பர உத் திகளை உருவாக்குதல், பொருள்களை பல்வேறு அளவுகளில் செப்பமிடுதல், தரம்பிரித்தல், பண்டக சாலைகளின் பராமரிப்பு, விற்பனை மேம்பாடு ஆகிய பல்வேறு பணிகளை விற்பனைத்துறை மேற் கொள்கிறது.

விற்பனைக் கொள்கை என்னவாக இருக்க வேண் டும் என்பது முடிவு செய்யப்படுகிறது. தரமான பொருள் விற்பனை, மிகுந்த் அளவு ஆதாயம், வாடிக்கையாளர் மனநிறைவு, அங்காடித் தலைமை ஆகிய வற்றுள் எது நிறுவனத்தின் கொள்கையாக இருக்க வேண்டும் என்பது முடிவு செய்யப்படுகிறது. அங்காடி நிலவரம் அவ்வப்போது தகவல்தொடர்பு மூலம் பெறப்பட்டு பரிசீலிக்கப்படுகிறது. விலைக் கொள்கை எதுவாக இருக்க வேண்டும் என்பதும் முடிவு செய்யப்படுகிறது. அடக்கவிலையுடன் குறிப் பிட்ட விழுக்காடு ஆதாயம் சேர்த்து விற்பதா, போட்டியாளர் விற்கும் விலைக்கு ஏற்றவாறு விற்பதா, மாறுபட்ட விலைக் கொள்கையைப் பின் பற்றுவதா என்பது அங்காடி நிலவரத்துக்கேற்றவாறு முடிவு செய்யப்படுகிறது.

அங்காடியில் என்னென்ன பொருள்களுக்கு வர வேற்பு இருக்கும், உற்பத்திப் பொருள்களில் என் னென்ன மாறுதல்கள் செய்யலாம் என்பது அங்காடி ஆய்வு மூலம் கண்டறியப்படுகிறது. விற்பனையாள ருக்கு விற்பனையின் அடிப்படையில் ஊதியம் வழங் குவதா, நிலையான ஊதியம் வழங்குவதா அல்லது இரண்டும் சேர்ந்த பொது அடிப்படையில் வழங்கு வதா என்பது முடிவு செய்யப்படுகிறது. உற்பத்திப் பொருள்களைத் தரம்பிரித்துத் தர நிருணயச் சான்று பெற்று விற்பனை செய்யும் பணியும் நிறைவேற்றப் படுகிறது.

பன்னாட்டு அங்காடியில் பொருள் விற்பதற்குத் தேவையான அந்நியச் செலவாணி பெறுதல், தரக் கட்டுப்பாடு, காப்பீடு செய்தல் ஆகிய பணிகளும் இத்துறையில் மேற்கொள்ளப்படுகின்றன. உற்பத்திப் பொருளுக்கான விளம்பரத்தை வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம், செய்தித்தாள், வார

இதழ்கள் மூலம் வெளியிடுவது, விளம்பரப் பலகைகள், சுவரொட்டிகள் தயாரிப்பது, விற்பனை வாரம் கொண்டாடி வாடிக்கையாளர்களைப் பெருக்குவது போன்ற புதிய உத்திகளையும் இத்துறை கையாள்கிறது. இதனால் உற்பத்திப்பொருள்களின் விலை கூடினாலும் போட்டியாளர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும்போது விளம்பரம் இன்றியமையாத ஒன்றாகிவிட்டது.

முகவர்கள் மூலம் பொருள்களை விற்பனை செய்வது அங்காடியில் நல்ல பங்கு வகிக்க இடமளிக்கிறது. எனவே, முகவர்களுக்குக் கடன் வழங்குவது, ஊக்குவிப்பது ஆகியவற்றையும் விற்பனைத்துறை மேற்கொள்கிறது. அங்காடி நிலையின் அடிப்படையில் தேவையைக் கணக்கிட்டு எதிர்காலத்துக்கான உற்பத்தி அளவையும் இத்துறையே நிருணயம் செய்கிறது.

**4. நிதித்துறை மேலாண்மை** : வரவு - செலவுத் திட்டம் தயாரித்தல், மூலதனத்துக்கும் சுழல் நிதிக்கும் வழிவகைகள் ஏற்படுத்தல், வங்கிக்கடன் வசதிகள் பெறுதல், கடன் ஆவணங்கள் வெளியிடுதல் போன்ற நிதி தொடர்பான அலுவல்களை இத்துறை மேற்கொள்கிறது.

தொழில் மூலதனம் முடக்கப்படும்போது அது ஆதாயம் ஈட்டியாக வேண்டும். அதே மூலதனத்தை வங்கியில் போட்டால் கிடைக்கும் வட்டியளவுக்குக் குறையாத ஆதாயத்தை ஈட்டாவிட்டால் அத்தொழிலினால் பயனில்லை. எனவே, எதிர்பார்க்கக்கூடிய ஆதாயத்தின் அளவைப்பொறுத்துத்தான் மூலதனம் தொழிலில் முடக்கப்படுகிறது. அவ்வாறே செலவு செய்வதிலும் விழிப்புணர்வு தேவைப்படுகிறது. ஓர் இயந்திரத்தைப் பணம் கொடுத்து வாங்குவதா, கடனடிப்படையில் வாங்குவதா, வாடகைக்கு எடுத்துக் கொள்வதா என்பது ஒவ்வொரு முறையிலும் ஏற்படும் வருவாய் இழப்பு கணக்கீட்டு அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது.

கடன் வாங்குவதால் கொடுக்கப்படும் வட்டி ஆதாயத்தில் எவ்வளவு விழுக்காடு என்பது கணக்கிடப்பட்டுக் கடன் வாங்குவதா அல்லது மூலதனத்தைப் பங்குகளாக வெளியிடுவதா என்பது முடிவு செய்யப்படுகிறது. வரவு - செலவுத் திட்டத்தின் அடிப்படையில் மாதந்தோறும் அல்லது வாரந்தோறும் சுழல் முதலின் தேவை என்னவென்பது கணக்கிடப்பட்டு அதற்கான பணத்திற்கு வகை செய்யப்படுகிறது.

ஆதாயத்தை எந்த வகை முதலீடுகளில் செலவிடலாம். அவற்றின்மீது எவ்வளவு வருவாய் கிடைக்கும் என்பது பரிசீலனை செய்யப்படுகிறது. தொழிலுக்கான நிதித்தேவை நீண்டகாலத் தேவையா, குறுகிய காலத்தேவையா என்பதன் அடிப்படையில் வழிமுறைகள் முடிவு செய்யப்படுகின்றன. மூலதனப் பங்குகள் வெளியிடுதல், கடன் பத்திரங்கள் வெளியிடுதல், வைப்பு நிதிகள் பெறுதல், வங்கிகளில் கடன் பெறுதல், வாடிக்கையாளரிடம் முன்பணம் பெறுதல் முதலான பல்வேறு வழிகளில் நிறுவனத்தின் நிதித் தேவை நிறைவு செய்யப்படுகிறது.

**துணை நூல்கள் :**


1. கார்டன் பி. இராபி., (தமிழாக்கம்) இரா. சுப்பராயலு, 1985, **பொறுப்பு**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

2. கார்டன் பி. இராபி., (தமிழாக்கம்) இரா. சுப்பராயலு, 1986, **மேலாளர்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

3. Bhushan, Y. K., 1980, **Fundamentals of Business Organisation and Management**, Sultan Chand & Sons, New Delhi.

4. Dinkar Pagare., 1981, **Principles of Management**, Sultan Chand & Sons, New Delhi.

5. Harold Koontz & Cyril O Donnell., 1981, **Essentials of Management**, Tata McGraw - Hill Publishing Company Ltd, New Delhi.


**மேலாண்மைக் கல்வி :** மேலாண்மை என்ற செயல்முறை உலகளாவியது. அதனுடைய செயல்முறை இன்று பல்வேறு நிறுவனங்களையும், நிலையங்களையும் திறம்பட நிருவகிக்க இன்றியமையாதது. ஒவ்வொரு நிறுவனமும் தனக்கென அமைந்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடிவெடுத்தல், நெறிப்படுத்துதல், பிற பணிகளை ஒருமுகப்படுத்துதல், பணியாளர்களைக் கையாளுதல், செயல் நிறைவேற்றத்தை மதிப்பீடு செய்தல் ஆகிய பணிகளை ஆணையுரிமையுடைய தலைமையின்கீழ் நிறைவேற்றி

வருகிறது. மேலாண்மை என்பது ஒரு நிறு வன அமைப்பு ( Organisation ) அதில் பிறருடைய கூட்டு முயற்சியும் ஒருங்கிணைப்பும் இணைந்து நிறுவனத்தின் குறிக்கோள்களையும், நோக்கங்களையும் நிறைவேற்றச் செய்யும் பணியே மேலாண்மையா கும். ஆணையுரிமையும், தலைமையும் ஒன்றோ டொன்று இணைந்து செயற்படும். ஆணையுரிமை என்பது பிறரிடமிருந்து பணியினைப் பெறும் உரிமை கொண்ட தாகும். அது குழுவை வழிகாட்டி, உந்துதலும் கட்டுப் பாடு செய்தலுமாகும். ஆனால், தலைமை என்பது தானாக ஏற்றுக்கொள்ளும் பணியாகும். ஆகவே, மேலாண்மை என்பது ஒரு செயற் பாங்கு. அது நிறுவனத்தின் பொது நோக்கங்களை நிறைவேற்றும் குழுவின் கூட்டு முயற்சி எனலாம்.

மேலாண்மைச் செயல்முறையில் பொதுவான சில படிகள் காணப்படும். திட்டமிடுதல் அமைப்பு முறையினை உருவாக்குதல் போன்ற செயல்கள் பொதுவாகக் கல்வி நிறுவனங்களுக்கும் அல்லது தொழில் நிறுவனங்களுக்கும் பொருந்தக்கூடியன. அவை எதைச் செய்ய வேண்டும் என்பதைத் திட்ட மிடுதல், மனித வளத்தையும் மூலப்பொருள் தளவாடங்களின் வளத்தையும் நெறிப்படுத்துதல், கட்டுப் பாடு செய்தல், இறுதியாக நோக்கத்தையும் இலக்கையும் நிறைவேற்ற மேலும் தேவையான திருத்தங்களைச் செய்தல் ஆகியனவாகும்.

திட்டமிடுதல் என்பது மேலாண்மையில் முதலாவது படிநிலை. அதில் குறிக்கோள்களை ஆராய்ந்து அதன்படி எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்வது; இருக்கும் வளங்களையும் கிடைக்கும் வசதிகளையும் வைத்து, தீர எண்ணி, எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்து அடங்கும். மேலும் மனிதவள சக்தியையும் வசதிகளையும் பயனின்றி வீணாவதைத் தடுத்தல், தன்னை எதிர்நோக்கியுள்ள சிக்கலின் தன்மை, அதைத் தீர்க்க உதவுக்கூடிய முறைகள், அதற்குத் தீர்வு காணும் நோக்கம் போன்றவற்றைப் பற்றிய தெளிவான கருத்துகளைப் பெறத் திட்டமிடுதல், செயல் ஆட்சியாளர்களுக்கும் அல்லது செயலாட்சித் தலைவர் அவர்களுக்கும் துணை செய்தல் ஆகியவற்றையும் செய் கிறது. திட்டமிடுதல், நோக்கங்களை அடைதல், மாற்று வழிமுறைகளைக் கடைப்பிடித்தல் போன்றவற்றையும் செய்கிறது.

செயல்திட்டம் வரைதல் ( Programming ) என்பது திட்டமிடுதலில் அண்மையிலான ஒரு முன்னேற்றம். செயல்திட்டம் வரைதல் என்பது குறிக்கோளை அடைவதற்குச் சிறுசிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு எளிய படிநிலைகளை அமைத்துக் கொள்வதாகும். இச்செய்திகள் நன்கு திட்டமிடப்பட்டுத் தொடர்ச்சியாக அமைக்கப்பட்டிருக்கும். நன்கு வரையப்பட்ட செயல்திட்டம், திட்டமிடுவோருக்கு, திட்டம் செயற் படுமா எனத் திட்டத்தைத் தொடங்குமுன்னரே சோதித்தறிய உதவும்.

**திட்டம் மதிப்பீடு செய்தலில் மீள்பார்வை உத்தி**: திட்டம் மதிப்பீடு செய்தலில் மீள்பார்வை உத்தியென்பது செயல்திட்டம் வரைதலில் செயலுரமிக்க உத்திகளுள் ஒன்று. இந்த உத்தி கல்வியியலில் முக் கிய பணியைச் செய்கிறது. இந்த உத்தி, கல்வி செயல் முறை ஏற்பாட்டில் நன்கு திட்டமிடப்பட்டுத் தொடர்ச்சியாக எளியவற்றிலிருந்து கடின பகுதிகளுக்கு இட்டுச்செல்லும் தருக்க முறையாக அமைந்துள்ளது.

நோக்கங்கள் வழியான மேலாண்மை, திட்டமிடுதலில் மற்றொரு அணுகுமுறையாகும். ஒரு நிறுவனத்தின் பொது நோக்கங்களை நிறுவனப்பணியாளர்கள் கூட்டு முறையில் முடிவு செய்து ஒவ்வொருவரின் பொறுப்பையும் அந்நோக்கங்களை நிறைவேற்றத் தில் எவ்வளவு எனத் தீர்மானித்து, ஒவ்வொருவரும் என்ன செய்து முடிக்க வேண்டும் எனத் திட்டமிடுதலே இம் முறை.

பொறுப்பு என்பது கிடைக்கப்பெற்ற கட்டளைகளுக்கேற்ப ஒப்படைக்கப்பட்ட பணிகளைப் பணியாளர் அவருடைய மேலான ஆற்றலுடன் நிறைவேற்றுவதாகும். பணியாளர்களை நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உதவி செய்யும் வகையில் பொறுப்புள்ளவர்களாக்குகிறது.

மேலாண்மையின் முடிவு செய்தல் என்பது தலையானது. குறிக்கோள்களை அடைவதற்கு நல்லதொரு முடிவு செய்தல் வேண்டும். முடிவு செய்தல் என்பது ஒரு விருப்பேற்பை உள்ளடக்கியது. அது மனஉணர்வாலும் நோக்கத்தாலும் சிந்தித்துச் செயற்படுவதாகும். நிபுணர்கள் முடிவெடுக்கும்போது அது மற்றவரின் செயல்களில் பின்விளைவை உண்டாக்குகிறது. மேலாண்மையில் முடிவு செய்தல் என்பது இடத்தை

யும் சூழலையும் பொறுத்துப் பின்விளைவை உண்டாக்குகிறது. தனிப்பட்ட ஆளின் அல்லது குழுவினரின் செயற்படுகின்ற தன்மை சிக்கலுக்கேற்பவும், சிறப்பிற்கேற்பவும் வேறுபடுகிறது. பெரும்பான்மையான பிற முடிவுகள் அதனைச் சாரும்போது, பெரும்பான்மையான ஆள்கள் உள்ளடங்கியுள்ளபோது, நிதியுடைமை மிகவும் நெருக்கடியாயிருக்கும் போது முடிவு செய்தலின் அவசியம் அதிகரிக்கிறது.

திட்டமிடலை அடுத்து அத்திட்டத்தை முடிவு செய்த பின்பு அதனைச் செயற்படுத்துவதற்கு நிறுவன அமைப்புத்திறமைகள் முக்கியமான்வை. இது ஒழுங்கு அமைத்தல் அல்லது திட்ட ஆக்கஞ் செய்தல் என்ற இரண்டாம் படி ஆகும். ஒழுங்கு அமைத்தலில், நோக்கங்களை அடையும் முயற்சியில் பங்கு கொண்டு உதவும் பணியாளர்கள், பணிகளையும், ஆக்கக் கூறுகளையும் ஒழுங்காக அமைத்து அவை இணக்கமுறச் செயலாற்றும் வகையில் நிறுவனத்தை அமைக்க வேண்டும். இதில் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்தல், தேர்வுமுறைகள், பயிற்சி அளித்தல் ஆகியவை அடங்கும். நிறுவனத்தின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சரியான எண்ணிக்கையில் பணியாட்களைப் பெறுதலும் மேலாண்மையின் முக்கியப் பணியாகும். ஒரு சிறிய குழு எந்த ஒரு முறையான அமைப்பு இல்லாமலேயும் திறம்படச் செயலாற்ற முடியும். ஆனால் குழுவின் அளவும், பணியின் சிக்கல் தன்மையும் மிகமிக, முறையான ஓர் அமைப்பு, உள்ளடங்கிய கூறுபாடுகளின்றும் மிகுதியான பயனைப் பெற அவசியமாகின்றது.

ஒழுங்கு அமைதல் பணியில் அதிகார ஒப்படைப்பு ( Delegation of authority ) என்பது முக்கியமானது. ஆணையுரிமை என்பது பிறரிடமிருந்து பணியினைப் பெறும் உரிமை கொண்டதாகும். பொறுப்பு என்பது மற்றொரு கருத்து. அதாவது கிடைக்கப் பெற்ற கட்டளைகளுக்கேற்ப ஒப்படைக்கப்பட்ட பணிகளைப் பணியாளர், அவர்களுடைய மேலான ஆற்றலுடன் செயல்நிறைவேற்றம் செய்ய வேண்டிய கடமையாகும். இதில் ஒழுங்குணர்வு ( Moral ) செயலுரமிக்க நிறு வன அமைப்புச் செயல்கள் ( Effective Organisational activity ) நிறுவனத்திலுள்ள குழு உறுப்பினர்களின் பொதுவான ஒழுக்கஞ்சார்ந்த அடிப்படை அமைப்புகளைச் சார்ந்துள்ளது.

இறுதியாக இயக்குதல் ( Directing ) அல்லது திசைப்படுத்தி நெறிப்படுத்துதல். பணி கட்டுப்பாடு செய்தல் ( Controlling ) ஆகியவை மேலாண்மையில் கடைசி இரு படிகளாகும். இயக்குதல் என்பது செயலாட்சித் தலைவர் எவ்வாறு தலைமையேற் கிறார், எவ்வாறு ஒழுங்குப்படுத்துகிறார், எவ்வாறு அவருடைய நிறுவனத்தின் நோக்கங்களை அடைய உதவி செய்கிறார் என்பதாகும். தலைவருடைய தலைமைப் பாணி மிக முக்கியமானது. இயக்குதலிலுள்ள சிறப்பான கூறுகளான சரியான கட்டளைகளையிடுதல், பணியாளர்களை ஊக்குவித்தல், தொடர்ந்து பணியிடைப் பயிற்சி முறைகள், ஒழுங்கு முறை பராமரித்தல், மன நிறைவான செயலுக்கு வெகுமதி அளித்தல் ஆகியனவாகும்.

மேலாண்மையில் மிகவும் போற்றக்கூடிய திறமை - செய்தி இணைப்பு ( Communication Skills ). இரு வழித் தொடர்பு முறையாகும். சிந்தனைகளை வெளியிடல், திட்டமிடுதல், கட்டளையிடுதல், எடுத்துரைத்தல் ஆகியவை குழு உறுப்புகளின் மனப்பான்மையைப் பாதிக்கும். மேலாண்மை நடைமுறைகளில் இப்போதைய செயல்கள் ஆய்வு செய்யப்பட்டு, ஏற்கனவே நெறிப்படுத்தப்பட்ட இலக்கை அடைவதற்கான அறிவுரைகள் அளிக்கப்படுகின்றன. திட்டங்களில் நெறிப்படுத்தப்பட்ட விளைவுகள் கிடைக்கின்றனவா என்பதையும், அதற்கான செயல்முறைகளை ஆய்வு செய்வதையும் பொறுத்தே மேலாண்மையின் சிறப்பு அமைகிறது. ஒரு நல்ல கட்டுப்பாடான மேலாண்மை அமைப்பு விரைவில் விவரங்களைச் சேகரித்து இடைஞ்சல்களைத் தடுக்கிறது. ஒரு நல்ல நிருவாகி வெகு கவனமாக வருங்காலத்தில் தடைக்கற்களாக இருக்கக்கூடிய சிக்கல்களைக் களையும் வகையில் செயற்படுவார். ஒரு நிருவாகத்தின் தரம், செயல் திறனையும் விளைவுகளையும் உயர்த்திச் செல்லும் திறனை வெளிப்படக் காட்டும்.

- ஈ. ஞா. வே.

**மேலாளர் :** ஒரு நிறுவனத்தின் வளங்களைப் பயன்படுத்தி அதன் குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கைகள் மூலம் விளைவுகளை ஏற்படுத்தித் தருபவர் மேலாளர் ( Manager ) எனப்படுவார். மேலாண்மையில் ஓர் அறிவியல் துறையாக இன்று வளர்ந்து முன்னேறியிருப்பதால் பொறியாளர், மருத்

துவர், வழக்கறிஞர் போன்று மேலாளரும் ஒரு தொழில் செய்பவராகக் கருதப்படுகிறார். இந்நிலையில் தொன்றுதொட்டு நிறுவனங்களை ஆட்சிசெய்து வந்துள்ள மேலாளருக்கும், தொழில் அடிப்படையில் கல்வி கற்று வந்துள்ள மேலாளருக்கும் வேறுபாடு காண்பது அவசியமாகிறது. வழிவழியாகப் பழக்கத்தில் வணிகம் செய்துவரும் ஒரு மேலாளர் அந்தக் குறிப்பிட்ட வணிகத்தில் மட்டுமே திறம் படைத்தவராய் இருப்பார். ஆனால், தொழில் அடிப்படையில் கல்வி கற்று வந்துள்ள மேலாளர் எந்தவித வணிகமாயிருந்தாலும், நிறுவனமாயிருந்தாலும் திறம்பட நடத்திச் செல்பவராய் இருப்பார். மருத்துவப் பட்டம் பெற்ற மருத்துவர், நோயாளிக்கு அவர் கற்ற கல்வியின் அடிப்படையில் மருத்துவம் செய்கிறார். அவரிடம் செவிலியராகப் பணிபுரிபவரும் அனுபவத்தின் மூலம் மருத்துவம் செய்யலாம். ஆனால், செவிலியர் மருத்துவர் ஆகமாட்டார். அதேபோன்று மேலாண்மைக் கல்வி பயின்ற மேலாளர்களே உண்மையான மேலாளர்களாகக் கருதப்படுவர்.

மேலாளர் எனப்படுபவர் நிறுவனத்துக்கும் அதன் சுற்றுச்சூழலுக்கும் இடையில் ஒரு தகவல் தொடர்பாளராகப் பணியாற்றுகிறார். பணியாளர்களுக்கிடையில் ஓர் ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்றுகிறார்கள். நிறுவனத்துக்கும், தொழிலாளருக்கும், சமுதாயத்துக்கும் நலம் பயக்கக்கூடிய அளவில் முடிவுகள் மேற்கொள்பவராகத் திகழ்கிறார். நிருவாகத்துக்கு அவர் பணியாளர். உடன் பணியாற்றுவோருக்கு அவர் ஒருங்கிணைப்பாளர். வாடிக்கையாளருக்கு அவர் நிறுவனத்தின் பேராளர். தொழிலாளருக்கு அவர் சமரசவாதி. அவருடைய பிரிவுக்கு அவர் அதிகாரி. இவ்வாறு மேலாளர் பல்வேறு நிலைகளில் நிறுவனத்தில் செயலாற்ற வேண்டியுள்ளது. எனவே, மேலாளரிடம் அதிக பொறுப்பைப் பெற்றிருக்கும் அதிகாரி பல்வேறு ஆட்களுக்கும் பல்வேறு பொருள் தொடர்பாக பொறுப்புடையவர் ஆகிறார்.

மேலாளர் எந்த விளைவினை ஏற்படுத்தித் தர வேண்டுமோ, எதற்குக் கணக்குக் கொடுக்க வேண்டுமோ அது பொறுப்பு என்று கூறப்படும். மேலாளர் தம் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக அவருக்கு கொடுக்கப்பட்ட கூடுதல் திறனே அதிகாரம் எனப்படும். அவர் பொறுப்பேற்றுள்ள செயல்களை நிறைவேற்ற அவருக்கு அதிகாரம் தரப்படாவிட்டால் அவர் வினைத்திறன் மிக்க மேலாளராகச் செயற்பட முடியாது. எனவே, பொறுப்பும், அதிகாரமும் எப்போதும் இணைந்தே தரப்பட வேண்டும். ஆனால், அதே சமயத்தில் பரந்து விரிந்த புறச்சூழ்நிலையில் ஏற்படும் மாறுதல்களையும், அவற்றால் அவருடைய நடவடிக்கைகளுக்கு ஏற்படும் பாதிப்பையும் அவர் புறக்கணிக்க இயலாது.

ஒரு சிறந்த மேலாளரின் பணி. ஒரு கப்பல் மாலுமியின் பணியை ஒத்ததாகும். ஒரு மாலுமிக்குத் தான் செல்லுமிடம் தெரியும். பல்வேறு திட்டங்கள் மூலமாகவும், கட்டுபாடுகள் வழியாகவும் அவருடைய பயணத்தின் முன்னேற்றம் குறித்து அவர் தகவல்களைத் தொடர்ந்து பெறுகிறார். நடைமுறையில் வாழ்க்கை இப்படி அமையாது. மேலாளர் மூன்று வகையான சூழ்நிலைகளில் வாழ்ந்து பணி செய்து நிலைத்திருக்க வேண்டும். அச்சூழ்நிலைகளின் மாறுபாட்டுக்குரிய அழுத்தமும், பரிமாணமும் பல்வேறு சிக்கல்களைத் தோற்றுவிப்பனவாகும்.

முதலாவதாக, அவர் தம்மைச் சுற்றியுள்ள பணியாளர்கள், பிற வளங்கள், கட்டுப்பாட்டுத் தொடர்புகள், இலக்குகள் போன்றவற்றின் சிக்கல்களைத் தீர்த்து வைக்க வேண்டும். இரண்டாவதாக, சுற்றுச்சூழலில் உள்ள போட்டியாளர்கள், வாடிக்கையாளர்கள், தொழிற்சங்கங்கள், பொருள் வாங்குபவர்கள் தொடர்பான சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டும். மூன்றாவதாக, அரசு விதிக்கும் கட்டுப்பாடுகள், அரசியல் முனைப்புகள், மாறுபடும் தொழில்நுட்பம், பொருளாதார மாற்றங்கள், சமுதாய நெருக்கடிகள், பிற நாடுகளின் முன்னேற்றம் ஆகியவற்றால் ஏற்படும் சிக்கல்களையும் எதிர்கொள்ள வேண்டும்.

எனவே, மேலாளர் என்ற நிலையில் அவருடைய அடிப்படைப் பணிக்கூறுகள் கீழ்க்கண்டவையாக அமையும் 1. என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்திருத்தல், 2. எப்படிச் செய்ய வேண்டும் என்று முடிவெடுத்தல், 3. அதில் தொடர்புடைய அனைவருக்கும் தகவலளித்தல், 4. அதைச் செய்வதற்கான ஆள்களை அமர்த்துதல், 5. அது செய்து முடிக்கப்பட்டதை உறுதிப்படுத்தல், 6. சுற்றுப்புறத்தில் எல்லா நிலைகளிலும் தேவையான அளவு தொடர்பு வைத்திருந்து, மாறுதல்களை எதிர்நோக்கி அதற்குத் தக்கவாறு நடவடிக்கை மேற்கொள்ளல் முதலியன. ஆனால் அவற்றை அவர் எப்படித் திறம்படச்செய்கிறார் என்பதில் தான் அவர்

வெற்றி அடங்கியிருக்கிறது. மேலாளர் தம்முடைய பணியில் வெற்றி பெறக் கீழ்க்கண்ட வழி முறைகளைக் கையாளவேண்டும் அவை :-

1. **அதிகாரப்படுத்தல்** : மேலாளரின் பணி ஒரு நிறுவனத்தின் வளங்களைச் சரியான அளவில் பயன் படச் செய்து சிறந்த விளைவுகளை ஏற்படுத்தித் தருவதாகும். எனவே, எந்தப் பணியையும் அவரே செய்து முடிக்கத் தேவையில்லை. மற்றவர்கள் மூலமாகச் செய்து முடித்தாக வேண்டும். அவரே செய்ய ஆரம்பித்தால் அதற்குப் போதிய நேரமில்லாமல் திணற வேண்டியிருக்கும். பின்னர், சார்புப் பணியாளருக்குப் போதிய வேலையில்லாமல் போய்விடும். அவர்கள் திறமை குறைந்து மேலாளரையே சார்ந்திருக்கக்கூடிய நிலைமை உருவாகிவிடும். எனவே, செய்யப்பட வேண்டிய வேலைகளைத் தாமே செய்ய வேண்டுமா, அதற்கான அவசியம் என்ன, வேறு யார் அதனைச் செய்து முடிக்க வல்லவர். அதைச் செய்வதற்கு யாருக்குப் பயிற்சியளிக்கலாம் அதற்குத் தேவையான நடவடிக்கை என்ன என்பதை மேலாளர் ஆராய வேண்டும்.

அதிகாரப்படுத்துதல் என்பது மேலாண்மையின் முறையான செயல்முறையாகும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்துக்காகப் பொறுப்பையும், அதிகாரத்தையும் ஒப்படைத்து அதன் செயலாண்மை குறித்துத் திரும்ப அறிவிக்கும் கடப்பாட்டை அது உருவாக்குகிறது. ஒரு முறை வாலாயம் நிறுவப்பட்டுவிட்டால் மேலாளர் அந்தப் பணியை அதிகாரப்படுத்தலாம். எங்கு எல்லா விவரங்களும் அறியப்படுகின்றனவோ அங்கு அந்தக் கீழ்மட்டத்தில் நடவடிக்கை அதிகாரப்படுத்தப்பட வேண்டும். இதற்கு ஏதுவாகக் குறிக்கோள்களும், இலக்குகளும் நிறுவப்பட வேண்டும். பொறுப்புக்கும், அதிகாரத்துக்கும் உரிய களங்கள் விளக்கப்பட வேண்டும். தகவல் தொடர்பு வழிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். தேவையான பயிற்சி அளிக்கப்பட வேண்டும். போதுமான கட்டுப்பாட்டு அமைப்புகள் நிறுவப்பட வேண்டும். இவை பணி முறைகளுக்கு மட்டுமா அல்லது விளைவுகளுக்கு மட்டுமா என்பதையும் முடிவு செய்யவேண்டும். பணி எங்கு அதிகாரப் படுத்தப்படுகிறதோ அங்கு நம்பிக்கையும், கட்டுப் பாடும் சமநிலையில் இருக்க வேண்டும். ஏனெனில் நம்பிக்கை மிகுந்தால் கட்டுப்பாடு குறைவதும், கட்டுப்பாடு மிகுந்தால் நம்பிக்கை குறைவதும் ஒன்றையொன்று தொடரக்கூடியதாகும்.

2. **தலைமைப் பண்பு** : தலைமை என்பது ஒரு பணிக்குழுவைச் சில இலக்குகளை நாடும்படி வழிப் படுத்தலும், அவர்கள் அவற்றை அடைவதற்கு அழைத்துச் செல்லக்கூடிய நுட்பமும் கொண்ட திறமையாகும். பணிக்குழுவைச் சார்ந்தவர்கள் மேலாளரைப் பின்பற்றுபவர்களாகவும், அப்படிப் பின்பற்றுபவர்கள் தாமாக முன்வந்தவர்களாகவும் இருக்க வேண்டும். மற்றவர்கள் எதை அடைய வேண்டும் என்று விரும்புகிறார்களோ அதைச் சிறந்த முறையில் நிகழ்த்திக்காட்டும் திறமையுடையவராக அவர் இருக்க வேண்டும். அந்த முறையைப் பயன் படுத்துவதில் அவர் மிகச்சிறந்த அதிகாரியாகத் திகழ வேண்டும். இவற்றுள் ஏதாவது ஒன்று இல்லையென்றாலோ, விலக்கப்பட்டாலோ அவரால் தொடர்ந்து தலைமையேற்க இயலாது.

பணியாளர்களை நெறிப்படுத்தும் அதிகாரம் படைத்திருப்பதால் மட்டுமே அவர் தலைவராகிவிட முடியாது. அவர் அதிகாரியாக இருக்கலாம். ஆனால் தலைவராவதற்கு வேறு தகுதிகளும் வேண்டும். அதிகாரிக்கும் தலைவருக்கும் இடையே உள்ள வேறுபாடு இதனை விளக்கும். 1. அதிகாரி தம் பணியாளர்களை விரட்டுகிறார். தலைவரோ அவர்களைப் பின்பற்ற வைக்கிறார். 2. அதிகாரி, அதிகாரத்தை நம்புகிறார். தலைவரோ நல்லுறவை நம்புகிறார். 3. அதிகாரி அச்சுறுத்தலைக் கையாள்கிறார். தலைவரோ அன்பைக் கையாள்கிறார், 4. அதிகாரி 'நான்' என்று சொல்கிறார். தலைவரோ 'நாங்கள்' என்று சொல்கிறார், 5. அதிகாரி எது தவறு என்பதைச் சுட்டுகிறார். தலைவரோ என்ன தவறு என்பதை விளக்குகிறார், 6. அதிகாரி ஒரு செயல் எப்படி நடந்தது என்பதை மட்டுமே அறிகிறார். தலைவரோ எப்படி நடக்க வேண்டும் என்று விளக்குகிறார். 7. அதிகாரி அவருடைய பணியாளர்களிடம் குறையைக் காண்கிறார். தலைவரோ அவர்களிடம் முறைமையை உருவாக்குகிறார். 8. அதிகாரி மரியாதையை எதிர்பார்க்கிறார். தலைவருக்கோ மரியாதை தானாக வந்து சேர்கிறது. 9. அதிகாரி பணியை வெறுப்புக்குரியதாக்குகிறார். தலைவரோ அதனை விருப்பத்திற்குரியதாக்குகிறார்.

தலைமை யின் இயல்பு அது எந்தச் சூழ்நிலையில் இயங்க வேண்டுமோ அதனைச் சார்ந்திருக்கும். பணியாளர் விரும்பக்கூடியதும் பின்பற்றக்கூடியதுமான தன்மைகளைத் தலைவர் தொடர்ந்து வெளிப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும். மேலாளருக்கு இத்

தகைய தலைமைப்பண்பு மிகவும் அவசியமானதாகும்.

**3. மனித வள மேம்பாடு** : ஒரு நிறுவனத்தின் பல்வேறு வளங்களான முதலீடு, இயந்திரங்கள், மூலப்பொருள்கள், பணியாளர்கள் ஆகிய அனைத்திலும் உற்பத்தித்திறன் நிறைந்த காரணி பணியாளர்களே யாவர். அவர்களுடைய உற்பத்தித்திறன் மனிதருக்கு மனிதர் வேறுபடும். ஒரு மேலாளர் மனிதர்களின் கைகளைப்போலவே அவர்களுடைய அறிவையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். பெரும்பாலான மனிதர்களிடம் வெளிப்படுத்தப்படாத திறமைகள் தேங்கிக்கிடக்கின்றன. குறைந்த முயற்சியில் மிகுதியான வேலையைச் செய்து முடிப்பது எப்படி என்பதைக் கண்டுபிடிக்கும் திறமை அந்த வேலையை உண்மையில் செய்கிறவர்களிடம்தான் அடிப்படையில் அமைந்துள்ளது. ஒவ்வொருவரும் அவர் பணியை அவருடைய சொந்தப்பணியாக இனங்காண இயலுமானால் அவர் அதில் மிகுந்த கருத்தைச் செலுத்துவார். அவரைப் பாதிக்கக்கூடிய இனங்களில் அல்லது பனிச்சூழல் குறித்து முடிவு மேற்கொள்ளும்போது அவர் கலந்தாலோசிக்கப்பட்டால் அவர் விருப்புடன் ஒத்துழைப்பார். இதற்கு அடிப்படையாக ஒரு நல்ல குழுவொழுக்கமும், நட்புறவும் ஏற்படுத்தப்பட்டு அவை தொடர்ந்து பராமரிக்கப்பட வேண்டும்.

புதிதாகப் பணியமர்த்தப்பட்டவரும், மாறுதலாகி வந்திருப்பவரும், புதிதாகப் பதவி உயர்வு ஏற்றவரும் தம் புதிய பதவிக்குச் சில எதிர்பார்ப்புகளோடு வருகின்றனர். அவற்றுள் முதன்மையானவை, 1. தாம் பொறுப்பேற்கக் கூடியதற்கான, தெளிவான விளக்கப்பட்ட ஒரு பணி. 2. தம்மை முழுதும் ஆட்கொள்ளக்கூடிய, தெளிவான நோக்கமுடைய ஒரு பணி. 3. தம்மைத் தகுதிப்படுத்தக்கூடிய பயிற்சி, 4. செய்த பணிக்குப் போதுமான ஊதியம், 5. திறமைகளை வெளிப்படுத்த ஒரு வாய்ப்பு. எனவே, ஒரு மேலாளர் இவற்றில் கவனம் செலுத்தி அவர்கள் தேவையை நிறைவு செய்யவேண்டும்.

ஒவ்வொரு பணியாளரின் சிறப்பியல்புகளையும் வளர்ச்சி பெறச்செய்தால் அந்தப் பணிக்குழு சிறந்து விளங்கும். இதற்கு வாய்ப்பளிக்கும் வகையில் அவர்களுக்குத் தேவையான பயிற்சியை அளிக்க வேண்டும். நல்ல பயிற்சி தெளிவாக விளக்கப்பட்ட இலக்கைக் கொண்டிருக்கும். தொடர்புடையவர்களுக்கு ஏற்றதாக இருக்கும். அவர்களுடைய தனித் திறமைகளை ஊக்குவிப்பதாக இருக்கும்.

ஒரு குழுவின் பணியானது விளையாட்டு அணியைப் போன்றது. குழுவிலுள்ள ஒவ்வொரு பணியாளரும் விளையாட்டு அணியின் ஆட்டக்காரருக்கு ஒப்பாகக் கருதப்பட்டால் உறுதியாக ஒவ்வொருவருக்கும் சிறப்பான பங்கும், பணியும் காத்திருக்கின்றன. எனவே, ஒரு மேலாளர் தம் கீழ் இயங்கும் பணிக்குழுவுக்குத் தனித்திறமை படைத்தவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களை வளர்ச்சி பெறச் செய்ய வேண்டும். அவர்களுடைய தனித் தன்மையைச் சிறப்பாகப் பயன்படுத்தும் வகையில் சரியான நிலைகளில் அவர்களைப் பணி அமர்த்த வேண்டும். குழுவின் வெற்றிக்கு ஏற்ற தந்திர நிலைகளை உருவாக்க வேண்டும். பணியாளர்கள் தங்களுடைய தனித்திறமையை வளர்த்துக் கொள்ள வசதிகளும், வாய்ப்புகளும் ஏற்படுத்தித் தரவேண்டும். அவர்கள் ஒரு நிலைக்கு மேலாகப் பல நிலைகளிலும் இருந்து செயலாற்றக் கூடிய பணிச் சுழற்சி முறையை அறிமுகப்படுத்த வேண்டும். இதனால், அவர்களுடைய பணித்திறன் பெருகும். இவ்வாறு மேலாளர் மனித வள மேம்பாட்டுக்கு வழி செய்வதில்தான் நிறுவனத்தின் வளர்ச்சியிருக்கிறது.

**4. தொழிலக உறவுகள்** : மனித உறவுகளுக்கும், தொழிலக உறவுகளுக்கும் வேறுபாடுகள் உள்ளன. பின்னதற்கு மனிதத்தன்மையை மறுப்பதால் உறவுகள் வேறுபடுகின்றன. தொழிலக உறவுகளும் முரண்பாடுகளும் இணைந்திருப்பது தவிர்க்க முடியாதது. கூலியை எடுத்துக்கொண்டால் அது தொழிலாளருக்கு வருவாயாகவும், நிருவாகத்திற்குச் செலவினமாகவும் அமைகிறது. இதனால் பொருளாதார முரண்பாடு ஏற்படுகிறது. தொழிலாளரின் நம்பிக்கையைப் பெறத் தொழிற்சங்கங்களும், நிருவாகமும் போட்டியிடுகின்றன. இதனால் வலிமை குறித்த முரண்பாடு ஏற்படுகிறது. தொழிற்சங்கங்கள் பொதுவுடைமைக் கொள்கையையும் நிருவாகம் தனியுடைமைக் கொள்கையையும் பின்பற்றுவதால் கொள்கை முரண்பாடு ஏற்படுகிறது. தொழிற்சட்டங்கள் பெரும்பாலும் பிணக்குகளினின்றும், அவற்றிற்கான தீர்வுகளினின்றும் செயற்பட வேண்டியிருப்பதால் சட்ட முரண்பாடுகள் தோன்றுவதுண்டு. இத்தகைய சூழ்நிலைகளில் சிக்கலைத் தீர்ப்பதிலும் உடன்பாடு ஏற்படுத்துவதிலும் மேலாளர் வல்லவராக இருக்க வேண்டும்.

**5. குறை களைதல்** : குறை என்பது ஒரு பணியாளரின் பணியில் உறுத்தல் ஏற்படுத்துவது அல்லது அவருடைய பணிச்சூழலில் நிறைவில்லாமல் செய்யக்கூடியதாகும். குறைகளில் தொண்ணூறு விழுக்காடு அடிப்படைப் பணி நிலைகள் தொடர்பான தவறான எதிர்ப்பார்ப்புகளால் எழுகின்றன என்பதை ஆராய்ச்சி அறிவுறுத்துகிறது. வெளியில் கூறப்படும் குறை அவருடைய துன்பத்துக்கு உண்மையான காரணமாக இருக்காது. அது பணிக்கு அப்பாற்பட்ட காரணமாகக்கூட இருக்கக்கூடும். ஆகவே, உண்மையான காரணமறிய அவரைப் பேசுவதற்கு ஊக்கமளித்துக் கருத்துக் கூறாமல் செவிமடுக்க வேண்டும். இதனால், உண்மையான காரணங்களை அறியமுடியும். இதன் நோக்கம் நிலைமையை ஒளியூட்டுவதேயன்றி வெப்பமூட்டுவதன்று. குறைக்கு உண்மையான காரணம் தெரிந்த பின்னர் நிலைமையை ஒழுங்குபடுத்தி, மீண்டும் அது ஏற்படாமல் இருப்பதை மேலாளர் உறுதி செய்ய வேண்டும். குறை என்பது குற்றம் சுமத்துபவரின் மன நிலையின்படி நியாயமற்ற நடவடிக்கைகள் அல்லது நிலைமைகளைக் குறிப்பதாகும். அவர் தனக்குக் குறை இருப்பதாகக் கற்பனை செய்து கொண்டிருந்தால் கூட அவருக்குக் குறை இருப்பதாகத்தான் கொள்ள வேண்டும். சிலர் குறைகளை வாயால் கூறமாட்டார்கள். அவர்களுடைய செயல்களின்மூலம் அவர்களுடைய குறைகளையும் மேலாளர் கண்டறிய முயலவேண்டும். குறைகள் அவ்வப்போது தீர்க்கப்படவில்லையென்றால் அவை ஒன்று சேர்ந்து தொழிலக அமைதியின்மைக்கு அடிகோலிவிடும்.

**6. ஒழுங்குப் பராமரிப்பு** : தவறுகள் திருத்தப்படவில்லையென்றால் அவற்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதாகப் பொருள்படும். ஒழுங்கு என்பது செயலுடன் தொடர்புடையது. தனி மனிதருடன் தொடர்புடையதன்று. இது ஓர் உணர்ச்சிமயமான பகுதியாகும். எனவே, ஒழுங்கைப் பராமாரிப்பதில் எச்சரிக்கை தேவை. ‘வெப்ப அடுப்பு விதி’ இங்கு வழிகாட்டும் நெறியாகக் கொள்ளப்படலாம். வெப்ப அடுப்பைத் தொட்டால் தொட்டவரை அது உடனே சுட்டுவிடும். யார் தொட்டாலும், எப்போது தொட்டாலும் அது சுடும். அதேபோன்று ஒழுங்கு மீறப்பட்டால் தண்டனை கிடைக்கும் என்பது பணியாளருக்குத் தெரிய வேண்டும். அதற்கு முன்னெச்சரிக்கை அளிக்க வேண்டும். யார் ஒழுங்கு மீறினாலும் வேறுபாடின்றி அவர் கள் தண்டிக்கப்பட வேண்டும். எப்போது மீறினாலும் தண்டிக்கப்பட வேண்டும். ஒழுங்குமீறல் நடைபெற்றவுடனேயே தண்டனை வழங்கப்பட வேண்டும். இங்கு மேலாளர் விரைவாகவும், பாகுபாடின்றியும், சீராகவும், நியாயமாகவும் செயற்படவேண்டும்.

ஒழுங்குமீறல்கள் முறையாகப் பதிவு செய்யப்பட வேண்டும். அதுபோன்றே பாராட்டுதல்கள் ஈட்டப்படும் சூழல்களும் பதிவு செய்யப்பட வேண்டும். ஒழுங்கு மீறலுக்கான உண்மையான காரணத்தை மேலாளர் கண்டறிந்தால் அதனைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்கலாம். ஒழுங்கு மீறலுக்குத் தண்டனை வழங்குவதிலும் வேறுபாடுகள் உள்ளன. முதன் முறையாக மீறும்போது கடிந்து கொள்ளலாம். இரண்டாம் முறை மீறும்போது எழுத்து மூலம் எச்சரிக்கை செய்யலாம். மூன்றாம்முறை மீறும்போது தண்டனை வழங்கலாம். இதனைச் சூழ்நிலையைப் பொறுத்தும் குற்றத்தின் தன்மையைப் பொறுத்தும் மேலாளர் முடிவு செய்ய வேண்டும்.

**7. நேரத்தை நிருவகித்தல்** : மூலதனம், இயந்திரங்கள், தொழிலாளர், மூலப்பொருள்கள் இவற்றைப் போன்று நேரம் என்பதும் ஒரு வளம். அதை வாங்கவோ, சேமித்து வைக்கவோ, வாடகைக்குப் பெறவோ, குவித்து வைக்கவோ முடியாது. அது மிகவும் விலையுயர்ந்தது. ஆகவே, மேலாளர் தம்முடைய நேரம் எப்படிச் செலவிடப்படுகிறது என்பதைச் சரி பார்த்துக்கொள்வது அவசியமாகும். இருக்கக் கூடிய நேரத்தை எந்தெந்தப் பணிகளில் செலவிட வேண்டும் என்பதைத் திட்டமிட வேண்டும்.

பாரட்டோ என்பவரின் கொள்கைப்படி ஒருவர் செலவு செய்யக்கூடிய நேரத்தில் எண்பது விழுக்காடு அவர் அடையக்கூடிய விளைவுகளில் இருபது விழுக்காட்டைச்சாதிக்கிறது. ஆனால், மீதம் இருபது விழுக்காடு நேரம் எண்பது விழுக்காட்டு விளைவுகளைச் சாதிக்கிறது. எனவே, அவர் கவனம் எங்குச் செலுத்தப்பட வேண்டுமோ அங்கு மட்டுமே செலுத்தப்பட்டால் மிகுதியான விளைவுகளைச் சாதிக்க முடியும். இதற்கு நேரம் வீணாவது, எப்படி, யார், வீணாக்குகிறார்கள் என்பதைக் கண்டறிய வேண்டும். நேரத்தைத் திறம்பட நிருவகிப்பதற்குக் கீழ்க்கண்ட வழிமுறைகளை ஆராய வேண்டும். அவை. 1. பணிகளை மிகுதியாக அதிகாரப்படுத்த இயலுமா? 2. நோக்கமற்று நடப்பதையும், தேவையற்றுப் பேசுவதையும் குறைக்க இயலுமா?

3. குறுக்கீடுகளைக் கட்டுப்படுத்த இயலுமா? 4. தொலைபேசி இணைப்பைச் சில குறிப்பிட்ட நேரங்களில் துண்டிக்க இயலுமா ? 5. சார் பணியாளர் தங்கள் ஐயங்களைத் தொகுத்துக்கொண்டு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வருமாறு பயிற்சியளிக்க முடியமா? 6. ஒரே நேரத்தில் ஒரே வேலையை மட்டும் செய்து வேறொன்றில் குறுக்கிடாமல் இருக்க இயலுமா? 7. தடங்கல்களை இனங்கண்டு அவற்றைக் களைய இயலுமா? 8. இலக்கு நாள்களை நினைவுகூரப் பையடக்க நினைவூட்டு முறையைப் பின்பற்ற இயலுமா ? 9. கூட்டங்கள் தொடங்கும் நேரத்தைப் போலவே முடியும் நேரத்தையும் முடிவு செய்ய இயலுமா ? 10. பெரும் பணிகளைச் சிறு அலகுகளாகத் துண்டிக்க முடியுமா ? 11. நிருணயிக்கப்பட்ட கால வரையறையைத் தவறாது பின்பற்ற முடியுமா முதலியனவாகும்.

மேலாளர் தம் நேரத்தை நிருவகிக்கக்கூடிய திறமையை வளர்த்துக்கொண்டால் அவருடைய விளைவுத் திறன் உயரும். நேரமில்லை என்ற நிலை எழாது. தேவைப்படும் நேரம் மிகுதியாகக் கிடைக்கும். ஆனால், ஆற்றலைச் சேமிப்பதற்கு அடிப்படையாக அது எங்கே இழக்கப்படுகிறது என்பதைத் தெரிந்துகொள்வது அவசியமாகும். ஒருவர் எத்தனை மணிநேரம் வேலை செய்தார் என்பதைவிட அத்தனை மணிகளில் அவர் என்ன சாதித்தார் என்பதே அவருடைய திறமையை வெளிப்படுத்தும். எனவே, மேலாளர் நேரத்தை நிருவகிக்கும் கலையில் வல்லுநராக இருத்தல் வேண்டும்.

**8. மாறுதலை நிருவகித்தல் :** மாறுதல் தவிர்க்க முடியாதது. உலகில் ஒவ்வொன்றுமே வளர்ச்சியடைகிறது, கெட்டுப்போகிறது அல்லது மாற்றமடைகிறது. இன்றைய தொழில்நுட்பத்தில் பெரும்பாலான பணிகளின் செயல்முறைகள் மாற்றமுறுகின்றன. இருந்தும் மனிதர்கள் மாற்றங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். பழக்கமான அமைப்பில் அவர்கள் பாதுகாப்பையும் வசதியையும் உணருகின்றனர். மாறுதல்களால் இடப்பெயர்ச்சியும், நிலையற்ற தன்மையும் நேருமோ என அச்சமேற்படுகிறது.

மேலாளர் மாறுதல்களை அறிமுகப்படுத்த வேண்டும். இடையூறுகளைத் தவிர்க்க மாற்றம் தேவை என்பதைத் தொழிலாளர்களுக்கு உணர்த்த வேண்டும். அவர்களுடன் உரையாடி மாறுதல்களினால் ஏற்படக்கூடிய நன்மைகளை உணரும்படி செய்ய வேண்டும். அதற்கு அவர்களுடைய இசைவையும் ஒத்துழைப்பையும் பெற வேண்டும். மாறுதல்கள் தவிர்க்க முடியாதவை அதற்குரிய எதிர்ப்பும் அவ்வாறே. மாறுதல்களுக்கு முதலில் ஏற்படும் எதிர்ப்புப் பின்னர் அவற்றை ஏற்றுக்கொள்வதற்கான செல்வாக்கையும் ஏற்படுத்த வல்லது. எனவே, மேலாளர்கள் மாறுதல்களின் முகவராக இருத்தல் அவசியம். தொழில்நுட்பம், பொருளாதாரம், அரசியல் ஆகிய எதிலிருந்தும் தோன்றக்கூடிய மாறுதலானது அவருடைய நடவடிக்கைகளில் செல்வாக்குச் செலுத்தவல்லது.

மாறுதலை ஏற்படுத்துவதற்கான எந்த முடிவும் நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்துவது குறித்த நியாயமான, உண்மையான, கட்டாயமான காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அதனால், ஏற்படும் நன்மைகள் இடர்ப்பாடுகளைவிடக் கணிசமானதாக இருக்க வேண்டும். மேலாளரானவர் மாறுதலை எப்போது அறிமுகப்படுத்த வேண்டும் என்பதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். காலமறிந்து அறிமுகப்படுத்தும் மாறுதல் சிறந்த விளைவுகளை ஏற்படுத்தத் தவறுவதில்லை.

**9. இடர்களை எதிர்கொள்ளல் :** மேலாளர் தம் பணிகளில் நான்குவிதமான இடர்களை எதிர்கொள்ள வேண்டும். அவை. 1. எதிர்கொள்ள இயலாத இடர்கள், 2. எதிர்கொள்ளக்கூடிய இடர்கள், 3. தவிர்க்கக்கூடிய இடர்கள், 4. தவிர்க்க இயலாத இடர்கள். ஒரு மேலாளர் இந்த இடர்களை எதிர்கொள்ள என்னென்ன உத்திகளைக் கையாள்கிறார் என்பதைப் பொறுத்து நிறுவனத்தின் வெற்றி அமையும். வாய்ப்புகளைக் கையாள்வதற்கு வேண்டிய திறமையைவிட இடர்களைக் களைவதற்குத் தேவையான திறமை அதிகமானதாகும். எனவே, மேலாளர் வாய்ப்புகளை அறிமுகப்படுத்துவதற்கும், இடர்களைக் குறைப்பதற்கும் தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

மேற்கண்ட வழிமுறைகள் மட்டுமே ஒரு மேலாளருக்கு வெற்றியைத் தேடி தந்துவிடாது. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்ப அவர் எடுக்கக்கூடிய முடிவுகளின் பயன் காலந்தாழ்த்தியே அறியப்படுமாதலால் அவருடைய தொலைநோக்குத் திறனும், தொடர்ந்த விழிப்புணர்வும், வருமுன் காக்கும் அறிவுத் திறனும், தம் நிலையில் பிறர்நிலையை உணரக்கூடிய தன்மையும் தான் அவருக்கு வெற்றியை அளிக்கவல்லன.

- இரா.சு.

**துணை நூல்கள் :**

1. கார்டன் பி. இராபி., (தமிழாக்கம்) இரா. சுப்ப ராயலு, 1985, **பொறுப்பு**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

2. கார்டன் பி. இராபி., (தமிழாக்கம்) இரா. சுப்ப ராயலு, 1986, **மேலாளர்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

3. Bhushan, Y. K., 1980, **Fundamentals of Business Organisation and Management**, Sultan Chand & Sons, New Delhi.

4. Peter F. Drucker., 1978, **Managing for Results**, Allied Publishers, New Delhi.

**மேலூதியம் :** ஒரு தொழிற்சாலையிலோ பிற நிறுவனங்களிலோ வேலை செய்யும் தொழிலாளிக்குரிய சம்பளத்தொகைக்கு மேல் அளிக்கப்படும் தொகைக்கு மேலூதியம் ( Bonus ) என்று பெயர். ஒரு தொழில் நிறுவனம் மனம் உவந்து, தானே தன் நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளர்கட்கு அவர்களுடைய ஊதியத்திற்கு மேல் தருகின்ற இலவச அல்லது கூடுதல் தொகையை இந்த மேலூதியம் குறிக்கும். தொழில் நிறுவனத்தில் தொழிலாளர்கள் செய்யும் பணியில் நிறைவு காணும்போதும், அதிகப்படி இலாபத்தைத் தொழில்நிறுவனம் பெற்றபோதும், இம் மேலூதியம் வழங்கப்பட்டு வந்துள்ளது. முதலாம் உலகப்போர் நடந்த காலத்தில் பொருள்களின் விலைகள் திடீரென உயர்ந்தபோது 1917, 1918ஆம் ஆண்டுகளில் தொழில் நிறுவனங்கள் அதிகப்படியான இலாபத்தைப் பெற்றன. குறிப்பாகப் பம்பாய், அகமதாபாத் ஆகிய நகரங்களில் இயங்கி வந்த துணி ஆலைகள் அளவு கடந்த இலாபத்தைப் பெற்றன. அதனால், இத்தொழில் நிறுவனங்கள் தம் ஆலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கட்கு அவர்கட்கு உரிய சம்பளத்திற்கு அப்பால் கூடுதல் தொகையை இலவசமாக வழங்கின. தொடர்ந்து 1920ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொழிலாளர்கட்கு வழங்கப்படுகின்ற கூடுதல் தொகை இலவசமாக 1917, 1918ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட வேண்டுமா என்பதை ஆய்வு செய்ய ஆலைச் சொந்தக்காரர்களால் ஒரு குழு நியமனம் செய்யப்பட்டது. இந்தக் குழு தொழிலாளர்கட்கு உரிய சம்பளத்திற்குமேல் ஒரு மாத சம்பளத் தொகை மேலூதியமாக வழங்கப்படவேண்டும் எனப் பரிந்துரைத்தது. பின்னர் 1921, 1922ஆம் ஆண்டுகளில் இத்தொழில் நிறுவனங்கள் இந்தப்பரிந்துரைப்படி மேலூதியம் வழங்கின. ஆனால், 1923ஆம் ஆண்டில் தொழில்துறை வீழ்ச்சியைக் காரணம் காட்டி, ஆலைச் சொந்தக்காரர்கள் 1923ஆம் ஆண்டு சூலை மாதம் மேலூதியம் தர இயலாது என அறிவித்தனர். அதன் விளைவாகத் துணி ஆலைகளில் 1924ஆம் ஆண்டு முடிவில் பொது வேலைநிறுத்தம் மேற் கொள்ளப்பட்டது. 1924ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அப்போதைய பம்பாய் அரசு மேலூதியத் தகராறு குறித்து விசாரிக்க ஒரு குழுவை நியமித்தது.

இக்குழு தொழிலாளர்கள் தங்களுக்குரிய நியாயமான சட்ட முறையிலான மேலூதியத்தை வழக்கமாகப் பெறும் உரிமை பெற்றுள்ளனரா என்பதை ஆய்வு செய்ய அமைக்கப்பட்டது. இக்குழு ஆய்வு செய்து, கடந்த ஆண்டுகளில் தொழிலாளர்கள் பெற்ற மேலூதியம் ஓர் இலவச அளிப்பு என்றும், சட்ட முறையிலான நடைமுறை செய்யக்கூடிய மேலூதியம் அன்று என்றும், முடிவு அறிவித்தது. இந்தக்குழு இப்படிப் பரிந்துரை வழங்கியபோதிலும், சில நிறுவனங்கள் தங்கள் தொழிலாளர்களுக்குத் தம் சுயவிருப்பப்படி மேலூதியம் அளித்தன. இரண்டாம் உலகப்போர் நடந்தபோதும், பொருள்களின் விலை திடீரென உயர்ந்ததன் விளைவாகத் தொழில் நிறுவனங்கள் மிகுந்த இலாபம் பெற்றதால், தம் தொழிலாளர்களுக்கு மேலூதியம் வழங்கி வந்தன. இப்படி வழங்கிய மேலூதியம் தொழில் நிறுவனங்கள் தாமே சுயமாக அளித்த தொகைகளாகும். மறுபடியும் 1948, 1949ஆம் ஆண்டுகளில் தொழில் நிறுவனங்களின் இலாபம் குறைந்ததாக ஆதாரமாகக் காட்டி, மேலூதியம் தருவதைப் பம்பாய் நகரிலும், மற்றும் சில நகரங்களிலும் தொழில் நிறுவனங்கள் மறுத்தன. மறு படியும் முதல் உலகப்போர் முடிந்தபிறகு, ஏற்பட்ட தொழிலாளர் தகராறுபோல் மேலூதியத்தைப் பொறுத்துத் தொழில் துறைத் தகராறு ஏற்பட்டது.

பம்பாய் அரசாங்கம் இந்தத் தகராறைத் தொழிலாளர் தகராறு தீர்க்க வேண்டிய நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தது, இராட்டிரீய ஆலை மசுதூர் சங்கத்திற்கும், ஆலை முதலாளிகள் கழகத்திற்கும் நடைபெற்ற இவ்வழக்கில் ( 1950 (1) சி.ஆர். 1164 ) தொழிலாளர் தகராறு தீர்க்கும் நீதிமன்றம், ஆலைகளுக்குக் கிடைக்கும் இலாபத்தில் ஒரு விகிதாச்சாரத்

தொகையை மேலூதியமாகத் தொழிலாளர்கட்கு வழங்க வேண்டும் என்று தீர்ப்பு அளித்தது. நட்டத்தில் இயங்கும் ஆலைகள் மேலூதியம் தரவேண்டிய தில்லை என்றும், தீர்ப்பு அளித்தது.

மேலூதியம் என்பது தொழில் நிறுவனத்திற்குக் கிடைக்கும் இலாபத்தில் ஒரு விகிதத்தொகையாக வரையறுக்கப்பட்டது. தொடர்ந்து மேலூதியம் குறித்துப் பல வழக்குகள் நீதிமன்றங்களில் கொடுக்கப் பட்டன.

உச்சநீதிமன்றத்தில் மேலூதியம் குறித்து விசாரிக் கப்பட்ட வழக்குகளில் உச்சநீதிமன்றம் மேலூதியம் குறித்துச் சில தீர்ப்புகளை வழங்கியது (ஏ11, 1958, 923). அத்தீர்ப்பில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்கள்:-

1. மேலூதியம் என்பது தருமத்திற்கு இலவசமாகத் தரப்படும் தொகையோ, கொடுக்கப்படாத ஊதியத் தொகையோ அன்று.

2. தொழில் நிறுவனம் தொழிலாளர்களுக்குத் தரும் ஊதியம் வாழ்க்கைத் தரத்திற்குப் போதாத போது, தொழிலின் இலாபத்தில் தொழிலாளியின் உழைப்பு ஒரு பங்கு என்றபோது, மேலூதியத்திற்குத் தொழி லாளி சட்டப்படி உரியவராகிறார்.

மைசூர் அரசாங்கத்திற்கும் தங்கச் சுரங்கத் தொழி லாளிகளுக்கும் இடையே உச்சநீதிமன்றத்தில் நடந்த வழக்கில் ஏ.ஐ.ஆர். 1958 உச்சநீதிமன்றம் பக்கம் 923 இல் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்பு மேலே கண்டபடி மேலூதியத்தைத் தொழிலாளி சட்டப்படி பெறுவ தற்கு உரியவர் ஆவார் எனத் தீர்ப்பு வழங்கியது.

அசோசியேட்டெட் சிமெண்டு நிறுவனத்திற்கும் அதன் தொழிலாளிக்கும் உச்சநீதிமன்றத்தில் நடை பெற்ற வழக்கில் சு.சி.ஆர். 1953 பக்கம் 925 வெளியாகி யுள்ள தீர்ப்பு, மேலூதியம் ஒவ்வோராண்டும் கணக் கிடப்படும் இலாபத்தில் சேர்க்கப்படுகிறது. சேர்க்கக் கூடாத செலவினங்கள் வரையறுத்துச் சொல்லப்பட் டுள்ளது. அகமதாபாத் பலதுறைத் தொழிலாளர்கள் சங்கத்திற்கும் அகமதாபாத் மின்சார நிறுவனத்திற்கும் நடந்த வழக்கில் ஏ.ஐ.ஆர். 1962 உச்சநீதிமன்றம் பக்கம் 1225 இல் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்பு, மேலூ தியத்தைப் பொறுத்தவரை வரையறை செய்யப்பட்ட ஒரு பரந்த குழு நியமனம் செய்யப்படவேண்டிய அவ சியத்தை உச்சநீதிமன்றம் இத்தீர்ப்பில் வலியுறுத்தி யுள்ளது.

அதன் விளைவாக 1961ஆம் ஆண்டு திசம்பர் ஆறாம் நாள் தீர்மானப்படி இந்திய அரசு ஒரு குழுவை நியமனம் செய்தது. அந்தக்குழு மேலூதியத்தைக் குறித்து ஆய்வு செய்து, 1964ஆம் ஆண்டு சூன் 24 ஆம் நாள் தன்னுடைய பரிந்துரைகளை இந்திய அரசுக்கு அளித்தது.

1964ஆம் ஆண்டு செப். 2ஆம் நாள் அரசாங்கம் குழுவின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டது. 1965 ஆம் ஆண்டு மே 29ஆம் நாள் மேலூதிய வழங்கு அவ சரச் சட்டம் அமல் செய்யப்பட்டு தொடர்ந்து 1965ஆம் ஆண்டு மேலூதியம் வழங்குச் சட்டம் அமல் செய்யப் பட்டு, மேலூதியம் என்பது சட்டப்படி இச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தொழில் நிறுவனம் தொழிலாளர் கட்கு கண்டிப்பாகத் தரவேண்டிய சட்டமாக அமல் செய்யப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு எட்டின் படி ஒரு தொழிலாளி அவர் அந்த ஆண்டு செய்த வேலை யின் காரணமாகக் கிட்டிய இலாபத்தின் வாயிலாக மேலூதியத்திற்கு உரிமை உடையவர் ஆவார். இச் சட்டப் பிரிவு ஒன்பதில் ஒரு தொழிலாளி ஏமாற்றுதல், திருடுதல், வேண்டுமென்றே சேதம் செய்தல் ஆகி யவை செய்வாரேயானால் அவர் மேலூதியத்திற்கு அருகதையற்றவர் என்று சொல்லப்பட்டுள்ளது.

மேலூதியம் ஒரு குறிப்பிட்ட விகிதப்படி தொழி லாளிக்கு ஆண்டுதோறும் நிகர இலாபத்தைக் கணக் கிட்டு, அதிலிருந்து அளிக்கப்பட வேண்டும். குறைந் தளவு நிகர இலாபத்தில் நூற்றுக்கு நான்கு வீதத்திற் குக் குறையாமல் மேலூதியம் வழங்கப்பட வேண் டும். அடிப்படை ஊதியத்தில் இருபது விழுக்காட் டுக்கு மேல் மேலூதியம் தர அனுமதிக்கப்படக் கூடாது என அதிக அளவு மேலூதியமும் வரையறை செய்யப் பட்டது.

சில குறிப்பிட்ட திருவிழாக் காலங்களில் தொழி லாளிகளுக்குத் தொழில் நிறுவனம் அளிக்கும் மேலூ தியத்திற்குத் திருவிழா மேலூதியமெனப்பெயர். எ.கா. தொழில் நிறுவனங்கள் தீபாவளிப் பண்டிகைக்குத் தரும் மேலூதியத்தைக் குறிப்பிடலாம். அதே போலவே தொழிலாளியை ஊக்குவித்து, உற்சாகப் படுத்தி இலாபத்தைப் பெருக்கி, அப்படிப் பெருக்கிய மேலூதியத்தை ஊக்க மேலூதியம் என்பர்.

இப்போது 20 பேருக்கு மேல் வேலை செய்யும் தொழில் நிறுவனங்கள் மேலூதியம் தரவேண்டு

மென்று, சட்டப்படி கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. புதிய தொழில் நிறுவனங்களுக்கு விலக்கும் தரப்பட்டுள்ளது.

- வி.சு.

**மேற்கு ஆசியச் சிக்கல்கள்** : மேற்கு ஆசிய நாடுகளை மேலைநாட்டினர் மத்தியக் கிழக்கு நாடுகள் என அழைக்கின்றனர். இப்பகுதியில் ஏறத்தாழ 24 சுதந்திர நாடுகள் இருக்கின்றன. ஈரானில் உள்ள பாரசீகர்கள், துருக்கியில் உள்ள துருக்கியர்கள், பிற பகுதிகளில் உள்ள அரேபியர்கள் முதலியவர்கள் எல்லாம் இசுலாம் சமயத்தைப் பின்பற்றும் போதிலும், குறிப்பாக பாரசீகர்கள், அரேபியர்களிடையே அதிகாரப்போட்டி, மனக்கசப்பு, பொறாமை முதலியன இருக்கின்றன. மேலும் இசுரேலிலுள்ள யூதர்களுக்கும் குறிப்பாக அரேபிய, பாரசீக முசுலீம்களுக்குமிடையே மிகுதியான வெறுப்புணர்ச்சி இருக்கிறது. மேலும் சியா, சன்னி முசுலீம்களிடையே வேற்றுமை உணர்வு, முடியாட்சியை எதிர்க்கும் அரேபிய பொது மக்கள் மனப்பான்மை, எல்லைத்தகராறுகள், எண்ணெய் வளம் தொடர்பான பொறாமைப் போட்டிகள், அதிகாரப்போட்டி, வல்லரசு, அயல்நாட்டுக் கொள்கை, வேற்றுமைகள் முதலியன மேற்கு ஆசியச் சிக்கல்களில் முதன்மை வகிக்கின்றன.

**அரேபிய - இசுரேல் போராட்டம்** : பாலஸ்தீன நாட்டுரிமை தொடர்பாக நடக்கும் போராட்டத்தைத் தான் பொதுவாக அரேபியர்- இசுரேல் போராட்டம் எனக் குறிப்பிடுவர். 1948ஆம் ஆண்டு மே திங்கள் இசுரேல் நாடு யூதர்களால் பாலஸ்தீனின் பெரும்பான்மையான பகுதிகளில் அமைக்கப்பட்டது. ஆனால் அரேபியர்கள் இசுரேலை அங்கீகரிக்க மறுக்கிறார்கள். பண்டைய காலத்தில் யூதர்கள் வாழ்ந்த பகுதி பாலஸ்தீனம். கி.பி.எழுபதுகளில் செருசலம் வீழ்ச்சியடைந்தவுடன் யூதர்கள் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறத்தொடங்கினார்கள். பின்னர் இசுலாம் சமயம் தோன்றியபிறகு இசுலாம் அரேபிய சிரியா நாடுகளைக் கைப்பற்றி ஆண்டு வந்தது. ஆகையால் முசுலீம்களின் பாலஸ்தீனக் குடியேற்றம் தொடங்கியது.

பதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாலஸ்தீன இசுலாமிய உருமானிய பேரரசின் பகுதியாக மாறியது. 1832 - 1840 ஆண்டுகளுக்கிடையே எகிப்து நாட்டின் பகுதியாக இருந்தது. ஆனால் 1840ஆம் ஆண்டுக்குப் பிறகு மீண்டும் உருமானியப் பேரரசின் பகுதியாக மாறியது. 1917 - 1918 ஆம் ஆண்டு பாலஸ்தீனம் பிரிட்டனின் ஒரு பகுதியாக மாறியது.

யூதர்கள் மீண்டும் 1855ஆம் ஆண்டிலிருந்து பாலஸ்தீனில் குடியேறத் தொடங்கினார்கள். 1914 இல் 100,000 யூதர்கள் குடியேறியிருந்தனர். 1897 இல் யூதர்கள் பாலஸ்தீனத்தின் சட்டப்படி யூதர்களுக் கு ஒரு தாயகம் அமைக்க வேண்டும். யூதர்களின் குடியேற்றங்களை மிகுதியாக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர். பாலஸ்தீனில் யூதர் தாயகம் அமைப்பதை பாலஸ்தீனை ஆண்டு வந்த பிரிட்டன் வரவேற்றது. 1939இல் யூதர்களின் மொத்த மக்கள் தொகை பாலஸ்தீனில் மூன்றில் ஒரு பகுதியாக மாறியது. பிரிட்டன் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறும் சமயம் 1948ஆம் ஆண்டு மே பதினான்காம் நாள் யூதர்கள் இசுரேல் நாட்டைத் தோற்றுவித்தார்கள்.

**அரேபியர் - யூதர் போர்கள்** : இசுரேல் நாடு தோன்றியவுடன் அரேபியர் யூதர்களிடையே ஓராண்டுக்காலம் போர் நீடித்தது. போர் மூலம் இசுரேல் தன் நாட்டை உறுதிப்படுத்திக் கொண்டது. பாலஸ்தீனின் ஒரு பகுதியில் இசுரேல் அமைக்கப்பட்டது. அரேபியர்களால் இசுரேலை அழிக்க முடியவில்லை. 1956ஆம் ஆண்டு சூயசுக்கால்வாய் தேசியமயமாக்கப்பட்ட நேரத்தில் மூண்ட எகிப்து - இசுரேல் போரில் இசுரேல் சீனாய் தீபகற்பத்தைக் கைப்பற்றியது. அக்வோபா வளைகுடாவை மீட்டுக்கொண்டது. ஐ.நா. சபை தலையீட்டினால் இசுரேல் இவ்விரு பகுதிகளிலிருந்தும் வெளியேறியது.

1967ஆம் ஆண்டு நடந்த மூன்றாம் போரிலும் இசுரேல் வெற்றியடைந்தது. எகிப்து தோல்வியடைந்தது. சீனாய் தீபகற்பம் முழுவதையும் இசுரேல் கைப்பற்றியது. மேலும் ஜோர்டனின் பாலஸ்தீனப் பகுதியான மேற்குமேட்டு ஜோர்டன் பகுதியையும் இசுரேல் கைப்பற்றியது. கிழக்கு செருசலம் இசுரேல் ஆக்கிரமிப்பின் கீழ் வந்தது. இதற்குப்பிறகு யூதர்கள் செருசலத்திற்கு வந்து குடியேறுவது மிகுதியானது. 1967க்கு முன் கிழக்கு செருசலத்தில் யூதர்களே வசிக்கவில் லை. 1982ஆம் ஆண்டு இப்பகுதியில் 70,000 யூதர்கள் குடியேறியிருந்தார்கள்.

மீண்டும் 1973ஆம் ஆண்டு போர் மூண்டது. இசுரேலுக்கு மீண்டும் வெற்றி கிடைத்தது. இப்போருக்குப்பிறகு சூயஸ்கால்வாய் அருகே இருக்கும் சீனாய் பகுதியின் ஒரு பிரிவை இசுரேல் எகிப்திற்கு அளித் தது. 1979ஆம் ஆண்டு மே மாதம் இருபத்தாறாம் நாள் எகிப்து - இசுரேல் உடன்படிக்கை செய்யப்பட்டது. எகிப்து இசுரேல் நாட்டை அங்கீகாரம் செய்தது. மேலும் 1982ஆம் ஆண்டு எகிப்து நாட்டின் பகுதியான சீனாயிலிருந்து இசுரேல் வெளியேறியது. எகிப்தின் இத்திருப்பத்தைப் பிற அரேபிய நாடுகள் வரவேற்கவில்லை. அரேபியர் தலைமைப் பகுதியை எகிப்து இழந்தது. 1981ஆம் ஆண்டு சூலைத் திங்கள் லெபனானின் தலைநகரான பெய்ருடை இசுரேல் தாக்கியது. 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சீரியாவிடமிருந்து கோவன்ஆசுப் பகுதியை இசுரேல் கைப்பற்றியது.

இப்போர்களின் முக்கிய விளைவு என்னவென்றால் பாலஸ்தீனிய அரேபியர்களுக்கு என்று தனி பாலஸ்தீனம் கிடையாது. 1948ஆம் ஆண்டு போருக்குப் பின்726,000 பாலஸ்தீனிய அரேபியர் அகதிகள் பிற அரேபிய நாடுகளுக்குச்சென்று குடியேறினர். 1964ஆம் ஆண்டு பாலஸ்தீனிய விடுதலை சங்கம் எகிப்தில் அமைக்கப்பட்டது. இச்சங்கத்தின் தலைவர் அராபத் ஆவார். இன்று சோர்டான் நாட்டின் 2.2 மில்லியன் மொத்த மக்கள் தொகையில் அறுபது விழுக்காடு பாலஸ்தீனிய அரேபியர்களாக இருக்கின் றனர். இசுரேல் ஆக்ரமிப்பில் இருக்கும் அரேபியப் பகுதிகளில் 1.3 மில்லியன் பாலஸ்தீனிய அரேபியர்கள் வாழ்கின்றார்கள்.

பாலஸ்தீனிய அரேபியர்களுக்கு இலெபனான் நாட்டில் இராணுவப்பயிற்சி அளிக்கப்பட்டதாலும், இலெபனானிலுள்ள இலீடானி ஆறு தெற்குப்பகுதி வரை இசுரேல் எல்லை பரவவேண்டும் எனும் குறிக்கோள் இருந்தாலும் இசுரேல் 1982 சூன் மாதம் இலெபனானின் மேல் படையெடுத்தது. இலெபனானின் ஒரு பகுதியை இசுரேலும், மற்றொரு பகுதியைச்சிரியாவும் பிடித்துக்கொண்டன. மற்றொரு பகுதியில் மட்டும் இலெபனானின் ஆட்சி நடக்கிறது. இன்று இலெபனானின் ஒரு பகுதி செருசலம், மேற்கு சோர்டன் மேட்டுப் பூமி, காசாத்துண்டு நிலப்பகுதி, கோலன் ஆட்சு முதலிய அரேபியர் நாட்டுப்பகுதிகள் இசுரேல் நாட்டுடன் இணைக்கப்பட்டிருக்கின்றன.

இசுரேலை அரேபியர்களால் அசைக்க முடியவில்லை. மேலும் பதினாறு ஆண்டுகளுக்கு முன் 1979 இல் எகிப்து மட்டும் இசுரேலை அங்கீகாரம் செய்துவிட்டது. இசுரேல் பாலஸ்தீனியர்களுக்கு விடுதலைச் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த மறுக்கின்றது. பாலஸ்தீனியர்களுக்கு என்று ஒரு தனிநாடு அமைக்க இசுரேல் இன்று வரை ஒத்துழைக்க முன் வரவில்லை. ஆகையால் இச்சிக்கல் தொடர்ந்து மேற்காசியாவின் அமைதியைக் குலைத்துவருகிறது.

**ஈரான் - ஈராக் போர்** : ஈரான், ஈராக் போர் 1980 செப்டம்பர் மாதம் தொடங்கியது. இப்போரை ஈராக்கின் தலைவர் சதாம் உசேன் ஆரம்பித்தார். போர் தொடங்கியபோது ஈரானில் உள்ள கிசிகிஸ் தான் மாநிலத்தைக் கைப்பற்றவேண்டும் என்று ஈராக் விரும்பியது. ஈரானில் கோமெனி இசுலாமிய சமயப் புரட்சியைத் தோற்றுவித்து இசுலாமிய பண்டைய மரபு முறைகளை அரபுநாடுகளில் பரப்ப முயற்சித்ததால், நவீனமயமான இசுலாம் சமயத்தைப் பின்பற்றும் எகிப்து, சவுதி அரேபியா போன்ற நாடுகள் ஈராக்கை ஆதரித்தன. மேலும் ஈரானில் முடியாட்சியைக் கவிழ்த்த புரட்சியினால் தங்களுக்கும் ஆபத்து நேரிடலாம் என்று வளைகுடா மன்னர்கள் எண்ணினர். அந்தப்புரட்சி நடந்த பத்து மாதங்களுக்குள் சவூதி அரேபிய மன்னருக்கு எதிரான சன்னி முசுலீம் போராளிகள் மெக்காவின் பெரிய மசூதியைக் கைப்பற்றிய தைக் கண்டு அச்சம் மேலும் அதிகரித்தது. அதனால் ஈரானின் மீது போர் தொடுத்த ஈராக்கிற்கு அந்த மன்னர்கள் பெருமளவு நிதியுதவி செய்தனர். அவர்களிடம் ஈராக் ஐயாயிரம் கோடி டாலர்கள் கடன் பட்டு விட்டது.

ஈரான் - ஈராக் போர் எட்டு ஆண்டுகளுக்கு மேல் 1980-லிருந்து 1988ஆம் ஆண்டு வரை நீடித்தது. இருபதாம் நூற்றாண்டிலேயே நடந்த நீண்ட ஆண்டுகள் நடந்த போர் இப் போர்தான். இப்போர் மூலம் பத்து இலட்சம் பேர் உயிரிழந்தனர். மேலும் 1200 பில்லியன் டாலர்கள் செலவானது. குவைத் - ஈராக் போரின் போது 1990ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஈராக் - ஈரானுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, ஈராக், ஈரானின் குறிப்பாக, இலாம் மாநிலப்பகுதியிலிருந்து வெளியேறியது. ஒரு இலட்சம் ஈரானியப் போர்க் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

**ஈராக் - குவைத் நாட்டைக் கைப்பற்றியமை** : குவைத் நாடு 6880 சதுர மைல் பரப்பளவுள்ள ஒரு சிறிய நாடு. இந்நாடு பாரசீக வளைகுடாவின் ஒரு பகுதியாக இருந்தது. இந்நாட்டை 1990 ஆகஸ்டு இரண்டாம் நாள் ஈராக் கைப்பற்றியது. இன்று இந் நாடு இராக்கின் பத்தொன்பதாவது மாநிலமாகக் கருதப்படுகிறது.

இரு நாடுகளின் எல்லைப்பகுதிகளில் பரந்துகிடக் கும் எண்ணெய்க் கிணறுகளிலிருந்து கடந்த பத்தாண்டு களில் ஏறத்தாழ ரூ. 4080 கோடி அளவுக்கு எண்ணெய் திருடியதாகக் குவைத் மீது ஈராக் குற்றஞ்சாட்டி அந்த அளவுக்கு நட்ட ஈடு கோரியது. மேலும் நிருணயிக்கப் பட்ட அளவைக் குவைத் மீறியதால் சந்தையில் எண் ணெய் விலை குறைந்ததாகவும் இதனால் ஈராக்கின் பொருளாதாரச் சீரமைப்பு பாதிக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டியது. மேலும் குவைத் அமெரிக்காவுடன் சேர்ந்து ஈராக்கின் பொருளாதாரத்தை நொடிக்கச் சதி செய்ததாகவும், அமெரிக்காவின் கைப்பாவையாக விளங்குவதாகவும் குற்றஞ்சாட்டியது. அரேபிய இலட்சியங்களுக்கு, குறிப்பாகப் பாலஸ்தீன விடு தலை இயக்கத்துக்கு குவைத் அரசு துரோகம் செய்தது எனச் சாதரண அரேபியர்கள் கருதுவதாகவும் குற்றஞ் சாட்டியது. மேலும் ஈராக் நாட்டுத் துறைமுக வசதியை மறுக்கும் விதமாக பிரிட்டானிய ஏகாதி பத்திய ஆட்சியால் உருவாக்கப்பட்டதே குவைத் நாடு எனவும் பறைசாற்றியது.

**குவைத் வரலாறு** : வரலாற்று ரீதியில் குவைத் ஒரு யதேச்சையாகவே தோன்றிய ஒரு நாடு எனக் கருதப்படுகிறது. அதன் முந்தைய பூமியில் மூன்றில் இரண்டு பங்கு சவூதி அரேபியாவின் வசம் இருக்கிறது. பண்டைய காலத்தில் மெசபடோமியாவின் பகுதி யாக இருந்த குவைத் ஏறத்தாழ 500 ஆண்டுகள், 1918ஆம் ஆண்டு வரை, உருமானியப் பேரரசில் உள்ள மொசபொடோமியாவின் ஒரு பகுதியாக இருந்தது. நாடோடிகளாகத் திரிந்த பழம் அரபுப் பழங்குடிகளில் அல்சபா என்ற பழங்குடியினர் குவைத்தில் குடியேறி, பிரிட்டனின் உதவியுடன் ஓர் அரச வம்சத்தை அமைத் துக்கொண்டனர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் குவைத் அரசர் எமிர் உருமானியப் பேரர சின் ஒரு பகுதியாக இராக் மாநிலத்திலுள்ள பசோரா மாநிலத் தின் ஆளுநர் ஆட்சியின் கீழ் ஆண்டு வந்தார்.

1899இல் அல்சபா எமிர் பிரிட்டிஷ் பேரரசின் மேலாண்மையை ஒப்புக்கொண்டார். 1938ஆம் ஆண்டு ஈராக் நாட்டுடன் குவைத் இணைக்கப்பட வேண்டும் எனக் குவைத் நாடாளுமன்றம் கேட்டுக் கொண்டது. 1958ஆம் ஆண்டு ஈராக், குவைத் நாட் டைக் கைப்பற்றத் திட்டமிட்டபோது, பிரிட்டனும் அமெரிக்காவும் அத்திட்டத்திற்கு ஆதரவு அளித்தன. 1961 செப்டம்பர் ஈராக் வெளியிட்ட வரைபடத்தில் குவைத் ஈராக்கின் ஒரு பகுதியாகக் காண்பிக்கப்பட் டுள்ளது. பொதுவாக அல்சபா பழங்குடியினருக்கும் தெற்கு ஈராக்கைச் சேர்ந்த தாக்ரீக் குடியினருக்கும் இடையே அடிக்கடி சண்டை நடந்ததுண்டு. இப் போதைய ஈராக் புரட்சி தலைமைக்குழுவில் பெரும் பாலோர் தாக்ரீக் குடியைச் சேர்ந்தவர்கள். பொதுவாக வளை குடா நாடுகளுக்கு நிலையான எல்லைகள் சமீப காலத்தில் தான் ஏற்பட்டன.

**குவைத்திலிருந்து வெளியேறுதல்** : இம்மாதிரி சிக்கலான சூழ்நிலையில்தான் ஈராக் குவைத் நாட் டைக் கைப்பற்றியது. அமெரிக்கா, சோவியத் யூனியன் உட்பட அனைத்து உலக நாடுகளும் ஈராக்கின் ஆக்ரமிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்து குவைத் திலிருந்து ஈராக்கின் படைகளைத் திரும்பப்பெற வேண்டுமென்று கருத்துத் தெரிவித்தது. ஐ.நா. சபை யின் உதவியுடன் நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டி ருக்கையில், அமெரிக்காவும், பிரிட்டனும், பிற உலக நாடுகளின் ஆதரவுடன் குவைத்திலிருந்து ஈராக்கை விரட்டியடித்து குவைத்தை ஈராக்கிடமிருந்து விடுவித் தன.

மேற்காசியச் சிக்கல்களின் மூலக்காரணம் அங்கு வசிக்கும் மக்களிடையே உள்ள பிளவு மனப்பான்மை தான். இவர்களிடையே ஒற்றுமையுணர்வு இல்லாத தாலும், நவீன போர் கருவிகள் இல்லாததாலும், வல் லரசுகளின் பதவிப்போட்டி இப்பகுதியில் வளர்ச்சி யடையும் சூழமைவு இருக்கின்றது. போட்டி மனப் பான்மை, பிரிவு மனப்பான்மையை வளர்க்கும் வல் லரசு ஆசிகளுடன் மேற்காசியாவில் சிக்கல்கள் தொடர்ந்து தோன்றிக்கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

- எஸ். நா.

**மேற்குறிப்புச் செய்தல் :** பொதுவாக, மேற் குறிப்புச் செய்தல் என்பது, ஓர் ஆவணத்தின் பின்புறம் எழுதுதல் என்று பொருள்படும். சட்ட நுணுக்கமாகப் பார்த்தால், மாற்றுமுறை ஆவணங்களின் மீதுள்ள உரிமைகளை மாற்றும் நோக்கத்துடன், அவ்வாவ ணங்களின் பின்புறம் ஒருவர் தம் பெயரை எழுதுதல் என்றே பொருள்படுகிறது. ஆவணத்தின் மீதான உரிமையினை மாற்றும் நோக்கத்துடன், ஆவணத்தை ஒப்படைப்புச் செய்வதால் மேற்குறிப்புச் செய்தல் நிறைவு பெறுகிறது.

மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பதினைந்தாம் பிரிவு மேற்குரிப்புச் செய்தலை, "முறையாவணத்தை மாற்றுவதற்காக, அவ்வாவணத்தை ஆக்கியோரோ, உடையோரோ அவ்வாவணத்தின் பின்புறமோ, முன்புறமோ, ஆவணத்துடன் இணைக்கப்பட்ட ஒரு காகிதத் துண்டிலோ, கையெழுத்திடுதல்" என்று வரையறுக்கிறது. மேற்குறிப்புச் செய்தலுக்கான கையெழுத்து, ஆவணத்தின் முதலிலோ, இடை யிலோ, கடையிலோ இருக்கலாம். ஆவணத்தின் மீதான உரிமைகளை மாற்றும் நோக்கம் இருக்க வேண்டும் என்பதே மேற்குறிப்புச் செய்தலின் தலையாய கருத்து.

மேற்குறிப்புச் செய்தலுக்குக் குறிப்பிட்ட வகை யான சொற்கள் தாம் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில்லை. கையெழுத்து மட்டும் இருந்தாலே போதுமானது. ஆவணத்திலேயே கையெழுத்திட வேண்டும். ஆனால், சில சமயங்களில் பலருக்கு மேற்குறிப்புச் செய்து ஆவணத்திற்கான உரிமைகள் மாற்றப்படுங்கால், ஆவணத்தின் பின்புறம் கையெ ழுத்துகளால் நிறைந்துவிடும்போது, ஆவணத்துடன் ஒரு சிறு காகிதத்தை இணைத்து, அதில் கையெழுத் திட்டு, உரிமையினை மாற்றும்படி மேற்குறிப்புச் செய்யலாம். அவ்வாறு இணைக்கப்பட்ட காகிதம் இணைக்கப்பட்ட காகிதம் ( Allonge ) எனக் கூறப்படுகிறது. மேற்குறிப்புச் செய்வதற்குச் சட்டப்படி யெல்லை இல்லை. எத்தனை மேற்குறிப்புகள் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம்.

மேற்குறிப்புச் செய்தலுக்கென்று குறிப்பிட்ட படி வம் குறிப்பிடப்படவில்லையெனினும், யாருக்கு உரிமை மாற்றப்படுகிறதோ (யாருக்கு மேற்குறிப்புச் செய்யப்படுகிறதோ) அவர் பெயரையும், பதவிப் பெயரையும் சரியாக அறிந்து கொள்ளும் வகையில் மேற்குறிப்புச் செய்யவேண்டும். பெயரில் எழுத்துப் பிழை இருக்குமானால், அதிலுள்ளபடியே மேற் குறிப்புச் செய்து, விரும்பினால் சரியானபடி, அதன்கீழ் கையெழுத்திடலாம். எ.கா. ஒரு காசோலை கிருட்டி ணசாமி என்பவருக்கு வரையப்பட்டிருக்குமானால், அவர் கிருட்டிணசாமி என்றே கையெழுத்திட்டு மேற் குறிப்புச் செய்ய வேண்டும். வேண்டுமானால் அதன் கீழ் கிருஷ்ணசாமி என்று எழுதலாம். ஆனால், மேற் குறிப்புச் செய்யும்போது கி.சாமி என்று கையெழுத்திடு வது முறையற்ற, முறையில் மேற்குறிப்புச் செய்தல் ( Irregular Endorsement ) ஆகும்.

முறையாவணத்திற்கான உரிமையினை மாற்றும் நோக்கத்துடன், முறையாவணம் ஒப்படைப்புச் செய்யப்பட்டால்தான் மேற்குறிப்புச் செய்தல் நிறை வடைகிறது. மேற்குறிப்புச் செய்வதற்கு உரிமையினை மாற்றும் நோக்கம் ( Intention ) மிக இன்றியமை யாதது. ஆவணத்தை ஆக்கியோரோ, ஆக்கியோரல் லாத தகுதி நிலையில் உடையோரோ மேற்குறிப்புச் செய்யலாம். ஒப்பந்தம் மேற்கொள்ளச் சட்டப்படி தகுதியடைந்த யாரும் மேற்குறிப்புச் செய்யலாம். ஓர் இளவர், ஆவணத்தின் படி தாம் கட்டுப்படவில்லை யெனினும், மேற்குறிப்புச் செய்யலாம். ஆவணத்தை உடையோர் இளவராக இருப்பின், தம் இயற்காப் பாளர் மூலமாகவும் மேற்குறிப்புச் செய்யலாம். முத லரின் சார்பில் முகவரும் மேற்குறிப்புச் செய்யலாம். கூட்டாண்மை நிறுவனத்தில், மற்றக் கூட்டாளிகளின் சார்பில் ஒரு கூட்டாளி மேற்குறிப்புச் செய்யலாம்.

மேற்குறிப்புச் செய்தல், முழுமையான மேற்குறிப் புச் செய்தல் ( Endorsement in Full ), வெறுமையான மேற் குறிப்புச்செய்தல் ( Endorsement in Blank ) என இரு வகைப்படுகிறது. அது கட்டுப்பாடுடனோ (Condition), எல்லைக்குட்பட்டோ ( Restrictive ) இருக்கலாம். மாற்று முறையாவணங்கள் சட்டம் பதினாறாம் பிரி வின்படி, யாருக்கு மேற்குறிப்புச் செய்யப்படுகிறதோ, அவர்தம் பெயரை குறிப்பிடாமல், மேற்குறிப்புச் செய்பவர் தம் கையெழுத்தை மட்டும் இட்டால், அது வெறுமையான மேற்குறிப்புச் செய்தல் எனப்படுகிறது. இதன்படி, ஆவணம் ஒப்படைப்புச் செய்யப்படுவதன் மூலம் உரிமை மாற்றப்படுகிறது.

யாருக்கு மேற்குறிப்புச் செய்யப்படுகிறதோ அவர் பெயரை எழுதி, மேற்குறிப்புச்செய்பவர் கையெழுத் திடுவாரானால் அது முழுமையான அல்லது தனித்த

மேற்குறிப்புச் செய்தல் ( Endorsement in Full or Special Endorsement ) எனப்படுகிறது. இவ்வாறு மேற்குறிப் புச் செய்யப்பட்ட ஆவணம், மேற்குறிப்புச் செய்யப் பட்டவராலேயே மாற்றப்பட வேண்டும். அவரோ, அவர் சட்டப் பேராளர்களோ அவ்வாவணத்தினைக் கொண்டு வழக்கிடலாம். மேற்குறிப்புச் செய்தலின் சட்டவிளைவு, ஆவணத்தின் மீதான உரிமை மாற்றம் செய்யப்படுவதாகும்.

மேற்குறிப்புச் செய்பவர், மீண்டும் மேற்குறிப்புச் செய்யக்கூடாது என்று குறிப்பிட்டு, மேற்குறிப்புச் செய்வராயின் அது எல்லைக்குட்பட்ட மேற்குறிப் பாகும். மேற்குறிப்புச் செய்பவர் தம் கடப்பாடினை விடுவிப்புச் செய்து கொண்டோ ( Exclusion of Liability ) ஒரு நிகழ்வினைச் சார்ந்து தம் கடப்பாடினை ஏற்றுக் கொண்டோ ( Liability depending upon happening of a Contingent event ) மேற்குறிப்புச் செய்யலாம். அத் தகையது நிபந்தனையுடன் கூடிய மேற்குறிப்புச் செய் தல் ( Conditional Endorsement ) எனப்படும்.

இவ்வாறு மேற்குறிப்புச் செய்தல் என்பது ஓர் ஆவணத்தின் மீதான உரிமையினை மாற்றிக் கொள் வதேயாகும். கையெழுத்திடுதல், உரிமையினை மாற்றும் நோக்கம், ஒப்படைப்புச் செய்தல் ஆகிய இம்மூன்றும் இணைந்தது மேற்குறிப்புச் செய்த லாகும்.

- ஜீவ. அ.


**மைத்தடச் சோதனை** : உளவியல் சோதனை களுள் ஒருவருடைய ஆளுமையை அறிவதற்காக அதிக மாகப் பயன்படும் சோதனை மைத்தடச் சோதனை ( Ink Blot Test ) ஆகும். முதன்முதலாக ஒரு மை உறிஞ்சு காகிதத்தை இரண்டாக மடித்து அழுத்தி அதன்மீது மையைத் தெளித்து வைத்தால் சிந்தப்பட்ட மையா னது பலவகைகளில் பரவி ஒழுங்கற்ற வடிவங்களை உண்டு பண்ணும். அது சரியான இரு பிரிவுகளாக இருக்கும். இதைக்காட்டி அதில் காணப்படுவன வற்றை உருவகமாக்கிக் கூறச் சொல்லுவதன் சோதனை.

இந்தச் சோனைக்கு இன்றைய பெயர் ஆளுமை காண் தட்டுகள் ( Psychodiagnostic Plates ) என்பதாகும். இதனை உருவாக்கியவர் சுவிசு நாட்டின் உளவியல் வல்லுநர் எர்மன் ரோசாக் ( Herman Rorschach ) என்பவர் முதல் முறையாக 1921ஆம் ஆண்டில் இப்படத்தட்டுகளை உருவாக்கினார். பிறகு 1928ஆம் ஆண்டு ஓரளவு மாற்றி அமைக்கப்பட்டு நிரந்தர மாக்கப்பட்டன. பத்து அட்டைகளில் ஐந்தில் இருக்கும் உருவங்கள் கறுப்பு நிறமானவை. இரண்டு அட்டை களில் ஓரளவு சிவப்பு வண்ணமிருக்கும். மீதி மூன்று அட்டைகளில் பல வண்ணங்களில் உருவங்கள் இருக்கும். எந்த அட்டையிலும் தெளிவான மனித உருவம், விலங்கு உருவம், இயற்கைக் காட்சி எதுவும் இருக்காது.

**சோதித்தல்** : பொதுவாகப் படங்களைக் காட்டு பவர் சோதனைக்கு வந்தவருக்கு முன்னால் உட்காரு வதில்லை. பக்கவாட்டில் அல்லது பின்பக்கமாக இருந்து கொண்டு பட அட்டைகளை ஒவ்வொன்றா கத் தரலாம். ஒவ்வொரு அட்டையைப் பார்க்கும் போதும் மனத்தில் தோன்றுவதை அப்படியே கூற வேண்டும். அட்டைகளைத் தலைகீழாகப் பார்த்துச் சொன்னாலும் சரியே. அவர் கூறுவதை எல்லாம் சோதனை நடத்துபவர் அவ்வாறே எழுதிக்கொள்ள வேண்டும். நிறைய பேசும்படி அவரைச் சிறிது தூண் டலாம். இச்சோதனைக்குக் குறிப்பிட்ட நேரமில்லை. பொதுவாக ஒரு மணிநேரத்தில் சோதனையை முடித்துவிடலாம். ஏனைய ஆளுமைச் சோதனை களைப் போலன்றி இது மறைமுகச் சோதனையாக உள்ளது. கற்பனை ஆற்றல் சோதனை எனக்கூறிச் சோதிக்கலாம். சோதனைக்குட்பட்டவரின் தற்காப்பு அச்சம் அவ்வாறு கூறுவதனால் ஓரளவிற்குத் தணியும்.

இச்சோதனையின் வாயிலாகப் பல பண்புகளை அறிய முடிந்தாலும், அவை தொகுப்பாகத்தான் இருக்குமே தவிர குறிப்பிட்ட பண்பொன்றை ஆழ மாகச் சுட்டிக்காட்டுவன அல்ல. இச்சோதனையின் விளைவுகள் தவறாயின் அது சோதனையின் தவறல்ல. இதனைச் சரியாகப் பயன்படுத்த முடியாமை தான். சோதனை நடத்துவோருக்குப் பட்டறிவு போதாது என்பதுதான். ஆகவே, இச்சோதனையை மேலும் செம்மைப்படுத்த வேண்டியதில்லை என்றா யிற்று. விடைகளுக்கேற்ப மதிப்பெண்கள் வெவ் வேறு முறைகளில் அளிக்கப்படுவதுண்டு. அதில் பயிற்சி இருந்தால்தான் சரியான உட்பொருளை அறிய முடியும். அதற்கென்றே ஓராண்டு, ஆறுமாதம் எனப் பயிற்சிகள் சில பல்கலைக்கழகங்களில் நடத்தப்படு கின்றன.

மைத்தடச் சோதனை




மைத்தடச் சோதனை

**அளவீடு** : ஒருவரின் கூற்றுகள் நான்கு வகையில் மதிப்பிடப்படுகின்றன. உருவங்களில் இருப்பு, வரையறை, பொருளடக்கம், பழக்கமான அல்லது புதுமைக் கருத்துகளாகக் கவனிக்கப்படுகின்றன. பொருளடக்கத்தில் காணப்படுவது விலங்குகளா, நிலப்பரப்பா, கலைப்படைப்பா என்றும் கவனிக்கப் படும். வரையறை என்பது உருவம், வண்ணம், நிழல், இயக்கம் ஆகியன பற்றிக் கூறப்படுகிறதா என்ப தாகும். வண்ணத்தைப் பற்றி எதுவுமே கூறப்படாமலி ருப்பது வண்ண அதிர்ச்சி ஆகும். இவை ஒருவரின் உணர்வைக் காட்டும் வண்ணத்தைப் பற்றிக் கூறி அங்குச் சரியான உருவங்களைக் காண முடியாத போது உணர்வு கட்டுப்பாடற்றது என்பதை அறிய லாம்.

பொதுவாக நல்ல உருவம், சுழற்சி, படைப்பெண் கள் முதலியன அதிகமிருந்தால் நுண்ணறிவு மிகுதி என்றறியலாம். அளவுக்கு மீறிய முழு உருவங்கள் கூறப்படுவது நுண்ணறிவு அன்று. கற்பனை ஆற்றல் மிகுதி என்பதாகும். பகுதிகளாகப் பிரித்துக்காணும் அறிவு அதிகமுடையோர் செயலாற்றல் படைத்தவர் ஆவார். அகமுகத்தவர்கள் அசைவுச் சுழற்சியை அதி கமாகக் காண்பர். நிழல் பகுதியைப் பற்றி அதிகமாக ஒருவர் பேசினால் அது அவர் மன நிறைவின்மையைக் குறிக்கும். அன்பை வெளிப்படுத்தும் நாட்ட மிருந்தால் தெளிவான உருவங்களைக் கூறுவர். வெண் பகுதியை அடிக்கடி உருவங்களாகக் காண்பவர்கள் முரண்பட்ட ஆற்றலைப் பெறுகிறார். முழு உருவங் களைக் காண முடியாதவர்கள் தம்முடைய ஆளுமையை ஏற்கவில்லை என்பது தான் உண்மை.

இச்சோதனையை எந்நாட்டவருக்கும் தரலாம். பண்பாடுகளின் வேறுபாடுகள் வேறு முடிவுகளைத் தருவதில்லை. பேசத்தெரிந்த குழந்தைகளுக்கும் தரலாம்.

- எம். பெ.

**மைய அமைப்பு :** ஒரு மொழியின் அமைப்பு முறை மைய அமைப்பு ( Central System ), புற அமைப்பு ( Peripheral System ) என இரு வகைப்படும். புற அமைப்பு, இயற்பியலோடு ( Physics) தொடர்புடை யது. ஒலியியலையும் ( Phonetics ) தத்துவத்தோடு ( Philosophy ) தொடர்புடைய பொருண்மையியலை யும் ( Semantics ) உள்ளடக்கியதாகும். மைய அமைப்பை எழுத்து அமைப்பு ( Phonological System ), இலக்கண அமைப்பு ( Grammatical System ), உரு பொலியனியல் அமைப்பு ( Morphophonemic System ) என்றும் மூன்று பெரும் உட்பிரிவுகளாகவும் கொள்வார்கள்.

**ஒலியனியல் அமைப்பு** : எழுத்தியல் ( Phonology ) என்பது ஒலியியல் ( Phonetics ), ஒலியனியல் ( Phonemics ) ஆகிய இரண்டும் சேர்ந்ததாகும். ஒரு மொழியில் காணப்பெறும் ஒலியன்களைக் கண்டறி தல் ஒலியனியல் அமைப்பின் முதல் நிலையாகும். வேற்று நிலை வழக்கு ( Contrast ), துணை நிலை வழக்கு ( Complementary distribution ) என்னும் இரு கோட்பாடுகளின் அடிப்படையில் ஒரு மொழியி லுள்ள ஒலியன்களைக் கண்டறிதல் இயலும். வேற்று நிலை வழக்கில் பொருளை வேறுபடுத்தும் ஒலிகள் ( Phones ), ஒலியன்கள் ( Phonemes ) எனவும், பொருளை வேறுபடுத்துவதற்குத் துணை புரியாது. துணைநிலை வழக்கில் வரும் ஒலிகள் மாற்றொலிகள் ( Allophones ) எனவும் கருதப்படும்.

சான்றாக, ‘அலை’, ‘ஆலை’ என்னும் இரு சொற் களில் பொருளை வேறுபடுத்தும் ஒலிக்கூறு அ, ஆ என்னும் இரு உயிர்களாகும். இவ்விரு உயிர்களும் ஒரே சூழலில் வந்து வேற்றுநிலை வழக்கில் அமையப் பெறுவதால் இவை தனித்தனி ஒலியன்களாகக் கருதப்படுகின்றன.

இக்காலத் தமிழில் அண்ணவின மூக்கொலியான ( Alveolar nasal ) ‘ன’ கரமும் பல்லின மூக்கொலியான ( Dental nasal ) ‘ந’ கரமும் துணைநிலை வழக்கில் வரு கின்றன. ‘ந’கர ஒலி மொழியினிடையில் பல்நுனி வெடிப்பொலியான ( Dental plosive ) ‘த’கரவொலியு டன் இணைந்து வருகின்றது. ஏனை இடங்களில் ‘ன’கரம் வருகின்றது. இவற்றுள் ஒன்று வருமிடத்தில் ஏனையது வருவதில்லை. மேலும், இவ்வொலிகள் சொற்களின் பொருளை வேறுபடுத்துவதற்குத் துணை புரிவதுமில்லை. எனவே, இவ்விரண்டு ஒலிகளும் ஓர் ஒலியனின் மாற்றொலிகளாகக் கருதப்படு கின்றன.

ஒலியன்களுடைய வருகைமுறையினை விளக்கு வது ஒலியனியல் அமைப்பின் இரண்டாம் நிலையா கும். ஈண்டுச் சொல்லின் முதல், இடை, கடையில்

வரும் ஒலியன்களின் விளக்கமும் உயிர்மயக்கங்கள் ( Vowel clusters ), மெய்ம்மயக்கங்கள் ( Consonant clusters ) ஆகியவற்றின் வருகை முறையும், அசைகள் ( Syllables ) பற்றிய செய்தியும் இடம் பெறுகின்றன. இந்நிலையில் ஒலியனியல் அமைப்பு ஒரு மொழி யின் கண்ணுள்ள ஒலியன்களின் எண்ணிக்கையினை யும் அவை மொழியில் வரும் பான்மையினையும் சுட்டும் வரைபடமாகச்செயற்படுகின்றது.

**இலக்கண அமைப்பு** : இலக்கண அமைப்பு ஒரு மொழியிலுள்ள உருபன்களைக் ( Morphemes ) கண்ட றிதல். உருபன்கள் சொற்களாகவோ, தொடர்களாக வோ ஆக்கம் பெறுதல், அவை சொல்லாக்க உருபு களையும் ( Derivative affix ) சொல்திரிபு உருபுகளை யும் ஏற்று வருதல், சொல் வகைகள், இலக்கணக் கூறு கள், தொடர்- தொடர்வகைகள், தொடர்கள் வாக்கியமாக அமைதல், சொற்களஞ்சியம் ஆகியவற்றை விவரிக்கும் வகையில் அமையும் இலக்கண அமைப்பே ஒரு மொழியின் இலக்கணம் என்று கூறப்படும்.

இலக்கண அமைப்பு இலக்கண மையக்கூறு ( Gra mmatical core ), சொற்களஞ்சியம் ( Lexicon ) என்னும் இரு உட்பிரிவுகளைக் கொண்டது. ஒரு மொழியின் சொல்வகைகள் ( Parts of Speech ), இலக் கணக்கூறுகள் ( Grammatical categories ), செயலிகள் ( Functors ), தொடர்- தொடர் வகைகள் ( Construction and Construction Types ) ஆகிய நான்கினையும் உள்ளடக்கியது இலக்கண மையக்கூறாகும்.

மொழியின் அனைத்து அடிச்சொற்களையும் ( Stems ), சொல் திரிபுகளையும் ( Inflection ), தொட ரியல் பண்புகளையும் ( Syntactical behaviour ) அடிப் படையாகக் கொண்டு வெவ்வேறு சொல் வகை களாகப் பாகுபாடு செய்தல் இயலும். பதிலிகள் ( Substitutes), சொல்திரிபு உருபுகள், குறியீட்டு வடிவங்கள் ( Markers), கட்டுப்படுத்தும் சொல்லாக்க உருபுகள் ( Gover ning Derivative Affixes ) ஆகியன ஒரு மொழியின்கண் காணப்பெறும் செயலிகளாகும்.

தமிழ் மொழியில் உம், என, என்று போன்ற குறி யீட்டு வடிவங்களும், காலம், எண், இடம், பால் போன்றவற்றைச் சுட்டப் பயன்பெறும் சொல்திரிபு உருபுகளும் செயலிகளாகச் செயற்படுகின்றன.

வாக்கியங்கள் தனிவாக்கியங்கள், கூட்டு வாக்கி யங்கள், கலவை வாக்கியங்கள் என்று மூன்று வகைப் படும். அவ்வாக்கியங்கள் அமைவதற்குரிய தொடர்கள் உள்வட்டத் தொடர்கள் ( Endocentric Construction ), வெளிவட்டத் தொடர்கள் ( Exocentric Construction ) என இருவகைப்படும்.

ஒரு தொடர் அத்தொடரில் உள்ள சொல் ஒன்றின் சொல்வகையில் அடங்குமாயின் அத்தொடர் உள் வட்டத்தொடர் எனப்படும். படித்த பையன், அழகிய வீடு என்பன பெயர்கள். பையன் என்னும் பெயர் வரும் இடங்களில் எல்லாம் படித்த பையன் என்ற தொட ரும் வரலாம். எனவே, இவ்விரு தொடர்களும் உள் வட்டத்தொடர்களாக அமைந்துள்ளன. உள் வட்டத் தொடர்கள் அல்லாத பிற தொடர்கள் அனைத்தும் வெளிவட்டத் தொடர்களே.

தொடர்கள் வாக்கியங்களாக அமையும் நிலையில் திணை- பால், ஒத்திசைவு ( Concord ), குறுக்கு குறிப்பு ( Cross - reference), அவாய்நிலை ( Government ) ஆகிய மூன்றும் அடிப்படைகளாக அமைகின்றன. தமிழ் மொழியில் ஈண்டு சுட்டப்பெற்ற அனைத்து வாக்கிய வகைகளும், தொடர் வகைகளும் காணப்படுகின்றன. சொற்களஞ்சியம் மொழியில் காணப்பெறும் அனைத் துச் சொல்லாட்சிகளையும் குறிக்கும் வகையில் அமையும்.

**உருபொலியனியல் அமைப்பு** : உருபொலியனி யல் அமைப்பு இலக்கண அமைப்பையும் ஒலியனி யல் அமைப்பையும் இணைக்கும் ஒரு பாலமாகச் செயற்படுகின்றது. சொற்கள் புணருங்கால் ஒலியன் களில் ஏற்படும் மாற்றங்களை இவ்வமைப்பு விளக்கு கின்றது. சொற்கள் புணரும் நிலையில் ஒலியன்களில் ஏற்படும் திரிபு புதிய மாற்று வடிவங்கள் தோன்ற அடிப்படையாக அமைகின்றது. அந்நிலையில் உரு பொலியனியல் அமைப்பு இலக்கண அமைப்பையும் ஒலியனியல் அமைப்பையும் இணைக்கும் ஒரு பால மாகச் செயற்படுவதனை அறிந்துகொள்ள இயலும்.

உருபன்கள் அல்லது சொற்கள் புணரும் அடிப் படை நிலையில் புணர்ச்சியினை அகப்புணர்ச்சி ( Internal Sandhi ), புறப்புணர்ச்சி ( External Sandhi ) என இரு வகைப்படுத்தலாம். இரண்டு தனி வடிவங்கள் ( Free Form ) புணர்வது புறப்புணர்ச்சி எனப்படும். மரம், கிளை, என்றும் இரண்டு வடிவங்களும் புணர்ந்து மரக்கிளை என மாற்றம் பெறுவது புறப் புணர்ச்சிக்குத் தக்க சான்றாகும். ஒரு தனி வடிவமும், ஒரு கட்டு வடிவமும் ( Bound Form ) அல்லது இரண்டு கட்டு வடிவங்கள் புணர்வது அகப்புணர்ச்சி எனப்படும்.

அ, படி, என்னும் இரண்டு கட்டுவடிவங்களும் 'அப்படி' எனப் புணர்ந்து நிற்பது அகப்புணர்ச்சியின் பாற்படும்.

புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஒலியன் களும், உருபன்களும் சூழல்களாக அமைதல் உண்டு. ஒலியனைச் சூழலாகக் கொண்டமையும் புணர்ச்சி ஒலியினால் கட்டுண்ட புணர்ச்சி ( Phonologically Conditioned Sandhi ) எனவும், உருபனைச் சூழலாகக் கொண்டமையும் புணர்ச்சி உருபனால் கட்டுண்ட புணர்ச்சி ( Morphologically Conditioned Sandhi ) எனவும் கருதப்பெறும்.

'மரம்' என்னும் வடிவமும், 'கிளை' என்னும் வடிவ மும் மரக்கிளை எனப்புணரும் நிலையில் மரம் என் னும் உருபினுக்கு 'மரக்' என்னும் மாற்று வடிவம் கிடைக்கப்பெறுகின்றது. ஈண்டு 'மரக்' என்னும் மாற்று வடிவம் தோற்றம் பெறும் புணர்ச்சி ஒலியனால் கட்டுண்ட புணர்ச்சியாகும். ஈண்டு வருமொழி முதல் ஒலிக்கேற்ப 'மரக்' என்ற மாற்று வடிவம் கிடைக்கப் பெறுகின்றது.

'நாழி' என்னும் வடிவமும் 'உரி' என்னும் வடிவ மும் 'நாடுரி' எனப்புணரும் நிலையில் நாழி என்னும் உரு பனுக்கு நாடு என்னும் மாற்று வடிவம் கிடைக்கப் பெறுகின்றது. உரி என்னும் உருபனுடன் மட்டுமே புணரும் நிலையில் நாடு என்னும் வடிவம் கிடைக் கப்பெறுவதால் இப்புணர்ச்சி உருபனால் கட்டுண்ட புணர்ச்சியாகும். - எ. ஆ.

**துணை நூல்கள் :**

1. Haris, Z., 1952, **Structural Linguistics**, University of Chicago, Chicago.

2. Hockett, C. F., 1958, **A Course in Modern Linguistics**, The Macmillan Company, Newyork.

3. Lyons, J., 1968, **Introduction to Theoritical Linguistics**, Cambridge University Press, Cambridge.

**மையத் தத்துவம் :** மையத் தத்துவம் என்பது அரசாங்கத்தின் எல்லா அதிகாரங்களும் உயர்மட்டத் தில் குவிக்கப்பட்டிருத்தலைக் குறிக்கும் ஒரு கொள்கை ஆகும். "அரசாங்கத்தில் ஆட்சி அதிகாரம் கீழ் மட்டத் திலிருந்து உயர் மட்டத்துக்கு மாற்றப்படும் இயல்பு தான் மையப்படுத்துதல் ஆகும்" என்று எல்.டி. ஒயிட்டு என்ற ஆசிரியர் கூறுகிறார். மையத் தத்து வத்தில் ( Centralism ) அரசாங்கப்பணிகள் பற்றிய முடிவு களும் தீர்மானங்களும் உயர்மட்ட அலுவலகத் திலேயே எடுக்கப்படுகின்றன. இதில் கள அதிகாரி களுக்கு முடிவு செய்யும் அதிகாரம் எதுவும் இருப்ப தில்லை. சில பணிகளைப் பொறுத்த வரையில் கள அலுவலர்களைத் தலைமையக அதிகாரிகள் கலந்து கொண்டாலும் களநிலையில் செய்யப்பட வேண்டிய பணிகள் என்னென்ன என்று தலைமையக அதிகாரி களே முடிவு செய்கின்றனர். கள அலுவலர்களின் கருத் துகளுக்குத் தலைமையக அதிகாரிகள் முதன்மை அளிக் காதபோதும், கள அதிகாரிகளைத் தலைமையகத்தார் அடிக்கடி கலந்து கொள்ளாமல், ஒரே சமயங்களில் மட்டும் கலந்து கொள்ளும்போதும், மையத் தத்துவம் செயற்படுகிறது. இவ்வாறு மையத்தத்துவம் என் பது, மக்களாட்சி முறைக்கு மாறான ஒன்றாகவும், கூட் டாட்சி முறைக்கு அடிப்படையான அதிகாரப் பரவல் முறைக்கு ( Decentralisation ) மாறான ஒன்றாகவும் இருக்கிறது.

**மையத்தத்துவத்தை முடிவு செய்யும் காரணி கள் :** *1.* ஆட்சிப்பொறுப்பு பற்றிய காரணி. ஓர் அர சாங்க நிறுவனத்தில் பணிசெய்யும் அலுவலர்கள் ஒவ் வொருவரும் தமக்கு மேற்பட்ட அதிகாரிகள் தம் ஆட் சிச் செயல்களைப் பொறுத்த அளவில் முழுப் பொறுப்புடையவர் என்ற விகிதப்படி பணி செய்தால், அங்கு முடிவு செய்யும் அதிகாரம் உள்ளிட்ட எல்லா அதிகாரங்களும் மேலதிகாரியிடத்திலேயே குவிக்கப் பட்டிருக்குமென்பது தெளிவு. இதே நிலைதான் தலைமையக, கள அலுவலகங்களுக்கும் பொருந்தும். அதிகாரமும், பொறுப்பும் பிரிக்க இயலாதவாறு இணைந்திருப்பவையாதலால் நடுவண் ஆட்சி அதி காரியே எல்லா ஆட்சிச் செயலுக்கும் பொறுப்புடை யவராகக் கருதப்படுவராயின் அவர் எந்தவிதமான தன்விருப்ப அதிகாரத்தையும் கள அலுவலருக்கு வழங்கமாட்டார்.

**ஆட்சி இயல் காரணி :** ஓர் ஆட்சித்துறை புதிதாக நிறுவப்பட்டு, அதன் பணிகளைச் செவ்வனே செய் யும் பழக்கம் அலுவலர்களுக்குப் போதிய அளவு இல்லாத போதும், ஓராட்சித்துறையின் கொள்கை களும், முறைகளும் ( Policies and Methods ) சீராக வகுக் கப்பட்ட வேண்டியிருக்கும்போதும் ( Uniformity ), கள அலுவலர்களுக்குப் போதிய அளவு தகுதியும் பயிற்சியும் இல்லாதபோதும், ஆட்சித்துறை

சிக்கனமாகவும், விரைவாகவும் பணிகள் நிறைவேற்றப்பட வேண்டிய கட்டாயம் தோன்றும் போதும், அந்த ஆட்சித்துறையில் மையத்தத்துவம் பின்பற்றப்படுகிறது.

**பணி இயல் காரணி ( Functional Factor )** : சில பணிகள் நாடு முழுவதிலும் செய்யப்பட வேண்டியனவாக இருக்கின்றது. அப்போது அவற்றைச் செய்யும் ஆட்சித்துறைகள் அவற்றை நாடு முழுவதிலும் ஒரே சீராக நிறைவேற் றவேண்டிய கட்டாயம் ( National Uniformity ) தோன்று கிறது. எ.கா. நாட்டுப்பாதுகாப்பு, பொருளாதாரத் திட்டம் வகுத்தல், செய்தித் தொடர்புகள், போக்குவரத்து முதலிய ஆட்சித்துறைகளிலெல்லாம், பணி பற்றிய முடிபுகளும் கட்டண விகிதங்களும் செலவு முறைகளும் ஒரே சீராக இருத்தல் வேண்டும். இவற்றிற்கெல்லாம் முடிவுகள் உயர்நிலை அதிகாரிகளால் எடுக்கப்பட்டு, அவர்கள் விடுக்கும் ஆணைகளுக்கிணங்கக் கள அதிகாரிகள் பணிகளை நிறைவேற்றி அவை பற்றிய அறிக்கைகளை மேலதிகாரிகளுக்கு விடுக்கின்றார்.

மக்களுக்குப் பங்கு இல்லா நிலையும் ஒரு காரணி ஆகும். ஓராட்சித்துறையால் செய்யப்பட வேண்டிய பணிகள் யாவை என்று முடிவு செய்வதற்கு மக்களுக்குப் பங்கு அல்லது அதிகாரம் இல்லை என்ற விதி பின்பற்றப்படுமேயானால், அவ்வாட்சித்துறை அதிகாரக் குவிப்பு முறையில் தான் அமைக்கப்பட்டுச் செயலாற்றும்.

**மக்களாட்சி இயலான அதிகாரக் குவிப்பு (Democratic Centralism)** : மக்களாட்சி இயலுக்கு மாறான ஒன்றாக மையத்தத்துவம் கருதப்பட்டாலும், ருசிய நாட்டின் ஆட்சி முறையிலே இந்த இரு கொள்கைகளும் இணைக்கப்பட்ட வடிவத்தில் பின்பற்றப்படுகின்றன. இலெனின் தாம் நிறுவக் கருதிய ஒரே கட்சி ஆட்சி முறையில், மையப்படுத்தப்பட்ட அமைப்புத்தான் உருவாகவியலுமென்றுணர்ந்து, 1902இல் மக்களாட்சி இயல்புடைய மையத் தத்துவம் என்ற கொள்கையை உருவாக்கினார். இதன்படி பொதுவுடைமைக் கட்சி ஏதேனுமொரு பொருளைப் பற்றி முடிவு எதனையும் எடுக்காத வரையில் அக்கட்சி உறுப்பினர் அப்பொருளைப் பற்றி விவாதிக்கவும், மறுக்கவும் உரிமை உடையவர் ஆவர். ஆனால் கட்சி அப்பொருளைப் பற்றி முடிவு எடுத்த பின்னர், கட்சி உறுப்பினர் எவரும் கட்சியின் முடிவை எதிர்க்கக் கூடாது.

அனைத்துலகப் பொதுவுடைமை மாநாடு ( Communist International ) 1930இல் வரைந்த ஒரு திட்டத்தின் படி, ஒவ்வொரு நிலையிலும் உள்ள கட்சி அமைப்பானது, தனக்கு அடுத்த மேல்நிலையிலுள்ள கட்சியின் அமைப்பு விடுக்கும் ஆணைகளுக்கும், முடிவுகளுக்கும் முழுதும் கட்டுப்படுதல் வேண்டும். இவ்வாறு வட்ட, மாவட்ட, மாநில, நடுவண் அமைப்புகள் ஒவ்வொன்றும் தனக்குக் கீழ்நிலையிலுள்ள அமைப்பைக் கட்டுப்படுத்துகிறது. மேல்நிலை அமைப்பின் உறுப்பினர் கீழ்நிலை அமைப்பின் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மேல்நிலை அமைப்புக்குக் கீழ்நிலை அமைப்பு முழுவதும் மாநாடுகளுக்கு இடைப்பட்ட காலங்களில் நாட்டின் கட்சி அமைப்புகள் எல்லாவற்றையும், எவ்வித மறுப்புமின்றிக் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் கட்சியின் நடுவண் குழுவுக்கு உண்டு. இந்த முறை இன்றளவும் அந்நாட்டின் ஒரு கட்சி ஆட்சி முறையில் பின்பற்றப் படுகிறது.

**நிறை, குறைகள்** : மையத் தத்துவம் பின்பற்றப் படுதலினால், முடிவு எடுக்கும் பணி ஒரேமட்டத்தில், வெகு விரைவாகச் செய்யப்படுகிறது. காலம் வீணாவதில்லை. அதே போல் முடிவுகளும் விரைவில் செயற்படுகின்றன. கீழ்நிலை அலுவலர்கள் முடிவு செய்ய வேண்டிய பணியினின்றும் விடுவிக்கப்பட்டு, தமக்குக் கொடுக்கப்பட்ட பணிகள் சரியா? தவறா? என்று முடிவு செய்ய வேண்டிய பணியினின்றும் விடுவிக்கப்பட்டுத் தமக்குக் கொடுக்கப்பட்ட பணிகளைச் செவ்வனே, குறித்த காலத்துக்குள் விரைந்து நிறைவேற்றும் நிலையிலுள்ளனர். மேலதிகாரியும், கீழலுவலர்களைத் தம் நேரடியான கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுதலியலும், அதிகாரிகள் ஆட்சி ( Bureaucracy ) எனப்படும் ஆட்சி வகை மக்களாட்சி முறைக்கு மாறான மையத் தத்துவத்தை அல்லது அதிகாரக் குவிப்பு முறையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால், மையத் தத்துவமானது, உள்ளூர்ப் பிரிவு மக்களின் ஊக்கத்தைத் தொடர்ந்து குறைத்து, நாளாவட்டத்தில் நாட்டின் வலுதேய்ந்து ஒழியுமாறு செய்கிறதென்று டாக்குவின் என்ற பிரான் அரசியலாசிரியர் கூறும் கருத்திலும் உண்மை இருக்கிறது. எவ்வளவுதான் அதிகாரிகளின் ஆட்சி திறமையானதாகவும், விரைவானதாகவும், சிக்கனமானதாக இருந்தாலும், அது மக்களுடைய விருப்பங்களை மதிக்கும் ஆட்சியாக இராது.

- பா. சு.

துணை நூல் :

1. Willoughfy, W.F., 1927, **Principles of Public Administration**, Brooking *, Washington.

**மைய – மாநில உறவுகள் :** அரசியலமைப்பு முறைகளில் ஒற்றை ஆட்சி முறை ( Unitary State ), கூட்டாட்சி முறை ( Federal State ) என இரு வகை உண்டு. இங்கிலாந்தும் பிரான்சும் ஒற்றை ஆட்சி முறைக்கு எடுத்துக்காட்டுக்களாகும். இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ருசியா முதலிய நாடுகள் கூட்டாட்சி முறைக்கு எடுத்துக்காட்டுக்களாகும்.

ஒற்றை ஆட்சி முறையில் மையச்சட்டமன்றமானது நாட்டின் மற்றப்பகுதிகளை முழுமையும் கட்டுப்படுத்தக்கூடிய உயர்தர அதிகாரத்தை உடையதாக உள்ளது. ஒற்றை ஆட்சி முறையில் ஒரே அரசாங்கமே அமைந்து செயற்படும். அதில் அதிகாரப்பங்கீடு அல்லது மாநில அரசாங்கங்கள் என்ற கூறு கிடையாது. மைய அரசே உள்ளூர் அரசாங்கங்களை அமைக்கவும், அவற்றுக்கு அதிகரங்களை வழங்கவும் அவற்றைக் கூட்டவும். குறைக்கவும், முற்றிலும் நீக்கவும் கூடிய சட்டப்படியான அதிகாரம் முழுவதையும் பெற்றிருக்கிறது. ஆனால், கூட்டாட்சி முறையில் மைய அரசுக்கும், அதனோடு சமநிலையில் இருந்து கூட்டாட்சியை ஆக்குகின்ற மாநில அரசுக்குமிடையே அதிகாரங்கள் பிரித்தளிக்கப்படுகின்றன. கூட்டாட்சி அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே மேற்கூறிய அதிகாரப் பங்கீடு பற்றி வழக்குகள் ஏற்பட்டால், அவ்வழக்குகளைத் தலைமை நீதிமன்றம் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் தீர்த்து வைக்கும். கூட்டாட்சியில் மைய - மாநில உறவுகளை தீர்மானிக்கும் ஒரு முக்கிய விதி, அரசியலமைப்புச் சட்டத்திலுள்ள அதிகாரப் பிரிவினை என்பதேயாகும். மாநில அரசுகளுக்குரிய அதிகாரங்கள் தனியாகவும், மைய அரசுக்குரிய அதிகாரங்கள் தனியாகவும் அரசியலமைப்புச்சட்டத்தால் பிரிக்கப்படுவதால் மாநில அரசுகள் மைய அரசுக்கு ஒதுக்கப்பட்ட அதிகாரங்களில் தலையிடக் கூடாது. இருவகை அரசுகளும் ஒவ்வொன்றும் தத்தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகார எல்லைக்குள் உரிமையுடன் இருத்தல் வேண்டும். அதிகாரப்பிரிவினையில் நாடு முழுவதற்கும் பொதுவாக உள்ள செய்திகளைப் பற்றிய அதிகாரங்கள் யாவும் மைய அரசுக்கு அளிக்கப்படுகின்றன. மாநிலத்தைப் பொறுத்த செய்திகள் பற்றிய அதிகாரங்கள், மாநிலங்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.

இந்தியாவில் மைய அரசுக்கும் மாநில அரசுக்குமிடையே அரசியல் அதிகாரங்கள் பிரிவு செய்யப்பட்டிருப்பதில் ஒரு தனித்தன்மை உள்ளது. இந்திய நாட்டு அரசியலமைப்பில் மூவகை அதிகாரப்பட்டியல்கள் உள்ளன. 1. பாதுகாப்பு - அயல் நாட்டு விவகாரங்கள், இருப்புப்பாதைத் துறை, நாணயமுறை முதலிய 97 அதிகாரங்கள் மத்திய அரசிடமிருக்கும். 2. உள்ளூர் ஆட்சி முறை, பொது உடல்நல வாழ்வு, நீதி வழங்குதல், சட்டம், ஒழுங்கு, கல்வி முதலிய 65 அதிகாரங்கள் மாநில அரசிடமிருக்கும். 3. குற்றவியல், அமைதிக்காலச் சட்டங்கள், ஒப்பந்தங்கள், மருந்துகள் முதலிய 47 அதிகாரங்கள் இரு அரசுகளுக்கும் பொதுவானவை என்று வரையறுக்கப்பட்டுள்ளன. இவை மூன்றிலும் குறிப்பிடப்படாமல் எஞ்சியுள்ள அதிகாரங்கள் மைய அரசிடமே விடப்பட்டுள்ளன. பொதுப் பட்டியலில் உள்ள ஒரு செய்தி பற்றி மாநிலச் சட்டமும் மையச்சட்டமும் முரண்படுமேயானால் மைய அரசின் சட்டமே செல்லுபடியாகும்.

அமெரிக்கா, ஆசுதிரேலியா, சுவிட்சர்லாந்து நாடுகளில் உள்ளதுபோல மாநிலங்களுக்கு எனத் தனி உரிமை அரசியல் அமைப்புகள் இந்தியாவில் இல்லை. பொது அரசியலமைப்பு ஒன்றுதான் உள்ளது. அது இரு அரசுகளுக்கும் சமமான நிலையை அளிக்கவில்லை. பல செய்திகளில் மாநிலங்கள், மைய அரசுக்குக் கட்டுப்பட்டுதான் இயங்கவேண்டும். நாடாளுமன்றம் மாநிலஅரசின் பரப்பைக் கூட்டவோ, குறைக்கவோ செய்யலாம். எல்லைகளையும் பெயர்களையும் மாற்றலாம். பிரித்துக் கூறுகளாக்கலாம். வெளிநாடுகளுடன் மைய அரசு செய்துகொள்ளும் ஒப்பந்தங்களை நிறைவேற்றும் பொருட்டுத் தேவையானால் மாநிலப் பட்டியலில் மைய அரசு தலையிட்டு அதிகாரம் செலுத்தலாம். பொதுவாக நாட்டு நலன் கருதி மாநிலப்பட்டியலை மைய அரசு எடுத்துக் கொள்ள முடியும். விளக்கப்பட்டுள்ள பல சூழ்நிலைகளிலும் நெருக்கடிக் காலங்களிலும் மையஅரசு மாநில அரசுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய விதிகளை அரசியல் அமைப்பில் காணலாம். அரசியல் அமைப்பைத் திருத்துவதில் மாநிலங்களுக்கு முதன்மை இல்லை. முக்கியமான சிலவற்றைத் தவிர்த்து மற்ற எல்லாச் செய்திகளிலும், மைய அரசின் நாடாளுமன்றமே திருத்தும் அதிகாரம் பெற்றுள்ளது.

மையஅரசில் மக்களவை, மாநிலங்களவை என்ற இரு மன்றங்களிருக்கின்றன. மாநிலங்களவை மாநிலங்களின் பேராளர்களைக் கொண்டது. அமெரிக்காவைப் போலச் சமப் பிரதிநிதித்துவம் என்பது இங்கே இல்லை. மாநிலங்களின் மக்கட்தொகை விழுக்காட்டின்படியே உறுப்பினர் எண்ணிக்கை உள்ளது. அதில் குடியரசுத் தலைவர் நியமிக்கும் பன்னிரண்டு உறுப்பினர்களும் உளர். இந்த அவைக்கு, மாநிலங்களின் தனி அதிகாரங்களில் தலையிடும் உரிமை உண்டு. மைய அரசின் கட்டளைகளை ஏற்று நிறைவேற்றாத மாநிலங்கள் மீது மைய அரசு நடவடிக்கை எடுக்கலாம்.

மாநிலங்களின் சட்டசபைகளில் மேல் சபையைப் பொறுத்தவரை, ஏதாவது மாற்றம் செய்யப்பட வேண்டுமென்றால் அதற்கு மையஅரசின் ஒப்புதல் இன்றியமையாததாகிறது. அதை மாற்றி அமைக்கவும் மைய அரசுக்கு உரிமையுண்டு. மாநிலங்களுக்கென வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்துவதில் கூடச் சில செய்திகளில் மைய அரசின் கட்டுப்பாடுகள் உள்ளன. எ.கா. சில பொருள்களின் மீது மாநில அரசுகள் இறக்குமதி வரி விதிக்க விரும்பினால் அத்தகைய சட்ட முன்வரைவுகளுக்கும் குடியரசுத் தலைவரின் ஒப்புதல் இன்றியமையாதது. சுருங்கக்கூறின், பொருளாதாரத்துறையில் இந்தியா ஓர் ஒற்றை ஆட்சி நாடாக இயங்குகிறது எனலாம்.

மாநில ஆளுநர்கள் குடியரசுத் தலைவரால் ஐந்து ஆண்டுகளுக்கு அமர்த்தப்பெற்று மையஅரசின் பேராளர்களாக ஆட்சி செலுத்துகின்றனர். இவர்களுக்குச் சில சிறப்பான அதிகாரங்கள் உண்டு. மாநிலப் பட்டியலில் அடங்கும் ஒரு செய்தியைப் பற்றி நிறைவேற்றப்பட்ட சட்டத்துக்கு, மாநில ஆளுநர் தமது ஒப்புதலை அளிக்காமல், குடியரசுத் தலைவரின் முடிவுக்கு ஒதுக்கி வைக்கலாம். சில செய்திகளில் கட்டாயமாக அவர் குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்குச் சட்ட முன்வரைவுகளை அனுப்பியே ஆகவேண்டும். நெருக்கடி, போர்க்காலம் ஆகியவற்றில் கூட்டாட்சி முறைக்குப் பதிலாக ஒற்றையாட்சி முறையே இயங்கும். அரசியல் அமைப்புப்படி மாநில அரசு இயங்கவில்லையென்று மாநில ஆளுநர்கள் அறிக்கை அனுப்பினால் மாநில அரசைக் கலைத்துவிட்டு, குடியாட்சித் தலைவரின் ஆட்சியை அங்கே ஏற்படுத்தவும் மைய அரசுக்கு இயலும்.

கடந்த சில ஆண்டுகளில் ஆளுநர்கள் மேற்கண்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி ஆந்திரா, கிழக்குப் பஞ்சாப், கேரளம், ஒரிசா, கோவா, அரியானா, மணிப்பூர், இராசஸ்தான், உத்திரப்பிரதேசம், மேற்கு வங்காளம், பீகார், பாண்டிச்சேரி, தமிழ்நாடு முதலிய பல மாநிலங்களில் குடியரசுத்தலைவரின் ஆட்சி புகுத்தப்பட்டது.

பொதுவாக, 1967ஆம் ஆண்டு வரை, காங்கிரசுக் கட்சி, மைய அரசிலும் மாநிலங்களிலும் வலிமை பெற்றிருந்தால் மைய - மாநில உறவுகளில் மிகுதியான சிக்கல்கள் ஏற்படவில்லை. பல சிக்கல்கள் கட்சி ஆதிக்க முறையில் தீர்க்கப்பட்டுவிட்டன. பிறகு, இந்தியாவில் பாதிக்கு மேற்பட்ட மாநிலங்களில் காங்கிரசு அல்லாத கட்சிகள், அரசாங்கங்களை அமைக்க நேரிட்டதன் விளைவாக, மைய - மாநில உறவுகளில் புதிய நிலைமை ஏற்பட்டுள்ளது. மாநிலங்கள் மிகுதியான அதிகாரங்களைப் பெற வேண்டுமென்ற மாநிலச் சுயாட்சிக் கொள்கையும் வலிமை அடைந்துள்ளது. மற்ற கூட்டாட்சி நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து, இந்தியாவில் மாநிலங்கள், மைய அரசுக்கு மிகுதியான அளவுக்குக் கட்டுப்பட்டிருக்கின்றன என்பது உண்மைதான். இதற்குக் காரணங்கள் அரசியல் அமைப்பை ஆக்கித்தந்த அரசியல் நிருணய சபையின் தன்மையும், அப்போதைய சூழ்நிலையும் ஆகும்.

இந்திய அரசியலமைப்பின் முன்னுரையில் உள்ள, குறிக்கோள் பகுதியையும், சவகர்லால் நேரு, அம்பேத்கார் முதலிய தலைவர்கள் அரசியல் நிர்ணய சபையில் அடிக்கடி கூறிய விளக்கங்களையும் கருத்திற் கொண்டுதான் இந்தியக் கூட்டாட்சி முறையை மதிப்பீடு செய்ய வேண்டும். குறிப்பாக, நேருவின் பின் வரும் அறிக்கை ஈண்டு சிந்திக்கத்தக்கது. அதாவது, மக்களுடைய வாழ்க்கைக் குறிக்கோளுடனும், ஆர்வங்களுடனும் தொடர்பில்லாத ஓர் அரசியல் அமைப்பு, பொருளற்றதாய் வெறுமை ஆகிவிடும். மிக விரைவாக மாறிவரும் கொந்தளிப்பான உலக நிலையில் இன்று செய்வது முற்றிலும் அப்படியே நாளைக்குப் பொருத்தமாக இருக்க முடியாது. கூடிய வரை செம்மையானதாகவும் வளைந்து கொடுக்கக் கூடியதாகவும் குறிப்பிட்ட ஒரு காலம் வரை, எளிதாக மாற்றக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

கூட்டாட்சிமுறை, மாநிலச் சுயாட்சி முறை முதலியனபற்றி அறிஞர் பலரும், குழுக்கள் பலவும் கருத்துகள் தெரிவித்திருக்கின்றன. மாநிலச் சுயாட்சி வேண்டுவோர், "மாநிலச் சுயாட்சி என்றால் இந்தியாவைத் துண்டுகளாகக் கூறுபோடுவதன்று.

மைய அரசுக்கும் மாநில அரசுக்குமுள்ள தொடர்புகளை மாற்றியமைப்பது" என்று விளக்கம் தருகின்றனர். அரசியல் அமைப்பை மாற்ற வேண்டியதில்லை. அதன் விதிகளை உண்மையான முறையில் உணர்ந்து தன்னல நோக்கும், கட்சிக் கொள்கை வெறியும் இல்லாமல், பதவியிலிருப்பவர்கள் நடந்து கொண்டால், மத்திய மாநில உறவுகளில் இணக்கமான தன்மை ஏற்படும் என்பதும் சிலர் கருத்தாகும். மாநிலச் சுயாட்சி என்ற பெயரால் அனைத்திந்திய ஒற்றுமையையும் நாட்டின் வலிமையையும் குன்றச் செய்யலாகாது என்ற வாதமும் சிந்தனைக்குரியது.

பொருளாதாரச் சீரமைப்பு முயற்சியில் பெருமளவு ஈடுபட்டுள்ள பழைய தலைமுறை மறைந்து புதிய தலைமுறை ஏற்பட்டு வரும் இக்காலத்தில் வாழும் இந்தியர்கள் மைய - மாநில உறவுகளைப் புதிய நோக்குடன் சிந்திக்க வேண்டியது இன்றியமையாதது. வரலாறு தரும் படிப்பினைகளை மறந்துவிடக் கூடாது. மிகுதியான அதிகாரக்குவிப்பு, வல்லாட்சி முறைக்கு இழுத்துச்செல்லும் என்று மகாத்மா காந்தி தம் ஆயுள் முழுவதும் கூறி வந்ததை நினைவுப்படுத்திக்கொள்ள வேண்டும். கொள்கை முறை வாதங்கள் ஒருபுறமிருக்க, நிலைமையைத் தன்மதிப்பு சிக்கலாகக் கொள்ளலாகாது. சிற்சில சூழ்நிலைகளில் மைய அரசிடம் அதிகாரக் குவிப்பு இருப்பது நல்லதுதான். ஆனால், அதனால் மாநிலங்களின் பொருளாதார ஆதாயத்திற்குத் தீங்கு நேர்ந்தால் கூட்டாட்சி உடைபட்டுவிடும் என்பதற்குப் போதுமான சான்று பங்களாதேசம்.

கூட்டாட்சிமுறை கேடுற்று மாநிலங்களின் நிலை மோசமாகுமானால் விளைவு இடராகிவிடும். இந்தியப் புவியியல் இன அமைப்பிலே, கூட்டாட்சித் தத் துவ முறை தடுத்து நிறுத்த முடியாத உயிர்நிலையாக ஓடிக்கொண்டிருக்கிறது.

அரசியல் அமைப்பு மாற்றுவதால், மத்திய-மாநில உறவு செம்மையுறும் என்று கூறமுடியாது. எந்த அரசியலமைப்பும் மக்களால் இயக்கப்படும் போது தான் உயிர்பெற்று வளர்கிறது. இயக்குபவரின் தன்மையையும், பண்பாட்டையும் பொறுத்துதான் அரசியல் அமைப்பு சிறப்புறும் அல்லது சிதைவுறும். மோசமான அரசியல் அமைப்புகள் கூட, இயக்குபவர்களின் சிறப்பினால் நன்றாகச் செயற்பட்டுள்ளன.

- தெ. பா.

**மொத்த நனவிலி நிலை** : இது ஆழ்ந்த நனவிலி நிலை ( Deep Unconscious State ) ஆகும். முழு நனவிலி நிலையை 1. மொத்த நனவிலி நிலை ( Coma ) எனவும், 2. உணர்ச்சியிழந்த நிலை ( Stupor ) எனவும் இரு வகைகளாகப் பிரிக்கலாம். மொத்த நனவிலி நிலையில் உயிரி ( Organism ) எவ்விதத் தூண்டலுக்கும் ( Stim lus ), துலங்கள் ( Response ) மறிவினை ( Reflex ) இன்றியிருக்கும். சுருங்கக்கூறின், பிணத்திற்கும் மொத்த நனவிலி நிலையில் இருப்பவருக்கும் ஒரே ஒரு வேற்றுமை உண்டெனின் அது மொத்த நனவிலி நிலையில் இருப்பவர் மூச்சு விட்டுக்கொண்டிருப்பார் என்ற ஒன்றாகும். உணர்ச்சியிழந்த நிலையில் இருப்பவர் நினைவற்று இருப்பினும் தூண்டலைத் தொடர்ந்து அதிக அளவில் கொடுத்தல் அவருக்குச் சிறிது எழுச்சியூட்டும்.

நீண்ட ஆழ்ந்த தூக்கம் ( Parasomnia ) என்பதும் ஒரு வகையான உணர்ச்சியற்ற நிலையாகும். இயக்கமற்ற பேசாத நிலையும் மற்றொரு வகையான உணர்ச்சியற்ற நிலையாகும். அரை மொத்த நனவிலி நிலை ( Semi Coma ) என்பது முழுவதும் நினைவற்ற நிலையாக இருப்பினும் அது மறிவினை உள்ள நிலையாகும். இதற்குக் கீழுள்ள நினைவுக் குறைநிலைகளைக் ( States of Impairment of Consciousness ) கடுமையான ( Severe ) நடுத்தரமான ( Moderate ) திண்மை குறைந்த ( Mild ) குழப்பநிலைகள் எனக் கொள்ளலாம். இவ்வாறு பலதரப்பட்ட நிலைகள் முழு நினைவு நிலைக்கும் முழு நனவிலி நிலைக்கும் நடுவே அமைந்துள்ளன.

**மொத்த நனவிலி நிலை ஏற்படக் காரணமான கூறுகள்** ; பல காரணங்கள் ஒன்றாக இணைந்து செயற்படுவதால் ஒவ்வொரு காரணக்கூறும் எவ்வாறு மொத்த நனவிலி நிலையை உண்டுபண்ணுகிறது என்பதை விளக்கமாக விவரிக்க இயலாது. இருப்பினும், சில முக்கியமான காரணக்கூறுகளை மட்டும் குறிப்பிட்டுக் கூறலாம்.

**மூளைக்குழாய் நோய்ப்புண்** : மூளைக்குச் செல்லும் இரத்தக்குழாயில் நோய்ப்புண் இருக்குமேயானால் அது நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஏறுமுக வலை அமைப்பில் ( Reticular Formation ) செயலுடன் குறுக்கிட்டு மயக்கம் அல்லது மொத்த நனவிலி நிலையை உண்டு பண்ணுகிறது. இந்தக் குறுக்கீடு மூளை உள் எலும்பினுள் ( Intra Cranial ) அழுத்தத்தை உண்டு பண்ணி மூளையின் உட்பகுதிகளுக்குத் தூய இரத்தம் எடுத்துச் செல்லும் தமனிகளைச் ( Arteries ) சுருங்கச் செய்கிறது. மொத்த நனவிலி நிலை ஏற்படு வதற்கு முன்பு மிகுந்த இரத்தக் கொதிப்பு ( Hypertension ) ஏற்படும். மூளைத்தண்டு நீரிலும் ( Cerebrospinal Fluid ) சிவப்பு இரத்த அணுக்கள் காணப்படும்.

**இடம் அடைக்கும் நோய்ப்புண்** : மூளை எலும்பினுள் கட்டி அல்லது சீழ் ( Intracranial Tumour or abscess) உண்டானால் மயக்கம் ஏற்பட்டுச் சிறிது சிறிதாக அக்கட்டியோ, அந்தச் சீழ்ப்புண்ணோ வீங்கி மூளையின் உள்ளிருக்கும் இடத்தை அடைத்து மொத்த நனவிலி நிலையை ஏற்படுத்தும். முடிவாக மொத்த நனவிலி நிலை ஏற்படும்முன்பு தலைவலி பொறுக்க முடியாத அளவிற்கு இருக்கும். வயது வந்தோர்களுக்குக் குறிப்பாக இரத்தக் கொதிப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எளிதில் இந்தக் கோளாறைக் கண்டு பிடிக்க இயலும்.

**தலைக்காயம்** : தலைக்காயத்தினால் நினைவு தவறும்போது பெரும்பாலும் அந்தக் காயம் மண்டையோட்டின் அடிப்பகுதியிலோ, மேற்பகுதியிலோ முறிவு ஏற்படும். இவ்வாறு தலையில் படும் காயம் மறைமுகமாக மூளையைத் தாக்கக்கூடும். எ.கா. உள்ளிருக்கும் கழுத்துப் பக்கமான தமனியில் ( Internal Carotid Artery ) இரத்த உறைவு ( Thrombosis ) உண்டாகும். இதனால், மூளை உள்எலும்பினுள் அதிர்ச்சி ஏற்பட்டு அங்கிருக்கும் தமனிகள் வெடித்துப் படிப்படியாக மொத்த நனவிலி நிலையை உண்டாக்குகின்றன. சிலமுறை மூளை வெளியுறையின் கீழ் இரத்தக்கட்டி ஏற்பட்டு அது முற்றி மொத்த நனவிலி நிலைக்கு அடிகோலும்.

**மூளை உறை காய்ச்சல் மற்றும் மூளைக் காய்ச்சல்** : மூளை உறைக் காய்ச்சலினால் மொத்த நனவிலி நிலை தோன்றுமேயாகில் அதற்குமுன் அறிகுறிகளில் முதன்மையாக இருப்பது தீராத தலைவலியாகும். பின்பு கடுமையான காய்ச்சல், முறைப்பான கழுத்து ( Cervical Rigidity ) முதலியன அறிகுறிகளாகத் தோன்றி முடிவாக மொத்த நனவிலி நிலை உண்டாகும். மூளைக் காய்ச்சலினால் ஏற்படும் மொத்த நனவிலி நிலையும் முதல் கட்டத்தில் காய்ச்சலாகத் தோன்றிப் பின்னர்ப் படிப்படியாக நோய் முற்றி முடிவில் மொத்த நனவிலி நிலையை வந்தடையும். மூளைக் காய்ச்சலினால் மொத்த நனவிலி நிலை ஏற்படும் முன்பு மூளை பரவலாகப் பாதிக்கப்பட்டுச் சில சமயங்களில் தண்டு வடமும் பாதிக்கப்பட்டு மூளைத் தண்டு வட நீரில் நோய்த்தன்மை மிக்க வேதியியல் மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**வளர்சிதைக் கோளாறுகள்** : சிறுநீரக நோய்கள் சிலவற்றால் சிறுநீர்த்தேக்கம் ஏற்பட்டு அதனால் நச்சுப்பொருள்கள் வெளியேற்றப்படாமல் இரத்தம் அசுத்தமடைந்து இதனால் மூளைக்குத் தூய இரத்தம் செல்லாமல் மொத்த நனவிலி நிலை உண்டாகும். இத்தகைய மொத்த நனவிலி நிலைக்கு மிகைஉப்பு நனவிலிநிலை ( Ureamic Coma ) என்று பெயர். இதே போன்று சர்க்கரை நோயின் ( Diabetes ) காரணமாகவும் மொத்த நனவிலி நோய் ஏற்படலாம். அதாவது இரத்தத்திலும், சிறுநீரிலும் மிக அதிக அளவு சர்க்கரை கலந்திருந்தால் மொத்த நனவிலி நிலை ( Hyperalgesia ) ஏற்படும் இதற்கு மிகை சர்க்கரை நனவிலி நிலை ( Diabetic Coma ) என்று பெயர்.

சர்க்கரையின் அளவு இரத்தத்தில் மிகவும் குறைவாகயிருந்தாலும் மொத்த நனவிலி நிலை ஏற்படும். இதைக் குறை சர்க்கரை நனவிலி நிலை ( Hypoglycemic Coma ) என்றழைப்பர். இந்நிலை மிகவும் துன்பமானது. ஏனெனில் மொத்த நனவிலி நிலை ஏற்பட்டவுடன் கவனிக்காமலிருந்தால் மூளை என்றுமே பழுதடைந்து சிறு மூளையில் ( Cerebellum ) இருக்கும் பிரகஞ்சி உயிரணுக்கள் ( Prukinje Cells ) பாதிக்கப்படும். இதனால், மனநோயும், நடைக்கோளாறும் ( Dementia and Cerebellar Alaxia ) உண்டாகும். அதிக வெப்பத் தின் ( Heat Stroke ) காரணமாகவும் குறைந்த உடல் வெப்ப நிலையாலும் ( Hypothermia ) மஞ்சள் காமா லைநோய் முற்றிப்போனாலும் ( Hepatic Coma) மொத்த நனவிலி நிலை உண்டாக வாய்ப்புகள் உள்ளன. இதேபோன்று இரத்தத்தில் சுண்ணாம்புச் சத்து அதிகமிருந்தாலும் ( Hyper Calcaemia) மனக் குழப்ப நிலை ஏற்பட்டுப் பின்னர் மொத்த நனவிலி நிலை தோன்றும். சில முறைகளில் நரம்பு தசைக்கோளாறினால் மூச்சுத் தடைப்பட்டு, அதனால் நுரையீரல்கள்

தெரிய நேரிடும். மேலும், இரத்தத்தில் உள்ள தாதுப்பொருள்களையும் ( Blood Electrolytes ) சோதித்துப்பார்க்கையில் அவற்றில் ஏதேனும் பிறழ்வு ஏற்பட்டுள்ளதா என்று அறியலாம். அவ்வாறு பிறழ்வு இருந்தால் மொத்த நனவிலி நிலை அதனால் ஏற்படுகிறது என்று திட்டவட்டமாகக் கூறலாம். எக்சு கதிர்களைக் கொண்டு மண்டையோட்டைப் படம்பிடித்து மூளை குழாய் மானி ( Cerebral Angiogram), மின் மூளை மானி ( Electro Encephalogram ), மின் இதயமானி ( Electro Cardiograph ) மூலம் மொத்த நனவிலி நிலை ஏற்பட்டதன் காரணத்தை அறியலாம். மேற்கூறிய பல்வேறு முறைகள் மூலம் மொத்த நனவிலி நிலை எக்காரணங்களால் ஏற்பட்டது என்று தெரிந்து கொள்ள முடியும். மொத்த நனவிலி நிலையின் பல்வேறு நிலைகளைக் கிளாசுகோ மொத்த நனவிலி நிலை அளவீடு ( Glasgow Coma Scale ) என்ற பட்டியலைக் கொண்டு அறியலாம்.

**மொத்த நனவிலி நிலையிலுள்ள நோயாளியைப் பாதுகாக்கும் விதம்** : இப்போது மொத்த நனவிலியில் உள்ள நோயாளியைப் பாதுகாக்கப் பல புதிய சாதனங்கள் உள்ளன. எனினும், சில அடிப்படை முறைகளைக் கருத்தில் கொண்டு அந்நோயாளியைப் பாதுகாத்தல் வேண்டும். அவை 1. மெல்லிய தலையணைமீது தலையைச் சாய்த்துப் படுக்க வைக்க வேண்டும். இரண்டு மணி நேரங்களுக்கு ஒருமுறை நோயாளியை மற்றொரு பக்கமாகத் திருப்ப வேண்டும். இதன் மூலம் தோலில் சில இடங்களில் அழுத்தம் காரணமாகப் புண்கள் ஏற்படாமல் தவிர்க்கலாம்.

2. வாயையும் முன் தொண்டையையும் ( Pharynx ) அடிக்கடி பஞ்சுத் துடைப்பத்தைக் ( Swab ) கொண்டு கிடுக்கியினால் ( Forcept ) பிடித்துத் தூய்மை செய்ய வேண்டும். இதனால் கோழையும், எச்சிலும் தொண்டையில் சேராமல் தடுக்கலாம். அப்படிச் சேர்ந்தாலும் மெல்லிய இரப்பர் உறிஞ்சு குழாய் ( Catheter ) மூலம் அகற்றி விடலாம். நோயாளியை அடிக்கடித் திருப்புவதாலும், மார்பில் குறிப்பாக நுரையீரலின் அடிப்பகுதி மீது இதமாகத் தட்டுவதாலும் நுரையீரலைச் சரிவர இயங்கச் செய்ய முடியும்.

3. தொண்டைக் குழாய் மூலம் ( Oesophaegal Tube ) அடிக்கடி சத்துள்ள உணவை நீராகக் கொடுக்க வேண்டும். 4. மொத்த நனவிலி நிலை நோயாளிக்குச் சிறுநீர் கழிப்பதில் கோளாறு ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, உறிஞ்சு குழாயை மாட்டி அதன்மூலம் சிறுநீரை அகற்ற வேண்டும். மூன்று நாட்களுக்கு ஒருமுறை உறிஞ்சு குழாயை மாற்றவேண்டும். சிறுநீரை அடிக்கடிச் சோதித்துப் பெருவாரி நோய் ( Infection ) உள்ளதா எனப் பார்க்க வேண்டும். மலச் சிக்கல் ஏற்படாமல் இருக்கக் குடலைக் கழுவ வேண்டும்.

- வ. தே. சா.

**மொழிக் குடும்பம் :** மொழியியலார் சமிட்டு (W. Schmidt ) என்னும் அறிஞரைப் பின்பற்றி உலகத்தைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியிலுள்ள மொழிகளையும் பல குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். ஒரே மொழியினின்றும் ஒலியாலும் வரி வடிவத்தாலும் மாறுபட்டுப் புதிய பரிமாணத்தில் வெளிப்படுபவை கிளை மொழிகள் எனப்படும்.

**யூரேசியா** ( Eurasia ) : *1.* இந்தோ - ஐரோப்பியக் குடும்பம். இதில் ஐரோப்பாவிலும் இந்தியாவிலும் இடையிலுள்ள பகுதியிலுமுள்ள பெரும்பான்மையான மொழிகள் அடங்கும். இந்தோ - ஐரோப்பிய மொழி பயின்றோர் இரைன் ஆற்றுக்கும் ஆக்சசு (Oxus) ஆற்றுக்குமிடையில் வசித்தனர் என்றும், பின்னர் மேற்கு, தெற்கு, தென்கிழக்கு ஆகிய திசைகளில் பரவினர் என்றும் தெரிகிறது.

இந்தக் குடும்பத்தின் முக்கியமான மொழிப் பிரிவுகள் *1.* செருமானியம் ( Germanic ), *2.* இத்தாலியம் ( Italic ), *3.* உரொமான்சு ( Romance ), *4.* கெல்டிக் ( Celtic), *5.* எல்லனிக் ( Hellenic ), *6.* இசுலேவிக் ( Slavic ), *7.* பால்டிக் ( Baltic ), *8.* இந்தோ - இரானியன் ( Indo - Iranian ) ஆகியன.

**உரேலிக் குடும்பம்** : இந்த மொழிகள் ஆதியில் பயின்ற இடம் வால்கா ஆற்றின் பெருவளைவு காணுமிடமாகும். இந்தக் குடும்பத்தின் முக்கிய மொழிப் பிரிவுகள் *1.* பின்னோ - அக்ரிக் ( Finno - Ugric), *2.* சாமோஎத் ( Samoyed ).

**ஆல்டேயிக்குக் குடும்பம்** ( Altaic ) : இந்த மொழி பயின்றோர் ஆசியாவில் புல்வெளிகளில் வசித்து துர்கோ - தார்த்தாரியர்கள், மங்கோலியர், துங்கு சிக்கர் ஆகியோர். மேற்குத் துர்க்கியிலிருந்து மத்திய ஆசியா வழியாக மங்கோலியா, சைனா, பசிபிக் பெருங்கடல் வரை இம்மொழி பேசுவோர் காணப்படுகின்றனர். இந்தக் குடும்பத்தின் முக்கிய மொழிப்

பிரிவுகள் 1. துர்க்கி ( Turkic ), 2. மங்கோலியன் ( Mangolian), 3. துங்குசிக்கு ( Tungusik ) என்பனவாகும்.

**காக்கேசியன் குடும்பம்** ( Caucasian ) : இந்த மொழிகள் காக்கசசு ( Cakcasus ) என்னுமிடத்தில் (சோவியத் நாடு) பேசப்படுகிறது. காசுபியன் கடலுக்கும் கறுப்புக் கடலுக்கும் இடையிலும் பேசப்படுகிறது. இந்தக் குடும்பத்தின் முக்கிய மொழிப்பிரிவுகள் 1. தென் காக்கேசியன் ( Southern ), 2. கிழக்குக் காக்கேசியன் ( Eastern ), 3. மேற்குக் காக்கேசியன் ( Western ), 4. தாசெசுதான் ( Dagestan ), என்பனவாகும்.

**ஆசியா** : பழைய ஆசிய மொழிகள்- இவை ஆல்டேயிக்கு மொழிகளையும் ஏசுகிமோ மொழிகளையும் இணைப்பன. இவற்றுள் முக்கியமானவை சப்பானியம் ( Japanese ), கொரியன் ( Korean ), வியட்நாமிசு ( Vietnamese ), பாசுக்கியூ ( Basque ), புருசசுகி ( Burushaski ), அய்னு ( Ainu ) ஆகியன. இவை எந்த மொழிக் குடும்பத்தோடும் சேராமல் தனித்து நிற்கும் மொழிகளாகும்.

**சீனா - திபேத்திய மொழிக்குடும்பம்** : இந்த மொழிகள் சீனா, பர்மா, இந்தியா, நேபாளம் முதலிய நாடுகளில் பேசப்படுகின்றன. இந்தக் குடும்பத் தின் முக்கிய மொழிப்பிரிவுகள் 1. சினிடிக்கு ( Sinitic), 2. திபெத்தோ - பர்மன் ( Tibeto - Burman ), 3. தாய் ( Tai ), 4. மியாஓ - யாஓ ( Miao - Yeo ), என்பனவாகும். உலகின் மிகப்பெரிய நாகரிக மொழிக் குடும்பங்களில் இதுவும் ஒன்று.

**திராவிட மொழிக்குடும்பம்** : இந்தியாவிலும், இலங்கை, பாகிஸ்தான் முதலிய இடங்களில் பேசப்படும் மொழி திராவிட மொழிகளாகும் ( Dravidian ). இந்தக் குடும்பத்தின் முக்கியமான மொழிப்பிரிவு கள் 1. தென் திராவிட மொழிகள் ( South Dravidian ), 2. மத்திய திராவிட மொழிகள் ( Central Dravidian ), 3. வட திராவிட மொழிகள் ( North Dravidian ) ஆகும். குடகு, குருக், கூயி, பிராகூயி, தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், கோண்டி, துளு போன்றவை முக்கியமான மொழிகளாகும்.

**முண்டா குடும்பம்** : இம் மொழிகள் பேசுவோர் இந்தியாவின் வட பாகத்திலும், மத்திய பாகத்திலும் வசித்தனர். இம்மொழிக் குடும்பத்தில் காணப்படும் முக்கிய மொழிகள் 1. சந்தாலி ( Santali ), 2. முண்டாரி ( Mundari ), 3. கோ ( Ho ), 4. சவரா அல்லது சோரா ( Savara ), 5. கொர்க்கு ( Korku ) ஆகியன.

**மோன் - குமர் மொழிக்குடும்பம்** : இம் மொழிகள் பேசுவோர் தென்கிழக்கு ஆசியாவில் காணப்படுகின்றனர். இம்மொழிக் குடும்பத்தில் காணப்படும் முக்கிய மொழிகள் 1. பாலௌங் ( Palaung ), 2. வா ( Wa ) அல்லது காவா ( Kawa ) , 3. பாக்னர் ( Bahnar ), 4. சேடாங்கு ( Sedang ), 5. காசி ( Khasi ), 6. குமர் ( Khmer), 7. நிக்கோபரிசு ( Nicobarese ) ஆகும். சில சமயம் இம்மொழிக் குடும்பமும் முண்டா மொழிக் குடும்பமும் இணைந்து அசுடிரோ - ஆசியாட்டிக்கு மொழிக் குடும்பம் என உருவாகலாம்.

**மலேயா - பாலினேசியன் மொழிக்குடும்பம்** ( Malayo - Polynesian ) : இக்குடும்பத்தை ஆசுடிரோனேசியன் ( Austronesian ) எனவும் குறிப்பிடுவர். இம் மொழிக் குடும்பம் உலகில் பாதியளவு இடங்களில் மடகாசுகர் ( Madagascar ) முதலான தென்கிழக்கு ஆப்பிரிக்கா, இந்தோனேசியா, பிலிப்பைன்சு, பசிபிக் பெருங்கடல் வரை காணப்படுகிறது. இம் மொழிக் குடும்பத்தில் காணப்படும் முக்கிய மொழிப் பிரிவுகள் 1. இந்தோனேசியன் ( Indonesian ), 2. மைக்ரோனேசியன் ( Micronesian ), 3. மெலனேசியன் ( Malanesian ), 4. பாலினேசியன் ( Polynesian ) என்பனவாகும்.

**பப்புவான் மொழிக்குடும்பம்** : இம்மொழிகள் பேசுவோர் நியூகினியா ( New Guinea ), நியூ பிரிட்டன் ( New Britian ) சாலமோன் தீவுகளின் கிழக்குப்பகுதிகளில் பேசப்படுகிறது. இம்மொழிக் குடும்பத்தில் காணப்படும் முக்கிய மொழிகள் 1. எங்க ( Enga ), 2. சிம்பு ( Chimpu ), 3. காகென் ( Hagen ), 4. காதே ( Kate), 5. மாரிந்து ( Marind ), 6. நிம்போரான் ( Nimboran ), 7. பயனிங்கு ( Baining ) என்பன.

**ஆசுதிரேலியன் மொழிக்குடும்பம்** : இம்மொழிகள் பேசுவோர் ஆஸ்திரேலியாவில் காணப்படுகின்றனர். இம்மொழிக் குடும்பத்தின் முக்கிய மொழிகள் 1. அரந்தா அல்லது அருந்தா ( Aranda ), 2. முர்ன்கின் ( Murngin ) ஆகும்.

**பாலியோ - ஆசியாட்டிக்கு மொழிக்குடும்பம்** ( Paleo - Asiatic ) : இம்மொழிகள் பேசுவோர் சைபீரியாவின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் காணப்படுகின்றனர். இம்மொழிக் குடும்பத்தின் முக்கிய மொழிகள் 1. சுக்கி ( Chukchi ), 2. கொர்யாக்கு ( Koryak),

உள்ளன. அவை ஆசுடிரிக்கு, இந்தோ - ஆரியன், திபெத்தே - சீனா, திராவிடம் என்பவையாகும்.

- இரா. மு.

**மொழித் தத்துவம்** : மொழித் தத்துவம் என்பது மொழியானது தத்துவம் ஒன்றை ஆராய்வதற்கு எந் நிலையில் பயன்படுகிறது என்பதை விளக்குவதாகும். தத்துவ அறிஞர்கள், மொழியின் அமைப்பினை ஆராய் வதன் மூலம் உலகைப்பற்றிய உண்மைகளை அறிந்து கொள்ள முடியும் என்று கருதுகின்றனர்.

மொழியைப் பற்றி பிளாட்டோ தம்முடைய குடியரசு என்னும் நூலில் குறிப்பிடுகிறார். அவர், தனிப் பட்ட பொருள்கள் பொதுவானத் தன்மையுடைய குணங்களைக் கொண்டிருந்தால் அக்குணங்களை, ஒன்றுடன் ஒன்று பொருந்துகின்ற கருத்து அல்லது அமைப்பு என்று கொள்ளலாம் என்கிறார். அக்கருத்தின் அடிப்படையில் மொழியால் ஒரு பொருளின் உள்ளிட்ட அமைப்பை ஆராயும் முறையைப் பிளாட்டோ கூறுகிறார். அரிசுடாட்டிலும், மொழித் தத்துவம் பற்றிய உண்மைகளைக் கூறுகின்றார். சில சொற்கள் பொருளுடையன என்றும், ஆனால் அவை தனித்து பொருளைத்தரா என்றும் கூறுகின்றார். மாறாக, இச் சொற்கள் வெளிப்படுத்தும் குணங்கள் ஒரு பொருளைச் சார்ந்திருந்தே அப்பொருளில் குணமாக அமைகின்றன. இச்சொற்கள் ஒரு பொருளின் அல்லது ஒரு மனிதனின் இயக்கத்தை வெளிப்படுத்தும் பொழுது அவை வாக்கியங்களில் பயனிலையாக அமைகின்றன.

மேலும், அரிசுடாட்டில் மேற்கூறிய வகையில் அமையும் சொற்களை வினைச்சொல்லாகக் கொண்டு எழுவாயுடன் இணைத்து ஒரு வாக்கியத்தின் வழியாகக் குறிப்பிடலாம் என்கிறார். எனவே, புலன் கடந்த அறிவியல் உண்மைகள் மொழியின் வழியாக வெளிப்படும்போது, அதன் எழுவாய் மட்டும் நிலை பேற்றுடன் இருக்க முடியும் என்பதும், ஒரு செய் கையோ இயக்கமோ தனித்து இயங்க முடியாது என்பதும் அறியப்படுகின்றன. ஆகவே, உலகில் மெய்ப் பொருள் மூல ஆராய்ச்சியின் வழி ஒரு வாக்கியத்தை ஆராயும்பொழுது அதில் எழுவாய் அடிப்படையாக இருந்து அதன் இயக்கமானது அதற்குத் துணை யாகவே அமைகின்றது என்பதும் பெறப்படுகின்றது.

அரிசுடாட்டிலினுடைய புலன் கடந்த அறிவியலா னது மேன்மெலும் வளர்ச்சியடைந்து இருபதாம் நூற்றாண்டில் ஓர் இயக்கமாகவே மலர்ந்துள்ளது. அவ்வியக்கம் 'தருக்க அணுவாதம்' எனப்படும். இவ் வியக்கத்திற்கு பெட்ரண்ட் இரசல் ( Betrand Russell ), உலுட்விக் விட்சின்சுடன் ( Ludwing Wittegensteerrn ) ஆகியோர் வித்திட்டனர். வாக்கியத்தில் தருக்க முறையில் அமையும் குறியீடானது ஒரு கருத்தினை நேரடியாகக் குறிக்கின்றது என்றும், பல்திறக் கூட் டொருமையில் அமையும் குறியீடுகள் அதே நிலையில் நேரடியாக வாக்கியத்தின் கருத்துகளைக் குறிக்கின்றன என்றும் இரசல் கூறுகின்றார். இக்கூற்றின் அடிப்படை யில் தருக்க அணுவாதம், முறையான மொழியமை வைக் கொண்டிருக்கிறது. இதனால் எங்ஙனம் வாக் கியத்தில் பல்திறக் கூட்டொருமைக் கருத்துகள் அமைந் துள்ளன என்பதை வரைமுறைப்படுத்தலாம். மேலும், வாக்கியத்தில் ஒவ்வொரு சொற்களும் எந்த முறை யில் இணக்கம் பெற்றுள்ளன என்பதையும், வேறு வேறு கருத்துகளை வெளிப்படுத்தும் சொற்கள் தருக்க முறையில் ஒன்று மற்றொன்றைச் சார்ந்திருக்கின்றன என்பதையும் அறிந்து கொள்ள முடியும்.

மொழியில் காரண காரிய அணுகுமுறையின் முக் கியத்துவத்தை அறிந்து கொள்ள வேண்டும். மொழி யால் அறிந்து கொள்ளப்படும் புலன் கடந்த அறிவியல் கருத்துகளைவிட அதில் காரணகாரிய அமைவுமுறை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. வாக்கியத்தின் பல் வேறு நிலையில் அமைந்திடும் கருதுதல் முறையைப் பகுத்து ஆராய்தல் வேண்டும். அங்ஙனம் பகுத்து ஆராய்வதால் வாக்கியங்களின் ஏற்புடைமைநிலை, ஏற்புடைமையாக நிலை ஆகியவற்றை அறிந்து கொள்ள முடியும். இதற்கு வாக்கியத்தில் அமைந் திடும் விவாத நிலையையும், உண்மைகள் வெளிப் படும் பாங்கையும் பகுத்திடல் வேண்டும். இதற்கு ஒன்றுடன் ஒன்று சார்ந்திடும் வாக்கியங்களுக்கும் அவற்றின் ஏற்புடைமைக்கும் முடிவு வேண்டும். இதனால் மேலெழுந்தவாரியாக காரண காரிய முறை யில் வாக்கியங்கள் அமைந்திருந்தாலும் அவற்றில் வெளிப்படும் உண்மைகள் ஏற்புடையாகாமையை எளிதில் அறிந்துகொள்ள முடியும். மேலும், காரண காரிய முறையில் ஒன்றை ஒன்றைச் சார்ந்திருக்கும் வாக்கியங்கள் குறிக்கும் உண்மைகள் முறைப்படுத்தப் பட்டனவாகவும், நடைமுறையில் நிகழக்கூடியன வாகவும் இருத்தல் அவசியம்.

மொழித் தத்துவத்தில் அறிவாய்வியல் கருத்துகள் வெளிப்படும் முறையை ஆராய்வது முக்கியம். இக் கருத்துகளில், புலன்வழி நுகர்ச்சி சாராது மனக்கோட்பாடுகளிலிருந்து உண்மை முடிவுகளுக்கு வர வேண்டும் என்ற அறிவு வெளிப்படும் முறை முக்கியமான தாகக் கருதப்படுகின்றது. இவ்வறிவினைக் கணிதத் துறையிலிருந்து பெறலாம். மேலும், இவ்வகை யிலான அறிவை அனுபவத்தின் வழியாகவும் பெற லாம் என்ற கொள்கையை உடையவர்களும் உண்டு. கணிதத்தில் வெளிப்படும் உண்மைகளை நடைமுறை யில் அடிப்படையில் பொய் என்று நிருப்பிப்பது கடி னம். இப்பின்னணியில் ஒரு வினா எழுகின்றது. குறி யீடுகளின் வெளிப்படாய் அமைந்திடும் உண்மையும், நடைமுறையில் வெளிப்படும் உண்மையும் ஒன்றாக இருப்பதற்குக் காரணம் யாது? என்பதே அவ்வினா வாகும். இதற்குச் சரியான விடையை வரையறுக்க லாம். கணிதத்தில் கையாளும் குறியீடுகள் வெளிப் படுத்தும் உண்மைகள் சரியானவையாக இருப்ப தாலும் அவை பொருள் வரையறையின் முடிவுக்கு ஏற்புடையதாகவும் இருப்பதாலேயே முடிவு சரியான தாக இருக்கின்றது.

தத்துவக் கருத்துகளை மொழியின் வழியாகத்தான் வெளிப்படுத்த முடியும். அறிவியல் உண்மைகளை வெளிப்படுத்துவதை விட தத்துவத்தை வெளிப்படுத் துவதற்கு மொழியானது மிகவும் தேவையுடையதா கின்றது. ஆகவே, மற்றவர்களைவிட தத்துவ அறிஞர் களே மொழியிலுள்ள குறைகளை ஆராய்ந்து அவற்றை நிறைவு செய்ய முயன்றுள்ளனர். மேலும், இறையிணைவுப் பண்புடன் உள்ளுணர்விற்கு ( Mystical intuition ) முக்கியத்துவம் கொடுப்பவர் களான பிளாட்டினசு ( Plotinus ) மற்றும் ஹென்றி பெர்க்சான் ( Henry Bergson ) ஆகியோர் நடைமுறை யில் இருக்கும் மொழியானது நுணுகிய தத்துவ உண்மைகளை வெளிப்படுத்த ஏற்புடையதாகாது என்று கருதுகின்றார். மேலும், அவர்களுடைய கருத்துப்படி, ஒருவன் பேருண்மையுடன் தடைகளற்று இணைவதால் அவனுக்கு ஏற்படக்கூடிய பேரின் பத்தை அனுபவிக்கத் தான் முடியுமே அன்றி, அதனை மொழியின் வழி வெளிப்படுத்த முடியாது என்று கருதுகின்றனர்.

மொழியில் ஏற்பட்டுள்ள குறைகளைக் களைய முற்படும் தத்துவ அறிஞர்களை எளிய மொழிநடை யை விரும்புகின்றவர்கள் என்றும், தத்துவத்தின் அடிப்படையில் மொழியை மாற்றி அமைக்க வேண் டும் என்று விரும்புகின்றவர்கள் என்றும் இரண்டு பிரி வாகப் பிரிக்கலாம்.

எளிய மொழிநடையை ஆதரிக்கின்றவர்கள், நாள் தோறும் மக்களிடையே புழக்கத்திலுள்ள மொழியின் வழியாகத் தத்துவ அறிஞர்கள் தங்கள் கருத்துகளை வெளியிட வேண்டும் என்று விரும்புகின்றனர். சான் லாக் அறிவாராய்ச்சி முறைசார்ந்த தொடர்கள் நிரம் பிய மொழி நடை ஏற்புடையதாகாது என்று கருதி னார். ஆனால், இன்றைய நிலையில் அதுவே வளர்ச்சி யுற்று, "எளிய மொழி நடையில் அமைந்த மொழித் தத்துவம்" என்னும் தத்துவ இயக்கமாக மிளிர்ந்துள் ளது. இதனையே விட்சின்சுடன் எழுதிய நூல்களில் காணமுடிகின்றது. இவர் தத்துவம், மொழியின் வழி வெளிப்படும்போது ஏற்படும் நடைமுறைச் சிக்கலை ஆராய்ந்துள்ளார். அவர், தத்துவ அறிஞர்கள் சாதாரண மாகப் பயன்படுத்தும் முக்கியச் சொற்களான அறிதல், பார்த்தல், காரணம் ஆகியவைகளுக்கு வேறுவித மானப் பொருளைக் கற்பித்துவிடுவதால் அதனைச் சாதாரணமானவர்கள் படிக்கும்பொழுது அவர்களுக்கு நடைமுறைச்சிக்கல்கள் ஏற்படுகின்றன என்று கருது கின்றார். மேலும், தத்துவ அறிஞர்கள் தாங்கள் நினைப்பதுபோல், உணர்வது போல் தாங்கள் கையாளும் மொழியைப் படிப்பவர்களும் எண்ணு வார்களா, உணர்வார்களா என்று நினைத்துப் பார்ப்ப தில்லை. மேலும், தத்துவ அறிஞர்கள் இன்று இப்படி மொழியைக் கையாண்டால் நாளை கால மாறுபாட் டால் அம்மொழி வெளிப்படுத்தும் பொருளானது வேறுவிதமாக மாறிவிடும் என்பதையும் ஆராய்ந்து பார்ப்பதில்லை. தத்துவ அறிஞர்கள், மருத்துவர்கள் நோயினைக் குணப்படுத்துவதைப் போன்று மொழி யில் ஏற்படும் குறைகளை அந்த அந்தக்கால கட்டத் திற்கு உகந்தார்போன்று நிறைவு செய்ய வேண்டும்.

தத்துவத்தின் அடிப்படையில் மொழியை மாற்றி யமைக்க விரும்புகின்றவர்கள் எளிய மொழி நடை யானது தத்துவத்தை வெளிப்படுத்த ஒவ்வாதது, தெளிவற்றது, இருபொருளைத் தரக்கூடியது. பின்ன ணியைப் பொறுத்தது, உண்மையை அப்படியே வெளிப்படுத்த முடியாதது போன்ற குறைகளையுடை யது என்று கருதுகின்றனர். இவர்களில் கிலைபினிட்சு, பெட்ரண்ட் இரசல் மற்றும் கார்னாப் ஆகியோர் முக்கியமானவர்களாவார்கள். இவர்கள் நடைமுறை யிலுள்ள மொழியைக் குறைகள் இல்லாமல்

உண்மையை அனைவருக்கும் ஒரே நிலையில் வெளிப் படுத்தும் நிலையில் மாறியுள்ளனர்.

மேலும், தத்துவ அறிஞர்கள் மொழியின் வழியாக அறிவின்தன்மை, காரணகாரிய அணுகுமுறையின் மேன்மை, நீதியின் முக்கியத்துவம் ஆகியவற்றை ஆராய்வதில் முன்னேற்றம் கண்டுள்ளனர். எ.கா. தத் துவ அறிஞர்கள் கையாளும் காரண காரிய அணுகு முறையை மூன்று வழிகளில் அறியலாம். 1. அவர்கள் காரண காரியத்தின் இயற்கைத் தன்மையை ஆராய் கின்றார்கள். 2. அவர்கள் காரணகாரிய அணுகுமுறை யின் உள்ளீடாகக் கொண்டிருக்கும் கருத்தினை ஆராய் கிறார்கள். 3. அவர்கள் எந்த ஒன்று எதற்கு காரண மாகின்றது என்று கொண்டு அதன் விளைவுகளைத் தெளிவாக விளக்குகின்றார்கள். பொதுவாக, தத்துவ அறிஞர்களது நோக்கம் அறிவாய்வியலுக்கே முக் கியத்துவம் கொடுப்பது, ஆனால் அதனை முறையாக வெளிப்படுத்தும்போது அவர்கள் கூறும் கருத்துகள் மொழியின் அமைப்பில் தெளிவான முடிவைப் பெறு கின்றன. இந்நிலையில் மொழியின் அமைப்பும், அம்மொழியின் வழியாக வெளிப்படும் அறிவாய் வியல் சார்ந்த கருத்துகளும் செம்மையான முறையில். அமைந்து அதில் குறைகள் இல்லாத நிலையை அடைகின்றது.

பகுப்பாராய்ச்சி முறையைக் கடைப்பிடிக்கும் தத் துவ அறிஞர்கள் மொழியின் வழி வெளிப்படும் அறி வாய்வியல் கருத்துகளுக்கு முன்னுரிமை தராது மொழிக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கின்ற னர். தத்துவ அறிஞர்கள் மொழியின் தன்மையைச் சோதித்து அதில் பின்வரும் கேள்விகளை எழுப்பி அதற்கு அம்மொழியானது சரியான விடையைக் கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றனர்.

1. ஏன் மொழியின் வழி வெளிப்படும் உண்மை கள் பொருளுடையதாக இருக்க வேண்டும்?

2. எதன் பின்னணியில் இருவகையாக அமைந்தி டும் மொழி நடை உண்மையை வெளிப்படுத்துகின் றது?

3. எதன் அடிப்படையில் ஒரு வாக்கியத்தில் அமைந் திடும் ஒரு சொல் இரு வேறுபட்டப் பின்னணியில் வேறு வேறு கருத்துகளை வெளிப்படுத்துகின்றது?

4. எவ் வழிகளில் வாக்கியத்தில் கையாளப்படும் சொற்கள் பொருளற்றவைகளாகின்றன?

5. எவ்வகையில் ஒரு வாக்கியம் குறியீட்டால் எழுதும் பொழுது வேறுபடுகின்றது?

6. எத்தன்மையில் ஒரு சொல்லானது பொருளை வெளிப்படுத்துகின்றது?

7. மொழியின் அமைப்பிற்கும் அதன்வழி வெளி படும் கருத்தோட்ட அமைவிற்கும் இடையிலான தொடர்பு என்ன?

8. மொழியியல் பகுப்பால் ஏற்படும் விளைவு களுக்கும் மொழிக்கும் இடையிலான பல்வேறான இணைப்புகள் என்னென்ன?

9. சமயக்கருத்துகள், பாடல்கள், அறிவியல் சார்ந்த விவாதங்கள் ஆகியவைகளுக்கென்று தனித்தனியான மொழிநடைகள் உள்ளனவா?

10. தத்துவ அறிஞர்கள் தனித்துவமான நிலையில் தனிப்பட்டப்பெயர்களையும், நிலைப்பாடான விளக் கங்களையும் விவரிக்கும்பொழுது கையாண்டிடும் மொழிநடை என்ன?

தத்துவ அறிஞர்கள் மொழியானது இப்படித்தான் இருக்க வேண்டும் என்று வரையறை அமைத்து அதைப்பற்றிய உண்மைகளை உலகிற்கு எடுத்துரைத் தனர். இந்நிலையில் கி.பி. பத்தொன்பதாம் நூற் றாண்டில் மொழியின் அமைப்பை ஆராய்ந்து அதி லுள்ள குறை களை நீக்கிய தத்துவ அறிஞர்களில் ஆர்டர் ( Herder ) மற்றும் கும்புலட் ( Humboldt ) ஆகி யோர் முக்கியமானவர்களாவர். இக்காலத்தில் மொழியின் வளர்ச்சிக்கு உளவியல் அதன் பங்கைச் சிறப்பாக ஆற்றினாலும் அதில் ஏற்படும் சிக்கல்களைத் தத்துவமே சீர் தூக்கிப் பார்த்து அவற்றை நீக்குகிறது. தத்துவ அறிஞர்களும் மொழியில் ஏற்படும் பலதரப் பட்டச் சிக்கல்களை ஒன்றுபட்ட அடிப்படையில் ஆராய்ந்து தெளிந்து அதற்கு புத்துயிர் ஊட்டுகின்றனர்.

- ஜெ. அர.

**மொழித்தாவல் :** ஒரு மொழி பேசும் சமூகத் தினர் மெல்லத் தம் மொழியையும் பண்பாட்டினையும் துறந்து வேறொரு மொழியையும் பண்பாட்டினையும் ஏற்றுக்கொள்ளும் போக்கிற்கு மொழித் தாவல் ( Language Shift ) என்று பெயர். பல மொழி பேசும் சூழல் களில் இத்தகைய மொழித்தாவல் போக்கு ஏற் படுகிறது. பெரும்பாலும் ஒரு சமூகத்தில் சிறுபான்மை

மொழியினராக உள்ளவர்களே தங்கள் தாய் மொழியை மெல்லத் துறந்து பெரும்பான்மையினரின் மொழிகளுக்கு மொழித்தாவல் புரிகின்றனர்.

ஒரு மொழியினின்று மற்றொரு மொழிக்குத் தாவல் நிகழும்போது ஒரு மொழியின் இழப்பும் கூடவே நிகழ்கிறது. மொழித் தாவலின் விளைவாகத் தான் மொழி இழப்பு இடம் பெறுகின்றது. மொழித் தாவல் மெல்ல மெல்ல நிகழ்வது போலவே மொழி இழப்பும் மெல்ல இடம் பெறுகிறது. ஒரு மொழி வழக்கிழந்து போகும் இறுதி நிலையில் பெற்றுள்ள மொழியமைப்புக்கூறுகள் அனைத்தும், மொழி ஒன்று புதிதாக உருவாக்கம் பெறும்போது பெற்றி ருப்பதையே ஒத்திருக்கும். மொழித்தாவல் பல்வேறு சமூகக் காரணங்களாலும் மொழியியல் காரணங்களா லும் நிகழ்கிறது. ஒரு சமூகத்தில் நிகழும் குடிபெயர்ப்பு, தொழில் மயமாக்கம், கல்வி முறை, சமூக ஏற்றத் தாழ்வு, அரசியல் செல்வாக்கு போன்ற பல்வேறு கூறுகள் மொழித்தாவலுக்குக் காரணிகளாக அமை கின்றன. தஞ்சையில் மராத்தியர் ஆட்சி நிலைபெற்ற பின் மராத்தியர்கள் பலர் அங்கு குடியேறினார்கள். தங்கள் தாய்மொழியான மராத்தி மொழியோடு மெல்ல மெல்லப் பெரும்பான்மை மொழியையும் கற்றுக் கொண்டனர். இன்று அவர்கள் தமிழ் மொழிக்கு முழுமையாக மொழித் தாவல் பெறும் நிலையில் உள்ளனர். நெய்வேலி போன்ற தொழில் மயமாக்கப்பட்ட நகரங்களில் பல்வேறு மொழி பேசும் மக்கள் வந்து கூடுவதால் அங்குள்ள சுற்றுப் புறங்களில் பெரும்பான்மை மொழியாக விளங்கும் தமிழ் மொழிக்கு வேற்று மொழியாளர்கள் மெல்ல மொழித்தாவல் செய்கிறார்கள். அரசு தம் செல்வாக் கினால் ஒரு குறிப்பிட்ட மொழிதான் ஆட்சிமொழி என்று ஆணையிடும் பொழுதும் மக்கள் மொழித் தாவல் புரிகிறார்கள்.

கல்வி முறையாலும் மெல்ல ஒரு சமூகம் மொழித் தாவல் புரிவதுண்டு. ஊட்டியில் வாழும் பழங்குடி மக்கள் தமிழ் வழியாகக் கல்வி கற்கும் போக்கினால் தங்கள் தாய்மொழியைவிடத் தமிழைக் கூடுதலாகக் கற்றுப் பயன்படுத்தி மொழித்தாவல் செய்கிறார்கள். சமூக ஏற்றத்தாழ்வும் மொழித்தாவலுக்கு ஏற்ற காரண மாகும். பெரும்பான்மை மக்களால் ஒரு பகுதியில் பேசப்படுகிற மொழியாக இருந்தாலும் அது சிறப்பாகக் கருதப்படாது புறக்கணிக்கப்படுகிறது. அத்துடன் அம்மொழி பேசுவோரையும் தாழ்வாகக் கருதுவர். இத்தகைய போக்கினால் தாழ்பிரிவினர் உயர்வாகக் கருதப்படும் வேறொரு மொழிக்கு மொழித் தாவல் மேற்கொள்வர்.

மொழித்தாவலின் மறுபுறமாகத் திகழும் மொழி இழப்பு மெல்ல மெல்லவே நிகழும். அயல்மொழித் தாவலோடு அயல் பண்பாட்டுத் தாவலும் நிகழ்வது போலவே மொழி இழப்போடு பண்பாட்டு இழப்பும் ஏற்படும். ஒரு சமூகத்தினர் தங்கள் மொழியைப் பயன் படுத்தும் அளவினைக் கொண்டு மொழி இழப்பு முடிவுசெய்யப்படுகிறது. முதலில் தாய்மொழியை வெளிப்புறச் சூழல்களில் பயன்படுத்தும் போக்குக் குன்றிப்போகும். பின்னர் வீட்டுச் சூழல்களிலும், அதனைத் தொடர்ந்து தெய்வ வழிபாடு போன்ற அணுக்கச் சூழல்களிலும் மொழிஇழப்பு நிகழும். இதற்கு இணையாக மொழித்தாவல் வெளிச் சூழல் களில் மெல்லத்தொடங்கி அணுக்கச் சூழல்களில் முழு வதுமாக இடம் பெற்று முற்றுப் பெறும்.

பன்மொழிச் சூழல்களில் சிறுபான்மை மொழி யினரிடையே மொழித்தாவல்கள் நிகழ்கின்றன. அவர்களுக்கிடையிலும் பல்வேறு காரணங்களால் மொழித்தாவல்கள் விரைவுப்படுத்தப்படுகின்றன. போதிய கல்வியறிவு இல்லாத ஏழை மக்கள் தங்கள் தாய்மொழியை விரைவில் துறந்துவிட்டுப் பெரும் பான்மை மக்களுடன் இணைந்து அவர்களுடைய தாய்மொழிக்கு மொழித்தாவலுறுகின்றனர். பொது வாக சிறுபான்மை மொழியினருள் பின்தங்கிய சாதி யைச் சார்ந்த ஏழை மக்கள் தங்கள் தாய்மொழியைப் பேசும் ஏனைய உயர் வகுப்பைச்சார்ந்த சமூகத்தினரி டமிருந்து ஒதுங்கி வாழ்கின்றனர். இவர்களைப் போன்றே பெரும்பான்மை மொழிச்சமூகத்தின் பின் தங்கிய சாதியினருள் உள்ள ஏழை மக்கள் ஒதுங்கி வாழ்கின்றனர். இவ்விரு பிரிவினரும் மொழிவழி வேறுபட்டாலும் பின்தங்கிய சாதியைச்சார்ந்த ஏழை மக்கள் என்பதாலும் ஒரு தொகுதியில் சேர்ந்து வாழும் நிலை ஏற்படுகிறது. இத்தகைய சூழலில் இச் சிறுபான்மையினரிடையே மொழித்தாவல் விரை வாக நிகழ்கிறது. இதைப்போன்றே பெரும்பான்மை மொழியினருடன் சாதிவழி இணைய முடிகிற சிறு பான்மை மொழியினர் விரைவில் தாவலுறுகின்றனர் என்பதைத் தமிழ் - மராத்தி ஆகிய இருமொழிகளைப் பற்றிய ஆய்வின் மூலம் அறியலாம்.

இது போன்றே கேரளாவில் உள்ள கொங்கனி மொழி பேசும் தாழ் வகுப்பைச்சார்ந்த குரும்பியர்கள்

மொழித் திட்டமிடுதல் என்பது புதிதாகத் தோன்றியது அன்று. உலக மொழிகளின் வரலாற்றினை நோக்கின், ஒவ்வொரு மொழியின் வாழ்விலும் வளர்ச்சியிலும் பல மாற்றங்கள் அவ்வப்போது காலத்திற்கேற்பவும் சமுதாயச் சூழல்கள், தேவைகள் ஆகியவற்றிற்கு ஏற்பவும் செய்யப்பட்டு வந்துள்ளதை அறிய முடிகிறது என்றாலும், 1968க்குப் பிறகு குறிப்பாக, வளர்ந்து வரும் நாடுகளில் வழக்கிலுள்ள பல்வேறு மொழிகளின் வளர்ச்சியை முன்னிட்டு, மொழித் திட்டமிடுதல் என்பது இம்மொழிகளின் வளர்ச்சிக்குத் தேவைதான் என்பது குறிப்பாக உணரப்பட்டது. இது சமுதாய மொழியியலில் விளக்கப்படும் பயனாக்கப் பிரிவிலும் அதனை ஒட்டிய மொழிவளர்ச்சியிலும் அடங்கும்.

மொழித் திட்டமிடுதலில் இரண்டு பெரும் பிரிவுகள் உள்ளன. அவை. 1. மொழிகளைப் பயன்பாட்டிற்கெனத் தேர்ந்தெடுத்தல், 2. மொழிக் கூறுகளைச் செம்மைப்படுத்துதல் என்பன. பயன்பாட்டில் ஏற்படும் மொழிச்சிக்கல்களைத் தீர்க்கவும், மொழிகளின் மூலம் பல்வேறு சமுதாயப் பணிகள் சிறப்பாக, நிறைவேற்றப்படவும், மொழித்திட்டமிடுதல் உதவுகிறது. அதாவது மொழித் திட்டமிடுதலில் மொழிச் சிக்கல்கள் ஒருபுறமும், மொழிக்கொள்கைகள் மற்றொரு புறமும் அமைந்துள்ளன. மொழிக்கொள்கைகள் மூலம் மொழிச் சிக்கல்களைத் தீர்ப்பதில் ஏற்ப டும் வெற்றி அல்லது தோல்வி அம்மொழிக் கொள்கைகள் எவ்வாறு மொழிப் பயன்பாட்டில் செயற்படுத்தப்படுகின்றன என்பதைப் பொறுத்தே அமையும். மேலும், மொழிச்சிக்கல்களுக்கு ஏற்ப மொழிக் கொள்கைகளில் மாற்றங்கள் செய்து கொள்வது மொழித் திட்டமிடுதலின் வெற்றிக்கு அடிகோலும். இவை தவிர, மொழிக் கொள்கைகளைச் செயற்படுத்தும் வழிமுறைகளும் மொழித்திட்டமிடுதலின் வெற்றிக்குத் துணை நிற்கும். எனவே, பயன்பாட்டிற்கென மொழி அல்லது மொழிகளைக் குறிப்பிட்ட சமுதாயப் பணிக்கெனத் தேர்ந்தெடுப்பதே முதற்பிரிவுத் திட்டமாகும்.

எ.கா. கல்வித்துறைக்கென ஒரு மொழி அல்லது மொழிகள்- ஆட்சித்துறைக்கென ஒரு மொழி/ மொழிகள் என மொழிகளுக்குச் சமுதாயப் பணிகள் தரப்படுகின்றன. இவ்வாறு பல்வேறு சமுதாயப் பணிகளுக்கு மொழிகளைத் தேர்ந்தெடுத்த பின்னர், அம்மொழிகளிலுள்ள பல்வேறு மொழிக்கூறுகளை ( ஒலி, ஒலியன், உருபன், சொல், தொடர், வாக்கியம், பொருள்) அந்தந்தத் துறையின் தேவைக்கு ஏற்பச் செம்மைப்படுத்திக் கொள்வது மொழிப் பயன்பாட்டின் தன்மையையும் ஆற்றலையும் பெருக்கிக் கொள்ள வழிவகுக்கும். இது போன்ற செம்மையாக்கத் திட்டத்தில் மொழிக்கூறுகளின் குறை, நிறைகளைக் கருத்திற்கொண்டு மாற்றங்கள் செய்யப்படுகின்றன. இதற்காக மூன்று முக்கியமான நடைமுறைகள் உள்ளன. மொழிப் புதுமையாக்கம், நிலைபேறாக்கம், எழுத்துருவாக்கம் என்ற இம்மூன்று நடைமுறைகளும் ஒலி முதல் பொருள் வரை மொழியிலுள்ள கூறுகளைச் செம்மைப்படுத்தப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

மொழிகளில் இல்லாத கருத்துகளைப் பிற மொழிகளிடமிருந்து பெறும் போது அவற்றைத் தாய்மொழியில் ஏதேனும் ஒரு வகையில் வெளிப்படுத்த வேண்டிய சூழல் கட்டாயம் தோன்றுகிறது. ஆகவே, புதிதாகச் சொற்கள், எழுத்துகள், தொடர்கள் போன்றவை உருவாக்கப்படுவதோடு ஏற்கனவே மொழியில் இடம்பெற்றுள்ள சில கூறுகள் மொழியின் தன்மைக்கு ஏற்ப மாற்றியும் அமைக்கப்படுகின்றன. இதனால் மொழி வளர்ச்சி பெறுகிறது. காலத்திற்கேற்ற மாற்றம் பெறுகிறது. சமுதாயத்தின் தேவைக்கேற்ப இயங்குகிறது. மொழிக் கூறுகளைச் செம்மைப்படுத்தும் திட்டத்தில் கலைச் சொல்லாக்கம், எழுத்துச் சீர்திருத்தம், எளிமையான இலக்கணங்கள் நிலைபேறு வழக் குகளை அமைத்தல், இருமொழி மற்றும் பன்மொழி அகராதிகளைத் தயாரித்தல், அடிப்படை மற்றும் பொதுச்சொற்களைத் தொகுத்தல், பல்வேறு சமுதாயப் பிரிவினர் எளிதாக எடுத்தாளும் வகையில் மொழி வழக்குகளை நிலைபேறாக்கம் செய்தல் போன்ற பலவும் இடம்பெறுகின்றன.

இவ்வாறு செய்யப்படும் மொழிகளைச் செம்மைப்படுத்தும் திட்டத்தினால் மொழிகளில் பயன்பாட்டிற்கு ஏற்ற கூறுகள், வந்து அமைவதோடு அவை எளிமையானவையாகவும் செய்தித் தொடர்பில் ஆற்றல் மிக்கவையாகவும் எடுத்தாள்வதற்கு ஏற்றவையாகவும் அமைகின்றன. இவ்வாறு அமைவதால் பயன்பாட்டில் ஈடுபடுத்தப்படும் மொழிகள் தன்னிறைவு பெற்றவையாகவும் சமுதாயப் பணிகளுக்கு ஈடுகொடுப்பவையாகவும் அமைந்து விடுகின்றன. ஒரு மொழியின் நிலைபேறாக்கத்திற்குச் சில கொள்கைகளை மொழித்திட்டமிடுதலின் இரண் டாம் பிரிவு வலியுறுத்துகிறது. அவை.

1. மொழிப்பொதுமை

2. எளிமையாக்கம்

3. விரிவாக்கம்

4. எடுத்தாளும் திறன்

இவற்றைப் பயன்படுத்துவதன் வாயிலாக மொழிகளின் பயன்பாட்டில் எளிமை ஏற்படவும் புரிந்து கொள்ளும் ஆற்றல் பெருகவும் வாய்ப்புகள் ஏற்படுகின்றன. ஒரு மொழியில் ஒரு நிலைபேறு வழக்கு மட்டுமே இருந்தால் போதுமானது என்ற கருத்திற்கு மாறாக சமுதாயப் பணிகளின் தன்மைக்கேற்ப ஒன்றிற்கு மேற்பட்ட நிலைபேறு வழக்குத் தேவை என்பது இதன் மூலம் நன்கு வெளிப்படுகிறது. இவ்வாறு நிலைபேறு பெற்ற வழக்குகளும் கூறுகளும் ஒரு மொழியின் கண் மிகுவதின் மூலமாக மொழி அதன் அமைப்பிலும் பயன்பாட்டிலும் தன்னிறைவும் ஆற்றலும் பெற்றுச் சமுதாய வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் அமைகிறது.

மொழித்திட்டமிடுதலில் மதிப்பிடுதலும் திறன் படுத்துதலும் இன்றியமையாதவை. பிற எந்தவொரு துறையில் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் மதிப்பீடு செய்வது போலவே, மொழித்திட்டங்களையும் மதிப்பீடு செய்து, அம்மதிப்பீட்டின் வாயிலாகக் கண்டறியப்பட்ட குறைகளைப் போக்கிடும் வகையில் சில ஆய்வுகளை மேற்கொண்டு, அவற்றால் பெறப்படும் முடிவுகளைப் பயன்படுத்தி மொழித் திட்டத்தைத் திறன்மிக்க வகையில் திருத்தி அமைத்தல் மிகவும் தேவையானது என்று கருதப்படுகிறது. இவ்வாறு செய்வது மொழித்திட்டமிடுதலின் முழுப் பயனையும் சமுதாயம் பெற வழி வகுக்கிறது என்பர். ஆகவே, மொழித்திட்டமிடுதல் மொழி வளர்ச்சிக்குத் துணை நின்றாலும் அது உண்மையில் சமுதாய வளர்ச்சிக்கும் அதன் மூலம் நாட்டு வளர்ச்சிக்கும் துணை நிற்பதே என்பது தெளிவாகிறது.

- கி.க.

**மொழித்தொடர்பு :** மொழி மனித சமுதாயத்தின் கருத்துப் பரிமாற்றத்திற்கு முக்கிய கருவியாகப் பயன்படுகிறது. உலகம் முழுவதும் பல ஆயிரக்கணக்கான மொழிகள் பேசப்படுகின்றன. ஆனால், ஒவ்வொரு குழுவினரும் ஒரு மொழியினை தாய் மொழியாகக் கொண்டு அம்மொழியின் மூலம் தங்கள் கருத்தினை வெளியிடுகின்றனர். அந்தக் குறிப்பிட்ட மொழியினைப் பேசுகின்றவர்கள் வேறொரு மொழி பேசும் குழுவினருடன் தொடர்பு கொள்ளும்போது மொழிகளுக்குள் தொடர்பு ஏற்படுகிறது. மக்கள் இல்லாமல் எழுத்து மொழிகள் மட்டுமே தொடர்பு கொள்வதில்லை.

மொழித்தொடர்பு நடைபெறப் பல்வேறு காரணங்கள் உள்ளன. ஒரு மொழி பேசும் மக்கள் தம் நாட்டைவிட்டு அயல்மொழி வழங்கும் நாட்டிற்குச் செல்வதன் மூலம் தொடர்பு ஏற்படலாம். வெவ் வேறு மொழி பேசுகின்ற இரு குழுவினர் சந்திக்கும் போது அவர்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் நடை பெற வேண்டுமானால் ஒரு குழுவினரின் மொழியை மற்ற குழுவினர் அறிந்திருக்க வேண்டும். இல்லை யேல் இருவரும் புதிதாக ஒரு மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

இரு வேறு மொழிகளைப் பேசுபவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளும்போது அவர்களுடைய மொழிகளில் மாற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. மாற்றம் என்பது இரண்டு மொழிகளிலும் ஏற்படக் கூடிய ஒன்று. அத்தகைய மாற்றங்கள் மற்றொரு மொழித்தொடர்பு ஏற்படுகிறது. அத்தொடர்புக்குப் பின் ஒரு குழுவினர் ஒரு மொழியாளராகவும், மற்றொரு குழுவினர் இரு மொழியாளராகவும் இருப்பதைக் காணலாம். நாளடைவில் இரண்டு குழுவினரும் இரண்டு மொழிகளிலும் பேசும் திறம் படைத்தவர்கள் ஆகலாம்.

ஒரு மொழியை மட்டும் அறிந்துள்ளவரை ஒரு மொழியாளர் (Monolingual) என்று கூறலாம். இரண்டு மொழிகள் அறிந்தவரை இரு மொழியாளர் (Bilingual) என்று கூறலாம். இரண்டிற்கு மேல் மூன்று அல் லது நான்கு மொழிகளைக் கற்றவர்களைப் பன்மொழியாளர் ( Multilingual ) என்று கூறலாம். ஒருவர் தம்முடைய மொழித்தொடர்பால் தான் இரு மொழியாளராகவோ அல்லது பன்மொழியாளராகவோ மாறுகிறார்.

ஒருவர் இரண்டு மொழிகளைக் கற்றுப்பேசும் போது, அதில் அவர்கள் அறிந்திருக்கும் பிற மொழியின் தாக்கத்தைக் காணலாம். இரு மொழியாளர்களின் இயல்பான பேச்சில் அது தவிர்க்க இயலாததாகும். ஒரு மொழியில் இன்னொரு மொழியின் தாக்கம் சற்றுக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ

இவ்விரண்டையும் மிகத் துல்லியமாக வேறுபடுத்த இயலாததால் மொழிக்கலப்பு என்றே பொதுவாகக் குறிப்பிடலாம் என்று பிசுமன் ( Fishman ) கூறுகிறார்.

மொழிக்குறுக்கீடு என்பது இரு மொழியாளர்களின் பேச்சில் அவர்கள் இரண்டு மொழிகளையும் அறிந்திருப்பதால் மொழிக்குறுக்கீடு நிகழ்கிறது. ஒரு மொழியில் பேசும்போது அம்மொழிக்குரிய இலக்கண வரம்பிலிருந்து விலகி, அயல்மொழிக் கூறுகள் வந்து கலந்து வழங்குவதை மொழிக் குறுக்கீடு எனலாம். அத்தகைய மொழிக் குறுக்கீடுகள் ஒரு மொழியின் ஒலியியல், உருபனியல், தொடரியல் ஆகிய பல நிலைகளில் நிகழும்.

- எஸ். இரா.

**மொழிப் புதுமையாக்கம்** : மொழி நிலைபேறு உடையது. ஆனால், அதன் தன்மை நாளுக்கு நாள் மாறுபட்டு மனித சமூகத்தினூடே புதிய மாற்றங்களுக்கு ஏற்பத் திரிந்து புதுமையாக்கப்படுகிறது. நாகரிகம் மொழிநடை மாற்றத்திற்கு உந்துகோலாக அமைகின்றது. இன்றைய நிலையில் சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள பல முன்னேற்றங்களை எதிரொலிக்கும் வகையில் மொழிக்கூறுகளிலும், நடையிலும் பல்வேறு மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. மொழிமாற்றம் என்பது ஒரு நொடியிலோ, நாளிலோ நிகழ்வதன்று. தொன்றுதொட்டுத் திரிந்து வளர்வதால் மொழி மாற்றங்கள் மொழியாளரின் உடனடிப்பார்வைக்குக் கிட்டுவதில்லை. பல்வேறு காலங்களின் மொழிப் பயன்பாட்டை ஒப்பு நோக்கி ஆய்ந்தே மொழிமாற்றங்களை உணர இயலும்.

தொன்று தொட்டு அனைத்து மொழிகளும் மாறுபட்டு வளர்ந்தவை. மொழி மாற்றங்கள் பயன்பாட்டிற்கு ஏற்ப வளர்ந்து வரும் மொழிக்கூறுகள் புதுமையாக்க உத்திகள் ஆகியவை வரையறுக்கப்படுகின்றன. இன்றைய நிலையில் மொழிப் புதுமையாக்கக் கூறுகளில் பார்க்கப்படவேண்டிய முக்கியக் கூறுகளுள் ஒன்று சமுதாய வளர்ச்சியில் மொழியின் பங்கு என்பதொன்றாகும்.

**மொழிப்பயன்பாடும், புதுமையாக்கமும்** : சமுதாயத்தில் மொழியின் பங்கு சமூகப்படிமுறை வளர்ச்சிக்கு மட்டுமேயல்லாமல் சமுதாய வளர்ச்சிக்கும் பயன்படுகின்றது. எ.கா. கல்வி, அறிவியல் வளர்ச்சி, மக்கள்தொடர்பு, செய்திப் பரிமாற்றம், ஆட்சிமுறை போன்ற பல்வேறு சமூகப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இத்தகு பயன்பாடு ஒரு மொழியின் வளர்ச்சிக்கும் புதுமையாக்கத்திற்கும் ஊன்றுகோலாகிறது.

**மொழியும் கல்வியும்** : பண்டைக்காலத்தில் மொழிக்கல்வி சமய நூல்களைப் பயிலவும், தருக்க சாத்திரங்களில் ஈடுபடவும் பயன்பட்டது. மனிதனின் அன்றாடத் தேவைக்குக் கல்வி ஒரு கருவியாக அமையவில்லை. ஆனால், இன்றைய நிலையில் கல்வியறிவு இன்றி ஒரு பணியையும் நிறைவேற்ற இயலாது. வேளாண்மை, சிறுதொழில் போன்றவற்றைச் சிறப்புற நடத்தக் கல்வி ஒரு பாலமாக அமைகிறது. காப்பியங்கள், பல்வேறு இலக்கியங்கள் படைக்கவும், பயிலவும் உதவிய மொழி இன்று வாழ்க்கை முன்னேற்றத்திற்கான அடிநிலையாகப் பயன்பெறுகிறது. உலகெங்கிலும் வளர்ச்சியின் தரம் அந்நாட்டு மக்களின் கல்வி அறிவுடன் ஒப்பு நோக்கியே முடிவு செய்யப்படுகிறது. முன்னேறிய நாடுகளில் கல்வியறிவு பெற்றவர்களின் எண்ணிக்கை ஏனைய நாட்டினர்களை விடப் பன்மடங்கு மிகுதியாக உள்ளது. அவர்களின் மொழிப் புதுமையாக்கமும் பன்மடங்கு பெருகியுள்ளது. இதனை அம்மக்களின் இருவேறு கால மொழி நிலைகளை ஒப்பாய்ந்து அறியலாம். சமுதாய முன்னேற்றத்தில் கல்வியின் பங்கு அவ்வாறிருக்க, அக் கல்வியை மக்களிடையே பரப்ப மொழி வளம் பெறுதல் வேண்டும். அம்மொழி வளர்ச்சியே மொழிப்புதுமையாக்கம் ஆகும்.

**மொழியும் அறிவியலும்** : ஆதி மனிதன் காலம் முதல் பழங்கற்காலம், உலோகக்காலம் ஆகிய காலங்களினூடே வளர்ந்து வந்துள்ள இன்றையச் சமூக வளர்ச்சி முற்றிலும் அறிவியலைச் சார்ந்துள்ளது. ஏனைய இயல்களின் தாக்கம் மொழியில் பரவலாக இருப்பினும் அறிவியலின் தாக்கம் மொழி வளர்ச்சியை முற்றிலும் மாறுபட்ட புதிய திசையில் திருப்பியுள்ளது. ஆன்மிக வளர்ச்சியும், காப்பியப் படைப்புகளும் மக்களின் ஒரு பகுதியினரையே கவர்ந்து வ[illegible] ஆனால், அறிவியல் ஒவ்வொரு மனிதனின் மு[illegible]ற்றத்திலும் அவனுடைய விருப்பு வெறுப்பு[illegible]ளைப் பொருட்படுத்தாது இடம் பெற்று வந்துள்ள[illegible] இதனால், அன்றாட மொழிப் பயன்பாட்டில் [illegible]பற்பல் மாற்றங்களையும், புதுமைகளையும் புகுத்த [illegible]நேர்ந்தது.

அறிவியல் வளர்ச்சி நான்கு திசைகளிலும் நாளும் வளர்ந்து பெருகுவதால், ஓரிடத்தின் வளர்ச்சி மற்றோரிடத்திலுள்ள மக்களுக்குப் பயன்படும் வகையில் அவர்தம் மொழிகளில் புதுமையாக்கம் புகுத்தப்படுகிறது. இதனால் மொழிப்பயன்பாட்டில் ஒலி, சொல், பொருள் ஆகியவை புதுமைப் பொலிவும், சிறப்பும் பெறுகின்றன.

ல, ட, ர போன்ற ஒலிகள் தமிழில் மொழி முதல் பயன்பெறுதல் மொழிப்புதுமையாக்கம் எனக் கொள்ளலாம். லாந்தர், டப்பா, ரோடு போன்ற பல ஏனைய மொழிப்பயன்பாடுகள் தமிழில் புகுத்தப் பெற்றதும் மொழிப்புதுமையாக்க முயற்சியின் பலனே. நைட்ரைட்டு, கார்பைடு போன்ற சொற்களில் உள்ள ரைட்டு, பைடு போன்ற பின்னொட்டுகள் தமிழ் இலக்கணக் கூறில் ஏற்பட்டுள்ள புதுமையாக்க முயற்சிகள். இவ்வாறாக, மொழியில் ஏற்படும் மாற்றங்களே மொழிப்புதுமையாக்கம் எனப்படுகின்றன. சமூகம் இம்மாற்றங்களை ஏற்றுக்கொள்ளவதைக் கொண்டு இம்மாற்றங்கள் மொழியில் நிலைபேறடையும்.

**மொழியும் செய்திப்பரிமாற்றமும்** : கல்வி அறிவியல் வளர்ச்சி, மக்கள்தொகைப்பெருக்கம், ஆட்சிமுறைச்சீர்திருத்தம் போன்ற பல சமுதாய மாற்றங்களினால் செய்திப்பரிமாற்றம் சமுதாயத்தில் ஒரு முக்கிய பங்கு பெறுகிறது. இச்செய்திப் பரிமாற்றம் நாளேடு, வானொலி, தொலைக்காட்சி போன்ற பல கருவிகள் மூலம் நடைபெறுகிறது. சமுதாய நிறைகுறைகள் உடனுக்குடன் மக்களைச்சென்று சேர இச்செய்திப் பரிமாற்றம் துணைபுரிகிறது. நடைமுறை மொழி வழக்கும், செய்தி பரிமாற்றத்தில் பயன்படும் மொழி நடையும் பல விதங்களில் மாறுபட்டு அமைகின்றன. இதனைக் கலந்துரையாடல் என்றும், கூட்டுச்செய்திப் பரிமாற்றம் என்றும் வேறுபடுத்தி மொழி ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன.

கூட்டுச் செய்திப் பரிமாற்றம் என்பது மொழிப் பயன்பாட்டில் மிகவும் அண்மைக்காலத்தில் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட ஒரு புது முயற்சியாகும். இதன் மூலம் மொழிநடையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சிக்கல்களும் முளைத்துள்ளன. செய்திப்பரிமாற்றத்தைச் செயற்படுத்தும் முன் அதனை ஏற்புச் சமுதாயம் எது என்பதனை முடிவு செய்யவேண்டும். இவர்கள் கல்வியாளர்களா, ஆராய்ச்சியாளர்களா, மேல்நிலை அலுவலர்களா, பொதுமக்களா என்பது முதலில் அறியப்பட வேண்டும். பின்னர்ப் பரிமாற்றம் செய்யப்படும் செய்தி அம்மக்களுக்கு எவ்விதத்தில் பயன்படும் என்பதும், அதை எம்முறையில் எடுத்துரைத்தால் அவர்கள் அதனைப் புரிந்துகொண்டு செயற்படுவர் என்பதும் போன்ற பல மொழிப்பரிமாற்றச் சிக்கல்களை ஆராய்ந்து ஏற்புச் சமுதாய மொழி அறிவிற்கேற்பச் செய்தியை மாற்றி யமைத்துக் கூட்டுச் செய்திப் பரிமாற்றம் என்பது நிகழ்த்தப் பெறுகிறது. இப்படியாகச் செய்திப் பரிமாற்றங்கள் ஒரு மொழியில் பல்வேறு மாற்றங்களையும், புதுமைகளையும் ( சொற் பயன்பாடு, மொழிநடை போன்ற பல்வேறு மொழிக் கூறுகளிலும் ) நிகழ்த்துகின்றன.

மாறுபட்ட மொழிப் பயன்பாடுகளினால் ஒரு மொழியில் பற்பல புதிய மாற்றங்கள் நிகழ்கின்றன. கல்வியாளர்களும், பொதுமக்களும், சமூகம் முழுவதும் இப்படியான மொழி மாற்றங்களுக்கு நாள்தோறும் காரணிகளாக அமைகின்றனர். புதுமையாக்க முயற்சிகளால் மொழி வளம் பெறுதலுடன், மொழித் திறனும் சிறப்புப்பெறுகிறது. ஒரு மொழி இப் புதுமையாக்கத்தின் பின், பல்வேறு புதுக்கருத்துகளைக் கலந்துரையாடவும், செய்திப்பரிமாற்றம் செய்யவும், கல்வி அறிவியல் வளர்ச்சிகளில் ஈடுபடுத்தப்பெற்று, பயனும் சிறப்பும் அடைகின்றது.

புதுமையாக்க முயற்சிகள் அனைத்தும் ஒப்புதலும் வெற்றியும் பெறுவதில்லை. மக்கள் ஏற்கும் மொழி மாற்றங்களே மொழியில் நிலைபேறடைகின்றன. புதுமையாக்கம் என்பது ஒரு மொழியில் ஒவ்வொரு விநாடியும் நிகழக்கூடியது. ஆனால், அம்மாற்றங்கள் நிலைபேறடையச் சமுதாய ஒப்புதல் தேவைப்படுகிறது. சமுதாயத் தேவைகளுக்கேற்ப அம்மொழி மாற்றங்கள் மொழியில் நிலைபேறடைகின்றன. புதுமையாக்க முயற்சிகள் ஒரு மொழியில் நிகழாது இருப்பின் சமூக வளர்ச்சிக்குப் பயனற்ற ஒரு நிலையை அடைந்து சமூக ஒப்புதலற்ற ஒரு மொழியாக மாறும் நிலை ஏற்படும். இது ஒரு மொழியின் அழிவுக்கு வழிகோலும்.

- பெ. ந. உ.

**மொழி மாற்றங்கள் :** மொழி காலந்தோறும் மாறுகிறது என்பது எல்லோருக்கும் பல காலமாகத் தெரிந்ததுதான். அது பழைய கூறுகள் மறைந்து புதிய கூறுகள் தோன்றுவதுதான். "காலத்துப்படினே" என்று தொல்காப்பியம் கூறுவதால் அம்மாற்றங்கள், வரலாற்று நிலையில் ஏற்படுகின்றன என்ற உண்மையும் வலியுறுகிறது. ஆனால், மொழியியலில் மொழி எல்லா நிலையிலும் அமைப்பு மாறும் என்பதும், ஒரு நிலையில் ஏற்படும் மாற்றம் பிற நிலையிலும் ( அதாவது எழுத்தில் ஏற்பட்ட மாற்றம் புணர்ச்சியிலும், சொல்லிலும் மாற்றம் ஏற்படுவது ) தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதும் இன்று வற்புறுத்தப் படும் பொது உண்மைகளாகும். அப்படியே மொழி மாற்றத்துக்கான காரணங்களும் இன்று தெளிவாக்கப் பட்டுள்ளன.

**அமைப்பும் மாற்றமும் :** ஒரு மொழியில் வழங்கும் ஒலிகளின் ஒலித்தன்மையில் ஏற்படும் மாற்றம், ஒலிமாற்றம் எனப்படுகிறது. இன்றைய தமிழில் சொல்லின் நடுவில் இரண்டு உயிர்களுக்கு இடையே வரும் வல்லின ஒலிகள் உரசொலியாக ( அகம் என்ற சொல்லில் வரும் ககரம், ஹகரம் போல் ஒலிப்பது ) உச்சரிக்கப்படுகிறது. இதே ஒலிப்பு சங்ககாலத் திலோ, இடைக்காலத்திலோ இல்லை என்றும், கடந்த இரண்டு, மூன்று நூற்றாண்டுகளுக்குள் ஏற்பட்ட மாற்றம் என்றும் தமிழ் மொழி வரலாற்று அறிஞர்கள் கருதுகிறார்கள். வல்லொலி, உரசொலியாக ஒலிக்கப் படுவது ஒரு ஒலிமாற்றம் ஆகும். அப்படியே 'ற்' என் பது சங்ககாலத்தில் வல்லொலியாக ஒலிக்கப்பட்டது. இடைக்காலத்தில் ஆடொலி ( Trill ) ஆக மாறி இன்று ஒரு சில கிளைமொழிகள் தவிர ஏனையவற்றில் தட் டொலியாக அதாவது 'ர' கரமாக ஒலிக்கப்படுவதும் மொழிமாற்றமே ஆகும். ஒலியன் மாற்றம் என்பது எண்ணிக்கையிலும் ஒலியன் வருமிடங்களிலும் ஏற்படும் மாற்றம் ஆகும்.

சங்ககாலத்தில் ந, ன என்ற இரண்டு ஒலிகளுமே ஒலியன்களாக ( வெரிந் - முதுகு, வரின் - வந்தால் ) இருந்தன. இடைக்காலத்தில் ஒரு ஒலியனே உள்ளது. எழுத்து மொழியின் இரண்டு வரிவடிவங்களும் இன்றுவரை பாதுகாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட் டாலும் ஒலியன் நிலையில் ஆராய்ந்தால் ஒரு ஒலி யனே கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில் இரண் டிற்கும் (ந, ன) இடைக்காலத்திலிருந்து வேற்று நிலை யாக வரும் குறைந்தளவு இணைகள் கிடைக்க வில்லை. பிற மொழித் தாக்கத்தால் இன்றைய பேச்சு மொழியில் அதிர்வுடைய வல்லொலிகள் ( b, d, g ) போன்றவை ஒலியன்களாகச் செயற்படுகின்றன. எனவே, நகரமும், னகரமும் ஒரு ஒலியனாக ஆனது மறைவு. அதிர்வுடை வல்லொலிகள் ஒலியனாக மாறி யது புது வரவு. சகரம் தொல்காப்பியர் காலத்தில் சொல்லுக் குமுதலில் அ, ஐ, ஔ ஆகிய உயிரெழுத்து களோடு வராமல் இருந்து, இடைக்காலத்தில் எல்லா உயிரெழுத்துகளோடும் சேர்ந்து வருவதும் ஒலியன் மாற்றமேயாகும்.

புணர்ச்சி விதிகளில் ஏற்படுவது மாறுபாட்டு மாற் றம் ( Alternation ) என்றும், சொல்லின் அதற்குரிய எழுத்துகளில் ஏற்படும் மாற்றம் உருவ மாற்றம் என் றும், இரண்டு வகை ஆகும். மாறுபாட்டு மாற்றத் தைப் புணர்ச்சி மாற்றம் என்று தமிழில் குறிப்பிட லாம். சங்க காலத்தில் னகர ஈற்றுச் சொற்கள் நான்காம் வேற்றுமையோடு, புணரும்போது னகரம் ற கரமாக மாறும் மகன் + ( க் ) கு - மகற்கு, இடைக்கா லத்தில் இடையே உகரம் வரும். மகன் + ( க் ) கு - மகனுக்கு, அவ்வாறே ளகர ஈற்றுச்சொற்கள் டகர மாக மாறினது மகட்கு என்பது போய் இடையே உகரம் வர மகளுக்கு என மாறும். இது புணர்ச்சி விதியில் ஏற்பட்ட மாற்றம் ஆகும். மகற்கு - மகனுக்கு - மகட்கு - மகளுக்கு என் பதை ஒலி மாற்றமாகவோ, ஒலியன் மாற்றமாகவோ கொள்ள முடியாது. புணர்ச்சி விதியே மாறுபடுகிறது. அதனால் புணர்ச்சி மாற்றம் என்றே கொள்ள வேண் டும். சங்ககாலத்தில் 'யா' என்று தொடங்கிய யாடு, யாறு, யாமை போன்றவை இடைக்காலத்தில் ஆகரத் தில் தொடங்கும் சொற்களாக ( முறையே ஆடு, ஆறு, ஆமை ) மாறி விட்டன. இது உருவமாற்றம் எனப் படும்.

இலக்கண அமைப்பு என்பது சிறப்புப்பொருளில் சொல்லியல், தொடரியல் ஆகிய இரண்டையும் குறிக்கும். எனவே, இலக்கண அமைப்பில் ஏற்படும் மாற்றம் இலக்கண மாற்றம் என்றழைக்கப்படுகிறது. இது இலக்கணக்கூறுகளில் ( திணை, பால், எண், வேற்றுமை, காலம் போன்றவை ) ஏற்படும் மாற்றம் ஆகும். புதிய சொற்கள் தோன்றுவதோ சொற்கள் வழக்கில் இல்லாமல் போவதோ சொற்களஞ்சிய மாற்றம் அல்லது அகராதி மாற்றம் ( Lexical change ) எனப்படுகிறது.

தமிழில் சங்ககாலத்தில் இறந்தகாலம், இறப்பல் லாத காலம் அதாவது, இன்றைய எதிர்கால விகுதி

என இரண்டு காலங்களே வினைச்சொற்களில் காணப் படுகின்றன. இடைக்காலத்தில் இருந்து கின்று / கிறு என்ற விகுதி நிகழ்காலத்தை உணர்த்தத் தொடங்கிய தால் இறந்தகாலம், எதிர்காலம், நிகழ் காலம் என்ற மூன்று காலங்கள் வினைச்சொற்களில் அமைந்து விட்டன. எனவே, இரண்டு காலம் மூன்று காலமாக மாறியது ஒரு இலக்கண மாற்றமே ஆகும். சங்க காலத்தில் வழங்கிய வெரிந், அழன், புழன் போன்ற பல சொற்கள் இடைக்காலத்தில் மறைந்ததும் இடைக் காலத்தில் துதி, அருச்சனை போன்ற சொற்கள் புதி தாகப் பழக்கத்தில் வந்ததும் அகராதி மாற்றத்தால் தான்.

மொழியமைப்பில் ஏற்படும் மாற்றத்துக்கு மூன்று பெரிய காரணங்களும் பல்வேறு சிறு காரணங்களும் உண்டு. ஒலிமாற்றம், கடனாட்சி, ஒப்புமையாக்கம் ஆகியன பெரிய காரணங்களாகும். ஏனெனில் இவற் றால் மொழி ஒன்றுக்கு மேற்பட்ட நிலைகளில் மாற் றம் அடைகிறது. சிறு காரணங்களால் உருவமாற்றம் மட்டுமே, அதுவும் குறைவான சொற்களில் மட்டுமே ஏற்படுகிறது.

ஒலிமாற்றம் வெறும் உச்சரிப்பு மாற்றந்தான். அந்த ஒலி மாற்றத்தால் ஒலியன் மாற்றம் ஏற்படும். தமிழில் இன்று சில மொழிகளில் ழ, ற, என்ற இரண்டு ஒலி யன்கள் மறைந்ததற்குக் காரணம் ழ கரம் ள கரமாக வும், ற கரம் ர கரமாகவும் உச்சரிக்கப்படுவதுதான். அதாவது பழைய ற கரமும், ர கரமும் ர கரத்தில் இணைந்துவிட்டன. அப்படியே ழ கரமும் ள கரமும் ளகரத்தில் இணைந்துவிட்டன. றீறீ என் பதும் ( பற்று - பத்து, காற்று - காத்து ) என்றாகி விட்டது. இந்த இரண்டு மாற்றங்களில் புணர்ச்சி மாற்றமும் இலக்கண மாற்றமும் அகராதி மாற்றமும் ஏற்பட்டுள்ளன. மாறு என்பது மாரு எனவும், மாற்று என்பது மாத்து எனவும் மாறிவிட்டதால் மாத்து என்பதை மார் + த்த் + து என்று விளக்கவேண்டியுள்ளது. இறுதி எழுத்து இரட் டித்து உண்டான பிற வினையானது விகுதி சேர்த்தல் மூலம் உண்டாகிறது என்று ஆகிவிட்டது. ஏமாறு என்ற சொல் ஏமாரு என்ற ஒலிக்கப்படுவதால், செய்து வினையெச்சமும் ஏமாந்து இறந்த கால வினைமுற் றும் - ஏமாந்தான் - ந்த் - என்ற விகுதியை இப்பொழுது ஏற்று வருகிறது. பழங்காலத்தில் அவை ஏமாறி, ஏமாற்றினான் என்ற இன் விகுதியோடு வந்தன. இங்கு இலக்கண விதியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதும் ஒருவித இலக்கண மாற்றமே ஆகும். இது ஒலி மாற்றத்தின் நேரடித் தாக்கத்தினால் உண்டாகவில்லை. உட்கார், சேர் போன்ற ரகர ஈற்றுச்சொற்கள் போல ஏமாரு என்பது ந்த் விகுதியை ஏற்றுள்ளது. ஆனாலும் இதற்கு அடிப்படைக்காரணம் ஒலிமாற்றமேயாகும்.

மறம், அறம் போன்ற சொற்கள் இன்று பேச்சு மொழியில் வழங்காததற்கு றகர, ரகர ஒலிமாற்றம் காரணமாக இருக்கலாம். ஏனெனில் மரம், அரம் என்ற சொற்கள் முன்னரே மொழியில் இருப்பதால் அவை பலபொருள் ஒரு சொல்லாகப் பயன்பட வேண் டிய நிலையில் முறையே வீரம், தருமம் என்ற பிற மொழிச்சொற்களால் அந்தப்பொருள்கள் இன்று உணரப்படுகின்றன. மறம், அறம் போன்ற சொற்கள் வழக்கு ஒழிந்தது அகராதி மாற்றமாகும். ஆகவே, ஒலி மாற்றம் மொழிஅமைப்பின் பல நிலைகளையும் பாதித்துள்ளதால் ஒரு பெருங்காரணமாகக் கொள்ளப் படுகிறது.

ஒரு மொழிபேசும் மக்கள் அரசியல் படை யெடுப்பு, பண்பாட்டுத் தொடர்பு போன்ற காரணங் களால், பிற மொழிபேசும் மக்களோடு தொடர்பு ஏற் படும்போது புதிய பொருள்களையும் புதிய கருத்து களையும் அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. அப்பொழுது அந்தப் பொருள்களையும், கருத்துகளை யும் குறிப்பிட அந்த மொழிச்சொற்களைக் கடனாளி ஆக்கப்பட்டால் அவை கடன் சொற்கள் என அழைக் கப்படும். இல்லாவிட்டால் தாய்மொழியிலுள்ள சொற்களையே அந்தப்புதிய பொருளில் கையாள லாம். அப்படித் தாய்மொழிச் சொற்களைப் புதிய பொருளில் கையாளுவது கடன் விரிவு என்று கூறப் படும். புதிய சொற்களைப் படைத்துக்கொண்டு, புதிய பொருளைக் குறிப்பதுமுண்டு. அதற்குக் கடனாக்கம் என்று பெயர்.

பொதுவாகக் கடனாட்சியால் அகராதி மாற்றமே ஏற்படும். சங்க இலக்கியத்தில் வழங்கும் விண்மீன் களின் பெயர்கள் வடமொழிச்சொற்களே. இதை நாள் பெயர்கள் என்று தொல்காப்பியம் குறிப்பிடும். அவை கடன் சொற்களே என்றே கருதவேண்டும். இன்று பரவலாக வழங்கும் இரயில், சைக்கிள், இலாரி போன்றவை ஆங்கில மொழியிலிருந்து கடனாண்ட சொற்களாகும். கிளை என்பது மரக்கிளை மட்டுமல்லா மல் கிளை அலுவலகம் என்ற தொடரில் கிளை புதிய பொருள் பயன்படுத்துவதற்குக் காரணம் ஆங்கில மொழித் தொடர்பே. அணு என்பது ஒரு துகள் என்ற பொருளோடு ஆட்டம் ( Atom) என்ற அறிவியல் பொரு

ளில் பயன்படுத்துவதும் பிறமொழித் தொடர்பினாலேயே ஆகும். இவையெல்லாம் கடன் விரிவாக்கத்திற்கு உதாரணங்களாகும். ஓட்டுநர், நடத்துனர் என்ற புதிய சொற்கள் ஆங்கிலச் சொற்களான 'டிரைவர்', 'கண்டக்டர்' என்ற சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படுவது கடன் சொல்லாக்கம் என்ற வகையில் அடங்கும். மேலே சொன்னபடி, இவையெல்லாம் தமிழில் பிறமொழித் தொடர்பால், கடனாட்சியால் ஏற்பட்ட அகராதி மாற்றங்களாகும்.

பிறமொழியாளர் தொடர்பு நீடித்து ஏற்பட்டால் பிற மொழிச்சொற்களை அப்படியே ஒலிக்கும் பழக்கம் ஏற்படும். அதனால் மொழியில் புதிய ஒலிகள் உண்டாவதோடு முன்னரே உள்ள ஒலிகளோடு வேற்று நிலையில் அமைந்து ஒலியன் மாற்றமும் ஏற்படும். தமிழில் அதிர்வுடைய வல்லொலிகள் தமிழ்ச் சொற்களில் சொல்லுக்கு இடையே மெல்லினத்தை அடுத்து ஒலிக்கப்பட்டு வந்தது. அதிர்வுடைய வல்லொலிகளை முதலாக உடைய பிறமொழிச் சொற்கள் கிளாசு, கோல், பாலு போன்றவற்றைக் கடனாண்டதால் தான் இன்று பேச்சு மொழியில் அவை ஒலியன்களாக அமைந்துவிட்டன. எனவே, கடனாட்சி ஒலியன் மாற்றத்திற்கும் காரணமாக அமைந்துவிட்டது. ஆதாரம், ஆதரி, அலங்காரம், அலங்கரி போன்ற சொற்களைக் கடனாண்டதால் புதிய புணர்ச்சி விதிகளும் அமைக்க வேண்டியுள்ளது. நீதி, அநீதி, அவசியம், அனாவசியம், மானம், அவமானம் போன்ற சொற்களைக் கடனாண்டதால் பெயர்ச் சொல்லில் எதிர்மறை என்ற இலக்கணக்கூறும் முன்னொட்டும் தமிழில் அமைந்து இலக்கண மாற்றமும் ஏற்பட்டுவிட்டது. இப்படி மொழியமைப்பில் பல நிலைகளிலும் கடனாட்சி மாற்றம் ஏற்படுத்துவதால் அது பெரும் காரணமாகக் கொள்ளப்படுகிறது.

சில சொற்களிடையே ஒரு ஒழுங்கு காணப்பட்டு அதே வகையைச் சார்ந்த சொற்களில் அந்த ஒழுங்கு முறை பின்பற்றப்படாமல் இருக்கலாம். அப்பொழுது பல சொற்களில் காணப்படும் ஒழுங்கு, ஒழுங்கற்ற சொல்லுக்கும் நீட்டிப்பதால் ஏற்படும் மாற்றமே ஒப்புமையாக்கம் எனப்படுகிறது. அரசி, அரசன், தலைவி, தலைவன், பாங்கி, பாங்கன் போன்ற சொற்களில் இறுதியிலிருக்கும் 'இ' கரம் பெண்பாலையும், 'அன்' ஆண்பாலையும் உணர்த்துகின்றன. மேலும் அச்சொற்களில் இகரத்தை நீக்கிவிட்டு, 'அன்' சேர்த்தால் ஆண்பால் சொல் உண்டாகி விடுகிறது. ஆனால் ஒருத்தி, என்ற சொல்லில் இ கரம் பெண்பால் விகுதியை நீக்கி அன் சேர்த்து ஆண்பால் உண்டாக்க முடியாது. எனவே மேலே உள்ள பல சொற்களில் உள்ள ஒழுங்கு இந்தச்சொல்லில் இல்லை. ஆனால், அந்த ஒழுங்குமுறையைப் பின்பற்றிப் பிற்காலத்தில் ஒருத்தன் என்ற ஆண்பால் வடிவம் உண்டாக்கப்பட்டுவிட்டது. ஒருத்தி, ஒருத்தன் என்னும்போது அந்த ஒழுங்குமுறை இங்கும் பின்பற்றப்பட்டுவிட்டது. ஒருவன் என்ற வடிவம் ஒருத்தன் என்று மாறியது ஒப்புமையாக்கத்தினால் ஆகும். இங்கு உருவமாற்றம் ஏற்பட்டுள்ளது. ஒப்புமையாக்கத்தினால் அடிப்படையாக உருவமாற்றம் ஏற்பட்டாலும் பிறமாற்றங்களும் ஏற்பட வாய்ப்பு உண்டு. தெலுங்கு மொழியில் கலு ( < கள், லு (< ள்) ) என்ற இரண்டு பன்மை விகுதிகள் இருந்தன. ஒப்புமையாக் கத்தினால் கலு என்ற சொல் ககர விகுதியின் ஒரு கூறாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டு இன்று 'லு' மட்டுமே பன்மை விகுதியாகக் கருதப்படுகிறது. ஏனகலு - (யானைகள்) என்ற வடிவம் க + லு எனப் பிரிக்கப்பட்டு யானை என்பது 'ஒலுக' என்று குறிக்கப்படுகிறது. இதனால் உருவமாற்றமும், இலக்கண மாற்றமும் ( கலு என்ற விகுதி மறைவு ) ஏற்பட்டுவிட்டது.

மொழி மாற்றங்களுக்குரிய சிறு காரணங்களுள் ஓரினமாதல் ( Assimilation ), வேறினமாதல் ( Dissimilation ), நிலைமாறல் ( Metathesis ), அசைகெடல் ( Haplology ) முதலியன குறிப்பிடத்தக்கன.

ஒன்பது, எண்பது போன்ற சொற்கள் ஒம்பது, எம்பது போன்று பேச்சுமொழியில் மாறியது ஓரினமாதலே காரணம். அதாவது மெல்லொலி நாமடி ஒலியாக இருக்க, அதை அடுத்துவரும் வல்லினம் இதழ் ஒலியாக அமைந்திருந்தது. பேச்சுமொழியில் மெல்லினமும் இதழ் ஒலியாக மாறிவிட்டது. ஒலி நிலையில் இரண்டும் வேறு இனமாக ( நாமடி ஒலியாகவும், இதழ் ஒலியாகவும் ) இருந்த இரண்டும் ஒரு இனமாக மாறிவிட்டன. இவை எந்த ஒலியின் செல்வாக்கால் மற்றொன்று மாறுகிறது என்பதை ஒட்டி முன்னோக்கு ஓரினமாதல் - அதாவது முதலிலுள்ள ஒலியை ஒட்டி இரண்டாவது ஒலி மாறுவது, எ.கா. படித்து என்பது படிச்சு என்று மாறுவது. பின்னோக்கு ஓரினமாதல் - அதாவது இரண்டாவது ஒலியையொட்டி முதல் ஒலி மாறுவது. எ.கா. எண்பது - எம்பது. பரசுபர ஓரினமாதல் - முதலாவது ஒலியால்

இரண்டாவதும் இரண்டாவது ஒலியால் முதலாவதும் மாறுவது என்று பிரித்து விளக்குவார்கள். இங்கு ஒன்றை அடுத்து ஒன்று அதாவது கிடைவாக்கில் ( Linear ) வரும் மாற்றம் ஏற்படுகிறது.

அப்படியில்லாமல் ஒரு பொருள் தொகுதியைச் சேர்ந்த சொற்களை வரிசையாகச் சொல்லும்போது, முதலில் உள்ள சொல்லால் அடுத்துவரும் சொல்லின் வடிவம் மாறுவதுண்டு. இந்த மாற்றம் அடுக்குத் தொடர் ஓரினமாதல் ( Paradigmatic Assimilation ) அல்லது தொலைவு ஓரினமாதல் ( Distant Assimilation ) என்று கூறப்படும். கன்னடம், தெலுங்கு போன்ற திராவிட மொழிகளை ஒப்புநோக்கும்போது தமிழிலும், மலையாளத்திலும் மட்டும் ஒன்பதின் பத்து மடங்கைக் குறிக்கும் சொல்லில் (தொண்ணூறு) நூறு என்ற வடிவமும், ஒன்பதன் நூறு மடங்கை குறிக்க ஆயிரம் என்ற வடிவமும் (தொள்ளாயிரம்) வழங்குவது புதுமையாகக் கருதப்படுகிறது. அங்கு அடுத்த எண் முறையே நூறு ஆயிரம் என்று வருவதுதான், மாற்றத்துக்குக் காரணம் என்று ஊகிக்கலாம். தொண்ணூறு - நூறு, தொள்ளாயிரம் - ஆயிரம் என்று கூறும்போது அடுக்கு நிலையில் அல்லது செங்குத்து நிலையில் ஓரினமாகி உள்ளதைக் காணலாம். எனவே, இது வரலாற்று முறையில் அடுக்குத்தொடர் ஓரினமாதல் ஆகும். சில கிளை மொழிகளில் முப்பது என்பது நுப்பது என்று ஒலிக்கப்படுவதற்குக் காரணம் அடுத்து வரும் பத்தாவது எண் நாற்பது என்பது நகரத்தில் தொடங்குவதேயாகும். அதாவது நாற்பது என்பதன் செல்வாக்கால் முப்பது என்பதிலுள்ள மகரம் நகரமாகிவிட்டது.

இன்று வியாழன் என்று வழங்குகிற கிழமைப் பெயர் வியாழம் என்று வழங்கியது என்பதற்கு ஞான சம்பந்தர் தேவாரமும், வியாழக்கிழமை என்ற தொகைச்சொல்லும் ( வியாழம் + கிழமைதான் வியாழக்கிழமை என்று ஆகுமே தவிர வியாழன் + கிழமை என்பது அப்படியாகாது ) சாட்சியாக இருக்கின்றன. எனவே, வியாழம் என்பது வியாழன் என்று மாறியதற்குக் காரணம் இதற்கு முன்னுள்ள சொல் 'புதன்' என்பது னகர ஈற்றில் முடிவதுதான்.

வேறினமாதல் என்பது ஒலி ஒற்றுமை உடைய இரண்டு ஒலிகள் ஒலியாக மாறுவதுதான். பாருடா, செய்யடா என்ற சொற்களில் வரும் அடா என்ற விகுதியில் வரும் டகரம் ஆடுடா, பாடுடா என்ற சொற்களில் ஆடுரா, பாடுரா என்று ர கரமாக மாறுவது வேறினமாதல் ஆகும்.

சொல்லிலுள்ள ஒலிகள் இடம் மாறி வருவதே நிலைமாறல் ஆகும். விசிறி என்ற சொல்லில் உள்ள வகரமும் சகரமும் இடம் மாறி சிவிறி என்று மாறியுள்ளதே நிலைமாறல் ஆகும்.

ஒற்றுமையுடைய இரண்டு அசைகள் அடுத்து அடுத்து வரும்போது சொற்களில் ஒரு அசை கெட்டு விடுவதே அசைகெடல் என்ற மாற்றம் ஆகும். அரு மருந்தன்ன என்ற சொல்லில் ரு என்பது தொடர்ந்து வந்துள்ளதால் ஒரு ரு கரம் கெட்டு அருமருந்த என்று ஆனது அசைகெடலாகும். பேச்சுமொழியிலும் தூங்குகின்ற என்ற சொல்லில் கு, கி என்ற ஒலி ஒற்றுமை உடைய இரண்டு அசைகள் சேர்ந்து வருவதால் கு என்ற ஒரு அசை கெட்டு தூங்குகிற என்று ஒலிக்கப் படுவது அசைகெடல் என்ற மாற்றத்தினாலேயே ஆகும்.

மொழிஅமைப்பில் ஏற்படும் மாற்றத்தை இப் படி பகுதி பகுதியாக மாற்றுவது அமைப்பு மொழி யிலை ஒட்டியது. மாற்றிலக்கண ஆய்வு மலர்ந்த மொழி மாற்றத்தையும் அமைப்பில் எல்லா நிலையி லும் ஏற்படும் விதி மாற்றமாக ( Rule change ) அவர்கள் விளக்கி வருவார்கள். அங்கு இந்தக் காரணங்கள் நேரடியாக ஒத்துக் கொள்ளாமல் சூழலாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

- செ. வை. ச.

**துணை நூல்கள் :**

1. Hockett C.F., 1957, **A Course in Modern Linguistics,** Macmillan, NewYork.

2. சக்திவேல்., 1985, **தமிழ் மொழி வரலாறு**, மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

**மொழி மாறாட்டம் :** ஒரு மொழியினைப் பயன்படுத்தும்போது அதனூடே வேறொரு மொழிக்கூறுகளையும் பயன்படுத்தும் நிலைக்கு மொழிமாறாட்டம் என்று பெயர். பன்மொழிச் சூழல்களில் மொழி மாறாட்டம் ( Code Switching ) மிகுதியாகக் காணப்படுகிறது. தேவைக் கருதியும், கருத்துப் பரிமாற்றம் தொடர்ந்து நிகழும் போதும் சிலர் அயல்மொழிச் சொற்கள், தொடர்கள், வாக்கியங்கள் ஆகியவற்றை

மொழியில் பயன்படுத்துகிறார்கள். அதனைப் பொது வாகப் மொழிக்குறுக்கீடு என்பர். புதிய கருத்துகளை வெளியிடவும் அயல்மொழிச் சொற்களைப் பயன் படுத்துவார்கள். எ.கா. சைக்கிள், பேனா, ரப்பர், டி.வி எனும் ஆங்கிலச்சொற்கள் தமிழ் மொழியில் பயன் படுகின்றன. இந்த அயல் மொழிச்சொற்களைத் தமி ழில் கடன் சொற்கள் ( Loan words ) என்று கூறுவார்கள். அயல்மொழி ஒலியமைப்பு, முறைகள், சொற்கள், தொடர்கள், தொடரமைப்புக் கூறுகள் ஆகியன ஒரு மொழியில் இடம் பெறலாம். சொல் தொகுதியுடன் அயல் மொழிக்கூறுகள் பல மிகுதியாகக் கடன் நிலையில் பயன்படுத்தப்படுவதை மொழி மாறாட் டம் என்று கூறுவர். இது ஒரு மொழியில் மற்றொரு மொழிக் கூறுகள் கலப்புறும் செயலினைக் குறிக்கும். ஓர் அயல்மொழி ஒலியனைக் கலப்பதிலிருந்து சில சமயங்களில் அயல்மொழியின் வாக்கியங்களை அப் படியே பேசத் தொடங்கி முழுவதையும் அயல் மொழிக்கு மாற்றிக்கொள்வது வரை மொழி மாறாட் டம் என்று கூறுவார்கள். மொழிக்கலப்பு, மொழி மாறாட்டம் ஆகிய இரண்டும் சொல் நிலையில் ஒன்று எனக் கூறலாம். இவை மொழிக்குறுக்கீடு எனும் பொதுச் செயலின் இருவேறு நிலைகளாகும். சொல் லளவில் நிகழும் குறுக்கீடுகளை மொழிக்கலப்பு ( Code - Mixing ) என்றும், சொல்லுக்கு மேலாகத் தொடர், வாக்கிய நிலை ஆகியவற்றில் அயல்மொழிக் குறுக் கீடு நிகழ்வதை மொழி மாறாட்டம் என்றும் கூறுவர். இரண்டையும் மொழி மாறாட்டம் என்று கூடப் பொதுவாகக் கூறுவதுண்டு.

மொழி மாறாட்டம் இரண்டு மொழிகளை முறை யாகக் கற்றவர்களின் பேச்சில் குறைவாகக் காணப் படும். அரைகுறையாகக் கற்ற இரு மொழியாளர் களிடந்தான் மொழி மாறாட்டம் கூடுதலாக விளங் கும். எழுத்து முறையைவிடப்பேச்சு முறையில்தான் மொழி மாறாட்டம் எளிதில் நிகழ்கிறது. மொழி மாறாட்டத்தில் பெயர்ச்சொற்கள், வினையடைகள், வினைச்சொற்கள், பெயரடைகள் என இயங்குமுறை எண்ணிக்கையில் அயல்மொழிக் கூறுகள் இடம் பெறுகின்றன. வாக்கியங்கள், எச்சத்தொடர்கள் ( Clau ses ) ஆகியவற்றைவிடத் தொடர்கள் ( Phrases ) குறைவாக இடம் பெறுகின்றன. மொழி மாறாட்டத் தில் சுட்டுச்சொல், மாற்றுப்பெயர்ச் சொற்கள் ( Pronoun) இணைப்புச் சொற்கள் ( Conjoined words ) ஆகியன பெரும்பாலும் இடம் பெறுவதில்லை.

கருத்துப் பரிமாற்றத்தின்போது பேசுவோரின் தகு திக்கு ஏற்பவும், மொழியின் பயன்பாடு கருதியும் மொழிமாறாட்டங்கள் நிகழ்கின்றன. மொழி மாறாட் டம் பேசுவோரின் சமூகத் தகுதிகளை நிருணயிக்கவும் உதவுகிறது. ஒருவரின் சமூகத் தகுதி அவர் சாதி, கல்வி நிலை, வாழும் சூழல்கள் ஆகியவற்றால் அமைகிறது. பார்ப்பனர்களின் பேச்சுவழக்கில் ஜ, ஷ, ஹ போன்ற ஒலியன்களும், சமசுகிருதச் சொற்களும் இடம் பெறு கின்றன. அதனை ஏனைய சாதியினரின் பேச்சு வழக்கில் மிகுதியாகக் காணமுடியாது. கற்றவர்களின் தமிழ் வழக்கில் ஆங்கிலச்சொற்கள் மிகுதியாகக் காணப்படு கின்றன. கன்னடத் தாய்மொழியாளர்கள் மிகுதியாக உள்ள ஓசூர் போன்ற தமிழகப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் பேச்சு வழக்கிலும் மொழி மாறாட்டங் கள் நிகழ்கின்றன. மொழிக்குறுக்கீடு தொடர்ந்து தலைமுறை தலைமுறையாக இருந்து வருவதால், இரு மொழிகளின் எல்லைப் பகுதிகளில் பேசப்படும் மொழி வழக்குகளில் இரண்டிற்கும் பொதுவான தொடரமைப்புகள் உருவாகி, சொல், உருபன் ஆகிய வற்றின் நிலையில் மட்டுமே மொழிவாரியான வேறு பாடுகள் இருப்பதைக் ( Gumperz, 1961 ) கம்பர்சு போன்ற அறிஞர்கள் உணர்த்தியுள்ளனர்.

மொழி மாறாட்டத்தை மொழி பயன்படும் சூழல் களும் உரைக்கோவையின் பொருளும் நிர்ணயிக்கின் றன. அத்துடன் மொழி நடைக்கு ஏற்பவும் மொழி மாறாட்ட அளவு வேறுபடும். தமிழின் உயர்நடை வழக்கில் மொழி மாறாட்டம் குறைவாகவே நிகழும். ஆனால் நீதிமன்ற வாதங்கள், அறிவியல் விவா தங்கள், அரசு நடவடிக்கைகள் ஆகியவற்றில் அயல் மொழிக் குறுக்கீடு கூடுதலாகக் காணப்படுகிறது. சமயச்சார்பான பொருள் பற்றிய மொழி நடையில் சமஸ்கிருத மொழிக்கலப்பும், அறிவியல் தொடர் பான மொழி நடையில் ஆங்கிலக் கலப்பும் காணப் படுகின்றன. மொழி மாறாட்டங்கள் மொழியிலுள்ள வழிமுறைகளுக்கு உட்பட்டே நிகழ்கின்றன.

அயல்மொழிக் கூறுகள் தாம் இடம் பெறுகின்ற மொழியின் ( Recipient language ) இலக்கண அமைப் புக்கேற்ப இடம் பெறுகின்றன. சான்றாக, தமிழில் பெயர்ச்சொற்கள் 'ஆக' எனும் உருபுடன் இணைந்து வழங்கப்படுகின்றன. இவ்விதிமுறைகட்கு ஏற்ப ஆக எனும் உருபுடன் இணைந்து கிளீனிங்கா ( Cleaning - ஆக ) நாய்சா ( Noise - ஆக ) என்றும் வழங்கப்படு கின்றன. தமிழில் பெயர்ச்சொற்களே எவ்வித மாற்ற

மு மின்றிப் பெயரடைகளாக வரலாம். சான்று. பூமரம், மொட்டை மாடி எனும் தொடர்களில் பூ, மொட்டை எனும் பெயர்ச்சொற்களே இங்கே பெயரடைகளாக இடம் பெறுகின்றன. இதற்கு இணையாகப் பெயர டைகளைப் பெயர்ச்சொற்களாகக் கருதும் நோக்கில் ஆங்கிலப் பெயரடைகளையும் பெயர்ச்சொற்களாகக் கருதி மீண்டும் "ஆக" எனும் விகுதி சேர்த்து கிளின்சியா, நாய்சியா என்றும் வழங்கப்படுகின்றன. இவ்வாறு அயல்மொழிச் சொற்கள் வருவது ஆங்கில இலக்கணத்தைக் குறைவாக அறிந்தவர்களால் செய் யப்படுகிற தவறான மொழிக்கலப்பாக அண்ணா மலை ( Annamalai, 1978 ) கருதுகிறார்.

சில சமயம் கருத்துப் பரிமாற்றத்தின்போது எழு கின்ற சில சங்கடச்சூழல்களைத் தவிர்க்கவும் மொழி மாறாட்டம் பயன்படுகிறது. சான்றாக, நெருங்கிய நண்பராக உள்ள ஒருவரை மேலதிகாரி கடிந்து கொள்ள வேண்டிய சூழலில் ஆங்கில மொழியைப் பயன்படுத்தலாம். ஒருவர் தம் உரைக்கோவையில் ஆங்கிலத்தையும் தமிழையும் கலந்து பேசுவது போலவே தமிழ் மொழியின் உயர் வழக்கையும் பேச்சு வழக்கையும் கலந்து பேசுவதுமுண்டு. ஒரு மொழி யில் இரு வழக்குகள் தத்தமக்குரிய தனித்தனி மொழி யியல் கூறுகளுடனும் வரையறுக்கப்பட்ட சூழலில் பயன்படும் சிறப்பு வரன்முறைகளுடனும் விளங்கும் நிலைக்கு இரட்டை வழக்கு என்று பெயர். இரண்டு மொழிகளுக்கிடையே நிகழும் குறுக்கீடுகளை மொழி மாறாட்டக் கோட்பாடு விளக்குவது போலவே இரட்டை வழக்கு மொழியின் இரு வழக்குகளுக் கிடையே நிகழும் குறுக்கீடுகளையும் மொழி மாறாட் டக் கோட்பாடு விளக்க வேண்டும் எனச் சிலர் கருதி னார்கள். ஒலியியல், உருபனியல், சொல் தொடரியல் ஆகிய நிலைகளில் மொழி மாறட்டங்கள் நிகழலாம். மொழி மாறாட்டங்கள் ஒலியியல் நிலையில் கூடுத லாகவும், தொடரியல் நிலையில் குறைவாகவும் இருப்பதாக அறிஞர்கள் கருதுகின்றனர்.

- எஸ். ஆ.

**துணை நூல்கள் :**

1. Annamalai, E., 1978, **The Anglicized Language : A Case for Code Mixing,** IJDL 7.2 PP. 239 - 247.

2. Gumperz, J. J., 1961, **Speech variation and the Study of Indian Civilization,** American Anthropologist PP. 976 - 88.

**மோசடி :** ஒரு செய்தி பொய்யானது என்று அறிந் திருக்கும்போதும், அச்செய்தி உண்மையானது என்ற நம்பிக்கையில்லாதிருக்கும்போதும் அச்செய்தி உண்மையானதா, உண்மையற்றதா என்பதைப்பற்றி வினவாமல் அச்செய்தி உண்மையானது என்று வலியுறுத்திக் கூறுவதும், ஓர் உண்மையான செய்தியை மறைப்பதும் மோசடி என்று கூறலாம். எனவே, மோசடி என்பது பொய்யான செய்தியை உண்மையென எடுத்துரைப்பதும், உண்மையான செய்தியைக் கூறாமல் மறைப்பதும் ஆகும்.

ஒப்பந்தச் சட்டவியல் பதினேழாவது பிரிவு மோசடி என்பதனை வரையறுக்கிறது. அப்பிரிவின் முதல் உட்பிரிவின்படி, ஒரு செய்தி உண்மையானது என்று நம்பாத ஒருவர் மற்றொருவரை வஞ்சிக்கும் நோக்கத்துடன் அல்லது, அவரை ஒப்பந்தத்தில் ஈடு படும்படி தூண்டும் நோக்கத்துடன், உண்மையற்ற செய்தி ஒன்றைக் கூறுவது மோசடி எனப்படுகிறது.

இரண்டாம் உட்பிரிவின்படி, ஒரு செய்தி உண்மை யானது என்று அறிந்த அல்லது நம்பிக்கையுடைய ஒரு வர் அச்செய்தியைச் சொல்லாமல் மறைப்பது மோச டியாகும். இதனை விளக்கமாகக் கூறின், சொல்லக் கடமைப்பட்ட ஒருவர், சொல்லாதிருப்பது மோசடி யாகிறது. பொதுவாக அமைதியாக இருத்தல் மோசடி ஆகாது. ஒரு செய்தியைக் கூறுவதற்குச் சட்டப் படி கடப்பாடு உடையவர், கடமைப்பட்டவர் அச் செய்தியைக் கூறாதொழியும்போது அவ்வாறு கூறா திருத்தல் மோசடியாகிறது. ஒருவர் பேசக் கடமைப் பட்டிருக்கும்போது பேசாதிருந்தால் அது மோசடி ஆகிறது. ஒப்பந்தத்தில் ஈடுபடும் தரப்பினர், மற்றவர் மீது நம்பிக்கை வைத்திருக்கும்போது அம்மற்றவர் பேசக் கடமைப்பட்டவராகிறார். மேலும், தான் அமைதியாக இருப்பதால், மற்றவர் வஞ்சிக்கப்படு கிறார் என அறிந்திருந்தும் அவர் அமைதியாக இருப் பாராயின் அதுவும் மோசடிதான்.

ஒரு செய்தி கூறப்படும்போது உண்மையானதாக இருந்து அதன்பின் சூழ்நிலை மாற்றத்தால் பொய்யா னதாக மாறியிருக்குமானால் அந்நிலையில் சூழ் நிலை மாற்றத்தைப் பற்றிக் கூறிவிடவேண்டும். அவ் வாறு கூறாமல் அமைதியாக இருத்தலும் மோசடி யாகிறது.

ஒருவருக்கு ஒரு செய்தியைக் கூறக் கடமை இல்லா திருந்தும், தாமாக ஏதோ ஒரு சிலவற்றைக் கூறிவிட்

டுப் பாதியைக் கூறாமல் அமைதியாக இருந்துவிட்டால் அதுவும் மோசடியே. ஒருவர் அமைதியாக இருக்கலாம். ஆனால் அவர் கூறினால் முழு உண்மையும் கூறிவிடவேண்டும்.

அச்சட்டத்தின் பதினேழாவது பிரிவின் மூன்றாம் உட்பிரிவின்படி, ஒருவரை ஒப்பந்தத்தின் ஈடுபடும் படி தூண்டும் நோக்கத்துடன் அல்லது அவரை வஞ்சிக்கும் நோக்கத்துடன் ஓர் உறுதியுரையை, நிறை வேற்றும் நோக்கம் இல்லாது அவருக்குக் கொடுப் பது மோசடியாகிறது. அதன் நான்காவது உட்பிரிவு வஞ்சிக்கும் நோக்குடன் செய்யும் எச்செயலும் மோசடி என்று கூறுகிறது.

மேலும், ஐந்தாம் உட்பிரிவு, சட்டம் குறிப்பாக எச்செயல் செய்வதால், செய்யாதொழிவதால் மோசடியானது என்று விளம்புகிறதோ அச்செயல் மோசடி என்று கூறுகிறது.

இவற்றால் மோசடி என்பதற்கு வஞ்சிக்கும் நோக்கம் அடிப்படையானது என்பது புலனாகிறது. மோசடியின் பேரில் செய்யப்பட்ட ஒப்பந்தம் தவிர்தகு நிலையானது ( Voidable ) இழப்பீடு பெற அடிகோலுகிறது.

- அ. பி. பீ.

**மௌனி** : இவர், தமிழ்ச்சிறுகதை உலகில், விடுதலைக்கு முற்பட்ட சிறுகதையாசிரியர்களுள் தலைச்சிறந்தவர். தம் இலக்கிய வாழ்வைச் சிறுகதைத் துறை ஒன்றிலேயே செலவிட்டவர். இவரது பாணி புதுமையானது. தனித்தன்மை நிரம்பியது. இவர் சமூகச் சிக்கல்கள் பற்றி அக்கறை கொள்ளாதவர். புற உலக நிகழ்ச்சிகளின் துணை இல்லாமல் தனி மனிதர்களின் மன உணர்ச்சிகளையே முதன்மைப்படுத்தி எழுதியவர். தமிழ் மரபுக்கும் போக்குக்கும் புதிதாகவும் சிறப்பாகவும் வழிவகுத்தவர். தமிழ்ச் சிறுகதையின் திருமூலர்... என்று எழுத்தாளர்களின் எழுத்தாளரான புதுமைப்பித்தனால் பாராட்டப்பெற்றவர். மணி என்ற இயற்பெயரையுடைய இவர் தஞ்சை மாவட்டத்தில் உள்ள செம்மங்குடியில் 1907 சூலை 27ஆம் நாள் பிறந்தார். சிதம்பரத்தில் 1983 வரை வாழ்ந்தார். பி.எஸ். இராமையாவின் தூண்டுதலால் இவர் 1934 ஆம் ஆண்டே எழுதத்தொடங்கினார். எனினும், இவரது முதற்கதை **"ஏன்"** என்ற தலைப்பில் ***மணிக்கொடி*** இதழில் 1936ஆம் ஆண்டு வெளிவந்தது. இவர் எழுதிய கதைகள் 24 ஆகும். இவர் 1939ஆம் ஆண்டிற்குப் பின் 1959 வரை எழுதவில்லை. பின் 1971 வரை அவ்வப்போது ஓரிரு கதைகள் எழுதியுள்ளார். இவர் கதைகளுள் பாதிக்கும் மேற்பட்டவை மணிக்கொடி இதழிலேயே வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இக்கதைகள் யாவும் **அழியாச்சுடர், மௌனிக் கதைகள், மௌனிக் கதைகள்** என மூன்று தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. பெங்குயின் வெளியீடு உட்பட உலகின் மிகச்சிறந்த இலக்கிய இதழ்களில் இவர் கதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எண்ணிக்கை அளவில் மிகக்குறைவான சிறுகதைகளே எழுதியிருப்பினும் எண்ணி வியக்கும் குறிப்பிடத்தக்க சிறப்பான இடத்தைச் சிறுகதை உலகில் பெற்றிருப்பவர் இவர். இவர்தம் சிறுகதைகள் பிஎச்.டி மாணவர்களால் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

உலக வாழ்க்கை சோகம் நிரம்பியது. பொய்மையானது என்பதே இவர் கதைகளின் மையக்கருத்தாகத் தெரிகிறது. காதற்பிரிவில் எழும் சோகமே இவரின் பெரும்பாலான கதைகளின் உள்ளடக்கமாகும். மௌனி தம் கதைகளுக்கு எடுத்துக்கொண்டுள்ள செய்திகள் எளிமையானவைகளே, பல கதைகளில் ஆசை நிறைவேறாமையும், காதல் ஏக்கமுமே கதைப் பொருளாக அமைந்து கிடக்கின்றன. ஆனால் இவருடைய நடையும் நோக்கும், கையாளும் செய்தியை நுண்மையாகவும், விவரமாகவும் சித்தரிக்கின்ற நயமும் இவருடைய தனியுரிமைகளாக விளங்குகின்றன. மௌனி ஓர் ஆன்மீகக் கலைஞர். மனித வாழ்வும் சிக்கல்களும் மாயை என்றுதான் உணர்த்துகிறார். நடைமுறை வாழ்வின் சிக்கல்களை அவரது படைப்புலகில் சந்திக்க முடியாததில் வியப்பில்லை. அவற்றை இவர் புறக்கணித்திருக்கிறார் என்று சொல்வதை விடத் தள மாற்றம் செய்துகொண்டார் என்று சொல்வதே பொருந்தும். புற வாழ்வில் காணும் வாழ்வின் துயரங்களை மனஉலக நிகழ்வுகளாகத் தளமாற்றம் செய்து கொண்டார். காதலும் அதன் அடிப்படையில் தோன்றும் மயக்கங்களுமாக அவை உருமாறி விட்டிருந்தன. மௌனி, மனித வாழ்வில் காதலை மட்டும் சிக்கலாகக் கண்டார் என்று சிலர் குறிப்பிடுவது பொருத்தமற்றது. மௌனியின் சிறுகதைகள் யாவும் குறிப்பிட்டவொரு சூழ்நிலையில் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களைக் கூறுவனவாகவே அமைந்துள்ளன. நிகழ்ச்சியினால் பாதிக்கப்பட்ட மனதில் தோன்றும் உணர்வு எழுச்சிகளின் மூலம் அந்நிலையைச் சித்தரிப்

பது சிறுகதை உத்திகளுள் ஒன்று. இவ்வுத்தியை முதன் முதலில் தமிழில் நன்கு கையாண்டவர் மௌனி.

மௌனியினுடைய சிறுகதைகள் தமிழ்ச்சிறுகதை உருவ அமைப்பில் புதுத்துறையினை ஏற்படுத்தியுள் ளன. இவர் தம் பாத்திரங்கள் இயல்புக்குமீறிய மன இயல்புகளைக் கொண்டவர்கள். இசை விருப்பில் ஆழ்ந்தவர்கள். ஒரு நோக்கில் மௌனியின் சுய வெளிப்பாடே இவர்கள் என்று கூடக் கூறலாம். மன மயக்கம் மிகுந்த இவர்களின் இயல்புக்குமீறிய நடத்தைகள் மன உணர்வுகளை வெளிக்கொணர்வதில் துணை புரிகின்றன.

மௌனியின் கதைகள் எண்ண அலை உத்தியின் தொடக்க நிலையைக் காட்டுவனவாகவே விளங்கு கின்றன என்பதை உறுத்திக்காட்டி நிற்கின்றது மௌ னியின் பாத்திரவார்ப்பு. மௌனியினுடைய கதைக ளில் வரும் பாத்திரங்கள் தெளிவற்றவையாகவே இருக்கின்றன என்பர். இவர் படைத்துள்ள மாந்தர் ஏதோ பறிகொடுத்ததைப் போன்றே எப்போதும் காணப்படுவர். தங்களைச் சுற்றிலும் ஏன் தங்களுக் குள்ளும் - ஏதோ ஒருவகை வெறுப்பை வளர்த்துக் கொண்டு அந்த வெறுப்பினால்தான் அமைதியில்லாத அமைதி கிடைப்பதாக இவர்கள் நம்புகின்றார்கள். அத னால்தான் உலகியலில் இயல்பாக நடக்கின்ற ஒரு சிறு நிகழ்ச்சி கூட அவர்களுக்குப் பேயுருவமாகக் காட்சியளிக்கின்றது.

உணர்ச்சிச் செறிவு சிறிதும் பாதிக்கப்படாமல் கதையை அமைப்பவர் இவர். இதற்கு ஊறு விளை விக்கும் எதனையும் இவர்தம் பெரும்பாலான கதை களில் காண இயலாது. **அழியாச்சுடர், பிரபஞ்சக் கானம், மாறுதல், மனக்கோலம், நினைவுச்சுழல்** போன்ற கதைகளில் இவரது படைப்புத்திறன் உச்சத்தைக் காணலாம். இவ்வகையில் மௌனியின் தனித்தன்மையை முழு அளவில் எடுத்துக்காட்டுவது 'அழியாச்சுடர்' எனலாம். தமக்கென்று இவர் ஒரு தனி மொழியையே சிருட்டித்துக் கொண்டிருக்கிறார் என்று கா.நா.சு சொல்வது ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத் தாகும்.

வழக்கில் உள்ள சொற்களால் கருத்தை உணர்த்த முடியாது என்று நினைக்கும்போது பொருளாழம் நிரம்பிய புதிய சொல்லாக்கங்களை உருவாக்கிக் கொள்கிறார். **அழியாச்சுடரில்** வரும் 'சிற்பித்தவை' என்ற சொல்லை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ள லாம். ஒரே சொல்லை வெவ்வேறு வகைகளில் பயன் படுத்தத் தெரிந்தவர். சான்றாக, அவன் முகத் தில் ஒரு கடுமை வேண்டும். உதட்டின் விளிம்பில் ஓர் ஏளனப் புன்னகை அருவிக்கொண்டிருந்தது என **பிரக்ஞை வெளி** கதையில் எழுதியிருப்பார். படிமங்களைப் பயன்படுத்துவதிலும் கைதேர்ந்தவரவார். எ.கா. அவள் முகமே விழிகளென இவனைப் பார்த்துவிட்டு உட்சென்றுவிட்டாள் என **மணக்கோலம்** கதையில் விவரித்திருப்பார்.

சிற்றறிவுடைய ஒரு வாசகனால் மௌனியின் கதைகளை எளிதாகப் புரிந்து கொள்ள இயலாது. அவர் பயன்படுத்தும் சொற்கள் எளியவைதான். ஆனால் மனமுறிவை அலைஅலையாயப் பெருகும் உணர்வுகளை - ஓவியமாக்கும் நிலையில் ஆக்கிய அமைப்புகள் சிக்கலாக உருவாகின்றன. எனவே, நடை புதிர் நிறைந்ததாகிறது. மருட்கை ஊட்டுகிறது. இத்தன்மை மௌனியின் படைப்புகளுக்கு மேலும் வலு சேர்ப்பதாகவும், மௌனியை ஆர்வத்துடன் அணுகும் வாசகனுக்கு இது சிக்கலாகத் தோன்றாமல் துணை புரிந்ததாகவும் பாராட்டுகிறார் ஆய்வாளர் ஒருவர்.

மௌனியைத் தலைச்சிறந்த தமிழ்ச்சிறுகதை ஆசிரியர் என்று பாராட்டுகிறன்றனர் சிலர். தகுதிக்கு மீறிய பெருமை பெற்றவர் என்று குறை கூறுகின்றனர் சிலர். குறுகிய வட்டத்துக்குள்ளேயே தம் பாத்திரங் களைப் படைக்கிறார் எனக் காரணங்காட்டுவர் சிலர்.

சுருங்கச்சொன்னால் ஒரு குறிப்பிட்ட வட்டத்திற் குள்ளேயே இவரது உள்ளடக்கம் அமைந்திருந்தா லும், உருவச் சிறப்பால், இருண்மைப்போக்கால், படிமநடையால் தனித்திறம் காட்டிய சிறுகதைக் கலைஞர் இவர் என்பதில் ஐயமில்லை.

- பழ. மு.

**வகுப்புணர்வு :** தம்முடைய வகுப்பைச் சேர்ந்த வர்களுடனும் பிற வகுப்பைச் சேர்ந்தவர்களுடனும் மனிதர்களுக்குள்ள உறவுகளைப் பற்றிய மனோ நிலையே வகுப்புணர்வு எனக்கூறுகிறார் ஆர்.எம். மக்ஐவர் (Mac Iver). சிலர், சமுதாயத்தில் கிடைக்கக் கூடிய ஒரே மாதிரியான வாய்ப்புகளைப் (Chances) புரிந்து கொள்ளும் திறனும் ஒரே மாதிரியான நோக் கத்தால் (Similarity of Interest) ஏற்படக்கூடிய கருத்துத் திறனும், ஆகியவற்றால் உளதாகும் அனுபவத்துடன்

இணைந்த உணர்ச்சிகரமான உறவும், ஒரு பொதுச் சமுதாயக் குறிக்கோளுக்காக எடுத்துக் கொள்ளக் கூடிய பொதுவான முயற்சிகளும் வகுப்புணர்வு என்று கூறுகின்றனர். வகுப்பு என்பது ஒரு நிலைக்குழு (Status Group). இந்தக்குழு சமுதாயத்தில் அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள நிலையின் (Status) அடிப்படையில் தோன்றுகிறது. எங்கெல்லாம் நிலைக்குழு ஏற்றத்தாழ்வுள்ள சமுதாய அமைப்பில் ஒரு குறிப்பிட்ட இடத்தைப் பெற்றுள்ளதோ, அங்கெல்லாம் அக்குழு சமுதாய வகுப்பு (Social Class) எனக் கூறப்படும். எனவே, சமுதாய வகுப்பு என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத் தகுதியையோ, அல்லது இடத்தையோ பெற்றிருக்கும் ஒரு கூட்டமாகும். அதனால் சில சலுகைகளையும், பொறுப்புக்களையும், அதிகாரத்தையும் அவ்வகுப்பு பெற்றிருக்கும். ஒவ்வொரு வகுப்பினரிடமும் வகுப்புணர்ச்சியும் ஒரு தனிப்பட்ட பண்பாடும் காணப்படும்.

வகுப்புணர்வு தான் காலப்போக்கில் சமுதாயத் தகுதியில் (Social Position) உள்ளவர்களும், வாழ்க்கையில் சமமான வாய்ப்புகளை உடையவர்களும் ஒரு குழுவாக இணைந்து செயற்பட வகை செய்கிறது. பொதுவாகத் தொழிலாளர்களிடையே வகுப்புணர்வு காணப்படுவதாக எல்லோரும் கூறுகிறார்கள். ஏனென்றால் அவர்களிடையே காணப்படும் பொதுவான நோக்கம் (Common Interest) அனைவரும் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. முதலாளித்துவத்தை எதிர்த்துப் போரிட்டுத் தங்கள் உரிமைகளைப் பெறத் தொழிலாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, தங்கள் வகுப்புணர்ச்சி என்ற தனித்தன்மையை வெளிக் காட்டுகிறார்கள்.

வெர்னர் எசு லேண்டக்கர் (Werner S. Landecker) வகுப்புணர்வை மூன்றாகப் பிரித்துக் கூறுகிறார். 1. வகுப்பு - தரம் உணர்ச்சி (Class - Status Consciousness), 2. வகுப்பு - அமைப்பு உணர்ச்சி (Class - Structure Consciousness), 3. வகுப்பு - நோக்க உணர்ச்சி (Class - Interest Consciousness).

வகுப்பு - தரம் உணர்ச்சி பற்றிக் குறிப்பிடும்போது அது, ஒரு குறிப்பிட்ட வகுப்பில் ஒருவருக்குக் கொடுக்கப்பட்டுள்ள சமுதாயத் தகுதியும் அதே வகுப்பைச் சேர்ந்த ஏனையவர்களுடன் அவனுக்குள்ள உறவு முறைகளைப் பற்றிய மனோநிலையும் தான் வகுப்பு - தரம் உணர்ச்சி என்று விளக்குகிறார்.

அடுத்தபடியாக வகுப்பு - அமைப்பு உணர்ச்சி பற்றிக் குறிப்பிடும் போது, ஒரு சமூகத்தில் உள்ள ஒவ்வொரு வகுப்பிற்கும் இடையே உள்ள வேறுபாடுகள், அவற்றின் அமைப்பு சமுதாயத்தகுதி முதலியவற்றின் அடிப்படையில், அந்தந்த வகுப்பு உறுப்பினர்களிடையே வகுப்புணர்ச்சி வேறுபட்டுக் காணப்படும் எனக் கூறுகிறார்.

வகுப்பு - நோக்க உணர்ச்சி பற்றிக் கூறும் போது, சமூகத்தில் காணப்படுகிற வகுப்புகளின் நோக்கங்கள் வேறுபடுகின்றன என்றும், மாறுபட்ட அல்லது முரண்பட்ட நோக்கங்களினால் வகுப்புக் கலவரங்கள் தோன்றுகின்றன என்றும் கூறுகிறார்.

பொதுவாக வகுப்பு அல்லது வகுப்புணர்வு என்றவுடன் நினைவிற்கு வருபவர் காரல் மார்க்சு (Kalr Marx) ஆவார். காரல் மார்க்சும் - பிரடரிக்கு ஏங்சல்சும் (Friedrich Engels) வகுப்பு, பொருளாதார வேற்றுமையை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது என்று கூறுகிறார்கள். இவர்கள் எழுதியுள்ள "பொதுவுடமை அறிக்கை" என்ற நூலில் இப்போதுள்ள சமுதாயத்தின் சரித்திரங்கள் வகுப்புப் போராட்ட சரித்திரங்களே எனக் குறிப்பிட்டுள்ளனர். மேலும், பொருளாதாரப் போட்டிக் குழுக்களே வகுப்புகளாகும் என்று கூறுகிறார்கள். இத்தகைய வகுப்பு வேறுபாடுகள், சமுதாயத்தில் பொருளாதார உற்பத்திக்குப் பயன்படுத்தக்கூடிய துணைக் கருவிகளின் மீது உரிமை கொண்டாடப்படுவதன் அடிப்படையில் தோன்றியுள்ளதைக் கூறுகிறார்கள். இந்த வழியில் இவர்கள் இன்றுள்ள தொழில் சமுதாயத்தை மத்தியதர வருக்க முதலாளிகள் (Bourgeois Capitalist) என்றும் பாட்டாளி வர்க்கத்துத் தொழிலாளர்கள் (Proletariate Labourers) என்றும் இரண்டு வகுப்புகளாகப் பிரித்துக் கூறுகிறார்கள். தொழிற் புரட்சிக்கு முந்தைய சமுதாயத்தில் நிலம் முக்கிய சொத்தாகக் கருதப்பட்டது. அச்சமுதாயத்தினரை நில உரிமையாளர் (Agriculturists) என்றும், விவசாயிகள் (Land-Lords) என்றும் இரண்டு வகுப்புகளாகப் பிரித்துக் கூறுகிறார்கள். இவ்வகையில் சொத்துதான் ஒருவரின் சமுதாயத் தகுதியை நிருணயிப்பதுடன், சமுதாய ஏற்றத் தாழ்வு, பொருளாதார வேறு

பாட்டின் அடிப்படையில் முடிவு செய்யப்படுகிறது என்றும் கூறுகிறார்கள். இக்கருத்தைப் பல சமூக வியல் அறிஞர்கள் மறுத்துக் கூறுவதுண்டு. அவர்கள் கருத்துப்படி சமுதாயத்தில் ஒரு வகுப்பிற்குக் கொடுக் கப்படுகின்ற நிலை அதன் பொருளாதாரத் தன்மை யைப் பொறுத்துக் கிடையாது என்பதாகும். எனினும், இவ்விரண்டு கருத்துகளையும் சமூகவியல் அறிஞர்களும் பொருளாதார வல்லுநர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இந்திய நாட்டைப் பொறுத்த மட்டும் வகுப் புணர்வு என்பது அறிவுணர்வு எனக் கொள்ளலாம். ஏனெனில் இங்கு வகுப்புணர்வை விடச் சாதி உணர்வு தான் மிகுதி. எனினும் புதிய தொழில் வளர்ச்சி, நகரமயமாதல், போக்குவரத்து வசதியின் முன்னேற்றம். புதிய ஆங்கிலக் கல்வி முறை, அரசியல், சமுதாய மறுமலர்ச்சி, குடியரசு அரசியல் முறை, தீண்டாமை ஒழிப்புச் சட்டங்கள், தொழி லாளர் சங்கங்களின் வளர்ச்சி போன்ற காரணங் களால் சமுதாயத்தில் சாதியுணர்வு மறைந்து, வகுப்புணர்வு தோன்றுவதாகச் சில அறிஞர்கள் கூறுகிறார்கள். ஆனாலும், ஒரே சாதியைச் சேர்ந்த வர்கள் சமுதாயத்தில் வெவ்வேறு வகுப்புகளுடன் சேர்ந்திருந்தாலும் சாதி உணர்வுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள் எனப்பல ஆராய்ச்சிக் குறிப்புகள் எடுத்துக்காட்டுகின்றன.

-கோ.இரா.

**துணை நூல்கள் :**

1. Bottomore, T.B., **Sociology - A Guide to Problems & Literature**, George Allen & Unwin (India) Pvt. Ltd., Bombay - 1971.

2. Mac. Iver, R.M., & Page, C.H., **Society - An Introductory Analysis,** The Macmillan Company of India Ltd., Delhi, 1977.

3. Sharma, R.N., **Principles of Sociology,** Asia Publishing House, Bombay, 1977.

4. Mannheim, Karl, **Systematic Sociology,** Routledge & Kegan Paul, London, 1959.

**வகுப்புப் போராட்டம்** : இக்காலச் சமூக, பொருளாதார, அரசியல்கொள்கைகளுள் ஆற்றலும், கிளர்ச்சியுமுடைய ஒரு கொள்கையாகக் கருதப்படு வது, வகுப்புப் போராட்டம் என்ற கொள்கை (Theory of Class Struggle) ஆகும். சமூகத்தில் முதலாளிகள் வகுப்பு என்பதும், தொழிலாளர் வகுப்பு என்பதும் ஒன்றுக்கொன்று முரணான நோக்கங்களை உடை யதாக இருப்பதால், இவை இரண்டிடற்குமிடையே மோதல் தவிர்க்க இயலாதது என்பதும், இதில் அளவில் பெரிய தொழிலாளர் வகுப்பே இறுதியில் வெற்றி பெறும் என்பதும், இக்கொள்கையின் பொரு ளாகும்.

**உயர்தரப்பொருளாதாரத் தத்துவத்தில் (Classical Economics) இக்கொள்கை** : இக்கொள்கை உயர்தரப் பொருளாதாரத் தத்துவத்தை வரைந்த தேவிடு இரிக்கார்டோ (David Ricardo) என்பவருடைய கருத்து களுள் காணப்படுகிறது .

மால்தூசு (Malthus) வினுடைய மக்கள் தொகைப் பெருக்கம் பற்றிய விதியையும், வாரம் பற்றிய விதியையும் ஆதாரங்களாகக் கொண்டு இரிக் காரடோ சில முடிபுகளைக் கூறினார். நிலத்தின் விளைபொருளே உணவுப் பொருளாகையால், நிலத்தின் உடைமையாளர் (Landlord) ஒரு தனி உரிமை பெற்றவர் (Monopolist) ஆகிறார். அவர் மற்ற பொரு ளாதார வகுப்பாராகிய முதலாளிகள், தொழிலாளர், தொழில் மேலாளர் (Manage or Entrepreneur) முதலி யோரிடமிருந்து வாரத்தை ஒரு கப்பத்தொகையாகப் பெறுதலால் அவர் ஒரு பொருளாதாரப் புல்லுரு வியே (Parasite) ஆவார். அவர் பெறும் கப்பம் (Tribute) பொருளுற்பத்திக்கு எந்த வகையிலும் உதவி செய்தல் இல்லை . இதனால் நில உடைமையாளருடைய கப்பம் பெறும் நோக்கம் சமூகத்திலுள்ள மற்ற ஒவ் வொரு வகுப்பாரின் நோக்கத்துக்கும் மாறுபடு கிறது. உணவுப் பொருள் விலை உயர, வளம் குறைந்த நிலமும் பயிரிடப்படுகிறது, வாரமும் (அல்லது குத்தகைப் பணமும்) உயருகிறது. மக்கள் தொகை மேலும் உயர, உணவுப் பொருள் விலையும் உயருகிறது. இவ்வாறு வாரம் அல்லது குத்தகை பற்றிய விதியும் மக்கள் பெருக்க விதியும் உழைப்புக் கூலி பற்றிய ஒரு விதியைத் தோற்றுவிக்கின்றன, அதாவது, உழைப்புக்கூலிகள் (Living Wages) வாழ்க்கை ஊதிய மட்டத்தை— அல்லது பிழைப் பூதிய மட்டத்தைவிட கூடுதலாகவோ குறை வாகவோ போகமாட்டா.

தொழிலுக்குத் கொடுக்கப்படும் இயற்கை யான கூலி அல்லது விலை எது என்பது தொழிலாளர் உயிர்

வாழ்தற்கும், தம் இனம் மிகைபடாமலும், குறைவு படாமலும் தொடர்ந்து நீடித்து அல்லது நிலையாக இருத்தற்கும் தேவைப்படும் பொருளே ஆகும்.

தொழிலிலிருந்து கிடைக்கும் பொருள் முழுவதும் பொதுவாக வாரம் (Rent), கூலிகள் (Wages), ஊதியங்கள் (Profits) முதலியனவாகப் பங்கீடு செய்யப்படுவதனால், குத்தகையிலும், கூலியிலும் கூடுதல் ஏதேனும் ஏற்படுமானால், அந்தக் கூடுதல் தொகை முதலாளிக்குக் கொடுக்கப்படும் ஊதியத்திலிருந்து கழித்துக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு, பொருளுற்பத்தி பெருகுகின்ற முன்னேற்றமான பொருளாதாரத்தில், அதில் பொருளுற்பத்திக்குச் சிறிதும் உதவி செய்யாத நில உடைமையாளருக்கு உற்பத்தியில் பெரிய பங்கும், மூலதனம் போட்ட முதலாளிக்கு அதைவிடச் சிறிய பங்கும், தொழிலாளருக்கு, அவர் மறுத்தால் வேறொருவரைத் தொழிலாளராக அமர்த்துவதற்கு எவ்வளவு தேவைப்படுமோ, அந்த அளவு பங்கு மட்டுமே கொடுக்கப்படுகின்றன. இதுவே முன்னேற்றமான பொருளாதாரத்தில் காணப்படும் ஒரு சாதாரண இயல்பு ஆகும். நிலத்தின் விளைச்சலிலிருந்து பெரும் பகுதி, உற்பத்தி ஏதும் செய்யாத நில உடைமையாளருக்குப் போகின்ற காரணத்தால், ஒருபுறம் நில உடைமையாளர் வகுப்புக்கும், இன்னொருபுறம் முதலாளி, தொழிலாளி, மேலாளர் வகுப்புகளுக்கும் இடையே நல்லிணக்கம் ஏற்படாமல், இரு கூட்டத்தாருக்கும் அல்லது வகுப்பாருக்குமிடையே போராட்டம் தொடங்குகிறது. உற்பத்திக்கு உதவி செய்யாத குத்தகை அல்லது வாரம் என்பது நிலத்திலிருந்து மட்டும்தான் கிடைக்கிறது என்பது இல்லை, வேறு வகையான வடிவங்களிலும் பொருளாதார வாரம் (Economic rent) கிடைக்கிறது.

**மார்க்சு கூறிய வகுப்புப் போராட்டக் கொள்கை:** நில உடைமையாளருடைய நோக்கங்கள், முதலாளிகள், தொழிலாளருடைய நோக்கங்களுக்கு மாறானவை என்று எடுத்துக் காட்ட, காரல் மார்க்சு (Karl Marx, *1818 - 1883)* முதலாளியின் நோக்கங்களும், தொழிலாளியின் நோக்கங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்று விளக்கினார். எவ்வாறெனில், உற்பத்தியிலிருந்து ஊதியத்துக்கு (Profits) ஒதுக்கப்படும் பங்கு எல்லாம் கூலியிலிருந்து கழிக்கப்படுகிறது. நில உடைமையாளர் நிலத்தைத் தம் ஏகபோக உடைமையாகக் கொண்டுள்ள காரணத்தால், அவர் நிலத்திலிருந்து கிடைக்கும் வாரத்தைப் பெறுவதற்கு உரியவராதல்போல, தொழில் மயமாக்கப்பட்ட பொருளாதார முறையில், முதலாளி உற்பத்திக் காரணிகளின் (Factors of Production) ஏகபோக உரிமை யாளராக இருப்பதனால், அவருக்குப் போகும் ஊதியங்களெல்லாம் ஒரு வகையான கூடுதல் மதிப்பு (Surplus Value), அல்லது ஒரு வகையான பொருளாதார வாரமே ஆகும். இவ்வாறு உயர்தரப் பொருளியலானது, தொழிலாளரை முதலாளிகள் பயன்படுத்திக் கொள்ளுகின்ற நிலையை மார்க்சுக்கு எடுத்துக் காட்டிற்று. தொழிலாளர் சங்கங்களை அமைத்துக் கொள்ளுதற்கு உடன்பாடு அளிக்கும் சட்டங்கள் முதலில் இங்கிலாந்திலும், பின்னர் மற்ற நாடு களிலும் செய்யப்பட்டன. ஆகையால் கிபி.19-ஆம் நூற்றாண்டில் சம நிலைக் கருத்துகளைப் (Labour theory of value) பின்பற்றிய தீவிரப் போக்குடைய தொழிலாளர் இயக்கம் வளர்ந்தது. அதன் தோற்றமும், வளர்ச்சியும் இரிக்காரடோவின் கூடுதல் மதிப்புக் கருத்தைப்போல, மார்க்சு தம் வகுப்புப் போராட்டம் பற்றிய கொள்கையை உருவாக்க உதவிற்று. தடை யற்ற வாணிகச் சூழ்நிலையில் ஒரு பொருளின் விலை அல்லது மதிப்பு அதனை உற்பத்தி செய்யும் தொழில் விளைவினால் தான் முடிவு செய்யப்படுகிறது. இரிக்காரடோ இந்தத் தொழில் மதிப்புக் கொள்கையையே (Labour theory of value) பொருளின் விலைகளை நிலைப்படுத்தும் பொருளாதார அளவு கோலாகக் கொண்டார். ஆயினும், அவரே பொருட்களின் விலைதான் (Price) பொருட்களில் அடங்கியுள்ள உழைப்பிளைவை வரையறை செய்கிறது என்பதையும் ஒப்புக்கொண்டார். மார்க்சு, முதலாளித்துவ முறையிலமைந்த தொழில் மயமான சமூகத்தின் விளைவுதான் கூலிக்கு உழைக்கும் தொழிலாளர் வகுப்பின் தோற்றம் ஆகும் என்றும், சமூக வரலாற்றை உருவாக்குபவை உற்பத்தி, பங்கீடு என்ற பொருளாதாரக் காரணிகளே ஆகும் என்றும், அதுவே சமூக சமத்துவமின்மையை ஒழித்து, சமூக சமத்துவத்தையும், வகுப்பு வேறுபாடற்ற சமூகத்தையும், நிறுவும் நோக்கத்தோடு வகுப்புப் போராட்டத்தை அல்லது தொழிலாளர் புரட்சியைத் தூண்டுகிறது என்றும், பொருளியல்பான தூண்டுதல் என்பது (Economic Determinism) அதுவே ஆகுமென்றும் கூறினார்.

வகுப்பு முரண்பாட்டுக் கொள்கையை முதன் முதலில் கண்டுபிடித்துக் கூறியவர் மார்க்சு அல்லர் என்பதும், அதனை முதலில் கூறியவர் பிரான்சு சமூக இயலாரான அகசுடின் தியரி (Augustine Thierry) என்பவர் தாம் என்பதும் கவனிக்கத் தக்கவையாகும்.

மார்க்சு தருக்கவாதப் பருப்பொருளியல் என்ற கொள்கையைத் (Dialectical Materialism) தொழிலாளர் வகுப்பு நடத்தும் புரட்சிக்குரிய ஒரு செயற்பாட்டுத் திட்டமாக ஆக்கினார். இக்காலச் சமூகத்தில் நகர வாழ்க்கை இயல்பும் வணிக நோக்கங்களும் உடைய ஒரு நடுத்தர வகுப்பு, அரசியல், சமூக உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு, ஆட்சியைக் கைப்பற்ற முயலுகிறது. ஆலைத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர் வகுப்பு நகர வாழ்க்கை இயல்புடனும், தன் அரசியல் சுதந்திரத்தை விடத் தனக்குப் பொருளாதாரத் துறையில் பாதுகாப்புப் பெறும் நோக்கத்துடனும் (Economic security) ஆட்சியைக் கைப்பற்ற முயலுகிறது. இவ்விரு வகுப்புகளுமே இக்காலச் சமூகத்தில் இயங்கும் அரசியல் சக்திகள் (Political forces) ஆகும். இவ்விரண்டு வகுப்புகளுள் எது மற்றதை அடக்கி ஆளுதல் வேண்டும் என்பது தான் இந்த வகுப்புப் போராட்டத்தில் அடங்கியுள்ள கேள்வி ஆகும்.

இலெனின் கூறிய வகுப்புப்போராட்டக் கொள்கை: நிகழ்ச்சிகளை உருவாக்கும் கருத்துகளே கருவிகள் (Weapons) ஆகும்; வகுப்புப் போராட்டத்தை நடத்துகின்ற தொழிலாளர் வகுப்புக்கும் புரட்சிக் கருத்துகளடங்கிய சமூகக் கொள்கையே கருவி ஆகும். இதையே மார்க்சு வகுத்த பொருளியற் கொள்கை காட்டுகிறது. தத்துவத்திலாயினும், பொருளாதாரத்திலாயினும், கொள்கைகளை உருவாக்குதல், இயலாது. ஆகையால், தருக்க இயலான பருப்பொருள் வாதத்தை அடிப்படையாகக் கொண்டு முதலாளித்துவ நடுத்தர வகுப்பாருடைய நலனைச் சரியெனக் காட்டும் ஒரு சமூகக் கொள்கையையும், அதற்கு மாறான தொழிலாளர் நலனைச் சரியெனக் காட்டும் ஒரு சமூகக் கொள்கையையும் உருவாக்குதல் கூடும். தொழிலாளர் நலன் பற்றிய சமூகக் கொள்கையே உயர்வானது. எவ்வாறெனில், அதுவே சமூக முன்னேற்றத்தில் தொழிலாளர் வகுப்பே எதிர்காலத்தில் ஓங்கிவளருமென்று காட்டுகிறது. தொழிலாளர் வகுப்பு, புரட்சி செய்யும் நோக்கத்தோடு அதாவது போராட்டம் நடத்தும் இயல்போடு இருக்கிறது. அது வகுப்புப் போராட்டத்தை நடத்துதற்குப் (அதாவது சமநிலைப் புரட்சியை நடத்துவதற்கு - Socialist revolution) போர் ஒரு தூண்டுகோலாக இருக்கிறது.

மக்களாட்சியில் கையாளப்படும் பெரும்பாலானவர் ஆட்சி (Majority rule) என்பது பொருளற்றது. பெரும்பாலர் ஆட்சி என்பது வகுப்புப் போராட்டத்தைக் குறிக்கோளாக உடைய சமநிலைக் கொள்கையோடு ஒத்து வராது. எந்த ஒரு சிக்கலும் இரு வகுப்பாருக்குமிடையே உள்ள போராட்டத்தில் தான் தோன்றுகிறது. அந்தப் போராட்டத்தை நடத்துபவை கட்சிகளாகும். நடுத்தர வகுப்பாரின் அரசாங்கத்தில் உண்மையான அதிகாரத்தைப் பெற்றிருக்கும் முதலாளிகள் தங்களுடைய உரிமைகளைக் காத்தற்கு உரிய கேடயமாக அரசியலமைப்பு உரிமைகளைப் பயன்படுத்துகின்றனர். தொழிலாளர் வகுப்பைப் பொறுத்தவரையில் வல்லந்தத்தை மூடிமறைக்கும் கேடயமாகவே அரசியலுரிமைகள் கையாளப்படுகின்றன. ஆகையால், பெரும்பாலாரைவிட, நன்கு அமைக்கப்பட்ட, தம் வகுப்பு உரிமைகளைப் பற்றிய உணர்வோடு செயற்படுகிற, நல்ல போர்க் கருவிகளை உடைய சிறுபான்மையோரே வகுப்புப் போராட்டத்தை அல்லது புரட்சியை வெற்றியாக நடத்தி, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி, அதன் பின்னர் பெரும்பான்மை ஆதரவைப் பெறுகின்றனர்.

இசுடாலின் கூறிய பொதுவுடைமைக் கொள்கையில் வகுப்புப் போராட்டக் கருத்து : பொதுவுடைமை அரசு பற்றிய கொள்கையின்படி, அரசாங்கம் என்பது மக்களுக்காக நடத்தப்படுவதாயினும், அது மக்களால் நடத்தப்படுவது அன்று. எவ்வாறெனில் அதன்மீது மக்களுக்கு எவ்விதக் கட்டுப்பாட்டு அதிகாரமும் இல்லை. பொதுவுடைமை அரசாங்கம் என்பது, தங்களைத் தாங்களே அமர்த்திக் கொள்ளுகிற, தங்களையே என்றும் நிலையாக இருக்குமாறு செய்கிற வல்லுநர் குழாத்தின் (Elite) அரசாங்கமே ஆகும். இந்தக் குழாத்தில் மக்களுள் மிகச் சிறந்த அறிவும், தகுதியும் உடையோரே அடங்கி இருப்பர். மேலும், இவ்அரசாங்க முறையின் அதிகாரங்களுக்கு, எந்த அரசியலமைப்புச் சட்டத்தினாலும் விதிக்கப்படும் வரம்புகள் இல்லை. அது அடையும் வெற்றிகளும், அதனுடைய நல்ல நோக்கங்களுமே

அதற்கு வரம்புகளாகும். உழைப்பாளருள், ஆலைத் தொழிலாளர்கள் (Workers or proletariat), உழவர்கள் (Peasants) என்ற இருவகுப்பார்களே இருக்கின்றனர். அவர்களுடைய சருவாதிகாரமே 1936-ஆம் ஆண்டின் உருசிய அரசியலமைப்புச் சட்டத்தில் இசுடாலினால் ஒப்புக் கொள்ளப்பட்டது. இவ்விருவருமடங்கிய பொதுவுடமைக் கட்சியின் அரசாங்கத்தில், முற்காலதிலிருந்து வந்த வகுப்புப் போராட்டம் ஒழிக்கப் பட்டுவிட்டது.

சோரல் கூறிய வகுப்புப் போராட்டக் கருத்து: பிரான்சின் சமநிலைக் கொள்கையாளரும், 'சிண்டிகலிசம்' (Syndicalism) என்னும் தொழிற் சங்கச் சம நிலைக் கொள்கையைக் கூறியவருமான சோரல் (Sorel, கி.பி.1847-1922) என்பார் அரசிலாத் தத்துவத்தை (Philosophic anarchism) ஏற்றுக்கொண்டாலும், மார்க்சு கூறிய வகுப்புப் போராட்டக் கொள்கையை ஒப்புக் கொண்டார். சமூகம் ஒன்றுக்கொன்று முரணான நலன்களை உடைய முதலாளிகள் வகுப்பு, தொழிலாளிகள் வகுப்பு என்ற இரு வகுப்புக் களடங்கியது. ஆகையால் இக்கால அரசு வகுப்பு வேறுபாட்டை உடைய அரசு, அதில் சில முதலாளி களே ஆதிக்கம் பெற்றுள்ளனர். அதற்கு அடிப்படைக் காரணம் தனியார் முதல் உரிமை (Individual Capitalism) ஆகும். இந்த முறையை நீக்கிக் கட்டு மூலதனத்தை நிறுவும் பொருட்டு, தொழிலாளர் சங்கங்களை அமைத்து, வேலை மறுப்பு செய்யும் வேலையைச் சங்கத்தின் விதிகளுக்குட்பட்டுச் செய்தல், வேலையைச் சிறு அளவில் செய்தல், வேலை நிறுத்தங்கள் ஆகிய வழிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

மதிப்பீடு : மார்க்சு, எகலைப்போல, சமூகமென்பதனை மனித இயல்பைக் காட்டுகின்ற பல நிறுவனங்களடங்கியதாகக் கருதினமையால், அவருடைய கொள்கை தாராள இயல்புக்கு மாறான ஒன்றாக ஆயிற்று. மனித இயல்புகளில் ஒன்றான , நிறுவனம் ஒன்றில் உறுப்பினராதல் என்ற இயல்பை மட்டும் ஒத்துக்கொண்டு மற்றவற்றை ஒதுக்கி, அவர் தம் வகுப்புப் போராட்டக் கொள்கையை வரைந்தமையால், அது சமூகத்தில் முதலாளி வகுப்புக்கும், தொழிலாளர் வகுப்புக்கும் இடையே முரண்பாட்டை வலியுறுத்துகிறது. தாராள அரசியற் கொள்கையின் இரு அடிப்படையான சமூக அல்லது ஒழுக்க இயல் கருத்துகளாவன. 1. ஒன்றுக்கொன்று முரணான நோக்கங்களை வல்லந்தமான வழிகளினா லல்லாமல், அமைதியான முறையில் பொருத்தமாக இணைத்தல் கூடும். 2. அவ்வாறு பொருத்தமாக இணைப்பதற்கு மக்களாட்சிச் செயல்முறைகளைப் பின்பற்றுதல்தான் ஒரேவழி. தனியார் உரிமைக் கோட்பாட்டின் குறைபாடுகளைத் தாராள அரசியற் கொள்கையாளர் ஒப்புக்கொண்டாலும் அவர்கள், ஒன்றுக்கொன்று முரண்பாடான நோக்கங்கள் அல்லது வகுப்புகள் தமக்குள் போராட்டம் நடத்திச் சமூகத்தை நிலைபெறச் செய்கின்றன என்றும், சமூகத்தில் வரலாறே அத்தகைய வகுப்புகளின் போராட்டத்தினால்தான் உருவாக்கப்படுகிறது என்றும் கூறிய மார்க்சின் கருத்துகளையும் ஒப்புக் கொள்ளவில்லை. பொருளாதாரத் தவறுகளைச் சட்டங்களின் வாயிலாக நீக்குதலியலும் என்ற தாராள அரசியற்கொள்கையாளரின் கருத்தில் மார்க்சுக்கு நம்பிக்கை இல்லை. இங்கிலாந்தில் வல்லந்தமான வகுப்புப் போராட்டம் எதுவும் இல்லாமலே, அமைதியான முறையில், சட்டங்களின் வாயிலாக இரு வகுப்புகளுக்குமிடையே இருந்த சமத்துவமின்மை நீக்கப்பட்டதை அதன் வரலாறு காட்டு கிறது. இதனைப் பெரும்பாலான நாடுகள் பின்பற்று கின்றன.

- பா.சு.

**துணை நூல்கள் :**


1. Hunt, Carew, R.N., **The Theory and Practice of Communism**, London, 1957.
2. Meyer G. Alfred, **Leninism**, Cambridge, Mass, 1957.


**வகைப்பாட்டியல்** : மனிதச் செயற்பாடுகளை ஆராய்ந்து வகைப்படுத்தும் நெறி முறையே வகைப் பாட்டியல் (Typology) எனப்படும். வகைப்பாட்டியலைப் பயன்படுத்த ஏற்ற களம் மொழிகள் ஆகும். மொழியியல் வகைப்பாட்டியல் (Linguistic typology) மொழிகளை விவரிப்பதையும் வகைப்படுத்துவதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இம்முறையில் பல்வேறு மொழிகள் விவரிக்கப்பட்டு அமைப்பியல் (Structural types) அடிப்படையில் மொழிகள் பாகுபாடு செய்யப்படும்.

வகைப்பாட்டியலின் வாயிலாக மொழிகளில் காணப்பெறும் பொதுமைப் பண்புகளையும், சிறப்புப் பண்புகளையும் கண்டறிதல் இயலும்.

மொழியின் அமைப்பில் காணப்பெறும் சிறப்புப் பண்புகளே வகைப்பாட்டியலுக்கு அடிப்படையாக அமைகின்றன. வகைப்பாட்டியல் விளக்க இலக்கணங்களில் காணப்பெறும் வகைகளில் (Types) அடிப்படையில் மொழிகளில் இனத்தொடர்பு (Geneological relationship) பேசப்படும் இடம் ஆகியவற்றிற்கு அப்பால் மொழிகளை வகைப்படுத்துகின்றது.

மொழியின் அனைத்து நிலைகளிலும் வகைப்பாட்டியலைப் பயன்படுத்த முடியும். ஒலியன் நிலை (Phonological Level), உருபன் நிலை (Morphological Level), தொடரியல் நிலை (Syntactical Level), பொருண்மை நிலை (Semantic Level) ஆகிய நிலைகளில் வகைப்பாட்டியலைப் பயன்படுத்தி மொழிகளை வகைப்படுத்தல் இயலும்.

ஒலியின் நிலையில் ஒலியங்களின் வருகை முறை, உயிர் ஒலியன்கள், மெய்யொலியன்கள் போன்றவற்றை வகைகளாகக் கொண்டு மொழிகளை வகைப்படுத்தலாம். திராவிட மொழிகள் அனைத்தும் முக்கோண உயிர் அமைப்புடைய மொழிகளாகும். தர்க்கிசு மொழியில் நீள்சதுர உயிர் அமைப்புக் காணப்படுகின்றது. உருபன் நிலையில் சொற்களில் காணப்படும் உருபன்களை அடிப்படையாகக் கொண்டு மொழிகளைத் தனிநிலை மொழிகள் (Isolating Languages), ஒட்டு நிலை மொழிகள் (Agglutinative Languages) உட்பிணைப்பு நிலை மொழிகள் (Inflectional Languages), உள்ளடக்குநிலை மொழிகள் (Incorporating Languages), இணைப்பு நிலை மொழிகள் (Synthetic Languages) ஆகிய பல்வேறு வகையினவாகப் பாகுபாடு செய்தல் இயலும்.

தொடரியல் நிலையில் வாக்கியத்தில் காணப்பெறும் சொற்களின் வரன்முறை (Word order), பெயரடைத் தொடரில் பெயரிடை, பெயர்அமையும் நிலை, வினையடையில் நிலையிடம் (Position) முதலியவற்றை அடிப்படை வகைகளாகத் கொண்டு மொழிகள் பாகுபாடு செய்யப்பெறும். வாக்கியத்தில் சொற்களில் வரன்முறையினை அடிப்படையாகக் கொண்டு எழுவாய் - செயப்படு பொருள்- பயனிலை - வரன்முறை மொழிகள் (S O V Languages), எழுவாய் - பயனிலை - செயப்படு பொருள் வரன்முறை மொழிகள் (S V O Languages) போன்று மொழிகளை ஆறுவகையினவாகப் பகுக்கலாம். பொருண்மை நிலையில் உறவுமுறைச் சொற்கள் (Kinship terms) நிறங்களைக் குறிக்கும் சொற்கள் போன்றவற்றை வகைகளாகக் கொண்டு மொழிகள் பாகுபாடு செய்யப்படும்.

வகைப்பாட்டியல் மொழியின் இலக்கணத்தினை விளக்கவும் விவரிக்கவும் செய்வதால் அதன் வாயிலாக மொழிகளின் விளக்க இலக்கணத்தினை விரிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. வகைப்பாட்டியலின் வாயிலாக எழுத்து வழக்கில்லா மொழிகளை ஒப்பீட்டாய்வு செய்யவும், ஒரு மொழி எந்தப் பிரிவைச் சார்ந்தது என்பதனைக் கண்டறியவும் இயலும் . அம்முறையில் மொழிகளின் பொதுமைப் பண்புகளைக் கண்டறிவதன் வாயிலாக மொழிகளின் பொது இலக்கணத்தினை (Universal Grammar) உருவாக்க முடியும்.

ஒரு மொழியின் வெவ்வேறு கால விளக்க இலக்கணத்தினை ஒப்பிடுவதன் வாயிலாக வரலாற்று வகைப்பாட்டியல் (Diachronic Typology) ஒரு மொழியின் வரலாற்றினை விவரிக்கும். மூல மொழியைக் கண்டறிய மரபு முறையிலிருந்து மாறுபட்டுப் பொது விதிகளை வகைப்பாட்டியல் உருவாக்கித் தருகின்றது. மேலும், வரலாற்று வகைப்பாட்டியல் வாயிலாக மொழியில் நடைபெறும் மாற்றங்களையும் அவற்றின் விகிதம் (Ratio), வருகை நிலை (Distribution) ஆகியவற்றை அறிந்து கொள்ளலாம்.

பிரடரிக் வான் சிலகல் என்பார் கி.பி.*1808* -ஆம் ஆண்டில் மொழிகளில் அமைப்புகளிடையே காணப்பெற்ற வேறுபாடுகளின் காரணமாக மொழிகளில் அமைப்பியல் வகையினை அடிப்படையாகக் கொண்டு, ஒட்டுநிலை மொழிகள் எனவும், உட்பினைப்புநிலை மொழிகள் எனவும் வகைப்பாட்டியல் முறையில் முதன் முதலாக மொழிகளை இரண்டு வகையினவாகப் பாகுபாடு செய்தார். வான் சிலகல் என்பார் கி.பி.*1818* - இல் இவ்விரண்டோடு தனிநிலை மொழிகள் என்பதைச் சேர்த்து மூன்றாகவும், வில்எல்ம் வான் அம்போல்ட்டு என்பார் கி.பி.*1835* -இல் சிலகல் குறிப்பிட்ட மூன்றோடு உள்ளடக்கு நிலை மொழிகள் என்பதனைச் சேர்த்து நான்காகவும் மொழிகளைப் பாகுபாடு செய்தனர்.

சபீர் என்பார் 1921-இல் சொற்களின் பொருளணுக்கள் அடிப்படையில் மொழிகளைப் பகுப்புநிலை மொழிகள் (Analytical Languages), இணைப்பு நிலை மொழிகள் (Synthetic Languages), பல்லிணைப்பு நிலை மொழிகள் (Polysynthetic Languages) என மூன்றாகப் பகுத்துக் காட்டினார். இட்ருபட்சுகாய் என்பார் 1939 -இல் ஒலியனியல் அமைப்பினை அடிப்படையாகக் கொண்டும், பேசல் என்பார் 1949-இல் சொல்லமைப்பினை அடிப்படையாகக் கொண்டும், உல்மேன் என்பார் 1953 -இல் பொருண்மை அடிப்படையாகக் கொண்டும் மொழிகளைப் பல்வேறு வகையினவாகப் பாகுபாடு செய்தனர்.

கிரீன்பர்க்கு என்பார் 1954-இல் உருபனியில் வகைப்பாட்டியலின் வாயிலாகச் சொற்களில் காணப்படும் உருபுகளின் விகிதத்தினைக் (Ratio) கண்டறியும் இணைப்பு நிலைக்காட்டியினை (Synthetic Index) உருவாக்கினார். ஆக்கெட்டு என்பார் 1955 -இல் ஒலியனியல் அமைப்பினைக் கொண்டு மொழிகளை வெவ்வேறு வகையினவாகப் பாகுபாடு செய்தார். உசுபென்சுகி என்பார் 1965-இல் மொழிகளின் அமைப்பியல் வகைப்பாட்டியல் (Structural Typology) கோட்பாட்டினை நிறுவினார். பெர்கூசன், கிரீன்பர்க்கு ஆகியோர் 1967 -இல் மொழிகளில் பொதுமைப் பண்புகளைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டனர். இலகுமான் என்பார் 1978 -இல் தொடரியல் வகைப்பாட்டியல் பற்றி விரிவான ஆய்வு நிகழ்த்தினார். பின்க்கு, உல்மேன் ஆகியோர் பொருண்மைப் பொதுப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டு மொழிகளைப் பாகுபாடு செய்துள்ளனர்.

-ஏ.ஆ.

**துணை நூல்கள் :**

1. Birnhaum, H., **Problems of Typological and Genetic Linguistics viewed in a Generative Frame Wrok**, Mouton, The Hague, Paris, 1970.

2. Lehmann, **Synthetic Typology - Studies in the Phenomelology of Languages**, University Texas Press, Texas, 1978.

3. Uspensky, B., **Principles of Structural Typology**, Mouton, The Hague, Paris, 1968.

**வங்கியியல் :** வங்கிகளைப் பற்றிய அறிவுத் தொகுதி வங்கியியல். "பணம் என்றால் என்ன?" என்ற வினாவிற்குப் "பணம் ஆற்றும் பணிகளே பணம்" என்று சுருக்கமாகக் குறிப்பிடுவதைப் போன்று, "வங்கி என்றால் என்ன?" என்ற வினாவிற்குப் பொதுவாக "வங்கிகள் ஆற்றும் பணிகளே வங்கி" எனலாம். பண்டங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்று இலாபம் பெறும் வாணிக நிறுவனங்களைப் போன்று, பணத்தை வைப்பாளர்களிடமிருந்து குறைந்த வட்டிக்குப் பெற்றுக் கடன் பெறுவோர்களுக்கு அதிக வட்டிக்குக் கடன் கொடுத்தும், கடன் பணத்தைப் பெருக்கியும் செயற்படும் நிதி நிறுவனத்தை வங்கி என்று குறிப்பிடலாம். வரைவோலை (Draft) அல்லது காசோலை (Cheque) அல்லது ஆணையின் (Order) அடிப்படையில் திருப்பிச் செலுத்தத் தக்க வகையில் மக்களிடம் உள்ள பணத்தைப் பல வகை வைப்புகளாகப் பெற்றும், அரசுப் பத்திரங்கள், பங்குப் பத்திரங்கள், தங்கம், உண்டியல்கள் (Bills), நம்பிக்கை உறுதிப் பத்திரங்கள் (Promissory Notes) ஆகியவற்றின் அல்லது அவை போன்ற பிறவற்றின் அடிப்படையில் பணத்தைக் கடனாகக் கொடுத்தும் மேற்குறிப்பிட்டவற்றைக் கழிவு செய்து (Discounting) வாங்கிக் கொண்டும் செயற்படும் தனி ஆள் அல்லது நிறுவனத்தை வங்கி என்று குறிப்பிடலாம் என்ற பொருளில் விளக்கம் தருகிறார் பின்லே சிர்ராசு (Findlay Shirras) என்னும் அறிஞர். பணத்தைப் பராமரிப்பதோடு, பணத்தை உற்பத்தி செய்யும் நிறுவனங்களை வங்கிகள் (Banks) என்று குறிப்பிடலாம் என்னும் பொருள்பட விளக்கம் தருகிறார், ஆர்.எசு. சேயர்சு (R.S. Sayers). கடன் கொடுப்பதற்காக அல்லது முதலிடுவதற்காகப் பொதுமக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்றுக் கொண்டு, அதே நேரத்தில் வைப்பாளர்கள் விடுக்கும் காசோலைகள், வரைவோலைகள், ஆணைகள் மற்றும் பிற வகைகள் மூலம் திருப்பிச் செலுத்திக் கொண்டு செயற்படும் நிறுவனத்தை வங்கி நிறுவனம் எனக் குறிப்பிடலாம் என்று இந்திய வங்கிச் சட்டத்தின் அடிப்படையில் விளக்கம் தருவர் சிலர். சுருக்கமாக, பலவிதமான வைப்புகளைப் பெறுதல், பலவிதமான கடன்களைக் கொடுத்தல், கடன் பணத்தை உற்பத்தி செய்தல் ஆகிய பணிகளைச் செய்யும் நிதி நிறுவனத்தை வங்கி என்று குறிப்பிடலாம்.

இத்தாலிய மொழியின் 'பாங்கோ' (Bango), பிரெஞ்சு மொழியின் 'பாங்கீ' (Banke), செருமானிய மொழியின் 'பாக்' (Bach) ஆகிய சொற்களிலிருந்து ஆங்கில மொழியின் 'பாங்கு' (Bank) என்ற சொல் தோன்றியிருக்கலாம் என வங்கி என்ற சொல்லின் தோற்றம் பற்றிக் குறிப்பிடுவர்.

வங்கிகள் கி.பி.12 -ஆம் நுற்றாண்டிலேயே தோன்றிவிட்டன என்றும், 1157-ஆம் ஆண்டில் பேங் ஆப் வெனிசு (Bank of Venice) என்ற வங்கி முதன் முதலாகத் தோற்றுவிக்கப்பட்டது என்றும் பொருளியல் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுவர்.

கிரௌதர் (Crowther) என்பார், வங்கியின் மூன்று தோற்றுவாய்களாக வணிகர்கள் (Merchant Bankers), கடன்கொடுத்து வாங்குவோர் (Money lenders), பொற்கொல்லர்கள் (Goldsmiths) ஆகியோர் இருந்தனர் எனக் குறிப்பிடுகிறார்.

இந்தியாவில் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே வங்கிகள் இருந்துள்ளன எனக் குறிப்பிடப் படுகிறது. கௌடில்யர் காலத்தில் வங்கி அமைப்பு இருந்ததாக அர்த்தசாத்திரம் (Arthasasthra) என்ற நூலிலும், வேத காலத்தில் இவ்வமைப்பு இருந்ததாக மனு நூலிலும் குறிப்புகள் காணப்படுகின்றன எனவும் வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆங்கிலேயர்கள் இந்தியாவிற்கு வந்த பிறகு இக்கால வங்கி அமைப்பு உருப்பெற்றதாகவும் குறிப்பிடுகிறார்கள்

உடலில் குருதி சுழன்று கொண்டே இருப்பது எவ்வளவு அவசியமோ, அவ்வளவு அவசியம் பொருளாதாரத்தில் பேரங்கள் (Transactions) நிகழ்ந்து கொண்டே இருத்தல் ஆகும். அச் சூழற்சி நடைபெற உறுதுணையாக இருப்பவை வங்கிகளே. பொருளாதார அமைப்புச் செயற்படவும், வளர்ச்சி பெறவும் வங்கிகள் பெருந்துணை புரிகின்றன.

வங்கிகளை மைய வங்கி (Central Bank), வாணிக வங்கி (Commerical Bank), பரிமாற்ற வங்கி (Exchange Bank), தொழில் வங்கி (Industrial Bank), வளர்ச்சி வங்கி (Development Bank), கூட்டுறவு வங்கி (Co-operative Bank), சேமிப்பு வங்கி (Savings Bank), வேளாண்மை வங்கி (Agricultural Bank) எனப் பல வகைப்படுத்தலாம்.

**மைய வங்கி** : ஒரு நாட்டில் வங்கி அமைப்புக்களின் அச்சாணி போன்றது மைய வங்கி, கொடுக்கப் பட்டிருக்கும் முழு அளவிலான அல்லது பகுதி அளவிலான முழு ஆட்சி உரிமையைப் (Monopoly Right) பயன்படுத்திப் பொது மக்களுக்கும் வாணிகத்திற்கும் தேவைப்படுவதற்கேற்பக் காகிதப் பணத்தை வெளியிட்டு ஒழுங்குபடுத்துதல், அரசுகளின் வங்கியாகச் செயற்படுதல், வாணிக வங்கிகளில் உரொக்க இருப்புக்குப் பாதுகாவலாக விளங்குதல், நாட்டில் அயற் செலவாணியின் பாதுகாவலாக விளங்குதல், இறுதி நிலைக் கடன் ஈவோனாகக் கொள்கைகளுக்கேற்பக் (Lender of the last resort) கடன்களை விரிவுபடுத்துதல் அல்லது குறைத்தல் ஆகிய இன்றியமையாத பணிகளை ஆற்றும் தலைமை நிலை வங்கியே மைய வங்கி, ஒவ்வொரு நாட்டிற்கும். ஒவ்வொரு தலைமை வங்கி உண்டு. ஐக்கிய அமெரிக்க நாட்டில் கூட்டரசுக் காப்பு முறை (Federal Reserve System) என்ற மைய அமைப்பு உண்டு. இந்தியாவின் மைய வங்கியாகிய இந்திய இருப்பு வங்கி (Reserve Bank of India) மேற்குறிப்பிடப்பட்ட பல மரபு வழிப் பணிகளோடு (Traditional Functions) தொழில்களின் வளர்ச்சிக்கான நீண்டகால, நடு காலக் கடன்களை அளித்தல், வேளாண்மைத் துறை வளர்ச்சிக்கான கடன் வசதிகளை அளித்தல் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கான முட்டுக்கட்டைகளைத் தவிர்த்தல் போன்ற பல வளர்ச்சிப் பணிகளையும் பெருமளவில் ஆற்றி வருகிறது.

**வாணிக வங்கி** : நாட்டில் உள்ள வங்கிகளில் அதிகமான எண்ணிக்கையில் இருப்பவை வாணிக வங்கிகளே, இலாப நோக்கத்துடன் இவை செயற்படுகின்றன. நீர்மைத் தன்மை (Liquidity), இலாபத் தன்மை (Profitability), உறுதித் தன்மை (Stability) என்ற மூன்று இன்றியமையாச குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு இவை பணியாற்றுகின்றன.

நடப்பு வைப்புகள் (Current Deposits), சேமிப்பு வைப்புகள் (Savings Deposits), நிலையான வைப்புகள் (Fixed Deposits) அல்லது கால வைப்புகள் (Term Deposits), தொடரும் வைப்புகள் (Recurring Deposits), அழைப்பு வைப்புகள் (Call Deposits), அறிவிப்பு வைப்புகள் (Deposits at Notice), ஓய்வு நல வைப்புகள் (Retirement Benefit Deposits), குறுகிய கால வைப்புகள் (Short Term Deposits) போன்ற பல வைப்புகளின் மூலம்

நாடு முழுவதிலும் பரவலாக உள்ள சேமிப்புகளை இவ்வங்கிகள் குவிக்கின்றன. கேட்புக் கடன் (Demand Draft), அதிகப் பற்று (Over Draft), உரொக்கக் கடன் (Cash Credit), தவணைக் கடன் (Loans repayable in instalments) என்ற பல வழிகளில் கடன்களை இவ் வங்கிகள் மக்களுக்கு அளிக்கின்றன. தனி ஆள் பொறுப்பு, தங்கம், வெள்ளி, பண்டங்கள், சொத்துகள், பிற பொருள் அடிப்படையில் வங்கி, கடன்களை அளிக்கிறது. திறமை மிக்க தொழில் முயல்வோர்களை ஊக்குவிக்கிறது. இக்கால வாணிகம் பெரும்பாலும் மாற்று உண்டியல்களின் (Bills of Exchange) மூலம் நிகழ்கின்றது. அவ்வுண்டியல்களைக் கழிவுசெய்து (Discounting) வாணிக வங்கி பணத்தைக் கொடுக்கிறது. காசோலைகள் மூலமும் வரைவோலைகள் மூலமும், அஞ்சல் மாற்றங்கள் (Mail Transfer) மூலமும், தந்தி வழி மாற்றங்கள் (Telegraphic Transfer) மூலமும் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு அல்லது ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பணத்தை மாற்ற வாணிக வங்கிகள் உதவுகின்றன. அந்நியச் செலாவணிக் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல், பாதுகாப்புப் பெட்டக வசதிகளைத் தருதல், பதிலாள் பணிகளை (Agency Services) அல்லது பொதுப் பயன்பாட்டுப் பணிகளை (Public Utility Services) ஆற்றுதல், பயனுள்ள பல பணிகளை ஆற்றுதல் ஆகியவை வணிக வங்கிகள் ஆற்றும் பணிகள். வணிக வங்கிகள் ஆற்றும் சிறப்பான இன்னொரு பணி, கடனை உற்பத்தி (Credit Creation) செய்வதாகும். வங்கிகள் கடன்களை உற்பத்தி செய்யும் தொழிற்கூடங்கள் என்னும் பொருள்பட விளக்குகிறார் சேயர்சு (Sayers).

**பரிமாற்ற வங்கிகள் : அந்நியச் செலாவணிப் பேரங்களில் ஈடுபடும் வங்கிகளைப் பரிமாற்ற வங்கிகள் (Exchange Banks) என்பர். இவ் வங்கிகள் மூலமே பன்னாட்டு வாணிகப் பேரங்கள் நிகழ்கின்றன. ஒரு சில இந்திய வங்கிகளும் பரிமாற்ற வங்கிகளாகச் செயற்படுகின்றன.**

**தொழில் வங்கி (அ) வளர்ச்சி வங்கிகள்** : தொழில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு நீண்ட காலக் கடன்களையும், நடுக் கால கடன்களையும் தரும் வங்கிகளைத் தொழில் வங்கிகள் என்பர். (செருமனியின் தொழில் வளர்ச்சிக்கு இத்தகைய வங்கிகள் பேருதவி புரிந்திருக்கின்றன). இந்தியாவில் தொழில் இணையம் (The Industrial Finance Corporation), மாநில இணையம் (State Finance Corporation), இந்தியாவின் தொழிற்கடன், முதலீட்டு இணையம் (The Industrial Credit and Investment Corporation of India) போன்ற நிதி நிறுவனங்கள் இப்பணியை ஆற்றி வருகின்றன.

**கூட்டுறவு வங்கிகள்** : கூட்டுறவு அடிப்படையில், குடியானவர்களுக்கும், நில உரிமையாளர்களுக்கும், மற்றவர்களுக்கும் கடன்கொடுத்து உதவும் வங்கிகள் கூட்டுறவு வங்கிகள் ஆகும்.

**சேமிப்பு வங்கிகள்** : மக்களிடம் உள்ள சேமிப்புகளைத் திரட்ட வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படுபவை சேமிப்பு வங்கிகள். ஆனால், இவை தனித்தியங்காமல் ஏதாவதொரு வங்கியின் உட்பிரிவாகச் செயற்படுகின்றன. இந்தியப் பேரரசில் அஞ்சல் துறை அலுவலகங்களிலும் செயற்படுகின்றன.

**வேளாண்மை வங்கிகள்** : வேளாண்மை முன்னேற்றத்திற்கும், வேளாண்மை செய்வோருக்கும் உதவுவதற்கெனச் செயலாற்றும் வங்கிகள் வேளாண்மை வங்கிகள் ஆகும். இந்தியாவில் நில அடைமான வங்கிகள், வேளாண்மை செய்வோருக்குத் தேவையான நீண்டகாலக் கடனுதவியை அளிக்கின்றன. குறுகிய காலக் கடன் உதவிகளையும் கிராம வங்கிகள் (Rural Banks) அளித்து வருகின்றன.

**வங்கி முறையின் அமைப்பு: தனி வங்கியும் கிளை வங்கியும்** : வங்கி முறைகளில் தனிவங்கி முறை, கிளை வங்கி முறை என இரு வகைகள் உண்டு. தனிவங்கி முறை ஐக்கிய அமெரிக்க நாட்டிலும், கிளை வங்கி முறை இங்கிலாந்து, இந்தியா போன்ற பல நாடுகளிலும் புகழ் பெற்று விளங்குகின்றன. கிளைகள் எதுவுமின்றி ஒவ்வொரு வங்கியும் தனித்து இயங்கும் தன்மையுடைய முறை தனி வங்கி முறை. இதில் பல நன்மைகள் உண்டு. வட்டாரத்தின் மூலதனம் அதே வட்டார வளர்ச்சிக்குப் பயன்படுதல், நிலப்பகுதிக்கேற்ற சீரான பணி, தவறுகள், மோசடிகள் ஆகியவற்றைத் தவிர்த்தல், பெருமளவு அமைப்பின் குறைகளின்மை ஆகியன தனி வங்கி முறையின் நன்மைகள். மூலதனப் பற்றாக்குறை, குறைவான இலாபம், இடர் தாங்கும் தன்மையின்மை, நாடு தழுவிய தன்மையின்மை, பொருளாதாரக்

காரணிகளுக்கேற்பச் செயற்பட முடியாமை, உள்ளூர் நிலை களுக்கேற்ப அனுசரித்துக் கொள்ள வேண்டிய இடர்ப்பாடு ஆகியன தனி வங்கி முறையின் குறைகள்.

ஓரிடத்தில் தலைமை அலுவலகத்தையும் நாடு முழுவதிலும் உள்ள பல இடங்களில் கிளை அலுவ லகங்களையும் ஏற்படுத்திக் கொண்டு ஒரே மூல தனம், ஒரே நிருவாகம்,ஒரே மாதிரியான சட்ட திட் டங்கள்,ஒரே இயக்குநர் குழு போன்றவற்றைப் பெற் றுச் செயற்படும் வங்கி முறையைக் கிளை வங்கி முறை என்பர். முறையான மூலதனப் பகிர்வு, வைப்பு களும் (Deposits), சொத்துகளும் (Assets) பலவகைப் படுத்தப்படுத்ல், பொருளாதாரக் காரணிகளின் அடிப் படையில் செயற்படுதல், பெருமளவு மூலதனம், திறமையான நிருவாகம், வேலைப் பகிர்வு முறை யைப் பயன்படுத்துதல், சிக்கனம், திறமையான தலைமை அமைப்பு ஆகியன கிளை வங்கி முறையின் நன்மைகளாகும். காலங்கடத்துதல், சிவப்பு நாடா முறை, செயற்படும் வாய்ப்பு, உள்ளூர்த் தேவைகள் புறக்கணிக்கப்படும் வாய்ப்பு, வட்டார வளர்ச்சி கேடுறும் வாய்ப்பு, சருவாதீன அமைப்புகள் தோன் றும் வாய்ப்பு, தவறுகளும் மோசடிகளும் நிகழ்வதற் கான வாய்ப்புகள் போன்றவை கிளை வங்கி முறையின் குறைகளாகச் சுட்டிக் காட்டப்படுபவை. மொத்தத்தில் கருதும் போது குறைகளைக் காட்டி லும் நிறைகள் மிகுதியாக இருப்பதால் கிளை வங்கி முறையே பரவலாக எல்லா நாடுகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

தொகுப்பு வங்கி முறை : தனிப்பட்ட ஒருவகை வங்கிகள் தன்னிச்சையாக ஒரு பிடிப்புக் குழுமத்தின் (Holding Company) கட்டுப்பாட்டுக்குள் அடங்கி அவற் றிற்குள் ஒருசில விதிகளைக் கடைப்பிடித்துக் கொள் ளும் முறையைத் தொகுப்பு வங்கிமுறை (Group Banking) எனலாம். இம்முறையில் உள்ள தனி வங்கிகள் ஒவ்வொன்றும் மற்ற வங்கிகளின் கிளைகள் போலச் செயற்படுகின்றன.

தொடர் வங்கிமுறை : இவ்வங்கி முறையைச் சங்கிலி வங்கி முறை (Chain Banking) என்றும் குறிப் பிடலாம். பிடிப்புக் கம்பெனியின் தொடர்பைத் தவிர்த்து ஒருவர் அல்லது ஒருசிலர் கூட்டாகச் சேர்ந்து பல வங்கிகளை நிறுவிச் செயற்படும் முறை தொடர் வங்கி முறை. இதில் ஒவ்வொரு வங்கியும் தனி வங்கியாகச் செயற்படும். இருப்பினும் ஒரே நிரு வாகத்தின்கீழ் இருப்பதால் ஒன்றுக்கொன்று கிளை போன்று செயற்படுவது வழக்கம்.

பதிலாள் வங்கி முறை : கிளை வங்கி முறையின் நன்மைகளைப் பெறுவதற்காகத் தனி வங்கிகள் ஒன்றுக்கொன்று ஒப்பந்த முறையில் உதவிக் கொள்ளும் அமைப்பைப் பதிலாள் வங்கி முறை (Correspondent Banking) என்பர்.

கிளை வங்கி முறையின் நன்மைகளைப் பெறு வதற்காகத் தொகுப்பு, தொடர், பதிலாள் வங்கி முறைகள் ஐக்கிய அமெரிக்க நாட்டில் பெருமளவில் பயன்படுகின்றன .

வங்கிகள் ஆற்றும் பணிகளின் அடிப்படை யில் வங்கிகளை வைப்பு வங்கிகள் (Deposit Banks), முதலீட்டு வங்கிகள் (Investment Banks), தொழில் வங்கிகள் (Industrial Banks) என்றும் வகைப்படுத்துவர். பெரும்பாலான வாணிக வங்கிகள் வைப்பு வங்கி களே. வைப்பு வங்கிகள் குறுகிய காலக் கடன்களை யும்,முதலீட்டு வங்கிகள் நீண்ட காலக் கடன்களை யும் நடுக்காலக் (Medium Term) கடன்களையும் கொடுக்கத் தக்கவை. இவ்விரு வகைப் பணிகளை யும் ஒரு வங்கி ஆற்றுமாயின் அதனைக் கலப்பு வங்கி என்று குறிப்பிடலாம்.

இந்தியாவின் தலைமை வங்கியாக இந்திய இருப்பு வங்கி (Reserve Bank of India) செயற்படுகிறது. அதற்கடுத்த நிலையில் பாரத வங்கியும் (State Bank of India) அதன் துணை வங்கிகளும் செயற்படுகின்றன. *(காண்க: பாரத வங்கி)* நாடு முழுவதிலும் பரவி யிருந்த வாணிக வங்கிகளில் சிலவற்றை மக்களாட் சிப் பொதுநலக் கூட்டு இலக்கில் பெறுதல், பொரு ளாதார வளர்ச்சியில் வங்கிகளில் பங்கைச் சீராக்கு தல், முதலீட்டைப் பெருக்கும் ஆர்வத்தை வளர்த் தல், வங்கித் தோல்விகளைத் (Bank Failures) தவிர்த் தல், வங்கிகளில் தன்னிச்சை நடவடிக்கைகளைத் தவிர்த்தல், புறக்கணிக்கப்பட்டிருந்த வேளாண்மைத் துறை வளர்ச்சிக்கு வங்கிகளைப் பயன்படச் செய்தல் போன்ற பல நோக்கங்களில் அடிப்படையில் நாட் டுடைமையாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட் டன. இந்தியக் குடியரசுத் தலைவரின் 1969 -ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 19-ஆம் நாள் சட்டத்தின்படி *1969 -ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் உரூ.50*

கோடி மொத்த வைப்புகளைப் பெற்றிருந்த 1. சென்ட்ரல் பேங்கு (Central Bank), 2. பாங்கு ஆப் இந்தியா, (Bank of India), 3. பஞ்சாப் நேசனல் பேங்கு (Punjab National Bank), 4. பேங்கு ஆப் பரோடா (Bank of Baroda), 5. யுனைடெட் கமர்சியல் பேங்கு (United Commercial Bank), 6. கனரா பேங்கு (Canara Bank), 7. யுனைடெட் பாங்கு ஆப் இந்தியா (United Bank of India), 8. தேனா பாங்கு (Dena Bank), 9. யூனியன் பேங்கு ஆப் இந்தியா (Union Bank of India), 10. அலகாபாத் பாங்கு (Allahabad Bank), 11. சிண்டிகேட் பேங்கு (Syndicate Bank), 12. இந்தியன் ஓவர்சீசு பாங்கு (Indian Overseas Bank), 13. இந்தியன் பாங்கு (Indian Bank), 14. பேங்கு ஆப் மகாராசுட்டிரா (Bank of Maharastra) ஆகிய பதினான்கு வாணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டன. அதன் மூலம் உரூ. 2742 கோடி வைப்புகள் அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன. அதன் தொடர் நடவடிக்கையாக 1980 -ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் 1. ஆந்திரா பேங்கு (Andra Bank), 2. கார்ப்பொரேசன் பேங்கு (Corporation Bank), 3. நியூ பேங்கு ஆப் இந்தியா (New Bank of India), 4. ஓரியண்டல் பேங்கு ஆப் காமர்சு (Oriental Bank of Commerce), 5. பஞ்சாப் அண்டு சிந்து பாங்கு (Punjab and Sindh Bank), 6. விசயா பாங்கு (Vijaya Bank) ஆகிய ஆறு வங்கிகள் நாட்டுடையமையாக்கப்பட்டன.

பொதுத் துறையின் குறைகள் என்று சொல்லப் படும் காலங்கடத்துதல், ஊழல், சிவப்பு நாடா முறை முதலிய பல குறைகள் ஆங்காங்கே சுட்டிக் காட்டப் பட்டாலும், இந்தியாவில் விரைவான பொருளா தார முன்னேற்றத்தைப் பெறவும், உண்மையான மக்களாட்சிப் பொதுநலக் கூட்டு இலக்கைப் பெற வும் இன்னும் பல வங்கிகள் நாட்டுடைமையாக்கப் பட வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று வருவ தாகப் பொருளாதார அறிஞர்களும் அரசியலாரும் குறிப்பிடுகின்றனர்.

**வைப்புக் காப்பீடு** : வங்கிகள் நாட்டின் பொருளா தார முன்னேற்றத்திற்கான ஆணி வேர் போலச் செயற்படுகின்றன. ஒரு சில நேரங்களில் ஒன்று அல் லது ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்களால் வங்கிகள் தோல்வியடைய (வங்கி முறிவு) (Bank Failure) நேரிட் டால், மக்களில் ஒரு பிரிவினர் அவர்தம் வாழ்க்கை முழுவதும் அரும்பாடு பட்டுச் சேர்த்த சேமிப்புகள் கேடுறலாம்; அவ்வங்கியுடன் தொடர்புடைய வாணிக, கல்வி, தனியார் நிறுவனங்கள் கேடுறலாம். பொருளாதார வளர்ச்சி கேடுறலாம்; எல்லாவற்றிற் கும் மேலாக வைப்பாளர்களின் வைப்புகள் பாழாகி விடலாம். எனவே, 1953 -ஆம் ஆண்டில் தனியார் துறையின் நிதி பற்றிய சராப் குழு (Shroff Committee on Finance for Private Sector), வங்கி வைப்புகளைக் காப்பீடு செய்வது நன்று என்று வலியுறுத்தியது. இந்தியப் பேரரசு 1961 -ஆம் ஆண்டில், "1961-ஆம் ஆண்டின் வைப்புக் காப்பீட்டுக் இணையச் சட்டத்தை" (Deposit Insurance Corporation Bill, 1961) நிறைவேற்றியது. இந்திய வைப்புக் காப்பீட்டு இணையம் (Deposit Corporation of India), 1962 -ஆம் ஆண்டு சனவரி 1 -ஆம் நாள் முதல் செயற்படுகிறது. அதன் மூலம் வைப்புகள் காப்பீடு செய்யப்படுவதால் வங்கி முறிவடையும் நிலை இக்காலத்தில் தவிர்க்கப்படுகிறது.

-என்.எஸ்.பா.

**வட்டிக் கோட்பாடுகள்:** முதலின் பணிக்காகக் கொடுக்கப்படும் விலையை வட்டி என்பர். வட்டியை மொத்த வட்டி, நிகர வட்டி என இருவகையாகப் பிரிக்கலாம். நிருவாகச் செலவு, இடர்ப்பாட்டுக்காக அமையும் காப்பீடு, சிரமத்திற் கான கட்டணம் ஆகியவற்றை மொத்த வட்டி யிலிருந்து கழித்தால் நிகர வட்டி கிடைக்கும். வட்டி தான் சேமிப்பை ஊக்குவிக்கும். சேமிப்புதான் மூல தனத்தைப் பெருக்கும். மூலதனம் பொருளாதார முன் னேற்றத்திற்கு மிக இன்றியமையாதது. வட்டிக் கோட்பாடுகளை வட்டி ஏன் கொடுக்கப்படுகின்றது, வட்டி எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என இரு வகைகளாகப் பிரிக்கலாம். வட்டி ஏன் கொடுக்கப் படுகின்றது என்பதைப் பின்வரும் கோட்பாடுகள் விளக்குகின்றன.

1. துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு (Abstinence Theory of Interest), 2. காலக் கழிவுக் கோட்பாடு (Agio Theory of Interest), 3. கால விருப்பக் கோட்பாடு (Time Preference Theory of Interest), 4. ஆக்கத்திறன் கோட்பாடு (Productivity Theory of Interest).

1. துய்ப்புத் தவிர்ப்புக் கோட்பாடு : என். டபிள்யூ. சீனியர் என்ற தொன்மைப் பொருளாதார வல்லுநரால் இக்கோட்பாடு உருவாக்கப்பட்டது. மக்கள் தங்கள் வருமானம் முழுவதையும் நுகர்வுக்காகச் செலவு செய்யாமல் ஒரு பகுதியை விட்டு வைத்துச் சேமிப்பதால்தான் மூலதனம் ஏற்படுகிறது. இவ்வாறு வருவாயின் ஒரு பகுதியை விட்டுவைத்துப் பல துன்பங்களைச் சந்திப்பதால் அவர்களுக்குக் கிடைக்கும் ஒரு பரிசுத் தொகையே வட்டியாகும். ஆனால், சேமிப்பதால் எவ்விதத் துன்பமும் வாராது எனச் சொல்லி இக்கோட்பாட்டை எதிர்த்தனர். எனவே, மார்சல், துய்ப்புத் தவிர்ப்பு என்பதற்குப் பதிலாக, 'காத்திருத்தல்' எனச் சொன்னார். கொடுத்த பணத்திற்காகக் காத்திருப்பதற்குக் கொடுக்கும் ஊதியம்தான் வட்டி என்கிறார்.

2. காலக் கழிவுக் கோட்பாடு : சான் கிரே என்பவரால் 1834 -ஆம் ஆண்டு இக்கோட்பாடு உணர்த்தப்பட்டது. பின்னர்ப் போம்பாவர்க்கு என்னும் ஆசுதிரேலிய வல்லுநர் இக்கோட்பாட்டிற்கு முழு வடிவம் தந்து உருவாக்கினார். மக்கள், எதிர்காலத்தில் கிடைக்கக்கூடியதைவிட இக்காலத்தில் கிடைக்கும் பொருட்களையே விரும்புவர். ஏனெனில், எதிர்காலம் என்பது நிலையற்றது. எனவே, எதிர்காலத்தில் கிடைக்கும் பொருட்களைவிட இக்காலத்தில் கிடைக்கும் பொருட்களுக்கு மக்களிடத்தில் மதிப்பு மிகுதி. இம்மிகுதியான மதிப்பே வட்டி என்பது அவரது கருத்து. இக்கோட்பாடு இப்போது கிடைக்கும் மனநிறைவிற்குச் சிறப்பு அளிக்கிறது. மக்கள் இப்போது கிடைக்கும் மனநிறைவை ஏற்கக் காரணம் எதிர்காலம் நிலையற்றது என்பதுடன் மனிதனது நிகழ்காலத் தேவைகள் எதிர்காலத் தேவைகளைவிட மிகுதியாயிருப்பதாகும். இக்காலத் தேவைகளை நிறைவு செய்த பின்னர்தான் எதிர்காலத் தேவைகளை நிறைவு செய்ய முடியும். எனவே, இக்காலத் தேவைகளைத் தள்ளி வைக்க மாட்டார்கள். அத்துடன் எதிர்காலத்தில், இக்காலத்தில் காணப்படும் பற்றாக்குறையை நீக்கிவிடமுடியும். எனவே, பற்றாக்குறைப் பண்டங்களை மனிதன் பெரிதும் விரும்பக்கூடும்.

ஆகையால், மக்கள் இக்காலத் தேவைகளை நிறைவுசெய்து மனநிறைவு பெறுகின்றனர். எனவே, சேமிப்பும், மூலதனமும் ஏற்பட வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது. மக்கள் எதிர்கால மனநிறைவை விரும்புபவர்களாக இருந்தால் எதிர்காலத்திற்கென்று சேமிப்பர். அதனால் மூலதனம் ஏற்படும். மக்களை எதிர்கால மனநிறைவு உடையவர்களாக மாற்ற, கொடுக்கப்படும் வெகுமதியே வட்டி எனப்படும்.

3. கால விருப்பக் கோட்பாடு : இக்கோட்பாட்டிற்கு விளக்கம் தந்தவர் இர்வின் பிசர். அவர் மக்கள் எதிர்காலத்தைவிட நிகழ்காலத்தையே பெரிதும் விரும்புவர் என்கிறார். மக்கள் எதிர்காலத் தேவையை நிறைவேற்றுவதை விட நிகழ்காலத் தேவையை நிறைவு செய்வதையே சிறந்தது என நினைக்கிறார்கள். மக்களின் பொறுமையின்மையை ஈடு கட்டுவதே வட்டி என்கிறார் பிசர். கால விடுப்பு ஒருவனுடைய வருமானத்தைப் பொறுத்தது. அத்துடன் வருமானத்தைப் பகிர்ந்தளித்தல், எதிர்காலத்தில் அவ்வருமானத்தை அனுபவித்தல், தொழிலில் நிலை, மனிதனின் கல்வி, ஒழுக்கம் ஆகியவற்றையும் பொறுத்ததாகும். தொலை நோக்குத்திறன், வாழ்நாள், எதிர்பார்ப்பு போன்றவையும் காலத்தின் விருப்பை மாற்றி அமைக்கின்றன.

4. ஆக்கத்திறன் கோட்பாடு: இக் கோட்பாட்டை இயற்கைப் பொருளியல் வல்லுநர்களும், இலாடர்டேல் என்ற வல்லுநரும் உருவாக்கினர். இயற்கைப் பொருளியல் வல்லுநர்கள் வட்டியை முதலுக்குக் கொடுக்கப்படும் ஊதியம் என நிருணயித்தனர். நிலம், உழைப்புப் போன்ற உற்பத்திக் காரணிகளைப் போலவே முதலும் உற்பத்திற்குப் பயன்படுத்தப் படுவதால் முதலுக்கு வட்டி வழங்கப்பட வேண்டும். ஓர் இயந்திரம் உற்பத்தித்திறனுடையது; ஒரு மனிதன் இயந்திரத்தை வாங்கப் பயன்படுத்தும் முதலுக்கு வட்டி கொடுத்தாக வேண்டும். மீன் பிடிக்கப் பயன்படும் படகு மீனவரின் உற்பத்தித் திறனை மிகுவிக்கும். எனவே, படகு வாங்கப் பயன்படும் முதலுக்கு வட்டி தரப்படவேண்டும். இக்கோட்பாடு மிகவும் எளிமையானது என்றாலும், சில குறைபாடுளையும் உடையது. 1. கூடுதல் உற்பத்தி என்பது உழைப்பும் முதலும் ஆகிய இரண்டின் பங்காகும். எனவே, முதல் மட்டும் உற்பத்தியை எவ்வளவு மிகுதிப்படுத்துகிறது என்பதைக் கணக்கிட முடிவதில்லை. 2. முதல் சில நேரங்களில் நுகர்வுக்காகவும் கடனாகப் பெறப்படுவதுண்டு. அப்போது உற்பத்தி மிகுதியாவதில்லை.

எனவே, வட்டி ஏன் செலுத்தப்பட வேண்டுமென இக்கோட்பாடு விளக்கவில்லை. 3. வட்டி எவ்வாறு நிருணயிக்கப்படுகிறதென்பதை இக்கோட்பாடு விவரிக்கவில்லை.

வட்டி ஏன் கொடுக்கப்படுகிறது என்பதை விவரிப்பதோடு வட்டி எவ்வாறு நிருணயிக்கப்படுகிறது என்பதையும் கீழ்க்கானும் கோட்பாடுகள் விவரிக்கின்றன. 1. தொன்மை வட்டிக் கோட்பாடு, 2. புதிய தொன்மை வட்டிக் தோட்பாடு, 3.கீன்சின் நீர்மை விருப்ப வட்டிக் கோட்பாடு.

1.தொன்மை வட்டிக் கோட்பாடு அல்லது சேமிப்பு - முதலீட்டு வட்டிக் கோட்பாடு : தொன்மைப் பொருளியல் வல்லுநர்களான பிகு, மார்சல், இடாசிக்கு, வால்ராசு, காசல், நைட்டு போன்றோர் இக்கோட்பாட்டை உருவாக்கினர். 'வட்டியில் தேவை அளிப்புக் கோட்பாடு' எனவும் இதனைச் சொல்வர்.

இக்கோட்பாடு வட்டி என்பது முதலின் தேவையையும் அளிப்பையும் பொறுத்து நிருணயிக்கப்படுகிறது எனக் கூறுகிறது. முதலின் அளிப்பு, தேவையை விட மிகுதியாக இருக்கும்போது வட்டி வீதம் குறையும். வட்டி வீதத்தின் குறைவு, முதலின் தேவையைவிட மிகுதியாக இருக்கும்போது வட்டி வீதம் குறையும். வட்டி வீதத்தின் குறைவு, முதலின் தேவையை ஒரு பக்கம் மிகுவிக்கும். சேமிப்பு அளிப்பு ஒரு பக்கம் குறையும். இது சேமிப்பு, முதலீடு இரண்டையும் சமநிலைக்குக் கொண்டு வரும். எனவே, நிறைவுப் போட்டியில் சேமிப்பும் முதலீடும் இணைகின்ற புள்ளியை வட்டி என நிருணயிக்கலாம். இக்கோட்பாட்டில், சேமிப்பு என்பது உற்பத்திக்காகச் சேமிக்கும் உண்மையான சேமிப்பையே குறிக்கும். முதலீடு என்பது இயந்திரங்கள், தொழில் நிறுவனங்கள் , பட்டறை போன்றவற்றில் முதலீடு செய்யும் உண்மையான முதலீட்டையே குறிக்கும். எனவே, இக்கோட்பாட்டை உண்மை வட்டிக் கோட்பாடு என்றும் கூறுவதுண்டு.

இக்கோட்பாட்டை கீன்சு மறுக்கிறார். அவரது கூற்றின்படி, சேமிப்பும் மூதைனமும் சமநிலை வட்டியின் மாற்றத்தால் ஏற்படுபவையல்ல; வருவாயின் அளவில் ஏற்படும் மாறுதல்தான் காரணம் என்கிறார். மேலும், முதலீடு தொழிலில் கிடைக்கும் இலாபத்தைப் பொறுத்ததேயன்றி, வட்டி வீதத்தைப் பொறுத்ததன்று என்கிறார் கீன்சு. இக்கோட்பாட்டின்படி, நுகர்வினைக் குறைத்தால்தான் முதலீடு மிகுதியாகும். ஆனால், நுகர்வுப் பொருட்களின் தேவை குறைந்தால், உற்பத்தியைக் குறைக்கும். அது முதலீடு செய்வதைப் பாதிக்கும்.

2. புதிய தொன்மை வட்டிக் கோட்பாடு அல்லது கடன் நிதி வட்டிக் கோட்பாடு : சுவீடன் நாட்டுப் பொருளியல் வல்லுநர் நட்விக்செல் முதன் முதலில் இக்கோட்பாட்டை உருவாக்கினார். பின்னர்க் குன்னார் மிர்தால், எரிக் லிந்தால், பெர்டில் ஓகலின், டி.எச். இராபர்ட்சன் போன்றோர் இக்கோட்பாட்டை வளப்படுத்தினர். இக்கோட்பாட்டின்படி வட்டி என்பது கடன் நிதியைப் பயன்படுத்துவதற்காகத் தருகிற விலை ஆகும். கடன் நிதிக்குரிய தேவையும் அளிப்பும் வட்டியை நிருணயிக்கின்றன. கடன் நிதியின் தேவை உற்பத்திக்காகக் கடன் வாங்குதல், நுகர்வுக்காகக் கடன் வாங்குதல், பதுக்கி வைத்தல் போன்றவைகளால் உண்டாகின்றது. இவற்றின் தேவை வட்டி வீதத்தைப் பொறுத்தது. கடன் நிதியின் அளிப்பு, மக்களின் சேமிப்பு, சேமிப்புக் கலைப்பு, வங்கிக்கடன் போன்றவற்றிலிருந்து வருகின்றது. இவை வட்டி வீதத்தைப் பொறுத்தவை. எனவே, கடன் நிதி அளிப்பு வட்டியையே ஒத்திருக்கும். வட்டி மிகுதியாக இருக்கும்போது கடன் நிதி அளிப்பும் மிகுதியாகும். வட்டி குறைவாக இருப்பின், கடன் நிதி அளிப்பும் குறையும். கடன் நிதியின் மொத்தத் தேவையும், அளிப்பும் சமமாக இருக்கும்போது வட்டிவீதம் நிருணயிக்கப்படுகிறது. இக்கோட்பாடு, வேலை நிறைவு உள்ளதாகக் கொண்டு விவரிக்கப் பட்டுள்ளது. வட்டி எவ்வாறு நிருணயம் செய்யப் படுகிறதெனத் திட்டவட்டமாகச் சொல்லவில்லை. அத்துடன், வட்டியைப் பொறுத்தே சேமிப்பு அமையும் என்பதும் சில சமயங்களில் நடக்காது. வட்டியைக் கணக்கிலெடுக்காமலே சேமிப்போரும் உண்டு. அத்துடன் சேமிப்பு, வருமானத்தைப் பொறுத்தது என்பது கீன்சின் வாதமாகும்.

3.கீன்சின் நீர்மை விருப்ப வட்டிக் கோட்பாடு : சே.எம்.கீன்சு நேர்மை விருப்பக் கோட்பாட்டை உருவாக்கினார். இக்கோட்பாட்டின்படி, உடனடித்

தேவைகளை நிறைவு செய்திட நீர்மையாக வைத்திருக்கும் பணத்தைக் கடனாக மற்றொருவனுக்குக் கொடுக்கும்போது கடன் கொடுப்பவர் அந்த அளவுக்குத் தன்னுடைய நீர்மை விருப்பத்தை இழக்கிறான். கடன் கொடுப்பவன் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு நீர்மை விருப்பத்தை விட்டுக் கொடுக்க வேண்டியுள்ளது. அப்படி விட்டுக் கொடுப்பதற்கு, கடன் வாங்கியவன் செய்யும் கைம்மாறுதான் வட்டியாகும். இக்கோட்பாட்டின்படி, பணத் தேவையும், அளிப்பும் வட்டி வீதத்தை நிருணயிக்கின்றன.

மனிதனுக்குக் கீழ்க்காணும் நோக்கங்களை ஈடு செய்வதற்குப் பணம் தேவைப்படுகிறது. 1. கொடுக்கல் வாங்கல் நோக்கு, 2. எச்சரிக்கை நோக்கு, 3. ஊகவாணிக நோக்கு. அன்றாடத் தேவைகளை நிறைவு செய்யப் பணம் தேவைப்படுகிறது. உரொக்கமாகப் பணம் வைத்திருந்தால்தான் அன்றாடத் தேவைகளான உணவையும் பிற பொருட்களையும் வாங்க முடியும். உற்பத்தியாளர்களும் மூலப் பொருள் வாங்கவும், கூலி கொடுக்கவும் உரொக்கமாகப் பணம் வைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. இது கொடுக்கல் வாங்கல் நோக்கு எனப்படும். தனிமனிதர்களுக்கு எதிர்பாராமல் ஏற்படும் நோய்கள், தேவை ஆகியவற்றை ஈடு செய்யவும் தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படும் எதிர்பாராத செலவுகளை ஈடுகட்டவும் பணம் தேவைப்படுகிறது. அதனால் உரொக்ககமாகப் பணம் வைத்திருக்க வேண்டியுள்ளது. இதற்கு முன்னெச்சரிக்கை நோக்கு என்று பெயர். எவ்வளவு பணம் முன்னெச்சரிக்கையாக வைத்துக் கொள்ள வேண்டுமென்பது சூழ்நிலையைப் பொறுத்ததாகும். இலாபம் பெறுகிற வகையில் முதலீடு செய்ய விரும்பி மக்கள் உரொக்கமாகப் பணம் வைத்திருப்பர். எடுத்துக்காட்டாகப் பத்திரங்களின் விலை மாறுதல்களினாலும் வட்டி வீதத்தினாலும் இலாபம் அடைய மக்கள் தங்கள் கையில் பணம் வைத்துக்கொண்டு, பத்திரங்களின் எதிர்கால மாறுதல்களை ஊகித்துக் கொண்டிருப்பதற்கு ஊக வாணிக நோக்கு என்று பெயர். ஒரு பொருளின் விலை குறையுமாயின் மேலும் குறையுமென எதிர்பார்த்து மக்கள் உரொக்கப் பணத்தை வைத்திருப்பர். வட்டி வீதம் மிகுதியானால், நீர்மை விருப்புக் குறையும். வட்டி வீதம் குறைந்தால் நீர்மை விருப்பு மிகுதியாகும்.

பணத்தின் அளிப்பு அரசு, வங்கி ஆகியவற்றிலிருந்து உருவாகின்றது. மக்களிடம் புழக்கத்திலுள்ள பணத்தையும், வங்கிகளில் எடுக்கும் நிலையிலுள்ள பணத்தையும் கீன்சு பண அளிப்பாக எடுத்துக் கொள்கிறார். பண அளிப்பு குறுகிய காலத்தில் மாறாதிருக்கும். பண அளிப்பு, பணத்தேவை ஆகியவற்றின் சமநிலையில் வட்டி நிருணயிக்கப்படுகிறது.

இக்கோட்பாட்டில் கீன்சு பிற காரணிகள் வட்டியை நிருணயிப்பதை விவரிக்காமல் விட்டுவிட்டார். கீன்சு குறிப்பிட்டுள்ள மூன்று நோக்கங்களைத் தவிர மக்கள் பிற நோக்கங்களுக்காகவும் உரொக்கமாகப் பணம் வைத்துள்ளனர்.

4. **புதுமை வட்டிக் கோட்பாடு** : புதுமை வட்டி கோட்பாட்டை இக்கால வல்லுநர்கள் கீன்சு, இலெர்னர் ஆகியோர் உருவாக்கினர். இக்கோட்பாடு உண்மைக் காரணிகளையும் பணமாக்கக் காரணிகளையும் எடுத்துக் கொண்டு வட்டியை நிருணயிக்கின்றது.

- ரா.இரா.

**வடதுருவப் பழங்குடிகள்** : வடதுருவப் பழங்குடி மக்கள், வடகிழக்குச் சைபீரியாவிலிருந்து, அலாசுகா, கிரீன்லாந்தின் மேற்குக் கிழக்கு கடற்கரைப் பகுதிகள் வடக்குக் கனடாவின் கடற்கரைப் பகுதிகள், பாபின் தீவுகள், பெரிங்கடல் தீவுகள் இலாப்ரடார்ப் பகுதிகள் ஆகிய இடங்கள் வரை பரவிக் காணப்படுகின்றனர். இப்பகுதிகளில் காணப்படும் பழங்குடியினர், தோற்றம், உடலமைப்பு போன்றவற்றின் ஒத்த குணங்களைக் கொண்டுள்ளனர். இப்பழங்குடியினர் பழுப்பு நிறத்தோலையும். கரிய மயிரினையும், கருமையான கண்களையும் எடுப்பான கன்ன எலும்புகளுடன் கூடிய அகன்ற முகத்தினையும் கொண்டுள்ளனர்.

அலுயூட்சு (Aleuts), பாபின் எசுக்கிமோக்கள் (Baffin Eskimos), கரியோ எசுக்கிமோக்கள் (Caribou Eskimos), காப்பர் எசுக்கிமோக்கள், கிழக்குக் கிரீன்லாந்து எசுக்கிமோக்கள், இலாப்ரடார் எசுக்கிமோக்கள், வடமேற்கெல்லை இந்தியர்கள் (North West Territory Indians), துருவ எசுக்கிமோக்கள்

(Polar Eskimos) ஆகியோர் வட துருவப் பழங்குடியினருள் ஒரு சிலராவர்.

துருவப் பிரதேசங்களில் கடின வாழ்வு மேற்கொண்டு வாழும் இப்பழங்குடியினர் தம் உணவிற்காகக் கடல் வாழ் விலங்குகளையே பெரும்பாலும் சார்ந்துள்ளனர். கடல்நாய், வடதுருவக் கரடிகள், திமிங்கிலங்கள் போன்ற விலங்குகள் இம்மக்கள் வாழ்வில் முதன்மை இடத்தைப் பெறுகின்றன. உணவு, உடை, விளக்கிற்கான எண்ணெய் போன்றவற்றை இவ்விலங்குகளிடமிருந்தே பெறுகின்றனர்.

தொடக்கத்தில், இம்மக்களின் உருவ அமைப்பு, மங்கோலிய மக்களுடன் ஒப்பிடப்பட்ட போதிலும் அண்மை ஆய்வுப்படி இவர்கள் அமெரிக்க இந்தியரிடமிருந்து தோன்றியவர்கள் என்னும் கருத்து ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

தோலால் மூடப்பட்ட கூடாரங்களைக் கோடைக் கால இல்லங்களாகக் கொண்டுள்ளனர் இப்பழங்குடியினர். குளிர்காலத்தில் பனி வீடுகளில் வாழும் இம்மக்கள் நடனமாடுவது, பாட்டுப் பாடுவது போன்ற செயல்களை இப்பருவத்தில் கூட்டாக மேற்கொள்கின்றனர். ஒத்துப் போகும் தன்மை, எசுக்கிமோக்களில் கவனிக்கத்தக்க பண்பாக அமைந்துள்ளது. இதற்குத் தக்க எடுத்துக்காட்டாகக் கிழக்குக் கிரீன்லாந்து எசுக்கிமோக்கள் திகழ்கின்றனர். இவர்கள் மொழியில் ஒரே சொல் பல்வேறு பொருள்களைக் குறிப்பதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

பசுபிக்குக் கடலின் வடபுறமுள்ள அலுயூடியன் தீவுகளில் வாழும் அலுயூடிப் பழங்குடியினர் 'காயக்சு' (Kayaks) எனப்படும் கடல் படகுகள் தயாரிப்பதில் சிறந்து விளங்குகின்றனர். மீன்களின் எலும்பு, தோல், பறவையிறகு போன்றவற்றிலிருந்து தமக்குத் தேவையான கருவிகளையும் உடைகளையும் செய்து கொள்கின்றனர். இப்போது இவர்கள் தமக்குச் சொந்தமான கடைகளையும், படகு வீடுகளையும், தேவாலயங்களையும் (Church) கொண்டுள்ளனர். கடந்த சில நூற்றாண்டுகளில் இப்பழங்குடியினர் இறந்தவரின் உடலைப் பதப்படுத்தி அவருடைய உடைமைகளுடன் குகைகளில் புதைக்கும் பழக்கத்தை மேற்கொணடிருந்தனர் எனக் கூறப்படுகிறது.

வடமேற்குக் கிரீன்லாந்திலுள்ள துலீ, எல்லர்மிர் ஆகிய நிலங்களில் வாழும் துருவ எசுக்கிமோக்கள் கல்லால் செய்யப்பட்ட பொறிகளைக் கொண்டு நரி வேட்டையாடுவதில் சிறந்து விளங்குகின்றனர். அதன் தோலிலிருந்து தம் குடும்பத்திற்குத் தேவையான ஆடைகளைத் தயாரிக்கின்றனர்.

வடகனடாவில் வாழும் 'நெட்சிலிகு' (Netsilik) எசுக்கிமோக்கள் கோடைக்காலத்தில் ஆறு, ஏரி ஆகியவற்றில் உள்ள மீன்களைப் பிடித்து உண்கின்றனர். இம்மக்கள் நாய் போல் ஊளையிட்டுக் கலைமான் வேட்டை மேற்கொள்கின்றனர். கடல்நாய் வேட்டையில் சிறந்து விளங்கும் இம்மக்கள் 'கடல் நாயின் மக்கள்' (People of the Seal) என்றும் கூறப்படுகின்றனர். இறந்த கடல்நாய்க்குத் தண்ணீர் புகட்டுவதன்வழி, அது மீண்டும் உயிர் பெற்று வருமென்றும், அதனால் அதை மீண்டும் வேட்டையாடலாம் என்றும் இவர்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். 'பல்கணவர் மணம்', 'பல் மனைவியர் மணம்' ஆகிய இரண்டும் இம்மக்களிடையே காணப்படுகின்றன. பெண் குழந்தைக் கொலை, தற்கொலை விகிதம் ஆகிய இரண்டும், பிற எசுக்கிமோக்களைக் காட்டிலும் இவர்களிடையே மிகுதியாகக் காணப்படுகின்றன.

வடஅமெரிக்க இந்தியாவில் காணப்படும் எசுக்கிமோக்களுள் தொன்மையான பழங்குடிகளான 'இடாக்ரிபு' (Dagrib), எல்லோநைபு (Yellow Knife), 'சிலேவு' (Slave) 'சிப்பிவியான்' ஆகியோர் மெக்கன்சீ (Mackenzie) ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் வாழ்கின்றனர். யூகான் (Yukon) பள்ளத்தாக்கில் 'கச்சின்' (Kutchin) பழங்குடியினரும், அமைதி ஆற்றுப் பகுதியின் (Peace River Region) தெற்குப்புறம் 'பீவர்' (Beaver) பழங்குடியினரும் காணப்படுகின்றனர். 'தாக்ரிபு' என்னும் பழங்குடிப் பெயர் பற்றி ஒரு கதை நிலவுகிறது. அக்கதை இந்தியப் பெண்களுக்கும் நாய்த் தெய்வத்திற்குமிடையே (Dog - deity) ஏற்பட்ட புணர்ச்சி வழித் தோன்றியவர்களே 'தாக்ரிபு இந்தியர்கள்', என்று கூறுகிறது. இதுபோன்றே, சிப்பிவியான் (Chipewyan), எல்லோநைபு பழங்குடியினர் ஆகியோர் அவர்கள் செய்யும் செப்புக் கருவிகளின் பெயரால் அழைக்கப்படுகின்றனர்.

கனடா நாட்டின் வடமேற்கெல்லையில் வாழும் எசுக்கிமோக்கள், மீன்பிடித்தும், சிறுவிலங்குகளை வேட்டையாடியும் வாழ்கின்றனர். முயல்வேட்டை, இவர்கள் வாழ்வில் பெரும்பங்கு பெறுகிறது. இதுவே 'முயல் எசுக்கிமோக்கள்' என்னும் இவர்களின் பெயருக்குக் காரணமாகியது. குளிரிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள முயல்தோல் சட்டையைப் பயன்படுத்துகின்றனர் இம்மக்கள். இப்பழங்குடியினரிடையே, வயதுக்கு வந்த பெண்கள் மீன்வலை, வில், அம்பு போன்றவற்றைத் தாண்டுவது, சுருக்குக் கண்ணியினைத் தொடுவது போன்றவை தீவினையினை விளைவிக்கும் எனக் கருதப்பட்டு அவை தடை செய்யப்பட்டுள்ளன.

இப்பழங்குடியினரிடையே எழும் சண்டைகள் வேடிக்கையான முறையில் தீர்க்கப்படுகின்றன. குறைகள் பாடல்களாகப் பாடப்படுகின்றன. ஒருவன் பாடும் பாடலுக்கு அவன் எதிரியும் அழைக்கப்படுகிறான். பாடப்படும் பாடல் வழி, அவனுடைய குறை ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவன் வென்றவனாகக் கருதப்படுகிறார். இல்லையெனில் தண்டிக்கப்படுகிறான்.

பொதுவாக, இப்பழங்குடி மக்களிடையே திருமணச் சடங்குகள் என எதுவும் வரையறுக்கப்படவில்லை. இருப்பினும் வரும் மனைவி மனநிறைவாக அமையவில்லையெனில், கணவன் அவள் பிறந்த வீட்டிற்கு அவளைத்திருப்பி அனுப்பும் வழக்கம் காணப்படுகிறது. இல்லையெனில் வேறொரு பெண்ணைக் காமக்கிழத்தியாக வைத்துக் கொள்கிறான். முதல் மனைவி இறந்த பிறகே காமக்கிழத்தி மனைவியென்னும் தகுதியை அடைகிறாள். மனைவியரைப் பரிமாறிக் கொள்ளும் வழக்கமும் இப்பழங்குடியினரிடையே பொதுவாகக் காணப்படுகிறது. ஆடை, விளக்கு, கத்தி ஆகியவற்றை மணப்பெண் கொண்டு வரும் வழக்கம் இவர்களிடையே உள்ளது. மணமான பின் பெண்கள் மிகக் கடுமையான பணிகளை மேற்கொள்கின்றனர். பல்லால் தோலைக் கடித்துப் பதப்படுத்துகின்றனர். அதன் காரணமாக இவர்கள் பற்கள் ஈறுவரை தேய்ந்து காணப்படுகின்றன.

இம்மக்கள் பாசமிக்க பெற்றோராகவும் திகழ்கின்றனர். இவ் வடதுருவப் பழங்குடியினருள் பெற்றோர் தமக்குப்பல குழந்தைகள் இருப்பினும், அநாதைக் குழந்தைகளை தம் வளர்ப்புப் பிள்ளைகளாக வளர்க்கின்றனர். இளைஞர் எளிதில் பிறர் வசப்படுபவராயும், மனநிறைவடையவராயும் உள்ளனர்.

ஆடையைப் பொறுத்தமட்டில் ஆடவருக்கும் பெண்டிருக்கும் ஒரே வகையான ஆடைகளே காணப்படுகின்றன. காற்சட்டை தலையணிகள் ஆகியவையும் ஒரே வகையானவையாக உள்ளன. தென் கிரீன்லாந்து எசுக்கிமோக்களிடையே, ஆடவர் பறவைத் தோலால் செய்யபட்ட 'திமயக்கு' (Timiak) எனும் மேலங்கியை அணிகின்றனர். அதன் மேல் பருத்தியால் நெய்யப்பட்ட 'அனோரக்கு' (Anorak) என்னும் ஆடையினை அணிகின்றனர். காற்சட்டை, புதைமிதி (Shoe), காலுறை ஆகியவற்றைக் கடல்நாயின் தோலிலிருந்து செய்கின்றனர். பெண்டிர் பறவைத் தோலால் செய்யப்பட்ட முக்காடற்ற மேலுறையினை அணிகின்றனர். கருப்புநாயின் தோலாலான உயர்கழுத்துச் சட்டையினை அணிகின்றனர். அதன் மேல் பணிகளாலான அகன்ற அட்டிகையினையும் அணிகின்றனர். கண்கவர் வண்ணத்தில், பெண்டிரின் பருத்தி உள்ளாடைகள் அமைந்துள்ளன. எசுக்கிமோ ஆடைகளுள் குறிப்பிடத்தக்கது 'அமன்டு' (Amant) என்னும் ஆடையாகும். இது குழந்தைகளைத் தூக்கிச் செல்வதற்கெனக் கலைமான் அல்லது கடல்நாய் தோலிலிருந்து தனியாகத் தயாரிக்கப்படுகிறது. தைக்கப்பட்ட பையினுள் தங்கள் குழந்தையைப் பாதுகாப்பாக எடுத்துச் செல்கின்றனர் இப்பழங்குடியினர்.

கிரீன்லாந்து எசுக்கிமோப் பெண்டிர் தம் சிகை அலங்காரத்திற்குப் பல்வகை வண்ண நாடாக்களைப் (Ribbons) பயன்படுத்துகின்றனர். நாடாக்களால் முடிச்சிடுவது பெருமையாகக் கருதப்படுகிறது. மணமாகாப் பெண்கள் சிவப்புநிற நாடாவையும், குழந்தையுடையோர் பச்சை நிற நாடாவையும் பயன்படுத்துகின்றனர். கருப்பு நாடாவையும் பச்சை நாடாவையும் விதவைகளையும், வெள்ளை நாடா வயது முதிர்ந்த விதவைகளையும் குறிக்கின்றது. நீலநிற நாடா மணமான பெண்டிரைக் குறிக்கிறது.

எசுக்கிமோக்கள் இறந்தவர்களின் ஆவியை 'இடார்ன்காகு' (Torngak) எனக் கூறுகின்றனர். அந்த ஆவியே இவர்களின் வாழ்வையும், நற்பேற்றையும் நிருணயிக்கும் என்று இம்மக்கள் கருதுகின்றனர். எனவே, ஆவி வழிபாட்டின் வழி அவற்றை மன

நிறைவு எய்துவிக்கின்றனர். நரகம் (Hell) இருக்கின்றது என்பதை ஏற்க மறுக்கின்றனர். சமய விழாக்களில் முகமூடிகளைப் (Face Mask) பயன்படுத்துகின்றனர்.

எசுக்கிமோக்களுள் எவர் இறந்தாலும் புதைக்கும் வழக்கத்தைப் பின்பற்றுகின்றனர். கடலில் எறியும் வழக்கத்தையும் கையாள்கின்றனர். இறந்தாரின் உடைமைகளும் சேர்த்துப் புதைக்கப்படுகின்றன. இதன்வழி இறந்தார் மீண்டும் திரும்ப மாட்டார் என்றும், அப்பொருட்களை நீத்தார் ஆவியுலகில் பயன்படுத்துவர் என்றும் இவர்கள் நம்புகின்றனர். இறந்தவர்களைத் தோலில் சுற்றி, அவர்களின் துணிகளையும், ஏனைய பொருட்களையும் உடலுடன் சேர்த்து வைத்துப் பாறைகளின் மேல் விட்டுச் செல்லும் பழக்கம் தொடக்கத்தில் காணப்பட்டது. இப்போது நாகரிகம் அடைந்து வரும் இப்பழங்குடியினர் இறந்தோரைப் பெட்டியிலிட்டு அடக்கம் செய்யும் முறையைப் பின்பற்றுகின்றனர். இங்ஙனம் அடக்கம் செய்யும் போது, அவை ஆழமாகப் புதைக்கப்படாததால் எசுக்கிமோக்களின் நாய்களால் அவை தோண்டியெடுக்கப்பட்டு உண்ணப்படும் நிகழ்ச்சி பொதுவாகக் காணப்படுகின்றது. எசுக்கிமோக்களின் வாழ்க்கையில் நாய்கள் முக்கிய பங்கேற்கின்றன என்றே கூறலாம். இலாப்ரடார் எசுக்கிமோக்கள் நாய்க்குப் பதிலாகக் கலைமானைப் பயன்படுத்துகின்றனர்.

தொடக்கத்தில், வெள்ளையருடன் இவர்கள் கொண்டிருந்த நெருங்கிய உறவு காரணமாகப் பல தீயொழுக்கங்களைக் கற்று அதனால் அவதியுற்றனர் எனக் கூறப்படுகிறது. மேலும் தங்களின் கடினமான வாழ்க்கையாலும், உணவுப் பற்றாக் குறையினாலும், எலும்புருக்கி நோய், அம்மை, சுரம் போன்ற நோய்களால் அவதியுற்றனர். படிப்படியாகச் சமயப் பரப்புநர் இப்பழங்குடியினரின் பழக்க வழக்ககங்களை மாற்றி இவர்களை நாகரிக மக்களாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களின் அறிவுரையால், பல எசுக்கிமோப் பழங்குடி மக்கள் கிறித்தவர்களாக மாறியுள்ளனர். இப்போது அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளின் அரசுகள் இப்பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தத் தேவையான வசதிகளைச் செய்து வருகின்றன.

பொதுவாகப் 'பச்சை மாமிசம் உண்பவர்கள்' எனக் கூறப்படும் வடதுருவப் பழங்குடியினர், தங்கள் வாழ்விடத்தின் சூழலுற்கேற்ப வாழத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டுள்ளனர் என்றே கூறலாம்.

- ம.ந.பு.

**வணிகக் குறி :** உற்பத்தி செய்வோர் அல்லது வணிகர் தம் சரக்கை அதைப் போன்ற பிற சரக்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கெனப் பயன்படுத்தும் குறி வணிகக்குறி (Trade Mark) என்று கூறப்படும். இது பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட குறியை, தாம் மட்டும் பயன்படுத்த அவர்கள் உரிமை பெறுகிறார்கள். அந்தக் குறியைப் பயன்படுத்தும் உரிமையாளர் அந்தக் குறியைப் பயன்படுத்தும் வரை உரிமை (Limited Right) பெறுகிறார். வணிகக் குறியைப் பதிவு செய்து பயன்படுத்துவதால் உரிமையாளர் அதில் சொத்துரிமையும் பெறுகிறார். வணிகக் குறி பதிவு செய்தல் பற்றிய விதிகள் *1958* -ஆம் ஆண்டு வணிகக் குறியும், சரக்குக் குறியும் பற்றிய சட்டத்தில் (The Trade and Merchandise Mark Act, 1958) கூறப்பட்டுள்ளன.

வணிகமும் சரக்குக் குறியும் பற்றிய சட்டத்தின் முக்கிய குறிக்கோள், வணிகக் குறியைப் பதிவு செய்வதும், பதிவு செய்தவரின் உரிமையைப் பாதுகாப்பதும், மற்றவர்கள் அக்குறியை மோசடியாகப் பயன்படுத்தாமல் தடுப்பதும் ஆகும். மற்றவர் அந்தக் குறியை மோசடியாகப் பயன்படுத்தினால் அவர்கள் மீது வழக்குத் தொடரவும், உரிமையாளருக்கு உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

வணிகக் குறியானது பொருட்களின் அடையாளம் காட்டும் குறி. அதன் பெயர், கையொப்பம், தெளிவான அடையாளம், படம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று இருக்க வேண்டும். அவற்றில் ஒன்று ஒரு பொருளுக்கு இடப்பட்டு அல்லது ஒரு பொருளுடன் இணைந்து இருந்தால், அது அதைப் போன்ற பொருட்களை மற்ற வணிகர் தயாரிப்பதிலிருந்து வேறுபடுத்திக் காட்டப் பயன்படுகிறது. எடுத்துக்காட்டு - குருவி, நிருமா, காளிமார்க்கு.

வணிகக் குறி ஒரு தனி உரிமையாகும். அது வாணிகத்தில் நற்பெயர் (Good Will) பெற்ற வணிகர்களைப் பாதுகாக்கப் பயன் படுத்தப்படும் குறியாகும். வணிகக் குறி தனியாக இயங்கக் கூடியதன்று . அது ஒரு வணிகத்துடனும், அந்த வணிகத்துடன் இணைந்த ஒன்றுடனும் தான் இயங்கக் கூடியது.

வணிகக்குறியைத் தனிப்பட்ட பொருட்களின் மீது பயன்படுத்த வகையுண்டு. இதை உண்மையிலேயே அப்பொருட்களின் மீது பயன்படுத்தியிருக்க வேண்டும். மற்றவர்களின் அதே போன்ற வணிகக் குறி உரிமை எந்த நாட்டின் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்டதோ அந்த நாட்டு எல்லைக்குள் தான் இயங்கக் கூடியது.

வணிகக் குறி மூன்று பணிகளை ஆற்றுகிறது. 1. அது யாரால் உற்பத்தி செய்யப்படுகிறது. அதன் தொடக்கம் என்ன என்பதைத் தெரிவிக்கிறது. 2. அது மாறாத தரத்திற்கு, உறுதியளிக்கிறது. 3. அது தயாரிக்கும் பொருளுக்கு விளம்பரம் தருகிறது. ஆதலால் நுகர்வோர் தாங்கள் வாங்க நினைக்கும் பொருட்களை வாங்கவும், அவர்கள் தாங்கள் வாங்க நினைத்த பொருளை வாங்கிய மன நிம்மதியைப் பெறவும் வணிகக் குறி பயன்படுகிறது. வணிகக் குறி பருப்பொருள் சொத்தாகக் (Incorporal Property) கருதப்படுகிறது.

வணிகக் குறியைப் பதிவு செய்வதற்கு, வணிகக் குறியும் சரக்குக் குறியும் பற்றிய சட்டத்தில் விதிமுறைகள் கூறப்பட்டுள்ளன. வணிகக் குறியைப் பதிவு செய்யும் தலைமை அலுவலகம் பம்பாயிலும் கிளை அலுவலகங்கள் கல்கத்தா, தில்லி, சென்னை ஆகிய இடங்களிலும் நிறுவப்பட்டுள்ளன.

வணிகக் குறியைப் பதிவு செய்ய விரும்பும் உற்பத்தியாளர் பதிவாளருக்கு மனுச் செய்ய வேண்டும். அவர் அந்த மனுவைப் பரிசீலனை செய்து மற்றவர்கள் அந்த வணிகக் குறிக்கு எதிர்ப்புக் தெரிவிக்கவில்லை என்றால் அதனைப் பதிவு செய்து கொள்வார். பதிவு செய்வதற்குத் தனிப் பதிவேடு வைக்கப் பட்டுள்ளது. பதிவு செய்தவுடன் அவ்வாவணம் ஒரு பொது ஆவணமாகும் (Public Document). அந்த ஆவணத்தைப் பார்வையிட விரும்பும் பொதுமக்கள் பதிவாளருக்கு விண்ணப்பம் செய்து பார்வையிடலாம். படியைப் பெறுவதற்கான கட்டணத்தைச் செலுத்திப் படியையும் பெற்றுக் கொள்ளலாம்.

வணிகக் குறியைப் பதிவு செய்தவுடன் அது ஏழாண்டுகளுக்குச் செயலில் இருக்கும். அதனைப் புதுப்பித்துக் கொள்ள விரும்பினால் அதன் உரிமையாளர் புதுப்பித்துக் கொள்ளலாம். அவ்வாறு புதுப்பித்துக் கொள்ளத் தவறி விட்டால் வணிகக் குறிப் பதிவேட்டிலிருந்து நீக்கப்படும். ஓராண்டிற்குள் அவர் மறுபடியும் அதனைப் பதிவேட்டிற்குக் கொண்டுவர மனு செய்து அதற்குத் தேவையான கட்டணத்தைச் செலுத்திப் பதிவு செய்து கொள்ளலாம். (பிரிவு 25 வணிகக்குறியும் சரக்குக் குறியும் பற்றிய சட்டம், 1958)

வணிகக் குறிப் பதிவாளர் மத்திய அரசால் [illegible] மிக்கப்படுகிறார். (பிரிவ 4) அவர் [illegible] வாகத் தொடர்பு கொண்டதாகும். அவ [illegible] யியல் நீதிபதி போன்று செயல்படலாம். வழக்குகளை உரிமையியல் நீதிபதி போல் விசாரணை செய்து தீர்ப்பு அளிக்கலாம் (பிரிவு 97).

ஓர் உற்பத்தியாளர் தம்முடைய வணிகக் குறியில் பொருட்களை உற்பத்தி செய்து நுகர்வோரிடையே நற்பெயரை (Good Will) எடுத்து நுகர்வோர் அப் பொருளை விரும்பி வாங்குகிறார்கள் என்று தெரிந்து மற்றோர் உற்பத்தியாளர் தம்முடைய பொருட்களை அதே வணிகக் குறியைப் பயன்படுத்தி மோசடியாகத் தயாரித்து நுகர்வோரை ஏமாற்றி விற்பனை செய்தால் வணிகக் குறி உரிமையாளர் அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவும், பொருட்களைத் தன் வணிகக் குறியோடு விற்காமல் தடை செய்யத் தடை உத்தரவு (Injunction) பெறவும், இழப்பீடு கோரவும் இந்தச் சட்டத்தில் வழிவகைகள் கூறப்பட்டுள்ளன (பிரிவு 29).

வணிகக் குறியைப் பதிவு செய்யவில்லையென்றால் அதே குறியை வேறு ஒருவர் தம்முடைய பொருட்களுக்குப் பயன்படுத்தினால் அவர் மீது வழக்குத் தொடரவும் இழப்பீடு கோரவும் முடியாது என்று இந்தச் சட்டத்தில் பிரிவு 27(1)இல் கூறப் பட்டுள்ளது. ஆனால் பிரிவு 27(2)இல் மற்றொரு வணிகரால் தயாரிக்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்படும் சரக்கு என்று நுகர்வோர் நம்பும் வகை[illegible] சின்னங்களையோ அல்லது சின்னங்களின் [illegible]

களையோ இட்டுத் தமது சரக்கை ஒருவர் விற்கும் போது அவர்மீது வழக்குத் தொடரலாம் என்று கூறப்பட்டுள்ளது.

**வயது அடிப்படைக் குழுக்கள்** : தொன்மைச் சமுதாயங்களில் வாழ்வின் பெரும்பாலான செயற்பாடுகள் உறவுமுறையால் (Kinship) பிணைக்கப்பட்ட குழுக்களுக்குள்ளேயே நடைபெற்றாலும் வேறு வகையான குழுக்களாலும் சமுதாய, பொருளாதார, அரசியல், சமயம் போன்ற பல்வேறு நிறுவனங்களின் செயல்கள் நடைபெறுகின்றன. அவை பெரும்பாலும் வயது அடிப்படையில் அமையும் குழுக்களால் செய்யப்படுகின்றன. அவ்வகைக் குழுவினரின் வயதுப் பிரிவைக் காட்டும் உறவு முறை சாராத சொற்கள் தொன்மைச் சமுதாயங்களில் தோன்றின. எடுத்துக்காட்டாக, குழந்தை, பையன், இளம் பருவத்தினர், பருவமெய்தியோர், கன்னிப் பெண், ஆடவர், பெண்டிர், முதியோர் போன்ற சொற்கள் வேறு எப்பொருளையும் உணர்த்தாமல் வயது வேறுபாட்டை மட்டும் பிரித்துக் காட்டக் கூடியனவாக உள்ளன. அவ்வகைச் சொற்கள் ஒவ்வொரு சமுதாயத்திலும் மக்கள் வாழ்வின் காலகட்டத்தைப் பல தகுதி நிலைகளாகப் பிரித்துக் காண முற்படுகின்றனர் என்ற வேறொரு முக்கிய பொருளையும் உணர்த்துவனவாக அமைகின்றன.

தொன்மைச் சமுதாயங்களில் வயது அடிப்படையில் செயற்படும் குழுக்கள் (Age-sets) பெரும் பங்கு வகிக்கின்றன. அக்குழுக்களில் ஒத்த வயதுடையோர் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்கள் அனைவரும் அன்றாட வாழ்வில் ஒருமைப்பாட்டுடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்படுகின்றனர். அவர்களின் செயற்பாடுகள் எவ்வாறு சமுதாய வாழ்விற்கு இன்றியமையாதனவாக உள்ளன என்பதைச் சில எடுத்துக்காட்டுகளுடன் விளக்கப்படும்.

கரிமோசாங் வயதுக் குழுக்கள் : கரிமோசாங் (Karimojong) பழங்குடியினர் வடகிழக்கு உகாண்டாவின் வறண்ட பகுதிகளில் ஆயர் வாழ்க்கை நடத்துபவர்கள். இவர்களின் எண்ணிக்கை ஏறக்குறை 60,000 ஆகும். இப்பழங்குடிகளின் சமுதாய அமைப்பில் வயதுக்குழுக்கள் (Age-sets), தலைமுறைக் குழுக்கள் (Generation sets) ஆகிய இரண்டும் இணைந்து செயல்படுகின்றன. தலைமுறைக் குழுவில் நான்கு பிரிவுகள் உள்ளன. அவை: ஓய்வுபெற்ற தலைமுறையினர் குழு (Retired generation set), மூத்த தலைமுறையினர் குழு (Senior generation sets), இளைய தலைமுறையினர் குழு (Junior generation set) , ஏற்புச் சடங்கிற்குட்படாத குழு (Non-initiated set). ஒவ்வொரு தலைமுறைக் குழுக்குள்ளும் 5 வயது அடிப்படைக் குழுக்கள் உள்ளன. ஒவ்வொரு குழுவிற்குமுள்ள வயது வேறுபாடு 5, 6-க்கு மேல் இராது.

ஓய்வுபெற்ற தலைமுறையைச் சேர்ந்த 5 வயது அடிப்படைக் குழுக்களும் அதிகார, நிருவாகப் பொறுப்பிலிருந்து விடுபட்டவர்கள். இவர்களுக்குக் கீழுள்ள மூத்த தலைமுறைக் குழுவினர் சமுதாய நிருவாகம், குற்றங்களை விசாரித்தல், சமயச் சடங்குகளைச் செய்தல் போன்ற பொறுப்பு வாய்ந்த பணிகளைக் கவனிக்கின்றனர். இளைய தலைமுறைக் குழுவினர் படைப்பிரிவிலும், குறைந்த அளவு நிருவாகத்திலும் பங்கு கொள்கின்றனர். இவர்கள் பெரும்பாலும் மூத்த தலைமுறையினருக்குக் கட்டுப்பட்டும் அவர்களின் வழிகாட்டுதலை ஏற்றும் செயல்படுவர். இச்மூகத்தில் இடம் பெற்றுள்ள அனைத்துக் குழுக்களிலும் ஆண்களே இடம்பெறுவர்.

கரிமோசாங் சமுதாயத்தில் வயது அடிப்படையில் அமையும் இக்குழுக்கள் வாழ்க்கையை நான்கு பிரிவுகளாகப் பிரித்து ஒவ்வொரு பிரிவிற்குமென சில பணிகளைப் பிரித்து அப்பணிகளை உறுப்பினர்கள் நன்கு செய்வதற்குக் கற்பிக்கின்றன. ஒவ்வொரு பிரிவையும் அடையும்போது ஏற்புச் சடங்குகள் (Initiation rites) செய்து அப்பிரிவில் செயல்புரியும் தகுதி அளிக்கப்படுகிறது. முதல் ஏற்புச்சடங்கு செய்து கொண்டு இளைய தலைமுறைக் குழுவிற்குள் நுழையும் தகுதியைப் பெறும்போதுதான் ஒருவன் ஆடவனுக்குரிய நிலையை (Manhood) அடைந்ததாகக் கருதப்படுவான்.

நந்தி வயதுக் குழுக்கள்: ஆப்பிரிக்காவில் மேற்குக் கென்யாவில் ஆயர் வாழ்க்கையையும் வேளாண் தொழிலையும் செய்து வாழ்வோரே நந்திப் (Nandi) பழங்குடியினர். இம்மக்களிடையே, பிறந்த ஆண்குழந்தை முதல் இறக்கும் தருவாயிலுள்ள முதியவன் வரை அனைவரும் ஏதோ ஒருவகை

வயதுக்குழுவில் உறுப்பினராக இருப்பர். முதல் வகைக் குழுவில் ஏற்புச் சடங்கினை ஏற்காத இளங் குழந்தைகள் அடங்குவர். 10 வயது முதல் 20 வயதிற் குள்ளாக அனைவரும் ஏற்புச் சடங்கினைச் செய்து கொள்ள வேண்டும். வசதி மிக்கக் குடும்பங்களில் 10 வயதடையும்போதே ஏற்புச் சடங்கினைச் செய்து விடுவர். இச்சமூகக்தில் 8 முதல் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஏற்புச்சடங்கு நடைபெறும்.

ஏற்புச் சடங்கின் போது இனக்குறியின் நுனித் தோல் நீக்கம் (Circumcision) செய்யப்படும். இது இரு நிலைகளில் செய்யப்படும். முதலில் நுனித்தோல் இலேசாக வெட்டப்படும். அப்போது அவன் தாங் கிக் கொண்டால் தொடர்ந்து வெட்டப்படும். அவ் வாறு ஒரே நேரத்தில் செய்து கொள்வோர் சிறந்த போர் வீரர்களாகுவர் என்று போற்றப்படுவர். அதற்கு மாறாக முதலில் வெட்டும்போது ஒருவன் பயந்தால் அவனை அடித்துப் பயமுறுத்தி எஞ்சியச் சடங்கினை முடிப்பர். அவர்கள் ஓரளவு பயந்தவர்கள் எனக் கருதப்படுவர். ஏற்புச்சடங்கு செய்து கொண்ட அனைவரும் படை வீரர்களாகப் பணிபுரிவர். இப் பிரிவில் உள்ளோர் அவர்கள் விரும்பும் பெண் களுடன் காதல் புரியவும் பாலுறவு கொள்ளவும் அனு மதிக்கப்படுவர். ஆனால் திருமணம் செய்துகொள்ள மறுக்கப்படுவர். இப்படைப் பிரிவில் நான்கு ஆண்டு கள் பயிற்சி பெற்ற பின் படைப்பிரிவில் மூத்தவர் களிடமிருந்து அவர்கள் நாட்டை தம் பொறுப்பில் ஏற்றுக்கொள்வர். படைப்பிரிவின் மூத்த குழுவினர் சில ஆண்டுக்காலம் பணிபுரிந்து விட்டுப் பிரிந்து விடுவர். இவ்வாறு பிரிந்தவுடன் ஒவ்வொருவரும் திருமணம் செய்து கொண்டு குடும்பம் என்றும் அமைப்பில் வாழ்வர். குடும்பமாக வாழும்போது படைப்பிரிவில் தன் உடனொத்தவனாகப் பணி யாற்றிய நண்பர்கள் அவனைப் பார்க்க வரும்போது அவர்களை மிகச்சிறப்பாக நடத்துவான். விருந்து கொடுப்பதுடன் தன் மனைவியையும் அவர்கள் உடலுறவு கொள்ள அனுமதிப்பான்.

நயாகுசா வயது அடிப்படைச் சிற்றூர்: தென் கிழக்கு ஆப்பிரிக்காவில் பண்டு (Bantu) மொழி பேசும் நயாகுசாப் (Nyakyusa) பழங்குடியினர் வயது அடிப்படையில் சிற்றூர்களை (Age-set villages) அமைத்து வாழ்கின்றனர். அவர்கள் சமூகத்தில் 11 வயது வரை குழந்தைகள் பெற்றோர்களின் வீட்டிலேயே வாழ்வர். பெற்றோர்களுக்கு உதவி யாக கால்நடைகளை மேய்ப்பர். பின்னர் 11 வயதுக் குப் பின் ஒத்த வயதுடைய ஆண் பிள்ளைகள் அனை வரும் பெற்றோர்கள் வாழும் சிற்றூர்களுக்கடுத்து சிறிய குடிசைகளை அமைத்துக் கொண்டு பெற்றோர் களின் நிலத்தில் வேளாண் வேலைகளைக் கவனிப் பர். கால்நடை மேய்க்கும் தொழில் 11 வயதுக்கும் கீழ் உள்ளவர்களால் (பெற்றோர்களுடன் தங்கும் குழந்தைகளால்) கவனிக்கப்படும். தனி இடத்தில் தங்கி வேளாண் வேலைகளில் ஈடுபட்டாலும் உண விற்குப் பெற்றோர் வீட்டிற்கு வந்து செல்வர்.

இருபத்தைந்து வயது வாக்கில் ஆண் பிள்ளைகள் திருமணம் செய்து கொள்வர். அப்போது ஒவ்வொரு வரும் சிறிய குடிசைகளை மாற்றி வலுவான குடிசை களை அமைத்துக் கொள்வர். திருமணத்திற்குப்பின் அவர்கள் மனைவியுடன் வாழத் தொடங்குவதால் உணவுக்காகப் பெற்றோர் வீட்டிற்குச் செல்வ தில்லை. அதனால் பெற்றோர்களுடன் அவர்கள் கொண்டுள்ள பிணைப்பு சிறிது சிறிதாகக் குறைந்து வரும். இந்நிலையில் அனைத்துப் பெற்றோர்களும் அவரவர் மக்களுக்கு வேளாண் நிலத்தையும் அப் பழங்குடியின் மொத்த நிருவாகப் பொறுப்பையும் அவர்களிடம் விட்டுவிடுவர். முதுமைக் காலத்தில் அவர்கள் எவ்வித பொறுப்புக்களுமின்றி ஓய்வாக வாழ்வர். இவ்வாறு வயதுப் பிரிவினரின் தனிப்பட்ட வாழ்க்கை ம்றை அவர்களிடையே ஒரு சுழற்சியாக அமைகிறது.

வயது அடிப்படையில் அமையும் குழுக்களைக் கொண்ட சமுதாயங்கள் மிகவும் அரிதாகவே உள் ளன. மர்டாக் தரவுகள் தொகுத்த 547 சமுதாயங்களுள் 23 சமுதாயங்களில் மட்டுமே இவ்வகை அமைப்புகள் காணப்படுகின்றன. இந்த 23 இல் 16 சமுதாயங்கள் ஆப்பிரிக்காவில் உள்ளன.

பண்பாட்டிடை நிலையில் வயது அடிப்படைக் குழுக்களை ஆராய்ந்த எய்சன்டாட் அதற்கான ஓர் எடுகோளை உருவாக்கினார். உறவுமுறை சார்ந்த குழுக்களில் இடம்பெறும் உறுப்பினர்களுக்கென்று தனிப்பங்கு பணிகளும் மதிப்புகளும், செய்யும் பணிகளுக்கு ஈடானவையும் இல்லாமலிருப்பதால் இவ்வாறான குழுக்கள் தோன்றுகின்றன. அதோடு பண்பாட்டு வயமாதல், பொருளாதாரம், அரசியல்

போன்ற நிறுவனங்களில் உறவுக் குழுக்களின் பங்கு பெரிதாக அமையாத சமுதாயங்களிலும், இவ்வகை யமைப்பு இடம்பெறும் எனக் கூறுகிறார். பெர்னார்டி என்றும் அறிஞர் போர் நடவடிக்கைகள் மிகுதியாக உள்ள சமுதாயங்களிலும், சமுதாய முறை நன்கு வலுவான நிலையில் அமையப் பெறாத சமு தாயங்களிலும், மைய அமைப்புடைய அரசியல் முறை இல்லாத சமுதாயங்களிலும் இவ்வகைக் குழுக்கள் செயல்படுகின்றன என மதிப்பிடுகிறார்.

-சீ.ப.

**வயது–பாலின அமைப்பு :** மக்கள் தொகை யின் அமைப்பு அதன் சிறப்பியல்புகளை அடிப்படை யாகக் கொண்டு ஆராயப்படுகிறது. அந்தச் சிறப் பியல்புகள் இரண்டு வகைகளில் அடங்கும் ஒன்று சார்த்தப்படுகின்ற சிறப்பியல்புகள் (Ascribed Characteristics); மற்றொன்று ஈட்டப்படுகிற சிறப்பியல்புகள் (Achieved Characteristics) ஆகும்.

சார்த்தப்படுகிற சிறப்பியல்புகள் மக்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் வாராதவை. அவர்கள் விரும்பி னாலும், விரும்பாவிட்டாலும் அவை அவர்களி டமே, அவர்களோடேயே அமைந்திருக்கும். அவை அவர்களின் சுயவிருப்பாற்றலுக்கு அப்பாற்பட்டு அமைந்திருப்பதால் அவர்களுக்கு அவற்றின் மீது எந்த விதமான கட்டுப்பாடும் செலுத்த வாய்ப்பில்லை. அவர்கள் அவற்றை மாற்றியமைக்க இயலாது. பாலினம், வயது, இனம், தேசிய இனம், சாதி முலிய சிறப்பியல்புகள் சார்த்தப்படுகிற சிறப்பியல்பு களாகும்.

ஈட்டப்படுகிற சிறப்பியல்புகள் மக்களுடைய கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை. அவர்களுடைய சுயவிருப்பாற்றலுக்கு உட்பட்டவை. அவை அவர் களுடைய முயற்சியின் காரணமாக வந்தமைபவை. எனவே, அவர்களால் அவற்றை மாற்றியமைக்க இயலும். சமூக - பொருளாதார முறையில் அமைகிற சிறப்பியல்புகள் பெரும்பாலும் ஈட்டப்படுகிற சிறப்பியல்புகளே. கல்வி, மனநிலை, தங்குமிடம் செய்தொழில், வருமானநிலை, பொருளாதாரத் தகு நிலை முதலிய சமூக - பொருளாதாரச் சிறப்பியல்பு கள் இவ்வாறாக ஈட்டப்படுகிற சிறப்பியல்புகளே ஆகும்.

இந்தச் சிறப்பியல்புகளில் ஒவ்வொன்றைக் கொண்டும் மக்கள்தொகை எப்படி அமைந்துள்ளது என்பதை அறிஞர் ஆய்வர். வயது, பாலினம் ஆகிய வற்றைக் கொண்டு ஆராயும்போது மக்கள் தொகை யின் வயது - பாலின அமைப்புக் கிடைக்கிறது.

மொத்த மக்கள் தொகையை வயதின் அடிப்படை யில் பல குழுக்களாகப் பிரித்துப் பகிர்வு செய்யும் பொழுது அமைகிற மக்கள் தொகை, அமைப்பு, வயது அமைப்பு (Age Structure) எனப்படும். ஒவ் வொரு வயதுக் குழுவிலும் எத்தனை ஆண்கள், எத் தனை பெண்கள் இருக்கிறார்கள் என்று கணக்கிட்டு, ஒவ்வொரு வயதுக் குழுவையும் பாலின அடிப்படை யில் பிரிக்கும் பொழுது அமையும் மக்கள் தொகை அமைப்பு வயது - பாலின அமைப்பு (Age-sex Structure) எனப்படும்.

மக்கள் தொகையை வயதின் அடிப்படையில் பல குழுக்களாகப் பிரிக்கும்போது, அதை இரண்டு வழிகளில் பிரிப்பர். ஒன்று, ஓராண்டு வயதுக் குழுக் களாகப் பிரிக்கலாம் அல்லது ஐந்தாண்டு வயதுக் குழுக்களாகப் பிரிக்கலாம். வயது பொதுவாக ஆண்டளவில்தான் கணக்கிடப்படுகிறது. இந்த வகையில் வயதுகள் ஒரு வயதுக்குக்கீழ், 1 வயது, 2 வயது, 3 வயது, 4 வயது, 5 வயது என்று தனித்தனி வயதுகளாக - ஓராண்டு வயதுகளாக அமைகின்றன. இந்த நிலையில் ஒவ்வோர் ஆண்டு வயதையும் ஒரு குழுவாகக் கருதி ஒவ்வொரு குழுவிலும் எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு மொத்த மக்கள் தொகையை வயது - பாலின அடிப்படையில் பகிர்ந்து அமைப் பார்கள்.

இவ்வாறு மக்கள் தொகையை ஓராண்டு வயதுக் குழுக்களாகப் பிரித்து அவை ஒவ்வொன்றின் ஆண் கள் - பெண்கள் எண்ணிக்கையைக் கணக்கிட்டு மக் கள் தொகையைப் பகிர்வு செய்து அதன் அமைப்பை உருவாக்குவர். ஆனால், இச் செயற்பாங்கு நீண்ட நேரம் எடுத்துக் கொள்ளும். மேலும், அவ்வாறு அமையும் அமைப்பும் பெரிதாகத் தோன்றும்.

எனவே, இச்சிக்கலைத் தவிர்க்க வயதுகள் ஐந் தாண்டுகள் என்ற கணக்கில் வகைப்படுத்தப்பட்டு, ஐந்தைந்து ஆண்டுக் குழுக்களாக அமைக்கப்படு கின்றன. 0, 1, 2, 3, 4, ஆகிய ஐந்து வயதுகள் ஒரு குழுவாகவும், 5, 6, 7, 8, 9 ஆகிய ஐந்து வயதுகள் இன்னொரு குழுவாகவும், 10, 11, 12, 13, 14, ஆகிய வயதுள்ளவர் பிறிதொரு குழுவாகவும், இப்படியே எல்லா வயதுகளும் ஐந்தைந்து ஆண்டுக் குழுக்களாக அமைக்கப்படுகின்றன. இத்ததைய செயற்பாங்கி னால் வயதுகள் 0-4 , 5 - 9, 10 - 14, 15 - 19, 20 - 24, 25 - 29 என்று ஐந்தாண்டு வயதுக் குழுக்களாகத் தொகுக்கப் படுகின்றன. இப்படிச் செய்வதால் வயதுக் குழுக் களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்பட்டு, வயது அமைப்பு அமைக்கும் செயற்பாங்கு எளிமைப்படுத் தப்படுகிறது.

சில வேளைகளில் வயதுகள் பத்தாண்டுகள் என்ற கணக்கில் வகைப்படுத்தப்பட்டு, பத்துப் பத்து ஆண்டுகளாகவும் கணக்கிடப்படுவதுண்டு. இந்த முறையில் , வயதுக் குழுக்களின் எண்ணிக்கை ஐந் தாண்டு வயதுக் குழுக்களின் வகைப்பாட்டு எண் ணிக்கையைவிடக் குறைவாகவே இருக்கும். நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகள், பள்ளி செல்லும் வயது அடையாத இளங்குழந்தைகள் ஆதலால், அவர்கள் மட்டும் ஒரு தனி வயதுக் குழுவாக ஐந்தாண்டு வயதுக் குழுவாகக் கருதப்பட்டு, ஏனைய வயதுகள் எல்லாம் பத்தாண்டு வயதுக் குழுக்களாக வகைப்படுத்தப்படும். இந்த முறையில் வயதுக் குழுக்கள் 0-4, 5 -14, 15 - 24, 25 - 34, 35 - 44, 45 - 54 ... என்று வகைப்படுத்தப்படும்.

இதையும்விட இன்னும் எளிமையான முறை யிலும் வயதுக்குழுக்கள் அமைக்கப்படுவதுண்டு. 0 - இலிருந்து 14 வரைக்குட்ட வயதுகள் ஒரு குழுவாகவும், 15-லிருந்து 59 வரைக்குட்பட்ட வயதுகள் ஒரு குழுவாகவும், 60 - க்கும் மேற்பட்ட வயதுகள் 0 -14, 15 - 59, 60 - என்று மூன்றே மூன்று குழுக்களாக மட்டும் அமைக்கப்பட்டு வயதுக் குழுக் களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படுகின்றது. 0 - இலிருந்து 14 வரைக்குட்பட்ட வயதினர் குழந்தைகள் என்பதாலும், அவர்கள் பொருளாதார முறையில் எந்தப் பங்கையும் செலுத்தாதவர்களாக - செலுத்த இயலாதவர்களாக இருப்பதாலும் அவர்கள் ஒரு தனித்த வயதுக் குழுவாக அமைகின்றனர். 15 - இலிருந்து 59 வரைக்குட்பட்ட வயதினர் பொருளா தார முறையில் பங்காற்று பவர்களாக - பங்காற்றக் கூடியவர்களாக இருப்பதால் அவர்கள் வேறொரு தனி வயதுக் குழுவாகக் கருதப்படுவர். 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பொருளாதார முறையில் பங்கு ஏதும் ஆற்றுவதில்லை யாதலாலும், ஆற்ற இயலா மற் போவதாலும் அவர்கள் பிறிதொரு தனி வயதுக் குழுவினராகக் கருதப்படுவர்.

ஆயினும் பொதுவாக நடைமுறையில் வய துக் குழுக்கள் ஐந்து ஆண்டுகள் என்ற கணக்கில்தான் வகைப்படுத்தப்பட்டு, வயது அமைப்பு உருவாகிறது. ஒவ்வோர் ஐந்தாண்டு வயதுக் குழுவிலும், எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் என்பது கணக்கிடப் படுகிறது. இவ்வாறு ஒவ்வோர் ஐந்தாண்டுக் குழு விற்கும் இரு பாலாரின் எண்ணிக்கையளவு கணக் கிடப்படும் பொழுது, வயது - பாலின அமைப்பு உருவாகிறது.

பொதுவாக ஒவ்வோர் ஐந்தாண்டு வயதுக் குழுவிலும் எத்தனை ஆண்கள், எத்தனை பெண்கள் இருக்கிறார்கள் என்று பாலின அளவு கணக்கிடப் படும்பொழுது,அந்த எண்ணிக்கை தனிமுழு எண் களில் (Absolute Numbers) தரப்படுவதுண்டு. ஆனால், தனி முழு எண்கள் வயது-பாலின அமைப்பைத் தெளிவாகப் புரிந்து கொள்ள உதவுவதில்லை. ஆகவே, வயது அமைப்பில் பாலின அளவைக் குறிக்கும் பொழுது விழுக்காட்டு அளவிலேதான் ஆண்கள்-பெண்கள் எண்ணிக்கை ஒவ்வோர் ஐந்தாண்டு வயதுக் குழுவுக்கும் தரப்படுகிறது.

விழுக்காட்டின் மூலம் தரப்படும் எண் ணிக்கையளவு மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பைத் தெளிவாகப் புரிந்து கொள்ள எவ்விதம் உதவும் என்பதைக் கீழே கொடுக்கப்பட்டுள்ள இந் திய மக்கள் தொகையின் வயது-பாலின அமைப் பைப் பற்றிய அட்டவணையைக் (1981) கொண்டு உணரலாம்.

**அட்டவணை - 1 : இந்திய மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பு** (1981) **வயதுக்குழுக்கள்**

| ஆண்டுகள் | மொத்த மக்கள் (விழுக்காடு) | ஆண்கள் (விழுக்காடு) | பெண்கள் (விழுக்காடு) |
|---|---|---|---|
| 0 - 4 | 14.1 | 13.9 | 14.3 |
| 5 - 9 | 13.4 | 13.4 | 13.5 |
| 10 - 14 | 2.1 | 12.2 | 11.9 |
| 15 - 19 | 10.1 | 10.2 | 10.0 |
| 20 - 24 | 8.5 | 8.5 | 8.6 |
| 25 - 29 | 7.4 | 7.3 | 7.6 |
| 30 - 34 | 6.5 | 6.4 | 6.6 |
| 35 - 39 | 5.7 | 5.7 | 5.7 |
| 40 - 44 | 5.0 | 5.1 | 5.0 |
| 45 - 49 | 4.4 | 4.5 | 4.2 |
| 50 - 54 | 3.6 | 3.7 | 3.4 |
| 55 - 59 | 2.9 | 2.9 | 2.8 |
| 60 - 64 | 2.3 | 2.3 | 2.3 |
| 65 - 69 | 1.7 | 1.7 | 1.7 |
| 70 + | 2.3 | 2.2 | 2.4 |
| | 100.0 | 100.0 | 100.0 |

மேற்கண்ட அட்டவணை இந்திய மக்கள் தொகையின் வயது-பாலின அமைப்பு (1981) எவ்விதம் அமைந்திருக்கிறது என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது. இனம் வயதுக் குழுக்களில் இரு பாலினங்களிலும் எண்ணிக்கை அதிகமாகவும், பிறகு வருகிற முதியோர் வயதுக் குழுக்களில் இரு பாலாரின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதும் ஆன நிலைமையை மேற்கண்ட அட்டவணை புலப்படுக்கிறது. இதிலிருந்து இந்திய மக்கள் தொகையில் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையே பிற வயதுக் குழுக்களின் (அதாவது 15 - 29, 30 - 44, .... ஆகிய வயதுக் குழுக்களின்) எண்ணிக்கையைவிட அதிகம் இருப்பது தெரிய வருகிறது.

மேலும், விழுக்காட்டின் உருவகையில் வயது-பாலின அமைப்பில் எண்ணிக்கையளவு தரும் முறையினால் இன்னொரு பயனும் ஏற்படுகிறது. மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பைக் கால அளவிலும், இட முறையிலும் ஒப்புமை செய்வதற்கு இம்முறை பெரிதும் பயன்படுகிறது.

மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பை ஒரு விளக்கப் படத்தின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ளலாம். அதற்கும் விழுக்காட்டு அளவு முறையே பயன்படுகிறது.

மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பை ஒரு விளக்கப்படத்தில் வைத்து வரைந்து காட்டும்போது, அது பொதுவாக ஒரு கூம்புக் கோபுர (Pyramid) வடிவத்தில் அமையும். கூம்புக்கோபுர வடிவத்தில் வயது - பாலின அமைப்பு அமையும்போது அதற்கு மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் என்று பெயர் சூட்டப்படுகிறது. கூம்புக் கோபுரம் போல வயது - பாலின அமைப்பு அடிப்பகுதியில் அகலமாகவும் , மேலே போகப் போகக் குறுகலாகவும் அமைவதால் அது மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் என்று பெயர் பெறுகிறது. (சிலர் வயது - பாலின அமைப்பை வயது - பாலின மரம் (Age - Sex Tree) என்றும் சொல்வதுண்டு. பொதுவாக மரத்தின் கிளைகள், இலைகள் அடர்ந்த பகுதி கூம்புக் கோபுரம் போலக் கீழ் மட்டத்தில் அகலமாகவும், மேலே போகப் போகக் குறுகலாகவும் அமைந்து இருப்பதால், வயது -பாலின அமைப்பு வயது - பாலின மரம் எனப்படுகிறது). இந்திய மக்கள் தொகையின் வயது-பாலின அமைப்பைப் (1981) பற்றிய கீழ்க்காணும் விளக்கப்படம் மக்கள் தொகையின் வயது-பாலின அமைப்பு எவ்விதம் கூம்புக் கோபுர வடிவத்தில் அமையும் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் ஒரே வடிவத்தில் அமைவதில்லை. அவை பல்வேறு வடிவங்களில் அமையும் என்கின்றனர். வாரன் எசு.தாம்ப்சன் (Warren S. Thompson), தேவிடு டி. உலூவி (David T. Lewis) ஆகிய இருவரும்.

முதல் வகை மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் அடிப்பகுதி அகலமாக இருக்கும். பக்கங்கள் சற்றே மேல் நோக்கிச் சரிந்திருக்கும். உயர்ந்த பிறப்பு விகிதமும், உயர்ந்த இறப்பு விகிதமும் உடைய நாடுகளில் மக்கள் தொகையின் வயது -பாலின அமைப்பு இவ்வாறுதான் அமையும். இந்திய மக்கள் தொகையின் வயது - பாலின அமைப்பு இத்தகைய கூம்புக் கோபுர வடிவத்தைத் தான் பெற்றுள்ளது.

இரண்டாம் வகை மக்கள் தொகைக் கூம்புக் கோபுரத்திலும் அடிப்பகுதி அகலமாகவே இருக்கும். ஆனால், முதல் படக் கூம்புக் கோபுர அடிப் பகுதியைவிட உள் வளைந்து மேலே குவியும். இளங் குழந்தைகள், மற்றும் குழந்தைகளின் இறப்புகள் குறிப்பிடத்தக்க அளவு குறைந்தும், கருவளம்-பிறப்புகளின் எண்ணிக்கை குறையாத நாடுகளில், வயது - பாலின அமைப்பு இத்தகைய கூம்புக் கோபுர வடிவத்தைப் பெறுகிறது. இலங்கை, பிலிப்பைன்சு, பிரேசில், மெக்சிகோ முதலிய நாடுகளில் மக்கள் தொகை இப்படிப்பட்ட கூம்புக் கோபுர வடிவத்தையே பெறுகின்றன.

மூன்றாம் வகைக் கூம்புக் கோபுரம் ஒரு தேன்கூடு போல இருக்கும். அதையொட்டிப் பிற பல வயதுக் குழுக்களின் அளவும் ஒரே மாதிரியான ஓர் எல்லை வரை குறுகலாக இருக்கும். குறைந்த பிறப்பு விகிதமும் குறைந்த இறப்பு விகிதமும் நிலவும் நாடுகளில் மக்கள் தொகை இப்படிப்பட்ட கூம்புக் கோபுர வடிவத்தில்தான் இருக்கும். மேற்கு ஐரோப்பிய நாடுகளின் மக்கள் தொகைகள் இப்படிப்பட்ட கூம்புக்கோபுர வடிவத்தையே பெற்றிருக்கின்றன.

நான்காம் வகை கூம்புக் கோபுரம், மணி (Bell) வடிவத்தில் இருக்கும். இதில் அடிப்பகுதி சிறியதாக இருக்கும். நடுப்பகுதி சற்றே குழி விழுந் திருக்கும். அதற்கு மேல் வருகிற அறுபது வயதுப் பகுதியில் கூம்புக் கோபுரம் இரு பக்கங்களிலும் சற்றுப் புடைத்திருக்கும். அதற்கும் மேலே உள்ள பகுதியில் கூம்புக் கோபுரம் மேல்நோக்கியவாறு கூம்பி இருக்கும். அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா ஆகிய நாடுகளின் மக்கள் தொகைகள் இத்தகைய கூம்புக் கோபுர வடிவத்தையே பெற்றிருக்கின்றன. அந்நாடுகளின் பிறப்பு விகிதம் குறைவாக இருப்பதால், கூம்புக்கோபுரத்தின் அடிப்பகுதி சிறியதாக இருக்கிறது. குறிப்பாக முதியோர்களுக்காக உடல் நல வசதிகள் சிறப்பாக அமைந்திருப்பதால், அறுபது வயதுப் பகுதியில் இறப்பு விகிதம் குறைந்து, முதியோர் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது. எவ்வளவுதான் உடல்நல மருத்துவ வசதிகள் மேம்பட்டிருந்தாலும், இயற்கையின் வலிமைக்கு முன்னாள் மனித முயற்சிகள் ஓரளவுக்குத்தான் பலன் கொடுக்கும் என்பதால், அறுபது வயதுக்கு மேற்பட்ட பகுதிகளில் போகப் போக இறப்பு விகிதம் கூடிக்கொண்டே செல்லுகிறது. அதனால், கூம்புக் கோபுரத்தின் அறுபது வயதுப் பகுதிக்கு மேல் உள்ள பகுதி மேல்நோக்கியவாறு கூம்புகிறது.

ஐந்தாம் வகை கூம்புக் கோபுரம் ஒரு பூச்சாடி போலத் தோற்றமளிக்கும். இதில் அடிப் பகுதி மிகவும் குறுகலாக இருக்கும். பிறகு கூம்புக் கோபுரம் பக்கவாட்டில் விரிந்து 15 வயதுப் பகுதியில் புடைப்புக் கொண்டிருக்கும். அதற்குப் பிறகு கூம்புக் கோபுரத்தின் பக்கங்கள் உள்மடங்கி மேலே குவியும். சப்பான் நாட்டில் மக்கள் தொகை இப்படிப்பட்ட கூம்புக் கோபுர வடிவத்தைத்தான் கொண்டிருக்கிறது. பிறப்பு விகிதம் குறைவாக இருப்பதால் கருவளம் குறைகிறது. அதனால், அடிப்பகுதி சிறியதாக அமைகிறது. மேம்பட்ட உடல்நல, மருத்துவ வசதிகளின் மூலம் குழந்தைகளின் இறப்பு விகிதம் கட்டுப் படுத்தப்படுவதால் குழந்தைகளின் எண்ணிக்கை மிகுகிறது. அதனால் கூம்புக் கோபுரத்தின் அடிப் பகுதிக்கு மேல் உள்ள பகுதி பக்கவாட்டில் விரிகிறது. இந்தப் பக்கவாட்டு விரிவு 15 வயதுப் பகுதி வரையிலும் நீடிக்கிறது. அதற்குப் பிறகு இயற்கையின் போக்குக்கு ஏற்பக் கூம்புக் கோபுரம் இரு பக்கங்களிலும் மேல் நோக்கிச் சரிந்து குவிகிறது.

உருவகைகள் எவ்வாறு இருந்தாலும், மக்கள் தொகை எல்லா நாடுகளிலும் பொதுவான அடிப் படையில் கூம்புக் கோபுர வடிவத்திலேயே அமைகிறது. இந்தக் கூம்புக் கோபுர வடிவத்தைக் கொண்டு ஒரு நாட்டுமக்கள் தொகையின் வயதுக் குழுக்கள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதையும் அறிந்து கொள்ள முடியும். பொதுவாக வளர்ந்து வரும் நாடுகளில் கூம்புக் கோபுரத்தின் அடிப்பகுதி அகலமாக இருக்கிறது. பிறப்பு விகிதம் அதிகமாக இருப்பதாலேயே அந்நாடுகளின் மக்கள் தொகைக் கூம்புக் கோபுரத்தின் அடிப்பகுதி அகலமாக இருக்கிறது. பிற பகுதிகள், அதாவது நடு, மேல் வயதுப் பகுதிகள் கீழ் வயதுப் பகுதிகளின் எண்ணிக்கையளவைக் காட்டிலும் சிறியதாக இருக்கிறது. அதனால்தான் அந்நாடுகளின் மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் பொதுவாகப் பக்கவாட்டில் மேல்நோக்கிச் சரிந்து இருக்கிறது. இதற்குக் காரணம் நடு, மேல் வயதுப் பகுதிகளில் உயர்ந்த இறப்பு விகிதத்தின் காரணமாக எண்ணிக்கை அளவு குறைவதுதான். இவ்வாறு மக்கள்

தொகையில் வயது - பாலின அமைப்பு எப்படி அமைந்துள்ளது. அது அவ்விதம் அமைவதற்கு என்ன காரணம் என்பதைக் கூம்புக் கோபுரம் கொண்டு அறியலாம்.

ஒரு சில நிகழ்வினங்களில் (Cases) வயது -பாலின அமைப்பில் பொது நடைமுறைக்கு மாறாக நடு வயதுப் பகுதிகள் கீழ் வயதுப் பகுதிகளை விட அதிக மான எண்ணிக்கையளவினைக் கொண்டிருக்கும். அதனைக் கூம்புக் கோபுரத்தின் மூலம் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம். கூம்புக் கோபுரத்தின் நடுப் பகுதி புடைந்திருந்தால் இதை உணர்ந்து கொள்ள முடியும். மேலும், இந்த நிலைமைக்கு என்ன காரணம் என்பதையும் அறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறு மக்கள் தொகைக் கூம்புக் கோபுரம் மக்கள் தொகையின் வயது -பாலின அமைப்பைப் பற்றி அறிந்து கொள்ளப் பயன்படுகிறது. வயது - பாலின அமைப்பை அறிந்து கொள்வதன் மூலம் மக்கள் தொகையில் சார்புத் தன்மைச் சுமை (Dependency Load) எந்த அளவுக்கு அமைந்துள்ளது என் பதை அறிந்து கொள்ளலாம். 0-14 வயதுக் குழுவைச் சேர்ந்தவர்கள் பொருள் ஈட்டும் ஆற்றலோ வாய்ப்போ இல்லாதவர்கள். அவ்வாறே 60 -க்கு மேற்பட்ட வயதினரும் பொருள் ஈட்டும் வலிமையோ, வாய்ப்போ இல்லாதவர்கள். 0 -14 வயதுக் குழுவினரும், 60 வயதுக்கு மேற்பட்ட வர்களும் பொருள் ஈட்டுதலில் எவ்விதப் பங்கும் ஆற்ற இயலாததால் அவர்கள் பொருள் ஈட்டும் தகுதி யுடைய 15-59 வயதுக் குழுவினரைச் சார்ந்து வாழ நேரிடுகிறது. அவர்களுடைய எண்ணிக்கை மக்கள் தொகையில் எவ்வளவு விழுக்காடு என்பதைப் பொறுத்துச்சார்ப்புத் தன்மையின் சுமை அமைகிறது. அவர்களுடைய விழுக்காடு அளவு மிகுதியாக இருந் தால் சார்புத் தன்மைச் சுமை மிகுதியாக இருக்கும்.

இந்திய மக்கள் தொகையில் இளவயதுச்சார்புத் தன்மையர் (Young dependents) 1981 -ஆம் ஆண்டுக் கணிப்பின்படி, அதாவது 0 -14 வயதுக் குழுவைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 39.6 விழுக்காடு இருந்தது. முதிய வயதுச்சார்புத் தன்மையர் (Aged dependents), அதாவது 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 4 விழுக்காடு இருந்தது. இரண்டையும் கூட்டும் போது மொத்தச் சார்புத் தன்மையினரின் எண்ணிக்கை 43.6 விழுக்காட்டுக்கு வந்தது. இவ்வளவு பெரிய எண்ணிக்கை ஒரு பெரிய சுமையேயாகும். ஏனெனில் 15- 59 வயதுக் குழுவைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை மொத்த மக்கள் தொகையில் 56.4 விழுக்காடு தான். ஆக, பொருளா தார முறையில் பங்காற்றுகிற ஒருவருக்கு 0.8 பேர் சார்புத் தன்மையினராக வாய்க்கின்றனர். பொருளா தார முறையில் பங்காற்றுகிற ஒருவர் தம்மை மட்டு மன்றி, தம்மைச் சார்ந்து வாழும் கிட்டத்தட்ட இன் னொருவரையும் தாம் ஈட்டும் ஊதியத்தை வைத்துக் கொண்டு ஆதரித்துக் காப்பாற்ற வேண்டியிருக்கிறது. அதனால், அவர் தலை மீது விழுகிற சுமை - சார்புத் தன்மைச் சுமை - கனமாக இருக்கிறது. இந்த நிலை மையை வயது - பாலின அமைப்புப்படம் பிடித்துக் காட்டுகிறது.

- சி.என்.ந.

**துணை நூல்கள் :**

1. Bhande, Asha and Kanitkar, Tara, **Principles of Population Studies**, Himalaya Publishing House, Bombay, 1985.

2. Kuppusamy, B., **Population and Society**, Popular Prakasham Pvt., Ltd., Bombay, 1975.

3. Thompson, Warren S. and Lewis, David T., **Population Problems**, Tata McGraw-Hill Publishing Company Ltd., New Delhi, 1980.

**வயது வரற் பருவம் :** குமரப் பருவத்தை அடுத்து வருகின்ற பருவம் 'வயது வரற் பருவம்' (Adulthood) ஆகும். இது முன், நடு, பின் வயது வரற் பருவமென மூன்று நிலைகளை உடையது. அம் மூன்று நிலைகளும் ஒன்றுக்கொன்று வேறுபட்டன வாகும். தங்களின் இளமைக் காலத்தில் வளர்த்துக் கொண்ட வகைப்படி தம் வயதுவரற் பருவத்தை ஒருவர் கழிப்பதாகக் கருதிட இடமில்லை. வயது வரற்பருவம் தொடர்ச்சியான வளர்ச்சிப் பருவ மாகும். அச்சமயத்தில் மனிதர்களின் கருதுகோள்கள், மனவெழுச்சி, உடல் அமைப்பு, சிந்தனைத் திறன், ஆளுமைப் பண்புகள் போன்றவையெல்லாம் குறிப் பிடத்தக்க வகையில் மாறுபாடடைகின்றன.

முன் வயது வரற் பருவத்தினர் தனித்திருப்பதைத் தவிர்த்துப் பிறருடன் நெருக்கமாகப் பழகத்

தொடங்குகின்றனர். இருபது வயதிலிருக்கும் மனிதர்களுக்குத் தம் வாழ்வின் இன்றியமையாப் பணியினை முடிவு செய்வதே பெருஞ்சிக்கலாகின்றது. இதே காலத்தில் பலர் தம் திருமணம் பற்றியும் முடிவெடுக்கின்றனர். மணம் புரிந்து கொண்டதும் அவர்கள் புதிய கடமைகளை மேற்கொள்ளவும் புதிய பொறுப்புகளையும், நிரந்தர உணர்வுகளையும் ஏற்கவும் வேண்டியவராகின்றனர். முதல் குழந்தை பிறந்தவுடன் மேலும் அதிகமான இணக்க நடத்தைகளை மேற்கொள்ள வேண்டியவராகின்றனர். மகளிருக்குத் தாயென்னும் நிலை உண்மையான சிக்கலாகின்றது.

மனிதர்கள் தம் முப்பது (வயது)களின் வாழ்வில் நிலை கொண்டிட முயல்கின்றனர். அவர்கள் தம் நல்ல குணங்களையும், கெட்ட குணங்களையும் புரிந்து கொண்டு தம்மைத்தாமே உணர்ந்து ஏற்றுக் கொள்கின்றனர். முப்பதுகளில் பெரும்பாலானோர்க்குத் துன்பம் ஏற்படுவதும், அதனால் வாழ்வு பற்றிய மகிழ்வின்மை ஏற்படுவதும் உண்டு.

நடு வயது வரற் பருவத்தை அடைந்த மனிதர்கள் தம் வாழ்வு குறுகியதென உணரத் தொடங்குகின்றனர். அதன் காரணமாக, வாழக்கையின் குறிக்கோள்களை அடைந்திட நெருக்கடி மிகுகின்றது. சில மனிதர்கள் புதிய தொழில்கள் அல்லது வேலைகளைத் தொடங்க எண்ணுகின்றனர். ஏனெனில், அவர்கள் புதிய சவால்களை அல்லது குறிக்கோள்களை எட்டிட ஓர் இரண்டாம் வாய்ப்பினை விரும்புகின்றனர். நாற்பதுகளில் ஆண்கள் பகுத்துணர்வு மிக்கவர்களாகவும் எதனையும் தாங்கிக் கொள்ளக்கூடியவர்களாகம் இருப்பர். இந்த நாற்பதுகளில் பெண்கள் தம் உரிமைகளை நிலைநாட்டுபவர்களாக இருப்பர். அச்சமயத்தில், குடும்பத்தில் பிறந்த பிள்ளைகள் குடும்பத்தை விட்டுப் பல்வேறு காரணங்களுக்காக வெளியேறி விடுவது பெண்களுக்கு மீண்ட உற்சாகத்தைத் தருகின்றது. ஆணும் பெண்ணும் முதுமையடைவதினால் ஏற்படும் உடல் மாற்றங்களை நன்கு உணர்ந்தவர்களாக இருக் கின்றனர். அவ்வயதில் மாதவிடாய் நின்று விடுவது பெண்களுக்கு ஒரு திருப்புமுனையாக அமைகின்றது. ஆண்களும் தம் உடல்நலத்தில் மிக்க அக்கறை யுடையவர்களாக இருப்பர். வாழ்க்கை குறுகியது என்ற எண்ணம் அவர்களைத் தம் வாழ்க்கையை உள்நோக்கிப் பார்க்கச் செய்கிறது. மேலும் அந்த எண்ணம் அவர்களில் செயல்களிலும் வெளிப்படு கின்றது. அவர்கள் தம் சொந்த விருப்பங்களை மிகவும் இன்றியமையாதனவாகக் கருதுவர். தன்னலக்காரர்களாகவும் இருப்பர். வேலையின் முடிவில் ஏற்பட்டுவிட்ட இடைவெளிகளை இட்டு நிரப்பு வதற்காக ஏற்படும் புதிய ஆர்வமும், குடும்பத் தேவைகள் குறைந்து வருவதும் இவர்களின் நல்லிணக்கத்தில் வெளிப்படும்.

பின் வயது வரற் பருவத்தில் பணி ஓய்வின் காரணமாக மனிதர்களிடம் தனித்துவமும், வாழ்வின் குறிக்கோளும் குறைந்திடுகின்றன. ஓய்வு நேரம் அதிகமிருப்பினும் செய்வதற்கு ஒன்றுமில்லை. அப்பருவத்தில் குடும்பப் பந்தங்கள் மிகவும் முக்கியமாகி விடுகின்றன. நோயினையும், மரணத்தையும் சந்திக்க வேண்டி இருப்பதால் முதுமையினால் ஏற்படும் உடல் மாற்றங்கள் தவிர்க்க முடியாதனவாகின்றன. முதுமையைப் பற்றி சமூகம் கொண்டிருக்கின்ற கருத்துத்தான் வயதுவரற் பருவத்தின் மிகப் பெரிய சவாலாகும். பொதுவாக எதிர்பார்ப்பதற்கு மாறாக, இளமையில் ஏற்பட்ட இன்ப அனுபவங்கள் முதுமையிலும் காணப்படுகின்றன. எழுபதிலும் எண்பதிலும் இருக்கும் மனிதர்களிடம் பாலுணர்விற்கும் உடல் விருப்பத்திற்கும் தேவையும், அதற்கான திறமையும் காணப்படும். வயது அதிகரிப்பதனால் சில இயக்கத் திறன்கள் வலிமையிழப்பினும் நுண்ணறிவு குறைந்திடுவதில்லை. வயது முதிர்ச்சியினை முதுமையென்பது சரியாகாது. ஒருசில மனிதர்களே முதுமையை அடைகின்றனர். சிலரின் நடத்தை முதுமையை அடைந்தாற்போன்று காணப்படுவது சமூகம் அப்படி எதிர்பார்ப்பதாக நினைத்து அவர்கள் நடிப்பதேயாகும்.

- கி.இரா.

**வயலூர் :** இவ்வூர் திருச்சிக்கு மேற்கே 8 கி.மீ. தொலைவில் உள்ளது. இவ்வூர் இராசகெம்பீர வள நாட்டைச் சேர்ந்தது. இவ்வூர் குமாரவயலூர். ஆதிய வயலூர், அக்னீசுவரம் என்றும் வழங்கப்படுகிறது. வயலூர் அருணகிரிநாதரால் 'செய்ப்பதி' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வயலூரில் முருகப்பெருமான் திருக்கோயில் வயல்களுக்கு நடுவில் தென்னஞ் சோலைகளால் சூழப்பெற்று மிகவும் அழகுற

விளங்குகின்றது. இத்திருக்கோயிலில் முதலாம் இராசராசசோழன் முதலான பல்வேறு சோழ மன்னர்களின் கல்வெட்டுகள் காணப்பெறுவது குறிப்பிடத்தக்கது. வயலூர் முருகப்பெருமான் மீது அருணகிரிநாதர் 18 திருப்புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளார். இவ்வூரில் திருமுருகன் வேலினால் ஒரு தீர்த்தத்தை உண்டாக்கி சிவபெருமானை வழிபட்டதாக இவ்வூர் வரலாறு கூறுகின்றது. இத்தீர்த்தம் இப்பொழுது குமாரதீர்த்தம், சக்தி தீர்த்தம், அக்னி தீர்த்தம் என்ற பெயர்களால் குறிக்கப்படுகிறது.

திருவண்ணாமலையில் முருகன் அருள்பெற்ற அருணகிரிநாதரை ஆறுமுகப்பெருமான் வயலூருக்கு வருமாறு பணித்ததாகவும், அருணகிரிநாதரும் முருகப் பெருமான் கட்டளைப்படி வயலூர் வந்ததாகவும் முருகப்பெருமான் அவருக்குக் காட்சி தந்தருளி திருப்புகழ் பாடும் ஆற்றலை அருளியதாகவும் கூறுவர்.

அருணகிரிநாதர் எந்த ஊருக்குச் சென்றாலும் அந்த ஊர்ப் பாடல்களில் 'வயலூரா! வயலூரா!' என வியந்து வாழ்த்துவதை நோக்கின் அருணகிரியாருக்கு வயலூர்பால் இருந்த பேரன்பு நன்கு விளங்கம். வயலூர் திருமுருகன் திருக்கோயிலில் அருணகிரிநாதர் திருவுருவம் எங்கும் இல்லாத தனிச்சிறப்புடன் அமைக்கப் பெற்றுள்ளமை குறிக்கத்தக்கதாகும். இக்கோயிலில் சூரிய பகவான் இரு தேவியர்களுடன் வீற்றிருந்து காட்சி தருகிறார். வயலூர் திருக்கோயிலில் வைகாசிப் பெருவிழா, ஆனியில் அருணகிரிநாதர் விழா, தை அமாவாசை, பங்குனி உத்திரப் பெருவிழா முதலியன மிகவும் சிறப்புடன் இன்றும் கொண்டாடப் பெறுகிறது. இத் திருக்கோயிலின் சார்பாக ஏழை மாணாக்கர் விடுதி ஒன்று நடத்தப்பெற்றுவருகிறது.

- வை.ப.

**வரம்பிலா ஆட்சி** : ஒரே ஆளிடத்தில் அரசின் சட்டமியற்றும் அதிகாரங்களும், நிருவாக அதிகாரங்களும் வரம்பில்லாமல் குவிக்கப்பட்டு, அவர் எவருக்கும் பொறுப்பற்றவாறு ஆளுவாராயின், அவ்வாட்சி வரம்பிலா ஆட்சி (Autocracy) என்று கூறப்படும்.

**ஆதாரமான கொள்கை** : இக்கால வல்லாண்மை ஆட்சி முறைக்க ஆதாரமாக அமைந்தது செருமானியத் தத்துவ ஆசிரியர் எகல் என்பவர் (கி.பி.18 , 19 -ஆம் நூற்றாண்டுகள்) வரைந்த அரசின் இயல்பு பற்றிய கொள்கை ஆகும். அரசு ஒன்றே தனியாட்களைவிட ஆற்றல் மிக்குடையதாகவும், சமூகம் முழுவதையும் உள்ளடக்கிய நோக்கங்களை உடையதாகவும், நிலையானதாகவும் இருக்கின்ற காரணத்தினால் அதுவே மனிதரின் செயல்களையெல்லாம் எல்லாத் துறைகளிலும் கட்டுப்படுத்துதற்கு உரிமையும் அதிகாரமும் உடையது. ஆகையால் அரசு மனிதருடைய நலவாழ்வுக்குப் பயன்படும் ஒரு கருவியாகக் கருதப்படாமல், அதுவே ஒரு குறிக் கோளாகக் கருதப்படுதலும், அதனுடைய ஆணைகளுக்கு யாவரும் முழுவதும் கட்டுப்பட்டு இருத்தலும் வேண்டும்.

**எடுத்துக்காட்டுகள்** : பண்டைக் காலத்தில் பல கிரேக்க நகரங்களில் அரசர்கள் வல்லாட்சியாளராக இருந்தனர். பண்டைய மெசபொட்டோமிய அரசர்கள் உலகியல் துறைகளிலும், சமயத்துறைகளிலும் அதிகாரங்கள் பெற்றிருந்தனர். சமய குருமாராகவும் இருந்தனர். சீன அரசர், தம் நிலையை இறைவனுடைய ஆணையால் பெற்றிருந்தார் எனக் கருதப்பட்டார். அவர் பரம்பரையாகக் குருமார் தொழிலைச் செய்தவர்களுடைய உதவியினாலும், படைகளை நடத்தும் திறமை பெற்றிருந்த பிரவுக்களினுதவியாலும் ஆட்சி செய்தார். முதலில் பொது நலனைக் கருத்தில் கொண்டு ஆட்சி செய்த அவர்கள் பின்னர் அதிகார விருப்பமுடைய வல்லாட்சியாளர்களாகவும், நாடுபிடிப்பவராகவும் ஆயினர். பாரசீகப் பேரரசர் தேரியசு என்பவர் (Darius I - கி.மு.6 -ஆம்) வல்லாட்சியாளருக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு ஆவார். ஆசிய நாடுகள் பலவற்றிலும் முசுலிம் அரசர் பெரும்பாலோர் வல்லாட்சியாளர்களே.

இக்கால வரலாற்றில் பிரான்சுப் பேரரசர் பதினான்காம் லூயி ஒரு வல்லாட்சியாளர். பிரசிய அரசர் இரண்டாம் பிரடரிக்கு, உருசிய சார் (Czar) அரசர்கள், பீட்டர், இரண்டாம் காதரைன் முதலியோரும் வல்லாட்சி அரசர்களாவர். பிரிட்டனில் வல்லாட்சி தோன்றாதவாறு, அங்குச் சட்டத்துக்கு மதிப்புக் கொடுக்கும் மக்களாட்சி படிப்படியாக

கி.பி.13 -ஆம் நூற்றாண்டிலிருந்தே வளர்ந்தது. பாராளுமன்றக் குடியாட்சி முறை பல நாடுகளிலும் முதல் உலகப் போருக்குப் பின்னர்த் தோன்றிற்று. ஆயினும் 1. போர்க்காலத்தில் நிருவாக உறுப்புக்கு மிகப்பெரிய அளவில் அதிகாரங்கள் வளர்ந்த நிலை 2.போருக்குப் பிற்காலத்தில் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும், குறிப்பாகச் செருமனியிலும், இத்தாலி யிலும் ஏற்பட்ட பண வீக்கமும் (Inflation), வேலை இல்லாமையும் (Unemployment) பாராளுமன்றங் களால் வெற்றியாகத் தீர்த்து வைக்கப்பட இயலாமற் போன நிலைமை, 3. சில மக்களாட்சி மரபுகள் பல நாடுகளிலும் நன்கு பரவாமலிருந்த நிலை, 4. பொரு ளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்குத் துணிவுடன் முன் வந்த இட்லர், முசோலினி போன்ற தலைவர் களில் திறமை, ஆகிய பல காரணங்களினால் பாராளுமன்ற மக்களாட்சி முறைக்கு மதிப்புக் குறைந்து, 1922 -இலிருந்து 1939 வரையிலான காலத்தில் போர்ச்சுகல், இத்தாலி, செருமனி, ஆசுத்திரியா, மெக்சிகோ முதலிய நாடுகளிலெல் லாம் வல்லாண்மை ஆட்சிகள் நிறுவப்பட்டன. அந்நாடுகளியெல்லாம் தாராள, குடியாட்சிக் கருத்து களைப் பின்பற்றிய நடுத்தர வகுப்பார் ஒடுக்கப் பட்டும், சமூக உரிமைகள் குறைக்கப்பட்டும் வந்தன. அமைதியான முறையில் கருத்துகளைப் பரப்பும் முறை கைவிடப்பட்டது. பொதுவாக மக்களிடையே பொறுப்புள்ள அமைச்சரவைகள்மீதும், பேராளர் முறைச் சட்ட மன்றங்களின் மீதும். மக்களாட்சி இயல்புடைய வாக்காளர் மீதும், இருந்து வந்த நம்பிக்கை மிகவும் குறைந்தது. வல்லாட்சி செய்த சருவாதிகாரிகள் தாங்கள் நடத்திய வல்லாண்மை ஆட்சியைத் தத்தம் நாட்டின் அரசியலமைப்புச் சட்டங்களுக்கு ஒத்ததாக (Constitutional) ஆக்கிக் கொண்டது குறிப்பிடத்தக்கது. இட்லர் எல்லா அதி காரங்களையும் தம்மிடத்துக் குவித்து வைத்துக் கொண்டாலும், தம்மைச் செருமானியக் குடியரசின் முதலமைச்சர் என்றும் (Chancellor) முசோலினி தம்மை இத்தாலிய அரசரின் முதலமைச்சர் என்றும் கூறிக்கொண்டனர். இரண்டாம் உலகப்போருக்குப் பின்னர் வல்லாண்மை ஆட்சிமுறை வெகுவாகப் பரவவில்லை.

மதிப்பீடு: வல்லாண்மை ஆட்சி முறை மக்களுக்கு நலன்பல செய்தாலும், அது மனிதனுடைய இயல்பு களான விடுதலை விருப்பத்தையும் சட்டத்துக்குக் கீழ்ப்படியும் இயல்பையும் மதிக்காத ஓர் ஆட்சி வகையாக இருந்த காரணத்தால், அதனைத் தூய வகையினின்றும் வேறுபட்ட ஒரு சிதைந்த ஆட்சி வகையாகவே (Corrupt form of Government) பண்டைய கிரேக்க அரசியல் சிந்தனையாளர்களான பிளேட்டோவும், அரிசுட்டாட்டிலும் குறிப்பிட்ட னர். கிரேக்கர்களுடைய அரசியலமைப்புக் கோட் பாட்டின்படி வல்லாட்சிக்கு மாற்றாகவும், ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும் இருப்பது மக்களாட்சி தான். வல்லாட்சி முறையில் அரசின் அதிகாரத்துக்கு வரம்பே இல்லாமற்போக, மக்களாட்சி முறையில் அரசின் அதிகாரம் சட்டத்தினால் வரம்பு படுத்தப் படுகிறது.

- பா.சு.

**துணை நூல்கள் :**


1. Marriott, J.A.R., **Dictatorship and Democracy**, Oxford, 1939.

2. Craig, G.A., **Europe since 1815**, Holt, Rinehart and Winston, 1961.


**வரலாற்றுக் காலம் :** மனித இன வரலாற்றில் எழுத்துச் சான்றுகள் தோன்றிய பின்னர் அவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட வரலாற் றுத் தொடர்பான காலத்தை வரலாற்றுக் காலம் (Historic Period) என்பர்.

மனிதன் காட்டில் திரிந்து, காய்கனி முதலியன தின்று விலங்குகளிடையே வாழ்ந்து வந்த காலம் முதற்கொண்டு, அறிவைப் பெருக்கிக் கலைகளை வளர்த்துக் கருத்து வகையால், உயர்ந்த நாகரிகத்தை அடைந்த காலம்வரை, அவன் பெற்ற அனுபவக் கருவூலமாக விளங்குவது வரலாறு.

மக்களின் வாழ்க்கை கடந்த காலத்தில் எப்படி இருந்தது என்பதை விளக்க முயலுவதே வரலாறு. கடந்த கால நிகழ்ச்சிகளைத் தொகுத்து உரைப்பது வரலாறு அன்று, கடந்த கால நிகழ்ச்சிகளைக் காண்ப தற்கு உரிய தொலை நோக்கியே வரலாறு எனலாம்.

நிகழ்காலத்தினை நன்கு, அறிந்து போற்றுவதற் குக் கடந்த காலத்தைப் பற்றிய தெளிவான அறிவு தேவை. நிகழ்காலம், பலவகையில் இறந்த காலத் தில் தொடர்ச்சியாகத் தோன்றுகிறது.

மனித இனம், நினைவுக்கு எட்டாத தொல் பழங் காலத்தில் தொடங்கிய வாழ்க்கைப் பயணத்தில் இன்றுவரை அடைந்துள்ள வெற்றி தோல்வி களையும், பெருமை சிறுமைகளையும், இன்ப துன்பங்களையும், எதிர்பார்ப்புகளையும் ஏமாற்றங் களையும், ஏற்றத் தாழ்வுகளையும் சுவையோடு கால வரன்முறைப்படுத்திக் கூறப்படும் தொடர்கதையே வரலாறு எனும் விளக்கம் எக்காலத்திற்கும் ஏற் புடைத்தாகும்.

மனித இனம் தோன்றிய காலம் இன்றைக்கு 20 - இலட்சம் ஆண்டுகளுக்கு மேலாகிறது. இந்த நீண்ட நெடுங்காலத்தை வரலாற்றுக் காலம் (Historic Period) எனவும், 'வரலாற்றுக்கு முந்திய காலம்' (Pre - Historic Period) எனவும் பாகுபடுத்துவது வழக்கம்.

எழுத்துச் சான்றுகள் தோன்றிய பின்னர், கிடைக் கும் செய்திகளை அரசியல், வாழ்வியல் என்னும் இருபெரும் தலைப்புகளில் வகைப்படுத்தி வரலாற் றுக் காலத்தை விளக்குவது மரபாகும். இந்த வரலாற் றுக் காலம் ஏறக்குறைய இன்றைக்கு 4 - ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தொடங்குவதாகக் கருதப் படுகிறது.

அண்மைக் கால ஆராய்ச்சியாளர்கள், வரலாற்றுக் காலத்திற்கும், வரலாற்றுக்கு முந்திய காலத்திற்கும் இடையே (கி.மு.5000 - கி.மு.2000) தொல் வரலாற் றுக் காலம் (Proto - Historic Period) என்னும் ஒரு காலநிலை உள்ளதெனச் சுட்டிக் காட்டுவர். இந்திய நாட்டின் வரலாற்றில் மொகஞ்சதாரோ-ஆரப்பா (சிந்துவெளி) நாகரிகக் காலத்தைத் 'தொல் வரலாற் றுக் காலம்' எனக் குறிப்பிடும் வழக்கம் வளர்ந்து வருகிறது. 'வரலாற்றுக் காலம்' என்பது பெரிதும் இரும்பு என்றும் உலோகத்தைப் பயன்படுத்திப் பல் வேறு கருவிகளைச் செய்து கொள்ளத் தொடங்கிய காலமாகக் கருதப்படுகிறது. எழுதுவதற்குரிய எழுது பொருட்களை ஆதிமனிதன் கண்டுபிடித்த நாளினை யொட்டித் தோன்றியதாகவும், இக்காலத்தைக் கூற லாம். மரப்பட்டை, இலைகள், காய்ந்த மடல்கள், கற்பாறைகள் கற்பலகைகள், பச்சைக் களிமண் கட்டி கள், மண்பாண்டங்கள், செப்புத் தகடுகள் முதலிய பொருட்களே தொடக்கத்தில் எழுதப்படுவதற்குரிய பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டன. அவற்றின் மீது கூர்மையான கற்குச்சிகள், எலும்புத்துண்டுகள், மரக்குச்சிகள், செம்பினாலும், வெண்கலத்தாலும் செய்யப்பட்ட கூர்மையான வடிவுடைய ஊசி போன்ற பொருட்கள் தொடக்கத்தில் எழுதுவதற் குரிய கருவிகளாகப் பயன்பட்டன.

'இரும்பு' என்னும் உலோகம் வழக்கிற்கு வந்த பிறகே 'எழுத்தாணி' என்னும் கருவி, பெரு வழக்கிற்கு வந்தது. இதைக் கொண்டு எழுதுவது எளிய செயலாயிற்று. அதன் விளைவாகப் பல்வேறு நிகழ்ச்சிகளையும், செய்திகளையும் கருத்துகளையும் எழுதி வைக்கும் பழக்கம் பெருகிற்று. அதன் பயனாக வரலாற்றை வரைவதற்குரிய எழுத்துச் சான்றுகள் மிகுதியாகத் தோன்றும் நிலை உருவாயிற்று. அக் காரணத்தினால், வரலாற்றுக் காலத்தின் தொடக்கம் இரும்புக் கருவிக் கால நாகரிகத்தோடு பின்னிப் பிணைந்துள்ளது எனலாம். இரும்பிற்குப் பிறகு, மனித இனம் ஒரு வெண்ணிற உலோக வகையைக் (Cobalt) கண்டு பிடித்துள்ளது. அது கிடைத்தற்கரிய பொருளாகவே இருந்து வருகிறது. ஆனால், செயற் கைப் பொருளான 'நெகிழ்மம்' (Plastic) இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர்ப் பெருவழக்கிற்கு வந்துள்ளது. எனவே, 20 -ஆம் நூற்றாண்டில் பிற் பகுதியை 'நெகிழ்மயுகம்' எனச் சுட்டினால், அது தவறாகாது.

வரலாற்றுக் காலத்தின் தலைமைப் பண்பாக விளங்குவது, 'இரும்புக் கருவிக் காலப்' பண்பாகும். உலகின் பல்வேறு பகுதிகளில் புதுக்கற்கருவி நாகரிகக் காலத்தைத் தொடர்ந்து செம்பு, வெண்கலக் கருவிக் கால நாகரிகங்கள் அரும்பியுள்ளன. இந்தியா வில், சிந்துவெளிப் பண்பாடு செம்புக் கருவிகளோடு கற்கருவிகளும் கலந்த நாகரிகமாகக் (Chalcolithic) காட்சி தருகிறது.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் புதுக் கற்கருவிக் காலத்தின் கடைப் பகுதியில் (கி.மு.1500) 'இரும்பு' என்னும் உலோகம் புழக்கத்திற்கு வந்து விட்டதைத் தொல்லியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தென்னிந்தியாவில்தான், வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்திற்கு முன்பே, இரும்பு, பயன்படுத்தப் பட்டதாகத் தொல்லியல் அறிஞர்கள் சிலர் கூறு கின்றனர்.

இரும்புக் கருவிக் காலத்தின் சின்னங்கள், புதிய கற்காலக் கருவிகளுடன் கலந்த நிலையில் தமிழகத் தில் தெற்கே திருநெல்வேலி மாவட்டம் முதல்,

ஆந்திரப் பிரதேசத்தில் கர்நூல் மாவட்டம் வரையில் உள்ள பல இடங்களில் ஆழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இரும்புக் கருவிக் காலப் பண்பாட்டின் மற்றொரு கூறாகப் பெருங்கல் (Megalithic) பண்பாடு கருதப்படு கிறது. இறந்தோர் உடல்களைத் தாழிகளில் வைத்து, அவர்கள் பயன்படுத்திய பல பொருட்களையும் இரும்புக் கருவிகளையும் அதனுள் வைத்து அக்கால மக்கள் புதைத்தனர். பிறகு, அதன்மீது பெரிய கற் களையும் பாறைகளையும் கொண்டு நினைவுச் சின் னங்கள் எழுப்பினர். அச்சின்னங்களையே 'பெருங் கற்படை' எனும் பெயரால் சுட்டுகின்றனர்.

வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தில் இனக் குழுச் சமுதாயம் மறையத் தொடங்கியது. நில மானிய சமுதாயம். சிறிது சிறிதாக உருப்பெற லாயிற்று. முதலில் குறுநில மன்னரின் ஆட்சி அமைந் தது. காலப் போக்கில், பல சிற்றரசுகளை ஒன்றாக இணைத்து, பரந்துபட்ட நிலப்பரப்பை ஒரு குடைக் கீழக்கொண்டு ஆட்சி செய்யும் 'பெரிய அரசுகள்' தோன்றின. சிற்சில காலங்களில் அவற்றில் இருந்து பல்வேறு நாடுகளில் அரசியல் ஆதிக்கம் செலுத்தும் 'பேரரசு'களும் அமைந்தன.

பேரரசுகளின் நிலைகுலைவையொட்டி, வாணி கப் பொருளாளதாரச் சமுதாயம் அமையலாயிற்று. அதன் விளைவாக முதலாளி முறையுடன் பின்னிப் பிணைந்த நிலப் பிரபு முறையில் எச்சமிச்சமான அரசுகள் கடல் வாணிகத்தில் ஈடுபட்டன. அதனோடு 'முதலாளிமுறைச் சமுதாயம்' வளர்ச்சியுற்றது.

கடல் வாணிகச் செழிப்பால், "குடியேற்ற முறை" ஆதிக்கம் பெருகிற்று. சுரண்டப்பட்டும், அடக்கியொடுக்கப்பட்டும். அல்லற்பட்ட நாடு களிலே தேசிய எழுச்சி வீறுகொண்டு எழுந்தது. அய லாரின் ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்ற 'தேசிய அரசுகள்' பல அதன் விளைவாக அமைந்தன.

இந்தப் போராட்டத்திற்கு இடையே 'செல் வந்தர்களின் கொடுங்கோலாட்சியை எதிர்த்துப் புரட்சிகள் தோன்றின. இவற்றின்வழி, புதிய சமு தாயம் சில நாடுகளில் உதயமாயிற்று. அவற்றைப் 'பொதுவுடைமைச் சமுதாயம்' எனவும் 'சமவுடை மைச் சமுதாயம்' எனவும் போற்றும் வழக்கம் வளர்ந்து வருகிறது. விடுதலையுணர்வோடு, 'தேசிய அரசுகளை' அமைத்துக்கொண்ட நாடுகளில் மக்க ளாட்சி வழிப்பட்ட 'குடியாட்சி' முறை கால் கொள்ளத் தொடங்கியது.

-க.த.தி.

**வரலாற்றுக்கு முந்திய காலம்** : வரலாற்றை வரைவதற்குத் தேவையான எழுத்துச் சான்றுகள் கிடைக்காத காலக்கட்டத்தையே 'வரலாற்றுக்கு முந்திய காலம்' எனச் சுட்டுவது மரபாகும். இந்தக் காலக்கட்டத்தை, வரலாற்றுக்கு முந்திய நாகரிக வளர்ச்சிக் காலத்தைத் 'தொல் பழங்காலம்' எனும் பெயரால் குறிப்பிடுவதும் உண்டு.

சற்றேறக் குறைய இருபது இலட்சம் ஆண்டு களுக்கு முற்பட்ட காலத்தில், இந்தக் காலக்கட்ட வரலாறு தொடங்குகிறது. இன்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், இக்காலக்கட்ட வரலாறு நிறைவுறுகிறது எனலாம்.

வரலாற்றுக்கு முந்திய காலத்தைப் பற்றிய அறிவு, இந்த நூற்றாண்டிலேயே பல்கிப் பெருகியுள்ளது. ஆயினும், கிடைத்துள்ள சான்றுகள் மிகக் குறை வானவை. போதிய அளவிற்கு அவை கிடைக்க வில்லை.

வரலாற்றுக்கு முந்திய காலத்தை அறிவதற்குப் பெரிதும் அகழ்வாராய்ச்சிகளின் உதவியினையே நாட வேண்டியுள்ளது. அவ்வாராய்ச்சிகளுள் கிடைத் துள்ள 'தொல்பொருள் சின்னங்களே' இக்கால வரலாற்றை அறிவதற்கு உதவுகின்றன.

இதனால், குறிப்பிட்ட மனிதர்களைப் பற்றியோ, தலைவர்களைப் பற்றியோ அல்லாமல் பொதுப் படையாக செய்திகளையே தெரிந்துகொள்ள இயலு கிறது. அன்றைய நிகழச்சிகள் யாவும், மனித இனத் தின் பல்வேறு குழுக்களின் பொதுப்படையாக செயல்முறைகளைப்பற்றியனவாக இருக்கும். இத னால் இந்தக் கால வரலாற்றை வரைவதில் குறுகிய நோக்கத்திற்கோ, விருப்பு வெறுப்புகளுக்கோ இட மில்லாமற் போகிறது.மனித வாழ்க்கையின் எல்லா வகையான செயல்களும் - பண்பாடு, பொருளியல், அறிவியல் பற்றிய செய்திகள் யாவும் - ஒட்டு மொத்த மாக இந்த வரலாற்றில் இடம் பெறுகின்றன.

இந்த வரலாற்றின் எல்லைகள், மிகவும் விரிந்தன வாகவும் பரந்தனவாகவும் உள்ளன. அதனால், அன்றைய சுற்றுப்புறச் சூழலில், மனிதன் எவ்வாறு ஒன்றி வாழ்ந்து வந்தான் என்பதையும், மனித வாழ்க்கையை இயற்கைச் சூழல் எவ்வாறு பாதித்தது என்பதையும், தொல்பொருள் சின்னங்களைக் கொண்டு ஒருவாறு உணர இயலுகிறது.

வரலாற்றிற்கு முந்திய காலத்தைப் பொதுவாகப் பழைய கற்கருவிக்காலம், (Palaeo - lithic), புதிய கற்கருவிக்காலம் (Neo-lithic Age), வெண்கலக் கருவிக் காலம் (Bronze Age), இரும்புக் கற்கருவிக் காலம் (Iron Age) எனவும் வகைப்படுத்துவர். இவற்றுள் இறுதியாகக் குறிப்பிடப்பட்ட 'இரும்புக் கருவிக்காலப் பண்பாடு' தொடக்க நிலைக்குப் பிறகு, 'வரலாற்றுக் காலத்தோடு' இணைந்தும், இழைந்தும் இயங்குகிறது.

வரலாற்றுக்கு முந்திய காலத்தில் வரலாற்றை அறிவதற்குப் பேரளவிற்கு உதவும் சான்றுகள் மனிதன் படைத்துப் பயன்படுத்திய கற்கருவிகளும் உலோகக் கருவிகளுமாகும். அருகிய நிலையில், எலும்பு, மான்கொம்பு, மரம் போன்றவற்றால் செய்யப்பட்ட பொருள்களும் உதவுகின்றன. இக்கருவிகளைக் கொண்டு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய வாழ்க்கை நிலையை ஓரளவிற்கு அறிந்து கொள்ள இயலுகிறது.

அக்காலத்திய கருவிகளைச் செய்துகொண்ட மனிதனுடைய தொழில் திறன், கலையுணர்வு , பொருளியல் நிலை, சுற்றுப்புறச் சூழல், தட்ப வெப்ப நிலை போன்றவற்றை, அக்கருவிகளை ஆராய்வதன் மூலம் அறிய இயலுகிறது.

அக்கருவிகள் மலைக்குகைகளிலும், திறந்த வெளிகளிலும், ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் காணப்படுகின்றன. மழை முழைஞ்சுகளில் அல்லது ஆற்றுப்படுகைகளில் அக்கருவிகள் கிடைக்கின்ற பொழுது, நிலவமைப்பின் அடிப்படையில், அச்சின்னங்களின் காலத்தைக் கணிப்பது எளிய செயலாகிறது.

இந்த வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திய கண்டுபிடிப்புகள் யாவும் மக்களின் ஊழிக் (Glacial Epoch) காலத்தைச் சேர்ந்தனவாக உள்ளன. இந்த 'மக்களின் ஊழிக் கால'த்தில், நிலவமைப்பு இயலில் உண்டான மாபெரும் மாற்றங்களும், வளர்ச்சிகளும் மனித இனத்தில் தோற்றத்திற்குரிய சூழ்நிலையை அமைத்துத் தந்தன. அந்தக் காலக் கட்டத்தை இன்றைக்குப் பதினைந்து இலட்சத்திற்கு முற்பட்ட நிலையில் தொடங்கியதாகக் கூறுவர்.

இந்தியாவின் ஆதி மனிதன் அக்காலத்திலேயே தோன்றிவிட்டான் என்பதற்குரிய சான்றுகள் பல கிடைத்துள்ளன.

தொல்பொருள் சின்னங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ள கற்கருவிகள் ஏராளமானவையாகும். அவற்றிடையே சில பொதுத் தன்மைகள் புலப்படுகின்றன. அவை அக்கருவிகளின் வடிவ அமைப்பையும், செய்யப்பட்ட தொழில் முறை நுட்பத்தையும் புலப்படுத்துகின்றன.

**பழைய கற்கருவிக்காலம் :** விலங்கு நிலையில் இருந்த மக்கள், வடிவாலும் சிந்தனைத் திறத்தாலும் வளர்ச்சியுற்றனர். அக்காலத்தில் மலைகளிலும், காடுகளிலும் கூட்டம் கூட்டமாக அவர்கள் அலைந்து திரிந்தனர். விலங்குகளை வேட்டையாடி வாழ்ந்தனர். அன்றைய நாகரிகம், 'வேட்டையாடி வாழும் சமுதாய' அமைப்பினை உருவாக்கிற்று. வயிற்றுப் பசியைப் போக்கிக்கொள்ள, இயற்கையில் கிடைத்த உண்பதற்குரிய காய், கனிகளையும், வேட்டையாடிய விலங்குகளின் இறைச்சியையும் அவர்கள் உண்டனர். அக்காலத்தில் தங்களுக்குத் தேவையான கருவிகளைத் தங்களுக்கு எளிதில் கிடைத்த சரளைக் கல், கூழாங்கல், கருநீலக் கல் முதலியவற்றால் செய்து கொண்டனர். அவை கரடுமுரடாகவும் நேர்த்தியற்றும் உள்ளன. அவர்கள் கி.மு.நூறாயிரம் ஆண்டுகளுக்கு முன்தொடங்கி, கி.மு.ஐயாயிரம் ஆண்டுகள் வரையில் இந்நிலையில்தான் வாழ்ந்தனர்.

பழைய கற்கருவிக் காலத்து மனிதர் மரமுள், குச்சிகள், எலும்புகள், கற்சில்லுகள் முதலியவற்றைக் கருவிகளாகப் பயன்படுத்தினர். அவற்றுள் முதன்மையானவையாகக் கற்கருவிகள் விளங்கின. ஓரளவிற்குக் கூர்மையாக இருந்த அவற்றைக்கொண்டு, விலங்குகளை வேட்டையாடினர். எலும்பிலிருந்து இறைச்சியைச் சுரண்டி எடுப்பதற்கும் பயன்படுத்தினர்.

இந்தியாவில் பழைய கற்கால மனிதர் வாழ்ந்தனர் என்பதற்குரிய தடையங்கள் கிடைத்துள்ளன. அவை, முதன் முதலில் தமிழ் நாட்டில்தான் கிடைத்துள்ளன. சென்னைக்கு அருகிலுள்ள பல்லாவரத்தில் கிபி1863-ஆம் ஆண்டு, பழைய கற்கருவிக் காலப் பண்பாடடிற்குரிய கருவிகள் கண்டெடுக்கப்பட்டன. செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் வட்டத்தில் அத்திரம்பாக்கம் எனும் ஊருக்க அருகில், கொர்த் தலையாறு என்னும் ஆற்றின் பள்ளத்தாக்கில், 1930-ஆம் ஆண்டிற்குப் பிறகு, ஏராளமான பழைய கற்காலக் கருவிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. இந்தப் பகுதியில் உள்ள குடியம் எனும் ஊரில் 1962 - 64 -ஆம் ஆண்டுகளில், அப்பண்பாட்டிற்குரிய குகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. மற்றும் பல இடங்களில், இது தொடர்பாகத் தொல்லியல் ஆய்வுகள் நடத்தப்பட்டன. தமிழ் நாட்டின் தெற்கு மாவட்டங்களில் பழைய கற்கருவிப் பண்பாட்டுத் தடையங்கள் கிடைக்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டில் குடியம் எனும் ஊரில் கண்டுபிடிக்கப்பட்ட குகையே மிகவும் தொன்மை வாய்ந்ததாகத் தெரிகிறது.

புதிய கற்கருவிக் காலம் : 'புதிய கற்கருவிக்காலம்' என்பது, மனிதன் வழவழப்பான கற்கருவிகளைச் செய்துகொண்டு வாழ்ந்த, ஒரு காலக்கட்டத்தைச் சுட்டுவதாகும். இப்பண்பாடு கி.மு. 5000 முதல் கி.மு. 1000 வரையில் வளர்ந்து சிறந்ததாகத் தொல்லியல் அறிஞர்கள் கருதுகின்றனர். இக்காலத்தில் மக்கள் வாழக்கையில் பல புதிய போக்குகளைக் காண இயலுகிறது. நாடோடியாக அங்குமிங்கும் அலைந்து திரிந்து வேட்டையாடி வாழ்க்கை நடத்திய மனிதன், இக்காலத்தில் நிலையாக ஓரிடத்தில் தங்கி, வாழக் கற்றான். ஓரளவிற்கு நிலத்தை உழுது, பயிரிட்டு வாழும் வேளாண்மைத் தொழிலில் அவன் ஈடுபட்டான். நாகரிக வளர்ச்சியில், இது ஒரு பெரிய முன்னேற்றமாகும். வேட்டையாடும் சமுதாய நிலை மாறியது. உணவுப் பொருள்களைத்தேடும் சமுதாய நிலை வளர்ந்தது. இதன் விளைவாக 'உணவுப் பொருள் உற்பத்தி' செய்யும் சமுதாய நிலை அரும்பியது எனலாம்.

இந்தியாவில் புதிய கற்கருவிக் காலக் குடியிருப்புகள் கோதாவரியாற்றுக்குத் தெற்கே பரந்துபட்டனவாக உள்ளன. தமிழ் நாட்டில் சேலம், தருமபுரி, வட ஆற்காடு மாவட்டங்களிலேயே புதிய கற்கருவிக் காலச் சின்னங்கள் கிடைத்துள்ளன. தென் மாவட்டங்களில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சின்னங்களே கண்டுபுடிக்கப்பட்டுள்ளன.

சேலம், தருமபுரி மாவட்டங்களில் சேர்வராயன் மலைத் தொடரிலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில், சவ்வாது, ஏலமலைப் பகுதிகளிலும் புதிய கற்கருவிக் காலத் தடையங்கள் பேரளவில் கிடைத்துள்ளன. வட ஆர்க்காடு மாவட்டத்தில் சோலார்ப்பேட்டை அருகில் 'பையம்பள்ளி' எனும் இடத்தில், சிறப்புமிகு புதிய கற்கருவிக்காலக் குடியிருப்பு ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. அங்கு எலும்பினால் செய்யப்பட்ட கருவிகளும், சரளைக் கற்களால் செய்யப்பட்ட பேனாத் கத்திகள் போன்ற பொருட்களும், கூழாங் கற்களால் செய்யப்பட்ட வழவழப்பான கைக் கோடரிகளும் பேரளவில் கிடைத்துள்ளள. வீடுகளின் அமைப்புச் சின்னங்கள் சில இங்குக் காணப்படுகின்றன. ஓரளவிற்குக் கலையுணர்வை வெளிப்படுத்தும் நேர்த்தி வாய்ந்த மண்பாண்டங்கள் பெரியனவும் சிறியனவுமாகப் பல கிடைத்துள்ளன. கல் உளிகளும், கொத்துகளும், சுடப்பாரைகளும், அம்மிக் கற்களும், குழவிகளும், திரிகை இயந்திரமும், துளையிடு கருவிகளும் பேரளவில் கிடைத்துள்ளன. இவை யாவும் வேளாண்மைத் தொழிலிற்குப் பெரிதும் பயன் பட்டுள்ளன.

புதிய கற்கருவிக் காலம் மூன்று வகையில் முக்கியம் வாய்ந்தது. முதலாவது வேளாண்மைத் தொழில் தோன்றி வளர்ந்தமையாகும். இரண்டாவது மனிதன் மண்பாண்டங்களைச் செய்யக் கற்றதோடு அவற்றின் மீது வண்ணவண்ண ஓவியங்களைத் தீட்டித் தன்னுடைய கலையுணர்வை வெளிப்படுத்தியமையாகும். மூன்றாவது குடியிருப்புகளை அமைத்துக் கொண்டமையாகும். வட்டவடிவமான குடிசைகளில் அவர்கள் வாழந்தனர். இக்காலத்தில் 10 அல்லது 15 குடிசைகள் கொண்ட குடியிருப்புத் தொகுப்புகள் பல கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இதனால், அவர்கள் 'கூடிவாழும்' இயல்புடையவர்களாக இருந்தனர் என்பது புலப்படுகிறது. மற்றும் 'இல், குடி, சேரி' எனும் தெருவமைப்புகளும், ஊர் அமைப்புகளும் உருவானமைக்குரிய 'கருமுதல்' களை இங்குக் காண இயலுகிறது. இம்மக்கள் மலைகளில் உள்ள சமவெளிப் பகுதிகளிலும், குன்றுகளைச்

சார்ந்த சமவெளிப் பகுதிகளிலுமே வாழ்ந்தனர். இப் புதிய கற்கருவிக் கால மக்கள், திராவிட மொழி பேசிய திராவிடப் பழங்குடி மக்களாக இருந்திருக் கக்கூடும் என ஆல்சின் எனும் அறிஞர் கருதுகிறார்.

உலோகக் கருவிக் காலம் : முதன் முதலில் கனிமங் களாலான உலோகங்களைக் கொண்டு, கருவிகளைச் செய்து மனிதன் வாழத் தலைப்பட்ட காலத்திய பண் பாடு, நாகரிக வளர்ச்சியில் மூன்றாம் காலக் கட்டத் தினதாகும். உலக வரலாற்றில் கி.மு.1500 அளவில், உலோக காலம் தொடங்கிவிடுகிறது. இந்திய நாட்டில், சிந்துவெளிப் பண்பாட்டில் (கி.மு.3500-1500) செம்பினால் செய்யப்பட்ட கருவிகள் பயன் படுத்தப்பட்டமை தெரியவருகிறது.

கல்லையும் மரத்தையுமே நம்பி இருந்த மக்கள், உலோகத்தின் பயன்பாட்டை உணரத் தொடங்கிய காலம் இது. உலோகத்தில் உறுதியாக இயல்பை யும், எளிதில் சிதைவுறாத தன்மையும் அறிந்த ஆதி மனிதன் பொன், செம்பு முதலிய உலோகங்களை, இயற்கையில் கிடைத்த கனிமங்களிலிருந்து உருவாக்கினான். இதற்கு அறிவுத் திறனும், தொழில் நுட்பவுணர்வும் தேவைப்பட்டன. இவ்வாறு, இக்கால இயந்திரத் தொழிலிற்கு அக்காலத்தில் வித்திடப்பட்டது எனலாம். வேல், வாள், ஈட்டி போன்ற கருவிகளை இவர்கள் செய்யக் கற்றனர்.

சிற்றூர்கள் பல உருவாயின. தொழில் வழிச் சமுதாயம் அமையலாயிற்று. சிற்றூர்கள் பல சேர்ந்து, சிறு நாடுகளைத் தோற்றுவித்தன. தங்கள் நலனைக் கருதவும், தங்களைக் கொடிய விலங்குகளிடமிருந் தும், பகைவர்களிடம் இருந்தும் காக்கவும் தங்களுக் குள்ளே தலைவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட னர். முதலில் இனக்குழுத் தலைவனாக இருந்த அவன், நாளடைவில் மன்னாக மாறினான்.

பண்டமாற்று வாணிகம் வளர்ந்தது. இனக் குழுக் களுக்கு இடையே போட்டியும், பொறாமையும், பூசலும் தோன்றின. பின்னர், அவை போராகவும் மூண்டன. அக்காலத்தில்தான் தனியுடைமை (சொத்து), தனியுரிமை போன்றவற்றிற்கான உணர்வு கள் அரும்பின.

தமிழ்நாட்டில் செம்பு, வெண்கலக் கருவிப் பண் பாடுகள் நிலவியமைக்கு உரிய சான்றுகள் கிடைக்க வில்லை. இந்த உலோகக் காலத்தில் உச்சக் கட்டத் திலேயே 'இரும்பு' வழக்கிற்கு வந்ததை அறியலாம். தமிழ்நாட்டில், கி.மு.1000-800-க்கு இடையிலேயே, இரும்புக் கருவிக்காலப் பண்பாடு தோன்றலாயிற்று. அப்பண்பாட்டுக் காலத்தின் தொடக்கம் வரலாற் றுக்கு முந்திய காலத்தைத் தழுவி நிற்கிறது. ஆனால், அதனுடைய வளர்ச்சியும், மலர்ச்சியும் வரலாற்றுக் காலத்திற்குள் இரண்டறக் கலந்து விடுகின்றன.

-க.த.தி.

**வரி விதிப்பு** ; அரசு பொது நன்மை நோக்கத் துடன் மேற்கொள்ளும் செலவுகளை ஈடு செய்வதற் காக, எந்தவிதமான நேரடியான கைம்மாறும் எதிர் பாராமல் மக்கள் அரசாங்கத்திற்குக் கட்டாயமாகச் செலுத்தும் செலுத்து தொகையே வரி. பேராசிரியர் ஆடம்சு (Prof. Adams) என்பாரின் கருத்துப்படி (1) அரசாங்கத்தின் நோக்கத்திலிருந்து பார்க்கும்போது வருவாய்த் தோற்றுவாயாக இருக்கிறது. (2) பொது மக்கள் நோக்கிலிருந்து பார்க்கும்போது வரி கட்டாயமாகச் செலுத்தப்படவேண்டியதொன்றாக இருக்கிறது. (3) நிருவாக நோக்கிலிருந்து பார்க்கும் போது சட்ட அடிப்படையில் வரி, அரசாங்கத்தின் பணத்திற்கான தேவையாகும். (4) கோட்பாட்டி யலின் அடிப்படையில் பார்க்கும்போது பொதுச் செலவை ஈடு செய்வதற்காக மக்களால் செலுத்தப் படுவது வரியாகும்.

வரியின் இயல்புகள் : பொது மக்கள் விரும்பி னாலும் விரும்பாவிட்டாலும் கட்டாயமாகச் செலுத் தப்படுவது வரி. வரியைச் செலுத்துவதால் எந்தவித மான நேரடியான கைம்மாறையும் வரிசெலுத்து வோர் எதிர்பார்க்க முடியாது. பொது மக்கள் எல் லோரும் பயனடையும் வகையில் அரசு மேற்கொள் ளும் செலவை ஈடுசெய்வதற்காக மக்களிடமிருந்து வரியை அரசு பெறுகிறது. வரி செலுத்துபவர் அவர் தம் வருமானத்திலிருந்து அல்லது முன்பே சேமித்து வைக்கப்பட்டிருந்த வருமானமாகிய சொத்திலிருந்து வரியைச் செலுத்துகிறார். வரி யார்மீது விதிக்கப்படு கிறதோ அவர் வரிச்சுமையைத் தாங்கிக் கொள்ள லாம், அல்லது பிறர்மீது வரிச் சுமையைப் புரட்டியும் விடலாம். தனி ஆள்களால்தான் வரிகள் செலுத்தப் படுகின்றன. வரி செலுத்துபவரின் வாங்கும் திறனை

(Purchasing Power) வரி குறைத்து விடுகிறது. அதாவது வரு மானத்தின் ஒரு பகுதியை வரியாகச் செலுத்துவ தால் மொத்த வருமானத்தின் வாங்கும்திறனில் குறிப் பிட்ட அளவிற்கு (வரித் தொகை அளவிற்கு) வாங் கும் திறன் குறைகிறது. குறிப்பிட்ட நிலப் பரப்பி லிருந்து பெறப்படும் சிறப்புத் தீர்வையைப் (Special assessment) போல் அல்லாமல் நாடு முழுவதிலும் வரி பெறப்படுகிறது. வரி வளர் அடிப்படையில் அல்லது விகித அடிப்படையில் இருக்கலாம்.

வரியின் நோக்கங்கள் : வருவாய் ஈட்டுதல், ஒரு சில பண்டங்களின், பணிகளின் நுகர்வின் அளவைக் கூட்டுவதன் மூலம் அல்லது குறைப்பதன்மூலம் நுகர்வை ஒழுங்குபடுத்துதல், தொழில் மந்தக் காலங் களிலும், பண வீக்கக் காலங்களிலம் தகுதியான வரி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதன் மூலம் நாட் டின் பொருளாதார நிலையைச் சீர்திருத்துதல், வரி விலக்குகள், வரிச் சலுகைகள் போன்றவற்றைத் தருதல் மூலம் உற்பத்திக்கு ஊக்கம் தருதல். தகுதி யான வரி விதிப்புக் கொள்கைகளைக் கையாளுவதன் மூலம் உற்பத்தியையும் வேலை வாய்ப்பையும் பெருக்குதல், வரி முறையைச் சீரிய முறையில் கையாளுவதன்மூலம் பொதுமக்களிடையே காணப் படும் செல்வ வருமானப் பங்கீட்டு ஏற்றத் தாழ்வு களைக் குறைத்துப் பொருளாதார நலனை மிகுதிப் படுத்துதல், வட்டார வளர்ச்சியைப் பேணுதல் போன் றவை வரி விதித்தலின் அடிப்படை நோக்கங் களாகும். அந்நோக்கங்களைப் பொதுவாக நடை முறையில் தனித்தனியாகப் பிரித்துக் காட்டுதல் எளிதன்று.

வரி விதிகள் : அரசுக்குக் கிடைக்கும் வருவாய்த் தோற்றுவாய்களில் வரி மிகச் சிறப்பானதொன்றா கும். ஆனால், மிகுதியான வரியை விதித்தால் அத னால் நன்மைகளைக் காட்டிலும் கேடுகள் மிகுந்து விடலாம். வரி விதிப்பில் கேடான விளைவுகளைத் தவிர்த்து நல்ல விளைவுகளைப் பெறுவதற்காக ஒரு சில விதிகளுக்கு வரி விதிப்பை உட்படுத்துதல் நன்று. பொருளாதார இயலின் தந்தை எனப் போற்றப்படும் பேராசிரியர் ஆதம் சுமித்து (Adam Smith) திறமை விதி, தெளிவு விதி, வசதி விதி, சிக்கன விதி என நான்கு விதிகளைக் குறிப்பிட்டிருக்கிறார். இவை தவிர உற் பத்தித் திறன் விதி, நெகிழ்ச்சி விதி, எளிமை விதி, பல் வகை வரி விதி, நடுநிலை வரி விதி என நான்கு விதி களும் இக்காலத்தில் வலியுறுத்தப்படுகின்றன.

பொதுமக்கள் அவரவர் தகுதிக்கேற்ப வரிசைச் செலுத்தும் வண்ணம் வரி விதிப்பு இருக்க வேண்டும் என்பது திறமை விதி (Canon of Ability) செல்வந்தர் களுக்கு அதிக வரி விதிப்பும் மற்றவர்களுக்குக் குறை வான வரி விதிப்பும், வறியவர்களுக்கு வரி விலக்கும் விதிக்கப் பெறுதல் நன்றென இவ்விதி குறிப்பிடு கிறது. வரித் தொகை எவ்வளவு, வரியை எப்படிச் செலுத்த வேண்டும். வரியை யாரிடம் செலுத்த வேண்டும், ஓர் ஆண்டில் வரித் தொகையின் அளவு ஏறத்தாழ எவ்வளவு இருக்கும் என்பன போன்ற பலவற்றில் வரி செலுத்துபவர்களுக்கும், வரியைப் பெறுபவர்களுக்கும் தெளிவான நிலைகள் இருக்கும் வண்ணம் வரி விதிப்பு இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடுவது தெளிவு விதி (Canon of Certainty), வரிச் செலுத்துபவருக்கு வசதியாக உள்ள காலத்திலும், முறையிலும் வரி வாங்குதல் நடைபெற வேண்டும் என்பதை வலியுறுத்துவது வசதி விதி (Canon of Convenience), 'சுண்டைக்காய் கால் பணம், சுமை கூலி முக்கால் பணம்' என்பதைப் போல் அல்லாமல் வரியை வாங்குவதற்காகும் செலவு கூடியமட்டும் குறைவாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்து வது சிக்கன விதி (Canon of Economy) விதிக்கப்படும் வரிகள் நல்ல அளவில் வருவாய் தரத்தக்கவைகளாக இருக்க வேண்டும். உற்பத்தித் திறன் குறைந்த பல வரிகளை விதிப்பதைவிட, உற்பத்தித் திறன் மிகுந்த சில வரிகளை விதிப்பது நன்று என்று குறிப்பிடுவது உற்பத்தித் திறன் விதி (Canon of Productivity), வரி விதிப்பில் நெகிழ்வுத் தன்மை இருக்க வேண்டும். மக்களின் வருமானங்கள் பெருகும் நாளில் வரி வரு வாய் தானாகவே வளர வேண்டும்; வருமானங்கள் சுருங்கும் நாளில் வரி வருவாயும் தானாகவே சுருங்க வேண்டும் என்று சர் சோசையா (Sir Josiah Stamp) என்பார் வரியின் நெகிழ்ச்சி விதியைக் (Canon of Elasticity) குறிப்பிடுகிறார். வரிகளைப் பற்றிய விவரங் கள் எளிதில் புரிந்து கொள்ளத்தக்கவையாக இருக்க வேண்டும், தேவைப்படும் விவரங்கள் குழப்பம் இல்லாமலும் குறைந்த செலவிலும் கிடைக்கத் தக்கவையாகவும் இருக்க வேண்டும். வரிச் சட்டங் கள் மிகத் தெளிவானவைகளாக இருக்க வேண்டும் என்று குறிப்பிடுவது எளிமை விதி (Canon of Simplicity). வருமானத்தைப் பெறுவதற்கு ஏதாவதொரு வரியை மட்டும் நம்பியிராமல் பல வகையான வரிகளையும் வரி அமைப்புப் பெற்றிருக்க வேண்டும் என்று வலி யுறுத்துவது பல்வகை வரிவிதி (Canon of Diversity). ஒரு

வரியை விதிக்கும் முன்னர் உற்பத்தியில் அதன் விளைவுகள் எவ்வாறு இருக்கும் என்பதைக் கவனித்துச் செயற் படவேண்டும், உற்பத்திக்கும் உற்பத்தித் திறனிற்கும் கேடு விளைவிக்கும் வரிகளைப் பயன் படுத்தாதிருக்க வேண்டும் என்ற குறிப்பிடுவது நடுநிலை வரிவிதி (Canon of Neutrality).

**வரிக் கோட்பாடுகள் :** வரியைச் செலுத்துவது வரி செலுத்துவோருக்கு ஒரு சுமை. இது வெறும் பணச் சுமை மட்டுமன்று. வரியைச் செலுத்துவதால் தோன்றும் நேரடிப் பணச் சுமை. வரியைச் செலுத்துவதால் வாங்கும் சக்தியில் தோன்றும் இழப்பாகிய நேரடி உண்மைச் சுமை. வரியைச் செலுத்துவதால் ஏற்படும் வட்டி இழப்பு, ஆதாய இழப்பு போன்றவற்றைக் குறிக்கும் மறைமுகப் பணச் சுமை, வரியைச் செலுத்துவதால் ஏற்படும் நலக் குறைவைக் குறிக்கும் மறைமுக உண்மைச் சுமை ஆகிய பல்வகைச் சுமைகள் உண்டு. இச்சுமை மக்கள் மீது சமமாகப் பகிர்ந்தளிக்கப்படும் வண்ணம் வரி விதிப்பு இருத்தல் நன்று என்று குறிப்பிடுவது வரிக் கோட்பாடு. வரிக் கோட்பாடுகளில் நன்மை அணுகுமுறை (Benefit approach), செலுத்தும் திறன் அணுகுமுறை (Ability to pay approach) என இரு அணுகு முறைகள் உண்டு. அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் விளைவாகத் தனியாட்கள் பெறுகின்ற நன்மைகளின் அளவிற்கேற்ப அவர்கள்மீது வரிச்சுமை அமைதல் வேண்டும் என்பது வரி விதிப்பின் நன்மைக் கோட்பாடு (Benefit theory of taxation). அரசாங்கம் பல செலவுகளைத் தனி ஆள்களின் நன்மைக்காக மேற்கொள்ளும்போது அச் செலவுகளை அம்மக்களே ஏற்றுக்கொள்ளும் வகையில் வரிச்சுமை அமை தல் வேண்டும் என்பது வரி விதிப்பின் செலவுக் கோட்பாடு (Cost of Service theory). இவ்விரு கோட்பாடுகளும் ஒரே கருத்தை இரு வழிகளில் குறிப்பிடுகின்றன. இவ்விரு கோட்பாடுகளும் நன்மை அணுகு முறையின் பாற்பட்டவை. அரசாங்கத்தின் செலவுகளை ஈடு செய்வதற்கும், அரசாங்கத்தை ஆதரிப்பதற்கும் பொதுமக்கள் அவரவர் களுக்கு எந்த அளவுக்குச் செலுத்தும் திறன் இருக்கிறதோ அந்த அளவுக்கு வரியைச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிடுவது செலுத்தும் திறன் அணுகு முறை. இவ்வணுகு முறையில் சம அளவுத் தியாகம் (Equal Sacrifice), விகித அளவுத் தியாகம் (Propational Sacrifice), குறைந்த அளவுத் தியாகம் அல்லது குறைந்த அளவு மொத்தத் தியாகம் (Least Aggregate Sacrifice) என்ற மூன்று அடிப்படைகள் குறிப்பிடப்படுகின்றன.

**வரி விதிப்பின் விளைவுகள் :** மிகச் சிறப்பான பொருளாதார விளைவுகளை ஏற்படுத்தும் வரி விதிப்பை அல்லது மிக்க குறைவான அளவில் கேடுகளை விளைவிக்கும் வரி விதிப்பை மிகவும் நல்ல வரி விதிப்பு எனலாம். வரி விதிப்பின் விளைவுகளை உற்பத்தியில் தோன்றும் விளைவுகள் என்றும், பகிர்வில் தோன்றும் விளைவுகள் என்றும் இரு வகைப் படுத்துவர் .

**உற்பத்தியில் வரி விதிப்பின் விளைவுகள்:** உற்பத்தியில் வரி விதிப்பின் விளைவுகளை டாக்டர் தால்டன் (Dr. Dalton) என்பவர். *(1)* பணி ஆற்றும், சேமிக்கும் திறனில் தோன்றும் விளைவுகள் என்றும், *(2)* பணி ஆற்றுவதற்கும், சேமிப்பதற்கும் உள்ள விருப்பத்தில் தோன்றும் விளைவுகள் என்றும் *(3)* பல்வேறு வேலைகளிலும், பல்வேறு நிலப்பகுதிகளிலும் உற்பத்தி மூல வளங்களைப் பகிர்ந்தளிப்பதில் தோன்றும் விளைவுகள் என்றும் மூன்று வகைகளாகப் பிரித்து விளக்குகிறார்.

வரி விதிப்பினால் பணியாற்றும் திறனும், சேமிக்கும் திறனும் குறைகிறது. வரியைச் செலுத்துவோரின் வாங்கும் திறன் குறைந்து அவர்களின் திறனும் குறையலாம். ஏழைகளின் வருமானத்தின் மீதான வரி அவர்களின் நிகழ்காலத் திறனையும், அவர்களின் குழந்தைகளின் எதிர்காலத் திறனையும் கெடுக்கிறது. சேமிக்கும் ஆற்றலையும் வரிகள் குறைத்து விடுகின்றன. இவ்விரு காரணங்களாலும் முதலிடும் திறனையும் வரி குறைத்துவிடுகிறது.

பொதுவாக, வரி இடைக்காலத்திற்கானதாக இருக்குமானால் வரிச் செலுத்துபவரின் பணியாற்றும், சேமிக்கும், முதலீடு செய்யும் விருப்பம் குறைந்துவிடாது. ஆனாலும், 'விருப்பம்' என்று குறிப்பிடும்போது. வரி செலுத்துபவரின் உள நிலையைக் குறிப்பிடுவதால் (அ) வரி செலுத்துபவரின் உள நிலையைப் பொறுத்தும் (ஆ) வரியின் தன்மையைப் பொறுத்தும் வேலை செய்யும் விருப்பமும் சேமிக்கும் விருப்பமும் முதலீடு செய்யும் விருப்பமும் அமைகின்றன.

உற்பத்தி மூலவளங்களைப் பகிர்ந்தளிப்பதில் வரிவிதித்தல் இன்றியமையாத பங்காற்றுகிறது. வரி விதிப்பினால் உற்பத்தி மூலவளங்கள் ஓரிடத்தி லிருந்து பிற இடத்திற்கும், ஒரு பயனிலிருந்து மற்ற தொரு பயனுக்கும் மாற்றப்படும் வாய்புகள் உள்ளன. வரி விதிப்பின் மூலம் மூல வளங்களை அரசு திரட்டி உற்பத்தியில் ஈடுபடுத்தலாம் என்பதில் தொன்மைப் பொருளாதார அறிஞர்களுக்கு உடன் பாடு இல்லை. இக்காலப் பொருளாதார அறிஞர் களுக்கு உடன்பாடு உண்டு. பகட்டுப் பண்டங்களின் மீதான வரிகளால் அரசு வருமானத்தைப் பெற்று அவற்றை உற்பத்திப் பணியியல் ஈடுபடுத்தலாம் என் பதை இன்று ஏறத்தாழ எல்லோரும் ஏற்றுக்கொள் கிறார்கள். அதைப் போன்று சுங்கவரி விதிப்பினால் அரசும் வருவாயைப் பெறும், உள்நாட்டுத் தொழில் களும் வளரும். ஆனால், திறமையும் பயனுமற்ற தொழில்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் நற் பலனைத் தாரா. நிகழ்காலப் பயன்களில் பயன்படத் தக்க மூல வளங்களை வரிவிதிப்பின் மூலம் எதிர் காலத்தில் பயன்படத் தக்கவையாக்க இயலும். அதே போல, ஓரிடத்தில் பயன்படத்தக்க மூலவளங்களை வரி விதிப்பின்மூலம் பிற இடங்களில் பயன்படத் தக்கவையாக மாற்றுதல் இயலும்.

பகிர்வில் விளைவுகள் : சமுதாயத்தில் உள்ள எல்லோருக்கும் அதிகமான அளவில் பொருளாதார நலன் கிடைக்க வேண்டும் என்பதால் வருமான, செல்வ நிலைகளில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் குறைக் கப்பட்டுச் சமன் செய்யப்பட வேண்டும் என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் கருத்து.

பல வகை வரிகள் பகிர்வில் பலவித விளைவு களைத் தோற்றுவிக்கலாம். உணவுப் பண்டங்களின் இன்றியமையாத பொருட்களின் விற்பனைமீதான வரிகள் பொதுவாகத் தேய்வு வீத வரிகளாகும் (Regressive Taxes). வருமானவரி, வாரிசு உரிமை வரி, செல்வ வரி போன்றவை வளர் விகித வரிகளாகும். வளர் விகித வரிகள் செல்வ வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கப் பயன்படு கின்றன.

வரிகளைச் செம்மையான முறையில் பயன்படுத் திப் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டிவிடலாம். பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தலாம், வேலை வாய்ப்புகளை பெருக்கலாம். எனவே, வரி யொன்றை விதிக்குமுன் அவ்வரியினால் தோன்றத் தக்க விளைவு களைச் சீர்தூக்கிப் பார்த்துப் பயன் படுத்துவர் பயன் தெரிவோர்.

வரிப் புரட்டுகையும் வரி நிலைப்பாடும் : வரி யார் மீது விதிக்கப்படுகிறதோ அதே ஆள் வரிச் சுமை யைத் தாங்கிக்கொள்ள வேண்டும் என்ற நியதி இல்லை. வரிச் சுமையைத் தானே முழு அளவில் அல்லது பகுதிகளளவில் தாங்கிக்கொள்ளலாம். முழு அளவில் அல்லது பகுதி அளவில் மற்றவர்களின் மீது புரட்டியும் விடலாம். வரிச் சுமை எவ்வாறெல் லாம் புரட்டிவிடப்படுகிறது என்பதை ஆராயும் கோட்பாட்டை வரி நிலைப்பாட்டுக்கோட்பாடு (Theory of incidence of taxation) என்பர்.

வரித் தாக்கு : வரி விதிக்கப்படும்போது முதன்முத லாக யாராவது ஒரு ஆள்மீது விழும் வரிச்சுமையே வரித்தாக்கு (Impact of Taxation). நகர் ஒன்றில் ஒருவர் சொந்த வீடு வைத்திருந்து அவருக்குச் சொத்து வரி விதிக்கப்படும்போது வரியின் வரித் தாக்கு அவர்மீது அமைகிறது என்பது பொருள். வரித் தாக்குதலுக்கு உட்படும் ஆள் வரிச் சுமையைத் தாமே தாங்குவதும் உண்டு; முன்னோக்கியோ, பின்னோக்கியோ புரட்டு வதும் உண்டு.

வரிப் புரட்டுகை : வரித் தாக்கை முன்னோக்கி அல்லது பின்னோக்கிப் புரட்டி விடுவதை வரிப் புரட் டுகை என்பர். இது வரியைச் செலுத்தாமல் ஏமாற்று வது அன்று. சட்டத்தின் அடிப்படையில் வரிச்சுமை யைப் புரட்டிவிட வாய்ப்புகள் உண்டு. உற்பத்தி யாளர் மொத்த விற்பனையாளர் மீதும், மொத்த விற்பனையாளர் சில்லறை விற்பனையாளர்மீதும், சில்லறை விற்பனையாளர் நுகர்வோர்மீதும் விற் பனை வரியைப் புரட்டிவிடுவதை முன்னோக்கிய புரட்டுகைக்கு (Forward Shifting) எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். வெளிநாட்டிலிருந்து பண்டங்களை இறக்குமதி செய்யும்போது விதிக்கப்பெறும் இறக்கு மதி வரியை வெளிநாட்டில் உள்ள விற்பனையாளரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இறக்குமதியாளர் அமைத்துக்கொள்ளும்போது அதனைப் பின்நோக் கிய புரட்டுகை (Backward Shifting) என்று குறிப்பிடு வர். ஒரு பகுதி முன்னோக்கிய புரட்டுகையாகவும்

மற்றொரு பகுதி பின்னோக்கிய புரட்டுகையாகவும் கூட அமையலாம்.

வரி நிலைப்பாடு : இறுதியாக வரிச்சுமை யார் மீதாவது அமையும். அந் நிலையை வரி நிலைப்பாடு என்பர். எடுத்துக்காட்டாக விற்பனை வரியின் வரி நிலைப்பாடு நுகர்வோர்மீது அமைகிறது. அச் சுமையை அவர் வேறுயார் மீதாவது புரட்டிவிடும் வாய்ப்புகள் இரா.

வரிப் புரட்டுகை, வரி நிலைப்பாடு பற்றிய கோட்பாடுகள் : வரிப் புரட்டுகை, வரி நிலைப்பாடு பற்றிய கோட்பாடுகளைப் பழமையான கோட்பாடு கள், காலக் கோட்பாடுகள் என இரு வகைப்படுத்து வர். பழமையான கோட்பாடுகளைச் செறிதல் கோட்பாடு (Concentration Theory), பரவல் கோட்பாடு (Differsion Theory) என இருவகைப் படுத்துவர். இயற்கைவாதியரின் கருத்துப்படி நிலம் மட்டுமே உற்பத்தித் திறன் உடையது. உற்பத்திச் செலவைத் காட்டிலும் அதிகப்படியான விளைவைத் தரத்தக்கது. எனவே, நிலச் சொந்தக் காரர்கள்மீது மட்டுமே வரியை விதித்தல் வேண்டும். வேறெந்தப் பிரிவு ஆட்கள் மீதும் வரி விதிக்கப்பட்டால், அது புரட்டப் பட்டு புரட்டப்பட்டு இறுதியாக நில உரிமை யாளர்கள்மீதே நிலைப்பாடு கொள்ளும் என்பது செறிதல் கோட்பாடு குழப்பத்தைத் தவிர்க்க நிலத்தின் மீதே வரி நிலைப்பாடு அமைதல் வேண்டும் என்று செறிதல் கோட்பாடு குறிப்பிடுகிறது. நிலம் மட் டுமே உற்பத்தித் திறன் உடையது என்ற கருத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்று குறிப்பிட்டுச் செறிதல் கோட்பாட்டைத் தவறு என்ற குறிப்பிடுவர் சிலர். என்.எப். கானார்டு (N.F. Canard) என்பவர் பரவல் கோட்பாட்டைக் குறிப்பிட்டார். வரியை யார் மீது விதித்தாலும் இறுதியில் அவ்வரி பலவகைளாக மாற்றவும் புரட்டவும் பட்டுச் சமுதாயம் முழுவதி லும் பரவிவிடும் என்று இக்கோட்பாடு குறிப்பிடு கிறது. எல்லா வரிகளும் ஒரே இடத்தில் செறிந்து விடுகிறது என்று குறிப்பிடும் செறிதல் கோட்பாடும், சமுதாயம் முழுவதிலும் பரவிவிடுகிறது என்று குறிப்பிடும் பரவல் கோட்பாடும் இரு எல்லை நிலைகளில் இருப்பவை. எனவே, உண்மைக்குப் புறம்பானவை. இந்த அடிப்படையில் இக்கோட் பாடுகளைத் தவிர்த்துத் இக்காலக் கோட்பாட்டை உருவாக்கியுள்ளனர். வரி நிலைப்பாட்டிற்கும் விலைக்கும் தொடர்பு உண்டு. விலையோடு வரி யைச் சேர்க்கின்றபோதுதான் வரிப்புரட்டுகை நிகழ்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுக்கின்றன. வரி விதித்தலால் ஏற்படும் விலை உயர்வில் ஒரு பகு தியை வரி விதிப்பிற்கு உள்ளாகும் ஆள் முன்னோக் கியோ, பின்நோக்கியோ புரட்டிவிட முயல்கிறார். பல காரணிகளில் அடிப்படையில் இப்புரட்டுகை அமைகிறது. எனவே, வரி நிலைப்பாடு, வரிப்புரட் டுகை பற்றிய ஆய்வுக்கு வரி விதிப்பிற்கு உள்ளாகும் பண்டங்களின் தேவை, அளிப்பு நிலைகளைப் பற்றிய ஆய்வு மிகவும் இன்றியமையாதது. கீழே குறிப்பிடப் பட்டுள்ள வரைபடம் மூலம் வரி நிலைப்பாட் டிற்கான இக்காலக் கோட்பாட்டை எளிதில் விளக்குவர்.

பண்டத்தின் தேவைக்கோடு DD; அளிப்புக்கோடு SS; ஓர் அலகின் சமநிலை விலை ER; இந்நிலையில் வரி விதிக்கப்படுவதாகக் கருதிக் கொண்டால் புதிய அளிப்புக்கோடு S1, S1 என மாறும்; புதிய விலை E1 R1 என மாறும். ஒவ்வொரு அலகிலிருந்தும் அரசுக் குக் கிடைக்கும் வரியின் அளவு E1 M. இதில் E1 L அளவை வாங்குபவரும், LM அளவை விற்பவரும் தாங்கிக் கொள்கின்றனர். எனவே, வரி நிலைப்பாடு இரு சாரார்மீதும் அமைகிறது. இக்காலக் கோட் பாட்டிலிருந்து கீழ்வரும் முடிவுகள் பெறப்படுகின் றன. 1. பண்டத்தின் தேவை நெகிழ்ச்சியும் அளிப்பு நெகிழ்ச்சியும் சமமானவையாக இருந்தால் வரி நிலைப்பாடு விற்பவர்., வாங்குபவர்மீது சரிசமமாக அமைகிறது. வரியில் 50 விழுக்காடு அளவுக்கு விலை உயர்வு இருக்கும் 2. தேவை நெகிழ்ச்சியைக் காட்டி லும் அளிப்பு நெகிழ்ச்சி அதிகமாக இருந்தால் வரிப் பளுவில் பெரும்பகுதி வாங்குபவர்மீது அமையும். வரியில் 50 விழுக்காடு அளவுக்கு அதிகமாக விலை உயர்வு இருக்கும். 3. அளிப்பு நெகிழ்ச்சியைக் காட்டி லும் தேவை நெகிழ்ச்சி அதிகமாக இருந்தால் வரிப் பளுவில் பெரும்பகுதி விற்பவர்மீது அமையும்; வரியில் 50 விழுக்காடு அளவுக்கு குறைவாக விலை உயர்வு இருக்கும். 4. பண்டத்தின் தேவை நெகிழ்ச்சி முற்றிலும் நிறைவானதாகவும் அளிப்பு நெகிழ்ச்சி குறைவானதாக்வும் இருந்தால் வரிப்பளு முழுவதும் விற்பவர் மீதே அமையும். 5. பண்டத்தின் தேவை முற்றிலும் இல்லாமலிருந்து அளிப்பு நெகிழ்ச்சி யானதாகவும் இருந்தால் வரிப்பளு முழுவதும் வாங்குபவர்மீதே அமையும். 6. பண்டத்தின் அளிப்பு

நெகிழ்ச்சி முற்றிலும் நிறைவானதாகவும் தேவை நெகிழ்ச்சியற்றதாகவும் இருந்தால் வரிப்பளு முழுவதும் வாங்குபவர்மீதே அமையும். 7. பண்டத்தின் அளிப்பு நெகிழ்ச்சி முற்றிலும் இல்லாமையிருந்து தேவை நெகிழ்ச்சியுள்ளதாகவும் இருந்தால் வரிப்பளு முழுவதும் விற்பவர்மீதே அமையும். பண்டத்தின் தேவை நெகிழ்ச்சி, அளிப்பு நெகிழ்ச்சி ஆகியவற்றின் தன்மை. உற்பத்திச் செலவு நிலைகள், வரியின் அளவு, நிலையக் காரணிகள் (Institutional factors) போன்றவை வரிப்புரட்டுகையிலும் வரி நிலைப்பாட்டிலும் உள்ளார்ந்திருக்கும் காரணிகளாகும்.

நிறைவுப் போட்டி அங்காடியில் (Perfectly Competitive Market) குறுங்காலத்தில் வரிப் புரட்டுகைக்கு வாய்ப்புகள் இல்லை. நீண்ட காலத்தில் வாய்ப்பு உண்டு. முழுஉரிமை அங்காடியில் குறிப்பிட்ட அளவிலான மொத்த வரி விதிக்கப்பட்டால் வரிப் புரட்டுகைக்கான வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. அலகின் (Unit) மீதான வரி விதிக்கப்படும் போது ஓரளவுக்கு வரிப்புரட்டுகை நிகழ்கிறது. நிறைவுப் போட்டியைக் காட்டிலும் முழுஉரிமை அங்காடியில் வரிப்புரட்டுகை மிகவும் குறைவாகவே இருக்கிறது.

பலவிதமான செலவு நிலைகளில் வரிப்புரட்டுகை

மற்றவை மாறாதிருக்கும் நிலையில் வளர்ந்து செல் செலவு நிலையில் வரியானது ஓரளவுக்குப் புரட்டப்படுகிறது என்பதை இரண்டாம் படமும் மாறாச் செலவு நிலையில் வரி முழுமையாகப் புரட்டப்படுகிறது என்பதை மூன்றாம் படமும், குறைந்தசெல் செலவு நிலையில் வரி விதிப்பைக் காட்டிலும் அதிகமான புரட்டுகை நிகழ்கிறது என்பதை நான்காம் படமும் காட்டுகின்றன. தொடக்க நிலை விலை RE. புதிய விலை R1 E1 வரியின் அளவாகிய E1M - இல் E1 L அளவு புரட்டப்படுவதையும் LM அளவு விற்பவரால் தாங்கிக் கொள்ளப்படுவதையும் படம் 2 (வளர்ந்துசெல் செலவு நிலை) படம் 3 காட்டுகிறது. வரியின் அளவு E1 M ஆக இருந்தும் E1 L அளவுத் தொகை வாங்குபவர்மீது புரட்டப்படுவதைப் (குறைந்துசெல் செலவு நிலை) படம் 4 காட்டுகிறது.

வரி விதிக்கும் அங்காடியின் இயல்புக்கேற்பக் குறுங்காலத்தில் வரிப் புரட்டுகை நிகழ்கிறது. பொதுவாக விலையை மாற்றுவதன்மூலம் இப்புரட்டுகை நிகழ்கிறது. உபரியாகக் கிடைப்பதன் மீதான வரி பெரும்பாலும் புரட்டப் படுவதில்லை. நிகர வருமான வரி, வாரிசு உரிமை வரி போன்றவை இதற்கான எடுத்துக்காட்டுகள். சொத்து வரி ஒரு சில நேரங்களில் புரட்டப்படலாம்.

**வரி வகைகள் :** வரி அமைப்பின் அடிப்படையில் வரிகளை நேர்முக வரி (Direct Tax), மறைமுக வரி (Indirect Tax) என்றும், இயல்பின் அடிப்படையில் குறிப்பிட்ட வகை வரி (Specific Tax), மதிப்புப் படியான வரி (Ad Valorem Tax) என்றும். நோக்கத்தின் அடிப்படையில் விகிதாசார வரி (Proportional Tax), வளர்விகித வரி (Progressive Tax), தேய்வு வீத வரி (Regressive Tax), மித வளர்விகித வரி (Degressive Tax) என்றும் வரி விதிக்கப்படும் இடத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு முனை வரி (Single Point Tax), பல முனை வரி (Multi-Point Tax) என்றும் பலவிதமாக வகைப்படுத்துவர்.

**நேர்முக, மறைமுக வரிகள் :** நேர்முக வரிகளைப் பெரும்பாலும் வரி விதிக்கப்படுபவரே செலுத்திவிடுகிறார். அவற்றை ஒருவர் மற்றவர்மீது புரட்டுவது இல்லை வருமான வரி, சொத்து வரி, செலவு வரி, நன்கொடை வரி, மரண வரி போன்றவை நேர்முக வரிகளாகும். மறைமுக வரிகளை வரி விதிப்புக்கு உள்ளானவரே செலுத்திவிடுகிறார், என்றாலும், இவ்வகை வரிகளை வரி விதிப்புக்கு உள்ளானவர் பிறர் மீது புரட்டி விடுகிறார். உள்நாட்டுத் தீர்வை, சுங்க வரிகள், விற்பனை வரிகள், கேளிக்கை வரிகள் போன்றவை மறைமுக வரிகளுக்கு எடுத்துக் காட்டுகளாகும். திறமைக்கு ஏற்ப வரி விதித்தல், துல்லியமான அளவில் அமைதல், வரித்தண்டல் செலவு குறைவாக இருத்தல், நெகிழ்ச்சித்தன்மை உடையதாக இருத்தல், குடிமை உணர்ச்சி தூண்டப்படுதல், செல்வ வருமான ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கப் படுதல் போன்றவை நேர்முக வரியின் நன்மைகளாகக் குறிப்பிடப்படுகின்றன. அதிகச் சுமையானவையாக இருத்தல், எளிமை இன்மை, சேமிப்பைக் கேடுறச் செய்தல், மிகுதியான அளவில் வரி ஏய்ப்புகளுக்கு வழிகோலுதல், எல்லோரும் வரி செலுத்தத் தக்க தன்மை இன்மை போன்றவை நேர்முக வரியின் குறைகளாகச் சுட்டிக்காட்டப்படுபவை. நேர்முக வரியின் நன்மைகளோடு ஒப்பிடுகையில் குறைகள்

மிகக் குறைவானவையே என்றும், அக்குறைகளையும் எளிதில் களைந்துவிடலாம் என்றும், எனவே, நேர்முக வரிகளை மிகுதியான அளவில் பயன்படுத்துவதே சிறந்த முறை என்றும் பலர் விவாதிக்கின்றனர். வசதியானவை, சுமை உணர்வு இன்மை, நுகர்வைக் கட்டுப்படுத்தச் சிறந்த வரி, மிகுதியான அளவிலான உற்பத்தித் திறனைப் பெற்றிருத்தல், வளர் விகிதத்திலும் விதிக்கப்படும் வாய்ப்புகள் இருத்தல், எல்லோரும் வரி செலுத்தத் தக்க இயல்பு, ஏய்ப்பதற்குக் கடினமானதாக இருத்தல் போன்றவை மறைமுக வரி முறையின் நன்மைகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. திறமை விதிக்குப் புறம்பானது, வரித் தண்டல் செலவு மிகுதியானதாக இருத்தல், வரிக்கு வரி என்ற முறைகேடு இருத்தல், குடிமை உணர்ச்சி தூண்டப்படும் வாய்ப்புகள் இன்மை, மதிப்பிட இயலாமை, விலைகளை உயர்த்திவிடும் தன்மை போன்றவை மறைமுக வரிமுறையின் குறைகளாகச் சுட்டிக்காட்டப்படுகின்றன. நேர்முக வரிகளிலும் மறைமுக வரிகளிலும் நிறைகளும் குறைகளும் இருப்பதால் இவ்விரண்டில் மிகச்சிறந்த வரி முறை எது என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியாது. கிளாட்சுடோன் (Gladstone) என்பவர் இதைக் குறிப்பிட ஓர் எடுத்துக்காட்டு தருகிறார். எல்லா இயல்புகளிலும் ஒரே மாதியாக உள்ள இரு உடன் பிறந்தவர் இருந்தால் அவர்கள் இருவரின் யார் மிகச் சிறப்பானவர் என்று எவ்வாறு தேர்ந்தெடுக்க முடியாதோ அதைப்போன்று நேர்முக வரிகள், மறைமுக வரிகள் ஆகிய இரண்டு வகைகளிலும் நிறைகளும் குறைகளும் இருப்பதால் இரண்டில் எது சிறந்தது என்று குறிப்பிட முடியாது இரண்டையும் தேவையான அளவுக்குப் பயன்படுத்திக்கொள்வதுதான் சிறந்த வரி அமைப்பு முறை என்று குறிப்பிடுகிறார்.

**குறிப்பிட்ட வரிகளும், மதிப்புப் படியான வரிகளும்:** ஒரு பொருளின் எடை, எண்ணிக்கை, அளவு அல்லது இதுபோன்ற ஏதாவதொரு புற அளவின் (External measure) அடிப்படையில் விதிக்கப்படும் வரியைக் குறிப்பிட்ட வரி என்று குறிப்பிடுவர். எணிணக்கை அல்லது அளவின் அடிப்படையில் இவ்வரிகள் விதிக்கப்படுவதால் இவ்வரிகளை மதிப்பிடுதல், தூண்டுதல் நிருவகித்தல் எளிது. ஆனால், பண்டங்களின் சிறிய அலகுகளின் அடிப்படையில் இவ்வரிகள் விதிக்கப் பெற்றால் மதிப்பிடுவது கடினம். மேலும், இவ்வரிகள் பெரும்பாலும் ஏழை மக்கள் பெரும்பான்மை அளவில் பயன்படுத்தும் பண்டங்களின்மீது விதிக்கப்படுவதால் தேய்வு வீத வரி முறையாகி விடுகின்றன.

மதிப்புப் படியான வரிகள் சொத்துகளின் மதிப்பின் அடிப்படையில் விதிக்கப்படுகின்றன. சமத்துவம் என்ற அடிப்படையில் பார்க்கும்போது இவ்வகை வரிகள் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன. இவை பெரும்பாலும் செல்வந்தர் மீது விதிக்கப் பெறுபவை. வரி விதிக்கப்படுபவரின் வரி செலுத்தும் திறனுக்கேற்ப அமையவை. ஆனால் இவற்றைத் தூண்டுவதும் நிருவகிப்பதும் எளிதல்ல. இறக்குமதி செய்பவர்கள் பெரும்பாலும் சொத்துகளின் மதிப்பைச் சரியாகச் சொல்வதில்லை.

**விகித அடிப்படையில் வளர்விகித, தேய்வு வீத மித வளர் விகித வரிகள் :**

வரி அடிப்படை, வரி விகிதம் ஆகியவற்றின் அடிப்படையில் வரிகளை மேற்கண்டவாறு வகைப் படுத்துவர். கீழ்வரும் 4 அட்டவணைகளும் 4 படங்களும் இவற்றை எளிதாக விளக்குபவை.

அட்டவணை - 1

**விகித அடிப்படையில் வரி முறை அட்டவணை**

| வரி அடிப்படை ரூ. | வரி விகிதம் (%) | வரித் தொகை ரூ. |
|---|---|---|
| 1,000 | 10 | 100 |
| 5,000 | 10 | 500 |
| 10,000 | 10 | 1,000 |
| 50,000 | 10 | 5,000 |
| 1,00,000 | 10 | 10,000 |

அட்டவணை - 2
வளர் விகித வரி முறை அட்டவணை

| வரி அடிப்படை ரூ. | வரி விகிதம் (%) | வரித் தொகை ரூ. |
|---|---|---|
| 1,000 | 10 | 100 |
| 5,000 | 12 | 600 |
| 10,000 | 15 | 1,500 |
| 50,000 | 20 | 10,000 |
| 1,00,000 | 28 | 28,000 |

அட்டவணை - 3
தேய்வு விகித வரி முறை அட்டவணை

| வரி அடிப்படை ரூ. | வரி விகிதம் (%) | வரித் தொகை ரூ. |
|---|---|---|
| 1,000 | 10.0 | 100 |
| 5,000 | 9.5 | 475 |
| 10,000 | 8.0 | 800 |
| 50,000 | 6.0 | 3,000 |
| 1,00,000 | 3.0 | 3,000 |

அட்டவணை - 4
மித வளர் விகித வரி முறை அட்டவணை

| வரி அடிப்படை ரூ. | வரி விகிதம் (%) | வரித் தொகை ரூ. |
|---|---|---|
| 1,000 | 10 | 100 |
| 5,000 | 12 | 600 |
| 10,000 | 15 | 1,500 |
| 50,000 | 15 | 7,500 |
| 1,00,000 | 15 | 15,000 |

வரி அடிப்படை அதிகரிக்கும்போது வரி விகிதம் மாறாமலிருக்கும் (அட்டவணை - 1) முறையை விகித அடிப்படை வரி முறை என்றும், வரி விகிதம் பெருகிக்கொண்டு செல்லும்(அட்டவணை- 2) முறையை வளர்விகித வரி முறை என்றும், குறைத்துக் கொண்டு செல்வதைத் (அட்டவணை - 3) தேய்வு விகித வரிமுறை என்றும், குறிப்பிட்ட நிலை வரை அதிகரித்துக்கொண்டு சென்று பின்னர் மாறாமல் இருக்கும் (அட்டவணை - 4) வரி முறையை மித வளர் விகிதவரி முறை என்றும் குறிப்பிடுவர்.

அதிக அளவில் வருவாய் தரத்தக்கது, சீரான வருமானச் செல்வப் பங்கீட்டைப் பெறுவதற்கு உதவி செய்யத்தக்கது. பகட்டுச் செலவுகளைக் கட்டுப்படுத்த உதவி செய்யத்தக்கது. அவரவர் திறனுக்கேற்ப வரி விதிக்க உதவி செய்யத்தக்கது. பொருளாதாரக் கோட்பாடுகளுக்குப் பொருத்தமானது. வருவாய் உபரி மீது வரி விதிக்கத்தக்கது. வேலை வாய்ப்பைப் பெருக்கவும், திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றத்தைப் பெறவும் உதவி செய்யத்தக்கது. வரித் தண்டும் செலவு குறைவான அளவிலானது என்பன போன்ற பல கருத்துகள் வளர்விகித வரி முறைக்கு ஆதரவாகக் குறிப்பிடப்படுகின்றன. வளர் விகிதத்தை நிருணயிப்பதற்கான அறிவியல் அடிப்படை எதுவும் இல்லை. வளர்விகித வரிகளால் சேமிப்பும், முதலீடும் கேடுற்றுப் பொருளாதார வளர்ச்சி கேடுறும். குறைந்து செல் இறுதிநிலைப் பயன்பாட்டின் அடிப்படை என்று குறிப்பிடலாம். அந்த அடிப்படையை அளவிட முடியாத நிலை, திறமை மிக்கவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனை போன்றது. ஊழல்களுக்கும் தவறுகளுக்கும் வழிவகுக்கத் தக்கது என்பது போன்ற பல எதிர் விவாதங்களும் வளர்விகித வரி முறைக்கு எதிராகக் குறிப்பிடப்படுகின்றன. ஆனால், மொத்தத்தில் காணும்போது வளரும் நாடுகளின் வளர்விகித வரி முறையில் ஏற்படும் குறைகளைக் காட்டிலும் நிறைகள் மிகுதியானவையாக இருப்பதால் அந்நாடுகளுக்கு அல்லது முறையே சாலச் சிறந்தது என்று பலர் வாதிடுகின்றனர்.

வரி செலுத்துபவரின் தாராதர நிலையைக் கெடுக்கத் தக்கதன்று இருத்தல் விதி, எளிமை விதி, ஒரே மாதிரியாக இருத்தல் விதி (Uniformity), உறுதியுடைமை விதி ஆகிய பல சிறப்பான வரி விதிகளின் அடிப்படையில் அமைந்திருத்தல், மேன்மேலும் உழைக்க வேண்டும்.

சேமிக்க வேண்டும். முதலிட வேண்டும். ஆதாயத்தைப் பெற வேண்டும் என்ற எண்ணங்களுக்குக் கேடு விளைவிக்காதிருத்தல், பொருளாதார வளர்ச்சிக்கு ஊறு விளைவிக்காதிருத்தல், மக்கள் வரியைச் செலுத்தும்போது சம அளவில் தியாகம் செய்யும் நிலை இருத்தல் போன்ற பல கருத்துகளை விகித அடிப்படை வரி முறைக்கு ஆதரவான விவாதங்களாகக் குறிப்பிடுவர். செல்வந்தர்களும் வறியவர்களும் ஒரே மாதிரியாக வரியைச் செலுத்த வேண்டும் என்று குறிப்பிடுவது எளிதானதாகத் தோன்றினாலும் நேர்மையானதன்று. அதிக அளவில் வருமானம் பெறுவர்களிடமிருந்து பெருமளவு தொகையை வரியாகப் பெற இயலாது என்பதால் உற்பத்தித் திறன் அற்றது. வளர்ச்சிக் காலத்திலும் அவசரக் காலங்களிலும் அரசு பெருமளவில் நிதியைப் பெறுவதற்கு இவ்வரி முறை உதவாதது என்ற பல குறைகள் விகித அடிப்படையில் வரி முறைக்கு எதிரான விவாதங்களாகக் குறிப்பிடப்படுகின்றன. பேச்சளவில் விகித அடிப்படை முறை சிறப்பானது என்றாலும் செலயளவில் தேய்வு விகித வரி விளைவையே அது தரும் என்றும், ஆகவே விகித அடிப்படை வரி முறை விரும்பத்தக்கதன்று என்றும், பல காரணங்களால் வளர்விகித வரி முறையே மிகவும் சிறந்தது என்றும் பெரும்பாலானோர் குறிப்பிடுகின்றனர்.

**வரிதாங்கும் திறன்** : இயல்பான சூழ்நிலையிலும் இயல்பற்ற சூழ்நிலையிலும் ஒரு நாடு எவ்வளவு வரி விதிப்பைத் தாங்கும் திறன் படைத்திருக்கிறது என்பதையே வரிதாங்கும் திறன் என்பர். வருமானம், இயல்பு, நோக்கம் நாட்டின் அரசியலமைப்புப் போன்ற பல காரணிகளில் அடிப்படையில் தனி மனிதனின் வரி தாங்கும் திறன் அமைகிறது. "பொதுவாகக் குறிப்பிடும்போது ஒரு சமுதாயத்தின் பல பிரிவினரின் வரி தாங்கும் திறனை வரி விதிப்பின் விகித அளவு என்று குறிப்பிடலாம். இந்த அளவுக்கும் அதிகமாக வரி விதித்தல் இருந்தால் மொத்தமாகப் பார்க்கும்போது சமுதாயத்தின் உற்பத்தி முயற்சிகளும் திறமைகளும் கேடுறும்" என்று வரி விதிப்பு விசாரணைக் குழு (Taxation Enquiry Committee) வரி தாங்கும் திறனை விளக்கியுள்ளது.

வரி தாங்கும் திறனை முழுமையான வரி தாங்கும் திறன் (Absolute taxable capacity), தராதரமான வரி தாங்கும் திறன் (Relative taxable capacity) என இரு வகைப் படுத்துவர். சமுதாயத்தின் வரி தாங்கும் உயர் அளவுத் திறனை முழுமையான வரிதாங்கும் திறன் என்பர். குறிப்பிட்ட நேரத்தில் அல்லது குறிப்பிட்ட கால அளவில் சமுதாயங்களின் அல்லது வெவ்வேறு ஆள்களின் வரி தாங்கும் திறனைத் தராதரமான வரி தாங்கும் திறன் என்றும் குறிப்பிடுவர்.

ஒரு நாட்டில் வரி தாங்கும் திறனைக் கணிப்பது எளிதன்று. எனினும், இக்கணிப்புகள் பல சூழ்நிலைகளில் பயனுள்ளவையாக அமைகின்றன. அமைதிக் காலங்களில் வளர்ச்சிப் பணி முயற்சிகளில் வரியைத் தாங்கிக் கொள்ளும் உச்ச அளவை மதிப்பிடுவதற்கும் கூட்டாட்சி அமைப்புகள் உள்ள நாடுகளில் பல்வேறு மாநிலங்களின் வரிதாங்கும் திறனை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும் இம்மதிப்பீடுகள் பயன்படுகின்றன. வரி தாங்கும் திறனைக் கணிப்பது பயனுள்ளது என்றாலும், இதனைக் கணிக்கும் முறைகள் பலவற்றைப் பலரும் வரையறை செய்ய முயன்றுள்ளனர். "பிழிந்தெடுப்பதன் உயர்நிலை அளவே வரிதாங்கும் திறன்" என்று பேராசிரியர் பின்லே சிர்ராசு (Prof. Findlay Shirras) குறிப்பிடுகிறார். குறிப்பிட்ட இரண்டு கால அளவுகளில் வாழ்க்கைத் தரம் மாறுபடாமலிருக்கும்போது, மக்களின் தனி ஆள் உற்பத்தி அளவை நிலை நிறுத்துவதற்குத் தேவையான மிகக் குறைவான நுகர்வு அளவுக்கு அதிகமாக உற்பத்தியில் தோன்றும் உபரியே வரிதாங்கும் திறன் என்று பேராசிரியர் சிர்ராசு (Prof. Shirras) விளக்கம் தருகிறார். "உண்மையில் மகிழச்சியற்றதும் மிகவும் மோசமானதுமான ஒரு வாழ்க்கை நிலைக்குச் செல்லாமலும், பொருளாதார அமைப்பைப் பாதிக்காமலும் பொது நிருவாகத்திற்குச் செலுத்தக்கூடிய குறைந்த அளவுத்தொகையே வரி தாங்கும் திறன்" என்று சொசையா (Sir Josiah Stamp) கூறுகிறார். இவ் விளக்கம் குழப்பங்களுக்கு இட்டுச் செல்வதால் வரி தாங்கும் திறன் என்பது மாயை. கானல் நீர் போன்ற கருத்து என்ற குறிப்பிட்டு இக்கருத்தையே ஒதுக்கி விடலாமெனப் பரிந்துரைத்திருக்கிறார். இருப்பினும் தராதரமான வரி தாங்கும் திறன் என்ற கருத்து பயனுடையது என்றும் தால்டன் குறிப்பிடுகிறார். வரி தாங்கும் திறன் என்ற கருத்து தெளிவற்றதாகவும் குழப்பமானதாகவும் இருப்பதால் இக்கருத்தை நீக்கிவிட்டு "உத்தம வரவு செலவுத் திட்டம்" (Optimum budget) என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்று பேராசிரியர் மசுகிரேவு (Prof. Musgrave) குறிப்பிடுகிறார்.

வரி தாங்கும் திறனை மக்கள் தொகையின் அளவு, நாட்டு வருமானத்தின் அளவு, செல்வ வருமானப் பங்கீடு, வரியின் தன்மை, பொதுச் செலவின் தன்மை, வரிச் செலுத்துபவரின் உளப்பாங்கு, பண வீக்கம் அல்லது பணவாட்ட நிலை, அரசியல் நிலை, பொருளாதார வளர்ச்சி நிலை, வருமானத்தின் உறுதித்தன்மை போன்ற காரணிகள் நிருணயிக்கின்றன. மக்கள் அதிகமாக இருந்தாலும், நாட்டு வருமானத்தின் அளவு அதிகமாக இருந்தாலும், செல்வ வருமானப் பங்கீட்டில் ஏற்றத் தாழ்வுகள் அதிகமாக இருந்தாலும், நேர்முக மறைமுக வரிகளுக்கிடையே அதிகமான சமன்பாடு இருந்தாலும், நேர்முக மறைமுக வரிகளுக்கிடையே அதிகமான சமன்பாடு இருந்தாலும் உற்பத்தி அதிகரிக்கும் வகையில் அறிவார்ந்த பொதுச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டாலும், போர்க்காலங்களிலும், அவசரநிலை போன்ற நிலைகளிலும் மக்கள் விரும்பும் அரசியலார் ஆட்சியில் இருந்தாலும், வளரும், வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களிலும், வருமானம் உறுதியுள்ளதாக இருந்தாலும் வரி தாங்கும் திறன் மிகுதியாக இருக்கும். இவற்றிற்கு எதிரான சூழ்நிலைகளில் வரிதாங்கும் திறன் குறைவாக இருக்கும்.

இந்தியாவில் வரிதாங்கும் திறன் பற்றி இரு கருத்துகள் உள. பெருகி வரும் பொதுச்செலவு, திட்டமிட்ட வளர்ச்சி, வருமானப் பெருக்கம், திட்டங்களினால் பொதுமக்களுக்குக் கிடைக்கும் பேரளவிலான நன்மைகள், பணப் பொருளாதாரத்தின் பெருக்கம், பொதுவான பொருளாதார முன்னேற்றம் ஆகிய பல காரணங்களினால் இந்தியாவில் வரிதாங்கும் திறன் மிகுதியாகிக் கொண்டே வருவதால் இன்னும் மிகுதியாக வரி விதிக்க வாய்ப்புகள் உள்ளன என்று விவாதிப்பவர்கள் உளர். அதே நேரத்தில் பேரளவில் பல்கிப் பெருகியுள்ள வறுமை நிலை, பெரும்பகுதியாக உள்ள பணத் தொடர்பற்ற துறையில் செயற்பாடு, பன்னாட்டு வணிக வளர்ச்சி இன்மை, மக்களின் மனநிலையில் பேரளவிலான மாற்றமின்மை போன்ற நிலைமைகளைச் சுட்டிக் காட்டி வரிதாங்கும் திறன் இந்தியாவில் குறைவாக அளவிலேயே இருக்கிறது என்றும் பலரும் விவாதிக்கின்றனர்.

-என்.கே.பா.

**வருங்காலவியல் :** வருங்காலம் எப்படி இருக்கும் என்பதைக் கணிக்க இயலாது என்ற கருத்து நெடுங்காலமாக அறிவுலகில் நிலவி வந்தது. சமுதாயத்தில் எதுவும் முன்கூட்டியே கணிக்கப்படுவதில்லையாதலால் வருங்காலத்தில் இன்னது, இப்படி நடக்கும் என்று முடிவுசெய்ய இயலாது. காரல் மார்க்சு வருக்கப் போராட்டத்தின் விளைவாக முதலாளித்துவச் சமுதாயம் உடைந்து, சமதருமச் சமுதாயமும், அதைத் தொடர்ந்து பொதுவுடைமைச் சமுதாயமும் உருவாகும் என்ற கருத்தை வெளியிட்ட போது, மாக்சு வேபர் (கி.பி.1864 -1920) என்ற அறிஞர், எதுவும் திட்டமிட்ட முறையில் நிருணயமாக நடைபெறாது. ஆகவே, வருங்காலத்தில் சமுதாயம் இன்ன விதமாக, இப்படித்தான் அமையும் என்று அறுதியிட்டுக் கூறமுடியாது என்று கூறி மறுத்தார்.

ஆயினும், வருங்காலம் பற்றிய எண்ணங்கள் அறிஞர்கள் மனத்தில் தோன்றியே இருந்தன. வருங்காலம் எப்படி அமையும், வருங்காலத்தில் என்ன நிகழும் என்று அறிஞர் பலர் தம் எண்ணங்களை எழுத்து வடிவில் வெளியிட்டார்கள். எச்.சி.வெல்சு (கி.பி.1866 - 1946) 'கால இயந்திரம்' (Time Machine), 'வியக்கத்தக்க வருகை' (The Wonderful Visit), 'அறிய வியலா மனிதன்' (Invisible Man), 'வரவேண்டியன வற்றின் வடிவம்' (Things to come) முதலிய நூல்களில் மூலமாகவும், பெரியார் ஈ.வே.ராமசாமி 'இனிவரும் உலகம்' என்ற நூலின் மூலமாகவும், டாக்டர் மு.வரதராசனார் 'கி.பி.2000' என்ற நூலின் மூலமாகவும் வருங்காலத்தைப் பற்றிய தங்கள் கருத்தைப் படம் பிடித்துக் காட்டினர்.

அறிவியல் அடிப்படையில் வருங்காலத்தை ஆராயும் போக்கு 1980-களில் எழுந்தது. அப்போக்கின் விளைவாக வருங்காலவியல் (Futurology) என்ற அறிவியல் துறை தோன்றியது. அந்த அறிவியல் துறை சோவியத்து ஒன்றியத்திலும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் முன்னறிதல் (Prognosis) என்றும், அமெரிக்காவில் வருங்காலத்தின் தன்மை (Futurism) என்றும் கூறப்படுகிறது.

வருங்காலத்தைத் தெளிவாக உற்று ஆராய்வதே வருங்காலவியலின் நோக்கமாகும். வருங்காலம் எவ்விதம் அமையும், பல்வேறு நிகழ்ச்சிகள், செயற்

பாங்குகள், எவ்விதம் எந்தக் கோலங்களில் அமையும் அல்லது அமையாது என்று நாட்டின் - சமூகத்தின் போக்குகளை ஆராய்ந்து அதன் அடிப்படையில் வருங்காலத்தைப் பற்றிய உண்மைகளை (Hypothesis) முன்கூட்டியே ஆராய்ந்து தெரிவிக்கிறது வருங்காலவியல். இதனால், வருங்காலம் எவ்விதம் அமையக் கூடும் என்று நம்மால் புரிந்து கொள்ள முடிவதால், வருங்காலத்தின் நிச்சயமற்ற தன்மை குறைந்து விடுகிறது.

வருங்காலவியலில் வருங்காலம் எப்படி? வருங்காலத்தில் ஏற்படக்கூடிய வினாக்கள், சிக்கல், இடர்கள் வெளிச்சமிட்டு, அவற்றை எதிரேற்கக் கூடிய வாய்ப்புகளையும், வழிகளையும் கோடிட்டுக் காட்டுகிறது. வருங்காலத்தில் வினாக்களை, சிக்கல்களைப் படம் படித்துக் காட்டி அது மக்களைப் பயமுறுத்துவதில்லை. அவற்றை எதிரேற்கக் கூடிய வாய்ப்புகளையும், வழிமுறைகளையும் எடுத்துக் காட்டுகிறது. அதனால், வருங்காலத்தில் திட்டமிடப்பட வேண்டியதற்கு அது உதவுகிறது.

சமூகத் திட்டமிடல் என்பது ஒரு சிக்கலான செய்ற்பாங்கு. அதற்கு எதிர்காலத் தேவைகள் பற்றிய அறிவு தேவை. அது மட்டுமன்றி அந்தத் தேவைகளை நிறைவேற்றுவதில் ஏற்படக்கூடிய சிக்கல்கள், இக்கட்டுகள் ஆகியவற்றைப் பற்றிய முன்னறிவும் தேவை. அத்தகைய அறிவின் அடிப்படையில் தான் வருங்காலத்தில் ஆற்ற வேண்டிய செயல்களை, சாதனைகளைத் திட்டமிட முடியும். வருங்காலம் பற்றிய அறிவின்றி, வருங்காலத்திற்காகத் திட்டமிடுவது இயலாது. எனவே, வருங்காலம் சார்ந்த சமூகத் திட்டமிடலுக்கு வருங்காலவியல் அறிவு மிகவும் தேவையாகிறது. இதற்குச் சப்பான் நாடு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அங்கு வருங்காலம் பற்றிய ஆய்வுகள் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. வருங்காலத் தேவைகள் முன்கூட்டியே மதிப்பிடப்பட்டுச் செயல்கள் நடைபெறுகின்றன. சப்பானில் நிலக்கரி கிடைப்பதில்லை. ஆனால், நிலக்கரி இன்றி அதன் தொழில் துறை இயங்குவதில்லை அதன் தொழில் மயத்திற்கும், தொழிற் பெருக்கத்திற்கும் நிலக்கரி மிகவும் இன்றியமையாதது. அங்கு வருங்காலத்தில் தொழிற் பெருக்கத்தின் விகிதம் விரைவாக இருக்கும் என்று வருங்காலவியல் குறிப்பிடுகிறது. அதனால், தொழிற் பெருக்கத்தின் தேவையை நிறைவேற்றிட நிலக்கரிக் கிடைப்பு தட்டுப்பாடற்று அமைய வேண்டும் என்பதற்காகச் சப்பானில் 1986 -லிருந்து ஆசுத்திரேலியாவிலிருந்து தேவைக்கு அதிகமாக நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டுக் கடலினுள் சேமித்து வைக்கப்படுகிறது. வருங்காலத்தில் நிலக்கரி கிடைப்பதில் இடர்ப்பாடோ, தட்டுப்பாடோ ஏற்படாமல் இருப்பதற்காகவே இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அதே போன்று தனது வளர்ந்து வரும் கால்நடைகளின் வருங்காலத் தீவனத் தேவையைக் கணக்கிட்டு, சப்பான் மத்திய ஆப்பிரிக்காவுடன் மாட்டுத் தீவனத்திற்காக 90 ஆண்டுக் குத்தகை உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

சோவியத் ஒன்றியம் வருங்காலத் தேவைகளைக் கணக்கிட்டு எதிர்வரும் இருபத்தைந்து ஆண்டுகளுக்கென ஒரு திட்டம் தயாரித்துள்ளது. அமெரிக்காவிலும் வருங்காலத்தில் பல்வேறு துறைகளில் ஏற்படக் கூடிய சிக்கல்களை எதிரேற்கத் திட்டங்கள் தீட்டிட அந்நாட்டு அரசு பல நிறுவனங்களை ஏற்படுத்தியுள்ளது. சுவீடன் நாட்டில் அதன் பிரதமர் அலுவலகத்தில் வருங்காலத்துக்கென ஒரு செயலகமே நிறுவப்பட்டுள்ளது. இதேபோல வருங்கால வினாக்களைச் சமாளிக்கப் போலந்து நாடு '2000 குழு' (Committee 2000) என்றொரு குழுவை ஏற்படுத்தியுள்ளது. அது மட்டுமல்லாமல் ஒவ்வோர் அமைச்சகமும் அடுத்த இருபதாண்டுகளுக்கென ஒரு முன்னோக்கத் திட்டம் தீட்டிட வேண்டுமென ஆணை பிறப்பித்துள்ளது. இத்தகைய இருபதாண்டுத் திட்டம் அல்லாமல் எந்த அமைச்சகமும் அரசிடம் நிதியுதவி கேட்க முடியாது.

இதே அடிப் படையிலேயே இந்திய அரசும் ஒவ்வொரு துறைக்கும் வருங்காலத்துக்கென ஒரு முன்னோக்குத் திட்டம் தயாரிக்க முனைந்துள்ளது. எண்ணெய் வித்துகள், பால், தொலைத் தொடர்பு சாதனங்கள், மின்னணுக்கருவிகள் முதலியவை தொடர்பான வருங்காலத் தேவைகளை எதிரேற்கத் தொழில் நுட்பப் பணித் திட்டங்கள் (Technology Missions) அமைக்கப்பட்டுள்ளன. அவை எண்ணெய் வித்துகள், பால், தொலைத் தொடர்புச் சாதனங்கள், மின்னணுக் கருவிகள் தொடர்பான வருங்காலத் தேவைகளைக் கணக்கிட்டு, அவற்றின் உற்பத்தியைப் பெருக்கிடவும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தயாரிக்கப்பட்டுள்ளன.

வருங்காலவியல் வெறும் சோதிடம் போல எதிர் காலத்தைக் கணிப்பதில்லை. அது நிகழ் காலத்தில் நிகழும் போக்குகளை அடிப்படையாகக் கொண்டே வருங்காலத்தைக் கணித்துக் கூறுகிறது. இக்காலத்தில் மின்னணுக் கணிப்பொறிகளும், விண்வெளிக் கோள்களும் பல துறைகளில் பயன்படுத்தப்பட்டு வியக்கத் தக்க மாற்றம் எழுந்துள்ளது. 'மின்னணுப் புரட்சி' என்ற அளவில் ஒரு புதிய காலத்தை மின்னணுக் கணிப்பொறிகளும், செயற்கைத் துணைக் கோள்களும் ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்தியாவிலும் மின்னணுக் கணிப்பொறிகளையும், விண்வெளிக் கோள்களையும் பல துறைகளில் பயன்படுத்தும் போக்கு குறிப்பிடத்தக்க அளவில் முன்னேறியுள்ளது. விண்வெளிக் கோள்களும், மின்னணுக் கணிப்பொறிகளும் பல்வேறு துறைகளில் நாடு மேம்பாடு அடையப் பெரிதும் துணை புரியும். அவற்றின் துணையுடன் வானிலை ஆராய்ச்சி, பருவ மழை, காலநிலைமாறுதல் முதலிய தகவல்கள் மேம்பாடு அடைந்து வேளாண்மை உற்பத்திப் பெருக வழி பிறக்கும். செய்தித் தொடர்புத் துறையும் மேம்பட்டுப் பல்வேறு பகுதிகளில் எழும் புதிய செய்திகள், அனைத்தும் சேகரிக்கப்பட்டு, இயற்கை வளங்கள் நிருவாகம், தொழில், வேளாண்மை, மருத்துவம், சுகாதாரம், கல்வி, ஆராய்ச்சி தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு காண வழியேற்படும். மேலும், அவற்றின் துணையுடன் பொதுவான செய்தித் தொடர்புச் சாதனங்கள் அணுக முடியாத பகுதிகளுக்கு, நாட்டின் மூலை முடுக்குகளுக்குச் செய்திகளை எடுத்துச் செல்லவும் வழி பிறக்கும். தொலைத்தொடர்புத் துறையும் புதுமை அடைந்து நாட்டில் பல்வேறு பகுதிகளில், தொலைவிடங்களில் இருப்பவர்கள் விரைவாகவும், எளிதாகவும் செய்தித் தொடர்பும், பரிமாற்றமும் செய்து கொள்ள இயலும். மின்னணுக் கணிப்பொறிகள் மூலம் கல்வி முறை புதுமை அடைந்து கற்பிக்கும் முறையும், பயிலும் பாங்கும் கல்வியறிவு நிலையும் முன்னேற்றமடையும், அவற்றோடு பாதுகாப்பு, தொழில், மருத்துவம், விண்வெளி ஆராய்ச்சி, அறிவியல் ஆராய்ச்சி, போக்குவரத்து, பொழுதுபோக்கு, அலுவலக நிருவாகம் முதலிய துறைகளும் புதுமை அடைந்து மேம்பாடடையும். சுருக்கமாகச் சொன்னால் 'அனைத்தும் மின்னணு மயம்' என்கிற நிலையில் எல்லாத் துறைகளிலும் மின்னணுவின் செல்வாக்கு ஓங்கியிருக்கும்.

வேறொரு பிரிவிலும் எதிர்காலத்தில் இந்தியாவில் சிறப்பான மேம்பாடு ஏற்படும் என்று வருங்காலவியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். வருங்காலத்தில் இயற்கையில் கிடைக்கும் நிலக்கரி, பாறை எண்ணெய் (Petrol), இயற்கைவாயு முதலிய புதுப்பிக்க இயலாத புதைபடிவ எரிசக்திகள் (Fossil Fuels) அன்றிப் புதுப்பிக்கக்கூடிய சூரிய ஒளி, காற்று, கடல் அலை முதலியன மிகுதியான அளவில் பயன்படுத்தப்படும் என்கின்றனர்.

வருங்காலத்தில் மக்கள் தொகைப் பெருக்கத்தின் விளைவாக வீட்டு வசதித்தேவை மிகுந்திருக்கும். அதனால் வீட்டு வசதிப் பணி முடுக்கி விடப்படும். வீடு கட்டுவதற்குத் தேவையான மூலப் பொருட்களான செங்கல், சிமெண்டு, எஃகு கண்ணாடி, அலுமினியம், நெகிழி (Plastic) முதலிய பொருட்களுக்குத் தேவை அதிகமாக இருக்கும். ஆகவே, அவற்றின் உற்பத்திக்கு மரபுசார்ந்த இயற்கை எரிசக்திகளன்றி, மரபு சாராத, புதிய எரி சக்திகளையுங் கொண்டு மின்சார உற்பத்தி முடுக்கி விடப்படும். அறிவியல் முறையில் மின்சாரத்தைப் பாதுகாக்கவும், வீணாகாமல் பயன்படுத்தவும் வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டு எரிசக்தித் துறையில் தன்னிறைவு ஏற்படும் என்கின்றனர் வருங்காலவியல் வல்லுநர்கள்.

வருங்காலவியல், வருங்காலம் பற்றி வெறும் நம்பிக்கையை மட்டும் ஊட்டுவதில்லை. எச்சரிக்கையும் கொடுக்கிறது. போர் இடர் உலகைக் கவ்வியுள்ள நிலையில், போரில்லாத, அமைதியான உலகம் எதிர்காலத்தில் ஏற்பட வாய்ப்பில்லை என்று வருங்காலவியல் வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். ஒரு பக்கம் அணு ஆயுதப் படைக் கருவிகளைக் குறைப்பதில் வல்லரசுகள் குறிப்பாக அமெரிக்காவும், சோவியத்து ஒன்றியமும் ஈடுபட்டிருந்தாலும், அவை வருங்காலவியலின் துணைக் கொண்டு வருங்காலத்தில் போர் முறைகள், உத்திகள், படைக்கருவிகள் எவ்வாறு இருக்கும் என்பதை அறிந்து கொண்டு, அதற்கேற்பத் தத்தம் பாதுகாப்புத் துறையை வலுப்படுத்தி வருகின்றன. கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகள், ஏவுகணைகளைத் தாக்க வல்ல ஏவுகணைகள் முதலியவற்றை உற்பத்தி செய்கின்றன.

அதே போல வருங்காலத்தில் இந்தியாவின் மக்கள் தொகை வளர்ச்சி ஒரு தீராத சிக்கலாக,

வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாக இருக்கும் என்று வருங்காலவியல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். இந்தியாவின் மக்கள் தொகை கி.பி.2000 -இல் 100 கோடி அளவையும், கி.பி.2020-இல் 190 கோடி அளவையும், கி.பி.2060-இல் 204 கோடி அளவையும் எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் காரணமாக முன்னரே மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாக உருவாகியுள்ள நகர மக்கள் தொகைப் பெருக்கம், வீடின்மை, குடிசைப் பகுதிகள் பெருக்கம், குடி தண்ணீர்ப் பற்றாக்குறை, கல்வி வசதியின்மை முதலிய சிக்கல்கள் மேலும் கடுமையடையும். நகர மக்கள் தொகை கி.பி.2000 -இல் இப்பொழுதுள்ள (1985 - 86) 192 மில்லியன் எண்ணிக்கையிலிருந்து 326 மில்லியன் அளவை எட்டும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே வீட்டுப் பற்றாக்குறை இப்பொழுதுள்ள (1987) 32 மில்லியன் என்ற எண் ணிக்கையளவிலிருந்து 63.8 மில்லியன் என்ற அளவை எட்டும் என்றும் குடிசைப் பகுதிகளில் வாழ்வோரின் எண்ணிக்கை இப்பொழுதுள்ள (1987) 33 மில்லியன் என்ற அளவிலிருந்து 60 மில்லியன் அளவுக்கு உயரும் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. உலகில் மொத்தம் 950 மில்லியன் பேர் கி.பி.2000 -இல் கல்வியறிவில்லாதவர்களாக இருப்பார்கள் என்றும், அதில் ஏறத்தாழ 500 மில்லியன் பேர் (அதாவது 52.63 விழுக்காடு) இந்தியர்களாக இருப்பார்கள் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மக்கள் தொகையின் வளர்ச்சி விகிதத்தைக் கட்டுப்படுத்த மைய அரசு முனைப்பாகக் குடும்ப நலத் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. தேசிய சுகாதாரக் கொள்கைத் திட்டம் கி.பி.2000 -இல் பிறப்பு விகித்தை ஆயிரம் பேருக்கு 21 குழந்தைகள் என்ற அளவில் குறைக்கவும், நிகர இனப் பெருக்க விகிதத்தை ஒரு விழுக்காடாக நிலைப்படுத்தவும் குறியளவு நிருணயித்துள்ளது. இத்தகைய நிலைமையில் மக்கள் தொகைப் பெருக்கம் இந்தியாவில் வருங்காலத்தில் அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றில் மேம்பாட்டினால் மற்றைய துறைகளில் ஏற்படும் வளர்ச்சிப் பயன்களை விழுங்கிவிட்டு அவற்றை இல்லாதவாறு செய்து விடும் என்று வருங்காலவியல் வல்லுநர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஒரு வினாவாகவே அடுத்த நூற்றாண்டிலும் நீடிக்கும் என்கின்றனர். வருங்காலத்தில் வாழ்க்கை வாய்ப்பு வள எதிர்பார்ப்பில் உயர்வினால் முதியோர்களுடைய எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமாதலால் முதியோர்களுடைய சுமை அதிகரித்து, அவர்களைப் பேணுவதும், பாதுகாப்பதும் சிக்கலாக அமையும் என்று வருங்காலவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

- சி.என்.ந.

**துணை நூல்கள் :**

1. Berry, Adrian, **The Next Ten Thousand Years: A Vision of Mans's Future in the Universe**, Saturday Review Press, E.P. Dutton and Co., Inc. 1974.

2.Gunn, James E., **Man and the Future**, Lawrance University Press, Kansas, 1968.

3. McHale, John, **The Future of Future**, George Brazeller, New York, 1969.

வருங்கால வைப்பு நிதி: இது ஒரு சமுதாயப் பாதுகாப்புத் திட்டமாகும். பணியிலிருப்போர் தங்கள் வருங்காலத் தேவையைக் கருதி ஊதியத்திலிருந்து ஒரு பகுதியை மாதந்தோறும் சேமித்து வைக்க உதவுகிறது. தொழிலாளர்கள் சட்டம் (1952) வருங்கால வைப்பு நிதி (Providunt Fund), குடும்ப ஓய்வுகால ஊதியம், வைப்பு இணைந்த காப்பீடு போன்ற திட்டங்களுக்கு வகை செய்கிறது. தொழிற்சாலைகள், பிற நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இந்நிதி பெரிதும் உதவுகிறது. இது 1952 -ஆம் ஆண்டு நவம்பர் முதல் நாள் நடைமுறைக்கு வந்தது. தொடக்கக் காலத்தில் சிமெண்டு, வெண்சுருட்டு, மின்சாரம், இரும்பு போன்றவற்றை உற்பத்தி செய்யும் தொழில்களுக்குத்தான் இது தொடங்கப்பட்டது. பின்னர், 100 தொழில்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

மேலும், இது 1956 -ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்ட சட்டத்தின்படி தேயிலை உற்பத்தி சுரங்கத் தொழில் போன்றவற்றிற்கும் பரிந்துரை செய்யப்பட்டது. முதலில் ஐம்பது தொழிலாளர் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் மட்டும் இச்சட்டம் கடைப்பிடிக்கப்பட்டது. பின்னர், 1960 -ஆம் ஆண்டு திசம்பர் மாதம் முதல், இருபதின்மர் அல்லது அதற்கும் மேற்பட்டோர் பணிபுரியும் தொழிற்சாலைகளுக்கும் பரிந்துரை செய்யப்பட்டது. மாத ஊதியம் உரூ.300 உள்ள பணியாளர்களுக்கு இத்திட்டம்

கொண்டு வரப்பட்டது. பின்னர், அத்தொகை உரூ.500-க்கும் இப்பொழுது உரூ.1000 - க்கும் உயர்த்தப்பட்டது.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம் : மைய அரசு தன்னுடைய அதிகாரமுறையான அறிக்கை மூலம் இத்திட்டத்தைத் தெரிவித்து, எல்லா வகை நிறுவனங்களிலுமுள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம். தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டத்தின் கீழ் (Employees Provident Fund Scheme), ஒரு நிதி நிறுவப்பட்டு, மைய அரசுக் குழுவால் நிருவகிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் விதிகள் எதிர்கால நாளிலிருந்து அல்லது சென்ற கால நாளிலிருந்து நடைமுறைப்படுத்தலாம். இத்திட்டம் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும், நிறுவனங்களுக்கும் பொருந்தும். எனினும் சட்டத்தின் பிரிவுகள் 16, 17 மூலம் சில நிறுவனங்கள் விதிவிலக்குப்பெறுகின்றன.

அளிப்பு: இச்சட்டத்தின் 6-ஆம் பிரிவின்படி எல்லாத் தொழிலதிபர்களும், பணியாண்மையர்களும் (Employer) இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி அதற்காகத் தங்களின் அளிப்பையும் (Contribution), பணியாளர்களின் அளிப்பிற்காக அவர்களின் ஊதியத்திலிருந்து கழிக்கப்பட்டத் தொகையையும் இத்திட்டத்திற்குத் தவறாமல் அளிக்க வேண்டும். சட்டமுறையான அளிப்பு பணியாளர்களில் அடிப்படை ஊதியம் விலைவாசிப்படி போன்றவற்றில் 6¼ விழுக்காடு ஆகும். இதே விழுக்காடு தொகை வேலைக்கமர்த்துபவரும் அளிக்க வேண்டும். பின்னர், 1963 -ஆம் ஆண்டிலிருந்து இது 8-1/3 விழுக்காடாக உயர்த்தப்பட்டது. பஞ்சப்படியில் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்ட உணவு தொடர்பான சலுகைகளின் உரொக்க மதிப்புக் கூடியுள்ளது. தக்கவைப்புப்படி (Retained Allowances) என்பது தொழிற்சாலை இயங்காத நாள்களில் தொழிலாளர்களைத் தக்கவைக்கும் பொருட்டு அளிக்கப்படும் படியாகும்.

அளிப்பைப் கணக்கிடும்போது பணியாளரின் அடிப்படை ஊதியம், விலைவாசிப்படி, தக்கவைப்புப்படி ஆகியவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும். அடிப்படை ஊதியம் போன்றவை நாள், வார, மாத அடிப்படையில் செலுத்தப்படலாம். மேலும் அளிப்பு உரூபாயின் மதிப்பில் குறைந்த பின்னத்தில் வந்தாலும் அதை முழு உரூபாயாக எடுத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக, வருங்கால வைப்பு நிதிகள், தொழிலாளர் வேலைக்கமர்த்துபவர் ஆகியவர்களின் பேராளர்களைக் கொண்ட ஒரு குழுவின் பாதுகாவலரிடம் (Trustees) ஒப்படைக்கப்படுகின்றன. சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிகளின்படி அப்பாதுகாவலர்கள் அதனை நிருவகிக்கின்றனர்.

பிற வகைகள் : வருங்கால வைப்பு நிதியின் பிற வகைகளாவன. சட்ட முறையான வருங்கால வைப்பு நிதி (Statutory Provident Fund). ஏற்றுக்கொண்ட வருங்கால வைப்பு நிதி (Recognised Provident Fund), பொது வருங்கால வைப்பு நிதி (Public Provident Fund), ஏற்றுக் கொள்ளப்படாத வருங்கால வைப்பு நிதி (Unrecognised Provident Fund), ஏற்றுக் கொள்ளப்பட்ட முதியோர் வைப்பு நிதி (Approved Superannuation Fund).

சட்ட முறையிலான வருங்கால வைப்பு நிதி: இது 1952 ஆம் ஆண்டு வருங்கால வைப்பு நிதிச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்ட வருங்கால நிதியாகும். நகராட்சி, இருப்புப்பாதைத்துறை, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றின் பணியாளர்கள் நன்மையைக் கருதி இது நிறுவப்பட்டது. இதுவும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதியாகும். இது 1952 - ஆம் ஆண்டின் சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிகளின் படி இயங்கி வருகிறது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வருங்கால வைப்பு நிதி: நிறுமம் அல்லது வேலைக்கு அமர்த்துவோர்களால் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. வருமான வரிச்சட்டத்தின்கீழ் வருமான வரி ஆணையரால் இது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். இவர்கள் சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் அல்லது விதிகளை ஆணையர் ஏற்க வேண்டும் அல்லது விதிகளை மாற்றிட ஆணையர் ஒப்புதல் வேண்டும். இந்நிதியின் விதிமுறைகளை வருமானவரிச் சட்டத்தின் நான்காவது அட்டவணைப் பகுதி 'அ' வில் காணலாம்.

பொது வருங்கால வைப்பு நிதி : இந்நிதியை 1.7.1968-இல் அரசு ஏற்படுத்தியது. ஒரு நிறுவனத்தின் பணியாளராக இல்லாத காரணத்தால் வருங்கால வைப்பு நிதியில் பங்கேற்க முடியாதவர்களான வழக்கறிஞர், மருத்துவர், கணக்கர், வணிகர்

போன்றோர்களுக்கு வாய்ப்புத் தந்திட இந்நிதி தொடங்கப்பட்டது. உச்சவரம்பை எட்டாத நிலையில், ஏற்கனவே ஒரு வருங்கால வைப்புநிதித் திட்டத்தில் பங்கேற்றிடும் ஊதியம் பெறும் பணியாளர்களும் இதில் பங்கேற்கலாம். அளிப்பு, இதன் உறுப்பினர்களால் மட்டும் வழங்கப்படுகிறது. காரணம் வேலைக்கு அமர்த்துவோர் இங்கில்லை. மேலும், வேலைக்கு அமர்த்துவோர் இருந்தாலும் இவர்களுக்காக அவர்கள் அளிப்பு வழங்குவதில்லை. அளிப்பு ஆண்டுக்காண்டு மாறிடலாம். ஆனால், குறைந்த அளவு ரூ100-உம் உயர்ந்த அளவு ரூ.20,000-உம் ஓர் ஆண்டுக்கு அளித்திடலாம். இவ்வருங்கால நிதிக்கணக்குகளை அரசு வங்கியின் எந்தக் கிளையிலும் தொடங்கிடலாம். தொடங்கிய நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்கு இதைத் தொடர வேண்டும். அளிப்பு ஐந்து ரூபாய் மடங்காக இருக்க வேண்டும். மாத இரு முறைதான் பணம் போடலாம். நிதி செலுத்துவோர் இறந்துவிட்டால் அவர் குறிப்பிட்டுள்ள ஆளுக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டும்.

ஏற்றுக்கொள்ளப்படாத வருங்கால வைப்பு நிதி : வேலைக்கு அமர்த்துவோர் தங்களின் தொழிலாளர்களுக்கு இந்நிதியைத் தொடங்கி வைப்பர். ஏற்கப்பட்ட வருங்கால வைப்பு நிதிக்குப் பதிலாக இது ஏற்படுத்தப்படுகிறது. வருமானவரிச் சட்டம் இதை ஏற்றுக் கொள்வதில்லை. வேலைக்கு அமர்த்துவோரும் தொழிலாளரும் இதற்குத் தங்கள் தொகையை அளிப்பர். அதற்குரிய வட்டி தனித்தனியே வரவு வைக்கப்படுகிறது. ஆனால், இந்தப் பணத்தை வேலைக்கு அமர்த்துவோர் விருப்பப்படிதான் தொழிலாளர்களுக்குத் திருப்பித்தரப்படும்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட முதியோர் நிதி : வேலைக்கமர்த்துவோரின் விண்ணப்பத்தின் பேரில் வருமான வரி ஆணையர் இதை ஏற்றுக் கொள்கிறார். வருமான வரிச் சட்டத்தின் நான்காவது அட்டவணைப் பகுதி 'ஆ' இதன் விதிமுறைகளை விளக்குகிறது. இதற்கு வருமானவரி ஆணையர் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

- கே.என்.இரா.

**துணை நூல்கள் :**

1. Naidu, B.B., **Law and Practice of Income Tax**, K.C.S. Design & Co., Madras, 1980.

2. Kapoor, N.D., **Elements of Industrial Law**, Sultan Chand & Sons, New Delhi, 1988.

**வலக்கைப் பழக்கம் :** உடலின் அமைப்பிலும், செயலிலும் பொதுவாகக் காணப்படும் இடக்கை, வலக்கைப் பழக்கத்தின் ஒத்த தன்மை முழுமை பெற்றிடவில்லை. இதில் குறிப்பிடத்தகுந்த வேறுபாடு என்னவெனில் வலப்பக்கம், குறிப்பாகக் கைப்பகுதியில் காணப்படும் உன்னத வளர்ச்சியைக் கூறலாம். பொதுவாக ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட கையையும் காலையும் மிகுதியாகப் பயன்படுத்துவது இயல்பாக உள்ளது. கண்களை மூடிக் கொண்டு நடக்கும் மனிதர்களுள் சிலர் திரும்பத்திரும்ப வலமாகவும், சிலர் இடமாகவும் சுற்றிச்சுற்றி வருதலைக் காணலாம். இதில் வலக்கைப் பழக்கம் பொதுவாகவும், இடக்கைப் பழக்கம் ஒரு விதிவிலக்குப் போலவும் அமைந்திருப்பதில் ஐயமில்லை. ஆதிகால மனிதர்களின் வாழ்க்கை முறை அவர்களின் வலக்கைப் பழக்கத்தின் ஆதிக்கத்தினையும், வரலாற்று ஏடுகள் முற்காலத்திலிருந்தே இடக்கைப் பழக்கம் பயனற்று இருப்பதனையும் தெளிவாக்குகின்றன.

ஒருவரிடம் மிகுதியாகவும் இன்னொருவரிடம் முறையாகவும் பல்வேறு அளவுகளில் வலக்கைப்பழக்கம் ஏற்படினும் இடக்கைப் பழக்கம் தோன்றாமலே இருந்துவிடுவதில்லை. அது நூற்றில் இருவரைப் பாதிப்பதாகக் கூறப்படுகின்றது. இடக்கைப் பழக்கத்தினைப் பீச்சாங்கைப் பழக்கம் என்பதுண்டு. இரண்டு கைகளையும் சமமாகப் பயன்படுத்தக் கூடியவர்கள் இரு கைப் பழக்கத்தினர் எனப்படுவர். அத்தகையவர்கள்கூட துல்லியமாகவும், நுட்பமாகவும் செயலாற்றும் போது ஏதாவது ஒரு கையினையே பெரிதும் பயன்படுத்துவர். குறிப்பிடத்தக்க எண்ணிக்கையில் அவர்கள் பெரும்பாலும் இடக்கைப் பழக்கத்தினராயிருந்து வலக்கைப் பழக்கத்தினைக் கற்றவராயிருக்கின்றனர்.

வலக்கைப் பழக்கத்தினை விளக்க முற்படும் கொள்கைகளுள் சில, உடல் உள்ளுறுப்புகளில் அமைப்பினைக் காரணம் காட்டுகின்றன. உள்ளுறுப்புகள் அமைந்துள்ளவிதம் உடலில் ஒருபக்கம் மட்டும் மிகுதியாக வளர்ச்சியடையுமாறு செய்கின்றது. அது தசைகளில் காரணமாகத் தன்னிச்சையாக ஏற்படுவதெனச் சில கொள்கைகள் கூறுகின்றன. வலக்கைப் பழக்கம் பலரிடையே பரவிக் காணப்படுவதற்குக் கல்வியும், முயன்று பெற்றிடும் பழக்க வழக்கங்களுமே முக்கிய காரணங்களாகச் சிலர் வலி

யுறுத்துகின்றனர். வேறு சிலர் அது பிறப்பிலே வந்த வேறுபாடு என்கின்றனர். அவ்வாறான பல்வேறு கருத்துகளுக்குள் மிக்க ஆதாரங்களைக் கொண்டது - மூளையின் இடப்பகுதியில் சிறப்பான வளர்ச்சி வலக்கைப் பழக்கத்திற்குக் காரணமாகும் என்ப தாகும். மக்களுடைய பேச்சுப் புலன்களில் கட்டுப் பாட்டு மையம் மூளையின் இடது பிளவில் அமைந் திருப்பதே இதற்கு அடிப்படையாகும். விதிவிலக் காக ஒரு சில நிகழ்ச்சிகளில் இடக்கைப் பழக்க முடையோருக்கு ஏற்படும் மறதி நோய்க்கான கார ணம் மூளையின் வலப்புறப் பிரிவினால் ஏற்படுவ தாகக் கண்டறியப்பட்டுள்ளது. மூளையின் வலப் பகுதி மிகுந்த எடையுள்ளதாக இருப்பின் அது இடக் கைப் பழக்கத்திற்குக் காரணமாக அமைகிறது. மூளை யின் இடப்பகுதி நன்றாக வளர்ச்சி அடைவதற்குக் காரணம் நல்ல குருதி ஓட்டமும், சத்துப் பொருட்கள் கிடைப்பதுமாகுமென்பதைத் தவிர வேறு காரணங் கள் சொல்ல முடியவில்லை. தொடக்கத்தில் எல்லோ ரிடமும் சிறு அளவில் காணப்படும் வலக்கைப் பழக்கம் கல்வி, சமூகம், தொழில் ஆகிய காரணங் களால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்டு இறுதியில் இப் பழக்கம் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துவிடு கிறது. தொடக்கத்தில் சிறுவர்கள் வலக்கைப் பழக்க முடையவராக இருந்தனரா அல்லது இடக்கைப் பழக்கமுடையவராக இருந்தவரா என்று கண்டறியச் செய்யப்பட்ட சோதனைகள் சரியான முடிவினை அளிப்பதாக இல்லாவிடிலும், வலக்கைப் பழக்கம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்படுகின்றது என அறிய முடிகிறது.

- கி. இரா.

**வலி நீக்கி** : உளமருத்துவ வல்லுநர்கள் (Psychiatrists) உளநோய்ப் பிணியாளர்களுடைய உளப் பிணியைப் பெரும்பாலும் மாத்திரைகளைக் கொண்டு குணப்படுத்துகின்றனர். இவ்வாறு உளப் பிணிக்குப் பயன்படுத்தப்படும் மாத்திரைகளை மூன்று முக்கிய வகைகளாகப் பிரிக்கலாம். அவை யாவன :- *(1)* எதிர் உளப்பிணி மாத்திரைகள் (Anti Psychotic drugs) அல்லது பெரிய வலி நீக்கிகள் (Major tranquilisers), *(2)* எதிர் உள நரம்புப் பிணி மாத்திரைகள் (Anti - anxiety drugs) அல்லது சிறிய வலி நீக்கிகள் (Minor tranquilisers), *(3)* எதிர் சோர்வு மாத்திரைகள் (Anti depressant drugs). இக்கட்டுரையில் முதலிரண்டு மாத்திரை வகைகளைப் பற்றி அறியலாம்.

*(1)* பெரிய வலி நீக்கிகள் : பல நூற்றாண்டுகளாக இந்தியாவில் உளநோய்கள் பலவற்றிற்கு இராவுல்ப்பியா (Rauwolfia) என்ற செடியைப் பயன் படுத்தி வந்தனர். இந்த மூலிகை வீறு கிளர்ச்சியுடை யோர் (Manics), மனச்சிதைவுற்ற பிணியாளர்கள் (Pschizophrenics) ஆகியோர் தம் நோயைக் குணப் படுத்தப் பெரிதும் பயன்படுகிறது என்பதை 1943-ஆம் ஆண்டு வெளிவந்த இந்திய மருத்துவ வெளியீட்டுக் குறிப்பு ஒன்று தெரிவிக்கிறது. மற்றொரு முக்கிய பெரிய வலி நீக்கியானது பெனோதைசின் (Phenothiazine) எனப்படும் குளோர்புரோமைசின் (Chlorpromazine) ஆகும். இராவுல்ப்பியா பிரிவைச் சார்ந்த பெரிய வலி நீக்கி மாத்திரைகள் மூளை நரம்பு முடிச்சுக்குக் கீழ் உள்ள (Hypothalamus) சில முக்கிய மையங்களைத் தாழ்த்தி அதன் மூலம் உளப்பிணி யாளர்களுக்கு உளத்தெளிவைத் தரும். பெனோ தைசின் என்ற வலி நீக்கி மூளைத்தண்டில் (Brain Stem) இருக்கும் வலை அமைப்பு எழுச்சி மண்டலத்தைத் (Reticular activating system) தாழ்த்தி உளப்பிணியாளரை அமைதிப்படுத்தும்.

குளோர்புரோமைசின் ஐடிரோ குளோரைடு (எலார்காக்டில் என்ற மாத்திரையில் காணப்படும் வலி நீக்கி மருந்து) என்ற பெரிய வலி நீக்கி 1952-ஆம் ஆண்டு உள மருத்துவத்தில் முதலில் பயன்படுத்தப் பட்டது. இதைப் பெரிதும் பயன்படுத்திய உள மருத்துவர்கள் இலாப்ரிட்டு (Laborit), இயூக்னார்டு (Huguenard) என்பவர்களாவர். அம்மருந்து குருதி அழுத்தக் குறைப்பையும் வெப்பக் குறைப்பையும், குமட்டல், வாந்தி முதலியவற்றையும் எதிர்த்துச் செயற்படும். அது ஒருவரைப் பெரிதும் அமைதிப் படுத்தும் தன்மையைக்கொண்டது. மயக்க மருந்து, போதை மருந்து, மது போன்றவை எவ்வாறு மூளையைப் பாதிக்குமோ அவ்வாறே இதுவும் செயற்படுவதாகக் கருதப்படுகிறது.

குளோர்புரோமைசின் பயன்படுத்துவதற்கான முக்கிய காட்டிகளாவன:-

1. வலி தணிக்கி (Sedative) : 50 - 100 மி.கி.வலுவுள்ள மாத்திரையை இரவு வேளையில் உட்கொண்டால் அது தூக்கத்தை உண்டாக்கும்.

2. ஒரு சிறிய வலி நீக்கியாக (Minor tranquiliser): 10 - 25 மி.கி. வலுவுள்ள மாத்திரையாகத் தினந்தோறும் மும்முறை உட்கொண்டால் அது நரம்புத் தளர்ச்சியைப் போக்குகிறது. இம்முறை ஒரு நலனைக் கொண்டிருக்கிறது. அந்நலனானது இம் மாத்திரை, தன்னை உட்கொள்பவர்களைத் தனக்கு அடிமைப்படுத்தாது.

3. மிகுந்த கிளர்ச்சியும் உளத் தளர்ச்சியும் மிகுதியாக ஒருவருக்கு இருந்தால் குளோர்புரோமைசின் அந்நிலையைத் தணிக்க மிகவும் பயனுடையதாக இருக்கிறது.

4. இன்புலன்காட்சி (Hallucination) இருக்கும் உளப் பிணியாளர்களுக்குத் தொடர்ந்து நீண்ட காலம் தினமும் 200 - 600 மி.கி. வலுவுள்ள குளோர்புரோமைசினைக் கொடுத்து வந்தால், அப்பிணியாளர்கள் முதலில் நோய்க்குறிகளிலிருந்து (Symptoms) விடுபட்டுப் பின்பு அவர்கள் மறுபடியும் சமூகத்துடன் ஒத்து வாழ அது பெரிதும் உதவும்.

**பக்கவிளைவுகள் :** குளோர்புரோமைசின் மிக விரைவாக உளப்பிணியைப் போக்குவதில் செயற்பட்டாலும் அது சில பக்க விளைவுகளை (Side effects) உண்டு பண்ணுகிறது. அவற்றுள் ஒன்று இடைக்கால மஞ்சள் காமாலை (Temporary Jaundice). அது எவ்விதப் பெரிய கல்லீரல் கோளாறுமின்றித் தோன்றும். பிணியாளருக்குக் குளோர்புரோமைசின் கொடுப்பதை நிறுத்தினால் மஞ்சள் காமாலை மறையும். சில சமயங்களில் குளோர்புரோமைசின் குருதியிலுள்ள வெள்ளை அணுவின் எண்ணிக்கையை மிகுந்த அளவில் குறைத்து அம்மனிதர்களைத் தொற்றுநோய்க் கிருமிகளுக்குப் பலியாகச் செய்யலாம். சிலரது உடல் இம்மருத்தைச் சிறிதுகூட ஏற்றுக்கொள்ளாமல் போவதுண்டு. சிலர் இம்மருந்தை உட்கொண்டவுடன் தலை சுற்றி மயங்கிக் கீழே விழுந்துவிடுவதும் உண்டு. பெண்களுக்கு மார்பகங்கள் பெருத்துப்பால் வரத் தொடங்கி விடுவதும் உண்டு. சிலருக்குப் பார்கின்சானிசம் (Parkinsonims) என்ற மூளைத் தொடர்பான நரம்பு நோய்க்குறி தோன்றுவதும் உண்டு. இவ்வாறு பல பக்க விளைவுகளைக் குளோர்புரோமைசின் தோற்றுவிக்கலாம். முதலில் இவ்விளைவுகளைப் பார்த்து இம்மருந்தை உடனடியாக நிறுத்தி விட்டால் பக்க விளைவுகள் எவ்வித நிலையான பழுதினையும் உண்டாக்கா.

மற்றொரு பெரிய வலி நீக்கியான இரெசர்பின் (Reserpine - இராவுல்பியா செடியிலிருந்து தயாரிப்பது) பெரும்பாலும் குறைவான பக்க விளைவுகளையே உண்டாக்குகிறது. அவை மூக்கில் சளி பிடித்து ஒழுகுதல், சோர்வு உணர்ச்சி, தூக்கத் தன்மை ஆகியவை ஆகும். ஒரு சில சமயங்களில் முகம் அல்லது பாதங்கள் நீர்க்கோத்துக்கொண்டு வீக்கமடையலாம்.

**2. சிறிய வலி நீக்கிகள் :** சிறிய வலி நீக்கிகள் பொதுவாக மனிதர்கள் எப்போதாவது தொடர்ந்து சில நாள்கள் நரம்புத் தளர்ச்சி அல்லது நெருக்கடி நிலையில் இருந்தால் அவர்களுக்குத் தரப்படுகின்றன. இவை நல்ல தூக்கத்தையும் ஓய்வினையும் தரவல்லன. எனவே, உளப்பிணியாளர்கள் (Psychotics) அனைவருக்கும், மது அருந்தும் மனிதர்களுக்கும் இவை தரப்படுகின்றன. இவை, பெரிய வலி நீக்கிகளைக் காட்டிலும் குறைந்த பக்க விளைவுகளை உண்டாக்குகின்றன. அவற்றைப் பொருட்படுத்தாமல் தொடர்ந்து இச்சிறிய வலி நீக்கிகளைக் கொடுத்து வந்தால், அவை நாளடைவில் பல சிக்கல்களை உண்டாக்கலாம்.

பொதுவாக உறக்கத் தன்மையை (Drowsiness) உண்டாக்குகிறது. நீண்ட நாள் தொடர்ந்து பெரிய அளவில் சிறிய வலி நீக்கிகளைக் கொடுத்து வந்து திடீரென நிறுத்தி விட்டால் தூக்கமின்மை, நடுக்கம், இல்புலன்காட்சி, காக்கா வலிப்பு முதலியவை உண்டாகின்றன. கருத்தரித்திருக்கும் பெண்களுக்கும், 6 வயதுக்குக் கீழான குழந்தைகளுக்கும், சோகப் பிணியாளர்களுக்கும் (Depressed Patients), எப்பொழுதும் கூர்கவனத்துடன் இருந்து செயல்புரிய வேண்டிய பணியாளர்களுக்கும் இம்மருந்துகள் தரப்படுவதில்லை. பெரிய வலி நீக்கிகளைப் போன்றே இச்சிறிய வலி நீக்கிகளையும் மதுவுடன் சேர்த்துக் கொடுக்கக்கூடாது. சில முக்கிய சிறிய வலி நீக்கிகளாவன மில்டவுன் (Miltown), இலிப்ரியம் (Librium), வேலியம் (Valium) ஆகியவை ஆகும்.

வலி நீக்கிகள், சில பக்க விளைவுகளை உண்டாக்கினாலும் பற்பல உளப் பிணிகளுக்கும் உளவழி நரம்புப் பிணிகளுக்கும் நன் மருந்தாகப் பயன்படுகின்றன. குறிப்பாகக் கவலை அல்லது தவிப்பு நோய் (Anxiety) வலி நீக்கிகளால் பெரிதும் குணமடைகிறது. வலி நீக்கிகள் திரும்பும் மனிதனை இயல்பான நிலைக்குக் கொண்டு வந்து ஒழுங்காகச் செயற்பட வைக்கின்றன. பெரும்பான்மையான உள மருத்துவர்கள் வலி நீக்கிகளை முதலில் கொடுத்துப் பின்பு அப்பிணியாளர்களுக்கு அறிவுரை (Counselling) கூறுகிறார்கள். இத்தகைய முறை மிகவும் பயனுடையதாகத் தெரிகிறது. இருந்தாலும் சில பிணியாளர்கள் வலி நீக்கி மருந்துகளே வேண்டிய உள அமைதி தருவதால் ஆலோசனைக்கு வராமல் எப்போதும் வலி நீக்கி மருந்துகளைச் சார்ந்தே இருந்து விடுகின்றனர். எனவே, அவர்தம் உளப் பிணிக்கு அடிப்படைக் காரணமாக இருக்கும் உளப் போராட்டங்களைப் பற்றியோ அவர்கள் வாழ்வில் அடைந்துள்ள வெறுப்புப் பற்றியோ தெரியாமல் போய்விடுகின்றது.

வலி நீக்கிகள் தொடர்ந்து நீண்ட காலம் எடுத்துக் கொண்டாலும் அடிமைப்படுத்தா. எனவே அதிக நாள் தொடர்ந்து எடுத்துக்கொள்ளலாம். இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட வலி நீக்கியையே தொடர்ந்து நீண்ட காலம் எடுத்துக்கொண்டால் அது பயனற்றுப் போய்விடும். எனவே வேறோரு வலி நீக்கியை அதற்குப் பதிலாகத் தரலாம். ஆனால், வலி நீக்கிகள் பல பக்க விளைவுகளை ஏற்படுத்துவதால் உள மருத்துவர் தம் மேற்பார்வையில் வலி நீக்கிகளை உட்கொள்ள வேண்டும்.

**துணை நூல்கள் :**

1. Strange, J.R., **Abnormal Psychology,** TMH, Edition, New Delhi, 1965.

2. Trettowan, W.H., **Psychiatry,** 4th Edition, Cox & Wyman Ltd., London, 1979.

வலியுறுத்தல் கொள்கைகள் : ஒருவருடைய நடத்தையை இரு வழிகளில் மாற்றவோ திருத்தவோ செய்யலாம். அந்நடத்தையை மிகுதிப் படுத்துவது ஒரு வழி, குறைப்பது மற்றொரு வழியாகும். ஒரு செயல் அல்லது நடத்தையை மிகுதிப் படுத்த வலியுறுத்தல் (Reinforcement) தேவையாகும். எடுத்துக்காட்டாக, நகைச்சுவைத் துணுக்கு சொல்லுதல். இதை மிகுதிப்படுத்த நகைப்பதை வலியுறுத்துவதாகும். ஒரு நடத்தையைக் குறைக்க வேண்டுமானால் வலியுறுத்தலைத் திரும்பப் பெறுதல் அல்லது அதற்குத் தண்டனை அளித்தல் ஒருவழியாகும்.

வலியுறுத்தல் என்பது, ஒரு செயல் அல்லது நடத்தை திரும்பத் திரும்ப நிகழ ஊக்குவித்துதவுவதற்கு, வாய்ப்பாக அந்நடத்தையைத் தொடர்ந்து நிகழும் ஏதேனும் ஒரு நிகழ்ச்சி ஆகும். வலியுறுத்தல், உடன்பாடு, எதிர்மறை என்ற இரு வகையிலும் அமையும்.

உடன்பாட்டு வலியுறுத்தலில், நடத்தையை ஊக்குவிக்கும் வகையில், அந்நடத்தை அல்லது செயலுக்குப் பின்னர் ஒரு பாராட்டுத் தூண்டுதல் அமையும். எதிர்மறை வலியுறுத்தல், அந்நடத்தையின் பின்னர் வெறுப்புத் தரும் தூண்டுதலை நீக்குவதன் மூலம் அமையும். விலங்குகளைப் பழக்குவோர் உடன்பாடு வலியுறுத்தலையும் எதிர்மறை வலியுறுத்தலையும் பயன்படுத்துவர். எடுத்துக்காட்டு, அடுத்த பக்கமுள்ள உணவை உண்ண நாய் குறுக்கே உள்ள தடையைத் தாண்டுவதற்குப் பயிற்சி அளிக்கப்படுவதுஆகும். இது உடன்பாட்டு வலியுறுத்தல் முறை. தடையாக உள்ள மின் தாக்குதலைத் தவிர்க்க, தாண்டுவதற்கு நாய் பயிற்றுவிக்கப்படுவது எதிர்மறை வலியுறுத்தல் முறை. இவ்விரு முறைகளினாலும் தடையைத் தாண்டும் செயல் அல்லது நிகழ்ச்சி வலிவூட்டப்படுகிறது.

1. வலியுறுத்தல் திறம்பட அமைய வேண்டுமானால் அதற்குச் சரியாக நேரம் கணிக்கப்பட வேண்டும். அதாவது, நிகழ்வை ஒட்டி உடனடியாக வலியுறுத்தல் இடம்பெறல் வேண்டும். அது வலியுறுத்தும் குறிக்கோளுடன் அமைதல் வேண்டும்.

நிகழ்வுக்கு முன்னதாக வலியுறுத்தல் இடம் பெற்றாலும் அது நிகழ்ச்சியை (நடத்தையை) ஊக்குவிக்கப் பயன்படாது. மிகவும் தாமதமாக இடம் பெற்றாலும் எதற்காக அந்த வலியுறுத்தல் என்பது உணர முடியாது. எனவே, வலியுறுத்தலின் நேரம் மிக முக்கியமாகும்.

2. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு வலியுறுத்தல் வேண்டுமெனில், அந்நிகழ்ச்சி இடம்பெற வேண்டியது முதல் தேவையாகும். அப்பொழுதுதான் அது

மறுமுறை நிகழும் வாய்ப்பு மிகைப்படுத்தப்படும். இதைப் பல வழிகளில் நிகழ்த்தலாம். 1. ஆய்வுக்கு உரியவரைப் பல நிகழ்ச்சிகளுக்கு ஊக்குவித்து ஒருவருக்கு வேண்டிய நிகழ்ச்சியைக் கண்டு வலியுறுத்தலாம். 2. ஊக்குவித்தலினால் மட்டும் பயன் தரவில்லை என்றால், பழைய நிகழ்ச்சிகளை (தடைகளை) நீக்கலாம். 3. மாதிரியாக நடந்து காட்டலாம். 4. உருவாக்கலாம் 5. நிகழ்ச்சியைத் திணிக்கலாம். இவை நிகழ்ச்சி இடம் பெறச் செய்ய ஒருவர் செய்யக் கூடிய சில வழிமுறைகளாகும்.

3. உடன்பாட்டு வலியுறுத்தல் முறையினால் நிலைநிறுத்தப்படும் நிகழ்ச்சி, சிறு தண்டனை மூலம் குறுகிய காலத்துக்கு அடக்கப்படலாம். ஆனால், வேறு நிகழ்ச்சிக்கு வகை செய்யப்பட்டாலன்றி அந்நிகழ்ச்சி முழுவதுமாக நீங்குவதில்லை.

வலியுறுத்தலில் எவ்வாறோ, அவ்வாறே தண்டனையின் திறனும் நேரத்தை ஒட்டி அமைகிறது. நிகழ்ச்சியை அடுத்து உடனே வழங்கப்படும் தண்டனை மிகுந்த பயனளிக்கிறது.

4. மாய்தல் : மக்கள் தம் வாழ்வில் பல செயல்களை - நிகழ்வுகளைப் பயில்கின்றனர். எனினும், அவை அனைத்தும் உறுதியுடன் நின்று நிலைப்பதில்லை, அவை வலுவிழந்து மங்கி மறைகின்றன. அதுவே 'மாய்தல்' எனப்படும். பொதுவாக, நிகழ்வின் வலிமை குறைதல், 'மாய்தலுக்குக் காரணம்' என்ற போதிலும், நிகழ்வு பாராட்டப்படாத போது திரும்பத்திரும்ப இடம் பெற வேண்டியுள்ளதால், அவ்வுண்மை அறியப்படாமல் வலுவிழக்கிறது. குறிப்பிட்ட தொரு நிகழ்ச்சி சில நேரங்களில் இயல்பாகவே மேலெழுந்து நிகழ்வதுண்டு. எடுத்துக்காட்டு, ஒருவர் தமக்குத் துன்பம் இழைத்த தம் பழைய நண்பனுடன் காலப்போக்கில் அவன் மாறியிருக்கலாம் என்ற நம்பிக்கையில் பேசுவதாகும்.

பொதுமையும் தனிமைக் கூறுகளும் : பல்வேறு சூழ்நிலைகளில் பொதுமை இயல்பாக அமைகிறது. ஏனெனில் முந்தைய சூழ்நிலையிலிருந்து சற்றே வேறுபட்டிருக்கக்கூடிய ஒவ்வொரு சூழ்நிலையிலும், புதிதாக எவ்வாறு செயற்படுவதென்று பயில்வது கடினமாகும். தூண்டுதல்களுக்கும், சூழ்நிலைகளுக்கும் வேறுபாடுகளைப் பிரித்தறியும் பொதுமைத் திறனும் மதிப்பு மிக்கதாகும். எடுத்துக்காட்டாக, பெற்றோரிடம் பணம் கேட்கும் குழந்தைகள், பெற்றோர் எப்போது நல்ல மனநிலையில் இருப்பார்கள் என்று சூழ்நிலையை வேறுபடுத்தித் தேர்ந்தெடுக்கப் பயின்றுள்ளமையைக் குறிப்பிடலாம்.

நிகழ்ச்சி அல்லது செயலை இயற்கையாகவே பெருக்குகின்ற உணவு, தண்ணீர், பாசம் முதலான வலியுறுத்தல்கள் 'முதன்மை வலியுறுத்தல்கள்' எனப்படும். முதன்மை வலியுறுத்தல்களுடன் தொடர்பு கொண்டதன் விளைவாக, வலியுறுத்தல்களாகும் தூண்டுதல்கள் துணை நிலை வலியுறுத்தல்கள்' எனப்படும். நம்முடைய நடத்தையை உருவாக்குவதில் துணை நிலை வலியுறுத்தல்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

-வி.ந.

**வழக்கங்கள்** : ஒரு குறிப்பிட்ட செயலை ஒருவன் தொடர்ந்து ஓர் ஒழுங்குமுறையோடு செய்து வந்தால் அது அவனிடத்தில் நிலைத்து நிற்கிறது. இவ்வாறு ஒரு செயல் திரும்பத் திரும்ப ஒரே ஒழுங்கு முறையில் செய்யப்பட்டு நிலை நிறுத்தப்படும் பொழுது அது தனி மனிதனைப் பொறுத்த அளவில் பழக்கமாகிறது. ஒரு குழுவைப் பொறுத்த அளவில் அதுவே ஒரு வழக்கம் (Custom) ஆகிறது. இக் கருத்தைக் குறிப்பிடும் போது சம்னர் (W.G. Sumner) ஒரு செயல் திரும்பத் திரும்ப ஓர் ஒழுங்குமுறையாகச் செய்யும்பொழுது ஒரு தனிமனிதனிடத்தில் அது பழக்கத்தையும், ஒரு குழுவினிடத்தில் வழக்கத்தையும் தோற்றுவிக்கிறது என்கிறார். ஆக, பழக்கத்தைப் போலவே, வழக்கமும் அமைகிறது. வேறுவகையில் சொன்னால் ஒட்டு மொத்தமாகத் தனி மனிதர்கள் ஒரு குறிப்பிட்ட செயலை ஒரே ஒழுங்கு முறையில் செய்து வரும்பொழுது அது குழுவின் பொதுச் செயலாக அமைந்து வழக்கம் ஆகிறது. எடுத்துக்காட்டாக, பல் துலக்கிய பின்னரே எந்தச் செயலும் மேற்கொள்ளப்படுகிறது என்ற நிலை ஒரு குழுவில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு நிலை நின்று அமைகிற பொழுது அது வழக்கம் ஆகிறது. ஆகவே தான், மன்றோ (H.D. Munro) என்பவர் நிலைநிறுத்தப்பட்ட செயலாற்றுப் பாங்குகளே வழக்கங்கள் என்கிறார்.

வழக்கங்கள் இன்ன செயலைத் தான் சார்ந்து இருக்கும் என்பதில்லை. எண்ணற்ற செயல்களைச் சார்ந்து அவை அமைகின்றன. ஒருவன் பிறந்ததி லிருந்து இறக்கின்ற வரை அன்றாடம் செய்திடும் செயல்களில் வழக்கங்களின் ஆதிக்கம் மேலோங்கி யிருக்கிறது. பேசுவது, பாடுவது, ஆடுவது, விளை யாடுவது, எழுதுவது, உட்கார்வது, உண்பது, உடுப் பது, படுப்பது, பிறருடன் பழகுவது, வழிபடுவது, பெரியோரை மதிப்பது, மணம் முடிப்பது, சொத் துரிமை அடைவது, சடங்குகள் நடத்துவது என்று அமைகிற கணக்கற்ற செயல்கள் வழக்கங்களின் அடிப்படையிலேயே அமைகின்றன.

ஒரு செயல் திரும்பத் திரும்ப, தொடர்ந்து செய்யப் படும் பொழுது அது வழக்கம் ஆகிறது என்றாலும், அது மட்டும் வழக்கம் அமைவதற்குப் போதாது. ஒரு செயல் வழக்கமாக அமைய என்னென்ன கட்டளை அளவைகள் வேண்டும் என்று சட்டவியல் வரை யறுத்துக் கூறுகிறது.

முதலாவதாக, வழக்கம் தொன்மையானதாக இருக்க வேண்டும். அதாவது நீண்ட நாள்களாகச் செயற்பாட்டில் இருக்க வேண்டும். அதற்காக அது நினைவுக்கெட்டாத காலத்திலிருந்து செயற்பாட்டில் இருந்து வர வேண்டும் என்ற கட்டாயமில்லை. ஒரு நீண்ட கால அளவுக்கு இருந்தாலே போதும். ஒரு செயல் முறை நூறு ஆண்டுகளாகச் செயற்பாட்டில் இருந்தாலே போதும், அதை வழக்கம் என்று சொல் லலாம் என்று இந்துச் சட்டம் கூறுகிறது. நூறு ஆண்டுக் கால இடைவெளியையே இந்துச் சட்டம் நினைவுக் கெட்டாத கால அளவு என்று கருகிறது.

இரண்டாவதாக, வழக்கம் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரவேண்டும். ஒரு வழக்கம் ஒரு குறிப்பிட்ட காலம் வரையில் நீடித்துப் பின்னர் நடுவில் தொடர்ச்சி அற்றுப் போய் மீண்டும் தொடர்ந்தால் அதை வழக்கம் எனக் கொள்ள வியலாது. மூன்றாவதாக, ஒரு வழக்கம் சம்பந்தப் பட்ட குழுவில் உலைவில்லாமல் ஒரே சீர்மையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வர வேண்டும். வேறுபாடு களுடன் உலைந்திருந்தால் அதை வழக்கம் என்று சொல்ல இயலாது.

ஒரு வழக்கம் என்பதற்கு இந்த மூன்று கூறு களும், அதாவது நீண்ட நாளாக இருக்கும் தொன்மை, தொடர்ந்து வரும் தன்மை, உலை யாதிருக்கும் சீர்மைப் பண்பு ஆகியவை முக்கியமாக இருக்க வேண்டுமென நீதிமன்றங்கள் வலியுறுத்து கின்றன. சிவானந்தா - முத்துராமலிங்கா (கி.பி.1866) என்ற வழக்கிலும், அந்த வழக்கைத் தொடர்ந்து கி.பி. - 1872 -இல் ஏற்பட்ட முறையிட்டு வழக்கான இராமலட்சுமி - சிவானந்தா என்ற வழக்கிலும் முறையே சென்னை உயர்நீதிமன்றமும், நீதிமன்றத் தீர்ப்புக்குழுவும் ஒரு வழக்கம் என்பதற்கு மேற்குறித்த மூன்று கருத்தையே ஆதரித்தன. சுந்தராபாய் - அனு மந்து (1932) என்ற வழக்கில் பம்பாய் உயர்நீதிமன்ற மும் இந்திரமணி தேவி - இரகுநாத பாஞ்சா (1961) என்ற வழக்கில் ஒரிசா உயர் நீதிமன்றமும் இக்கருத் தையே ஆதரித்தன. இந்திய உச்சநீதிமன்றமும் 1953 - இல் நிகழ்ந்த சரசுவதி அம்மாள் - சகதாம்பாள் என்ற வழக்கில் இக்கருத்தை உறுதி செய்தது.

நான்காவதாக, ஒரு வழக்கம் நிச்சயமானதன்மை கொண்டதாக இருக்கவேண்டும். வழக்கில் இருக் கிறதா இல்லையா என்ற ஐயம் இருக்கக் கூடாது. நிச்சயமாக நிலவுகிறது என்று உறுதிசெய்யக் கூடிய வகையில் அது நிலைபெற்றிருக்க வேண்டும். அதனால்தான் எச்.டி.மன்றோ தம் வழக்கங்கள் பற்றிய வரையறை விளக்கத்தில் நிலை நிறுத்தப் பட்ட தன்மையைப் பெரிதும் வலியுறுத்துகிறார். ஒரு வழக்கம் நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்றாலே அது நிச்சயமாக நிலவுகிறது என்பதுதான் பொருள்.

இந்த நான்கு தன்மைகளே வழக்கத்திற்கு அளவைகளாக அமைகின்றன. ஆயினும் சட்டவியல் வல்லுநர்களும், நீதிமன்ற நீதிபதிகளும் மேலும் ஒரு படி மேலே சென்று ஒரு வழக்கம் பொதுக் கொள்கைத் திட்டத்திற்கு எதிராகவோ, ஒழுக்கமற்ற தாகவோ, குற்றத் தன்மை உடையதாகவோ இருக் கக் கூடாது என்று வலியுறுத்துகின்றனர். விஞ்ஞானே சுவரர், குல்லூகர் ஆகிய பிற்காலச் சாத்திர-சட்ட வியல் வல்லுநர்கள் இத்தகைய கருத்தை வலியுறுத்து கின்றனர். நீதிமன்றங்கள் வழக்கங்கள் மேற்குறித்த தன்மையைக் கொண்டவையாக இருந்தால் அவை செல்லத் தக்கவையல்ல. அவற்றை அனுமதிக் கவோ, செயற்படுத்தவோ கூடாது என்கின்றனர். வன்னியக் கோன் - வன்னிச்சி (1928), பாலுசாமி - பால கிருட்டிணா (1957) என்ற வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றமும், மோதிராம் - சுக்மா (1960) என்ற

வழக்கில் மத்திய பிரதேச உயர்நீதிமன்றமும் , இலட்சம்மா - அப்பளசாமி (1960) என்ற வழக்கில் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றமும், தும்மக்கா - அரங்கப்பா (1977) என்ற வழக்கில் கருநாடகா உயர் நீதிமன்றமும் இக்கருத்தை எடுத்தியம்பின.

இந்த அடிப்படையில் நீதிமன்றங்கள் சில வழக்கங்களைப் புறக்கணித்து அவை செல்லத் தக்கவையல்ல என்று தீர்ப்பளித்துள்ளன. விதவை ஒருத்தி மறுமணம் செய்யும்பொழுது அவள் தனக்கு முதல் கணவன் வீட்டில் போட்ட நகைகளைத் திருப்பிக் கொடுத்து விட்ட பின்னரே மறுமணம் முடிப்பது இந்தியாவில் பல இடங்களில் வழக்கத்தில் இருக்கிறது. ஆயினும், இந்த வழக்கம் பொதுக் கொள்கைத் திட்டத்திற்கு எதிரானது. ஆகவே செல்லாது என்று ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றம் வெங்கடசுப்பராவ் - புசங்கையா (1960), இலட்சுமம்மா - அப்பளசாமி (1960) ஆகிய இரண்டு வழக்குகளில் தீர்ப்பு அளித்தது.

மகாராட்டிராவில் சில வகுப்பினரிடையே ஒரு பெண்ணுக்குக் கணவன் பிடிக்கவில்லையானால், அவள் அவனை விட்டுப் பிரிந்து அவன் அனுமதியில்லாமல் வேறொருவனை மணந்து கொள்வது வழக்கம். இந்த வழக்கம் ஒழுக்கமற்றது. குற்றத் தன்மையுடையது, மோசமானது. ஆகவே சட்ட முறையில் செல்லத்தக்கதன்று என்று பம்பாய் உயர் நீதிமன்றம் உகி - காதி (கி.பி.1870) நாராயண் - இலாவிங்கு (கி.பி.1878) முதலிய வழக்குகளில் தீர்ப்பளித்தது. உத்தரப்பிரதேசத்தில் தேரி, கார்வால் பகுதியில் தோம் என்ற வகுப்பினரிடையே குழந்தையில்லாத ஒரு விதவை இறந்து போன கணவருக்காக இன்னொருவனுடன் கூடிக் குழந்தை பெறும் வழக்கம் இருந்து வருகிறது. ஆயினும், இந்த வழக்கம் ஒழுக்கமற்ற, மோசமான வழக்கம் என்று ஒரு வழக்கில் அலகாபாது உயர்நீதிமன்றம் 1979-இல் தீர்ப்பளித்து, அதைச் சட்ட முறையில் செல்லாது என்று அறிவித்தது.

இவ்வாறு வழக்கங்களைப் பொதுக் கொள்கைத் திட்டத்திற்கு எதிரானவை, ஒழுக்கமற்றவை, குற்றமுடையவை என்ற அடிப்படையில் சட்டங்களும், நீதிமன்றங்களும் அவற்றைப் புறக்கணித்துச் செல்லாதவையாக ஆக்கினாலும் அவை வழக்கங்கள் என்ற தகுதியை இழப்பதில்லை. சட்டத்தின் பார்வை எப்படியிருந்தாலும் வழக்கங்கள் வழக்கங்களாகவே அமையும். வழக்கங்களை ஒழுக்கமான, ஒழுக்கமற்ற வழக்கங்கள் என்றோ, குற்றமுடைய குற்றமற்ற வழக்கங்கள் என்றோ, பொதுக் கொள்கைத் திட்டத்திற்கு இசைவான, எதிரான வழக்கங்கள் என்றோ, சட்ட முறையிலான, சட்டத்திற்குப் புறம்பான வழக்கங்கள் என்றோ வகைப்படுத்துவது சட்டவியலில் வேண்டுமானால் நடைமுறையில் இருக்கலாம். ஆனால் சமூக அறிவியல்களில் இத்தகைய வகைபாடு கிடையாது. சமூகவியல் கண்ணோட்டத்தின்படி வழக்கங்கள் பொதுவாக இரு வகைகளில்தான் அமைகின்றன. ஒன்று, தனிமனிதர் தனியாகக் கடைப்பிடிக்கிற வழக்கங்கள், இரண்டு எல்லோரும் கூட்டாகக் கடைப்பிடிக்கிற வழக்கங்கள்.

வழக்கங்கள் ஒரு சமூகத்தில் எல்லா இடங்களிலும், எல்லாப் பிரிவுகளிலும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. எடுத்துக்காட்டாக , இந்தியாவில் பல குடும்பங்கள் தமக்கென்று தனி வழக்கங்களை வைத்துக் கொண்டிருக்கின்றன. இவ்வாறே சாதிகளும், பழங்குடிகளும் தமக்கென்று தனித்தனியான வழக்கங்களைக் கொண்டிருக்கின்றன. வட்டாரங்களிலும் அவற்றிற்கென்று மரபு வழியான தனி வழக்கங்கள் நிலவுகின்றன. அந்த வகையில் வழக்கங்கள் குடும்ப வழக்கங்கள், சாதி -பழங்குடி வழக்கங்கள், வட்டார வழக்கங்கள் என்று அமைகின்றன. இவை மரபுசார் சட்டங்கள் (Customs Laws) என்று கூறப்படும்.

குல தெய்வ வழிபாடு, நீத்தார் நினைவுச் சடங்கு, மணமகன் வீட்டாருக்குப் பந்திப் பணம் வைப்பது, அன்பளிப்புத் தருவது, திருமணமான மகளுக்குச் சீர்வரிசை கொடுப்பது முதலிய பல செயல்களில் ஒவ்வொரு குடும்பமும் தனக்கென்று ஒரு மரபு வழியான வழக்கத்தைப் பின்பற்றுகிறது. நீதிமன்றங்கள் கூடக் குடும்ப வழக்கம் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொள்கின்றன.

பல வேளைகளில் சட்டம் வழக்கத்தை எதிர்த்துச் செயற்பட்டாலும், பல நிகழ்வுகளில் சட்டத்திற்கு அடிப்படையாக வழக்கமே அமைகிறது. இந்தியாவில் திருமண நடைமுறைகள் (எ-டு. இந்துத் திருமணத்தில் சப்தபதிச் சடங்கு), தாம்பத்திய உறவுகள், ஆலய நடைமுறைகள் முதலியவற்றில் சட்டங்கள் எல்லாம் மரபுவழி வழக்கங்களின் அடிப்படை

யிலேயே தான் அமைந்திருக்கின்றன. இங்கிலாந்தில் 'பொதுச் சட்டம்' (Common Law) என்று சொல்லப்படுகிற நடைமுறைச் சட்டம் முழுக்க வழக்கங்களின் அடிப்படையிலேதான் அமைந்திருக்கிறது.

இப்படி வழக்கங்கள் சட்டத்திற்கு ஆதாரமாய் அமைவதால் இரண்டு பலன்கள் ஏற்படுகின்றன. ஒன்று சட்டம் வடிவெடுக்கிறது. இரண்டு வழக்கம் வலுப்படுகிறது. சட்ட முத்திரை பெறுகிற போது வழக்கத்திற்கு வலு கூடுகிறது. அதிகார உரிமையோடு மக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய தகுதியை அது பெறுகிறது.

இவ்வாறான தகுதியைப் பெறும் வழக்கங்கள் சமூகத்தில் முக்கிய பங்காற்றுகின்றன. சமூகக் கட்டுப்பாடு ஏற்படுவதில் அவை முக்கிய பங்காற்றுகின்றன. சமூகக் கட்டுப்பாட்டுக் காரணிகளாகச் செயற்பட்டு, இவற்றை இந்த வகையில் இப்படித்தான் செய்ய வேண்டும் என்று வழிவகுத்து அதன் மூலம் தனி மனிதர்களுடைய நடத்தை முறைகளை நெறிப்படுத்துகின்றன. இதனால் மக்கள் ஒழுங்கு நெறியைப் பின்பற்றி அதனால் சமூகத்தில் ஒழுங்கும் அமைதியும் ஏற்படுகின்றன.

பழங்குடிச் சமூகத்தில் எழுதப்பட்ட, தொகுக்கப்பட்ட சட்டங்கள் என்று எதுவும் இல்லையாதலால் தொன்று தொட்டு நிலவி வருகிற வழக்கங்கள் அங்குச் சட்டங்களாக அமைந்து சமூகக் கட்டுப்பாட்டை நிறுவுகின்றன. வழக்கங்களை மீறுவது ஒரு குற்றம் என்ற கருதப்பட்டு, அதற்கு முறை சார்ந்த தண்டனை வழங்கப்படுகிறது. இத்தகைய தகுதி சட்டத்திற்கு மட்டுமே உண்டு. ஆனால், பழங்குடிச் சமூகத்தில் வழக்கங்கள் இத்தகைய தகுதியை அடைந்திருப்பதால், சமூக மானிடவியல் வல்லுநர்கள் வழக்கங்களைத் தொன்மைச் சட்டம் (Primitive Law) என்கின்றனர். இக்காலப் புதிய சமூகத்தில் சட்டத்திற்கு எத்தகைய தகுதி, அதிகார உரிமை, அமைப்பு ஆகியவை இருக்கின்றவோ, அவ்வளவும் பழங்குடிச் சமூகத்தில் அப்படியே வழக்கங்களுக்கும் வாய்த்துள்ளன.

இக்காலச் சமூகத்தில் சட்டம் முதன்மையான, சமூகக் கட்டுப்பாட்டுக் காரணியாகச் செயற்பட்டாலும், வழக்கங்கள் செயலற்றுப் போய்விடுவதில்லை. அவை முடிந்த அளவு சமூகக் கட்டுப்பாட்டுக்கும், சமூக ஒழுங்குக்கும் பங்காற்றுகின்றன. சட்டம் முறை சார்ந்த காரணியாகச் செயற்படுகிறது. வழக்கங்கள் முறை சாராத காரணியாகச் செயலாற்றுகின்றன. இந்த வகையில் வழக்கங்கள் சட்டத்தோடு இணைந்து சமூகக் கட்டுப்பாட்டையும், ஒழுங்கையும் ஏற்படுத்துகின்றன.

முறைசாராக் காரணி என்றாலும் சில வேளைகளில் வழக்கங்கள் சட்டத்தைக் காட்டிலும் மேலோங்கி நிற்பதுண்டு. எடுத்துக்காட்டாக, இந்துத் திருமணச் சட்டம், 1955-பிரிவு 5 (iv) ஓர் இந்து ஆணை தடை செய்யப்பட்ட உறவு வழியில் வருகிற எவரையும் திருமணம் செய்யலாகாது என்று தடுக்கிறது. அந்தத் தடை செய்யப்பட்ட உறவுகளுள் அக்காள் மகளும், அத்தை மகளும், தாய் மாமன் மகளும் அடங்குகின்றனர். ஆயினும், அக்காள் மகளை, அத்தை மகளை, தாய் மாமன் மகளை மணமுடிக்கும் வழக்கம் தென்னியாவில் தொன்று தொட்டு நிலவி வருகிறது. இவ்வழக்கத்திற்குச் சட்டம் பணிந்து 'பிரிவு 5(iv)-க்கு மாறான வழக்கம் அல்லது வழக்காறு (அதாவது) மேற்குறித்த (மண வழக்கம்) இருக்குமேயானால், அவ்வழக்கமே மேலோங்கும். பிரிவு 5 (iv) செயல்படாது' என்கின்றது. இவ்வாறே பிரிவு 5 (iv) ஓர் இந்து ஆண் (தந்தை வழியில் ஐந்து அளவிலும், தாய் வழியில் மூன்று அளவிலும்) 'சபிண்டா' உறவு முறையில் வருகிற பெண்ணை மணமுடித்தலாகாது என்று கூறுகிறது. ஆயினும், இந்த விதிக்கு விலக்கும் அளிக்கிறது. 'இந்த விதிக்கு முரணான ஒரு வழக்கம் அல்லது வழக்காறு இருந்தால் அதுவே மேலோங்கும், அதற்கு முன்பு இவ்விதி அமலாகாது' என்று கூறுகிறது. ஆகவே, சட்டமே வழக்கங்களுக்கு முன் பணிந்து அவற்றிற்கு வழிவிடுகிறது. நீண்ட மரபுத் தன்மை வழக்கங்களுக்கு இருப்பதால், அவை சட்டத்தை விடச் சிறப்பு எய்தி முன்னுரிமை பெறுகின்றன.

'ஒரு வழக்கம் சட்டத்திற்கு ஒப்ப இருந்தாலும் சரி, அல்லது எதிராக இருந்தாலும் சரி, வழக்கமே சட்டத்தைவிட மிகுதியாகச் செல்லும்' என்கிறார் காத்யாயனா. சமய - சாத்திர விதிகள் கூட வழக்கங்களுக்குப் பின்னாலேதான் என்று முற்கால சமய சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். நாரதர் 'புனித சட்டத்தை (அதாவது சமய சாத்திர விதியை) விட வழக்கம் மேலோங்குகிறது' என்கிறார். 'வழக்கம்

ஒவ்வொன்றையும் முடிவுசெய்கிறது. இந்த வகையில் அது புனிதமான சட்டத்தைவிட மேலோங்கி நிற்கிறது' என்கிறார். இன்னும் ஒரு படி மேலே சென்று 'சாத்திரங்களின் அடிப்படையில் கூட வழக்கங்களை ஒதுக்கித் தள்ளக் கூடாது' என்று வழக்கங்களுக்கு ஆதரவு காட்டுகிறார். யாக்ஞவல்கியர் 'சுமிருதிகளே வலியுறுத்தினாலும் கூட வழக்கங்கள் தடுக்கிற செயல்களைச் செய்யலாகாது' என்கிறார்.

சட்டங்களை இயற்ற, அமல்படுத்த, பேண, பாதுகாக்க, நிலைநிறுத்த முறையான அரசு அமைப்புகள் உள்ளன. ஆனால், வழக்கங்களுக்கோ பொதுவாகப் பின்னணியில் எந்தவிதமான அமைப்பு வகையில் ஆதரவும் கிடையாது. அவற்றை அறிவிக்கவோ, செயற்படுத்தவோ, பாதுகாக்கவோ, நிலை நிறுத்தவோ எந்த அரசு அமைப்பும் கிடையாது. ஆயினும், அவை நீடித்து நிலைத்து நிற்கின்றன. இதற்குக் கின்சுபெர்கு (Ginsberg) ஒரு காரணம் கூறுகிறார். மக்களுக்கு வழக்கங்களின் பால் ஓர் உணர்ச்சிகரமான ஈடுபாடும், ஐக்கியமும் இருக்கிறது என்கிறார். இதனை மக்கள் வழக்கங்களைக் கடைப்பிடிப்பதிலும், அவற்றின் மீறலைக் கண்டிப்பதிலும் காணலாம். முன்னதில் ஓர் உணர்ச்சிவயமான ஈடுபாடு இருப்பதைக் காணலாம். இத்தகைய உணர்ச்சி நீரோட்டத்தை வழக்கங்கள் உட்கொண்டிருப்பதே அவற்றின் நிலைபேற்றுக்கும், வலிமைக்கும் காரணம் என்கிறார் கின்சுபெர்கு.

- சி.என்.ந.

**துணை நூல்கள் :**

1. Gisbert, Pascual, **Fundamentals of Sociology**, Orient Longman, Bombay, 1973.

2. MacIver, R.M., and Page, Charles, H., **Society : An Introductory Analysis**, Macmillan Co., of India, Delhi, 1974.

**வழக்காறு :** வழக்காறு என்பது நீண்ட பல ஆண்டுகளாக ஒரு சமூகத்தினிடையே நியாமான, தெளிவான உணர்வுடன் இடைவிடாது தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வரப்பட்ட நெறியைக் குறிக்கும். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையான இனத் தாருக்கிடையிலும் இயங்கி வரும் சட்ட மரபுகளுக்கு வழக்காறு (Custom) பிறப்பிடமாகும். சமயத்தால், வட்டாரத்தால், சாதிக் கட்டுப்பாடுகளால், பழக்க வழக்கங்களால் பிரிவுபட்டு இயங்கி வந்த சமூகங்களுக்கிடையே கடைப்பிடிக்கப்பட்ட அவர்களுடைய வழக்காறுகள் எழுதப்படாத, குழூக் குறிப் பாணைச் சட்டங்களாக இயங்கி வந்தன. இந்து சமயச் சார்புடையவர்களின் சட்டமும், கிறித்தவ சமயச் சார்புடையவர்களின் சட்டமும், இசுலாமிய சமயச் சார்புடையவர்களின் சட்டமும் அவரவர்களுடைய வழக்காறு காரணமாக மாறுபட்டும் வேறுபாடு கொண்டதாகவும் இயங்கி வருகின்றன.

விக்னேசுவ்ரா என்ற வல்லுநர் இதுபற்றித் தெளிவுரை வழங்கியுள்ளார். வழக்காறு என்பது எழுதப் படாத உரைகளை அடித்தளமாகக் கொண்டதென்றும், அதனைத் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளும் பழங்கால ஞானியர் வகுத்த உண்மையென்றும் பேசப்படுகிறது. சட்டத்துறை ஆய்வுப்படி பேசும்போது வழக்காறு என்பது பொதுச் சட்டத்திலிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை என்று பேசப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட குடும்பத்தார் அல்லது சமூகத்தார் அல்லது மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கடைப்பிடிக்கும் விதிமுறைகளைச் சட்ட வல்லுநர்கள் சில நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் சட்டமாக ஏற்றுக்கொள்கின்றனர்.

சட்ட அங்கீகாரம் பெறத் தகுந்த வழக்காறு சில முக்கிய விதிகளுக்குக் கட்டுப்பட்டதாக இருக்க வேண்டும். அவையாவன 1. வழக்காறு பழமையானதாக அல்லது தொன்மைச் சிறப்புள்ள நியதியாக இருக்க வேண்டும். 2. வழக்காறு தெளிவானதாக இருக்க வேண்டும். அதில் ஏதும் குழப்பம் கூடாது. 3. வழக்காறு நியாயமானதாக இருக்க வேண்டும். 4. வழக்காறு தொடர்ந்து இடைவிடாது கடைப்பிடிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

இந்த வரையறைக்குள் உள்ள வழக்காறுகள் பொதுச்சட்ட விதிகளுக்கு முரண்பட்டனவாக இருந்தபோதிலும் கடைப்பிடிக்கத் தகுந்த வழக்காறாக ஏற்றுக் கொள்ள நியாயம் உண்டு என்று சுந்தரிபாயி என்பவருக்கும் கண்மால் என்பவருக்கும் நடைபெற்ற வழக்கில் 34 பம்பாய் எல்.ஆர். 802 வழக்கில் கூறப் பெற்றுள்ளது. வழக்காறு சட்டமுறையான அங்கீகாரம் பெறுவதற்கு அது நடைமுறைச் சட்டத்தால் தடுக்கப்படாததாக இருக்க வேண்டும். பொதுச்சட்டக் கொள்கைக்கும், பொது

ஒழுக்க நெறிக்கும் முரண்பட்ட வழக்காறு, சட்டப் படி செல்லத்தக்கதன்று என்று வன்னியக் கோனார்க்கும் வன்னிச்சிக்கும் நடைபெற்ற வழக் கில் சென்னை உயர்நீதி மன்றத்தால் தீர்ப்பு அளிக்கப் பட்டுள்ளது. இப்படிப் பல வழக்காறுகள் சமூக ஒழுக்க நெறிக்குப் புறம்பானவையாகக் காணப்படும் போது நடைமுறைச் சட்டம் அந்த வழக்காற்றைச் சட்டப்படி செல்லத்தக்கதாக ஏற்றுக் கொள்வ தில்லை. எடுத்துக்காட்டாகத் தமிழ்நாட்டில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தாருக்கிடையில் ஓர் ஆள் தன் னுடைய மகளுக்குப் பிறந்த மகளை அதாவது பேத்தி யைத் திருமணம் செய்து கொள்ள ஒரு வழக்காறு நிலவிய போதிலும் இந்த வழக்காறு பொது நீதிக்குப் புறம்பானதாகக் கருதப்பட்ட காரணத்தால் இந்த வழக்காறு சட்டப்படிச் செல்லத்தக்கதன்று என்று பாலுசாமி ரெட்டியாருக்கும், பாலகிருட்டிணருக்கும் நடைபெற்ற வழக்கில் (1956) 2 எம்.எல்.செ.357 வழக்கில் தமிழ்நாடு உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

வழக்காறு, சட்டப்படி செல்லத்தக்கது என்று நிரூபிக்க சில வரையறைகளை நீதிமன்றத் தீர்ப்புகள் வழங்கியுள்ளன. அவை வருமாறு. 1. வழக்காறு ஒரே சீராகத் தொடர்ச்சியாகக் கடைப்பிடிக்கப்பட்டது என் றும், அந்த வழக்காற்றைச் சட்ட முறையாக ஏற்றுக் கொண்டு மன நிறைவான உணர்வு தெளிவுபடுத்த வேண்டும் என்றும், அது தகுந்த சட்ட ஆதாரங் களுடன் நிரூபிக்கப்பட வேண்டும் என்றும் தமிழ் நாடு உயர்நீதி மன்றம் தன் தீர்ப்பில் தெளிவுபடுத்தி யுள்ளது. 2. வழக்காறு நடைமுறையில் இயங்கி வந்ததைப் பல ஆதாரங்களைக் காட்டி நிரூபிக்கலாம். நீதி மன்றங்கள் தீர்ப்பு அல்லது பஞ்சாயத்தாருடைய முடிவு அந்த வழக்காற்றைச் சட்ட முறையாக ஏற்றுக் கொண்டிருப்பது தகுந்த நிரூபண மாகும். அனுபவம் மிக்கவர்கள் தகுதி மிக்கவர்களாக இருந்து அவர்கள் சாட்சியம் அளிக்கும் போது, இந்த வழக்காறு கடைப்பிடிக்கப்பட்டு வந்ததற்குப் பல சான்றுகளைக் காட்டிச் சட்டமுறையாக ஏற்றுக் கொள்ளத்தக்க வழக்காறு என்று நிரூபிக்கப்பட்டால் அந்த வழக் காற்றுக்கான சான்று நிரூபணம் சட்டப்படி செல்லத் தக்கதாகும். இவ்வாறு கோபால் ஐயருக்கும், இரகுபதி ஐயருக்கும் நடைபெற்ற வழக்கில் 7 எம்.எல்.சி.ஆர். 250 வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. வழக்காறு நீதிமன்றங்களில் நிரூபிக்கப்படும் பொழுது அந்த வழக்காற்றுக்குப் பல சான்றுகளைக் காட்டிய போதிலும் நீண்ட காலத் திற்குக் கடைப்பிடிக்கப்பட்டது என்பதற்கு ஆதாரங் கள் தரப்படல் வேண்டும். வழக்காறு என்பது கார ணம் அறியாதது என்றும், காரணம் ஒன்று, வழக் காற்றை நடைமுறைப் படுத்தியதென்றும் சொல்லு வதற்கில்லை என்றும் 57 எம்.எல்.செ.817 வழக்கில் பேசப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட வழக்காறு, நீதி மன்றத்தின் கவனத்திற்கு வந்து, நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு அங்கீகாரம் அளித்து விட்டால், நீதிமன்றம் அடுத்தடுத்த வழக்குகளுக்கு நிரூபணம் பெறத் தேவையில்லை என்பதனை முன்னாலால் என்ப வருக்கும், இராசகுமார் என்பாருக்கும் நடைபெற்ற வழக்கில் 1962 எசு.சி.1493 இந்திய உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. நீண்டகாலமாக ஒரு வழக் காறு கடைப்பிடிக்கப்பட்டு வந்து அந்த வழக்காறு இடைக்காலத்தில் கைவிடப்பட்டிருப்பின், கைவிடப்பட்டதாகக் கூற்று மொழிபவர் அக்கூற்றை நிரூபிக்க வேண்டும்.

வழக்காறு மூன்று வகையாகப் பிரிக்கப்படுகிறது. அவை, 1. வசிக்கும் இடத்திற்கேற்ப வழக்காறு, 2. ஒரு குறிப்பிட்ட இனத்தாருக்குள் இயங்கி வரும் வழக்காறு, 3. ஒரு குறிப்பிட்ட குடும்பத்தாருக்குள் இயங்கி வரும் வழக்காறு ஆகும். இந்த மூன்று வகை யான வழக்காறுகளும் சட்ட நீதிக்குள் ஏற்புடையதாக இருப்பின் வழக்காறு செல்லத்தக்கதாகும். நடை முறை சட்டங்களும் தகுதியுள்ள வழக்காறுகளை அங்கீகாரம் செய்துள்ளன. எடுத்துக்காட்டாக 1956-ஆம் ஆண்டு மத்திய சட்ட எண்.30 இந்து வாரிசுச் சட்டம் பிரிவு 2ன் உட்பிரிவு 3-இல் தகுதியுள்ள வழக் காறுகள் சட்ட அங்கீகாரம் பெற்றுள்ளன. அதே சட்டத்தில் பிரிவு 3-இல் உட்பிரிவு 4 -இல் சட்ட நாள்களுக்கு உட்பட்ட வழக்காறுகளுக்குச் சட்டப்படி செய்யத்தக்க வழிமுறைகள் பேசப்பட்டுள்ளன.

சில சூழ்நிலைகளில் நடைமுறைச் சட்ட நியதிகளையும் மீறி நீதி மன்றங்கள் வழக்காறுகளுக்கு அங்கீகாரம் அளித்துள்ளன. எடுத்துக்காட்டாக , 18 வயது நிரம்பாத இளவல் எந்த ஒப்பந்தத்திலும் தன்னை ஈடுபத்திக கொள்ள அருகதை உடையவர் அல்லர் என்பது நடைமுறைச் சட்டம். ஆனால் வழக் காறு காரணமாக அந்தச் சட்ட நீதி தளர்த்தப்பட் டுள்ளது. பட்டுவாக சமுகத்தாருக்கிடையில் 14

அல்லது 15 வயது மட்டும் நிரம்பப்பட்ட வயதுடைய பெண்கள் திருமண முறிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளதை வழக்காறு காரணமாக நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு இராமன்பாய் என்பார்க்கும், சானோலால் என்பார்க்கும் நடைபெற்ற வழக்கில் ஏ.ஐ.ஆர்.1963 மத்திய பி.ஆர்.ஏ.57-ல் ஒரு இந்திய உயர்நீதி மன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது. அதே போல இந்துக் குடும்பங்களில் மட்டும் வழக்காறு காரணமாக அங்கீகாரம் பெற்ற சில முறைகள் சட்டப்படி செல்லத்தக்கனவாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்து சுவிகாரச் சட்டத்தில் பிரிவு 2 பிரிவு 3 ஆகியவற்றில் வழக்காறு பற்றிப் பேசப்பட்டுள்ளது. வழக்காறு சம்பந்தப்பட்டவரை நடைமுறைச் சட்ட விதிமுறைகளில் சில விதிகள் தளர்த்தப்பட்டுத் தீர்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக யாரோ சொல்லக் கேள்வி (Hearsay evidence) என்பது இந்தியச் சான்றுச் சட்டப்படி செல்லத்தகுந்த சாட்சியம் ஆகாது. ஆனால், இராசேந்திரா என்பாருக்கும், கங்கானந்து என்பாருக்கும் 52 ஐ.ஏ.270-50 எம்.எல்.செ.194 வழக்கில் வழக்காறு நிருபிக்க, தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்ட கேள்வி (Hearsay evidence) ஏற்றுக்கொள்ளத் தக்க சான்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அவ்வழக்காறு அங்கீகாரம் பெற்றுள்ளது. வழக்காறுகளைச் சட்டப்படி செல்லத்தக்கனவாக நீதிமன்றம் ஏற்றுக் கொள்கின்றபோது சமூக ஒழுக்கத்தைக் கணக்கில் கொண்டு தீர்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாகத் திருமண முறிவைப் பொருத்தவரை, கணவன் மனைவி இருவரும் இசைந்து திருமண முறிவு செய்து கொள்கிறபோது அது ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வழக்காறாக இருப்பின் அந்த வழக்காறு, சட்டப்படி செல்லத் தகுந்தது என்று சங்கரலிங்கம் என்பார்க்கும், சுப்பன் என்பார்க்கும் நடைபெற்ற வழக்கில் (17எம் 479) நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. ஆனால், திருமணம் ஆனவள் கணவனுடன் திருமண முறிவு பெறாமல் அவனுடைய ஆயுட்காலத்தில், அவள் பிறிதொருவனை மணந்து கொள்வது வழக்காறு என்று பேசப்பட்ட போதிலும் அந்த வழக்காறு சட்டப்படி செல்லத்தக்கதன்று என்றும் என்.ஆர்.இராகவாச்சாரி எழுதிய இந்துச் சட்டம் என்ற நூலின் பக்கம் 14-இல் சொல்லப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட வழக்காறு அனுமதிக்கப்பட்டால் மனித நெறி விலங்கு நெறியாகிவிடும் என்பது அந்நூலில் சொல்லப்பட்டுள்ளது. அதே மாதிரி நடனக்காரி, புதல்வியைத் தத்து எடுத்துக் கொள்கின்றபோது, தத்தெடுத்துக் கொள்ளப்படுபவள் பரத்தையர் அல்லது விபசார வாழ்க்கைக்குத் தள்ளப்படுவதற்காகத் தத்தெடுத்துக் கொள்ளப்பட்டால் அந்த வழக்காறு செல்லத் தக்கதன்று என்று கமலாட்சி என்பார்க்கும், இராமசாமி என்பார்க்கும் 19 எம் 127 வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது.

புனிதமான வழக்காறுகளை நீதிமன்றங்கள் காக்கத் தவறுவதில்லை. மனித குலத்திற்குப் புறம்பான வழக்காறுகள் சட்ட அங்கீகாரம் பெறவில்லை. வகையாக, நெறியாக, தொன்மைச் சிறப்புடைய வழக்காறுகளைப் புதிய சட்டங்கள் கைவிடவில்லை என்பது புலனாகும்.

ஒரு வழக்காறு உண்மையாகவே இயங்கி வந்ததா என்பதை ஆய்வு செய்து ஒரு நீதிமன்றம் அளிக்கும் தீர்ப்பு ஓர் உண்மைப் பொருளின் (Question of Fact) முடிவுரையாகும். இதற்கு 34.எம்.எல்.செ.104 நூல் ஆதாரம். ஆனால், ஒரு வழக்காறு சட்ட முறையாக ஒரு சமூகத்தைக் கட்டுப்படுத்தக்கூடியது என்ற தீர்ப்பு 40எம்.709 (பி.சி) ஒரு சட்டச் சிக்கலின் (Question of Law) முடிவாகும். ஒரு வழக்காறு சட்டப்படி ஏற்புடையதா, விலக்கப்படவேண்டியதா என்ற வினா ஓர் உண்மைப் பொருளின் முடிவாகும். ஒரு வழக்காறு தகுந்த சாட்சியமில்லாமல் முடிவாக ஏற்புடையதாகக் கீழ் நீதிமன்றம் முடிவுக்கு வந்ததை மேல்முறையீடு நீதிமன்றம் மறுபரிசீலனை செய்து ஏற்புடைய வழக்காறு அன்று எனத் தீர்ப்புக்கூறலாம்.

இந்திய சான்றுச் சட்டம் பிரிவு 13-இல் ஒரு வழக்காறு நிரூபணத்திற்கு உரிய சட்ட நெறிகள் பேசப்பட்டுள்ளன. பிரிவு 13படி இந்தியச் சான்றுச் சட்டத்தில் ஒரு வழக்காறு நிரூபிக்கப்பட, அந்த வழக்காறு உற்பத்தியாவதற்கு ஏற்பட்ட ஒரு தொடர்பு நடவடிக்கை (Transaction) நிரூபணத்திற்கு உரிய உண்மையாகும் எனப் பேசப்பட்டுள்ளது. அந்த வழக்காறு எப்படி வேண்டப்படுகிறது, எப்படித் திருத்தப்பட்டது, எப்படி அங்கீகரிக்கப்பட்டது எப்படி உறுதி செய்யப்பட்டது அல்லது மறுக்கப்பட்டது, அல்லது இப்போது உள்ளதற்கு முரண்பட்டுள்ளது என்ற உண்மைகள் அனைத்தும் வழக்காற்றைப் பொறுத்தவரை நிரூபிக்கத் தகுந்த உண்மைகள் ஆகும். ஒரு குறிப்பிட்ட காரியத்தில் எப்படி வழக்காறு வேண்டப்

பட்டது அல்லது அங்கீகரிக்கப்பட்டது அல்லது அனுபவிக்கப்பட்டது அல்லது அப்படி அனுபவிப்பது எதிர்க்கப்பட்டது அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்டது அல்லது கைவிடப்பட்டது என்ற உண்மையும் வழக்காற்றை நிரூபணம் செய்ய ஏற்ற சான்றுகள் ஆகும். இப்படி இந்தியச் சான்றுச் சட்டம் பேசுகிறது.

இந்தச் சான்றுகளை மிக எச்சரிக்கையாக ஆய்வு செய்ய வேண்டுமென்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. இதுபற்றி ஏ.ஐ.ஆர். 1953, எசு.சி.201 இல் தெளிவாகப் பேசப்பட்டுள்ளது. ஒரு வழக்காற்றை நிரூபிக்கத்தகுந்த சான்று ஆவணங்கள் தாக்கல் செய்யப்படாத போதும், அந்தச் சான்று ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலாமைக்குத் தகுந்த காரணம் தரப்படாத போதும் வெறும் வாய்மொழிச் சான்றை ஆதாரமாகக் கொண்டு வழக்காற்றை நிரூபிக்க ஒரு தரப்பினர் எடுத்த நடவடிக்கையில் நீதிமன்றம் வழக்காற்றை ஏற்றுக் கொள்ள மிகவும் தயங்க வேண்டும் எனவும், முற்றிலும் நிரூபணமாவது ஐயமே எனவும் கூறப்பட்டுள்ளது. நடைமுறையிலுள்ள பொதுச் சட்டத்திற்கு மாறுபட்ட வழக்குரை ஒன்றை ஒரு தரப்பினர் நிரூபிக்க முன்வரும் போது அவர்களுக்கு நிரூபிக்கும் சுமை சற்று அதிகமாகக் கணக்கிடப்பட்டுள்ளது. தெளிவாகவும், தொடர் சங்கிலியாக சான்றினைக் கொண்டும் அது நிரூபிக்கப்பட வேண்டும். ஒரு குடும்பத்தின் பெண்கள், வாரிசு உரிமையிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற குடும்ப வழக்காற்றை நிரூபிக்க நீண்ட தொடர் சங்கிலியான சான்றுகள் தேவைப்படுகின்றன. ஒரு வழக்காறு குறித்து 22 வயதானவன் சொல்லும் சாட்சி அதிக மதிப்புள்ள சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. அவன் குறைந்த வயது உடையவன். ஆதலினால் வழக்காறு குறித்து அவன் அறிவும் குறைந்ததாகத்தான் இருக்கும் என்று இந்திய உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. இந்தத் தீர்ப்பு ஏ.ஐ.ஆர்.1956 எசு.சி.548-இல் வெளியிடப்பட்டுள்ளது. வழக்காறு என்பது எப்படி உருவாயிற்று என்பதை விளக்கத் தேவையில்லை என்றும், ஒரு குறிப்பிட்ட இன மக்கள் ஒரே சீராக நீண்ட காலத்திற்குத் தங்கள் வாழ்க்கை நியதியாகக் கடைப்பிடித்தார்கள் என்பதை நிரூபித்தால் போதும் என்றும் அந்த வழக்காறு ஒழுக்கக் கேடுடையதாகவோ பொது நெறிக்கு முரணானதாகவோ இல்லாமல் இருந்தால் அதனை அங்கீகரித்து, சட்ட நியதியாக ஏற்றுக் கொள்வது சரியானதே என்று கேரள உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஏ.ஐ.ஆ.1986 திருவாங்கூர், கொச்சி, 167-இல் வெளியிடப்பட்டுள்ளது. வழக்காறு என்பது நீதிக்கும் நியாயத்திற்கும் நல்ல மனச்சாட்சிக்கும் புறம்பானதாக இருக்கக் கூடாது. அது நீதிமன்றத்தினால் செல்லத்தக்கது அன்று என்று தீர்ப்பு கூறப்பட்டிருந்தாலோ நடைமுறைச் சட்டங்களுக்குப் புறம்பானதாக இருந்தாலோ அது அமல்படுத்தப்படுவதில்லை. வழக்காற்றைப் பொறுத்தவரை, சில வழக்காறுகள் பொதுத்தன்மை உடையனவாகவும், சில வழக்காறுகள் சிறப்புத் தன்மை உடையனவாகவும் அமைந்துள்ளன.

வழக்காற்றை நிரூபிக்கும் சில முறைகள் :

1. ஒரு வழக்காற்றைச் சிறப்பாக அறிய வாய்ப்புள்ள அல்லது ஒரு வழக்காற்றை அறிய ஆதாரமுள்ளவர்கள் சொல்லும் கருத்துரை மூலம் வழக்காறு நிரூபிக்கப்படலாம்.

2. இறந்த ஒருவர் சொன்ன வாக்குமூலம் அல்லது நீதிமன்றத்திற்கு வர இயலாது ஒருவர் சொன்ன வாக்குமூலம், அந்த வாக்குமூலம் ஒரு குறிப்பிட்ட வழக்காறு நிலவி வந்தது பற்றி எழுந்த வாதத்தில் சொல்லப்பட்டிருந்தால், அதனைத் தெரிந்தவர்கள் எடுத்துச் சொல்லும் வாக்குமூலங்கள் மூலமும் வழக்காற்றை நிரூபிக்கலாம். சொல்லக் கேட்டதைச் சாட்சி, சொல்ல முயன்றால் சாட்சியம் ஆகாது என்ற பொது நெறிக்கு இந்தப் பகுதி முரண்படுகிறது. இருந்தபோதிலும் நிரூபிக்கப்படவேண்டிய வழக்காற்றின் தன்மையைக்கருதி, புதுச்சான்றுச் சட்ட விதியிலிருந்து சற்று விலக்குப்பெறுகிறது.

3. ஒருவருக்கொருவர் உள்ள தொடர்பில் ஒரு குறிப்பிட்ட வழக்காறு எழுப்பப்பட்டிருந்தாலோ, திருத்தப்பட்டிருந்தாலோ, அங்கீகரிக்கப்பட்டிருந்தாலோ, உறுதி செய்யப்பட்டிருந்தாலோ, மறுக்கப்பட்டிருந்தாலோ இப்போது உள்ளதற்கு முரண்பட்டிருந்தாலோ அவை வழக்காறு குறித்த சான்றுகளாகும்.

4. ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியில் வழக்காறு எழுப்பப்பட்டிருந்தாலோ, அங்கீகரிக்கப்பட்டிருந்தாலோ, அனுபவிக்கப்பட்டிருந்தாலோ, அப்படி அனுபவிப்பது மறுக்கப்பட்டிருந்தாலோ, உறுதி

செய்யப்பட்டிருந்தாலோ, கைவிடப்பட்டிருந் தாலோ அதற்கான காரியங்கள் அல்லது தொடர்பு கள் பற்றிய சான்றுகள் கொண்டு வழக்காறு நிரூபிக் கப்படும் அல்லது பொய் யெனத் தள்ளப்படும்.

பிரிட்டன் போன்ற நாடுகளில் வழக்காற்றுக்குச் சிறப்பிடம் தருவார்கள் அந்த நாட்டில் மட்டுமே அரசியற்சட்டம் எழுதப்படவில்லை. பிரிட்டனை வழக்காற்றுக்கு மாண்பும், மரியாதையும் அதிகம் அளிக்கப்படுகிற நாடு எனலாம். தொன்மை வழக் காறுகளை அந்நாட்டினர் எளிதில் கைவிட மாட்டார் கள். எவ்வளவுதான் காலங்கள் மாறினாலும் புதுமை மலர்ந்தாலும் தொன்மைச் சிறப்பையும், வழக் காற்றையும் புனிதமாக அந்நாட்டினர் ஏற்றுக் கொள் வார்கள். எனவேதான் பிரிட்டன் நாட்டின் வழக்காறு பற்றி விளக்கம் சொல்லுகிறபோது வழக்காறு சட்டப்படி கட்டுப்படுத்தக்கூடியதாகவும், அமைய வேண்டுமானால் சிந்தனை படைத்த மனிதர்களின் நினைவுக்காலத்தில் அதற்கு முரணான ஒன்று இயங்கி வாராததைத் தெளிவுபடுத்தினால் போது மானது என்ற சட்டநெறி கூறப்பட்டது. வழக்காறு குறித்துத் தெளிவான விளக்கங்கள் ஏ-ஐ-ஆர்.1941 பி.சி.21 நூலிலும், ஏ.ஐ.ஆர்.1952 எஸ்.சி.231-லும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. சில வழக்காறு களில் சில செயல்கள் செய்யத் தடையுள்ள வழக்காறு களை நிரூபிக்க முயலும் போது அதற்குச் சான்றுகள் தேடுவது சற்றுக் கடினமாகின்றது. சில செயல்கள் செய்யத்தடுக்கப்படுகின்ற வழக்காறுகளுக்குச் சான்று கள் கிடைப்பது கடினம். பொதுவாக வழக்காறு என்பது சட்டச் சிக்கலாகவும், உண்மையை நிறுவும் சிக்கலாகவும் கலந்து வந்துள்ளது. சட்ட அடிப்படை யிலான சிந்தனையோடு அதற்கு பல சான்றுகள் சொல்லப்படுகின்ற போது நிரூபணம் செய்யப்படு கின்றது.

-வி.சு.

**வழக்குச் சொத்துப் பேணுநர்** : உரிமை யியல் நடை முறைச் சட்டம் (சி.பி.சி) விதி 40 வழக்குச் சொத்துப் பேணுநர் குறித்துப் பேசுகிறது. ஒரு நீதிமன்றம் நியாயத்திற்காகவும் சொச்தைப் பேணுவதில் வசதிக்காகவும் தன் உத்திரவு மூலம், வழக்குச் சொத்துப் பேணுநரை, வழக்கில் தீர்ப் பாணை பிறப்பிப்பதற்கு முன்னரோ, பிறப்பித்த பின்னரோ நியமனம் செய்ய அதிகாரம் உண்டு. அதன் மூலம் குறிப்பிட்ட எவரையும் சொத்தைப் பாது காப்பதிலிருந்து அல்லது துய்ப்பதிலிருந்து விலக்கிட வும் நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அச்சொத்தை வழக்குச் சொத்துப் பேணுநர் நிருவாகத்திலோ, பொறுப்பிலோ, துய்ப்பிலோ, ஒப்படைக்க நீதி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. அப்படி வழக்குச் சொத்துப் பேணுநரிடம் ஒப்படைக்கப்பட்ட சொத்தைப் பாதுகாக்கவும், நிருவகிக்கவும், சொத்தை மீட்கவும், சொத்தை விருத்தி செய்யவும், வாடகை அல்லது சொத்தின் வருமானங்களை வசூ லிக்கவும், அதற்கான தாவா செய்யவும், நிறைவேற்ற வும், அதற்கான நிறைவேற்ற ஆவணங்கள் எழுதித் தரவும் சொத்தைக் காக்க வழக்குத் தொடுக்கவும், இன்னும் நீதிமன்றம் கருதும் நியாயமான உரிமை களை வழக்குச் சொத்து பேணுநர் பெறவும், உரிமை உடையவர் ஆவார்.

வழக்குச் சொத்துப் பேணுநர் என்ற சட்டக் கொள்கை ஆங்கில நாட்டுச் சட்டத்தைத் தழுவியது எனலாம். ஒரு சொத்து தொடர்பாக வழக்கு நீதிமன் றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள போது, சொத்தை யாரும் அழித்திடாமல் பாதுகாக்க இந்த ஏற்பாடு சட்டத்தில் இடம் பெற்றுள்ளது. இந்திய நாட்டில் கி.பி.1882-ம் ஆண்டில் இயங்கிய சட்டத்தின் பிரிவு 503 - இன்படி பேணுநர் நியமிக்கப்படுவது நடைமுறை யில் வந்துள்ளது. வழக்கில் தொடர்புள்ள நிலையான அல்லது அசையும் சொத்துகளைப் பாதுகாக்கவும், நல்ல முறையில் காத்திடவும் அந்தச் சட்டப் பிரிவு நீதி மன்றத்திற்கு அதிகாரம் வழங்கியது. அதை அடிப் படையாகக் கொண்டு பின்னர் 1908-ஆம் ஆண்டு மத்திய சட்ட எண்.5 உரிமையியல் நடைமுறைச் சட்டம் நீதிமன்றத்திற்கு வழக்குச் சொத்துப் பேணுநர் குறித்து அதிகப்படியாக அதிகாரம் வழங்கியது. நீதி மன்றத்தில் வழக்குச் சொத்து குறித்துத் தொடரப் பட்டுள்ள வழக்கில் மட்டுமல்லாமல் எந்தவொரு நீதிமன்றத்தால் சொத்து பறிமுதல் சப்தி செய்யப் பட்டிருந்தாலும் பறிமுதல் செய்த நீதிமன்றமும் வழக்குச் சொத்துப் பேணுநர் நியமனம் செய்வது உண்டு. வழக்கு முடிவடையாமல் நீதிமன்றத்தின் விசாரணையில் உள்ளபோது, நீதிமன்றத்தால் நிய மிக்கப்படும் வழக்குச் சொத்துப் பேணுநருக்குக் குறைந்த எல்லைக்குள் உரிமை இருந்து வரும்.

நீதிமன்றத்தில் வழக்குப் பேணுநர் நியமிக்க யாரேனுமொருவன் வழக்குத் தொடரும் போது அவனுக்கு வழக்கில் கண்டுள்ள சொத்தின் மீது உரிமைகள் அவசியம் இருக்க வேண்டும். சொத்தில் உரிமை இல்லாதவன் வழக்குச் சொத்துப் பேணுநர் நியமனம் கேட்பதும் செல்லத்தக்கதன்று என *'இந்திய வழக்குகள்' 61* (Indian Cases) *849* - இல் குறிப்பிடப் பட்டுள்ளது. சொத்துக்கு எந்தவிதமான அழிவோ, இடரோ நேரிடாதபோது வழக்குச் சொத்துச் பேணுநர் நியமனம் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

நியாயமும் சொத்தைப் பேணிக்காப்பதற்கான வசதியும் : வழக்குச் சொத்துப் பேணுநர் நியமனம் செய்யக் கேட்பது நியாயமானது என்ற போதிலும், நியமனம் கேட்போருக்கு அந்தச் சொத்து உரிமையும், சொத்து பாத்தியதையும் இருந்தால்தான் வழக்குச் சொத்துப் பேணுநர் நியமிக்கப்படுவார் என்று பல தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளது.

நியமிக்கப்படும் வழக்குச் சொத்துப் பேணுநர் இரு கட்சிக்காரர்களுக்கும் சார்பில்லாமல் நடுநிலை வசிப்பவராக இருக்க வேண்டும் எனவும், சொத்தில் தனிப்பட்ட அக்கறை உடையவராக இல்லாம லிருக்க வேண்டும் எனவும், *18* இந்திய வழக்குகள் *398*ல் தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது. ஆனால் சில அரிய சூழ்நிலையில் இருகட்சிக்காரர்களில் யாரேனும் ஒருவர் வழக்குச் சொத்துப் பேணுநராகத் தகுந்த காரணம் கருதி நியமிக்கப்படுவதும் உண்டு.

வழக்குச் சொத்துப் பேணுநருக்கு நீதிமன்றம் அவர் செய்யும் பணிக்கு ஊதியத்தை நிருணயம் செய்யும் வழக்குமன்றத்தால் நியமனம் செய்யப்படும் வழக்குச் சொத்துப் பேணுநர், வழக்குச் சொத்தின் பொறுப்பை ஏற்றுக் கொள்ளும் போது நீதிமன்றத்திற்குப் பிணை யம் (சாமீன்) (Security) தரக் கடமைப்பட்டவராவார். நீதிமன்றத்தின் ஆணைக்கு ஏற்ப அப்போதைக்கப் போது வழக்குச் சொத்து நிருவாகத் தொடர்பான அனைத்துக் கணக்குகளையும் நீதிமன்றத்தில் அளிக்க வேண்டும். அவரால் தரப்பட வேண்டிய தொகை களை நீதிமன்ற ஆணைப்படி செலுத்திட வேண்டும். வழக்கு சொத்துப் பேணுநரின் கவனக்குறைவு காரண மாகவோ, தெரிந்தே செய்த குறை காரணமாகவோ, வழக்குச் சொத்துக்கு இழப்பு நேரிட்டால் வழக்குச் சொத்துப் பேணுநரே அந்த இழப்புக்குப் பொறுப் பாளியாவர்.

வழக்குச் சொத்துப் பேணுநர் வழக்குச் சொத்து நிருவாகம் குறித்த கணக்கை நீதிமன்ற ஆணைப்படி அளிக்கத் தவறினால் அல்லது வழக்குச் சொத்துப் பேணுநர் செலுத்த வேண்டிய தொகைகளைச் செலுத்தத் தவறினால் அல்லது வழக்குச்சொத்துக்கு வழக்கு சொத்துப் பேணுநரின் கவனக் குறைவு காரண மாக வேண்டுமென்றே விட்டுவிட்ட இழப்பு என் றால் நீதிமன்றம் வழக்குச் சொத்துப் பேணுநரின் சொந்தச் சொத்தைப் பறிமுதல் செய்து விற்று வழக்குச் சொத்து இழப்பை மீட்க நடவடிக்கை எடுக்க உரிமையியல் நடைமுறைச் சட்ட விதி *40* பிரிவு *4*ல் கூறப்பட்டுள்ளது. ஒரு சொத்து நிலமாக இருப்பின் அந்நிலம் அரசாங்கத்திற்கு வரி கட்டுவ தாக இருப்பின் அல்லது அரசுக்குக் கிடைக்கப் பெற்ற நிலமாக இருப்பின் அந்நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் இசைவுடன் அவரையே வழக்குச் சொத்துப் பேணுநராக நீதிமன்றம் நியமிக்க உரிமை உண்டு. அதுபோன்றே தமிழ் நாட்டைப் பொறுத்தவரை, கூட்டுறவுத் துறை தொடர்புடைய சொத்தைப் பரா மரிக்க நீதிமன்றம் கூட்டுறவுத் துறையினர் இசைவு டன் அத்துறையினரை வழக்குச் சொத்துப் பேணு நராக நியமிக்கச் சட்டம் அனுமதிக்கிறது.

வழக்குச் சொத்துப் பேணுநரை நியமிக்க உரிமை பெற்ற நீதிமன்றத்திற்கு இப்பேணுநரை நீக்கவும் உரிமை உண்டு. *(1931 எ.எல்.ஜே.13)* ஒரு வழக்குச் சொத்துப் பேணுநர் நீதிமன்ற ஆணையை மீறி, சரி வரக் கணக்குகளை வழக்குச் சொத்தைப் பொறுத்த வரை வைத்திருக்காவிடில் அவரை நீதிமன்றம் நீக்கி விடும். *(869.சி.246)* ஒரு வழக்குச் சொத்துப் பேணுநர் வழக்குச் சொத்தின் துய்ப்பை ஒப்படைத்த பிறகு அவ ருக்குக் கிடைக்க வேண்டிய ஊதியத்திற்கு வழக்குத் தொடர அவருக்கு அதிகாரம் உண்டு.

வழக்கை விசாரித்து, பேணுநர் சரியாகக் கணக்கு வைத்திருக்க வேண்டுமென கல்கத்தா உயர்நீதி மன்றம் 12 இந்திய வழக்குகள் 780 தீர்ப்பில் தெளிவாக்கி உள்ளது. அவையாவன.

1. ஒரு வழக்குச் சொத்துப் பேணுநர் தம் கணக்கை எப்போது வேண்டுமானலும் சோதனைக்குக் கேட்டால் தகுந்த ஆதாரங்களுடன் நீதிமன்றத்திற்குத் தந்திட ஆயத்த நிலையில் இருக்க வேண்டும்.

2. கணக்கைச் சரி செய்யும் போது, வழக்குச் சொத்துப் பேணுநரின் கணக்கை வாதாடும் இருகட்சிக் காரர்களையும் கேட்டு நீதிமன்றம் முடிவு செய்திட வேண்டும்.

3. ஒரு வழக்குச் சொத்துப் பேணுநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சொத்து நிருவாகத்தில் மிகப் பெரிய அளவிலான செலவினம் ஏதும் இருப்பின் நீதிமன்ற அனுமதியில்லாமல் அதிகப்படிச் செலவினத்தை வழக்குச் சொத்துப் பேணுநர் செய்திடக் கூடாது.

4. ஒரு வழக்குச் சொத்துப் பேணுநர் மேற்கொண்டுள்ள செயல் வழக்குச் சொத்துக்கும், கட்சிக் காரர்களுக்கும், நல்லதாக இருப்பதை மெய்ப்பித்து விட்டால் அந்தச் செயல் நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

5. சட்ட உதவி தேவைப்படின் அதற்கான சட்டத் துறைச் செலவினங்களுக்காகவும், வழக்குரை கட்டணத்திற்காகவும், நீதிமன்றம் செலவினத்தை வழக்குச் சொத்துப் பேணுநருக்கு அனுமதிக்க வேண்டும். சட்ட உதவி தேவையில்லாத வழக்குகளுக்கு அது பொருந்தாது.

6. வழக்குச் சொத்துப் பேணுநரின் கணக்குச் சரி பார்க்கப்பட்டு நீதிமன்றத்தால் சரியான கணக்கு என ஒப்புக் கொள்ளப்பட்ட பிறகு ஏதும் வழக்குச் சொத்துப் பேணுநர் கவனக்குறை காரணமாக அல்லது அவரால் அறிந்து இழைக்கப்பட்ட இழப்பு வெளிப்பட்டால் சரிபார்த்த கணக்கை மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டு கண்டுபிடிக்கப்பட்ட புதுக்கணக்குப் படி வழக்குச் சொத்துப் பேணுநரிடமிருந்து தொகையை வசூலித்திட வேண்டும்.

கல்கத்தா உயர்நீதி மன்றத் தீர்ப்பையொட்டிப் பல தீர்ப்புகள் தொடர்ந்து பல நீதி மன்றங்களால் அளிக்கப்பட்டுள்ளன. ஒரு குழந்தைக்குத் தர அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் வழக்குச் சொத்துப் பேணுநர் அளித்திருக்கிறார். அதற்குக் குழந்தையிடமிருந்து கைச்சாத்து (இரசீது) வாங்கித் தந்த போதிலும் அதிகப்படியாகக் கொடுக்கப்பட்ட தொகையை வழக்குச் சொத்துப் பேணுநர் தம் பணத்திலிருந்து நீதிமன்றத்தில் செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவரார். (28 ஐ.சி.25) ஓர் இளவலை விடுதலை செய்தபோது வழக்குச் சொத்துப் பேணுநர் காவல்துறையினருக்குக் கையூட்டுத் தந்திருக்கிறார். அந்தக் கையூட்டுத் தொகை கணக்கில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. வழக்குச் சொத்துப் பேணுநர் கையூட்டு கொடுத்ததாகச் சொல்லும் தொகையை செலுத்தியே தீர வேண்டும்.

**வழக்கு மூலம்** : உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்குத் தொடர மூலகாரணமாக உள்ள ஒரு நிகழ்ச்சி வழக்கு மூலம் எனப்படும். எடுத்துக்காட்டாக ஒருவரிடம் நிலம் குத்தகைக்கு விடப்பட்டு, குத்தகைச் சாகுபடி செய்பவர், குத்தகை நெல் அளக்க மறுத்தால் நில உடமையாளர் குத்தகைதாரரிடம் குத்தகை நெல் கேட்டுத் தொடரும் வழக்கிற்கு எது வழக்கு மூலம்? குத்தகைக்கு நிலத்தைச் சாகுபடிக்கு விட்டதும், குத்தகை நெல் கொடுக்க மறுத்ததும் வழக்குமூலம் (Cause of Action) எனப் பேசப்படுகிறது. இந்த உண்மைகளை உரிமையில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கும் வாதி நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ளார். இதனாலேயே வழக்கு மூலம் என்பது வாதி நிரூபிக்கக் கடமைப்பட்ட உண்மைகளின் தொகுப்பு என்றும் கூறப்படுகிறது. அந்த உண்மைகளை வாதி நிரூபிக்கத் தவறினால் வழக்கில் அவர் கேட்கும் பரிகாரம் கிடைக்காது. எந்த ஒரு உண்மையை வாதி நிரூபித்தால் அவருக்குப் பரிகாரம் கிடைக்குமோ அது வழக்குமூலம் எனத் தெளிவாகியுள்ளது. அதனை நிரூபிக்கத் தவறினால் பிரதிவாதிக்கு நன்மை விளையும்.

உரிமையியல் நீதிமன்றங்களில் தொடரப்படும் வழக்குகளுக்கான வழக்கு உற்பத்தியாகும் அடித்தளத்தை இச்சொல் சுட்டுகிறது. உரிமையியல் நடைமுறைச்சட்டம், பிரிவு 20-ன் படி ஒரு வழக்கில், வழக்கின் மூலம் எந்த நீதிமன்ற எல்லையில் உற்பத்தியாயிற்றோ அந்த நீதிமன்றத்தில் தான் வழக்குத் தொடர முடியும்.

எடுத்துக்காட்டாக, ஆதிமூலம் என்பவருக்குச் சொந்தமான ஒரு கடை திருச்சி நகரத்தில் உள்ளது. வடிவேலு என்பவர் தஞ்சை நகரில் வணிகம் நடத்துகிறார். வடிவேலு தன் திருச்சி நகர முகவர் மூலம் ஆதிமூலத்தின் கடையில் சரக்குகள் வாங்குகிறார்.

வாங்கப்பட்ட சரக்கைத் திருச்சியில் ஒரு சரக்குந்தில் வடிவேலு வேண்டிக் கொண்டதற்கிணங்க ஏற்றித் தஞ்சைக்கு அனுப்புகிறார். வடிவேலு இந்தச் சரக்குக்கு உரிய தொகையை அளிக்காவிடில் ஆதிமூலம், பிரிவு 20-ன் படி வடிவேலு வசிக்கும் தஞ்சை நகரில் வழக்குத் தொடரலாம், அல்லது வழக்குமூலம் உற்பத்தியான இடமாகிய திருச்சியிலும் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம். திருச்சி நகரில் வழக்குத் தொடர வேண்டுமானால் அவருக்குள்ள காரணம் வழக்கு மூலம் ஆகும். வழக்கு மூலம் என்றால் என்ன? தஞ்சையைச் சார்ந்த வடிவேலு என்பவர் திருச்சில் ஆதிமூலம் கடையில் சரக்குகள் வாங்கியதும் சரக்குந்தில் வடிவேலு வேண்டுகோளுக்கு இணங்க ஏற்றியதும் வழக்கின் மூலம் ஆகின்றன. எடுத்துக்காட்டாகத் தொகையைத் தஞ்சை நகரில் வந்து ஆதிமூலம் கேட்டு வடிவேலு தரமறுத்து அதன் விளைவாக உற்பத்தியாகும் வழக்கின் மூலம் தஞ்சையில் எழுந்தபோதிலும், திருச்சி நகரத்தில் எழுந்துள்ள வழக்கின் மூல உற்பத்தியையே (சொல்லப்பட்டுள்ள சரக்கு வாங்கியது, சரக்குந்தில் ஏற்றியது, ஆகிய வழக்கு மூலங்களை) ஆதாரமாகக் கொண்டு திருச்சியிலும் வழக்குத் தொடுக்கலாம்.

உரிமையியல் நடைமுறைச்சட்டம் விதி 2 பிரிவு 3-இன் படி ஒரு வாதி ஒரு பிரதிவாதியின் மீது அல்லது பல வாதிகள் பல பிரதிவாதிகள் மீது தொடரப்பட்டுள்ள வழக்கில் பிரதிவாதி அல்லது பிரதிவாதிகள் மீது, பரிகாரம் கிடைக்க வாதிக்குள்ள வழக்குமூலங்கள் அனைத்தையும் இணைத்து ஒரே வழக்கில் பரிகாரம் கேட்டிடலாம் என்பது கூறப்படுகிறது. வழக்குமூலங்கள் ஒரே வழக்கில் இணைக்கப்பட்டுத் தாக்கல் செய்யப்படும், வழக்கில் மொத்தக் கூடுதல் தொகையைக் கணக்கிலெடுத்துச்சட்டப்படி உரிய நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட வேண்டும். அசையாத பொருள்களைப் பொறுத்தவரை வழக்கு மூலங்களை ஒரே வழக்கில் இணைத்துப் பரிகாரம் கேட்டிடும் போது நீதிமன்றத்தின் அனுமதி தேவைப்படுகிறது. ஆனால், அதற்குச் சில விதிவிலக்குகள் தரப்பட்டுள்ளன. ஒரு நிலையான சொத்தின் துய்ப்பிற்கு வாதி உரியவர் என்று தொடரப்படும் வழக்கில் பிரதிவாதி அனுபவிக்க உரிமையில்லாத சொத்தை அனுபவித்து காலத்திற்கான வருவாயை வாதி கேட்க உரிமையுண்டு அதற்கு நீதிமன்ற அனுமதி தேவையில்லை. சொத்திலிருந்து கிடைக்கும் வாடகை உரிமையும் விதிவிலக்கில் அடங்கும் . நிலையான சொத்துகளின் துய்ப்புப் பெறக் கேட்கப்படும் வழக்கில் ஒப்பந்தத்தை முறித்த அல்லது மீறியதற்கான இழப்பீடும் சேர்த்துக் கேட்க நீதிமன்ற அனுமதி தேவையில்லை. ஒரே வழக்குமூலத்தை மையமாகக் கொண்டு கேட்கப்படும் பரிகாரத்திற்கு நீதிமன்ற அனுமதி தேவையில்லை.

சில காலங்களில் சில வழக்குகளில், வழக்குமூலங்கள் சேர்க்கப்பட வேண்டியவை விடப்பட்டிருந்தால் அதற்கான மறுப்பை வழக்கின் தொடக்கத்தில் அதாவது வழக்கில் எழுவினா தீர்மானிக்கப்படும் போதோ அதற்கு முன்னதாகவோ தெரிவிக்க வேண்டும். ஒருவேளை வழக்குமூலம் வழக்கில் இணைக்கப்பட வேண்டியது பின்னால் நேரிட்ட விளைவு காரணமாயின் அதற்கு மட்டும் விதிவிலக்கு உண்டு. எழுவினா தீர்மானிக்கப்படும் கட்டத்தில் எழுப்பப்படும் அல்லது எழுப்பப்படாத மறுப்புகள் ஏற்புடையனவல்ல என உரிமையியல் நடைமுறைச் சட்டம் விதி 3 பிரிவு 7ல் கூறப்பட்டுள்ளது.

ஒரு பிரதிவாதியின் மேல் வழக்கு மூலம் வழக்குரையில் சொல்லப்படாவிட்டால் அந்த வழக்குரை நீக்கப்படத்தக்கது என்றும் 1941 பி.டபிள்யூ.என். 25 இல் சொல்லப்பட்டுள்ளது. வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள அத்தனையும் உண்மையானவை என்று எடுத்துக் கொள்ளப்பட்டு அதனை ஆய்வு செய்து வழக்குரையில் வழக்குமூலம் பொதிந்துள்ளதா என்பதைத் தொடக்க எழுவினாவாக ஆய்வு செய்ய வேண்டும், என்று பிரிவி கவுன்சில் வழக்கு 25. எம்.எல்.செ.104 இல் சொல்லப்பட்டுள்ளது. நீதிமன்றங்கள் வழக்குரைக்கு அப்பால் ஆய்வுக்குச் செல்ல இயலாது. உரிமையியல் நடைமுறைச் சட்டம் விதி 37 பிரிவு 11 இல் ஒரு வழக்குரையில் வழக்குமூலம் சொல்லப்படாவிட்டால் அந்த வழக்குரை நீக்கப்படவேண்டும் என்று சட்டம் கூறுகிறது.

உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 20-இல் வழக்கு மூலம் முழுதும் அல்லது ஒரு பகுதி எந்த வழக்கு மன்ற எல்லைக்குள் உற்பத்தி ஆயிற்றோ அந்த வழக்கு மன்றத்தில்தான் தாவா தாக்கல் செய்யப்படவேண்டும் என்று கூறுகின்றது. ஒரு நிறுவனம் தொழில் நடத்தும் போது அந்த நிறுவனத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்தான்

அலுவலகத்தின் இடமானபோதிலும் அதனுடைய கிளை அலுவலகம் அமைந்துள்ள இடங்களில் வழக்கு மூலம் உற்பத்தியாகியிருந்தால், அந்த வழக்கு மூலம் உற்பத்தியான நீதிமன்ற எல்லைக்கு வழக்கை விசாரிக்க உரிமை உண்டு. வழக்கு மூலம் என்பது தாவாவுக்கு முன் நிகழ்ந்த உற்பத்தியாக இருக்க வேண்டும். வழக்கின் நடவடிக்கையில் எழுப்பப்படு கின்ற வாதுரையாக இருந்தால் மட்டும் போதாது என்று (*50 எம்.எல்.சே. 328*) சட்ட நூலில் பேசப்பட் டுள்ளது.

வழக்கு மூலம் என்பதைப் பற்றித் தெளிவாகப் பல தீர்ப்புகளில் விளக்கப்பட்டுள்ளன. வழக்கு மூலம் என்பது அடிப்படையானது. நீதிமன்றங்களில் வழக் குரை பல நேரங்களில் திருத்த அனுமதிக்கப்பட் டுள்ளன. இரு வாதிகளுக்கிடையில் ஏற்பட்டுள்ள உண்மையான சிக்கலைத் தெளிவு படுத்த வழக்குரை திருத்தப்படுகிறது. சில நேரங்களில் வாதி கேட்கும் உரிமை புரியாத அளவிற்குக் குழப்பமான பிழையாக இருந்தால் அதனை மாற்ற வழக்குரைகளைத் திருத்தம் செய்ய நீதிமன்றங்கள் அனுமதிப்பதுண்டு. ஆனால் ஒரு தாவாவின் அடிப்படைத்தன்மையை மாற்றம் செய்யக்கூடிய அல்லது ஒரு வகையான சட்டத் தொடர்பை மையமாகக் கொண்ட தாவா வைப் பிறிதொரு சட்டத்தொடர்பை மையமாக வைப்பதற்காகத், தாவாவைத் திருத்தம் செய்ய நீதி மன்றங்கள் அனுமதிப்பதில்லை. இந்தக் கருத்து 60 எம்.எசு.சே. 713 நூலில் தெளிவாக விளக்கப்பட்டுள் ளது. ஒரு தாவா எந்த அடித்தளத்தில் எழுப்பப்பட்டுள் ளதோ அந்த அடித்தளத் தாவாவின் தன்மையைத் திருத்தம் செய்ய நீதிமன்றங்கள் அனுமதிப்பதில்லை. ஆனால், அந்த அடித்தளத்தை மையமாகக் கொண்ட தாவாவில் கேட்கப்படுகின்ற பரிகாரம் தாவாவின் அடிப்படைத் தன்மையை மாற்றம் செய்வதில்லை என்பதனால் பரிகாரத்தைத் திருத்தம் செய்ய நீதி மன்றங்கள் அனுமதிப்பதுண்டு. *92 இந்தியன் கேசசு 330* ஏட்டில் வழக்கு மூலம் உற்பத்தியான நாளை மாற்றம் செய்ய நீதிமன்றங்கள் அனுமதிப்பதுண்டு. ஆனால் வழக்கு மூலத்தையே திருத்தம் செய்ய அனுமதிப்பதில்லை என்று கூறப்பட்டுள்ளது. *41 லா வீக்லி* பக்கம்-37-இல் அசல் வாக்குமூலத்தை மேலும் தெளிவுப்படுத்த வழக்குரை திருத்தம் செய்ய அனுமதி உண்டு என்றும் வழக்கு மூலத்தைத் திருத்தம் செய்ய அனுமதி இல்லை என்றும் தெளிவாகக் கூறப்பட் டுள்ளது. எழு வினா குறித்து இரு வாதிகளுக்குள் ஏற்பட்டுள்ள உரிமையியல் தகராற்றைத் தெளிவு படுத்தத் திருத்தங்கள் அனுமதிக்கப்படுவதுண்டு. பல்வேறு தொடர் வழக்குகளின் உற்பத்தியைத் தடுக் கத் திருத்தங்கள் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், ஒரு வழக்கில் வழக்கு மூலம் இல்லை என்று நிரு பணம் செய்ய வேண்டிய பொறுப்பு பிரதிவாதியைச் சார்ந்ததாகும். வழக்கின் மூலம் வழக்குரையில் வாதி சொல்லுகிறபோது அந்த வழக்கு மூலம் பொய்யா னது என்பதைப் பிரதிவாதி நிரூபிக்கக் கடமைப்பட் டுள்ளார் என்பது *102 இந்தியன் கேசசு 31*-இல் பேசப்படுகிறது.

**வழக்குரைஞர்** : வழக்கறிஞர்களின் உரிமை களும் கடமைகளும் சட்டப்படி 1961 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வழக்குரைஞர் வரையறை செய்யப் பட்டுள்ளன. அச்சட்டம் பிரிவு 29-இன் படியும் பிரிவு 33-ன் படியும் வழக்குரைஞர்கள் மட்டுமே நீதிமன்றங் களில் வாதிட உரிமையுடையவர்கள் ஆவர். இவர்கள் வழக்கறிஞர் எனவும் குறிப்பிடப் பெறுவர்.

நீதிமன்றங்களில் வழக்குரைஞர்களை அமர்த்திக் கொண்டு வாதிடும் மரபு இந்தியாவைப் பொறுத்த வரை ஆங்கில நாட்டு மரபினைத் தழுவியது. ஆங்கில நாட்டில் நீதிமன்றங்களில் வழக்குரைஞர்களை அமர்த்திக் கொள்ளும் மரபு இருந்து வந்தது. அது இந்தியாவிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன்னர்ச் சட்டம் சாதாரண மக்க ளுக்கு எட்டாத அளவுக்கு, வல்லுநர்களின் ஆலோ சனையிலும் கருணையிலும் இயங்குமளவுக்கு இருந் தது உண்மை. பிற நாட்டு மொழிகளில் இயற்றப் பட்ட சட்டம் சாதாரண ஏழை எளியவர்களுக்கு விளங்கவில்லை. எனவே அறிஞர் அண்ணா அவர் கள், 'சட்டம் ஓர் இருட்டறை எனவும் வழக்குரைஞர் வாதம் ஒரு விளக்கு' எனவும் குறிப்பிட்டார்கள். அது ஏழைகளுக்கு ஒளி விளக்காக அமையவில்லை. வழக் கில் தொடர்புடையவனுக்கு வழக்குரைஞர் வாதம் புரியவில்லை. எனவே தான் வழக்குரைஞர் வாதம் ஏழைகளுக்கு எட்டாது என்று அறிஞர் அண்ணா சொன்னார்கள். வழக்குரைஞர்கள் நீதிபதியின் உள்ளத்தைக் கவரவே வாதம் புரிந்தனர். ஏழை எளிய வர்களுக்குப் புரியவேண்டும் என்ற எண்ணத்தோடு

செய்யவில்லை. கொலைக் குற்றம் சுமத்தப் பட்டவன் நீதிமன்றத்தில் நின்று கொண்டிருப்பான். ஆனால் அவனுக்குத் தெரியாமலே, அவன் புரிந்து கொள்ள இயலாமலே அவனுடைய வழக்கில் வாதங்களும், எதிர் வாதங்களும் நீதிமன்றங்களில் நடைபெறும். அந்த நிலையைப் போக்க அரசாங்கம் காலப்போக்கில் இரண்டு தலையாய கடமைகளை நிறைவேற்றியது. அவை 1. நீதிமன்ற மொழி ஆங் கிலத்திற்குப் பதிலாக வட்டார மொழியாக மாற்ற மடைந்தமை, 2. நீதிமன்றத்தில் வழக்கு குறித்து வாதிட இயலாதவர்களுக்கும் பொருளாதார வசதி குறைந்தோருக்கும் இலவசச் சட்ட உதவித் திட்டம் அமுலாக்கப்பட்டமை ஆகும்.

மேலே கண்ட இரு திட்டங்கள் மூலம் ஓரளவுக்கு ஏழை எளியவர்களின் தொல்லைகள் துடைக்கப்படு கின்றன. மாநில மட்ட வழக்குரைஞர் மன்றமும், இந்திய வழக்குரைஞர் மன்றமும், 1961-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வழக்குரைஞர்கள் சட்டத்தின் மூலம் வழக்குரைஞர்கள் சட்டத்தின் மூலம் தோன்றின.

வழக்குரைஞர் துணையினாலேயே நீதிமன்றங் களில் பணிகள் செம்மையாக நடைபெற முடியும் என்னும் நிலை நேர்ந்துள்ளது. வழக்காடும் இரு தரப் பினர் சார்பிலும் வழக்கில் தொடர்பில்லாத இரு தரப்பு வல்லுநர்களின் வாதுரைகளும், வாதங்களும் சட்டப்படி நியாயமான தீர்ப்பு வழங்கத் துணை செய்கின்றன. வழக்குரைஞர் நீதிபதியின் கவனத்தைத் தம் பக்கம் திருப்ப வாதப் போர் புரிகிறார். அவ் வழக்குரைஞர் வாதத்தில் படும் உண்மைகளை நீதி பதி நிறைவோடு ஏற்றுக் கொள்ளாமலிருக்க எதிர்த் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தைத் தொடுக்கிறார். இரு தரப்பு வாதங்களும் நீதிமன்றத்தின் கவனத்தில் எடுத் துக் கொள்ளப்பட்டு நீதிபதி தம் தீர்ப்புரையை ஓர் ஆய்வுரையாகக் கூறுகிறார். அப்பணி சற்றுச் சிரம மான பணியானாலும் நீதிபதிகள் செய்கிறார்கள். நின்று நிதானமாக ஆழமாகச் சிந்தித்துக் கூறப்படும் தீர்ப்புகள் பிழையாவதில்லை. அவசரத்தில் எழுதப் படும் தீர்ப்புகள் நிலைப்பதும் இல்லை. எனவேதான் நீதிபதிகளுக்குக் கால இடைவெளி இன்றியமையாத தாகின்றது. அந்தக் காலஇடைவெளி நீட்டிப்பதால் வழக்குக் கட்டுகளின் சுமை பெருகி முடிவாகாத வழக்குகளின் எண்ணிக்கை ஒரு பெரும் சிக்கலா வதும் உண்டு. கூடுதல் நீதிமன்றங்கள் தாம் இச் சுமையைக் குறைக்க இயலும்.

இருதரப்பில் எதிர் எதிராக நின்று இரு வழக்குரை ஞர்கள் வாதம் செய்யும் போது, அவ்வாதத்தில் ஒரு தரப்பு வாதமே ஏற்றுக் கொள்ளப்பட்டு மற்றொரு தரப்பு வாதம் தள்ளுபடியாகிறது.

அதனாலேயே வழக்குரைஞர்கள் நீதிமன்றங்களில் பொய் பேசுகிறார்கள் அல்லது பொய் வழக்காடு கிறார்கள் என்று பாமரமக்களிடையே இழிவாகப் பேசப்படுகிறது. அப்படிப் பேசுவது அவர்கள் அறியாமையின் விளைவேயாகும். ஒரு வழக்கில் வழக்காடும் உரிமை பெற்ற வழக்குரைஞருக்கு எந்தக் கட்டத்திலும் பொய் பேச வேண்டிய இன்றியமை யாமை எள்ளளவுக்கும் கிடையாது. வழக்குரை ஞரின் நடைமுறைப் பணியை ஆய்வு செய்தால் உண்மை புலப்படும்.

எடுத்துக்காட்டாகக் குற்றவியல் நீதிமன்றங்களில் குற்றம் சுமத்தப்பட்டவர் சார்பில் தோன்றல் அறிக்கையளித்து வழக்குரைஞர் நீதிமன்றத்தில் தோன்றுகிறார். அப்படி அவர் தோன்றும் போது அவரைச் சார்ந்தோர் தரும் தகவல் அடிப்படையில் பிணையிலிருந்து விடுதலை கேட்கிறார். வழக்குரை ஞர் பிணையில் விடுவிக்கக் கேட்கும் போது எழுப் பும் வாதம் அவருக்குத் தரும் தகவலின் அடிப்படை யில் அமைவதால் வழக்குரைஞர் மீது ஏதும் சுமையோ கூடுதற் பொறுப்போ இல்லை. பிணை யில் விடுதலையாகி வெளி வந்தவுடன் நீதிமன்றக் கட்டளைப்படி நடக்காத கட்டத்தில் சாமீன் அளித்த வர் பொறுப்பாளியாவாரே அல்லாமல் வழக்குரை ஞர் பொறுப்பாளி ஆக மாட்டார் என்பது குற்ற வியல் சட்டத் துறையில் அரிச் சுவடிப் பாடம்.

குற்றவியல் வழக்கை நடத்தும் போது வழக்குரை ஞர் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்யும் போதும், ஆவணங்கள் தாக்கல் செய்யும் போதும், இறுதியில் வாதம் செய்யும் போதும், வழக்குரைஞர் தமக்குத் தன்னுடைய கட்சிக்காரர் தரும் தகவல் அடிப்படையிலேயே பேசுகிறார். வழக்குரைஞர் வாதம் இரண்டு பிரிவுகளை அடிப்படையாகக் கொண்டது. ஒரு பிரிவு வழக்கில் தொடர்புடைய உண்மைகள் பற்றி எழுப்பும் உரை முழுதும் கட்சிக் காரர் தரும் தகவலை மையமாகக் கொண்டது. எனவே, வழக்குரைஞர் சொந்தமாகத் தெரிந்து கொண்ட உண்மை என்ற பேச்சுக்கே இடமில்லை.

அடுத்த பிரிவு வாதம் சட்டத் தொடர்பானது. சட்ட நூல்களில் ஆய்வு செய்து வழக்குரைஞர் தம் வாதத்தைத் தருவதிலும் அவருடைய சொந்தவுரைக்கு இடம் ஏதும் இல்லை. சட்ட நூலில் சொல்லப்பட்டுள்ளவற்றை வழக்குரைஞர் மேற்கோள் காட்டுகிறார்.

உரிமையியல் நீதிமன்றங்களானாலும், உயர்நீதி மன்றங்களானாலும், எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குரைஞர் ஆற்றும் பணியில் பொய்மைக்கு எள்ளளவும் இடமில்லை. ஒரு நிகழ்ச்சி நடந்ததா இல்லையா என்பதை ஆய்வு செய்யும் போது நீதிமன்றத்தில் இரு தரப்பினருடைய தகவல்களையும் கட்சிக்காரர்கள் தரும் உண்மைகளின் அடிப்படையில் நீதிமன்றத்தில் வழக்குரைஞர்கள் அளிக்கிறார்கள். அத் தகவல்களை நிரூபிக்கவோ பொய்யானது என மறுக்கவோ இரு கட்சிக்காரர்களும் தாங்கள் அளிக்கும் சான்று ஆவணங்களாலும், வாய் மொழிச் சாட்சியம் மூலமும் சான்று தருகிறார்கள். உண்மையைப் புலப்படுத்த அல்லது வெளிக் கொண்டு வர வழக்குரைஞர்கள் சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்கிறார்கள். சான்றுச் சட்டப்படி செல்லத் தகுந்த சாட்சியங்களையும் ஏற்றுக் கொள்ளத் தக்க சான்று ஆவணங்களையும் நீதிமன்றங்கள் ஆய்வு செய்கின்றன. வழக்குரைஞர்கள் அந்நிகழ்ச்சி நடந்திருக்கலாம் அல்லது நடந்திருக்க நியாயமில்லை என்று வாதம் தொடுக்கிறார்கள். அப்படித் தொடுக்கும் போது சட்டச் சிக்கலை வாதத்தில் மேற்கோள் காட்டுகிறார்கள். சம்பவம் நடந்திருக்குமா இல்லையா என்பதை ஆய்வு செய்வதில் நீதிமன்றங்களுக்கு வழக்குரைஞர்கள் துணை செய்கிறார்கள். சட்ட நூல்களிலிருந்து சட்ட நியதிகளை எடுத்துக் காட்டிச் சட்டப்படி ஏற்புடையதா அல்லது ஏற்கத் தகாததா என வாதம் செய்கிறார்கள். அதில் எக்கட்டத்திலும் வழக்குரைஞர் தம் சொந்தக் கருத்தையோ, தாம் அறிந்த உண்மையோ கூற இடமில்லை. ஒரு கட்சிக்காரர் வழக்கறிஞருக்குத் தரும் தகவலைக் கட்சிக்காரர் இரகசியமாகக் கொள்ளவும் கடமைப்பட்டவர் ஆவார். கட்சிக்காரர் தரும் தகவலை வழக்குரைஞர் வெளியிட வேண்டிய கட்டாயம் இல்லை. கட்சிக்காரர் ஒரு வழக்குரைஞருக்கு ஒரு தகவல் தந்துள்ள போது அத்தகவலை, அந்த வழக்குரைஞர் எதிர்த் தரப்பினருக்குத் தோன்றிப் பயன்படுத்த அனுமதியில்லை. சென்னை உயர்நீதி மன்றம் முழு அளவு நீதிபதிகள் (Full Bench) வழங்கிய தீர்ப்பு (1958) 2 "மெட்ராசு லா சர்னல்" இதழில் பக்கம் 305-இல் உள்ளது. அவ்வழக்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், ஒரு வழக்குரைஞருக்கும் இடையே நடந்த வழக்காகும். அவ்வழக்கில் ஒரு வழக்குரைஞர் குற்றவியல் வழக்கு ஒன்றில் ஒரு தரப்பினருக்கு ஓர் ஆலோசனை வழங்கிய பிறகு தொடர்ந்து அடுத்த கட்டத்தில் எதிர்த் தரப்பினருக்கு அதே வழக்குரைஞர் தோன்றுவது சட்டப்படி செல்லத் தக்கதன்று எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. வழக்குரைஞர்கள் கட்சிக்காரர்கள் தரும் தகவலை இரகசியமாகப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்று இந்தியச் சான்றுச் சட்டம் பிரிவு 126-இல் சொல்லப்பட்டுள்ளது. ஆனால், சட்ட விரோதமான காரியங்கள் குறித்துக் கட்சிக்காரர் தரும் தகவலை வழக்குரைஞர் இரகசியமாகக் காக்க வேண்டியதில்லை என்றும் இந்தியச் சான்றுச் சட்டம் பிரிவு 126-இல் சொல்லப்பட்டுள்ளது. கட்சிக்காரர்கள் தரும் தகவல்கள் வழக்கறிஞராலும் வழக்குரைஞரிடம் பணியாற்றுவோராகிய எழுத்தர்கள், இதர துணை வழக்குரைஞர்களாலும் கூட இரகசியமாகப் பாதுகாக்கப்பட வேண்டும். சில வேலைகளில் சில வழக்குகளில் சமரசமாகப் பேசித் தீர்த்துக் கொள்ள முற்படுவதுண்டு. அப்படி ஏதும் சமரசம் செய்ய வேண்டிக் கட்சிக்காரர் தகவல் அளித்திருந்தால் அத்தகவல் குறித்துச் சிறப்புத் தோன்றல் அறிக்கை(வக்காலத்து) தாக்கல் செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதி மன்றத்தில் கோவிந்தம் மா.ளுக்கும், மாரிமுத்து மேசுதிரி என்பவருக்கும் நடைபெற்ற வழக்கில் தீர்ப்புக்கூறப்பட்டு 1958 (2) "மெட்ராசு லா சர்னலில்" பக்கம் 34-ல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் பல்வேறு சமசுதானங்களில் பல்வேறு வகையான நீதிமன்றங்கள் இயங்கி வந்தன. வழக்குரைஞர்களும் பல்வேறு வகைப்பட்டவர்களாகப் பல்வேறு நீதிமன்றங்களில் தோன்றி வழக்குகளை நடத்தி வந்தனர். இந்திய மண்ணில் 1879 -ஆம் ஆண்டு முதலாவது வழக்குரைஞர் சட்டம் அமுலுக்கு வந்தது. அச்சட்டப்படி நீதிமன்றங்களில் வழக்குரைஞர்கள் நீதிமன்றங்களில் வழக்கு நடத்தி வந்தனர். பின்னர் 1926-ஆம் ஆண்டு வழக்குரைஞர்கள் மன்றச் சட்டம் இயற்

றப்பட்டு அமலாக்கப்பட்டது. அச்சட்ட படி உயர்நீதி மன்றத்திற்குக் கட்டுப்பட்ட மாநில வழக்குரைஞர் கள் மன்றங்கள் நிறுவப்பட்டன.

இறுதியாக 1961-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட் டம் வழக்குரைஞர்கள் மன்றத்தை மாநில அள விலும், மைய அளவிலும் உருவாக்கித் தன்னிறைவு பெற்ற அமைப்புகளாக்கியது. இப்போது நீதிமன்றங் களில் 1961-ஆம் ஆண்டு வழக்குரைஞர்கள் சட்டப் படியே வழக்குகளை நடத்தி வருகிறார்கள். 1926-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட சட்டப்படி வழக்குரைஞராவ தற்குப் படிப்புத் தகுதியும், இதர தகுதிகளும் உடை யவர்கள், தொடர்புடைய உயர்நீதிமன்றங்களில் வழக்குரைஞர் மன்றப்பரிந்துரையிலும் உயர்நீதிமன்ற உரிமைப்படியும் வழக்குரைஞர்களாகப் பதிவு செய் யப்பட்டனர். ஆனால் 1961-ஆம் ஆண்டு வழக்குரை ஞர் சட்டம் இதனை முழுவதும் மாற்றியமைத்து விட்டது. வழக்குரைஞராவதற்குத் தகுதியுள்ளவர்கள் வழக்குரைஞர்கள் மன்றங்களிலேயே பதிவு செய்து கொள்ள வழிவகை காணப்பட்டுள்ளது. வழக்குரை ஞர் மன்றங்கள் தன்னிறைவு கொண்ட மன்றங்களாக, உரிமைகளும் கடமைகளும் வகுக்கப்பட்டு அவற்றின் படி இயங்கி வருகின்றன. ஒரு வழக்குரைஞர் தாம் ஏற்றுக்கொண்ட வழக்குக்கு மட்டும் கடமைப்பட்ட வர் அல்லர், அவருக்கு மிக உயர்ந்த சமூகக் கடமை யும் உண்டு என்று சட்ட வல்லுநர் மேன்மை தங்கிய மாரிஸ் ஆர் சோகன் எழுதிய தன் வரலாற்று நூலில் 180-181 பக்கங்களில் தெளிவாக விளக்கியுள்ளார். அவர் கூற்றுப்படி வழக்குரைஞர் வருங்காலத்திற்கு ஏற்ற வகையில் சட்டத்தில் திருப்பங்களை விளை வித்து முன்னேற்றத் துறையில் சமூகம் வளர, தங்கள் காலத்தின் பெரும் பகுதியைச் செலவிடத் துணிய வேண்டும் என்று சொல்லியுள்ளார்.

அதே கருத்தை நீதிபதி கசேந்திரகட்காரும் வலி யுறுத்திப் பேசியுள்ளார். வழக்குரைஞர்கள் தம் கட்சிக் காரர்கட்குத் தாம் ஏற்றுக் கொண்ட வழக்கில் கடமை உணர்வோடு நடந்து கொண்டால் மட்டும் போதாது என்றும், பரந்த சமுதாயத்திற்கு அவர்கள் பணி இன்றியமையாதது என்றும், நீதிபதி கசேந்திர கட்கார் வலியுறுத்தியுள்ளார்.

வழக்குரைஞர்கள் பணியைச் சீர் செய்யவும், வழக்குரைஞர்களுக்கு நீதிமன்றங்களில் வாதிட உரிமைகள் வழங்கிடவும், வழக்குரைஞர்கள் தம் கடமைகளைச் செம்மையாய் நிறைவேற்றவும், பல் வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. வழக்குரை ஞர்களின் உரிமைகளையும், கடமைகளையும் 1879 - ஆம் ஆண்டு இயற்றப்பட்ட வழக்குரைஞர்கள் சட்டம் (Legal Practioners Act) தெளிவாக வரையறை செய்துள்ளது.

தொடர்ந்து 1926-ஆம் ஆண்டு வழக்குரைஞர் மன் றச் சட்டம் இயற்றப்பட்டு அமல் செய்யப்பட்டது. இறுதியாக 1961-ஆம் ஆண்டுச் சட்டம் வழக்குரைஞர் கள் மன்றச் சட்டத்தை முழுதும் திருத்தி வழக்குரை ஞர்கள் மன்றங்களைத் தன்னிறைவு மன்றங் களாக்கின.

இந்திய வழக்கறிஞர் சட்டம் என்ற பெயரில் 1926-ஆம் ஆண்டு சட்ட எண் XXXVIII- படி ஒரு சட்டம் இயற்றப்பட்டது. நீதிமன்றங்களில் வாதிடும் வழக் குரைஞர்கள் தொடர்புடைய முந்தையச் சட்டங் களைத் திருத்தம் செய்து ஒரே சீராக்க நோக்கத்துடன் வழக்குரைஞர்கள் மன்றங்களை உருவாக்கி அம்மன் றங்கள் சில கடமைகளைச் சுமக்கச் செய்து உரிமை களை வழங்கிட அச்சட்டம் இயற்றப்பட்டது.

அச்சட்டப்படி நாடெங்கும் இயங்கி வரும் உயர்நீதிமன்றங்கள் வழக்குரைஞர்கள் பட்டியலைத் தயாரித்து வரும். வழக்குரைஞராக அச்சட்டப்படிப் பதிவு செய்து கொள்ள விரும்புவோர் உயர்நீதி மன்றத்தின் வழக்குரைஞர் பதிவேட்டில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு உயர்நீதி மன்ற எல்லைக்கும் உட்பட்டு வழக்குரைஞர்கள் சட்டப்படி இயங்கி வரும் ஒவ்வொரு வழக்குரைஞர் குழுவிலும் 15 உறுப்பினர்கள் அங்கம் வகிப்பார்கள். அதில் மாநிலத் தலைமை வழக்குரைஞரும் (Advocate General) உயர்நீதி மன்றத்தால் நியமிக்கப்படும் நால்வரும் அடங்குவர். உயர்நீதிமன்றம் அந் நால்வரில் இரு நீதிபதிகளை வழக்குரைஞர் குழுவில் நியமிக்க வேண்டும். எஞ்சிய பத்து உறுப்பினர்கள் வழக்குரைஞர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுவர் அப்படித் தேர்ந்தெடுப்பதில் குறைந்தது ஐந்து உறுப்பினர்கள் பத்தாண்டுக் காலம் வழக்குரைஞர் தகுதி உரிமை பெற்றவராக இருக்க வேண்டும். அக்குழுவுக்குத் தலைவர், உபதலைவர் தேர்ந்தெடுக் கப்படுவார்கள். மேற்கு வங்காளம், பம்பாய்,

சென்னை உயர்நீதிமன்ற வழக்குரைஞர் குழுக்களுக்கு அந்தந்த மாநிலத் தலைமை வழக்குரைஞர் (Advocate General) தலைவராக இயங்குவார்.

அச்சட்டம் பிரிவு 9-இன் படி வழக்குரைஞர்கள் குழு உயர்நீதிமன்ற அனுமதியின் பேரில் வழக்குரை ஞர்களாகப் பதிவு செய்து கொள்ள வேண்டியவர்கள் குறித்து ஒழுங்குபடுத்து விதிகளைச் செய்யலாம். அப்படிச் செய்யும் விதிமுறைகள், உயர்நீதி மன்றம் ஒருவர் வழக்குரைஞராகத் தகுதியில்லாதவர் என்று நிராகரிக்கும் உரிமையைக் கட்டுப்படுத்தும் விதி முறையாகவோ, உயர்நீதிமன்ற உரிமைகளில் தலை யிடும் விதிமுறையாகவோ இருக்கக்கூடாது. உயர்நீதி மன்ற உரிமைகளில் தலையிடாத வகையில் வழக்குரைஞர் குழுவுக்கு விதிமுறைகள் வகுக்க உரிமைகள் உண்டு.

அவையாவன : 1. வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்ள வேண்டியவரின் கல்வித் தகுதி, 2. உயர்நீதிமன்றத்திற்கு வழக்குரைஞராகப் பதிவு செய்ய முறையும் அமைப்பும் கூறும் படிவம் தொடர் புடையது. 3. உயர்நீதிமன்றம் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்ள விரும்புவோரின் மனுக்களை வழக்குரைஞர் குழுவிற்குத் தெரிவிக்க வேண்டும். 4. ஒருவர் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்ளத் தகுதியில்லாதவர் என்று மறுக்கும் எண்ணம் வழக் குரைஞர் குழுவுக்கு இருந்தால் உயர்நீதி மன்றத்தில் மறுக்கும் உரிமை. 5. வழக்குரைஞராகப்பதிவு செய்து கொள்ள வேண்டுவோரைக் கட்டணம் கட்டச் செய் தல் பெண்களும் வழக்குரைஞராகப் பதிவு செய்து கொள்ளச் சட்டம் செய்துள்ளது.

இந்திய வழக்குரைஞர்கள் மன்றச் சட்டம் பிரிவு 10 - இன்படி ஒரு வழக்குரைஞர் முறை கேடாக நடந்து கொண்டால் அவ்வழக்குரைஞர் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமை உயர்நீதி மன்றத்திற்கே உண்டு. பிரிவு 10 சொல்வதாவது. "உயர்நீதிமன்றம் அச்சட்ட எல்லைக்குட்பட்டு ஒரு வழக்குரைஞர் தொழில் அடிப்படையிலோ, இதர வகையிலோ ஒழுங்கீன மாக நடந்து கொண்டால் மன்னித்தல் அல்லது குறிப் பிட்ட காலத்திற்கு வேலைநீக்கம் அல்லது நிரந்தரப் பணி நீக்கம் செய்ய உரிமை கொண்டதாகும்."

வழக்குரைஞர்களில் கடமைகள் செம்மை யாக வரையறை செய்யப்பட்டுள்ளன. கட்சிக்காரர் களின் தொகைகள் வழக்குரைஞர் கையில் உள்ள போது அதனைப் பாதுகாத்துக் கட்சிக்காரரிடம் ஒப்படைக்க வேண்டிய கடமை வழக்குரைஞருக்கு உண்டு. அதில் ஏதும் வழக்குரைஞர் ஊதியம் என்று தெளிவாகப் பிரித்து கட்சிக்காரரின் தொகையாகக் கொள்ள வேண்டும் என்றும் அத்தொகை சரியாகக் கட்சிக்காரருக்கு வழங்கப்படாவிட்டால் அது தொழில் ஒழுங்கீனம் எனவும் இந்திய உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பு 'ஆல் இந்தியா ரிப்போர்ட்' 1957- ஆம் ஆண்டு இதழ் பக்கம் 149-இல் வெளியாகி யுள்ளது. வழக்குரைஞர் வழக்குக் குறித்துச் செய்த செலவினங்களுக்கு நியாயமான, நேர்மையான கணக்கு இருக்க வேண்டும்.

ஒரு வழக்குரைஞர் நடத்தும் வழக்கில் தொடர் புடைய சொத்தில் ஒரு குறிப்பிட்ட வீதத்தை வழக் குரை ஊதியமாகக் கேட்பதை நீதிபதிகள் கடுமை யாகக் கண்டனம் செய்துள்ளனர். அப்படிச் செய்வது பிரிவு 23 ஒப்பந்தச் சட்டப்படி, தவறானது என நீதிபதி கசேந்திர கட்கார் குறிப்பிட்டுள்ளார்.

கவனக்குறைவு என்பது ஒரு வழக்குரைஞரைப் பொறுத்தவரை ஒழுங்கீனமாகக் கொள்ளப்பட வில்லை. ஆனால், உண்மையை ஒரு வழக்குரைஞர் மறைக்கும் போதும் பொய்யான தகவல்களைக் கட்சிக்காரரிடம் தந்து நம்ப வைக்கும்போதும் கவனக்குறைவும் ஒழுங்கீனமாகக் கருதப்படுகிறது.

எடுத்துக்காட்டாக 178 -இந்திய வழக்குகள் இதழில் பக்கம் 398-இல் ஒரு வழக்கு வெளியாகியுள் ளது. வழக்குரைஞரிடம் ஒப்படைக்கப்பட்ட வழக்கை வழக்குரைஞரின் எழுத்தர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் விட்டு விட்டார். அவ்வழக்கிற் குச் செய்யப்பட்ட செலவினக் கணக்குகளைக் கட்சிக் காரரிடம் சொல்லவில்லை. வழக்குத் தொடர்பான சரியான தகவல்கள் கட்சிக்காரருக்குத் தரப்பட வில்லை. வழக்குரைஞரின் கவனக் குறைவோடு உண்மையைக் கட்சிக்காரரிடம் மறைக்க முற்பட்ட தால் அவ்வழக்குரைஞரின் செயல் ஒழுங்கீனமானக் கொள்ளப் பட்டது.

அச்சட்டப்படி ஒரு வழக்குரைஞர் செய்யும் தொழி லில் ஒழுங்கீனம் பற்றி முறையீடு செய்யப்பட்டால் அதனை விசாரணை செய்து பரிந்துரை வழங்க உயர் நீதிமன்றம் தீர்ப்பு மன்றங்களை (Tribunals)

வழக்குரைஞர் மன்றம் மூலம் நியமித்தோ மாவட்ட நீதிபதியைக் கொண்டு விசாரணை செய்தோ அவர்கள் அளிக்கும் முடிவை பரிசீலனை செய்யும் குற்றம் சாட்டப்பட்ட வழக்குரைஞரின் முறையீட்டையும் கேட்டுக் குற்றமேதும் காணப்படாவிட்டால் அவர் குற்றமற்றவர் என அறிவிக்கும் ஒழுங்கீனம் செய்திருப்பதாகத் தெரிந்தால் உயர்நீதி மன்றம் வழக்குரைஞருக்கு மன்னிப்பு அல்லது தண்டனை வழங்கும் குறுகிய காலப் பணி நீக்கம் வாழ்நாள் முழுதும் வழக்குரைஞராகப் பணி ஆற்றக் கூடாது. ஆகிய வற்றில் ஏதேனும் ஒரு தண்டனையை நீதிமன்றம் வழங்கும். சாதாரண குற்றவியல் நீதிமன்றங்களில் நடக்கும் வழக்குகளுக்கும், வழக்குரைஞர் குழுச் சட்டப்படி வழக்குரைஞர் மீது பிரிவு 10-இன் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு. இரண்டுக்கும் குறிக்கோள்கள் வேறு வகையானவை ஆகும். வழக்குரைஞர் துறையின் தகுதியையும் தரத்தையும் தக்க வைத்துக் கொள்ள பிரிவு 10 நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. 'ஆல் இந்தியா ரிப்போர்ட்டர்' 1964 -ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் இதழில் பக்கம் 244 -இல் பிரிவு 10 -ன் கீழ் உயர்நீதி மன்ற வழக்குரைஞர் ஒழுங்கீனம் செய்தால் எடுக்கப்படும் நடவடிக்கையின் குறிக்கோள் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அவ்வழக்கில் கட்சிக்காரருக்கு உரிய தொகையை வழக்குரைஞர் கட்சிக்காரரிடம் அளிக்காமல் மோசடி செய்தமைக்கு ஐந்து ஆண்டுக்காலம் வழக்குரைஞர் பணியிலிருந்து நீக்கம் செய்தது கடுமையான தண்டனை ஆகாது என்றும், தண்டனை நியாயமானதே என்றும் உச்ச நீதி மன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. வழக்குரைஞர் சட்டம் 1961 வந்தபின் 1926-ஆம் ஆண்டின் வழக்குரைஞர் மன்றச் சட்டம் நீக்கப்பட்டது.

முன்னர்க் கூறிய 1961-ஆம் ஆண்டு வழக்குரைஞர் சட்டம் இந்திய மைய அரசினால் இயற்றப்பட்ட சட்டமாகும். நீதித்துறைச் சீர்திருத்தத் தொடர்பாக 1953 -ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட அனைத்திந்திய வழக்குரைஞர் குழுப் பரிந்துரைகளாலும், சட்ட ஆணையப் பரிந்துரைகளாலும், வழக்குரைஞர்கள் குழு சட்டத் துறைக் கல்வி ஆகியவை தொடர்பான பரிந்துரைகளாலும் அச்சட்டம் மைய அரசினால் இயற்றப்பட்டது.

**அச்சட்டத்தின் முக்கிய குறிக்கோள்.** 1. அனைத்திந்திய வழக்குரைஞர் மன்றத்தை (All India Bar Council) உருவாக்கிப் பொதுப்பட்டியல் வழக்குரைஞர்களைக் கொண்ட வழக்குரைஞர்கள் குழு அமைத்து வழக்குரைஞர்கள் உச்ச நீதிமன்றங்களிலும் நாட்டின் பல பகுதிகளில் உள்ள நீதிமன்றங்களிலும், பணியாற்றும் உரிமையை (Right to Practice) உருவாக்குவது வழக்குரைஞர்கள் அனைத்திந்திய மையத்தில் மாநில வாரியாக வகுக்கப்பட்டு மையப் படுத்தப்படுகிறார்கள். 2. வழக்குரைஞர் மன்றங்களை ஒருங்கிணைத்து வழக்குரைஞர் என்ற பெயரில் பல் வேறு வகைப்பட்ட பிரிவுகளாக இயங்கி வரும் வழக்குரைஞர்களை ஒரே சீரான மட்டத்தில் (Single Class) நிறுவுவது. 3. வழக்குரைஞராகும் படிப்புத் தகுதியையும் இதரத் தகுதிகளையும் அனைத்திந்திய மட்டத்தில் எந்த வேறுபாடும் இல்லாத ஒரே தகுதியாகக் கொள்ளச் செய்வது. மாநிலங்கள் தோறும் வெவ்வேறு வகைப்பட்ட கல்வித் தகுதி முதலிய வேறுபாடுகளைக் களைவது. 4. தகுதி அடிப்படையில் முதிர்ந்த வழக்குரைஞர் என்றும் இதர வழக்குரை ஞர்கள் என்றும் வழக்குரைஞர்களை இரு வகையாகப் பிரிப்பது. 5. தன்னுரிமை கொண்ட வழக்குரைஞர் மன்றங்களை மாநில அளவில் உருவாக்கி, மைய வழக்குரைஞர் மன்றத்தோடு, இணைத்து இந்திய அளவில் சில உரிமைகளும் கடமைகளும் அவ்வழக்கறிஞர் மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அக்குறிக்கோள்களுடன் 1961 -ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த சட்டம் 1926-ஆம் ஆண்டு வழக்குரைஞர் குழுச் சட்டத்தையும் ஏணைய வழக்கறிஞர் சட்டங்களையும் அமலிலிருந்து நீக்கிவிட்டன.

அச்சட்டம் பிரிவு 3-படி மாநிலங்கள் தோறும் ஒரு மாநில வழக்குரைஞர் மன்றம் இயங்கி வரும். சில மாநிலங்களில், மாநில வழக்குரைஞர் மன்றம் பல மாநிலங்கள் சேர்ந்த மன்றமாகக் கூட இயங்குவது உண்டு. எடுத்துக்காட்டாக அரியானா மாநிலத்திற்கும், பஞ்சாப் மாநிலத்திற்கும் ஒரே மாநில வழக்குரைஞர் மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. பாண்டிச்சேரிக்கும், தமிழகத்திற்கும் உள்ள மாநில வழக்குரைஞர் மன்றம் சென்னை வழக்குரைஞர் மன்றம் என இயங்கும்.

ஒவ்வொரு மாநில வழக்குரைஞர் மன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரும் துணைத் தலைவரும் இருப்பர். அவர்களையும் வழக்கறிஞர் மன்ற உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க வழக்கறிஞர்கள் அடங்கிய வாக்காளர் பட்டியல் ஒன்றை மாநில வழக்குரைஞர் மன்றம் ஆயத்தம் செய்து வெளியிடும்.

அச்சட்டம் பிரிவு 4-இன் படி இந்திய வழக்குரைஞர் மன்றம் என்று ஒன்று உருவாக்கப்பட்டது. அவ்வழக்குரைஞர் மன்றத்திற்கு இந்திய சட்டத்துறைத் தலைவருமே (Attorney General) அரசியல் சட்டத் தலைமை ஆலோசகரும் (Solicitor General) உறுப்பினர்கள் ஆவர். ஒவ்வொரு மாநில வழக்குரைஞர் மன்றமும் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுத்து அனைந்திந்திய வழக்குரைஞர் மன்றத்திற்கு அனுப்பி வைக்கும்.

மாநில வழக்குரைஞர் மன்ற அமைப்பும், கடமையும் அச்சட்டம் பிரிவு 6-இல் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. மாநில வழக்குரைஞர் மன்றத்தின் கடமைகளாவன. 1. புதிதாக வழக்குரைஞர்களைத் தம் வழக்குரைஞர் மன்றத்தில் பதிவு செய்தல், 2. வழக்குரைஞர்கள் பட்டியலை ஆயத்தம் செய்து பாதுகாப்பாக வைத்துக் கொள்ளல். 3. வழக்குரைஞர்கள் மீது வரும் குற்றச்சாட்டுகளை எடுத்துக் கொண்டு குற்றச்சாட்டு மீது முடிவு செய்தல், 4. தம்மிடம் பதிவு செய்து கொண்ட வழக்குரைஞர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும், வழக்குரைஞர்களின் சலுகைகளையும், அக்கறைகளையும் பாதுகாத்தல். 5. சட்டச் சீர்திருத்தத்திற்குத் துணை செய்தலும் ஆதாரம் தருதல், 6. சட்டத் தொடர்பானவை குறித்துக் கருத்தரங்குகள் நடத்தலும் பல்வேறு சட்டத் தலைப்புகளில் சொற்பொழிவுக்கு ஏற்பாடு செய்தலும். 7. ஏழை எளியவர்கட்கு இலவசச் சட்ட உதவி அளித்தல். 8. வழக்குரைஞர் குழுவுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கத் தேர்தல் நடத்துதல். 9. வழக்கறிஞர் குழு இயங்கு நிதி சேர்த்து முதலீடு செய்தல் 10. அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இதர உரிமைகளை அமல் படுத்தத் துணை செய்தல். 11. ஊனமுற்றோர் நலிவடைந்தோர் அல்லது இதர வழக்குரைஞர்களில் நலன் காக்க நிதி உதவி நலத்துறை இயக்குவது. நலிவடைந்தோருக்கு இலவச உதவி வழங்கல்.

வழக்குரைஞர்கள் மன்றத்தை 1961-ஆம் ஆண்டுச் சட்டம் தன்னிறைவு பெற்ற மன்றமாக்கி எளியவர்கட்குத் துணை செய்ய அம்மன்றம் முன்வர வேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

-வி.சு.

**வழக்குரைஞர் பேரவை :** மக்களாட்சியில் சட்டவமைப்புத் துறையும், நிருவாகத் துறையும் ஒரு வண்டியின் இரு சக்கரங்கள் என்றால், நீதித்துறை அச்சக்கரங்கள் இரண்டையும் இணைக்கின்ற அச்சு எனத் தக்கதாகும். வண்டி ஓட அச்சு இன்றியமையாதது போல மக்களாட்சி செம்மையாக நடைபெற நீதித்துறை இன்றியமையாத ஒன்று.

நீதித்துறை என்பது இரண்டு அங்கங்களைக் கொண்டது. நீதிபதிகள் ஓர் அங்கம். வழக்குரைஞர்கள் பிறிதோர் அங்கம். இரண்டும் இணைந்து செயற்பட்டால்தான் நீதித்துறை வெற்றியடைய இயலும்.

வழக்குரைஞர் தொழில் தொன்றுதொட்டு ஒரு புனிதத் தொழிலாகக் கருதப்படுகின்றது. நம் நாட்டில் விடுதலை வேள்வியில் தங்களை ஆட்படுத்திக் கொண்ட வழக்குரைஞர்கள் மிகப் பலராவர். மகாத்மா காந்தி, பண்டித சவகர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், டாக்டர் அம்பேத்கார், இராசகோபாலாச்சாரியார், பி.டி. இராசன், ஆர்.வெங்கட்ராமன் போன்றோர் வழக்குரைஞர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

வழக்குரைஞர் தொழிலில் பொருளீட்டுவது மட்டும் முக்கியமன்று. நீதி காக்கப்படல் வேண்டும். ஏழை எளியவர்களுக்கு எளிதாக நீதி கிடைக்க வேண்டும். இந்தத் தொழிலுக்கென்று சில கட்டுப்பாடுகள், ஒழுக்க நெறிகள், நடைமுறைகள் இருக்கின்றன.

மேலே சொல்லப்பட்ட தொழில் முறையைக் காக்கப் பல்வேறு அமைப்புகள் நம் நாட்டில் செயற்படுகின்றன. எந்தெந்த ஊரில் நீதிமன்றம் உள்ளதோ, அந்தந்த ஊரில் ஒரு வழக்குரைஞர் சங்கம் (Bar Association) இருக்கும். அங்கே உள்ள வழக்குரைஞர்கள் தங்களுக்கென விதிமுறைகளை அமைத்துக் கொண்டு, பதிவு செய்த அமைப்பாகச் செயற்படுகின்றார்கள். அவை சட்டத்தால் உருவாக்கப்பட்டவை அல்ல.

சட்டத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புகள் இரண்டு. முன்பிருந்த சட்டங்களையும், சட்ட ஆய்வுக் குழுக்கள் கொடுத்த அறிக்கைகளையும் ஒருங்கிணைந்து, ஒரு கட்டுக்கோப்பான 1961-ஆம் ஆண்டு வழக்குரைஞர்கள் சட்டம் (25) (Advocate Act) என்று ஒன்று இயற்றப்பட்டிருக்கின்றது. அதன்படி, மாநில அளவில் மாநில வழக்குரைஞர் பேரவை என்ற ஒன்றும் (State Bar Council) அனைத்திந்திய அளவில் அனைத்திந்திய வழக்குரைஞர் பேரவை என்ற (All India Bar Council) ஒன்றும் செயற்பட்டு வருகின்றன. இவை இரண்டிற்கும் ஐந்தாண்டிற்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் வழக்குரைஞர் பட்டியல் ஒன்று உருவாக்கப்பட்டு, அதிலுள்ள அனைத்து வழக்குரைஞர்களும் வேட்பாளர்களாகத் தகுதி பெறுகிறார்கள். அந்தப் பட்டியலிலுள்ள வழக்குரைஞர்களின் எண்ணிக்கை 5000 முதல் 10,000 வரை இருந்தால், 15 உறுப்பினர்களையும், 10,000-க்கு மேல் 15,000 வரை இருந்தால், 20 உறுப்பினர்களையும் மாநிலப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கலாம். தமிழகத்தைப் பொறுத்த அளவில் தமிழகமும், பாண்டிச்சேரியும் சேர்ந்து தமிழ்நாடு வழக்குரைஞர் பேரவை (Bar Council of Tamilnadu) என்ற பெயரில் இயங்கி வருகிறது. அதன் செயலகம் சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் அதற்கெனக் கட்டப்பட்ட கட்டடத்தில் செயற்படுகிறது. அந்தப் பேரவை உறுப்பினர்கள் தம்முள் ஒருவரைத் தலைவராகவும், மற்றொருவரைத் துணைத் தலைவராகவும், வேறு ஒருவரை அனைத்திந்திய வழக்குரைஞர் பேரவைக்குப் பேராளராகவும் (Representative) தேர்ந்தெடுப்பார்கள். அந்த அமைப்பில் மாநில அரசு முதன்மை வழக்குரைஞர் (Advocate General) அவருடைய பதவியின் காரணமாக ஓர் அங்கத்தினராகக் கருதப்படுகின்றார். அந்த அமைப்பிற்கு ஊதிய அடிப்படையில் தகுதியுடைய ஒருவரை நியமனம் செய்வர். அவர் அலுவலக வேலைகளைச் செய்து வருவார். அது போல ஊதிய அடிப்படையில் இடைநிலை ஊழியர்களும், கடைநிலை ஊழியர்களும் நியமிக்கப்பட்டுச் செயலருக்குத் துணையாகப் பணிபுரிகின்றார்கள். அந்தப் பேரவைக்கென்று வைப்பு நிதி திரட்டப்பட்டு, இப்பேரவையின் பணிகள் செயற்படுத்தப்படுகின்றன.

இதுபோன்ற ஒவ்வொரு மாநில வழக்குரைஞர் பேரவையிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பேராளர் அனைவரும் சேர்ந்து அனைத்திந்திய வழக்குரைஞர் பேரவை அமைத்துச் செயற்படுகின்றனர். அந்த அமைப்பில் இந்தியப் பேரரசின் தலைமை வழக்குரைஞரும் (Attorney - General of India) அரசு தரப்பில் வாதிடும் முதன்மை வழக்குரைஞரும் (Solicitor - General) ஆகிய இருவரும் தத்தம் பதவி காரணமாக அங்கத்தினர்களாக இடம் பெறுகின்றார்கள். மாநிலப் பேரவை போலவே இதற்கும் ஒரு தலைவர், துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அதைப் போலவே, செயலரும் மற்றும் அவருக்குத் துணை செய்யும் ஊழியர்களும் பணிபுரிகின்றார்கள். இந்த அமைப்பின் செயலகம் நாட்டின் தலைநகரான தில்லியில் இருக்கின்றது. இந்த இரண்டு அமைப்புகளுமே சட்டத்தால் உருவாக்கப்பட்டுத் தனித்து இயங்கக்கூடிய (Autonomous) அமைப்புகள்.

மேலே சொல்லப்பட்ட மூன்று அமைப்புகளின் தலையாய பணி வழக்குரைஞர்கள் தொழிலின் கண்ணியத்தைக் காப்பாற்றி, கடமைகளை உணரச் செய்து, கட்டுப்பாடுகளின்படி அறநெறி காத்து நிற்பதற்கு ஆவண செய்தலே ஆகும். அது வழக்குரைஞர் சட்டத்தின் 6-ஆம் பிரிவில் மிக விளக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதில் கண்டுள்ள பணிகள். 1. முறையாகச் சட்டம் பயின்று, பட்டம் பெற்ற வழக்குரைஞர்களின் பட்டியலை உருவாக்குவது. 2. அந்தப் பட்டியலில் அவ்வப்போது நீக்குபவரை நீக்கி, சேர்க்கின்றவரைச் சேர்த்து முறைப்படுத்துவது, 3. வழக்குரைஞர்களின் மீதுள்ள முறையற்ற நடத்தை பற்றிய வழக்குகளை ஏற்று முடிவு செய்வது. 4. பட்டியலிலுள்ள வழக்குரைஞர்களின் உரிமைகள், நலன்கள், ஆகியவற்றைப் பாதுகாப்பது, 5. சட்டங்களைக் காலத்திற்கு ஏற்றபடி மாற்றுவதை ஆதரித்து ஏற்பது. 6. அவ்வப்பொழுது வழக்குரைஞர் மாநாடுகள், கருத்தரங்கங்கள் முதலியவற்றிற்கு ஏற்பாடு செய்து, சட்ட வல்லுநர்களையும், சட்ட முனைவர்களையும் கொண்டு, சட்டங்களில் சிறப்பான தலைப்புகள் அடிப்படையில் பேருரையாற்றச் செய்து, அதன் பயனை வழக்குரைஞர் அடையச் செய்வது, 7. ஏழைகளுக்கு இலவசச் சட்ட உதவி வழங்குவது, 8. மாநிலப் பேரவையில் நிதிகளைத் தகுந்த முறையில் முதலீடு செய்வது, 9. முறைப்படி தேர்தல் நடத்தி உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது, 10. இதற்கென்று இயற்றப்பட்ட 1961-ஆம் ஆண்டு வழக்குரைஞர் சட்-

டத்தில் (Advocates Act, 1961) சொல்லப்பட்டிருக்கும் பிற பணிகளைச் செய்வது முதலியன.

இந்த மாநில, அனைத்திந்தியப் பேரவைகளில் வழக்குரைஞர் இரண்டு அல்லது மூன்று பேர் கொண்ட பல குழுக்கள் (Committees) ஏற்படுத்தப் பட்டு, அவை வெவ்வேறு பணிகளைச் செய்யப் பணிக்கப்படுகின்றன. அந்தக் குழுக்களில் தலையாய குழு வழக்குரைஞர்களின் ஒழுங்கீனங்கள், முறை கெட்ட நடத்தைகள், கட்சிக்காரருக்கு ஊறு விளை வித்தல், அவருக்குரிய பணத்தைக் கையாடல் செய் தல், அவருக்கு நம்பிக்கையின்மையை ஏற்படுத்துதல், கையூட்டுக்குத் துணை நிற்றல், நீதிமன்றத்தைக் களங் கப்படும் விதத்தில் நடத்தல், முறைகேடாகச் செயற் படுதல் போன்ற காரணங்களைக் காட்டி, அவர்களின் மேல் வழக்குத் தொடுத்தால், அந்த வழக்கை முறை யாக விசாரணை செய்து, முடிவு எடுத்து உரிய தீர்ப்புக் கூறுகிறது. வழக்குரைஞர்கள் மேலுள்ள குற்றங்கள் விசாரணையில் மெய்ப்பிக்கப்படுமானால், அந்த வழக்குரைஞர்களைப் பட்டியலிலிருந்து நீக்கி, அவருக்கு அளித்திருக்கும் தொழில் அனுமதி ஆணையை (Sanad) அகற்றலாம். அல்லது ஒரு கால வரம்பு வரை தொழில் செய்யக்கூடாதென்று ஆணை யிடலாம். அல்லது ஒருமுறை கண்டித்து மேற் கொண்டு இவ்வாறு குற்றங்கள் செய்யக் கூடா தென்று எச்சரித்து விட்டுவிடலாம். இந்த முடிவிற்கு மேல், மேல் முறையீடு அனைத்திந்திய வழக்குரை ஞர் பேரவையில் தாக்கல் செய்யலாம். அதற்கும் மேல் முறையீடு செய்ய வேண்டுமென்றால், அதனை உச்சநீதி மன்றத்தில் தான் செய்யமுடியும்.

இவற்றையெல்லாம் உற்று நோக்குகின்ற பொழுது, எத்துணைச் சிறப்பான, வியக்கத்தக்க, விதிமுறைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன என்பது விளங்கும்.

இந்த அமைப்புகளின் மற்றொரு சீரிய நோக்கம் சிறந்த வழக்கறிஞர்களை உருவாக்குவது. நம் நாட்டில் சட்டக் கல்லூரிகள் செயற்படுகின்ற முறை களை அவ்வவ்போது ஆய்ந்து, குறைகளைத் களைந்து அவ்வக்காலத் தேவைக்கும், நடை முறைக்கும் ஏற்றவாறு அரசிற்குப் பரிந்துரை செய்ய லாம். பாட அட்டவணையைக் காலத்திற்கு ஏற்ற வாறு எதை நீக்க வேண்டும், எதைச் சேர்க்க வேண் டும் என்று ஆய்ந்து அரசுக்குப் பரிந்துரை செய்யலா சட்ட அறிவோடு நல்ல ஒழுக்கத்தையும் சட் கல்லூரி மாணவர்களுக்கு வலியுறுத்தி, அவர்கள நெறி மிக்க வழக்குரைஞர்களாக ஆக்குவதற் ஆவண செய்யலாம். மற்றொரு சிறப்புப்பணி, வழ குரைஞர்கள் வயதான காலத்திலும் , அவர்களுக் விபத்தாலோ, நோயாலோ, வயது மூப்பாலே தொழில் செய்ய இயலாத நிலையிலும் பொருளு தவி செய்தற்கான வழிமுறைகளை இந்த அமைப் கள் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் பரிந்துரை செய்கின்றன. வழக்குரைஞர்கள் நலவாழ்வு நிதி திட்டம் ஒன்றைத் தமிழ்நாடு வழக்குரைஞர் பேரவை ஏற்படுத்தியுள்ளது. ஒரு வழக்குரைஞர் ஓய்வு பெ றாலும், உயிரிழந்தாலும் , முப்பதினாயிரம் உரூபா வரை கிடைப்பதற்கு வழி வகுத்து, அதனைச் செயற் படுத்தத் தமிழக அரசு முன்வந்திருக்கிறது. இந்த ஏற் பாடு சட்ட முறையாக விரைவில் செயற்பட விருக்கிறது.

மேலே சொல்லப்பட்ட வழக்குரைஞர் சட்டப்ப ஏற்படுத்தப்பட்டுள்ள மாநில வழக்குரைஞர் பேரவை, அனைத்திந்திய வழக்குரைஞர் பேரவை ஆகிய இரண்டும் சிறந்த வழக்கறிஞர்களை உரு வாக்கி, அவர்களைச் சீரிய முறையில் தொழில் செய்ய வைத்து, அவர்களுடைய வாழ்வின் நலன்களைப் பாதுகாக்கின்றன.

தமிழ்நாடு வழக்குரைஞர் பேரவையின் வைர விழா (Diamond Jubilee) 22.10.89 -இல் சென்னையில் நடைபெற்றது. அதன் பொன்விழா 1979 -இல் நடை பெற்றது. அப்பேரவை 1928-இல் அமைக்கப்பட்டது.

- ப.வெ.

**வழக்கு விசாரணை :** பல திறப்படும் வழக்கு கள் மாறுபடுவது போல் வழக்கு விசாரணைகளும் மாறுபடுகின்றன. குற்றவியல் வழக்குகள், உரிமை யியல் வழக்குகள், வருவாய்த்துறை வழக்குகள் என வழக் குகள் பல திறப்பட்டனவாகும். உரிமையியல் நீதிமன்ற விசாரணைகளும் குற்றவியல் நீதி மன்ற விசாரணைகளும் சிறப்பாக அறிந்து கொள்ள வேண் டிய விசாரணைகளாகும்.

**உரிமையியல் நீதிமன்ற விசாரணைகள் :**

உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு நீதி மன்றத்தால் வழக்குரை ஏற்றுக் கொள்ளப்பட்டவுடன் பிரதிவாதிகளுக்குத் தோன்றல் ஆணை அனுப்பப்படுகிறது. பிரதிவாதிகள் தரப்பு எழுத்து மூலமான வாக்குமூலம் தாக்கல் செய்யப் பட்டவுடன் வழக்கின் எழுவினா (Issue) முடிவு செய்யப்படுகிறது. இதன் பிறகு உரிமையியல் நடை முறைச்சட்டம் விதி 18-இன் படி வழக்கு விசாரணை தொடங்குகிறது. பொதுவாக வாதியே வழக்கைத் தொடங்குவதுண்டு. ஆனால், எழுவினாவில் யார் மீது நிரூபிக்க வேண்டிய சுமை (Burden of Proof) சுமத்தப்பட்டுள்ளதோ அந்தக் கட்சிக்காரர்களே வழக் கைத் தொடங்க வேண்டும் என 40 சி.டபிள்யு.என். 865 தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

தாவா விசாரணைக்குப் போடப்பட்டுள்ள நாளில் விசாரணை தொடங்க வேண்டிய வாதியோ பிரதி வாதியோ தங்கள் வழக்கை எடுத்துரைத்து, தம் தரப்பு சாட்சிகளை விசாரிக்கத் தொடங்குவார். அப்படிச் சாட்சிகள் விசாரிக்கப்படும் போது தகுந்த சான்று ஆவணங்களைச் சட்டப்படி ஏற்றுக் கொள்ளக் கூடிய சாட்சிகள் மூலமாகக் குறியீடு செய்வது அனு மதிக்கப்படுகிறது. குறியீடு செய்யப்பட்ட சான்று ஆவணங்களை அல்லது சான்று ஆவணப் பகுதி களையே நீதிமன்றம் தீர்ப்புரையில் ஆய்வுக்கு எடுத் துக் கொள்ளும்.

ஒரு தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்படும் போது எதிர்த்தரப்பினர் குறுக்கு விசாரணை செய்வார்கள். வாதியோ, பிரதிவாதியோ தன் தரப்பு சாட்சிகளை விசாரிக்கும்போது விடை கிடைக்கும் வினாக்களைக் (Leading Questions) கேட்க அனுமதிப்பது இல்லை. சாட்சிகள் தாமே வாக்குமூலம் சொல்ல வேண்டும். தனக்கு வேண்டிய சாட்சியத்தைச் சாட்சி அளிக்க விடை உள்ளடக்கம் கொண்ட வினாக்களைத் தன் தரப்பு சாட்சிகளிடம் எழுப்பிட இருவாதிகளும் அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், குறுக்கு விசா ரணையின் போது சாட்சி உண்மை கூறும் இயல் புடையவனா என்பதை உணர்த்தக் கூட சில கேள்வி கள் கேட்பதுண்டு. சாட்சியின் வாக்குமூலம் பொய்மையாக இருக்கக் கூடும் என்பதற்கான கேள்விகளைக் குறுக்கு விசாரணையில் எழுப்புவது உண்டு. சாட்சிகள் நீதிபதியின் முன் உறுதிமொழி செய்து வெளிப்படையாக நீதிமன்றத்தில் விசாரிக் கப்படுகிறார்கள். சில சூழல்களில் சில சாட்சிகள் இரகசியமாக விசாரிக்கப்படுவதும் உண்டு. சில சூழல்களில் விதி 18, பிரிவு 10 உரிமையியல் நடை முறைச் சட்டப்படி நீதிமன்றம் தானாகவே வழக்கின் முக்கியம் குறித்துக் கேள்விகளை எழுப்புவது உண்டு. அப்படி எழுப்பும் கேள்வியையும், பதிலை யும், அதற்கான மறுப்பையும் நீதிமன்றம் குறித்துக் கொள்ள வேண்டும். உரிமையில் நடைமுறைச் சட்டம் விதி 18 பிரிவு 11 படி ஒரு சாட்சியிடம் ஒரு கேள்வி கேட்கும் போது யாரேனும் ஒரு தரப்பினர் அதற்கு மறுப்புத் தெரிவித்தால் நீதிமன்றம் கேட்கப்படும் கேள்வியையும், பதிலையும், அதற்கு எழுப்பப்பட்ட மறுப்பையும், மறுப்பு தள்ளுபடி செய்யப்பட்டதையும் குறுத்திட வேண்டும் என்பது விளக்கப்பட்டுள்ளது.

விசாரிக்கப்பட்ட சாட்சியைத் திரும்பவும் அழைத்து விசாரிக்க நீதிமன்றத்திற்கு உரிமை உண்டு. சில சாட்சிகள் வெளிநாடு சென்றிடுவார்கள் எனத் தோன்றினால் அல்லது சாட்சி விசாரணைக்குக் கிடைப்பது அரிது எனத் தோன்றினால் அப்படிப் பட்ட சாட்சிகளை விரைவாக உடனே நீதிமன்றம் விசாரித்திடச் சட்டம் இடம் தந்துள்ளது. தாவா, இடம் சம்பந்தப்பட்ட சில குறிப்புகளைப் பெற நீதி மன்றம் விசாரணைக்குழு நியமனம் செய்வதுண்டு. விசாரணைக்குழுவினர், தாவா இடத்தைப் பார்த்து விட்டுத் தரும் அறிக்கையை ஆதாரமாகத் தீர்ப்பில் ஆய்வுக்கு ஏற்றுக் கொள்வது உண்டு. நீதிமன்றத்தில் நேரிடையாகத் தோன்ற இயலாத சாட்சிகளை நீதிமன்றத்தால் நியமிக்கப்படும் விசாரணையாளர் சாட்சி உள்ள இடத்திற்குச் சென்று விசாரிப்பதும் உண்டு. சாட்சி விசாரணைகள் சான்று ஆவணங்கள் குறியிடப்படுதல் ஆகியவை இந்திய சான்றுச்சட்டப் படி நீதிமன்றங்களில் நடைமுறைப்படுத்தப்படு கிறது.

இருவாதிகளின் உரிமையியல் வழக்கின் முறையீடுகளை (Pleadings) மையமாகக் கொண்டு சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்கள். வழக்கின் பரிகார முறையீட்டில் (Pleadings) இல்லாத ஒன்றுக்குச் சாட்சி அல்லது சாட்சியம் அனுமதிக்கப்படுவ தில்லை. வழக்கிற்குத் தொடர்புடைய உண்மைகளை மெய்ப்பிக்கச் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்கள்.

சான்று ஆவணங்கள் சாட்சிகள் மூலம் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் குறியிடப்படுகின்றன.

குற்றவியல் விசாரணை : குற்றவியல் நீதிமன்றங்களில் குற்றம் சாட்டப்பட்டுள்ள எதிரிகளுக்கு நியாயமான விசாரணை உறுதி செய்யப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் நவாபு காசி உசைன் என்பார்க்கும், மதுகார் புருடோத்தம் என்பார்க்கும் (ஏ.ஐ.ஆர்.1958 என்.இ.376) நடந்த வழக்கில் தீர்ப்புக் கூறியுள்ளது. ஒரு குற்றம் நிருபிக்கப்படுகிற வரையிலும் எதிரி குற்றமற்றவராகக் கருதப்படுகிறார். இது ஒரு பொதுக் கொள்கை ஐக்கிய நாட்டு மனித உரிமை அறிவிப்பு பிரிவு 10, 11, ஆகிய பிரிவுகளில் இந்தப் பொதுக் கொள்கை தெளிவுபடுத்தப் பட்டுள்ளது. நியாயமான ஐயப்பாடுகளுக்கு அப்பால் குற்றம் சுமத்துவோர் எதிரி செய்ததாகச் சொல்லப்படும் குற்றத்தைத் தன் சொந்த பலத்தில் நிரூபிக்கக் கடமைப்பட்டுள்ள கோட்பாடு குற்றவியல் நீதித் துறையில் பொதுக் கொள்கையாகும்.

தண்டிக்கப்படவேண்டியவன் விடுதலை செய்யப்படுவதால் நீதித்துறையின் மீது மக்கள் நம்பிக்கை இழக்கிறார்கள். ஆனால் குற்றமற்றவன் தண்டிக்கப்படுவது அதைவிட கொடியது என்றும் நாகரிக சமூகம் நிந்திக்கக் கூடியது என்ற உச்சநீதி மன்றம் கலிதாம் என்பார்க்கும் இமாசலப் பிரதேச அரசுக்கும் (1973-எஸ்.ஸி.ஸி. 808) நடந்த வழக்கிலும் தாராம்தான் என்பாருக்கும் உத்திரப்பிரதேச அரசுக்கும் நடைபெற்ற (1974-4 எஸ்.ஸி.ஸி.267) வழக்கிலும் தெளிவுபடுத்தியுள்ளது. குற்றம் சுமத்தப்பட்ட எதிரி தம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை ஏற்றுக்கொள்ள உரிமையுடையவராவர். குற்றம் சுமத்துவோர் நீதிமன்றத்தில் வழக்கை விசாரணைக்கு வைக்கும்போது எதிரியின் வருகை மிக இன்றியமையாதது. குற்றம் சுமத்தப்பட்டவர் மீது வழக்கு விசாரிக்கப்படும்போது அவர் நீதிமன்றத்தில் இருக்க வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அவரை வைத்துக் கொண்டுதான் சாட்சிகளை விசாரிக்க வேண்டும். குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 205-இன் கீழ் அவருக்குப் பதிலாக ஒரு வழக்குரைஞரை முன்னிலைப்படுத்தி கீழ் விசாரிக்கலாம். பிரிவு 317-இன் கீழ்ச் சில சூழ்நிலைகளில் எதிர் நீதிமன்றத்துக்குக் கட்டாயம் வருவதைத் தளர்த்தி அவர் வராமலிருக்க நீதிமன்றம் அனுமதிக்கலாம். சாட்சிகள் அரசு தரப்பில் அல்லது குற்றம் சுமத்துவோர் தரப்பில் விசாரிக்கப்படும் போது எதிரி தரப்பில் எதிரியோ அல்லது எதிரி வழக்கறிஞரோ குறுக்கு விசாரணை செய்ய உரிமை உடையவர்கள் ஆவர். குறுக்கு, விசாரணைக்கு அமைக்கப்படாத சாட்சிகள் நிறைவான சாட்சியாகார். எதிரி தரப்புக்கும் சாட்சிகளை அழைக்கவும், விசாரிக்கவும் உரிமையுண்டு. ஓர் எதிரியின் மீது ஒரு குறிப்பிட்ட குற்றத்திற்காக ஒரே தடவை விசாரிக்கப்பட்டு விடுதலை அல்லது தண்டனை வழங்கலாம். ஒரு தடவை ஓர் எதிரியின் மீது ஒரு குறிப்பிட்ட குற்றத்திற்காக விசா ரணை நடந்து எதிரி விடுதலையோ தண்டனையோ பெற்றுவிட்டால் மறுபடியும் அதே குற்றத்திற்காகப் பிறிதொரு வழக்கு அந்த எதிரியின்மீது எழுப்பக் கூடாது.

நீதித்துறை, தனித்தன்மை மிக்கது என்ற பொதுக் கொள்கை வலியுறுத்தப்படுகிறது. எதிரிகள் தம்முடைய வழக்குகளுக்கு வழக்குரைஞர்களை அமர்த்திக் கொள்ள உரிமை உடையவராவர். அமர்வு நீதி மன்றங்களைப் பொறுத்தவரை அந்த நீதிமன்றங்களில் நடக்கும் வழக்குகளில் எதிரிக்கு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ளப் போதுமான நிதி வசதி இல்லாவிட்டால் நீதிமன்றம் எதிரிக்கு ஒரு வழக்குரைஞரை அமர்த்தி எதிரிக்கு உதவி செய்ய வேண்டுமென்று சட்டம் கூறுகிறது. ஒரு குற்றத்தைச் செய்ததாகக் குற்றம் சுமத்தப்பட்ட எதிரி விசாரணைக் காலத்தில் மனநிலை சரியில்லாமல் பைத்தியமாக இருந்தால் விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டு எதிரி மனநிலை தெளிந்த பிறகு, அவர் மீது சுமத்தப்பட்ட குற்றம் சம்பந்தமான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். உச்சநீதி மன்றத்திற்கும், உயர்நீதி மன்றங்களுக்கும் நீதிமன்ற மொழியாக ஆங்கிலம் இயங்க வேண்டும். ஆனால் சில மாநிலங்களில் நிருவாகப் பரிந்துரையின்படி உயர்நீதிமன்றத்தில் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தி மொழியில் நடவடிக்கைகள் நடத்த அனுமதிக்கப்படுகிறது.

குற்றங்கள் சமூகத்திற்கு எதிராக இழைக்கப்பட்டுள்ளன என்ற பொதுக் கொள்கையின் காரணமாக, குற்றம் இழைக்கப்பட்டவரும், குற்றம் சுமத்தப்பட்டவரும் தங்களுக்குள் சமரசம் செய்து கொள்வதைச் சட்டம் சில வழக்குகளில் அனுமதிப்பதில்லை. ஒரு சில வழக்குகளில் மட்டிலும் இப்படிச் சமரசம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 320-இல் சமரசம் செய்து கொள்ளத் தக்க குற்றங்கள்பற்றியும் சமரசம் செய்து கொள்ளத்தக்க பாதிக்கப்பட்டவர்கள் பற்றியும் பட்டியல் போட்டு விளக்கப்பட்டிருக்கிறது. சில குற்றங்களைப் பொறுத்தவரை நீதிமன்றத்தின் அனுமதி பெற்றுத்தான் சமரசம் செய்து கொள்ள முடியும். நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்குவதற்கு முன் எப்போது வேண்டுமானாலும் சமரசம் செய்து கொள்ளலாம். வழக்கில் ஒரு எதிரி தண்டிக்கப்பட்ட பிறகு மேல்முறையீட்டு வழக்கு தரப்பட்டிருந்தால், மேல்முறையீட்டு மன்றத்தின் அனுமதியின் பேரில் சமரசம் செய்து கொள்ளத்தக்க வழக்கை, சமரசம் செய்து கொள்ளலாம். குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 321-படி சில சூழ்நிலைகளில் அரசாங் கம் தன்னுடைய அரசு வழக்குரைஞர் அல்லது துணை அரசு வழக்குரைஞர் மூலமாக ஒரு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றவியல் வழக்கை அந்நீதிமன்றத்தின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இதைத் தவிர குற்றவியல் நடைமுறைச் சட்டம் சில சிறப்புச் சூழ்நிலைகளில் பிரிவு 258-ன் கீழ் வழக்குகளைத் தீர்ப்புச் சொல் வதற்கு முன் எந்தக் கட்டத்திலும் உரிமை நீதிமன் றத்தைப் போலவே குற்றவியல் நீதிமன்றங்களுக்கும் வழக்குகளைத் தாக்கல் செய்ய சில கால எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 467 முதல் 473 வரை உள்ள பகுதியில் இந்தக் கால எல்லை பற்றிப் பேசப்பட்டுள்ளது. இந்தக் கால எல்லை மிக அவசியமெனக் கருத சில காரணங்களுண்டு. அவையாவன. 1. காலம் தாழ்த் தப்பட, தாழ்த்தப்பட சாட்சிகளின் நினைவாற்றல் குறைந்து உண்மை நிகழ்ச்சியைச் மறக்கும் சூழ்நிலை ஏற்படுகிறது. 2. குற்றம் சுமத்தப்பட்டவர் தம் மீது குற்றவியல் வழக்கு எப்போது போடப்படுமோ என்று காலவரை இல்லாமல், நீண்டகாலத்திற்கு மன அமைதியில்லாமல் தொடர்ந்து அச்சுறுத்தப்படுவது முறையன்று. 3. குற்றம் நடந்ததாகச் சுமத்தப்படும் வழக்கில் குற்ற நிவாரணத்துக்குத் தண்டனை உணர்வு முழுதும் நினைவை விட்டுச் சென்ற பிறகு வழக்கு நடப்பது பயனில்லை. 4.குற்றத்திற்கு உடனுக்குடன் தண்டனை கிடைக்காவிட்டால் குற்றவியல் சட்டத் தின் குறிக்கோள் நீண்டகாலத்தால் மறைந்து விடுகிறது. 5. கால எல்லை இருப்பதாலேயே குற்றம் சுமத்துவோர் அல்லது அரசாங்கம் கால எல்லைக்குள் குற்றத்தைப் புலனாய்வு செய்து நீதி மன்றத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்திட முயற்சி செய்வார்கள். தண்டத்தொகை மட்டும் தண்டனை யாக உள்ள வழக்குகளை ஆறு மாதத்திற்குள்ளும் ஓராண்டு வரை தண்டிக்கத்தக்க வழக்குகளை ஓராண் டுக்குள்ளும், மூன்றாண்டுகள் வரை தண்டிக்கத்தக்க வழக்குகளை மூன்றாண்டுகளுக்குள்ளும், தொடர் புடைய நீதிமன்றங்களில் வழக்குத் தொடர்பான குற்ற அறிக்கையை வழங்குவர். அப்படி தாக்கல் செய் யத் தவறினால் அந்த வழக்கு சட்டப்படி காலாவதி ஆகிவிடுகிறது.

அமர் நீதிமன்ற விசாரணை அமர் நீதிமன்றங்கள் அரிய சில சூழ்நிலைகளைத் தவிரப் பொதுவாக வழக்குகளை நேரடியாக எடுத்துக் கொள்வதில்லை. அமர் நீதி மன்றங்களில் வழக்கு விசாரணை செய்யத் தகுதியுள்ள வழக்குகளைக் குற்றவியல் நடுவர் மன்றங்கள் அனுப்புகின்றன. அமர் நீதி மன்றத்திற்கு ஒரு வழக்குத் தொடர்பான ஆவணங்கள் வந்தவுடன் எதிரியின் மீது குற்றத்திற்கான சான்றுகள் சரியாக இல்லாவிடில் பிரிவு 227-கீழ் எதிரியை விடுவித் திடலாம். இல்லாவிடில் எதிரியின் மீது குற்ற அறிக்கை படிக்கப்படவேண்டும். எதிரிக்கு அவன் செய்ததாகச் சுமத்தப்படும் குற்றம் படிக்கப்படுகிறது. எதிரி தன் குற்றத்தை ஒத்துக்கொண்டால் நீதிமன்றம் தண்டனை வழங்குகிறது. எதிரி குற்றவாளி இல்லை என்று எதிர் வாதம் செய்தால் அமர்நீதி மன்றம் ஒரு நாளைக் குறிப்பிட்டு அந்த நாளில் அரசு தரப்புச் சாட்சிகளை விசாரித்து சான்றாவணங்களைக் குறிப் பிட்டு வழக்குப் பொருள்களைக் குறியிட்டு, சாட்சி களை விசாரிக்கிறது. எதிரி தரப்பில் குறுக்கு விசா ரணை செய்ய உரிமையுண்டு. அதன் பிறகு எதிரிக்கு விரோதமாகவுள்ள சாட்சியங்களின் பகுதிகள் படித் துக் காட்டப்பட்டு அதற்கான எதிரியின் சமாதானம் கேட்கப்படுகிறது. எதிரித் தரப்புச் சாட்சிகள் விசா ரணை செய்யப்படுவார்கள். அரசுத் தரப்பினர் அச் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வார்கள்.

பற்றாணை வழக்குக்கள் : பிரிவு 237-இல் தாக்கல் செய்யப்படும் சிறப்பு அவதூறு வழக்குகளைத் தவிர எஞ்சிய அமர்நீதி மன்ற வழக்குகள் பற்றாணை (Warrant) வழக்குகளாகும். எந்த வழக்கிற்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை அல்லது இரண்டு ஆண்டுகட்கு மேல் தண்டனை வழங்க லாமோ அந்த வழக்கு பற்றாணை வழக்கு எனப் படும்.

அமர் நீதிமன்ற வழக்குகள் தவிர எஞ்சிய வழக்குகள் பல திறப்பட்டவையாகும். அவையாவன.

1. பற்றாணை வழக்கு - காவல் துறையினரால் தொடரப்பட்டது.

2. காவல்துறை அல்லாதவர்களால் தொடுக்கப்பட்ட பற்றாணை வழக்கு.

3.அழைப்பாணை (Summon) வழக்கு - காவல் துறையினரால் தொடரப்பட்டது.

4. காவல்துறை அல்லாதவர்களால் தொடரப்படும் அழைப்பாணை வழக்குகள்.

5. சுருக்கமான (Summary Trial) விசாரணை வழக்குகள்.

**காவல்துறையினரால் தாக்கல் செய்யப்படும் பற்றாணை வழக்குகள்** : குற்றவியல் நடுவர் காவல் துறையினரால் தாக்கல் செய்யப்படுகின்ற ஆவணங்கள் கிடைக்கப் பெற்றவுடன் எதிரியை நீதிமன்றத்திற்கு வரவழைத்து எதிரிக்கு அதன் நகல்களைக் கொடுத்து முடித்த பிறகு காவல்துறை ஆவணங்களைப் பிரிவு 173 -இன் கீழ்க் கிடைக்கப் பெற்றுள்ளதை ஆய்வு செய்து இருவாதிகளுடைய முறையீடுகளைக் கேட்ட பிறகு எதிரியின் மீது குற்றம் செய்ததற்கான அடிப்படைச் சான்றுகள் ஏதும் இல்லாவிடில் பிரிவு 239 கீழ் எதிரியை விடுவித்திடலாம். மேற்படி நடுவர் மன்றம் காவல்துறை ஆவணங்களை ஆய்வு செய்து எதிரி குற்றம் செய்திருப்பதற்கான எதார்த்த வழக்கு தோன்றினால் எதிரியின் மீது குற்றச்சாட்டு படிக்கப்பட்டு எதிரி குற்றத்தை ஒத்துக் கொண்டால் உரிய தண்டனை வழங்குவர். எதிரி குற்றத்தை ஒத்துக் கொள்ளாவிடில் குறிப்பிட்ட தேதியில் அரசுத் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்கள். அதன் பிறகு எதிரித் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்கள். அதன் பின் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

காவல் துறையினர் அல்லாதார் தாக்கல் செய்யும் பற்றாணை வழக்குகளில் எதிரியை நீதிமன்றத்திற்கு வரவழைத்து எதிரி முன் னிலையில் குற்றம் சுமத்துவோர் தரப்புச் சாட்சிகள் விசாரிக்கப்படுகின்றனர். அந்த சாட்சிகளை விசாரித்த பிறகு எதிரியின் மேல் ஏதும் குற்றம் இல்லாவிட்டால் பிரிவு 245 (10) கீழ் குற்றவியல் நடுவர் நீதிமன்றம் எதிரியை விடுவித்திடுவர். ஆனால், நடுவர் மன்றம் எதிரி குற்றம் செய்ததற்கு அடிப்படை இருப்பதாக முடிவுக்கு வந்தால் பிரிவு 246 கீழ் எதிரி மீது குற்றப் பத்திரிக்கை நீதிமன்றம் படிக்கும். அந்தக் கட்டத்தில் எதிரி குற்றத்தை ஒத்துக்கொண்டால் எதிரிக்குத் தண்டனை வழங்கப் படுகிறது. ஆனால் எதிரி குற்றத்தை ஒத்துக் கொள்ளாவிட்டால் குற்றம் சுமத்துவோர் சாட்சிகளை மறுபடியும் குறுக்கு விசாரணை செய்ய எதிரிக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். அதன் பின் எதிரித் தரப்புச் சாட்சிகள் இருந்தால் அவர்களும் விசாரிக்கப்படுகிறார்கள். அதன்பின் சாட்சிகளை ஆய்வு செய்து இருதரப்பு ஆதாரங்களையும் கேட்டு எதிரிக்குத் தண்டனையோ, விடுதலையோ வழங்கப்படுகிறது.

**அழைப்பாணை வழக்குகள்** : பற்றாணை வழக்குகள் இல்லாத ஏனைய வழக்குகள் அழைப்பாணை (Summon) வழக்குகள் எனப்படும். அவ்வழக்குகளில் எதிரி, நடுவர் மன்றத்திற்கு வரவழைக்கப்பட்ட பிறகு எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றம் அவருக்கு எடுத்துரைக்கப்படுகிறது. அவன் குற்றவாளி இல்லை என்று சொன்னால் குற்றம் சுமத்துவோர் தரப்புச் சாட்சிகள் விசாரிக்கப்படுகின்றனர். அழைப்பாணை வழக்குகளில், பற்றாணை வழக்குகளைப் போல் குற்றப் பத்திரிகை படிக்க வேண்டிய இன்றியமையாமை இல்லை. எதிரி குற்றத்தை ஒத்துக் கொண்டால் 252 அல்லது 253 பிரிவின் கீழ்த் தண்டனையோ விடுதலையோ பெறுகிறான். அதன் பின் எதிரித் தரப்புச் சாட்சிகள் விசாரிக்கப்பட்டு இரு தரப்பு வாதங்களையும் கேட்டு விடுதலையோ, தண்டனையோ வழங்கப்படுகிறது. வழக்கு விசாரிக்கப் படும்போது அழைப்பாணை வழக்குகள் பற்றாணை வழக்குகளாக நடுவர் நீதிமன்றத்திற்குத் தோன்றினால் அழைப்பாணை வழக்குகளைப் பற்றாணை வழக்குகளாக மாற்ற உரிமையுண்டு. இதைத்தவிர சுருக்கமாக விசாரிக்கச் சில வழக்குகள் ஒதுக்கப் பட்டுள்ளன. வழக்கு விசாரணைகளில் சாட்சிகளின் எண்ணிக்கை கூட்டப்படுவதில்லை. குற்றவியல் நீதிமன்றங்களில் ஒரே சாட்சி நம்பத்தகுந்த முறையில் சாட்சி அளித்தால் அதனை ஏற்றுத் தண்டனை வழங்கலாம் என்று வடிவேல்தேவன் வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டுள்ளது.

-வி.சு.

**வழிகாட்டலும், அறிவுரை கூறலும் :** கண்ணுக்குத் தெரியாத கடற்பாறைகள், கடலினுள்ளே ஓடும் நீரோட்டங்கள், கலத்தைக் கவிழ்க்கும் திமிங்கிலங்கள், கடத்திச் செல்லும் கொள்கைக்காரர்கள், சுழன்றடிக்கும் சூறாவளி, இவற்றிற்கிடையே கலங்கித் தவிக்கும் கலம் இவை அனைத்தையும் மீறிக் கரை சேர்வோமா என்று கவலைப்படும் மாலுமிகட்கு நம்பிக்கையூட்டும் கலங்கரை விளக்கம் போல இன்றைய சிக்கல் நிறைந்த வாழ்க்கையை நெறிப்படுத்தவும், வெற்றிகரமாக நடத்தவும், மாணவர்களின் பல்வேறு சிக்கல்களுக்கு அவர்களே தாமாகத் தீர்வு காணும் திறமையை வளர்ப்பதற்கும் உதவுவதுதான் வழிகாட்டலும், அறிவுரை கூறலும் (Guidance and Councelling) ஆகும்.

வழிகாட்டுதலின் தேவை : முற்காலத்தில் வாழ்க்கை எளிமையாக இருந்தது. மனிதன் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தான். சிக்கல்கள் வரும்போது இளையவர்கள், முதியவர்களின் அறிவுரையை நாடினர். தாத்தா, பாட்டி, ஆகியோர் பேரன், பேத்திகளுக்கு அறிவுரை கூறினர். இன்று கூட்டுக்குடும்பம் சமுதாய மாற்றத்தால் மாறி வருகிறது. தனி மனிதன் தன் சிக்கல்களுக்குத் தானாகவே தீர்வுகாண வேண்டியிருக்குகிறது. ஒவ்வொருவரும் எல்லாவிதமான திறமைகளையும் பெற்றிருப்பதில்லை. எனவே, தம் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும் வாழ்க்கையில் முன்னேறுவதற்கும், அறிவிற் சிறந்தவர்களையும், திறமை மிக்கவர்களையும், தம் நம்பிக்கைக்குரியவர்களையும் நாடுகின்றனர். அவர்கள் தம்மிடம் வந்தோருக்கு வழிகாட்டுகின்றனர். அறிவுரை கூறுகின்றனர்.

கல்வியின் நோக்கம் அறிவை வளர்ப்பது மட்டுமன்று, மாணவனின் பல திறமைகள், நல்ல மனப்பான்மைகள், மெய்ப்பாடுகள் ஆகியவற்றையும் வளர்ப்பதாகும். மாணவனின் ஆளுமை இசைந்த முழுவளர்ச்சியைப் பெற வாய்ப்புகளை அமைத்துத் தருவதே கல்வியின் நோக்கமாகும். மாணவரிடையே தனியாள் வேற்றுமைகள் காணப்படுகின்றன. எனவே, எல்லோருக்கும் ஒரே வகைப்பட்ட கல்வி பயனற்றது. மாணவர்களின் பல்வகைக் கவர்ச்சிகளுக்கும், நாட்டங்களுக்கும், திறமைகளுக்கும் ஏற்ப பல நோக்கங்களையுடைய பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றுள் ஒரு மாணவன் எதனைத் தேர்ந்தெடுப்பது என்றும் சிக்கலுக்கு விடை காண வழி காட்டல் தேவைப்படுகிறது.

மேனிலைக் கல்வியில் அறிவுசார் கல்வி (Academic), தொழிற்கல்வி (Vocationa) என இரு பிரிவுகள் உள்ளன. மாணவனின் திறமைக்கும் ஆர்வத்திற்கும், நாட்டத்திற்கும் ஏற்ப எந்தப் பிரிவைத் தேர்ந்தெடுப்பது என்பதில் மாணவனுக்கு வழிகாட்ட வேண்டும். தகாத பிரிவைத் தேர்வு செய்வதால் மாணவனின் வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. தமக்கு ஏற்ற பாடங்களையும் தொழில்களையும் தேர்ந்தெடுத்தல், மாணவர்களுக்குவெற்றியையும், மன நிறைவையும் அளிப்பதோடு, அவர்களின் திறமையும், காலமும், ஆற்றலும் பயனற்று வீணாவதைத் தவிர்க்கவும் செய்கிறது. பலவகையான வேலை வாய்ப்புகள் பல இடங்களில் உள்ளன. குறிப்பிட்ட வேலையைப் பெறுவதற்கு என்ன கல்வித்தகுதிகள் வேண்டும், என்ன திறமைகள் வேண்டும், அதற்கான தேர்வுகள் எப்போது எங்கு நடைபெறும் என்பன போன்ற செய்திகளை மாணவர்களுக்கு வழங்குவதில் வழிகாட்டலும், அறிவுரை கூறலும் பெரும் பங்கு வகிக்கின்றன.

ஏழ்மை நிலை, பெற்றோர்களது அறியாமை, தவறான மனப்பான்மைகள், ஏற்பற்ற குடும்பச் சூழ்நிலை, கெட்ட நண்பர்களுடன் பழகுதல், மனமுறிவை (Frustration) தோற்றுவிக்கக்கூடிய சுற்றுப்புறச் சூழ்நிலை போன்றவற்றின் விளைவால் மாணவனின் வாழ்வில் பல சிக்கல்களும், எதிர்பாராதனவும் எழும். அவை தீர்க்கப்படாவிடில் மாணவர்களின் வளர்ச்சியிலும், கல்வி முன்னேற்றத்திலும் தடைகள் ஏற்படும். அவற்றைத் தவிர்த்து நன்முறைப்படுத்த வழிகாட்டுதலும், அறிவுரை கூறுவதும் தேவைப்படுகின்றன.

வளர்ச்சியினால் பல மாறுதல்கள் ஒவ்வொரு நிலையிலும் தோன்றுகின்றன. அம்மாறுதல்களை விரும்பத்தகுந்தவாறு நெறிப்படுத்த வழிகாட்டுதல் இன்றியமையாதது. வளர்ச்சி தொடர்ச்சியானது எனவே வழிகாட்டலும் தொடர்ந்து தேவைப்படுகிறது.

வழிகாட்டுதல் முறை : வழிகாட்டுதல் பற்றி அறிஞர்கள் பலவாறு வரையறுத்துள்ளனர். சிக்கல்

களுக்குத் தானாக வழி காண உதவுதலே வழி காட்டுதல் எனப்படும். தன் அறிவையும், திறமைகளையும் வளர்த்து, சூழ்நிலைக்கு இசைந்த பொருத்தப்பாட்டினை ஏற்படுத்தி, இசைந்த வாழ்வு வாழத் திறமைகளைப் பெற உதவி செய்வதே வழி காட்டல் எனப்படும். வழிகாட்டுதல் என்பது மனிதன் தன் வழியில் முன்னேற உதவுவதே ஆகும்.

ஒவ்வொரு மனிதனும் தன் திறமையையும், ஆர்வத்தையும் புரிந்து கொள்ளவும், அவற்றை இயன்ற அளவு வளர்க்கவும், தொடர்புடைய வாழ்க்கை இலக்குகளை நிறுவவும், சமுதாயத்தின் பொருத்தப்பாட்டுடன் (Adjustment) நடந்து கொள்ளத் திறமைகளை வளர்க்கவும் உதவுவதே வழி காட்டல் என்கிறார் திராக்சுலர் (Traxler).

வழிகாட்டல் மனித வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் முழுவளர்ச்சி பெற்றுத்திகழ அளிக்கப்படும் அனைத்து விதமான உதவிகளாகும். சுருக்கமாகத் தனிமனிதன் தன் திறமைகளையும், ஆர்வங்களையும் அறிந்து கொள்ளவும், தன் வலுவான, நலிவான இயல்புகளைப் புரிந்து கொள்ளவும், தனக்கும் சூழ்நிலைக்கும் பொருத்தப்பாடாக நடக்கவும், தன் சிக்கல்களை எதிர்கொண்டு செவ்வனே தீர்க்கவும், வாழ்க்கையின் குறிக்கோள்களை அமைத்துத் தானாக முன்னேறவும் உதவுவதே வழிகாட்டல் ஆகும்.

**வழிகாட்டலின் செயல்கள்** : *1.* மாணவர்களைப் பள்ளிச் சூழ்நிலைக்குப் பொருந்தியவர்களாக்குதல், **2.** திறமையாகக் கல்வி கற்க உதவுதல், *3.* மாணவரிடையே விரும்பத்தகுந்த மனப்பான்மையை வளர்க்க உதவுதல், *4.* மாணவர்களின் உடனடி நோக்கத்தைத் திட்டமிட உதவுதல், *5.* பெற்றோர்களைப் பள்ளியோடு ஒத்துழைக்க உதவுதல், *6.* மாணவர்களுக்குப் பலவிதமான தொழில் அறிவைப் பெற உதவுதல், *7.* ஆசிரியர் மாணவர் தொடர்பை வளர்க்க உதவுதல் ஆகியன வழிகாட்டலின் செயல்களாகும்.

**வழிகாட்டுதலின் வகைகள்** : வழிகாட்டுதல் பல வகைப்படும். அவை *1.* கல்வியில் வழிகாட்டுதல் (Educational guidance), *2.* தொழிலில் வழிகாட்டுதல் (Vocational guidance), *3.* தனியாள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுதல் (Personal guidance), *4.*நலவாழ்விற்கு வழிகாட்டுதல் (Health guidance), **5.** குடும்ப வாழ்க்கைக்கு வழிகாட்டுதல் (Family life guidance) என்பனவாகும்.

**கல்வியில் வழிகாட்டுதல்** : மாணவனின் கல்வி வளர்ச்சிக்குத் தகுந்த சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்க உதவுவது கல்வி வழிகாட்டல் எனப்படும் இதனால் மாணவன் கல்வியின் நோக்கங்களை நிறைவேற்ற முடிகிறது. எவ்வகையான கல்வி வாய்ப்புகள் உள்ளன? அவற்றிற்கான பயிற்சிகள் எத்தன்மையானவை? எங்கு இவை அளிக்கப்படுகின்றன? எத்தன்மையான மாணவர்கள், எந்தத் துறையில் சேர்ந்து படிக்கலாம்? என்ற அறிவைக் கல்வியில் வழிகாட்டுதல் அளிக்கிறது.

**தொழிலில் வழிகாட்டுதல்** : மையர்சு (Myers) என்ற அறிஞரின் கருத்துப்படி ஒரு தனிமனிதனுக்குப் பொருத்தமான தொழிலைத் தேர்ந்தெடுக்கவும், அதைச் செம்மையுறச் செய்ய ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கும், அத்தொழிலில் மேம்பாடு அடையச் செய்வதற்கும் உதவி செய்வதுதான் தொழிலில் வழிகாட்டல் எனப்படும்.

**தனியாள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டல்** : மாணவனின் தனிப்பட்ட வாழ்க்கையில் எழக்கூடிய பல சிக்கல்களையும், தொல்லைகளையும் தீர்ப்பதற்கு உதவி செய்தல் தனியாள் முன்னேற்றத்திற்கு வழிகாட்டல் எனப்படும். எடுத்துக்காட்டாகக் குமரப் பருவத்தில் பாலுணர்ச்சி மிகுந்து பல குழப்பங்களையும், வீண் கவலைகளையும் உருவாக்கும். அதை நெறிப்படுத்த வழிகாட்டுதலும் அறிவுரை கூறுதலும் உதவுகிறது. மேலும், மாணாக்கனது உள்ளத்துள் எழும் மனவெழுச்சிப் போராட்டங்களையும், அதனால் தோன்றும் பொருத்தப்பாடற்ற நடத்தைகளையும் (Mal adjustments) போக்குவதற்குத் தனியாள் முன்னேற்ற வழிகாட்டல் இன்றியமையாததாகும்.

**நலவாழ்விற்கு வழிகாட்டல்** : உடல் நலமும், உள நலமும், பெற்று வாழ வழங்கும் உதவி நலவாழ்விற்கு வழிகாட்டல் எனப்படும்.

**குடும்ப வாழ்க்கைக்கு வழிகாட்டல்** : சிக்கனமான சீரான, இனிமையான குடும்ப வாழ்க்கைக்கு வழி

காட்டுவது, சரியான வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுத்து, சிறந்த திட்டமிட்ட குடும்ப வாழ்க்கைக்கு உதவுதல் போன்றவை குடும்ப வாழ்க்கைக்கு வழிகாட்டுதல் ஆகும்.

**அறிவுரை கூறுதல்** : அறிவுரை கூறுதல் வழிகாட்டலில் ஒரு பகுதியாகும். சிக்கல்கள் உடையவர்களுக்கு உதவி செய்தல் அறிவுரை வழங்குதல் ஆகும். அறிவுரை வழங்குதல் என்பது அறிவுரை வழங்குவோருக்கும், அறிவுரை கேட்போருக்குமிடையே முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொடர்பு ஆகும். அறிவுரை கூறுவதில், அறிவுரை கேட்போர் தம் சிக்கலைப்பற்றிய குழு அறிவையும் பெற்று, அச்சிக்கலைத் தாமே ஏற்பதற்குரிய திறனையும் பெறுகிறார்.

**அறிவுரை கூறுதலின் வகைகள்** : 1. நேர்முக அறிவுரை கூறுதல் (Directive Counselling), 2. மறைமுக அறிவுரை கூறுதல் (Non-directive counselling), 3. பன்முனைக்கூட்டு அறிவுரை கூறுதல் (Elective counselling).

**நேர்முக அறிவுரை கூறுதல்** : நேர்முக அறிவுரை கூறுதலை அறிமுகப்படுத்தியவர் வில்லியம்சன் (Williamson) ஆவார். அறிவுரை கூறுவோர் அறிவுரை நாடுவோரின் சிக்கலை ஆராய்ந்து அதைத் தீர்ப்பதற்கு உதவி செய்வது நேர்முக அறிவுரை வழங்குதல் ஆகும். அறிவுரை நாடுவோர் அறிவுரை கூறுவோரின் அறிவுரைக்குக் கட்டுப்பட்டுச் செயற்பட வேண்டும். அம்முறையில் மாணவனின் சிக்கலுக்குச் சிறப்பிடம் அளிக்கப்படுகிறது.

**மறைமுக அறிவுரை கூறுதல்** : உரோகர்சு (Rogers) என்பவர் இம்முறையை அறிமுகப்படுத்தினார். இம்முறையில் அறிவுரை நாடுவோர் தம் சிக்கலைத் தாமாகவே உணர்ந்து, அதைத் தீர்ப்பதற்கு- வழிமுறைகளைத் தாமே தேர்ந்தெடுப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. மாணவன் தானாகத் தன் சிக்கலைத் தீர்ப்பதற்குரிய திறமையைப் பெறுவதற்கான சூழ்நிலையை அறிவுரை வழங்குவோர் உருவாக்கிக் கொடுத்கிறார். இம்முறையினைச் செயற்படுத்தக் காலம் கூடுதலாக ஆகிறது. மேலும், அறிவுரை கூறுவோர், அறிவுரை நாடுவோர் ஆகியோரிடத்து மிகுதியான திறமையும் தேவைப்படுகிறது.

**பன்முனைக் கூட்டு அறிவுரை கூறுதல்** : தார்ன் (Throne) என்பவர் இம்முறையை அறிமுகப்படுத்தினார். அறிவுரை கேட்போரின் தன்மைக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப, நேர்முக அறிவுரை வழங்குதலையும், மறைமுக அறிவுரை வழங்குதலையும் மேற்கொண்டு, சிக்கலைத் தீர்க்க உதவும் மேம்பாடடையச் செய்வது பன்முனைக் கூட்டு அறிவுரை கூறுதலாகும்.

**அறிவுரை கூறுவோரின் பண்புகள்** : அறிவுரை கூறுவோர் சில பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும். அவை. 1. சிறந்த மனிதத் தொடர்பை ஏற்படுத்திச் செயற்படுத்தும் அன்பு, பரிவு, பாசம், அடக்கம், விட்டுக் கொடுக்கும் தன்மை, மனிதநேயம் போன்ற பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும். 2. சூழ்நிலைக்குத் தகுந்தவாறு ஒத்துப்போகிற ஆளுமை பெற்றிருத்தல் வேண்டும். 3. அடுத்தவர்களின் நம்பிக்கையைப் பெறும் வண்ணம் சிறந்த நடத்தையும், திறமையையும் பெற்றிருத்தல் வேண்டும். 4. மற்றவர்களுக்கு அறிவுரைகூறி, நல்வழிப் படுத்தச் சிறந்த செய்திப் பரிமாற்றத் திறன் பெற்றிருத்தல் வேண்டும். 5. சிக்கல்களை ஆராயும் திறன், முடிவு கட்டும் திறன் பெற்றிருத்தல் வேண்டும். 6. நுண்ணறிவு மிக்கவராகவும், பல்வேறு துறைகளைப் பற்றிய (கல்வி, தொழில், வாழ்க்கை, சமூகம்) அறிவு மிக்கவராகவும் அதை எடுத்தியம்பும் திறன் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**அறிவுரை கூறுதலின் நிலைகள்** : அறிவுரை கூறுதலிலும் வழிகாட்டுதலிலும் சில நிலைகள் பின்பற்றப்படுகின்றன. முதலாவதாக, அறிவுரை கேட்போரை நேர்காணல் மூலம் விசாரித்து, அவருடன் பரிவுடன் பேசி, நல்லுறவை ஏற்படுத்தி, அவருடைய சிக்கல்களின் தன்மையை அறிவுரை கூறுவோர் உணர வேண்டும். பிறகு அறிவுரை, கூறுவோரின் தன்மையும் அறிவுரை கேட்போருக்கு உணர்த்த வேண்டும். அடுத்து, அறிவுரை கேட்போரின் எல்லா முக்கிய விவரங்களையும், பல முறைகளில் சேகரிக்க வேண்டும். விவரங்களைச் சேகரித்தபின் அவற்றை ஆராய்ந்து, அறிவுரை கேட்போரிடம் இணைந்து பேசி அவரது இயல்புகளையும், சிக்கல்களின் தன்மையினையும் அவரே ஓரளவேனும் உணர உதவ வேண்டும். சிக்கல்களைப் பற்றி உணர்ந்தபின் அச்சிக்கல்களுக்குத் தீர்வு காண உதவக்கூடிய பல்வேறு வழிவகைகளை,

அறிவுரைகளைக் கேட்போரிடம் கலந்து பேசி முடிவு செய்யவேண்டும். பிறகு அவ்வழி முறைகளைச் செயற்படுத்தவும், அதனால் ஏற்படும் விளைவு களைச் சீர்தூக்கிப் பார்க்கவும் திறனைப் பெற உதவ வேண்டும். இப்போது அறிவுரை கேட்போர் சிக்கல்களை எதிர்கொள்ளவும், அதனைத் தீர்க்கவும் திறமை களைப் பெறுகின்றனர்.

சுருங்கக் கூறின் தம் இயல்புகளையும், தம் சூழ் நிலையின் இயல்புகளையும் உணர்ந்து சிறந்த பொருத்தப்பாட்டினைப் பெற மாணவர்களுக்கு உதவுவதே அறிவுரை கூறுதல், வழிகாட்டல் ஆகியவற்றின் அடிப்படை நோக்கமாகும். கல்வி நிலையங்களில் 'வழிகாட்டுதல், அறிவுரை கூறுதல் அமைப்புகளை ஏற்படுத்தி, மாணவர்களின் முன் னேற்றத்திற்கு உதவ வேண்டும். அப்போது மாணவர் உலகம் முன்னேறும்.

-எம்.ச.

**துணை நூல்கள் :**

1. Fuster, J.M., **Psychological Counselling in India**, Macmillan and Co., Ltd., Madras, 1964.

2. Kochar, S.K., **Guidance in Indian Education**, Sterling Publishers Pvt. Ltd., New Delhi, 1978.

**வழிநிலைக் குழுக்கள் :** முதல் நிலைக் குழுக் களுக்கு எதிரிடையாக இருப்பவையே வழிநிலைக் குழுக்கள் (Secondary groups) ஆகும். இவை இரண் டாம் நிலைக் குழுக்கள் என்றும் கூறப்படும். அரசியல் கட்சி, தொழிற் சங்கம், பல்கலைக்கழகம், இராணுவப்படை, நாடு முதலிய குழுக்கள் வழி நிலைக் குழுக்களுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு களாகும்.

முதல் நிலைக் குழுக்களில் காணப்படுகிற கூறுகள் வழிநிலைக் குழுக்களில் காணப்படா. பொதுவாக வழிநிலைக் குழுக்கள் அளவில் பெரியனவாக இருக்கும். உறுப்பினர் எண்ணிக்கை மிகுதியாக இருக்கும். இதனாலேயே மாக் ஐவர் (Mac Iver) என்ற அறிஞர் வழி நிலைக் குழுக்களைப் 'பெரிய சங்கங்கள்' (Great Associations) என்று குறிப்பிடுகிறார்.

ஒரு குறிப்பிட்ட குழு அளவில் சிறியதாக இருந் தால்தான் அதன் உறுப்பினர்கள் நேருக்கு நேராகப் பழகவும், அணுக்கமான தொடர்பு கொள்ளவும் முடியும் என்கிறார் கிங்சுலீ டேவிசு (Kingsley Davis) என்ற அறிஞர். அதனால், அத்தகைய குழுக்களில் நெருக்கமான, முதல் நிலை உறவுகள் அமைகின்றன. ஆனால், வழிநிலைக் குழுக்கள் அளவில் உறுப்பினர் எண்ணிக்கையில் பெரியனவாக உள்ளமையால் உறுப்பினர்கள் நேருக்கு நேராகப் பழகவோ, ஒருவரையொருவர் பார்த்துப் புரிந்து கொண்டு அணுக்கமான தொடர்பு கொள்ளவோ வாய்ப்பு இல்லாமல் போகிறது. இதன் காரணமாக வழி நிலைக் குழுக்களில் நேருக்கு நேராக, நெருக்கமான, முதல் நிலை உறவுகள் அமைவதில்லை. குறைவான சூழ்நிலைகளில் மட்டுமே உறுப்பினர்களுக்கு நேரடி யான தொடர்பு கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. அப்படி ஏற்படும் வாய்ப்பிலும், அந்தத் தொடர்பு குறைந்த கால அளவிலேதான் நடைபெறுகிறது. அதன் காரணமாக அந்தத் தொடர்பு நெருக்கம் இல்லாமலும், உறுதியற்றும் போகின்றன.

பொதுவாக வழிநிலைக் குழுக்கள் அளவில் பெரியனவாக உள்ளமையால், உறுப்பினர் களிடையே கருத்துப் பரிமாற்றம் நேரிடையாக நடைபெறுவதில்லை, மறைமுகமாகவே நடைபெறு கிறது. அஞ்சல், சுற்றறிக்கைகள், செய்தி அறிக்கைகள் முதலியவற்றின் மூலம் பெரிதும் கருத்துப் பரி மாற்றம் நடைபெறுகிறது. இப்படி உறுப்பினர் களிடையே மறைமுகமாகவே கருத்துப் பரிமாற்றம் ஏற்படுவதால் அவர்களுடைய தொடர்புகளும் மறைமுகமாகவே அமைகின்றன.

தொடர்புகள் நேருக்கு நேராக, நெருக்கமாக அமைய இயலாமற் போவதால், வழிநிலைக் குழுக் களில் அமைகிற சமூக உறவுகள் ஆழமற்று, உணர் வற்று அமைகின்றன. அதனால், அந்த உறவுகள் மேம்போக்காகவே அமைகின்றன. தொடர்புடைய தனி ஆட்களைப் பொறுத்து, அவர்களுக்காகவே அவை அமைவதில்லை. அந்த ஆட்கள் போயின் அல்லது அவர்களுடைய உறவு வீழ்ந்திடின், அதனால் எந்த விதமான உணர்வுப் பாதிப்பும் ஏற்படுவது கிடையாது. தம் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற முறை யில்தான் அவர்கள் மீது நாட்டம் செலுத்தப்படுகிறதே

தவிர, அவர்களுக்காக, அவர்கள் பொருட்டு நாட்டம் செலுத்தப்படுவதில்லை. அதனால்தான் அவர்கள் குழுவிலிருந்து விலகிடின் அல்லது மறைந்திடின் அந்த நிகழ்வு எந்த வித உணர்வுப் பாதிப்பையும் ஏற் படுத்துவதில்லை. அவர்கள் இடத்தில் பிறர் வரும் போது அவர்களிடம் அந்த உறவு திருப்பப்படுகிறது. முந்தைய உறவைப் போலவே பிந்தைய உறவும் அமைகிறது. தம் குழுவைச் சேர்ந்தவர்கள் என்ற முறையிலேயே அவர்கள் மீது கவனம் செலுத்தப் பட்டு உறவு ஏற்படுத்தப்படுகிறது.

இவ்வாறு வழிநிலைக் குழுக்களில் சமூக உறவு கள் இயந்திரத் தன்மையாக, உணர்வு ஊடுருவல் இல்லாமல் அமைவதால், அவை முதல் நிலைக் குழுக்களில் திகழ்வதைப் போல, விழுமிய பொரு ளாகக் கருதப்படுவதில்லை. ஏற்படும் உறவைப் போற்றிப் பேணவேண்டும் என்ற முனைப்பு எல்லாம் வழிநிலைக் குழுக்களில் ஏற்படுவதில்லை. அதுவாக நீடித்தால் உண்டு. அப்படி நீடிக்காமல் போனாலும், அது நீடிக்கவில்லையே என்ற வருத் தமோ, அதை மேற்கொண்டு நீடிக்க வைக்க வேண் டும் என்ற முனைப்போ வழி நிலைக் குழு உறுப்பினர் களுக்கு ஏற்படுவதில்லை.

வழி நிலைக் குழுவில் அமையும் உறவு தொடர்பு டையவர்களால் ஒரு கருவியாகத்தான் கருதப்படு கிறது. வழி நிலைக்குழுவில் ஒருவர் வந்து சேரும் போது, மற்றவர்களுடன் சேர்ந்து பங்கேற்கும் போது, குழுவின் இலட்சியத்தை - பற்றுக்கோட்டை அடைய அவர் உதவக் கூடும் என்ற அளவிலேதான் அவரை வரவேற்று, உறவாடுகிறார்கள். தம்முடன் குழுவின் இலட்சியத்தை அடைய அவர் உதவும் வரையில் அவருடன் உறவு வைத்துக் கொள்ளு கின்றனர். அவர் உதவ இயலாமற்போனால் அல்லது குழுவிலிருந்து விலகி விட்டால், அவரிடம் கொண் டுள்ள உறவும் அத்துடன் வீழ்ந்து விடுகிறது. அவ ருக்கு மாறாக இன்னொருவர் வரும்போது, அதே அணுகுமுறையிலேயே அவர் ஒரு கருவியாக வர வேற்கப்பட்டு, உறவு வைத்துக் கொள்ளுகின்றனர்.

அத்தகைய உறவுகளை மாக் ஐவர் ஒப்பந்த அள விலான உறவுகள் (Contractual relations) என்கிறார். மேலும், ஓர் ஒப்பந்தத்திற்கு உட்பட்டு நடக்கும் இருவர் எவ்வாறு ஒருவருக்கு ஒருவர் ஒப்பந்தம் நிறைவேறுவதற்காக மட்டும் தமக்குள் உறவு வைத்துக் கொள்ளுகிறார்களோ, அவ்வாறே வழி நிலைக் குழுவிலும் அதன் உறுப்பினர்கள் அதன் இலட்சியங்களை அடைவதற்காக வேண்டித் தமக்கு உறவு வைத்துக் கொள்ளுகிறார்கள் என்கிறார். ஓர் ஒப்பந்தத் தரப்பினர் தமது கடமையை நிறைவேற்ற இயலாமற் போகும்போது, மற்ற தரப்பினர் ஒப்பந்தத்தை முறித்து விட்டு வேறொருவரைச் சேர்த்துக் கொண்டு ஒப்பந்தத்தின் இலக்கை அடைய முயல்வதைப் போலவே, வழி நிலைக் குழுவிலும் தொடர்புடைய ஆட்கள் கருவிகளாகக் கருதப்பட்டு அந்தக் கருவிகள் குழுவின் இலக்கை அடைய உதவ முடியாமற் போகும்போது அவர்களுக்குப் பதிலாக மற்றவர்கள் அந்த இடத்தில் வருங்கால் அவர்களும் கருவி களாகவே வரவேற்கப்பட்டு உறவு வைத்துக் கொள்ளப்படுகின்றனர்.

ஆக, முதல் நிலை உறவுகளைப் போல வழிநிலை உறவுகள் அமைவதில்லையாதலால், முதல் நிலைக் குழுக்களுக்கு எதிரான குழுக்களாக வழிநிலைக் குழுக்கள் விளங்குகின்றன. ஆயினும், கின்சுலீ டேவிசு முதல் நிலைக் குழுவைப் போலவே வழி நிலைக் குழுவும் பொதுவான இலட்சியங்களைக் கொண்டிருக்கும் என்கிறார். ஒரு குழு என்ற முறையில் எந்த ஒரு மனிதத் தொகுதியும் பொது வான இலக்குகளைக் கொண்டிருக்கும். அந்த வகை யில் வழி நிலைக் குழுவும் பொதுவான இலட்சியங் களைக் கொண்டிருக்கும் என்பது கிங்சுலீ டேவிசின் கருத்து. அந்த இலட்சியங்களை அடைய வழிநிலைக் குழு உறுப்பினர்கள் ஒன்றாகச் செயற்பட்டே ஆக வேண்டும். எனினும், வழி நிலைக் குழு உறுப்பினர்களில் செயற்பாடு நேரிடையான கூட்டுறவாக அமைவதில்லை. வழி நிலைக் குழு அளவில் பெரிதாக இருப்பதால் அதன் உறுப்பினர்கள் மறைமுகமான கூட்டுறவோடுதான் செயற்படுகின்றனர் என்று மாக் ஐவர் கூறுகிறார். எல்லோரும் குழுவின் இலட்சியங்களை நிறை வேற்றப் பாடுபடுகின்றனர். ஆனால், அவர் களிடையே நேருக்கு நேரான உறவு ஏற்பட வாய்ப்பில்லாததால் அவர்கள் தத்தம் இடத்திலேயே இருந்து கொண்டு தம் பங்கை ஆற்றுவதன் மூலம் ஒரு கூட்டுறவுச் செயற்பாட்டு நிலையைத் தோற்று விக்கிறார்கள். அந்த நிலையில் மறைமுகமாக அமை கிற கூட்டுறவுச் சூழ்நிலையில் குழு இயங்கி, அதன் இலட்சியங்கள் ஈடேறுகின்றன.

இவ்விதம் வழி நிலைக் குழுக்களும், முதல் நிலைக் குழுக்களைப் போலவே ஒரு கூட்டுச்சார்புத் தன்மையோடு இயங்குகின்றன. உறுப்பினர்கள் நேருக்கு நேராக, நேரிடையாகக் கூட்டுறவு கொண்டு செயற்படுவதில்லையே தவிர, குழுக்களின் பொதுவான இலட்சியங்களை அடைய அவர்கள் மறைமுகமான நிலையில் கூட்டுறவோடு கூட்டாகச் செயற்படுவதால் வழிநிலைக் குழுக்கள் கூட்டுச் சார்புத் தன்மை எய்துகின்றன. அதற்கும் மேலாக, அவற்றின் பொதுஇலட்சியங்கள் பொதுப் பற்றுக் கோடுகள், அவற்றின் கூட்டுச் சார்புத் தன்மைக்கு அடிப்படை அமைத்துத் தருகின்றன.

மாக் ஐவரும், கிங்சுலீ டேவிசும் வழிநிலைக் குழுக்கள் அளவில் பெரிதாக இருப்பதால், முதல் நிலைக் குழுக்களைப்போல, அவற்றில் முறை சாராக் (Informal) கட்டுப்பாட்டை ஏற்படுத்த வழி யில்லை என்கின்றனர். அதன் காரணமாக வழி நிலைக் குழுக்கள் முறைசார் கட்டுப்பாட்டுச்சாதனங் களை, அதாவது, முறைப்படி இயற்றப்பட்ட சட்ட திட்டங்களின் தொகுப்பைக் கொண்டு முறையான நெறி முறையோடு கட்டுப்பாட்டை அமல்படுத்து கின்றன. முறை சார் கட்டுப்பாட்டை அமலாக்க முறை சார் சாதனங்கள் மட்டுமன்றி, முறையான, ஒழுங்கமைப்பு கொண்ட அதிகார அமைப்பும் தேவை என்பதால் வழி நிலைக் குழுக்களில் அத் தகைய முறை சார் கட்டுப்பாட்டு மையம் அமைந் திருக்கும் என்று மாக் ஐவர் கூறுகிறார்.

-சி.என்.ந.

**துணை நூல்கள் :**

1. Davis, Kingsley, **Human Society**, Subjeet Publications, Delhi, 1981.

2. Mac Iver, R.M., and Page, Charles H., **Society : An Introductory Analysis**, Macmillan & Co., Ltd., London, 1955.

வள்ளியப்பா, அழ. : இவர் தமிழ் மொழியில், குழந்தைகளுக்கெனக் கவிதைகள் இயற்றிப் புகழ் பெற்ற கவிஞர்களுள் ஒருவராவார். குழந்தைக் கவிஞர் எனச் சிறப்பிக்கப் பெற்ற இவர் 1922-ஆம் ஆண்டு புதுக்கோட்டைக் கருகிலுள்ள இராயவரம் என்னும் ஊரில், அழகப்பச் செட்டியார்- உமையாள் ஆச்சி ஆகியவர்களுக்கு மகனாய்த் தோன்றினார். செட்டிநாட்டு நகரத்தார் மரபில் தோன்றிய அழ.வள்ளிப்பா புதுக்கோட்டையிலுள்ள காந்தி பாடசாலையில் தம் தொடக்கக் கல்வியைப் பெற் றார். இளம் வயதிலேயே மகாகவி சுப்பிரமணிய பாரதியார், தேசிக விநாயகம் பிள்ளை ஆகியோர் பாடல்களில் ஆர்வம் மிகக் கொண்டு பயின்றார். பிற்காலத்தில் இவர்பால் அமைந்த கவிதைப்பண்பு பெருகி வளர அவ்விருவர்தம் பாடல்களும் காரண மாயின. பள்ளிப்பருவத்தில் இவர் கொண்டிருந்த கவிதை ஆர்வத்தைக் கண்டு வியந்த ஆனந்தம் பிள்ளை என்னும் ஆசிரியர் இவரது வீடுதேடிச் சென்று பாரதியார் பாடல்களைக் கற்பித்தார்.



**வள்ளியப்பா, அழ.**

இவர் இராமச்சந்திரபுரத்திலிருந்து பூமீசுவரசாமி உயர்நிலைப் பள்ளியில் தம் உயர் கல்வியைத் தொடர்ந்தார். தமது 13 -ஆம் வயதிலேயே இவர் கவிதை பாடத் தொடங்கினார். தம் ஊரில் இருந்த திரையரங்கத்தில் ''காணாத காடு" (Lost Jungle) என்ற திரைப்படத்தைப் பார்க்கத் திரண்டு வந்த மக்கள் நுழைவுச்சீட்டு வாங்குவதற்குப்பட்ட அவதியை, ஒரு கவிதையாக வடித்தார். இவர் இயற்றிய முதற் பாடலாக அமைந்த அக்கவிதை.

*'காணாத காடு,*
*கண்டுவிட்டால் ஓடு*
*ஒளிய இடம் தேடு*
*........*
*ஏழைகள் படுவதோ அரும்பாடு,*
*'டிக்கெட் விலையோ பெரும்பாடு*

என அமைந்தது. அக்கவிதை அத்திரைப்படத்திற்கு ஒரு பெரிய விளம்பரமானது.

இவர் தம் பள்ளிப் பருவத்திலேயே, பாரதியின் புகழ் பரப்பத் தம் ஊரில் சங்கம் ஒன்றை நிறுவினார். காந்தியடிகளிடம் ஈடுபாடு கொண்ட இவர், ஆண்டு தோறும் அவர் பிறந்த நாளின்போது பலர் உதவியால் பொருள் பெற்று, ஏழைகளுக்கு, உணவு அளித்து மகிழ்ந்தார்.

இவர் 1940-ஆம் ஆண்டு சென்னையில் நூற்பதிப்பு நிறுவனமாக விளங்கிய, சக்தி காரியாலயத்தின் பொருளாளராகப் பணி பெற்றார். அடுத்த ஆண்டு இந்தியன் வங்கியில் பணி மேற்கொண்ட இவர் அதில் பல ஆண்டுகள், உயர் பதவிகள் பெற்றுப் பணியாற்றி இறுதியில் அந்த வங்கியின் வட்டார மேலாளராக (Area Manager) காரைக்குடியில் பணி புரிந்து ஓய்வு பெற்றார். இவர் 1944-ஆம் ஆண்டு புதுக்கோட்டையைச் சேர்ந்த வள்ளியம்மை என்பவரை மணந்து ஐந்து குழந்தைகளுக்குத் தந்தையானார்.

இவர் சென்னையில் பணி புரிந்தபோது உண்டாகிய, தி.ச.ரவின் தொடர்பினால் எழுத்தாளராக உருவானார். இவர் எழுதிய நகைச்சுவைக் கட்டுரைகள், "வாழ்க்கை வினோதம்" என்ற நூலாக வெளிவந்தன. குழந்தைக் கவிஞராக இவர் புகழ் சிறப்பதற்குக் கவிமணி, திரு.வி.க., இரா.பி. சேதுப் பிள்ளை, ஐயன்பெருமாள் கோனார், கல்கி, மயிலை சிவமுத்து, முதலியோர் உதவியாகத் திகழ்ந்தனர். 'வள்ளி' என்ற புனை பெயரில் "விவேகானந்தரும் - ஆழ்வார்சமத்தானத்து மன்னரும்" என்ற இவரது நூல் காரைக்குடியில் வெளியானது.

இவர் 1950-ஆம் ஆண்டுக் குழந்தை எழுத்தாளர் சங்கத்தைத் தோற்று வித்தார். குழந்தைகள் இன்பமே தம் இன்பம் என்றும், அவர்களுக்குத் தொண்டு செய்வதே தம் குறிக்கோள் என்றும் இவர் கூறுவார். அதற்கேற்பக் குழந்தைகளுக்காகவே கவிதை படைக்கத் தொடங்கித் தம் வாழ்நாள் முழுதும் அதற்காகப் பாடுபட்டு வந்தார்.

மலர்ந்த முகமும், எளிய தோற்றமும், எவரையும் கடிந்துரையா இன்சொல்லும், விருந்தோம்பும் பண்பும், ஏழை எழுத்தாளர்க்கு உதவும் பரந்த மனமும், கொண்டு விளங்கிய வள்ளியப்பா புகழ் மிக்க குழந்தைக் கவிஞராகவும், புரவலராகவும் திகழ்ந்தார். இவர் தம் வாழ்நாளில் ஐம்பத்தாறுக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் நாடகங்களும் அடங்கியுள்ளன. இவரெழுதிய 'மலரும் உள்ளம்' என்ற நூலுக்கு மத்திய அரசும், மாநில அரசும் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தன. 'சின்னஞ்சிறு வயதில்', 'பெரியோர் வாழ்விலே', 'பிள்ளைப் பருவத்திலே' போன்ற வாழ்க்கை வரலாற்று நூல்கள் தமிழக அரசின் பரிசுகளைப் பெற்றன.

இவரது நம் நதிகள் என்னும் நூல் பதினான்கு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இவர் தம் கவிதைகள் தெலுங்கு, ஆங்கிலம் போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. குழந்தைப் பாடல்கள் அடங்கிய ஒலிப்பதிவு நாடாக்களை (Cassettees) வெளியிட்டுள்ளார். தென்னாப்பிரிக்கத் தமிழ்க் குழந்தைகளுக்காக ஆறு ஒலிப்பதிவு நாடாக்களை வெளியிட்டார்.

மூன்றாவது குழந்தை இலக்கிய மாநாட்டில் (1961) இவரைப் பாராட்டி, அந்நாள் இந்தியக் குடியரசுத் தலைவர் சாகிர் உசேன் வெள்ளிக் கேடயம் வழங்கினார். பின்னர், 1963 -இல் இலக்னோவில் நடந்த மாநாட்டில் இவர் கேடயம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றார். 'பிள்ளைக்கவியரசு', 'மழலைச் செம்மல்', 'குழந்தைக் கவிஞர்' ஆகிய சிறப்புப் பட்டங்களை இவர் பெற்றுள்ளார்.

குழந்தைப் பத்திரிகைகளை வளர்த்த பெருமை வள்ளியப்பாவிற்குண்டு. புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த (1944-1951) 'பாலர்மலர்', 'டமாரம்', 'சங்கு' ஆகிய குழந்தைகளுக்கான இதழ்களின் சிறப்பாசிரியராகப் பணிபுரிந்தார். பூஞ்சோலை என்னும் இதழுக்கு மதிப்பியல் ஆசிரியராக (1951-1954) இருந்தார். இவர் தம் இறுதிக்காலம்வரை. 'கோகுலம்' என்னும்

சிறுவர் இதழின் மதிப்பியல் ஆசிரியராக இருந்துள்ளார். இவர் திடீரென நோய்வாய்ப்பட்டுத் தம் 67-ஆம் வயதில் (1989) காலமானார்.

-இரா. குரு.

**வளங்களை ஒதுக்கீடு செய்தல் :** மனிதனின் பல்வேறு வகையான விருப்பங்களை நிறைவு செய்யும் பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்வதற்குப் பயன்படுகின்ற சாதனங்கள் (Means) வளங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் பல்வேறு வகையான உற்பத்தி வளங்கள் காணப்படுகின்றன. நிலம், உழைப்பு, மூலதனம் முதலிய உற்பத்திக் காரணிகள் முதன்மையான வளங்கள் என்று பொருளியலறிஞர்களால் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை போக, மூலப் பொருட்கள், நீர்வளம், இயந்திரங்கள், சாலைகள், ஆலைகள், மின்சக்தி, போக்குவரத்துச் சாதனங்கள், எரிபொருட்கள் முதலியவையும் உற்பத்தி வளங்கள் என்று இரிச்சர்சு எச்.இலபீட்விச்சு (Richarch H. Leftwich) குறிப்பிட்டுள்ளார். அவ்வளங்கள் கிடைப்பதற்கு அருமையாக உள்ளன. பல்வேறு பயன்களில் பயன்படுத்தத்தக்க வகையிலும் சிறப்புத் தன்மையைப் பெற்றுள்ளன. அவ்வாறு உள்ள வளங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தும் வழிவகைகளைக் கண்டறிவதுதான் பொருளியலில் அடிப்படையான சிக்கலாகும் என்று இலயனல் இராபின்சு (Lionel Robins) கூறியுள்ளார்.

சந்தைப் பொருளாதாரத்தில் (Market Economy) கிடைப்பதற்கருமையாக உள்ள வளங்களை ஒதுக்கீடு செய்வது பற்றித் தொன்மைப் பொருளியலறிஞர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். பண்டங்களுக்கான அளிப்பும், தேவையும் வினைபுரிந்து விலைமட்டம் நிருணயிக்கப்படும் சுதந்திரமான சந்தைநிலையைத் தொன்மைப் பொருளியலறிஞர்கள் சந்தைப் பொருளாதாரம் என்று குறிப்பிடுகின்றனர். அவர்களின் கருத்துப்படி, போட்டிச் சந்தையில் வளங்கள் இயல்பாகவே சிறப்பான ஒதுக்கீடு செய்யப் பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. போட்டிச் சந்தையில் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்பவர்களுக்கும் முழுமையான சுதந்திரம் உண்டு. எனவே, உற்பத்தியாளர் தம் கைவசமுள்ள வளங்களைத் தேர்ந்து பயனையறிந்து ஆதாயமான வகையில் பயன்படுத்துவர். குறிப்பிட்ட வளத்தினைப் பல்வேறு பயன்களில் அல்லது துறைகளில் பயன்படுத்தும் பொழுது அவற்றின் இறுதி நிலை உற்பத்தித்திறன் சமமாக அமைதல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட வளத்தை ஒருதுறையில் ஒதுக்கிப் பயன்படுத்தும் பொழுது கிடைக்கின்ற உற்பத்தியின் மதிப்பு உரூ.1000 என்றும், அதே வளத்தைப் பிறிதொரு துறையில் பயன்படுத்தும் பொழுது கிடைக்கின்ற உற்பத்தியின் மதிப்பு உரூ.1200 என்றும் கொள்ள வேண்டும். இரண்டாம் துறையில்தான் வளம் அதிக உற்பத்தித் திறனைப் பெற்றுள்ளது. எனவே, அந்த வளத்தை ஆதாயமாக ஒதுக்க வேண்டுமெனில், இரண்டாம் துறைக்குத்தான் ஒதுக்குதல் வேண்டும். அத்தகைய சூழ்நிலையில் இயல்பாகவே இரண்டாம் துறையை நோக்கி வளங்கள் இடம் பெயர்ந்து சென்றுவிடுகின்றன என்று தொன்மைப் பொருளியலறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

வளங்களைப் பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கும் பொழுது வேலைவாய்ப்பு, வருவாய்ப் பகிர்வு (Income Distribution) பன்னாட்டு வாணிகச் செலுத்து நிலை முதலியவற்றைக் கவனத்திற்கொள்ள வேண்டும் என்று ஆலிசு செனரி (Hollis B. Chenery) கூறியுள்ளார்.

மூலதனத்தை நிதிவளம் (Financial Resource) என்று போலக்கு, புக்கனன் என்ற அறிஞர்கள் வகைப்படுத்தியுள்ளனர். எந்தத் துறையில் விளைவு வேகம் அல்லது உற்பத்தி வேகம் (Rate of Return) மிகுந்து காணப்படுகின்றது என்பதைக் கண்டறிந்து, அந்தத் துறையில் நிதி வளத்தை ஒதுக்கிப் பயன்படுத்த வேண்டும் என்ற போலக்கு, புக்கனன் ஆகியோர் கூறியுள்ளனர்.

முன்னோடித் துறைகளுக்கு (Leading Sectors) வளங்களை ஒதுக்கீடு செய்வதுதான் சிறந்த கொள்கை என்று உருசுடோ (Rostow) கூறியுள்ளார். நுகர்வுப் பண்டங்களையும், உற்பத்தி செய்யும் தொழிலையும், அத்தொழிலுக்குத் தேவையான கருவிகளை உற்பத்தி செய்யும் தொழிலையும் முன்னோடித் துறைகளென்று உருசுடோ குறிப்பிட்டுள்ளார்.

வளங்களை ஒதுக்கீடு செய்யும்பொழுது, மறுமுதலீட்டு வாய்ப்பைக் (Reinvestment) கருத்திற்கொள்ளுதல் இன்றியமையாததென்று வால்டர் காலென்சனும் (Walter Galenson) ஆர்வி லைபென்சுடினும் (Harvey Leibenstein) கூறியுள்ளார்.

அவ்வாறு வளங்களை ஒதுக்கீடு செய்தல் குறித்துக் கருத்துகள் கூறப்பட்டிருப்பினும், நடைமுறையில் நாட்டில் பின்பற்றப்படுகின்ற கொள்கையின் அடிப் படையில்தான் வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படு கின்றன. முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற் றப்படும் நாட்டில், பண்டச் சந்தையிலும், காரணிச் சந்தையிலும் போட்டி நிலவும்பொழுது, வளங்கள் இயல்பாகவே சிறந்த முறையில் உச்ச அளவு உற்பத்தி யைத் தருகின்ற துறையில் ஒதுக்கீடு செய்யப்படு கின்றன. குறைந்த அளவு உற்பத்தியைத் தரும் வகை யில் பயன்படுத்தப்பட்டாலும், நிறைந்த உற்பத்தி யைத் தரும் துறைக்கு வளங்கள் மாற்றப்பட்டு விடு கின்றன. போட்டிச் சந்தையில் வளங்களும், காரணி களும் தங்கு தடையின்றிச் சுதந்திரமாக இடம்பெறும் வாய்ப்பைப் பெற்றுள்ளன. எனவே, அதிக அளவு உற் பத்திப் பயனை நோக்கி அவை இடம் பெயர்வதில் சிக்கல் தோன்றாது என்று தொன்மைப் பொருளிய லறிஞர் குறிப்பிட்டுள்ளனர். போட்டிச் சந்தையை நடைமுறையில் காண்பதறிது. நிறைகுறைப் போட் டிச் சந்தையைத் தான் பார்க்க முடிகிறது. முற்று ரிமை, இருவர் முற்றுரிமை, சில்லோர் முற்றுரிமை, முற்றுரிமைப் போட்டிச் சந்தை, வாங்கல் திறன் சந்தை (Monopsony), இருமுக முற்றுரிமை, போன்ற நிறைகுறைப் போட்டிச் சந்தைகளில் ஏதாவது ஒன்றைத்தான் நடை முறையில் பார்க்க முடிகிறது. அத்தகைய நிறை குறைப் போட்டிச் சந்தையில், இயல்பாக வளங்கள் சிறப்பான பயன்வழிகளில் ஒதுக்கப்படுவதில்லை என்பதைக் குறிப்பிட வேண் டும். சமதருமக் கொள்கையைச் செயற்படுத்தும் நாடு களில், அரசு வகுத்துக் கொண்டுள்ள கொள்கையின் பாற்பட்டுத்தான் வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படு கின்றன. கலப்புப் பொருளாதாரக் கொள்கையைச் செயற்படுத்தும் நாடுகளில் தனியார் துறையும் உள் ளது. பொதுத்துறையும் உள்ளது. தனியார் துறையினர் தம்மிடமுள்ள வளங்களை உச்ச அளவு ஆதாயம் வரும் வழி வகையினைக் கண்டறிந்து ஒதுக்கீடு செய் கின்றனர். பொதுத்துறைக்கு அரசின் கொள்கையின் பாற்பட்டு வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

-சு.வெ.பா.

**துணை நூல்கள் :**

1. Pigou, A.C., **The Economics of Welfare**, Macmillan & Co., Ltd., London, 1932.

2. Richarch, H. Leftwich., **The Price system and Resource Allocation**, The Dryden Press, Hinsdole, Illinois, 1976.

3. Watson, D.S. & Mary A. Hotman., **Price Theory and its Uses**, Houghton Mifflin, Boston, 1976.

**வளமை :** தனியொரு ஆளோ, நாடோ செல்வச் செழிப்புடனும் மகிழ்ச்சியுடனும் இருக்கத் தக்க தொரு நிலையை வளமை எனலாம். தனியொருவர் கல்வி, பயிற்சி, வருவாய், மருத்துவ, பொழுது போக்கு வசதிகள் ஆகிய எல்லாவற்றையும் பெற்று விரும்பிய வேலையையும் பெற்று மகிழ்வோடு வாழும் நிலையை வளமை எனலாம். வளமை நிலை கொண்ட மக்கள் தம் இன்றியமையாத் தேவை களையும் (Necessaries), வசதி விருப்பங்களையும் (Comforts), ஆடம்பர விருப்பங்களையும் (Luxuries) நிறைவேற்றி மகிழ்வுடன் வாழ்வர்.

தனி ஆளாக இருந்தாலும், தனியொரு நாடாக இருந்தாலும் இந்த வளமை நிலைமைப் பெறுவதற் காகத் தொடர்ந்து முயற்சிகளை மேற்கொண்ட வண்ணம் இருக்கவேண்டும். நாடுகளை அவை ஏற்றுக் கொண்டுள்ள பொருளாதார அமைப்பின் அடிப்படையில் முதலாளித்துவப் பொருளாதாரம் (Capitalism), சமதருமப் பொருளாதாரம் (Socialism), பொதுவுடமைப் பொருளாதாரம் (Communism), கலப்புப் பொருளாதாரம் (Mixed Economy) எனப் பல வகையாகக் குறிப்பிடுவர். அவற்றுள், எல்லாமே பொதுவுடமையாக இருக்கும் பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் வளமையும், மந்த நிலையும் மாறி மாறித் தோன்றும் வாய்ப்புகள் மிக மிகக் குறைவு. எதை, யார், எப்போது, எப்படி, எந்த அள வில் உற்பத்தி செய்ய வேண்டும். அவை எப்போது யாரால், எந்த அடிப்படையில், யார் யாரிடையே, எப்படிப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பன போன்ற பலவும் அரசினால் அல்லது குறிப்பிட்ட தொரு அரசியல் கட்சியினால் நிருணயிக்கப்படுவ தால் வளமையும் மந்தமும் மாறிமாறித் தோன்றும் வாய்ப்புகள் இவ்வகைப் பொருளாதாரங்களில் மிக மிகக் குறைவே. ஆனால், பிற வகைப் பொருளா தாரங்களில், குறிப்பாக முதலாளித்துவப் பொருளா தாரத்தில் வளமையும் மந்த நிலையும் மாறி மாறித்

தோன்றுவதை வாணிகச் சூழல் கோட்பாடுகளின் (Theories of Trade Cycles) மூலம் அறியலாம்.

வளமைக் காலத்தில் வாணிகம் செழிப்பாக இருக்கும், உற்பத்தி செய்யப்படும் பண்டங்களும் பணிகளும் முழு அளவில் பயன்படுத்தப்பட்டு விடும் என்ற நம்பிக்கை உற்பத்தியாளர்களிடையே இருக்கும். எனவே, அவர்கள் மேன்மேலும் அதிகமான அளவில் பண்டங்களையும், பணிகளையும் உற்பத்தி செய்யத் தலைப்படுவர், தொழிலாளர்களுக்கு நல்ல வேலை வாய்ப்புகளும் உயர்ந்த ஊதியமும் இருக்கும். இவ்வுயர்ந்த ஊதியத்தைக் கொண்டு மேன் மேலும் இன்றியமையாத, வசதி, பகட்டான பண்டங்களையும் பணிகளையும் நுகர்வோர் நுகர்வர், உற்பத்தியாகும் பண்டங்களும், பணிகளும் பயன்பட்டு விடுகின்ற நிலை இருப்பதால் உற்பத்தியாளர்களின் ஆதாயம் பெருகும். மேன்மேலும் உற்பத்தியைப் பெருக்கும் அவர்களின் சிந்தனையும் வலுப்பெறும். மொத்தத்தில் எல்லோருடைய வருமானங்களும், வேலைகளும், உற்பத்தியும், நுகர்வும் பிற பொருளாதார நடவடிக்கைகளும் உயர்ந்து செல்லும் போக்கைப் பெற்றுக் கொண்டிருக்கும். எதிர்காலம் பற்றிய நற்சிந்தனை நாடு முழுவதிலும் காணப்படும்.

வளமை நிலை பல ஆண்டுகள் அல்லது பல பத்தாண்டுகள் காலம் நீடித்தாலும் இந்நிலை தொடர்ந்து நீடிப்பதில்லை. இந்நிலையின் இறுதிக் கட்டத்தில் திறன் குறைந்த உற்பத்திக் காரணிகளும் மிகுதியான செலவில் பயன்படுத்தப்படும் நிலை தோன்றும். உற்பத்தித்திறன் குறைந்து, ஆதாயம் குறைந்து, மொத்தப் பொருளாதாரமும் வளமை நிலையிலிருந்து மாறுபட்டு மந்த நிலையை நோக்கிச் செல்லும்நிலை தோன்றிவிடலாம்.

மந்தநிலையின் இறுதிக் கட்டத்தில் வளமை நிலை தோன்றவும் வாய்ப்புகள் உண்டு. இவ்வாறு மந்த நிலையும் வளமை நிலையும் மாறி மாறித் தோன்றுவதையே பொருளியலார் வாணிகச் சுழற்சி (Trade Cycle) என்பர். இந்த நிலைமாற்றங்களுக்கான காரணத்தைப் பற்றி அறிஞர் பெருமக்கள் பலப்பல விளக்கங்களைத் தந்திருக்கின்றனர். அவர் தம் விளக்கங்களை வாணிகச் சுழல்கோட்பாடுகள் என்று பொருளியலில் குறிப்பிடுவர். ஒரு நாட்டுக்குள் பல் வகைப் பிரிவினர் வசிக்கலாம். பல்வகைப் பிரிவினரும் பல் வகைத் திறன் பெற்றவர்களாவும் பல்வகை வருமான நிலைகளைப் பெற்றவர்களாகவும் இருப்பர். அதாவது சமுதாயத்தில் பல பிரிவு மக்களில் ஒருசில பிரிவினர் வளமை நிறைந்தவர்களாகவும், ஒருசில பிரிவினர் வளமை குறைந்தவர்களாகவும் இருக்கலாம். இந்நிலை விரும்பத்தக்கதில்லை எனப் பொருளியல் வல்லுநர்கள் குறிப்பிடுவர். இந்நிலை தொடர்ந்தால் செல்வ, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மிகுந்து மக்களிடையே புரட்சி தோன்றவும், அமைதியின்மை ஏற்படவும் காரணமாக அமைந்து விடும். பொருளாதார முன்னேற்றத்திற்காகத் திட்டமிட்ட முயற்சிகளில் ஈடுபடும் போதும் மக்களின் செல்வ, வருமான நிலைகளில் மாறுபட்ட வளமை நிலை தோன்றலாம். மொத்தத்தில் இவ்வேற்றத் தாழ்வுகள் இல்லாத அல்லது இவ்வேற்றத் தாழ்வுகள் மிகமிகக் குறைவாக உள்ள தொரு பொருளாதார வளர்ச்சியே விரும்பத்தக்கதாகும்.

பொருளாதார வல்லுநர்களுள் சிலர் நாடுகளின் பொருளாதார வளர்ச்சி நிலைகளை வரலாற்றுப் பின்னணியில் விளக்கும்போது பல்லேறு வளர்ச்சி நிலைகளைக் குறிப்பிடுகின்றனர். பொருளாதார வளர்ச்சி நிலைகளை வேட்டைப் பருவம் (Hunting Stage), ஆயர்குடிப் பருவம் (Pastrol Stage), வேளாண்மைப் பருவம் (Agricultural Stage), தொழிற் பருவம் (Industrial Stage) என ஆதம் சுமித்து (Adam Smith) விளக்குகிறார். அடிமை நிலை (Slavery Stage), ஆயர்பாடி நிலை, வேளாண்மை நிலை, பொறிசெய்பண்டங்கள் நிலை, வாணிக நிலை என வகைப்படுத்துகிறார் பிரடரிக் இரிசுட்டு (Fredrick Rist). பண்டமாற்றுப் பொருளாதாரம், பணப் பொருளாதாரம், கடன் பொருளாதாரம் என விளக்கம் தருகிறார் கில்டிபிராண்டு (Hildebrand). நிலமானியமுறை (Feudalism), முதலாளித்துவ முறை (Capitalism), சமதரும முறை (Socialism), பொதுவுடைமை முறை (Communism) என வகைப்படுத்தி விளக்குகிறார் காரல் மார்க்சு. இந்த அடிப்படையில் அமெரிக்க நாட்டுப் பொருளாதார வல்லுநரான ராசுடோவு (W.W. Rostow) பொருளாதார வளர்ச்சி நிலைகளைப் பழமை நிலை, எழு நிலையின் முன்னோடி நிலை (Pre-take-off Stage), எழு நிலை (Take-off Stage), தன்னைத் தானே வளர்த்துக் கொள்ளும் நிலை, வளமை நிலை என ஐவகையாகக் குறிப்பிடுகிறார்.

வளமை நிலையில் சமுதாயம் செல்வச் செழிப்போடு காணப்படும். 'ஏழ்மை', 'பசி', 'பஞ்சம்' போன்ற சொற்களுக்கான விளக்கங்களை மக்கள் கலைக்களஞ்சியங்கள் மூலமே கற்றறிந்து கொள்வர். இந்நிலையில் முன்னோடித் துறைகள் (Primary growth sectors) யாவும் நீண்டகால நுகர்வோர் பண்டங்களின் உற்பத்தியில் ஈடுபடுகின்றன. தனி ஆள் உண்மை வருமானம் (Per capita real income) மிக விரைவாக அதிகரிக்கிறது. மக்கள் ஏராளமான அளவில் பண்டங்களையும் பணிகளையும் நுகருகின்றனர். உழைப்பாளர்களின் உற்பத்தித் திறன் அதிகரித்து மிகத் திறமையுள்ள உழைப்பாளர்களாக மாறுகின்றனர். நகர்ப் புறங்களில் புதிய வசதிகளுடன் வாழுவதையே மக்கள் விரும்புகின்றனர். சமுதாயத்திற்கு நன்மை தரும் பலவிதமான பொதுநலப் பணிகளை மக்களும் அரசும் மேற்கொள்ளுகின்றனர். பன்னாட்டு அளவில் நாட்டின் ஆற்றலையும் புகழையும் பரப்புவதற்கான எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொள்ளுகின்றனர்.

வளமை நிலையை அடைவதே நாடுகளின் குறிக்கோள். எனவே, இந்நிலையின் கால அளவினைக் குறிப்பிடுவது இயலாது. இரோசுடோவின் கருத்துப்படி 1920-ஐ ஒட்டிய ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்க நாடும், 1930 -ஐ ஒட்டிய ஆண்டுகளில் சப்பான், மேற்கு ஐரோப்பா ஆகியவையும் வளமை நிலையை அடைந்துள்ளன.

-என்.எஸ்.பா.

**வளர்ச்சி உளவியல் :** வளர்ச்சி உளவியல் என்பது உளவியலின் பிரிவுகளுள் ஒன்றாகும். உயிர் கருவுற்ற நாள் முதல் இறக்கும் நாள் வரை நடைபெறும் வளர்ச்சி மாற்றங்களைப் பற்றிக் கற்பது வளர்ச்சி உளவியல் (Development Psychology) ஆகும். வளர்ச்சி மாற்றங்கள் எனப் பொதுவாகக் கூறப்பட்டாலும், அத்தொடர் மனித நடத்தையில் மாந்தரின் வயதிற்கேற்ப நடைபெறும் வளர்ச்சி மாற்றங்களைக் குறிப்பதாகவே கொள்ளப்படும்.

எலிசபெத்து அர்லாக்கு (Elizabeth Hurlock) என்ற வளர்ச்சி உளவியல் வல்லுநர் கருத்துப்படி வளர்ச்சி உளவியல் என்ற பிரிவு முதன் முதலில் 1953 -ஆம் ஆண்டு உண்டாக்கப்பட்டது. வளர்ச்சி உளவியல் வல்லுநர்கள் ஆறு முக்கிய குறிக்கோள்களைக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர். அவையாவன. (1) ஒரு வளர்ச்சிக் கட்டத்திலிருந்து மற்றொரு வளர்ச்சிக் கட்டத்திற்குச் செல்லும்போது தோற்றம், நடத்தை, ஆர்வம், குறிக்கோள் ஆகியவற்றில் ஏற்படும் பொது மாற்றங்களையும், சிறப்பு மாற்றங்களையும் பற்றி அறிவது, (2) அம் மாற்றங்கள் எப்போது ஏற்படுகின்றன என அறிவது, (3) அம்மாற்றங்களுக்குக் காரணக் கூறுகளாக அமைவனயாவை என்று அறிவது, (4) அம்மாற்றங்கள் எவ்வாறு நடத்தையைப் பாதிக்கின்றன என்று அறிவது, (5) அம் மாற்றங்களை முன்கூட்டியே அறிய முடியுமா எனத் தெரிந்து கொள்ள முயல்வது, (6) அத்தகைய மாற்றங்கள் தனிப்பட்டவையா, உலகமுறையிலானவையா என அறிவது.

**வளர்ச்சி மாற்றங்கள் என்றால் என்ன? :** வளர்ச்சி என்றாலே முதிர்ச்சியினாலும் முன்பயிற்சினாலும் ஏற்படுகின்ற ஒழுங்கான, எதிர்பார்ப்புகளுக்கேற்பத் தொடர்ச்சியான முன்னேற்றப்படியில் நடைபெறும் மாற்றங்களைக் குறிக்கும். வளர்ச்சி என்பது உயரத்தில் ஓர் அங்குலம் கூடுதல் அல்லது ஒருவர்தம் திறனில் முன்னேறுதல் ஆகியவற்றை மட்டும் கொண்டதன்று. அது பல்வேறு உருவமைப்புகளையும் (Structure), செயற்பாடுகளையும் (Functions), ஒருங்கிணைக்கும் சிக்கலான படிமுறையாகும் (Process).

வளர்ச்சியின் போது ஒரே சமயத்தில் இரு முரணான மாற்றங்கள், வாழ்நாள் முழுவதும் நடைபெறுகின்றன. அவ்விரு முரணான மாற்றங்களாவன. (1) வளர்ச்சி (Growth), (2) அழிவு அல்லது தேய்வு (Atrophy). அவ்விரண்டும் கருவுற்றதிலிருந்து இறப்பு வரை நடைபெற்று வருகின்றன. இளம் வயதில் வளர்ச்சி, அழிவைக் காட்டிலும் மிகுதியாக நடைபெறுகிறது. வயது மிகுந்து வர வர அழிவு அல்லது தேய்வு, வளர்ச்சியைக் காட்டிலும் மிகுதியாகக் காணப்படுகிறது. அப்போதும் வளர்ச்சி முழுவதும் நின்று விடுவதில்லை. எடுத்துக்காட்டாக தலைமுடி வளர்ச்சி, தோல் வளர்ச்சி முதலியவை ஆகும்.

மனிதனுள் எப்போதும் மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக உடல் திறன்களிலும் உளத் திறன்களிலும் அம்மாற்றங்களைப் பெரிதும்

காணலாம். அத்தகைய மாற்றங்களின் அமைப்பு கோயில் மணி வடிவமுள்ள வளைவினை (Bell shaped curve) ஒத்திருக்கும். தொடக்கத்தில் மிகுந்து கொண்டே சென்று நடுவயதில் தட்டையாகிப் பிறகு சிறிது சிறிதாக கீழே இறங்கத் தொடங்கி முதியோர் பருவத்தில் தொடக்கக் காலத்தில் எவ்வாறு தாழ்ந்திருந்ததோ அவ்வாறே இருக்கும்.

**வளர்ச்சியைப் பற்றிய முக்கிய கூற்றுகள்** : அர்லாக்கு *(1976)* வளர்ச்சியைப் பற்றி 7 முக்கிய கூற்றுகளை (Facts) விளக்கியுள்ளார். அவை இங்குச் சுருக்கமாக விளக்கப்படும்.

*1.* வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைவது குழந்தைப் பருவமாகும். வயது முதிர முதிர, ஒருவர் தம்மை எவ்வாறு வெற்றிகரமாகப் பொருத்தி அமைத்துக் கொள்கிறார் என்பது இளம் வயதில் அவருக்கு இருந்த பழக்க வழக்கங்கள், நடத்தைக் கோலங்கள் (Behaviour Patterns), போக்குகள் (Attitudes) முதலியவற்றைப் பொறுத்து இருக்கும். எனவே குழந்தைப் பருவமே ஒருவர் தம் வாழ்வினுக்கு அடித்தளமாக அமைகிறது. *(2)* முதிர்ச்சியும் (Maturation), கற்றலுமே (Learning) வளர்ச்சியை உண் டாக்குகின்றன. முதிர்ச்சி என்பது ஒரு தனி ஆளின் மரபு நிலை (Heredity)யைப் பொறுத்து அமையும். அது கற்றலுக்கு வேண்டிய மூலப் பொருளை அளிக்கும், மேலும் அது பொதுவான நடத்தைக்கு வேண்டிய தொடர்ச்சியினை நிருணயிக்கும். கற்றல் என்பது தனி ஆளின் (Individual) பயிற்சியையும் (Exercise), முயற்சியையும் (Effort) பொறுத்து அமைவதாகும். *(3)* வளர்ச்சி, வரையறுக்கப்பட்ட, எதிர்பார்ப்புக்குட் பட்ட பாதையில் தொடரும் உடல் (Physical), இயக்கம் (Motor), பேச்சு (Speech), அறிவு (Intelligence), வளர்ச்சி ஆகியவை சீரான ஒழுங்கான பாதையில் நடைபெறும். உடல் வளர்ச்சியும் உள வளர்ச்சியும் மிகுந்த ஒட்டுறவினைத் (Correlation) தமக்கிடையில் கொண்டிருக்கின்றன.

*4.* எல்லா மனிதர்களும் வெவ்வேறானவர்கள். ஒவ்வொரு மனிதனும் தனக்கே உரிய வழியில் வளர்ச்சி அடைகின்றான். சிலர் எவ்விதத் தடங்கலு மின்றி வளர்கின்றனர். சிலரிடம் வளர்ச்சியில் மேடு பள்ளங்களைக் காணலாம். சிலர் திடீரென உச்ச நிலை வளர்ச்சியை அடைவதுமுண்டு. 5. ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டமும் (Developmental phase) பொதுக் கூறுகளைக் கொண்டிருக்கும். ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திற்கும் பொதுக் குணநலன்கள் உள்ளன. *6.* ஒவ்வொரு கட்டமும் பல வளர்ச்சி இடர்ப்பாடு கள் (Lazards) கொண்டு இருக்கும். அவ்விடர்ப்பாடு கள் மூன்று வகைப்படும். அவை, *(1)* உடல் இடர்ப் பாடுகள், *(2)* உள இடர்ப்பாடுகள், *(3)* சமூக இடர்ப் பாடுகள் என்பனவாம். *7.* ஒவ்வொரு கட்டத்தைப் பற்றிப் பல பழங்கால (Traditional) நம்பிக்கைகள் உள்ளன. ஒரு மனிதனைப் பற்றிய மற்றவர் கருத்து களையும், தன்னைப் பற்றிய தன்னுடைய கருத்து களையும் இந்த நம்பிக்கைகள் பெரிதும் பாதிக்கின் றன. வாழ்க்கைப் படலம் : (Life span) வாழ்க்கைப் படலத் தின் ஆயுளை நிருணயிக்கும் கூறுகளின் எண்ணிக்கை ஒன்பதாகும். *(1)* மரபு நிலை (Heredity), *(2)* பொது உடல் நிலை (General Physical Condition), *(3)* உடல் எடை (Body Weight). குறைந்த எடையுள்ளவர் களும் மிகுந்த (பருத்த உடல் பெற்றோர்) எடையுள்ள வர்களும், சரியான எடையுள்ளவர்களைக் காட்டிலும் குறைவாகவே உயிர் வாழ்கின்றனர். *(4)*பாலினம் (Sex), பெண்கள் ஆண்களைக் காட்டிலும் நீண்ட காலம் உயிர் வாழ்கின்றனர். *(5)* இனம் (Race) - தாழ்த் தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றவர்களைக் காட்டிலும் குறைவான ஆண்டுகள் உயிர் வாழ்கின்ற னர். (இப்போது இந்நிலை மாறி வருவதைக் காண லாம். *(6)* சமூகப் பொருளாதார நிலை (Socio - economic level): ஒருவர் தம் சமூகப் பொருளாதார நிலை எவ்வளவிற்கெவ்வளவு உயர்ந்திருக்கிறதோ அவ்வளவிற்கவ்வளவு அவரது வாழ்நாளும் நீண்டு இருக்கும். *(7)* கல்வி (Education): கல்வி அறிவு மிகுதி யாகப் பெற்றவர்கள் நீண்ட நாள் வாழ்கின்றனர். *(8)* வேலை (Occupation), *(9)* புவி நிலை (Geographic Condition) என்பனவாகும். பட்டணம், பட்டணத்திற் கருகில் இருக்கும் இடங்கள் ஆகியவற்றில் வாழ்ப வர்கள் கிராமப் புறங்களில் வாழ்பவர்களைக் காட்டி லும் நீண்ட நாள் வாழ்கின்றனர்.

வாழ்க்கைப் படலத்தைப் பத்துக் கட்டங்களாகப் பிரித்துள்ளனர். அவை பின்வருமாறு. *(1)* முன் பிறப்புக் காலம் (Prenatal Period) - கருவுற்றதிலிருந்து பிறக்கும் காலம் வரை, *(2)* இளங்குழவிப் பருவம் (Infancy) - பிறப்பு முதல் இரண்டு வாரம் முடிய, *(3)* குழவிப் பருவம் (Babyhood) - மூன்றாம் வாரம் முதல் இரண்டு ஆண்டுகள் முடிய, *(4)* முன்

குழந்தைப் பருவம் (Early childhood) - மூன்று முதல் ஆறு ஆண்டுகள் வரை (5) பின் குழந்தைப் பருவம் (Late childhood) - ஆறு முதல் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் வரை (6) பூப்புப் பருவம் அல்லது முன் குமரப்பருவம் (Puberty or Pre Adolescence) - பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகள் முதல் பதின்மூன்று அல்லது பதினான்கு ஆண்டுகள் வரை. (7) குமரப் பருவம் (Adolescence) - பதின்மூன்று அல்லது பதினான்கு ஆண்டுகள் முதல் பதினெட்டு ஆண்டுகள் வரை, (8) முன் முதிர்ந்தோர் பருவம் (Early Adulthood) - பதினெட்டு ஆண்டுகள் முதல் நாற்பது ஆண்டுகள் வரை, (9) நடு வளதினர் பருவம் (Middle Age) - நாற்பது ஆண்டுகள் முதல் அறுபது ஆண்டுகள் வரை (10) முதியோர் பருவம் (Old Age) - அறுபது ஆண்டுகள் முதல் இறப்பு வரை.

வளர்ச்சிப் பணிகள் (Developmental Tasks) : ஒவ்வொரு கட்டத்திலும் மனிதர்கள் அக்கட்டத்திற்குத் தக்க பணிகளைச் செய்வதைச் சமூகம் எதிர்பார்க்கிறது. அப்பணிகள் மனிதனை வளர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன. மனிதன் அப்பணிகளைச் சரிவரச் செய்து முடித்தால் மகிழ்ச்சியையும் ஆனந்தத்தையும் அடைந்து, அடுத்த வளர்ச்சிக் கட்டத்திற்குச் செல்ல ஆயத்தமாகிறான். அவ்வளர்ச்சிப் பணிகளை உரிய காலத்தில் சரிவரச் செய்யத் தவறினால் மனிதன் நிறைவின்மையும் துக்கமும் அடைந்து, அவனது உள வளர்ச்சியில் தேக்கத்தை அடைகிறான். ஒவ்வொரு கட்டத்திற்கும் பற்பல வளர்ச்சிப் பணிகள் உள்ளன. அவற்றுள் பின்வருமாறு அமையும்.

குழவிப்பருவம் மற்றும் முன் குழந்தைப் பருவம் : (1) நடக்கக் கற்றுக் கொள்ளல், (2) திடப்பொருளை உண்ணக் கற்றுக்கொள்ளல், (3) பேசக் கற்றுக் கொள்ளல், (3) மலங்கழித்தலில் கட்டுப்பாட்டைப் பெறுதல் முதலியவை.

பின் குழந்தைப் பருவம் : (1) பொதுவான விளையாட்டுகளுக்கு வேண்டிய திறனைப் பெறுதல், (2) மற்ற குழந்தைகளுடன் ஒற்றுமையாக விளையாடக் கற்றுக்கொள்ளல்.

குமரப் பருவம் : (1) பெரியவர்களிடமிருந்து மனவெழுச்சி நிலையிலும் பொருளாதார நிலையிலும் தன்னிச்சைத் தன்மை அடைதல். (2) வேலைக்குத் தன்னை ஆயத்தப்படுத்திக்கொள்ளல்.

முன் முதிர்ந்தோர் பருவம் : (1) தன் வாழ்க்கைத் துணைவரைத் தேர்ந்தெடுத்தல், (2) குடும்பத்தைப் பாதுகாத்தல்.

நடுவயதினர் பருவம் : (1) சமூகத்தையும் சுற்றுப்புற ஒழுங்கினையும் பாதுகாத்தல் (2) குமரப் பருவத்தில் இருக்கும் தன் குழந்தைகளைக் கடமையுணர்வு மிக்க முதிர்ந்தோர்களாக்குதல்.

முதியோர் பருவம் : (1) தளர்ந்து வரும் உடல் நிலையை ஏற்றுக்கொள்ளுதல் (2) ஓய்வு பெற்ற வாழ்க்கைக்கும், குறைவாகப் பணம் பெறுதலுக்கும் தன்னைப் பொருத்திக்கொள்ளுதல்.

வளர்ச்சி உளவியலில் செய்யும் ஆய்வு முறைகள் : வளர்ச்சி உளவியலில் இரு வகையான ஆய்வு முறைகள் உள்ளன. அவை (1) குறுக்குவெட்டு ஆய்வு (Cross sectional research), (2) நீள் வகை ஆய்வு (Longitudinal research).

குறுக்கு வெட்டு ஆய்வு என்பது ஒரே வயதினை உடைய பலரை ஒரே சமயத்தில் ஆய்வு செய்து அவ்வயதிற்குரிய நடத்தைக் கோலங்களை நிருணயிப்பது. மேலும், இதை ஒப்பாய்வு முறையிலும் செய்யலாம். அதாவது 8 வயது கொண்ட 100 குழந்தைகளை ஒரு குழுவிலும் , 9 வயது கொண்ட 100 குழந்தைகளை வேறொரு குழுவிலும், 10 வயது கொண்ட 100 குழந்தைகளை மற்றொரு குழுவிலும் வைத்து இம்மூன்று குழுக்களையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டு வளர்ச்சியினைக் கண்டறியலாம். நீள் வகை ஆய்வில் ஒரே ஒரு குழந்தையைத் தேர்ந்தெடுத்து அக்குழந்தையை நீண்ட காலம் ஆய்வு செய்து ஒவ்வொரு குறிப்பிட்ட பருவத்திலும் அதன் வளர்ச்சியைப் பற்றிப் படிப்பது ஆகும். அதேபோல் பல குழந்தைகளைப் பல ஆண்டுகள் தொடர்ந்து ஆய்வு செய்தலையும் நீள் வகை ஆய்வு எனலாம்.

-வ.தே.சா.

**துணை நூல் :**

1. Hurlock, E.B., **Developmental Psychology**, Tata Mc. Graw Hill Publishing Co., Ltd., 1976.

**வளர்ச்சிக் கோட்பாடு :** பண்டங்களையும் பணிகளையும் பயன்படுத்துவது நுகர்வு. நுகர்வின் அதிகரிப்பால் முதலீடு தூண்டி விடப்படும்போது, நுகர்வுத் தேவை அதிகரிப்பிற்கு முதலீட்டுத் தேவை அதிகரிப்பு விகிதத்தை வளர்ச்சி, ஊக்கி, முடுக்கி (Accelerator) என்ற குறிப்பிடுவர். எடுத்துக்காட்டாக, ஏதோ ஒரு முயற்சியின் விளைவாக 1000 அலகுகளாக இருந்த நுகர்வுத் தேவையின் அளவை 1200 அலகுகளாக அதிகரிப்பதாகக் கருதிக் கொண்டால், நுகர்வுத் தேவை அதிகரிப்பை 200 அலகுகள் ($\Delta Y$) என்று குறிப்பிடலாம். இந்நுகர்வுத் தேவை அதிகரிப்பால் 400 அலகுகள் முதலீட்டுத் தேவை அதிகரிப்பதாக இருந்தால் வளர்ச்சியின் அளவை

$$\frac{\Delta I}{\Delta Y} = \frac{400}{200} = 2$$

எனக் குறிப்பிடலாம். நுகர்வுப் பண்டங்களுக்கான தேவையானது முதலீட்டுப் பண்டங்களுக்கான தேவையை இரண்டு மடங்கு அளவிற்கு வளர்க்கிறது என்பது பொருள். இவ் விளக்கத்தைத் தரும் கோட்பாடு, வளர்ச்சிக் கோட்பாடு, ஊக்கிக் கோட்பாடு, முடுக்கிக் கோட்பாடு என்று பல பெயர்களால் குறிப்பிடப்படுகிறது.

பிரான்சு நாட்டைச் சேர்ந்த பொருளியல் அறிஞர் ஆல்பர்ட்டு அப்டாலியன் (Albert Aftalian) என்பவர்தாம் முதன்முதலில் இக்கோட்பாட்டைக் குறிப்பிட்டார். பின்னர் அமெரிக்க நாட்டுப் பொருளியல் வல்லுநரான சே.எம்.கிளார்க்கு (J.M. Clark), 1917-இல் 'வாணிக ஊக்கியும் தேவை விதியும்' (Business Acceleration and Law of Demand) என்ற தம் கட்டுரையில் வளர்ச்சி (ஊக்கி) என்ற கருத்தை விளக்கினார். பின்னர், ஆர்.எப். காராடு (R.F. Harrod), கிக்சு (Hicks), சாமுவேல்சன் (Samuelson) போன்ற அறிஞர் பலர் இக் கருத்தை மிகவும் புகழடையும் வண்ணம் பயன்படுத்தினார்கள்.

இக்கருத்து சான் மேனார்டு கீன்சு (John Maynard Keynes) என்பாரின் சொந்தக் கருத்து அன்று என்றும், இருப்பினும் 'வேலைக்கோட்பாடு' (Employment Theory) என்ற தம் கோட்பாட்டை விளக்கும் போது இக்கருத்தினை மிகச் சிறப்பானதொன்றாகக் கையாண்டிருக்கிறார் என்றும் அறிஞர்கள் கூறுவர்.

பொதுவாகப் பொருளாதாரம் மந்த நிலையிலிருக்கும்போது 'வளர்ச்சி' எவ்வாறு செயற்படுகிறதென்பதைக் கீழ்வருமாறு விளக்குவர். பொருளாதார மீட்சியைப் பெற அரசு பொது முதலீட்டை (Public investment) மேற்கொள்கிறது. ஒருவரின் செலவு மற்றவரின் வருமானம். எனவே, அரசு மேற்கொள்ளும் செலவு அவ்வளவும் சமுதாயத்தின் அதிகப்படியான வருமானமாகிறது. வருமானத்தைப் பெறும் மக்கள் பண்டங்களையும் பணிகளையும் மிகுதியாக நுகரத் தொடங்குவர். நுகர்வுத் தேவைப் பெருக்கத்தினால் முதலீட்டுப் பண்டங்களின் உற்பத்தியும் பெருகத் தலைப்பட்டு, இப் பண்டங்களின் உற்பத்தியின் மீதான முதலீடு பெருகத் தலைப்படும். இம் முதலீட்டைத் தூண்டிவிடப்படும் முதலீடு (Induced Investment) என்பர்.

'வளர்ச்சி' அல்லது 'ஊக்கி' என்ற கருத்தைப் பேராசிரியர் கேயக்கு (Prof. Hayek) கீழ்வருமாறு குறிப்பிடுகிறார். குறிப்பிட்ட அளவு நுகர்வுப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு அந்த அளவைக் காட்டிலும் பல மடங்கு அதிகமுள்ள மூலதனப் பண்டங்களை ஓராண்டாகிய குறுகிய காலத்தில் பயன்படுத்துவது இயல்பு. அதைப் போன்று நுகர்வுப் பண்டங்களின் தேவையில் தோற்றுவிக்கப்படும் எந்தவிதமான அதிகரிப்பும் அதைக் காட்டிலும் பல மடங்கு அதிகமான அளவில் மூலதனப் பண்டங்களுக்கான தேவையைத் தோற்றுவிக்கிறது.

'வளர்ச்சிக் கெழு' அல்லது 'ஊக்கிக் கெழு' : **(Acceleration Co-efficient)**

$$a = \frac{\Delta I}{\Delta Y}$$

$a \rightarrow$ ஊக்கிக் கெழு
$\Delta I \rightarrow$ முதலீட்டில் தோன்றும் அதிகரிப்பு
$\Delta Y \rightarrow$ வருமானத்தில் (நுகர்வில்) தோன்றும் அதிகரிப்பு.

கீழ்வரும் சிறிய எடுத்துக்காட்டின் மூலம் இக் கருத்தை மேலும் எளிமையாக விளக்கலாம். 1000 நுகர்வுப் பண்டங்கள் தேவைப்படுகின்றனவென்றும், அவற்றை உற்பத்தி செய்ய 10 இயந்திரங்கள் தேவைப் படுகின்றன என்றும் வைத்துக் கொண்டால் ஒவ்வொரு இயந்திரத்தின் வாழ்நாள் (இயந்திரம்

உற்பத்தியில் பயன்படத்தக்க கால அளவு) 10 ஆண்டுகள் என்று கருதப்படும். இப்போது, தொடர்ச்சியாக 1000 அலகுகள் கொண்ட நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டுமானால் ஆண்டு ஒன்றுக்கு 10 புதிய இயந்திரங்களை உற்பத்தி செய்ய வேண்டும். ஈடு செய்யும் தேவை (Replacement Demand) என்று இதனைக் குறிப்பிடுவர். நுகர்வுப் பண்டங்களின் தேவை 1000 அலகுகளாக இருக்கும்வரை இந்நிலை மாறாமல் இருக்கிறது. ஆனால் நுகர்வுப் பண்டங்களின் தேவை மாற்றமடையும் வாய்ப்புகள் இல்லாமல் இல்லை. நுகர்வுப் பண்டங்களின் தேவை 10 விழுக்காடு அதிகரிப்பதாகக் கருதிக் கொண்டால் ஆண்டொன்றிற்கான இயந்திரங்களின் தேவை 01-லிருந்து 20 ஆக (100 விழுக்காடு) அதிகரித்து விடுகிறது. பழைய நுகர்வுத் தேவையை ஈடு செய்வதற்கும் 10 இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. அதாவது நுகர் வுப் பண்டங்களின் தேவையில் தோன்றும் அதிகரிப்பு ($\Delta Y$) (இந்த எடுத்துக்காட்டில் 10 விழுக்காடு) முதலீட் டுப் பண்டங்கள் துறையில் பேரளவு அதிகரிப்பிற்கு ($\Delta I$) (இந்த எடுத்துக்காட்டில் 100 விழுக்காடு) வகை செய்கிறது. இவ்வாறாக, நுகர்வோர் பண்டத் தொழில்களில் ஏற்படும் மாற்றம் குறைவாகவும், இந்த மாற்றத்தினால் முதலீட்டுப் பண்டங்களின் தொழில்களில் ஏற்படும் மாற்றம் அதிகமாகவும் உள்ளன. இதில் வளர்ச்சியின் (ஊக்கியின்) அளவு

$$\frac{100}{10} = 10.$$

சமுதாயத்தின் வருமான மாற்றம் உரூ. 5 கோடி ($\Delta Y$) என்றும் அதனால், முதலீட்டில் ஏற்படும் மாற்றம் உரூ.10 கோடி ($\Delta I$) என்றும் கருதிக் கொண்டால்

$$\text{வளர்ச்சி (ஊக்கி)} \quad \frac{\Delta I}{\Delta Y} = \frac{10}{5} = 2$$

வளர்ச்சிக் கெழுவைப் பல காரணிகள் நிருணயிக்கின்றன :

1. மூலதன விளைவு விகிதம் (Capital output ratio).

2. மூலதனப் பணடத்தின் வாழ்நாள் அளவு. மூலதனப் பண்டம் உழைக்கும் கால அளவு அதிகமானால் வளர்ச்சிக் கெழுவின் அளவும் அதிகமாகும், குறைவானால் குறைவாகவும் இருப்பது இயல்பு.

**வளர்ச்சியும் பெருக்கியும் :** வருமானம், வேலை ஆகியவற்றினால் முதலீட்டில் ஏற்படும் விளைவை விளக்குவது வளர்ச்சி (ஊக்கி). முதலீட்டினால் வருமானம் வேலை ஆகியவற்றில் ஏற்படும் விளைவை விளக்குவது பெருக்கி (Multiplier).

இறுதிநிறை நுகர்வு நாட்டம் (Marginal Propensity to consume) அதிகமானால் பெருக்கி விளைவும் அதிகமாக அமையும், குறைவானால் பெருக்கி விளைவும் குறைவாக இருக்கும். இறுதிநிலை நுகர்வு நாட்டம் ஓர் உளவியல் (Psychological) காரணியாதலால் பெருக்கியை உளவியல் காரணி சார்ந்த ஒன்று என்பர். இதற்கு மாறாக, இயந்திரங்களின் உழைக்கும் தன்மையை (Durability), அதாவது எவ்வளவு காலத்திற்கு இயந்திரங்கள் பயன்படத் தக்கவை என்பதைப் பொறுத்து ஊக்கியின் அளவு அமைகிறது. இயந்திரங்கள் நெடுங்காலத்திற்கு உழைக்கத் தக்கவையாக இருப்பின் ஊக்கியின் மதிப்பு அதிகமானதாகவும், குறைந்த காலத்திற்கு உழைக்கத்தக்கவையாக இருப்பின் ஊக்கியின் மதிப்பு குறைவானதாகவும் அமைகிறது. ஊக்கியின் மதிப்பு இயந்திரங்களின் உழைக்கும் தன்மையைப் பொறுத்தமைவதால் ஊக்கி தொழில் நுட்பக் காரணிகளைப் (Technological factors) பொறுத்தமைகிறது என்பர்.

**எடுகோள்கள் :** வளர்ச்சிக் கோட்பாடு கீழ்வரும் பல எடுகோள்களில் அடிப்படையில் அமையப் பெற்றிருக்கிறது. 1. நுகர்வோர் பண்டங்களிலும், தொழில்களிலும் எச்சத்திறன் (Excess capacity) இல்லை. 2. முதலீட்டுப் பண்டங்களிலும், தொழில்களிலும் எச்சத்திறன் இருக்கிறது. 3. நுகர்வுப் பண்டங்களிலும், தொழில்களிலும் தோன்றும் தேவை அதிகரிப்பு இடைக்கால மானதாக இல்லாமல் நிலையான இயல்புடையதாக (Permanent in nature) இருக்கிறது. 4. மூலதன- விளைவு விகிதம் மாறாமல் இருக்கிறது. 5. மூலவளங்கள் தாராளமாகக் கிடைக்கும் நிலை இருக்கிறது. 6. கடன் அளிப்பு நெகிழ்ச்சியுள்ளதாக இருக்கிறது. தொழில்களில் முதலீடு செய்வதற்கும், பிற காரணங்களுக்கும் எவ்விதத் தடையுமில்லாமல் பணம் தாராளமாகக் கிடைக்கத் தக்க நிலை உள்ளது. 7. முதலீட்டுப் பண்டங்கள் தொழில் திரவத் தன்மையுடையதாக (Fluidity) இருக்க வேண்டும். அதாவது, எவ்விதமான தாமதமும் இல்லாமல் உற்பத்தி மூலவளங்கள் கிடைப்ப

பெருக்கி - ஊக்கி இணைப்பில் (Multipler - Accelerator Interaction) வருமானப் பெருக்கம்.

| பெருக்கியின் காலம் | தொடக்கநிலை முதலீடு | தூண்டி விடப்படும் நுகர்வு | தூண்டி விடப்படும் முதலீடு | நாட்டு வருமானத்தில் தோன்றும் மொத்த அதிகரிப்பு |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடிக்கணக்கில்) | | |
| 1. | 40 | 0 | 0 | 40 |
| 2. | 40 | 40x.5 = 20 | 20-0x2=40 | 40+20+40 = 100 |
| 3. | 40 | 100 x .5=50 | 50-20x2=60 | 40+50+60=150 |
| 4. | 40 | 150x.5=75 | 75-50x2=50 | 40+75+50=165 |
| 5. | 40 | 165x.5=82.5 | 82.5-75x2=15 | 40+82.5+15=137.5 |

தாகவும், தேவை தோன்றியவுடன் எவ்விதத் தாமதமும் இல்லாமல் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுவதாகவும் உள்ளதொரு நிலை உள்ளது.

**வரையறைகள்** : வளர்ச்சிக் கோட்பாடு சரியானதாக இருக்க வேண்டுமெனில் எடுகோள்கள் உண்மையானவையாக இருக்க வேண்டும். ஆனால், பெரும்பாலான எடுகோள்கள் உண்மை நடைமுறை நிலைகளுக்கு மாறானவையாக இருப்பதால் இக்கோட்பாடும் பல வரையறைகளுக்குட்பட்டதாக உள்ளது.

**சிறப்புகள்** : வருமானம் உற்பத்தியாகும் போக்கை அறிந்து கொள்ள இக்கோட்பாடு உதவுகிறது. ஒரு துறையில் தோன்றும் சிறிய அளவு அதிகரிப்பு, எவ்வாறு பிற துறைகளில் பேரளவு அதிகரிப்பைத் தோற்றுவிக்கிறது என்பதை அறிந்து கொள்ள உதவுகிறது. நுகர்வோர் பண்டங்கள், தொழில் துறையைக் காட்டிலும் முதலீட்டுப் பண்டங்கள் தொழில் துறையில் ஏன் அதிகமான அளவில் மாற்றங்கள் தோன்றகின்றன என்பதற்கான விளக்கத்தை இக்கோட்பாடு தருகிறது. பேராசிரியர்கள் இக்சு (Hicks), காராடு (Harrod) ஆகியோர் தங்களின் வாணிபச் சுழல் கோட்பாடுகளை வளர்ச்சி (ஊக்கி) என்ற கருத்தின் அடிப்படையில் விளக்கி உள்ளனர்.

**பெருக்கி - ஊக்கி இணைப்பு** : பெருக்கி, ஊக்கி இரண்டும் செயற்படும்போது எவ்வாறு வருமானப் பெருக்கம் தோன்றுகிறது என்பதைக் கீழ்வரும் அட்டவணை மூலம் விளக்குவர். இறுதிநிலை நுகர்வு நாட்டத்தின் அளவு 0.5 , ஊக்கியின் அளவு 2 என்றும் இரு எடுகோள்களில் இவ்வட்டவணை அமையப் பெற்றிருக்கிறது.

நான்காம் காலத்தில் நாட்டு வருமானத்தில் தோன்றும் அதிகரிப்பு உச்ச அளவில் இருக்கிறது. ஆனால் 5-ஆம் காலத்தில் இது குறைந்து விடுகிறது. பெருக்கி, ஊக்கி ஆகியவற்றின் விளைவுகள் பலவீனமடைந்து வருவதே இதற்கான காரணமாகும்.

**துணை நூல்கள் :**

1. பாலசுப்பிரமணியன், என்.எசு., பேரியல் பொருளாதாரம், உமா பப்ளிகேசன்சு, மதுரை, *1986*.

2. Alfred W., Stories and Douglas C. Hague, **A Text book of Economic Theory**, The English Language Book Society and Longman Group Limited, London, 1982.

**வளர்ச்சி முறை** : மனிதன் நாள்தோறும் வளர்ந்து கொண்டிருக்கும் ஓர் உயிரி. ஒவ்வொரு மனிதனும், கருவுற்றது முதல் பிறந்து, வாழ்ந்து இறக்கும் வரை, கருவுற்ற நிலை, குழந்தைப் பருவம், குமரப் பருவம், முதிர் பருவம், நடுவயதுப்பருவம், கிழப்பருவம், என்ற பல பருவங்களைக் கடந்து செல்கிறான். ஒவ்வொரு பருவத்திலும் அவனுடைய உடல் அமைப்பிலும் அளவிலும் மாறுபாடுகள் தோன்றுகின்றன. அவனுடைய உடல், உள்ளம் ஆகியவற்றின் செயற்பாடுகளிலும் மேம்பாடுகள் ஏற்படுகின்றன. மனிதனின் உருப்பெருக்க மாற்றத்தையும் செயல் திற மேம்பாடுகள் ஏற்படுகின்றன. மனிதனின் உருப்பெருக்க மாற்றத்தையும் செயல் திற மேம்பாடுகளையும் இணைத்து வளர்ச்சி எனப்படுகிறது.

உருப்பெருக்கம் (Growth) பொதுவாக உடற்கூற்றில் ஏற்படும் மாற்றத்தைக் குறிப்பிடுகிறது. அதாவது உடலின், உயரம், பருமன், எடை, வடிவம் ஆகியவற்றில் ஏற்படும் வளர்ச்சியைக் குறிப்பிடு

கிறது. அம்மாற்றம் மனிதன் முதிர்ச்சி (Maturity) அடையும் வரை நடைபெறுகிறது. அதன்பின் உருப் பெருக்கம் அடைவதில்லை. உருப்பெருக்கத்தை அளவிட்டுக் கூற முடியும்.

மனிதன், வளர்ச்சி அடைவதால் உருப் பெருக்கம் அடைவது மட்டுமன்றி அறிவு, புதுத் திறன்கள், மெய்ப்பாடுகள், பண்புகள் ஆகியவற் றிலும் மாற்றமடைகின்றான். வளர்ச்சியின் போது உடல் உள்ளம் ஆகியவற்றின் ஒவ்வொரு கூறும், செயற்பாடுகளும் மாற்றமடைகின்றன. இவ்வாறு மனிதனின் உடல், உள்ளம் ஆகியவற்றில் தோன்றும் அனைத்து விதமான மாற்றங்களின் மொத்தப் பண்புகளும் செயல்திறன் மேம்பாடு (Development) எனப்படுகின்றன. அது வாழ்நாள் முழுவதும் நடை பெறுகிறது. உருப்பெருக்கத்தைக் கண்கூடாகப் பார்க்க முடியும். ஆனால், செயல் திறன் மேம் பாட்டை எளிதாக அளவிட முடியாது, பார்க்க முடி யாது. ஆனால், நடத்தை மாற்றங்களால் அறிய முடி கிறது. எடுத்துக்காட்டாக அறிவு வளர்ச்சியை, மனி தன் சிக்கல்களைத் தீர்ப்பதிலிருந்து அறிய முடிகிறது.

உருப்பெருக்க மாற்றத்திற்கும், செயல்திறன் மேம் பாட்டிற்கும் இடையே வேறுபாடுகள் உள்ளன. ஆனால் அவை இரண்டும் மனித வளர்ச்சியைக் குறிப்பிடுகின்றன. அவை ஒன்றை ஒன்று சார்ந்தே செயற்படுகின்றன.

வளர்ச்சி பற்றிய அறிவின் தேவை : 1. குறிப்பிட்ட மாற்றங்கள் அல்லது நடத்தைகள் எப்போது எழும் என்பதை எதிர்கொள்வதற்கும், 2. குழந்தைகளின் வளர்ச்சியை எப்போது தூண்ட வேண்டும் என்பதை உணர்த்துவதற்கும், 3. தோன்றப் போகும் மாறுதல் களுக்குக் குழந்தைகளை ஆயத்தம் செய்வதற்கும், 4. வளர்ச்சிக்கு ஏற்பப் பொருத்தமான விரும்பத்தகுந்த நடத்தைகளை அமைத்துக் கொள்ள அறிவுரை கூறுவ தற்கும், வளர்ச்சி பற்றிய அறிவு தேவைப்படுகிறது.

மனித வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகள் : மனித வளர்சசி, மரபு (Heredity), சூழ்நிலை (Environment), பால் (Sex), பயிற்சி, நாளமில்லாச் சுரப்பிகளின் தாக்குதல் முதலியவற்றால் பாதிக்கப்படுகிறது. இவற்றில் மரபு நிலையும், சூழ்நிலையும் இன்றி யமையாதன.

மரபு: "எலிக்குப் பிறந்தது யானையாகுமா? புலிக் குப் பிறந்தது பூனையாகுமா?" என்பார்கள். அந்தந்த இனங்களுக்குப் பிறக்கும் குட்டிகள் அவற்றின் பெற்றோரை அல்லது முன்னோரை ஒத்திருக் கின்றன. ஏன்? மரபுநிலை செயற்படுவதால் குட்டிகள் அல்லது பிள்ளைகள் தம்பெற்றோரை அல்லது முன் னோரை ஒத்திருக்கின்றன. மரபுநிலை என்பது கரு வுறும்போது தம் பெற்றோர்களிடமிருந்து குழந்தை பெறும் உடற்கூறுகளும், உள்ளக்கூறுகளும், மன வெழுச்சிக்கூறுகளும் கொண்ட மொத்தப் பண்புக் கூறுகளாகும். மரபுநிலை என்பது ஒரு கருவுற்ற முட்டையில் அடங்கி நிற்கும் எல்லாப் பண்பு களையும் குறிக்கும். முதிர்ச்சி பெற்ற ஆண், பெண் ஆகிய இருபாலாரின் பாலணுக்களின் (Genes) சேர்க்கையால் மனிதன் தோன்றுகிறான். ஆண் பால் அணுக்களுக்கு விந்தணுக்கள் (Sperms) என்றும், பெண் பாலணுவுக்கு முட்டை (Ovum) என்றும் பெயர். இப் பாலணுக்கள் ஒவ்வொன்றிலும் 23 இணை மரபணுக் கீற்றுகள் (Chromosomes) என்னும் , உயிரணுக் கோல் கள் உள்ளன. ஒவ்வொரு மரபணுக்கீற்றிலும் பல்லா யிரக் கணக்கான மரபணுக்கள் (Genes) உள்ளன. இவை மரபுத் தன்மையைத் தலைமுறைதோறும் எடுத்துச் செல்கின்றன.

உடற் சேர்க்கையின்போது விந்தணு முட்டையைச் சென்று அடைகிறது. இதற்குக் கருவுறுதல் என்பது பெயர். கருவுறும்போது தந்தையின் விந்தணு விலிருந்து 23 மரபணுக் கீற்றுகளும், தாயின் முட்டை யிலிருந்து 23 மரபணுக்கீற்றுகளும் இணைந்து 23 இணைகளாகின்றன. கருவில் வளரும் குழந்தை தாய், தந்தையர் அல்லது முன்னோர் மரபுத் தன்மையைப் பெறுகிறது.

மரபுநிலை விதிகள் வருமாறு : 1. பெற்றோரைப் போலவே பிள்ளைகளும் இருந்தல். 2. பெற் றோரைப் போல் அல்லாமல் பிள்ளைகள் மாறுபட்டி ருத்தல். பெற்றோர் நல்ல சிவப்பாக இருப்பர். பிறக் கும் குழந்தை கறுப்பாக இருக்கும் 3. பெற்றோரை விடப் பின்தங்கி இருத்தல் (Regression). பெற்றோர் அறிவாளிகளாக இருப்பார்கள், ஆனால், பிள்ளை கள் முட்டாள்களாகவும் இருக்கலாம். 4. மரபு நிலைப் பண்புகள் பெற்றோர்களிடமிருந்து மட்டு மன்றி முன்னோர்களிடமிருந்தும் வருதல். பெரு மளவுப் பண்புகள் பெற்றோரிடமிருந்து வந்தவை யாகும்.

**சூழ்நிலை** : ஒருவன் வளர்ச்சியை மரபுநிலை மட்டுமன்றிச் சூழ்நிலையும் மிகுதியாகப் பாதிக்கிறது. சாதகமான சூழ்நிலையால் வளர்ச்சி தூண்டப் படுகிறது. பாதமான சூழ்நிலை விரும்பிய வளர்ச்சியைத் தடை செய்கிறது. ஒருவன் வளர்ச்சியையும், நடத்தையுயம் அவனுக்குப் புறம்பேயிருந்து கட்டுப் படுத்தும், பலவித காரணிகள் சூழ்நிலை எனப்படும். சூழ்நிலை பலவகைப்படும். கருவுற்றதிலிருந்து பிறக்கும் வரை தாயின் கருப்பையில் குழந்தை வளரும் போது சூழ்நிலை அதைப் பாதிக்கிறது. இது பிறப்புக்கு முன்னுள்ள சூழ்நிலை (Pre-natal environment) எனப்படும். இந்நிலையில் தாய் உண்ணும் உணவு, தாயின் உடல்நிலை, உள்ளத்திலெழும் மனவெழுச்சிகள் போன்றவை. கருப்பையில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. குழந்தை பிறந்த பின் அதைப் பாதிக்கும் சூழ்நிலைகள் பிறப்புக்குப் பின்னுள்ள சூழ்நிலைகள் (Post - natal environment) எனப்படும். இயற்கை வளம், தட்பவெப்ப நிலைகள், நில அமைப்பு போன்ற புவியியல் சூழ்நிலையும் (Geographical environment), குடும்பம், பள்ளி, சுற்றத்தார், நண்பர்கள், சமய நிறுவனங்கள் போன்ற சமூகச் சூழ்நிலைகளும் (Social environment) குழந்தையின் வளர்ச்சியைப் பாதிக்கின்றன. நல்ல சூழ்நிலை வளர்ச்சிக்கு இன்றியமையாதது ஆகும்.

நல்ல பொறுக்கு விதை சரியான சூழலில் நல்ல மகசூலைக் கொடுக்கிறது. அதுபோலக் குழந்தையின் முழுவளர்ச்சிக்கு மரபு நிலையும் நல்ல சூழ்நிலையும் இன்றியமையாதன. ஒருவன் என்ன செய்ய இயலும் என்பதை மரபு நிலையும், எவ்வாறு செய்கிறான் என்பதைச் சூழ்நிலையும் நிருணயிக்கின்றன. மரபுநிலை வளர்ச்சியின் எல்லையை வகுக்கின்றது. சூழ்நிலை, அடையும் வளர்ச்சியைச் செம்மைப்படுத்துகிறது. மரபு நிலையை மாற்ற இயலாது. ஆனால், நல்ல சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்துக் குழந்தையின் வளர்ச்சிக்கு உறுதுணை செய்ய வேண்டும்.

பயிற்சியும் குழந்தையின் வளர்ச்சிக்கு உறுதுணை புரிகிறது. கல்வி என்பது ஆரோக்கியமான உடலையும், திடமான உள்ளத்தையும் உருவாக்குவது ஆகும். எனவேதான், உடற்பயிற்சியும், பாடங்களின் வாயிலாக உளப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. நல்ல வளர்ச்சிக்கு இளமையிலேயே சிறந்த கல்வியை அல்லது பயிற்சியை அளிக்க வேண்டும். உடல் வளர்ச்சிக்கு மிக இன்றியமையாதது நாளமில்லாச் சுரப்பிகள் சுரக்கும் நீர் வகைகளாகும் (Harmones).

**வளர்ச்சியின் கூறுகள்** : மனித வளர்ச்சி பன்முனைப்பட்டது. அது உடல் வளர்ச்சி, உடல் இயக்க வளர்ச்சி (Motor development), அறிவு வளர்ச்சி, மனவெழுச்சிகள் வளர்ச்சி (Emotional development) சமூகப் பண்புகளின் வளர்ச்சி எனப் பலவகைப்படும்.

உடல் வளர்ச்சி என்பது மனிதனின் உடற்கூறுகளின் வளர்ச்சியும் (Anotomical growth), உடலியல் வளர்ச்சியும் (Physiological) இணைந்த செயலாகும். உடல் வளர்ச்சியின் காரணமாக உடலியக்க வளர்ச்சி ஏற்படுகிறது. அதாவது கைகள், கால்கள், உடலின் பல்வேறு தசைகள் போன்றன வலுப்பெற்று இணைந்து திடமாகச் செயற்படுகின்றன. நடத்தல், எழுதுதல் என்பன உடலியக்க வளர்ச்சியால் செயற்படுகின்றன.

அறிவு வளர்ச்சி என்பது புலன் காட்சித்திறன் (Perception), நினைவாற்றல், கற்பனை, மொழித்திறன், பொதுமைக் கருத்துகளை உருவாக்கும் திறன், நுண்ணறிவு, ஆய்வுத்திறன், சிக்கல்களைத் தீர்த்தல் போன்ற பல அறிவுசார் செயல்களின் வளர்ச்சி ஆகும். அறிவு வளர்ச்சியில் மரபு நிலையும், சூழ்நிலையும் இணைந்தே செயற்படுகின்றன.

மனவெழுச்சிகள் (Emotions) அல்லது மெய்ப்பாடுகள் என்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலையாகும். அச்சம், சினம், மகிழ்ச்சி, அன்பு, துயரம், வெறுப்பு போன்றவை மனவெழுச்சிகள் எனப்படும். அம் மனவெழுச்சிகள் சிறு குழந்தைகளிடம் மிகுதியாகக் காணப்படுவதில்லை. ஆனால் நாளடைவில் வளர்ச்சி அடையும்போது, மனவெழுச்சிகள் பாகுபட்டுத் தெளிவான நடத்தைக் கோலங்களாக விரும்பியபோது வெளிப்படுகின்றன.

மனிதன் சமுதாயத்தோடு இணைந்து வாழும் அறிவுள்ள ஓர் உயிரி, சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப் பட்ட நடத்தைகள், பழக்கங்கள், நடைமுறைகள், மதிப்புகள், பண்புகள் ஆகியவற்றைப் பற்றிய அறிவைப் பெற்று, அவற்றைப் பின்பற்றுவதே சமூகப் பண்புகளின் வளர்ச்சியாகும். நல்ல சமூகப் பண்புகள் வளர்ச்சியடைந்தால்தான் நற்குடிமகனாகத்

திகழ முடியும். குழந்தை, பெற்றோர், சுற்றத்தார், பள்ளிக்கூடம், நண்பர்கள் போன்ற சமூகத்தாரி டையே பழகும்போது அதன் சமூகப்பண்பு வளர் கிறது. பெற்றோர்களும், ஆசிரியர்களும் நல்ல பண்பு களை வளர்க்க வழிகாட்ட வேண்டும். இவ்வாறு குழந்தையின் பல்வேறு கூறுகளின் வளர்ச்சியால் ஆளுமை வளர்ச்சி அடைகிறது.

**வளர்ச்சிப் படிகள்** : மனித வளர்ச்சியை இரு பெரு நிலைகளாகப் பிரிக்கின்றனர். அவை பிறப்பதற்கு முன் உள்ள பருவம், பிறந்ததற்குப் பின் உள்ள பருவம் எனப்படும்.

**பிறப்பதற்கு முன் உள்ள பருவம்** : கருவுற்ற திலிருந்து ஏறத்தாழ 270 முதல் 280 நாள்கள் வரை குழந்தை தன் தாயின் கருப்பபையில் வளர்கிறது. இப் பருவத்தை மூன்று நிலைகளாகப் பிரிக்கலாம். கருவுற்றது முதல் இரண்டு வாரங்கள் முறை நிலை (Germinal period) எனப்படும். இந்நிலையில் கருமுட்டை அளவில் பெரிதாகி ஏறத்தாழ 3 மி.மீ அளவுள்ள ஓர் உயிரணுத் தொகுப்பாகிறது.

கருவுற்ற 2-ஆம் வாரம் முதல் 8-ஆம் வாரம் வரை உள்ள நிலையைக் கருநிலை (Embryonic stage) எனலாம். குழந்தையின் கண்கள், காதுகள், வாய், மூக்கு, கை, கால்கள், விரல்கள், போன்ற உறுப்புகள் உருப்பெறுகின்றன. இதயம் துடிக்கத் தொடங்கு கிறது. 8 -ஆம் வாரத்திலிருந்து குழந்தை பிறக்கும் வரையிலுள்ள வளர்ச்சிக்காலம் முதுசூல் நிலை (Foetal period) எனப்படுகிறது.

**பிறந்தபின் உள்ள வளர்ச்சிப்பருவம்** : பிறந்த பின் உள்ள வளர்ச்சிப் பருவத்தை அறிவியலார் பல பருவங்களாகப் பிரித்துள்ளனர். கர்லாக்கு (Hurlock) என்பவர் 10 பருவங்களாகப் பிரித்துள்ளார். அவை. 1. குழவிப் பருவம் (பிறப்பு முதல் 2 வாரங்கள் வரை - Infancy), 2. குழந்தைப் பருவம் (2 வாரம் முதல் 2 வயது வரை -Babyhood), 3. முன்பிள்ளைப் பருவம் (2 வயது முதல் 6 வயது வரை - Early Childhood) 4. பின் பிள்ளைப் பருவம் ( 6 வயது முதல் 12 வயது வரை - Later Childhood) 5. பூப்புப் பருவம் (12 வயது முதல் 13 வயது வரை - Puberty) , 6. முன் குமரப் பருவம் (14 வயது முதல் 17 வயது வரை - Early Adolescence) 7.பின் குமரப் பருவம் (17 வயது முதல் 21 வயது வரை - Later Adolescence) 8.முதிர்பருவம் அல்லது வாலிபப் பருவம் (21 வயது முதல் 40 வயது வரை - Adulthood), 9. நடுவயதுப் பருவம் (40 வயது முதல் 60 வயது வரை - Middle age), 10. கிழப்பருவம் (60 வயதிற்குப் பின் - Old age).

சிலர் வளர்ச்சியைக் குழவிப் பருவம், பிள்ளைப் பருவம், குமரப் பருவம், வாலிபப் பருவம், நடு வயது, தளர்வுறு பருவம், கிழப்பருவம் என்று பிரிக்கின்றனர். இவ்வளர்ச்சி நிலைகளைச் சரியாகப் பிரிக்க முடியாது. ஒரு நிலையில் உள்ள வளர்ச்சி யாவது அடுத்த நிலையோடு தொடர்புடையது. மேலும், ஒரு வளர்ச்சி நிலை, எப்பொழுது தொடங்குகிறது, எவ்வயதில் முடிவடைகிறது என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியாது. ஆனால், ஒவ்வொரு நிலையிலும் புது வளர்ச்சி மாற்றங்கள் தோன்றுகின்றன.

**வளர்ச்சிசார் செயல்கள்** : ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் குழந்தை சில குறிப்பிட்ட செயல்களைச் செய்கிறது. குழந்தையின் வளர்ச்சி நிலைக்கு ஏற்ப இக்குறிப்பிட்ட செயல்களைக் கற்றலை அல்லது வெளிப்படுத்துவதை வளர்ச்சிசார் செயல்கள் என்று ஆவிகர்சுட்டு (Havighurst) என்பார் குறிப்பிடுகிறார். குறிப்பிட்ட செயலை, அக்குறிப்பிட்ட வளர்ச்சி நிலையில் செய்வதால் மன நிறைவைக் கொடுக் கிறது. மேலும், அது அடுத்து வரும் செயலுக்கு ஆயத்தப்படுத்துவதாகவும் அமைகிறது. வளர்ச்சிசார் செயல்களைப் பற்றிய அறிவு, வளர்ச்சியைத் தூண்ட வும், வரப்போகும் வளர்ச்சியை எதிர்நோக்கவும் பயன்படுகிறது.

**மனித வளர்ச்சியின் பொதுப் பண்புகள்** : மனித வளர்ச்சியின் பொதுப் பண்புகள் பலவாகும், அவை பின்வருமாறு அமையும். 1. வளர்ச்சி மரபு நிலையும் சூழ்நிலையும் இணைந்து செயற்படுவதின் விளை வாதல், 2. வளர்ச்சி என்பது தொடர்ந்து நிகழ்தல், 3. வளர்ச்சி குழந்தையின் தொடக்க ஆண்டுகளில் மிக அதிகமாக இருத்தல்.(பிறப்புக்கு முன் கருவுற்ற முட்டை மிகத் தீவிரமாக வளர்ச்சியுற்று, குழவி நிலையை அடைதல். பிறந்த பின், குழந்தைப் பருவத் திலும், குமரப் பருவத்திலும், பிற பருவங்களைக் காட்டிலும் வளர்ச்சி விரைவாக இருக்கிறது). 4. வளர்ச்சி பன்முனைப்பட்டு அமைதல், (உடல்

வளர்ச்சி, அறிவுவளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, சமூக வளர்ச்சி, செயல்திறன் போன்ற வளர்ச்சிக் கூறுகள் ஆகிய யாவும் ஒன்றுடன் ஒன்று இணைந் தவையாகும். ஒன்று தடைப்பட்டால் மற்ற வளர்ச்சி களும் பாதிக்கப்படும்.) 5. முறையான வரிசைப்படி வளர்ச்சியின் போக்குக் காணப்படுதல். (ஒரு குழந்தை பிறந்தவுடன் எழுந்து ஓடுவதில்லை. அது முறையாக முதலில் தவழும், அமரும், பின்னர் எழுந்து நிற்கும், நடக்கும், இறுதியாக ஓடும். 6. வளர்ச்சியில், உருப்பெருக்கம் அடையும் போது புதுப்பண்புகளும், திறன்களும் தொடர்ந்து வளர்ச்சி யடைதல், 7. ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் அதற் கென்ற சில சிறப்புப் பண்புகள் காணப்படுதல், (குமரப் பருவத்தில் உடல் வளர்ச்சி, பால் சார்பான உறுப்புகளில் வளர்ச்சி ஆகியவை சிறப்பாக நடைபெறுகின்றன. 8. வளர்ச்சி பாகுபடுத்தல் (Differentiation), ஒருங்கிணைத்தல் (Integration) ஆகிய இரண்டின் அடிப்படையில் நடை பெறுதல் (முதலில் குழந்தை யாரைப் பார்த்தாலும் அம்மா, அப்பா என்று கூறும். நாளடைவில் தன் தாய் தந்தையரை மட்டும், பிறரிடமிருந்து பாகுபடுத்தி அம்மா, அப்பா என்று கூறும். செயல் திறன்களின் வளர்ச்சியில் பல செயல்கள், திறன்கள் ஒருங்கிணைக்கப்பட்டுச் செயற் படுகின்றன. 9.வளர்ச்சி பொது உடலியக்கத்திலிருந்து குறிப்பிட்ட உடல் இயக்கத்திற்குச் செல்லுதல். (தொடக்கத்தில் குழந்தை ஒரு சிறு பொருளை எடுப்ப தற்குத் தன் முழு உடம்பையும் திருப்பி, தன் எல்லா விரல்களாலும் அந்தப் பொருளை எடுக்கும். நாளடைவில் கையை மட்டும் திருப்பிக் குறிப்பிட்ட விரல்களால் மட்டும் அந்தப் பொருளை எடுக்கும்.) 10. மனித வளர்ச்சியில் தனியாள் வேற்றுமைகள் (Individual differences) இடம் பெறுதல். ( சில குழந்தை களிடம் வயதிற்கு மீறிய வளர்ச்சி காணப்படுகிறது. வேறு சிலர் மெதுவாக வளர்பவர்களாக இருக்கின்ற னர்.)

மனித வாழ்க்கை கருவுறுதலிலிருந்து தொடங்குகிறது. கருவுற்ற முட்டை தாயின் கருப் பையில் ஏறத்தாழ 280 நாள்கள் வரை வளர்ந்து, பின் பிறக்கிறது. பிறந்த குழந்தை குழவிப்பருவம், பிள்ளைப் பருவம், குமரப்பருவம், நடுவயதுப் பருவம், கிழப்பருவம் போன்ற பருவங்களைக் கடந்து இறக்கிறது. கருவுற்றது முதல் இறக்கும் வரை, மனிதன் உருப்பெருக்கத்திலும், தன் செயல் திறன்களிலும் பல மாறுபாடுகளை அடைகிறான். அவனுக்கு உடல் வளர்ச்சியும், உள்ள வளர்ச்சியும் ஏற்படுகின்றன. வளர்ச்சிக்கேற்பப் புதுப்பண்புகளும், திறன்களும் வெளிப்படுகின்றன. மனிதன் கருவுற்றது முதல் பிறந்து, வாழ்ந்து இறக்கும் வரை வளர்ச்சி அடைந்து கொண்டேயிருக்கிறான்.

**துணை நூல்கள் :**

1. சந்தானம், எஸ்., **கல்வியின் உளவியல் அடிப்படைகள்**, பழநியப்பா பிரதர்ஸ், மதுரை, 1987.

2. Baldwin, A.L., **Theories of Child Development**, Harper & Row, New York, 1967.

3. Craig, Grace J., **Child Development**, Parentice - Hall, New Jersey, 1979.

4. Erickson, Marilyn, T., **Child Psychopathology**, Parentice - Hall, New Jersey, 1978

**வளர்ப்புக் குழந்தை :** உண்மையான பெற்றோர் அல்லாத கணவன் - மனைவியர்களால் வளர்க்கப்படும் குழந்தை வளர்ப்புக் குழந்தைகள் எனப்படுகின்றனர். வளர்ப்பினால் ஏற்படும் பெற்றோர் -குழந்தை, உறவு, வளர்ப்புக் குழந்தை வளர்ப்புப் பெற்றோர் ஆகியோருகிடையே தோன் றும் உறவாகும்.

குழந்தைகள் இல்லாத கணவன் - மனைவி (பெற்றோர்) வேறு குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்ப்பது உலக நாடுகள் பலவற்றுள் சட்டத்தி னாலும், பழக்கத்தினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகும். குழந்தைகள், தம்மைப் பெற்ற இயற்கையான பெற்றோரிடம் காட்டும் அதே பாச உணர்வை வளர்ப்புத் தாய் தந்தையிடம் காட்டு கின்றனரா என்பது உளவியலில் ஆய்வு செய்யப்பட்ட ஒன்று. அக்கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தமிழில் திரைப்படங்களும், கதைகளும் வெளிவந்துள்ளன. தாயைப் பிரிந்து வளரும் குழந்தை கள் தம் உண்மையான பெற்றோரை குறிப்பாகத் தாயைச் சந்தித்து அன்பு சொரிவதாக அக்கதைகள் எடுத்துக் காட்டும்.

பெற்றோருக்கும் குழந்தைக்கும் இடையில் வளரு கின்ற பாச உறவு, வேறு கணவன் - மனைவி ஏற்று வளர்க்கும்போது அக்குழந்தையின் வயதை ஒட்டி

எவ்வாறிருக்கும் என்பது ஆய்வு செய்யப்படும். மேலும், வளர்ப்புத்தாய் - தந்தை மற்றும் குழந்தை களிடையே இயல்பாக ஏற்படும் பெற்றோர்-குழந்தை உறவும் ஆய்வுக்குரியது.

இங்கு விரிவஞ்சி, குழந்தை பிறந்த சூழ்நிலை யிலிருந்து வளர்ப்புத்தாய் தந்தையிடம் மாறுகின்ற போது குழந்தையிடம் ஏற்படக்கூடிய நுண்ணறிவு, சமூகக் குறை நல வளர்ச்சிப் பாதிப்பு, பொதுவாகப் பிறந்த சூழ்நிலையைவிட வளர்க்கப்படும் சூழ்நிலை யில் பொருளாதாரமும், பாசமும் மிகுந்ததாக இருக்கும் என்றயூகம் முதலியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

சில செய்திகளில், குழந்தை இல்லாத கணவன்-மனைவியர் தம் நெருங்கிய உறவினரல்லாத வேறு குடும்பத்திலிருந்து குழந்தையைத் தத்தெடுத்து வளர்க்க விரும்பும்போது, அக்குழந்தைகள் வளர்ப்புத் தாய் தந்தையிடம் வளரும் உண்மையை அறியாமல் வளர வேண்டும் என்று வளர்ப்புத் தாய் - தந்தையர் விரும்புகின்றனர். அத்தகைய நிலையில் அவர்களைத் தத்து எடுத்துக் கொள்ளும் வயதைத் கருத்தில் கொள்ள வேண்டும். உரிய வயதில் தத்து எடுத்துக் கொள்வதன் மூலம் வளர்ப்புத் தாய் - தந்தையர்பால் இயல்பான பாசமும், உறவும் வளர வழி ஏற்படும். அதனைக் குழந்தையின் வளர்ச்சிக்குப் போதுமான சூழ்நிலை எனலாம்.

குழந்தைகளின்பால் பெற்றோரின் செல்வாக்கு அல்லது தாக்கம் ஏற்படுத்துவன மூன்று முக்கிய அம்சங்களாகும். அவை 1. குழந்தை இரவில் உறங்கும்போது தாய் - தந்தையிடமிருந்து பிறப் பிலேயே பெறுகின்ற சிறப்புக் குறைக்கூறுகள், 2. குழந்தை வளரும்போது பெற்றோரின் தாக்கத் திற்கு ஆளாதல், 3. குழந்தைகளின் முதிர்ச்சிக்குப் பெற்றோர் தம் குழந்தைக்கு வழங்கும் பரிசுகளும், தண்டனைகளும், சமுதாய முன் மாதிரியும் ஆகும்.

**பெற்றோரிடமிருந்து குழந்தைகளைப் பிரித்து அவர்களை மறக்கச் செய்தலின் விளைவு** : குழந்தை களைப் பெற்றோரிடமிருந்து அவை பிறந்த சில வாரங்களில் பிரித்துச் செல்வமிக்க சூழ்நிலைகளில் வளர்க்கப்பட்ட நூறு குழந்தைகளில் அறிவுக் கூர்மையை அறிஞர்கள் மான்சுகோடக்கும் ஏவார்டு சுகில்சும் *(1949)* அளந்தறிந்துள்ளனர். தத்தெடுத்து வளர்க்கப்பட்ட அக்குழந்தைகள்பால் அறிவுக் கூர்மை சராசரி அளவைவிட மிகுதியாக இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர். அதற்குக் காரணம் வளர்ந்த சூழ்நிலையில் ஏற்படும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.

**பச்சிளம் பருவத்தில்** : இளமை அனுபவம் மனத் தில் ஆழப் பதிந்து விடுகிறது. அது பிற்கால நடத்தையை முடிவு செய்யுமளவிற்கு வலிமை யுடையதாக இருக்கிறது. அதற்கு எடுத்துக்காட்டாக, புதிதாக அடைகாக்கும் வாத்தும் வாத்தினைப் போன்ற பறவைகளும், தம் நெருக்கடியான நேரத் தில், அவை காணும் ஏதேனும் ஓர் இயங்கும் பொருளுடன் நிலையாக இணைந்து விடுகின்றன என்று என்.திம்பாசு *(1951)* என்பார் எடுத்துக்காட்டி யுள்ளார். தொடக்கக் காலத்தில் அல்லது இளம் பருவத்தில் பார்க்க அல்லது அசையத் தொடங்கும் போது விலங்குகள் மனத்தில் அனுபவம் பதிந்து விடுகிறது. அந்த நிலை அதை இயங்கத் தொடங்கு வதற்கும், அஞ்சத் தொடங்குவதற்கும் இடையில் நிகழ்கிறது. ஒருவரின் தொடர்பு விலங்கிற்கு ஏற்பட வில்லை என்றால், அதனிடம் பதிவு ஏதும் நிகழ் வதற்கு மாறாக, எதற்கும் அச்சத்தை வெளிப்படுத் தும். விலங்குகள் வீடுகளில் மனிதர்களால் வளர்க்கப் படும்போது விரைவில் மனப் பதிவு ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக ஓர் ஓநாய்க் குட்டியை அது பிறந்த வுடன் வீட்டில் வளர்த்தால், ஆறு அல்லது எட்டு வாரங்களில் மனிதர்களுடன் பழகி மனிதச் சூழலை ஏற்றுக்கொள்கிறது. அது பிறந்த முதல் சில வாரங் களில் பார்த்து நகரும் பொருட்களுடன் இணக்கமான உறவு கொள்வதே இதற்குக் காரணம்.

**சுற்றுப்புறத்தின் பாதிப்பு** : தாயாரின் வளர்ப்பு, அரவணைப்பு, உயிரியின் தேவைகள் முதலியவற் றைப் பெறுவதால் பாதுகாப்பும், செயற்பாட்டுத் தூண்டுதலுக்கான சூழ்நிலையும் ஏற்படுகின்றன. உயிரின வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும் இந்தச் சுற்றுப்புற ஆதரவு தேவைப்படுகிறது.

**சமூக வளர்ச்சி** : சமூக நடத்தை உருவாவதற்கு வளரும் சுற்றுப் புறத் தொடர்புடன் பச்சிளம் பருவமும் முக்கிய கூறாகும். குறிப்பாகக் குழந்தை தாயாரிடம் பெரிதும் ஈடுபாடு கொண்டிருக்கும்.

தாய் தொன்று தொட்டுத் தன்னுடைய நேரத்தில் பெரும் பகுதியைக் குழந்தையுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறாள். தந்தை அல்லது காப்பாளரும் நேரத்தின் பெரும் பகுதியைக் குழந்தையைக் கண்டு களிப்பதில்செலவிடுகின்றனர். குழந்தைகளும் அவர்களுடன் ஈடுபாடு கொண்டுள்ளன. மற்றவர்களைவிட இத்தகையவர்களை அணுகவும், அவர்களால் வளர்க்கப்படவும் குழந்தைகள் விரும்புவதுடன், அவர்களைக் கண்டால் அச்சமின்றி நடந்து கொள்ளவும் செய்வர். பிறந்த முதல் மாத்தில் சிறு குழந்தை மற்றவர்களிடையே எந்த வேற்றுமையும் காட்டுவதில்லை. சிறு குழந்தை அந்தப் பருவத்தில் யாரிடமும் ஈடுபாடு ஏதும் காட்டாததால் எந்த ஒருவரைப் பற்றியும் தெளிவான எண்ணம் எதையும் கொள்வதில்லை. அதனால், தன்னை எடுத்துக் கொள்பவர்கள். தாலாட்டுபவர்கள் உணவூட்டுபவர்கள் பற்றிக் குறிப்பாகக் கவனிப்பதில்லை. மகிழ்ச்சியான மனநிலையில் இருப்பதால், யாரைப் பார்த்தாலும் புன் சிரிப்புடன் மழலையொலி எழுப்பும். குழந்தை நான்கு அல்லது ஐந்தாம் மாதத்தில் ஆட்களைப் பிரித்தறியும் திறன் பெறுகிறது. பழகியவர்களிடம் எளிதில் சென்று ஈடுபாடு காட்டுவதுடன், புதியவர்களைக் கண்டால் அஞ்சி ஒதுங்கவும் செய்யும். ஆறாவது மாதத்தில் புதியவர்கள் அணுகினால் அஞ்சி அழத்தொடங்கும். எட்டாம் மாதத்தில் புதியவர்களைக் கண்டு அச்சமுறும் உச்சநிலை அடைகிறது. 12 - 15 மாதங்களில் படிப்படியே இவ்வுணர்வு மறைவதால் புதியவர்களைப் பார்த்து அஞ்சுவதில்லை. சிறு குழந்தையில் ஏற்படும் தாய் சேய் உறவு, வளர்ச்சி வயது வந்த நிலையில் ஏற்படத்தக்க நெருங்கிய உறவு வளர்ச்சிக்கு முதற் படியாகும் என்று ஆர்லோ முதலான அறிஞர்கள் கருதுகின்றனர். சிறு குழந்தையில் பாச உணர்வு உருவாகாத குழந்தைகள், அதாவது காப்பகங்களில் வளரும் குழந்தைகள், ஆர்வமற்றுப் பற்றற்ற நிலையில் பிற்கால வாழ்வில் நல்லுறவுகளை வளர்த்துக்கொள்ள இயலாதவர்களாகின்றன. (இசுபிட்டி, 1946), சிறு குழந்தைகள் மற்றும் பெற்றோரிடையே இளமையின் ஏற்படும் பாச உணர்வின் தன்மையையும், தரத்தையும் ஒட்டியே, அவர்கள் வளர்த்தபின் மற்றவர்களிடம் நம்பிக்கையுள்ளவர்களாகவோ, மாறுபட்டவர்களாகவோ அமைகிறார்கள் என்று எரிக் எலிஞ்சன் (1950) கருதுகிறார். தேவைகள் நிறைவு செய்யப்பட்டு, அரவணைத்து, ஒரே சீராக அன்பு செலுத்தி வளர்க்கப்படும் சிறு குழந்தைகள், மற்றவர்கள்மேல் நம்பிக்கை கொள்ளும் அடிப்படை மனப்பான்மையை வளர்த்துக்கொள்கிறார்கள். ஆனால், வாழ்க்கையில் பற்றாக்குறை உள்ளவர்கள் அல்லது ஒரே சீரான அன்பு கிடைக்காதவர்கள் பிறர்பால் நம்பிக்கையற்ற தன்மையை வளர்த்துக் கொண்டு வாழ்க்கை முழுவதையும் அவ்வாறே கழிக்கின்றனர்.

நான்கு வயதுக் குழந்தை ஒன்று நீதிமன்றக் காப்பில் விடப்பட்டிருந்தது. அதற்குக் காரணம் அக்குழந்தையை 6 மாதத்துக்குள் தத்தெடுத்து வளர்த்தவர்கள் அக்குழந்தை அன்பு செலுத்தாத தன்மையுடமையதென்ற காரணம் காட்டித் திரும்ப அதே நிறுவனத்திடம் ஒப்படைக்க விரும்புகின்றனர். வளர்ப்பவர்களின் நம்பிக்கைக்கு அக்குழந்தை உரியதாக இல்லை என்பது, அவர்கள் குறை. அக்குழந்தையிடம் வேறு குறை அவர்கள் காணவில்லை. முதலில் பெற்ற தாயை நம்பிய அக்குழந்தை, பின்னர் வளர்த்தவர்களாலும் கைவிடப்படும் நிலையில் உலகில் யாரையும் நம்பும் மனநிலையில் இல்லை என்கிறார் எல்கிசுட்டு. அக்குழந்தை தன்னுடைய நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள மறு வாய்ப்பு அளிக்கப்படாமையால் மனம் புண்பட்டு வருந்தியது. காலம் மட்டுமே அக்குழந்தையின் மனநிலையை மாற்ற முடியும் என்கிறார் அறிஞர் எல்சிசுட்டு.

-வி.ந.

**வளைகுடா** : காண்க : விரிகுடா

**வளைகுடாப் போர்** : அமெரிக்கா தலைமையிலான பல நாடுகள் இராக்குமீது கி.பி.1991 -ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 17-ஆம் நாள் (இந்திய நேரப்படி வியாழன் அதிகாலை 3.20 மணிக்கு) இப்போரைத் தொடங்கியது. இப்போர் 43 நாட்கள் நடைபெற்று பிப்ரவரி 28-ஆம் நாள் முடிவடைந்தது. இப்போரின் மூலம் அமெரிக்காவின் வலிமையும் நிரூபிக்கப்பட்டது. இப்போர் முதல் முறையாக ஐ.நா.வின் ஆதரவுடன் நடைபெற்ற போராகும் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாதரவுடன்தான் அமெரிக்காவும் அதன் நட்புறவு நாடுகளும் இராக்கு மீது குவைத்தை விடுவிக்கப் போர் நடத்தியது. இப்

போர் பாரசீக வளைகுடாவிலும் அரேபிய முந்நீரகத்திலும் நடைபெற்றதால் வளைகுடாப்போர் என்று குறிப்பிடப்படுகிறது. இப்போரின் முக்கிய காரணம், இரான் படைகள் தன்னுரிமை கொண்ட குவைத் நாட்டை 1990 ஆம் ஆண்டு ஆகசுடுத் திங்கள் 2-ஆம் நாள் அத்துமீறி நுழைந்து, அதனைத் தன் நாட்டுடன் இணைத்துக்கொண்ட செயலே ஆகும். இரண்டாம் உலகப் போருக்குப்பின் வெளிப்படையாக ஓர் இறைமை உடைய நாட்டினை அதாவது குவைத் நாட்டினை இராக்கு கைப்பற்றித் தன்னுடன் இணைத்துக்கொண்ட செய்கை கண்டிக்கத்தக்க செயலாகும்.


மத்தியக் கிழக்கு ஆசியா எண்ணெய் வளம், சூயசுக் கால்வாய், விமான தளங்கள் ஆகியவற்றினால் வல்லரசுகளின் ஆதிக்கத்தின் கீழிருக்கும் நிலப் பரப்பாக விளங்குகிறது. சோவியத் உருசியாவின் பொதுவுடைமைக் கொள்கைகள் இப்பகுதியில் பரவாமல் இருக்க முதலாளித்துவ நாடுகள் முயன்றன. அனால் இப்பகுதி இராணுவ முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. கருப்புத் தங்கம் எனப்படும் பெட்ரோலியம் இப்பகுதியின் பொருளாதாரச் செல்வமாக விளங்குகிறது. இந்த எண்ணெயை நம்பி மேலை நாடுகளும் பிற நாடுகளும் உள்ளன. அமெரிக்காவிடமுள்ள எண்ணெய் வளம் அந்நாட்டிற்கு 75 ஆண்டுகளுக்குப் போதுமானதாக இருந்தாலும் அந்நாடு ஒரளவு பாரசீக வளைகுடாவின் எண்ணெயை நம்பி இருக்கின்றது. உலகின் எண்ணெய் வளத்தில் 3 /4 பங்கு மத்திய கிழக்காசியாவில் உள்ளது. ஆகவே மத்தியக் கிழக்கு ஆசியாவில் உள்ள நாடுகளின் வெளியுறவுக் கொள்கையும், வல்லரசுகளின் வெளியுறவுக் கொள்கையும் பிறநாடுகளின் வெளியுறவுக் கொள்கையும் எண்ணெய்க் கொள்கையுடன் சார்ந்துள்ளது. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் அரபு நாடுகள், அபுதாபி, இரான், இராக்கு, குவைத் கொத்தார், சவூதி அரேபியா ஆகியவை ஒன்றாக 1973, 1978 ஆகிய ஆண்டுகளில் மேலை நாடுகளின் பொருளாதாரத்தைத் தடுமாற வைக்கும் வண்ணம் பெட்ரோல் நெருக்கடியை ஏற்படுத்தின. அப்போது கூட அமெரிக்கா போர் செய்யும் எண்ணத்தைக் கொண்டிருக்கவில்லை. ஆனால் இராக்கின் வலிமை மத்தியக் கிழக்கில் வளர்ச்சி அடைந்து பலம் பொருந்தியதாக மாறுவதை விரும்பாததால் இப்போர் ஏற்பட்டது என்று கருத வாய்ப்பு உள்ளது. மேலும் எண்ணெய் வளத்தைத் தங்கள் கட்டுபாட்டில் கொண்டு வருவதற்கு அமெரிக்காவும் பிறநாடுகளும் பல முயற்சிகளைச் செய்கின்றன. அதனால் அவர்கள் இப்பகுதியில் உள்ள பிற்போக்கு அரசுகளுக்கு ஆதரவை நல்கி வருகின்றன.

மத்தியக் கிழக்காசியாவில் இசுரேல் 1948 -ஆம் ஆண்டு தோன்றியது. அதனை அனைத்து அரபு நாடுகளும் எதிர்த்தன. இசுரேலின் தோற்றத்தினாலும், எல்லைப் பெருக்கத்தாலும் ஏற்பட்ட பாலத்தீனச் சிக்கல் இன்றளவும் தீர்க்கப்படாமல் உள்ளது. பாலத்தீனச் சிக்கலும், இசுரேலை எதிர்க்கும் சிக்கலும் அனைத்து அரபு நாடுகளையும் ஒன்றாக இணைக்கும் நிலையை உருவாக்குகின்றது. அரேபிய ஒற்றுமையையும் தேசியத்தையும் பல காலக் கட்டங்களில் ஒன்றுபடுத்த முசுதபா கமால் பாசா, நாசர் போன்றவர்கள் பாடுபட்டனர். அதேபோன்ற தன்மையை இராக் அதிபர் சதாம் உசேன் கொண்டிருந்தார் என்ற எண்ணமும் இப்போர் தோன்ற ஓர் ஏதுவான காரணமாக அமைகின்றது.

வளைகுடாப் பிரதேசத்தில் குவைத் ஒரு சிறிய நாடாக இருந்தாலும் எண்ணெய் வளத்தில் உலகில் 1/5 பங்கைப் பெற்றுள்ளது. 1961 ஆம் ஆண்டு அது ஒரு சுதந்திர நாடாகத் தோன்றியபோது அது மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தது. 1950 இல் அங்கு ஒரே ஒரு மருத்துவமனை மட்டுமே இருந்தது. தனது எண்ணெய் உற்பத்தியின் வருமானத்தைக்கொண்டு மிக விரைவில் முன்னேறியது. இன்று குவைத்தில் 41% பெண்கள் பல்கலைக்கழகங்களில் பயில்கின்றனர். 30 மருத்துவமனைகள் இலவச மருத்துவ வசதிகளைத் தருகின்றன. இடைநிலைக் கல்வி வரை இலவசமாகக் கட்டாயக் கல்வி தரப்படுகிறது. உலக நாடுகளில் பின் தங்கிய நாடுகளுக்குப் பொருளுதவி செய்வதில் குவைத் முதலிடத்தைப் பெற்றுள்ளது. குவைத்தில் 71% படிப்பறிவு பெற்றவர்கள். அதனால் குவைத்தில் வாழ்க்கைத்தரம் சிறந்து விளங்குகின்றது. இந்நாடு இங்கிலாந்து வங்கியில் 90 மில்லியன் தாலர்களை வைத்துள்ளது. அதன் வட்டியே 8.8 மில்லியன் தாலர் ஆக உள்ளது. இத்தகைய வளர்ச்சியைப் பிற அரபு நாடுகளில் காண முடிவதில்லை, இதனையும் போர் ஏற்பட ஒரு காரணமாகக் கூறலாம்.



ஈராக் ஏவுகணையால் தாக்கப்பட்ட டெல்அவிவ் குடியிருப்புப் பகுதி



குவெய்த் பாலைவனத்தில் கண்ணிவெடி வலையை இங்கிலாந்து இராணுவ பொறியாளர்கள் தகர்க்கிறார்கள்

இராக்கு 8 ஆண்டுகள் (1980-88) இரானுடன் போர் செய்தது. இப்போரினால் இராக்கின் பொருளாதாரம் நலிவுற்றது. இராக்கின் பொருளாதாரத்தைச் சீர்படுத்தும் முயற்சிகள் மிகுதியாக எடுக்கப்படவில்லை. ஆகவே இராக்கு குவைத்தின் எண்ணெய் வளத்தையும் அதனால் ஏற்படும் பொருளாதார நன்மைகளையும் கருதிக் குவைத்தைத் தாக்க எண்ணம் கொண்டது.

வரலாற்று முறையில் இராக்கு தோன்றியதிலிருந்தே குவைத் தன்னைச் சார்ந்த பகுதி என்று கூறி வந்தது. இன்றைய குவைத்தின் தொடக்கத்தினை கி.பி.18 ஆம் நூற்றாண்டிலிருந்தே காணலாம். அது ஆட்டோமான் பேரரசின் ஒரு பகுதியாகவே இருந்தது. 1914 ஆம் ஆண்டு பிரிட்டனின் கீழ் வந்தது. குவைத் 1961 -இல் இறைமை பெற்ற அரசாகத் தோன்றியபின் 1969 இல் இராக் தனது துருப்புகளைக் குவைத்திற்குள் அனுப்பியது. அனைத்து அரபு நாடுகளும் குவைத்தை ஆதரித்தன. சோவியத் உருசியா தனது போர்க் கப்பல்களை அப்பிரதேசத்திற்கு அனுப்பியது. அதனால் இராக்கின் துருப்புகள் பின் வாங்கின. ஆயினும் 1977 இல் தான் அனைத்து துருப்புகளையும் முழுமையாகப் பின்வாங்கியது. இராக் புவியியல் அடிப்படையில் வளைகுடாப் பிரதேசத்தில் வலிமைபெற குவைத்தின் தீவுகளை அடைய விரும்புகிறது.

இரான் - இராக்கு போரின்போது குவைத்தும், சவுதி அரேபியாவும் இராக்கிற்குப் பொருளாதார உதவி செய்தன. குவைத் மட்டும் போர்க் கலத்தில் 15 மில்லியன் தாலர்கள் திரும்பிப் பெறாத கடனாகத் தந்துள்ளது. தனது துறைமுகங்களையும், விமானத் தளங்களையும் பயன்படுத்திக்கொள்ள உதவியது. இதனால் சதாம் உசைன் குவைத்தைத் தனது முதல் தரமான சகோதர நாடு என்று வருணித்தார். அப்படியிருந்த நிலை மாறி குவைத்தைப் பிடித்த நிலை ஏற்பட்டதால் வளைகுடாப்போர் ஏற்பட்டது.

இரான் - இராக்கு போரின்போது இராக் தோல்வி அடையாமல் இருக்க அமெரிக்காவும், அரேபிய நாடுகளும் பல உதவிகள் செய்து வந்தன. இரானின் அயோத்துல்லா கொமேனியின் இசுலாமிய பழமைவாத முயற்சியைக் கட்டுப்படுத்த முயன்றன. இதனால் இராக்கும், சதாமும் வளருவதற்கு உறுதுணையாக நின்றன. கி.பி.1980 முதல் 1990 வரை இராக்கிற்கு அணுமின் நிலையங்களை ஏற்படுத்தவும், பூச்சி மருந்து தொழிற்சாலைகள் ஏற்படுத்தவும் உதவின. இராக்கு தனக்குத் தேவையான அனைத்தையும் பல நாடுகளிலிருந்து பெற்றது. இரசாயன நச்சு மருந்துகள் முதல் ஏவுகணைகள் வரையிலும் மற்றும் அணுகுண்டு தயாரிக்கும் நிலையையும் அதனை அடையச் செய்தன. இராக்கு, ஒசிராக் என்னுமிடத்தில் உள்ள அணுமின் நிலையத்தின் மூலம் அணுகுண்டு தயாரிக்கும் வலிமை பெற்றுள்ளது என்பதினால் 1989 ஆம் ஆண்டு அப்பகுதியை இசுரேல் தாக்கியது. இந்த அணுகுண்டு அபாயமே போருக்கு ஒரு காரணமாக விளங்குகிறது. மேலும் இராக்கு இத்தாலிய வங்கியின் மூலம் இரகசியக் கடன் பெற்று போர்த் தளவாடங்களை வாங்கியது. பதுங்கு குழிகளையும், பாதாள நிலவறைகளையும் அமைத்தது. இவ்வாறு இராக்கு இராணுவ வலிமைப்பெற்ற நாடாக வளர வழி ஏற்பட்டது. இப்போருக்கு இதுவும் ஒரு காரணமாக அமைகின்றது.

ஐ.நா.சபை தோன்றிய பின்னர் வல்லரசுகள் கெடுபிடிப் போரில் ஈடுபட்டு வந்தன. இதனால் ஐ.நா.பல அரசியல் சிக்கல்களைத் தீர்க்க முடியவில்லை. கெடுபிடிப்போர் முடிவடையும் நிலைக்கு வந்தபோது இந்த வளைகுடாப்போர் ஐ.நா.சபையின் ஆதரவுடன் ஏற்பட்டது. எடுத்துக்காட்டாக இரான்-இராக்கு போரின்போது இராக்கு குவைத்தின் எண்ணெய்க் கப்பலை தாக்கியது. உடனே குவைத் வல்லரசுகளின் உதவியை நாடின. தனது பதினோறு கப்பல்களிலும் வல்லரசுகளின் கொடிகளை வைத்துக்கொள்ள அனுமதி கேட்டது. சோவியத் உருசியா தனது கப்பல்களைத் தர முன்வந்தது. இறுதியில் அமெரிக்கா 11 கப்பல்களிலும் தனது கொடியை வைத்துக்கொள்ள அனுமதித்தது. இதனால் கெடுபிடிப்போரின் விளைவுகளும் இப்போருக்குக் காரணமாக அமைகின்றன.

இராக்கு அதிபர் சதாம் உசைன் குவைத்தைக் கைப்பற்றியவுடன் குவைத் தனது குடும்பத்துடன் சவுதி அரேபியாவிற்குத் தப்பியோடினார். இந்த நிகழ்ச்சியை வளைகுடா நாடுகள் 36 மணி நேரம் கழித்தும் அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை. 40 மணி நேரம் கழித்து அரபுலீக் நாடுகள் முக்கியமாக சோர்டான், ஏமன், பாலத்தீன விடுதலையமைப்பு இராக்கைக் குறை கூற மறுத்தன. எகிப்திய அதிபர்



திருக்கூர்தியிலிருந்து (**Helicopter**) தாக்குதல் பயிற்சி நடத்தும் | அமெரிக்க விமானப்படை



கூட்டணிப் படைகளின் முதல் குண்டுவீச்சுக்குப் பிறகு பாக்தாத் வானில் புகை மண்டலம்

ஓசினி முபாரக் குவைத்தை விட்டு மூன்று நாள்களில் இராக்கு வெளியேறிவிடுமென்று நம்பினார். ஆனால் அது வீணானது. இந்தச் சூழ்நிலை இராக்கிற்கு வலிமை மிகுதி என்ற எண்ணம் ஏற்படக் காரணமாக அமைந்து விட்டது. அதனால் இராக்கு குவைத்தை விட்டு வெளியேறவில்லை. இச்சூழ்நிலையும் போருக்குக் காரணமாக அமைந்தது.

இராக்கு அதிபர் சதாம் உசைன் குவைத்தைக் கைப்பற்றிய பின் ஐ.நா.சபை பொருளாதாரத் தடையை விதித்தது. இத்தடையை 161 நாடுகள் ஆதரித்தன. ஆகசுடு 6 முதல் இத்தடை அமலுக்கு வந்தது. குவைத்திலிருந்து வெளியேறும்படி ஐ.நா. சபை கேட்டுக் கொண்டது. அவ்வாறு வெளியேறாததால் 1990 ஆம் ஆண்டு நவம்பர் 29 - ஆம் தேதி ஐ.நா. சபை. 678 -வது தீர்மானத்தைப் பாதுகாப்புச் சபை நிறைவேற்றியதும் இத்தீர்மானத்தில் 12 நாடுகள் பங்கேற்றன. இத்தீர்மானத்தின்படி குவைத்தை விட்டு இராக்கு வெளியேறாவிட்டால் ஐ.நா. பாதுகாப்புச் சபை இராணுவ நடவடிக்கை எடுக்கும் உரிமையை வழங்கியது. அப்போதும் இராக்கு குவைத்தைவிட்டு வெளியேறவில்லை. இச்சிக்கலுக்குத் தீர்வுகாண ஐ.நா. செயலர் பெரலப் - டி கொய்யரின் கடைசி நிமிடப் பேச்சு வார்த்தையும் பயனளிக்கவில்லை. அதனால் இப்போர் மூண்டது எனலாம்.

அதற்குப் பதிலாக இராக்கு, போருக்கு ஆயத்த நிலையைச் செய்து வந்தது. பொதுமக்கள் கருத்தையும், உலக அரங்கின் கருத்தையும் தம்பக்கம் சேர்த்துக் கொள்ள பல முயற்சிகளைச் செய்தது. எடுத்துக்காட்டாக சதாம் உசைன் பெட்ரோலியத்தை இலவசமாக உலக நாடுகளுக்கு வழங்குவதாகக் கூறினார், அமெரிக்கா தாக்கினால் அது தற்கொலைக்கு ஒப்பாகும் என்றார். இவ்வாறு இராக்கு ஆயத்த நிலையை அடைந்ததும் இப்போருக்கு ஒரு காரணமாகக் கூறலாம்.

சதாம் உசைன் குவைத்தைக் கைப்பற்றியதற்குக் காரணமாகக் கூறுவது குவைத் இராக்கின் எண்ணெய்க் கனிமத்தைக் குவைத் தனது நிலப்பரப்பிலிருந்தே களவாடுகின்றது என்பதாகும். இக்கூற்றின் உண்மையில்தான் குவைத்தின் ஆக்ரமிப்பு அடங்கியுள்ளது. இவை அனைத்தும் பேச்சு வார்த்தை மூலம் தீர்வு கொண்டிருக்கலாம். ஆனால் போர் மூலம் அழிவு ஏற்படுத்தித் தீர்வுகாணும் நிலைக்கு வந்ததால் தான் இப்போர் ஏற்பட்டது.

போரின் போக்கு : ஐ.நா.வின் தீர்மானத்தின்படி குவைத்திலிருந்து இராக்கை வெளியேற்றும் காரணத்தினால் அமெரிக்காவின் தலைமையிலான பன்னாட்டுப் படைகள் சவூதி அரேபியாவிற்கு வந்தன. இப்போரில் சதாம் உசேன் தோல்வி அடைவார் என்பதை அனைவரும் அறிவர். அவர் இரண்டு வகையில் போர் செய்தார். ஒன்று இசுரேலைத் தாக்குவது, இரண்டு சவூதி அரேபியாவின் எண்ணெய்க் கிணறுகளைத் தாக்குவது, இதனால் முதல் காரணத்தின்படி அரேபிய ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றார். முதல் காரணத்தில் தோல்வி அடைந்தாலும், இரண்டாவது காரணத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா இராக்கின் இராணுவ வலிமையை அழிப்பதில் ஈடுபட்டது. முதலில் பல நாள்கள் விமானத் தாக்குதலையே நடத்தியது. இப்போர் மூலம் பன்னாட்டு விமானப்படைகள் ஏவுகணைகளையும், குண்டுகளையும் கணிப்பொறியால் இயங்கும் மின்னணுக் கருவிகளைப் பொருத்திச் சற்றும் குறிதவறாமல் இலக்குகளை வீழ்த்தின, அத்தாக்குதலின் அழிவைப் படம் பிடித்து வந்தன. இப்போரினை மின்னணுப் போர் என்று அழைக்கலாம். இப்போர்த் தாக்குதலை அமெரிக்காவினர் 'சுடு பாலைவனச் சூறாவளி' (Operation Desert Storm) எனப்பெயரிட்டனர்.


போரின்போது இராக்கு சவூதி அரேபியாவில் அலகாஃப்சி என்ற நகரத்தினைக் கைப்பற்றியது. ஆனால் சில நாள்களில் அந்த நகரம் பன்னாட்டுப் படைகளால் கைப்பற்றப்பட்டது ஆனால் தரைப் போரைத் தொடங்க சில நாள்கள் பிடித்தன. கடைசியாக பிப்ரவரி 23 ஆம் நாள் தரைப்படைத் தாக்குதலைப் பன்னாட்டுப்படை தொடங்கியது. இறுதியில் இராக்கு பிப்ரவரித் திங்கள் 26 ஆம் நாள் குவைத்தைவிட்டு வெளியேற முடிவு செய்தது. சதாம் உசைன் படைகளைத் திரும்பப் பெற ஆணையிட்டார். பின்னர் இராக்கு ஐ.நா.சபையின் 12 தீர்மானங்களையும் ஏற்றுக் கொண்டது. பின்னர் பிப்ரவரி 28 ஆம் தேதி அமெரிக்க அதிபர் போர் நிறுத்தப் பிரகடனம் செய்தார். இவ்வாறாக வளைகுடாப் போர் ஒரு முடிவு பெற்றது.

-பு.எ.மோ.

**வளைதடி :** தட்டையாகவும், வளைவாகவும் உள்ள ஒரு வகை எறிபடையே வளை தடி (Boomarang) எனப்படும். இது வலறி, வலறித் தடி, வளைதடி எனப் பலவாறாகக் கூறப்படுகின்றது. அனைத்து எறி படைக் கலன்களுள்ளும் இதுவே பெரிதும் தொன்மையானதாக விளங்கியிருக்க வேண்டும். குகையோவியங்களில் காட்டு விலங்குகளைச் சுற்றி வளை தடிகள் வரையப்பட்டுள்ளமை இதற்குச் சான் றாக அமைகிறது. தொல் வரலாற்றுக்காலம் தொடங்கி, இன்றளவும் வளைதடிகள் வேட்டை யாடுவோரால் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. சிறு விலங்குகளை வேட்டையாடவும், கண்ணிகளில் (Snares) பிடிபட்ட விலங்குகளைக் கொல்லவும், ஈட்டி அல்லது அம்புகளால் காயப்படுத்தப்பட்ட ஒரு விலங் குகளைக் கொல்லவும் இவை பெரிதும் பயன் படுகின்றன. நேருக்கு நேர் சண்டையில், ஒருவரை யொருவர் வளைதடி கொண்டும் தாக்கிக் கொண்ட னர். வளைதடிகள் தோன்றிய இடமாக ஆசுத்தி ரேலியா கருதப்பட்டாலும், 12,000 ஆண்டுகளுக்கு முன்னரே பழங்கிரேக்கர், பண்டை எகிப்தியர், தேனிசு (Danish) மக்கள் ஆகியோர் வளைதடிகளைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்றவராக விளங்கி வந் திருக்கின்றனர்.

**வளைதடிகளின் தோற்றம் :** முறையாக வளைந்த மர வேர்களைத் தீயிட்டுச் சூடுபடுத்திக் தேவைக் கேற்ப வளைத்து, வளைதடிகளை முதன்முதலில் உருவாக்கியிருக்க வேண்டும் என்பர் மானிட வியலார். இப்போதைய முதுகுடிகள் (Aborigines) வளைதடிகளை உருவாக்குவதைக் கொண்டு அக் கருத்து நிலவுகிறது. எளிதான கழிகளை எறிந்து பார்த்த தொல் பழங்குடிகள் நாளடைவில் கழிகளின் ஒரு முனையை வளைத்து எறிந்து பார்த்து இத்தகைய வளைதடிகளை உருவாக்கியிருக்கலாம் என்ற கருத் தும் உள்ளது. தேவையான அளவு இயற்கையிலேயே வளைந்திருக்கும் மர வேரை நெருப்பில் காட்டிச் சூடு இருக்கும்போதே அதை இன்னும் தேவையான அளவு வளைத்து, பழங்காலத்தில் வளைதடிகள் செய்யப்பட்டன. இப்போது, வழக்கிலுள்ள வளை தடியில் வடிவையொத்துள்ள மரத்தின் பகுதிகளை வெட்டியெடுத்துச் செதுக்கி வழுவழுப்பாக்கி, நெருப்பிலிட்டோ கொதி நீரில் ஊற வைத்தோ தேவையான அளவு வளைத்து வளைதடிகள் செய் கிறார்கள்.

**வளைதடிகளின் வகைகள் :** வேலைப்பாடற்றதும் சற்றே வளைந்ததுமான வளைதடிகள் முதல் நன்கு வேலைப்படாமைந்ததும் பெரிதும் வளைந்ததுமான வளை தடிகள் வரை இவை பலவகைளாக உள்ளன. தொன்று தொட்டு, மரம், எலும்பு, கொம்பு, கல் ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு பொருளால் வளைதடி கள் உருவாக்கப்பட்டு வந்திருப்பினும் கல் அல்லது உலோகத்தாலான துளையிடப்பட்ட உடற்பகுதி கொண்டனவாகவும் மரத்தாலான கைப்பிடிகளைக் கொண்டனவாகவும் உள்ள வளைதடிகள் காலப் போக்கில் உருவாக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, அசுதெக்குப் (Aztec) பழங்குடியினரின் வளைதடிகள் எரிமலைக் கற்களாலும் (Volcanic rock), மயோரிப் (Maori) பழங்குடியினரின் வளைதடிகள் எலும்பு களாலும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மேலும், பயன்பாட்டின் அடிப்படையில், பல வகைப்பட்ட வடிவங்களிலும், அளவுகளிலும் வளைதடிகள் அமை யக் காணலாம். வளைதடி செய்யப் பயன்படுத்தும் பொருள் (Material), வளைதடியின் வடிவம் (Shape) எறியப்படும் வளைதடி திரும்பும் தன்மையுடையதா இல்லையா என்ற அடிப்படை ஆகியவற்றைக் கொண்டு வளைதடிகளைக் கீழ்வருமாறு வகைப் படுத்தலாம்.



இவற்றுள், திரும்பும் தன்மையின் அடிப் படையிலேயே பெரும்பாலும் வளைதடிகள் வகைப் பாடு செய்யப்படுவதால், 'திரும்பும் வளைதடிகள்', 'திரும்பாவளை தடிகள்' என்னும் அடிப்படையில் வளைதடிகளைப் பற்றிக் காண்பது ஏற்புடையதாகும்.

**திரும்பும் வளைதடிகள்** : எறிந்தவரிடமே திரும்ப வந்து சேரும் வளைதடிகள் 'திரும்பும் வளைதடிகள்' எனப்படுகின்றன. இவ்வகை வளைதடியின் இரு முனைகளும் சமனில்லா நீளத்தைக் கொண்டிருக்கும். இவ்வளைதடிகளின் ஒவ்வொரு முனையும் காற் றைக் கிழித்துச் செல்லும் வகையில் வளைந்திருக்கும். முன்னோக்கிச் செல்லும் முனை மற்றொரு முனையை விடச் சற்று உயர்ந்து காணப்படும். மின் விசிறி அல்லது வானூர்தியின் முன் சுழற்றி (Propeller) போன்ற வடிவமைப்பே இத்தகைய வளைதடிகளை எறிந்தவரிடமே திரும்பச் சேர்க்கிறது.

பொதுவாக, திரும்பும் வளைதடி வட்ட வடிவ அல்லது நீள் வட்ட வடிவப் பாதையில் பய ணம் செய்து எறிந்தவரிடமே திரும்ப வந்தடைகிறது. என்றாலும், நன்கு பயிற்சி பெற்று எறிவோராலேயே இவ்வளைதடிகளைச் சரியாகத் திரும்பச் செய்யவிய லும். அதனால், "வளைதடிகள் தாமாகத் திரும்புவ தில்லை; நன்கு எறியும் பயிற்சியுடையோரே அவற் றைத் திரும்பச் செய்கின்றனர்" என்னும் கூற்று நிலவு கிறது. சிறந்த வல்லுநரால் எறியப்படும்போது, ஒரு திரும்பும் வளைதடி 15 மீட்டர்களுக்கும் மிகுதியான உயரத்தையடைந்து 15 மீட்டர் விட்டமுள்ள வட்ட வடிவ அல்லது நீள் வட்ட வடிவ 'ஓடுபாதை'யை (Flight Path) ஏற்படுத்திப் பின்னர்ச் சிறுசிறு வட்டங் களை அல்லது நீள் வட்டங்களை உண்டாக்கி, எறிந்த வரின் கைகளிலோ அவருக்கு மிக அருகிலோ திரும்ப வந்தடைகிறது.

திரும்பும் வளைதடிகள் விளையாட்டுக் கருவிகளாகவே பெரும்பாலும் பயன்படுத்தப்படு கின்றன. நில மட்டத்திற்குச் சற்று அருகில் பறந்து வரும் பறவைக் கூட்டத்தை நோக்கி இத்தகு திரும் பும் வளை தடிகளை எறியும்போது, அவ் வீச்சி னின்றும் தப்பிக்க இன்னும் சற்றுத் தாழப் பறக்கும் பறவைகள் விரித்து வைக்கப்பட்டிருக்கும் கண்ணி களில் பிடிபடும். அந்நிலையில் வேட்டையாடு கருவி யாகவும் இது பயன்படுகிறது.

கிழக்கு, தென்கிழக்கு ஆசுத்திரேலியப் பகுதி களிலும், மேற்கு ஆசுத்திரேலியாவின் தென்மேற் கிலும் விளையாட்டுக் கருவிகளாகப் பயன்படுத்தப் படும் சில குறிப்பிட்ட வளைதடிகள் திரும்பும் தன்மையானதாக விளங்குகின்றன.

**திரும்பா வளைதடிகள்** : இவை பெரும்பாலும் தாக்கும் ஏவுகணைகளாகப் (Missile) பயன்படுத்தப் படுகின்றன. திரும்பும் வளை தடிகளைக் காட்டிலும் வலுவானவையாக இவை உள்ளன. இவற்றின் முனைகள் கூரியனவாக உள்ளன. எறியப்படும் போது இவ்வளைதடிகள் பெரும்பாலும் நேரான ஓடுபாதையில் செல்கின்றன. என்றாலும் சில சற்று வளைந்த ஓடுபாதையில் செல்லும். இத்திரும்பா வளைதடிகளைப் பயன்பாட்டின் அடிப்படையில், வேட்டையில் பயன்படுவன, போரில் பயன்படுவன, சடங்கில் பயன்படுவன என முப்பெரும் பிரிவுகளுள் அடக்கலாம்.

**வேட்டையில் பயன்படுவன** : பாதுகாப்பாகப் புதர்களினுள் மறைந்திருக்கும் விலங்குகளை விரட்டி, வெளியேறச் செய்ய வேட்டையாடுவோர் இவ் வளைதடிகளைப் பயன்படுத்துகின்றனர்.

ஆசுத்திரேலியப் பெரும் மணற்பாலையைச் சார்ந்த பழங்குடியினர் கங்காரு வேட்டையில் பயன் படுத்தும் வளைதடிகள் இதற்குத் தக்க சான்று களாகும். வட இந்தியாவின் பில் (Bhill) பழங்குடி யினர் இன்றும் வேட்டையில் இவ் வளைதடிகளைப் பயன்படுத்துகின்றனர்.

**போரில் பயன்படுவன** : வேட்டையில் பயன்படும் வளைதடிகளை விட இவை வலுவானவையாக உள் ளன. நேருக்கு நேர் நின்று ஒருவரையொருவர் தாக் கிக் கொள்ளும் போர்களில் இவ் வளைதடிகள் பெரி தும் பயன்படுத்தப்பட்டன. இருப்பினும், கை தேர்ந்த எறிவோரால் 110 மீட்டர் தொலைவிலுள்ள தம் எதிரி யைக்கூட இவற்றைக் கொண்டு தாக்கிக் கொல்ல வியலும். தென்னிந்தியாவின் பாளையப்பட்டுப் போர்களில் இவ் வளைதடிகள் பெரிதும் பயன்படுத் தப்பட்டன என்று புதுக்கோட்டையின் அந் நாளைய திவான், எட்கார் தர்சுடனுக்கு (Edgar Thurston) எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**சடங்கில் பயன்படுவன :** வாழ்வியற் சடங்குகளில் பயன்படுத்தப்படும் திரும்பா வளைதடிகளே 'சடங்கில் பயன்படுவன'. தார்லிங்கு (Darling) ஆற்றுப் பகுதியைச் சார்ந்த ஆசுத்திரேலியப் பழங்குடியினர் ஈமச் சடங்கின்போது வளைதடிகளைக் கொண்டு தம் தலையைக் காயப்படுத்தி வரும் குருதியைப் பிணத்தின் மீது சிந்துகின்றனர்.

**வளை தடிகளை எறிதல் :** வளைதடியைஎறிவோர் அதன் முனைகள் தம்மை நோக்கியிராமல் வெளிப்புறத்தை நோக்கியவாறு வைத்துக் கொண்டு எறிய வேண்டும். இல்லாவிட்டால், எறிவோர் மீதே வளைதடி தாக்கும். வளைதடியை எறிவோர் அதனைத் தம் தோளுக்குப் பின்புறமாக, மேலே பிடித்துக் கொண்டு முன்நோக்கி மிகவும் வலிவுடன் வீசியெறிவர். அவ்வாறு எறியும்போது மணிக்கட்டில் ஒரு சுழற்சியைக் கூட்டி வீசுவர். அப்போது தான் எறியப்படும் வளைதடி எறிவோரிடமே வட்டமிட்டுச் சரியாகச் சென்றடையும். பொதுவாக, வளைதடிகள் காற்று வீசும் திசைக்கு எதிராக 45° அல்லது 25° கோணத்தில் வீசப்படும். இருப்பினும் மிக்க வேகத்தில் காற்று விசும்போது வளைதடிகளை எறிவதோ இவற்றின் ஒரு பாதையைக் கட்டுப்படுத்துவதோ இயலாததாகும். திரும்பும் வளைதடிகளைக் கிடைமட்ட நிலையில், 60° - 75° கோணத்தில் தலைக்கு மேலாக ஒரு கையால் பற்றிக் கொண்டு, மணிக்கட்டில் சுழற்சியைக் கூட்டி, வீசியெறியும் போது அவற்றின் ஓடு பாதைக்குப் பின் மிகத் துல்லியமாக எறிந்தவரிடமே அவை திரும்ப வந்து சேருகின்றன.

**இந்திய வளைதடிகள் :** சென்னை அரசு அருங்காட்சியகத்தின் முதல் பொறுப்பு அலுவலராகப் பணியாற்றிய பால்பர் (General Balfour) இந்தியாவிற்கு உரியனவாக இருவகை வளைதடிகளைக் குறிப்பிடுகின்றார். குசராத்து மாநிலத்தின் கட்சு வளைகுடாவைச் சேர்ந்த கோலிப் (Koli) பழங்குடியினர் கையாளும் 'கட்டாரியா' எனப்படும் வளைதடி ஒருவகையாகும். இது எளிய, வளைந்த வடிவுடைய மரத்தாலனது. முயல்கள், காட்டுப் பன்றிகள், உள்ளிட்ட சிறு விலங்குகளை வேட்டையாட இவ்வளை தடிகளை அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களைச் சேர்ந்த சில மரபினர் 'வலறி' எனப்படும் வளைதடியைப் பயன்படுத்தியுள்ளனர். இது இரண்டாவது வகையாகும். இது வடிவில் கட்டாரியா, ஆசுத்திரேலிய வளைதடி ஆகியவற்றிலிருந்து மாறுபடுகிறது. ஏறக்குறைய பிறைச் சந்திர வடிவில், முழுதும் தட்டையாக விளங்கும் இவ்வளைதடியின் பின் முனை பெரிதும் அகன்று காணப்படுகின்றது. இதற்கு மாறாக, இதன் குறுகிய முனையோ சற்று வளைக்கப்பட்ட நிலையில், நன்கு வடிவமைக்கப்பட்ட குமிழைக் (Knob) கைப் பிடியாகக் கொண்டுள்ளது. பொதுவாக அவ்வளைதடிகள் மரத்தாலும், இரும்பு, தந்தம் முதலியவற்றாலும் உருவாக்கப்பட்டுள்ளன. பாளையப்பட்டுப் போர்களில் (Páligar Ward) அவை பெரிதும் பங்கு பெற்றனவென்று தர்சுடனுக்கு எழுதிய மடலில் புதுக்கோட்டையின் அன்றைய திவான் குறிப்பிடுகின்றார். மான், முயல் வேட்டையிலும் அவை பயன்படுத்தப்பட்டமை தெரிகிறது. இந்திய வளைதடிகள் யாவும் 'திரும்பா வளைதடி' வகையைச் சேர்ந்தவை. அவ்வகையில் அவை ஆசுத்திரேலியத் திரும்பா வளைதடிகளை ஒத்திருப்பது வெளிப்படை.

**வளைதடியின் இன்றைய நிலை:** நேருக்கு நேரான போர்களின்போது இருபுறத்து எதிரிகளாலும் வளைதடிகள் ஏந்தப்பட்ட நிலையிலேயே வளைதடிகள் போர்க் கருவிகளாக அமையும் என்பது வெளிப்படை, அமர்ந்த இடத்திலிருந்து கொண்டே வெகு தொலைவிற்கப்பாலுள்ள எதிரிகளை அழிக்கக்கூடிய போர்க்கருவிகள் தோன்றியுள்ள இக்காலத்தில் வளைதடிகள் தலைதூக்கவியலாமற் போயின. இது போன்றே, வேட்டையில் முதிர்ந்த வழிவகைகளைக் கொண்டுள்ள முன்னேறிய பண்பாடுகளுக்கிடையே, வளைதடிகள் வழக்கிழந்த தொன்மைக் கருவிகளாகவே திகழ்கின்றன. இந்நிலையில், வளைதடிகள் பெரிதும் குறியீடாகவோ (Symbolic), சடங்குப் பொருளாகவோ (Ritual Object) இன்று பயன்படுத்தப் படுகின்றன. எடுத்துக்காட்டாக, இசுகாண்டிநேவியாவில் (Scandinavia) வளைதடிகள் 'வரலாற்றுக் கதைகளில்' (Legends) இடம்பெறும் ஓர் ஆயுதமாகவே சுட்டப்படுகின்றன.

-சி.ம.

**வறியவர் வழக்கு** : தாம் தொடரவிருக்கக் கூடிய வழக்கின் வழக்குரைக்காக விதிக்கப்பட்டுள்ள நீதிமன்றக் கட்டணத்தைச் செலுத்துவதற்குப் போது மான வசதியைக் கொண்டிராதவர் அல்லது அவ்வாறு நீதிமன்றக் கட்டணம் விதிக்கப்படாமல் இருப்பின் தேவையான துணிமணிகள் மற்றும் வழக்கின் கருப் பொருள் அவற்றைக் தவிர உரூ.1000 - மதிப்புடைய சொத்திற்கு உரிமையில்லாதவர் வறியவர் (Indigent Person) எனக் கருதப்படுவார். வறியவர் வழக்கு (Suit by Indigent Person or Pauper) பற்றிய விதிமுறைகள் 1908 -ஆம் ஆண்டு உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில் பிரிவு 33 -இல் கூறப்பட்டுள்ளன.

ஒருவர் வறியவர் என்ற நிலையில் வழக்குத் தொடர விரும்பினால் அவ்வாறு வழக்கிடுவதற்காக நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறல் வேண்டும். அவ்வாறான அனுமதிக்கான மனு, வழக்குரைக்குத் தேவையான விவரங்கள், மனுதாரர் கொண்டிருக்கும் அசையும், அசையாச் சொத்துகள், அவற்றின் மதிப்பு, ஆகிய விவரங்களைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் வழக்குரையைப் போன்று கையெழுத்திடப் பட்டு, சரிபார்க்கப்பட்டிருக்க வேண்டும். நீதிமன்றத் திற்கு வாராமல் இருப்பதற்கு விதிவிலக்குப் பெற் றாலன்றி, மனுதாரர் நீதிமன்றத்திற்கு வரல் வேண் டும். பின்னர் அவர் நீதிமன்றத்தால் சொத்து, அவரு டைய உரிமையின் தகுதி ஆகியவை குறித்து விசாரிக் கப்படுவார். மனு அளிக்கப்பட்ட நாளிலிருந்த நிலை தான் வறியவர் நிலையென நீதிமன்றத்தின் கவனத் தில் எடுத்துக் கொள்ளப்படும். பிரதிவாதிக்கு வாதி யின் வறியவர் நிலையைக் குறித்துப் பதில் அளிக்கா மல் வாதி வறியவராக வழக்கிட அனுமதிக்கப்பட மாட்டார். ஒருமுறை ஒரு வழக்கு வறியவர் வழக்காக ஏற்றுக் கொள்ளப்படின் பின்னர்ப் பிரிவு 33 விதி 9 - இல் கூற்பபட்ட காரணங்களுக்காக மட்டுமே பின் னர் ஒருவர் வறியவரல்லாதவராக அறிவிக்கப்படு வார். வழக்கின் விசாரணையின் போது வாதிக்கு வழக்குமூலம் (Cause of Action) இல்லையெனத் தோன்றினால் வழக்குத் தள்ளுபடி செய்யப்படும்.

பின்வரும் சூழ்நிலைகளில் வறியவர் வழக்காக வழக்குத் தொடர அனுமதி மறுக்கப்படும். அவை, (அ). பிரிவு 33 விதிகள் 2 மற்றும் 3 ஆகியவற்றில் எடுத் துரைக்கப்பட்டுள்ளவாறு, மனுவானது, வரையப் படாமல் இருக்கும்போது, (ஆ). மனுதாரர் வறிய வராக இல்லாதபோது (இ). மனு அளிக்கப்படு வதற்கு இரண்டு மாதங்களுக்கு முன் மோசடியாக அல்லது வறியவர் போன்று வழக்கிடும் நோக்கத் துடன் எந்தச் சொத்தினையாவது உரிமைமாற்றம் செய்திருந்த போது, (ஈ) வழக்குரையின் குற்றச்சாட்டு எவ்வித வழக்கு மூலமும் கொண்டிராதபோது, (உ) வழக்கின் கருப்பொருள் குறித்து வேறு எவருட னாவது ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தபோது, (ஊ) வழக்கின் குற்றச் சாட்டுகள் காலவரையறை யினால் பாதிக்கப்பட்டிருக்கும் போது, (எ) மனுதார ருடன், வழக்கிற்காக வேறு எவராவது பண உதவி செய்வதாக ஒப்பந்தம் ஏற்படுத்தியிருக்கும் போது ஆகும்.

மேற்கண்ட காரணங்களினால், ஒருவர் வழக்கு வறியர் வழக்காக வழ க்குத் தொடர அனுமதி மறுக்கப் படும்.

மனுவைத் தள்ளுபடி செய்வதற்குப் போதிய காரணம் இல்லாத போது, நீதிமன்றம் எதிர்த்தரப் பினருக்கும் அரசு வழக்குரைஞருக்கும் அறிக்கை அனுப்பி, வறியர் நிலையைத் தீர்மானிக்க ஒரு தேதியை நிருணயித்து, சாட்சியங்களை ஏற்றுக் கொள்ளும். மனு விசாரிக்கப்பட்டுத் தரப்பினரின் வாதங்களைக் கேட்டறிந்த பின்னர் நீதிமன்றம் மனுதாரர் வறியவரா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கும். ஒருவேளை மனு ஏற்கப்படின் மனுவிற்கு எண் கொடுக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டு வழக்கின் வழக்குரையாக (Plaint) ஏற்கப்படும். பின்னர் அது எல்லா வழக்குரையையும் போலச் செயற்படும். சாதாரண வாதுரைக்கும், வறியர் வாதுரைக்கும் உள்ள வேறுபாடு என்னவெனில், வறியர் வாதுரைக் காக நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய தில்லை. ஆனால் அழைப்பாணைகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டணம், மனுவிற்கான கட்டணம், வழக்குரைஞர் கட்டணம் ஆகியவை செலுத்தப்பட வேண்டும்.

ஒருவர் வறியர் எனத் தீர்மானிக்கப்பட்டு அவர் வழக்காட அனுமதிக்கப்பட்ட பின்னர், வழக்குரை ஞர் வாயிலாக வாதிட இயலாதபோது நீதிமன்றம் அவருக்காக ஒரு வழக்குரைஞரை நியமிக்கலாம்.

வழக்கின் நாள், மனுதாரர் நீதிமன்றத்தில் மனு அளித்த நாளிலிருந்து கணக்கிடப்படும், வாதுரையாக

அது ஏற்றுக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து கணக்கிடப் படாது.

மனுதாரரின், வறியவராக ஏற்றுக் கொள்ள அனுமதி கோரும் மனு, ஒரு வேளை நிராகரிக்கப் படின், அவ்வாணையின் பேரில் மேன் முறையீடு செய்யலாம். வறியவராக வழக்கிடக் கோரும் உரிமையானது தனிப்பட்ட உரிமையாகும். எனவே, மனுதாரர் இடையில் இறப்பின், நீதிமன்றக் கட்ட ணத்தை செலுத்தினாலன்றி அல்லது தான் வறியவர் என்று மெய்ப்பித்தாலன்றி அவர் தம் சட்டப் பேராளர் தொடர்ந்து வழக்காட உரிமை கிடையாது.

வறியவரில்லை என எப்போது நீதிமன்றம் அறிவிக்கலாம்? வழக்கின் பேராளர் அல்லது அரசு வழக்குரைஞர் மனுவின் பேரில் வாதிக்குத் தக்க அறி விப்புக் கொடுத்து, கீழ்க்காணும் காரணங்களுக்காக மனுதாரரை வறியவரில்லை என முடிவு செய்ய லாம். அவையாவன. அ) வழக்கின் நடைமுறை, வழக்கு விசாரணையின் போது முறையற்று இருத் தல். ஆ) வாதிக்குப் போதுமான வசதி இருக்கிறது என்று தெரியவருதல், இ) வழக்கின் கருப்பொருள் குறித்து வேறு ஒருவர் நலன் ஒன்று பெற்றிருந்து, அவ ருடன் மனுதாரர் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டி ருத்தல். இத்தகு நிலைகளில் வாதியை வறியவர் என்று அறிவிக்கப்பட்டதிலிருந்து விலக்கலாம்.

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 33 விதிகள் 10 முதல் 12 வரையிலானவை நீதிமன்றக் கட்டணத்தை வசூலிப்பது குறித்துக் கூறுகின்றன. அவையாவன. 1. வறியவர் ஒருவர் வழக்கில் வெற்றி பெறும் போது நீதிமன்றக் கட்டணத் தொகை அரசின் முதல் பொருட்பிணைப் பொறுப்பாகும். எவரிட மிருந்து தொகை பெறப்பட வேண்டும் என்று நீதி மன்றம் ஆணையிடுகிறதோ அவரிடமிருந்து அரசு அதனை வசூலித்துக் கொள்ளும். 2. வறியவரின் வழக்குத் தோற்றுப்போனாலோ, அவர் வறிய வரில்லை எனத் தீர்மானிக்கப்பட்டாலோ, வழக்கு திரும்பப் பெறப்பட்டாலோ (நீதிமன்றத்திற்கு வராத காரணத்தினால் அல்லது அழைப்பாணைக் கட்ட ணம் செலுத்தப்படாத காரணத்தினால்) தள்ளுபடி செய்யப்பட்டாலோ, வாதி கட்டணத் தொகை செலுத்த வேண்டும். 3. வாதியின் இறப்பினால் வழக்கு வழக்கறவு ஏற்படின் இறந்த வாதியின் சொத்திலிருந்து அத் தொகை பெறப்பட வேண்டும் என நீதிமன்றம் ஆணையிடும்.

உரிமையியல் நடைமுறைச் சட்டத்தில், வாதி மட்டுமே வறியவராக வழக்காட வகை செய்யப்பட் டுள்ளது. பிரதிவாதி வறியவராக வழக்காட வகை செய்யப்படவில்லை. எனினும் நீதிமன்றம் தன் உள்ளார்ந்த அதிகாரங்களைக் (Inherent Powers) கொண்டு பிரதிவாதியையும் வறியவர் என்ற நிலை யில் வாழக்காட அனுமதிக்கலாம்.

-ஆ.சே.

**வறுமையின் பண்பாடு** : உலகின் பல நாடு களில் வறுமை நிலையில் உள்ளவர்கள், அவர்கள் தம் வறுமைச் சூழலுக்குத் தக்கவாறு தகவமைத்துக் கொண்டு வாழும் முறையினை, வறுமையின் பண்பாடு (Culture of Poverty) என்னும் சொற்றொடர் குறிக்கிறது. இக்கருத்தாக்கத்தினை ஆசுகார் உலூவி (Oscar Lewis) என்னும் அமெரிக்க மானிடவியலறிஞர் மெக்சிகோ, பியூர்டோரிக்கோ, நியூயார்க்கு போன்ற பகுதிகளில் நிகழ்த்திய களப் பணியின் மூலமாகவும் ஒப்பீட்டு ஆய்வின் மூலமாகவும் உருவாக்கினார். அவர் கருத்துப்படி, பெரிய சமுதாயத்தினரிடையே விளங்கிவரும் விழுமியங்கள் (Values), குறிக்கோள்கள் ஆகிய வற்றைத் தங்களால் எட்ட முடியாது என்பதை வறுமை நிலையில் உள்ளோர் உணர்ந்து, அதனால் உண்டான மனமுறிவுகளுக்கு ஈடுகொடுத்து, அவர் கள் அளவில் ஒரு வகையாக வறுமைப் பாங்குடைய வாழ்க்கை நிலையை ஏற்படுத்திக் கொள்கின்றனர். குடிசைவாழ் குழந்தைகள் ஆறு அல்லது ஏழாவது வயதிலேயே அவர்களின் வறுமைநிலைப் பண்பாட் டிற்குரிய மனப்பான்மைகளையும் விழுமியங்களை யும் ஈர்த்துக் கொள்ளுகின்றனர் என்கிறார் ஆசுகார் உலூவி. அதாவது, குழந்தைகள் தங்கள் பெற்றோர் களிடமிருந்து பெறும் சமுதாய வயமாதல் (Socialization) முறைகளினால் தங்கள் பெற்றோர் களைப் போன்றே வாழ்க்கையின் மேல் வெறுப்புக் கொண்டு தாழ்வு மனப்பான்மை போன்ற எண்ணங் களால் சிக்குண்டு, வாழ்வில் எந்தவிதப் பெரும் குறிக்கோளுமின்றிச் சமூகத்தில் மேல்நிலைக்கு இடம் பெயர முடியாமல் தடைபட்டுப் போகின் றனர்.

வறுமையின் பண்பாட்டிற்கு அடிப்படையாகச் சில சமூக, உளவியல் கூறுகளை ஆசுகார் உலூவி குறிப்பிடுகின்றார். அவை. 1. வறுமையின் பண்பாட்டிற்குரியோர் தாங்கள் சார்ந்துள்ள சமுதாயத்தின் அனைத்து நிறுவனங்களிலும் முனைப்பாகப் பங்கு பெறாமலும், அந்தச் சமூக அமைப்பின் மீது அவ நம்பிக்கை கொண்டும், தேசிய பண்பாட்டிலிருந்து வேறுபட்டுத் தமக்கெனத் தனியாக ஓர் உட் பண்பாட்டினை (Sub-Culture) உருவாக்கிக் கொண்டும் விளங்குவர். 2.குடும்பம் என்ற நிலைக்கு மேலே எந்த ஒரு முறைப்படுத்தப்பட்ட அமைப்பையும் இவர்கள் கொண்டிருக்க மாட்டார்கள். 3. வாழ்க்கை வட்டத்தில் குழந்தைப் பருவத்தை ஒரு பாதுகாக்கப்பட வேண்டிய, இன்றியமையாத கட்டமாக இவர்கள் கருதமாட்டார்கள். 4. உதவியற்ற நிலை, ஊழ் பயன் நம்பிக்கை, சார்பு நிலை, தாழ்வு மனப்பான்மை போன்ற உணர்வுகளை இவர்கள் மிகுதியாகக் கொண்டிருப்பர்.

திருமணம் இல்லாமலேயே இணைந்து வாழும் தம்பதியர், கூடா ஒழுக்க உறவுகள் கொண்டோர் இவ்வகைப் பண்பாட்டில் பரவலாகக் காணப்படுவர். மேற்கூறப்பட்ட பண்பாட்டுக் கூறுகள் அனைத்தும் வறுமைநிலை மக்கள் விரும்பிப் பெற்றவையல்ல; இருப்பினும் அவை இம்மக்களிடம் தொடர்ந்திருக்கக் காரணம் அவர்கள் வாழுகின்ற சூழ்நிலையின் தாக்கத்தினால் ஆகும். வறுமைப் பண்பாடானது கிராமம், நகரம், நாடு ஆகிய எல்லைகளைக் கடந்து நிற்கிறது என்பார் ஆசுகார் உலூவி.

மேலே கூறப்பட்ட 'வறுமையின் பண்பாடு' என்னும் கருத்தாக்கத்தை ஆசுகார் உலூவியின் ஆராய்ச்சிப் பின்னணியை நோக்குவதன் மூலம் புரிந்து கொள்ள முடியும். ஆசுகார் உலூவி தொடக்கத்தில் உழவர்களைப் (Peasants) பற்றி மிக்க ஆர்வத்துடன் ஆய்வு செய்த போதிலும் அவர் வாழ்வின் இறுதி இருபதாண்டுக் காலத்தில் நகரிய ஆய்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். அதாவது அவர் எழுத்தறிவற்ற பிளாக் பூட் இந்தியத் தொல்குடியினரை ஆராயத் தொடங்கிப் பின்னர் இசுபெயின், மெக்சிகோ, கியூபா ஆகிய நாடுகளின் உழவர்களைப் பற்றி ஆய்ந்து இறுதியில் மெக்சிகோ, பியூர்டோரிக்கோ, கியூபா, நியூயார்க்கு ஆகிய நகரங்களில் வாழ்ந்த சேரி மக்களைப்பற்றி ஆய்வு செய்தார்.

ஆசுகார் உலூவியின் நகரிய ஆய்வானது தெப்போசுடுலானிலிருந்து (Tepoztlan) மெக்சிகோவிற்கு இடம் பெயர்ந்த மக்களைப் பற்றிய ஆய்வில் தொடங்கியது. அவ்வாய்வு இதற்கு முன்னர்ச் செய்யப்பட்ட ஆய்வுப் போக்குகளான, கிராம மக்கள் நகர்ப் புறங்களுக்கு இடம் பெயர்ந்து சென்று நகரியச் சூழலில் தங்கியபோது அவர்களுக்கு ஏற்படும் உளவியல், குடும்பச் சிதைவு போன்றவற்றைப் பற்றிய ஒரே மாதிரியான ஆய்வாக இல்லாமல் வேறுபட்டதாக இருந்தது. குடி பெயர்ந்தோரிடையே ஒழுங்குமுறையற்ற தன்மை இருப்பதைத் தம் ஆய்வின் மூலம் கண்டறிந்தார். அவர் தம் ஆய்வு, நகரமயமாதல் (Urbanization) பற்றிய ஆய்வுக்கு வலு சேர்த்தது. நகரமயமாதல் என்பது எளிமையானதும், ஒருமுகப் படுத்தப்பட்டதும், ஒரே மாதிரியானதும் அன்று என்றும், அது வேறுபட்ட வடிவங்களையும், பொருள்களையும், அது சார்ந்துள்ள இடத்தின் வரலாறு, பொருளாதார, சமூகப் பண்பாட்டு நிலைகளையும் பொறுத்து மாறும் தன்மையையும் உடையது என்றும் அவர் கருதினார்.

மெக்சிகோ நகருக்கு இடம்பெயர்ந்த பெரும்பாலான தெப்போசுடுலான் மக்கள் வறுமை நிலையில் வெசின்டேடுசு (Vecindades) என்னும் சேரிப் பகுதிகளில் வசித்து வந்தனர். அந்த வெசின்டேடுசுப் பகுதிகள் ஆசுகார் உலூவியின் கவனத்தை மிகவும் ஈர்த்தன. அவை அளவிலும் மக்கள்தொகை எண்ணிக்கையிலும் சிறியவை மட்டுமல்ல, அப்பெருநகரின் தனித்தொதுங்கிய பகுதிகள் என்றும் அத்தகைய வெசின்டேடுசுகள் தங்களுக்குள் பல பண்பாட்டுத் தன்மைகளைப் பகிர்ந்து கொள்கின்றன என்றும், அவற்றின் வாழ்க்கை முறை பொது சமுதாய முறைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டது என்றும் உலூவி உணர்ந்தார். அத்தகைய பெருநகரச் சேரி மக்களின் வாழ்க்கைத் தன்மைகளே ஆசுகார் உலூவியை வறுமையின் பண்பாடு என்னும் கருத்தை ஆராயவும், அது பற்றிய முதல் ஆய்வு அறிக்கையை எழுதி முடிக்கவும் உதவின.

ஆசுகார் உலூவி 1959-ஆம் ஆண்டில் 'ஐந்து குடும்பங்கள், வறுமையின் பண்பாடு பற்றிய மெக்சிகன் நிகழ்வாய்வுகள்' என்னும் நூலினை வெளியிட்டார். அந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகள் வறுமையின் பண்பாடு என்னும் கருத்துப் படிவத்தை இரத்த

மும் சதையும் என்பது போல அதன் உள்ளுறவுகளை யும் பிணைப்புகளையும் எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகின்றன. மெக்சிகோவின் பல்வேறு பகுதி களின் ஊரக, நகரியக் குடும்பங்கள் பற்றி அவர் தரும் தரவுகள் பண்பாட்டிடை ஆய்வுக்குச் சிறந்த மாதிரி யாகத் திகழ்கின்றன. ஆசுகார் உலூவி தம் ஆய்வுகளில் வறுமை நிலையினரின் பண்பாட்டிற்குரிய நலன் களை அட்டவணைப் படுத்தாமல் அதன் அமைப் பியல் குறித்துக் கவனஞ் செலுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஐக்கியநாட்டில் நிலவும் வறுமையைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்கு உற்ற துணையாகவும், இவர்தம் ஆய்வு அமைந்தது. இவ ருக்குப் பின்னர்ப் பலரும் இந்தக் கருத்தாக்கத்தை ஏனைய நாடுகளிலிலும் தங்கள் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தினர். இக்கருத்தாக்கம் கடும் திறனாய் வுக்கு உட்பட்டது. சமூக அறிவியலாரும், சமூகப் பணி புரிவோரும், மைக்கேல் ஆரிங்டன் போன்ற எழுத்தாளர்களும் இச்சொற்றொடரைக் கையாண்ட துடன் அதனைப் பெருவழக்காக்கவும் செய்தனர். 'பண்பாடு' என்னும் அணுகுமுறை சார்ந்து வறுமையை ஆய்வு செய்தனர். எனினும் அந்தக் கருத்தாக்கத்தின் பயன்பாடு பற்றிப் பல்வேறு துறைகளிலிருந்தும் வினாக்கள் எழுப்பப்பட்டன.

வறுமையின் பண்பாடு என்னும் ஆசுகார் உலூவி யின் கருத்தாக்கத்தைப் பற்றிய மதிப்பீடுகளை இலீகாக்கும் (Leacock), வாலன்டைனும் (Valentine) வெளியிட்டனர். எடுத்துக்காட்டாக, ஆசுகார் உலூவிக்கு நடுத்தர வகுப்பு அறிவுப் பார்வையே இருந்தது என அவர்கள் குற்றஞ்சாட்டினர். அது மட்டு மல்லாமல் ஏழைகளின் வறுமையை நியாயப்படுத்து வது போன்றபோக்கும், சமூகத்தில் நிகழவேண்டிய ஒரு முழுமையான மாற்றத்தை ஆதரிக்காத போக்கும் ஆசுகார் உலூவிக்கு இருந்தனவெனக் கூறினர்.

ஆசுகார் உலூவி ஏழைகளின் முன்னேற்றத்தில் கொண்டிருந்த பற்றில் ஏதும் குறைபாடு இல்லை. வறுமை பற்றிய முதல்நிலைச் செயலறிவு (Empirical knowledge) இருந்ததனால் வறுமையில் வாழ்வதை விட வறுமையைப் புகழ்வது எளிதானது என்பதை அவர் அறிந்திருந்தார். ஏழையாய் இருப்பது பயங்கர மானது. ஆனால், வறுமைப் பண்பாட்டில் இருப்பது அவ்வளவு மோசமானதன்று என உலூவி கூறு வதாகப் பலரும் கூறியதை அவர் மறுத்தார். உண்மை யில் வறுமைப் பண்பாட்டினை ஒழிப்பதை விடவும் வறுமையை ஒழிப்பது எளிதானது என்றே தாம் கூறியதாக உலூவி எடுத்துரைத்தார்.

பொது நலக் கூட்டமைப்பு நாடுகளில் (Socialist Countries) வறுமை நிலைப் பண்பாடு காணப்படாது என்பது உலூவியின் கருதுகோளாகும். ஏனெனில், அங்கு ஏழைகள் உயர்வான அமைப்பு முறையில் இருப்பதனாலும், அவர்கள் பெரிய சமுதாயத் தினரோடு, முதலாளித்துவ நாடுகளிலிருப்பதை விட அதிக அளவில் ஒருங்கிணைந்து இருப்பதனாலும் ஆகும் என்பார். இத்தகைய கருதுகோளை உரு வாக்கக் காரணமாக அமைந்தது அவர் கியூபாவைப் பற்றிப் பல நூல்கள் படித்ததும், 1947 புரட்சிக்கு முந்தைய கியூபாவை நேரில் சென்று பார்த்ததும் புரட்சிக்குப் பிந்தைய கியூபாவை அறிந்ததும் ஆகும்.

-ஆ.செ.

**துணை நூல்கள் :**

1. Leacock, Eleanor Burke (Ed.), **The Culture of Poverty: A Critique**, Simson and Schuster, New York, 1971.

2. Lewis, Oscar, **The Culture of Poverty**, Scientific American, 215 : 19-25, 1966.

3. Valentine, Charles, **Culture and Poverty**, University of Chicago Press, Chicago, 1968.

**வன்புணர்ச்சி** : உடல் உறவு விலங்குகளின் இனப்பெருக்கத்திற்கு இயல்பாய் அமைந்த ஒன்றா கும். மனிதனும் பொதுவாக அந்த இனத்தைச்சார்ந்த வன்தான். ஆயினும் அவனுக்குப் பகுத்துணரும் அறிவுத்திறன் இருக்கிறது. அதன் காரணமாக அவனுள் இயற்கையாக எழுகின்ற விலங்குணர் வுக்கு ஒழுங்கு முறைகளை ஏற்படுத்தியுள்ளான். அந்த ஒழுங்கு முறைகள், அந்தந்தச் சமுதாயப் பின் னணியினாலும், வழக்கங்களாலும், பண்பாடு களாலும், முறைப்படுத்தப்பட்டுப் பின்னர் சட்ட உரு கொடுக்கப்பட்டிருக் கின்றன. எனவே சட்டம் ஏற்கின்ற ஆண், பெண் உடலுறவு இயல்புப்புணர்ச்சி எனப்படும். பெரும்பாலும் கணவன் மனைவிய ரிடையே உள்ள உடலுறவுக்குச் சட்ட ஒப்புதல்

இருக்கிறது. திருமணம் செய்து கொள்கின்றவர்கள் கருத் தொருமித்து உடலுறவு கொள்வதற்கும், இசைவு அளிப்பதாகவே சட்டம் கருதுகின்றது. திருமணமில்லா உடலுறவைச் சட்டம் ஏற்றுக் கொள்வதில்லை. ஆயினும், அது குற்றம் என்று சொல்ல முடியாத ஒரு நிலை. ஏனெனில், அது ஆண், பெண் இருவரின் இசைவுடன் நடைபெறுகின்ற பொழுது தண்டனைக்கு உட்படுத்த முடியாத குற்ற மற்றதாகி விடுவதைப் பார்க்கலாம். ஆயினும், இதில் உடல் உறவு கொள்ளுகின்ற பெண்ணின் விருப்பமோ, இசைவோ இல்லாமல் இச்செயல் நடந்தேறுகின்ற பொழுது அது குற்றமாகக் கருதப் படுகிறது. சில சமயங்களில் இசைவு அச்சுறுத்தியோ ஏமாற்றியோ வாங்கப்பட்டதாக இருக்கலாம். அல்லது பருவமடையாத பதினாறு வயதுக்கு உட்பட்டவர் அளித்த இசைவாகவும் இருக்கலாம். ஆயினும் இவை அனைத்தும் சட்டத்தால் குற்றமானதாகக் கருதப்படுகிறது. இத்தகு உடலுறவை 'வன்புணர்ச்சி' (Rape) என்று சட்டம் கூறுவதோடு, அத்தகு குற்றத்தைச் செய்தவருக்குக் கடுமையான தண்டனையும் விதிக்க வேண்டும் என்று வலியுறுத்தவும் செய்கின்றது.

இக்குற்றம் பெண்ணின் விருப்பத்திற்கு எதிராகவும், அவளுடைய மானத்திற்குக் கேடு செய்வதாகவும் இருப்பதால் சட்டம் வரையறுத்துக் கூறுகின்ற குற்றங்களில் இது மிகக் கொடியதாகக் கருதப் படுகிறது. இந்தியத் தண்டனைச் சட்டத்தில் 375-வது பிரிவு இதை வரையறுத்துக் கூறுகிறது. அப்பிரிவின் விளக்கப்படி அமைகின்ற உடலுறவு, வன்புணர்ச்சி என்று குறிப்பிடப்படுகின்றது. அதன்படி,

1. ஒரு பெண்ணுடன் ஓர் ஆண் கொண்டிருக்கும் உடலுறவு, அப்பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக நிகழ்ந்திருக்க வேண்டும் அல்லது

2. அப்பெண்ணின் இசைவு இல்லாமல் நடைபெற்றிருக்க வேண்டும் அல்லது

3. அப்பெண்ணுக்கு மரணம் அல்லது காயம் ஏற்படுத்தப்படும் என்ற அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டதன் காரணமாக இசைவைப் பெற்றிருக்க வேண்டும். அல்லது

4. அவள் கணவன் போல் நடித்து அதன் காரணமாக அவளுடைய இசைவைப் பெற்றிருக்க வேண்டும் அல்லது

5. பதினாறு வயதுக்கு உட்பட்ட பெண்ணின் இசைவு பெற்றோ பெறாமலோ, நிகழ்ந்திருக்க வேண்டும். அந்நிலையிலமையும் வன்புணர்ச்சி குற்றமாகும்.

பதினாறு வயதிற்கு மேற்பட்ட பெண்ணின் இசைவுடன் நடைபெறுகின்ற உடலுறவு இப்பிரிவின் கீழ்க் குற்றமாகாது. அவ்விதம் பெறப்படும் இசைவு தன்னிச்சையானதாகவும், அறிவுக்கெட்டியதாகவும் பகுத்துணர்ந்து கொடுக்கப்பட்ட இசைவாகவும் இருக்க வேண்டும். செயல் நடைபெறும் முன்னர் இசைவு பெற்றிருந்ததாக நிரூபிக்க வேண்டும். செயல் முடிந்த பின்னர்த் தரப்படும் இசைவு குற்றப் பொறுப்பிலிருந்து குற்றவாளியை விடுவிக்கப் போதுமானதாகாது. விலைமாதாயிருந்தாலும் அவளுடைய இசைவின்றி நடைபெறும் உடலுறவு இக் குற்றத்திற்கு ஆளாக்கும். போதைப் பொருள் மூலமாகப் பெறும் இசைவும் மனநிலை சரியில்லாதவர் இசைவும் பகுத்துணரும் பருவமடையாத இசைவும் சட்டத்தின் கண்ணோட்டத்தில் இசைவாகாது.

இக்குற்றத்தைச் செய்கின்ற ஆணின் வயது வரம்பு கூறப்படவில்லை. பகுத்துணரும் அறிவுபெற்றிருந்தால் குற்றத்திற்குள்ளாக்கப்படவேண்டும். அதே போன்று இக்குற்றத்திற்கு ஊள்ளாக்கப்படுகின்ற பெண்ணிற்கும் வயது வரம்பு கிடையாது. இரண்டு வயது குழந்தையாக இருந்தாலும், எண்பது வயது முதிர்ந்த கிழவியாயிருந்தாலும் இக்குற்றத்திற்குள்ளாக்கப்படலாம். எந்த வயதும் இக்குற்றத்திற்குப் பாதுகாப்பானது என்று கூறிவிட முடியாது.

இருபது வயதான ஒருவன் எழுபது வயது கிழவியிடம் இக்குற்றத்தை நிகழ்த்தியதற்காக இருபது ஆண்டுச் சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டதாக சீவர்சு ஆவணக் குறிப்புக் கூறுகிறது.

பீராசிலுள்ள கங்கான் என்னும் இடத்தில் 1946-ல் 2 வயது குழந்தையிடம் இக்குற்றம் நிகழ்த்தப்பட்டிருப்பதாக வேதிம ஆய்வகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அக்குழந்தையின் மறைவிடத்திலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. குற்றவாளியும்

உடன் சோதனைக்குள்ளாக்கப்பட்டான். குழந்தையை இடையில் ஏற்றி வந்த தாயின் சேலையில் வடிந்திருந்த இரத்தமும், விந்தும், குற்றவாளியின் துணியில் படிந்திருந்த இரத்தமும் விந்தும் குற்றத்தை நிரூபித்தன.

வெறிபிடித்த நிலையில் இக்குற்றம் நிகழ்த்தப்படும்பொழுது வயது வரம்புமட்டுமல்ல, உயிரற்ற பிணங்களிலும் கூட நிகழ்த்தப்பட்டிருப்பதாக வழக்குகள் சான்றுபகர்கின்றன. கணவனே மனைவியிடம் இக்குற்றத்தை நிகழ்த்தியதாகச் சில வழக்குகளில் நிரூபணமாகி இருக்கின்றது. மனைவியின் வயது 15 -க்கும் குறைவாயிருக்கும் பொழுது இக்குற்றம் நடைபெற்றதாகக் கருத வாய்ப்பிருக்கின்றது.

சாகிர் செய்கு என்ற 35 வயது வாலிப வயதினன் பத்து வயது நிரம்பாத தன் மனைவியிடம் வலுக்கட்டாயமாக உடலுறவு கொண்டதன் விளைவாக அவளுடைய பிறப்புறுப்பு சின்னா பின்னப்பட்டு இரத்த நாளங்கள் வெடித்து, இரத்த ஒழுக்குக் காரணமாக 24 மணி நேரத்தில் மரணமடைந்தாள். இரத்தக் கட்டும், காயமும், வீக்கமும் அவள் பிறப்புறுப்பில் காணப்பட்டன. அதன் கன்னிச்சவ்வு கிழிந்து போயிருந்தது. பல்வேறுபட்ட சிறிதும் பெரிதுமான காயங்கள் பிறப்புறுப்பில் காணப்பட்டன. மருத்துவச் சாட்சியத்தின் அடிப்படையில் வன்புணர்ச்சிக்கான தண்டனை கணவனுக்கு அளிக்கப்பட்டது என்று கால்வர்டு இந்திய மருத்துவ அரசு இதழ் சூன் 1895 பக்கம் 221-இல் கூறப்பட்டுள்ளது.

மருத்துவரிடம் 14 வயதுச் சிறுமி மாதவிடாய் குறித்து முறையிட்டாள். அதற்கு அவர் வைத்தியம் தேவை என்று கூறி அவளோடு உடலுறவு கொள்கிறார். அவள் அதை சிகிச்சையின் ஒரு பகுதி என்று நம்பியதால், எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. ஆயினும் அது வன்புணர்ச்சி என்று அரசு, எதிர்தார் என்ற வழக்கில் முடிவு கட்டியது.

ஒரு தாயார், தம் 19 வயதுப் பெண்ணுக்குக் காக்காய் வலிப்புச் சிகிச்சைக்காக மருத்துவரிடம் அழைத்து வருகிறாள். மறைவிடத்தில் சதை சேர்ந்து ஒட்டிக் கொண்டிருக்கிறது. ஒரு சிறிய அறுவைச் சிகிச்சையின் மூலம் சரி செய்துவிடலாம் என்று மருத்துவர் கூறுகிறார். தாயாரும் சிகிச்சைக்கு இசைகிறாள். மருத்துவர் அவளை உடலுறவுக்கு ஆளாக்குகிறார். அது வன்புணர்ச்சி என்று அரசு எதிர் 'பிளேட்டரி' (Q.B.Dvn) 410-ல் முடிவு கட்டியது.

சரணம் கற்றுக்கொள்ள 16 வயது நிரம்பிய சிறுமி ஒருத்தி இசை ஆசிரியரை அணுகுகிறாள். அவர் உனக்குச் சாரீரம் சரியில்லை, அதற்காக ஒரு சிறு அறுவை செய்து கொண்டால் சரியாகிவிடும் என்று கூறுகிறார். அவளும் இசைகிறாள். ஆனால், அவர் அவளுடன் உடலுறவு மேற்கொள்கிறார். அது வன்புணர்ச்சி என்று வில்லியம்சு வழக்கில் 1923(1) கே.பீ.34-ல் தீர்ப்பளிக்கப்பட்டது.

வயது முதிர்ச்சியடையாத பெண் சிறுமி பிஞ்சுப் பருவத்தில் வன்முறைப் புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டதைத் தன் தாயிடம் வேடிக்கையாக எடுத்துச் சொன்னாள். அதை வேறு ஒருவரிடமும் கபடமின்றி உடனடியாக எடுத்தியம்பினாள். இதுவே போதுமான சான்று என்று முடிவு கட்டியதோடு வேறு சான்று கொண்டு உறுதிப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை என்று சின்னப்பா சம்பந்தப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதி மன்றம் முடிவு எடுத்தது.

இந்தக் குற்றத்திற்கு உள்ளாக்கப்படுவது பெண்ணாக இருப்பதாலும், இக்குற்றத்தைச் செய்பவர் ஆணாயிருப்பதாலும், மறைவாகவே இக்குற்றத்தைப் பெரும்பாலும் நிகழ்த்துவதாலும் குற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள் தவிர வேறு உறுதிப்படுத்தும் சாட்சியங்கள் இல்லாதிருப்பினும், மருத்துவச் சாட்சியத்தின் அடிப்படையில் பெரும்பாலும் முடிவு கட்ட வேண்டிய நிலை ஏற்படும். எந்த ஒரு பெண்ணும் தன்னை இழிவுபடுத்தும் இக்குற்றத்தை யார் மீதும் வேண்டுமென்று சுமத்தமாட்டாள். நிகழ்ச்சி நடந்ததன் அடிப்படையிலோ, அதற்கு முயற்சி செய்து தப்பிக்கொண்டதன் அடிப்படையிலோ தான் ஒரு பெண் இக்குற்றத்தைச் சுமத்த முற்படுகின்றாள். வெளியிலிருந்து உறுதிப்படுத்தும் சாட்சியம் பெரும்பாலும் இல்லாதிருப்பதால், குற்றத்திற்கு உள்ளாக்கப்பட்ட பெண், அச்சமயத்தின் தன்னுடைய முழுபலத்தையும் காட்டி எதிர்த்திருக்க வேண்டும். அச்செயல் நடைபெற்ற பொழுது அவள் மீது ஏற்பட்ட அடையாளங்கள் சோதித்துப் பார்க்கப்படும். கை, மார்பகம், வாய், பெண்குறி, தொடை போன்ற உறுப்புகளில்

ஏற்படுத்தப்பட்ட காயம், குற்றவாளியின் விந்து, உரோமம் போன்றவை கிடைக்கப்பெற்றால் அவை கணக்கில் எடுக்கப்பட்டு, நிகழ்ச்சியின் காரணமாகப் பெண்ணுறுப்பில் ஏற்பட்ட மாற்றமும், காயங்களும் கணக் கில் எடுக்கப்பட்டு, மருத்துவச் சான்றிதழில் குறிப் பிடப்படும். அதேபோல் குற்றவாளியின் உறுப்புகளும் சோதனைக்குள்ளாக்கப்பட்டுக் காயம் முதலானவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். அவற்றின் அடிப்படையிலேயே பெரும்பாலும் நீதிமன்றங் கள் குற்றம் நிகழ்ந்ததை ஏற்றுக் கொண்டு தண்டனை வழங்கும். குற்றத்திற்கு உள்ளாக்கப்படு கின்ற பெண்ணின் சாட்சியங்களை வைத்தே வழக்குகளில் நீதிமன்றங்கள் முடிவெடுக்கும். ஆயினும் வேறு உறுதிப்படுத்தும் சாட்சியங்கள் இல்லாத வழக்குகளில் நிகழ்வுக்கு உள்ளாக்கப்பட்ட வரின் சாட்சியத்தை மட்டும் வைத்துக் குற்றம் நிகழ்ந்ததை முடிவுகட்டலாம். இருப்பினும் நீதிமன்றங்கள் சோதனை செய்தே அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. சில சமயங்களில் பொய்க் குற்றச்சாட்டுகளும் விரோதத்தின் காரண மாகக் கொடுக்கப்பட்டிருப்பதை வழக்குகள் எடுத்தியம்புகின்றன.

இலக்னோவிலுள்ள நடுவர் நீதிமன்றத்தில் 12.2.1923 அன்று இலக்னாசி என்ற 30 வயதடைந்த விதவை ஒருத்தியால் குற்றப்பத்திரிகை ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. அதில் முந்தைய நாள் மாலையில் தான், அமினாபாதிலிருந்து குதிரை வண்டியில் சென்று கொண்டிருந்தபொழுது வண்டி ஓட்டி, இம்பீரியல் வங்கி மெகதாப்புக் கட்டடத்தின் அருகில், வண்டியை நிறுத்தி, தன்னைக் கட்டாய மாகத் தூக்கிச்சென்று, தரையில் போட்டு, தன் னுடைய விருப்பத்திற்கு மாறாகவும், இசைவின்றி யும் வலுக்கட்டாயமாக உடலுறவுக்குள்ளாக்கிய தாகக் குற்றம் சாட்டினாள். அவள் மீதோ அவள் அங் கங்கள் மீதோ எந்தக்காயமும் காணப்படவில்லை. குற்றவாளி, தான் அவளுடைய இசைவுடன் உட லுறவு கொண்டதை ஒப்புக் கொண்டான். அவன், தனக்குச் சேரவேண்டிய வண்டி வாடகையைத் தவிர மேற்கொண்டு எதுவும் அவளுக்குத் தரமுடியாது என்று மறுத்துவிட்டதன் காரணமாக அக்குற்றச் சாட்டு செய்யப்பட்டிருக்கிறது என்று கூறினான். நீதிபதி அவன் கூற்றை ஏற்று, குற்றச் சாட்டுப் பொய் யானது என்று தீர்ப்பளித்தார்.

ஓர் ஊமைப்பெண் 1923 -ஆம் ஆண்டு சூலை மாதம் துணிக்கடையில் திருடினாள். அவள் காவ லரிடம் ஒப்படைக்கப்பட்டாள். இலக்னோ குற்ற வியல் நடுவரிடம் கொண்டு வரப்பட்டபொழுது, தன்னை அந்தக் கடைக்காரர் கற்பழித்து விட்டதாகக் கூறி அவள் வேட்டியில் பட்டிருந்த ரத்தக் கறையைக் காட்டினாள். அவள் நல்ல கட்டான உடம்புடன் காணப்பட்டாள். வேட்டியும், குர்தாவும் அணிந் திருந்தாள். அவள் சைகை மூலம் தான் கற்பழிக்கப் பட்டதை எடுத்துக் கூறினாள். மருத்துவப் பரி சோதனையில் அவள் மீதோ, அவள் அங்கங்களிலோ எந்தவிதக் காயமும் காணப்படவில்லை என்று கூறப் பட்டதோடு, அவள் வேட்டியில் இருந்த இரத்தக் கறை மாதவிடாயால் ஏற்பட்டது என்றும் மருத்துவச் சான்றிதழில் கூறப்பட்டது. விசாரணையில் அவள் கைதேர்ந்த விலை மாது என்பது தெரியவந்தது. எனவே, குற்றத்திற்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணின் சாட்சியத்தை மட்டிலும் வைத்து இக்குற்றத்தை முடிவு கட்டுவது மிகவும் இடர்ப்பாடாகவும் முடிந்து விடும் என்பதை உணர்ந்து, நீதிமன்றங்கள், அது போன்ற நிகழ்ச்சிகளில் மிக உன்னிப்பாகக் கவனித்தே முடிவு எடுக்கும்.

புகழ் பெற்ற பேராசிரியர் மோடியிடம், ஒரு வழக்கு கொண்டு வரப்பெற்றது. அதில் மனைவி தன்னுடைய வளர்ப்பு மகளை அழைத்து வந்திருந் தாள். தன்னுடைய கணவனுடன் வளர்ப்பு மகள் உட லுறவு கொண்டதாகக் குற்றச்சாட்டு. மருத்துவச் சாட்சியம் அதை உறுதிப்படுத்தியது. ஆயினும் வளர்ப்பு மகளின் சம்மதத்துடனே உடலுறவு நிகழ்ந் திருந்ததால், இந்தப் பிரிவின் கீழ் வழக்குத் தொடர முடியாமற் போயிற்று. இக்குற்றத்திற்குப் பிரிவு, 376-ல் ஆயுள் தண்டனையோ அல்லது 10 ஆண்டுகள் வரை சிறைக்காவல் தண்டனையோ கொடுத்துத் தண் டிக்கலாம். குற்றவாளி கணவராயிருந்தால் இரண்டு ஆண்டுகள் வரை சிறைக்காவல் தண்டனை அளிக்க லாம்.

-எச்.எம்.அ.

**வாங்கல் திறன் :** வாங்கல் திறன் என்பது நுகர் வோர் சந்தையில் நுகர்வோர் முற்றுரிமையைக் குறிக் கும் சொல்லாகும். உற்பத்தி செய்யப்பட்ட முழு


அளவினையும் ஒரு ஆளோ ஒரு நிறுவனமோ வாங்கும் திறனைப் பெற்றிருக்கும் நிலை பொருளாதாரத்தில் 'நுகர்வோர் முற்றுரிமை' அல்லது வாங்கல் திறன் (Monopsony) என்று குறிப்பிடப்படுகிறது.

முற்றுரிமைச் சந்தை நிலைக்கு நேர் எதிர் மறையான நிலையை 'வாங்கல் திறன்' விளக்குகிறது. முற்றுரிமைச் சந்தையில் ஒரே ஒரு உற்பத்தியாளரோ அல்லது வணிகரோ இருப்பர். நுகர்பவர் பலர் இருக்கின்றனர். ஆனால், வாங்கல் திறன் சந்தையில் பண்ட உற்பத்தியிலும் மற்றும் விற்பனையிலும், பலர் ஈடுபட்டிருந்தாலும், பண்ட உற்பத்தி முழுவதையும் வாங்கி நுகர்பவர் ஒருவராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருக்கின்றன. பண்ட நுகர்வில் அல்லது வாங்குதலில் முற்றுரிமை பெற்றிருப்பதை சந்தையின் வாங்கல் திறன் எனக் குறிக்கிறது. எடுத்துக்காட்டாக, நாட்டில் உற்பத்தியாகும் மொத்தப் பருத்தியையும் இந்தியப் பருத்தி வாரியம் வாங்கிக் கொள்கிறதென்றால் இந்தியப் பருத்தி வாரியத்தை வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் (Monopsonist) என்று குறிப்பிடலாம்.

**முற்றுரிமையும் வாங்கல் திறனும்** : முற்றுரிமையில் (Monopoly) ஒரு நிறுவனம் மிகுந்த ஆதாயத்தைப் பெறுவதிலேயே குறியாயிருக்கும். இதேபோன்று, வாங்கல் திறனைப் பெற்றுள்ள நுகரும் நிறுவனமும் அதிகளவு உபரிப் பயன்பாட்டைப் பெறுவதில் குறியாயிருக்கின்றன. முற்றுரிமையில் நிறுவனம் எப்பொழுது மிகுந்த அளவு ஆதாயத்தை ஈட்ட முடியுமென்றால் இறுதிநிலை உற்பத்திச் செலவும், இறுதி நிலை வருவாயும் சமமாக அமையும்பொழுது மட்டுமே பெற முடியும். எனவே, முற்றுரிமை நிறுவனங்கள் இறுதி நிலை உற்பத்திச் செலவும், இறுதி நிலை வருவாயும் சமமாக அமைகின்ற புள்ளியில் உற்பத்தியின் அளவை நிருணயித்துக் கொள்கின்றன. இதே போன்று இறுதிநிலைச் செலவும், இறுதி நிலைப் பயன்பாடும் சமமாக அமைகின்ற பொழுது, வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் மிகுந்த அளவு உபரிப் பயன்பாட்டைப் பெறுகிறது.

**வாங்கல் திறன் பெற்றுள்ள நிறவனம் பெறும் உபரி:** இவ்வரைபடம், வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் பெறும் உபரியளவுப் பயன்பாட்டை விளக்குகிறது. இந்தியப் பருத்திக் கழகம், இந்தியாவில் விளைகின்ற பருத்தி முழுமையையும் வாங்கும் ஒரே நிறுவனம் எனக் கொண்டு வரைபடம் விளக்குவதைக் காணலாம்.

வரைபடம் -1




வாங்கல் திறன்


வரைபடம் -1இல் DP - இந்திய பருத்திக் கழகத்தின் தேவைக் கோடு. இதனையே இறுதி நிலைப் பயன்பாட்டுக் கோடாகவும் கருதலாம். SS - பருத்திக்குரிய அளிப்புக்கோடாகும். ஒரு குறிப்பிட்ட விலை மட்டத்தில், நிலையான அளிப்பைப் (பருத்தியின் அளவு) பருத்தி உற்பத்தியாளர் அளிக்கின்றனர் எனக் கொள்ளும் பொழுது, இந்தக் கோடு, சராசரி உற்பத்திச் செலவையும் இறுதி நிலை உற்பத்திச் செலவையும் விளக்குகிறது. A- என்ற புள்ளியில் இறுதிநிலைப் பயன்பாடும், இறுதிநிலைச் செலவும் சமநிலையை அடைகின்றன. MU=MC. NA - விலை மட்டத்தில், வாங்கல்- திறன் பெற்றுள்ள இந்தியப் பருத்திக் கழகம் ON - என்ற அளவு பருத்தியை வாங்குகிறது. ON - அளவு பருத்தியை வாங்குவதற்கு இந்தியப் பருத்திக் கழகம் கொடுக்கத் தயாராயிருப்பது ODAN - அளவுத் தொகையாகும். ஆனால், உண்மையில் கொடுப்பது OSAN - அளவுத் தொகையாகும். உண்மையில் கொடுக்கப்படும் தொகை குறைவாக உள்ளது. எனவே, ODAN – ONSE = DASE அளவு உபரியை வாங்கல் திறன் பெற்றுள்ள இந்தியப்

பருத்திக்கழகம் பெறுகிறது என்பதை இவ்வரைபடம் விளக்குகிறது.

**வாங்கல் திறனில் உபரி** : நிறுவனங்களின் சராசரி உற்பத்திச் செலவும், இறுதிநிலை உற்பத்திச் செலவும் அதிகரித்துச் செல்லும்பொழுது, வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் உபரி பெறும்.

பண்டங்களை உற்பத்தி செய்யும் நிறுவனத்தில் சராசரி உற்பத்திச் செலவும், இறுதிநிலை உற்பத்திச் செலவும், அதிகரித்துக்கொண்டு செல்வதாகக் கொண்டால் இத்தகைய நிலையில் வாங்கல் திறனைப் பெற்றுள்ள நிறுவனம் பெறுகின்ற உபரியை, வரைபடம் -2 விளக்குவதை அறியலாம்.

வரைபடம் -2




இறுதிநிலைச் செலவுக் கோடும் (MC), சராசரிச் செலவுக் கோடும் (AC) மேல்நோக்கிச் செல்கின்றன. அதனால் இவ்விரு செலவுகளும் அதிகரிக்கின்றன என்பதை அவை விளக்குகின்றன.

வரைபடம் -2இல் வாங்கல் திறனைப் பெற்றுள்ள நிறுவனம் OE விலையில், ON அளவுப் பண்டத்தை வாங்குகிறது. ON அளவுப் பண்டத்தை வாங்குவதற்கு நிறுவனம் கொடுக்கத் தயாராக இருக்கும் தொகை ODAN. ஆனால், ஒரு நிறுவனம் உண்மையில் கொடுக்கும் தொகை OEPN என்று அமைகிறது. எனவே, வாங்கல் திறனைப் பெற்றுள்ள நிறுவனம் பெறுகின்ற உபரி DAPE என்று அமைகிறது.


A என்ற புள்ளியில் இறுதிநிலைச்செலவும், இறுதிநிலைப் பயன்பாடும் சமநிலை அடைகின்றன. சமநிலைப் புள்ளியிலிருந்து OX அச்சை நோக்கி வரையப்படும் கோடு சராசரி செலவுக்கோட்டை P என்ற புள்ளியில் வெட்டி, OX அச்சில் (N என்ற புள்ளியில் சேர்கிறது. எனவே ON அளவுப் பண்டத்தை வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் NP விலையில் (NP=OE) வாங்குகிறது. சராசரிச் செலவுக்கோடு வாங்கல் திறன் பெற்றுள்ள நிறுவனம் தருகின்ற பண்டத்திற்கான சராசரி விலை மட்டத்தைக் குறிக்கிறது.

**விலைவேறுபாடுகாட்டும் வாங்கல் திறன்** : வாங்கல் திறன் சந்தையை இரண்டு நிலைகளில் புரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகிறது. அவை. 1. எளிய வாங்கல் திறன் சந்தை (Simple monopsony market). 2. விலை வேறுபாடு காட்டும் வாங்கல் திறன் சந்தை (Price discriminating monopsony market).

எளிய வாங்கல் திறன் சந்தையில், பண்டங்களை வாங்கும் நிறுவனமோ ஆளோ வாங்கப்படும் பண்டத்தின் அளவை நிர்ணயம் செய்து கொள்ளுவதுண்டு. அவ்வாறு நிர்ணயம் செய்வதன்மூலம் அதிக அளவு உபரிப் பயன்பாட்டை (Maximum utility surplus) அடைய முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இரண்டாம் வகை விலைவேறுபாடு காட்டும் வாங்கல் திறனாகும். இச்சந்தையில், வாங்கல் திறனைப் பெற்றுள்ள நுகர்பவரோ நிறுவனமோ வெவ்வேறு நிருணயிக்கப்பட்ட விலைகளில் வெவ்வேறு உற்பத்தியாளரிடம் பண்டங்களை வாங்க முற்படுவதுண்டு. ஒரே காலத்தில் ஒரு பண்டத்தை வெவ்வேறு உற்பத்தியாளரிடமிருந்து வெவ்வேறு விலை மட்டத்தில் வாங்குதல் விலை வேறுபாடுகாட்டும் வாங்கல் திறன் என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வாறு விலை வேறுபாடு தோற்றுவிப்பதற்குக் காரணம், உற்பத்தியாளர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவகையான உற்பத்திச் செலவு அமைவதே யாம். எடுத்துக்காட்டாக, கோதுமை உத்திரபிரதேச மாநிலத்தில் அதிகச் செலவிலும், பஞ்சாபு மாநிலத்தில் குறைந்த செலவிலும் உற்பத்தி செய்யப்படு

கிறது. இந்திய உணவுக் கழகம் கோதுமையை வாங்கும்பொழுது உத்தரபிரதேசக் கோதுமைக்கு அதிக விலையும், பஞ்சாப் கோதுமைக்குக் குறைந்த விலையும் கொடுக்கிறது. இவ்வாறு வேறுபட்ட விலை

வரைபடம்-3




வாங்கல் திறன்

மட்டத்தில் பண்டங்களை வாங்கும்பொழுது, வாங்கல்திறன் பெற்ற நிறுவனத்திற்கு அதிக அளவு நுகர்வோர் உபரிப் பயன்பாடு கிடைக்க வாய்ப்புள்ளது.

வரைபடம் 3-இல் விலை வேறுபாடு காட்டும் வாங்கல் திறன். S1 என்பது உத்தரபிரதேசக் கோதுமை அளிப்புக்கோடு. S2 என்பது பஞ்சாப், அரியானா மாநிலங்களின் கோதுமை அளிப்புக்கோடு. இவை சராசரி உற்பத்திச் செலவினை அடிப்படையாகக் கொண்டு வரையப்பட்டுள்ளன.

S1 அளிப்புக்கோடு S2 அளிப்புக் கோட்டிற்கு மேற்புறத்தில் அமைந்துள்ளது. அதாவது உத்தரப் பிரதேச மாநிலத்தில் விளையும் கோதுமையின் சராசரி உற்பத்திச் செலவை S1 அளிப்புக்கோடு விளக்குகிறது. எனவே உத்தரபிரதேசத்தில் கோதுமையின் உற்பத்திச் செலவு அதிகம் என்பது தெளிவாகிறது.

MC, உத்திரப் பிரதேசத்தில் விளையும் கோதுமையின் இறுதிநிலைச் செலவுக்கோடு MC2 பஞ்சாப், அரியானா மாநிலங்களில் விளையும் கோதுமையின் இறுதிநிலை உற்பத்திச் செலவைக் குறிக்கும்கோடு. இவ்விரண்டு (MC, MC2) இறுதிநிலை செலவுக் கோடுகளையும் இணைத்து, தொகு இறுதிநிலைச் செலவுக் கோடு AMC வரையப்பட்டுள்ளது.

கோதுமைக்குரிய தேவைக்கோடு D/MU பல்வேறு விலை மட்டத்தில் நிலவும் தேவையினளவை விளக்குகிறது. இவ்வளைகோடு இறுதி நிலைப் பயன்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறது.

E என்ற புள்ளியில் தொகு இறுதிநிலைச் செலவுக் கோடும் இறுதிநிலைப் பயன்பாட்டுக் கோடும் சந்திக்கின்றன. எனவே E என்ற புள்ளியில் சமநிலை எய்தப்படுவதாகக் கொள்ளலாம். இப்புள்ளியிலிருந்து OX அச்சைத் தொடும்வரை ஒரு செங்குத்துக்கோடு வரையும்பொழுது அக்கோடு OX அச்சில் R என்ற புள்ளியில் சந்திக்கிறது. எனவே, இந்திய உணவுக் கழகம் மூன்று மாநிலங்களிலும் வாங்கும் மொத்தம் கோதுமையின் அளவு OR என்று அமைகிறது. இக்கோடு MC கோட்டை E என்ற புள்ளியிலும், MC1 கோட்டை E1 என்ற புள்ளியிலும் வெட்டுகிறது. MC கோடு உத்தரபிரதேச மாநிலக் கோதுமையின் இறுதி நிலை உற்பத்திச் செலவைக் குறிக்கும். E1 புள்ளியிலிருந்து அச்சைத் தொடுவதற்கு ஒரு செங்குத்துக்கோடு வரைந்தால், அக்கோடு OX அச்சில் N புள்ளியில் தொடுகிறது. எனவே, ON அளவு கோதுமை உத்தரபிரதேசத்திலிருந்து வாங்கப்படுவதாகக் கொள்ளலாம்.

MC2 கோடு பஞ்சாபு, அரியானா மாநிலங்களில் விளையும் கோதுமையின் இறுதிநிலை உற்பத்திச் செலவை விளக்கும் கோடு. E என்ற புள்ளியிலிருந்து வரையப்பட்ட கோடு MC2 கோட்டை E2 புள்ளியில் வெட்டுகிறது. புள்ளி சமநிலைப் புள்ளியாகிறது. E2 என்ற புள்ளியிலிருந்து OX அச்சிற்குச் செங்குத்துக் கோடு வரையும் பொழுது அக்கோடு OX அச்சை Q புள்ளியில் சந்திக்கிறது. எனவே, OQ அளவு கோதுமை பஞ்சாபு, அரியானா மாநிலங்களிலிருந்து வாங்கப்படுவதாகக் கொண்டால், மொத்தம் வாங்கப்படும் கோதுமையின் அளவு ON+OQ=OR. இவ்வாறு வாங்கப்படும் கோதுமைக்கு வெவ்வேறு வகையான விலை மட்டம் நிருணயிக்கப்படுகிறது.

E, N செங்குத்துக்கோடு S1/AC1 கோட்டை வெட்டும் புள்ளியிலிருந்து அச்சை நோக்கி வரையப்படும் படுகிடைக்கோடு, OY அச்சில் P1 என்ற புள்ளியில் தொடுகிறது. S1/AC1 வளைகோடு உத்தரபிரதேச மாநிலத்தில் விளையும் கோதுமையின் அளிப்பை விளக்கும் கோடு. எனவே, P1 என்ற விலை மட்டத்தில் உத்தரபிரதேச மாநிலத்திலிருந்து கோதுமை ON அளவு வாங்கப்படுகிறது என அறியலாம்.

E2Q செங்குத்துக்கோடு, S2/AC2 வளைகோட்டிலிருந்து OY அச்சை நோக்கி வரையப்படும் கிடைகோடு OY அச்சில் P2 புள்ளியில் சந்திக்கிறது. S2/AC2 வளைகோடு பஞ்சாபு, அரியானா மாநிலங்களின் கோதுமைக்குரிய அளிப்புக்கோடு. எனவே OP2 விலை மட்டத்தில் OQ அளவு கோதுமை பஞ்சாபு, அரியானா மாநிலங்களிலிருந்து வாங்கப்படுகிறது.

-சு.வெ.பா, க.பு.

**துணை நூல்கள் :**

1. Ferguson, C.E., & Gould, J.P., **Micro Economic Theory**, Richard D Irwin, Inc., Homewood, Illinois, 1975.
2. Robinson, Joan, **The Economics of Imperfect Competition**, Macmillan & Co., Ltd., London, 1933.
3. Samuelson, Paul, A., **Foundations of Economic Analysis**, Harvard University Press, 1947.

**வாங்கு பணத்திற்கான பொருட்பிணைப் பொறுப்பு** : சொத்தை வாங்குவதற்கு ஒரு குறிப்பிட்ட தொகை முன் பணமாகத் தரப்பட்டிருந்தால், அந்தத் தொகை விற்பவரிடம், விற்பனைக்குள்ள சொத்துக் காக வாங்குபவர் தந்துள்ள ஓர் அச்சாரத் தொகையாகி விடுகிறது. எனவே, அந்த அச்சாரத் தொகை (Earnest Money) விற்போருடைய உரிமையிலுள்ள சொத்தின்மீது செலுத்திய முன் பணத்திற்குப் பிணை உரிமை, வாங்குவோருக்குக் கிடைக்கின்றது. எடுத்துக் காட்டாக வடிவேலு என்பவர் ஐயாதுரை என்ப வரிடம் இரண்டு ஏக்கர் நிலத்தைக் கிரய சாசனத்திற்கு வாங்க, இருதரப்பினரும் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு ஒப்புக்கொண்டு அப்படி உடன்பாடு செய்து கொண்ட நாளில் கிரயம் வாங்கிக் கொள்ள அச்சாரமாக ரூபாய் ஆயிரம் வடிவேலு ஐயாதுரையிடம் தருகிறார். அந்த ஆயிரம் முன் தொகை ஐயாதுரையின் விற்க உள்ள சொத்தின் மீது ஒட்டப்பட்டுள்ளது. அந்தத் தொகையைப் பெற்ற பிறகு, சொத்துக்காரர் சொத்தில், ஆயிரம் ரூபாய் வடிவேலு முன்பணத் தொகையை ஏற்றிவிட்டதால், அந்தத் தொகையைக் கொடுத்த வடிவேலுவுக்கு அச்சொத்தின் மீது ஒரு முன்பாத்தியப் பிணை உரிமை உண்டாக்கப்பட்டது. அந்த முன் பாத்தியப் பிணை உரிமை ஆங்கிலேயச் சட்டத்தைச் சற்றுத் தழுவி வந்த சட்டம் என்றும் கொள்ளலாம்.

இக்கொள்கை 'ஆல்சுபரி இங்கிலாந்து சட்டம்' என்ற நூலின் பாகம் XIX பக்கம் 16, 17-இல் விளக்கப்பட்டுள்ளது. விலைக்கு வாங்கிக் கொள்பவர் செய்துகொண்ட ஒப்பந்தம் அமலுக்கு வர இயலாமற் போனாலும், சொத்தை வாங்க, விற்பவரிடம் கொடுத்த முன் தொகை சொத்தின்மீது ஒரு பிணை உரிமை ஏற்படுத்தியுள்ளது என்பது இந்தக் கொள்கையாகும்.

இந்திய நாட்டில் இக்கொள்கை சட்டப்படி ஏற்றுக்கொள்ளப்பட்டது. மைய அரசின் 1882-ஆம் ஆண்டுச் சட்ட எண்.4 சொத்து மாற்றுச் சட்டத்தில் இக்கொள்கை சட்டமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மைய அரசின் 1882-ஆம் ஆண்டுச் சட்ட எண்.4 சொத்து மாற்றுச் சட்டம் பிரிவு 55-இல் ஓர் அசையாச் சொத்தை வாங்குவோரின் உரிமையும் பொறுப்பும், விற்போரின் உரிமையும் பொறுப்பும் வரையறுத்துச் சொல்லப்பட்டுள்ளன. சொத்தை வாங்குவோருக்கும் சொத்தை விற்போருக்கும் உள்ள உரிமைகளும் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டிய சட்டப்படியான சுமை அல்லது பொறுப்புகளும் சொல்லப்பட்டுள்ளன. சொத்து விற்பனை செய்வோர் சொத்துகளில் எதுவும் குறைபாடுகள் இருந்தால் அந்தக் குறைபாடுகளைச் சொத்தை வாங்குவோரிடம் சொல்லிவிட வேண்டும். வாங்குவோரின் நியாயமான கவனத்தில் புலப்படாத ஆழமான குறைபாடுகள் எதுவானாலும் அதனை வாங்குவோருக்கத் தெரிவிக்க விற்பனை செய்பவர் கடமைப்பட்டுள்ளார். விற்பவர் கையிலுள்ள சொத்துத் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் வாங்குவோரிடம் காட்ட வேண்டும். வாங்குவோருக்கு உள்ள ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்த விற்பனை செய்பவர் கடமைப்பட்டவராவார். சொத்தை வாங்குபவரும்

விற்பவரிடம் சொத்தை வாங்கத் தொகை கொடுத்து விடலாம். குறிப்பிட்ட கால எல்லையில் குறிப்பிட்ட இடத்திலுள்ள, சொத்தை விற்பனை செய்ததற்காகப் பத்திரம் எழுத, பத்திரத்தை நிறைவேற்றித் தர விற்ப வர் கடமைப்பட்டவராவார். சொத்தை வாங்கிக் கொள்ள ஒப்பந்தம் செய்து கொண்ட நாளிலிருந்து அப்போது தரப்பட்டுள்ள முன் பணத்திற்கான சொத்தின்மீது, பொருட்பிணை, வாங்குவோருக்கு அவர் செலுத்திய தொகை காரணமாக உருவாகிறது. சொத்தை வாங்குவோரிடம் ஒப்படைக்கும் நாளுக்கு முன்னுள்ள இடைக்காலத்தில் சொத்தை மிகுந்த பாதுகாப்புடன் காத்து, சொத்தையும் சொத்துக்கான பாத்தியப்பட்ட ஆவணங்களையும் வாங்குவோரி டம் ஒப்படைக்க விற்பவர் கடமைப்பட்டவராவார். வாங்குவோர், தொகை செலுத்தி விட்டால், விற் பவர், வாங்குவோரிடம் சொத்துக் குறித்து அனைத்து ஆவணங்களுயும் ஒப்படைக்கக் கடமைப்பட்டவ ராவார். சில சூழ்நிலைகளில் இதற்குச் சில விதி விலக்குகளும் உண்டு. சொத்தை வாங்குபவர் விற் பவரிடம் சொத்தை வாங்க ஒப்பந்தம் செய்த நாளில், தொகை கொடுத்திருந்தால் விற்பனை செய்பவர் சொத்தின் அனுபவத்தைத் தர மறுத்தால், வாங்கு பவர் தாம் கொடுத்த தொகைக்காகச் சொத்தின் மீது பிணை உரிமை கொண்டாட முன் உரிமை உடைய வர் ஆவார். சொத்து மாற்றுச் சட்டம்(பிரிவு 55 பத்தி 6 உட்பிரிவு 'ஆ') இந்தக் கொள்கையை வலியுறுத்திக் கூறுகிறது.

சொத்தை வாங்குபவர், சட்டப்படி நியாயமான காரணங்களால் சொத்தின் அனுபோகத்தை ஒப்புக் கொள்ளாதபோதும், வாங்குவோருக்கு இந்த உரிமை உண்டு, சொத்தை ஒப்பந்தப்படி வாங்குபவ ரிடம் விற்பவர் ஒப்புவிக்க மறுக்கிறபோதோ, இய லாதபோதோ இந்த முன் பாத்தியதையை வாங்கு பவர் சொத்தின் மீது கொண்டாடுவது ஓர் உரிமை. ஒரு வேளை சொத்தின் அனுபோகம் வாங்கு வோரிடம் ஒப்படைக்கப்பட்டு, முடிந்துவிட்டால் இக்கொள்கை அனுசரிக்க இயலாததாகும். எடுத்துக் காட்டாக ஒரு சொத்து விலை கொடுத்து வாங்கப் பட்ட பின்னர் வாங்கியவர் சொத்தில் அனு போகத்தை ஏற்றுக்கொண்ட பிறகு, வேறு ஏதோ காரணங்களால், சாசனம் செல்லாததாகிவிட்டால், அந்தச் சட்டத்தில் இந்தக் கொள்கையை அமல்படுத்த இயலாது. வார்ட்டன் சட்ட அகராதி (14-ஆம் பதிப்பு 1938-இல் பக்கம் 357-இல்) முன்னதாகச் செலுத்திய வாங்கு பணம் என்பது வாங்குபவர் குறிப்பிட்ட விற் பனையாளரின் சொத்தை, ஒப்பந்தப்படி வாங்கு பவர் விற்பனையாளரைச் சாசன ஒப்பந்தத்திற்குள் கட்டுப்படுத்த அளிக்கப்படும் தொகை என்று விளக் கம் தருகிறது. இந்தத் தொகை, சாசன ஒப்பந்தத்தைச் செயற்படுத்த உத்தரவாதமானது என்பது பொருள். மேற்கொண்டு சாசன நடவடிக்கை நடந்தால், அந்தத் தொகை வாங்குதொகையின் ஓர் அமிசமாகிறது. இதில் இன்னொரு சட்ட உண்மையையும் கருத்தில் கொள்ள வேண்டும். வாங்குபவர் சாசனத்தை அம லாக்க முன் வராவிட்டால், வாங்குபவர் இத் தொகையை இழந்துவிடுவார். நீதிபதி போவோன் விசாரித்த 'கோ (எ) சுமித்து' வழக்கின் (1884 - 53 சட்ட இதழ் 1055 (1059) வழக்கு) தீர்ப்புரை சொல்வதாவது- சட்டக் காரணமின்றிச் சொத்தை வாங்குபவர் தாம் வாங்குவதற்கான ஒப்பந்தத்தை மீறினால், அதற்குச் செலுத்திய தொகையையும் திரும்பப் பெற விரும் பினால், அந்த உரிமை இவருக்குச் சட்டப்படி கிடைக்காது. ஆனால், வாங்குபவர் ஒப்பந்தத்தை ஏற்று நடக்க முன்வரும்போது, விற்பவர் ஒப்பந் தத்தை முறிக்கக் காரணமானால், வாங்குபவர் செலுத் திய முன்பணத்தை இழக்கமாட்டார். இந்த முன் பணம் செலுத்தப்பட்டதற்குக் குறிப்பிட்ட சொத்தில் வாங்குபவர் பிணை உரிமைக்கு அருகதை உடையவர் ஆவார்.

1929 -ஆம் ஆண்டுக்கு முன்னர், வாங்குபவர் முன்னதாகச் செலுத்திய வாங்கு பணத்திற்கான பொருட் பிணைப் பொறுப்பு, அடுத்துக் கிரயச் சாசனம் வாங்கியவருக்கு முற்றிலும் தெரியாமல் நியாயமாக வாங்கியிருந்தால், அவரை இந்தப் பொருட்பிணை கட்டுப்படுத்தாது என்ற நிலை இருந்தது. இந்தப்பகுதி 1929 -ஆம் ஆண்டுச் சட்டத் தில் திருத்தம் செய்யப்பட்டு, இந்தப் பொருட் பிணை தெரியாமல் வாங்கியிருந்தாலும், அவரைக் கட்டுப்படுத்தும் என இந்தியச் சட்டம் திருத்தம் செய்யப்பட்டது. முன்னதாகச் செலுத்திய வாங்கு பணத்திற்கான பொருட் பொறுப்பின்படி வாங்கு வோருக்குச் சொத்தின்மீது ஒரு பாத்தியதை உரு வானதாக ஒரு தீர்ப்பில் அப்போதிருந்த அரசரின் தனிப்பட்ட ஆயம் (Privy Council) தீர்ப்புச் செய்தது. (1926 பி.சி.94 (96) ஏ.ஐ.ஆர். 3-இல் தீர்ப்பு). ஆனால், அந்தத் தீர்ப்பாணை டி.பி.ஆக்ட்டு பிரிவு 54-இல்

கடைசிப்பத்திப் படியும், 1908 பதிவுச் சட்டம் பிரிவு 17 (2) கீழ்த் தரப்பட்டுள்ள விளக்கப் படியும் மேலே சொல்லப்பட்டுள்ள தீர்ப்பு நடைமுறைச் சட்டமாகத் தொடரவில்லை. (1962) 1962 கேரள எல்.டி.728 (730)-இல் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்புரையும் 1916 சட்டம் 61 ஏ.ஐ.ஆர்.வி 3-இல் வெளியிடப்பட்டுள்ள தீர்ப்பும். "சொத்தின் மீது பிணை என்பது வேறு, சொத்தில் பாத்தியதை என்பது வேறு" என்ற கொள்கையை அமல்படுத்தியுள்ளன. இந்தப் பொருட்பிணை வாங்குவோர் வழக்குத் தொடுக்கக் கால எல்லை, கால எல்லைச் சட்டப் பிரிவு 62 (1963) சட்டப்படியும் 1908 கால எல்லைச் சட்டம் 132 பிரிவுக்கு ஒப்பான சட்டப்படியும் கால எல்லை தீர்மானிக்கப்படுகிறது. வாங்குவோர் கொடுத்த முன்பணத்திற்குச் சொத்தின் பிணையத்தைக் காட்டாமல் விற்பவர் தரவேண்டியதற்கு விற்பனையாளர் மீது தனித்தும் வழக்குத் தொடரலாம், அல்லது பொருட்பிணையில் வழக்குத் தொடுக்க உரிமை உடையவர் ஆவார். இசுடிக் பாண்டு (எ) சான் என்ற வழக்கில் வாங்குபவர் எந்தச் சொத்துக்கு முன் தொகை கொடுத்திருக்கிறாரோ, அந்தச் சொத்து முழுதும் அழிந்து போய்விட்டால் அல்லது அப்படி ஒரு சொத்தே இல்லாது போய் விட்டால் விற்பவரிடம் ஏதும் முன்பிணை உரிமை பாத்தியதை வாங்குவோருக்குக் கிடைக்காது. சொத்தே இல்லாதபோது, பிணை எப்படி வரும்? வாங்கு தொகையினைத் திரும்பப் பெறத் தனிப்பட்ட முறையில், விற்போர் சொந்தப் பொறுப்பில் அவர் மீது வழக்குத் தொடர இயலும். இந்தப் பிணை உரிமை சொத்தில் வாங்குபவருக்கு உள்ளபோதிலும், தனிப்பட்ட முறையில் கொடுத்த பணத்திற்குத் தாவா செய்யவும், வாங்குபவருக்கு உரிமை உண்டு. வாங்குபவர் கொடுத்த பணத்திற்குச் சொத்தைப் பிணைக்கும் உரிமை சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது.

-ப.சு.

**வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் :** இரண்டாம் உலகப் பெரும் போரும், தொழிற் புரட்சியும், தொழிற் சாலைகளில் பெருக்கமும், நாட்டுப்புற வாழ்க்கையிலிருந்து நகர்ப்புற வாழ்க்கைக்குப் புதிய மாற்றத்தை விளைவித்தன. அதன் விளைவாக நகர்ப்புறங்களில் மக்கள் பெருக்கம் விரைவாக ஏற்பட்டது. நகர்ப்புறங்களில் மக்கள் பெருக்கத்தாலும் குடியிருப்பு வசதி போதுமான அளவுக்குப் பெருகாததாலும் குடியிருப்போருக்கு நியாயமான வாடகைக்குக் குடியிருக்க வீடுகள் கிடைக்கவில்லை. தொழிற்சாலைகளும் நிலையாக ஓரிடத்தில் இயங்குவதில் பெரும் இடர்ப்பாடுகள் ஏற்பட்டன.

நகர்ப்புற வாழ்க்கையை ஏற்றுக் கொண்டவர்கள் குடியிருக்கும் வீடுகளின் வாடகை எல்லை மீறி உயர்ந்தது. நியாயமான காரணங்களில்லாமல் பலர் குடியிருக்கும் வீட்டை அடிக்கடி காலி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. குடியிருப்போருக்குக் குடியிருக்கும் வீட்டில் தொடர்ந்து இருக்கும் நிலையில்லை. இந்தக் கவலையிலிருந்து குடியிருப்போர் பாதுகாக்கப்பட மாநிலங்கள் தேவையான சட்டங்கள் இயற்ற வேண்டிய இன்றியமையாமையை இந்திய உச்சநீதி மன்றம் (1974 (1) எசு.சி.சி. 242 (பக்கம் - 248 -இல்) தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

முதன்முதலாக 1941-ஆம் ஆண்டு உலகப்போர் நடந்த காலத்தில் வாடகையைக் கட்டுப்படுத்தி, காரணமில்லாமல் குடியிருப்போரை வெளியேற்றாமல் இருக்க அரசாங்கம் கட்டளைகளைப் பிறப்பித்தது. அந்தக் கட்டளைகள் அப்போதைக்கப்போது புதுப்பிக்கப்பட்டு வந்தன. இறுதியாக 1946-ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் வாடகைக் கட்டுப்பாட்டுச்சட்டத்தை இயற்றியது. அச்சட்டம் 1946-ஆம் ஆண்டு அக்டோபர் முதல் நாளிலிருந்து அமலுக்கு வந்தது. இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே அமலில் இருக்க அச்சட்டம் பிறப்பிக்கப்பட்டபோதிலும், அப்போதைக்கப்போது புதுப்பிக்கப்[illegible] வந்தது. மீண்டும், 1949(?)-ஆம் ஆண்டு சென்[illegible] நிலச் சட்டம் எண் 25 சட்டமாக இயற்றப்[illegible] 51-ஆம் ஆண்டு செப்டம்பர் 30-ஆம் நாள் அம[illegible]ந்தது. இறுதியாக. 1960-ஆம் ஆண்டுச் சட்ட[illegible] தன்னிறைவு பெற்ற சட்டமாகும், வாடகை[illegible] குடியிருப்போர் கட்டடச் சொந்தகாரருக்குச் [illegible]த்த வேண்டிய வாடகைகள் இச்சட்டத்தால் மு[illegible]தும் வரையறுக்கப்பட்டுள்ளன.

இச்சட்டம் மனித அடிப்படை உரிமை[illegible] பாதிக்கக் கூடியதாக அமைந்துள்ளதாகவும், இ[illegible] அரசியற் சட்டப்படி செல்லத் தக்கதன்று என்றும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. சீனிவாச

ஐயங்கார் என்பவருக்கும் தமிழக அரசுக்கும் இடையே நடைபெற்ற வழக்கை நீதிமன்றம் விசாரணை செய்த இச்சட்டம் இந்திய அரசியற் சட்ட வாழ்க்கை அடிப்படை உரிமையை எவ்வகையிலும் பாதிக்கவில்லை என்றும், சட்டம் முழுதும் செல்லத் தக்கது என்றும் கூறப்பட்ட தீர்ப்புரை 1971 (ஐ) எம்.எல்.செ. 502 இதழ் பக்கம் 504-இல் வெளியாகி யுள்ளது. தொடர்ந்து தொடரப்பட்ட பல வழக்கு களிலும், குறிப்பாக இராவல் அண்டு கோவுக்கும் ராமச்சந்திரனுக்கும் (1966-2-எம்.எல்.செ.68.பக்கம்-86) நடந்த வழக்கிலும் சென்னைத் துணி வணிகர் அறக் கட்டளைக்கும் முல்சந்து குப்தாவுக்கும் (1966 2 எம்.எல். செ. 533 , பக்கம் - 534) நடந்த வழக்கிலும், வேங்கடாசலம் என்பவருக்கும் கபாலமூர்த்திப் பிள்ளை என்பவருக்கும் (ஏ.ஐ.ஆர்.1955 சென்னை 350, பக்கம்-359) நடந்த வழக்கிலும் தமிழக அரசு இயற்றிய 1960-ஆம் ஆண்டு வாடகைச் சட்டம் இந்திய அரசியற் சட்ட வாழ்க்கை அடிப்படை உரிமைகட்கு முரண்பட்டதன்று என்றும், அச்சட்டம் செல்லத் தக்கது என்றும் தீர்ப்புக் கூறப்பட்டது.

இச்சட்டம் வளர்ந்து வரும் நகர்ப்புற வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதது. இச்சட்டம் வாடகைக்கு விடும் முறையை ஒழுங்குபடுத்துகிறது. நியாயமான வாடகையை வாடகைக் கட்டுப்பாட்டுத் தீர்ப்பாயம் மூலமாக முடிவு செய்ய வகை செய்கிறது. குடியிருப் போரை அடிக்கடி காலி செய்ய அச்சுறுத்தும் நிலை நீக்கப்பட்டுக் குடியிருப்போரைக் காலி செய்ய நியாயமான காரணங்கள் வகுக்கப்பட்டுள்ளன. அக் காரணங்களின்றிக் காலி செய்யச் சொல்ல கட்டட உரிமையாளருக்கு உரிமை இல்லை. வாடகைக்கு விடப்பட்ட கட்டடத்தைக் காலி செய்ய, சில கட்டுப் பாடுகள் இச்சட்டப் பிரிவு 10-இல் கூறப்பட்டுள்ளன. அரசாங்கத்திற்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தால் பிரிவு 10, 14 பொருந்தா. வாடகைக்கு இருப்போர் நியாயமான காரணமில்லாமல் கட்டடத்தை வாட கைக்கு விட்டவர் உரிமையை மறுத்தால் வாட கைக்கு இருப்போரைக் காலி செய்யச் சட்டம் அனு மதிக்கிறது. வேண்டுமென்றே வாடகை கொடுக்க வேண்டிய நாளுக்குள் கொடுக்கத் தவறினாலோ வாடகைக்கு விடப்பட்ட கட்டடத்தை வாடகைக்கு விடப்பட்ட காரியத்தை விட்டு வாடகைக்கு இருப் போர் வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தினாலோ வாடகைக்கு இருப்போர் கட்டடத்தைச் சேதப் படுத்தினாலோ, குடியிருப்போர் சட்டத்திற்கு விரோதமான அல்லது கெட்ட நடத்தையுள்ள செயல் களுக்கு வாடகைக் கட்டடத்தைப் பயன்படுத்தித் தண்டனை பெற்றிருந்தாலோ, ஒரே கட்டடத்தில் குடியிருக்கும் பிற குடியிருப்போர்களுக்குத் தொல்லை விளைவித்தாலோ, மலைப்பகுதி யல்லாத பகுதிகளில் வாடகைக்கு இருப்பவர் நான்கு மாதங்களுக்குத் தொடர்ந்து கட்டடத்தை அனு போகம் செய்யத் தவறினாலோ, கட்டடச் சொந்தக் காரருக்கு அந்நகரில் வாடகைக்கு விடப்பட்ட கட்டடத்தையல்லாமல் வேறு கட்டடம் சொந்தத்தில் இல்லாவிட்டாலோ, வாடகைக்கு விடப்பட்ட கட்ட டம் கட்டட உரிமையாளரின் சொந்த உபயோகத்திற் குத் தேவைப்பட்டாலோ, வாடகைக்குக் குடியிருக் கும் வாடகை செலுத்துவோரை வாடகைக் கட்டுப் பாட்டு அலுவலர் முன் மனு கொடுத்து, விசாரணை செய்து காலி செய்து கட்டடத்தைக் கையகப்படுத்த வாடகைக்கு விட்டவர்க்கு உரிமையுண்டு.

சில சூழ்நிலைகளில் நகர்ப்புறங்களில் கட்டடம் இல்லாத காலியிடங்களைக் குத்தகைக்கு விடுவ துண்டு. கட்டடம் ஏதும் இல்லாத காலியிடம் வாட கைக்கு விடப்பட்டிருந்தால் காலியிடத்திற்குத் தமிழக அரசு வாடகைக் கட்டுப்பாடு சட்டம் (சட்ட எண்.18 -1960) பொருந்தாது என நீதிமன்றங்கள் தீர்ப்பு அளித்துள்ளன. இந்திய உச்ச நீதி மன்றத்தால் சே.ஆர்.சேத்தி என்பாருக்கும் ஆர்.பி.பி.டி.செயின் என்பாருக்கும் நடந்த வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பில் (1972(2) எசு.சி.சி. 613 பக்கம் 615) அந்தச் சட்ட நெறி விளக்கப்பட்டுள்ளது. அதே கருத்தைத் தமிழக உயர்நீதி மன்றம் கண்ணன் என்பாருக்கும், முத்தையா செட்டியாருக்கும் நடந்த வழக்கில் 1968 (2) எம்.எல்.செ. 631 பக்கம் 633-இல் கூறியுள்ளது. ஒரு காலிமனை சுற்றுச் சுவர், கழிவறையுடன் அமைந் துள்ளதுகூட வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் பிரிவு 2-இன்படி கட்டடம் ஆகாது என 1955 (1) எம்.எல்.செ. பக்கம் 22-இல் கூறப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட காலிமனைகளை வாடகை கொடுப்போரிடமிருந்து மீட்க உரிமையியல் நீதி மன்றங்களில் வழக்குத் தொடர உரிமை உண்டு, என்ற உண்மையைத் தமிழக உயர்நீதிமன்றம் 1971(1) எம்.எல்.செ.266, பக்கம் 268 - இல் கூறியுள்ளது. குடிசை வீடுகளுக்கும் கூட வாட கைக் கட்டுப்பாட்டுச் சட்டம் பொருந்தும் என்ற சட்ட நியதியினை இராணி என்பாருக்கும் சிதம்பரம்

செட்டியாருக்கும் நடைபெற்ற வழக்கில் *(1952) (2) எம்.எல்.சே.221 பக்கம். 236)* தமிழக உயர்நீதிமன்றம் கூறியுள்ளது.

ஒரு முழுக் கட்டடத்தில் ஒரு பகுதி வாடகைக்கு விடப்பட்டிருந்தாலும் அந்தப் பகுதி கீற்று வேயப் பட்ட பகுதியாக இருந்தாலும் வாடகைக் கட்டுப் பாட்டுச் சட்டம் பொருந்தும். இப்போது சென்னை போன்ற நகரங்களில் அடுக்குமாடிக் கட்டடங்கள் வந்துள்ளன. ஒரு பெரிய கட்டடத்தின் ஒரு பகுதி தனி யாகப் பெறப்பட்டு அனுபோகம் செய்யப்படுகிறது. அந்தத் தனிப்பகுதிகள் வாடகைக்கு விடப்பட்டால் அவற்றையும் கட்டடமாக வாடகைக் கட்டுப்பாட் டுச் சட்டப் பிரிவு 2-இன்படி கருத வேண்டும் என *1966(1) எம்.எல்.செ.342 பக்கம் 344*-இல் கூறப்பட் டுள்ளது.

ஒரு கட்டடத்தின் சொந்தக்காரர் தமக்குப் பயன் படாத இடம் காலியாக இருந்தால் அல்லது கட்ட டம் வாடகைக்குக் கொடுக்கப்பட்டு வாடகைக்கு அனுபவித்தவர் கட்டடத்தைக் காலி செய்து விட்டால் அல்லது வாடகைக்கு அனுபவித்தவரின் வாடகைக் காலம் முடிந்து காலம் முடிந்து விட்டால் வேறு ஏதாவது சட்டப்படி கட்டடம் தேவைப்பட்டு அந்தத் தேவை நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தால் ஏழு நாள்களுக்குள் அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற அதிகாரிக்குக் கட்டடம் காலியான செய்தியை எழுத்து மூலம் தெரிவித்திட வேண்டும். அதேபோல ஒரு கட்டடத்தில் வாடகைக்கு இருப்பவர் வாடகைக் கால எல்லை முடிந்தாலோ, கட்டடத்தைக் காலி செய்து விட்டாலோ, அந்த நிகழ்ச்சியிலிருந்து ஏழு நாள்களுக்குள் அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற அதிகாரியிடம் கட்டடம் காலியானது தொடர்பான தகவலைத் தந்திட வேண்டும்.

மேலே கண்டபடி அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்ற அதிகாரிக்குத் தகவல் தரப்பட்டுத் தகவல் தந்ததி லிருந்து பத்து நாள்களுக்குள் தொடர்புடைய கட்டடம் மத்திய அல்லது மாநில அரசு அல்லது உள் ளாட்சித் துறைக்கு அல்லது அரசு அதிகாரிகள் பயன் பாட்டிற்குத் தேவைப்படுவதாகத் தகவல் ஏதும் எழுத்து மூலம் ஒப்புதல் பெற்ற அதிகாரியிடமிருந்து வராவிட்டால் கட்டடச் சொந்தக்காரர் தாமே அனு பவிக்கவோ வாடகைக்கு விடவோ உரிமை உடை யவர் ஆவார். ஆனால் 10 நாள்களுக்குள் கட்டடச் சொந்தக்காரருக்கு அந்த உரிமை இல்லை. இந்தக் கட்டடக் கட்டுப்பாடு குடியிருப்பு வீடுகளாயின் மாத வாடகை ரூபாய் இருபத்தைந்துக்குள் இருப் பின் அக்கட்டடங்களுக்கும், குடியிருப்பு அல்லாத கட்டடங்களுக்கும் அதன் வாடகை மாதம் ரூபாய் ஐம்பதுக்குள் இருப்பின் அக்கட்டடங்களுக்கும் பொருந்தாது. அதேபோலச் சில நிபந்தனைகளுக் குட்பட்டு ஒரு கட்டடத்தில் ஒரு பகுதியில் மட்டும் உரிமையாளர் குடியிருக்கும் கட்டடத்தில் மறுபகுதி வாடகைக்கு விடப்பட்டு வாடகைதாரர் காலி செய்தால் பிரிக்க முடியாத கட்டடத்தைப் பொறுத்த வரை மேற்கண்ட சட்ட விதியில் விலக்கு அளிக்கப் பட்டுள்ளது.

மேற்கண்ட சட்ட நெறிப்படி வாடகைக் கட்டுப் பாட்டுச் சட்டத்திற்குள் சிக்கிக் கொண்ட கட்டடங் களை மீட்பது மிக அரிதாக இருந்தது. எனவே, 1973-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டம் 23, பிரிவு 5-இன்படி வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத் தில் பிரிவு 3 (அ) என்ற பகுதிகள் புதிதாகச் சேர்க்கப் பட்டன.

புதிதாக 1973-ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட சட்டப்படி ஒரு கட்டடச் சொந்தக்காரர் குடியிருப்பு வீடுகளைத் தம் சொந்தப் பயன்பாட்டிற்கு அல்லது தம் குடும்பத்தைச் சார்ந்தவர்களின் சொந்தப் பயன் பாட்டிற்குக் கேட்டும் மீட்க உரிமை உண்டு. அவ ருக்கு அந்தக் கட்டடம் உள்ள நகரத்தில் வேறு குடி யிருப்பு வீடு இருப்பின் அவருக்கு இந்த உதவி கிடைக்காது. அதேபோன்று, குடியிருப்பு அல்லாத கட்டடங்களுக்கு அதே நிபந்தனைப்படி உதவி பெறக் கட்டட உரிமையாளருக்கு உரிமையுண்டு. அதே போன்று பேருந்து மகிழ்வுந்து போன்ற வண்டிகள் பயன்படுத்தக் கட்டட மீட்பு உரிமையும் கட்டட உரிமையாளருக்கு உண்டு. மடம், அறநிலையங்கள், சமய நிறுவனங்கள், கல்வி நிலையம் போன்றவை தம் கட்டடங்களை மீட்பதற்கு உரிமை இந்தத் திருத்தச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளது. அதிகாரம் பெற்ற அலுவலரிடம் மனு தந்து மேற்கண்ட உரிமை களைக் கட்டட உரிமையாளர் பெறலாம்.

வாடகைக்கு அனுபவிப்பவருக்குக் கட்டட உரிமையாளரின் முகவரி சரியாகத் தெரியாம லிருந்தாலோ கட்டட உரிமையில் யாருக்கு வாடகை வாங்க உரிமை உண்டு எனத் தகராறு நேர்ந்தாலோ

அந்தக் கட்டடத்தின் வாடகைத் தொகையை வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரியிடம் வாடகை கொடுப்பவர் செலுத்திடலாம். வாடகை பெற உரிமை உள்ளவர்கள் மனுச் செய்து வாடகையைப் பெற்றிடலாம். அதிகாரிக்கு ஐயம் நேரிட்டால் நீதி மன்றத்தால் யார் வாடகை வாங்க உரிமையுள்ளவர் எனத் தீர்ப்பு அளிக்கப்பட்டு நீதி மன்றத் தீர்ப்புப்படி வாடகையை உரியவர் பெற்றிடலாம்.

வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் பிரிவு 11 என்பது கட்டட உரிமையாளர்கட்கு ஓர் அருட் கொடை எனலாம். கட்டட உரிமையாளர் வாட கைக்குக் குடியிருப்போர் மீது பிரிவு 10-இன் கீழ்க் கட்டடத்தைக் காலி செய்து பயன்பாட்டு உரிமை பெற மனு தரப்பட்டு அந்த மனு வாடகைக் கட்டுப் பாட்டு அதிகாரியின் விசாரணையில் உள்ள போது வாடகைக்குக் கட்டடத்தை அனுபவிப்பவர் தம் வாடகை நிலுவை முழுவதும் அதிகாரி குறிப்பிட் டுள்ள கால எல்லைக்குள் கட்டித் தீர்த்திட வேண்டும். இல்லை என்றால் வாடகை நிலுவை உள்ள வாடகை செலுத்துபவர் கட்டட உரிமையாளர் காலி செய்யக் கொடுத்துள்ள மனுவை எதிர்த்து எதிரி வாதிடும் உரிமையை இழந்திடுவார். வாடகை நிலுவையை அதிகாரி குறிப்பிட்டுள்ள முறைப்படி கட்டத் தவறி னால் மேற்கொண்டு அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு வாடகை கொடுப்போர் கட்டடத் தைக் காலி செய்து கட்டட உரிமையாளரிடம் அனு போகத்தை ஒப்படைக்க வேண்டி உத்தரவு பிறப்பித் திடுவார். இந்த விதி முறை, மேல் முறையீட்டு மனுக்கள் விசாரணைக்கும் பொருந்தும்.

கட்டடங்களைப் பழுது பார்க்க நேரிடும்போது, பழுது பார்ப்பதற்காக வாடகைக்கு உள்ளவரைக் காலி செய்திட வழிவகை சட்டத்தில் கூறப்பட் டுள்ளது. கட்டடம் பழுதுபார்க்கப்பட்ட பின்னர், வாடகைக்குக் குடியிருந்த அதே ஆள் குடியிருக்க உரிமை உடையவராவார். அதே மாதிரி கட்டடத்தை முழுவதும் இடித்திட வாடகைக்குக் குடியிருப்பவர் காலி செய்தாக வேண்டும். ஆனால், குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் கட்டடம் இடிக்கப்படாவிடில் வாடகைக்கு இருப்பவர் அனுபோகம் கேட்டிட உரிமை உண்டு.

பல சூழ்நிலைகளில் கட்டட உரிமையாளர்கள் வாடகைக்கு இருப்போரிடமிருந்து அதிக வாடகை பெறக் குடியிருப்போர் அனுபவிக்கும் வசதிகளில் தடை ஏற்படுத்துவதுண்டு. அந்தத் தொல்லை களிலிருந்து வாடகைக்கு இருப்போரைக் காக்கச் சட்டம் துணை செய்கிறது. குழாய்த் தண்ணீரைத் தடுப்பது அல்லது மின்சாரத்தைத் துண்டிப்பது போன்ற தொல்லைகளைக் கட்டட உரிமையாளர் கள் கடைப்பிடித்து வாடகையை உயர்த்த முனைப் பாக இருப்பதுண்டு. பிரிவு 17-இன்படி வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் வாடகைதாரர்களின் வசதிகளில் கட்டட உரிமையாளர் தலையிடாமல் பாதுகாக்கிறது. இழந்த வசதிகளை மீட்டுத்தர இப் பிரிவு வாடகை கொடுப்போருக்குத் துணை செய் கிறது. குடியிருப்புக் கட்டடங்களைக் குடியிருப்பு அல்லாத கட்டடங்களாக மாற்ற வேண்டினால் அதற்கு வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் எழுத்து மூலமான அனுமதி வேண்டும்.

இன்றியமையாதனவும் மிகத் தேவையானவை யுமாகிய கட்டடப் பழுதுகளை நீக்கித்தரக் கட்டட உரிமையாளர் கடமைப்பட்டவராவார். கட்டடத்தை வேண்டுமென்றே பழுதாக்கிக் கட்டடத்தைப் பயன் படுத்துவதை இடுக்கண் விளைவிக்கும் என்ற நிலைக்கு உள்ளாக்கிக் கட்டடத்திலிருந்து குடியிருப் போரைக் காலி செய்ய வழி காணும் கட்டட உரிமை யாளர்களிடமிருந்து வாடகை கொடுப்போர் பாது காக்கப்படச் சட்டம் வழி முறை வகுத்துள்ளது. வாடகைக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆணை யினாலோ, அதிகாரம் பெற்ற அலுவலர் ஆணையின் பேரிலோ, வாடகைக்குக் குடியிருப்போர் கட்ட டத்தைப் பழுது பார்த்து வாடகையில் கழித்துக் கொள்ளச் சட்டம் அனுமதிக்கிறது. அந்தப் பழுது பார்க்கும் செலவு ஆண்டு வாடகையில் 12-இல் ஒரு பங்குக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**வாணிகக் கூட்டுறவுக் குழு :** மனித உடலுக்கு இரத்தம் எவ்வளவு முக்கியமோ அந்த அளவு தொழிலுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். அவ்வாறு நிதி வழங்கக்கூடிய கழகங்களில் முக்கியமானதொன்று வாணிக அலகுப் பொறுப் புரிமை நிறுவனமாகும். அதைப் பற்றி அறிந்து

கொள்வதற்கு முன்னர், முதலீட்டுப் பொறுப்புரிமைகள் (Investment Tursts) பற்றித் தெரிந்து கொள்வது இன்றியமையாததாகும். முதலீட்டுப் பொறுப்புரிமை என்பது ஒரு நிதிக் கழகமாகும். பல நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்வதற்காக மக்களின் சேமிப்பை அது திரட்டுகிறது. அச் சேமிப்பு பலவகை நிறுவனங்களில் முதலீடு செய்யப்படுவதால் சில இடையூறுகளும் இடர்ப்பாடுகளும் தோன்றுவது இயல்பு. ஒரு நிறுவனத்தின் முதலீட்டிற்கு வருவாய் குறைந்துவிட்டால் மற்ற நிறுவனத்திலிருந்து பெறப்படும் வருவாயிலிருந்து அது சரிக்கட்டப்படுகிறது.

அக் கழகத்தின் நோக்கம் நல்ல முறையில் முதலீடு செய்து அதிக வருவாய் பெறுவது ஆகும். பிற நிறுவனங்களின் மேலாண்மையில் பங்கு பெறும் நோக்கம் அதற்கில்லை. எனவே, தன் பங்குகளையும், கடனீட்டு ஆவணங்களையும் வெளியிட வேண்டிய நடைமுறை முதலைப் (Capital) பெற்றிட அது முயல்கிறது. அம் முதலைக் கொண்டு, பல்வேறு நிறுவனங்களின் பங்குகளையும், கடனீட்டு ஆவணங்களையும் அது வாங்குகிறது. அவற்றிலிருந்து வரும் பங்காதாயம், வட்டி போன்ற வருவாய்களில் நிருவாகச் செலவைக் கழித்து விட்டு மீதமுள்ள வருவாயைத் தன் பங்குதாரர்களுக்கு வழங்குகிறது. எனவே, அந் நிதிக்கழகத்தின் வெற்றி முதலீடுகளைத் தேர்ந்தெடுப்பவர்களின் நாணயத்தையும், நன்னடத்தையையும் பொறுத்துள்ளது. அப்பொறுப்புரிமைகளை மேலாண்மைப் பொறுப்புரிமைகள் (Management Trusts) அல்லது அலகுப் பொறுப்புரிமைகள் (Fixed or Unit Trusts) என இருவகைகளாகப் பிரிக்கலாம்.

**மேலாண்மைப் பொறுப்புரிமைகள்** : இவை நிறுவனச் சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்படுகின்றன. இவை நிறுவனப் பங்குகளிலும், கடனீட்டு ஆவணங்களிலும், அரசினர் ஆவணங்களிலும் தங்கள் பணத்தை முதலீடு செய்கின்றன. இதன் நிருவாகத்தை ஏற்றிடும் இயக்குநரை, முதலீட்டுக் கொள்கையை முடிவு செய்கிறது. முதலீட்டு வகையைத் தேர்ந்தெடுப்பதற்கும், தேவையானால் அதன் பட்டியலை மாற்றுவதற்கும் அதிகாரம் அதற்குண்டு.

**நன்மைகள்** : பல நிறுவனங்களில் முதலீடு செய்வதால் இழப்பு அச்சம் தவிர்க்கப்படுகிறது. நல்ல வருமானம் கிடைக்கிறது. இலாபம் மறுபடியும் முதலாக்கப்பட்டு வருமானம் பெருக்கப்படுகிறது. இதன் மேலாண்மை, பங்குதாரர்களின் நலனைப் பாதுகாக்கிறது. இதன் பங்கு ஒன்று, பல நிறுவனங்களின் பங்குகளில் ஒரு பகுதியாக இருக்கிறது. மேலும் நல்ல பங்குகளின் முதலீடு செய்து முதலீட்டாளர்களை இது உற்சாகப்படுத்துகிறது. இவ்வாறு தனிப்பட்டவர்களின் சேமிப்பைத் திரட்டி தேசியத் தொழில் வளர்ச்சிக்குப் பயன்படுத்த இக்கழகம் உதவுகிறது.

**நிலை அல்லது அலகுப் பொறுப்புரிமை**: இக்கழகம் அறுதியிட்டுப் பட்டியலில் கூறப்பட்ட பங்குகளில் முதலீடு செய்கிறது. இயக்குநர்கள் தங்கள் விருப்பம் போல் பட்டியலை மாற்ற முடியாது. அவ்வாறு வாங்கப்பட்ட பங்குச் சான்றுகள் (Shares) நம்பிக்கையாளர் குழுவிடம் தரப்படும். அக்குழு முதலீட்டார்களுக்கு அவற்றை வழங்கும். அவ்வாறு வாங்கப்பட்ட பங்குகளின் தொகுப்பு, அலகு (Unit) எனப்படும். அவ்வலகு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுப் பொதுமக்களுக்கு விற்கப்படுகின்றன. முதலீடு மீது வரும் வருவாய் அலகு வாங்கியவர்களுக்குப் பிரித்துத் தரப்படுகிறது. அலகு வாங்கியவர்கள் வேண்டும்போது அலகை அன்றைய விலையில் பொறுப்புரிமைக் கழகத்திற்கு விற்றிடலாம்.

**நன்மைகள்** : *1.* முதலீடு செய்வோர்களின் முதல் பல்வேறு பங்குகளில் முதலீடு செய்யப்படுவதால் வருமானம் பெருகுகிறது. 2. முதலீட்டாளர், தங்கள் பணம் எங்கு முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதை அதாவது மாறாப் பிணையமுள்ள ஆவணங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிந்து கொள்கிறார்கள். 3. எல்லாம் வெளிப்படையாகவே நடைபெறுவதால் ஊக வணிகம், இயக்குநர்கள் செய்திடும் ஊழல், மேலாண்மை செய்திடும் தவறு போன்றவற்றால் ஏற்படக்கூடிய இழப்பு அச்சம் இல்லை. 4. துணை அலகின் (Sub-unit) விலை குறைவாக இருப்பதால் சிறிய அளவு முதலீடு செய்வோர்களுக்கு மிகவும் ஊக்கமளிக்கிறது.

**தீமைகள்** : இக்கழகம் பலவகைத் தொழில்களின் ஆவணங்களில் முதலீடு செய்ய முடியாது. பங்குகளின் பட்டியலை அடிக்கடி மாற்ற இயலாது. துணை அலகுகளை விற்க அதிகமான தொகையைக்

கழிவாகத் தரவேண்டும். விருப்பம் போல் மாற்றிடும் நெகிழ்ச்சி இதற்கில்லை. எனவே, பெரிய அளவு இழப்பு ஏற்பட வாய்ப்புண்டு.

மாறும் பொறுப்புரிமைக் கழகம் : இதுவும் மற்ற முதலீட்டுப் பொறுப்புரிமைக் கழகங்களைப் போல் இயங்கி வருகிறது. ஆனால் மேலாண்மைக்கு முதலீடு செய்யும் பங்குகளை மாற்ற உரிமை உண்டு. மாறும் பொறுப்புரிமைக் கழகத்தில் (Flexible Trust) முதலீட்டுப் பங்குகளின் பட்டியல் இருந்தாலும் முதலீட்டுக் கோட்பாட்டை மாற்றும் உரிமை இதற்குத் தரப்பட்டுள்ளது. இத்தகைய பொறுப்புரிமைக் கழகங்களுக்கு இந்திய நாட்டில் முக்கியத்துவம் தரப்படுவதில்லை.

இந்திய அலகுப் பொறுப்புரிமை நிறுவனம் அல்லது கழகம் : இந்திய அலகுப்பொறுப்புரிமை நிறுவனச் சட்டப்படி (1963) இந்திய அலகுப் பொறுப்புரிமை நிறுவனம் (Unit Trust of India) தொடங்கப்பட்டது. இது 1964-ஆம் ஆண்டு பிப்பிரவரி முதல் நாளிலிருந்து தன் தொழிலைத் தொடங்கியது. தன் அலகுகளை 1964-ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் நாளிலிருந்து விற்கத் தொடங்கியது. இங்கிலாந்து நாட்டிலுள்ள பொறுப்புரிமை நிறுவனம் போலவே, இது தொடங்கப்பட்டதாகும். இது அவ்வப் பொழுது ஏற்படும் மாறுதல்களுக்கு இடமளிக்கக் கூடிய ஒரு பொறுப்புரிமை அமைப்பாகும். சிறு சேமிப்பாளர்களுக்குத் தொழில் வளர்ச்சி மூலம் கிடைக்கும் செழிப்பினில் பங்கு பெற உதவுகிறது. அரசின் சிறு சேமிப்பிற்கு உதவுவதே இதன் முக்கிய நோக்கமாகும். முதலுக்குப் பாதுகாப்பு, கூடிவரும் வருவாய் போன்றவை இதன் சிறப்பாகும். மூலதனச் சந்தை வலுப்பெற்றிட இது உதவுகிறது.

முதல் : பொதுத் துறையில் உரூ. 5 கோடி முதலுடன் இது தொடங்கப்பட்டது. இந்திய மைய வங்கி உரூ.2.5 கோடியும், இந்திய ஆயுள் காப்பிட்டுக் கழகம், உரூ.75 இலட்சமும், இந்திய அரசு வங்கி உரூ. 75 இலட்சமும், பட்டியல் வங்கிகளும் நிதிக் கழகங்களும் உரூ. 1 கோடியும் ஆகக் கொடுத்த பணமே இந்த 5 கோடியாகும்.

மேலாண்மை : இதன் மேலாண்மை ஒரு நம்பிக்கையான குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வாணிகம், தொழில், நிதி, முதலீடு போன்றவற்றில் சிறப்பறிவும் கொண்டவர்களிலிருந்து ஒரு தலைவரையும் ஏனைய நால்வரையும் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. காப்பீட்டுக்கழகத்தின் ஒரு பேராளரும் இந்திய அரசு வங்கியின் ஒரு பேராளரும், ஏனைய கழகங்களின் இரண்டு பேராளர்களும் இக்குழுவில் நியமிக்கப்படுகின்றனர். மேலும் ஓர் உறுப்பினர் மத்திய வங்கியின் செயற்பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார். குழு வணிக நோக்கத்தோடு செயலாற்றும். இதற்கு மைய வங்கி வழிகாட்டியாக விளங்குகிறது. சமூகத் தொண்டர்கள், தொழிற்சங்கங்கள், நிருவாக அதிகாரிகள் போன்றோரின் கூட்டுறவை இக்குழு நாடுகிறது.

முதலீட்டுக் கோட்பாடு : முதலீடுகளுக்குப் பாதுகாப்பளித்தலும், தகுந்த வருவாய் பெறுதலும் முதலீட்டு மதிப்பை உயர்த்தலும் இதன் முக்கிய பணிகளாகும். மேலும் பொறுப்புரிமை நிறுவனத்தின் முதலீடு, முதலீடு செய்யப்பட்ட பண மதிப்பில் 5 விழுக்காடு அல்லது நிறுவனங்கள் வழங்கப்பட்ட பங்கு மதிப்பில் 10 விழுக்காடு இவற்றில் எது குறைவாக உள்ளதோ அந்தத் தொகையாகும். மேலும் புதிய தொழில் நிறுவனங்களின் பங்கு வெளியீட்டில் முதலீடு செய்யப்படும் தொகையில் 5 விழுக்காட்டிற்கு மேல அம் முதலீடு இருக்கக் கூடாது. பொறுப்புரிமை நிறுவனத்திற்கு 6 விழுக்காட்டிற்குக் குறையாமல் வருமானம் வரும்படி முதலீடு செய்யப்பட வேண்டும்.

1964-ஆம் ஆண்டு அலகின் சிறப்ட அமைப்புகளாவன : 1. அலகுகள் உரூ. 10 மடங்கில் விற்கப்பட்டன. ஓர் அலகின் மதிப்பு ரூ.10. 2. அலகுகளில் உச்சவரம்பின்றி எவ்வளவு தொகை வேண்டுமானாலும் முதலீடு செய்யலாம். 3. அலகுகள் 1964-ஆம் ஆண்டு சூலை முதல் நாளிலிருந்து ஆகசுட்டு 15-ஆம் தேதி வரை அதே விலையில் விற்கப்பட்டன. பின்னர், அன்றாடச் செய்தித்தாள் நிலவர விலைப்படி விற்கப்பட்டன. 4. அலகுகளைப் பொறுப்புரிமை நிறுவனம் குறிப்பிட்ட விலையில் அதற்கே விற்கலாம். அது 1964-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது. 5. அலகுகளை ஈடாக வைத்து வங்கிகளில் கடன் வாங்கலாம். 6. பொறுப்புரிமை நிறுவனத்தின் ஆண்டுக் கணக்கு சூன் மாதம் முப்பதாம் நாள்

முடிவடைகிறது. 7. நிறுவனத்திற்குக் கிடைக்கும் வருமானத்தில் நிருவாகச் செலவுகளைக் கழித்து விட்டு, மீதமிருக்கும் வருமானத்தில் 90 விழுக்காடு, அலகுகள் வைத்திருப்போர்களுக்கு இலாப ஈடாக வழங்கப்படுகிறது.

சலுகைகள் : பொறுப்புரிமை நிறுவனங்களுக்கு வருமானவரி, இறப்புவரி போன்றவற்றிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. அதேபோல் அலகு பெற்றுள்ளோர்களுக்கும் வரிச் சலுகைகள் உண்டு. பொறுப்புரிமை நிறுவன வருமானத்தைத் தனிப்பட்டவர்களுக்கு வழங்கும்போது வருமான வரியைக் கழிக்கக் கூடாது. அது போன்ற சலுகைகள் இருப்பதால் பொறுப்புரிமை நிறுவனத்திற்கு நல்ல வரவேற்புள்ளது. இந்நிறுவனம் நல்ல வருமானம், பல்வகை முதலீடுகள், வரிச்சலுகைகள் முதலிய நன்மைகளை வழங்கிச் சமுதாயத்தின் சேமிப்புகளைத் திரட்டுகிறது. எனவே, இதனுடைய வெற்றி சிறிய நடுத்தர முதலீட்டாளர்களைப் பொறுத்துள்ளது.

குறைபாடுகள் : வருமானத்தில் மட்டும் அலகுதாரர்களுக்குப் பங்குண்டு. ஆனால் மூலதன மதிப்புயர்வில் பங்கில்லை. நிறுவனங்களில் முதலீடு செய்தால் கூட்டங்களில் கலந்து கொள்ளலாம். மேலாண்மையிலும் பங்கு கொள்ளலாம். இங்கு அவ்வுரிமை இல்லை. நிறுவனப் பங்குதாரர்களுக்கு அவர்கள் பொருட்களை விற்பதில் வழங்கப்படும் சலுகைகள் அலகுதாரர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, இது பொதுத் துறையில் தொடங்கப்பட்டுள்ளதால் தனியார் துறை முதலீடு நிறுவனங்களை எடுத்துக் கொள்ளும் வாய்ப்பு இதற்குண்டு. குறைகளையும் நிறைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது நிறைகள் மிகுதியாக உள்ளன என்பது தெரிய வரும். எனவே, பொறுப்புரிமை நிறுவனங்கள் புதுமையான பல முதலீட்டுத் திட்டங்களைத் தீட்டி மக்களிடமிருந்து சேமிப்புகளைத் திரட்டி, தேசிய தொழிற் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் மிகவும் உதவி வருகின்றன.

-கே.என்.இரா.

துணை நூல் :

1. Reddy, P.N., and S.S. Gneshan, **Principles of Business Organisation and Management**, Urasia Publishing House (P) Ltd., New Delhi, 1978.

**வாணிகச் சமநிலை :** ஒரு நாட்டின் பன்னாட்டு வாணிகத்தையும் நிதி நடவடிக்கைகளையும் காட்டும் ஆண்டறிக்கை செலுத்து நிலை (Balance of Payments) எனப்படும். அதன் முக்கிய அங்கமாக விளங்குவது அந்நாட்டின் சரக்குகள் - சேவைகள் போன்றவற்றின் 'ஏற்றுமதி-இறக்குமதி' ஆகும். ஓர் ஆண்டில் ஒரு நாட்டின் ஏற்றுமதிக்கும் இறக்குமதிக்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுவது வாணிகச் சமநிலை (Balance of Trade) யாகும். அது, ஏற்றுமதி மதிப்பிற்கும் இறக்குமதி மதிப்பிற்கும் உள்ள ஒரு தொடர்பைக் காட்டுகிறது. அந்நாட்டின் பொருட்கள்-சேவைகள் போன்றவற்றின் ஏற்றுமதி மதிப்பு இறக்குமதி மதிப்பைவிட அதிகமாக இருந்தால் ஏற்றுமதி மிகுதி (Export Surplus) என்றும், இறக்குமதி மதிப்பு ஏற்றுமதி மதிப்பைவிட அதிகமாக இருந்தால் இறக்குமதி மிகுதி (Import Surplus) என்றும் கூறப்படுகின்றனது. எற்றுமதி மிகுதியாக இருக்கும்போது சாதகமான வாணிகச் சமநிலையும் (Favourable Balance of Trade) இறக்குமதி மிகுதியாக இருக்கும்போது பாதகமான வாணிகச் சமநிலையும் (Unfavourable Balance of Trade) ஏற்படுகின்றன. ஆனால், பொருளாதார வல்லுநர்களில் பலர், இவ்விரு மிகுதிகளும் ஒரு நாடு மற்ற நாடுகளுடன் கொண்டுள்ள பிற வகையான நிதி நடவடிக்கைகளைப் பொறுத்துள்ளது என்று கருதுகின்றனர்.

நாட்டின் பொருளாதாரக் கோட்பாடும் திட்டமும் கி.பி.17 அ 18-ஆம் நூற்றாண்டுகளில் இவ் வாணிகச் சமநிலையைப் பொறுத்துத்தான் தீட்டப்பட்டன. மேலும், பன்னாட்டு வாணிகத்தின் முக்கிய குறிக்கோளே ஏற்றுமதியைப் பெருக்குவதாகும். மேலும், பன்னாட்டு வாணிக நடவடிக்கைகளின் நோக்கம், அவற்றின் செலுத்துதல்களைத் தங்கம், வெள்ளி அல்லது பன்னாட்டளவில் ஏற்றுக் கொள்ளக்கூடிய நாணயம் ஆகியவற்றில் செலுத்துவதாக இருந்தது. அரசாங்கமும் நாடும் ஒரே மாதிரியாகக் கருதப்பட்டுத் தங்கத்தின் வரவால் அரசாங்கமும், பிற சொத்துகளின் வரவால் நாடும் பயனடைந்தன. மேலும், நாடுகளின் ஏற்றுமதிகள் சாதகமான இருப்பைக் காட்டின.

ஒரு நாட்டின் வாணிக நிலையின் மீது *(1776)* ஆடம் சுமித்து என்ற அறிஞரின் 'நாடுகளின் செல்வம்' (Wealth of Nation) என்னும் கோட்பாடு மிகவும் ஆதிக்கம் செலுத்தியது. ஒரு நாட்டின் செல்வம் அதன் மக்கள்

நுகர்வதற்குக் கிடைக்கும் பொருட்களே தவிர, செல்வத்தை அடையும் பிற சொத்துக்களன்று என்று ஆடம் சுமித்து சுட்டிக் காட்டினார். "வாணிகம் இரு நாடுகளுக்கிடையே ஒருவருக்கொருவர் பயனடையும் வழியில் இருக்க வேண்டும். மேலும், ஒரு நாடு எந்தப் பொருளைத் திறமையுடன் உற்பத்தி செய்ய முடியுமோ அந்தப்பொருளை உற்பத்தி செய்து, அதில் சிறப்புத் தன்மை பெற வேண்டும்" என்று ஆடம் சுமித்து பின்பற்றிய பண்டைய பொருளாதாரக் கோட்பாடு கூறுகிறது. ஒப்புமை நன்மை பயக்கும் கோட்பாட்டில் தடையற்ற பன்னாட்டு வாணிகம் வளர முடியும்.

ஒரு நாட்டின் வாணிக நிலையைப் பற்றிப் பண்டைய பொருளாதாரம் கவலைப்படவில்லை. ஆனால், "சாதகமான நிலை", "பாதகமான நிலை" என்ற சொற்றொடர்கள் காணப்பட்டன. இன்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொடர்கள் இரண்டு. அவை, ஏற்றுமதியைச் "சுறுசுறுப்பான நிலை" என்றும், இறக்குமதியை "மந்தமான நிலை" என்றும் சொல்லப்படுவனவாகும்.

புதிய வாணிகக் கோட்பாடு உலகில் 1930-இல் ஏற்பட்டது. நீண்டகால கண்ணோட்டத்தில் குறுகிய காலக் கட்டத்தில் இறக்குமதியைவிட அதிகமான ஏற்றுமதியைப் பெருக்கி வேலையில்லாத் தன்மையை அது ஓரளவுக்கு குறைக்க முற்படுகிறது. ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யும்போது வேலையில்லாமலிருக்கும் தொழிலாளர்களை அது பயன்படுத்துகிறது.

வாணிகச்சமநிலை வாணிகச்செலுத்து நிலையின் ஒரு பகுதியாகும். செலுத்து நிலையில்லாமல் வாணிகச் சமநிலைக்குப் பொருளாதார முறையில் பொருளில்லை. பன்னாட்டுப் பொருளாதாரத் தொடர்பும் வாணிகச் சமநிலையும் செலுத்து நிலையில் உள்ளடங்கியவையாகும். ஒரு நாடு ஏற்றுமதியை மிகுதியாகப் பெற்றிருக்கலாம். ஆனால், அயல்நாட்டுக் கடனுக்காகச் செலுத்தப்படும் வட்டி, முதல் போன்றவற்றால் அம் மிகுதி பெரிதும் பாதிக்கப்படுகிறது.

**செலுத்து நிலை :** ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் ஏற்படும் பொருளாதாரத் தொடர்பையும், பேரங்களையும் புள்ளிவிவரங்களுடன் ஒட்டு மொத்தமாகக் காட்டுவதுதான் செலுத்து நிலையாகும். ஓராண்டில் ஏற்படும் அத்தகைய தொடர்பு, நிதி நடவடிக்கைகள், வாணிகச் சமநிலை போன்றவற்றை இது காட்டுகிறது. ஒரு நாட்டின் நிதி வருமானத்தையும், செலுத்துதல்களையும் இது குறிக்கிறது. வருமானம் செலுத்துதல்களைவிட அதிகமாக இருந்தால் சாதகமான செலுத்து நிலையென்றும், செலுத்துதல்கள் வருமானத்தை விட அதிகமாக இருந்தால் பாதகமான செலுத்து நிலையென்றும் சொல்லப்படுகிறது.

வாணிகச் சமநிலைக்கும், செலுத்து நிலைக்கும் **உள்ள வேறுபாடுகள் :** செலுத்து நிலையின் கோட்பாடு சமநிலையின் கோட்பாட்டைவிட விரிவானது. முன்னர்க் கூறியபடி வாணிகச் சமநிலை செலுத்து நிலையின் அமைப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஒரு நாடு, கண்ணிற்குப் புலனாகும் பொருட்களையும் புலனாகாச் சேவைகளையும் ஏற்றுமதி அல்லது இறக்குமதி செய்திடும். வாணிகச் சமநிலை புலனாகும் சரக்குகளின் ஏற்றுமதி அல்லது இறக்குமதியின் மதிப்பைக் குறிக்கிறது. சரக்குகளின் ஏற்றுமதி இறக்குமதி ஒரு நாட்டின் திறந்த வாணிகத்தைக் காட்டுகின்றன. காரணம், அவற்றைச் சுங்க அதிகாரிகள் ஆராய்ந்து சான்று வழங்கிடலாம். ஆனால், செலுத்து நிலை தன் பரந்த நோக்கெல்லையால் (Scope) புலனாகும். புலனாகாத பொருட்களின் மொத்தப் பற்றுகளையும் வரவுகளையும் காட்டுகிறது. இவ்வாறு வாணிகச் சமநிலை, செலுத்து நிலையின் ஓர் அங்கமாகத் திகழ்கிறது. மேலும், இது செலுத்து நிலையின் நடப்புக் கணக்கில் ஒரு பகுதியாக விளங்குகிறது. செலுத்துநிலை, புலனாகாத சேவைகளையும் முதல் கணக்கையும் தன்னகத்தே கொண்டுள்ளது. வாணிகச் சமநிலை என்பது பன்னாட்டு வாணிகத்தின் மொத்தப் பொருளாதார நடவடிக்கையில் ஒரு பகுதியானதால் அதற்குச் செலுத்து நிலைபோல் சிறப்பில்லை. எனவே, செலுத்து நிலைதான் ஒரு நாட்டின் பன்னாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளுக்கு முழுப்பதிவுச் சான்றை வழங்கி, அதிகச் சிறப்பு வாய்ந்ததாக விளங்குகிறது. கப்பலில் சரக்கேற்றுதல், சுற்றுலா, வங்கிப் பணிகள் காப்பீட்டுப் பணிகள், வட்டி பெறல், கடன் தருதல் - பெறுதல், அரசாங்கத்தின் பொதுச் செலவு, தங்கமும் முதலும் நாட்டிற்குள் வருதல், வெளிச் செல்லல்,

அன்பளிப்புகள், சீரமைப்புச் செலவுகள் போன்ற புலனாகாத செயல்களையும் செலுத்துநிலை உள்ள டக்கியுள்ளது. ஆனால், வாணிகச்சமநிலை இவற் றைத் தன்னகத்தே கொண்டிருக்கவில்லை.

ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் ஏற்றுமதியும் இறக்குமதியும் சமமாக இருந்தால் வாணிகச் சம நிலையும் சமமாக இருக்கும். ஆனால், ஏற்றுமதியும் இறக்குமதியும் ஒரே அளவில் இருக்க வேண்டும் என்ற தேவை இல்லை. முன்னர்ச் சொல்லியபடி ஏற்றுமதி இறக்குமதியைவிட அதிகமாக இருந்தால் ஏற்றுமதி மிகுதி அல்லது சாதகமான வாணிகச் சம நிலை என்றும், இறக்குமதி அதிகமாக இருந்தால் பற் றாக்குறை அல்லது பாதகமான சமநிலை என்றும் கூறப்படுகிறது. வாணிகம் பற்றி கி.பி.18-ஆம் நூற் றாண்டில் எழுதிய பொருளாதார வல்லுநர்கள் சாதக மான இருப்பு. 'பாதகமான இருப்பு' என்ற சொற் றொடர்களைப் பயன்படுத்தினர். அந்நாளில் அயல் நாட்டு வாணிகச் செலுத்துதல்கள் தங்க நாணயங்கள் மூலம் தீர்க்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, இந்தியா 100 கோடி உரூபாய் பெரும்படியான சரக்குகளை ஏற்றுமதி செய்து, 80 கோடி உரூபாய் பெறும்படி யான சரக்குகளை இறக்குமதி செய்தால், 20 கோடி உரூபாய் அளவிற்குத் தங்கம் கிடைக்கும். தங்கம் ஒரு செல்வமாகும் என்றும், தங்கம் பெற்றால் நாடு செல்வ நாடாக விளங்கிடும் என்றும் கருதுவதால், பண்டைய பொருளாதார வல்லுநர்கள் ஏற்றுமதியின் மிகுதி நாட்டிற்குச் சாதகமானது என எண்ணினர். ஆனால், இந்தியாவின் ஏற்றுமதி மதிப்பு உரூபாய் 100 கோடியாகவும், இறக்குமதி மதிப்பு உரூபாய் 150 கோடியாகவும் இருந்தால் உரூபாய் 50 கோடி மதிப் புள்ள தங்கம் அயல் நாட்டினருக்குத் தரப்பட வேண்டும். இந்தியா தங்கத்தை இழந்த அளவிற்கு ஏழையாகிவிடும். எனவேதான், அதிகப்படியான இறக்குமதியைப் பாதகமான வாணிகச் சமநிலை என்றனர். ஆனால், இன்று பன்னாட்டு வாணிக நடவடிக்கைகளுக்குத் தங்கம் செலுத்தப்படுவ தில்லை. எனினும், சாதகமான இருப்புநிலை, பாதக மான இருப்புநிலை என்ற தொடர்கள் பயன்படுத்தப் படுகின்றன. சுருக்கமாகக் கூறவேண்டுமானால், ஒரு நாட்டின் ஏற்றுமதியும், இறக்குமதியும் சமமாக இருப்பது அரிது. அதாவது, வாணிகச் சமநிலை சமமாக இருப்பதில்லை. எனவே, ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில் ஒரு நாடு சாதகமான வாணிகச் சம நிலையை அல்லது பாதகமான வாணிகச் சமநிலை யைப் பெறுவதுதான் இயல்பாகக் காணப்படுகிறது.

-கே.என்.இரா.

**துணை நூல்கள் :**

1. Ahuja, H.L., **Modern Economics**, S. Chand & Company, New Delhi.

2. Mitharu, D.M., **Introduction to International Economics**, Vora & Co., Publishers (P) Ltd., Bombay.

3. Sundaram, K.P.M., **Money, Banking and International Trade**, Sultan Chand & Sons, New Delhi, 1979.

**வாணிகச் சுழல் :** கடந்த 150 ஆண்டுகளாக உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சியைக் காணு வோர் நல்ல பல முன்னேற்றங்கள் நிகழ்ந்திருப் பதைக் காணக்கூடும். ஆனால், பொருளாதார வளர்ச்சி என்பது ஒரே சீராகத் தொடர்ந்து நிகழ்ந்த தாக இல்லாமல் மிகச் செழிப்பான வாணிக நிலை யும், மந்தமான வாணிக நிலையும், மாறி மாறித் தோன்றியிருப்பதைக் காணலாம். செழிப்புக் காலங் களில் விலைகள், உற்பத்தி, வேலை, வருமானம் ஆகியன எல்லாம் மிகுதியாகச் சென்றிருப்பதையும், மந்தக் காலங்களில் அவை யாவும் குறைந்து சென்றி ருப்பதையும் பொருளாதார வரலாறு மெய்ப்பிக் கிறது. அம் மாற்றங்கள் ஏறத்தாழ ஒரே சீரான அமைப் பில் செயற்பட்டிருப்பதையும் காணமுடிகிறது. நல்ல வாணிகம் இருக்கும் நிலையைச் செழிப்பு அல்லது பூரிப்பு என் றும், மந்தமான சூழ்நிலைகள் இருக்கும் நிலையை மந்தம் அல்லது வீழ்ச்சி என்றும் கருதிக் கொண்டால் ஒரு செழிப்புக் காலத்தையும் அதை யொட்டித் தோன்றும் மந்தக் காலத்தையும் வாணிகச் சுழல் (Business cycle or Trade cycle) என்று குறிப்பிடுவர்.

இயல்புகள் : வாணிகச் சுழல்கள் பலவற்றை ஆராய்பவர்கள் 1. ஏக கால நிகழ்ச்சி (Synchronism), 2.. குறிப்பிட்ட காலங்களில் தோன்றியவை (Periodicity) என்ற இரு இயல்புகளைக் குறிப்பிடுவர். வாணிக உலகு என்பது உயிர் வாழும் உயிரினம் போன்றதொரு அமைப்பு. ஓர் உயிரினம் வளர்ச்சி பெறும்போது அதன் உறுப்புகள் யாவும் சீராக ஒரே நேரத்தில் வளர்ச்சி பெறுவதைப் போன்று, ஒன்றோடொன்று மிக நெருக்கமான தொடர்புடைய

வாணிக அமைப்புகள் யாவும் தொடர்ச்சியான வளர்ச்சியைப் பெறுகின்றன. ஓர் உயிரினத்தின் ஏதாவதொரு உறுப்பு பலமற்றுப்போகும்போது எப்படி மற்ற உறுப்புகளும் கேடுறுகின்றனவோ, அப்படி வாணிக உலகின் ஒரு பகுதி கேடுறும்போது பிற பகுதிகளும் கேடுறுகின்றன. இவ்வியல்பை ஏக கால நிகழ்ச்சி என்பர். இரண்டாவதாக வாணிகச் சுழல் மாற்றங்களை நுணுகி ஆராயும்போது மந்தமும், மீட்சியும், வளர்ச்சியும், இறக்கமும் குறிப்பிட்ட கால இடைவெளிகளுக்குப் பின்னர் மாறிமாறித் தோன்றியிருப்பதையும் காணலாம். அதனைக் குறிப்பிட்ட கால அளவில் தோன்றுபவை எனக் குறிப்பிடுவர்.

**வாணிகச் சுழலின் உறுப்புகள்**: வாணிக நிலைகளில் தோன்றியுள்ள மாற்றங்களைக் கூர்ந்து ஆராயும்போது 1. பல ஆண்டுக் கால அளவில் ஏற்படும் பொருளாதார மாற்றங்களைக் குறிக்கும் பொதுவான போக்குகள் (Secular trend or General trend), 2. ஒரு சில ஆண்டுகளுக்குள் செழுமையும் மந்த நிலையும் மாறி மாறித் தோன்றிக் கொண்டிருக்கும் - சுழற்சியாக வரும் - நிகழ்ச்சிகளின் போக்குகள் (Cyclic trend or Cyclical flucatuations), 3. குறிப்பிட்டதொரு ஆண்டுக்குள் நடைபெறும் ஏற்றத் தாழ்வுகளைக் குறிப்பிடும் பருவ காலத்திற்குரிய போக்குகள் (Seasonal variations or fluctuations), 4. ஒழுங்கற்ற மாறுபாடுகள் (Irregular fluctuations) எனப் பல வகைகளைக்காண முடியும்.

**வாணிகச் சுழலின் முகங்கள் அல்லது நிலைகள் : (Phases of a Trade Cycle) :** வாணிகச் சுழலில் பொதுவாக நான்கு நிலைகளைக் குறிப்பிடுவர். முதலாவதாக, கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள B முதல் C வரை (அல்லது G முதல் R வரை) உள்ள பொருளாதார மீட்சிக்காலம் அல்லது பணவாட்ட நீக்கக் காலம் (Recovery or Reflaction), இரண்டாவதாக, C முதல் D வரையுள்ள பொருளாதார விரிவுக்காலம் (Prosperity Phase) அல்லது பணவீக்கக் காலம் (Inflation Phase), மூன்றாவதாக, D முதல் E வரையிலான பொருளாதார இறக்கக் காலம் (Recessionary Phase) அல்லது பணவீக்க நீக்கக் காலம் (Disinflationary Phase), நான்காவதாக, E முதல் G வரையிலான பொருளாதார மந்தக் காலம் (Depression Phase) அல்லது பண வாட்டக் காலம் (Deflation Phase) ஆகிய நான்கு நிலைகளில் ஏதாவதொன்றில் தொடங்கி அடுத்தடுத்த நிலைகளை அடைந்து நிகழும் போக்கை வாணிகச் சுழலில் காணலாம்.

**மீட்சிக்காலம்** : வீழ்ச்சி தொடர்ந்து சென்று கொண்டே இருப்பதில்லை. வீழ்ச்சியின் உச்ச நிலையில் எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை கொண்ட ஒரு சில துணிவான ஆட்கள் (தொழில் முனைவோர்) முதலீடுகளை மேற்கொள்கின்றனர். உற்பத்திக் காரணிகள் மிக மலிவான விலைகளில் கிடைக்கத்தக்க சூழ்நிலையும், அரசின் ஆதரவும் இத்தகைய தொழில் முனைவோர்களின் நடவடிக்கைகளுக்கு மிகுதியான ஆதரவாக அமைகின்றன. அவர்களின் துணிச்சலான நடவடிக்கைகளால் நாடு நல்ல வளர்ச்சிப் பாதையில் திரும்பிவிடுகிறது. வருமானம், வேலை, முதலீடு, பண அளவு, தேவை ஆகியவை மிகுதியாகத் தொடங்குகின்றன.

**விரிவுக்காலம்**: மீட்சிக் காலத்தின் உச்ச நிலையாகிய முழு வேலை நிலையை (Full employment level) நாடு அடைகிறது. ஆனால், முழு வேலை நிலையை அடைந்த பின்னும் தொடர்ந்து அதே போக்கில் செல்வதால் விரிவுக்காலம் தோன்றுகிறது. இச்செழுமைக் காலத்தில் வேலை, உற்பத்தி, வருமானம், புதியன கண்டுபிடித்தல், புதிய உற்பத்தி முறைகளைக் கண்டு பிடித்தல், அவற்றைத் தொழிலில் பயன்படுத்துதல் போன்றவை நிகழும், மக்களின் வருமானமும் வேலை வாய்ப்புகளும் பெருகும், பலர் பலப்பல புதிய தொழில்களைத் தொடங்குவர், எல்லாம் செழிப்பாக இருக்கும்.ஆனால், நாட்டில் முழு வேலைநிலை இருக்கின்ற காரணத்தால் உண்மை வருமான மிகுவதைக் காட்டிலும் பண வருமானம் பல மடங்கு மிகுந்து பண வீக்கம் ஏற்படும். (சீன்சின் கருத்துப்படி மொத்த அளிப்பு மிகாமல் மொத்தத் தேவையும், பண வருமானமும் மட்டும் மிகுந்து செல்லும் நிலையே பண வீக்க நிலையாகும்) இந்த நிலை தொடர்ந்துசென்று ஓர் உச்ச நிலையை அடையும். உச்ச நிலைக்குப் பின் நெருக்கடியும், தொழிலின் எதிர்காலம் பற்றிய அவ நம்பிக்கையும் தோன்றிய பூரிப்பு வெடிப்பு (Boom Burst) ஏற்படுகிறது. எங்கும் பரவலான அச்சம் ஏற்படுகிறது. அவற்றின் விளைவாக இறக்கம் தோன்றுகிறது.

**இறக்கம்** : பண அங்காடியில் நெருக்கடி, விலைகளில் சரிவு, தொழிலில் இலாபக் குறைவு, உற்பத்தி முடக்கம், வேலை இழப்பு, போன்றவை தோன்றி வருமானக் குறைவையும், அச்சத்தையும், எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தி

விடுகின்றன. எனவே, எல்லாம் இறங்கு முகமாக இருக்கும்.

மந்தம் : இறக்கக் காலத்தில் தோன்றிய சரிவு, முழு வேலை நிலையை அடைந்தவுடன் மிகவும் வலு வடைந்துவிடுகிறது. வருமானம், வேலை, பண அளவு, வங்கிக்கடன், முதலீடு, இலாபம் ஆகிய எல்லாம் மிக வேகமாகச் சரியத் தொடங்கிப் பொரு ளாதாரத்தில் பல இன்னல்களைத் தோற்றுவித்து மிகவும் கவலைக்கிடமானதொரு வீழ்ச்சியின் உச்ச நிலையைப் பொருளாதாரம் அடைகிறது. பின்னர் மீண்டும் மீட்சி, விரிவு, இறக்கம், மந்தம் என்ற நிலைகள் மாறி மாறித் தோன்றிக்கொண்டே இருக் கின்றன.

வாணிகச் சுழல் கோட்பாடுகள் : வாணிகச் சுழல் எவ்வாறு தோன்றுகிறது என்பது ஓர் அடிப்படை வினா வாணிகச் சுழல் தோன்றுகிறது என்பதில் கருத்து வேறுபாடுகள் இல்லை. என்றாலும், எவ் வாறு தோன்றுகிறது என்பதைப் பற்றிய கருத்து வேறு பாடுகள் பல நிலவுகின்றன. அதுபற்றி அறிஞர்கள் கூறும் கருத்துகள் வாணிகச் சுழல் கோட்பாடுகள் எனப்படும். அவற்றில் சிறப்பான சிலவற்றைக் கீழ்வருமாறு குறிப்பிடுவர்.

தட்பவெப்ப நிலைக்கோட்பாடு : தட்ப வெப்ப நிலைகள் மாறிக்கொண்டே இருக்கின்றன. தட்ப வெப்ப நிலைகளில் தோன்றும் மாற்றங்களுக்கேற்ப ஒரு சில ஆண்டுகளில் வேளாண்மை விளைச்சல் பெருமளவிலும், மற்ற சில ஆண்டுகளில் மிகக் குறை வான அளவிலும் அமைந்து விடுகிறது. வேளாண்மை உற்பத்தி நிலைகளைப் பொறுத்தே தொழில் நிலைகளும் மூன்றாம்துறை (Tertiary sector) நடவடிக்கைகளும் அமைவதால் தொழில் துறை களிலும் வளர்ச்சியும் இறக்கமும், மந்தமும் எழுச்சி யும் மாறி மாறித் தோன்றிக்கொண்டே இருக்கின்றன என்பது தட்ப வெப்ப நிலைக்கோட்பாடு (Climate Theory). இசுடான்லி செவான்சு (Stanley Jevone) என்பவர், குறிப்பிட்ட ஆண்டுகள் கால இடைவெளி யில் சூரியக் கோளத்தில் கரும் புள்ளிகள் தோன்று கின்றன எனவும். அவற்றின் விளைவாகத் தட்ப வெப்ப நிலைகளும் வேளாண்மை உற்பத்தியும் மாற்றமடைந்து வாணிகச் சுழல்கள் தோன்றுகின்றன என்றும் தம் சூரியப் புள்ளிக் கோட்பாட்டைக் (Sun spot theory of Trade cycle) குறிப்பிடுகிறார். ஆனால், அக் கோட்பாட்டை இக் காலத்தில் பலர் ஏற்பதில்லை. பருவகால மாற்றங்கள் தோன்றுவது இயற்கையே என்றாலும் சூரியனில் புள்ளிகள் தோன்றுவதால் தான் அம்மாற்றங்கள் நிகழுகின்றன என்பதைச் சான்றுடன் விளக்க இயலாது என்பது அவர்களின் கூற்று.

உளவியல் கோட்பாடு : மக்களின் மன இயல்புகள் மாறத்தக்கவை. எவ்விதமான அடிப்படையும் இல்லாமலேயே மக்களில் ஒரு சிலர் எதிர்காலம் பற்றிய நல்ல நம்பிக்கையுடன் பலவிதமான தொழில் களில் ஈடுபடும்போது சூழ்நிலைகள் துணை யானவைகளாக அமைந்து பொருளாதார வளர்ச்சி தோன்றுகிறது, மக்களில் ஒரு சிலர் எதிர்காலம் பற்றிய அச்சத்துடன் தம் பொருளாதார நடவடிக்கை களைக் குறைத்துக்கொள்ளும்போது, பொருளாதார மந்தநிலை தோன்றிவிடுகிறது. எனவே, வாணிகச் சுழல்கள் தோன்றுவதற்கான காரணம் மக்களின் உளப்பாங்கே என்பது உளவியல் கோட்பாடு (Psychological Theory).

மக்களின் உளப்பாங்கு மாற்றங்களுக்குத் துல்லிய மான காரணங்களைக் குறிப்பிடுதல் இயலாது. ஆனால், வாணிகச் சுழல் மாற்றங்கள் எவ்வாறு தோன்றுகின்றன என்பதையோ, ஏன் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அவை நிகழ்கின்றன என்ப தற்கான விளக்கத்தையோ இக்கோட்பாடு தெளிவு படுத்தவில்லை.

போதா நுகர்வுக்கோட்பாடு அல்லது அமிதச் சேமிப்புக் கோட்பாடு : வளர்ச்சிக் காலத்தில் செல்வந் தர்களின் வருமானம் பெருகியும் ஏழைகளின் வரு மானப் பெருக்கம் குறைந்தும் இருக்கும். செல்வந்தர் கள் தங்களின் பேரளவு வருமானத்தில் பெரும் பகுதி யைச் சேமித்து முதலிட்டுப் பண்டங்களின், பணி களின் உற்பத்தியைப் பெருக்குவர். ஆனால், பெரும் பான்மையில் இருக்கும் ஏழைகள் தங்களின் வரு மானக் குறைவினால் பண்டங்களையும் பணிகளை யும் நுகர முடியாத நிலையிலிருப்பர். எனவே, இலாபமும், நம்பிக்கையும் குறைந்து பொருளாதார இறக்கமும் மந்தமும் தோன்றுகின்றன என்பது சே.ஏ.ஆப்சன் (J.A. Hobson) படைத்தலைவர் தக்லசு (Major Donglas) போன்றோர் குறிப்பிடும் வாணிகச்

சுழல் கோட்பாடு. அதுவே போதா நுகர்வுக் கோட்பாடு (Under Consumption Theory) அல்லது அமிதச் சேமிப்புக் கோட்பாடு எனப்படும்.

இக்கோட்பாடு ஓரளவுக்கே சரியானதென்றும், முழு அளவில் ஏற்றுக் கொள்ளதக்கதல்ல என்றும் இக்கோட்பாட்டைப் பற்றி ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். இக்கோட்பாடு சரியானதாக இருக்க வேண்டும் என்றால் முதலீட்டுப் பண்டங்கள் தொழில்களில் தோன்றும் ஏற்றத் தாழ்வுகளைக் காட்டிலும், நுகர்வுப் பண்டங்கள் தொழில்களில் தோன்றும் மாற்றங்கள் மிகுதியானவையாக இருக்க வேண்டும். ஆனால், உண்மைநிலை இதற்கு மாறானதாக இருக்கிறது.

பணவாக்கக் கோட்பாடு : இக்கோட்பாட்டை வலியுறுத்துபவர் ஆர்.சி.ஆட்ரே (R.G. Hawtrey) என்பவராவர். பெரும் அளவு வாணிகம் வங்கிப் பணத்தின் துணையுடனே நிகழ்கின்றது. வாணிகம் செழிப்பானதாக இருக்கும் நிலைகளில் வங்கிகள் தாராளமாகக் கடன் உதவிகளைச் செய்ய முன் வருகின்றன. மலிவாகக் கிடைக்கும் கடன் பண உதவியுடன் வணிகர்கள் மேன்மேலும் முதலீடுகளைப் பெருக்கிவிடுகின்றனர். கடன் பணப்புழக்கம் பெருக்கமடைந்து நிறைவு நிலையை அடைகிறது. குறிப்பிட்ட நிலைக்குப் பின் வங்கிகளின் இருப்பு- நிலையும் குறைந்து, அளவுக்கதிகமாகக் கடன்களைக் கொடுத்துவிட்டோமோ என்ற அச்சமும் தோன்றி, கடன் அளவைக் குறைக்கும் முயற்சிகளில் வங்கிகள் ஈடுபடுகின்றன. அம்முயற்சிகள் விரைவான வளர்ச்சியின் முடிவில் தோன்றும் திருப்புமுனையாக அமைந்துவிடுகிறது. கடன் அளவு குறைந்து, நாணய நெருக்கடி ஏற்பட்டுப் புகழ்மிக்க நிறுவனங்கள்கூடத் தோல்வியடையும் ஒரு நிலை தோன்றிப் பொருளாதார மந்தம் ஏற்பட்டுவிடுகிறது.

பணவாக்கக் கோட்பாடும் (Monetary Theory) முழுமையானதன்று. வளர்ச்சிப் போக்கு அல்லது மந்தப் போக்கு விரைந்துசெல்லும் நிலையைத்தான் இக்கோட்பாடு விளக்குகிறதே தவிர வளர்ச்சிநிலை தோன்றவும், மந்தநிலை தோன்றவும் உள்ள சரியான விளக்கத்தைத் தரவில்லை என்று இக்கோட்பாட்டைக் குறை கூறுவர். வாணிகச் சுழலுக்கு வங்கிப் பண அளவு மட்டுமே காரணமாக இருக்க இயலாதென்பது இவர்தம் கருத்து.

அமித முதலீட்டுக் கோட்பாடு : அளவுக்கு அதிகமாக முதலீடுகள் மேற்கொள்ளப்படுவதால் வளர்ச்சி நிலை தோன்றுவதாகவும், அதற்கு மாறான நிலைகளில் மந்த நிலை தோன்றுவதாகவும் குறிப்பிடும் கோட்பாட்டை அமித முதலீட்டுக் கோட்பாடு (Over Investment Theory) என்பர். நுகர்வுப் பண்டங்கள் தொழில்கள் பெருகுவதைக் காட்டிலும் அதிகமான அளவில் முதலீட்டுப் பண்டங்கள் (Investment Goods) தொழில்கள் வளர்ச்சிக் காலத்தில் பெருகுவது அமித முதலீட்டினால்தான் என்று இக்கோட்பாட்டை ஏற்பவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். ஆனால், அதற்கான விளக்கத்தைக் குறிப்பிடுவதில் கருத்துவேறுபாடுகள் உள்ளன. கேயக்கு (Hayek), மேச்லப்பு (Machlup), உரோப்கீ (Ropke), இராபின்சு (Robins) போன்றோர் வங்கிக் கடன் பணப் பெருக்கமே இதற்கான காரணம் என்பர். வங்கிக்கடன் பெருக்கமும், முதலீட்டு நடவடிக்கைகளும் வாணிகச் சுழலுக்கான காரணமாக இருப்பினும் அவ்வாணிகச் சுழல்கள் ஏறத்தாழ ஒரே மாதிரியான இடைவெளிக் காலஅளவுகளில் ஏன் ஏற்படுகின்றன என்பதற்கான விளக்கத்தை இக்கோட்பாடு தெளிவுபடுத்தவில்லை என்று இக்கோட்பாட்டைப் பற்றிக் கருத்துரை கூறுவர் சிலர்.

கீன்சின் கோட்பாடு : சான் மேனார்டு கீன்சு என்பார் அவர் தம் 'பொதுக் கோட்பாடு' (General Theory) என்னும் நூலில் வருமானம், விளைவு, வேலை ஆகியவற்றில் தோன்றும் மாற்றங்களுக்கான காரணங்களை விளக்கும் போது, முதலீட்டின் அளவுக்கேற்ப அம்மாற்றங்கள் நிகழ்கின்றன என விளக்கம் தருகிறார். முதலீட்டை நிருணயிக்கும் வட்டி , மூலதனத்தின் இறுதி நிலைத் திறன் (Marginal Efficiency of Project) ஆகிய இரண்டில் மூலதனத்தின் இறுதி நிலைத் திறன் இன்றியமையாத பங்கு வகிக்கிறது என்று குறிப்பிடுகிறார். புதிய முதலீடுகளை மேற்கொள்ளும்போது எதிர்பார்க்கத்தக்க இலாப அளவே மூலதனத்தின் இறுதிநிலைத்திறன். எனவே, இவ்வெதிர்பார்ப்புகளுக்கேற்ப வாணிகச் சுழலின் நிலைகள் தோன்றுகின்றன என்று விளக்கம் தருவர். இவ்விளக்கத்தினை அடிப்படையாகக்கொண்டு பெருக்கிக் கோட்பாடு (Theory of Multiplies) குறிப்பிடப்படுகிறது.

வாணிகச் சுழலின் எந்த நிலையிலும் பொருளாதாரத்தில் எல்லாத் துறைகளிலும் ஒரே நேரத்தில் ஒரே

மாதிரியான மாற்றங்கள் நிகழ்கின்றன. நிகழ்ச்சிகள் திரண்டு திரண்டு அடுத்த நிலை ஏற்படும்வரை தொடர்கின்றன. அதற்கான விளக்கத்தைப் பெருக்கிக் கோட்பாடு தரவில்லை என்று குறைகூறுவர் சிலர்.

**இக்காலக்கோட்பாடு பெருக்கி-ஊக்கி(வளர்ச்சி) இணைப்பு விளைவுக்கோட்பாடு** : பொருளாதாரம் மந்த நிலையில் இருக்கும் போது அரசுகள் தன் னிச்சையாக முதலீடுகளை (Autonomous Investment) மேற்கொள்கின்றன. அவற்றின் விளைவாகச் சமு தாயத்தின் வருமானம் பல மடங்கு பெருகுகிறது. இது பெருக்கி விளைவு. வருமானம் பெருகும்போது நுகர்வுப் பண்டங்களின் தேவையும் பெருகி, முத லீடும் தேவையும் பெருகும். இதனைத் தூண்டி விடப்படும் முதலீடு என்பர். இவ்விளைவை ஊக்கி விளைவு (Accelerator effect) என்பர். பெருக்கி விளை வும் ஊக்கி விளைவும் ஒன்றுக்கொன்று துணை செய்து பொருளாதார வளர்ச்சிக்கு உதவுகிறது. அது, பெருக்கி ஊக்கி இணைப்பு விளைவுக் கோட்பாடு (Multiplies Accelerator Interaction Theory). தனியார் முதலீட்டில் தோன்றும் சரிவு பொருளாதார மந்தத் திற்கு வழிவகுக்கும். பொருளாதாரம் இயல்பான வளர்ச்சி விகிதத்தில் வளர்ந்து கொண்டிருக்கும் போது அரசின் தன்னிச்சை முதலீட்டின் விளை வாகவோ, புதியன புகுத்துதல் (Innovation) மூல மாகவோ, பிற காரணத்தாலோ பொருளாதாரத்தில் ஓர் அதிர்ச்சி ஏற்பட்டுப் பெருக்கி விளைவு தோன்று கிறது. அப்பெருக்கி விளைவினால் ஊக்கி விளைவு தோன்றுகிறது. பொருளாதாரம் விரைவான வளர்ச்சி யைப் பெற்று உயர்ந்ததொரு நிலையை அடைகிறது. அவ்வுயர்ந்த நிலையில் இயல்பான வளர்ச்சியைப் பெற்றுக்கொண்டிருக்கும்போது தூண்டிவிடப்படும் முதலீடு குறைந்து ஊக்கி - பெருக்கி விளைவுகள் குறைந்து பொருளாதாரத்தில் இறக்கம் தோன்று கிறது. அவ்விறக்கம் வீழ்ச்சிக்கும் மந்தத்திற்கும் வழி கோலுகிறது. அவ்விளக்கத்தைத் தருபவர் பேராசி ரியர் இக்சு (Prof. Hicks) ஆவார்.

**இக்காலக் கோட்பாட்டைப் பேராசிரியர் கால்டார் மேம்படுத்திய விதம்** : பெருக்கி - ஊக்கி இணைப்பு விளைவினால் வாணிகச் சுழல் மாற்றங்கள் நிகழ் கின்றன என்ற இக்காலக் கோட்பாட்டை மேம் படுத்தி விளக்குகிறார் பேராசிரியர் கால்டார் (Prof. Kaldor). முடிந்த சேமிப்பு (Ex-Post savings), முடிந்த முதலீடு (Ex-Post investment) என்ற கருத்துகளுக்கு மாறாக எதிர்பார்க்கும் சேமிப்பு (Ex-ante savings), எதிர்பார்க்கும் முதலீடு (Ex-ante investment) என்ற கருத்துகளைக் கால்டார் பயன்படுத்துகிறார். எதிர் பார்க்கும் சேமிப்பைக் காட்டிலும் எதிர்பார்க்கும் முதலீடு மிகுதியாக இருந்தால் வருமான, வேலை, பொருளாதார நடவடிக்கைகள் பெருகிச் செல்லவும், எதிர்பார்க்கும் முதலீட்டைக் காட்டிலும் எதிர்பார்க் கும் சேமிப்பு மிகுதியாக இருந்தால் வருமானம், வேலை, பொருளாதார நடவடிக்கைகள் குறைந்து செல்லவுமான நிலை தோன்றும் என்ற விளக்கத்தைக் கால்டார் குறிப்பிடுகிறார். தனியார்துறை முதலாளித் துவப் பொருளாதாரத்தில் இத்தகைய வாணிகச் சுழல்கள் தோன்றுவதைத் தவிர்க்க இயலாதென் பதையும் கால்டார் சுட்டிக்காட்டுகிறார்.

**வாணிகச் சுழல் விளைவுகளைக் கட்டுபடுத்தும் வழிகள்**: வளர்ச்சிக் காலத்தில் பண வீக்கமும் மந்தக் காலத்தில் பணவாட்டமும் தோன்றுவதியல்பு. எனவே, வளர்ச்சிக் காலத்தில் பண வீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பணக்கொள்கைகள் (Monetary Policies), நிதிக் கொள்கைகள் (Fiscal Policies), அரசு நடவடிக்கைகள் போன்றவற்றை மேற் கொள்வர். அதற்கு மாறான பண வாட்டக் காலத் தில் பணவாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பணக்கொள்கைகள், நிதிக்கொள்கைகள், அரசு நடவடிக்கைகள் போன்றவற்றை மேற்கொள்வர்.

வாணிகச்சுழலின் விளைவுகள் பன்னாட்டளவில் தோன்றத்தக்கவை என்பதால், உள்நாட்டு நட வடிக்கைகளோடு பன்னாட்டளவில் வாணிகச்சுழல் மாற்றங்களின் விளைவுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

-என்.எஸ்.பா.

**துணை நூல்கள் :**

1. பாலசுப்பிரமணியன், என்.எஸ்., **நுண்ணினப் பொருளாதாரம்**, உமா பப்ளிகேஷன், மதுரை, 1987.

2. Alfred, W. Storier & Douglas Hague, **A Text Book of Economic Theory**, Longman Group Ltd., London, 1982.

3. Dewett, K.K & Adarsh Chand, **Modern Economic Theory**, Shyam Lal Charitable Trust, New Delhi, 1985.

**வாணிகப் பொதுச் சங்கம்** : ஒரு நகர் அல்லது மாநகரத்திலுள்ள உற்பத்தியாளர்கள், வணிகர்கள், போக்குவரத்து உரிமையாளர்கள், தொழில் அலுவலர்கள் (Professional men) போன்றோர்களையும் வங்கிகளையும் உறுப்பினர்களாகக் கொண்டு அவர்களின் தொழில் நலத்திற்காகவும், அப்பகுதியின் தொழில் வளர்ச்சிப் பெருக்கத்திற்காகவும் இயங்குகிறது. இந்த வாணிகப் பொதுச் சங்கத்தில் (Chamber of Commerce) தொடர்புடைய எல்லோரும் உறுப்பினராக வேண்டிய இன்றியமையாமை இல்லை. அதே போல் உறுப்பினர்கள் அனைவரும் தொடர்ந்திருக்க வேண்டிய இன்றியமையாமையும் இல்லை.

இதற்கும் வாணிகக் கழகத்திற்கும் (Trade Association) வேறுபாடு உள்ளது. வாணிகக்கழகம் பெரும்பாலும் துறை வாரியாக அமைக்கப்படுவதால் அவ்வவ் துறையைச் சார்ந்த நிறுவனங்களை உறுப்புகளாகக் கொண்டு அவற்றின் நலத்தை மட்டுமே பெருக்கும் நோக்கத்தோடு செயலாற்றுகிறது. ஆனால் வாணிகப் பொதுச் சங்கம் அது அமைந்துள்ள பகுதியைச் சார்ந்த எல்லா வணிகர்கள் - உற்பத்தியாளர்கள் போன்றோர்களின் நலத்தைக் காக்கும் நோக்கத்தோடு, அப்பகுதியின் தொழில் - வாணிக நலமும் வளர்ச்சியும் மேம்படவும் பாடுபடுகிறது.

இச்சபைகளின் அமைப்பும் இயல்பும் நாட்டுக்கு நாடு மாறுபடுகின்றன. பிரான்சு நாட்டில் இவை அரசு ஆணையின் அடிப்படையில் அமைக்கப்பட்டு அரசுத் தொடர்பு கொண்டு அரசுக் கட்டுப்பாட்டிற்குட்பட்டுச் செயற்படுகின்றன. அங்குள்ள அரசு நிறுவனங்களான துறைமுகப் பொறுப்பு நிறுவனம் (Port Trust), தொடர்வண்டிப் போக்குவரத்து நிறுவனம், மின்உற்பத்தி - வழங்கல் நிலையங்கள் போன்றவற்றை நிருவகிக்கின்ற பொறுப்பை இவை ஏற்றுள்ளன. ஆனால், உலகின் பெரும்பாலான நாடுகளில் இவை அரசு தொடர்பின்றியும் கட்டுப்பாடின்றியும் தம் விருப்பத்திற்கேற்பச் செயலாற்றுகின்றன. இதனால், அரசிற்கும் இவற்றிற்கும் தொடர்பில்லை என்பது பொருளன்று. தம் குறைகளையும், தம் உறுப்பினர் குறைகளையும், அரசு சட்டத்தால் ஏற்படும் தீமையையும் இவை அரசாங்கத்திடம் கூறி முறையிடும். இவற்றின் உறுப்பினர்கள் நலன் - இவை அமைந்துள்ள பகுதியின் தொழில் நலன் போன்றவற்றைப் பெருக்கிட அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை இவை எடுத்து இயம்பும். எனவே, அரசும் இச்சங்கங்களைக் கலக்காமல் தன் பொருளாதார- தொழில் - நிதி பற்றிய கோட்பாடுகள் பற்றிய முடிவுகளை எடுப்பதில்லை. எனவேதான், மாநிலச் சட்ட மன்றங்களிலும், நகராட்சி மன்றங்களிலும் இன்னும் பிற பொதுமன்றங்களிலும் இவற்றின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். இந்திய நாட்டில் இச்சங்கங்கள் பெரும்பாலும் நிறுவனச் சட்டத்தின் கீழ்ப்பதிவு செய்யப்பட்டப் பொறுப்புறுதி நிறுவனங்களாக அமைக்கப்படுகின்றன.

இந்திய நாட்டில் இச்சங்கங்கள் முதன்முதலாக ஐரோப்பிய வாணிகர்களால் தொடங்கப்பட்டன. எடுத்துக்காட்டாக கி.பி.1834-ஆம் ஆண்டில் வங்காள வாணிகப் பொதுச்சங்கம் தொடங்கப்பட்டது. பின்னர் கி.பி. 1836-ஆம் ஆண்டு சென்னை, பம்பாய் போன்ற நகரங்களில் இச்சங்கங்கள் தோன்றத் தொடங்கின. கல்கத்தாவிலுள்ள இந்தியக் கூட்டு வணிகச் சபை என்ற கூட்டமைப்பில் 15 உள்ளூர்ச் சபைகள் இருந்தன. அது 1920-ஆம் ஆண்டு ஐரோப்பிய வாணிகர்களால் அமைக்கப்பட்டது. இந்திய வாணிகர்கள் 1927-ஆம் ஆண்டு இந்தியத் தொழில் - வாணிகக் கூட்டமைப்புச் சங்கம் (Federation of Indian Chamber of Commerce and Industry) என்ற ஒன்றைப் புது தில்லியில் நிறுவினார்கள். அதில் பல வாணிகப் பொதுச்சங்கங்களும், வாணிகக் கழகங்களும், அயல்நாட்டுச் சங்கங்களும், தொழில் நிறுவனங்களும் உறுப்புகளாக உள்ளன. இம் மாபெரும் அமைப்பு இந்திய நாட்டுத் தொழிலுக்கும், அரசிற்கும் இடையே நல்லுறவை வளர்க்கும் பாலமாக விளங்குகிறது. அகில - இந்தியத் தொழிலாளர்அமைப்பு ஒன்று 1942-ஆம் ஆண்டில் தொழிலாளர் நலன் புரக்கும் பொருட்டு அமைக்கப்பட்டு இதன் உறுப்பாகப் பணியாற்றி வருகிறது. இந்திய வணிகச் சங்கம், கல்கத்தா - இந்தியத் தேயிலைச் சங்கம், இந்தியச் சுரங்கக் கூட்டமைப்பு, சுரங்க மண் ஆய்வு நிறுவனம், இந்திய மதுவகைச் சங்கம், அகில இந்திய உற்பத்தியாளர்களின் சங்கம் போன்ற அமைப்புகளும் இந்திய நாட்டில் உள்ளன.

**பணிகள்** : அச்சங்கங்கள் ஆற்றும் பணிகள் வாணிக - தொழில் வளர்ச்சிக்கு மிகவும் உதவியாக உள்ளன. இவை தம் உறுப்பினரின் நலனைப் புரக்கின்றன.

அவை அமைந்துள்ள பகுதிகளின் தொழில் வளர்ச்சிக்காக மிகவும் பாடுபடுகின்றன. தொழில், வாணிகம், அங்காடி பற்றிய நிலவரங்களையும் புள்ளி விவரங்களையும் திரட்டித் தருகின்றன. அரசுச் சட்டங்கள் தம் உறுப்பினர்களின் நலனுக்கு எதிராக இருக்குமானால் அது பற்றி அரசிடம் முறையிட்டுத் திருத்தம் செய்கின்றன. எந்தெந்தச் சட்டங்கள், நடவடிக்கைகள் மேற்கொண்டால் உறுப்பினர்களுக்கு நலம்பயக்கும் என ஆராய்ந்து அதுபற்றி அரசிற்கு எடுத்துரைக்கின்றன. உறுப்பினர்களுக்கு ஏற்ற நடவடிக்கைகளைச் சீர்படுத்தி அவர்களிடையே நிலவும் போட்டிகளைக் குறைக்கின்றன. அவர்களிடையே ஏற்படும் சிக்கல்களை நடுவர் அல்லது இசைவுத் தீர்ப்பு (Arbitration) மூலம் தீர்த்து வைக்க ஏற்பாடு செய்கின்றன. தொழில் பற்றிய பொருள்காட்சி - ஆய்வு போன்றவற்றை உருவாக்க ஏற்பாடு செய்கின்றன.மேலும் உறுப்பினர்களுக்குத் தொழில் நுணுக்கம், சட்ட நுணுக்கம் பற்றிய ஆய்வுரைகளையும் தருகின்றன. ஏற்றுமதியாளர்களுக்குத் தோற்றுவிப்புச் சான்றிதழ் வழங்குகின்றன. தேர்தலில் தொழில் நலனைக் கருத்தில் எண்ணித் தகுதியுடைய வேட்பாளர்களுக்கு ஆதரவு தருகின்றன. தொழில் நூல் நிலையம் அமைத்திருக்கின்றன. வாணிக - தொழில் அறிவைப் பரப்புவதற்காகத் தேர்வுகள் நடத்திச் சான்றிதழ் வழங்குகின்றன. சுருங்கக் கூறின், தொழில் வளர்ச்சிக்கு அவற்றால் எந்த உதவி அல்லது பணி செய்ய முடியுமோ அவற்றைத் தயங்காமலும் தளராமலும் செய்து வருகின்றன.

பன்னாட்டு வாணிகச் சங்கம் - **(International Chamber of Commerce) :** இச்சங்கம் *1920*-இல் பெல்சியம், பிரான்சு, பிரிட்டன், இத்தாலி, அமெரிக்கா, போன்ற நாடுகளின் வணிகர்கள் கூடிய கூட்டத்தில் நிறுவப்பட்டது. பின்னர், நாற்பது நாடுகள் இதோடு இணைந்தன. பன்னாட்டு வாணிகத்தைப் பெருக்கவும், வாணிகத் தடைகளை நீக்கவும், நாடுகளிடையே வாணிக உறவை வளர்க்கவும் இது தொடங்கப்பட்டது. பல நாடுகளின் தேசிய சங்கத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இதன் ஆட்சிக் குழுவில் பணியாற்றுகின்றனர். ஒரு தலைவர் - ஒரு நிருவாகக் குழு ஆகியோர்களின் மேற்பார்வையில் ஒரு பொதுச் செயலாளர் எல்லா முடிவுகளையும் எடுக்கிறார்.இதன் தலைமை அலுவலகம் பாரிசில் உள்ளது. இச்சபையின் கூட்டம் இதன் உறுப்பு நாடுகளில் ஏதாவது ஒரு நாட்டில் ஓராண்டிற்கு இரண்டு முறை நடக்கும். பல்வேறு நாட்டுப் பேராளர்கள் கலந்து கொள்வார்கள். அதில் பங்கு பெற விரும்பும் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு தேசிய குழு ஒன்று இருக்கும். அதில் தொழில், வாணிகம், நிதி, போக்குவரத்து போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ளோர் உறுப்பினர்களாக இருப்பர். இத்தகைய தேசிய குழுக்கள் உறுப்பினர் நாடுகளுக்கும், அகில உலக வாணிக சபைக்கும் இடையே ஒரு இணைப்புப் பாலங்களாகத் திகழ்கின்றன. பன்னாட்டு வாணிகர்களிடையே எழும் பூசல்களையும், வழக்குகளையும் தீர்த்து வைப்பதற்காக இச்சங்கம் 'இசைவுத் தீர்ப்பு நீதிமன்றம்' ஒன்றை நிறுவியுள்ளது. இச்சபையின் நோக்கங்களின் நிறை வேற்றத்தில் பங்கு பெற்றிட இந்தியத் தேசிய குழு *1928*-இல் தில்லி மாநகரில் நிறுவப்பட்டது. இவ்வாறு வாணிகப் பொதுச்சங்கம் பல நாடுகளில், பல மாநிலங்களில், பல மாவட்டங்களில் நிறுவப்பட்டுத் தொழில், வாணிகம், நிதி, போக்குவரத்து துறையைச் சார்ந்தவர்களின் நலன் ஆகியவற்றிற்காகப் பாடுபட்டு அத்துறைகளை வளர்த்திட உதவுகின்றன.

- கே.என்.இரா.

**துணை நூல் :**

1. Shukla, M.C., **Business Organization and Management**, S. Chand & Co., New Delhi, 1965..

**வாணிகப் பொருளாதாரக் கொள்கை முறை :** உலகில் மனித இனம் தோன்றிய நாளிலிருந்து பொருளாதாரச் சிக்கல்களும் தோன்றத் தொடங்கின. உலகில் பல்வேறு நாடுகளிலும், பல்வேறு காலக் கட்டங்களிலும் பல பொருளியல் அறிஞர்கள் தோன்றித் தங்களுடைய கருத்துகளை வெளிப்படுத்தினர். வணிக வாதம் என்னும் பொருளியல் சிந்தனை ஐரோப்பாவில் கி.பி.*16*-ஆம் நூற்றாண்டில் தோன்றிய கருத்தாகும். சர் தாமசு மன் *(1571-1641)*, அந்தோனியோ கெர்ரா *(1580-1650)*. வான் ஆர்னிக்கு *(1638-1712)*, மான்சிரடீன் *(1576-1621)* போன்ற இங்கிலாந்து, இத்தாலி, செருமனி, பிரான்சு நாட்டு அறிஞர்கள் வணிக வாதக் கொள்கையை உருவாக்கினர். ஐரோப்பாவில் கி.பி.*15*-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், *16* -ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சமூகப் பொருளாதாரத் துறையில் பல்வேறு வளர்ச்சிகளும், மாற்றங்களும் ஏற்பட்டன.

உள்நாட்டு வணிகமும், வெளிநாட்டு வணிகமும் பொருளியல் வளர்ச்சியில் புதிய வலிமையும், பொலிவும் பெற்றன. கப்பல் போக்குவரத்து வணிக வளர்ச்சியை மேலும் விரைவு படுத்தியது. இக் காரணங்களால் ஐரோப்பிய நாடுகளில் பொருளாதார வளர்ச்சியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இச் சூழலில் வணிகவாதக் கொள்கை செல்வாக்குப் பெறத் தொடங்கியது எனலாம். வணிகவாதம் என்னும் சொல்லிற்கு முதன் முதலில் முறையான, தெளிவான விளக்கம் கூறப்படவில்லை. பிரான்சு நாட்டு இயற்கை வாதிகள் (Physiocrats) இச் சொல்லை முதன் முதலாகப் பயன்படுத்தினர். பின்னர், பொருளியல் தத்துவத்தின் தந்தை ஆடம் சுமித்து கடுமையான முறையில் தாக்கியதன் விளைவாக வணிகவாத எண்ணங்கள், பொருளியல் சிந்தனைகள் வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றன. வணிக வாதம் எந்தவொரு நாட்டின் தனிக் கொள்கையையும் உறுதிப்படுத்தவில்லை. அது எந்தவொரு சிந்தனையாளனின் முழுமையான வெளிப்பாடும் ஆகாது. இங்கிலாந்து, ஆலந்து, செருமனி, இத்தாலி போன்ற நாடுகளில் பொருளாதாரத் துறையில் செல்வாக்குப் பெற்று முன்னிலையிலிருந்த முதலாளிகள், வணிகப் பெருமக்கள், ஆளும் அதிகார வர்க்கத்தினர் ஆகியோர் தத்தம் நாடுகளில் பொருளியல் வளமும், வலுவான அரசும் அமைய வேண்டுமென வலியுறுத்திக் கூறினர். இவ்வாறு கி.பி.16-ஆம் நூற்றாண்டில் வலியுறுத்தப்பட்ட கொள்கைகளே வணிக வாதம் என்று குறிக்கப்படலாயின. இது ஒவ்வொரு நாட்டிலும், அந்நாட்டின் தன்மைக்கு ஏற்றவாறு வெவ்வேறு சொற்களால் குறிப்பிடப்பட்டது. வணிக வாதக் கொள்கை பிரான்சு நாட்டில் 'கால்பர்ட்டிசம்' என்றும் செருமனியில் 'காமரிலிசம்' என்றும், இங்கிலாந்தில் 'மெர்க்கண்டலிசம்' என்றும் கூறப்பட்டன. மத்திய காலத்தில் ஐரோப்பாவில் செயற்பட்ட பொருளாதார நிலைகளுக்கு எதிராகவும் வணிக வாதக் கொள்கை இருந்தது. அறிவியல் விழிப்புணர்ச்சியும் அரசியல் சிந்தனையும் புதிய எண்ணங்களைத் தோற்றுவித்தன. செல்வம் திரட்டும் செயல் பாவச் செயல் அன்று என்றும், வணிகத்தில் ஈடுபடுவது சமுதாயத்துக்கு நன்மையே விளைவிக்கும் என்றும் மார்ட்டின் உலூதர் கிங்கு விளக்கம் அளித்தார். கண் மூடித்தனமாகச் சமயத்தைப் பின்பற்றும் எண்ணத்திலும் மாற்றம் ஏற்பட்டது. அதன் காரணமாகப் பணம் படைத்தோர் புதிய தொழில்களில் முதலீடு செய்யத் தொடங்கினர். முதலாளிகள் கூட்டம் நாட்டின் உற்பத்தியிலும் அரசியல் அமைப்பிலும் சக்தி வாய்ந்த நிலையைப் பெற்றது. ஐரோப்பிய நாடுகளில் இச்சூழலில் புதிய புதிய உற்பத்தி முறைகளை முதலாளிகள் புகுத்தினர். இதனால், அந்தப் புதிய முதலாளித்துவ சக்தியோடு இணைந்து அரசு செயற்படத் தொடங்கியது.

எனவேதான், வணிக வாதக் கொள்கை இம் மாறிய சூழ்நிலையில் நிலைபெறத் தொடங்கியது. வணிகவாதம், தேசிய அரசு வலிமை பெற வேண்டுமென்று, அவ்வலிமையைப் பெறுவதற்குத் தேவையான செல்வப் பெருக்கம் அவசியம் என்றும் அச் செல்வப் பெருக்கத்தை அடைவதற்குப் பொருளாதார வாழ்வை முறைப்படுத்த வேண்டுமென்றும் வலியுறுத்தியது. வணிக வாதத்தை முன்னிறுத்திய சிலருள் சர் தாமசு மன் என்பவர்தாம் தலை சிறந்தவர் என்று கருதப்படுகிறார். இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த இவர் வணிகவாதக் கருத்துகளை வகுத்த முன்னோடி ஆவார். இலண்டனைச் சேர்ந்த மிகப் பெரும் வணிகச்குடும்பத்தில் பிறந்தவர். நாட்டின் செல்வத்தைப் பெருக்குவதற்கு முக்கிய காரணம் வணிகத்தின் வளர்ச்சிதான் எனக் குறிப்பிட்டார். எனவே, ஏற்றுமதியைப் பெருக்கி இறக்குமதியைக் குறைத்தால் நாட்டின் செல்வ நிலை பெருகும் எனக் கூறினார். அவர் எழுதிய சிறிய நூலில் வணிக வாதக் கருத்துகளை எடுத்துரைத்துள்ளார். அரசு நிலத்தைத் தரிசாகப் போடக்கூடாது. விளைச்சல் நிலங்களில் இங்கிலாந்து அக்காலத்தில் சணல், புகையிலை போன்ற இறக்குமதிகளில் உள்ள பற்றைக் குறைக்க வேண்டும். உள்நாட்டிற்குத் தேவையான உணவுப் பொருட்களையும், மூலப் பொருட்களையும் இங்கிலாந்து நாட்டிலே உற்பத்தி செய்ய வேண்டும். வெளிநாடுகளின் தேவைகளை அறிந்து அந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். ஏற்றுமதி செய்யும் பொருட்கள் சொந்த நாட்டுக் கப்பல்களில் அனுப்பப்பட வேண்டும். இதன் மூலம் கப்பல் கட்டணத்தைக் குறைத்து இலாபத்தைப் பெருக்க முடியும். கடல் வளத்தைப் பயன்படுத்தி மீன்பிடிக்கும் தொழிலைப் பெருக்க வேண்டும். நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். ஆடம்பரப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யக்கூடாது. கிழக்கிந்திய

நாடுகளில் கிடைக்கும் வாசனைப்பொருட்களையும், மிளகு போன்ற பொருட்களையும் வாங்கி ஐரோப்பிய நாடுகளின் சந்தைகளில் விற்று அதிக இலாபத்தைப் பெற வேண்டும். இது போன்ற கருத்துகளைத் தாமசு மன் வலியுறுத்தினார். இதே கருத்துகளின் எதிரொலியைத் தான் மற்ற வணிக வாதிகளும் தங்கள் நாடுகளின் சூழ்நிலைக்கேற்ப வலியுறுத்தினர்.

பொதுவாக எல்லா வணிகவியலாரும் சோம்பலைக் கண்டித்தனர். நாட்டிலுள்ள எல்லாப் பிரிவினரும் கடுமையான உழைப்பின் மூலம் செல்வத்தைப் பெருக்கலாம் என்றும் வலியுறுத்தினர். பொன், வெள்ளியை வணிகம் மூலம் குவிப்பதனால் நாட்டின் செல்வம் அதிகரிக்கும் எனவும் அந்நிலை தான் பொருளாதாரத்தின் முதற்படி என்றும் வலியுறுத்தினர். இக் கொள்கை வணிக ஏகாதிபத்தியம் தோன்றவதற்குக் காரணமாக அமைந்தது எனலாம். ஐரோப்பிய நாடுகள் பல இந்தியா போன்ற கிழக்கிந்திய நாடுகளை அடிமைப்படுத்திப் பொருளாதாரச் சுரண்டலை மேற்கொண்டன. அரசு, பொருளியல் துறைகளில் பல கட்டுப் பாடுகளை ஏற்படுத்தியது. வணிகவாதியர் சிலர் பொருளியல் கருத்துகளை வலியுறுத்தினர். மக்கள் தொகை வளர்ச்சியடைவதைப் பற்றி அவர்கள் அதிகக் கவலை கொள்ளவில்லை. மாறாக மக்கள் தொகைப் பெருக்கத்தால் நாட்டில் வளமும், வலிமையும் பெருகும் எனக் கருதினர். வட்டி வாங்குவது, வட்டித் தொழிலில் ஈடுபடுவது போன்ற செயல்களை, சர் தாமசு மன் போன்றவர்கள் வலியுறுத்தினர். பெரும்பாலான வணிக இயலார் வட்டி விகிதம் குறைவாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். வட்டி குறைவாக இருந்தால் முதலீடு பெருகும் என நம்பினர்.

வணிக வாதம் பற்றிப் பின்னால் வந்த பொருளியல் அறிஞர்கள் கடுமையாகத் திறனாய்வு செய்தனர். பொன்னையும், வெள்ளியையும் நாட்டின் செல்வமாக வணிகவாதியர் கருதியதை மிகக் கடுமையாக ஆடம் சுமித்து கண்டித்தார். ஒரு நாட்டின் மக்களுக்குத் தேவையான பொருட்களும் அவற்றை உற்பத்தி செய்யும் சாதனங்களும் அந்த நாட்டின் செல்வமாக அமைய முடியும் என்று ஆடம் சுமித்து சுட்டிக் காட்டினார். பொன்னும், வெள்ளியும் குவித்து வைத்து மக்களுக்குத் தேவையான பொருட்களை வழங்க முடியாவிட்டால் செல்வத்தின் பயன்தான் என்ன எனவும் வினவினார். ஏற்றுமதியைப் பெருக்குவதற்காக உள்நாட்டில் மக்களுக்குத் தேவையான பொருட்களைச் சுருக்கிக் கொள்வதும், நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தைத் தாழ்த்துவதும் என்ன பொருளாதார மாற்றத்தைக் கொண்டு வரும் எனவும் வினவினார். உற்பத்திச் செலவு குறைவாக இருக்க வேண்டும் என்றும் கூலி குறைவாக இருப்பதற்கு மக்கள் தொகை பெருக வேண்டும் என்று வணிக வாதியர் வைத்த வாதம் மிகவும் பிற்போக்கானது எனப்பலரும் வலியுறுத்தினர்.

மேலும் ஆடம் சுமித்து போன்ற அறிஞர்கள் தடையில்லா வாணிகம் என்ற கொள்கையை வலியுறுத்தினர். அக்கொள்கை வணிகவாதக் கொள்கைக்கு எதிரிடையான கொள்கையாகும். வணிக வாதக் கொள்கை சில ஆண்டுகளில் ஐரோப்பிய நாடுகளிலேயே தோல்வியைத் தழுவியது. வணிக வாதக் கொள்கையில் தற்சார்புத் தன்மை வலிவுறுத்தப்பட்டாலும் அதன் வெளிப்பாடுகள் பொருளாதாரக் குழப்பத்தையே உருவாக்கும் என்பதை, பல ஐரோப்பியச் சிந்தனையாளர்கள் குறிப்பிட்டார்கள். மேலும் தொழில் வளர்ச்சி, தொழில் நுட்ப வளர்ச்சி, அறிவியல் வளர்ச்சி போன்ற வளர்ச்சிகளை ஒட்டியே தொழில் துறை வளர்ச்சியும் ஏற்பட்டது. இந்த அறிவியல் வளர்ச்சியும், போட்டியும் பல நாடுகளில் தோன்றியதனால் எந்தவொரு நாடும் எல்லாத் துறைகளிலும் தனித்தியங்க முடியாது என்ற நிலை 19 -ஆம் 20 - ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டது. எனவே வணிக வாதியரின் அடிப்படையான சிந்தனைகள் தோல்வியில் முடிந்தன எனலாம். இந்நூற்றாண்டுகளில் ஏற்பட்ட முற்போக்குச் சிந்தனை வளர்ச்சியும், பொது நலக் கூட்டமைப்பும் காரல்மார்க்சின் பொருளியல் தத்துவங்களும் உலகளாவிய தாக்கங்களை ஏற்படுத்தியதால் வணிக இயல் கொள்கையின் ஆதிக்க நிலைபாடுகள் முடங்கிவிட்டன எனலாம். நலப் பொருளியலில் பேசப்படுகின்ற, தேவைக்கேற்ற ஊதியம், கூலி, ஏழை மக்களுக்குச் சலுகைகள், சமூகப் பாதுகாப்பு போன்ற நலக் கொள்கைகளை அரசு முன்னின்று பாதுகாப்பதுதான் இக்கால அரசுகளின் தலையாய கடமைஎனக் கருதப்படுகிறது. மேலும், நாட்டில் அளவுக்கு மேல் மக்கள் தொகைப் பெருக்கம் பொருளாதார வளர்ச்சிக்கும் அமைதிக்கும் பெரும் இடையூறுகளாக அமையும் என்ற கருத்து

இன்று எல்லா நாடுகளிலும் ஏற்கப்பட்டுட்டுள்ளது. கூலிக்காக மக்கள் தொகைப் பெருக்கத்தை ஊக்கு விக்க வேண்டுமென்ற வணிகவியல் வாதியரின் கருத்து இன்று அடியோடு புறக்கணிக்கப்பட்டு விட்டது.

வணிக வாதத் கொள்கையைச் சில நிலைகளில் சே.எம்.கெயின்சு (K.M. Keynes) ஆதரித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆடம் சுமித்தின் மதிப்பீடுகள் தவறானவை என்றும் கெயின்சு குறிப்பிட்டார். புதிய பொருளாதார சிந்தனையில், சேமிப்பு, முதலீடு, வருமானப் பெருக்கம், முழுவேலை வாய்ப்பு ஆகியவை முக்கியமானவையாகும். மேற்கூறிய பொருளாதாரக் காரணிகளை ஒரு வகையில் வணிக வாதியர் உணர்ந்து வலியுறுத்தினர் என சே.எம்.கெயின்சு நம்பினார். அவர் அமெரிக்காவில் ஏற்பட்ட மந்தநிலைப் பொருளாதாரத்தை விரைவு படுத்தப் பயன்படுத்திய, பொருளாதார நடவடிக்கைகள் எல்லாம் அவர் வணிக வாதக் கொள்கைக்கு அருகே இருப்பது போன்று தோன்றியதால் அவர் அக்கொள்கையின் மீது பற்றுக்கொண்டிருந்தார் எனலாம்.

தொலை நோக்குடன் பார்த்தால் வணிக வாதக் கொள்கை வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளில் கூட, பெரும் வெற்றிகளை ஈட்டவில்லை.

வளர்கின்ற நாடுகளுக்கு வணிக வாதக் கொள்கையின் சில பொருளாதாரத் தன்மைகள் ஏற்புடையன என்ற கூறுபவர்களும் உள்ளனர். ஆனால், பெரும்பாலான வளர்கின்ற நாடுகள் ஒரு காலக் கட்டத்தில் வணிக வாதக் கொள்கையால் ஐரோப்பிய நாடுகளுக்கு அடிமை நாடுகளாக மாற்றப்பட்டன என்பது வரலாற்று உண்மையாகும். பழம் பெரும் சமூகப் பொருளாதாரப் பின்னணிகளையும், மரபுகளையும் உள்ளடக்கிய அந்நாடுகளில் கி.பி.16-ஆம் நூற்றாண்டில் தோன்றி மறைந்த சிந்தனையைப் பொருத்திப் பார்ப்பது சரியான அணுகு முறையாகாது. மேலும் இயற்கை வளம், அரசியல், பண்பாட்டு முறைகள் முதலான வளர்கின்ற நாடுகளில் ஒரே தன்மையாக இல்லை.

- மு.நா.

**துணை நூல்கள் :**

1. Charles Gide & Charles Rist, **A History of Economic Doctorines**, Oxford University Press, Madras, 1973.

2. Robert Wekachman, **A History of Economic Ideas**, VBS / Harper Reprint, Universal Book Stall, Delhi, 1967.

**வாய்ப்புப் பெறுமானம்** : இதை வாய்ப்புச் செலவு என்றும், பிற வாய்ப்புச் செலவு என்றும் பொருளியலில் குறிப்பிடுவர். ஏதோ ஒன்றைப் பெறுவதற்காக மற்றதை இழக்க நேரிடலாம். இழக்க நேரிட்டதன் மதிப்பே, பெற்றதன் உண்மை மதிப்பாகும் என்பதே வாய்ப்புப் பெறுமானம் (Opportunity Cost) என்பதன் பொருள். எடுத்துக்காட்டாக, ஓர் ஏக்கர் நிலத்தில் 10 மூட்டை நெல்லை அல்லது, 1 கண்டி கரும்பை விளைவிக்கலாம் என்றும் உழவர் கரும்பை விளைவிக்கிறார் என்றும் கருதினால், 1 கண்டி கரும்பின் உண்மை மதிப்பு, உற்பத்தி செய்யாமல் விடப்பட்ட பிற வாய்ப்பாகிய 10 மூட்டை நெல்லுக்குச் சமம். உழவர் நெல்லை விளைவிக்கிறார் என்றால் 10 மூட்டை நெல்லின் உண்மை மதிப்பு, உற்பத்தி செய்யாமல் விடப்பட்ட பிற வாய்ப்பாகிய 1 கண்டி கரும்புக்குச் சமம். இவ்வாறு, பண்டங்களின், பணிகளின் மதிப்பை அவற்றைப் பெறுவதற்காகத் தவிர்க்கப்பட்ட பிற வாய்ப்புப் பண்டங்களின், பிற வாய்ப்புப் பணிகளின் மதிப்பிற்குச் சமம் என்று குறிப்பிடும் கோட்பாடே, பிற வாய்ப்புச் செலவு அல்லது வாய்ப்புப் பெறுமானமாகும்.

பெறுமானம் அல்லது உற்பத்திச் செலவு : பொருளாதார நடவடிக்கைகளின் உயிர்நாடியாக விளங்குபவை உற்பத்தியும், பகிர்வும் ஆகும். உற்பத்தி என்பது பயன்பாட்டைப் படைத்தல் (Creation of Utility) அல்லது பயன்பாட்டை மிகுதிப்படுத்துதல் (Increase of Utility) ஆகும். நிலம், உழைப்பு, மூலதனம், அமைப்பு ஆகிய நான்கு உற்பத்திக் காரணிகளின் துணையுடன் நிகழ்வது உற்பத்தி. அக்காரணங்களுக்காகும் பணச் செலவு உற்பத்திச் செலவு (Cost of Production) அல்லது பெறுமானம் எனப்படும். செலவைப் பணச் செலவு (Money Cost), உண்மைச் செலவு (Real Cost), வாய்ப்புச் செலவு (Opportunity Cost)

என மூவகையாகப் பொருளியலில் விளக்குவர். இயல்புச் செலவு (Nominal Cost) அல்லது பணச் செலவு என்பது உற் பத்திக் காரணிகளுக்காகும் பணச் செலவைக் குறிப்பிடுகிறது.

உண்மைச் செலவு என்ற கருத்திற்கு ஆசுத்திரியப் பொருளியல் கோட்பாட்டினரும் (Austrian School of Economists) அவர்தம் வழித் தோன்றல்களும் புதியதொரு விளக்கத்தைத் தந்தனர். அக்கருத்தையே வாய்ப்புப் பெறுமானம் என்பர். ஒரு பொருளைப் பெறுவதற்காக விட்டுக் கொடுக்கப் படும் அடுத்த மாற்றுப் பொருளின் மதிப்பே முதலில் குறிப்பிடப்பட்ட பொருளுக்கான உண்மைச் செலவு என்பது அவர்தம் கருத்து. இதனை, வாய்ப்புச் செலவு (Opportunity Cost) என்றும், ஒற்றை மாற்றுச் செலவு (Alternative Cost) என்றும், புடை மாற்றுச் செலவு (Transfer Cost) என்றும் , இடப்பெயர்ச்சிச் செலவு (Displacement Cost) என்றும் குறிப்பிடுவர்.

சமுதாயத்தின் நோக்கில், ஒரு சேரப் பார்க்கும் போது, பணச்செலவு என்பதை விட உண்மைச் செலவு என்பதே சாலச் சிறந்த கருத்தாக அமையும். பணச் செலவும், உண்மைச் செலவும் சமமாக இருப்ப தில்லை. திரைப்பட நட்சத்திரங்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், வாணிகர்கள், கூலியாள்கள் முதலிய பலவகைச் சமுதாயப் பிரிவினர்களின் உழைப்புக்கும் அவர்தம் வருமானத்திற்கும் நெருக்கமான தொடர்பு இருப்பதில்லை.

வாய்ப்புப் பெறுமானம் என்ற கருத்தை வலிந்து புகழ் பெறச் செய்தவர் அமெரிக்கப் பொருளியல் வல்லுநரான தாவன்போர்ட்டு (Prof. Davanport) என்பவராவர். உற்பத்தி மூலவளங்கள் கிடைப்பதற் கரியவை. எனவே, ஏதாவது ஒன்றை உற்பத்தி செய்ய மற்றதொன்றின் உற்பத்தியைத் தவிர்க்க வேண்டிய நிலை வரலாம். எது தவிர்க்கப்படுகிறதோ அதன் மதிப்பே உற்பத்தியாகும். பொருளின் உண்மைச் செலவு என்ற எண்டர்சன் (Henderson) என்னும் பொருளியல் வல்லுநர் குறிப்பிடுகிறார்.

பணப் பொருளியலில் வாய்ப்புப் பெறுமானத் தைக் கீழ் வருமாறு விளக்குவர். உற்பத்திக் காரணிகள் பிற உற்பத்திப் பணிகளில் ஈடுபடுவதைக் காட்டிலும் குறிப்பிட்டதொரு உற்பத்திப் பணியில் ஈடுபடுத்தப் படுவதற்காகத் தூண்டப்படும் பணச்செலவே பிற வாய்ப்புப் பெருமானம் அல்லது வாய்ப்புச் செலவு ஆகும்.

உற்பத்திக் காரணிகளின் அளவு குறிப்பிட்ட அளவிலேயே இருக்கிறது. அப்பற்றாக்குறையினால் அவற்றைப் பல பயன்களில் பயன்படுத்த இயலுவ தில்லை. ஒருசில பயன்களில் உற்பத்திக் காரணி களைப் பயன்படுத்தும்போது பிற வழிகளில் அவற் றைப் பயன்படுத்த இயலாமல் போகிறது. எனவே, ஒருசேரப் பார்க்கும்போது, உற்பத்தியான பண்டங் களின் அல்லது பணிகளின் உண்மைச் செலவு, உற்பத்தி ஆகாமல் தவிர்க்கப்பட்ட பண்டங்களின் அல்லது பணிகளின் மதிப்பிற்குச் சமமாகிறது.

தனிப்பட்டவர்களின் நோக்கில் அச்செலவைத் தனியார் வாய்ப்புச் பெறுமானம் (Private Opportunity Cost) என்றும், சமுதாய நோக்கில் சமுதாய வாய்ப்புப் பெறுமானம் (Social Opportunity Cost) என்றும் குறிப்பிடுவர்.

பொருட்களைப் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்வதா, உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து கொள்வதா என்பதில் முடிவு செய்யவும், பன்னாட்டு வாணிகத்தில், பணத்தை நோக்கமாக வைத்திருப்பதா பிறவகைச் சொத்துகளாக வைத்தி ருப்பதா என்பதில் முடிவு செய்யவும் இக்கருத்து பயன்படுகிறது.

முயற்சியைக் கருத்தில் கொள்ளாமை, உற்பத்திக் காரணிகளின் ஓரியல்பற்ற தன்மை, உண்மை நிலைக் குப் புறம்பான எடுகோள்கள் போன்ற ஒருசில அடிப்படைகளில் இக்கருத்தில் உள்ள குறைகள் பல சுட்டிக் காட்டப் படுகின்றன. மேலும், உற்பத்திக் காரணிகள் பற்றாக் குறையாக இல்லாமலிருக்கும் சூழ்நிலைகளில் எந்த உற்பத்தியையும் தவிர்க்காமல் எல்லாப் பண்டங்களையும் பணிகளையும் உற்பத்தி செய்து கொள்ள முடியும் என்பதாலும் இக்கருத்து குறையுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

-என்.எஸ்.பா.

**துணை நூல் :**

1. David W. Pearce, (Gen. Ed.), **The Dictionary of Modern Economics**, Macmillan, London, 1983.

**வாய்மொழிச் சான்று :** இந்தியச் சான்றியல் சட்டப் படி சான்றுகள் இரண்டு வகைப்படும். அவை, 1. வாய்மொழிச் சான்று (Oral evidence) 2. ஆவணச் சான்று என்பன. விசாரணையிலிருக்கும் செய்திகள் குறித்து நீதிமன்றத்தின்முன் நீதிமன்ற அனுமதியுடன் சான்றாளர்கள் வாய்மொழியாகப் பகரும் சான்றுகள், வாய்மொழிச் சான்றுகளாகும். நீதிமன்றத்தின் ஆய்வுக்காகத் தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் ஆவணச் சான்றுகளாகும்.

வாய்மொழிச் சான்று மூலம் வழக்கு மெய்ப்பிப்பு : வழக்கொன்றின் மெய்ப்பிப்பின்போது வாய்மொழிச் சான்றைப் பொறுத்தவரையில் எல்லா நேரங்களிலும் நேரடியானதாகவே இருந்திட வேண்டும். அதாவது, பார்க்கப்படக்கூடிய ஒன்றை அது சுட்டுமானால் தாம் அதைப் பார்த்ததாகக் கூறுகிற ஒரு சான்றாளரின் சான்றாக அது இருத்தல் வேண்டும். கேட்கப்படக்கூடிய ஒன்றை அது சுட்டுமானால், தாம் அதைக் கேட்டதாகக் கூறுகிற ஒரு சான்றாளரின் சான்றாக அது இருத்தல் வேண்டும். வேறெந்தப் புலனாலேனும் அல்லது வேறெந்த முறையிலேனும் அறியக்கூடிய ஒன்றை அது சுட்டுமானால், அந்தப் புலனால் அல்லது அந்த முறையில் தம்மால் அறியப்பட்டதாகக் கூறுகிற ஒரு சான்றாளரின் சான்றாக அது இருத்தல் வேண்டும். ஒரு கருத்தையோ, அந்தக் கருத்துக்கு அடிப்படையாக இருக்கும் ஆதாரங்களையோ அது சுட்டுமானால், அந்த ஆதாரங்களின் அடிப்படையில் அந்தக் கருத்தைக் கொண்டிருக்கின்றவரின் சான்றாக அது இருத்தல் வேண்டும்.

ஆனால், பொதுவாக விற்பனைக்கு வைக்கப்படும் ஆய்வு நூல் எதிலேனும் தெரிவிக்கப்பட்ட வல்லுநர்களின் கருத்துகளையும் அத்தகைய கருத்துகளைக் கொள்வதற்கு அடிப்படையாகவுள்ள ஆதாரங்களையும், அந்த நூலாசிரியர் இறந்துவிட்டிருந்தால், அல்லது கண்டுபிடிக்கப்பட முடியாதவராக இருந்தால், அல்லது சான்றளிக்க இயலாதவராக இருந்தால் அல்லது நியாயமானதன்று என்று நீதிமன்றம் கருதும் அளவுக்குத் தாமதமோ செலவோ இல்லாமல் ஒரு சான்றாளராக அவர் தருவிக்கப்பட முடியாமலிருந்தால், அத்தகைய ஆய்வு நூல்களைத் தாக்கல் செய்வதன் மூலமாக மெய்ப்பிக்கலாம்.

மேலும், வாய்மொழிச் சான்றாவது ஓர் ஆவணமல்லாத ஏதேனும் ஒரு முக்கிய பொருளின் உண்மையை அல்லது நிலையைச் சுட்டுமானால், நீதிமன்றம் தான் பொருத்தமென நினைத்தால், தன் ஆய்வுக்காக அத்தகைய முக்கிய பொருள்களைத் தன்முன் கொண்டு வந்து வைக்குமாறு வேண்டலாம்.

சான்றளிக்கத் தகுதியுடையவர்கள் : நீதிமன்றத்தில் கேட்கப்படும் கேள்விகளைப் புரிந்து கொண்டு, அத்தகைய கேள்விகளுக்குப் பகுத்தறிவுக்கு உகந்த அளவில் பதில்கள் அளிக்கும் எவரும் சான்றளிக்கத் தகுதியுடையவர்களாவார்கள். அவர்கள் முதிர்ந்த வயதினராகவோ, முதுமூப்பு நிலையினராகவோ, உடல்நோய், உள்ள நோய் உடையவர்களாகக் கூட இருக்கலாம். பித்து நிலையில் உள்ள ஒருவர் தம்மிடம் கேட்கப்படும் கேள்விகளைப் புரிந்து கொள்ளவும், அவற்றிற்குப் பகுத்தறிவுக்கு உகந்த அளவில் பதில்களைக் கொடுக்கவும் தமது பித்துநிலை காரணமாகத் தடுக் கப்படுகிறார் என்றாலன்றி அவர் சான்றளிக்கத் தகுதியுடையவராவார். பேச இயலாதவராக உள்ள ஒருவர்கூட தாம் தம் சான்றைப் புரிந்து கொள்ளத் தக்கதாகச் செய்யக்கூடிய வேறு எந்த முறையிலும், அதாவது எழுத்து மூலமாகவோ, சைகை மூலமாகவோ அதைக் கொடுக்கலாம். ஆனால், நீதிமன்றத்தில் பகிங்கரமாக அத்தகைய எழுத்து எழுதப்படுதலும் சைகைகள் காட்டப்படுதலும் வேண்டும். அவ்வாறு கொடுக்கப்படும் சான்றும் வாய்மொழிச் சான்றாகவே கருதப்படும்.

- பு.வே.

**வார்டு, இலெசுடர் பிராங்க்கு (கி.பி.1841 – 1913) :** இவர் கி.பி.19 -ஆம் நூற்றாண்டில் சமுதாயவியல் துறையில் ஒரு வித்தகராக விளங்கியவராவார். தம் கூர்மையான மதி நுட்பத்தாலும், களஞ்சியம் போன்ற பரந்துபட்ட அறிவினாலும், விரிவான எழுத்தாற்றலாலும் அத்துறையில் வார்டு (தமக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டார்.

ஓர் எளிய மனிதனும் புகழ்மிக்க பெருந்தகையராய் வாழ இயலும் என்பதற்கு இவருடைய வாழ்க்கை வரலாறு எடுத்துக் காட்டாக விளங்குகிறது. இவர் அமெரிக்காவில் இல்லினாய் நகரில் சோலியெட்டு

(Joliet) என்னுமிடத்தில் கி.பி.*1841* -ஆம்ஆண்டு ஒரு எளிய குடும்பத்தில் பத்துக் குழந்தைகளில் கடைசிக் குழந்தையாகப் பிறந்தார். ஏழ்மை காரணமாக ஓரளவே தொடக்க நிலைக் கல்வி பெற முடிந்தது. ஆயினும், பகலெல்லாம் பண்னை வேலை செய்து விட்டு இரவில் கண் விழித்து நிறையப் படித்தார். அத்துடன் நில்லாமல், கிரேக்கம், செருமன், பிரெஞ்சு, இலத்தீன் ஆகிய மொழிகளையும் கற்று அவற்றில் புலமை எய்தினார்.

இவர் கி.பி.*1858*-இல் பென்சில்வேனியாவிலுள்ள ஒரு பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்தார். அமெரிக்கா வில் கி.பி.*1861*-இல் உள்நாட்டுப் போர் ஏற்பட்ட போது, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ஆபிரகாம் லிங்கன் இளைஞர்களுக்கு விடுத்த அழைப்பை ஏற்று, வார்டு கி.பி. *1863*-இல் போர்ப்படையில் சேர்ந்து போரில் ஈடுபட்டார். போரில் இவர் மும் முறை கடுமையான காயம் அடைந்ததனால் கி.பி.*1864* -இல் போர்ப்படையிலிருந்து விலக்கப் பட்டார்.

பிறகு இவர் அமெரிக்கக் கருவூலத் துறையில் ஓர் எழுத்தராகவும், பின்னர் அதிலிருந்து விலகிப் புள்ளி விவரச் சேகரிப்பு அலுவலகத்தில் நூலகராகவும் பணியாற்றினார். அங்குப் பணியாற்றிக் கொண்டே கொலம்பியாப் பல்கலைக்கழகத்தில், மாலை வகுப்புகளில் சேர்ந்து எம்.ஏ., (தாவரவியல்) எல்.எல்.பி. முதலிய பட்டங்களைப் பெற்றார் .

வார்டு கி.பி.*1881*-இல் அமெரிக்க நிலவியல் அளவாய்வு (U.S. Geological Survey) நிறுவனத்தில் சேர்ந்து தொல் தாவரவியல் (Palaeobotany) பிரிவுக்குப் பொறுப்பு ஏற்றார். பின்னர் கி.பி.*1892*-இல் அதே நிறு வனத்தில் தலைமைப் புதைபடிவ ஆய்வாளராகப் (Chief Palaeontologist) பதவி உயர்வு பெற்றார். தொல் பழங்காலத் தாவரவியல் துறையிலும், நிலவியல் துறையிலும் இவருக்கு ஏற்பட்ட அனுபவமும், அறிவும் இவருக்கு அந்தத் துறைகளில் விரிவான ஆராய்ச்சிகள் செய்திடவும், கட்டுரைகள் எழுதவும் துணை புரிந்தன. அவ்வகை ஆய்வுகள் செய்தபோது இவர் ஆகசுட்டுகோம்ட்டு, எர்பர்ட்டு இசுபென்சர் ஆகிய சமூகவியல் அறிஞர்களின் நூல்களைப் படிக்க நேரிட்டது. அதனால் இவருடைய ஆர்வம் சமூக வியலின்பால் திரும்பியது. அந்த ஆர்வம் நாளடைவில் பல்கிப் பெருகி இவரை ஒரு சமூகவியல் முன்னோடியாக ஆக்கியது. இவர் தம் சிந்தனைகளை வளர்த்துப் பல நூல்களை எழுதிக் குவித்தார். இவர் கி.பி.*1883*-இல் தமது முதல் சமூகவியல் படைப்பை வெளியிட்டார். "இயக்கவியல் சமூகவியல்" (Dynamic Sociology) என்ற தலைப்பில் வெளிவந்த அந்தப் படைப்பு இவருடைய சமூகவியல் சிந்தனைகளை வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தியது. அந்த நூலைத் தொடர்ந்து நாகரிகத்தின் உளவியல் கூறுகள் (Psychic Factors of Civilization - கி.பி.*1893)*, சமூகவியலின் சுருக்கம் (Outline of Sociology - கி.பி.*1898)*, உண்மைச் சமூகவியல் Pure Sociology - கி.பி. *1903)* போன்ற நூல்களை எழுதி வெளியிட்டார்.

அனைத்துலகச் சமூகவியல் நிறுவனம் என்ற அமைப்பு *1903* -இல் இவரைத் தன் தலைவராகத் தேர்ந்தெடுத்தது. இவர் *1906*-இல் அமெரிக்கச் சமூக வியல் சங்கத்தின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். அந்த ஆண்டில் இவர் நாற்பது ஆண்டு களுக்கு மேலாகத் தாம் வகித்து வந்த அரசுப் பணி யிலிருந்து விலகிப் பிரவுன் பல்கலைக் கழகத்தில் (Brown University) சமூக, அரசியல், அறிவியல் துறை யில் சமூகவியல் பேராசிரியராகச் சேர்ந்து சமூகவியல் கற்பிக்கத் தொடங்கினார். அன்றிலிருந்து இறுதி வரை இவர் அதே பணியிலிலேயே இருந்து வந்தார்.

**சமூகவியல்** : வார்டு ஓர் அறிவியல் கண்ணோட் டத்தில் சமூகவியலை அணுகுகிறார். சமூக நிகழ்வுகள் என்பன மனிதனுடைய சாதனைகளே தவிர வேறு அல்ல. ஒவ்வோர் அறிவியலும் மனிதச் சாதனை களையே தனது கருப்பொருளாகக் கொண்டு ஆராய் கின்றது. அப்படிப்பட்டநிலையில் சமூகவியல் மனிதச் சாதனைகளைப் பிரித்து ஆராய்கிற அறி வியல்கள் தரும் உண்மைகளைத் திரட்டித் தொகுத்து, கூட்டிணைத்துப் பொதுமையான உண்மைகளைப் பகுத்துத் தருகிறது. இந்தக் கட்டத்தில் சமூகவியலின் ஆய்வு முறையையும் வார்டு தொட்டுக் காண்பிக் கிறார். பொதுமைக் கோட்பாடுகளை (Generalizations) உருவாக்குவதே சமூகவியலின் ஆய்வு முறை என்று வார்டு கூறுகிறார். இவர் தம் "இயக்கவியல் சமூகவியல்" (Dynamic Sociology) என்னும் நூலில் படிமலர்ச்சி பற்றியும், அதில் மனிதனுக்குள்ள தொடர்பு பற்றியும் விவரமாகக் கூறுகிறார்.

ப்டிமலர்ச்சி நான்கு கட்டங்களில் ஏற்படுகிறது என்று வார்டு கூறுகிறார். முதலில் பிரபஞ்சத்தில் படிமலர்ச்சி (Cosmogeny) ஏற்படுகிறது. அதைத் தொடர்ந்து உயிரினங்கள் படிமலர்ச்சி (Biogeny) அடைகின்றன. பிறகு மனிதனுடைய படிமலர்ச்சி (Anthropogeny) ஏற்படுகிறது. அதைத் தொடர்ந்து சமூகப் படிமலர்ச்சி (Sociogeny) ஏற்படுகிறது.

ஒவ்வொரு கட்டத்திலும் படிமலர்ச்சி ஒரு விதியின்படி நிகழ்கிறது. அதாவது, தொடர்புடைய பொருள் (பிரபஞ்சம் / உயிரினம் / மனிதன் / சமூகம்) ஒரு விதியின் அடிப்படையிலும், ஓர் ஒழுங்கு முறையிலும் படிமலர்ச்சியடைகிறது. ஒரு பொருளின் கட்டமைப்பு வெறும் மூலங்களால் மட்டும் ஆனதில்லை. மூலங்களுக்கிடையே நிகழும் தொடர் வரிசை உறவுகளே அதன் கூட்டமைப்பிற்குக் காரணமாகின்றன. அந்த உறவுகள் மாறும்போதுதான் பொருளும் மாற்றமடைகின்றது. படிமலர்ச்சியடைந்து உருமலர்கிறது. மூலங்களுக்கிடையே முரண்பாடும், மோதலும் ஏற்பட்டு அவற்றின் உறவுகள் மாறுகின்றன. மூலங்கள் மோதும்போது புதிய ஆற்றல் வெளிப்படுகிறது. அந்தப் புதிய ஆற்றலால் மூலங்கள் மீண்டும் ஒன்றிணைந்து புதிய கட்டமைப்பைச் சமைக்கின்றன. இவ்வாறு ஒரு பொருளில் அதன் மூலங்கள் தம்முள் முரண்பட்டு மோதிக் கொள்ளும்போது, பொருள் படிமலர்ச்சி புதிய கட்டமைப்புப் பெறுகிறது. சமூகப் படிமலர்ச்சியும் இதே அடிப்படையிலேயே நிகழ்கிறது என்கிறார் வார்டு. ஒவ்வொரு நிலையிலும் சமூகம் ஒரு புதிய கட்டமைப்புப் பெறும் பொழுது, அது முந்திய நிலையில் இருந்த கட்டமைப்பை விட வேறுபட்டு மேம்பட்டு விளங்குகிறது. பழைய கட்டமைப்பின் ஆக்கக் கூறுகளே புதிய கட்டமைப்பில் இருந்தாலும், அவற்றின் உறவுகள், அமைவு ஆகியன மேம்பட்டு இருக்கும் என்கிறார் வார்டு.

மனிதச் சமூகத்திற்கு அப்பாற்பட்ட உயிரினத் திரட்சிகள் இயற்கையான செயற்பாங்கில் படிமலர்ச்சி அடைகின்றன. அவை இயற்கைத் தேர்வு (Natural Selection) என்ற செயற்பாங்கின் மூலம், வாழும் சூழ்நிலைக்கேற்பப் படிமலர்ச்சி பெற்று வளர்ச்சியடைகின்றன. ஆனால் மனிதச் சமூகம் மட்டுமே செயற்கைத் தேர்வின் மூலம் (Artificial Selection) வளர்கிறது, வாழும் சூழ்நிலையைத் தக்கவாறு திருத்தி அமைத்து மேம்பாடு முன்னேறுகிறது, திட்டமுறையில் செயல்புரிந்து மேம்பாட்டை அடைகிறது என்கிறார் வார்டு. ஆக மனிதச் சமூகம் இயற்கையான முறையில் மட்டுமல்லாது, செயற்கையான செயல்வினையின் மூலமும் படிமலர்ச்சியடைந்து முன்னேற்றம் அடைகிறது. செயற்கையான செயல்வினை ஒரு நோக்கத்தின் அடிப்படையிலேயே அமைகிறது. சமூக முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்ற நோக்கத்திலேயே செயல்வினை திட்டமிட்டு ஆற்றப்படுகிறது.

ஒரு சமூகம் அதனுடைய படிமலர்ச்சி வளர்ச்சிச் செயற்பாங்கில் ஓர் இலட்சிய நிலையை அடைய வேண்டுமானால், அந்த இலட்சிய நிலை எல்லோருக்கும் பெருமளவு மகிழ்ச்சி அமைகின்ற நிலையாக இருக்க வேண்டும். எல்லோருக்கும் பெருமளவு மகிழ்ச்சி கிடைக்கும் போதுதான் சமூகம் தனது படிமலர்ச்சியில் இலட்சிய நிலையை அடைந்ததாகக் கருதப்படும் என்கிறார் வார்டு.

அப்படிப்பட்ட நிலையை அடையச் சமூகம் திட்டமிட்டுப் பலவாறு செயற்பட வேண்டும். முதலில் சூழ்நிலையில் அமைந்துள்ள இயற்கைச் சக்திகளை அறிந்து கொள்ள வேண்டும் (Knowledge). அந்த அறிவு எல்லாரிடத்திலும் பரவி அமைந்திருக்க வேண்டும் . அந்தக் கல்வியறிவின் அடிப்படையில் சூழ்நிலையோடு வைத்துக் கொள்ள வேண்டிய உறவுகளைப் பற்றிச் சரியான கண்ணோட்டம் (Dynamic opinion) அமைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் கண்ணோட்டம் தெளிவாக அமைந்ததும் இயற்கைச் சக்திகளைப் பயன்படுத்துகிற சமூக முயற்சிகளை (Conation) மேற்கொள்ள வேண்டும். அத்தகைய முயற்சியில் வெற்றி பெறுவதே முன்னேற்றமாகும். முன்னேற்றம் அமைந்தால் எல்லோருக்கும் மகிழ்ச்சி கிட்டும். ஆக, எல்லோருக்கும் மகிழ்ச்சி அமைய, முன்னேற்றம் ஏற்பட வேண்டும். முன்னேற்றம் ஏற்பட அறிவும், கல்வியும் செழிப்புற வேண்டும்.

வார்டு தமது உண்மைச் சமூக (Pure Sociology) நூலில் உணர்ச்சிச் சக்திகளை மூன்று வகைகளாகப் பிரிக்கிறார். அவை, 1. சுயவளர்ச்சி பற்றிய உணர்ச்சிச் சக்திகள் (Ontogenic forces). அவரவர் தத்தம் வளர்ச்சி பற்றி அக்கறை காட்டுவதற்கு இவ்வகை உணர்ச்சிகளே இயக்கு சக்திகளாக அமைந்து தனிமனிதர்களை இயக்குகின்றன. அவை இரண்டு வகைகளில்

அமைகின்றன. ஒன்று, ஆக்கமுறைச் (Positive) சக்திகள்; மற்றொன்று எதிர்மறைச்(Negative) சக்திகள். இன்பத்தை நாடுகிற உணர்ச்சிகள் ஆக்கமுறைச் சக்திகள். வலியைத் தவிர்க்க முயலும் உணர்ச்சிகள் எதிர்மறைச் சக்திகள். 2. ஒருவர், நம்மவர் என்று பாராட்டுகிற மரபினர் மீது காட்டப்படுகிற உணர்ச்சிச் சக்திகள் (Philogenic forces). இவை நேரிடையாகவோ, மறைமுகமாகவோ காட்டப்படு கின்றன. பாலுணர்வு நேரிடையாகக் காட்டப்படுகிற உணர்ச்சி. குருதித் தொடர்பின் அடிப்படையில் எழுகிற பாச உணர்ச்சி மறைமுகமாகக் காட்டப்படும் உணர்ச்சியாகும். 3. சமூகத்தின் வளர்ச்சிக்கு அடிப் படையாக அமைகிற உணர்ச்சிச் சக்திகள் (Sociogenic forces). இவை மூன்று வகைப்படும். ஒன்று, பாது காப்பானவற்றை, நல்லனவற்றை நாடுகிற ஒழுக்க உணர்வுகள். இரண்டு, அழகியனவற்றைச் சுவைக் கும் இரசனை உணர்ச்சிகள். மூன்று, உண்மை யானவற்றை, பயன்தரத் தக்கனவற்றை நாடுகிற அறிவாற்றல், சமுதாயவியலுக்குப் பெரும் பங் காற்றிய இவர் 1913 -இல் காலமானார்.

**துணை நூல் :**

Timasheff, Nicholas, S., **Sociological Theory : Its Nature and Growth**, Random House, New York, 1967.

**வாழ்க்கை உதவித் தொகை** : மனைவி, குழந்தைகள், பெற்றோர் ஆகியோர்க்கு வாழ்க்கை உதவித் தொகை அல்லது 'சீவனாம்சம்' (Maintenance) அளிக்க வேண்டும் என்று குற்ற விசாரணை நடை முறைச் சட்டம் (Criminal Procedure Code) 125 -ஆம் பிரிவு வற்புறுத்துகிறது. அச்சட்டம் 1973-இல் நடை முறைக்கு வந்தது. இந்திய உச்ச நீதிமன்றம் (Supreme Court of India) வெளியிட்ட தீர்ப்பு ஒன்றில் (A.I.R. 1963, S.C.P. 1521) ஒருவர் தம் மனைவி, மக்கள், பெற்றோர் ஆகியோரை அனாதைகளாகத் தெருவில் அலைய விடாமல் அவர்களுக்கு வாழ்க்கை உதவிப்பணம் கொடுத்துக் காப்பாற்ற வேண்டும் என்று ஆணை யிட்டுள்ளது. வாழ்க்கை உதவித் தொகை வேண்டி உரிமையியல் நீதிமன்றத்தில் (Civil Court) வழக்குத் தொடுத்தால், அது கால தாமதம் ஆகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தங்களைத் தாங்களே பாது காத்துக்கொள்ள இயலாதவர்களுக்கு விரைவில் அத்தொகை கிடைக்க வேண்டும் என்பதற்காகவே அந்த வழக்குக் குற்றவியல் நீதிமன்றத்தில் (Criminal Court) தாக்கல் செய்யப்படுகிறது. அதனால் சுருக்கு விசாரணை (Summary Trial) செய்யப்பட்டு, விண்ணப்பம் (Petition) தாக்கல் செய்த நாளிலிருந்து அல்லது தீர்ப்பு வழங்கப்பட்ட நாளிலிருந்து மாதம் ஒன்றுக்கு வாழ்க்கை உதவித் தொகையாக உரூபாய் 500-க்கு அதிகப்படாமல் கொடுக்கப்படல் வேண்டும் என்று அப்புதிய சட்டத் திருத்தம் (1973) கூறுகிறது. அதன்படி போதிய வசதி படைத்திருந்தும் தன்னைத் தானே காத்துக் கொள்ள இயலாத (i) மனைவி, (ii) முறையாக அல்லது முறை தவறிப் பிறந்த மணமான அல்லது மணமாகாத இளையர் (Minors), (iii) ஒரு வருக்கு முறையாக அல்லது முறை கேடாகப் பிறந்த - வயது வந்த - உடலோ உள்ளமோ ஊனமுற்ற - தன்னைத் தானே பேணிக் காத்துக் கொள்ள முடி யாதவர் (திருமணமான பெண்ணைச் சேர்க்க லாகாது), (iv) தம்மைத் தாமே பேணிக்காத்துக் கொள்ள இயலாத தாய், தந்தை ஆகியோரைப் புறக்கணித்தாலும், பேணிக்காக்க மறுத்தாலும், அத்தகைய புறக்கணிப்பு அல்லது பேணிக்காக்க மறுத்தல் மெய்ப்பிக்கப்பட்ட பின்னர், ஒரு முதல் வகுப்புக் குற்றவியல் நடுவர் (First Class Judicial Magistrate) அத்தகையவரை அவர் தம் மனைவி, மக்கள், தாய், தந்தையரைப் பேணிக் காப்ப தற்காக மாதந்தோறும் மொத்தத்தில் உரூபாய் 500-க்கு மேற்படாமல் அளிக்குமாறு ஆணையிடலாம். மேலும், வழக்குக்குச் செலவான தொகையையும் (Costs) தருமாறு ஆணையிடலாம்.

அந்தச் சட்டப் பிரிவு எல்லா சமயத்தினருக்கும் பொதுவாக அமைந்த ஒன்றாகும். அதிகத் தொகை யாக ஒவ்வொருவரும் உரூபாய் 500-க்கு அதிகமாகக் குற்றவியல் நீதிமன்றத்தில் பெற இயலாது. ஆனால், உரிமையியல் நீதிமன்றத்தில் 1956-ஆம் ஆண்டு இந்து மகவேற்பு வாழ்க்கை உதவித் தொகைச் சட்டப் பிரிவு (The Hindu Adoptions and Maintenance Act, 1956)பிரிவு 23 -இன் கீழ் இந்து சமயத்தைச் சேர்ந்த வர்கள் விண்ணப்பம் செய்து அதிகத் தொகை பெற லாம். மேலும், மேற்கண்ட சட்டப் பிரிவு 19-இன் கீழ் தனக்கோ, தன் பெற்றோர், மக்கள் ஆகியோர்க்கோ எவ்விதச் சொத்துமின்றிப் பராமரிக்க இயலாத விதவையான மருமகளும் தன் மாமனாரிடம் வாழ்க்கை உதவித் தொகை பெறலாம்.

இந்திய உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றில் (1988) திருமணம் ஆன திருமணம் ஆகாத மகள்கூட வசதியாக இருப்பின், தங்களைக் காத்துக் கொள்ள இயலாத தாய் தந்தையர்க்கு வாழ்க்கை உதவித் தொகை வழங்க வேண்டுமென ஆணையிட்டுள்ளது. மேலும், இந்து திருமணச் சட்டப் பிரிவு 24, உரிமையியல் நீதிமன்றத்தில் மணவிலக்கு விண்ணப்பம் நிலுவையில் இருக்கும்போது மனைவி தன் கணவனிடமிருந்து வாழ்க்கை உதவித் தொகை பெறலாம் என்று கூறுகிறது.

**தீர்ப்பினை நிறைவேற்றல், காலவரம்பு, தண்டனை:** வாழ்க்கை உதவித் தொகையினை அந்தத் தொகை செலுத்தப்பட வேண்டிய நாளிலிருந்து ஓராண்டுக்குள் அதற்கென விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஓராண்டுக் காலத்திற்குப் பின்னர் நீதிமன்றம் எதிர் விண்ணப்பதாரர் பணம் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தப் பிடி ஆணையைப் (Warrant) பிறப்பிக்கக் கூடாது. வாழ்க்கைத் தொகைக்குரிய ஆணை பெற்றவர் அவ்வாணைக்கு இலக்கானவர் வசிக்கும் இடத்தில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் தொகையை கு.வி.ந. சட்டப் பிரிவு 128 -இன் கீழ் விண்ணப்பம் செய்து எதிர் விண்ணப்பதாருக்கு அழைப்பாணை (Summon) அனுப்பப் பணிக்கலாம். அப்பிரிவின்படி, வாழ்க்கைத் தொகைக்கான ஆணையின் நகலைக் கட்டணம் எதுமின்றித் தரலாம்.

நீதிமன்றத்தினால் ஆணையிடப்பட்ட ஒருவர் தக்க காரணமின்றி அந்த ஆணையின்படி வாழ்க்கை உதவிப் பணம் செலுத்தத் தவறினால், அவ்வாறு தவறும் ஒவ்வொரு முறையும் ஒரு பிடிஆணையைப் பிறப்பித்து, அவர் செலுத்தத் தவறிய ஒவ்வொரு மாதத் தொகைக்கும், ஒரு மாதம் வரை சிறைக் காவலும் அல்லது அந்தத் தொகை முழுமையாகச் செலுத்தப்படும் வரை சிறைக் காவலும் விதிக்க வேண்டும் (பிரிவு 125(3)).

**மனைவி கணவருடன் சேர்ந்து வாழ மறுப்பதற்குக் காரணமும், சீவனாம்சம் மறுக்கப்படுவதற்கான காரணங்களும் :**

**ஆணையைக் கொள்ளும் முறை :** ஒரு கணவன் மற்றொரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டிருந்தாலும் அல்லது அப் பெண்ணைத் தன் காதல் கிழத்தியாக செய்து கொண்டிருந்தாலும் அவன் மனைவி அவனுடன் சேர்ந்து வாழ மறுப்பதற்குப் போதுமான காரணம் இருப்பதாகக் கருதலாம் (பிரிவு 125 (3)).

(1) கணவன் மனைவி இருவரும் மனமொப்பித் தனித்தனியே பிரிந்து வாழ்ந்தாலும், (2) கணவனுடன் சேர்ந்து வாழ மறுப்பதற்குத் தக்க காரணம் ஏதும் இல்லாதிருந்தாலும் அல்லது கள்ளக் காதலில் வாழ்க்கை நடத்தி வந்தாலும் எந்தப் பெண்ணும் இந்தப் பிரிவின் கீழ்த் தன்னைப் பேணுவதற்கான தொகையைத் தன் கணவனிடம் பெறுவதற்கு உரிமை கிடையாது. (பிரிவு 125 (4))

மேற்கண்ட காரணங்கள் மெய்ப்பிக்கப்பட்டால், குற்றவியல் நடுவர் எந்த மனைவிக்குச் சாதகமாக இந்தப் பிரிவின் கீழ் ஆணை இடப்பட்டிருக்கிறதோ அந்த ஆணையை நீக்கிவிட வேண்டும் (பிரிவு 125 (5)).

**வழக்குக்குரிய நீதிமன்றமும் எல்லையும் :** எந்த மாவட்டத்திலும் எவர் மீதும் 125-ஆம் பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படலாம். அந்த நடவடிக்கை, (அ) அவர் இருக்கும் இடத்தில் அல்லது (ஆ) அவர் அல்லது அவர் மனைவி இருக்கும் இடத்தில் அல்லது, (இ) அவர் தம் மனைவியுடன் கடைசியாகச் சேர்ந்து வாழ்ந்த இடத்தில் அல்லது தமது முறைகேடான குழந்தையின் தாயுடன் கடைசியாக வாழ்ந்த இடத்தில் எடுக்கப்படலாம்.

**முகமதியச் சட்டம் :** முகமது அகமது கான் எதிர் சாபானு பேகம் என்ற வழக்கில் இந்திய உச்ச நீதிமன்றத்தின் அரசியல் அமைப்பு ஆயம் (Constitution Bench) மணவிலக்குச் செய்த கணவன் தன் மனைவிக்கு மகர் என்றும் முகமதிய மணக்கொடை கொடுத்து (குற்றவிசாரணை நடைமுறைச் சட்டப் பிரிவு 127(3)) வாழ்க்கை உதவிப் பொருள் ஆணையை நீக்கம் செய்யலாம் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது. உச்ச நீதிமன்றம் தனது கருத்தை வலியுறுத்தப் புனித குரானில் கூறப்பட்ட கருத்துகளை மேற்கோள் காட்டிக் குற்றவிசாரணை நடைமுறைச் சட்டப் பிரிவு 125-க்கும் முகம்மதிய இன் முறைச் சட்டத்திற்கும் (Muslim Personal Law) எவ்வித முரண்பாடும் இல்லை என்றும், ஒவ்வொரு முகமதியக் கணவனும் மணவிலக்குச் செய்யப்பட்ட மனைவிக்கு வாழ்க்கை

உதவித் தொகை வழங்க வேண்டுமென்றும் தீர்ப்புக் கூறியது. அந்தத் தீர்ப்பை இசுலாமிய சமூகத்தின் ஒரு பகுதியினர் தங்களது சாரியத்துச் (Shariat) சட்டத்திற்கு முரணாக உள்ளது என்று எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். அதன் விளைவாக மேற்கண்ட சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுக் குடியரசுத் தலைவரால் 19.5.1986 -ஆம் நாளன்று ஒப்புதல் பெற்று நடைமுறைக்கு வந்துள்ளது.

-மு.மு.

**வாழ்க்கைக் கல்வி** : பள்ளியில் பெறும் படிப்பு பெருமளவு ஏட்டுச்சுரைக்காயாய் அமைகிறது. பள்ளியை விட்டு அகன்று வாழ்க்கையில் ஈடுபட இருக்கும் மாணவருக்கு எவ்விதத்திலும் இக்கல்வி பயனுற அமையாது போவதைக் கல்வியாளர்கள் பலரும் கண்டித்துள்ளனர். அன்றாட வாழ்க்கையுடன் தொடர்பு கொண்டதாகக் கல்வி அமைதல் வேண்டும் என ஒவ்வொரு கல்விக்குழுவும் வலியுறுத்தி வந்துள்ளது. சமுதாயச் செயல்களுடன் தொடர்பு கொண்டதாகக் கல்வித் திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என அண்மைக் காலமாக உணரப்பட்டு, இப்போது வாழ்க்கைக் கல்வி என்ற திட்டமும் செயற்படுத்தப்படுகின்றது.

இன்று செயற்படுத்தும் வாழ்க்கைக்கல்வி என்ற திட்டத்திற்கு அடிப்படையாய் அமைந்தது காந்தி அடிகள் வகுத்த ஆதாரக் கல்வித் திட்டமாகும். கல்வியானது மக்களது வாழ்க்கையுடன் இணைந்ததாகவும் அதனை உயர்த்துவதாகவும் அமைய வேண்டும் என்று காந்தி அடிகள் கருதினார். உண்மைக் கல்வி என்பது பயனுள்ள உடலுழைப்பு செயல் திறங்களின் வளர்ச்சி கொண்டதாக அமைய வேண்டும். காந்தி அடிகளின் கல்விக் கருத்துகள் உருவாவதற்கு இரசுகின், தால்சுடாய் போன்றோரது நூல்களிலுள்ள வாழ்க்கைக் கருத்துகளும் உதவின. இப்பல்வேறு கொள்கைகளைக் கொண்டு 1937 ஆம் ஆண்டில் தமது ஆதாரக் கல்வியினைக் காந்தி அடிகள் நாட்டுக்கு அளித்தார். இக்கல்வித் திட்டத்தில் கைப்பணி போன்ற ஓர் உற்பத்தித் தொழிலை மையமாகக் கொண்டு கல்வி அமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இக்கைப்பணி, பள்ளி அமைந்திருக்கும் சமூகச் சூழ்நிலைக்குப் பொருத்தமான வகையில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். இதனுடன் இணைந்தே சில தவறான போக்குகள் ஏற்பட்டதன் விளைவாக இத்திட்டம் கைவிடப்பட்டது.

எனினும், 1966-இல் அமைக்கப்பட்ட கொத்தாரியின் கல்விக் குழு, ‘ஆதாரக் கல்வியின் அடிப்படைக் கருத்துகளை கல்வியின் எல்லா நிலைகளிலுமே ஊடுருவ வைத்தல் வேண்டும் என்றும் எல்லா மாணாக்கர்களுக்கும் வேலை அனுபவம் அளிக்கப் படவேண்டும்’ என்றும் குறிப்பிட்டிருப்பதை உணரலாம். இதனைத் தொடரந்து 10 ஆண்டுக் கல்வி முறையைப் பற்றி ஆராய்ந்த ஈசுவர் பாய் படேல் குழு, தொழில்சார் கல்வி பற்றியும் சமூகப் பயனுள்ள உற்பத்திச் செயல்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. பள்ளிலும் பள்ளிக்குப் புறத்தேயும் மாணவர்கள் ஈடுபடக்கூடிய பல செயல்களைக் குறிப்பிட்டு ஒவ்வொரு செயலிலும் ஈடுபட்டுக் கற்கும்போது அதனுள் அடங்கியுள்ள அறிவியல் பூர்வமான கருத்துகளையும் சமூக, பொருளாதாரச் செய்திகளையும் அறிய வாய்ப்பு ஏற்படும் என்பதனை உணர்த்தியுள்ளது.

இதனை மாற்றி 1986 இல் அமைக்கப்பட்ட புதிய கல்விக்குழு வேலை அனுபவம் என்று பல்வேறு கலைப்பாடங்களுடன் இணைத்து 10-ஆம் வகுப்பு வரை நிறைவேற்ற இயலும் என்று அறிவுறுத்தியுள்ளது. மாணவரது சூழ்நிலைக்கும், தேவைக்கும் ஏற்ப இச்செயல்களைத் தேர்ந்தெடுத்து, இதில் பெற்ற அறிவினையும் திறன்களையும் வளர்த்துக் கொண்டு இவற்றின் அடிப்படையில் மேல் வகுப்புகளில் எவ்வாறு தொழிற்பிரிவுப் பாடங்களைத் தேர்ந்தெடுக்க இயலும் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வேலை அனுபவத்தின் முக்கியமான நோக்கங்கள் வருமாறு : 1. சமுதாயத்தில் நடைபெறுகின்ற தொழில்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துதல். 2. வெவ்வேறு செயல்களில் அடங்கியுள்ள கருத்துகளையும், அறிவியல் முறைகளையும் உணர்த்துதல். 3. சூழ்நிலையில் கிடைக்கும் கச்சாப்பொருட்களை அறிதலும், அவற்றைப் பயன்படுத்தி செய்யப்படும் கருவிகளை இயக்குதலும். 4. சமூகச் சிக்கல்களை உணர்தல். 5. கருவிகளைப் பயன்படுத்திச் செயல்திறன்களை வளர்த்துக் கொள்ளுதல். 6. கடுமையான உழைப்பினை அறிந்து

மதிப்புக் கொடுத்தல். 7.வேலை அனுபவத்தில் ஈடுபடுவதால் தன்மதிப்பு பெறுதல். 8. தான் வாழும் சமூகத்திற்குத் தன் கடமையை ஆற்றுதல்.

இத்தகைய வாழ்க்கைக் கல்வியின் அடிப் படையில் 1 முதல் 10 வகுப்பு வரை மாணவரைச் சில செயல்களில் ஈடுபடுத்தி அதற்குப் பின்னர், பள்ளிப் படிப்பை முடித்து வாழ்க்கைச் செயல்களில் ஈடுபடு வோர்களுக்கு அவரது ஆர்வத்திற்கொப்ப சில பணி களைத் தொடங்க வாய்ப்பளிப்பதே ஆகும். பிளஸ் 2 படிப்பில் தொடர இருப்போர்க்கு அவரது ஆர்வத்திற் கேற்ப, சில தொழில் தொடர்பான பாடங்களை இணைத்தால், அவற்றில் ஈடுபட்டு திறன்களை வளர்த்துக்கொள்ள வாய்ப்பாக அமையும்.

இதன் அடிப்படையில், தொடக்க நிலைக் கல்வி யில் சூழ்நிலைப் படிப்பு, சோதனை செய்து அறிதல் ஆகிய சில எளிய நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படு கின்றன. உடற்பாதுகாப்பும், சுற்றுப்புற சுகா தாரத்தை வளர்ப்பதிலுமான சில செயல்களில் குழந்தைகளை ஈடுபடுத்தலாம், சூழ்நிலைப் படிப்பு இதற்குத் துணையாக அமையும், வீனாகும் பொருட் களைக் கொண்டு அழகுப் பொருட்களை அமைப் பதிலும், சுற்றுப்புறத்தை உற்றுநோக்குவதிலும் வாய்ப்புகள் அளிக்கலாம். ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல், செடிகள் வளர்த்தல் போன்றவை ஆர்வமூட்டக்கூடிய செயல்கள் ஆகும். உயர்நிலைப் பள்ளி நிகழ்ச்சிகளில் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான சில செயல்களில் ஈடுபடுத்தி விற்பனை யாகக்கூடிய பொருட்களைச் செய்து, சிறிது பொருள் ஈட்ட வகை செய்யலாம். சூழ்நிலையில் கிடைக் கின்ற பொருட்களை வைத்துக் கொண்டே செய்யக் கூடிய பொருட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். பிள்ளைகளின் ஆர்வத்தினை அடிப்படையாகக் கொண்டும், தேவைக்கேற்பவும் சூழ்நிலையை அடிப்படையாகக் கொண்டும், இச்செயல்கள் அமைக்கப்படுவதால், எல்லா பள்ளிகளுக்கும் ஒரே மாதிரியான வேலை அனுபவத்தை வரையறுக்க முடியாது. இச்செயல்களைப் பள்ளிப் பாட நேரத் திலும், மற்ற நேரங்களிலும் செய்ய வாய்ப்பளித்தல் வேண்டும். இச்செயல்களைப் பள்ளிகளில் கற்பிக்க பல வசதிகள் செய்து தரப்படவேண்டும். இதற்கான பொருட்களையும், கருவிகளையும் பெற்று, தனி வகுப்பு அறைகளும் அமைப்பதோடு, இத்துறையில் மாணவருக்குப் பயிற்சி அளிப்பதற்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் தேவைப்படுகின்றனர். சில கருவி களை அமைப்பதிலும், கைத்திறன்களை வளர்ப் பதிலும் அறிவியல் போன்ற பாடங்களின் தன்மையே வழி வகுக்கின்றன. ஆகவே பாடங்கள் கற்பிக்கும்போதே கூட வேலை அனுபவத்தை மாண வரிடையே வளர்க்க வழி அமைகின்றது. பள்ளியில் கற்பிக்கும் நேரத்தில் குறைந்தது 20 விழுக்காடு நேரம் இவ்வேலை அனுபவத்திற்காக ஒதுக்கப்படல் வேண்டும்.

இவ்வாறு பள்ளிப் படிப்பை முடித்து வரும் மாணவர்களது ஆர்வத்தினை வளர்க்கும் பொருட்டு பிளஸ்-2 படிப்பில் வழக்கமாக ஏற்படுத்தும் பாடப் படிப்புடன் தொழிற்பிரிவு பாடங்களும் இணைக்கப் பட்டுள்ளன. இப்பிரிவில் சூழ்நிலைக்கேற்பவும், மாணவரது ஆர்வத்தினை வளர்க்கும் பொருட்டும் பல வகையான தொழிற்பாடங்கள் இணைக்கப்படு கின்றன.

இத்திட்டத்தினைச் செயற்படுத்துவதில் பல சிக் கல்கள் எழுகின்றன. பத்தாம் வகுப்பு முடித்துச் செல் கின்ற மாணவர்களில் குறைந்தது 50 விழுக்காடு மாணவராவது தொழிற்பிரிவு பாடங்களில் கல்வி கற்க வேண்டும் என்ற கொத்தாரி கல்விக்குழு எதிர் பார்த்தது. ஆனால் நடைமுறையில் ஏறத்தாழ 3 விழுக் காடு மாணவர்களுக்கு மேல் இப்பிரிவினில் பயில வில்லை. படிப்பில் ஆர்வமில்லாத குறைந்த மதி படைத்தோருக்கே இவ்வகுப்புகள் பொருந்தும் என்ற தவறான எண்ணம் பெற்றோரிடையே நிலவு வதைத் தவிர்த்தல் வேண்டும். சூழ்நிலைக்கேற்ப தேவையான பாடப்பிரிவுகளை இணைத்தல் வேண் டும். இப்பாடப்பிரிவுகளுக்குப் பள்ளியில் போது மான வசதிகளும் பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் இருத்தல் வேண்டும். இப்பாட வகுப்புகளில் தயாரித்த பொருட்களை விற்பனை செய்ய விற்பனை நிலையங்கள் தேவை. இவ்வகுப்புகளைத் திறம்பட நடத்த சமுதாயத்துடன் தொடர்பும் ஈடுபாடும் அவசியம் வேண்டும். தொழிற்பிரிவு பாடங்களில் படித்து முடித்துச் செல்லும் மாணவர்களுக்கு வழிகாட்டும் மையங்களும் வேலையில் அமர்த்தும் பணியும் இன்றியமையாதன.மேலும் இத்தொழிற்

பயிற்சிப் பாடங்களில் படித்து வெளிவரும் மாண வர்களுக்கு அந்தந்ததத் துறைகளில் மேலும் அறிவை யும், பயிற்சி நுட்பத்தையும் பெருக்கிக் கொள்வதற் கான வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

-அ.ப.

**வாழ்க்கைத் தரம்** : நுகரும் பண்டங்களின் தன்மை அடிப்படையில் விளக்கப்படும் கருத்துகளில் ஒன்று வாழ்க்கைத் தரம், ஒரு தனி மனிதனின் அல்லது சமு தாயத்தின் நுகர்வுத் தேவைகளைப் பொதுவாக இன்றியமையாதவை (Necessaries), வசதியானவை (Comforts), ஆடம்பரமானவை என மூவகைப்படுத் துவர். உணவு, உடை, உறையுள் போன்றவை இன்றி யமையாத விருப்பங்கள். அந்த இன்றியமையாத விருப்பங்களை வாழ்க்கைக்கு இன்றியமையாதவை (Necessaries for life), திறமைக்கு இன்றியமையாதவை (Necessaries for efficiency), வழக்கத்தாலான இன்றியமையாதவை (Conventional necessaries) என மூவகைப்படுத்துவர். இன்றியமையாதனவாக இல் லாமல் அதே நேரத்தில் திறமையை மிகுதிப்படுத்து பவனவாக உள்ள விருப்பங்களை வசதி விருப்பங்கள் என்பர். இன்றியமையாதனவாகவும் இல்லாமல், திறமையை மிகுதிப்படுத்துவனவாகவும் இல்லா மல், தத்தம் செல்வச் செழிப்பைப் பிறருக்குப் பறை சாற்றுவதற்காக என்று உள்ள நுகர்வுத் தேவைகள் ஆடம்பர விருப்பங்கள் ஆகும். கீழ்வரும் எடுத்துக் காட்டுகளைக் காண்க. உணவுக்கான விருப்பம் வாழ்க்கைக்கு இன்றியமையாத விருப்பம். சரிவிகித உணவுக்கான (Balanced diat) விருப்பம் திறமைக்கு இன்றியமையாத விருப்பம். திருமண வீட்டில் விருந் தளிக்க வேண்டிய விருப்பம், வழக்கத்தால் இன்றிய மையாத விருப்பம், அமர்வதற்காக இல்லங்களில் பயன்படுத்தப்படும் மெத்தை இருக்கைகள், மின் விசிறி போன்றவை வசதி விருப்பங்கள். வைர மோதிரம், பட்டுச் சேலைகள், குளிர்சாதனப்பொறி (Air conditioner), படகு போன்ற பெரிய மகிழ்வுந்துகள் ஆகியவற்றிற்கான விருப்பம் ஆடம்பர விருப்பம்.

ஒரு மனிதன் அல்லது ஒரு குடும்பம் அல்லது ஒரு நாடு எந்த அளவுக்கு மேற்கூறிய மூவகை விருப்பங் களை நிறைவு செய்கிறது என்பதைப் பொறுத்து, அம் மனிதனின் அல்லது அக்குடும்பத்தின் அல்லது அந் நாட்டின் வாழக்கைத் தரம் அமைகிறது என்பது குறிப் பிடப்படுகிறது.

ஒரு மனிதன் தன் இன்றியமையாத விருப்பங் களைக்கூட நிறைவு செய்ய முடியாததொரு நிலை யிலிருப்பின், அவன் வாழ்க்கைத்தரம் மிகவும் குறை வானதாகக் கருதப்படுகிறது. அதற்கு மாறாக, அவ னுடைய இன்றியமையாத விருப்பங்கள் எல்லா வற்றையும் நிறைவேற்ற முடிகிறது என்றால், அவன் வாழ்க்கைத் தரம் ஒரளவுக்கு நிதானமாக இருக்கிறது என்றும், இன்றியமையாத விருப்பங்களையும், வசதி விருப்பங்களையும் நிறைவேற்ற முடிகிறது என்றால் அவன் வாழ்க்கைத் தரம் நன்றாக உள்ளது என்றும், இன்றியமையாத விருப்பங்கள், வசதி விருப்பங்கள், ஆடம்பர விருப்பங்கள் ஆகிய எல்லா வகை விருப் பங்களையும் நிறைவு செய்ய முடிகிறது என்றால் அவ னுடைய வாழ்க்கைத் தரம் மிக உயர்ந்த நிலையில் இருக்கிறது என்றும் குறிப்பிடுவர். ஒரு நாட்டில் வாழும் பெரும்பான்மையான மக்கள் நுகரும் இன்றி யமையாத விருப்பங்கள், வசதி விருப்பங்கள், ஆடம் பர விருப்பங்கள் போன்றவற்றின் அளவுகளைப் பொறுத்து அந்நாட்டின் வாழ்க்கைத்தரம் அமை கிறது.

மக்களுக்குத் தம் நுகர்வுத் தேவைகளை நிறை வேற்றப் பணம் தேவைப்படுகிறது. வருமானம் மிகுதியாகப் பெறுபவர்கள் தம் இன்றியமையாத தேவைகளையும், வசதி விருப்பங்களையும், ஆடம் பர விருப்பஙகளையும் நிறைவு செய்து கொள்ள முடிகிறது. வருமானம் குறைவாகப் பெறுபவர் களால் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. எனவே, வாழ்க்கைத் தரத்தை நிருண யிக்கும் இன்றியமையாத காரணி வருமானமாகும். வருமானம் மிகுதியாக இருந்தால் வாழ்க்கைத்தரம் உயர்ந்தும், வருமானம் குறைவாக இருந்தால் வாழ்க் கைத் தரம் குறைந்தும் காணப்படுவது இயல்பு. ஆனால் இப்பொது விதிக்கு விதிவிலக்கும் உண்டு.

நுகர்வுத் தேவையை நிறைவேற்றப் பணத்தைப் பயன்படுத்திப் பண்டங்களையும் பணிகளையும் மக்கள் நுகர்வர். அப்பணப் பொருளாதாரத்தில் (Money economy) பண்டங்களும் பணிகளும் அவற்றின் விலைகளுக்கேற்பக் கிடைக்கின்றன. விலைகள் மிகுதியாக இருந்தால் குறிப்பிட்ட வருமானத்தைக்

கொண்டு குறைந்த அளவு பண்டங்களையும் பணிகளையும் மட்டுமே நுகர முடியும். விலைகள் மலிவாக இருந்தால் அதிக அளவில் பண்டங்களையும் பணிகளையும் நுகர முடியும். எனவே, நாட்டில் நிலவும் விலைநிலைகள் வாழ்க்கைத் தரத்தை நிருணயம் செய்யும் மற்றுமொரு இன்றியமையாத காரணியாகும்.

பல்வகை நுகர்வுப் பண்டங்களும் தாராளமாகக் கிடைக்கும் நிலை, கல்வி, பயிற்சி, மருத்துவம், வாணிகம், வங்கி, செய்தித்தொடர்பு, போக்குவரத்து ஆகிய பல்வகை அமைப்புகளின் செழிப்பான வளர்ச்சி நிலை போன்ற பல காரணிகளும் வாழ்க்கைத் தரத்தை நிருணயிக்கின்றன. மொத்தத்தில் பருப்பொருள் சார்ந்த (Material) பண்டங்களையும், நுண் (Non-material) பண்டங்களையும் பயன்படுத்தும் அளவைப் பொறுத்து வாழ்க்கைத் தரம் அமைகிறது.


வாழ்க்கைத் தரமும் வாழ்வின் தரமும் : வாழ்வின் தரம் (Standard of life) என்ற கருத்து வாழ்க்கைத் தரத்தினின்று (Standard of living) வேறுபட்டதொன்று. பருப்பொருள் சார்ந்த, சாராத நுண் பண்டங்கள் பணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி எந்த அளவுக்கு இன்றியமையாத விருப்பங்களையும், வசதி விருப்பங்களையும், ஆடம்பர விருப்பங்களையும் நிறைவு செய்ய முடிகிறதோ அந்த அளவைப் பொறுத்து வாழ்க்கைத் தரம் அமைகிறது. ஆனால், ஒருவர் வாழும் விதம், அவர்தம் வாழ்க்கையின் உயர்ந்த குறிக்கோள் போன்றவற்றின் அடிப்படையில் வாழ்வின் தரம் அமைகிறது. பெரிய பங்களா, மகிழ்வுந்து, வேலையாட்கள் என்று பல கோடி உரூபாய் மதிப்புள்ள சொத்துகளுக்கு உரிமையாளராக இருந்து ஆடம்பரத்தோடும், செல்வச் செழிப்போடும் வாழும் ஒருவரின் வாழ்க்கைத் தரம் பொருளியல் அடிப்படையில் உயர்ந்ததுதான். ஆனால், அவர் குடிகாரராகவும், கொலைகாரராகவும் ஊர் மக்களை ஏமாற்றிப் பொய்யுரை புனைந்து திரியும் கள்வராகவும் இருப்பின், அவர்தம் வாழ்வின் தரம் மிகவும் கீழானது ஆகும். மகாத்மா காந்தியடிகள் 'அரை நிருவாணப் பக்கிரி' என்று ஆங்கிலேயர்களால் இழித்துப் பேசப்பட்ட நிலையில், மிகக் குறைந்த ஆடைகளுடன் குடிசையில் எவ்விதமான வசதிகளும் இன்றி வாழ்ந்தாலும், உயர்ந்த குறிக்கோளுடன், நாட்டுக்காகத் தம்மைத் தாமே தியாகம் செய்யும் நோக்குடன் வாழ்ந்ததால் அவர் தம் வாழ்வின் இலக்கு மிக மிக உயர்ந்தது. ஆனால், அவர்தம் வாழ்க்கைத் தரம் மிகவும் எளிமைதானது.

வாழ்க்கைத்தரம், வாழ்வின் தரம் ஆகிய இரண்டு கருத்துகளும் சார்புடைய கருத்துகளே (Relative concepts) யாகும். 'இவை உயர்ந்தவை, இவை தாழ்ந்தவை' என்று வரையறுத்துக் குறிப்பிட இயலாது. அவை, ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்த்து அறிந்து கொள்ளக்கூடியவையாகும்.

- என்.எஸ்.பா

**வானுவாட்டுக் குடியரசு :** தென்பசிபிக்கு மாக்கடலில் ஆசுத்திரேலியா கண்டத்தின் கிழக்கில் உள்ள தீவுக்கூட்டம் முன்பு நியூஎபிரிடீசு (New Hebrides) என்று பெயர் பெற்றிருந்தது. அதற்க 1980 - ஆம் ஆண்டு சுதந்திரம் வழங்கப்பட்ட பிறகு வானுவாட்டுக் குடியரசு என்னும் புதிய பெயர் சூட்டப் பெற்றது. இத்தீவுக்கூட்டம் பிசித்தீவுக்கு 800 கி.மீ. மேற்கிலும், நியூகெலிடோனியாவுக்கு 400 கி.மீ. வடகிழக்கிலும் அமைந்துள்ளது. இதன் நிலப்பரப்பு 14,700 ச.கி.மீ. ஒரு சங்கிலித்தொடர் போல 80 தீவுகள் 724 கி.மீ. நீளத்தில் அமைந்துள்ளன. இக்குடியரசின் மக்கள்தொகை 1984-ஆம் ஆண்டு மதிப்புப்படி 135,000. ஏறத்தாழ 15,000 மக்கள் தலைநகரான விலா (Vila)வில் வாழ்கின்றனர். தலைநகர் எபேட்டுத்தீவில் உள்ளது. தன்னா (Tanna), ஆம்பிரிம் (Ambryom), இலொபேவி (Lopevi) ஆகிய மூன்று இடங்களில் 3 எரிமலைகள் உள்ளன. தீவுகளில் அடிக்கடி நிலநடுக்கம் ஏற்படுவதுண்டு. குடியரசின் தேசிய மொழிக்கு பிசுலாமா (Bislama) என்று பெயர். இத்துடன் ஆங்கிலமும் பிரான்சு நாட்டு மொழியும் அரசாங்க மொழிகளாக விளங்குகின்றன.

இப்பகுதியில் கொப்பரைத் தேங்காய் மிகுதியாக விளைகிறது. மீன்பிடித்தல், கால்நடை வளர்த்தல், சுரங்கவேலை முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. மங்கனம் (Manganese) நிலத்திலிருந்து எடுக்கப்படுகிறது. உள்நாட்டு மக்களின் பெரும்பான்மையினர் மெலனீசியராவர். சிறிதளவு பாலினீசியா மக்களும் வாழ்கின்றனர். பல உள்நாட்டு மொழிகள் மக்களால் பேசப்படுகின்றன. ஒருவகை ஆங்கிலம்




**வானுவாட்டுக் குடியரசு**

பொது மொழியாக உள்ளது. போர்ச்சுகீசிய கடல் வழி வல்லுநர், பெட்ரோ பெர்னாண்டசு தெ குயிரோசு (Pedro Fernandez de Queiros) என்பவர், கி.பி.1606-ஆம் ஆண்டில் நியூபெப்ரிடீசு தீவுகளைக் கண்டுபிடித்தார் பிறகு, கி.பி. 1774 -இல் சேம்சுகுக் என்ற ஆங்கிலக் கடற்படைத்தளபதி இங்கு முறை யான நில ஆய்வுகளை நிகழ்த்தினார். ஆங்கிலேய சமயத் தூதுக் குழுவினர், கி.பி. 19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இங்கு செல்லத் தொடங்கினர். அதே காலத்தில், உள்நாட்டுச் சந்தன மரத்தை நாடி அயல் நாட்டவர் இங்கு சென்றதன் விளைவாக சந்தனமரம் காலப்போக்கில் அடியோடு இல்லாமற் போயிற்று. பிறகு, உள்நாட்டினரைக் கடத்திக் கொண்டு போய் ஆசுத்திரேலியா கண்டத்திலுள்ள குவீன்சுலாந்து மாநிலத்தில் பருத்தி, சர்க்கரைத் தோட்டங்களில் பணிகளில் அமர்த்தும் வழக்கம் தொடர்ந்தது. இக் கள்ளக் கடத்தலைத் தவிர்க்க இங்கிலாந்து எடுத்துக் கொண்ட முயற்சிகள் கி.பி.1887 -இல் பயனளித்தன. அதே ஆண்டில், இங்கிலாந்தும் பிரான்சும் இணைந்து ஒரு கடற்படை மேலாண்மைக்குழுவை அமைத்து, அத்தீவுகளில் தமது கட்டுப்பாட்டை நிறு வின. பிறகு, கி.பி.1906 -ஆம் ஆண்டு மேலாண்மைக் குழு அகற்றப்பட்டு அரசியல் முறையில் இங்கிலாந் தும் பிரான்சும் கூட்டுத்தலைமை ஆட்சியை அங்கு ஏற்படுத்தின. அவ்வமைப்புபடி அத்தீவுகளில் இருந்த ஆங்கிலேயர்கள் இங்கிலாந்தின் கட்டுப்பாட்டின் கீழும், தீவுகளின் பிரான்சு நாட்டு மக்கள், பிரான்சின் கட்டுப்பாட்டின் கீழும் கொணரப்பெற்றனர். பொது வான நாட்டு அதிகாரம் இரண்டு நாடுகளுக்குமே இல்லை. தீவுகளின் உள்நாட்டு மக்கள், இங்கிலாந்துக்கோ பிரான்சுக்கோ கட்டுப்பட்டவர் கள் இல்லை. பொதுவாக தீவுகளின்செய்திகள் அனைத்தையும் இங்கிலாந்தும் பிரான்சும் இணைப்பு ஆட்சி முறை மூலம் கண்காணித்து வந் தன. அத்தகைய கூட்டுத்தலைமை ஆட்சி, கி.பி. 1980 -ஆம் ஆண்டு முடிவுற்று, நியூஎபிரிட்சுத் தீவுகள், வானுவாட்டுக் குடியரசு என்ற புதிய பெயருடன் சுதந்திரம் பெற்றன. சுதந்திர வானுவாட்டுவில், 39 உறுப்பினர்களடங்கிய ஒரு தேசிய பேராளர் அவையை மக்கள் 4 ஆண்டுகளுக்கொரு முறை தேர்ந்தெடுக்கின்றனர். அச்சட்டசபை, குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுக்கிறது. இக்குடியரசு,



வானுவாட்டு குடியரசு ஆடவன்

ஐக்கியநாடுகள் அவையிலும், ஆங்கிலேயப் பொது நல அரசிலும் உறுப்பு நாடாக உள்ளது.

-தெ.பா.

**விசயலட்சுமி பண்டிட்** : இவர் சவகர்லால் நேருவின் தங்கையும் ஐ.நா.பொதுச் சபை தலைவர் பதவி வகித்த முதல் பெண்மணி என்ற பெருமைக் குரியவருமாவார். இவர் அலாகாபாத்தில் உள்ள ஆனந்தபவனில் 1900 -ஆம் ஆண்டு ஆகசுட்டுத் திங்கள் 18 -ஆம் நாள் பிறந்தார். மோதிலால் நேருவின் செல்லத் திருமகளாக வளர்ந்த இவர் இளமை முதற்கொண்டே கல்வியறிவில் சிறந்து விளங்கினார். வழக்கறிஞர் இரஞ்சித் சீதாராம் பண்டிட்டை 1921-ஆம் ஆண்டு மணந்தார். திருமணத் திற்குப்பின் இவர் கல்கத்தாவில் வாழ்க்கை நடத்தி வந்தார். சந்திரலேகா, நயனதாரா என்ற இரண்டு பெண் குழந்தைகளுக்குத் தாயான பின்னர், மீண்டும் அலகாபாத்துக்குத் திரும்பி அரசியலில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார்.

இவர் 1935-ஆம் ஆண்டு அலாகாபாத் நகரமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். விடுதலைப் போராட்டக்காலத்தில் காங்கிரசுக் கட்சி நடத்திய பல்வேறு கிளர்ச்சிகளிலும் பங்கேற்று இவர் பல முறை சிறை சென்றார். உத்தரப் பிரதேசத்தில் 1937-ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்த லில் இவரும் இவர் தம் கணவரும் வெற்றி பெற்ற னர். இவர் 1946 -ஆம் ஆண்டுவரை சட்ட மன்ற உறுப்பினராக நீடித்தார்.

இவர் 1946-ஆம் ஆண்டில் இந்தியத் தூதுக் குழு வின் தலைவராக ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்துகொண்டார். இந்திய விடுதலைக்குப் பின்னர் சோவியத் நாட்டிற்கான முதலாவது இந்தியத் தூதராக இவர் நியமிக்கப்பட்டார். காங்கிரசுக் கட்சி சார்பில் 1952-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு முதலாம் மக்களவைக்குத் தேர்ந் தெடுக்கப்பட்டார்.

ஐ.நா.பொதுச்சபையின் தலைவராக 1953-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 15-ஆம் நாள் தேர்ந் தெடுக்கப்பட்டதன் வாயிலாக அப்பதவியைப் பெற்ற முதல் பெண் என்ற புகழுக்கு உரியவரானார். பிரிட்டனுக்கான இந்தியத் தூதராக 1954 -ஆம் ஆண் டும், இசுபெயினுக்கான இந்தியத் தூதராக 1958 -ஆம் ஆண்டும் நியமிக்கப்பட்டார். மராட்டிய மாநிலத்தில் ஆளுநராக 1962-ஆம் ஆண்டு முதல் 1964-ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்.

சவகர்லால் நேரு மறைந்ததையடுத்து அவரது தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் இவர் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் 1967 வரை அப்பதவியில் நீடித்தார். நெருக்கடி நிலை பிர கடனப்படுத்தப் பட்டதை எதிர்த்து 1975-ஆம் ஆண்டு இந்திரா காங்கிரசுக் கட்சியை இவர் கடுமையாக எதிர்த்தார். பின்னர் நடைபெற்ற தேர்தலில் சனதா கட்சிக்கு ஆதரவாகப் பிரசாரம் செய்தார். சனதா



விசயலட்சுமி பண்டிட்

கட்சி வெற்றியடைந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பின்னரும் பதவி எதையும் ஏற்க மறுத்துவிட்டார். அதன் பின்னர் அரசியலிலிருந்து முழுமையாக விலகி தேராடூனில் தமது இல்லத்தில் அமைதியாக வாழ்ந்து வந்தார். உலக அளவில் இந்தியாவின் நலனுக்காகப் பெரிதும் பாடுபட்ட இவர் 1990-ஆம் ஆண்டு டிசம்பர் முதல் தேதி தம் 90-ஆம் வயதில் காலமானார்.

- சா.உ..

**விதவைகள் மறுவாழ்வு :** இந்தியா போன்ற கீழ்த்திசை நாடுகளில் விதவை நிலை என்பது பெண்களுக்கு ஏற்படுகின்ற கொடுமையான நிலையாகும். விதவை என்பது மணமான ஒரு பெண் மகப்பேறு பெற்றோ, பெறாமலோ தன் கணவனை இழந்து நிற்கும் நிலையைக் குறிக்கும். நேரக்கூடாத ஒன்று நேரிட்டதாக விதவை நிலை கருதப்பட்டு, அந்நிலையில் பெண்களுடைய உரிமைகள், சுதந்திரம், இயல்பான நடவடிக்கைகள் ஆகிய அனைத்தும் கட்டுப்படுத்தப்படுகின்றன. .அதனால், அவர்களுடைய பொருளாதார நிலை, கல்வி வாய்ப்பு, எதிர்கால வாழ்வு ஆகியன முடங்கிப் போய் விடுகின்றன.

"விதவை நிலை என்பது மணபான பெண்ணின் வாழ்வில் ஏற்படக்கூடிய ஒரு நிகழ்ச்சியேயாகும். அந்நிகழ்ச்சி பெண்களுடைய இயல்பான வாழ்க்கையைத் தடுத்து நிறுத்த வேண்டியதில்லை. முன்போலவே விதவை நிலையிலும் பெண்கள் இயல்பான வாழ்க்கை வாழ வேண்டும்" என்று பல சீர்திருத்தவாதிகள் பெண்களுக்காக உரிமைக் குரல் எழுப்பி இயக்கம் கண்டனர்.

இந்தியாவில் கி.பி.19-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் விதவைகள் மறுமணம் செய்யலாகாது என்ற சமூகத் தடை இருந்தது. அதை எதிர்த்து ஈசுவர சந்திர வித்தியாசாகர், தேபேந்திர நாததாகூர், சசிபாத பானர்சி, கேசப் சந்திர சென், விட்டுணு சாத்திரி பண்டிட்டு, மகாதேவ கோவிந்த ரானடே, மகரிசி தோண்டோ கேசவ கார்வே, மாதவதாசு கர்சன்தாசு முதலிய சமூகச் சீர்திருத்தவாதிகள் போர்க்குரல் எழுப்பினர். விதவைகள் மறுமணத்திற்கு ஆதரவாக இடையறாது பேச்சுகள் மூலமும், வெளியீடுகள் மூலமும் தம் கருத்தைப்பரப்பினர். சசிபாத பானர்சி, மகரிசி கார்வே, மாதவ தாசு கர்சன்தாசு முதலியோர் தம் கொள்கை முழக்கத்திற்குத் தாமே முன்மாதிரியாக நின்று விதவைகளை மணம் புரிந்தவர். அவர்களுடைய விதவை மறுமண ஆதரவு முயற்சிகளுக்கு இளைஞர்களின் உணர்ச்சியோடுகூடிய ஒத்துழைப்பும் கிடைத்தது. இளைஞர்கள், குறிப்பாக வங்காள இளைஞர்கள் பெதுனே சங்கம் (Bethune Society), தத்தவோதினி சபா (Tattawodhini Sabha) என்ற அமைப்புகளை நிறுவி விதவைகளின் மறுமண இயக்கத்திற்கு வலுவூட்டினர். தெரோசியன்கள் (Derozians) என்ற பெயரில் இயங்கிய வங்காள நடுத்தர வகுப்பைச் சேர்ந்த முற்போக்கு இளைஞர்களும் விதவை மறுமண இயக்கப் பணியில் சேர்ந்து விதவைகளுக்காகப் போராடினர். இத்தகைய முனைப்பான இயக்கத்தின் விளைவாக கி.பி.1856-ஆம் ஆண்டில் இந்து விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்டுச் செயற்பாட்டுக்கு வந்தது. இச்சட்டத்திற்கு எதிராகச் சனாதனிகளும், பழமைவாதிகளும் இராதாகாந்த தேபு என்பவர் தலைமையில் அணிவகுத்து எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆயினும், சட்டம் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

விதவை மறுமணத்தின் மீதிருந்த தடை நீங்கி அதற்குச் சட்ட அனுமதி கிடைத்ததும் வங்காளத்தில் செயற்பட்டு வந்த பிரம்ம சமாசமும், பஞ்சாபுப் பகுதியில் செயற்பட்டு வந்த ஆரிய சமாசமும், மகாராட்டிராவில் இயங்கி வந்த பிரார்த்தனை சமாசமும் விதவைகள் மறுமணத்திற்கு ஆக்கமுறையிலான முயற்சிகளை மேற்கொண்டன, விதவைகளின் பெற்றோர்களைக் கண்டு பேசி, விதவைகளுக்கு மறுமணம் செய்திட வற்புறுத்தின. இவ்வியக்கங்கள் விதவைகள் மறுமணத்தையும் நடத்தி வைத்தன. தென்னிந்தியாவில் வீரேசலிங்கம் பந்துலு என்பவரால் கி.பி.1891-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட விதவை மணச் சங்கமும் விதவை மறுமணப் பணியில் முயற்சிகள் மேற்கொண்டது.

ஆயினும், விதவை மறுமணம் தொடர்பாகச் சமூகத்தில் நிலவி வந்த மரபு வழியான நம்பிக்கைகளும், கோட்பாடுகளும் தளர்ச்சியடையாமல் அப்படியே நிலைத்து நின்றன. விதவைப் பெண்களும் மறுமணம் புரியத் தயக்கம் காட்டினர். குறிப்பாக, முப்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட விதவைகளும், இரண்டு, மூன்று குழந்தைகளுக்குத் தாயான விதவைப் பெண்களும் மறுமணம் வாழ்வில் சிக்கலையும் இடர்ப்பாட்டையும் தோற்றுவிக்கும் என்று மறுமணத்தை விலக்கி வைத்தனர். ஆசாரப் பற்று மிகுந்த குடும்பங்களில் விதவை மறுமணம் ஒரு முறையற்ற ஒழுக்கமற்ற செயல் என்று விலக்கி வைக்கப்பட்டுத் தடை செய்யப்பட்டது. விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்டு முப்பது ஆண்டுகள் கழிந்த பிறகும் விதவை மறுமணங்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே இருந்தது. அந்த முப்பது ஆண்டுகளில் அறுபது விதவை மறுமணங்களே நடைபெற்றன.

படித்துத் தெளிவு பெற்ற பெண்களும், விதவைகளின் மறுவாழ்வுக்கும் பாடுபட்ட பெண்களும் கூட விதவை நிலையில் மறுமணம் செய்யத் தயங்கினர். விதவைகளின் மறுமணத்திற்காகப் பாடு பட்ட மகரிசி கார்வேயின் துணைவியார் இரமாபாய் அம்மையாரே (மகரிசி கார்வேயை மணப்பதற்கு முன் அவரே ஒரு விதவையாக இருந்தார்.) கணவரின் இறப்புக்குப் பின்னர் மறுமணத்தை நாடத் தயங்கினார். சென்னையைச் சேர்ந்த சுப்புலட்சுமி சுப்பிரமணியம் இளம் வயதிலேயே விதவையானவர். அவர் தம்மையொத்த விதவைகளின் கல்வி வளர்ச்சிக்கும், நல் வாழ்வுக்கும் பாடுபட முன் வந்தாரேயன்றி மறுமணத்தை ஏற்க விரும்பவில்லை. அவ்வாறே பண்டித இரமாபாய் என்ற மகாராட்டிர அம்மையார் விதவைகளின் நல் வாழ்விற்காகப் பெரிதும் உழைத்தாரே தவிர, தம் விதவை நிலையில் மறுமணம் புரிய விரும்பவில்லை.

இன்று விதவை மறுமணம் பற்றிய சமூக நிலைப்பாடு மாறி இருக்கிறது. திருமதி குனியால் தேசாய் என்பவர் 1945-இல் குசராத்துப் பகுதியில் நடத்திய ஓர் ஆய்வில் 89 விழுக்காடு பெண்கள் விதவை மறுமணத்தை ஆதரிப்பது கண்டறியப்பட்டது. இப்படிப் பட்ட மாற்றத்திற்குக் கல்வியறிவின் மேம்பாடும், முற்போக்கான சிந்தனைகளும் சமயச் சார்பின்மை தழுவிய கொள்கைகளின் தாக்கமும், சமூக விழிப்புணர்வின் பரவலுமே முதன்மையான காரணங்களாகும். விதவை மறுமணம் பற்றிய சமூக மனப்பான்மையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தினால் இப்பொழுது விதவை மறுமணம் படிப்படியாக வழக்கில் வந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவில் பல மாநில அரசுகள் விதவை மறுமணத்தை ஊக்குவிக்கப் பல நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. அவற்றுள் சிறப்பிடம் பெறுவது நிதியுதவி. விதவைகளின் மறு வாழ்விற்கு மறுமணமே சிறந்த வழி என்றும், அத்தகைய வழியை விதவைகள் நாடுவதற்குப் பொருள் உதவி பெரிதும் துணை செய்யும் என்றும் மாநில அரசுகள் எண்ணி விதவை மறுமணத்திற்குப் பொருள் உதவி தந்து ஊக்குவிக்கின்றன. தமிழ்நாடு அரசு விதவை மறுமணத்தை ஊக்குவிக்கின்ற வகையில் விதவை மறுமணம் என்றொரு திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. இந்தத் திட்டம் 1975-ஆம் ஆண்டில் அமலுக்கு வந்தது. இந்தத் திட்டத்தின் கீழ் இளம் வளதில் கணவனை இழந்த விதவைகள் மறுமணம் செய்து கொண்டால் அந்த மணமக்களுக்கு 5000 உரூபாய் பொருளுதவி வழங்கப்படும். அந்தத் தொகை பணமாகக் கொடுக்கப்படாமல் சேமிப்புப் பத்திரமாக வழங்கப்படுகிறது. பணத்துக்காக விதவைப் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு எவரும் ஏமாற்றி விடக்கூடாது என்பதற்காகவே பொருளுதவி சேமிப்புப் பத்திரமாக வழங்கப்படுகிறது.

மேலும் விதவைகள் வாழ்வில் கவலை தோன்றாமல் இருக்கத் தமிழ்நாடு அரசு பல உதவிகளை அளிக்கிறது. ஏழை விதவைகளுக்கு மாதம் உரூபாய் 50 உதவித் தொகை வழங்குகிறகு. முன்பு 35 உரூபாயாக இருந்த இந்த உதவித் தொகை 1989-ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் முதல் 50 உரூபாயாக உயர்ந்துள்ளது. முன்பு ஓர் ஆண்டிற்கு இவ்வளவு விதவைகள் தாம் உதவித்தொகை பெறலாம் என்று உச்சவரம்பு இருந்தது. அந்த உச்சவரம்பும் 1989 ஏப்பிரல் மாதத்திலிருந்து விலக்கப்பட்டு, அனைத்து ஏழை விதவைகளுக்கும் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

அது மட்டுமன்றி ஆண்டுதோறும் பொங்கலின் போது விதவைகளுக்கு இலவசமாகச் சேலைகளும் வழங்கப்படுகின்றன. அந்தத் திட்டம் 1988 ஏப்ரல் மாதத்திலிருந்து செயற்பாட்டில் இருந்து வருகிறது. விதவைகள் தனியாகத் தொழில் நடத்த விழைந்தால் தமிழ்நாடு அரசின் சமூக நலத் துறை அவர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் பெற்றுத் தருகிறது. மேலும் 20 முதல் 40 வயது வரையிலுள்ள ஆதரவற்ற விதவைகளுக்கு தையல் இயந்திரம் இலவசமாக வழங்கப்படுகிறது. ‘விதவைகள் மகள் திருமணத் திட்டம்’ என்ற திட்டத்தின் கீழ் விதவைத் தாய்மார்களின் 18 வயது முதல் 30 வயது வரையுள்ள பெண்மக்கட்குத் திருமணம் நடத்த உரூபாய் 1000 அளவில் பொருளுதவி வழங்கப்படுகிறது. அவர்களுடைய குழந்தைகளுக்கு 10-ஆம் வகுப்பு முடிய இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. பெண் குழந்தைகளுக்கு மட்டும் +1, +2, வகுப்புகளிலும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.

மாநில அரசுகள் மட்டுமன்றி, மைய அரசும் விதவைகளின் நலனுக்குப் பணியாற்றுகிறது. மைய

அரசின் சமூக நல, மறுவாழ்வு இயக்குநரகம் இடம் பெயர்ந்து வரும் விதவைகளுக்குக் கல்வி பயிலப் பொருளுதவி அளிக்கிறது. மையச் சமூக நல வாரியம் விதவை இல்லங்களை நிறுவவும்,நிருவகிக்கவும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கி ஊக்கப்படுத்துகிறது.

அரசுகள் மட்டுமன்றித் தனியார் தொண்டு நிறுவனங்களும் விதவைகள் நலத்திற்கும் பாதுகாப்புக்கும் பெரும்பணி ஆற்றுகின்றன. அவை விதவை இல்லங்களை நிறுவி விதவைகளுக்குத் கல்வி வசதி, தங்கும் வசதி, உணவு வசதி, மருத்துவ வசதி ஆகிய வசதிகளைச் செய்கின்றன. அப்பளம் தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல், தீப்பெட்டி செய்தல், பலகார வகைகள், உரொட்டி, பழச்சாறு போன்ற உணவுப் பண்டங்கள் தயாரித்தல், பொம்மைகள், மெழுகு வர்த்தி, கைவினைப் பொருட்கள் முதலியன செய்தல், ஆயத்த ஆடைகள் தைத்தல் முதலிய பணிகளில் பயிற்சி கொடுத்து அவர்களுக்கு வருமானம் கிடைக்க அந் நிறுவனங்கள் வழி செய்கின்றன. கிறித்தவ சமயத்தின் பல்வேறு திருச்சபைகளும் விதவைகளுக்கு இல்லங்களை நிறுவி ஆதரிக்கின்றன. அவ்வாறே இந்தியாவில் அநாதைகளுக்குப் பாதுகாப்பு நல்கிடும் சமணச் சங்கம் (Jain Society for the protection of Orphans) ஆதரவற்ற விதவைகளுக்குப் புகலிடமும் பொருளுதவியும் தந்து ஆதரவு அளிக்கிறது. அச்சங்கம் தில்லியில் தலைமையகத்தைக் கொண்டு பணிபுரிகிறது. சேவா சமிதி என்ற சமயச் சார்பற்ற அமைப்பு உத்தர பிரதேசம், தில்லி, பஞ்சாபு, இமாசலப் பிரதேசம் முதலிய பகுதிகளில் விதவை இல்லங்களை நடத்தி வருகிறது.

இன்று விதவை இல்லங்களே விதவைகளுக்குப் புகலிடமாக விளங்குகின்றன. அவற்றின் முன்னோடிகள் பண்டித இரமாபாய், கார்வே, வீரேசலிங்கம் பந்துலு, சுப்புலட்சுமி சுப்பிரமணியம் முதலியோர் தொடங்கிய விதவை இல்லங்களேயாகும். பண்டித இரமா பாய் கி.பி.1889-இல் பம்பாயில் சாரதா சதன் என்ற பெயரில் விதவை இல்லம் ஒன்றைத் தொடங்கினார். பூனாவிலும் 1892-இல் அத்தகைய அமைப்பை நிறுவினார். அந்த இல்லங்களில் அவர் விதவைகளுக்கு ஊண், உறைவிடம் ஆகிய வசதிகளைச் செய்து கொடுத்துக் கல்வியும் கற்றுக் கொடுத்தார். அந்தக் காலக் கட்டத்தில் பெண் கல்வி, குறிப்பாக விதவைகளின் கல்வி மறுக்கப்பட்டதால் கல்விச் சேவை ஓர் உயர்ந்த சேவையாகக் கருதப்பட்டது. ஆகவேதான், சாரதா சதன் அமைப்பில் விதவைகளுக்குக் கல்வி கற்றுத் தருவது முதன்மையான பணியாக இருந்தது. பண்டித இரமாபாய்க்கு இங்கிலாந்திலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் கிறித்தவ சமயச் சங்கங்கள் நிதியுதவி அளித்தன. அதனால் அவர்தம் பணி நிதித் தொல்லையில்லாமல் செயற்பட முடிந்தது.

ஆனால், இதற்கு நேர் மாறாக மகரிசி கார்வேயின் முயற்சி அமைந்திருந்தது. அவர் தம்முடன் பதினைந்து பேரைச் சேர்த்துக் கொண்டு கி.பி.1896 -ஆம் ஆண்டில் ஆனந்த பாலிகாசிரமம் என்றொரு விதவை இல்லத்தை விதவைகளின் கல்விக்காக நிறுவினார். ஆனால், அவரிடம் போதுமான பொருள் இல்லை. எனினும், விதவைகளுக்குக் கல்வி கற்றுத் தர வேண்டும் என்ற விடாப்பிடியான நோக்கத்தில் அவர் ஆனந்த பாலிகாசிரமத்தை நிறுவினார். ஆனால், அந்தக் காலத்தில் பெண் கல்வி மீது சமூகத்தில் வெறுப்பும், தடையும் நிலவியதால் விதவைகள் கல்வி கற்க அனுமதிக்கப்படவில்லை. விதவைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க கார்வே செய்த முயற்சி ஒரு முறைகேடான செயலாகக் கருதப்பட்டது. ஆகவே, பெற்றோர்கள் விதவைப் பெண்களை ஆனந்த பாலிகாசிரமத்தில் சேர்க்க மறுத்தனர். ஆயினும் கார்வேயும், அவர் நண்பர்களும் பெற்றோர்களை நேரில் சந்தித்து விதவைப் பெண்களை இல்லத்துக்கு அனுப்பவேண்டினர். அவர்கள் பொருள் பற்றாக் குறையில் இருந்தனர் . எனினும் குறைந்த பொருளைக் கொண்டே விதவைப் பெண்கள் இல்லத்திற்கு வந்து போகப் போக்குவரத்து வசதியும், தங்கும் வசதியும் செய்து கொடுத்துக் கல்வி கற்றுக் கொடுத்தனர். நாளடைவில் அவர்களுடைய விதவைக் கல்வி முயற்சி படிப்படியாக வெற்றி பெற்று உரிய பலனைத் தந்தது. சென்னையில், வீரேசலிங்கம் பந்துலு 1902-ஆம் ஆண்டில் ஒரு விதவை இல்லத்தை நிறுவினார். அதில் அவர்களுக்கு இலவசமாகத் தங்கவும் உண்ணவும் வசதி செய்து கொடுத்துக் கல்வி வாய்ப்பும் அளித்தார். சென்னையில் 1912-13 ஆம் ஆண்டுகளில் மேலுமொரு விதவை இல்லம் தொடங்கப்பட்டது. அதை நிறுவியவர் சுப்புலட்சுமி

சுப்பிரமணியம். அவர் அந்த இல்லத்தில் விதவைகளுக்குத் தங்கும் வசதியும் வேண்டிய உதவிகளும் செய்து கல்வி அளித்தார். அவருடைய முயற்சிக்குத் தொடக்கத்தில் ஆதரவு இல்லாமல் இருந்தது. ஆயினும், நாளடைவில் நிலைமை மாறி பலன் கொடுக்கத் தொடங்கியது.

இன்று, விதவை இல்லங்களுக்குத் தொடக்கத்தில் இருந்த இடர்ப்பாடுகள் இல்லை. ஆகவே அவை எளிதாக விதவைகளுக்குப் பாதுகாப்பும், கல்வியும் அளித்து வருகின்றன. ஆயினும் அவற்றின் வளர்ச்சிக்கு அடிக்கல்லாய் அமைந்தவை முன்னாளைய விதவை இல்லங்களே ஆகும்.

-சி.என்.ந.

**விநோதக்கூத்து :** கூத்துகள் பலவகைப்பட்டிருந்தாலும் அவை வகை தொகை செய்யப்பட்ட நிலையைச் சிலப்பதிகாரத்தில் காணமுடிகிறது. சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் குரவை, கலிநடம், குடக்கூத்து, கரணக் கூத்து, நோக்குக் கூத்து, தோற்பாவைக் கூத்து என்று ஆறு கூத்துகளை விநோகக் கூத்துகளெனக் குறிப்பிடுகிறார்.

அடியார்க்கு நல்லார் குறிப்பிடும் கூத்துகள் யாவும் சங்க காலத்திலேயே வழக்கத்தில் இருந்திருக்கின்றன. விநோதக்கூத்து வரிசையில் முதலாவதாகக் குறிப்பிடப்படும் குரவை சங்ககாலத்தில் செல்வாக்குப் பெற்ற கூத்தாகும். பலர் கூடி நிகழ்த்தும் இக்கூத்தை மலைநடனம் என்றும் கூறுவர். ஏழு அல்லது ஒன்பது பேர் கூடி ஆடும் ஆட்டம் என்பது உரையாசிரியர்கள் தரும் விளக்கமாக இருக்கிறது. ஒருங்கு நாமாடுங் குரவையுள் (கலி-10419) என்பது போன்று வரும் குறிப்புகளால் குரவை என்பது குழு நடனம் எனத் தெரிகிறது. குரவையில் பங்குகொள்வோர் ஒருவரையொருவர் தழுவிக்கொண்டு ஆடுவதை (மதுரைக் காஞ்சி 614-615) இலக்கியம் சுட்டுகின்றது. குரவை முறையாக ஆடப்பட்ட நிலையில் இசைப் பின்னணியும் (கலி-12034-35) இருந்திருப்பதாகத் தெரிகிறது. இக்காலச் சிறுதெய்வ வழிபாட்டில் இடம் பெறும் முளைப்பாளி குரவையின் எச்சமெனக் கூறுவாரும் உளர்.

கயிற்றின் மீது தாளத்திற்கேற்ப நிகழ்த்தும் நடனம் கலிநடமாகும். இது கழாய்க்கூத்து எனவும் கயிற்றாட்டம் எனவும் கூறப்படுகிறது. "கழைபாடு இரங்க பல்இயம் கறங்க ஆடுமகள் நடந்த கொடும்புரி நோன்கயிற்று" (நற்-951-2 ) என்ற வரிகளினின்றும் இக்கயிற்றாட்டம் சங்ககாலத்தில் இருந்ததுஎன அறியலாம். புராண இதிகாச வரலாறுகளின் அடிப்படையில் சில கூத்துகளை அடியார்க்கு நல்லார் ஆரியக்கூத்தெனக் குறித்துள்ளார். அதில் கலிநடம் சேர்வதற்கு வாய்ப்பில்லை. கூட்டான இசைக்கருவிகளின் பின்னணி இக்கூத்திற்கு உண்டு. ஆரவாரத்தினைக் கலி என்று குறிப்பிடும் போக்கை இலக்கியத்தில் காணலாம். அவ்வகையில் கலிநடம் எனக் கூறப்பட்ட தாகலாம். கழை என்பது மூங்கிலைக் குறிக்கும். எனவே, குரவையைப் போல இக்கூத்தும் குறிஞ்சி நிலத்தில் பிறந்ததாகும்.

பதினோரு வகையான ஆடல்களில் குடக்கூத்தும் ஒன்று. தெய்வ விருத்திகளுள் ஒன்றான இக்கூத்திலிருந்து வேறுபட்டது விநோதக்கூட்டத்தில் அடங்கும் குடக்கூத்து. நீள்நிலம் அளந்தோன் ஆடியகுடம் (சிலப் - 555) என்று தெய்வவிருத்திகளுள் ஒன்றாக வருவதை இங்குக் குறிப்பிடலாம். பிற்காலத்தில் வழங்கும் கரக ஆட்டத்தை இக்கூத்துடன் இணைத்துப் பார்க்க வழியுண்டு.

கரணம் என்பது படிந்த ஆடலாகும். பதினோராடல் வரிசையில் இக்கரணமும் இடம்பெறுகிறது. விநோதக்கூத்தில் அடுத்ததாகச் சுட்டப்படும் நோக்கிற்கு நுண்மையும் பாரமும் மாயமும் கொண்டது என்று அடியார்க்கு நல்லார் இலக்கணங்காட்டுவார். இறுதியாகச் சுட்டப்படும் பாவைக்கூத்து, தோலாற் பாவை செய்து ஆட்டுவிப்பதாகும். பாவை விளையாட்டிலிருந்து வடிவம் பெற்றதாகக் கூறுவர். மணற் பாவைகள் புனைதலிலிருந்து கோரைப்புல்லால் செய்யப்படும் நிலை வளர்ந்தது. இதுவே, தோலாற் பாவை செய்து ஆட்டுவிக்கும் நிலையைக் குறிப்பதாயிற்று. மரப்பாவையைப் பற்றிய குறிப்பினை திருக்குறளிலும் (1058) காணலாம். அடியார்க்கு நல்லார் காலத்தில் பாவை தோலால் செய்யப்பட்டிருத்தல் வேண்டுமெனத் தெரிகிறது.

மேலே சுட்டிய அறுவகைக் கூத்துகளுடன் விகடக் கூத்தினையும் இணைத்து விநோதக்கூத்தினை

ஏழென்பர். இதனை வசைக்கூத்து என்றும் குறிப்பிடுவர். பலவகை உருவங்களையும் பழித்துக்காட்ட வல்லவன் ஆடுவது அக்கூத்தின் இயல்பாகும்.

-இரா. பால.

**விபத்துக்கு உள்ளாகும் தன்மை** : தொழில் துறையில் நிறைவேற்றப்படுகின்ற விபத்துத் (Accident) தடுப்புத் திட்டங்களால் தொடர்ந்து விபத்து அளவு குறைந்து வருகிறது. இதனால் தொழிற்சாலைப் பணி பாதுகாப்பாக உள்ளது என்றபோதிலும் வளர்ந்துவரும் தொழில், வாணிகம், போக்குவரத்துத் துறை ஆகியவற்றின் காரணமாக விபத்துகளும் அவற்றால் ஏற்படும் இறப்புகளும் பெருகி வருகின்றன.

விபத்துகள் சில மனிதனின் தவறால் நிகழ்பவை. இதற்கு எடுத்துக்காட்டு 'போபால் நச்சு வாயு' விபத்தாகும். இன்றைய தொழிலுலகில் இது மிகக் கொடுமையான ஒன்று.

விபத்துகளுக்குப் பல சுற்றுப்புற இயந்திர, மனிதக் கூறுகள் தொடர்புடையனவாக உள்ளன. வழக்கமாக இயந்திரத்திறன் குறைபாடும் மனிதன் செய்யும் தவறும் இணைந்து விபத்துகளை விளைவிக்கின்றன. இயந்திரக் கோளாறு மட்டும் அல்லது மனிதனின் தவறு மட்டும் விபத்துக்குக் காரணம் என்று பிரித்துக் கூறமுடியாது.

சிலர் அடிக்கடி விபத்துக்கு ஆளாவார்கள். அத்தகையோர் 'விபத்துக்குச் சாதகமான நிலையினர்' என்று குறிக்கப்படுகின்றனர். ஒருவர் விபத்துக்குள்ளாகும் தன்மை என்பது குண நலனின் விளைவாக அவர் தொடர்ந்து 'விபத்துக்கு உள்ளாகும் நிலையாகும்'. எடுத்துக்காட்டாக ஒரே தன்மைத்தான சூழ்நிலைகளில் ஓர் இயந்திரத்தை இருவர் இயக்குகின்றனர் என்றால் விபத்து ஏற்படத்தக்க வாய்ப்பு இருவருக்கும் ஒத்த சம அளவில் இருக்க வேண்டும். என்றாலும், ஒருவர் திறமையற்ற இயந்திர இயக்கியாக இருக்கலாம். அதனால் அவருக்கு விபத்து நேரும் வாய்ப்பு மிகுதியாகும். அத்தகையவர் 'விபத்துக்கு உள்ளாகும் தன்மையினர்' எனப்படுவார். அவ்வாறு விபத்துக்கு உள்ளாகும் நிலையினரைக் கண்டறியத் தொழில் விபத்துச் சூழல் துறையில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடக்கக் காலத்தில் விபத்துக்குள்ளாகும் தன்மை தவறாகப் பொருள் கொள்ளப்பட்டது. பெரும்பாலான விபத்துகளுக்கு 'எதிர்பாராமை' அல்லது 'தற்செயல் நிகழ்வு' காரணமாகக் கருதப்பட்டது. மூன்றில் ஒரு பங்கு விபத்துகள் 'சமநிலையற்ற பொறுப்பு' காரணமாக நிகழ்வன. 'சம நிலையற்ற பொறுப்பில்' சாதகமான சூழல் உட்பட தொழிலாளரின் ஒழுங்கு முறை வேறுபாடும் அடங்கும் .

சமநிலையற்ற பொறுப்பு : சமநிலைப் பொறுப்பு அடிப்படையில் விபத்துகள் நிகழ்வதில்லை என்று பல ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. சிலர் தமக்குரிய அளவுக்கு மேல் விபத்துக்கு ஆளாகின்றனர். ஒரு சாராரின் கருத்துப்படி ஒருவர் ஒருமுறை விபத்துக்குள்ளானால் அடுத்தமுறையும் விபத்துக்குள்ளாகும் வாய்ப்பு மிகுதியாகின்றது. விமான ஓட்டிகளால் நிகழும் விபத்து அந்தக் கருத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறப்படுகிறது.

மற்றுமொரு கருத்தின்படி ஒருவரின் விபத்துக்குள்ளாகும் தன்மை அவருடைய உளவியல் அமைப்பை ஒட்டியதாகும். இதற்கு எடுத்துக்காட்டாகக் குறிப்பிட்ட சிலர் மற்றவர்களைவிட மிகுதியாக விபத்துக்கு ஆளாகின்றமை குறிக்கப்படுகிறது.

ஒரு வகையான விபத்துக்கு ஆட்படும் சூழல், வேறுவகை விபத்துக்குச் சாதகமான இயல்புடன் தொடர்புள்ளதாகவும் தெரிகிறது. எடுத்துக்காட்டாக, மிகுதியான விபத்துகளுக்கு ஆளாகும் ஊர்தி ஓட்டுநர், ஆபத்துக் குறைவான வேறு வேலைக்கு மாற்றப்படும் போதும், பொதுவான தொழிலாளியைவிட மிகுதியான உடல் காயங்களுக்கு ஆளாகிறார். வீட்டுச்சூழலில் விபத்துகளுக்கு ஆளாகும் ஒருவர் வேலையிலும் விபத்துகளுக்கு ஆளாவதும், வேலைச் சூழலில் விபத்துகளுக்கு ஆளாகும் ஒருவர் வீட்டிலும் விபத்துகளுக்கு ஆளாவதும் உண்டு.

தட்பவெப்ப நிலை மாறுபாடுகள், வெளிச்ச மாறுபாடு முதலான சுற்றுப்புற நிலைகளும் விபத்துகளின் அளவைப் பாதிக்கின்றன. அதே போன்று வயது, அனுபவம் ஆகியவற்றிற்கும் விபத்துகளுக்கும் கூடத் தொடர்பு உள்ளது. வேலைக்குச் சேர்ந்த முதல் ஆறு மாதங்களில் 50 விழுக்காட்டினரும் அடுத்த ஆறு மாதங்களில் 23 விழுக்காட்டினரும், இரண்டரை ஆண்டு அனுபவத்திற்குப் பின்னர் 3 விழுக்காட்டி

னரும் விபத்துகளுக்கு ஆளாகின்றனரெனத் தெரிகிறது.

தொழில் நுட்பப் பயிற்சி, பாதுகாப்புப் பயிற்சி ஆகியன பெற்ற தொழிலாளர் தொகுதியின் காயமடையும் அளவு விரைவாகக் குறைந்து விரைவில் நிலை பெறுகிறது. அத்தகைய பயிற்சி பெறாத குழுவினரின் காயமடையும் அளவு மிகுதியாக உள்ளது. இந்த ஆய்வுகள் திறமையைப் பெருக்கும் பயிற்சி பாதுகாப்பு முறைகள் ஆகியவற்றின் தேவையை வலியுறுத்துகின்றன.

மேலும், விபத்துகளுக்கும் 'பணிக்கு வராதிருத்தல்' அல்லது கவனக் குறைவாயிருத்தல் ஆகியவற்றிற்கும் நேரடித் தொடர்பு இருப்பதாகத் தெரிகிறது. ஓர் உருக்குத் தொழிலாளர் குழுவில் விபத்துகளுடன் 'பணிக்குவராத' தொழிலாளரின் அளவு மிகுதியாகவும், விபத்துகள் இல்லாத தொழிலாளரிடையே 'பணிக்குவராதோர்' அளவு குறைவாகவும் இருப்பது தெரிந்தது.

உளவியல் தன்மைகள் விபத்துகளுடன் தொடர்புடையனவாக உள்ளன. தம்மையொத்த தொழிலாளர்களால் பெரிதும் விரும்பப்படும் தொழிலாளர்கள் விபத்துகள் அற்றவர்களாகவும், மற்றவர்களால் விரும்பப்படாத தொழிலாளர்கள் விபத்துகள் மிகுந்தவர்களாகவும் கண்டறியப்பட்டுள்ளது. சுருங்கக் கூறின் விபத்துகளுக்கு உள்ளாகும் நிலையினர் சிலர் இருப்பது உண்மை என்ற போதிலும், பிற தன்மைகளையொட்டி விபத்துப் புள்ளிவிவரங்களின் வேறு வகை விளக்கங்களின் காரணமாக 'விபத்துகளுக்கு உள்ளாகும் தன்மை' என்பது இரண்டாம் இடத்தில் வைத்தே கருதப்பட வேண்டியுள்ளது. எனவே, தொடர்ந்து பாதுகாப்புப் பயிற்சியும், பாதுகாப்பான கருவிகளின் வடிவமைப்பும் விபத்துத் தடுப்புக்குச் சிறந்த வழிகளாகும்.

-வி.ந.

**வியன்னா நகரம்** : ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான ஆசுத்திரியாவின் (Austria) தலைநகரான வியன்னா அந்நாட்டின் மிகப்பெரிய நகரமுமாகும். ஆசுத்திரியாவின் வடகிழக்குப் பகுதியில், தான்யூபு (Danube) ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள வியன்னா (Vienna) அதன் அரசியல், பொருளாதார, பண்பாட்டு மையமாகவும் விளங்குகின்றது. அந்நாட்டை கி.பி.1273 முதல் 1918 வரை ஆட்சிபுரிந்த ஆப்சுபர்கு (Hapsburg) மரபினரின் தலைநகரமாகவும், கி.பி.1558 முதல் 1806 வரை புனித உரோமப் பேரரசின் தலைநகரமாகவும் இது திகழ்ந்தது. இந்நகரம்.கி.பி.18 ,19 -ஆம் நூற்றாண்டுகளில் கல்வி, இலக்கியம், இசை ஆகியவற்றில் புகழ்மிக்கதாய் இருந்தது. முதல் உலகப் போருக்குப்பின் இதன் புகழ் மங்கியது. ஆயினும் இரண்டாம் உலகப்போருக்குப் பின் இங்குப் பன்னாட்டு மாநாடுகள் பல நடைபெற்றதாலும், பன்னாட்டு நிறுவனங்கள் ஏற்பட்டதாலும் சிறப்படைந்தது. இரண்டாம் உலகப் போருக்கு முன்னர் இது ஐரோப்பாவில் நான்காவது பெரிய நகரமாக விளங்கியது. இதன் பரப்பளவு 415 ச.கி.மீ. மக்கள்தொகை 1, 489, 153 (1985)

பழைய 'உள்நகரம்' வியன்னாவின் நடுவில் அமைந்துள்ளது. இங்கு வரலாற்றுப் புகழ்மிக்க பல கட்டடங்களைக் காணலாம். அவற்றுள் குறிப்பிடத்தக்கதான புனித இசுடீபன் மாவட்டத் தலைமைக் கோயில் (St. Stephen's Cathedral) நகரின் நடுவில் உள்ளது. இங்குள்ள அரண்மனையில் இடைக்காலத்திலும், புதிய காலத்திலும் கட்டப்பட்ட பல கட்டடங்களைக் காணலாம். இவற்றில் அரசகர்கள் வாழ்ந்த இடம் இப்பொழுது குடியரசுத் தலைவரின் வாழ்விடமாக உள்ளது. இதற்கு அருகில் பர்கர்ட்டென் (Burggarten), வோல்க்சுகர்ட்டென் (Volksgarten) என்னும் மிக அழகிய இரு பூங்காக்கள் இருக்கின்றன. இவ்வுள் நகரைச் சுற்றி அமைந்துள்ள இரிங்சுடிராசென் (Ringstrassen) என்னும் தெருக்களில் இந்நகரின் சிறந்த பொதுக் கூட்டங்கள் உள்ளன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை கலை வரலாற்று அருங்காட்சியகம், நகர் மன்றம், இசை அரங்கு நாடாளுமன்றம் ஆகியன. வியன்னா புற நகர்ப் பகுதியில் உள்ள கட்டடங்களுள் சிறந்தவை, புனித சார்லசின் கோயில், பெல்வெடார் அரண்மனை (Belvedere Palace), சுகான்புருன் விலங்குக் காட்சியகம் முதலியன அவ்விலங்குக் காட்சியகம் கி.பி.1752-ல் நிறுவப்பட்டது உலகிலுள்ள மிகப்பழைய விலங்குக் காட்சியகங்களுள் இதுவும் ஒன்றாகும்.

இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையினர் செருமானிய மொழி பேசும் ஆசுத்திரியர். இங்கு

செக்குகளும் (Czechs), அங்கேரியர்களும் செருமானிய மொழியையும் அறிந்துள்ளனர். இங்குள்ள மக்களுள் 80 விழுக்காட்டினர் உரோமன் கத்தோலிக்கச் சமயத்தினராவர்.

ஆசுத்திரியாவின் முதன்மைத் தொழில் நகரமான இதில் வேதியியல் பொருட்கள், மருந்துகள், ஆடைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள் ஆகியவற்றை உருவாக்கும் தொழிற் சாலைகள் உள்ளன. மேலும் ஆடம்பரப் பொருட் களான மிக அழகிய தோல்பொருட்கள், விளை யாட்டு பொம்மைகள், அணிகலன்கள் மகளிர் தொப்பிகள் ஆகியவையும் இங்குச் செய்யப்படு கின்றன.

இங்கு உயர்கல்வி நிலையங்கள் பல உள. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை நுண்கலைக் கழகம் (The Academy of Fine Arts), இசைக்கழகம் (The Academy of Music), தொழில் நுணுக்கப் பல்கலைக்கழகம் (The Technical University), வியன்னாப் பல்கலைக்கழகம் (University of Vienna). இந்நகரில் பல அருங்டகாட்சி யகங்கள், கலைக் கூடங்கள், நூலகங்கள் ஆகியவை உள்ளன. பல்வேறு அரங்குகளில் இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். உலகப் புகழ் பெற்ற இசை அறிஞர்களான இலட்விக்கு வான் பீத்தோவன் (Ludwig Van Beethovan), சோன்சு பிராம்சு (Johannes Brahms), சோசப்பு ஏடென் (Joseph Hayden), உல்புகாங்கு அமாடியசு மோசரட்டு (Wolfgang Amadeus Mozart), பிரான்சு பீட்டர் சுகுபர்ட் (Franz Peter Schubert), சோகன் இசுடிராசு (Johann Strauss) ஆகியோர் இங்கு வாழ்ந்தவராவர்.

இவ்விடத்தில் வரலாற்றுக்கு முற்பட்ட காலத் திலிருந்தே மக்கள் வாழந்து வந்தனர். இது



வியன்னா நகரம்



பழைய வியன்னா நகரம்

உரோமானியரின் எல்லைப்புறக்காவல் நிலையமாக கி.மு.15-ஆம் ஆண்டில் இருந்தபொழுது இதற்கு விண்டபோனா (Vindobona) என்று பெயர். உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின்னர் செருமானியக் கூட்டத்தினர் இதனைக் கைப்பற்றினர். பின்னர் கி.பி.800 -ஆண்டுகளில் இதனைப் பெற்ற மேகியர்கள் (Magyars) இதற்கு வியன்னா எனப் பெயரிட்டனர். இந்நகரைக் கைப்பற்றிய ஆப்சுபர்குகள் (Hapsburgs) கி.பி.1273 -ஆம் ஆண்டிலிருந்து இதனைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இது புனித



பாராளுமன்றக் கட்டடம்

உரோமப் பேரரசின் தலைநகராகவும் கி.பி.1558 -லிருந்து 1806 வரை இருந்ததால் இதன் செல்வ வளம் பெருகி நகரம் வளர்ச்சியடைந்தது. துருக்கியர் இதனைக் கைப்பற்ற கி.பி.1529, 1683 ஆண்டுகளில் முயன்று தோல்விகண்டனர். முதல் உலகப் போருக்குப் பின்னர் இது ஆசுத்திரியக் குடியரசின் தலைநகராயிற்று. இரண்டாம் உலகப்போரின்போது 1938-லிருந்து 1945 வரை செர்மானியர் கையில் இருந்ததால், நேச நாடுகளின் குண்டு வீச்சால் மிகவும் சேதமடைந்தது. போருக்குப் பின்னர் 1945-லிருந்து 1955-வரை நேச நாடுகளிடமிருந்தது. பல கட்டடங்களைக் கொண்ட ஐ.நா.மையம் 1979 -ல் இங்குக் கட்டி முடிக்கப்பட்டதால், பன்னாட்டு மாநாடுகள் பல இங்கு நடத்தப்பட்டன. அதன் நிறுவனங்கள் பல இங்கு உள்ளன.

-சி.இரெ.

**விரயச் சடங்கு :** பழங்குடியினர் பெருமளவில் பொருட்களைச் செலவிட்டு விருந்தும் அன்பளிப்பும் கொடுத்து ஒருவர் தம் தகுதியை ஈட்டும் சடங்கு விரயச் சடங்கு (Potlatch) எனப்படும். இவ்வகைச் சடங்கு அமெரிக்காவின் வடமேற்குக் கரை இந்தியர் களிடம் மிகுதியாகக் காணப்படுகிறது.

அம்மக்கள் பழங்குடி அவையில் (Tribal Council) உயர் பதவி அல்லது தலைவர் பதவிக்குப் போட்டி யிடும் போதும், சொத்துரிமைக்காக இருவர் போட்டியிடும் போதும், குடும்ப நிகழ்ச்சிகளைப் பெரும் பொருட் செலவில் நடத்திச் சமுதாயத்தில் தனித் தகுதியை ஈட்ட நினைக்கும் போதும் விரயச் சடங்கினைச் செய்கின்றனர். இதில் விருந்து கொடுப்போர் தம் உறவினர்களையும் போட்டியாள ராகத் திகழ்பவரையும் அவருடைய உறவினர்களை யும் அழைத்துப் பெரு விருந்தும் பரிசுப் பொருள் களும் அளிப்பர். விருந்துண்டவர்கள் தங்கள் தகுதியும் உயர்ந்தது என்று அனைவருக்கும் தெரிய வேண்டும் என எண்ணும்போது தம் உறவினர்களையும் தமக்கு முன்னர் விருந்தளித்துத் தகுதியை நிலைநாட்டிக் கொண்டவரையும் அவருடைய உறவினர்களையும் அழைத்து விருந்து கொடுப்பார்கள்.

இச்சடங்கில் விருந்தளிப்பவர் விருந்துக்கு வரும் அனைவருக்கும் பெரும் பொருட் செலவில் உண வளித்து விலையுயர்ந்த பரிசுகளையும் வழங்குகிறார். போர்வைகள், கூடைகள், மிகுதியான உணவுப் பண்டங்கள், உலர்ந்த மீன்கள் போன்றவை பரிசாக அளிக்கப்படுகின்றன. விருந்தின் முடிவில் மிகப் பெரும்பான்மைப் பொருட்கள் எரிக்கப்படுகின்றன. மலைமலையாகப் போர்வைக் குவியல்கள், செப்புக் காசுகள், படகுகள், உணவுப் பொருட்கள் போன்ற பலவும் எரிக்கப்படுகின்றன. கோடைக் காலத்தில் தயாரிக்கப்பட்ட மீன் எண்ணெய் நெருப்பினைத் தூண்டப் பயன்படுத்தப்படுகிறது. பொருட்களை அழிப்பது பொருளாதாரக் கேடு எனக் கருதாமல் விருந்தினரைச் சிறப்பிக்கும் முறையாகக் கருது கின்றனர்.

ஓராண்டு அல்லது சிறிதுகாலம் கழித்து விருந் திற்கு வந்தவருள் ஒருவர் போட்டி விருந்தளிக்கக் கடமைப்பட்டவராவார். அவரளிக்கும் விருந்து முன்னர் அளிக்கப்பட்டதைக் காட்டிலும் சிறப்பாக அமைதல் வேண்டுமென விரும்புவர். ஒவ்வொரு விருந்திலும் அளிக்கப்பட வேண்டிய பரிசுப் பொருட் களும் அழிக்கப்பட வேண்டிய பொருட்களின் எண்ணிக்கையும் மிகுதியாகிக் கொண்டேயிருக் கின்றன. இருப்பினும் அவரவரின் செல்வ வளத்தை அடிப்படையாகக் கொண்டே இச்சடங்கு நிகழ்த்தப் படும். எனவே, விரயச்சடங்கினைச் செய்பவர் தமக் குத் தேவையான பொருட்களைப் பெறத் தம் உற வினரின் உதவியை நாட வேண்டியராகின்றார்.

அண்மைக் காலம் வரை விரயச் சடங்கு பெரு மளவில் வட அமெரிக்காவின் வடமேற்குப் பகுதிப் பழங்குடிகளிடம் நிலவி வந்துள்ளது. இவ்விரயச் சடங்குகள் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 - ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் உயர் தகுதியை அடையும் பொருட்டுப் போட்டி மனப்பான்மை யுடன் விருந்தளிப்பது, பொருட்களைப் பெருமள வில் வீணாக்குவது போன்றசெயல்களால் நடை பெற்று வந்தன. இன்னும் இச்சடங்கு பரவலாக வழக்கில் உள்ளது.

வடமேற்குக் கரையோரம் வாழும் மக்கள் ஒவ் வொரு ஆண்டும் மிகுதியான வஞ்சிர மீன் (Salmon fish) வகைகளைப் பிடிக்கின்றனர். தங்களிடம் மிகுதியாக உள்ள அம்மீன்களை அனைவருக்கும் பங்கிட விரயச் சடங்கினை மேற்கொண்டு பெரு விருந்தளிக்கின்றனர். அம்மக்கள் குறுமென் மயிர்த் தோல் வாணிகத்தை (Fur trade) மேற்கொள்வதால், விரயச் சடங்கிற்குத் தேவையான பொருட்கள் கிடைக்கின்றன.

குவாகியூட்டல் (Kwakiutl) பழங்குடியினர் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் தம் அதிகாரம், தகுதி ஆகியவற்றை நிலைநாட்ட விரயச் சடங்கினைச் செய்தனர். அப்பழங்குடியினரின் தொன்மையான விரயச் சடங்குகளினாலேயே உலகப் பண்பாட்டுப் படத்தில் அவர்களில் பெயர் இடம் பெற்றது. விரயச் சடங்கு செய்யும் எதிரெதிர் குழுவிலுள்ள இசைக் கலைஞர்கள் தங்கள் குழு வெற்றி பெறத் தீவிரமான வெறியுடன் செயற்படுகின்றனர். அவர்கள் ஒருவரை யொருவர் கேலி செய்தும், பொருட்கள் பாழா வதைத் குறித்துக் கவலையுறாமலும், தங்கள் வெற்றி யிலேயே கண்ணும் கருத்துமாயிருக்கின்றனர்.

விரயச் சடங்கில் தம் வளத்தை இழப்பதன்வழி, ஒருவன் உயர் தகுதியை அடைகிறான். பொருள் ஈட்டும் திறனுடையோரால் மட்டும் இத்தகு சடங்குகள் செய்ய இயலும் சமூகத்தில் உள்ள மற்றவரால் இவை செய்யவியலா. பிற்காலத்தில் ஐரோப்பியரின் தொடர்பும், அவர்கள் அறிமுகப்படுத்திய பொருட்களின் அதிகரிப்பும், விரயச் சடங்கில் மிகுதியான போட்டியும் பொருள் அழிவும் நேரக் காரணமாயின.

விரயச் சடங்கிற்கான காரணங்களை விளக்குவதிலும், அது சமுதாயச் சூழலில் கொண்டிருக்கும் சிறப்பினை விளக்குவதிலும் செயற் பாட்டியலார் (Functionalists) ஈடுபட்டனர். நியூகினியில் வாழும் பழங்குடியினர் அளிக்கும் பன்றி இறைச்சி விருந்து, மிகுதியாகப் பன்றிகள் பெருகுவதைக் குறைக்கும் வழிமுறையாக உள்ளது. உரூத் பெனிடிக்ட்டு (Ruth Benedict)கூற்றின்படி விரயச் சடங்கு என்பது ஒரு மறுபங்கீட்டு முறை (Redistribution) விருந்தாகும். இச்சடங்கைச் சுற்றுச் சூழலுடன் தொடர்புபடுத்தி வய்தா (A.P. Vayda), சட்டல்சு (W. Suttles), பிட்டாக்கி (S. Piddocke) ஆகியோர் விளக்கியுள்ளனர். அவர்களுள், பிட்டாக்கி மேற்குக் குவாக்யூட்டல் பழங்குடியினரின் விரயச் சடங்கு உள்நாட்டுப் பஞ்சத்தால் அவதியுறும் இடங்களில், மிகுதியான உணவுப் பொருட்களைக் கொண்டோர் அவற்றைப் பிறருக்கு அளித்து உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டதே என்று குறிப்பிட்டுள்ளார். சுற்றுச் சூழலுடன் தொடர்புபடுத்தாமல் சமுதாய நோக்கில் மறுபங்கீட்டு முறையாகச் செய்யப்படுவதே விரயச் சடங்கு என்பது பாவ்லா உரூபெல் (Pavla Rubel) என்பாரின் வாதமாகும். விரயச் சடங்கினைப் பொருளாதார நோக்குடன் இணைத்துக் கூறுவது தவறென்கிறார் இர்விங் கோல்டுமேன் (Irving Goldman).

தொடக்கத்தில் பழங்குடியினர் சிலர் தம் செல்வத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும் சமுதாயச் செயல்முறையாகச் செய்யப்பட்ட விரயச் சடங்கு அரசுத் தலையீட்டால் படிப்படியாகக் குறையத் தொடங்கியது. இருப்பினும், பழங்குடியினர் பண்பாட்டில் இது இன்றும் பல நிலைகளில் வெளிப்படுகிறது.

-ம.ந.பு.

**விரல் சுவைத்தல் :** ஒரு பொருளை அடைவதற்கு முன்னர் அல்லது அதனைப் பற்றியவுடன் குழந்தையின் வாய் தானாகவே திறந்து கொள்கிறது. குழந்தையின் வாய் அசைவுகளைப் பார்த்தால் அது, அதன் வாயினால் பொருளைப் பற்ற முயலுவதாகவே தோன்றும். கையினால் நன்கு பற்றிப் பழகிய பின்னரும் வாயின் அசைவுகள் இருந்து கொண்டே இருக்கும். ஐந்தாறு மாதங்களுக்கு அவ்வாறு இருக்கும். எல்லா உடலுறுப்புகளையும் விட, வாய் மிகுந்த தொடு உணர்வு கொண்டதாக இருப்பதுதான் சப்புவதற்கான காரணம் ஆகியது (கோப்கா-*1928*). இது தனியொரு நிகழ்ச்சி அன்று பார்வை, கையசைவு, வாயினால் தொடுதல் போன்றவை ஒருங்கிணைந்த தொகுப்புச் செயலாகும்.

எழுபது தாய்மார்கள் தம் குழந்தைகளின் விரல் சூப்பும் பழக்கத்தைப் பற்றிக் கவனிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டனர். அவர்களுள் 61 குழந்தைகள் பால் பருகிய பின்னரும் மார்பைச் சப்பிக் கொண்டிருந்தனர். பிறப்பிலிருந்து 3 மாதங்களில் அந்நிலை காணப்பட்டது. ஆனால், ஏழாம் மாதத்திலிருந்து அப்பழக்கமானது அதிகமாயிற்று. இலெவி (*1937*) என்பவர், பால் பருக அதிக வாய்ப்பினை விரும்பித்தான் குழந்தை விரலைச் சுவைப்பதாகவும், பிற்காலத்தில் விரலைச் சூப்பும் பழக்கம் அவ்வாறு வந்ததாகவும் நினைத்தார்.

ஆராய்ச்சி நோக்கு : நாய்க் குட்டிகளுக்குப் புட்டிகளில் பால் தரப்பட்டது. சில குட்டிகளுக்குப் பெரிய துளையிட்ட சூப்பு இரப்பர் பொருந்திய புட்டியையும், மற்றவற்றிற்குச் சிறிய ஓட்டை உள்ள சூப்பு இரப்பர் பொருந்திய புட்டியையும் தந்தனர். இருவகையான புட்டிகளிலும் ஒரே அளவு பால் இருந்தது. பெரிய துளையுள்ளவற்றிலிருந்து பால் விரைவில் தீர்ந்து விட்டது. பாலை விரைவாகக் குடித்த குட்டிகள் செருப்பு, துணி ஆகியவற்றை மேலும் சப்பின. ஆகவே, பால் குடித்த நேரம் போதாததால் தனியாக எதையேனும் சுவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது என முடிவானது (ஏரசு - *1951*).

யார்ரோ (*1954*) என்பவர் கொஞ்ச நேரம் மட்டும் பால் குடிக்கும் குழந்தைகள்தாம், அதிக நேரம் பால் குடித்த குழந்தைகளை விட விரலை அதிகமாகச் சுவைப்பதாகக் கண்டார். மகிழ்ச்சிக்காகத்தான்

குழந்தைகள் விரலைச் சப்புகின்றனர் என்று நினைக்கின்றனர் சிலர். பாலை அருந்துவது மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சி தான். ஆனால், விரலிலிருந்து பால் வருவதில்லை என்னும்போது விரலைச் சுவைப்பது நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு நிகழ்வதில்லை. ஆகவே, அன்னையைப் பற்றிக் கொண்டு போதிய அளவு பாலைக் குடித்தோம் என்ற மனநிறைவு இல்லாத குழந்தைகள்தாம் விரலைச் சூப்புகின்றன என்றும் எண்ணப்படுகின்றது. சில மலைவாழ் மக்களில் குழந்தை விரும்பும் போதெல்லாம் சற்றும் தாமதியாமல் பாலை ஊட்டும் பழக்கம் இருந்தும் பல குழந்தைகள் விரலைச் சுவைக்கின்றன. ஆகவே, விரலைச் சுவைப்பதானது வாய்ப்பு மறுக்கப்படுவதனால் ஏற்பட்ட மனக்குறை எனக் கூறிவிட முடியாது (*ஆர்லன்சுகி - 1949*).

விருப்பு வெறுப்பு நிலை : குழந்தை அன்னையை அன்னமாக நினைக்கிறது போலும் உணவைத் தரும் அன்னையின் மீது அதிக அன்பு பெருகி அம்மாவையே விழுங்கக் குழந்தை எண்ணலாம். அம்மாவைக் கடித்து வைப்பதன் நோக்கம் இதுவே என்று எண்ணுவோரும் உள்ளனர். பாலைப் பருகுதலை நிறுத்த எண்ணும் அன்னையைத் தண்டிப்பதற்காகவும் கடிக்கலாம். அன்பின் பெருக்கால் அம்மாவை விழுங்கிவிட விரும்பும் குழந்தை கடித்தும் வைக்கிறது. விருப்பும் வெறுப்பும் ஒருங்கே இணைந்த நிலை இது. சில வாரங்களுக்குள் அப்பழக்கம் நின்று விடும். வயது அதிகமான பின்னரும் அக்குறை இருப்பின் மனக்கோளாறு எனலாம். மற்றபடி இயற்கையான நிகழ்ச்சியாகத்தான் இதனைக் கொள்ள வேண்டும். ஆறாம் வயதிலும் விரலைச் சுவைப்பது, எழுதுகோலைக் கடிப்பது, வயதானவர் புகை பிடிப்பது அல்லது (பசி இல்லாத போது) அதிகமாக உண்பது கோளாறுகளேயாகும்.

சில குழந்தைகள் பிறப்பதற்கு முன்னரும், பிறந்த உடனும், விரலைச் சூப்புவதுண்டு (*கேசல்-1943*). விரலைச் சுவைப்பதனால் விரலானது வீங்கி விடுவதாகவும் அல்லது பற்கள் கோணலாகி விடுவதாகவும் எண்ணுவது தவறு.

- மா.பெ.

**துணை நூல்கள் :**

1. Baldwin, A.L., **Theories of Child Development**, John Wiley & Sons, Inc., New York. 1968.

2. Thompson, G.C., **Child Psychology**, The Time of India Press, Bombay, 1969.

**விரிகுடா :** கடல் அல்லது பெரிய ஏரியின் நீர், நிலப்பகுதியினுள் குடைந்து அல்லது உள்வாங்கி இருக்கும். அது குறுகலாயிருப்பின் கழி என்றும், பெரியதாயிருப்பின் குடா என்றும் பெயர் பெறும். இது பொதுவாக, நிலப்பகுதியின் தொடக்கத்தில் குறுகியும், கடல் நோக்கிச் செல்லச்செல்ல விரிந்தும் இருப்பின் விரிகுடா எனப்படும். இதற்கு எடுத்துக்காட்டாக வங்காள விரிகுடாவைக் கூறலாம்.

குடாவின் அகலம் ஏறத்தாழ சீராகவோ அல்லது கடலுடன் கலக்குமிடம் குறுகியோ இருப்பின் வளைகுடா எனப்படும். இதற்கு எடுத்துக்காட்டாக பாரசீக வளைகுடாவைக் கூறலாம்.

- இரெ.அ.

**விரிந்த சிந்தனை :** பல வகையான வினாக்களுக்கு உடனுக்குடன் சரியான விடைகளை அளிக்க முடிவது நுண்ணறிவு என்று கருதப்பட்டு வந்தது. தமிழ் நாட்டின் தலை நகர் எது? ஐந்தும் ஏழும் என்ற எண்களை வைத்துக் கொண்டு பன்னிரண்டை எவ்வாறு பெறலாம்? கடிகாரத்தின் பயன் என்ன? என்பன போன்ற வினாக்களுக்கு, சென்னை, கூட்டுதல், நேரம் அறிதல் போன்ற விடைகள் இருக்கக் கூடும். ஒவ்வொரு வினாவிற்கும் ஒரே விடைதான் சரியானதாக இருக்கக்கூடும். அதனைத் தெரிந்திருப்பவன் அறிவாற்றல் பெற்றவன் எனக் கருதப்படுவான். ஒரு வினாவிற்கு ஒன்றிற்கு மேற்பட்ட சரியான விடைகள் இருக்க முடியாது என்று கருதுகின்றனர். ஒரு மாணவன், கடிகாரத்தை வைத்துத் தீ மூட்டலாம் என்ற போது ஆசிரியர் வியந்து போனார். அதன் கண்ணாடியைக் கொண்டு சூரிய ஒளிக்கதிர்களைப் பஞ்சு அல்லது காகிதத்தின் மீது குவியச் செய்து எரிய வைக்கலாம். பன்னிரெண்டு என்பதின் இரண்டு எண்களைக் கூட்டினால் மட்டுமல்லாமல் (5x2) + (7x4) – 26 என்று

அல்லது $(5x2)+(7x2)\div 2$ என்றும் **12** என்ற விடையைப் பெறலாம். இவ்வாறு ஐந்தையும் ஏழையும் உட்படுத்தி ஒரு மாணவன் பலவகைகளில் விடையைப் பெற்றால் அதுவும் சரியே. இது போன்ற எண்ணங்களை ஆசிரியர்கள் விரும்புவதில்லை. அதனால் மாணவர்களின் சிந்தனை ஆற்றல் தடைபட்டு விடுகின்றது. ஒரு வினாவிற்கு- அல்லது ஒரு சிக்கலுக்கு ஒன்றிற்கும் அதிகமான சரியான விடைகளும் வழிகளும் இருக்குமென்பதை ஏற்க வேண்டும். இவ்வாறு எண்ண அலைகளை மனம் போன போக்கில் போக விடுவதுதான் சரி. இதனைத் துணிகரமான சிந்தனை, ஆக்கச் சிந்தனை, ஓரச்சிந்தனை அல்லது விரி சிந்தனை என்று கூறப்படுகின்றது. ஒரே விடையை மட்டும் நாடுவது குவி சிந்தனை என்றும் பரந்தநோக்கோடு பல்வகையான சரியான விடைகளை நாடும் முயற்சியை விரிசிந்தனை என்றும் கூறப்படுகிறது. அமெரிக்கக் கல்வி முறையானது பெரும்பாலும் குவி சிந்தனையை மட்டும் பழக்குவதாக இருப்பதனால் தான் பல ஆக்கச் செயல்களும் வளர்ச்சிப் பெருக்கமும் ஏற்படுவது தடைபட்டு விட்டதாக முதன்முதலாகச் சுட்டிக்காட்டியவர் கில்பார்டு ஆவார். அமெரிக்க உளவியல் மன்றத்தில் உரை நிகழ்த்திய போது கில்பர்டு (1950), சோவியத்து நாடு தன் விஞ்ஞானிகள் விண்கலத்தில் பூமியைச் சுற்றிவரச் செய்ததற்கான முக்கிய காரணம் அந்நாட்டில் குவி சிந்தனையைத் தவிர்த்து விரிந்த சிந்தனைக்கு முக்கிய இடமளித்தமைதான் என்று குறிப்பிட்டார். பின்னரே ஆக்கத்திறனை வளர்த்த விரி சிந்தனையை அறிவுத்திறத்தின் முக்கிய கூறாகக் கருதத் தொடங்கினர். ஆகவே, விரி சிந்தனை பற்றி மிக்க அளவில் தெரிந்து கொள்ளும் முயற்சியில் உளவியல் வல்லுநர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

விரி சிந்தனையில் எண்ண ஓட்டம், இசைவிணக்கம், புதுத்தோற்றம், விரிவாக்கம் போன்ற ஆற்றல்களும் அடங்கியுள்ளன. எண்ண ஓட்டம் கூடத் தனி ஆற்றல் அன்று. எண்ண ஓட்டமானது சொல்லோட்டம், கருத்தோட்டம், தொடர்ஓட்டம், விளக்க ஓட்டம் ஆகியவற்றால் ஆனது. விரிசிந்தனையைச் சோதிப்பதுகூடப் பழைய தேர்வுகளைப் போன்றதன்று. குறிப்பிட்ட நேரத்தினுள் நிறை விடைகளை அளிக்க முடிய வேண்டும். 'கை' என்னும் எழுத்துடன் தொடங்கும் சொற்களை, எவ்வளவு முடியுமோ அவ்வளவு சொற்களை ஒரு நிமிடத்திற்குள் எழுதச் சொல்லலாம். கை, கைகலத்தல், கைகூட்டுதல், கைகூப்புதல், கைகோள், கைக்காணி, கைக்கூலி, கைக்கோளன், கைதவன், கைத்துண்டு, கைம்மை, கைமாற்று, கையேடு என்று எழுதலாம். எத்தனை சொற்கள் பொருளுள்ளவையோ அவற்றிற்கேற்ப மதிப்பெண்கள் தரவேண்டும். இவை சொல்லோட்டம் தான். கால்பந்தைவிடச் சிறிய, ஆனால், உருண்டை வடிவமான பொருட்களைக் கூறச் சொல்லும் போது இந்த எண்ண ஓட்டமானது கருத்தோட்டமாகும். மிளகு, கசகசா, உருளைக்கிழங்கு, கடுகு, பூப்பந்து, தேங்காய், விளாம்பழம், எலுமிச்சம் பழம், சாத்துக்குடி பழம் முதலியன எடுத்துக்காட்டு. செங்கல்லின் பயன்களென்ன என்பது இசைவிணக்கத்திற்கான விடைகளைத் தரக்கூடியது. வீடுகட்ட, பள்ளிகட்ட, பாலம் கட்ட, அறை கட்ட போன்ற விடைகள் எவ்வளவாக இருப்பினும் அவை எண்ண ஓட்டத்திற்கான மதிப்பெண்ணைப் பெறும். தலையணையாக, கோலம் போட, தொட்டி கழுவ போன்ற மாற்றுக் கருத்துகளைத் தான் இசைவிணக்கமாகக் கொள்வது. புத்தம் புதிய கருத்துகளைப் புதுத்தோற்றம் அல்லது தற்படைப்புத் தன்மை பெற்ற ஒன்று என்று கருத வேண்டும். ஏற்கனவே, உள்ளவற்றைச் சிறுசிறு மாறுதல்களைச் செய்து வெவ்வேறு வகையில் உருவப்படுத்துவதை விரிவாக்கம் என்பர். குறிப்பிட்ட நேரத்தினுள், தரப்பட்டுள்ள நீளவட்டங்களை உருமாற்றுமளவிற்கு ஏற்றவாறு மதிப்பெண்களைத் தரவேண்டும்.

ஆக்கத்திறன் கோட்பாடு : சிந்தனை ஆக்கக் கருத்தாக மட்டுமல்லாமல், ஆக்கப் பொருளாகவும் முடிவதுதான் ஆக்கத்திறன் என்பர் சிலர். மாசுலோ போன்ற வேறு சிலர் ஆக்கத்திறன் விளைபொருளாக முடிய வேண்டியதில்லை; ஆக்கத் திறனானது வெறும் சிந்தனையளவில் இருப்பது கூடச் சிறப்புத் தான் என்கின்றனர்.

ஆக்கத்திறன் கருத்தைப் பற்றித் தீவிரமாக எண்ணத் தொடங்கிய கில்பர்டு, விரிந்த சிந்தனையின் தனிச் சிறப்பினால் ஈர்க்கப்பட்டு எல்லா நுண்ணறிவுக் கொள்கைகளையும் இணைத்து அறிவுத்திறன் அமைப்பு (Structure of Intellect) ஒன்றை அமைத்தார். தெரிந்த அளவில் உள்ள எல்லா நுண்ணறிவு ஆற்றல்களையும் இணைத்து 120 ஆற்றல்கள் உள்ளன என அறிந்தார். அவற்றை ஐந்து செயலியங்கங்களாகவும்

(Operations), ஆறு வினைப் பொருட்களாகவும் (Products), நான்கு பொருளடக்கங்களாகவும் (Contents) கண்டறிந்தார். இது ஒரு முடிவான கட்டமாக்கப்பட்டது. நான்கு பொருளடக்கங்கள் உருவளவு, குறியீட்டளவு, மொழி, நடத்தை என்பதை ஆராய்ந்ததில் கேட்டல் என்ற ஆற்றல் இல்லாததை அறிந்து அதனையும் சேர்த்துக் கொண்டதனால் *(1978)* அறிவுத் திறன் அமைப்பில் ஆற்றல்களில் எண்ணிக்கை *120*-இல் இருந்து *150* ஆக (5x5x5) உயர்ந்து விட்டது. மேலும் மாற்றங்கள் வரக்கூடும்.

**விரிந்த போக்குடையோன்** : விரிந்த சிந்தனைக்கு மீத்திறன் மிகவும் முக்கியமானதாக இல்லை. சாதாரண நுண்ணறிவு படைத்தோரும் பலர் விரிசிந்தனை படைத்தோராக உள்ளனர். இருப்பினும் அவர்களுடைய ஆளுமையும் பிறபண்புகளும் வேறாகவே உள்ளன. அவற்றின் நிமித்தம்தான் அவர்கள் சிறக்கின்றனர். கில்பர்டு, கிரிசுடன்சென், பெரிக்கு, மெர்ரிபீல்டு *(1957)* என்போர் விரிசிந்தனை மிகுந்தோரின் பண்புகளை ஆய்ந்தனர். அவர்கள் கண்ட தன்மைகளில் சில பின் வருவனவாகும். *1.* இப்போதைய நிலையில் ஆறுதலற்ற குழப்பம், *2.* பெரும் விடுதலை விரும்புதல், *3.* எதையும் செய்வதற்கான உறுதியான உந்துதல், *4.* பல துறைகளைப் பற்றிய விவரங்களை அறிந்திருத்தல், *5.* மீத்திறனோ மேதைத் தன்மையோ இல்லை எனினும் சராசரி நுண்ணறிவை மிஞ்சி இருத்தல். *6.* முடியாதென்றிருப்பதைச் செய்ய விரும்புதல், *7.* மிகுந்த குறைகாணும் வேட்கை, *8.* எதிர்மாறானவற்றை இணைத்துக் காணும் தன்ஆற்றல், *9.* தனித்து நிற்கவும், தேவைப்பட்டால் முரண்பட்டிருக்கவும் ஏற்ற மனநிலை, *10.* குழப்பங்கள், சிக்கல்கள், புதிர்கள் முதலியவற்றை மிகவும் விரும்புதல், *11.* எதையும் அலசிப் பார்ப்பதோடு உள்ளுணர்விற்கும் மதிப்புத் தருதல், *12.*வேலை நேரங்களில் வரையறையின்மை, *13.* தம் தீர்வுகள் நேர்த்தியையும், சீர்மையையும் அடையும் வரை ஆறுதல் பெறாமை, *14.* அகமுகத் தன்மையோ புறமுகத் தன்மையோ, இல்லாத சிக்கலான ஆளுமை, *15.* தன்னைத் தானே ஊக்கிக் கொள்ளுதல்.

**விரி சிந்தனை பேணுதல்** : விரிந்த சிந்தனையானது இளஞ்சிறார்களிடம்தான் பெருமளவில் காணப்படுகின்றது. இயற்கையைச் சுவைத்தலிலிருந்துதான் குழந்தைகளுக்குச் செய்திகள் கிடைக்கின்றன. நான்காம் வயதில் இருக்கும் சிந்தனை பெரியவனாக வளர்ந்த பிறகும் இருப்பதில்லை *(ஆண்ட்ரூசு-1930)* எத்தகைய கட்டுப்பாடுமில்லாதபடி எண்ண முடியாததால்தான் விரி சிந்தனை தடைபட்டு விடுகின்றது. இத்தடைக்கு மற்றொரு காரணம் கற்பனை உலகிலிருந்து மெய்யான வாழ்க்கையில் ஈடுபடுவதாகும். இருப்பினும் விரிசிந்தனையை ஊக்குவிக்க முடியும் *(தாரன்சி-1962)*. அவ்வாற்றலை நன்கு வளர்க்க முடியும். அதற்கான சூழ்நிலையையும் மன ஏற்பையும், பெற்றோர் ஆசிரியர் பொது மக்கள் ஆகியோர் ஏற்படுத்தித் தர வேண்டும் இதற்குப் பின்வரும் சில வழிகளைப் பின்பற்றலாம். *1.* தடைகளை விதிக்காமல் மனம்போன போக்கில் வரும் சிந்தனைகளை வெளிப்படுத்த உரிமை தருதல். *2.* புது முறைகளில் எதையேனும் செய்திருந்தால் அதனை விளக்கிக் கூற வாய்ப்புத் தருதல், *3.* தெரிந்த கதைகளுக்குப் புது முடிவுகளை அளிக்கச் செய்தல், *4.* புதுக்கருத்துகள் வரும்போது பெருமைப்படுத்துதல், *5.* பொருட்களையும், எண்ணங்களையும் புதிய முறைகளில் கையாளுவதற்கு ஊக்குவித்தல், *6.* சிக்கல்களின் தீவிரம், முக்கியத்துவம், எளிமை, பயன் போன்ற அடிப்படையில் நிரல்படுத்துதல், *7.* அத்தியாயங்கள் அல்லது கதைகளுக்குச் சிறப்பான புதுத் தலைப்புகளைக் கூறுதல், *8.* சில சூழ்நிலைகள், நிகழ்ச்சிகள், சிக்கல்கள் ஆகியவற்றிலிருந்து உதிக்கும் பின்விளைவுகளைக் கூற வைத்தல், *9.*அமைச்சர், விமானி, உழவன், தளபதி, ஆசிரியர் போன்றோர் கடமைகளை ஏற்று விளையாட வாய்ப்புத் தருதல், *10.* முன்னேற்பாடின்றி ஒரு பாடல் அல்லது கவிதையை இயற்றவும், ஓவியத்தை வரையவும் விளையாட்டினைத் தோற்றுவிக்கவும் தூண்டுதல், *11.* திறனாய்வதற்கு வாய்ப்பளித்தல், *12.* புதிய எண்ணங்கள்பால் சகிப்புத்தன்மையை வளர்த்தல், *13.* மாணவர்களே திட்டமிடல், *14.* எதையும், சொல்லவும் செய்யவும் வாய்ப்பளித்தல்.

-மா.பெ.

**துணை நூல்கள் :**

1. Butehar, H.L., and Pont, H.B., **Educational Research in Britain**, No. 3, London : University of London Press Ltd., 1973.

2. Mangan, S.K., **Educational Psychology**, Ludhiana: Prakash Brothers, Educational Publishers, 1981.

3. Torrance, E.P., **Guiding Creative Talent**, Prentice Hall of India (Pvt.) Ltd., New Delhi, 1969.

**விரிவுரையாற்றல் :** ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அதன் இயற்கை வளத்தையும், மனித வளத்தையும் பொறுத்ததாகும். நாட்டின் வளங்கள் அனைத்தையும் மேம்படுத்த அடிப்படையாகத் திகழ்வது மனிதவளம். அம்மனித வளத்தைப் பெருக்க உதவும் பலவித சாதனங்களுள் ஒன்று விரிவுரையாற்றலாகும்.

விரிவுரையாற்றலின் இன்றியமையாத, தலையாய நோக்கங்கள் செய்திகளை வெளிப்படுத்தல், அறிவை வளப்படுத்தல், ஆர்வத்தைத் தூண்டல் எனப் பலவகைப்படும். அந்நோக்கங்கள் ஒவ்வொரு இயலுக்கும், ஒவ்வொரு விரிவுரையாளருக்கும் என வேறுபடும் தன்மையுடையன. விரிவுரைகள் பெரும்பாலும் விரிவுரைக்குப் பொருத்தமுள்ள பாடத்தின் கருத்து, பொருள் ஆகியவற்றை வெளிப்படுத்தவும், அப்பாடங்களின்மேல் மேன்மேலும் ஆர்வத்தைக் தூண்டவும், புதிய உண்மைகளை வெளிக் கொணரவும், முருகியலை வெளிப்படுத்தவும் வல்ல தன்மைகளைக் கொண்டிருக்கும். எந்த ஒரு நல்ல விரிவுரையும் ஆர்வத்தைத் தூண்ட வல்ல ஆற்றல் கொண்டதாகும். அது கற்போரின் சிந்தனைத் திறத்தை வளப்படுத்தல், படிக்கும் பழக்கங்களை ஏற்படுத்தல், கூர்ந்து கவனித்தல், கேட்டல் எனப் பற்பல பயன்களைத் தரவல்லது. மேலும், அது அறிந்த கருத்துகட்குப் புதுப்பொருளைப் புதிய நோக்கில் காண வல்ல அணுகுமுறைகளையும் ஏற்படுத்த வல்லது.

ஒரு நல்ல விரிவுரையாளர், தாம் அறிந்த பொருளை ஆர்வத்துடன் தாம் பயிற்றுவிக்கும் வகுப்பின் முன் அறிவுத் திறனுக்கு இணங்க அறிவோடும், விருப்பத்தோடும், நல்ல குரல் வளத்தோடும், வகுப்பில் உள்ளோரின் எண்ணங்களுக்கும் உணர்வுகட்கும் பொருந்த விரிவுரையாற்றல் வேண்டும்.

விரிவுரைக்கலை கி.மு.5 -ஆம் நூற்றாண்டிற்கு முன்னரே கிரேக்க நாட்டில் வளர்க்கப்பட்ட கலையாகும். மேலும், கிரேக்க நாட்டில் விரிவுரையாற்றலுக்கு என்று உள்ள திறன்கள் மேம்பாடு அடையப் பயிற்சிகள் கொடுக்கப்பட்டனவற்றிற்கு வரலாறு சான்றளிக்கின்றது. அத்திறன்களை வளர்க்கத் தருக்க முறை, சொற்பெருக்குதல் போன்ற பல்வேறு அமைப்புகளுடன் பயிற்சிகள் தரப்பட்டன. ஏறக்குறைய அதே சமயத்தில் கிறித்தவ, இசுலாமியப் பல்கலைக்கழகங்களில், அம்முறையே பின்பற்றப் பட்டது. அப்பல்கலைகழகங்களில், விரிவுரைகளில், ஒரு பகுதியைப் படித்து, அப்பகுதிக்கான விளக்க உரை, தொகுப்புரை, தெளிவுரை, கருத்துரை போன்ற உரை விளக்கங்கள் தரப்பட்டன. மருத்துவம், அறிவியல் ஆகிய பாடங்களில் விரிவுரையாற்றும் வகுப்புகளில் கரும்பலகை, மாதிரிகள், சோதனைகள் போன்றவை கி.பி.19 -ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டன. ஆனால் கலை, மொழி அறிவியல் ஆகிய பாடங்களில் பெரும்பாலும் பழைய முறையான சொற் பெருக்காற்றும் முறையே பயன்படுத்தப்பட்டது. இன்றும், உலகெங்குமுள்ள தொடக்கப் பள்ளிகள் முதல் பல்கலைக் கழகங்கள் ஈறாக உள்ள கல்வி நிறு வனங்களின் அனைத்துத் துறைகளிலும் விரிவுரையாற்றல் பெரும் இடம் பெறுகின்றது. மானிடச் செய்திப் பரிமாற்றம் நிகழ உதவும் சாதனமாக விரிவுரையாற்றல் விளங்குகிறது. விரிவுரையாற்றலின் அடிப்படைக் கூறுகளாக நோக்கம், செய்தி பரப்பல், செய்தி கேட்டல் ஆகியவை அமைகின்றன. செய்திகளைத் தருதலும், பொருளை உணர்த்தலும், ஆர்வத்தை மேம்படுத்தலும் விரிவுரையாற்றலின் பரந்த நோக்கங்களாகும்.

விரிவுரையாற்றலைக் கேட்கும் மாணாக்கர்களின் கற்றல் நிகழ்ச்சிகள் பற்றிய ஆய்வுகள், தெளிவையும் ஆர்வத்தையும் தரவல்லனவாக விரிவுரைகள் அமைய வேண்டும் என்பதைச் சுட்டுகின்றன. விரிவுரையாற்றலில் தெளிவு என்பது மொழியைத் திறம்படப் பயன்படுத்தல், இன்றியமையாக் கூறுகளை மீள்பார்வை செய்தல், தொகுத்தல், பார்த்தல், அமைத்தல் போன்றவற்றால் அமைவதாகும். விரிவுரையாற்றலில் பயன்படுத்தப்படும் பல வாக்கியங்கள், நோக்கங்களைத் தெரிவிப்பன. அமைப்பைக் கூறுவன. தொடக்கத்தையும் முடிவையும் கூறுவன., ஒன்றோடு ஒன்று உறவு படுத்தும் தன்மையன, ஆர்வத்தைத் தூண்டவல்லன என்று பலவகையில் அமையும். ஆர்வத்தைத் தூண்டல் என்பது குரல் வளம், பேசும் திறன், உடல் அசைவுகள், கண்நோக்குகள், முக பாவங்கள், கட்புலச் சாதனங்களை நுணுக்கத்துடன் திறம்படப் பயன்படுத்தல் போன்றவற்றைப்

பொறுத்ததாகும். இத்தகு வழிகளிலன்றி ஆர்வத்தைத் தூண்டல் என்பது விரிவுரையாற்றலால் இயலாத செயலாகும்.

விரிவுரையாற்றலுக்கு வேண்டிய இன்றியமை யாத் திறன்கள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

தயாரித்தல் : பொருள், இலக்குகள், அமைப்பு கைப்படிகள், ஏனைய பொருட்கள் ஆகியவற்றைச் சேகரித்தல்.

செய்திகளைத் தருதல் : செய்திகளை அமைப்பு களின் மூலம் தெளிவுடன் தருதல்.

விவரித்தல் : கருத்துகளை எடுத்துக்காட்டுகள் மூலம் அறியவைத்தல்.

ஆர்வத்தைத் தூண்டல் : பாடப் பொருளின் மூலம் ஆர்வத்தைத் தூண்டல்.

ஆயத்தம் செய்தல் : விரிவுரையைத் தொடங்குதற் கான நிலைகளை ஏற்படுத்தல்.

முடிப்பித்தல் : கருத்துகளையும், பகுதிகளையும் ஒன்றோடு ஒன்று இணைப்பித்தல்.

கட்புலச் சாதனைங்களைப் பயன்படுத்தல் : வண்ணப் பலகை முதலியன பயன்படுத்தல்.

மாணாக்கர்கட்குப் பல்வகைச் செய்திகளை அளித்தல் : சிறு குழு உரையாடல், புதிர் தீர்த்தல் போன்ற மாணாக்கர் குழுச் செயல்கள் மூலம் ஆர்வத் தைத் தூண்டல்.

இயம்புதல் : ஒரு கருத்தை விளக்குதற்கு ஒரு பகுதியைப் படித்தலும் விளக்குதலும்.

ஒப்பிடல் : ஒப்புமைப்படுத்தல், வேற்றுமைப் படுத்தல், போலச் செய்தல், வேறுபாடுகள், நிறைகள், குறைகள் பயன்படுத்தல் போன்றவை.

தயாரித்தல், குறிக்கோளையும் இலக்குகளையும் நிருணயித்தல், வழிகாட்டும் நெறிகளைக் கூறல், கருத்துகளை முறைப்படுத்தல் அவற்றைத் தொகுத் தல், வழிகாட்டல், அகமதிப்பீட்டிற்கான கூறுகளை விளக்குதல் போன்ற கூறுகளை ஒரு விரிவுரை கொண் டிருத்தல் வேண்டும். எனவே, ஒரு விரிவுரையைத் தயாரிக்கு முன் அதைக் கீழ்க்காணும் முறைப்படி தயாரித்தல் சிறப்பாகும்.

1. விரிவுரையை, கற்போர் வழிநின்று தயாரிக்க வேண்டும். 2. விரிவுரையின் குறிக்கோள்கள் திட்ட வட்டமாகவும் துல்லியமாகவும் நிருணயிக்கப்பட வேண்டும். 3. பேச்சின் தொடக்கமும் முடிவும், வடிவமும், தெளிவுடன் வரையறுக்கப்படல் வேண் டும். 4. விரிவுரையின் இன்றியமையா வளர்ச்சிப் படிகள் திட்டமிடப்பட்டிருக்க வேண்டும்.

விரிவுரை தயாரிக்கும் பொழுது வடிவம், அமைப்பு, பொருள் போன்றவற்றைத் தொழில் நுணுக்கக் கூறுகளோடு இயைத்துத் திட்டமிடல் வேண்டும். விரிவுரையின் அமைப்பு கால முறைப் படியோ சிக்கல் தீர் அணுகு முறைப்படியோ தருக்க நெறிப்படியோ, அமைப்பு முறை அணுகலின் படியோ அமைய வேண்டும். இவ்விரிவுரைகளில் அமைக்கப்படும் கருத்துகளை அவற்றின் இன்றி யமையா வரிசைப்படியோ ஒப்புமைப்படியோ வேற் றுமைப்படியோ அமைக்க வேண்டும்.

பிளை (Bligh - 1972) என்பாரின் கூற்றுப்படி விரி வுரை முறைகளை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். அவை மரபுமுறை (Classical), சிக்கல் மையமுறை (Problem centred), தொடர் வரிசை முறை (Sequential approach) என்பன ஆகும். மரபு முறைப்படி மரபுகள், உட்பிரிவுகள், மிகச்சிறு உட்பிரிவுகள், இன்றியமை யாப் பண்புகள், எடுத்துக்காட்டுகள் போன்றன அமைகின்றன. சிக்கல் மைய முறைப்படி ஒவ்வொரு பொருளும் ஒற்றுமை அல்லது வேற்றுமைப்படுத்தப் படும் அளவினதாக அமைக்கப்பட்டிருக்கும். தொடர் வரிசை முறைப்படி ஒவ்வொரு வாக்கியமும் அடுத்த துடன் உருவாக்கப்பட்டு ஒரு முடிவை எதிர்நோக்கி யதாக அமையும். இவ்வகையான அமைப்புப் பெரும்பாலும் வரலாறு, தத்துவம், கணிதம், அவற் றோடு தொடர்புடைய பாடங்கள் ஆகியவற்றில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும்.

விரிவுரையாற்றும் பொழுது, செய்திகள் கவ னத்தை ஈர்க்கும் வகையில், பரபரப்பின்றியும், தளர்ச்சியின்றியும், குரலில் ஏற்ற இறக்கங் கொண்டும் ஆற்ற வேண்டும். மாணாக்கர்கள் நன்கு

கேட்கும் வண்ணம் விரிவுரையின் இறுதிக் கட்டத்தில் செய்திகளை முடிக்கும் பாங்கு சிறக்க வேண்டும். வண்ணப் பலகையில் எழுத்துகள் தெளிவாகவும் நேர்த்தியாகவும் அமைதல் வேண்டும்.

விரிவுரையாற்றும் பாங்கு, தாக்கத்தை விளைவிக்கும் இன்றியமையாத உறுப்பாகும். அப்பாங்கு வெறும் பாடப்பொருளை மட்டுமன்றி, விரிவுரை நிகழ்த்துவோர் அறிவு, அனுபவம், ஆளுமை, திறன்களின் ஒட்டு மொத்தத் தன்மை ஆகியவற்றின் விளைவையும் அடக்கியதாகும்.

பிரவுன் பக்சா (Brown, Baksha - 1982) என்பவர் விரிவுரைப் பாங்குகளை ஐந்து வகைப்படுத்துவர். அவை, வாய்மொழி, இயல்புமொழி, செய்தித் திரட்டு, வரையறையற்றது (Amorphous), தற்சலனம் (Self doubters) ஆகியனவாகும். வாய்மொழி விரிவுரை என்பது பெரும்பாலும் நன்கு அமைக்கப்பட்ட தன்மையாகும். அவ்வகைப் பாங்கு பெரும்பாலும் கலை, சமூகவியல் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படுகின்றது. அவ்வகை பெரும்பாலும் ஆசிரியர் பேசுவதாகவும் கற்றல் சாதனங்களை அரிதாகப் பயன்படுத்துவதாகவும் அமையும் இயல்பு விரிவுரைகள் நன்கு அமைக்கப்படுவதோடு இன்றியமையாக் கருத்துகள் மீள வலியுறுத்தப்படுதலையும் கொண்டனவாகும். குறிப்பிட்ட நிலைகளில் தொகுத்துச் சொல்லப்படும். அம்முறை அறிவியல் வகுப்புகளில் மிகவும் பயன்படும். செய்தி விரிவுரை என்பது பெரும்பாலும் ஒரு பகுதியைப் படிப்பதாக அமையும். முழுக் கருத்துகளும் பெரும்பாலும் வண்ணப் பலகைகளில் எழுதப்படும். அம்முறை பெரும்பாலும் அறிவியல், இயந்திரத் தொழில் நுட்பவியல் ஆகிய வகுப்புகளில் பயன்படுகின்றது. வரையறையற்ற விரிவுரையில் இலக்குகள் நிருணயிக்கப்படுவதில்லை. எனினும் விரிவுரையாளர் முழுத் தன்னம்பிக்கையுடன் செயற்படுவர். தற்சலன முறை எனப்படுவது எந்த வகையாலும் சிறப்புடையதன்று. அது முழு நம்பிக்கையும் குறிக்கோளும் அற்ற விரிவுரையாகும். எவ்வகை விரிவுரையாயினும், எப்பாடப் பொருளாயினும், எச் சூழ்நிலையிலாயினும், தயாரித்தல், அறிவித்தல், தெற்றென விளக்கல், ஆர்வமூட்டல் என்பன இடம் பெறல் வேண்டும். விரிவுரையாளர் பலர், விரிவுரையாற்றுங்கால், தாங்கள் குறித்துக் கொண்ட விவரங்களையோ, கைப்படிகளையோ, அனுபவ மாதிரிகளையோ அடிப்படையாகக் கொள்கின்றனர்.

பிளிசு (Blish), காசுடின் (Costin), மக்லே (McLeigh) ஆகிய ஆய்வாளர்கள் செய்திப் பரிமாற்ற முறைகளில் விரிவுரையாற்றும் முறை திறன்மிகு முறையென்றும் அதனால்தான் கணிப்பான் வழிக்கற்றல், நாடாப் பதிவுக் கற்றல் போன்ற எத்தனையோ முறைகள் இருந்தும், தலையாய முறையாக, அநேகமாக எல்லா நாடுகளும் அம்முறையைப் பின்பற்றுகின்றன என்றும் கூறியுள்ளனர்.

விரிவுரையாற்றல் முறை 1930-ஆம் ஆண்டு முதல் இன்று வரை நடைபெற்ற ஆய்வுகளால், ஒரு சிறந்த முறையாகவும், முயற்சி, காலம், பொருள் ஆகியவை சிக்கனம் உடைய ஓர் அமைப்பாகவும் விளங்குகிறது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நிகழ் ஆய்வுகள், விரிவுரையாற்றல் நிகழ்ச்சிக்கெனச் சில பண்புகளை எடுத்துக் கூறுகின்றன. அவை, 1. பொருட்பகுதி நன்கு தெரிந்திருத்தல், 2. மாணாக்கர்களின் முன்னறிவை நன்கு அறிதல், 3. இன்றியமையாக் கருத்துகளை வரிசைப்படுத்துதல், 4. குறிப்புகளைத் திறம்பட எழுதுதல், 5. ஆர்வமூட்டுமாறு தொடங்குதல், 6. தருக்க முறைப்படி செய்திகளைத் தருதல், 7. மாணாக்கர் கண்நோக்கு, மனநிலை, ஆர்வம், தயார்நிலை ஆகிய இவற்றை ஆய்தல், 8. உடல், அங்க அசைவுகள் ஆகியவற்றை அளவோடும் திறனோடும் பயன்படுத்தல், 9. நகைச்சுவைத் தன்மையை ஓரளவிற்குப் பயன்படுத்தல், 10. தெளிந்த, ஏற்ற இறக்கக் குரல்வளம், இடையீட்டுத் தன்மை, அழுத்தம் போன்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல் என்பனவாகும்.

- ச.மோ.

**விலக்குச் சொல் :** ஒவ்வொரு மொழி பேசும் சமுதாயத்தினரிடையேயும் சில குறிப்பிட்ட சொற்கள் பயன்படுத்தத் தகாதனவாகக் கருதப்பட்டு வருகின்றன. அச்சொற்கள் வழக்கொழிந்து போவதும் இல்லை. சில குறிப்பிட்ட சூழலில் மட்டுமோ வரையறுக்கப்பட்ட குழுக்களிலோ அச்சொற்கள் பயன்படலாம். அவ்வகைச் சொற்களை விலக்குச் சொற்கள் (Taboos words) என்று குறிக்கின்றனர்.

பொதுவாக மனித உடலின் பால் உறுப்புகளைக் குறிக்கும் சொற்களும், உடலுறவைக் குறிக்கும் சொற்களும் அனைத்துச் சமுதாயத்தினராலும் விலக்குச் சொற்களாகக் கருதப்படுகின்றன. பிற்காலத்தில் தான் இது தொடர்பான சொற்கள் விலக்குச் சொற்களாக மாறின என்று கூறவும் வாய்ப்புள்ளது. எடுத்துக்காட்டாக 'முலை' என்ற சொல் சங்க இலக்கியங்களிலும் பிற்கால இலக்கியங்களிலும் மிகுந்த அளவில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இச்சொல் இக்காலத் தமிழ் வழக்கில் விலக்குச் சொல்லாகிவிட்டது. இதுபோன்ற உடல் உறுப்புச் சொற்களையும் உடல்உறவுத் தொடர்பான சொற்களையும் பிறர் மீது உள்ள போபத்தைக் காட்டப் பயன்படுத்திப் பேசும் போது அவை, 'கெட்ட வார்த்தைகள்' (விலக்குச் சொற்கள்) என மக்களால் வெறுத்து ஒதுக்கப்படுகின்றன.

சில எண்களைக் குறிக்கும் சொற்களும் விலக்குச் சொற்களாகச் சில சமுதாயத்தில் கருதப்படுகின்றன. கிறித்தவ சமயத்தைப் பின்பற்றும் மேலை நாட்டினர் 13 என்ற எண்ணைக் கூறப் பயப்படுகின்றனர். அச்சொல்லை விலக்குச் சொல்லாகக் கருதுகின்றனர். ஏசுவின் 13 -ஆம் சீடனான யூதாசு காரியேத்து என்பவனே ஏசுவைக் காட்டிக் கொடுத்தவன் ஆகயால், 'பதின்மூன்று' என்ற சொல் விலக்குச் சொல்லானது என்பர். தமிழ் நாட்டிலுள்ள குறிப்பிட்ட இனத்தவரிடையே (கன்னர்) 'பத்து' என்ற எண்ணைக் குறிக்கும் சொல் விலக்குச் சொல்லாக உள்ளது எனத் தெர்சுடன் கூறுகின்றார். கணவனை இழந்த மகளிரின் தாலியைக் கணவன் இறந்த பத்தாம் நாள் அறுத்து விடுவர் என்ற அச்ச உணர்வே இதற்குக் காரணம் எனலாம். இவ்வகைச் சொற்கள் இறப்பையும் அதன் மூலம் நிகழ்வுறும் துன்பத்தையும் நினைவூட்டுதலால் இவற்றைச் சொல்ல மக்கள் அஞ்சுகின்றனர். இவையே நாளடைவில் விலக்குச் சொற்களாகக் கூடும். சில சொற்கள் ஒரு தனி மனிதனுக்கு மட்டுமோ ஒரு சிறு குழுவுக்கோ விலக்குச் சொல்லாயிருப்பதும் உண்டு. தமிழ்ச் சமுதாயத்தில் கணவனின் பெயரை மனைவி எவ்விடத்திலும் சொல்லக் கூடாது என்னும் வழக்கம் உள்ளது. கணவன் பெயரை மனைவி கூறுவது என்பது விலக்குச் சொல் மரபாகக் கருதப்படுகிறது.

விலக்குச் சொற்களுக்குப் பதிலாக வேறு சொற்களைப் பயன்படுத்தி நினைத்தவர் தம் கருத்தை வெளிப்படுத்துதலும் நோக்குதற்குரியது. தொல்காப்பியத்திலும் (தொல்.சொல்.17) இத்தகு கருத்து இடம் பெற்றுள்ளது. அம்மை நோயை 'முத்துப் போட்டிருக்கு' என்றும் 'வசம்பு' என்ற மருந்துப் பொருளைப் 'பேர் சொல்லாதது' என்று அச்சத்தினால் கூறும் இக்கால வழக்குகளையும் விலக்குச் சொற்களாகக் கொள்ளலாம். 'பாம்பு' என்ற சொல்லை இரவுநேரத்தில் 'பழுதை' என்று கூறுதலும் இவ்வகையைச் சேர்ந்ததே.

'மூத்திரம்' என்பதற்கு 'ஒன்றுக்கு' என்றும், மலம் கழிக்கச் செல்வதை 'இரண்டுக்குப் போகிறேன்' என்றும் கூறப்படும் இக்கால வழக்குகளையும் விலக்குச் சொற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் சொற்களாகக் கொள்ளலாம்.

ஒரு குழுவைச் சேர்ந்தோர் பொதுவாக அனைவராலும் பயன்படுத்தப்படும் வழக்குச் சொற்களைப் பயன்படுத்துதலை விடுத்து அக்குழுவிலுள்ளோர் மட்டுமே அறிந்து கொள்ளும் வகையில் பயன்படுத்தும் சொற்கள் இவ்வகையினவே. பொற்கொல்லர் பொன்னைப் 'பறி' என்று கூறுதலை எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம்.

-கோ.பா.

துணை நூல்கள் :

1. Emeneau, M.B., **Dravidan Linguistics, Ethrology and Folk Tales**, A.V. 1967.

2. Thurston, E., **Castes and Tribes of Southern India**, Madras, 1909.

விலங்கு உளவியல் : எல்லா உயிரினங்களும் சில அடிப்படையின் கீழ்த் தனித்தனிக் குழுக்களாகச் சேர்த்து இனமறிவதற்கு முக்கியக் காரணியாக இருந்தது. தார்வின் (1859) தந்த பாரம்பரியக் கோட்பாடாகும். சிம்பன்சி என்ற குரங்கினம் மனித இனத்தை மிகவும் நெருங்கி இருப்பதாக நம்பப்பட்டது. இவ்விரு இனங்களையும் இணைக்கும் வேறொரு இனம் இருந்திருக்கும் என்றும் நம்புகின்றனர். கடந்த

நூறு ஆண்டுகளில்தான் மனிதனை மட்டும் ஆராய்ந்தால் போதாது, எல்லா உயிரினங்களையும் ஆராய்ந்தால்தான் மனித நடத்தையை நன்கு புரிந்து கொள்ள முடியும் என்ற எண்ணம் வலுத்தது. விலங்கினின்றும் விலகி வந்தவன் மனிதன் என்பதனால், மூதாதையர் பற்றிய அறிவு பிற்கால மனித வளர்ச்சிக்கு வித்தாகும் என்ற நம்பிக்கை வலுத்தது. இக்கால மனிதன் தன்னுடன் ஆடு,மாடு, நாய், பூனை, குதிரை, குரங்கு, கோழி, ஒட்டகம், புலி, கரடி, கிளி போன்ற பிற உயிரினங்களைத் தன்னுடன் சேர்த்தே வளர்க்கிறான். குரங்குகள் மனிதர்களைப் பார்த்து நம்மைப் போலச் செய்வதையும் மனிதன் கவனித்தான். தொடக்கத்தில் உயிரியல் வல்லுநர்கள் உடலுறுப்பு ஒப்பாதலை மட்டும் கவனித்து வந்தனர். அண்மைக் காலமாகத் தான் உணர்வுகள், இயல்பூக்கங்கள், கற்கும் ஆற்றல், எழுச்சி, அன்பு, ஒத்துழைப்பு முதலியன பற்றியும் ஆராயத் தொடங்கினர். சிற்பங்களை வடித்த மனிதன், 30,000 ஆண்டுகளுக்கு முன்னர்க்கூட மரஞ் செடி கொடிகளை விட மிருகங்களைத் தான் மிகுதி யாகப் பாறைகளில் செதுக்கி இருக்கிறான். உயிரினங் களைத் தன்னுடன் ஒப்பிட்டுக் காணும் பாங்கானது மிகமிகப் பழமையானது. விலங்குகளுடன் சேர்ந்தே வாழ்ந்திருக்கிறான் , வாழ்கிறான்.

சோவியத்து நாட்டுப் பாவ்லன், அமெரிக்க நாட்டு வாட்சன், செருமன் நாட்டுக் கோகலர் போன்றறோர் விலங்குகளை வைத்துச் செய்த ஆராய்ச்சி, மூளையின் இயக்கம் கற்றல் ஆகியவற்றைப் பற்றி மனிதன் நன்கு புரியும்படி செய்தது. இதிலிருந்து மொழி, சமூக உறவு பற்றி எல்லாம் ஆராயத் தொடங்கினர். குரங்குக் கூட்டங்களிடையே வசித்தும், குரங்குக் குட்டியைத் தத்தெடுத்துத் தம் குழந்தையுடன் வளர்த்தும் ஆராய்ந்த உளவியல் வல்லுநர்கள் உள்ளனர். (காதித் தம்பதிகள் - 1951). இத்தகைய முயற்சி அல்லது ஆராய்ச்சியை விலங்கு உளவியல் அல்லது ஒப்பியல் உளவியல் என்பர்.

மக்களைவிட உயிரினங்களை ஆராய்வது எளிது. அவற்றிடமிருந்து தோன்றும் சிக்கல்களின் இயல்பு குழப்பம் குறைந்தது. ஆராயும்போது, ஆய்வாளரின் விருப்பப்படி அவற்றைக் கட்டுக்குள் வைத்திருக்க முடியும். சோதனைச் சாலைகளில் விலங்குகளை வைத்து ஆராய்வதனால் எதைக் கற்க முடிந்தது என் கின்றனர் சிலர். மனிதர்களை ஆய்வுக் கூடங்களில் வைத்து ஆராய்வதனால் எதனைக் கற்க முடிந்தது என்று அவர்கள் வேறு வினாவையும் எழுப்புகின்ற னர். சோதனைச் சாலையாவது என்றும் இயற்கை யான சூழ்நிலையாக மாற முடியாது. ஆகவே, இப்பொழுது இயற்கையான சூழ்நிலையில் குழுக் களை ஆராயும்போது அவர்களுக்குத் தெரியாதபடி ஆராய்கின்றனர் (மெக்னெய்ல் - 1978).

சேர்வை நலம் : எல்லா உயிரினங்களின் மூளை யோடு மனித மூளையினை ஒப்பிட்டுப் பார்த்தால் அது எல்லையற்ற ஆற்றலைப் பெற்றதாக இருக்கிறது என்பது புலனாகும். பொது மனிதன் அந்த ஆற்றலில் 15 விழுக்காட்டினைத்தான் பயன்படுத்துகிறான். பெருங் கண்டுபிடிப்புகள், கருத்துப் புரட்சிகள், சாதனைப் படைப்புகள் ஆகியவற்றைச் செய்தவர் களிடமும் அவர்களது மூளை ஆற்றலில் 17 அல்லது 19 விழுக்காடுதான் பயன்படுத்தப்பட்டிருகின்றது என்று தெரிகிறது. சில துறைகளில் மனிதனை விட உயிரினங்கள் சிறப்பாற்றலைப் பெற்றுள்ளன (மெக்கீசி, தாய்ல் - 1966). பல பறவைகளால் நெடுந் தொலைவிலுள்ளனவற்றைக் காண முடியும். மக்க ளால் கேட்க இயலாத ஓசைகளை நாய்கள் கேட்கும். அவை 3,000 மோப்பங்களைத் தனித்துக் கண்டுணர வும் முடியும். மனிதன் மற்ற உயிரினங்களைப் போலப் பறக்கவோ ஓடவோ முடியாது. புறாக் களைப் போலக் காந்த அலைகளைத் தெரிந்து கொள்ள முடியாது. பிற விலங்குகளிடையே நிகழும் உளவியல் இயக்கங்களை நன்கு புரிந்து கொள்ள முடிகின்றது.

மனிதனைப் பற்றி எவ்வளவு உயர்வாக எண்ணி னாலும், மனிதனும் மிருகமே. ஆகவே, அவனைப் பிற உயிரினங்களுடன் இணைத்து ஆராய்ந்தால்தான் மனிதனைப் பற்றிச் சிறப்பாகப் புரிந்து கொள்ள முடியும். (சீரிய, காட் பிரைட்-1978). ஒப்பியல் உள வியலைக் கற்கும் எவரும் இக்கூற்றினை மறுப்ப தில்லை. பிற உயிரினங்களுடன் மக்களுக்கு உள்ள உறவு நன்கு விளங்குமானால், சுற்றுச் சூழல் வாழ்க் கையும், சமூக உறவும் சிறந்திருக்கும். சில சிறப்புத் துறைகளில் தனிப் போக்கு வேண்டியது தான். எல்லா உயிரினங்களும் செய்திகளைத் தமக்குள் உரையாட முடியும். ஆனால் மொழி, எழுத்து என்று மனித னைப் போல் வேறு எந்த உயிரினமும் வளர்த்துக்

கொள்ளவில்லை. கணிதம், கருவிகளை உருவாக்குதல் ஆகியவையும் புதியனவே.

-ம.பெ.

**துணை நூல்கள் :**

1.McKeachie, W.J. & Doyle, C.L., **Psychology**, Addision - Wesley Publishing Co., London, 1966.

2. Mc Neil, E.B. and others., **Psychology : Today and Tomorrow**, San Francisco : Canfield Press, 1978.

3. Seary, B & Glorified, N., **Development of Behaviour**, Bozfon, Houghton, 1978.

4. Stone, C.P., **Comparative Psychology**, New Delhi : Prentice - Hall of India Pvt. Ltd., 1964.

**விலைக் குறியீட்டெண் :** உலக அரங்கில் ஒரு நாடு வகிக்கின்ற இடம், அந்நாடு உற்பத்தி செய்யும் பண்டங்களின் அளவையும் பணிகளின் அளவையும் சார்ந்துள்ளது. அந்நாட்டில் புழக்கத்திலுள்ள பணத்தின் மூலம் அவற்றின் விலைகள் மட்டுமன்றி அவற்றின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களும் அளவிடப்படுகின்றன. அந்தப் பணத்தின் மதிப்பு மீது நம்பிக்கையிருந்தால் மட்டுமே மக்கள் அந்நாட்டில் ஆட்சி புரியும் அரசின் மீதும் நம்பிக்கை கொள்வர். பணத்தின் மதிப்பு நிலையாக இருக்க வேண்டுமெனில் பண்டங்களின் விலையில் பெருமளவில் மாற்றம் ஏற்படக் கூடாது. அத்தகைய மாற்றத்தை அளவிட உறுதுணையாக இருப்பது விலைக்குறியீட்டென் ஆகும்.

விலைக்குறியீட்டெண் என்பது தனித்தன்மையான சராசரியாகும். இது குறிப்பிட்ட பண்டங்களின் பணிக் குழுவில் ஒரு காலத்திற்கும் பிறிதொரு காலத்திற்கும் இடையே நிகழும் சார்புடைய மாற்றங்களை அளவிடப் பயன்படுகிறது. இது பலதரப்பட்ட பண்டங்களின் குழுக்களுக்கும், பலதரப்பட்ட மக்கள் குழுவினருக்கும் கணக்கிடப்படுகின்றது.

கணக்கிடும் முறை : விலைக்குறியீட்டெண் கணிப்பிற்குத் தேவையான புள்ளி விவரங்கள், அடிப்படை ஆண்டு, நிகழும் ஆண்டுகளில் பண்டங்களின் சந்தை விலை, அவற்றின் நுகர்வு அல்லது மொத்த விற்பனை ஆகியனவாகும். அடிப்படை ஆண்டு என்பது விலை மாற்றங்களை ஒப்பிட்டுப் பார்க்கப் பயன்படுத்தும் காலமாகும். அது போர், பஞ்சம், பிணி போன்ற காரணங்களால் பெருமளவில் விலைமாற்றங்கள் அடையும் ஆண்டாக இல்லாமல், இயல்பான (Normal) ஆண்டாக இருத்தல் வேண்டும். அது நிகழும் ஆண்டுக்கு வெகுஅருகிலோ, தூரத்திலோ இருத்தல் கூடாது. அடிப்படை ஆண்டில் விலைக் குறியீட்டென் *100* எனவும், பிற ஆண்டுகளில் *100* -ஐ விட மிகுதியாகவோ குறைவாகவோ இருக்கும். அது *120* -ஆக இருந்தால் அடிப்படை ஆண்டை விட *20* விழுக்காடு ஏறியிருப்பதைக் குறிக்கும். அது *90*-ஆக இருந்தால் அடிப்படை ஆண்டை விட விலை *10* விழுக்காடு குறைந்திருப்பதைக் குறிக்கும்.

$$= \left( \frac{\Sigma_i P1i}{\Sigma_i Poi} \right) \times 100$$

விலைக் குறியீட்டெண்ணைக் கணக்கிடப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. அவை பின்வருமாறு. அ.) எளிய கூட்டல் முறை விலை குறியீட்டெண்,

ஆ) எளிய விகிதாசார விலைக் குறியீட்டெண்.

$$= \frac{1}{n} \frac{\Sigma}{i} \left( \frac{Pic}{Poi} \right) \times 1000$$

'n' என்பது பண்டங்களின் எண்ணிக்கை

'Pic' என்பது நிழும் ஆண்டில் $i^{th}$ பண்டத்தின் விலை

'Poi' என்பது அடிப்படை ஆண்டில் $i^{th}$ பண்டத்தின் விலை.

Σ என்பது பல பண்டங்களின் மொத்த அளவைக் குறிக்கப் பயன்படுத்தும் குறியீடு.

எளிய கூட்டல் முறையில் கணக்கிடப்படும் குறியீட்டெண் பண்டங்களின் விலை எந்த அலகுகளில் கொடுக்கப்படுகிறதோ அதனைச் சார்ந்திருக்கும். (எ-டு) ஒரு கிலோகிராமின் விலை உரூ. , ஒரு மீட்டரின் விலை உரூ., எளிய விகிதாச்சார விலைக் குறியீட்டெண் பண்டங்களின் விலை தரப்படும் அலகுகளைச் சார்ந்திருப்பதில்லை. எனினும், இம்முறையிலும் குறிப்பிட்ட பண்டங்களுக்குச் சிறப்புத் தர இயலாது.

விலைக் குறியீட்டெண்கள் நாட்டின் பொருளாதார நிலையை எதிரொலிப்பனவாக இருக்க வேண்டுமெனில், பண்டங்களுக்குத் தரப்படும் சிறப்பு மாறுபட வேண்டும். அந்தந்தப் பண்டங்களின் நுகர்வு அல்லது விற்பனை அளவானது அவற்றின் இன்றியமையாமையை வெளிப்படுத்துவதாக எடுத்துக் கொள்ளலாம் என்பதால், அவையே எடையாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அதனைப் பின்பற்றிப் பிசர் (Fisher) என்பவர் விலைக் குறியீட்டெண்ணிற்கு உருவாக்கிய சூத்திரம்.

$$Fp = \sqrt{\left(\frac{\Sigma_i P1iQ1i}{\Sigma_i P0iQ0i}\right)\left(\frac{\Sigma_i P1iQ0i}{\Sigma_i P0iQ0i}\right)} \times 100$$

'Q1i' என்பது நிகழும் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட பண்டத்தின் அளவு.

'Q0i' என்பது அடிப்படை ஆண்டில் பயன்படுத்தப் பட்ட பண்டத்தின் அளவு.

**விலைக் குறியீட்டெண்ணின் வகைகள்** : பிசரின் முறைப்படி பலவகையான குறியீட்டெண்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. அவை மொத்த விற்பனை, சில்லறை விற்பனை, விலைக் குறியீட்டெண்கள், நுகர்வோர் விலைக் குறியீட்டெண்கள், ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களின் விலைக் குறியீட்டெண்கள் ஆகும். இந்திய மைய இருப்பு வங்கி, இந்திய நாட்டின் பல்வேறு மாநிலங்களுக்கும் நகரங்களுக்கும் விலைக் குறியீட்டெண்களை ஒவ்வொரு வாரமும் கணக்கிட்டு வெளியிடுகிறது. அவை பலவிதமான பண்டங்களுக்கும், பலதரப்பட்ட மக்கள் குழுக்களுக்கும் கணக்கிடப்படுகின்றன.

மொத்த விலைக் குறியீட்டெண் உணவுப் பொருட்கள், வேளாண்மைப் பொருட்கள் தொழில் உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றுக்குக் கணக்கிடப்படுகின்றது. இக்குறியீட்டெண்கள் நாட்டின் பொருளாதார நிலையில் ஏற்படும் மாற்றங்களைக் குறிப்பாகப் பணவீக்கத்தின் அளவினைத் தருகின்றன. பின்வரும் அட்டவணையில் 1970-71-ஐ அடிப்படை ஆண்டாக எடுத்துக் கொண்டு, கணக்கிடப்பட்ட மொத்த விலைக்குறியீட்டெண், குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குத் தரப்பட்டுள்ளது.

அட்டவணை **1 :** இந்தியாவில் மொத்த விலைக் குறியீட்டெண் ஆண்டு **(1970–71)** வேளாண்மைப் பொருட்கள் :

| ஆண்டு | வேளாண்மைப் பொருட்கள் | தொழில் உற்பத்திப் பொருட்கள் | எல்லா வித்ப் பொருட்கள் |
|---|---|---|---|
| 1972 - 73 | 110.3 | 121.9 | 116.2 |
| 1976 - 77 | 158.6 | 175.2 | 176.6 |
| 1980 - 81 | 210.5 | 257.3 | 267.3 |
| 1984 - 85 | 304.7 | 351.7 | 321.5 |
| 1985 - 86 | 343.2 | 380.3 | 331.4 |
| 1986 - 87 | 360.4 | 419.4 | 349.3 |
| 1987 - 88 | 387.1 | 435.8 | 390.6 |

*ஆதாரம் : இந்திய மைய இருப்பு வங்கி வெளியீடு செப்டம்பர், 88.*

நாட்டில் உள்ள எல்லா வகைப் பொருட்களின் மொத்த விலைக் குறியீட்டெண் தொடர்ந்து மிகுந்து கொண்டு செல்வது பணவீக்கம் நிலவுவதைக் குறிக்கிறது.

மக்களின் வாழ்க்கைத் தரத்தை நிருணயம் செய்ய நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணக்கிடப்படுகிறது. மைய வங்கி பின்வரும் குழுக்களுக்கு இக் குறியீட்டெண்ணை, அவர்களுக்குப் பஞ்சப்படியை நிருணயம் செய்யவும், குறைந்த அளவுக் கூலியை வரையறுக்கவும் கணக்கிடுகிறது. பின்வரும் அட்டவணையில் வேளாண் தொழிலாளர்கள், ஆலைத் தொழிலாளர்கள், நகரத்தில் வசிக்கும் மக்கள் ஆகியோருக்குரிய குறியீட்டெண்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2 : இந்தியாவில் நுகர்வோர் விலைக் குறியீட்டெண்.

| ஆண்டு | வேளாண் தொழிலாளர்கள் | ஆலைத் தொழிலாளர்கள் |
|---|---|---|
| 1972 - 73 | 225 | 207 |
| 1976 - 77 | 302 | 301 |
| 1980 - 81 | 409 | 451 |
| 1984 - 85 | 538 | 564 |
| 1985 - 86 | 555 | 620 |
| 1986 - 87 | 578 | 674 |
| 1987 - 88 | 636 | 745 |

***ஆதாரம் : இந்திய மைய இருப்பு வங்கி (RBI Bulletin) செப்டம்பர், 1988 இதழ்.***

நுகர்வோர் விலைக்குறியீட்டெண் கணக்கிடப் படுங்கால் அக்குழு பயன்படுத்தும் பண்டங்கள் மட்டுமே ஏற்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக, வேளாண் தொழிலாளர்களுக்கான நுகர்வோர் விலைக்குறியீட்டெண்ணில் குளிர் சாதனப்பெட் டி, தொலைக் காட்சிப் பெட்டி ஆகியவற்றின் விலை களை எடுத்துக் கொள்ள முடியாது.

-மா.தெ.

**துணை நூல்கள் :**

1. Maxwell, E.A., **Introduction to Statistical Thinking**, Prentice Hode Inc., New Gersey, 1983.

2. Theodore, R., Anderson & Morns, Zelditch., **A Basic Course in Statistics**, Charles Gifflin & Co., London, 1940.

3. Yule, G.V., & Kendall, M.G, **An Introduction to the Theory of Statistics**, Charles Gifflin & Co., Ltd., London, 1940.

**விழாக்கள்** : இவை பழங்காலம் தொடங்கி இன்று வரை உலகின் எல்லாப் பாகங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றன. நாட்டுக்கு நாடு, ஊருக்கு ஊர் பல்வேறு வகையில் விழாக்கள் மாறு படும். தனி மனிதனைப் பற்றிய விழாக்கள், சமுதாய விழாக்கள், சமய விழாக்கள், நாட்டு விழாக்கள் என விழாவினைப் பலவகையில் பிரிக்கலாம். மேலும், நாகரிகமடையாத அன்றைய மக்கள் தொடங்கி (இன்று வாழும் நாகரிகமற்ற ஒதுக்கிடங்களில் வாழு பவர் உட்பட) நாகரிகம் பெற்றவர் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் இன்றைய மக்கள் வரை அவரவர் இனம், குழு, கொள்கை, வாழிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பலவகை விழாக்கள் நடைபெறு கின்றன.

தமிழில் விழாவின் அடிப்படையாக அமைந்த சொற்களைக் கண்டு அவற்றை விளக்கிய பர்ரோ (T. Burrow), மேலை நாட்டு அறிஞர் எமனோ (M.B. Emeneou) ஐந்து சொற்களை அதற்கு அடிப்படை யாகக் கொண்டனர். 'உக' என்ற அடிப்படையில் உகப்பு, ஓகை என்ற சொற்கள் மகிழ்ச்சியில் விளை யும் விழாக்களாக அமையும். 'நோல்' என்பதன் அடியாக நோன்பு விழாவாக அமைகின்றது. பண்டிகை விழாவாகின்றது. 'பாண்' அடியாகப் பாணர் - இசை வாணர் வழியும் விழா அமைகின் றது. 'வேண்டு' என்பதன் அடியாக வேண்டுதல், வேண்டுமை, வேட்பு என்ற வகையில் விழாவாற்றி வேண்டிய பெறும் சிறப்புக் காட்டப் பெறுகின்றது. இவ்வாறு விழாக்கள் பல வகையில் அமைகின்றன.

தன் மனிதனைப் பற்றிய விழா அவன் பிறப்பதற்கு முன் தொடங்கி இறந்து அவன் நினைவுள்ள வரை யிலும் நடைபெறுகின்றது. கருவளர் காலத்தில் வளை காப்பு, சீமந்தம் தொடங்கிப் பின் பிறந்த நாள்விழா, மணவிழா, மகப்பேறுவிழா என்று வாழ்நாளில் அமையும் விழாக்களும், மறைந்தபின் சடங்கு அடிப்படையில் நடைபெறும் நினைவு விழாக்களும், தனி மனித விழாக்களாக அமைகின்றன. கூட்டு விழாக்களாகச் சமுதாய அமைப்பில் பொங்கல் விழா, புத்தாண்டு விழா, நிறைமதி, பிறைமதி விழாக்கள், வசந்த விழா, வேனில்விழா போன் றவை நடைபெறுகின்றன. திறப்பு விழா, கால்கோள் விழா, தொடக்கவிழா என்பனவும், கம்பன் விழா, வள்ளுவர் விழா என்பனவும் போன்ற விழாக்களும்




பொங்கல் விழா





கிருத்துப் பிறப்பு விழா



இரம்சான் விழா

உள. சமய அடிப்படையில் பாரதத்தில் விநாயகர் சதுர்த்தி, கலைமகள் விழா, கார்த்திகை விழா, தீபாவளி போன்றவை இந்துக்களால் கொண்டாடப் பெறுகின்றன. மேலைநாடுகளில் தொன்மையான எகிப்திய, கிரேக்க, உரோம, யூதர் நாடுகளில் தமிழ் நாட்டினைப் போன்றே மிகப் பழங்காலந்தொட்டுச் சமய அடிப்படையிலும் சமுதாய அடிப்படையிலும் விழாக்கள் நடைபெற்றுள்ளன. இங்கிலாந்து, செருமனி, அமெரிக்கா போன்ற நாடுகளில், அவர்தம் நிலைத்த திருந்திய வாழ்க்கை அமைந்த பிறகு சமய அடிப்படையில் விழாக்கள் சிறந்தனவெனக் காட்டுவர். எனினும் அந்த நாடுகளிலும் பழங்காலந் தொட்டே பழங்குடி மக்கள் அவரவர் தம் மரபு நிலை பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப விழாவினைக் கொண்டாடி மகிழ்ந்தனர் என்பது தேற்றம்.

சமய விழாக்கள் அடிப்படையில் கிறித்தவர்தம் கிறித்து பிறந்த நாள் விழா, நல்ல வெள்ளி போன்றனவும், மகமதியர்தம் இரம்சான், பக்ரீத்து போன்றனவும், சீனாவின் கொண்டாடப்பெறும் புத்தர் விழாவும் இந்திய நாட்டுப் புத்த முழுமதிநாள் விழாவும் சைனர்தம் தீர்த்தங்கரர் பற்றிய விழாக்களும் பிற சமயத் தலைவர் விழாக்களும் நினைவு கூர்தற்குரியன.

சமுதாய அடிப்படையில் இந்திய நாட்டில் காலந் தோறும் நடைபெறும் விழாக்கள் பல. அறுவடைப் பயன் கண்டு மகிழும் பொங்கல் விழாவும், வசந்த விழா, ஓலிப்பண்டிகை போன்றனவும் அவற்றுள் அடங்கும். நாட்டு விழாக்களில் அமெரிக்க விடுதலை நாள் விழா, இந்திய விடுதலை நாள் விழா, குடியரசு நாள் விழா போன்றவை அடங்கும். அவற்றுடன் நல்லவர் பிறந்து, மறைந்த நாட்களும் விழாவாகக் கொண்டாடப்படுகின்றன. கிருட்டிணர் பிறப்பு (கோகுலாட்டமி) இராமர் பிறப்பு, காந்தி பிறப்பு போன்றவை ஒரு சில.


தனிமனிதன் செயல்களைப் பாராட்டும் வகையில் தமிழ்நாட்டிலும் பிறவிடங்களிலும் விழாக்கள் நடைபெற்றன - நடைபெறுகின்றன. வீரர் வழிபாடும், கல்நாட்டு விழாவும் மன்னர் பிறந்த நாள் மங்கல விழாவும், வெறியாட்டு விழாவும், உண்டாண்டு விழாவும், குருதிப் பலியும் பிறவும் தொல்காப்பியர் காலந்தொட்டு நாட்டில் நடைபெற்று வருகின்ற விழாக்களாம்.

ஆறறிவுடைய மனிதன் ஆரவாரத்தோடு விழாக்களைக் கொண்டாடும் வேளையில், பறவையும் விலங்கும், ஓரறிவுடைய மரமும் செடியும் கூடக் காலந்தொறும் விழாக்களைக் கொண்டாடுகின்றன. உருசியப் பறவைகள் கூட்டமாகத் தமிழ்நாட்டு வேடந்தாங்கலில் வந்து தங்குதலும், காகம் கலந்துண்ணும் காட்சியும், எறும்பின் ஈட்டமும் விலங்குகளும் ஊர்வனவும் (சமுதாயமாக) இணைந்து செல்லும் காட்சிகளும் விழாவினை நினைப்பூட்டுகின்றன. பருவம் அறியப் பூத்துக் காய்த்துக் கனிகளை வழங்கும் மாவும், பலாவும், மற்றவையும் இயற்கையின் விழாவேயாகும். மல்லிகை முதலியன வசந்தத்தால் பூத்துக் குலுங்குவதும், ஓரறிவுடைய உயிர்கள் கொண்டாடும் பருவ விழாக்களாகும். இவ்வாறு உயிர்கள் அனைத்துமே ஏதாவது ஒருவகையில் விழா ஆர்ந்து மகிழ்கின்றன என்பது தெளிவு.

விழா எதற்கு என்று எண்ணிப்பார்க்க வேண்டும். பூம்புகாரிலே இந்திரவிழாவினை அறிவித்த வள்ளுவ முதுமகன் 'பசியும் பிணியும் பகையும் நீங்கி வசியும் வளனும் சிறக்கென வாழ்த்தி' விழாவினைப் பற்றி அறிவித்தான் என்பர் இளங்கோவடிகள். எனவே, நாட்டின் பசியும் பிணியும் நீங்கவும் மக்கள் பகையற்று வாழவும் செல்வம் சிறக்கவுமே விழாக்கள் நடைபெறுகின்றன என்பது உண்மையாகும். பெற்றது கொண்டு சுற்றத்தாரை மட்டுமன்றி எல்லாரையும் இணைத்து இன்பம் காண்பதுவே விழாவாகும். பூம்புகாரின் இந்திர விழாவிலும், பழைய இலக்கியங்களில் வரும் பிற விழாக்களிலும், இன்றைய சமுதாய நாட்டு விழாக்களிலும் இத்தகைய செயல்களைக் காணலாம் எல்லாரும் இன்புற்று வேறுபாடற்று இணைந்து வாழ வழி வகுப்பதே விழாவாகும். 'ஐப்பசி ஓணவிழாவும் அருந்தவர்கள், துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்', என்று கி.பி.7 -ஆம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தர் கூறியுள்ளார். இன்று நாட்டில் இசை விழாக்களும், ஒவ்வொரு துறையினரும் ஆண்டுக்கு ஒரு வாரம் நடத்தும் மரியாதை அல்லது நற்செயல் போற்றும் விழாக்களும் நடைபெறுகின்றன. பழங்காலத்தில் தமிழ்நாட்டில் இசை விழாக்களைப் பாணர் நடத்தி வந்துள்ளனர். இங்கிலாந்து, செருமனி, அமெரிக்கா போன்ற மேலை நாடுகளிலும் கி.பி.17, 18-ஆம் நூற்றாண்டுகளில் இத்தகைய இசை விழாக்கள் நடைபெற்றுள்ளன.



வண்ண விழா



புத்தர் விழா

தமிழ் நாட்டில் பருவந்தோறும் நடைபெறும் விழாக்கள் பல, மிகப் பழங்காலத்தில் நடைபெற்ற, இத்தகைய விழாக்களைப் பற்றிச் சங்க இலக்கியங் களும் நன்கு காட்டுகின்றன. புனலாட்டு விழா என வெள்ளப் பெருக்கில் அதைப் போற்றி வழிபடுவ தோடு 'வந்தன்று வையைப்புனல்' என்று வாழ்த்தி அதில் ஆடவரும் பெண்டிரும் திளைத்தாடும் விழா வினைப் பரிபாடல் பல விடங்களில் விளக்குகின்றது. இன்றும் காவிரிப் பெருக்கினைப் போற்றும் ஆடிப் பெருக்கு விழா நாட்டில் உண்டு. அரசர்தம் பிறந்த நாள் விழா, மண்ணுமங்கலம் போன்றவற்றை விளக்குகின்ற இலக்கியங்கள் பல. மேலும், வசந்த விழாவினை ஊர்தொறும் கொண்டாடி வந்த சிறப் பினை, முக்கியமாகப் பூம்புகாரில் நடைபெற்ற இந்திர விழாவினைச் சிறப்பிக்கும் முகத்தான். 'சித்திரைத் திங்கள் சேர்ந்த' பெருவிழா என இளங்கோவடிகள் விளக்குகிறார். மேலும், பின் வேனிற்காலத்தது வேட்டுவர்தம் விழாவினையும் இடைக்குல மகளிர்தம் ஆய்ச்சியர் குரவையினையும் சேர நாட்டில் மலைக்குறவர்தம் குன்றக் குரவை யினையும் கூறுகிறார். தமிழர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தியவர்கள். அவர்களுக்குத் திங்கள் தொறும் வரும் நிறைமதி நாளே விழா நாளாக அமைந்தது. சித்திரையில் நிறைமதியும், வைகாசியில் விசாகமும், கார்த்திகையில் கார்த்திகை யும், மார்கழியில் ஆதிரையும், தைப்பூசமும், மாசி மகமும், பங்குனி உத்திரமும் அத்தகைய நிறைமதி விழாக்களேயாகும். இன்றும் கடற்கரையிலும் ஆற்றுப்படுகைகளிலும் இந்த நிறைமதி விழாக்கள் கோயில் தோறும், ஊர்தொறும் நடைபெறுகின்றன. தெய்வத்திருத்தலங்களில் பத்து நாட்கள் தொடர்ந்த இனிய பெருவிழாவாக நடைபெறுகின்றன. இந்த நாட்களிலும் அவ்வவ்விடத்தில் வாழ்வார் வேறு பாடற்று, சமுதாய உணர்வோடு ஒன்றுகூடி, பசியும், பிணியும், பகையும் நீங்கியவகையில் மகிழ்ந்து விழாவாற்றுகின்றனர்.

தமிழ்நாட்டு விழாக்களில் சிறந்த விழாவாகக் கொண்டாடப் பெறுவது பொங்கல் விழாவாகும். அவ்விழாவினைப் பற்றிப் பழைய இலக்கியங்களில் போதுமான சான்றுகள் இன்றேனும், இன்று அது சாதி, சமய வேறுபாடற்ற உழவர் விழாவாக நடை பெறுகின்றது. ஆடியில் இட்ட வித்து ஐப்பசி - கார்த்திகையில் அறுவடையாக, கார்த்திகையில் புதுநெல் கொண்டு அவலாக்கி ஆண்டவனுக்குப் படைத்தனர். பின் மார்கழி நோன்பாகவும் தை நீராடலாகவும் தொடர்ந்து வரும் விழாவினை ஒட்டி, தை முதல் நாளைப் பொங்கலாகவும் அதற்கு முன் நாளை உள்மாசும் புறத் தூசும் போக்கும் போகி நாளாகவும், அடுத்த நாளை உழவுக்குதவிய மாடு களைப் போற்றும் நாளாகவும் அதற்கு அடுத்த நாளை உற்றாரையும் மற்றாரையும் கண்டு மகிழ்ந்து இன்பத்தைப் பகிர்ந்து கொள்ளும் காணும் பொங்கல் விழாவாகவும் தமிழர் இன்று வரையில் போற்றி வருகின்றனர். வடநாட்டிலும் போகியை இந்திர விழாவாகவும் பொங்கலைப் பகிர்ந்துண்ணும் நாளா கவும் கொண்டாடுகின்றனர். எந்த வேறுபாடும் இன்றி யாவரும் இணைந்து மகிழும் சிறப்பினை இன்றும் ஒலி (Holy)விழாவில் காணமுடிகின்றது.

சில விழாக்கள் விரத நாட்களாகவும் அமைகின் றன. கார்த்திகை விளக்கீடு உள்ளொளி பெருக்கி, புற இருள் அகற்றி நிற்பதோடு உண்ணாவிரத நாளாக வும் அமைகின்றது. அப்படியே கௌரி விரதம் போன்றவையும் அமையும். கலைமகள் விழா, பத்து நாட்கள் கொண்டாடப்பெற்று நாட்டில் கல்வி, கைத் தொழில் போன்றவற்றை வளர்க்கப் பயன்படுகின் றது. சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், மணி மேகலை போன்றவற்றில் இவ்விழாக்களின் சிறப் புப் பேசப் பெறுவதன்றிப் பின் எழுந்த பல சமய இலக்கியங்களாகிய உலா, கோவை பிள்ளைத் தமிழ், குறவஞ்சி, பள்ளு போன்றவையும் இவ் விழாக்களைப் பற்றி விளக்குகின்றன. மணிவாசகர், ஆண்டாள் போன்ற அடியவர் பெண்கள் விளை யாட்டு வகைகளை விழாக்களாகவே பாடிப் பரவுவர்.

முன் காட்டியபடி தனிமனித விழாவாக - சமுதாய விழாவாக - சமய விழாவாக - நாட்டு விழாவாக - உலக விழாவாக (ஐக்கிய நாட்டு விழாக்கள் - UNO) விளையாட்டு விழாவாக (ஒலிம்பிக்கு போன்றவை) பெருகிய நிலையில் விழா பலவகையில் விரிவடைந் துள்ளது. அதே வேளையில் பழம்பெரும் இலக்கியங் கள் காட்டிய விழாக்கள் அனைத்தும் தொடர்ந்து இன்றுவரை நடைபெற்று வருகின்றன. மனித இனம் ஒன்றுபட, இணைந்து நலம்பெற, வேற்றுமை நீங்க,

பசியும், பிணியும் அகல, எல்லாரும் எல்லாச் செல்வமும் பெற்று எழிலுற்று வாழ, உயிரினம் இன்பம் துய்க்க இந்த விழாக்களே அடிப்படை.

- அ.மு.ப.

**விளம்பரம் :** வளர்ந்து வரும் அறிவியல் உலகில் வாழ்க்கை புதுமைப் படுத்தப்பட்டிருக்கிறது. எதையும் அறிவியல் அணுகுமுறையோடு செயற்படுத்த வேண்டியுள்ளது. அறிவியல் உதவியால் உற்பத்தி மிகுந்துள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் உரிய முறையில் விற்பனை செய்யப்பட வேண்டும். அவ்வாறு உயர்ந்த அளவு விற்பனை செய்யப்பட வேண்டுமானால் விளம்பரம் (Advertising) என்னும் உத்தியைக் கையாள வேண்டியது இன்றியமையாததாகிறது. சந்தையில் போட்டி மிகுதியாக உள்ளதால் பொருட்களை விளம்பரப்படுத்த வேண்டியுள்ளது.

விளம்பரம் என்பது மக்களைத் தன்வயப்படுத்திப் பொருட்களை வாங்கத் தூண்டும் ஒரு கருவியாகும். பொருட்களுக்குப் புதிய பயன்பாடு ஏற்படுத்தவும், புதிது புதிதாக நுகர்வோர்களை அறிமுகப்படுத்திக் கொள்ளவும், உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் இடையில் ஒரு பாலமாக விளம்பரம் பயன்படுகிறது. விற்பனையாளரின் உதவியின்றி உற்பத்தியாளருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பொருள்களை வாங்கவும் குறைவான காலத்தில், குறைவான செலவில் இலட்சக்கணக்கானவர்கள் பொருள்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், வாங்கத் தூண்டவும் விளம்பரம் சிறப்பாக உதவுகிறது.

எந்த ஒரு பொருளுக்கும் விளம்பரம் இன்றியமையாததாக இருக்கிறது. பத்துக் காசு மதிப்புடைய ஊறுகாயாக இருந்தாலும், பத்தாயிரம் உரூபாய் மதிப்புடைய தொலைக்காட்சிப் பெட்டியாக இருந்தாலும் விளம்பரம் செய்யப்படுகிற பொருட்களே சந்தையில் முக்கிய இடத்தைப்பெற்றுள்ளன. விற்பனை மிகுதியாக நடைபெறுகிறது. மக்கள் தேர்ந்தெடுத்து ஒரு குறிப்பிட்ட பொருளையே வாங்குவதற்குக் காரணமாக அமைவது விளம்பரமாகும்.

**விளம்பரத்தின் தன்மைகள்** : ஒரு பொருளைப் பற்றி அல்லது பணியைப் பற்றி அறிந்து கொள்ளச் செய்யும் விளம்பரம் ஒரே நேரத்தில் இலட்சக்கணக்கானவர்களுக்குத் தெரியப்படுத்தும் பொருட்டு எழுத்து மூலமாகவோ, ஒலியின் மூலமாகவோ, ஒளியின் மூலமாகவோ அமையலாம்

பொருளைப் பற்றிய செய்தியாக, பொருள் கிடைக்கும் இடம், அதன் பயன், பயன்படுத்தப்படும் முறை, பொருளின் தரம், விலை, எடை, அளவு ஆகியவை பற்றிச் சொல்லி, நுகர்வோரைக் கவரும் வண்ணம் அவர்கள் தேவையை நிறைவு செய்யும்படி அமைவது விளம்பரத்தின் நோக்கமாகும்.

பொருளை வாங்குவதற்குத் தூண்டுகோலாக விளம்பரம் அமைவதால் விளம்பரச் செலவுகள் அனைத்தும் பொருளின் மீது சுமத்தப்படுகின்றன. பொருளின் மீது திணிக்கப்படும் விளம்பரச் செலவு நேரத்தையும், அலைந்து வாங்கும் செலவையும் சிக்கனப்படுத்துவதால் அதை யாரும் பொருட்படுத்துவதில்லை.

**விளம்பரப் பணியும் நோக்கமும்:** விற்பனையைப் பெருக்கக் கையாளும் உத்திதான் விளம்பரம் ஆகும். அதுமட்டுமன்றி அதை ஒட்டிய பல நோக்கங்களும் உள்ளன. அவையாவன 1. ஒரு குறிப்பிட்ட பொருளின் உற்பத்தியினால் மட்டும் மனிதன் தன் தேவையை நிறைவு செய்து கொள்ள முடியாது. புதிய தேவைகளை அவனுக்கு அறிமுகப்படுத்தவும், அதை வாங்கிப் பயன்படுத்தவும் விளம்பரம் பயன்படுகிறது. புதிய படைப்பிற்கு அல்லாமல் நடைமுறையில் இருக்கும் பொருளை நிலைப்படுத்தவும் அது பயன்படுகின்றது.

**தேவைப் படைப்பின் நிலைகள்** : அ.விளம்பரம் மக்கள் கவனத்தைப் பெற வேண்டும்; ஆ. பொருளைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆர்வத்தைத் தூண்ட வேண்டும்; இ. ஆர்வத்தைப் பொருளின் பயன்பாட்டோடு இணைக்க வேண்டும்; ஈ. தேவையை நிறைவேற்ற மக்கள் பொருளீட்டவும் அதன் மூலம் பொருளைப் பெறவும் அமையவேண்டும்.

2. உற்பத்தியாளர் நற்பெயர் பெறவும், பெற்ற நற்யெரை நிலை நிறுத்தவும், பொருளின் தரம், உழைப்பு, பயன், ஆகிய அனைத்திலும் மேம்பட்ட பொருளாக உற்பத்தி செய்து தரவேண்டும். வெற்று விளம்பரம் பொருளை நிலை நிறுத்தாது.

3. போட்டிப் பொருள்களிலிருந்து நுகர்வோரைக் கவர்ந்து சந்தை நிலையை உயர்த்திக் கொள்ளவும், உயர்த்திக் கொண்ட சந்தை நிலையைத் தக்கவைத்துக் கொள்ளவும் விளம்பரம் துணைபுரிகிறது. ஒரு பொருள் உயர்வானது என்பதை உற்பத்தியாளர்கள் வெளிப்படையாகக் கூறுவதைக் காணலாம்.

4. பொருளை எவ்வாறு பயன்படுத்துவது, பாதுகாப்பது என்றும் அதன் வணிகப் பெயர் இது என்றும் விளம்பரம் மூலம் அறிவுறுத்தலாம்.

5. ஏற்கனவே உள்ள நிறுவனம் புதிய பொருளை அறிமுகப்படுத்தும்போது முன்கூட்டியே விளம்பரப் படுத்தி வாங்குவோர் ஆர்வத்தைத் தூண்டி எதிர் பார்ப்பை ஏற்படுத்தலாம்.

6. தொடர்ந்து தொய்வின்றி விற்பனை நடைபெற விளம்பரம் இன்றியமையாததாகும்.

**விளம்பரத்தின் நன்மைகள்** : விளம்பரம் இல்லாமல் எந்த ஒரு பொருளும் சந்தையில் வெற்றி பெற இயலாது. அந்த அளவுக்கு விளம்பரம் சிறப்புத் தன்மை வாய்ந்தது. சமுதாயத்தில் அனைவருடைய தேவையையும் நிறைவு செய்யும் ஓர் இடைநிலையராகப் பணியாற்றுவது விளம்பரமாகும். இதன் நன்மைகள் பின்வருமாறு அமைகின்றன.

**உற்பத்தியாளருக்கு ஏற்படும் நன்மைகள்** : 1. விளம்பரம் உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்குகிறது; விற்பனையை அதிகரிக்கிறது; விற்பனை, உற்பத்தி இரண்டும் தடையின்றி நடைபெற வழி வகுக்கிறது. உற்பத்தி மிகுதியாவதால் அடக்கவிலை குறைகிறது; தரம் உயருகிறது; வாணிக நற்பெயரைத் தேடித்தருகிறது. ஓர் உற்பத்தியாளர் செய்யும் விளம்பரம் அதே பொருளை உற்பத்தி செய்யும் மற்றவருக்கும் பயன்படுகிறது. விற்பனையாளர்களை ஊக்குவிக்கிறது. மிகுந்த விற்பனையால் குறைந்த கழிவுத் தொகையில் விற்க அவர்கள் முன்வருவர். பருவ காலத் தேவை நெகிழ்வுகளை விளம்பரம் மூலம் சரிக்கட்டலாம்.எடுத்துக்காட்டாக மின் விசிறிகள் போன்றவை மழைக் காலத்தில் தேவைப்படா. எனவே உற்பத்தியையும் விற்பனையையும் தொடர்ந்து நடத்த பருவ காலச் சிறப்புத் தள்ளுபடி செய்து தொழிலை விரிவுபடுத்த விளம்பரம் பயனுள்ளதாக அமைகிறது.

**நுகர்வோருக்கு ஏற்படும் நன்மைகள்** : உற்பத்திச் செலவு வழங்கல் செலவு ஆகியவற்றோடு விளம்பரச் செலவும் நுகர்வோர் மீது திணிக்கப்படுகிறது என்றாலும் விளம்பரத்தால் ஏற்படும் பயன் நுகர்வோருக்கு மிகுதியாகவே இருக்கிறது. 1. தொடர்ந்த உற்பத்தியாலும், விற்பனையாலும் இலாபம் அதிகரிக்கிறது. தொடர்ந்து சந்தையில் வைத்துக்கொள்ளத் தரமான பொருளை உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்கின்றனர். நுகர்வோருக்குத் தரமான பொருள் கிடைக்கிறது. 2. விலை ஏற்ற இறக்கத்தை நுகர்வோருக்குத் தெரிவிக்க விளம்பரம் பயன்படுகிறது. மேலும் விலையைப் பற்றியும் விளம்பரம் செய்வதால் கூடுதலான விலைகொடுத்து வாங்குவதும் விற்பதும் தவிர்க்கப்படுகின்றன. 3. உற்பத்தியாளருக்கும் நுகர்வோருக்கும் விளம்பரம் இணைப்பாக இருப்பதால் இடை நிலையர்கள் தவிர்க்கப்படுகின்றனர். 4. சிறந்த பொருளை இருந்த இடத்திலிருந்தே தெரிந்து கொள்ளலாம். 5. பொருளைப் பயன்படுத்தும் முறையையும், பாதுகாக்கும் வழியையும் விளம்பரத்தின் மூலம் உணரலாம்.

**சமுதாயத்திற்கு ஏற்படும் நன்மைகள்** : செய்தித்தாள்களில் விளம்பரம் செய்வதால் அவற்றிற்கு வருவாய் கிடைக்கிறது. புதிய புதிய தேவைகளை உருவாக்கவும், பயன்படுத்தவும் வருவாயீட்டவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளவும் பண்பாடு மேலோங்கவும், மனநிறைவுடன் தேவையை நிறைவு செய்து கொள்ளவும் விளம்பரம் உதவுகிறது. புதிய பொருட்களை அறிமுகப்படுத்தவும் ஆதாயம் ஈட்டவும் பயன்படுகிறது.

**விளம்பரத்திற்கு உள்ள எதிர்ப்புகள்** : பொய்யான விளம்பரங்களாலும் விளம்பரத்தை உற்பத்தியாளர்கள் தவறான வழியில் பயன்படுத்துவதாலும் விளம்பரத்திற்குப் பல எதிர்ப்புகள் ஏற்படுகின்றன.

விளம்பரம் விலைவாசியை உயர்த்துகிறது என்ற கருத்து நிலவுகிறது. இது தவறாகும். ஏனெனில் விளம்பரம் செய்யப்படுகின்ற பொருள் விளம்பரம் செய்யப்படாத பொருளைவிட மிகுந்த அளவில் விற்பனையாகிறது. விற்பனை அதிகரிப்பதால் உற்பத்தியும் ஆதாயமும் அதிகரிக்கின்றன. எனவே விலை குறைவாக்கப்படுகிறது. தரம் உயர்த்தப்படுகிறது. விளம்பரம் வீண் செலவு என்று பலர் வாதிடுகின்ற













பல்வேறு விளம்பரங்கள்

னர். அவர்கள் கூறும் காரணங்களாவன : அ. பல விளம்பரங்கள் மக்கள் மனதைக் கவருவதில்லை. மக்களே சில விளம்பரங்களைப் புறக்கணிக்கின்றனர். எனவே செலவும் உழைப்பும் வீணாகிறது. ஆ. மொத்தத் தேவையில் பெருக்கம் மிகாமலிருக்கும்போது, புதிய புதிய பொருள்களைச் சிக்கனமாக உற்பத்தி செய்யாதபோதும் விளம்பரம் பயனற்றதே. பொருளைப் பற்றி மிகைபடக்கூறி மக்களை ஏமாற்ற முயல்வது நல்ல விளம்பரமாகாது. அவ்வாறு இருந்தால் அப்பொருள் விரைவாகச் சரியத் தொடங்கும். விளம்பரக் கவர்ச்சியால், எப்படியேனும் அப்பொருளைப் பயன்படுத்த வேண்டும் என்ற விருப்பத்தால் தகுதி மீறிக் கடன் வாங்கி மக்கள் துன்புறுகின்றனர். அருவருப்பூட்டும் படங்களுடன் விளம்பரம் செய்வது இந்நாட்டுப் பண்பாட்டிற்கு ஒவ்வாததாக இருக்கிறது. விளம்பரத்தால் வணிகப் பெயர் தரித்த பொருள்களுக்கு முன்னுரிமை நிலையை உண்டாக்கித் தருவதும், உற்பத்தியாளர் இதைப் பயன்படுத்தி நுகர்வோரைச் சுரண்டுகின்றனர் என்பதும் எதிர்ப்பாளர் கருத்து. தீயநோக்கம் இல்லாமல் நேர்மையான வழியில் விளம்பரம் அமைந்தால் ஒரு பொருள் சந்தையில் வெற்றிபெறும்.

**விளம்பர ஏற்பாடுகள்** : குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெற வேண்டுமானால் விளம்பரம் திட்டமிட்டுச் செய்யப்பட வேண்டும். திட்டம் தீட்டு முன்னர் விளம்பரத்தின் நோக்கம், விளம்பரப்படுத்த வேண்டிய பொருள், யாருக்காக எந்தச் சாதனங்கள் மூலமாக விளம்பரப்படுத்த வேண்டும் என்பன போன்றவற்றை எண்ணிப் பார்க்க வேண்டும். விளம்பரத்தில் சுட்டிக் காட்டப்படும் விற்பனை அம்சம், அதன் மீது ஒட்டப்படும் பெயர்ச் சீட்டுகள் (Labels) ஆகியவை தெளிவாக அச்சிட வேண்டும். விளம்பரத்திற்கு ஒதுக்கப்படும் நிதியை 'விளம்பரச் செலவுத் திட்டம்' (Advertising Budget) என்பர். போட்டிப் பொருட்களிலிருந்து காக்கவும், சந்தையை விரிவுபடுத்தவும் பெருமளவு நிதி தேவைப்படும். தேடிய நற்பெயரைக் காத்துக் கொள்ளக் குறைவான நிதி போதுமானதாகும். கடந்த காலத்தோடு ஒப்பிட்டு எதிர்காலத்திற்குத் தேவையான நிதியை ஒதுக்குவது பாதுகாப்பானதாகும்.

உரிய விளம்பரச் சாதனங்களைத் தேர்ந்தெடுத்து விளம்பரம் செய்வது இன்றியமையாததாகும். விளம்பரம் செய்யப்படும் செய்தியைத் தயாரிக்கும் பொறுப்பைச் சிறந்த வல்லுநர்களிடம் ஒப்படைக்க வேண்டும். அவ்வல்லுநர் அமைக்கும் விளம்பரங்கள் கவர்ச்சியுடையதாகவும், மக்களை வாங்குமாறு தூண்டக்கூடியனவாகவும் இருக்கவேண்டும். இறுதியாக, விளம்பர ஏற்பாடு அடையும் வெற்றியை மதிப்பிட்டு, குறைகளைக் களைந்து மேலும், அதை முறைப்படுத்த வேண்டும். இதழ்களில், செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யும்போது விளம்பர வெற்றியைக் கணிக்க நறுக்குச்சீட்டு, நிறுவன முகவரிக்கு எழுதுமாறு கேட்டல் போன்ற முறைகளைக் கையாள்வது வழக்கம்.

**விளம்பரச் செய்தி தயாரித்தல் (அ) விளம்பரப் படி** : வாங்கும் பொருளைப் பற்றிப் பொதுமக்கள் அறிய வேண்டி தயாரிப்பாளர் விடுக்கும் செய்தியே விளம்பரப் படி (Advertising Copy) ஆகும். இது விளம்பரத்தில் இடம் பெறும் தலைப்பு, பாட்டு, படம், செய்திகள், உரையாடல், இசை, வணிகப் பெயர், வணிகக் குறி அனைத்தையும் ஒருசேரக் குறிக்கும்.

விளம்பரப்படி வெற்றிகரமாய் அமையக் கீழ்க் காணும் சிறப்பியல்புகள் அமைவது நல்லது. ஒரு விளம்பரம் மக்கள் கவனத்தை ஈர்க்கக் கூடியதாயிருக்க வேண்டும். அவ்வாறு இல்லையாயின் அது பயனில்லை. ஒருவர் பணிக்கு விரைந்து போகும் போதுகூட அவ்விளம்பரம் கவர்ந்திருந்தால் அது வெற்றிகரமான விளம்பரமாகும். அதற்குப் பல வழிகள் கையாளப்படுகின்றன.

*1.* **விளக்கப் படங்கள்** : மக்கள் மனத்தைக் கவரும் வகையில் விளம்பரப் படம் அமைவது சிறந்தது. பொருளோடு தொடர்புடைய படமாகச் சிறந்த முறையில் அச்சிடப்பட்டுச் சரக்குகளின் இயல்பு, பயன் சிறப்பு ஆகியவற்றை விளக்கும் வண்ணம் அமைய வேண்டும். *2.* மக்கள் எளிதில் மனத்தில் பதித்து வைத்துக் கொள்ளத்தக்கதாகவும் மூன்று நான்கு சொற்களுக்குள் பெரிய எழுத்தில அச்சிட்டதாகவும் படிக்கத் தூண்டக்கூடியதாகவும் தலைப்பு அமைய வேண்டும். *3.* பாட்டுப்பாடி விளம்பரம் செய்வது மக்களிடம் பொருளை இனம் காட்டும். *4.* பார்க்கும் போதே ஈர்க்கும் அளவுக்கு அமைவதும் பார்க்கத் தூண்டுவதும் வண்ணமாகும். வண்ணச் சேர்க்கை கவர்ச்சியாய் அமைய வேண்டும்.



வரி விளம்பரங்கள்

கட்டணம்:- (8.5 Pt டைப் குறைந்தது 4 வரிகள் அதிக பட்சம் 20 வரிகள்) தஞ்சை பதிப்பு வரி 1-க்கு ரூ.30/-, சென்னை, மதுரை, திண்டுக்கல், திருச்சி, தஞ்சை, கோவை, ஈரோடு, சேலம், நெல்லை, நாகர்கோவில், வேலூர், கடலூர், பெங்களூர், பாண்டிச்சேரி ஆகிய 14 பதிப்புகளுக்கும் சேர்த்து வரி 1-க்கு ஜெனரல் ரூ.500/-, ரியல் எஸ்டேட் ரூ.480/-, சேல்ஸ், ஆட்டோ மொபைல், கம்ப்யூட்டர், கல்வி ரூ.430.00.

ஆட்கள் தேவை

Fresh/Not Completed DME, சூபர் வைசர்கள் தேவை. For Automobile Ancillary Unit 09444014962/ 09444904962.

9 * (4 L) * MDSG182627

சென்னையில் வீட்டு வேலைக்கு வாட்ச்மேன் குடும்பம் தேவை. தங்கும் இடம், சமையல் சாமான்கள் உண்டு. சம்பளம் 2000+700 Ph: 044-25515032, 0984072165

29 * (5 L) * MDSG182804

SSI ENGG.

ssiengghrd@gmail.com

ITI பிரிவில் பிட்டர், எலக்ட்ரானிக்ஸ், மெக்கானிக்கல் டிரேடு முடித்த அப்ரண்டீஸ் முடித்த / முடிக்காதவர்கள் வேலைக்கு தேவை. ஆலை மேலாளர், தஞ்சாவூர் ஸ்பின்னிங் மில் லிமிடெட், தஞ்சாவூர்-5

* * * (7L TNJD008349)

MNC கம்பெனிக்கு ஆட்கள் தேவை:

1. House Keeping Supervisor
2. House Keeping Boys
3. Cook

ஹோட்டல் முன் அனுபவம் உள்ளவர்கள் அணுகவும். சாப்பாடு, தங்கும் வசதி உண்டு.

Wanted CA/Inter CA/ICWA/ICWA (Inter) required for an Audit Firm Apply to Vaithisvaran & Co, 19, IX Cross Street, Dr Radhakrishnan Salai, Mylapore, Chennai-600004 Phone 044 42017951/53

31 * (6 L) * MDSG182806

அனுப்பவேண்டிய முகவரி

BOX No : 8392

C/o தினத்தந்தி, சென்னை-7

ATTENTION

Diploma Holders in

CHEMICAL

ஆட்கள் தேவை

பிரோ வேலைக்கு டிங்கர் தேவை கான்ட்ராக்ட் சம்பளம், தஞ்சாவூர். Ph. 223154, Cell 9442847374, 9865319419

* * * (4L TNJD008333)

கம்பெனிகளில பணிபுரிய 5 - +2 தேவை. Pay2500-5000 கேண்டீன், ரூம் வசதி எழுதுக ISO, 113, KR சாலை, தட்டாஞ்சாவடி, பாண்டி-9

(4 L) * MDSG182675

72 Vacancies for any degree / diploma, +2. Freshers Welcome Free accomodation Start 3000 to 9000 pm Phone: 9894390625. REAL INDIA. 60, Arcot Road, Vellore 4

ENGG & TEXTILES (PVT) Ltd Co.க்கு 5 to +2, All DEGREE, DIPLOMA, I.T.I. படித்த (P/F) அதிக நபர்கள் தேவை. சம்பளம் ரூ.5,400 to 8,100 வரை. ரூம், மெஸ், E.S.I., P.F. வசதி உண்டு. ரூ.5X1 ஸ்டாம்புடன் 15 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

THE MANAGER

P.B.No 721, TENNUR, TRICHY-17.

மினரல் வாட்டர் கம்பெனிக்கு வாட்டர் பவுச ஆபரேட்டர்கள் மறுறுமெக்கானிக்குகள் தேவை. உணவு, தங்குமிட வசதி உண்டு. ஓமசக்திஏஜெனசீஸ், 59, அண்ணா சாலை, எஸ்.வி.எஸ். கிளப், சென்னை-2. Ph. 044-28418400.

20 * (7 L) * MDSG182840

Graduate Supervisors/ Field Executives with Two Wheeler Required for BPO Work Contact in Person with Your Resume @ Vaithisvaran & Co., 19, IX Cross Street, Dr. Radhakrishnan Salai, Mylapore, Chennai-600004 Phone

ஆட்கள் தேவை- செக்யூரிட்டி

சென்னையில் செக்யூரிட்டி வேலைக்கு 10th படித்தவர்கள் உடனடியாக 150 பேர் தேவை. சம்பளம் ரூ.3750-4500/- Contact 9841635976

7 * (5 L) * MDSG182747

ரூ.3,000 - 4,500

சம்பளத்தில் காவலர் பணி

யூனிபார்ம், மருத்துவம், தங்குமிடம்

இன்ஷ்யூரன்ஸ், மெஸ் வசதி உண்டு. 10th +2 அசல் கல்வி சான்றிதழ்கள்/ PP

JAYAM CNC

10,+2,ITI, DME, CNC/VMC மெஷினிலஇலவசபயிற்சியுடன் வேலை. Ph: 044-26243622, 9380834028.

22 * (4 L) * MDSG182835

Advanced CNC - Training

CNC/VMC Programming & Own Machine Training with Job10th, ITI, Dip.,Deg 9884743797,9994142452

21 * (4 L) * MDSC058327

SRI VENKATESHWARA CNC

10th, +2, ITI, DME, BE, CNC மெஷின்பயிற்சிக்கு பிறகு வேலை CAD/CAM Training Given, Ph: 044-26543190, 9382673751.

* (5 L) * MDSG182831

WANTED

ITI Electrician அல்லது அனுபவமுள்ள Electrician சென்னை மணலியிலுள்ள தொழிற்சாலைக்கு தேவை.

ZEUS

SUZUKI

3000/- ஆயிரம்

இச்சலுகை பிப். 5, 6, 7, 8 ஆகிய தாட்களுக்கு மட்டுமே

போட்டோ, ரேஷன் கார்டு, வாக்காளர் அட்டை, செல் பீல், வீட்டு வரி ரசீது (அல்லது) சம்பள சான்றிதழ் (அல்லது) நிலப்பட்டா இவற்றுடன் வந்தால்

உடனடி லோன் & எக்ஸ்சேஞ் வசதி

யுனிவர்சல் மோட்டார்ஸ்

Ph 04362-659555, 244444, 246333 Cell 99655-19901.

புதிய கிரேஜுவேட்!

ஸன்ரைஸ்

திருமண வாழ்த்து

தமிழ்ப்பல்கலைக்கழக துணை வேந்தர்

கொங்குநாட்டு தங்கம் முனைவர்

சி.சுப்பிரமணியம் அவர்களின்

இல்ல மணவிழா 10-09-06

மணமக்கள்: டாக்டர் சு. சங்கீதா

டாக்டர் அ. அதீசுராசு

காலத்தால் அழியாத ஓவியமாய் வாழ்ந்திட வாழ்த்துகின்றோம்.

ஓவியர் அன்பரசன், B.F.A.,M.A.,Ph.D.,

அ.செல்வகுமாரி, அ.குறளோவியா, அ.சங்கொலி, தஞ்சாவூர்-6.

TATA MOTORS

எரிபொருளை சேமியுங்கள். ஸ்டைலாக செல்லுங்கள்.

Lowest ever EMI of Rs. 2,599/-* per lakh

SUMO VICTA Cash Discount of Rs. 20,000/-*

ALL NEW SUMO Victa DI Turbo DIRECT INJECTION TURBO ENGINE

The new Victa DI range starts at Rs. 4.92* lacs.

பல்வேறு விளம்பரங்கள்

5. விளம்பரச் செய்தியைச் சுற்றிக் கரைகட்டுவதும் செய்தியைச் சுற்றி வெற்றிடம் விடுவதும் செய்தியை படிக்கத் தூண்டும்.

**6. விலைப்புள்ளி (Price Quotation)** : விளம்பரத்தில் விலையைத் தெரிந்து கொள்ளும் வண்ணம் விளம்பரப் படியின் வலக்கோடியில் எடுப்பாகத் தெரியும் படி விலைப் புள்ளியைப் பதிவு செய்ய வேண்டும்.

**ஆ. தெரிவித்தல்** : பொருளின் பயன், சிறப்பு, தரம், பயன்படுத்தும் வழி போன்றவற்றைக் குறிப்பாகச் சொல்ல வேண்டும். பார்ப்பவர் மனத்தில் பதியும் வண்ணம் வேறுபாடான பாணியில் தெரிவிப்பது நல்லதாகும்.

**இ. நினைவில் நிற்கச் செய்தல்** : விளம்பரத்தின் அமைப்பு, செய்தி, படம், வண்ணம் போன்றவை பொருளை மனத்தில் நிலை நிறுத்தும் அளவிற்குச் சிறப்பாக அமைய வேண்டும்.

**ஈ. நம்பிக்கையூட்டுதல்** : பொருளின் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் விளம்பரம் அமைய வேண்டும். பொருள் செயற்படும் விதத்தை அதன் உள்ளமைப்பு, உருவம் ஆகியவற்றைக் காட்டும்படி படங்கள் அமைவது நன்று.

**உ.பயிற்றுவித்தல்** : பொருளைப் பற்றிய முழுச் செய்திகளையும் விளம்பரம் உணர்த்த வேண்டும். புதிய பொருளை வாங்குதல், பயன்படுத்தல் பாதுகாத்தல் போன்றவற்றைப் பயிற்றுவிக்க வேண்டும். எண்ணங்களுக்கும் செயல்களுக்கும் மூலவிசையாக அமைந்துள்ள இயல்புணர்வுகளைத் தட்டியெழுப்ப வேண்டும்.இயல்புணர்வுகளைத் தட்டியெழுப்பும் திறன் பொருளை வாங்கத் தூண்டும்படி அமைய வேண்டும்.

**விளம்பரப்படி அமைப்பு** : விளம்பரப்படியில் பொருளின் பெயர், கவர்ச்சிப்பண், செய்திகள், படங்கள், கரை (Border) இவற்றை முடிவு செய்து எவ்வெவ்விடங்களில் எந்தெந்த அளவுள்ள எழுத்துக்களை அச்சிட வேண்டும் என்று அச்சுக் கோர்ப்பவருக்கு அறிவுறுத்தி அச்சிடுதல் விளம்பரப்படி அமைப்பு எனப்படும். விளம்பரச் சாதனம் எதற்காக, யாருக்காக, எதன் வாயிலாக, எந்தச் சாதனத்தால் விளம்பரம் செய்யவேண்டும் என்பதை அறிந்து செய்தல் முக்கியமானது. படித்தவர், பாமரர் அனைவருக்கும் பயன்படும் வகையில் விளம்பரம் அமைய வேண்டும். அவையாவன

**1.செய்தி அச்சகங்கள்** : அச்சின் மூலமாக வரும் விளம்பரமே மிகுதியாக உள்ளது. செய்தித்தாள்கள், இதழ்கள் போன்றவற்றில் மிக்க அளவில் விளம்பரங்கள் வருகின்றன.

**2. நேர்முக அஞ்சல்** : கடிதம் மூலமாக அறிமுகப் படுத்தப்பட்ட பொருளைப் பற்றி நுகர்வோர், வணிகர் போன்றோர்க்குத் தெரிவிப்பது நேர்முக அஞ்சல் (Direct Mail) விளம்பரம் ஆகும். அ. சுற்றுக் கடிதங்கள் ஏற்கனவே செய்து வரும் சரக்கில் மேம்பாடு புதியவற்றை அறிமுகப்படுத்துதல் போன்றவற்றை அறிவிக்கச் சுற்றுக் கடிதங்கள் (Circular letter) அனுப்பி அதன்மூலம் விளம்பரப்படுத்தலாம். ஆ. விலையேடுகள் விலை, அவற்றைப் பற்றிய விவரிப்பு, அவற்றின் செயற்பாடு, சிறப்பு அம்சம் ஆகியவை தேவையானால் படங்கள் அவற்றைத் தாங்கியிருக்கும்.

**புறமனை விளம்பரச் சாதனங்கள்** : சுவரொட்டிகள், தெரு விளம்பரப் பலகைகள் போன்றவை புறமனைச் சாதனங்கள் ஆகும். பார்வையான இடத்தில் பெரிய எழுத்துகளால் எழுதியும் வண்ணக் கலவைகளால் ஓவியங்களை வரைந்தும் விளம்பரம் செய்யப்படுகிறது. பொருட்காட்சிகளிலும், வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகளிலும் விளம்பரம் செய்யப்படுகின்றது. செவிவழிச் செய்தியாக, பேச்சு வடிவத்தில் எல்லா மக்களும் கேட்டுணரும்படி வானொலி மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது. பாடல், உரையாடல், உரைநடை போன்ற அலங்காரங்களோடும் இசையோடும் செவிக்கினியதாய் இவ்விளம்பரம் அமைகிறது. தொலைக்காட்சியின் மூலம், பொருளை நேரடியாக அறிமுகப்படுத்தி, அது பயன்படும் முறையையும் அதன் சிறப்புத் தன்மைகளையும் கவர்ச்சிகரமாய் வெளிப்படுத்தி விளம்பரம் செய்யப்படுகிறது.

திரைப்படம் மூலமாகவும் பொருளை அறிமுகப் படுத்தி அதன் சிறப்புத் தன்மைகளை எடுத்துக்கூறி மக்கள் மனதைக் கவருவதுண்டு. திரைப்பட நடிகைகளை விளம்பரத்திற்குப் பயன்படுத்திப் பொருள்

பற்றிய அவர்களது நேரடியான அனுபவத்தைத் திரையில் காண்பித்து விற்பனையைப் பெருக்குவதும் விளம்பர உத்தியாகும்.

கடையில் அழகான கண்ணாடிப்பெட்டிக்குள் பொருட்களை மனம் கவரும் வகையில் அடுக்கி வைத்து விளம்பரப்படுத்துகின்றனர். மேலும் விற்பனை கூடுவதற்கு இலவசமாக நாள்காட்டி, எழுதுகோல், சாவிச்சங்கிலி, பணப்பை, சாம்பல் தட்டு (Ash trays) போன்றவற்றில் ஒன்றைக் கொடுத்தும் விளம்பரத்தைப் பெருக்குகின்றனர். மேற்கண்ட விளம்பரங்களால் ஒரு பொருள் சந்தையில் நிலையான இடத்தைப் பெறுகிறது.

-கே.என்.இரா.

**துணை நூல் :**

1. Chatterjee, Satya Saran, **Modern Business**, The World Press (P) Ltd., Calcutta, 1979.

**விளையாட்டு மருத்துவம் :** விளையாட்டு மருத்துவம் (Play Therapy) என்பது உளவியல் மருத்துவ முறையில் ஒருவகையாகும். இம்முறையில் குழந்தை, விளையாட்டின் வாயிலாகத் தன் ஆழ் மனத்தில் ( நனவிலி - Unconscious) உள்ள உணர்ச்சிகளை வெளியிடுகிறது. வயதுவந்தோர்களுக்கான இதனையொத்த முறை உள ஆய்வு முறை (Psycho - analysis) எனப்படும்.

உளநோயுற்ற குழந்தைகளிடையே இந்த விளையாட்டு மருத்துவம் வெற்றிகரமான முறையில் பயன்படுத்தப்படுகிறது. அக்குழந்தைகளுக்குப் பொதுவாக விளையாட வாய்ப்புக் கிடைப்பதில்லை. அதற்குக் காரணம் பெற்றோருடைய கட்டுப்பாடு, நண்பர் இல்லாமை, உணர்ச்சி சம்பந்தப்பட்ட சிக்கல்கள் ஆகியவையாகும். விளையாட்டு மருத்துவத்தின் மூலமாக அக்குழந்தைகள் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளவும், விளையாட்டுப் பொருட்களைப் பயன்படுத்தும் முறையில் சிறந்து விளங்கவும், தம்மை ஏற்றுக்கொள்ளும் ஒரு முதிர்ச்சி பெற்றோருடன் (மருத்துவமளிப்பவர்) விரும்பத்தக்க உறவை வளர்த்துக் கொள்ளவும், தம்முடைய அச்சங்களையும், சிக்கல்களையும் வெளிப்படுத்த ஒரு வழியை உணரவும் முடிகிறது. எடுத்துக்காட்டாக, விளையாட்டு மருத்துவத்தின்போது தன் சகோதரன் மீது கோபம் கொண்டுள்ள ஒரு பெண் குழந்தை, ஒரு ஆண் பொம்மையை அடித்து வீழ்த்துவாள். இந்த நடத்தையை அடிப்படையாகக் கொண்டு, மேலும் அக்குழந்தையின் உளப்பாங்கை அறிய குழந்தையும், மருத்துவம் அளிப்பவரும் சேர்ந்து விளையாடும் பொம்மைகள் விளையாட்டு பயன்படுத்தப்படும்.

தங்களுடைய உள்ளத்தை சொற்கள் மூலமாக வெளிப்படுத்துவதில் சில சிக்கல்களைச் சந்திப்பதால், குழந்தைகள் பொம்மைகள் விளையாட்டு மூலமாக, எளிதாக அவர்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்த இயலும். அதற்கு இம்முறை பெரிதும் உதவுகின்றது.

ஒரு பெண் குழந்தை மருத்துவமனையில் இருந்தபோது திடீரென்று சிடுசிடுப்பான முகத்துடன் தோற்றமளித்தது. அக்குழந்தை ஏன் அவ்வாறு உள்ளது என்று கேட்கப்பட்டபோது, தனக்கு ஏனென்று தெரியவில்லை என்று விடையளித்தது. மருத்துவமளிப்பவர் ஒருவர் தம்முடன் விளையாட்டில் ஈடுபட ஊக்குவித்தபோது அக்குழந்தை உடன்பட்டது. ஒரு பொம்மையைக் குழந்தை எனவும், மற்றொரு பொம்மையைத் தாதி எனவும் குழந்தை குறிப்பிட்டது. அந்த இரு பாத்திரங்களை வைத்து ஒரு கதையை உருவாக்கிக் கூற சொன்னதும், அக்குழந்தை "அந்தத் தாதி எப்போதும் அந்தக் குழந்தை விரும்பாதவற்றைச் செய்யச் சொல்லி வற்புறுத்துகிறாள். நான் அந்தத் தாதியை வெளியே தூக்கியெறியப் போகிறேன்" என்றது. அந்த விளையாட்டின் வாயிலாக குழந்தை அம்மருத்துவமனையில் உள்ள தாதியருள் ஒருவருடன் அது கொண்டுள்ள உறவு மகிழ்ச்சியளிப்பதாக இல்லை என்பதையும், அவள் மீது அது கொண்டுள்ள சினத்தையும் வெளிப் படுத்த முடிந்தது. இந்த விளையாட்டு மருத்துவத்தின்போது மருத்துவமளிப்பவர் சினத்தை அக்குழந்தையுடன் தொடர்புபடுத்தாமல், "அந்தப் பொம்மைக் குழந்தை தாதி மீது கோபம் கொண்டிருக்க வேண்டுமே?" என்றே கேட்டார். இங்கு அக்குழந்தை தன் கோபத்தை வெளிப்படுத்தியது (தாதி பொம்மையை வெளியே தூக்கியெறிந்தது) வியப்பை அளித்தாலும், குழந்தைகள் வழக்கமாகவே முதிர்ந்தோரைக் காட்டி

லும் தந்திரமாகவும், திசைமாற்றியும் பேசுவதில் குறைந்தே ஈடுபடுகின்றனர் என்பதையறிய உதவுகின்றது.

குழந்தைகளின் நனவு நிலைக்கும், உணர்ச்சி சார்ந்த அனுபவங்களுக்கும் விளையாட்டு பாலமாக அமைகின்றது. அதனால் விளையாட்டு குழந்தைகளைப் பொறுத்தவரையில், முதிர்ந்தோருக்கு அகநோக்கு (Introspection) தத்துவம், சமயம் ஆகியவை ஆற்றும் பங்கிற்கு ஒத்த பணியை ஆற்றுகின்றது என்பது புலனாகிறது.

குழந்தைகள், விளையாட்டைத் தம்முடைய தோல்விகள், துன்பங்கள், ஏமாற்றங்கள் ஆகியவற்றைச் சமன் செய்யப் பயன்படுத்துகின்றன. குறிப்பாக, மொழியை நுணுக்கத்துடனும், பண்பாட்டிற்கு ஒத்த வகையிலும் பயன்படுத்த இயலாமையினால் குழந்தைகள், விளையாட்டை நாட வேண்டியுள்ளது.

-வே.க.

**விற்பனை :** உற்பத்தியான பொருட்களை நுகர்வோருக்கு வழங்கும் செயலே விற்பனை ஆகும். ஒரு பொருளின் வெற்றி, விற்பனையைச் சார்ந்து நிற்கிறது. சந்தையிடுதலில் விற்பனையே முக்கிய இடத்தை வகிக்கிறது. பொருளின் இறுதிக்கட்ட நடவடிக்கையே விற்பனைதான். ஆதாயம் விற்பனையைப் பொறுத்தே அமைகிறது. அதிக அளவு உற்பத்தியில் கவனம் செலுத்துவதைப் போல விற்பனையிலும் கவனம் செலுத்துவது இன்றியமையாதது. மக்களின் தேவையை நிறைவு செய்வதில் விற்பனையே உரிய இடத்தைப் பெறுகிறது. எனவே, ஒரு தொழிலுக்கு இன்றியமையாதது விற்பனையாகும்.

**விற்பனைப் பணிகள்** : விற்பனை திட்டமிட்டு நடத்தப்படும் ஒன்றாகும். சரியான பொருளை, சரியான அளவுகளில், சரியான விலைக்கு, சரியான சூழ்நிலையில் தேவையானவர்க்குக் கிடைக்கச் செய்வதே விற்பனையைப் பெருக்கும் வழியாகும். அவ்வாறான விற்பனையின் பணிகளைத் தனித் தனியே பகுக்கலாம்.

**அ. திட்டப் பணிகள்:** *1. சந்தை ஆராய்ச்சி, 2. சரக்காகத் திட்டம், 3. விற்பனைக் கனிப்பும் வரவு செலவுத் திட்டமும், 4. விற்பனைக் கொள்கை.*

**ஆ. நிருவாகப் பணிகள் :** *1. விற்பாண்மையர் தேர்வு, 2.விற்பாண்மையர் பயிற்சி, 3. விற்பாண்மையர் கட்டுப்பாடு, 4. விற்பாண்மையர் ஊதியம்.*

**இ. நிறைவேற்றும் பணிகள் :** *1. விளம்பரம், 2. விற்பனைப் பெருக்கமும் தேவைப் படைப்பும், 3.விற்பனை வாலாயப் பணிகள்.*

**சந்தையாராய்ச்சி (Market Research) :** சந்தை நிலை அதன் போக்கு, தேவையின் இயல்பு, போட்டிநிலை ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றினடிப்படையில் பொருளை விற்க வேண்டும். சந்தையை ஆராய்ந்து தேவைக்கேற்ப உற்பத்தி செய்து விற்பனைக் கொள்கைகளைச் சரியாக அமைத்து விற்பனை செய்ய வேண்டும்.

சந்தையின் இயல்புகளை ஆராய்ந்து எப்பொருள் மிகுதியாக விற்பனையாகிறது; யார் அதை வாங்குகிறார்கள்; அவர்களது மாற்றுத் தேவையென்ன எதனடிப்படையில் அதை வாங்குகிறார்கள் என்பனவற்றை ஆராய்ந்து விற்பனையைப் பெருக்க வேண்டும்.

நகர்ப்புற மக்களின் தேவை, கிராமப்புற மக்களின் தேவை, அவர்களின் பொருளாதாரம், பழக்க வழக்கங்கள், விருப்பு வெறுப்பு, வயது வேறுபாடு போன்ற பல்வேறு அடிப்படைக் கூறுகளால் தேவை ஒவ்வொருவருக்கும் மாறுபடுகிறது. அவற்றை ஆராய்ந்து எல்லோருடைய தேவையையும் நிறைவு செய்யச் சந்தை ஆராய்ச்சி பயன்படுகிறது.

பொருளாக்கத் திட்டம் :எப்பொருளை உற்பத்தி செய்வது என்ற தீர்மானம் பற்றிய சிக்கல்களை ஆராய்ந்து தக்க முடிவெடுப்பதுதான் பொருளாக்கத் திட்டமாகும். உற்பத்திக்கும் விற்பனைக்கமிடையே இருக்க வேண்டிய நெருங்கிய தொடர்பை அது வலியுறுத்துகிறது. வாங்குவோரின் சுவை, பாணி, விருப்பு - வெறுப்புகள், பழக்க வழக்கங்கள், வாங்கும் சக்தி இவற்றிற்கேற்ப பொருளின் தரம், வடி

வமைப்பு, செயல்திறன், விலை ஆகியன அமைய வேண்டும்.

**விற்பனை முன் கணிப்பும் விற்பனை வரவு செலவுத் திட்டமும்** : வரும் ஆண்டில் எவ்வளவு சரக்குகளை விற்க இயலும் என்பதை முன்னதாக மதிப்பிடுவதே விற்பனை முன்கணிப்பு எனப்படும். பொருளின்தன்மை, போட்டி, சந்தைநிலை, இப்போதைய விற்பனை அளவு, வருங்காலத்தில் விற்பனையைப் பெருக்க வாய்ப்பு, நுகர்வோர் சுவையுணர்வு, அரசுக்கொள்கை, விற்பனையாளரின் திறமை, மொத்த சில்லறை வணிகர்கள் பொருளை விற்பதில் காட்டும் ஈடுபாடு ஆகியவற்றை உணர்ந்து விற்பனை முன்கணிப்பு தீட்டப்படுகிறது.

**விற்பனைக் கொள்கை** : நல்ல பொருளை முறையான வழிகளில் சரியான விலைக்குத் தேவையான பொழுது தருவதே விற்பனைக் கொள்கையின் முக்கிய குறிக்கோளாகும். குறைந்த செலவில் நிறைந்த விற்பனை செய்வதே அதன் நோக்கமாகும். வாடிக்கையாளரின் பொருளாதார நிலை, மனநிறைவு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும்.

பொருளை வழங்க எவ்வழி சிறந்தது - என்ன விலை, எந்த அடிப்படையில் விற்பது - என்னென்ன சலுகைகள் அளிப்பது போன்றவை விற்பனைக் கொள்கையில் அடங்கும்.

பொறுப்புறுதி (Guarantee) தருவது, பொறுப்புறுதிக்கு அட்டை தயாரிப்பது, அதில் எவ்வளவு காலப் பொறுப்புறுதி, என்னென்ன பழுதுக்குப் பொறுப்புறுதி போன்றவற்றை விற்பனைக் கொள்கையில் அமைத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு தந்தால் நுகர்வோர் பொருளைத் துணிந்து வாங்க முன்வருவார்கள்.

**நிருவாகப் பணிகள்** : விற்பனையாளரைத் (Salesman) தேர்ந்தெடுத்து வேலையிலமர்த்துதல், பயிற்சி அளித்தல், கட்டுப்படுத்தல், ஊதியம் அளித்தல் ஆகியன விற்பனை நிருவாகப் பணிகள். தொழில் நிலைய வெற்றி விற்பனையாளரின் அறிவுத்திறன், உழைப்பில் ஈடுபாடு இவற்றைச் சார்ந்துள்ளது. நிறைவேற்றுப் பணிகள், விளம்பரம், விற்பனைப் பெருக்கமும் தேவைப் படைப்பும், தொடர்ச்சியான விற்பனை என மூன்று வகைப்படும்.

**தேவைப்படைப்பு** : வாங்குவோரின் தேவையைப் பொறுத்தே பொருள் படைக்கப்படுகிறது. புதிய பொருட்களைப் படைத்தும் தேவையைப் புதிதாக்கலாம். இதனால் சந்தை விரிவடையும். எப்பொருளை மக்கள் விரும்புகிறார்கள் - ஏன் விரும்புகிறார்கள், எப்பொருள் எங்கு மிகுதியாக விற்பனையாகிறது என்பவற்றை உணர்ந்து அவர்களின் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் பொருளைப் படைக்க வேண்டும். போட்டியான தொழிலுலகில் மக்களின் தேவையை நிறைவு செய்யும் நிறுவனமே வெற்றிபெறுகிறது. விளம்பரம், விற்பனையாளர், சரக்குகளைப் பார்வையில் வைத்தல், மாதிரிச்சரக்கு வழங்குதல் போன்ற செயல்முறை விளக்கத்தையும் சரக்கு பற்றிய சிறப்பு அமிசத்தையும் மக்களுக்குத் தெரியப்படுத்துதல் தேவைப்படைப்பின் பணியாகும்.

**விற்பனைப் பெருக்க முயற்சிகள்** : சந்தையில் பொருள் அறிமுகமாகும் போதே அதிகஅளவு விற்பனையை எட்டும் என்று கணக்கிட முடியாது. பொருளைப் பற்றி, நுகர்வோருக்குத் தெரியப்படுத்தி அவர்களை வாங்கத்தூண்டி விற்பனையைப் பெருக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. விளம்பரம் செய்வது, சரக்கின் சிறப்பியல்புகளைத் தெரிவிப்பது, விலை, எடை ஆகியவற்றை வண்ண உறைகளில் குறித்து வழங்குவது, பரிசுப்பொருள்கள் வழங்குவது - இலவசமாக ஊக்கப் பொருட்கள் தருதல் (எடுத்துக் காட்டாக) ஒரு சவர்க்காரம் வாங்கினால் சீப்பு இலவசம் - போன்ற உத்தியைக் கையாள்வது) போன்ற நடவடிக்கைகளால் விற்பனையைப் பெருக்கலாம். சுருங்கக் கூறின் நற்பெயரை ஏற்படுத்த எடுக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றும் விற்பனையைப் பெருக்க எடுக்கும் நடவடிக்கைகள் ஆகும்.

**விற்பனை வாலாயப் பணிகள்** : விற்பனை குறித்த நாள் நடவடிக்கை விற்பனை வாலாயப் (Selling routine) என்றுகூறப்படும். தகவல் கேட்பவர்க்கு மறுமொழி தருதல், விலைப்புள்ளி அனுப்புதல், விற்பாணை பெறுதல், விற்பாணை விலக்குச் செய்தல், விற்பாணைச் செயலாக்கம், குறைகளைக் களைதல், கணக்கு வைத்தல் கடன் வசூலித்தல் ஆகியன இதன் பணிகளாகும்.

**விற்பனை முறைகள்** : எந்தெந்த முறைகளைக் கையாண்டு விற்பனை செய்வது என்பதை உற்பத்தியாளர் எண்ணிச் செயற்பட வேண்டும். நுகர்வோருக்கு நேரடியாகச் சரக்கை விற்பது 'நேரடி விற்பனை' என்றும், இடைநிலையர் மூலம் விற்பது 'மறைமுக விற்பனை' என்றும் பெயர்பெறும்.

**நேரடி விற்பனை முறை** : உற்பத்தி செய்யப்பட்ட பொருளை உற்பத்தியாளரிடமிருந்து நேரடியாக நுகர்வோரிடம் விற்பனை செய்வது இவ்விற்பனை ஆகும். நுகர்வோர் பற்றிய செய்திகளை நேர்முகமாக அறிய இது சிறந்த வாய்ப்பைத் தருகிறது. உற்பத்தியான இடத்திலேயே பொருளை விற்பது, உற்பத்தியாளர் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்வது, அஞ்சல் மூலம் விற்பனை செய்வது போன்ற விற்பனைகள் நேரடி விற்பனைகளாகும்.

**மறைமுகமான விற்பனை முறை** : உற்பத்தியாளர் உற்பத்தியில் முழுக்கவனம் செலுத்துதற்காகவிற்கும் பணியை பிறரிடம் ஒப்படைக்கிறார். அவ்வாறு பிறர் மூலம் விற்பனை செய்வதை மறைமுக விற்பனை முறை எனலாம்.

**விற்பனை வகைகள்** : விற்பனை, கீழ்க்காணும் பல வழிகளில் செய்யப்படுகின்றது. 1. ஆய்வு வழியான விற்பனை, 2.விவரிப்பு வழியான விற்பனை, 3. மாதிரிச் சரக்கு வழியான விற்பனை, 4.'ஏற்பு அல்லது திருப்பம்' அடிப்படையிலான விற்பனை, 5. வாடகைக் கொள்முதல் விற்பனை, 6. தவணை முறை விற்பனை.

**1. ஆய்வுவழியான விற்பனை** : பொருளை நேரில் பார்த்துத் தம் தேவைக்கு ஏற்றதுதானா என்று ஆய்வு செய்து வாங்குவது. நேரடியாகவே சரக்கை வாங்குவதால் சரக்கைப் பற்றிப் பின்னர்க் குறை ஏதும் சொல்ல இயலாது. திருப்பி அனுப்பவோ இழப்பீடு பெறவோ இயலாது. விற்போர் வாங்குவோரிடையே நல்லுறவை ஏற்படுத்தும்.

**2. விவரிப்பு வழியான விற்பனை** : பொருளை விவரிப்பு செய்து விற்பனையை மேற்கொள்ளுதல், தரப் படுத்தல், வகைப்படுத்தல், வாணிகப் பெயரிடல், விளம்பரம் செய்தல் ஆகியவற்றின் மூலம் பொருள் குறித்து விவரிப்புச் செய்யும் நடவடிக்கை விற்பனையைத் தூண்டுகிறது.

**மாதிரிச் சரக்கு வழியான விற்பனை** : விவரிப்பை விட மாதிரிச் சரக்கை அனுப்பி வைத்து பொருளை மதிப்பிடுமாறு செய்து, பின்னர்த் தம் பொருளை அனுப்பினால் விற்பனை பெருகும். மாதிரிச் சரக்கும் ஒரு வகையில் விளம்பரமாக அமையும்.

**ஏற்பு அல்லது திருப்பம் என்ற அடிப்படையிலான விற்பனை** : மாதிரி அனுப்பவியலாத பொருளையும், விவரிப்பின் மூலமாகத் தரம், செயல் திறம் ஆகியவற்றை உணர்த்தவியலாத பொருளையும் (எடுத்துக்காட்டாக இயந்திரங்கள், உந்து வண்டிகள் போன்றவை) வாடிக்கையாளர் நேரில் வந்து பார்த்து வாங்கவியலாத சூழ்நிலையில் அப்பொருட்களை- ஏற்க அல்லது திருப்புக எனும் அடிப்படையில் அனுப்புவதுண்டு. இதற்கு ஒரு கால வரையறை உண்டு. பொருளுடன் ஒப்பமை வழிப்பட்டியல் (Proforma Invoice) அனுப்பப்படும். வாங்குவோர் சரக்கைப் பெற்று ஆய்ந்து பார்த்து ஏற்புடையதாயின் அவற்றை ஒப்புக்கொண்டு குறித்த பணத்தை அனுப்பலாம். இல்லையேல் விற்போர் செலவில் திருப்பி அனுப்பி விடலாம். குறித்த காலத்திற்குள் பொருளைத் திருப்பி அனுப்பாவிடில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.

**வாடகைக் கொள்முதல் விற்பனை** : பொருளுக்கான பணம் முழுவதையும் உடனடியாகச் செலுத்த வேண்டிய தேவையின்றிச் சிறிது சிறிதாகச் செலுத்தும் சலுகை பெற்றோரும் "விற்கப்படும் பொருள் மீதான பற்றுரிமையைப் பிணையமாகக் கொண்டு விற்பவர் வாங்குபவருக்குக் கடன் வசதி அளிக்கும் வாணிகமே வாடகைக் கொள்முதல் விற்பனை" (Hire Purchase System) என இசுடீபன் (Stephen) இதற்கு வரைவிலக்கணம் கொடுக்கிறார். முழுத்தொகையும் செலுத்திய பிறகே வாங்குபவர் சரக்கிற்கு உரிமையுடையவராகிறார். தவணையில் பணம் கட்டும் பொழுது வட்டியும் சேர்த்துக் கணக்கிடப்படும். உரிய காலத்தில் பணத்தைச் செலுத்த முடியாமற் போனால் விற்பவரே சரக்கைக் கைப்பற்றும் நிலை உருவாகும்.

**தவணை முறை விற்பனை** : **கடன் விற்பனையின் ஒரு வகையே `தவணை விற்பனை** (Instalment Sale) ஆகும். வாங்கப்படும் பொருளுக்கு மொத்தத் தொகையும் உடனடியாகச் செலுத்தப்படுவதில்லை. ஒரு பகுதி மட்டுமே செலுத்தப்படும். ஒப்பந்தம் செய்

யப்படும் போது மீதிப்பணம் அதற்குரிய வட்டி ஆகியவை பகுதி பகுதியாகக் (தவணை முறை) குறிப்பிட்ட கால அளவில் அல்லது இத்தனை தவணைகளில் என்று குறித்த முறையில் வசூலிக்கப்படுகிறது. தவணையைச் சரியாகச் செலுத்தாவிடில் பொருளைக் கைப்பற்றும் உரிமை விற்பவருக்கு இல்லை. நீதிமன்றம் மூலமே தொகையையோ பொருளையோ பெறமுடியும்.

விற்பனைத் துறையும் அதன் நிருவாகமும் : தொழில் நிலையத்தின் செயல்திறன், வளர்ச்சி, புகழ் ஆகியவற்றின் அளவுகோலாக விற்பனை திகழ்கிறது. விற்பனையைப் பொறுத்தே ஒரு தொழில் வெற்றிகரமாக இயங்க முடிகிறது. தேவையை எதிர்நோக்கிய வண்ணம் உற்பத்தி செய்யப்படுவதும் திட்டமிட்ட வளர்ச்சி, அறிவியல் தொழில் நுட்ப முன்னேற்றம் ஆகியவற்றின் விளைவாக உற்பத்தி பெருகி வருவதும், நாள்தோறும் புதுப்புதுப் பொருட்கள் வந்தவண்ணமிருப்பதும் விற்பனையைப் பெருக்க எடுக்கும் நடவடிக்கைகள் ஆகும். போக்குவரத்துத் தொடர்பு வசதிகளில் ஏற்பட்டு வரும் புரட்சிகரமான முன்னேற்றம், நாகரிக வளர்ச்சி, உற்பத்திப் பெருக்கத்தினால் மக்களின் ஆள் வருமானம், உயர்வு ஆகியவை விற்பனையைப் பெருக்கியுள்ளன. எனவே, விற்பனையின் மீது கவனம் செலுத்த வேண்டிய இன்றியமையாமை உள்ளது. அதற்கான துறையை ஏற்படுத்தி விற்பனையைப் பெருக்குவதே சிறந்த வழியாகும். விற்பனைத்துறை விற்பனைப் பணியாளர் பிரிவு, சந்தையிடும் ஆராய்ச்சிப் பிரிவு, விளம்பரப் பிரிவு, விற்பனைப் பெருக்கப் பிரிவு, பண்டகம், கூட்டுமம், அனுப்பீடு, வழிப்பட்டியல் ஆகியவற்றின் பிரிவு, கடனளிக்கும், வசூலிக்கும் பிரிவு எனப் பல உட்பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. விற்பனைத் துறையின் தலைமைப் பொறுப்பிலிருப்பவர் விற்பனை மேலாளர் எனப்படுகிறார். விற்பனை அமைப்பை நிருவகிப்பதும் உற்பத்தியான பொருட்கள் முடங்கிவிடாமல் தொடர்ந்து விற்பனை நடைபெறச் செய்வதும் அவர் கடமையாகும்.

அவர் நன்கு கற்றறிந்தவராகவும், நிருவாகத் திறமையுடையவராகவும் ஈடுபாடு, தன்னம்பிக்கை, மனஉறுதி, முன்னறிவு, பொறுமை, ஆர்வம், ஆளுமை, ஆய்வு மனப்பான்மை ஆகியவற்றைக் கொண்டவராகவும் சிந்தனையாளராகவும் இருக்க வேண்டும்.

சந்தையாராய்ச்சி செய்தல், விளம்பரம் செய்தல், விற்பனைக் கொள்கையை வகுத்தல், விற்பனையாளரை நியமித்தல் முதலான விற்பனையைப் பெருக்கவல்ல அனைத்து நடவடிக்கைகளையும் அவர் கவனிக்கிறார்.

-கே.என்.இரா.

**துணை நூல் :**

1. Reddy, P.N., Gulsman, S.S., **Principles of Business Organisation or Management**, Urasia Publishing House (P) Ltd., New Delhi, 1978.

**வினா நிரல்** : அனைத்துத் துறைகளிலும் இன்று ஆய்வு முறையியல் (Research Methodology) முறைப்படுத்தப்பட்டு அறிவியல் நோக்கில் ஆராயும் போக்கு வளர்ச்சி பெற்று வருகிறது. இத்தகைய வளர்ச்சி ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆய்வு முறையில் தோன்றிய குறைபாடுகளைக் களைந்து மேன்மேலும் ஆய்வின் தன்மை சிறப்பாக அமைவதற்காக மேற்கொள்ளப் பட்ட உத்திகளால் ஏற்பட்டுள்ளது.

ஆய்வுப் பணியில் தேர்ந்தெடுத்துக் கொண்ட ஆய்வுப் பொருளைப் பல கோணங்களில் ஆராய்ந்து முடிவினைக் காண்பதற்குப் பல ஆய்வு உத்திகள் பயன் படுத்தப்படுகின்றன. அவற்றுள் ஒன்று வினா நிரலாகும் (Questionnairs). பொதுவாகச் சமுதாய அறிவியல்களில் வினாநிரல்முறை மிகவும் பயன்படுத்தப் படுகிறது. மக்களின் சூழ்நிலை, நடத்தை முறைகள், வாழ்க்கை நிகழ்வுகள் குறித்து உற்றுநோக்கல் (Observation) மூலம் அறிய இயலும் என்றாலும் அதை மட்டும் பயன்படுத்தி ஆய்விற்கான தரவுகளைப் பெறல் இயலாததாகிறது. பரந்த நிலப்பரப்பில் வாழும் மக்களிடையே தேர்ந்தெடுத்த சில கூறுகளைக் குறித்துத் தகவலாளிகளிடமிருந்து (Informants) தரவுகளைக் (Data) குறுகிய காலத்தில் குறைந்த பொருட் செலவில் பெறுவதற்கு வினா நிரல் முறையே மிகவும் பயன்படுகிறது. இருப்பினும் ஆய்வுப் பொருளின் தன்மைக்கேற்ப வினாநிரல் முறையைப் பயன்படுத்தும் முறை மாறுபடுகிறது.

வினாநிரல் என்பது தகவலாளிகளிடமிருந்து தேவையான தரவுகளைப் பெறுவதற்காக உருவாக்கப்படும் வினாக்களின் தொகுதியாகும். இதனை வினாப்பட்டியலோடு (Schedule) தொடர்புபடுத்திக் குழம்பக்கூடாது. இவ்விரண்டிற்கும் வேறுபாடுகள் உள்ளன. வினாநிரலானது அஞ்சல் மூலமோ வேறு வகையிலோ தகவலாளிக்கு அனுப்பப்படும். அதற்குரிய விடை, அனுப்பப் பெற்றவரால் எழுதப்பட்டு, அஞ்சல் வழியாக அல்லது வேறு வழியாகப் பெறப்படும். ஒரு குழுவாகச் சேர்ந்துள்ள இடத்தில் வினா நிரலைத் தகவலாளிகளிடம் கொடுத்து அவ்விடத்திலேயே அவற்றிற்குரிய விடைகளை அவர்கள் கைப்பட எழுதப் பெற்றாலும் அது வினாநிரல் வகையைச் சேரும். வினாப் பட்டியல் என்பது, ஆய்வாளர் களப்பணியின்போதும் பிற இடங்களில் தகவல்கள் சேகரிக்கச் செல்லும்போதும் அங்கு என்னென்ன கேள்விகள் கேட்க வேண்டும். எதற்கடுத்து எந்தக் கேள்வி கேட்க வேண்டும் எனப் பட்டியலிட்டு அவற்றைக் களப்பணியில் பயன்படுத்த உருவாக்கப்படும். அப்பட்டியலைத் தகவலாளிகளிடம் பெரும்பாலும் கொடுப்பதில்லை. பட்டியலைப் பார்த்துக் கேள்விகளைக் கேட்பதற்காக அது உருவாக்கப்படுகிறது. இது சில நேரங்களில் வினாப்பட்டியலைத் தகவல் கூறுவோரிடம் கொடுத்துச் சில பகுதிகளில் அவர்தம் கருத்துகளை எழுதச் செய்வதும் உண்டு.

வினா நிரல் வகைகள் : வினா நிரல்கள் அவற்றின் தன்மைகளுக்கேற்பப் பல வகைகளாக அமைகின்றன. வினாக்கள் தொகுக்கப்படும் முறையை அடிப்படையாகக் கொண்டு வினாநிரல்கள் அமைப்புற்ற வினாநிரல்கள் (Structured Questionnairs) என்றும், அமைப்புறா வினா நிரல்கள் (Non-structured Questionnairs) என்றும் இரு வகைப்படுகின்றன. அமைப்புற்ற வினா நிரல்களில் தெளிவாக வரையறுக்கப்பட்ட வினாக்களும், ஓர் ஒழுங்குமுறையில் வரிசைப்படி அமைக்கப்பட்ட வினாக்களும் இடம் பெறும். அனைத்துத் தகவலாளிக்கும் அனுப்பப்படும் வினா நிரல்களில் உள்ள சொற்களும், வினாக்களும் மாற்றப்படாமல் அப்படியே இருக்கும். அதனால் அனைத்துத் தகவலாளிகளும் ஒரே வகையான வினாக்களுக்கு எம் முறையில் விடையளிக்கின்றனர் என்பதை அறிய முடியும். அவ்வகை வினாநிரல்கள் விடைகளுள் ஒன்றைத் தெரிவு செய்வதாகவோ தகவலாளி தன் விருப்பம்போல் விடையை எழுத அனுமதிக்கும் வகையிலோ அமையும். வாழ்க்கைச் செலவைக் கணித்தல், நுகர்பொருள் செலவினங்களைக் கணித்தல், மக்கள் தொகை விகிதம் அறிதல் போன்ற மதிப்பாய்வுகளுக்கு ஒவ்வொரு வினாவிற்குக்கீழும் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றுள் தகவலாளி தனக்குப் பொருத்தமான ஒன்றைத் தேர்வு செய்து கோடிடுவார். அவ்வகை வினாக்களைக் கொண்ட வினாநிரல் மூடிய வகை வினாக்கள் (Closed Questionnaire) என்றும் கூறப்படும். வினாக்களைத் ஆயத்தம் செய்வோரே சில விடைகளைக் கொடுத்து அதனின்று ஒன்றைத்தேர்வு செய்யும்படி கேட்காமல், தகவலாளியின் மனத்தில் தோன்றுவதை விடையாக எழுதக் கேட்கும் வினாக்களைக் கொண்டவை திறந்த வினாநிரல் (Open Questionnaire) எனப்படும். மேற்கூறிய இருவகை வினாநிரல்களுள் எது சிறந்தது என்பதை வகைப்படுத்த இயலாது. ஆய்வின் தன்மைக்கேற்ப வினாக்களின் தேவைகளும் பயன்பாடும் அமையும். அமைப்புறா வினாநிரல்கள் தகவலாளிக்குத் தகவலாளி மாறுபடலாம். சில வினாக்களுக்குச் சிறப்பிடம் கொடுத்து மற்றவற்றிற்கு ஓரளவு சிறப்பிடம் கொடுக்கப்படலாம்.

வினா நிரலின் முறை : தரமான, அனைத்து வகையிலும் முழுமையான வினா நிரலைத் தயாரிக்கும் பொருட்டு அவற்றின் முன் பகுதியில் பின்வரும் கருத்துகள் இடம் பெறுமாறு செய்யப்படும். வினா நிரல் அனுப்பப்படும்போது வினாநிரலின் முன் பகுதியில் அறிமுக உரை ஒன்று இடம்பெறும். அதில் வினா நிரல் எவ்வகையான ஆய்வுக்குரியது என்பதையும், அவ்வாய்வின் பயனையும், அதில் தகவல் எழுதும் முறையையும் சில வினாக்களுக்குச் சிறப்பாக எதிர்பார்க்கும் தகவல்களை எழுதும் குறிப்பையும் விளக்கும் அறிமுகக் கடிதம் இணைக்கப்படும். மதிப்பாய்வின் தலைப்பு, அதன் பயன், மதிப்பாய்வு செய்யும் நிறுவனம், தகவலாளியின் முழு ஈடுபாட்டைப் பெறும் வகையில் அவருடன் ஆய்வின் பொருள் குறித்துக் பகிர்ந்து கொள்ளும் செய்தியும் இடம்பெறும். இரண்டாம் பிரிவில் குடும்பத் தலைவரின் வயது, பால், குடும்ப அளவு, குடும்ப உறுப்பினர்களின் மணத்தகுதி, கல்வி, தொழில், வருவாய், சமயம், சமூகப் பொருளாதாரத் தகுதி போன்றவை இடம்பெறும். இரண்டாம் பிரிவில் இடம்பெறும் செய்திகள் ஆய்வின் தன்மைக்

கேற்ப மாறுபடும். சில கூறுகளுக்குச் சிறப்பிடமும், ஏனைய கூறுகளுக்கு ஓரளவு சிறப்பிடமும் கொடுக்கும் வகையில் வினா நிரல் அமைக்கப்படும்.

மூன்றாம் பிரிவில், ஆய்வின் தன்மைக்கேற்ப எத்தகு விளக்கங்கள் பெற வேண்டுமோ அதற்கேற்றாற்போல் வினாக்கள் அமைக்கப்படும். அப்பகுதியில் வினாக்களை வரிசைப்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்தப்படும். தகவலாளிகள் ஆய்வாளர்களைப் போன்று மிகவும் நுணுக்கமாகச் செயற்படும் வாய்ப்பு இல்லாமல் போகலாம். ஆதலால், வினாக்கள் புரியும் வகையில் அமைத்தலும், எல்லோரும் அறிந்த சொற்களைக் கொண்டு வினாக்கள் அமைத்தலும் தேவையாகின்றன. ஒரு குறிப்பிட்ட பொருள் குறித்து அறிய விரும்பும் வினாக்கள் ஒன்றன்பின் ஒன்றாக அமைக்கப்பட வேண்டும். வெவ்வேறு இடங்களில் அமைக்கப்படுதல் தவிர்க்கப்படும்.

வினா நிரலின் அளவு மிகப் பெரியதாக இருந்தால், அதனை நிறைவு செய்து அனுப்புவது தாமதமாகலாம் அல்லது தகவலாளி பல பணிகளுக்கிடையில் முடிக்க இயலாமல் போகலாம். தகவலாளி விடைகளை நீண்ட பக்கங்களில் கைப்பட எழுதக் கேட்கும் வினாக்கள் இருந்தாலும் மேற்கூறிய நிலை ஏற்படலாம். ஆகவே, அளவிற்கு அதிகமான வினாக்களைக் குறைப்பதும், வண்ணமிகு தாள்களில் அச்சிடுவதும், வரைபடங்கள், பட்டியல்கள், அட்டவணைகள் போன்ற படவகைகள் சில சேர்த்து அதன் மூலம் விடைகளைப் பெற முயலுதலும் வெற்றிற்கு வழிகோலும்.

**வினா நிரலின் பயன்தன்மை** : பரந்த நிலப்பகுதியில் வாழும் பல்வேறு தரப்பட்ட மக்களிடையே கருத்துக் கணிப்போ பிற செய்திகளோ பெற்றுச் செய்யப்படும் ஆய்விற்கு வினாநிரல் நல்ல பலனைத் தரும். ஒவ்வோர் இடத்திற்கும் ஆய்வாளர் சென்று தரவுகள் பெறவேண்டுமானால் பொருட் செலவும், காலச் செலவும் மிகுதியாகும். இதற்கு மாறாக வினா நிரல் முறை சிக்கன முறையாகவும் குறுகிய கால எல்லைக்குள் தரவுகள் பெறும் முறையாகவும் அமையும். எல்லா வகையான ஆய்வுகளுக்கும் வினாநிரல் முறை பொருந்தாது. பொருட் செலவும் காலச் செலவும் குறைக்க வேண்டுமென எண்ணினால், சில வகையான ஆய்வுகளை வெற்றிகரமாகச் செய்யவியலாது. எல்லா வகையான வினாக்களுக்கும் தகவலாளி வெள்ளைத் தாளில் விடைகளைப் பதிவு செய்ய விரும்புவதில்லை. மன உணர்வுகள், பால் சார்ந்த கருத்துகள், தனிப்பட்ட கருத்துகள் போன்றவற்றை அச்சிட்ட வினாநிரலில் எழுத்து மூலம் தகவலாளி பதிவு செய்ய விரும்புவதில்லை. மேலும், வினாநிரலில் அனுப்பப்பட்ட அனைவரிடமிருந்தும் பதில் கிடைக்குமென ஆய்வாளர் எதிர்பார்க்கவியலாது. ஒரு வினாநிரல் வெற்றிகரமான ஆய்வுக்கு உதவ வேண்டுமானால் கேட்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு எந்த வகையில் விடை கிடைக்கிறது. எவ்வளவு பேரிடமிருந்து விடை கிடைக்கிறது என்பதை அறிய வேண்டும். அதற்குச் சோதனை முறையில் குறைந்த எண்ணிக்கையில் சிலருக்குக் கொடுத்து, முடிவு எவ்விதம் அமைகிறது என்பதை அறிய வேண்டும். முடிவு எதிர்பார்க்குமளவிற்கு அமைந்தால் ஆயத்தம் செய்த வினாநிரல்கள் அனைத்தையும் அனுப்பி வைக்கலாம். சோதனை ஆய்வு வெற்றி பெறாமல் போனால் அதற்கான காரணங்களை ஆராய்ந்து வினாநிரலை மீண்டும் செப்பனிட்டு ஆய்வைத் தொடர வேண்டும்.

*-சீ.ப.*

**வீரசம்பன்** : இவன் பாண்டியர்க்கு உட்பட்டு ஆட்சிபுரிந்த சம்புவராய மன்னன். இவன் தொண்டை மண்டலத்தில் உள்ள விரிஞ்சிபுரம், காஞ்சிபுரம் பகுதிகளை ஆண்டு வந்தான. இவன் வீரசோழனின் மகன் என்பதனைக் காஞ்சிபுரம் கல்வெட்டு அறிவிக்கிறது.

இரண்டாவது பாண்டியப் பேரரசைச் சார்ந்த சடாவர்மன் சுந்தரபாண்டியனின் (கி.பி.1304 -1319) சிற்றரசரான இவன் வீரசம்பனான எதிரிலிச் சோழன் சம்புவராயர் எனவும் குறிக்கப் பெறுகிறான். வீரசம்பன் (கி.பி.1306-1317) வீரசம்பநாயனான சம்புவராயன், சம்புகுலோத்துங்கன் சம்புவராயன் வீரசம்பன் எனவும் குறிப்பிடப் பெறுகிறான். இவன் தூங்கும் நேரத்திற்குள் தனது பகைவர்களை வென்று வெற்றிகளைக் குவித்தவன் என்ற திருவல்லம் கல்வெட்டில் குறிப்பிடப்பெறுகிறான். கேரளமன்னன் இரவிவர்மன் குலசேகரனை வென்று துரத்துவதில்

பாண்டியர்களுக்கு வீரசம்பனும் கி.பி.1313-இல் படையுதவி புரிந்துள்ளான். குன்னத்தூர் (இரெண் டேரிப்பட்டு) சம்புகேசுவரர் கோயில் இவ்வேந்த னால் கட்டப்பட்டது. காஞ்சிபுரம் அருளாளப் பெரு மாள் கோயிலுக்கு இவன் புசியரதம் எனும் அழகு மிக்க தேர் ஒன்றினைத் தானமளித்துள்ளான். திருவல் லம் கோயிலில் நித்ராவசான விசயா மண்டபம் ஒன்றினையும் இவன் கட்டுவித்தான். இவன் தனது பிறந்தநாளான ஆயிலிய நட்சத்திரத்தில் ஆவணி மாதத் திருநாள் நடத்தவும், தனது பெயரில் நிறுவப் பட்ட வீரசம்பன் சந்தி எனும் கட்டளைக்கும் படு வூரான விரசம்பநல்லூரைத் தானமளித்துள்ளான்.

இவ்வேந்தனது பெயரால் வீரசம்பன் பணம், வீரசம்பன் குளிகை, வீரசம்பன் வாய்க்கால், வீரசம்பீசுவரம், வீரசம்ப மத்தராயன் புறவடை, வீரசம்பனூர், வீரசம்பன் சந்தி, வீரசம்ப நல்லூர் ஆகியன குறிக்கப்படுகின்றன. எனவே இவன் சம்புவராயர் வரலாற்றில் சிறந்ததோர் இடத்தைப் பெற்றிருந்தான் என்பது தெளிவு. சமயப்பொறை உடைய இவன் காஞ்சிபுரம் பெருமாளுக்குத் தேர் ஒன்றை வழங்கியதைப்போன்று ஏகாம்பரநாதர் கோயிலுக்குத் தேர் ஒன்றையும் வழங்கியுள்ளான். இவன் சம்புவராயர் மரபின், இரண்டாவது தன் னுரிமை பெற்ற அரசின், முன்னோடியாக விளங்கி னான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

-ம.இரா.த.

**வெங்கைக் கோவை** : இது திருவெங்கை மலையில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்ற தமிழ் அகத்தினைக் கோவையிலக்கியம் ஆகும். இதனைப் பாடியவர் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் ஆவார். இவர் காலம் கி.பி.17-ஆம் நூற் றாண்டாகும்.

தமிழ்க் கோவை நூல்களுள் முதல் வரிசையில் வைத்து எண்ணத்தக்க சிறப்புடைய வெங்கைக் கோவை, கடவுள் வாழ்த்துச் செய்யுள் ஒன்றுடன் 425 கட்டளைக் கலித்துறைப் பாக்களும் கொண்டு 427 செய்யுட்களால் அமைந்துள்ளது. மேலும் சிறந்த அக விலக்கியமாயும், சைவ இலக்கியமாயும் திகழ்கிறது.

இக்கோவையில், "பாயும் மலர்த்தன் பொழில் சூழும் வெங்கைப் பழமலை" (5) "சுரும்பு களிக்கும் பொழில் வெங்கை" (217), "நெல்லுங் கரும்பும் நிறைவெங்கை" (242) என்பனபோல் வெங்கைப் பதியின் நிலவளமும், "புரவலர் ஒக்கும் குடிவாழும் வெங்கை" (286) என்பது போல் அப்பதியின் குடி வளமும், "பாவிடை வைத்த பெரும் புகழ் வெங்கை" (26), "பழி மாற்றிய புகழ் வெங்கை" (29) என்று அதன் புகழ்வளமும் இவ்வாறே அதன் பிறவளங்களும் சிறப்புறப் பாராட்டப்படுகின்றன.

அன்பர்களின் போற்றிப் பாடல்களை விரும்பி யருளும் இறைவன் பண்பினை இக்கோவை இனிதே பாடுகின்றது. சுந்தரமூர்த்தி நாயனாரால் தேவாரம் பெறவேண்டி அவருடைய மனைவியாகிய பரவைநாச்சியாரிடம் அவருக்காகத் தூது சென்ற பெருமான் செயலைக் குறித்து, "காதார் அமுதம் பெறவேண்டி அன்றொரு காரிகைபால், தூதாய் நடந்த திருவெங்கை வானர்" (179) என்று பாடுதல் காணலாம். இன்னும், "மாணிக்கவாசகன் செந்தமிழ் மாலை மணக்கும் முடி வேணிக் கடவுள்" (265) என்று இறைவன் திருவாசகத்தையே மாலையாகத் திருமுடி யில் அணிந்தருளிய சிறப்பையும் இக்கோவை பாராட்டுகின்றது.

இக்கோவையின் இலக்கிய நயங்கள் இனிமை சான்றன. காப்புப் பாடல் முதல் ஈற்றுப் பாடல் முடிய எல்லாப் பாடல்களிலும் இந்நளயங்களைக் காணலாம். அவற்றுள் சில வருமாறு தலைவன் முதன் முதல் தலைவியைக் கண்டு கூடும் இயற்கைப் புணர்ச்சியில் அவளிடத்தே முழு இசைவு தோன்றா மையாகிய இடையூற்றை அவன் மொழிதலென்பது ஒருதுறை. அது இடையூறு கிளத்தல் என்று அமை யும். இக்கோவைத் தலைவி நாணிக்கண் புதைத்து நிற்றலை இத்தலைவன் இங்கே தம் புணர்ச்சிக்கு இடையூறாகக் கிளந்து மொழிகின்றான். "என்னிடத் துக் காமவேள் செய்யும் கலகத்திற் குக் காரணமாகிய அணங்கே, உலகிலே பொற்குடத்தைப் பெற்றோர் தாம் அதனைப் பிறர்க்குக் காட்டாமல் புதைப்பர். வாளென்றால் பிறரை அச்சுறுத்துமாறு அதனை வெளிப்படக் காட்டுவர். நீயோ பொற்குடங்கள். இரண்டு பெற்றும் அவற்றைப் புதையாமல் வாட் படைகளைப் புதைக்கின்றாயே. இது போன்ற

செயலைக் கதையிலேயும் கேட்டதில்லை காண்" (15) என்று நயம்படக் கூறுகின்றார்.

கற்பியலில் தலைவியின் மணமனைக்குச் சென்று அவளது இல்வாழ்க்கைச் சிறப்பினைக் கண்டு வந்த செவிலி, அவளுடைய கற்பு மேம்பாட்டை நற்றாய்க்குக் கூறும்போது, "கற்புத் தன்மையில் நம் மகளுடன் அருந்ததி ஒப்பாவாள் எனின், அவ்வருந்ததி வாழும் வானுலகிலே அவள் கற்பினால் மேகங்கள் என்றும் மழை பொழிவதில்லை, ஆனால் நம் மகள் கற்பினால் இவள் வாழும் ஊரிலே திங்கள் மும்மாரியாகப் பெய்கின்றன காண்" (376)என வேறுபடுத்திச் சிறப்பிக்கும் நயம் உயர்ந்தின்புறத் தகும். இவ்விலக்கிய நயமெல்லாம் கற்பனைக் களஞ்சியம் என்ற ஆசிரியரின் சிறப்புப் பெயருக்கேற்ப அமைந்துள்ளன.

இன்னும் சிவபுராணச் செய்திகள் அருளாளர் வரலாறுகள் போன்ற பலவற்றையும் இக்கோவை ஆங்காங்கே பொருத்தமுற ஆண்டு பொலிகின்றது.

-வ.கு.

**வெண்ட்வொர்த்து சார்லசு வாட்சன் (கி.பி.1730 – 1782) :** இவர் இங்கிலாந்தில் முதலமைச்சராக இருந்த ஓர் ஆங்கில அரசியல்வாதி இவர் இலண்டனில் கி.பி.1730 -ஆம் ஆண்டு பிறந்தார். வெசுட்டுமினிசுடர் பள்ளிலும் கேம்பிரிட்சு (எருதந்துறை) பல்கலைக் கழகத்தோடிணைந்த புனித யோவான் கல்லூரியிலும் இவர் கல்வி பயின்றார். அயர்லாந்தில் கி.பி.1750-ஆம் ஆண்டு 'பிரபு' (Lord) என்ற பட்டத்தைப் பெற்றார். அதே ஆண்டு இங்கிலாந்து நாட்டிலும் பிரபுப் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. இவர் இராக்கிங்காம் குடும்பத்தைச் சேர்ந்தவராதலால் இராக்கிங்காம் கோமான் என்றும் இவர் குறிப்பிடப்படுகிறார். இவர் இங்கிலாந்து நாட்டு பிரபுக்கள் மன்றத்தில் கி.பி. 1751 - இல் உறுப்பினரானார். விக்கு அரசியல் கட்சியின் (Whig Party) பால் இவருக்கு பற்றுமிகுதி. தயங்கித் தயங்கிப் பேசும் பண்பு கொண்டவர். அதனால் அரசியலில் முனைப்புடன் பங்கேற்க இயலவில்லை. ஆனால் பிட் (Pitt) என்பார் ஆங்கில நாட்டின் தலைமை அமைச்சராகப் பொறுப்பேற்க 1765 ஆம் ஆண்டில் மறுத்தபோது இவர் துணிவுடன் அப்பதவியை ஏற்று, அரசியல் சிக்கலைத் தவிர்த்தார்.

வெண்ட்வொர்த்து சார்லசு வாட்சன் (Wentworth Charles Watson) மிகப்பெரும் செல்வராகவும், அரசியல் செல்வாக்கு மிக்கவராகவும் விளங்கினார். நாடாளுமன்ற உறுப்பினராகப் புகழ் பெற்றிருந்த எட்மண்ட் பர்க்கு (Edmund Burke) இவரது செயலராகப் பணியாற்றியமையும் இவர் அரசியல் வெற்றிக்குப் பெருமளவு உதவியது. இவர் அமெரிக்கக் குடியேற்ற நாடுகளிடம் நட்புணர்வு கொண்டிருந்தார். எனவே அமெரிக்கர் விரும்பாத முத்திரைச் சட்டத்தை விலக்கிட எண்ணினாலும், அமெரிக்கர் மேல் வரிவிதிக்க ஆங்கில நாடாளுமன்றத்துக்கு உரிமை உண்டு என்பதைக் கொள்கையளவில் உறுதி செய்தார்.

வெண்ட்வொர்த்தின் பிரதமர் பதவி ஓராண்டு காலம்தான் நீடித்தது. அக்குறுகிய காலத்தில் எந்த விதச் சிறப்புமின்றி இவரது ஆட்சி நடைபெற்றது. இவர் கி.பி.1782 - ஆம் ஆண்டு கூட்டு அமைச்சரவை அமைக்க அழைக்கப்பட்டபோது நிதித் துறையைத் தம் மேற்பார்வையில் வைத்துக்கொண்டார். அக்காலத்தில் அயர்லாந்துக்குச் சட்டமன்றத்தில் சொந்தமாகச் சட்டமியற்றும் உரிமை வழங்கப்பட்டது. அத்துடன் விடுதலைப் போரில் வெற்றி கண்ட அமெரிக்கக் குடியேற்ற நாடுகளுடன் அமைதி உடன்பாடு காணவேண்டும் என மன்னரை இவர் இணங்க வைத்தார். இவ்விரண்டும் வெண்ட்வொர்த்தின், இரண்டாம் ஆட்சிக் காலச் சாதனைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இரண்டாம் முறை பிரதமராக அமர்ந்த இவர் கி.பி.1782-ல் மரணமடைந்தார்.

-தே.ச.

**வெத்தர் :** இலங்கையில் வாழும் முதுகுடியினர். இவர்கள் சிறுத்த மெலிந்த உடற்கட்டமைப்புடையவர்கள்; கரும்பழுப்பு நிறமுடையவர்கள். இவர்களின் தலைமயிர் சுருட்டையாக இருக்கும் நெற்றி தாழ்ந்தும் மூக்கு அகன்றும் காணப்படும்.

பாலி மொழியில் எழுதப்பட்டுள்ள மகாவம்சம் (Mahavamsa) என்னும் வரலாற்றுக்

குறிப்பு நூலில் வெத்தர்களைப் (Veddas) பற்றிய செய்திகள் உள்ளன. பாண்டுகாபயா என்னும் அரசன் கி.மு.4-ஆம் நூற்றாண்டில் அனுராதபுரத்தில் வெத்தர்களின் தெய்வமான வியாதாதேவனுக்கு நிலத்தை அளித்ததுடன் வெத்தர்களுக்குக் குடியிருப்புகளையும் கட்டிக் கொடுத்துள்ளான். முதலாம்பராக்கிரமபாகு என்னும் அரசன் கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் யொவனுருவாவில் ஆட்சி செய்து வந்த கசபாகுவை வெல்ல எண்ணிப் பெரும் படை திரட்டினான். அப்படையில் ஆயிரக்கணக்கான வெத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுப் பயிற்சி அளிக்கப்பட்டனர்.

ஒரு காலத்தில் இலங்கை முழுவதும் பரவியிருந்த இப்பழங்குடி மக்கள் கி.பி.12-ஆம் நூற்றாண்டில் கூட ஆயிரக்கணக்கில் வாழ்ந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. ஆனால், இன்று இம்மக்களின் தொகை நூற்றுக்கணக்கில் மட்டுமே உள்ளது. தொடக்கக் காலத்தில் வெத்தர்கள் வாழ்ந்து வந்த குகைகளில் பிற்காலத்தில் இலங்கைக்கு வந்த புத்தத் துறவிகள் வாழ விரும்பினர். குகைகளைத் துறவிகளுக்கு விட்டுவிட்டு வெத்தர்கள் அருகிலிருந்த காட்டுப் பகுதிக்குள் குடிபுகுந்திருக்க வேண்டுமெனக் கருதப்படுகிறது. மேலும் உழவர்கள் காடுகளை அழித்துச் சீர்திருத்தியதால் வேட்டையாடுவதையே வாழ்க்கைத் தொழிலாக் கொண்ட வெத்தர்களின் தொழில் எல்லை சுருங்கியது. அதனால் பல வெத்தர்கள் வேட்டையாடி வாழ்வதை விடுத்து இடம் பெயரும் வேளாண்மை முறையினைத் தழுவினர். நாளடைவில் கால்நடை வளர்த்தலையும் சேர்த்துக் கொண்டு சிறு வேளாண்மை செய்வோராக மாறினர். கண்டி வட்டாரத்தில் வாழும் சிங்களர்கள் இவ்வாறு மாறிய வெத்தர்களே என்று பார்க்கர் (H. Parker) கூறுகிறார். இப்பகுதியில் தங்களைப் புத்தர்கள் எனக் கூறிக் கொள்ளும் சிங்களர்கள் வெத்தர்களின் தெய்வமாகிய வியாதா தேவனையும் வழிபடுகின்றனர்.

சிங்களர்கள், வெத்தர்கள் ஆகிய இருஇனத்தாரின் மண்டை ஓடுகளை ஆராய்ந்த விர்சொவு என்பார் (R. Virchow) வெத்தர்களே இலங்கயின் முதுகுடிகள் என்றும், வெத்தர்களுக்கும் இந்தியாவிலிருந்து வந்த மக்களுக்கும் ஏற்பட்ட கலப்பினால் தோன்றியவர்களே சிங்களர்கள் என்றும் கூறுகிறார்.

இலங்கையின் கிழக்குப் பகுதியில் மட்டுமே இன்று காணப்படும் வெத்தர்களைக் காடுகளில் வாழ்பவர்கள், கிராமங்களில் வாழ்பவர்கள், கடற்கரைப் பகுதியில் வாழ்பவர்கள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவர்களுள் முதல் வகையினரே முற்கால வெத்தர்களின் பழக்க வழக்கங்களை ஓரளவு கொண்டுள்ளார்கள். இவர்கள் கண்டி மலைப் பகுதியில் தாழ்வாரத்தில் உள்ள அடர்ந்த காடுகளிலும், மது ஓயா பள்ளத்தாக்கிலும் வாழ்கின்றனர். இவர்களும் நாடோடித்தனமான வாழ்க்கை முறையிலிருந்து இப்போது மாறி வருகின்றனர். கிராம வெத்தர்கள் சிங்களர்களுடனும், கடற்கரை வெத்தர்கள் தமிழர்களுடனும் கலந்து வாழத் தொடங்கியுள்ளனர்.

பெரும் மாறுதலுக்கு உட்படாது இருபதாம் நூற்றாண்டின் முதல் கால் நூற்றாண்டு வரை வாழ்ந்த கலப்பற்ற வெத்தர்களின் வாழ்க்கை முறை பின்னர் மாறுபட்டது. இவ்வெத்தர்கள் மலைப் பாறைகளில் உள்ள குகைகளைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு முன்பாகச் சிறு கூரைகளை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். குகை போன்ற அமைப்பு கிடைக்காவிட்டால் ஏதேனும் ஒரு பாறையை ஒட்டினாற் போல் குடிசை அமைத்துக்கொள்வதுண்டு. நல்ல குகை, அவர்களின் பரம்பரைச் சொத்தாகக் கருதப்பட்டது. கோடைக்காலத்தில் நீர் நிலைகள் வற்றி விடும்போது வேட்டைக்காகத் தாழ்வான காடுகளுக்கு வர வேண்டியிருக்கும். அக்காலங்களில் நீர் மிகுதியாகக் கிடைக்கும் இடங்களில் இடைக்காலக் குடிசைகளை அமைத்துக் கொள்வார்கள்.

வேட்டையாடுவதே இவ்வெத்தர்களுக்கு முதன்மைத் தொழில், மான், பன்றி, உடும்பு போன்றவை முக்கியமாக வேட்டையாடப்படும் விலங்குகளாகும். ஒரு வகையான தாவர நஞ்சைக் குளங்களில் கரைத்து மீன்களை மயக்கமடைய வைத்துப் பிடிப்பதும், புகை மூட்டித் தேனீக்களை விரட்டித் தேன் எடுப்பதும் இவர்களின் பிற தொழில்களாகும். வெத்தர்களின் அம்பு முனைகளும் கோடரிகளும் மட்டுமே உலோகத்தாலான பொருட்கள். திருவோட்டுக்காயின் ஓடுகள், சுரைக் குடுக்கைகள், மரவுரி நார்களால் பின்னப்பட்ட பைகள், கூடைகள்

ஆகியவையே காடுகளில் வாழ்ந்த வெத்தர்களின் அன்றாட வாழ்வில் பயன்பட்ட பொருட்கள். வெத்தர்கள் மட்பாண்டங்களை அருகில் வாழும் சிங்களர்களிடமிருந்து பெற்றனர். பழங்கடி மக்களின் படுக்கை விரிப்புகளாகப் பயன்படும் பாய்களைக் கூட இவர்கள் பயன்படுத்தியதில்லை. அவற்றிற்குப் பதிலாக மான் தோல்களைப் பயன்படுத்தி வந்தனர். இம்மக்களின் முக்கிய உணவு இறைச்சி பழங்கள், கிழங்குகள், தேன், மீன் ஆகியவையே. பிற்காலத்தில் மேற்குறிப்பிட்ட உணவுப் பொருட்களுடன் காய்கறிகளையும், சிறுதானியங்களையும் அரிசியையும் சேர்த்துக் கொண்டனர். வெத்தர்கள் அணிகள் அணிவதில்லை.

காடுகளில் வாழ்ந்த வெத்தர்கள் நான்கு அல்லது ஐந்து குடும்பங்களைக் கொண்ட சிறுசிறு குழுக்களாகச் சேர்ந்து வாழ்வர். ஒவ்வொரு குழுவும் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியைச் சொந்தமாக வைத்திருந்தது. ஒரு குழுவின் அனுமதியின்றிப் பிற குழுவினர் நுழையக் கூடாது. ஒரு குழுவின் உறுப்பினர் உரிமை குடிவழியில் கொள்ளப்பட்டது. திருமணத்திற்குப் பின் கணவன் தன் மனைவியின் எல்லைக்குள் சென்று வாழ வேண்டும். வெத்தர்களுக்குள் முறையான கால்வழிப் பிரிவுகள் உள்ளன. இவ்வமைப்பில் மொரேனே (Morane), உனபனே (Unapane) என்னும் இரு பிரிவுகள் உயர்ந்தவையாக மதிக்கப்படுகின்றன. இப்பிரிவுகள் ஒன்றோடொன்று மண உறவு வைத்துக் கொள்கின்றன. பிற பிரிவுகளுடன் மணஉறவு கொள்வதில்லை. திருமணங்கள் பெரும்பாலும் அத்தை - மாமன் மக்களுடன் (Cross - Cousins) நடைபெறுகின்றன. முற்காலத்தில் வெத்தர்களின் திருமணம் மிக எளிதாக நடைபெற்றது. ஒரு பெண்ணை மணக்க விரும்பும் இளைஞன் மான், உடும்பு ஆகியவற்றின் உலர்ந்த இறைச்சியையும், தேனையும் பெண்ணின் தந்தையிடம் கொடுப்பான். அவற்றை ஏற்றுக் கொண்டால் அவன் தன் மகளை அழைத்து இளைஞனிடம் ஒப்படைப்பான். உடனே அப்பெண் ஓர் அரைஞாணைத் (இடுப்புக் கயிறு) தயாரித்துத் தன் கணவனுக்கு அளிப்பாள். ஒருவனுக்கு ஒருத்தி என்பதில் உறுதியாக உள்ளனர். மணம் முடித்தவர்களும், மணமாகாதவர்களும் மிக உயர்ந்த கற்பு நெறியுடன் வாழ்ந்து வந்துள்ளனர். விதவைகள் மறுமணம் செய்து கொள்ளலாம். திருமணம் முடிந்தபின் பெண்ணின் தந்தை மருமகனுக்குப் பரிசாக வில், அம்பு போன்றவற்றையும், தேனீக்கள் நிரம்பி வாழும் பாறைப் பகுதியையும் வழங்குவதுண்டு.

வெத்தர்கள் குகைகளில் வாழ்ந்தபோது அங்கு மரணம் ஏற்பட்டால் இறந்தவரின் உடலை அக்குகையிலேயே விட்டுவிடுதல் வழக்கம். உடலைக் கழுவுதல், அலங்கரித்தல் போன்ற எந்தச் சடங்கும் செய்யாது இலைச் சருகுகளால் உடலை மூடிவிட்டுக் குகையிலிருந்து வெளியேறி விடுவர். அவ்வாறு செய்யாது அக்குகையில் இருந்தால் இறந்தவரின் ஆவி அவர்கள் மீது கற்களை வீசும் என்று கருதினர். பின்பு அக்குகையை நெடு நாட்களுக்குக் பயன்படுத்தாது விடுவர். மீண்டும் அங்குக் குடிபுகும் நிலை ஏற்பட்டால் உள்ளே இருக்கும் எலும்புகள் சடங்குகள் எதுவும் நடத்தப்படாமல் வெளியே அகற்றப்படும். மற்றொரு முறையில் இறந்தவரின் உடலத்தை உடன்பிறந்தோர் அல்லது உறவினர் குழிதோண்டிப் புதைப்பர். ஆனால், நினைவுத் தூண்கள் எதுவும் எழுப்புவதில்லை. இறந்தவரின் ஆவி 'யாகா' என்றும், ஆவிகள் 'யாகு' என்றும் கூறப்படுகின்றன. இறந்தவரின் ஆவிக்கு இரண்டு மூன்று வாரங்களுக்கு விருந்து படைக்கப்படுகிறது. வெத்தர்கள் மிக உயர்வாகப்போற்றும் உணவான அரிசிச் சோறும் தேங்காய்ப் பாலும் கலந்த உணவைப் படைக்கின்றனர். அந்நிகழ்ச்சியின் போது இறந்தவரின் ஆவியை ஒருவர் தன்னுள் ஏற்றுப் பேசுவார். அந்த விருந்தை ஏற்றுக் கொண்டதாகத் தெரிவித்தவுடன் அங்குக் கூடியுள்ள ஆண், பெண் குழந்தைகள் அனைவரும் படைக்கப்பட்ட உணவை உண்பர்.

வெத்தர்களின் சமயம் மூதாதையரின் ஆவிகளுடன் தொடர்புடையதாகும் 'யாகு' என்னும் அந்த ஆவிகள் தங்களுக்கு நன்மை செய்வதாகக்கருதி வெத்தர்கள் வழிபடுகின்றனர். ஒவ்வொரு குழுவிலும் ஒரு பூசாரி இருப்பார். அவர் ஆவிகளைத் தமக்குள் அழைத்து அவற்றின் அருள் பெற்றுப் பேசுவார். அவருக்குக் கபுரலே (Kapurale) அல்லது துக்கனவா (Dugganawa) என்பது பெயர். அவர் மூலமாக ஆவிகள் எந்தப் பக்கம் சென்றால் நல்ல வேட்டை கிட்டும் என்பது போன்ற செய்திகளைத் தெரிவிக்கின்றன. வேட்டையில் கிடைத்த விலங்கின் தலையை வெட்டி எடுத்து ஆவிகளுக்குக் காணிக்கையாகக் காட்டிலேயே

விட்டு விடுவார்கள். தேன் எடுப்பதில் உதவும் கிரியம்மா என்னும் தெய்வத்திற்குத் தேனைப் படைத்து வணங்குகின்றனர். பிற்காலத்தில் கிராம மக்களுடன் கலந்ததன் விளைவாக இன்றைய வெத்தர்கள் இந்து, புத்த சமய முறைகள் சிலவற்றையும் பின்பற்றுகின்றனர். கதிர்காமத்தில் உள்ள முருகன் வெத்தர் தலைவனின் மகளான வள்ளியம்மாளை மணந்ததாகக் கூறி அங்குச் சென்று வழிபடுகின்றனர். வெத்தர்கள் சிங்களர்களுடன் கலந்து தங்கள் பழங்குடிச் சிறப்பை இழந்துவிட்டபோதிலும் சில சமய முறைகளிலும், கிராமிய நம்பிக்கைகளிலும் இலங்கைத் தீவின் முதுகுடிகள் என்பதை வெளிப்படுத்துகின்றனர்.

வெத்தர்களின் தொன்மைப் பண்பாடு பற்றிக் கூறும்போது அவர்களுடைய பாறை ஓவியங்கள் பற்றிக் குறிப்பிடலாம். சில பாறைகளில் திருத்தமற்ற ஆண், பெண் விலங்குகளின் ஓவியங்களும், தோலால் ஆன பைகள் போன்ற வடிவங்களும் தீட்டப்பட்டுள்ளன. வெத்தர்களிடம் இசைக்கருவிகள் எதுவும் இல்லை. இருப்பினும் ஆவிகளை அழைப்பது போன்ற நேரங்களில் அவர்கள் ஆடும் போது வயிற்றில் கைகளால் தட்டித் தாளமிடுகின்றனர்.

வெத்தர்கள் தமிழும் சிங்களமும் கலந்த ஒரு கிளை மொழியைப் பேசுகின்றனர். ஆண்டு முழுவதும் காடுகளில் தங்கி வாழும் வெத்தர்கள் இன்றில்லை. அரைகுறை நாடோடிகளாக உள்ள வேட்டைக்கார வெத்தர்களும் நிலையான வேளாண்மை மக்களாக மாற இலங்கை அரசு உதவி வருகிறது.

-ப. இரா.

**வெர்ரியர் எல்வின் (1902 –1964)** : இவர் இந்தியப் பழங்குடிகளைப் பெருமளவில் ஆய்வு செய்த ஆங்கிலேய மானிடவியலறிஞர்; பழங்குடி நலத்திட்டங்களுக்கு இந்திய அரசின் ஆலோசகராக இருந்தவர்; பழங்குடிகளின் நலனுக்கு அயராது உழைத்தவர். வெர்ரியர் எல்வின் (Verrier Elwin) ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் பயின்று பட்டம் பெற்றவர். தொடக்கக்காலத்தில் பழங்குடி களின் வாழ்க்கை முறைகளை மையமாகக் கொண்டு புதினங்களையும் கவிதைகளையும் எழுதி வந்தார். பின்னர்க் கிறித்தவ சமயப் பரப்பாளராகப் பணியாற்ற முற்பட்டார். அப்பணியில் சில காலம் பணியாற்றிய பின் ஆங்கிலேய அரசு இவரை இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது.

எல்வின் இந்தியாவிற்கு *1936* - ஆம் ஆண்டு கிறித்தவ சமயப் பரப்பாளராக வந்தது முதற் கொண்டே பழங்குடிகளின் வாழ்க்கை முறையை அறிவதில் நாட்டங் கொண்டார். மத்தியப் பிரதேசப் பழங்குடிகளைப் பற்றிய இவரது முதல் புதினம் அவர்களது வாழிடம், மரபு வழக்கங்கள், சமுதாய வாழ்வு, சமயச் சடங்குகள் முதலானவை பற்றியதாக அமைந்தது. ஆங்கிலேய அரசு இந்தியாவை ஆண்ட காலத்தில் பழங்குடியினரைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் பொருட்டு அவர்களின் சமுதாய வாழ்வின் அனைத்துக் கூறுகளையும் அறிய வேண்டியவர்களாய் இருந்ததால் பல ஆங்கில மானிடவியலாரைப் பயன்படுத்தி அம்மக்களின் நடைமுறைகளை அறிய முற்பட்டது. இவ்வகைப் பணியில் எல்வினைச் சிறப்பாகப் பயன்படுத்த ஆங்கிலேய அரசு விழைந்தது. அதன் பின்னரே எல்வின் முறைப்படியான இனக்குழுவியல் (Enthnography) ஆய்வுகளை மேற்கொள்ள முனைந்தார். இனக்குழுவியல் ஆய்வு என்பது ஒரு சமுதாயத்தைப் பற்றி மானிடவியல் ஆய்வு நெறிகளுடன் மேற்கொள்ளப்படும் ஆய்வாகும். மத்தியப் பிரதேசப் பழங்குடிகளைப் பற்றிய எல்வின் எழுதிய நூல் இந்திய இனக்குழுவியல் துறையில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

பெய்கர் (Baigar) பழங்குடியினர் பற்றி *1939* -இல் இவர் வெளியிட்ட நூல் ஆறாண்டு காலக் களப்பணியின் உழைப்பை உணர்த்துவதாக உள்ளது. அதன் பின்னர் எல்வின் இந்தியாவின் பல பகுதிகளுக்குச் சென்று பழங்குடிகளின் பண்பாட்டு, அரசியல், வாழ்க்கை முறைகளை ஆராய்ந்தார். மகாராட்டிரம், ஒரிசா, அசாம், மேகாலயா, வடகிழக்கு இமய மலைப் பகுதி முதலான பகுதிகள் இவர் ஆய்வு செய்த பகுதிகளுள் குறிப்பிடத்தக்கவை.

இந்தியப் பழங்குடிகளின் வளர்ச்சிக்கான திட்டங்களும் பணிகளும் குறித்து விரிவான அளவில் எழுதி சவகர்லால் நேருவின் நன்மதிப்பை இவர் பெற்றார்.

அதனால் இந்திய அரசின் பழங்குடிகள் பற்றிய திட்டமிடுதலுக்கு நேருவின் ஆலோசகாராகப் பணியமர்த்தப்பட்டார். மாநில அரசுகள் விடுத்த அழைப்பையும் ஏற்று ஆலோசகராகச் செயற்பட்டார். எல்வினின் பணி ஆட்சியாளர்களோடு மட்டும் தொடர்புடையதாக இல்லாமல் கல்விசார் நிலையிலும் தொடர்புடையதாக அமைந்தது. இவர்தம் பிற்கால ஆய்வு நூல்கள் இந்திய மானிடவியலுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தன. மரியரின் கொலைகளும், தற்கொலைகளும் பற்றிய நூல் இந்தியப் பழங்குடிகளிடையே நிலவும் சமுதாயச் சிக்கல்களை விளக்குவதுடன் அவற்றிற்கான அடிப்படைக் காரணங்களையும் சுட்டிக் காட்டுகின்றது. இது போன்று, இந்தியப் பழங்குடிகள் குறித்துப் பல பயன்மிக்க ஆய்வுகளைச் செய்து முடித்தார். அவற்றுள் பெய்கர் (Baigas), அகாரியா (Agaria) பழங்குடிகள் குறித்து செய்த ஆய்வுகள் இந்தியப் பழங்குடிகள் பண்பாட்டின் பரிமாணங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்தன. 'மரியரும் அவர்களின் மணமாகாதார் கூடமும்' (Maria and their Ghotul) பற்றிய நூல் இந்தியப் பழங்குடிகளின் பாலுறவு வாழ்க்கையையும் பழங்குடிகளிடையே இளையோர் கூடங்களின் செயற்பாடுகளையும் விளக்குகிறது.

இந்தியாவில் நாட்டுப்புறவியல் ஆய்வுகளின் வளர்ச்சிக்கு எல்வினின் பங்கு குறிப்பிடத்தக்கது. இவரது "நடு இந்தியத் தொன்மங்கள்" (The Myths of Middle India) என்னும் நூல் நாட்டுப்புற வியலுக்குக் குறிப்பிடத்தக்க பங்காகும். இது தவிர ஒரிசாப் பழங்குடிகளின் நாட்டுப்புறக் கதைகளைத் தொகுத்தார். வடகிழக்கு இமய மலைப் பகுதி மக்களின் நானூறு கதைகளைத் தொகுத்து "இந்தியாவின் வடகிழக்கு எல்லைப் புறத் தொன்மங்கள்" (The Myths of North East Frontier of India) என்னும் நூலை வெளியிட்டார். இவை தவிர நாகர் பழங்குடியினர் குறித்தும் சில நூல்கள் எழுதியுள்ளார். எல்வினின் நூல்களுள் மிகவும் சிறப்பானது "வடகிழக்கு எல்லைப்புற மாகாணங்களின் தத்துவம்" (Philosophy of NEFA) என்னும் நூலாகும். இந்நூல் இப்பகுதி மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை, சமய வாழ்வு, தொன்மவியல் முதலானவற்றின் சிறப்புகளைச் சிறந்த இனக் குழுவியல் முறையில் விவரிக்கிறது.

இந்திய மானிடவியல் ஆய்விதழ்களுள் விடிவெள்ளியாகத் திகழும் 'இந்தியாவில் மனிதன்' (Man in India) என்ற முத்திங்களிதழுக்கு இவர் பதிப்பாசிரியராகப் பணியாற்றினார். இந்திய மானிடவியல் மதிப்பாய்வின் (Anthropological Survey of India) இயக்குநராகவும் சில காலம் பணியாற்றினார். இந்தியப் பழங்குடிகளைப் பற்றிய திட்டங்களில் செல்வாக்கு இன்றளவும் காணலாம். இவரைச் சிறப்பித்து டாக்டர் பிரதான்னும் (Dr. M.C. Pradhan) பிறரும் 'மானிடவியலும் தொல்வியலும்' என்னும் தொகுப்பு நூலை வெளியிட்டனர். இவர் 1964-ஆம் ஆண்டு காலமானார்.

- சீ.ப.

**வெள்ளாறு– 1**: வெள்ளாறு திருச்சி மாவட்டத்தில் மருங்காபுரிக்கருகில் வேழமலையில் (வேலமலை) உற்பத்தியாகிறது. அம்மலையை வேளிர் மலை என்றும் கூறுவர். முற்காலத்தில் பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் எல்லையாக அமைந்த இது புதுக்கோட்டை மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க ஆறுகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. திருச்சி மாவட்டத்தில் ஏறத்தாழ 40 கி.மீ. ஓடி நீர் வளந்தந்து இவ்வாறு புதுக்கோட்டை மாவட்டத்தில் புகுந்து குளத்தூர் வட்டத்திலுள்ள மின்வெளி ஏரியை நிரப்பிக் குடுமியான்மலை, பேரையூர், கடையக்குடி, வல்லநாடு, ஆலங்குடி, புதுக்கோட்டை வழியாகச் சென்று அறந்தாங்கி, வட்டத்தில் கோவில் கோட்டையை அடுத்துள்ள வங்காள விரிகுடாவில் கலக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்தில் இவ்வாறு செல்லும் தொலைவு ஏறத்தாழ 96 கி.மீ. ஆகும். இவ்வாற்றின் மொத்த நீளம் 136 கி.மீ.

இவ்வாற்றில் பல அணைகள் கட்டப்பட்டுள்ளன. குடுமியான்மலைக்கருகில் கட்டப்பட்டுள்ள அணையிலிருந்து விசலூர், வயலோகம், பெருமானாடு, கவிநாடு ஆகியவற்றின் ஏரிகள் நீரைப் பெறுகின்றன. கவிநாடு ஏரி, சேந்தமங்கலத்தில் கட்டப்பட்டுள்ள அணைக்கட்டிலிருந்தும் நீரைப் பெறுகிறது. கோல்ட் சுவர்த்து அணைக்கட்டிலிருந்து வளநாடு ஏரிக்குத் தண்ணீர் செல்கிறது.

வடமொழியாளர் இவ்வாற்றைச் 'சுவேதா' எனக் குறிப்பிடுவர். வெண்மையான ஆறு என்ற முறையிலோ வேலமலை அல்லது வேளிர் மலையில் தோன்றி வருகின்ற காரணத்தினாலோ வெள்ளாறு எனக் குறிக்கப்படுகிறது. தைப்பூசம், சித்திரைத் திங்களில் முழு மதி நாள், மற்றைய திங்கள்களில் மறைமதி நாள் ஆகிய நாட்களில் நீராடுவோர் புனித மடைவர் என்ற நம்பிக்கையுள்ளதால் அந்நாட்களில் மக்கள் பெருவாரியாக வந்து ஆங்காங்கே நீராடுவர். நீராடுவதற்கேற்ற முறையில் பல படித்துறைகள், குளியலறைகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன.


**வெள்ளாறு – 2** : இந்த ஆறு சேலம் மாவட்டம் கொல்லிமலைப் பகுதியில் தோன்றி பச்சைமலை வழியாக ஓடி, திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களில் பாய்ந்து பரங்கிப்பேட்டைக்கு அருகில் கடலுடன் கலக்கிறது. இது பல கிளையாறுகளைப் பெற்றுள்ளது. இதனைத் தென்வெள்ளாறு என்பர். இதன் துணை ஆறான வசிட்டா ஆறு (பேராறு) சேலத்திலுள்ள கல்வராயன் மலையில் தோன்றி திருச்சி, தென்னார்க்காடு மாவட்டங்களுக்கு இடையில் ஓடி விருத்தாலம் வட்டத்திலுள்ள தொழுதூருக்கு மேற்கே 6 கி.மீ. தொலைவில் இவ்வாற்றுடன் கலக்கிறது. பின்னர் வட ஆர்க்காடு மாவட்டத்திற்கும் திருச்சி மாவட்டத்திற்கும் எல்லையாக ஓடுகிறது. பல சிற்றாறுகள் சேர்ந்த மணிமுத்தாறு இதற்குத் துணை ஆறு ஆகும். இவ்வாற்றிலுள்ள நீர்த்தேக்கங்களுள் இன்றியமையாதனவாகக் கருதப்படுவன தொழுதூர் அணையும், பலாந்துறை அணையும் ஆகும் . தொழுதூர் அணையிலிருந்து வெளிங்டன் நீர்த்தேக்கத்திற்கும், உகலூர் ஏரிக்கும் நீர்கொண்டு செல்லப் படுகின்றது. பலாந்துறை அணையினாலும் மற்றைய நீர்த்தேக்கங்களாலும் சேலம், திருச்சி, தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகள் நீர்ப் பாசனப் பயன்களைப் பெறுகின்றன. கழி முகத்திலிருந்து சில கி.மீ. தொலைவுவரை படகுப் போக்குவரத்து நடைபெறுகிறது. இவ்வாற்றின் நீளம் ஏறத்தாழ 224 கி.மீ. ஆகும். மூன்றாம் நந்திவர்மன் பாண்டியனைத் தோற்கடித்த போர்களில் தெள்ளாற்றுப் போரைப் போல வெள்ளாற்றுப்போரும் சிறந்த போராகும்.

-க.அ.

**வெள்ளைவாரணார், க** : இவர், தஞ்சை மாவட்டம் திருநாகேச்சுரத்தில் 14.1.1917-இல் கந்தசாமி முதலியாருக்கும் அமிர்தம் அம்மையாருக்கும் மகனாய்ப் பிறந்தவர். திருப்பெருந்துறை தேவாரப் பாடசாலையில் 1928-1930 வரை பயின்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1931-1935 வரை பயின்று வித்துவான் முதல் வகுப்பில்முதன்மை பெற்றார். பயின்ற பல்கலைக்கழத்தில் 1943-1979 வரை சிறப்பாகப் பணி செய்தார். இவர் போதக ஆசிரியராகவும், நூலாசிரியராகவும், உரையாசிரியராகவும், திகழ்ந்தார். திருமுறை, சைவசித்தாந்தம் முதலிய துறைகளில் ஆழ்ந்த புலமையும் தேர்ச்சியும் மிக்கவர். ஓய்வு பெற்றபின் மதுரைப் பல்கலைக்கழகத்தில் 1980-1982 வரை சிறப்புப் பேராசிரியராக அமர்ந்து தொல்காப்பியம்-பொருளதிகாரத்திற்கு(அகத்திணை நீங்கலாக) சிறந்த விளக்கவுரை எழுதினார். இவர் 1982 -முதல் 1984 முடிய உள்ள காலத்தில் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக இலக்கியத்துறையின் சிறப்புப் பேராசிரியராகத் திகழ்ந்தார். இவருடைய சீரிய தலைமையின் கீழ் சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் சிறப்பாக உருவாகியது.

பேராசிரியர், இயல், இசைப் புலமையர். பண் ஆய்வாளர், திருமுறைக் கலைஞர் பன்னூல் ஆசிரியர், பலபேராசிரியர்களுக்குப் பாடம் நடத்திய பெரும் பேராசிரியர்.

இவரைச் சைவத் திருமடங்கள் மதித்துப் போற்றின. இவர் எழுதிய திருமுறை வரலாறு (இரு தொகுதிகள்) என்னும் பெருநூல் இவருக்குப் பேரும் புகழும் தந்தது. அது தமிழக அரசு முதற்பரிசையும் பெற்ற சிறப்புடையது. திருமுறை ஆராய்ச்சிக்கு மூல நூலாய், முதல் நூலாய் விளங்குகிறது. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் சொல்லதிகாரத்திற்குத் தெளிவுரை எழுதியுள்ளார். தொல்காப்பியம், நன்னூல் இரண்டையும் ஒப்பிட்டு, ஒப்பாய்வு படைத்துள்ளார். திருமந்திரம் பாடல் பலவற்றிற்கு உரை வகுத்துள்ளார். இவர் எழுதிய திருவருட்பா சிந்தனை, திருமுறைகளையும் திருவருட்பாவையும் ஒப்பிட்டு நுண் பொருள் ஆராய்ந்து ஒருமை கண்ட சிறந்த நூலாக அமைந்து அரசின் பரிசினைப் பெற்றது. தமிழிலக்கிய வரலாற்றில் திருமுறை வரலாற்றிற்க்குத் தனிச்சிறப்பு உண்டு. ஆய்வுலகில் ஒளிபரப்பும் ஞாயிறு கருத்துச் சுரங்கமாய் வரலாற்றுப் பேழை



வெள்ளைவாரணார், க.

யாய், திருமுறை வளம் காட்டும் கண்ணாடியாய் விளங்குகிறது.

தமிழகப் பல்கலைக்கழகங்கள் அனைத்திலும் பாடக்குழு, தேர்வுக்குழு ஆளவை, ஆட்சிக்குழு அனைத்திலும் சீரிய முறையில் செயலாற்றிய செம்மலாகிய இவர் தொல்காப்பியக் கல்வியில் வல்லவர்; சங்க இலக்கியக் கல்வியில் தகைமைசால் புலமையர்; திருமுறைக் கல்வியில் தேர்ச்சி மிக்கவர். இம்மூன்றிலும் முறையான புலமை பெற்ற முது பெரும்புலவர். இவர் பெருநூல் பல படைத்த பேரறிஞர். பேராசிரியர் வெள்ளை வாரணரும், பழுத்த பேரானந்தப் பழமாக ஆழ்பெரும் புலமையோடு அளித்த தமிழ் நூல்களும் நிலைத்து நின்று பயன் நல்க வல்லன.

உரை எழுதிய நூல்கள் : திருவருட் பயன், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், திருமந்திர அருள் முறைத் திரட்டு, காரைக்கால் அம்மையார் நூல்கள் முதலியன.

ஏடு பார்த்துப் பதிப்பித்தவை: பரத சங்கிரகம், கம்பராமாயணம் பாடவேறுபாடுகளுடன் அமைந்த பதிப்பு. விபுலானந்தர், பண்டிதமணி, நாவலர் பாரதியார், உமாமகேசுவரம் பிள்ளை முதலிய பெருமக்களுக்கு தொண்டராய், தோழராய், வாழ்ந்த சிறப்புடையவர். இவர், 1939 -இல் தமிழகத்தில்ஏற்பட்ட மொழிப்போரில் 'காக்கை விடுதூது' என்னும் பெயரில் நூல் இயற்றி மொழி காத்த மறவர். கரந்தைத் தமிழ்ச்சங்கம், திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கம், தமிழகப் புலவர் குழு முதலிய சங்கங்களில் உறுப்பினராய் விளங்கி வழிகாட்டிய சிறப்பு இவருக்குண்டு

பெற்ற விருதுகளில் மதுரைத் திருஞான சம்பந்தர் ஆதினம் வழங்கிய "திருமுறைத் தெய்வமணி", காமகோடி சங்கராச்சாரிய சுவாமிகள் வழங்கிய "திருமுறை உரைமணி", தருமையாதீனம் வழங்கிய "திருமுறை ஆராய்ச்சிக்கலைஞர்", குன்றக்குடி ஆதீனம் வழங்கிய "முது பெரும்புலவர்", தமிழக தேவார ஓதுவார்கள் சங்கம் வழங்கிய "சங்கநூற் பெரும் புலமைச் சான்றோர்", கரந்தைத் தமிழ்ச் சங்கம் வழங்கிய "செந்தமிழ்ச்சான்றோர்", தமிழக அரசு வழங்கிய "கலைமாமணி", சென்னைச் சிவநேய பேரவை வழங்கிய "சிவக்கணிமணி" முதலிய குறிப்பிடத் தக்கன. இவர் 13.6.88 -இல் காலமானார்.

-ச.மெ.

**வெளிஅங்காடி நடவடிக்கை** : பொருளாதார மந்தக் காலங்களில் பத்திரங்களை வாங்குவதன் மூலம் பணப் புழக்கத்தை அதிகப்படுத்தவும், பொருளாதார மலர்ச்சிக் காலங்களில் பத்திரங்களை விற்பதன் மூலம் பணப்புழக்கத்தைக் குறைவிக்கவும் நாட்டின் மையவங்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளை வெளிஅங்காடி நடவடிக்கைகள் என்பர்.

மைய அரசும், மைய வங்கியும் பணத்தை வெளியிடுகின்றன. வாணிகப் பாங்குகள் கடனை உற்பத்தி செய்கின்றன. பணத்தின் அளவும் கடனின் அளவும் சேர்ந்து நாட்டின் மொத்தப் பண அளவை (Quantity of Money) நிருணயிக்கின்றன. நாட்டில் நிலவும் மொத்தப் பண அளவு பொருளாதார மலர்ச்சிக் காலத்தில் அல்லது பொருளாதார மந்தக் காலத்தில் பல்வகை விளைவுகளைத் தோற்றுவிக்கின்றன. எனவே, பொருளாதார மலர்ச்சிக் காலத்தில் தோன்றத்தக்க பணவீக்கத்தையும் (Inflation), பொருளாதார மந்தக் காலத்தில் தோன்றத் தக்க பணவாட்டத்தையும் (Deflation) நீக்கிப் பொருளாதார நிலையை உறுதிப் படுத்தவும், வங்கியும் பல நடவடிக்கைகளை மேற்

கொள்வது இயல்பு. இந்த நடவடிக்கைகளைக் கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகள் (Quantitative Credit Control Methods), கடன் தன்மைக் கட்டுப்பாட்டு முறைகள் (Qualitative Credit Control Methods) என இருவகைப்படுத்துவர். அவற்றில் கடன் அளவுக் கட்டுப்பாட்டு முறைகளில் பாங்கு வீதக் கொள்கை (Bank Rate Policy), வெளி அங்காடி நடவடிக்கைகள் (Open Market Operations), உரொக்க இருப்பு வீத மாறுதல்கள் (Changing the Reserve Ratio) என்பன சிறப்பானவை.

வெளி அங்காடி நடவடிக்கைகள் : மைய வங்கி அரசுப் பத்திரங்களை விற்றுப் பணத்தை அங்காடியிலிருந்து பெற்றுக் கொள்வதன் மூலம் கடன் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துகிறது, அரசுப் பத்திரங்களை வாங்கிப் பணத்தை அங்காடியில் வெளியிடுவதன் மூலம் கடன் பெருக்கத்திற்கு வகை செய்கிறது. மையப்பாங்கில் இந்நடவடிக்கையே வெளி அங்காடி நடவடிக்கை.

வங்கி வீதக் கொள்கையின் குறைகளினால் வெளி அங்காடி நடவடிக்கைகள் அவசயமாகிறது என்று பேராசிரியர் காம் (Professor Halm) குறிப்பிடுகிறார். பண அளவைக் கட்டுப்படுத்த விரும்பும்போது மைய வங்கி இந்த நடவடிக்கையை மேற்கொள்கிறது.

செயற்படும் விதம் : மைய வங்கி பத்திரங்களை விற்கும்போது அவற்றிற்கென உரொக்கத்தை அல்லது வாணிக வங்கி மீது வரையப்பட்ட காசோலைகளை அல்லது வரைவோலைகளைப் பெறுகிறது. உரொக்கமாகப் பெறும்போது புழக்கத்திலிருக்கும் மொத்தப் பண அளவு குறைகிறது. காசோலைகளாகவும், வரைவோலைகளாகவும் பெறும் போது வாணிக வங்கி உரொக்க இருப்புக் குறைகிறது. இவ்விரண்டும் கடன் பெருக்கத்தைக் குறைக்கும் வாய்ப்புகளைத் தோற்றுவிக்கின்றன. மைய வங்கிப் பத்திரங்களை வாங்குபோது உரொக்கமாகப் பணத்தைக் கொடுக்கிறது அல்லது காசோலைகளைக் கொடுக்கிறது. காசோலை பெறுவோர் வாணிக வங்கி அவற்றை வைப்பாக விடுக்கும்போது அவற்றின் உரொக்க இருப்பு அதிகரிக்கிறது. இவ்விரண்டும் கடன் உரொக்கத்தை அதிகரிக்கும் வாய்ப்புகளைத் தோற்றுவிக்கின்றன.

சிறப்பும் பயனும் : வங்கி வீதத்தை அதிகரிக்கும் போது வாணிகவங்கி மைய வங்கியை அணுகும் போதுதான் பலன் கிடைக்கிறது. ஆனால், வெளி அங்காடி நடவடிக்கைகளில் நேரடியாகவே பொது மக்களிடம் புழங்கும் பணத்தின் அளவும் பாங்குகளின் உரொக்க இருப்பு அளவும் குறைக்கப்படுகிறது / அதிகரிக்கப்படுகிறது. எனவே, எல்லா வழிகளிலும் வங்கி வீதத்தைக் காட்டிலும் வெளி அங்காடி நடவடிக்கைகள் மிகவும் சிறப்பானவையாகும்.

வெளி அங்காடி நடவடிக்கையின் பயன்கள் பல. முதலாவதாக, வங்கி வீதக் கொள்கைக்கு ஆதரவாக இவை அமைகின்றன. இரண்டாவதாக, அரசுப் பத்திரங்களின் விலைகளில் உறுதித் தன்மையை ஏற்படுத்த இவை உதவுகின்றன. மூன்றாவதாக, இந்நடவடிக்கைகளினால் உள்நாட்டு விலைகளும், வேலை, வருமானம் ஆகியவையும் மாற்றமடைகின்றன. இறுதியாக, பொருளாதாரத்தில் ஒருசில பருவங்களில் பணப்பற்றாக் குறையையும், வேறு சில பருவங்களில் மிகையான பணப்புழக்கமும் இருப்பதைத் தவிர்க்க இவை உதவுகின்றன.

வரையறைகள் : கடன் கட்டுப்பாட்டு முறை என்ற வடிவத்தில் வெளி அங்காடி நடவடிக்கைகளும் எதிர்பார்க்கும் பலனைத் தாராமல் போகலாம். அதற்கான காரணங்கள் பல . 1. வாணிக வங்கிகள் உரொக்க இருப்பு குறையும்போது கடன்களைக் குறைக்கின்றன, உரொக்க இருப்பு அதிகரிக்கும் போது கடன்களை மிகுதியாக்குகின்றன என்ற எடுகோளின்படி வாணிக வங்கிகள் நடந்துகொள்ளும் என்று உறுதியாகக் குறிப்பிட முடியாது. தொழில் முயல்வோர்கள் எதிர் காலத்தில் ஆதாயம் பெறும் வாய்ப்பு எவ்வாறு இருக்கும் என்று கருதுவதன் அடிப்படையில்தான் பெரும்பாலும் முதலீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2. தொழில் மந்தக் காலங்களில் உரொக்க இருப்பு அதிகமாக இருந்தாலும் வாணிகப் பாங்குகள் கடன் பெருக்க முயற்சிகளை மேற்கொள்ள மாட்டா, முதலிடுபவர்களும் முன்வர மாட்டார்கள். 3. பணஅங்காடி நன்கு அமையப் பெறாத வளரும் பொருளாதாரங்களில் வெளி அங்காடி நடவடிக்கைகள் எதிர்பார்க்கும் பலனைத் தராமற் போகலாம்.

இந்தியாவில் வெளி அங்காடி நடவடிக்கைகள் : இரண்டாம் உலகப் பெரும் போருக்கு முன்னால் வெளி அங்காடி நடவடிக்கைகள் மிகவும் குறைவாகவே இருந்தன. கொரியப் போரினால் *1948-1951* ஆண்டுகளில் தோன்றிய பணவீக்கத்தைக் கட்டுப் படுத்த ஏறத்தாழ உரூ.200 கோடிக்குப் பத்திரங்களை மையவங்கி வாங்கியது. அதன்பிறகு கொள்கை மாற்றம் ஏற்பட்டு ஏறத்தாழ ரூ.50 கோடிக்குப் பத்திரங்களை விற்றது; பின்னர் *1967 - 1968* -இல் உரூ.*53.4* கோடிக்கும், *1968-1969*-இல் உரூ.*30* கோடிக்கும் *1969-1970* -இல் ரூ.*84.1* கோடிக்கும், *1970-1971*-இல் உரூ.*137.7* கோடிக்கும், *1971-1972*-இல் ரூ.*56.1* கோடிக்கும் பத்திரங்களின் விற்பனை இருந்தது.

வெளி அங்காடி நடவடிக்கைகள் சீரான முறையில் செயற்பட வேண்டுமானால், 1. மைய வங்கி ஏராளமான கடன் பத்திரங்களை வைத்திருக்க வேண்டும். 2. நன்முறையில் வளர்ச்சியடைந்த உண்டியல் அங்காடி (Bill Market) இருக்க வேண்டும். இந்தியாவில் இந்நிலைகள் காணப்படவில்லை. எனவே, வெளி அங்காடி நடவடிக்கைகள் செயல் திறன் மிக்கதொரு கடன் கட்டுப்பாட்டு முறையாக இந்தியாவில் செயற்படவில்லை என்று குறிப்பிடுவர்.

-என்.எஸ்.பா.

**துணை நூல் :**

என். எஸ்.பாலசுப்பிரமணியன், **பணம், பாங்கு, பன்னாட்டு வாணிகம்**, உமா பப்ளிகேஷன்சு, மதுரை-1987.

**வெளி நரம்புத் தொகுதி :** மனிதரின் நரம்பு மண்டலம், மூளை, முதுகுத் தண்டு, உடலின் பல்வேறு பாகங்களில் உள்ள உணர்வு முடிச்சுகள் ஆகியவற்றிற்கு உணர்வுச் செய்திகளை அனுப்பும் நரம்புகள், பல்வேறு பகுதிகளின் உணர்வுச் செய்திகளையும் பெறும் நரம்புகள் முதலியவற்றை உள்ளடக்கியுள்ளது.


மூளையும், முதுகுத் தண்டும் 'மத்திய நரம்பு மண்டலம்' என்று குறிக்கப்படுகின்றன. செய்திகளைப் பெறுகின்றனவும் அனுப்புகின்றனவுமான நரம்புகள், உடலின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள 'நரம்பு மண்டலம்' எனப்படுகிறது. அந்நரம்பு மண்டலத்தில், உடலுக்குள்ளும், உடலுக்கு வெளியிலும் நிகழும் உணர்வுச் செய்திகளைத் தொகுத்து மூளைக்கும், முதுகுத் தண்டுக்கும் அளிப்பன ஒரு வகை; மூளை அல்லது முதுகுத் தண்டிலிருந்து உடலின் பல்வேறு பகுதிகளுக்கும் உணர்வுச் செய்திகளை அனுப்புவன மற்றொரு வகை. பொதுவாக மூளையிலும் முதுகுத் தண்டிலும் உள்ள சில நரம்புகள் அங்கு வந்தடையும் செய்திகளையும் அங்கிருந்து அனுப்பப்படும் செய்திகளையும் இணைகின்றன. அவை தொடர்பு நரம்புகள் எனப்படுகின்றன.

உடலின் பகுதிக்கு ஏற்ப, அங்குப் பிரிந்து செல்லும் கிளை நரம்பு மண்டலம் பிரித்தறியப்படுகிறது. உடலின் இயக்கத்தைப் பெரிதும் கட்டுப்படுத்தும் தானியங்கித் தசைகளை வெளி நரம்புத் தொகுதி கட்டுப் படுத்துகிறது.

வெளி நரம்புத் தொகுதி இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை ஒத்துணர்வு மற்றும் எதிர் உணர்வு நரம்புப் பிரிவுகளாகும் அவை இரண்டும் உடலின் சுரப்பிகளையும் குருதிக் குழாய்களின் செயல்களையும் கட்டுப்படுத்தி ஒருங்கிணைப்பன என்றாலும், மாறுபட்டுச் செயற்படுவன ஆகும்.

எடுத்துக்காட்டாக, அச்சம் அல்லது சினம் போன்ற உணர்வழுத்தத்துக்கு உடல் ஆட்படும் போது, ஒத்துணர்வு நரம்பு மண்டலத்தைச் சேர்ந்த நரம்பு நார்கள் விரைந்து செயற்படுகின்றன. அப்போது அந்நரம்பு மண்டலம் உடலுக்கு முன்னறிவிப்புச் செய்தி அனுப்பி ஆபத்து அல்லது அவசர நிலையைச் எதிர்ஏற்க உடலை ஆயத்தம் படுத்தி விடுகிறது. ஒத்துணர்வு நரம்புகளின் மூலம் அவசரச் செய்தி பெறும் உடலில், மாற்றங்கள் ஏற்படுகின்றன. இதயம் வேகமாகத் துடிக்கிறது; மிகுதியான குருதியை உடலுள் செலுத்துக்கிறது; மூச்சு வேகமாகிறது; விழிப் பாவைகள் விரிகின்றன. உணவு செரித்தல் நிறுத்தப்பட்டுக் குருதி உடலின் பிற பாகங்களுக்குச் செலுத்தப்பட்டு தாக்குதலைச் சந்திக்க உடல் ஆய்த்தமாகிறது.

**நரம்பு ம்ண்டலம்**




இதற்கு மாறாக, ஒத்துணர்வு நரம்புகள் அமைந்துள்ள பெரும்பாலான பகுதிகளிலும் அமைந்துள்ள எதிர் உணர்வு மண்டமும், அப்பாகங்களுக்கு ஒத்துணர்வு நரம்புகள் அனுப்பிய முன்னறிவிப்புச் செய்திக்கு மாறுபட்ட செய்தியைத் தருகிறது. பெரும்பாலும் அவை அச்சத்தைத் தவிர்க்கும் உணர்வையே அனுப்புகின்றன, பீதியை மாற்றி இயல்பு நிலை ஏற்பட உதவுகின்றன. அதன் விளைவாக இதயத் துடிப்பு இயல்பான வேகத்துக்கு வருகிறது. உணவு செரிமானம் சீராக்கப்படுகிறது. மூச்சு இயல்பாகிறது. விழிப்பாவைகளும் இயல்பு நிலைக்குத் திரும்புகின்றன. இவ்வாறு, ஒத்துணர்வு மற்றும் எதிர் உணர்வு நரம்புகளும் ஒரே நேரத்தில் செயற்பட்டு உடலின் உணர்வு நிலையைச் சீராக்குகின்றன.

- வி.ந.

**வெளியீட்டுக்கோட்பாடு** : பழக்கமாகிவிட்ட ஒன்றைப் பழக்கத்தின் வாயிலாகவே தீர்த்துக்கட்டவோ, மாற்றவோ, நீக்கவோ முடியும் இது விழுங்கியதைக் கக்கவைப்பது போன்றது. இதை நிகழ்விப்பதற்கான பொறுப்பை உளவியல் வல்லுநர் ஏற்பார். பழக்கப்பட்டுவிட்ட தூண்டதலுக்கு எப்பொழுதும் அளிக்கும் துலங்கலை மாற்றிப் புதுத்துலங்கலை அளிக்க முயலுதல்தான் புது முயற்சி, தான் தளர்ந்த நிலையில் இருக்கப் பழகுவதுடன் பிறருடனும் இயல்பாக ஏந்தவித இறுக்கமும் இல்லாமல் பழகவும் பேசவும் முயலுதல் நல்லது.இதனை அடைவது அவ்வளவு எளிதன்று. உளவியல் வல்லுநர் நோயாளியிடம் நீதியையோ, பண்பையோ பேசுவதில்லை. அவருடைய நடத்தையைப் பற்றிய தீர்ப்பையும் அளிப்பதில்லை. இதனால் நோயாளி தன் மனத்தைத் திறக்க வாய்ப்பு ஏற்படுகிறது. நெறிப்படுத்தும் வல்லுநருடன் இருப்பதே ஒருவித பாதுகாப்பு என்ற உணர்வை ஏற்படுத்திவிட்டாலே போதுமானது. மனவெளியீட்டுக் கோட்பாட்டின்படி நடிப்பின் மூலம் அழுந்திக் கிடக்கும் உணர்வுகளை வெளிப்படுத்த முடியும். ஒரு பெண் ணின் பட்டறிவு இதனை நன்கு விளக்கும்.

ஒரு பணக்காரப் பட்டதாரிப்பெண் தனக்கு வசதிகள் இருந்தும் 5 மாதங்களாக வீட்டை விட்டு வெளியே வரவில்லை. இவருக்கு வயது 36. மூன்று குழந்தைகளுக்குத் தாய். நன்றாக மகிழுந்து (Car) ஓட்டவும் தெரியும். பம்பாயில் கணவருடன் வாழ்ந்து வந்தார் கணவன் அமெரிக்காவுக்கு நோய்வாய்ப் பட்டிருக்கும் தங்கையைக் காணப் புறப்பட்டார். அவருடன் அவருடைய தாயாரும் விமானம் மூலம் போவதாகத் திட்டம். குழந்தைகள் தம் தாத்தாவுடன் கோவைக்கு முன்னதாகவே அனுப்பப்பட்டனர். அது போலவே மனைவியை விமானம் மூலமாகக்

கோவைக்கு அனுப்பி வைத்தனர். கோவைக்கு வந்த திலிருந்து எதையும் செய்யாமல் இருப்பதுதான் வேலையாகிவிட்டது. திரைப்படத்திற்குக்கூட செல்ல மறுத்து வந்தார். நல்ல பட்டுச் சேலைகள் பல இருந்தும் அழுக்கடைந்த நூல்புடவைகளைத்தான் உடுத்துவார்.

இச்சிக்கலைத் தீர்த்து வைக்க உளவியல் வல்லுநர் ஒருவர் அழைக்கப்பட்டார். உதவ வந்த நெறியாளர் பேச அழைத்ததற்கு அந்த அம்மையார் அவரிடம் வர வில்லை. ஆகவே உரையாடல் சமையல் அறையில் நிகழ்ந்தது. அங்கும் கூட பாதி அளவு அலமாரிக்குப் பின்னால் மறைய முயற்சி நடந்தது. இந்த நெறி யாளர் குடும்பத்திற்கு நன்கு பழக்கமானவர். வற் புறுத்திப் பேசவைக்கும் முயற்சி நடந்து கொண்டிருந் தது. 'எனக்கு ஒன்றுமில்லை' அல்லது 'எல்லாம் சரி யாகத்தான் உள்ளது' என்ற ஒரேவிதமான விடைகள் தாம் திருப்பித் திருப்பிக் கூறப்பட்டன. முகத்தில் பொய்யான புன்முறுவல், ஆனால் நெஞ்சு நிறைய வருத்தச்சுமை.

புறத்தே சென்றால் ஒரு வேளை தெளிவாகப் பேசக்கூடும் என்ற நம்பிக்கையில் மகிழுந்தை ஓட்டி வர அந்தப் பெண்ணிற்கு யோசனை கூறப்பட்டது. இதைக் கேட்டவுடன் அந்தப் பெண்மணி துள்ளிக் குதித்து மகிழுந்து திறவுகோலை எடுத்து வண்டி யையும் ஆய்த்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டார். இதெல்லாம் மிகவேகமாக நிகழ்ந்தாலும் பேசாது இருவரும் புறப்பட்டனர். இன்னும் சரியாகப் பேச வில்லை. 'கல்லார் பழத்தோட்டம் வரை போய் திரும்பிவிடலாம்' என்று அவர் கூறியதும் அந்தப் பெண் வெகுவேகமாக மகிழுந்தை ஓட்டினார். விபத்து ஏதும் நிகழ்ந்து விடக்கூடாது என்பதற்காக அவர் பேசாதிருந்தார். வண்டியானது வேகமாக ஆக அந்தப் பெண்ணிற்குத் தெம்பும் மிகுந்து கொண்டே போயிற்று. வீடு திரும்பும் போதும் அதே வேகம் தான்.

கணவன் வீட்டார் வேகமாக இவரை ஊருக்கு அனுப்பி வைத்தது இழிவாகக் கருதப்பட்டது. அடி மனத்தில் இந்த உணர்வானது உறுத்திக் கொண்டே இருந்தது. விமானம் பறப்பதைப் போன்ற வேகத்தில் மகிழுந்துவை ஓட்டியதில் (அந்த நிலைப்பில்) உள்ளத்திலிருந்து ஆத்திரம் புறத்தே வந்ததும் அமைதி கிடைத்தது. அன்று அவருடைய கணவன் அமெரிக்கா விலிருந்து பம்பாய்க்குத் திரும்புகிறார் என்பது இந் தப் பெண்ணுக்கு மட்டும்தான் தெரியும். வீட்டில் வேறு எவருக்கும் தெரியாது. இந்தச் செய்தியை எவருக்கும் சொல்லவும் இல்லை. புறத்தே வேகமாக மகிழுந்துவை ஓட்டி நிகழ்த்திய புயல் உள்ளத்தூடே இருந்த புயலைத் தணித்தது. இப்பொழுது புறத்தே யும் அமைதி.

தனக்கு ஏற்பட்ட சிக்கலைத் தானே தீர்த்துக் கொள்ள முடிந்ததைக் காணலாம். அழுந்திக் கிடந்த உணர்ச்சியை வேகமாகக் காரை ஓட்டித் தன் ஆத்திரத் தைத் தீர்த்துக் கொண்டதாகக் கொள்ள வேண்டும். மனப்போராட்டம் உண்டான வேகத்திலேயே வெளிப்படுத்திக்கொள்ள முடிந்ததனால் இறுதியில் உள் அமைதி நிலவுகிறது. மன வெளியீட்டுக் கோட் பாட்டில் பின்விளைவு இது.

-எம்.பெ.

**வெறுப்புக் கொள்கையினர்** : பழமை யையும் பயன்படாத தத்துவத்தையும் வெறுத்த கொள்கையினர், வெறுப்புக் கொள்கையினர் எனப் பட்டனர். கிரேக்க நாட்டில் ஓர் அடிமைப் பெண்ணிற் குப் பிறந்த ஆண்டிசுதெனிசு (Anthisthenes) என்பவர், சாக்கரடீசுக்குப் பின்னர் வெறுப்புக் (Cynicism) கொள்கையினைப் போதித்தார். 'நாய் எவ்வாறு எளிமைத் தன்மையோடு வாழ்கிறதோ அவ்வாறு மனிதனும் எளிமைத் தன்மையுடன் வாழ வேண்டும்' என்பது அவர் வலியுறுத்திய வெறுப்புக் கொள்கை யின் அடிப்படைக் கருத்தாகும். வெறுப்புக் கோட் பாட்டினரை உணர்த்தும் ஆங்கிலச் சொல்லின் (Cynics) வடிவம், அதன் கிரேக்க மூலமொழியில், 'நாயொடு தொடர்புடையது' என்னும் பொருள் படும் சொல்லிலிருந்து தோன்றியதாகும். வெறுப்புக் கொள்கையை வற்புறுத்தியவர்களுள் ஒருவரான தியோசினிசு என்பவரின் கல்லறை மீது எழுப்பப் பட்ட தூணில், சலவைக் கல்லினாலான ஒரு நாயின் படிமத்தைப் பொருத்துமளவு, வெறுப்புக் கொள்கை யினரோடு நாய் தொடர்புபடுத்திப் பேசப்பட்டது. கள்வர்களை நாய் குரைப்பது போல நடைமுறைக்கு ஒவ்வாத தத்துவங்களைக்கண்டு அவர்கள் சாடினர்.

சாக்ரடீசு (கி.மு.399-299) இறந்து ஒரு நூற்றாண்டளவு, வெறுப்புக் கொள்கையினர் புகழுடன் விளங்கினர். வெறுப்புக் கொள்கையினர் தத்துவத்தைவிட வாழும் முறைமைக்கு அதிக முதன்மை கொடுத்தனர். இவர்களைப் பற்றிய முதல் நூல்கள் இப்போது கிடைக்கப் பெறாமையால், இவர்களைப் பற்றி முழுமையாக அறிய இயலவில்லை. வெறுப்புக் கொள்கையினர் தூய கிரேக்க மரபின் வழியில் வளர்க்கப்படவில்லை. தத்துவம் என்பது கிரேக்க மரபில் அறிவின் நாட்டம் (Love of Wisdom) என்று விளக்கப்பட்டது. அவ்வகையில் அறிவும் நன்னடத்தையும் இணைக்கப்பட்டன. வெறுப்புக் கொள்கையினர் பயன்படுதலுக்கு (Utility) அதிக முதன்மை கொடுத்து, தத்துவம் என்பதன் உண்மைப் பொருளுக்கு மதிப்பில்லாமல் செய்தனர். சாக்ரடீசு அக்காலச் சமுதாயத்திலிருந்த சில கொள்கைகளை எதிர்த்தார். அவர் மேற்கொண்டிருந்த மேலான அறத்தை அடிப்படையாகக் கொண்டே சாக்ரடீசு தம் காலத்திலிருந்த ஒவ்வாக் கொள்கைகளை எதிர்த்தார். வெறுப்புக் கொள்கையினர், சாக்ரடீசு அடிப்படையாகக் கருதிய மேலான அறத்தைக் கைக்கொள்ளாமல், தம் காலத்திலிருந்த கொள்கைகளை எதிர்ப்பதையே தம் முழு நோக்கமாகக் கருதினர். உயரிய அடிப்படை இன்றி எதிர்ப்புக்காக மட்டுமே எதிர்த்தல், தம்மை நன்னெறியில் உய்க்காது என்பதை வெறுப்புக் கொள்கையினர் உணரவில்லை.

வெறுப்புக் கொள்கையினர் மனவள (Mental Culture) மேம்பாடு, அறிவியலில் பயிற்சி (Scientific Training) ஆகிய இரண்டையும் மறுத்தார்கள் என்பது கூறுப்படுகிறது. ஆயினும், அறிவியலில் ஆய்வு செய்தலை நற்பண்புகளைக் கடைப்பிடித்தலுக்கு வழியாகக் கொண்டனர் என்று கூறுவதே பொருத்தமாகத் தோன்றகிறது. ஆகவே வெறுப்புக் கொள்கையினர் பிளேடோ போன்றோரின் கொள்கைகளை எதிர்த்தாலும், அவர்கள் காலத்திலிருந்த அறிவு ஆய்வுச் சிக்கல்களை வெறுப்புக் கொள்கையினராலும் தவிர்க்க இயலவில்லை. மொழிக்கும் எண்ணத்துக்கும் (Language and Thought) உள்ள உறவு இவர்கள் காலத்தில் முக்கிய செய்தியாக இருந்தது. அறம், அரசியல் பற்றிய கருத்துகள் சமுதாயத்தில் மக்கள் எவ்வாறு நடக்கிறார்கள் என்பதைக் குறிக்கும் அளவுக்குத் தாழ்ந்தது.

பதங்களைப் பற்றி ஆய்வு செய்வது கல்வியின் தொடக்கம் பதங்களைச் சரியான முறையில் பயன்படுத்துவது கல்வியின் நோக்கம் என்பது போன்ற கருத்துகள் வெறுப்புக் கொள்கையினரால் வெளியிடப்பட்டன. ஆன்டிசுதனீசு (Antisthenes) எழுதிய பதங்கள் பற்றி (on words) என்னும் நூல் இப்போது இழக்கப்பட்டதால், வெறுப்புக் கொள்கையினர் அவ்வகையில் கொண்டிருந்த கருத்துகளை இன்று முழுமையாக உணர இயலவில்லை.

வெறுப்புக் கொள்கையினர் மேற்கொண்டிருந்த அறிவு ஆராய்ச்சிக் கொள்கைகள் சாக்ரடீசு, சார்சியசு (Gorgias), இப்பியசு (Hippias) ஆகியோரின் கொள்கைகளிருந்து உருப்பெற்றன. துறவு என்பது உயர்நிலையை அடைவதற்கு வழியாகச் சாக்ரடீசால் கருதப்பட்டது. ஆனால் வெறுப்புக் கொள்கையினர் உயர்நிலையை மறந்து, துறவைத் துறவுக்காகவே கடைப்பிடித்தனர். சமுதாயத்தில் உள்ள நடைமுறைகளைக் கடைப்பிடிக்க அஞ்சி, இயற்கைக்குத் திரும்புவோம் (Back of Nature) என்னும் கொள்கையை இவர்கள் கடைப்பிடித்தனர். அவ்வகையில் வெறுப்புக் கொள்கையினர் சாக்ரடீசு கடைப்பிடித்த உயர்நிலை அறத்தை அடைவதற்கு வழியாகக் கூறிய எதிர்மறை முறைகளையே அதிகம் வற்புறுத்தினர் எனலாம்.

பழைய மரபில் நம்பிக்கை இழத்தல், சமுதாய நிறுவனங்களின் பணியில் மக்களின் நம்பிக்கையை ஒரு வகையில் குறைக்கிறது. உயர்நிலை அறவியல் தோன்றுவதற்கு அந்நிலை வழி வகுக்கிறது. பெலோபனேசியப் போர் (Peloponnesian War) சாதாரண மனிதனை அறவியல் பற்றிய கேள்விகளைக் கேட்குமாறு தூண்டியது. மேலும், மரபு வழியில் வந்த சமுதாய நிறுவனங்களோடு, புதிய புதிய சமுதாய நிறுவனங்களும் ஏற்பட்டன. "ஏதென்சு மக்களாகிய நாங்கள் மட்டுமே பொதுப்பணிகளில் அக்கறை கொள்ளாத மனிதனைத் தீங்கற்ற மனிதன் (Harmless man) என்று கூறாமல், சமுாயத்திற்குப் பயனற்ற (Useless member of Society) மனிதன் என்று கூறுகிறோம்" எனப் பெரிக்கிளசு என்பவர் கூறினார். தேவைகளே இல்லாமல் இருப்பது தெய்வீக நிலை. எந்த அளவுக்குக் குறைத்துக் கொள்ளுதல் தெய்வீக நிலையை அடைதற்கு வழியாகும் என்று சாக்ரடீசு

கூறினார். வெறுப்புக் கொள்கையினர் சாக்ரடீசின் அது போன்ற கருத்துகளை மட்டுமே வற்புறுத்தினர். சாக்ரடீசு கூறிய உயர்நிலை அறத்தை வற்புறுத்த வில்லை.

-ச.க.

**வென்று மண்கொண்ட சம்புவராயர் :** இவன் குலசேகர சம்புவராயரால் நிறுவப்பட்ட சம்புவராய மரபின், இரண்டாவது தனியரசை வலிமையும் சிறப்பும் உடையதாகச் செய்த மாமன்னன். இவன் ஏகாம்பரநாத குலசேகர சம்புவராயரின் (கி.பி.1306 -1330) மகன். எனவே ஏகாம்பரநாதன் வென்று மண் கொண்ட சம்புவராயர் எனவும் குறிக்கப் பெறுகிறான். வென்று மண் கொண்ட சம்புவராயர் (கி.பி.1322 - 1339) கி.பி.1322 - இல் தனது தந்தையால் முடிசூட்டப்பட்டடான். கி.பி.1330 -இல் இவனது தந்தை இறக்கவே, சக்கர வர்த்திப் பட்டம் சூடிக் கொண்டான். கல்வெட்டு களில் இவன் 'சகலலோகச் சக்கரவர்த்திவென்று மண்கொண்டார்' எனக் குறிப்பிடப்பெறுகிறான். இப்பட்டத்தினைப் புனைந்து கொண்ட இம்மரபின் முதல் வேந்தன் இவனே.

இவ்வேந்தனது கல்வெட்டுகள் வடார்க்காடு, தென்னார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் மொத்தம் 19 கிடைத்துள்ளன. இவனது காலத்தில் சம்புவராயர் அரசு செங்கற்பட்டு, சிரீபெரும்புதூர், காஞ்சிபுரம், வந்தவாசி, குடியாத்தம், போளூர், வேலூர், வாலாசாப்பேட்டை ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

கி.பி.1325 முதல் கி.பி.1335 முடிய இவ்வேந்த னது கல்வெட்டுகள் யாண்டும் கிடைக்கவில்லை. இவன் முசுலிம் படையெழுச்சியால் சீரழிந்த நாட் டையும் கோயில்களையும் சீரமைப்புச் செய்வதில் முனைந்தான். எடுத்துக்காட்டாக திருவாமாத்தூர்க் கோயில் சீர்திருத்தம் செய்யப்பட்டதனைச் சுட்ட லாம்.

'திருமல்லிநாதன்', 'சென்ற திசை வென்றான்' முதலான பெயர்களும் இவனுக்கு உண்டு. இவனது பெயரால் சென்ற திசை வென்றான் திருவீதி. வென்று மண்கொண்டான் திருமண்டபம். வென்று மன்கொண்டான் திருவீதி ஆகியன அமைக்கப்பட் டன. இவ்வேந்தனது ஆட்சிக் காலத்தில் பொன்னூ ரில் அழகப்பெருமாள் கோயிலும், வளவியாற்றூரில் சிவன் கோயிலும், திருக்கச்சூர் சிவன் கோயிலில் அம்மன் ஆலயமும் அமைக்கப்பெற்றன. இவன் நலி வுற்ற வணிகக் குடிகளைப் பாதுகாப்பு மிக்க இடங் களில் குடியமர்த்தி, அவர்கட்கு வரிச்சலுகைகள் வழங்கி வாணிகம் வளரத்தக்க ஏற்பாடுகள் செய் தான், கலையில் தேர்ச்சி பெற்ற நாடக, கூத்துக் கலை ஞர்களைப் போற்றிப் புரந்தான்.


ஆர்ப்பாக்கிழான் காலிங்கராயன், எழும்போதன் கங்கையாடி மாதயன், பெருமாப்பிள்ளையான விசுவநாத தேவன் முதலான அரசியல் அதிகாரிகள் ஆட்சித்துறைச்சிறப்புறப் பணிபுரிந்தனர். 'ஏகாம்பர நாதன் சம்புவராயர் திருவடி நிலைக் கோல்' எனும் அளவு கோல் நிலம் அளக்கப் பயன்படுத்தப்பட்டது.

இவ்வேந்தனுக்குத் திருமல்லிநாதன் இராச நாராயணன், பொன்னின் தம்பிரான் இராச நாராயணன் எனும் இரு புதல்வர்கள் இருந்தனர். இவர்கள் முறையே கி.பி.1337, கி.பி.1338 -ஆம் ஆண்டுகளில் முடிசூட்டப் பெற்றனர். வென்று மண்கொண்டான் கி.பி.1339 -இல் காலமானான். இவன் ஐந்து ஆண்டுகளே தன்னுரிமை பெற்ற வேந்த னாக ஆண்ட போதிலும் சம்புவராயர் வரலாற்றில் தலைசிறந்த மன்னனாகப் போற்றப் பெறுகிறான்.


-ம.இரா.த.

**வெனிசுலா :** இது தென் அமெரிக்காவின் வடக்குக் கடற்கரைப் பகுதியில் உள்ளது. வெனிசுலா (Venzuela) குடியரசின் வடக்கே கரிபியன் கடலும் (Caribbean Sea), கிழக்கே கயானாவும் (Guyana), தெற்கே பிரேசிலும் (Brazil), மேற்கே கொலம்பியா வும் அமைந்துள்ளன. இதன் பரப்பு 9.12,050 ச.கி.மீ, மக்கள் தொகை 14.69 மில்லியன் (1982) ஆக உள்ளது. இம்மக்களின் மொழி இசுபானிய (Spanish) மொழி யாகும். இதன் தலை நகர் கேரகாசு (Caracas) நகரம்.

வெனிசுலாவின் நிலப்பகுதியை நிலவியல்படி நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை :




வெனிசுலா அமைவிடம்



மகுட்டோ கடற்கரை



வெனிசுலா தலைநகரம்

1. மாராகைபோ தாழ்நிலப் பகுதி (Maracabio Low lands), 2. வடக்கில் உள்ள உயர்நிலப்பரப்பு (The Northern Highlands), 3.ஒருனிக்கே சமவெளி (Orinoco Plains), 4.கியானாவின் உயர்நிலப்பரப்பு (Guiana Highlands).

வென்சுலாவின் வடக்குக் கடற்கரையில் பல சிறிய தீவுகள் உள்ளன. அவற்றில் மார்கரீட்டா (Margarita) மிகப் பெரியது. இத்தீவு முத்துக் குளித்தலுக்குப் பெயர் பெற்றது.

இங்கு தட்ப வெப்பம் உயரத்திற்கு ஏற்றவாறு வேறுபடுகிறது. கடற்கரைப் பகுதியில் வெப்ப மண்டலத் தட்ப வெப்பம் நிலவுகிறது. மலைப் பகுதிகள் மிகவும் குளிர்ச்சியாக இருக்கும். வெனிசுலா நகரங்களில் ஆண்டுமுழுவதும் இளவேனிற் காலநிலை இருக்கும். ஒரிஸிபோ சமவெளியில் வரண்ட பருவ நிலை திசம்பர் முதல் ஏப்ரல் வரையும், குளிர்ந்த பருவ நிலை மே முதல் திசம்பர் வரை நிலவும். வறண்ட காலத்தில் நிலப்பரப்பு சிமெண்டைப்போல் கடினமாக மாறிவிடும். குளிர்காலத்தில் ஆறுகளில் வெள்ளம் பெருகி எங்கும் நீர்வெள்ளம் காணப்படும்.

வெனிசுலாவில் விலைமதிப்புடைய பல கனிமச் செல்வங்கள் உள்ளன. அக்கனிமங்கள் பாறை எண்ணை, தங்கம், இருப்புத் தாது, மங்களம், நிலக்கீல் (Asphabt), வைரம் மற்றும் உப்பு ஆகியவை. பாறைஎண்ணை இந்த நாட்டின் மிகப்பெரிய கனிமச் செல்வமாகும். இந்நாட்டின் பெரும்பகுதி காடுகளாக உள்ளன. ஏறத்தாழ 600 வகை மரங்கள் இங்கு வளர்கின்றன. இக்காடுகளிலிருந்து இரப்பர், மரப்பிசின் மற்றும் மின்சாரக்கம்பிகள் செய்யப் பயன்படும் பல பொருள்கள், யாவும் கிடைக்கின்றன. வெனிசுலாக் காடுகளுக்குள் செல்வது எளிதன்று. பல இடையூறுகள் இருப்பதால், காடுகள் முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.



தலைநகர தலைமையகம்

வெனிசுலாவில் 50 விழுக்காட்டு மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் வடக்கே உயர்நிலங்களில் பயிரிடுகின்றனர். பண்ணைத் தொழிலும் பெருமளவு நடைபெறுகிறது. இங்கு பெருமளவு தானியங்கள் பயிர் செய்யப்படு கின்றன. வாணிகப் பயிர்களில் காப்பி முக்கிய இடத்தை வகிக்கிறது. பிற பயிர்கள் கரும்பு, நெல், பருத்தி, எள், காய்கறிகள், பழங்கள், கோகொ ஆகியவை ஆகும்.

தொழில்கள் சிறிது சிறிதாக வளரும் நிலையில் உள்ளன. அயல்நாட்டு தொழிலாளர்கள் மீது மிகுதி யான வரி விதிக்கின்றது. உள்நாட்டவர்க்கு கடனுதவி செய்து ஊக்குவிக்கிறது. இப்போது வெனிசுலாவில் பருத்தி ஆடைகள், சிமெண்டு, வெண்சுருட்டு, காலணி, மருந்து, கட்டடப் பொருட்கள், இரப்பர் குழாய்கள், இரப்பர் வண்டி வளயங்கள் முதலியன உற்பத்தியாகின்றன. இங்குப் பக்குவப்படுத்தப்படும் மாட்டிறைச்சி உலகின் பல பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

வெனிசுலாவில் பெரும்பாலான நகரங்கள் வடக்கு உயர்நிலங்களிலும் கரிபியன் கடற்கரைப் பகுதியிலும் உள்ளன. பல நகரங்களுக்குத் துறைமுக வசதி உள்ளது. தலைநகருக்கு இலாகுவாயிலா (Laguaira) எனும் துறைமுகம் உதவுகிறது. மாராகையோ இந்நாட்டின் இரண்டாவது பெரிய நகரம் ஆகும். இங்குள்ள சிறந்த துறைமுகங்கள் புவர்டோ கபிலோ (Puerto Cabello) மற்றும் சான்டா மார்ட்டா (Santamarta) ஆகும். தென்பகுதியில் உள்ள மிக முக்கிய நகரம் சிவிநாத் பொலிவர் (Civdad Bolivar) ஒரினோ நதிக்கரையில் அமைந்துள்ளது.

வெனிசுலாவை முதன்முதலில் கி.பி.1498 ஆம் ஆண்டு கிறிசுதபர் கொலம்பசு (Christobar Columbus) கண்டறிந்தார். வெனிசுலாவின் வடக்குப் பகுதியில் உள்ள குமணா (Cumana) என்னும் இடத்தில் ஏற்பட்ட குடியிருப்புதான் மிகவும் பழமையானது. இக்குடி




நவீன விரைவுப் போக்குவரத்து சாலை அமைப்பு

யிருப்பின் தொடக்கம் கி.பி.1512-ஆம் ஆண்டாகும். தென் அமெரிக்காவில் ஐரோப்பியர்கள் உருவாக்கிய முதல் குடியிருப்பு இதுவே.

கொலம்பசுக்குப்பின் கி.பி.1499 -ஆம் ஆண்டு மான்சே-டி-ஓசடா (Monsodeojeda) என்ற இசுபானியர் செய்த கடற்பயணத்தினால் இங்கு இசுபானியர்கள் குடியேறினார்கள். குடியேறிய பின் இந்நாட்டினை ஆராய முற்பட்டனர். இப்பயணத்தில் அமெரிக்காவைக் கண்டறிந்த அமெரிகோ வெசுபூசியும் (America Vespucci) இருந்தார். இக் குடியேறிகள் கடற்பகுதியில் இருந்த போர்த்தன்மை பெற்ற கரிபிய செவ்விந்தியர்களுடன் பல ஆண்டுகள் போர் புரிந்தனர்.

இசுபானிய அரசர் ஐந்தாம் சார்லசு வெனிசுலாவின் குடியேறும் உரிமையை செருமனியைச் சேர்ந்த வெல்சர் (Welser) வாணிகக் குழுவிற்கு வழங்கினார். இதனால் செருமானியக் குடியேற்றமும் இங்கு அமைந்தது. இதனை இசுபானியர்கள் எதிர்த்ததாலும், செருமானியர்கள் உள்நாட்டினரைக் கொடுமைப்படுத்தியதாலும் கி.பி.1546 -இல் குடியேற்ற உரிமையை அரசர் விலக்கிவிட்டார். அதன் பின் இந்த செருமானியக் குடியேற்றம் இசுபானிய அரசின்கீழ் வந்தது.

வெனிசுலாவின் சுதந்தரப் போராட்டம் கி.பி.1806 - ஆம் ஆண்டு நடைபெற்றது. கேரகாசில் பிறந்து வளர்ந்த மிராண்டா (Miranda) இம் முதல் சுதந்திரப் போராட்டத்தை நடத்தினார். ஆனால் இப்போராட்டம் தோல்வியுற்றது. மாவீரன் நெப்போலியன் இசுபானிய அரசரை அரசாட்சியிலிருந்து விலகச் செய்து யோசப் போனப்பார்ட்டையை (Joseph Bonapart) கி.பி.1808 -இல் அங்கு அரசராக்கினார். அப்போது வெனிசுலா இசுபானிய அரசின் கீழ் இருந்தது. வெனிசுலாவில் கி.பி.1810-இல் ஏற்பட்ட கிளர்ச்சியில் அதன் ஆளநர் தளபதி விலக்கப்பட்டார். பின்னர்க் கூடிய பேராளர் சபை கி.பி.1811 -ஆம் ஆண்டு வெனிசுலாவைச் சுதந்திர நாடாக அறிவித்



வெனிசுலா பெட்ரோலியத் தொழிற்சாலை

தது. இதுவே இலத்தின்- அமெரிக்காவில் முதன் முதலாகச் சுதந்திரம் அடைந்த குடியேற்ற நாடாகும். மிராண்டா கி.பி.1812-இல் இந்நாட்டின் சர்வாதிகாரியானார். ஆனால் அவரை இசுபானிய இராணுவம் உடனே சிறை செய்தது. அன்றிலிருந்து சுதந்திரப் போராட்டத்தை நடத்திய பெருமை சைமன் பொலிவர் (Simon Bolivar) என்ற சுதந்திர வீரரையே சாரும் இவர் தோல்வியடைந்தும் நாடுகடத்தப்பட்ட பின்னும் கி.பி.1819 -இல் படைகளைத் திரட்டி இசுபானியர்களை பயாக்கா (Bayaca) என்ற போர்க்களத்தில் தோற்கடித்தார். கொலம்பியாவுடன் இணைத்து வெற்றி பெற்ற வெனிசுலா. கி.பி.1829 -இல் தனித்த குடியரசாகியது.

வெனிசுலா ஒரு குடியரசு ஆக இருந்த போதிலும் அரசியல் சட்டத்தை சரிவரக் கடைப்பிடிக்கத் தவறியதால் சுதந்திரம் அடைந்த பின்னும் பல ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சியில் இருந்தது. அரசியல் சட்டப்படி குடியரசுத் தலைவரைப் பொதுத் தேர்தல் மூலம் 5 ஆண்டிற்கு ஒரு முறை தேர்ந்தெடுப்பர். இந்நாட்டின் பாராளுமன்றம் இரண்டு சபைகளை உடையது. 1. ஆளுநர் சபை (Senate), 2. பேராளர் சபை (House of Daputies), ஆளுநர் சபைக்கு மாநில அவைகளிலிருந்தும் ஊராட்சிக் குழுக்களிலிருந்தும் (Municipal Council) இருவரை ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுத்து இச்சபைக்கு அனுப்புவார்கள். சபைக்கு மக்கள் பொதுத் தேர்தல் மூலம் 5 ஆண்டுக்கு ஒரு முறை பேராளர் தேர்ந்தெடுப்பர். வாக்குச் சீட்டுக்கள் பல நிறங்களில் அமைவதால் கல்வி அறிவு அற்ற மக்கள் யாருக்கு எந்த நிறம் என அறிந்து எளிதில் வாக்களிப்பர்.

குடியரசுத் தலைவரே மாநிலங்களின் ஆளுநரையும் கூட்டாட்சி மாவட்டம், இரண்டு பிரதேசங்களின் ஆளுநரையும் நியமிப்பார். மாவட்டங்களையும், ஊராட்சியையும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் நிர்வாகத்தை நடத்தும்.

-தெ.பா.

**வேங்கடசாமி, மயிலை சீனி :** இவர் 1901-இல் மயிலையில் சீனிவாச நாயகருக்கு மகனாக எளிய குடும்பத்தில் தோன்றினார். தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கினார். தம் அண்ணன் சீனி. கோவிந்தராசனிடம் தமிழ் பயின்றார். செந்தமிழ்த் திங்கள் இதழ்களில் வந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பயின்று ஆராய்ச்சியில் வல்லவரானார். மறைமலை அடிகளுடைய நூல்களைக் கற்று ஆராய்ச்சி மனப்பான்மையும் தனித்தமிழ்ப் பற்றும் கொண்டார்.

சென்னைக் கன்னிமாரா பொது நூலகம், மறைமலை அடிகள் நூலகம் முதலியவற்றைத் தம் வாழ்விடமாகக் கொண்டு, தமிழக வரலாறு, நாகரிகம், பண்பாடு பற்றிய அனைத்து நூல்களையும் கற்றுத் தேர்ந்தார். தன்னம்பிக்கையினாலும், கடின உழைப்பினாலும், விடா முயற்சியினாலும் பதினாறு அரிய பெரிய நூல்களைத் தமிழுக்கு அளித்தார்.

அறிவியல் அணுகு முறையில் ஆராய்ச்சி நூல்கள் எழுதிய இவரை 'ஆராய்ச்சிப் பேரறிஞர்' எனத் தமிழறிஞர் போற்றுகின்றனர். இவர், ஒரு வரலாற்றாசிரியனின் பார்வையும், சமூக அறிஞனின் மனப்பாங்கும், ஒரு நல்லாசிரியனின் வெளியிடும் திறனும், ஓர் ஆய்வாளனுக்கு வேண்டிய நடுவு நிலைப் பார்வையும் ஓர் எழுத்தாளனுக்கு வேண்டிய நடை நயமும் அமையப் பெற்றவர்.

சீனி. வேங்கடசாமி தமிழுலகில் ஒரு சிறந்த வரலாற்றாசிரியராகவும், நடுநிலை பிறழாத ஆராய்ச்சியாளராகவும் மனிதப் பண்பு குன்றாத எழுத்தாளராகவும் விளங்கினார்.

கா. சுப்பிரமணிய பிள்ளையுடன் தொடர்பு கொண்டு ஆராய்ச்சி செய்வதில் சிறந்து விளங்கினார். கா.சு. பிள்ளை கனிமொழிகள் சீனி. வேங்கடசாமியைத் தமிழ்த்துறையில் நிரம்பவும் விளக்கின. சீனி வேங்கடசாமி அவரை அடிக்கடி சந்தித்துப் பேசி மகிழ்வது வழக்கம். விபுலானந்த அடிகளுடன் மயிலாப்பூர்க்கபாலீசுவரர் கோயில் குளக்கரையில் உள்ள அரச மரதினடியில் முத்தமிழ் நுணுக்கங்களை ஆராய்வது வழக்கம்.

தமிழ் எழுத்துகளின் வளர்ச்சியைச் சீனி. வேங்கடசாமி நன்கு அறிந்தவர். எவ்வெக் காலங்களில் எவ்வெவ்வெழுத்துகள் பயன்படுத்தப்பட்டன என்பது, அவ்வெழுத்துகளின் வரிவடிவங்கள் இன்னவை என்பதும், எழுத்துகளில் காலத்தோறும் ஏற்பட்ட மாற்றம் யாது என்பதும் அவர் நன்கு அறிந்தவை. பழமையை ஆராய்வதாக இருந்தாலும் அதில் யாரும் தொடாத பகுதியைத் தொட்டுக்காட்ட வேண்டுமென்பது இவரது வேட்கை. கிறித்தவமும் தமிழும், பௌத்தமும் தமிழும், சமணரும் தமிழும் என்னும் நூல்கள் இலக்கிய வரலாற்று நூல்களில் கருத்தியல் ஆய்வுகளாகப் புதிய நோக்கில் எழுதப் பெற்றவை. இவர் பலமொழிகளைப் பயின்றார். பல எழுத்துகளை அறிந்தார். பற்பல கலைகளின் திறமுணர்ந்தார். சான்றோர் பலரோடு உறவு கொண்டார். ஊர் ஊராகக் கால் கடுக்க நடந்து உண்மையை நாடினார். சீனி. வேங்கடசாமி பொருளைத் தேடினாரில்லை. தம்மையே தமிழுக்கீந்தார்.

வரலாற்று வல்லுநர் சீனி. வேங்கடசாமி தமிழகத்திற்குக் கிடைத்த ஓர் அரும் புதையல். வரலாற்று உண்மைகளை மிகையுமில்லாமல், மறைப்புமில்லாமல் உள்ளவை உள்ளவாறு தருவது அவருடைய இயல்பாகும். இவர் சிறப்பறிந்த மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 'பேரவைச் செம்மல்' பட்டம் வழங்கிப் பெருமைப்படுத்தியது. இவர் 8.5.1980-இல் இயற்கை எய்தினார்.

-ச.மெ.

**வேங்கட விளக்கு :** இது அகநானூற்றுக்கு எழுதப்பட்டுள்ள உரை ஒன்றின் பெயராகும். 'எட்டுத் தொகையுள் ஒன்றாகிய நெடுந்தொகையெனப்படும் அகநானூற்றுக்கு நாவலர் பண்டித ந.மு.வேங்கடசாமி நாட்டாரும் கரந்தைக் கவியரசு இரா.வேங்கடாசலம் பிள்ளையும் இயற்றிய வேங்கட விளக்கு என்னும் உரை முற்றிற்று' என வரும் குறிப்பினால் அகநானூற்றுக்கு அவ்விருவரும் இணைந்தியற்றிய உரையின் பெயரே வேங்கட விளக்கு என்பது விளங்கும். வேங்கடசாமி, வேங்கடாசலம் என்னும் இருவர் பெயர்க்கும் பொதுவாய் அமைந்த வேங்கடம் என்ற பெயர்ப்பகுதியும், உவமையாகு பெயராய்

உரையைக் குறிக்கும் விளக்கு என்ற பெயரும் சேர்ந்து 'வேங்கட விளக்கு' என்னும் பெயர்த்தொடர் அமைந்தது. இருளகற்றி ஒளிதந்து பொருள்களைப் புலப்படுத்தும் விளக்குப்போல், நூலுரையும் பாடல்களைக் கண்ணழித்துப் பொருள் கூறி, ஐயமகற்றித் தெளிவுதந்து கருத்தை விளக்குகின்ற பண்புடையதாதலின் உவமையாகுபெயராய் விளக்கு என்னும் பெயர் பெறும். இது வடமொழியில் தீபிகையென வழங்கும். நானார்த்த தீபிகை, பரமார்த்த தீபிகை என்றெல்லாம் பிற நூல்களுக்கு அமைந்த உரைகள் குறிப்பிடத்தக்கன.

அகநானூறு நூல் முழுமைக்கும் விரிவாகவும் விளக்கமாகவும் ஒரே போக்கில் எழுந்த முதலுரை இவ்வேங்கட விளக்கேயாகும். பாடல்களை அவற்றின் பொருள்செல் நெறிக்கேற்பப் பிரித்து முறைப் படுத்தி அடிகளைக் கண்ணழித்துப் பதவுரை கூறி முடித்தவுடன் பாடல்களின் அகன்ற பொருளைச் சுருக்கி வினை முடிபு காட்டிப் பின் வேண்டுமளவில் விளக்க உரை வரைந்து உள்ளுறை இறைச்சிகளைப் புலப்படுத்துவதோடு, தொல்காப்பிய உரையாசிரியர்கள் அவற்றை எங்கெங்கு எவ்வெவ்வாறு மேற்கோள்களாக எடுத்தாண்டனரென்பதையும் சுட்டிச் செல்கின்றது இவ்வுரை.

இவற்றுள் தொடக்கம் முதல் இறுதி வரை எல்லாப் பாடல்களுக்கும் அமைந்த தெளிவான வினைமுடிபும், உரையாசிரியர்கள் மேற்கொண்ட பாடல்கள் எல்லாவற்றையும் குறித்த மேற்கோட் குறிப்பும் இவ்வுரையின் தனிச்சிறப்புக் கூறுகளாம். 'மாயோளாகிய நம் கிழத்தி, காடணிகொண்ட காண்டகு பொழுதில், தனது நற்றோள் நலஞ்செலச் சாஅய் நெகிழ வருந்தினள் கொல்லோ?' என்று பாடலின் பரந்த பொளுக்கு வினைமுடிபு காட்டுவதோடு பின்னும், 'மைபுலம் பரப்ப, சிதர் ஆர்ப்ப, தெள்விளி பரப்ப, காடணி கொண்ட பொழுது என்க' (அகம்.41) என முடிபுக்குள் முடிபு காட்டுவதும் காணலாம். மேற்கோள் குறிப்பினுள் குறிப்பிட்டதொரு பாடலை இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பேராசிரியர் ஆகிய மூவரும் வெவ்வேறு இலக்கணங்களுக்கு ஏற்ற வகையில் எவ்வாறெல்லாம் மேற்கொண்டுரைத்தனரென்பது விளங்க அவற்றை இவ்வுரை முறையாகக் காட்டிச் செல்வது ஆய்ந்து கற்போர்க்கு அரும் பயனுடையதாம்.

பாடல்களிற் பயின்ற சொற்களுக்கும் தொடர்களுக்கும் இவ்வுரை தெளிவாகவும் நுட்பமாகவும் பொருள் கூறும். 'குறியா இன்பம்-சிந்தனையும் முயற்சியுமின்றி வந்த இன்பம்' (அகம்.2), 'புழுகு-அம்பின் தலையிற் செறிக்கும் குப்பி, இது மல்லிகை மொட்டு எனவும் படும்' (அகம்-9) 'வாவிப் பறத்தலின் இது வாவலெனப் பெயர் பெறுவதாயிற்று, வௌவால் எனவும் வழங்கப்பெறும்' (அகம்-57) 'உன்னம்-கருத்து'. இஃது உன்னல் என்னும் வினையடியாகப் பிறந்த பெயர்' (அகம்.65) என்பனவற்றை இவ்வகையில் காணல் கூடும்.

இவ்வுரை பலவிடங்களில் நயமான உரை விளக்கங்களைத் தந்து செல்லும். 'வேங்கடம் பயந்த வெண்கோட்டு யானை, மறப்போர்ப் பாண்டியர்' (அகம்-27) என வருமிடத்து, வேங்கடம் பயந்த யானை என்பதற்கு வேங்கடமலை பெற்ற (தோற்றிய) யானையெனப் பொதுவே கொள்ளாது, அம்மலையையுடைய அரசர் திறையாகத் தந்த யானை எனச் சிறப்புறக் கூறும். இராக்கால நிகழ்ச்சியைப் புனையுமொரு பாடலில், 'தாமரை வண்டூது பனிமலர்' என்று அமைந்ததோர் அடிக்கு, 'வண்டுகள் உள்ளிருந்து ஊதும் தாமரையின் குளிர்ந்த மலர்' எனப் பொருள் கூறி, 'இராக்காலமாதலின், வண்டூது பனிமலர் என்றது, வண்டு உள்ளே ஊதும் மலர் என்க' என விளக்கம் கூறுகின்ற இவ்வுரையின் நுட்பமும் (பா. 46) உணரத்தகும்.

பாடலடிகளில் பொதிந்து கிடக்கும் பொருள்களைத் தெளிவுறக் காட்டும் சிறந்த விளக்கவுரையாக இவ்வுரை அமைந்துள்ளது. காட்டாக "'கயிறு பிணிக் குழிசி ஓலை கொண்மார் பொறிகண்டழிக்கும் ஆவண மாக்களின்' என்றது ஊராண்மை நாட்டாண்மைக் கழகங்கட்கு உறுப்பினரைத் தேர்ந்தெடுத்தற் பொருட்டு உடன் பாடு தெரிவிக்கும் தகுதியுடையார் பலரும் எழுதிக் குடத்தின்கட் போகட்ட ஓலைகளை ஆவணமாக்கள் பலர்முன் குடத்தின் மேலிட்ட இலச்சினையைக் கண்டு நீக்கி, உள்ளிருக்கும் ஓலைகளை எடுத்து தேரப்பட்டார் இவரென்ன முடிபு செய்வதோர் வழக்கத்தினைக் குறிப்பது. இது குடவோலை என்று கூறப்படும். பழைய கல்வெட்டுக்களில் இம்முறை விரிவாகச் சொல்லப் பட்டுள்ளது" (அகம்.77) எனவரும் விளக்கவுரை குறிப்பிடத்தக்கது.

பாடற் பகுதிகட்குப் பொருள் இது தாவென்று நிறுவ வேண்டுமிடங்களில் அப்பொரு ளுக்கு ஆதாரமான மேற்கோள்களைக் காட்டி நிறுவு கின்ற திறன் இவ்வுரையில் அமைந்துள்ளது. 'இலை யில் மலர்ந்த முகையில் இலவம், கலிகொள் ஆயம் மலிபுதொகுபெடுத்த அஞ்சுடர் நெடுங்கொடி பொற் பத்தோன்றி' (அகம்.11) எனவருமிதற்கு, "இலையில் வாய் மலர்ந்துள அரும்பில்லாத இலவம்பூக்கள், ஆரவாரத்தைக்கொண்ட மகளிர் கூட்டம் மகிழ்ந்து கூடி எடுத்த அழகிய கார்த்திகை விளக்கின் நெடிய ஒழுங்குபோலத் தோன்ற" என்று பொருளெழுதிப் பின் விளக்கவுரையில், "கார்த்திகைத் திங்களின் கார்த்திகை நாளில் இல்லந்தோறும் வரிசையாக விளக்குகளை ஏற்றிவைத்து விழா அயர்தல் சங்கச் செய்யுட்கள் பலவற்றிற் கூறப்பெறுதலின் தமிழ் நாட்டில் பண்டுதொட்டு இவ்வழக்கம் இருந்து வருவதென்பது பெற்றாம். 'அம்ம வாழி தோழி கைம்மிக' (அகம்-141) என்றும் பாட்டினுள் கார்த்திகை விழாக் கொண்டாடும் முறைமையும் 'எவ்வளை நெகிழச் சாஅய்' (அகம்.185) என்னும் பாட்டினுள், 'பெருவிழா விளக்கம் போலப் பல வுடன், இலையில மலர்ந்த இலவமொடு' என இவ் வுவமையும் இந்நூலுட் பின்னர் வருவதும் காண்க" என்று நிறுவுதல் அறிந்து இன்புறத்தக்கது.

விளக்கவுரைக்கிடையே சில கருத்துகளை ஆய்ந் துரைக்கும் ஆய்வுரையாகவும் இவ்வுரை அமைகின் றது. அதற்கு, "தொண்டி என்பதொரு பதி சோழ நாட்டுக் கடற்கரைக் கண்ணிருப்பினும் இவ்வாசி ரியர் (அம்மூவனார்) பிற இடங்களில் சேரனுடைய தொண்டி, மாந்தை என்பனவற்றைப் பாடியிருத்த லின், இங்குக் குறித்த தொண்டியும் சேரர் கடற்கரைப் பட்டினமாகிய தொண்டியே யாதல் வேண்டும்" (அகம்.10) எனவும், "சங்கச் செய்யுட்களில் வேங்கை மலரில் வண்டு படுமெனக் கூறியிருக்கவும் திவாகர பிங்கல நிகண்டுகள், 'சண்பகமும் வேங்கையும் வண் டுணா மலர் மரம்' எனக் கூறுதல் ஆராய்தற்குரியது" (அகம்.38) எனவும் வருவன எடுத்துக்காட்டுகளாம்.

சங்கப் பாடல்கட்குச் சிலவிடங்களில் அவற்றின் துறைகளோடு பொருத்தி அமைதி கூறுதலென்பது உரையின் தகுதிப்பாடுகளுள் ஒன்றாகும். இவ்வுரை அத்தகு சிறப்புடனும் திகழ்கின்றது. 'இரவுக் குறிச் சென்று தலைமகளைக் கண்ணுற்று நீங்கும் தலை மகனைப் பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி வரைவு கடாயது' என்ற துறையிலமைந்த பாட லொன்று (அகம்.92), தோழி இரவுக்குறியை மறுத் துப் பகற்குறி நேர்ந்து இடங்கூறிய அளவிலேயே முடிகின்றது, பாடலில் தோழி வரைவு கடாவுதல் வெளிப்படையாகத் தோன்றவில்லை. பகற்குறி நேர்ந்த வாய்பாட்டால் தோழி வரைவு கடாயது என்ற நுட்பமான துறைக்குறிப்போ புதிர்போல் பொருளைப் பொதிந்து காட்டுகின்றது. இந்நிலை யில் விளக்க உரையே அமைதி கூற வேண்டும். அது கூறும் அமைதி வருமாறு:- "(தோழி) பகற்குறி நேர்ந் தாள்போற் கூறினும் காந்தள் அவிழ்ந்த ஆங்கண் தருவித்தாழ்நீர் ஒரு சிறை என்றமையின் பூக்கொய்ய வருவாராலும் அருவியாட வருவாராலும் பகற் குறி யும் அரிதென்பது புலப்படுத்தி வரைவு கடாயினாளா யிற்று.

பாடல்கள் பலவற்றிலும் உள்ளுறுத்தமைந்த உள்ளுறையுவமைகளையும் இறைச்சியில் தோன் றும் பொருட்குறிப்புகளையும் எடுத்து விளக்குவ தோடு சொற்களுக்கும் பொருட்களுக்கும் ஏற்ற இலக்கணக் குறிப்புகளையும் இவ்வுரை காட்டிச் செல்கின்றது. அன்றியும் அகநானூற்றுப் பாடல் களால் சிறப்புற அறியத்தகும் வரலாற்றுக் குறிப்பு களை வேறு பல சான்றுகளோடும் மெய்ப்பட நாடி யுரைக்கும் நல்லுரையாகவும் இது அமைந்துள்ளது.

முடிவாக, நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டா ரும் கரந்தைக் கவியரசு இரா.வேங்கடாசலம் பிள்ளை யும் இணைந்தியற்றிய இவ்வுரை, எண்ணெயும் நீரும் போற் கலவாத இரு தன்மையின்றிப் பாலும் தேனும் போற் கலந்த ஒரு தன்மைத்ததாய் ஒருவர் உரையெனவே ஒன்றி உருப்பெற்று விளங்குவது பாராட்டத்தகுவதாம். இவ்வுரையாசிரியருள் யார் எப்பகுதியை எழுதினரென்ற குறிப்புமில்லை; இதனைப் பிரித்தறியக் கடவுமில்லை. அவ்வளவிற்கு உரை ஒன்றித் திகழ்கின்றது.

-வ.கு.

**வேடம் புனைதல் :** உடை, ஒப்பனை முதலியவற்றால் ஒருவன் புனைந்து கொள்ளும் வேற்று வடிவம் வேடம் எனப்படும். போலியாக ஒன்றைத் தன்னிடத்தில் உண்டாக்கிக் கொள்ளுதலை வேடம் புனைதல் என்று குறிப்பிடுகின்றனர். நாடகங்களில் மட்டுமன்றி மக்களின் வாழ்க்கையிலும் வேடம் புனையும் வழக்கம் இருந்து வருகிறது. பண்டைக்கால வேந்தர்கள் இராக் காலங்களில் மாறுவேடம் புனைந்து நகர்ச்சோதனை மேற்கொள்வதுண்டு என்பது கூறப்படுகிறது.

**வேடம் புனைதலின் முக்கிய கூறுகள்** : வேடம் புனைதலில் ஆடை அணிகலன்களும், ஒப்பனையும், முகத்தோற்றத்தை மாற்றிக் கொள்வதும் இன்றியமையாத கூறுகளாக இடம் பெற்றுள்ளன.

**இந்திய மரபுக் கலைகளில் வேடம் புனைதல்** : பெரும்பாலும் இந்நாட்டுக் கலைகளில் இடம் பெறும் வேடங்கள் அனைத்தும் அப்பாத்திரங்களின் குணநலப் பண்புகளின் அடிப்படையில் அமைந்துள்ளன. இவை தவிரப் பறவைகள் விலங்குகள் போன்றவற்றைக் குறியீடுகளாக எழுதியும் முகமூடிகளைத் தரித்தும் வேடம் புனைகின்ற வழக்கமும் இருந்து வருகிறது.

இந்நாட்டுக் கிராமியக் கலைகளில் வேடம் புனைதல் 'கோலம் புனைதல்' என்ற பெயரிலும் வழங்கி வருகிறது. கேரளத்தின் படையாளி போன்ற கலைகளில் தென்னம்பாளையில் கோலங்கள் எழுதிப் புனைந்து கொள்வர். அதில் தோன்றுகின்ற பாத்திரத்தையே, சுயட்சிக் கோலம் , பைரவி கோலம் என்னும் பெயர்களில் வழங்குகின்றனர்.

பரதரின் நாட்டிய சாத்திரத்தின்படி இவ்வேடம் புனைதல் ஆகாரிய அபிநயத்திற்குட்பட்டதாகும். 1. நாடகத்தைப் பார்வையாளர்கள் புரிந்து கொள்ளுதல், 2. நாடகத்தின் கலைச் சிறப்புகளைப் புலப்படுத்துதல் என்னும் இரண்டும் ஆகாரிய அபிநயத்தின் இரு முக்கிய நோக்கங்களாகும்.

நாடக மாந்தர்களின் அடிப்படையான குணங்களைப் புலப்படுத்தும் தன்மை ஆடை அணிகளுக்குண்டு. நாடகத்தின் பாணி, சூழல் ஆகியவற்றை வெளிக்கொணர ஆடை, அணிகள் பெரிதும் உதவுகின்றன.

கேரளத்தின் கூடியாட்டத்தில் பாத்திரங்களின் முக்குணங்களுக்கும் உரிய வண்ணச் சாயப்பூச்சு ஒப்பனை மேற்கொள்ளப்படுகிறது. கேரளத்தில் கிருட்டிண ஆட்டம் ஒயிலாக்கம் நிறைந்த ஒப்பனை, ஆடை, அணி முதலியவற்றைக் கொண்டதாகும். அதில் பெண்களுடைய ஒப்பனை மிகவும் நளினப்படுத்தப் பட்டதாக உள்ளது. சில பாத்திரங்களுக்கு முகமூடிகளை அணிவித்து மேடையில் உலவவிடுவதும் கதகளியும், கிருட்டிண ஆட்டத்தைப் போலவே ஆடை, அணி, ஒப்பனை கொண்டது. அதில் முகமூடிக் கதா பாத்திரத்திரங்கள் இடம்பெறுவதில்லை. கதகளியில் மினுக்கு, பச்சை, கத்தி,தாடி, கரி என்று ஐந்து வகையான வேடங்கள் உள்ளன.

முகத்தில் வண்ணச் சாயம் பூசுவதைப் போலவே நெடிய சிறந்த கலை வேலைப்பாடுகளை உடைய தலைக்கிரீடங்களையும் அணிவிப்பது வழக்கம். தலைக்கிரீடங்களுக்குப் பின்னால் நூலாலான தலைமுடிகள், தொங்கவிடப்படுகின்றன. இத்தகைய விரிந்த ஒப்பனை, அணிகலன் ஆகியவற்றிற்கேற்பக் கவிழ்ந்த குடை போன்ற அமைப்பிலான பாவாடைகளை இப்பாத்திரங்கள் அணிந்து கொள்கின்றனர்.

காட்சிக்கினிய ஒப்பனை, ஆடை அணிகலன்கள் ஆகியவற்றைச் கொண்டது. கருநாடகத்தின் யட்சகானக் கலை வடிவம். அதில் இடம்பெற்றுள்ள பாத்திரப் படைப்புகளின் ஒப்பனை வண்ணம் தீட்டப் பெற்ற பாணியைக் கொண்டதாகும். யட்சகான நாடகங்களில் இடம்பெறும் ஆடை அணிகலன்கள், ஒப்பனை ஆகியவற்றை மூன்று பிரிவுகளில் அடக்கலாம். சாரகன், அந்தணன் அல்லது முனிவன் என்னும் எளிய மனிதர்களுக்கு எளிய நடைமுறைக்குகந்த ஒப்பனையும் உடைகளும் பயன்படுத்தப்படுகின்றன. அவை அவர்களைக் கடவுளர், மீமனிதர் ஆகியோர்க்கு நேர்மாறானவர்களாகக் காட்டப் பெரிதும் பயன்படுகின்றன. இக்கலை வடிவங்களில் வீரம்செறிந்த கர்ணன், அருச்சுணன்போன்ற பாத்திரங்களுக்குக் கருநீல நிறமும் பெரிய கறுப்புநிற மீசையும், புருவங்களும், உதட்டிற்குச் சிவப்பும் நெற்றித் திலகமும் இடுவர். கடவுளான கிருட்டிணன், என்றும் இளமையுடன் இருப்பவனாகக் காட்ட அப்பாத்திரங்களுக்கு மீசை இடம் பெறுவதில்லை. கீந்தர்வர்கள் போன்ற பகட்டான பாத்திரங்களுக்கு அவர்களின் கண்களின் கீழ்ப் பகுதியில் மென்மையான சிவப்பு வண்ணப் பூச்

சைப் பூசுகின்றனர். அரக்கர் அரக்கியருக்கு மிக விரிந்த பெரிய அளவிலான ஒப்பனை செய்யப்படுகிறது.

ஆடை அணிகலன்களைப் பொறுத்தவரை ஆண் பாத்திரங்களில் தெய்வத் தன்மை வாய்ந்த பாத்திரங்களும், காதல் மற்றம் வீர உணர்ச்சி மிக்க பாத்திரங்களுக்கும் பச்சை அல்லது சிவப்பு வண்ண மேல் சட்டை அணிவர் .இடுப்பிற்குக் கீழ் சிவப்பு , ஆரஞ்சு கலந்த பல வண்ணக் கலவைகள் கொண்ட உடையை வேட்டியாகக் கட்டி இருப்பார்கள். இந்த வண்ணங்கள் ஒன்றற்கொன்று துணை செய்வனவாக அமைந்துள்ளன. இந்த ஆடைகளுக்கு மேல் செயற்கை ஒளி கொடுக்கும் அணிகலன்கள் அணிந்திருப்பர். மன்னர்கள் போன்ற பாத்திரங்களுக்குத் தலையில் தங்க கிரீடம் வைத்துக் கட்டியிருப்பார்கள். ஏனைய பாத்திரங்கள் தலையில் துணியால் பலவகையான முண்டாசுகளைக் கட்டி இருப்பர். அம்முண்டாசுகளின் மேல் சிவப்பு அல்லது கறுப்புத் துணி சுற்றப் பட்டு அவற்றின் மேல் தங்க, வெள்ளிப் பட்டைகள் பிண்ணப்பட்டிருக்கும். அரக்கர்கள் தனியான தலையணியும் மார்புக்கவசமும் அணிந்திருப்பர்.

தமிழகத் தெருக்கூத்தில் இடம்பெறும் புராணப் பாத்திரங்கள் நடைமுறை வாழ்க்கையில் காணப் படும் மனிதர்களைக் காட்டிலும் மிடுக்காகவும் உயர்ந்தும் தோன்றும் வண்ணம் கிரீடம் புயக்கட்டைகள், மார்பு அணிகள், வைக்கோலினால் விரிந்து நிற்கும் மேல் துணிப்பாவாடைகள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை மஞ்சள் சார்ந்த வண்ணக் கலவை யால் முகத்தில் எழுதிய ஒப்பனை முதலியன இக்கலை வடிவின் தனிப்பெருங்கூறுகளாக விளங்குகின்றன.

தஞ்சை, மெலட்டூர், சாலியமங்கலம் போன்ற பகுதிகளில் வழக்கிலுள்ள பாகவத மேளா என்னும் நாட்டிய நாடகத்தில் நரசிம்ம மூர்த்திக்கு முகமூடியைப் பயன்படுத்துகின்றனர். அரச வேடத்திற்கு இராச அங்கி முதலியன உடையாக அமைந்துள்ளன.

தமிழக நாட்டுப்புறக் கலையான பொய்க்கால் குதிரையாட்டத்தில் ஆண், பெண் கலைஞர்கள் முறையே அரசன், அரசி வேடமணிந்து ஆடுகிறார்கள். நன்கு அலங்கரிக்கப்பட்ட குதிரைக் கூட்டை தோள்பட்டைகளில் கட்டித் தொங்க விட்டுக் கொண்டு ஓர் அடி உயரத்திற்கும் குறையாத கட்டைகளின்மேல் நின்று கொண்டு ஆடுகின்றனர். குறவன் குறத்தி ஆட்டத்தின் குறவன் குறத்தி வேடமிட்டு ஆடும் கலைஞர்கள் உண்மையான குறவன், குறத்தி போல் பாசி மாலைகளை அணிந்து கொண்டு பாடியும் ஒருவரை ஒருவர் ஏசியும் ஆடுகின்றனர். புலி வேடம் ஆடும் கலைஞர் புலியின் உண்மையான மஞ்சள், கறுப்பு, வெள்ளைக் கோடுகளைத் தம் உடலில் இவ்வண்ணக் கலவைகளால் கோடுகளாகவும், பட்டைகளாகவும் தீட்டிக் கொண்டும், இவ்வண்ணங்கள் கொண்ட துணியை உடலை ஒட்டிக் கொண்டு இருக்கும்படி தைத்துப் போட்டுக் கொண்டும், கையில் புலி நகங்களை மாட்டிக் கொண்டும், முகத்தில் கம்பியாலான மீசை அணிந்தும், தலையில் புலியின் உடல்மேற்பகுதி போன்ற வண்ணத் துணியால் ஆன தலை உறையை அணிந்து கொண்டும் புலி வேட நிகழ்ச்சியை நடத்துகின்றனர். மயிலின் தலைக் கூட்டைத் தலையிலும் உடற்கூட்டைத் தோள் பட்டைகளிலும் அணிந்து கொண்டு உடல் முழுக்க நீலம் அல்லது பச்சைதுணியால் மறைத்துக்கொண்டு மயில் நடனம் ஆடுகின்றனர்.

தெருக்கூத்துப் போன்ற கலை வடிவங்களில் ஆண்கள் பெண் வேடம் புனைவதாயிருந்தால் பெரும் பாலும் பெண்களைப் போல் தலைமுடியை வளர்த்துக் கொண்டிருப்பர். இன்றைய புதிய நாடகம், திரைப்படம் போன்றவற்றில் ஆண்கள் கேலிக்காகவோ, பெண்ணாக மாறு வேடத்தில் வரும் சூழ்நிலையிலோ பெண்வேடம் போட நேர்ந்தால் தலையில் செயற்கைத் தலைமுடியை (Wig) அணிந்து கொண்டு நடிக்கிறார்கள். உருவத்தை மாற்றி வேடம் புனைதற்குரிய பொருட்கள் இக் காலத்தைப்போல் முற்காலத்தில் மிகுதியாகக் கண்டுபிடிக்கப்படாத காரணத்தால் வேடம் புனைவதில் உடைகளே முக்கியமான இடத்தைப் பெற்றன. இப்பொழுது புலி, சிங்கம், கரடி, மயில் போன்று விலங்குகளாகவும் பறவைகளாகவும் மனிதர் வேடம் புனைவதற்கு ஏற்ற வாய்ப்புகளும் வசதிகளும் மிக்குள்ளன.

அழகான இளைஞர் ஒருவரை அருவருக்கத்தக்க தோற்றமுடையவராகவும் , இருபது வயதுடைய ஓர் ஆண் அல்லது பெண்ணை 70 வயதுடைய கிழவன் அல்லது கிழவியாகவும் இன்றைய ஒப்பனை, வேடப்பொருட்களால் காட்ட இயலும்.

வேடம் புனைதலில் ஒப்பனையைப் பொறுத்த அளவில் அந்தந்த வயதினர் அப்படியப்படியே தோன்றுதற்குரிய வேடம் ஏற்கும்பொழுது, செய்யப் படும் ஒப்பனையை நேரடி ஒப்பனை (Straight Make-up) என்றும், தன் வயதைத் தாண்டியும், பிறபால் வேடங்களை ஏற்கும்பொழுதும், மனிதரல்லாத ஏனைய வேடங்களை ஏற்கும்பொழுதும் மேற்கொள் ளப்படுகின்ற ஒப்பனையைக் குணநல ஒப்பனை (Character Make - up) என்றும் கூறுகிறார்கள். இவற் றைத் தவிர உடம்பில் காயம், உடல் உறுப்புகளில் ஊனம், அம்மைத் தழும்பு, தீத்தழும்புகள், புழுதி படிதல் போன்ற பலவகையானவேடங்களை அணி விக்கின்ற முறைகளும் வந்துள்ளன.

பகல் வேடம் என்னும் மரபுக்கலை வடிவம் ஒன்று இன்றும் தமிழ்நாட்டில் வழகத்தில் இருந்து வரு கிறது. அதில் கலைஞர்கள் புராண, இதிகாசப் பாத் திரங்கள் போல் வேடமணிந்து தெருக்களில் சில கதைப் பகுதிகளைப் பேசியும் நடித்தும் காட்டிச் செல்லும் வகையில் அக்கலை வாழ்ந்து வருகிறது.

மாறுவேடப் போட்டி என்னும் வேடம்புனைதல் நிகழ்ச்சி தனிக் கலையாகவே உருவாகியுள்ளது. உலகத்தில் புகழ்பெற்ற தலைவர்களில் வேடங் களையும் வாழ்க்கையில் பல்வேறு தொழில்களைச் செய்கின்ற பலருடைய வேடங்களையும் புனைந்து கொண்டு அவற்றிற்குரிய ஒப்பனை மற்றும் ஆடை அணிகலன் களை அணிந்துகொண்டு அவர்களைப் போலவே பேசியும் நடந்தும் காட்டித் திறமைக் கேற்பப் பரிசு பெறுகின்றனர்.

-கு.மு.

**துணை நூல்கள் :**

1. வரதராசன், வெ., **தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன்**, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை. 1986.

2. Philippe Perrottet, **Practical Stage Make-up**, Studio Vista Ltd., London, 1967.

3. Rangavataranam, **Theatrical Product**, Group of Authors, State Institute of Languages, Trivandrum, 1979.

## வேணுகோபால் பிள்ளை, மகாவித்வான்.மே.வி. :

இவர் கி.பி.1986-இல் சென்னையில் பிறந்தார்; தாமே முயன்று தமிழ் பயின்றார், காஞ்சிபுரத்தில் தமிழாசிரி யராய்ப் பணி செய்தார்; சிந்தாமணியைக் கற்றுக் தேர்ந்து நச்சினார்க்கினியர் உரையில் தேர்ச்சி பெற்றார்; பலருக்குச் சீவக சிந்தாமணி வகுப்பு நடத்திப் பயிற்சி அளித்தார்; சிந்தாமணிச் செல்வர் எனச் சிறப்புப் பட்டம் பெற்றார். மாலை நேரங் களிலும் இரவு நேரங்களிலும் தமிழ் வகுப்பு நடத்திப் பலநூறு பேர் வித்துவான் வகுப்புத் தேர்ச்சி பெறு வதற்கு உதவி புரிந்தார். சென்னையில் இலக்கிய வகுப்புகள் நடத்தியவர்களுள் இவர் தனிச்சிறப்புப் பெற்றவராவார். ஆயிரக்கணக்கான உரைநடை நூல் களை அச்சுப்பிழையின்றி வெளிவரத் துணை செய் தார். பவானந்தர் கழகத்தின் மூலம் பல நூல்களைப் பிழையறப் பதிப்பித்தார். இலக்கணப் புலமை நிரம் பிய இவர் இலக்கிய இலக்கணப் பாடம் சொல் வதில் வல்லவர், பயன் கருதாது பல நூறு இளைஞர் களுக்குத் தமிழறிவு ஊட்டியவர். இவர் யாப்பியலில் தனித்திறம் சான்றவர். யாப்பறி புலவர் எனச் சிறப் பிக்கப் பெற்றவர், யாப்பருங்கலம் உரையினைப் பிழையற்ற செம்பதிப்பாகப் பதிப்பித்தவர்.

குருகுலக் கல்வி முறையில், தமிழை முறைசாராக் கல்வி மூலம் முறையாகப் பயிற்றுவித்த பெருமகனார் இவர். எளிமையும், நுண்மையும், தெளிவும், விளக்கமும் அமைந்த பயிற்று முறையில் சிறந்தவர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் கம்பராமாயணப் பதிப்புக் குழுவில் உறுப்பினராய்த் திகழ்ந்தார், புலவர் குழுவின் சிறப்புமிகு உறுப்பின ராகவும் திகழ்ந்தார். மேலும், தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் முதன்மைப் பதிப்பாசிரிய ராகவும் விளங்கினார்.

இவர் முன்னாள் தலைமை அமைச்சர் இந்திரா காந்தியால் பொன்னாடை போர்த்தப் பெற்றுப் பொற்கிழி வழங்கப் பெற்றவர், தமிழக அரசால் கலை மாமணி விருது வழங்கப் பெற்றவர். இவர் 1985-ஆம் ஆண்டு காலமானார்.

-ச.மெ.

**வேபர், மாக்சு (கி.பி.1864 –1920) :** பல்கலை வித்தகர் என்ற பெருமை சில அறிஞர்களுக்கே கிடைக்கும். அவர்களுள் மாக்சு வேபர் (Max Weber) என்ற செருமானியச் சமூகவியல் அறிஞரும் ஒருவர். சமூகவியல் மட்டுமல்லாம்ல் சட்டவியல், பொருளியல், தத்துவம், வரலாறு, அரசியல் ஆகிய துறைகளிலும் இவர் பெரும் புலமை பெற்றிருந்தார். இப்பல்துறை அறிவு இவருடைய சமூகவியல் கோட்பாடுகளுக்கும், கருத்துகளுக்கும் பெருமை உண்டாக்கியது.

மாக்சு வேபர் கி.பி.1864 -இல் செருமனியில் எர்பர்ட்டு தர்ன்சியா (Erfurt Thrungia) என்னுமிடத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் சிறந்த சட்டவியல் வல்லுநராக விளங்கியதால் தொடக்கத்திலிருந்தே சட்டவியலைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் வேபருக்கு உண்டாயிற்று. இவர் கி.பி.1891 -இல் பல்கலைக்கழகப் படிப்பை முடித்தார். இவர் படித்துக் கொண்டிருந்த காலத்தில் பொருளாதாரம் பற்றிச் சில நூல்களும், பல ஆராய்ச்சிக் கட்டுரைகளும் எழுதி அறிவுலகத்தின் கவனத்தைக் கவர்ந்தார்.

சிறிது காலம் இவர் பெர்லின் பல்கலைக்கழகத்தில் சட்டப் பயிற்றுநராகப் பணியாற்றி விட்டு கி.பி.1894-இல் பிரைபூர் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகச் சேர்ந்தார். அந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து கி.பி.1896 -இல் விலகி ஐடல் பர்க்குப் பல்கலைக்கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராகச் சேர்ந்தார். நரம்பு மண்டலத்தில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக இவர் கி.பி.1898-இல் ஆசிரியப் பணியை விட வேண்டியதாயிற்று. ஆயினும், 1903 - இல் இவருக்கு ஓரளவு உடல் நிலை தேறியதும் மீண்டும் ஆய்வுப் பணியில் ஈடுபடலானார்.

புரிந்து கொள்ளுதல் : எந்தவோர் அறிவியலும் ஒரு பொருளை, நிகழ்வைப் புரிந்து கொள்வதையே இலக்காகக் கொண்டிருக்கும் என்பார் வேபர். ஒரு பொருளை , நிகழ்வை விளக்குவதுதான் அறிவியலின் பணி. ஆனால், அதைப் புரிந்து கொண்ட போது தான் விளக்கம் தர இயலும். அதைப் புரிந்து கொள்ள அதை நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒரு பொருளை, நிகழ்வை நன்கு விளங்கிக் கொண்டு புரிந்து கொள்வதே (Interpretative Understanding) அறிவியலின் நோக்கம் என்கிறார் வேபர். சமூகத்தையும், பண்பாட்டையும் பற்றி அமையும் இயல்கள், குறிப்பாக வரலாறும், சமூகவியலும் இந்த நோக்கத்திலேயே செயற்படுகின்றன என்கிறார். புரிந்து கொள்வது என்பது வேபரைப் பொறுத்த அளவில் ஒரு பொருள் இன்னது. இன்ன தன்மையது என்பதைப் புரிந்து கொள்வது அன்று. புரிந்து கொள்வது என்பது இரண்டு நிலைகளில் நடைபெற வேண்டும். ஒன்று சமூக நிகழ்வின் காரணத்தைப் புரிந்து கொள்ளுதல், மற்றொன்று அதனுடைய உட்பொருளைப் புரிந்து கொள்ளுதல். ஒரு சமூக நிகழ்வு நிகழ இது போதும் என்ற அளவில் அமையும் காரணத்தையும், அதற்கு இத்தகைய உட்பொருள் போதுமானதாக இருக்கும் என்ற அளவில் அமையும் உட்பொருளையும் புரிந்து கொண்டால்தான் புரிந்து கொள்ளுதல் மிக உயர்ந்ததாக இருக்கும் என்கிறார் வேபர். இத்தகைய அளவில் அமையும் மிக உயர்ந்த நிலையிலான புரிந்து கொள்ளுதலே ஒரு சமூக நிகழ்வைப் பற்றிய ஆய்வின் இலக்காக இருக்க வேண்டும் என்கிறார் வேபர்.

எந்தவோர் அறிவியலும் உண்மையைத் தேடியே தன் பயணத்தைத் தொடங்குகின்றது. இயற்கை அறிவியல்கள் இயற்கை நிகழ்வுகளைப் பற்றிய உண்மைகளைத் தேடி வெற்றி பெறுகின்றன. ஆயினும், அவற்றின் கண்டுபிடிப்பு முழுமையாக அமைவதில்லை. அப்படி அமைந்து விடுமானால் இயற்கை அறிவியல்கள் முழுமையடைந்து முற்றுப்பெற்று விடும். மேற்கொண்டு ஆய்வுப் பணிக்கென்று வாய்ப்பு இல்லாத நிலையில் முடிவு நிலையை அடைந்து விடக் கூடும். இவ்வாறே ஒரு சமூக நிகழ்வின் உட்பொருளும் ஒரு நிகழ்தகவோடு அமையும் என்று சமூகவியல் வெளிப்படுத்துகிறது. இதுதான் ஒரு சமூக நிகழ்வின் உட்பொருள் என்று அது அறுதியிட்டு வரையறுப்பதில்லை. இன்னது சமூக நிகழ்வின் உட்பொருளாக அமையக் கூடிய நிகழ்தகவைப் பெற்றுள்ளது என்று சமூகவியல் உண்மை வெளிப்படுத்துகிறது என்கிறார் மாக்சு வேபர்.

ஒரு சமூக நிகழ்வின் காரணத்தைப் புரிந்து கொள்ள இரண்டு நிலைகளில் அதைத் தேடலாம் என்கிறார் வேபர். ஒன்று, வரலாற்று காரணிகள் முறை (Historical Causality), மற்றொன்று சமூகக் காரணிகள் முறை (Social Casuality).

இரண்டு நிகழ்ச்சிகள் பல முறை தொடர்ந்து ஒரே நேரத்தில் சேர்ந்து நிகழும்போது, அந்த நிகழ்தலின் நிகழ்வினங்களைப் புள்ளியியல் முறையின் மூலம் கணக்கிட்டு அவற்றுக்கிடையே காரண-விளைவு உறவு உள்ளதா என்று அறிய முடியும். ஆனால், எல்லா நிகழ்வுகளிலும் இந்தப் புள்ளியல் முறை மூலம் காரண - விளைவு உறவு அமையக் கூடிய நிகழ்தகவைக் காண இயலாது. சில நிகழ்வுகள் வரலாற்று நிகழ்ச்சிகளாக அமையும். ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் அவை அமையும். அப்படிப்பட்ட வரலாற்று நிகழ்ச்சிக்ளின் காரணத்தை அறியப் புள்ளியல் முறை உதவாது என்கிறார் வேபர்.

ஒரு குறிப்பிட்ட வரலாற்று நிகழ்ச்சி ஏற்படுபடுவதற்கு முன்பு நிலவிய நிலைமைகளை, வாய்ப்புச் சூழ்நிலைகளை ஆராய்ந்து, அவை அந்த வரலாற்று நிகழ்ச்சி ஏற்பட எத்தகைய பங்கு ஆற்றின என்பதை நிருணயித்தால்தான் அதன் காரணத்தைக் கண்டறிய முடியும் என்கிறார் வேபர்.

சமுதாய அமைப்பில் ஒரு கூறுக்கும் மற்றொரு கூறுக்கும் உள்ள உறவு ஒரு வழியினதாக இருக்காது; இரு வழியினதாக இருக்கும். அதாவது, இரண்டு கூறுகளும் ஒன்றையொன்ற ஈர்க்கும். ஒன்று மற்றொன்றை ஈர்க்கவும், பின்னது முன்னதை ஈர்க்கவும் வாய்ப்புண்டு என்கிறார் வேபர்.

இக்கருத்தின் அடிப்படையில் பொருளாதார நிகழ்வுக்கும், சமய நிகழ்விற்கும் உள்ள உறவு பற்றிய காரல் மார்க்சின் கருத்தை வேபர் மறுக்கிறார். காரல் மார்க்சு, பொருளாதார அமைப்பு முறையே (உற்பத்தி முறை) சமூக மேற்கட்டுமானத்துக்கு அடிப்படையாக அமைகிறது என்கிறார். அதுவே, சமயம் உள்ளிட்ட அனைத்துச் சமூக மேற்கட்டுமானக் கூறுகளையும் நிருணயிக்கின்றது என்று கூறுகிறார். ஆனால், வேபர் பொருளாதார நிகழ்வுக்கும், சமய நிகழ்வுக்கும் உள்ள உறவு ஒரு வழியானது அன்று என்றும், இரண்டுமே ஒன்றையொன்று சார்ந்துள்ளவை என்றும், அப்படியிருக்கப் பொருளாதார நிகழ்வே சமய நிகழ்வை ஈர்த்துக் கட்டுப்படுத்துகிறது எனக் கூறமுடியாத என்றும், சமய நிகழ்வும் பொருளாதார நிகழ்வை ஈர்த்துக் கட்டுப்படுத்தும் என்றும் கூறுகின்றார்.

பொருளாதார நிகழ்வை சமய நிகழ்வு எவ்வாறு ஈர்க்கிறது என்பதை எடுத்துக்காட்ட புதிய மேலை நாட்டு முதலாளித்துவத்தின் மீது சீர்திருத்தக் கிறித்துவ சமயம் செலுத்திய செல்வாக்கை வேபர் எடுத்துக் காட்டுகிறார். அதற்குச் கால்வினின் கருத்தைப் பயன்படுத்துகிறார்.

கால்வின், "தேவனுடைய அருளைப் பெற ஒவ்வொருவரும் கடுமையாக உழைக்க வேண்டும். பிறகு அந்த உழைப்பில் கிடைக்கிற வருவாயை இடைக்கால இன்பங்களுக்காகப் பயன்படுத்தாமல், மீண்டும் மீண்டும் ஆதாயம் கிடைக்கிற வண்ணம் மறுபடியும் ஆக்க முறையான பொருளாதார நடவடிக்கைகளில், அதாவது உற்பத்தித் தொழில்களிலும், வணிகத்திலும் முதலீடு செய்து தொழில், வணிக நிறுவனங்களை நிறுவ வேண்டும். அப்படிச் செய்தால்தான் தேவனுடைய அருளைப் பெற முடியும்" என்று கூறுகிறார்.

அந்த அறநெறி ஓர் உண்மையைக் கோடிட்டுக் காட்டுகிறது. தேவனுடைய அருளைப் பெற எத்தகைய வழி இயல்பாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. தேவனுடைய அருளைப் பெற இரண்டு வழிகள் உள்ளன என்கிறார் வேபர். ஒன்று துறவறம் பூண்டு தேவனுடன் அக நிலை உணர்வில் தொடர்பு (Mystic contact) கொள்வது. மற்றொன்று, துறவறம் மேற்கொள்ளாமலேயே தேவனுடைய அருளைப் பெற முயல்வது. முதலாம் வழி எளியவர்களால் எளிதாக மேற்கொள்ள இயலாத வழி. இரண்டாம் வழி எளியவர்களால் எளிதில் ஏற்கக் கூடியது. இதற்கு அவர்கள் செய்ய வேண்டியது இடைக்கால இன்பங்களைத் தள்ளி வைத்து விட்டு, மேன்மேலும் பொருள் சேர்க்க வேண்டும் என்ற முனைப்பில் கடுமையாக உழைத்து, அதில் கிடைக்கும் வருவாயை மேற்கொண்டு இலாபம் கிடைக்கும் வண்ணம் ஆக்க முறையான பொருளாதார நடவடிக்கைகளில் முதலீடு செய்து உழைப்பதாகும். இப்படிப் பாடுபட்டுச் சேகரிக்கும் பணத்தை அனுபவிக்காது மேன்மேலும் தொழில் நிறுவனங்களை நிறுவிப் பலருக்கு வேலை வாய்ப்பினை அளிப்பது தேவனுடைய அருளைப் பெறுவதற்குச் சமமாகும்.

இவ்வாறு கால்வினின் அறநெறி எளியவர்களுக்குத் தேவனுடைய அருளைப் பெறக் கூடிய, சிறந்த, பயன்தரத்தக்க வழியைக் காட்டியதால் அது சீர்திருத்தக் கிறித்தவ மக்களைப் பெரிதும் கவர்ந்தது. அவர்கள் கடுமையாக உழைக்கவும், உழைப்பில் கிடைத்த வருவாயைக் கொண்டு உற்பத்தித் தொழில் நிறுவனங்களை நிறுவவும், பெருக்கவும் தூண்டியது. அதன் காரணமாகப் புதிய முதலாளித்துவம் மேலை நாடுகளில் வளர்ந்தோங்கியது. அந்த அடிப்படையில் தான் வேபர், புதிய முதலாளித்துவத்தின் உயிர்த் தத்துவம், சீர்திருந்தக் கிறித்தவ சமயத்தின் பொருளாதார உயிர்த் தத்துவத்தின் விளைவாக அமைகிறது என்கிறார்.

ஏனைய சமயங்களில் சீர்திருத்தக் கிறித்தவ சமயத்தைப் போல பொருளாதார அறநெறி இல்லாமற் போவதால், அந்தச் சமயங்கள் செல்வாக்குப் பெற்றிருக்கிற நாடுகளில் புதிய முதலாளித்துவம் வளரவில்லை என்கிறார் வேபர். இந்து சமயம், இசுலாமிய சமயம் , கன் பூசிய சமயம், மாவோயியம் ஆகியவற்றை ஆராய்ந்து அவற்றில் சீர்திருத்தக் கிறத்தவ சமயத்தின் பொருளாதார அறநெறியைப் போன்ற அறநெறி முறை எதுவும் அமையவில்லை என்று வேபர் கண்டறிந்தார். அந்தச் சமயங்கள் மரபு சார்ந்தவை. ஆகவே, அவை மரபு வழியாக நிலவி வரும் பொருளாதார சமூக நிலையமைப்பு எத்தன்மையில் உள்ளதோ அத் தன்மையிலேயே நீடிக்க ஆதரவு காட்டுகின்றன.

**உட்பொருள் பற்றிப் புரிந்து கொள்ளல்** : ஒரு நிகழ்வைப் புரிந்து கொள்ள வெறும் காரணம் மட்டும் போதாது. அதன் உட்பொருளும் தேவை. ஒரு நிகழ்வின் உட்பொருளைப் புரிந்து கொண்டால்தான், அதன் போக்கின் காரணத்தையும், விளைவுகளையும் புரிந்து கொள்ள முடியம் என்கிறார் வேபர்.

அவ்வாறு உட்பொருளையும், அதைக் கொண்டு காரண காரியத்தையும் புரிந்த கொள்ளக்கூடிய வகையில் அமைந்துள்ளதே மனிதச் செயல், சமூகவியல் அதை விளங்கிக் கொண்டு புரிந்து கொள்ள முயல்கிறது என்கிறார் வேபர்.

மனிதச் செயல் என்பது மனித நடத்தையின் ஒரு வடிவம். ஒன்றைச் செய்வதாகவோ செய்யாமலிருப்பதாகவோ அது அமையக் கூடும். ஒரு மனிதச் செயல் ஒரு தனிமனிதனுடன் தொடர்பு கொண்டிருந்தாலும் அது சமூகத் தன்மையுடன் அமைகிறது. அந்த வகையில் மனிதச் செயல் என்பது சமூகச் செயல் என்று வேபர் கூறுகிறார்.

-சி.என்.ந.

**துணை நூல்கள் :**

1. Coser, Lewis, A., **Masters of Sociological Thought**, Harcourt Brace Jovanovich, New York, 1977.

2. Sorokin, Pitrim, A., **Contemporary Sociological Theories**, Kalyan Publishers, Ludhiana, 1978.

3. Thinasheff, Nicholas, S., **Sociological Theory : Its Nature and Growth**, Random House, New York, 1967.

## வேர்ச்சொல்லியல்

**வேர்ச்சொல்லியல்** : ஒரு மொழியில் சொற்றொடரின் உறுப்பாகிய சொல்லும் (Word) அது தரும் பொருளும் (Meaning) ஆகிய இரண்டும் குறிப்பிடத்தக்க சிறப்புடையன. இவற்றோடு சொல்லின் வரலாறும் (Historical aspect). அதன் அப்போதைய வழக்கும் (Descriptive aspect), இனமொழிச் சொல் ஒப்பீடும் (Comparative aspect), இலக்கணக் கூறும் (Grammatical aspect), அதன் வேர்ச்சொல் (Root), அடிச் சொல் (Stem) அமைப்பும், செய்யுள் வழக்கும் (Usage in Standard Language), பேச்சு வழக்கும் (Usage in Colloquial Language), அவற்றின் எடுத்துக்காட்டுக்கள், வருமிடம், அச்சொல்லிலிருந்து தோன்றும் இலக்கண வகையடுக்குகள் (Paradigmatic Forms), திரிபு வடிவங்கள் (Corrupted forms), சொல்லொடு சேர்ந்த ஒட்டுக்கள் (Affixes) இவை முதலாயினவற்றுள் வேண்டுவ கூறலுமாம்.

சொல் தரும் பொருள் நிலையிலும் தெரிபொருள் (Direct or Primary or Central or Denotative meaning), குறிப்புப் பொருள் (Indirect or Secondary or Marginal or Connotative meaning), கொடுத்தலோடு கால நிலைப் பொருள் மாற்றம் (Semantic Shift), எடுத்துக்காட்டுகள், அன்றைய பொருள் வகை, இன மொழியில் அதே சொல்லின் பொருள் ஒப்பீடு, இருவகை வழக்கின் பொருள்நிலை, சொற்பொருளோடு (Lexical Meaning) இலக்கணப் பொருள் (Grammatical Meaning). இவை முதலானவற்றுள் வேண்டுவ கூறலுமாம்.

சொல் என்பது ஓர் சொற்தொடரின் இரு இடைவெளியிடைப்பட்டு நிற்பது. இவை யிணைந்தே சொற்றொடராகின்றது, மொழியா கின்றது. மொழியில் வரும் இத்தகைய எல்லாச் சொற்களும் பொருளுடையனவே. பொருளற்றன போல் தோன்றும் ஒரு சிலவும் ஆய்ந்து காணின் பொருளுடையனவே. தொடக்க நிலையில் சொல் லுக்கும், பொருளுக்கும் தொடர்பு காணவியலாது. வழக்கத்தால் சொல் பொருளைச் சுட்டி வருகின்றது. இத்தகைய பொருள் சூழ்நிலையால் (Situation or Environment) ஏற்படுவது, சொற்களில் இணைவு சில போது அவற்றினின்றும் வேறுபட்ட பொருளைத் தந்து நிற்றலுமாகும். அப்போது இணைவு நிலையும், அதுதரும் தனிப் பொருள் நிலையில் ஓர் தனிச் சொல்லாகும் நிலைபெறும். ஒரு சொல்லுக்கு ஒரு பொருள் இயல்பாயினும், ஒரு பொருளுக்கு ஒரு சொல் இயல்பாயினும் ஒரு சொல்லுக்கே பல பொருளும், ஒரு பொருளுக்கே பல சொல்லும் வரு தல் மொழியியல்பாகும். சொல்லோடு ஒலியழுத்தம் (Decent) சேர வேறு பொருள் தருதலுமாகும்.

சொல், பொருள் தருவது ஒருநிலை. இது சொல்லின் புறநிலை. அதாவது உலகத்தின் ஏதாவது ஒரு பொருளைச், செயலைச் சுட்டும் நிலை, அதன் அமைப்பு நிலை, அகநிலையாகும். ஒரு சொல் அதன் வேர்ச்சொல்லாகிய ஒருருபன் நிலையிலோ அல்லது பிற உருபன் சேர்ந்த நிலையிலோ ஒலியன் அல்லது ஒலியன் தொடர்பால் காணப்படும். இத்தகைய சொற்களைத் தனிச்சொல் (Single word), தொகைச் சொல் (Compound word), தொடர் சொல் (Phrasal word) என ஒரு பொருள் தருநிலையில் வகை செய்ய லாகும். இரட்டைக் கிளவியும் (Iterative Form) மேலனவற்றுள் அடங்கும், ஒரு பொருள் தரு நிலையில்.

சொற்களில் பெயர் (Noun), வினை (Verb), இடை (Clitics or Bound forms) முதலியன சிறப்பாகக் கருதப்படற்கும், பொருள் கூறப்படற்கும் உரியன. இவற்றுள் பல இலக்கணக் கூறுகளோடும் (Grammatical or Inflectional Categories) வரும். இலக் கணக் கூறுகள் அமையாத கல், சொல், நில், வெல் மண், பொன் போன்ற வேர்ச்சொல் நிலையிலான பெயர் வினைச் சொற்களும் உள. இத்தகைய சொற் கள் பழைமையில் பெயருக்கும், வினைக்கும் பொது வாகவே இருந்தன. காலத்தால் பெயராக, வினை யாக வேறுபட்டன. பெயரில், வினையில், இடை யில் வகை குறிப்பிடலுமாகும். இடையிலும் தனி நிலையில் பொருள் கூறத்தக்கனவுமாம்.

சொற்பொருள் (Lexical Meaning) நிலையால் தொடர்புடைய வடிவம், இலக்கணக்கூறுபாடு (Grammatical or Inflectional elements) நீங்கியது. உரிச் சொல் (Lexical item or content Form) என்பது, வேர்ச் சொல்லும், அடிச் சொல்லுமே (Derivaties or Derived Forms) யாகிய இவை பொருளாக்கச் சொற்கள் எனினுமாம். இவையே வேர்ச் சொல்லியலில் அகராதியில் சிறப்பாக வரிசைப்படுத்தற்குரியன. பொருள் கூறத் தக்கன. இவை தனித்து நின்று பொருள் தரத்தக்கன (Free forms). இடைச் சொற் களாயினும் (Clitics or Bound Forms) பொருள் நிலையால் சொல் வரிசையில் குறிப்பிடத்தக்கனவே.

சொல்லாக்க நிலையிலான (Derivative categories), இலக்கண நிலையிலான (Inflectional Categories) சொற்கள் சொல் வரிசையில் குறிப்பிடப் பட்டுச் சொற்பொருள் (Lexical Meaning) சொல்லப் பெறவில்லையெனில் மொழியின் கண்ணுள்ள எல்லாச் சொற்களையும் வரிசைப்படுத்தி எவ்வகைப் பொருளையும் சுட்டியதாகாது முடியும். எனவே, வேர்ச்சொல், அடிச்சொல்லாகிய உலகப்பொருள் நிலைச் (Lexical Meaning), சொற்களையும் (Root or Free Forms), முன்னொட்டு (Prefis), இடை அல்லது உள்ளொட்டு (Infix), பின்னொட்டு (Suffix) நிலை யிலான, இலக்கணப் பொருளமைந்த (Grammatical Meaning) இடைச் சொற்களையும் (Non-Root or Bound Forms) சொல் வரிசைப்படுத்தி எவ்வகைப் பொருளை யும் கூறுதலே ஓர் மொழியின் சொற்பொருள் கூறுதலின் நிறைவாகும்.

குறில் அல்லது நெடில் உயிர் ஒன்று கொண்டு முன், பின் மெய் வந்ததோ, வராதோ அமைவதே திராவிடம் அல்லது தமிழ் மொழியின் வேர்ச் சொல் அமைப்பாகும்.

(C)V/V(C)=(C) முன் பின் மெய் உள்ளதும், இல்லதும்

V/V உயிர்க் குறில் அல்லது உயிர் நெடில் ஒன்று

இவ்வடிவம் திராவிடம் அல்லது தமிழின் எல்லாப் பெயர், வினை முதலாகிய சொற்களின் முதலில், ஒன்றே வருமியல்பினது ஆக, ஒரு சொல்லுக்கு ஒரு வேர்ச் சொல்லேயமையும். இன்னோர் வேர்ச் சொல் வர வேறோர் சொல்லாகும். ஒரு வேர்ச் சொல், தனி நின்றும் பெயர் , வினைச் சொல்லாகும் (Simple Stem) அதனோடு சொல்லாக்க நிலையில் ஒட்டுருபன்கள் (Derived Affixes) இணைந்து, ஆயின் திணை, பால், எண், இடம், காலம், வேற்றுமை சாரியை முதலிய இலக்கணக் கூறுடைய ஒட்டுருபன்களின்றி (Inflectional Affixes) அமைவன பெயர், வினை, அடிச்சொல் (Derivational Stem) ஆகும். எல்லாப் பொருட் சொற் (Lexical Forms) கூறுகளும் இவ்விரண்டினுள் அடங்கும். இவையே பொருட் சொல் தொகுப்பில் சிறப்பிடம் பெறுவன. அதாவது, வேர்ச்சொல்லியலில் (Etymology) சிறப்பிடம் பெறத் தக்கன.

பொருள்காணும் வேர்ச் சொல்லீட்ட வரிசையில் ஒரு பொருள் சுட்டுகின்ற ஒரு தனிச் சொல்லோ, தொகைச் சொல்லோ, தொகா நிலையிலமைந்த தொடர் சொல்லோ குறிக்கத்தக்கனவாகும்.

எ-டு. 1. தனிச்சொல் - அரன் - சிவன்
2.தொகைச் சொல் - முக்கண்ணன் - சிவன்
3.தொகா நிலைத் தொடர் சொல் - உமையமர்ந்த பாகன் - சிவன்

இவ்வாறு ஒரு பொருளைச் சுட்டி வாராத பொருளுடையன சொல் வரிசையில் கருதப் பெறாதிருப்பதே சொற்பொருளியலில் காணத்தக்கது. பிற வாறாயின் சொல் வரிசையில் மயக்க நிலை ஏற்படும்.

நால்வாய் - யானை எனும் ஒரு பொருள்தரின், எடுப்பதும், நால் கயிறு - நாலும் கயிறு என அடை கொண்டுவரின் இத்தொகைச் சொல்லை ஒரு பொருள்தாராத நிலையில்சொல் வரிசையில் ஒரு சொல்லாகக் கொள்ளாது விடுவதும் சொற்பொருள் காணும் முறையில் சொல்லைக் கருதும் வகையாகும். இவ்வாறு பொருள் காணத்தக்க சொல் வரிசையைத் திட்டமிடல் வேர்ச் சொல்லியலின் முதற் பகுதியாகும்.

சொல்லுக்குப் பொருள் காண்பதே வேர்ச் சொல்லியலின் முழு நோக்கமாதலின் இதனில் சிந்தனை மிக வேண்டுவதாகும். சிலபோது செய்யுள் சொல்லின் பொருள் சூழ்நிலையால் இதுவெனத் தெளிவாகத் தெரிந்தும், உரையாசிரியர் தொடர்பில்லாத பொருளைச் சொல்லப் பெரு மயக்க நிலை ஏற்படும். ஆகவே, சொல்லின் பொருளை வரையறை செய்து கொள்ளலும், அப்பொருளை உணர்த்தத்தக்க வேறோர் சொல்லை ஈடாகச் சொல்லிப் பொருளைப் புலப்படுத்திக் காட்டலும் கூர்ந்தாய்ந்த நிலையில் அமைதல் வேண்டும். ஒரு சொல்லின் பொருளை விளக்க வேண்டும் ஈடாகிய ஒரு சொலன்றிப் பிற வேறு சொற்களையும் (Synonyms) அப்பொருள் தர இட்டுக் காட்டல் நலம்.

நீர், கல் போன்ற சொற்களுக்குப் பொருள் விளக்கம் பெறும் பிறசொல் தகுதியுடையன இல்லாத நிலையில், ஒரு பொருள் குறித்தனவாகத் தொடர் நிலையில் விளக்கிக் காட்டலுமாகும். மரவகை, பறவை வகை, விலங்கு வகை என எழுத்து நிலையில் வேறு பொருள் விளக்கஞ் சுருங்கிய நிலையில் சொலவியலாதபோது தொடர் விளக்கமும், படவிளக்கமும் தருவதும் முறையாகும்.

ஒரு சொல்லுக்குப் பலவேறு பொருள் காணின், வேறுபட்ட பொருள் நிலை தோறும் வேறுபட்ட சொல்லாகக் கருதி வேறு வேறாக்கிக் காட்டல்சொற்பொருள் மரபாகும்.

சொல் வரிசையில் அம்மொழியின் கண்ணுள்ள எல்லாக் கலைச்சொல்லும், தொழிற் சொல்லும், எழுத்து வடிவச் சொல்லும், பேச்சுவடிவச் சொல்லும் முதலாகிய பலவும் இடம் பெற்றுப் பொருள் குறிக்கப்படின் சொல்லீட்ட வரிசை, நிறை நிலையடையும். இதன்கண் கிளை மொழிப் பொருள் வேறுபாடும் உணர்த்தப் பெறுவதும் குறிப்பிடத்தக்கது.

ஆக, ஒரு பொருள் குறித்த நிலையிலான ஒரு வேர்ச்சொல் அல்லது அடிச்சொல்லின், அல்லது ஒரு பொருள் குறித்த நிலையிலான பலவேர்ச் சொல் அல்லது அடிச்சொல்லின் தொகை நிலை அல்லது தொடர் நிலையில் அமைந்தனவற்றின் வரையறைப் பட்ட பொருளைச் சொல்லுதலோடு அவை பற்றி

அறியவாகும். வரலாறு, அமைப்பு, இலக்கணம் முதலிய பிறபல விளக்குதலே வேர்ச் சொல்லியலின் நோக்கமாதல் வேண்டும். சொல் குறித்த பல்வகை விளக்கமே வேர்ச் சொல்லியலின் இயல்பு.

-சி.சு.

**துணை நூல்கள் :**


1. Hockett, Charles, F., **A Course in Modern Linguistics**, Oxford BH-Pub-Co., 1958.

2. Gleasan, H.D., **An Introduction to Descriptive Linguistics**, Oxford & IBH, Pub. Co., 1955.


**வேலை நிறுத்தம் :** ஒரு தொழில் நிறுவனத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் ஒருமுகமாகச் சேர்ந்து வேலையை நிறுத்துவது அல்லது வேலையைத் தொடர்வதற்கு மறுப்பது அல்லது வேலையை ஏற்க மறுப்பது அல்லது அவர்களுள் ஒருவரின் பேச்சை ஏற்று வேலையைத் தொடர மறுப்பது போன்ற செயல்கள் வேலை நிறுத்தம் (Strike) என்று கூறப்படுகின்றது.

தொழிலாளர்களிடையே ஏற்படும் ஒற்றுமையின் காரணமாக வேலையைத் தொடர்வதற்கும், வேலையை ஏற்பதற்கும் மறுப்புத் தெரிவிப்பதும் அதன் காரணமாக எல்லோரும் வேலைக்கு வாராமலிருப்பதும் முக்கியமாகும். ஒரு தொழிலாளி வேலைக்கு வாராமலிருப்பது மட்டுமே வேலை நிறுத்தம் அன்று. ஒரு தொழிலாளிக்கும் ஏனைய தொழிலாளிக்கும் இடையே வேலை நிறுத்தம் பற்றி ஒரு பொதுவான ஒற்றமை இருப்பதற்குச் சான்று வேண்டும்.

**கதவடைப்பு** : கதவடைப்பு (Lock out) என்பது தொழிற்சாலையை மூடுவது அல்லது வேலையை இடைக்காலமாக நிறுத்துவது ஆகும். ஒரு பணியாண்மையர் தம்மால் அமர்த்தப்பட்ட தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்வதை மறுப்பது என்று பொருள்படும்.

**பொது வசதி சேவைத் துறையில் வேலை நிறுத்தத் தடை** : 1. சட்டத்தில் சொல்லியுள்ளபடி வேலை நிறுத்தம் செய்வதற்கு ஆறு வாரங்களுக்கு முன்னர்ப் பணியாண்மையருக்கு அறிக்கை தரா விட்டாலும், 2. அவ்வறிக்கை கொடுத்து 14 நாள்களுக்குள்ளும், 3. அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலக் கெடுவிற்குள்ளும், 4. அமைதி நிலை நாட்டும் அதிகாரி முன்னிலையில் முடியாமல் உள்ள வழக்கு இருந்தபோதும், அதன் முடிவு தெரிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும் பொது வசதிச் சேவைத் துறையில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது. இவ்வறிக்கை ஆறு மாதங்களுக்குத் தான் செல்லுபடியாகும்.

**பொது வசதி சேவை நிறுவனக் கதவடைப்புத் தடை** : பொது வசதிச் சேவை நிறுவனங்களும் கதவடைப்பிற்கு ஆறு வாரங்களுக்கு முன் தொழிலாளர்களுக்கு அறிக்கை தராமலும், அவ்வறிக்கை கொடுத்து 14 நாள்களுக்குள் நடுவர் தீர்ப்பு முடிவடையாத போதும், அதன் முடிவு வந்து இரண்டு மாதங்களுக்குப் பின்னும், அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலக்கெடுவிற்குள்ளும், அமைதி நிலைநாட்டும் அதிகாரி முன்னிலையில் உள்ள வழக்கு முடியாத போதும் அல்லது அது முடிந்த 7 நாட்களுக்குப் பின்னரும் கதவடைப்புச் செய்தல் கூடாது.

சட்டத்தின் கூறியுள்ளபடி அறிவிக்கை விடப்படல் வேண்டும். ஏற்கனவே தொழிலாளர்கள் வேலை நிறுத்தில் இருக்கும்போது பணியாண்மையர் கதவடைப்புச் செய்தால் அறிக்கை தேவை இல்லை. எனினும் உரிய அரசு அதிகாரிக்குக் கதவடைப்புப் பற்றித் தெரிவிக்க வேண்டும். ஏதாவது ஒரு நாளில் பணியாண்மையர் பெறும் வேலை நிறுத்தம் அறிக்கையையும், அவர் கோரும் கதவடைப்பு அறிக்கையையும் 5 நாள்களுக்குள் உரிய அரசு அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். மேலும், அவர் பெற்ற அறிக்கையின் எண்ணிக்கையையும், கொடுத்த அறிக்கையின் எண்ணிக்கையையும் குறிப்பிட வேண்டும்.

**தொழில் நிறுவனங்களில் நடக்கும் வேலை நிறுத்தத்திற்கும் கதவடைப்பிற்கும் தடை (பிரிவு 23)** : ஒரு குழுவினால் மேற்கொள்ளும் அமைதி நடவடிக்கைகள் முடியாமல் இருக்கும்போதும் அது முடிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும், தொழில் நீதிமன்றம், தேசியத் தீர்ப்பாயம் ஆகியவற்றினரிடையே நடந்து வரும் வழக்குகள் முடிவடையாத போதும் அதன் முடிவு தெரிந்த இரண்டு மாதங்களுக்குப் பின்னரும், ஒரு தகராறு பற்றித் தீர்ப்பு வழங்கிட விசாரணை



வேலை நிறுத்தம்

நடந்து கொண்டிருக்கும் போதும் ஒரு தொழில் நிறுவனத்தின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்யக் கூடாது. அதன் பணியாண்மையரும் கதவடைப்புச் செய்ய கூடாது.

பொது வசதி சேவை நிறுவனங்களில் சட்ட விரோத வேலை நிறுத்தம். (பிரிவு. **24**) : இந் நிறுவனங் களில் பணியாற்றும் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் தொடங்குவதற்கு 6 வாரங்களுக்கு முன்னர் அறிக்கை கொடுக்காமலும் அறிக்கை கொடுத்த 14 நாள்களுக்கும் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள காலக் கெடுவிற்குள்ளும் அமைதி நடவடிக்கை நடந்து கொண்டிருக்கும் போதும், முடிவு தெரிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும் வேலை நிறுத்தம் செய் தால் அது சட்ட விரோதமானதாகும்.

தொழில் நிறுவனங்களில் சட்ட விரோத வேலை நிறுத்தம் : ஒரு தொழில் நிறுவனத்தின் தொழிலாளர் கள், அமைதி நடவடிக்கை முடிவடையாத போதும், அதன் முடிவு தெரிந்த ஏழு நாள்களுக்குப் பிறகும், தொழில் தீர்ப்பாயத்தில் வழக்கு நடந்து கொண்டி ருக்கும் போதும், அதன் முடிவு தெரிந்த ஏழு நாட் களுக்குப் பின்னரும், ஒரு வழக்கின் தீர்ப்புக்காக விசாரணை நடந்து கொண்டிருக்கும் போதும் வேலை நிறுத்தம் செய்தல் கூடாது.

தொழில் நிறுவனங்களில் சட்ட விரோதக் கதவடைப்பு : ஒரு தொழில் நிறுவனத்தில் பணியாண் மையர், அமைதி நடவடிக்கை நடந்து கொண்டிருக் கும் போது, அதன் முடிவு தெரிந்த ஏழு நாட்களுக்குப் பிறகும், வழக்கின் தீர்ப்புக்காக விசாரணை நடந்து கொண்டிருக்கும் போதும், தொழில் தீர்ப்பாயத்தில் வழக்கு நடந்து கொண்டிருக்கும் போதும், கதவ டைப்புச் செய்தால் அது சட்ட விரோதமானதாகும்.

எனினும், சட்ட விரோத வேலை நிறுத்தத்திற் காகச் செய்த கதவடைப்பும், சட்ட விரோதக் கத வடைப்பிற்காகச் செய்த வேலை நிறுத்தமும் சட்ட விரோமானவை ஆகா.

சில வழக்குகள் : 1. ஒரு வழக்கில் ஒரு குறிப்பிட்ட நாளில் நிலக்கரிச் சுரங்கத்தில் எந்தத் தொழிலாளியும்

வேலை செய்யவில்லை. எனவே, அன்று எந்த வேலையும் நடைபெறவில்லை. எனவே, அந்த வேலை நிறுத்தம் சட்ட விரோதமனாது எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. காரணம் போட்டித் தொழிற்சங்கங்களிடையே ஏற்பட்ட ஒற்றுமையின்மையால் அந்த வேலை நிறுத்தம் ஏற்பட்டது.

2. பிறிதொரு வழக்கில் ஒரு வணிகக் குழுமத்திற்கும் அதன் தொழிலாளர்களுக்மிடையே பட்டியலில் கண்ட விடுமுறை நாளில் தொழிலாளர் வேலை செய்தால் அதனை ஈடுகட்ட விடுமுறை தரப்படும் என உடன்பாடு ஏற்பட்டது என்றாலும் தொழிலாளர்கள் பட்டியலில் கண்ட விடுமுறையில் வேலை செய்ய மறுத்தனர். எனவே, வேலை நிறுத்தம் சட்ட விரோதமானது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

3. மற்றொரு வழக்கில் தொழிலாளர் நேர்மையற்ற ஆனால் சட்ட விரோதமில்லாத வேலை நிறுத்தத்தில் சேர்ந்ததற்காகப் பணியான்மையர் அவரை வேலையிலிருந்து நீக்க முடியாது என்று தீர்ப்புக் கூறப்பட்டது.

சட்ட விரோதமான வேலை நிறுத்தத்திற்குத் தண்டனை : சட்டத்தில் கூறப்பட்ட, சட்ட விரோதமான வேலை நிறுத்தத்தை ஒரு தொழிலாளர் செய்தால் அவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை அல்லது உரூபா ஐம்பது தண்டம், அல்லது இரண்டும் சேர்த்து விதிக்கப்படும்.

சட்ட விரோதக் கதவடைப்பிற்குத் தண்டனை : சட்டத்தில் கூறப்பட்டுள்ள ஒரு விரோதக் கதவடைப்பை ஒரு பணியாண்மையர் செய்தால் ஒரு மாதச் சிறைத் தண்டனை அல்லதும உரூ.50 தண்டம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

தூண்டுதலுக்குத் தண்டனை : சட்ட விரோத வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்வதற்கும் சட்ட விரோதக் கதவடைப்புச் செய்வதற்கும் ஒருவர் தூண்டினால் அவருக்கு 6 மாதச் சிறைத் தண்டனை அல்லது உரூ.1000 தண்டம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

நிதி உதவிக்குத் தண்டனை : ஒருவர் சட்ட விரோதமான வேலை நிறுத்தத்திற்கும், கதவடைப்பிற்கும் தெரிந்தே நிதியுதவி செய்தால் ஆறுமாதச் சிறைத் தண்டனை அல்லது உரூ.1000 தண்டம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

-கே.என்.இரா.

**துணை நூல் :**

1. Kapoor, N.D., **Mercantile Law and Industrial Law**, Sultan Chand & Sons, New Delhi, 1982.

**வேலை மனநிறைவு:** வேலை மனநிறைவு என்பது வேலை செய்யும் ஒருவர் அவர் செய்யும் வேலையின்பால் கொண்டுள்ள மனப்போக்கினைக் குறிக்கும். அது ஒருவர் தம் வேலையின்பால் கொண்டுள்ள உணர்ச்சி முறையிலான செயற்பாடு ஆகும். வேலை மட்டுமே தனித்து நின்று மனப்போக்கிற்கான செயற்பாடு பொருளாவதில்லை. ஏனெனில் வேலை என்பது மிகவும் சிக்கலான ஓர் உருவகம் ஆகும். வேலை என்பது பல முகங்களைக் கொண்டது. எடுத்துக்காட்டாக, வேலையின் இயல்பு, மேற்பார்வையாளர், உடன் வேலை செய்வோர், நிறுவனம், ஊதியம் அல்லது பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஆகவே, ஒருவரின் வேலை மனநிறைவு (Job Satisfaction) என்பது அவருடைய வேலையின் பல்வேறு கூறுகளைச் சார்ந்த அவருடைய மனநிறைவின் அளவு எனலாம். வேலை மன நிறைவின் கூறுகள் சில வருமாறு 1. வேலையின் தன்மை, 2. ஊதியம், 3. பதவி உயர்வுகள், 4. ஒப்புதல், 5. வேலை செய்வதற்கான வசதிகள், 6. பலன்கள், 7. தான் (Self), 8. மேற்பார்வையாளர், 9. உடன் வேலை செய்வோர், 10. நுகர்வோர், 11. குடும் பத்தினர், 12. ஏனையோர்.

வேலை நிறைவு, வேலை செய்வதற்கான ஊக்கத்தை (Work Motivation) ஒத்ததாகக் கருதப்படுகிறது. ஆனால், வேலை மனநிறைவு என்பது ஒருவர் தம் வேலையைக் குறித்துக் கொண்டுள்ள உணர்ச்சியைச் சார்ந்ததாகும். வேலை செய்வதற்கான ஊக்கம், வேலையைச் செய்யும்போது வெளிப்படும் செயல்களைச் சார்ந்ததாகும்.

வேலை மனநிறைவு குறித்துப்பல கோட்பாடுகள் உள்ளன. அவற்றுள் சில இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை, ஒப்புநோக்கு இயக்கம் (Comparison

Process), கருவியாய் அமைதல் கோட்பாடு (Instrumentality Theory), சமுதாயப்பாதிப்பு (Social Influence), சமன்பாட்டுக் கோட்பாடு (Equity Theory), இருவகைக் காரணிகள் கோட்பாடு (Two Factors Theory) முதலியனவாகும்.

ஒப்பு நோக்கம் இயக்கம் : பெரும்பான்மையாக ஒத்துக்கொள்ளப்பட்டுள்ள இக்கோட்பாட்டின்படி, வேலை மனநிறைவு என்பது , ஒருவர் தம் மனத்தில் கொண்டுள்ள ஓர் அளவும், அந்தஅளவு எந்த மட்டில் நிறைவு செய்யப்பட்டுள்ளது என்று உணரப்படுகிற உணர்ச்சி அளவும் ஏற்படுத்துகின்ற பாதிப்பே ஆகும்.

கருவியாய் அமைதல் கோட்பாடு : தம்மால் மதிக்கப்படும் குறிக்கோள்களை அடைய வேலை எந்த அளவுக்கு ஒரு கருவியாக அமைகிறது என்பதைச் சார்ந்தே வேலை மனநிறைவு அமைகிறது என்று இக் கோட்பாடு கூறுகின்றது. ஒருவர் ஊதியம், பதவி உயர்வு, வேலை செய்ய உகந்த சூழல் ஆகியவற்றை உயர்வாக மதிக்கலாம். மேற்கூறியவற்றை அடைய, எந்த அளவு தம்முடைய வேலை ஒரு கருவியாக அமைகிறது என்பதன் மூலம் அவருடைய வேலை மனநிறைவு அவரால் நிருணயிக்கப்படுகிறது.

சமுதாயப் பாதிப்பு : ஒருவர், தம்முடைய வேலை மனநிறைவை, வேலை சார்ந்த விவரங்களைக் கொண்டு கணிக்காமல், தம்மையொத்த வேலை செய்யும் மற்றையோர் எத்தகைய வேலை மன நிறைவு கொண்டுள்ளனர் என்பதை நோக்கி அதன் மூலம் தம்முடைய வேலை மனநிறைவைக் கணிக்கின்றனர். புதிதாக ஒரு வேலைக்கு வருபவர் அந்த வேலையில் தாம் எந்த அளவு வேலை மனநிறைவு பெறுவோம் என்பதை அறிந்திருப்பதில்லை. அவர்கள் தம்மைச் சுற்றியுள்ளோரை, தம்மையொத்தோரைக் கண்டு, அவர்கள் வேலை மனநிறைவு பெற்றுள்ளனரா அல்லது அவ்வாறில்லையா என்பதைக் கொண்டு தம்முடைய வேலை மனநிறைவின் அளவை நிருணயிக்கின்றனர்.

சமன்பாட்டுக் கோட்பாடு : தம்முடைய உழைப்பையும் அதனால் தாம் அடையும் பலன்களையும், பிறருடைய உழைப்புடனும், அவர்கள் அடையும் பலன்களுடனும் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் வேலை மனநிறைவைக் கணிக்கின்றனர். சமன்பாடற்ற பலன்கள், குறைந்த வேலை மனநிறைவே தருகின்றன.

இருவகைக் காரணிகள் கோட்பாடு : வேலை மன நிறைவைத் தரும் காரணிகளும், வேலைசார் மனக் குறையைத் தரும் காரணிகளும், ஆகிய இருவகைக் காரணிகளும் வெவ்வேறானவை ஆகும். ஒப்புதல், தன்னாட்சி, பொறுப்பு, ஆகியவை வேலை மன நிறைவைத் தரவல்லன, ஆனால், இவையில்லையேல் வேலை மனநிறைவு கிடைக்காதேயன்றி வேலைசார் மனக்குறை ஏற்படுவதில்லை. ஊதியம், வேலை செய்யத் தகுந்த சூழல், மேற்பார்வையாளர், உடன் வேலை செய்வோர் ஆகியன நன்றாக அமைந்திருந்தால் வேலை சார் மனக்குறை தோன்றாது. ஆனால், இவை வேலை மனநிறைவைத் தரா. இக் கோட்பாடு ஆராய்ச்சி வாயிலாக அறுதியிட்டுக் கூற இயலாத ஒன்றாகும். ஏனெனில் இருவகைக் காரணிகளுமே வேலை மனநிறைவு வேலை சார் மனக்குறை ஆகியவற்றிற்குக் காரணிகளாக அமைகின்றன.

வேலை மனநிறைவும் நிறுவனச் சூழலும் : அண்மைக் காலத்தில், வழக்கில் வந்துள்ள நிறுவனச் சூழல் எனப்படுவது வேலை மனநிறைவினின்றும் மாறுபட்ட வேறொன்றன்று என்னும் விவாதம் உருவாகியது. ஆனால், வேலை சார் சூழலின்பால் ஒருவர் உணர்ச்சி முறையில் கொண்டுள்ள கருத்தே வேலை மனநிறைவு என்றும், அவர் அதனை விவரிக்கும் போது அது நிறுவனச் சூழல் ஆகும் என்றும் ஆய்வாளர்கள் வகுத்துள்ளனர். அதாவது, வேலை சார் சூழல் "எவ்வாறு உள்ளது?" என்ற வினாவுக்கு அளிக்கும் விடை நிறுவனச் சூழலைக் (Organisational Climate) குறிப்பிடுவதாகவும், அச்சூழலை "எந்த அளவு விரும்புகிறீர்கள்?" என்ற வினாவுக்கு அளிக்கும் விடை வேலை மனநிறைவைக் குறிப்பிடுவதாகவும் அமைகின்றன.

வேலை மனநிறைவும் வேலை சார் நடத்தைகளும்: வேலை மனநிறைவும் வேலையை விட்டு நீங்கிச் செல்லுதலும் எதிர்மறைத் தொடர்புள்ளவை. வேலையை விட்டு நீங்கிச் சென்றோர் கூறிய கருத்துகளின்படி வேலையில் சில மாற்றங்களைச் செய்த போது, வேலையை விட்டு நீங்கிச் செல்வோர் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவிற்குக் குறைந்ததாக ஆய்வுகள் உணர்த்துகின்றன.

வேல்லக்கு வராதிருத்தல் , வேலை மனநிறைவுடன் தொடர்பற்றுள்ளது. ஏனென்றால் வேலைக்கு வரா திருத்தல், வேறு பல காரணங்களாலும் நிருணயிக்கப் படுகின்றது. வேலையின் சிறப்பு, வேலை மன நிறைவுடன் தொடர்புடையதாக இருக்கும் என்று ஊகிக்கப்பட்டாலும், ஆய்வுகள் அதனை உறுதி செய்யவில்லை. வேலையின் தன்மையே சிறப்பான வேலைக்குக் காரணமாகிறது. வேலை மனநிறைவு மட்டுமே சிறப்பான வேலைக்கு வித்திட இயலாது.

-வே.க.

**வேலை வாய்ப்பின்மை :** இது தொழில் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளிலும் வளர்ச்சியடை யாத நாடுகளிலும் காணப்படும் பொதுவான ஒரு சமுதாய - பொருளாதாரச் சிக்கலாக உள்ளது. இதற்கான கார ணங்களும் தன்மைகளும் நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. காரல் பிரிபரம் (Karl Pribram) என்ற அறிஞர் வேலை வாய்ப்பின்மையைப் பற்றிக் கூறும்போது வேலை செய்யத் தகுதியும் ஆர்வமும் உள்ள ஒருவருக்குச் சமூகத்தில் வேலையில்லாத ஒரு சூழ்நிலையையே வேலை வாய்ப்பின்மை (Unemployment) எனக் கூறுகிறார். அதாவது உழைக்க விரும்புகின்றவர்கள் வருவாய் கிடைக்கின்ற பணி எதனையும் பெற இயலாமல் இருக்கின்ற நிலையே வேலை வாய்ப் பின்மையாகும். இவ்வாறு வேலை வாய்ப்பின்மையை விவரிக்கும்போது உடல் அமைப் பினால் வேலை செய்யத் தகுதியற்றவர்கள் அல்லது மனநிலை குறைபாடு உள்ளவர்கள் அல்லது வேலை செய்ய விருப்பமில்லாதவர்கள் எனப் பிரித்துப் பார்க்க வேண்டும். மேற்கூறிய அனைவரையும் வேலையில்லாதவர்களாக கருதக்கூடாது. உடல் அமைப்பினால் வேலை செய்யத் தகுதியற்றவர்களுள் சிறுவர்-சிறுமியரையும், நோயாளிகளையும், வயது முதிர்ந்தோர்களையும், உடல் ஊனமுற்றோரையும் சேர்த்துக் கொள்ளலாம். அடுத்து வேலை செய்ய விருப்பமில்லாதவர்களுள் துறவிகளையும், இரந் துண்பவர்களையும், சொத்துகளையுடைய பெரும் பணக்காரர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். இருப் பினும் சில அறிஞர்கள் இவர்களுள் வேலை செய்ய விருப்பமுள்ளவர்களையும், மனநிலை குன்றியவர் களுள் குணப்படுத்தத்தக்க நிலையிலுள்ளவர்களை யும் வேலையில்லாதவர்கள் பட்டியலில் சேர்த்துக் கொள்கிறார்கள். அதுபோன்ற மாறுபட்ட கருத்து களினால் சமூகவியலறிஞர்களும் பொருளாதார வல்லுநர்களும் வெவ்வேறு விதத்தில் வேலை வாய்ப் பின்மையை வகைப்படுத்துவதிலும், அவற்றிற்கான காரணிகளைக் கண்டுபிடிப்பதிலும் மாறுபட்டுள்ள னர்.

பிவரிட்சு பிரபு (Lord Beveridge) என்பவர் வேலை வாய்ப்பின்மையை அதன் காரணங்களின் அடிப் படையிலும், தன்மையின் அடிப்படையிலும் தனித் தனியாக வகைப்படுத்துகிறார். வேலைவாய்ப்பின் மைக்கான காரணங்களின் அடிப்படையில் அதனை ஐந்து வகையாகப் பிரித்துள்ளார்.

தொழில் நுட்ப வேலையின்மை : தொழில் நுட்பங் களில் விரைந்த மாற்றங்கள் ஏற்படுவதால் தோன்று வது தொழில் நுட்ப வேலையின்மை (Technological Unemployment) ஆகும். புதிய அறிவியல் கண்டுபிடிப்பு களாலும் தொழில் நுணுக்க மாற்றங்களாலும் பலர் வேலை இழக்கின்றனர். வாணிக, தொழில் அமைப் பிலும் நிருவாக முறையிலும் மாற்றங்களை ஏற்படுத் தும் பொழுது தொழில் நுட்ப வேலை வாய்ப் பின்மை ஏற்படலாம். எடுத்துக்காட்டாக, கணிப் பொறி (Computer) போன்ற இயந்திரங்களைப் பயன் படுத்துவதால் ஏற்படும் வேலைவாய்ப்பின்மையைக் கூறலாம்.

சுழல் நிலை வேலையின்மை : சில சமயங்களில் குறிப்பிட்ட பொருளுக்கு மக்களிடையே தேவை குறையும்போது அப்பொருளின் உற்பத்தியைக் குறைக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனால் உண்டாகும் வேலையின்மையே சுழல்நிலை வேலை யின்மை (Cyclical Unemployment) எனப்படும்.

பிறழ்ச்சிக் காரண வேலையின்மை : தொழிற் சாலையின் அமைப்புகளில் ஏற்படும் மாற்றங்களி னால் இவ்வகை வேலையின்மை ஏற்படுகிறது. புதிய வணிக முறைகள் அடிக்கடி மாறக் கூடியவையாக இருக்கின்றன. சில சமயங்களில் தேவைக்கு மிகுதி யான தொழிலாளர்கள் இருக்கும்பொழுது அவர்கள் அனைவரையும் ஒரு குறிப்பிட்ட பொருள் உற்பத்தி யில் ஈடுபடுத்த முடியாத சூழ்நிலையில் இத்தகைய வேலையின்மை ஏற்படாலம். ஏனெனில், அந்தப் பொருளின் தேவை குறைந்திருக்கலாம் அல்லது அந் தப் பொருளுக்குப் பதிலாக மக்கள் வேறு பொருளை

மிகுதியாக வாங்கலாம். உழைப்புக்குரிய தேவைக்கும் அளிப்புக்கும் இடையில் சரியான பொருத்தமின்மையின் காரணமாக இத்தகைய வேலையின்மை தோன்றலாம். ஒருவருக்கு வேலை செய்ய ஆட்கள் தேவைப்படலாம். ஆனால், பொருத்தமான ஆள் கிடைக்காததாலோ, தக்க ஆள் இடம் மாறி வந்து வேலை பார்க்க முன் வராததாலோ, இத்தகையை வேலையின்மை ஏற்படலாம். பிறழ்ச்சிக் காரண வேலையின்மை (Frictional Unemployment) இடங்களில் ஏற்றத் தாழ்வுகளாலும், தொழில்நுட்ப வேறுபாடுகளாலும் ஏற்படலாம்.

அமைப்புமுறை வேலையின்மை : இது சமுதாயத்தின் பொருளாதார அமைப்பில் ஏற்படக்கூடிய மாற்றத்தின் விளைவால் தோன்றக்கூடியது. ஒரு பொருளைப் பயன்படுத்துவோரின் விருப்பத்தில் ஏற்படக் கூடிய மாற்றம், மக்கள் தொகைப்பெருக்கம், உற்பத்தியில் கையாளப்படக்கூடிய முறைகள் முதலானவற்றால் இத்தகைய வேலையின்மை தோன்றுகிறது. தேவை மாற்றத்தினால் பொருளாதார அமைப்பில் எதிர்பாராத மாற்றம் ஏற்படுவதாலும், தேவைக்கு மேல் உழைப்பு மிகுதியானதாலும் இவ்வகை வேலையின்மை ஏற்படுகிறது. நிலம், மூலதனம் ஆகியவற்றைப் பயன்படுத்துவதைப் போல உழைப்பைப் பயன்படுத்த முடியாது. பொருளாதார மாற்றம் விரிவாகவும், பெரிய அளவிலும் ஏற்படுகின்ற பொழுது உற்பத்தி முறை மாறி அமைப்புமுறை வேலையின்மை (Structural Unemployment) தோன்றுகிறது.

பருவ கால வேலையின்மை : தொழில்களின் நடவடிக்கைகளில் தோன்றக்கூடிய பருவ கால ஏற்றத் தாழ்வுகளினாலோ, பொருட்களின் தேவையில் ஏற்படக்கூடிய மாறுதல்களினாலோ சிலர் வேலையற்றிருக்கலாம். நாட்டில் ஏற்படும் தட்ப, வெட்ப நிலை மாற்றங்களுக்கு ஏற்பத் தொழில் நடவடிக்கைகள் மாறுகின்றன. நாகரிக மாற்றங்களும் இத்தகைய வேலையின்மைக்கு ஓர் இன்றியமையாக் காரணமாகும். வேளாண்மை இயற்கையைப் பெரிதும் சார்ந்திருப்பதால், பிற துறைகளைவிட வேளாண்மையிலேயே, மிகுதியாகப் பருவாகால வேலையின்மை (Seasonal Unemployment) காணப்படுகின்றது. பிவரிட்சு பிரபு வேலையின்மையை அதன் தன்மையின் அடிப்படையில் பின்வருமாறு கூறுகிறார்.

தன்விருப்ப வேலையின்மை : வேலையில் உள்ள ஒருவர் தன் விருப்பப்படி வேலையிலிருந்து விலகிக் கொள்ளுதலைத் தன் விருப்ப வேலையின்மை (Voluntary Unemployment) என்று கூறலாம். இருக்கின்ற வேலைச் சூழ்நிலையிலும், நிலவுகின்ற கூலி நிலையிலும் சிலர் வேலை செய்வதைவிட வேலையற்றிருப்பதையே விரும்பலாம்.

தன்விருப்பமற்ற வேலையின்மை : ஒருவர் தம் தகுதிக்குத் குறைவான ஊதிய விகிதத்தில் வேலை செய்ய விரும்பியும், முயன்றும் வேலை கிடைக்காமல் இருக்கும் நிலை தன் விருப்பமற்ற வேலையின்மை (Involuntary Unemployment) எனப்படுகிறது.

வேலையின்மை நகர்ப்புற வேலையின்மை (Urban unemployment), கிராமப்புற வேலையின்மை (Rural Unemployment), பின்தங்கிய பகுதி வேலையின்மை (Unemployment in Depressed Area), சமுதாய வேலையின்மை (Social Unemployment) என்றும் வகைப்படுத்தப்படும்.

நகர்ப்புற வேலையின்மை நகரில் வாழும் மக்களிடையே காணப்படுகின்ற வேலையின்மையைக் குறிக்கும். கிராமப்புற வேலையின்மை கிராமப்புறங்களில் காணப்படுகின்ற வேலையின்மையைக் குறிக்கும். பின்தங்கிய பகுதியில் காணப்படுகின்ற வேலையின்மை என்பது வேளாண்மை, தொழில் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்நிலைகள் இல்லாத வறண்ட பகுதியில் காணப்படுவதாகும். இறுதியாக, சமுதாய அமைப்பின் காரணமாகவும், மரபுவழிப் பழக்கவழக்கங்களினாலும், குறிப்பிட்ட சாதி, சமயம் ஆகியவற்றைச் சேர்ந்த சிலர் வேலையற்றிருக்கலாம். இதனைச் சமுதாய வேலையின்மை என்று கூறலாம். பிற்போக்கான சமுதாயங்களில் இந்நிலையைக் காணலாம்.

வேலையின்மைக்கான காரணங்கள் : பொதுவாக வேலையின்மைக்கான காரணங்களைத் தனிஆள் காரணிகள் (Personal factors), தொழில்நுட்ப பொருளாதாரக் காரணிகள் (Technological - economic factors) என இரு வகைப்படுத்தலாம்.

தனி ஆள் காரணிகள் : தனிஆள் காரணிகளில் நடத்தையில் குறை உள்ளவர்களையும் உடலில் ஊன

முள்ளவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம். புதிய தொழில்முறைக்கு ஏற்ற பயிற்சி இல்லாதது கூட இவ்வகைக் காரணிகளில் ஒன்றாகும். எல்லியட்டும், மெர்ரிலும் (Elliott & Merrill), வயது, ஒவ்வாத தொழிற் பயிற்சி (Vocational unfitness). தீர்க்க முடியாத நோய், உடல் ஊனங்கள் ஆகியவை தனிஆள் காரணிகளாகும் என்று கூறுகிறார்கள்.

தொழில் நுட்ப - பொருளாதாரக் காரணிகள் : தொழில் நுட்பங்களிலும், தொழில் நுணுக்கங்களிலும் விரைந்த மாற்றங்கள் ஏற்படுதல், புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள் அடிக்கடி மாறுகின்ற தன்மையுடைய தொழில்கள், பொருளாளதார அமைப்புகள் ஆகியவை வேலையின்மைக்கான முக்கிய காரணிகளாகும். பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய ஏற்றத்தாழ்வுகளும் வேலையின்மைக்கு ஒரு முக்கிய காரணியாகும்.

வேலையின்மையின் தீய விளைவுகள் : வேலையின்மை நிரந்தரமானதாக இருந்தாலும் அல்லது இடைக்காலமானதாக இருந்தாலும் அதனால் சமுதாயத்தில் பல தீய விளைவுகள் ஏற்படுகின்றன். அதனால் ஏற்படக்கூடிய தீய விளைவுகள், தொடர்புள்ள தொழிலாளியை மட்டுமன்றி, அவருடைய குடும்பத்தையும், அவர் வாழும் சமூகத்தையும் பாதிக்கக் கூடியவையாக இருக்கும். வேலையின்மையினால் ஏற்படக்கூடிய தீய விளைவுகளைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்.

வேலையின்மையும் தனிஆள் சீர்குலைவும் : நிரந்தரமற்ற வேலை, தொழிலாளியினுடைய உடல், மனநிலை, விடாமுயற்சி போன்றவற்றை அதிகமாகப் பாதிக்கின்றது என்றும், அது அவருடைய தன்னம்பிக்கையைக் குறைத்து அவரை ஒரு சோம்பேறியாக்குகிறது என்றும், மற்றவர்களைப் பற்றி எப்போதும் குறைகூறக் கூடிய மனநிலையை வளர்த்துக் கொள்ள வழிவகுக்கிறது என்றும், இத்தகைய தீய விளைவுகளால் அந்தத் தொழிலாளி முழுமையாகச் சீர்குலைந்து விடுகிறான் என்றும் இலெசுகுயர் கூறுகிறார்.

வேலையின்மையும் உடல்நலக் குறைவும் : வேலையின்மையால் தங்கள் குடும்பத்தைப் பேணிப் பாதுகாக்கப் போதுமான வருவாய் கிடைக்காததால், குறைந்த உணவை உண்பதும், தேவையான உணவுப் பொருளட்களை வாங்க இயலாத சூழ்நிலையில் துன்புறுவதும், குறைந்த அளவுகூட மருத்துவத்திற்குச் செலவு செய்ய இயலாமல் போவதும் ஏற்படுகின்றன. கவலை, அச்சம் போன்ற இதர உணர்ச்சிமயமான எண்ணங்களினால் மேலும் உடல் நலம் பாதிக்கப்படுகின்றது. குறைவான வருவாய் உள்ள தொழிலாளர்களிடையே உடல்நலக் குறைவு ஒரு பெரும் சிக்கலாக விளங்குகின்றது.

வேலையின்மையும் குடும்பச் சீர்குலைவும் : வேலையின்மையினால் பாதிக்கப்பட்ட ஒருவருடைய உடலும் மனநிலையும் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் அவருடைய குடும்பமும் பாதிக்கப்படுகின்றது.

வேலையின்மையும் சமுதாயச் சீர்குலைவும் : வேலையின்மையினால் நாட்டின் உற்பத்தியும் அதனால் மக்களின் வாழ்க்கைத் தரமும் குறைகின்றன. நோய்வாய்ப் படுதலினாலும், குற்றங்களில் எண்ணிக்கை மிகுவதனாலும், மனக் குறைபாடுகளினாலும் பல சமூகச் சிக்கல்கள் தோன்றி, சமுதாயச் சீர்குலைவு ஏற்படுகிறது. வேலையில்லாது இருப்பவர்கள் அவர்களுக்கு மட்டுமன்றிச் சமூகத்திற்கே பெரும் சிக்கலுடையவர்களாக ஆகிவிடுகிறார்கள். இத்தகையவர்களுக்காகச் சமுதாயம் மருத்துவமனை, அவசரகால உதவி போன்றவற்றிற்காக மிகுந்த கவனம் செலுத்தவும் செலவு செய்யவும் வேண்டியுள்ளது.

வேலைவாய்ப்பின்மை திட்ட அளவைகளை (Criteria), பேராசிரியர் இராசு கிருட்டிணா (Prof. Raj Krishna) கூற்றுப்படி நான்கு விதமாக வகைப்படுத்துவர்.

வேலையின்மையைத் தவிர்க்க இரு வழிகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முதலாவது, தொழிலாளர்களின் அளிப்பைக் குறைக்கும் முயற்சி ஆகும். தொழிலாளர்களின் அளிப்பைக் குறைப்பதற்கான முயற்சிகளுள் முதன்மையானது மக்கட் பெருக்க வேகத்தைக் குறைக்கும் முயற்சியாகும். அம் முயற்சி விரும்பத்தக்க பலன்களை அளிக்கத் தக்கது என்றாலும், குறுகியகால அளவில் எதிர்பார்க்கும் பலன்களை அம் முயற்சி மூலம் பெறுவது இயலாது

என்பதையும் அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். எனவே, நீண்டகால நடவடிக்கைகளில் ஒன்றாக அம் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. ஆனால், வேலையின்மை நிலை உடனடியாக விலக்கப்பட வேண்டியதொன்று என்பதால் நீண்ட கால நடவடிக் கையோடு, குறுகிய கால நடவடிக்கைகளாக உழைப் பின் தேவையை மிகதியாக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் பணக் கொள்கை (Monetary Policy), அரசின் நிதிக் கொள்கை (Fiscal Policy), வருமானக் கொள்கை (Income Policy), விலைக் கொள்கை (Price Policy), பன் னாட்டு நடவடிக்கைகள் (International Measures) போன்றவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் உழைப்பிற்கான தேவையை மிகுதியாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொருளாதார நடவடிக்கைகளான உற்பத்தி, பகிர்வு ஆகிய நடவடிக்கைகள் மூலம் ஒரு முழு அளவில் அரசே மேற்கொள்ளத் தக்க பொதுவுடை மைப் பொருளாதார அமைப்பில் வேலையின்மை நிலையை எளிதில் நீக்கி விடலாம் என்றும், தனியார் உடைமை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் முதலாளித் துவப் பொருளாதாரத்தில் வேலையின்மை நிலையை நீக்க முடியாது என்றும் பொருளியல் வல்லுநர் குறிப்பிடுவர். முதலாளித்துவப் பொருளா தாரத்தில் தனியார் உடைமை ஏற்றுக் கொள்ளப்பட்டி ருப்பதால் செல்வ, வருமானப் பங்கீட்டில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் முனைப்பாக இருக்கும். அத்தகைய நாடுகளிலும் வேலையின்மை நிலையின் முனைப் பான விளைவுகளைக் குறைப்பதற்கான முயற்சி களை அரசுகள் மேற்கொள்ளுகின்றன.

வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ள வேலை யின்மை நிலையைக் காட்டிலும் குறைந்த வளர்ச்சி யுடைய நாடுகளில் நிலவும் வேலையின்மையின் அளவும் தன்மையும் மாறுபட்டிருக்கின்றன. ஏறத் தாழ ஒரு புரையோடிய புண் போலப் பொருளா தாரத்தில் பின்தங்கிய நிலையின் காரணமாக நிலை யான தன்மையுடன் வளரும் நாடுகளில் வேலை யின்மை காணப்படுகிறது. இது நிலையானதாக உள்ளதுடன் அந்நாடுகளில் இதன் அளவும் மிகுந்து காணப்படுகிறது.

**இந்தியாவில் வேலையின்மை :** இந்தியா ஒரு வள ரும் நாடு. இந்தியாவில் உள்ள வேலையின்மையை 1. நகர்ப்புற வேலையின்மை (Urban Unemployment), 2. கிராமப்புற வேலையின்மை (Rural Unemployment) என இரு வகைப்படுத்துவர். தொழில் வேலை யின்மை (Industrial Unemployment), கல்வியறிவு பெற்றோரிடையே உள்ள வேலையின்மை (Industrial Unemployment) என்ற இரு பகுதிகளாக நகர்புற வேலையின்மையை வகைப்படுத்துவர். அதைப் போலத் திறந்த வேலையின்மை (Open Unemployment), மறைமுக வேலையின்மை (Disguised Unemployment) என்ற இரு பகுதிகளாகக் கிராமப்புற வேலை யின்மையை வகைப்படுத்துவர்.

வேலையின்மை என்பதற்கான ஒரே வகையான துல்லியமான விளக்கமும் இலக்கண வரைவும் இல் லாத நிலையில் இந்தியாவில் நிலவும் வேலை யின்மை அளவைக் குறித்துப் பல்வேறு மதிப்பீடுகள் உள்ளன.

நகர்ப்புறங்களில் 8.1. இலட்சம் ஆட்களும் கிராமப்புறங்களில் 6.0 இலட்சம் ஆட்களும் ஆக மொத்தமாக 14.1. இலட்சம் ஆட்கள் வேலையற்றி ருந்தனர் என 1981-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கீடு குறிப்பிட்டது.

இந்தியத் திட்டக் குழுவின் மதிப்பீட்டின்படி (இந்திய மைய இருப்பு வங்கியின் 1969-ஆம் ஆண்டு திசம்பர் மாத ஏட்டில் (Reserve Bank of India Bulletin) வெளியிடப்பட்டவை) 1951-56 ஆண்டுகளுக்கான முதல் ஐந்தாண்டு திட்ட இறுதிக் காலத்தில் 5.3 மில் லியன் ஆட்களும், 1956-61-ஆம் ஆண்டுகளுக்கான இரண்டாம் ஐந்தாண்டு திட்ட இறுதிக் காலத்தில் 7.1 மில்லியன் ஆட்களும், 1961 -66 ஆண்டுகளுக்கான மூன்றாம் ஐந்தாண்டு திட்ட இறுதிக் காலத்தில் 9.6 மில்லியன் ஆட்களும். 1966 - 69 -ஆம் ஆண்டுகளுக் கான 3 ஓராண்டு திட்டங்களில் இறுதிக் காலத்தில் 22 முதல் 23 மில்லியன் வரையிலான ஆட்களும் வேலை யின்மை நிலையிலிருந்தனர்.

வேலையின்மை இந்தியாவில் எந்த அளவில் இருந்திருக்கிறது என்பதைப் பற்றி என்.எசு.எசு. (N.S.S.) என்று கூறப்படும் தேசிய மாதிரிக் கணிப்பு

(National Sample Survey) பல மதிப்பீடுகளை வெளியிட்டிருக்கிறது. பகவதி குழு (Bhagavathi Committee)வின் மதிப்பீட்டின்படி 1971-இல் இந்தியத் தொழிலாளர்களுள் 10.4 விழுக்காட்டினர் வேலையின்மை நிலையிலிருந்தனர் என்பர். திருத்தப்பட்ட ஆறாம் திட்ட (1980-85) மதிப்பீட்டின்படி, '1985-இல் 11.98 மில்லியன் தொழிலாளர்கள் வேலையின்மை நிலையில் இருப்பர்' என்றும் 'ஏழாம் திட்டக் காலத்தில் அந்த அளவு பெருமளவில் குறைக்கப்பட முயற்சிகள் மேற்கொள்ளப்படும்' என்றும் இந்தியத் திட்டக் குழு குறிப்பிட்டுள்ளது.

மதிப்பீடுகளின் துல்லியமான தன்மையை ஏற்றுக்கொள்ள இயலாவிட்டாலும் வேலையின்மையின் அளவும் அதன் தொடர்புடைய சிக்கல்களும் இந்தியாவில் நாள்தோறும் பெருகி வருவது உண்மையே. விரைவான மக்கட் பெருக்கம் மிகக் குறைந்த அளவிலான பொருளாதார வளர்ச்சி, உழைப்பாளர்களின் எண்ணிக்கைப் பெருக்கம், பொருத்தமற்ற தொழில் நுட்பம், பொருத்தமற்ற கல்வி முறை போன்ற பல காரணிகளின் விளைவாகவே வேலையின்மைச் சிக்கல் இந்தியாவில் பெருகி வருகிறது. இந் நிலையைத் நீக்க அரசு பெரும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. எட்டாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் வேலையின்மையைப் பெருமளவில் குறைப்பதற்காகவும், அடுத்தடுத்த திட்டக் காலங்களில் முழு வேலை நிலையை (Full employment level) அடைவதற்காகவும் பல முன்னோடித் திட்டங்களை ஆறாம், ஏழாம் ஐந்தாண்டு திட்டங்களில் இந்தியப் பேரரசு தொடங்கிச் செயற்பட்டு வருகிறது.

-கோ.இரா.என்.எஸ்.பா.

**துணை நூல்கள் :**


1. Madan, G.R., **Indian Social Problems**, Allied Publications, Bombay, 1976.

2. Mamoria, C.B., **Social Problems and Social Disorganization in India**, Kitab - Mahal, Allahabad, 1981.

3. Narayana, D.L., (Ed), **Planning for Employment**, Sterling Publishers Pvt. Ltd., New Delhi, 1980.

4. Puttaswamiah, K., **Unemployment in India : Policy for Man Power**, Oxford & IBH, New Delhi, 1977.

5. Sharma, R.N., **Principles of Sociology**, Asia Publishers, Bombay, 1976,


**வேலை வாய்ப்பு :** பொருளாதார அமைப்பில் மிகப் பெரும்பங்கினை வேலைவாய்ப்புப் பெறுகின்றது. எல்லா நாடுகளிலும் எல்லாச் சமுதாய அமைப்புகளிலும் வேலை வாய்ப்பு முதன்மை அமைப்பாக இருந்து வருகிறது. வேளாண்மைத் துறையிலும், தொழில் துறையிலும், பணித் துறையிலும் ஈடுபடும் அனைவரும் வேலை வாய்ப்பினைப் பெற்றவர்கள் என்று கருதப்படுகின்றனர். வேலை வாய்ப்பின் தன்மை பொருளாதார அமைப்பின் சூழலுக்கு ஏற்ப அமைகிறது. பண்ணை முறையில் வேலை பெற்றவர்கள் வேலை வாய்ப்பு என்ற இலக்கணத்தின்கீழ் வந்திருந்தாலும், பல சமூகக் கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். வேளாண்மைப் பணி தொடங்கும் காலத்தில்தான் அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும். கூலி சீரான முறையில் கொடுக்கப்படவில்லை. உழைப்பிற்கு ஏற்ற கூலி மறுக்கப்பட்டதால் இவ்வேலை வாய்ப்பு சுரண்டல் முறையை உருவாக்கியது எனப் பல பொருளியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவித்தனர். பல ஆயிரக்கணக்கான தொழிற்கூடங்கள் 19, 20-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில் வளர்ச்சி காரணமாகத் தோன்றின. வேலை வாய்ப்பும் பெருகுகிறது. தொழிலாளர் கழகங்கள் மாபெரும் சக்தியாக மாறின. அவை உழைப்பிற்கு ஏற்ற கூலி, எட்டு மணி நேர வேலை, சுத்தமான சுற்றுப்புறச் சூழ்நிலை போன்ற பல வசதிகள் வேண்டும் என வலியுறுத்தின. தொழிற்சாலை பொருளாதாரத்திற்கு இன்றியமையாக் காரணியாக அமைந்தது. வேலை வாய்ப்பை உருவாக்குவதும், உற்பத்தியைப் பெருக்குவதும் சமூக நலன்களைப் பேணிப் பாதுகாப்பதும் அரசின் கடமைகளாகக் கருதப்பட்டன.

பொருளியல் சிந்தனையில் கி.பி.18, 19-ஆம் நூற்றாண்டுகளில் சில கருத்துகள் எதிரொலித்தன. இந்தப் பொருளியல் சிந்தனை அக்காலப் பொருளியல் அமைப்பின் விளைவுகளாகும். தலையீடு இல்லாத தனியார் பொருளாதாரமே தலை சிறந்தது என நம்பிக்கை உறுதிப்படுத்தப்பட்டது. இக்கூற்றின்படி அங்

காடி அமைப்பு முறையில் தேவை, அளிப்பு ஆகிய வற்றின் சக்திகளுக்கு ஏற்பக் கூலி நிலை, கூலி மாறு பாடுகள், வேலை வாய்ப்பு, வேலை வாய்ப்பின்மை ஆகியவை நிருணயிக்கப்படுகின்றன என்ற கருத்தும் கூறப்பட்டது. எனவே, அரசு வேலை வாய்ப்பை உரு வாக்குவதில் தனி அக்கறை செலுத்தவில்லை. இச் சிந்தனைப் போக்கை 1930-ஆம் ஆண்டில் அமெரிக்கப் பொருளாதார நிலையில் ஏற்பட்ட பெரும் மந்த நிலை மாற்றியது. இந்தப் பெரும் பொருளாதார நெருக்கடியால் 1930 -ஆம் ஆண்டு, ஐரோப்பா நாடுகள் அதிர்ச்சியையும், அனுபவத்தையும் பெற் றன. முழு வேலை வாய்ப்பு அளிப்பது என்ற கொள்கை பல ஐரோப்பிய நாடுகளில் அரசுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. முதலாளித்துவ அமைப் பில் வேலைவாப்புப் பெருகும் என்ற நிலை மாறிப் பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றும் என்ற முன்னறி விப்பும் உலகிற்கு எட்டியது. கீன்சு (Keynes) என்ற பொருளியல் மேதை தனியார் பொருளாதாரத்தை அரசாங்கம் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவது தவறில்லை எனவும், பொதுச் செலவு மூலம் முதலாளித்துவம் ஏற்படுத்தும் சிக்கல்களைத் தீர்க்க லாம் எனவும் முழு வேலை வாய்ப்பைத் தருவது நல அரசின் தலையாய கொள்கையாக இருக்க வேண் டும் எனவும் வலியுறுத்தினார். இங்கிலாந்து நாட்டில் 1944-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பிவிரிட்சு அறிக்கை (Beveridge Report - 1944) நல்ல சமூக அமைப்பில் முழு வேலை வாய்ப்பு நிலைதான் நல்ல அறிகுறி எனக் குறிப்பிட்டது. அமெரிக்க நாட்டில் 1946 -ஆம் ஆண்டு, வேலை வாய்ப்பு நிலையில் ஒரு திருப்புமுனை ஆண்டாகியது. அந்த ஆண்டில் வேலை வாய்ப்புச் சட்டம் அறிவிக்கப்பட்டது. ஐக் கிய நாடுகளின் உரிமைச் சாசனத்தில் உயர் வாழ்க் கைத் தரமும், முழு வேலை வாய்ப்பும், சமூகப் பொருளாதார வளர்ச்சியும், முன்னேற்றமும் நெறி முறைகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. முழு வேலை வாய்ப்பை அளிப்பது உலக நாடுகளின் கடமை எனவும் அறிவுறுத்தப்பட்டது. முழு வேலை வாய்ப்பு என்பதைப் பற்றிய பல வரையறைகள் உள்ளன. சர் வில்லியம் பிவிரிட்சு (Sir William Beveridge) வேலை வாய்ப்பைப் பற்றி அளித்த வரை யறைகள் சிறப்புக்குரியனவாகும். வேலையில்லா மனிதர்கள் இருப்பதைவிட எப்பொழுதும் பேலை காலியாக இருக்கும் சூழ்நிலை உருவாக்குவதுதான் சிறந்தது என்பது பிவிரிட்சின் கூற்றாகும். ஐரோப்பிய நாடுகளில் 20-ஆம் நூற்றாண்டில் முழு வேலை வாய்ப்பை உருவாக்குதல், அளித்தல் ஆகிய முயற்சி கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன, மேற்கொள் ளப்படுகின்றன. தொழில் வளர்ச்சியும், தொழில் நுட்ப வளர்ச்சியும் விரைவாகச் செயற்படுவதினால். வேலைவாய்ப்புப் பெருகும் நிலை அந்நாடுகளில் காணப்படுகின்றது. முதலாளித்துவத் பொருளாதார அமைப்பில் ஏற்படும் சில நெருக்கடிகள் காரணமாக அவ்வப்போது வேலை வாய்ப்புக் குறைகின்ற சூழ் நிலையும் ஏற்படுகின்றது. கல்வியும், சமூக நிலையும் அந்நாடுகளில் வளர்ச்சி பெற்று இருப்பதனால் வேலை வாய்ப்பு இன்மையை மக்கள் தாங்கிக் கொள்வதில்லை. அரசு இச்சூழலில் வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்குச் சலுகைத் தொகை தருகின்றது மூன்றாம் உலக நாடுகளில் ஆசிய, ஆப்பிரிக்கா, இலத்தின் அமெரிக்க நாடுகளில் முழு வேலை வாய்ப்பு என்பது பெரும் சிக்கலாகவும், வினாகவும் உள்ளன. அந்நாடுகளில் மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்பப் பொருளாதார வளர்ச்சி வேகமாக இல்லாமையால் நாடு எதிர்பார்க்கின்ற அளவுக்கு வேலை வாய்ப்புத் தர முடியவில்லை. வேளாண் மைத் துறை போதிய அளவில் எல்லாப் பகுதிகளி லும் வளர்சியடையாத காரணமும் வேலை வாய்ப் பின்மைக்குக் காரணமாக அமைகின்றது.

இந்தியா, விடுதலைக்குப்பின் பொருளாதார வளர்ச்சியை விரைவு படுத்த ஐந்தாண்டு திட்டங் களைத் தீட்டியது. வேலை வாய்ப்பைப் பெருக்கு வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. புள்ளி விவரங்கள் அடிப்படையில் வேலை வாய்ப்பின் தன் மையை அறிந்து கொள்ள முடிகின்றது. மைய அரசு 1984-ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி 33.11 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத்தந்தது. மாநில அரசுகள் 61.53 இலட்சம் ஆள்களுக்கு வேலை வாய்ப்பை அளித்தது. அரசுக்கு உட்பட்ட நிறுவனங்கள் (Quasi Governments) அளிக்கும் வேலை வாய்ப்பின் எண் ணிக்கை 52.72 இலட்சமாகும். உள்ளாட்சி அமைப்பு கள் மூலம்வேலை வெறுவோர் 21.30 இலட்சம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தனியார் நிறுவனங்களில் 1984-ஆம் ஆண்டு 73.43 இலட்சம் ஆள் வேலை வாய்ப்பைப் பெற்றனர்.

**வேலை அமைவு நிலை** : இந்தியாவில் பொருளாதார அமைப்பிற்கு ஏற்ப வேலை அமைவு நிலை உள்ளது. இந்தியாவின் பொருளாதாரச் சூழலின்படி கலப்புப் பொருளாதார அமைப்பை விடுதலைக்குப் பின் ஆட்சி செய்த காங்கிரசு அரசு ஏற்றது. இக் கலப்புப் பொருளாதார அமைப்பின்படி பொதுத் துறையும், தனியார் துறையும் தனித்தனியாகவும், சில துறைகளில் இணைந்தும் செயலாற்றுகின்றன. வேலை அமைவு பின்வரும் பொருளாதார நிறுவனங்களில் பிரிவுகளுக்கேற்பவும் அமைந்துள்ளது. அது வேளாண்மை (Agriculture), கனிமத்துறை (Mining), உற்பத்தித் துறை (Manufacturing), மின்சாரம், வாயு, தண்ணீர் (Electricity, Gas, Water), கட்டட அமைப்புத் துறை (Construction), மொத்த-சில்லறை வாணிபம் (Whole sale, Retail Trade), போக்குவரத்து, கிடங்குகள் தொடர்புத் துறை (Transport, Storage and Communication), நிதி அமைப்பு (Financing), காப்பீடு (Insurance), நிலச் சொத்து (Real Estate), சமுதாய வளர்ச்சி, சமூகப் பணிகள், தனியார் பணிகள் (Community Social and Personal Services) போன்ற பல பிரிவுகளாக இந்தியாவில் அமைந்துள்ளது. மேற்கூறிய பிரிவுகளில் 1984-ஆம் ஆண்டின் கணக்குப்படி 168.66 இலட்சம் ஆள்கள் பணியாற்றுகின்றனர். தனியார் துறையில் மேற்கூறிய பிரிவுகளில் 73.43 இலட்சம் ஆட்கள் பணியாற்றுகின்றனர். இந்தியாவின் மக்கள் தொகை வளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்ப்பின் இவ்வேலை வாய்ப்பு மேற்கூறிய துறைகளில் மிகக் குறைந்த அளவில்தான் உள்ளது எனப் புலப்படும்.

**வேலை வாய்ப்புகளில் காணப்படும் சமுதாய முறை அமைப்பு** : வேலை வாய்ப்பு நிறுவனங்களிலும், வேலையில் ஈடுபடும் தொழிலாளர்களிடமும் பல மாறுதல்கள் ஏற்பட்டன. இந்த மாறுதல்களைப் பற்றி ஐரோப்பிய நாடுகளில் பல ஆய்வுகள் செய்துள்ளனர். உற்பத்தித் திறனையும், முயற்சி ஆர்வத்தையும் (Motivation) பெருக்கவும் தொழிலாளர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் தொழிற்கூடங்களின் மேலாளர்களையும், தொழிலாளர்களையும் ஒன்றுபடுத்திக் குடியரசு நெறி முறையில் வழிபடுத்தித் தொழிலாளர்களின் உரிமைகளை மதித்து உற்பத்தித் திறனை வளர்க்கும் நோக்குடன் இந்தப் புதிய சமுதாய முறையை உருவாக்கினர்.

**தொழில் அமைப்பு நலவியல்** : இச் சமுதாயக் கூற்றின்படி முதலாளித்துவ நிறுவனங்கள் தொழிலாளர்களைச் சுரண்டல் மனப்பான்மையுடன் பார்க்காமல், தொழிலாளர் சக்தியையும் பல நிலைகளில் கொண்டு செல்லும் போக்கே தொழில் அமைப்பு நலஇயல் என்று கூறப்படுகின்றது. சமவுடைமை நாடுகளில் தொழிலாளர்களின் சமூக நலன்களை வளர்க்கும் நோக்குடன் அவர்களின் திறன் பல நிலைகளில் சோதிக்கப்பட்டு, அவர்களுக்கு அவர்களின் திறனுக்கு ஏற்ப வேலைகள் தரப்படுகின்றன. மேலும் தொழிலாளர்களுடைய சமுதாயக் கடமையும், நாட்டின் குடிமகன் என்ற தொழிலாளர்களின் கடமை உணர்ச்சியும் எடுத்துச் சொல்லப்படுகின்றன.

**தொழிலாளர்கள் நுகர்வு நிலை** : தொழில் துறையிலும், வணிகத் துறையிலும் பணியாற்றும் தொழிலாளர்கள் சமுதாய வாழ்வில் ஒன்றிணைந்து சமுதாயத்தால் படைக்கப்படும் பொருள்களையும் பணிகளையும் நுகர்கின்றனர். பல ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர்களே பெரும்பாலும் நுகர்வோர்களாக உள்ளனர். எனவே, தொழிலாளர் கழகங்கள் மூலம் அவரவர்களுடைய நிலையைப் பாதுகாக்கவும் தொடர்ந்து வருவாயைப் பெறவும் பல பாதுகாப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. வேலை வாய்ப்பின்மைக் காப்பீடு (Unemployment Insurance), வேலைப் பயிற்சி, சமூகப் பாதுகாப்பு போன்ற திட்டங்கள் மூலமும் தொழிலாளர்களின் நிலை பாதுகாக்கப்படுகின்றது.

இதுபோன்ற தொழிலாளர் நலத் திட்டங்களும், அமைப்புகளும் வேலைவாய்ப்புகளில் காணப்படும் சமுதாய முறை அமைப்பு எனப்படுகின்றது. இந்தியா போன்ற வளருகின்ற நாடுகளில் உழைக்கும் தொழிலாளர்கள் பல்வேறு தொழிற்சங்கங்கள் மூலம் பல்வேறு உரிமைகளைப் பெற முடியும் என்ற நிலை இருப்பினும் ஐரோப்பிய நாடுகளில் இருக்கின்ற சமுதாய அமைப்பு முறை இன்னும் முழு அளவில் இந்தியாவில் உருவாகவில்லை எனலாம்.

**வேலையும், கூலியும்** : இந்தியாவில் வேலை அமைப்பு இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றது. அரசின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு இயங்குகிற தொழிற்கூடங்களும், இந்த விதிகளுக்கு உட்படாத

வேலை அமைப்பு முறையும் உள்ளன. பெரும் பாலும் பெரிய தொழில் நிறுவனங்கள் அனைத்திலும் அரசின் விதிகள் படியும், தொழிலாளர் கழகங்களில் கூலிஉயர்வு பெறும் திறனைப் பொருத்தும் கூலி நிலைகள் அமைகின்றன. இந்தியாவில் தொழிலாளர் கழகங்களின் போராட்டங்களினால் 1936-ஆம் ஆண் டில் வேலைக்கு ஏற்ற கூலி தருவது சட்டமாக்கப் பட்டது. விடுதலைக்குப் பின் இந்தியாவில் 1948-ஆம் ஆண்டில் குறைந்த அளவு கூலிச்சட்டம் இயற்றப்பட் டது. அச்சட்டங்கள் இந்தியாவின் முழுமைக்கும் எல்லா வகையான தொழில்களுக்கும் விரிவுபடுத்தப் பட்டன. மேலும் ஊக்கத்தொகை அளிப்பதும் சட்டவடிவில் 1965-ஆம் ஆண்டிலிருந்து கொண்டு வரப்பட்டது. ஊக்கத் தொகைச் சட்டத்தில் 1976-ஆம் ஆண்டு திருத்தம் மேற்கொளள்ளப்பட்டது. இத்திருத் தத்தின்படி ஊக்கத்தொகை உற்பத்தி அல்லது ஆதா யம் அல்லது உற்பத்தித்திறன் அடிப்படையில் வழங்க லாம் என்பது கொண்டுவரப்பட்டது. இச்சட்டங்கள் பெரும்பாலும் தொழில் பிரிவுகளில் அமல்படுத்தப் படுகிறது. வேளாண்மைத் துறையில் சீரான கூலி அமைப்பு முறை இன்னும் உருவாகவில்லை எனலாம். தஞ்சையின் கிழக்குப் பகுதிகளிலும், கேரளா மாநிலத்தில் ஆலப்புழை (Allepey) மாவட் டத்திலும் வேளாண்மைச் சங்கங்கள் சீரான கூலி உயர்வுக்காகப் போராடுகின்றன. அரசு அவ்வப் போது வேளாண்மைத் துறையில் கூலி உயர்வை அறிவிக்கின்றது. இருப்பினும் உழைப்புக்கு ஏற்ற கூலி சீரான முறையில் தரப்படுவதில்லை.

-மு.நா.

**வைணவ சமயாசாரியர்கள் :** வைணவ சமயம் ஓர் உபய வேதாந்த சமயம். வடமொழி யிலுள்ள வேத வேதாந்தங்கள் வடமொழி மறை களாகவும், தமிழிலுள்ள ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் தென்மொழி மறைகளாகவும் வைணவர் களால் கருதப்படுகின்றன. "இவ்விரு மறைகளும் வைணவ சமயத்தையே மனிதன் உய்யும் வகையாகக் காட்டுகின்றன" என்று நிலைநாட்டி, கி.பி.9-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.14 -ஆம் நூற்றாண்டு வரையில் வைணவ சமயத்தைப் பரப்பியவர்கள் வைணவ சமயாச்சரியர்கள் எனப்படுகின்றனர். இவர்கள் அனைவரும் வடமொழி மறையையும் அவற்றை விளக்கும் இசுமிருதிகள், இதிகாசங்கள், புராணங் கள், நியாயம், மீமாம்சை, வியாகரணம் முதலான சாத்திரங்களையும் கரை கண்டவர்கள். அன்றியும் இவர்கள் இந்தச் சாத்திரங்களை மேற் கோள் காட்டி ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் முழங்கப்படும் வைணவ சமயமே இந்த வடமொழி நூல்களிலும் முழங்கப்பட்டுள்ளது என்று தம் சொற் பெருக்குகளாலும், நூல்களாலும் நிலைநாட்டியவர் கள் ஆவர். இவர்களுள் முதல்வரான நாதமுனிகள் சில வட மொழி நூல்களை அருளியிருந்த போதிலும் அவை இப்போது கிடைப்பதில்லை. அவர் பேரரான ஆளவந்தார் என்னும் யாமுநாசாரியர் எட்டு நூல் களை அருளியுள்ளார்.

வேதாந்தப் பொருளை விளக் கும் 'சித்தித்திரயம்' என்னும் மூன்று நூல்கள், 'திரு மாலே பரம்பொருள்' என விளக்கும் 'மகாபுருட நிருணயம்', பாஞ்சராத் ராகமம் வேத சமயத்தையே சொல்கிறது என விளக் கும். 'ஆகமப்பிராமாண்யம்', கீதையின் பொருளை விளக்கும் 'கீதார்த்த சங்கிரகம்', திருமாலின் துதியான 'தோத்திர ரத்தினம்', திருமகளின் துதியான 'சதுசுலோகீ' என்பவை அவை. அவற்றுள் மகா புருட நிருணயம் தவிர ஏனையவை இப்போதும் கிடைக் கின்றன. இவருடைய சீடர்களுக்குச் சீடராய், விசிட்டாத்துவைத சிரீவைணவ மதத்தபகரான இசிரீராமானுசர் அருளிய நூல்கள் ஒன்பது. அவற்றுள் ஆளவந்தாரின் விருப்பப்படி வியாசரின் பிரம்ம சூத்திரங்களுக்கு மேலும் இரண்டு சுருக்கமான உரைகளாய் அமைந்தவை 'வேதாந்த தீப'மும் 'வேதாந்தசார'மும் ஆகும். உபநிடதங்களின் பொருட் களை ஆராய்ந்து நிருணயிக்கும் நூலே 'வேதார்த்த சங்கிரகம்' ஆகும்.

ஆளவந்தாருடைய கீதார்த்த சங்கிரகத்தை அடியொற்றிச் சிரீராமானுசரால் கீதைக்கு உரையாக இயற்றப்பட்டது. 'கீதா பாடியம்' ஆகும். எம்பெரு மாளின் ஆராதனத்தை விளக்குவது 'நித்தியக் கிந்தம்'. சிரீரங்க நாச்சி யாரோடு கூடிய சிரீரங்கநாதனை ஒரு பங்குனி உத்தரத் திருநாளில் உலகினர் உய்வதற்காக சிரீராமானுசர் சரணமடைந்ததை விளக்கும் நூல்களே 'கத்தியத்திரயம்' எனப்படும் சரணாகதி கத்தியமும், சிரீரங்க கத்தியமும், சிரீராமானுசர் அருளிய இவ் வொன்பது நூல்களும் வடமொழியில் அமைந்தவை. சிரீராமானுசளுக்குப் பின்னரே வைணவ சமயாசாரி

யர்கள் செந்தமிழ்ப் பாக்களினாலான நூல்களையும், இரத்தினமும் பவளமும் இடை விரவிக் கோத்த மாலை போலத் தென்மொழியும் வடமொழியும் கலந்த மணிப்பிரவாள நடையில் அமைந்த உரை நடைநூல்களையும் இயற்றினர். பெரிய அத்துவைத சமயத் தலைவராயிருந்து சிரீராமானுசரால் வைணவ ராக்கப் பெற்ற அருளாளப் பெருமாள் எம்பெருமானார் 'ஞானசாரம்', 'பிரமேயசாரம்' எனும் வெண்பாக்களாலான இரு நூல்களை இயற்றினார். சிரீராமானுசரின் சீடரான திருக்குருகைப் பிரான் பின்னான் திருவாய்மொழிக்கு 'ஆறாயிரப்படி' உரையையும், பட்டரின் சீடரான நஞ்சீயர் 'ஒன்பதினாயிரப்படி' உரையையும், நம்பிள்ளையின் சீடரான பெரியவாச்சான் பிள்ளை 'இருபத்து நாலாயிரப்படி' உரையையும், அவர்தம் மற்றொரு சீடரான வடக்குத் திரு வீதிப்பிள்ளை 'முப்பத்தாறாயிரப்படி' (ஈடு) உரையையும், பெரியவாச்சான் பிள்ளையின் சீடரான வாதி கேசரி அழகிய மணவாளச் சீயர் 'பன்னீராயிரப்படி' உரையையும் மணிப்பிரவாள நடையில் இயற்றினார்கள்.

பெரியவாச்சான் பிள்ளை நாலாயிர திவ்வியப் பிரபந்தத்துக்கும், ஆளவந்தாருடைய தோத்திரங்கள், சிரீராமாருடைய 'கத்தியத்திரயம்' ஆகியவற்றுக்கும், மூன்று இரகசிய மந்திரங்களுக்கும், இராமாயணத்தில் முக்கியமான மூன்று சுலோகங்களுக்கும் மணிப்பிரவாள நடையில் உரைகளை இயற்றி "வியாக்கியானசக்ரவர்த்தி" என்னும் பெருமையைப் பெற்றார். பிள்ளை உலகாசிரியர் 'அட்டாதச ரகசியம்' எனப் படும் பதினெட்டு இரகசிய நூல்களை மணிப் பிரவாள நடையில் அருளினார். அவற்றுள் முதன்மையான "முமுட்சுப்படி, தத்துவத்திரயம். சிரீவசன பூடணம்" என்னும் நூல்களுக்கும், உலகாசிரியரின் தம்பியான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிய ஆசாரிய இருதயத்துக்கும், பெரியாழ்வார் திருமொழியில் நானூறு பாட்டுக்கும், மாமுனிகள், மணிப்பிரவாள நடையில் உரைநூல்களை அருளினார். மேலும், "உபதேச ரத்தினமாலை", "திருவாய் மொழி நூற்றந்தாதி", "ஆர்த்திப் பிரபந்தம்" ஆகிய செந்தமிழ்ப் பாக்களாலான நூல்களையும் இயற்றினார் மாமுனிகள்.

சிரீராமானுசருக்குச் சீடரான எங்களாழ்வான் விட்டுணு புராணத்துக்கு வடமொழியில் உரை அருளினார். கூரத்தாழ்வானும் பட்டரும் வட மொழியில் பல துதிநூல்களை இயற்றினர். கூரத்தாழ்வானின் சீடரான திருவரங்கத்தமுதனார் சிரீராமானுசரைப் பற்றிய 'இராமானுச நூற்றந்தாதி' என்னும் செந்தமிழ்ப் பாக்களாலான நூலை அருளினார். நடாதூர் அம்மாளின் சீடரான சுதர்சன் பட்டர் சிரீராமானுசருடைய சிரீபாடியத்துக்கும், ஏனைய சில நூல்களுக்கும் வடமொழியில் உரை அருளினார். சிரீவேதாந்த தேசிகர் வடமொழியிலும் தமிழ்ப்பாக்களிலும் மணிப்பிரவாள நடையிலும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்களை அருளினார். ஏனைய பல வைணவ சமயாசாரியர்கள், இத்தகைய நூற்றுக்கணக்கான நூல்களை அருளியுள்ளனர். "அறிவற்ற எல்லையிலா அசேதனப் பொருட்கள், அறிவுடைய கணக்கற்ற சீவர்கள் அடங்கிய உலகனைத்தையும் தன் உடலாகக் கொண்ட திருமால் ஒருவனே பரம்பொருள், பரமபதம் சென்று அவன் திருவடிகளில் என்றும் கைங்கரியம் (தொண்டு) செய்வதே பெரும்பேறு. அப்பேற்றை அளிக்கும் உபாயமாக (ஆறாம்) இருப் பவனும் அவனே" என்பரே உபய வேதாந்தங்களின் நிருணயமாகும் என்னும் கருத்து இந்த நூல்கள் அனைத்திலும் நிலைநாட்டப்பட்டுள்ளது.

-எஸ்.கி.

**வைராக்கிய தீபம்** : இந் நூல் தவத்திரு சாந்தலிங்க அடிகளால் அருளிச் செய்யப்பட்ட ஐந்து நூல்களுள் ஒன்றாகும். கொலை மறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோத வுந்தியார் நெஞ்சுவிடு தூது என்பன ஏனைய நான்கு நூல்கள் ஆகும். தவத்திரு சிதம்பர சுவாமிகள் இதற்கு உரை எழுதியுள் ளார்கள்.

இந்நூல் பாயிரத்தில் கணபதி வணக்கம், சுப்பிரமணியர் வணக்கம், நூலாசிரியர் வணக்கம், குரு வணக்கம் என்னும் நான்கு துதிப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அந்நான்கு துதிப்பாடல்களும் உரையாசிரியரால் எழுதப்பட்டனவாகும்.

உணர்வை நேத்திரமாகவும் யானென்பதும் என தென்பதுமாகிய மயக்கத்தை இருளாகவும் பாசத் தைக் குழியாகவும், பரமசிவத்தைப் பொருளாகவும், நூலாசிரியனை ஞான சூரியனாகவும் கருதி இந் நூலுக்கு உரை செய்துள்ளார் உரையாசிரியர். சூரியன் மாலையில் மறையும்பொழுது தனது ஒளியைத் தீபத் தினிடத்தில் வைத்து விளக்கஞ் செய்கின்றான் என்பது நூல் வழக்கமாதலால், இந்நூலின் ஆசிரியனாகிய சாந்தலிங்க அடிகள் என்னும் ஞானசூரியன் வைராக் கிய தீபத்தைத் தந்தான் என்று பொருள் கொள்வதற்கு ஏற்ப 'வைராக்கிய தீபம்' என்ற நூலின் பெயர் பொருத்தமுற அமைந்துள்ளது என்பர் உரை யாசிரியர்.

இந்நூலாசிரியர் தம் நூலின் பாயிரத்தில் கடவுள் வணக்கப் பாடல்களாக முதல் 2 பாடல்களையும் (1, 2) அருளிறை வணக்கப் பாடல்களாக இரண்டு பாடல்களையும் (3, 4), வேதாகமச் சிறப்பாக ஒரு பாடலையும் (5), முதல் நூல் பற்றி ஒரு பாடலையும் (6), அவையடக்கப் பாடலாக ஒரு பாடலையும் (7), நூற்பெயர் குறித்து ஒரு பாடலையும் (8) பாடி யுள்ளார்.

உட்பற்று, புறப்பற்று என்னும் இவற்றை யெல்லாம் துறந்த துறவாகிய ஞானத்தைக் காட்டி லும் சிறந்த ஞானம் எதுவுமில்லை என்பது ஆசிரி யரின் கருத்ததாக உள்ளது. இல்வாழ்க்கையில் ஞானம் அருகியே வரும் என்பதாலும் துறவின்கண் ஞானம் மிகுதியாக இடம்பெறுவதாலும் துறவினை ஞானமென்றே ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

தேனிரம்பிய மலரைத் தேடும் வண்டினைப் போல் சீவகாருண்யம், ஈசுரபத்தி, பாச வைராக் கியம், பிரமஞானம் என்னும் நான்கும் நிறைந்த ஞானாசிரியனை ஒரு துறவி தேடுவான் என ஆசிரியர் குறிப்பிடுகிறார். இல்வாழ்க்கை இன்பத்தை அற்ப மெனத் துறந்து பேரானந்தத்தை அடையத் தொடங்கி னோன் தன்னைப் பிறர் வந்து பின்சென்று எவற்றைக் கொடுப்பினும், உண்பனவும், உடுப்பனவுமன்றிப் பிறிதொன்றனை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்று ஆசிரியர் கூறுகிறார்.

பாடல்களில் சில பொதுவான செய்திகளை ஆங் காங்கே கூறிச் செல்லும் போக்கும் இந்நூலாசிரியரி டம் காணப்படுகிறது. அது நீதி போதனை செய்வது போல் அமைந்துள்ளது. காடி, கூழ் போன்ற பிச்சை களை அருந்தும்போது உள்ளத்தில் வெறுப்பு வைத்து அருந்தக்கூடாது, மிகுந்த தூக்கம் வந்தவிடத்துத் தூங்க வேண்டும். மிகுந்த பசி வந்தவிடத்துப் புசிக்க வேண் டும். பகற்காலத்தில் நித்திரை செய்யக்கூடாது, மகளிரை விழைதல் துறவறத்திற்கு எதிரானது என்பன போன்ற செய்திகள் நேரடியாகப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

உரையாசிரியர், நூலாசிரியர் கூறவரும் கருத்திற் கேற்ற தேவையான எடுத்துக்காட்டுகளை, சிவதரும தோத்திரம், குறுந்திரட்டு, மெய்ஞ்ஞான விளக்கம், திருக்குறள், பெருந்திரட்டு, திவ்வியப் பிரபந்தம், கூர்மபுராணம், மெய்ஞ்ஞான விளக்கம், தத்துவரத் தினாகரம், ஞானவாசிட்டம், திருமந்திரம், தேவாரம், ஞானசாரம், போன்ற இலக்கியங்களி லிருந்து கொடுத்துள்ளார்.

-கு.மு.

**வோல்கா ஆறு :** சோவியத் சமதர்மக் குடியரசு நாட்டில் ஓடும் ஆறு. ஐரோப்பிய ஆறுகளில் நீள மானது. 3690 கி.மீட்டர் நீளமுடையது. இது பாயும் பகுதி மிகச் செழிப்புடையது. 1,380,000 ச.கி.மீட்டர் பகுதி இதனால் பயனடைகின்றது. உருசிய நாட்டு மக்களில் நான்கிலொரு பங்கினர் இவ்வாறு பாயும் பகுதியில் வாழ்கின்றனர். பொருளாதார அடிப்படை யில் இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இதன் மூலமாகவும் இவ்வாற்றின் கிளை நதிகள் மூல மாகவும் உருசியாவின் வாணிகப் பொருட்களில் மூன்றில் ஒரு பங்கு அந்நாட்டின் பல பாகங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

மாசுகோவிற்கு வடமேற்கிலும் இலெனின் கிராடிற்கு கிழக்கிலும் அமைந்துள்ள வால்தாய் குன்றுகளில் இவ்வாறு உற்பத்தியாகின்றது. வெர்கோவெய் என்னும் கிராமத்திற்கருகில் உற்பத்தியாகி காசுபியன் கடலைச் சென்றடைகிறது. இதற்கிடையில் இலிசிலக், பெனொ, வோல்கா போன்ற பல ஏரிகளுள்ளன. வோல்கா ஏரியினின்றும் தென்கிழக்காகத் திரும்பி, பெரும் பள்ளத்தில் பாய் கின்றது. பின்பு வடகிழக்காகத் திரும்பி பிரை பின்சிக்


பின்லாந்து
பால்டிக்கடல்
ஒன்காஎரி
பின்லாந்து வளைகுடா
லெனின் சதுக்கம்
ரைபின்சிக் நீர்த்தேக்கம்
வோல்கா ஆறு
கலினின்
யாரோசுலாவி
வோல்கா ஆறு
கோர்க்கி நீர்த்தேக்கம்
மாசுகோ
கோர்கி
காசான்
கைபைசேவ் நீர்த்தேக்கம்
உல்யானோவசுக்
பென்சு
வோல்கா ஆறு
கீவ்
சாரோட்டோவ்
கார்கோ
வோல்காசதுக்க நீர்த்தேக்கம்
வால்கோகிராட்
வோல்கா ஆறு
ஆசுட்ரகான்
காசுபியன்கடல்
கருங்கடல்

வோல்கா ஆறு

நீர்ப்பிடிப்பு நிலையத்தை அடைகின்றது. பின்பு மேலும் வடகிழக்காகச் சென்று 2030 கி.மீட்டர் நீளமுள்ள காமா ஆற்றினைத் தன்னுடன் இணைத்துக் கொள்கின்றது. பின்னர் தெற்காகத் திரும்பி சிகுலி மலைகளைக் கடந்து சாமரா என்னுமிடத்தில் வளைகின்றது. தொடர்ந்து வால்காகிராட் என்ற இடம் வரை வடமேற்காகப் பாய்கின்றது. அது முதல் இவ்வாற்றின் வடகரைப்பகுதி உயர்ந்த கரைகளுடனும் தெற்கில் தாழ்வான கரைப் பகுதிகளுடனும் ஓடுகின்றது. ஏராளமான மண்ணை அடித்துச் சென்று தென்கிழக்காகத் திரும்பி காசுபியன் கடலின் வடபகுதியைச் சென்றடைகின்றது. சுரா, வெட்லுகா, மொலாகா, சாமரா போன்றவை இதன் முக்கிய கிளை நதிகள்.

காலினின் என்னுமிடத்திற்குக் கீழும் குயிபிசிவ் எனுமிடத்திற்கு மேலும் நீரைத்தேக்கிப் பல நோக்குத் திட்டங்களுக்குப் பயன்படுத்ததுதலின் பொருட்டு செயற்கை நீர்த்தேக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இரைபின்சுக், குயிபிசிவ் முதலியவை முக்கிய நீர்த் தேக்கங்களாகும்.

இவ்வாறு நவம்பர் - திசம்பர் மாதங்களில் முழுமையாகப் பனிக்கட்டியாக உறையத் தொடங்குகின்றது. ஏப்ரல் மாத நடுப்பகுதியில் உருகத் தொடங்குகின்றது. இவ்வாறு தன் போக்கு முழுவதிலும் போக்குவரத்துக்கு ஏற்புடைதாயுள்ளது. உருசியாவின் பொருளாதாரத்திற்கு உறுதுணையாக உள்ள இவ்வாறு ஆசியாவையும், ஐரோப்பாவையும் இணைக்கும் ஒரு பாலமெனவும் திகழ்கின்றது.

உருசியாவின் வட பகுதியின் உற்பத்திப் பொருட்கள், மரம், உக்ரெயிலிருந்து தானியங்கள், ஆற்றுப் பகுதியில் பிடிக்கப்படும் மீன்கள், பாகுவிலிருந்து பெட்ரோல், பருத்தி போன்றவை இந்த ஆறு மூலம் எடுத்துச் செல்லப்படுகின்றன. நாட்டின் பல பகுதிகளும் இவ்வாற்றின் கால்வாய்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளன.

இசுலாவி இனத்தவர், கொசக்குகள், உருசியர், ஆர்மேனியர், சிர்காசியர்கள், துர்க்காமேனியர், நாடோடி மக்கள் போன்ற பல பிரிவினரும் இதன் மூலம் பலனடைகின்றனர். 'வோல்கா படகுப் பாட்டு' மிகவும் புகழ் வாய்ந்தது. இரண்டாவது உலகப்போரின் போது வோல்கா ஆற்றின் வடகரையிலுள்ள இசுடாவின்கிராடு நகரில் நடைபெற்ற போர் முக்கியமானதாகும்.

-மா.கா.

# பொருளடைவு

| | | |
|---|---|---|
| அக்கேடியர் | - | 1 |
| அகத்தீசுவரம் | - | 2 |
| அகத்தீசுவரம்2 | - | 2 |
| அங்கோர் | - | 3 |
| அடுக்குத்தொடர் | - | 3 |
| அடைப்பொலிகள் | - | 4 |
| அண்மைவிதி | - | 6 |
| அண்மை விளைவு | - | 7 |
| அப்துல் ரகுமான், துங்கு | - | 8 |
| அப்பாத்துரையார், கா. | - | 9 |
| அப்பே-துபே | - | 11 |
| அபராசிதவர்மன் | - | 12 |
| அமர்வு நீதிமன்றம் | - | 13 |
| அமிர்தமங்கலம் | - | 14 |
| அமோகவர்சன், (கி.பி. 814 - 880) | - | 15 |
| அயூப்கான் | - | 16 |
| அயூப்கான் முகம்மது | - | 17 |
| அரங்கநாத கவிராயர், அட்டாவதானம் | - | 18 |
| இரங்கநாதன், சீ.இரா | - | 19 |
| அராபி பாசா | - | 20 |
| அரியலூர் | - | 20 |
| அருங்காட்சியகவியல் | - | 21 |
| அருணா ஆசப் அலி | - | 23 |
| அருள் நமச்சிவாய தேசிகர் | - | 24 |
| அரை ஒப்பந்தம் | - | 24 |
| அல்லூர் | - | 26 |
| அறநிலையம் | - | 26 |
| அறிவுத்திறன் இழப்பு | - | 27 |
| அறுவகை இலக்கணம் | - | 29 |
| அன்னாம் | - | 29 |
| அன்னூர் | - | 30 |

| | | |
|---|---|---|
| அனைத்திந்தியக் கைத்தொழில் வாரியம் | - | *31* |
| ஆசப் அலி *(1888 - 1953)* | - | *32* |
| ஆசியாமைனர் | - | *33* |
| ஆதிகேசவலு நாயக்கர், பா.ம. | - | *35* |
| ஆதித்தன் சூரியன் | - | *36* |
| ஆதிவராகர் கோயில் | - | *37* |
| ஆவுடையார் கோயில் செப்பேடு | - | *38* |
| ஆழ்புலன் காட்சி | - | *38* |
| ஆளுமைச் சமநிலை | - | *41* |
| இடர் தரும் நடத்தை | - | *42* |
| இடைநிலைக் கல்வி | - | *44* |
| இந்திவர்மன் | - | *47* |
| இயல் திட்டவாதம் | - | *49* |
| இயற்கை வழிபாடு | - | *50* |
| இயற்கை விதிகள் | - | *52* |
| இயற் நிலைக்கொள்கை | - | *54* |
| இயற் பொருளாதாரம் | - | *55* |
| இரட்டைக்கிளவி | - | *57* |
| இராசகம்பீர சம்புவராயன் | - | *57* |
| இராச நாராயண சம்புவராயர், முதலாம் | - | *58* |
| இராச நாராயண சம்புவராயர், இரண்டாம் | - | *58* |
| இராச நாராயண சம்புவராயர், மூன்றாம் | - | *59* |
| இராசாராம் மோகன்ராய் | - | *59* |
| இராசீவ் காந்தி | - | *65* |
| இராணா கும்பா | - | *66* |
| இராமச் சந்திரன், எம்.ஜி. | - | *66* |
| இருதுருவ உலக அதிகார அமைப்பு | - | *69* |
| இருபடிநிலைக் கல்வி அமைப்பு | - | *71* |
| இருமுனைக் கோட்பாடு | - | *72* |
| இலக்கணச் சூடாமணி | - | *72* |
| இலைக்டென்சுடீன் | - | *74* |
| இளம் இத்தாலிய இயக்கம் | - | *74* |
| இன்பக் கொள்கை | - | *75* |
| ஈர்த்தல் விதிகள் | - | *77* |

உடல் ஊனமுற்றோர் கல்வி - 78
உடலொறுப்பு - 80
உடன்கட்டையேறுதல் - 83
உணர்வு நீக்கம் - 86
உத்தம சோழமிலாடுடையார் - 87
உயிர்க்கொள்கை - 88
உரூபாய் - 89
ஊர்ப்பெயர் - 92
எழுத்துச் சீர்திருத்தம் - 94
ஏகாம்பரநாதன் குலசேகர சம்புவராயர் - 96
ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண்மை நிறுவனம் - 96
ஐக்கிய நாடுகள் முன்னேற்றத்திட்டம் - 98
ஐகூ கவிதை - 100
ஐயக் கொள்கை - 102
ஐயப்பன் - 103
ஒட்டாவா ஒப்பந்தம் - 106
ஒட்டியன் கலாபை - 107
ஒப்புமை உளவியல் - 108
ஒரு மொழியம் - 109
ஒய்வூதியம் - 110
ஓவியம் - 112
ஓவியவகைகள் - 132
கங்கைகொண்ட சூரியதேவன் வானாதிராயன் காலிங்கராயன் - 134
கடந்த நிலைப்பொருள் - 135
கண்டன் மறவனார் - 136
கண்டி நடனம் - 137
கந்தசாமிப்பிள்ளை ச.மு. காரணப்பட்டு - 138
கம்பதாசன் - 139
கம்பவர்மன் - 140
கமலாம்பாள் சிரித்திரம் - 141
கல்வி இலக்கு - 142
கவச நூல்கள் - 144
கற்றல் கோட்பாடுகள் - 145
கன்னோசி ஆங்கிரே - 149

காட்பைசசு, வீமா - 150
காண்வ மரபு - 151
காயிதே மில்லத் - 151
காரைக்காடு - 152
காலிங்வுட் ராபின் சியார்சு - 153
கிருட்டிணவேணி அம்மாள், பண்டிதை, எசு - 154
கீழக்கரை - 155
குடித்தொதையியல் சார் மானிடவியல் - 156
குடிமதிப்பு - 1991 - 158
குணசேகரம்(குணசீலம்) - 159
குலோத்துங்கச் சோழச் சேதிராயன் - 160
குவா மொழிகள் - 160
குவிந்த சிந்தனை - 161
குளுவ நாடகம் - 163
குறுபர் - 164
கூட்டுநிலைச் சொத்துரிமை - 165
கையெழுத்தியல் - 166
கைலாசபதி, க - 169
கைவிடுதல் - 170
கொற்றவை - 171
கோவலன் பொட்டல் - 172
கோவிந்தராசன்,சீர்காழி - 173
கோவிந்தன், புலவர், கா - 174
சகசமலம் - 175
சகசாநந்த அடிகள் - 176
சகந்நாதன், கி.வா - 177
சங்காரம் - 178
சஞ்சீவி, ந - 179
சட்டமியற்றல் - 180
சட்ட முகவர் - 182
சட்டவியல் - 183
சடாவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் - 184
சத்திரவாணன் - 185
சமத்துவம் - 186

| | | |
|---|---|---|
| சயந்தம் | - | 191 |
| சரத் சந்திரபோசு | - | 191 |
| சரவண, அறுமுகமுதலியார் | - | 192 |
| சரியை | - | 193 |
| சாக்கிரம் | - | 194 |
| சாகு | - | 196 |
| சாசகானாபாத்து | - | 198 |
| சாதவாகனர் கலை | - | 199 |
| சாதன சதுட்டயம் | - | 201 |
| சாமியா மில்லியா இசுலாமியா | - | 202 |
| சார்பில் தோற்றக் கொள்கை | - | 204 |
| சார்லசு மார்ட்டல் | - | 206 |
| சாருவாகம் | - | 207 |
| சாரூபம் | - | 208 |
| சால்வரின் | - | 210 |
| சாலோகம் | - | 210 |
| சிவாச்சாரியார் | - | 211 |
| சிற்றெட்டகம் | - | 212 |
| சீவல மாற பாண்டியர் | - | 212 |
| சுத்தானந்த பாரதியார் | - | 213 |
| சுந்தரத்தோளுடையான் வானாதிதாயன் | - | 214 |
| சுவடியியல் | - | 214 |
| செக்கோசுலோவேக்கிய நாட்டுத் தத்துவம் | - | 221 |
| செயிற்றியம் | - | 224 |
| செல்லுலார் துறை | - | 224 |
| சேக்கோபின்கள் | - | 225 |
| சேம்சு அறிக்கை | - | 226 |
| சேலம் | - | 228 |
| சொல்லிலாச்சோதனை | - | 229 |
| சொற்காலவியல் | - | 232 |
| சௌரம் | - | 233 |
| ஞானப்பிரகாசர், களந்தை | - | 234 |
| தண்டபாணி தேசிகர் | - | 235 |
| தம்மம்பட்டிப் பாளையப்பட்டு | - | 237 |

| | | |
|---|---|---|
| தமிழ்நெறி விளக்கம் பொருளியல் | - | *238* |
| தருவாய்க்கொள்கை | - | *239* |
| தற்புல உண்மை | - | *240* |
| தன்மான இயக்கம் | - | *241* |
| தன்னிலை அடைதல் | - | *242* |
| திண்டுக்கல் | - | *246* |
| தியானம் | - | *247* |
| திருநாவுக்கரசு, க.த. | - | *248* |
| திருப்போரூர் | - | *248* |
| திருமண மருத்துவம் | - | *249* |
| திருமால் | - | *252* |
| திருமாலிருஞ்சோலை நின்றான் மாவலி வாணாதிராயன் | - | *255* |
| திறந்தவெளிப் பள்ளி | - | *256* |
| துணிகர முதலீடு | - | *257* |
| துணை விதி | - | *258* |
| துவாரகை | - | *262* |
| தூய தமிழ் | - | *263* |
| தூயவாரம் | - | *273* |
| தெருக்கூத்து | - | *273* |
| தேக்கநிலைப் பகுப்பாய்வு | - | *275* |
| தேக்கநிலைக் மாதிரி | - | *276* |
| தேவராய சுவாமிகள் | - | *277* |
| தைத்தரிய உபநிடதம் | - | *278* |
| தொடக்க நிலைக்கல்வி | - | *279* |
| தொடர்ச்சி விதி | - | *282* |
| தொலையுணர்வு | - | *284* |
| நடமாடும் நீதிமன்றம் | - | *287* |
| நடுவன் கல்வி நிறுவனம் | - | *288* |
| நடுவன் நிலைப் பள்ளிக்கல்வி | - | *288* |
| நந்திதேவர் | - | *291* |
| நல்லுருவ விதி | - | *291* |
| நலிவுற்றோர் கல்வி | - | *293* |
| நாச்னா | - | *295* |
| நாட்டார் வழக்குகள் | - | *295* |

| | | |
|---|---|---|
| நாட்டுப்புறக் கதைகள் | - | *298* |
| நாட்டுப்புறத் தெய்வங்கள் | - | *299* |
| நாட்டுப்புறப் பாடல்கள் | - | *304* |
| நாட்டுப்புற விளையாட்டுக்கள் | - | *306* |
| நாணயங்கள் | - | *308* |
| நார்வுட் அறிக்கை | - | *311* |
| நிதித்திட்டம் | - | *313* |
| நியமம்(நேமம்) | - | *315* |
| நியூசோம் அறிக்கை | - | *315* |
| நெறிமுறைகள் | - | *319* |
| நோக்கக் கொள்கை | - | *321* |
| பகழிக்கூத்தர் | - | *322* |
| பகற் கனவு | - | *323* |
| படிமக்கலை | - | *324* |
| பண்பாட்டுச் சமச்சோதனை | - | *326* |
| பண்பாட்டு மானிடவியல் | - | *327* |
| பண ஊதியமும், வட்டி வீதமும் | - | *330* |
| பணியர் | - | *331* |
| பணியிடைப் பயிற்சி | - | *334* |
| பயன்முறை மானிடவியல் | - | *336* |
| பரந்தாமனார் அ.கி. | - | *338* |
| பல்கேரியா | - | *339* |
| பல தெய்வக் கோட்பாடு | - | *343* |
| பல நோக்குப்பள்ளிகள் | - | *345* |
| பன்னாட்டுக் கல்வி நிறுவனம் | - | *347* |
| பாகவத புராணம் | - | *349* |
| பாசுகம், வில்லியம் | - | *349* |
| பாதுகாபபுக் கல்வி | - | *350* |
| பார்வை குன்றியோர் கல்வி | - | *351* |
| பால் கல்வி | - | *352* |
| பாலச்சந்தர், வீணை | - | *354* |
| பாலசுப்பிரமணிய முதலியார், ம. | - | *355* |
| பிராப், விலாடிமிர் | - | *356* |
| பிறப்புத்தடை | - | *357* |

| | | |
|---|---|---|
| புற ஊக்கி | - | 360 |
| பெரியபட்டினம் | - | 362 |
| பேச்சுமொழி | - | 364 |
| போதி சத்துவர் | - | 366 |
| மக்கட்பெயர் | - | 368 |
| மக்கள் தொகை வீழ்ச்சி | - | 370 |
| மகளிர் சொத்துரிமை | - | 372 |
| மகடி நாடகம் | - | 376 |
| மங்கலங்கிழார் | - | 379 |
| மண்டல் குழு அறிக்கை | - | 380 |
| மணியம்மை, ஈ.வெ.ரா. | - | 381 |
| மதுராந்தகன் கண்டராதித்தன் | - | 383 |
| மதுரை சோமு | - | 384 |
| மருங்கொலி | - | 385 |
| மருத்துவச் சட்டவியல் | - | 386 |
| மனநிலை | - | 389 |
| மனோரா | - | 390 |
| மானாமதுரை மாரியம்மன் செப்பேடு | - | 392 |
| முக்தேசுவர் | - | 393 |
| முடித்தல் விதி | - | 394 |
| முதுமக்கள் தாழி | - | 396 |
| முதுரைச் சோர்வு உளப்பிணி | - | 398 |
| முதுவர் | - | 402 |
| மும்முடிச் சோழன் | - | 404 |
| முரண் எதிர்நிலை | - | 405 |
| முரண் நிலை ஆய்வியல் | - | 406 |
| முருகப்பா | - | 407 |
| முழு ஆயம் | - | 408 |
| முழுநிலைக் கோட்பாடு | - | 409 |
| முள்ளு குறும்பர் | - | 410 |
| முறைகேடாகப் பிறத்தல் | - | 412 |
| முறையிலாக் கல்வித்தடை | - | 415 |
| முறையின்றிச் சிறைப்படுத்தல் | - | 416 |

| | | |
|---|---|---|
| முறையின்றித் தடைசெய்தல் | - | 418 |
| முன் தீர்ப்புத்தடை | - | 419 |
| முன் தீர்ப்பு முறை | - | 421 |
| முன்தீர்ப்பு முறை ஏற்பு | - | 423 |
| முன்மரபைப் பாதிக்கும் கோட்பாடு | - | 424 |
| முன்னறிவுடன் நினைத்தல் | - | 425 |
| முன்னிலை ஏற்புடைமை | - | 426 |
| முன்னுரிமைப் பங்குகள் | - | 427 |
| மூதாதையர் சொத்து | - | 428 |
| மூர். ஜி.இ | - | 430 |
| மூலதன அங்காடி | - | 431 |
| மூலதன ஆக்கம் | - | 434 |
| மூலதன ஆதாய வரி | - | 437 |
| மூலதன இருப்பு | - | 438 |
| மூலதனத்தின் இறுதிநிலை ஆக்கத்திறன் | - | 441 |
| மூளை அலைகள் | - | 443 |
| மெக்காலே தாமசு பாபிங்டன் | - | 444 |
| மெய்சி முன்னிலை மீட்சி | - | 447 |
| மெய்ப்பிக்கும் பொறுப்பு | - | 449 |
| மெய்யப்பச் செட்டியார் ஏ.வி | - | 451 |
| மெயின் | - | 453 |
| மெரீனாக் கடற்கரை | - | 455 |
| மேல்நிலைக் கல்வி | - | 457 |
| மேல் முறையீடு | - | 458 |
| மேல்வாரம் | - | 460 |
| மேலவை | - | 464 |
| மேலாண்மை | - | 466 |
| மேலாண்மைக் கல்வி | - | 475 |
| மேலாளர் | - | 477 |
| மேலூதியம் | - | 483 |
| மேற்கு ஆசியச் சிக்கல்கள் | - | 485 |
| மேற்குறிப்புச் செய்தல் | - | 488 |
| மைத்தடச் சோதனை | - | 489 |
| மைய அமைப்பு | - | 491 |

| | | |
|---|---|---|
| மையத் தத்துவம் | - | 493 |
| மைய-மாநில உறவுகள் | - | 495 |
| மொத்த நனவிலி நிலை | - | 497 |
| மொழிக் குடும்பம் | - | 500 |
| மொழித் தத்துவம் | - | 503 |
| மொழித்தாவல் | - | 505 |
| மொழித் திட்டமிடுதல் | - | 507 |
| மொழித்தொடர்பு | - | 509 |
| மொழிப் புதுமையாக்கம் | - | 511 |
| மொழி மாற்றங்கள் | - | 513 |
| மொழி மாறாட்டம் | - | 516 |
| மோசடி | - | 518 |
| மௌனி | - | 519 |
| வகுப்புணர்வு | - | 520 |
| வகுப்புப் போராட்டம் | - | 522 |
| வகைப்பாட்டியல் | - | 525 |
| வங்கியியல் | - | 527 |
| வட்டிக் கோட்பாடுகள் | - | 531 |
| வடதுருவப் பழங்குடிகள் | - | 534 |
| வணிகக் குறி | - | 537 |
| வயது அடிப்படைக் குழுக்கள் | - | 539 |
| வயது-பாலின அமைப்பு | - | 541 |
| வயது வரற் பருவம் | - | 545 |
| வயலூர் | - | 546 |
| வரம்பிலா ஆட்சி | - | 547 |
| வரலாற்றுக் காலம் | - | 548 |
| வரலாற்றுக்கு முந்திய காலம் | - | 550 |
| வரி விதிப்பு | - | 553 |
| வருங்காலவியல் | - | 562 |
| வருங்கால வைப்பு நிதி | - | 565 |
| வலக்கைப் பழக்கம் | - | 567 |
| வலிநீக்கி | - | 568 |
| வலியுறுத்தல் கொள்கைகள் | - | 570 |
| வழக்கங்கள் | - | 571 |

வழக்காறு - 575
வழக்குச் சொத்துப் பேணுநர் - 579
வழக்கு மூலம் - 581
வழக்குரைஞர் - 583
வழக்குரைஞர் பேரவை - 589
வழக்கு விசாரணை - 591
வழிகாட்டலும், அறிவுரை கூறலும் - 596
வழிநிலைக்குழுக்கள் - 599
வள்ளியப்பா, அழ. - 601
வளங்களை ஒதுக்கீடு செய்தல் - 603
வளமை - 604
வளர்ச்சி உளவியல் - 606
வளர்ச்சிக் கோட்பாடு - 609
வளர்ச்சி முறை - 611
வளர்ப்புக் குழந்தை - 615
வளைகுடா - 617
வளைகுடாப் போர் - 617
வளைதடி - 623
வறியவர் வழக்கு - 626
வறுமையின் பண்பாடு - 627
வன்புணர்ச்சி - 629
வாங்கல் திறன் - 632
வாங்கு பணத்திற்கான பொருட்பிணைப் பொறுப்பு - 636
வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் - 638
வாணிகக் கூட்டுறவுக் குழு - 641
வாணிகச் சமநிலை - 644
வாணிகச் சுழல் - 646
வாணிகப் பொதுச் சங்கம் - 651
வாணிகப் பொருளாதாரக் கொள்கை முறை - 652
வாய்ப்புப் பெறுமானம் - 655
வாய்மொழிச் சான்று - 657
வார்டு, இலெசுடர் பிராங்கு - 657
வாழ்க்கை உதவித் தொகை - 660

| | | |
|---|---|---|
| வாழ்க்கைக் கல்வி | - | 662 |
| வாழ்க்கைத் தரம் | - | 664 |
| வானுவாட்டுக் குடியரசு | - | 665 |
| விசயலட்சுமி பண்டிட் | - | 668 |
| விதவைகள் மறுவாழ்வு | - | 669 |
| விநோதக் கூத்து | - | 672 |
| விபத்துக்கு உள்ளாகும் தன்மை | - | 673 |
| வியன்னா நகரம் | - | 674 |
| விரயச் சடங்கு | - | 678 |
| விரல் சுவைத்தல் | - | 679 |
| விரிகுடா | - | 680 |
| விரிந்த சிந்தனை | - | 680 |
| விரிவுரையாற்றல் | - | 383 |
| விலக்குச் சொல் | - | 685 |
| விலங்கு உளவியல் | - | 686 |
| விலைக் குறியீட்டெண் | - | 688 |
| விழாக்கள் | - | 690 |
| விளம்பரம் | - | 698 |
| விளையாட்டு மருத்துவம் | - | 704 |
| விற்பனை | - | 705 |
| வினா நிரல் | - | 708 |
| வீரசம்பன் | - | 710 |
| வெங்கைக் கோவை | - | 711 |
| வெண்ட்வொர்த்து சார்லசு வாட்சன் | - | 712 |
| வெத்தர் | - | 712 |
| வெர்ரியர் எ஬்வின் | - | 715 |
| வெள்ளாறு - 1 | - | 716 |
| வெள்ளாறு - 2 | - | 717 |
| வெள்ளைவாரணார், க. | - | 717 |
| வெளி அங்காடி நடவடிக்கை | - | 718 |
| வெளி நரம்புத் தொகுதி | - | 720 |
| வெளியீட்டுச் கோட்பாடு | - | 721 |

| | | |
|---|---|---|
| வெறுப்புக் கொள்கையினர் | - | 722 |
| வென்று மண்கொண்ட சம்புவராயர் | - | 724 |
| வெனிசுலா | - | 724 |
| வேங்கடசாமி, மயிலை சீனி | - | 730 |
| வேங்கட விளக்கு | - | 730 |
| வேடம் புனைதல் | - | 733 |
| வேணுகோபால் பிள்ளை, மகாவித்வான், மே.வி. | - | 735 |
| வேபர், மாக்சு | - | 736 |
| வேர்ச்சொல்லியல் | - | 738 |
| வேலை நிறுத்தம் | - | 741 |
| வேலை மனநிறைவு | - | 743 |
| வேலை வாய்ப்பின்மை | - | 745 |
| வேலை வாய்ப்பு | - | 749 |
| வைணவ சமயாசாரியர்கள் | - | 752 |
| வைராக்கிய தீபம் | - | 753 |
| வோல்கா ஆறு | - | 754 |

# கலைச்சொற்கள்

## தமிழ் - ஆங்கிலம்

| | | |
|---|---|---|
| அக ஊக்கி | - | Intrinsic motives |
| அகக்கட்டுப்பாடு | - | Enuresis |
| அகமெய்மை | - | Ideal |
| அசையும் பொருளை வசப்படுத்துதல் | - | Psycho kinesis |
| அடிப்படை உண்மை | - | Axiom |
| அடிப்படைக் குடியாட்சி | - | Basic Democracy |
| அடிமன நவிற்சி | - | Surrealism |
| அண்மை | - | Proximity |
| அண்மை விதி | - | Law of Recency |
| அதிக வெப்பம் | - | Heat stroke |
| அதிர்வில்லா ஒலி | - | Voiceless Sound |
| அதிர்வொலி | - | Voiced Sound |
| அமர்வு நீதிமன்றம் | - | Sessions Court |
| அரசர் அவை | - | King of Council |
| அரிச்சித்திரம் | - | Etching |
| அழைப்பாணை | - | Summon |
| அழைப்பு வைப்புகள் | - | Call Deposits |
| அளவு நீதிபதி | - | Full Bench |
| அறிவிப்பு வைப்புகள் | - | Deposits of Notice |
| அறிவுத்திறன் அமைப்பு | - | Structure of Intellect |
| அடிச்சொல் | - | Stem |
| ஆடம்பர விருப்பம் | - | Luxury |
| ஆடொலி | - | Trill |
| ஆயர்குடிப் பருவம் | - | Pastrol stage |
| ஆழ்ந்து தாக்கும் நிலை | - | Intensity |
| ஆழ்புலன் காட்சி | - | Depth Perception |
| ஆளுமை | - | Personality |
| இடப்பெயர் ஆய்வு | - | Tonopmy Study |
| இடர்தரும் நடத்தை | - | Problem Behaviour |
| இடைக்கால மறுப்பாணை | - | Suspensive Veto |

| | |
|---|---|
| இடைநிலை வகுப்பு | Intermediate |
| இணைப்புத் தன்மை | Ossification |
| இணைப்பு நிலை மொழிகள் | Synthetic Languages |
| இயல்பூக்கம் | Instinct |
| இயற்கை நவிற்சி | Naturalism |
| இயற்கைப் பதிவு நவிற்சி | Impressionism |
| இருநிலை வழக்கு | Diglossia |
| இரும்புக் கற்கருவிக் காலம் | Iron Age |
| இருமொழியம் | Bilingualism |
| இன்பியற் கொள்கை | Hedonism |
| இன்புலன் காட்சி | Hallucination |
| ஈமப்பேழை | Sarcophagus |
| உட்பிணைப்பு நிலை மொழி | Inflectional Language |
| உண்டியல் அங்காடி | Bill Market |
| உணர்வில் தொடர்பு | Mystic contact |
| உரசொலி | Fricative |
| உருப்பெருக்கம் | Growth |
| உருபன் நிலை | Morphological level |
| உழவர் | Peasant |
| உழைக்கும் தன்மை | Durability |
| உழைப்புக்கூலி | Living Wages |
| உள்ளார்ந்த ஆள்வரை | Inherent |
| உள்ளுறை ஏற்புடைமை | Content validity |
| உறக்கத்தன்மை | Drowsiness |
| உறிஞ்சடைப்பொலி | Implosive Stop |
| ஊக்கி | Motive |
| ஊசலாட்டம் | Clones |
| எரிமலைக் கற்கள் | Volcanic rock |
| எல்லை ஆள்வரை | Territorial |
| எளிமை விதி | Law of Simplicity |
| ஏவுகணை | Missile |
| ஏற்றுமதி மிகுதி | Export Surplus |
| ஒட்டணிமை விதி | Law of Contiguity |
| ஒட்டமைப்புச் சொல் | Loan blend |

ஒட்டு நிலைமொழி - Agglutinative Language
ஒப்புமை வழிப்பட்டியல் - Performa Invoice
ஒருமித்த விதி - Law of Similarity
ஒலியன் நிலை - Phonological level
ஒளித்திறன் கருவி - Audio Meter
ஓடுபாதை - Flight Pooth
ஓரளவு நனவுநிலை - Marginally conscious
ஓரினமாதல் - Assimilation
கடன் உற்பத்தி - Credit creation
கண்பார்வைக் குறிப்பி - Binocular curve
கரை - Border
கல்லாக - Fossil
கலப்பற்ற தன்மை - Purity
கலைமரபு - Classicism
கனிக்கல் - Gypsum
காரணி ஏற்புடைமை - Factor Validity
கால அளவு - Duration
கிளர்ச்சியுடையோர் - Manics
குமிழ் - Knob
குழவிப்பருவம் - Babyhood
கூட்டு அடைப்பொலி - Compound Stop
கைத்தலைமுடி - Wig
கைவிடுதல் - Disertation
சக்தியின் முழு வெளிப்பாடு - Total release of energy
சட்டமியற்றல் - Legislation
சட்டவியல் - Jurisprudence
சணல் எண்ணெய் - Linseed Oil
சமநிலைப் புரட்சி - Socialist revolution
சாம்பல் தட்டு - Ash trays
சிக்கன விதி - Cannon of Economy
செறிதல் கோட்பாடு - Concentration theory
சொல்லப்பட்ட கேள்வி - Hearsay evidence
சொற்களின் வரன்முறை - Word order
சேமிப்பு வைப்புகள் - Savings Deposits

| | | |
|---|---|---|
| தலைமை ஆலோசகர் | - | Solicitor General |
| தவணை விற்பனை | - | Instalment Sale |
| தற்சலனம் | - | Self doubters |
| தன்னிலை அடைதல் | - | Self Actualization |
| தனி அடைப்பொலி | - | Simple stop |
| தனித்திட்டப் பணியமைப்பு | - | Project Organisation |
| தனிநிலை மொழிகள் | - | Isolating Languages |
| திசுக்கள் அல்லது மூலக்கூறு இறப்பு | - | Molecular death |
| திட்ட அளவை | - | Criteria |
| திறமை விதி | - | Canon of ability |
| திறன் அணுகுமுறை | - | Ability to pay approach |
| திறன் சந்தை | - | Monopsony |
| துணிகர முதலீடு | - | Venture Capital |
| துணைநிலை வழக்கு | - | Complementary distribution |
| துணை விதிகள் | - | Bye-Laws |
| துலங்கள் | - | Response |
| தெளிவு விதி | - | Canon of certainty |
| தொடர்பு நடவடிக்கை | - | Transaction |
| தொடரியல் நிலை | - | Syntactical Level |
| தொடரும் வைப்புகள் | - | Recurring Deposits |
| தொலையுணர்வு | - | Telepathy |
| தொலைவிடக் கல்வி | - | Clairvoyance |
| தொலைவிடம் கேட்டல் | - | Clairaudience |
| தொழிற்கல்வி | - | Vocational |
| தொன்மைச் சட்டம் | - | Primitive Law |
| தோல் நிறமடைதல் அல்லது பசலை | - | Pigmentation |
| தோல் வாணிகம் | - | Fur trade |
| நகர மயமாதல் | - | Urbanization |
| நடப்பு வைப்புகள் | - | Current Deposits |
| நடுநிலை வரிவிதி | - | Canon of Neutrality |
| நடுவர் | - | Jury |
| நயன்மை | - | Justice |
| நன்தொடர்ச்சி | - | Good Continuation |
| நன்மை அணுகுமுறை | - | Benefit approach |

| | | |
|---|---|---|
| நில எடுப்புச்சட்டம் | - | Land Acquisition |
| நிலைமாறல் | - | Metathesis |
| நிலையான வைப்புகள் | - | Fixed Deposits |
| நிறைவுத் தன்மை | - | Complementary |
| நீண்ட ஆழ்ந்த தூக்கம் | - | Para omni |
| நீர் அச்ச நோய் | - | Hydrophobia |
| நீள்கோட்டுப்புலன் காட்சிக்கோள் | - | Linear Perspective |
| நுண்கலைக் கழகம் | - | The Academy of Fine Arts |
| நுண்படம் | - | Micro Film |
| நெகிழ்ச்சி விதி | - | Canon of Elasticity |
| நெகிழி | - | Plastic |
| நேர்முக அஞ்சல் | - | Direct mail |
| பணவாக்கக் கோட்பாடு | - | Monetary theory |
| பணித்தகு தொகை | - | Quantum men it |
| பணியாண்மையர் | - | Employer |
| பதிலிப் பண்டம் | - | Substitute |
| பரப்பு | - | Extent |
| பரவல் கோட்பாடு | - | Diffusion theory |
| பருப்பொருள்சார் திட்டமிடல் | - | Physical planning |
| பழங்குடி அவை | - | Tribal council |
| பழமைப்பற்று | - | Conservative |
| பிரச்சாரப் போர் | - | propaganda war |
| புதிய கற்கருவிக் காலம் | - | new Lithic Age |
| புலனாய்வு கடந்த உளவியல் | - | parapsychology |
| புலனுணர்வுத் தொடர்பு | - | Extrasensory perception |
| புள்ளியீட்டு மரபு | - | Pointillism |
| புற அளவு | - | External measure |
| புற ஊக்கி | - | Extrinsic motives |
| பூப்புப் பருவம் (அ) முன்குமரப் பருவம் | - | Puberty (or) Pre Adolescence |
| பொது இலக்கணம் | - | Universal Grammar |
| பொருண்மை நிலை | - | Semantic level |
| பொருளணியல் மாற்றம் | - | Semantic Change |
| பொறுப்புறுதி | - | Guarantee |
| மக்கட் பெயராய்வு | - | Anthoropogmy Study |

| | | |
|---|---|---|
| மக்களை ஈர்ப்பவர் | - | Crowed puller |
| மகிழுந்து | - | Car |
| மயக்க மருந்து | - | Anasthetists |
| மரபு நிலை | - | Heredity |
| மருங்கொலிகள் | - | Laterals |
| மறிவினை | - | Retles |
| மறைபொருள் | - | Mystic |
| மறுமுதலீட்டு வாய்ப்பு | - | Reinvestment |
| மனநோயும் நடைக்கோளாறும் | - | Dementia-and crebellar Raxia |
| மனமுறிவு | - | Frustration |
| முகக்குறியியலார் | - | Physiognomists |
| முக்காற்று உண்மை | - | Syllogism |
| முடித்தல் விதி | - | Principle of Closure |
| முதிர்ச்சி | - | Maturity |
| முதுசூல் நிலை | - | Foetal period |
| முதுமைச் சோர்வு உளப்பிணி | - | Involutional melancholia |
| முழு உடல் அழிவு அல்லது உடல் இறப்பு | - | Somatic death |
| முழுநிலை உளவியல் | - | Gestular Psychology |
| முறைசாரா | - | Informal |
| முறையான பணியமைப்பு | - | Formal organisation |
| முறையீடு | - | Pleading |
| முன்நனவு நிலை | - | Subconscious |
| முன்னறிதல் | - | Prognosis |
| முன்னறிவு அல்லது முன்னுணர்வு | - | Precognition |
| முன்னிலை ஏற்புடைமை | - | Face validity |
| முன்னுரிமைப் பங்கு | - | Preference shares |
| முன்னோரை வழிபடுவது | - | Ancestor worship |
| மூக்கொலிகள் | - | Nasals |
| மூச்சிலா அடைப்பொலி | - | Unaspirated |
| மூச்சுடை அடைப்பொலிகள் | - | Aspirated stops |
| மூதாதையர் சொத்து | - | Ancestral property |
| மூலதன இருப்பு | - | Capital stock |
| மூளை அலைகள் | - | Brain waves |
| மெருகெண்ணெய் | - | Varnish |

| | | |
|---|---|---|
| மொத்த நனவிலி நிலை அளவீடு | - | Glasgow Coma Scale |
| மொழிக்கலப்பு | - | Codemixing |
| மொழிகளில் இனத்தொடர்பு | - | Geneological relationship |
| மொழிக் குறுக்கீடு | - | Language Interference |
| மொழி மாறாட்டம் | - | Code switching |
| மௌனத்தின் செயல் | - | Action of silence |
| வசதி விதி | - | Canon of convenience |
| வசதி விருப்பம் | - | Comfort |
| வஞ்சிர மீன் | - | Salmon Fish |
| வணிகக்குறி | - | Trade mark |
| வரலாற்று வகைப்பாட்டியல் | - | Diachronic Typology |
| வருடொலிகள் | - | Flaps |
| வருவாய்ப் பகிர்வு | - | Income Distribution |
| வரையறையற்றது | - | Amorphous |
| வலி தணிக்கி | - | Sedative |
| வலிப்புலனின்மை | - | Analgesic |
| வழக்கடிப் பாடுகள் | - | Mores |
| வாணிகச் சூழல் | - | Trade cycle |
| வாய்மொழிப் போர் | - | Verbal warfare |
| வாழ்க்கைப் படலம் | - | Lite span |
| விடுவிப்பாளன் | - | Liberator |
| விரயச் சடங்கு | - | Potlatch |
| விலக்குச் சொற்கள் | - | Taboo words |

# ஆங்கிலம் - தமிழ்

| | |
|---|---|
| Ability of pay approach | திறன் அணுகுமுறை |
| Aborigines | முதுகுடிமகன் |
| Academic | அறிவுசார் கல்வி |
| Action of silence | மௌனத்தின் செயல் |
| Agglutinative language | ஒட்டுநிலை மொழி |
| Amorphous | வரையறையற்றது |
| Analgesic | வலிப்புலனின்மை |
| Anesthetists | மயக்க மருந்து |
| Ancestral property | மூதாதையர் சொத்து |
| Ancestor worship | முன்னோரை வழிபடுவது |
| Anthroponomy study | மக்கட்பெயர் ஆய்வு |
| Ash trays | சாம்பல் தட்டு |
| Aspirated stops | மூச்சுடை அடைப்பொலிகள் |
| Assimilation | ஓரினமாதல் |
| Autio meter | ஒலித்திறன் கருவி |
| Axiom | அடிப்படை உண்மை |
| Babyhood | குழவிப் பருவம் |
| Basic democracy | அடிப்படை குடியாட்சி |
| Benefit approach | நன்மை அணுகுமுறை |
| Bilingualism | இருமொழியியம் |
| Bill market | உண்டியல் அங்காடி |
| Binocular curve | கண் பார்வைக் குறிப்பி |
| Border | கரை |
| Brain waves | மூளை அலைகள் |
| Bye-laws | துணை விதிகள் |
| Call deposits | அழைப்பு வைப்புகள் |
| Canon of ability | திறமை விதி |
| Canon of certainly | தெளிவு விதி |
| Canon of convenience | வசதி விதி |
| Canon of economy | சிக்கன விதி |
| Canon of elesticity | நெகிழ்ச்சி விதி |
| Canon of neutrality | நடுநிலை வரிவிதி |

| | |
|---|---|
| Canon of simplicity | எளிமை விதி |
| Capital stock | மூலதன இருப்பு |
| Car | மகிழுந்து |
| Circumcision | நுனித்தோல் நீக்கம் |
| Clairaudience | தொலைவிடம் கேட்டல் |
| Clairvoyance | தொலைவிடக் கல்வி |
| Classicism | கலை மரபு |
| Clones | ஊசலாட்டம் |
| Code mixing | மொழிக்கலப்பு |
| Code switching | மொழி மாறாட்டம் |
| Comfort | வசதி விருப்பம் |
| Complementarily | நிறைவுத்தன்மை |
| Complementary distribution | துணை நிலை வழக்கு |
| Compound stop | கூட்டு அடைப்பொலி |
| Concentration theory | செறிதல் கோட்பாடு |
| Conservative | பழமைப் பற்று |
| Correlation | மிகுந்த ஒட்டுறவு |
| Credit Creation | கடன் உற்பத்தி |
| Criteria | திட்ட அளவை |
| Crowd Puller | மக்களவை ஈர்ப்பர் |
| Current Deposits | நடப்பு வைப்புகள் |
| Dementia and Cerebella Rlaxia | மனநோயும் நடைக் கோளாறும் |
| Deposits of Notice | அறிவுப்புகள் வைப்புகள் |
| Depth perception | ஆழ்புலன் காட்சி |
| Diachronic Dipody | வரலாற்று வகைபாட்டியல் |
| Differs ion theory | பரவல் கோட்பாடு |
| Diglossia | இருநிலை வழக்கு |
| Directing | இறதியாக இயங்குதல் |
| Direct Mail | நேர்முக அஞ்சல் |
| Dissertation | கைவிடுதல் |
| Drowsiness | உறக்கத்தன்மை |
| Durability | உழைக்கும் தன்மை |
| Duration | கால அளவு |
| Employer | பணியாண்மையர் |

| | |
|---|---|
| Enuresis | அகக்கட்டுபாடு |
| Estranger's Mission | மதப்பிரச்சார நிறுவனம் |
| Etching | அரிச்சித்திரம் |
| Export surplus | ஏற்றுமதி மிகுதி |
| Extent | பரப்பு |
| External measure | புற அளவி |
| Extrasensory perception | புலனுணர்வுத் தொடர்பு |
| Extrinsic motives | புறஅளவி |
| Face validity | முன்னிலை ஏற்புடைமை |
| Factor validity | காரணி ஏற்புடைமை |
| Fixed deposits | நிலையா வைப்புகள் |
| Flaps | வருடொலிகள் |
| Flight path | ஓடுபாதை |
| Foetal period | முதுசூல்நிலை |
| Formal organization | முறையான பணியமைப்பு |
| Fossil | கல்லாக |
| Fricatives | உரசொலிகள் |
| Frustration | மனமுறிவு |
| Full Bench | அளவு நீதிபதி |
| Fur trade | தோல் வாணிகம் |
| Genealogical relationship | மொழிகளில் இனத்தொடர்பு |
| Gestalt psychology | முழுநிலை உளவியல் |
| Glasgow coma scale | மொத்த நனவிலி அளவீடு |
| Growth | உருப்பெருக்கம் |
| Guarantee | பொறுப்புறுதி |
| Gypsum | களிக்கல் |
| Hallucination | இன்புலன் காட்சி |
| Haplogy | அசைகெடல் |
| Harmless man | தீங்கற்ற மனிதன் |
| Hearsay evidence | சொல்லப்பட்ட கேள்வி |
| Heat stroke | அதிக வெப்பம் |
| Hedonism | இன்பியற் கொள்கை |
| Heredity | மரபு நிலை |
| Hydrophobia | நீர் அச்சநோய் |

| | |
|---|---|
| Ideal | அகமெய்ம்மை |
| Implosive stop | உறிஞ்சடைப்பொலி |
| Import surplus | இறக்குமதி விதி |
| Impressionism | இயற்கைப் பதிவு நவிற்சி |
| Income distribution | வருவாய்ப் பகிர்வு |
| Inflectional Languages | உட்பிணைப்பு நிலை மொழிகள் |
| Informal | முறைசாராத |
| Inherent | உள்ளார்ந்த ஆள்வரை |
| Installment sale | தவணை விற்பனை |
| Instinct | இயல்பூக்கம் |
| Intensity | ஆழ்ந்து தாக்கும் நிலை |
| Intermediate | இடைநிலை வகுப்பு |
| Intrinsic motives | அகஊக்கி |
| Involution melancholia | முதுமைச் சோர்வு உளப்பிணி |
| Iron age | இரும்புக் கற்கருவிக் காலம் |
| Isolating language | தனிநிலை மொழிகள் |
| Jurisprudence | சட்டவியல் |
| Jury | நடுவர் |
| Justice | நயன்மை |
| King in council | அரசர் அவை |
| Knob | குமிழ் |
| Land acquisition Law | நில எடுப்புச் சட்டம் |
| Language interference | மொழிக்குறிக்கீடு |
| Laterals | மருங்கொலிகள் |
| Law of contiguity | ஒட்டணிமை விதி |
| Law of primary | முதன்மை விதி |
| Law of regency | அண்மை விதி |
| Law of similarity | ஒருமித்த விதி |
| Legislation | சட்டமியற்றுதல் |
| Liberator | விடுவிப்பாளன் |
| Life span | வாழ்க்கைப் படலம் |
| Linear perspective | நீள்கோட்டுப்புலன் காட்சிக்கோள் |
| linseed oil | சணல் எண்ணெய் |
| Living wages | உழைப்புக் கூலிகள் |

| | |
|---|---|
| Loan blend | ஒட்டமைப்புச் சொல் |
| Luxuries | ஆடம்பர விருப்பம் |
| Manics | கிளர்ச்சியுடையோர் |
| Marginally conscious | ஓரளவு நனவு நிலை |
| Maturity | முதிர்ச்சி |
| Metathesis | நிலைமாறல் |
| Micro film | நுண்படம் |
| Missile | ஏவுகணை |
| Molecular death | திசுக்கள் அல்லது மூலக்கூறு இறப்பு |
| Monetary theory | பணவாக்கக் கோட்பாடு |
| Monophony | திறன் சந்தை |
| Mores | வழக்கடிப்பாடுகள் |
| Morphological level | உருபன் நிலை |
| Motive | ஊக்கி |
| Mystic | மறைபொருள் |
| Mystic contact | உணர்வில் தொடர்பு |
| Nasals | மூக்கொலிகள் |
| Naturalism | இயற்கை நவிற்சி |
| Neco lithic age | புதிய கற்கருவிக் காலம் |
| Ohomastics | பெயராய்வு |
| Ossification | இணைப்புத்தன்மை |
| Parapsychology | புலனாய்வு கடந்த உளவியல் |
| Parasomnia | நீண்ட ஆழ்ந்த தூக்கம் |
| Pastrol stage | ஆயர்குடிப் பருவம் |
| Peasants | உழவர்கள் |
| Pecuniary | பண ஆள்வரை |
| Personality | ஆளுமை |
| Phonological level | ஒலியன் நிலை |
| Physical planning | மருப்பொருள்சார் திட்டமிடல் |
| Physiognomists | முகக்குறியியலார் |
| Pigmentation | தோல் நிறமடைதல் அல்லது மசலை |
| Plastic | நெகிழி |
| Pleading | முறையீடு |
| Pointillism | புள்ளியிட்டு மரபு |

| | |
|---|---|
| Potlatch | விரயச் சடங்கு |
| Precognition | முன்னறிவு அல்லது முன்னுணர்வு |
| Preference shares | முன்னுரிமைப் பங்கு |
| Primitive law | தொன்மைச் சட்டம் |
| principle of colosure | முடித்தல் விதி |
| Problem behaviour | இடர் தரும் நடத்தை |
| Proforma invoice | ஒப்புமை |
| Prognosis | முன்னறிதல் |
| Project organiszation | தனித்திட்டப் பணியமைப்பு |
| Propaganda war | பிரச்சாரப் போர் |
| Proximity | அண்மை |
| Psycho kinesis | அசையும் பொருளை வசப்படுத்துதல் |
| puberty (or) preadolescence | பூப்புப் பருவம், அதற்குமுன் குமரப்பருவம் |
| Purity | கலப்பற்ற தன்மை |
| Quantum merit | மணித்தகு தொகை |
| Recuring deposits | தொடரும் வைப்புகள் |
| Reflex | மறுவினை |
| Reinvestment | மறுமுதலீட்டு வாய்ப்பு |
| Response | தூலங்கள் |
| Salmon fish | வஞ்சிர மீன் |
| Sarcophagus | ஈமப்பேனடி |
| Savings deposits | சேமிப்பு வைப்புகள் |
| Sedative | வலிதணிப்பு |
| Self actualization | தன்னிலை அடைதல் |
| Self doubters | தற்சலனம் |
| Semantic change | பொருளியல் மாற்றம் |
| Semantic level | பொருண்மை நிலை |
| Sessions court | அமர்வு நீதி மன்றம் |
| Simple stop | தனி அமைப்பொலி |
| Socialist revolution | சமநிலைப் புரட்சி |
| Social position | சமுதாயத்தகுதியியல் |
| Somatic death | முழு உடல் அழிவு அல்லது உடல் இறப்பு |
| Stem | அடிச்சொல் |
| Structure of intellect | அறிவுத்திறன் அமைப்பு |

| | |
|---|---|
| Subconscious | முன்நனவு நிலை |
| Substitute | பதிலிப்பண்டம் |
| Summon | அழைப்பாணை |
| Surrealism | அடிமன நவிற்சி |
| Suspensive veto | இடைக்கால மறுப்பாணை |
| Syllogism | முக்காற்று உண்மை |
| Syntactical level | தொடரியல் நிலை |
| Synthetic languages | இணைப்பு நிலை மொழிகள் |
| Taboo words | விலக்குச் சொற்கள் |
| Telepathy | தொலையுணர்வு |
| Territorial | எல்லை ஆள்வரை |
| The Academy of Fine Arts | நுண்கலைக் கழகம் |
| Taxonomy study | இடப்பெயர் ஆய்வு |
| Total release of energy | சக்தியின் முழு வெளிப்பாடு |
| Trade cycle | வாணிகச் சூழல் |
| Trade mark | வாணிக குறி |
| Transaction | தொடர்பு நடவடிக்கை |
| Tribal council | பழங்குடி அவை |
| Trill | ஆடொலி |
| Unaspirated | மூச்சிலா அடைப்பொலி |
| Universal grammar | பொது இலக்கணம் |
| Urbanization | நகரமயமாதல் |
| Varnish | மெருகெண்ணெய் |
| Verbal warfare | வாய்மொழிப்போர் |
| Venture capital | துணிகர முதலீடு |
| Vocational | தொழிற்கல்வி |
| Voiced sound | அதிர்வொலி |
| Voiceless sound | அதிர்வில்லா ஒலி |
| Volcanic rock | எரிமலைக் கற்கள் |
| Wig | கைத் தலைமுடி |
| word order | சொற்களின் வரன் முறை |

தமிழ்ப் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்
தமிழ் நாடு
அச்சகம்